॥ ஸ்ரீஸீதாராமாப்யாம் நம: ॥

1961


மகரிஷி ஸ்ரீவால்மீகி அருளிய

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

பால காண்டம் — அயோத்தியா காண்டம்
ஆரண்ய காண்டம் — கிஷ்கிந்தா காண்டம்

தமிழ் மொழிபெயர்ப்பு - முதல் பாகம்

श्रीमद्वाल्मीकीयरामायणम् (बालकाण्डसे किष्किन्धाकाण्डतक) पार्ट –१ (तमिल)



GITA PRESS, GORAKHPUR

கீதா பிரஸ், கோரக்பூர்

॥ ஸ்ரீஹரி: ॥

1961

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

பால காண்டம் – அயோத்தியா காண்டம்

ஆரண்ய காண்டம் – கிஷ்கிந்தா காண்டம்

தமிழ் மொழிபெயர்ப்பு – முதல் பாகம்

श्रीमद्वाल्मीकीयरामायणम् (बालकाण्डसे किष्किन्धाकाण्डतक) पार्ट – १ (तमिल)

த்வமேவ மாதா ச பிதா த்வமேவ
த்வமேவ ப₃ந்து₄ஶ்ச ஸகா₂ த்வமேவ ।
த்வமேவ வித்₃யா த்₃ரவிணம் த்வமேவ
த்வமேவ ஸர்வம் மம தே₃வதே₃வ ॥

ஆருயிர் அன்னையும் நீயே, அருமைத் தந்தையும் நீயே,
உறவும் சுற்றமும் நீயே, உற்ற நண்பனும் நீயே,
கற்கும் கல்வியும் நீயே, சேர்க்கும் செல்வமும் நீயே,
அனைத்தும் ஆன என்றன் ஆதிதேவனும் நீயே!

Translated by:
Pandit T.S.Kothandaraman

கீதா பிரஸ், கோரக்பூர் – 273 005. (உ.பி.)

Books are also available at—

1. Gita Press Sales Depot
   Gita Press Mansion, 8/1M, Racecourse
   COIMBATORE — 641018 ✆ 0422-3202521
2. Gita Press Gorakhpur Book Shop
   Electro House N0. 23, Ramanathan Street, Kilpauk
   CHENNAI — 600010 ✆ (044) 26615959; Fax 26615909

Second Reprint 2015 3,000
Total 5,500

❖ **Price : ₹ 190**

(One Hundred and Ninety Rupees only)

Printed & Published by :

Gita Press, Gorakhpur—273005 (INDIA)

(a unit of Gobind Bhavan-Karyalaya, Kolkata)

Phone - (0551) 2334721, 2331250; Fax : (0551) 2336997

e-mail : **booksales@gitapress.org** website : **www.gitapress.org**

॥ ஸ்ரீஹரி: ॥

॥ ஓம் ஸ்ரீ பரமாத்மநே நம: ॥

பதிப்பாளர் உரை

கூஜந்தம் ராமராமேதி மது₄ரம் மது₄ராக்ஷரம் ।
ஆருஹ்ய கவிதாஶாகா₂ம் வந்தே₃ வால்மீகிகோகிலம் ॥

இராமாயணம் என்ற மகாகாவியம், மிகத் தொன்மையான காலத்திலிருந்து, உலகின் தலைசிறந்த இலக்கியப் படைப்பாக அறிஞர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இலக்கியம் என்ற கண்ணோட்டத்தில் பார்த்தால், அறிவுஜீவிகளான ஒரு சிலர் மட்டுமே அதைப் படித்து மகிழ்ந்திருப்பார்கள். ஆனால், இராமாயணம் இன்றளவும் பச்சைப் பசுமையாக நின்று நிலவி, பல்லாயிரக்கணக்கான மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தி வருகிறது என்றால், அதற்கென்று தனிக் காரணம் இருக்க வேண்டும்.

சாட்சாத் மகாவிஷ்ணுவின் அவதாரமான இராமன், 'பூவுலகில் மக்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்?' என்று, தானே நடந்து காட்டியிருக்கிறார்; 'அறநெறி தவறாமல் வாழ்வதே வாழ்க்கை' என்பதை நிரூபித்துக் காட்டியிருக்கிறார்.

மேலும், பாரதத்தின் பண்டைக்கால் அறிவுச் செல்வங்கள், கலைகள், சமுதாய அமைப்பு, புவியியல், கோள்நிலை, சகுனம், அரசியல், வாழ்க்கை முறை, குடும்பப்பிணைப்பு போன்ற பல தகவல்களின் நம்பத்தகுந்தத் தொகுப்பாக விளங்குகிறது, இராமாயணம். அதனால்தான், பாரத மக்களாகிய நாம் மட்டுமல்லாமல், உலகத்தின் பல்துறை ஆய்வாளர்களும் இராமாயணத்தைப் போற்றிப் புகழ்கிறார்கள்.

இராமாயணம், வால்மீகி என்ற கவிஞரின் சொந்தக் கற்பனை அல்ல. நிகழ்ச்சிகள் எவ்வாறு நிகழ்ந்தனவோ, அவ்வாறே அவைகளைக் கொடுத்துள்ளார், வால்மீகி. 'இராமனுக்குப் பெருமை சேர்க்க வேண்டும்' என்ற எண்ணத்தில், எந்த நிகழ்ச்சியையும் மாற்றி அமைத்து விடவில்லை.

கோடிக்கணக்கான சுலோகங்களைக் கொண்ட ஸ்ரீமத் ராமாயணம் விண்ணுலகங்களில் விளங்கிக் கொண்டிருக்கிறது என்கின்றன, புராணங்கள்.

ஆனால், சிற்றறிவாளர்களான மனிதர்களால் அவ்வளவு பெரிய ஸ்ரீமத் ராமாயணத்தைப் படித்தறிந்து கொள்ள முடியாது என்பதால், இருபத்து நான்காயிரம் சுலோகங்கள் கொண்ட சிறு நூலாக ஆக்கித் தந்தார், ஆதிகவி வால்மீகி.

ஏட்டுப் பிரதிகளிலுள்ள அல்லது அச்சாகி வந்துள்ள ஸ்ரீமத் வால்மீகி ராமாயணங்களில் மிகச் சரியாக இருபத்து நான்காயிரம் சுலோகங்கள் இல்லை; கூடியும் குறைந்தும் காணப்படுகின்றன. அத்துடன் பாட வேற்றுமைகளும் ஏராளமாகக் காணப்படுகின்றன. ஒரு சுலோகத்திலேயே இரண்டு–மூன்று வேற்றுமைகள் காணப்படுகின்றன. எனவே, இந்த மொழிபெயர்ப்பு நூலில், தமிழ்நாட்டில் பெருவாரியான அடியார்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள சுலோகங்களின் மொழிபெயர்ப்பு நடையே பின்பற்றப்பட்டுள்ளன.

இராமாயணம் முழுவதையும் படித்தால்தான் பாவங்கள் போகும் என்பதில்லை. ஸ்ரீமத் ராமாயணத்திலுள்ள ஒவ்வொரு சொல்லும்கூட மகாபாதகங்களைப் போக்கிவிடும்! என்று நம்பிக்கையுடன் சொல்லியிருக்கிறார்கள், நமது முன்னோர்கள்.

சரிதம் ரகு₄நாத₂ஸ்ய ஶதகோடிப்ரவிஸ்தரம் ।
ஏகைகமக்ஷரம் ப்ரோக்தம் மஹாபாதக நாஶநம் ॥

என்கிறது, இராமாயண பலஶ்ருதி.

ஸ்ரீமத் ராமாயணத்தைப் படிக்க இயலாதவர்கள், அந்த நற்பலன்களை இழந்துவிட வேண்டியதுதானா? இல்லை.

ஸ்ரீமத் ராமாயணத்தைக் காது கொடுத்துக் கேட்டாலே போதுமாம்! அதுவும், இராமாயணம் முழுவதையும் கூட அல்ல; ஒரு சுலோகத்தின் அரைப் பகுதி அல்லது கால்பகுதியைக்கூட கேட்டாலே போதும், அனைத்துப் பாவங்களும் நீங்கி, பிரும்மலோகத்திற்குப் போய் விடலாம்!

ஶ்ருண்வந் ராமாயணம் ப$_4$க்த்யா ய: பாத$_3$ம் பத$_3$மேவ வா ।
ஸ யாதி ப்$_3$ரஹ்மண: ஸ்த$_2$நம் ப்$_3$ரஹ்மணா பூஜ்யதே ஸதா$_3$ ॥

தமிழ்நாட்டில், ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்திற்கு எல்லையில்லாத பெருமை இருந்து வருகிறது. பண்டைய காலந்தொட்டே தமிழ்நாட்டு ஆஸ்திகர்கள், வால்மீகியின் புனிதப் படைப்பான இராமாயணத்தைத் தினசரி பாராயணமாகக் கைக் கொண்டிருக்கிறார்கள். ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தைப் பாராயணம் செய்வதால், 'இக–பர நலன்கள் நிச்சயமாகக் கிடைக்கின்றன' என்பதைப் பல்வேறு புராணங்கள் கூறுகின்றன. ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம், கல்பதருவைப் போல் எல்லா விருப்பங்களையும் நிறைவேற்றித் தருவது. நிஷ்காமமாகப் படித்தால், அது மெய்ஞ்ஞானத்தை அருளக் கூடியது.

இராமாவதாரம், திரேதா யுகத்தில் நடந்தது. அந்த யுகம் முடிந்தவுடன் மண்ணுலகில் இராமசக்தி மறைந்துவிடவில்லை. திருவையாற்றுத் தியாகப் பிரும்மத்திற்கு, ஸ்ரீராமப்பிரும்மம் காட்சி கொடுத்தது ஆச்சரியமான செய்தி அல்ல. ஆங்கிலேய கலெக்டருக்கும், இஸ்லாமிய தானீஷாவுக்கும்கூட இராமன் காட்சி தந்திருக்கிறார் – என்பது வரலாற்று உண்மை.

இராமன், நித்திய வஸ்து; பதித பாவனன்!

பிரும்மபுத்திரியான அகலிகை பாவியாகிப் போனாள். இராமனின் அரவிந்தப் பாதங்கள் பட்டதும், அவரே (இராமனே) வணங்கும் மகோன்னதத் தன்மையை அடைந்தாள்!

காவிய நாயகன் இராமனின் மறத்திற்கு எல்லை காண முடியாது; அவருடைய அறத்திற்கும் கருணைக்கும்கூட எல்லை காண முடியாது!

பிறனில் விழையாமை; விறனில் (வீரத்தில்) பிழையாமை; சொல்லில் பிறழாமை; அறனில் தவறாமை ஆகிய மேலான நான்கு குணங்கள், இராமன் என்ற ஒரு மானுடனை தெய்வநிலைக்கு உயர்த்திக் காட்டுகின்றன.

'இராமன் என்றொரு மனிதன்' என்பது பாமரத்தனமான உண்மை. அவன், பரப்பிரும்மம் என்பது நித்திய, நிரந்தரமான உண்மை.

யத$_2$ா஽வர்ணயத் கர்ணமூலே஽ந்தகாலே
ஶிவோ ராம ராம ராமேதி காஶ்யாம் ।
ததேகம் பரம் தாரகம் ப்$_3$ரும்மரூபம்
ப$_4$ஜே஽ஹம் ப$_4$ஜே஽ஹம் ப$_4$ஜே஽ஹம் ப$_4$ஜே஽ஹம் ॥

'ஒன்றே ஒன்றான, இரண்டாவது என்று ஏதுமில்லாத புனிதப் பரம்பொருள் எதுவோ, அதுதான் இராமன்' என்று, அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறார், ஆதிசங்கரர். ஒரு தடவை, 'வணங்குகிறேன்' என்று சொன்னால், அது மேலெழுந்தவாரியான மதிப்பீடாகப் போய்விடக் கூடும் என்பதால், 'வழிபடுகிறேன்' (*ப$_4$ஜே஽ஹம்*) என்று நான்கு தடவைகள் கூறியிருக்கிறார்.

காசி க்ஷேத்திரத்தில் உயிர் பிரியும் தறுவாயிலுள்ளவர்களின் வலது செவியில், சாட்சாத் சிவபெருமானே, ***'ராம, ராம'*** என்ற தாரக மந்திரத்தைக் கூறி, அந்த ஜீவனுக்கு மோட்சத்தைக் கொடுக்கிறார். ஏன் ***'ராம'*** மந்திரம் கூறுவதென்றால், நிர்குணப்பிரும்மத்தின் ஸகுண வடிவமே, இராமன். பரப்பிரும்மத்தை உபாசிக்கிறவர்களுக்கு, பிரும்ம லயமே ஏற்பட்டுவிடுகிறது.

வால்மீகிகி$_3$ரிஸம்பூ$_4$தா ராமஸாக$_3$ரக$_3$ாமிநீ |

புநாது பு$_4$வநம் புண்யா ராமாயணமஹாநதீ$_3$ ||

'இராமாயணம் என்ற ஜீவநதி, வால்மீகி என்ற மலையில் தோன்றியது; இராமன் என்ற பெருங்கடலை நோக்கிப் பாய்கிறது. புண்ணியமான அந்த நதி, இந்த மண்ணுலகைப் புனிதமடையச் செய்யட்டும்' என்பது, தினசரிப் பிரார்த்தனை. 'இராமாயணம், பாரத நாட்டைப் புனிதப்படுத்தட்டும்' என்ற குறுகிய பிரார்த்தனை இங்கே சொல்லப்படவில்லை. ***'புநாது புவநம்'*** – இந்தப் பூமண்டலத்தையே புனிதமாக்கட்டும்! ஆம், ***'வஸுதை$_4$வ குடும்பகம்'*** – உலகம் முழுவதும் ஒரு குடும்பம்தானே!

'ஸர்வே பவந்து ஸுகிந: | ஸர்வே ஸந்து நிராமயா: ||' – 'எல்லோரும் இன்புற்று இருப்பார்களாக; எல்லோரும் நோயின்றி வாழ்வார்களாக.' அந்த நெறியை மெய்ப்படுத்துகிறது, இராமாயணம்.

இராமாயணம் தோன்றியது, அயோத்தி வர்ணனை, அசுவமேத யாக நிகழ்வு, ஸ்ரீராமாவதாரம், தாடகை வதம், விசுவாமித்திரரின் வேள்வி காத்தல், மிதிலை நோக்கிப் புறப்படுதல், கங்கை பூமிக்கு வருதல், அகலிகையின் சாபம் நீங்குதல், மிதிலையில் தசரத புதல்வர்களின் விவாகம், பரசுராமருடன் போர், அயோத்தி வருகை முதலிய பல நிகழ்வுகளுடன் அமைந்தது பால காண்டம்.

ஸ்ரீராமனுக்கு முடிசூட்டு விழா முன்னேற்பாடுகள், மந்தரையின் போதனையினால் கைகேயி மனம் மாறுதல், ஸ்ரீராமனின் பிரதிக்ஞை, சீதையையும் லட்சுமணனையும் வனவாசத்திற்கு அழைத்துச் செல்ல சம்மதித்தல், அயோத்தி மக்களின் கொதிப்பு, வனவாசம், குகனுடன் சந்திப்பு, கங்கையைக் கடத்தல், சித்திரகூட வாசம், தசரதரின் மரணம், ஸ்ரீராம–பரதர்கள் சந்திப்பு, பாதுகா பட்டாபிஷேகம், தண்டகாரண்யத்தில் புகுதல் போன்ற பல நிகழ்வுகளுடன் அமைந்தது அயோத்தியா காண்டம்.

தண்டகாரண்யத்தில் இராமன், சீதை–லட்சுமணனுடன் நுழைந்தவுடன் முனிவர்களைச் சந்திக்கும் நிகழ்ச்சியுடன் தொடங்கும் ஆரண்ய காண்டம், பம்பை நதிக்கரையில் முடிவடைகிறது. பஞ்சவடி வாசம், சூர்ப்பணகை வருகை, மாரீச மான், இராவணன் சீதையை அபகரித்துச் செல்வது, ஜடாயுவுக்கு பரமபதம் அருளுதல், சபரிக்கு விண்ணுலகு, பம்பையைக் காண்பது முதலியன ஆரண்ய காண்டக் காட்சிகள்.

அனுமானுடன் முதல் சந்திப்பு, சுக்ரீவனுடன் நட்பு, வாலியை மாய்த்தல், சுக்ரீவனுக்கு முடிசூட்டுதல், வானரப்படை சேகரித்தல், சம்பாதியின் ஆலோசனை, அனுமான் பெருங்கடலைத் தாண்டி இலங்கைக்குச் செல்ல முடிவு செய்தல் முதலியன கிஷ்கிந்தா காண்டக் காட்சிகள்.

இந்த நான்கு காண்டங்களிலும் இராமாயணம் என்னும் பேராறு சுழன்று சுழன்று செல்கிறது; அட்டகாசமாக ஓடுகிறது; எதிர்பாராத வளைவுகளை உண்டாக்கி, திமிர்பிடித்தவனைப் போல் முரட்டுத்தனமாகச் செல்கிறது. ஆனால், வெள்ளம் கரையைக் கடந்து செல்லவில்லை; கட்டுக்கடங்காத வேகத்திலும் சீர்மை இருக்கிறது.

வேத$_3$வேத்$_3$யே பரே பும்ஸி ஜாதே த$_3$ஶரத$_2$ாத்மஜே |

வேத$_3$: ப்ராசேதஸாத$_3$ாஸீத் ஸாக்ஷத்$_3$ராமாயணாத்மநா ||

சொல்–வாக்குக் கடந்த பரம்பொருள், சக்கரவர்த்தித் திருமகனாக அவதாரம் செய்ததும், வால்மீகியின் வாக்கில் வேதமே இராமாயணமாக வெளிவந்தது. ஞானத் தராசில், வேதமும் இராமாயணமும் சமநிலை!

வால்மீகியின் படைப்பு மிகத் தொன்மையானது. எனவே, சுலோகத்தின் ஒவ்வொரு சொல்லையும் கருத்தில் ஏற்றுக் கொண்டு, தற்கால தமிழிலக்கிய முறையைப் பின்பற்றி

மொழிபெயர்க்க வேண்டியது தவிர்க்க முடியாத கட்டாயம். ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தில், 'நற்புருவமுடையாளே!', 'அழகிய தொடையுடையவளே!', 'அகன்ற விழியாளே!' – என்று வந்துள்ள விளிச்சொற்கள், 'அழகானவளே!' என்று மட்டும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. *'அநக₄:', 'அநிந்தி₃த'* (குற்றமற்ற, நிந்திக்கத்தகாத) போன்ற சொற்கள், தமிழ்நடையின் ஓட்டம் கருதி, பல இடங்களில் விடப்பட்டுள்ளன.

ஒவ்வொரு ஸர்க்கத்தின் தலைப்பும் எல்லாப் பதிப்புகளிலும் ஒரே மாதிரியாக இல்லை. எனவே, ஸர்க்கங்களின் தலைப்பு பிற்கால அறிஞர்களால் வழங்கப்பட்டுள்ளது என்று ஊகிக்க வேண்டியிருக்கிறது.

எமது பதிப்பகம், தமிழ்கூறு நல்லுலகம் உய்ய வேண்டி, ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தை (தமிழ் மூலம் – மொழிபெயர்ப்பு) வெளியிட வேண்டும் என்று திட்டமிட்டு, பரமகருணா மூர்த்தியான இராமப்பிரபுவின் அருளினால் இம்மாபெரும் புனிதப்பணி நிறைவடைந்து, ஐந்து பாகங்களாக (1. பால காண்டம்–அயோத்தியா காண்டம்; 2. ஆரண்ய காண்டம்–கிஷ்கிந்தா காண்டம்; 3. சுந்தர காண்டம்; 4. யுத்த காண்டம்; 5. உத்தர காண்டம்) ஏற்கனவே வெளியிடப்பட்டு, ஆன்மிக அன்பர்களின் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

மேலும், ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தின் தமிழ் மொழிபெயர்ப்பை மட்டும் விரும்பும் தமிழ்கூறு நல்லுலக ஆன்மிக அன்பர்களுக்காகவே இரண்டு பாகங்களை (*முதல் பாகம் :* பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிஷ்கிந்தா காண்டம்; ***இரண்டாம் பாகம் :*** சுந்தர காண்டம், யுத்த காண்டம், உத்தர காண்டம்) கொண்ட இக்காவியத்தை வெளியிடுவதற்கு, எமக்கு அருள்புரிந்த ஸ்ரீராமசந்திரமூர்த்தியின் கருணைக்குத்தான் எல்லையேது.

இராமபிரானுடைய பெருங்கருணையால், ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தின் (தமிழ் மொழிபெயர்ப்பு) (பால காண்டம் – அயோத்தியா காண்டம் – ஆரண்ய காண்டம் – கிஷ்கிந்தா காண்டம்) முதல் பாகமாகிய இந்நூல், தற்போது தங்கள் திருக்கரங்களில் வண்ணமிகு மலராக நறுமணம் வீசித் திகழ்கிறது.

இராமபிரானுடைய பரம கிருபையால் இராமாயணப் பேராறு, சூரிய–சந்திரர் உள்ள வரையில் வற்றாமல் ஓடிக் கொண்டிருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை! இராமன் திருவடிகளில் புகலடைந்துள்ள நம் அனைவரையும் அவர் காத்து ரட்சிப்பாராக.

அனைத்து நலன்களையும் அருளவல்ல இந்தப் புனித நூலை, அன்பர்கள் அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டும் என்பதே எங்கள் விருப்பம். அவ்விருப்பத்திற்கேற்ப, எங்களுக்கு இப்புனித காவியத்தை மிகத்தெள்ளிய நடையில் பசுமை மாறாமல் தமிழில் மொழிபெயர்ப்புச் செய்தருளிய, எமது வணக்கத்திற்குரிய சென்னை, ***(அமரர்) பண்டிட் டி.எஸ். கோதண்டராமன்*** அவர்களுக்கு, ஸ்ரீராமசந்திரமூர்த்தியின் பேரருள் கிடைக்கப் பிரார்த்திக்கிறோம்.

ஸ்ரீராமப்பிரபுவின் அடியார்களின் திருவடிகளுக்கு எமது சிரந்தாழ்ந்த வணக்கங்கள்.

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தைப் படிப்போர் அனைவருக்கும் ஸ்ரீராமசந்திரமூர்த்தியின் பேரருள் கிடைக்க வேண்டும் என உள்ளன்போடு பிரார்த்திக்கிறோம்.

க்ஷோ₂ஷ்பதீ₃க்ருதவாராஸிம் மஸ₂கீக்ருத ராக்ஷஸம் ।
ராமாயணமஹாமாலாரத்நம் வந்தே₃ऽநிலாத்மஜம் ॥

'சீதா–லட்சுமண–ஹனுமத் சமேத ஸ்ரீராமனுக்கு ஜெய்!'

— **பதிப்பாளர்கள்**

|| ஸ்ரீஹரி: ||

தேவநாகரி எழுத்துக்கள் — சில குறிப்புகள்

ஒரு மொழியின் சொல்லை இன்னொரு மொழியின் எழுத்துக்களால் எழுதுவதை எழுத்துப்பெயர்ப்பு **(Transliteration)** என்று அழைக்கிறோம். ஒரு மொழியிலுள்ள சொல்லின் பொருளை மற்றொரு மொழியில் கூறுவதை மொழிபெயர்ப்பு **(Translation)** என்று அழைக்கிறோம்.

சம்ஸ்கிருதச் சொற்களைப் பிழையின்றி உச்சரிக்க, முறையாக சம்ஸ்கிருதம் கற்றவர்களிடமிருந்து அறிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும்.

ஆங்கில எழுத்துக்களின் துணைகொண்டு *2, 3, 4* என்னும் குறியீடுகளுடன் சம்ஸ்கிருத எழுத்துக்களுக்கு நிகரான தமிழ் ஒலி வடிவங்கள் இங்கு தரப்பட்டுள்ளன.

अ அ	आ ஆ	इ இ	ई ஈ	उ உ
ऊ ஊ	ऋ ரி	ॠ ரீ	ऌ ல்ரு	ए ஏ
ऐ ஐ	ओ ஓ	औ ஔ		
क க [ka]	ख க$_2$ [kka]	ग க$_3$ [ga]	घ க$_4$ [gha]	ङ ங
च ச [ca]	छ ச$_2$ [cha]	ज ஜ [ja]	झ ஜ [jha]	ञ ஞ
ट ட [ta]	ठ ட$_2$ [tta]	ड ட$_3$ [da]	ढ ட$_4$ [dda]	ण ண
त த [tha]	थ த$_2$ [thha]	द த$_3$ [dha]	ध த$_4$ [dhha]	न ந, ன
प ப [pa]	फ ப$_2$ [pha]	ब ப$_3$ [ba]	भ ப$_4$ [bha]	म ம
य ய	र ர	ल ல	व வ	
स ஸ [sa]	ष ஷ [sha]	क्ष க்ஷ [ksha]	ह ஹ [ha]	
श ஶ [s̄ā]	ज्ञ க்ஞ [gna]	ॠ ரு [ṟi]		

‘श’ என்ற எழுத்து *‘ஶ’* என்று எழுத்துப்பெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது. இந்த *‘ஶ’* என்னும் எழுத்து *‘பிசகு’*, *‘கசடு’* என்னும் சொற்களில் வரும் *‘ச’*வைப் போன்று ஒலிக்கும்.

சம்ஸ்கிருத–தமிழ் எழுத்துப்பெயர்ப்பில் **(Transliteration)** கொடுத்துள்ள எழுத்துக்கள் எழுத்துப்பெயர்ப்பில் மட்டும் பயன்படுத்தப்பட்டுள்ளன. மொழிபெயர்ப்பில், வழக்கத்தில் உள்ள தமிழ் எழுத்துக்களே பயன்படுத்தப்பட்டுள்ளன. உதாரணமாக ‘सुखं’ என்ற சொல் எழுத்துப்பெயர்ப்பில் *‘ஸுக$_2$ம்’* என்றும், மொழிபெயர்ப்பில் *‘சுகம்’* என்றும் எழுதப்பட்டுள்ளது.

சம்ஸ்கிருதத்தில் உள்ள உயிரெழுத்தான 'ऋ' என்பது உயிரெழுத்தாக வரும்பொழுது *'ரி'* என்றும், உயிர்மெய்யெழுத்தாக வரும்பொழுது 'ரு' என்றும் உச்சரிக்கப்படுகிறது. (உ–ம்.:– ऋषि – *ரிஷி*, कृत्वा – *க்ருத்வா*) இந்த 'ரு' என்னும் எழுத்து *'எருது'*, *'விருது'* என்னும் சொற்களில் வரும் 'ரு'வைப் போன்று ஒலிக்கும்.

'ञ' என்ற எழுத்து 'ஞ' என்றும், 'ज्ञ' என்ற கூட்டெழுத்து 'க்ஞ' என்றும் எழுத்துப்பெயர்ப்பு செய்யப்பட்டுள்ளன. 'ञ' என்ற எழுத்தில் துவங்கும் சொற்களில்லை.

ஒரு சொல்லிற்கு மேல் இருக்கின்ற புள்ளியானது *'ம்'* என்னும் எழுத்தைக் குறிக்கிறது. (உ–ம்.:– सुखं – *ஸுகம்*)

ஒரு சொல்லின் இறுதியில் மேலும் கீழும் வருகின்ற இரு புள்ளிகள் (:) *'விஸர்கம்'* என்று அழைக்கப்படுகிறது. இதன் உச்சரிப்பு, இதற்கு முன் வரும் எழுத்தைப் பொறுத்து அமையும். உதாரணம் பின்வருமாறு :–

भवन्तः	–	ப$_4$வந்த:	–	ப$_4$வந்த*ஹ*
स्थितिः	–	ஸ்தி$_2$தி:	–	ஸ்தி$_2$தி*ஹி*
प्रभुः	–	ப்ரபு$_4$:	–	ப்ரபு$_4$*ஹு*
गुणैः	–	கு$_3$ணை:	–	கு$_3$ணை*ஹி*
भ्रुवोः	–	ப்$_4$ருவோ:	–	ப்$_4$ருவோ*ஹோ*

சம்ஸ்கிருதச் சுலோகங்களில் சில இடங்களில் *'ऽ'* அல்லது *'ऽऽ'* என்னும் குறியீடுகளைக் காணலாம். இதற்கு *'அவக்$_3$ரஹம்'* என்று பெயர். இந்த இடங்களில் முறையே *'அ'*, *'ஆ'* என்னும் எழுத்துக்கள் தொக்கி நிற்கின்றன என்று பொருள் கொள்க.

II ஸ்ரீஹரி: II

பொருளடக்கம்

ஸ்ரீமத் வால்மீகி ராமாயண மாஹாத்ம்யம்

பால காண்டம்

அயோத்தியா காண்டம்

ஆரண்ய காண்டம்

II ஸ்ரீஹரி: II

ஸ்ரீமத் வால்மீகி ராமாயண மாஹாத்ம்யம்

(வால்மீகி ராமாயணத்தின் சிறப்பு)

(ஸ்ரீஸ்கந்தபுராணம் உத்தரகண்டத்தில் நாரதர்–சனத்குமாரர்களிடையே நடந்த உரையாடல் என்ற பகுதியில் உள்ளது.)

அத்தியாயம் : ஒன்று

கலியுகத்தில் மக்களின் தாழ்நிலை; இராமாயணத்தைப் படிப்பதால் ஏற்படும் பலன்கள்; இராமாயணத்தைக் கேட்பதற்கு உகந்த காலம்

அனைத்துலகங்களுக்கும் புகலிடம், இராமன். இராமனைத் தவிர வேறு யார் நமக்கு அடைக்கலம் கொடுக்க முடியும்? கலி என்கிற யுகதோஷத்தினால் ஏற்படும் மாசுகள் (பாவங்கள்) இராமனால் அழிக்கப்படுகின்றன. இராமனுக்கு நமஸ்காரம் செய்வது நமது கடமை. காலன் என்னும் பயங்கரமான சர்ப்பம், இராமனால் (இராம நாம சப்தத்தைக் கேட்டாலே) நடுங்குகிறது. உலகம் முழுவதும் இராமனுடைய பிடியில் இருக்கிறது. இராமனிடம் குறைவுபடாத பக்தி எனக்கு உண்டாவதாகுக. இராமா! தாங்கள்தான் எனக்கு ஆதாரம். தங்களுக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரம். (1)

சித்திரகூடத்தில் வசிப்பவர்; திருமகள் வடிவினளாகிய சீதாப்பிராட்டியின் ஆனந்தத்திற்கு இருப்பிடம்; அடியார்களுக்கு அபயம் அளிப்பவர் – இப்படிப்பட்ட பரமானந்தமூர்த்தியான ஸ்ரீராமனை வணங்குகிறேன். உலகங்களைப் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் தொழில்களைச் செய்யும் பிரும்மா, விஷ்ணு, மகேசன் ஆகியவர்கள், எந்தப் பரம்பொருளின் கூறுகளோ, அந்த மிகத் தூய்மையான, சச்சிதானந்தமயமான, பரமாத்மப் பரம்பொருளை (இராமனை) வணங்கித் துதிக்கிறேன். (2,3)

முனிவர்கள் கேட்கிறார்கள்— மாமுனிவரே! (ஸூத மாமுனியே!) பேரறிவாளரான தாங்கள், எங்களால் கேட்கப்பட்ட எல்லாவற்றையும் முற்றிலுமாகக் கூறிவிட்டீர்கள். (ஆனால், இன்னும் ஒரு சந்தேகம் இருக்கிறது.) உலக வாழ்க்கையாகிய வலையில் மாட்டிக் கொண்டவர்களுக்குத் துன்பங்கள் ஏராளமாக ஏற்படுகின்றன. கலியில், வேதநெறிப்படியான ஆசார–அனுஷ்டானங்கள் அழிந்து போய்விடுகின்றன என்று தாங்கள் சொன்னீர்கள். (அதாவது, தேவதைகளின் அருளைப் பெறுவதற்கான சடங்குகள் நின்று போய்விடும். அப்படியானால்,) சம்சாரமாகிற முடிச்சை வெட்டித் தள்ளுபவராக யார் நினைக்கப்படுகிறார்? கொடுமையான கலியுகம் பிறந்ததும் வேதநெறிகள் மறைந்து போகும். அதனால், தருமம் பிறழ்ந்த வாழ்க்கை முறையில் முழுவேகத்துடன் ஈடுபடும் மக்களுக்குப் பெருந்துன்பங்கள் ஏற்படும் என்றும் கூறினீர்கள். (4–6)

அப்போது, வேத விதிகளுக்கு எதிரான கருத்துக்கள் தோன்றும் என்று எல்லா அறிஞர்களாலும் கூறப்பட்டிருக்கிறது. கலியுகத்தில், மக்கள் எல்லோரும் காமம் மிகுந்தவர்களாகவும், குட்டையான சரீரம் உடையவர்களாகவும், கருமிகளாகவும், (தெய்வத்தின்மேல் நம்பிக்கை வைக்காமல்) ஒருவரையொருவர் அண்டியவர்களாகவும், ஆயுள் குறைந்தவர்களாகவும், அநேக மகவுகளைப் பெற்றுக் கொள்பவர்களாகவும் இருக்கப் போகிறார்கள். பெண்கள், தம் சுகத்தையே நாடுபவர்களாகவும், பிற ஆண்களிடம் விருப்பம் உடையவர்களாகவும், கணவனின் சொல்லை மதிக்காமல் எப்போதும் பிறர் வீடுகளில் இருப்பதில் ஆசை கொண்டவர்களாகவும், ஒழுக்கம் இல்லாத ஆண்களிடம் எப்போதும் அன்புடையவர்களாகவும் இருக்கப் போகிறார்கள். (7–9)

நற்குடியில் பிறந்த பெண்கள்கூட, அந்நிய புருஷர்களுடன் தரக்குறைவான உரையாடலில் ஈடுபடுபவர்களாகவும், கடுமையான சொற்களைப் பேசுபவர்களாகவும், பொய் உரைப்பவர்களாகவும், உடல் தூய்மை விதிகளைக் கடைப்பிடிக்காதவர்களாகவும் இருப்பார்கள். கலியுகத்தில் பெண்கள், பொருளில்லாமல் நீண்ட நேரம் பேசுபவர்களாக இருக்கப் போகிறார்கள். திருவோட்டில் உணவு பெற்றுண்டு ஊர்ஊராகச் சுற்றித் திரியும் துறவிகளும் உறவு–நட்பு என்ற சிக்கலில் மாட்டிக் கொள்வார்கள். அவர்கள் (துறவிகள்) உணவு–புகழ் என்ற கவலைகளில் ஆழ்ந்து, (இவைகளை எளிதாகப் பெற்றுத்தரக் கூடிய) சிஷ்யக் கூட்டங்களை ஏற்படுத்திக் கொள்வார்கள். பெண்கள், தம் இரு கைகளாலும் தலையைச் சொறிந்து கொள்வார்கள்; வீட்டுத் தலைவர், கணவர் ஆகியோரின் சொற்களைத் தம் மனமறிந்தே புறக்கணிப்பார்கள். (10–13)

எப்போது இருபிறப்பாளர்கள் வேதநெறிக்குப் புறம்பானவர்களுடன் சேர்ந்துகொண்டு மறை ஒழுக்கங்களைக் குறைவாகப் பேசுகிறார்களோ, அப்போது கலி முற்றிவிட்டது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். ஞானப்பெருந்தகையே! கொடுமையான கலியுகத்தில், பாவச்செயல்களையே செய்யும் மக்களுக்கு உள்ளத்தூய்மை இல்லாமற்போகும். அப்படிப்பட்டவர்கள் முக்தியடைய என்ன வழி? (14,15)

அறநெறியாளர்களில் தலையாயவரே! எல்லாம் அறிந்தவரே! ஸூத மாமுனிவரே! தேவர்களுக்கெல்லாம் தலைவன், தேவதேவன், ஜகத்குரு என்றெல்லாம் போற்றப்படும் பரம்பொருள் (இராமன்) எந்தக் கர்மாவினால் (அல்லது, எந்த நெறியைக் கடைப்பிடிப்பதால்) மனம் மகிழ்வாரோ, அந்த வழியை எங்களுக்குக் கூறுங்கள். முனிவர்களில் தலைசிறந்த ஸூதரே! இப்போது நாங்கள் கேட்ட விஷயங்களுக்கெல்லாம் முழுமையாகப் பதில் சொல்லுங்கள். ஸூத முனிவரே! தங்கள் சொல்லமுதத்தைக் கேட்பதில் யாருக்குத்தான் மனநிறைவு ஏற்படாது? (எல்லோருக்கும் ஆனந்தம் உண்டாகும்.) (16,17)

ஸூதர் கூறுகிறார்— முனிவர்களே! நீங்கள் எல்லோரும் எதைக் கேட்க விரும்புகிறீர்களோ, அதை உங்களுக்குச் சொல்கிறேன். இராமாயணம் என்ற பேரிலக்கியம், மகாத்மாவான நாரதரால் சனத்குமாரருக்குக் கூறப்பட்டது. அது, எல்லா வேதப்பொருள்களையும் உட்கிடையாகக் கொண்டது; எல்லாப் பாவங்களையும் அழிக்கக்கூடியது; துன்பம் தரும் கோள்களை நெருங்கவிடாமல் விலகிப் போகச் செய்வது. (கிரகங்களின் தொல்லையிலிருந்து காப்பாற்றுவது.) அது (இராமாயணம்) தீயகனவுகளை ஒழிக்கவல்லது; பெருமையைத் தரக்கூடியது; இவ்வுலக இன்பங்களையும் (பின்னர்) மோட்சத்தையும் அளிக்கக்கூடியது. அந்தக் காவியத்தில் ஸ்ரீராமப்பிரபுவினுடைய வரலாறு விளக்கமாகக் கூறப்பட்டிருக்கிறது. அந்தக் காவியத்தைப் படிப்பவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் எல்லா நலன்களையும் நிச்சயமாகக் கொடுக்கக் கூடியது. (18–20)

(இராமாயணம் என்ற இந்த இதிகாசம்) தருமம்–அர்த்தம்–காமம்–மோட்சம் என்பதான நான்கு புருஷார்த்தங்களுக்கும் அடிப்படைக் காரணமாக அமைந்து, மகத்தான பலன்களை அளிக்கக் கூடியது. இதற்கு முன்னர் வெளியிடப்படாத இந்தச் சரித்திரம், புண்ணியமான பலனைக் கொடுக்கக் கூடியதாகையால் மிகவும் கவனத்துடன் கேளுங்கள். உபபாதகங்கள், மகாபாதகங்கள் என்று கூறப்படும் எல்லாவிதப் பாவங்களையும் செய்தவனாக இருந்தாலும், (வால்மீகி) முனிவரால் இயற்றப்பட்ட (நாரத முனிவரால் கூறப்பட்ட) தெய்விகமான இந்தக் காவியத்தைக் கேட்பதாலேயே (பாவங்கள் நீங்கப் பெற்றுப்) பரிசுத்தனாகிறான். (21,22)

உலக நன்மையில் ஊக்கமுடைய சான்றோர்கள், இராமாயணத்தில் கூறப்பட்ட நன்னெறிகளைப் பின்பற்றி நடப்பார்களேயானால், அவர்களே இவ்வுலகில் செய்யவேண்டிய கடமைகளைச் செய்து முடித்தவர் ஆவார்கள். அவர்களே எல்லா அறநூல்களிலும் வல்லவர் ஆவார்கள். அந்தணோத்தமர்களே! தரும–அர்த்த–காம–மோட்சங்களுக்குச் சாதனமான இராமாயணம் என்பது மேன்மையான அமுதம் போன்றது. அதனால், எப்போதும் மிகவும் பக்தியுடன் கேட்கப்பட

வேண்டியதாகும். எவனுடைய முற்பிறவிகளில் செய்யப்பட்ட பாவங்கள் முற்றிலுமாக அழிந்து போய் விட்டனவோ, (எவனுடைய மனம் தூய்மையாகிவிட்டதோ,) அவனுக்கு இராமாயணத்தின்பால் மிகுந்த பற்று ஏற்படுகிறது என்பது நிச்சயம். பாவத்தின் பிடியில் சிக்கிக் கொண்டிருப்பவன், இராமாயணம் என்னும் மிகவும் புனிதமான காவியம் சொல்லப்படும்போது அதைக் கேட்காமல், மனத்தை வேறிடம் செலுத்தி, இழிவான வார்த்தையாடலில் உள்ளத்தைச் செலுத்துகிறான். (23–26)

அந்தணோத்தமர்களே! நீங்கள் எல்லோரும் மிகவும் புண்ணியத்தை அளிக்கக்கூடிய இராமாயணம் என்ற உயர்ந்த காவியத்தைக் கேட்பீர்களாக. அதைக் கேட்பதாலேயே பிறப்பு–முதுமை–இறப்பு பற்றிய அச்சம் போகும்; (அந்த மனிதன்) மாசற்ற மனம் உடையவனாகிறான். ஏன், அந்த மனிதனே அச்யுதன் வடிவானவனாகிறான்! மிகவும் மேன்மையுடையதும், பெறற்கரிய பேற்றினை அருள்வதும், அடியார் விரும்பிக் கேட்கும் வரங்களை அருள்வதுமான இந்தக் காவியம், எல்லா மக்களையும் சம்சாரக் கடலை எளிதாகக் கடக்கச் செய்கிறது. அடியார்களின் உள்ளக்கிடக்கையைப் பூர்த்தி செய்யும் இந்தக் காவியத்தைக் கேட்பவன், இராமபிரானுடைய தனிப் பெரும் உலகையே சென்றடைகிறான். (27,28)

பிரும்மா–விஷ்ணு–ருத்ரன் என்ற பெயர்களுடன் வெவ்வேறு உருவமேற்று, உலகங்களைப் படைத்து–காத்து–அழிப்பவனும், முழுமுதற்கடவுளும், மிகுந்த மகிமை பொருந்தியவனும், விரும்பத்தக்கவனுமான அந்தப் பரம்பொருளைத் தன் மனத்தில் நிலைநிறுத்தி இடைவிடாது பக்தி செலுத்துபவன் மோட்சத்தை அடைகிறான். எவன் பெயர்–தொழில் என்ற வேற்றுமைகள் அற்றவனோ, காரண–காரியங்களுக்கு அப்பாற்பட்டவனோ, மகோன்னதமான நிலையில் உள்ளவனோ, வேதாந்த சாஸ்திரங்களை ஊன்றிப் படிப்பதால் அறியத்தக்கவனோ, தன் இயல்பான ஒளியினால் பிரகாசிப்பவனோ, அவன் எல்லா புராண–வேதங்களைக் கற்றவர்களால் கண்களால் காணத்தக்கவன். (அந்தப் பரவஸ்துதான், இராமன். இராமாயணத்தைப் பக்தி–சிரத்தையுடன் படிப்பதால் பரமாத்ம தரிசனம் கிடைக்கும்.) (29,30)

அந்தணோத்தமர்களே! கார்த்திகை, மாசி, சித்திரை மாத சுக்லபட்சத்தில் (பிரதமை முதல்) ஒன்பது நாட்களுக்கு அமுதக் கதையாகிய இராமாயணத்தைக் கேட்க வேண்டும். இவ்வாறாக, சமஸ்த மங்களங்களையும் கொடுக்கவல்ல ஸ்ரீராமப்பிரபுவின் வரலாற்றைச் செவிமடுப்பவன், இவ்வுலகிலும் அவ்வுலகிலும் தான் விரும்பிய உயர் நோக்கங்களையெல்லாம் அடைகிறான். (31,32)

(இந்த முறைப்படி இராமாயணத்தைக் கேட்பவன்) எல்லாப் பாவங்களிலிருந்தும் நீங்கியவனாக, (தனக்கு முந்தைய) இருபத்தோரு தலைமுறையினருடன் இராமலோகத்தை அடைகிறான். அங்கே சோகம் என்ற பேச்சே இல்லை. சித்திரை, மாசி, கார்த்திகை மாத சுக்லபட்சத்தில், ஒன்பது நாட்கள் பாராயணம் செய்வதுடன், மிகவும் ஆர்வத்துடன் கதையைக் கேட்கவும் வேண்டும். இராமாயணம், உலகில் முதன்முதலாக இயற்றப்பட்ட காவியம்; தேவலோகத்தையும் முக்தியையும் அளிக்கக் கூடியது. ஆகவே, எல்லா வகையான அறச்செயல்களும் நசித்துப் போய்விடும் பயங்கரமான கலியுகத்தில், இராமாயண கதை என்னும் அமுதம், ஒன்பது நாட்கள் (என்ற முறைப்படி) செவிகளால் பருகப்பட வேண்டும். (33–35)

வேதியர்களே! பயங்கரமான கலியுகத்தில், ஸ்ரீராமனின் திருப்பெயரையே அண்டி இருப்பவர்கள் எவர்களோ, அவர்களே உலகில் ஆற்றவேண்டிய கடமைகளை முற்றிலுமாகச் செய்து முடித்தவர்கள் ஆவார்கள். அவர்களை கலிபுருஷன் அண்டுவதில்லை. (அவர்கள் கலியின் கொடுமைகளை அனுபவிப்பதில்லை.) எந்த வீட்டில் நாள்தோறும் இராமாயணச் சொற்பொழிவு நடைபெறுகிறதோ, அந்த வீடு புண்ணிய க்ஷேத்திரமாகிவிடுகிறது. அவ்விடம் சென்றதும் துஷ்டர்களுடைய பாவங்கள் நசித்துப் போகின்றன. (36,37)

தவச்செல்வர்களே! இராமாயணக் கதையை பக்தி–சிரத்தையுடன் கேட்காதவரையில், ஒரு மனிதனுடைய சரீரத்தில் பாவங்கள் குடிகொண்டிருக்கின்றன. (பாவங்களின் பயனான நோய்கள், இராமாயணக் கதையைக் கேட்பதால் நீங்கிவிடுகின்றன.) இராமாயணத்தைக் கேட்பது (பாராயணம் செய்வது) என்பது, உலகில் எளிதாக அடையக்கூடிய பேறு அல்ல; கோடிக்கணக்கான பிறவிகளில் செய்து, சேர்த்து வைக்கப்பட்டுள்ள மகத்தான புண்ணியத்தின் விளைவாகவே கிடைக்கக் கூடியது. (38,39)

வைதிகோத்தமர்களே! கார்த்திகை, மாசி, சித்திரை மாத சுக்லபட்சத்தில் இராமாயணத்தைக் கேட்டமாத்திரத்திலேயே, (அரக்க இயல்பை அடைந்துவிட்டிருந்த) ஸௌதாஸன் என்பவன், அந்தச் சாபத்திலிருந்து விடுபட்டான். கௌதம மாமுனிவரின் சாபத்தினால் அரக்க உருவத்தைப் பெற்றுவிட்ட ஸௌதாஸன், இராமாயணத்தைக் கேட்ட மகிமையால் விடுதலை அடைந்து, மீண்டும் பழைய வடிவத்தைப் பெற்றான். ஸ்ரீராமசந்திரனிடம் பக்திபூண்டு, இராம பக்தியில் திளைப்பவன் இந்தக் கதையைக் கேட்பானேயாகில், மகாபாவங்களிலிருந்தும் பலவகையான பாதகங்களிலிருந்தும் விடுபடுகிறான். (40–42)

ஸ்ரீஸ்கந்தபுராணம், இராமாயண மாஹாத்ம்யம் என்ற பகுதியில் முதலாவது அத்தியாயம் முற்றிற்று.

அத்தியாயம் : இரண்டு

நாரத–சனத்குமாரர்கள் உரையாடல்; சோமதத்தன் சாபம் நீங்குதல்

முனிவர்கள் கேட்கிறார்கள்— மாமுனிவரே! தேவரிஷியான நாரதர், அறம் நிறைந்த நூலாகிய இராமசரிதையைக் கூறும் இராமாயணத்தை, சனத்குமாரருக்கு எவ்வாறு கூறினார்? அவர்கள் இருவரும் எங்கே சந்தித்துக் கொண்டார்கள்? பண்பாளரே! பிரும்மவாதினிகளான (பரப்பிரும்மத்தை முற்றிலுமாக அறிந்த) அவர்கள், எந்தப் புண்ணியத்தலத்தில் சந்தித்துக் கொண்டார்கள்? இவருக்கு (சனத்குமாரருக்கு) நாரதர் கூறியவற்றைத் தாங்கள் எங்களுக்குக் கூறியருள வேண்டும். (1,2)

ஸூதர் கூறுகிறார்— மகாத்மாக்களே! சனகர் முதலியவர்கள், பிரும்மாவின் மானஸ புத்திரர்களாகக் கருதப்படுகிறார்கள். அவர்கள் எல்லோரும் அஹங்கார–மமகாரம் இல்லாத நைஷ்டிக பிரம்மசாரிகள். அவர்களுடைய பெயர்களைச் சொல்கிறேன், கேளுங்கள்— சனகர், சனந்தனர், சனத்குமாரர், சனாதனர். அவர்கள் நால்வரும் திருமாலடியார்கள்; மகாத்மாக்கள்; பரப்பிரும்மத் தியானத்திலேயே ஆழ்ந்திருப்பவர்கள்; ஆயிரம் சூரியனுக்கு நிகரான ஒளிபடைத்தவர்கள்; சத்தியமே பேசுபவர்கள்; முக்தியில் இச்சை கொண்டவர்கள். ஒருநாள், பிரும்மாவின் புத்திரர்களும் மகாதேஜஸ்விகளுமான சனகர் முதலியோர், பிரும்மாவின் சபா மண்டபத்தைப் பார்ப்பதற்காக, மேருமலைச் சிகரத்தைச் சென்றடைந்தார்கள். எல்லோராலும் போற்றப்படும் ஆன்மிக ஆற்றலையுடைய அவர்கள், மகாவிஷ்ணுவின் திருவடிகளிலிருந்து தோன்றியதும், மிகவும் புனிதமானதும், சீதா என்ற பெயரால் அழைக்கப்படுவதுமான கங்கா நதியைக் கண்டு, அதில் நீராட விரும்பினார்கள். (3–7)

அந்தணர்களே! இதனிடையில் தேவரிஷியான நாரதர், விஷ்ணுவின் பெயரான நாராயணன் முதலிய திருநாமங்களைக் கீர்த்தனம் செய்து கொண்டு, அவ்விடத்திற்கு வந்தார். நாராயணா, அச்யுதா, அனந்தா, வாசுதேவா, ஜனார்தனா, யக்ஞேசா, யக்ஞபுருஷா, இராமா, விஷ்ணோ! உங்களுக்கு நமஸ்காரம். இவ்வாறு உலகத்தையே புனிதப்படுத்தும் பகவான் ஸ்ரீஹரியின் நாமங்களை உச்சரித்துக் கொண்டும், உலக மக்களின் பாவங்களைப் போக்கும் கங்கையைத்

துதித்துக் கொண்டும் நாரத முனிவர் அங்கு வந்து சேர்ந்தார். மகாதேஜஸ்விகளான சனகர் முதலானோர் நாரதர் வருவதைப் பார்த்ததும், முறைப்படி அவரை வரவேற்று உபசரித்தார்கள். அவரும், அந்த முனிவர்களுக்குத் தலைவணங்கி, தன் மரியாதையைத் தெரிவித்தார். பின்னர், முனிவர்கள் நிறைந்திருந்த அந்தக் கூட்டத்தில், நாராயண நாமத்திலேயே மூழ்கித் திளைக்கும் முனிசிரேஷ்டரான நாரதரைப் பார்த்து, சனத்குமாரர் பின்வருமாறு கூறினார். (8–12)

சனத்குமாரர் கூறினார்— பேரறிவாளரே! முனிவர்களில் தலையாயவரே! நாரதரே! தாங்கள் எல்லாமறிந்தவர். தாங்கள் விஷ்ணு பக்தியில் ஊறித் திளைத்துக் கொண்டிருப்பவர். ஆகவே, தங்களைக் காட்டிலும் மேலானவர் எவருமேயில்லை. அசையும் பொருள்–அசையாப் பொருள் நிறைந்த இவ்வுலகம் எவரிடமிருந்து தோன்றியதோ, எவருடைய திருவடிகளிலிருந்து கங்கை நதி உற்பத்தியானதோ, அந்த ஸ்ரீஹரியைப் பற்றிய ஞானம் எவ்வாறு உண்டாகும்? தங்களுக்கு எங்களிடம் கருணை இருக்குமேயானால், இது பற்றிய உண்மையான விளக்கங்களை எங்களுக்குக் கூறவேண்டும். (13,14)

நாரதர் கூறுகிறார்— எவர் மிக உயர்ந்தவரோ, தேவதேவரோ, மேலானவற்றுக்கெல்லாம் மிக மேலானவரோ, மிக மகிமை பொருந்திய இடத்தில் வசிப்பவரோ, எல்லா குணங்களும் உடையவரோ, குணங்கள் அற்றவரோ, அந்த மகாபுருஷரை (ஸ்ரீராமனை) வணங்குகிறேன். ஞானம்–அஞ்ஞானம், தருமம்–அதருமம், வித்தை–அவித்தை வடிவினரும், எல்லோருடைய ஆத்மாவிலும் அவரவர் வடிவமாக விளங்குபவருமான தங்களுக்கு நமஸ்காரம். (15,16)

அசுரர்களைக் கொன்றவர்; நரகத்தை முடிவுக்குக் கொண்டு வந்தவர் (அடியார்களின் நரக பயத்தைப் போக்குபவர்); விரல்களின் அசைவினாலேயே (அவ்வளவு எளிதாக) தருமத்தைக் காப்பவர்; பூமியின் சுமையைக் குறைப்பதற்காக லீலாவிநோதங்களைச் செய்வதில் விருப்பமுடையவர் – இப்படிப்பட்ட ரகுகுலத்தின் ஒளிவிளக்கு போன்ற இராமதேவனை வணங்குகின்றேன். (தான், ஒரே வஸ்து ஆனாலும்) தன்னை நான்கு உருவங்களாகப் பிரித்து, அவதாரம் செய்து, வானரவீரர்களால் சூழப்பட்டு, (இலங்கைக்குச் சென்று,) அரக்கர் படையைக் கொன்றொழித்த தசரதகுமாரர் ஸ்ரீராமனை வணங்குகிறேன். (17,18)

இராமனுடைய (பெருமையைக் காட்டும்) இப்படிப்பட்ட வரலாறுகள் எல்லையில்லாமல் இருக்கின்றன. கோடிக்கணக்கான ஆண்டுகளானாலும் அவைகளை எண்ணி முடியாது. மனுக்களாலும் முனிவர்களாலும்கூட, எவருடைய திருநாமத்தின் பெருமையின் எல்லையைக் காணமுடியாதோ, (கண்ணுக்கெட்டாத) அந்த எல்லையை மிகவும் சாமானியனான நான் எவ்வாறு அடைய முடியும்? மகாபாதகங்களைச் செய்தவர்களும் எந்தத் திருநாமத்தை ஸ்மரிப்பதால் பரிசுத்தத்தை அடைகிறார்களோ, அவரை (அவ்வளவு மகா மகிமை பொருந்திய ஸ்ரீராமனை)ச் சிற்றறிவாளனாகிய நான் எவ்வாறு தோத்தரிக்க முடியும்? கோரமான கலியுகத்தில், இராமாயணத்தில் மூழ்கித் திளைக்கும் இருபிறப்பாளர்களே, வாழ்க்கைக் கடமைகளைச் செய்து முடித்துவிட்டவர் ஆவார்கள். (தேவ–ரிஷி–பித்ரு கடன்களிலிருந்து விடுபட்டவராவார்கள்.) அவர்களை நான் எப்போதும் வணங்குகிறேன். (19–22)

(சனத்குமாரரே!) கார்த்திகை, மாசி (மாகம்), சித்திரை (சைத்ரம்) மாத வளர்பிறையில் 'ஒன்பது நாட்களுக்குக் கேட்பது' என்ற முறைப்படி, இராமாயண கதாம்ருதத்தைச் செவிகளால் பருக வேண்டும். சுதாஸன் என்ற அந்தணன், கௌதமருடைய சாபத்தால் அரக்கர் உருவை அடைந்திருந்தான். ஆனால், இராமாயணத்தைக் கேட்டதன் பயனாக, அவன் அந்த சாபத்திலிருந்து விடுதலை அடைந்தான். (23,24)

சனத்குமாரர் கேட்கிறார்— எல்லா தருமங்களின் பலன்களையும் அளிக்கவல்ல இராமாயணம் எவரால் கூறப்பட்டது? முனிவர்களில் சிறந்தவரே! ஸௌதாஸனுக்கு கௌதம

சாபம் எவ்வாறு உண்டாயிற்று? இராமாயண மகிமையால், அவன் எவ்வாறு சாபத்திலிருந்து விடுதலை பெற்றான்? தாங்கள் அந்த வரலாற்றை முழுமையாகச் சொன்னால், நாங்கள் பெரும்பேறு பெற்றவர்களாவோம். சொல்பவர், கேட்பவர்களின் பாவங்களைப் போக்கும் இந்தக் கதையை விளக்கமாகக் கூறியருள வேண்டும். (25–27)

நாரதர் கூறுகிறார்— வேதவித்தகரே! வால்மீகியின் முகத்திலிருந்து தோன்றிய இராமாயணத்தைக் கேட்பீராக. அமுதமயமான இராமாயணக் கதை, 'ஒன்பது நாள் கேட்பது' என்ற முறையில் கேட்கப்பட வேண்டும். (28)

கிருதயுகத்தில், தருமம்–கர்மம் பற்றி முழுமையாக அறிந்திருந்த சோமதத்தன் என்ற பெயர் பெற்றவன், தருமத்தைக் கடைப்பிடிப்பதிலும் ஊக்கமுடையவனாக இருந்தான். ஸௌதாஸன் என்ற பெயராலும் அழைக்கப்பட்ட அந்த அந்தணன், மனோகரமான கங்கை நதிக்கரையில், பரப்பிரும்மத்தைக் கண்டறிந்த மாமுனிவரான கௌதமரிடமிருந்து, எல்லா அறங்களைப் பற்றியும் கேட்டறிந்தான். புராணங்கள், சாஸ்திரங்கள் ஆகியவற்றையும் கௌதமர் இவனுக்குக் கற்பித்தார். அவரால் சொல்லப்பட்ட சகல தருமங்களையும் ஸௌதாஸன் கேட்டறிந்தான். (29–31)

ஒருநாள், ஸௌதாஸன் பரமேசுவரனுடைய ஆராதனையில் ஈடுபட்டிருந்தபோது, அவனருகில் வந்த குரு கௌதமரைக் கண்டும் எழுந்து மரியாதையுடன் வரவேற்காமலிருந்தான். கௌதமர், ஆன்ம ஒளியின் கருவூலம்; பரம சாந்த குணமுடையவர்; பேரறிவாளர். தன்னுடைய சீடனான ஸௌதாஸன், அறநூல்களில் விதிக்கப்பட்ட (ஈசுவர ஆராதனம் என்ற) கர்மாவைச் செய்வது கண்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தார். ஆனால், ஜகத்குருவும் தேவதேவருமான எந்தப் பரமேசுவரனை அவன் ஆராதித்துக் கொண்டிருந்தானோ, அந்த ஈசுவரன், குருவுக்கு அவமரியாதை என்ற பாவத்தின் பயனாக, அரக்கக் குலத்தை அடையும்படி (ஸௌதாஸனுக்குச்) சாபம் கொடுத்தார். (அதைக் கேட்டதும் நடுங்கிப் போன) காலத்திற்கேற்ற உபாயத்தை மேற்கொள்ளும் திறன் படைத்த ஸௌதாஸன், கைகளைக் கூப்பிக் கொண்டு இவ்வாறு பிரார்த்தித்தான். (32–35)

அந்தணன் கேட்கிறான்— பகவன்! எல்லா அறங்களையும் அறிந்தவரே! எல்லாவற்றையும் காண்பவரே! தேவர்களுக்குத் தலைவர் போன்றவரே! என்னால் செய்யப்பட்ட குற்றங்கள் அனைத்தையும் மன்னித்தருள வேண்டும். (36)

கௌதமர் கூறுகிறார்— கார்த்திகை மாத சுக்லபட்சம் (பிரதமை முதல் நவமி வரை) ஒன்பது நாட்கள் இராமாயண கதாம்ருதம் பயபக்தியுடன் பருகப்படவேண்டும். அப்படிக் கேட்பாயேயானால், இந்தச் சாபத்தின் விளைவு நீண்ட காலம் இருக்காது; பன்னிரண்டு ஆண்டுகள் மட்டும் இருக்கும். (37)

அந்தணன் கேட்கிறான்— முதிர்ந்த ஞானம் உடையவரே! இராமாயணம் யாரால் கூறப்பட்டது? அதில் எவருடைய வரலாறு அடங்கியிருக்கிறது? இவையெல்லாவற்றையும் நீங்கள் எனக்குச் சுருக்கமாகக் கூறவேண்டும். இவ்வாறு கூறிவிட்டு, மனத்திற்குள் மகிழ்ச்சி கொண்ட அந்த ஸௌதாஸன், ஆசார்யரின் திருவடிகளை வணங்கினான். (38,39)

கௌதமர் கூறுகிறார்— அந்தணனே! இராமாயண காவியம் வால்மீகி முனிவரால் இயற்றப்பட்டது. இராமாவதாரம் செய்து, இராவணன் முதலான அரக்கர்களைக் கொன்றொழித்து, தேவர்கள் நலனைப் பாதுகாத்த அந்த வரலாற்றைக் கேள். கார்த்திகை மாத சுக்லபட்சப் பிரதமையிலிருந்து நவமி வரை ஒன்பது நாட்கள், எல்லாப் பாவங்களையும் போக்கும் இராமாயணம் கேட்கப்பட வேண்டும். இவ்வாறு கூறிவிட்டு, முற்றிலும் நிறைவேறிய ஆசைகளையுடைய (ஆசைகள் அற்றுப்போன) கௌதமர், தன் ஆசிரமத்தை நோக்கிச் சென்றார். (40–42)

அந்த அந்தணன், ராட்சஸ உருவத்தையடைந்து, மிகவும் துன்பப்பட்டு, எப்போதும் பசி–தாகம் தணியாமலும், மகாகோபத்தின் பிடியில் சிக்கியவனாகவும் ஆனான். அவனுடைய சரீரம்

தேய்பிறை இரவுக் காலம் போல் கருமையை அடைந்தது. பயங்கரமான தோற்றங்கொண்ட அவன், மக்கள் நடமாட்டமில்லாத காட்டில் சுற்றித் திரிந்தான். அவன், அங்கே பல்வகையான விலங்குகளையும், (காட்டு) மனிதர்களையும், பாம்பு–தேள்–பறவை–குரங்கு முதலியவற்றையும் பலவந்தமாகக் கைப்பற்றிப் புசித்து வந்தான். (43,44)

வேதோத்தமர்களே! (அந்த அரக்கனின் செயலால்) ஏராளமான எலும்புக்கூடுகள், செந்நீர் பெருகும் உடல்கள், இரத்தம் உறிஞ்சப்பட்ட பிரேதங்கள் ஆகியவற்றால் இந்த மண்ணுலகம் மிகவும் பயங்கரமாகத் தோற்றமளித்தது. ஆறு மாத காலத்திற்குள், நூறு யோஜனை பரப்பளவு கொண்ட அந்தப் பிரதேசத்தை நிர்மூலமாக்கிவிட்டு, பின்னர் வேறொரு காட்டுப் பகுதிக்குச் சென்றான். அங்கேயும் நாள்தோறும் மனிதர்களைக் கொன்று புசித்து வந்தான். எல்லாப் பிராணிகளுக்கும் பேரச்சத்தைக் கொடுத்து வந்த அவன், அலைந்து திரிந்து சென்று கொண்டிருக்கும் போது, ஒரு சமயம் நர்மதை நதிக்கரையை அடைந்தான். (45–47)

அந்தச் சமயத்தில், கலிங்க நாட்டில் பிறந்தவரும், கர்கர் என்று பெயர் பெற்றவரும், அறநெறி வழுவாதவருமான ஓர் அந்தணர் அவ்விடம் வந்து சேர்ந்தார். தோளில் கங்கைநீரைச் சுமந்து கொண்டும், வாரணாசி விசுவநாதரைத் துதித்துக் கொண்டும், இராமனுடைய திருநாமங்களைக் கீர்த்தனம் செய்துகொண்டும், மிக்க மகிழ்ச்சியில் திளைத்தவராக அவ்விடத்தை அடைந்தார். (48,49)

அங்கு வந்து கொண்டிருக்கும் அந்த முனிவரை, சுதாஸன் (ஸௌதாஸன்) என்ற அந்த அரக்கன் பார்த்தவுடன், 'இன்று நல்ல உணவு கிடைத்தது' என்று தனக்குள் கூறிக்கொண்டு, இரு கைகளையும் தூக்கிக் கொண்டு, அவரை நோக்கிச் சென்றான். ஆனால், அவரால் கூறப்பட்ட பகவந்நாமாக்களைக் கேட்டதும் தொலைவிலேயே நின்றுவிட்டான். அந்த அந்தணரை அவனால் கொல்ல முடியவில்லை. (திகைப்படைந்த) அந்த அரக்கன் (அவரைப் பார்த்து) பின்வருமாறு கூறினான். (50,51)

அரக்கன் கூறுகிறான்— பேரருளாளரே! பெரும்பேறு பெற்றவரே! தங்களுக்கு நமஸ்காரம். இது என்ன, மிகவும் ஆச்சரியமாக இருக்கிறதே! தாங்கள் கூறும் நாமங்களைக் கேட்ட மாத்திரத்திலேயே, (ஈவு–இரக்கமில்லாத) அரக்கர்கள்கூட வெகுதூரத்திற்கு ஓடிப்போகிறார்களே! இதற்கு முன்னர், ஆயிரங்கோடி வேதியர்கள் என்னால் புசிக்கப்பட்டிருக்கிறார்கள். (52,53)

அந்தணரே! தங்களிடம் உள்ள பகவானின் திருநாமம் என்ற கவசம் பேராபத்துக்களிலிருந்து தங்களைக் காப்பாற்றுகிறது. ஐயனே! அரக்கர்களாகிய நாங்கள்கூட பகவானின் திருநாமத்தைக் கேட்டவுடனே பரமசாந்தத்தை அடைகிறோம் என்றால், (அந்த நாமத்திற்குரியவனான) அச்யுதனின் பெருமை எத்தகையது! அந்தணோத்தமரே! பேரருளாளரே! தாங்கள் பாசம்–வெறுப்பு முதலான குற்றங்களை முற்றிலுமாகக் களைந்தவர். இராமகதையின் மகிமையால் மிகவும் இழிந்த, கொடிய இந்த நிலையிலிருந்து என்னைக் காப்பாற்றுங்கள். மாமுனிவரே! முன்பொரு சமயம், நான் என் குருவை அலட்சியப்படுத்திவிட்டேன். பின்னர், நான் வணங்கிப் பிரார்த்தித்துக் கொண்டபின், என்னுடைய குரு, எனக்கு அருள்புரியும்விதமாக, பின்வரும் சொற்களைக் கூறினார்— முன்பு, வால்மீகி முனிவரால் இயற்றப்பட்ட இராமாயணத்தை, கார்த்திகை மாத வளர்பிறையில் மிகுந்த பக்தியுடன் கேட்பாயாக. (54–57)

ஆசார்யர், மேலும் மங்களகரமான சொற்களைச் சொன்னார். இராமாயண கதாம்ருதம் 'ஒன்பது நாள் கேட்பது' என்ற மரபுப்படிக் கேட்கப்பட வேண்டும். ஆகவே, பிரும்மத்தை அறிந்தவரே! பேரருள் பெற்றவரே! சகல சாஸ்திரங்களையும் கற்றுத் தேர்ந்தவரே! இராமாயணக் கதையைச் சொல்லி, இப்போது செய்துவரும் பாவச் செயல்களிலிருந்து என்னைக் காப்பாற்ற வேண்டும். (58,59)

நாரதர் கூறுகிறார்— அந்த அந்தணோத்தமர், அரக்கன் வாயிலிருந்து புகழ்பெற்ற இராமாயணம் என்ற சொல்லையும், இராமனுடைய அளவிடற்கரிய பெருமையையும் கேட்டு மிகவும் வியப்படைந்தார். இராம நாமத்தில் திளைத்திருப்பவரும், கருணை மிக்கவருமான அவ்வந்தணர், சுதாஸன் என்ற அந்த அரக்கனை நோக்கிப் பின்வருமாறு கூறினார். (60,61)

அந்தணர் கூறுகிறார்— அரக்கர் தலைவனே! பெரும்பேறு பெற்றவனே! உன்னுடைய அறிவு தெளிவடைந்துவிட்டது. இராமபக்தியில் திளைத்திருப்பவனே! தற்போது நடந்துகொண்டிருக்கும் கார்த்திகை மாத வளர்பிறையில் இராமாயண மகாகாவியத்தைக் கேள்; இராமபிரானின் பெருமையையும் கேட்பாயாக. இராமத் தியானத்தில் ஈடுபட்டிருப்பவனை, யார் என்னதான் செய்ய முடியும்? (எந்த தெய்வம் அல்லது கோள், துன்பத்தைக் கொடுக்க முடியும்?) (ஏனென்றால், முப்பெரும் பொருளான) பிரும்மா, விஷ்ணு, சிவன் ஆகியோர், இராம பக்தியில் ஈடுபட்டிருக்கும் அடியார் இருக்கும் இடத்தில் வந்து தங்கிவிடுகிறார்கள். அந்த இடத்தில் தேவர்களும், சித்தர்களும், இராமாயணத்தில் மூழ்கி ஆனந்திப்பவர்களும் வந்து சேர்கிறார்கள். அதனால், கார்த்திகை வளர்பிறையில் இராமசரிதத்தைத் கேள். எனவே, நீ மிகுந்த கவனத்துடன் 'ஒன்பது நாட்கள் கேட்பது' என்ற விதிப்படிக் கேட்பாயாக. இவ்வாறு கூறிவிட்டு, கர்க முனிவர் இராமாயணத்தை உபதேசித்தருளினார். (62–66)

கதையைக் கேட்டவுடனேயே, அவனிடமிருந்த அரக்கத்தனம் விலகிப் போயிற்று. அரக்கத்தன்மையை விடுத்து, தேவதைகளுக்கு நிகரான (உயர்ந்த) தன்மையை அடைந்தான். கோடி சூரியனைப் போன்ற பேரொளி, நாராயணனுக்கு நிகரான கண்கவர் தோற்றம், சங்கு–சக்கரம்–கதையைக் கைகளில் தாங்கியவனாக, அவன், விஷ்ணுவின் இருப்பிடத்தை அடைந்தான் (சாரூப்யத்தை அடைந்தான்). அந்த அந்தணன், கர்க முனிவரை வெகுவாகப் போற்றிவிட்டு வைகுண்டத்தை அடைந்தான். (67–69)

நாரதர் கூறுகிறார்— வேதவிற்பன்னர்களே! இராமாயண கதை என்ற அமுதத்தைப் பருகுங்கள். இராமாயணத்தை எந்தக் காலத்தில் கேட்டாலும் நற்பயன் விளையும் என்றாலும், கார்த்திகை மாதத்தில் கேட்டால் அதிகமாக பயன் கிடைக்கும். கோடிக்கணக்கான மகாபாதகங்களைச் செய்தவனாக இருந்தாலும், இராமாயணத்தை நினைத்தமாத்திரத்திலேயே, எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுபட்டு உத்தமகதியை மனிதன் அடைகிறான். இராமாயணம் என்ற பெயரை, எப்போது ஒருவன் ஒரு தடவையேனும் சொல்கிறானோ, அப்போதே பாவங்களிலிருந்து விடுபடுகிறான்; காலக்கிரமத்தில் விஷ்ணுலோகத்தை அடைகிறான். எப்போதும் மிகுந்த பக்தியுடன் இராமாயணத்தைப் படிப்பவர்களும் கேட்பவர்களும் கங்கை நதியில் நீராடினால் கிடைக்கும் புண்ணியத்தைப் போன்ற நூறு பங்குப் பயனைப் பெறுவார்கள். (70–73)

ஸ்ரீஸ்கந்தபுராணம், இராமாயண மாஹாத்ம்யம் என்ற பகுதியில் இரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

அத்தியாயம் : மூன்று

மாக மாதத்தில் இராமாயணத்தைக் கேட்பதன் பலன்; மன்னன் சுமதி–சத்தியவதியின் முற்பிறவி வரலாறு

சனத்குமாரர் கேட்கிறார்— தேவரிஷி நாரதரே! இந்த இதிகாசமானது தங்களால் கூறப்பட்டது. இராமாயணத்தின் பெருமைகளை, இன்னும் விரிவாக மீண்டும் எடுத்துக் கூறுங்கள். (கார்த்திகை மாதத்தில் இராமாயணத்தைப் படிப்பதாலும் கேட்பதாலும் ஏற்படும் நற்பயன்களை எடுத்துக் கூறினீர்கள்.) தாங்கள் மனமுவந்து மற்ற மாதங்களில் (இராமாயணத்தைப் படிப்பதாலும்,

கேட்பதாலும்) ஏற்படும் மகிமைகளைக் கூறுங்கள். முனிவரே! தங்கள் சொற்களாகிற அமுதத்தைப் பருகும் யாருக்குத்தான் பேரானந்தம் உண்டாகாது? (1,2)

நாரதர் கூறுகிறார்— இராமனுடைய மகிமைகளை அறிந்து கொள்வதற்கு மிகவும் ஆர்வத்துடன் இருக்கிறீர்கள் என்பதால், நீங்கள் எல்லோரும் பெரும் பாக்கியசாலிகள்; கடமைகளைச் செய்து முடித்தவர்கள் என்பதில் சந்தேகமில்லை. பிரும்மத்தை அறிந்த முனிவர்கள், மிகவும் புண்ணியம் செய்தவர்களுக்கும்கூட, இராகவனுடைய பெருமையைக் கேட்பது என்ற விஷயம் எளிதில் பெறக் கூடியதல்ல என்று சொல்லியிருக்கிறார்கள். மாமுனிவர்களே! மிகவும் பழமையானதும் பல்சுவை கொண்டதுமான (இராமாயணம் என்ற) இதிகாசத்தைக் கேளுங்கள். அது, எல்லாப் பாவங்களையும் போக்கக் கூடியது; எல்லா நோய்களையும் அழிக்கக் கூடியது. (3–5)

முன்னர், துவாபர யுகத்தில், சந்திர வம்சத்தில் தோன்றிய சுமதி என்ற மன்னர், ஏழு த்வீபங்களுக்கும் ஒப்பற்ற பேரரசராகச் செல்வச் செழிப்புடன் இருந்து வந்தார். அவர் அறநெறி தவறாதவர்; வாய்மை தவறாதவர்; எல்லாவித நற்குணங்களும் வாழ்க்கைச் செல்வங்களும் நிறைந்தவர்; எப்போதும் இராமகாதையைக் கேட்பவர்; இராமனை வழிபடுவதில் ஊக்கங்கொண்டவர். இராம வழிபாட்டில் ஆழ்ந்திருக்கும் அடியார்களுக்குப் பணிபுரிவதில் பெருவிருப்பம் உடையவர்; அகங்காரம் இல்லாதவர்; மரியாதைக்குரிய சான்றோர்களிடத்தில் பெருமதிப்புக் கொண்டிருப்பவர்; எல்லாவற்றையும் சமமாகப் பார்ப்பவர்; நல்ல பண்பாளர். மன்னராகிய சுமதி, எல்லாப் பிராணிகளின் நலனிலும் அக்கறை உடையவர்; அமைதியாக இருப்பவர்; நன்றி மறவாதவர்; புகழ் பெற்றவர். பெரும்பேறு பெற்ற அவருடைய மனைவி, எல்லா சுபலட்சணங்களும் அமைய பெற்றவள். கணவரிடத்தில் தன் உயிரையே வைத்திருந்த கற்புக்கரசியான அவள் பெயர், சத்தியவதி. கணவன்–மனைவியான அவ்விருவரும் இராமாயணத்தைப் படிப்பதிலும் கேட்பதிலும் எப்போதும் ஈடுபட்டு வந்தார்கள். (6–10)

நாள்தோறும் அன்னதானம் செய்து வந்தார்கள்; தண்ணீர் தானம் செய்தார்கள் (தண்ணீர்ப்பந்தல் அமைத்தார்கள்). பெரிய நீர்நிலைகள், பூஞ்சோலைகள், கிணறுகள் அமைத்துக் கொடுத்தார்கள். பெரும் பாக்கியசாலியான அந்த மன்னர், இராமாயணத்தில் ஆழ்ந்து தோய்ந்தவராக இருந்து வந்தார். உள்ளத்தில் பக்தியுணர்வு நிறைந்து விளங்க, இராமாயண காவியத்தைத் தானே பாராயணம் செய்வார்; அல்லது பிறர் சொல்லக் கேட்பார். அறத்தின் முற்றறிவுடைய, எப்போதும் இராமனிடம் திளைத்த மன்னரையும், அவருடைய மனைவி சத்தியவதியையும் தேவர்கள்கூடப் போற்றிப் பாராட்டினார்கள். (11–13)

மூன்றுலகங்களிலும் புகழ் பெற்றவர்களும் அறவொழுக்கம் தவறாதவர்களுமான அந்தத் தம்பதியைக் காண்பதற்கு, ஒரு சமயம், ஏராளமான சிஷ்யர்களை அழைத்துக் கொண்டு விபாண்டக முனிவர் வந்தார். விபாண்டகர் வந்து கொண்டிருப்பதைக் கண்டு மிகவும் மகிழ்ச்சியடைந்த மன்னர், உபசாரங்களுக்குரிய பல பொருள்களை எடுத்துக் கொண்டு, மனைவி உடன்வர, அவரை எதிர்கொண்டழைக்கச் சென்றார். அதிதி உபசாரங்களைப் பெற்றுக் கொண்டு, மனப்பூரிப்புடன் இருக்கையில் அமர்ந்துகொண்ட அவரை நோக்கி, தன் இருக்கையில் உட்கார்ந்து கொண்டு, இரு கைகளையும் கூப்பியவண்ணம் மன்னர் கூறினார். (14–16)

மன்னர் கூறுகிறார்— "அண்ணலே! தங்கள் வருகையால் நான் பெரும்பேறு பெற்றவனாகி விட்டேன். ஏனென்றால், மகாத்மாக்களின் வருகையால் சௌக்கியங்கள் உண்டாகின்றன என்று மேலோர்கள் புகழ்ந்துரைக்கிறார்கள். எவ்விடத்தில் மகான்களுக்கு அன்பு தோன்றுகிறதோ, அவ்விடத்தில் எல்லா வகைச் செல்வச் செழிப்பும் தானாகவே தோன்றிவிடுகிறது. ஆன்மப் பொலிவு, புகழ், செல்வம், புத்திரன் ஆகியவையெல்லாம் ஏற்படுகின்றன என்று அறிவாளர்கள்

கூறுகிறார்கள். முனிவரே! ஐயனே! எந்த இடத்தில் சாது–மகாத்மாக்களின் பெருங்கருணை தோன்றுகிறதோ, அவ்விடத்தில் நாள்தோறும் சுக–சௌக்கியங்கள் பெருகுகின்றன. (17–19)

பிரும்மன்! வேதவித்தகரின் திருவடியைக் கழுவிய நீரை எவனொருவன் தன் தலையில் தெளித்துக் கொள்கிறானோ, அவன் எல்லா புண்ணிய தீர்த்தங்களிலும் நீராடிய புண்ணியத்தைப் பெறுகிறான் என்பதில் ஐயமில்லை. முற்றிலும் மன அமைதி பெற்ற மாமுனிவரே! என்னுடைய புத்திரர்கள், மனைவிகள் மற்றும் எல்லாச் செல்வங்களையும் தங்களுக்குக் காணிக்கையாக்கி விட்டேன். நாங்கள், தங்களுக்கு எவ்வாறு சேவை செய்ய வேண்டும்? என்று ஆணையிடுங்கள்.'' இவ்வாறு கூறிமுடித்த மன்னரைப் பார்த்து, முனிவராகிய விபாண்டகர், தன் கையினால் மன்னரைத் தொட்டுக் கொண்டு (அவ்வளவு மனநெருக்கத்துடன்) பெரும் மகிழ்ச்சியுடன் பதில் கூறினார். (20–22)

முனிவர் கூறுகிறார்— மன்னனே! உன்னுடைய பேச்சு, உன் குலத்திற்கேற்ற வகையில் உயர்ந்து விளங்குகிறது. பணிவோடு இருப்பவர்கள் எல்லாப் பெருமைகளுக்கும் உரியவராகிறார்கள். நாடாள்பவனே! நான், எப்போதும் நல்வழியிலேயே செல்லும் உன் உபசரிப்பால் திருப்தி அடைந்திருக்கிறேன். உனக்கு மங்களமுண்டாகட்டும். பெருமைக்குரியவனே! நான் கேட்கப் போவதற்கு உரிய பதிலைக் கூறுவாயாக. பகவான் ஸ்ரீஹரியைச் சந்தோஷப்படுத்தும் பல புராணங்கள் இருக்கின்றன. அவைகளையும் நீ படித்துப் பாராயணம் செய்ய முடியும். ஆனால், நீயோ மாக (மாசி) மாதத்தில் இராமாயணத்தில் ஆழ்ந்து லயப்பட்டிருக்கிறாய். சாந்தகுணம் படைத்த உன் மனைவியும், எப்போதும் இராமன் நினைவாகவே இருக்கிறாள். 'இது, ஏன் இப்படி?' என்பதை உள்ளபடி நீ எனக்கு உரைக்க வேண்டும். (23–26)

மன்னர் கூறுகிறார்— அண்ணலே! தாங்கள் கேட்ட கேள்விக்கு விடை கூறுகிறேன், கேளுங்கள். முனிவரே! நம் இருவரிடையே நிகழும் இந்த நிகழ்ச்சி மிகவும் வியப்பை அளிப்பதன்றோ! பெரியோரே! முற்பிறவியில், நான் மாலதி என்ற பெயருடைய ஒரு வேளாளனாக இருந்தேன். தீய வழிகளிலேயே சென்று, எல்லாப் பிராணிகளுக்கும் துன்பத்தைக் கொடுத்து வந்தேன். மகா கருமியாக இருந்தேன்! அறத்தை வெறுப்பவனாகவும், கோவில் சொத்துக்களை அபகரிப்பவனாகவும், பாதகச் செயல்கள் செய்பவர்களுடன் கூட்டுறவு வைத்துக் கொண்டும், தெய்வங்களுக்கு நிபந்தமாக அளிக்கப்பட்ட பொருள்களைக் கொண்டு வாழ்க்கை நடத்துபவனாகவும் இருந்தேன். பசு வதை, அந்தணரைக் கொல்லுதல், திருட்டு, உயிர்ப் பிராணிகளை வதைத்தல், கடுமையான பேச்சு, பாவச் செயல்கள் புரிதல், பொதுமகளிரை நாடுதல் போன்றவைகளை நாள்தோறும் செய்து வந்தேன். (27–30)

வீட்டுப் பெரியோர்களின் அறிவுரைகளை உதாசீனப்படுத்தி, மேற்கண்டபடி தவறான வழிகளில் சென்ற என்னை, சிறிது காலத்திற்குப் பின்னர், உற்றார்–உறவினர்கள் கைகழுவி விட்டார்கள். அதனால், மனமுடைந்து ஒரு காட்டைச் சென்றடைந்தேன். தினமும் புலால் உணவைப் புசித்துக் கொண்டு, வழிபோக்கர்களுக்கு இடையூறு அளித்து, மக்கள் கூட்டமே இல்லாத அந்தக் காட்டில் தாங்க முடியாத துயரத்துடன் தன்னந்தனியனாக வசித்து வந்தேன். ஒரு நாள், பசி–தாகம், களைப்பு–இளைப்பு, தூக்கம் தாங்காமல் சுழலும் கண்களுடன், மக்களே இல்லாத ஒரு காட்டில், தெய்வவசமாக வசிஷ்டரின் ஆசிரமத்தைக் கண்டேன். (31–33)

புகழ்பெற்ற முனிவரே! அந்த ஆசிரமத்தின் அருகில் ஒரு தடாகம் இருந்தது. அதில் அன்னம், நீர்க்காக்கை முதலிய பறவைகள் ஏராளமாக இருந்தன. அந்த நீர்நிலையின் நாற்புறமும் காட்டு மலர்களின் கொத்துக்களால் மறைக்கப்பட்டிருந்தன. (மலர்க்கொத்துக்கள் நிறைந்த மரங்கள் வளர்ந்திருந்தன.) அந்த நீர்நிலையின் தண்ணீரைப் பருகித் தாகத்தைத் தணித்துக் கொண்டேன். அதன் கரையில் உட்கார்ந்து உடல் சிரமத்தைப் போக்கிக் கொண்டேன். பின், சில மரங்களைப் பெயர்த்தெடுத்து, அவற்றின் வேர்களை உண்டு பசியைத் தணித்துக்

கொண்டேன். வசிஷ்டரின் ஆசிரமத்தருகிலேயே நான் வசிக்கத் தொடங்கினேன். (அங்கு சிதறிக் கிடந்த) ஸ்படிகத் துண்டுகளைக் கொண்டு சுவர்கள் கட்டினேன். இலை–புல்–மரக்கட்டைகள் சேகரித்து, மேலே மூடி ஒரு நல்ல வீட்டைக் கட்டிக் கொண்டேன். வேடர்களின் வாழ்க்கையை ஏற்று, பல்வகை விலங்குகளையும் கொன்று, அதன்மூலம் வாழ்க்கையை நடத்திக் கொண்டு இருபது ஆண்டுக்காலம் அங்கே தங்கியிருந்தேன். (34–37)

அப்போது, விந்திய நாட்டில் வேடர் குலத்தில் தோன்றிய, காளி என்று பெயர் பெற்ற இவள் – நற்குணம் படைத்த இந்த என் மனைவி – என்னிடம் வந்து சேர்ந்தாள். பிரும்மன்! உற்றார்–உறவினர்களால் கைவிடப்பட்டு, அதனால் மிகவும் துக்கமடைந்து, உடல் நலிந்து, பசி–தாகங்களால் மிகவும் களைப்படைந்து, 'யார் எனக்கு உணவு அளிப்பார்கள்?' என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தாள். அங்குமிங்கும் அலைந்து திரிந்துகொண்டிருந்த இவள், மனித நடமாட்டமில்லாத, நான் வசித்துக் கொண்டிருந்த அந்தக் காட்டிற்குத் தெய்வச்செயலாக வந்து சேர்ந்தாள். கோடை காலம். வெளியே வெயில் வாட்டியெடுத்தது; உள்ளே (மனத்தினுள்ளே) துயரம் வாட்டியெடுத்தது. இவ்வாறு மிகவும் துன்பத்தில் தவித்துக் கொண்டிருந்த இந்தப் பெண்ணைக் கண்டு எனக்கு இரக்கம் ஏற்பட்டது. (38–41)

பிரும்மத்தை அறிந்த மகாஞானியே! நான், இவளுக்குக் குடிப்பதற்குத் தண்ணீரும், உண்பதற்குப் புலாலும், காட்டுப் பழங்களும் கொடுத்தேன். அதன்பின், களைப்பு நீங்கிய அவளிடம், அவள் பற்றிய முழு விபரங்களையும் கேட்டேன். மாமுனிவரே! அவள் தன் பிறப்பு–வளர்ப்பு பற்றிக் கூறியவைகளைக் கேளுங்கள். இவள் பெயர் காளி; வேடர் குலத்தில் தோன்றியவள். பேரறிவாளரே! தாம்பிகன் என்பவனுடைய மகளாகிய இவள் விந்தியமலையில் வசித்துக் கொண்டிருந்தாள். எப்போதும் பிறர் சொத்துக்களை அபகரித்து வந்தாள்; கோள் சொல்வதே இவள் வேலை. ஞானம் பெற்றவரே! ஒரு நாள் இவள் தன் கணவனையே கொன்று விட்டாள். அதனால் உறவினர்களால் துரத்திவிடப்பட்டாள். சுற்றித் திரிந்து கொண்டிருக்கும் போது, மக்களே இல்லாத இந்தக் காட்டில் என்னிடம் வந்து சேர்ந்தாள். இவ்வாறு, தான் செய்த காரியம் எல்லாவற்றையும் என்னிடம் தெரிவித்தாள். (42–45)

முனிவரே! வசிஷ்டருடைய ஆசிரமத்திற்கு அருகில், நானும் இவளும் கணவன்–மனைவி என்ற உறவுகொண்டு, புலால் உணவை உண்டு வாழ்க்கையைக் கழித்துக் கொண்டிருந்தோம். ஒரு நாள், உணவுக்காக (விலங்குகளை வேட்டையாடுவதற்காக) வசிஷ்டருடைய ஆசிரமம் அருகில் சென்றோம். சான்றோரே! தேவரிஷிகளின் கூட்டத்தை அங்கே பார்த்ததும் அருகில் சென்றோம். அப்போது நடந்து கொண்டிருந்த மாக (மாசி) மாதத்தில் நாள்தோறும், அந்தணர்கள் இராமாயணம் படிப்பதைக் கண்டோம். மகாபலம் படைத்தவர்களாக இருந்தாலும், அப்போது உணவு உண்ணாததால் பசியும் தாகமும் எங்களை வாட்டியெடுத்தன. எனவே, எங்கள் விருப்பம் இல்லாமலே, வசிஷ்டருடைய ஆசிரமத்தை நோக்கிச் சென்றோம். (46–49)

இராமாயணத்தைக் கேட்பதற்காக, பக்தியுடன் ஒன்பது நாட்கள் தொடர்ந்து அவ்விடம் சென்றோம். அது முடிந்தவுடனேயே எங்களுக்கு மரணம் ஏற்பட்டுவிட்டது. ஒன்பது நாட்கள் இராமாயணம் கேட்ட அந்தப் புண்ணியச் செயலால், பகவான் மதுசூதனன் மனம் களித்து, எங்களை அழைத்துக் கொண்டு போவதற்காக, தன்னுடைய தூதர்களை அனுப்பி வைத்தார். அவர்கள் எங்களை ஒரு விமானத்தில் ஏற்றிப் பரமபதத்திற்கு அழைத்துச் சென்றார்கள். நாங்கள் இருவரும் தேவதேவனான சக்கரபாணியின் சந்நிதியை அடைந்தோம். (50–52)

அரிய, பெரிய போகங்களை எவ்வளவு காலம் நாங்கள் அவ்வுலகில் அனுபவித்தோம் என்பதைக் கேளுங்கள். ஆயிரம் கோடி யுகங்களும் நூறு கோடி யுகங்களும், ஸ்ரீராமனுடைய அவ்விடத்தில் இருந்துவிட்டு, பிரும்மலோகம் போய்ச் சேர்ந்தோம். அங்கேயும், (முன்னர் கூறிய) அதே அளவு காலம் இருந்துவிட்டு தேவலோகம் வந்து சேர்ந்தோம். முனிசிரேஷ்டரே! அங்கேயும்

அதே அளவு காலம் (ஆயிரத்து நூறு கோடி யுகங்கள்) உத்தமோத்தமமான போகங்களை அனுபவித்துவிட்டு, பின்னர், இந்த மண்ணுலகை வந்தடைந்தோம். (53–55)

இராமாயணத்தை மனமொப்பிக் கேட்காவிட்டாலும், ஏனோ–தானோவென்று கேட்டதன் பயனாக, இங்கேயும் இப்போது நாங்கள் அனுபவித்துவரும் மகத்தான பாக்கியங்களைப் பெற்றோம். அறவடிவினரே! இராமாயண கதையை பக்திபூர்வமாக ஒன்பது தினங்கள் கேட்டாலே, அது, அவனுடைய மறுபிறவி, வயோதிகம், மரணம் என்பவைகளை அழித்துவிடும். அந்தணோத்தமரே! மனப்பூர்வமாக இல்லாவிட்டாலும் ஏதோவொருவிதத்தில் இராமாயணத்தைக் கேட்டாலே, அது மிகப்பெரும் பயனை அளிக்கிறது. எனவே, அந்த இராமாயணத்தைக் கேளுங்கள். (56–58)

நாரதர் கூறுகிறார்— இவையெல்லாவற்றையும் கேட்ட பின்னர், மாமுனிவரான விபாண்டகர், மன்னரை வாழ்த்திவிட்டு, தன்னுடைய தபோவனத்திற்குச் சென்றார். வேதவித்தகர்களே! நீங்கள் எல்லோரும் தேவதேவனும் சக்கரதாரியுமான ஸ்ரீஹரியின் கதையைக் கேளுங்கள். இராமாயண கதை, (விரும்பியவற்றையெல்லாம் அளிக்கும்) காமதேனு என்று சொல்லப்படுகிறது. எல்லா தருமங்களின் பலனையும் கொடுக்கக்கூடிய இராமாயணத்தை, மாசி மாத வளர்பிறையில், தொடர்ந்து ஒன்பது நாட்கள் கேட்கவேண்டும். புனிதமான இந்த வரலாறு, எல்லாப் பாவங்களையும் போக்கக் கூடியது. எவனொருவன் இதைப் படிக்கிறானோ அல்லது கேட்கிறானோ, அவன் இராமபக்தனாக ஆகிவிடுகிறான். (59–62)

ஸ்ரீஸ்கந்தபுராணம், இராமாயண மாஹாத்ம்யம் என்ற பகுதியில் மூன்றாவது அத்தியாயம் முற்றிற்று.

அத்தியாயம் : நான்கு

சைத்ர மாதத்தில் இராமாயணத்தைக் கேட்பதால் ஏற்படும் பலன்; கலிகன்– உத்தங்கன் வரலாறுகள்

நாரதர் கூறுகிறார்— இன்னொரு மாதத்தில் (சைத்ரம்) இராமாயணத்தைப் படிப்பதால் ஏற்படும் பலன்களைச் சொல்கிறேன், கவனமாகக் கேளுங்கள். இராமாயண மாஹாத்ம்யம், எல்லாப் பாவங்களையும் போக்கக் கூடியது; புண்ணியம் தருவது; எல்லாத் துயரங்களையும் அழிப்பது; பெண்கள் மற்றும் நான்கு வருணத்தாருக்கும், அவர்கள் விரும்பியவற்றை எல்லாம் கொடுக்கக் கூடியது; எல்லா விரதங்களின் பலன்களைக் கொடுப்பது; தீயகனவுகளை அழிப்பது; பெரும்பேற்றை அளிப்பது; இகலோக–பரலோக சௌக்கியத்தைக் கொடுக்கக் கூடியது. இந்த விஷயத்தில் (சைத்ர மாத இராமாயணம் படிப்பதில்), ஒரு பழைய வரலாற்றை ஆன்றோர்கள் கூறுகிறார்கள். அந்த வரலாற்றைப் படிப்பவர்கள்–கேட்பவர்களின் எல்லாப் பாவங்களும் நசித்துப் போகின்றன. (1–4)

முன்பொரு கலியுகத்தில், கட்டுப்பாடுகள் இல்லாமல் திரிந்த கலிகன் என்பவன் இருந்தான். பிற பெண்களையும் பிறர் சொத்துக்களையும் அபகரிப்பதையே தொழிலாகக் கொண்டவன். எப்போதும் பிறரைப் பற்றிக் குறை கூறிக் கொண்டேயிருப்பான்; எல்லாப் பிராணிகளையும் துன்புறுத்துவான். நூறு, ஆயிரக்கணக்கில் அந்தணர்களையும் பசுக்களையும் கொன்று போட்டிருக்கிறான். தேவாலய சொத்துக்களையும், பிறருடைய செல்வத்தையும் பறிப்பதில் எப்போதும் ஈடுபட்டிருந்தான். மாபெரும் பாவங்களை அவன் செய்து விட்டிருந்தான். (5–7)

அவன் செய்த பாவங்களைக் கோடி வருஷங்கள் எண்ணினாலும் முடிவு காண முடியாது. மகாபாவியும், பிராணிகளுக்கு யமன் போன்றவனுமான அவன், ஒரு சமயம், எல்லாச் செல்வச் செழிப்புகளும் நிறையப் பெற்ற ஸௌவீரம் என்ற பட்டணத்தை அடைந்தான். உயர்ந்த ஆடை–அணிகலன்கள் அணிந்த யுவதிகள்; சுத்தமான நீர் நிரம்பிய தடாகங்கள்; பல்வகைப்

பொருள்களை விற்கும் விதவிதமான கடைகள் முதலியவற்றால், அந்த நகரம் பொலிவுடன் விளங்கிற்று. அந்த நகரத்தின் பூஞ்சோலையில், பகவான் கேசவனுடைய (இராமனுடைய) திருக்கோவில் விளங்கிற்று. (8–10)

அந்த ஆலயத்தின் கோபுரங்களில் தங்கக் கலசங்கள் இருப்பதைப் பார்த்து, அந்தத் தீயவன் மிகவும் மகிழ்ச்சி அடைந்தான். 'இங்கேயுள்ள ஏராளமான தங்கத்தைத் திருடிக் கொண்டு செல்வேன்' என்று நிச்சயித்துக் கொண்டான். திருடிக் கொண்டு சென்றுவிடுவது என்று நிச்சயம் செய்து கொண்ட அவன், அந்தத் திருக்கோவிலுக்குள் சென்றான். அங்கே அமைதியானவரும், இறைத்தத்துவங்களின் உண்மையை உள்ளபடித் தெளிவாக அறிந்தவரும், திருமாலின் சேவையில் மனங்குவிந்திருப்பவரும், தவத்தின் நிலைக்களனும், தனியாக இருந்தவரும், கருணைமிக்கவரும், பொருட்பற்றில்லாதவரும், தியானத்தில் ஆர்வமுடையவருமான உத்தங்கர் என்ற அந்தணரைப் பார்த்தான். (11–13)

அவரை அங்கே பார்த்ததும், 'இவர் என் திருட்டுக்குத் தடையாக இருக்கிறாரே?' என்று எண்ணினான். (அதனால், சரியான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தான்.) நட்டநடுநிசியில் தெய்வத்தின் சொத்துக்களை ஒன்றுதிரட்டினான். (உத்தங்கர், தான் திருடியதை வெளியே சொல்லிவிடுவாரே? என்பதால்,) அவரைக் கொல்ல விரும்பி, அவர் மார்பில் தன் காலை வைத்து அழுத்தி, கழுத்தைத் தன் கையினால் திருகி, உடை வாளை எடுத்து, அவரைக் கொல்ல முற்பட்டான். தன்னைக் கொல்வதற்கு முடிவு செய்துவிட்ட அவனைப் பார்த்து உத்தங்கர் கேட்கிறார். (14,15)

உத்தங்கர் கேட்கிறார்— ''ஐயனே! அண்ணலே! நல்லவரே! குற்றமேதும் செய்யாத என்னைக் கொலை செய்ய வீணாகத் தாங்கள் முயல்கிறீர்கள். நீசரே! நான் உங்களுக்கு என்ன கெடுதல் செய்தேன்? என்பதைச் சொல்லுங்கள். குற்றம் செய்தவனைத் தேடிக் கண்டுபிடித்து, அவனுக்குத் தண்டனை கொடுப்பது என்பது உலக வழக்கம். நல்லவரே! குற்றமே செய்யாதவனை நற்பண்புள்ள மனிதர்கள் வீணாகத் துன்புறுத்துவதில்லை. அமைதியான மனத்தை உடைய நல்லோர்கள், தம் பகைவர்களிடமும் அறிவிலிகளிடமும்கூட சில நற்குணங்கள் இருப்பதை எண்ணிப் பார்த்து, அவர்களிடமும் பகைமை பாராட்டுவதில்லை. எவன், பிறர் தன்னை அடிக்கடி இழித்துக் கூறுவதைக் கேட்டும் பொறுமையுடன் இருக்கிறானோ, அவனை உத்தமமான மனிதன் என்று கூறுகிறார்கள். அவனே பகவான் விஷ்ணுவுக்குப் பிரியமானவன் என்றும் கூறப்படுகிறான். (16–20)

பிறர் நலனில் அக்கறை கொண்டவர், ஒருவன் தன்னை அழிக்க வரும் சமயத்திலும் அவனிடம் விரோதம் கொள்வதில்லை. சந்தன மரத்தை வெட்டும் கோடரியை அது பழிதீர்த்துக் கொள்வதில்லை. மாறாக, அதன் முனையில் நறுமணத்தைப் பூசிவிடுகிறது. அட! என்ன கஷ்டம்! விதி மிகவும் பலம் வாய்ந்தது. மக்களைப் பலவிதங்களிலும் தாக்கித் துன்புறுத்துகிறது. மக்களுடைய உறவைத் துறந்து வசிப்பவனும்கூட, தீயவர்களால் துன்புறுத்தப்படுகிறான். எந்தக் குற்றமும் செய்யாதவனையும்கூட இவ்வுலகில் தீயோர்கள் கஷ்டப்படுத்துகிறார்கள். செம்படவர்கள், கோள் சொல்பவர்கள், வேடர்கள் ஆகியோர், இவ்வுலகில் காரணம் ஏதுமில்லாமலே மற்றப் பிராணிகளிடம் பகைமை பாராட்டுகிறார்கள். (21–23)

ஆகா! மாயைக்குத்தான் எவ்வளவு ஆற்றல்! உலகத்திலுள்ள அத்தனை மக்களையும் மயக்கிவிடுகிறது! புதல்வன், நண்பன், மனைவி முதலியோர்கள் மூலம் எல்லாவிதமான துக்கங்களிலும் ஆழ்த்திவிடுகிறது. பிறர் பொருளைத் திருடி, ஒருவன் தன் மனைவி–மக்களைப் போஷிக்கிறான். ஆனால், அவனுக்கு என்ன லாபம்? கடைசியில், அவன் எல்லாவற்றையும் விட்டுவிட்டுத் தன்னந்தனியனாக மேலே போகிறான். என்னுடைய தாய், என்னுடைய தந்தை, என் மனைவி, என் குழந்தைகள், என் சொத்து – என்று, இம்மாதிரியாக மமகாரம் மனிதர்களை வாட்டி வதைக்கிறது. (24–26)


செல்வம் சம்பாதித்து உறவினர்களுக்குத் தாராளமாகக் கொடுத்துவரும் காலம் வரையில், அவர்கள் இவனிடம் ஒட்டிக்கொண்டு சுகத்தை அனுபவிப்பார்கள். ஆனால், முறைகேடான வழிகளில் பணம் சம்பாதித்ததன் பயனான பாவங்களை இவன் மட்டுமே அனுபவிக்கிறான்'' என்று அந்த உத்தமர் சொன்னதைக் கேட்டு, மனத்திற்குள் ஆலோசித்துப் பார்த்து, மனம் பதறி, கைகளைக் கூப்பிக் கொண்டு, 'மன்னிக்க வேண்டும், மன்னிக்க வேண்டும்' என்று பல தடவை கெஞ்சினான், கலிகன். அந்தப் பெரியவருடைய கூட்டுறவினாலும், திருமால் சந்நிதி விசேஷத்தாலும், அந்தத் தீயவன் பாவங்கள் ஒழிந்து, மிகவும் பச்சாதாபப்படத் தொடங்கினான்— ''தங்களைப் பார்த்தவுடனேயே அவைகள் எல்லாம் மறைந்து போய்விட்டன. (27–30)

ஐயனே! என்னுடைய அறிவு எப்போதும் பாவத்தையே சிந்தித்துக் கொண்டிருந்தது. எப்போதும் பாவச் செயல்களையே செய்து கொண்டிருந்தேன். எனக்கு எவ்வாறு மேன்மை ஏற்படும்? நான் யாரை அடைக்கலம் புகவேண்டும்? முற்பிறவிகளில் செய்த பாவங்களின் பயனாக, இப்பிறவியில் தீயகுணங்களை உடையவனானேன். இந்த ஜன்மத்திலும் கணக்கில்லாமல் பாவங்கள் செய்திருக்கிறேன். இந்த நிலையில், இனி எனக்கு என்ன கதி கிடைக்கப் போகிறதோ?'' மகாத்மா(வாகிவிட்ட) கலிகனிடமிருந்து இந்தச் சொற்களைக் கேட்ட உத்தங்கர் என்ற அந்தணாளர், பின்வருமாறு கூறினார். (31–33)

உத்தங்கர் கூறுகிறார்— பேரறிவாளனே! நன்று, மிக நன்று. உன்னுடைய அறிவு தெளிவும் பிரகாசமும் பெற்றுவிட்டது. அதனால்தான், உலக வாழ்க்கை என்னும் தீராத்துன்பத்தை நீக்கும் வழியைத் தெரிந்துகொள்ள விரும்புகிறாய். சைத்ர மாத வளர்பிறையில் ஒன்பது நாட்கள், பக்தி–கவனத்துடன் இராமாயணம் கேட்கவேண்டும். அதைக் கேட்டமாத்திரத்திலேயே மனிதன் எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுபடுகிறான். (உத்தங்கரின் உபதேசத்தைக் கேட்ட) அந்த விநாடியிலேயே கலிகன் என்ற அந்த துஷ்டன் பாவங்கள் நீங்கப் பெற்று, இராமாயணத்தைக் கேட்டு, உடனேயே மரணம் அடைந்தான். உயிரிழந்து தரையில் வீழ்ந்துவிட்ட (முன்னாள்) துஷ்டனைக் கண்டு, கருணையுள்ள உத்தங்கர் மிகவும் வியப்படைந்து பகவான் ஸ்ரீஹரியைத் தோத்திரம் செய்தார். இராமாயணத்தைக் கேட்டு, பாவங்கள் நீங்கப் பெற்று, தேவலோகத்திலிருந்து வந்த விமானத்தில் ஏறிக்கொண்ட அவன் (கலிகன்), உத்தங்கரைப் பார்த்துக் கூறினான்— 'மகாபாவங்களின் விளைவான துன்பங்களிலிருந்து, தங்கள் அருளால் நான் விடுபட்டுவிட்டேன். பேரறிஞரே! தங்கள் திருவடிகளில் விழுந்து வணங்குகிறேன். நான் செய்த குற்றத்தைப் பொறுத்தருள வேண்டும்.' (34–40)

ஸூதர் கூறுகிறார்— இவ்வாறு கூறிமுடித்த கலிகன், (விமானத்திலிருந்து இறங்கி வந்து) மாமுனிவரான உத்தங்கர் மீது, தேவலோக மலர்களை மாரியாகப் பொழிந்தான். மூன்று முறை அவரை வலம் வந்து நமஸ்காரம் செய்தான். எல்லா வகையான போகப் பொருள்கள் நிரம்பியதும், அப்சரப் பெண்டிர் கூட்டமாக இருந்ததுமான விமானத்தில் ஏறி, பகவான் ஸ்ரீஹரியின் வாசஸ்தலமான பரமபதத்தை அடைந்தான். ஆகவே, வேதவிற்பன்னர்களே! சைத்ர மாத வளர்பிறையில், மிகவும் பக்தி–சிரத்தையுடன் தொடர்ந்து ஒன்பது நாட்கள் இராமாயணத்தைக் கேளுங்கள். மேலும், இராமாயணம் எல்லா ருதுக்களிலும் படித்துப் பயனடையத்தக்கது. இவ்வாறு ஸ்ரீஹரியை வழிபடுபவன், தான் விரும்பியவற்றையெல்லாம் அடைகிறான் என்பதில் ஐயமில்லை. சனத்குமாரரே! இராமாயணத்தின் பெருமையைப் பற்றி, உங்களால் கேட்கப்பட்ட எல்லாக் கேள்விகளுக்கும் நான் பதில் சொல்லிவிட்டேன். இனி, வேறு என்ன கேட்க விரும்புகிறீர்கள்? (41–45)


ஸ்ரீஸ்கந்தபுராணம், இராமாயண மாஹாத்ம்யம் என்ற பகுதியில் நான்காவது அத்தியாயம் முற்றிற்று.




வியாத், கிரௌஞ்சப் பறவையை அம்பெய்து கொன்றதைக் கண்ட ஸ்ரீவால்மீகி முனிவர் மனம் வருந்தி, கீழ்கண்ட சுலோகத்தைக் கூறினார்—

மா நிஷாத$_3$ ப்ரதிஷ்ட$_2$ாம் த்வமக$_3$ம: ஶாஶ்வதீ: ஸமா: ।
யத்க்ரௌஞ்சமிது$_2$நாதே$_3$கமவதீ$_4$: காமமோஹிதம் ॥


(பால காண்டம் 2/15)




ஸ்ரீராம–சீதா–லட்சுமணர்கள் வனவாசம் செல்கிறார்கள்.




ஸ்ரீராமன், தந்தையின் மரணச்செய்தி கேட்டு,
அவருக்கு நதியில் தர்ப்பணம் செய்கிறார்.




ஸ்ரீராமன், பரதனுக்குத் தனது பாதுகைகளை அளிக்கிறார்.




பரதன், ஸ்ரீராமனின் பாதுகைகளைச் சிம்மாசனத்தில்
வைத்து 'பாதுகா பூஜை' செய்கிறார்.




ஸ்ரீராமன், பொன்மானை (மாரீசனை)த் துரத்திச் செல்லுதல்



சபரியின் குடிலிற்கு ஸ்ரீராம-லட்சுமணர்களின் வருகை



சபரி, ஸ்ரீராம-லட்சுமணர்களை உபசரித்தல்



அனுமன், இராம-லட்சுமணர்களைத் தோளில்
சுமந்து, சுக்ரீவனிடம் செல்லுதல்

அத்தியாயம் : ஐந்து

இராமாயணத்தை ஒன்பது நாட்கள் கேட்கும் விதிமுறை, மகிமை மற்றும் பலன்களின் விவரம்

ஸூதர் கூறுகிறார்— இராமாயணத்தின் மகிமைகளைக் கேட்டு, மாமுனிவரான சனத்குமாரர் மிகவும் ஆனந்தம் அடைந்தார். முனிவர்களுள் தலைசிறந்தவரான நாரதரைப் பார்த்து மீண்டும் வினவினார். (1)

சனத்குமாரர் கூறுகிறார்— மாமுனிவரே! தாங்கள் இராமாயணத்தின் மகிமைகளை விளக்கிக் கூறினீர்கள். இப்போது, இராமாயணத்தைப் படிக்கும் விதிமுறைகளைக் கேட்க விரும்புகிறேன். மகாபுண்ணியசாலியான முனிவரே! பரம்பொருள் தத்துவத்தை நன்குணர்ந்தவரே! தாங்கள் மிகவும் அருள்கூர்ந்து இந்த விஷயத்தைப் பற்றியும் விளக்கமாகக் கூறவேண்டும். (2,3)

நாரதர் கூறுகிறார்— எல்லா உலகங்களிலும் பிரசித்தி பெற்றதும், சுவர்க்க போகத்தையும் மோட்சத்தையும் அளிக்கவல்லதுமான இராமாயணத்தைப் படிக்கும் முறைகளை ஒருமுகப்பட்ட மனத்துடன் கேளுங்கள். பக்தியுணர்வில் திளைத்து இராமாயணம் படிக்கும் வழிமுறைகளை நான் சொல்லப் போகிறேன், கேளுங்கள். (4,5)

எதைப் படிப்பதால் (கேட்பதால்) கோடிக்கணக்கான பாவங்கள் அழிந்து போகின்றனவோ, அத்தகைய மகிமை வாய்ந்த இராமாயணத்தை, சித்திரை–மாசி–கார்த்திகை மாத வளர்பிறை துவக்கத்தில், அல்லது ஐந்தாம் நாளிலிருந்து ஆரம்பிக்க வேண்டும். தொடக்க நாளில், வேதவிற்பன்னர்களைக் கொண்டு ஸ்வஸ்திவாசனம் என்ற மங்கள கர்மாவைச் செய்யவேண்டும். தொடர்ந்து ஒன்பது நாட்கள் இராமாயண சரிதாம்ருதத்தைச் செவிகளால் கேட்பதாக சங்கல்பம் செய்து கொள்ள வேண்டும். (6,7)

'ஸ்ரீராமா! இன்று முதல், நாள்தோறும், நான் தங்கள் கதையாகிய அம்ருதத்தைக் கேட்கப் போகிறேன். தங்கள் எல்லையற்ற அருளால் என் விருப்பம் நிறைவேற வேண்டும்' (என்று பிரார்த்தித்துக் கொள்ள வேண்டும்). நாள்தோறும் (படுக்கையிலிருந்து எழுந்ததும்) நாயுருவிக் குச்சியால் பல் துலக்க வேண்டும்; இராமபக்தியில் திளைத்தவனாக, அறநூல்களில் கூறப்பட்டுள்ள முறைப்படி நீராடவேண்டும். தன் புலன்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்து உறவினர்களோடுகூட இராமாயணத்தைக் கேட்க வேண்டும். குல ஆசாரப்படி வாய் துலக்கி, (நீர்நிலையில்) நீராடி, தூய வெண்மை ஆடை அணிந்து கொண்டு மௌனமாக வீட்டிற்கு வரவேண்டும். பின்னர், கால்களை நீரால் கழுவிக் கொண்டு, ஆசமனம் செய்து சாட்சாத் நாராயணனை ஸ்மரிக்க வேண்டும். பிறகு, வழக்கமாகச் செய்துவரும் தேவபூஜையைச் செய்து, பக்தியுணர்வுடன் சங்கல்பம் செய்துகொண்டு இராமாயணப் புத்தகத்தை மலர்கொண்டு அர்ச்சிக்க வேண்டும். (8–12)

'இராமாயண கதையைக் கேட்டல்' என்ற விரதத்தை மேற்கொள்பவன், பக்தியில் மூழ்கி, 'ஓம் நமோ நாராயணாய' என்ற மந்திரத்தைக் கூறி, ஆவாஹன–ஆஸன–கந்த–புஷ்ப உபசாரங்களைச் செய்ய வேண்டும். தான் செய்த எல்லாப் பாவங்களும் நீங்க வேண்டும் பொருட்டு, தன் சக்திக்கேற்றபடி, ஒரு தடவை அல்லது இரண்டு–மூன்று தடவைகள் மனப்பூர்வமாக ஹோமம் செய்ய வேண்டும். இவ்வாறு, புலன்களை அடக்கி, விதிக்கப்பட்ட முறையில் இராமாயணம் படிப்பது–கேட்பது என்ற புனிதச்செயலைச் செய்பவன், எந்த உத்தமலோகத்தை அடைந்தபின், ஒரு ஜீவன் மீண்டும் மண்ணுலகத்திற்குத் திரும்பி வருவதில்லையோ, அந்தப் பரமபதத்தை (பகவான் விஷ்ணுவின் ஸ்தானத்தை)ச் சென்றடைகிறான். (13–15)

(எவ்வளவு தாழ்ந்தவனாக இருந்தாலும், கெஞ்சிக் கேட்டுக் கொண்டால், அவனுக்கு உடை–உணவு கொடுக்க வேண்டும் என்பது பொது தருமமாக இருந்தபோதிலும்,) இராமாயணம்

படிப்பது–கேட்பது என்ற விரதத்தை மேற்கொண்டவன், சண்டாளர்களுக்கும், இழிநிலை அடைந்தவர்களுக்கும் உணவு–உடை தானம் செய்யலாகாது. நாத்திகன், அறம் வழுவியவன், பிறரை நிந்திப்பவன், கருமி ஆகியோருடன் இராமாயண விரதத்தை ஏற்றிருப்பவன் பேச்சு வார்த்தைகூட வைத்துக் கொள்ளக்கூடாது. (16,17)

ஒரு தாய்க்கு, அவளுடைய சொந்தக் கணவன் இருக்கும்போது, வேறொரு ஆடவன் மூலம் பெற்றுக் கொண்ட மகவு; இசையைத் தொழிலாகக் கொண்டவன்; தேவதைகளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட பொருள்களைக் கொண்டு ஜீவிப்பவனின் அன்னத்தை உட்கொள்பவன்; வைத்தியன்; நரஸ்துதி செய்து கவிதை எழுதுபவன்; தெய்வம்–அந்தணர்க்குப் பகைவன்; பிறர் வீட்டில் உணவு கொள்ள பேராசைப்படுபவன்; பிற பெண்டிர்களிடம் மனத்தைப் பறிகொடுத்தவன் – ஆகிய இவர்களுடன் இராமாயண விரதத்தை அனுஷ்டிப்பவன் ஒரு சொல்கூடப் பேசக் கூடாது. இம்மாதிரியான நியமங்களைத் தவறாமல் கடைப்பிடித்து, மனத்தூய்மை பெற்று, புலன்களை வென்று, எல்லாப் பிராணிகளின் நலனை விரும்புகிறவனாக, இராமாயணத்தில் மூழ்கித் திளைப்பவன் மிக உயர்ந்த நிலையை அடைகிறான். (18–20)

கங்கைக்கு நிகரான புண்ணிய தீர்த்தம் இல்லை; தாய்க்கு நிகரான குரு இல்லை; விஷ்ணுவுக்கு நிகரான தெய்வம் இல்லை; இராமாயணத்தைக் காட்டிலும் உயர்ந்த நூல் எதுவுமில்லை; மறைகளுக்கு நிகரான சாத்திரங்கள் இல்லை; மன அமைதிக்கு நிகரான சுகம் இல்லை; சாந்தியைக் காட்டிலும் மேலான (அறிவு) ஒளி இல்லை; இராமாயணத்தைக் காட்டிலும் உயர்வான காவியம் இல்லவேயில்லை; பொறுமைக்கு நிகரான பலம் இல்லை; புகழுக்கு நிகரான செல்வம் இல்லை; மெய்ஞ்ஞானத்திற்கு நிகராகப் பெறத்தக்கது இல்லை; இராமாயணத்திற்கு மேலாக வேறொரு வஸ்து இல்லை. இராமாயணக் கதைப்பொழிவு நிறைவடைந்ததும், வேதவிற்பன்னரான சொற்பொழிவாளருக்கு தட்சிணையோடுகூட பசுவை தானம் செய்ய வேண்டும்; இராமாயண புத்தகத்தையும், ஆடை–அணிகலன்களையும் சமர்ப்பிக்க வேண்டும். இராமாயணக் கதையைச் சொன்னவருக்கு இராமாயண புத்தகத்தை அளிப்பவன், பரமபதத்தை அடைந்து, சோகமில்லாப் பெருவாழ்வை அடைகிறான். (21–25)

அறத்தை அறிந்தவர்களுள் சிறந்தவரே! ஒன்பது நாட்கள் இராமாயணத்தைக் கேட்பதால் ஏற்படும் பலன்களைக் கேளுங்கள்— இராமாயணத்தைப் பஞ்சமியில் தொடங்கிக் கேட்க வேண்டும். அவ்விதம் கேட்பவன் எல்லாப் பாவங்களிலிருந்தும் உடனே விடுபடுகிறான். இரண்டு முறை இராமாயணக் கதையைக் கேட்பவனுக்கு, புண்டரீகயக்ஞம் செய்த பலன் கிடைக்கிறது. புலன்களை வென்று, விரத நியமங்களைக் கைக்கொண்டு இராமாயணத்தைக் கேட்பவனுக்கு அசுவமேத யாகத்தின் இரு மடங்கு பலன்கள் கிடைக்கின்றன. உத்தமமான முனிவர்களே! எவனொருவன் நான்கு முறை கேட்கிறானோ, அவன் அக்னிஷ்டோம யாகம் எட்டு தடவைகள் செய்த பலனை அடைகிறான். (26–29)

மகாபாக்கியசாலியான எவன், ஐந்து முறை இராமாயணத்தைக் கேட்பது என்ற விரதத்தைச் செய்து முடிக்கிறானோ, அவன் அத்யக்னிஷ்டோமம் என்ற யாகத்தின் இரு மடங்கு பலன்களைப் பெறுகிறான். இந்த விரதத்தை, ஒருமைப்பட்ட மனத்துடன் ஆறு முறை செய்து முடிப்பவன், எண்மடங்கு அக்னிஷ்டோம யாக பலனை அடைகிறான். மாமுனிவர்களே! எந்த ஒரு பெண்ணோ, ஆணோ எட்டு முறை இராமாயணத்தைக் கேட்டால், நரமேதம் என்ற யாகத்தின் ஐந்து மடங்கு பலனை அடைகிறார்கள். ஒரு பெண் அல்லது ஆண், இராமாயண விரதத்தை ஒன்பது முறை செய்து முடித்துவிட்டால், அவர்கள் கோமேதம் என்ற வேள்வியைச் செய்த மும்மடங்கு புண்ணியத்தைப் பெறுவார்கள். (30–33)

மனச்சாந்தியுடன் இராமாயணத்தைப் படிப்பது, கேட்பது என்ற வேள்வியைச் சிரத்தையுடன், புலன்களை அடக்கிச் செய்துமுடிப்பவன் பேரானந்தமே நிறைந்த பரமபதத்தை அடைகிறான்.

அங்கு சென்றுவிட்டவனுக்கு, (மீண்டும் மண்ணுலகப் பிறப்பு என்ற) துயரம் ஏற்படுவதில்லை. நாள்தோறும் இராமாயணத்தைப் படித்தல், கேட்டல் செய்பவன்; கங்கையில் நீராடுவதை உறுதியாகக் கடைப்பிடிப்பவன்; அறநெறிகளை எடுத்துக் கூறுபவன் – ஆகிய இவர்கள் சம்சாரக் கடலைக் கடந்தவர்கள் என்பதில் சந்தேகமில்லை. (34,35)

மகாத்மாக்களே! துறவிகள், பிரம்மசாரிகள், வீரர்கள்கூட, இராமாயணத்தை ஒன்பது நாட்களுக்குக் கேட்க வேண்டும். மிகுந்த பக்தியுடன் இராம கதையைக் கேட்பவன் ஞானவொளி பெற்று, பிரும்மலோகம் சென்று, அங்கே பரமானந்தத்தில் திளைத்திருப்பான். ஆகவே, அந்தணோத்தமர்களே! இராமாயண கதையைக் கேளுங்கள். தெய்விகக் கதைகளைக் கேட்க விரும்புவர்களால் கேட்கத் தகுந்த மிகச்சிறந்த கதை இதுவே. இதைக் காட்டிலும் புனிதமானது வேறொன்றுமில்லை. (36–38)

தீய கனவுகளைப் போக்கும் இந்தக் கதை மிகவும் போற்றுதலுக்குரியது. எனவே, மன ஒருமைப்பாட்டுடன் கேட்கத்தக்கது. மிகவும் ஈடுபாட்டுடன் இந்தக் கதையின் ஒரு சுலோகம் அல்லது ஒரு வரியையாவது படிப்பவன், கோடிக்கணக்கான உபபாதகங்கள் செய்ததன் விளைவான பாவங்களிலிருந்து விடுபடுகிறான். இது ரகசியங்களுள் ரகசியமானது ஆனதால் நன்மக்களுக்கே சொல்லப்பட வேண்டும். ஸ்ரீராமனுடைய திருக்கோயில், புண்ணியத்தலம், அல்லது அடியார் திருக்கூட்டத்தில் இந்தக் கதை சொல்லப்பட வேண்டும். அந்தணர்களை வெறுப்பவன், வெளிவேஷக்காரன், மக்களை ஏமாற்றும் தொழிலில் ஈடுபட்டவன் ஆகியோருக்கு இந்தக் கதையைச் சொல்லக்கூடாது. காமம் முதலிய மனமாசுகள் நீங்கப் பெற்றவர்கள்; இராமபக்தியில் திளைப்பவர்கள்; ஆசார்யர்களிடத்தில் பக்தியுடையவர்கள் ஆகியவர்களுக்கு முக்திக்கு வழிகாட்டும் இந்தக் கதையைச் சொல்ல வேண்டும். (39–42)

இராமன், அனைத்துத் தெய்வங்களின் உருவம்; மனமுருகிப் பிரார்த்திப்பவர்களின் துன்பங்களைப் போக்குபவன்; பக்திப் பண்பாளர்களிடம் பேரன்பு பூண்டவன். இராமதேவன், பக்தியினால் மகிழ்ச்சி அடைகிறான். வேறு எந்த வகையாலும் அல்ல. மனிதன், தன்னிச்சையாக (மனம் ஒட்டாமலே) எந்தப் பெயரை (இராமநாமத்தை) உச்சரிக்கிறானோ அல்லது நினைத்துக் கொள்கிறானோ, அவனும்கூட பரமபதத்தை அடைகிறான். மகாத்மாக்களே! சம்சாரம் என்னும் பயங்கரமான, உட்புகமுடியாதபடி அடர்த்தியான காட்டிற்கு (அதைப் பொசுக்கிச் சாம்பலாக்கும்) பிரளயாக்னி போன்றவன், மதுசூதனனான இராமன். அவன் திருநாமத்தை நினைத்துக் கொள்பவர்களின் எல்லாப் பாவங்களையும் உடனே அழித்து விடுகிறான். (43–45)

இராமாயணத்தால் சுட்டிக்காட்டப்படும் பொருள், இராமனே! ஈடு–இணையில்லாததும் புண்ணியமானதுமான இந்தக் காவியத்தைக் கேட்டாலும் படித்தாலும் எல்லாப் பாவங்களையும் போக்கவல்லது. எவனுக்கு இராம நாம ரஸத்தில், பக்திபூர்வமான மனமகிழ்ச்சி ஏற்படுகிறதோ, அவனே இவ்வுலகக் கடமைகளைக் குறைவறச் செய்து முடித்தவன்; எல்லா அறநூல்களையும் கற்றுணர்ந்த மேதாவி. வேதியர்களே! அவனால் செய்து முடிக்கப்பட்ட தவம் (இராம வேள்வி) புண்ணியமானது; சத்தியமானது; உரிய நற்பலனைத் தருவது. இராமபக்தியுடன் இராம கதையைக் கேட்பதால் ஏற்படும் மனநிறைவு, வேறு எதனாலும் கிடைப்பதில்லை. (46–48)

மறைவல்லுநர்களே! பயங்கரமான கலியுகத்தில், இராமாயணத்திலேயே ஊறித் திளைத்திருப்பவர்கள், இராம நாமத்தில் ஆழ்ந்திருப்பவர்கள் – இவர்களே வாழ்க்கைக் கடமைகளை நிறைவேற்றியவர்களாவார்கள். இராமாயணம் என்ற அமுதப்பொழிவை ஒன்பது நாட்களுக்குக் கேட்க வேண்டும். அவ்வாறு கேட்பவர்களே நல்வழிப்பட்டவர்கள், மகாத்மாக்கள். அவர்களை எப்போதும் நான் வணங்குகிறேன். பரமபுருஷனான ஸ்ரீராமனுடைய திருநாமம் மட்டுமே என் உயிர்மூச்சு. கலியுகத்தில், ஒரு ஜீவன் நற்கதியடைவதற்கு (இராம நாமத்தைத் தவிர) வேறு வழியேயில்லை. (49–51)

ஸூதர் கூறுகிறார்— மகாத்மாவான நாரதரால் இவ்வாறு உபதேசிக்கப்பட்ட சனத்குமாரர், தெள்ளிய ஞானம் பெற்று, உடனே, ஆனந்தப் பெருவெள்ளமான நல்லுலகை அடைந்தார். ஆகவே, அந்தணோத்தமர்களே! நீங்களும் இராமாயணத்தைக் கேளுங்கள். தொடர்ந்து ஒன்பது நாட்கள் கேட்பவன், எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுபடுகிறான். அந்தணப் பெருந்தகையோர்களே! இந்த மகாகாவியத்தைக் கேட்டபின், கதையைச் சொன்னவரை நன்றாகப் போற்றிக் கௌரவிப்பவனிடம் திருமகள் நாயகரான மகாவிஷ்ணு மிகவும் பிரீதி அடைகிறார். அந்தணப் பெரியோர்களே! கதை சொல்லியவர் (கதை கேட்டவர் செய்த மரியாதைகளால்) திருப்தி அடைந்தாரேயானால், பிரும்மா–விஷ்ணு–ருத்ரன் ஆகிய மூவரும் திருப்தி அடைகிறார்கள். இதைப் பற்றி ஆலோசிக்க வேண்டியதேயில்லை. (52–55)

இராமாயணக் கதையைச் சொன்னவருக்கு, (கேட்டவரின்) பொருளாதார நிலைக்குத் தக்கபடி பசுக்கள், ஆடைகள், பொன் மற்றும் இராமாயண நூல் முதலியவற்றைக் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுப்பதனால் விளையும் நற்பலன்களைக் கூறுகிறேன், கேளுங்கள். நவக்கிரகங்களும், பூத–வேதாளங்களும் அவனைப் பாதிப்பதில்லை. இராமாயணத்தைக் கேட்டவனுக்கு எல்லா செல்வச் செழுமைகளும் வளர்கின்றன. அவனை நெருப்பு பாதிப்பதில்லை; திருடர் முதலியோரிடமிருந்து அச்சம் ஏற்படுவதில்லை; இந்தப் பிறவியில் சம்பாதிக்கப்பட்ட பாவங்களிலிருந்து உடனே விடுபடுகிறான். (56–59)

அவன் தன் வாழ்வின் முடிவில், முந்தைய ஏழு தலைமுறையினருடன் மோட்சத்தை அடைகிறான். முன்னொரு காலத்தில், சனத்குமாரர் பக்தியுடன் கேட்டபோது, நாரதரால் சொல்லப்பட்ட விவரங்கள் அனைத்தையும் உங்களுக்குக் கூறினேன். இராமாயணம் என்ற ஆதிகாவியம், எல்லா வேதங்களின் பொருளுக்கும் ஏற்புடையது; எல்லாப் பாவங்களையும் நீக்கவல்லது; புண்ணியம் தரக்கூடியது; எல்லாத் துக்கங்களையும் அழிக்கவல்லது; எல்லாப் புண்ணியப் பலன்களையும் அளிப்பது; எல்லா வேள்விகளின் நற்பயன்களையும் கொடுக்கக்கூடியது. (60–62)

இராமாயணத்தின் ஒரு சுலோகம் அல்லது ஒரு வரியையேனும் படிக்கும் அறிஞர்கள் ஒருபோதும் பாவச்சிக்கலில் மாட்டிக் கொள்வதில்லை. ஸ்ரீராமனுக்கு அர்ப்பணம் செய்யப்பட்ட இந்தப் புண்ணியக் காவியம், அடியார்களின் விருப்பங்களையெல்லாம் அருள்வது. எவர்கள் பக்தியுடன் இந்தக் காவியத்தைக் கேட்டு ஞானம் பெறுகிறார்களோ, அவர்கள் அடையும் புண்ணியங்களைக் கேள். அவர்கள், நூறு ஜன்மங்களில் செய்த பாவங்களிலிருந்து உடனேயே விடுதலை பெற்று, ஆயிரக்கணக்கான தலைமுறையினருடன் பரமபதத்தை அடைகிறார்கள். (63–65)

ஒவ்வொரு நாளும் இராம கதையை, இராம நாமத்தைக் கேட்டுக் கொண்டிருப்பவருக்கு, தீர்த்தயாத்திரை, கோதானம், தவம், வேள்வி ஆகியவைகளால் ஆவது என்ன? (அவைகளால் கிடைக்கக்கூடிய அத்தனை பயன்களையும், இராம நாம சங்கீர்த்தனத்தால் இவர்கள் அடைந்து விடுகிறார்கள்.) சைத்ரம், மாகம், கார்த்திகை மாதங்களில் ஒன்பது நாட்கள் இராமாயண அமுதப்பொழிவைக் கேட்க வேண்டும். இராமாயண காவியம், இராமனுடைய பேருளைப் பெற்றுத்தரக் கூடியது; இராம பக்தியை வளர்ப்பது; எல்லாப் பாவங்களையும் அழிப்பது; எல்லாச் செல்வங்களையும் வளர்ப்பது. எவனொருவன், மன ஒருமைப்பாட்டுடன் இராமாயணத்தைக் கேட்கவோ, படிக்கவோ செய்கிறானோ, அவன் எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுபட்டு விஷ்ணுலோகத்தைச் சென்றடைகிறான். (66–69)

ஸ்ரீஸ்கந்தபுராணம், இராமாயண மாஹாத்ம்யம் என்ற
பகுதியில் ஐந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

ஸ்ரீமத் வால்மீகி ராமாயண மாஹாத்ம்யம் முற்றிற்று.

|| ஸ்ரீஹரி: ||

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

பால காண்டம்

ஸர்க்கம் : ஒன்று

நாரதர் கூறியது

சிறந்த தபஸ்வியான வால்மீகி முனிவர் தவம்–ஸ்வாத்யாயம் ஆகியவற்றில் ஆழமாக ஈடுபட்டுள்ளவரும், பேசுவதில் வல்லவரும், தலைசிறந்த முனிவருமான நாரதரைப் பார்த்துக் கேட்டார்— (முனிவரே!) தற்போது இவ்வுலகில் நற்குணம், ஆற்றல், அறங்கள் பற்றிய தெள்ளறிவு, நன்றி மறவாமை, வாய்மை பேசுதல், சொல்லப்பட்ட வாக்கினை நிறைவேற்றுவது ஆகியவற்றில் உறுதி உடையவர் யார்? நல்லொழுக்கம், எல்லாப் பிராணிகளின் நலனில் அக்கறை, பேரறிவு, செயல்திறன் உடையவர், கண்ணால் பார்த்தவுடனே பிரியம் ஏற்படும் பேரழகு உடையவர் யார்? (1–3)

தன் மனத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர், கோபத்தை வென்றவர், ஒளி பொருந்தியவர், யாரிடமும் வெறுப்பைக் காட்டாதவர், போர்க்களத்தில் நிற்கும்போது எவருக்குக் கோபம் ஏற்பட்டால் அதைக் கண்டு தேவர்களும் அஞ்சி நடுங்குவார்களோ, (அப்படிப்பட்டவர் யார் இருக்கிறார்?) இதைத் தெரிந்து கொள்ள நான் மிகவும் ஆவலுள்ளவனாக இருக்கிறேன். மாமுனிவரே! இப்படிப்பட்ட ஒரு மாமனிதரைத் தாங்கள் நிச்சயமாக அறிந்திருப்பீர்கள். (4,5)

வால்மீகியின் இந்தச் சொற்களைக் கேட்டதும், மூவுலகச் செய்திகளையும் அறிந்தவரான நாரதர், 'சொல்கிறேன், கேளுங்கள்' என்று கூறி மகிழ்ச்சியுடன் கூறத் தொடங்கினார். முனிவரே! நீங்கள் கூறிய சிறந்த குணங்களில் பல (மனிதர்களிடம்) காணற்கரியவை. என்றாலும் அவ்வளவு உயர்ந்த குணங்கள் எல்லாம் நிறைந்த ஓர் உத்தம மனிதரை, நான் நினைவுபடுத்திக் கொண்டு சொல்கிறேன், கேளுங்கள். (6,7)

(அவர்) இக்ஷ்வாகு வம்சத்தில் தோன்றியவர்; இராமன் என்று மக்களால் அழைக்கப்படுபவர்; தன்னைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர்; பேராற்றல் படைத்தவர்; ஒளிமிக்கவர்; உறுதியும் புலனடக்கமும் உடையவர்; அறிவாளர்; நீதி அறிந்தவர்; பேச்சுத்திறன் உடையவர்; எல்லா மேன்மைகளும் பெற்றவர்; எதிரிகளை அழிப்பவர்; விசாலமான தோள்களும், வலுவான புஜங்களும், சங்கு போன்ற கழுத்தும், செழிப்பான தாடைகளும், அகன்ற மார்பும் உடையவர்; பெரிய வில்; எலும்பு தெரியாதபடிச் சதைப்பிடிப்பு உள்ள கழுத்தின் கீழ்ப்பகுதியை உடையவர்; காமம் முதலான ஆறு எதிரிகளை அடக்கி வைத்திருப்பவர்; முழங்கால் வரை நீண்டிருக்கும் கைகளும், அழகான சிரசும், கவின்மிகு நெற்றியும், மனங்கவர் கம்பீரமான நடையும் உடையவர்; உடலுறுப்புக்கள் சாமுத்திரிகா லட்சணப்படியான அளவுடனும், அந்தந்த அங்கத்திற்கு ஏற்றபடி அளவுப் பகுப்புடனும், இந்திரநீலமணி போன்று கரும்பச்சை வண்ணமும் கொண்டுள்ளன; மிக்கப் பராக்கிரமம் உடையவர்; நீண்ட அகன்ற கண்களை உடையவர்; (8–11)

தருமமறிந்தவர்; தவறாத சொல் உடையவர்; மக்களின் நல்வாழ்வில் மனம் செலுத்துபவர்; புகழ் மிக்கவர்; தெள்ளிய ஞானம் நிறைந்தவர்; (நெருப்புப்போல்) தூய்மையானவர்; புலன்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர்; மனத்தை ஓரிடத்தில் நிலைநிறுத்தக் கூடியவர்; பிரும்மாவைப்

போன்றவர்; அனைத்துச் செல்வச் செழிப்பும் நிறைந்தவர்; வாரி வழங்கிப் போஷிப்பவர்; எதிரிகளை ஒழித்துக் கட்டுபவர்; உயிர்ப்பிராணி வர்க்கங்கள் அனைத்தையும் காப்பாற்றுபவர்; தருமத்தை மிக்க கவனத்துடன் ரட்சிப்பவர்; தனக்குண்டான தருமங்களையும், தம் மக்களுக்கான அறங்களையும் போற்றிப் பாதுகாப்பவர்; வேத–வேதாந்தத் தத்துவங்களை அறிந்தவர்; வில்வித்தையில் தனிப்பெரும் ஆற்றலுடையவர்; எல்லா அறநூல்களின் பொருளுண்மையை அறிந்தவர்; நினைவாற்றலும், ஆழ்ந்த அறிவும் உடையவர்; எல்லா மக்களுக்கும் பிரியமானவர்; இரக்கம் உடையவர்; நெஞ்சுரம் படைத்தவர்; நற்சிந்தனையாளர்; (12–15)

பெருங்கடலை நோக்கி ஆறுகள் பாய்ந்து வந்து, அதில் கலந்துவிடுவதைப் போல, இவரை நோக்கிச் சான்றோர்கள் ஆர்வத்துடன் வருகிறார்கள்; உயர் இயல்பினர்; எல்லோரிடமும் சமமான பார்வை உடையவர்; எப்போதும் அழகிய தோற்றமுடையவர்; (கோபம், ஆக்ரோஷம், போர்முனைப்பு ஆகியவற்றாலும் உடற்பொலிவு விகாரமடைவதில்லை.) கம்பீரத்தில் பெருங்கடலையும், உறுதியில் இமயத்தையும் போன்ற அவர், எல்லா நற்குணங்களும் நிரம்பி, தன் தாயார் கௌசல்யாவின் ஆனந்தத்தை வளர்ப்பவர்; (16,17)

வீரத்தில் மகாவிஷ்ணு; மனத்தை ஈர்க்கும் தோற்றத்தில் முழுநிலவு; கோபத்தில் பிரளயகால அக்னி; பொறுமையில் பூமித்தாய்; தியாகத்தில் குபேரன்; சத்தியத்தில் இன்னொரு தருமதேவதை போன்றவர். இவ்வளவு நற்குணங்கள் நிரம்பியவரும், சொல் தவறாத பராக்கிரமம் உடையவரும், தசரத மன்னனுக்குப் பிரியமான மூத்த மகனும், உன்னத குணசாலியுமான இராமனுக்குக் குடிமக்களின் நன்மைக்காகவும், குடிமக்களுக்கு மகிழ்ச்சி தரும் ஒரு செயலைச் செய்ய வேண்டும் என்ற நன்னோக்கத்துடனும் இளவரசுப் பட்டம் சூட்ட, மாமன்னர் நிறைவான மனத்தோடு ஆசைப்பட்டார். (18–20)

பட்டம் சூட்டுதல் என்ற கோலாகல நிகழ்ச்சிக்காகச் சேகரிக்கப்படும் ஏராளமான பொருட்களைக் கண்ட (மன்னரின் ஒரு) மனைவியான கைகேயி (என்பவள்), முன்னர் கொடுப்பதாக ஒப்புக்கொள்ளப்பட்டிருந்த வரத்தின்படி, இராமனை நாடு கடத்த வேண்டும் என்றும், (தன் வயிற்றில் பிறந்த மகன்) பரதனுக்குப் பட்டம் கட்ட வேண்டும் என்றும் கோரினாள். அறநெறி என்ற நீள்கயிற்றால் பிணைக்கப்பட்ட மன்னர் (தான் முன்னர் கொடுத்த) சொல் தவறாமல், தனக்கு மிகவும் பாசத்திற்குரிய மைந்தன் இராமனை நாடு கடத்தினார். (21–23)

மன்னர் முன்பு கொடுத்திருந்த வரத்தை நிறைவேற்றுவதற்காக தந்தையின் ஆணைப்படியும், கைகேயியின் விருப்பப்படியும் வீரரான இராமன் கானகம் சென்றார். அப்போது, அன்னை சுமித்திரையின் ஆனந்தத்தை வளர்ப்பவனும், (மூத்தவர்களிடம்) பேரன்பு காரணமாக அடக்கம் உடையவனுமான லட்சுமணன், தனக்குப் பிரியமான சகோதரர் வெளியே புறப்பட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்து அன்பு பொங்கியெழ, நல்ல சகோதரனின் இயல்புக்கேற்றபடி (மூத்த) சகோதரனைத் தொடர்ந்து உடன் சென்றான். (24–26)

இராமனுக்கு மிகவும் பிரியமான மனைவி; இராமனுக்கு உயிர் போன்றவள்; ஜனகருடைய குலத்தில் தோன்றியவள்; தேவமாயை போல் உருவாக்கப்பட்டவள்; அழகும் நற்குணங்களும் நிறைந்தவள்; பெண்களில் தலைசிறந்தவள் – இப்படிப்பட்ட சீதை, சந்திரனை விட்டுப் பிரியாத ரோஹிணியைப் போல இராமனைப் பின்தொடர்ந்து (காட்டிற்குச்) சென்றாள். தந்தை தசரதரும் ஊர்மக்களும் சிறிது தூரம் வரை பின்தொடர்ந்து வந்தார்கள். (தசரதர், தன் தேரோட்டியை அனுப்பியிருந்தார்.) (27,28)

சிருங்கிபேரபுரத்தில், கங்கைக் கரையில் தனக்குப் பிரியமான வேடர் தலைவன் குகனைச் சந்தித்தபின், (தேரை ஓட்டிக் கொண்டு வந்த) சாரதிக்கு விடைகொடுத்து அனுப்பினார் தருமாத்மாவான இராமன். லட்சுமணன், சீதை, குகனோடுகூட, ஒவ்வொரு வனப்பகுதியாகச் சென்று பற்பல ஆறுகளைக் கடந்து, பரத்வாஜ முனிவரின் ஆணைப்படி சித்திரகூடத்தை அடைந்து,

அங்கே ஓர் அழகிய பர்ணசாலையை அமைத்துக் கொண்டு, மூவரும் அந்தக் காட்டில் வசிக்கத் தொடங்கினார்கள். (பரத்வாஜ ஆசிரமத்திலேயே குகன் விடைபெற்றுச் சென்றுவிட்டான்.) (29–31)

தேவ–கந்தர்வர்களைப் போன்ற அம்மூவரும் அங்கே சுகமாக வசித்துக் கொண்டிருந்தார்கள். இராமன் சித்திரகூடம் சென்று தங்கியபின், மகன் பிரிவாற்றாமையைத் தாங்க முடியாத மன்னர் தசரதர், மகனை நினைத்துப் புலம்பிக் கொண்டே தேவலோகம் சென்றடைந்தார். அவரது உயிர் பிரிந்ததும், வசிஷ்டர் முதலான அந்தணர்களால் அரசுரிமை ஏற்க வேண்டும் என்று கட்டளையிடப்பட்ட போதிலும், (மகாபலம் பொருந்திய) பரதன் அரசாட்சியை ஏற்கவில்லை. அவன், இராமனின் திருவடிகளை வணங்கி, அவர் அருளைப் பெறுவதற்காகக் காட்டிற்குப் போனான். (32–34)

(சித்திரகூடம்) சென்று சத்தியத்தையே பராக்கிரமமாகவுடைய மகாத்மாவும் சகோதரருமான இராமனை, தன் உத்தம மரபுக்கேற்ற இயல்பை வெளிப்படுத்தும் வகையில், 'அறம் அறிந்தவரே! தாங்கள்தான் மன்னர்' என்று கூறிப் பிரார்த்தித்தான். இராமன் பெருமனம் படைத்தவர்; மகிழ்ச்சி ததும்பும் முகத்தினர்; பெரும் புகழ் உடையவர். (என்றாலும்) வீரம் மிகுந்த இராமன், தந்தையின் ஆணையை மீறி, தான் அரசு செலுத்த விரும்பவில்லை. (35,36)

அரசு செலுத்துவதற்காகத் தன் பாதுகைகளை (அவனிடம்) ஒப்படைத்து, மீண்டும் மீண்டும் வற்புறுத்திக் கூறி, பரதனைத் திருப்பி அனுப்பி வைத்தார், பரதனின் மூத்த சகோதரரான இராமன். அவனுடைய விருப்பம் நிறைவேறாமல் போனாலும், இராமனின் திருவடிகளில் வணங்கி, நந்திக்கிராமத்தில் தங்கியிருந்தபடியே இராமன் திரும்பி வரும் நாளை மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டு அரசாட்சியை நடத்தத் தொடங்கினான். (37–39)

பரதன் சென்றதும் திருவளர்செல்வரும், வாக்கைக் காப்பாற்றுபவரும், புலனடக்கம் உடையவருமான இராமன், (அயோத்தி) நகர மக்கள் பெருவாரியாக வருவதும்–போவதுமாக இருப்பதைப் பார்த்து, (அவர்களைத் தடுத்து நிறுத்துவது கஷ்டம் என்பதால்) மன உறுதிபூண்டு, (மக்கள் எளிதில் புகுந்து வரமுடியாத) தண்டகாரண்யத்திற்குள் பிரவேசித்தார். தாமரைக் கண்ணரான இராமன் பெருங்காட்டிற்குள் நுழைந்ததும் (எதிரே வந்த) அரக்கன் விராதனைக் கொன்று, பின்னர் சரபங்கர், சுதீக்ஷ்ணர், அகஸ்தியர், அகஸ்தியரின் சகோதரர் முதலிய முனிவர்களைத் தரிசனம் செய்து கொண்டார். அகஸ்தியருடைய ஆணைப்படி, இந்திரனால் கொடுக்கப்பட்ட வில், கத்தி, குறைவுபடாத அம்புகளைக் கொண்ட இரண்டு அம்புறாத்தூணிகள் முதலியவைகளை மிக்க மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார். (40–42)

வனவாசிகளுடன் இராமன் வசித்துக் கொண்டிருக்கும் காலத்தில், (ஒரு சமயம்) அசுர–அரக்கர்களை அழிக்க வேண்டும் என்று அவரைப் பிரார்த்தித்துக் கொள்வதற்காக, முனிவர்கள் கூட்டமாக வந்தார்கள். தண்டகாரண்யத்தில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களும், (தீவிரமான தவத்தினால்) அக்னியைப்போல் ஆன்மப்பொலிவு பெற்றவர்களுமான அவர்களிடம், அந்தக் காட்டிலுள்ள அசுர–அரக்கர்களை அழிப்பதாகவும், (பின்னர் நடைபெறப் போகும்) பெரும் போரில் எல்லா அரக்கர்களையும் வதம் செய்வதாகவும் இராமன் வாக்குறுதி அளித்தார். (43–45)

அந்த ஜனஸ்தானத்திலேயே வசித்து வந்தவளும், தன் விருப்பம் போல் உருவமெடுக்க வல்லவளுமான அரக்கி சூர்ப்பணகை, அவரால் அங்கபங்கம் செய்யப்பட்டாள். பின்னர், சூர்ப்பணகையின் தூண்டுதலால் போருக்கு வந்த கரன், திரிசிரஸ், தூஷணன் ஆகிய அரக்கர்களையும், அவர்களுடன் வந்த படைவீரர்களையும் போர்க்களத்தில் இராமன் அழித்துக் கட்டினார். ஜனஸ்தானம் என்ற அந்தக் காட்டுப் பகுதியில் வசித்து வந்த பதிநான்காயிரம் அரக்கர்களையும் கொன்றொழித்தார். தன் சொந்தக்காரர்களின் பேரழிவைக் கேள்விப்பட்ட இராவணன், சினத்தால் மனம் தடுமாறி, மாரீசன் என்ற அரக்கனின் உதவியை நாடிச் சென்றான். (46–49)

'இராவணா! பேராற்றல் படைத்த அவருடன் (இராமனுடன்) பகைமை பாராட்டுவது உனக்கு ஏற்றதல்ல' என்று கூறி, பலவாறாக மாரீசனால் தடுக்கப்பட்ட போதிலும், அந்த அறிவுரையை அலட்சியம் செய்த காலனால் தூண்டப்பட்ட இராவணன், மாரீசனுடன்கூட இராமன் தங்கியிருந்த ஆசிரமவளாகத்திற்குச் சென்றான். (50,51)

அரசகுமாரர்கள் இருவரையும் மாயாவியான அவனால் (மாரீசனால்) வெகுதூரத்திற்கு அப்புறப்படுத்தப்பட்டு, (தன்னுடன் சண்டை போட வந்த) ஜடாயு என்ற கழுகைக் கொன்றுவிட்டு, இராமனுடைய பத்தினியைக் கவர்ந்து சென்றான். கழுகு கொல்லப்பட்டுக் கிடப்பதைப் பார்த்து, (ஈனஸ்வரத்தில் கழுகு கூறிய) 'மைதிலி கவர்ந்து செல்லப்பட்டாள்' என்பதைக் கேட்டு, இராகவன் சோகத்தால் தகிக்கப்பட்டு, எல்லாப் பொறிகளும் கலங்கி நிற்க, துயரத்துடன் புலம்பத் தொடங்கினார். (52,53)

அந்தத் துயரச்சூழலிலேயே ஜடாயுவுக்கு ஈமக்கடன்கள் செய்தார். பின்னர், சீதையைத் தேடிச் சென்று கொண்டிருக்கும்போது, விகாரமும் பயங்கரமும் கலந்த தோற்றமுடைய கபந்தன் என்ற அரக்கனைக் கண்டார். பெருந்தோளர் (இராமன்) அவனைக் கொன்று (உடலை) அக்னியில் போட்டவுடன் அவன் சுவர்க்கம் சென்றான். (கபந்தன்) மேலே போகும்போது அறநெறி தவறாத சபரியைப் பற்றிக் கூறினான்— 'இராகவா! தருமம் காக்கும் தூய துறவியான சபரியைச் சென்றடைவாயாக!' எதிரிகளை வீழ்த்துபவரும், தேசு மிகுந்தவருமான அவர் சபரி இருந்த இடத்தை அடைந்தார். தசரத குமாரர் சபரியினால் தகுந்த முறையில் உபசரிக்கப்பட்டார். (54–57)

ஆகா! பம்பை ஏரிக்கரையில் அனுமானுடன் சந்திப்பு ஏற்பட்டதன்றோ! அனுமானுடைய ஆலோசனையின்படி சுக்ரீவனையும் சந்தித்தார். மகாபலசாலியான இராமன், சுக்ரீவனிடம் ஆரம்பம் (அயோத்தியிலிருந்து புறப்பட்டது) முதல் தொடங்கி என்னென்ன நடந்தனவோ, அவைகளை அவ்விதமே – குறிப்பாக சீதையைப் பற்றி – விரிவாகக் கூறினார். இராமனிடமிருந்து முழுமையான தகவல்கள் பெற்றுக் கொண்ட வானரன் சுக்ரீவன், மனம் உவந்து அக்னிசாட்சியாக இராமனுடன் நட்புப் பூண்டான். (58–60)

பின்னர், வானர மன்னன் வாலியுடன் (தனக்குப்) பகைமை ஏற்பட்டது குறித்து நெருங்கிய நட்புணர்வுடனும் துயரத்துடனும் இராமனிடம் தெரிவித்தான். அப்போது வாலியை வதம் செய்வதாக, இராமனால் சபதம் செய்யப்பட்டது. சுக்ரீவன், வாலியினுடைய நிகரற்ற ஆற்றலைப் பற்றிக் கூறினான். (ஏனென்றால்,) இராமனுடைய ஆற்றலில் சுக்ரீவனுக்குச் சந்தேகம் இருந்து வந்தது. இராமனுடைய பலத்தைப் பற்றித் (தன் கண்களால்) தெரிந்து கொள்வதற்காக, பெரிய மலை போன்றிருந்த துந்துபியின் பேருடலைக் காட்டினான், சுக்ரீவன். (61–64)

(சுக்ரீவனின் கருத்தைப் புரிந்து கொண்ட) மாவீரர் (அட, இந்தச் சிறுவேலைதானே! என்று) சற்றே புன்னகைத்து, எலும்புகளின் மாபெரும் குவியலை, கால் கட்டைவிரலைக் கொண்டு, பத்து யோஜனை தூரத்திற்கப்பால் தூக்கியெறிந்தார். அடுத்ததாக, அவனுக்கு நம்பிக்கை ஏற்படுவதற்காக ஒரேயொரு பெரும் பாணத்தால் ஏழு ஆச்சா மரங்களையும், மலையையும், ரஸாதலத்தையும் ஒருங்கே துளைத்துக் காட்டினார். இவ்வரிய செயலால் (இராமனின் அளப்பரிய ஆற்றலில்) நம்பிக்கையடைந்த பெருவானரன் மனத்திருப்தியுடன் இராமனுடன் கிஷ்கிந்தைக் குகையைச் சென்றடைந்தான். (65–67)

தங்கத்தைப் போல் செம்மை கலந்த மஞ்சள் நிறத்துடன் விளங்கிய வானரத் தலைவன் சுக்ரீவன் (குகை வாயிலில் நின்று) இடிமுழக்கம் செய்தான். அந்தப் போரொலியைக் கேட்டு, (தன்னைத் தடுக்க முற்பட்ட மனைவி) தாரைக்குச் சமாதானம் கூறிவிட்டு, சுக்ரீவனைச் சந்திப்பதற்காக வானர மன்னன் (வாலி) வெளியே வந்தான். இராகவன் அவனை அவ்விடத்திலேயே ஒரே அம்பினால் அடித்து வீழ்த்தினார். இவ்வாறு சுக்ரீவனுக்குக் கொடுத்த

வாக்குப்படி சண்டையில் வாலியைக் கொன்றார், இராகவன். அந்த (வானர) அரசு பீடத்தில் சுக்ரீவனையே அமர்த்தினார். (68–70)

வானரர்களில் காளை போன்ற அவன், எல்லா வானரர்களையும் அழைத்து, ஜனகன் செல்வியாகிய சீதையைத் தேடிக் கண்டு வரும்படி ஆணையிட்டு நாற்றிசைகளுக்கும் அனுப்பி வைத்தான். பின்னர், மேற்கொண்டு சம்பாதி என்னும் கழுகின் சொற்படி, மகாபலம் பொருந்திய அனுமான் நூறு யோஜனை அகலமுள்ள உப்புக் கடலைத் தாண்டிக் கடந்தார். எதிர்க்கரையில் இராவணனால் பரிபாலிக்கப்படும் இலங்கை நகரை அடைந்து, அசோகவனத்தில் சோகத்தில் ஆழ்ந்திருக்கும் சீதையைக் கண்டார். தக்க சான்றுகளுடன் தன்னை அறிமுகம் செய்து கொண்டபின் தான் வந்திருப்பதன் நோக்கத்தையும் தெரிவித்துக் கொண்டார். வைதேகிக்கு ஆறுதல் கூறினார். பின் (அந்தப் பூஞ்சோலையின்) நுழைவாயிலைத் தகர்த்தெறிந்தார். (71–74)

(தன்னை எதிர்க்க வந்த) ஐந்து சேனாநாயகர்களையும், ஏழு மந்திரி குமாரர்களையும் கொன்று, அட்சகுமாரனைக் கசக்கிப் பிழிந்து, பின்னர் (தன் விருப்பப்படியே அவர்களிடம்) அகப்பட்டுக் கொண்டார். பிரும்மாவின் வரத்தினால் (எதிரிகளின்) அஸ்திரக் கட்டிலிருந்து தான் விடுவிக்கப்பட்டு விட்டதைத் தெரிந்து கொண்டார். (இருப்பினும்) அந்த வீரர் (கயிற்றால்) தன்னைக் கட்டும் அரக்கர்களின் அட்டகாசங்களை (தானாகவே) பொறுத்துக் கொண்டிருந்தார். (75,76)

பின்னர், மிதிலை மன்னர் மகளாகிய சீதையை மட்டும் விட்டுவிட்டு, இலங்கை நகரத்தைத் தீ வைத்துக் கொளுத்தினார். (சீதையைக் கண்டுவிட்ட) இனிய செய்தியை இராமனுக்குத் தெரிவிக்கும் பொருட்டு, மகாவானரர் திரும்பி வந்தார். அளவுகடந்த அறிவு படைத்த அனுமான், மகாத்மாவான இராமனை அடைந்து, அவரை வலம் வந்து, 'கண்டேன், சீதையை!' என்று (சிறு வாக்கியத்தில்) உண்மைச் செய்தியை விண்ணப்பித்தார். (77,78)

பின்னர், இராமன் சுக்ரீவனோடுகூட பெருங்கடலின் கரையை அடைந்து, சூரியனைப்போல் பேரொளி வீசும் அம்புகளால் கடலைக் கலக்கி உசுப்பிவிட்டார். ஆறுகளின் நாயகனான சமுத்திர மன்னன், தானே நேரில் வந்து பார்த்தான். அவனுடைய ஆலோசனையின்படி, நளன் என்னும் வானரனைக் கொண்டு பாலம் அமைக்கச் செய்தார். அந்தப் பாலத்தின் மூலமாக இலங்கை சென்று, போரில் இராவணனைக் கொன்று, பின்னர் சீதையைத் திரும்பப் பெற்று பெரிதும் வெட்கமடைந்தார். (79–81)

மக்கள் சபையில், அவளைப் பார்த்து மிகக் கடுமையான வார்த்தைகளைக் கூறினார், இராமன். பதிவிரதையான சீதை, அக்கடுஞ்சொற்களைத் தாங்க மாட்டாமல் அக்னியில் பிரவேசித்தாள். அப்போது, (மனம்–மொழி–மெய் ஆகிய மூன்றினாலும்) 'சீதை குற்றமற்றவள்' என்று அக்னிதேவன் கூறவே, இராமனுடைய அந்த மாபெரும் செயலால் மூன்றுலகச் சராசரங்களும், தேவ–ரிஷிக் கூட்டங்களும் கவலை நீங்கி மகிழ்ச்சியடைந்தன. எல்லா தேவர்களாலும் புகழப் பெற்ற இராமன் மிகவும் ஆனந்தத்தை அடைந்தார். (82–84)

அரக்கத் தலைவனான விபீஷணனை இலங்கை மன்னனாக முடிசூட்டிய பின், தன் நன்றிக்கடனைச் செலுத்திவிட்ட மனநிறைவால் கவலை நீங்கிப் பெருமகிழ்ச்சியில் திளைத்தார், இராமன். தேவதைகளிடமிருந்து பெறப்பட்ட வரத்தின் மூலம் (இலங்கைப் போரில்) மாண்டு போன வானரர்களை உயிர்ப்பித்து எழுப்பினார். நண்பர்கள் புடைசூழ புஷ்பகத்தில் ஏறி, அயோத்தி நோக்கிப் புறப்பட்டார். எதிர்கொள்ள முடியாத வீரம் படைத்த இராமன், (போகும் வழியில்) பரத்வாஜ முனிவரின் ஆசிரமத்தில் தங்கினார். அங்கிருந்து பரதனைப் பார்த்து வரும்படி அனுமானை அனுப்பினார். பின்னர், சுக்ரீவனுடன் நடந்த விஷயங்கள் குறித்து உரையாடிக் கொண்டே புஷ்பக விமானத்தில் ஏறி நந்திக்கிராமம் அடைந்தார். (85–88)

பாவமற்றவரான இராமன், நந்திக்கிராமத்தில் சகோதரர்களுடன்கூட (விரதகாலம் முடிந்து விட்டதால்) சடையை நீக்கினார். சீதாதேவியைத் திரும்பப் பெற்று ராஜ்யலட்சுமியையும் மீண்டும்

அடைந்தார். மக்கள் மெய்சிலிர்க்கும்படியான மகிழ்வுடனும், மனமார குதூகலத்துடனும், எல்லா விருப்பங்களும் நிறைவேற்றப்பட்டதால் உண்டான நிறைவுடனும், மனவியாதியும் உடல்நோயும் அற்றவர்களாகவும், பஞ்சம் முதலான அச்சம் நீங்கியவர்களுமாக வாழ்ந்தார்கள். (89,90)

இராம ராஜ்யத்தில் தன்னுடைய மைந்தனின் மரணத்தை யாரும் ஒருபோதும் பார்த்ததில்லை; விவாகமான மாதர்கள் விதவைகளானதில்லை; எப்போதும் பதிவிரதைகளாகவே இருந்து வந்தார்கள்; நெருப்பினால் பயம் ஏற்பட்டதில்லை; எந்தப் பிராணியும் நீரில் மூழ்கி மரித்ததில்லை; (பேய்க்காற்று, புயல், சூறாவளி போன்ற) காற்றினால் உண்டாகும் பயம் ஏற்பட்டதில்லை; காய்ச்சல், நோய் முதலியவற்றாலும் அச்சம் ஏற்பட்டதில்லை; உணவின்மையால் பசிக்கொடுமை, திருடர் பயம் தோன்றியதில்லை; நகரங்களும் கிராமத் தொகுதிகளும் பொருள்–பண்டம் நிறைந்தவைகளாக இருந்தன. கிருதயுகத்து மக்களைப்போல எல்லோரும் எப்போதும் நெஞ்சார்ந்த மகிழ்ச்சியுடன் இருந்தார்கள். (91–94)

நூறு அசுவமேத யாகங்களைச் செய்து, அநேக பொற்காசுகளைத் தட்சிணையாகக் கொடுத்தார்; பதினாயிரம் கோடிக்கணக்கில் பசுமாடுகளை வேதவித்தகர்களுக்கு முறைப்படி தானம் செய்தார்; பெரும் புகழ் பெற்ற குலத்தில் தோன்றிய அவர், அந்தணர்களுக்கு கணக்கில்லாத அளவிற்குப் பொருள்களை வாரி வழங்கினார். நூற்றுக்கணக்கான அரச பரம்பரைகளையும் இராகவன் நிறுவப் போகிறார். இவ்வுலகில் நான்கு வருணத்தாரையும் அவரவர் வாழ்க்கை நெறியில் நிலைநிறுத்துவார். பத்து ஆயிரம் ஆண்டுகளும், பத்து நூறாண்டுகளும் (பதினோராயிரம் ஆண்டுகள்) இராமன் அரசாட்சி என்ற பெரும் பொதுநலப்பணியை நிறைவேற்றிவிட்டு, பிரும்மலோகம் (அதாவது, இங்கே இவர் விஷயத்தில் வைகுண்டம்) திரும்பிச் சென்றடையப் போகிறார். (95–97)

மனமாசுகளை நீக்குவதும், பாவங்களை அழிப்பதும், புண்ணியத்தை அளிப்பதும், வேதங்களுக்கு நிகரானதுமான இந்த இராமசரிதத்தைப் படிப்பவர், எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுவிக்கப்படுகிறார். இராமாயணம் என்ற இந்தக் கதையைப் படிப்பவருக்கு மகன்கள், பேரன்கள், உறவினர்கள்கூடச் சேர்ந்திருக்கும் நீண்ட ஆயுள் கிட்டுகிறது. அவர் (உயிரைத் துறந்தபின்) சுவர்க்கத்திற்குச் சென்று, அங்கே கௌரவிக்கப்பட்டு நிலையாகத் தங்கிவிடுகிறார். இதனைப் படிக்கும் இருபிறப்பாளர்கள் வேத–வேதாந்த அறிவினைப் பெறுவார்கள்; க்ஷத்திரியர்கள் அரசாட்சியை அடைவார்கள்; வைசியர்கள் வியாபாரத்தில் வெற்றியைப் பெறுவார்கள்; சாமானிய வேளாள மக்களும் நற்பெருமையை அடைவார்கள். (98–100)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
முதலாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இரண்டு

பிரும்மாவின் வருகை

பேச்சில் வல்லவரும் அறநெறியாளருமான மாமுனிவர் வால்மீகி, நாரதருடைய அந்தச் சொற்களைக் கேட்டபின், தன் சீடர்களோடுகூட அவரைக் கொண்டாடிக் கௌரவித்தார். அவரால் (வால்மீகியால்) முறைப்படி கௌரவிக்கப்பட்ட தேவரிஷி நாரதர், அவரைப் பிரார்த்தித்து விடைபெற்றுக் கொண்டு வான்வழியாகச் சென்றார். அவர் தேவலோகம் சென்ற ஒரு முகூர்த்த காலத்திற்குப்பின், வால்மீகி முனிவர் கங்கா நதியிலிருந்து தொலைவில் இல்லாத தமஸா நதிக்கரையை அடைந்தார். (1–3)

தமஸா நதிக்கரையை அடைந்த முனிவர் நீரில் இறங்கி ஸ்நானம் செய்யும் படித்துறை சேறு–சகதி இல்லாமல் சுத்தமாக இருப்பதைப் பார்த்து அருகிலிருந்த சிஷ்யனிடம் கூறினார்— ''பரத்வாஜனே! சகதியில்லாமல் விளங்கும் இந்தப் படித்துறை, தெளிந்தத் தூய நீரோட்டத்துடன் அழகாகக் காணப்படுகிறது – மேன்மக்களின் மனத்தைப்போல. குழந்தாய்! தண்ணீர்ச் சொம்பை இங்கேயே வை; என்னுடைய மரவுரியைக் கொடு. இந்த தமஸா நதியின் தூய நீரில் ஸ்நானம் செய்கிறேன்.'' மகாத்மா வால்மீகி இவ்வாறு கூறியதும் குருவின் ஆணைப்படி நடக்கும் பரத்வாஜன் அவருடைய உடையான மரவுரியை அவரிடம் கொடுத்தான். (4–7)

புலன்களை வென்ற அவர், சீடனின் கையிலிருந்து மரவுரியைப் பெற்றுக் கொண்டபின், அந்த மகாவனத்தின் இயற்கை அழகை அனுபவித்தவாறே நாலாபக்கங்களிலும் நடந்து செல்லத் தொடங்கினார். அருகிலேயே ஒருபோதும் இணைபிரியாத (ஆண்–பெண்ணான) இரண்டு அன்றில் பறவைகளைப் பார்த்தார். அவைகளின் இனிய ஒலியையும் கேட்டார். அப்போது, அவர் பார்த்துக் கொண்டிருக்கும்போதே பாவசிந்தனையும், உயிர்களிடம் பகைமையும் கொண்ட ஒரு வேடன், அந்தப் பறவை இணையில் ஆண் பறவையை (அம்பு வீசி)க் கொன்றான். பெண் அன்றில், தன் ஆண் இணை கொல்லப்பட்டு ரத்தம் சொட்டச் சொட்ட தரையில் வீழ்ந்து விட்டதைப் பார்த்துப் பரிதாபமாக அழத் தொடங்கியது. தன்னைவிட்டு ஒருபோதும் பிரியாததும், சிவந்த தலைப்பகுதியும், அழகிய சிறகுகளும் கொண்ட அந்த ஆண் அன்றில் மிகவும் காமவசப்பட்டிருந்த நிலையில் (வேடனால்) பிரிக்கப்பட்டுவிட்டது. (8–12)

அவ்வாறு (இரக்கமே இல்லாத) வேடனால் வீழ்த்தப்பட்டுத் துடித்துக் கொண்டிருக்கும் பறவையைக் கண்டு, அறநெறியாளரான முனிவரின் உள்ளத்தில் கருணை உண்டாயிற்று. இயல்பாகவே கருணை உள்ளம் படைத்த அந்த முனிவர், 'அநியாயமன்றோ இது?' என்று சிந்தித்து, அழுது கொண்டிருக்கும் பெண் அன்றிலைப் பார்த்தவாறே (வேடனிடம்) பின்வரும் சொற்களைக் கூறினார்— ''வேடனே! உனக்கு இனி ஒருக்காலும் அமைதியே கிடைக்காது; ஏனென்றால், காமவசப்பட்டிருந்த கிரௌஞ்ச தம்பதியில் ஒன்றை (ஆண் அன்றிலை) எந்தக் காரணமும் இல்லாமல் கொன்றிருக்கிறாய்.'' (13–15)

இவ்வாறு சொல்லியபின்னர் நெஞ்சத்தில் ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தபோது, ''அட! சோகத்தால் வருந்தும் இந்தப் பறவையின் நிமித்தமாக, நான் என்னவோ பேசிவிட்டேனே!'' மகாஞானியும் பேரறிவாளருமான அவர் கவலையுடன் இவ்வாறு சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்தவராக சிஷ்யனிடம் பின்வருமாறு கூறினார்— ''வருத்தத்தினால் தவித்த என்னிடமிருந்து வெளிப்போந்த இந்தச் சொற்கள், கவிதை இலக்கணத்தை ஒட்டியபடி, ஒவ்வோர் அடியிலும் சமமான அட்சரங்களுடனும், தந்திக்கருவியில் இசைக்கும்படி லய சுத்தத்துடனும், சுலோக வடிவமாகவும் அமைந்துள்ளதால் எனக்குப் புகழைத் தரப் போகிறது; வேறு மாதிரியாக (கோபம், சாபம் போன்ற பாவச் செயலாக) அமையப் போவதில்லை.'' (16–18)

முனிவருடைய மிக உயர்வான சொற்களைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்து, ''ஆம், ஐயனே! தாங்கள் கூறியது சரிதான்'' என்று மனப்பூர்வமாக சிஷ்யனும் ஏற்றுக் கொண்டான். அதனால் ஆசார்யரும் மகிழ்ந்தார். பின்னர், முறைப்படி அந்தப் புண்ணிய நதியில் தலைமூழ்கி நீராடிவிட்டு, தன் சொற்களின் பொருளைப் பற்றிச் சிந்தித்தவாறே முனிவர் (ஆசிரமத்தை நோக்கி) திரும்பி நடந்தார். பணிவுள்ளவனும், வேதங்கள் கற்றவனுமான பரத்வாஜன் என்ற அந்த மாணவன், ஆசார்யருடைய நீர்ச் செம்பில் தண்ணீர் நிரப்பி எடுத்துக் கொண்டு, அவருக்குப் பின்னால் நடந்தான். தருமத்தை அறிந்தவரான அவர், தன் சிஷ்யனுடன் ஆசிரம வளாகத்தை அடைந்து, ஓர் ஆசனத்தில் அமர்ந்து வேறு பேச்சுக்கள் பேசினார். (என்றாலும்) அவர் உள்மனம் (வேடனை நோக்கித் தான் சொல்லிய) அந்தச் சொற்களிலேயே ஆழ்ந்திருந்தது. (19–22)

இதனிடையில், அனைத்துலகங்களையும் படைப்பவரும், எல்லாம் செய்ய வல்லவரும், மிக்க ஒளி வீசுபவருமான நான்முக பிரும்மா, சிறந்த முனிவரான அவரைக் காண்பதற்காகத் தானே நேரில் வந்தார். அவரைப் பார்த்தவுடன் வால்மீகி உடனே எழுந்து நின்றார். மனம்–புலன்களை அடக்கி வைத்துக் கொண்டு வியப்பு மேலிட்டவராக நின்றபடியே இருந்தார். பின்னர், (உணர்வு பெற்று) பாத்யம்–அர்க்யம்–ஆசனம்–தோத்திரம் முதலான உபசார முறைப்படி வரவேற்று, வணங்கி நின்று அவருடைய நலம் பற்றி விசாரித்தார். உத்தமமான ஓர் ஆசனத்தில் பகவான் பிரும்மா அமர்ந்து கொண்டார். வால்மீகி முனிவரையும் உட்காரும்படி கூறினார். (23–26)

பிரும்மாவினால் அனுமதிக்கப்பட்ட அவரும் ஓர் இருக்கையில் அமர்ந்தார். அப்போது அவர் எதிரில் அனைத்துலகப் படைப்பாளரான பிரும்மாவே உட்கார்ந்திருந்த போதிலும், (அவரிடம் மனம் ஈடுபடாமல்) 'பகைமை எண்ணம் கொண்ட பாவியான வேடன், எந்தக் காரணமும் இல்லாமல், மிக அழகாக சப்தமிடும் கிரௌஞ்ச பட்சியின் உயிரை மாய்த்தானே?' என்று அந்த நிகழ்ச்சியைப் பற்றிய எண்ணத்திலேயே மனம் லயித்திருந்தார். மீண்டும் மீண்டும் அதைப் பற்றியே நினைத்துக் கொண்டு, வருத்தத்தில் மூழ்கி, உள்மனத்தில் துயரப்பட்டுக் கொண்டிருந்த அவரைப் பார்த்து, சற்றே இளநகை புரிந்தவண்ணம் பிரும்மா கூறினார்— (27–29)

''அந்தணோத்தமரே! என்னுடைய சங்கல்பத்தினாலேயே உங்கள் முகத்திலிருந்து அந்தச் சொற்கள் வெளிவந்தன. இதைப் பற்றி மேலும் சிந்தித்துக் குழம்ப வேண்டாம். நீங்கள் கூறியது யாப்பு இலக்கண முறைப்படி அமைந்த சுலோகமே ஆகும். ('கோபத்தில் எழுந்த சாபச் சொற்களோ?' என்ற கவலையை விடுக!) மாமுனிவரே! இராமனுடைய வரலாறு முழுவதையும் எழுதுங்கள். பகவான் ஸ்ரீராமன் உலகில் மிகச்சிறந்த தருமாத்மா; புத்திமான். நாரதரிடமிருந்து நீங்கள் கேட்டபடியே அந்த மாவீரருடைய வரலாற்றைக் கூறுங்கள். அந்தப் பெருவீரருடைய வாழ்க்கையில் ரகசியமாகவும் வெளிப்படையாகவும் எவை எவை நடந்தனவோ, அதுபோல், லட்சுமணன், அரக்கர்கள், சீதை ஆகியோரின் வாழ்க்கையில் ரகசியமான மற்றும் வெளிப்படையான நிகழ்ச்சிகள் என்னென்ன நடந்தனவோ, அவையெல்லாம் உங்கள் அறிவுக்குப் புலனாகும். (30–34)

'இராமகாவியம்' என்ற உங்கள் படைப்பில் ஒரு சொல்கூட பொய்யாகப் போகப் போவதில்லை. புனிதமானதும், புகழைக் கொடுக்கக் கூடியதுமான இராம கதையை மனங்கவர் நடையில் செய்தருள்வீராக! மண்ணுலகில் எந்தக் காலம் வரையில் மலைகளும் ஆறுகளும் நிலைத்திருக்குமோ, அந்தக் காலம் வரை (நீங்கள் எழுதப் போகும்) இராமாயண கதை மக்களிடையே மதிப்புடன் விளங்கப் போகிறது. உங்களால் இயற்றப்படும் இராம கதை எதுவரையில் உலகில் விளங்கிக் கொண்டிருக்குமோ, அந்தக் காலம் வரையில் நீங்கள் மேலுலகங்கள், கீழ் உலகங்கள் மற்றும் என்னுடைய (சத்திய) லோகத்தில் வாழ்ந்து கொண்டிருப்பீர்கள்.'' இவ்வாறு கூறிவிட்டு பகவான் பிரும்மா, அந்தப் பொழுதே மறைந்து போனார். (35–37)

முனிபுங்கவர் வால்மீகியும், அவருடைய எல்லாச் சீடர்களும் (பிரும்மா திடீரென்று வந்து பேசிவிட்டு மறைந்ததை எண்ணிப்) பேராச்சரியம் அடைந்தார்கள். அவருடைய எல்லா மாணவர்களும் அந்தச் சுலோகத்தைத் திரும்பக் கூறி மகிழ்ந்தார்கள். அநேக தடவைகள் கூறி மிகவும் ஆச்சரியத்தில் மூழ்கிய அவர்கள், தங்களுக்குள் இவ்வாறு பேசிக் கொண்டார்கள். மகரிஷியால் (அன்றில் பறவையின் துயரத்தைத் தாங்க மாட்டாமல்) கூறப்பட்ட சொற்கள் (இலக்கண விதிகளுக்கு ஏற்ப) சமமான எழுத்துக்களோடும், நான்கு பாதங்களோடும் செய்யுள் வடிவில் அமைந்துள்ளன. அவருடைய உள்ளத்தின் சோகம் (அவருக்குப் பெரும்புகழ் ஈட்டித் தரும்) சுலோக ரூபமாகிவிட்டது. (38,39)

தூய ஞானம் பெற்ற மாமுனிவரின் உள்ளத்திலும் இதே சமயத்தில், 'இம்மாதிரியாகவே இராமாயண காவியம் முழுவதையும் நான் எழுதப் போகிறேன்' என்ற எண்ணம் தோன்றிற்று.

அதன்படி பெரும்புகழ் வாய்ந்த இராமனுடைய சரித்திரத்தை அளவான எழுத்துக்களோடு கூடியதும், மனங்கவரும் நூற்றுக்கணக்கான சுலோகங்கள் கொண்டதும், புகழை அளிப்பதுமான ஒரு பெருங்காவியமாகக் கீர்த்தியுள்ள அந்த மாமுனிவர் படைத்தார். ஸமாஸம்–ஸந்தி முதலிய இலக்கண விதிகளின்படி அமைக்கப்பட்டதும், நேரிடையான பொருள், உள்ளுறையான மறைபொருள் தரும் வாக்கியங்களால் ஆக்கப்பட்டதும், முனிவரால் இயற்றப்பட்டதும், ரகுவரனுடைய சரிதத்தையும், பத்துத் தலையனான இராவணனுடைய வதத்தையும் கேளுங்கள். (40–42)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
இரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : மூன்று

இராமகாவியம் பற்றிய சிறு குறிப்பு

தருமம் முதலான புருஷார்த்தங்களை உள்ளடக்கிய இராமசரிதத்தை முழுமையாக நாரதரிடமிருந்து கேட்ட வால்மீகி, பேரறிவாளரான இராமனின் சரிதத்தை இன்னும் விளக்கமாக அறிந்து கொள்ள முயன்றார். முறைப்படி ஆசமனம் செய்து, கிழக்கு நுனியாகப் போடப்பட்ட தர்ப்பங்களில் அமர்ந்து, கைகளைக் கூப்பிக் கொண்டு, அடுத்த முயற்சி பற்றிச் சிந்தித்தார். இராமன், லட்சுமணன், சீதை, தசரதர் மற்றும் அரச மனைவியர்களால் அனுபவிக்கப்பட்டவை அனைத்தையும் – சிரித்தது, பேசியது, லட்சியம், செயல்பாடுகள் ஆகியவைகளை – அறத்தின் வலிமையால் தான் பெற்ற சக்தியைக் கொண்டு துல்லியமாகப் பார்த்தார். (1–4)

காட்டில் போய்க் கொண்டிருக்கும்போது சத்தியம் தவறாத இராமன், லட்சுமணன், சீதை ஆகியோருக்கு நேர்ந்தவைகளையும் முழுமையாகக் கண்டார். தன் யோகதாரணையால் முன்னர் நிகழ்ந்த சம்பவங்கள் அனைத்தையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தருமாத்மாவான வால்மீகி (கண்களாலும் அறிவினாலும்) தெள்ளத்தெளிவாகப் பார்த்தார். பேரறிவாளரான அவர், தன் சக்தியினால் உண்மையாக நடந்ததனைத்தையும் பார்த்து, உள்ளங்கவரும் இராமனுடைய வரலாற்றை எழுதும் ஆவல் கொண்டார். (5–7)

காமத்தின் பொருளை உள்ளடக்கியது; அறத்தின் தத்துவத்தை வெகு விரிவாகப் பேசுவது; இரத்தினங்களைக் கொண்ட சமுத்திரம் போல் ஆழமானது; எல்லோருக்கும் செவி இன்பத்தை வழங்குவது; மாமுனிவர் நாரதரால் முன்னர் கூறப்பட்டது – ரகு குலத்தின் இப்படியான வரலாற்றை எழுதுவதற்கு வால்மீகி மாமுனிவர் உறுதி கொண்டார். இராமனுடைய பிறப்பு, அவருடைய அளவற்ற ஆற்றல், எல்லோருக்கும் உதவியாக இருக்கும் தன்மை, மக்களின் பிரியத்துக்குப் பாத்திரமாக இருப்பது, மன்னிக்கும் இயல்பு, சாந்தம், முகவிலாசம், வாய்மையைக் கடைப்பிடித்தல் (என்பனவற்றை நினைவிலிருத்திக் கொண்டார்). (8–10)

மனங்கவரும் பற்பல கிளைக் கதைகள்; விசுவாமித்திரர் வருகை; சிவதனுஸை முறித்தல்; ஜானகியுடன் விவாகம்; இராமனுக்கும் பரசுராமனுக்குமிடையே நடந்த விவாதம்; அப்போது இராமனிடம் வெளிப்பட்ட உயர் குணங்கள்; இராமனுக்கு இளவரசுப் பட்டம் கட்ட முயற்சி; கைகேயியின் தீய எண்ணம்; இளவரசுப் பட்டம் கட்டும் நிகழ்ச்சி நடைபெறாமல் போனது; இராமன் காட்டிற்கு அனுப்பப்படுவது; துக்கம் தாங்காமல் மன்னன் (தசரதர்) விண்ணுலகை அடைவது; சர்வ பிராணிகளின் துயரம்; (தமஸா நதிக்கரையில்) அயோத்தி மக்களை விட்டுவிடுதல்; வேடர் தலைவன் குகனுடன் உரையாடல்; தேரோட்டி சுமந்திரரைத் திருப்பி அனுப்புதல்; (11–14)

கங்கையைக் கடந்து செல்லுதல்; பரத்வாஜ முனிவரைக் காண்பது; பரத்வாஜரின் ஆலோசனைப்படி சித்திரகூடத்தை அடைதல்; வாஸ்து முதலிய சடங்குகளைச் செய்து புதிய ஆசிரமத்தில் பிரவேசிப்பது; பரதன் வருகை; இராமன் அவனைச் சமாதானப்படுத்துவது; தந்தைக்கு நீர்க்கடன் செலுத்துதல்; நந்திக்கிராமத்தில் இராம பாதுகைகளுக்குப் பட்டாபிஷேகம் செய்து, அங்கேயே வசிக்கத் தொடங்குதல்; (இராமன் முதலிய மூவர்) தண்டகாரண்யம் செல்லுதல்; விராதனை வதம் செய்தல்; சரபங்கரைத் தரிசித்தல்; சுதீக்ஷ்ணருடன் சந்திப்பு; அநஸூயையோடு கூட இருந்து, அவரால் சமர்ப்பிக்கப்படும் உடற்பூச்சுக்களை (சீதை) ஏற்பது; அகஸ்தியரைத் தரிசனம் செய்வது; அவரால் அளிக்கப்பட்ட வில்லை ஏற்பது; சூர்ப்பணகையோடு வீராவேசப் பேச்சு; அவள் மேனியழகைச் சிதைத்தல்; (15–19)

கரன், திரிசிரஸ் ஆகியோரை அழித்தல்; இராவணன் வெகுண்டு எழுதல்; மாரீச வதம்; சீதை கவர்ந்து செல்லப்படுதல்; இராகவன் புலம்பல்; கழுகரசன் ஜடாயுவின் மரணம்; கபந்தனைப் பார்ப்பது; பம்பா நதியைக் காண்பது; சபரிக்குத் தரிசனம் கொடுப்பது; அனுமானைச் சந்திப்பது; கருணை உள்ளம் கொண்ட இராகவன் பம்பைக் கரையில் புலம்புவது; ரிஷ்யமூக மலைக்குச் செல்லுதல்; சுக்ரீவனைச் சந்தித்தல்; தன் பேராற்றலில் அவனுக்கு நம்பிக்கை உண்டாக்குவது; நட்புக் கொள்ளுதல்; சுக்ரீவன்–வாலியினிடையே நிலவிய போட்டி–பொறாமை பற்றி அறிதல்; வாலியை வீழ்த்துதல்; சுக்ரீவனுக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவது; தாரையின் ஒப்பாரி; மழைக்காலம் முடியும் வரை இராமன் அங்கேயே (பிரஸ்ரவண கிரியில்) தங்குவது; (20–24)

(குறித்தக் காலத்தில் சுக்ரீவன் வராததால்) சிங்கம் நிகர் இராகவனுக்கு வந்த கோபம்; வானரப் படைகளைத் திரட்டுதல்; எல்லாத் திசைகளுக்கும் வானரர்களை அனுப்புதல்; உலகைப் பற்றிய முழுத் தகவலையும் (சுக்ரீவன்) விளக்கமாகக் கூறுவது; (இராமன் அனுமானிடம்) கணையாழியைக் கொடுத்தல்; அங்கதன் தலைமையிலான வானரர்கள் வழிதவறி ஒரு குகைக்குள் புகுதல்; (காலக்கெடு முடிந்துவிட்டதால்) பிராயோபவேசம் செய்து உயிரைவிட நிச்சயித்தல்; சம்பாதியைச் சந்திப்பது; வானரர்கள் மகேந்திர மலை மேல் ஏறுதல்; (அனுமான்) கடலைத் தாண்டுதல்; சமுத்திரராஜன் வழங்கிய வழிமுறைகள்; அனுமான் மைநாக பர்வதத்தைக் காண்பது; (அனுமானைக் கடல் மத்தியில்) அரக்கி அதட்டுதல்; சாயாக்ராஹியைப் பார்த்தல்; அந்த ஸிம்ஹிகையை வீழ்த்துதல்; இலங்கையில் மலய பர்வதத்தைக் காண்பது; (25–28)

இரவில் (அனுமான்) இலங்கை நகருக்குள் புகுவது; தனித்திருக்கும் தான் எவ்வாறு செயல்பட்டு வெற்றி பெறுவது என்று சுய ஆலோசனை; அரண்மனையில் பானசாலைக்குள் செல்வது; அந்தப்புரத்தில் தேடுவது; இராவணனையும் காண்பது; புஷ்பக விமானத்தில் தேடுவது; அசோகவனத்திற்குச் செல்வது; சீதாபிராட்டியைக் கண்ணால் காண்பது; (அவளிடம்) அடையாளத்தைக் கொடுத்தல்; சீதையுடன் உரையாடுதல்; அரக்கிகள் சீதையைப் பயமுறுத்துவது; திரிஜடை கனவு காண்பது; (அனுமானிடம்) சூடாமணியைக் கொடுத்தல்; (அனுமான்) மரங்களை முறித்துச் சாய்த்தல்; அரக்கிகள் ஓட்டம்; கிங்கரர்களை அழித்தொழிப்பது; வாயுகுமாரர் பிடிபடுதல்; இலங்கையை எரித்து வெற்றிக்குரல் எழுப்புவது; மீண்டும் வான்வழியாகத் திரும்பி வருதல்; மதுவனத்தை அழித்தல்; இராகவனிடம் நற்செய்தியைக் கூறித் தைரியப்படுத்துதல்; சூடாமணியை அளித்தல்; கடலரசனைக் கண்டு, அவன் ஆலோசனைப்படி நளன் 'சேதுபாலம்' அமைத்தல்; (29–34)

பெருங்கடலைக் கடத்தல்; இரவில் இலங்கை முற்றுகை; விபீஷணனுடன் உறவு; அவன் அரக்கர்களை அழிப்பதற்கான உபாயங்களை விண்ணப்பித்தல்; கும்பகர்ணன் வீழ்ச்சி; மேகநாதன் அழிவு; இராவணன் அழிவு; சீதையைத் திரும்பப் பெறுதல்; விபீஷணனுக்குப் பட்டாபிஷேகம்; புஷ்பக விமானத்தைத் தருதல்; அயோத்தி நோக்கிச் செல்வது; பரதன் சந்திப்பு; இராமனுக்கு முடிசூட்டுதல் என்ற மங்கள நிகழ்ச்சி; உடன் வந்த எல்லாப் படையினரையும் திருப்பி

அனுப்புதல்; தன் நாட்டில் நல்லாட்சி புரிதல்; வைதேகியைக் காட்டிற்கு அனுப்புதல் – இவைகளை எழுதிய பின்னர், மண்ணுலகில் இராமன் செய்யப் போகும் பற்பல நற்செயல்கள் பற்றியும், பிற விவரங்களையும் தெய்வாம்சம் பொருந்திய முனிவர் வால்மீகி, அடுத்த பகுதியில் (உத்தர காண்டத்தில்) வரைந்து நிறைவு செய்தார். (35–39)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நான்கு

இராமாயணம் தோன்றுதல்

இராமன், அயோத்தியில் அரசாட்சி செய்து கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் வால்மீகி முனிவர் தான் வசித்து வந்த காட்டில் பல்வகையான சொற்சேர்க்கைகளைக் கொண்ட இராமசரிதம் முழுவதையும் கவிதையாகப் புனைந்தார். முனிவர், அந்தக் காவியத்தில் இருபத்து நான்காயிரம் சுலோகங்களும், ஐந்நூறு ஸர்க்கங்களும், ஆறு காண்டங்கள் மேலும் ஒரு காண்டமும் உள்ளதாக இயற்றினார். பேரறிஞரான அவர் இனிமேல் நடக்கப் போகின்றவைகளையும் எழுதிய பின்னர், 'இந்தக் காவியத்தைப் பிரசாரம் செய்வதற்காக யாரிடம் ஒப்படைப்பேன்?' என்று சிந்தித்தார். மாமுனிவரான அவர் இவ்வாறு சிந்தித்துக் கொண்டிருக்கும்போது, முனி வேஷம் தரித்த லவ–குசர்கள் அவருடைய பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தார்கள். (1–4)

லவ–குசர்கள் தருமம் அறிந்தவர்கள்; அரசகுமாரர்கள்; புகழ் பெற்றவர்கள்; ஒரே தாய் வயிற்றில் பிறந்த சகோதரர்கள்; இனிய குரல் வாய்க்கப் பெற்றவர்கள்; அந்த ஆசிரமத்திலேயே வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். இவர்களை வால்மீகி பார்த்தார். வேதங்களை நன்றாகக் கற்றவர்களும், மேதாவிகளுமான அவர்களைப் பார்த்ததும், வேதார்த்தங்களைத் தெளிவுபடக் கூறும் தமது நூலைப் பிரசாரம் செய்வதற்குத் தகுதி பெற்றவர்கள் அவர்கள் என்று அவர் தீர்மானித்தார். அந்தக் காவியத்திற்கு இராமாயணம் என்றும், சீதையின் மகாவரலாறு என்றும், பௌலஸ்திய (இராவண) வதம் என்றும் முனிவர் பெயரிட்டார். (5–7)

படிப்பதற்கும் இசைப்பதற்கும் ஏற்றதாக அந்தக் காவியம் அமைந்திருந்தது. த்ருதம், மத்யம், விலம்பிதம் என்ற மூன்று கால பிரமாணங்களும், ஷட்ஜம் முதலிய ஏழு ராகப் பிரிவினைகளும் பெற்று, கம்பி வாத்தியங்களில் இசைக்கத்தக்கதாகவும், லயத்திற்கு ஒத்ததாகவும் அமைந்திருந்தது. சிருங்காரம், கருணை, ஹாஸ்யம், ரௌத்ரம், பயாநகம், வீரம் முதலான சுவைகள் நிறைந்த அந்தக் காவியத்தை, அவர்கள் மெட்டமைத்துப் பாடினார்கள். இசைக்கலையின் நுட்பங்களை அறிந்தவர்கள்; மந்த்ரம், மத்யம், தாரம் என்ற ஸ்வரங்களின் மூலத்தை அறிந்தவர்கள்; செவிக்கினிய குரல்வளம் படைத்தவர்கள்; அசுவினீ தேவர்கள் போல் பேரழகு வாய்ந்த இரட்டையர்; உடன்பிறந்தவர்கள்; நல்உருவமும், அங்க லட்சணங்களும் பொருந்தியவர்கள்; அன்புச்சுவை சொட்டப் பேசுபவர்கள்; ஓர் அழகுச் சிலையின் பிரதிபிம்பத்தைப் போன்று நிகரற்ற வடிவினர்; இராமனுடைய உடலிலிருந்து வெளிப்போந்த வேறு இரு உருவத்தைப் போன்றவர்கள். அரச குமாரர்களான அவ்விருவரும் தருமத்தைப் போதிக்கும் உத்தமமான அந்தக் காவியம் முழுவதையும் பிழையில்லாமல் கற்றறிந்து கொண்டார்கள். (8–12)

முனிவர்கள், இருபிறப்பாளர்கள், சாதுக்கள் ஆகியோர் கூடியிருக்கும் இடங்களில் (நிச்சயமாக இத்தகைய கூட்டங்களில் அத்யாத்மிக விஷயங்களே பேசப்படும்) தத்துவமறிந்த அவ்விருவரும் தங்களுக்கு (வால்மீகி முனிவர்) உபதேசித்தபடியே ஒரே குரலில் இசைத்தார்கள். பெரும்பேறு பெற்றவர்களும், எல்லாவித லட்சணங்களும் அமையப் பெற்றவர்களுமான அவர்கள் இருவரும்,

ஒரு சமயம் பரமாத்ம தரிசனம் பெற்ற முனிவர்கள் கூடி உட்கார்ந்திருந்தபோது, அவர்களருகே சென்று இராமாயண காவியத்தைப் பாடினார்கள். (13,14)

அதனைக் கேட்டு கண்கள் ஆனந்தக் கண்ணீர் சொரிய, மிகவும் ஆச்சரியத்தை அடைந்தவர்களாய், ‘நல்லது, ரொம்ப நல்லது’ என்று பாராட்டினார்கள். அறப்பற்றுடைய அம்முனிவர்கள் அனைவரும் மனம் மகிழ்ந்து, பாடல் இசைக்கிற லவ–குசர்களான அவ்விருவரையும் வெகுவாகப் போற்றினார்கள். உங்கள் பாட்டின் இனிமையை என்னென்று சொல்ல! சுலோகங்களின் அமைப்பைப் பற்றி என்ன கூறுவது! முன்பு எப்போதோ நடந்தவைகளைக்கூட, இப்போது கண்ணுக்கு எதிரே நடப்பதுபோல காட்டுகின்றன! அவ்விருவரும் உள்ளே சென்று மிகவும் இனிமையாகவும், கேட்போரைக் கவர்ந்திழுக்கும்படியும், ஸ்வரங்கள் நன்றாகச் சேர்ந்தவாறும் காவியப் பொருளில் நெஞ்சம் ஊன்றிப் பாடினார்கள். தீவிரமான தவங்கள் செய்து புனிதர்களாகியுள்ள மகரிஷிகள், மனத்தைச் சுண்டியிழுக்கும்படியாக வெகு இனிமையாகப் பாடினார்கள். (15–19)

மனம் மகிழ்ந்த ஒரு முனிவர் எழுந்து சென்று ஒரு குடத்தைப் பரிசாகக் கொடுத்தார். பெரும் புகழ் படைத்த ஒருவர் முகமலர்ச்சியுடன் அவர்களுக்கு மரவுரி கொடுத்தார்; வேறொருவர் கருமான்தோலும், மற்றொரு மகாமுனிவர் மௌஞ்ஜி என்ற புல்லால் செய்த அரைஞாணும் கொடுத்தார். ஒருவர் கமண்டலுவையும், இன்னொருவர் முப்புரி நூலையும் கொடுத்தார். ஒருவர் அத்திமரப் பலகையையும், இன்னொருவர் ஜபமாலையையும் கொடுத்தார். வேறொருவர் ஆசனம் ஒன்றையும், மற்றொருவர் கௌபீனமும் அளித்தார்கள். வேறொருவர் கோடாலியைக் கொடுத்தார். வேறொரு முனிவர் காஷாய வஸ்திரத்தையும், மற்றொரு முனிவர் ஜடையைக் கட்டும் சாதனத்தையும், இன்னொருவர் உடையாகப் பயன்படுத்தக் கூடிய மரப்பட்டைகளையும் கொடுத்தனர். (20–24)

ஒரு முனிவர் யாகத்திற்குத் தேவையான பாத்திரத்தைக் கொடுத்தார். இன்னொருவர் விறகுக்கட்டைகள் கொடுத்தார். அங்கேயிருந்த மற்ற முனிவர்கள் நெஞ்சம் நிறைந்து, ‘பல்லாண்டு வாழ்க’ என்று வாழ்த்தினார்கள். சொல் வீணாகாத முனிவர்கள் அவர்களுக்கு பல வரங்களைத் தந்தார்கள். ‘வால்மீகி முனிவரால் இயற்றப்பட்ட இந்த நெடுங்கதை மிகவும் ஆச்சரியப்படத்தக்கதாக இருக்கிறது. இனி வரப் போகும் கவிஞர்களுக்கு அடித்தளமாக அமையப் போகிறது. மங்களமாகத் தொடங்கியதற்கேற்ப நல்லவிதமாக நிறைவு பெற்றிருக்கிறது. எல்லா இசை நுட்பங்களையும் கற்றறிந்த நிபுணர்களால் இசைக்கப்படும் இது கேட்போரின் ஆயுளை நீட்டிக்க வல்லது; மனோதைரியத்தைக் கொடுக்கக் கூடியது; எல்லோருக்கும் செவியின்பம் அளிக்கக் கூடியது. (25–28)

நெடுஞ்சாலை, ராஜபாட்டை ஆகிய எல்லா இடங்களிலும் புகழ் பரவியிருக்கும் அப்பாடகர்களை, ஒரு சமயம் பரதனுக்கு மூத்தவரான இராமன் பார்த்தார். எதிரிகளை அழிக்கும் திறன் கொண்ட இராமன், சகோதரர்களான லவ–குசர்களையும் தன் இருப்பிடத்திற்கு அழைத்துவரச் செய்து தக்கபடி உபசரித்தார். திவ்வியமான சுவர்ண சிம்மாசனத்தில் பிரபு இராமசந்திரன் அமர்ந்திருக்க, கீழே வரிசைப்படி அமைச்சர்களும் சகோதரர்களும் உட்கார்ந்திருந்தார்கள். பேரழகு படைத்தவர்களும் அடக்கமானவர்களுமான அவ்விருவரையும் சுட்டிக்காட்டி, லட்சுமண–சத்ருக்ன–பரதர்களிடம் இராமன் இவ்வாறு கூறினார்— (29–32)

‘‘தெய்விகத் தோற்றம் கொண்ட இவ்விருவரும் பாடும் இந்தக் கதையைக் கேட்போம். விசித்திரமான பொருள்–சொற்கட்டுகளுடன் நன்றாகப் பாடுகிறார்கள்’’ என்று தூண்டிவிட்டார். அவர்களும் இனிமை–தெளிவு–விஸ்தாரமான ராக ஆலாபனை, தந்தி வாத்தியங்களுக்கேற்ற லயம், பொருள் விளக்கம் தோன்றப் பாடினார்கள். மக்கள் நிறைந்த அந்தப் பேரவையில் நிகழ்ந்த இசை நிகழ்ச்சி எல்லோருடைய உடல்–மனம்–நெஞ்சங்களை ஆனந்தத்தில் ஆழ்த்தியது;

செவிப்புலனுக்கு இன்பம் அளித்தது. லவ–குசர்களான இவ்விருவரும் பெரும் தவசிகள்; முனிவர்கள்; அரசனுக்குரிய அங்க அடையாளங்களைப் பெற்றிருக்கிறார்கள்; மிக உயர்ந்த சரிதத்தை – அது எனக்கும்கூட மங்களத்தைக் கொடுக்கக் கூடியது – நன்றாகக் கேளுங்கள். பின்னர், இராமனின் ஆக்ஞைக்கிணங்க மார்க்கம் என்ற இசை மரபுப்படி (லவ–குசர்கள்) அந்தக் காவியத்தைப் பாடினார்கள். இராமனும் கூட்டத்தோடு கூட்டமாக இருந்து பாட்டை ரசிக்க விரும்பி, இறங்கி வந்து, சபையில் அமர்ந்து காவியத்தில் ஆழ்ந்து போனார். (33–37)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐந்து

அயோத்தி வர்ணனை

மனுப் பிரஜாபதி தொடங்கி, மிகப் பழமையான காலத்திலிருந்து இந்தப் பூமண்டலம் முழுவதும் எப்போதும் வெற்றி வீரர்களாக விளங்கிய இக்ஷ்வாகு மன்னர்களிடம் இருந்து வருகிறது. அவர்களில் சகரன் என்னும் மன்னனால்தான் சாகரம் (பெருங்கடல்) அகழப்பட்டது. அவன் செல்லுமிடங்களுக்கெல்லாம் அவனுடைய அறுபதாயிரம் மைந்தர்களும் உடன் செல்வார்கள். இப்படிப்பட்ட பேரரசர்கள் பரம்பரையினரைப் பற்றிய கதை இராமாயணம் என்பதாகப் பெரும் புகழை அடைந்தது. நாங்களிருவரும் முதலில் இருந்து கடைசி வரை முழு காவியத்தையும் ‘பண்’ அமைத்துப் பாடப் போகிறோம். இந்தக் காவியம் தரும–அர்த்த–காம–மோட்சங்களாகிற நான்கு புருஷார்த்தங்களையும் கொடுக்கக் கூடியது. எனவே, போட்டி–பொறாமை–வெறுப்பு முதலியன இல்லாமல் (பக்தி–சிரத்தையுடன்) கேளுங்கள். (1–4)

(வளமும் புகழும் உடைய) கோசலம் என்ற நாடு சரயூ நதியின் கரையில் அமைந்துள்ளது. ஏராளமான பொருட்செல்வமும், இயற்கை வளமும் பொருந்திய நாடு. அந்த நாட்டில் உலகப் புகழ் பெற்ற நகரமான அயோத்தி இருந்தது. மனிதகுலத் தலைவரான மனுப் பிரஜாபதி, தானே அதை உண்டாக்கி வசித்து வந்தார். பன்னிரண்டு யோஜனை நீளமும், மூன்று யோஜனை அகலமும் கொண்ட அந்த நகரம் அனைத்து வகை செல்வச் செழிப்புடனும், நன்றாக அமைக்கப்பட்ட பெரு வழிகளும் உடையதாக இருந்தது. செம்மையாக அமைக்கப்பட்ட ராஜபாட்டைகளில் தண்ணீர்த் திவலைகளுடன் கூடிய மலர்கள் எப்போதும் சிதறிக் கிடந்தன. மேலுலகத்தில் பெரும் புகழுடன் வாழ்ந்து வரும் தேவராஜனைப் போல, பேரரசின் முன்னேற்றத்தில் கருத்துடைய மன்னர் தசரதர் அங்கே வாழ்ந்து கொண்டிருந்தார். (5–9)

அந்த நகரத்தில் சாளரங்களும் தோரணவாயில்களும் இருந்தன. உள்ளே வணிக நிலையங்கள் வரிசையாக நிறுவப்பட்டிருந்தன. அங்கே போரில் பயன்படும் பல்வகை யந்திரங்களும், போர்த் தளவாடங்களும் சேமிக்கப்பட்டிருந்தன. அத்துடன் இவைகளைத் தயாரிக்கும் கருமான்களும் இருந்தார்கள். அரச துதி பாடுபவர்களும், பரம்பரைப் பெருமையை எடுத்து ஓதுபவர்களும் அரண்மனையில் இருந்தார்கள். ஈடு–இணையற்ற சோபையுடன் பிரகாசித்தது. நெடிதுயர்ந்த அரண்மனை மாடங்களில் பதாகைகள் பறந்தன. நூற்றுக்கணக்கான சதக்னீ (என்ற யந்திரங்கள் மதில்களில்) நிறுவப்பட்டிருந்தன. சுற்றிலும் மிகவும் ஆழமான அகழி இருந்தது. பிறரால் (எதிரிகளால்) நுழைய முடியாத (கட்டுக்காவல் நிறைந்த) கோட்டை; குதிரை–யானை–பசு–ஒட்டகம்–கழுதை முதலான மிருகங்கள் நிறைந்தது. வெகுமானம் அளிக்க விரும்புகிறவர்களாலும், கப்பம் செலுத்தும் சிற்றரசர்களாலும் எப்போதும் கூட்டமாக இருந்தது. பல நாடுகளைச் சேர்ந்த வணிகர்கள் வந்து கூடும் பெருமையைப் பெற்றிருந்தது.

தேவேந்திரனுடைய அமராவதி நகரத்தைப் போல இரத்தினங்கள் இழைக்கப்பட்டதும், மலை போன்றதுமான பெரும் மாளிகைகளும் மறைவிடங்களும் அங்கே இருந்தன.

உயர்குலப் பெண்டிர் நிறைந்திருந்தார்கள்; எல்லா வகையான இரத்தினங்களும் எங்கும் சிதறிக் கிடந்தன; விமான அறைகள் பல இருந்தன; எண்கோண வடிவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த அந்த நகரம் விசித்திரமான பேரழகுடன் விளங்கிற்று. வீடுகளில் ஏராளமான மக்கள் வாழ்ந்தார்கள். இடைவெளியே இல்லாதபடி அவ்வளவு நெருக்கமாக இருந்தது. சம தரையில் நிறுவப்பட்டிருந்த அந்தப் பட்டணத்தில் நெல்–அரிசி நிறைந்திருந்தது. தண்ணீர், கருப்பஞ்சாறு போல் இனிப்பாக இருந்தது. துந்துபி, மிருதங்கம், வீணை, பணவம் முதலிய இசைக் கருவிகளின் பேரொலி உலகில் வேறு எவ்விடத்தையும்விட இங்கே அதிகமாக ஒலித்துக் கொண்டிருந்தது. தங்கள் தவ வலிமையால் சித்தர்களால் பெறப்பட்ட வான் வீதியில் சஞ்சரிக்கும் விமானம் போல் அந்த நகரம் பொலிவுற்றிருந்தது. அழகும் பயனும் தரும் வகையில் அமைக்கப்பட்ட மாளிகைகளில் சான்றோர்கள் நிரம்பியிருந்தார்கள். (10–19)

மக்கள் கூட்டத்திலிருந்து தனியே விலகி வேறு துணையின்றி நிற்பவனையும் (பெற்றோரும் புத்திரர்களும் இல்லாதவனையும்), போர்க்களத்திலிருந்து பயந்து ஓடிப் போகிறவனையும் அம்புகளால் கொல்லாதவர்கள்; ஒலி வரும் திசையிலிருந்தே இலக்கை உணர்ந்து அம்பு செலுத்தும் சப்தவேதி என்ற தனித்திறமையுடையவர்கள்; போர்க்கருவிகளில் நல்ல பயிற்சி பெற்றவர்கள்; போர்த்திறன் உடையவர்கள்; அவ்வாறே காடுகளில் மதம் பிடித்து உலவும் சிங்கம்–புலி–பன்றிகளைச் சஸ்திரங்களாலும், தம் கை பலத்தாலும் ஒழித்துக் கட்டுபவர்கள் – இப்படிப்பட்ட மகாவீரம் படைத்த பல்லாயிரக்கணக்கான மகாரதர்களால் நிறைந்திருந்த (அயோத்தி) பட்டணத்தில் மன்னர் தசரதர் ஆட்சி செலுத்திக் கொண்டிருந்தார். (20–22)

அந்த நகரத்தில் நித்யாக்னிஹோத்ரிகள், யம–நியமம் முதலானவைகளைக் கடைப்பிடிக்கும் அஷ்டாங்க யோக சித்தர்கள், ஆறு அங்கங்களோடு கூடிய வேதங்களைக் கசடறக் கற்ற அந்தணப் பெரியோர்கள் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். ஏராளமாக தானம் வழங்குபவர்கள், வாய்மையினின்றும் பிறழாதவர்கள், மாமுனிவர்களைப் போன்று விரதம் அனுஷ்டிப்பவர்கள், நல்லொழுக்கம், தூய வாழ்க்கை நடத்தும் ரிஷிகள் போன்றோர்கள் அயோத்தியில் எப்போதும் நிரம்பியிருந்தார்கள். (23)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
ஐந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஆறு

அரசு மாட்சிமை விளக்கம்

அந்த அயோத்தி நகர மன்னர் தசரதர் வேதம் அறிந்தவர்; பிற விஷயங்களையும் செவிமடுத்து ஏற்றுக் கொள்பவர்; தொலைநோக்கு உடையவர்; மிகவும் தேஜஸ்வி; நகர மக்களிடமும் கிராம மக்களிடமும் அன்பு உடையவர்; இக்ஷ்வாகு குலத்தில் தோன்றிய அதிரதர்; வேள்விகள் இயற்றியவர்; அறத்தில் நாட்டமுடையவர்; எல்லா மக்களையும் தன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர்; மகரிஷி போன்று தவவலிமை உடையவர்; மூன்று உலகங்களிலும் பிரசித்தி பெற்ற ராஜரிஷி; தோள்வலிமை உடையவர்; பகைவர்களை அடக்கியவர்; நல்ல நண்பர்களைப் பெற்றவர்; புலன்களை வசப்படுத்தியவர்; செல்வங்களையும், மற்றப் பொருட்களையும் சேர்த்து வைத்திருப்பதில் இந்திரன் மற்றும் குபேரனுக்கு நிகரானவர்.

மனுப் பிரஜாபதி உலகம் முழுவதையும் எப்படிக் காப்பாற்றி வந்தாரோ, அதுபோல தசரதரும் எல்லா மக்களையும் பரிபாலித்து வந்தார். தருமார்த்த காமங்களைத் தரும் செயல்களில் ஈடுபட்டிருப்பவரும், சொன்ன சொல் தவறாதவருமான அவர், அமராவதி பட்டணத்தைத் தேவேந்திரன் பரிபாலித்து வருவதைப் போல அயோத்தியில் ஆட்சி செலுத்தினார். (1–5)

அந்தப் பெரு நகரத்தில் பொது மக்கள் மனமகிழ்ச்சி, அறம் பிறழாமை, ஆழ்ந்த கேள்வி, முகமலர்ச்சி, தம்மால் சம்பாதிக்கப்பட்ட பொருளில் திருப்தி மற்றும் வாய்மை தவறாதவர்களாக இருந்தார்கள். புகழ் பெற்ற அந்தப் பட்டணத்தில், உயர்தரமான பொருட்கள் இல்லாத, தருமார்த்த காமங்கள் நிறைவேறாத, ஏராளமான பசு–குதிரை–செல்வம்–தானியம் இல்லாத குடும்பஸ்தர்களே இல்லை. அயோத்தியில் பெண்ணாசை மிக்கவன், கஞ்சன், இழிகுணத்தான், கல்வி அறிவில்லாதவன், வேதங்களில் நம்பிக்கை இல்லாதவன் என்று ஒருவனைக்கூட காண முடியாது. அங்கிருந்த எல்லா ஆண்களும் பெண்களும் அறநெறிப்பட்டவர்களாகவும், புலனடக்கம் உடையவர்களாகவும், மனப்பூர்வமாக மகிழ்ச்சியுடையவர்களாகவும், ஒழுக்கம்–நன்னடத்தையில் மகரிஷியைப் போன்று குற்றமற்றவர்களாகவும் இருந்தார்கள். (6–9)

அயோத்தியில் செவியணி–தலையணி–மலர்மாலைகள் அணியாதவரோ, சுக–சௌக்கிய அனுபவப் பொருட்கள் குறைவாக உடையவரோ, அழுக்கான உடல்–உடை உடையவரோ, மணமிக்க சந்தனப்பூச்சு இல்லாதவரோ, துர்மணம் வீசுபவரோ காணப்படவேயில்லை. அறுசுவை உணவு உண்ணாதவர்; தானம் செய்யாதவர்; தோள்வளை, மார்பில் பிரகாசிக்கும் பதக்கம் மற்றும் கையில் அணியும் காப்பு–கங்கணம் இல்லாதவர்; மனவடக்கம் இல்லாதவர் என்று யாருமே அந்த நகரில் காணப்படவில்லை. அயோத்தியில் நாள்தோறும் அக்னிஹோத்ரம் செய்யாதவர், வேள்வி செய்யாதவர், இழிந்தவன், திருடன், நல்லொழுக்கம் இல்லாதவன், கீழ்மக்களுடன் உடலுறவு கொள்பவன் என்று எவருமே இல்லை. (10–12)

(அந்த நகரத்தில் இருந்த) அந்தணர்கள் அனைவரும் தத்தம் கர்மாக்களைச் செய்து கொண்டும், புலன்களை வென்றவர்களாகவும், தானம்–அத்யயனம் செய்பவர்களாகவும், பிறரிடமிருந்து தானம் பெற்றுக் கொள்வதில் மிக்க மனக்கட்டுப்பாடு உடையவர்களாகவும் இருந்தார்கள். (அவர்களில்) வேத நம்பிக்கையில்லாத, பொய் பேசுகிற, குறைந்த கேள்வி ஞானம் உடைய, பிறரிடம் பொறாமை பிடித்து அலைகிற, செயல் திறனில்லாத, அறிவற்றவராக ஒருவர்கூட இல்லை. (அந்த நகரத்தில்) ஆறு அங்கங்களோடு கூடிய வேதம் அறியாதவர், விரத அனுஷ்டானம் இல்லாதவர், ஆயிரத்திற்குக் குறைவாக தானம் அளிப்பவர், தீனன், நல்மனம் பிறழ்ந்தவன், கவலைப்படுபவன் என்று எவருமே இருக்கவில்லை. அயோத்தியில் பொலிவில்லாத, அழகில்லாத, அரசுக்கு விசுவாசமில்லாத ஓர் ஆணையோ, பெண்ணையோ காண முடியாது. அந்தணர் முதலான நான்கு வருணத்தார்களும் தெய்வத்தையும் விருந்தினர்களையும் நன்கு கௌரவிப்பவர்களாகவும், நன்றி மறவாதவர்களாகவும், வள்ளன்மை மிக்கவர்களாகவும், சூரர்களாகவும், பேராற்றல் படைத்தவர்களாகவும் இருந்தார்கள். (13–17)

புகழ்மிக்க அந்த நகரத்தில் உள்ள எல்லா மக்களும் நீண்ட ஆயுள் உடையவர்களாகவும், தருமத்தையும் சத்தியத்தையும் கடைப்பிடிப்பவர்களாகவும், எப்போதும் பெண்கள்–புதல்வர்கள்–பேரர்களுடனும் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். க்ஷத்திரியர்கள், அந்தணர் முகம் பார்த்து நடப்பவர்களாகவும், வணிகர்கள், க்ஷத்திரியர்களை அனுசரித்துச் செயல்படுபவர்களாகவும், வேளாளர்கள், தமக்குரிய பணிகளில் ஈடுபட்டு முன் சொன்ன மூன்று வருணத்தார்களுக்கும் சேவை செய்பவர்களாகவும் இருந்தார்கள். மகாபுத்திமானான மனு மாமன்னர் முன்னொரு காலத்தில் காப்பாற்றியதைப் போல, அயோத்தி இக்ஷ்வாகு குலத்தின் தலைவரான தசரதனால் இப்போது மிகத் திறமையாகக் காப்பாற்றப்பட்டு வந்தது. (18–20)

வீரத்தில் அக்னியைப் போல் அண்ட முடியாதவர்களும், திறமை மிக்கவர்களும், அவமானத்தைப் பொறுக்க முடியாதவர்களும், அஸ்திர–சஸ்திரப் பயிற்சியில் முழுமை அடைந்தவர்களுமான படைவீரர்களால் சிங்கங்கள் நிறைந்த மலைக்குகை போன்று அந்த நகரம் விளங்கிற்று. காம்போஜம், பாஹ்லீகம் முதலான நாடுகளைச் சேர்ந்தனவும், காட்டுப் பிரதேசங்கள், நதிக்கரைகளில் பிறந்து வளர்ந்தனவும், இந்திரனுடைய உச்சைசிரவம் என்ற குதிரைக்கு ஈடானவைகளுமான உத்தம ஜாதிக் குதிரைகள் அயோத்தியில் கணக்கில்லாமல் இருந்தன. விந்தியம், இமயம் முதலான மலைகளில் தோன்றியவைகளும், மலைபோல் பேருருவமும் பேராற்றலும் பெற்று மதம் பிடித்து அலைபவைகளுமான யானைகள் இருந்தன. (21–23)

ஐராவதம், மகாபத்மம் மற்றும் அஞ்ஜனம், வாமனம் என்ற திசைக்களிறுகளின்றும் தோன்றியவைகளாலும், பத்ரம்–மந்த்ரம்–மிருகம் ஆகிய தனித்தனி இயல்புடையனவும், பத்ரம்–மந்த்ரம், பத்ரம்–மிருகம், மிருகம்–மந்த்ரம் என்பனவற்றின் இயல்புகளைக் கொண்ட வாரணங்களாலும் அந்த நகரம் நிரம்பியிருந்தது. (இமயம், விந்தியம், ஸஹ்யம் என்னும் மலைகளில் வாழும் தனித்தன்மை வாய்ந்த யானைகள் பத்ரம், மந்த்ரகம், மிருகம் ஆகிய சொற்களால் குறிப்பிடப்பட்டுள்ளன. மூன்று இயல்புகளும் ஒருங்கே அமையப் பெற்றவை; இரண்டிரண்டு இயல்புகள் அமையப் பெற்றவை என்று விவரமாகக் கூறப்பட்டுள்ளது.) (24,25)

(மூன்று யோஜனை அகலமுள்ள அயோத்தியில்) இரண்டு யோஜனை தூரம் வரை சென்று போர் புரிவது என்பது எவருக்கும் இயலாததால் அயோத்தியா (போரில் வெல்ல முடியாதது) என்ற பெயர் உண்மையாகவே ஆயிற்று. இருளை அழித்து, தாரகைகளை ஒளிரச் செய்யும் மிகப் பிரகாசமாக விளங்கும் சந்திரனைப் போல, பகைவர்களை ஒழித்து, குடிமக்களை மனம் மகிழச் செய்யும் பேராற்றலுடைய தசரத மன்னர், அந்த நகரத்தை ஆண்டு வந்தார். தன் பெயரை உண்மையாக்கிக் கொண்டு விளங்கியதும், உறுதியான நுழைவாயில்களும் கொத்தளங்களும் உடையதும், மங்களகரமானவைகளும், கண்கவர் வனப்புடையவையுமான மாளிகைகளால் பிரகாசிப்பதும், சிங்க நிகர் மன்னர்கள் நிரம்பியதுமான அயோத்தியா நகரத்தில் இந்திரனுக்கு நிகரான அவ்வரசர் ஆட்சி புரிந்து வந்தார். (26–28)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
ஆறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஏழு

அமைச்சர்கள் பற்றிய விவரங்கள்

பெருமனம் படைத்த இக்ஷ்வாகு மன்னரின் அமைச்சர்கள் ஆலோசனை கூறுவதில் சிறந்தவர்களாகவும், இங்கிதம் அறிந்தவர்களாகவும், எப்போதும் மன்னருக்குப் பிரியமும் நன்மையும் செய்யும் செயல்களில் ஈடுபட்டவர்களாகவும், நற்குணமுடையவர்களாகவும் இருந்தார்கள். தூய மனம் படைத்தவர்களும், அரசு நடவடிக்கைகளில் எப்போதும் அவருடன் இணங்கிச் செல்பவர்களும், புகழ் பெற்றவர்களுமான எட்டு அமைச்சர்கள், வீரம் மிகுந்த அவருடைய அவையில் இருந்தார்கள். திருஷ்டி, ஜயந்தன், விஜயன், சித்தார்த்தன், அர்த்தஸாதகன், அசோகன், மந்த்ரபாலன் என்பவர்களோடு சுமந்திரர் எட்டாவதாக இருந்தார். (1–3)

முனிவர்களில் சிறந்தவர்களான வசிஷ்டரும், வாமதேவரும் அரசப் புரோகிதர்களாக விளங்கினார்கள். மற்ற ரிஷிகளான சுயக்ஞர், ஜாபாலி, காசியபர், கௌதமர், சிரஞ்ஜீவியான மார்க்கண்டேயர், அந்தணோத்தமரான காத்யாயனர் முதலியோர் மந்திரிகளாகவும் இருந்தார்கள். இந்த அந்தண முனிவர்களுடன் மன்னருடைய முன்னோர்கள் காலத்திலிருந்தே பொறுப்பு

வகித்துள்ளவர்களும், ஆழ்ந்தகன்ற கல்வியின் விளைவாக அடக்கம் உடையவர்களும், (தவறு செய்ய) நாணுபவர்களும், செயல்திறன் கொண்டவர்களும், புலனடக்கம் உடையவர்களும் அமைச்சர் பொறுப்பில் தொடர்ந்து இருந்து வந்தார்கள். (4–6)

ஒருவரோடொருவர் ஒத்துப் போகிறவர்கள்; நீதி அறிந்தவர்கள்; நிறைந்த கேள்வி ஞானம் உடையவர்கள்; அனைத்து வகையான செல்வச் செழிப்பும் பெற்றவர்கள்; தாராள மனம் உடையவர்கள்; படைக்கலன்களைக் கையாளுவதில் நிபுணர்கள்; மனம் குலையாத உடலாற்றல் பெற்றவர்கள்; புகழ் பெற்றவர்கள்; அரசுப் பணியில் மூழ்கியவர்கள்; அரசாணைப்படி செயலாற்றுபவர்கள்; ஆன்ம ஒளி–பொறுமை–புகழ் உடையவர்கள்; புன்னகையோடு தாமே முன் வந்து அறிமுகம் செய்து கொண்டு சம்பாஷணை செய்பவர்கள்; (7,8)

கோபத்தின் காரணமாகவோ, சுயநல காமத்தின் காரணமாகவோ ஒருபோதும் பொய் பேசாதவர்கள்; உள்நாடு–வெளிநாடுகளில் அவர்களுக்குத் தெரியாத தகவல்களே இல்லை. பிற மன்னர்களால் செய்யப்படுகிற அல்லது செய்து முடித்துவிட்ட (கூட்டுச் சேர்ந்து படையெடுப்பது போன்ற) செயல் திட்டங்கள் பற்றி ஒற்றரிடமிருந்து அறிந்து கொள்பவர்கள்; நிர்வாக நடவடிக்கைகளில் கைதேர்ந்தவர்கள்; சந்தேகத்திற்கு இடமில்லாதபடி பல பரிசோதனைகளில் தேறிய பெருநட்பு உடையவர்கள்; (9,10)

குற்றம் செய்த புதல்வனுக்கும்கூட சட்டப்படி தண்டனை வழங்குபவர்கள்; அரசு வருமானத்தைப் பெருக்குவதிலும், புதிய படைவீரர்களைச் சேர்த்துக் கொள்வதிலும் மனம் கொண்டவர்கள்; குற்றம் செய்யாத எதிரியைப் பகைமை காரணமாக வீணாகத் துன்புறுத்தாதவர்கள்; வீரர்கள்; எப்போதும் உற்சாகம் நிறைந்தவர்கள்; அரசியல் சாசனத்தைப் பின்பற்றி நடப்பவர்கள்; குடும்பத்தோடு வாழ்கின்ற சான்றோர்களைப் பாதுகாப்பவர்கள்; அந்தணர்களையும் க்ஷத்திரியர்களையும் இம்சிக்காமல், அளவறிந்து வரிவசூல் செய்து, அரசுக் கருவூலத்தை நிறைத்தவர்கள்; குற்றவாளியின் பலம்–பலஹீனம் ஆகியவற்றை நன்றாக ஆராய்ந்து, அதற்கேற்றபடி இலகுவான அல்லது கடுமையான தண்டனை வழங்குபவர்கள். அவர்கள் அனைவருடைய நடத்தை தூயதாக இருந்தது. சிந்தனைகள் ஒன்றாகவே இருந்தன. (11–14)

அயோத்தி நகரம் மற்றும் கோசல நாட்டில் பொய் பேசுபவன், கொடுமைக்காரன், பிற பெண்களிடம் ஈடுபாடு கொண்டவன் என்று ஒருவன்கூட இல்லை. நாட்டிலும் நகரத்திலும் முழுமையான அமைதி நிலவியது. அவர்கள் எல்லோரும் நல்லாடை தரித்து பெருமிதத் தோற்றம் கொண்டிருந்தார்கள்; விரத அனுஷ்டானங்களைக் கடைப்பிடித்தார்கள்; மன்னருடைய நலனில் நாட்டமுடைய அவர்கள், நீதி என்ற கண்களால் எப்போதும் விழித்துக் கொண்டிருப்பவர்கள்; ஆசார்யரின் நல்லுரைகளை ஏற்று நடப்பவர்கள்; பராக்கிரமத்தினால் பெரும் புகழ் பெற்றவர்கள்; வெளி தேசங்களிலும் அவர்களைப் பற்றி அறிந்திருந்தார்கள்; எல்லா விஷயங்களையும் தம் புத்தியால் ஆராய்ந்து ஒரு நல்ல முடிவுக்கு வருவார்கள்; முற்றிலும் நல்லியல்புடைய அவர்கள் தீய குணங்களின் சேர்க்கை இல்லாமல் இருந்தார்கள்; நட்பு உடன்படிக்கை, இரு சாராரைப் பிரித்து வைத்தல் ஆகிய அரசியல் கோட்பாடுகளை ஆழமாக அறிந்திருந்தார்கள்; இயல்பாகவே தெய்விக குணங்கள் நிரம்பியவர்கள்; அரசு திட்டங்களை ரகசியமாகக் காப்பதில் வல்லவர்கள்; அதிநுட்பமான ஆலோசனை வழங்குவதில் சாமர்த்தியம் உடையவர்கள்; (15–19)

நீதி நூல்களில் சிறப்பான அறிவுடையவர்கள்; எப்போதும் இனிமையாகப் பேசுபவர்கள். குற்றமற்ற மன்னர் தசரதர் இப்படிப்பட்ட நல்ல அமைச்சர்களோடுகூட பூமண்டலத்தை ஆண்டு வந்தார். ஒற்றர்களின் துணை கொண்டு தனது சொந்த நடவடிக்கை மற்றும் மற்ற அரசர்களின் நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தார். தன்னுடைய தருமநெறியினால் மக்களை உற்சாகத்தில் வைத்திருந்தார். அதரும நெறியை நீக்கி, மக்களைப் பரிபாலித்து வந்தார். பெரிய வள்ளல், சொன்ன சொல் தவறாதவர் – என்றெல்லாம் மூன்று உலகங்களிலும் அவர்

கொண்டாடப்பட்டார். இவ்வுலகத்தை மனிதரில் புலி போன்ற அவர் (தசரதர்) அங்கிருந்தவாறே ஆட்சி செய்து கொண்டிருந்தார். தனக்கு நிகராகவோ, தன்னைக் காட்டிலும் மேலாகவோ உள்ள ஒரு பகைவனையும் அவர் காணவில்லை. (20–23)

அவருக்கு நல்ல நண்பர்கள் இருந்தார்கள்; சிற்றரசர்கள் எல்லோரும் பணிவுடன் இருந்தார்கள்; எதிரிகளையெல்லாம் தன் வீரத்தினால் அழித்து ஒழித்தார். தேவலோகத்தை இந்திரன் ஒப்பற்ற முறையில் பரிபாலித்து வந்ததைப் போல, இவ்வுலகத்தை தசரத மன்னர் பரிபாலித்து வந்தார். அரசு திட்டங்களை ரகசியமாகக் காப்பாற்றுபவர்களும், அரசனுக்கு அனுகூலமாக அவர் விருப்பத்திற்கு ஏற்றாற்போல் நடப்பவர்களும், படிப்பறிவும் செயல்திறனும் உடையவர்களுமான இத்தகைய அமைச்சர்களால் சூழப்பட்ட மன்னர், ஒளிமயமான கிரணங்கள் சூழ உதித்தெழும் சூரியனைப் போல் நன்றாகப் பிரகாசித்தார். (24,25)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
ஏழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எட்டு

சுமந்திரர் கூறியது
(மந்திராலோசனை)

இவ்வளவு சிறப்புக்கள் பெற்றிருந்தவரும், தருமம் அறிந்தவரும், மகாத்மாவுமான அவரை, பரம்பரையைத் தொடரச் செய்யும் புதல்வன் இல்லாத மனக்கவலை வாட்டிக் கொண்டிருந்தது. பெருமனம் கொண்ட அவருக்கு, இதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தபோது, ஒருசமயம், 'பிள்ளையைப் பெறுவதற்காக, நான் ஏன் அசுவமேத யாகம் செய்யக் கூடாது?' என்ற எண்ணம் உண்டாயிற்று. தூய உள்ளம் கொண்ட மந்திரிகள் அனைவருடனும் கலந்தாலோசித்து புத்திமானும் அறநெறியாளருமான அவர், 'கட்டாயம் செய்ய வேண்டியதுதான்' என்று உறுதியாக முடிவு எடுத்தார். உடனே, அமைச்சர்களில் சிறந்தவரான சுமந்திரரைப் பார்த்து, 'எம்முடைய எல்லா ஆசார்யர்களையும் புரோகிதர்களையும் விரைவில் அழைத்து வா' என்று கூறினார். (1–4)

விரைந்து செயலாற்றக் கூடிய சுமந்திரர், விரைவாகச் சென்று வேதவிற்பன்னர்களான அவர்கள் அனைவரையும் கூட்டமாக அழைத்து வந்தார். சுயக்ஞர், வாமதேவர், ஜாபாலி, காசியபர், குல புரோகிதரான வசிஷ்டர் மற்றும் அங்கு கூடியிருந்த மற்ற அந்தண சிரேஷ்டர்களையும் நன்றாக உபசரித்த பின்னர், தருமாத்மாவான தசரதர் அறம்–பொருளோடு கூடிய இந்த இனிய சொற்களைக் கூறினார்— ''புதல்வன் வேண்டும் என்று வேட்கையுடன் தவித்துக் கொண்டிருக்கும் எனக்கு நிம்மதியே இல்லை. அதனால், (மகனை அடைவதற்காக சகல பாவங்களையும் போக்கக்கூடிய) அசுவமேத யாகம் செய்யவேண்டும் என்று என் மனத்தில் படுகிறது. அதற்காக சாஸ்திரநூல்களில் சொல்லப்பட்டுள்ள வைதிக வேள்விச் சடங்குகளைச் செய்ய விரும்புகிறேன். நான் என்னென்ன கர்மாக்களை எந்தெந்த முறையில் செய்து, எவ்வாறு என் விருப்பத்தை அடைவேன்? என்பதைப் பற்றி, இங்கே ஆலோசித்துக் கூறுங்கள்.'' வசிஷ்டர் முதலான எல்லா அந்தணோத்தமர்களும் மன்னரிடமிருந்து வெளிப்பட்ட சொற்களைக் கேட்டு, 'ரொம்ப சரி' என்று ஆமோதித்தார்கள். (5–10)

மிகவும் மனமகிழ்ச்சி அடைந்த அவர்கள் அனைவரும், 'சரயூ நதியின் வடக்குக் கரையில் வேள்விச்சாலை அமைக்கப்படட்டும்' என்று கூறினார்கள். ''தேவையான பொருட்களைச் சேகரம் செய்ய வேண்டும். தங்களுடைய (பட்டக்) குதிரை இஷ்டப்படி உலகில் சஞ்சரிப்பதற்காக அவிழ்த்துவிடப்படட்டும். மன்னரே! புத்திரனைப் பெறவேண்டும் என்பதற்காக இப்படிப்பட்ட

தருமத்தோடு கூடிய சிந்தனை தங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. எனவே, எப்படியும் தாங்கள் தங்கள் விருப்பப்படி குமாரர்களை அடையத்தான் போகிறீர்கள்.'' அந்தணர்களால் இவ்வாறு கூறப்பட்டதைக் கேட்டு, அரசர் மகிழ்ச்சியடைந்தார். மன்னர் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தவாறே, 'நம்முடைய ஆசார்யர்கள் கூறியபடித் தேவையான பொருட்களையெல்லாம் சேகரம் செய்யுங்கள்' என்று மந்திரிகளைப் பார்த்துக் கூறினார். (11–13)

''வீரம் மிகுந்த படைவீரர்களின் பாதுகாப்புடன் குருமார்களில் ஒருவர் உடன் செல்ல குதிரையை அவிழ்த்து விடுங்கள். சரயூவின் வடக்குக் கரையில் யாகபூமியைத் தேர்ந்தெடுங்கள். அறநூல்களில் கூறப்பட்டுள்ளபடி சாந்திச் சடங்குகள் முறைப்படி செய்யப்பட வேண்டும். எல்லா அரசர்களையும் இந்த வேள்விக்கு அழைக்கலாம். உயர்ந்ததான இந்த வேள்வியில் குற்றங்குறைகள், கஷ்டங்கள் நேராவண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால், விஷயம் அறிந்த பிரும்மராட்சஸர்கள் (இம்மாதிரியான நல்ல செயல்களில்) இடைஞ்சல் உண்டுபண்ணுவதற்குத் தேடி அலைகிறார்கள். கர்மா சரிவர நடத்தப்படாவிட்டால் கர்த்தாவுக்கு உடனே அழிவு வந்துவிடும். ஆதலால், என்னால் தீர்மானிக்கப்பட்ட இந்த வேள்வி, முறைப்படி நிறைவேறுவதற்கான ஆயத்தங்களைச் செய்யுங்கள். செய்திறனுடைய நீங்கள் இத்தகைய சீர்மிகு செயல்களைச் செய்துகாட்டுவதில் வல்லவர்கள்.'' மன்னரால் புகழ்ந்துரைக்கப்பட்ட மந்திரிகள், 'அவ்வாறே செய்வோம்' என்று பதிலுரைத்தார்கள். மாமன்னருடைய அந்த ஆணைகளைக் கேட்ட அறம் அறிந்த அந்தணர்கள், அரசரை மிகவும் புகழ்ந்தவர்களாக, அவரிடம் விடைபெற்றுக் கொண்டு திரும்பிச் சென்றார்கள். (14–19)

வேதியர்களுக்கு விடைகொடுத்து அனுப்பிய பின்னர் மந்திரிகளிடம் (மன்னர்) இவ்வாறு கூறினார்— ''புரோகிதர்களால் கூறப்பட்டபடி, இந்த வேள்வியானது முறைப்படி நடக்க வேண்டும். அவ்வாறு நடப்பதற்கு செயலாற்றலுடைய நீங்கள் எல்லோரும் சமர்த்தர்கள்.'' கூடியிருந்த மந்திரிகளிடம் இவ்வாறு கூறிய பேரரசர் அவர்களை அனுப்பிவிட்டு முகப்பொலிவுடன் தன் அரண்மனைக்குச் சென்றார். அங்கு சென்று தன் மனத்திற்கினிய மனைவிகளைப் பார்த்து, ''மகன் பிறக்கவேண்டும் என்பதற்காக வேள்வி நடத்தப் போகிறேன். நீங்கள் யாகதீட்சை கைக் கொள்ளுங்கள்'' என்று சொன்னார். நெஞ்சுக்கினிய அந்தச் சொற்களைக் கேட்டதும், தேசுமிக்க அரசிகளின் தாமரையன்ன முகங்கள், பனிக்காலம் முடிந்தவுடன் (வசந்த காலம் வந்ததும்) மலர்ச்சியுறும் தாமரையைப் போல மிகவும் பிரகாசம் அடைந்தன. (20–23)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
எட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஒன்பது
ரிஷ்யசிருங்கர் வரலாறு

(அரசவையில்) கூறப்பட்டதைக் கேட்ட தேரோட்டி(யும் அமைச்சருமான) சுமந்திரர், தனிமையில் மன்னரைப் பார்த்து இவ்வாறு கூறினார்— ''மிகப் பழமையானதும், புராணங்களில் கூறப்பட்டிருப்பதுமான ஒரு செய்தியைத் தாங்கள் கேட்க வேண்டும். பண்டைய காலத்திய இந்தக் கதையை ரித்விக்குகள் பேசிக் கொண்டிருந்தபோது நான் கேட்டேன். பகவான் சனத்குமாரர் முன்னர் ஒரு காலத்தில் தங்களுக்குப் புத்திரன் பிறப்பதைப் பற்றி, முனிவர்கள் முன்னிலையில் (இந்தக் கதையைக்) கூறினார். காசியபருக்கு விபாண்டகர் என்ற பெயரில் ஒரு புதல்வன். அவருக்கு ரிஷ்யசிருங்கர் என்ற புகழ் பெற்ற புதல்வர் தோன்றுவார். அவர் காட்டிலேயே பிறந்து, வளர்ந்து, அங்கேயே எப்போதும் சுற்றிக் கொண்டிருப்பார். தந்தையுடனேயே இருக்கும் அந்த அந்தணோத்தமர் (தந்தையைத் தவிர) வேறு யாரையும் பார்த்ததேயில்லை. (1–4)

மகாத்மாவான அவர் பிரம்மசரியத்தின் இரு கூறுகளையும் அனுஷ்டித்துக் காட்டுவார். (விவாகம் செய்து கொள்ளாமலே வாழ்க்கையைக் கழித்துவிடுவது என்பது நைஷ்டிக பிரம்மசரியம்; விவாகம் செய்து கொண்டு சாஸ்திர விதிகளின்படி தாம்பத்திய உறவு கொள்வது என்பதும் பிரம்மசரியத்திற்கு நிகரானது.) இவ்வாறு ஒரு கருத்து மக்களிடையே பரவியிருக்கிறது; வேதமோதிய அறிஞர்களாலும் அவ்வாறே கூறப்படுகிறது. இப்படியே (தந்தையைத் தவிர வேறு எந்த மனிதரையும் பாராதவராகவே,) தன் ஆசிரமத்திற்குரிய அக்னி காரியங்களையும், புகழ்மிக்க தந்தையைப் பாதுகாத்தும் வந்தவண்ணமே காலம் கடந்து கொண்டிருக்கும். இதே சமயத்தில் பெரும் பலசாலியும் வீரமும் படைத்த ரோமபாதர் என்பவர் அங்க தேசத்தில் மன்னராக இருப்பார். (5–7)

அவ்வரசன் அறநெறி பிறழ்ந்து நடந்ததால் மழை பொழியாமற்போகவே, எல்லாப் பிராணிகளுக்கும் அச்சத்தை உண்டாக்கும் கடுமையான பஞ்சம் ஏற்படும். மழை பெய்யாததால் துக்கமடைந்த அரசர் வேதவிற்பன்னர்களான அந்தண பெரியோர்களை அழைத்து இவ்வாறு கூறுவார்— 'தாங்கள் எல்லோரும் அறநெறிகளையும், மக்களின் நடத்தை முறைகளையும் நன்றாக அறிந்தவர்கள். (மழையின்மைக்குக் காரணம், நான் நெறிமுறைகளை மீறி நடந்ததுதான் என்று நிச்சயமாக நம்புகிறேன்.) நான் செய்த பாவத்தைப் போக்கும் பரிகார நியமங்களை உத்தரவிடுங்கள்.' (8–10)

வேதவித்தகர்களான பிராமணர்கள், 'விபாண்டக முனிவரின் புதல்வனை எப்படியாவது இங்கே அழைத்து வாருங்கள். ரிஷ்யசிருங்கரை அழைத்து வந்து, தக்க முறையில் உபசரித்து, வேதமுறைப்படி தங்களுடைய குமாரத்தியான சாந்தாவைக் கன்னிகாதானம் செய்துகொடுங்கள்' என்பார்கள். அவர்களுடைய சொற்களைக் கேட்ட மன்னர், 'மனவுறுதி படைத்த அவரை எவ்வாறு இங்கே அழைத்து வர இயலும்?' என்று எண்ணி மிகவும் கவலை கொள்வார். மந்திரிகளுடன் கலந்தாலோசித்த பின்னர், நயமாகப் பேசி புரோகிதர்களையும், மன்னருடன் நெருக்கமாகவும் உரிமையோடும் பழகும் அமாத்யர்களையும் அனுப்பி வைப்பது என்று மன்னர் தீர்மானம் செய்வார். மன்னரின் ஆணையைக் கேட்டு, மனம் கலங்கி, தலைகுனிந்து, 'அந்த முனிவரிடம் எங்களுக்குப் பயம்; நாங்கள் போக மாட்டோம்' என்று பதில் கூறுவார்கள். (11–15)

பின்னர் நன்றாக ஆலோசித்துவிட்டு, அந்தக் காரியத்தை நிறைவேற்றுவதற்குத் தகுந்த உபாயங்களைக் கூறுவார்கள். 'நாங்கள் ஏதோ ஓர் உபாயத்தினால் அந்தப் பிரும்மசாரியை, இங்கே கொண்டு வருகிறோம். (ஆனால், என்ன உபாயம்? என்று இப்போது கேட்காதீர்கள். அவர் வருகையினால் நாட்டு மக்களுக்கு நன்மை ஏற்படும் என்பதால்) அப்படிச் செய்வது குற்றமாகாது.' விவரங்களை அறிந்து கொண்ட அங்கதேச மன்னர், தாமே கணிகைகளை அனுப்பி (தந்திரமாக) முனிகுமாரரை அழைத்து வரச் செய்ததும், (மேகங்களுக்குத் தலைவனான) இந்திரன் மழை பொழிவிப்பான். (அந்தணர்கள் முன்னர் கூறியதற்கிணங்க,) சாந்தாவை அவருக்குக் கன்னிகாதானம் செய்து கொடுப்பார். (கணிகை என்பவர்கள் மன்னருக்கு உற்சாகமூட்டுவதற்கான உயர்பணிகளில் நியமிக்கப்படுபவர்கள்; தவறான நெறியில் செல்லாதவர்கள்.) (16,17)

மாப்பிள்ளையான அந்த ரிஷ்யசிருங்கர், தங்களுக்கு (தசரதனுக்கு)ப் புத்திரன் உண்டாக வேண்டும் என்பதற்காக உரிய சடங்குகளைச் செய்து வைப்பார். இதுவரை சனத்குமாரரால் சொல்லப்பட்ட விஷயங்களைத் தங்களிடம் விவரித்தேன் (என்றார் சுமந்திரர்).'' மனம் மகிழ்ந்த தசரதர், ''முன்னர் ரிஷ்யசிருங்கர் எந்த முறையினால் அழைத்து வரப்பட்டார் என்பதை விளக்கமாகக் கூறு'' என்று சுமந்திரரைக் கேட்டுக் கொண்டார். (18,19)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
ஒன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பத்து

ரிஷ்யசிருங்கரை அங்கதேசத்திற்கு அழைத்து வருதல்

அரசரால் இவ்வாறு கேட்கப்பட்ட சுமந்திரர், ''மந்திரிகளால் என்ன உபாயத்தைக் கொண்டு ரிஷ்யசிருங்கர் அழைத்து வரப்பட்டார்? என்று நான் சொல்வதையெல்லாம் அமைச்சர்களோடுகூட இருந்து கேளுங்கள்.'' புரோகிதர்களும் அமாத்யர்களும், 'எந்த ஆபத்தும் இல்லாத ஒரு வழியை நாங்கள் ஆலோசித்து வைத்துள்ளோம்' என்று ரோமபாதரிடம் கூறினார்கள். (1,2)

'ரிஷ்யசிருங்கர் காட்டிலேயே வசித்து வருபவர்; தவம்–ஸ்வாத்யாயம் முதலியவற்றில் ஒரே மூச்சாக ஈடுபட்டிருப்பவர்; பெண்கள் தரும் சுகம், புலன்கள் வாயிலாகக் கிடைக்கும் சுகம் ஆகியவை என்னவென்பதே அறியாதவர். மனிதனின் சித்தத்தைத் தவறு செய்யத் தூண்டுகிற புலனுகர் இன்பங்களை ஊட்டி, வெகு விரைவில் நகரத்திற்கு அவரை அழைத்து வருவோம்; அதற்கான முயற்சிகளை உடனே தொடங்க வேண்டும். அழகான, நன்றாக அலங்காரம் செய்து கொண்ட கணிகைகள் அங்கே செல்ல வேண்டும். வெகுவாக கௌரவிக்கப்பட்ட அவர்கள் பலவித உபாயங்களால் அவரை வசப்படுத்தி, இங்கே அழைத்து வந்து விடுவார்கள்.' அரசர் இதனைக் கேட்டதும், 'அவ்வாறே செய்யலாம்' என்று புரோகிதருக்குப் பதில் கூறினார். பின்னர் புரோகிதரும் மந்திரிகளும் அவ்வாறே செய்தார்கள். (3–6)

அழகான நாரீமணிகள் (அரசரின் ஆணையைக் கேட்டு) அடர்ந்த அந்தக் காட்டிற்குச் சென்றார்கள். எப்போதும் தவக்குடிலிலேயே இருந்து வரும் தீரரான முனிகுமாரரைக் காணும் பொருட்டு, ஆசிரமத்திற்கு அருகில் இருந்தபடியே முயன்று கொண்டிருந்தார்கள். எப்போதும் மனம் நிறைந்து விளங்கிய அவர், தந்தையினுடைய ஆசிரமத்தைவிட்டு வெளியே போனதே இல்லை. தவசியான அவர் பிறந்த நாளிலிருந்து வேறொரு ஆணையோ, பெண்ணையோ, நாடு–நகரத்தில் தோன்றி வளரும் எந்தவொரு பிராணியையோ பார்த்ததேயில்லை. (7–9)

ஒரு சமயம், மனம் போன போக்கில் திரிந்து கொண்டிருந்த அவர், தற்செயலாக கணிகைகள் தங்கியிருந்த இடத்திற்கு வந்தார். விபாண்டகரின் புத்திரரான ரிஷ்யசிருங்கர், அந்த எழில்மிகு அணங்குகளைப் பார்த்தார். இனிய குரலில் பாடுகின்றவர்களும், கண்கவர் அலங்காரம் செய்து கொண்டிருந்தவர்களுமான அவ்வணங்குகள், விபாண்டகரின் புதல்வரான ரிஷ்யசிருங்கரை அணுகிக் கேட்டார்கள்— 'பிரும்மன்! தாங்கள் யார்? எங்கே இருக்கிறீர்கள்? என்றெல்லாம் நாங்கள் அறிந்து கொள்ள விரும்புகிறோம். மக்களே இல்லாத பயங்கரமான இந்தக் கானகத்தில் தனியராகத் தாங்கள் சுற்றி வருகிறீர்களே, ஏன்? எங்களுக்குக் கூறுங்கள்.' (10–12)

அந்தக் காட்டில் அதுவரை பெண்களைப் பார்த்ததில்லை. அத்துடன் மிகவும் அழகாகவும் இருக்கிறார்கள். (இந்த அதிசயத் தகவலை, உடனே) தன்னிடம் பிரியமுள்ள தந்தைக்குத் தெரிவிக்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு உண்டாயிற்று. 'என்னுடைய தகப்பனார் விபாண்டகர். நான் அவருடைய சொந்தப் புதல்வன். உலகில் ரிஷ்யசிருங்கன் என்று என்னைச் சொல்வார்கள். மேன்மைக்குரிய பிரம்மசரியம் அனுஷ்டிக்கிறேன். அருகில்தான் எங்கள் ஆசிரமம் இருக்கிறது. (அருள்கூர்ந்து அங்கே வாருங்கள்.) அழகான தோற்றம் கொண்டவர்களே! உங்களுக்குத் தகுந்த முறையில், அறநெறிப்படி உங்களை அங்கே உபசரிக்கிறேன்.' (13–15)

முனிகுமாரரின் சொற்களைக் கேட்டு, அதனை அங்கீகரித்து, அவருடைய ஆசிரமத்தைக் காண்பதற்காக, அவர்கள் அனைவரும் அவருடன் சென்றார்கள். வந்தவர்களுக்கெல்லாம், 'இதோ அர்க்யம்; இதோ பாத்யம்; இது கிழங்கு; இது பழம்' என்று சொல்லி முறையாக உபசாரம் செய்தார், ரிஷிகுமாரர். உபசாரங்களையெல்லாம் மிகவும் உற்சாகத்துடன் ஏற்றுக் கொண்டார்கள், அந்த அணங்குகள். ஆனால், 'முனிவர் வந்து விடுவாரோ?' என்ற பயத்தால் விரைவில் திரும்பிச் செல்ல அவசரப்பட்டார்கள். 'அந்தணரே! எங்களிடமும் வகைவகையான பழங்கள் இருக்கின்றன.

எங்களுடைய பிரதி உபசாரமாக, அவைகளை ஏற்றுக் கொண்டு உடனே புசித்து விடுங்கள், தாமதம் வேண்டாம்.' (16–19)

பிறகு, அவர்கள் எல்லோரும் மகிழ்ச்சியோடு அவரை மார்புறத் தழுவி, மோதகங்களையும் மற்றும் பலவகையான இனிப்புப் பண்டங்களையும் அவருக்குக் கொடுத்தார்கள். எப்போதும் காட்டிலேயே இருப்பவரானதால் (அவர்கள் கொடுத்த உணவுப் பொருட்களை) முன்னர் சுவைத்தறியாத பழங்கள் என்று எண்ணியே உண்டு மகிழ்ந்தார். பின்னர், அவருடைய தகப்பனாரிடம் உள்ள பயத்தால் அந்தப் பெண்மணிகள், 'நேரமாகிவிட்டது, நாங்கள் நித்யானுஷ்டானங்கள் செய்யவேண்டும்' என்று சொல்லி, அவரிடம் விடைபெற்றுச் சென்றார்கள். (20–22)

அவர்கள் எல்லோரும் சென்றதும், கசியப (விபாண்டக) புத்திரரான ரிஷ்யசிருங்கர் மனச்சஞ்சலம் அடைந்து துயரத்துடன் அங்குமிங்கும் அலைந்தார். வீரரும், விபாண்டகரின் குமாரரும், ஸ்ரீமானுமாகிய அவர் அடிக்கடி அவர்கள் நினைவாகவே இருந்து, மறுநாள் மனங்கவரும்வண்ணம் அலங்காரம் செய்து கொண்டு, பேரழகுடன் விளங்கிய அவர்களைச் சந்தித்த அதே இடத்திற்கு வந்தார். அவரைப் பார்த்ததுமே மனம்பூரித்த அணங்குகள் அவரை அணுகி வந்து இவ்வாறு சொன்னார்கள்— 'அழகியவரே! எங்கள் ஆசிரமத்திற்கு வரவேண்டும். இங்கே (இப்போது நாம் நின்று பேசிக் கொண்டிருக்கும் இடத்தில்) அழகான பலவகைப்பட்ட கிழங்குகளும் பழங்களும் ஏராளமாக இருக்கின்றன. ஆனால், இதைப் போன்றே அங்கேயும் (ஆசிரமத்திலும்) முறைப்படியான உபசாரங்களுக்குத் தேவையான இவையனைத்தும் உயர்ந்த வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.' (23–27)

மனம் கவரும் அவர்களுடைய அழைப்பைக் கேட்டதும், அவர்களுடன் செல்வதற்கு முடிவு செய்தார் (ரிஷ்யசிருங்கர்). அந்தப் பெண்கள் அவரை அழைத்துச் சென்றார்கள். பெரும் ஆன்மிக ஆற்றல் படைத்த அவர் அங்கே (அங்கதேச எல்லையில்) காலடி வைத்ததுமே, உலக மக்கள் மகிழ்வுறும்படியாக இந்திரன் உடனே மழை பொழிவித்தான். மழையோடு கூடவே தன் நாட்டிற்கு வந்திருக்கும் அந்தண முனிவரை எதிர்கொண்டழைத்து, தலைவணங்கி, தரையில் விழுந்து நமஸ்கரித்தார், மன்னர். மனமுவந்து, முறைப்படி அவருக்கு அர்க்யம் முதலான உபசாரங்களைச் செய்தார். உத்தம அந்தணரான அவருக்கு (தான் தந்திரமாக அழைத்து வரப்பட்டதால்) கோபம் வரக்கூடாது என்று பணிவுடன் அவரைப் பிரார்த்தித்துக் கொண்டார். (28–31)

பின்னர், மன்னர் அவரை உள்ளே அழைத்துச் சென்று, நிம்மதியான மனத்துடன் மகள் சாந்தாவை அவருக்கு வேதவிதிப்படி தானம் செய்து கொடுத்துத் திருப்தியடைந்தார். மகாதேஜஸ்வியான ரிஷ்யசிருங்கர், அங்கே எல்லா சுக–சௌக்கியங்களையும் மனைவி சாந்தாவோடுகூட அனுபவித்துக் கொண்டு வாழ்ந்து கொண்டிருந்தார். (32,33)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
பத்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பதினொன்று

ரிஷ்யசிருங்கரின் அயோத்தி வருகை

(தசரத) மாமன்னரே! அந்த சனத்குமாரர் அங்கே மேலும் விவரமாகச் சொல்லியதை, நான் இப்போது தங்கள் நலனிற்காகச் சொல்கிறேன், கேளுங்கள். (1)

சத்தியம் தவறாதவரும், திருவளர்செல்வரும், தருமவழியில் செல்பவருமான தசரதர் என்ற பெயர் கொண்ட மன்னர், இக்ஷ்வாகு குலத்தில் தோன்றப் போகிறார். அவருக்கு அங்க நாட்டு

மன்னருடன் நட்பு உண்டாகும். அவருக்கு (அங்க மன்னருக்கு) பெருமை பொருந்திய சாந்தா என்ற பெயருடைய பெண் இருப்பாள். அங்கராஜனுடைய புதல்வர் ரோமபாதர் என்பவர். பெருமைமிக்க தசரதர், ஒரு சமயம் அவரிடம் செல்வார். 'அறம் அறிந்தவரே! நான் மக்கட்பேறு இல்லாதவன். தங்கள் அனுமதியுடன் சாந்தாவும், அவள் கணவரும் (எங்கள் நாட்டிற்கு) வந்து என் குலத்தை விளங்கச் செய்வதற்கான வேள்வி செய்ய வேண்டும்.' அந்த வேண்டுகோளைக் கேட்ட மன்னர், மனத்தால் சிந்தித்துப் பார்த்துவிட்டு ஆத்மவானாகிய, பிள்ளைப்பேறுடைய சாந்தாவின் கணவரைக் கொடுக்கப் போகிறார். (அயோத்திக்கு அனுப்பி வைக்க இசையப் போகிறார்.) கவலை நீங்கிய தசரதர், அந்த அந்தணரைப் பெற்றுக் கொண்டு வந்து நிரம்பிய மனத்துடன் வேள்விகளைச் செய்விக்கப் போகிறார். (2–7)

வேள்வி செய்யும் பெருவிருப்பத்துடன் தருமம் அறிந்த தசரத மன்னர், கைகூப்பிக் கொண்டு உத்தம அந்தணரான ரிஷ்யசிருங்கரைக் குழந்தைப்பேறும், சுவர்க்க வாழ்க்கையும் அருளவல்ல வேள்வியை நடத்திக் கொடுக்கும்படிப் பிரார்த்திக்கப் போகிறார். மன்னர், வைதிகோத்தமர்களால் நடத்தப்படும் வேள்விகளின் பயனாக, தான் விரும்பியவைகளை அடையப் போகிறார். எல்லையில்லாத பராக்கிரமமுடைய நான்கு புதல்வர்கள் இவருக்குத் தோன்றப் போகிறார்கள். அவர்கள், பரம்பரை பெருமையை நிலைபெறச் செய்பவர்களாகவும், எல்லா உலகங்களிலும் புகழ் பெற்றவர்களாகவும் விளங்குவார்கள். முன்பு கிருதயுகத்தில் பகவான் சனத்குமாரர், தேவதைகள் முன்னிலையில் இவ்வாறு கூறினார். எனவே, ஆண்களில் புலி போன்றவரே! படைகள்–வாகனங்களுடன்கூட தாங்களே நேரில் சென்று, அவரை (ரிஷ்யசிருங்கரை) மிகவும் பெருமைப்படுத்தி அழைத்து வாருங்கள்.'' (8–12)

சுமந்திரருடைய சொற்களைக் கேட்டு தசரதர் மனமகிழ்ந்தார். தேரோட்டியிடமிருந்து அறிந்த தகவலை வசிஷ்டரிடம் தெரிவித்தார். (அவர் அனுமதியைப் பெற்றுக் கொண்டார்.) மனைவிகளோடும் மந்திரிகளோடும் மெல்ல மெல்லச் சென்று காடுகளையும் நதிகளையும் கடந்து, அந்த அந்தணர் இருந்த இடத்திற்குச் சென்றார். முனிபுங்கவரான அவர் இருந்த இடத்தை ஒருவாறு அடைந்தார். ரோமபாதரின் அருகில் இருக்கும் அந்தணாளரைக் கண்டார். ஒளிவீசுகின்ற நெருப்பைப் போல் (தன் தேஜஸால் பிரகாசிக்கும்) முனிகுமாரரைக் கண்டார். உடனே, ரோமபாதர் தகுந்த முறைப்படி தசரதரை வரவேற்று உபசரித்தார். நட்பு நெருக்கத்தால் மிகவும் அகமகிழ்ந்த ரோமபாதர், மகாமேதாவியான முனிகுமாரரிடம் எல்லாவற்றையும் விளக்கிக் கூறினார். (13–17)

நண்பரும் உறவினருமான அவரை இவர் நன்றாக பதில் உபசாரம் செய்தார். இவ்வாறு பரஸ்பரம் அன்புவசப்பட்டு மரியாதை செய்யப்பட்ட மன்னர், ஏழெட்டு நாட்கள் உடனிருந்த பின்னர், ரோமபாதரைப் பார்த்து இவ்வாறு கூறினார்— ''மன்னரே! தங்களுடைய புத்திரியும், அவள் கணவரும் எங்கள் நகரத்திற்கு வரவேண்டும். அங்கும் ஓர் அரிய செயல் நடத்தப்பட வேண்டியுள்ளது.'' அதைக் கேட்ட ரோமபாதர், மாமேதையான ரிஷ்யசிருங்கர் போவதற்கு இணங்கி, அவரிடம், ''நீங்கள் உங்கள் மனைவியுடன் சென்று வாருங்கள்'' என்றார். ''அப்படியே செய்கிறேன்'' என்று அரசருக்குப் பதில் கூறினார், அவர். மன்னரால் அனுமதிக்கப்பட்ட அவர், மனைவியுடன் புறப்படுவதற்கு ஆயத்தமானார். அப்போது, நட்புப்பெருக்கினால் இரு மன்னர்களும் பரஸ்பரம் மார்புறத் தழுவிக் கொண்டார்கள்; கைகூப்பிக் கொண்டார்கள். ரோமபாதரும் தசரதரும் எல்லையில்லா ஆனந்தம் அடைந்தார்கள். பின்னர், நண்பரிடம் விடைபெற்றுக் கொண்டு ரகுநந்தனரான தசரதர் புறப்பட்டுச் சென்றார். (18–23)

வேகமாகச் செல்லக்கூடிய தூதர்கள் மூலம், ''உடனே நகரத்தை நன்றாக அழகுபடுத்துங்கள் ; பதாகைகளைக் கட்டுங்கள்; வாசனைப் பொருட்களைத் தெளியுங்கள்; நறுமணப் புகை எழுப்புங்கள்'' என்று நகர மக்களுக்குச் செய்தி அனுப்பினார். மன்னர் திரும்பி வருகிறார் என்பதை அறிந்ததும் நகர மாந்தர் அனைவரும் மிகவும் மகிழ்ந்து, அரசர் சொல்லியனுப்பியவாறே சிறப்பாகச் செய்து முடித்தார்கள். சங்கு, துந்துபி வாத்தியங்கள்

முழங்க நன்றாக அலங்கரிக்கப்பட்ட நகரத்திற்குள் தலைசிறந்த அந்தணரை முன்னிட்டுக் கொண்டு மன்னர் பிரவேசித்தார். நகர மக்கள் அனைவரும் அந்த அந்தணப் பெரியோரைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். (இவர் செய்யப்போகும் யாகத்தினால்தானே மன்னர் தசரதருக்கு மகன் பிறக்கப் போகிறான்! என்பதால் மகிழ்ச்சி.) (24–27)

நகரத்திற்குள் வந்து கொண்டிருக்கும் அவரை – தேவலோகத்திற்கு வந்த காசியபரை ஆயிரங்கண்ணனான தேவேந்திரன் கோலாகலமாக வரவேற்றதைப் போல – பேராற்றல் படைத்த தசரதருடன் வரும் ரிஷ்யசிருங்கரை விமரிசையாக வரவேற்றார்கள். அவரை அரண்மனைக்குள் அழைத்துச் சென்று முறைப்படி உபசாரங்கள் செய்து, அவரருகில் தான் இருப்பதாலேயே உலகில் எல்லாவற்றையும் செய்து முடித்துவிட்டவராகத் தன்னைக் கருதினார், தசரதர். கணவரோடுகூட வந்திருக்கும் பெருங்கண்ணாளான சாந்தாவைப் பார்த்து, அந்தப்புரப் பெண்மணிகள் எல்லோரும் மிகவும் ஆனந்தம் அடைந்தார்கள். அவர்கள் எல்லோராலும் (விசேஷமாக மன்னராலும்) பரிவுடன் உபசரிக்கப்பட்ட அவள், கணவரோடுகூடச் சிறிது காலம் அங்கேயே சௌக்கியமாக இருந்து வந்தாள். (28–31)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
பதினோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பன்னிரண்டு

அசுவமேத யாக ஏற்பாடுகள்

நாட்கள் பல கடந்தன. வசந்த காலம் வந்தது. ஒரு மங்களமான நாளில் யாகத்தைத் தொடங்கலாம் என்ற எண்ணம் மன்னருக்கு உண்டாயிற்று. எனவே, தேவர்களைப் போன்ற காந்தியுடைய அந்தணாளர் (ரிஷ்யசிருங்கர்) முன் தலைதாழ்த்தி வணங்கி, வம்ச பரம்பரையில் தொய்வு ஏற்படாமலிருக்க, பிள்ளைப்பேறு வேண்டி யாகம் நடத்திக் கொடுக்கும்படிக் கேட்டுக் கொண்டார். நன்றாக உபசரிக்கப்பட்ட அவர், ''அவ்விதமே ஆகட்டும். யாகத்திற்குத் தேவையான பொருள்களைச் சேகரம் செய்யுங்கள். உங்களுடைய குதிரையை (தன் இஷ்டப்படி பல நாடுகளிலும் சஞ்சாரம் செய்வதற்காக) அவிழ்த்துவிடுங்கள். (1–3)

சரயூ நதியின் வடக்குக் கரையில் யாகசாலை அமையுங்கள்'' என்றார். அதைக் கேட்டதும் தலைசிறந்த அமைச்சரான சுமந்திரரிடம் மன்னர் இவ்வாறு கூறினார்— ''சுமந்திரா! வேதவித்துக்களான சுயக்ஞர், வாமதேவர், ஜாபாலி, காசியபர் முதலான ரித்விக்குகளையும், அரசபுரோகிதரான வசிஷ்டரையும், மற்றுமுள்ள அந்தணோத்தமர்களையும் அழையுங்கள்.'' விரைவாகச் செயல்படும் திறன் கொண்ட சுமந்திரர் விரைந்து சென்று, வேதங்களின் எல்லையைக் கண்டவர்களும், தகுதியுடையவர்களுமான அவ்வந்தணர்கள் அனைவரையும் அழைத்து வந்தார். தருமாத்மாவான தசரத மன்னர், அவர்களை நன்கு உபசரித்து தருமார்த்தங்களோடு கூடியதும் நியாயமானதுமான இனிய சொற்களைக் கூறினார்— (4–7)

''புதல்வனுக்காக வேட்கையுடன் தவித்துக் கொண்டிருக்கும் எனக்கு அமைதியே இல்லை. புத்திரனை அடையவேண்டும் என்பதற்காக அசுவமேத யாகம் செய்யவேண்டும் என்று என் மனத்தில் படுகிறது. அந்த வேள்வியைச் சாஸ்திர நூல்களில் சொல்லப்பட்டுள்ள முறைப்படி செய்ய விரும்புகிறேன். (விபாண்டக முனிவரின் குமாரரான) ரிஷ்யசிருங்கரின் ஆன்மசக்தியால் என்னுடைய விருப்பங்களையெல்லாம் அடைவேன்.'' மன்னரிடமிருந்து வந்த இந்தச் சொற்களைக் கேட்ட வசிஷ்டர் முதலிய உத்தம அந்தணர்கள், உடனே, 'சரி, சரி' என்று ஆமோதித்தார்கள். (8–10)

ரிஷ்யசிருங்கர் முன்னிலையில் வசிஷ்டர் முதலான எல்லா முனிவர்களும் அரசருக்கு பின்வருமாறு பதில் கூறினார்கள்— ''தேவையான பொருட்களைச் சேகரம் செய்யுங்கள். தங்களுடைய பட்டக் குதிரையை (பல நாடு–நகரங்களிலும் சுற்றி வருவதற்காக) அவிழ்த்து விடுங்கள். சரயூ நதியின் வடக்குக்கரையில் யாகசாலையை நிர்மாணம் செய்யுங்கள். புத்திரனை அடைய வேண்டும் என்பதற்காக, இந்த அறவழிச் சிந்தனை தங்களுக்கு ஏற்பட்டிருப்பதால், எப்படியும் தாங்கள் தங்கள் விருப்பப்படி நான்கு குமாரர்களை அடையத்தான் போகிறீர்கள்.'' அந்தணர்களால் இவ்வாறு கூறப்பட்டதைக் கேட்டு மன்னர் திருப்தியடைந்தார். மிக்க மகிழ்ச்சியுடன் மந்திரிகளைப் பார்த்து மங்களமான சொற்களைக் கூறினார்— (11–13)

''நம்முடைய ஆசார்யர்கள் கூறியபடி தேவையான பொருட்களையெல்லாம் சேகரியுங்கள். வீரம் மிகுந்த படைவீரர்களின் பாதுகாப்புடன் குருமார்களில் ஒருவர் உடன் செல்ல குதிரையை அவிழ்த்துவிடுங்கள். சரயூ நதியின் வடக்குக்கரையில் யாகசாலைக்கான நிலத்தைக் கையகப்படுத்துங்கள். அறநூல்களில் கூறப்பட்டுள்ளபடி சாந்தி–சடங்குகள் உரிய முறையில் செய்யப்பட வேண்டும். உயர்ந்ததான இந்த வேள்வியைத் துன்பம் தரக்கூடிய குற்றங்கள் ஏற்படாமல் கவனமாக செய்ய முடியுமானால் எல்லா மன்னர்களும் செய்யலாம். விஷயம் அறிந்த பிரும்மராட்சஸர்கள் இம்மாதிரியான வேள்விகளில் தவறுகளைத் தேடியே அலைந்து கொண்டிருப்பார்கள். வேள்வியில் தடங்கல் ஏற்பட்டால், உடனே கர்த்தா (வேள்வியை நடத்துபவன்) அழிந்து போகிறான். ஆகவே, என்னால் தீர்மானிக்கப்பட்ட இந்த வேள்வியானது முறைப்படி நடந்து நிறைவேறுவதற்கான ஆயத்த வேலைகளைச் செய்யுங்கள். இத்தகைய சீர்மிகு செயல்களைச் செய்து காட்டுவதில் வல்லமை உடையவர்கள், நீங்கள்.'' (14–18)

உடனே, எல்லா மந்திரிகளும், 'அவ்விதமே செய்கிறோம்' என்று பதிலளித்தார்கள். மன்னர்களில் தலையாயவரான அவரால் ஆணையிட்டபடியே எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடித்தார்கள். அரசர்களில் காளை போன்றவரும் அறம் அறிந்தவருமான அவரைப் புகழ்ந்து ஆசிவழங்கிய அந்தணர்கள், அவரால் விடைகொடுக்கப்பட்டு, தாங்கள் வந்தவாறே திரும்பிச் சென்றார்கள். அந்தணோத்தமர்கள் சென்ற பின்னர், மந்திரிகளுக்கு விடைகொடுத்து அனுப்பிவிட்டு, பேரொளி வீசும் மன்னர், தன் மாளிகையைச் சென்றடைந்தார். (19–21)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
பன்னிரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பதின்மூன்று

யாகசாலை பிரவேசம்

மீண்டும் வசந்தகாலம் வந்தபோது, முழுமையாக ஓர் ஆண்டு கழிந்து முடிந்திருந்தது. வீரம் மிகுந்த மன்னர், பிள்ளைப்பேற்றுக்காக அசுவமேத யாகம் செய்யத் தொடங்குவது என்று தீர்மானித்தார். வசிஷ்டரிடம் சென்று வணங்கிய அவரை, முனிவர் தக்கபடி மரியாதை செய்தார். அந்த அந்தணோத்தமரிடம் பிள்ளைப்பேற்றைப் பற்றி மனநெகிழ்ச்சியுடன் கூறினார்— ''பிரும்மன்! சாஸ்திர நூல்களில் கூறப்பட்டுள்ளபடியும், வேள்விச் சடங்குகளில் இடையூறு ஏற்படாதவண்ணமும் எனக்காக யாகம் செய்ய வேண்டும். தாங்கள் என்னிடம் பேரன்பு கொண்டவர்; என் நல்வாழ்வில் அக்கறையுடையவர்; மிக உயர்ந்த நிலையிலுள்ள ஆசார்யர். செய்யப்போகும் யக்ஞத்தின் முழுச் சுமையையும் (முழுப் பொறுப்பையும்) ஏற்று நடத்தும் ஆற்றலுடையவர், தாங்கள்.'' ''அப்படியே ஆகட்டும்; நீங்கள் விரும்பியபடி அனைத்தையும் செய்து தருகிறேன்'' என்று மன்னரிடம் வசிஷ்டர் கூறினார். (1–5)

பின்னர், வேள்விக்கான சடங்குகளை நடத்துவதில் வல்லுநர்களான முதிய வேதியர்கள், யாகசாலை நிர்மாணிப்பதில் நிபுணர்கள், முற்றிலும் தருமமார்க்கத்தில் வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கும் வயோதிகர்கள், தொடக்கம் முதல் நிறைவு வரை அந்தப் பணியில் தொடர்ந்து இருக்கக் கூடியவர்கள், ஸ்தபதிகள், தச்சர்கள், மண் தோண்டுபவர்கள், ஜோதிடர்கள், கல்தச்சர்கள், நாட்டியமாடும் நர்த்தக–நர்த்தகிகள், நிறைந்த கேள்வி ஞானமும் சாஸ்திர அறிவும் பெற்று தூய வாழ்க்கை நடத்திக் கொண்டிருப்பவர்கள் – இவர்களையெல்லாம் அழைத்துச் சென்றார். ''மன்னருடைய ஆணைப்படி நீங்கள் அனைவரும் வேள்வி சம்பந்தமாகத் தத்தமக்குரிய பணிகளைச் செய்யுங்கள். (6–8)

அநேக ஆயிரக்கணக்கான செங்கற்களை விரைவில் கொண்டு வாருங்கள். மன்னர்கள் தங்குவதற்காக எல்லா சுக சாதனங்கள் நிறைந்த மாளிகைகளைக் கட்டுங்கள். பிராமணர்கள் தங்குவதற்காக, அவர்கள் தத்தம் கர்மாக்களைச் செய்வதற்கு உகந்த முறையில் நூற்றுக்கணக்கான வீடுகளைக் கட்டுங்கள். கட்டடங்கள், காற்றினாலும் மழையினாலும் தாக்கப்படாதவைகளாகவும், உணவுப் பொருட்களும் தண்ணீரும் உடையனவாகவும் இருக்க வேண்டும். (9,10)

அவ்வாறே நகர மக்கள் வந்து தங்குவதற்காக விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். தொலைவிலிருந்து வரும் மன்னர்களுக்குத் தனித்தனியே யானைக் கொட்டகை, குதிரை லாயம், படுக்கை அறைகள் அமைக்கப்பட வேண்டும். வெளிநாட்டிலிருந்து வரும் படைவீரர்கள் தங்குவதற்காகப் படைத்தளங்கள் குறிக்கப்பட வேண்டும். நாடு–நகர மக்களுக்காக அவர்கள் விரும்பும் எல்லாப் பொருள்களும், பல்வகை உணவுப் பண்டங்களும் நிறைந்த அழகிய இருப்பிடங்கள் நிர்மாணிக்கப்பட வேண்டும். அவர்கள் எல்லோரையும் மரியாதையுடன் உபசரித்து முறைப்படி போஜனம் அளிக்க வேண்டும்; விளையாட்டுத்தனமாக (அலட்சியமாக) நடந்து கொள்ளக் கூடாது. எல்லா வருணங்களைச் சேர்ந்தவர்களையும் அன்புடன் வரவேற்று கௌரவிக்க வேண்டும். (11–14)

விருப்பு–வெறுப்புகளுக்கு ஆட்பட்டு யாரையும் அவமரியாதை செய்யக்கூடாது. அவர்களிலும் வயது, தகுதி நிலையைக் கருத்தில் கொண்டு வேள்விச்சடங்குகளில் பலவகை பணியாளர்களுக்கும் சிற்பிகளுக்கும் சிறப்பான மரியாதை செய்ய வேண்டும். பொருட்களாலும் விருந்து உபசாரங்களாலும் அவர்கள் எல்லோரும் உபசரிக்கப்பட வேண்டும். அனைத்தும் நடக்கவேண்டிய முறைப்படி நடத்தப்பட வேண்டும். எதிலும் கவனக்குறைவு ஏற்பட்டுவிடாதபடி மனத்திருப்தியுடனும் மகிழ்ச்சியுடனும் நீங்கள் எல்லோரும் காரியங்களைச் செய்யுங்கள்.'' பின்னர், அவர்கள் எல்லோரும் ஒன்றாகத் திரண்டு வந்து, 'தங்கள் விருப்பப்படி எல்லாவற்றையும் செய்கிறோம். ஒரு சிறு குறையும் நேராமல் பார்த்துக் கொள்கிறோம்' என்று வசிஷ்டரிடம் கூறினார்கள். (15–18)

பின்னர் சுமந்திரரை அழைத்து, 'இந்த மண்ணுலகில் நல்லாட்சி நடத்தும் அரசர்களை எல்லாம் அழைப்பாயாக' என்று வசிஷ்டர் சொன்னார். ''ஆயிரக்கணக்கில் அந்தணர்–க்ஷத்திரியர்–வைசியர்–வேளாளர் ஆகியோரையும், மற்ற நாடுகளிலுள்ள சான்றோர்களையும் மிக்க மரியாதையுடன் அழைத்து வா. மிதிலையின் மன்னரான ஜனகர் சத்தியம் தவறாதவர்; எல்லா சாஸ்திரங்களிலும் வல்லவர்; வேதங்களில் உறுதியான ஞானம் உடையவர். நீயே நேரில் சென்று அவருக்குரிய மரியாதையைச் செலுத்தி, பாக்கியசாலியான அவரை அழைப்பாய். அவரோடு முன்பிருந்தே நமக்குத் தொடர்பு உண்டு என்பதால் முதலில் அவரைப் பற்றிச் சொன்னேன். (19–22)

அவ்வாறே மனத்திற்குகந்தவரும், இனிமையாகப் பேசுகின்றவரும், நல்லொழுக்கம் உடையவரும், தேவர்களைப் போல் ஒளிவீசுபவருமான காசி தலைவரையும் நீயே அழைப்பாயாக. அவ்வாறே நம்முடைய மாமன்னருக்கு மாமனாரும், தருமத்தில் மூழ்கியவரும், வயோதிகருமான கேகய மன்னரை, அவர்தம் மகனோடு இங்கே அழைத்து வருவாயாக. நமது மாமன்னரின்

நண்பரும் புகழ்பெற்றவரும் மகாபாக்கியசாலியுமான அங்கதேசத்து அரசர் ரோமபாதரை வெகுவாக கௌரவித்து அழைத்து வருக. பழமையான சிந்து–ஸௌவீர–ஸௌராஷ்டிரப் பகுதிகளைச் சேர்ந்த அரசர்களையும், தென்னாட்டிலுள்ள அரசர்கள் அனைவரையும் அழைப்பாயாக. மேலும், நம்முடன் நல்லுறவு வைத்துக் கொண்டுள்ள மற்ற மன்னர்களையும் உற்றார்–உறவினரோடு விரைவில் வரவேண்டும் என்று அழைப்பு அனுப்பு. இவர்களையெல்லாம் மன்னரின் ஆணைப்படி விரைந்து சிறப்பாகச் செயல்படும் தூதர்களைக் கொண்டு அழைத்துவரச் செய்வாய்.'' வசிஷ்டருடைய சொற்களைக் கேட்ட சுமந்திரர், உடனே மன்னர்களை அழைத்து வருவதற்கு நல்ல தோற்றமுடைய பணியாளர்களுக்கு உத்தரவிட்டார். அத்துடன் முனிவர் கூறியபடி, தான் நேரில் சென்று அழைக்க வேண்டிய மன்னர்களை அழைப்பதற்கு அறநெறியாளரான அவரே மிக விரைவாகச் சென்றார். (23–29)

யாகசாலை அமைப்பதற்காக நியமிக்கப்பட்ட தொழிலாளர்கள் அனைவரும் சகலகலாவல்லவரான வசிஷ்டரிடம் வந்து யாகசாலை கட்டுமானத்தில் அதுவரை செய்யப்பட்டுள்ளதை விவரித்துக் கூறினார்கள். அதைக் கேட்டுத் திருப்தியடைந்த வசிஷ்டர், அவர்களைப் பார்த்து இவ்வாறு கூறினார்— ''எவருக்கும் அலட்சியமாகவோ விளையாட்டாகவோ எதையும் கொடுக்கக்கூடாது. அலட்சியத்துடன் செய்யப்படும் தான–தரும காரியம் கொடுப்பவனைக் கொன்றுவிடும் என்பதில் சந்தேகமில்லை.'' இரவு–பகலாக வந்தவண்ணமிருந்த மன்னர்கள், ஏராளமான நவரத்தினங்களைத் தசரதருக்குக் கொடுப்பதற்காகக் கொண்டு வந்தார்கள். (30–32)

அப்போது மனமகிழ்ந்த வசிஷ்டர் அரசரைப் பார்த்து இவ்வாறு கூறினார்— ''மனிதருள் புலிபோன்ற மன்னரே! உங்கள் உத்தரவுப்படி ஏராளமான அரசர்கள் வந்திருக்கிறார்கள். அந்த உத்தம மன்னர்கள் எல்லோரும் என்னால் தகுதிக்கேற்றபடி உபசரிக்கப்பட்டு விட்டார்கள். அரசே! கட்டுப்பாடு நிறைந்த நமது மக்கள் யாகத்திற்குத் தேவையான எல்லா ஏற்பாடுகளையும் சிறப்பாகச் செய்து முடித்திருக்கிறார்கள். எல்லா வகையான விருப்பங்களையும் நிறைவேற்றுவதற்கான எல்லாப் பொருள்களும் குவித்து வைக்கப்பட்டுள்ள யாக வளாகத்திற்கு வேள்வியைச் செய்வதற்காக (சங்கல்பம் செய்து கொள்வதற்காக), நீங்கள் புறப்பட்டு வரவேண்டும். (33–35)

(மிகப்பெரிய செயல்கள், குறுகிய காலத்திலேயே சிறப்பாகச் செய்யப்பட்டுவிட்டபடியால்) மனத்தாலேயே நிர்மாணிக்கப்பட்டதோ என்று அதிசயிக்க வைக்கும் வேள்வி வளாகத்தை, நீங்கள் பார்க்க வேண்டும். (நீங்கள் வந்து யாகத்தைத் தொடங்கி வைக்க வேண்டும் என்றபடி.)'' பின்னர் வசிஷ்டர்–ரிஷ்யசிருங்கர் ஆகிய இருவரின் சொற்படி, சுப நட்சத்திரம் கூடிய ஒரு நன்னாளில் நாடாளும் மன்னர் அவ்விடம் புறப்பட்டுச் சென்றார். வசிஷ்டர் முதலான அந்தணோத்தமர்கள், ரிஷ்யசிருங்கரை முன்னிட்டுக் கொண்டு யாகசாலைக்குச் சென்று, சாஸ்திரநூல்களில் கூறப்பட்டுள்ள முறைப்படி யக்ஞகர்மாவைத் தொடங்கினார்கள். திருவளர்செல்வரான மன்னர், தன் மனைவிகளுடன் யாகதீட்சையை மேற்கொண்டார். (36–38)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
பதின்மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பதிநான்கு

அசுவமேத யாக நிகழ்வு

சரியாக ஓர் ஆண்டுக் காலம் நிறைவடைந்ததும் (பல நாடுகளிலும் சுற்றுவதற்காக அனுப்பப்பட்ட) குதிரை திரும்பி வந்தது. உடனே சரயூவின் வடகரையில் அசுவமேத யாகம் செய்வதற்கு மன்னர் நிச்சயம் செய்தார். பெருவள்ளலான மன்னருடைய அசுவமேதப்

பெருவேள்விச் சடங்குகளை ரிஷ்யசிருங்கரை முன்னிறுத்தி அந்தணச் சான்றோர்கள் நடத்தினார்கள். சாஸ்திர நூல்களில் கூறப்பட்டுள்ள விதிகளை மீறாமலும், செய்முறைப்படியும் வேதவித்தகர்களான ரித்விக்குகள் எல்லாக் கர்மாக்களையும் செய்தார்கள். சாஸ்திரப்படி ப்ரவர்க்யம் செய்து, அதுபோலவே உபஸதம் என்ற கர்மாவையும், மற்ற பிரதேசங்களில் வழக்கத்திலுள்ள சில அதிகப்படியான கர்மாக்களையும் முறைப்படி அந்தணோத்தமர்கள் செய்தார்கள். (1–4)

முனிசிரேஷ்டர்களான அவர்கள் அந்தந்த கர்மாக்களுக்குரிய தேவதைகளைப் பூஜித்து, மனப்பூர்வமாக பிராதஸ்ஸவனம் முதலான கர்மாக்களை முறைப்படி செய்தார்கள். சோமலதையைப் பிழிந்து குற்றமற்ற இந்திரனுக்கு முறைப்படி சோமரஸம் ஆகுதி செய்யப்பட்டது. நிகழ்வு முறைப்படி மாத்யந்தினஸவனம் தொடங்கப்பட்டது. மகாவல்லமை பொருந்திய மன்னருடைய யாகத்தில், சாஸ்திர நூல்களை நன்றாக ஆராய்ந்து குறையில்லாமல் திருதீயஸவனம் என்ற கர்மாவையும் முனிபுங்கவர்கள் செய்தார்கள். (5–7)

ரிஷ்யசிருங்கர் முதலானவர்கள் முன்னர் குருகுலவாசத்தில் கற்றுக் கொண்டபடி ஸ்வர–அக்ஷரப் பிசகு இல்லாமல் உரிய மந்திரங்களைக் கூறி, இந்திரன் முதலான முக்கிய தேவதைகளை அங்கே அழைத்தார்கள். தேவலோகவாசிகளான அவர்களுக்கு ஸாமவேத வல்லுனர்களான ஹோதாக்கள் (என்னும் ரித்விக்குகள்) இனிய, மனங்கவரும் ஸாம கானங்களால் அழைத்து, அவரவர் தகுதிக்கு ஏற்றபடி ஆகுதிகளை அளித்தார்கள். வேள்விக்கு உரியனவல்லாத பொருட்கள் எவையும் அக்னியில் அவியாகச் சொரியப்படவில்லை; எந்தப் பொருளும் நழுவிப் போய் அக்னி குண்டத்திற்கு வெளியே போய் விழவில்லை. முன்னர், பிரும்மா செய்ததாகக் கூறப்படுவதைப் போலவே எல்லாம் நல்ல சுகத்தைக் கொடுக்கும் முறையில் செய்யப்பட்டன. (8–10)

ஹோம காலத்தில் வேள்வி செய்து களைப்படைந்தவரோ, பசியால் வாடுபவரோ காணப்படவில்லை. கல்வி–கேள்வியில் சிறந்தவரல்லாத, நூற்றுவருக்குக் குறைந்த சீடர்களையுடைய அந்தணர்களோ அங்கு இல்லை. (எல்லோரும் நூற்றுக்கணக்கான பிரும்மசாரிகளுக்கு வேதக் கல்வியைக் கற்பித்து வந்தார்கள் என்றபடி.) கணக்கில்லாத அந்தணர்களுக்கும், ஏனைய வருணத்தாருக்கும் நாள்தோறும் விருந்து அளிக்கப்பட்டது. தவம் செய்வோருக்கும் துறவிகளுக்கும் அங்கே தினமும் உணவு வழங்கப்பட்டது. (11,12)

வயோதிகர்கள், நோயுற்றவர்கள், பெண்கள், சிறுவர்கள் என்று அவரவருக்கு ஏற்றபடி வழங்கப்பட்ட அறுசுவை உணவு வகைகளைப் புசித்தவர்கள், 'போதும்!' என்ற திருப்தியை அடையவில்லை. 'கொடு, கொடு..., அன்னம் கொடு, ஆடைகள் கொடு' என்று அரசரால் உற்சாகப்படுத்தப்பட்ட அரசுப் பணியாளர்கள், மேலும் மேலும் வாரி வழங்கினார்கள். குன்றுகளைப் போல் சமைத்த உணவுப் பண்டங்கள் குவிக்கப்பட்டிருந்தன. தினமும் புதிது புதிதாக உணவு தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டது. (13–15)

அந்தப் பெருவள்ளலுடைய (தசரதருடைய) யாகத்திற்கு பற்பல தேசங்களிலிருந்து வந்திருந்த ஆண்களுக்கும் பெண்களுக்கும் உணவு–குடிநீர் ஏற்பாடுகள் சிறப்பாகச் செய்யப்பட்டிருந்தன. அந்தணப் பெரியோர்கள், 'ஆகா! சாப்பாடு என்றால் இதுதான் சாப்பாடு! என்ன ருசி! என்ன தரம்!' என்று புகழ்ந்தார்கள். தசரதரைப் பார்த்து, 'அடடா! எங்களுக்கு ரொம்ப திருப்தி! உங்கள் ஆசை நிறைவேற வேண்டும்!' என்று ஆசி வழங்கினார்கள். ஆடை–அணிகலன்களால் நன்றாக தம்மை அலங்கரித்துக் கொண்ட ஆண்கள் அந்தணர்களுக்குப் பரிமாறினார்கள். அப்படி பரிமாறுகிறவர்களுக்கு உதவி செய்யும் துணை பணியாளர்களும் உயர்ந்த மணிகுண்டலங்களை அணிந்திருந்தார்கள். (16–18)

அன்றன்றைய கர்மாக்கள் நிறைவடைந்ததும் கல்வி–கேள்விகளிலும் வாதத்திலும் சிறந்த அந்தணர்கள், ஒருவரையொருவர் ஜெயிக்க விரும்பி, மேலும் மேலும் விவாதித்துக் கொண்டே போனார்கள். அங்கு வேள்வி செய்வதற்காக நியமிக்கப்பட்ட செயல்திறனுடைய அந்தணர்கள்,

நாள்தோறும் செய்யப்பட வேண்டிய கர்மாக்களைச் சாஸ்திரத்தை அலசிப் பார்த்து, அதில் கூறியபடியே செய்தார்கள். அரசருடைய அந்த சபையில் இருபிறப்பாளர்களில் ஆறு அங்கங்களோடும் வேதங்களை அறியாதவரோ, நிறைந்த கேள்வி ஞானம் இல்லாதவரோ, வாதத்திறமை இல்லாதவரோ ஒருவர்கூட இல்லை. (யாகப் பசுக்களைக் கட்டுவதற்காக நிறுவப்படும்) யூபக் கால்கள் நடவேண்டிய சந்தர்ப்பம் வந்தவுடன் வில்வ மரக்கால்கள் ஆறும், கருங்காலி ஸ்தம்பங்கள் ஆறும், அதே எண்ணிக்கை பலாச மரக்கால்களும் நிறுவப்பட்டன. நறுவிலி மரத்தால் ஒரு யூபமும், தேவதாரு மரத்தால் ஒரு யூபமும் நடப்பட்டன. மார்பளவு இடைவெளிவிட்டு அவை இரண்டும் அமைக்கப்பட வேண்டும் என்பது விதி. (19–23)

இக்காரியங்களை எல்லாம் (சிற்ப) சாஸ்திரம் அறிந்தவர்களும், யாகக்கிரியா பண்டிதர்களும் இணைந்து செய்தார்கள். அந்த மகாவேள்வியில் அழகூட்டுவதற்காக எல்லா யூபங்களும் பொற்கலன்களால் அலங்கரிக்கப்பட்டன. இருபத்தொரு யூபக் கால்கள் இருபத்தொரு அரத்னி (ஒரு நீட்டளவு) நீளத்திற்கு அமைக்கப்பட்டன. ஒவ்வொன்றும் இருபத்தொரு வஸ்திரங்களால் அலங்கரிக்கப்பட்டன. தொழிலாளர்களால் நன்றாகச் செய்யப்பட்டிருந்த யூப ஸ்தம்பங்கள் உறுதியாகவும், சாஸ்திர முறைப்படியும் நிறுவப்பட்டன. கவர்ச்சிகரமான தோற்றம் கொண்ட அவைகள் எட்டு கோணங்களில் நடப்பட்டன. வானுலகில் சப்தரிஷிகள் பிரகாசமாக ஒளிர்வதைப் போல, ஸ்தம்பங்கள் எல்லாம் ஆடைகளாலும், சந்தன–புஷ்பங்களாலும் அலங்கரிக்கப்பட்டு வெகுவாகப் பிரகாசித்தன. (24–27)

(யாககுண்டம் அமைப்பதற்குத் தேவையான) செங்கற்கள் அளவு பிரகாரமும், குறிப்பிடப்பட்ட அமைப்பிலும் தயாரிக்கப்பட்டன. குண்டங்களில் அக்னி நிலைப்படுவதற்கான கர்மாக்களில் தேர்ச்சி பெற்ற பிராமணர்கள் அக்னியை உண்டாக்கினார்கள். அரசரால் நியமிக்கப்பட்ட காரிய வல்லுநர்களான பிராமணர்களால் குண்டங்களில் அக்னி உண்டாக்கப்பட்டது. கருடசயனம் என்ற அந்த யாக குண்ட அமைப்பில் பொற்சிறகுகளோடு கூடிய பொதுவாக ஆறு பாகம் நீளமாக அமைக்கப்படும் கருடன், இந்த யாகத்தில் அதனிலும் மூன்று மடங்கு நீளமுள்ளதாகக் கிழக்கு நோக்கிப் பார்த்திருக்கும்படி அமைக்கப்பட்டது. (28,29)

யாகசாலைத் தூண்களில் அந்தந்த தேவதைகளை உத்தேசித்து, அவரவர்களுக்குரிய பிராணிகள் கட்டப்பட்டன. யாக கர்ம சாஸ்திர நூல்களில் கூறப்பட்டுள்ளபடி பாம்புகளும் பறவைகளும் கட்டப்பட்டன. சாமித்ரம் என்ற கர்மாவில் யாகத்திற்கான குதிரையும், நீர்வாழ்ப் பிராணிகளும் யாகவிதிகளைக் கூறும் நூலில் கூறியுள்ளபடி முனிவர்களால் உரிய இடங்களில் கொண்டு நிறுத்தப்பட்டன. முந்நூறு பசுக்கள் அங்கு யாகசாலைத் தூண்களில் கட்டப்பட்டன. மன்னருடைய மிக உயர்ந்த ஜாதிக் குதிரையும் அங்கே கொண்டு வரப்பட்டது. கௌசல்யை, அந்தக் குதிரையைத் தீர்த்தப் புரோட்சணம் முதலிய கர்மாக்களால் தூய்மைப்படுத்தி, மூன்று கத்திகளால் தடவிக் கொடுத்தார். 'அறநூல்படி நடக்கவேண்டும்; (அப்படி நடந்தால்தான்) கோரிய பலன் கிடைக்கும்' என்ற உறுதியான எண்ணத்தோடு, ஓர் இரவு முழுவதும் அந்தக் குதிரையின் பக்கத்திலேயே கௌசல்யை தங்கினார். (30–34)

பின்னர் ஹோதா, அத்வர்யு, உத்காதா ஆகிய மூன்று வேத சாகை வித்தகர்கள், அரசருடைய பட்டத்தரசிகளையும், மற்றுமுள்ள போக பத்தினிகளையும் குதிரையைத் தொடச் செய்தார்கள். (தொட்டு மரியாதை செய்து வணங்கச் சொன்னார்கள்.) புலன்களைக் கட்டுப்பாட்டில் வைத்துள்ள அவர்கள் (ரித்விக்குகள்) அசுவகந்தத்தை எடுத்து முறைப்படி யாகாக்னியில் ஆகுதி செய்தார்கள். அப்போது அக்னியிலிருந்து எழுந்த புகையின் வாசனையை, தன்னுடைய அனைத்துப் பாவங்களையும் தொலைத்து ஒழிப்பதற்காகக் குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்டபடி மன்னர் நன்றாக முகர்ந்து அனுபவித்தார். யாகம் செய்துவந்த பதினாறு வேதியர்களும் அசுவமேத வேள்விக்குரிய ஒவ்வொன்றையும், அவ்வவற்றுக்கான மந்திரங்களைக் கூறி, அக்னியில் செலுத்தினார்கள். மற்ற யக்ஞங்களில், நொச்சி இலையில் திரவியத்தை வைத்து ஆகுதி

கொடுக்கப்படும். அசுவமேத யாகத்தில் ஹோமத் திரவியங்கள் கோரை முறத்தில் வைத்து ஆகுதி கொடுக்கப்படுகிறது. (35–39)

கல்ப சூத்திரத்தின்படி, அசுவமேத யாகத்தில் மூன்று தினங்கள் முக்கியமானவை என்று அந்தணர்கள் நிர்ணயித்திருக்கிறார்கள். முதல் நாளில், நான்கு ஸ்தோமங்களுள்ள அக்னிஷ்டோமம் செய்யப்படுகிறது. இரண்டாவதாக, உக்த்யம் என்ற வேள்வியும், அதற்குப் பின்னர் அதிராத்ரம் என்ற வேள்வியும் நடத்தப்படுகின்றன. சாஸ்திரங்களில் கூறியபடி விதிக்கப்பட்ட பற்பல ஹோமங்களும் செய்யப்பட்டன. மற்ற நாட்களில் ஜோதிஷ்டோமம், ஆயுஷ்டோமம், இரு அதிராத்ரங்கள், அபிஜித், விசுவஜித் என்பன மற்றும் அப்தோர்யாமம் என்ற பெருவேள்வியும் செய்யப்பட்டன. (40–42)

தசரதர், யஜுர்வேத பண்டிதர்களுக்குத் தன் ராஜ்யத்தின் கிழக்குப் பகுதியைத் தட்சிணையாகக் கொடுத்தார். ரிக்வேத பண்டிதர்களுக்கு மேற்குப் பகுதியையும், பிரும்மாவுக்கு தெற்குப் பகுதியையும் கொடுத்தார் (பிரும்மா – யாகச் சடங்கு வல்லுநர்). அசுவமேத யாக விதிமுறைகளின்படி, ஸாமவேதம் ஓதிய கணத்தினருக்கு வடக்குப் பகுதியைத் தட்சிணையாகக் கொடுத்தார். சுயம்புவான பிரும்மாவால் இவ்வாறு (பூமிதானம்) செய்யப்பட்டிருப்பதை முன்னுதாரணமாகக் கொண்டு தசரதர் செய்து காட்டினார். குலம் தழைப்பதற்காக நீதி–நியாயப்படி வேள்வியைச் செய்து முடித்த மன்னர், யாகத்தின் ஏனைய கர்மாக்களைச் செய்த வேதியர்களுக்கு வேள்வி சாலைகள் அமைத்திருந்த நிலப்பரப்பு முழுவதையும் தானமாக அளித்தார். (43–45)

பாவங்கள் நீங்கிய மன்னரைப் பார்த்து, ''உங்கள் ஒருவரால்தான் உலகம் முழுவதையும் காப்பாற்ற முடியும். பூமியால் எங்களுக்கு எந்தப் பிரயோஜனமும் இல்லை; எங்களால் நிர்வாகம் செய்யவும் முடியாது. மன்னரே! நாங்கள் எப்போதும் வேதம் ஓதுவதையே கடமையாகக் கொண்டுள்ளோம். நீங்கள் பூமிக்குப் பதிலாகச் சிறிதளவு பொருள் கொடுங்கள், போதும். நவரத்தினங்கள், தங்கம், பசுக்கள் – இவற்றில் எதுவானாலும் சரி. ஆகவே, அவைகளைக் கொடுங்கள். பூமியினால் எங்களுக்கு எந்தவித உபயோகமும் இல்லை'' என்று வேத விற்பன்னர்களான அந்தணர்கள் கூறியதைக் கேட்ட மன்னர், லட்சக்கணக்கான பசுக்களை அவர்களுக்கு வழங்கினார். பத்து கோடி தங்கக் காசுகளையும், அதைவிட நான்கு மடங்கு அதிகமாக வெள்ளிக் காசுகளையும் அளித்தார். (46–50)

அப்போது யாகம் செய்த அந்தணர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து தாம் பெற்றுக் கொண்ட செல்வங்கள் எல்லாவற்றையும் (யாக முதல்வர்களான) ரிஷ்யசிருங்க முனிவரிடமும், பேரறிவாளரான வசிஷ்டரிடமும் ஒப்படைத்தார்கள். பின்னர், அவரவர் தகுதிக்கேற்ப அந்தப் பொருட்களெல்லாம் பங்கிட்டு அளிக்கப்பட்டன. மிகவும் திருப்தியடைந்த அவர்கள் மகிழ்ச்சியுடன் நன்றி தெரிவித்துக் கொண்டார்கள். (51,52)

உறுதியான மனம் படைத்த மன்னர், யாகத்திற்கு வந்திருந்த மற்ற பிராமணர்களுக்கு கோடிக்கணக்கில் தங்கக் காசுகளை வழங்கினார். அப்போது ஏழ்மை நிலையிலிருந்த ஒரு பிராமணர் வந்து தானத்திற்காகக் கைநீட்டவே, (எல்லாப் பொருட்களையும் தானமாக வழங்கிவிட்டு மீதமின்றி நின்ற) தசரதர், தன் கையில் அணிந்திருந்த உயர்ந்த அணிகலனையே கொடுத்துவிட்டார். அந்தணர்களிடம் அன்பு கொண்ட மன்னர் ஆனந்தத்தால் கண்களில் நீர்வழிய, குறையேதும் இல்லாமல் யாகத்தை நடத்தி வைத்த வேதவித்தகர்களுக்கு நமஸ்காரம் செய்தார். தரையில் விழுந்து பணியும் உதார குணமுள்ள மாமன்னருக்கு, அந்தணர்கள் எல்லோரும் வேத விஹித ஆசீர்வாத மந்திரங்களால் போற்றிப் புகழ்ந்தார்கள். வேறு மன்னர்களால் செய்ய முடியாததும், சுவர்க்கத்திற்கு இட்டுச் செல்வதும், ஈடு–இணையில்லாததும், மிக்க உயர்ந்ததுமான யாகத்தைக் குறைவில்லாமல் செய்துவிட்டதால், மன்னரிடம் ஒட்டிக் கொண்டிருந்த பாவம் அனைத்தும் அழிந்து போயிற்று. (53–57)

அப்போது ரிஷ்யசிருங்கரைப் பார்த்து, ''நல்விரதமுடையவரே! எங்கள் குலத்தை வளரச் செய்யும் புத்திரனைப் பெறுவதற்கான வேள்விகளைத் தாங்களே செய்தருள வேண்டும்'' என்று தசரதர் கேட்டுக் கொண்டார். ''மன்னரே! அவ்வாறே செய்கிறேன். உங்கள் குலப்பெருமையை நிலைநிறுத்தக் கூடிய நான்கு புத்திரர்கள், தங்களுக்குப் பிறக்கப் போகிறார்கள்'' என்று, அந்த அந்தணப் பெரியார் கூறினார். (58,59)

ஸ்ரீமத் வால்மீகி இராமாயணம் பால காண்டத்தில்
பதினான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பதினைந்து

இராவணனை அழிப்பது எப்படி?

மகாமேதாவியும் வேதவித்தகருமான ரிஷ்யசிருங்கர் சிறிது நேரம் தியானபரராக இருந்து, (என்ன செய்யலாம்? என்பதைத் தனக்குள் நிச்சயித்து,) பின்னர் உணர்வு பெற்று மன்னரிடம் இவ்வாறு கூறினார்— ''உங்களுடைய விருப்பம் புத்திரன் வேண்டும் என்பது. அதனால் நிச்சயமாக மகப்பேறு என்னும் பலனைக் கொடுக்கக் கூடிய அதர்வணவேத மந்திரங்களால் உங்களுக்காக, நான் யாகம் செய்கிறேன்.'' பின்னர், மந்திரப் பிரயோக நூல்களில், 'மகன் பிறக்கவேண்டும்' என்ற நோக்கத்துடன் கூறியுள்ள மந்திரங்களைக் கூறி, தேஜஸ்வியான ரிஷ்யசிருங்கர் அக்னியில் ஆகுதிகளை வார்த்தார். அப்போது தேவ–கந்தர்வ–ஸித்த–முனிவர்கள் தத்தம் அவிர்பாகத்தைப் பெற்றுக் கொள்வதற்காக, அங்கே வந்து கூடினார்கள். (1–4)

அவர்கள் தத்தமக்குரிய நிலைப்படி நின்று உலகப் படைப்பாளரான பிரும்மாவைப் பார்த்து முக்கியமான செய்தியைக் கூறினார்கள்— ''தங்களுடைய வரப்பிரசாதத்தைப் பெற்றுவிட்ட இராவணன் என்ற அரக்கன், எல்லையற்ற தன் பராக்கிரமத்தினால் எங்களைத் துன்புறுத்துகிறான். (அவனுக்குச் சாபம் கொடுத்தால், எங்கள் தவ நியமம் கெட்டுவிடும் என்பதால்) எங்களால் அவனை அடக்க முடியவில்லை. முன்னொரு காலத்தில், அவன் செய்த தவத்தால் மனமகிழ்ந்த தாங்கள் வரம் கொடுத்துவிட்டீர்கள். அதற்கு மதிப்புக் கொடுப்பதற்காக, நாங்கள் அவன் அட்டகாசங்களைப் பொறுத்துக் கொண்டிருக்கிறோம். தீயமனம் கொண்ட அவன், மூன்று உலகங்களையும் அடக்கி வைத்துள்ளான்; தனக்கு மேலானவர்களிடம் வெறுப்பைக் காட்டுகிறான்; தேவர்களுக்குத் தலைவனான இந்திரனையும் அவன் ஒடுக்க விரும்புகிறான். (5–8)

தங்களிடமிருந்து பெற்ற வரத்தினால், (மிகவும் திமிர் அடைந்து) மனம் மயங்கி, முனிவர்–கந்தர்வர்–யட்சர்–அசுரர்–பிராமணர் ஆகியோரை, எவராலும் அடக்க முடியாத வல்லமை பெற்ற அவன் கொடுமைப்படுத்துகிறான். அவனிடம் உள்ள பயத்தினால், சூரியன்கூட (அவன் இருக்குமிடத்தில்) வெம்மையாக இருப்பதில்லை; அவனருகில் காற்று வேகமாக வீசுவதில்லை; அவனைக் கண்டதும் அலைவீசிக் கொண்டிருக்கும் பெருங்கடலும் சலிக்காமல் தேக்கமாக நின்றுவிடுகிறது. அதனால், பயங்கரமான தோற்றமுடைய அந்த அரக்கனிடம் எங்களுக்கு எல்லையில்லாத பயம் இருக்கிறது. தீயவனான அவனை அழிப்பதற்காக, தாங்கள்தான் ஏதேனும் உபாயம் செய்ய வேண்டும்.'' (9–11)

இவ்வாறு தேவர்கள் கூறியதைக் கேட்ட பிரும்மா, சிறிதுநேரம் யோசித்துவிட்டு, ''ஓ!... அந்தக் கொடியவனை ஒழித்துக் கட்டுவதற்கான வழி எனக்குத் தெரிந்துவிட்டது!'' என்று அவர்களிடம் சொன்னார். ''அவன், 'கந்தர்வர், யட்சர், தேவர், அசுரர், அரக்கர் ஆகியோரால்

எனக்கு அழிவு ஏற்படாதிருக்க வேண்டும்' என்று வேண்டினான். 'சரி, அப்படியே ஆகட்டும்' என்று நான் வரம் கொடுத்தேன். மனிதர்களை மிகவும் கேவலமாகக் கருதியதால், அவர்களை(த் தன் வரத்தில்) சேர்க்கவில்லை. ஆகவே, மனிதரால்தான் அவன் கொல்லப்பட முடியுமே தவிர, வேறு எவராலும் அல்ல என்பது தெளிவாகிறது.'' பிரும்மாவிடமிருந்து வந்த ஆறுதலான இந்தச் சொற்களைக் கேட்டு, தேவர்களும் முனிவர்களும் மற்ற அனைவரும் பெரிதும் சந்தோஷம் அடைந்தார்கள். (12–15)

இதனிடையில் உலகத் தலைவரும், பேரொளி பொருந்தியவருமான மகாவிஷ்ணு பட்டாடை அணிந்து, சங்கு–சக்கரம்–கதை முதலியவைகளைக் கையில் ஏந்தியவராக வந்து சேர்ந்தார். பிரும்மாவுடன் சேர்ந்து ஓரிடத்தில் அமைதியாக நின்றார். தேவர்கள் அனைவரும் தலைவணங்கி துதி செய்து, பின்னர் இவ்வாறு சொன்னார்கள்— (16,17)

''விஷ்ணோ! உலக மக்களின் நலனை முன்னிட்டுத் தங்களிடம் ஒரு பொறுப்பை ஒப்படைக்கிறோம். தருமம் அறிந்தவர், வள்ளல், முனிவர்களைப் போன்று ஆன்மிக ஒளி உடையவர், அயோத்தியின் மன்னர் – ஆகிய தசரதரின் நாணம்–திரு–புகழ் ஆகிய மூன்று நற்குணங்களுக்கு இருப்பிடமான மூன்று மனைவிகளிடமும், தங்களை நான்கு கூறுகளாகச் செய்து கொண்டு, தாங்கள் புத்திரர்களாகப் பிறக்க வேண்டும். விஷ்ணோ! மனித குலத்தில் பிறவி எடுப்பதால் தாங்கள் மனிதராக ஆகிவிடுவீர்கள். அப்போதுதான் தேவர்களால் கொல்ல முடியாதவனும், உலகங்களுக்கெல்லாம் கூரான முள் போன்றவனுமான இராவணனை யுத்தத்தில் கொல்ல முடியும்.

(வரம் என்ற) பேராற்றல் பெற்றுச் செருக்கித் திரியும் அரக்கர் தலைவனான இராவணன், தேவ–கந்தர்வ–ஸித்த–முனிவர்களைப் பாடாய்ப் படுத்துகிறான். முனிவர்கள் மட்டுமில்லாமல், நந்தன வனத்தில் விளையாடிக் கொண்டிருந்த கந்தர்வ–அப்சரசுகளும் அவனால் துன்புறுத்தப்பட்டார்கள். அவனைக் கொல்ல வேண்டும் என்று பிரார்த்திப்பதற்காகவே முனிவர்களோடுகூட நாங்களும் தேவர்களும் வந்திருக்கிறோம். ஸித்த–கந்தர்வ–யட்சர்கள் தங்களைச் சரணடைந்திருக்கிறார்கள். மகாதேவரே! எங்கள் எல்லோருக்கும் தாங்கள்தான் பெருந்துணை. தேவர்களுடைய பகைவர்களை அழிப்பதற்காக, மனித குலத்தில் அவதாரம் செய்வதில் மனத்தைச் செலுத்துங்கள்.'' (18–24)

மிக உயர்ந்த தெய்வமும் தேவதேவனுமான மகாவிஷ்ணு இதைக் கேட்டார். எல்லா மக்களாலும் பணிவுடன் வேண்டிக் கொள்ளப்பட்ட அவர், அங்கு கூடியிருந்த தருமப்பற்றுள்ள பிரும்மா முதலான எல்லா தேவர்களையும் பார்த்துக் கூறினார்— ''மங்களம் உண்டாகுக! அச்சத்தை விடுங்கள். உங்களுடைய நலனுக்காக, தேவ–ரிஷிகளுக்குப் பேரச்சத்தை உண்டாக்கும் கொடூரன் இராவணனை மகன்கள், பேரன்கள், அமைச்சர்கள், நண்பர்கள், உறவினர்கள் ஆகியோருடன் யுத்தத்தில் கொன்று, பதினோராயிரம் ஆண்டுகள் மனித உலகில் ஆட்சி செய்து வாழ்ந்து கொண்டிருப்பேன்.'' (25–28)

இவ்வாறு வரம் கொடுத்த பின்னர், கருணை உள்ளம் படைத்த ஸ்ரீமகாவிஷ்ணு, மனித பரம்பரையில் எந்த இடத்தில் பிறவி எடுப்பது? என்பது பற்றிச் சிந்தித்தார். உடனே தாமரைக்கண்ணரான அவர், தன்னை நான்கு கூறுகளாக்கிக் கொண்டு, தசரதர்தான் தனக்கு தந்தை என்று நிச்சயித்தார். அப்போது மதுசூதனரான அவரை, தேவ–ரிஷி–கந்தர்வ–ருத்ர–அப்சர கணங்கள் இனிய சொற்களால் தோத்தரித்தார்கள்— (29–31)

''பிரபோ! இராவணன் அளவிட முடியாத ஆற்றலுள்ளவன்; எல்லையில்லாத செருக்கு உடையவன்; அமரர்கோன் இந்திரனுக்குப் பகைவன்; உலக மக்களை அழ வைப்பவன்; சாதுக்களுக்கும் தவசிகளுக்கும் முள் போன்றவன். எனவே, தவம் செய்வோருக்குப் பயத்தைத் தருகிற அவனை வேரோடு கெல்லி எறியுங்கள். உலகத்தையே கதறச் செய்கிறவனும்,

எல்லையற்ற பராக்கிரமம் படைத்தவனுமான அவனை சேனைகளோடும் உறவினர்களோடும் அடியோடு அழித்துவிட்டு, பின் தீமை–மாசு நெருங்க முடியாததும், தங்களால் பாதுகாக்கப்படுவதுமான விண்ணுலகத்திற்கு அமைதியான மனத்தோடு திரும்பி வாருங்கள்.'' (32,33)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
பதினைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பதினாறு

பாயசம் வந்தது!

தேவோத்தமர்களால் இவ்வாறு நியமிக்கப்பட்ட ஸ்ரீமந் நாராயணனான மகாவிஷ்ணு, (பின்னால் நிகழக்கூடிய நிகழ்ச்சிகளை) அறிந்திருந்தபோதிலும், தேவர்களைப் பார்த்து இனிய குரலில் இவ்வாறு கேட்டார்— ''தேவர்களே! முனிவர்களை முள்ளைப் போல் குத்தித் துன்பம் விளைவிக்கின்ற அந்த அரக்கத் தலைவனைக் கொல்வதற்கு என்ன வழி சொல்கிறீர்கள்? நான் யாரைச் சென்றடைய வேண்டும்.'' இதைக் கேட்டதும் தேவர்கள் அனைவரும், அழியாப் பெரும் பொருளான விஷ்ணுவை நோக்கி, ''மனித வடிவம் தாங்கி யுத்தத்தில் இராவணனை வதம் செய்யுங்கள்'' என்றார்கள். ''எதிரிகளை அடக்குபவரே! அவன் நீண்ட காலம் தீவிரமாகத் தவம் செய்தான். அதனால், உலகப் படைப்பாளரான பிரும்மா மகிழ்ந்தார். மனம் மகிழ்ந்த அவர், ''மனிதனைத் தவிர, வேறு பலவகையான எந்தப் பிராணியிடமிருந்தும் பயம் ஏற்படாது'' என்ற வரத்தை, அந்த அரக்கனுக்குத் தந்தார். (1–5)

வரம் கேட்கும் அந்தப் பழைய நாளிலேயே மானுடர்கள் அவனால் கேவலப்படுத்தப் பட்டார்கள். இவ்வாறு பிதாமகரான பிரும்மாவிடமிருந்து வரத்தைப் பெற்ற அவன் கர்வம் கொண்டு மூன்று உலகங்களையும் அல்லல்படுத்துகிறான்; பெண்களையும் கவர்ந்து செல்கிறான். எனவே, எதிரிகளை வாட்டுபவரே! அவனுடைய அழிவு மனிதர் மூலமாகத்தான் ஏற்படும் என்பது நிச்சயமாகிவிட்டது.'' எல்லா ஜீவன்களுக்கும் மூலமான பரமாத்மாவான மகாவிஷ்ணு தேவர்களின் பதிலைக் கேட்டதும், 'மன்னர் தசரதர் தனக்கு தந்தையாக வேண்டும்' என்று சங்கல்பித்துக் கொண்டார். புத்திரன் இல்லாத அந்த மன்னர், பிள்ளையைப் பெறவேண்டும் என்பதற்காக புத்திரனைத் தரும் வேள்விகளைச் செய்து கொண்டிருந்தார். இவ்வாறு அவர் (மகாவிஷ்ணு) தீர்மானம் செய்து, பிரும்மாவிடம் கூறிவிட்டு, தேவர்களாலும் மகரிஷிகளாலும் போற்றப்பட்டு, அப்போதே மறைந்தருளினார். (6–10)

அப்போது யாகம் செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் அக்னி குண்டத்திலிருந்து ஈடில்லாத ஒளியுடன் கூடியதும், மிகவும் அதிசயமானதும், பெருமை வாய்ந்ததும், பலம் உடையதுமான ஒரு பூதம் வெளிப்பட்டது. கருமையான உடல்; செவ்வாடை; சிவந்த வாய்; துந்துபியைப் போன்று கம்பீரமான குரல்; பளிச்சென்று உரோமம், தாடி–மீசை; சிங்கத்தினுடையதைப் போல் நீண்ட கேசம்; மங்களமான அங்கலட்சணங்கள்; மலைச்சிகரம் போன்ற உயரம்; கர்வம் மிகுந்த சிங்கத்தின் பராக்கிரமம்; தெய்விகமான அணிகலன்கள்; சூரியனைப் போல் சுட்டெரிக்கும் பிரகாசம்; கொழுந்துவிட்டு எரியும் நெருப்புப் போன்ற தோற்றம் – இவ்வாறு காட்சியளித்த அந்த பூதம், ஜாம்பூநத தங்கத்தாலானதும், வெள்ளி மூடி போடப்பட்டதும், திவ்யமான பாயசம் நிறைந்ததுமான பாத்திரத்தை, தன் அன்பு மனைவியைப் பாசத்துடன் அணைத்துக் கொள்ளும் கணவனைப் போல, வலுவான புஜங்களில் தாங்கிக் கொண்டு, தானே ஒரு மாயை என்பது போல் வந்து, தசரத மன்னரைப் பார்த்து இவ்வாறு கூறிற்று— (11–15)

"அரசரே! இங்கே வந்திருக்கும் நான் பிரஜாபதி தொடர்புடைய மனிதன் என்பதை அறிந்துகொள்." இதைக் கேட்டவுடன் மன்னர் கைகளைக் கூப்பிக் கொண்டு, "ஐயனே! வருக. தங்கள் வரவு நல்வரவாகுக. தாங்கள் எனக்குக் கட்டளையிடும் பணி எதுவோ?" என்று கேட்டார். பிரஜாபதியிடமிருந்து (பூத உருவில்) வந்த அந்த மனிதன், மேலும் இவ்வாறு மொழிந்தது— "மன்னா! தெய்வங்களை ஆராதித்து வந்ததன் பயனை இப்போது அடைந்துவிட்டீர். சிங்கம் போன்ற மன்னரே! இது தேவர்களால் உண்டாக்கப்பட்ட பாயசம். இது புத்திரனைக் கொடுக்கக் கூடியது; செல்வத்தையும் ஆரோக்கியத்தையும் தரக்கூடியது. இதனைப் பெற்றுக் கொள். இதனை உன்னுடைய மனத்திற்குகந்த பட்டத்தரசிகளுக்குக் கொடுப்பாயாக. எதற்காக யாகம் செய்கிறாயோ, அந்தக் குறிக்கோளை (புத்திரர்களை) அவர்கள் மூலம் நீ அடையப் போகிறாய்." என்று கூறி, அரசரிடம் கொடுத்தது. (16–20)

தசரதர், 'அப்படியே' என்று ஆமோதித்து, தங்கமயமானதும், தேவர்களால் கொடுக்கப்பட்டதும், தேவர்களால் உருவாக்கப்பட்ட உண்பொருள் நிறைந்ததுமான பாத்திரத்தைத் தலையில் தாங்கி, காட்சிக்கு இனியதும், அற்புதமாக இருந்ததுமான அந்த பூதத்தைப் பெருமகிழ்ச்சியோடு வணங்கி வலம் வந்தார். வறுமையில் வாடிக் கொண்டிருந்தவனுக்குப் பெருஞ்செல்வம் கிடைத்தாற்போல, தேவர்களால் உண்டாக்கப்பட்ட பாயசத்தைப் பெற்ற தசரதர் மிகவும் சந்தோஷம் அடைந்தார். உடனே, பேரொளி வாய்ந்ததும் புதுமையானதுமான அந்த பூதம், அந்தக் காரியத்தை நிறைவேற்றிவிட்டு அங்கேயே மறைந்தது. (21–24)

(இந்த அதிசய நிகழ்ச்சியைக் கேட்டவுடன்) அவருடைய அந்தப்புரத்து மனைவிகள், மகிழ்ச்சிக் கிரணங்களால் மிகவும் பிரகாசமாக விளங்கத் தொடங்கினார்கள் – சரத் காலத்தில் கண்ணுக்கினிய சந்திரனின் அழகிய கிரணங்களால் வானம் பிரகாசிப்பதைப்போல. அவர் அந்தப்புரத்திற்குள் நுழைந்ததுமே கௌசல்யையைப் பார்த்து, "நமக்குப் புத்திரர்களைக் கொடுக்கக்கூடிய பாயசத்தைப் பெற்றுக் கொள்" என்று கூறினார். (25)

மன்னர் பாயசத்தில் சரிபாதியை கௌசல்யைக்குக் கொடுத்தார். மீதியில் சரிபாதியை சுமித்திரைக்குக் கொடுத்தார். புதல்வன் உண்டாக வேண்டும் என்பதற்காக, மிகுந்திருந்ததில் பாதியை கைகேயிக்குக் கொடுத்தார். அம்ருதத்திற்கு நிகரான பாயசத்தில் மிகுந்திருந்ததைச் சற்று யோசனை செய்துவிட்டு, மறுபடியும் சுமித்திரைக்கே மன்னர் கொடுத்தார். இவ்வாறு தனித்தனி அளவாக, அந்தப் பட்டத்துராணிகளுக்கு மன்னர் பாயசத்தைக் கொடுத்தார். (26–28)

மன்னரின் உத்தம மனைவிகள் இங்ஙனம் பாயசத்தைப் பெற்று, அதனை மிகப்பெரும் பேறாகக் கருதிப் பேரானந்தம் அடைந்தார்கள். மன்னர் அளித்த பாயசத்தைத் தனித்தனியே பருகிய உத்தமப் பெண்டிர், விரைவிலேயே கர்ப்பம் தரித்து, அக்னி–சூரியன் போல மிகுந்த ஒளியோடு விளங்கத் தொடங்கினார்கள். அரசிகளின் வயிற்றில் கரு வளர்ந்து வருவதைக் கண்டு, தன் விருப்பம் நிறைவேறியதை உணர்ந்து, மன்னர் – விண்ணுலகில் இந்திர–ஸித்த–ரிஷிக் கூட்டங்களால் போற்றப்படும் ஸ்ரீஹரிக்கு நிகராக – மிகவும் மனநிறைவு அடைந்தார். (29–31)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
பதினாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பதினேழு

கரடி–வானரர்களின் உற்பத்தி

விசால மனம் படைத்த மன்னருக்குப் புதல்வனாகத் தோன்றுவது என்று பகவான் விஷ்ணு தீர்மானித்ததும், எல்லா தேவர்களையும் அழைத்து பிரும்மதேவர் இவ்வாறு கூறினார்—

''நம்முடைய நலன் விரும்பியும், வீரரும், சொல் தவறாதவருமான ஸ்ரீவிஷ்ணுவுக்கு உதவி செய்வதற்காக, இஷ்டப்படி உருவம் எடுக்கக் கூடிய பலசாலிகளாக, உங்களைப் பிறப்பித்துக் கொள்ளுங்கள். மாயை அறிந்தவர்கள்; வீரர்கள்; வேகத்தில் வாயுவுக்கு நிகரானவர்கள்; நீதி அறிந்தவர்கள்; புத்திசாலிகள்; விஷ்ணுவுக்குச் சமமான பராக்கிரமம் உடையவர்கள்; யாரிடமும் தோல்வி அடையாதவர்கள்; பல்வகையான உபாயங்களை அறிந்தவர்கள்; சிங்கம் போன்ற உறுதியான சரீரம் படைத்தவர்கள்; எல்லாவித அஸ்திரங்களையும் செலுத்த வல்லவர்கள்; அம்ருதம் அருந்திய அமரர்களைப் போன்றவர்கள். (2–4)

இப்படியான வல்லமை படைத்தவர்களாக, அப்சர–கந்தர்வ–கின்னர–வானர–யட்ச–நாக–கரடி–வித்யாதர கன்னிகைகளிடம் ஈடு–இணை இல்லாத பராக்கிரமம் கொண்ட வானர வடிவினர்களாகப் பிறவியெடுங்கள். முன்பொரு காலத்திலேயே கரடித்தலைவனாக ஜாம்பவான் என்னால் படைக்கப்பட்டு விட்டார். நான் கொட்டாவிவிட்டபோது, என் வாயிலிருந்து அவர் வெளிப்பட்டார்.'' பிரும்மாவினுடைய ஆணையைக் கேட்ட அவர்கள் அதற்கு இணங்கி, அவர் கூறியபடியே வானர வடிவம் கொண்ட புத்திரர்களைப் பெற்றெடுத்தார்கள். (5–8)

மகாத்மாக்களான முனிவர்–ஸித்த–வித்யாதர–நாக–சாரணர்கள் காட்டுவாசிகளான வீர புத்திரர்களை உற்பத்தி செய்தார்கள். மகேந்திரமலை போன்றவனும், மேலாண்மை மிக்கவனுமான வாலியை இந்திரனும், சுக்ரீவனை ஒளி வீசுகிறவர்களுள் சிறந்தவரான சூரியனும் பிறப்பித்தார்கள். மிக உயர்ந்தவனும், வானரத் தலைவர்களுள் அறிவிற்சிறந்தவனுமான தாரன் என்ற பெயருடைய மகாவானரத்தை பிருஹஸ்பதி உண்டாக்கினார். கந்தமாதனன் என்ற திருவளர் வானரன் குபேரனுடைய புதல்வன்; நளன் என்ற பெயருடைய பெருவானரத்தை விசுவகர்மா தோற்றுவித்தார். (9–12)

நெருப்பைப் போல் ஒளிவீசும் நீலன், அக்னியின் குமாரன்; அவன் தேஜஸ்–புகழ்–வீரம் முதலியவற்றால் வீரம் மிகுந்த மற்ற வானரர்களைக் கடந்து நின்றான். ஒரே மாதிரியான பேரழகு வாய்ந்த உருவம் கொண்ட அசுவிநீ குமாரர்கள், தங்களைப் போன்றே மைந்தன், த்விவிதன் ஆகிய இருவரையும் உண்டாக்கினார்கள். சுஷேணன் என்ற பெயர் கொண்ட வானரத்தை வருணன் உற்பத்தி செய்தார். பர்ஜன்யன், பெரும்பலம் கொண்ட சரபனைத் தோற்றுவித்தார். வஜ்ரம் போல் மிகவும் உறுதியான தேகமும், கருடன் போல் வேகமும், சகல நற்குணங்களும் பெற்ற அனுமான் என்ற வானரர், வாயுதேவனுடைய சொந்தப் பிள்ளை ஆவார். (13–16)

பத்துத் தலைகொண்ட இராவணனின் வதத்தில், மிகவும் அக்கறை கொண்ட அவர்கள் (தேவர்கள்) எல்லா வானரத் தலைவர்கள் மூலம் உடலாற்றலும் அறிவாற்றலும் கொண்ட ஆயிரக்கணக்கான வானரர்களைத் தோற்றுவித்தார்கள். அவர்கள் அனைவரும் ஈடில்லாத பலம் பொருந்தியவர்கள்; வீரர்கள்; மனஉறுதி தளராதவர்கள்; விரும்பிய வடிவங்களை ஏற்கக்கூடியவர்கள்; யானை மற்றும் மலைச்சிகரம் போல் பேருருவமும் மகாபலமும் படைத்தவர்கள். கரடிகள், வானரர்கள், வாலில்லாக் குரங்குகள் எல்லாம் தாமதமில்லாமல் குட்டிகளை ஈன்றெடுத்தன. உற்பத்திக்குக் காரணமான தேவனுக்கு உள்ள வடிவம், தோற்றம், பராக்கிரமம் கொண்ட வானரர்கள் தனித்தனியே அதே மாதிரியாகத் தோன்றினார்கள். வாலில்லாக் குரங்குகள் வயிற்றில் பிறந்த தேவர்கள், மற்றவைகளைக் காட்டிலும் சற்றுக் கூடுதலான பராக்கிரமம் கொண்டிருந்தார்கள். (17–20)

கரடிகளிடமும், கின்னரப் பெண்களிடமும் வானரர்கள் தோன்றினார்கள். மனம் நிறைந்த தேவதை, மகரிஷி, கந்தர்வர், பறவை, யட்சர், திசைக்களிறு, கிம்புருஷர், ஸித்தர், வித்யாதரர், (வாசுகி முதலான) ஸர்ப்பங்கள் ஆகிய பல இனத்தினரும் ஆயிரக்கணக்கில் வானரர்களை உற்பத்தி செய்தார்கள். காட்டில் வசிக்கும் சாரணர்கள், பேருருவம் கொண்ட வீரர்களான வானரப் புத்திரர்களை உண்டாக்கினார்கள்; காட்டில் கிடைப்பவைகளையே உணவாகக் கொள்பவர்கள்,

அவர்கள். முக்கியமான அப்சரசுகளிடமிருந்தும், வித்யாதர–நாக–கந்தர்வப் பெண்களின் உடலிலிருந்தும் (வானரர்கள்) தோன்றினார்கள். (21–24)

விரும்பிய வடிவத்தையும் ஆற்றலையும் எடுக்கக் கூடியவர்கள்; மனம் போனபடி (தடை இல்லாமல்) திரிந்து கொண்டிருப்பவர்கள்; செருக்கினாலும் பலத்தினாலும் சிங்கம்–புலிக்கு ஒப்பானவர்கள்; பெரும் பாறைகளைப் பெயர்த்து எறியக் கூடியவர்கள்; மரங்களைப் பிடுங்கி வீசக் கூடியவர்கள்; நகங்களையும் பற்களையும் ஆயுதமாகக் கொண்டவர்கள்; எல்லா வகையான அஸ்திரப் பிரயோகத்திலும் நிபுணர்கள்; பெரிய பர்வதங்களை அசைத்துப் பார்க்கக் கூடியவர்கள்; ஆணிவேரோடிய மரங்களையும் முறித்துத் தள்ளுபவர்கள்; தமது வேகத்தினால் நதிகளின் நாயகனான சமுத்திரத்தையும் தடுக்க வல்லவர்கள்; (25–27)

தமது கால்களால் பூமியையும் பிளப்பார்கள்; பெருங்கடலையும் நீந்திச் செல்வார்கள்; வானமண்டலத்தில் புகுந்து மேகங்களையும் கைப்பற்றுவார்கள்; காட்டில் மதங்கொண்டு திரியும் யானைகளையும் அடக்குவார்கள்; ஆகாயத்தில் பெருங்கூச்சலிட்டுக் கொண்டு பறந்து செல்லும் பறவைகளைத் தமது பேரிரைச்சலால் கீழே வீழ்த்துவார்கள். இப்படிப்பட்ட பேராற்றல் படைத்த, விருப்பம் போல் உருவம் எடுக்கக்கூடிய வானரத் தலைவர்களுக்கு ஆயிரக்கணக்கில் குட்டிகள் பிறந்தன. முக்கியமான வானரப் படைத்தலைவர்களிடம் உத்தமமான வானர வீரர்கள் உண்டானார்கள்; படைவீரர்களும் வானரர்களைப் பெற்றார்கள். (28–31)

கரடிகளிடம் தோன்றிய ஆயிரக்கணக்கானோர் மலைச்சிகரங்களில் வசிக்கத் தொடங்கினார்கள்; மற்றும் பலர் பலவிடங்களிலும் இருந்த காடு–மலைகளில் வாழ்ந்து வந்தார்கள். சகோதரர்களாகத் தோன்றிய சூரிய மைந்தன் சுக்ரீவனுக்கும், இந்திரன் புதல்வன் வாலிக்கும் எல்லா வானரத் தலைவர்களும் சேவை செய்து வந்தார்கள். நளன், நீலன், அனுமான், மற்றுமுள்ள வானர வீரர்கள் எல்லோரும் கருடனுக்கு நிகரான ஆற்றலும், போர்க்கலையில் நிபுணத்துவமும் பெற்றவர்கள். (32–34)

அவர்கள் சுற்றித் திரிந்து கொண்டிருக்கும் போது எதிர்ப்படும் சிங்கம்–புலி–மகாசர்ப்பங்களைத் தம் பராக்கிரமச் செருக்கினால் தொல்லைப்படுத்தினார்கள். அவர்கள் அனைவரிலும் பெருந்தோளனான வாலி எல்லையில்லாத ஆற்றல் படைத்தவனாக இருந்தான். அவன் தன்னுடைய தோள்வலிமையால் கரடி–வாலில்லாக்குரங்கு–வானரர்களைக் காப்பாற்றி வந்தான். பலவிதமான உருவத் தோற்றங்களைக் கொண்ட இப்படிப்பட்ட சூரர்களால் காடு–மலை–கடல் சூழ்ந்த இப்பூமண்டலம் பற்பல இடங்களிலும் நிரம்பியதாயிற்று. இராமபிரானுக்கு உதவி செய்வதற்காகத் தோன்றியவர்களும், மேகக்கூட்டம், மலைச்சிகரம் போல் உருவமும் மகாபலமும் பெரிய சரீரமும் பெற்று விளங்கியவர்களுமான வானரப் படைத்தலைவர்களால் இந்த மண்ணுலகம் நிரம்பி வழிந்தது. (35–37)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
பதினேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பதினெட்டு

ஸ்ரீராமாவதாரம்

மனஸ்வியான தசரதரின் அசுவமேத யாகம் நிறைவடைந்ததும், தேவர்கள் எல்லோரும் தங்களுடைய பங்குகளை (அவிர்பாகங்களை)ப் பெற்றுக் கொண்டு, வந்தவாறே திரும்பிச் சென்றார்கள். யாகதீட்சை கட்டுப்பாடுகள் முடிவடைந்ததும், மனைவியர், பணியாளர்கள்,

படைவீரர்கள், வாகனங்கள் புடைசூழ (அயோத்தி) நகரத்தை அடைந்தார், தசரதர். மன்னரால் தகுதிக்கேற்றபடி மரியாதை செய்யப்பட்ட பிற நாட்டு அரசர்கள், முனிபுங்கவரை வணங்கி, அகமகிழ்ச்சியுடன் தத்தம் நாடுகளுக்குத் திரும்பிச் சென்றார்கள். (1–3)

நகரத்திற்குத் திரும்பிச் செல்லும் மன்னருடைய வெற்றித்திரு பொருந்திய படைகள் உள்ளமகிழ்வுடன் இருந்ததால் ஒளிவிட்டுப் பிரகாசித்தன. வெளிநாட்டு அரசர்கள் விடைபெற்றுச் சென்றதும், அந்தணோத்தமர்களை முன்னிறுத்திக் கொண்டு திருவளர் மன்னர் தசரதர் நகரத்திற்குள் நுழைந்தார். நன்றாக கௌரவிக்கப்பட்ட ரிஷ்யசிருங்கர், மனைவி சாந்தாவுடன் (தன் நாட்டிற்குச்) சென்றார். அவருடன் சிறிது தூரம் சென்றுவிட்டுத் திரும்பினார், மேதாவியான மன்னர். இவ்வாறாக, எல்லோரையும் அனுப்பி வைத்துவிட்டு, புத்திரர்கள் பிறப்பைச் சிந்தித்துக் கொண்டு சுகமாக இருந்து வந்தார், தசரதர். (4–7)

யாகம் நிறைவடைந்து ஆறு ருதுக்கள் கடந்தன. பன்னிரண்டாவது மாதமாகிற பங்குனி மாதம், நவமி திதி, புனர்வசு நட்சத்திரம் கூடிய நன்னாளில், ஐந்து கோள்கள் உச்சத்தில் இருக்கும் வேளையில், கர்க்கடக லக்னத்தில் சந்திரனும் பிருஹஸ்பதியும் சேர்ந்து தோன்றும் நல்ல நேரத்தில் உலக நாயகரும், எல்லோராலும் வணங்கப்படுபவரும், எல்லா லட்சணங்களும் பொருந்தியவருமான ஸ்ரீராமனை கௌசல்யை பெற்றெடுத்தார். இக்ஷ்வாகு குலத்தைத் தொடரச் செய்பவரும், பெரும்பேறு பெற்றவரும், மகாவிஷ்ணுவின் சரிபாதியும், எல்லையில்லாத ஆன்ம ஒளி வீசுபவருமான அவரால் கௌசல்யாதேவி மிகவும் அழகாக விளங்கினார். (8–11)

தேவர்களின் வரத்தினால் அன்னை அதிதி வஜ்ரபாணியான இந்திரனைப் பெற்றதைப் போல, கைகேயிக்குச் சத்திய பராக்கிரமனான பரதன் என்பவன் பிறந்தான். அவன் சாட்சாத் விஷ்ணுவின் (இராமனின்) அம்சத்தில் கால் பங்கு; மொத்தத்தில் அரைக்கால் பங்கு எல்லா நற்குணங்களும் நிரம்பியவன். பின்னர், லட்சுமணன்–சத்ருக்னன் என்ற இரு புதல்வர்களை சுமித்திரை பெற்றெடுத்தாள். (12,13)

வீரர்களான அவ்விருவரும் எல்லாவிதமான அஸ்திரங்களைச் செலுத்துவதில் வல்லவர்கள்; (இருவரும் சேர்ந்து) விஷ்ணுவின் (அம்சத்தில்) அரைப் பங்கு. நல்லறிவுடைய பரதன் மீன லக்னம் பூச நட்சத்திரத்தில் பிறந்தான். சுமித்திரையின் குழந்தைகள் ஆயில்ய நட்சத்திரம் கடக லக்னத்தில் சூரியன் உச்சத்தில் இருக்கும் போது பிறந்தார்கள். இவ்வாறாக, மாமன்னரின் நான்கு குழந்தைகளும் தனித்தனி குணநலன்களோடும் லட்சணங்களோடும் விளங்கினார்கள். (14,15)

அவர்கள் (நால்வரும்) காந்தியினால் பாத்ரபத நட்சத்திரம் (பூரட்டாதி–உத்திரட்டாதி – இவை ஒவ்வொன்றும் இரண்டிரண்டு தாரகை உடையது) போலும், நற்குணங்களும் அழகிய அங்கங்களும் பெற்றிருந்தார்கள். (அவர்கள் பிறந்ததும்) கந்தர்வர்கள் இனிய குரலில் பாடி வாழ்த்தினார்கள்; அப்சர நங்கைகள் ஆடிக் களித்தார்கள்; தேவர்கள் பேரிகை முழங்கினார்கள்; வானத்திலிருந்து மலர்மாரி பொழிந்தது; அயோத்தியில் மக்கள் கூட்டங்கூட்டமாகக் கூடினார்கள்; நகரம் திருவிழாக் கோலம் பூண்டது. (16,17)

தேரோடும் வீதிகளில் ஜனக்கூட்டங்கள் நிறைந்தன; நடனம் ஆடும் ஆண்களும் பெண்களும் நாட்டியமாடிக் கொண்டிருந்தார்கள். பாடகர்களும் வாத்தியம் வாசிப்போரும் கொட்டி முழக்கிப் பாடியதால் ஆகாயத்தில் சப்தம் நிறைந்தது. ஏராளமான நவரத்தினங்கள் அங்கே தரையில் சிதறிக் கிடந்தன. (மன்னருக்கு மகன்கள் பிறந்துவிட்ட சந்தோஷத்தில், மக்கள் தம் செல்வத்தை வாரி வழங்கினார்கள்.) சூத–மாகத–வந்தி கணங்களுக்கு மன்னர் சன்மானங்கள் அளித்தார். பிராமணர்களுக்குப் பணம், பசு, செல்வங்களை வாரி வழங்கினார். பதினோரு நாட்கள் கழிந்ததும் குழந்தைகளுக்குப் பெயரிடுதல் (நாமகரணம்) என்ற ஸம்ஸ்காரத்தைச் செய்தார். (18–20)

மூத்தவனான மகாத்மாவுக்கு இராமன் என்றும், கைகேயியின் பிள்ளைக்கு பரதன் என்றும், சுமித்திரையின் பிள்ளைகளில் ஒருவனுக்கு லட்சுமணன் என்றும், மற்றவனுக்கு சத்ருக்னன் என்றும் மிக்க மகிழ்ச்சியுடன் வசிஷ்டர் பெயரிட்டார். நாமகரணச் சடங்கை முன்னிட்டு பிராமணர்களுக்கும், நாட்டு–நகர மக்களுக்கும் நிறைவான உணவளித்தார், மன்னர். பிராமணர்களுக்கு அளவில்லாத இரத்தினக் குவியல்களைத் தானம் செய்தார். குழந்தைகளுக்கு அவ்வக்காலங்களில் செய்ய வேண்டிய ஜாதகர்மா முதலான எல்லாக் கர்மாக்களையும் மன்னர் செய்வித்தார். (21–23)

அந்த நால்வரில் மூத்தவரான இராமன் குலபரம்ரையை வளர்க்கும் பதாகை போல் விளங்கி, தந்தைக்கு மிக்க ஆனந்தத்தைக் கொடுத்தார். உலகப் பிராணிகளுக்கு தான்தோன்றியான பிரும்மா எவ்வாறு மிகவும் வேண்டப்பட்டவரோ, அவ்வாறே இவரும் மிகவும் நேசிக்கப்பட்டவர் ஆனார். எல்லோரும் (நால்வரும்) வேதங்களைக் கற்றறிந்தார்கள். இவர்கள் சூரர்கள்; உலக மக்களின் நலனில் நோக்கமுடையவர்கள்; ஞானம் நிறைந்து விளங்கினார்கள்; எல்லா நற்குணங்களையும் பெற்றிருந்தார்கள். அவர்களுள் இராமன் சத்தியபராக்கிரமராகவும், பேரொளி பொருந்தியவராகவும் இருந்தார். குற்றமற்ற முழுநிலவைப் போல எல்லா மக்களுக்கும் பிரியமானவராக இருந்தார். யானையேற்றம், குதிரையேற்றம், தேர் ஓட்டுதல் முதலியவற்றில் ஈடான தேர்ச்சி பெற்றிருந்தார்கள். வில்வித்தையைக் கற்பதிலும், தகப்பனாருக்குப் பணிவிடை செய்வதிலும் முழுமூச்சுடன் ஈடுபட்டிருந்தார்கள். (24–27)

மக்களால் பெரிதும் விரும்பப்படுபவரும், மூத்த சகோதரருமான இராமனுடன் சிறுவயது முதற்கொண்டே திருவள்செல்வனான லட்சுமணன் மிகவும் ஒட்டுதலுடன் பழகி வந்தான். அவனுக்குத் தன் உடம்பைக் காட்டிலும் இராமனிடம் அதிகப் பிரீதி இருந்தது. அனைத்துச் செழுமைகளும் நிறைந்த லட்சுமணன், இராமனுக்குச் சரீரத்திற்கு வெளியே உள்ள உயிர் போல் விளங்கினான். அவன் இல்லாமல் புருஷோத்தமனான இராமன் உறங்குவதில்லை. தனக்குக் கொடுக்கப்படும் உயர்வகை உண்டிகளை அவனில்லாமல் சாப்பிடுவதில்லை. இராமன், காட்டில் வேட்டையாடுவதற்காகக் குதிரை மேல் ஏறிச் செல்லும்போதெல்லாம், கையில் வில்லேந்தி தமையனுக்கு உறுதுணையாக லட்சுமணனும் பின்தொடர்ந்து சென்றான். அவ்வாறே, லட்சுமணனுக்குப் பிறகு பிறந்த சத்ருக்னன் பரதனிடம் மிகவும் பிரியமாக இருந்தான். உயிரைக் காட்டிலும் நேசித்து வந்த அவனிடம் பரதனுக்கும் பெரும் பாசம் இருந்தது. (28–32)

மன்னர், தெய்வாம்சத்தோடு கூடியவர்களும், மிகவும் இஷ்டமானவர்களுமான நான்கு புத்திரர்களால், நான்கு திசைக்காவலர்களை அடைந்த பிதாமகரான பிரும்மாவைப் போல் மிகவும் திருப்தியடைந்தார். (திசைப் பொறுப்புக்களை அவர்கள் ஏற்றுக் கொண்டதைப் போல, இவர்கள் அரசுப் பொறுப்பை ஏற்று, தமது பணியைத் தொடர்வார்கள் – என்பதால்.) அவர்கள் நால்வரும் நல்லறிவு நிறைந்தவர்கள்; நற்குணமுடையவர்கள்; (அறம் அல்லாதன செய்வதற்கு) வெட்கம் உடையவர்கள்; புகழ் பெற்றவர்கள்; எல்லாம் அறிந்தவர்கள்; தொலைநோக்கு உடையவர்கள். (33,34)

இவ்வாறு எல்லா வகையிலும் சிறந்து விளங்கி, சுடர்விட்டுப் பிரகாசிக்கும் புதல்வர்களைக் கண்டு, உலகப் படைப்பாளியான பிரும்மாவைப் போல, தந்தையான தசரதர் சந்தோஷமாக இருந்தார். மனிதருள் புலி போன்று சிறந்தவர்களான அந்த நால்வரும் வேதங்களைக் கற்பதில் முனைப்புடன் இருந்தார்கள்; தந்தைக்குப் பணிவிடை செய்வதில் ஆர்வம் காட்டினார்கள்; வில்வித்தையிலும் முன்னிலையில் நின்றார்கள். (35,36)

பிறகு, ஒரு சமயம் தருமாத்மாவான தசரதர், ஆசார்யர்கள், உறவினர்கள் கூடியிருக்கும்போது, அவர்களின் (குமாரர்களின்) விவாகத்தைப் பற்றிப் பேசத் தொடங்கினார். அமைச்சர்களோடு இது பற்றி விவாதித்துக் கொண்டிருக்கும்போது, மகாதேஜஸ்வியான மாமுனிவர் விசுவாமித்திரர்

அங்கு வந்து சேர்ந்தார். மன்னரைப் பார்க்க விரும்பிய அவர், வாயிற்காப்போர் தலைவனிடம், ''காதியின் மைந்தனும் கௌசிகனுமான நான் வந்திருக்கிறேன் என்று உடனே போய்ச் சொல்'' என்று கூறினார். (37–39)

இதைக் கேட்டதும் பயந்துபோன அவர்கள் மன்னன் மாளிகைக்குள் விரைந்து ஓடினார்கள். அவருடைய அதிகாரக் குரலினாலான சொற்களால் அச்சமடைந்த அவர்கள், சிந்தை கலங்கி, மன்னர் சபையை அடைந்து, தசரதரிடம் விசுவாமித்திர முனிவர் வந்திருப்பதைத் தெரிவித்தார்கள். அவர்கள் சொன்ன தகவலைக் கேட்டதும், தேவேந்திரன் தன் மாளிகைக்கு வந்த பிரும்மாவை வரவேற்பதைப் போல, புரோகிதர்களுடன்கூட விசுவாமித்திரரை எதிர்கொண்டு அழைக்க தசரதர் சென்றார். (40–42)

கடுமையான விரதங்களை அனுஷ்டிப்பவரும், நீண்ட காலமாகத் தவம் செய்பவரும், ஆன்ம ஒளியால் பிரகாசிப்பவருமான அவரைக் கண்டதும், மன்னர் முகமலர்ச்சியுடன் அர்க்யம் அளித்து உபசரித்தார். மன்னரால் சாஸ்திர முறைப்படி கொடுக்கப்பட்ட அர்க்கியத்தைப் பெற்றுக் கொண்ட அவர், மக்களின் நல்வாழ்வு–நாட்டு வளம் பற்றி மன்னரிடம் விசாரித்தார். அறம் அறிந்தவரான கௌசிகர், நாடு–கருவூலம்–நகரம்–உறவு–நட்பு ஆகியவற்றின் நலனைப் பற்றிக் கேட்டறிந்தார். ''உனக்குக் கப்பம் செலுத்தும் சிற்றரசர்கள் எல்லோரும் அடங்கி இருக்கிறார்களா? பகைவர்கள் ஜெயிக்கப்பட்டார்களா? தேவபூஜை, அதிதிபூஜை முதலியன நன்றாக அனுஷ்டிக்கப்படுகின்றனவா?'' (என்று விசுவாமித்திரர் வினவினார்.) (43–46)

வசிஷ்ட முனிவரைச் சந்தித்து நலன் விசாரித்தார், விசுவாமித்திரர். பெரும் பாக்கியசாலிகளான மற்ற முனிவர்களையும் சந்தித்து தகுதிக்கேற்றவாறு அளவளாவினார். பின்னர், அவர்கள் எல்லோரும் உவகை அடைந்தவர்களாய் சபாமண்டபத்தை அடைந்தார்கள். அங்கே வரவேற்கப்பட்டுத் தத்தமக்குரிய ஆசனங்களில் அமர்ந்தார்கள். பிறகு, மனமகிழ்ச்சியுடன் மகாவள்ளலாகிய மன்னர் விசுவாமித்திர முனிவரைப் புகழ்ந்து பேசி, இவ்வாறு கூறினார்— (47–49)

''வாருங்கள் முனிவரே! தண்ணீர்ப்பஞ்சம் வாட்டிய நேரத்தில் பெருமழை பெய்தாற்போல, பிள்ளைப்பேறு இல்லாதவனுக்கு விதிப்படி மணந்து கொண்ட பத்தினிகளிடம் புதல்வர்கள் உண்டானாற்போல, தொலைந்த பொருள் திரும்பக் கிடைத்தாற்போல தங்கள் வரவை எண்ணுகிறேன். தங்கள் விருப்பம் என்னவோ? தெரிவியுங்கள். மிக்க மகிழ்ச்சியுடன் செய்து தருகிறேன். பிரும்மன்! தார்மிகரே! என்னுடைய பெரும் அதிருஷ்டத்தின் காரணமாகத்தான் தாங்கள் இங்கே வந்திருக்கிறீர்கள். (50–52)

இப்போதுதான் (தாங்களே அடியேனை நாடி வந்ததால்) என் ஜன்மம் பயனுடையதாயிற்று; என் வாழ்க்கையும் நல்வாழ்க்கை ஆயிற்று. கடுமையான தவம் இயற்றி, ராஜரிஷி என்ற சிறப்பினைப் பெற்ற தாங்கள், பிரும்மரிஷி என்ற பெரும் சிறப்பினையும் பின்னர் அடைந்தீர்கள். என்னால் மிகவும் உயர்ந்த முறையில் கௌரவிக்கத்தக்கவர் தாங்கள் (என்பதை நான் நிச்சயமாக உணர்ந்துள்ளேன்). ஆகவே, தங்கள் வருகையை மிகவும் புனிதமானதாகவும் நற்சகுனமாகவும் கருதுகிறேன். தங்களைத் தரிசித்ததால் புண்ணிய க்ஷேத்திரத்தை அடைந்தவனாகிவிட்டேன். (அளவில்லாத புண்ணியம் எனக்குக் கிடைக்கப் போகிறது.) தங்களின் இந்த விஜயம் எந்தக் காரியத்தின் பொருட்டு என்று கூறும்படி பிரார்த்திக்கிறேன். (53–55)

தங்களுக்குச் சேவை செய்து அதன்மூலம் தங்கள் அனுக்கிரகத்தைப் பெற விரும்புகிறேன். கௌசிகரே! வந்த காரியத்தை முடித்துக் கொள்ளாமல், தாங்கள் இங்கிருந்து செல்லக் கூடாது. தாங்கள்தான் எனக்கு எல்லா தெய்வமும். நான், வெறுமே (ஏவல்படி) செயலாற்றுபவன். பெரியோரே! மிகப்பெரிய பேறு எனக்குக் கிடைக்கப் போகிறது என்பதைத் தங்கள் வருகையால் அறிகிறேன். தங்கள் விஜயத்தினால் (நான் இதுவரை இயற்றிய) தருமங்களின் பயன் முழுவதும் கிடைத்துவிட்டது (என்றே எண்ணுகிறேன்).'' இவ்வாறு இந்திரிய நிக்ரஹமுடைய மன்னரால்

பணிவுடன் கூறப்பட்ட, மனத்திற்கும் செவிக்கும் இதமானதுமான சொற்களைக் கேட்டு, பார் புகழும் குணமும் புகழும் படைத்த, சமம்–தமம் முதலான நியமங்களில் ஊன்றி நிலைத்த உத்தமோத்தமரான முனிவர் மிகவும் ஆனந்தம் அடைந்தார். (56–58)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
பதினெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பத்தொன்பது

விசுவாமித்திரர் கூறுதல்

அரசர்களில் சிங்கம் போன்ற தசரதரின் அற்புதமும் விளக்கமுமாக அமைந்த பேச்சைக் கேட்டு, மகாதேஜஸ்வியான விசுவாமித்திரர் மெய்சிலிர்த்துக் கூறினார்— ''ராஜசிங்கமே! நீங்கள் பேசியது உங்கள் உயர்நிலைக்கு உகந்ததாக இருக்கிறது. உலகத்தில் வேறு யாராலும் இவ்வாறு பேச முடியாது. பிரசித்தி பெற்ற ஒரு பரம்பரையில் தோன்றியிருக்கிறாய். அத்துடன் வசிஷ்டரே புரோகிதராக அமைந்து நல்லுபதேசங்கள் செய்து வருகிறார். என் மனத்திலுள்ள ஒரு காரியத்தைச் சொல்கிறேன். அதை நிச்சயம் நடத்திக் கொடுக்கவேண்டும். மாமன்னனே! அந்தக் காரியத்தை நடத்திக் கொடுத்து, 'சொன்ன சொல் தவறாதவன்' என்ற பெயரை நிலைநிறுத்திக் கொள். (1–3)

ஒரு ஸித்தியை அடைவதற்காக, நான் சில நியமங்களை ஏற்று அனுஷ்டித்து வருகிறேன். விருப்பம் போல் உருவம் எடுக்கக் கூடிய இரண்டு அரக்கர்கள் என் விரதானுஷ்டானங்களுக்கு இடைஞ்சல் செய்து வருகிறார்கள். என்னுடைய நீண்ட விரதத்தின் பெரும் பங்கு நிறைவேறி முடிவுறும் நிலையில் உள்ளது. ஆனால், போர்ப் பயிற்சி பெற்றவர்களும், ஆற்றல் மிக்கவர்களுமான சுபாகு, மாரீசன் என்ற இருவர் காரியத்தைக் கெடுத்து வருகிறார்கள். (4,5)

அவர்கள் யாககுண்டத்தின் மேல் இரத்தம் மற்றும் மாமிசங்களை ஏராளமாகக் கொட்டுகிறார்கள். அதனால், என்னுடைய விரத நியமங்கள் வீணாகிப் போகின்றன. என்னுடைய முயற்சி பயனற்றுப் போவதால் உற்சாகமிழந்து, அந்தப் பிரதேசத்திலிருந்து புறப்பட்டு வந்துவிட்டேன். (தாங்கள் அவர்களுக்குச் சாபம் கொடுக்கலாமே? என்று நீ கேட்பாய்.) மன்னனே! சாந்த சித்தத்துடன் அந்த வேள்வியில் ஆழ்ந்து ஈடுபடுவதால், எனக்குக் கோபமே ஏற்படுவதில்லை. (6,7)

அந்த வேள்வியின் நியமம் அப்படிப்பட்டது – அது நடக்கும்போது கோபம் கொள்ளலாகாது; சாபம் கொடுக்கலாகாது. ஆகவே, ராஜசிம்மமே! உறுதிபிறழாத பராக்கிரமம் கொண்டவனும், சூரனும், முன்னுச்சி கொண்டவனும், உன்னுடைய மூத்த புதல்வனுமான இராமனை எனக்குக் கொடுப்பாய். என்னால் மறைவாகக் காப்பாற்றப்படும் இவன், தன்னுடைய பேராற்றலினாலும் தன்னைக் காத்துக் கொள்வான். அத்துடன் எனக்கு இடையூறு செய்யும் அரக்கர்களையும் கொல்லக் கூடியவன். நானும் இவனுக்கு பலவகையான மகிமைகளை நிச்சயமாகக் கொடுப்பேன். (8–10)

அவர்கள் இருவரும் இராமனுக்கு எதிரில் ஒருக்காலும் நிற்க முடியாது. (அவர்களை வென்றபின்,) இராமனுடைய புகழ் மூன்று உலகங்களிலும் பரவப் போகிறது. இராமனைத் தவிர வேறு எந்த ஆண்மகனும் அவர்களைக் கொல்வதற்குத் துணியமாட்டார்கள். பேராற்றல் படைத்த அவ்விருவரும் மகாபாவிகள்; யமபாசத்திற்கு அருகில் வந்துவிட்டவர்கள். (விரைவில் உயிர்விடப் போகிறவர்கள்.) மன்னனே! அவர்கள் இருவராலும் மகாபராக்கிரமசாலியான

இராமனுக்கு ஈடு கொடுக்க முடியாது. இராமனைப் புத்ரவாத்ஸல்யம் மட்டும் கொண்டு நீ பார்க்கக்கூடாது. நான், உனக்கு சத்தியம் செய்து சொல்கிறேன், அவ்விரு அரக்கர்களும் கொல்லப்பட்டு விட்டார்கள் – என்றே நீ நம்பலாம். சத்தியபராக்கிரமம் படைத்த மகாத்மா இராமனை (அவன் உண்மை ஸ்வரூபத்தை) நான் அறிவேன். (11–14)

இங்கு கூடியிருப்பவர்களில் தவம் புரிகின்ற தபஸ்விகளும், ஞான ஒளி படைத்த வசிஷ்டரும் (இந்த உண்மையை) அறிவார்கள். உலகத்தில் நிலையான பெரும் புகழையும், அறத்தின் சிறந்த விளைவுகளையும் பெற நீ விரும்பினால், இராமனை எனக்குக் கொடுக்கக் கடவாய். காகுத்தனே! வசிஷ்டர் முதலான உன்னுடைய ஆலோசகர்களுடன் ஆலோசனை செய்து, அவர்கள் அனுமதி கொடுத்தால், இராமனை என்னிடம் ஒப்படை. இது என்னுடைய விருப்பம். (இராமன் சிறு குழந்தை அல்லன். எனவே, அவன் பாதுகாப்புப் பற்றி வீணாகச் சஞ்சலப்படாமல்) உன் பிள்ளையிடம் கொண்டிருக்கும் உறவை நெகிழ்த்து என்னிடம் கொடுப்பாய். (15–17)

யாகத்திற்கு இன்னும் பத்து நாட்கள்தான் இருக்கின்றன. எனவே, தாமரைக்கண்ணனான இராமனை உடனே கொடுத்துவிடு. யாகம் செய்வதற்கான காலம் கழிவதற்கு முன் நாங்கள் புறப்பட்டு போகிற வழியைப் பார், உனக்கு மங்களம் உண்டாகட்டும். மனத்தில் துயரத்தைத் தேக்கிக் கொள்ளாதே.'' இவ்வாறு அறம்–பொருளோடு கூடிய சொற்களைக் கூறிவிட்டு, தருமாத்மாவும் தேஜஸ்வியுமான மாமுனிவர் விசுவாமித்திரர் நிறுத்தினார். விசுவாமித்திரரின் மங்களமான சொற்களைக் கேட்ட மாமன்னர் மிகுந்த சோகத்தால் நடுநடுங்கிப் போனார்; மனம் குழம்பி மயங்கினார். பின்னர், நினைவு பெற்றதும் மிகவும் அச்சமடைந்து வருத்தத்தில் ஆழ்ந்தார். இவ்வாறாக, இதயத்தையும் மனத்தையும் பிளக்கவல்ல கடுமையான சொற்களை முனிவரிடமிருந்து கேட்டவுடன், மாமன்னர் மிகவும் சோகத்தில் மூழ்கி, ஆசனத்திலிருந்து நழுவி விழுந்தார். (18–22)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபது

தசரதர் கூறுதல்

விசுவாமித்திரர் கூறியவைகளைக் கேட்ட ராஜசிம்மமான தசரதர், ஒரு முகூர்த்த காலம் போல் நினைவிழந்து கிடந்தார். பின்னர் உணர்வு பெற்று இவ்வாறு கூறினார்— ''தாமரைக்கண்ணனான என்னுடைய இராமனுக்கு இன்னும் பதினாறு வயது ஆகவில்லை. ஆகவே, அரக்கர்களோடு போர் புரியும் தகுதியைப் பெறவில்லை என்று கருதுகிறேன். அக்ஷௌஹிணி கணக்கான படைவீரர்களுக்கு நான் தலைவன். இந்தப் படையுடன் சென்று, நான் அந்த அரக்கர்களுடன் போர் புரிகிறேன். என்னுடைய சேனா வீரர்கள் சூரர்கள்; வெல்ல முடியாதவர்கள்; அஸ்திரப் பிரயோகத்தில் வல்லவர்கள்; அரக்கர் கூட்டங்களுடன் சண்டையிடுவதற்குத் தகுந்தவர்கள். (அருள்கூர்ந்து) இராமனை அழைத்துச் செல்வதாகக் கூறாதீர்கள். (1–4)

வில்லேந்திய கையனாக நானே யுத்தகளத்தில் முன்னின்று, தங்கள் யாகத்தைக் காப்பாற்ற, என் உடலில் உயிர் இருக்கும் வரையில் அரக்கர்களுடன் போரிடுவேன். என்னால் பாதுகாக்கப்பட்ட உங்கள் யாக–விரதானுஷ்டானம் இடையூறில்லாமல் நிறைவேறப் போகிறது. நானே அங்கு வருகிறேன். இராமனை அழைத்துப் போவதாகக் கூறாதீர்கள். இராமன் சிறுவன்;

கல்வியை இன்னும் முடிக்காதவன்; எதிரிகளின் பலாபலங்களை அறியாதவன்; அத்துடன் போர்க்கலையில் வல்லவனும் அல்லன். (5–7)

அரக்கர்கள் மாயயுத்தம் செய்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. அவர்களுடன் யுத்தம் செய்யும் தகுதி இராமனுக்கு இல்லை. இராமனை விட்டுப் பிரிந்து ஒரு முகூர்த்த காலம்கூட உயிர் வாழமாட்டேன். பிரும்மன்! நிச்சயமாக இராமனை அழைத்துச் செல்ல வேண்டும் என்று நீங்கள் நினைத்தால், நால்வகைப் படையுடன் கூடிய என்னுடன்கூட அவனை அழைத்துச் செல்லுங்கள். அறுபதாயிரம் ஆண்டுகள் தவித்துக் கொண்டிருந்தபின் பெற்ற பிள்ளை இந்த இராமன். இராமனை அழைத்துப் போவதாகக் கூறாதீர்கள். என்னுடைய நான்கு புதல்வர்களில் குல தருமங்களைத் தொடர்ந்து நடத்தவேண்டிய கடமையுடைய மூத்த மகன் இராமனிடம் எனக்கு அபாரமான அன்பு. (எனவே,) இராமனை அழைத்துப் போவதாகக் கூறாதீர்கள். அந்த அரக்கர்களுடைய பலம் என்ன? அவர்கள் யாருடைய புத்திரர்கள்? அவர்கள் எப்படிப்பட்டவர்கள்? (8–12)

முனிவரே! அவர்கள் உயரம்–பருமன் எவ்வளவு? எவர்கள் அவர்களைப் பரிபாலிக்கிறார்கள்? இராமன், அந்த அரக்கர்களுடன் எவ்வாறு சண்டை போட வேண்டும்? பிரும்மன்! மாயயுத்தம் செய்பவர்களான அவர்களுடன் என் படைவீரர்களும் நானும் எவ்வாறு போர் புரியவேண்டும்? முனிபுங்கவரே! நான் எவ்வாறு வீரச்செருக்கும் தீயகுணங்களும் உடைய அரக்கர்களை எதிர்க்க வேண்டும்? என்பதையெல்லாம் எனக்குக் கூறுங்கள்.'' அவருடைய சொற்களைக் கேட்டதும் விசுவாமித்திரர் பதில் கூறினார்— (13–15)

''புலஸ்திய வம்சத்தில் தோன்றியுள்ள இராவணன் என்ற அரக்கன், பிரும்மாவினால் கொடுக்கப்பட்ட வரத்தின் பலத்தினால் மூன்று உலகங்களையும் மிகவும் துன்புறுத்தி வருகிறான். அரக்கர்களுக்கெல்லாம் தலைவனான இராவணன் மகாவீரமும் மகாபலமும் பொருந்தியவன்; ஏராளமான அரக்கர்களால் எப்போதும் சூழப்பட்டிருப்பவன்; குபேரனுடைய சகோதரன்; முனிவர் விச்ரவஸின் குமாரன். பலசாலியான அவன், தானே நேரிடையாக வந்து வேள்விகளைத் தடுப்பதில்லை. அவனால் தூண்டப்பட்ட, மிக அதிகமான ஆற்றல் கொண்ட இரண்டு அரக்கர்களான மாரீசனும் சுபாகுவும் வேள்விக்கு இடையூறு செய்பவர்கள்.'' (16–19)

விசுவாமித்திரர் இவ்வாறு கூறியதைக் கேட்ட மன்னர், ''தீயவனான அவனுடன் போர் புரியும் சக்தி எனக்கு இல்லவே இல்லை'' என்று கூறினார். ''அறம் அறிந்த பெரியோரே! அருள்கூர்ந்து என் புத்திரன் விஷயத்தில் தயவு காட்டுங்கள். நானோ பாக்கியமில்லாதவன். ஆதலால், தாங்கள்தான் எனக்கு அருள் செய்யும் தெய்வம், ஆசார்யன் எல்லாம். தேவ–அசுர–கந்தர்வ–யட்ச–பட்சி–நாகர்கள்கூட, இராவணனைப் போரில் எதிர்கொள்ள வல்லவர்கள் அல்லர் என்னும்போது அல்ப மானுடர்கள் எம்மாத்திரம்? அந்த அரக்கன் யுத்தத்தில் மாவீரர்களின் வீரத்தை அபகரித்துவிடுகிறான். அதனால், நான் என் படைகளுடனும் புத்திரர்களுடனும் சேர்ந்து சென்றாலும் அவனுடனோ, அவன் படைகளுடனோ போர் புரியும் சக்தி எனக்கு இல்லை. (அப்படியிருக்கும்போது) தேவகுமாரனைப் போன்றவனும், போர்க்கலையில் தேர்ச்சி பெறாதவனுமான என் பிள்ளை (அரக்கர்களை) எதிர்த்துப் போர் புரிய முடியுமா? (20–24)

மகாதவச்சீலரே! சிறு குழந்தையான என் மகனை ஒருபோதும் தரமாட்டேன். சுந்தோபசுந்தர்களின் புதல்வர்களான அவ்விரு இராக்கதர்களும் யுத்தத்தில் சாட்சாத் யமனுக்கு நிகரானவர்கள். அப்படிப்பட்ட கொடியவர்கள் உங்கள் யாகத்திற்கு இடையூறு செய்கிறார்கள் என்றால் என் புத்திரனைக் கொடுக்கவே மாட்டேன். அவர்களில்லாத மற்ற அரக்கர்களுடன் நான் என் உற்றார்–உறவினருடன் போர் செய்ய ஆயத்தமாக இருக்கிறேன். இல்லாவிட்டால் நானும், என் பந்துக்களும் தங்கள் காலில் விழுந்து வணங்கிக் கேட்டுக் கொள்வோம் (இராமனைக் கேட்காதீர்கள் என்று).'' இவ்வாறு மாமன்னரின் உப்புசப்பில்லாத உரையைக்

கேட்டதும் குசிகருடைய புத்திரரும் அந்தணோத்தமருமான விசுவாமித்திரர் அடக்க முடியாத பெருங்கோபத்தை அடைந்தார். வேள்வியில் நன்கு சொரியப்பட்ட நெய் ஆகுதியால் கொழுந்துவிட்டு எரியும் அக்னியைப்போல், மகரிஷி என்ற அக்னி பெரிய நெருப்புக் கொழுந்துகளை விட்டுக் கொண்டு கனன்றார். (25–27)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
இருபதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்தொன்று

வசிஷ்டர் கூறுதல்

தசரதருடைய புத்திர வாத்சல்யம் நிறைந்த சொற்களைக் கேட்டு கௌசிகர், மன்னரைப் பார்த்து கோபம் பொங்கப் பதில் கூறினார்— (1)

''முன்னதாக ஒப்புக் கொண்டுவிட்டு பின் அந்த சபதத்தைப் புறக்கணிக்க விரும்புகிறாய். ரகுகுலத்திற்கு இது (சொன்ன சொல் தவறுவது) உகந்ததல்ல. இது குலதருமத்திற்கு நேர் எதிரிடையானது. நீ இப்படிச் செய்வது சரி என்று உனக்குத் தோன்றினால், அது அப்படியே இருக்கட்டும். நான் வந்த வழியே திரும்பிப் போகிறேன். காகுத்தனே! கொடுத்த வாக்கைப் பொய்யாக்கிய நீ, உற்றார்–உறவினரோடுகூடச் சௌக்கியமாக இருப்பாயாக.'' விசுவாமித்திரருடைய கட்டுக்கடங்காத கோபத்தினால் பூமண்டலம் முழுவதும் ஆடி அதிர்ந்தது; தேவர்கள் பேரச்சம் அடைந்தார்கள். நல்ல விரதங்களை அனுஷ்டிப்பவரும், மனோதைரியம் உடையவருமான மாமுனிவர் வசிஷ்டர், உலகம் முழுவதும் பயத்தால் அஞ்சி நடுங்குவதைக் கண்டு, மன்னரைப் பார்த்து இவ்வாறு கூறினார்— (2–5)

''கீர்த்திமிக்க இக்ஷ்வாகு குலத்தில் தோன்றியவன் நீ; சாட்சாத் இன்னொரு தருமதேவதை போன்றவன்; உறுதியான உள்ளம் படைத்தவன்; புலன்களை அடக்கியவன்; சகலவிதமான செல்வச் செழிப்புடையவன். அப்படிப்பட்ட நீ அறநெறியைப் புறக்கணிக்கலாகாது. மூன்று உலகங்களிலும் தசரதர் தருமாத்மா என்ற புகழ் பரவியிருக்கிறது. எனவே, உன்னுடைய இயல்பான அறத்தையே கைக்கொள்; அதருமச் சுமையைச் சுமக்காதே. (6,7)

தசரதா! 'நான் இவ்வாறு செய்கிறேன்' என்று வாக்குக் கொடுத்துவிட்டு, அதை நிறைவேற்றாவிட்டால், யாக–யக்ஞங்களையும், குளம்–குட்டைகளையும் அழித்த பாவம் வந்து சேரும். அதனால், இராமனை அனுப்பி வைப்பாயாக. நெருப்புக் கங்குகளால் காப்பாற்றப்படும் அமிர்தத்தை (யாரும் நெருங்கக்கூட முடியாததை)ப் போல, விசுவாமித்திரரால் பாதுகாக்கப்படும் இவனுக்கு (இராமனுக்கு) அஸ்திரவித்தை தெரிந்தாலும் தெரியாவிட்டாலும், அரக்கர்கள் இவன் எதிரில் நிற்கக்கூட முடியாது. (8,9)

இவர் (விசுவாமித்திரர்) தருமத்தின் திருவுரு; இவர் பராக்கிரமம் உடையவர்களில் முதன்மையானவர்; தவத்தின் பரமஸ்தானம். இவர் நாலாவிதமான அஸ்திரங்களை அறிந்தவர். மூன்று உலகங்களிலுமுள்ள சராசரங்களில் இவர் அறிந்துள்ளவைகளை ஒருவர்கூட அறிய மாட்டார்; இனியும் அறியப் போவதில்லை. தேவர், முனிவர், அசுரர், அரக்கர், கந்தர்வர், யட்சர், கின்னரர், உரகர் ஆகிய எவரும் (இவருடைய பேராற்றலை) அறியமாட்டார்கள். (10–12)

எல்லா அஸ்திரங்களும் பிருசாஸ்வன் என்ற பிரஜாபதியின் புதல்வர்கள்; தருமவழியில் செல்பவர்கள். முன்னொரு சமயம் விசுவாமித்திரர் நாட்டை ஆண்டு கொண்டிருந்தபோது, அவருக்குக் கொடுக்கப்பட்டவர்கள். பிருசாஸ்வனுடைய புத்திரர்கள், தக்ஷப் பிரஜாபதியின் இரண்டு புதல்வியின் புத்திரர்கள். அவர்கள் ஒரே உருவமுடையவர்கள் அல்லர். (பல்வகைத்

தோற்றம் உடையவர்கள்.) மகாவீரமும் பிரகாசமுமுடைய அவர்கள் வெற்றியைத் தேடித் தருபவர்கள். (13,14)

தக்ஷனின் (மிகுந்த அழகுடைய) பெண்களான ஜயாவும் சுப்பிரபாவும் பேரொளி வீசும் நூற்றுக்கணக்கான அஸ்திர–சஸ்திரங்களைப் பெற்றெடுத்தார்கள். ஜயா என்ற பெண்மணி எல்லையில்லாத பலம் கொண்டவர்களும், விருப்பம் போல் உருவம் எடுக்கக் கூடியவர்களுமான ஐநூறு மகன்களை அரக்கர்களைக் கொல்ல வேண்டும் என்பதற்காகவே பெற்றாள். சுப்பிரபா என்பவள் ஸம்ஹார் என்ற பெயருள்ள ஐநூறு மகவுகளைப் பெற்றாள். அவர்கள் யாராலும் வெல்ல முடியாதவர்கள்; அடக்க முடியாதவர்கள்; பெரும்பலம் உடையவர்கள். அந்த அஸ்திரங்களையெல்லாம் குசிக புத்திரரான இவர் உள்ளபடியே அறிவார். அத்துடன் இதற்கு முன் காணப்படாத புதிய அஸ்திரங்களையும் உற்பத்தி செய்யக் கூடியவர். (15–18)

தசரதனே! சகலமும் அறிந்தவரும், சிறந்த முனிவரும், பேருள்ளம் கொண்டவருமான இவரால் அறியப்படாதது இருந்ததுமில்லை; இருக்கப் போவதுமில்லை. இத்தகைய மகாவீரமும் தேஜஸும் புகழும் கொண்டவர் விசுவாமித்திரர். மன்னரே! இராமன் இவருடன் செல்வதால் ('என்ன ஆகுமோ?' என்று) கவலை கொள்ள வேண்டாம். குசிக புத்திரரான இவர், தானே அவர்களை (இராக்கதர்களை) அடக்க வல்லவர். உன் குமாரனுக்குப் பேரும் புகழும் ஏற்பட வேண்டும் என்பதற்காகவே உன்னிடம் வந்து வேண்டுகிறார்.'' இவ்வாறு வசிஷ்டர் கூறியவுடன் மாமன்னர் மனம் மகிழ்ந்து போனார்; உடலெங்கும் ஒளி பரவியது. 'பெரும் புகழ் படைத்த விசுவாமித்திரருடன் இராமனை அனுப்புவது என்று முடிவு செய்வதே அவனுக்கு அனுகூலமாக இருக்கும்' என்று எண்ணினார். (19–22)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
இருபத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்து இரண்டு

மந்திர உபதேசம்

இவ்வாறு வசிஷ்டர் கூறியதும், மன்னர் அகமகிழ்ந்து இராமனை, லட்சுமணனுடன்கூட சபைக்கு வருமாறு கூப்பிட்டனுப்பினார். (இராமன்) மன்னரும் தந்தையுமான தசரதராலும் அன்னையினாலும் ஆசீர்வதிக்கப்பட்டார்; புரோகிதர் வசிஷ்டரால் மங்களமான வேத மந்திரங்களால் மந்திரக்காப்பு செய்விக்கப்பட்டார். மன்னர் தசரதர் பாசத்திற்குரிய மைந்தனை உச்சிமுகர்ந்து, உள்ளம் உவகையுற, குசிக புத்திரரான விசுவாமித்திரரிடம் ஒப்படைத்தார். தாமரைக்கண்ணனான இராமன் விசுவாமித்திரரோடு செல்லவிருப்பதை அறிந்து, காற்றானது தூசு–தும்பு இல்லாமல் உடலை மெல்ல வருடிக் கொண்டு வீசிற்று. மகாத்மா இராமன் பயணத்திற்கு ஆயத்தமானதும் மலர்மாரி பொழிந்தது; தேவதுந்துபிகள் முழங்கின; சங்கு மற்றும் பேரிகைகளின் பேரொலி எழுந்தது. (1–5)

முன்னால் விசுவாமித்திரர் சென்றார். அவர் பின்னால் பெரும் புகழ் படைத்தவரும், வில்லேந்தியவரும், முன்னுச்சிக் குடுமி உடையவருமான இராமன் சென்றார். அவரை சுமித்திரையின் மைந்தன் லட்சுமணன் பின்தொடர்ந்தான். இருவரும் அம்புறாத்தூணி அணிந்திருந்தார்கள்; கையில் வில் தாங்கிக் கொண்டிருந்தார்கள். தம் பேரொளியால் பத்துத் திசைகளையும் பிரகாசப்படுத்திக் கொண்டிருந்தார்கள். மூன்று தலை படைத்த இரு நாகங்கள் போல, சான்றோரான விசுவாமித்திரரைப் பின்தொடர்ந்து சென்றார்கள். மகிமை பொருந்தியவர்களும், வில்லேந்தியவர்களும், கவின்மிகு ஆடை–அணிகளுடன் விளங்கியவர்களுமான அவ்விருவரும் அசுவினீ குமாரர்கள் பிரும்மாவைப் பின்தொடர்ந்து செல்வதைப் போல் சென்றார்கள். (6–8)

காந்தி பொருந்தியவர்களும், உடலழகு பெற்றவர்களும், திருவளர் செல்வர்களும், சுற்றிலும் ஒளியைப் பரப்புபவர்களும், குற்றமற்றவர்களுமான இராம–லட்சுமண சகோதரர்கள் பரமேசுவரனைப் பின்தொடரும் அக்னி குமாரர்களைப் போல விசுவாமித்திரரைப் பின்பற்றிச் சென்றார்கள். ஒன்றரை யோஜனை தூரம் கடந்து சென்று, சரயூவின் வலது கரையை அடைந்ததும், 'இராம' என்று இனிய சொல்லைக் கூறினார், விசுவாமித்திரர். (9–11)

''குழந்தாய்! அகத்தூய்மைக்காக ஆசமனம் செய்; காலதாமதம் செய்யாதே; பலா–அதிபலா என்ற மந்திரங்களை, நீ ஏற்றுக் கொள். (இவைகளின் பலனைக் கேட்பாயாக.) களைப்பு, காய்ச்சல், உடல் தேய்வு முதலியன உண்டாகாது. தூங்கிக் கொண்டிருக்கும்போதோ, கவனக்குறைவாக இருக்கும்போதோகூட நிசாசரர்கள் உன்னைத் தாக்க முடியாது. மண்ணுலகில் உனக்கு நிகரான தோள்வலிமை உடையவர் எவரும் இருக்கமாட்டார்; மூவுலகிலும் உனக்கு ஈடானவர் யாரும் இருக்க முடியாது. அழகிலோ, சாமர்த்தியத்திலோ, மெய்ஞ்ஞானத்திலோ, அறிவைக் கொண்டு காரியத்தை நிச்சயிப்பதிலோ, பிறருடைய கேள்விக்குப் பதில் சொல்வதிலோ உனக்குச் சமமானவர் இந்த உலகத்திலேயே எவரும் இருக்கமாட்டார். எல்லா மந்திரஞானத்திற்கும் தாய் போன்றவை பலா–அதிபலா என்ற மந்திரங்கள். இந்த மந்திரங்களில் நீ சித்தி பெற்றுவிட்டால், உனக்கு நிகரானவரே இருக்கமாட்டார்கள். (12–16)

மனிதருள் மாணிக்கமே! பயணம் சென்று கொண்டிருக்கும்போது இந்த மந்திரங்களை ஜபித்தால் பசி–தாகம் உனக்கு ஏற்படாது. இந்த இரண்டு மந்திரங்களிலும் நீ வல்லவனாகி விட்டால், எல்லையில்லாத புகழ் உன்னிடம் வந்து சேரும். மிகுந்த சக்தியோடு விளங்கும் இவ்விரு மந்திரங்களும் பிரும்மாவின் புத்திரிகள். காகுத்தனே! உனக்கு இவைகளை உபதேசிக்க விரும்புகிறேன். (மிக உயர்வான பலன்களை அளிக்கக் கூடிய இந்த வித்யைகளைப் பெற்றுக் கொள்வதற்கு) நீ தகுதி உடையவன். அறம் தவறாதவனே! உன்னிடம் சர்வ வல்லமையும் முன்னரே இருக்கிறது. என்றாலும் இவை இன்னும் பெருமையை அளிக்கும் என்பதில் சந்தேகமில்லை. (17–19)

இவை என்னுடைய தவவலிமையால் பெறப்பட்டவை. (அதனால் கூடுதல் சக்தி பெற்றிருக்கின்றன.) உனக்கு பலவிதங்களில் உதவியாக இருக்கப் போகின்றன.'' உடனே, இராமன் மலர்ந்த முகத்துடன் ஆசமனம் செய்து, தூய்மை பெற்று, மாசற்ற இதயங்கொண்ட மாமுனிவரிடமிருந்து இரண்டு வித்யைகளையும் ஏற்றுக்கொண்டார். வித்யைகளை (மந்திரங்களை)ப் பெற்றுக் கொண்டதும், சரத்கால சூரியன்போல பேராற்றல் பெற்றவராக மிகவும் பொலிவுடன் திகழ்ந்தார். ஆசார்யருக்குச் செய்ய வேண்டிய பணிவிடைகளை விசுவாமித்திரருக்குச் செய்து, சரயூ நதிக்கரையில் மூவரும் சுகமாக இரவைக் கழித்தார்கள். தசரத மாமன்னருடைய செல்வக் குமாரர்களான அவ்விருவரும், (அவர்களுக்குச் சற்றும் பொருந்தாத) புல்படுக்கையில் ஒன்றாக உறங்கினார்கள். விசுவாமித்திரர் அவர்களைக் கொஞ்சிக் குலாவி மகிழச் செய்ததால், அந்த இரவு ஒரு நொடி போல் ஆயிற்று. (20–23)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
இருபத்து இரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்து மூன்று

காமாசிரம வாழ்க்கை

இரவு கழிந்து விடியற்காலை வந்ததும், இலை–தழைப் படுக்கையில் படுத்துக் கொண்டிருந்த காகுத்தனை, மாமுனிவரான விசுவாமித்திரர் பள்ளியெழுப்பினார். ''எவரைப் பெற்றதால், 'நல்ல

புதல்வனைப் பெற்றவர்' என்ற நற்பெயரை கௌசல்யை அடைந்தாரோ, அந்த ஸ்ரீராமா கிழக்குத் திக்கில் சந்தியாகால அருணோதயம் ஆகிவிட்டது. எழுந்திராய், ஆண் சிங்கமே! வேதவிதிப்படியான நித்திய கர்மானுஷ்டானங்களைச் செய்ய வேண்டும்.'' அன்புமிகுந்த முனிவரின் சொற்களைக் கேட்டதும், அரசகுமாரர்கள் எழுந்து, நீராடி, நீர்க்கடன் செலுத்தி, காயத்ரீ மந்திர ஜபம் செய்தார்கள். கண்கவர் ஒளியுடன் விளங்கிய அவ்விருவரும் நித்தியகர்மாக்களை முடித்துக் கொண்டு, தவச்செல்வரான விசுவாமித்திரரை வணங்கி, மகிழ்ந்து புறப்படுவதற்கு ஆயத்தமாக நின்றார்கள். (1–4)

வீரர்களான அவ்வரச குமாரர்கள் நடந்து சென்று கொண்டிருக்கையில், புனிதமான சரயூ சங்கமத்தில் மூன்று உலகிலும் ஓடும் தெய்விகமான கங்கை நதியைக் கண்டார்கள். தூய உள்ளம் படைத்தவர்கள், பல ஆண்டுக் காலமாகக் கடுமையான தவம் செய்பவர்கள் – இப்படிப்பட்ட முனிவர்களின் ஆசிரமவளாகங்களை அங்கே பார்த்ததும், மிகவும் குதூகலமடைந்த இராம–லட்சுமணர்கள், மகாஞானியான விசுவாமித்திரரைப் பார்த்துப் பின்வருமாறு கேட்டார்கள்— ''பகவன்! புண்ணியமான இந்த ஆசிரமம் யாருடையது? இங்கே யார் வசிக்கிறார்? இதைத் தெரிந்து கொள்வதற்கு நாங்கள் மிருந்த ஆர்வத்துடன் இருக்கிறோம்.'' அவர்களுடைய சொற்களைக் கேட்ட முனிபுங்கவர் மெல்ல நகைத்து, ''முன்னர் இது யாருடைய ஆசிரமமாக இருந்தது என்பதைக் கேளாய், இராமா! (5–9)

முன்னொரு காலத்தில் மன்மதன் சரீர வடிவத்தோடு இருந்தான். அவனை, 'காமன்' என்று அறிஞர்கள் அழைப்பார்கள். இந்த இடத்தில் ஸ்தாணுவாகிற பரமேசுவரன் பல நியமங்களுக்கு உட்பட்டு நிலைத்த மனத்துடன் தவம் செய்து கொண்டிருந்தார். ஒரு சமயம் தவம் கலைந்து எழுந்து மருத் கணங்களோடுகூட போய்க் கொண்டிருந்தார். கெட்ட எண்ணம் கொண்ட காமன், அவரைத் தாக்கினான். ஈசுவரன் 'ஹூம்' என்று ஒலியெழுப்பினார். ரகுநந்தனா! ருத்ரனுடைய (நெற்றிக்) கண்ணால் எரிக்கப்பட்ட தீயவனான காமனுடைய உடலிலிருந்து அங்கங்கள் நழுவிப் போயின. கோபம் கொண்ட பரமேசுவரனால் அவனுடைய சரீரம் எரிக்கப்பட்டதால், காமன் அசரீரம் (உடலற்றவன்) ஆனான். இராகவா! அன்று முதல் அவன், 'அனங்கன்' என்று பெயர் பெற்றான். அழகு மிகுந்த காமன், எங்கே தன் சரீரத்தை விட்டானோ, அந்தப் பிரதேசம் அங்கதேசம் என்று வழங்கப்படலாயிற்று. (10–14)

இந்த ஆசிரமம் பரமேசுவரனுடையது; புண்ணியம் தருவது. இங்கேயுள்ள ரிஷிகள் முன்னர் அவருடைய சீடர்களாக இருந்தார்கள்; எப்போதும் தருமத்திலேயே மூழ்கியவர்கள். அவர்களிடம் பாவம் என்பதே கிடையாது. இப்போது இங்கேயே புண்ணியம் தரும் இரு நதிகளின் சங்கமப் பிரதேசத்தில் இந்த இரவைக் கழிப்போம். கவின்மிகு காட்சியனே! நாளை (கங்கையைக்) கடந்து செல்வோம். (15,16)

மனுஷ்யோத்தமனே! நாமனைவரும் நீராடி, (காயத்ரீ) ஜபம் செய்து, அக்னியில் தர வேண்டிய ஆகுதிகளைக் கொடுத்துவிட்டுத் தூயவர்களாக புண்ணியமான இந்த ஆசிரமத்திற்குள் செல்வோம். இங்கு தங்குவது மிகவும் உயர்வானது. இராமா! இன்றிரவை இங்கேயே கழிப்போம்.'' இவர்கள் இவ்வாறு பேசிக் கொண்டிருக்கும்போதே, தீர்க்கதரிசனம் உடைய அவ்விடத்திய முனிவர்கள் மிக்க மகிழ்ச்சியுடன் அங்கே வந்து, விசுவாமித்திரருக்கு அர்க்யம்–பாத்யம் கொடுத்து அதிதி உபசாரம் செய்தார்கள். (17–19)

பின்னர், இராம–லட்சுமணர்களுக்கு உரிய முறையில் உபசார மரியாதைகள் செய்தார்கள். சுவாரசியமான பேச்சுக்கள் பேசி பரஸ்பரம் களிப்படைந்தார்கள். அங்கே கூடியிருந்த முனிவர்கள், தத்தமக்குரிய முறைப்படி சந்தியாகால மந்திர ஜபங்களைச் செய்தார்கள். பின்னர், அதிதியாக வந்தவர்களை அழைத்துக் கொண்டு நல்ல நியமங்களைக் கடைப்பிடிக்கும் அவ்விடத்திய முனிவர்கள் காமாசிரம வளாகத்தினுள் சென்றார்கள். அறத்தையே உயிர்மூச்சாகக்

கொண்ட தலைசிறந்த முனிவர் விசுவாமித்திரர், அரசகுமாரர்களுக்குச் சுவையான செய்திகளைக் கூறி மகிழ்வுறச் செய்தார். காமாசிரமத்தில் அவர்கள் மிக்க மனத்திருப்தியுடன் தங்கியிருந்தார்கள். (20–22)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
இருபத்து மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்து நான்கு

தாடகாவனத்தை அடைதல்

(மறுநாள்) பொழுது விடிந்ததும் சாந்திமயமான அந்த வேளையில் சந்தியாவந்தனம் செய்து, விசுவாமித்திரர் முன்செல்ல, எதிரிகளை அடக்கவல்ல அவ்விருவரும் (இராம–லட்சுமணர்கள்) கங்கையின் கரையை அடைந்தார்கள். பண்பாளர்களான அந்தப் பிரதேசத்து முனிவர்கள் எல்லோரும் ஓர் அழகிய படகைக் கொண்டு வந்து, விசுவாமித்திரரிடம் இவ்வாறு கூறினார்கள்— ''அரசகுமாரர்களை முதலில் ஏறச் செய்து, பின்னர் தாங்கள் ஓடத்தில் ஏறுங்கள்; காலதாமதம் வேண்டாம். இடையூறுகள் இல்லாமல் பயணம் செய்வீர்களாக!'' ''அவ்வாறே ஆகட்டும்'' என்று கூறிவிட்டு, அந்த முனிவர்களைப் பாராட்டிப் பேசிய விசுவாமித்திரர், கடலைச் சென்றடைகிற அந்த நதியை, அவ்விருவருடன் கடந்து சென்றார். (1–4)

தம்பியுடன்கூட நதியின் நடுவை அடைந்ததும், தண்ணீர் பீறிக்கொண்டு மோதும் பேரிரைச்சலைக் கேட்டார், இராமன். ''தண்ணீர் அலைமோதி எழுப்பும் இந்தப் பயங்கர ஓசைக்கு என்ன காரணம்?'' என்று, நதியின் மத்தியில் முனிபுங்கவரை இராமன் வினவினார். இராகவனுடைய சொற்களைக் கேட்டு தருமாத்மாவான விசுவாமித்திரர், அந்தப் பேரொலியின் காரணத்தை உற்காசத்துடன் சொல்ல ஆரம்பித்தார்— (5–7)

''இராமா! கைலாச பர்வதத்தில் பிரும்மா மனத்தால் ஏரி ஒன்றை உண்டாக்கினார். அதனால், அது மானஸ ஏரி என்று பெயர் பெற்றது. அதிலிருந்து புறப்பட்ட நதி அயோத்தியைச் சுற்றிக் கொண்டு ஓடுகிறது. பிரும்மாவினால் தோற்றுவிக்கப்பட்ட சரஸிலிருந்து புறப்பட்டதால் அதற்கு சரயூ என்று பெயர். அது கங்கையுடன் இந்த இடத்தில் கலப்பதால் இருநதிகளின் வெள்ள மோதலால் பெரிய சத்தம் உண்டாகிறது. இராமா! பக்தியுடன் இந்தப் புண்ணிய நதிகளை வணங்கு.'' அறம் தெரிந்தவர்களும், பெரும் பலசாலிகளுமான அவ்விருவரும் அவ்விரு நதிகளையும் பக்தியுடன் வணங்கினார்கள். பின், நதியைக் கடந்து அக்கரை அடைந்தார்கள். (8–11)

மாமன்னனின் புதல்வனான இராமன், எதிரே பயங்கரமான ஒரு காட்டைக் கண்டதும் முனிவரைப் பார்த்துக் கேட்டார்— ''அட! இந்தக் காட்டில் நுழைய முடியாது போலிருக்கிறதே? மின்மினிப் பூச்சிக் கூட்டங்கள் சப்தமிட்டுக் கொண்டிருக்கின்றன; பயங்கரமான நாய்கள் உள்ளன; பறவையின் சப்தம் காதைத் துளைக்கிறது. பற்பல வகையான பறவைகளாலும், பூமிக்குள் வசிக்கும் புழுக்களாலும் எழுப்பப்படும் ஓசைகள் அச்சத்தை விளைவிக்கின்றன. சிங்கம், புலி, பன்றி, யானை முதலியவைகள் திரிந்து கொண்டிருக்கின்றன. கருங்காலி, அசுவகர்ணம், பில்வம், பாதிரி, இலந்தை முதலிய மரங்கள் நிறைந்திருக்கின்றன. இது யாருடைய வனம்?'' (12–15)

''குழந்தாய் இராமா! இது யாருடைய வனம் என்பதைச் சொல்கிறேன், கேள்'' என்று மகாதேஜஸ்வியான விசுவாமித்திரர் கூறத் தொடங்கினார்— ''தேவ சிற்பிகளால் நிர்மாணிக்கப்பட்ட மலாதம், கரூசம் என்ற பெயருடைய வளமிக்க இரண்டு நாடுகள் முன்னர் இங்கே இருந்தன. இராமா! முன்னொரு காலத்தில் இந்திரன் விருத்திராசுரனைக் கொன்றபோது, அவனை

அசுத்தங்கள் சூழ்ந்து கொண்டன. பசியும், பிரும்மஹத்தி தோஷமும் அவனை (இந்திரனை) வாட்டி எடுத்தன. தவச்செல்வர்களும் முனிவர்களும் தேவர்களும் கும்பங்களில் நீர்நிரப்பி, மந்திர உருவேற்றி, அந்நீரினால் இந்திரனை நீராட்டியதும், அவனிடமிருந்த அழுக்குகள் நீங்கிப் போயின. (16–19)

இந்தப் பிரதேசத்தில் இந்திரனுடைய சரீரத்தைத் துன்புறுத்திய மாசுகளையும், (பசி–பிரும்மஹத்தி தோஷம் என்ற) பாவங்களையும் கழுவிவிட்டதனால், அவன் மிக்க மகிழ்ச்சியை அடைந்தான். அமரர்கோன் மாசுகளும் பாவங்களும் நீங்கித் தூயவனானவுடன், இந்தப் பிரதேசத்திற்கு வரங்களையும், சிறப்பான செழிப்புக்களையும் வழங்கினான். ‘என் உடல் மாசுகளை ஏற்றுள்ள இந்த இரு நாடுகளும் மலாதம், கரூசம் என்ற பெயருடன் உலகில் பெரும் புகழை அடையப் போகின்றன.’ அறிவிற்சிறந்த இந்திரனால் அந்த நாட்டிற்குக் கொடுக்கப்பட்ட உயர்ந்த நிலையை உணர்ந்து, அங்கிருந்த தேவர்கள், ‘ஆமாம், ஆமாம், ரொம்ப சரி’ என்று கூறி ஆமோதித்தார்கள். மலாதம், கரூசம் என்ற இரு நாடுகளும் நெடுங்காலமாக வளம் மிக்கனவாக இருந்தன; மக்கள் மகிழ்ச்சியோடு இருந்தார்கள். (20–24)

ஏதோ ஒரு சமயத்தில், விருப்பப்படி உருவம் எடுக்கக் கூடிய யட்சப் பெண்ணும், சுந்தன் என்பவனுடைய மனைவியும், ஆயிரம் யானைகளின் பலம் கொண்டவளுமான தாடகை என்பவள் இங்கே வந்தாள். இந்திரனுக்கு நிகரான ஆற்றல் கொண்ட மாரீசன் என்ற அரக்கன் அவளுடைய புதல்வன். நீண்ட கைகள், பெரிய தலை, அகன்ற வாய், பெரிய உடல் படைத்த பயங்கரமான அந்த அரக்கன், எப்போதும் மக்களைத் துன்புறுத்தி வருகிறான். இராகவா! இந்த மலாதம், கரூசம் என்ற இரு நாடுகளையும் கொடிய செயல்களில் ஈடுபடும் தாடகை நாள்தோறும் நாசப்படுத்தி வருகிறாள். அவள் (நாம் செல்லும்) இந்த வழியை அடைத்துக் கொண்டு இன்னும் ஒன்றரை யோஜனை தொலைவில் இருக்கிறாள். அவள் இருக்கும் தாடகாவனத்திற்கு இங்கிருந்துதான் போக வேண்டும். (25–29)

பயங்கரச் செயல்களில் ஈடுபடும் இவளை, நீ உன் சொந்த ஆற்றலினால் கொல்ல வேண்டும். இடையூறுகளின்றி முன்புபோல் அமைதியான தேசமாக மீண்டும் ஆக்க வேண்டும் என்று நான் ஆணையிடுகிறேன். இராமா! பொறுக்க முடியாத, கொடூரமான செயல்களைச் செய்யும் யட்சிணி தாடகை வசிக்கும் இந்த இடத்திற்கு இப்படி நம்மைப்போல் வேறு யாரும் எளிதாக வந்துவிட முடியாது. பயங்கரமான இந்தக் காட்டைப் பற்றிய முழு விவரங்களையும் உனக்குக் கூறிவிட்டேன். யட்சப் பெண்ணான அவளால் துரத்தியடிக்கப்பட்டவர்கள் இன்னும்கூட இங்கே திரும்பி வரவில்லை. (தாடகையின் அட்டகாசங்கள் இன்னும் தொடர்ந்து நடந்து வருகின்றன.)'' (30–32)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
இருபத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்தைந்து

தாடகையின் வரலாறு

ஈடு–இணையில்லாத பெருமை பெற்ற முனிவரின் சொற்களைக் கேட்டு வீரபுருஷனாகிய இராமன், பவ்யமாக பதில் கூறினார்— ''முனிவரே! யட்சர்கள் எல்லோரும் பலம் குறைந்தவர்கள் என்று சொல்லப்படுகிறது. அப்படியிருக்கும்போது இந்தப் பெண் (தாடகை) எவ்வாறு ஆயிரம் யானை பலத்தைப் பெற்றிருக்கிறாள்?'' இராகவனுடைய கேள்வியைக் கேட்டு, இராம–லட்சுமணர்களைப் பார்த்து இனிய குரலில் விசுவாமித்திரர் பதில் சொன்னார்— ''மிகவும் பலம்

பெற்று செருக்கித் திரியும் அந்த மாது, வரம் பெற்ற மகிமையால் அளவற்ற ஆற்றலை அடைந்துவிட்டாள். (1–4)

முன்னர், சுகேது என்ற பலமிக்க யட்சன் இருந்தான். அவனுக்கு குழந்தைகள் இல்லை. நல்ல ஆசாரங்களைக் கடைப்பிடிக்கும் அவன், (பிள்ளையை அடைவதற்காக) நீண்டகாலம் தவம் செய்தான். யட்சர் தலைவனான அவனுடைய தவத்தினால் மகிழ்ச்சியடைந்த பிரும்மதேவர், தாடகை என்ற பெயருடைய மிகச்சிறந்த பெண்ணைக் கொடுத்தார். அப்போது, தாடகைக்கு ஆயிரம் யானை பலத்தையும் பிரும்மதேவர் கொடுத்தார். ஆனால், யட்சனுக்கு ஒரு புதல்வனைக்கூட கொடுக்கவில்லை. நாட்கள் செல்லச்செல்ல அழகிலும் பருவத்திலும் அவள் வளர்ந்து கொண்டே வந்தாள். உரியகாலத்தில் ஜம்பன் என்பவனுடைய புத்திரனான சுந்தன் என்பவனுக்கு அவளை விவாகம் செய்து கொடுத்தான். (5–8)

காலப்போக்கில் யட்சப்பெண் தாடகைக்கு மாரீசன் என்ற மகன் பிறந்தான். யாராலும் அடக்க முடியாத அவன் ஒரு சாபத்தால் அரக்கன் ஆகிவிட்டான். அகஸ்தியருடைய சாபத்தினால் சுந்தன் வீழ்த்தப்பட்டதும், அவள் தன் மகனுடன் சென்று அவரைப் பயமுறுத்தினாள். அவரை வாயில் போட்டு தின்றுவிடுவதற்காக, அவள் வேகமாக ஓடிவந்து தன்மேல் விழப்போவதைக் கண்ட மாமுனிவர் அகஸ்தியர், 'ராட்சஸனாகப் போகக் கடவாய்' என்று மாரீசனைச் சபித்தார். மிகவும் கோபம் கொண்ட அகஸ்தியர் தாடகையையும் இவ்வாறு சபித்தார். (9–12)

'மனிதர்களைப் புசிக்கும் மகாயட்சியாக உருவம் சிதைந்து, முகம் விகாரமாகப் போவதாகுக. இப்போதுள்ள இந்த நல்லுருவம் மறைந்து உடனே பயங்கரமான உருவத்தை அடைவாய்.' இந்த சாபத்தினால் மிகவும் கோபமடைந்து மனம் கலங்கிய அவள், அகஸ்தியர் வசித்துக் கொண்டிருந்ததால் வளமாக இருந்த இந்தப் பகுதியில் இருந்தவர்களைத் துரத்தியடித்தாள். இவ்விதம் தீயசெயல்களில் ஈடுபட்டுள்ளவளும், எல்லையற்ற பராக்கிரமமுடையவளும், மிகவும் கொடுமையானவளுமான இந்த யட்சியை, பசு–அந்தணர் நலனுக்காகக் கொன்று போடு. (13–15)

ரகுநந்தனா! சாபத்தினால் இந்த நிலையை அடைந்துள்ள இவளைக் கொல்வதற்கு மூன்று உலகத்திலும் (உன்னைத் தவிர) வேறு எவருக்கும் ஆற்றல் கிடையாது. இராமா! ஒரு பெண்ணைக் கொல்ல வேண்டியிருக்கிறதே? என்று மனம் வெறுத்துத் தயங்கக் கூடாது. நான்கு வருணத்தாரின் நலனை முன்னிட்டு அரசகுமாரனால் (உன்னால்) இந்த வதம் செய்யத்தக்கது. மக்களைக் காப்பாற்றும் பொறுப்பில் உள்ளவர்கள், போற்றத்தக்கது–இகழத்தக்கது என்றோ, இது மாபாதகம் என்றோ, அறம் பிறழ்ந்த செயல் என்றோ ஆலோசித்துக் கொண்டிராமல், 'மக்களைக் காப்பது தலையாய கடமை' என்ற நோக்கத்தில் செயல்பட வேண்டும். அரசுப் பொறுப்பை ஏற்பதற்காக நியமிக்கப்படுபவர்களுக்கு இதுதான் மிகப்பழமையான தருமம். தருமத்தையே அறியாத இவளைக் கொல்வது அதருமம் அல்ல. (16–19)

முன்னர், அசுர மன்னன் விரோசனனுடைய மகள் (மந்தரை) பூமியை அழிக்க முற்பட்டபோது, தேவராஜன் இந்திரன் அவளைக் கொன்றான் என்று சொல்லக் கேட்டிருக்கிறோம். பிருகு முனிவரின் பத்தினியும், சுக்ராசார்யாருடைய தாயாருமான க்யாதி என்பவள் இந்திரனை ஒழித்துக்கட்ட முயன்றபோது, விஷ்ணு அவளைக் கொன்றொழித்தார். இவ்வாறாக, நீதி நெறிப்படி ஆட்சி செய்யும் இன்னும் பல அரசகுமாரர்களும், அதருமத்தில் மூழ்கி நடந்த பெண்களைக் கொன்றிருக்கிறார்கள். அதனால், ராஜகுமாரா! என் சொல்லில் நம்பிக்கை வைத்து, வெறுக்கத்தக்க இவளை ஸம்ஹாரம் செய்வாயாக!'' (20–22)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
இருபத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்தாறு

தாடகை வதம்

முனிவருடைய வீரம் ததும்பும் சொற்களைக் கேட்ட, நன்னெறிகளைக் கைவிடாத அரசகுமாரன் இராமன் இரு கைகளையும் கூப்பிக்கொண்டு பதில் சொன்னார்— ''கௌசிக முனிவர் என்ன காரியம் செய்யச் சொன்னாலும், அதில் சந்தேகம் கொண்டு தயக்கம் காட்டாமல், செய்யவேண்டிய கடமை என்று எண்ணிச் செய்வாய்! என்பது என் தந்தையின் ஆணை. அதை நான் கௌரவிக்க வேண்டும். அயோத்தியில் என்னுடைய ஆசார்யர்கள் முன்னிலையில் என் தந்தை தசரதர் இவ்வாறு எனக்குக் கூறியுள்ளார். அவருடைய சொற்களை நான் புறந்தள்ளலாகாது. நான் தந்தையினால் (முனிவர் சொற்படி செய் என்று) கூறப்பட்டிருக்கிறேன். மேலும், இப்போது தாங்களும் ஆணையிடுகிறீர்கள். சந்தேகப்பட வேண்டாம். (தவசிகளுக்கும் வேதியர்களுக்கும் அனுகூலமான) உயர்ந்த காரியமான 'தாடகையை அழித்தல்' என்பதை நான் செய்கிறேன். பசுக்கள்–அந்தணர்களின் நலனுக்காகவும், இந்த நாட்டின் க்ஷேமத்திற்காகவும் ஈடு–இணையில்லாத பராக்கிரமமும், தவ ஆற்றலும் பெற்றுள்ள தங்கள் ஆணையை நிறைவேற்றப் போகிறேன்.'' (1–5)

எதிரிகளை அடக்கும் வல்லமை படைத்த இராமன், இவ்வாறு சொல்லிவிட்டு வில்லின் நடுவில் கைவைத்து நாண்கயிற்றை இழுத்து, மிகவும் பயங்கரமாக ஒலி எழுப்பினார். எட்டு திசைகளிலும் அந்தப் பேரொலி கேட்டது. அந்த சப்தத்தினால் தாடகாவனத்திலிருந்த அனைத்துப் பிராணிகளும் நடுநடுங்கின. அந்த ஓசையினால் பொறி கலங்கிப் போன தாடகை மிகவும் சினங்கொண்டாள். பலத்த ஓசையைக் கேட்டு கோபம் கொண்டு மதி கலங்கிய அந்த அரக்கி, அந்த நாணொலி வந்த இடத்தைக் குறி வைத்து ஓடி வந்தாள். கோபம் கொண்டவளும், அவலட்சணமானவளும், பயங்கரமான முகத்தையுடையவளும், மிகவும் முதுமை அடைந்து விட்டவளுமான அவளைப் பார்த்ததும், இராமன், லட்சுமணனை நோக்கிச் சொன்னார்— (6–9)

''லட்சுமணா! பயந்த சுபாவமுடையவர்களின் இதயத்தைப் பிளந்துவிடும்படி கோரமும், கதிகலங்க வைப்பதுமான இந்த யட்சியின் உடலைப் பார். அடக்க முடியாதவளும், மாயை செய்யும் திறன் உடையவளுமான இவளுடைய காது–மூக்குகளை அறுத்து, இங்கே திரும்பி வராதபடி செய்து விடுகிறேன். பெண் என்ற காரணத்தால் இவளைக் கொல்வதற்கு நான் விரும்பவில்லை. இவளுடைய பலத்தையும் நடமாட்டத்தையும் அழித்துவிடுவதே சிறந்தது என்று எண்ணுகிறேன்.'' (10–12)

இவ்வாறு இராமன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே சினத்தால் மதி மயங்கிய தாடகை, கைகளைத் தூக்கி விரித்துக் கொண்டு, இராமனையே குறி வைத்து ஓடிவந்தாள். பிரும்மரிஷி விசுவாமித்திரர், 'ஹூம்' என்று (மந்திர) ஒலி எழுப்பி, அவளைப் பயமுறுத்தினார். மேலும், ''ரகுகுலத் தோன்றல்கள் இருவருக்கும் மங்களம் உண்டாகட்டும்; வெற்றி கிடைக்கட்டும்'' என்றும் ஆசி கூறினார். புழுதிப் புயலைக் கிளப்பி, எதுவும் கண்ணுக்குப் புலப்படாதவாறு செய்தாள், தாடகை. அடர்ந்த தூசியினால் அவர்கள் இருவரும் சிறிது நேரம் செயலற்றுப் போனார்கள். பின்னர், மாயையை மேற்கொண்டு அவ்விருவர் மீதும் கல்மாரி பொழியச் செய்தாள். அதனால், இராமன் கோபம் கொண்டார். (13–16)

ஏராளமாகப் பொழிந்த கல்மாரியைத் தன் அம்புகளால் தடுத்து நிறுத்தினார், இராமன். தன்னை நோக்கி ஓடிவரத் தொடங்கிய அவளுடைய இரு கைகளையும் வாளால் வெட்டித் தள்ளினார். கைகளை இழந்து, களைப்படைந்து அருகில் வந்து கர்ஜிக்கும் அவளுடைய காது–

மூக்குகளை அறுத்துப் போட்டார், மிக்க கோபம் கொண்ட லட்சுமணன். விருப்பப்படி உருவம் எடுக்கக் கூடிய அந்த யட்சி, உடனே பலவிதமான வடிவங்களை எடுத்துக் கொண்டு, தன்னுடைய மாயையால் அவர்கள் கண்ணுக்குப் புலப்படாதவண்ணம் மறைந்து போனாள். (17–19)

பெருமழை போல் பயங்கரமாகக் கற்களைப் பொழிந்து கொண்டு, அவள் அலைந்து திரிந்தாளன்றோ! இராம–லட்சுமணர்கள் எல்லாப் பக்கங்களிலும் கல்மழையால் தாக்கப்படுவதைக் கண்ட விசுவாமித்திரர், இராமனைப் பார்த்துக் கூறினார்— ''இராமா! இரக்கம் காட்டியது போதும். இவள் பாவி; தீய நடத்தை கொண்டவள்; வேள்விகளுக்கு இடையூறு செய்பவள்; யட்சி; மாயச் செயல்களில் வல்லவள். சந்தியாகாலம் வருவதற்கு முன் இவளைக் கொன்றுவிடு. அரக்கர்கள், அந்தி வேளையில் அடக்க முடியாதவர்களாகி விடுவார்கள்.'' (20–22)

இவ்வாறு கல்மாரி பொழிந்து கொண்டிருக்கும் யட்சியைக் காட்டிக் கூறினார். சப்தவேதி எனும் தனிச்சிறப்பு பெற்ற அஸ்திரத்தைக் கொண்டு, அவளைச் செயலிழக்கச் செய்தார், இராமன். அம்புமழையால் தடுக்கப்பட்ட அவள் மாயையை மேற்கொண்டு, இராம–லட்சுமணர்களைக் கொல்லும் நோக்கத்துடன் அவர்களை நோக்கி ஓடினாள். அவள், இடியைப் போல் மிகவும் பலமும் வேகமும் கொண்டு, தங்களைத் தாக்குவதற்கு ஓடி வருவதைப் பார்த்து, அவள் மார்பை ஓர் அம்பினால் துளைத்தார் (இராமன்). அவள் கீழே விழுந்தாள்; மரணமும் அடைந்தாள். பேருருவம் கொண்ட அவள் கொல்லப்பட்டதைக் கண்ட அமரர்கோனும் அமரர்களும், 'ரொம்ப சரி, ரொம்ப நல்லது' என்று காகுத்தனைப் பாராட்டினார்கள். (23–26)

மிகவும் மகிழ்ச்சியடைந்த தேவருலகத் தலைவனும், மற்ற தேவர்களும் ஆனந்தம் பொங்க விசுவாமித்திரரிடம் இவ்வாறு கூறினார்கள்— ''கௌசிக மாமுனிவரே! உங்களுக்கு நல்வாழ்த்துக்கள்! இந்திரன் முதலிய எல்லா தேவர்களும், மருத் கணங்களும் இராமனுடைய இந்தக் காரியத்தால் மிகவும் மனநிறைவு பெற்றுள்ளார்கள். நீங்கள் இராமனுக்கு உங்கள் பேரன்பைக் காட்டவேண்டும். பிரஜாபதி பிருசாஸ்வனுடைய சத்தியபராக்கிரமமுடைய புத்திரர்களை (அஸ்திரங்களை) தவ ஆற்றலால் பெற்றுள்ள நீங்கள், இராகவனுக்கு அறிமுகப்படுத்த வேண்டும். (அஸ்திர மந்திரங்களை உபதேசிக்க வேண்டும்.) பிரும்மன்! இவர் அதற்குத் தகுதியுடையவர். உங்களை அனுசரித்துச் செல்வதில் உறுதியாக இருப்பவர். அரசகுமாரரான இராமனால் தேவர்களின் நலனுக்காக மகத்தான ஒரு செயல் செய்யப்பட வேண்டியுள்ளது.'' இவ்வாறு மகிழ்ச்சியுடன் கூறிவிட்டு, எல்லா தேவர்களும் விசுவாமித்திரரை மனதார வாழ்த்திவிட்டு வந்தபடியே திரும்பிச் சென்றார்கள். அப்போது சந்தியாகாலம் வந்தது. (27–31)

தாடகா வதத்தால் மிகவும் திருப்தியடைந்த முனிபுங்கவர், இராமனை உச்சிமுகர்ந்து இவ்வாறு கூறினார்— ''இனிய காட்சி தரும் இராமனே! இந்த இரவு இங்கேயே தங்குவோம். நாளை பொழுது விடிந்ததும் என்னுடைய ஆசிரமத்திற்குச் செல்வோம்.'' விசுவாமித்திரரின் சொற்களைக் கேட்டு மனமொப்பி, அவ்விரவு தாடகாவனத்திலேயே சுகமாகத் தங்கினார், தசரத குமாரன். அந்த வனம் சாபத்திலிருந்து அந்த கணமே விடுபட்டு, குபேரனுடைய நந்தவனமான சைத்ரரதம் போல் வளம் கொழித்துப் பிரகாசித்தது. இராமன், அந்த யட்சப் பெண்ணைக் கொன்றதால் தேவர்கள், சித்தர்கள் முதலியோரால் வெகுவாக பாராட்டப்பட்டார்; முனிவருடன்கூட அங்கேயே தங்கினார். வைகறைப்பொழுதில் முனிவர் அவரைக் கண்மலரச் செய்தார். (32–36)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
இருபத்தாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்தேழு

அஸ்திரங்களை ஒப்படைத்தல்

அன்றிரவை அங்கே கழித்தபின், மிக்க புகழ் பெற்றவரான விசுவாமித்திரர், இராகவனைக் கொண்டாடி இனிய சொற்களால் பேசலுற்றார்— ''ராஜகுமாரா! உனக்கு மங்களம் உண்டாகட்டும். நான் மனக்களிப்புடன் இருக்கிறேன்; மனம் நிறைந்து பிரீதியுடன் எல்லாவித அஸ்திரங்களையும் உனக்குக் கொடுக்கப் போகிறேன். திவ்யமான அந்த அஸ்திரங்களைக் கொண்டு யுத்தத்தில் எதிரிகளை வசப்படுத்தலாம். தேவ–அசுர–கந்தர்வ–உரகக் கூட்டத்தினரையும் எதிர்த்து நின்று வெற்றியடைவாய். அப்படிப்பட்ட தெய்விகமான அஸ்திரங்களை எல்லாம் முழுமையாக உனக்குத் தருகிறேன். இராகவா! மகிமை பொருந்திய தண்டசக்கரம் உனக்குத் தருகிறேன். (1–4)

வீரனே! தருமசக்கரம், காலசக்கரம், விஷ்ணுசக்கரம், மிகக் கொடியதான ஐந்திரம், வஜ்ரம், சிவனை தேவதையாக உடைய சூலம், பிரும்மசிரஸ் என்ற அஸ்திரம், ஐஷீகம் மற்றும் பெருந்தோளனே! இணையில்லாத பிரும்மாஸ்திரமும் தருகிறேன். ஒளிவீசும் மோதகீ, சிகரீ என்ற இரு கதாயுதங்கள், தருமபாசம், காலபாசம் ஆகியவற்றையும், இராமா! நான் உனக்குத் தரப்போகிறேன். (5–8)

உத்தமமான வருணபாசமும் வருணாஸ்திரமும் கொடுக்கிறேன். இரு இடிகள் கொடுக்கிறேன். ஒன்று காய்ந்து போகச் செய்யும்; மற்றொன்று தண்ணீரைப் பொழியும். பினாகாஸ்திரம், நாராயணாஸ்திரம், அக்னிக்குப் பிரியமானதும் சிகரம் என்ற பெயருடையதுமான ஆக்னேயாஸ்திரம், ப்ரதனம் என்ற வாயவ்யாஸ்திரம், ஹயசிரஸ் என்ற அஸ்திரம், க்ரௌஞ்சம் என்னும் அஸ்திரம் ஆகியவைகளையும் தருகிறேன். (9–11)

பேரரசன் நற்புதல்வனே! இரண்டு சக்தி (வேல்) ஆயுதங்களையும், கங்காளம், பயங்கரமான முஸலம், காபாலம், கங்கணம் முதலிய எல்லாவற்றையும் அரக்கர்களை அழிப்பதற்காகக் கொடுக்கிறேன். வித்யாதரர்களைத் தேவதையாக உடைய நந்தனம் என்ற பெயர் கொண்ட மகாஸ்திரம் மற்றும் உயர்ந்த வாளையும் உனக்குக் கொடுக்கிறேன். கந்தர்வர்களைத் தேவதையாகக் கொண்ட மானவாஸ்திரம், ப்ரஸ்வாபனம்–ப்ரசமனம் என்ற இரு அஸ்திரங்கள் மற்றும் (சூரியனை அதிதேவதையாகக் கொண்ட) ஸௌராஸ்திரமும் உனக்குத் தருகிறேன். வர்ஷணம், சோஷணம், ஸந்தாபனம், விலாபனம், மாதனம் (வசீகரித்தல், வற்றச் செய்தல், தவிக்கச் செய்தல், துக்கப்படுத்துதல், மதிமயக்குதல் ஆகிய ஐந்து செயல்களைச் செய்வது) மற்றும் வெல்ல முடியாததான மன்மதாஸ்திரம், மோகனம் என்ற பைசாச அஸ்திரம் ஆகியவைகளைப் பெற்றுக் கொள்வாய், ஆண்சிங்கமே! (12–16)

தாமஸாஸ்திரம், மகாபலம் கொண்ட ஸௌமம், ஸம்வர்த்தம், வெல்லுதற்கரிய மௌஸலம் (உலக்கை), ஸத்யம் என்ற அஸ்திரம், சிறப்பான மாயாதரம் (மாயையாகச் செயல்படுவது), சூரியதேவனுடையதும், தேஜப்ரபம் என்ற பெயருடையதும், பிறர் வல்லமையை அபகரிப்பதுமான அஸ்திரம், சந்திரனை தேவதையாகக் கொண்ட சிசிரம் என்ற குளிர்ச்சியான அஸ்திரம், (விசுவகர்மாவின்) கொடியதான த்வாஷ்ட்ரம், பகனை அதிதேவதையாகக் கொண்டதும் ஈவு–இரக்கமற்றதுமான சீதேஷுரீ (குளிரைப் பொழியும் அம்பு), மானவாஸ்திரம் ஆகிய இவையனைத்தும் தம் விருப்பப்படி உருவம் எடுக்கக்கூடியவை; மிகவும் ஆற்றல் உடையவை; முற்றிலும் நம்பத்தகுந்தவை. அரசகுமாரனே! இப்போதே இவைகளை ஏற்றுக் கொள்வாய்.'' (17–20)

பிறகு, அவர் சுத்தம் செய்துகொண்டு (ஆசமனம் செய்து), கிழக்கு நோக்கி அமர்ந்து கொண்டவராய், மனப்பூர்வமான திருப்தியுடன் மேற்சொன்ன அஸ்திரங்களுக்கெல்லாம் உரித்தான மந்திரங்களை உபதேசித்து அருளினார். இவ்வளவு மந்திரங்களையும் தேவர்களாலும்கூட தாங்க

முடியாது. அப்படிப்பட்ட மகோன்னத மந்திரங்களை விப்ரராகிய விசுவாமித்திரர் (க்ஷத்திரியரான) இராமனுக்குத் தெரிவித்தார் (உபதேசித்தார்). முனிவர் மந்திரங்களைச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, அவைகள் பெருமதிப்புக்குரிய தேவதை வடிவம் தாங்கி, இராகவன் எதிரே வந்து நின்றன. எல்லா அஸ்திர தேவதைகளும் கைகளைக் கூப்பிக் கொண்டு உள்ளம் மகிழ, இராமனிடம் சொன்னார்கள்— (21–23)

''இராகவனே! நாங்கள் எல்லோரும் தங்கள் நம்பிக்கைக்கு உரியவர்கள். தங்கள் பணியாளர்கள். தங்களை வாழ்த்தி வணங்குகிறோம். தாங்கள் என்ன ஆணையிடுகிறீர்களோ, அவ்வாறே செய்து முடிப்போம்.'' ஆற்றல் மிகுந்த அவர்கள் இவ்வாறு கூறியதும் சித்தம் மகிழ்ந்த இராமன், கையால் தொட்டு அவர்களை அங்கீகரித்து அருளினார். ''நான் மனத்தால் நினைக்கும்போது வாருங்கள்'' என்று கூறி, அவர்களை அனுப்பி வைத்தார். பின்னர், மிக்க ஒளி பொருந்திய இராமன் மனநிறைவுடன் மாமுனிவர் விசுவாமித்திரரைப் பணிந்து மேலே தொடர்ந்து செல்வதற்கு ஆயத்தமானார். (24–26)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
இருபத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்தெட்டு

செலுத்திய அஸ்திரங்களைத் திரும்ப அழைப்பது எப்படி?

அஸ்திரங்களைப் பெற்றுக்கொண்டு முகமலர்ச்சியுடன் தூயவராகச் சென்று கொண்டிருந்த இராமன், விசுவாமித்திரரைப் பார்த்துச் சொன்னார்— ''தேவர்களாலும் அசுரர்களாலும் வெற்றி கொள்ளமுடியாத அஸ்திரங்களைப் பெற்றுக் கொண்டுவிட்டேன். ஐயனே! செலுத்திய அஸ்திரங்களைத் திரும்பவும் அழைத்துக் கொள்வது எப்படி? என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.'' காகுத்தன் இவ்வாறு கேட்டவுடன் பேரறிவாளரும், நெஞ்சுறுதி உடையவரும், நியமங்களை அனுஷ்டிப்பவரும், தூயவருமான விசுவாமித்திரர், செலுத்திய அஸ்திரங்களை (அவைகளின் வேலை முடிந்தவுடன்) திரும்பப் பெறுவதற்கான மந்திரங்களை உபதேசித்தார். (1–3)

''சத்தியவான், சத்தியகீர்த்தி, த்ருஷ்டம், ரபஸம், பிரதிஹாரதரம், பிராங்முகம், அவாங்முகம், லக்ஷ்யம், அலக்ஷ்யம், த்ருடநாபம், சுநாபம், தசாக்ஷம், சதவக்த்ரம், தசசீர்ஷம், சதோதரம், பத்மநாபம், மஹாநாபம், துந்துநாபம், ஸ்வநாபம், ஜ்யௌதிஷம், க்ருசனம், நைராஸ்யம், விமலம், யோகந்தரம், விநித்ரம், தைத்யம், ப்ரதமனம், சுசிர்பாஹு, மஹாபாஹு, நிஷ்குலி, விருசி, ஸார்சிமாலி, த்ருதிமாலி, வ்ருத்திமான், ருசிரம், பித்ரியம், ஸௌமனஸம், விதூதம், மகரம், கரவீரகரம், தனம், தான்யம், காமரூபம், காமருசி, மோஹனம், மாரணம், ஜ்ரும்பகம், ஸர்வநாபம், ஸந்தானம், வரணம் ஆகிய ப்ருசாஸ்வனுடைய பிள்ளைகள் – காந்தி மிக்கவர்கள்; விருப்பம் போல் உருவம் எடுக்கக் கூடியவர்கள் – இவைகளைப் பெற்றுக் கொள்வாயாக! வாழ்க நீ! இவைகளை ஏற்றுக் கொள்வதற்கு மிகவும் தகுதி வாய்ந்தவன், நீ!'' ''சரி, அப்படியே!'' என்று நெஞ்சார்ந்த மகிழ்ச்சியுடன் காகுத்தன் கூறினார். (4–11)

தெய்விக ஒளி வீசும் உடல் உருவத்தோடு தோன்றிய அவர்களில் சிலர் நெருப்பைப் போன்றிருந்தார்கள்; சிலர் புகை நிறத்தோடிருந்தார்கள்; சந்திர–சூரியனுக்கு ஒப்பாக இருந்தார்கள், சிலர். தலைவணங்கி கைகளைக் கூப்பிக்கொண்டு இருந்த அவர்கள் இனிமையான குரலில் சொன்னார்கள்— ''ஆண்சிங்கமே! இதோ நாங்கள் வந்திருக்கிறோம். தங்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்று ஆணையிடுங்கள்.'' (இதைக் கேட்டதும் இராமன் சொன்னார்—) ''என் நினைவில் இருந்து கொண்டிருங்கள். உங்களுக்கு வேலை இருக்கும்போது என் உதவிக்கு

வாருங்கள். உங்கள் விருப்பம்போல் செல்வீர்களாக'' என்று ரகுநந்தனன் கூறினார். பின்னர், அவர்கள் இராமனை வலம் வந்து விடைபெற்றுச் சென்றார்கள். (12–15)

''அப்படியே'' என்று விடையிறுத்து, வந்தபடியே அவர்கள் சென்றார்கள். அஸ்திரங்கள் அனைத்தையும் அறிந்து கொண்டுவிட்ட இராமன், தொடர்ந்து பயணத்தை மேற்கொண்டு சென்று கொண்டிருக்கும்போது மாமுனிவர் விசுவாமித்திரரைப் பார்த்து வினயமும் இனிமையும் தோன்றக் கூறினார்— ''எதிரில் காணப்படும் மலையைச் சுற்றிலும் மேகக் கூட்டத்தைப் போல் ஏராளமான மரங்கள் செழிப்பாக வளர்ந்துள்ளன. இவைகளைக் காணும்போது என் மனத்திற்கு உல்லாசம் ஏற்படுகிறது. நிறைய மான்கள் காணப்படுகின்றன. கண்ணுக்கு இனியதாகவும், பார்ப்பதற்கு உகந்ததாகவும் இந்த இடம் இருக்கிறது. (16–18)

பலவிதமான பறவைகளின் வெவ்வேறான இனிய ஒலிகள் செவிக்கு இன்பம் அளிக்கின்றன. ஐயனே! மனம் பதைக்கச் செய்யும் பயங்கரமான பிரதேசத்தை நாம் கடந்து வந்து விட்டோம் என்று, இந்த இடத்தின் சுகமான சூழ்நிலைகளைப் பார்த்ததும் எனக்குத் தோன்றுகிறது. முனிவரே! இது எந்த மகரிஷியினுடைய ஆசிரமம் என்பதை எனக்குக் கூறுங்கள். (19,20)

மாமுனிவரே! அந்தணர்களைக் கொல்பவர்களும், தீய நடத்தை கொண்டவர்களும், தங்கள் வேள்விக்கு இடையூறு செய்கின்றவர்களும், கெடுமதியாளர்களுமான பாவிகள் வசிக்கும் இடத்திற்கு வந்துவிட்டோமா? ஐயனே! அவர்கள் வசிக்கும் இடம் எது? தாங்கள் யக்ஞம் செய்யும் இடம் எது? வேள்வியைக் காப்பதற்கு எம்மாதிரியான நடவடிக்கை எடுக்க வேண்டும்? என்னால் எந்த அரக்கர்கள் கொல்லப்பட வேண்டும்? பெரியவரே! இவைகளைப் பற்றியெல்லாம் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.'' (21,22)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
இருபத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்தொன்பது

'சித்தாசிரமம்' என்ற புண்ணிய பூமி

அளவிட முடியாத பெருமைகள் பெற்ற அந்த வனத்தைப் பற்றிக் கேட்டதும், விசுவாமித்திரர் விஸ்தாரமாகச் சொல்ல ஆரம்பித்தார்— ''பெருந்தோளனே! இராமா! தேவாதிதேவரான மகாவிஷ்ணு தவம் செய்வதற்காக பல ஆண்டுகள், பல யுகங்கள் இங்கே வசித்து வந்தார். இந்த இடம் முன்பு வாமனருடைய ஆசிரமமாக இருந்தது. தவம் செய்து அதில் அவர் சித்தியை அடைந்ததால், இந்த இடம் சித்தாசிரமம் என்று பெயர் பெற்றது. அதே காலத்தில், விரோசனன் என்ற அசுரனின் புத்திரனான பலி என்பவன் இந்திரன் முதலான எல்லா தேவர்களையும், மருத் கணங்களையும் வென்று, மூன்று உலகத்திலும் பிரசித்தமாக அரசாட்சி செய்து கொண்டிருந்தான். (2–5)

அசுரர் தலைவனான பலிச் சக்கரவர்த்தி மிகப்பெரிய யக்ஞம் செய்தான். பலி, யாகதீட்சை ஏற்றுக் கொண்டிருக்கும் அந்தச் சமயத்தில், அக்னியை முன்னிட்டுக் கொண்டு எல்லா தேவர்களும் இந்த ஆசிரமத்திற்கு நேராகவே வந்து, 'விஷ்ணு பகவானே! விரோசனன் மகனான பலி உத்தமமான யக்ஞத்தைச் செய்து வருகிறான். அந்த வேள்வி முடிவடைவதற்குள், எங்களுடைய காரியத்தை நிறைவேற்றிக் கொடுங்கள். எல்லா இடங்களிலிருந்தும் யாசகர்கள் அவனிடம் வந்து தானம் பெற்றுச் செல்கிறார்கள். யார் எதைக் கேட்டாலும், அதை அப்போதே கொடுத்து விடுகிறான். ஆகவே, தேவர்களின் நலனுக்காக, தாங்கள் மாயையை ஏற்று, சிறிய (வாமன) வடிவம் தாங்கி, எங்களுக்கு மங்களத்தைச் செய்ய வேண்டும்.' (6–9)

இதனிடையில், இராமா! அக்னிக்கு ஒப்பான தேஜஸை உடைய காசியபர் தன் தருமபத்தினி அதிதியுடன்கூட, பல ஆயிரம் தேவ ஆண்டுகள் தவம் செய்து, அந்த விரதத்தைப் பூர்த்தி செய்து, வரங்களைக் கொடுக்கும் பகவானைப் பிரீதி செய்தார். (அப்போது அவர் முன் பகவான் தோன்றினார்.) 'தவத்தாலேயான திருவுரு, தவக்கூட்டங்களின் தொகுதி, உருவெடுத்து வந்த தவம், தவச்செல்வர் ஆகியவரும், புருஷோத்தமருமான தங்களைத் தீவிரமாக செய்யப்பட்ட தவத்தின் பயனாகத் தரிசிக்கிறேன். பிரபு! தங்கள் சரீரத்தில் இவ்வுலகங்கள் அனைத்தையும் காண்கிறேன். தாங்கள் அநாதியானவர்; இன்னதென்று புரிந்து கொள்ள முடியாதவர். தங்களை நான் சரணமடைகிறேன்.' அனைத்து மாசுகளும் நீங்கிய காசியபரைப் பார்த்து, ஹரி சொன்னார்— (10–13)

'நீ வாழ்க! என்னிடம் ஏதாவது வரம் கேள். நீ வரம் பெறத்தக்கவன் என்று நான் தீர்மானமாக எண்ணுகிறேன்.' இதைக் கேட்டதும், மரீசியின் புதல்வரான காசியபர் பதில் சொன்னார்— 'என் பத்தினி அதிதி, தேவர்கள் மற்றும் என் சார்பிலும் பிரார்த்திக்கிறேன். பகவானே! மனம் மகிழ்ந்திருக்கும் தாங்கள் எனக்கு ஒரு வரம் தந்தருள வேண்டும். மாசற்ற மாமணியே! பகவானே! என் பத்தினியான அதிதியிடம் மகனாகப் பிறக்கவேண்டும். அசுரர்களை வீழ்த்துபவரே! இந்திரனுடைய இளைய சகோதரனாகத் தாங்கள் ஆகவேண்டும். (14–16)

துயரத்தால் தவித்துக் கொண்டிருக்கும் தேவர்களுக்கு உதவி செய்யக் கடவீர். சித்தாசிரமம் (எண்ணங்கள் கைகூடும் இடம்) என்ற இந்த இடத்தின் பெயர், தங்கள் அருளால் பொருள் பொருந்தியதாக ஆகவேண்டும். பகவானே! காரியம் நடைபெறுவதற்காகத் தாங்கள் இங்கிருந்து இப்போதே எழுந்து செல்லுங்கள்.' பின்னர், மிகவும் தேசுடைய மகாவிஷ்ணு அதிதியை (கர்பத்தை) அடைந்தார். (அவருக்கு மகனாகப் பிறந்தார்.) குறுகிய (வாமன) வடிவம் கொண்டு விரோசனன் புதல்வன் பலி இருக்குமிடம் சென்றார். மூன்றடி நிலம் யாசகமாகக் கேட்டார், அவனிடம். ஓர் அடியால் இம்மண்ணுலகைப் பெற்றார். (17–19)

எல்லா மக்களின் நலனிலும் அக்கறை கொண்ட பகவான், இன்னொரு அடியால் மேலுலகத்தைப் பறித்துக் கொண்டார். (மூன்றாவது அடியால்) தன் பேராற்றலால் பலியை அடக்கி, மகேந்திரனுக்கு மீண்டும் உலகங்களைக் கொடுத்தார். மகாதேஜஸ்வியான மகாவிஷ்ணு, மீண்டும் மூவுலகங்களையும் இந்திரனிடம் ஒப்படைத்தார். முன்பு அவரால் வசிக்கப்பட்ட இந்த ஆசிரமம் மனக்கிலேசத்தையும் உடல் களைப்பையும் தீர்க்கக் கூடியது. வாமனரிடத்தில் எனக்குள்ள பக்தி காரணமாக, நான் இங்கே வசித்து வருகிறேன். வேள்விக்கு இடையூறு செய்யும் அரக்கர்கள் இந்த இடத்திற்குத்தான் வருகிறார்கள். ஆண்புலியே! தீய நடவடிக்கைகளில் ஈடுபடும் அவர்களை இங்கேதான் ஸம்ஹரிக்க வேண்டும். இராமா! இனி நாம் புனிதமான சித்தாசிரமம் செல்வோம்.'' (20–23)

இவ்வாறு மகிழ்ச்சியுடன் கூறி, இராம–லட்சுமணர்களின் கைகளைப் பற்றிக் கொண்டு, ஆசிரமத்தின் எல்லையை அடைந்ததும் அவர்கள் திருமுகத்தைப் பார்த்தார், மாமுனிவர். புனர்வசு என்ற இரு தாரகைகளின் இடையில் பனிமூட்டம் இல்லாத முழு நிலவின் பேரொளி அவர்கள் முகத்திலிருந்து வீசியதாகத் தோன்றியது. அவரைப் பார்த்தவுடன் சித்தாசிரமவாசிகளான முனிவர்கள் உடனே சட்டென்று எழுந்து வந்து வரவேற்றார்கள். தவச்செல்வரான விசுவாமித்திரரை உரியமுறையில் உபசரித்தார்கள். அவ்வாறே, அரசகுமாரர்கள் இருவரையும் அதிதிகளை வரவேற்கும் முறைப்படி வரவேற்றார்கள். எதிரிகளை அடக்க வல்லவர்களும், ரகுகுலத்திற்கு மகிழ்ச்சியைத் தருபவர்களுமான அவ்விரு ராஜகுமாரர்களும் சிறிதுநேரம் ஓய்வெடுத்துக் கொண்ட பின்னர், கைகளைக் கூப்பிக்கொண்டு வணக்கத்துடன் முனிவரைப் பார்த்துக் கூறினார்கள்— (24–27)

''முனிபுங்கவரே! தங்களை வணங்குகிறோம். தாங்கள் இப்போதே யாகதீட்சை ஏற்றுக் கொள்ளுங்கள். தாங்கள் கூறியபடி, சித்தாசிரமம் என்ற இந்தப் பெயர் பொருள் உள்ளதாக

ஆகட்டும்.'' இவ்வாறு சொல்லப்பட்டவுடன் மாமுனிவரான விசுவாமித்திரர், புலன்களை வசப்படுத்தி, கட்டுப்பாடுகளை விதித்துக் கொண்டு தீட்சையை ஏற்றார். ராஜகுமாரர்கள் இருவரும் நிம்மதியாக இரவைக் கழித்துவிட்டு, விடியற்காலையில் கண்விழித்து, காலை சந்தியாவந்தனம் செய்துவிட்டு, மிகவும் தூயவர்களாக, ஜபிக்க வேண்டிய மந்திரங்களை முறைப்படி ஜபித்த பின்னர், அக்னிஹோத்ரம் செய்து முடித்து, பரமசாந்தமாக வீற்றிருக்கும் விசுவாமித்திரரின் பாதங்களைப் பணிந்தார்கள். (28–31)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
இருபத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பது

வேள்வி காத்தல்

இடத்தையும் காலத்தையும் கருத்தில் கொண்டு உசிதமான முறையில் பேச வல்லவர்களும், எதிரிகளை அடக்குபவர்களுமான அவ்விரு ராஜகுமாரர்களும், அந்த இடத்திற்கும் சந்தர்ப்பத்திற்கும் ஏற்ற சொற்களை கௌசிகரிடம் சொன்னார்கள்— ''மாமுனிவரே! இரவுச்சுற்றிகளான அந்த அரக்கர் இருவரும் எப்போது தண்டிக்கப்பட வேண்டும்? அந்த நேரத்தை இழந்துவிடக் கூடாதல்லவா? ஆகவே, இதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறோம்.'' போர் செய்வதற்குத் துடிப்புடன் நிற்கும் காகுத்தர்கள் இருவரும் இவ்வாறு கூறியதைக் கேட்டதும், முனிவர்கள் எல்லோரும் அரசகுமாரர்களைப் பாராட்டிப் பேசினார்கள். (அவர்கள் சொன்னார்கள்—) ''இப்போதிருந்து ஆறு இரவுகள், நீங்களிருவரும் கண்ணும் கருத்துமாகக் காவல் செய்யவேண்டும். விசுவாமித்திரர் யாகதீட்சை ஏற்றுக் கொண்டிருப்பதால் பேச்சுப் பேசமாட்டார்.'' (1–4)

இதைக் கேட்ட அரசகுமாரர்கள் இரவு–பகலாக ஆறு நாட்கள் கண்கொட்டாமல் அந்த தபோவனத்தைப் பாதுகாத்து நின்றார்கள். சிறந்த வில்லாளிகளும், வீரர்களும், எதிரிகளை அடக்குபவர்களுமான அவ்விருவரும் மிகவும் கவனமாக இருந்து, முனிசிரேஷ்டரான விசுவாமித்திரரை(யும், மற்ற முனிவர்களையும்) பாதுகாத்தார்கள். (ஐந்து) நாட்கள் கழிந்து ஆறாவது நாள் வந்தது. ''மனக்கலக்கமில்லாமல் துணிச்சலுடன் இரு'' என்று லட்சுமணனிடம் இராமன் சொன்னார். (5–7)

யுத்தம் செய்வதில் ஆர்வத்துடன் இருந்த இராமன் இவ்வாறு சொல்லிக் கொண்டிருக்கும்போது, உபாத்தியாயர் (பிரும்மா என்ற பொறுப்பில் உள்ளவர்), புரோகிதர் (சடங்குகளைக் கண்காணிப்பவர்) மற்றும் பிற ரித்விக்குகளால் சூழப்பெற்ற யாக குண்டத்தில் வேள்வித் தீ கொழுந்துவிட்டுப் பிரகாசமாக எரிந்தது. (இப்படி வேள்விக் குண்டத்தில் நெருப்பு ஜொலித்தால் அரக்கர்கள் வருகிறார்கள் என்ற முன்னறிவிப்பாகக் கொள்ளவேண்டும்.) (8)

தர்பம், சமஸம் (என்ற பாத்திரம்), ஸ்ருக் (என்ற கரண்டி), சமித்துக்கள் (அரசு போன்ற யாகயோக்கியமான மரங்களின் குச்சிகள்), மலர்களின் கூட்டங்கள் மற்றும் ரித்விக்குகளால் (வேள்வி இயற்றுபவர்களால்) சூழப்பட்ட விசுவாமித்திரரால் அழகாக விளங்கிய அந்த வேள்விக்களம் பிரகாசமாகத் தீச்சுவாலைகளை வீசியது. வேள்வி நடத்தும் முறைப்படி (சடங்குகளில் குறைவு இல்லாமல்) உரிய மந்திர கோஷத்துடன் அந்த வேள்வி நடந்து கொண்டிருந்தது. அப்போது பயங்கரமான பேரொலி ஆகாயத்தில் கேட்டது. (அரக்கர்கள் வந்துவிட்டார்கள் என்பது உறுதியாயிற்று.) (9,10)

மழை காலத்தில் ஆகாயத்தை மறைத்துக் கொண்டு மேகங்கள் மழையைப் பொழிவதைப் போல, மாயையில் வல்லவர்களான அரக்கர்கள் (ஆகாயத்தை மறைத்துக் கொண்டு பெருங்கூட்டமாக) ஓடி வந்தார்கள். பேருடல் படைத்த மாரீசனும் சுபாகுவும் பணியாளர்கள் புடைசூழ ஓடி வந்து அக்னி குண்டத்தின் மேல் ரத்தமாரி பொழிந்தார்கள். வேள்விக்களத்தைச் சுற்றிலும் ரத்தம் பொழிந்திருப்பதைக் கண்டதும், ('அவர்கள் எங்கே இருந்து கொண்டு இவ்வாறு செய்கிறார்கள்?' என்று அறிந்து கொள்வதற்காக,) இங்குமங்கும் ஓடிச் சென்ற இராமன், ஆகாயத்தில் அவர்களைப் பார்த்தார். திடீரென்று வந்து தாக்கும் அவர்களைக் கண்டு தாமரைக்கண்ணரான இராமன், லட்சுமணனைப் பார்த்து இவ்வாறு கூறினார்— (11–14)

''லட்சுமணா! பார். புலாலுண்பவர்களும் துராசாரர்களுமான இந்த அரக்கர்களை மேகக் கூட்டத்தைச் சிதறடிக்கும் காற்றைப் போல் மானவாஸ்திரத்தைச் செலுத்தி விரட்டிவிடுகிறேன். இதில் சந்தேகமில்லை. மாயாவிகளும் கோழைகளுமான இவர்களை, நான் கொல்ல விரும்பவில்லை.'' இவ்வாறு சொல்லிவிட்டு வில்லில் பாணத்தைத் தொடுத்து, பெருஞ்சத்தமும் பேரொளியும் கொண்ட மானவம் என்ற அஸ்திரத்தை மிகவும் கோபத்துடன் மாரீசனின் மார்பை நோக்கிச் செலுத்தினார், இராமன். பேராற்றல் படைத்த அந்த அஸ்திரத்தின் தாக்குதலைத் தாங்க மாட்டாமல், சரியாக நூறு யோஜனை தூரத்திற்கப்பால் சமுத்திரத்தில் போய் விழுந்தான் (மாரீசன்). மகாபலம் கொண்ட சீதேஷு எனப்படும் மானவாஸ்திரத்தால் தாக்கப்பட்டு, பிரக்ஞை இழந்து, மூச்சுத் திணறித் தத்தளித்துக் கொண்டிருக்கும் அவனைக் காட்டி, லட்சுமணனிடம் இவ்வாறு கூறினார்— (15–18)

''லட்சுமணா! இந்த மானவாஸ்திரத்தின் தருமநெறியைப் பார். என் உள்ளத்தைப் புரிந்துகொண்டு, அவனை இழுத்துக் கொண்டு போய் கடலில் மூழ்கடித்தது. ஆனால் கொல்லவில்லை. இரக்கமற்றவர்கள், முறைதவறி நடப்பவர்கள், பாவச் செயல்களிலேயே ஈடுபட்டிருப்பவர்கள், வேள்விகளை நாசம் செய்பவர்கள், மாமிசம் உண்பவர்கள் ஆகிய மீதியுள்ள மற்ற அரக்கர்களையும் வதம் செய்யப் போகிறேன்.'' இவ்வாறு லட்சுமணனிடம் கூறிவிட்டு, தன்னுடைய செயல்வேகத்தைக் காட்டுவதுபோல, பெரிய வில்லில் அம்பு கோர்த்து ஆக்னேயம் என்ற அஸ்திரமாகச் செய்து, சுபாகுவின் மார்பை நோக்கி விடுத்தார், இராமன். அதனால், உடல் பிளக்கப்பட்ட அவன் தரையில் விழுந்தான். (அவன் இறந்ததும்) பெரும் புகழ் படைத்த இராமன் மற்றவர்களை, வாயவ்யம் என்ற அஸ்திரத்தால் அழித்து ஒழித்தார். (19–22)

மிகவும் தயவுள்ள இராமன், வேள்விகளை நாசம் செய்யும் எல்லா அரக்கர்களையும் கொன்றதன் மூலம் முனிவர்களுக்கு மிக்க ஆறுதலைத் தந்தார். இந்திரன், முன்னர் ஒரு காலத்தில் அசுரர்களை அழித்தபோது முனிவர்களால் பாராட்டப்பட்டதைப் போல, இப்போது இராமனைச் சித்தாசிரம முனிவர்கள் பாராட்டினார்கள். பின்னர், வேள்வி நிறைவடைந்ததும் மாமுனிவர் விசுவாமித்திரர், எல்லாப் பக்கங்களும் இடையூறு–இடைஞ்சல் இல்லாமல் நிர்மலமாய் இருப்பதைப் பார்த்து, காகுத்தனிடம் இவ்வாறு கூறினார்— ''மகா பராக்கிரமசாலியே! என் விருப்பத்தை நிறைவேற்றிவிட்டாய்! தந்தையின் உத்தரவுப்படி நடந்து கொண்டாய். கீர்த்திமிக்கவனே! சித்தாசிரமம் என்ற இந்த இடத்தின் பெயரை உண்மையாக்கிவிட்டாய்!'' என்று இராமனை வெகுவாகப் புகழ்ந்துரைத்தார். பின், அவர்களுடன்கூட சந்தியாகால அனுஷ்டானங்களைச் செய்தார். (23–25)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
முப்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்தொன்று
மிதிலையை நோக்கிப் புறப்பாடு

தங்களுக்குக் கொடுக்கப்பட்ட காரியத்தை வெற்றிகரமாக முடித்துவிட்டதால் நிரம்பிய மனம் கொண்ட இராம–லட்சுமணர்கள் நெஞ்சார மகிழ்ந்து, அவ்விரவை அங்கேயே கழித்தார்கள். பொழுது புலர்ந்து காலை நேரம் வந்தவுடன், காலை வேளைக்குரிய ஜப–ஹோமங்களைச் செய்துவிட்டு, விசுவாமித்திரரும் மற்ற முனிவர்களும் வீற்றிருந்த இடத்திற்கு வந்தார்கள். அக்னியைப் போல் ஜொலித்துக் கொண்டிருந்த முனிசிரேஷ்டரைப் பணிந்து வணங்கி, இனிமையாகப் பேச வல்லவர்களான அவ்விருவரும் இனிய மொழிகளைப் பேசலுற்றார்கள்— ''முனிவர் முதல்வரே! இதோ தங்கள் பணியாளர்களான நாங்கள் இருவரும் வந்திருக்கிறோம். தங்கள் தேவைக்கேற்றபடி எங்களுக்கு உத்தரவிடலாம். சொல்லுங்கள், இப்போது நாங்கள் என்ன செய்ய வேண்டும்?'' அவர்களால் இவ்வாறு சொல்லப்பட்டதும், முனிவர்கள் அனைவரும் விசுவாமித்திரர் முன்னிலையில் இராமனிடம் கூறினார்கள்— (1–5)

''மனிதருள் மாணிக்கமே! பரம தார்மிகரான மிதிலை மன்னர் ஜனகருடைய ஏற்பாட்டில் யக்ஞம் நடைபெறப் போகிறது. நாங்கள் அங்கே செல்லப் போகிறோம். ஆண் சிங்கமே! நீயும் எங்களுடன் வரப் போகிறாய். அங்கு அற்புதமான, சிறந்த வில் ஒன்றைக் காண்பாய். நிகரற்ற பலமும் பயங்கரமும் அற்புத ஒளியும் கொண்ட அந்த வில், முன்னொரு காலத்தில், வேள்விச் சாலையில் தேவர்களால் ஜனகரின் முன்னோருக்குக் கொடுக்கப்பட்டது. தேவ–கந்தர்வ–அசுர–அரக்கர்கள் ஆகிய எவராலும் அந்த வில்லில் நாணேற்ற முடியவில்லை என்னும்போது மனிதர்களைப் பற்றி என்ன சொல்ல! அவர்களால் ஒருக்காலும் முடியாது. அந்த வில்லினுடைய பலத்தை அறிந்துகொள்ள விரும்பிய, பேராற்றல் படைத்த அரசகுமாரர்கள் பலர் முயன்றும் நாணேற்றக்கூட முடியவில்லை. அந்த வில்லை மிதிலை மன்னருடைய அரண்மனையில் காணப் போகிறாய். காகுத்தனே! காண்பதற்கரிய வேள்வியையும் காண்பாய். (6–11)

அப்போதைய மிதிலை மன்னன், தன்னுடைய வேள்விக்குப் பரிசாக, இந்த வில்லை விரும்பிக் கேட்டார். அதனால், எல்லா தேவர்களும் (பரமேசுவரன் உட்பட) அழகிய இடைப்பகுதியை உடைய இந்த வில்லைக் கொடுத்தார்கள். அந்த மன்னனுடைய அரண்மனையில், பூசனைக்குரிய தேவதையாக, தினமும் பூஜிக்கப்பட்டு, நறுமணப்புகை காட்டப்பட்டு, மணம் வீசும் அகரு முதலான பொருட்கள் பூசப்பட்டு வருகிறது.'' இவ்வாறு கூறிய பின்னர், முனிசிரேஷ்டரான விசுவாமித்திரர் முனிவர்கள் கூட்டத்தோடும், இராம–லட்சுமணர்களோடும் புறப்படுவதற்கு ஆயத்தமானார். அப்போது அவர் வனதேவதைகளை அழைத்து, ''உங்களனைவருக்கும் க்ஷேமம் உண்டாகட்டும். நோக்கம் நிறைவேறப் பெற்றவனாக சித்தாசிரமத்திலிருந்து புறப்பட்டு, கங்கைக்கு அப்பால் வடக்கே இமாலய மலைக்குச் செல்கிறேன்'' என்று கூறினார். (12–15)

உடனே, அந்த சித்தாசிரம வளாகத்தை வலம் வந்து வடக்குத் திசையை நோக்கிச் செல்லத் தொடங்கினார். பயணப்பட்டுச் சென்று கொண்டிருந்த அவரை உடனிருந்த ரிஷிகள் பின்தொடர்ந்தார்கள். அந்த யாத்திரையில் மகாதபஸ்விகள் நூறு வண்டிகளில் சென்றார்கள். சித்தாசிரமத்திலிருந்த விலங்கு–பறவைக் கூட்டங்கள் (பிரிவைத் தாங்கமாட்டாமல்) மாமுனிவர் விசுவாமித்திரரைத் தொடர்ந்து சென்றன. சிறிதுதூரம் சென்றதும், விலங்கு–பறவைக் கூட்டங்களைத் திரும்பிப் போகும்படிக் கூறினார். அவர்கள் வெகுதூரம் சென்றதும் சூரியன் மேற்குத் திசையில் இறங்கியவுடன் (சோணபத்ரம் என்ற) சோணா நதியின் கரையில் முனிவர்கள் நிம்மதியாகத் தங்கினார்கள். (16–19)

சூரியன் மறைந்தவுடன் அவர்கள் நீராடி, சாயங்கால அக்னிஹோத்திரத்தைச் செய்த பின்னர், எல்லையில்லா தேசு படைத்த விசுவாமித்திரர் அருகில் அமர்ந்து கொண்டார்கள். இராமனும்

லட்சுமணனோடுகூட முனிவர்களை வணங்கிவிட்டு, பெருமதியாளர் விசுவாமித்திரரின் எதிரே உட்கார்ந்தார். அப்போது தவப்பொலிவு திகழும் மாமுனிவர் விசுவாமித்திரரைப் பார்த்து இராமன் மிகவும் ஆர்வத்தோடு கேட்டார்— ''ஐயனே! இயற்கை வளம் நிரம்பி அழகாக விளங்கும் இந்த நாடு எவருடையது? தாங்கள் எல்லாவற்றையும் விவரமாகக் கூறி அருள்வீர்களாக.'' உத்தம தவசியான அவர், இராமன் இவ்வாறு கேட்டவுடன் உற்சாகம் பெருக, அந்த நாட்டினுடைய முழு வரலாற்றையும் முனிவர் கூட்டத்தில் சொன்னார். (20–24)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
முப்பத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்து இரண்டு

குசநாபன்– கன்னிகைகள் வரலாறு

பிரும்மாவின் புத்திரரான குசன் என்பவர் நெடுங்காலம் தவம் செய்தவர். விரதம், தருமங்களை முழுமையாகக் கற்றறிந்து, அவற்றின்படி நடந்து வருபவர். சான்றோர்களால் சிறப்பாகக் கௌரவிக்கப்படுபவர். அவர், விதர்ப ராஜகுமாரி என்ற நற்குல மங்கையிடம் பலம் மிக்கவர்களான நான்கு குமாரர்களை உற்பத்தி செய்தார். அவர்கள் குசாம்பன், குசநாபன், அதூர்த்தரஜஸ், வசு எனப்படுவார்கள். எல்லோரும் ஒளிமிக்கவர்களாகவும், உற்காசம் கொண்டவர்களாகவும் இருந்தார்கள். க்ஷத்திரிய தருமமான 'மக்களைக் காப்பாற்றுதல்' என்ற நெறியைப் பின்பற்றச் செய்ய வேண்டும் என்று விரும்பிய குசன், அறநெறியில் நிற்பவர்களும், சத்தியம் பேசுபவர்களுமான தன் புதல்வர்களைப் பார்த்து, ''மகன்களே! ராஜ்யாதிகாரம் செய்யுங்கள். அப்படிச் செய்தால் உங்களுக்கு ஏராளமான புண்ணியம் கிடைக்கும்'' என்றார். (1–4)

தந்தை குசனின் சொற்களைக் கேட்ட மாமனிதர்களான அவர்கள் நால்வரும் தனித்தனியாக நான்கு நகரங்களை நிர்மாணித்துக் கொண்டார்கள். மகாபலசாலியான குசாம்பன் 'கௌசாம்பீ' என்ற நகரத்தையும், தருமாத்மாவான குசநாபன் 'மஹோதயம்' என்ற நகரத்தையும் ஏற்படுத்தினார்கள். மன்னன் அதூர்த்தரஜஸ் 'தர்மாரண்யம்' என்ற நகரத்தையும், மன்னன் வசு 'கிரிவிரஜம்' என்ற சிறப்பான நகரத்தையும் தோற்றுவித்தார்கள். (இப்போது நாம் தங்கியிருக்கும் இடம்) சான்றோரில் சிறந்த வசுவினுடைய ராஜ்யம் வசுமதி என்பதாகும். நகரத்தைச் சுற்றிலும் ஐந்து மலைகள் விளங்குகின்றன. (5–8)

மகத நாட்டில் உற்பத்தியாகி, இங்கே பாய்ந்து வரும் அழகான இந்த நதியின் பெயர், ஸுமாகதீ. இந்த நதியின் ஓட்டம் ஐந்து மலைகளின் பள்ளத்தாக்குகளிலும் ஒரு மாலைபோல அமைந்துள்ளதைப் பார். முற்காலத்திலிருந்த வசு என்ற பேரரசருடன் இந்த மாகதீ நதிக்குக் தொடர்பு இருக்கிறது. (இதுவும் மிகவும் தொன்மையானது.) இந்த நதி தென்மேற்கிலிருந்து வடகிழக்குப் பகுதிகளுக்குச் செல்கிறது. அதன் இரு கரைகளும் வளமான வயல்வெளிகள் இருப்பதால் தானியங்கள் ஏராளமாக உற்பத்தியாகின்றன. (9,10)

ராஜரிஷியான குசநாபன், க்ருதாசீ என்ற அப்சரப் பெண்ணிடம் நூறு கன்னிகைகளை உண்டாக்கினார். அந்த நூற்றுவரும் யௌவனப் பருவத்தை அடைந்தவர்கள்; நல்ல தோற்றமுடையவர்கள்; சிறப்பாக அலங்காரம் செய்து கொண்டிருப்பவர்கள்; மழைக்கால மின்னல் கூட்டத்தைப் போல பளீரிடுபவர்கள்; உயர்ந்த அணிகலன்கள் அணிந்திருப்பவர்கள். அவர்கள் ஆடிப்பாடி விளையாடும் பூங்காவிற்கு வந்து ஆடிப்பாடியும், இசைக்கருவிகளை இசைத்தும் எல்லையில்லாத ஆனந்தத்தை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் எல்லோரும்

சர்வாங்க சுந்தரிகள். உலகில், அவர்களுக்கு ஒப்பான நற்தோற்றமுடையவரே இல்லை. மேகக் கூட்டங்களிடையே கண்சிமிட்டும் நட்சத்திரங்களைப் போல ஒளிவீசிக் கொண்டிருந்தார்கள். எல்லா நற்குணங்களும் நிரம்பி, அழகிய தோற்றம், யௌவனம் பெற்றவர்களான அவர்களைப் பார்த்து, எல்லா இடங்களிலும் உலவி வருகின்ற வாயுதேவன் இவ்வாறு சொன்னான்— (11–15)

''நான் உங்கள் எல்லோரையும் நேசிக்கிறேன். என்னுடைய மனைவிகளாக ஆகிவிடுங்கள். மனிதத்தன்மையை நீக்கிவிடுங்கள். (என்னை மணந்து கொண்டால்) சகல சௌக்கியங்களையும், நீண்ட ஆயுளையும் அடைவீர்கள். இளமை என்பது ஸ்திரமில்லாதது. குறிப்பாக, மானுடர்களுக்கு யௌவனம் என்ற பருவம் குறுகிய காலமே உள்ளது. (என்னை மணந்தால்) முடிவேயில்லாத யௌவனத்தையும் இறவாமையையும் பெறுவீர்கள்.'' பெருஞ்செயல்களையும் எளிதாகவே செய்யக்கூடிய வாயுவின் சொற்களைக் கேட்டு, அதை அலட்சியப்படுத்தி, நூறு பெண்களும் பின்வருமாறு பதில் கூறினார்கள்— (16–18)

''எல்லாப் பிராணிகளின் உடலினுள்ளும் மூச்சுக்காற்றாகப் போய் வந்து கொண்டிருக்கும் தங்கள் அளவற்ற பிரபாவத்தை நாங்கள் அறிவோம். தேவதோத்தமரே! (எங்களை விவாகம் செய்து கொள்ள விரும்புவதாகச் சொல்லி,) எங்களை ஏன் அவமதிக்கிறீர்கள்? நாங்கள் எல்லோரும் குசநாபனின் புதல்விகள். (மனிதர்கள்தாம்.) நீங்கள் தேவனாக இருந்தாலும், (உங்களுக்குச் சாபம் கொடுத்து) பதவி நீக்கம் செய்ய முடியும் எங்களால். ஆனால், முயன்று பெற்ற தவ ஆற்றலைக் காப்பாற்றிக் கொள்ளவே விரும்புகிறோம். (ஆத்திரப்பட்டு உங்களுக்குச் சாபம் கொடுத்து, அதனால் எங்கள் தவச்சேமிப்பின் ஒரு பகுதியை இழக்க விரும்பவில்லை.) (19,20)

மூடனே! வாய்மை தவறாத எங்கள் தந்தைக்குத் தெரியாமல் காமவசப்பட்டோ, (அல்லது பலாத்காரம் போன்ற) வேறு காரணங்களாலோ, நாங்களே எங்களுக்கு விருப்பமான ஆடவனைத் தேர்ந்தெடுக்கும் கெட்ட காலம் ஒருக்காலும் ஏற்படாது. எங்கள் தந்தைதான் எங்களுக்குத் தலைவர்; எங்களின் மேலான தெய்வம். அவர், யாருக்கு எங்களைக் கொடுக்கிறாரோ, அவர்தான் எங்கள் கணவர்.'' அவர்களுடைய பதிலைக் கேட்டு மிகவும் கோபம் கொண்ட வாயுதேவன், அவர்களுக்குள் புகுந்து எல்லா உடல்களையும் நொறுக்கித் தள்ளினான். வாயுவினால் உடல் சீர்குலைக்கப்பட்ட அந்தப் பெண்கள் மனம் கலங்கி, வெட்கம் சூழ, கண்களில் நீர்மல்க, அரசர் (தந்தை) மாளிகைக்குள் புகுந்து தரையில் வீழ்ந்தார்கள். (21–24)

தன்னுடைய பாசத்திற்குரியவர்களும் இரங்கத்தக்கவர்களும் அழகானவர்களுமான பெண்கள் எல்லோரும் கூனிகளாக மாறிவிட்டதைக் கண்டு, சித்தம் கலங்கி மன்னர் கேட்டார்— ''புதல்விகளே! என்ன நடந்தது? (உங்களை இப்படி அவமானப்படுத்தி,) தருமத்தை அவமதித்தவன் யார்? யாரால் கூனிகளாக்கப்பட்டீர்கள்? எல்லோரும் சுருண்டு கிடக்கிறீர்களே தவிர, வாய் திறந்து பேசமாட்டேன் என்கிறீர்களே? குமாரத்திகளே! இகழத்தக்க இந்தச் செயல் யாரால் செய்யப் பட்டது? என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.'' இவ்வாறு அரசர் கேட்டுவிட்டு, நீண்ட பெருமூச்சுவிட்டுக் கொண்டு பதிலைக் கேட்கக் காத்திருந்தார். (25–27)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
முப்பத்து இரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்து மூன்று

பிரும்மதத்தரின் விவாகம்

குசநாபனுடைய அந்த உரையைக் கேட்டபின், அவர் பாதங்களில் தலைவைத்து வணங்கி, நூறு பெண்களும் சொல்லத் தொடங்கினார்கள்— ''மன்னரே! எல்லா இடத்திலும்

சஞ்சரிக்கும் வாயுதேவன் எங்களை ஆக்கிரமிக்க விரும்பினார். அதரும வழியில் மனம் கொண்ட அவர் தருமநெறியைப் பார்க்கவில்லை. 'தேவனே! நாங்கள் எங்கள் தகப்பனாருக்கு அடங்கியவர்கள். எங்கள் விருப்பம்போல் செயல்படுபவர்கள் அல்லர். எங்கள் தந்தையிடம் சென்று எங்களைக் கேளுங்கள். அவர் விருப்பப்பட்டுக் கொடுத்தால், நாங்கள் அனைவரும் உங்களுடையவர்களே' (என்று நாங்கள் சொன்னோம்). பாவ சிந்தனையில் கட்டுண்ட அவருக்கு, எங்கள் பதில் பிடிக்கவில்லை. அதனால், இவ்வாறு கூறிய எங்களையெல்லாம் வாயு மிகவும் அலங்கோலப்படுத்திவிட்டார்.'' (1–4)

அவர்களுடைய சொற்களைக் கேட்டு மிகவும் தார்மிகரான மன்னர், ஒப்பற்றவர்களான நூறு பெண்களையும் பார்த்துக் கூறினார்— ''பெண்களே! மிக உயர்ந்த நிலையிலுள்ள மேன்மக்கள் எவ்வாறு பொறுமையைக் கடைப்பிடிப்பார்களோ, அப்படிப்பட்ட பொறுமையை ஒரே மனத்தினராகவும், எனது குலத்தின் பெருமையையும் நினைவிற்கொண்டு நீங்கள் அனுஷ்டித்திருக்கிறீர்கள். ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் பொறுமை என்பது விலைமதிக்க முடியாத அணிகலன் போன்றது. அதிலும், குறிப்பாக தேவதைகளிடம் பொறுமையைக் காட்டுவது என்பது மிகவும் செயற்கரிய செயல். (5–7)

பெண்களே! உங்கள் அனைவரிடமும் அளவற்ற பொறுமை சமமாக இருக்கிறது என்பது தனிச்சிறப்பு. பொறுமையே தானம்; பொறுமையே சத்தியம்; பொறுமையே யக்ஞம்; பொறுமையே புகழைத் தேடித் தரும்; பொறுமைதான் மிக உயர்ந்த தருமம். இவ்வுலகம் முழுவதும் பொறுமையில் நிலைபெற்றிருக்கிறது.'' (பின்னர்) இராமா! தேவர்களுக்கு நிகரான பராக்கிரமம் படைத்த குசநாபன், பெண்களை அந்தப்புரத்திற்கு அனுப்பி வைத்தார். பின்னர், ஆலோசனை கூறுவதில் வல்லவர்களான அமைச்சர்களுடன் கலந்தாலோசித்தார். 'எந்த நாட்டில், எந்த சமயத்தில் தங்களுக்கு நிகரான யாருடன் பாணிக்கிரகணம் செய்து வைப்பது?' என்பது குறித்து ஆலோசனை நடத்தினார்கள். (8–10)

அதே காலத்தில் சூலீ என்ற மாமுனிவர், நழுவாத மேலெழும் வீர்யமுடையவர்; நல்ல பழக்கவழக்கங்கள் உடையவர். அவர் வேதோக்தமான தவத்தில் ஈடுபட்டிருந்தார். தவம் செய்து கொண்டிருந்த அவரை, ஊர்மிளையின் புதல்வியான ஸோமதா என்ற அப்சர நங்கை அணுகி சேவை புரிந்து வந்தாள். அவரிடம் அவள் பெரும் பக்திபூண்டு, பணிவுடன் சேவையிலேயே மனம் ஒன்றியவளாக நெடுநாட்கள் இருந்து வந்தாள். தருமம் தவறாத அவள் பணிவிடையினால் முனிவர் மிகவும் திருப்தியடைந்தார். (11–13)

ரகுநந்தனா! அவர் ஒரு நல்ல சந்தர்ப்பத்தில் அவளைப் பார்த்து, ''நீ வாழ்க! உன் சேவைகளால் நான் மனம் மகிழ்ந்திருக்கிறேன். உனக்குப் பிரியமான எந்தக் காரியம் நான் செய்யவேண்டும்? சொல்'' என்றார். 'முனிவர் மகிழ்ச்சியுடன் இருக்கிறார்' என்பதை அறிந்து கொண்ட குரலினிமையுடைய கந்தர்வப் பெண், மிகவும் திருப்தியடைந்து அழகாகப் பேசுவதில் வல்லவரான அவரைப் பார்த்து இனிதாகப் பேசினாள்— (14,15)

''மாபெரும் தபஸ்வியே! தாங்கள் கடுமையான தவம் செய்து, பரப்பிரம்ம தரிசனம் பெற்று, அந்த ஞான ஒளியுடன் பிரகாசித்துக் கொண்டிருக்கிறீர்கள். அறநெறியாளரே! தங்களைப் போன்று வேதோக்தமான தவங்களில் ஈடுபடக்கூடிய உத்தம புத்திரனை வேண்டுகிறேன். எனக்குக் கணவர் இல்லை; நான் யாருடைய மனைவியும் இல்லை. (தங்களுடைய சேவையில் ஈடுபட்டிருக்கிறேன்.) தங்களுடைய அபாரமான தவ ஆற்றலினால் எனக்கு ஒரு மகனைக் கொடுத்தருளும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.'' அவளுடைய பணிவிடைகளால் மனம் நிறைந்த பிரும்மரிஷி, ஒப்பற்ற ஒரு புத்திரனை அளித்தார். சூலியினுடைய மானஸ புத்திரனான அவர் பிரும்மதத்தர் என்று பெயர் பெற்றார். (16–18)

மன்னரான பிரும்மதத்தர் (குசநாபன், தம் பெண்களுக்கு மணம் செய்வது குறித்துத் தீவிரமாக ஆலோசனை செய்து கொண்டிருந்த காலத்தில்), சகலவிதமான செல்வச் செழிப்புக்களுடன்

விளங்கும் காம்பீல்யம் என்னும் நகரில், தேவலோகத்தில் இந்திரன் மகோன்னதமாக ஆண்டு கொண்டிருந்ததைப் போல ஆட்சி செய்து கொண்டிருந்தார். காகுத்தனே! மன்னர் குசநாபன், நூறு பெண்களையும் பிரும்மதத்தருக்குக் கொடுப்பது என்று நிச்சயம் செய்தார். மன்னன், மகாதேஜஸ்வியான பிரும்மதத்தரை (சகல மரியாதைகளுடன்) அழைத்து வந்து, நெஞ்சார்ந்த மகிழ்ச்சியுடன் நூறு பெண்களையும் விவாகம் செய்து கொடுத்தார். ரகுநந்தனா! இந்திரனைப் போல் அளவற்ற பெருமையுடன் விளங்கிய பிரும்மதத்தர், நூறு கன்னிகைகளின் கைகளையும் வரிசையாகப் பற்றினார். அவர் தொட்டமாத்திரத்தில், நூறு பெண்களும் கூனல் நீங்கி, கவலை அகன்று, மிகவும் அழகு பொருந்தியவர்களாக ஆனார்கள். (19–23)

மன்னர் குசநாபன், வாயுதேவன் பிடியிலிருந்து தன் புதல்விகள் விடுபட்டுவிட்டதைக் கண்டு, அடக்க முடியாத ஆனந்தப் பெருவெள்ளத்தில் மூழ்கி எழுந்தார். குசநாபன், பிரும்மதத்தருக்குத் தன் நூறு பெண்களை விவாகம் செய்து கொடுத்த பின்னர், பிரும்மதத்தரை அவருடைய மனைவிகளோடும், புரோகிதக் கூட்டங்களோடும் சிறப்பான மரியாதைகளோடு அனுப்பி வைத்தார். அப்சர நங்கை ஸோமதாவும் தகுதியான இடத்தில் தன் குமாரனுக்கு உறவு ஏற்பட்டிருப்பது கண்டு மிகவும் மகிழ்ந்தாள். மருமகள்களைத் தக்கபடி உபசரித்து அன்பு காட்டினாள். கன்னிகைகள் ஒவ்வொருரையும் தொட்டுத் தொட்டுப் பார்த்து, மனம் பூரித்து, குசநாபனை வாயார வாழ்த்தினாள். (24–26)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
முப்பத்து மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்து நான்கு

விசுவாமித்திரர் வம்ச வரலாறு

பிரும்மதத்தர் விவாகம் செய்து கொண்டு புறப்பட்டுச் சென்ற பிறகு, புதல்வன் இல்லாதிருந்த குசநாபன் புத்திரனை அடைவதற்காகப் புத்திரகாமேஷ்டி செய்தார். வேள்வி நடந்து கொண்டிருக்கும்போது, பிரும்மாவின் மானஸ புத்திரரான குசன், மிகுந்த வாத்சல்யத்துடன் தன் குமாரன் குசநாப மன்னரைப் பார்த்துக் கூறினார்— ''மகனே! உனக்கு நிகராக அறநெறியிற்செல்லும் புதல்வன் பிறப்பான். காதி என்று பெயர் பெறும் அவனால் உனது புகழ் உலகத்தில் நிரந்தரமாக விளங்கும்.'' இராமா! இவ்வாறு குசன், மன்னர் குசநாபனிடம் சொல்லிவிட்டு, ஆகாய மார்க்கமாக சனாதனமான பிரும்மலோகத்தைச் சென்றடைந்தார். பின்னர், சிறிதுகாலத்திற்குப் பின் குசநாபனுக்கு பரமதர்மிஷ்டரான காதி என்ற பெயருடைய மகன் தோன்றினார். (1–5)

காகுத்தனே! என்னுடைய தந்தையாரான காதி (குசிகர்) அறநெறிகளைத் தவறாது கடைப்பிடிப்பவர். குசனுடைய குலத்தில் தோன்றியதால் எனக்கு 'கௌசிகர்' என்று பெயர். எனக்கு நியமங்களை நன்கு அனுஷ்டிக்கிற ஒரு மூத்த சகோதரி இருக்கிறாள். சத்தியவதி என்று பெயர். ரிசீக முனிவருக்கு விவாகம் செய்து கொடுக்கப்பட்டாள். கணவனைத் தொடர்ந்து உடலுடன் சுவர்க்கத்திற்குப் போனாள். மிகவும் இரக்க குணமுடைய அவள், (மீண்டும் மண்ணுலகுக்கு வந்து) கௌசிகீ என்ற மகாநதியாகப் பெருக்கெடுத்தாள். (6–8)

இமயமலையிலிருந்து ஓடிவரும் அந்த நதி மிகவும் புனிதமானது; அழகானது. மக்களின் நலனுக்காகவே, என் சகோதரி நதியாக ஓடிக் கொண்டிருக்கிறாள். நானும், சகோதரியான கௌசிகியிடம் உள்ள பேரன்பால், அவளருகே இமயமலையின் தாழ்வரையில் நிரந்தரமாகச் சுகமாகத் தங்கியிருந்தேன். சத்தியவதி புனிதமானவள்; சத்தியத்திலும் தருமத்திலும்

நிலைத்திருப்பவள். இங்கே கௌசிகீ நதியாகப் பாய்ந்து கொண்டிருக்கிறாள். இராமா! நான் ஒரு நோக்கத்தை நிறைவேற்றும் எண்ணத்துடன், அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு சித்தாசிரமம் வந்தடைந்தேன். உன்னுடைய பராக்கிரமத்தால் என் லட்சியம் கைகூடப் பெற்றேன். இதுதான் என்னுடைய பிறப்பைப் பற்றிய வரலாறு; என்னுடைய குலத்தின் கீர்த்தி. வீரனே! இந்த நாட்டைப் பற்றிய விவரங்களைக் கேட்டாயே. அதனால் எல்லாவற்றையும் சொன்னேன். நான் கதைகளைப் பேசிக் கொண்டேயிருந்ததில் பாதி இரவு கழிந்துவிட்டது. காகுத்தனே! உறங்கச் செல்வாயாக! உனக்கு மங்களமுண்டாகட்டும். நம்முடைய நாளைய நடைபயணத்திற்கு இடையூறு ஏற்படக் கூடாதல்லவா? (9–14)

மரங்களில் கிளைகள் அசையாமல் நிற்கின்றன; விலங்குகளும் பறவைகளும் கண்ணுறங்கிக் கொண்டிருக்கின்றன. இரவு நேரத்தின் இருட்டு எல்லாத் திசைகளிலும் பரவிவிட்டது. சந்தியாகாலம் கழிந்து மெதுவாக இரவு வேளை வந்துவிட்டது. ஆகாயத்தில் தாரகைகள் கண்சிமிட்டுவதைப் போல் காணப்படுகின்றன. ஆகாயம், நட்சத்திரக் கூட்டங்களின் ஒளியால் பிரகாசிக்கிறது. உலகத்தின் இருளைப் போக்குபவனும், குளிர்ந்த கிரணங்களை உடையவனுமான சந்திரன், தன்னுடைய ஒளியினால் உலகிலுள்ள பிராணிகளின் உள்ளத்தில் களிப்பை உண்டாக்கிக் கொண்டு உதித்து எழுகிறான். இரவில் இங்குமங்கும் திரியும் பிராணிகளும், யட்ச–ராட்சஸக் கூட்டங்களும், மாமிசம் உண்ணும் பயங்கரமான பைசாசங்களும் திரிந்து கொண்டிருக்கின்றன. (15–18)

இவ்வளவு பேசிவிட்டு மகாதேஜஸ்வியான மாமுனிவர் உரையைச் சற்று நிறுத்தினார். உடனே எல்லா முனிவர்களும், 'நன்றாகச் சொன்னீர்கள்!' என்று வாழ்த்திப் போற்றினார்கள். ''குசிகருடைய பரம்பரை மிகவும் சிலாக்கியமானது. அவர்கள் எப்போதும் தருமத்திலேயே நிலைத்திருப்பவர்கள். குச வம்சத்தில் தோன்றியவர்கள் உத்தமமானவர்கள்; பிரும்மாவிற்கு நிகரானவர்கள்; மகாத்மாக்கள். முக்கியமாக பெரும்புகழ் படைத்த விசுவாமித்திரராகிய தாங்களும் மற்றும் குலத்தை விளங்கச் செய்பவளும் நதிகளில் சிறந்தவளுமான கௌசிகியும் இருக்கிறீர்களே!'' இவ்வாறு முனிவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்ட குசிகரின் புத்திரரான விசுவாமித்திரர், (மேற்கில்) மறையும் சூரியனைப் போல உறக்கத்தில் ஆழ்ந்தார். இராமனும் லட்சுமணனோடுகூட சிறிது வியப்படைந்து, முனிபுங்கவரைப் போற்றிவிட்டு, நித்திரையைத் தழுவினார். (19–23)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
முப்பத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்தைந்து

உமையும் கங்கையும்

மிகுந்திருந்த இரவுப் பொழுதை சோனை நதிக்கரையில், மற்ற முனிவர்களுடன் கழித்து விட்டு, வைகறையில் பொழுது விடிந்ததும் விசுவாமித்திரர் (இராமனைப் பார்த்துக்) கூறினார்— ''இராமா! இரவு முடிந்து விடியற்காலை வந்துவிட்டது. கிழக்கில் அருணோதயம் ஆகிவிட்டது. எழுந்திராய்! தெய்வமே எழுந்திராய்! உனக்கு மங்களம் உண்டாகட்டும். பயணத்தைத் தொடர்வதற்கு ஆயத்தமாகு.'' அவருடைய சொற்களைக் கேட்டதும், காலைப்பொழுதிற்குரிய ஜபம்–நீர்க்கடன்களைச் செலுத்தி, மேற்கொண்டு செல்வதற்கு எண்ணம் கொண்டு பின்வருமாறு கூறினார்— (1–3)

''இந்த சோனை நதி தெள்ளிய நீருடன் இருக்கிறது; ஆழமும் இல்லை; ஆங்காங்கே மணற்திட்டுக்களும் காணப்படுகின்றன. பிரும்மன்! நாம் எந்த வழியாக, இதைக் கடந்து செல்ல

வேண்டும்?'' இராமன் இவ்வாறு கேட்டவுடன், ''மகரிஷிகள் எந்த வழியாகப் போய்க் கொண்டிருக்கிறார்களோ, அதுதான் என்னால் காட்டப்பட்டது'' என்று விசுவாமித்திரர் சொன்னார். அவர்கள் வெகுதூரம் நடந்து நண்பகல் வேளையில் நதிகளில் மிகச்சிறந்ததும், முனிவர்கள் பலர் வாழ்ந்து கொண்டிருப்பதுமான கங்கைக் கரையை அடைந்தார்கள். (4–6)

புனிதமான நீரை உடையதும், அன்னம்–நீர்க்காக்கைகள் ஓயாமல் வந்துபோய்க் கொண்டிருப்பதுமான அந்த நதியைக் கண்டதும், இராம–லட்சுமணர்களும் முனிவர்களும் பெருமகிழ்ச்சி அடைந்தார்கள். கங்கையின் கரையில் எல்லோரும் தங்குவதற்கு ஏற்பாடு செய்துகொண்டார்கள். பின்னர், நீராடிவிட்டு முறைப்படி பிதிரர்களுக்கு நீர்க்கடன் செலுத்தி, அக்னிஹோத்திரம் முதலிய அக்னி காரியங்களைச் செய்து, ஒப்பற்றதான ஹவிஸ் உணவைப் புசித்து, தூயதான கங்கைக் கரையில் உள்ளக்களிப்புடன் வீற்றிருந்தார்கள். மகானுபாவரான விசுவாமித்திரரைச் சுற்றி அனைவரும் அமர்ந்திருக்கும்போது, இராமன் அவரைக் கேட்டார்— (7–10)

''பெரியோரே! கங்கை, த்ரிபதகா என்று கூறப்படுகிறாள். மூன்று உலகங்களிலும் விளங்கும் அந்தப் பேராறு, எவ்வாறு ஆறுகளின் நாயகனான கடலுடன் சங்கமிக்கிறது? இதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.'' இராமனுடைய கேள்வியினால் உற்சாகமூட்டப்பட்ட மாமுனிவர், கங்கையின் பிறப்பு–வளர்ப்பு பற்றிப் பேச ஆரம்பித்தார்— ''பல்வகை தாதுக்களுக்கு இருப்பிடமானதும், மலைகளின் அரசனுமான மாமலை இமவானுக்கு, இவ்வுலகிலேயே ஒப்புயர்வில்லாத அழகு பொருந்திய இரு புதல்விகள் பிறந்தார்கள். இராமா! மேருமலையின் மகள் மனங்கவரும் வனப்புடையவள்; இடைநல்லாள்; மேனா என்று பெயர். இவள் இமவானுக்குப் பிரியமான பத்தினி; அவ்விரு புதல்விகளுக்கும் அன்னை. மேனாவின் வயிற்றில் தோன்றிய இருவரில் கங்கை என்பவள் மூத்தவள்; உமா என்பவள் இளைய பெண். (11–15)

மலையரசன் இமவானிடம், 'அவனது மூத்த மகளான கங்கையைத் தரவேண்டும்' என்று தேவர்கள், அவர்களுடைய காரியசித்திக்காக வேண்டினார்கள். அவளே, பின்னர் மூன்று உலகங்களிலும் விளங்கப்போகும் த்ரிபதகா எனப்பட்டாள். உடனே, மூன்று உலகங்களுக்கும் நன்மை செய்யும் விருப்பத்துடன், மக்களைத் தூய்மைப்படுத்துபவளும், தன்போக்கில் செல்பவளுமான கங்காதேவியைச் சாஸ்திர விதிகளின்படி, அவர்களுக்குக் கொடுத்தான் (மலையரசன்). மூன்று உலகங்களுக்கும் நன்மை செய்பவர்களான தேவர்கள், கங்கையைப் பெற்றுக் கொண்டு, தாங்கள் வந்த காரியம் கைகூடிய மனநிறைவுடன் திரும்பிச் சென்றார்கள். ரகுநந்தனா! மலையரசனின் மற்றொரு மகள் மிகக் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்துக் கொண்டு, தவம் செய்து தவச்செல்வி ஆனாள். தீவிரமான தவத்தில் ஈடுபட்டு மக்களால் வணங்கப்படும் மேன்மையைப் பெற்றிருந்த தன் புதல்வி உமாவை, ஒப்பற்ற அழகு படைத்த ருத்ரருக்கு விவாகம் செய்து கொடுத்தான். (16–20)

நதிகளில் சிறந்ததான கங்கை, (ருத்ரதேவனை மணந்து கொண்ட) உமாதேவி – இவர்கள் இருவரும் மலையரசனின் இரு புதல்விகள்; மக்கள் எல்லோராலும் வணங்கப்படுபவர்கள். இவ்வாறு நீ கேட்ட விஷயம் குறித்து, த்ரிபதகா என்ற கங்கை நதியின் கதையைச் சொன்னேன். வேகமாகச் செயல்படுவதில் தலையாயவனே! (மேலும், கேள்.) முதலில், கங்கை ஆகாயத்தை அடைந்தாள். மலைமகளான அவள் அழகான தேவநதியாக தேவலோகத்தை அடைந்து, மக்களின் பாவங்களைப் போக்குகின்ற நீரோட்டமானாள். (21–23)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
முப்பத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்தாறு
உமாதேவியின் வரலாறு

இராம–லட்சுமணர்கள், முனிவர் கூறிய கதையைக் கேட்டதும் அவரைக் கொண்டாடிவிட்டு, அவரிடம் சொன்னார்கள்— (1)

''பிரும்மன்! தாங்கள் இந்தக் கதையை எங்களுக்குக் கூறியது நல்ல உபதேசம்தான்; தருமப்படியானதுதான். மலையரசனின் மூத்த மகளைப் பற்றி இன்னும் விரிவாகக் கூறவேண்டும். தாங்கள் விரிவாக எல்லாவற்றையும் அறிந்தவர். தேவ–மனுஷ்ய லோகங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளை அறிந்து கொள்ளும் சக்தியுள்ளவர். (முனிவரே!) எந்தக் காரணத்தால் மூன்று உலகங்களிலும் பாய்ந்து செல்லும் சிறப்பினைப் பெற்றாள், கங்கை? நதிகளில் சிறந்த கங்கை, த்ரிபதகா என்ற புகழை எவ்வாறு பெற்றாள்? தருமம் அறிந்தவரே! மூன்று உலகங்களிலும் அவள் என்னென்ன காரியங்களைச் செய்கிறாள்?'' காகுத்தன் இவ்வாறு கேட்டதும், தவச்செல்வரான விசுவாமித்திரர், முனிவர்கள் நிறைந்திருந்த அந்தக் கூட்டத்தில், முழுக் கதையையும் விஸ்தாரமாகக் கூறத் தொடங்கினார். (2–5)

இராமா! முன்பொரு சமயம் உமாதேவியை விவாகம் செய்து கொண்ட பரமேசுவரன், பத்தினியைக் காம உணர்வோடு பார்த்து, உடலுறவு கொள்ளத் தொடங்கினார். மகாதேவர் இவ்வாறு சிற்றின்பக் களிப்பில் ஈடுபட்டு நூறு தேவ வருஷங்கள் கழிந்தன. எதிரிகளை மாய்ப்பவனே! சிற்றின்ப விளையாட்டும் நிற்கவில்லை; பார்வதிக்குக் குழந்தையும் பிறக்கவில்லை. அப்போது, பிரும்மா முதலான தேவர்கள் மனம் கலங்கி ஆலோசித்தார்கள்— 'இனி, இவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்தால், அதை யாரால் தாங்க முடியும்?' எனவே, எல்லா தேவர்களும் பரமேசுவரன் இருக்குமிடம் சென்று வணங்கி, விண்ணப்பித்துக் கொண்டார்கள்— (6–9)

'தேவதேவரே! மகாதேவரே! இந்த உலகத்தின் நன்மையின்பால் நாட்டம் செலுத்துங்கள். தேவர்கள் (நாங்கள்) வணக்கத்துடன் பிரார்த்தித்துக் கொள்வதைக் கேட்டு அருள் புரியவேண்டும். உலகங்கள் எதுவும் தங்கள் வீர்யத்தைத் தாங்கிக் கொள்ள முடியாது. பத்தினியுடன் வேதமுறைப்படியான தவங்கள் செய்வீர்களாக. மூன்று உலகங்களின் நன்மைக்காக, தங்கள் வீர்யத்தைத் தங்கள் உடலுக்குள்ளேயே சேமிப்பீர்களாக! இந்த உலகங்களையெல்லாம் காப்பாற்றுங்கள். உலகங்கள் இல்லாதபடி (அழிந்து போகும்படிச்) செய்துவிடாதீர்கள். (சிந்தனைக்கெட்டாத சக்தியுடைய தங்கள் வீர்யம் வெளிப்பட்டால், உலகங்கள் பொசுங்கிப் போகும்.)' அனைத்துலகங்களுக்கும் பெருந்தலைவரான பரமேசுவரன், அவர்கள் கூறியதைக் கேட்டு, 'சரி' என்று சொன்னார். தொடர்ந்து இவ்வாறு பேசினார்— (10–13)

'நானும் உமாதேவியும் வீர்யத்தை எங்களுக்குள்ளேயே தரித்துக் கொள்கிறோம். வானுலகமும் மண்ணுலகமும் அமைதியாக இருக்கட்டும். ஆனால், என்னிடமிருந்து வெளிப்பட்டுவிட்ட தேஜஸை யார் ஏற்கப் போகிறார்? என்பதை, தேவர்களே! எனக்குத் தெரிவியுங்கள்.' இவ்வாறு கேட்கப்பட்டதும், 'வெளிப்பட்ட தேஜஸை இந்த பூமிதேவி தாங்கிக் கொள்வாள்' என்று பரமேசுவரனுக்குப் பதில் சொன்னார்கள், தேவர்கள். இதைக் கேட்டதும் பரமேசுவரன், தன்னுடைய தேஜஸைப் பூமியில் விட்டார். பூமியிலுள்ள காடு–மலையெங்கும் அந்த தேஜஸ் வியாபித்தது. அப்போது தேவர்களும் கந்தர்வர்களும் அக்னிதேவனைப் பார்த்து, 'வாயுவுடன் ருத்ரதேஜஸுக்குள் புகுந்து கொள்வாயாக' என்று கூறினார்கள். (14–18)

அக்னியினால் ஆக்ரமிக்கப்பட்ட ருத்ரதேஜஸ் ஒரு வெண்மலை ஆயிற்று. அதில், அக்னி–சூரியனைப் போல் ஒளிவீசும் தெய்விகமான நாணற்காடும் தோன்றிற்று. அங்கேதான் மகா பராக்கிரமம் கொண்ட கார்த்திகேயன் அக்னி குமாரனாகத் தோன்றினார். அப்போது தேவர்களும் முனிவர்களும் மிகவும் மனம் மகிழ்ந்தவர்களாய் உமாதேவியையும் சிவபெருமானையும்

வெகுவிமரிசையாக வாழ்த்திப் போற்றினார்கள். இராமா! அப்போது மலையரசன் மகளான உமா, தேவர்களைப் பார்த்து, 'எனக்குப் பிரியமில்லாத (மனம் ஒவ்வாத) காரியத்தைச் செய்த தேவர்களே! அதன் பலனை இப்போது அனுபவிக்கப் போகிறீர்கள்' என்று கூறினாள். (19–21)

இவ்வாறு கூறிவிட்டு, சூரியனைப் போல் ஜொலித்துக் கொண்டிருந்த பார்வதி, கோபத்தால் கண்கள் சிவக்க, சினம் பொங்க, கையில் நீர் எடுத்துக் கொண்டு, அவர்கள் எல்லோருக்கும் சாபம் கொடுத்தாள்— 'புத்திரனைப் பெறும் விருப்பத்துடன் நான் இன்பக்களிப்பில் ஈடுபட்டிருந்த போது, அதைத் தடுத்து நிறுத்திவிட்டீர்கள், அல்லவா? இனி, உங்களுடைய மனைவிகளிடம் புத்திரனை உற்பத்தி செய்யும் திறனை நீங்கள் இழப்பீர்களாக. இப்போதிலிருந்து உங்கள் மனைவிகளுக்குக் குழந்தையே பிறக்காமல் போகக் கடவது.' (22,23)

இவ்வாறு தேவர்களுக்குச் சாபம் கொடுத்துவிட்டு பூமியையும் சபித்தாள்— 'பூதேவியே! உனக்கு ஒரே உருவம் இருக்காது. பல பேர்களுக்கும் மனைவியாக ஆகப் போகிறாய். (நாட்டின் பல பகுதிகளில், பல அரசர்கள் பூமியை அனுபவிப்பார்கள். அதாவது ஆட்சி செலுத்துவார்கள்.) துர்புத்தி உடையவளே! எனக்குப் புத்திரன் தோன்றக் கூடாது என்று எண்ணினாய், அல்லவா? என் கோபத்தினால் மயங்கிக் கலங்கிப் போகும் உனக்கும், மகவைப் பெற்றுக் கொஞ்சிக் குலாவும் பேறு கிடைக்காமற்போகும்.' (24,25)

எல்லா தேவர்களும் (சாபம் பெற்றதனால்) மனம் தவிக்கும் நிலையைப் பார்த்த பரமேசுவரன், வருணனால் பாதுகாக்கப்படும் மேற்குத் திசையை நோக்கிச் செல்லத் தொடங்கினார். அவர் அங்கிருந்து புறப்பட்டு, இமாலய பர்வதத்தின் வடக்குப் பகுதியில், ஒரு சிகரத்தில் உமாதேவியுடன்கூட தவம் செய்ய ஆரம்பித்தார். இராமா! மலைமகளான உமையின் வரலாற்றை விஸ்தாரமாகச் சொன்னேன். நான் சொல்லப் போகும் கங்கையின் உற்பத்தியை லட்சுமணனுடன் சேர்ந்து கேட்பாயாக. (26–28)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
முப்பத்தாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்தேழு

கந்தனின் பிறப்பு

மகாதேவர் தவத்தில் ஈடுபட்டவுடன் தங்களுக்கு ஒரு சேனாபதி வேண்டும் என்று வெகுகாலமாகத் தவித்துக் கொண்டிருந்த தேவர்களும் முனிவர்களும் பிரும்மாவிடம் சென்றார்கள். பிரும்மாவைப் பார்த்ததும் காலில் விழுந்து வணங்கி, இந்திரன் முதலான எல்லா தேவர்களும் அக்னிதேவனை முன்னிலைப்படுத்தி, அவரிடம் சொன்னார்கள்— (1,2)

'தேவனே! முன்னர், மகாதேவன் எங்களுக்கு ஒரு படைத்தலைவனை உற்பத்தி செய்து தருவதாக ஒரு வரம் கொடுத்தாரல்லவா? பகவானே! எங்களுடைய விரோதிகளை அடக்கவல்ல அந்த சேனாபதி இதுவரை பிறக்கவில்லை. (அப்படித் தோன்ற வேண்டிய படைத்தலைவனின்) தந்தையான பகவான் ஈசுவரன், இப்போது இமயபர்வத சிகரத்தில் உமையுடன்கூட, மிகக் கட்டுப்பாடான முறையில் தவம் செய்து வருகிறார். மக்களின் நலனில் மிகவும் நாட்டமுடைய தாங்கள்தான், அடுத்ததாகச் செய்ய வேண்டிய காரியத்தை நிச்சயிக்க வேண்டும். தாங்கள்தான் சட்ட திட்டங்களையும் எதிர்காலத்தையும் அறிந்தவர்; தாங்கள்தான் எங்களுக்குப் புகலிடம்.' (3–5)

எல்லா உலகங்களுக்கும் பிதாமகரான பிரும்மா, தேவர்கள் கூறியதைக் கேட்டு, இனிய வார்த்தைகளால் சமாதானப்படுத்தி, மேலும் கூறினார்— 'அவரவர் பத்தினிகளிடம் குழந்தைகள்

உற்பத்தியாக மாட்டார்கள் என்று மலைமகள் சொன்ன சொல் சத்தியமானது. அதை யாரும் மாற்ற முடியாது என்பதில் சந்தேகமில்லை. இந்த ஆகாச கங்கை இருக்கிறாளே, அவளிடம் அக்னி பகவான் எதிரிகளை அடக்கவல்ல தேவசேனாபதியைத் தோற்றுவிக்கப் போகிறார். மலையரசனின் மூத்த புதல்வியான கங்காதேவி, தன் சொந்தப் பிள்ளையாகவே கருதி பாசத்துடன் வளர்ப்பாள். உமாதேவியும் இதற்கு சம்மதம் தெரிவிப்பாள் என்பது உறுதி.' (6–9)

ரகுநந்தனா! இதைக் கேட்ட அமரர்கள், தாங்கள் வந்த காரியம் நிறைவேறிவிட்டதாகக் கருதி, பிரும்மாவை வணங்கித் தோத்தரித்தார்கள். தாதுக்கள் நிறைந்த கைலாச மலையை அடைந்து, அவர்கள் அங்கிருந்த அக்னிதேவனை அணுகி, புத்திரனை உற்பத்தி செய்து தருவதற்காக அவரை நியமித்தார்கள். 'அக்னிதேவரே! தேவர்களின் நல்வாழ்விற்கான இந்தக் காரியத்தைத் தாங்கள் ஏற்று நிறைவேற்றித் தர வேண்டும். (பகவான் ருத்ரனுடைய) பேராற்றல் படைத்த வீர்யத்தைத் தாங்கள் எடுத்துச் சென்று கங்கையில் சேர்க்க வேண்டும்.' தேவர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட அக்னி பகவான், கங்கையிடம் சென்று, 'இந்த கர்பத்தை ஏற்றுக்கொள். தேவதைகளுக்கு மிகவும் பிரியத்தைத் தரக் கூடிய செயல் இது' என்று கூறினார். (10–13)

அக்னியின் சொற்களைக் கேட்டவுடன், கங்கை மிக அழகிய உருவத்தை ஏற்றுக் கொண்டாள். மனத்தைக் கொள்ளை கொள்ளும் பேரழகு வாய்ந்த அந்த அணங்கைக் கண்டு, அக்னிதேவனின் உடலெங்கும் காமம் கனன்றது. தேவியின் உடல் முழுவதையும் அக்னியின் காமத் தீ வியாபித்துப் பெருக்கெடுத்தோடியது. அதனால், கங்கையின் கிளை நதிகள், வாய்க்கால்கள் எல்லாம் நிரம்பி வழிந்தன. எல்லா தேவர்களுக்கும் முன்னால் செல்பவரான அக்னியைப் பார்த்து, 'தேவனே! தங்களால் என்னிடம் ஊன்றப்பட்ட தேஜஸை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதன் வெம்மையினால் எரிக்கப்படுகிறேன். என் அறிவு தடுமாறுகிறது' என்று சொன்ன கங்கையைப் பார்த்து, எல்லா தேவர்களுக்கும் புரோகிதரான (வேள்வியில் சொரியப்படும் அவியுணவை எடுத்துச் செல்பவர்) அக்னிதேவன் கூறினார்— 'இந்த இமயமலையின் அடியில் இந்த கர்பத்தை வைத்துவிடு.' அக்னிதேவனின் சொற்களைக் கேட்ட கங்கை தன்னுடைய நீரோட்டங்களிலிருந்து பேரொளி வீசிக் கொண்டிருந்த அந்தத் தேஜஸை ஒருங்கு சேர்த்து குறிக்கப்பட்ட இடத்தில் வைத்தாள். (14–18)

கங்கையிடமிருந்து தோன்றியதால் (அக்னி சம்பந்தத்தால்) உருக்கப்பட்ட சுவர்ணம் போல் ஒப்பற்ற ஒளிவீசும் தங்கக்குழம்பாக அந்த கர்பம் பூமியை அடைந்தது. அதனால், அந்த இடம் முழுவதும் தங்கமயமாயிற்று. அதனைச் சுற்றியிருந்த பிரதேசத்திலிருந்த வஸ்துக்கள் கர்ப தீக்ஷண்யத்தால் செம்பு–இரும்புகளாக மாறிவிட்டன. கர்பத்திலிருந்த அசுத்தப் பொருட்கள், அங்கே தகரம்–ஈயம் ஆகிவிட்டன. இவ்வாறாக, அவைகள் பலவித உலோகங்களாக பூமியில் பரவிவிட்டன. பூமியில் வைத்தவுடனேயே கர்பத்தின் எல்லையில்லாத தேஜஸால் அந்த வெண்மலையும், அதைச் சூழ்ந்திருந்த காட்டுப் பிரதேசமும் தங்கமயமாயின. இராகவா! அது முதற்கொண்டு நெருப்பைப் போல் பளீரென ஜொலிக்கும் அந்த சுவர்ணம் ஜாதரூபம் என்ற பெயரால் பிரசித்தியடைந்தது. அதன் தொடர்பினால் அங்கிருந்த புல், மரம், கொடி, புதர்கள் எல்லாம் பொன்மயமாயின. (19–23)

இந்திரன், மருத் கணங்கள் ஆகிய எல்லோரும் அப்போதுதான் பிறந்த ஆண் மகவுக்குப் பால் கொடுப்பதற்காக கிருத்திகா நட்சத்திர தேவதைகளிடம் கொண்டு சேர்த்தார்கள். 'இவன் நம் எல்லோருக்கும் புத்திரன்' என்று மனப்பூர்வமாக ஒருமைப்பட்டு (கிருத்திகா நட்சத்திர தேவதைகள்) நிச்சயித்ததும், அவர்கள் மார்பில் பால் சுரந்தது. அப்போதுதான் பிறந்த அந்தக் குழந்தைக்கு எல்லோரும் பால் கொடுத்தார்கள். அப்போது தேவர்கள் அனைவரும் (அந்தக் குழந்தை) கிருத்திகைப் பெண்களால் பாலூட்டப் பெற்றதால், அவர்களுடைய சொந்தக் குழந்தை என்ற கருத்துத் தோன்ற, கார்த்திகேயன் என்று பெயர் சூட்டினார்கள். 'இந்தக் குமாரன் மூன்று உலகங்களிலும் புகழ் பெற்று விளங்கப் போகிறான் என்பதில் ஐயமில்லை.' (24–26)

அவர்கள் கூறிய மகிழ்ச்சியூட்டும் சொற்களைக் கேட்டு, சிவன்–பார்வதியிடமிருந்து நழுவியதும், கங்கையின் கர்பத்திலிருந்து தோன்றியதும், சுடர்விடும் அக்னியைப் போல் லட்சுமிகரமாகப் பிரகாசிப்பதுமான அந்தக் குழந்தையை நீராட்டினார்கள். காகுத்தனே! கர்பம் நழுவிப் பிறந்த குழந்தையாதலால் அக்னிக்கு ஒப்பானதும், பெரும்பேறு பெற்றதும், கிருத்திகையின் சிசுவுமான அதற்கு (ஸ்)கந்தன் என்று பெயரிட்டு தேவர்கள் அழைத்தார்கள். (27,28)

அப்போது கிருத்திகைப் பெண்கள் அறுவருக்கும் பால் சுரக்கத் தொடங்கியது. ஆறு முகங்களைப் பெற்று, அறுவரின் மார்பகங்களிலிருந்தும் பாலைப் பருகினான், கந்தன். ஒரு நாள் தாய்ப்பால் பருகியவுடனேயே அவன் அழகிய வாலிப உடலைப் பெற்றான். அவன் தன்னுடைய சொந்த பலத்தினால் அசுர–சைன்யக் கூட்டங்களை வெற்றி கொண்டான். அப்போது அக்னியை முன்னிட்டுக் கொண்டு தேவர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து, பேராற்றல் படைத்த கந்தனைத் தேவசேனைகளுக்குத் தலைவனாகப் பட்டம் சூட்டினார்கள். (29–31)

இராமா! நான், உனக்குக் கங்கையின் கதையை விரிவாகக் கூறினேன். அத்துடன் கார்த்திகேயனுடைய பிறப்பைப் பற்றியும் கூறினேன். இந்தச் சரித்திரம் கேட்பவருக்குப் பெருமையையும் புண்ணியத்தையும் கொடுக்கக் கூடியது. காகுத்தனே! கார்த்திகேயனிடம் அபாரமான பக்தி கொண்டிருப்பவன், இவ்வுலகில் பிள்ளைகள்–பேரன்களுடன் நீண்ட காலம் இருந்து, பின்னர் கந்தனுடைய உலகத்தை அடைவான். (32,33)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
முப்பத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்தெட்டு

சகரன் வரலாறு

இனிய சொற்களால் அந்தக் கதையை இராமனுக்குச் சொல்லிய பின்னர், விசுவாமித்திரர் மீண்டும் வேறொரு கதையைக் கூறுவதற்காகப் பின்வருமாறு பேசத் தொடங்கினார். (1)

முன்னொரு காலத்தில் அயோத்தி மன்னனாக சகரன் என்பவன் ஆண்டு வந்தான். அவன் தருமசிந்தனை உடையவன்; வீரன்; மகப்பேறு இல்லாதவன். புத்திரனைப் பெறுவதற்கு ஆவல் உள்ளவன். விதர்ப மன்னன் மகளான கேசினீ என்பவள் சகரனின் மூத்த மனைவி; அறநெறிப்படி நடப்பவள்; சத்தியம் பேசுபவள். அரிஷ்டநேமி (கசியபர்) என்பவரின் புதல்வியான சுமதி என்பவள் அவனுடைய இரண்டாவது மனைவி. உலகில் ஒப்பற்ற பேரழகு வாய்ந்த பெண்மணி. அவர்கள் இருவருடன்கூட இமாலய மலைக்குச் சென்று, அங்குள்ள 'ப்ருகுப்ரஸ்ரவணம்' என்ற சிகரத்தில் (மகப்பேறு அடைவதற்காகத்) தவம் செய்யத் தொடங்கினான். (2–5)

நூறு ஆண்டுகள் பூர்த்தியானவுடன், அந்தத் தவத்தினால் நன்கு ஆராதிக்கப்பட்டவரும், சத்தியசந்தர்களில் முதல்வருமான பிருகு முனிவர் சகரனுக்கு வரம் கொடுக்க முன்வந்தார். 'மாசற்றவனே! ஏராளமான புத்திரர்கள் உனக்கு உண்டாகப் போகிறார்கள். ஆண்களில் காளை போன்றவனே! இணையற்ற கீர்த்தியையும் இவ்வுலகில் அடையப் போகிறாய். உன் மனைவிகளில் ஒருத்தி, உன் வம்சத்தைத் தொடரச் செய்யும் ஒரு மகவைப் பெற்றெடுப்பாள்; மற்றொருத்தி அறுபதினாயிரம் மகன்களைப் பெற்றெடுப்பாள்.' இப்படி சொன்ன மகாத்மா பிருகுவைப் பார்த்து மிக்க மகிழ்ச்சியுடன் கைகளைக் கூப்பிக் கொண்டு இரண்டு அரசிகளும் கேட்டார்கள்— 'எங்கள் இருவரில் யாருக்கு ஒரு மகன் பிறப்பான்? இதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள நாங்கள் மிகவும் ஆவலுடன் இருக்கிறோம். உங்கள் வாக்கு உண்மையாகவே ஆகட்டும். (எங்களுக்குக் குழந்தைகள் பிறக்கட்டும்.)' (6–10)

அவர்களுடைய பேச்சைக் கேட்ட பரமதார்மிகரான பிருகு முனிவர், 'உங்கள் விருப்பத்தைத் தெரிவியுங்கள்; அதன்படி செய்யலாம்' என்ற மிக முக்கியமான சொற்களைச் சொன்னார். 'ஒருவன் குலத்தை விருத்தி செய்பவனாக இருப்பான்; பல பேர்களாகப் பிறப்பவர்கள் மகாபலமும் கீர்த்தியும் உறுதியும் படைத்தவர்களாக இருப்பார்கள். யாருக்கு எந்த வரம் வேண்டும்?' ரகுநந்தனா! அரசர் (சகரன்) கேட்டுக் கொண்டிருக்கும் போதே கேசினீ என்பவள் 'குலத்தை விளங்கச் செய்யும் ஒரு புத்திரன் வேண்டும்' என்ற வரத்தைக் கேட்டாள். கருடனின் சகோதரியான சுமதி, மகாசக்தியும் பெரும் புகழையும் பெற்று சிறப்பாக விளங்கப் போகிற அறுபதினாயிரம் புதல்வர்களை வேண்டிப் பெற்றாள். (11–14)

இராகவனே! பிருகு முனிவரைத் தலைவணங்கி வலம் வந்து, இருமனைவிகளுடன் தன் நகரத்திற்கு ஏகினான், மன்னன் சகரன். காலம் சென்று கொண்டிருந்தது. மூத்தவளான கேசினிக்கு ஒரு மகன் பிறந்தான். சகரனின் சொந்தப் பிள்ளையான அவனுக்கு அசமஞ்ஜன் என்று பெயரிட்டார்கள். ஆண்வீரனே! சுமதி என்ற மற்றொரு அரசிக்கு ஒரு சதைப்பிண்டம் பிறந்தது. அதை உடைத்தவுடன் அறுபதினாயிரம் குழந்தைகள் வெளிப்பட்டார்கள். அக்குழந்தைகளையெல்லாம் நெய்க்குடங்களில் வைத்து தாதிகள் வளர்த்தார்கள். வெகுகாலம் கழிந்தபின்னர், அவர்கள் எல்லோரும் யௌவனப் பருவத்தை அடைந்தார்கள். இவ்வாறு (புத்திரன் இல்லாமல்) நீண்ட நெடுங்காலம் கழிந்த பின்னர், சகரனுக்கு வாலிபத் தோற்றத்தோடு விளங்கும் அறுபதினாயிரம் குமாரர்கள் இருந்தார்கள். (15–19)

சகரனுடைய சொந்தப் பிள்ளையான அசமஞ்ஜன் நகரத்திலுள்ள சிறுவர்களைப் பிடித்து, சரயூவில் தூக்கியெறிந்து, அவர்கள் தத்தளித்து மூழ்கிப் போவதைச் சிரித்துக் கொண்டே பார்ப்பான். இவ்வாறாக பாவச் செயலைச் செய்து வந்தவனும், நன்மக்களுக்கு இடையூறு செய்பவனும், ஊர்மக்களுக்குத் துன்பம் விளைவிப்பவனுமான அவனை, தந்தை (மன்னர்) ஊரைவிட்டுத் துரத்தியடித்தார். அந்த அசமஞ்ஜனுடைய குமாரன் அம்சுமான் என்பவன் வீரம் மிகுந்தவன்; மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டவன்; எல்லோருடனும் இனிமையாகப் பேசுபவன். ஒரு சமயத்தில் சகர மன்னனுக்கு, 'வேள்வி செய்யவேண்டும்' என்ற தீர்மானமான எண்ணம் உண்டாயிற்று. இவ்வாறு நிச்சயித்த வேதம் அறிந்த மன்னன், தன் உபாத்தியார்களோடுகூட யக்ஞம் தொடங்குவதற்கான முன்னேற்பாடுகளில் ஈடுபட்டார். (20–24)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
முப்பத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்தொன்பது

பூமியைத் தோண்டினார்கள்!

அனற்கொழுந்துபோல் சுடர்விடும் விசுவாமித்திரரைப் பார்த்து, அவர் கூறிய கதையைக் கேட்டு, மகிழ்ச்சி பொங்க, இராமன் அவரிடம் கேட்டார்— 'ஐயனே! என்னுடைய முன்னோர்கள் எவ்வாறு வேள்வி செய்தார்கள்? மகத்தான அந்த வரலாற்றை விரிவாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.' ஆர்வம் நிரம்பிய அந்தச் சொற்களைக் கேட்டதும் இராமனைப் பார்த்து, சற்றே நகைத்தாற்போல் விசுவாமித்திரர் சொல்லலுற்றார்— (1–3)

'பெருந்தகைமையாளர் சகரனுடைய வரலாற்றை விரிவாகச் சொல்கிறேன், கேள். இராமா! பரமேசுவரனுடைய மாமனார் இமவான் என்ற மகிமை பொருந்திய மலை. இமயமலையிலிருந்து வெகுதூரத்தில் தென் திசையில் விந்திய பர்வதம் இருக்கிறது. நேர் எதிராகவுள்ள அவையிரண்டும் ஒன்றையொன்று பார்த்துக் கொண்டிருக்கின்றன. (இடையேயுள்ள நிலப்பகுதி

சமவெளியாதலால், மலை ஏதும் குறுக்கே நின்று பார்வையைத் தடுக்கவில்லை.) புருஷோத்தமனே! அவ்விரண்டு மலைகளின் இடையேயுள்ள புண்ணிய பூமியில் அந்த வேள்வி நடந்தது. மாவீரனே! அந்தப் பிரதேசம் வேள்வி செய்வதற்கு மிகவும் உகந்தது. காகுத்தனே! அந்த யாகத்தில், சகரனுடைய விருப்பப்படி வலிமைமிக்க வில்லுடையவனும் மகாரதனுமான அம்சுமான், யாகக் குதிரையைக் காப்பாற்றும் பொறுப்பை ஏற்றிருந்தான். யாகம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது பர்வகாலத்தில், (உக்த்யம் என்ற யாகம் நடைபெற வேண்டிய நாளில்) அரக்க உருவம் தாங்கி வந்த இந்திரன், யாகக் குதிரையைக் கவர்ந்து சென்றான். (4–7)

குதிரை அபகரித்துச் செல்லப்படுவதைக் கண்டு மகாத்மாக்களான ரித்விக்குகள் அனைவரும், யஜமானரான சகரனிடம் இவ்வாறு கூறினார்கள்— ‘இந்தப் பர்வ காலத்தில் யாகக் குதிரை வேகமாக இழுத்துச் செல்லப்படுகிறது. கவர்ந்து செல்பவனைக் கொன்றுவிட்டு, குதிரையைத் திரும்பக் கொண்டு வாருங்கள். (அப்படித் திரும்பக் கொண்டு வராவிட்டால்) யாகத்தில் குறை ஏற்படும். அதனால், எல்லோருக்கும் கேடு உண்டாகும். ஆகவே, மன்னரே! குறை ஏதுமில்லாமல் வேள்வி நிறைவேறுவதற்கான நடவடிக்கை எடுங்கள்.’ (8–10)

அந்த அரசவையில் உபாத்தியாயர்கள் சொன்னதைக் கேட்ட மன்னன், தன்னுடைய அறுபதினாயிரம் புதல்வர்களையும் நோக்கிக் கூறினான்— ‘‘ஆண்வீரர்களே! புத்திரர்களே! அரக்கர்களின் செயல்பாடுகளை அறியேன். இந்த யக்ஞத்தைத் துவக்கும்போது, யக்ஞ ரட்சணத்திற்கான மந்திர ஜப ஆகுதிகளைச் செய்துவிட்டுத்தான், இந்த வைதிகர்கள் தொடர்ந்து நடத்துகிறார்கள். அன்புச் செல்வங்களே! உங்களுக்கு மங்களம் உண்டாகட்டும். நீங்கள் எல்லோரும் சென்று குதிரையைத் தேடிக் கண்டுபிடியுங்கள். சமுத்திரத்தின் எல்லை வரை சென்று அகில புவனத்திலும், ஒவ்வொரு யோஜனை தூரத்திலும் ஆழ்ந்த கவனத்துடன் செல்லுங்கள். (11–13)

(என் ஆணைப்படி,) குதிரை கண்ணுக்குப்படும் வரையில் பூமியைத் தோண்டுங்கள். குதிரையைத் திருடிச் சென்றவனையும் தேடிக் கண்டுபிடியுங்கள். நான் யாகதீட்சை செய்து கொண்டிருக்கிறேன். (அதனால், இதைவிட்டு உங்களுடன் வர முடியாது.) எனவே, நீங்கள் குதிரையைக் கொண்டுவரும் காலம் வரை பேரன்களோடும், வேள்வி நடத்தும் உபாத்தியாயர் களோடும் நான் இங்கேயே இருக்கிறேன். உங்களுக்கு மங்களம் உண்டாகட்டும்.’’ (14,15)

பேராற்றல் படைத்த அந்த அரசகுமாரர்கள் அனைவரும் தந்தையின் ஆணையால் முடுக்கிவிடப்பட்டவர்களாக, உலகம் முழுவதிலும் அலைந்து திரிந்து தேடினார்கள். இந்த மண்ணுலகில் ஒரு யோஜனை தூரம்கூட விடாமல் துழாவிப் பார்த்தும் யாகக் குதிரையைக் காணவில்லை. மாவீரர்களான அவர்கள் வஜ்ரம் போன்ற தம் நகங்களாலும், இடியைப் போன்ற சூலங்களாலும், பயங்கரமான கலப்பைகளாலும் பூமியைத் தோண்டினார்கள். இராகவனே! பூமி பிளக்கப்படும்போது பேரொலி எழுந்தது. (பூமியைத் தோண்டும்போது) துண்டிக்கப்படுகிற நாகர்கள், அசுரர்கள், அரக்கர்கள், மற்றப் பிராணிகளின் கூக்குரல் சகிக்க முடியாததாக இருந்தது. (16–19)

ரகுநந்தனா! அவர்கள் அறுபதினாயிரம் யோஜனை ஆழத்திற்குப் பூமியைத் தோண்டி ரஸாதலம் வரை சென்றார்கள். இவ்வாறாக, மாமலைகளுடன் விளங்கும் இந்த ஜம்பூத்வீபத்தைத் தோண்டியவாறே எல்லாப் பக்கங்களிலும் சுற்றிச் சுற்றி வந்தார்கள். அப்போது, பெரும் கலவரம் அடைந்த தேவ–கந்தர்வ–அசுர–பன்னகர்கள் எல்லோரும் பிரும்மாவிடம் சென்றார்கள். (20–22)

கவலை நிறைந்த முகத்தோடு கூடிய அவர்கள், பிரும்மாவைத் தோத்தரித்து மிகவும் பயத்துடன் அவரிடம் முறையிட்டார்கள்— ‘‘பகவானே! சகரனுடைய குமாரர்களால் பூமி முழுவதும் தோண்டப்படுகிறது. ஏராளமான சான்றோர்களும் நீர்வாழ் பிராணிகளும் வதம் செய்யப்படுகிறார்கள். ‘இவன் வேள்விக்கு இடையூறு செய்தவன்; இவன்தான் அசுவமேத

குதிரையைத் திருடிச் சென்றவன்' என்று சொல்லிக் கொண்டு, சகர குமாரர்கள் எல்லாப் பிராணிகளையும் துன்புறுத்தி வருகிறார்கள்.'' (23–25)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
முப்பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பது

கபிலரைக் காணுதல்

யமனைப் போன்று மகாபலம் படைத்த சகர புத்திரர்களின் செயலால் கதிகலங்கி, அச்சத்தால் நடுங்கியவண்ணம் தேவர்கள் சொன்னதைக் கேட்டு, பிரும்மா பதில் கூறினார்— (1)

''இந்தப் பூமி முழுவதும் வாசுதேவருடைய மனைவி; மாதவனுக்கு உரியவள். அதே பகவான், கபிலர் என்ற உருவம் ஏற்று, இந்த உலகத்தை எப்போதும் தாங்கிக் கொண்டிருக்கிறார். அவருடைய கோபக்கனலால் அரசகுமாரர்கள் அனைவரும் விரைவில் எரிக்கப்படப் போகிறார்கள். பூமியைத் தோண்டுவது என்பது மிகப்பழமையான சமாசாரம். (இது ஒவ்வொரு கல்பம்தோறும் நடந்து வருகிறது.) குறைந்த வாழ்நாட்களையுடைய சகரனுடைய குமாரர்களும் அழியத்தான் போகிறார்கள்.'' எதிரிகளை அடக்குபவனே! பிரும்மாவின் சொற்களைக் கேட்ட முப்பத்து முக்கோடி தேவர்களும் மிகுந்த மனமகிழ்ச்சியுடன் வந்தவாறே திரும்பிச் சென்றார்கள். (2–5)

சகரனுடைய பராக்கிரமம் மிக்க புதல்வர்கள் பூமியைப் பிளந்தபோது இடியோசை போன்ற பேரொலி எழுந்தது. அவர்கள் உலகம் முழுவதும் தோண்டிப் பார்த்து, கடல் சூழ் மண்ணுலகை வலம் வந்து (சிறிது இடம்கூட விடாமல் தேடிப் பார்த்துவிட்டு,) சகரனிடம் வந்து கூறினார்கள்— 'நாங்கள், உலகம் முழுவதிலும் சுற்றிப் பார்த்துவிட்டோம். தேவ–அசுர–அரக்க–பைசாச–உரக–பன்னகர்கள் போன்ற வீரப்பிராணிகளைக் கொன்று போட்டோம். யாகக் குதிரையையோ, அதைத் திருடிச் சென்றவனையோ நாங்கள் பார்க்கவில்லை. வாழ்க, மன்னா! நாங்கள் இனி என்ன செய்ய வேண்டும்? என்பதை ஆலோசித்துக் கூறுங்கள்.' (6–9)

இராகவா! அவர்கள் கூறியதைக் கேட்ட மாமன்னன், மிகவும் கோபம் கொண்டு கூறினான்— ''மீண்டும் சென்று பூமியின் அடிப்பாகம் வரை தோண்டுங்கள். வெற்றி உங்களுக்கே. குதிரையைத் திருடிச் சென்றவனைக் கண்டுபிடித்து, காரியத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு திரும்பி வாருங்கள்.'' போற்றுதற்குரிய தந்தை சகரனின் ஆணையை ஏற்று, அறுபதினாயிரம் மைந்தர்களும் ரஸாதலம் தட்டுப்படும்வரை பூமியைக் குடைந்தார்கள். இவ்விதம் குடைந்து கொண்டே போகும்போது மாபெரும் பர்வதம் போன்று விளங்கியதும், மண்ணுலகைத் தாங்கிக் கொண்டிருப்பதுமான 'விரூபாட்சன்' என்ற திசைக்களிற்றைக் கண்டார்கள். விரூபாட்சன் என்ற மாபெரும் யானை, மலை–காடுகளோடு கூடிய இவ்வுலகத்தைத் தன் தலையில் சுமந்து கொண்டிருந்தது. (10–14)

காகுத்தனே! அது எவ்வெப்போது களைப்படைந்துத் தலையைச் சற்று அசைத்துக் கொள்கிறதோ, அப்போதெல்லாம் நிலநடுக்கம் உண்டாகிறது. திசைக்காவலனான அந்தப் பெரும் யானையை வலம் வந்து, மரியாதை செலுத்தி, ரஸாதலத்தைத் துளைத்துக் கொண்டு தொடர்ந்து சென்றார்கள். கிழக்குத் திசையைத் தோண்டிப் பார்த்துவிட்டு தெற்குத் திசைக்குச் சென்றார்கள். தெற்குத் திசையிலும் ஒரு மாபெரும் யானையைக் கண்டார்கள். மிகப்பெரிய மலை போன்றிருந்த, மகாபலம் பொருந்திய, தலையினால் பூமியைத் தாங்கிக் கொண்டிருக்கிற 'மகாபத்மம்' என்ற யானையைப் பார்த்துப் பேராச்சரியம் அடைந்தார்கள். (15–18)

சகரனுடைய அறுபதினாயிரம் புதல்வர்களும் மகாபத்மத்தை வலம் வந்து, பின்னர் மேற்குத் திசையில் தோண்டத் தொடங்கினார்கள். மகாபலசாலியான அவர்கள் மேற்குத் திசையிலும் பேராற்றல் படைத்ததும், பெரிய மலை போன்றதுமான 'ஸௌமநம்' என்ற திசைக்களிற்றைக் கண்டார்கள். அவர்கள் அதனுடன் க்ஷேம–லாபங்கள் விசாரித்துவிட்டு, வலம் வந்து, தோண்டிக் கொண்டே இமயமலை இருந்த வடக்குத் திசையை அடைந்தார்கள். (19–21)

ரகுநாயகனே! வடக்கில் பனிப்பாறை போன்று வெண்மையான 'சுவேதபத்ரம்' என்ற திசைக்களிறு மங்களமயமான தன் சரீரத்தால், இவ்வுலகைத் தாங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தார்கள். அன்புடன் அதைத் தடவிக் கொடுத்து, அவர்கள் எல்லோரும் அதைப் பிரதட்சிணம் செய்து, அறுபதினாயிரவரும் பூமியை மேலும் தோண்டினார்கள். சகர குமாரர்கள் அனைவரும் கீர்த்தி பெற்ற வடகிழக்குத் திசைக்குச் சென்று மிகவும் ஆக்ரோஷத்துடன் பூமியைத் தோண்டினார்கள். பேரார்வமும், பயங்கரமான வேகமும், பேராற்றலும் கொண்ட அவர்கள், சனாதன வாசுதேவ ஸ்வரூபமான கபிலர் என்பவரை அங்கே பார்த்தார்கள். (22–25)

ரகுநந்தனா! அவர் இருந்த இடத்திற்கு சமீபத்திலேயே ஒரு குதிரை மேய்ந்து கொண்டிருந்தது. அவர்கள் எல்லோருக்கும் எல்லையில்லாத மகிழ்ச்சி உண்டாயிற்று. அவரைக் குதிரையைத் திருடியவராக எண்ணிக் கொண்டு, கோபத்தால் கலங்கிய கண்களுடன் மண்வெட்டி, கலப்பை, பற்பல மரங்கள், பாறைகள் எடுத்துக் கொண்டு, சினத்தால் கொதித்து, ஓட்டமாக ஓடி வந்து, 'இரு, இரு... பதில் சொல்' என்று அதட்டினார்கள். 'எங்கள் யாகக் குதிரையை, நீதான் திருடிக் கொண்டு வந்திருக்கிறாய். கெட்ட புத்தியுள்ளவனே! இங்கே வந்திருக்கும் நாங்கள் சகரனுடைய குமாரர்கள், தெரிந்துகொள்.' (26–28)

இராமா! அவர்கள் பேசியதைக் கேட்ட கபிலர் மிக்கச் சினமடைந்து, 'ஹூம்' என்று சத்தம் எழுப்பினார். காகுத்தனே! ஒப்புயர்வற்ற பிரபாவம் கொண்ட கபிலர், அந்த ஹூம்கார ஒலியினாலேயே சகரனின் மைந்தர்கள் அத்தனை பேரையும் சாம்பல் குவியலாக்கிவிட்டார். (29–30)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
நாற்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்தொன்று

அசுவமேத யாகம் நிறைவடைதல்

மைந்தர்கள் சென்று வெகுகாலமாகியும் திரும்பி வராததைக் கண்டு, உள்ளொளியால் பிரகாசித்துக் கொண்டிருக்கும் பேரனைப் பார்த்து சகரன் கூறினார்— (1)

"நீ மகாசூரன்; நிறையப் படித்தவன்; நம் முன்னோர்களுக்கு நிகரான ஆற்றலுடையவன்; சிற்றப்பன்மார்கள் எங்கே போனார்கள்? என்று கண்டுபிடி. அத்துடன் யாகக் குதிரையைத் திருடிச் சென்றவனையும் தேடிக் கண்டுபிடி. பூமியினுள்ளே பேராற்றலும் பேருருவமும் கொண்ட பிராணிகள் இருக்கின்றன. அவைகளை எதிர்த்துப் போரிடுவதற்காக, போர்வாள் மற்றும் வில் எடுத்துச் செல்வாயாக. வணங்கிப் போற்றத்தக்கவர்களுக்கு உரிய மரியாதை செலுத்து. இடையூறு செய்பவர்களைக் கொன்றுவிடு. சென்ற காரியத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு, நீ திரும்பி வந்த பின்புதான் என்னுடைய யாகம் நிறைவடையும்." (2–4)

பராக்கிரமசாலியான அம்சுமான் பேரரசனான சகரனுடைய வார்த்தைகளைக் கேட்டதும் வில்லும் வாளும் தாங்கிப் புறப்பட்டான். வீரம் மிக்கவர்களான சிற்றப்பன்களால் பூமியைக் குடைந்து தோண்டப்பட்ட வழியிலேயே, சகர மன்னன் கொடுத்தக் குறிப்பின்படிச் சென்றான், பேரன் அம்சுமான். போகும் வழியில், ஓர் இடத்தில் தேவ–தானவ–ராட்சஸ–பிசாச–பட்சி–

நாகர்களால் பூஜிக்கப்படும் பேராற்றல் படைத்த ஒரு திசை யானையைக் கண்டான். அவன் அதனை வலம் வந்து, தொட்டுத் தடவி, குசலம் விசாரித்து, தன் சிற்றப்பன்கள் பற்றியும், குதிரை திருடி பற்றியும் கேட்டான். அம்சுமானின் வேண்டுகோளைக் கேட்டு, அந்தத் திசை யானை, 'அசமஞ்ஜன் புதல்வனே! வந்த காரியத்தை முடித்துக் கொண்டு, குதிரையுடன் விரைவில் போகப் போகிறாய்' என்று பதில் கூறிற்று. அந்த நல்வாக்கைக் கேட்ட அம்சுமான், மற்ற திக்கஜங்களையும் வரிசையாகப் பணிவுடன் கேட்கத் தொடங்கினான். (5–10)

பேச்சில் வல்லவைகளான மற்ற திக்கஜங்கள் அவனைப் போற்றிப் பூசித்து, 'குதிரையுடன் கூடத் திரும்பி வருவாய்' என்று தெம்பான பதிலைக் கூறின அதைக் கேட்ட பின்னர், தொடர்ந்து சென்ற அந்த மாவீரன், சகர குமாரர்களான தன் சிற்றப்பன்கள் சாம்பல் குவியலாகக் கிடந்த இடத்தைச் சென்றடைந்தான். அம்சுமானுக்கு (சிற்றப்பன்கள் கபிலரால் எரிக்கப்பட்டார்கள் என்பதை அறிந்ததும்) அளவில்லாத துயரம் உண்டாயிற்று. சகர குமாரர்கள் அழிக்கப்பட்டதால் துக்கம் மேலிடக் கேவிக் கேவி அழுதான். (11–13)

துயரம்–கவலைகளால் ஆட்கொள்ளப்பட்ட அந்த வீரன், அசுவமேத யாகக் குதிரை அருகிலேயே திரிந்து கொண்டிருப்பதைப் பார்த்தான். அரசகுமாரர்களுக்கு நீர்க்கடன் செலுத்த விரும்பிய அவன் தண்ணீருக்காக இங்குமங்கும் பார்த்தான். ஆனால், நீர்நிலை எதுவும் கண்ணில் படவில்லை. நெடுந்தொலைவுக்குப் பார்வையைச் செலுத்திப் பார்த்தான். அப்போது அவனுடைய சிற்றப்பன்களின் மாமனும், அனலைப் போல் ஒளிர்பவனும், பறவைகளின் தலைவனுமான கருடனைக் கண்டான். (14–16)

விநதையின் மைந்தனான மகாபலமுடைய கருடன் அவனைப் பார்த்து, "வீரனே! (சிற்றப்பன்மார் இறந்தது குறித்து) வருந்தாதே. அவர்கள், உலக நன்மைக்காகவே வதம் செய்யப்பட்டார்கள். பேராற்றல் படைத்த இவர்கள் ஒப்புயர்வற்ற கபிலரால் எரிக்கப்பட்டு மாண்டார்கள். அதனால், இவ்வுலகத்தின் தண்ணீரால் பிதிரர் கடன்களைக் கொடுப்பது சரியானது அல்ல. இமவானின் மூத்த புதல்வி, கங்கை. (அவள் நதியாக இருக்கிறாள்.) அந்த கங்கையின் புனித நீரைக் கொண்டு, பித்ருக்களான சிற்றப்பன்களுக்குத் தர்ப்பணம் செய். (17–19)

சாம்பல் குவியலாக்கப்பட்டுவிட்ட இவர்களைப் புனிதமான கங்கை நீர் நனைக்கட்டும். சாம்பல் குவியலாகிவிட்ட அறுபதினாயிரம் சகர புத்திரர்களை, மக்களைக் கவர்ந்திழுக்கும் கவின்மிகு கங்கை, தன் நீரால் நனைத்து சுவர்க்கலோகத்திற்கு அனுப்பி வைப்பாள். (எனவே,) தேவலோகத்திலிருந்து மண்ணுலகிற்குக் கங்கையைக் கொண்டு வா. (மேலுலகிலுள்ள) கங்கையை (கீழேயுள்ள) இவ்வுலகுக்குக் கொண்டு வர உன்னால் முடியுமானால் முயற்சி செய். பெரும்பேறு பெற்றவனே! மனத்தைத் தைரியப்படுத்திக் கொண்டு, இப்போது குதிரையுடன் செல்வாயாக. உன் பாட்டனாரால் ஆரம்பிக்கப்பட்ட யாகத்தைப் பூர்த்தி செய்வதற்கு இதுதான் வழி." (20–22)

கருடனின் ஆலோசனைப்படி, மகாவீரனான அம்சுமான் குதிரையை அழைத்துக் கொண்டு வேகமாகத் திரும்பி வந்தான். யாகதீட்சையிலிருந்த மன்னன் சகரனிடம் நடந்தவை அனைத்தையும் விவரமாகக் கூறினான். கருடன் கூறிய ஆலோசனையையும் சொன்னான். அம்சுமானிடமிருந்து பயங்கரமான செய்திகளைக் கேட்ட அரசன், உரிய நியமங்களோடும் விதிமுறைகளோடும் யாகத்தைப் பூர்த்தி செய்தான். அசுவமேத யாகத்தை நிறைவு செய்துவிட்டு, ராஜ்யலட்சுமியை உடைய சகரன், தன் நகரத்திற்குத் திரும்பிச் சென்றான். கங்கையைக் கொண்டு வருவது குறித்துப் பலவிதமாகச் சிந்தித்தும் எந்தவிதமான நிச்சயத்தையும் எட்டவில்லை. அந்த விஷயத்தில் எந்த முடிவும் எடுக்காமலே நீண்ட காலம் கடத்தி, முப்பதாயிரம் ஆண்டுகள் அரசு செலுத்தி, வானுலகை அடைந்தான். (23–27)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
நாற்பத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்து இரண்டு

பகீரதனுக்கு வரம் அளித்தல்

இராமா! சகரன் ஆயுள் முடிந்து விண்ணுலகம் ஏகியதும், நகரமக்கள் ஒருமனதாக அறநெறி நிற்பவனான அம்சுமானை அரசனாக்கினார்கள். அம்சுமான் மிகச்சிறந்த மன்னனாக விளங்கினான். அவனுடைய மைந்தன் திலீபன் புகழ்மிக்கவனாக இருந்தான். திலீபனிடம் அரசாட்சியை ஒப்படைத்துவிட்டு, இமயமலையின் ஒரு சிகரத்தில் கடுமையான தவத்தை மேற்கொண்டான், அம்சுமான். முப்பத்திரண்டாயிரம் ஆண்டுகள் தபோவனத்தில் இருந்து கீர்த்தி பெற்ற மன்னன் சுவர்க்கத்தை அடைந்தான். (1–4)

மகாவீரனான திலீபன், பாட்டனார்கள் வதம் செய்யப்பட்டதைக் கேட்டு, மனம் மிக வருந்தி, பற்பல ஆலோசனைகள் செய்தும் (கங்கையைக் கொண்டு வருவதற்கான) எந்த முடிவையும் எடுக்கவில்லை. 'நான் எவ்வாறு கங்கையைக் கீழே இறங்கி வரச் செய்வேன்? எவ்வாறு என் முன்னோர்களுக்கு நீர்க்கடன் செலுத்தி முடிக்கப் போகிறேன்? அவர்களை எவ்வாறு கரையேற்றப் போகிறேன்?' என்ற கவலையில் மூழ்கினான். இவ்வாறு ('என் மூதாதையர்களைக் கரையேற்றுவது என் கடமையாயிற்றே' என்ற) அறிவுணர்வுடனும், தெளிவான சிந்தனையுடனும் இருந்த திலீபனுக்குத் தருமமூர்த்தியான பகீரதன் என்ற பெயருடையவன் புத்திரனாகப் பிறந்தான். (5–7)

மகாதேஜஸ்வியான திலீபன் பலவிதமான அநேக யாகங்களைச் செய்தான். முப்பதினாயிரம் ஆண்டுகள் அரசாட்சி செய்தான். மூதாதையர்களைக் கரையேற்றும் விஷயத்தில் எந்த முடிவுக்கும் வராமலே, நோயினால் பீடிக்கப்பட்டு மரணம் அடைந்தான், திலீபன். தான் செய்த புண்ணிய கர்மாக்களின் பயனாக, இந்திரலோகத்தை அடைந்து இன்புற்றிருந்தான். அரசர்களுள் காளை போன்றவனான பகீரதன் மன்னனாக முடிசூட்டப்பட்டான். (8–10)

ரகுநந்தனா! பகீரதன் ராஜரிஷி போன்றிருந்தான்; தருமம் தவறாதவனாக இருந்தான். ஆனால், மகப்பேறு இல்லை. மகன் வேண்டுமென்று ஆசைப்பட்டான். அதனால், நாட்டையும் மக்களையும் அமைச்சர்களிடம் ஒப்படைத்துவிட்டு, கங்கையைக் கொண்டு வருவதில் மிகவும் தீவிரமாக ஈடுபட்டு, கோகர்ணம் என்ற புண்ணியத்தலத்தில் நீண்டகாலம் தவத்தில் மூழ்கினான். கைகளை மேலே தூக்கிக் கொண்டு பஞ்சாக்னி மத்தியில் நின்றான். புலன்களை வென்று மாதம் ஒரு வேளை மட்டும் உணவு கொண்டான். மகாத்மாவான மன்னன் இவ்விதம் ஆயிரம் ஆண்டுகள் கடுமையான தவம் செய்தான். மக்களின் தலைவரும், வல்லமை பொருந்தியவருமான பகவான் பிரும்மா (பகீரதனின் நெடிய தவத்தினால்) திருப்தி அடைந்தார். (11–14)

உடனே, பிரும்மா தேவர்களோடு வந்து தவம் செய்து கொண்டிருந்த மகாதபஸ்வியான பகீரதனிடம் கூறினார்— 'பகீரதனே! பாக்கியசாலியே! மன்னனே! மிக மேன்மையாக அனுஷ்டிக்கப்பட்ட உன் தவத்தினால், நான் திருப்தி அடைந்தேன். வேண்டிய வரத்தைக் கேள்.' எல்லா உலகங்களுக்கும் பிதாமகரான அவரைப் பார்த்ததும் பேராற்றல் பெருந்திய பகீரதன் கைகளைக் கூப்பிக்கொண்டு எழுந்து நின்று சொன்னான்— (15–17)

''பகவானே! தாங்கள் என்னிடம் மகிழ்வுடன் இருப்பீர்களேயானால், என்னுடைய நீண்டகால தவத்திற்குரிய பலன் கிடைப்பதானால், சகரனுடைய மைந்தர்கள் அனைவரும் என் கையால் நீர் பெறுவார்களாக. மகாத்மாக்களான என்னுடைய எந்த கொள்ளுப்பாட்டனார்கள் சாம்பல் குவியலாக இருக்கிறார்களோ, அவர்கள் கங்கையின் நீரினால் நனைக்கப்பட்டு, அழிவில்லாத சுவர்க்க லோகத்தைச் சென்றடைய வேண்டும். தேவனே! எனக்குச் சந்ததியைக் கொடுக்க வேண்டும். எங்களுடைய இக்ஷ்வாகு பரம்பரை என்னுடன் முடிந்துவிடக் கூடாது. இதுவே நான் கோரும் மேலான வரம்.'' அனைத்துலகப் பிதாமகரான பிரும்மா, அரசன் சொன்னதைக் கேட்டு மங்களமான சொற்களை இனிய குரலில் பதிலிறுத்தார்— (18–21)

''பகீரதனே! மகாரதனே! உன்னுடைய மிக உயர்ந்த விருப்பம் அப்படியே ஆகுக. இக்ஷ்வாகு குலம் அழிவில்லாமல் விளங்கும். வாழ்க, நீ. இமவானுடைய மூத்த புதல்வியான கங்கை நதி இறங்கிவரும் மகத்தான வேகத்தை பரமசிவனால் மட்டும்தான் தாங்கிக் கொள்ள முடியும். அதனால் முதலில் சங்கரனின் அருளைப் பெறுவாயாக. மன்னனே! கங்கையின் வேகமான வீழ்ச்சியை பூமிதேவியால் தாங்கிக் கொள்ள முடியாது. கங்கையைத் தாங்கக் கூடிய பேராற்றல் சூலதாரியான பரமசிவனைத் தவிர, வேறு எவரிடமும் இல்லை.'' அரசனிடம் இவ்வாறு கூறிவிட்டு, கங்கையிடமும் பகீரதனுக்கு உதவி செய்யும்படிப் பரிந்துரை செய்துவிட்டு, மருத்கணங்களோடுகூட விண்ணுலகிற்கேகினார், பிரும்மதேவன். (22–25)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
நாற்பத்து இரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்து மூன்று

கங்கை பூமிக்கு வந்தாள்!

தேவதேவனான பிரும்மா சென்றதும், பகீரதன் ஒரு காலின் கட்டை விரலை மட்டும் தரையில் ஊன்றிக் கொண்டு ஒரு வருட காலம் பரமேசுவரனைக் குறித்துத் தவம் செய்தான். இரண்டு கைகளும் மேல்நோக்கி நின்றன; பிடிப்பு ஏதும் இல்லை; காற்றே உணவு; ஆதாரம் இல்லை; தூணைப் போல அசைவில்லாமல் நின்று இரவு–பகலாகத் தவமியற்றினான். ஓர் ஆண்டுக் காலம் நிறைந்ததும், உமாபதியும், எல்லா உயிர்களின் தலைவரும், எல்லா மக்களாலும் வணங்கப்படுபவருமான சங்கரன், மன்னன் பகீரதனிடம் இவ்வாறு கூறினார்— 'மாமனிதனே! உன் தவத்தால் நான் மகிழ்ச்சி அடைந்துள்ளேன். உனக்குப் பிரியமான காரியத்தைச் செய்து தருகிறேன். என் தலையில் இமவான் மகளைத் தாங்கிக் கொள்கிறேன்.' (1–4)

இமவானின் மூத்த புதல்வியும், எல்லா மக்களாலும் வணங்கிப் போற்றப்படுபவளுமான கங்கை மிகப்பெரிய உருவம் ஏற்று, தாங்க முடியாத வேகத்துடன் ஆகாயத்திலிருந்து மங்களமயமான சிவனுடைய தலையில் விழுந்தாள். ஆகா! தாங்கிக் கொள்ள முடியாத அளவுக்கு வேகமும் உருவமும் கொண்ட கங்கை, 'என்னுடைய ஓட்டத்தின் வேகத்தில் சங்கரனையும் இழுத்துக் கொண்டு பாதாளத்திற்குள் புகுந்து விடுகிறேன்' என்று எண்ணினாள். தன்னைத் தாழ்வாக மதிக்கும் அவள் எண்ணத்தை அறிந்து மிகவும் கோபம் கொண்ட பகவான் சங்கரன், கங்கையை மறைந்து போகும்படிச் செய்துவிட முடிவு செய்தார். (5–7)

புனிதமான கங்கை ருத்ரனுடைய சிரசில் குதித்தாள். இமாலயத்தைப் போன்று வெகு விஸ்தாரமாக இருந்த அவருடைய சடைக்கற்றை என்ற குகைக்குள் நுழைந்த அவள், எவ்வளவோ முயன்றும்கூட, எவ்விதத்திலும் பூமிக்குச் செல்ல சக்தியற்றவள் ஆனாள். சடைக் கூட்டத்தில் திக்குத் திசை புரியாமல் சிக்கித் தவித்த அவள், வெளியே வரும் வழியைக் காணவில்லை. அநேக ஆண்டுக் காலம் சடைமுடியிலேயே சுற்றித் திரிந்து கொண்டிருந்தாள். (8,9)

ரகுநந்தனா! (சங்கரனின் சடையில் புகுந்த) கங்கை வெளியே வர முடியாததால் பகீரதன் மறுபடியும் கடுமையான கட்டுப்பாடுகளுடன் தவம் செய்தான். பரமசிவன் மிகவும் மனமகிழ்ச்சி அடைந்தார். பின்னர் பரமேசுவரன், பிந்துஸரஸ் என்ற நீர்நிலையில் கங்கையைப் பாய விட்டார். அவளை விட்டவுடன், அங்கு ஏழு பிரிவுகளான நீரோட்டங்கள் ஏற்பட்டன. கங்கையின் புனிதமான நீரைக் கொண்ட ஹ்லாதிநீ, பாவநீ, நளிநீ என்ற மூன்று ஆறுகளும் கிழக்கு நோக்கிச் சென்றன. தெள்ளிய நீரைக் கொண்ட ஸுசக்ஷு, சீதா, மகாநதியான ஸிந்து ஆகிய மூன்று நதிகளும் மேற்குத் திசையை நோக்கிச் சென்றன. அவைகளுள் ஏழாவதான,

உலகத்தைப் புனிதமாக்கும் அலகாநந்தா என்ற கீர்த்தி பெற்ற ஆறு, மன்னன் பகீரதனைப் பின்தொடர்ந்தது. (10–14)

ராஜரிஷியான பகீரதன் தெய்விக ஆற்றல் கொண்ட ரதத்தில் ஏறி, வழிகாட்டிக் கொண்டு முன்னதாகச் சென்றான். கங்கை மிகவும் கம்பீரமாக, அவன் வழியில் பின்தொடர்ந்து சென்றாள். ஆகாயத்திலிருந்து சங்கரன் தலைக்கு வந்த அவள், பின்னர் பூமிக்கு வந்தாள். பேரிரைச்சல் எழுப்பியவாறு வேகமாக, அவள் பிரவகித்துக் கொண்டிருந்தாள். மீன்கள், ஆமைகள், முதலைகள் கூட்டம் கூட்டமாக அதனுடன் விழுந்தன. நீர்வாழ் மற்ற பிராணிகளும் கங்கையில் கலந்து விழுந்ததால், பூமி அழகு மிகுந்து காணத் தகுந்ததாயிற்று. (15–17)

அப்போது தேவரிஷி–கந்தர்வ–யட்ச–ஸித்தர்கள் கூட்டமாக வந்து, ஆகாயத்திலிருந்து பூமிக்குச் சென்றுவிட்ட கங்கையைப் பார்த்தார்கள். பட்டணம் போல் விசாலமான விமானங்களிலும், உத்தமமான குதிரை–யானைகளிலும் வந்த அவர்கள் பேராச்சரியத்துடன் அங்கே நின்று கொண்டார்கள். இணையற்ற ஆற்றலுடைய தேவர்கள் கங்கை பூமியில் விழுகின்ற அற்புதத்தை, காண்பதற்கரிய காட்சியைக் காண விரும்பிக் கூட்டங்கூட்டமாக வந்து குழுமினார்கள். (18–20)

(கங்கையின் பாய்ச்சலைக் காண விரும்பி) மிகவும் வேகமாக வந்து கொண்டிருந்த ஒளிமயமான தேகம் படைத்த தேவர்களாலும், அவர்கள் அணிந்து கொண்டிருந்த அணிகலன்களின் ஒளியினாலும், மேகங்கள் இல்லாமல் வெட்டவெளியாய் விளங்கிய ஆகாயம், நூறு சூரியப் பிரகாசத்துடன் பேரொளி வீசியது. துள்ளித் திளைத்தபடி வீழ்ந்து கொண்டிருந்த முதலை–பாம்பு–மீன் கூட்டங்களால் கங்கை நீர்வீழ்ச்சி, மின்னலின் ஒளிச்சிதறல்களுடன் தோன்றும் ஆகாயம் போல் விளங்கியது. ஆயிரக்கணக்கான துண்டுகளாக்கப்பட்ட வெண்மையான நுரை பரவலாக விழுந்து கொண்டிருந்த காட்சி, சரத் கால வெண்மேகங்களாலும், அன்னப் பறவைகளின் சஞ்சாரத்தாலும் விளங்கும் ஆகாயம் போலிருந்தது. (21–23)

சில நேரங்களில் வேகமாகவும், சில இடங்களில் குறுகலாகவும் மற்றும் சில இடங்களில் அகலமாகவும், சில சந்தர்ப்பங்களில் கீழ்நோக்கிப் பாய்ந்தும், சில சந்தர்ப்பங்களில் மேல்நோக்கித் தாவியும், சில இடங்களில் மிக மிக மெதுவாகவும், சில நேரங்களில் தண்ணீரின் மேல் தண்ணீரை அடித்துக் கொண்டும், அடிக்கடி மேலே மேலே சென்றும் (ஒருவழியாக) மண்ணுலகில் (கங்கை) வீழ்ந்தது. பரமேசுவரனின் திருமுடியிலிருந்து வெளிப்பட்டு, பூதலத்திற்கு வந்து சேர்ந்த அந்தத் தண்ணீர், மாசற்றதாகவும் தெள்ளியதாகவும் கருதப்பட்டது. (24–26)

அப்போது பூவுலகில், அவ்விடத்தில் இருந்த தேவரிஷிகளும் கந்தர்வர்களும், 'பரமசிவன் உடலிலிருந்து வந்து விழுந்த தண்ணீர் மிகவும் புனிதமானது' என்பதால், அதில் நீராடினார்கள். சாபம் பெற்றதனால் விண்ணுலகிலிருந்து மண்ணுலகத்துக்குத் தள்ளப்பட்டவர்கள் (தேவ–கந்தர்வ–யட்சர் முதலானோர்), அந்த நீரில் நீராடி, மாசுகள் நீங்கப் பெற்றார்கள். தூயதான கங்கையில் மூழ்கி எழுந்த அவர்கள் பாவம் நீங்கியவர்களாக (சாபவிமோசனம் பெற்று), ஆகாயமார்க்கமாக மீண்டும் தத்தம் உலகங்களை அடைந்தார்கள். தெளிவான ஒளிவீசும் அந்தத் தண்ணீரால் உலகம் மகிழ்ந்து களித்தது. மக்கள் கங்கையில் மூழ்கி நீராடி பாவம் நீங்கப் பெற்றார்கள். (27–30)

பராக்கிரமசாலியான ராஜரிஷி பகீரதன், தெய்விகமான ஒரு தேரில் அமர்ந்து முன்னே செல்ல, அவனுக்குப் பின்னால் கங்கை தொடர்ந்து சென்றது. தேவ–முனி–அசுர–அரக்க–கந்தர்வ–யட்ச–கின்னர–உரக–அப்சரக் கூட்டங்களும், எல்லா நீர்வாழ் பிராணிகளும் பகீரதனுடைய ரதத்தின் பின்னால் சென்று கொண்டிருக்கும் கங்கையை, மனம் நிறைந்தவர்களாகப் பின்தொடர்ந்து சென்றார்கள். எங்கெங்கெல்லாம் மன்னன் பகீரதன் சென்றானோ, அங்கங்கெல்லாம் புகழ் பெற்றவளும், ஆறுகளில் முதன்மையானவளும், எல்லாப் பாவங்களையும் அழிப்பவளுமான கங்கை சென்றாள். (31–34)

போகும் வழியில் அபார சக்தி வாய்ந்தவரான ஜன்ஹு யாகம் செய்து கொண்டிருந்தார். கங்கை, தன் பிரவாக வேகத்தால் மகிமை பொருந்திய அவருடைய வேள்விச்சாலையை நீரில் மூழ்கடித்தாள். இராகவா! யாகதீட்சையிலிருந்த அவர், அவளுடைய செருக்கைத் தெரிந்து கொண்டு, கங்கையின் நீர்ப்பெருக்கு முழுவதையும் குடித்துவிட்டார். அடடா, என்ன அற்புதம்! அப்போது அதைக் கண்டு தேவ–கந்தர்வ–முனிவர்கள் மிகவும் ஆச்சரியமடைந்து, புருஷசிரேஷ்டரும், தயவு நிறைந்தவருமான ஜன்ஹுவைப் பிரார்த்தித்தார்கள். 'கங்கை, உங்கள் மகள் போல' என்று நயந்து கூறினார்கள். அதனால் மனம் மகிழ்ந்த அவர், தன் செவிகள் வாயிலாகக் கங்கையை வெளிப்படுத்தினார். அது முதற்கொண்டு ஜன்ஹுவின் மகள் என்ற பொருள்படும் ஜான்ஹவி என்று கங்கை அழைக்கப்படலானாள். மீண்டும் பகீரதனின் ரதத்தைத் தொடர்ந்து சென்றாள், கங்கை. (35–39)

ஆறுகளில் தலைமையான கங்கை, கடல் எல்லை வரை சென்று, பகீரதன் எடுத்துக் கொண்ட முயற்சி நிறைவேறுவதற்காக பாதாளம் சென்றாள். ராஜரிஷி பகீரதன் மிகவும் முயன்று கங்கையைக் கொண்டு வந்து, சாம்பலாகக் கிடந்த பாட்டனார்களை மிகவும் துயரத்தோடு பார்த்தான். (இவர்களுக்கு இத்தனை காலம் வரை நல்ல கதி கிடைக்கவில்லையே? என்பதால் துயரம்.) ரகுகுலத் தோன்றலே! சாம்பல் குவியல் மேல் கங்கை நீரைப் பொழிந்தான். பாவங்கள் நீங்கப் பெற்ற அவர்கள் சுவர்க்கத்தை அடைந்தார்கள். (40–42)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
நாற்பத்து மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்து நான்கு

சகர குமாரர்கள் நற்கதி அடைதல்

கங்கை பின்தொடர கடற்கரையை அடைந்த மன்னன் பகீரதன், பூமிக்குக் கீழே ரஸாதலத்தில், அவனுடைய முன்னோர்கள் சாம்பலாக்கப்பட்ட இடத்தை அடைந்தான். இராமா! கங்கை நீரினால் சாம்பல் நனைக்கப்பட்ட அந்த நேரத்தில் எல்லா உலகங்களுக்கும் தலைவரான பிரும்மா, அங்கு தோன்றி அரசனைப் பார்த்துக் கூறினார்— (1–2)

''ஆண்சிங்கமே! மகாத்மாவான சகரனுடைய அறுபதினாயிரம் புதல்வர்களும் கடைத்தேற்றப்பட்டு, தேவர்களைப் போல் விண்ணுலகம் அடைந்துவிட்டார்கள். மன்னனே! சமுத்திரத்தில் நீர் உள்ள காலம் வரை சகர குமாரர்கள், தேவர்களைப் போல தேவலோகத்தில் சௌக்கியமாக இருப்பார்கள். கங்காதேவியும் உனக்கு ஒரு மூத்த மகள் போல் ஆகிறாள். உன்னுடைய பெயரை ஒட்டி, பாகீரதி என்ற பெயருடன் உலகில் கீர்த்தியுடன் விளங்கப் போகிறாள். பாகீரதி என்பதுடன் தெய்விக நதியான கங்கை, த்ரிபதகா என்ற பெயரையும் பெறுகிறாள். மூன்று வழிகளில் (உலகங்களில்) பாய்ந்து புனிதப்படுத்துகிறாள் என்பதால் 'த்ரிபதகா' என்ற சிறப்புப் பெயரை அடைகிறாள். அரசனே! உன்னுடைய பாட்டனார்கள் எல்லோருக்கும் இங்கே நீர்க்கடன் செலுத்திப் பிரதிக்ஞையை நிறைவேற்று. (3–7)

உன்னுடைய தந்தை முதலிய முன்னோர்கள் மிகவும் புகழ்பெற்றவர்கள்; அறநெறியாளர்கள்; மேன்மையானவர்கள். என்றாலும், அவர்கள் மனோரதம் நிறைவேறவில்லை. (கங்கையைக் கொண்டுவர முடியவில்லை.) அம்சுமான், உலகில் நிகரற்ற பராக்கிரமம் படைத்தவன்; ராஜரிஷி; நற்குணங்கள் நிறைந்தவன்; மாமுனிவர்களைப் போன்ற ஆற்றலுடையவன்; தவத்தில் எனக்கு ஈடானவன்; க்ஷத்திரிய தருமத்தைக் கைவிடாது கடைப்பிடித்தவன். (இவ்வளவு சிறப்புக்களைப் பெற்ற அவன்) கங்கையைக் கொண்டு வருவதாகச் சபதம் செய்தும், அதை நிறைவேற்ற

முடியவில்லை. குற்றமற்றவனே! உன்னுடைய தந்தையான திலீபன் பேராற்றலுடையவன். அவன், மறுபடியும் முயன்றும்கூட கங்கையைக் கொண்டுவர முடியவில்லை. (நெடுங்கால முயற்சிக்குப் பின்பும் நிறைவேற்றப்படாமலிருந்த) அந்தப் பிரதிக்ஞை உன்னால் நிறைவேற்றப்பட்டுள்ளது. (இந்த அரிய செயலினால்) இவ்வுலகில் மகோன்னதமான கீர்த்தியை அடைந்திருக்கிறாய். (8–12)

எதிரிகளை அடக்குபவனே! கங்கையை (மேலுலகத்திலிருந்து) கீழே இறக்கிக் கொண்டு வந்த செயற்கரிய செயலினால், தருமத்திற்கு இருப்பிடமான உத்தமலோகங்களையும் அடையப் போகிறாய். மனிதருள் மாணிக்கமே! எந்தக் காலத்திலும் நீராடுவதற்கு உரியதான இந்தப் புனிதநீரில் நீயும் மூழ்கி நீராடு. அதனால் தூய்மையடைந்து புண்ணியப் பயன்களை அடைவாய். பாட்டனார்கள் எல்லோருக்கும் தர்ப்பணம் செய். உனக்கு மங்களம் உண்டாகட்டும். நான் சத்தியலோகத்திற்குச் செல்கிறேன். நீ உன் நகரத்திற்குச் செல்வாய்.'' தேவர்களுக்குத் தலைவரும், அனைத்துலகப் பிதாமகருமான பிரும்மா இவ்வாறு கூறிவிட்டு, தான் வந்த வழியே தேவலோகத்திற்குத் திரும்பிச் சென்றார். (13–16)

மன்னனாயினும் முனிவர் போன்றிருந்த பகீரதனும் விதிக்கப்பட்ட கர்மாவான நீர்க்கடனை, பெரும்புகழ் கொண்ட சகர குமாரர்களுக்கு உரிய முறையில் வரிசையாகச் செலுத்தினான். தர்ப்பணம் செய்துத் தன் பிதிரர் கடன்களிலிருந்து விடுபட்டுத் தூய்மையடைந்த மன்னன், தன் பட்டணத்தில் பிரவேசித்தான். இவ்வாறு தன் எண்ணம் ஈடேறப் பெற்றவனாகத் தன் நாட்டில் நல்லாட்சி செய்தான். இராகவனே! தங்கள் மன்னனைத் திரும்பவும் பெற்ற மக்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். அவர்களுடைய சோகம் அழிந்தது; எண்ணம் கைகூடியது; கவலை நீங்கியது. (17–19)

இராமா! கங்கையின் வரலாற்றை விரிவாக உனக்குச் சொன்னேன். உரிய காலத்தில் மாலை நேர வழிபாடுகளை நிறைவேற்ற வேண்டுமல்லவா? நீ வாழ்க! சந்தியாகாலம் கழிந்து கொண்டிருக்கிறது. இந்த வரலாறு பொருள், புகழ், நீண்ட ஆயுள், மழலைச் செல்வம், சுவர்க்கம் ஆகியவற்றை வழங்கக் கூடியது. அந்தணர், க்ஷத்திரியர் மற்றும் அனைவருக்கும், எவர் இந்தக் கதையைச் சொல்கிறாரோ, அவருடைய பிதிரர்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள்; தேவதைகளும் பிரீதி அடைகின்றன. கங்கை பூமிக்கு இறங்கி வருதல் என்ற மங்களமான இந்தக் கதையைக் கேட்பவருடைய எல்லா விருப்பங்களும் நிறைவேறுகின்றன. காகுத்தனே! அவருடைய பாவங்கள் அனைத்தும் அழிந்து போகின்றன; ஆயுளும் கீர்த்தியும் பெருகுகின்றன. (20–22)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
நாற்பத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்தைந்து

அமிழ்தம் தோன்றுதல்

விசுவாமித்திரர் கூறிய கதையைக் கேட்டு மிகவும் ஆச்சரியமடைந்த இராம–லட்சுமணர்கள், அவரிடம் இவ்வாறு கூறினார்கள்— (1)

''வேதவித்தகரே! புனிதமான கங்கை தேவலோகத்திலிருந்து இறங்கி வந்து, சகர குமாரர்களால் தோண்டப்பட்ட பள்ளத்தை நீரால் நிரப்பி, சாகரமாக்கிய உன்னதமான கதையைக் கூறினீர்களே, அது மிகவும் ஆச்சரியத்தை அளிக்கிறது. தாங்கள் கூறிய அந்தக் கதையைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்த எங்களுக்கு இரவு முழுவதும் நொடிப்பொழுதாகக் கழிந்துவிட்டது.'' விசுவாமித்திரர் சொன்ன மங்களமான கதையிலேயே மனம் லயித்து,

லட்சுமணனுடன் பேசிக் கொண்டிருந்ததில் இரவு முழுவதும் கழிந்தது. நிர்மலமான வைகறைப்பொழுது தோன்றியதும், காலை சந்தியாவந்தனம் முதலிய நித்திய கடமைகளைச் செய்த பின்னர், மாமுனிவர் விசுவாமித்திரரிடம் சென்று இராகவன் இவ்வாறு கூறினார்— (2–5)

''வந்தனைக்குரிய இரவுமடந்தை சென்றுவிட்டாள்; கேட்கத் தகுந்த உயர்ந்த கதையையும் கேட்டுவிட்டேன். நீரோட்டங்களில் தலைசிறந்ததான, புண்ணியம் நல்கும் த்ரிபதகா நதியைக் கடந்து அக்கரை செல்வோம். புண்ணிய கர்மாக்களை அனுஷ்டிக்கும் முனிவர்களுக்கு ஏற்ற வகையில், சுகமான இருக்கை இந்தப் படகில் அமைக்கப்பட்டுள்ளது. தாங்கள் இங்கே வந்திருப்பதை அறிந்து கொண்ட இவ்விடத்திய முனிவர்கள், உடனடியாக இதை அனுப்பியிருக்கிறார்கள்.'' (6,7)

இராமன் கூறியதைக் கேட்ட அவர், முனிவர் கூட்டங்களோடும் இராமனோடும் அந்த ஓடத்தில் ஏறி நதியைக் கடந்து சென்றார். வடக்குக் கரையை அடைந்தவுடன், அங்கிருந்த முனிவர்களுக்கு உபசாரங்கள் செய்து கங்கையின் கரையில் தங்கினார்கள். அப்போது விசாலா என்னும் நகரத்தை அங்கிருந்தவாறே பார்த்தார்கள். பின்னர், அழகிய, தெய்விகமான, தேவலோகம் போல் விளங்கும் விசாலா நகரத்திற்கு இராம–லட்சுமணர்களோடு முனிவர் விரைந்து சென்றார். (8–10)

மகாமேதாவியான இராமன், கைகளைக் கூப்பிக் கொண்டு மாமுனிவர் விசுவாமித்திரரிடம் சிறந்த நகரமான விசாலாவைப் பற்றிக் கேட்டார்— ''மாமுனிவரே! விசாலா நகரத்தில் எந்த வம்சம் ஆட்சி செய்து கொண்டிருக்கிறது? என்பதை அறிய விரும்புகிறேன். தங்களை வணங்கிக் கேட்கிறேன். இதைத் தெரிந்து கொள்வதில் மிகவும் ஆவலுள்ளவனாக இருக்கிறேன்.'' இராமன் கேட்ட கேள்விக்கு முனிவர் மிகத்தொன்மையான விசாலா நகரத்தைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தார்— (11–13)

''இராமா! இந்திரனிடமிருந்து நான் கேட்டுத் தெரிந்து கொண்ட விபரங்களை, இப்போது என்னிடமிருந்து கேள். இந்த நாட்டின் உண்மையான வரலாற்றைக் கேட்பாயாக. முன்னர் ஒரு கிருதயுகத்தில், திதியின் மைந்தர்களான தைத்யர்கள் மகாபலசாலிகளாக இருந்தார்கள். அதிதியின் புதல்வர்களான தேவர்கள் பெரும்பேறு பெற்றவர்களாகவும், ஆற்றல் மிக்கவர்களாகவும், தருமநெறியில் ஆழ்ந்த பற்றுடையவர்களாகவும் இருந்தார்கள். ஆண்புலியே! ஒரு சமயம் அவர்களுக்கு, 'நாம் மரணம்–மூப்பு–நோய் இல்லாதவர்களாக எப்படி ஆவோம்?' என்ற எண்ணம் உண்டாயிற்று. இவ்வாறு ஆலோசித்துக் கொண்டிருக்கும்போது, 'பாற்கடலைக் கடைந்து, அதன் சாரத்தை அடைவோம்' என்ற எண்ணம் பராக்கிரமசாலிகளான அவர்களுக்கு உண்டாயிற்று. எல்லை காணமுடியாத ஆற்றல் பெற்றிருந்த அவர்கள், அவ்வாறே நிச்சயம் செய்து, வாசுகியைக் கயிறாகவும் மந்தரமலையை மத்தாகவும் வைத்து, பாற்கடலைக் கடையத் தொடங்கினார்கள். (14–18)

ஆயிரம் ஆண்டுகள் கழிந்தபின், ஆயுர்வேத வடிவினராக, தருமாத்மாவான ஓர் ஆண் ஒரு கையில் தண்டமும், மற்றொரு கையில் கமண்டலமும் தாங்கியவராக வெளிப்பட்டார். அவருக்கு தன்வந்தரி என்று பெயர். அவருக்குப் பின் மிகவும் ஒளிபொருந்திய அப்சரசுகள் தோன்றினார்கள். மத்தினால் கடைந்தபோது, அப்புவின் (தண்ணீரின்) சாரத்தினால் உருவாக்கப்பட்ட அழகிகள் என்பதால் அப்சரஸ் என்ற பெயர் அவர்களுக்கு ஏற்பட்டது. காந்திமிக்க அறுபதுகோடி அப்சரப் பெண்கள் பாற்கடலிலிருந்து தோன்றினார்கள். (19–21)

காகுத்தனே! அவர்களுக்குப் பணிவிடை செய்பவர்களின் எண்ணிக்கைக்குக் கணக்கே இல்லை. அந்த அப்சர மங்கைகளை தேவ–தானவர்கள் யாரும் மணம் செய்துகொள்ள ஒப்பவில்லை. யாராலும் ஏற்றுக் கொள்ளப்படாத அவர்கள் பொதுமகளிர் ஆனார்கள். பிறகு,

ரகுநந்தனா! வருணனுடைய புதல்வியான வாருணீ மேலே வந்தாள். அதிருஷ்டக்காரியான அவள், தன்னை மனைவியாக ஏற்றுக் கொள்பவனைத் தேடிக் கொண்டு போனாள். திதியினுடைய புத்திரர்களான தைத்யர்கள் வருண குமாரத்தியை ஏற்றுக் கொள்ளவில்லை. (22–24)

குற்றமற்ற அவளை அதிதியின் மைந்தர்கள் ஏற்றுக் கொண்டார்கள். வாருணீ (சுரா) என்பவளை மறுத்த திதியின் புதல்வர்கள் அசுரர்கள் (சுராவை ஒதுக்கியவர்கள்) என்றும், அவளை ஏற்றுக்கொண்ட அதிதியின் குமாரர்கள் சுரர்கள் என்றும் அழைக்கப்பட்டார்கள். வாருணியை ஏற்றுக் கொண்ட சுரர்கள் மனம் மகிழ்ந்து ஆனந்தமாக இருந்தார்கள். குதிரைகளில் சிறந்ததான உச்சைசிரவமும், கௌஸ்துபம் என்ற இரத்தினமும் மேலே எழுந்து வந்தன. புருஷோத்தமனே! அதைத் தொடர்ந்து மகிமை பொருந்திய அமிழ்தம் வெளிப்பட்டது. பின்னர், அதன் காரணமாக மிகப்பெரிய அளவில் உயிர்ச்சேதம் ஏற்பட்டது. அதிதியின் புதல்வர்கள் திதியின் மைந்தர்களைக் கொன்று குவித்தார்கள். ஒரு சமயம் அசுரர்கள் ராட்சஸர்களை உடன் அழைத்துக் கொண்டு வந்தார்கள். (25–28)

வீரனே! மூன்று உலகங்களையும் மயங்கச் செய்யும் கோரமான யுத்தம் நடந்தது. பேரழிவு ஏற்பட்டதும் மகாபலசாலியான விஷ்ணு, மோகினி என்ற மாயா வடிவத்தில் வந்து, வேகமாக அமிர்தத்தைக் கைப்பற்றிக் கொண்டு போய்விட்டார். புருஷோத்தமரும் அழிவில்லாதவருமான விஷ்ணுவை எதிர்த்துச் சென்ற அசுரர்கள், பராக்கிரமம் மிக்க விஷ்ணுவால் தூள்தூளாக்கப்பட்டார்கள். அதிதியின் சொந்தப் பிள்ளைகளான சுரர்கள், திதியினுடைய மைந்தர்களைத் தாக்கி ஒழித்தார்கள். திதி–அதிதியின் குமாரர்களிடையே நடந்த அந்தக் கடுமையான போரில் திதியின் புத்திரர்களை அழித்து, இந்திரன் ராஜ்யத்தை மீட்டுக் கொண்டான். மகிழ்ச்சியுடன் ரிஷிக் கூட்டங்களோடும் சாரணர்களோடும் கூடிய உலகங்களை ஆளத் தொடங்கினான். (29–31)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
நாற்பத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்தாறு

திதியின் கர்ப்பம் சிதறுதல்

தன்னுடைய குமாரர்கள் கொல்லப்பட்டதால் மிகவும் துக்கமடைந்த திதி, மரீசியின் புதல்வரும், தன்னுடைய கணவருமான காசியபரிடம் இவ்வாறு கூறினாள்— (1)

''பகவானே! மகாபலசாலியான உங்களுடைய (இன்னொரு மனைவியின்) புத்திரர்களால், என் சொந்தப் பிள்ளைகள் கொல்லப்பட்டு விட்டார்கள். நீண்ட காலம் தவம் செய்து, இந்திரனைக் கொல்லக்கூடிய ஒரு புத்திரனைப் பெற விரும்புகிறேன். அதற்காக, நான் தவத்தை மேற்கொள்ளப் போகிறேன். நீங்கள், நான் கர்ப்பம் தரிக்கச் செய்யவேண்டும். பலம் மிகுந்தவன்; சமநோக்குக் கொண்டவன் – இப்படிப்பட்டவனாக இந்திரனைக் கொல்லும் ஆற்றல் பெற்ற ஒரு மகனை எனக்குக் கொடுக்க வேண்டும்.'' (2,3)

அவளுடைய சொற்களைக் கேட்ட காசியபர், பெரும் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் திதியைப் பார்த்து, ''அப்படியே ஆகட்டும். வாழ்க, நீ. தவச்செல்வியே! நீ பூரணமாக ஆசாரங்களைக் கடைப்பிடித்துத் தூய்மையுடன் இருக்க வேண்டும். நீ ஆயிரமாண்டுக்காலம் ஆசாரத்தைக் கடைப்பிடித்து வந்தால், இந்திரனைக் கொல்லும் சக்திபெற்ற மகனை அடைவாய். மூன்று உலகங்களையும் காப்பாற்றக்கூடிய ஒரு புத்திரனை, என் மூலமாக நீ அடைவாய்.'' இவ்வாறு

கூறிவிட்டு, மகாதேஜஸ்வியான அவர் அவளைத் தன் கைகளால் தொட்டார். அவளை அணைத்துக் கொண்டு, 'உனக்கு மங்களம் உண்டாகுக' என்று ஆசீர்வதித்துவிட்டு, அவர் தவம் செய்யப் போய்விட்டார். (4–6)

மாமனிதனே! அவர் சென்றபின், மிகவும் மகிழ்ச்சியோடிருந்த திதி, குசப்லவம் என்ற இடத்திற்குச் சென்று கடுமையான தவத்தில் ஈடுபட்டாள். தவம் செய்கிற அவளுக்கு ஆயிரம் கண் படைத்த இந்திரன் அடக்க–ஒடுக்கமாக சேவை செய்தான். அக்னி, குசம் என்ற தர்பம், விறகு, தண்ணீர், பழம், கிழங்கு முதலியவைகளையும், அவளுக்குத் தேவைப்படும் பிற பொருட்களையும் தக்க சமயத்தில் கொண்டு வந்து கொடுத்தான். இந்திரன் (சிற்றன்னையின்) காலைப் பிடித்துவிட்டு, உடற்களைப்பைப் போக்கினான். மற்றும் எல்லா நேரங்களிலும் அவளுடைய பணிவிடையிலேயே ஈடுபட்டிருந்தான். ஆயிரம் ஆண்டுகள் நிறைவடைய இன்னும் பத்து ஆண்டுகளே மிச்சமிருந்தன. அப்போது, மிகவும் மனமுவந்த திதி, இந்திரனைப் பார்த்துக் கூறினாள்— (7–11)

''வீரர்களில் சிறந்த வீரனே! தவம் நிறைவடைவதற்கு இன்னும் பத்தாண்டுக் காலமே உள்ளது. வாழ்க, நீ. அதன் பின்னர், நீ உன் சகோதரனைக் காண்பாய். உன்னைக் கொல்வதற்காகவே நான் ஒரு புத்திரனை வேண்டினேன். (உன்னுடைய களங்கமற்ற தொண்டினால் என் எண்ணம், உனக்குச் சாதகமாக மாறிவிட்டது.) அவன், உன்னை வெற்றிகொள்ள முனையும்போது, நான் அவனைச் சமாதானப்படுத்துவேன். மகனே! மூன்று உலகங்களையும் வென்று, அவனுடன்கூட எந்தக் கவலையுமில்லாமல் அனுபவிப்பாயாக. தேவர் தலைவனே! மகாத்மாவான உன் தந்தையிடம் ஒரு மகனை வேண்டிப் பிரார்த்தித்தேன். 'ஆயிரம் ஆண்டுகளுக்குப்பின் நீ விரும்பியபடி ஓர் ஆண் குழந்தை பிறப்பான்' என்று அவர் வரம் கொடுத்தார்.'' (12–14)

இவ்வாறு இந்திரனிடம் கூறினாள், திதி. (பிற்பகலில்) களைப்படைந்திருந்த அவளுக்குத் தூக்கம் வந்தது. தூக்கக் கலக்கத்தில் தலையை ஆட்டி ஆட்டி, தலைக் கூந்தல் பாதங்களில் படும்படியாக இருந்த நிலையில் உறங்கிப் போனாள். கால்களில் தலைபடும்படியான கோலத்தில் ஆசாரக் குறைவுடன் இருந்த அவளைப் பார்த்து, இந்திரன் இகழ்ச்சி தோன்ற சிரித்தான்; மகிழவும் செய்தான். இராமா! மிகவும் கவனமாக இருக்கும் இந்திரன், அவளுடைய உடலில் பிரவேசித்து வயிற்றிலிருந்த கர்பத்தை ஏழு துண்டுகளாக்கினான். நூறு முனைகளையுடைய வஜ்ராயுதத்தைத் தரிக்கும் இந்திரனால் தகர்க்கப்படும்போது, கர்பம் உரத்தக் குரலில் அழுதது. அந்த சத்தத்தினால் திதி விழித்துக் கொண்டாள். (15–18)

(*மா ருத:, மா ருத:*) 'அழாதே, அழாதே' என்று கர்பத்திடம் இந்திரன் சொன்னான். அப்படியும் அது அழுது கொண்டிருக்கும்போதே அதனைக் கூறுகளாக்கினான். கொல்லாதே, கொல்லாதே என்று திதி அலறினாள். தாயின் சொல்லுக்கு மதிப்புக் கொடுத்து இந்திரன், அவள் வயிற்றிலிருந்து வெளியே வந்து விழுந்தான். கைகளைக் கூப்பிக்கொண்டு வஜ்ரத்துடன் நின்ற இந்திரன், ''தலைக் கூந்தல், கால்களில் உரசும்படியான அனாசார நிலையில் தாங்கள் இருந்தீர்கள். அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, யுத்தத்தில் இந்திரனைக் கொல்வதற்காகவே தோன்றப் போகிறவனை ஏழு துண்டுகளாக வெட்டினேன். அன்னையே! என்னை மன்னித்து விடுங்கள்'' என்று சொன்னான். (19–22)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
நாற்பத்தாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்தேழு

‘விசாலா’ நகரத்திற்குச் செல்லுதல்

தன்னுடைய கர்பம் ஏழு பிண்டங்களாகச் செய்யப்பட்டதால் மிகவும் துக்கமடைந்த திதி, வெற்றி கொள்ள முடியாதவனான இந்திரனிடம் சமாதானமாகப் பேசினாள்— (1)

‘‘தேவர்கள் தலைவனே! எதிரிகளின் ஆற்றலை அழிப்பவனே! என்னுடைய தவற்றினால்தான் கர்பம் ஏழு கூறுகளாக்கப்பட்டது. குற்றம் உன்னுடையது அல்ல. என்னுடைய கர்பம் சிதைக்கப்பட்டுவிட்டது. உனக்கும் எனக்கும் பிரியத்தைக் கொடுக்கும் ஒரு செயலாக, அதை மாற்ற விரும்புகிறேன். இவர்கள் (கர்பத்துண்டுகள்) உருவமும் உயிரும் பெற்று, ஏழேழு மருத்துக்களின் ஏழு இடங்களைக் காப்பவர்களாக ஆகட்டும். மைந்தனே! என் பிள்ளைகளான இந்த எழுவரும் ‘மாருத’ என்று பெயர் பெற்று, தேவசரீரம் ஏற்று வாதஸ்கந்தர்களாக ஆகாயத்தில் சஞ்சரிக்கட்டும். இந்த ஏழு கணங்களில் ஒரு கணம் (எழுவர்) பிரும்மலோகத்திலும், இன்னொரு கணம் இந்திரலோகத்திலும் உலவுவார்கள். பெரும் புகழ் கொண்ட மூன்றாவது குழு திவ்விய வாயுவாக ஆகாயத்தில் வீசட்டும். (2–5)

தேவர்கள் தலைவனே! தெய்வத்தன்மை பெற்றுவிட்ட என்னுடைய புத்திரர்களான மீதமுள்ள நான்கு கணங்களும், உன்னுடைய ஆக்ஞைப்படி, எல்லாத் திசைகளிலும் உலவி வரட்டும். ‘*மா ருத: மா ருத:*’ (அழாதே, அழாதே) என்று உன்னால் கூறப்பட்டதற்கிணங்க, ‘*மாருதா:*’ (மருத்துக்கள்) என்ற பெயருடன் விளங்கட்டும்.’’ அவளுடைய உரையைக் கேட்ட ஆயிரங்கண்ணுடைய புரந்திரன் கைகளைக் கூப்பிக்கொண்டு (வணக்கமாக) திதியைப் பார்த்துக் கூறினான்— ‘‘தாங்கள் சொன்னபடியே எல்லாம் நடக்கும். சந்தேகப்பட வேண்டாம். உங்களுடைய புதல்வர்கள், தேவவடிவம் ஏற்று சஞ்சாரம் செய்வார்கள். வணங்குகிறேன் தாயே! விடைகொடுங்கள்.’’ (6–9)

தாயும் புதல்வனும் இந்தத் தபோவனத்தில் அவ்வாறு ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டு, தங்கள் காரியம் கைகூடியவர்களாக விண்ணுலகத்திற்குத் திரும்பிச் சென்றார்கள் என்று, பிறர் சொல்லக் கேட்டிருக்கிறேன். காகுத்தனே! திதி, எந்த நாட்டில் சித்தி பெறுவதற்காகத் தவம் செய்தாளோ, அவளுக்குப் பணிவிடை செய்து கொண்டு இந்திரன் வசித்து வந்தானோ, அந்த நாடு இதுதான். ஆண்புலியே! இக்ஷ்வாகுவின் மைந்தன் பரமதார்மிகனான அலம்புஸன். அவனுடைய குமாரன் விசாலன் என்பவன். அவன் இந்த இடத்தில் விசாலா என்ற நகரத்தை நிர்மாணித்தான். விசாலனுடைய புதல்வன் பலசாலியான ஹேமசந்திரன். ஹேமசந்திரனுக்குப் பின் அவனுடைய குமாரன் சூசந்திரன் என்பவன் புகழ்பெற்று விளங்கினான். (10–13)

சூசந்திரனுடைய மகன் தூம்ராச்வன்; தூம்ராச்வனுடைய பிள்ளை ஸ்ருஞ்ஜயன். ஸ்ருஞ்ஜயனுடைய மைந்தன் பிரதாபம் மிக்க சகதேவன்; சகதேவனுடைய புத்திரனான குசாஸ்வன் தருமநெறி தவறாதவன். மகாதேஜஸ்வியான குசாஸ்வனுடைய புதல்வன் பிரதாபம் மிக்க சோமதத்தன்; சோமதத்தனுடைய மைந்தன் காகுத்ஸ்தன் என்ற பெயர் பெற்றவன். அவனுடைய புத்திரன் சுமதி, எவராலும் வெற்றி கொள்ள முடியாத பேராற்றல் கொண்டவன். தேவர்களுக்கு ஒப்பான அவன், இப்போது இந்த நாட்டை ஆண்டு வருகிறான். இக்ஷ்வாகு மன்னனின் ஆசீர்வாதத்தால் விசாலா நாட்டின் அரசர்கள் எல்லோரும் நீண்ட ஆயுளும், பரந்த நோக்கமும், வீர்யமும், அறநெறி பிறழாதவர்களாகவும் இருந்து வந்திருக்கிறார்கள். (14–18)

இராமா! இந்த இரவு நாம் இங்கேயே தங்குவோம். நாளை பொழுது புலர்ந்ததும் ஜனகனைப் பார்க்கச் செல்வோம். ‘விசுவாமித்திரர் வந்திருக்கிறார்’ என்று கேள்விப்பட்டவுடன், மன்னரில் சிறந்த சுமதி, அவரை எதிர்கொண்டு அழைப்பதற்காக வந்தார். உபாத்தியாயர்களுடனும் உறவினர்களுடனும் சேர்ந்து சிறந்த முறையில் அவரை வரவேற்று, கைகளைக் கூப்பியபடி,

நலன் விசாரித்து விசுவாமித்திரரிடம் சொன்னார்— ''நான் மிகவும் பாக்கியசாலி! தங்கள் அனுக்கிரகத்திற்குப் பாத்திரமாகிவிட்டேன்! மாமுனிவரான தாங்கள், என் நாட்டிற்கே வந்து எனக்குத் தரிசனம் அளிக்கிறீர்களே! என்னிடம்தான் தங்களுக்கு எவ்வளவு கருணை! என்னைக் காட்டிலும் மேலான பாக்கியசாலி வேறு எவருமே இல்லை!'' (19–22)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
நாற்பத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்தெட்டு

இந்திரன் – அகலிகைக்குச் சாபம்

ஒருவருக்குகொருவர் சந்தித்து க்ஷேமலாபங்கள் விசாரித்து முடிந்த பின்னர், மாமுனிவரிடம் மன்னர் சுமதி கேட்டார்— (1)

''முனிவரே! நலன் விளைக! இவ்விரண்டு இளைஞர்களும் தேவர்களுக்கு நிகரான பராக்கிரமம் உடையவர்கள்போல் காணப்படுகிறார்கள். யானை–சிங்கம் போல் நடைபயில்பவர்கள்; புலி–காளை போன்று பிறரை நடுங்கச் செய்யும் கம்பீரான நடையை உடையவர்கள்; தாமரை இதழ் போன்று விசாலமான கண்கள்; அழகில் அசுவினீ தேவர்கள்; குழந்தைப் பருவம் முடிந்து வாலிபப் பருவத்தின் தொடக்கத்தில் உள்ளவர்கள். இவர்கள், தேவலோகத்திலிருந்து தற்செயலாக மண்ணுலகத்திற்கு வந்த தேவர்களோ? சுகுமாரர்களான இவர்கள் எப்படி காலால் நடந்து இங்கு வந்தார்கள்? எதற்காக வந்திருக்கிறார்கள்? யாருடைய புதல்வர்களோ? (2–4)

ஆகாயத்தை சந்திர–சூரியர்கள் பிரகாசப்படுத்துவதுபோல, இவர்கள் இந்த தேசத்தைப் பிரகாசப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இருவரும் உயரம், நடை, உடை, மெய்ப்பாடு, அசைவு ஆகியவற்றில் ஒரே மாதிரியாக இருக்கிறார்களே! நடக்க முடியாத பாதை வழியாக, மனிதகுல மாணிக்கங்களான இவர்கள் எதன் பொருட்டு வந்துள்ளார்கள்? உயர்ந்த ஆயுதங்களை அணிந்து வீரர்களாகத் தோன்றுகிறார்கள். இவர்களைப் பற்றி விரிவாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.'' (5,6)

அவருடைய வார்த்தைகளைக் கேட்ட விசுவாமித்திரர், எல்லாத் தகவல்களையும் நிகழ்ந்த படியே கூறினார். அதைக் கேட்டு மன்னர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். தசரதரின் குமாரர்களே அதிதிகளாக வந்திருப்பதை அறிந்து, மகாபலசாலிகளான அவர்களை முறைப்படி உயர்ந்த முறையில் உபசரித்தார். சுமதியின் சிறப்பான விருந்தோம்பலை ஏற்றுக்கொண்ட இராம–லட்சுமணர்கள், அவ்விடத்தில் ஓர் இரவு தங்கிவிட்டு மிதிலையை நோக்கிச் சென்றார்கள். (7–9)

ஜனகருடைய நகரமான மிதிலையைத் தூரத்திலிருந்தே பார்த்து, அதன் செழிப்பையும் சிறப்பையும் உணர்ந்து, ''ஆகா! என்ன அழகு!'' என்று புகழ்ந்து போற்றினார்கள். மிதிலையின் எல்லைப் பகுதியில் ஓர் ஆசிரமத்தைக் கண்டார், இராமன். அது பழமையானதாகவும் அழகாகவும் இருந்தது. ஆனால், மனிதர்களே காணப்படவில்லை. முனிபுங்கவரைப் பார்த்து, ''செழுமையாக விளங்கும் இந்த ஆசிரமத்தில் முனிவர் எவரும் இல்லையே? இது எந்த முனிவரின் இருப்பிடமாக முன்பு இருந்தது? என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்'' என்றார். பேச்சில் வல்லவரான இராகவனால் இவ்வாறு கேட்கப்பட்டதற்கு, மாமுனிவர் விசுவாமித்திரர் பதிலிறுத்தார்— (10–13)

''அடடா! நல்ல கேள்வி கேட்டாய், இராகவனே! பெரும் தபஸ்வியாக விளங்கிய எவர் கோபம் கொண்டு இந்த ஆசிரமத்தைச் சபித்தாரோ, அந்த வரலாற்றைக் கேள். மாமனிதனே! இது மகாத்மாவான கௌதமருடைய ஆசிரமமாக முன்னர் இருந்தது. தெய்விக ஒளியுடன் திகழ்ந்து தேவர்களாலும் நன்கு மதிக்கப்பட்டதாக இருந்தது. அரசகுமாரனே! அவர் முன்பொரு

காலத்தில் இவ்விடத்தில் பத்தினி அகலிகையுடன் இருந்து கொண்டு அநேக ஆண்டுக்காலம் தவம் செய்துவந்தார். அவர், (ஒரு சமயம்) குடிலிலிருந்து வெளியே சென்றிருந்தபோது, அதை அறிந்துகொண்ட இந்திராணியின் கணவன் இந்திரன், முனிவர் வேஷம்பூண்டு உள்ளே வந்து அகலிகையிடம் இவ்வாறு கூறினான்— (14–17)

'சுந்தரியே! காமவசப்பட்டவன் மனைவியின் ருதுகாலம் வரை காத்திருக்க மாட்டான். இப்போது நான் உன்னோடு உறவு கொள்ள விரும்புகிறேன்.' 'ஆயிரம் கண்ணுடைய இந்திரனே முனிவர் வேஷம் தரித்து வந்திருக்கிறான்!' என்பதை உணர்ந்து கொண்டு, 'தேவராஜனே என்னை நாடி வந்திருக்கிறான்!' என்று அகலிகை ஆச்சரியமடைந்தாள். அகலிகை உள்மனம் குதூகலிக்க தேவர்கோனைப் பார்த்து, 'சந்தோஷமாக இருக்கிறேன், பிரபு! நீங்கள் இவ்விடத்திலிருந்து விரைவாகச் சென்று விடுங்கள்' என்றாள். 'தேவர் தலைவரே! மரியாதைக்குரியவரே! உங்களையும் என்னையும் எப்போதும் காப்பாற்ற வேண்டும்.' இந்திரன் சற்றே நகைத்து அகலிகையிடம் சொன்னான்— (18–21)

'அழகுமிக்கவளே! நானும் மிகவும் திருப்தியுடன் இருக்கிறேன். நான் வந்தவாறே (யாருக்கும் தெரியாமல்) திரும்பிச் செல்கிறேன்.' இவ்வாறு அவளுடன் பேசிவிட்டு குடிசையிலிருந்து வெளியே வந்தான். 'கௌதமர் வந்துவிடுவாரோ?' என்ற அச்சத்தின் காரணமாகத் தட்டுத்தடுமாறி வேகமாகப் போக முயன்றபோது, மாமுனிவர் கௌதமர் உள்ளே வந்து கொண்டிருப்பதைப் பார்த்தான். தேவ–தானவர்களால் வெற்றி கொள்ள முடியாதவர்; தபோபலம் நிறைந்தவர்; நீராடிக் கொண்டிருந்தபோதே திரும்பி வந்ததால் நீரால் நனைந்திருப்பவர்; கொழுந்துவிட்டுப் பிரகாசிக்கும் நெருப்பைப் போன்று சுடர் தெரிப்பவர்; கையில் சமித்தும் தர்ப்பமும் ஏந்தியிருப்பவரான முனிசிரேஷ்டரைப் பார்த்ததும், தேவர்களின் மன்னன் நடுநடுங்க, முகம் வெளிறிப் போனான். (22–25)

முனிவர் வேஷத்திலிருக்கும் இந்திரனைப் பார்த்ததும் நன்னெறியாளரான கௌதமர், தீயநெறிப்பட்ட அவனிடம் பெரும் கோபத்துடன் கூறினார்— 'கெடுமதி படைத்தவனே! என் உருவத்தை ஏற்று செய்யத்தகாத இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறாய். (எந்தக் காமவலையில் சிக்கி, நீ இந்த அக்கிரமத்தைச் செய்தாயோ, அதன் மூலகாரணமான) ஜனன உறுப்பு, உனக்கு இல்லாமற்போகக் கடவது.' தவச்செல்வரான கௌதமர் பொங்கியெழும் கோபத்துடன் இவ்வாறு கூறிய அந்த விநாடியிலேயே இந்திரனுடைய ஜனன உறுப்பு அறுந்து பூமியில் விழுந்தது. (26–28)

இவ்வாறு இந்திரனுக்குச் சாபம் கொடுத்துவிட்டு அகலிகையையும் சபித்தார்— 'ஆயிரக்கணக்கான ஆண்டுகள் நீ இங்கே இருக்கப் போகிறாய். காற்றே உணவு; வேறு உணவு ஏதும் இல்லை; தவம் செய்து கொண்டு, குப்பைமேட்டில் படுத்துக் கொண்டு, எந்தப் பிராணிகளின் கண்ணிலும் தென்படாமல், இந்த ஆசிரமத்திலேயே வசித்துக் கொண்டிரு. எப்போது பயங்கரமான இந்தக் காட்டிற்கு எவராலும் வெல்லமுடியாத தசரத குமாரன் இராமன் வருகிறானோ, அப்போது (பாவக்கறை நீங்கி) தூயவள் ஆவாய். (29–31)

தீயநெறியாளே! அவரை வணங்கிப் பூஜித்து, அதன் பயனாக லோபம்–மோகம் நீங்கி, என்னுடன் சேர்ந்து மகிழ்ந்து, உன் சுய வடிவை அடைவாய்.' இவ்வாறு கூறிவிட்டு தேசுமிக்கவரான கௌதமர், கெட்ட நடத்தையுள்ள அவளையும், இந்த ஆசிரமத்தையும் துறந்து, சித்த–சாரணர்கள் உலா வரும் இமாலயத்தின் அழகிய சிகரம் ஒன்றில் நீண்ட தவம் செய்யப் போய்விட்டார். (32,33)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
நாற்பத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்தொன்பது

அகலிகையின் சாபம் நீங்குதல்

ஜனனேந்திரியத்தை இழந்த இந்திரன், பயந்த முகத்துடன் அக்னி–முனிவர்கள்–சாரணர்கள் இருந்த இடத்திற்குச் சென்று அவர்களிடம் கூறினான்— (1)

''தெய்விக ஆற்றல் படைத்த கௌதமருக்குக் கோபத்தை உண்டாக்கி, அதன் மூலம் தேவர்களுக்கு நன்மை உண்டாக வேண்டும் என்பதற்காகவே என்னால் அவ்வாறு செய்யப்பட்டது. கோபம் கொண்ட அவரால் நான் பிறப்பு உறுப்பினை இழந்தவனாகிவிட்டேன்; அவளும் நிராகரிக்கப்பட்டாள். அவர் எங்களுக்குக் கொடிய சாபம் கொடுத்ததால், அவருடைய தபோபலத்தை அபகரித்துவிட்டேன். (தவம் மேற்கொண்டிருக்கும்போது கோபம் கொள்வதும், சாபம் கொடுப்பதும் தவத்தின் சக்தியைக் குறைத்துவிடும்.) தேவர்களுக்கு உதவியாக இந்தக் காரியத்தைச் செய்தேன். (கௌதமரின் தவத்திற்கு இடையூறு செய்யாமலிருந்தால் நீண்ட தவத்தின் பயனாக, அவர் தேவலோகத்திற்கே அதிபதியாகிவிடுவார்.) எனவே, தேவ–ரிஷி–சாரணர்களான நீங்களனைவரும் எனக்கு பிறப்பு உறுப்பு உண்டாகும்படிச் செய்ய வேண்டும்.'' (2–4)

இந்திரனுடைய வேண்டுகோளைக் கேட்ட தேவர்கள், அக்னியை முன்னிட்டுக் கொண்டு பித்ரு தேவதைகளிடம் சென்று சொன்னார்கள்— ''முன்–பின் யோசனை செய்யாமல் காமவசப்பட்ட இந்திரன், முனிவரின் பத்தினியைக் கெடுத்தான். முனிவரின் சாபத்தால் ஜனனேந்திரியத்தை இழந்தவனாக்கப்பட்டான். இப்போது தேவராஜன் இங்கே தேவர்களிடம் வந்து ('உங்களுக்கு நன்மை செய்யப் போகத்தானே, எனக்கு இந்த நிலை?' என்று) மிகவும் கோபப்படுகிறான். பித்ரு தேவதைகளே! (தங்களுக்கு அக்னி மூலமாகக் கொடுக்கப்பட்ட) இந்த ஆடு அண்டகோசத்துடன் இருக்கிறது. இந்திரனோ அவைகளை இழந்தவனாக்கப்பட்டுவிட்டான். ஆட்டினுடைய அந்த அங்கத்தை எடுத்து, உடனே இந்திரனுக்குக் கொடுங்கள். அந்த அங்கம் இல்லாமல், ஆடு உங்களுக்கு மிகவும் சந்தோஷத்தைக் கொடுக்கட்டும். எனவே, இனிமேல் உங்கள் திருப்திக்காக அண்டகோசமில்லாத ஆட்டை, உங்களுக்குத் தருகிறவர்களுக்கு ஏராளமாக, குறைவில்லாத பயன்களைக் கொடுங்கள்.'' (5–9)

அக்னியினுடைய சொற்களைக் கேட்ட பித்ரு தேவதைகள் ஒன்றாகச் சேர்ந்து, ஆட்டினிடமிருந்து அண்டகோசத்தை வெட்டியெடுத்து, இந்திரனின் உடலில் உரிய இடத்தில் ஒட்ட வைத்தார்கள். அது முதற்கொண்டு, காகுத்தனே! எல்லா பித்ரு தேவதைகளும் அண்டகோசம் இல்லாத ஆட்டை ஏற்றுக் கொள்கிறார்கள். என்றாலும் ஆட்டைக் கொடுப்பவர்களுக்கு நிறைவான பலன் கிடைத்துவிடுகிறது. மகாத்மாவான கௌதமருடைய தவ ஆற்றலால் ஆட்டின் அண்டகோசங்களுடனேயே இந்திரன் இருந்து வந்தான். (10–12)

இராமா! பேராற்றல் உடையவனே! வா, புண்ணிய கர்மாக்கள் நடைபெற்ற கௌதமரின் இந்த ஆசிரமத்திற்குள் வா. தெய்விக வடிவம் கொண்டவளும் பெரும்பேறு பெற்றவளுமான அகலிகையைக் கடைத்தேற்றுவாயாக. விசுவாமித்திரரின் சொல்லை ஏற்று, இராம–லட்சுமணர்கள் விசுவாமித்திரர் முன்னே செல்ல, அந்த ஆசிரமத்திற்குள் பிரவேசித்தார்கள். (13,14)

பாக்கியசாலியான அவள் நீண்ட தவத்தினால் பேரொளி வீசிக் கொண்டிருப்பதைப் பார்த்தார்கள். இவ்வுலக மக்களாலும் எல்லா தேவாசுரர்களாலும் காண முடியாதவளாக (அவள்) இருந்தாள். பிரும்மா மிகவும் கவனத்துடன் படைத்த மாயாமய உருவமாக விளங்கினாள். பனிக்கூட்டத்தாலும் மேகங்களாலும் மறைக்கப்பட்ட பூர்ணசந்திரன் போல் காணப்பட்டாள். கொழுந்துவிட்டு எரியும் நெருப்பு புகையினால் சூழப்பட்டிருப்பதைப் போலிருந்தாள். நீர்நிலையில் பிரதிபலிக்கும் சூரியன் போல் முழு ஒளியுடன் கண்ணுக்குப் புலப்படாதவளாக இருந்தாள். அவள்

கௌதமருடைய சாபத்தினால் இராமனுடைய தரிசனம் கிடைக்கும் காலம் வரையில், மூன்றுலக மக்களுக்கும் கண்ணுக்குப் புலப்படாதவளாக ஆனாள் அன்றோ? (15–18)

சாபம் முடிந்துபோகும் நேரம் வந்துவிட்டது. அவர்கள் கண்களில் படும்படியாக வெளிப்பட்டாள். அப்போது இராம–லட்சுமணர்கள் அவளுடைய காலில் விழுந்து வணங்கினார்கள். கௌதமர் சொன்னதை நினைவுபடுத்திக் கொண்டு, அவள் அவ்விருவரையும் சிறப்பாக வரவேற்றுப் பூசித்தாள். தெளிந்த மனத்துடன் அவர்களுக்கு பாத்யம், அர்க்யம் முதலியன அளித்து விருந்தோம்பல் செய்தாள். சாஸ்திர விதிகளில் கூறியபடி, அவர் அந்த உபசாரங்களை ஏற்றுக் கொண்டார். (அற்புதமான இந்த நிகழ்ச்சியின் காரணமாக, தேவர்கள் பேரானந்தம் அடைந்தார்கள்.) அப்போது ஏராளமான மலர்மாரி பொழிந்தது; துந்துபிகள் முழங்கின. (19–21)

கந்தர்வ–அப்சரசுகள் பாட்டும் கூத்துமாக அமர்க்களப்படுத்தினார்கள். 'ரொம்ப சரி... நல்ல காரியம் செய்தீர்கள்' என்று கூறி, தேவர்கள் எல்லோரும் அகலிகையைப் போற்றினார்கள். தவத்தின் மகிமையால் சரீர சுத்தம் பெற்றுவிட்ட அவள் கௌதமருடன் இணைந்தாள். மகாதேஜஸ்வியான கௌதமரும் அகலிகையைத் திரும்பப் பெற்று மகிழ்ச்சி அடைந்தார். கௌதமர் முறைப்படி இராமனைப் பூஜித்த பின்னர் தவம் செய்யப் புறப்பட்டார். இராமன் மிக உயர்ந்த உபசாரங்களை மாமுனிவர் கௌதமரிடமிருந்து பெற்றுக் கொண்டு, மிதிலையை நோக்கிச் சென்றார். (22–24)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
நாற்பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பது
ஜனகருடன் சந்திப்பு

பிறகு, இராமனும் லட்சுமணனும் வடகிழக்கு திசையில் சென்று, விசுவாமித்திரரை முன்னிறுத்திக் கொண்டு, வேள்வி வளாகத்திற்குள் பிரவேசித்தார்கள். முனிபுங்கவரிடம் லட்சுமணனுடன் சென்ற இராமன், ''ஜனகருடைய வேள்வி ஏற்பாடுகள் மிகச்சிறப்பாக அமைந்திருக்கின்றன. அநேக ஆயிரம் வேதவித்தகர்களான பிராமணர்கள் பற்பல நாடுகளில் இருந்தும் வந்திருக்கிறார்கள். முனிவர்கள் தங்கியிருக்கும் இடங்களிலும் நூற்றுக்கணக்கான வண்டிகள் சூழ்ந்து நிற்கின்றன. பிரும்மன்! நாம் தங்க வேண்டிய இடத்தை நீங்களே குறிப்பிட்டுச் சொல்லுங்கள்.'' இராமனுடைய சொற்களைக் கேட்ட மாமுனிவர் விசுவாமித்திரர், ஜனக்கூட்டமில்லாத, நீர் வசதியுள்ள தூய்மையான ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்தார். (1–5)

விசுவாமித்திரர் வந்திருக்கிறார் என்று கேள்விப்பட்டதும் மன்னர், தன் புரோகிதர் சதானந்தரை முன்னிட்டுக் கொண்டு வேகமும் வினயமும் கூடியவராக எதிர்கொண்டழைத்தார். மகாத்மாக்களான ரித்விக்குகள் உடனே விசுவாமித்திரருக்கு விதிமுறைப்படி அர்க்யம் முதலானவைகளைக் கொண்டு வந்து, உரிய மந்திரங்கள் ஓதி வரவேற்றார்கள். பேரறிஞரான ஜனகரின் அந்த வரவேற்பை விசுவாமித்திரர் ஏற்றுக்கொண்டார். பின்னர், அரசரின் நலன் பற்றியும், வேள்வி தடையில்லாமல் நடைபெறுவது பற்றியும் கேட்டறிந்தார். அவருடன் வந்திருந்த முனிவர்கள், உபாத்தியாயர்கள், புரோகிதர்களையும் நலன் விசாரித்தார். (6–9)

அவர்கள் எல்லோரும் அவரவர் நிலைக்கேற்றபடி முகமலர்ச்சியுடன் சம்பாஷித்தனர். அப்போது கைகளைக் கூப்பிக் கொண்டு ஜனக மன்னர் முனிபுங்கவரிடம் கூறினார்— ''வந்திருக்கும் எல்லா முனிவர்களோடும் தாங்கள் ஆசனத்தில் அமரவேண்டும்.'' ஜனகருடைய சொற்களைக் கேட்ட மாமுனிவர் இருக்கையில் அமர்ந்தார். புரோகிதர்கள், ரித்விக்குகள்,

மன்னர், அமைச்சர்கள் ஆகியோரும் தத்தமக்குரிய அந்தஸ்திற்கேற்றபடிச் சுற்றிலும் ஆசனங்களில் அமர்ந்து கொண்டார்கள். விசுவாமித்திரர் அங்கே எதிர்பாராதவிதமாக வந்ததனால் மிகவும் மகிழ்ச்சியடைந்த அரசர், ''தேவதைகள் இன்று என்னுடைய வேள்விச்சடங்குகளைப் பயனுள்ளனவாகச் செய்துவிட்டன! (10–13)

தங்களைத் தரிசித்ததினாலேயே இந்த யாகத்தின் பயன் எனக்குக் கிடைத்துவிட்டது என்றே எண்ணுகிறேன். தாங்களாகவே எனக்கு அருள்புரியும் பொருட்டு, அநேக முனிவர்களுடன் யாகசாலைக்கே வந்திருக்கிறீர்களே! நான் மிகவும் பாக்கியசாலி. இந்த வேள்வி நிறைவேற இன்னும் பன்னிரண்டு நாட்கள் இருப்பதாக, சாஸ்திர வல்லுநர்களான ரித்விக்குகள் சொல்கிறார்கள். கௌசிகப் பெருந்தகையே! அந்த தினத்தில் தங்களுடைய அவிர்பாகங்களை ஏற்பதற்காக வரும் தேவர்களை, நீங்கள் பார்க்கலாம்.'' இவ்வாறு மலர்ந்த முகத்துடன் விசுவாமித்திரரிடம் ஜனகர் சொன்னார். பின் மன்னர் வணக்கத்துடன் கைகளைக் கூப்பிக் கொண்டு மறுபடியும் முனிவரைக் கேட்டார்— (14–16)

''முனிவரே! பகவான் அருள் செய்க! உங்கள் அருகில் நிற்கும் இரு இளைஞர்களும் தேவர்களுக்கு ஒப்பான பராக்கிரமம் படைத்தவர்களாகத் தோன்றுகிறார்கள். யானை போலும், சிங்கம் போலும் செருக்கான நடை; புலி போலும், காளை போலும் பார்ப்போரை நடுங்க வைக்கும் பார்வை; தாமரை இதழ் போன்று விசாலமான கண்கள்; கத்தி, அம்புறாத்தூணி, வில் தரித்தவர்கள்; உருவத்தில் அசுவினீ தேவர்கள் போன்று யௌவனத்திற்கு வந்து கொண்டிருப்பவர்கள்; தேவலோகத்து அமரர்கள் தற்செயலாகப் பூமிக்கு வந்திருப்பதைப் போன்றவர்கள்; எவ்வாறு மிருதுவான தம் கால்களால் நடந்து இங்கே வந்தார்கள்? எதற்காக, யாருக்காக வந்திருக்கிறார்கள்? உத்தமமான ஆயுதங்களைத் தரித்துக் கொண்டிருக்கும் இவ்வீரர்கள் யாருடைய குமாரர்கள்? ஆகாயத்தைச் சந்திர–சூரியர்கள் பிரகாசப்படுத்துவதைப் போல, இவர்கள் இந்தப் பிரதேசத்தை ஒளிமயமாக்கிக் கொண்டிருக்கிறார்களே! உயரம், இங்கிதம், கையசைவுகளில் ஒருவருக்கொருவர் வேறுபடாமல் ஒரே மாதிரி இருக்கிறார்கள். தலைமுடியைக் காகபட்சமாக (முன்குடுமி) வைத்துக் கொண்டிருக்கிற இவ்விரண்டு வீரர்களையும் பற்றி விரிவாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.'' (17–21)

மகாத்மா ஜனகரின் சொற்களைக் கேட்டு, எல்லையில்லாத ஆத்மபலம் படைத்த கௌசிகர், ''இவர்கள் தசரதருடைய குமாரர்கள்'' என்றார். அவர்கள் சித்தாசிரமத்தில் தங்கியிருந்தது; அரக்கர்களை வதம் செய்தது; எவ்வித இடையூறுமின்றி இவ்விடம் வந்து சேர்ந்தது; (வழியில்) விசாலா நகரத்தைப் பார்த்தது; அகலிகையைத் தரிசித்தது; கௌதமருடன் சந்திப்பு – இவைகளை விரிவாகக் கூறிவிட்டு, முடிவில், ''இங்குள்ள மகோன்னதமான வில்லைப் பற்றித் தெரிந்து கொள்ளும் ஆவலுடனும் வந்திருக்கிறார்கள்'' என்றார். இவ்வாறாக விபரங்களனைத்தையும் மகாத்மாவான மன்னர் ஜனகருக்கு, மகாதேஜஸ்வியான முனிவர் விசுவாமித்திரர் எடுத்துரைத்துவிட்டுச் சற்றே ஓய்ந்தார். (22–25)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
ஐம்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்தொன்று

விசுவாமித்திரர் வரலாறு

மகாமேதாவியான விசுவாமித்திரரின் பேச்சைக் கேட்ட பேராற்றல் படைத்த பெருந்தவசியான சதானந்தருக்கு மயிர்க்கூச்சல் உண்டாயிற்று. கௌதமருடைய மூத்த குமாரரான அவர் கடுமையாகத்

தவம் செய்து மிக்க ஒளியுடன் விளங்கினார். இராமனைப் பார்த்ததாலேயே மிகவும் சந்தோஷத்தை அடைந்தார். அரசகுமாரர்கள் இருவரும் சௌகரியமாக உட்கார்ந்துவிட்டதைப் பார்த்து, முனிபுங்கவர் விசுவாமித்திரரிடம் சதானந்தர் கூறினார்— (1–3)

''முனிவர் முதல்வரே! புகழ்மிக்கவரும் நீண்டகாலமாகத் தவத்தில் ஈடுபட்டிருந்தவருமான என் அன்னையை அரசகுமாரனுக்குக் காட்டினீர்களா? மனிதசரீரம் எடுத்த எல்லோராலும் பூசிக்கத்தக்க ஸ்ரீராமசந்திர பிரபுவை மகாதேஜஸ்வினியும் புகழ்மிக்கவருமான என் தாயார், காட்டில் கிடைக்கும் காய்–கனி–புஷ்பங்களால் உபசரித்தாரா? முன்னர் ஒரு காலத்தில் என் அன்னைக்கு ஆற்றல் மிக்கவனான தேவ(ராஜ)னால் இழைக்கப்பட்ட அநீதியைப் பற்றிய உண்மையை இராமனிடம் கூறினீர்களா? கௌசிகரே! இராமனைத் தரிசித்ததால் எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுபட்டுப் பரிசுத்தமாகிவிட்ட என் அன்னை, என் தந்தையுடன் சேர்ந்து விட்டாரா? என் அருமை தந்தையார் இராமனைப் பூஜித்தாரா? ஸ்ரீராமன், என் தந்தையின் உபசாரங்களை ஏற்றுக்கொண்டுதானே இங்கே வந்திருக்கிறார்? கௌசிகரே! எங்கள் தகப்பனாரின் தபோவனத்திற்கு வந்து என் பெற்றோரின் உபசாரங்களை ஏற்றுக்கொண்ட ஸ்ரீராமன், உவகையடைந்த மனத்துடன் என் தந்தைக்கு நமஸ்காரம் செய்தாரா?'' (4–9)

சதானந்தருடைய உரையைக் கேட்டு, பேச்சில் வல்லவரான விசுவாமித்திரர் பதில் கூறினார்— ''முனிவரே! எந்தச் சட்டமும் மீறப்படவில்லை. எது செய்ய வேண்டியதோ, அதை நான் செய்தேன். முன்பு, ஜமதக்னியுடன் ரேணுகாதேவி சேர்ந்ததைப் போல, கௌதமருடன் அகலிகை சேர்ந்துவிட்டாள்.'' பேரறிவாளரான விசுவாமித்திரரின் பதிலைக் கேட்டதும் சதானந்தர் இராமனிடம் கூறினார்— (10–12)

''வரவேண்டும், இராமனே! வரவேண்டும். மாமுனிவரும் வெல்லமுடியாதவருமான விசுவாமித்திரரை முன்னிட்டுக் கொண்டு, இங்கே வந்திருக்கிறாயே! அது எங்கள் பாக்கியம்! விசுவாமித்திரருடைய செயல்திறன் சிந்தித்துப் பார்க்க முடியாதது; தவம் செய்து பிரும்மரிஷி ஆனவர்; எல்லையில்லா ஆற்றல் உடையவர்; ஆன்மபலம் மிக்கவர்; உலகமனைத்தையும் காப்பாற்றக் கூடியவர், இவர் – என்று அறிந்து கொள்வாய். இராமா! இம்மண்ணுலகில் உன்னைக் காட்டிலும் பாக்கியசாலி வேறொருவனும் இல்லவே இல்லை. ஏனென்றால், உன்னைப் பாதுகாத்துக் கொண்டிருப்பவர், வெகுகாலம் கடுமையான தவம் செய்த குசிகபுத்திரர். மகாத்மா கௌசிகருடைய வரலாற்றைச் சொல்லப் போகிறேன், கேள். அவருடைய ஆற்றல், சிறப்பான செயல்பாடுகள் பற்றி, நான் கூறுவதைக் கேட்பாயாக. (13–16)

தருமாத்மாவான இவர் நீண்ட காலம் மன்னராக ஆட்சி செய்தவர்; எதிரிகளை அடக்குபவர்; அறம் அறிந்தவர்; மெத்தப் படித்தவர்; பொதுமக்களின் நலனில் கண்ணும் கருத்துமாக இருந்தவர். பிரஜாபதிக்கு குசன் என்ற பெயருடைய ஒரு மன்னர் மகனாக இருந்தார். குசனுடைய மைந்தன் பலவானும், தருமத்தை விட்டுச் சிறிதும் அகலாதவருமான குசநாபன். குசநாபனுடைய மைந்தன் காதி என்று புகழ் பெற்றவர். காதியின் புதல்வர் மாமுனிவரான விசுவாமித்திரர். பேராற்றலுடைய விசுவாமித்திரர் இந்த நாட்டைப் பரிபாலித்தார்; அநேக ஆயிரம் ஆண்டுகள் மன்னராக வீற்றிருந்து ஆட்சி புரிந்தார். (17–20)

ஒரு முறை அவர் அக்ஷௌஹிணி கணக்கில் நால்வகைச் சேனைகளையும் கூட்டிக் கொண்டு உலகத்தைச் சுற்றி வந்தார். பல நகரங்கள், நிலப்பகுதிகள், நதிகள், மலைகள், ஆசிரமங்கள் ஆகியவற்றை வரிசையாகச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வரும்போது, பலவகை மரங்கள் நிறைந்ததும், பலவகையான விலங்குகள் ஓடித் திரிவதும், சித்த–சாரணர்கள் வந்துபோவதுமான வசிஷ்டருடைய புண்ணிய ஆசிரமத்தைச் சென்றடைந்தார். தேவ–தானவ–கந்தர்வ–கின்னரர் ஆகியோரின் கூட்டங்களால் அந்த ஆசிரமம் ஒளிமிகுந்து விளங்கியது. துள்ளித் திரியும் மான்கள்கூட, அங்கே சலசலப்பில்லாமல் திரிந்தன. இருபிறப்பாளர்கள் பலர்

அங்கே வசித்துக் கொண்டிருந்தார்கள். தவம் செய்து ஸித்தி பெற்று அக்னியைப் போல் ஒளிவீசும் மகாத்மாக்களான பிரும்மரிஷிகளும் தேவரிஷிகளும் அங்கே இருந்தார்கள். (21–25)

தண்ணீரை மட்டுமே அருந்துபவர்கள்; காற்றை மட்டுமே புசிப்பவர்கள்; காய்ந்து போன சருகுகளையே உணவாகக் கொள்பவர்கள்; பழம்–கிழங்கு மட்டுமே உணவாகக் கொள்பவர்கள்; புலன்களை வென்றவர்கள்; கோபத்தைக் கட்டுப்படுத்தியவர்கள்; உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தியவர்கள் ஆகிய முனிவர்களும், வாலகில்யர்களும், ஜப–ஹோமங்களில் முழுமையாக ஈடுபட்டிருந்தவர்களும் மற்றும் வைகாநஸர்களும் அங்கே சூழ்ந்திருந்து அழகு கூட்டினார்கள். இன்னொரு பிரும்மலோகம் போல் மிகச்சிறப்பாக விளங்கிய வசிஷ்டருடைய ஆசிரமத்தை மகாபலசாலியும் வெற்றிவீரருமான மன்னர் விசுவாமித்திரர் பார்த்தார். (26–28)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
ஐம்பத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்து இரண்டு
வசிஷ்டரின் விருந்தோம்பல்

தவசிகளில் சிறந்தவரான வசிஷ்டரைப் பார்த்ததும் மிகவும் திருப்தியடைந்த பலவானான விசுவாமித்திரர் முறைப்படி அவரை வணங்கினார். 'உங்கள் வரவு நல்வரவாகுக!' என்று வரவேற்ற வசிஷ்டர், அவருக்கு ஓர் ஆசனம் போடும்படி (சிஷ்யர்களுக்கு) உத்தரவிட்டார். புத்திமானாகிய விசுவாமித்திரர் சௌகரியமாக ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டதும், முறைப்படி அவருக்கு பழம், கிழங்கு முதலியன கொடுத்து உபசரித்தார், முனிவர். (1–3)

வசிஷ்டர் அளித்த உபசாரங்களை ஏற்றுக் கொண்ட நல்லரசர், அவரிடம் தவம்–அக்னிஹோத்ரம்–சிஷ்யர்கள் நலன் பற்றி விசாரித்தார். பராக்கிரமசாலியான விசுவாமித்திரர் ஆசிரமத்திலுள்ள தாவரங்கள் நல்லமுறையில் உள்ளனவா? என்று கேட்டபோது, 'எல்லாம் நலமே' என்று மன்னருக்குப் பதில் கூறினார், வசிஷ்டர். ஆசனத்தில் சௌகரியமாக வீற்றிருக்கும் விசுவாமித்திரரைப் பார்த்து, பிரும்மாவின் மைந்தரும், தவசிகளில் சிறந்தவருமான வசிஷ்டர் குசலம் விசாரிக்கத் தொடங்கினார்— (4–6)

''மன்னரே! நீங்கள் நலமாக இருக்கிறீர்களா? அறநெறி தவறாதவரே! நியாய முறையிலான ஆட்சியினால் மக்களை மகிழ்ச்சியுடன் வைத்திருக்கிறீர்களா? அரசரே! மன்னருக்குரிய நெறிமுறைப்படி மக்களைக் காப்பாற்றுகிறீர்களா? உங்களுடைய வேலைக்காரர்களுக்குப் போதுமான பொருள் கொடுத்து ஆதரிக்கிறீர்களா? அவர்கள் உங்கள் உத்தரவுக்குக் கட்டுப்பட்டு நடக்கிறார்களா? எதிரிகளை மாய்ப்பவரே! உங்களுடைய எதிரிகள் எல்லோரையும் வென்று விட்டீர்களா? குற்றமற்றவரே! உங்களுடைய சேனை, கருவூலம், நண்பர்கள், புதல்வர்கள், பேரர்கள் ஆகிய எல்லோரும் நன்றாக இருக்கிறார்களா?'' தேஜஸ்வியான விசுவாமித்திரர் பணிவோடு கூடியவராக, ''தாங்கள் கேட்டபடி எல்லாம் நலமே'' என்று வசிஷ்டருக்குப் பதில் சொன்னார். அறம் தவறாதவர்களான அவ்விருவரும் நெடுநேரம் பல செய்திகளைப் பேசி, அளவளாவி மகிழ்ந்தார்கள். அதனால், அவர்களிடையே பிரியம் அதிகமாயிற்று. (7–11)

ரகுநந்தனா! பேச்சு நிறைவடையும் தருணத்தில் பகவான் வசிஷ்டர், சற்றே சிரித்தாற்போல் விசுவாமித்திரரைப் பார்த்துக் கூறினார்— ''பேராற்றலுடையவரே! நான் எல்லையற்ற பிரபாவமுடைய உங்களுக்கும், உங்களுடைய சைன்யத்திற்கும், அவரவருக்குரிய முறையில் உணவளிக்க விரும்புகிறேன். மன்னரே! நீங்கள் முக்கியமான விருந்தினர். மிகவும் சிரத்தையுடன்

கௌரவிக்கப்பட வேண்டியவர். அதனால் நீங்கள், என்னுடைய விருந்தோம்பலை ஏற்றுக்கொள்ளவே வேண்டும்.'' (12–14)

வசிஷ்டர் இவ்வாறு கூறியதும், பேரறிவு படைத்த விசுவாமித்திரர், ''தாங்கள் உணவு கொள்ள வேண்டும் என்று சொன்னதே, உண்மையாக உணவு அளித்ததற்குச் சமானமாகக் கொள்கிறேன். பகவானே! தங்கள் ஆசிரமத்தில் கிடைக்கக் கூடிய பழங்கள், கிழங்குகள் கொடுத்து, பாத்யம்–ஆசமனீயம் முதலியவற்றால் உபசரித்து, எனக்குத் தரிசனம் தந்து – இப்படியெல்லாம் உயர்ந்த முறையில் என்னைக் கௌரவித்திருக்கிறீர்கள். தங்களுக்கு நமஸ்காரம். சென்று வருகிறேன். தோழமை தோன்ற தங்கள் கண்களால் என்னைப் பாருங்கள். (என்னை ஆசீர்வதியுங்கள்.)'' (15–17)

அரசர் இவ்வாறு (மறுத்துச்) சொன்னதும் தருமாத்மாவும், விசால மனமும் உடைய வசிஷ்டர் மீண்டும் மீண்டும் வற்புறுத்தினார். காதியின் புத்திரர், 'சரி' என்று பதில் சொன்னார். ''முனிவரே! தங்கள் விருப்பப்படியே ஆகட்டும்.'' இவ்வாறு விசுவாமித்திரர் கூறியதும் ஜபம் செய்பவர்களுள் சிறந்தவரும் மாசுமருவற்றவருமான வசிஷ்டர் மனம் மகிழ்ந்து காமதேனுவை அழைத்தார். (18–20)

''காமதேனுவே! வா, வா! நான் சொல்வதைக் கவனமாகக் கேட்டு, உடனே செயல்படு. படைகளுடன் கூடிய இந்த ராஜரிஷிக்கு மிகவும் உயர்ந்த உணவு வகைகளால் அதிதி ஸத்காரம் செய்ய முற்பட்டிருக்கிறேன். நீ, என்னுடைய இந்த விருப்பத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும். விரும்பியவற்றை வழங்குபவளே! யார் யாருக்கு என்னென்ன விருப்பமோ, அவை எல்லாவற்றையும், அறுசுவை உணவு வகைகளையும் எனக்காக, இப்பொழுதே பொழிந்து தருவாய். சுவையுள்ள உணவு, பானங்கள், நக்கியும் கடித்தும் சாப்பிடக் கூடிய பதார்த்தங்கள் மற்றும் பலவகை அன்னங்களின் குவியல்கள் – ஆகிய இவை எல்லாவற்றையும் விரைவில் உற்பத்தி செய்து தருவாயாக.'' (21–23)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
ஐம்பத்து இரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்து மூன்று

விசுவாமித்திரர் காமதேனுவை யாசித்தல்

எதிரிகளை அடக்குபவனே! வசிஷ்டரால் இவ்வாறு உத்தரவிடப்பட்டதும், யார் யாருக்கு என்னென்ன விருப்பமோ, அவையனைத்தையும் கொடுத்தது, காமதேனு. கரும்பு, தேன், பொறி, மது, போதை பானங்கள், பானங்கள், மிக உயர்ந்த வகை உணவுப் பண்டங்கள், கடித்தும் நக்கியும் தின்னக் கூடிய பதார்த்தங்கள், சூடான அன்னங்களின் மலை போன்ற குவியல்கள், இனிப்புப் பணியாரங்கள், வடைகள், பால்–தயிர்–நெய் ஆறுகள், பல சுவைகள் கொண்ட ரஸ வகைகள், அறுசுவை உண்டிகள், இனிய பானங்கள் முதலியவற்றால் ஆயிரக்கணக்கான போஜன பாத்திரங்கள் நிரம்பி வழிந்தன. (1–4)

எல்லோரும் வயிறுபுடைக்க உண்டு, குடித்து மிகவும் மகிழ்ச்சியில் மூழ்கினார்கள். இராமா! சுவையான விருந்தளித்து, விசுவாமித்திரரின் படையினரை வசிஷ்டர் திருப்தி செய்வித்தார். ராஜரிஷி விசுவாமித்திரரும், அந்தப்புர அரசிகளுடனும், அந்தணர்–புரோகிதர்களுடனும், அமாத்தியர்–அமைச்சர்–பணியாளர்களுடனும் விருந்தளித்து, கௌரவிக்கப்பட்டதால் மிகவும் மனமகிழ்ந்து வசிஷ்டரிடம் கூறினார்— (5–7)

''பிரும்மன்! தாங்கள் மிக உயர்ந்த முறையில் என்னை வரவேற்று உபசரித்திருக்கிறீர்கள். பேச்சில் வல்லவரே! இப்போது நான் சொல்லப் போவதை அருள்கூர்ந்து கேளுங்கள். நான், உங்களுக்கு நூறாயிரம் பசு மாடுகளைத் தருகிறேன். சபலையை (காமதேனுவை) எனக்குக் கொடுத்து விடுங்கள். உலகத்திலுள்ள சிறந்த பொருட்கள் மன்னனிடம்தான் போய்ச் சேர வேண்டும் என்பது பொது நியாயம். அதன்படி சிறப்பான இந்த காமதேனு என்னிடம்தான் இருக்கவேண்டும். அந்தணரே! தரும வழியில் பார்த்தாலும் இது என்னுடையதுதான். (சிறந்த வஸ்துக்கள் மன்னனிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பது சம்பிரதாய விதி.) ஆகவே, எனக்கு காமதேனுவைக் கொடுங்கள்.'' இவ்வாறு தருமாத்மாவான விசுவாமித்திரர் கூறியதும் பகவான் வசிஷ்டர் பதில் சொன்னார்— ''நூறு ஆயிரம் என்ன, நூறு கோடி பசுக்கள் கொடுத்தாலும், இது என்னிடமிருந்து பிரித்துக் கொடுப்பதற்கு உரிய பொருள் அல்ல. (8–12)

பெருந்தன்மையுள்ளவனை விட்டு எப்போதும் அகலாத கீர்த்தியைப் போன்று, நிரந்தரமாக காமதேனு என்னிடம் இருந்து கொண்டிருக்கிறது. இவளிடமிருந்து பெறப்படும் நெய்யைக் கொண்டுதான் தேவதைகளுக்கு ஹவ்ய ஆகுதியும், பித்ருக்களுக்கு கவ்ய ஆகுதியும் கொடுத்து வருகிறேன். என்னுடைய வாழ்க்கைப் பயணமும் இவளை நம்பியே இருந்து கொண்டிருக்கிறது. நான் செய்யும் அக்னிஹோத்ரம், பலி, ஹோமம், ஸ்வாஹா–வஷட் என்று முடிவில் கூறிச் செய்யப்படும் ஆகுதிகள் மற்றும் பலவிதமான மந்திரஹோமங்களும் இந்த பசுவையே ஆதாரமாகக் கொண்டிருக்கின்றன. மன்னரே! இவையெல்லாம் இந்த பசுவைக் கொண்டே நடைபெற்று வருகின்றன. உண்மையில் இதுதான் என் சொத்து. இது என்னை மகிழ்ச்சியுடன் வைத்திருக்கிறது. மேலும், வேறு பல காரணங்களும் இருக்கின்றன. ஆகவே, அரசரே! நான், உங்களுக்கு காமதேனுவைக் கொடுக்க இயலாது.'' வசிஷ்டர் இவ்வாறு சொன்னவுடன், பேச்சில்வல்ல விசுவாமித்திரர் மிகவும் கோபம் பொங்கக் கூறினார்— (13–16)

''தங்கத்தால் ஆன மூக்குக் கயிறு, கழுத்தில் சுவர்ணப்பட்டை, பொன்னாலான அங்குசம் – இவைகளோடு கூடிய பதிநான்காயிரம் யானைகளைத் தங்களுக்குக் கொடுக்கிறேன். பொன்மயமான மணிகள் கிண்கிணியென ஒலிக்கும் நான்கு வெண்குதிரை பூட்டிய எண்ணூறு தங்கத்தேர்கள் தருகிறேன். நல்ல தேசத்தில், நல்ல குலத்தில் பிறந்த லட்சணமான பதினோராயிரம் குதிரைகளைத் தங்களுக்குத் தருகிறேன். மேலும், பற்பல நிறங்கள் கொண்ட இளமையான பசுக்கள் ஒரு கோடி தருகிறேன். தயவுசெய்து எனக்கு சபலையை (காமதேனுவை)க் கொடுங்கள். அந்தணோத்தமரே! தங்கள் இஷ்டம் போல் எவ்வளவு இரத்தினங்கள், பொற்காசுகள் வேண்டுமோ, அவ்வளவையும் தருகிறேன். எனக்கு சபலையைக் கொடுங்கள்.'' (17–21)

புத்திகூர்மையுடைய விசுவாமித்திரரால் இவ்வாறு கூறப்பட்டதும், ''மன்னரே! நான் ஒருபோதும் (எவ்வளவு செல்வம் கொடுத்தாலும்) சபலையைக் கொடுக்க மாட்டேன். இதுவே என்னுடைய இரத்தினம். என்னுடைய செல்வம். இதுவே என்னுடைய சொத்து. இதுவே என்னுடைய வாழ்வு. (அமாவாசை, பௌர்ணமி நாட்களில் நான் செய்கின்ற) தர்ச–பூர்ணம், நிறைய தட்சிணை கொடுத்து செய்யப்படும் வேள்விகள் மற்றும் பல்வேறு வகையான புண்ணிய கர்மாக்களுக்கும் ஆதாரமாக இருப்பது சபலைதான். என்னுடைய கர்மாக்கள் எல்லாவற்றிற்கும் இதுவே வேர் போல் உள்ளது என்பதில் ஐயமில்லை. மன்னரே! மேலே மேலே பேசிக் கொண்டேயிருப்பதால் என்ன பயன்? நான், காமதேனுவைக் கொடுக்க மாட்டேன். (இதுதான் முடிவான பதில்.)'' (22–25)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
ஐம்பத்து மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்து நான்கு
வீரர்கள் தோன்றுதல்

முனிவர் வசிஷ்டர் காமதேனுவைக் கொடுப்பதற்கு இசையவில்லை என்றதும், விசுவாமித்திரர் (தன் படைவீரர்களைக் கொண்டு) பலவந்தமாக, அதைப் பிடித்திழுக்க ஆரம்பித்தார். இராமா! பேராற்றல் படைத்த மன்னரால் இழுத்துச் செல்லப்படும் சபலை, துக்கம் தாங்காமல் அழுதுகொண்டே சிந்தனை செய்தது. 'இது என்ன, அரசரின் வேலைக்காரர்களால் நான் இழுத்துச் செல்லப்படுகிறேனே? மேன்மை பொருந்திய வசிஷ்டரால் நான் கைவிடப்பட்டு விட்டேனா?' என்று துயரத்தால் கசங்கிப் போனாள். (1–3)

'ஆத்மஞானம் பெற்ற முனிபுங்கவருக்கு நான் என்ன தவறு இழைத்தேன்? அறிநெறி தவறாத அவர் குற்றமற்றவளும் பக்தையும் பிரியமானவளுமான என்னை ஏன் புறக்கணிக்கிறார்?' இவ்வாறு ஆலோசனை செய்து, அடிக்கடி பெருமூச்சுவிட்டுக் கொண்டு (ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவளாக) நூற்றுக்கணக்கான வேலைக்காரர்களைப் புறந்தள்ளிவிட்டு, காற்றைப் போல் கடுகிய வேகத்துடன் வசிஷ்டரின் திருவடிகளைச் சரணடைந்தாள். அழுது கொண்டும் கூக்குரலிட்டுக் கொண்டும் இவ்வாறு கூறினாள். (4–6)

வசிஷ்டருக்கு எதிரில் நின்றுகொண்டு, மேகம்–துந்துபி நாதம் போன்ற பேரொலி எழுப்பினாள். ''பகவானே! பிரும்மாவின் மைந்தரே! நீங்கள் என்னைப் புறக்கணித்துவிட்டீர்களா, என்ன? உங்களிடமிருந்து என்னைப் பிரித்து அரச வேலைக்காரர்கள் இழுத்துச் செல்கிறார்களே, அதன் காரணம் என்ன?'' இதைக் கேட்ட பிரும்மரிஷி துக்கத்தால் தகிக்கப்பட்டவளும், சகோதரி போன்றவளுமான அவளைப் பார்த்துச் சொன்னார்— ''சபலே! நான் உன்னைக் கைவிடமாட்டேன். நீ, எனக்கு எந்தக் குற்றமும் செய்யவில்லை. இந்த மன்னர் மிகவும் பலசாலி. அந்தக் கொழுப்பினால் உன்னை அழைத்துச் செல்கிறார். அவருக்கு ஈடான பலம் என்னிடம் இல்லை. அத்துடன் தற்சமயம் அவர் நாடாளும் மன்னர். (7–10)

பலம் மிகுந்தவர், மன்னர், க்ஷத்திரியர், உலகுக்கு அதிபதி, யானை–குதிரை–தேர்ப்படைகளுடன் அக்ஷௌஹிணி சைன்யத்துடன் வந்திருக்கிறார், காற்றில் அசைந்தாடிப் பறக்கின்ற கொடிகளை உடையவர் – ஆகிய இந்தக் காரணங்களால் இவர் என்னிலும் ஆற்றலுடையவர்.'' இவ்வாறு வசிஷ்டரால் சொல்லப்பட்டதும் பேச்சுக்கலையின் நுட்பங்களை அறிந்த சபலை, எல்லையில்லாத ஆற்றல் கொண்ட பிரும்மரிஷியிடம் வணக்கத்துடன் கூறினாள்— ''க்ஷத்திரியர்களுடைய பலம் ஓரளவிற்கு உட்பட்டது. பிராமணர்கள் அவர்களைக் காட்டிலும் அதிக சக்தி பெற்றவர்கள். பிரும்மன்! தெய்விகமான பிரும்மபலம், க்ஷத்திரியர்களுடையதைக் காட்டிலும் மிகவும் மேலானது. தங்களுடைய பலம் ஒப்பில்லாதது. தங்களைக் காட்டிலும் பலமுள்ளவர் எவரும் இலர். (11–14)

விசுவாமித்திரர் மிக்க வீரமுடையவர்தான். ஆனால், தாங்கள் யாராலும் வெற்றி கொள்ள முடியாதவர். தேசுமிக்கவரே! தங்களுடைய பிரும்மபலத்தால் நானும் பேராற்றல் பெற்றுள்ளேன். எனக்கு உத்தரவு கொடுங்கள். அவர், எந்த அகந்தைச் செருக்கினால் இத்தகைய தவறான வழியைப் பின்பற்றுகிறாரோ, அந்த அகந்தையை அடியோடு ஒழித்துவிடுகிறேன்.'' இவ்வாறு அவள் சொன்னதும் பெரும்புகழ் படைத்த வசிஷ்டர், ''எதிரிகளின் படையை அழிக்கும் வல்லமையுடைய வீரர்களைச் சிருஷ்டிப்பாயாக'' என்று அனுமதி கொடுத்தார். உடனே, காமதேனு படைவீரர்களை உண்டாக்கினாள். (15–17)

அவள், 'ஹூம்' என்று எழுப்பிய பேரொலியிலிருந்து பப்லவர் என்ற நூற்றுக்கணக்கான படைவீரர்கள் தோன்றி, விசுவாமித்திரர் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, அவருடைய சைன்யத்தை முற்றிலுமாக அழித்தார்கள். மிக வேகமாகத் தன்னுடைய சேனை சின்னாபின்னமாக்கப்பட்டதைக்

கண்ட மன்னர் கௌசிகர், மிகவும் சினம் கொண்டு, ஆத்திரத்தால் கண்கள் விரிய, சிறிய–பெரிய அஸ்திரங்களால் பப்லவர்களை அழிக்கத் தொடங்கினார். நூற்றுக்கணக்கான பப்லவர்கள் விசுவாமித்திரரால் தாக்கப்பட்டு அல்லற்படுவதைக் கண்ட காமதேனு, மீண்டும் யவன ஜாதி சம்பந்தமுடைய சகர்கள் என்னும் பயங்கரமான படையினரைப் படைத்தது. யவனக் கலப்பில் உண்டான சகர்களால் அந்தப் பிரதேசம் நிரம்பி வழிந்தது. (18–21)

பராக்கிரமமும் வீரமும் படைத்த அவர்கள் மலர்த்தாதுக்களைப் போல பொன்வண்ண மேனியராக இருந்தார்கள். கூர்மையான வாள், பட்டஸம் தரித்துக் கொண்டிருந்தார்கள். பொன்வண்ணப் பட்டாடை அணிந்திருந்தார்கள். கொழுந்துவிட்டெரியும் நெருப்பு எல்லாவற்றையும் எரித்துவிடுவதைப் போல, அந்த அரசரின் படை முழுவதும் அவர்களால் எரிக்கப்பட்டது. உடனே, மகாவீரரான விசுவாமித்திரர் சக்தி வாய்ந்த அஸ்திரங்களை ஏவினார். அவைகளால் யவன–காம்போஜ–பப்லவ சேனை மிகவும் சேதத்தை அடைந்தது. (22,23)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
ஐம்பத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்தைந்து

விசுவாமித்திரரின் போர்

விசுவாமித்திரரின் அஸ்திரங்களால் கதிகலங்கி, அந்தப் படையினர் சேதமடைந்ததைக் கண்ட வசிஷ்டர், ''சபலே! உன் யோகபலத்தால் இன்னும் சேனாவீரர்களை உண்டாக்கு'' என்று தூண்டினார். அவளுடைய 'ஹும்' சப்தத்திலிருந்து சூரியனுக்கு ஒப்பாக ஒளிவீசும் காம்போஜர்கள் தோன்றினார்கள். பால் சுரக்கும் மடியிலிருந்து சஸ்திரங்களை ஏந்திய பர்பரர்கள் உண்டானார்கள். பிறப்பு உறுப்பிலிருந்து யவனர்களும், ஆசனவாயிலிருந்து சகர்களும் வெளிப்பட்டார்கள். உரோமக்கால்களிலிருந்து மிலேச்சர்கள், ஹாரீதர்கள், வேடர்கள் தோன்றினார்கள். (1–3)

ரகுநந்தனா! அவர்களால் விசுவாமித்திரருடைய படை முழுவதும் – காலாட்கள், யானைகள், குதிரைகள், தேர்கள் எல்லாம் – ஒரு நொடியில் அழிக்கப்பட்டது. மகாத்மாவான வசிஷ்டரால் படை முழுவதும் அழிக்கப்பட்டதைக் கண்டு, விசுவாமித்திரரின் நூறு புதல்வர்களும் பலவகையான ஆயுதங்களை ஏந்திக் கொண்டு கோபம் மிக்கவர்களாய், ஜபம் செய்பவர்களுள் சிறந்தவரான வசிஷ்டரை நோக்கிப் பாய்ந்து சென்றார்கள். ரிஷிபுங்கவர், 'ஹும்' என்ற ஓர் ஒலியினாலேயே அவர்கள் அனைவரையும் எரித்துவிட்டார். மகாத்மா வசிஷ்டரால் விசுவாமித்திரரின் புதல்வர்கள் குதிரை–தேர்–காலாட்படையுடன் ஒரு முகூர்த்த காலத்திற்குள்ளாகவே சாம்பலாக்கப்பட்டார்கள். (4–7)

புகழ்பெற்ற விசுவாமித்திரர் தன் குமாரர்களும் படைவீரர்களும் முற்றிலுமாக அழிக்கப்பட்டதைப் பார்த்து மிகுந்த வெட்கத்துடன் கவலையில் மூழ்கினார். வேகம் தணிந்த பெருங்கடல், விஷப்பற்கள் பிடுங்கப்பட்ட பாம்பு, ராகுவினால் பீடிக்கப்பட்ட சூரியன் – இவற்றைப்போல அப்போதே களையிழந்தவர் ஆனார். மைந்தர்கள், படைவீரர்கள் ஆகியோரைப் பறிகொடுத்து, சிறகுகள் வெட்டப்பட்ட பறவை போல் ஏக்கத்தோடு இருந்த அவர், தன் சக்தியையும் முயற்சியையும் இழந்து நம்பிக்கை குன்றிப் போனார். அவருக்கு ஒரு புதல்வன் எஞ்சியிருந்தான். அவனுக்குப் பட்டம் சூட்டி, 'அரசநீதியின்படி நாட்டை ஆள்வாயாக' என்று நியமித்துவிட்டு (தவம் செய்வதற்காக)க் காட்டிற்குப் போனார். (8–11)

தவச்செல்வரான அவர் கின்னர–உரகர்கள் சஞ்சரிக்கும் இமயமலை அடிவாரம் சென்று, பரமேசுவரனின் அருளைப் பெறுவதற்காகத் தவத்தில் ஈடுபட்டார். காலம் சென்று

கொண்டிருக்கையில், ஒரு சமயம் இடபக்கொடியுடைய தேவர்களின் நாயகர் பரமசிவன் வரம் கொடுக்கும் பொருட்டு மாமுனிவர் விசுவாமித்திரரின் முன் காட்சியளித்தார். ''அரசனே! எதற்காக தவம் செய்கிறீர்? உமது விருப்பம் என்ன? சொல்லும். வரம் கொடுக்கும் எண்ணத்துடன் வந்திருக்கிறேன். உமது வேண்டுகோளை நிறைவேற்றி வைக்கிறேன்.'' இவ்வாறு பரமேசுவரன் கூறியதும், தவச்சீலரான விசுவாமித்திரர் மகாதேவரை வணங்கிக் கூறினார்— (12–15)

''மகாதேவரே! தாங்கள் என்னிடம் பிரீதி அடைந்தவராக இருந்தால், எனக்கு, அங்கம்–உபாங்கம்–உபநிஷத்–ரகசியம் ஆகியவற்றோடு, தனுர்வேதத்தைக் கொடுத்தருளுங்கள். தேவ–தானவ–மகரிஷி–கந்தர்வ–யட்ச–ராட்சஸர்களுக்கு என்னென்ன அஸ்திரங்கள் உண்டோ, அவையெல்லாம் என் உள்ளத்தில் தோன்றட்டும். தேவதேவரே! தங்கள் அனுக்கிரகத்தால் என்னுடைய இந்த விருப்பம் நிறைவேறட்டும்.'' ''அப்படியே ஆகட்டும்'' என்று சொல்லிவிட்டு, பரமேசுவரன் மறைந்து போனார். மகாபலசாலியான ராஜரிஷி விசுவாமித்திரர் அஸ்திரங்கள் அனைத்தையும் அடைந்துவிட்டதால் அகந்தை மேலும் வளர்ந்து செருக்கு நிறைந்தவராகவே ஆகிவிட்டார். பர்வ (பௌர்ணமி–அமாவாசை) காலங்களில் சமுத்திரம் பொங்குவதைப் போல (தன்) ஆற்றல் வளர்ந்து கொண்டே போனதால், 'முனிபுங்கவரான வசிஷ்டர் அழிந்தே போனார்' என்று அப்போதே முடிவு கட்டினார், மன்னர். (16–20)

விரைவாக, அவர் வசிஷ்டருடைய ஆசிரமத்திற்குச் சென்று அஸ்திரங்களைப் பொழிந்தார். அஸ்திரப் பிரபாவத்தினால் அந்த தவச்சாலை முழுவதும் எரிந்து போயிற்று. மேதாவியான விசுவாமித்திரரிடமிருந்து மேன்மேலும் அஸ்திரம் வந்து கொண்டிருப்பதைப் பார்த்துத் திகிலடைந்த நூற்றுக்கணக்கான முனிவர்கள் வெகுவேகமாக எல்லா திசைகளிலும் ஓடினார்கள். வசிஷ்டருடைய ஆயிரக்கணக்கான சீடர்களும், விலங்கு–பறவைகளும் பயந்து நடுங்கி, பல திசைகளிலும் தலைதெறிக்க ஓடினார்கள். மகாத்மா வசிஷ்டருடைய தபோவனம் ஒரு முகூர்த்த காலத்திற்குள் எந்த உயிர்ப் பிராணியும் இல்லாமல் சப்தம் அடங்கி, பாலைவனம் போல் ஆகிவிட்டது. (21–24)

'பயப்படாதீர்கள், பயப்படாதீர்கள்' என்று திரும்பத் திரும்பக் குரல் கொடுத்தார், வசிஷ்டர். நான், ''சூரியன் பனிக்கூட்டத்தை அழிப்பதைப் போல காதியின் மைந்தனை, இப்போதே அழித்து விடுகிறேன்.'' இவ்வாறு சொல்லிவிட்டு, பேராற்றல் படைத்த பெரும் தவசியான வசிஷ்டர் கோபம் மிகுந்தவராய் விசுவாமித்திரரிடம் இவ்வாறு கூறினார்— ''நெடுங்காலமாகச் செழிப்புடன் விளங்கி வந்த இந்த ஆசிரமத்தை அழித்துவிட்டாய். மூடனே! நீ கெட்ட வழியில் செல்பவன். அதனால், நீ நன்றாக இருக்க மாட்டாய்.'' இவ்வாறு சொல்லிவிட்டு மிகவும் கோபம் கொண்ட அவர் கையில் தண்டத்தைப் பிடித்துக் கொண்டு, புகையில்லாத காலாக்னி போல் நெருப்புக் கனலாய், இன்னொரு யமதண்டம் போல் நின்றார். (26–28)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
ஐம்பத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்தாறு

வசிஷ்டர் வென்றார்!

இவ்வாறு வசிஷ்டர் கூறியதும் மகாபலசாலியான விசுவாமித்திரர், ஆக்னேயாஸ்திரத்தைக் கையில் எடுத்து, 'நில்லும், நில்லும்' (அக்னியைப் பொழியும் இந்த அஸ்திரத்தைக் கண்டு ஓடி விடாதீர்!) என்று கூவினார். பகவான் வசிஷ்டர், காலதண்டம்போல் திகழ்ந்த பிரும்ம தண்டத்தைக் கையில் ஏந்திக் கொண்டு கோபத்துடன் கூறினார்— (1,2)

''க்ஷத்திரியப்பதரே! இதோ, இங்கேதான் நிற்கிறேன்! உன்னுடைய ஆற்றல் அனைத்தையும் காட்டு! காதி மைந்தனே! ஏராளமான அஸ்திர–சஸ்திரங்களைப் பெற்றிருப்பதால் பெருகியிருக்கும் உன் ஆணவத்தை, இப்போது அழித்துக் காட்டுகிறேன். க்ஷத்திரியப்பதரே! உன்னுடைய க்ஷத்திரிய பலம் எங்கே? மகத்தான பிரும்மபலம் எங்கே? என்னுடைய தெய்விகப் பிரும்மபலத்தை இப்போது பார்!'' காதி மைந்தரால் ஏவப்பட்டு வேகத்துடன் வந்து கொண்டிருந்த பயங்கரமான ஆக்னேயாஸ்திரத்தை எரிந்து கொண்டிருக்கும் அக்னியில் தண்ணீர் ஊற்றினாற்போல தன் பிரும்மதண்டத்தால் ஏற்று, அதன் சக்தியை அடக்கிவிட்டார், வசிஷ்டர். (3–5)

கோபம் கொண்ட விசுவாமித்திரர், வாருணம், ரௌத்ரம், ஐந்திரம், பாசுபதம், ஐஷீகம் முதலான அஸ்திரங்களைப் பிரயோகித்தார். (ஆனால், அவைகளும் அடங்கிப் போயின. எனவே, மேன்மேலும் அஸ்திரங்களை விட்டார்.) மானவம், மோகனம், காந்தர்வம், ஸ்வாபநம், ஜ்ரும்பணம், மாதனம், ஸந்தாபனம், விலாபநம், சோஷணம், தாருணம், வெல்ல முடியாத வஜ்ரம், பிரும்மபாசம், காலபாசம், வருணபாசம், பைநாகம், நீரில்லாத மேகம், நீருண்ட மேகம், தண்டம், பைசாசம், க்ரௌஞ்சம், தருமசக்கரம், காலசக்கரம், விஷ்ணுசக்கரம், வாயவ்யம், மதனம், ஹயசிரஸ், இருவகை சக்தி ஆயுதங்கள், கங்காளம், முஸலம், வைத்யாதரம் என்னும் சிறப்பான அஸ்திரம், பயங்கரமான காலாஸ்த்ரம், கோரமான திரிசூலம், காபாலம், கங்கணம் ஆகிய இவை எல்லா அஸ்திரங்களையும் வசிஷ்டர் மேல் ஏவினார். (6–12)

பிரும்ம புத்திரரும் மந்திரஜபம் செய்பவர்களுள் தலையாயவருமான வசிஷ்டர், அவை எல்லாவற்றையும் பிரும்மதண்டத்திற்குள் அடக்கிவிட்டார்! என்ன ஆச்சரியம்! அதுவரை செலுத்திய அஸ்திரங்கள் எல்லாம் அடக்கப்பட்டுவிட்டதும், விசுவாமித்திரர் பிரும்மாஸ்திரத்தைச் செலுத்தினார். அந்த பிரும்மாஸ்திரம் விடப்பட்டதும் வேகமாகப் பாய்ந்து வருவதைப் பார்த்து, அக்னி, தேவரிஷிகள், கந்தர்வர், மகா உரகர்கள் முதலானோர்களும், மூன்று உலகங்களும் நடுநடுங்கிப் போயின. இராகவனே! பிரும்மாவைத் தேவதையாகக் கொண்ட பயங்கரமான அந்த அஸ்திரத்தையும் முழுமையாகத் தன் பிரும்மதண்டத்தினால் பற்றி அடக்கினார், வசிஷ்டர். (13–16)

வசிஷ்டர், பிரும்மாஸ்திரத்தை ஏற்றுச் செயலிழக்கச் செய்தபோது, கோபத்தால் கொதித்துக் கொண்டிருந்த அவருடைய தோற்றம் மூன்று உலகங்களையும் மோகத்தில் ஆழ்த்துவதாகவும் பயங்கரமானதாகவும் ஆயிற்று. மகாத்மா வசிஷ்டருடைய உரோமக்கால்களிலிருந்து சூரியனுடைய கிரணங்கள் போன்று புகையுடன் கூடிய நெருப்புப் பொறிகள் வெளிப்பட்டு விழுந்தன. வசிஷ்டர் கையில் தூக்கிப் பிடித்திருந்த பிரும்மதண்டம் புகையில்லாமல் எரியும் காலாக்னியைப் போலும் இன்னொரு யமதண்டம் போலும் காட்சியளித்தது. (17–19)

அப்போது தவச்சீலரான வசிஷ்டரை முனிவர்கள் வணங்கித் தோத்தரித்தார்கள்— ''தங்களுடைய ஆற்றல் எல்லையில்லாதது. பிரும்மாஸ்திரத்தின் சக்தியைத் தங்கள் பேராற்றலால் தாங்கிக் கொள்ள வேண்டும். பிரும்மன்! பலசாலியான விசுவாமித்திரர் தங்களால் தோற்கடிக்கப்பட்டார். அருள்கூர்ந்து சாந்தம் அடையுங்கள். ஜபம் செய்பவர்களுள் தலையாயவரே! மக்கள் அனைவரும் அச்சம் நீங்கியவர்கள் ஆகட்டும்.'' முனிவர்கள் இவ்வாறு சொன்னவுடன் மகாதபஸ்வியான அவர் சாந்தத்தை அடைந்தார். தோல்வியைக் கண்ட விசுவாமித்திரரும் நீண்ட பெருமூச்சுவிட்டுக் கொண்டு இவ்வாறு கூறினார்— (20–22)

''க்ஷத்திரிய பலம், பலமா என்ன? பிரும்மதேஜஸ்தான் உண்மையான பலம்! என்னுடைய எல்லா அஸ்திரங்களும் ஒரே ஒரு பிரும்மதண்டத்தால் நாசமாக்கப்பட்டன. இந்தத் தத்துவத்தை, இந்த நிகழ்ச்சியின் மூலம் கண்ணாரக் கண்டு உணர்ந்துவிட்டேன். என்னுடைய புலன்கள், மனம் ஆகியவற்றை மாசற்றதாகச் செய்து கொண்டு, எந்த தவம் வழியாக, நான்

அத்தன்மை அடைவதற்குக் காரணமாக அமையுமோ, அப்படிப்பட்ட மகத்தான தவத்தைச் செய்யப் போகிறேன்.'' (23,24)

ஸ்ரீமத்வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
ஐம்பத்தாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்தேழு

திரிசங்குவின் வேள்வி

இராமனே! தன்னுடைய தோல்வியை நினைத்துத் தகிக்கும் இதயத்துடன் விசுவாமித்திரர் அடிக்கடி பெருமூச்சுவிட்டுக் கொண்டு, வசிஷ்டரிடம் பகைமையை வளர்த்துக் கொண்டு, அரசியுடன்கூட தென்திசைக்குச் சென்று மிகவும் உன்னதமான, கடுமையான நியமங்களோடு கூடிய தவத்தைச் செய்தார். காட்டில் கிடைக்கும் பழம்–கிழங்குகளை மட்டும் புசித்து, அடங்கிய மனத்துடன் பெரிய தவத்தை அனுஷ்டித்தார். நாளடைவில், சத்திய–தருமத்திலேயே மனத்தைச் செலுத்தியவர்களான புத்திரர்கள் பிறந்தார்கள். (1–3)

ஹவிஷ்யந்தன், மதுஷ்யந்தன், த்ருடநேத்ரன், மகாரதன் (என்று அவர்களுக்குப் பெயர்). சரியாக ஆயிரம் ஆண்டுகள் நிறைந்தவுடன், தவச்செல்வரான விசுவாமித்திரரைப் பார்த்து, உலகப்பிதாமகரான பிரும்மா, (பின்வரும்) இனிமையான சொற்களைக் கூறினார்— ''குசிக மைந்தரே! உங்களுடைய தவத்தினால் ராஜரிஷிகளுக்குரிய புண்ணிய லோகங்களை வென்று விட்டீர்கள். உன்னதமான தவத்தைச் செய்த நீங்கள் ராஜரிஷி என்று அறியப்படுவீர்கள்.'' இவ்வாறு கூறிவிட்டு அனைத்து உலகங்களுக்கும் தலைவரான பிரும்மா, உடன் வந்தவர்களையும் அழைத்துக் கொண்டு வான்வழியே பிரும்மலோகம் சென்றுவிட்டார். அதைக் கேட்ட விசுவாமித்திரர் வெட்கம் மேலிட பேச்சற்றுப் போனார். (4–7)

மிகவும் துக்கத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட அவர், சினம் பொங்க இவ்வாறு கூறினார்— 'அட! இவ்வளவு காலம் அருமையான தவம் செய்த பின்பும், தேவர்களும் முனிவர்களும் என்னை ராஜரிஷி என்றுதான் ஏற்றுக் கொள்கிறார்கள். (பிரும்மரிஷி என்று கூறவில்லை. எனவே,) இதுவரை நான் செய்த தவம் பலனில்லாமல் போய்விட்டது என்று எண்ணுகிறேன்.' இவ்வாறு மனத்திற்குள் எண்ணி மீண்டும் தவம் செய்ய முடிவு செய்தார், மகாதபஸ்வியான அவர். காகுத்தனே! தன்மானம் மிக்க அவர் கடுமையான தவத்தை (மறுபடியும்) மேற்கொண்டார். (8,9)

இதே காலத்தில் சத்தியம் தவறாதவனும், புலன்களை வென்றவனும், இக்ஷ்வாகு குலத்தோன்றலுமான திரிசங்கு என்று பெயர் பெற்றவன் (அயோத்தியில்) ஆட்சி செய்து கொண்டிருந்தான். 'நான் இந்த உடலுடனேயே தேவர்களின் உயர்ந்த இருப்பிடத்தை (தேவலோகத்தை) அடைய வேண்டும். அதற்காக வேள்வி நடத்த வேண்டும்' என்ற எண்ணம் உண்டாயிற்று அவனுக்கு. அவன் குலகுருவான வசிஷ்டரை அழைத்துத் தன் விருப்பத்தைத் தெரிவித்தான். மகாத்மாவான வசிஷ்டர், 'இது செய்யக் கூடியது அல்ல' என்று மறுத்துக் கூறித் திருப்பி அனுப்பியதும், அவன் (திரிசங்கு) தெற்கு திசை நோக்கிச் சென்றான். (வேள்வி செய்து, அதன் பயனாக மனித உடலுடன் தேவலோகம் செல்வது என்ற) தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக, வசிஷ்டருடைய குமாரர்களை வேண்டிக் கொள்ளும் பொருட்டு, அவர்கள் நீண்ட காலமாகக் கடுமையான தவத்தில் ஈடுபட்டிருந்த இடத்திற்குப் போய்ச் சேர்ந்தான். (10–14)

பேராற்றல் படைத்த திரிசங்கு, ஒளிமிக்கவர்களும் புகழ்பெற்றவர்களுமான வசிஷ்டரின் நூறு குமாரர்களும் தவம் செய்து கொண்டிருப்பதைப் பார்த்தான். ஆசார்யருடைய புத்திரர்களான அந்தப் பெரியோர்களிடம் சென்று வரிசைக்கிரமமாக அவர்களை வணங்கி, வெட்கத்தால் தலைகுனிந்து (சற்று நேரம்) பேச்சிழந்து நின்றான். கைகளைக் கூப்பிக்கொண்டு மகா மேன்மை தங்கிய அவர்களைப் பார்த்து, ''நான் தங்கள் எல்லோரையும் சரணடைகிறேன்; அடைக்கலம் கேட்கிறேன். நான் ஒரு மாபெரும் வேள்வி நடத்த விரும்பி, குலகுருவான வசிஷ்டரிடம் கேட்டேன். (உங்களுக்கு நலமே உண்டாகுக.) அவர் மறுத்துவிட்டார். நீங்கள் அதற்கு அனுமதி அளிக்க வேண்டும். ஆசார்யருடைய புதல்வர்கள் அனைவருக்கும் நமஸ்காரம் செய்து பிரார்த்திக்கிறேன். தவம் புரியும் பிராமணர்களான உங்களைத் தலையால் வணங்கி யாசிக்கிறேன். (15–19)

'இந்த உடலுடனேயே நான் தேவலோகத்தை அடைய வேண்டும்' என்ற என்னுடைய நோக்கம் நிறைவேறும் வகையில், நீங்கள் ஒருங்கிணைந்து யாகத்தை நடத்தித் தர வேண்டும். வசிஷ்டர் மறுத்துவிட்டார். தவச்செல்வர்களே! குருபுத்திரர்களான உங்களைத் தவிர வேறு ஒரு புகலையும் நான் காணவில்லை. இக்ஷ்வாகு மன்னர்கள் எல்லோருக்கும் அரச புரோகிதர்கள்தாம் ஒரே புகலிடம். மெத்த அறிவுடையவர்களான புரோகிதர்கள், மன்னர்களை எப்போதும் பிரச்சனைகளிலிருந்து அக்கரை சேர்ப்பிக்கிறார்கள். (உங்கள் தகப்பனாரோ என் கோரிக்கையை நிராகரித்துவிட்டார்.) ஆகவே, அவருக்குப் பிறகு நீங்கள் எல்லோரும்தான் என் வணக்கத்திற்குரிய தெய்வம்.'' (20–22)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
ஐம்பத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்தெட்டு

திரிசங்கு சாபம் பெற்றான்!

பின்னர், திரிசங்குவின் சொற்களைக் கேட்ட முனிகுமாரர்கள் நூறு பேரும் கோபம் பொங்கியவர்களாய் அரசனிடம் இவ்வாறு கூறினார்கள்— ''கெட்ட புத்தியுடையவனே! சத்தியம் தவறாத குலகுருவே மறுத்துவிட்ட ஒரு விஷயத்தை, அவர் சொல்லை அலட்சியம் செய்து, வேறொரு வழியில் நிறைவேற்றிக் கொள்ளும் துணிச்சல் உனக்கு எப்படி வந்தது? இக்ஷ்வாகு மன்னர்கள் எல்லோருக்கும் உயர்ந்த ஒரே புகலிடம் புரோகிதர் வசிஷ்டர். சத்தியம் தவறாத அவருடைய சொற்களை மீறி, எதையும் (நாங்கள்) செய்யமாட்டோம். 'செய்யக் கூடாது' என்று பகவான் வசிஷ்டர் சொன்ன பிறகு, அந்த வேள்வியைச் செய்வதற்கு, எங்களுக்கு ஏது சக்தி? உன்னால்தான் எப்படி முடியும்? (1–4)

மன்னனே! நீ இன்னும் சிறுபிள்ளையாக இருக்கிறாய்! உன்னுடைய ஊருக்கே திரும்பிப் போ. மூன்று உலகத்தில் உள்ளோருக்கும் (அவர்கள் விருப்பம் எதுவாக இருந்தாலும் அதை நிறைவேற்றிக் கொடுக்கும்) யாகத்தைச் செய்யக் கூடியவர், பகவான் (வசிஷ்டரே). அவரை அவமானப்படுத்தும் வகையில், (அவர் நிராகரித்த) அந்த யாகத்தை எங்களால் எப்படிச் செய்ய முடியும்?'' கடுங்கோபத்துடன் சொற்கள் குழறியபடி அவர்கள் சொன்னதைக் கேட்டு மன்னன், மறுபடியும் இவ்வாறு கூறினான்— ''ஆசார்யரும், ஆசார்யரின் புதல்வர்களான நீங்களும் என் வேண்டுகோளை மறுத்துவிட்டீர்கள். தவச்செல்வர்களே! உங்களுக்கு மங்களம் உண்டாகட்டும். நான் வேறொரு புகலிடத்தை நாடிச் செல்கிறேன்.'' (2–7)

அவனுடைய பயங்கரமான உட்கிடக்கையை அறிவிக்கும் அந்தச் சொற்களைக் கேட்ட முனிவரின் மைந்தர்கள் கடுங்கோபத்துடன், 'சண்டாளனாகப் போகக் கடவாய்' என்று

சாபமிட்டார்கள். இவ்வாறு கூறிவிட்டு, அந்தச் சான்றோர்கள் தம் ஆசிரமத்திற்குள் சென்றுவிட்டார்கள். பின்னர், அந்த இரவு கழிந்தவுடன் (பொழுது விடிந்ததும் அவனைப் பார்த்தபோது) மன்னன் சண்டாளனாகியிருந்தான். அவனுடைய நிறம் கறுப்பாகியிருந்தது; விகாரமான தோற்றம்; குறுகிய தலைமுடி; உடலில் பிணச் சாம்பலின் பூச்சு; இரும்பினாலான ஆபரணங்கள். இவ்வாறு சண்டாள வடிவத்தை அடைந்துவிட்ட திரிசங்குவைக் கண்டு, எல்லா அமைச்சர்களும், கூடவே வந்திருந்த ஊர் மக்களும் அவனை விட்டுவிலகி வெகுவேகமாக ஓடிப் போனார்கள். (8–10)

காகுத்தனே! தைரியமாக இருந்த மன்னன் இரவு–பகலாக (கவலை என்ற) அக்னியால் வாட்டியெடுக்கப்பட்டதும், தவச்செல்வரான விசுவாமித்திரரிடம் (உதவியை நாடி) தனியொருவனாகச் சென்றான். இராமனே! சண்டாள உருவத்தைப் பெற்று, வாழ்க்கை முழுவதும் பயனற்றதாகிவிட்ட அந்த அரசனைப் பார்த்ததும் முனிவருக்கு இரக்கம் வந்தது. பேராற்றல் படைத்தவரும், அடிபிறழாத அறநெறியாளருமான அவர், கருணை மேலிட விகாரமான தோற்றம் கொண்டிருந்த மன்னனைப் பார்த்து இவ்வாறு கூறினார்— (11–13)

''உனக்கு மங்களமுண்டாகுக! மகாபலம் பொருந்திய மன்னனே! நீ இங்கே என்ன காரியத்திற்காக வந்திருக்கிறாய்? அயோத்திக்கு அதிபதியே! வீரனே! சாபத்தினால் சண்டாளனாகிவிட்டாயா, என்ன?'' சண்டாளனாக மாறிவிட்டிருந்த மன்னன், அந்தச் சொற்களைக் கேட்டதும் வாக்கின் நுட்பத்தை அறிந்த அவன் கைகளைக் கூப்பிக் கொண்டு, பேச்சில் வல்லவரான அவரிடம் கூறினான்— (14,15)

''என் ஆசார்யரும், ஆசார்யருடைய குமாரர்களும் என் வேண்டுகோளை மறுத்துவிட்டார்கள். அருள்பொழியும் காட்சியினரே! 'சரீரத்தோடுகூட தேவருலகம் செல்லவேண்டும்' என்ற என்னுடைய விருப்பம் பூர்த்தியாகாதது மட்டுமல்லாமல், அதற்கு விபரீதமான பலன் விளைந்திருக்கிறது. நான் நூறு வேள்வி செய்துவிட்டேன். அப்படியும் அதன் பலன் கிடைக்கவில்லை. பண்பாளரே! பல இடுக்கண்களைச் சந்திக்க நேரிட்ட காலத்தில்கூட, இதுவரை நான் பொய் பேசியதே இல்லை; இனியும் பேசமாட்டேன் – என்று என்னுடைய அரச தருமத்தின் மீது ஆணையாகத் தங்களிடம் சொல்கிறேன். (16–18)

நான் பல்வகையான வேள்விகளைச் செய்திருக்கிறேன்; அறவழியில் நின்று மக்களைக் காப்பாற்றி இருக்கிறேன்; என்னுடைய நன்னடத்தைகளால் மகாத்மாக்களான ஆசார்யர்கள் சந்தோஷப்பட்டிருக்கிறார்கள். இப்போதும் நான் அறநெறிக்கிணங்க யாகம் செய்யவே விரும்புகிறேன். முனிபுங்கவரே! ஆனால், என் குருமார்கள் என்னிடம் திருப்தியை அடையவில்லை. தலைவிதிதான் மிகவும் சக்தி வாய்ந்தது; மனித முயற்சி வீணானது – என்று எண்ணுகிறேன். தெய்வம் எல்லாவற்றையும் வலுவான கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறது. எனவே, தெய்வம்தான் சர்வ வல்லமை கொண்ட புகலிடம். (19–21)

மிகவும் துயரத்தில் தவித்துக் கொண்டிருக்கும் நான், தங்களுடைய மகத்தான அனுக்கிரகத்தை வேண்டிக் கேட்கிறேன். தங்களுக்கு நமஸ்காரம்! தெய்வம் என்னுடைய முயற்சிகளை நசுக்கப் பார்க்கிறது. தாங்கள் என்னிடம் கருணை காட்ட வேண்டும். நான் வேறொருவரை நாடிச் செல்ல மாட்டேன்; எனக்கு வேறு எவரும் சரண் இல்லை. தங்கள் தங்களுடைய புருஷகாரத்தால் (தவ வலிமையை உள்ளடக்கிய மனித முயற்சியால்) தெய்வம் தரும் இடையூறுகளை முற்றிலுமாக முறியடிக்க முடியும்.'' (22,23)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
ஐம்பத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்தொன்பது
வசிஷ்ட குமாரர்கள் கொடுத்த சாபம்

(சதானந்தர், ஸ்ரீராமனிடம் சொல்கிறார்— ஸ்ரீராமா!) நிஜமான சண்டாள வடிவத்தை ஏற்றுக்கொண்டு வந்து, திரிசங்கு கூறிய விபரம் முழுவதையும் கேட்ட குசிக புத்திரர் கருணை கொண்டு அன்புசொட்டப் பேசினார். (1)

''இக்ஷ்வாகு வம்ச மன்னனே! உனக்கு நல்வரவு கூறுகிறேன். நீ அறவழியில் செல்பவன் என்பது எனக்குத் தெரியும். மன்னரில் சிறந்தவனே! பயப்படாதே. நான், உனக்கு அடைக்கலம் தருகிறேன். யாகத்திற்கு உதவியாக இருக்கக்கூடிய புண்ணிய–கர்மானுஷ்டானர்களான எல்லா மாமுனிவர்களையும் நான் அழைக்கிறேன். அரசனே! (அவர்கள் வந்து சேர்ந்தவுடன்) கவலையில்லாமல் நீ யாகத்தைத் தொடங்கலாம். குருவினுடைய சாபத்தால் மாறிவிட்ட இந்தச் சரீரத்துடனேயே – இந்தத் தோற்றத்துடனேயே – நீ தேவலோகம் செல்லப் போகிறாய். அடைக்கலம் கோரி கௌசிகனாகிய என்னிடம் வந்திருக்கிறாய்! அப்புறம் என்ன? மன்னனே! சுவர்க்கம் உன் கைக்குள் அகப்பட்டு விட்டதாகவே எண்ணுகிறேன்.'' (2–5)

இவ்வாறு திரிசங்குவிடம் கூறிவிட்டு, பராக்கிரமசாலியான அவர் தருமநெறி அணுவளவும் தவறாத மகாமேதாவியான தன் புதல்வர்களை அழைத்து, யாகத்திற்குத் தேவையான பொருட்களையெல்லாம் சேகரிக்கும்படி உத்தரவிட்டார். எல்லாச் சீடர்களையும் கூப்பிட்டு, ''குழந்தைகளே! என் ஆணை என்று சொல்லி, சிஷ்யர்கள், நண்பர்கள், சாஸ்திர ஞானமுடைய ரித்விக்குகள் மற்றும் எல்லா முனிவர்களையும் அழைத்து வாருங்கள். யாரேனும் என் வார்த்தையை மதிக்காமல் இகழ்ச்சியாகப் பேசினால் கொஞ்சமும் தயக்கம் காட்டாமல் அதையும் என்னிடம் கூறி விடவேண்டும்.'' அதைக் கேட்டவுடன் அனைத்து திசைகளுக்கும் அவர்கள் (குமாரர்களும் சிஷ்யர்களும்) புறப்பட்டுச் சென்றார்கள். (6–9)

பிரும்மத்தைத் தரிசித்தவர்களான முனிவர்கள் எல்லா நாடுகளிலிருந்தும் வரத் தொடங்கினார்கள். மிக்கப் பிரகாசத்துடன் விளங்கும் விசுவாமித்திரரின் சிஷ்யர்கள் ஒன்றாகக் கூடி வந்து பிரும்மவாதினிகளான எல்லா முனிவர்களும் கூறியதைச் சொன்னார்கள். 'விசுவாமித்திரர் யாகம் செய்வதற்காகத் தங்களை அழைக்கிறார்' என்று நாங்கள் (குமாரர்களும் சிஷ்யர்களும்) கூறிய செய்தியைக் கேட்டு, இருபிறப்பாளர்களான அந்தணர்கள் அனைவரும் புறப்பட்டு வந்து கொண்டிருக்கிறார்கள். மகோதயர் என்ற பெயருடையவரைத் தவிர எல்லா நாடுகளிலிருந்தும் முனிவர்கள் வருவதற்கு இசைந்துள்ளார்கள். முனிபுங்கவரே! வசிஷ்டருடைய புதல்வர்கள் நூற்றுவரும் கோபத்தால் கொதித்து குரல் தடுமாறியபடிச் சொல்லிய வார்த்தைகளைக் கேளுங்கள்— (10–12)

''ஒரு க்ஷத்திரியன் யாகம் செய்விக்கிறான்! அதுவும் ஒரு சண்டாள யஜமானனுக்காக! தேவர்கள் யாகசாலைக்கு வந்து, சபையோர் அனைவரும் பார்த்திருக்க, வேள்வியில் இடப்படும் ஹவிஸை வாங்கி உண்பார்களாமா? விசுவாமித்திரரின் ஆணைக்குக் கட்டுப்பட்டு, அந்தணர்களும் ஏனைய மகாத்மாக்களும் சண்டாள போஜனத்தைச் சாப்பிட்டால் தேவலோகத்தை எவ்வாறு அடைய முடியும்? மாமுனிவரே! வசிஷ்ட குமாரர்களும் மகோதயரும் கோபத்தால் கண்கள் சிவக்க, கொடுமையான இவ்வார்த்தைகளை எரிச்சலுடன் கூறினார்கள்.'' விசுவாமித்திரர், அவர்கள் எல்லோரும் கூறியதைக் கேட்டு, கோபத்தால் கண்கள் சிவக்க ஆணவத்துடன் இவ்வாறு கூறினார்— (13–16)

''அவர்கள் குற்றமற்ற என்னைக் குறை கூறுகிறார்கள். தீயவர்களான அவர்கள் சாம்பலாகப் போவார்கள் என்பதில் சந்தேகமில்லை. இப்போது அவர்களை என்னுடைய காலபாசத்தால் கட்டி, யமலோகத்திற்கு அனுப்பி வைக்கிறேன். எழுநூறு ஜன்மாக்களுக்குச் சவத்திற்காக வைக்கப்படும்

உணவை உண்பவர்களாக இருப்பார்கள். நாய் இறைச்சியை உண்ணும் 'முஷ்டிகா' என்னும் இரக்கமற்ற இனத்தினராக நிறம் மாறி, உருவம் மாறி (இகழ்ச்சிக்குரியவர்களாக) இவ்வுலகில் திரிந்து கொண்டிருப்பார்களாக! கெட்ட புத்தியுள்ள மகோதயன் தூற்றத்தகாத என்னைத் தூற்றினான். (எனவே,) எல்லா மக்களாலும் நிந்திக்கப்படும் வேடத்தன்மையை அடைவான். மனத்தில் இரக்கமே இல்லாதவனாக, பிற பிராணிகளைக் கொல்பவனாக இருந்து என் கோபத்தின் விளைவாக நீண்ட காலத்திற்குத் துன்பங்களை அனுபவிப்பான்.'' முனிவர்கள் எல்லோரும் கேட்டுக் கொண்டிருக்கும்போது, இவ்வாறு கூறிவிட்டு மகாதவசியான விசுவாமித்திரர் நிறுத்தினார். (17–22)

ஸ்ரீமத் வால்மீகி ராமயணம் பால காண்டத்தில்
ஐம்பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபது

திரிசங்கு சுவர்க்கம்

மகோதயர் மற்றும் வசிஷ்ட குமாரர்களின் தவவலிமை அழிந்துவிட்டதை உணர்ந்து, முனிவர்களை நோக்கி மகாதேஜஸ்வியான விசுவாமித்திரர் கூறினார்— (1)

''இவன் இக்ஷ்வாகு குலத்தோன்றல்; திரிசங்கு என்று பெயர் பெற்றவன்; தருமம் செய்தவன்; வள்ளல்; அத்துடன் என்னைச் சரணடைந்துவிட்டவன். 'இந்தச் சரீரத்துடன் நான் தேவலோகத்தை வெற்றி கொள்வேன் (சென்றடைய வேண்டும்)' என்பது இவன் விருப்பம். ஆகவே, என்ன மாதிரியான யாகம் செய்தால், இவன் தனது சரீரத்துடனே தேவலோகம் செல்வானோ, அப்படிப்பட்ட வேள்வியை நீங்கள் செய்யுங்கள்; நான் உடன் இருக்கிறேன்.'' விசுவாமித்திரருடைய சொற்களைக் கேட்டதும் அறம் அறிந்தவர்களான எல்லா மாமுனிவர்களும் தமக்குள் ஒன்றுகூடி (விசுவாமித்திரரின் தவவலிமையால் உள்ளூர அச்சம் கொண்டு), ''கௌசிகர் அக்னிக்கு ஒப்பானவர்; கோபமூட்டப்பட்டால் சாபம் கொடுத்துவிடுவார். ஆகவே, விசுவாமித்திரருடைய தவவலிமையினால் திரிசங்கு தன் சரீரத்துடன் தேவலோகம் செல்லட்டும். அதற்கு அனுகூலமாக நாம் வேள்வி நடத்துவோம்'' என்று எல்லோரும் முடிவு செய்தார்கள். இவ்வாறு தீர்மானித்துக் கொண்ட முனிவர்கள் அவரவர்களுக்கு உரிய வேள்வி கிரியைகளை வகுத்துக் கொண்டு செய்தார்கள். (2–8)

அந்த வேள்வியில் விசுவாமித்திரரே அத்வர்யுவாக (தலைமைப் புரோகிதராக) இருந்து செயல்பட்டார். பின்னர், மற்றவர்கள் வேதவிற்பன்னர்களாக (வேதியர்களாக), ரித்விக்குகளாக (வேள்வி செய்பவர்களாக) அமர்ந்து, (வேள்விகளை நிகழ்த்தும் முறைகளை விளக்கும்) கல்ப சாஸ்திரத்தில் கூறியுள்ளபடி, சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு வேள்விச் சடங்குகளைச் செய்தார்கள். பின்னர், பல நாட்கள் கழிந்ததும் மகாதபஸ்வியான விசுவாமித்திரர், அக்னியில் கொடுக்கும் ஆகுதியை நேரில் வந்து பெற்றுச் செல்லும்படி, எல்லா தேவதைகளையும் மந்திரங்களால் அழைத்தார். ஆனால், எந்த ஒரு தேவதையும் அந்த அழைப்பை ஏற்று, தனக்குரிய உணவைப் பெற்றுக் கொள்வதற்காக வரவில்லை. உடனே, கோபம் பொங்கியெழுந்தவராய் விசுவாமித்திரர் ஸ்ருவத்தை (ஆகுதிக்கரண்டியை) உயரே தூக்கிக் காட்டியபடி, சினத்துடன் திரிசங்குவிடம் இவ்வாறு கூறினார்— (9–12)

''மன்னனே! என்னுடைய தவத்தினால் சம்பாதிக்கப்பட்ட மகத்தான சக்தியை இப்போது பார்! நான், என்னுடைய பேராற்றலினால் சரீரத்தோடு உன்னைத் தேவலோகத்திற்கு அனுப்பி

வைக்கிறேன். தன் உடலோடு தேவலோகம் செல்வது என்பது இயலாத காரியம்தான். ஆனால், மன்னனே! என்னால் செய்யப்பட்ட தவத்திற்குக் கொஞ்சமாவது பயன் இருக்குமேயானால், (நான் ஆணையிடுகிறேன்) போ, தேவலோகத்திற்கு!'' காகுத்தனே! முனிவர் (விசுவாமித்திரர்) இவ்வாறு கூறியவுடனே, (மற்ற) முனிவர்கள் எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, மன்னன் (திரிசங்கு) விண்ணுலகைச் சென்றடைந்தான். தேவலோகத்திற்கு வந்துவிட்ட திரிசங்குவைப் பார்த்து, தேவராஜன், எல்லா தேவர்களும் கூடியிருக்கும் போது இவ்வாறு சொன்னான்— (13–16)

''திரிசங்குவே! நீ மீண்டும் மண்ணுலகத்திற்கே போ. உனக்கு சுவர்க்கத்தில் இடம் கிடையாது. மூடனே! ஆசார்யரால் சபிக்கப்பட்டுத் தாழ்ந்த நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்ட நீ, தலைகுப்புற பூமியில் விழுவாயாக!'' இவ்வாறு இந்திரன் கூறியதும், மீண்டும் திரிசங்கு தவச்செல்வரான விசுவாமித்திரரைக் கூவியழைத்து, 'காப்பாற்றுங்கள்' என்று அலறியபடிக் கீழே விழுந்தான். அவனுடைய அபயக் குரலைக் கேட்ட கௌசிகர், (தேவர்களிடம்) மிகவும் கோபமடைந்து, 'அங்கேயே நில், நில்' என்று ஆணையிட்டார். (அதன்படி திரிசங்கு, ஆகாசவெளியில் அந்தரத்தில் அப்படியே நிலைத்து நின்றான்.) எல்லா ரிஷிகளும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, இன்னொரு பிரும்மாவைப்போல், தென்திசையில் வேறொரு சப்தரிஷி மண்டலத்தை (விசுவாமித்திரர்) சிருஷ்டி செய்தார். கோபத்தால் மதி கலங்கிய அவர், இன்னொரு தாரகைக் கூட்டத்தையும் தோற்றுவித்தார். (17–20)

மகாதபஸ்வியான அவர் கோபத்தினால் சித்தம் கலங்கி தென்திசையில் சப்தரிஷி மண்டலத்தினிடையே ஏராளமான நட்சத்திரங்களையும் உண்டாக்கினார். (இவ்வளவு போதாது என்று எண்ணியவராக) 'இன்னோர் இந்திரனை உண்டாக்குகிறேன்; அல்லது, இந்திரனில்லாத இன்னொரு தேவலோகத்தை சிருஷ்டிக்கிறேன்.' இவ்வாறு தனக்குள் தீர்மானித்துக் கொண்ட அவர், ஆத்திரம் மேலிட தேவர்களையும் சிருஷ்டிக்க ஆரம்பித்தார். இதனால், தேவ–அசுர–முனிவர்கள் மிகவும் அச்சமடைந்து, மகாத்மாவான விசுவாமித்திரர் இருந்த இடத்திற்கு வந்து மிக்கப் பணிவுடன் கூறினார்கள்— (21–23)

''தவச்செல்வரே! பெரியோரே! இந்த மன்னன் குரு சாபத்தினால் எல்லாப் புண்ணியங்களையும் இழந்து தீனனாகிவிட்டான். மனிதச் சரீரத்தோடு விண்ணுலகம் செல்வதற்கு உரியவன் அல்லன்.'' தேவர்களுடைய விளக்கத்தைக் கேட்ட முனிபுங்கவர், அவர்கள் முன் இணக்கமான ஒரு யோசனையைக் கூறினார்— ''தேவர்களே! உங்களுக்கு மங்களம் உண்டாகுக. 'சரீரத்துடன் உன்னைத் தேவலோகத்திற்கு அனுப்பி வைக்கிறேன்' என்று நான் சொல்லிய வார்த்தை பொய்யாவதைச் சகிக்கமாட்டேன். திரிசங்கு இப்போது இருக்கும் இடத்திலேயே தேவலோகத்தின் எல்லா இன்பங்களையும் அனுபவிக்கட்டும். என்னால் தோற்றுவிக்கப்பட்ட எல்லா நட்சத்திரங்களும் அவ்விடங்களிலேயே நிரந்தரமாக இருக்கட்டும். உலகம் உள்ள வரையிலும், என்னால் சிருஷ்டிக்கப்பட்ட எல்லா வஸ்துக்களும் நிலைத்து நிற்க வேண்டும். இதனை நீங்கள் அங்கீகரிக்க வேண்டும்.'' (24–28)

இதைக் கேட்ட தேவர்கள் எல்லோரும், ''சரி, அப்படியே ஆகட்டும். உங்களால் உண்டாக்கப்பட்ட எல்லா வஸ்துக்களும் எப்போதும் இருக்கட்டும். என்ன, திருப்திதானே? ஆகாய மண்டலத்தில், வைசுவானர பாதைக்கு வெளியே ஒளிவீசிக் கொண்டிருக்கும் அநேக நட்சத்திரங்களுக்கிடையே இவைகள் பிரகாசித்துக் கொண்டு இருக்கட்டும். தலைகீழாக உள்ள திரிசங்குவும் தேவர்களைப் போல் சுகங்களை அனுபவிக்கட்டும். ஒளித்திரட்சிகளான மற்ற எல்லாப் பொருட்களும் நோக்கம் நிறைவேறியவனும், புகழ் பெற்றவனும், தேவலோகத்தை அடைந்துவிட்டவனுமான உத்தம மன்னனுக்கு அனுசரணையாக இருக்கட்டும்.'' தேவர்களால் வணங்கித் தோத்தரிக்கப்பட்ட தருமாத்மா விசுவாமித்திரர், மற்ற முனிவர்கள் கேட்கும்வண்ணம்

'சரி' என்று ஆமோதித்தார். பிறகு, ஒருவாறாக வேள்வியை முடித்துக் கொண்டு தேவர்கள், முனிவர்கள், தவச்செல்வர்கள் எல்லோரும் தத்தம் வழியே திரும்பிச் சென்றார்கள். (29–33)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
அறுபதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்தொன்று

சுனச்சேபன் கதை

மகாத்மாவும் புருஷோத்தமருமான விசுவாமித்திரர் வேள்விக்காக வந்திருந்த முனிவர்கள் எல்லோரும் திரும்பிச் சென்றுவிட்டதும், அந்த ஆசிரமத்தைச் சேர்ந்த முனிவர்களைப் பார்த்து இவ்வாறு கூறினார்— (1)

"தெற்குத் திசைக்கு வந்த நமக்கு மிகப்பெரிய இடையூறு (திரிசங்கு உருவத்தில்) நேர்ந்துவிட்டது. எனவே, வேறு இடத்திற்குப் போய் அந்த இடத்தில் தவத்தைத் தொடங்குவோம். மகாத்மாக்களே! மேற்குத் திசையிலுள்ள விசாலா என்னும் புண்ணிய நதியின் கரையில் சுகமாக (தொந்தரவு இல்லாமல்) தவம் செய்வோம். அந்தத் தபோவனம் உத்தமமான இடம்." இவ்வாறு சொல்லிவிட்டு மகாதேஜஸ்வியான மாமுனிவர் (எல்லோருடனும் புறப்பட்டுச் சென்று,) புஷ்கர புண்ணியக் கரையில், கிழங்கு–பழங்களை மட்டும் உணவாகக் கொண்டு, கடுமையான, யாராலும் செய்ய முடியாத பெருந்தவத்தைச் செய்தார். (2–4)

இதே சமயத்தில், அம்பரீஷன் என்ற பெயர் பெற்ற அயோத்தி மன்னன் யாகம் செய்ய முற்பட்டான். யாகம் நடந்து கொண்டிருக்கும்போது யாகப்பசுவை இந்திரன் கவர்ந்து சென்றுவிட்டான். யாகப்பசு காணாமற்போனதும், வேள்வி நடத்தும் வேதியர்கள் அரசனிடம் இவ்வாறு சொன்னார்கள்— "அரசனே! பசுவை யாரோ அபகரித்துச் சென்று விட்டார்கள். தகுந்த பாதுகாப்பு இல்லாததால் யாகப்பசு காணாமற்போய்விட்டது. தருமத்தால் காக்கப்படாத அரசனைப் பாவங்கள் நாசம் செய்துவிடும். (மன்னன், அறம் என்ற கவசத்தால் தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும் – என்றபடி,) பெரிய அளவில் பிராயச்சித்தம் செய்யப்பட வேண்டும். ஆண்களில் சிறந்தவனே! இந்த வேள்விச் சடங்கு நடந்து முடிவதற்குள் யாகப்பசுவையோ அல்லது அதற்குப் பதிலாக ஒரு மனிதனையோ கொண்டு வா." (5–8)

புருஷோத்தமனான இராமனே! குருமார்களுடைய சொற்களைக் கேட்ட மன்னன், ஆயிரக்கணக்கான பசுக்களைக் கொடுத்து, அதற்கு ஈடாக வாங்கக் கூடிய ஒரு மனிதப் பசுவை தேடித் திரிந்தான். பற்பல தேசங்களிலும், நாட்டுப்புறங்களிலும், பட்டணம்–காடு–புனிதமான ஆசிரமங்களிலும் அந்த அரசன் விசாரித்துக் கொண்டு தேடினான். ரகுநந்தனா! குழந்தாய்! பிருகுதுந்தம் என்ற மலைப் பகுதியில் மனைவி–மக்களுடன் சுகமாக வசித்துக் கொண்டிருந்த ரிசீகர் என்ற முனிவரைக் கண்டான். மகாதேஜஸ்வியும் பேரொளி வீசுபவனும் ராஜரிஷியுமான அவன், பிரும்மரிஷிக்கு சிரம் தாழ்த்தி வணங்கி, மனம் குளிரச் செய்து, இவ்வாறு கூறினான். (9–12)

ரிசீகரைப் பலவாறாக எல்லாத் துறைகளிலும் நலன் விசாரணை செய்துவிட்டு, அவரிடம் சொன்னான்— "லட்சம் பசுக்களைப் பெற்றுக்கொண்டு ஒரு பிள்ளையை யாகப்பசுவாக எனக்கு விற்றுவிடுவீர்களேயானால், நான் விருப்பம் நிறைவேறியவனாவேன். பார்க்கவரே! எல்லா நாடுகளிலும் சுற்றித் திரிந்து பார்த்துவிட்டேன். யாகப்பசு கிடைக்கவில்லை. எனக்குத் தங்களுடைய புதல்வர்களில் ஒருவனை விலைக்குக் கொடுக்க மனம் இரங்கவேண்டும்." இதைக்

கேட்ட மகாதேஜஸ்வியான ரிசீகர் பதில் சொன்னார்— ''மக்கள் கோமானே! என் மூத்த புதல்வனை எக்காரணத்தைக் கொண்டும் நான் விற்க மாட்டேன்.'' விசால மனம் படைத்த புதல்வர்களின் தாயார், ரிசீகர் சொன்னதைக் கேட்டாள். (13–16)

தவசியான அவள் புருஷோத்தமனான அம்பரீஷனைப் பார்த்துச் சொன்னாள்— ''பிருகு குலத்தோன்றலாகிய என் பர்த்தா மூத்த குமாரனை விற்க முடியாது என்று சொல்லிவிட்டார். கடைசி மைந்தனான சுநகன் எனக்கு மிகவும் பிரியமானவன் என்பதை அறிந்து கொள். மன்னனே! அதனால் கடைசிப் புதல்வனை ஒருக்காலும் உனக்குக் கொடுக்க மாட்டேன். மனிதருள் மாணிக்கமே! பெரும்பாலும் புதல்வர்களில் மூத்தவர்கள் தந்தைகளுக்குச் செல்லமாகவும், கடைசி மகன்கள் தாயார்களுக்கு வேண்டப்பட்டவர்களாகவும் இருப்பார்கள் என்பது விதி. எனவே, என்னுடைய கடைசி மைந்தனை நான் காப்பாற்றுவேன்.'' (17–19)

இராமா! முனிவரும் முனிபத்தினியும் இவ்வாறு சொன்னவுடன் நடுப்பிள்ளையான சுனச்சேபன் தானே முன்வந்து கூறினான்— ''தந்தை, 'மூத்தவன் விற்கப்படக்கூடியவன் அல்லன்' என்றார். தாயார் கடைசி மைந்தனை விற்க மறுத்துவிட்டாள். ஆதலால், மன்னனே! நடுமைந்தன் விற்கத் தகுந்தவன் என்று கருதுகிறேன். நடுப்பிள்ளையான என்னை அழைத்துக் கொண்டு போங்கள்.'' இராமா! பிரும்மவாதினிகளான அவர்கள் பேச்சைக் கேட்டு, முடிவில் ஏராளமான பொற்காசுகளையும், இரத்தினக் குவியல்களையும், லட்சம் பசுக்களையும் கொடுத்து, மன்னன் அம்பரீஷன் சுனச்சேபனைப் பெற்றுக் கொண்டு மிகவும் திருப்தியுடன் திரும்பிச் சென்றான். புகழ்பெற்ற ராஜரிஷியான அம்பரீஷன், சுனச்சேபனை உடனே ரதத்தில் ஏற்றிக் கொண்டு சென்றுவிட்டான். (20–24)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
அறுபத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்து இரண்டு
அம்பரீஷன் செய்த யாகம்

ரகுநந்தனா! புகழ்பெற்ற அம்பரீஷன், சுனச்சேபனைப் பெற்றுக்கொண்டு போகும்போது நண்பகல் வேளை வந்தது. பயணக் களைப்பால் (விசுவாமித்திரரும், அவருடைய நண்பர்களான முனிவர்களும் தவம் செய்து கொண்டிருந்த) புஷ்கரத்தில் ஓய்வு எடுத்தான். அவன் ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கும்போது பெரும் புகழை அடையப்போகும் சுனச்சேபன் மிகவும் மனத்துயரத்துடன் சற்று தள்ளினாற்போலிருந்த புஷ்கரக்ஷேத்திரத்திற்கு வந்து முனிவர்களோடுகூடத் தவம் செய்து கொண்டிருந்த மாமன் விசுவாமித்திரரைக் கண்டான். முகம் கறுத்து தாகத்தாலும் மனக்கவலையாலும் தளர்ந்துவிட்ட அவன், முனிவரின் (விசுவாமித்திரரின்) மடியில் வீழ்ந்து இவ்வாறு சொன்னான்— (1–3)

''எனக்குத் தாயார் இல்லை; தந்தை இல்லை; நெருங்கிய உறவினர்களோ, உடன்பிறப்புக்களோ இல்லை. நற்குணங்களின் நாயகமே! தருமத்தின்படி நீங்கள் என்னைக் காப்பாற்ற வேண்டும். (சரண் வேண்டி வந்தவனைக் கைவிடுவது தருமம் அல்லவே?) முனிசிரேஷ்டரே! எல்லோரையும் காப்பாற்றுகிறவர் தாங்கள்தான். எல்லோரையும் கடைத்தேற்றுபவர் தாங்களே. (என் வேண்டுகோள் என்னவென்றால்) வேள்வியைத் துவக்கிவிட்ட மன்னன், உரிய முறையில் அதை நிறைவு செய்ய வேண்டும். எவ்விதக் குறைவுமில்லாமல் நான் நீண்ட ஆயுளுடன் இருந்து உத்தமமான தவத்தை அனுஷ்டித்து, தேவலோகம் சென்று இன்பங்களை அனுபவிக்கவேண்டும். வேறு துணையில்லாத என்னை இரக்கமனம் கொண்ட தாங்கள்தான்

காப்பாற்ற வேண்டும். தருமாத்மாவே! ஆபத்திலிருந்து ஒரு மகனை அவன் தந்தை எவ்வாறு விடுவிப்பாரோ, அவ்வாறே தாங்கள் என்னை ரட்சிக்க வேண்டும்.'' (4–7)

அவனுடைய சொற்களைக் கேட்ட மகாதபஸ்வியான விசுவாமித்திரர், பலவாறாகப் பேசிச் சாந்தப்படுத்தி, தன் புதல்வர்களைப் பார்த்து இவ்வாறு கூறினார்— ''(மைந்தர்களே!) மேன்மையை வேண்டுபவர்கள் மேலுலகில் சௌக்கியங்களை அடைதல் என்ற ஒரு நற்பயனை அடைவதற்காக புத்திரர்களைப் பெறுகிறார்கள். அந்த உத்தமமான நல்ல காலம் இப்போது உங்களுக்கு வந்திருக்கிறது. முனிவரின் குமாரனான இச்சிறுவன் என்னிடம் அடைக்கலம் கோருகிறான். இவன் உயிருடன் இருக்கும்படியான ஒரு காரியத்தைச் செய்தாலே, நீங்கள் எனக்குப் பிரியமானதைச் செய்தவர்கள் ஆவீர்கள். (8–10)

நீங்கள் எல்லோரும் சாஸ்திரங்களில் கூறியுள்ள கர்மாக்களைச் செய்திருக்கிறீர்கள்; தருமத்திலேயே மனத்தை நிலைநிறுத்தியுள்ளீர்கள். (பிதா உயிரோடு இருக்கும்போது, அவர் ஆணைக்குக் கீழ்ப்பட்டு நடப்பது புத்திரர்கள் கடமை. எனவே, இப்போது நான் சொல்லப் போவதை ஏற்று, நீங்கள் நடப்பதுதான் அறநெறியாகும்.) மன்னனுடைய வேள்வியில் யாகப்பசுவாக ஒருவன் பயன்பட்டு, அக்னிதேவனுக்குத் திருப்தியைக் கொடுங்கள். இப்படி செய்தால் சுனச்சேபன் என்னைச் சரணடைந்ததன் பயனை அடைவான்; யாகமும் எவ்விதக் குறையுமில்லாமல் பூர்த்தியாகும்; தேவதைகளும் திருப்தி அடைவார்கள்; நானும் என் வாக்கைக் காப்பாற்றியவன் ஆவேன்.'' (11,12)

மக்கள் திலகமே! முனிவருடைய சொற்களைக் கேட்ட மதுச்சந்தன் முதலான புதல்வர்கள், இறுமாப்புடன் விளையாட்டுப் போல இவ்வாறு கூறினார்கள்— ''தந்தையே! சொந்தப் பிள்ளைகளை விட்டுவிட்டு, எப்படி அயலாருடைய மகனைக் காப்பாற்றத் துணிந்தீர்கள்? நல்ல போஜனம் அருந்திக் கொண்டிருக்கும்போது, நாய் மாமிசத்தைக் கொண்டு வந்து பரிமாறுவது போலிருக்கிறது!'' புதல்வர்களுடைய சொற்களைக் கேட்ட முனிபுங்கவர், கோபத்தால் சிவந்த கண்களுடன் அவர்களுக்குச் சாபம் கொடுக்க ஆரம்பித்தார்— (13–15)

''உங்களுடைய கூற்று, என்னிடம் பயமில்லாமல் சொல்லப்பட்டதாக இருக்கிறது; அறநெறிக்குப் புறம்பானது; என் ஆணையை மீறியதாக இருக்கிறது; மயிர்க்கூச்சலை ஏற்படுத்தும் அளவுக்கு எதிர்பாராத கொடுமையாக இருக்கிறது. நீங்கள் எல்லோரும் அந்தண ஜாதியில் பிறந்த வசிஷ்ட குமாரர்கள்போல் நாய் மாமிசம் புசிப்பவர்களாய் ஆயிரம் ஆண்டுக் காலம் பூமியில் வசிப்பீர்களாக.'' தலைசிறந்த முனிவரான அவர், தன் புத்திரர்களுக்குச் சாபம் கொடுத்துவிட்டு, சுனச்சேபனுக்கு ஆபத்திலிருந்து விலக்கக்கூடிய ரக்ஷோமந்திரங்களால் பாதுகாப்புச் செய்து, அவனிடம் சொன்னார்— (16–18)

''புனிதமான தர்பைக் கயிற்றால் கட்டப்பட்டு, சிவந்த மாலை, சந்தனம் பூசப்பட்டு, விஷ்ணுவை அதிதேவதையாக உடைய யூபஸ்தம்பத்தை அடைந்து (அதில் கட்டிப் போடப்பட்டதும்) வேத மந்திரங்களால் அக்னியைத் தோத்திரம் செய். முனிகுமாரனே! அம்பரீஷனுடைய யாகத்தில் திவ்யமான இவ்விரண்டு வேத மந்திரங்களை மனமுருகிச் சொல்லி, அதனால் உன் விருப்பத்தை அடைவாய் (உயிர் பிழைப்பாய்).'' சுனச்சேபன் அவ்விரண்டு மந்திரங்களையும் ஒரே நினைவாகக் கேட்டுக் கொண்டு மனத்தில் பதித்துக் கொண்டான். உடனே, அரசருள் சிங்கம் போன்ற அம்பரீஷனைப் பார்த்துச் சொன்னான்— ''ராஜசிம்மமே! வீரரே! விரைவாக யாகசாலைக்குச் செல்வோம். அரசருக்கரசே! யாகதீட்சை ஏற்றுக் கொள்ளுங்கள்; யாகத்தை விரைவில் நிறைவு செய்யுங்கள்.'' (19–22)

முனிபுத்திரனின் சொற்களைக் கேட்டு, மிகவும் மகிழ்ச்சியடைந்து, கவனக்குறைவு இல்லாதவனாய் சீக்கிரத்தில் வேள்விச்சாலையை அடைந்தான், மன்னன். (முன்னர் யாகப்பசுவை இழந்ததற்குக் காரணம் கவனக்குறைவு. அதுபோல் இப்போதும் நேர்ந்துவிடக்கூடாதே? என்பதால்

கூடுதலான கவனம் செலுத்தினான்.) சபையோர்களின் அனுமதியைப் பெற்று, யாகப்பசுவாக வந்திருப்பவனைத் தர்பைகளால் கட்டி, சிவந்த ஆடை அணிவித்து, யூபஸ்தம்பத்தில் இணைத்துக் கட்டிப் போட்டான், மன்னன். கட்டப்பட்டிருந்த சுனச்சேபன் தனக்கு உபதேசிக்கப்பட்ட உன்னதமான அவ்விரண்டு வேதமந்திரங்களால் தேவர்களான இந்திரனையும் உபேந்திரனையும் தோத்தரித்து மகிழ்ச்சியுறச் செய்தான். (23–25)

இராகவனே! ஆயிரங்கண்ணனான இந்திரன் ரகசியமாகக் கூறப்பட்ட தோத்திரங்களால் மனத்திருப்தியடைந்து, சுனச்சேபன் முன் தோன்றி, ''நீண்ட காலம் வாழ்வாயாக'' என்று அருளினான். மக்களில் உயர்ந்தோனே! அந்த மன்னனும் யாகத்தினை நிறைவு செய்தான். (யாகப்பசுவைப் பலி கொடுக்காததால் குறைவு ஏற்பட்டுவிடவில்லை.) இராமா! இந்திரனுடைய அனுக்கிரகத்தால் அவனுக்கு (அம்பரீஷனுக்கு) பல மடங்கு நற்பயன் ஏற்பட்டது. தருமாத்மாவான விசுவாமித்திரர், அந்தப் புனிதமான புஷ்கரப் பிரதேசத்தில் மீண்டும் பத்தாயிரம் ஆண்டுகள் தவம் புரிந்தார். (26–28)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
அறுபத்து இரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்து மூன்று

மேனகை வந்தாள்!

(சதானந்தர் தொடர்ந்து கூறினார்— இராமா!) சரியாக ஆயிரம் ஆண்டுகள் முடிந்து, மகாமுனிவர் தவவிரதத்தை முடித்துக் கொண்டதும், அவருக்குத் தவப்பயனைக் கொடுப்பதற்காக எல்லா தேவர்களும் வந்தார்கள். ''உங்களுக்கு மங்களம் உண்டாகட்டும்! நீங்கள் செய்த புண்ணிய கர்மாக்களின் பயனாக முனிவர் (ரிஷி) என்ற நிலையை அடைந்திருக்கிறீர்கள்!'' என்று பேரொளி படைத்த பிரும்மா இனிமையாகச் சொன்னார். அவரிடம் இவ்வாறு மொழிந்துவிட்டு பிரும்மா மீண்டும் விண்ணுலகம் சென்றுவிட்டார். (ஆனால், விசுவாமித்திரர் திருப்தி அடையவில்லை; தன் லட்சியம் நிறைவேறிவிட்டதாக எண்ணவில்லை. எனவே,) விசுவாமித்திரர் மறுபடியும் கோரமான தவத்தைச் செய்யத் தொடங்கினார். (1–3)

பின்னர், வெகுகாலம் சென்றபின் அப்சரசுகளில் சிறந்தவளான மேனகை, புஷ்கரத்தில் நீராடுவதற்காக வந்து போகத் தொடங்கினாள். ஒரு சந்தர்ப்பத்தில் குசிக புத்திரரான விசுவாமித்திரர் ஒப்பற்ற வடிவழகுடையவளும், மேகக் கூட்டத்தில் ஒளிவீசும் மின்னலைப் போன்றும் விளங்கிய மேனகையைக் கண்டார். கண்டவுடனேயே காமவசப்பட்ட முனிவர் அவளிடம், ''அப்சர மடந்தையே! உன் வரவு நல்வரவாகுக! இங்கே என் ஆசிரமத்தில் தங்கலாமே?'' என்று கூறினார். ''பெண்ணே! வாழ்க நீ! காமத்தால் மிகவும் மதிமயங்கி இருக்கும் எனக்கு அருள்புரி.'' இவ்வாறு கூறப்பட்டதும் பேரழகியான அவள் அங்கேயே வசிக்கத் தொடங்கினாள். இராகவா! அவள் விசுவாமித்திரரின் ஆசிரமத்தில் வசிக்க ஆரம்பித்து பத்து ஆண்டுகள் மிக இனிமையாக நொடிப்பொழுதாகக் கழிந்துவிட்டன. (4–8)

இவ்வாறு பல ஆண்டுகள் சுகமாகக் கழிந்தபின்னர், மாமுனிவரான விசுவாமித்திரருக்கு (தாம் ஏமாற்றப்பட்டோம் என்ற ஓர் உள்ளுணர்வு ஏற்படவே,) கவலையும் வருத்தமும் தோன்ற மிகவும் வெட்கமடைந்தார். ரகுநந்தனா! 'இவையெல்லாம் ஏராளமாகச் சேர்ந்துவிட்ட தன் தவப்பயனை அழிப்பதற்காகவே தேவர்களால் நடத்தப்பட்டன' என்ற உறுதியான எண்ணம் ஏற்பட்டு ஆத்திரப்பட்டார். 'காமக் களிப்பில் மயங்கியிருந்தேன். பத்து ஆண்டுகள், ஒரு நாள் போல் கழிந்துவிட்டது! அதனால், என்னுடைய தவத்திற்கு எவ்வளவு பெரிய இடையூறு

ஏற்பட்டுவிட்டது!' இராமா! அந்த முனிசிரேஷ்டர் பெருமூச்சுவிட்டார். தன் மீதே பச்சாதாபப்பட்டு வருந்தினார். கைகளைக் குவித்துக் கொண்டு பயத்தால் உடல் நடுங்க நின்று கொண்டிருக்கும் மேனகையைப் பார்த்து, சமாதானமான வார்த்தைகளைச் சொல்லி விடைகொடுத்து அனுப்பி வைத்தார். (9–13)

பின்னர், வடக்கிலுள்ள மலைக்கு ஏகினார். மகாதபஸ்வியான அவர், கௌசிகீ நதியின் கரையை அடைந்து, 'தவப்பயன் கிடைக்கும் வரையில் புலன்களின் சேஷ்டைகளுக்கு இடம் கொடுப்பதில்லை' என்ற உறுதிபூண்டு மிகவும் கட்டுப்பாடான தவத்தில் ஈடுபட்டார். உத்தர மலையில் ஆயிரம் ஆண்டுகள் அவர் கடுமையான தவம் செய்ததும் தேவர்களுக்குத் திகில் ஏற்பட்டது. எல்லா முனிவர்களும் தேவர்களும் ஒன்றுகூடி, 'குசிக புத்திரர் செய்த தவம் இவ்வளவில் பூர்த்தி அடையட்டுமே?' என்று ஒருமித்து முடிவு செய்து, பிரும்மதேவனிடம் விண்ணப்பித்துக் கொண்டார்கள். தேவர்களுடைய சொற்களின்படி, அனைத்துலகப் பிதாமகரான பிரும்மா, தவச்செல்வரான விசுவாமித்திரரிடம் வந்து இனிய சொற்களைக் கூறினார்— (14–17)

''மகரிஷியே! அன்பரே! உமக்கு நல்வரவு கூறுகிறேன்! உமது கடுமையான தவத்தினால் நான் மகிழ்ச்சி அடைந்துள்ளேன். நன்கு விரதங்களை அனுஷ்டிப்பவரே! மகத்துவத்தை – முனிவர்களின் விசேஷ மரியாதைக்குரிய 'மகரிஷி' என்ற அந்தஸ்தை – உமக்கு அளிக்கிறேன்.'' அனைத்து உலகங்களுக்கும் பிரபுவான பிரும்மாவின் சொற்களைக் கேட்டு, தவச்செல்வரான விசுவாமித்திரர் துயரப்படவும் இல்லை; சந்தோஷப்படவும் இல்லை. இரு கைகளையும் கூப்பி, தலைவணங்கி, பிரும்மாவுக்கு இவ்வாறு பதில் சொன்னார், மாமுனிவர் விசுவாமித்திரர். (18–20)

''என்னுடைய புண்ணிய கர்மாக்களின் பயனாக, தாங்கள் என்னைப் பார்த்து, ஒப்பற்றதான 'பிரும்மரிஷி' என்ற சொல்லைக் கொண்டு அழைத்தால்தான், 'நான் புலன்களை வென்றவன்' என்பது ஏற்புடையதாகும்.'' இதைக் கேட்ட பிரும்மா, ''நீங்கள் இன்னும் புலன்களை வென்றவராகவில்லை. முனிவரில் சிங்கம் போன்றவரே! இன்னும் முயற்சி செய்யுங்கள்'' என்று சொல்லிவிட்டு விண்ணுலகம் போய்விட்டார். (21,22)

பிரும்மாவும், அவருடன் வந்த தேவர்களும் சென்ற பின்னர், மாமுனிவரான விசுவாமித்திரர், இரு கைகளையும் உயரத் தூக்கிக் கொண்டு பிடிப்பு எதுவும் இல்லாதவராகக் காற்றைப் புசித்துக் கொண்டும், கோடை காலத்தில் நாற்றிசையிலும் அக்னியை மூட்டிக் கொண்டு நடுவே நின்று, சுட்டெரிக்கும் சூரியனைப் பார்த்துக் கொண்டும், மழைக்காலத்தில் வெட்டவெளியில் நின்று கொண்டும், குளிர்காலத்தில் நீர்நிலையில் இராப்பகலாகப் படுத்துக் கொண்டும் தவம் செய்தார். இவ்வாறு ஓராயிரம் ஆண்டுக்காலம் உக்கிரமான தவத்தைச் செய்தார். விசுவாமித்திர முனிவர் இவ்வளவு கடுமையாகத் தவம் செய்வதைக் கண்டு, தேவர்களுக்கும் இந்திரனுக்கும்கூட அளவில்லாத அச்சம் உண்டாயிற்று. தேவேந்திரன் அமரர் சபையைக் கூட்டி, ரம்பை என்ற அப்சரப் பெண்ணிடம் தங்களுக்கு அனுகூலமும், கௌசிகருக்கு இடையூறு விளைவிப்பதுமான வார்த்தைகளைச் சொன்னான். (23–26)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
அறுபத்து மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்து நான்கு

ரம்பைக்குச் சாபம்

''ரம்பா தேவியே! கௌசிகருக்கு மனமயக்கத்தை ஏற்படுத்தி, காமத்தின்பால் அடக்க முடியாத துடிப்பு உண்டாகும்படிச் செய். நீ, இந்த மாபெரும் பணியை தேவர்களின்

நன்மைக்காகச் செய்ய வேண்டும்.'' இராமா! புத்திமானாகிய இந்திரனால் இவ்வாறு ஆணையிடப்பட்ட அப்சர நங்கையான ரம்பை மனக்கலக்கமடைந்து, கைகளைக் கூப்பிக் கொண்டு, தேவர்களின் நாயகனுக்குப் பதில் சொன்னாள்— (1,2)

''தேவர்களின் தலைவனே! மாமுனிவரான விசுவாமித்திரர் பேராற்றலுடையவர். (அவர் மட்டும் உண்மையைத் தெரிந்து கொண்டுவிட்டால்) தாங்கமுடியாத கோபத்தை, என்னிடம் காட்டுவார் என்பதில் ஐயமில்லை. அதனால், எனக்குப் பயமாக இருக்கிறது. தேவரே! அருள்கூர்ந்து, அபாயமான இந்தப் பணியில் என்னை நியமிக்க வேண்டாம்.'' அச்சம் கொண்ட ரம்பை இவ்வாறு வேண்டிக் கொண்டதும், கைகூப்பி உடல் நடுங்க நிற்கும் அவளைப் பார்த்து இந்திரன் சொன்னான்— ''ரம்பையே! பயப்படாதே. உனக்கு மங்களம் உண்டாகட்டும். என் ஆணையை நிறைவேற்று. இயற்கை வளங்கள் செழிப்பாக இருக்கும் வசந்த காலத்தில், மனத்தைக் கொள்ளை கொள்ளும் குயில் உருவமேற்று, மன்மதனோடுகூட உன் அருகிலேயே (உன் பாதுகாப்பிற்காக) நான் இருந்து கொண்டிருப்பேன். மங்களச் செல்வியே! உன் உருவத்தை இன்னும் பல மடங்கு அழகுள்ளதாகச் செய்து கொண்டு, ஒளி வீசிக் கொண்டு, தபஸ்வியான கௌசிக முனிவரின் மனத்தில் குழப்பத்தை ஏற்படுத்து.'' (3–7)

அவனுடைய ஆணையைக் கேட்ட அவள், ஒப்புயர்வற்ற லாவண்யமான உருவத்தை எடுத்துக் கொண்டு, மனங்கவரும் புன்முறுவல் பூத்து, விசுவாமித்திரருக்கு ஆசை காட்டினாள். செவிக்கினிய குயிலின் கூவலைக் கேட்டு, அவர் மனம் பூரித்து எழ, இவளையும் அப்போது கண்டார். அப்போது குயிலின் இன்னிசை போன்ற குரலாலும், ரம்பையின் ஈடு–இணையற்ற சௌந்தரியத்தையும் பார்த்தவுடன் முனிவருக்கு ஐயப்பாடு எழுந்தது. முனிவர் பெருமான், இவையனைத்தும் இந்திரனுடைய சதித் திட்டம் என்பதை ஞானதிருஷ்டியால் உணர்ந்து, கோபாவேசம் கொண்டு ரம்பையைச் சபித்தார்— (8–11)

''ரம்பையே! காமத்தையும் கோபத்தையும் அடக்கி வெற்றி கொள்ள முயலும் என்னை மயக்கி, வழி தடுமாறச் செய்ய வந்திருக்கிறாய். தீயவளே! பத்தாயிரம் வருடகாலம் நீ கற்பாறையாக இருப்பாயாக! ரம்பையே! மகாபராக்கிரமசாலியும், தவவலிமை பொருந்தியவருமான அந்தணப் பெருந்தகையாளர் (வசிஷ்டர்), என் கோபத்தால் ஜடப்பொருளாக ஆகிவிட்ட உன்னைக் கடைத்தேற்றுவார் (உன் சுய உருவத்தைக் கொடுப்பார்).'' இவ்வாறு கூறிவிட்டு, தவவேந்தராகிய விசுவாமித்திரர், கொடிய கோபம் காரணமாக ஏற்பட்ட மனச்சஞ்சலத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல் தவித்தார். (கோபம் கொள்ளவே கூடாது என்ற தீர்மானம் தோற்றுப் போய்விட்டதால் மனம் நிலைகொள்ளமால் சஞ்சலப்பட்டது.) வலிமைமிக்க அவருடைய சாபத்தினால் ரம்பை அப்போதே கற்பாறையாகிவிட்டாள். மகரிஷியின் கோபக்கனலான சொற்களைக் கேட்டுக் கொண்டிருந்த மன்மதன், அவ்விடத்திலிருந்து வெளியே ஓடிப் போய்விட்டான். (12–15)

இராமா! பொறிகள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்படாததால் கோபம் வந்தது. கோபத்தினால் தவவலிமை குன்றிப் போயிற்று. அதனால், அவருக்கு மன அமைதி கிட்டவில்லை. தவத்தின் வலிமை அபகரிக்கப்படும் விஷயமாக, அவருக்கு ஒரு திட்டம் உதயமாயிற்று. ''ஒருக்காலும் நான் கோபம் கொள்ளமாட்டேன்; எந்த நிலையிலும் நான் பேசமாட்டேன். மேலும், நூறாண்டுகள் ஆனாலும் மூச்சுக்காற்றையும் வெளிவிடமாட்டேன்! இந்திரியங்களை வென்று, என் சரீரத்தை வற்றிப் போகச் செய்வேன். தவத்தின் பயனாக எப்போது எனக்கு பிராமணத்தன்மை கிடைக்குமோ, அதுவரையில் மூச்சுக்காற்று விடாமல், உணவு கொள்ளாமல், நீண்ட நெடுங்காலமானாலும் சரி, இப்படியே தவத்தில் நிற்பேன். நான் தவம் செய்து கொண்டிருக்கும்போது என்னுடைய உடல் உறுப்புக்கள் தளர்ச்சியை அடையமாட்டா.'' ரகுநந்தனா! முனிவர்பெருமானாகிய அவர் ஆயிரம் ஆண்டுக்காலத்திற்குத்

தீட்சையைச் சங்கல்பித்துக் கொண்டார். உலகில் வேறெவராலும் செய்ய இயலாத, நிகரில்லாத சபதத்தைச் செய்தார். (16–20)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
அறுபத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்தைந்து

விசுவாமித்திரர் பிரும்மரிஷி ஆனார்!

பின்னர், இராமா! மாமுனிவர் வடக்குத் திசையை விட்டுவிட்டு, கிழக்குத் திசைக்குச் சென்று, மிகத் தீவிரமான தவத்தில் ஈடுபட்டார். ஆயிரம் ஆண்டுக்காலம் மௌனமாக இருப்பது என்று உறுதிபூண்டு ஒப்பற்றதும், பிறரால் செய்ய முடியாததுமான தவத்தைச் செய்தார். ஆயிரம் ஆண்டுக் காலம் முழுவதும் ஜடப் பொருளான மரக்கட்டை போலிருந்தார், மாமுனிவர். பலவிதமான இடையூறுகளால் தாக்கப்பட்டபோதும், அவர் மனத்தாலும் கோபம் அடையாமலிருந்தார். (1–3)

அவர், தன் நோக்கத்தின்படி, எவ்விதக் குறையுமில்லாமல் தவத்தைச் செய்து முடித்தார். மிகவும் கடுமையான நியமங்களைக் கைக்கொண்ட அவர், ஆயிரம் ஆண்டுக்கால விரதம் பூர்த்தியானவுடன் அன்னத்தைப் புசிக்க இருந்த வேளையில், பிராமண வேஷம் தரித்த இந்திரன் வந்து, அவர் உண்பதற்காக வைக்கப்பட்டிருந்த அன்னத்தைக் கையேந்திக் கேட்டான். (4,5)

சங்கல்பத்திலிருந்து சிறிதும் வழுவாத அவர் பக்குவப்படுத்தப்பட்டு வைக்கப்பட்டிருந்த போஜனத்தை முழுவதுமாக, அந்தப் பிராமணருக்குக் கொடுத்தார். உணவு மீதியில்லாமற்போகவே, படைப்பாற்றல் உட்பட அனைத்து வல்லமைகளையும் பெற்றிருந்தும், அவர் மறுபடியும் உணவைப் படைத்து உண்ணவில்லை. மௌன விரதத்தை மேற்கொண்டிருந்ததால் பிராமணரிடம் ஒரு வார்த்தையும் பேசவில்லை. மேலும், இன்னோர் ஆயிரம் ஆண்டுக்காலம் முனிபுங்கவர் மூச்சைக் கட்டுப்படுத்தித் தவம் செய்தார். (6,7)

சுவாசம் விடாமல் இருந்த அவருடைய உச்சந்தலையில் புகை உண்டாயிற்று. அதனால், மூன்று உலகமும் நெருப்பினால் தகிக்கப்படுவதைப்போல் மிகவும் அச்சத்தை அடைந்தது. அவருடைய தீவிரமான தவத்தீயினால் தேவ–கந்தர்வ–பன்னக–அசுர–ராட்சஸர்கள் மதிமயங்கிப் போனார்கள்; ஒளி மங்கிப் போனார்கள். தம் குற்றங்களால் மாசுபட்டிருந்த அவர்கள் பலம் குன்றியவர்களாகி, எல்லோருமாகச் சென்று பிரும்மாவிடம் முறையிட்டார்கள்— "பிரும்மதேவரே! பலவகையான வழிகளால் மாமுனிவர் விசுவாமித்திரர் ஆசை காட்டப்பட்டும், கோபப்படுத்தப்பட்டும் கூட அவர் தடுமாறவில்லை; தவவலிமையினால் மேன்மை பெற்று வருகிறார். அவருடைய தவத்தில் குற்றம் குறை என்பது ஓர் அணுவளவுகூட காணப்படவில்லை. (8–11)

அவர் மனத்தில் என்ன விரும்பியிருக்கிறாரோ, அது கொடுக்கப்படாவிட்டால் மூன்று உலகங்களிலுமுள்ள சராசரப் பொருட்களைத் தனது தபோபலத்தால் அழித்தே விடுவார். எல்லாத் திசைகளும் அதிர்கின்றன; எந்த வஸ்துவும் தெளிவாகப் புலப்படவில்லை; கடல்கள் கொந்தளிக்கின்றன; எல்லா மலைகளும் வெடித்துச் சிதறுகின்றன; பூமி நடுங்குகிறது; காற்று மிகவும் ஆக்ரோஷத்துடன் வீசுகிறது. பிரும்மதேவரே! இந்தக் கேடுகளுக்கு என்ன பரிகாரம் செய்வது? என்பது தெரியாமல் தவிக்கிறோம். மக்கள் தெய்வ நம்பிக்கையை இழந்து வருகிறார்கள். மூன்று உலகமும் எதனாலோ வியாபிக்கப்பட்டதைப் போல, மிகவும் கலங்கிய உள்ளத்துடன் இருக்கிறது. மகரிஷியான அவருடைய பேரொளியால் சூரியனும் ஒளி குன்றிவிட்டான். (12–15)

பகவான் விசுவாமித்திரர் நெருப்பைப்போல் கொழுந்துவிட்டுப் பிரகாசிக்கிறார். பிரும்மதேவரே! முன்னர் காலாக்னி மூன்று உலகங்களையும் எரித்து அழித்ததைப் போல், அந்த மாமுனிவர் உலகத்தை அழிப்பதற்கு முடிவு செய்வதற்கு முன், அவர் விரும்பியதைக் கொடுத்துத் திருப்தி செய்துவிட வேண்டும். அவர் மனத்தில் என்ன விரும்பியிருக்கிறாரோ, அது தேவலோக ஆட்சியாகவே இருந்தாலும் சரி, அவருக்குக் கொடுத்துவிட வேண்டியதுதான்.'' பின்னர், பிதாமகரை முன்னிட்டுக் கொண்டு எல்லா தேவர்களும் மகாத்மா விசுவாமித்திரரிடம் வந்து மனம் குளிரும் வகையில் இவ்வாறு சொன்னார்கள்— (16–18)

''பிரும்மரிஷியே! உங்களுக்கு எங்களது பாராட்டுக்கள்! உங்கள் தவத்தினால் நாங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளோம். கௌசிகரே! உக்கிரமான தவத்தின் பயனாக பிராமணத் தன்மையை அடைந்துவிட்டீர்கள். பிரும்மன்! தேவர்களோடு இருக்கும் நான், (அவர்கள் அறிய) நீண்ட ஆயுளை உங்களுக்குத் தருகிறேன். உங்களுக்கு மங்களம் உண்டாகட்டும். உங்கள் மனோரதம் நிறைவேறிவிட்டது. நற்பேறு பெற்றவரே! இனி உங்கள் விருப்பப்படி சஞ்சரிக்கலாம்.'' தேவர்கள் முன்னிலையில் பிதாமகர் சொன்னதைக் கேட்டு உள்ளம் மகிழ்ந்த மாமுனிவர், அவர்களை நமஸ்கரித்துச் சொன்னார்— (19–21)

''பிராம்மண்யமும் நீண்ட ஆயுளும் எனக்குக் கிடைத்துவிட்டன என்பது உண்மையானால், பிரணவ–வஷட்கார–வேதங்கள் என்னை வந்து அடைய வேண்டும். (பிரும்மஞானத்திற்கு முக்கிய சாதனம், ஓங்காரம்; யக்ஞங்களுக்குப் பரம சாதனம், வஷட்காரம் – இவைகளை உபதேசிக்கின்றன வேத வேதாங்கங்கள்.) க்ஷத்திரியருக்கு உரிய தனுர்வேதம் மற்றும் சாந்தி–புஷ்டிகர–சத்ருஜய ஹோமங்களையும், நால்வகை வேதங்களையும் அறிந்தவர்களுள் முதன்மையானவர், வசிஷ்டர். அவர், பிரும்மாவின் மானஸ புத்திரர். அவர், என்னைப் பிராமணன் என்று அங்கீகரிக்க வேண்டும். (22,23)

நீங்கள், என்னுடைய இந்தக் கோரிக்கையை நிறைவேற்றிவிட்டுத் திரும்பிப் போகலாம். (அப்படி நடக்காவிட்டால், நான் மறுபடியும் தீவிரமாகத் தவம் செய்யத் தொடங்கி விடுவேன்!)'' பின்னர், தேவர்களால் பிரார்த்திக்கப்பட்ட ஜப–தியான சூரருமான வசிஷ்டர், விசுவாமித்திரருடன் நட்புக் கொண்டு 'அப்படியே ஆகட்டும்' என்று ஆமோதித்தார். எல்லா தேவதைகளும், ''நீங்கள் பிரும்மரிஷிதான். சந்தேகமே இல்லை. உங்கள் கோரிக்கைகள் எல்லாம் கைகூடினதாகும்'' என்று கூறினார்கள். (24,25)

இவ்வாறு கூறிவிட்டு, எல்லா தேவதைகளும் வந்த வழியே திரும்பிப் போனார்கள். தருமாத்மாவான விசுவாமித்திரரும் ஒப்பில்லாத பிராம்மண்யத்தை அடைந்து தவத்தில் சிறந்தவரும், பிரும்மரிஷியுமான வசிஷ்டரைப் போற்றிக் கொண்டாடினார். விசுவாமித்திரர் தவத்திற்குரிய நியமங்களைக் கடைப்பிடித்துக் கொண்டு, இந்த மண்ணுலகமெங்கிலும் இஷ்டப்படிச் சஞ்சரிக்கத் தொடங்கினார். (26,27)

இராமா! இவ்வாறு இந்த மகாத்மாவினால் பிராம்மண்யம் அடையப்பட்டது. ஸ்ரீராமா! முனிவர்களில் இவர் உத்தமர். இவர் தவத்தின் மெய்யுரு. இவர் எப்போதும் தருமத்திலேயே நிலைத்திருப்பவர்; வீர்யம் இவரிடம்தான் குடிகொண்டுள்ளது. இவ்வாறு கூறிவிட்டு, மகாதேஜஸ்வியான அந்தணோத்தமர் (சதானந்தர்) சற்றே நிறுத்தினார். இராம–லட்சுமணர்கள் முன்னிலையில் சதானந்தர் கூறியதைக் கேட்ட ஜனகர், குசிகபுத்திரரைக் கைகூப்பி வணங்கிச் சொன்னார்— (28–30)

''அறத்தின் திருவுருவமே! காகுத்தர்களோடு தாங்கள் யாகத்திற்கு எழுந்தருளி இருக்கிறீர்களே! நான் மிகவும் பாக்கியசாலி. முனிவர் பெருமானே! நான், தங்கள் அனுக்கிரகத்திற்குப் பாத்திரமாகியிருக்கிறேன். பிரும்மன்! தங்கள் கரிசனத்தால் நான் புனிதமாக்கப்பட்டுவிட்டேன். தங்கள் பார்வை என் மேல் பட்டதனாலேயே அநேகவிதமான

நன்மைகள் என்னை வந்தடைந்து விட்டன. பிரும்மன்! மிகுந்த சாகசத்துடன் தாங்கள் செய்த தவத்தின் பெருமைகள் விளக்கிச் சொல்லப்பட்டதை, தேஜஸ்வியான ஸ்ரீராமனுடன்கூட நானும் கேட்டேன். (ஸ்ரீராமனுக்குத் தெரிவிப்பதற்காகவே சதானந்தர் விசுவாமித்திரர் வரலாற்றைக் கூறினார். அப்போது ஜனகரும் கேட்டுக் கொண்டிருந்தது, அவர் செய்த பேறு.) இங்கே இந்த சபையில் இருக்கும் எல்லோரும் தங்களுடைய மேலான சிறப்புக்களைக் கேட்டறிந்தார்கள். தங்களுடைய தவம் ஒப்புயர்வில்லாதது; தங்களுடைய பலம் அளவிட முடியாதது. (31–34)

குசிக மைந்தரே! தங்களுடைய குணங்கள் எல்லாம் எக்காலத்திலும் (எவரிடமும்) காணப்பட முடியாதவை. அண்ணலே! தங்களுடைய ஆச்சரியமான கதையைக் கேட்டு, 'போதும்' என்ற எண்ணம் எனக்கு வரவில்லை. முனிசிரேஷ்டரே! சந்தியாகால கர்மானுஷ்டானத்திற்கான காலம் வந்துவிட்டது. நிழல்கள் நீளமாகப் போய்விட்டன. சூரியன் மேற்றிசையில் மறைந்து கொண்டிருக்கிறான். நாளைக் காலையில் மறுபடியும் தங்களைத் தரிசிக்கும் பாக்கியத்தை, எனக்கு அளிக்கவேண்டும். தவம் செய்பவர்களுள் தலையாயவரே! தங்களுக்கு நல்வரவு கூறுகிறேன். எனக்கு விடைகொடுக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.'' (35,36)

இவ்வாறு ஜனகர் கூறியதும், முனிபுங்கவர் அவரைப் புகழ்ந்துரைத்து, அவர் உடனே செல்வதற்கு நிறைந்த மனத்துடன் விடைகொடுத்தார். மிதிலை மன்னன் ஜனகன் முனிவரிடம் இவ்வாறு விடைபெற்றுக் கொண்டு, உபாத்தியாயர்களுடனும் உறவினர்களுடனும் அவரை வலம் வந்து நமஸ்கரித்தான். தருமாத்மா விசுவாமித்திரரும் அங்கிருந்த மாமுனிவர்களால் கொண்டாடப் பட்டு, இராம–லட்சுமணர்களுடன் தன் இருப்பிடத்திற்குத் திரும்பிச் சென்றார். (37–39)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
அறுபத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்தாறு

சிவதனுஸ்

மறுநாள் காலைப்பொழுது அமைதியாகப் புலர்ந்ததும் காலைக்குரிய கர்மானுஷ்டானங்களைச் செய்து முடித்த மன்னர் (ஜனகர்), அளவிலா ஆன்மிக ஆற்றல் கொண்ட விசுவாமித்திரரை, இராம–லட்சுமணர்கள் உடன் இருக்கும்போது போய்ப் பார்த்தார். அறநெறியாளரான ஜனகர் அவரையும், பேராற்றல் கொண்ட இராம–லட்சுமணர்களையும் அறநூல் விதிகளின்படி மரியாதை செய்து பின்னர் கூறினார்— (1,2)

''பெருந்தகையாளரே! மாசற்றவரே! தங்களை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். நான், தங்களுக்கு என்ன சேவை செய்யட்டும்? நான், தங்களால் கட்டளையிடத்தக்கவன் என்பதால் தாங்கள் எனக்கு ஆணையிடலாம்.'' விசாலமான இதயம் படைத்த ஜனகரால் இவ்வாறு கூறப்பட்டதும், தருமாத்மாவும் வார்த்தை சித்தருமான விசுவாமித்திரர் வீரரான மன்னருக்குப் பதில் கூறினார்— (3,4)

''இவ்விருவரும் தசரதரின் குமாரர்கள்; க்ஷத்திரியர்கள்; மக்களிடையே செல்வாக்குப் பெற்றவர்கள்; பட்டத்தரசிகளுக்குப் பிறந்தவர்கள்; நாடாளும் உரிமை உடையவர்கள். ('தசரதரின் எந்த மனைவிக்குப் பிறந்தவர்கள்?' என்ற ஐயப்பாட்டை நீக்குவதற்காக, இந்தக் குறிப்பைக் கொடுத்தார், முனிவர்.) உன்னிடத்திலுள்ள மகோன்னதமான வில்லைப் பார்க்கும் ஆசை உள்ளவர்கள். உனக்கு நலன் விளைக! மன்னனே! இவர்களுக்கு வில்லைக் காட்டு. வில்லைப் பார்த்ததும், தங்கள் விருப்பம் பூர்த்தியான அரசகுமாரர்கள் இருவரும், அவர்கள் இஷ்டப்படித் திரும்பிச் செல்வார்கள்.'' (5,6)

இதைக் கேட்ட ஜனகர், மாமுனிவரைப் பார்த்து இவ்வாறு சொன்னார்— "இந்த வில் எப்படி என்னிடம் வந்து சேர்ந்தது? என்பதைச் சொல்கிறேன், கேளுங்கள். எங்கள் குலமுதல்வரான நிமிச் சக்கரவர்த்திக்கு ஆறாவதாக தேவராதர் என்ற புகழ்பெற்ற மன்னர் இருந்தார். பெருமானே! அவருடைய கையில் (இந்த வில்) அடைக்கலமாகக் கொடுக்கப்பட்டது. முன்னர் தக்ஷனுடைய வேள்வியை நாசம் செய்யும் காலத்தில் மகாவீரம் படைத்த ருத்ரன் வில்லைத் தூக்கிக் காட்டி, கோபாவேசம் கொண்டவராய் இகழ்ச்சி தோன்ற தேவர்களைப் பார்த்து இவ்வாறு கூறினார்— (7–9)

'இந்த வேள்வியில் பாகத்தை (ஹவிஸ்) உண்டு மகிழ்ந்த நீங்கள், எனக்குரிய பங்கினைத் தரவில்லை. (தக்ஷன், 'ருத்ரனை அழைக்கமாட்டேன்' என்று சொன்னபிறகு, நீங்கள் எந்தத் துணிச்சலுடன் வந்து அவன் அளித்த உணவை ஏற்றீர்கள்? என்றபடி.) விலைமதிப்பிட முடியாத அணிகலன்களைத் தரித்துள்ள உங்கள் தலைகளை, வில்லால் (அம்பைவிட்டு) துளைத்துச் சிதைக்கிறேன்.' முனிவர் நாயகரே! அப்போது தேவர்கள் எல்லோரும் சித்தம் கலங்கியவர்களாய் சிவபெருமானைப் போற்றிப் புகழ்ந்து மன்றாடினார்கள். அதனால், பரமேசுவரன் சமாதானத்தை அடைந்தார். அவர்களிடம் மனத்திருப்தியை அடைந்த சிவன், வில்லை அவர்களிடமே கொடுத்துவிட்டார். என்னிடம் உள்ள வில் தேவதேவனான மகாதேவனுடைய உத்தமமான வில்லே ஆகும். (10–12)

சான்றோரே! பின்னர் எங்கள் முன்னோர்களிடத்தில் ஓர் ஒப்படைப்புப் பொருளாக அளிக்கப்பட்டது. ஒரு சமயம் யாகத்திற்கான நிலப்பரப்பைக் கலப்பையால் உழுதபோது, கொழுமுனையில் ஒரு பெண் சிசு வெளிப்பட்டாள். யாகபூமியைச் செப்பனிடும்போது கிடைத்தவள் என்பதால் சீதா என்று அழைக்கப்பட்டாள். பூமியிலிருந்து தோன்றிய என்னுடைய மகள் நாளொரு மேனியும், பொழுதொருவண்ணமுமாக வளர்ந்து வந்தாள். என்னுடைய கன்னிகை கர்ப்பவாசமில்லாமல் பிறந்தவளாகையால் வீரசுல்கமாக அடையத்தக்கவள் என்று அறிவிக்கப்பட்டது. எவனொருவன், மக்கள் அறியும்படியாகத் தன் ஈடில்லாத பராக்கிரமத்தைக் காட்டுகிறானோ, அவனாலேயே அடையத்தக்கவள். (13–15)

மனிதத்தாயின் வயிற்றிலிருந்து அல்லாமல் பூமித்தாயின் வயிற்றிலிருந்து வெளிப்போந்து வளர்ந்து கொண்டிருந்த என் மகளை மணந்து கொள்ள விரும்பி, பல அரசர்கள் வந்து கேட்டார்கள். என்னுடைய கன்னிகையை விரும்பிக் கேட்ட எல்லா மன்னர்களுக்கும், 'இவள் வீரத்தால் அடையத்தக்கவள்' என்று கூறி, என் செல்வியைக் கொடுக்கவில்லை. முனிபுங்கவரே! அரசர்கள் எல்லோரும் ஒன்றாகக் கூடி மிதிலைக்கு வந்து, வீரத்தை வெளிப்படுத்துவதற்கான சாதனம் என்ன? என்றறிய விரும்பினார்கள். அவ்விதம் அறிய விரும்பியவர்களுக்காக சிவதனுஸ் கொண்டு வரப்பட்டது. அந்த வில்லைக் கையால் எடுக்கவோ, தூக்கி நிறுத்தவோ அவர்களால் முடியவே இல்லை. மாமுனிவரே! பெருவீரர்களான அவர்களுடைய ஆற்றல் வில்லைத் தூக்கும் விஷயத்தில் மிகக் குறைவானது என்பதை அறிந்துகொண்டு, அவர்களைத் திருப்பி அனுப்பிவிட்டேன். (16–20)

அதனால் மிகவும் கோபமடைந்த மன்னர்கள் எல்லோரும் தங்கள் வீரத்தை நிலைநாட்டுவதற்காக (வீரம் குறைந்தவர்கள் என்ற சந்தேகத்தைப் போக்குவதற்காக), மிதிலையை முற்றுகையிட்டு போக்குவரத்தை அடைத்துவிட்டார்கள். சிறந்த அரசர்களாகிய அவர்கள், தாங்கள் அவமானத்தை அடைந்துவிட்டதாக எண்ணிக்கொண்டு கோபாவேசம் கொண்டவர்களாக மிதிலைப் பட்டணத்தைத் தொல்லைப்படுத்தினார்கள். ஓர் ஆண்டுக்காலம் முற்றுகை நீடித்ததால் எல்லாப் படைகளும் பொருட்களும் நாசமடைந்தன. முனிவர் பெருமானே! எனக்கு அப்போது மிகவும் துக்கம் உண்டாயிற்று. அப்போது நான், எல்லா தேவர்களையும் குறித்துத் தவம் செய்து மகிழ்வித்தேன். மனம் நிறைந்த அவர்கள், எனக்கு நால்வகைப் படையை அருளினார்கள். (21–24)

புதிய படைகளால் தாக்கப்பட்ட, பாவச் செயலில் ஈடுபட்ட அரசர்கள், தங்கள் வீரர்களை இழந்து, வீரம் குன்றி, சந்தேகத்திற்குரிய வீரம் உடையவர்களாக, தங்களுடன் வந்திருந்த படைகளுடன் திக்குத்திசை தெரியாமல் ஓடிப் போனார்கள். நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளும் ஆற்றல் படைத்தவரே! பேரொளி வீசிக்கொண்டு அற்புதமாக விளங்கும் வில்லை, முனிவர் திலகமே! இராம–லட்சுமணர்களுக்கும் காண்பிக்கிறேன். முனிவரே! இராமன் இந்த வில்லில் நாணேற்றிவிட்டால், ஒரு தாயின் வயிற்றில் பிறவாத (தெய்வத்தன்மை உடைய) என் மகள் சீதையை (ஏர்முனை நாயகியை), தசரத குமாரனுக்குப் பாணிக்கிரகணம் செய்து கொடுப்பேன்.'' (25–27)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
அறுபத்தாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்தேழு

வில் முறிந்தது!

ஜனகருடைய சொற்களைக் கேட்ட மாமுனிவர் விசுவாமித்திரர், மன்னரைப் பார்த்து ''இராமனுக்கு வில்லைக் காட்டுவாயாக'' என்று கூறினார். பிறகு, ''நறுமணப்பூச்சு, மாலைகளால் அலங்கரித்து வில்லை எடுத்து வாருங்கள்'' என்று மன்னர் ஜனகர் மந்திரிகளைப் பார்த்து உத்தரவிட்டார். ஜனகரால் ஆணையிடப்பட்ட அமைச்சர்கள் நகரத்திற்குப் போய், தம் எதிரில் வில்லை வைத்துக் கொண்டு வெளியே வந்தார்கள். கஷ்டமான வேலைகளைச் செய்தாலும் களைப்படையாத ஐயாயிரம் ஆட்கள், எட்டுச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்டியை மிகவும் சிரமப்பட்டு இழுத்துக் கொண்டு வந்தார்கள். (1–4)

அந்த வில் வைக்கப்பட்டிருந்த இரும்புப் பெட்டியைக் கொண்டு வந்து, அந்த அரச ஆலோசகர்கள், தேவரைப் போன்றிலங்கும் ஜனகரிடம் கூறினார்கள்— ''மிதிலைத் தலைவரே! அரசர் கோமானே! எல்லா அரசர்களாலும் வணங்கப்பட்ட வில், இதோ கொண்டு வந்திருக்கிறோம். தங்கள் விருப்பம் போல் (அரசகுமாரர்களுக்குக்) காட்ட விரும்பினால் அப்படியே செய்யலாம்.'' அவர்கள் சொற்களைக் கேட்டபின், இராம–லட்சுமணர்களைப் பார்த்து, இரு கைகளையும் கூப்பி அஞ்சலியாக வைத்துக் கொண்டு, பெருமைக்குரிய விசுவாமித்திரரிடம் (பின்வருமாறு) விண்ணப்பித்துக் கொண்டார்— (5–7)

''வேதவித்தகரே! ஜனக குல மன்னர்களால் மிகவும் கௌரவமாகப் பராமரிக்கப்பட்டு வரும் வில், இதோ கொண்டு வரப்பட்டிருக்கிறது. மகாவீரம் பொருந்திய அரசர்களாலும் இதை வளைக்கக்கூட முடியவில்லை. அமரர் கூட்டங்கள், அசுர–ராட்சஸ–கந்தர்வ–யட்ச–கின்னர–உரகர்கள் ஆகிய எவராலும் இதைத் தூக்கக்கூட முடியவில்லை. (அப்படியிருக்கும்போது) மகத்தான இந்த வில்லை வளைத்து, நாணேற்றி, அம்புகோர்த்து, நாணை இழுத்து, மேலே தூக்கி நிறுத்த மனிதர்களால் முடியவே முடியாது என்பதைச் சொல்ல வேண்டுமா, என்ன! ஆன்மப்பேறு பெற்றவரே! முனிவரே! விற்களில் மிகவும் உன்னதமான கௌரவத்தைப் பெற்றுள்ள அந்த வில் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இவ்விரண்டு அரசகுமாரர்களுக்கும் காண்பிப்பீர்களாக!'' (8–11)

அறத்தின் திருவுருவமான விசுவாமித்திரர் ஜனகருடைய சொற்களைக் கேட்டதும், ''குழந்தாய், இராமா! வில்லைப் பார்!'' என்று இராகவனிடம் கூறினார். (இராமன்) பிரும்மரிஷியின் ஆணையை ஏற்று, அந்த வில் வைக்கப்பட்டிருந்தப் பெட்டியைத் திறந்து, வில்லைப்

பார்த்துவிட்டுச் சொன்னார்— ''வேத்வித்தகரே! இப்போது உத்தமமான இந்த வில்லைக் கையினால் தொடப் போகிறேன். (சிவபெருமானுடைய தனுஸ் என்பதால் ஓர் அடையாள மரியாதையாக 'தொடப் போகிறேன்'.) தூக்கி நிறுத்தி, நாண் ஏற்றும் முயற்சியிலும் ஈடுபடுவேன்.'' [ஜனகரே! *'ராமலக்ஷ்மணயோப்சாபி'* (சென்ற ஸர்க்கத்தில் இராம லட்சுமணர்களுக்கும்) என்று அலட்சியமாகச் சொன்னீர்களே? உமக்கு இந்த வில்லை நான் வளைப்பதில் ஏதேனும் ஆட்சேபம் இருந்தால் இப்போதே சொல்லிவிடும். இது வீர்யசுல்கம். பெண்ணைக் கொடுக்க வேண்டி நேரிட்டால், பின்னர் மனம் வருந்திப் பயனில்லை! என்பது ஸ்ரீராமனின் திருவுள்ளம்.] (12–14)

'சரி' என்று மன்னனும் மகரிஷியும் ஒரே குரலில் அவருக்கு அனுமதியளித்தார்கள். முனிவருடைய ஆசீர்வாதத்துடன் அவர் வில்லின் இடைப்பகுதியை விளையாட்டாகப் பற்றினார். பல்லாயிரக்கணக்கான மக்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அறத்தின் நாயகன் இராமன் அந்த வில்லை வெகுசுலபமாகத் தூக்கி நிறுத்தினார். மகாவீரரான, பெரும்புகழ் கொண்ட அவர் வில்லைத் தூக்கி நிறுத்தி, வில்லின் நடுப்பகுதியில் நாணேற்றினார். (உடனே,) அது முறிந்தது. (15–17)

அப்போது இடிமுழக்கம் போன்ற ஓசை எழுந்தது; பூமி பயங்கரமாக ஆடிற்று; மலைச்சிகரங்கள் பிளந்து சிதறின. செவியைப் பிளக்கும் ஓசையினால் கதிகலங்கிப் போன எல்லா மனிதர்களும் கீழே விழுந்தார்கள் – விசுவாமித்திர முனிவர், மன்னன் ஜனகர், இரு இராகவர்களைத் தவிர! பின்னர், மக்கள் எல்லோரும் மயக்கம் தெளிந்து எழுந்ததும், அதிர்ச்சியிலிருந்து விடுபட்ட நாவலரான மன்னர், முனிவரைப் பார்த்துக் கைகளைக் கூப்பிக்கொண்டுச் சொன்னார்— (18–20)

''பகவானே! தசரத குமாரர் ஸ்ரீராமனுடைய வீரத்தை, என் கண்களாலேயே பார்த்து விட்டேன்! அட, இது என்ன அற்புதமான காட்சி! இப்படி நடக்கும் என்று நான் எண்ணிப் பார்த்ததுகூட இல்லை! ஊகித்ததும் இல்லை! தசரத குமாரர் ஸ்ரீராமனைக் கணவனாக அடைந்து, ஜனக பரம்பரைக்குச் சிறப்பான புகழைக் கொண்டு வரப் போகிறாள் என்னுடைய மகள், சீதை. கௌசிகரே! என்னுடைய பிரதிக்ஞை சத்தியமாகட்டும். என் உயிரைக் காட்டிலும் மேலான என் மகள், வீரத்திற்குப் பணயமாக வைக்கப்பட்டிருந்த சீதை, இராமனுக்குக் கொடுக்கப்பட வேண்டியவளே. (21–23)

வேதங்களின் கருவூலமே! தங்கள் அனுமதியின்பேரில் என்னுடைய அமைச்சர்கள் ரதங்களில் ஏறி, அயோத்திக்கு வெகுவேகமாகச் செல்லட்டும். அதற்குத் தாங்கள் அனுமதியளிக்க வேண்டும். அரசரிடம் (தசரதரிடம்) பணிவான வார்த்தைகளால், வீரசுல்கமாக வைக்கப்பட்டிருந்தவள், வெற்றி வீரருக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்று, எல்லா விஷயங்களையும் கூறி, அவரை என் பட்டணத்திற்கு அழைத்துக் கொண்டு வரவேண்டும். (24,25)

அந்த மன்னரிடம், 'காகுத்தர்கள் இருவரும் முனிவரின் பாதுகாப்பில் இருக்கிறார்கள்' என்பதைக் கூறி, அவரை உள்ளங்குளிரச் செய்து, வெகுவேகமாகச் செல்லக் கூடியவர்களான தூதர்கள் மன்னரை அழைத்து வரவேண்டும்.'' கௌசிகரும், ''அப்படியே ஆகட்டும்'' என்றார். அறவடிவாகிய மன்னன், நடந்தவைகளை எல்லாம் நடந்தபடியே கூறி, உடனே தசரத மன்னரை அழைத்து வரும்படி மந்திரிகளிடம் உரிய ஆணைகளைக் கொடுத்து, அயோத்திக்கு அனுப்பி வைத்தார். (26,27)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
அறுபத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்தெட்டு

தசரதருக்கு அழைப்பு

ஜனகரால் ஆணையிடப்பட்ட தூதர்கள், வழியில் மூன்று இரவுகள் தங்கி (வேகமாக விரட்டிக் கொண்டு வந்ததால்,) குதிரைகள் மிகவும் களைப்படைந்த நிலையில் (நான்காவது நாள்) அயோத்தி நகரத்தை அடைந்தார்கள். அரசருடைய அரண்மனையை அடைந்த அவர்கள், வாயிற்காப்பாளர்களிடம் ''ஜனகருடைய தூதர்களான நாங்கள் வந்திருக்கிறோம் என்பதை மன்னரிடம் உடனே தெரிவியுங்கள்'' என்று சொன்னார்கள். (1,2)

இதைக் கேட்ட வாயிற்காப்பாளர்கள் ரகுகுலத்தோன்றல் தசரதரிடம் விண்ணப்பித்தார்கள். ''மன்னர் மாளிகைக்கு அந்தத் தூதர்கள் உடனே அனுமதிக்கப்படட்டும்'' என்று அரசர் அனுமதி கொடுத்ததை, அவர்கள் விரைந்து வந்து வாயிற்புறத்தில் நின்று கொண்டிருந்த தூதர்களிடம் தெரிவித்தார்கள். அரசர் உத்தரவின்பேரில் அவர்களை உள்ளே அழைத்துச் சென்றார்கள். (தூதர்கள்) தேவர்களுக்கொப்பான காந்தியுடன் விளங்கும் முதிய மன்னர் தசரதரைப் பார்த்தார்கள். எல்லா தூதர்களும் இரு கைகளையும் கூப்பிக் கொண்டு, தெளிந்த நடையில் சொல் தடுமாற்றமில்லாமல் வினயத்துடன் மன்னரிடம் விண்ணப்பித்துக் கொண்டார்கள்— (3–5)

''மாமன்னரே! மிதிலை மன்னர் ஜனகர், அக்னிஹோத்ரம்–நித்திய வைதிக கர்மாக்கள்–உபாத்யாயர்கள்–புரோகிதர்கள்–பரிவாரங்களோடு, நட்புத் தோன்றும் செவிக்கினிய சொற்களால் இதயபூர்வமாக (பல தடவை), தங்களுடைய குறைவற்ற க்ஷேமலாபத்தை விசாரிக்கிறார். மிதிலைத் தலைவர் ஜனகர் நலன் விசாரித்த பின்னர், விசுவாமித்திரரின் ஒப்புதலைப் பெற்று, பின்வரும் செய்தியைத் தங்களுக்குத் தெரிவிக்கிறார்— (6–8)

'முன்னர், என்னுடைய மகள் வீரத்தினால் அடையத்தக்கவள் (தன் பேராற்றலை உறுதியாக வெளிப்படுத்தும் வீரனுக்கே மணம் செய்து கொடுக்கப்படுவாள்) என்று அறிவிக்கப்பட்டது தெரிந்த விஷயம்தான். போதிய வீரமில்லாததால் தோல்வியைத் தழுவிய பல மன்னர்கள் திருப்பி அனுப்பப்பட்டார்கள். அரசரே! விசுவாமித்திரரை முன்னிட்டுக் கொண்டு, தற்செயலாக (மிதிலைக்கு) வந்த தங்கள் அருமைக்குமாரனால் பெருமைக்குரிய என் மகள் வெல்லப்பட்டாள். மன்னரே! (நான் செய்து கொண்டிருந்த) வேள்வியின் நிறைவு வேளையில், மக்கள் கூடியிருக்கும் போது பேராற்றல் படைத்த ஸ்ரீராமனால் தெய்விகமான அந்த வில்லும் (தூக்கி நிறுத்தி நாணேற்றப்பட்டதால்) நடுவில் முறிக்கப்பட்டது! (ஆகா, என்ன பராக்கிரமம்!) (9–11)

ஆகவே, இவருக்கு (ஸ்ரீராமனுக்கு) வீர்யசுல்கமான என் செல்வமகள் கன்னிகாதானம் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்ற என் சபதத்தை நிறைவேற்ற விரும்புகிறேன். தாங்கள் அதை அங்கீகரிக்க வேண்டும். மாமன்னரே! உபாத்தியாயர்கள், புரோகிதர்களோடுகூட கூடிய விரைவில் இங்கு வந்து, தங்கள் குமாரர்களைப் பார்த்து மகிழவும். தங்களுக்கு என் நல்வாழ்த்துக்கள். மன்னர் மன்னா! என்னுடைய பிரதிக்ஞையை நிறைவேற்றிக் கொடுக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன். (வெற்றி வீரர்களாகத் திகழும்) தங்கள் குமாரர்களை (நீண்ட இடைவெளிக்குப் பின்) சந்திப்பதால் மனத்திருப்தியையும் அடைவீர்கள்.' (12–14)

இவ்வாறு விசுவாமித்திரரின் இசைவைப் பெற்று, சதானந்தரின் சொற்களை ஏற்று நடக்கும் விதேக நாட்டின் அதிபதி மகிழ்ச்சி தரக்கூடிய செய்தியைத் தெரிவித்தார்.'' தூதர்கள் கூறிய செய்தியைக் கேட்டு மிகவும் மனம் மகிழ்ந்த மன்னர், வசிஷ்டர், வாமதேவர், மற்றுமுள்ள அமைச்சர்களிடம் பின்வருமாறு கூறினார்— (15,16)

''கௌசல்யையின் ஆனந்தத்தை வளர்க்கும் இராமன், தம்பி லட்சுமணனுடன் தற்சமயம் விதேக நாட்டில் இருக்கிறான். காகுத்தனின் அளவிடமுடியாத பராக்கிரமத்தை மகாத்மா ஜனகர்,

தன் கண்களாலேயே கண்டுள்ளார். இராமனுக்குத் தன் மகளை விவாகம் செய்து கொடுக்க வேண்டும் என்று விரும்புகிறார். போற்றுதலுக்குரிய ஜனகர் அனுப்பியிருக்கும் செய்தி ஏற்கத்தக்கது என்று நீங்கள் எல்லோரும் கருதினால் (மிதிலைப்) பட்டணத்திற்கு, நாம் விரைவாகச் செல்வோம். காலதாமதம் வேண்டாம்.'' (17–19)

சபையோர்களும், எல்லா முனிவர்களும், 'சம்மதம்' என்று தெரிவித்தார்கள். அதனால், திருப்தியடைந்த மன்னர் சபையோர்களைப் பார்த்து, 'நாளைக்கே புறப்படலாம்' என்றார். மாமன்னரால் மிகவும் நன்றாக உபசரிக்கப்பட்ட ஜனக தூதர்கள், எல்லா சௌகரியங்களையும் பெற்று உள்ளம் பூரித்தவர்களாய் அன்றிரவைக் கழித்தார்கள். (20,21)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
அறுபத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்தொன்பது

தசரதர்–ஜனகர் சந்திப்பு

இரவு கழிந்ததும் உபாத்தியாயருடனும் உறவினர்களுடனும் மகிழ்ச்சியுடனிருந்த மன்னர் தசரதர் சுமந்திரரிடம் பின்வருமாறு உத்தரவிட்டார்— (1)

''கருவூலக் காப்பாளர்கள் அனைவரும், ஏராளமான செல்வங்களையும் இரத்தினங்களையும் எடுத்துக் கொண்டு, தக்கப் பாதுகாப்புடன் முன்னதாகச் செல்லட்டும். பல்லக்கு முதலான வாகனங்களுடன், ஒப்புயர்வில்லாத நமது நால்வகைச் சேனைகள் எல்லாம் என்னுடைய உத்தரவு கிடைத்தவுடனேயே புறப்படும் வகையில், விரைவில் ஆயத்தம் செய்யப்படட்டும். வசிஷ்டர், வாமதேவர், ஜாபாலி, காசியபர், சிரஞ்ஜீவியான மார்க்கண்டேய ரிஷி, காத்யாயனர் ஆகிய அந்தணப் பெருமக்கள் முன்னதாகப் பயணப்படட்டும். காலதாமதமில்லாமல் என்னுடைய ரதம் (நீண்ட பயணத்திற்குரிய முன்னேற்பாடுகளுடன்) ஆயத்த நிலையில் இருக்கட்டும். (ஜனகரின்) தூதர்கள் என்னை அவசரப்படுத்துகிறார்கள்.'' (2–5)

அரசருடைய உத்தரவுப்படி, நால்வகைப் படைகள் முனிவர்களுடன் முன்னதாகச் சென்றுகொண்டிருந்த மன்னரைப் பின்தொடர்ந்து சென்றன. (தசரதர்) நான்கு நாட்கள் வழிப் பயணம் செய்து விதேக நாட்டை அடைந்தார். திருவளர் மன்னர் ஜனகர், (தசரதர் வந்துவிட்டார் என்ற) செய்தி செவிக்கெட்டியதும் சீரிய வரவேற்பு அளித்தார். அப்போது முதியவரான தசரத மன்னரைப் போய் சந்தித்து மனமகிழ்ச்சியில் திளைத்திருந்த ஜனகர் மேலும் சந்தோஷமடைந்தார். (6–8)

புருஷோத்தமராகிய ஜனகர், புருஷோத்தமராகிய தசரதரைப் பார்த்து முகமலர்ச்சியுடன் கூறினார்— ''ரகுகுலத் தோன்றலே! மாமன்னரே! தங்களுக்கு நல்வரவு கூறுகிறேன். என்னுடைய பெரும் பேற்றின் பயனாகத் தாங்கள் இங்கே வந்திருக்கிறீர்கள். என் கன்னிகை வீரத்தினால் வெற்றி கொள்ளப்பட்டதால் இரு புதல்வர்களும் மனமகிழ்ச்சியுடன் இருப்பதைப் பார்த்து, தாங்கள் மனநிறைவு அடைந்துள்ளீர்கள். தேவர்களால் சூழப்பட்ட தேவேந்திரன் போல மகாதேஜஸ்வியான முனிவர் பகவான் வசிஷ்டர், எல்லா அந்தணோத்தமர்களோடும் இங்கே வந்திருப்பது எனது பாக்கியம். (9,10)

என்னிடம் விரோதம் கொண்ட மன்னர்களின் முற்றுகை போன்ற இடையூறுகள் தெய்வத்தின் அருளினால் வெற்றி கொள்ளப்பட்டன. புண்ணியவசத்தால் வீரம் மிக்கவர்களும் தருமசீலர்களுமான ரகுகுலத்தாருடன் விவாக சம்பந்தம் ஏற்பட்டதன் மூலம் என்னுடைய பரம்பரை பெருமை

அடைந்திருக்கிறது. மனிதருள் மாணிக்கமே! நாளைக் காலையில் யாக கர்மாக்கள் முடிந்தவுடன், முனிவர்களால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ள இந்த விவாகத்தைத் தாங்கள் முடித்து வைக்க வேண்டும்.'' முனிவர்கள் முன்னிலையில் அவர் கூறிய சொற்களைக் கேட்டு, சொற்சிலம்பரான தசரத மன்னர், ஜனக மன்னருக்குப் பின்வருமாறு பதில் சொன்னார்— (11–13)

''தானத்தைப் பெற்றுக் கொள்வது என்பது தானத்தைக் கொடுப்பவரின் சௌகரியத்தைப் பொறுத்தது என்று நான் முன்னரே கேள்விப்பட்டிருக்கிறேன். அறிஞரே! நீங்கள் சொல்கிறபடியே நாங்கள் செய்கிறோம்.'' அறநெறிகளுக்கு உகந்ததும், புகழ் வளர்ப்பதுமான உரையைச் சத்தியம் தவறாத மன்னர் கூறுவதைக் கேட்ட விதேக மன்னர் மிகவும் ஆச்சரியத்தை அடைந்தார். அப்போது முனிவர்கள் எல்லோரும் பரஸ்பர சந்திப்பினால் மிகவும் மகிழ்ச்சியில் திளைத்தவர்களாய் அன்றிரவை இன்பமாகக் கழித்தார்கள். (14–16)

பின்னர், மகாதேஜஸ்வியான இராமனும் லட்சுமணனும் விசுவாமித்திரரை முன்னிட்டுக் கொண்டு இணையாகச் சென்று தந்தையின் திருவடிகளை நமஸ்கரித்தார்கள். ரகுகுலத்திற்குப் பெருமை சேர்க்கும் இரு புத்திரர்களையும் பார்த்து ஆனந்தப்பட்ட தசரத மன்னர், ஜனக மன்னரால் நன்றாக உபசரிக்கப்பட்டு மனநிறைவுடன் அங்கே தங்கினார். மகாதேஜஸ்வியும் சாஸ்திர வல்லுநருமான ஜனகர், யாகத்தினுடையவும் இரு புதல்விகளுக்கும் (சீதை, மற்றுமொரு பெண்ணான ஊர்மிளைக்கும்) செய்ய வேண்டிய கர்மாக்களையும் அறநூல் முறைப்படி செய்து முடித்துத் திருப்தி அடைந்தவராய் இரவைக் கழித்தார். (17–19)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
அறுபத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எழுபது

கன்னிகையைக் கோருவது

மறுநாட்காலையில் ஜனகர், மாமுனிவர்களுடன் யாக கர்மாக்களை முடித்துக் கொண்டு, புரோகிதர் சதானந்தரைப் பார்த்து, பொருளுணர்ந்து பேசவல்லவரான அவர் சொன்னார்— (1)

''என்னுடைய இளைய சகோதரன் குசத்வஜன் என்று பெயர் பெற்றவன்; ஆன்ம ஒளிமிக்கவன்; அறவழியில் நிலைத்து நிற்பவன். இக்ஷுமதி நதியின் நன்னீரைக் குடிநீராகக் கொண்டதும், நாற்புறமும் கோட்டைச் சுவர்மீது விரோதிகளைத் தடுக்கும் பொறிகள் பொருத்தப்பட்டதும், புண்ணியப் பேரொளி வீசுவதும், புஷ்பக விமானம் போல் பரந்து விரிந்து சகல சௌக்கியங்களையும் வழங்குவதுமான ஸாங்காசியம் என்னும் மங்களகரமான பட்டணத்தை ஆட்சி செய்து வருகிறான். என்னுடைய யக்ஞத்தைப் பலவித உதவிகள் செய்து காப்பாற்றியிருக்கிறான். நான், அவனைப் பார்க்க விரும்புகிறேன். நடைபெறப்போகும் விவாக விமரிசைகளை, என்னுடன் சேர்ந்து அவனும் அனுபவிக்க வேண்டும்.'' (2–4)

இவ்விதம் சதானந்தர் முன்னிலையில் பேசிக் கொண்டிருந்தபோது வேலை எதுவும் இல்லாதிருந்த சிலர் வந்தார்கள். ஜனகர் அவர்களுக்கு (குசத்வஜரை அழைத்து வரும்படி) உத்தரவிட்டார். அவர்கள், மன்னருடைய கட்டளையைச் சிரமேற்கொண்டு வேகமாகச் செல்லும் குதிரைகளில் ஏறி, இந்திரனுடைய ஆக்ஞைப்படி உபேந்திரனை அழைத்து வருமாப் போலே மனிதருள் புலி போன்ற குசத்வஜரை அழைத்து வருவதற்குச் சென்றார்கள். அவர்கள் ஸாங்காசியம் சென்று, குசத்வஜரைப் பார்த்தார்கள். ஜனகருடைய உள்ளக்கருத்தையும் உள்ளவாறே

தெரிவித்தார்கள். மிக அவசரமாக வந்த உத்தம தூதர்களின் சொற்களைக் கேட்ட மன்னர் குசத்வஜர், ஜனகப் பேரரசரின் உத்தரவுக்கிணங்க (மிதிலைக்கு) வந்து சேர்ந்தார். (5–8)

அவர், தருமத்தைக் கட்டிக் காக்கும் மகாத்மாவான ஜனகரைப் பார்த்தார். தருமவானான அவர் சதானந்தரையும் ஜனகரையும் வணங்கினார். அவர், மன்னர்கள் உட்காரத் தகுந்த திவ்யமான ஆசனத்தில் அமர்ந்தார். எல்லையில்லாத தேசு படைத்த சகோதரர்களான அவ்விருவரும் அருகருகே அமர்ந்து பேசி, சுதாமன் என்ற நல் அமைச்சரை (தசரதரிடம்) அனுப்பி வைத்தார்கள். ''அமைச்சர் தலைவரே! எல்லையில்லாத பேரொளி வீசுபவரும், எவராலும் வெல்ல முடியாதவருமான இக்ஷ்வாகு குல மன்னரைத் தன் சொந்தக் குமாரர்களோடும், உடன் வந்திருக்கும் சபையினருடனும் விரைவில் அழைத்து வாரும்.'' (9–11)

அவர் (சுதாமன்), ரகு பரம்பரையின் தொடர்ச்சியைக் காப்பாற்றி வருபவரை, அவர் தங்கியிருக்கும் விடுதிக்குச் சென்று பார்த்துத் தலைதாழ்த்தி வணங்கி, பின்னர் இவ்வாறு சொன்னார்— ''அயோத்தி நாயகரே! வீரரே! மிதிலை மன்னர் ஜனகர், உபாத்தியாயர்–புரோகிதர்களுடன் தங்களைக் காண ஆவலுடன் காத்துக் கொண்டிருக்கிறார்.'' பிரதான மந்திரியின் சொற்களைக் கேட்ட தசரத மன்னர், முனிவர் கணங்களோடும் பந்துக்களுடனும் ஜனகர் இருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார். அந்த மன்னர், அமைச்சர்கள், உபாத்தியாயர்கள், உறவினர்கள் முன்னிலையில் பேச்சுக்கலை நிபுணர் (தசரதர்) விதேக மன்னரைப் பார்த்து இவ்வாறு கூறினார்— (12–15)

''மாமன்னரே! இக்ஷ்வாகு குலத்திற்குக் குலதேவதை போன்றவர்; எல்லா முக்கிய நிகழ்ச்சிகளிலும் எங்களுக்காகப் பேசுபவர் மாமுனிவர் பகவான் வசிஷ்டர் என்பது தாங்கள் அறிந்ததே. விசுவாமித்திரர், மற்றுமுள்ள முனிவர்களின் ஒப்புதலுடன் தருமாத்மாவான வசிஷ்டர் பெருமான் என் பரம்பரையைப் பற்றி வரிசையாக எடுத்துக் கூறுவார்.'' இவ்வாறு அளவிலாத பெருமைக்குரிய அரசர்கள் வீற்றிருந்த சபையில் தசரதர் கூறிவிட்டு ஓய்ந்ததும், சொற்கலை நிபுணரான பகவான் வசிஷ்டர், புரோகிதர்களுடன் இருந்த விதேக மன்னனிடம் பின்வருமாறு சொல்லத் தொடங்கினார்— (16–18)

''பிரும்மா, புலன்களுக்கெட்டாத மூலப்பொருளிலிருந்து தோன்றியவர்; நித்ய–நிரந்தரமானவர்; அழிவில்லாதவர். அவரிடமிருந்து மரீசி தோன்றினார்; மரீசியின் புதல்வர் கசியபர்; கசியபரிடமிருந்து விவஸ்வான் உண்டானார்; வைவஸ்வதரின் பிள்ளை என்று சொல்லப்படுபவர் மனு. மனித வர்க்கத்தின் ஆதிமுதல்வரான மனுவுக்கு மைந்தர் இக்ஷ்வாகு; இக்ஷ்வாகு என்ற அவர் மிகப் பண்டைய காலத்தில் அயோத்தி மன்னராக இருந்தார். இக்ஷ்வாகுவின் மகன் திரு பொருந்திய குக்ஷி என்று பெயர் பெற்றவர்; குக்ஷியினுடைய மைந்தனாக அருட்செல்வன் விகுக்ஷி தோன்றினார்; மகாதேஜஸ்வியான விகுக்ஷியின் புத்திரன் பாணன் என்பவர் மகா பராக்கிரமசாலி; (19–22)

மகாதேஜஸ்வியான பாணனுடைய புதல்வன் வீரம் மிக்கவரான அநரண்யன்; அநரண்யனிடமிருந்து பிருதுவும், பிருதுவின் மைந்தனாக திரிசங்குவும் தோன்றினார்கள்; பெரும்புகழ் கொண்ட துந்துமாரன் திரிசங்குவின் புத்திரனாகப் பிறந்தார்; மகாதேஜஸ்வியான துந்துமாரனிடமிருந்து யுவனாச்வன் பிறந்தார்; யுவனாச்வனுடைய பிள்ளை உலகாண்ட மன்னன் மாந்தாதா; மாந்தாதாவினுடைய மகனாக சுஸந்தி என்ற திருச்செல்வன் தோன்றினார்; சுஸந்திக்கு த்ருவஸந்தி, பிரஸேனஜித் என்ற இரு புதல்வர்கள். புகழ்பெற்ற த்ருவஸந்தியிடமிருந்து பெயர் பெற்ற பரதன் தோன்றினார்; (23–26)

பரதனிடமிருந்து மகாதேஜஸ்வியான அஸிதர் என்பவர் பிறந்தார்; அவருக்கு வீரர்களான ஹைஹயர்கள்–தாலஜங்கர்கள்–சசிபிந்துக்கள் ஆகிய பிற மன்னர்கள் விரோதிகளாகி, யுத்தத்திற்கு வந்தார்கள். அவர்களை எதிர்த்துப் போரிட்ட அவர் (அஸிதர்) நாட்டிலிருந்து விரட்டப்பட்டார்.

இமயமலைக்கு வந்து ப்ருகுப்ரஸ்ரவணம் என்னும் புனிதத் தலத்தில் வசித்து வந்த பலஹீனரான அஸிதர் காலக்கிரமத்தில் மரணமடைந்தார். அவருடைய இரண்டு மனைவிகளும் கருத்தரித்திருந்தார்கள் என்று சொல்லப்படுகிறது. ஒருத்தி, மற்றொருத்தியின் கருச்சிதைவுக்காக விஷத்தைக் கொடுத்துவிட்டாள். பிருகு வம்சத்தில் தோன்றிய சியவனர் என்ற முனிவர் இமயமலையைச் சார்ந்து, தெய்வ வழிபாட்டில் முழுமூச்சுடன் ஈடுபட்டு, அழகியதான ஒரு குன்றில் வாழ்ந்து கொண்டிருந்தார். (27–31)

(கருச்சிதைவுக்காக விஷம் கொடுக்கப்பட்ட) ஒருத்தி, தெய்வப்பொலிவுள்ள பிருகு வம்சத்தினர் சியவனரை ஒரு சமயம் வணங்கினாள். தாமரை இதழ் கண்ணாளும், பேறுபெற்றவளுமான அவள் தனக்குக் குழந்தை பிறக்க வேண்டும் என்று விரும்பினாள். காளிந்தீ என்ற அவள் அந்த முனிவரின் அருகில் சென்று நமஸ்கரித்தாள். அந்த அந்தணர் புத்திரனை விரும்பிப் பிரார்த்தித்த அவளிடம் அது விஷயமாக, 'மாபெரும் பாக்கியசாலியே! உன் வயிற்றில் நற்குணமும் மகாபலமும் பராக்கிரமும் மகாதேஜஸ்வியுமான ஒரு மைந்தன் விஷ சம்பந்தத்தோடு பிறக்கப் போகிறான். தாமரைக் கண்ணாளே! வருத்தப்படாதே.' (32–34)

இவ்வாறு (சியவனரால்) சொல்லப்பட்ட அவள், மகாதேஜஸ்வியான அஸிதர் மரணமடைந்த பின்னரும், மனத்தை அவரிடமே செலுத்தி (சியவனரின் ஆசீர்வாத பலத்தினால்) மின்னற்கொடி போன்ற பிரகாசத்துடன் விளங்கினாள். கணவனை இழந்த துக்கத்தில் இருப்பவளும், பதிவிரதையும், அரசகுமாரியுமான அவள், சியவனரை வணங்கி விடைபெற்றுக் கொண்டாள். பின், சரியான காலத்தில் ஒரு புத்திரனைப் பெற்றெடுத்தாள். அவளுடைய கருவைக் கலைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் சக்களத்தியால் விஷம் (*'க₃ர:'*) கொடுக்கப்பட்டதால், அந்த விஷத்துடனேயே பிறந்த சிசு சகரன் என்றாயிற்று. (35–37)

சகரனிடமிருந்து அசமஞ்ஜன் தோன்றினார்; அசமஞ்ஜனிடமிருந்து அம்சுமான் உண்டானார்; அம்சுமானுடைய மைந்தன் திலீபன்; திலீபனுடைய புதல்வன் பகீரதன்; பகீரதனிடமிருந்து ககுத்ஸ்தன் தோன்றினார்; ககுத்ஸ்தனுடைய மகன் ரகு; ரகுவினுடைய மைந்தன் தேஜஸ்வியான பிரவிருத்தன். ஒரு சாபத்தினால் அவர் அரக்கனாக மாறினார். (38,39)

கால்கள் கறுத்துப் போனதால் கல்மாஷபாதன் என்ற அவப்பெயரையும் பெற்றார். அவரிடமிருந்து சங்கணர் தோன்றினார்; சங்கணருடைய மைந்தன் சுதர்சனன்; சுதர்சனனுடைய புதல்வன் அக்னிவர்ணன்; அக்னிவர்ணனிடமிருந்து சீக்ரகர்; சீக்ரகரிடமிருந்து மரு என்ற புதல்வர் தோன்றினார். மருவிடமிருந்து ப்ரசுச்ருகர்; அவரிடமிருந்து அம்பரீஷன்; அம்பரீஷனுடைய மைந்தன் நகுஷன் என்பவர் இம்மண்ணுலகை ஆண்டார். நகுஷனிடமிருந்து யயாதி; யயாதிக்குப் பிள்ளையாகப் பிறந்தவர் நாபாகன்; நாபாகனிடமிருந்து அஜன்; அஜனின் மைந்தராக தசரதர் பிறந்தார். (40–42)

இந்த தசரதரிடமிருந்து உண்டானவர்கள் சகோதரர்களான இராம–லட்சுமணர்கள். வம்சத் தொடக்கக் காலத்திலிருந்தே தூய பரம்பரையினராக இருப்பவர்களும், தருமத்தில் மிக்க பற்றுடையவர்களும், அரசுரிமை உடையவர்களும், வீரர்களும், சத்தியம் தவறாதவர்களும், இக்ஷ்வாகு குலத்தில் பிறந்தவர்களுமான இராம–லட்சுமணர்களுக்கு, மன்னரே! உங்கள் இரு புதல்விகளையும் கன்னிகாதானம் செய்து கொடுக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன். அரசரே! இரு பிள்ளைகளும், இரு பெண்களும் ஒத்த நிலையில் இருப்பவர்களாதலால் மணம் செய்து கொடுக்க மனம் கொள்வீராக.'' (43,44)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
எழுபதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எழுபத்தொன்று

கன்யாதானம் செய்து கொடுக்கிறேன்!

இவ்வாறு (வசிஷ்டர்) பேசி முடித்ததும், ஜனகர் கைகளைக் கூப்பிக் கொண்டு பதில் சொன்னார்— ''நல்ல செய்திகளைச் சொன்ன தங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது நான் சொல்லப் போகும் எங்களுடைய குலத்தின் விவரங்களையும் கேட்டருள்வீராக. மாமுனிவரே! நற்குலத்தில் பிறந்தாலும் கன்யாதான சமயத்தில், கன்யையின் குலத்தைப் பற்றிய முழு தகவல்களும் சொல்லப்பட வேண்டும். (நான் சொல்லப் போகிறேன்.) அதைக் கேளுங்கள். (1,2)

தன்னுடைய நற்கர்மங்களால் மூன்று உலகிலும் புகழ் பெற்ற நிமி என்ற அரசர் இருந்தார்; தருமத்தையே உயிர்மூச்சாகக் கொண்டவர்; சான்றோர்களில் தலையாயவர். அவருடைய மைந்தனுக்கு மிதி என்று பெயர்; மிதியின் புத்திரர் ஜனகர். அவர் முதலாவது ஜனகர்; ஜனகரிடமிருந்து உதாவசு; உதாவசுவிடமிருந்து தருமாத்மாவான நந்திவர்தனர் உண்டானார்; நந்திவர்தனருடைய மகனின் பெயர் சுகேது; சுகேதுவிடமிருந்து தோன்றியவர் தேவராதர் என்ற பலசாலி; பிருஹத்ரதன் என்று பெயர் பெற்றவர் ராஜரிஷி தேவராதருடைய புதல்வர். (3–6)

பிருஹத்ரதனிடமிருந்து சூர பராக்கிரமம் பொருந்திய மகாவீரர் என்பவர் தோன்றினார்; மகாவீரருடைய புதல்வர் சிறந்த அறிவாளியும் வீண்போகாத பராக்கிரமத்தைப் பெற்றவருமான சுத்ருதி. தருமாத்மா சுத்ருதியின் மைந்தன் மிகவும் தருமானுஷ்டரான த்ருஷ்டகேது; ராஜரிஷி த்ருஷ்டகேதுவிடமிருந்து ஹர்யச்வர் என்ற பெயர் பெற்றவர் உண்டானார். ஹர்யச்வருடைய மகன் மரு; மருவின் மைந்தன் ப்ரதீந்தகன்; ப்ரதீந்தகனுடைய பிள்ளை தருமாத்மாவான கீர்த்திரதன் என்ற மன்னர். கீர்த்திரதனின் புதல்வர் தேவமீடன்; தேவமீடனின் மகன் விபுதன்; விபுதனின் மகன் மஹீத்ரகன். (7–10)

மஹீத்ரக மன்னரின் புதல்வர் மகாபலசாலியான கீர்த்திராதன்; ராஜரிஷி கீர்த்திராதனிடமிருந்து மகாரோமா என்பவர் பிறந்தார். மகாரோமாவிடமிருந்து தருமாத்மா ஸ்வர்ணரோமா தோன்றினார்; ராஜரிஷி ஸ்வர்ணரோமாவிடமிருந்து ஹ்ரஸ்வரோமா உண்டானார். தருமம் அறிந்த மகாத்மாவான அவருக்கு இரண்டு புத்திரர்கள் பிறந்தார்கள். நான் மூத்தவன்; என் இளைய சகோதரன் வீரனான குசத்வஜன். மன்னரான என் பிதா எனக்குப் பட்டம் கட்டிவிட்டு, குசத்வஜனைப் பராமரிக்கும் சுமையை, என்னிடம் ஒப்படைத்துவிட்டுக் கானகம் போனார். (11–14)

வயோதிகரான தந்தை தேவலோகம் சென்றதும், தேவர்களுக்கொப்பான இளவல் குசத்வஜனை அன்போடு ஆதரித்துக் கொண்டு அறம் தவறாமல் அரசு செலுத்தினேன். பிறகு, நாளாவட்டத்தில் சாங்காசிய நகரத்தின் மன்னன் சுதன்வா என்ற வீரன் மிதிலையை முற்றுகையிட வந்தான். அவன், 'பரமேசுவரனின் உத்தமமான வில்லையும், கமலக்கண்ணாளான கன்யை சீதையையும் என்னிடம் ஒப்படைக்கவும்' என்ற செய்தியுடன் தூதர்களை அனுப்பினான். (15–17)

பிரும்மரிஷியே! அவனுக்கு என் மகளைக் கொடுக்காததால் என்னுடன் சண்டைக்கு வந்தான். என் கண்ணெதிரில் வந்த மன்னன் சுதன்வா யுத்தத்தில் கொல்லப்பட்டான். மாமுனிவரே! சுதன்வா என்ற அவ்வரசனைக் கொன்று, சாங்காசியத்தில் வீரனான என் சகோதரன் குசத்வஜனுக்கு முடிசூட்டினேன். இந்த என் சகோதரன் இளையவன்; நான் மூத்தவன். முனிபுங்கவரே! மிகுந்த மனத்திருப்தியுடன் என் இரு பெண்களையும் மணம் செய்து கொடுக்கிறேன். (18–20)

தங்கள் ஆசி வேண்டுகிறேன்! சீதையை இராமனுக்கும், ஊர்மிளையை லட்சுமணனுக்கும் கொடுக்கிறேன். தேவமகளிர் போன்றவளும், வீரத்தால் வெல்லப்பட்டவளுமான என் மகள்

சீதையையும், இரண்டாமவளான ஊர்மிளையையும் 'கொடுக்கிறேன்' என்று மூன்று தடவை சொல்கிறேன். இதில் ஐயமில்லை. மன்னரே! இராம–லட்சுமணர்களுக்கு (விவாகத்திற்கு முன் செய்யவேண்டிய கர்மாவான) கோதானத்தைச் செய்விப்பீர்களாக! (கோதானம் என்ற சொல் கல்வி முடிந்து வீட்டிற்குத் திரும்புவதையும், முகத்திலுள்ள முடி மழித்தலையும் குறிக்கும்.) (21,22)

நாந்தீ சிராத்தம் என்ற மங்களமான முன்னோர் கடனையும், ஸமாவர்த்தனம் முதலான விவாகக் கர்மாவுக்கு முந்திய சடங்குகளையும் செய்வீராக! பெருந்தோளரே! இன்று மக நட்சத்திரம். மூன்றாம் நாள் உத்தரபல்குனீ. மன்னா! அந்த உத்தர நட்சத்திரத்தில் விவாகச் சடங்குகளை நடத்தலாம். இராம–லட்சுமணர்களின் விவாகத்தை முன்னிட்டு சௌக்கியங்களை அள்ளித் தரும் தானம் என்பது செய்யத்தக்கது.'' (23,24)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
எழுபத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எழுபத்து இரண்டு

விவாகத்திற்கு முந்தைய மங்களச் சடங்குகள்

இவ்வாறு சொன்ன விதேக மன்னனிடம் வசிஷ்டர் முன்னிலையில் மாமுனிவர் விசுவாமித்திரர் கூறினார்— (1)

''மாமனிதரே! எண்ணிப் பார்க்க முடியாத பெருமை கொண்டவைகளும், உவமை அற்றவைகளுமான இக்ஷவாகு, விதேகம் என்ற இரு குலங்களுக்கு நிகராக வேறு பரம்பரையே இல்லை! மன்னா! இராம–லட்சுமணர்களுக்கு சீதை–ஊர்மிளையின் விவாகம் என்ற உறவு அறவழிப்பட்டது; உருவ லாவண்யத்தாலும் சரியாக அமைந்தது. அரசரே! நான் கூறப் போவதைச் செவி கொடுத்துக் கேளுங்கள். அறம் அறிந்தவரே! உங்கள் இளைய சகோதரர், மன்னர் குசத்வஜர். இந்த தருமாத்மாவினுடைய இரண்டு புதல்விகளும் உலகில் ஈடில்லாத அழகுப் பெட்டகங்கள். (எங்கள் பக்கத்திலுள்ள தகுதி வாய்ந்த இரு இளைஞர்களுக்கு) மனைவிகளாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். (2–5)

மன்னா! குமாரனான பரதனுக்கும், புத்திமானான சத்ருக்னனுக்கும் இரு பெண்களையும் கன்யாதானம் செய்து கொடுக்கும்படி கோருகிறோம். தசரதருடைய புதல்வர்களாகிய இவர்கள் எல்லோரும் வாலிப மிடுக்குடன் விளங்குபவர்கள்; உலகக்காப்பாளர்கள் போன்றவர்கள்; தேவர்களுக்கு நிகரான பேராற்றல் படைத்தவர்கள். ராஜேந்திரா! இக்ஷ்வாகு பரம்பரை இடையறாது தொடர்ந்து வருவது. தங்கள் பரம்பரை புண்ணியச் செயல்களில் ஈடுபட்டது. எனவே, இரண்டு குலங்களின் உறவும் முடிச்சுப் போடப்படட்டும்.'' (6–8)

வசிஷ்டருடைய சம்மதத்துடன் விசுவாமித்திரர் பேசியதைக் கேட்ட ஜனகர், கைகளைக் கூப்பிக் கொண்டு இரு மாமுனிவர்களையும் நோக்கிக் கூறினார்— ''எங்கள் குலம் பாக்கியம் செய்திருக்கிறது என்று எண்ணுகிறேன்! அதனால்தான் மாமுனிவர்களாகிய நீங்கள் இருவரும், தாங்களாகவே உசிதமான குலத்தொடர்பை ஆணையிடுகிறீர்கள். அப்படியே ஆகட்டும். தங்கள் அருளாசி கிடைக்கட்டும். குசத்வஜனுடைய இரு புதல்விகளும் பரதன், சத்ருக்னன் ஆகிய இருவருக்கும் முறையே மனைவிகள் ஆகட்டும். மாமுனிவரே! பேராற்றல் பொருந்திய அரச குமாரர்கள், நான்கு அரசகுமாரிகளையும் ஒரே நாளில் பாணிக்கிரகணம் செய்து கொள்வார்களாக! வேதவித்தகரே! பகன் என்பவர் அதிஷ்டான தேவதையாகவுள்ள உத்தரபல்குனீ நட்சத்திரத்தில் விவாகம் செய்வது சிறப்பைத் தரும் என்று சான்றோர்கள் புகழ்ந்துரைக்கிறார்கள்.'' (9–13)

இவ்வாறு மனத்திற்கினிய சொற்களைக் கூறிய ஜனகர் கைகூப்பியவண்ணம் மீண்டும் எழுந்து இரு தபோதனர்களையும் பார்த்துக் கூறினார்— ''எனக்குப் பேரருளைச் செய்திருக்கிறீர்கள்! (விவாகத்திற்கு உரியவர்களாக நான்கு பெண்கள் இருக்கும்போது, ஒருத்திக்கு மட்டுமோ அல்லது இருவருக்கு மட்டுமோ விவாகம் நடத்துவது என்பது நல்லறமாகாது என்பதை உணர்த்தி, நால்வருக்குமே – என் தம்பியின் புதல்விகளுக்கும் – விவாகம் நடைபெறுவதற்கான வழியைத் தேடித் தந்தீர்களே! என்ன பாக்கியம்!) நான் எப்போதும் தங்கள் சீடன். மாமுனிவர்களாகிய நீங்கள் இருவரும் தலைமைப் பீடங்களில் அமர வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன். இந்தப் பட்டணம் எப்படி தசரதருக்கும் உரிமையுடையதாக ஆகிறதோ, அதுபோல அயோத்தி பட்டணமும் எனக்கு உரிமையுடையதாக ஆகிறது. உங்களுக்கு இந்த நகரத்தின் மீது முழு அதிகாரமும் இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. உங்கள் விருப்பப்படிச் செய்வதற்கு ஆணையிடலாம்.'' (14–16)

இவ்வாறு விதேக மன்னர் ஜனகர் பேசி முடித்ததும் ரகுநந்தனரான மன்னர் தசரதர், அவருக்குப் பதில் கூறினார்— ''மிதிலைக்கு அதிபர்களான சகோதரர்கள் இருவரும் எண்ண முடியாத நற்குணங்கள் நிறைந்தவர்கள்; முனிவர்களும், அரசர் கூட்டமும் தங்களால் நல்ல முறையில் கௌரவிக்கப்பட்டிருக்கிறார்கள். தங்களுக்கு என் பாராட்டுக்கள். மங்களம் உண்டாகட்டும். நான், என் விடுதிக்குச் சென்று, விவாகத்திற்கு முன் செய்ய வேண்டிய எல்லாக் கர்மாக்களையும் சிரத்தையுடன் செய்து முடிக்கிறேன்'' என்றும் சொன்னார். (17–19)

ஜனக மன்னரிடம் விடைபெற்றுக் கொண்டு, மன்னர் தசரதர் அவ்விரு முனிவர்களையும் முன்னிட்டுக் கொண்டு விரைவில் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார். அந்த அரசர், தன் மாளிகைக்குச் சென்று விதிப்படி சிராத்தக் கர்மாக்களைச் செய்தார். மறுநாள் பொழுது விடிந்ததும் துயிலெழுந்து, கோதானம் என்ற மங்களச் சடங்கினைச் செய்தார். புத்திரர்களின் நன்மையில் நாட்டங்கொண்ட அவர், அந்தணர்கள் ஒவ்வொருவருக்கும் லட்சலட்சமாகப் பசுக்களைத் தானம் செய்தார். (20–22)

ஆண்களில் ஏறு போன்றவரும், பிள்ளைப்பாசம் மிக்கவருமான அவர் புதல்வர்களின் கோதானச் சடங்கை முன்னிட்டு, தங்கப்பூண் இழைக்கப்பட்ட கொம்புகளை உடையவைகளும், அங்கலட்சணக் குறை இல்லாதவைகளும், கன்றுகளோடு கூடியவைகளும், ஏராளமாகப் பால் கொடுக்கின்றவைகளுமான நான்கு லட்சம் பசுக்களையும், பலவகையான செல்வங்களையும் அந்தணர்களுக்கு வழங்கினார். அப்போது, அந்த மன்னர் கோதானம் (முடி மழித்தல்) செய்யப்பட்டுவிட்ட புதல்வர்கள் சூழ வீற்றிருந்த காட்சி, லோகபாலர்கள் சூழ மலர்ந்த முகத்தோடு, பிரஜாபதி பிரும்மா வீற்றிருப்பதைப் போல் விளங்கிற்று. (23–25)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
எழுபத்து இரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எழுபத்து மூன்று

தசரத புத்திரர்களின் விவாகம்

என்றைய தினம், கோதானம் என்ற உத்தமமான சடங்கை மன்னர் செய்து முடித்தாரோ, அன்றைய தினமே சூரரான யுதாஜித் வந்து சேர்ந்தார். கேகய மன்னருடைய புதல்வரும், பரதனுடைய சாட்சாத் மாமனுமாகிய அவர், அரசர் தசரதரைக் கண்டு குசலம் விசாரித்து பின் இவ்வாறு மொழிந்தார்— (1,2)

''கேகய மன்னர் அன்புடன் தங்கள் நலன் பற்றி விசாரிக்கச் சொன்னார். யார் யாருடைய நலன் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்புகிறீர்களோ, அவர்கள் எல்லோரும் தற்சமயம்

ஆரோக்கியமாக இருக்கிறார்கள். ராஜேந்திரரே! கேகய மன்னர் என் சகோதரியின் மைந்தனை (தன் பேரனான பரதனை)க் காண விரும்பினார். அவனை அழைத்துப் போவதற்காக நான் அயோத்திக்கு வந்தேன். அயோத்தியில், தங்கள் புத்திரர்கள் (இராமன்) விவாகத்திற்காகத் தங்களுடன் மிதிலைக்குச் சென்றுவிட்டதாகக் கேள்விப்பட்டேன். உடனே, வேகமாக என் உடன்பிறந்தவளின் மகனைக் காணும் பேராவலுடன் இங்கே வந்துவிட்டேன்!'' (3–5)

பின்னர், தசரதர் மிகவும் அன்பிற்குரிய விருந்தினர் வந்திருப்பதைப் பார்த்து, கௌரவத்திற்குரிய அவரை உயர்ந்த உபசாரங்களால் பெருமைப்படுத்தினார். அந்த இரவை பெரும் புகழ் கொண்ட புதல்வர்களோடு கழித்துவிட்டு, பொழுது புலர்ந்ததும் கண்விழித்து, நித்தியக் கர்மாக்களைச் செய்து முடித்து, முனிவர்களை முன்னிலைப்படுத்தி, யாகசாலையை அடைந்தார், தசரதர். இராமன், எல்லாவிதமான அணிகலன்களையும் அணிந்துகொண்டு, விவாகத்திற்குரிய (கங்கணம்) மங்கலச் சரடு கட்டிக் கொண்டு, மற்ற மூன்று சகோதரர்களும் உடன் வர, விஜயா என்ற சுபமுகூர்த்த நேரத்தில் வசிஷ்டரையும், மற்ற முனிபுங்கவர்களையும் முன்னே நிறுத்தி, தந்தையின் அருகே வந்து நின்றார். (6–9)

பகவான் வசிஷ்டர் விதேக மன்னரிடம் வந்து இவ்வாறு கூறினார்— ''மன்னரே! விவாகத்திற்கான மங்களச் சடங்குகளைச் செய்து முடித்து, புத்திரர்களுடன் (கன்னிகைகளைத்) தானம் செய்யப் போகிறவரை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். (கன்னிகையைக்) கொடுப்பவர், (கன்னிகையைப்) பெற்றுக் கொள்பவர் ஆகியோருக்கு எல்லாச் செல்வங்களும் வளர்கின்றன. அல்லவா? இந்த விவாகத்தை நடத்திக் கொடுத்து, உங்கள் கடமையை நிறைவேற்றுங்கள்'' (10–12)

இவ்வாறு மகாத்மா வசிஷ்டரால் கூறப்பட்டதும், மேலான தருமங்களை அறிந்தவரும், கருணைச் சித்தருமான ஜனகர், இவ்வாறு பதில் சொன்னார்— ''என்னுடைய இந்த இடத்தில் தங்களைத் தடுத்து நிறுத்துபவர் யார்? யாருடைய ஆணையை எதிர்பார்க்கிறீர்கள்? இந்த ராஜ்யம் தங்களுடையது என்னும்போது, இந்த மாளிகையும் தங்களுடையதுதானே? தன் வீட்டில் தன் விருப்பம்போல் நடந்து கொள்வதில் என்ன தயக்கம்? என்னுடைய கன்னிகைகள், விவாகத்திற்கான எல்லாச் சடங்குகளையும் முடித்துக் கொண்டு, தக்க உடையணிந்து வேள்விக் குண்டத்தின் அருகே வந்திருக்கிறார்கள். முனிவர் பெருமானே! நான், இந்த மேடையில் தங்களை எதிர்பார்த்துக் கொண்டு சித்தமாக இருக்கிறேன். (13–16)

எல்லாச் சடங்குகளையும் குறையில்லாமல் செய்யுங்கள். ஏன், காலதாமதம்?'' ஜனகரால் சொல்லப்பட்டதைக் கேட்ட தசரதர், எல்லா முனிவர்களையும் தன் புதல்வர்களையும் உள்ளே அழைத்து வரச் செய்தார். அப்போது விதேகர்களின் அரசர் வசிஷ்டரிடம் இவ்வாறு கூறினார்— ''முனிவரே! உலக மக்கள் அனைவராலும் விரும்பப்படும் இராமனுடைய விவாக சம்பந்தமான கிரியைகளனைத்தையும் முனிவர்களைக் கொண்டு செய்விப்பீர்களாக.'' (17–19)

'சரி' என்று ஜனகரிடம் பதில் கூறினார், பகவான் வசிஷ்டர். விசுவாமித்திரரையும், தருமமே உருவெடுத்தாற்போன்ற சதானந்தரையும் முன்னிட்டுக் கொண்டு, மகா தபஸ்வியான அவர் மணப்பந்தலின் நடுவில் முறைப்படி வேள்விக் குண்டம் அமைத்து, அந்த வேதியின் நாற்புறங்களிலும் சந்தனத்தாலும் மணமிக்க மலர்களாலும் அலங்கரித்தார். (20,21)

தங்கப் பாலிகைகள், தானிய முளைகளுடன் கூடிய துளையுள்ள கலசங்கள், விதை முளைத்த மடக்குகள், மணப்புகை வீசும் தூபக்கால்கள், சங்குகள், ஹோமம் செய்வதற்கான சட்டுவம் போன்ற ஸ்ருவம் மற்றும் கரண்டி போன்ற ஸ்ருக்குகள், அர்க்யதீர்த்தத்தால் நிரப்பப்பட்ட பாத்திரங்கள், பொறி நிறைந்த கிண்ணங்கள், முறைப்படி தயாரிக்கப்பட்ட அட்சதைகள் – வேதியைச் சுற்றிலும் வைக்கப்பட்டன. முறைப்படி மந்திரங்களை உச்சரித்துக் கொண்டு, சமமான

அளவுள்ள தர்பங்களைப் பரப்பி, முறைப்படி மந்திரம் கூறி, குண்டத்தில் அக்னி வளர்த்து, மகாதேஜஸ்வியான மாமுனிவர் வசிஷ்டர் அந்த அக்னியில் ஆகுதிகள் கொடுத்தார். (22–24)

எல்லா அணிகலன்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்த சீதையை, இராமனுக்கு நேர் எதிரில் அக்னிக்கு முன்பாக நிற்கச் செய்து, கௌசல்யையின் ஆனந்தத்தைப் பெருகச் செய்கிற இராமனை நோக்கி, ஜனக மகாராஜர் சொன்னார்— ''இந்த சீதை என்னுடைய மகள். தரும கர்மாக்களில் உனக்கு அனுசரணையாக இருக்கப் போகிறவள். இவளை ஏற்றுக் கொள். உனக்கு மங்களம் உண்டாகட்டும். (இவளுடைய லட்சுமிகரமான) திருக்கரத்தை (உன்னுடைய வீரத்தை வெளிப்படுத்திய) திருக்கரத்தினால் பற்றுவாயாக. (25–27)

இவள் பதிவிரதை; பெரும் பாக்கியசாலி; (உன்னை) எப்போதும் நிழல்போலப் பின்தொடர்வாள்'' என்று கூறி, மந்திரங்களால் புனிதமாக்கப்பட்ட தீர்த்தத்தை வார்த்தார். தேவர்களும் முனிவர்களும், 'ஆகா! என்ன பாக்கியம்!' என்று குதூகலித்தார்கள். (ஆகாயத்தில்) தேவ பேரிகைகள் முழங்கின; ஏராளமான மலர்மாரி ஏற்பட்டது. இவ்வாறு மகள் சீதையை மந்திரங்களால் புனிதமாக்கப்பட்ட நீரினால் தாரை வார்த்துக் கொடுத்துவிட்டு, மகிழ்ச்சியில் மூழ்கித் திளைத்த ஜனக மகாராஜர் சொன்னார்— (28–30)

''லட்சுமணா! வா. உனக்கு மங்களம் உண்டாகட்டும்! என்னால் கொடுக்கப்படுபவளான ஊர்மிளையைப் பெற்றுக் கொள். அவள் கையைப் பற்றிக் கொள். காலதாமதம் வேண்டாம்.'' அவனிடம் இவ்வாறு சொல்லிவிட்டு பரதனிடம் கூறினார்— ''ரகுநந்தனா! மாண்டவியின் கையைப் பற்றிக் கொள். காலதாமதம் வேண்டாம்.'' தருமத்திருவுருவான ஜனக மாமன்னர் சத்ருக்னனிடம் சொன்னார்— ''மகாபலம் பொருந்தியவனே! சுருதகீர்த்தியின் கையை உன் கையினால் பற்றிக் கொள். காகுத்தர்களான நீங்கள் எல்லோரும் பண்பாளர்கள்; எல்லா விரத அனுஷ்டானங்களையும் குறைவில்லாமல் செய்து முடித்தவர்கள். இனி, பத்தினிகளோடு இணைந்து அறம் செய்யுங்கள். காலதாமதம் வேண்டாம்.'' (31–34)

வசிஷ்டருடைய கருத்துக்கிசைய நடக்கும் அந்த நால்வரும், ஜனகருடைய சொற்களைக் கேட்டு நான்கு கன்னிகைகளின் கையை முறையே தம் கையால் பற்றினார்கள். பெரும் பண்பாளர்களான ரகுகுல உத்தமத் தோன்றல்களாகிய நால்வரும் பத்தினிகளுடன் அக்னியையும் மணமேடையையும் அரசனையும் முனிவர்களையும் வலம் வந்து, விவாகச் சடங்கு முறையை விவரிக்கும் நூல்களில் சொல்லப்பட்டபடி, விவாகக் கர்மாவைச் செய்து முடித்தார்கள். (கன்னிகைகளின்) மென்மையான கைகள் (வலிமைமிக்க) காகுத்தர்களின் கரங்களால் ஏற்கப்பட்டவுடன், பேரொளியுடன் கூடிய மலர்மாரி ஆகாயத்திலிருந்து பொழிந்தது; தேவலோக பேரிகைகள் முழங்கின; பாட்டும் வாத்திய சங்கீதமும் ஒலித்தன. (35–38)

கூட்டம் கூட்டமாக அப்சரசுகள் நடனமாடினார்கள்; கந்தர்வர்கள் இனிமையாகப் பாடினார்கள்! ரகு பரம்பரையில் தலைசிறந்து விளங்கிய அவர்களின் விவாகத்தின்போது இந்த அற்புதம் காணப்பட்டது. இவ்வாறாக வெளியே நாட்டியம்–பாட்டு–தாளம் என்று அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தபோது, பெரும்புகழ் கொண்ட அவர்கள் அக்னியை மூன்று தடவை வலம் வந்து, தத்தமது மனைவியரைக் கைப்பிடித்துத் தனதாக்கிக் கொண்டார்கள். பின்னர், ரகுநந்தனர்களான நால்வரும் மனைவியருடன் தங்கள் மாளிகைக்குச் சென்றார்கள். மன்னர் தசரதரும் பந்துபரிவாரங்களுடனும் முனிவர்களுடனும் தம்பதிகள் சென்ற காட்சியைப் பார்த்து ஆனந்தம் பொங்கியவராய் பின்தொடர்ந்து சென்றார். (39–41)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
எழுபத்து மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எழுபத்து நான்கு

பரசுராமரை எதிர்கொள்ளல்

அன்றிரவு கழிந்ததும் மாமுனிவர் விசுவாமித்திரர் ரகுகுல குமாரர்களை ஏராளமான ஆசிமொழிகளால் வாழ்த்திவிட்டு, இரு மன்னர்களிடமும் விடைபெற்றுக் கொண்டு, வடக்கிலுள்ள மலையை நோக்கிப் புறப்பட்டுச் சென்றார். விசுவாமித்திரர் சென்றவுடன் மிதிலை மன்னர் ஜனகரிடம் தசரத மன்னர் விடைபெற்றுக் கொண்டு, அயோத்தியை நோக்கி விரைவாகச் சென்றார். தன் பட்டணத்திற்குச் செல்லும் அவரைச் சிறிது தூரம் வரை விதேக மன்னர் பின்தொடர்ந்து சென்றார். (1,2)

பெண்களைக் கணவர்களுடன் அனுப்பி வைக்கும்போது விதேக நாட்டின் அரசர் ஏராளமான ஸ்ரீதனம் கொடுத்தார். பல இலட்சக்கணக்கான பசுக்களையும், சிறந்த கம்பளிகளையும், கோடிக்கணக்கான வெண்பட்டு ஆடைகளையும், தெய்விக வடிவுடைய நன்கு அலங்கரிக்கப்பட்ட யானை, குதிரை, தேர், காலாட்படைகளையும், குற்றேவல் செய்யும் ஆண்–பெண் பணியாளர்களையும், கன்னிகையின் பிதாவான ஜனகர் அவர்களுக்குக் கொடுத்தார். வெள்ளி, தங்கம், முத்து, பவழம் முதலியவற்றையும் மிக்க மகிழ்ச்சியுடன் ஸ்ரீதனமாகக் கணக்கில்லாமல் கொடுத்தார். ஏராளமான பொருட்களைக் கொடுத்து, தசரதரை வழியனுப்பிவிட்டு, மிதிலை மன்னர் மிதிலையில் தன் அரண்மனைக்குள் பிரவேசித்தார். அயோத்தியின் அதிபதி பெரும் புகழ் கொண்ட புத்திரர்களுடன் எல்லா முனிவர்களையும் முன்வரிசையில் நிறுத்தி, சேனை–பரிவாரங்களுடன் பயணத்தைத் தொடர்ந்தார். (3–7)

முனிவர் கூட்டத்துடனும், இராகவனுடனும் சென்று கொண்டிருந்த தசரதரை நாலாபக்கங்களிலிருந்தும் கோரமான ஒலிகளை எழுப்பிப் பறவைகள் எச்சரித்தன. பூமியில் சஞ்சரிக்கும் விலங்குகள் வலமாகவே சென்றன. இவைகளைப் பார்த்துவிட்டு அரசரில் புலிநிகர் தசரதர் வசிஷ்டரைக் கேட்டார்— ''பறவைகள் பயங்கரமாக அமங்கலமாகக் கூவுகின்றன; விலங்குகளும் வலமாகச் செல்கின்றன; என்னுடைய மனம் நடுங்குகிறது; மார்பு படபடக்கிறது. இது எதனால்?'' (8–10)

மன்னர் தசரதரின் இந்தப் பேச்சைக் கேட்டு, மாமுனிவர் ஆறுதலான வார்த்தைகளைக் கூறினார்— ''இதற்கு (இந்தச் சகுனங்களுக்கு) என்ன பலன்? என்பதைக் கேளுங்கள். பறவைகளின் ஒலிக்குறிப்பிலிருந்து தெய்வ சங்கல்பத்தின்படி பயங்கரமான அபாயம் காத்துக் கொண்டிருக்கிறது என்றும், விலங்குகளின் நடவடிக்கையிலிருந்து அந்த அபாயம் நீங்கிவிடும் என்றும் புலப்படுகிறது. எனவே, நீங்கள் மனக்கலக்கத்தை விட்டுவிடுங்கள்.'' (11,12)

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே பூமியை நடுங்கச் செய்து கொண்டும், பெரிய பெரிய மரங்களைக் கீழே சாய்த்துக் கொண்டும் கட்டுக்கடங்காத பேய்க்காற்று அங்கே ஏற்பட்டது. என்ன ஆச்சரியம்! சூரியன் இருளால் மறைக்கப்பட்டான்; திசைகள் எல்லாமே இல்லாமல் போய்விட்டன; அந்தப் படைகள் எல்லாம் புழுதியால் சூழப்பட்டு மறைக்கப்பட்டதாயிற்று. வசிஷ்டரும், மற்ற முனிவர்களும், மன்னரும், அவருடைய புதல்வர்களும் மட்டுமே அங்கே சுய உணர்வோடு இருந்தார்கள். மற்றவை எல்லாம் சுயநினைவை இழந்தன. (13–15)

பயங்கரமான அந்த இருளில் சாம்பல் பூசப்பட்ட அந்தப் படை, பயங்கரமான தோற்றத்துடன் சடாமுடி தரித்து, அரச குலத்தை அழிப்பவரான பிருகு வம்சத்தோன்றல் ஜமதக்னியின் குமாரரைப் பார்த்தது. கைலாசமலை போல் எதிர்கொள்ள முடியாதவர்; காலாக்னியைப் போல் பொறுக்க முடியாதவர்; கொழுந்து விட்டெரியும் நெருப்பைப்போல் தேஜஸின் பேரொளியால், பாமர ஜனங்களால் கண்ணால் பார்க்க ஒண்ணாதவர்; தோளில் கோடாரி மற்றும் மின்னற்கூட்டம்

போல் பளீரிடும் வில்; திரிபுரங்களை எரிப்பதற்காகப் புறப்பட்ட பரமசிவன் போல் கையில் சக்திமிக்க அம்பு. (16–18)

இவ்வாறு பயங்கரமான தோற்றம் கொண்டு கொழுந்துவிட்டெரியும் நெருப்பைப் போன்று ஜொலிக்கும் அவரைப் பார்த்ததும், மந்திரஜப ஹோமத்தில் ஆழ்ந்து ஈடுபட்டவர்களான வசிஷ்டர் முதலிய அங்கிருந்த முனிவர்கள் அனைவரும் தமக்குள் மெதுவாகப் பேசிக் கொண்டார்கள். ''தன்னுடைய தந்தை கொல்லப்பட்டதால் பழிக்குப் பழி வாங்கிக் கொண்டிருக்கும் இவர் க்ஷத்திரியரை (தசரதரின் குடும்பத்தினரை)க் கொல்வதற்காக வந்திருக்கிறாரோ, என்னவோ? முன்பே இவர் க்ஷத்திரியர்களை வதம் செய்து கோபத்தை ஒழித்துவிட்டவர்; வெறுப்பை விட்டுவிட்டவர். மறுபடியும் க்ஷத்திரியர்களைக் கொல்வது என்பது இவருடைய நோக்கமாக இருக்க முடியாது.'' (19–21)

இவ்வாறு தங்களுக்குள் பேசிக் கொண்டபின், (அதிதி பூஜைக்குரிய) அர்க்யம்–பாத்யம் எடுத்துக் கொண்டு, பார்ப்பதற்குப் பயங்கரமாக இருக்கும் அவரை, 'இராமா! இராமா!' என்று அன்பொழுக அழைத்தவண்ணம் முனிவர்கள் அவரிடம் வந்தார்கள். பராக்கிரமசாலியான அவர் முனிவர்களால் அளிக்கப்பட்ட உபசாரத்தை ஏற்றுக் கொண்டபின், தசரதராமனைப் பார்த்து, ஜமதக்னி மைந்தரான பரசுராமர் பேசலுற்றார். (22,23)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
எழுபத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எழுபத்தைந்து

வைஷ்ணவ வில்லின் மகிமை

''தசரதராமா! வீரனே! உன்னுடைய அற்புதமான ஆற்றலைப் பற்றிக் கேள்விப்பட்டேன். (சிவ) வில்லை முறித்த வரலாற்றையும் விவரமாகத் தெரிந்து கொண்டேன். வில்லை முறித்தல் என்ற உன்னுடைய செயல் மிகவும் ஆச்சரியகரமானது; சிந்தித்துப் பார்க்க முடியாதது. அதைக் கேட்டுவிட்டுத்தான் மங்களமான இன்னொரு வில்லை எடுத்துக் கொண்டு, நான் இங்கே வந்திருக்கிறேன். மிகவும் அஞ்சத்தக்கதும், ஜமதக்னியால் கொடுக்கப்பட்டதுமான இந்தப் பெரிய வில்லை வளைத்து நாணேற்றி, உன்னுடைய சொந்த பலத்தை எனக்குக் காட்டு. இந்த வில்லில் நாணேற்றுவதில் உன் தோள் திறமையைக் கண்ட பின்னர், 'இருவரிடையே போர்' என்ற முறைப்படி, நான், உன் வீரத்தை அங்கீகரிப்பதைப் போல உன்னுடன் தனி ஒருவனாகப் போரிடுகிறேன்.'' (1–4)

அவருடைய அந்தச் சொற்களைக் கேட்ட அரசர் தசரதர், கவலைதோய்ந்த முகத்துடன் இரங்கத்தக்கவராய் கைகளைக் கூப்பிக் கொண்டு வேண்டினார்— ''க்ஷத்திரியர்களின் மேலிருந்த கோபத்தை அழித்துவிட்டீர்கள். தாங்கள் அந்தணர்; மிக்க புகழ் பெற்றவர். சிறுபிள்ளைகளான என் புதல்வர்களுக்குத் தாங்கள் அபயம் அளிக்கவேண்டும். வேதபாராயணத்தையே வாழ்க்கை நெறியாகக் கொண்டிருக்கும் பிருகு முனிவரின் குலத்தில் தோன்றியவர், தாங்கள். இந்திரனிடம் வாக்குறுதி தந்து ஆயுதங்களைத் துறந்துவிட்டீர்கள். அறநெறியையே பின்பற்றி நடக்கும் தாங்கள், காசியபருக்கு இந்த பூதலத்தைத் தந்துவிட்டு, மகேந்திர மலையிலுள்ள காட்டை வாசஸ்தலமாகக் கொண்டீர்கள். மாமுனிவரே! தாங்கள், என்னை அடியோடு ஒழிப்பதற்காக வந்திருக்கிறீர்கள். இராமன் ஒருவன் மட்டும் கொல்லப்பட்டால் நாங்கள் யாரும் உயிர் பிழைத்திருக்க மாட்டோம்.'' (5–9)

இவ்வாறு தசரதர் சொல்லிக் கொண்டிருப்பதை எல்லாம் பராக்கிரமசாலியான பரசுராமர் செவியில் ஏற்றுக்கொள்ளாமல் இராமனை நோக்கியே பேசினார்— "மிக உயர்ந்த, தெய்விகமான, உலகப் புகழ்பெற்ற, உறுதியான, ஆற்றல்மிக்க, முதன்மையான, நன்கு வடிவமைக்கப்பட்ட இரண்டு விற்கள், முன்னர் விசுவகர்மாவினால் செய்யப்பட்டன. அதில் ஒன்றை, போர் செய்வதில் விருப்பமுள்ள முக்கண்ணரிடம் தேவர்கள் கொடுத்தார்கள். மாமனிதனே! எந்த வில் உன்னால் ஒடிக்கப்பட்டதோ, அதுதான் பரமசிவன் முப்புரங்களையும் எரித்த வில். எவராலும் நெருங்க முடியாத இரண்டாவது வில், தேவர்களால் விஷ்ணுவிற்குக் கொடுக்கப்பட்டது. விஷ்ணுவிடம் கொடுக்கப்பட்ட அந்த வில் (நான் கொண்டு வந்திருக்கிற) இதுதான். (10–13)

காகுத்தனே! இதுவும் ருத்ரனுடைய வில்லுக்கு ஈடான பெருமையைக் கொண்டது. அப்போது, தேவர்கள் எல்லோரும் பிதாமகரான பிரும்மாவிடம் சொன்னார்கள்— 'நீலகண்டர், விஷ்ணு ஆகியோரின் பலாபலத்தை ஒப்பிட்டுப் பார்க்க விரும்புகிறோம்.' தேவர்களின் எண்ணத்தைப் புரிந்து கொண்ட பிரும்மா, அவ்விருவருடைய ஆற்றலைத் தெரிந்து கொள்வதற்காகப் பகைமையை மூட்டினார். பகைமை முற்றி ஒருவரையொருவர் வெற்றி கொள்ள விரும்பிய நீலகண்டர்–விஷ்ணுவினிடையே மயிர்க்கூச்சலை உண்டாக்கும் மாபெரும் போர் உண்டாயிற்று. அப்போது பேராற்றல் கொண்ட சிவதனுஸ் (விஷ்ணுவின்) ஹுங்கார ஒலியினாலேயே செயலிழந்து போயிற்று. அதைப்போல முக்கண்ணரான மகாதேவர் மரக்கட்டைபோல் ஆனார். (14–17)

அப்போது முனிவர்–சாரணர்களோடு தேவர்கள் ஒன்றுகூடிப் பிரார்த்தித்தார்கள்; முதன்மையான தேவதைகளான அவ்விருவரும் சாந்தம் அடைந்தார்கள். விஷ்ணுவினுடைய சக்தியால் சிவன் கையிலிருந்த வில் செயலிழக்கச் செய்யப்பட்டதைப் பார்த்து, முனிவர் கூட்டங்களும் தேவர்களும் விஷ்ணுவை உயர்ந்தவராகக் கருதினார்கள். (18,19)

கோபம் கொண்ட ருத்ரன், விதேக மன்னர்களில் பெரும்புகழ் கொண்ட ராஜரிஷி தேவராதன் கையில், அம்புகளுடன் (தன்னுடைய) வில்லைக் கொடுத்தார். இராமா! விஷ்ணுவால் கையாளப்பட்ட இந்த வில் தனக்குமேல் வேறொன்றில்லாதது; வெற்றியைக் கொடுப்பது. பிருகு குலத்தில் தோன்றிய ரிசீகரிடம் ஒப்புயர்வில்லாத வைப்புப் பொருளாக ஒப்படைக்கப்பட்டது. ஆன்மபலம் பொருந்திய ரிசீகர், யாராலும் செய்ய முடியாத கர்மாக்களைச் செய்தவரும், மகாத்மாவும், என்னுடைய தந்தையுமான ஜமதக்னியிடம் தெய்வ நலம் திகழும் இதனைக் கொடுத்தார். (20–22)

என்னுடைய தந்தையார் அஸ்திரங்களைத் துறந்து, தவவலிமையில் ஈடுபட்டிருந்தபோது, அற்ப புத்திகாரனான (கார்த்தவீர்ய) அர்ஜுனன் அவரைக் கொன்றுவிட்டான். வேறெங்கும் கேட்டறியாததும் பயங்கரமானதுமான என் தந்தையின் கொலையைக் கேட்டு, கோபம் பொங்கியெழுந்தவனாக, க்ஷத்திரிய மன்னர்கள் தோன்றத் தோன்ற எத்தனையோ முறை (அவர்களைக்) கொலை செய்து பழிவாங்கினேன். (மன்னர்களைத் தொலைத்து, அவர்கள் அரசை ஏற்றதனால் பெற்ற) இவ்வையகம் முழுவதையும், நான் செய்த கொலை பாதகத்திற்குக் கழுவாய் தேடுவதற்காக, மேற்கொண்ட சாந்தியக்ஞ கர்மாவின் முடிவில் காசியபருக்குத் தட்சிணையாகக் கொடுத்துவிட்டு, தவவலிமையை வளர்த்துக் கொள்வதற்காக மகேந்திர மலைக்குச் சென்றுவிட்டேன். (23–25)

இராமா! இந்த வில்தான் என்னுடைய தந்தை–பாட்டனார்களால் காப்பாற்றப்பட்டு வந்த விஷ்ணு கையாண்ட வில். க்ஷத்திரியர்களுடைய தருமத்தின்படி, உத்தமமான இந்த வில்லை கையினால் தூக்கிக் காட்டு. எவராலும் வெற்றி கொள்ள முடியாத அம்பை, உத்தமமான

இந்த வில்லில் இணைத்து நாணேற்று. காகுத்தா! உன்னால் அவ்விதம் செய்ய முடிந்தால், அதைப் பார்த்த பின்னர் உன்னுடன் 'ஒருவருடன் ஒருவர்' என்ற துவந்துவ யுத்தம் செய்கிறேன்.'' (26,27)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
எழுபத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எழுபத்தாறு

பரசுராமர் தோற்றார்!

ஜமதக்னியின் மைந்தரான பரசுராமரின் சொற்களைக் கேட்டார், தசரதராமன். தந்தையிடம் இருந்த மரியாதையால் அதுவரையில் வாய் திறவாமலிருந்த அவர், பரசுராமரிடம் இப்போது கூறினார்— (1)

''பிருகு குலத் தோன்றலே! தாங்கள் தங்கள் தந்தைக்குப்பட்டிருந்த கடனைத் தீர்ப்பதற்காக, என்ன (கொடூரமான) கர்மா செய்தீர்கள் என்பதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். பிராமணரே! அதை நாங்கள் முறையானதாகவே கருதுகிறோம். பார்க்கவரே! ஆண்மை இல்லாதவன், க்ஷத்திரிய தருமத்தை அனுசரிப்பதற்கான ஆற்றலில்லாதவன் என்றெல்லாம் என் வீரத்தை அவமதித்திருக்கிறீர்கள் அல்லவா? இப்போது என்னுடைய பராக்கிரமத்தை (தங்கள் கண்களாலேயே) பாருங்கள்.'' (2,3)

இவ்வாறு கூறிவிட்டு அரிய செயல்களை விளையாட்டாகவே செய்யும் திறன் பெற்ற இராகவன், கோபத்தோடு பரசுராமருடைய கையிலிருந்து வில்லையும் அம்பையும் கைப்பற்றினார். (கூடவே, வைஷ்ணவ சக்தியும் தானாகவே இராமனிடம் சென்றது.) இராமன் அந்த வில்லை வளைத்து, நாணேற்றி, அம்பைப் பொருத்தினார். ஆகா! பிறகு ஜமதக்னியின் குமாரரான பரசுராமனைப் பார்த்து, இராமன் சினத்துடன் கூறினார்— (4,5)

''நீங்கள் பிராமணர் என்ற காரணத்தால் என்னால் வணங்கத்தக்கவர். அத்துடன் விசுவாமித்திரருக்கு உறவினர். (விசுவாமித்திரர், உங்கள் தந்தையாருக்கு தாய்வழி மாமன்.) அதனால், உங்கள்மேல் உயிரை வாங்கும் இந்த அம்பினைச் செலுத்த முடியாதவனாக இருக்கிறேன். பரசுராமரே! (மூவுலகங்களிலும் தங்குதடையில்லாமல் செல்லும்) உங்கள் பாதங்களைக் கட்டுப்படுத்தி நகரவொட்டாமல் செய்தல்; உங்கள் தவவலிமையால் பெறப்பட்டுள்ள ஒப்புயர்வில்லாத புண்ணிய லோகங்களை அழித்தல் – இவை இரண்டில் நீங்கள் எதை விரும்புகிறீர்கள்? இந்த பாணம் (நான் வில்லில் தொடுத்திருக்கிறேனே, அது) விஷ்ணு பகவான் சம்பந்தமுடையது; தெய்விகமானது; பலத்தால் ஏற்படும் இறுமாப்பை அழிக்கக் கூடியது. இது தன் வீர்யத்தால் இலக்கினைத் தாக்காமல் பயனின்றி வீணாகக் கீழே விழாது.'' (6–8)

உத்தமமான ஆயுதத்தை (வைஷ்ணவ வில்லை) ஏந்திக் கொண்டிருக்கும் ஸ்ரீராமனைத் தரிசிப்பதற்காக, எல்லா தேவர்களும் முனிவர் கூட்டங்களும் பிதாமகர் பிரும்மாவை முன்னிட்டுக் கொண்டு அங்கே கூடினார்கள். கந்தர்வர், அப்சரசுகள், ஸித்த–சாரண–கின்னரர்கள், யட்ச–ராட்சஸ–நாகர்களும் மகா அற்புதமான அந்தக் காட்சியைக் காண்பதற்காக, அங்கே வந்து சேர்ந்தார்கள். மிகச்சிறந்த வில்லைக் கையில் ஏந்தி நிற்கும் இராமபிரானைப் பார்த்து மக்கள் அனைவரும் ஸ்தம்பித்து நின்றார்கள். பேராற்றலைப் பறிகொடுத்துவிட்ட ஜமதக்னியின் புதல்வரான பரசுராமர், ஸ்ரீராமனைக் கண்கொட்டாமல் பார்த்தார். (9–11)

இராமனின் அளப்பரிய ஆற்றலால் தன் வீர்யம் அழிக்கப்பட்டதால் பார்க்கவ ராமர் உணர்வற்றுப் போனார். பின்னர், (ஒருவாறு உணர்வு பெற்று) மிகவும் நிதானமாக தாமரைக்கண்ணன் இராமனைப் பார்த்து (பின்வருமாறு) சொன்னார்— (மிகுந்த இறுமாப்புடன் பேசிய அவர்தான் எவ்வளவு குன்றிப் போய்விட்டார்!) ''இந்தப் பூவுலகம் என்னால் முன்பு (யாக தட்சிணையாக) காசியபருக்குக் கொடுக்கப்பட்டது. 'என்னுடைய நாட்டில் நீ இருக்கக்கூடாது' என்று என்னிடம் காசியபர் சொன்னார். நான் அவ்வாறு தடைவிதிக்கப்பட்டதால் குருவின் ஆணையை ஏற்று மண்ணுலகில் இரவில் தங்குவதில்லை. காகுத்தனே! இந்தப் பூமி காசியபருக்கு உரியதாகி விட்டதல்லவா? அதனால், அந்தப் பிரதிக்ஞை (இரவில் தங்க மாட்டேன் என்பது) என்னால் செய்யப்பட்டது. (12–14)

வீரராகவனே! ஆகவே, என் கால்களின் சஞ்சாரத்தைத் தடுக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். காற்றினும் கடிய மனோவேகத்தில் சிறந்த பர்வதமான மகேந்திர மலைக்குச் சென்று விடுகிறேன். ஒப்பற்ற புண்ணிய உலகங்கள் என்னுடைய கடுமையான தவத்தினால் வசப்படுத்தப்பட்டுள்ளன. அவைகளையெல்லாம் சிறந்த பாணத்தைச் செலுத்தி, என்னிடமிருந்து விலக்கிவிடு. (அவைகள் மீது எனக்கு உரிமை இல்லாமற்போகட்டும்.) காலதாமதம் வேண்டாம். இந்த வில்லில் பாணத்தைப் பூட்டியதிலிருந்தே நீ தேவோத்தமனும் குறைவில்லாதவனும் மது என்ற அரக்கனை அழித்தவனுமான சாட்சாத் மகாவிஷ்ணு என்பதைப் புரிந்து கொண்டேன். எதிரிகளை மாய்ப்பவனே! உனக்கு மங்களம் உண்டாகட்டும். (15–17)

இங்கே குழுமியுள்ள தேவர்கள் எல்லோரும் பிறரால் செய்ய முடியாத செயல்களைச் செய்பவர் என்றும், போரில் நிகரில்லாத ஒருவன் நீயே என்றும் பிரமிப்புடன் உன்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். காகுத்தனே! மூன்று உலகத்திற்கும் தனிப் பெரும் தலைவனான உன்னால் நான் தோற்கடிக்கப்பட்டேன் என்பது எனக்கு அவமானத்தைத் தரக்கூடிய விஷயமல்ல. இராமா! நல்ல நியமங்களைக் கடைப்பிடிப்பவனே! ஒப்பற்ற (வில்லில் கோர்த்துள்ள) பாணத்தைச் செலுத்துவாய். பாணம் விடுபட்டவுடன் உத்தம பர்வதம் மகேந்திரமலைக்குச் செல்வேன்.'' (18–20)

இவ்வாறு பராக்கிரமம் மிக்க ஜமதக்னியின் குமாரர் பரசுராமர் சொன்னவுடன் திருவளர் நாயகன் தசரதராமன் உத்தம பாணத்தை விட்டார். தன்னுடைய தவ மகிமையால் பெறப்பட்ட நல்லுலகங்களெல்லாம் இராமனால் அபகரிக்கப்பட்டு விட்டதைப் பார்த்தவுடன், சிறந்ததான மகேந்திர பர்வதத்தை நோக்கி விரைந்தார், பரசுராமர். உடனே, எட்டுத் திசைகளிலும் இருள் விலகி ஒளி வீசத் தொடங்கியது. கையில் தூக்கி நிறுத்திய வில்லுடன் நிற்கும் இராமனை, தேவர்களும் ரிஷிகணங்களும் மிகவும் கொண்டாடினார்கள். தசரதராமனை பரசுராமர் புகழ்ந்துரைத்தார். (இராமனை) பிரதட்சிணம் செய்துவிட்டு, தன் ஆன்மலாபத்திற்கான வழியில் (மகேந்திரமலைக்குச்) சென்றார். (21–24)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
எழுபத்தாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எழுபத்தேழு

அயோத்திக்கு வந்தார்கள்!

பரசுராமர் அவ்விடத்திலிருந்து சென்றதும் தசரதராமன் மன அமைதி அடைந்து, (அவ்விடத்தில்) யார் கண்ணிலும் புலப்படாமலிருந்த வருணனின் கையில் அந்த வில்லையும்

பாணத்தையும் கொடுத்தார். பின்னர், வசிஷ்டர் முதலான முனிவர்களை வணங்கி, கவலையோடு இருக்கும் தந்தையைப் பார்த்து ரகுநந்தனர் (பின்வருமாறு) சொன்னார்— (1,2)

''பரசுராமர் சென்றுவிட்டார். (கவலையை விடுங்கள்.) தலைவரான தங்கள் அரவணைப்பில் இருக்கும் நால்வகைப் படைகளும் அயோத்தியை நோக்கிப் பயணப்படட்டும்.'' மைந்தன் இராமனுடைய சொற்களைக் கேட்ட மன்னர் தசரதர், இராகவனை இரு கைகளாலும் கட்டித் தழுவி உச்சிமுகர்ந்தார். 'பரசுராமர் போய்விட்டார்' என்பதைக் கேட்டு உள்ளம் பூரித்து மகிழ்ந்த மன்னர், தானும் புத்திரர்களும் மறுபிறவி எடுத்ததாகவே கருதினார். விரைவில் (அயோத்தி) நகரத்தை நோக்கிச் செல்லும்படி, அந்தப் படைகளுக்கு உத்தரவிட்டார். (3–6)

அழகான கொடி–தோரண–பாவட்டங்களால் அலங்கரிக்கப்பட்டதும், மங்களமான வாத்தியங்களின் ஒலி நிரம்பியதும், நீர் தெளிக்கப்பட்ட சீரான அரசபாட்டைகளை உடையதும், மலர்க்குவியல்கள் இறைக்கப்பட்டதும், மன்னரின் வருகையால் மலர்ந்த முகத்தோடு விளங்குகின்ற ஊர்மக்களாலும் ஆசீர்வாத கோஷங்களை எழுப்புகின்றவர்களாலும் நிரம்பியதும், கூட்டம் கூட்டமாக மக்கள் அணி செய்து கொண்டிருந்ததுமான நகரத்திற்குள் மன்னர் பிரவேசித்தார். (7,8)

நகரப் பொதுமக்களும், நகரத்தில் வசித்துக் கொண்டிருந்த அந்தணப் பெரியோர்களும் சிறிது தூரம் முன்னேயே சென்று வரவேற்க, திருவளர் நாயகர்களான புதல்வர்கள் பின்தொடர, பெரும் புகழ் கொண்ட மன்னர் இமாலயம் போல் விளங்கிய தனக்குப் பிரியமான தன் மாளிகைக்குள் பிரவேசித்தார். எல்லா விருப்பங்களையும் நிறைவேற்றும் வசதிகளுடன் கூடிய மாளிகையில் தன் உற்றார்–சுற்றத்தாரோடு மகிழ்ச்சியுடன் இருந்தார், மன்னர். (9,10)

கௌசல்யையும் சுமித்திரையும் நல்லிடையாளான கைகேயியும் மற்றுமுள்ள அரச பத்தினிகளும் மருமகள்களுடன் பேசிப் பழகுவதில் மூழ்கிப் போனார்கள். பெரும் பாக்கியசாலியான சீதையையும், புகழ் கொண்ட ஊர்மிளையையும் மற்றும் குசத்வஜருடைய இரு பெண்களையும் மன்னரின் பத்தினிகள் அன்புடன் வரவேற்று அழைத்துச் சென்றார்கள். (11,12)

வெண்பட்டு உடுத்திக் கொண்டு சோபையுடன் விளங்கிய அவர்களனைவரும் மாளிகைக்குள் இருந்த தேவாலயங்களில் மங்களச் சொற்களால் தெய்வங்களை வழிபட்டார்கள். அந்த அரசகுமாரிகள் வணங்கத்தக்கவர்களை வணங்கினார்கள். அவர்கள் தனிமையில், கணவன்மார்களோடு கூடியவர்களாய் மகிழ்ச்சியுடன் இன்பம் அனுபவித்தார்கள். கனிவான உள்ளம் படைத்த அரசகுமாரர்கள் உலகில் நிகரற்ற வீரியம் படைத்தவர்களாக, மனைவிகளை அடைந்தவர்களாக, அஸ்திர–சஸ்திரப் பிரயோகத்தில் வல்லுநர்களாக, செல்வச் செழிப்புடையவர்களாக, நல்ல நண்பர்களுடன் கூடியவர்களாக இருந்து வந்தார்கள். அறம் அறிந்த ஆணேறுகளான அவர்கள் தந்தைக்குப் பணிவிடை செய்துகொண்டு, உரிய காலங்களில் தம் குருமார்களை (தமது வினயத்தால்) மகிழ்வுறச் செய்தார்கள். (13–16)

சிறிது காலம் சென்றபின், மன்னர் தசரதர் தன் மகனும் கைகேயியின் மைந்தனுமான ரகுநந்தனன் பரதனிடம் கூறினார்— ''பிள்ளாய்! கேகய மன்னரின் புதல்வனும், உன்னுடைய மாமனுமான யுதாஜித் உன்னை அழைத்துக் கொண்டு போவதற்காக, இங்கே தங்கியிருக்கிறான்.'' தசரதர் இவ்வாறு சொன்னதும், கைகேயியின் மைந்தன் பரதன் சத்ருக்னனுடன் (கேகய நாடு) செல்வதற்கு ஆயத்தமானான். சூரனான அவன் தந்தையிடமும், யாருக்கும் துன்பம் தராத இராமனிடமும், தாய்மார்களிடமும் விடைபெற்றுக் கொண்டு, சத்ருக்னனுடன் சென்றான். மனமகிழ்ந்த யுதாஜித் பரதனோடு சத்ருக்னனையும் அழைத்துக் கொண்டு, (கேகய நாட்டில்) தன் நகரத்திற்குள் பிரவேசித்தான். (அவர்களைக் கண்டு) அவனுடைய தந்தை மிகவும் சந்தோஷப்பட்டார். (17–21)

பரதன் சென்றதும் இராமனும் பலசாலியான லட்சுமணனும் தெய்வத்திற்கொப்பான தந்தைக்குத் தேவைப்பட்ட பணிவிடைகளைச் செய்து வந்தார்கள். அறவடிவினரான இராமன் தந்தையின் கட்டளைகளைச் சிரமேற்கொண்டு, நகர மக்களின் நல்வாழ்விற்கும் மகிழ்ச்சிக்கும் தேவையான பணிகளைச் செய்து வந்தார். மிகுந்த கவனத்துடன் அன்னைகளுக்குத் தேவையான பணிவிடைகளையும், குருமார்களுக்கு உகந்த பணிவிடைகளையும் அந்தந்தக் காலங்களுக்கேற்ப செய்து வந்தார். (22–24)

இவ்வாறு, இராமனின் நற்குணங்களால் தசரதர் திருப்தியடைந்தார். அந்தணர்கள், பட்டணத்து ஜனங்கள், நாட்டு மக்கள் ஆகிய அனைவரும் அவ்வாறே மனமகிழ்ந்தார்கள். பிராணிவர்க்கங்களுக்கு எவ்வாறு பிரும்மதேவர் மிகவும் போற்றுதலுக்குரியவரோ, அவ்வாறே மிகப் புகழ்பெற்ற, வீண்போகாத பராக்கிரமத்தையுடைய, மிக அருமையான குணங்களைப் பெற்ற ஸ்ரீராமன், நான்கு குமாரர்களில் மிகவும் அன்புக்குரியவராக இருந்தார். (25,26)

இராமன் சீதையுடன் பல ஆண்டுகள் சுகமாக இருந்தார். அன்புள்ளம் கொண்ட அவர் எப்போதும் அவளிடம் அன்பு கொண்டவராக, தன் மனத்தில் இடம் கொடுத்திருந்தார். இராமனுக்குப் பிரியமான சீதை, அவள் தந்தையால் (ஜனகரால்) மனமொப்பிக் கொடுக்கப் பட்டவள் என்பதாலும், அவளுடைய நற்குணங்களாலும் பேரழகினாலும் கவரப்பட்டாள். அவளிடம் மேலும் மேலும் அன்பு வளர்ந்து கொண்டே இருந்தது. அவளுடைய இதயத்தில், அவள் கணவருக்கு அவளிடம் இருந்ததைப் போல் இரு மடங்கு பிரியம் இருந்தது. மனத்திற்குள் இருந்தவைகளும் வெளியில் சொல்லப்பட்டவைகளுமான எல்லா விஷயங்களையும் அவர்களுடைய இதயங்கள் பரஸ்பரம் புரிந்துகொண்டன. (27–29)

தேவதைகளுக்கு ஒப்பான ரூப லாவண்யம் பெற்றவளும், ஜனகர் புதல்வியும், மிதிலையில் தோன்றியவளும், லட்சுமிதேவியின் தோற்றப் பொலிவுள்ளவளுமான சீதை மேன்மேலும் அவருடைய அன்புக்குரியவளானாள். ராஜரிஷியின் புதல்வரான அந்த ஸ்ரீராமன், மிகவும் மனங்கவர்பவளும், பேரன்பு கொண்டவளும், மிகச்சிறப்பான அரசரின் கன்னிகையுமான அவளுடன் சேர்ந்து மிகுந்த சோபையுடன் விளங்கிய திருக்காட்சி தேவாதிதேவனும், எங்கும் நிறைந்தவருமான மகாவிஷ்ணு லட்சுமியோடு சேர்ந்திருப்பதைப் போல் இருந்தது. (30,31)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டத்தில்
எழுபத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

பால காண்டம் முற்றிற்று.

॥ ஸ்ரீஹரி: ॥

அயோத்தியா காண்டம்

ஸர்க்கம் : ஒன்று

இளவரசுப் பட்டம்

சீலம் மிகுந்தவனான பரதன், மாமன்(மார்களைச் சேர்ந்த உறவினர்களைப் பார்ப்பதற்காக, அவர்கள்) வீட்டிற்குப் போகும்போது, நித்தியவைரிகளான ஐந்து புலன்களை அடக்கிய சத்ருக்னன் மிகவும் ஆசையுடன் அழைத்துச் செல்லப்பட்டான். அவன், அங்கே சகோதரனுடன் எல்லாவிதச் சுக–சௌகரியங்களும் கொடுத்து உபசரிக்கப்பட்டு இருந்து வந்தான். மாமன் யுதாஜித், அவர்களைத் தன் சொந்த பிள்ளைகளைப் போல் கருதிக் கொஞ்சிக் குலாவினார். தங்களுடைய எல்லா விருப்பங்களும் நிறைவேற்றப்பட்டவர்களாக இருந்தபோதிலும், வீரர்களான சகோதரர்கள் இருவரும் வயோதிக மன்னரான (தமது தந்தை) தசரதரைப் பற்றியே எண்ணிக் கொண்டிருந்தார்கள். (1–3)

அந்த மன்னரும் மகேந்திரன்–வருணனுக்கு ஒப்பானவர்களும், வெளிநாட்டில் வசித்துக் கொண்டிருப்பவர்களுமான குமாரர்களைப் பற்றியே கவலை கொண்டிருந்தார். (தேவேந்திரனும் வருணனும் அளவிட முடியாத நட்புடையவர்கள்; அவர்களிடையே விரோதமே தோன்றாது – என்பது புராண வரலாறு.) அவருடைய ஆண்காளைகளான நான்கு புத்திரர்களும் மிகவும் அன்புக்குரியவர்கள். தன் சரீரத்திலிருந்து தோன்றிய நான்கு கைகளைப் போன்றவர்கள். அந்நால்வருள் பராக்கிரமசாலியான இராமன், எல்லா நற்குணங்களும் நிரம்பி, தந்தையினுடைய அளவற்ற மகிழ்ச்சிக்குக் காரணமாகி, உயிர்களுக்குப் பிரும்மா போல மிகவும் நெருக்கமானவராக இருந்தார். (4–6)

கொடியவனான இராவணனுடைய வதத்தை விரும்பிய தேவர்களால் பிரார்த்திக்கப்பட்ட, ஆதிமூலம் அறியமுடியாத விஷ்ணு பகவானே, மானிடர் உலகில் அந்த ஸ்ரீராமனாகப் பிறந்திருக்கிறார். எல்லையற்ற தெய்விக ஒளிவீசும் அவரைக் குழந்தையாகப் பெற்ற கௌசல்யை – தேவர்களுள் இந்திரனைப் பெற்ற அதிதிதேவியைப்போல – பெருமையுடன் விளங்கினார். ஸ்ரீராமன் வீரத்தோடு கூடியவர்; அழகிய தோற்றமுடையவர்; எவரிடமும் வெறுப்புக் கொள்ளாதவர்; பூதலத்தில் உவமையில்லாதவர்; குணங்களால் தசரதருக்கு நிகரான மைந்தர். (7–9)

அவர் எப்போதும் சித்தம் கலங்காதவர்; அன்புசொட்டப் பேசுபவர்; கடுமையான வார்த்தைகளால் தாக்கப்பட்டக் காலங்களிலும்கூட, அதேபோல கடுமையான சொற்களால் பதில் சொல்லாதவர்; எப்போதோ செய்யப்பட்ட ஏதோவொரு சிறு உதவியாலும் திருப்தி அடைபவர்; பிறர் செய்த நூற்றுக்கணக்கான குற்றங்களையும், தன்னுடைய மேலாண்மை திறத்தினால் நினைவில் வைத்துக் கொள்ளாதவர்; ('யாரும் எவ்வித அபகாரமும் செய்து, இவருக்குத் தீங்கு செய்ய முடியாது' என்பது அவருக்கே தெரியும் – என்றபடி.) நாள்தோறும் அஸ்திரப்பயிற்சி செய்து வருபவர்; ஆனால், பயிற்சியின் இடைவெளிகளில் குண–ஞான–வயது முதிர்ச்சி பெற்ற மேலோர்களுடன் பேசிப் பழகி, தன் அறிவைப் பல துறைகளிலும் வளர்த்துக் கொள்பவர்; (10–12)

அறிவுள்ளவர்; முதலில் பேசுபவர்; அன்பான சொற்களைச் சொல்பவர்; வீரம் மிக்கவர்; ஆனால், தன்னுடைய மகத்தான வீரத்தைக் கண்டு வியப்பு (இறுமாப்பு) அடையாதவர்; உண்மையல்லாதவற்றைப் பேசாதவர்; மெத்தக் கல்வி கற்றவர்; முதியவர்களை மரியாதையுடன் நடத்துபவர்; குடிமக்களால் பேரன்பு கொண்டு பாராட்டப்படுபவர்; குடிமக்களுக்குப் பிரியமானதைச் செய்து, அவர்களை மகிழ்விப்பவர்; ஏழைகளிடம் அன்புடையவர்; சினத்தை வென்றவர்;

வேதியர்களை வழிபடுபவர்; துன்பப்படுகிறவர்களிடம் இரக்கம் காட்டுபவர்; அறம் அறிந்தவர்; புலன்களை அடக்கியவர்; உள்ளும் புறமும் தூய்மையானவர்; (13–15)

தன் பரம்பரைக்கேற்ற சிந்தனை உடையவர்; தனது க்ஷத்திரிய தருமத்தை உயர்வாகக் கருதுபவர்; 'அளவில்லாத புகழைப் பெறுவதே உன்னதமான சுவர்க்கத்திற்கு ஈடானது' என்ற கொள்கை உடையவர்; நன்மையைத் தராத விஷயங்களிலும், அறவழியைக் காட்டாத வரலாறுகளிலும் பற்றில்லாதவர்; தர்க்கத்தில், எதிராளியின் கேள்விகளுக்கு அடுக்கடுக்காகப் பதில் சொல்லும் ஆற்றலில் பிருகஸ்பதிக்கு ஒப்பானவர்; நோய் இல்லாதவர்; முறுக்கான வாலிபர்; சொல்லாற்றல் உடையவர்; உடற்கட்டுக் கொண்டவர்; இடம் மற்றும் காலச் சூழ்நிலைக்கேற்ப நடப்பவர்; 'உலகில் மனிதத் தத்துவங்களையெல்லாம் அறிந்த ஒரே ஓர் உத்தம மனிதராக, இவரையே பிரும்மா படைத்தாரோ?' என்று சொல்லத்தக்கவர்; (16–18)

அரசகுமாரரான அவர், எல்லாவித உயர்குணங்களும் நிரம்பியவர்; அதனால், குடிமக்களின் பேரன்பைப் பெற்று, அவர்களது உடலுக்கு வெளியே உலவுகின்ற உயிரைப் போன்றவர்; பரதனின் மூத்த சகோதரரான அவர், முறைப்படி கல்விப் பயிற்சி நிறைவுச் சடங்குகளைச் செய்துவிட்டவர்; முறைப்படி வேத–வேதாங்கங்களை அறிந்தவர்; வில் வித்தையிலும் அஸ்திர வித்தையிலும் தந்தையைக் காட்டிலும் மேலானவர்; எல்லா நற்குணங்களுக்கும் விளைபூமி; குற்றமற்ற பரம்பரையில் தோன்றியவர்; இரங்கத்தக்க நிலையில் இல்லாதவர்; உண்மை பேசுபவர்; நேர்மையானவர்; தருமம், அர்த்தம் – இவற்றை நுட்பமாக அறிந்த முதிய அந்தணர்களால் நன்னெறிகள் பயில்விக்கப்பட்டவர்; (19–21)

தருமம், அர்த்தம், காமம் – இவற்றின் சூட்சுமம் அறிந்தவர்; நினைவாற்றல் உடையவர்; மேதாவி; உலக விவகாரங்களைத் தெரிந்து கொள்வதில் சமர்த்தர்; காலச் சூழ்நிலைக்கேற்ப தருமானுஷ்டானங்களைக் கைக்கொள்வதில் தேர்ச்சி பெற்றவர்; பணிவுள்ளவர்; தன் எண்ணங்களை மனத்திற்குள்ளேயே மறைத்துக் கொள்பவர்; ஆலோசனை ரகசியங்களைப் பகிரங்கப்படுத்தாதவர்; உதவிக்கு ஓடிவரும் சிறந்த நண்பர்களை உடையவர்; வீண்போகாத கோபமும் மகிழ்ச்சியும் உடையவர்; (கோபத்திற்குக் காரணமாக இருந்தவருக்குத் தண்டனையும், மகிழ்ச்சிக்குக் காரணமாக இருந்தவருக்குப் பரிசும் கிடைக்கும்.) பொருட்களைக் கொடுக்க வேண்டிய சமயத்தையும், சேர்க்க வேண்டிய காலத்தையும் நன்கு அறிந்தவர்; (22,23)

உறுதியான பக்தியும் நிலையான ஞானமும் உடையவர்; தீயோரையும் தீயனவற்றையும் நெருங்க விடாதவர்; பண்பில்லாத சொற்களைக் கூறாதவர்; சோம்பலில்லாதவர்; கவனக்குறைவு இல்லாதவர்; தன் குற்றங்களையும் பிறர் குற்றங்களையும் அறிந்தவர்; (ஆனால், குற்றங்களைப் பலர் முன்னிலையில் அம்பலப்படுத்தித் தலைகுனியச் செய்பவர் அல்லர்.) சாஸ்திரங்களை அறிந்தவர்; நன்றி மறவாதவர்; மனித இயல்புகளின் வேறுபட்ட நிலைகளை உணர்ந்தவர்; ஒரு மனிதனை ஆராய்ந்து தம்முடன் சேர்த்துக் கொள்வதிலும், முறைப்படி அவனை ஆதரிப்பதிலும் நிபுணர்; (24,25)

மேன்மக்களைப் பாதுகாப்பதிலும், அல்லாதவர்களை அடக்குவதிலும் சரியான காலக்கணக்கு உடையவர்; கருவூலத்திற்குப் பொருள் வரவைப் பெருக்குவதற்கான வழிமுறைகளையும், அனுமதிக்கப்பட்ட செலவினங்களையும் அறிந்தவர்; தொன்மையான சாஸ்திர நூல்களிலும், நாட்டு மொழிகள் கலந்த அறநூல்களிலும் சிறந்தவற்றைக் கற்றறிந்தவர்; அறம்–பொருள் நாடி முறையான இன்பம் அனுபவிப்பவர்; சுணக்கம் இல்லாதவர்; பொழுதுபோக்காக மனம் களிக்கச் செய்யும் இசை, சிற்பம் போன்றவைகளின் நுட்பங்களை அறிந்தவர்; 'வருமானத் தொகையை எவ்வாறு பங்கிட்டுச் செலவழிக்க வேண்டும்' என்பதை அறிந்தவர்; யானை–குதிரைகளின் மேல் ஏறிச் சவாரி செய்வதிலும், அவைகளை அடக்கிப் பயிற்சிக் கொடுப்பதிலும் ஈடுபட்டவர்; (26–28)

வில்வித்தையை அறிந்தவர்களுள் முதன்மையானவர்; உலகத்தினரால் 'அதிரதர்' என்று ஒப்புக்கொள்ளப்பட்டவர்; எதிரிப்படையை எதிர்கொண்டு தாக்குபவர்; சிதற அடிப்பவர்; படைகளை அணிவகுப்பதில் வல்லவர்; போர்க்களத்தில் சினங்கொண்ட தேவர்களாலும் அசுரர்களாலும் வெற்றிகொள்ள முடியாதவர்; எவரிடமும் வெறுப்பில்லாதவர்; கோபத்தை வென்றவர்; அகங்காரம், பொறாமை இல்லாதவர்; எந்தப் பிராணியையும் அவமதிப்பவர் அல்லர்; காலச் சூழ்நிலைக்கு அடிபணியாமல் எந்த நிலையிலும் கலங்காதவர் – இவ்வாறாக, மன்னரின் மைந்தரான இராமன், எல்லா நல்ல குணங்களும் உடையவராக இருந்தார். (29–31)

நற்குணங்களின் உறைவிடமான அவர், மூன்றுலக மக்களாலும் நேசிக்கப்பட்டார்; 'ஸ்திரமான பொறுமை' போன்ற குணங்களால் பூமித்தாய்க்கு ஒப்பானவர்; அறிவினால் பிருகஸ்பதிக்கும், வீரத்தினால் இந்திரனுக்கும் நிகரானவர். (இவ்வாறு இராமன்,) தன் கிரணங்களால் சூரியன் பிரகாசிப்பதைப் போல எல்லாக் குடிமக்களின் மனத்தைக் கவரும் நற்குணங்களால், தந்தைக்கு தன்னிடம் மேலும் அன்பைப் பெருக்கிப் புகழொளியுடன் விளங்கினார். இவ்வாறு ஒழுக்கமான நடத்தை உள்ளவரும், எவராலும் வெற்றிகொள்ள முடியாத அளவிற்கு எல்லையற்ற பராக்கிரமம் பொருந்தியவரும், லோகபாலர் போன்றவருமான அவரை இப்பூவுலகம் (நாட்டுப் பிரஜைகள்) விரும்பியது. (தன்னை ஆட்சி செய்யவேண்டும் என்று ஆவலுற்றது.) (32–34)

இவ்வாறான ஒப்புவமையில்லாத நற்குணங்களைப் பெற்றிருந்த புதல்வனைக் கண்டு, எதிரிகளை வாட்டும் மன்னர் தசரதர் மனத்தில் ஆலோசிக்கத் தொடங்கினார். நீண்ட நெடுங்காலமாக வாழ்ந்து கொண்டு அரசு செலுத்தி, முதுமை அடைந்துவிட்ட மன்னருக்கு (பின்வருமாறு) விசாரம் எழுந்தது— "நான் உயிருடன் இருக்கும்போதே இராமன் எவ்வாறு மன்னன் ஆவான்? (அந்தக் காட்சியைக் காண) எனக்குப் பேராவலாக இருக்கிறது. 'நான், என்னுடைய பாசத்திற்குரிய மைந்தனின் 'ராஜ்யாபிஷேகம்' செய்யப்படும் அற்புதக் காட்சியை எப்போதுதான் பார்க்கப் போகிறேனோ?' என்ற அடக்கமுடியாத ஆசை நெஞ்சில் சுழன்று கொண்டிருக்கிறது. (35–37)

மழையைப் பொழியும் மேகத்தைப் போல், மக்களின் நல்வாழ்வையும் செழிப்பையும் விரும்புகிறவன்; எல்லா உயிர்களிடத்திலும் இரக்கம் உள்ளவன்; மக்களுக்கு என்னிடம் உள்ள அன்பைக் காட்டிலும் அதிக அன்பைப் பெற்றவன்; பராக்கிரமத்தில் யமனுக்கும் இந்திரனுக்கும் நிகரானவன்; (நியாயம் விட்டகலாத பாரபட்சமற்ற கடுமை, தெய்வானுகூலம் – இவை உடையவன்.) புத்தி சக்தியில் பிருகஸ்பதிக்குச் சமமானவன்; உறுதியில் மலை போன்றவன்; என்னைவிட சீரிய குணங்களை உடையவன். நான், இந்த வயோதிகத்தில், என் சொந்தப்பிள்ளை, இந்தப் பூமண்டலம் முழுவதிலும் ஆட்சி செலுத்துவதைக் கண்களால் கண்டுவிட்டு, உரிய காலம் வந்ததும் சுவர்க்கத்தை அடைவேன்." (38–40)

என்றிப்படியாக ஆலோசனை செய்தார் (மன்னர் தசரதர்). தன் மைந்தனிடம் அமைந்திருந்த பல்வகைச் சிறப்புகள், சான்றோர்களுக்குரிய எண்ணிறந்த நற்குணங்களால் வேறு எந்த மன்னனிடமோ, மற்ற மனிதரிடமோ காணக் கிடைக்காதவற்றால் – அவன் பொலிவுற்று விளங்குவதைக் கண்ட மன்னர், அமைச்சர்களோடு கலந்தாலோசித்து, (இராமனுக்கு) இளவரசுப் பட்டம் சூட்டுவது என முடிவு செய்தார். (அப்போது) விண்ணுலகிலும் வான்வெளியிலும் பூமியிலும் காணப்பட்ட பயங்கரமான துர்நிமித்தங்களால் அச்சம் அடைந்தார். புத்திமானான அவர், தன் சரீரம் மூப்படைந்துவிட்டதையும் உணர்ந்தார். (41–43)

முழுநிலவைப் போன்ற முகம் படைத்த இராமன், எல்லாக் குடிமக்களின் அன்புக்கும் பாத்திரமாகியிருந்தார். அவர் அவ்விதம் குடிமக்களின் அன்பைப் பெற்றிருந்தது, மன்னரின் மனக்கவலையைப் போக்கவல்லதாக இருந்தது. மன்னருக்கும் இந்த விஷயம் தெரிந்தேதான் இருந்தது. தன்னுடைய மற்றும் மக்களுடைய நன்மைக்காகவும், பிரியத்தின்படியும் தருமாத்மாவான மன்னர், சரியான சந்தர்ப்பம் வந்ததும் மிக அவசரமாகச் செயல்பட்டார். (44,45)

பூவுலகிலுள்ள முக்கியமான மன்னர்களையும், பற்பல நகரங்களில் வாழ்வோர்களையும், சிற்றரசர்களையும் அழைத்துவரச் செய்தார். அவர்கள் தங்குவதற்கான இடங்களைப் பல்வகை ஆபரணங்களாலும், உயர்ந்த பொருட்களாலும் அலங்கரித்து கௌரவப்படுத்தினார். தானும் நன்றாக அலங்கரித்துக் கொண்டு, பிரஜாபதி பிரும்மா, பிரஜைகளுக்குக் காட்சி தந்தருள்வதைப் போல, மக்களுக்கு முன் தோன்றினார். அவகாசம் இல்லாததால் கேகய மன்னரையும் ஜனகரையும் அழைக்கவில்லை. இந்த இனிய செய்தியைப் பின்னர் சொல்லிக் கொள்ளலாம் (என்று இருந்துவிட்டார்). (46–48)

எதிரிப்படையைக் கலக்கும் மன்னர் அவையில் வந்து அமர்ந்ததும், மக்களால் போற்றப்படும் மற்ற அரசர்கள் (கேகய மன்னர், ஜனகர் தவிர) உள்ளே வந்தார்கள். ஆலோசனை சொல்வதில் வல்லவர்களான அவர்கள், மன்னரால் காட்டப்பட்ட பல்வகை ஆசனங்களில் அவரை நோக்கியவண்ணமே அமர்ந்து கொண்டார்கள். நன்றாக உபசரிக்கப்பட்டு, ஆசனங்களில் அமர்ந்திருந்த, வணக்கத்தோடு கூடிய மன்னர்களாலும் பட்டணத்துப் பிரமுகர்களாலும் கிராமப்புறத் தலைவர்களாலும் சூழப்பட்டிருந்த அந்த மாமன்னர், தேவர்களால் சூழப்பட்ட இந்திரன்போல் விளங்கினார்! (49–51)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
முதலாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இரண்டு

சபையினர் ஒப்புதல்

அப்போது மன்னர், சபையினர் எல்லோரையும் பார்த்து நன்மை பயக்கக்கூடியதும், உள்ளத்தை மகிழச் செய்வதும், அனைவருக்கும் தெரிந்ததுமான செய்தியைச் சொன்னார். துந்துபி என்ற தேவபேரிகையின் ஒலி போன்று கம்பீரமாக எதிரொலி எழும்புகின்ற, அரசபதவிக்கு உரிய சொல்முறைக்கேற்ப, கேட்போரை வசீகரிக்கச் செய்கிற, ஒப்புவமையில்லாத, செவிச்சுவையுடன் கூடிய குரலில், மேகத்தைப் போல் உன்னதமாகக் கர்ஜித்துக் கொண்டு மற்ற அரசர்களைப் பார்த்து மன்னர் கூறினார்— (1–3)

"இந்த மகத்தான அரசு, இந்திரனுக்கொப்பான என் முன்னோர்களான மன்னர்களால் ஒரு குழந்தையிடம் காட்டும் பாசப்பரிவுடன் பரிபாலிக்கப்பட்டு வந்துள்ளது என்பது நீங்கள் எல்லோரும் அறிந்ததே. அவ்விதம் மிகச்சிறந்த இக்ஷ்வாகு குல மன்னர்களால் பரிபாலிக்கப்பட்டு, தற்போது ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிற நான், சுக–சௌக்கியங்களுக்கு உரிமைப்பட்ட இவ்வுலகம் முழுவதற்கும் மேலும் சிறப்பை அதிகரிக்க விரும்புகிறேன். முன்னோர்கள் சென்ற வழியையே பின்பற்றிச் சென்றேன். உறக்கம்கூடக் கொள்ளாத என்னால், குடிமக்கள் முடிந்த வரையில் எப்போதும் கவனமாகப் பாதுகாக்கப்பட்டார்கள். (4–6)

என்னுடைய இந்தச் சரீரம், எல்லா உலகங்களின் நலனுக்காகப் பாடுபட்டு, வெண்கொற்றக் குடையின் நிழலில் இருந்தே மூப்பை அடைந்துவிட்டது. (நான் நீண்ட நெடுங்காலம் ஆட்சி செய்துவிட்டேன் – என்றபடி.) ஆயிரக்கணக்கான ஆண்டுகள் நீண்ட ஆயுள் பெற்று வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்றாலும், தேகக்கட்டு தளர்ந்து விட்டதால் ஓய்வு பெற விரும்புகிறேன். உலகத்தை அறவழியில் நின்று நிர்வகிக்கும் பொறுப்பு மன்னர்களைச் சார்ந்தது. புலன்களைக் கட்டுப்படுத்தாதவர்களால், இந்தப் பெரும் சுமையைச் சுமக்க இயலாது. நான் நீண்டகாலமாக, இந்த ஆட்சிச் சுமையைச் சுமந்து களைப்படைந்துவிட்டேன். (7–9)

எனவே, இங்கே கூடியிருக்கும் எல்லோருடையவும், அந்தணோத்தமர்களுடையவும் சம்மதத்துடன் மக்கள் சேவையில் இராமனை ஈடுபடுத்திவிட்டு, நான் ஓய்வு கொள்ள விரும்புகிறேன். என் மூத்த மகனான இராமன் அனைத்து குணங்களிலும் என்னை ஒத்தவன்; பராக்கிரமத்தில் இந்திரனுக்கு நிகரானவன்; எவராலும் வெல்லப்பட முடியாதவன். புஷ்ய நட்சத்திரத்தோடு கூடிய சந்திரன் போல் சகல மக்களையும் மகிழ்விப்பவனும், தருமத்தைத் தாங்குபவர்களுள் தலையாயவனும் புருஷோத்தமனுமான இவனை, இளவரசாக மனப்பூர்வமாக நியமிக்கிறேன். (10–12)

லட்சுமணனுக்கு மூத்தவனான அவன் எல்லாச் சிறப்புகளும் பெற்றவன். மூன்று உலகங்களும் எந்த ஒருவனால், 'நல்ல தலைவரைப் பெற்றோம்' என்று எண்ணிக் களிப்படையுமோ, அப்படிப்பட்ட தனியொரு செம்மல் அவன். இந்த வையகத்தை இப்பொழுதே அந்த மங்களங்களுடன் கூட்டி வைத்து, அதாவது அந்த மைந்தனிடத்தில் (ஆட்சிப்) பொறுப்பை ஒப்படைத்து, மனக்கவலைகள் ஒழிந்தவனாக ஆகப் போகிறேன். என்னால் ஆழமாக ஆலோசிக்கப்பட்ட பின்னர் தீர்மானிக்கப்பட்ட இந்த விஷயம் சரியானது என்னும் பட்சத்தில், உங்கள் சம்மதத்தைத் தெரிவியுங்கள். அல்லது நான் எவ்வாறு செயல்பட வேண்டும்? என்பதைக் கூறுங்கள். (13–15)

இப்படிச் செய்வது (இராமனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டுவது) எனக்கு மிகவும் திருப்தி அளிக்கக் கூடியது. என்றாலும் இதைவிட அதிக நன்மை பயக்கக்கூடிய வேறு யோசனை இருந்தால் அதைத் தெரிவிக்கலாம். ஏனென்றால், ஒரு மனிதன் எடுக்கும் முடிவைக் காட்டிலும், நடுநிலையாளர்களால் பரஸ்பர ஆலோசனைக்குப்பின் தீர்மானிக்கப்படும் திட்டம், மிக்க பயனைத் தரக்கூடியதாக இருக்கும்.'' இவ்வாறு மன்னர் சொன்னதைக் கேட்டதுமே பெருமகிழ்ச்சியுற்ற ஏனைய அரசர்கள், மழையைப் பொழியவிருக்கும் கருமேகங்களைக் கண்டதும் மகிழ்ச்சியுடன் தோகை விரித்தாடும் மயில்களைப் போல கும்மாளமிட்டுக் கொண்டாடி வரவேற்றார்கள். (16,17)

தொடர்ந்து எல்லாப் பொதுமக்களும் பாசமும் மகிழ்ச்சியும் பொங்க எழுப்பிய மகத்தான பேரொலி உலகத்தையே ஆட்டுவதாக இருந்தது! தருமம், அர்த்தம் அறிந்த அந்த மன்னருடைய அந்தரங்க அபிப்பிராயத்தைப் பலவகையாலும் புரிந்து கொண்டு, அந்தணர்கள், மக்கட்தலைவர்கள், நகர மக்கள், புறநகர்ப் பெரியோர்கள் எல்லோரும் ஒன்றுகூடி ஆலோசனை செய்து, தசரத மன்னரின் வயோதிகத்தையும் மனத்தில் எண்ணிப் பார்த்து, ஒரு தீர்மானத்திற்கு வந்தபின் அவரிடம் சொன்னார்கள்— (18–20)

''மன்னரே! தாங்கள் அநேக ஆயிரம் ஆண்டுகள் கழிந்த முதியவராகிவிட்டீர்கள். எனவே, இந்த உலகத்தைப் பரிபாலிக்கும் பொறுப்பைக் கொடுத்து, ஸ்ரீராமனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டுங்கள். நீண்ட புஜங்களை உடையவரும், மகாபலசாலியுமான ஸ்ரீரகுவீரன் பட்டத்து யானையின் மேல் அமர்ந்து, கொற்றக்குடையால் அவ்வப்போது திருமுகமண்டலம் மறைக்கப்பட (ராஜபாட்டைகளில்) பவனி வருவதைக் காண ஆசைப்படுகிறோம்!'' அவர்களுடைய விருப்பத்தை வெளிப்படுத்தும் இந்த வார்த்தைகளைக் கேட்டு, அவர் (மக்களின் எண்ணத்தைப் புரிந்து கொண்டுவிட்டாலும்) புரிந்து கொள்ளாததைப் போலவும், தெளிவாக அறிந்துகொள்ள விரும்புவதைப் போலவும் பின்வருமாறு கூறினார்— (21–23)

''நான் சொன்னதைக் கேட்டவுடனேயே (தயக்கமே காட்டாமல்) இராமனை அரசனாகப் பார்க்க விரும்புகிறீர்களே? அரசர்களே! எனக்கு ஒரு சந்தேகம். அதைக் கேட்டு நிஜமான பதிலைக் கூறுங்கள். நீதிநெறி தவறாமல் நான் நாட்டை ஆண்டு கொண்டிருக்கிறேன், இல்லையா? அப்படியிருக்கும்போது, நீங்கள் ஏன் என் புதல்வனை இளவரசனாகக் காணத் துடிக்கிறீர்கள்?'' (24,25)

அவர்கள் (சிற்றரசர்கள்) நகர்ப்புற மற்றும் நாட்டுப்புற மக்களுடன் மகாத்மாவான அவரிடம் கூறினார்கள்— ''மன்னா! தங்களுடைய புதல்வரிடம் ஏராளமான நல்ல குணங்கள் அமைந்திருக்கின்றன. மன்னா! தேவர்களைப் போன்ற அவர் மகா புத்திமான்; இயல்பாகவே சிறந்த குணங்களை உடையவர்; பிரியத்தை ஏற்படுத்தக் கூடிய, ஆனந்தத்தைத் தரக்கூடிய அவருடைய குணங்கள் எல்லாவற்றையும் இப்போது கூறுகிறோம். செவிசாய்த்து அருள்க. (26,27)

ஸ்ரீராமன், மானுடம் கடந்த தெய்வ குணங்களால் இந்திரனுக்கு நிகரானவர்; சத்தியத்தையே பராக்கிரமமாக உடையவர்; இக்ஷ்வாகு பரம்பரையில் மற்ற எல்லோரையும்விட மேலானவர். ஸ்ரீராமன் உலகில் நேர்மையானவர்; சத்திய–தருமங்களில் மூழ்கியவர்; நல்லறமும் நல்லொழுக்கமும் சாட்சாத் இராமனிடமே உருக்கொண்டுள்ளன. மக்களுக்கு உவகை அளிப்பதில் சந்திரன் போன்றவர்; பொறுமை(மன்னிப்பு, தயை)யில், பூமிதேவி; அறிவில் பிருகஸ்பதி போன்றவர்; வீரத்தில் இந்திரனுக்கு நிகரானவர். (28–30)

தருமம் அறிந்தவர்; சத்தியம் தவறாதவர்; நல்லொழுக்கம் உள்ளவர்; வெறுப்பு இல்லாதவர்; பிறர் செய்யும் குற்றங்களைப் பொறுப்பவர்; அமைதி தோன்றப் பேசுபவர்; இனிமையாகப் பேசுபவர்; செய்நன்றி மறவாதவர்; புலன்களை வென்றவர். மென்மையானவர்; தீர்மானம் உடையவர்; எப்போதும் நலன்களையே செய்பவர்; யாரையும் வெறுப்பு மூட்டாதவர்; எல்லா ஜீவர்களிடமும் பாசத்துடன் பேசுபவர்; வாய்மை தவறாதவர். கல்வி–கேள்விகளில் சிறந்த மூத்தோர்களையும் அந்தணர்களையும் மதிப்பவர். அதனால், இவ்வுலகில் ஒப்புவமையற்ற பெரும் புகழ் வளர்ந்து கொண்டே இருக்கிறது. (31–33)

தேவ–அசுர–மானுடர்களில் எல்லா அஸ்திரங்களிலும் வல்லமை பெற்றவர், இவரே; குருகுலக் கல்வியை முடித்துக் கொண்டு, அதற்கான விரதங்களைச் செய்து முடித்தவர்; முறைப்படி வேத–வேதாங்கங்களை அறிந்தவர். பரதனுக்கு முன்தோன்றிய அவர் உலகிலேயே இசைக்கலையில் தலையாயவர்; நற்குணங்களால் மக்களை வசீகரிப்பவர்; அடக்கமானவர்; உபகார சிந்தனை உடையவர்; பேரறிவாளர். தருமம், அர்த்தம் ஆகிய துறைகளில் நிபுணர்களான அந்தணர்களால் நன்றாக பயில்விக்கப் பெற்றவர். கிராமத்தையோ, நகரத்தையோ காப்பாற்றுவதற்காக லட்சுமணனுடன் வெளியே செல்லும்போது, போர்க்களத்தில் வெற்றி பெறாமல் திரும்பியதில்லை. (34–36)

போரிலிருந்து திரும்பி யானை மீதோ, ரதத்திலோ வரும்போது, நகர மக்களைத் தன் சுற்றத்தாரைப் போல் மதித்து, புதல்வர்கள், அக்னிஹோத்திரம், மனைவிகள், பணியாட்கள், சீடர்கள் விஷயமாக எல்லாவற்றையும் தனித்தனியாக ஒரு தந்தை தன் சொந்தக் குமாரர்களிடம் பாசத்தோடு விசாரிப்பதைப்போல நலன் விசாரிக்கிறார். 'உங்களுடைய சிஷ்யர்கள் சோம்பலில்லாமல் சரியாகப் பணிவிடை செய்து வருகிறார்களா?' என்று எங்களையெல்லாம் மனிதருள் புலியான இராமன் எப்போதும் விசாரிக்கிறார். மக்களுக்குக் கஷ்டம் ஏற்படும்போது இவர் மிகவும் துக்கம் அடைகிறார்; (அதே போல்) மகிழ்ச்சிகரமான காலங்களில் ஒரு தந்தையைப்போல் சந்தோஷப்படுகிறார். (37–40)

சத்தியம் பேசுபவர்; சிறந்த வில்லாளர்; மூத்தோர்களை மதிப்பவர்; புலன்களை வென்றவர்; புன்சிரிப்புத் தவழப் பேசுபவர்; எந்த இக்கட்டிலும் தருமத்தையே அண்டியிருப்பவர்; எல்லாவிதச் செழுமைகளுக்கும் நல்ல நிலைக்களனாக இருப்பவர்; உபயோகமில்லாத உரையாடல்களை ஒதுக்கிவிடுபவர்; மேலும் மேலும் வாதங்களைத் தொடர்ந்து அடுக்கிக் கொண்டே போக வல்லவர்; பிருகஸ்பதி போல் சொல்வன்மை உடையவர்; அழகிய புருவம் உடையவர்; செந்தடங்கண்ணர்; 'தானே சாட்சாத் விஷ்ணு' என்பது போலிருப்பவர். இராமன், அவரது சூர–வீர–பராக்கிரமங்களால் எல்லா மக்களாலும் பெரிதும் விரும்பப்படுபவர். (41–43)

குடிமக்களை நன்கு பரிபாலிப்பதில் அக்கறை உடையவர்; ஆசைக்கு அடிமைப்பட்டு புலன்களைத் தவறான வழிகளில் செலுத்தாதவர். மூன்று உலகங்களையும் தான் ஒருவராகவே ஆளும் திறமை பெற்றவர் என்னும்போது, இந்த மண்ணுலக ஆட்சி ஒரு பொருட்டா, என்ன? இவருடைய கோபமோ மகிழ்ச்சியோ ஒருபோதும் பலன் தராமற்போனதில்லை. சட்டப்படி மரணதண்டனை கொடுக்கப்பட வேண்டியவருக்கு, அந்தத் தண்டனையைக் கொடுப்பார்; மரணதண்டனை பெற தகுதி இல்லாதவனிடம் இவர் கோபம் கொள்வதில்லை. (44,45)

இவருக்கு மகிழ்ச்சியைக் கொடுப்பவருக்கு ஏராளமான செல்வங்களைக் கொடுத்து மகிழ்கிறார். எல்லா மக்களுக்கும் அமைதியான முறையில் நன்மை செய்து, அவர்களுடைய உள்ளத்தைக் கொள்ளை கொண்டுவிட்ட நற்குணங்களால் – கிரணங்களால் ஒளிவீசும் சூரியன்போல் – இராமன் பிரகாசிக்கிறார். இவ்வாறு நற்குணங்களால் நிரம்பியவரும், லோகபாலருக்கு நிகரானவரும், சத்தியத்தையே பராக்கிரமமாகக் கொண்டவருமான ஸ்ரீராமனை, பூமாதேவி தன் நாதனாக்கிக் கொள்ள விரும்பினாள். (46,47)

தசரதரே! உங்களுடைய பாக்கிய விசேஷத்தினால் உங்களுக்கு நன்மை ஏற்படும் பொருட்டு, மரீசி பிரஜாபதிக்கு காசியபர் புதல்வராகப் பிறந்ததைப் போல, எங்கள் அதிர்ஷ்டத்தால் புத்திரன் என்ற சொல்லுக்குரிய கடமைகளில் தவறாத இவர், உங்களுக்கு மகனாகப் பிறந்திருக்கிறார். தேவர்கள், அசுரர்கள், மானுடர்கள், கந்தர்வர்கள், உரகர்கள் மற்றும் எல்லா நாடுகளிலும் நகரங்களிலும் அந்தப்புரங்களிலும் அதற்கு வெளியே உள்ளவர்களும் புறநகர் மக்களும் பெரும்புகழ் கொண்ட ஸ்ரீராமனுக்கு ஆற்றல், ஆரோக்கியம், ஆயுள் மேன்மேலும் வளர வேண்டும் என்று பிரார்த்திக்கிறார்கள். (48–50)

இளம்பெண்களும் முதிய பெண்மணிகளும் காலை–மாலை வேளைகளில் மனம் குவிந்து, தயாள மனம் கொண்ட ஸ்ரீராமனின் சௌக்கியத்தைப் பிரார்த்தித்து, எல்லா தெய்வங்களுக்கும் நமஸ்காரம் செய்கிறார்கள். அவர்களுடைய பிரார்த்தனை தங்களுடைய அங்கீகாரத்தால் நிறைவேற வேண்டும். கருநெய்தல் மலர் போன்ற வண்ணத்திருமேனி கொண்டவரும், எல்லா எதிரிகளையும் அழிப்பவரும், தங்களுடைய (குடிமக்களின் நலன்களைப் பாதுகாக்கும் உத்தம மன்னரின்) புதல்வருமான அவரை, இளவரசுப் பட்டம் ஏற்றவராகப் பார்க்க வேண்டும். (51,52)

வேண்டியவற்றை வழங்குபவரே! இவ்வளவு சிறப்பினைக் கொண்ட தங்கள் குமாரர் தேவதேவனுக்கு ஒப்பானவர்; எல்லா மக்களுடைய நன்மையில் உறுதியான எண்ணம் கொண்டவர்; கருணை உள்ளம் படைத்தவர். அவருக்கு எங்கள் க்ஷேமத்தைக் கருதி மனமுவந்து விரைவில் பட்டாபிஷேகம் செய்விக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறோம்.'' (53)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
இரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : மூன்று

முடிசூட்டுவிழா முன்னேற்பாடுகள்

மன்னர், தாமரைமொட்டுப்போலக் குவிந்த கைகளைத் தலைக்கு மேலே தூக்கி, அவர்கள் வணங்கியதை ஏற்றுக் கொண்டு, எல்லாவிதத்திலும் பிரியமானதும் நலமானதுமான பதிலைக் கூறினார்— ''என்னுடைய அன்புக்குரிய மூத்த குமாரனை யுவராஜாவாகக் காண விரும்புகிறீர்களே! ஆகா! எனக்கு எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது, தெரியுமா? என்னுடைய பெருமை ஒப்புயர்வில்லாததாக ஆகிவிட்டது.'' இவ்வாறு அவர்களுக்குப் பதில் கூறிவிட்டு,

அவர்கள் கேட்கும்படியாக வசிஷ்டர், வாமதேவர் முதலான அந்தணர்களிடம் மன்னர் (பின்வருமாறு) கூறினார்— (1–3)

''மரங்கள் துளிர்த்து மலர்களோடு அழகாக விளங்கும் இந்த சித்திரை மாதம் சுபகாரியங்களுக்கு ஏற்றது. இராமனுடைய இளவரசுப் பட்டாபிஷேகத்திற்காக, எல்லாப் பொருள்களையும் சேகரியுங்கள்.'' மன்னர் இவ்வாறு சொல்லி முடித்தவுடனேயே மக்கள் மகிழ்ச்சி தாங்காமல் பெரும் கோஷம் எழுப்பினார்கள். மெல்ல அந்த மக்களின் ஆரவாரம் அடங்கியதும், முனிபுங்கவர் வசிஷ்டரை நோக்கி (இவ்வாறு) சொன்னார், மன்னர். (4,5)

''பகவானே! இராமனுடைய இளவரசுப் பட்டாபிஷேகத்திற்காக என்னென்ன பொருட்கள் தேவையோ, சிறியது, பெரியது என்ற பாகுபாடு இல்லாமல் அவைகளை எல்லாம் கொண்டுவர இப்போதே பணியாளர்களுக்கு உத்தரவிடுங்கள்.'' மண்ணாளும் மன்னருடைய சொற்களைக் கேட்ட அந்தணோத்தமரான வசிஷ்டர், மன்னருக்கு எதிரில் கைகூப்பிக் கொண்டு, உத்தரவை நிறைவேற்றுவதற்குத் துடித்துக் கொண்டிருந்த பணியாளர்களுக்கு(ப் பின்வருமாறு) கட்டளையிட்டார்— (6,7)

''சுவர்ணம் முதலான இரத்தினங்கள், சிறுதெய்வ வழிபாட்டிற்குரிய சாதனங்கள், எல்லா வகையான மூலிகைகள், வெண்மை வண்ண மாலைகள், பொறிகள், தனித்தனியே தேன், நெய், புதிய ஆடைகள், தேர், அனைத்து வகையான படைக்கலன்கள், நால்வகைப் படைகள், நல்ல லட்சணம் பொருந்திய யானை, வெண்சாமரம்–விசிறி, வெண்ணிறக் கொடி, வெண்குடை, அக்னியைப் போல் ஒளிவீசுகின்ற தங்கத்தாலான நூறு கலசங்கள், பொற்கொப்பிக் கொம்புகளை உடைய காளைகள், எல்லா அங்கங்களும் நிறைந்துள்ள புலித்தோல் ஆகியவைகளைச் சேகரித்து, பூமியாளும் மன்னருடைய அக்னிசாலையில் நாளை காலைக்குள் சேர்த்துவிடுங்கள். மேலும், (சொல்வதற்கு விட்டுப்போன) தேவையான பிற வஸ்துக்கள் அனைத்தையும் ஒன்று திரட்டுங்கள். (8–12)

அந்தப்புரம் மற்றும் நகரத்தின் எல்லா வாயில்களையும் சந்தனம்–மலர்மாலைகளால் அலங்காரம் செய்யுங்கள். முகர்பவரைக் கவர்ந்து இழுக்கும்படியான நறுமணப்புகை கமழச் செய்யுங்கள். தயிர், பால், நெய் கலந்த சுவை கூடிய உயர்ந்த போஜனம், ஒரு லட்சம் இருபிறப்பாளர்களுக்குப் போதுமான அளவுக்கு ஆயத்தம் செய்யப்பட வேண்டும். நாளைக் காலை, அந்தணப் பெரியோர்களை அழைத்து, நல்ல முறையில் உபசரித்து, நெய், தயிர், பொறி, ஏராளமான தட்சிணை முதலியவற்றை தானம் செய்யுங்கள். (13–15)

நாளைய தினம், சூரியன் உதயமானவுடனேயே ஸ்வஸ்திவாசனம் (மங்களமான வாழ்த்துக்களைக் கூறுதல்) என்னும் சடங்கு நடைபெற வேண்டும். அதற்காக வேதவித்துக்கள் நியமிக்கப்பட வேண்டும். அவர்களுக்கு உரிய ஆசனங்களும் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். நகரத்தின் எல்லா இடங்களிலும் பதாகைகள் கட்டுங்கள். அரசபாட்டைகளில் தண்ணீர் தெளியுங்கள். இசை வல்லுநர்களும், நன்றாக அலங்காரம் செய்துகொண்ட கணிகைகளும் அரச மாளிகையின் இரண்டாம் கட்டில் நிற்க வேண்டும். (16,17)

தெய்வ வழிபாட்டுத்தலங்களில் அன்னத்தோடு கூடிய உணவு வகைகள், தட்சிணை, கையில் மாலைகள் முதலியவற்றைத் தனித்தனியே வைத்துக் கொண்டு (அங்கே வருபவர்களுக்குக் கொடுப்பதற்காக) சிலர் நிற்க வேண்டும். நீண்ட கத்தியை ஏந்திய போராளிகள் மனம் களிப்புற்றவர்களாக பட்டாபிஷேகம் நடக்கப் போகும் மன்னர் மாளிகை வாசலில் கவசம் அணிந்து ஆயத்த நிலையில் இருக்கவேண்டும்.'' இவ்வாறு அவ்விரு அந்தணர்களும் (வசிஷ்ட–வாமதேவர்) பணியாளர்களுக்கு உத்தரவு கொடுத்துவிட்டு, தாங்களே சேகரிக்க வேண்டிய உபகரணங்களையும் சேகரித்தார்கள். இதற்குப் பின்னரும் மிகுந்திருந்த காரியங்களை, மன்னரிடம் தெரிவித்துவிட்டுச் செய்து முடித்தார்கள். (18–20)

மனத்திருப்தியடைந்து மகிழ்ச்சியோடிருந்த சிறப்பான அந்தணர்கள் இருவரும் எல்லாவற்றையும் நன்றாகத் திட்டமிட்டுச் செய்து முடித்த பின்னர், உலகாளும் மன்னரிடம் சென்று, ''அனைத்தும் தாங்கள் கூறியபடியே நடத்தப்பட்டன'' என்று சொன்னார்கள். பிறகு, பிரகாசமான காந்தியுடைய மன்னர், சுமந்திரரைப் பார்த்து, ''புண்ணியாத்மாவான இராமனை விரைவில் இங்கே அழைத்து வாருங்கள்'' என்றார். ''தங்கள் உத்தரவு'' என்று சொல்லிவிட்டு, ரதத்தில் நின்று போர்புரிபவர்களுள் மிகச்சிறந்தவரான இராமனை, அரசரின் ஆணைப்படி ரதத்தில் ஏற்றி அழைத்து வந்தார், சுமந்திரர். (21–23)

அப்போது, அந்த அரசவையில் வீற்றிருந்த அமைச்சர்கள், சிற்றரசர்கள், நகரவாசிகள் மற்றும் கிழக்கு, வடக்கு, மேற்கு, தெற்கு நாடுகளின் மன்னர்கள், மிலேச்சர்களின் சனாதன தருமத்தைச் சார்ந்திராத வேற்று நாட்டினர், ஆரியர்கள், காடுகளிலும் மலைகளிலும் வசிக்கின்றவர்கள் ஆகிய எல்லோரும் – தேவர்கள் எவ்வாறு இந்திரனின் தலைமையை ஏற்று அடிபணிந்து நின்றார்களோ, அவ்வாறே – தசரதரின் ஆணைக்குக் காத்திருந்தார்கள். மருத் கூட்டத்தினிடையே விளங்கும் இந்திரன் போல், அவர்கள் மத்தியில் வீற்றிருந்த ராஜரிஷியான தசரதர், மாளிகையில் இருந்தவாறே (எதிரே, சாலையில்) ரதத்தில் வந்து கொண்டிருக்கும் தன் செல்வமகனைக் கண்டார்! (24–26)

கந்தர்வராஜனைப் போன்ற கவினுறு உடலமைப்பு; உலகெங்கிலும் புகழ் பெற்ற மகாவீரம்; நீண்ட கைகள்; மகாபலம்; மதங்கொண்ட யானை போன்ற கம்பீரமான நடை; சந்திரனைக் காட்டிலும் அதிக ஒளிவீசும் திருமுகம்; மிகவும் மகிழ்ச்சியைக் கொடுக்கும் திருத்தோற்றம்; உருவம்–கருணை–நற்குணங்களால் மக்களின் கண்ணையும் கருத்தையும் ஈர்த்திழுக்கும் கவர்ச்சி; கடுங்கோடையின் வெப்பத்தினால் தவித்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு மழை பொழிவிக்கும் மேகம் போல் ஆனந்தத்தைக் கொடுப்பவர் – இப்படி அழகுப் பெட்டகமாக வந்து கொண்டிருக்கும் இராமனைப் பார்த்துப் பார்த்து, மன்னருக்குப் 'போதும்' என்ற திருப்தி ஏற்படவில்லை! (27–29)

சிறந்ததான தேரிலிருந்து சுமந்திரர், அந்த இராகவனைக் கைலாகு கொடுத்து இறக்கிவிட்டு, தந்தையை நோக்கிச் சென்று கொண்டிருந்த அவருக்குப் பின்னே, அஞ்சலியாக (வணங்கியபடி)க் கைகளை வைத்துக் கொண்டு சென்றார். கைலாசமலைச் சிகரம்போல் விளங்கிய அந்த அரச மாளிகையில் மன்னரைப் பார்ப்பதற்காகத் தேரோட்டியுடன் சென்றார், இராமன். தந்தையின் அருகில் கூப்பிய கரங்களுடன் சென்று, தன் பெயரைச் சொல்லி, அவர் திருப்பாதங்களில் நமஸ்காரம் செய்து வணங்கினார். (30–32)

மன்னர், தன் அருகில் வந்து கைகூப்பிக் கொண்டு நிற்கும் மகனைப் பார்த்து, குவிந்த கரங்களைப் பற்றித் தன்னிடம் இழுத்து, அன்புக்குரிய மகனை மார்புறத் தழுவிக் கொண்டார். மங்களகரமானதும் கண்ணுக்கினியதும் நவரத்தினங்கள்–பொன் இழைக்கப்பட்டதும் சுகத்தைக் கொடுக்கக் கூடியதுமான ஓர் உயர்ந்த ஆசனத்தில் அமரும்படி, இராமனுக்குக் கட்டளையிட்டார், மன்னர். நிர்மலமான சூரியன் உதயகாலத்தில் மேருபர்வதத்தைத் தன் செங்கதிர்களால் பிரகாசப்படுத்துவதைப் போல, உயரிய அந்த ஆசனத்தில் அமர்ந்த இராமன், தன் ஒளியால் அதற்கு ஒளியூட்டினார்! (33–35)

பிரகாசிக்கின்ற அவரால் நிர்மலமான கிரகங்களாலும் நட்சத்திரங்களாலும் விளங்கப்பெற்ற ஆகாயம், சரத்காலத்தில் சந்திரனால் ஒளிர்வதுபோல் அந்தச் சபையே பிரகாசித்தது! அணிகலன்கள், ஆடைகள் அணிந்து கொண்ட தன்னையே கண்ணாடியில் பார்ப்பதைப் போல, பாசப் புதல்வனை (தன் பிரதிபிம்பம் போலவே இருப்பதை)க் கண்டு மன்னர் மனத்திற்குள் களிப்புற்றார். புதல்வரைப் பெற்றவர்களுள் சிறந்த புதல்வர்களைப் பெற்ற தனிப்பெருமை கொண்ட அவர், புன்னகை தவழப் புதல்வனை அழைத்து, காசியபர் (தன் மைந்தனான) தேவேந்திரனுக்கு உபதேசிப்பதுபோல (பின்வரும்) சொற்களைச் சொன்னார்— (36–38)

''என்னுடைய மூத்த பட்டத்தரசியின் வயிற்றில் தோன்றிய என்னுடைய மூத்த புதல்வன், நீ. குணத்திலும் அவளையே கொண்டிருக்கிறாய். என்னைக் காட்டிலும் சிறந்த நற்குணங்களைப் பெற்றிருக்கிறாய். அதனாலேயே, இராமா! நீ என்னுடைய பேரன்பிற்குரியவனாக இருக்கிறாய். இங்கே கூடியுள்ள பிரஜைகள் எல்லோரையும் உன் இனிய குணங்களால் வசீகரித்திருக்கிறாய். (அவர்கள், உன்னை இளவரசனாகப் பார்க்க விரும்புகிறார்கள்.) ஆகவே, (நாளைய தினம்) பூச நட்சத்திரம் கூடிய நன்னாளில், இளவரசுப் பட்டத்தைப் பெற்றுக் கொள்ளப் போகிறாய். (39,40)

பிறப்பிலேயே (இயல்பாகவே) நீ பணிவுடையவன்; நற்குணங்கள் நிரம்பியவன். அப்படியிருந்தாலும், மகனே! உன்னிடமுள்ள வாத்சல்யத்தினால் உனக்கு அனுகூலமான சில வார்த்தைகளை, நானே விரும்பிச் சொல்கிறேன். நீ, மேலும் பணிவுடையவனாக வேண்டும்; எப்போதும் புலன்களை வென்றவனாக இருக்க வேண்டும்; தானாகப் பீறிட்டுக் கொண்டு வெளிப்படும் காமம், கோபம், துயரம் போன்றவற்றை விட்டுவிட வேண்டும். (பலர் அறிய வெளிக்காட்டலாகாது.) (41,42)

ஒற்றர்கள் மூலம் தெரிவிக்கப்படும் செய்திகள், அதுபோல் தானே நேரில் பார்த்தும் கேட்டும் தெரிந்து கொண்ட தகவல்கள் – இவைகளை ஆராய்ந்து பார்த்து உண்மையான செய்திகளின் அடிப்படையில் செயல்பட்டு, அமைச்சர் முதலான அரசு அதிகாரிகளையும் எல்லாக் குடிமக்களையும் மகிழ்ச்சியுடன் வைத்துக் கொள். கருவூலம் மற்றும் ஆயுதசாலைகளில் தேவையானவற்றை ஏராளமாகச் சேர்த்து வைத்து, மக்களை மகிழ்ச்சியாகவும் அன்புகாட்டியும் எவனொருவன் நாட்டை ஆள்கிறானோ, அவனை அமுதத்தை அடைந்த தேவர்களைப் போல நண்பர்கள் மகிழ்வடையச் செய்கிறார்கள். ஆகவே, பிள்ளாய்! நீ, உன்னைக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு (மக்கள் மகிழ்வுறும்படிச்) செயல்படுக.'' (43–45)

(தசரதருடைய) இந்தச் சொற்களைக் கேட்ட இதமான செயல்களையே செய்யும் இராமனுடைய நண்பர்கள் விரைவாக ஓடிச் சென்று, கௌசல்யையிடம் செய்தியைச் சொன்னார்கள். மாதர்களில் மாணிக்கம் போன்ற கௌசல்யை, இந்த இனிய செய்தியைக் கொண்டு வந்தவர்களுக்குப் பொன்னையும் பசுக்களையும் பலவகையான இரத்தினங்களையும் கொடுக்கும்படி ஆணையிட்டார். இதனிடையே இராகவன் மன்னரை வணங்கி விடைபெற்றுக் கொண்டு, ரதத்தில் ஏறி, குடிமக்கள் மகிழ்ந்து கொண்டாட, ஒளிமிக்க தன் மாளிகையைச் சென்றடைந்தார். (46–48)

பட்டணத்து மக்கள் மன்னருடைய சொற்களைக் கேட்டதும் தங்களுக்குப் பிடித்தமான அந்த நல்விருப்பம் (இராமனுக்கு இளவரசுப்பட்டம்) விரைவில் நிறைவேறப் போவதால் மகிழ்ந்து, மன்னரிடம் விடைபெற்றுக் கொண்டு, தத்தம் இல்லங்களுக்குச் சென்று, தாங்கள் நினைத்த காரியம் கைகூட வேண்டும் என்று பிரார்த்தித்துத் தெய்வங்களை வழிபட்டார்கள். (49)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நான்கு

கௌசல்யை ஆசீர்வாதம்

பட்டணத்து மக்களும் மந்திரிகளும் சென்ற பிறகு, நிகழ்ச்சிகளின் தவிர்க்க முடியாத தன்மையை அறிந்தவரான மன்னர், மறுபடியும் தனக்குள் ஆலோசித்து மிகச்சிறந்த ஒரு முடிவை எடுத்தார். 'நாளைய தினம் பூச நட்சத்திரம் உள்ள நன்னாள். என்னுடைய புதல்வன் தாமரைக்கண்ணன் இராமன், நாளையே இளைய மன்னனாக அபிஷேகம் செய்யப்பட

வேண்டும்.' பின்னர், அந்தப்புரம் சென்ற மன்னர் தசரதர், ''இராமனை மறுபடியும் அழைத்து வா'' என்று தேரோட்டிக்குக் கட்டளையிட்டார். (1–3)

அந்த ஆணையை ஏற்றுக்கொண்ட தேரோட்டி சுமந்திரர், இராமனுடைய மாளிகைக்கு மறுபடியும் அவரை அழைத்து வருவதற்காக விரைந்து சென்றார். வாயிற்காப்பாளர்கள் (உள்ளே சென்று) அவர் மறுபடியும் வந்திருப்பதை இராமனிடம் தெரிவித்தார்கள். 'அவர் மீண்டும் வந்திருக்கிறார்' என்பதைக் கேட்டவுடனேயே, இராமனுக்குப் (பட்டாபிஷேக விஷயத்தில்) சந்தேகம் ஏற்பட்டது. அவரை உடனே உள்ளே அழைத்து இராமன் கூறினார்— ''நீங்கள் மறுபடியும் வந்திருக்கிறீர்களே? என்ன வேலை? செய்தியை விவரமாகச் சொல்லுங்கள்.'' (4–6)

அதைக் கேட்ட தேரோட்டி, ''மன்னர், தங்களைப் பார்க்க விரும்புகிறார் (என்ற செய்தியைச் சொல்லிவிட்டேன்). இதைக் கேட்டபின், 'அங்கே போக வேண்டுமா, வேண்டாமா?' என்று முடிவு செய்வது, உங்கள் கையில் இருக்கிறது.'' தேரோட்டியின் சொற்களைக் கேட்ட இராமன் பரபரப்படைந்து, மன்னரை மீண்டும் பார்ப்பதற்காக அரசமாளிகைக்குச் சென்றார். 'இராமன் வந்துவிட்டார்' என்று தசரத மன்னருக்குத் தெரிவிக்கப்பட்டவுடன், பேரன்புக்குரிய உயர்ந்த குணங்கள் கொண்ட அவரை மாளிகைக்குள் அனுப்பும்படிக் கூறினார். திருவளர் நாயகன் இராகவன், தந்தையின் மாளிகைக்குள் நுழைந்தவுடனேயே சற்றுத் தொலைவில் தந்தையைக் கண்டு, கைகளைக் கூப்பிக் கொண்டு நமஸ்காரம் செய்தார். (7–10)

பாதங்களில் விழுந்த அவரைத் தூக்கி நிறுத்தி மார்புடன் அணைத்துக் கொண்ட மன்னர், உயர்ந்த ஆசனத்தைக் காட்டி அமரச் செய்து பேசத் தொடங்கினார்— ''இராமா! நீண்ட நாட்கள் வாழ்ந்து நான் வயோதிகத்தை அடைந்துவிட்டேன். நான் விரும்பிய எல்லாச் சுகபோகங்களையும் அனுபவித்துவிட்டேன். ஏராளமானவர்களுக்கு அன்னம் அளித்து, நிறைய தட்சிணைகள் கொடுத்து, நூற்றுக்கணக்கான யாகங்கள் செய்துவிட்டேன். (11,12)

மகிமைமிக்க ஆண்பிள்ளாய்! இவ்வுலகில் இப்போது எவரும் ஒப்புவமையில்லாத எனக்கு, இஷ்டமான மகனாக நீ பிறந்திருக்கிறாய். நான் தானம், யக்ஞம், ஸ்வாத்யாயம் முதலியவற்றை செய்து முடித்திருக்கிறேன். வீரனே! நான் விரும்பிய எல்லாச் சுகங்களையும் அனுபவித்து விட்டேன்! (இவ்வாறாக,) தேவர், ரிஷி, பித்ரு, பிராமணர், தனது ஆத்மா – இவற்றின் கடன்களைத் தீர்த்துவிட்டேன்! (யாக–யக்ஞங்களைச் செய்ததால் தேவர் கடனையும், வேதாத்யயனத்தால் முனிவர் கடனையும், புதல்வனைப் பெற்றதால் பிதரர் கடனையும், தானம் செய்ததால் பிராமணர் கடனையும், சுகானுபவங்களால் ஆத்மாவின் கடனையும் தீர்த்துவிட்டேன்.) (13,14)

உன் முடிசூட்டு விழாவைத் தவிர நான் செய்யவேண்டிய கடமை வேறு ஏதும் இல்லை. ஆகவே, நான் சொல்லப் போவதைக் கவனமாகக் கேட்டு, உட்கருத்தைப் புரிந்து கொண்டு, அவ்வாறே நீ செய்யவேண்டும். பிள்ளாய்! இப்போது மக்கள் எல்லோரும் நீ அரசனாக வேண்டும் என்று விரும்புகிறார்கள். அதனால், உனக்கு இளவரசுப் பட்டம் சூட்டப் போகிறேன். இராமா! மேலும் இப்போதெல்லாம் நான் பயங்கரமான கனவுகளைக் காண்கிறேன். இடியோசை போன்ற பேரொலியுடன்கூட பகற்கொள்ளிக்கட்டை (ஆகாயத்திலிருந்து) விழுகிறது. (இது ஒரு அசுப நிமித்தம்.) (15–17)

என் அருமை இராமனே! என்னுடைய ஜன்ம நட்சத்திரத்தைச் சூரியன், செவ்வாய், ராகு ஆகிய குரூர கிரகங்கள் பீடித்திருப்பதாகச் சோதிடர்கள் சொல்கிறார்கள். இப்படிப்பட்ட அபசகுனங்கள் ஏற்படும்போது, பொதுவாக மன்னன் மிகக் கொடிய ஆபத்தை அடைகிறான் அல்லது மரணத்தை அடைகிறான் (என்று கோள்நிலை பலன் சொல்கிறார்கள்). ஆகவே, இராகவா! என் சுயநினைவு என்னை விட்டுப் போகாமலிருக்கும் போதே, நீ முடிசூட்டிக் கொண்டுவிடு. (ஏனெனில்,) மனிதர்களின் மனம் மாறும் தன்மையுடையது. (18–20)

இன்றைய தினம், புஷ்ய நட்சத்திரத்திற்கு முந்தைய நட்சத்திரமான புனர்வசுவில் சந்திரன் இருக்கிறான். நாளைய தினம், புஷ்யம் கூடிய நன்னாள் பட்டாபிஷேகத்திற்கு உகந்தது என்று சோதிடர்கள் கூறுகிறார்கள். எனவே, சத்துரு சம்காரனே! புஷ்ய நட்சத்திரத்தில் அபிஷேகம் செய்து கொள். என் மனம் என்னை மிகவும் பரபரப்படையச் செய்கிறது. நாளைய தினம் இளவரசனாக உனக்குப் பட்டம் சூட்டிவிடுகிறேன். ஆகவே, இப்போது முதற்கொண்டு நீ கட்டுப்பாடுகளைக் கைக்கொள்ள வேண்டும். இன்றிரவு பத்தினியுடன் தர்ப்பப்படுக்கையில் சயனிக்க வேண்டும். (21–23)

கவனக்குறைவில்லாத நண்பர்கள் உன்னை எல்லாப் பக்கங்களிலும் பாதுகாக்க வேண்டும். இது போன்ற மாபெரும் நிகழ்ச்சிகளுக்கு அநேக இடையூறுகள் உண்டாகவே செய்யும். இந்தப் பட்டணத்திலிருந்து வெளியே சென்றிருக்கும் பரதன் இங்கு திரும்பி வருவதற்குள், இடைப்பட்ட இந்தக் காலம்தான் உன் பட்டாபிஷேகத்திற்கு உரிய காலம் என்று நான் திடமாக நம்புகிறேன். உன்னுடைய சகோதரன் பரதன், சான்றோர்களின் நடத்தையை அனுசரிப்பவன் என்பது உண்மைதான். அவன் மூத்தவனை அனுசரித்து நடப்பவன்; அறத்தையே உயிராகக் கொண்டவன்; கருணை உள்ளவன்; புலன்களை வென்றவன். (24–26)

இராகவா! சான்றோர்கள் மற்றும் தருமத்தையே பற்றி ஒழுகும் மனிதர்களுடைய மனம்கூட பல காரணங்களால் விருப்பு–வெறுப்பை அடைகிறது; சஞ்சலமில்லாமல் எப்போதும் உறுதியாக இருப்பதில்லை என்ற விஷயம் எல்லோரும் அறிந்ததுதானே?'' நாளைய தினம் நடக்கப் போகும் பட்டாபிஷேகம் சம்பந்தமாக, இவ்வாறு அறிவுரை கூறப்பட்ட இராமன், 'இனி, நீ போகலாம்' என்று அனுமதிக்கப்பட்டதும் தந்தையை வணங்கிவிட்டுத் தன் மாளிகைக்குத் திரும்பினார். தன்னுடைய திருமாளிகைக்குள் புகுந்த அவர், பட்டாபிஷேகம் குறித்து அரசர் சொன்ன அறிவுரைகள் நினைவுக்கு வந்தவராக, (பெற்ற தாயிடம் இந்த நற்செய்தியைத் தானே தெரிவிப்பதற்காக) அடுத்த விநாடியே வெளியே வந்து, அன்னையின் அந்தப்புரத்திற்குப் போனார். (27–29)

அவர், அங்கே பட்டாடை உடுத்திக் கொண்டு மௌனமாக மிகவும் பக்தி சிரத்தையுடன் 'இராமனுக்கு ராஜ்யலக்ஷ்மி கிடைக்கவேண்டும்' என்று பூஜாக்ருஹத்தில் தேவதைகளைப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கும் அன்னையைக் கண்டார். இராமனுக்குப் பட்டாபிஷேகம் என்ற நற்செய்தியைக் கேட்டவுடன் அவ்விடத்திற்கு சுமித்திரையும் லட்சுமணனும் முன்னதாகவே வந்திருந்தார்கள். பின்னர், சீதாதேவியும் அழைத்து வரப்பட்டாள். இராமன் உள்ளே வந்தபோது கௌசல்யை கண்களை மூடிக்கொண்டு தியானத்தில் ஆழ்ந்திருந்தார். சுமித்திரை, சீதை, லட்சுமணன் ஆகியோர் அவருக்குச் சேவை செய்யும் நிலையில் இருந்தார்கள். (30–32)

புஷ்ய நட்சத்திரத்தில் தன் புதல்வனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டப்படுகிறது என்பதைக் கேட்டதும், பரம்பொருளான சாட்சாத் மகாவிஷ்ணுவை மனத்தில் நினைத்து, சுவாசத்தைக் கட்டுப்படுத்தி, பக்திபரவசத்துடன் தியானத்தில் ஆழ்ந்திருந்த அவரை அணுகி, நமஸ்காரம் செய்து, மாசற்றவரான அவருக்கு ஆனந்தம் விளைவிக்கும் சொற்களை, இராமன் கூறத் தொடங்கினார்— (33,34)

''தாயே! குடிமக்களைக் காக்கும் பணியில் நான் தந்தையால் நியமிக்கப்பட்டுள்ளேன். என் தகப்பனாரின் கட்டளைப்படி, இந்தப் பட்டாபிஷேகம் நாளைய தினம் நடக்கவிருக்கிறது. 'இன்றிரவு, என்னுடன்கூட சீதையும் உபவாசம் இருக்கவேண்டும்' என்று ரித்விக்குகளும் ஆசார்யர்களும் கூறியதை, என்னுடைய தந்தை, எனக்குத் தெரிவித்தார். நாளைய தினம் நடக்கவிருக்கின்ற பட்டாபிஷேக வைபவத்தை முன்னிட்டு என்னென்ன மங்களமான சடங்குகள் இப்போது செய்யப்பட வேண்டுமோ, அவைகளை எனக்கும் சீதைக்கும் செய்விப்பீர்களாக.'' (35–37)

வெகுகாலமாக மனத்திலிருந்த விருப்பம் நிறைவேறுவதற்கான காலம் வந்துவிட்டதைக் கேட்டு, கௌசல்யை ஆனந்தக்கண்ணீர் மல்கி, நாத்தழுதழுக்க இராமனிடம் கூறினார்—

''குழந்தாய்! இராமனே! நீண்ட காலம் வாழ்வாயாக. உன் வழியில் குறுக்கிடும் எதிரிகள் அடியோடு ஒழிக்கப்பட்டு விட்டார்கள். ராஜ்யலக்ஷ்மியை அடையப் போகும் நீ, என் சுற்றத்தாரையும் சுமித்திரையின் உறவினர்களையும் சந்தோஷமடையச் செய். மகனே! ஓர் உத்தமமான நட்சத்திரத்தில் நீ எனக்குப் பிறந்திருக்கிறாய். ஆகா! அதனால்தான் உன் நற்குணங்களால் தந்தையார் தசரதரை மனமகிழச் செய்திருக்கிறாய். (38–40)

கமலக்கண்ணனான புருஷோத்தமர், மகாவிஷ்ணுவைப் பற்பல கடினமான நியமங்களுடன் ஆராதித்தது வீண் போகவில்லை. ஆம்! அதன் பயனாகத்தான் இக்ஷ்வாகு பரம்பரையின் ராஜ்யலக்ஷ்மி, உன்னை அடைந்து மேன்மை அடையப் போகிறாள்!'' இவ்வாறு, அன்னை சொல்லியபின் கைகளைக் குவித்துக் கொண்டு பணிவுடன் நிற்கும் சகோதரனைப் பார்த்து, புன்முறுவல் கொண்டு இராமன் சொன்னார்— (41,42)

''லட்சுமணா! என்னுடன் சேர்ந்து நீயும் இந்த உலகைப் பரிபாலனம் செய். என்னுடைய இரண்டாவது அந்தராத்மாவான உன்பொருட்டே இந்த ராஜ்யலக்ஷ்மி கிடைத்திருக்கிறாள். சுமித்திரையின் மைந்தனே! உன் விருப்பப்படி, எல்லா போகங்களையும் அரசு சலுகை மற்றும் உரிமைகளையும் அனுபவிப்பாய்! இந்த வாழ்க்கையையும் அரசாட்சியையும் உனக்காகவே நான் விரும்புகிறேன்.'' இவ்வாறு லட்சுமணனிடம் கூறிவிட்டு, இரு தாய்மார்களையும் வணங்கியபின் சீதைக்கும் விடைகொடுத்து அனுப்பிவிட்டு, தன் இருப்பிடத்திற்குப் போனார், இராமன். (43–45)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐந்து

விரதங்கள் மேற்கொள்ளுதல்

மாமன்னர் தசரதர், மறுநாள் நடக்கவிருக்கும் பட்டாபிஷேகம் சம்பந்தமாக இராமனுக்குச் சொல்லவேண்டிய விஷயங்களைச் சொல்லி அனுப்பிவிட்டு, புரோகிதர் வசிஷ்டரை அழைப்பித்து பின்வருமாறு கூறினார்— ''தவச்செல்வரே! தாங்கள் இப்போதே சென்று, இடையூறுகள் நீங்கி, ராஜ்யத்தை அடைய வேண்டும் என்பதற்காக, இராமனும் சீதையும் சேர்ந்து அனுஷ்டிக்க வேண்டிய விரத நியமங்களைச் செய்வியுங்கள்.'' (1,2)

'அப்படியே செய்கிறேன்' என்று வேதவல்லுநர்களில் முதல்வரான பகவான் வசிஷ்டர் அரசரிடம் கூறிவிட்டு, தானே இராமன் மாளிகைக்குச் சென்றார். (தன்னுடைய சிஷ்யன் ஒருவன் மூலமாகக்கூட, அவர் இந்தக் காரியத்தைச் செய்வித்திருக்கலாம். ஆனால், சீதா–ராமர்களைத் தரிசிக்கும் பாக்கியம் இன்றும் நாளையும் விட்டால், அப்புறம் பதிநான்கு ஆண்டுகளுக்குப் பிறகுதானே கிடைக்கும் என்பதால், தானே சென்றார் – என்றபடி.) (3)

வேதமந்திரங்களைப் பிழையறக் கற்றுணர்ந்தவரும், மிக உறுதியாக விரதானுஷ்டானங்களைக் கடைப்பிடிப்பவருமான அவர் (வசிஷ்டர்), மந்திர நூல்களில் கூறியுள்ளபடி இராமனை உபவாசம் இருக்கச் சொல்வதற்காக, அந்தணர் உபயோகத்திற்கென்றே நிர்ணயிக்கப்பட்டிருந்த ஆயத்தமாக இருந்த தேரில் ஏறி, வெண்மேகக் கூட்டம் போன்று ஒளிவீசும் இராமன் திருமாளிகையை அடைந்து, மூன்றாம் கட்டு வரையில் தேரிலேயே சென்றார். (புரோகிதர் போன்ற ஒரு சில முக்கியஸ்தர்களுக்கே உள்ள சிறப்புச் சலுகை. மற்றவர்கள் மாளிகை நுழைவாயிலிலேயே தேரை நிறுத்திவிட்டு நடந்துதான் உள்ளே செல்லவேண்டும்.) (4,5)

முனிவர் வந்து கொண்டிருப்பதை (தூரத்திலிருந்தே) பார்த்துவிட்ட இராமன் கலவரமடைந்து, கௌரவத்திற்குரிய அவரைக் கௌரவிக்கும் பொருட்டு முனிவரை எதிர்கொண்டு அழைப்பதற்காக

பரபரப்புடன் தன் அறையிலிருந்து வெளியே வந்தார். முனிவரின் தேர் அருகே விரைவாகச் சென்று, அவருக்குக் கைலாகு கொடுத்து, தானே அவரைத் தேரிலிருந்து இறக்கினார். வசிஷ்ட முனிவர், மிகவும் அடக்கமாக இருக்கும் அவரை (இராமனை)ப் பார்த்து வாழ்த்திப் பேசி, ஆசி கூறியபின், அன்புக்குரிய அவரை மகிழ்ச்சியில் ஆழ்த்தும் முறையில், 'இராமா!...' என்று அன்பொழுக விளித்துக் கூறினார்— (6–8)

''உன் தகப்பனார் மிகவும் திருப்தியுடன் இருக்கிறார். இளவரசுப் பட்டத்தை அடையப் போகிறாய். சீதையும் நீயும் இப்போது முதல் உபவாசத்தில் இருக்க வேண்டும். நகுஷ மன்னன் மிக்க அன்புடன் யயாதிக்குப் பட்டம் சூட்டியதைப்போல, மன்னர் தசரதர் நாளைக் காலையில் யுவராஜாவாக, உனக்குப் பட்டம் சூட்டுவார்.'' இவ்வாறு சொல்லிவிட்டு விரத அனுஷ்டானங்களை முறைப்படி செய்பவரும் புனிதருமான வசிஷ்டர், சீதைக்கும் இராமனுக்கும் உரிய மந்திரங்களைக் கூறி, உபவாச தீட்சை அளித்தார். (9–11)

பின்னர், மன்னரின் ஆசார்யராகிய அவர், முறைப்படி இராமனால் மரியாதை செய்யப்பட்டார். அவர், காகுத்தனை அங்கிருந்து செல்வதற்கு அனுமதி கொடுத்துவிட்டு, இராமனின் மாளிகையிலிருந்து வெளியே சென்றார். அன்போடு உரையாடும் நண்பர்களுடன் அங்கே சிறிதுநேரம் அமர்ந்திருந்து, பின் அவர்களுக்கு அனுமதியளித்துவிட்டுத் தன் அறைக்குள் சென்றார், இராமன். அப்போது, மலர்ந்த தாமரைகளையுடைய தடாகத்தில் இரைச்சலிட்டுக் கொண்டு சுற்றி வரும் பறவைக் கூட்டங்களைப் போல், மனக்களிப்புடன் உரக்கப் பேசி மகிழும் ஆண்–பெண்களால் இராமபவனம் நிறைந்ததாயிற்று. (12–14)

அரச மாளிகைகளுள் சிறந்ததான இராமனுடைய மாளிகையிலிருந்து வெளியே வந்த வசிஷ்டர், சாலைகளில் கூட்டம் கூட்டமாக மக்கள் நிற்பதைக் கண்டார். முடிசூட்டு விழாவைக் காண வந்த மக்கள், அயோத்தியின் ராஜபாட்டைகளில் எல்லா இடங்களிலும் கூட்டம் கூட்டமாக நின்று அடைத்துக் கொண்டிருந்தார்கள். ராஜபாட்டையில் ஜனக்கூட்டங்களாகிற அலைகள் பரஸ்பரம் மோதிக் கொண்டதால் ஏற்பட்ட ஆனந்தக் கோலாகலப் பேரோசை, பெருங்கடலில் எழும்பும் சப்தம் போல் கேட்டது. (15–17)

அவ்வேளையில், நகரத்தின் எல்லா வீதிகளிலும் நீர் தெளிக்கப்பட்டும், தோரணங்கள் கட்டப்பட்டும், வீடுகளின் உச்சியில் கொடிகள் கட்டப்பட்டதாகவும் அயோத்தி மாநகர் விளங்கிற்று. பெண்கள், குழந்தைகள் உள்பட அயோத்திவாசிகள் எல்லோரும் இராம பட்டாபிஷேகத்தைக் காணும் மகத்தான ஆவலுடன், 'எப்போது சூரியன் உதிப்பான்?' என்று துடிப்புடன் காத்துக் கொண்டிருந்தனர். மக்களின் ஆனந்தத்தைப் பெருக்குவதும், அவர்கள் வாழ்வில் விலைமதிக்க முடியாத அற்புத அணிகலன் போன்றதுமான அயோத்தி நகரத்தின் தனிச்சிறப்புடைய கோலாகல வைபவத்தைக் காண ஜனங்கள் தவியாய்த் தவித்துக் கொண்டிருந்தார்கள். (18–20)

இவ்விதம் மக்கள் கூட்டங்களால் நிரம்பி வழிந்த அரசபாட்டையை அடைந்த புரோகிதர், ஜனக்கூட்டத்தை மெல்ல மெல்ல ஒதுக்கிக் கொண்டு, அரசருடைய அரண்மனையை அடைந்தார். வெண்மேக சிகரம் போல் விளங்கிய அரண்மனை உப்பரிகைக்குச் சென்று, இந்திரனைக் காண வந்த பிருகஸ்பதிபோல், மன்னருடன் இணைந்து அவர் விளங்கினார். வந்து கொண்டிருந்த அவரைப் பார்த்ததும் சிம்மாசனத்திலிருந்து எழுந்து வந்த மன்னர் தசரதன், 'தாங்கள் சென்ற காரியம் நிறைவேறியதா?' என்று கேட்டவுடன், 'அது செய்து முடிக்கப்பட்டது' என்று அவர் (வசிஷ்டர்) கூறினார். (21–23)

அவருடன் (மன்னருடன்) கூட, அவருக்குச் சமமான ஆசனங்களில் அமர்ந்திருந்த சபையோர்கள், புரோகிதருக்கு மரியாதை காட்டும் முறையில் ஆசனங்களிலிருந்து எழுந்து நின்றார்கள். ஆசார்யரிடம் விடைபெற்றுக் கொண்டு, சபையோர்களைப் போகச் சொல்லிவிட்டு,

தன் குகைக்குள் கம்பீரமாக நுழையும் சிங்கத்தைப் போல, மன்னர் தன் அந்தப்புரத்திற்குள் நுழைந்தார். தாரகைக் கூட்டங்கள் புடைசூழ விளங்கும் சந்திரன் ஆகாயத்தை ஒளிர்விப்பது போல, சிறந்த ஆடையணிகள் அணிந்த பெண்மணிகள் கூட்டத்தால், பிரகாசிக்கும் மகேந்திரனுடைய இருப்பிடத்தைப் போன்ற அந்த மாளிகையைக் கண்கவரும்வண்ணம் பிரகாசிக்கச் செய்து கொண்டு, நாடாளும் மன்னர் உள்ளே சென்றார். (24–26)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
ஐந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஆறு

மக்களின் மகிழ்ச்சி வெள்ளம்

புரோகிதர் சென்றவுடன் இராமன், நீராடி கட்டுப்பாடான மனத்துடன், நெடுந்தடங்கண்ணாளான பத்தினியுடன் (மைதிலியுடன்) சேர்ந்து, ஸ்ரீமந் நாராயணனுக்குப் பூஜை–தோத்திரங்கள் செய்தார். (பின் அக்னி காரியம் செய்ய முனைந்து) முறைப்படி ஹவிஸ் நிறைந்த 'ஸ்ருக்' என்ற கரண்டியை மிகப் பணிவுடன் எடுத்து, முழுமுதற்கடவுளுக்குச் சுவாலைவிட்டுப் பிரகாசிக்கும் அக்னியில் நெய் சேர்த்து ஆகுதி கொடுத்தார். (1,2)

அந்த அரசகுமாரர் மிகுந்திருந்த ஹவிஸ் அன்னத்தைப் புசித்தார். தனக்குப் பிரியமானது நடக்க வேண்டும் என்று ஸ்ரீமந் நாராயணனைத் தியானித்து வேண்டி, சீதையுடன்கூட மௌன நியமத்தை மேற்கொண்டு, தன் மாளிகையிலிருக்கும் ஸ்ரீவிஷ்ணுவினுடைய அழகான திருச்சன்னதியில், தானே தர்பங்களைப் படுக்கையாக விரித்துப் படுத்துக் கொண்டார். இரவில் ஒரு யாமம் மிகுந்திருக்கும்போது கண் விழித்துக் கொண்ட அவர், கட்டிடம் முழுவதிலும் அலங்கார வேலைகளைச் செய்யச் செய்தார். (3–5)

பின்னர், சூத–மாகத–வந்திகளின் செவிக்கினிய வாழ்த்துப் பாடல்களைக் கேட்டார். காலை சந்தியாதேவியை ஒருமைப்பட்ட மனத்துடன் துதித்து 'காயத்ரீ ஜபம்' செய்தார். தூய்மையான பட்டாடை அணிந்து கொண்டு, ஸ்ரீமந் நாராயணனைத் தலைவணங்கித் தொழுது, தோத்திரங்களால் மகிழச் செய்தார். அந்தணர்களைக் கொண்டு வேத மந்திரங்களைச் சொல்லச் சொன்னார். அவர்களுடைய கணீரென்ற செவிக்கினிய புண்யாஹ மந்திர ஒலியும், (வெளியே) பேரிகை வாத்தியங்களின் பேரொலியும் சேர்ந்து அயோத்திப் பட்டணத்தை நிறைத்தன. (6–8)

அயோத்தி மக்கள் அனைவரும் வைதேகியும் இராகவனும் (இரவு முழுவதும்) உபவாசம் இருந்தார்கள் என்பதைக் கேட்டு (நிச்சயம் பட்டாபிஷேகம் நடைபெறும் என்ற நம்பிக்கை அடைந்து) மிகவும் குதூகலித்தார்கள். மக்கள் எல்லோரும் இராம பட்டாபிஷேகத்தைப் பற்றிக் கேள்விப்பட்டு, இரவு முடிந்து பொழுது புலர்ந்ததும் நகரத்தை அழகுபடுத்தினார்கள். (9,10)

வெண்மேகம் தவழும் மலைச்சிகரங்கள் போன்ற தேவாலயங்களிலும், நாற்சந்திகளிலும், தேரோடும் திருவீதிகளிலும், தெருவோரத்தில் வளர்க்கப்பட்டிருந்த பெரிய மரங்களிலும், பெரிய மாளிகைகளிலும், பல்வகை பண்டங்கள் விற்கப்படும் வணிக வளாகங்களிலும், குடும்பஸ்தர்களின் செழுமை மிக்கதும் செல்வம் கொழிப்பதுமான இல்லங்களிலும், சமுதாயக் கட்டிடங்களிலும், வெகுதூரத்திலிருந்தே கண்ணுக்குப் புலப்படும் உயரமான மரங்களிலும் வண்ண ஓவியங்கள் வரையப்பட்ட கொடிகளும் பாவட்டாக்களும் கட்டப்பட்டன. (11–13)

அப்போது பொதுமக்கள், நடனமாடும் ஆடவர், நடனப் பெண்டிர், இசை முழங்கிக் கொண்டிருந்த பாடகர்கள் ஆகியோரின் மனத்திற்கும் செவிக்கும் சுகமளிக்கும் இனிய ஓசைகளைக்

கேட்டார்கள். இராம பட்டாபிஷேக முகூர்த்த நேரம் நெருங்கியதும், இராமாபிஷேகத்தைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்த மக்கள் நாற்சந்திகளிலும் வீடுகளிலும் கூட்டமாகக் கூடி, பரஸ்பரம் அதைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தார்கள். (14,15)

வீட்டுவாசற்படியருகில் கூட்டங்கூட்டமாக விளையாடிக் கொண்டிருந்த சின்னஞ்சிறுவர்களும் இராம பட்டாபிஷேகத்தைப் பற்றியே தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள். அந்த இராம பட்டாபிஷேகக் கொண்டாட்ட காலத்தில் பட்டணத்தின் ராஜபாட்டை மணமிக்க மலர்கள் தூவப்பெற்று, நறுமணப் புகைகள் காட்டப்பட்டு சோபையுள்ளதாகச் செய்யப்பட்டது. (16,17)

(பட்டாபிஷேகச் சடங்குகள் நிறைவேறி, இராமனைத் தரிசித்துவிட்டு, மக்கள் திரும்பும்போது) 'இரவு நேரம் ஆகிவிடுமோ?' என்ற சந்தேகத்தால், சாலையைப் பிரகாசப்படுத்துவதற்காக, தேரோடும் வீதிகளையொட்டியத் தெருக்களில் உயரமான தீபத்தூண்களை நாட்டினார்கள். நகரத்தை இவ்வாறாக அலங்கரித்துவிட்டு, இராம பட்டாபிஷேகத்தை எதிர்பார்த்துக் கொண்டு, பட்டணத்து மக்கள் கூட்டங்கூட்டமாகச் சேர்ந்து எல்லா நாற்சந்திகளிலும் சமுதாயக் கூடங்களிலும் தங்களுக்குள் அதைப் பற்றியே பேசிக் கொண்டு, மன்னரைப் புகழ்ந்தார்கள். (18–20)

''அடடா! இக்ஷ்வாகு குல நந்தனர், மகாத்மா, இந்த மன்னர் எப்பேர்ப்பட்டவர்! தான் வயோதிகத்தை அடைந்துவிட்டதை உணர்ந்து, இராமனுக்குப் பட்டம் சூட்டுகிறாரே! பழமையான சம்பிரதாயங்களை நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கும் ஸ்ரீராமன், நம்மை ஆள்பவராகி நீண்ட காலம் பரிபாலிக்கப் போகிறார் என்பது நமக்குக் கிடைத்துள்ள அனுக்கிரகம். (21,22)

இராமன் மனக்கொந்தளிப்பு இல்லாதவர்; மெத்தப் படித்தவர்; தருமமே உருவானவர்; சகோதரர்களிடம் பாசமுள்ளவர்; சகோதரர்களிடம் எவ்வளவு ஒட்டுதலோ, அவ்வளவு பாசம் நம்மிடமும் உள்ளவர். மாசற்ற தருமாத்மாவான மன்னர் தசரதர் நெடுநாள் வாழ்வாராக! அவருடைய நெஞ்சக் கருணையால் பட்டாபிஷேகம் செய்விக்கப்பட்டவராக, இராமனைக் காணப் போகிறோம்!'' இவ்வாறெல்லாம் பட்டணத்து மக்கள் பேசிக் கொண்டிருந்ததைக் கேள்விப்பட்ட புறநகர் மக்கள், எல்லாத் திசைகளிலிருந்தும் வந்து கூடினார்கள். (23–25)

இராம பட்டாபிஷேகத்தைப் பார்ப்பதற்காக, எல்லாப் பகுதிகளிலிருந்தும் அவர்கள் நகரத்திற்கு வந்தார்கள். இராமனுடைய அந்தப் பட்டணத்தை புறநகர் மக்கள் நிரம்பி வழியச் செய்தார்கள். மக்கள் கூட்டம் பெருகிக் கொண்டே போனதால், பர்வ காலங்களில் சமுத்திரத்தில் எழும் அலையோசை போல் பேரிரைச்சல் உண்டாயிற்று. பட்டாபிஷேகத்தைக் கண்டுகளிக்க வேண்டுமென்ற பேரவாவுடன் வந்த கிராமத்தார்களால் இந்திரனுடைய நகரம் போன்ற அந்தப் பட்டணம், நீர்வாழ் பிராணிகளால் நிறைந்த மகாசாகரம்போல் ஆயிற்று. (26–28)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
ஆறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஏழு

மந்தரை வந்தாள்!

தாயார் வீட்டிலிருந்து வந்த ஒரு வேலைக்காரி; எங்கேயோ, எப்படியோ பிறந்தவள்; கைகேயியுடன் கூடவே இருப்பவள். (பட்டாபிஷேகத்திற்கு முந்தைய நாள்) முழுநிலவைப் போல் ஒளிவீசும் மாளிகையின் மேல்தளத்திற்குத் தற்செயலாக ஏறி வந்தாள். அந்த மேல்தளத்திலிருந்து அயோத்தியின் ராஜபாட்டை முழுவதும் நீர் தெளிக்கப்பட்டும், தாமரை–நீலோத்பல மலர்கள் தூவப்பட்டும் பொலிவுற்று விளங்குவதை, மந்தரை (என்ற அந்த வேலைக்காரி) பார்த்தாள். (1,2)

மிக உயர்ந்த பதாகைகளாலும் நீண்ட கொடிகளாலும் அலங்காரம் செய்யப்பட்டிருந்ததும், சந்தன நீரால் தெளிக்கப்பட்டதும், தலைமூழ்கி நீராடிய மக்கள் நிறைந்ததும், கையில் மாலைகள்–மோதகங்கள் ஏந்திக் கொண்டிருந்த அந்தணோத்தமர்களின் பேச்சொலி கேட்பதும், தேவாலய நுழைவாயில்கள் வெண்மை பூசப்பட்டு விளங்குவதும், எல்லா வாத்தியங்களின் ஒலி கேட்பதும், மனமகிழ்ந்த மக்கள் நிறைந்ததும், வேதமந்திரங்களின் இனிய ஒலி கேட்பதும், மனக்களிப்புடன் விளங்கும் உயர்ஜாதி யானைகள்–குதிரைகள் நிரம்பியதும், மதாளித்து நிற்கும் பசுக்கள்–காளைகள் உடையதும், மகிழ்ச்சி மீதூரப் பெற்ற பட்டணத்து மக்களால் கொடிகளும் மாலைகளும் ஏற்றப்பட்டு விளங்குவதுமான அயோத்தியைப் பார்த்து, மந்தரை மிகவும் ஆச்சரியத்தை அடைந்தாள். (3–6)

மகிழ்ச்சியால் மலர்ந்த கண்களைக் கொண்டவளும், வெண்பட்டாடை அணிந்தவளுமான ஒரு தாதி, தன் அருகில் நிற்பதைப் பார்த்த மந்தரை, அவளிடம் கேட்டாள்— "எப்போதும் பணவிஷயத்தில் சிக்கனமாக இருக்கும் இராமனின் தாயார், மிகவும் மகிழ்ச்சியுடன் மக்களுக்குப் பணத்தை வாரி வழங்குகிறாரே, ஏன்? பொதுமக்கள் ஏன் இவ்வளவு குதூகலமாக இருக்கிறார்கள்? மிகவும் ஆனந்தத்தில் மிதக்கும் மன்னர் என்ன முக்கியமான காரியம் செய்யப் போகிறார்? எனக்குச் சொல்." (7–9)

சந்தோஷ சாகரத்தில் மூழ்கியிருந்த அந்தச் செவிலித்தாய், இராமபிரானுக்கு ஏற்பட்டுள்ள மகத்தான சம்பத்தைப் பற்றிக் கூனி மந்தரையிடம் கூறினாள்— "கோபத்தை வென்றவரும், மாசுமருவற்றவருமான ஸ்ரீராமனுக்கு நாளைய தினம் புஷ்ய நட்சத்திரம் கூடிய சுப வேளையில் மன்னர் தசரதர் இளவரசுப் பட்டம் சூட்டப் போகிறார்!" செவிலித்தாயின் சொற்களைக் கேட்ட கூனி, (தனக்குள்ளேயே) மிகவும் கோபம் கொண்டவளாக, கைலாசமலை போன்ற அந்த மாபெரும் மாளிகையின் மேல்தளத்திலிருந்து உடனே கீழே இறங்கினாள். (10–12)

கோபத்தால் கொதித்துக் கொண்டிருந்தவளும், தீய நோக்கம் உடையவளுமான அந்த மந்தரை, சயனித்துக் கொண்டிருந்த கைகேயியிடம் சென்று பின்வருமாறு சொன்னாள்— "அறிவு கெட்டவளே! என்ன படுக்கை வேண்டிக் கிடக்கிறது? பேராபத்து வந்திருக்கிறது உனக்கு. பெரிய துயரத்தில் சிக்கி அல்லற்படப்போவதை, நீ இன்னும் அறியவில்லையே? உன்னிடம் மிகவும் அன்பு காட்டுவதாக வெளிவேஷம் போடுகிறார், உன் கணவர். உண்மையில் அவருக்கு உன்னிடம் பிரியம் இல்லை. வெளிப்பார்வைக்குத் தெரியும் உன் பாக்கியமும் கோடை காலத்து நதி ஓட்டத்தைப் போல வற்றிக் கொண்டிருக்கிறது." (13–15)

நல்லதிலும் கெட்டதையே சுட்டிக்காட்டும் இயல்பினளும், மிகவும் கோபம் கொண்டவளுமான கூனியால் கடுமையாகக் கூறப்பட்ட சொற்களைக் கேட்ட கைகேயி, மிகவும் துக்கத்தை அடைந்தாள். கைகேயி கூனியைப் பார்த்து, "மந்தரையே! எல்லோரும் நலம்தானே? நீ வாடிய முகத்துடன் மிகவும் துக்கப்படுகிறவள் போல் இருக்கிறாயே?" என்றாள். கைகேயியின் அமைதியான சொற்களைக் கேட்ட, பேச்சில் வல்லவளான மந்தரை, பொங்கியெழும் சினத்தோடு சில சொற்களைக் கூறினாள். (16–18)

கூனி, கைகேயியின் நலன் விரும்புபவள். அதனால், இப்போது மிகவும் முகம் வாட்டமடைந்து, அவளையும் கவலைக்கு உள்ளாக்கி, இராமனிடம் வைத்திருந்த நல்லெண்ணத்தை நாசம் செய்யும் வகையில் அழுத்தமாகச் சொன்னாள்— (19)

"தேவி! முடிவேயில்லாத அழிவு உனக்கு ஏற்படப் போகிறது, தெரியுமா? தசரத மன்னர், இராமனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டப் போகிறாராம்! அதைக் கேட்டது முதலாக துக்கமும் வருத்தமும் கொண்டு, ஆழங்காண முடியாத பயம் என்னும் கடலில் மூழ்கியும், நெருப்பினால் தகிக்கப்பட்டும் தவித்த நான், உடனே உன்னிடம் செய்தியைச் சொல்லி, உன் நலன்களைக் காத்துக் கொள்ளும் நடவடிக்கை எடுப்பதற்காக, இங்கே ஓடோடி வந்தேன். (20,21)

கைகேயி, 'உனக்குத் துக்கம் ஏற்பட்டால், அது எனக்கும் பெரிய துக்கம்தான். உனக்கு க்ஷேமம் என்றால் அது என்னுடைய க்ஷேமமும் ஆகும்' என்பதில் சந்தேகமில்லை. தேவி! ஒரு மன்னர் பரம்பரையில் பிறந்தவள், நீ. ஒரு மாமன்னரின் பட்டத்தரசி. அரச நீதிகளின் கடுமையான போக்குகளை அறியாமலிருக்கிறாயே? உன் கணவர் வாயால் தருமம் பேசுகிறவர்; (நெஞ்சில்) வஞ்சனை உடையவர்; இனிமையாகப் பேசுவார்; ஆனால், கொடூரமான நெஞ்சினர். அவர் பேசுவதெல்லாம் உண்மை என்றே நம்பிக் கொண்டிருந்தாயல்லவா? இப்போது பார், அவர் (உனக்கு) செய்துவிட்ட வஞ்சனையை. (22–24)

உன்னுடைய கணவர் எவ்வித அர்த்தலாபமும் இல்லாமல் வீணாக உரையாடி, உன்னை அமைதியாக வைத்திருப்பதற்காகவே இவ்விடம் வருகிறார். இப்போது கௌசல்யைக்குத்தான் பெரும்பேற்றை அளித்திருக்கிறார். கெட்ட எண்ணம் கொண்ட அவர், பரதனை உன் பிறந்த வீட்டிற்கு அனுப்பிவிட்டு, நாளைக் காலையில் எவ்வித எதிர்ப்பும் இல்லாத தருணத்தில் இராமனை, அரசு அதிகாரத்தில் நிலைநிறுத்தப் போகிறார். (25,26)

ஒன்றுமறியாத பேதைப் பெண்ணே! ஒரு தாய், தன் குழந்தையின் நலனில் அக்கறை கொண்டு போஷிப்பதைப் போல, உன் கணவரிடம் அன்பு வைத்தாய். ஆனால், விஷப் பாம்பைத் தன் மடியில் வைத்துக் கொஞ்சுவதைப் போல, உன் கணவர் என்று சொல்லப்பட்ட சத்துருவுக்கு உன் இதயத்தில் இடம் கொடுத்து மகிழ்ச்சி அடைந்தாய். வெறுப்படைந்த சத்துரு அல்லது சர்ப்பம் எவ்வாறு நடக்குமோ, அவ்வாறே தசரத மன்னர் மகனோடு கூடிய உன்னிடம் நடந்து காட்டியிருக்கிறார். (உன் அன்பையெல்லாம் மறந்து, உனக்கே துரோகம் செய்திருக்கிறார் — என்றபடி.) (27,28)

உலகமறியாத சிறுமியே! நீ எப்போதும் சுக–சௌக்கியமான வாழ்க்கைக்கு உரியவள். இராமனுக்குப் பட்டம் சூட்டப்படுவதால் நீயும் உன் சுற்றத்தார்களும் இழிநிலையை அடையப் போகிறீர்கள். பெரும் வியப்புடன் என்னைப் பார்க்கிறாயே! கைகேயி! இதுதான் சரியான தருணம். உன்னுடைய நல்வாழ்விற்கு உகந்த நடவடிக்கையை உடனே எடு. என்னையும் உன் புத்திரனையும் (இனி நிகழப்போகிற இழிவுகளிலிருந்து) காப்பாற்று.'' (29,30)

மங்களமான முகம் கொண்டவளும், சரத்கால சந்திரனைப் போல் இருந்தவளுமான அவள், மந்தரையின் சொற்களைக் கேட்டு மகிழ்ச்சி நிறைந்தவளாய் எழுந்து நின்றாள். மிகவும் சந்தோஷமும் ஆச்சரியமும் அடைந்த கைகேயி, உயர்ந்ததான ஓர் அணிகலனை, அந்தக் கூனியிடம் கொடுத்தாள். உத்தமப் பெண்மணியான கைகேயி, கூனியிடம் ஓர் ஆபரணத்தைக் கொடுத்துவிட்டு, மந்தரையைப் பார்த்து மேலும் சொன்னாள்— (31–33)

''மந்தரையே! எனக்கு மிகவும் பிரியமான செய்தியைச் சொல்லியிருக்கிறாய். எனக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கக்கூடிய நற்செய்தியைக் கூறிய உனக்கு, இன்னும் என்ன வேண்டுமானாலும் செய்வேன்! இராமனிடத்திலும் பரதனிடத்திலும் நான் ஏற்றத்தாழ்வைக் காணவில்லை. (இருவரிடமும் சமமான பாசம் வைத்திருக்கிறேன்.) மன்னர், இராமனுக்குப் பட்டம் சூட்டப் போகிறார் என்பதால் நான் மனமகிழ்ச்சியுடன் இருக்கிறேன். (34,35)

அன்புக்குரியவளே! எனக்கு மிகவும் இஷ்டமான நல்ல சங்கதியைச் சொல்லியிருக்கிறாய். இதைக் காட்டிலும் உயர்ந்தது வேறெதுவும் இல்லை. அப்படிப்பட்ட மிக மிகப் பிரியமான செய்தியைச் சொல்லியிருக்கும் உனக்கு இன்னும் வேறு என்ன வரம் வேண்டுமானாலும் கொடுப்பேன். வேண்டிய வரத்தைக் கேள்.'' (36)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
ஏழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எட்டு

கைகேயி மனம் மாறினாள்!

மந்தரை, அவளை வெறுப்புடன் பார்த்து, அவள் கொடுத்த ஆபரணத்தைத் தூக்கி எறிந்துவிட்டுக் கோபமும் துக்கமும் கூடியவளாகப் பின்வருமாறு கூறினாள்— ''கவலைப்பட வேண்டிய இந்த நேரத்தில் நீ சந்தோஷப்படுகிறாயே? இன்னமும் நீ சிறுபிள்ளையாக இருக்கிறாய். சோகக் கடலில் மூழ்கிக் கொண்டிருக்கிற நீ, அதை உணரவில்லையே? பேராபத்து வந்திருக்கிறது உனக்கு. எனவே, மிகவும் வருத்தப்பட வேண்டிய இந்தச் சந்தர்ப்பத்தில் சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கிறாயே? நான் துக்கப்பட்டுக் கொண்டிருந்தாலும் (உன் மூடத்தனத்தை நினைத்து) மனத்திற்குள் (இகழ்ச்சியாக) நகைத்துக் கொண்டிருக்கிறேன். (1–3)

உன்னுடைய தவறான புத்தியைக் கண்டு நான் வருத்தப்படுகிறேன். அறிவு படைத்த எவள்தான் இம்மாதிரி துக்கவேளையில் சந்தோஷப்படுவாள்? சக்களத்தியின் மகன் எதிரி போன்றவன். அவனுக்கு ராஜ்யம் கொடுக்கப்படுகிறது என்றால் உனக்குப் பேராபத்து வந்துவிட்டது என்று அர்த்தம். 'ஆட்சியைப் பறித்துக் கொண்டுவிடுவானோ?' என்ற பயம் இராமனுக்கு, பரதன் ஒருவனிடமிருந்துதான் வரும். இப்போது இராமனால் நமக்கு இலேசான பயம். நாளைக்குப் பட்டம் சூட்டப்பட்டபின் அவன் மேலும் அதிகாரம் பெற்றுவிடுவான் என்றால், நமக்கு நிச்சயமாக ஆபத்துத்தான். (4,5)

வில்வீரனாகிய லட்சுமணன் எப்போதும் இராமனை ஆதரித்துப் போகிறவன். இராமனை லட்சுமணன் அனுசரித்துச் செல்வதைப் போலவே, பரதனை சத்ருக்னன் அனுசரித்துச் செல்கிறான். பெண்ணே! பிறப்பு வரிசைப்படி பார்த்தால், இராமனுக்கு அடுத்ததாக உரிமையுள்ளவன் பரதன்தான். (அதனால்தான் பரதனுக்கு ஆபத்து என்று சொன்னேன்.) மற்ற இருவரும் இவர்களுக்கு இளையவர்கள். (அதனால், அவர்கள் ஆட்சியைப் பெறுவது குறித்துச் சிந்தனையே செய்யமாட்டார்கள்.) (6,7)

இராமன் அறிவாளி; அரசநீதி அறிந்தவன்; சாஸ்திரங்கள் கற்றவன்; சமயத்திற்கேற்றபடிக் காரியம் செய்யக்கூடியவன். அப்படிப்பட்ட இராமனால் உன் மகனுக்கு ஏற்படக்கூடிய ஆபத்தை எண்ணிப் பார்த்து, நான் வெலவெலத்துப் போகிறேன். நாளைக்கு புஷ்ய நட்சத்திரத்தில் அந்தணோத்தமர்கள் பிரமாதமாக இளவரசுப் பட்டம் சூட்டப் போகிறார்கள். கௌசல்யைக்கு மகா அதிருஷ்டம்! அவளுடைய புதல்வனுக்கல்லவா பட்டாபிஷேகம்! எதிரிகளே இல்லாத இந்தப் பூமண்டலத்தைப் பெற்று, (இராமனின் அன்னை) கௌசல்யைக்கு ஏராளமான கௌரவங்கள் வந்து சேரும். நீ, கையைக் கூப்பிக் கொண்டு வேலைக்காரிபோல் நிற்கப் போகிறாய்! (8–10)

இவ்வாறாக, எங்களைப் போலவே நீயும் அவளுடைய ஏவலாளராக ஆகப் போகிறாய்; உன்னுடைய புத்திரனும் இராமனுடைய பணியாளனாக ஆகப் போகிறான். இராமனுடைய அந்தப்புரத்திலுள்ள பெண்மணிகள் – சீதையும், அவளுக்குப் பணிவிடை செய்யும் மங்கையரும் – உள்ளம் மகிழ்ந்து குதூகலிக்கப் போகிறார்கள். (ஆனால் இங்கே?) பரதனுடைய மேலாண்மைக்குக் குறைவு வந்துவிட்டதும், உன்னுடைய நாட்டுப் பெண்கள் அதிருப்தியோடு இருக்கப் போகிறார்கள்.'' (11–12)

இவ்வாறெல்லாம் மந்தரை பேசப் பேச, (இராம பட்டாபிஷேகத்திலேயே மனம் தோய்ந்திருந்த) கைகேயிதேவி மிகவும் உவகையுடன் இராமசந்திர பிரபுவினுடைய குணங்களைப் பாராட்டிப் பேசத் தொடங்கினாள்! ஆகா! என்ன பாசம்! ''என் செல்வன் இராமன் தருமம் அறிந்தவன்; ஆசார்யர்களிடம் பணிவு உள்ளவன்; செய்நன்றி மறவாதவன்; சத்தியம் பேசுபவன்; நெருப்பைப் போல் தூயவன். (இவற்றிற்கெல்லாம் மேலாக,) மன்னரின் மூத்த புதல்வன் என்பதால், அவன்தானே இளவரசுப் பட்டத்திற்கு உரியவன்? (13–14)

சகோதரர்களையும் வேலைக்காரர்களையும் (உன்னையும் சேர்த்துதான்) ஒரு தந்தையைப் போல் போஷிப்பான். அவன் நீண்ட நாள் வாழட்டும்! கூனிக் கிழவியே! இராமபட்டாபிஷேகத்தைக் கேட்டு, நீ ஏன் இவ்வளவு எரிச்சல் அடைகிறாய்? இராமன் நூறு ஆண்டுகள் ஆட்சி செய்த பின்னர், தந்தை–பாட்டன் காலத்திலிருந்து வரும் இந்த ராஜ்யத்தை ஆணேறு போன்ற பரதனும் நிச்சயம் அடைவான். மந்தரையே! மேன்மேலும் ஏன், எதிர்காலத்திலும்கூட வளர்ச்சியைக் குறிக்கும் நல்ல நேரம் வந்திருக்கும்போது நீ ஏன் மனம் பதறுகிறாய்? (15–17)

பரதன் (என் சொந்தப் பிள்ளை என்பதால்) எனக்கு மிகவும் பிரியமானவன். ஆனால், அதைக் காட்டிலும் எனக்கு மிகவும் பிரியமானவன், இராகவன். (தன் சொந்தத் தாயாரான) கௌசல்யைக்குச் செய்வதைக் காட்டிலும், எனக்கே அதிகமாகப் பணிவிடை செய்கிறான். ராஜ்யம் இராமனுக்குக் கொடுக்கப்பட்டது என்றால், அது பரதனுக்குக் கொடுக்கப்பட்டதாகவே எண்ண வேண்டும். இராகவன், தன்னைப் போலவேதான் தன் உடன்பிறந்தோரையும் எண்ணுகிறான்.'' (18,19)

கைகேயியின் இந்தச் சொற்களைக் கேட்டு கூனி மந்தரை மேலும் துக்கமடைந்தாள். உஷ்ணமான நீண்ட பெருமூச்சுவிட்டுக் கொண்டு கைகேயியிடம் இவ்வாறு சொன்னாள்— ''உன் பேதைமையால் உனக்கு விரோதமானவற்றிலும்கூட நல்லதையே பார்க்கிறாய். தனக்கு இஷ்டமானது கைவிட்டுப் போவதால் உண்டாகும் சோகம்; அதே போல், தனக்கு விருப்பமில்லாதது வந்து சேருவதால் உண்டாகும் வியசனம் (வருத்தம்) – இவை, பரந்து விரிந்திருக்கும் துக்கக்கடலில் மூழ்கிக் கொண்டிருக்கிறோம் என்பதையே அறியாமலிருக்கிறாய். (20,21)

கைகேயி! இராமன் அரசனாகப் போகிறான். அவனுக்குப் பின் அவனுடைய புதல்வன் மன்னன் ஆவான். (அதுதானே அரசநீதி?) எனவே, நாட்டை ஆளும் உரிமையிலிருந்து பரதன் விலக்கப்படுகிறான். (பரதனுக்கு ஆட்சி செய்யும் வாய்ப்பு ஒருபோதும் கிடைக்காது.) நங்காய்! ஒரு மன்னரின் எல்லாக் குமாரர்களும் ஆட்சி செய்யும் முறை பழக்கத்தில் இல்லை. எல்லாப் புதல்வர்களும் ஆட்சிபீடத்தில் அமர்த்தப்பட்டால் பெரிய விபரீதம் உண்டாகிவிடும். அதனால், பேரழகு படைத்தவளே! கேகயன் மகளே! மன்னர்கள், மற்றப் பிள்ளைகள் குணசாலிகளாக இருந்தாலும்கூட, மூத்தவனிடமே ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்கிறார்கள். (22–24)

உன்னுடைய மைந்தன், அரச பரம்பரையிலிருந்தும் சகல சுக–சௌக்கியங்களிலிருந்தும் விலக்கப்பட்டவனாக, அநாதை போல் மிகவும் இழிநிலைக்குத் தள்ளப்படுவான். இந்த விபரீதங்களை எண்ணிப் பார்த்துத்தான் உனக்கு ஆலோசனை கூற ஓடி வந்தேன். நீ, என் மனத்தைப் புரிந்து கொள்ளாமல், சக்களத்தியின் பேரதிருஷ்டத்தைக் கேட்டு, எனக்குப் பரிசு தருகிறாய். சத்துரு பயமே இல்லாத ராஜ்யத்தைப் பெற்றுக் கொண்டதும், நிச்சயமாக பரதனை நாட்டை விட்டு, ஏன், உலகத்தைவிட்டே கூட வெளியேற்றிவிடுவான், இராமன். (25–27)

பாலனாக இருந்தபோதே பரதனை மாமன் வீட்டிற்கு அனுப்பிவிட்டாய், நீ. (தந்தையின் அருகில் இருந்தால்தானே பரஸ்பரம் அன்பு வளரும்.) (இந்த இயல்பு மனிதர்களிடம்தான் என்பதில்லை.) மரம்–செடி–கொடிகளுக்குக்கூட அருகருகே இருப்பதால்தான் நட்பு ஏற்படுகிறது. (மரத்தின் அருகிலேயே இருக்கும் ஒரு கொடி, அந்த மரத்தையே தழுவிக் கொள்கிறது.) பரதனுக்கு அனுகூலமாக நடக்கும் சத்ருக்னனும் அவனுடன் சென்றுவிட்டான். (சத்ருக்னன் மட்டும் இங்கே இருந்திருந்தால் தசரதர் கொஞ்சம் தயக்கம் காட்டி இருப்பார்.) இராமனுக்கு லட்சுமணன் எப்படியோ, அப்படி பரதனுக்கு சத்ருக்னன் – இணைபிரியாதவன். (28,29)

வனவாசிகள் சிலர் ஒரு மரத்தை வெட்டப் போனார்களாம். ஆனால், அதைச் சுற்றிலும் முட்புதர் மண்டிக் கிடந்ததால், முட்கள் தம் உடம்பைப் புண்ணாக்கிவிடுமே? என்ற பெரும் பயத்தால் மரத்தை வெட்டாமலே வந்துவிட்டார்கள் என்று பிறர் சொல்லக் கேட்டிருக்கிறோம். சுமித்திரையின் புதல்வன் இராமனைப் பாதுகாக்கிறான்; இராமன், லட்சுமணனைப் பாதுகாக்கிறான்.

அசுவிநீ குமாரர்களைப் போல அவ்விருவரிடையே நிலவும் சகோதரபாசம் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். (30,31)

ஆகவே இராமன், லட்சுமணனுக்கு எந்தக் கெடுதலும் செய்யமாட்டான். ஆனால், பரதனுக்குத் துன்பம் கொடுப்பான் என்பதில் எவ்விதச் சந்தேகமும் இல்லை. தேவி! அதனால் உன் மகன், மாமன் வீட்டிலிருந்து நேரே காட்டிற்கே போகட்டும். (இங்கு வரவே வேண்டாம்.) இதுதான் எனக்கும் உனக்கும்கூட மிகவும் நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது. இது இப்படி இருந்தபோதிலும் பரம்பரையாக வந்துள்ள ராஜ்யத்தைத் தருமவிதிகளுக்கு விரோதமில்லாமல் பரதன் அடைந்தானேயானால், உனக்கும் உன் சுற்றத்தார் அனைவருக்கும் மேன்மைகள் உண்டாகும். (32–34)

சக்களத்தியின் மகன் என்பதால் இயல்பாகவே, பரதனிடம் இராமனுக்கு விரோதம் இருக்கும். எல்லாச் சுகங்களுக்கும் தகுதியுடைய உன் மகன் எல்லாப் பேறுகளையும் இழந்து நிற்கும் நிலையில், எல்லாச் செல்வச் செழிப்புகளையும் பெற்றுவிட்ட இராமனுக்கு அடங்கி எவ்வாறு வாழ முடியும்? கானகத்தில், யானைத் தலைவனை ஒரு சிங்கம் எவ்வாறு தாக்கி விரட்டுமோ, அவ்வாறு இராமனால் துன்புறுத்தப்படப் போகும் பரதனை, நீதான் காப்பாற்ற வேண்டும். முன்னர் அதிகார மமதையும் செல்வாக்கும் பெற்று, நீ செருக்குடன் இருந்தபோது, உன் சக்களத்தியான இராமனுடைய அன்னையைத் திரஸ்காரம் செய்தாயே, அவள் அந்த விரோதத்தை (இப்போது வாய்ப்பு வந்திருக்கும்போது) எவ்வாறு பழிதீர்த்துக் கொள்ளாமல் இருப்பாள்? (35–37)

வளப்பமான கடல், மலைகள், நகரங்கள் கொண்ட இந்தச் சாம்ராஜ்யத்தை இராமன் அடைந்ததுமே, ஏ, பெண்ணே! பரதனும் நீயும் இழிநிலைக்குத் தள்ளப்பட்டு துன்பங்களை அடையப் போகிறீர்கள். இந்த வையகத்தை இராமன் அடைந்ததுமே, நிச்சயமாக பரதன் காணாமல் போய்விடுவான். அதனால், இந்த க்ஷணமே, உன் சொந்தப்பிள்ளைக்கு அரசுப் பட்டமும், மற்றவனுக்கு நாடு கடத்தலும் நடைபெற வேண்டிய வழியை யோசித்துக் கொள்.'' (38,39)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
எட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஒன்பது
மந்தரையின் வசப்பட்டாள், கைகேயி!

இவ்வாறு மந்தரை சொல்லியதைக் கேட்ட கைகேயி, கோபம் வீசும் முகத்துடனும் நீண்டதாக உஷ்ணப் பெருமூச்சுவிட்டுக் கொண்டும் மந்தரையைப் பார்த்துச் சொன்னாள்— ''நான் இப்போதே இராமனைக் காட்டிற்கு அனுப்பி வைக்கிறேன்; விரைவில் இளவரசனாக பரதனுக்கு முடிசூட்டுகிறேன். மந்தரையே! இப்படி நடப்பதற்கு என்ன உபாயம்? என்பதை ஆலோசித்துச் சொல். பரதனுக்கு அரசு கிடைக்க வேண்டும்; ஒருபோதும் இராமனுக்குக் கிடைக்கக் கூடாது.'' (1–3)

இவ்வாறு கைகேயிதேவியால் சொல்லப்பட்டவுடன் பாவத்திற்கு வழிகாட்டுபவளும், இராமனுடைய மேன்மையை அழிக்க விரும்புவளுமான மந்தரை, கைகேயியை நோக்கி இவ்வாறு கூறினாள்— (4)

''கைகேயி தாயே! அம்மாடி! கேட்டுக் கொள். உன்னுடைய பிள்ளை பரதன் மட்டுமே அரசுப் பட்டத்தை அடைவதற்கான வழியை இப்போது சொல்கிறேன், கவனமாகக் கேள். கைகேயி! உன் சம்பந்தமான ஒரு ரகசியத்தை முன்பு என்னிடம் சொல்லியிருக்கிறாய். அது

உன் நினைவுக்கு வரவில்லையா? அல்லது என்னிடமிருந்து மறைக்க விரும்புகிறாயா? அல்லது என் வாயால் சொல்லிக் கேட்க விரும்புகிறாயா? உல்லாசப் பெண்ணே! நீ என்னிடம் சொல்லியதை, என் வாய் மூலமாகக் கேட்க விரும்புகிறாய் என்றால் சரி, சொல்கிறேன். கேட்ட பிறகு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, அதைப் பற்றி ஆலோசிக்கலாம்.'' (5–7)

மந்தரையின் சொற்களைக் கேட்ட கைகேயி, படுக்கையிலிருந்து சற்றே எழுந்து (நிமிர்ந்து உட்கார்ந்து நீ சொல்லப் போவதைக் கவனமாகக் கேட்டு நடப்பேன் – என்றபடி) பின்வருமாறு கூறினாள்— ''மந்தரையே! எந்தப் பாதையில் சென்றால் பரதனுக்கு ராஜ்யம் கிடைக்குமோ, இராமனுக்கு ஒருபோதும் கிடைக்காதோ, அப்படிப்பட்ட ஒரு நிச்சயமான வழியை, எனக்குக் காட்டு.'' இவ்வாறு கைகேயி கூறியதும், தவறான பாதையையே காட்டுபவளும், இராமனுடைய பெருமையை அழிக்க விரும்புவளுமான கூனி பின்வருமாறு கூறினாள்— (8–10)

''முன்னொரு காலத்தில் தேவர்களுக்கும் அசுரர்களுக்குமிடையே போர் நிகழ்ந்தபோது, தேவரிஷிகளோடு உன்னுடைய பர்த்தா (கணவர்) உன்னையும் அழைத்துக் கொண்டு, இந்திரனுக்கு உதவி செய்வதற்காகப் போனார். தேவி! தென்திசையில் தண்டகாரண்யத்தில் வைஜயந்தம் என்ற புகழ்பெற்ற நகரத்தில் பெரிய மீன் கொடியை உடைய சம்பரன் என்னும் மகாமாயாவியான ஆற்றல்மிக்க அசுரன் இந்திரனுடன் போர் புரிந்தான். ஆனால், தேவர்களால் அவனை வெல்ல முடியவில்லை. (11–13)

அந்த மாபெரும் போரில் அடிபட்டு, காயம்பட்டுக் கிடந்த வீரர்கள் (களைப்படைந்து) இரவில் ஆழ்ந்த தூக்கத்திலிருந்தபோது, வேகமாகச் சென்று இழுத்து வந்து அவர்களை அரக்கர்கள் கொன்று அழித்தார்கள். அப்போது பெருந்தோளரான தசரத மன்னர் அசுரர்களோடு மாபெரும் போர் புரிந்தார். ஆனால், அவர்கள் சஸ்திரங்களால் தசரதரைத் துளைத்தெடுத்து விட்டார்கள். தேவி! தன் நினைவிழந்து கிடந்த அவரைப் போர்க்களத்திலிருந்து வெளியே கொண்டு வந்து நீ காப்பாற்றினாய். அங்கேயும் வந்த அசுரர்கள், உன் கணவரின் உடலை சஸ்திரங்களால் காயப்படுத்தவே, மேலும் பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டு சென்று காப்பாற்றினாய். (14–16)

அழகான தோற்றமுடையவளே! அஞ்சாநெஞ்சத்துடன் நீ செய்த சேவையால் மனம் மகிழ்ந்த அவர், உனக்கு இரண்டு வரங்களை அளித்தார். தேவி! 'எனக்கு எப்போது தேவையோ, அப்போது பெற்றுக் கொள்கிறேன்' என்று நீ சொன்ன பதிலை காருண்யம் மிக்க உன் கணவர் அங்கீகரித்தார். கைகேயி! எனக்கு இந்த விபரமெல்லாம் தெரியாது. நீ முன்பு ஒருசமயம் என்னிடம் சொன்ன பிறகுதான் தெரிந்து கொண்டேன். (17,18)

உன்னிடத்திலுள்ள பேரன்பினால் இந்த வரலாற்றை நான் நினைவில் வைத்துக் கொண்டிருக்கிறேன். (அந்த வரங்களை இப்போது பயன்படுத்து. உடனடியாக, நீ என்ன செய்ய வேண்டுமென்றால்) இராமனுடைய பட்டாபிஷேகத்திற்காக வந்து குவிந்து கொண்டிருக்கும் பண்டங்களைத் தடுத்து நிறுத்து; வந்து சேர்ந்துவிட்டவைகளைத் திருப்பி அனுப்பு. உன் கணவரிடம், 'பரதனுக்குப் பட்டாபிஷேகம்; பதிநான்கு ஆண்டுகள் நாட்டிற்கு வெளியே இராமன் இருப்பது' என்ற இரண்டு வரங்களையும் நீ கேள். (19,20)

பதிநான்கு ஆண்டுக்காலம் இராமன் காட்டில் வசித்தால், உன் மகன் (நாட்டில் நல்லாட்சி நடத்தி,) குடிமக்களின் ஆழமான அன்பைப் பெற்று நிரந்தர மன்னனாகிவிடுவான். அசுவபதி மன்னரின் மகளே! உடனே நீ, அழுக்கான ஆடைகளை உடுத்திக் கொண்டு, பிணக்கு உள்ளவள் போலாகி, கோபம் வரும்போது தங்குவதற்கென்றே விசேஷமாக அமைக்கப்பட்டுள்ள கோபகிருஹத்திற்குச் சென்று, பாய்–படுக்கை இல்லாமல் வெறுந்தரையில் படுத்துக் கிட. அவர் வந்தால் கண்ணால் ஏறெடுத்தும் பார்க்காதே. அவருடன் நீயாகப் பேசவும் பேசாதே.

மன்னரைப் பார்த்ததும், உலகிலேயே நீ ஒருத்திதான் துக்கத்தில் மூழ்கியவள் என்பதுபோல நன்றாக வாய்விட்டு அழு. (21–23)

நீ, உன் கணவருக்கு மிகவும் நெருக்கமானவள் என்பதில் எனக்குச் சந்தேகமே இல்லை. உனக்காக என்றால் அவர் நெருப்பிலும் புகுந்து விடுவார்! மன்னர், நீ கோபப்படும்படியான ஒரு காரியத்தைச் செய்யவும் மாட்டார்; கோபத்தோடு நீ இருப்பதை வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கவும் மாட்டார். ஏன், உனக்குப் பிரியத்தைக் கொடுக்கும் என்றால், மன்னர், தன் உயிரைக்கூட விட்டுவிடுவார். நாடாளும் மன்னர் உன் விருப்பத்திற்கு மாறாகச் செய்யத் துணியார். மெல்லப் புரிந்துகொள்ளும் இயல்பினளே! மற்ற மனைவிகளைக் காட்டிலும் உன்னிடம்தான் மன்னனுக்கு அதிகப் பிரீதி. இந்த சௌபாக்கிய பலத்தை நினைத்துப் பார். (24–26)

மாணிக்கம், முத்து, தங்கம், பல்வகை இரத்தினங்கள் ஆகியவற்றையெல்லாம் மன்னர் தசரதர் உனக்குக் கொடுப்பார். ஆனால், அவைகளின் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்காதே. பெரும்பேறுடையாளே! தேவாசுர யுத்தத்தின்போது கொடுக்கப்பட்ட இரண்டு வரங்களை நினைவுபடுத்து. 'நீங்கள் கொடுத்த வரங்களைத்தானே நான் கேட்கிறேன்?' என்று சொன்னால், அவரால் மீற முடியாது. ரகுகுல திலகமான தசரதர், அவரே உன்னைத் தரையிலிருந்து தூக்கி நிறுத்தி, வரம் கொடுக்க இசைவு தெரிவிக்கிறாரோ, அப்போது சத்தியத்திற்குள் அவரைக் கட்டுப்படுத்தி, இந்த வரத்தைக் கேள். (27–29)

'இராமனை (ஒன்பதும், ஐந்தும் சேர்ந்த) பதிநான்கு வருடங்களுக்குக் காட்டில் இருக்கச் செய்யுங்கள்; நாடாளும் உரிமை கொண்ட ஆணேறு பரதன், இந்தப் பூமண்டலத்தின் அரசனாக ஆக்கப்படட்டும்.' பதிநான்கு ஆண்டுக்காலம் இராமன் கானகத்தில் இருந்துவிட்டால், உன் பிள்ளை பரந்து விரிந்து வேர் விட்டுக் கொண்டு, ஆழமாக ஊன்றிக் கொண்டு, (பதிநான்கு ஆண்டுகளுக்கு) அப்புறமும் மன்னனாக நீடிப்பான். தேவி! இராமன் நாடு கடத்தப்பட வேண்டும் என்ற வரத்தை அவசியம் கேள். அழகியவளே! அப்படிச் செய்தால்தான் உன் மகனைப் பற்றிய, உன் விருப்பங்கள் எல்லாம் நிறைவேறும். (30–32)

இவ்வாறு நாடு கடத்தப்பட்டபின், இராமன் இராமனாக இருக்கமாட்டான்! (மக்கள், அவனை மறந்தே போய்விடுவார்கள்.) உன்னுடைய மகன் பரதனோ, எதிரி என்று கருதத்தக்க அந்த ஒருவனும் (நாட்டை விட்டுப் போய்விட்டதால் நாட்டில்) இல்லாமற்போகவே, கவலை ஒழிந்தவனாகச் செங்கோல் செலுத்துவான். இராமன் கால கெடு முடிந்து காட்டிலிருந்து திரும்பிவரும் காலத்தில் தைரியம் மிகுந்த உன்னுடைய பிள்ளை, தனக்கு ஆதரவாளர்களை ஏராளமாகப் பெற்று, நல்மனம் கொண்ட நண்பர்களோடு நாட்டில் ஆழமாகக் கால்பதித்துவிடுவான். (33,34)

உனக்குச் சரியான சந்தர்ப்பம் வந்துவிட்டது என்றே நினைக்கிறேன். மனத்தடுமாற்றத்தை உதறித் தள்ளிவிட்டு, அரசனை (வரங்களால்) கட்டுப்படுத்தி, இராம பட்டாபிஷேகத்திற்காக வந்துள்ள பண்டங்களைத் திருப்பி அனுப்பிவிடு.'' தீமையை நல்லதுபோல எடுத்துக்காட்டிய மந்தரையின் சொற்களை நம்பிக்கையுடன் ஏற்றுக் கொண்ட கைகேயி, மனம் களித்து மந்தரையிடம் சொன்னாள். சீரிய சிந்தனைகளைக் கொண்ட கைகேயி, கூனியினுடைய சொற்களைக் கேட்டதும் தவறான வழியைப் பின்பற்ற நிச்சயம் செய்து, விவரம் புரியாத சிறுமியைப் போல மிகவும் வியப்படைந்தாள். (35–37)

''கூனியே! நன்மை தரும் ஆலோசனைகளை வழங்குபவர்களுள் நீ தலையாயவள் என்பதை நான் இதுவரை அறியாமல் போய்விட்டேன்! உலகிலுள்ள கூனிகளில் ஒரு தீர்மானமான முடிவு எடுப்பதில் நீயே முதல் இடம் வகிக்கிறாய்! நீதான் எனக்கு நன்மை செய்வதில் எப்போதும் கண்ணும் கருத்துமாக இருக்கிறாய்! கூனியே! (நீ மட்டும் வராதிருந்தால்) அரசரின் உள்ளத்தில் இருந்த சதித்திட்டத்தை, நான் அறிந்திருக்கவே மாட்டேன். தீய நிலைப்பாடு உடைய, திரிந்த

மனம் கொண்ட, கொடுமை இழைக்கின்ற கூனிகள் இருக்கிறார்கள். (ஆனால், நீ அப்படியில்லை.) காற்றின் வேகத்தினால் தலைதாழ்ந்த தாமரைபோல் இருக்கிறாய். (38–40)

மந்தரையே! கண்ணுக்கினியவளே! உனது மார்போ தோள் வரையிலும் நிமிர்ந்து அழகாக இருக்கிறது. கீழே அழகிய தொப்புளையுடைய வயிறு வெட்கங்கொண்டதுபோல் உள்ளடங்கி இருக்கிறது; உன் முதுகுப்புறத்தின் கீழ்ப்பகுதி அகன்று, கனத்துப் பரிபூரணமாக இருக்கிறது; கொங்கைகள் அழகாகப் பெருத்துள்ளன; குற்றங்குறைகளற்ற முழுநிலவைப்போல் உன் திருமுகம் அழகாக விளங்குகிறது. மந்தரையே! உன் இடுப்பு அரைஞாண் ஒட்டியாணத்தால் மாசுமருவற்றதாகப் பிரகாசிக்கிறது. உன் தொடைகள் இரண்டும் மிகவும் இசைவாக அமைந்துள்ளன; கால்கள் இரண்டும் நீண்டிருக்கின்றன. (41–43)

நீண்ட தொடைகளுடன் கூடிய நீ பட்டுச் சேலை அணிந்து கொண்டு, எனக்கு முன்னே (தலைமைப் பாதுகாவலர் போல) நீ செல்வதைக் காணும்போது, ஒரு 'ராஜஹம்ஸம்' போல் பொலிகிறாய்! அசுரர் தலைவனான சம்பரனிடத்தில் எவ்வளவு ஆயிரக்கணக்கான மாயாஜாலங்கள் இருந்தனவோ, அவையெல்லாம், ஏன், அவற்றுக்கும் மேல் பல ஆயிரக்கணக்கான மாயைகள் உன்னிடம் இருக்கின்றன. உத்தமமான ஆலோசனைகள், நாட்டு நிர்வாகமுறை, மாயை ஆகிய எல்லாம் உன்னிடம் சேர்ந்திருப்பதால்தான், உன்னுடைய கூன் நீண்டு, அகன்று, ரதத்தின் முன்பாகம் போல் விசாலமாகக் காணப்படுகிறது. (44–46)

கூனி! பரதனுக்கு முடிசூட்டப்பட்டு, இராமன் காட்டிற்குப் போனவுடன் உன் கூனுக்குப் பொன்னாலான மாலையைச் சூட்டுகிறேன். என் எண்ணம் கைகூடியதும், நம்பிக்கையடைந்து உயர்ந்த ரக, நல்ல நிறமுள்ள, நன்றாக அரைக்கப்பட்ட சந்தனத்தை, உன் கூன் பகுதியில் பூசுகிறேன். உன் நெற்றியில் அழகான பொன்மயமான திலகம் வைப்பேன்; அழகான ஆபரணங்கள் செய்து கொடுப்பேன். (47–49)

சந்திரனைப் போட்டிக்கு அழைக்கின்ற ஒப்பில்லாத அழகு படைத்த முகத்தோடும், விலைமதிக்க முடியாத ஆடைகளை அணிந்து கொண்டும் ஒரு தேவதைபோல் இறுமாப்புடன் நடைபயிலப் போகிறாய்! எதிரிகளின் கூட்டத்தை (சக்களத்திகளின் பரிவாரப் பெண்களை) மனம் வெதும்பச் செய்து, ஒரு சிறப்பான நிலையை அடையப் போகிறாய்! நீ எப்படி எனக்குப் பாதசேவை செய்கிறாயோ, அப்படியே பற்பல அணிகலன்கள் அணிந்த அநேக கூனிகள், உனக்கும் பணிவிடை செய்வார்கள்.'' (50,51)

இவ்வாறெல்லாம் புகழ்ந்து பேசப்பட்ட அவள் (மந்தரை), யாக குண்டத்தில் கொழுந்துவிட்டு எரியும் அக்னியைப்போல் ஜொலித்துக் கொண்டு, சுத்தமான படுக்கையில் படுத்திருந்த கைகேயியைப் பார்த்து இவ்வாறு கூறினாள்— ''மங்களமானவளே! வெள்ளம் குறைந்து ஆறு வற்றிப் போனபின் அணை போடுவதால் பயன் ஏதுமில்லை. எழுந்திராய் பெண்ணே! நல்ல காரியத்தைச் செய். மன்னருக்கு (உன் மனக்கஷ்டத்தை)க் கண்ணாரக் காணச் செய்.'' (52,53)

நெடுந்தடங்கண்ணாளும், தன்னுடைய சிறப்புமிக்க உயர்நிலையால் மதங்கொண்டு செருக்கடைந்திருந்தவளுமான அவள், இவ்வாறு ஊக்கப்படுத்தப்பட்டதும், மந்தரையுடன் கோபகிருஹம் சென்று, அநேக நூறாயிரம் மதிப்புடைய முத்துமாலையையும், உயர்ந்த மங்களமான அணிகலன்களையும் கழற்றி எறிந்துவிட்டு, தங்கப்பதுமை போன்ற அந்த உத்தமப் பெண்மணி கூனியின் சொல்லுக்கு வசப்பட்டு, அவ்விடத்தில் வெறும் தரையில் படுத்து, மந்தரையிடம் இவ்வாறு சொன்னாள்— (54,55)

''பொன்னாலும் பொருளாலும் இரத்தினங்களாலும் உணவுகளாலும் எனக்கு எவ்விதப் பிரயோஜனமும் இல்லை. இராமனுக்குப் பட்டாபிஷேகம் நடத்தப்பட்டால், அதுவே என் வாழ்க்கைக்கு முடிவு கட்டிவிடும். இராமன் காட்டிற்குப் போனால் பரதன் பட்டத்தை அடைவான். கூனியே! இங்கே நான் செத்துப் போகும் நிலையில் இருப்பதாக, மன்னருக்குத் தகவல் கொடு.'' (56,57)

பின்னர், உலகாளும் மன்னருடைய பட்டத்தரசியைப் பார்த்து, பரதனின் தாயாருக்கு அனுகூலம் போன்ற, இராமனுக்குக் கேடு விளைவிக்கின்ற மிகக் கொடுமையான வார்த்தைகளைக் கூனி கூறினாள்— ''இராகவன் இந்த ராஜ்யத்தை அடைந்துவிட்டானேயானால், நீயும் உன் பிள்ளையும் நிச்சயமாகக் கதியற்றுப் போவீர்கள். என் அழகுக் கண்மணியே! உன்னுடைய மகன் பரதன் முடிசூட்டப்படுவதற்காக என்ன செய்ய வேண்டுமோ, அதனை உடனே செய்யத் தொடங்கு.'' (58,59)

கூனியினுடைய வார்த்தைகள் என்ற அம்புகளால் திரும்பத் திரும்பத் துளைத்தெடுக்கப்பட்ட அரசி, (அவள் மதிநுட்பத்தால்) மிகவும் வியப்படைந்து, கோபம் தணியாதவளாய் நெஞ்சில் கையை வைத்து, மீண்டும் மீண்டும் கூனியைப் போற்றிப் புகழ்ந்தாள். ''வெகுநாட்கள் தங்குவதற்காக இராமன் காட்டிற்குப் போனால்தான், பரதன் சகல ஐசுவரியங்களும் கைகூடியவனாக ஆவான். இல்லையென்றால், கூனியே! நான் இப்போதே யமலோகம் போய்விடுவேன் என்பதை நீ தெரிவிப்பாய். படுக்கைகள், மாலைகள், நறுமணப் பூச்சுக்கள், கண்ணுக்கு மை, பானம், போஜனம் ஆகிய எதனையும், நான் ஏற்கமாட்டேன். இராமன் இப்போது காட்டிற்குப் போகாவிட்டால், இனி இவ்வுலகில் வாழ்வதையும் விரும்பமாட்டேன்.'' (60–62)

இப்படியான கொடூர வார்த்தைகளைக் கூறிவிட்டு, பேரழகியான அவள் நகைகளனைத்தை யும் கழற்றிப் போட்டுவிட்டு, விரிப்பு எதுவுமில்லாத வெறுந்தரையில் (தேவலோகத்திலிருந்து) கீழே விழுந்துவிட்ட கின்னர நங்கைபோல் படுத்துக் கிடந்தாள். தாங்க முடியாத கோபம் என்ற பேரிருளால் சூழப்பட்ட முகமுடையவளாய், உத்தமமான மாலைகளையும் ஆபரணங்களையும் நீக்கியவளாய், சக்கரவர்த்தியின் பத்தினியான அவள், எதிலும் பற்றுக் கொள்ளாமல் நட்சத்திரங்களின் ஒளியிழந்து இருளால் சூழப்பட்ட வானம் போல் காணப்பட்டாள். (63,64)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
ஒன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பத்து

தசரதரும் கைகேயியும்

பாவியான கூனியால் முற்றிலும் தவறான பாதை காட்டப்பட்ட தேவி, நஞ்சு பூசிய பாணத்தால் அடிபட்டுக் கிடந்த 'கின்னரி' (என்னும் பறவை) போல் தரையில் கிடந்தாள். (விஷத்தின் காரணமாகப் பறவை மூர்ச்சையடைந்து அசைவற்றுக் கிடந்ததே தவிர, உயிர் போகவில்லை.) கவின்மிகு பெண்மணியும் பேச்சுத்திறனுடையவளுமான அவள், இனிச் செய்யவேண்டிய காரியத்தை மனத்திற்குள் ஆலோசித்து, முடிவு செய்து, தன் மனத்திலிருந்தவைகளை மெல்ல மெல்ல மந்தரையிடம் கூறத் தொடங்கினாள். (1,2)

மந்தரை கூறிய திட்டங்களால் மதிமயங்கிய அவள், தன்னை ஆதரவற்றவளாகக் கருதி, மனம் கொதித்து, நாககன்னிகை போல் நீண்ட உஷ்ணப் பெருமூச்சுவிட்டுக் கொண்டு, தனக்கு நன்மையைத் தரக்கூடிய வழியைப் பற்றிச் சிறிது நேரம் ஆலோசனை செய்யத் தொடங்கினாள். நட்புடையவளும் போக–போக்கியங்களை விரும்புவளுமான அந்த மந்தரை, அவளுடைய உறுதியான முடிவைக் கேட்டு, தனக்கு காரியசித்தி ஏற்பட்டுவிட்டதாக உணர்ந்து மிகவும் உள்ளம் மகிழ்ந்தாள். (3,4)

கோபம் தலைக்கேறிய பட்டத்துராணியான அவள், ஒரு பாமரப் பெண்ணைப் போல் புருவத்தை நெற்றிவரை உயர்த்தி, நெறித்து தீர்மானமான ஒரு முடிவைச் செய்து தரையில்

விழுந்தாள். கைகேயியால் கழற்றி எறியப்பட்ட பல வண்ணம் கொண்ட மாலைகளும், திவ்யமான ஆபரணங்களும் தரையில் ஆங்காங்கே சிதறிக் கிடந்தன. அவளால் கழற்றி எறியப்பட்ட மாலைகளும் அணிகலன்களும் ஆகாயத்தை நட்சத்திரங்கள் அழகு செய்வதைப்போல தரையை ஒளிபெறச் செய்தன. அழுக்கான ஆடையணிந்து, பின்னிய கூந்தலை அவிழ்த்து ஒரு முடிச்சுப் போட்டுக் கொண்டு, உணர்விழந்த கின்னர நங்கை போல் கோபகிருஹத்தில் அவள் விழுந்துவிட்டாள்! (5–8)

(இது இப்படியிருக்க, அங்கே அரண்மனையின் வேறொரு புறத்தில்) இராமனுடைய பட்டாபிஷேக ஏற்பாடுகள் குறித்து ஆணைகள் பிறப்பித்துவிட்டு, சரியான நேரத்தில் வந்துவிடும்படி எல்லோருக்கும் கூறிவிட்டு, மாமன்னர் கைகேயியின் அந்தப்புரத்திற்குள் நுழைந்தார். இராமனுக்குப் பட்டாபிஷேகம் என்ற செய்தி இப்போதுதான் வெளியிடப்பட்டது என்பதால், (கைகேயிக்குத் தானே தெரிவித்து, அவளை ஆச்சரியப்படுத்த வேண்டும் என்ற விருப்பத்துடன்) தன்னுடைய ஆழமான அன்புக்குப் பாத்திரமானவளிடம் மகிழ்ச்சிகரமான செய்தியைக் கூறுவதற்காக, புலன்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்த மன்னர், கைகேயியைக் காணச் சென்றார். வெண்மேகக் கூட்டங்கள் விளங்கும் ஆகாயத்தில் ராகு இருக்கும்போது உதயமாகும் முழுநிலவைப் போல பெரும் புகழையுடைய அவர், கைகேயியின் மிகச்சிறந்த மாளிகையில் பிரவேசித்தார். (9–11)

அங்கே கிளிகளும் மயில்களும் ஏராளமாக இருந்தன; கிரௌஞ்சம், அன்னம் ஆகிய பறவைகளின் இரைச்சல் கேட்டுக் கொண்டிருந்தது; இசைக்கருவிகள் முழங்கிக் கொண்டிருந்தன; கூனிகளும் குள்ளமான பெண்களும் இருந்தார்கள்; சம்பகம், அசோகம் முதலியன சோபிக்கும் கொடிவீடுகள் இருந்தன; ஓவிய அறைகள் இருந்தன; தந்தம்–வெள்ளி–பொன்னாலான மேடைகள் அமைக்கப்பட்டிருந்தன; எல்லாக் காலங்களிலும் மலர்கள், பழங்கள் தரும் மரங்களாலும் சோலைகளாலும் அதிக அழகுடன் விளங்கியது; தந்தம்–வெள்ளி–பொன்னாலான உயர்வான ஆசனங்கள்; வகைவகையான அன்ன–பானங்கள்; நொறுக்குத் தீனிகள்; விலைமதிக்க முடியாத ஆபரணங்கள் – இவற்றால் அந்த மாளிகை தேவலோகத்திற்கு ஒப்பானதாக இருந்தது! (12–15)

இவ்வாறு செல்வச் செழிப்புடனும், அழகுக் கொழிப்புடனும் விளங்கும் தன் அந்தப்புரத்திற்குள் நுழைந்த மன்னர், மிகச் சிறப்பான படுக்கையில் தனக்கு மிகவும் இஷ்டமான மனைவி கைகேயியைக் காணவில்லை. காமத்தின் வசப்பட்டு அன்பு நாயகியுடன் கூடி மகிழ விரும்பிய மன்னர், அவளைக் காணாததால் (அந்தப்புர வேலைக்காரிகளிடம்) விசாரித்தார்; கவலையும் அடைந்தார். ஏனென்றால், இதற்கு முன்னர் (ஒரு தடவை கூட) அவர் (வழக்கமாக அவ்விடம்) வரும் அந்த நேரத்தில் அவள் இல்லாமல் இருந்ததில்லை. மேலும், ஒருபொழுதுகூட (அவள் இல்லாத) வெற்று வீட்டிற்குள் மன்னர் நுழைந்ததுமில்லை. (16–18)

சுயநலத்தில் முனைப்புக் கொண்டு, அசட்டுத்தனமான ஒரு திட்டத்தில் அவள் ஈடுபட்டிருக்கிறாள் என்பதை அறியாத மன்னர், அவளுடைய தனி அறைக்கும் சென்று பார்த்துவிட்டு வழக்கம் போல் சேடிகளிடம் விசாரித்தார். வாயிற்காப்பவள் மிகவும் பயத்துடன் கைகளை நன்றாகக் கூப்பிக் கொண்டு, ''சக்கரவர்த்தி அவர்களே! அரசியார் மிகவும் சினங்கொண்டு கோபமனைக்குள் போயிருக்கிறார்'' என்றாள். வாயிற்காப்பவளின் சொற்களைக் கேட்ட மன்னர், முன்னைக் காட்டிலும் அதிகமாக மனம் கலங்கி, புலன்கள் துடித்துச் சஞ்சலப்பட மிகவும் வருத்தமடைந்தார். (19–21)

உலகாளும் அந்த மன்னர் துக்கத்தினால் எரிக்கப்பட்டவர் போல, கோபகிருஹத்தில் பண்புக்கு விரோதமாகத் தரையில் வீழ்ந்து கிடந்த அவளைப் பார்த்தார். கள்ளம்–கபடு இல்லாத அந்த முதியவர், தன் பிராணனைக் காட்டிலும் மேலாக நேசிக்கும் இளவயது

மனைவியும், தகாத ஒரு காரியத்தை நிறைவேற்றுவதில் உறுதிபூண்டுவிட்டவளுமான அவள், வெறுந்தரையில் படுத்திருக்கக் கண்டார். (22,23)

வேருடன் வெட்டிசாய்க்கப்பட்ட கொடி போன்றவள்; தேவலோகத்திலிருந்து கீழே தள்ளிவிடப்பட்ட தேவகன்னிகை போன்றவள்; சுவர்க்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட கின்னரி போன்றவள்; வானிலிருந்து வழுக்கி விழுந்த அப்சரப் பெண் போன்றவள்; தூக்கி எறியப்பட்ட மாலை போன்றவள்; வலைக்குள் அகப்பட்டுக் கொண்ட பெண்மானைப் போன்றவள். இவ்வாறிருந்த அவளை, 'காட்டில் வேடனால் நஞ்சு பூசிய அம்பினால் தாக்கப்பட்ட பெண்யானையை, ஆண்யானை எவ்வாறு மிகுந்த பரிவுடன் தடவிக் கொடுக்குமோ' அவ்வாறே அவளிடம் அதிகமான காமபாசம் கொண்டிருந்த அவர், இரு கைகளாலும் அவளைத் தடவிக் கொடுத்துக் கொண்டு, அஞ்சி நடுங்கும் உள்ளத்துடன் தாமரைக்கண்ணாளான அந்த நங்கையிடம் சொன்னார்— (24–26)

"உனக்கு என்னிடம் கோபம் உண்டாகி இருக்கிறது என்பதை நான் அறியேன். தேவி! யாரேனும் உன்னைத் துச்சமாக எண்ணிப் பேசினாரா? அல்லது எவரேனும் உன்னை நிந்தித்தாரா? கல்யாணி! இப்படிப் புழுதியில் படுத்துக் கிடந்து என்னைத் துக்கப்படுத்துகிறாயே? அன்புடையாளே! நான் உயிரோடு இருக்கும்போது, நீ ஏன் தரையில் கிடந்து புரளுகிறாய்? என் மனத்தைத் தடுமாறச் செய்வதற்கென்றே, உன் உள்ளத்தை ஏதோ ஒரு துர்தேவதை ஆட்டி வைக்கிறது. (உன் உடலை நோய் ஏதேனும் வாட்டுகிறதா?) என்னிடம் நிபுணர்களான மருத்துவர்கள் இருக்கிறார்கள். (அவர்களுக்கு வேண்டியன எல்லாம் கொடுத்திருக்கிறேன்.) எல்லா வகையிலும் மனத்திருப்தி உள்ளவர்கள். (27–29)

அழகியே! உனக்கு என்ன நோய்? என்று சொல். அவர்கள், உன்னைக் குணப்படுத்தி விடுவார்கள். உனக்குப் பிரியமான எவருக்கேனும் ஏதேனும் உதவி செய்ய வேண்டுமா? அல்லது யாரேனும் உனக்குக் குற்றம் செய்துவிட்டாரா? எவனுக்கு இப்போது ஏராளமான நன்மைகள் செய்யப்பட வேண்டும்? அல்லது யாருக்கு மகத்தான கெடுதல் செய்யப்பட வேண்டும்? தேவி! அழாதே. உன் உடம்பையும் இப்படி வாட்டி வதைக்காதே. (30,31)

கொலைத் தண்டனைக்கு உரியவனாகாத யாரேனும் ஒருவன் கொலை செய்யப்பட வேண்டுமா? அல்லது கொலைத் தண்டனை பெற்ற ஒருவன் விடுவிக்கப்பட வேண்டுமா? ஏழை ஒருவன் கொழுத்த பணக்காரன் ஆக்கப்பட வேண்டுமா? அல்லது செல்வம் படைத்த ஒருவன் பரம ஏழையாக்கப்பட வேண்டுமா? நானும், என்னைச் சேர்ந்தவர்களும் உன் வசத்தில் உள்ளவர்கள். உன் விருப்பத்திற்கு மாறாக நடப்பதற்கு நான் ஒருபோதும் துணியேன். நான் உயிர் பிழைத்திருக்க வேண்டுமென்றால், உன் மன விருப்பத்தைக் கூறிவிடு. என்னிடம் உனக்குள்ள உரிமையை அறிந்துள்ள நீ, என்னைப் பற்றிச் சந்தேகப்படலாமா? (32–34)

நான், என்னுடைய புண்ணியங்களின் மேல் ஆணையிட்டுக் கூறுகிறேன். உன் விருப்பம் எதுவோ, அதை நிச்சயமாகச் செய்வேன். சூரிய சக்கரம் எதுவரையில் சுழல்கிறதோ, அவ்வளவு தூரத்திற்கு இடைப்பட்ட பூமி என் ஆளுகைக்கு உட்பட்டது. மிகப்பழமையான சிந்து, ஸௌவீரம், ஸௌராஷ்டிரம், தென்பகுதியிலுள்ள நாடுகள், வங்க–அங்க–மகத–மத்ஸ்ய–காசி–கோசலம் ஆகிய செழிப்பான நாடுகள் (என் ஆதிக்கத்தில் உள்ளன.) கைகேயி! அந்த நாடுகளில் அநேக பண்டங்கள், தன–தானியங்கள், ஆடு–மாடுகள் (தனிச்சிறப்புடன்) இருக்கின்றன. அவைகளில் எவையெவை உனக்கு விருப்பமோ, அவைகளைக் கேள். (35–37)

அஞ்சும் இயல்புடைய பெண்ணே! எழுந்திரு, எழுந்திரு. உனக்கு எதனால் மனத்தளர்ச்சி? அழகியே! தெளிவாகச் சொல். எதைக் கண்டு உனக்கு பயம் வந்தது? சூரியன், பனிமூட்டத்தை அழித்து விடுவதைப் போல, நான் உன் சோகத்திற்கான மூலகாரணங்களை அழித்து விடுவேன்."

இவ்வாறு தசரதர் சொன்னதும் சற்று சமாதானம் அடைந்த அவள், அவருக்குக் கொஞ்சமும் பிடிக்காத அந்த விஷயத்தையே கூறி, கணவருக்கு மேலும் துன்பத்தைக் கொடுக்கத் தொடங்கினாள். (38,39)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில் பத்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பதினொன்று

'வரங்களைத் தாருங்கள்!'

மன்மத பாணங்களால் தாக்கப்பட்டிருந்தவரும், காமவெறியின் வசப்பட்டு, அதன் பின்னே சென்று கொண்டிருந்தவருமான தசரத மன்னரைப் பார்த்து கடுமையான சொற்களைக் கூறினாள், கைகேயி. ''எனக்குப் பிரியமில்லாததை யாரும் செய்யவுமில்லை; என்னை யாரும் அவமானப்படுத்தவுமில்லை. நாயகரே! என் மனத்தில் ஒரு கருத்து (விருப்பம்) இருக்கிறது. அதை உங்கள் மூலமாக நிறைவேற்றிக் கொள்ள விரும்புகிறேன். என் விருப்பத்தை நிறைவேற்றி வைக்கும் எண்ணம் இருந்தால், முதலில் எனக்குப் பிரதிக்ஞை செய்து கொடுங்கள். பிறகு, என் வேண்டுகோளைத் தெரிவிக்கிறேன்.'' (1–3)

கைகேயியைப் பார்த்து காமவசப்பட்ட மாமன்னர், அந்தப் புன்னகையாளின் கூந்தலை வருடி, அவளைக் கைகளால் அணைத்துக் கொண்டு மெல்ல நகைத்தபடி கூறினார்— ''கர்வமுடைய நங்காய்! மனிதர்களில் புலி போன்ற உத்தமன் இராமனைக் காட்டிலும் என் பிரியத்திற்கு உரியவர் வேறு எவரும் இலர் என்பதை நீ அறியாயோ? யாராலும் வெல்ல முடியாதவனும் மாவீரனும் புருஷோத்தமனும் என் உயிர்நிலை போன்றவனுமான இராமன்மேல் ஆணையிட்டுக் கூறுகிறேன். உடனே, உன் மனத்தில் இருப்பதைச் சொல். (4–6)

ஒரு முகூர்த்த காலம், எவனைப் பார்க்காமல் என்னால் நிச்சயமாக உயிர் வாழ முடியாதோ, அந்த இராமன்மேல் ஆணையாகச் சொல்கிறேன் – உன் சொல்லை நான் நிறைவேற்றி வைப்பேன்! என்னிடமும், என்னுடைய மற்ற புதல்வர்களிடமும் உள்ள அன்பைக் காட்டிலும் மிக அதிக அன்பு வைத்திருக்கும் மனிதக்காளை போன்ற இராமன்மேல் ஆணையாகச் சொல்கிறேன் – உன் சொல்லை நான் நிறைவேற்றி வைப்பேன். (7,8)

மங்களமானவளே! என்னுடைய உள்ளமும் உன் விருப்பத்தை நிறைவேற்றுவதற்குத் துடித்துக் கொண்டிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்வாய். கைகேயி! எது நல்லது என்று எண்ணுகிறாயோ, அதை என்னிடம் கூறு. தவித்துக் கொண்டிருக்கும் என்னைக் கைதூக்கிவிடு. உனக்கு நான் வசப்பட்டிருப்பதை அறிந்திருந்தும், என்மேல் நீ சந்தேகம் கொள்ளக்கூடாது. என்னுடைய புண்ணியங்களின்மேல் ஆணையிட்டுச் சபதம் செய்கிறேன் – நான், உன் விருப்பத்தை நிச்சயமாக நிறைவேற்றி வைப்பேன்.'' (9,10)

தன்னுடைய நோக்கத்திலேயே குறியுடன் இருந்த கைகேயி, அவர் (மன்னர்) தன்பக்கம் வந்துவிட்டார் என்பதை உணர்ந்து கொண்டு நடுநிலை தவறி, தன் மகன் நலனில் மட்டும் ஆர்வம் கொண்டு, மனக்களிப்படைந்து, சொல்லத்தகாத சொற்களைச் சொல்லலுற்றாள். மன்னர் சபதம் செய்து கூறிய சொற்களால் மிகவும் சந்தோஷமடைந்த அவள், யமதருமராஜனே நேரில் வந்தாற்போன்ற பயங்கரமான வார்த்தைகளால், தன் எண்ணத்தைத் தெரிவித்தாள்— (11,12)

''வரிசையாக ஆணையிட்டு எனக்கு வரம் தருவதாக – என் விருப்பத்தை நிறைவேற்றி வைப்பதாக – சபதம் செய்திருக்கிறீர்கள். அதனை இந்திரன் முன்னிட்ட முப்பத்து முக்கோடி தேவர்களும் கேட்பார்களாக! சந்திரன், சூரியன், ஆகாயம், கிரகங்கள், இரவு–பகல் அபிமானி

தேவதைகள், திசைகள், மேலுலகம், கந்தர்வர் மற்றும் அரக்கர் அடங்கிய இந்த பூலோகம், இரவில் திரியும் உயிரினங்கள், வீடுகளிலுள்ள குடும்ப தேவதைகள் மற்றுமுள்ள பிற ஜந்துக்களும் நீங்கள் பேசியதை அறியக் கடவார்களாக! வாக்குத் தவறாதவர், பராக்கிரமசாலி, தருமம் அறிந்தவர், பண்பாளர் ஆகிய இவர் எனக்கு வரம் கொடுக்கிறார். அதை எல்லாத் தேவதைகளும் கேட்கட்டும்.'' (13–16)

இவ்வாறு மகாவீரராக இருந்தும் காமத்தின் வசப்பட்டுவிட்டவரும், வரம் கொடுக்க ஒப்புக் கொண்டுவிட்டவருமான அவரைத் தன் கைப்பிடிக்குள் அடக்கிக் கொண்டுவிட்ட தேவி கைகேயி, முதலில் ஓரிரு வார்த்தைகள் புகழ்ந்து பேசிவிட்டுப் பின்னர் கூறினாள்— (17)

''மன்னரே! முன்பு ஒரு காலத்தில் நடந்த தேவாசுர யுத்தத்தை நினைத்துப் பாருங்கள். அப்போது எதிரிகள் உங்களை மிகவும் பலமாகத் தாக்கிக் கீழே தள்ளிவிட்டார்கள். உயிர் மட்டும் ஊசலாடிக் கொண்டிருந்தது. அந்தச் சமயத்தில், நான் மிகவும் கவனத்துடன் கண் விழித்திருந்து, பலவிதமான முயற்சிகள் செய்து, தங்கள் உயிரைக் காப்பாற்றினேன். அதனால் மனமகிழ்ந்த தாங்கள், எனக்கு இரண்டு வரங்கள் கொடுப்பதற்கு முன்வந்தீர்கள். (18,19)

ஐயனே! நாடாளும் மன்னரே! சொன்ன சொல் தவறாதவரே! அந்த இரண்டு வரங்களையும் தங்களிடமே ஒப்படைத்திருந்தேன். ஒப்புப்பொருளாக வைக்கப்பட்டிருந்த அவைகளையே இப்போது மீட்டுக் கொள்ள விரும்புகிறேன். நியாயமான முறையில் எனக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்ட அந்த வரங்களை, நீங்கள் எனக்குக் கொடுக்காமற்போனால், உங்களால் அவமானம் செய்யப்பட்டவளாக, நான் இப்போதே உயிரை விட்டுவிடுகிறேன்.'' (20,21)

வேடனின் வேய்ங்குழல் நாதத்தால் இழுக்கப்பட்டு, அவன் விரித்த வலையில் சிக்கித் தன் உயிரை விடும் மானைப் போல, வரங்கள் என்ற சொல்லினாலேயே மன்னர், கைகேயி விரித்த வலையில் அகப்பட்டுக் கொண்டார். (பின்னர் நாசமும் அடைந்தார்.) இதற்குப் பின், வரங்களைக் கொடுக்க இசைந்துவிட்டவரும், காம மயக்கத்திலிருந்தவருமான அவரைப் பார்த்துக் கூறினாள்— ''மன்னரே! முன்பொரு சமயம் தேவாசுர யுத்தத்தின்போது, எனக்கு உங்களால் இரண்டு வரங்கள் கொடுக்கப்பட்டன. (22,23)

இப்போது நான், அந்த வரங்களைப் பெற்றுக் கொள்ள விரும்புகிறேன், கேட்டுக் கொள்ளுங்கள். இராம பட்டாபிஷேகத்திற்காகச் சேகரம் செய்யப்பட்டிருக்கும் பொருள்களைக் கொண்டே என்னுடைய மகன் பரதனுக்கு முடிசூட்டப்பட வேண்டும்! தேவாசுர யுத்தத்தின்போது தாங்கள் வாக்குத்தத்தம் செய்த இரண்டாவது வரத்தைக் கேட்கும் காலம் இப்போது வந்திருக்கிறது. ஒன்பதும் ஐந்தும் சேர்ந்த பதிநான்கு ஆண்டுக்காலம் தண்டகாரண்யத்தில் மரவுரியும் மான்தோலும் அணிந்துகொண்டு தவசியாக இராமன் இருக்கவேண்டும். எதிர்ப்பு என்ற அச்சம் இல்லாத சூழ்நிலையில், பரதன் இளவரசுப் பொறுப்பை ஏற்கவேண்டும்! (24–26)

இதுதான் என் மனத்திற்குகந்த ஆசை. உங்களால் முன்னரே கொடுக்கப்பட்ட வரங்களைத்தான் கேட்கிறேன். (அதனால், சத்தியசந்தரான தாங்கள், தங்கள் சொற்களைக் காப்பாற்றியே ஆகவேண்டும்.) அத்துடன், இப்போதே இராமன் காட்டிற்குச் செல்வதை, நான் என் கண்களால் பார்க்க வேண்டும். ஆகவே, சக்கரவர்த்தியாரே! சொன்ன சொல்லைக் காப்பாற்றுங்கள். குலம், பண்பாடு, உயிர் ஆகியவற்றைக் காப்பாற்றுங்கள். சகலபோகங்களும் நிறைந்த மேலுலக வாசம் கிடைக்க வேண்டும் என்றால் சொன்ன சொல் தவறாமையைத்தான் முக்கியச் சாதனமாகத் தவச்செல்வர்கள் கூறுகிறார்கள்.'' (27,28)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
பதினோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பன்னிரண்டு

கைகேயி–தசரதர் விவாதம்

கைகேயியின் கொடிய சொற்களைக் கேட்ட மாமன்னர், பெரும் மனக்கவலையை அடைந்து ஒரு முகூர்த்த காலம் வேதனையில் துடித்தார். ''எனக்கு என்ன ஆயிற்று? ஏதேனும் கனவு காண்கிறேனா? மதிமயக்கமா? துர்தேவதை என்னுள் புகுந்து ஆட்டி வைக்கிறதா? அல்லது மனோவியாதி துன்புறுத்துகிறதா?'' இவ்வாறெல்லாம் சிந்தனை செய்த மன்னர் அமைதியைக் காணவில்லை. கைகேயியின் சொற்களால் தாக்கப்பட்ட அவர், சிறிது நேரம் சென்று உணர்வு பெற்று அவளிடம் சொன்னார். (1–3)

பெண்புலியைக் கண்ட மான்போல மனம் சிதறி, வேதனைப்பட்டு, கீழே வெறுந்தரையில் உட்கார்ந்து நீண்ட பெருமூச்சுவிட்டுக் கொண்டு, மந்திர உச்சாடனத்துடன் போடப்பட்ட ஒரு மண்டலத்தினுள் அடைத்து வைக்கப்பட்ட கொடிய விஷம் கொண்ட சர்ப்பம் போல் கட்டுண்டு, 'அடப் பாவமே!' என்ற சொல்லை மிகவும் வெறுப்புடன் கூறிய மன்னர், சோகத்தால் தாக்கப்பட்ட மனத்தினராய், மறுபடியும் மூர்ச்சை அடைந்தார். வெகுநேரம் சென்று நினைவு பெற்ற மன்னர், மிகவும் துக்கத்துடன், சினம் மிகுந்து கண்ணாலேயே எரித்துவிடுபவர் போல கைகேயியைப் பார்த்துக் கூறினார்— ''இகழ்ச்சிக்குரியவளே! தீய ஒழுக்கம் உடையவளே! இந்த (இக்ஷ்வாகு) குலத்தை நாசம் செய்ய வந்தவளே! பாவியே! இராமனோ அல்லது நானோ உனக்கு என்ன கேடு செய்தோம்? தன் சொந்த தாயாரைப் போலவே, உன்னிடம் (மரியாதையுடனும் பாசத்துடனும்) நடந்து கொள்கிறான், இராகவன். அப்படிப்பட்ட அவனுக்கே துன்பம் தரும் முயற்சியில், எந்தக் காரணத்தினால் நீ முனைந்து நிற்கிறாய்? (4–8)

என் அழிவுக்காகவே, உன்னை என் வீட்டிற்குள் நுழைய விட்டேன் போலிருக்கிறது. அரசகுமாரி உருவத்தில் வந்த நீ மிகவும் கொடியதான விஷத்தையுடைய பெண் நாகம் என்று அறியாமல் போய்விட்டேனே? உயிர்ப் பிராணிகள் எல்லாமே இராமனின் குணநலன்களைக் கொண்டாடிப் பேசின. அப்படியிருக்கும் போது எனக்குப் பிரியமான புதல்வனை, எந்தக் குற்றத்தைச் சுமத்திக் கைவிட முடியும்? கௌசல்யையோ, சுமித்திரையையோ தியாகம் செய்வேன்; என் ராஜ்யத்தையும் விட்டுவிடுவேன்; என் உயிரைக்கூடத் துறந்து விடுவேன்! ஆனால், தந்தையிடம் மிகவும் பாசம் உடைய (தந்தையால் மிகவும் அன்புகாட்டப்படுகிற) இராமனை ஒருபோதும் துறக்கமாட்டேன். என் மூத்த புதல்வனைக் கண்களால் பார்த்த அளவிலேயே எனக்குப் பேரானந்தம் உண்டாகிறது. அவன் என் கண்ணில் படாதபோது மனம் கலங்குகிறது. (9–12)

உலகம், (ஜீவாதாரமான) சூரியன் இல்லாமலே தொடர்ந்து சுழலக் கூடும். தண்ணீர் இல்லாமல் தாவரங்கள் வளரக்கூடும். ஆனால், இராமன் இல்லாமல் என் உடலில் உயிர் தங்கியிருக்காது. கெடுமதி கொண்டவளே! போதும், போதும். இந்த அளவில் (என்னிடம் தனிமையில் கூறியதுடன்) தவறான உன் எண்ணத்தைத் துறந்துவிடு. என்னிடம் கொஞ்சம் இரக்கம் காட்டு. உன் கால்களில் தலை வைத்து, நான் வணங்கினால் உன் மனம் இரங்கும் என்றால் நான் அவ்விதம் செய்வதற்கும் சித்தமாக இருக்கிறேன். பாவி! இது என்ன கொடுமை? பயங்கரமான இந்த எண்ணம் உனக்கு எப்படி வந்தது? (13–15)

அல்லது பரதனிடம் எனக்குப் பிரியம் இருக்கிறதா, இல்லையா? என்று சோதனை செய்து பார்க்க விரும்புகிறாயா? ரகுவம்ச திலகனான பரதன் சம்பந்தமாக, நீ முதலில் சொன்னாயே, அது அப்படியே இருந்துவிட்டுப் போகட்டும். (பரதனுக்குப் பட்டம் கட்டவேண்டும் என்ற வரம் தருகிறேன்.) இராமன், என் மூத்த பிள்ளை; தருமானுஷ்டானத்திலும் மற்றவர்களைக் காட்டிலும் மேலானவன்; சகல சௌபாக்கியங்களும் நிறைந்தவன் என்றெல்லாம் செவிக்கினிய பாராட்டுக்களைக் கூறி வந்தாயே. அவையெல்லாம் அவனிடம் வேலை வாங்குவதற்காகக் கூறப்பட்ட பசப்பு மொழிகள் என்றல்லவோ ஆகிவிடும்? (16,17)

(இராமனுக்குப் பட்டாபிஷேகம் என்ற) அந்தச் செய்தியைக் கேட்டவுடனேயே சோகத்தீயால் தகிக்கப்பட்ட நீ, என்னையும் மிக்க துயரத்தில் ஆழ்த்துகிறாய். பாழடைந்த கட்டிடத்திற்குள் புகுந்தவருக்குச் சித்தப்பிரமை ஏற்படுவதுபோல், யாரோ ஒருவருடைய கைப்பிடிக்குள் அகப்பட்டுக் கொண்டுவிட்ட நீ, (இப்படியெல்லாம் பேசுகிறாய்.) உன்னுடைய சிந்தனையில் தடுமாற்றம் வந்திருப்பதிலிருந்தே நியாயம் தவறாத இக்ஷ்வாகு பரம்பரையில் மிகப்பெரிய அநீதி தோன்றிவிட்டது (என்று நினைக்கிறேன்). (18,19)

தடங்கண்ணாளே! முறையற்ற அல்லது எனக்குப் பிரியமில்லாத ஒரு சிறு காரியத்தைக்கூட, இதற்கு முன்னர் நீ செய்ததே இல்லை என்பதால் இப்போது நடந்து கொண்டிருக்கும் இந்தச் சம்பவத்தில்கூட எனக்கு நம்பிக்கை வரவில்லை. உலகம் அறியாத சிறுபெண்ணே! 'இராமன், மகாத்மாவான (என் சொந்தப்பிள்ளை) பரதனுக்கு இணையானவன் (பரதனிடம் உள்ளது போலவே, இராமனிடமும் பாசம் கொண்டிருக்கிறேன்)' என்று, என்னிடம் பல தடவைகள் பல செய்திகளைக் கூறியிருக்கிறாய். (20,21)

தேவி! தருமாத்மாவும், மிக்க புகழ் பெற்றவனுமான அவனுக்கு ஒன்பதும் ஐந்துமான (பதிநான்கு) ஆண்டுகளுக்கு வனவாசம் என்பது உனக்கு நியாயமாகப்படுகிறதா? நீ இயல்பாகவே பயந்த சுபாவம் உடையவளாயிற்றே? (உனக்கு எப்படி இப்படிப்பட்ட பயங்கரமான எண்ணம் வந்தது?) மிகவும் மிருதுவான சரீரமுடையவன் அவன். தருமத்திலேயே உறுதியாக நிற்பவன். மிகவும் கோரமான காட்டு வாழ்க்கை அவனுக்கு உகந்தது என்று உனக்குப்படுகிறதா? (22,23)

கவின்மிகு கண்ணாளே! உனக்குப் பணிவிடை செய்து வருபவனும், கண்களால் பார்த்துப் பார்த்து மகிழத்தக்கவனுமான இராமனை நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும் என்ற எண்ணம் உனக்கு எவ்வாறு ஏற்பட்டது? பரதனைக் காட்டிலும் அதிகமாக, இராமன்தான் உனக்குப் பணிவிடை செய்கிறான். (ஆகவே, அவனிடம்தானே நீ அதிகமாக அன்பு காட்டவேண்டும்?) அதனால், பரதன் உன்னிடம் விசேஷமாகக் குற்றேவல் செய்ததை, நான் பார்த்ததே இல்லை. மனிதர்களுள் ரிஷபம் போன்ற இராமனைக் காட்டிலும் மேலாக, உனக்குப் பணிவிடை, கௌரவம், சொல்லியவண்ணம் செய்தல் ஆகியவற்றை வேறு எவன்தான் செய்வான்? (24–26)

பல ஆயிரக்கணக்கான மாதர்கள், பல ஆயிரக்கணக்கான வேலைக்காரிகள் இருக்கிறார்கள். ஆனால் தீய நடத்தை, தீய எண்ணம் இராமனைத் தீண்டியதில்லை. எல்லாப் பிராணிகளையும் சுத்தமான மனத்துடன் அணுகி, அன்பொழுகப் பேசி, குடிமக்களைத் தன்வசப்படுத்தி வைத்திருக்கிறான், புலிநிகர் இராமன். இராமன், உலக மக்களைச் சத்தியத்தாலும், வறியவர்களைக் கொடையினாலும், ஆசார்யர்களைப் பணிவிடையாலும், யுத்தத்தில் விரோதிகளை வில்திறனாலும் வெற்றி கொள்கிறான். (27–29)

இராமனிடம் சத்தியம், தானம், தவம், தியாகம், நட்பு, தூய்மை, நேர்மை, கல்வி, பெரியோருக்குப் பணிவிடை போன்ற நற்குணங்கள் நிலைகொண்டுள்ளன. தேவி! அப்படி நேர்மை குடிகொண்ட, தேவர்களுக்கு நிகரான, மாமுனிவர் போன்று ஆன்ம ஒளி பெற்றுத் திகழும் இராமனுக்குக் கேடு செய்ய ஏன் விரும்புகிறாய்? பிரியமில்லாத வார்த்தையை மக்களிடம் இராமன் பேசியதாக, எனக்கு ஞாபகமே இல்லை. இனிமையாகப் பேசுபவனும் எனக்குப் பிரியமானவனுமான இராமனிடம் உனக்காக, பிரியமில்லாத வார்த்தையை எப்படிக் கூறுவேன்? (30–32)

பிழையைப் பொறுத்தல், தவம், தியாகம், சத்தியம், தருமம், நன்றி மறவாமை, உயிர்களுக்குத் தீங்கு செய்யாமை ஆகிய மேலான இயல்புகள் நிரம்பிய இராமனை விட்டால், எனக்கு வேறு யார்தான் துணை? கைகேயி! நான் வயோதிகன்; வாழ்க்கையின் கடைசிக் கட்டத்தில் இருக்கிறேன்; மனம் நொந்து கிடக்கிறேன்; உன் எதிரில் பதற்றத்துடன் நிற்கும்

என்மேல் இரக்கம் காட்டு. கடல்சூழ்ந்த மண்ணுலகில் என்னென்ன கிடைக்குமோ, அவை எல்லாவற்றையும் உனக்குக் கொடுக்கிறேன். நீ கோபத்திற்கு ஆட்பட்டுவிடாதே. (33–35)

கைகேயி! இரண்டு கைகளையும் கூப்பிக் கும்பிடுகிறேன்; காலில் வேண்டுமானாலும் விழுந்து பணிகிறேன். இராமனுக்குப் புகலிடமாக (அபயம் அளிப்பவளாக) இரு. (நீ இதற்கு சம்மதித்தால்தான்) இந்த விஷயத்தில் அதருமம் என்னைப் பற்றாமல் இருக்கும்.'' இவ்வாறு துக்கத்தினால் பரிதவித்துக் கொண்டு, புலம்பிக் கொண்டு, அவ்வப்போது சுயநினைவை இழந்து கொண்டு, இங்குமங்கும் புரண்டு கொண்டு, வருத்தத்தால் மூழ்கடிக்கப்பட்டு, சோகக் கடலிலிருந்து மீள்வதற்காக மீண்டும் மீண்டும் பிரார்த்தித்துக் கொண்டிருந்த மன்னரைப் பார்த்து, கோபத்தால் கொதித்துக் கொண்டிருந்த கைகேயி, மிகவும் பயங்கரமான சொற்களைக் கூறினாள்— (36–38)

''அரசரே! இரண்டு வரங்களைக் கொடுத்துவிட்டு, பின்னர், 'இப்படி முன்பின் யோசியாமல் கொடுத்துவிட்டேனே!' என்று தவித்தீர்களேயானால், உங்கள் அறநெறி தவறாமையை மக்கள் முன் எவ்வாறு தம்பட்டம் அடித்துக் கொள்வீர்கள்? அறம் அறிந்தவரே! உங்களோடுகூட அநேக ராஜரிஷிகள் கூடியிருக்கும்போது, அவர்கள் என் விஷயமாகக் கேட்டால், அவர்களுக்கு என்ன பதில் சொல்வீர்கள்? (எனக்குக் கொடுத்த வரங்களை நிறைவேற்றாவிட்டால், நான் மற்ற அரசர்களுக்குத் தெரிவிப்பேன் – என்றபடி.) (39,40)

'எவளுடைய இரக்கத்தினால் நான் இன்னும் உயிரோடு இருக்கிறேனோ, எவள் மிகவும் ஆபத்தான நிலையிலிருந்த என்னைக் காப்பாற்றினாளோ, அந்தக் கைகேயியிக்கு இரண்டு வரங்கள் கொடுப்பதாகக் கூறியதைப் பொய்யாக்கிவிட்டேன்!' என்று சொல்லப் போகிறீர்களா? மன்னரே! உங்கள் குலத்தில் தோன்றிய உத்தமர்களான அரசர்களுக்கு, ஒரு களங்கத்தை ஏற்படுத்தப் போகிறீர்களா, என்ன? சற்றுமுன்தானே என் விருப்பத்தை நிறைவேற்றுவதாக வாக்குத்தத்தம் செய்தீர்கள்? அதற்குள் அதை விட்டுவிட்டு வேறு ஏதேதோ பேசுகிறீர்களே? (41,42)

(உங்கள் முன்னோர்களில்) சிபி என்று ஒரு மன்னர். ஒரு பருந்தும் புறாவும் சண்டை போட்டுக் கொண்டு அவரிடம் வந்தன. (புறாவுக்கு அடைக்கலம் கொடுப்பதாக வாக்குத்தத்தம் செய்துவிட்டதால்,) பருந்துக்குத் தன் உடல் சதையையே வெட்டிக் கொடுத்தார். அலர்க்கன் என்று ஓர் அரசன் (பார்வை அற்றிருந்த ஓர் அந்தணனுக்கு) வாக்குக் கொடுத்தபடி, தன் இரு கண்களையும் பிடுங்கிக் கொடுத்து (அந்தப் புண்ணியத்தின் பயனாக,) மேலான நிலையை அடைந்தான். (43)

பெருங்கடல் (தேவர்களுக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவதற்காக) இன்னமும் கரையைக் கடக்காமல் இருக்கிறது. உங்களுடைய முன்னோர்களின் நன்னெறிகளை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் கொடுத்த வாக்கைப் பொய்யாக்கிவிடாதீர்கள். கெடுமதி படைத்தவரே! தருமத்தைப் புறக்கணித்துவிட்டு, இராமனை இளவரசனாக முடிசூட்டிவிட்டு, கௌசல்யையோடுகூட எப்போதும் இன்பம் அனுபவிக்க விரும்புகிறீர்கள். (உண்மை இப்படியிருக்க, என்னை எப்படி லட்சியம் செய்வீர்கள்?) (44,45)

தருமமோ, அதருமமோ? பொய்யோ, நிஜமோ? அது பற்றிய விசாரணை இப்போது வேண்டாம். நீங்கள் எனக்குக் கொடுத்த வாக்குறுதி இருக்கிறதே, அதில் எவ்வித மாற்றமும் இல்லை. இராமனுக்குப் பட்டாபிஷேகம் நடக்கும் என்பது உறுதியானால், நான் இப்போதே நிறைய விஷம் குடித்து, உங்கள் கண்ணெதிரிலேயே இறந்துவிடுவேன். இளவரசரைப் பெற்றெடுத்த தாயார் என்ற காரணத்தால், பிறர் இராமனுடைய அன்னையைக் கைகூப்பி வணங்கி மரியாதை செலுத்துவதை ஒரு நாள் பார்த்தால்கூடப் போதும், அந்தத் துர்ப்பாக்கியத்தைக் காட்டிலும் மரணமே எனக்கு உகந்தது. (46–48)

மன்னரே! பரதன் மேல் மற்றும் என் மேல் ஆணையிட்டுச் சொல்கிறேன்— இராமன் நாட்டைவிட்டு வெளியேறுவது என்ற ஒன்றைத் தவிர, வேறு எதனாலும் நான் சமாதானம்

அடையமாட்டேன்.'' இவ்வாறு கூறிவிட்டு ஒருவழியாக, கைகேயி பேச்சை நிறுத்தினாள். கண்ணீர் சொரிந்து அழுது கொண்டிருந்த மன்னருக்கு ஆறுதல் கூறவேயில்லை, அவள். இராமனுக்கு வனவாசம், பரதனுக்கு அரச பதவி – என்ற கொடிய சொற்களைக் கேட்டுப் பொறி தடுமாறிய மன்னர், ஒரு முகூர்த்த காலம் கைகேயியிடம் எதுவும் பேசாமலிருந்தார். வருத்தத்தைத் தரும் பேச்சைப் பேசிய தன் அன்புக்குரிய மனைவியை இமைகொட்டாமல் பார்த்தவண்ணம் இருந்தார். (49–52)

நெஞ்சைப் பிளப்பதும், துயரமும் கவலையும் தரக்கூடியதும், பயங்கரமானதும், வஜ்ராயுதம் போல் தாக்குவதுமான அவளுடைய சொற்களைக் கேட்ட மன்னர் நிம்மதியை இழந்தார். அவர் அரசியின் தீய திட்டத்தையும், கோரமான சபதத்தையும் எண்ணி எண்ணி, (மனம் தளர்ந்து) 'இராமா' என்று நீண்ட பெருமூச்சுடன் கூவியழைத்து, வெட்டுண்ட மரம்போல் கீழே சாய்ந்தார். உலகாளும் மாமன்னர் பைத்தியம் பிடித்தவர்போல் சுயசிந்தனை இழந்தவராக, கடுமையான நோய்க்கு ஆளானவர்போல் தாறுமாறாகப் பிதற்றிக் கொண்டு, மந்திரத்தினால் வீரியம் அபகரிக்கப்பட்ட சர்ப்பம் போல் செயலற்றவராக ஆனார். (53–55)

மன்னர், கைகேயியைப் பார்த்து பலமிழந்த குரலில் கேட்டார்— ''நல்லதுபோல் தோற்றம் தரும் தீயவழியை உனக்கு யார் உபதேசித்தார்? துர்தேவதையால் ஆக்கரமிக்கப்பட்டவள் போல் என்னிடம் பண்புக்குறைவாகப் பேசுவதற்கு வெட்கப்படவில்லையே? உன் நடத்தையில் உள்ள இந்தக் குறையை நான் முன்பே அறியாமற்போய்விட்டேன். நீ இளமையாக இருந்த காலத்தில் உன்னிடமிருந்த நற்பண்பு இப்போது மாறிவிட்டதாகக் காண்கிறேன். எந்த விஷயத்தினால் உனக்கு அச்சம் ஏற்பட்டு, இம்மாதிரியான வரத்தைக் கேட்கத் துணிந்தாய்? (56–58)

அரசுக் கட்டிலில் பரதன் அமரவேண்டும்; இராமன் காட்டில் இருக்கவேண்டும் – என்று வரம் கேட்கிறாய். உன் கணவனுக்கும் மக்களுக்கும் பரதனுக்கும் பிரியமானதைச் செய்ய விரும்புவாயேயானால் தவறான இந்த எண்ணத்தை நீ கைவிடு; பொய்யிலிருந்தும் விலகி நில். வெறுக்கத்தக்கவளே! பாவ எண்ணம் கொண்டவளே! கீழ்த்தரமானவளே! அறமில்லாத செயல்களைச் செய்பவளே! என்னிடமோ அல்லது இராமனிடமோ உனக்குத் துயரம் கொடுக்கக்கூடிய அல்லது பொய்யான எந்த நடவடிக்கையைக் கண்டாய்? (59,60)

இராமன் இல்லாத நாட்டில் பரதன் ஒருபோதும் இருக்கமாட்டான். இராமனைக் காட்டிலும் அறநெறியைக் கடைப்பிடிப்பதில் அவன் மிகவும் மேம்பட்டவன் என்று நான் நம்புகிறேன். 'காட்டிற்குப் போ' என்று சொல்லியவுடன் 'ராகுவினால் பீடிக்கப்பட்ட சந்திரன்போல்' இராமனுடைய முகம் காந்தியிழந்து போவதை, நான் எவ்வாறு (முகம் கொடுத்துப்) பார்ப்பேன்? நண்பர்களுடன் கலந்தாலோசித்து எடுக்கப்பட்ட முடிவை, எதிரிகளால் நாசம் செய்யப்பட்ட சேனையைப் போல, தலைகீழாக மாற்றி அமைத்தால், நான் அவர்களை எவ்வாறு பார்ப்பேன்? (61–63)

பல திசைகளிலிருந்தும் வந்து கூடியிருக்கும் அரசர்கள், 'இக்ஷ்வாகு பரம்பரையில் பிறந்த இவர், சிறுபிள்ளைத்தனமாகச் செயல்படும் இவர், எப்படித்தான் இவ்வளவு நீண்டகாலம் ஆட்சி செய்தாரோ?' என்று என்னைக் குறித்து இகழ்ச்சியாகப் பேசுவார்கள். வயோதிகம் அடைந்த, நற்குணசாலிகளான அநேக வேதவிற்பன்னர்கள் என்னிடம் வந்து, 'ஸ்ரீராமன் எங்கே?' என்று கேட்டால், நான் அப்போது என்ன பதில் சொல்வேன்? கைகேயியினால் (வஞ்சக சாகரத்தில்) அமுக்கப்பட்ட என்னால், என் மகன் நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டான் – என்று சத்தியமாக நடந்ததைச் சொன்னால், அரசவையில் கூறப்பட்ட என் சங்கல்பம் (இராமனுக்குப் பட்டாபிஷேகம் என்பது) அசத்தியமாகிவிடும். (64–66)

இராகவன் காட்டிற்கு அனுப்பப்பட்டுவிட்டால், கௌசல்யை என்னிடம் எவ்வாறு பேசுவாள்? அவளுக்குப் பிரியமில்லாத ஒரு காரியத்தைச் செய்துவிட்டு, நான் என்ன பதில் கூறுவேன்? அந்தந்தச் சமயத்திற்கேற்றபடி ஒரு வேலைக்காரியைப் போல, ஒரு தோழியைப் போல,

பத்தினியாக, சகோதரியைப் போல, தாயாரைப் போல கௌசல்யை நடந்து வந்திருக்கிறாள். எப்போதும் இனிமையாக நடப்பவள்; அரும்பெறல் மகனைப் பெற்றவள்; அன்பொழுகப் பேசுபவள். என்னுடைய பாராட்டுக்குரிய அவளை, உன்னிடமிருந்த பயம் காரணமாக, பகிரங்கமாக நான் பாராட்டியதே இல்லை. (67–69)

நோய்க்கு ஒவ்வாத பண்டங்களைப் புசித்த நோயாளி பின்னர் துன்பப்படுவதைப் போல, உன்னிடம் ஏராளமாக அன்பைச் செலுத்தியது, என்னை இப்போது தகிக்கிறது. இராமனுக்கு முடிசூட்டுதலை நிறுத்திவிட்டுக் காட்டிற்குப் போகச் சொன்னதைக் கேட்டதும், (என் மகன்கள் கதி என்ன ஆகுமோ? என்று) அச்சத்தை அடைந்த சுமித்திரை, என்னிடம் எவ்வாறு நம்பிக்கை வைப்பாள்? ஆதரவற்று நிர்கதியாக நிற்கப் போகும் வைதேகிக்கு நெஞ்சைப் பிளக்கும் இரண்டு செய்திகளைக் கேட்க வேண்டியிருக்கும். ஒன்று, இராமனுடைய வனவாசம்; மற்றொன்று, என்னுடைய மரணம். (70–72)

இராமனுடைய நிலை குறித்து வருந்தி, என் உயிர் போய்விட்டது குறித்துத் துக்கமடைந்து, இமயமலைச்சாரலில் கின்னரனிடமிருந்து பிரிக்கப்பட்ட கின்னரி போல் மிகவும் குன்றிப் போகப் போகிறாள். அழுதுகொண்டிருக்கும் சீதையையும், பெரும் காட்டில் வசிப்பவனாக இராமனையும் பார்த்துக் கொண்டு, நான் உயிரோடு இருக்கமாட்டேன். அந்த நிலையில் கைம்பெண்ணாகிவிட்ட நீ, புதல்வனைக் கொண்டு ஆட்சி நடத்துவாய். (73–75)

சாதுவான உன்னை நல்லவள் என்று எண்ணினேன். நீயோ தீய இயல்புடையவள் என்பதைக் காட்டிவிட்டாய். உன்னிடம் அதிக அன்புகாட்டியதற்காக இப்போது வருந்துகிறேன் – மகிழ்ச்சி தரும் உற்சாக பானத்தைப் பருகிய பின்னர், அதில் விஷம் கலந்திருக்கிறது என்பதை அறிந்துகொண்டதைப் போல. வஞ்சனையாக, தேனொழுகும் சொற்களால் என்னை மகிழ்வித்துப் பேசி வந்தாய். 'குழலோசையால் மயக்கி மானைப் பிடிக்கும் வேடனைப் போல்' (என்னை வஞ்சனையால் மயக்கி,) என் உயிரைப் பறிக்கப் போகிறாய். (76,77)

கள் குடிக்கும் அந்தணனை ஏசுவதைப் போல, புதல்வனைத் துறந்துவிட்ட என்னை 'நெறியில்லாதவன்' என்று சந்துபொந்துகளிலெல்லாம் மக்கள் இகழ்ந்து பேசப் போகிறார்கள். என்ன கஷ்டம்! என்ன வேதனை! உன்னுடைய பயங்கரமான பேச்சைக்கூட, நான் பொறுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது! முன்பு செய்த பாவத்தின் விளைவாக, இவ்வளவு பெரிய துக்கம் எனக்கு வந்திருக்கிறது போலும். ஏ பாவி! இந்தப் பாவி உண்மை தெரியாமல் உன்னை வெகுகாலம் சௌக்கியமாக வைத்துக் காப்பாற்றினேனே? 'கழுத்தில் சுருக்குப் போடும் கயிறு நீ' என்று நான் அறியாமற்போனேனே? (78–80)

உன்னோடு இன்பமாகக் காலம் கழித்த நான், யாருமில்லாத தனி இடத்தில் கருநாகத்தைப் பிடிக்கும் சிறுவனைப் போல, நீ எனக்குக் காலன் என்பதை உணரவில்லை. துராத்மாவான என்னால் மகாத்மாவான புதல்வன், தந்தை இல்லாதவன் போல் ஆக்கப்பட்டான். அப்படிப்பட்ட என்னை, மக்களனைவரும் தூற்றத்தான் போகிறார்கள். மன்னன் தசரதர் காமப்பித்தேறியவன்; மதிகெட்டவன். ஒரு பெண்ணிடம் கொண்ட மோகத்தால், தனக்குப் பிரியமான புதல்வனைக் காட்டிற்கு அனுப்பத் துணிந்துவிட்டானே? (என்று தூற்றுவார்கள்.) (81–83)

விரத அனுஷ்டானம், பிரம்மசரியம், ஆசார்யர்களுக்குப் பணிவிடை என்று இவ்வளவு காலம் கஷ்டப்பட்டான். இப்போதுதான் அவன் சுகத்தை அனுபவிக்கும் காலம் வந்திருக்கிறது. ஆனால், என்ன கஷ்டம்! மறுபடியும் கஷ்டத்தையே அனுபவிக்கப் போகிறான்! என்னுடைய புத்திரன், என் சொல்லுக்கு மாறாக அடுத்த வார்த்தை பேசமாட்டான்! 'காட்டிற்குப் போ' என்று சொன்னவுடனேயே, 'சரி, அப்படியே!' என்றுதான் சொல்வான். என்னுடைய இராகவன், 'காட்டிற்குப் போ' என்று நான் சொன்னதும், 'மாட்டேன்' என்று சொன்னால், அது எனக்குப் பிரியமானதாக இருக்கும். ஆனால், என் குழந்தை அப்படிச் செய்யமாட்டானே! (84–86)

இராமன் மாசுபடாத மனம் உடையவன்; என் உட்கிடக்கையை ('காட்டிற்குப் போக மாட்டேன்' என்று அவன் சொல்லவேண்டுமென்று நான் மனத்திற்குள் நினைப்பதை) அறிய மாட்டான். இராமன் காட்டிற்குப் போய்விட்டானானால் எல்லா மக்களுடைய ஏச்சுக்களையும் பெற்றுள்ள, மன்னிக்க முடியாத பெரும் குற்றத்தைச் செய்துவிட்ட என்னை, காலன் யமலோகத்திற்குக் கொண்டு செல்வான். மனிதசிரேஷ்டனான இராமன் காட்டிற்குப் போய் நானும் மரணமடைந்த பின்னர், இங்கேயுள்ள என்னுடைய அன்புக்குரியவர்களுக்கு (கௌசல்யை முதலானாவர்களுக்கு) நீ, என்னென்ன துன்பங்களைச் செய்யப் போகிறாயோ? (87,88)

என்னையும் இராமனையும் மற்ற புத்திரர்களையும் காணப் பெறாதவளாய், துக்கத்தைத் தாங்க முடியாமல் என்னுடனேயே உடன்கட்டை ஏறிவிடுவாள், கௌசல்யை. (சுமித்திரைக்கும் இதே நிலைதான் ஏற்படும்.) கௌசல்யையும் சுமித்திரையையும் என்னையும் மூன்று புத்திரர்களையும் ஆழங்காண முடியாத சோக சமுத்திரத்தில் தள்ளிவிட்டு, கொடியவளான நீ மட்டும் (அரசாட்சி என்ற) சுகத்தை அடைவாய். மிகப் பழமையான காலத்திலிருந்து யாராலும் வெல்லப்பட முடியாத இக்ஷ்வாகு பரம்பரையினரால் நல்லாட்சி செய்யப்பட்டு, என்னாலும் இராமனாலும் கைவிடப்பட்டுக் குழப்பத்தை அடையப்போகும் இந்த ராஜ்யத்தை நீயே ஆட்சி செய்து வா. (89–91)

இராமனை நாட்டைவிட்டு வெளியேற்றியது பரதனுக்குச் சம்மதம் என்று தெரிய வந்தால், அவன், என் உயிர் நீங்கியவுடன் செய்யவேண்டிய இறுதிக் கடன்களைச் செய்ய வேண்டாம். அடிப்பாவியே! குணம் கெட்டவளே! எனக்குப் பகையாய் முளைத்தவளே! கைகேயி! நீ உன் மனோரதம் நிறைவேறியவளாகவே இரு. நான் மரணமடைந்து, புருஷோத்தமனான இராமன் காட்டிற்குப் போன பிறகு, கைம்பெண்ணாகிவிட்ட நீ மகனுடன்கூட அரசு செலுத்தப் போகிறாய். (92–94)

நீ, ஓர் அரசகுமாரி என்ற உருவில் என் மாளிகைக்குள் நுழைந்தாய். (அதனால், என்ன விளைந்தது? என்றால்) பாவம் செய்தவனுக்குக் கிடைப்பதைப் போன்று எல்லையில்லாத இகழ்ச்சி, மக்களின் திரஸ்காரம், எல்லாப் பிராணிகளிடமிருந்தும் அவமரியாதை ஏற்பட்டுவிட்டது. பெருமைக்குரியவனான என் பிள்ளை இராமன், இதுநாள் வரையில் தேர், யானை, குதிரை – இவற்றின் மீதேறிப் பயணம் செய்தவன், பெருங்கானகத்தில் கால்களால் எவ்வாறு நடந்து செல்வான்? (95,96)

எவன் உணவு கொள்ளும்போது, குண்டலம் அணிந்த சமையற்காரர்கள், உயர்ந்த பான–போஜனங்களை மிகவும் அக்கறையுடன் சமைத்துப் பரிமாறுவார்களோ, அப்படிப்பட்ட என் மகன் இராமன், காட்டில் கிடைக்கக்கூடிய துவர்ப்பு–கசப்பு–உறைப்பான உணவுகளைச் சாப்பிட்டுக் கொண்டு எங்ஙனம் உயிர் வாழ்வான்? விலைமதிக்க முடியாத ஆடைகளை அணிந்து கொண்டவனாய் நெடுங்காலம் சௌக்கியமாக இருந்த அவன், காவி உடையைச் சுற்றிக் கொண்டு, கட்டாந்தரையில் படுத்துக் கொண்டு எவ்வாறு காலம் தள்ளுவான்? (97–99)

இராமன் காட்டிற்குப் போவது, பரதனுக்குப் பட்டாபிஷேகம் – என்ற பயங்கரமானதும் நினைத்துப் பார்க்க முடியாததுமான தீய ஆலோசனை யாரால் கொடுக்கப்பட்டது? மாதர்கள் துஷ்டைகள்; சுயநலமிகள் – எக்கேடாவது கெட்டுப் போகட்டும்! நான் எல்லா பெண்மணிகளையும் பற்றி அப்படிச் சொல்லவில்லை. பரதனுடைய அம்மா மட்டும்தான் இப்படி. (நம்பிக்கையை நாசம் செய்யும் சுயநலக்காரி.) (100,101)

குரூரமானவளே! நல்ல விஷயத்தில் கெட்டதைக் கற்பித்து, என்னைத் துக்கப்படுத்து வதற்காக ஆலோசனை பெற்றவளே! என்னை நிமித்தமாகக் கொண்டு, எந்தத் தீமையை நீ காண்கிறாய்? அல்லது எல்லா உயிர்களுக்கும் நன்மையே செய்யும் இராமனிடத்தில்தான் நீ என்ன குற்றம் கண்டாய்? இராமன் துயரக்கடலில் மூழ்கிவிட்டதைப் பார்த்துவிட்டால் (அது தனக்கே ஏற்பட்ட கஷ்டம் போல்) தந்தைமார்கள் புதல்வர்களையும், மனங்கோணாது நடந்துவரும்

மனைவிகள் தத்தம் கணவன்மார்களையும் துறந்துவிடுவார்கள். இந்த தேசம் முழுவதும் கோபம் பொங்கியெழ விபரீதங்கள் நடந்துவிடும். (102,103)

நானோ என்றால், தேவகுமாரனைப் போன்ற வடிவழகு பெற்ற என் பிள்ளை, ஆடையலங்காரத்துடன் என் எதிரில் வந்து தோன்றும்போது பரமானந்தப்படுகிறேன். அவனைப் பார்த்ததுமே நான் இளைஞனாகி விடுகிறேன். சூரியன் இல்லாமல்கூட உலகம் இயங்கலாம். இந்திரன் மழையைப் பொழியாவிட்டாலும்கூட மக்கள் தத்தம் தொழில்களில் ஈடுபடலாம். ஆனால், இந்த நாட்டிலிருந்து வெளியே செல்பவனாக இராமனைக் கண்டுவிட்டால், ஒருவர்கூட உயிருடன் இருக்க விரும்பமாட்டார் என்று நான் திடமாக நம்புகிறேன். (104,105)

என் அழிவை விரும்புகிறவள்; எனக்குத் தீமையைத் தருபவள்; எனக்கு விரோதி; என் உயிரைப் பறிக்க வந்த காலன் போன்ற உன்னை, என் வீட்டில் வசிக்க விட்டுவிட்டேன். காம மயக்கத்தால் கொடிய விஷத்தையுடைய நாகப்பாம்பான உன்னை, நெடுநாட்கள் என் மடியில் வைத்துக் கொஞ்சினேன். அதனால், இப்போது செத்துக் கொண்டிருக்கிறேன். நானும் இராமனும் லட்சுமணனும் இல்லாமல், உன்னுடன் பரதன் நகரம், புறநகர்கள், பர்வதங்கள் உடைய இந்த நாட்டை ஆட்சி புரியட்டும். அதனால், என் நலனை விரும்பாதவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுப்பவளாகிறாய். (106,107)

வெறுக்கத்தக்க நடத்தை உடையவளே! துன்பப்படும் காலத்திலும் தாக்குதல் நடத்துபவளே! அக்கிரமமான வார்த்தைகளைப் பேசும் உன் வாயிலிருந்து பற்கள் தூள்தூளாகப் போய்க் கீழே விழவில்லையே? அடக்கஷ்டமே! அனுகூலமில்லாத, பிரியமில்லாத ஒரு சொல்லைக்கூட இராமன் சொன்னதில்லை; கோபத்துடன் பேசியும் அறியான். எல்லோரையும் கவர்ந்திழுக்கும்வண்ணம் குழையக் குழையப் பேசுபவனும், எப்போதும் நற்குணங்கள் நிரம்பியவனுமான இராமனிடத்தில் குற்றம் கண்டு பேசுகிறாயே நீ? (108,109)

கேகய மன்னர் பரம்பரையில் தோன்றிய களங்கமே! நீ சோகத்தில் மூழ்கியே இரு; அல்லது தீயைப் பற்ற வைத்துக் கொள்; அல்லது எப்படியோ செத்துப் போ; அல்லது பூமியில் விழுந்து ஆயிரம் துண்டுகளாகப் போ! எனக்கு அனுகூலமில்லாததும், மிகக் கொடூரமானதுமான உன் சொற்படி நடக்கமாட்டேன். கூர்மையான கத்தியைப் போன்றவள், நீ. பொய்யான விஷயங்களை எப்போதும் மதுரமாகப் பேசுகிறவள், நீ.

இரக்கமில்லாத இயல்பினள்; தன் குலத்தையே நாசம் செய்பவள்; உயிர் நிலையாகிய என் இதயத்தையே எரிப்பவள்; என் மனத்திற்குப் பிடிக்காதவள். நீ இன்னும் உயிரோடிருப்பதை நான் சகிக்கமாட்டேன். என் மகனைப் பிரிந்து, இனி எனக்கு வாழ்க்கையே இல்லை என்னும்போது சுக–சௌக்கியங்களை அனுபவிப்பது எப்படி நடக்கும்? என்னைப் பற்றி நான் அறிவேன். இனி உன்னுடன் நான் சந்தோஷமாக இருக்கமுடியுமா, என்ன? எனக்குத் துன்பத்தைத் தரக்கூடிய ஒரு காரியத்தைத் தயவுசெய்து நீ வற்புறுத்தாதே. உன் பாதங்களில் விழக்கூட நான் சித்தமாயிருக்கிறேன். என்மீது கருணை காட்டு.'' (110–112)

உலகாளும் அந்த மாமன்னர், பண்பு கடந்து பேசும் அந்தப் பெண்ணிடம் (வரம் என்ற காரணம் சொல்லி) உறுதியாகச் சிக்கிக் கொண்டு, ஆதரவற்ற தீனர் போல புலம்பிக் கொண்டு நீட்டப்பட்டிருந்த அவளுடைய கால்களில் விழுவதற்கு முயன்றார். ஆனால், துக்க மேலீட்டால் அப்போதே உணர்விழந்து, அவள் கால்களைப் பற்றாமலே கீழே விழுந்தார். (113)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
பன்னிரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பதின்மூன்று

தசரதரின் புலம்பல்

(புண்ணியம் தேய்ந்தபின் தேவலோகத்திலிருந்து தள்ளப்பட்ட யயாதி போல) மனைவியின் காலில் விழத் தகாதவரும், வெறுந்தரையில் கிடக்கக் கூடாதவருமான மன்னர் தரையில் விழுந்து கிடந்ததைப் பார்த்து, தீமையே உருவெடுத்து வந்தாற்போன்றவளும், இதுவரை தன் விருப்பம் ஈடேறப் பெறாதவளும், உலக அபவாதத்திற்கு அஞ்சாதவளும், 'பரதனுக்கு ஏதோ ஆபத்து வந்துவிட்டது' போன்ற தோற்றத்தைக் காட்டியவளுமான அவள், அந்த வரத்தை முன்னிறுத்தியே மறுபடியும் பேசத் தொடங்கினாள்— (1,2)

''மாமன்னரே! சத்தியம் பேசுகிறவர் என்றும், திடமான நியமானுஷ்டானம் உடையவர் என்றும் நீங்கள் பறைசாற்றிக் கொள்கிறீர்கள். (அப்படியிருக்கும் நீங்கள்) என்ன காரணத்தால் எனக்கு வாக்களிக்கப்பட்ட வரத்தைக் கொடுக்காமலிருக்க விரும்புகிறீர்கள்?'' இவ்வாறு கைகேயி கூறியவுடன், மன்னர் சிறிது நேரம் மனம் வருந்தி, பின்னர் கோபம் கொண்டு பதில் கூறினார்— (3,4)

''பண்பில்லாதவளே! எனக்குப் பகையானவளே! புருஷோத்தமனான இராமன் காட்டிற்குப் போனதும், நான் உயிரை விட்டுவிடுவேன். கைகேயி! அதற்குப் பிறகு உன் மனோரதம் நிறைவேறியவளாகச் சௌக்கியமாக இரு. சுவர்க்கத்திற்கு நான் போய்ச் சேர்ந்ததும், அங்கே உள்ள தேவர்கள் இராமனைப் பற்றிய க்ஷேம–லாபங்களை விசாரிக்கும்போது, நான் உண்மையைக் கூறினால், அவர்கள் என்னை ஏசுவதை எவ்வாறு பொறுத்துக் கொள்வேன்? 'கைகேயியின் விருப்பத்தை நிறைவேற்ற விரும்பிய நான், இராமனைக் காட்டிற்கு அனுப்பிவிட்டேன்' என்று உண்மையான காரணத்தைக் கூறுவேனேயானால், (அரசவையில்) நான் அறிவித்த செய்தி பொய்யாகிவிடும். (5–7)

புதல்வன் இல்லாதிருந்த நான் அரும்பாடுபட்டு பெறற்கரிய மகாவீரனான இராமனை மைந்தனாகப் பெற்றேன். அவ்விதம் அருமையாகப் பெற்ற புத்திரனை நான் எவ்வாறு தியாகம் செய்வேன்? சூரன்; நிறையக் கற்றவன்; சினத்தை வென்றவன்; மன்னிக்கும் இயல்புடையவன்; கமலக்கண்ணன், இராமன். அவனை எவ்வாறு நாடு கடத்துவேன்? கருநெய்தல் மலர் போன்ற வண்ணம் கொண்டவன்; முழங்கால் வரை நீண்ட கைகளை உடையவன்; தன்னிகரில்லாத பலம் பொருந்தியவன்; வசீகரிக்கும் கவின்மிகு மேனியன் – இப்படிப்பட்ட இராமனைத் தண்டகாரண்யத்திற்கு எவ்வாறு அனுப்பி வைப்பேன்? (8–10)

எல்லாவிதச் சுகங்களுக்கும் உரியவன்; துக்கங்களை அனுபவிக்கத் தகாதவன். மகாபுத்திசாலியான இராமனுக்குக் கஷ்டம் என்பதை நான் எவ்வாறு சகித்துக் கொள்வேன்? துன்பப்பட வேண்டாத இராமனுக்குத் துக்கத்தைக் கொடுப்பதற்கு முன்னதாகவே, நான் (இவ்வுலகிலிருந்து) வெளியேறிவிட்டால் (மரணமடைந்துவிட்டால்), அதுவே எனக்கு நலன் தருவதாகும். இகழ்ச்சிக்குரியவளே! பாவம் செய்ய முடிவு எடுத்து விட்டவளே! வீண்போகாத பேராற்றலுடைய இராமனுக்கு, என் மனத்திற்கு உகந்தவனுக்கு பெரும் கஷ்டத்தைக் கொடுக்கிறாயே, கைகேயி. அது எதனால்? உலகில், நிச்சயமாக எனக்கு அபகீர்த்தியும் அவமானமும் ஏற்படத்தான் போகிறது.'' (11–13)

இவ்வாறெல்லாம் அவர் மனம் கலங்கிப் புலம்பிக் கொண்டிருந்த அந்தச் சமயத்தில் சூரியன் மறைந்து இரவும் வரத் தொடங்கியது. மூன்று யாமங்கள் கொண்ட அந்த இரவில் ஆகாயத்தில் முழு நிலவு ஒளிமயமாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தாலும், துயரம் தாங்காமல் புலம்பிக் கொண்டிருந்த மன்னருக்கு ஏற்பட்டிருந்த காரிருளைப் போக்கவல்லதாக இல்லை. நீண்ட வெம்மையான பெருமூச்சுவிட்ட வயோதிக மன்னர், ஆகாயத்தை வெறித்துப்

பார்த்தவண்ணம், நோயின் உபத்திரவத்தைத் தாங்க முடியாமல் தவிக்கும் நோயாளியைப் போலப் புலம்பிக் கொண்டிருந்தார்— (14–16)

''ஓ இரவே! தாரகைகளை அணிந்தவளே! உனக்கு விடிவுகாலம் ஏற்படுவதை, நான் விரும்பவில்லை. உன்னைக் கையெடுத்துக் கும்பிடுகிறேன். என்மீது கருணை காட்டு. அல்லது நீ சீக்கிரமாகக் கழிந்துவிடு. இரக்கமற்றவளும் இகழத்தக்கவளும் பெரும் துயரத்துக்குக் காரணமானவளுமான கைகேயியைப் பார்த்துக் கொண்டேயிருக்க, நான் சம்மதப்படவில்லை.'' இவ்வாறு கூறிவிட்டு கைகேயியை நோக்கி இரு கைகளையும் கூப்பிக் கொண்டு, அவளை மனம் குளிர வைக்கும் எண்ணத்துடன் மறுபடியும் இவ்வாறு கூறத் தொடங்கினார்— (17–19)

''நல்லொழுக்கமுடையவன்; இரங்கத்தக்கவன்; உன்னையே அடைக்கலம் புகுந்தவன்; மரணத்தருவாயில் இருப்பவன்; குறிப்பாக, இந்நாட்டு மன்னனாகிய என்னிடம் தயவு காட்டுவாய், கைகேயி. அழகியவளே! (இராமனுக்குப் பட்டாபிஷேகம் என்று) பொருளில்லாத வெறும் வார்த்தைகளை, நான் வெளியிடவில்லை. சிறுபெண்ணே! நீ என்னிடம் தோழமை உடையவள் (என் மனம் போலவே நடப்பவள்). நல்லவிதமாக, என் தருமசங்கடத்தை நீ தீர்த்து வைக்க வேண்டும். தேவி! எனக்கு அருள்புரிவாய். என்னுடைய இராமன், உன்னால் கொடுக்கப்பட்டதாக அழிவில்லாத ராஜ்யத்தைப் பெறட்டும்.

கருங்கண்ணாளே! அப்படி செய்தால், நீ மேலான புகழைப் பெற்று விளங்குவாய். கவர்ச்சிமிக்கவளே! அழகிய முகமும் கண்களும் உடையவளே! இப்போது நான் உன்னிடம் வைத்துள்ள கோரிக்கை எனக்கும் இராமனுக்கும் குடிமக்களுக்கும் ஆசார்யர்களுக்கும், ஏன் பரதனுக்கும்கூட மகிழ்ச்சியைக் கொடுக்கக்கூடியதாகையால், அதனை ஏற்றுக் கொள்.'' தூய எண்ணமுடையவரும், கண்ணீர் சொரியும் சிவந்த கண்களை உடையவரும், மன்னரும், கணவருமான அவருடைய புதுமையானதும் இரக்கத்தை வரவழைப்பதுமான புலம்பலைக் கேட்டும், கெடுமதி படைத்தவளும் இரக்கமற்றவளுமான அவள் ஒரு வார்த்தைகூடப் பதில் சொல்லவில்லை. (20–24)

மன்னர் மறுபடியும் உணர்விழந்தார். தனக்கு இஷ்டமானவளும் திருப்தி அடையாதவளும் விரோதமாகப் பேசுகிறவளுமான அவளைப் பார்த்து, மகனை நாட்டிலிருந்து வெளியேற்றுவதை நினைத்து மிகவும் துக்கத்தை அடைந்து, தன் நினைவிழந்து தரையில் விழுந்தார். இவ்வாறு துயரம் தாங்காமல் பெருமூச்சுவிட்டுக் கொண்டு, அறநெறி தவறாதவரான மன்னர் அரற்றிக் கொண்டிருந்தார். பயங்கரமான அந்த இரவு கழிந்தது. அவரைத் துயிலெழுப்புவதற்காக மங்கள இசையுடன் துதிபாடகர்கள் வந்து இசைக்கத் தொடங்கியதும், உத்தம மன்னராகிய அவர், அதை நிறுத்தச் சொன்னார். (25,26)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
பதின்மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பதிநான்கு

கைகேயியின் பிடிவாதம்

புத்திரசோகத்தினால் பீடிக்கப்பட்டு, சுயநினைவையிழந்து, செயலற்றவராகத் தரையில் விழுந்து கிடந்த இக்ஷ்வாகு பரம்பரையில் வந்த அவரைக் கண்கொட்டாமல் வெறுப்புடன் பார்த்து, மகாபாவியான அவள் பின்வருமாறு சொன்னாள்— (1)

''எனக்கு வரம் கொடுப்பதாகக் கூறிவிட்டு, அதை நிறைவேற்றித் தருமாறு நான் கேட்கும்போது, ஏதோ பாவச்செயலைச் செய்துவிட்டதைப் போல தரையில் அசைவில்லாமல்

படுத்துக் கொண்டு நாடகம் ஆடுகிறீர்களே, இதெல்லாம் என்ன? தருமவழியில் திடமாக நிற்க வேண்டாமா, நீங்கள்? தருமநெறிகளை அறிந்த சான்றோர்கள் 'சத்தியம்தான் மிகவும் உயர்ந்த தருமம்' என்று சொல்கிறார்கள். அதனால், நானும் தருமத்தைச் சார்ந்து நின்றே, உங்களையும் தருமத்தை அனுஷ்டிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். (2,3)

உலகாண்ட மன்னர் சிபி சக்கரவர்த்தி, (எளிய பிறவியான) பருந்து என்னும் பறவைக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதற்காகத் தன் உடலையே கொடுத்து, மிக உத்தமநிலையை அடைந்தான். அவ்வாறே, ஆன்ம ஆற்றல் நிறைந்த அலர்க்கன் என்னும் மன்னன், வேதவித்தகரான ஓர் அந்தணர் வந்து யாசித்தபோது, கொஞ்சம்கூட மனம் சலிக்காமல் தன் இரு கண்களையும் பிடுங்கிக் கொடுத்தான். நதிகளின் பதியான கடல், தான் கொடுத்த சத்தியத்தைக் காப்பாற்றும் பொருட்டு பர்வ காலங்களில்கூட, தன் அருகேயுள்ள கரையைச் சிறிதுதூரம்கூடக் கடந்து செல்வதில்லை. (4–6)

சத்தியம்தான் ஓர் அட்சரமான 'ஓம்'; சத்தியத்தில்தான் தருமம் வேர் கொண்டிருக்கிறது; சத்தியம்தான் அழிவற்ற வேதங்கள்; சத்தியத்தினால்தான் மோக்ஷம் அடையப்படுகிறது. உங்களுக்கு தருமத்தில் உறுதியான நம்பிக்கை இருக்குமானால் கண்டிப்பாகச் சத்தியத்தை அனுஷ்டிப்பீர்களாக! உத்தமரே! வாக்களிக்கப்பட்ட வரத்தை நிறைவேற்றுபவராக இருப்பீர் களேயானால், எனக்குக் கொடுக்கப்பட்ட வரம் பயனுள்ளதாக ஆகட்டும். (7,8)

தருமநெறிப்படி நடப்பதால் கிடைக்கும் அளவற்ற நற்பலன்களைப் பெறுவதற்காகவும், என்னுடைய கோரிக்கையை நிறைவேற்றுவதற்காகவும், உங்கள் மகன் இராமனை நாட்டை விட்டு வெளியே அனுப்பி வையுங்கள். (என் மனமாற்றத்திற்கு இடமே இல்லை.) மூன்று முறை உறுதியாகச் சொல்கிறேன்— 'இராமனை நாட்டை விட்டு அனுப்பி வையுங்கள்.' எனக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதியை, இப்போது நீங்கள் நிறைவேற்றி வைக்காவிட்டால், உங்களால் கைவிடப்பட்ட நான், உங்கள் எதிரிலேயே என் உயிரை விட்டுவிடுவேன்.'' (9,10)

கொஞ்சம்கூட சந்தேகத்திற்கு இடமில்லாமல் இவ்வாறு கைகேயியினால் கூறப்பட்டதும், முன்பு பலிச்சக்கரவர்த்தி இந்திரனுடைய நலனை முன்னிட்டு வந்த வாமனருக்குக் கொடுத்த சத்தியபாசத்திலிருந்து (உண்மை நிலையைத் தெரிந்து கொண்ட பிறகும்) விடுவித்துக் கொள்ள முடியாமல் இருந்ததைப் போல, மன்னரும் தற்போது சத்தியப் பிணைப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முடியாமல் இருந்தார். இரண்டு சக்கரங்களுக்கிடையில் அகப்பட்டுக் கொண்டு தவிக்கும் வண்டிக் காளையைப் போல முகப்பொலிவிழந்து மனம் தவிப்பவராக ஆனார், அவர். (11,12)

அந்த மன்னர் கலங்கிய கண்களுடன் பார்ப்பது போல மிகவும் முயற்சி செய்து தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கைகேயியிடம் பின்வருமாறு கூறினார்— ''(விவாக காலத்தில்) மந்திரங்களைக் கூறி, உன்னுடைய எந்தக் கையைப் பற்றினேனோ, அந்தக் கைக்குரிய உன்னையும் உன் புதல்வனையும் கைவிடுகிறேன். தேவி! இரவு கழிந்துவிட்டது. சூரியன் உதயமானவுடன் பட்டாபிஷேகத்திற்கு மக்கள் நிச்சயமாக, என்னை அவசரப்படுத்துவார்கள். இராமபட்டாபிஷேகத்திற்காகச் சேகரிக்கப்பட்டுள்ள சாமான்களைக் கொண்டு, நான் இறந்த பிறகு, இராமன் எனக்கு அந்திமகிரியைகளை நடத்தச் சொல். அமங்கள நடத்தை உடையவளே! இராமபட்டாபிஷேகத்தைத் தடுத்து நிறுத்திய காரணத்தால், நீயோ, உன் புத்திரனோ எனக்கு நீர்க்கடன் செய்யக்கூடாது. (13–17)

முன்னர் 'இராமபட்டாபிஷேகம்' என்று அறிவிப்பு செய்தபோது, குடிமக்களை ஆனந்தம் நிறைந்த முகத்தையுடையவர்களாகப் பார்த்தேன். (இப்போதோ எல்லாம் தலைகீழாகிவிட்டது!) உற்சாகமிழந்து, ஆசையிழந்து, கவலையோடு தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டிருக்கும் அவர்களை என்னால் பார்க்கவே முடியாது.'' மகாத்மாவான மன்னர் இவ்வாறெல்லாம் அவளுடன்

பேசிக் கொண்டிருந்த அளவில், சந்திரனும் நட்சத்திரங்களும் ஒளிவீசிக் கொண்டிருந்த இரவு (ஒருவழியாக முடிவுக்கு வந்து) பொழுது புலரத் தொடங்கியது. (18,19)

பாவசிந்தனையைக் கைக்கொண்டவளும் பேச்சில் வல்லவளுமான கைகேயி, கோபத்தால் மதி தடுமாறி, மறுபடியும் மன்னரிடம் கடுமையான சொற்களைக் கூறினாள்— ''மன்னரே! இது என்ன, விஷத்தைக் குடித்தால் எத்தகைய துன்பம் ஏற்படுமோ, அத்தகைய சொற்களைப் பேசுகிறீர்கள்? எதற்கும் மனம் சலிப்படையாத புதல்வன் இராமனை இங்கே அழைப்பியுங்கள். இராமனைக் காட்டிற்கு அனுப்பிவிட்டு, என் மகனுக்கு அரசைக் கொடுங்கள். என் வாழ்க்கையில் எவருடைய குறுக்கீடும் இல்லாமல் செய்யுங்கள். இப்படிச் செய்தால் வாழ்க்கையில் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்து முடித்துவிட்டவர் ஆவீர்கள்.'' (20–22)

நீண்ட சவுக்கினால் சுளீரென்று தாக்கப்பட்ட குதிரை போல், திரும்பத் திரும்ப கைகேயியினால் தூண்டப்பட்ட மன்னர், இவ்வாறு கூறினார்— ''தருமம் என்ற கயிற்றால் நான் கட்டப்பட்டிருக்கிறேன். நான் சுயநினைவையும் இழந்து கொண்டிருக்கிறேன். அறநெறி நடப்பவனும், எனக்குப் பிரியமானவனுமான மூத்த புதல்வன் இராமனைப் பார்க்க விரும்புகிறேன்.'' பின்னர், இரவு கழிந்து சூரியன் உதயமானதும் பட்டாபிஷேகத்திற்காகக் குறிக்கப்பட்ட புண்ணிய நட்சத்திரம் கூடிய முகூர்த்த வேளையில், குணக்குன்றாகிய வசிஷ்டப் பெருந்தகை சிஷ்யர்கள் புடைசூழ, தேவையான சாமான்களை எடுத்துக் கொண்டு வேகமாக நகரத்திற்குள் நுழைந்தார். (23–26)

நன்றாகக் கூட்டப்பட்டு, தண்ணீர் தெளிக்கப்பட்ட வீதிகள்; விலையுயர்ந்த தோரணங்களின் அணிவரிசை; (சாலைகளில்) பல்வகையான மலர்கள் தூவப்பட்டிருந்தன; பல்வகையான மாலைகள் அழகாக விளங்கின. ஆனந்தம் கொப்பளிக்கும் மனிதர்களின் கூட்டங்கள்; முதல்தரமான பண்டங்கள் ஏராளமாக விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த கடைகள்; இராமனுடைய முடிசூட்டு விழாவைக் காணும் ஆர்வத்துடன் கூடியிருக்கும் பற்பல இசை–நடனக் குழுக்கள்; (27,28)

எல்லாத் திக்குகளிலும் சந்தனம் மற்றும் அகில் புகையின் நறுமணம் – இப்படியாக, இந்திரனுடைய நகரம் போன்று மேன்மையாக விளங்கிய அந்த நகரத்தின் தெருக்களைக் கடந்துசென்று, மன்னரின் அந்தப்புர மாளிகையில் நுழைந்த அவர், அநேக இருபிறப்பாளர்களையும், நகர மற்றும் நாட்டு மக்களையும், சடங்குகள் செய்யவல்ல அந்தணோத்தமர்களையும் பார்த்தார். யாகச் சடங்கு நிபுணர்களாலும், மிகவும் மரியாதைக்குரிய சபையினராலும் நிரம்பிய மாளிகையின் உள்கட்டை அடைந்து, அவர்களைக் கடந்து சென்றார், அவர். (29–31)

மாமுனிவர்களால் சூழப்பட்டவரும், மிக்க உவகை கொண்டவருமான வசிஷ்டர், மாளிகையிலிருந்து வெளியே வந்து கொண்டிருக்கும் அமைச்சரும், இனிய இயல்புடையவருமான சுமந்திரர் என்ற தேரோட்டியை வாயிலருகே கண்டார். மிக்க புகழ் வாய்ந்த சாரதியிடம் மகாதேஜஸ்வியான வசிஷ்டர் பின்வருமாறு கூறினார்— (32,33)

''வசிஷ்டனாகிய நான் இங்கே வந்திருப்பதாக மன்னரிடம் உடனே கூறு. இவைகள் கங்கைநீர் நிறைந்த குடங்கள். தங்கக்குடங்களில் சமுத்திரங்களிலிருந்து தண்ணீரும், அத்திமரத்தாலான உயர்வகை ஆசனமும் பட்டாபிஷேகத்திற்காக, இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது. பல்வகையான தானியங்கள், நறுமணப் பொருட்கள், இரத்தினங்கள், தேன், தயிர், நெய், பொறி, தர்ப்பம், புஷ்பங்கள், பால், கண்ணுக்கினிய கன்னிப் பெண்கள் எண்மர், மதம் கொண்ட உத்தம யானை, நான்கு குதிரை பூட்டும் ரதம், சாணை தீட்டிய கூர்மையாக்கப்பட்ட ஒளிவீசும் வாள், சிறந்த வில், மனிதர்கள் சுமக்கும் பல்லக்குகள், முழுநிலா போன்ற கொற்றக்குடை, இரண்டு வெண்சாமரங்கள், தங்கத்தாலான வட்டில், பொன்மாலைகள் சூட்டப்பட்ட நிமிர்ந்த திமில் கொண்ட வெண்மையான பெருங்காளை, நான்கு

கோரைப்பற்களை உடைய சிங்கம், சக்தி வாய்ந்த உத்தம ஜாதிக்குதிரை, சிம்மாசனம், புலித்தோல், சுவாலை விடும் அக்னி, எல்லா வகையான வாத்திய கோஷ்டிகள், பொது மடந்தையர், நன்றாக அலங்கரிக்கப்பட்ட நாரீமணிகள், ஆசார்யர்கள், அந்தணர்கள், பசுக்கள், புனிதமான விலங்கு–பறவைகள், நகர மக்கள், கிராமப்புறத் தலைவர்கள், வணிகர்களின் குழுக்கள் – இவர்களும் மற்றும் அன்புள்ளம் கொண்டவர்களும், புகழைப் பேசிக் கொண்டிருப்பவர்களும் இராமனுடைய பட்டாபிஷேகத்திற்காகச் சிற்றரசர்களுடன் குழுமியுள்ளர்கள். முன்னரே தீர்மானிக்கப்பட்டுள்ள நாளில், புண்ணியமான நட்சத்திர யோகத்தில் இராமன் ராஜ்யத்தை அடையவேண்டி மாமன்னரைத் துரிதப்படுத்து.'' மாபெரும் ஞானவானின் சொற்களைக் கேட்ட தேரோட்டி, ராஜசிம்மன் தசரதரைப் புகழ்ந்து கொண்டே மாளிகைக்குள் நுழைந்தார். (34–43)

அரசரின் ஆணைப்படி நடக்கின்ற வாயிற்காப்பாளர்கள், சக்கரவர்த்தியின் அன்பிற்குப் பாத்திரமானவரும், வயதில் மூத்தவரும், எப்பொழுது வேண்டுமானாலும் உள்ளே செல்ல அனுமதி பெற்றவருமான அவரைத் தடுத்து நிறுத்த முடியாமலிருந்தார்கள். அவர், மன்னர் அருகில் போய் நின்றார். அவருக்கு மன்னருடைய துயரநிலை தெரியாததால், மிகவும் மகிழ்ச்சியைக் கொடுக்கக்கூடிய வாழ்த்துக்களால் அவரைத் தோத்தரிக்க முயன்றார். பின்னர், சாரதியான சுமந்திரர், மன்னருடைய அந்த மாளிகையில் கைகளைக் கூப்பிக்கொண்டு, அந்த நேரத்திற்குகந்த வாழ்த்துக்களைக் கூறினார்— (44–46)

''பேராற்றல் பொருந்திய சமுத்திரமானது சூரியன் உதயமானவுடன் ஆர்ப்பரித்து, அலைகளை எழுப்பி, தன்னிடம் நீராட வந்தவர்களையும் ஆனந்தப்படுத்துகிறது. அதுபோல தாங்கள் நிறைவான உள்ளத்துடன் துயிலெழுந்து, எங்களையும் மகிழ்வியுங்கள். சாரதியான மாதலி இந்த வேளையில்தான் இந்திரனைத் தோத்திரம் செய்து எழுப்பினான். அசுரர்கள் எல்லோரையும் அவர் (இந்திரன்) வெற்றி கொண்டார். நானும், அவ்வாறே தங்களைத் துயிலெழுப்புகிறேன். ஆறு அங்கங்களோடு கூடிய வேதங்கள், தான்தோன்றியான பிரும்மாவை எவ்வாறு கண்மலரச் செய்கின்றனவோ, அவ்வாறே நான் தங்களைக் கண்மலரச் செய்கிறேன். (47–49)

சூரியன், சந்திரனுடன் சகல பூதங்களுக்கும் ஆதாரமான, மங்களமான இந்த பூமியை எவ்வாறு எழுப்புகிறாரோ, அவ்வாறே நான் தங்களை எழுப்புகிறேன். மாமன்னரே! தாங்கள் விரைவில் கண்மலரப் பிரார்த்திக்கிறேன். பட்டாபிஷேக மகோத்ஸவத்திற்கு உரிய ஆடை–அணிகலன்கள் அணிந்து, சிம்மாசனத்தில் அமர்ந்து, மேருமலையில் விளங்கும் சூரியன் போல் விளங்குவீர்களாக! காகுத்தரே! சந்திரன், சூரியன், சிவன், குபேரன், வருணன், அக்னி, இந்திரன் ஆகியோர் தங்களுக்கு வெற்றிவாகையைத் தருவார்களாக! (50–52)

ராத்ரிதேவி சென்றுவிட்டாள்; மங்களமான பகல் வந்து விட்டது. ராஜசிங்கமே! கண்விழித்தருள்க! இனி ஆற்றவேண்டிய கடமைகளைச் செய்வீர்களாக! ஸ்ரீராமனுடைய பட்டாபிஷேகத்திற்கு வேண்டிய அத்தனை பொருட்களும் சேகரிக்கப்பட்டுவிட்டன. நகரமாந்தர், புறநகர் மக்கள், புண்ணியசாலிகளான வணிகர்களும் வந்துவிட்டார்கள். வசிஷ்டப் பெருந்தகை அந்தணர்களோடு வந்து நின்று கொண்டிருக்கிறார். மன்னா! இராமபட்டபிஷேகத்திற்கான ஆணையை உடனே தெரிவிக்கக் கோருகிறேன். (53–55)

இடையர்கள் இல்லாத பசுமந்தைகள், தலைவனில்லாத போர்ப்படை, சந்திரன் இல்லாத இரவு, காளை இல்லாத பசுக்கூட்டம் – இவை எப்படியோ, அப்படியே மன்னன் இல்லாத நாடானது நல்ல நிர்வாகம் இல்லாமை, ஒளியின்மை, கலவரம் நிறைந்ததாக ஆகிவிடும்.'' இவ்வாறு ஆறுதலான பொருள் நிறைந்த அவருடைய சொற்களைக் கேட்டதும், உலகாளும் மன்னர் மறுபடியும் சோகத்தால் தாக்கப்பட்டார். 'மகனைப் பிரியவேண்டுமே?' என்ற நினைவால், மகிழ்ச்சியிழந்து, சோகத்தால் சிவந்த கண்களுடன் தருமசீலரும், புத்திலட்சுமி உடையவருமான அந்த மன்னர், தலைநிமிர்ந்து சாரதியைப் பார்த்து பின்வருமாறு கூறினார்— (56–58)

''இம்மாதிரியெல்லாம் என்னை உற்சாகப்படுத்திப் பேசி, என் உள்ளத்தின் வேதனையை மேலும் அதிகமாக்குகிறீர்கள்.'' மன்னரின் அழுகைக் குரலைக் கேட்டும், அவருடைய அநாதரவு நிலையைப் பார்த்தும், (விபரீத நிலையை உணர்ந்து கொண்டு) தன் இரு கைகளையும் கூப்பிக் கொண்டு தலையைத் தாழ்த்தியபடி சுமந்திரர், அவ்விடத்திலிருந்து சற்று ஒதுங்கி நின்றார். மன்னர் துன்ப மிகுதியால், தான் சொல்ல வேண்டியதைக் கூறமுடியாமற்போகவே, அரசு மந்திராலோசனைகளில் வல்லவளான கைகேயி, சுமந்திரருக்குப் பதில் கூறினாள்— (59,60)

''சுமந்திரரே! இராமபட்டாபிஷேக சந்தோஷத்தால் மன்னர் இரவு முழுவதும் தூங்கவில்லை. அதனால் களைப்படைந்துள்ள இவர் இப்போதுதான் கண்ணயர்ந்திருக்கிறார். ஆகவே, சாரதியே! மன்னரின் புகழ்பெற்ற மைந்தன் இராமனை, உடனே இங்கே அழைத்து வாருங்கள். இது பற்றி மேலே எதுவும் கேட்க வேண்டாம்.'' அவர், இராமபட்டாபிஷேகம் என்ற மங்களகரமான காரியத்தை எண்ணி, மனத்திற்குள் மிகவும் ஆனந்தப்பட்டு, மனம் நிறைந்தவராக அரச ஆணைப்படி, விரைவாக (மாளிகையிலிருந்து) வெளியேறினார். அவள், 'விரைவில் அழைத்து வா' என்று சொன்னதால், பட்டாபிஷேகத்திற்காகத்தான் அறத்தின் நாயகனான இராமன் இங்கே வரப் போகிறார் – என்று தெள்ளத்தெளிவாக எண்ணினார், அவர். (61–64)

சாரதி இவ்வாறு எண்ணி, மனம் பூரித்தவராக, பெருந்தோளரான இராமனைக் காணும் மிக்க விருப்பத்துடன் வெளியே புறப்பட்டார். ஒரு பெருங்கடலினிடையில் உள்ள மடுவைப்போல் தனிச்சிறப்புடன் விளங்கும் மங்களமான அந்த அந்தப்புர மாளிகையிலிருந்து வெளிப்பட்ட சாரதி சுமந்திரர், வாயிலின் எதிரே திரண்டு நின்ற மக்கட்கூட்டத்தைக் கண்டார். அவசரமாக வெளியே வந்த அவர், தனக்கு முன்னால் மன்னர்கள் பலர் நுழைவாயில்வரை வந்து நிற்பதைப் பார்த்தார். நகர மக்களையும் பலவகையான செல்வந்தர்களையும் வாசற்படி வரையில் வந்து நிற்கின்றவர்களாகக் கண்டார். (65–67)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
பதிநான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பதினைந்து

சுமந்திரர், இராமனிடம் சென்றார்!

அந்தணர்களான வேதவித்தகர்களும், ராஜ புரோகிதர்களும் (இராமபட்டாபிஷேக குதூகலத்திலும் பண்டங்கள் சேகரிப்பதிலும்) அன்றிரவைக் கழித்துவிட்டு, பொழுது புலரும் வேளையில் சபா மண்டபத்தின் வாயிலை வந்தடைந்தார்கள். அமைச்சர்கள், படைத்தலைவர்கள், வணிகப் பிரமுகர்கள் முதலியோர் இராமபட்டாபிஷேகத்தைக் கண்டு களிப்பதற்காக, அங்கே குழுமியிருந்தார்கள். (1,2)

குற்றமில்லாத சூரியன் தோன்றினான். பகல் வந்தது. புஷ்ய நட்சத்திரம், இராமன் ஜனித்த கடக லக்னம் – இந்த சுபமுகூர்த்தத்தில் இராமபட்டாபிஷேகத்தை நடத்துவதற்குத் தேவையான எல்லாப் பொருட்களும் ஆயத்தமாக இருந்தன. பொன்னாலான தண்ணீர்க் குடங்கள்; நன்றாக அலங்கரிக்கப்பட்ட அரசருக்குரிய இருக்கையான 'பத்ரபீடம்'; ஒளிவீசும் புலித்தோல் விரிக்கப்பட்ட தேர்; கங்கை–யமுனை புண்ணிய சங்கமத்திலிருந்து கொண்டு வரப்பட்ட தீர்த்தம்; (3–5)

மற்றும் பல நீரோட்டங்கள், புண்ணிய மடுக்கள், குளங்கள், தடாகங்கள் – இவைகளிலிருந்து கொண்டு வரப்பட்ட தீர்த்தங்கள்; கிழக்கு நோக்கி ஓடும் நதிகள், மேற்கு திசை நோக்கி ஓடும் நதிகள் மற்றும் தெற்கு–வடக்காக ஓடும் நதிகள் – இவைகளிலிருந்தும்,

எல்லாச் சமுத்திரங்களிலிருந்தும் தண்ணீர் கொண்டு வரப்பட்டிருந்தது. பொன்னாலும் வெள்ளியாலும் ஆன நீர் நிரம்பிய குடங்கள், பால் உள்ள மரங்களின் இலைக்கொத்துக்களால் மூடப்பட்டிருந்தன. (6,7)

தாமரை, நீலோத்பலம் போன்ற மலர்களால் அலங்கரிக்கப்பட்டு மணம் கூட்டப்பட்ட சுத்தமான தண்ணீரால் நிரப்பப்பட்டிருந்தன; தேன், தயிர், நெய், பொறிகள், தர்பங்கள், மலர்கள், பால், எல்லா அணிகலன்களும் அணிந்திருந்த நல்லொழுக்கமுடைய ஆலயப் பணிப்பெண்கள், சந்திரனுடைய கிரணங்கள் போல் தங்கத்தால் செய்யப்பட்ட, இரத்தினங்கள் இழைக்கப்பட்ட தன்னிகரில்லாத சாமரமும் இராமனுக்காக ஆயத்தமாக இருக்கின்றன. சந்திரமண்டலத்திற்கு ஒப்பாக ஒளிவீசும் அகலமான வெண்கொற்றக் குடையும் அபிஷேகப் பொருட்களுடன் கொண்டு வரப்பட்டுள்ளது. வெள்ளைக் காளையும் வெள்ளைக் குதிரையும் நின்று கொண்டிருக்கின்றன. (8–11)

பாகனுக்கு அடங்கி நடக்கும் நல்ல லட்சணங்களையுடைய பட்டத்து யானை வந்து நிற்கிறது; எல்லா அணிகலன்களும் அணிந்த எட்டு கன்னிகைகளும் சுமங்கலிகளும் எல்லா இசைக்குழுவினரும் மற்றும் துதிபாடுவோரும் வந்துவிட்டார்கள். இக்ஷ்வாகு பரம்பரையில் அரச பட்டாபிஷேகத்திற்கு என்னென்ன பொருட்கள் தேவைப்படுமோ, அவைகளையெல்லாம் எடுத்துக் கொண்டு, ராஜகுமாரரின் பட்டாபிஷேகத்தைப் பார்த்துக் களிப்பதற்காக, மாமன்னர் தசரதரின் ஆணைப்படி அங்கே கூடியிருந்தார்கள். (12–14)

சூரியனோ உதித்துவிட்டான்; அரசனையோ காணவில்லை. அரசன் வெளியே வந்து நமக்கு தரிசனம் கொடுக்காததன் காரணத்தை யார்தான் சொல்லப் போகிறாரோ? பேரறிவாளரான ஸ்ரீராமனின் பட்டாபிஷேகத்திற்காக, எல்லா ஏற்பாடுகளும் பூரணமான நிலையில் உள்ளன என்று, சர்வ வல்லமை படைத்த மன்னர்கள் பேசிக் கொண்டிருந்தபோது, மன்னருக்கு நெருக்கமான சுமந்திரர், அவர்களைப் பார்த்து இவ்வாறு சொன்னார்— "மன்னருடைய ஆணைப்படி இராமனை அழைத்துவர, நான் விரைவாகப் போய்க் கொண்டிருக்கிறேன். (15–17)

தாங்கள் எல்லோரும் மன்னரின் கௌரவத்திற்கு உரியவர்கள். விசேஷமாக, ஸ்ரீராமனின் போற்றுதலுக்கு உரியவர்கள். (அவர்கள் சார்பில்) தங்கள் எல்லோருடைய சுக–சௌக்கியம் பற்றி நான் விசாரிக்கிறேன். தாங்கள் நலம்தானே?" இவ்வாறாக, கண்விழித்துக் கொண்ட பின்னரும் மன்னர் வெளியே வராததற்கான காரணத்தைக் கூறிவிட்டு, பழைய செய்திகள் எல்லாம் அறிந்தவரான சுமந்திரர் (மீண்டும்) அந்தப்புர மாளிகையின் நுழைவாயிலிற்குச் சென்றார். அந்த மாளிகைக்குள் எப்போது வேண்டுமானாலும் முன் அனுமதி இல்லாமல் செல்லும் உரிமை சுமந்திரருக்கு இருந்தது. உள்ளே நுழைந்த அவர் மன்னரின் வம்ச பரம்பரைத் துதி செய்து அரசரைக் களிப்பிக்க முனைந்தார். (18–20)

பின்னர், மன்னரின் படுக்கையறை வரையில் சென்று மிக அருகில் நின்று கொண்டார்; அந்த இடத்தில் அவருக்கும் மன்னருக்குமிடையே ஒரு திரை மட்டும்தான் இருந்தது. பெருமையுடன் கொண்டாடத் தகுந்த வாழ்த்துக்களால் தசரதரைப் போற்றினார்— "காகுத்தரே! சந்திரன், சூரியன், பரமேசுவரன், குபேரன், வருணன், அக்னி, இந்திரன் ஆகியோர் தங்களுக்கு வெற்றியை அளிப்பார்களாக! ராத்ரிதேவி சென்றுவிட்டாள். தாங்கள் ஆணையிட்டபடி எல்லாம் நிறைவேற்றப்பட்டுவிட்டது. ராஜசிம்மரே! கண்விழித்து எழுக! அடுத்தபடி செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யுங்கள். அரசரே! அந்தணர்களும் படைத்தலைவர்களும் வணிகர்களும் வந்துவிட்டார்கள். (21–24)

இராகவரே! கண் மலருங்கள். தங்கள் தரிசனத்திற்காக அவர்கள் ஆவலுடன் காத்துக் கொண்டிருக்கிறார்கள்." அரசர் கண்விழித்து, போற்றி வாழ்த்திக் கொண்டிருந்த, ஆலோசனையில் வல்ல சாரதியான சுமந்திரரிடம் இவ்வாறு கூறினார்— (25)

''சாரதியே! 'இராமனை அழைத்துவா' என்று நான் சொன்னபடி ஏன் நடக்கவில்லை? என் ஆணை என்ன காரணத்தால் அலட்சியப்படுத்தப்படுகிறது? நான் ஒன்றும் ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருக்கவில்லை. உடனே, இராமனை இங்கே அழைத்து வாரும்'' என்று மன்னர் தசரதர், மறுபடியும் சாரதிக்கு ஆணையிட்டார். அவர் மன்னரின் ஆணையைக் கேட்டுத் தலைவணங்கி வணக்கம் தெரிவித்துவிட்டு, 'மகத்தான நல்ல நிகழ்ச்சி நடக்கப் போகிறது' என்று எண்ணியபடி, அரசரின் மாளிகையிலிருந்து வெளியே வந்தார். பாவட்டாக்களாலும் கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்த ராஜபாட்டையை வந்தடைந்தார். (26–28)

நாற்புறமும் பார்த்துக் கொண்டு உடலும் உள்ளமும் பூரித்தவராக, சுமந்திரர் வேகமாகச் சென்றார். அவர், வழிநெடுகிலும் இராமனுடைய கல்யாண குணங்கள் பற்றியும் பட்டாபிஷேகம் பற்றியும் மக்களனைவரும் மகிழ்ச்சியுடன் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டார். தூரத்திலிருந்த போதே இந்திரனுடைய மாளிகைக்கு நிகராக ஒளி வீசுவதும் கைலாசமலைபோல் ஒளிர்வதும் பேரழகு படைத்ததுமான இராமனின் திருமாளிகையை சுமந்திரர் பார்த்தார். (29,30)

(அடடா! என்ன மாளிகை! என்ன அழகு!) பெரிய பெரிய கதவுகள்; நூற்றுக்கணக்கான முகப்புத் திண்ணைகள்; பொற்பதுமைகளின் வரிசைகள்; இரத்தினங்களாலும் பவழங்களாலும் ஆன தோரணங்கள்; சரத்கால மேகம் போன்ற தோற்றம்; மேருமலையின் குகையைப் போன்ற பிரகாசம்; உயர்ந்த இரத்தின மாலைகளால் அலங்காரம்; முத்துமணிகளின் சிதறல்; சந்தனம் அகில் நறுமணப் புகை; தர்துர மலைச்சிகரம் போல் எப்போதும் மனத்திற்கு இஷ்டமான நறுமணம் கமழ்வது; அன்னப்பறவைகளும் நடனமாடும் மயில்களும் நிறைந்திருப்பது; கலைவண்ணத்துடன் செதுக்கப்பட்ட மான் பதுமைகள், சுவர்களில் தத்தம் அழகொளியால் உயிர்களின் கண்ணையும் கருத்தையும் கவரும் ஓவியங்கள். (31–34)

சந்திரன், சூரியன் போன்ற பேரொளி; குபேரனின் மாளிகைக்கு ஒப்பானது; மகேந்திரனின் இருப்பிடம் போல் விளங்குவது; பலவகையான பறவைகளின் கூட்டம் நிரம்பியது; மேரு மலையின் சிகரத்தைப் போன்றது – இவ்வாறான ஸ்ரீராமனின் திருமாளிகையைச் சாரதி பார்த்தார். ஆகா! கைகளைக் கூப்பியவண்ணம் மக்கள் நின்று கொண்டிருந்தார்கள். புறநகர் மக்கள் காணிக்கைகளை எடுத்துக் கொண்டு வந்திருந்தார்கள். (காணப்போகும்) இராமபட்டாபிஷேகத்தை எண்ணி மகிழ்ந்த ஜனங்கள் அணிவகுத்து நின்றார்கள். (35,36)

இராமனுடைய திருமாளிகை மாபெரும் மேகத்தைப் போன்ற காந்தி உடையதாகவும், உயர்ந்தும் நன்கு அலங்கரிக்கப்பட்டும் பலவகையான இரத்தினங்கள் நிறைந்ததாகவும், ஏராளமான குள்ளர்–கூனர்களை உடையதாகவும் காணப்பட்டது. குதிரைகள் பூட்டப்பட்ட (மழை–வெயிலிலிருந்து தேரோட்டிக்குப் பாதுகாப்பு அளிக்கும்) முகப்பு மேற்கூரையுடைய தேரில் சுமந்திரர் சென்றார். வழிநெடுகிலும் மக்கள் கூட்டத்தையும் சிற்றரசர் கூட்டத்தையும் பார்த்துக் கொண்டே சென்றார். (அவர், இராமனை அழைக்கப் போகிறார் என்பதைப் புரிந்து கொண்ட) மக்களனைவரும் மகிழ்ச்சி அடைந்தார்கள். (37,38)

இங்குமங்கும் ஓடித் திரியும் மான்–மயில்கள் விளங்குவதும், அனைத்து செல்வச் செழிப்புடன் ஒளிர்வதும், இந்திரனுடைய அரண்மனை போல் எழில்மிகு தோற்றமுடையதுமான, விலைமதிக்க முடியாத பொருட்கள் நிறைந்த இராமனுடைய மாளிகையை அடைந்ததும், அந்தச் சாரதி மயிர்க்கூச்சலை (புல்லரிப்பை) அடைந்தார். அங்கே கைலாசமலை போல் ஒளிவீசுபவைகளும் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டவைகளும் தேவலோக மாளிகைக்கு நிகரானவைகளுமான பல இடைகழிகளைக் கடந்து, இராமனது ஆணையை எதிர்பார்த்து நிற்கும் அன்புள்ளம் கொண்ட ஏராளமான ஏவலாளர்களைக் கடந்து, அந்தப்புரம் வரை தேரில் சென்றார். (39,40)

அவ்விடத்தில் இராமபட்டாபிஷேக காரியங்களில் சம்பந்தப்பட்ட மக்களின் மகிழ்ச்சிகரமான உரையாடல்களையும், மாமன்னரின் புதல்வருடைய க்ஷேமத்தைப் பிரார்த்திக்கும் மற்ற எல்லா

மக்களின் பேச்சுக்களையும் கேட்டார். மகேந்திரனுடைய மாளிகை போன்றதும், மான்–மயில்கள் விளையாடுவதும், மேருவின் சிகரம் போல் மிக உயர்ந்து ஒளிவீசுவதும், அழகியதுமான ஸ்ரீராமபவனத்தைச் சுமந்திரர் பார்த்தார். மாளிகையின் நுழைவாயிலில் தரிசனம் செய்வதற்காக வந்த மக்கள் இரு கைகளையும் குவித்து நிற்பதையும், காணிக்கை பொருளுடன் வந்த ஏராளமான புறநகர் மக்களையும், எண்ண முடியாத கோடிக்கணக்கான வாகனங்கள் இடைவெளி இல்லாமல் நிறுத்தப்பட்டிருப்பதையும் கண்டார். (41–43)

கரிய மேகம் சூழ்ந்த மாமலை போன்றதும், ஒப்புயர்வில்லாததும், அங்குசம் தேவைப்படாத தும், எதிரிகளால் எதிர்கொள்ள முடியாததும், பெருத்த உடல் உடையதும், ஸ்ரீராமனுக்கே வாகனமானதுமான 'சத்ருஞ்ஜயம்' என்னும் யானையைக் கண்டார். நன்றாக அழகுபடுத்திக் கொண்டு தேர்–குதிரை–யானைகளில் எல்லாப் பக்கங்களிலிருந்தும் வந்திருந்த நூற்றுக்கணக்கான பேரன்பர்களையும், முக்கிய அமைச்சர்களையும் தாண்டிச் சென்று, சோபை மிகுந்த அந்தப்புரத்தினுள் நுழைந்தார், சாரதியான சுமந்திரர். மலையின் உச்சியில் சூழ்ந்து கொண்டிருக்கும் மேகத்தை ஒத்ததும், மகாவிமானத்தைப் போல் சிறந்த பல குடியிருப்புகளின் கூட்டம் நிறைந்ததுமான அம்மாளிகையினுள் யாராலும் தடுக்கப்படாமல், இரத்தினங்கள் கொழிக்கும் பெருங்கடலில் (தடையின்றிச் செல்லும்) மகரமீன் போல் சுமந்திரர் நுழைந்தார். (44–46)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
பதினைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பதினாறு

இராமன், தன் மாளிகையிலிருந்து புறப்படுதல்

அரண்மனையின் பழைய வரலாறுகளை அறிந்த அவர் (சுமந்திரர்), மக்கள் கூட்டம் நிறைந்த அந்தப்புர நுழைவாயிலைக் கடந்து, விசேஷமான கட்டுக்காவலுடன் இருந்த விசாலமான அங்கணத்தை அடைந்தார். அங்கே, ஸ்ரீராமனிடம் அசஞ்சலமான பக்தி கொண்டவர்களும், அம்பு–வில் தரித்தவர்களும், தவறு இழைக்காதவர்களும், சிந்தனை பிறழாதவர்களும், ஒளிவீசும் தங்கக் குண்டலங்கள் அணிந்தவர்களுமான இளைஞர்கள் காவலில் நியமிக்கப்பட்டிருந்தார்கள். அந்த அங்கணத்தின் வாயிற்படியில், காவித்துணி அணிந்து, கையில் கோல் ஏந்தி, நன்றாக அலங்கரித்துக் கொண்டு, புலன்களைக் கட்டுப்படுத்திய முதியவர்கள், பெண்மணிகளுக்குப் பாதுகாவலர்களாக உட்கார்ந்திருப்பதைக் கண்டார். (1–3)

இராமனுக்குப் பிரியமானதைச் செய்ய விரும்பும் அவர்கள் எல்லோரும், அவர் (சுமந்திரர்) நேரே வந்து கொண்டிருந்ததைப் பார்த்தவுடன், பரபரப்புடன் தத்தம் இடத்திலிருந்து எழுந்து நின்றார்கள். பணிவுடையவரும், பணியில் திறனுடையவருமான தேரோட்டி சுமந்திரர், 'ஸ்ரீராமனிடம் சுமந்திரன் வாயிற்படியில் நிற்கிறான் என்று உடனே தெரிவியுங்கள்' என்று அவர்களிடம் கூறினார். யஜமானரின் பிரியத்தைச் செய்ய விரும்பும் பணியாளர்களான அவர்கள், பத்தினியோடு இருந்த இராமனை அணுகி, உடனே அந்தத் தகவலைத் தெரிவித்தார்கள். (4–6)

தந்தைக்கு மிகவும் அந்தரங்கமானவரான சாரதி வந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டதும், அவரிடம் அன்பைக் காட்டும் விதத்தில், அந்த உள் அறைக்கே அவரை வரச் சொன்னார். உத்தமமான விரிப்பு போடப்பட்டிருந்த பொன்மயமான கட்டிலில், சிறந்த ஆடை–அணிகலன்கள் அணிந்து கொண்டு, குபேரனைப் போல் வீற்றிருக்கும் அவரை (இராமனை), சுமந்திரர் பார்த்தார். செக்கச் சிவந்த மேகம் போல் தூயதும் நறுமணம் வீசுவதுமான உயர்ந்த சந்தனப் பூச்சுடன் விளங்குபவரும், எதிரிகளை வாட்டுபவரும், அருகில் கையில் சாமரம் ஏந்திக் கொண்டு

அமர்ந்திருக்கும் சீதையோடு கூடியவராக, சித்திரை நட்சத்திரத்துடன் கூடிய சந்திரன் போல் பிரகாசிக்கும் இராமனைப் பார்த்தார். (7–10)

அரச பரம்பரையின் புகழை இசைக்கும் (வந்தீ) சுமந்திரர், பணிவு என்னும் குணநலனை அறிந்தவர். எனவே, தன்னுடைய சுயம்பிரகாசத்தினால் ஜொலிக்கின்ற சூரியனைப் போல் பேரொளி வீசிக் கொண்டிருப்பவரும், வேண்டியன வேண்டியாங்கு அருள்பவருமான இராமனின் முன்னிலையில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கினார். (தேரோட்டுதல் மட்டுமில்லாமல் அரசன் புகழ் பாடகர்களான 'வந்தீ' என்ற பொறுப்பிலும் சுமந்திரர் இருந்தார் என்பது குறிப்பு.) கேளிக்கை மஞ்சத்தில் மலர்ந்த முகத்துடன் வீற்றிருக்கும் அவரிடம் சுக–சௌக்கியம் பற்றி விசாரித்துவிட்டு, அரசரால் மரியாதை செய்யப்படுபவரான சுமந்திரர், அரசகுமாரரிடம் இவ்வாறு கூறினார்— (11,12)

''ஸ்ரீராமா! தங்களைப் பெற்றெடுத்ததால் கௌசல்யை, நல்ல மகவை ஈன்றெடுத்த தாய் ஆனார்! இப்போது கைகேயி அரசியுடன் இருக்கும் தங்கள் தந்தையார், தங்களைக் காண விரும்புகிறார். உடனே புறப்படுங்கள். காலதாமதம் வேண்டாம்.'' இதைக் கேட்டவுடன் பேரொளி வீசும் புருஷோத்தமர் மனமுவந்தவராகி, பெருமிதத்துடன் சீதையை நோக்கிப் பின்வருமாறு கூறினார்— ''தேவி! மன்னரும் அரசியும் ஒன்றுகூடி, என் விஷயமாக ஏதோ பேசிக் கொண்டிருந்திருக்கிறார்கள். நிச்சயமாக பட்டாபிஷேகம் பற்றித்தான் ஆலோசனை செய்து கொண்டிருந்திருப்பார்கள். (13–15)

மயக்கும் விழியாளே! அவருடைய எண்ணத்தைத் தெரிந்து கொண்டு, பிரியமானதைச் செய்ய விரும்பும் திறமைசாலியான கைகேயி தாயார், என் விஷயத்தில் மன்னரைத் தூண்டிவிட்டிருக்கிறார். (பட்டாபிஷேகச் செய்தி கேட்டு) மனம் களித்து, மன்னரின் நலனில் அக்கறை கொண்டு, அவரைப் பின்பற்றி நடக்கும் கேகய மன்னரின் குமாரத்தியும், என்னுடைய அன்னையுமான அவர் பொருளாசையும் (ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணமும்) கொண்டவர். மனத்திற்குகந்த அரசியுடன் இருக்கும் அவர், என்னுடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்ய வல்லவரான சுமந்திரரையே செய்தியைச் சொல்லும்படி அனுப்பியிருக்கிறார். எவ்வளவு பாக்கியம்! (16–18)

அங்கே அந்தரங்கமான ஆலோசனை நடந்திருக்கிறது. அதனால் அதற்கேற்றபடி நம்பிக்கைக்குரிய தூதர் வந்திருக்கிறார். நிச்சயமாக, இப்போதே என்னை இளவரசனாகப் பட்டம் சூட்டப் போகிறார், மன்னர். (அம்மாடியோவ்! நேரமாகிக் கொண்டிருக்கிறது!) நான் உடனே சென்று உலகாளும் மாமன்னரைக் காண்பேன். நீ, உன் தோழிகளுடன் ஆனந்தமாக இருந்து கொண்டிரு.'' இவ்வாறாக, கணவரால் நற்செய்தி கூறி, கௌரவிக்கப்பட்ட கருங்கண்ணாள் சீதை, மங்களமான சிந்தனைகளுடன் வாயிற்படிவரை பின்தொடர்ந்து சென்று வழியனுப்பி வைத்தாள். (19–21)

''இப்போது இருபிறப்பாளர்கள் உடன் இருக்க, தங்களுக்கு இளவரசுப் பட்டாபிஷேகம் செய்விக்கும் மன்னர், பின்பொரு சமயத்தில் பிரும்மா, தேவராஜனான இந்திரனுக்கு நடத்தி வைத்ததைப் போல, (பற்பல மன்னர்களையும் வெற்றி கொண்டதன் அடையாளமாகச் செய்யப்படும்) ராஜசூயத்தையும் செய்து வைப்பார் என்பது திண்ணம். அப்போது (ராஜசூய யாக சமயத்தில்) யாகதீட்சை ஏற்று, விரத நியமங்களை அனுஷ்டித்து, உயர்ந்த மான்தோல் அணிந்து, தூயவராய், மான்கொம்பைக் கையில் பிடித்துக் கொண்டிருக்கும் தங்களைப் பார்த்துப் பரவசமடைந்து, தங்களுக்குத் தொண்டு செய்து கொண்டே இருப்பேன். கிழக்கில் இந்திரனும், தெற்கில் யமனும், மேற்கில் வருணனும், வடக்கில் குபேரனும் தங்களைக் காப்பாற்றுவார்களாக!'' (22–24)

பின்னர், சீதையிடம் விடைபெற்றுக் கொண்டு, பட்டாபிஷேகத்திற்கு முன்னர் செய்ய வேண்டிய நற்சடங்குகளைச் செய்துமுடித்துவிட்ட அவர், சுமந்திரருடன் மாளிகையிலிருந்து வெளியே வந்தார். மலைக்குகையில் வாசம் செய்யும் சிங்கம், குகையிலிருந்து வெளியே புறப்பட்டு வருவதைப் போல வந்த அவர், பணிவுடன் கைகூப்பிக் கொண்டு நிற்கும் லட்சுமணனை வாயிற்படியில் கண்டார். பின்னர், நடுக்கட்டில் காத்துக் கொண்டிருக்கும் நண்பர்களோடு அளவளாவினார். தரிசனத்திற்காக நின்று கொண்டிருந்தவர்களைப் பார்த்து, அவர்களிடையே புகுந்து சந்தோஷப்படுத்தினார். (25–27)

பின்னர், ஆண்களில் புலிபோன்ற அந்த அரசகுமாரர், புலித்தோல் விரிக்கப்பட்டதும், வெள்ளியால் ஆனதும், மலைபோல் பேருருவம் கொண்டு விளங்கியதுமான உத்தமத் தேரில் ஏறினார். மேகம் போல் கம்பீரமாக ஓசை எழுப்புவதும், விசாலமானதும், இரத்தினம் மற்றும் பவழங்களால் அலங்கரிக்கப்பட்டதும், சூரியனுக்கொப்பான பேரொளியால் கண்களைக் கூசச் செய்வதும், யானைக்குட்டிகள் போன்ற உயர்ஜாதிக் குதிரைகள் பூட்டப்பட்டதும், பச்சை குதிரைகள் பூட்டப்பட்ட இந்திரனுடைய ரதம் போல் விரைவாகச் செல்வதும், உலகில் வேறெங்கும் காண முடியாத பேரெழிலுடன் விளங்குவதுமான தேரில் விரைவாக ஏறிச் சென்றார், இராகவன்! (28–30)

அந்தத் தேர், ஆகாயத்தில் பேரொலி எழுப்பிக் கர்ஜிக்கும் மேகம் போல் எண்திசைகளிலும் ஒலி எழுப்பிக் கொண்டு, பெரிய மேகக்கூட்டத்திலிருந்து உதயமாகும் சந்திரனைப் போல, அந்தத் திருமாளிகையிலிருந்து புறப்பட்டுச் சென்றது. ஸ்ரீராமனின் இளையவனான லட்சுமணன், ஒரு கையில் குடையையும் இன்னொரு கையில் சாமரத்தையும் பிடித்துக்கொண்டு, ரதத்தில் ஏறி, சகோதரனுக்குப் பின்புறத்தில் இராமனுக்குப் பாதுகாப்பாக நின்றான். அவர் வெளியே வந்ததும், எல்லாப் பக்கங்களிலும் கூடியிருந்த மக்களிடையே பேரிரைச்சலும் ஆரவாரமும் உண்டாயின. (31–33)

அப்போது, முக்கியமான உத்தமக் குதிரைகளும் குன்றினை ஒத்த யானைகளும், நூற்றுக்கணக்கில், ஆயிரக்கணக்கில் இராமனைப் பின்தொடர்ந்து சென்றன. அவருக்கு முன்னதாக ஆயுதமேந்தியவர்களும், சந்தனம் மற்றும் அகரு முதலிய நறுமணப் பூச்சுக்களைப் பூசிக் கொண்டிருந்தவர்களும், வாள்–வில் ஏந்திய சூரர்களும், கோலாகல வைபவத்தைக் கண்டுகளிக்கும் ஆவலுடன் வந்திருந்த ஏராளமான மக்களும் சென்றார்கள். போகும் வழியில் சங்கீத வாத்தியங்களின் இனிய ஒலிகளும் புகழ்பாடும் கலைஞர்களின் போற்றிகளும் சூரர்களின் எழுச்சிக்குரலும் கேட்கப்பட்டன. (34–36)

உப்பரிகையின் சாளரங்களில் நன்றாக அலங்காரம் செய்து கொண்டு இராமனின் வரவை எதிர்பார்த்து நின்ற பெண்கள், எல்லாத் திசைகளிலிருந்தும் குவியல்குவியலாக மலர்களைப் பொழிய, அந்த வழியே எதிரிகளை அடக்கும் இராமன் சென்றார். உப்பரிகைகளில் இருந்தவர்களும், வீடுகளை ஒட்டினாற்போல் தரையில் நின்று கொண்டிருந்தவர்களுமான அழகான அங்கங்கள் அமையப் பெற்ற பெண்மணிகள், இராமனை மகிழ்விக்கும் பொருட்டு சிறந்த சொற்களைக் கூறிப் பணிந்தார்கள்— (37,38)

''தாயை மகிழ்விக்கும் தனயரே! தங்களுடைய இந்தப் பயணம் உரிய பயனை அடையப் போகிறது. தாங்கள், முன்னோர்களால் அரசாளப்பட்டு வந்த ராஜ்யத்தை அடையப் போகிறீர்கள். இதைக் கண்டு தங்கள் அன்னையார் கௌசல்யாதேவி நிச்சயம் மனம் மகிழ்வார்.'' 'எல்லாச் சுமங்கலிகளைக் காட்டிலும் மேலானவர், இராமனுடைய மனத்திற்குகந்த சீதையே!' என்று அங்கிருந்த நாரீமணிகள் எண்ணினார்கள். ''அந்தத் தேவியார் நிச்சயம் முன் ஜன்மத்தில் பெருந்தவம் நன்கு செய்திருக்கிறார். அதனால்தான் ரோகிணி சந்திரனை அடைந்ததைப் போல, இவர் இராமனுடைய நெருக்கத்தைப் பெற்றிருக்கிறார்!'' (39–41)

இவ்வாறு, தேரோடும் திருவீதிகளின் இருபுறங்களிலும் உச்சி மாடிகளில் நின்று கொண்டிருந்த இளம் பெண்கள், தன்னைக் குறித்து புகழ்ந்துரைப்பதைக் கேட்டுக் கொண்டே இராமன் சென்றார். வழிநெடுகிலும் கூடியிருந்த நகர மக்களும் கிராமப்புற மக்களும் மிகவும் மகிழ்ச்சியில் திளைத்தவர்களாய், தன்னைப் பற்றிய பலவிதமான உரையாடல்களையும் புகழுரைகளையும் பேசுவதைக் கேட்டார், தசரத இராமன். (42,43)

''அரசருடைய அனுக்கிரகத்தால் மகத்தான ராஜ்யலக்ஷ்மியை அடையப்போகும் இராமன் இதோ போய்க் கொண்டிருக்கிறார்! இனி நம்முடைய ஆசைகள் எல்லாம் நிறைவேறிவிடும்! ஏனென்றால், இவர்தானே நம்மை அரசாளப் போகிறார்! இவர் நெடுங்காலம் இந்த எல்லா நாடுகளையும் ஆட்சி செய்யப் போகிறார் என்பதே மக்களுக்குப் பெரிய பாக்கியம். இவர் ஆட்சியில் யாருக்கும் கஷ்டம் என்பதே ஏற்படாது. துயரம் என்பதையே யாரும் பார்க்க மாட்டார்கள்.'' (44,45)

கனைத்துக் கொண்டு சென்ற குதிரைகள், பிளிரிட்டுக் கொண்டு சென்ற யானைகள், மன்னர் பரம்பரையின் புகழ்பாடும் மாகதர் என்ற கூட்டத்தினர் முன்செல்ல, சிறந்த பாடகர்களால் சூழப்பட்டு, மிகுந்த கௌரவமான சூழ்நிலையில், குபேரன் போல் விளங்கிய இராமன் சென்றார். பெண்யானைகள், ஆண்யானைகள், தேர்கள், குதிரைகள் குழுமியிருந்தன; நாற்சந்திகளில் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது; இரு புறங்களிலும் உள்ள வணிகக்கூடங்களில் ஏராளமான நவரத்தினங்களையும், விற்பனைக்கான மற்ற பொருட்களின் குவியல்களையும், அரசபாட்டை மனதிற்கினியதாக இருப்பதையும் இராமன் பார்த்தார். (46,47)

ஸ்ரீமத் வால்மீகி இராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
பதினாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பதினேழு

ஸ்ரீராமன், தசரதரைக் காண வந்தார்!

மகழ்ச்சியோடிருந்த நண்பர்களால் சூழப்பட்ட இராமன், கொடிகளாலும் தோரணங்களாலும் கட்டப்பட்டதும், உயர்வகை அகில் புகை மணம் வீசுவதும், பலவகைப்பட்ட மனிதர்களின் கூட்டங்கள் நிறைந்ததுமான நகரத்தைத் தேரில் அமர்ந்திருந்தபடியே பார்த்தார். இரு பக்கங்களிலும் வெண்மேகம் போல் எழில் கொஞ்சும் மாளிகைகளைப் பார்த்துக் கொண்டே, அகில் மணம் கமழும் ராஜபாட்டையின் இடையே இராமன் சென்றார். (1,2)

உயர்வகை சந்தனக் கட்டைகளும் அகிற்கட்டைகளும் ஆங்காங்கே குவியலாக வைக்கப்பட்டிருந்தன; நறுமணத் திரவியங்களின் வாசனை கமழ்ந்து கொண்டிருந்தது; சுத்தமான பட்டு, பட்டு சம்பந்தப்பட்ட துணிகள் விரிக்கப்பட்டிருந்தன; குற்றங்குறை இல்லாத நன்முத்துக்களாலும் உத்தம ஸ்படிகங்களாலும் அதிக சோபையுடன் விளங்கியது; அந்த ராஜபாட்டை அகலமாக இருந்தது; பலவகையான பண்டங்கள், பலவிதமான ஆகாரங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன – இவ்வாறு தேவலோகத்தில் இந்திரன் பவனி வரும் அரசபாட்டை போல், (அயோத்தியின்) இந்த அரசபாட்டை விளங்குவதைக் கண்டு களித்தார். (3–5)

தயிர், அட்சதை, ஹவிஸ், பொறி, அகில்–சந்தனப் புகை, பலவகையான மலர்மாலைகளிலிருந்து வெளிப்படும் மணம் – இவைகளால் சதுக்கங்கள் பூஜிக்கப்பட்டிருந்தன. அன்பர்களால் மகிழ்ச்சியுடன் கூறப்பட்ட, அநேக ஆசிமொழிகளைக் கேட்டு, தகுதிக்கு ஏற்றபடி அவர்கள் எல்லோருக்கும் பதில் மரியாதை செய்தபடியே சென்று கொண்டிருந்தார். ''பாட்டனார், முப்பாட்டனார் என்று பரம்பரையாக அரசாளப்படும் ராஜ்யத்தை இப்போது தாங்கள் அடைந்து, அவர்கள் சென்ற நல்ல வழியிலேயே சென்று, எங்களைக் காப்பாற்றுவீர்களாக! (6–8)

இவருடைய தந்தையாலும், அதற்கு முன்னர் எல்லா பாட்டனார்களாலும் எவ்வாறு நன்றாகப் பரிபாலிக்கப்பட்டோம். இராமன் அரசனாக ஆனவுடன் அதைக் காட்டிலும் மேலான சுக– சௌக்கியங்களுடன் வாழ்வோம். இராமன் இளவரசுப் பட்டம் சூட்டிக்கொண்டு அரண்மனையிலிருந்து வெளியே பவனி வரும் திருக்காட்சியைக் கண்டுவிட்டால் போதும்! அப்புறம் இந்த உலகத்தில் அனுபவிப்பதற்கு வேறு என்ன சுகம்தான் இருக்கிறது? மோக்ஷம்தான் எதற்கு? எல்லையில்லாத ஆன்மிக ஆற்றல் கொண்ட ஸ்ரீராமனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டப்பட்டுவிட்டால், இதைவிட அதிக சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடியது வேறெதுவும் இல்லை.'' (9–11)

இவைகளையும், இவை போன்று தன்னைப் பற்றி நண்பர்களால் புகழ்ந்துரைக்கப்படும் சொற்களையும் கேட்டுக் கொண்டே, அவைகளைப் பொருட்படுத்தாமல் ராஜபாட்டையில் இராமன் சென்றார். தான் இருக்குமிடத்தைத் தாண்டி, இராகவன் வெகுதூரம் போய்விட்டார். என்றாலும், தன்னுடைய மனத்தையும் கண்களையும் அவரிடமிருந்து பெயர்த்தெடுக்க, எந்த மனிதராலும் முடியவில்லை! (12,13)

(அவ்விதம் கோலாகலமாக, ராஜபாட்டையில் கோடிசூரியப் பிரகாசமாகச் சென்று கொண்டிருக்கும்) ஸ்ரீராமனை எவன் பார்க்கவில்லையோ, அல்லது எவனை இராமன் பார்க்கவில்லையோ, அவன் உலகத்தாரால் நிந்திக்கத்தக்கவன். ஏன், அவன் நெஞ்சமே அவனை இகழ்ந்துரைக்கும்! தருமாத்மாவான ஸ்ரீராமன், நான்கு வகுப்பினருக்கும் அவர்கள் வயதிற்குத்தக்கபடி பேரருள் புரிகிறார். அதனால், அவர்கள் எல்லோரும் அவரிடம் பக்தியுடன் இருக்கிறார்கள். அரசகுமாரர், சதுக்கங்களையும் தெய்வத்திருவீதிகளையும் அரச மரங்களையும் யாகசாலைகளையும் வலம் வந்தவாறே சாலையில் சென்றார். (14–16)

மன்னர் தசரதருடைய மாளிகை பெருத்த மேகக்கூட்டம் போல் கண்ணுக்கு இனியதாக விளங்கியது. கைலாச பர்வதத்தின் வண்ணச் சிகரங்களைப் போல பற்பல உப்பரிகைகள் இருந்தன. வெண்மையான, மிக உயரமான ஸ்தூபிகளால் ஆகாயத்தையே அளவெடுப்பது போன்றிருந்தது. மாளிகையில் இரத்தினங்கள் இழைக்கப்பட்டிருந்தன. வர்தமானம் என்ற கட்டிடக்கலை முறையில் அமைக்கப்பட்டிருந்தது. மண்ணுலகில் மிக உயர்ந்ததாக, இந்திரனின் மாளிகைக்கு ஒப்பாக இருந்தது. திருவளர்செல்வரான ராஜகுமாரர் தந்தையின் மாளிகைக்குள் சென்றார். (17–19)

வில்லேந்திய வீரர்களால் காக்கப்பட்ட மூன்று கட்டுகளையும் குதிரைகள் பூட்டிய தேருடனே கடந்து சென்று, அடுத்த இரண்டு கட்டுகளையும் காலால் நடந்து சென்றார். தசரத குமாரர் எல்லா ரேழிகளையும் கடந்து, தன்னுடன் வந்த அன்பர்களைத் திருப்பி அனுப்பிவிட்டு, தெளிந்த மனத்துடன் மீண்டும் உள்ளே சென்றார். அரசகுமாரர் தந்தையிடம் செல்வதைப் பார்த்து பெருமகிழ்ச்சியில் மூழ்கியிருந்த மக்கள், அவர் அங்கிருந்து மீண்டும் திரும்பி வருவதை, முழுநிலவின் உதயத்தை எதிர்பார்த்திருக்கும் பெருங்கடலைப் போல மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டு காத்திருந்தார்கள். (20–22)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
பதினேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பதினெட்டு

காட்டிற்குப் போ!

சிறந்ததான ஓர் ஆசனத்தில் சுண்டிப் போன முகத்துடன் வீற்றிருப்பவரும், மனவேதனைப்பட்டுக் கொண்டிருப்பவரும், கைகேயியுடன் இருப்பவருமான தந்தையைப்

பார்த்தார், இராமன். அவர், மிகப்பணிவுடன் தந்தையின் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்து, பின்னர் மனத்தைத் தளரவிடாமல் கைகேயியின் சரணங்களில் முடிதாழ்த்தி வணங்கினார். இரங்கத்தக்க நிலையிலிருந்த மன்னர் கண்ணீர் நிறைந்த கண்களுடன், 'இராமா...' என்று மட்டும் அழைத்துவிட்டு, அவரைப் பார்க்கவும் பேசவும் முடியாதவரானார். (1–3)

(தசரதருடைய) அங்கங்களில் மகிழ்ச்சி தென்படவில்லை; துயரமும் தாபமும் வாட்டிக் கொண்டிருந்தன; பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தார்; அலைப்புண்ட நொந்த மனத்தை உடையவராக இருந்தார்; அலைகளின் வரிசைகளால் எப்போதுமே கலக்கம் அடையாத பெருங்கடல், அடங்கிக் கிடப்பதுபோல் இருந்தார்; ராகுவினால் பீடிக்கப்பட்ட சூரியன் போலவும், பொய்வார்த்தை சொல்லிவிட்ட முனிவரைப் போலவும் பொலிவிழந்த தோற்றம் – இதற்கு முன்னர் இம்மாதிரி வித்தியாசமான நிலையில் பார்த்தறியாத இராமன், காலால் பாம்பை மிதித்து விட்டதைப் போல் துணுக்குற்று அச்சமடைந்தார். (4–6)

தந்தையின் அந்தச் சோகம், எண்ணிப் பார்க்கவே முடியாதது. 'காரணம் என்னவாக இருக்கக்கூடும்?' என்று பர்வ காலங்களில் ஆர்ப்பரிக்கும் பெருங்கடல் போல் மனம் தத்தளித்தார், இராமன். தந்தையின் நலனில் அக்கறையுடைய இராமன், 'என் தந்தை ஏன் இப்போது என்னுடன் சிரித்துப் பேசாமலிருக்கிறார்? முன்பெல்லாம் என்னுடைய தந்தை கோபத்துடன் இருந்தாலும் என்னைப் பார்த்தவுடன் மகிழ்ச்சி அடைவாரே? அப்படிப்பட்டவர் இப்போது என்னைப் பார்த்தும் ஏன் மனவருத்தத்துடன் இருக்கிறார்?' என்று, அப்போது தனக்குள் சிந்தை செய்தார். (7–9)

அவர் மனோபலத்தை இழந்தவர் போலாகி, சோகத்தால் பீடிக்கப்பட்டு, முகம் பொலிவிழந்து, அன்னை கைகேயியை நோக்கிப் பணிவுடன் பின்வருமாறு கேட்டார்— ''என் தந்தை என்மீது ஏன் கோபமாக இருக்கிறார்? அறியாமையால்கூட நான் எந்தக் குற்றமும் செய்யவில்லையே? (தங்களுக்குத் தெரிந்திருக்கும் என்று நம்புகிறேன்.) அந்தக் காரணத்தை எனக்குச் சொல்லுங்கள். தாங்களே எப்படியாகிலும் இவரைச் சமாதானப்படுத்துங்கள். எப்போதும் என்மீது பாசத்தைப் பொழிந்து கொண்டிருப்பாரே? இப்போது உவகையில்லாத மனத்தோடு உள்ளாரே? முகம் வாடி மிகவும் தீன நிலையில் இருக்கிறார். என்னுடன் பேசக்கூட மாட்டேன் என்கிறாரே? (10–12)

சரீர சம்பந்தமான நோய், மனத்தை வாட்டும் துயரம் – இவை ஏதேனும் இவரைத் தாக்கியிருக்கிறதா, என்ன? ஏனெனில், பொதுவாக மனிதர்களுக்கு எப்போதும் சுகமே கிடைத்துக் கொண்டிருப்பது மிகவும் அரிது. இனியதோற்றமுடைய குமாரன் பரதன், மகாவீரனான சத்ருக்னன் அல்லது என்னுடைய தாயார்கள் – இவர்களுக்கு எந்தக் குறையும் ஏற்பட்டுவிடவில்லையே? மாமன்னருக்கு அதிருப்தியைக் கொடுத்துவிட்டு அல்லது தந்தையின் கட்டளைப்படி நடக்காததால், அவருக்குக் கோபத்தை உண்டாக்கிவிட்டு, ஒரு முகூர்த்தகாலம்கூட நான் உயிரோடு இருக்கமாட்டேன். (13–15)

ஒரு மனிதன் தன் பிறப்புக்கு மூலகாரணமானவரும் கண்கண்ட தெய்வமுமான தந்தையை மீறி எவ்வாறு இருக்க முடியும்? தாங்கள் அளவுகடந்த அன்புச்சலுகையால் அல்லது கோபத்தால் கடுமையான சொற்கள் ஏதும் சொல்ல, அதனால் இவர் மனம் குழம்பிப் போயிருக்கிறாரா? அன்னையே! மன்னரிடம் இதற்கு முன்னர் எப்போதும் பார்த்திராத இந்த மாற்றத்திற்கான காரணத்தைக் கேட்கிறேன், அருள்கூர்ந்து உண்மையைக் கூறுங்கள்.'' (16–18)

மகாத்மாவான இராகவன் இவ்வாறு கூறிமுடித்ததும், வெட்கத்தை முற்றிலும் துறந்து, நற்பண்புகளைக் கைவிட்டு, தன் மனத்திலுள்ள விருப்பத்தைத் தெரிவிக்கும் வகையில் பின்வரும் மொழிகளைக் கூறினாள், கைகேயி. ''இராமா! மன்னருக்குக் கோபமும் இல்லை; துயரமும் இல்லை. அவர் மனத்தில் ஏதோ ஒரு முக்கியமான விஷயம் இருந்து கொண்டிருக்கிறது. சொன்னால் நீ கேட்பாயோ? மாட்டாயோ? என்ற பயத்தால் பேசாமலிருக்கிறார். உன்னிடத்தில் அவருக்கு மிகவும் அன்பு உண்டு. அதனால், உன் மனத்திற்கு மகிழ்ச்சி தராத

ஒரு விஷயத்தைக் கூறுவதற்கு இவரது நா கூசுகிறது. என்னிடம் அந்த விஷயத்தைச் சொல்லியிருக்கிறார். நீ கட்டாயமாக, அதை நடத்தித் தர வேண்டும். (19–21)

இவர், முன்பொரு காலத்தில் என்னைக் கௌரவித்து எனக்கு வரம் கொடுத்தார். (கொடுத்த வரத்தை இப்போது நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் கேட்கும்போது) யாரோ பாமர மனிதனைப் போல, 'அடடா, வரம் கொடுப்பதாக வாக்குத்தத்தம் செய்துவிட்டேனே?' என்று வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார். மக்களின் தலைவரான இவர், 'நான் வரம் கொடுக்கிறேன்' என்று கூறிவிட்டு, நதியில் வெள்ளம் பெருகி ஓடிய பின்னர், அணை கட்டித் தண்ணீரைத் தேக்க முயல்வதைப் போல, இப்போது அந்த உறுதிமொழியைப் பொருளற்றதாகச் செய்ய விரும்புகிறார். (22,23)

சத்தியம்தான் தருமத்திற்கு ஆணிவேர் போன்றது என்பது எல்லாச் சான்றோர்களுக்கும் தெரியும். உன் நன்மையை விரும்பும் அவர், அதனால் என்மேல் கோபம் கொண்டு, கொடுத்த வாக்கைக் கைவிடக்கூடாது. (24)

மன்னர் சொல்லிய விஷயம் – உன் மனத்திற்குப் பிடித்ததோ, பிடிக்காததோ – அதை நீ செய்வாயேயானால், நடந்தது எல்லாவற்றையும் நடந்தவாறே உனக்குச் சொல்கிறேன். அரசரால் கொடுக்கப்பட்ட வாக்கு, உன்னிடம் கூறப்பட்டபின் பொருளற்றதாகப் போய்விடக் கூடாது. நீ, அவருடைய ஆணையை நிறைவேற்றுவதாக இருந்தால் விளக்கமாகச் சொல்கிறேன். இவர் உன்னிடம் நேரடியாகச் சொல்லமாட்டார்.'' கைகேயி சொன்ன இந்த வார்த்தைகளைக் கேட்ட இராமன், மனம் புழுங்கி, அரசர் கேட்டுக் கொண்டிருக்கும்போதே அரசியிடம் இவ்வாறு கூறினார்— (25–27)

''ஆகா, என்ன கஷ்டம்! தாயே! தாங்கள் என்னிடம் இந்த மாதிரியான சொற்களைச் சொல்லத்தகாது. மன்னர் உத்தரவிட்டால் நான் நெருப்பிலும் வீழ்வேன்; கொடிய விஷத்தையும் குடிப்பேன்; கடலில் மூழ்குவேன். என் நலன் விரும்புகிற இவர்தான் என்னுடைய குரு, தந்தை, மன்னர். அவரால் ஆணையிடப்பட்டால் நான் எதைத்தான் செய்யமாட்டேன்? ஆகவே, அரசியே! மன்னரின் விருப்பம் எதுவோ, அதைத் தெரிவியுங்கள். அதைக் கட்டாயம் செய்வேன் என்று உறுதி கூறுகிறேன். இராமனாகிய நான் முதலில் ஒன்றைக் கூறிவிட்டு, பின்னர் அதை மாற்றிப் பேசுபவன் அல்லன்.'' (28–30)

நேர்மை தவறாதவரும் சத்தியத்தையே பேசுகிறவருமான இராமனை நோக்கி, பண்பாடில்லாத கைகேயி மிகவும் கதிகலங்கச் செய்யும் சொற்களைக் கூறினாள்— ''இராமா! முன்பு ஒரு காலத்தில் தேவாசுர யுத்தம் நடந்தபோது, யுத்தகளத்தில் அம்புத் தாக்குதலால் உடலில் காயங்கள் ஏற்பட்டு, உன் தந்தை மிகவும் பரிதாப நிலையில் இருந்தபோது, என்னால் காப்பாற்றப்பட்டார். அப்போது மனமகிழ்ந்து, வில்லின்மேல் ஆணையிட்டு எனக்கு இரண்டு வரங்கள் கொடுத்தார். இராகவா! 'பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்விக்க வேண்டும்; நீ, இப்போதே தண்டகாரண்யம் போக வேண்டும்' என்ற வரங்களைக் கொடுக்கும்படி, இப்போது மன்னரைக் கேட்டேன். (31–33)

உன் தந்தை, சத்தியபிரதிக்ஞர் (கொடுத்த வாக்கைக் காப்பாற்றுபவர்) என்று நிலைநாட்ட விரும்பினால், 'நானும் சத்தியம் பேசுகிறவன்தான்' என்று நிரூபிக்க விரும்பினால், புருஷோத்தமனே! இப்போது நான் சொல்லப் போவதைக் கேள். தந்தையின் ஆணைக்குக் கட்டுப்பட கடமைப்பட்டவன், நீ. பதிநான்கு ஆண்டுகள் நீ காட்டில் வசிக்க வேண்டும் என்று இவரால் வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருக்கிறது. (34,35)

உன் பட்டாபிஷேகத்திற்காகச் செய்யப்பட்டுள்ள ஏற்பாட்டின்படியே, சேகரிக்கப்பட்டுள்ள பொருள்களைக் கொண்டு, பரதனுக்கு அபிஷேகம் நடத்தப்பட வேண்டும். (நீ) இந்த பட்டாபிஷேகத்தைத் துறந்து, தண்டகாரண்யம் சென்று சடைமுடி–மரவுரி தரித்துக் கொண்டு,

ஈரேழு (அதாவது) பதிநான்கு ஆண்டுகள் வாசம் செய்து கொண்டிரு. பலவகையான நவரத்தினங்கள் நிறைந்ததும், குதிரை–ரதம்–யானைகள் கூடியதுமான கோசலத் தலைநகரில் இருந்து கொண்டு, பரதன் இப்பூமண்டலத்தை அரசாளட்டும். (36–38)

இவ்வளவுதான்! பாசம் பெருகி ஓடும் மன்னருக்கு, 'உன்னைப் பிரிந்திருக்க வேண்டுமே?' என்ற சோகத்தால் முகம் கலங்கியிருக்கிறது. நிமிர்ந்து உன்னைப் பார்க்கவும் முடியவில்லை. ரகுநந்தனா! மன்னரின் இந்தச் சபதத்தை நீ நிறைவேற்றி வைப்பாயாக! அதன்மூலம் பெருமைக்குரிய சத்தியத்தைக் கடைப்பிடித்து, தருமசங்கடத்திலிருந்து மன்னரை விடுவிப்பாயாக.'' (39,40)

இவ்வாறாக கைகேயி, மிகக் கொடூரமான சொற்களைக் கூறியதைக் கேட்டும்கூட இராமன் துயரம் அடையவில்லை. ஆனால், 'இராமனைப் பிரிந்திருக்க வேண்டுமே? அவன் காட்டில் வெகுவாகக் கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியிருக்குமே!' என்ற வருத்தத்தால் தாக்கப்பட்டு, மகானுபாவரான மன்னர், முன்பைவிட அதிகமான துக்கத்தை அடைந்தார். (41)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில் பதினெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பத்தொன்பது

இராமன் பிரதிக்ஞை செய்தல்

மனதிற்கு உகந்ததல்லாததும், மரணத்திற்கு ஒப்பாக துயரம் தரக்கூடியதுமான அந்த வார்த்தையைக் கேட்டும்கூட இராமன் சிறிதுகூட மனக்கவலை அடையாமல் கைகேயியிடம் இவ்வாறு கூறினார்— ''அப்படியே ஆகட்டும். மன்னர் வாக்குத்தத்தம் செய்தபடி, சடாமுடியும் மரவுரியும் தரித்துக் கொண்டு, காட்டில் வசிப்பதற்காக, இந்த இடத்திலிருந்தே நான் போய்விடுகிறேன். ஆனால், ஒரு விஷயத்தை மட்டும் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். எவராலும் ஆக்கிரமிக்க முடியாதவரும் எதிரிகளை அடக்கவல்லவருமான மன்னர், முன்புபோல் என்னிடம் சிரித்து மகிழ்ந்து பேசாமலிருப்பதற்குக் காரணம் என்ன? (1–3)

தாயே! தங்களிடம் இவ்வாறெல்லாம் பேசுவதற்காகத் தாங்கள் கோபம் கொள்ள வேண்டாம். (காட்டிற்குப் போகாமலிருப்பதற்காக ஏதேனும் வழி தேடுகிறேனோ? என்று சந்தேகப்பட வேண்டாம்.) மரவுரி, சடாமுடி தரித்து, நான் நிச்சயம் காட்டிற்குப் போகிறேன். நீங்கள் மனத்திருப்தியுடன் இருங்கள். என் நலன் விரும்பியும், பிரம்மோபதேசம் செய்தவரும், தந்தையும், அறநெறி வழுவாதவருமான மன்னரால் எது ஆணையிடப்படுகிறதோ, அதன் சாதக–பாதகம் பற்றி ஆலோசனை செய்து கொண்டு, அவருக்குப் பிரியமானதை நான் செய்யாதிருப்பேனா, என்ன? (நிச்சயமாக அவர் ஆணைப்படி நடப்பேன்.) (4,5)

ஆனால், பரதனுக்குப் பட்டாபிஷேகம் என்ற செய்தியை மன்னர், தானே என்னிடம் ஏன் தெரிவிக்கவில்லை? என்பதுதான் என் மனத்தை மிகவும் வருத்துகிறது. சகோதரனான பரதனுக்கு என்றால், யாராலும் வற்புறுத்தப்படாமலேயே, நான் தானாகவே சீதையையும் ராஜ்யத்தையும் பிராணனையும் நண்பர்களையும் செல்வங்களையும் மகிழ்ச்சியுடன் கொடுப்பேனே! (வாக்குத்தத்தம், வரம் முதலான பேச்செல்லாம் எதற்கு?) அப்படியிருக்கும்போது, பெற்றெடுத்த தந்தையாரான மன்னரால் ஆணையிடப்பட்டு, தங்கள் விருப்பம் கைகூடும்வண்ணமாகவும், (மன்னரால்) கொடுக்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்றவும் நான் அவ்வாறே (மன்னரின் ஆணைப்படி) செயல்படுவேன் என்பதைக் கூறவும் வேண்டுமா? (6–8)

அரசாளும் மன்னர் கீழே தரையைப் பார்த்துக் கொண்டு, மெல்லமெல்லக் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறாரே, இது சரியா, என்ன? (அருள்கூர்ந்து) வெட்கத்தால் தலைகுனிந்திருக்கும்

அவரைச் சமாதானப்படுத்துங்கள். மன்னரின் ஆணையைப் பெற்று, விரைவிலேயே தூதர்கள், மாமனின் வீட்டிலிருந்து பரதனை அழைத்து வருவதற்காக வேகமாகச் செல்லும் குதிரைகளில் ஏறிச் செல்லட்டும். தந்தையிட்ட ஆணையைப் பற்றி, மேலும் எதுவும் விசாரணை செய்து கொண்டிராமல், காட்டில் பதிநான்கு ஆண்டுகள் வசிப்பதற்காக, உடனே இங்கிருந்தே நான் செல்கிறேன்.'' (9–11)

கைகேயி, இராமனுடைய சொற்களைக் கேட்டுத் திருப்தி அடைந்தாள். இராமன் புறப்பட்டுச் சென்றுவிடுவார் என்ற நம்பிக்கை கொண்டு, அவரை அவசரப்படுத்தினாள்— ''நீ சரியாகச் சொன்னாய், இராமா! மாமனின் வீட்டிலிருந்து பரதனை அழைத்து வருவதற்காக விரைந்து செல்லும் குதிரைகளில் சவாரி செய்ய தூதர்கள் இதோ இப்போதே புறப்பட்டுவிடுவார்கள். இராமா! காட்டிற்குப் போவதற்கு நீயே விருப்பத்துடன் இருக்கிறாய். காலதாமதம் செய்ய வேண்டியதில்லை. அதனால், இங்கிருந்தபடியே உடனே நீ காட்டிற்குப் போகலாம். (12–14)

மன்னர், மனம் நொந்து போயிருப்பதால் உன்னிடம் அவர் தானே பேசவில்லை. புருஷோத்தமனே! இதற்காக, நீ கோபப்பட வேண்டாம். இது மிகவும் அல்பமான விஷயம். நீ விரைவாகச் செயல்பட்டு, இந்தப் பட்டணத்திலிருந்து காட்டிற்குப் போகாதவரையில், உன்னுடைய தகப்பனார் குளிக்கவோ, சாப்பிடவோ மாட்டார்!'' (கைகேயியின் சொற்களைக் கேட்டுக் கொண்டிருந்த) மன்னர், 'அட! என்ன கஷ்டம்! என்ன கேவலம்!' என்று சோகத்தில் மூழ்கி, நீண்ட பெருமூச்சுவிட்டுக் கொண்டு, தங்கம் இழைக்கப்பட்ட அந்தக் கட்டிலில் மூர்ச்சித்து விழுந்தார். (15–17)

இராமன், அரசரை எழுப்பி உட்கார வைத்தார். (அதைக் காணச் சகியாமல்) கைகேயி, அவரைக் காட்டிற்குப் போவதற்குத் துரிதப்படுத்தினாள். அதைக் கேட்டுச் சவுக்கால் அடிபட்ட குதிரைபோல் அவர் துடிதுடித்துப் போனார். மிகக் கொடூரமான வார்த்தைகளைப் பண்பாடு சிறிதும் இல்லாத அவளிடமிருந்து கேட்ட பின்னரும்கூட இராமன், மனத்தில் வருத்தம் இல்லாமல் கைகேயியிடம் கூறினார்— (18,19)

''தேவி! பொருட்பற்றுக் கொண்டு, இவ்வுலகில் வாழ்வதில் எனக்கு இஷ்டமில்லை. தருமத்தை மட்டுமே நம்பியிருக்கும் முனிவர்களைப் போன்றவன் நான் என்பதை அறிந்து கொள்ளுங்கள். வந்தனைக்குரிய தந்தையாரின் திருப்திக்காக, என்னால் முடிந்ததனைத்தையும் செய்வேன். உயிரை விட்டாகிலும் அவர் விருப்பத்தை நிறைவேற்றிக் காட்டுவேன். ஏனென்றால், தந்தைக்குப் பணிவிடை செய்வது மற்றும் அவர் சொற்படி நடப்பது என்பதைக் காட்டிலும் மேலான தருமானுஷ்டானம் இல்லை. (20–22)

வணக்கத்திற்குரிய என் தந்தையாரால் நேரில் சொல்லப்படாவிட்டாலும், நீங்கள் சொல்லும் வார்த்தையை நான் ஏற்று, மக்கள் நடமாட்டமில்லாத காட்டில் பதிநான்கு ஆண்டுகள் வசிப்பேன். அன்னையே! தாங்களும் எனக்குக் கட்டளையிட முழு உரிமை பெற்றவர். ஆனால், தங்கள் சொற்களுக்குக் கீழ்ப்படியும் நல்ல குணம் என்னிடம் இருக்கிறதா? என்று சந்தேகப்பட்டுவிட்டீர்கள். அதனால், இது விஷயமாக மன்னரைக் கேட்டிருக்கிறீர்கள். (23,24)

என் அன்னையிடம் சென்று விடைபெற்றுக் கொள்ள வேண்டும். சீதைக்கு நல்ல வார்த்தை கூறிச் சமாதானப்படுத்த வேண்டும். (இந்த இரண்டு கடமைகளையும் எவ்வளவு விரைவாகச் செய்து முடிக்க முடியுமோ, அவ்வளவு விரைவில் செய்துவிட்டு) பின்னர், அடர்ந்த பெருங்காடான தண்டகாவனத்திற்கு உடனே செல்கிறேன். பரதன் அரசை ஆளட்டும்; முறைப்படி தந்தைக்குப் பணிவிடை செய்யட்டும். அவ்வாறு நடக்கும்படி செய்ய வேண்டியது தங்கள் கடமை. இதுவே பழமையான தருமம்.'' (25,26)

இராமனுடைய இந்த உரையைக் கேட்ட தந்தை துயரத்தால் மிகவும் தாக்குண்டவர் ஆனார். சோக மேலீட்டால் எதுவும் பேச முடியாமல் பெருங்குரலில் அழ ஆரம்பித்தார்.

உணர்விழந்திருந்த தந்தையின் திருவடிகளில் இராமன் நமஸ்கரித்துவிட்டு, பொல்லாதவளான கைகேயியையும் வணங்கினார். பிரகாசமான தோற்றத்தை உடைய அவர், அங்கிருந்து வெளியேறினார். தந்தையாரையும் கைகேயியையும் வலம்வந்த இராமன், அந்த அந்தப்புரத்திலிருந்து வெளியே வந்ததும், தன்னுடைய நண்பர்களின் கூட்டத்தைக் கண்டார். சுமித்திரையின் ஆனந்தத்தை வளர்ப்பவனான லட்சுமணன், கண்ணீர் ததும்பும் கண்களுடன் மிகவும் சீற்றத்துடன் அவருக்குப் பின்னால் சென்றான். (27–30)

(போகும் வழியில்) பட்டாபிஷேகத்திற்காகச் சேகரித்து வைக்கப்பட்டிருந்த மங்களத் திரவியங்களை ('இவைகளைக் கொண்டு, பரதனுக்கு நல்லபடியாகப் பட்டாபிஷேகம் நடக்கட்டும்' என்று மனமுவந்து பிரார்த்தனை செய்து) வலம் வந்து அவைகளைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் மெல்லச் சென்றார், இராமன். 'அரசு கிடைக்கவில்லை' என்ற இழப்பு, மக்களையெல்லாம் வசீகரித்துக் கவர்ந்திருக்கும் அவருடைய திருமுக மண்டலத்தின் மக்த்தான திருவருள் பொருந்திய எழிலைப் பறிக்கவில்லை – இரவுவேளையின் இருள் சந்திரனின் பேரொளியை மங்கச் செய்ய முடியாமற்போவதைப் போல! (31,32)

காட்டிற்குப் போவதற்கு ஆசையுள்ளவரும், இந்தப் பூமண்டலத்தின் ஆட்சியையே துறந்தவருமான அவருடைய மனத்தில் உலகப்பற்றைத் துறந்து விளங்கும் ஜீவன்முக்தரைப் போல, எந்தச் சஞ்சலமும் தோன்றவில்லை! மங்களமான குடை, நன்றாக அழகு செய்யப்பட்ட வெண்சாமரங்கள் – இவைகளை ஏற்றுக் கொள்ளாமல், தேரையும் தனது ஏவலாளர்களையும் நகர–நகர்ப்புற மக்களையும் ஒதுக்கி விலக்கிக் கொண்டு, மனத்திற்குள் துக்கத்தைத் தாங்கிக் கொண்டு, புலன்களை அடக்கி வைத்து, மன உறுதியுடைய அவர், வருத்தமான ஒரு செய்தியை அன்னையிடம் தெரிவிப்பதற்காக, அந்த மாளிகைக்குள் புகுந்தார். (33–35)

சத்தியவாதியும் திருவளர்செல்வருமான இராமனின் பட்டாபிஷேகத்தைக் காண வந்த மக்களில் எவரும் (அருகிலேயே எப்போதும் இருப்பவர்களான நண்பர்கள்கூட), அவருடைய திருமுகத்தில் சோகக்குறிப்பு எதையும் காணவில்லை! சரத்காலத்தில், தன் பிறப்பியல்பான தண்ணொளி வீசும் எல்லாக் கிரணங்களோடும் கூடிய பூர்ண சந்திரனைப் போல, பெருந்தோளரான அவர் தனக்கு இயல்பாகவுள்ள மனக்குதூகலத்தை இழக்காமலிருந்தார்! பெருங்கீர்த்தி படைத்தவரும் அறநெறியாளருமான இராமன், எல்லாக் குடிமக்களையும் இனிய சொற்களால் மகிழ்வித்துக் கொண்டே அன்னையின் மாளிகைக்குள் நுழைந்தார். (36–38)

மகாபராக்கிரமம் படைத்தவனும், சகோதரனுக்கு இணையான நற்குணங்கள் கொண்டவனுமான லட்சுமணன், தன் நெஞ்சத்திற்குள் வேதனையைச் சுமந்துகொண்டு, அவரைப் பின்தொடர்ந்து சென்றான். பேரானந்தத்தில் திளைத்துக் கொண்டிருந்த அந்த மாளிகையில் புகுந்த இராமன், தனக்கு ஏற்பட்டுள்ள மாபெரும் அரசு அதிகார இழப்பை அறிய நேரிட்டால் நண்பர்களுக்குப் பிராணன் போய்விடுமோ? என்ற சந்தேகத்தால், முற்றிலும் மாறிவிட்ட நிலையை வெளிக் காட்டாதிருந்தார். (மாறாக, மலர்ந்த முகத்துடனேயே உள்ளே சென்றார்.) (39,40)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபது

கௌசல்யையின் கதறல்

கூப்பிய கைகளுடன் கைகேயியின் அந்தப்புரத்திலிருந்து அவர் வெளியே வந்து கொண்டிருந்த போது, மற்றப் பெண்மணிகள் இருந்த பகுதியிலிருந்து உரத்த வேதனைக்

குரல்கள் கேட்டன. தந்தையின் தூண்டுதல் இல்லாமலேகூட, அந்தப்புரப் பெண்களின் அவசியத் தேவைகளைத் தானே கவனித்து நிறைவேற்றி வந்த – கைகொடுத்துக் காப்பவரும், நமக்கு அடைக்கலம் தருபவருமான – அந்த ஸ்ரீராமன், இன்று காட்டிற்குப் போய்விடப் போகிறார். ஸ்ரீராமன் பிறந்த நாளிலிருந்தே, பெற்ற தாய் கௌசல்யையிடம் எவ்வளவு அன்பு–மரியாதையுடன் நடந்து கொள்கிறாரோ, அவ்வாறே நம்மிடமும் நடந்து கொள்கிறார். (1–3)

கோபமூட்டக்கூடிய சொற்களை யாரேனும் கூறினாலும் அவர் சினம் கொள்வதில்லை. பிறரைக் கோபமூட்டும் சொற்களைத் தவிர்த்துவிடுவார். கோபம் கொண்ட எல்லோரிடமும் பண்பும் பரிவும் தோன்றப் பேசிச் சமாதானப்படுத்துவார். அட, பகவானே! அந்த ஸ்ரீராமன் இப்போதே இங்கிருந்து வெளியேறப் போகிறார். எல்லா மக்களும் சரண்புகும் வள்ளலான இராமனைத் துறக்கும் நமது மன்னர், அறிவில்லாமல் இந்த உலகில் இத்தனை நாட்கள் காலம் கழித்திருக்கிறார்! மகா கஷ்டம்! அரச பத்தினிகள் அனைவரும் கணவனைத் திட்டினார்கள். கன்றுகளை இழந்த தாய்ப்பசுக்கள் போல பெருத்த குரலில் கதறி அழுதார்கள். (4–6)

'புத்திரன் காட்டிற்குப் போய்விடப் போகிறானே?' என்ற சோகத்தால் வெந்துகொண்டிருந்த மன்னர், அந்தப்புரத்தின் மற்றொரு பகுதியிலிருந்த அரச பத்தினிகளின் துயரக்குரலைக் கேட்டு வெட்கமடைந்து, அந்தப் படுக்கையிலேயே தன்னை மறைத்துக் கொண்டார். (பிறிதோரிடத்தில்) புலன்களை வென்றடக்கிய இராமன், தன் குடும்பத்தாரின் துயரத்தைச் சகித்துக் கொள்ள முடியாதவராக, யானைபோல் பெருமூச்சு விட்டுக் கொண்டு, தம்பி லட்சுமணனுடன் தாயாரின் அந்தப்புரத்திற்குள் சென்றார். அந்தப்புரத்தின் வாயிற்படியில் மிகவும் கௌரவத்திற்குரிய வயோதிகர் ஒருவர் உட்கார்ந்திருப்பதைக் கண்டார். மற்றும் பலர் நின்று கொண்டிருப்பதையும் பார்த்தார். (7–9)

அவர்கள் எல்லோரும் வெற்றிவீரத்திலகமான இராமனைப் பார்த்தவுடனேயே அருகில் வந்து, 'வெல்க! வாழ்க' என்று வாழ்த்தொலி எழுப்பினார்கள். இந்த முதல் அங்கணத்தைக் கடந்து, இரண்டாவது அங்கணத்தில் நுழைந்ததும் மன்னராலும் போற்றப்படுகிற வேத விற்பன்னர்களான வயோதிக அந்தணர்களைக் கண்டார். இராமன் அந்த முதியவர்களை வணங்கிவிட்டு, மூன்றாவது கட்டுக்குள் நுழைந்தார். அங்கே வாயில் காக்கும் வேலைக்காக நியமிக்கப்பட்டிருந்த முதிய மாதர்களையும், இளவயதுப் பெண்களையும் கண்டார். அவர்கள், அவரைக் கண்டதும் மனமகிழ்ச்சியடைந்து, வெற்றி வாழ்த்துக் கூறி, வேகமாக உட்புறம் சென்று, இராமனின் தாயாரிடம் அந்த இனிய செய்தியைத் தெரிவித்தார்கள். (10–13)

புதல்வனின் நலனில் அக்கறையுடைய கௌசல்யை இரவு முழுவதும் கண்விழித்திருந்து, பொழுது புலர்ந்ததும், ஒருமுகமான மனத்துடன் பகவான் விஷ்ணுவைப் பூஜித்தார். எப்போதும் ஆசார நியமங்களுடன் இருக்கும் அவர், பட்டாடை அணிந்து, மங்கள நிகழ்ச்சிக்குரிய சிறப்புச் சடங்குகள் செய்து முடித்து, மந்திரம் கூறி, அக்னியில் ஆகுதி கொடுத்தார். மங்களமான அந்தப்புரத்திற்குள் நுழைந்த இராமன், அக்னியில் ஆகுதி கொடுத்துக் கொண்டிருப்பவராக அன்னையைப் பார்த்தார். (14–16)

அங்கு தேவபூஜைக்காக தயிர், அட்சதை, நெய், மோதகங்கள், ஹவிஸ் முதலியன தயாராக வைக்கப்பட்டிருந்ததைக் கண்டார். (மேலும்) பொறி, வெண்மலர் மாலைகள், பாயசம், சித்ரான்னம், ஸமித்துக்கள், பூர்ணகும்பங்கள் முதலியவற்றையும் ரகுநந்தனன் கவனித்தார். சிறந்த வண்ணப்பொலிவுடன் திகழ்ந்த அவர், அனுஷ்டான நியமங்களைக் கடைப்பிடித்துக் கொண்டிருந்ததால் சற்றே இளைத்திருந்தார். வெண்பட்டு உடுத்தி, தீர்த்தத்தினால் தெய்வங்களுக்கு அர்க்யம் கொடுத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தார். (17–19)

அன்னையாகிய தன் ஆனந்தத்தை வளர்க்கும் புதல்வன் வந்திருப்பதை வெகுநேரம் சென்று கவனித்த அவர், தன் குட்டியிடம் ஓடிச் செல்லும் பெண்குதிரையைப் போல,

பாசத்துடன் விரைந்து அருகில் சென்றார். அன்னை அருகில் வந்தவுடன் அவர் திருப்பாதங்களில் விழுந்து வணங்கினார், இராமன். அவர் அவரை மார்புறத் தழுவிக் கொண்டு உச்சிமுகர்ந்தார். எவராலும் வெற்றி கொள்ள முடியாத தன் புதல்வன் இராகவனைப் பார்த்து, புத்திர பாசமுடைய அவர், அனுகூலமான நல்ல வார்த்தைகளைக் கூறினார்— (20–22)

''நெடுங்காலம் வாழ்ந்தவர்களும், தருமசீலர்களும், முனிவர் போன்று பற்றின்றி வாழ்ந்தவர்களும், ஆத்மானுபவம் பெற்றவர்களுமான உயர்ந்த பரம்பரையில் தோன்றிய நீ, அவர்களைப் போலவே நீண்ட ஆயுள், நெடிய கீர்த்தி, அறம் தவறாமை பெற்று விளங்குவாயாக! சொன்ன சொல் தவறாதவரும், தந்தையுமான மன்னரைப் போய்ப் பார். தருமாத்மாவான அவர், இப்போதே உனக்கு இளவரசுப் பட்டம் சூட்டப் போகிறார்.'' (23,24)

தனக்கு அளிக்கப்பட்ட ஆசனத்தில் அமராமல் (தாயின் சொல்லுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும் என்பதால்) அதைக் கையால் தொட்டுவிட்டு, உணவு கொள்ளும்படி அழைக்கப்பட்ட இராமன் கைகளைக் கூப்பிக்கொண்டு தாயிடம் ஏதோ சொல்ல ஆரம்பித்தார். அவர் இயல்பாகவே அடக்கம் உடையவர்; அத்துடன் தாய்க்கு கௌரவம் கொடுப்பவர். எனவே, (இப்போது, தாயாருக்குப் பிரியமில்லாத ஒரு செய்தியைத் தெரிவிக்க வேண்டி இருக்கிறதே? என்ற மனச்சுமையாலும்) குனிந்த தலையுடன் தண்டகாரண்யம் செல்வதற்கு அனுமதிகோரிப் பேசத் தொடங்கினார்— (25,26)

''அன்னையே! எதிர்பாராத ஒரு மகாகஷ்டம் இப்போது வந்திருக்கிறது என்பதைத் தாங்கள் அறியீர்கள் போலும்! நான் தண்டகாரண்யம் போகப் போகிறேன்! (என்பதைக் கேட்டு) தங்களுக்கும், சீதை–லட்சுமணர்களுக்கும் மகத்தான துக்கம் ஏற்படப் போகிறது. இனி, இந்த (மாதிரியான உயர்ந்த) ஆசனம் எனக்கு எதற்கு? தர்பாசனத்தில் உட்கார வேண்டிய காலம் எனக்கு வந்திருக்கிறது. அரசர்களுக்குரிய உணவு வகைகளைத் தவிர்த்துவிட்டு, முனிவர்களைப் போல் தேன்–கிழங்கு–பழங்களை மட்டுமே புசித்துக் கொண்டு, மனித நடமாட்டமில்லாத காட்டில் பதிநான்கு ஆண்டுகள் வசிக்கப் போகிறேன். (27–29)

மாமன்னர், இளவரசுப் பட்டத்தை பரதனுக்குக் கொடுக்கிறார். அத்துடன் ஒரு தவசியைப் போல வாழவேண்டுமென்று, என்னைத் தண்டகாரண்யத்திற்கு நாடு கடத்துகிறார். ஆளில்லாத காட்டில் (ஆறும், எட்டும்) பதிநான்கு ஆண்டுகள் காட்டில் கிடைக்கும் பொருள்களையே அனுபவித்துக் கொண்டு, பழம்–கிழங்குகளை உணவாகக் கொண்டு வாழவேண்டும்.'' அவர் (இதைக் கேட்டவுடன்) காட்டில் ஒரு சால மரத்தின் கிளை கோடரியால் வெட்டப்பட்டாற்போல, தேவலோகத்திலிருந்து தள்ளிவிடப்பட்ட தேவமாதுபோல தடாலென்று கீழே விழுந்தார். (30–32)

இதுவரை துக்கத்தையே அனுபவித்திராதவரும், மயக்கமடைந்துவிட்டவரும், வெட்டி வீழ்த்தப்பட்ட வாழைமரம் (கதலீ) போன்றவருமான தாயாரை, இராமன் (கைகளால் எடுத்துத்) தூக்கினார். ('கதலீ' என்றால் ஒரு மானினத்தின் பெண்பாலையும் குறிக்கும். 'அம்பினால் தாக்கப்பட்டுக் கீழே விழுந்துவிட்ட பெண்மானைப் போன்ற' என்றும் பொருள் கொள்ளலாம்.) பெரும் பாரத்தைச் சுமந்து கொண்டு ஓடியதால் ஏற்பட்ட களைப்புத் தீருவதற்காகத் தரையில் இப்படியும் அப்படியும் புரண்டு எழுந்த பெண் குதிரைபோல், (கோசலையின்) மேனி முழுவதும் படிந்திருந்தத் தூசிகளைத் தன் கைகளால் துடைத்துவிட்டார். (33,34)

இதுவரை துக்கத்தை அனுபவித்து அறியாதவரும், சுக அனுபவங்களுக்கே உரியவருமான அவர், அருகில் அமர்ந்திருந்த சூரப்புலியான இராமனிடம் லட்சுமணனுக்கும் கேட்கும் படியாகப் பின்வருமாறு சொன்னார்— ''நீ, எனக்குப் பிள்ளையாகப் பிறக்காதிருந்திருந்தால், நான் இவ்வளவு சோகத்தை அனுபவிக்க நேர்ந்திருக்காது. குழந்தாய்! ரகுநந்தனா! பிள்ளையே பெறாத மலடியாக இருப்பது, இதைக் காட்டிலும் பெரிய துக்கமில்லை. குழந்தாய்! மலடிக்கு,

'எனக்குக் குழந்தை பிறக்கவில்லையே?' என்ற மனத்துயரம் ஒன்று மட்டுமே. வேறு எவ்விதமான துக்கமும் அவளுக்கு ஏற்படாது. (35–37)

என் கணவர், மன்னராக ஆட்சி செய்யும் காலத்தில் (ஒரு மூத்த பட்டத்தரசிக்குக் கிடைக்க வேண்டிய) பெரிய பாக்கியமோ, சுகமோ நான் கண்டதேயில்லை. என் மகன் மன்னனானதும் பல சௌக்கியங்களை அடையலாம் என்ற நம்பிக்கையால், நான் உயிரைத் தாங்கியிருந்தேன். நான் மூத்த அரசியாக இருந்தும், எனக்கு இளையவர்களான சக்களத்திகள், என் இதயத்தைப் பிளப்பது போன்ற அவதூறான பல சொற்களைக் கூறும்போது நான் கேட்டுக் கொண்டிருக்க வேண்டியிருக்கும். (38,39)

பெண்களுக்கு இதைக் காட்டிலும் துக்ககரமான விஷயம் என்ன இருக்கிறது? என்னுடைய துயரத்திற்கும் புலம்பலுக்கும் முடிவே கிடையாது. செல்வமே! நீ என் அருகில் இருக்கும்போதே, நான் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறேன் என்னும்போது, நீ ஊரைவிட்டே போய்விட்டாயேயானால், என் கதியைப் பற்றி என்ன சொல்ல? எனக்கு நிச்சயமாக மரணம்தான் ஏற்படும். என் கணவர் என்னை எப்போதும் திரஸ்கரித்தே (நிராகரித்தே) வந்துள்ளார். அவரிடம் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை. கைகேயியின் வேலைக்காரிகளைப் போல அல்லது அதற்கும் தாழ்ந்த நிலையிலேயே நான் இருந்து கொண்டிருக்கிறேன். (40–42)

என்னிடம் வேலை செய்யும் பணியாளர் அல்லது என் சொல்லைக் கேட்டு நடக்கும் ஒருவர், கைகேயியின் புதல்வனை அப்போது காண நேர்ந்தால், என்னிடம் பேசாமலே போய்விடுகிறார்! மகனே! இவ்வளவு தாழ்நிலையை அடைந்துவிட்ட நான், எப்போதும் ஆத்திரப்பட்டுக் கொண்டிருக்கும் கைகேயியின் சிடுசிடு முகத்தை எவ்வாறு காண்பேன்? இராகவா! நீ (உபநயனம் என்ற சடங்கு நடந்து இரண்டாவது) பிறப்பு எடுத்து பதினேழு ஆண்டுகள் (உனக்கு இப்போது இருபத்தேழு வயதாகிறது) ஆகின்றன. இதுவரை ஏராளமான கஷ்டங்களைப் பொறுத்துக் கொண்டிருந்தேன். உனக்கு இளவரசுப் பட்டம் சூட்டப்பட்டவுடன் கஷ்டங்கள் தீர்ந்துவிடும் என்றிருந்தேன். (43–45)

இந்த முதிய வயதில், சக்களத்திகளின் ஏச்சுப் பேச்சுக்கள் என்ற, குறையவே குறையாத துக்கத்தை நான் இன்னும் வெகுகாலம் தாங்கிக் கொண்டிருக்க முடியாது. பூர்ண சந்திரனைப் போன்ற உன் முகத்தைப் பாராமல், மிகவும் தீன நிலையில் இருக்கின்ற நான், தொடர்ந்து துக்கப்பட்டுக் கொண்டே எவ்வாறு வாழ்வேன்? பாக்கியம் இல்லாத நான், (உடலையும் மனத்தையும் கட்டுப்படுத்தும் சிரமமான நியமங்கள்) உபவாசங்கள், தெய்வத் தியானங்கள் செய்து, உன்னை வளர்த்ததெல்லாம் வீணாகப் போய்விட்டதே? (46–48)

மகாநதியில் புதிதாக வெள்ளம் ஏற்படும் காலத்தில், கரைகள் தாக்கப்பட்டுக் கரைந்து போகும். (உன்னை நாடு கடத்திய செய்தியைக் கேட்ட பின்பும் என் மனம் சிதறிப் போகவில்லை என்றால், அதற்குக் காரணம் என் மனம் ஆற்றங்கரை போல் மண்ணால் ஆனது அல்ல.) அப்படி என் இதயம் பிளந்து போகாததால், அது பாறாங்கல்லால் செய்யப்பட்டது என்று நினைக்கிறேன். பயத்துடன் அழுதுகொண்டிருக்கும் பெண்மானை ஒரு சிங்கம் அலட்சியமாகத் தூக்கிச் செல்வதைப் போல, (அஞ்சிப் புலம்பிக் கொண்டிருக்கும் என்னை) மரணம் ஏன் வந்து கொத்திக் கொண்டு போகவில்லை? யமனுடைய வீட்டில் எனக்கு மட்டும் இடம் இல்லை போலும்! அதனால்தான் யமன், என்னைக் கொண்டு செல்ல விரும்பவில்லை. (49,50)

என்னுடைய இருதயம் (சரீரம்) நிச்சயமாக இரும்பால் ஆக்கப்பட்டிருக்க வேண்டும். அதனால்தான் அது பிளந்து போகவுமில்லை; முறிந்து விழவும் இல்லை. துக்கம், என் உடல் முழுவதும் ஆக்கிரமித்திருந்தும் எனக்கு மரணம் ஏற்படவில்லை என்றால், அதற்குக் காரணம் 'விதிக்கப்பட்ட மரணகாலம் வந்தால்தான் இறப்பு நிகழும்' என்பது தீர்மானமாகிறது. மகனின் க்ஷேமத்திற்காக, நான் செய்த விரதங்கள், தானங்கள், ஆசார கட்டுப்பாடுகள், இயற்றிய தவம்

போன்றவையனைத்தும், உவர்நிலத்தில் விதைக்கப்பட்ட விதையைப் போல, பலன் தராமல் போய்விட்டனவே? என்பதுதான் என்னை மிகவும் வாட்டுகிறது. (51,52)

பொறுக்க முடியாத பெருந்துயரத்தால் நசுக்கப்படுபவன், மரணகாலம் வருவதற்கு முன்பாகவே, தன் விருப்பப்படி யமலோகம் செல்லலாம் என்றால், ஈன்ற கன்றைக் காணாத தாய்ப்பசுவைப் போல பெற்றெடுத்த உன்னைக் காணாத நான், இப்போதே காலதேவனின் சபையை அடைந்து விடுவேனே? மரணம் வராவிட்டால் என்ன? முழுநிலவைப் போன்ற காந்தி படைத்த உன் திருமுக மண்டலத்தைக் காணாமல், இங்கே வீண்பொழுது கழித்துக் கொண்டிருப்பதைக் காட்டிலும், தேகபலம் குறைந்துவிட்டாலும், கன்றின்மேல் உள்ள பாசத்தால் அதைத் தொடர்ந்து செல்லும் பசுவைப்போல, நானும் உன்னுடன்கூட காட்டிற்கு வருகிறேன்.'' (53,54)

தன்னுடைய குஞ்சு, வலையில் அகப்பட்டுக் கொண்டு தவிப்பதைக் கண்டு அலறித் துடிக்கும் கின்னரிப் பறவை போல், எதிர்வரக்கூடிய பெரும் துன்பங்களை எண்ணிப் பார்த்து, சத்திய பரிபாலனம் என்ற வலையில் அகப்பட்டுக் கொண்டுள்ள தன் மகன் இராகவனைப் பார்த்துப் பார்த்து, கண்களால் கண்ணீர்விட்டு ஓவென்று அழுதார். (55)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
இருபதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்தொன்று

கௌசல்யையயும் லட்சுமணனையும் சமாதானம் செய்தல்

இராமனின் தாயார் கௌசல்யாதேவி புலம்புவதைக் கண்டதும் மிகவும் மனம் புண்பட்ட லட்சுமணன், அந்தச் சூழ்நிலைக்கு உகந்ததான சொற்களைக் கூறினான்— ''பெரியன்னையே! ஒரு பெண்ணின் சொல்லிற்கடங்கி உத்தரவிடப்பட்ட ஸ்ரீராமன், அரசாட்சியைத் துறந்து காட்டிற்குப் போவது என்பதில் எனக்கும் சம்மதமில்லை. பெண்ணாசையால் தூண்டிவிடப்பட்ட வயோதிகரான மன்னரின் இயற்கை குணம் மாறிவிட்டது. புலனின்பங்கள் அவரை அதட்டி அழைக்கின்றன. இந்த நிலையில் அவர் என்னதான் சொல்லமாட்டார்? (1–3)

நாட்டைவிட்டுக் காட்டிற்குத் துரத்தும்படியான அளவிற்குக் குற்றத்தையோ, குறையையோ ஸ்ரீராமனிடம் நான் பார்க்கவில்லை. இந்த உலகில், மறைவாகக்கூட இவரிடம் குற்றத்தைக் கூறும் மிகவும் எதிரியான அல்லது திரஸ்கரிக்க(நிராகரிக்க)ப்பட்ட எந்த ஒரு மனிதனையும் நான் காணவில்லை. அறநெறியில் நோக்கமுடையவர் எவர்தான் தெய்வம் போன்றவரும், நேர்மையானவரும், எதிரிகளிடமும் அன்பு பாராட்டுகிறவருமான ஒரு புதல்வனை எவ்விதக் காரணமுமின்றிக் கைவிடுவார்? அரசருக்கு மீண்டும் பாலபருவம் (ஆழமான சிந்தனை இல்லாமை) வந்திருக்கிறது! அவருடைய வார்த்தையை அரசநீதி உணர்ந்த எந்தப் புதல்வனாவது மனத்தில் வாங்கிக் கொள்வானா? (4–7)

(பட்டாபிஷேக மாற்றத்தைப் பற்றிய) இந்த விஷயத்தை வெளியே எந்த மனிதரும் அறியாதிருக்கும் இப்போதே, தாங்கள் என்னுடன் ராஜ்யத்தில் தங்களை நிலைநிறுத்திக் கொள்ளுங்கள். இராகவனே! நான் தங்கள் பக்கத்தில் கையில் வில்லுடன் பாதுகாப்பாக நிற்பேன்; கொடுங்காலனே வந்து நிற்பது போலிருக்கும் என்னைக் கண்டும், எனக்கு மேல் அதிக வீரபராக்கிரமத்தைக் காட்டக் கூடியவன் எவனேனும் இருக்கிறானோ? புருஷோத்தமா! எவரேனும் இதற்கு விரோதமாகப் புறப்பட்டாரேயானால், கூர்மையான என் பாணங்களால் இந்த அயோத்திப் பட்டணம் முழுவதையும் மனிதப்பூண்டே இல்லாமல் செய்துவிடுவேன். (8–10)

பரதனுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள், அவனுக்கு அனுகூலமாக இருக்க விரும்புபவர்கள் அனைவரையும் கொன்று விடுவேன். (இவ்வளவு கொடுமையாக நடப்பவனைக் கண்டுதான்

உலகம் நடுங்கிப் போற்றும்.) அடக்கமும் எளிமையும் எப்போதும் அவமானத்தைத்தான் அடைகின்றன. கைகேயியின் துர்போதனையை ஏற்று, நம்முடைய தந்தை என்பவர் நமக்கு நட்பு அற்றவராக ஆகிவிட்டபடியால், நாமும் பாச—பந்தங்களை உதறிவிட்டு, அவரைக் கைது செய்ய வேண்டும் அல்லது கொலை செய்ய வேண்டும். ஒருவர் செய்யத்தக்கது—செய்யத்தகாதது என்ற அடிப்படை அறிவையிழந்து, தவறான வழியில் செல்வாரேயானால், அவர் தந்தையாகவே இருந்தாலும் சரி, தண்டனைக்கு உரியவரே. (11–13)

புருஷோத்தமா! எந்த ஒரு பலத்தை ஆதாரமாகக் கொண்டு அல்லது எந்த ஒரு நியாயமான காரணத்தை முன்னிறுத்தி, தங்களுக்குக் கொடுக்கப்பட்ட அரசாட்சியை, இப்போது கைகேயிக்குக் கொடுக்க விரும்புகிறார் (நம் தந்தையார்)? எதிரிகளை மாய்ப்பவரே! தங்களுடனும் என்னுடனும் மாபெரும் விரோதத்தை வைத்துக் கொண்டு, அரசாட்சியைப் பரதனுக்குக் கொடுப்பதற்கு என்ன அதிகார சக்தி இருக்கிறது? அன்னையே! என் கையிலுள்ள இந்த வில், நான் செய்த தானங்கள், நான் செய்த அக்னி காரியங்கள் — இவைகள் மேல் ஆணையிட்டுக் கூறுகிறேன், உண்மையாக, மனப்பூர்வமாக சகோதரர் இராமனையே பின்பற்றி நான் நடப்பேன்! இது சத்தியம். (14–16)

கொழுந்துவிட்டெரியும் நெருப்பில் அல்லது கோரமான காட்டிற்குள் இராமன் புகப்போகிறார் என்றால், அன்னையே! நான் அவருக்கு முன்பாகவே அங்கே புகுந்திருப்பேன். நிச்சயமாக நம்புங்கள். தாயே! சூரியன் உதயமானவுடன் இருள் முற்றிலுமாக ஒழிந்து விடுவதைப் போல, என்னுடைய பராக்கிரமத்தினால் (எதிரிகளை எல்லாம் ஒழித்து,) தங்கள் துயரத்தைத் துடைப்பேன். தாங்கள் அப்போது என் மாவீரத்தைக் காண்பீர்கள். இராமபிரானும் காண்பார். கைகேயியிடம் அளவற்ற காமம் கொண்டவரும், அறிவிழந்தவரும், உறுதி அற்றவரும், பாலகனைப் போல தக்கது—தகாதது என்ற பகுத்தறிவு இல்லாதவரும், வயோதிகத்தால் மதிமயங்கிக் கீழ்த்தரமாக நடப்பவருமான தந்தையை, நான் கொல்லத்தான் போகிறேன்.'' (17–19)

இராமனிடம் பேரன்பு கொண்ட லட்சுமணனுடைய சொற்களைக் கேட்டுவிட்டு சோகத்தில் மூழ்கியிருந்த கௌசல்யை, அழுதபடியே இராமனிடம் கூறினார்— ''குழந்தாய்! இனிமேல் செய்யவேண்டிய காரியம் என்ன? என்று, உன் சகோதரன் லட்சுமணன் சொன்னதைக் கேட்டாயல்லவா? அது உனக்குச் சரியென்று நினைத்தால், அவ்விதமே செய். என்னுடைய சக்களத்தியின் முறைகேடான சொற்களைக் கேட்டு, சோகத்தால் வெந்து கொண்டிருக்கும் என்னை (இங்கே) விட்டுவிட்டு, நீ காட்டிற்குச் செல்லலாகாது. தருமம் அறிந்தவனே! நீ, தருமத்தையே அனுஷ்டிக்க விரும்பினால், இங்கேயே இருந்துகொண்டு (உன்னைப் பெற்ற தாயாரான) எனக்குப் பணிவிடை செய்து, மிகச்சிறந்த தருமபரிபாலனத்தை நடத்து. (20–23)

செல்வமே! பிடிவாதமாகத் தன் வீட்டிலேயே இருந்து கொண்டு, தன் தாயாருக்குப் பணிவிடை செய்ததன் மூலம் மிக உயர்ந்த தவம் செய்தவர் என்ற பெருநிலையை அடைந்து, (அதன் பயனாக) காசியபர் தேவலோகம் சென்றார். எவ்வாறு மன்னர் உன்னால் கௌரவிக்கத்தக்கவரோ, அதேபோல்தான் நானும். நீ, காட்டிற்குப் போவதற்கு நான் ஆணையிடவில்லை. நீ, இங்கிருந்து காட்டிற்குப் போகவும் கூடாது. உன்னைப் பிரிந்து வாழ்வதோ, சுகத்தை அனுபவிப்பதோ என்னால் முடியாது. உன்னுடனே இருந்துகொண்டு, வெறும் புல்லையே புசிக்க நேரிட்டாலும், அதுவே எனக்கு மேன்மையானது. (24–26)

சோகத்தில் ஆழ்ந்திருக்கும் என்னை இங்கேயே விட்டுவிட்டு, நீ காட்டிற்குப் போவாயானால், நான் உண்ணாவிரதம் மேற்கொண்டு உயிர் துறப்பேன். உயிரைக் காப்பாற்றிக் கொள்ள என்னால் இயலாது. நதிகளின் பதியான சமுத்திரராஜன், பெற்ற தாயாருக்கு வருத்தம் உண்டாக்கிய அதருமத்தின் விளைவாக, நரகவாசத்திற்கு ஈடான பெருந்துன்பங்களை அடைந்தான் என்பது எல்லோருக்கும் தெரிந்த கதை. மகனே! (நான் மிகவும் துயரத்தால்

தவித்துக் கொண்டிருக்கிறேன். என் சொல்லைக் கேளாமல் நீ காட்டிற்குப் போவாயேயானால், அறநெறி தவறிய அந்தச் செயலின் பாவ விளைவாக,) நீயும் பெருந்துன்பங்களை அனுபவிப்பாய்.'' (27,28)

மிகவும் மனம் நொந்து புலம்பிக் கொண்டிருக்கும் தாயாரை நோக்கி, தருமாத்மாவான ஸ்ரீராமன், அறவழிப்பட்ட பதிலைக் கூறினார்— ''தந்தையாரின் ஆணையை மீறி நடக்கும் சக்தி என்னிடம் இல்லை. தங்கள் திருப்பாதங்களில் தலை வைத்து வேண்டிக் கொள்கிறேன். நான் காட்டிற்குப் போகவே விரும்புகிறேன். ஞானம் நிறைந்த 'கண்டு' என்று ஒரு முனிவர். தந்தையின் கட்டளையை நிறைவேற்றுவதையே விரதமாகக் கொண்டிருந்த அவர், முனிவரான தந்தையின் சொற்படி, ஒரு பசுமாட்டைக் கொன்றார். (29–31)

நம்முடைய குலத்தில்கூட முன்பு தந்தை சகரனின் ஆணைப்படி, பூமியைத் தோண்டிய அவருடைய புத்திரர்கள் அனைவரும் (சபிக்கப்பட்டு) ஒரே சமயத்தில் உயிரிழந்தார்கள். காட்டில் ஜமதக்னியின் குமாரரான பரசுராமன், தந்தையின் கட்டளைப்படி, தன்னைப் பெற்றெடுத்த தாயார் ரேணுகையின் தலையைக் கோடாரியினால் வெட்டிவிட்டார். அன்னையே! இவர்களாலும், தெய்வத்திற்குச் சமமான மற்றும் பிற பெரியோர்களாலும் தந்தையின் வாக்கு தயக்கமில்லாமல் நிறைவேற்றப்பட்டுள்ளது. (எனவே, நானும்) தந்தையின் சொல் வீணாகாதபடி நடப்பேன். தந்தையின் கட்டளைப்படி நடப்பது என்பது ஏதோ என் ஒருவனால் மட்டுமே செய்யப்படுவதல்ல. நான் முன்பு சொல்லிய மாமனிதர்களாலும் இவ்வாறே செய்யப்பட்டிருக்கிறது. (32–35)

தங்களுக்கு மனக்கிலேசம் தரும்படியான ஓர் அறநெறியை நான் புதிதாக உண்டாக்கவில்லை. நம் முன்னோர்களின் எண்ணமும் இப்படியாகத்தான் இருந்தது. அவர்கள் சென்று காட்டிய பாதையில்தான் நான் போகிறேன். தந்தையின் கட்டளையை ஏற்று நடப்பவன், ஒருக்காலும் பழிச்சொல்லை அடையமாட்டான். உலகில் இதற்கு மாறான விதி ஏதும் இல்லை. ஆகவே, அறநூல் விதிகளுக்கேற்ப, நான் செயல்படப் போகிறேன்.'' வில்லாளிகள் அனைவரிலும் மேலானவரும், பேச்சுத்திறன் உள்ளவர்களில் முதன்மையானவருமான அவர், இவ்வாறு தாயாரிடம் சொல்லிவிட்டு, லட்சுமணனை நோக்கிப் பின்வருமாறு கூறினார்— (36–38)

''லட்சுமணா! உனக்கு என்னிடமுள்ள எல்லையில்லாத பாசத்தை நான் அறிவேன். உன்னுடைய பராக்கிரமம், தைரியம், எவராலும் எதிர்கொள்ள முடியாத ஆன்மபலம் – இவற்றையும் அறிவேன். நல்ல லட்சணங்கள் உடையவனே! சத்தியம், பொறுமை ஆகியவை பற்றி, என் எண்ணங்களைப் புரிந்து கொள்ளாத நம் அன்னை, ஈடு–இணையில்லாத பெருந்துயரத்தில் உழல்கிறார். தருமம்தான் உலகில் எல்லாவற்றைக் காட்டிலும் மிக உயர்வானது. தருமத்தில் சத்தியம் (வாக்குத் தவறாமை) நிலைபெற்றிருக்கிறது. தந்தையின் இந்த ஆணையும் தருமம் சார்ந்திருப்பதால் உத்தமமானதே. (39–41)

அறத்தையே வாழ்க்கை நெறியாகக் கொண்டுள்ள ஒருவன், தன் தந்தை, தாய் மற்றும் அந்தணனுக்கு வாக்குக் கொடுத்துவிட்டு, அதை நடத்தாமல் வீணாக்குவது என்பது செய்யத் தகாதது. அவ்விதம் தருமத்தையே நம்பிக் கொண்டிருக்கும் நான், தந்தையின் ஆணையைப் புறக்கணிக்க மாட்டேன். தந்தையின் கட்டளையைத்தான் கைகேயிதேவி என்னிடம் கூறியிருக்கிறார். ஆகவே, (போர், எதிர்ப்பு, தன்னலம், மதிமயக்கம் என்றெல்லாம் கூறிப்) போரைத் தூண்டிவிடும் க்ஷத்திரியர்களுடைய தருமத்தில் மனத்தைச் செலுத்தாதே. தருமத்தையே பின்பற்று; கொடுமையான எண்ணம் வேண்டாம்; என் கருத்தை ஏற்றுக்கொள்.'' (42–44)

சகோதர பாசமுடைய லட்சுமணனின் தமையனார், பாசத்தோடுகூட இவ்வுரையைச் சகோதரனிடம் கூறிவிட்டு, மீண்டும் கௌசல்யையை நோக்கித் தலைவணங்கிக் கைகூப்பிக் கொண்டு இவ்வாறு சொன்னார்— ''அன்னையே! நான் இங்கிருந்தே காட்டிற்குப் போகப் போகிறேன். எனக்கு அனுமதி கொடுங்கள். மங்களமான மந்திரங்களைக் கூறி வழியனுப்பி வையுங்கள். என் உயிர்மேல் ஆணையாக வேண்டிக் கொள்கிறேன். (45,46)

முன்பொரு காலத்தில் யயாதி என்ற மன்னர், தேவலோகத்திலிருந்து பூலோகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டார். பின்னர், அவர் மறுபடியும் தேவலோகம் சென்று நிரந்தரமாகத் தங்கினார். அதேபோல, 'பதிநான்கு ஆண்டு வனவாசம்' என்ற கட்டளையை நிறைவேற்றிவிட்டு, காட்டிலிருந்து திரும்பிப் பட்டணத்திற்கு வருவேன். அன்னையே! சோகத்தை நெஞ்சில் தாங்கிக் கொள்ளுங்கள், அதுதான் நல்லது; வருத்தப்பட வேண்டாம். தந்தையின் ஆணையை நிறைவேற்றிவிட்டு, காட்டிலிருந்து இங்கே மறுபடியும் வருவேன். (47,48)

தங்களாலும் என்னாலும் வைதேகி–லட்சுமணன்–சுமித்திராதேவி ஆகியோராலும் தந்தையின் கட்டளை ஏற்கப்பட வேண்டும். இதுதான் மிகப்பழமையான காலத்திலிருந்து அனுஷ்டிக்கப்படும் தருமம். தாயே! என் பட்டாபிஷேகத்திற்காகத் தாங்கள் செய்துள்ள ஏற்பாடுகளை நிறுத்தி விடுங்கள்; துக்கத்தை நெஞ்சிலேயே அடக்கிக் கொள்ளுங்கள்; காட்டில் போய் வசிப்பது என்ற தருமானுகூலமான என் முடிவை அங்கீகரியுங்கள்.'' அறநெறிப்பட்டதும் சஞ்சலமில்லாததும் உறுதியானதுமான இந்த உரையைச் செவியுற்ற தாயார், உயிரற்றவர்போல சிறிது நேரம் மூர்ச்சித்துக் கிடந்து, பின்னர் இராமனைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார்— (49–51)

''மைந்தனே! சுதருமம், நல்ல ஒட்டுறவு என்ற நோக்கில் தந்தையார் எப்படி உன்னால் கௌரவிக்கத்தக்கப் பெரியவரோ, அதே போலத்தான் (தாயாகிய) நானும் கௌரவிக்கத்தக்கவள். நான், உனக்கு அனுமதி கொடுக்க மாட்டேன். மிகவும் துயரத்தில் தவித்துக் கொண்டிருக்கும் என்னை இங்கே விட்டுவிட்டு, நீ இவ்வாறு வெளியே போகக் கூடாது. நீ இல்லாமல், (மற்ற எல்லாச் சௌக்கியங்களுடன்) இந்த உலகத்திலோ, பித்ருலோகத்திலோ, தேவலோகத்திலோ நான் வாழ்வதால் என்ன பயன்? உன் பக்கத்தில் ஒரு முகூர்த்த காலம் இருந்தால், அதுவே அனைத்து ஜீவப்பிராணிகள் வாழும் நாட்டின் ஆட்சியைக் காட்டிலும் சிறந்ததாகும்.'' (52,53)

தன் போக்கில் சென்று கொண்டிருக்கும் ஒரு பெரிய யானையைத் தீப்பந்தங்களால் அடித்து, மறித்து நிறுத்த சில பேர்கள் முற்பட்டாலும், அது (பாதகமான சூழ்நிலைக்கு அஞ்சாமல்) தன் வழியிலேயே செல்வதைப் போல, பெற்றெடுத்தத் தாயாரின் இரங்கத்தக்க பிரலாபத்தைக் கேட்ட பின்னரும், இராமன் தன் நிலையில் உறுதியோடு இருந்தார்! (54)

அறநெறியைக் கடைப்பிடிப்பதில் உறுதியாக இருந்த அவர், மூர்ச்சையடைந்துவிட்டது போன்ற நிலையில் இருந்த அன்னையையும், சோகத்தால் தகிக்கப்பட்டிருக்கும் லட்சுமணனையும் பார்த்து தருமத்தோடு இயைந்ததும், அவரால் மட்டுமே சொல்லக்கூடியதுமான சொற்களைக் கூறினார்— ''லட்சுமணா! உனக்கு என்னிடம் எப்போதுமுள்ள அளவற்ற பக்தியையும் பராக்கிரமத்தையும் நான் அறிவேன். என் வாதத்திலுள்ள நியாயத்தைப் புரிந்து கொள்ளாமல், தாயாருடன் சேர்ந்துகொண்டு, எனக்கு மிகவும் துக்கத்தைக் கொடுத்து வருத்துகிறாய். (55,56)

முன்பு செய்த தருமமானது இந்தப் பிறவியில் பயன் கொடுக்கத் தொடங்கும்போது, தருமம், அர்த்தம், காமம் என்ற மூன்றும் நேரிடையாகவே காணப்படுகின்றன. எப்படியென்றால், பத்தினி என்ற ஒருத்தியின் மூலமே தரும–அர்த்த–காமங்கள் நிறைவேறுகின்றனவல்லவா, அதுபோல. (மனைவி, கணவன் இயற்றும் விருந்தினர் உபசரிப்பு போன்ற அறச்செயல்களில் துணை நிற்கிறாள்; அவனுடைய காமத்திற்கு ஈடு கொடுக்கிறாள்; நன்மகனைப் பெற்றுக் கொடுத்து, கணவன் புண்ணியமான மேலுலகங்களை அடையவும் உதவுகிறாள்.) (பத்தினி இருந்தால் மற்ற மூன்றும் கிடைக்கும். தருமம் அனுஷ்டிக்கப்பட்டால் மற்றவை தாமே வந்து சேரும்.) இதில் ஐயமில்லை. (57)

எந்த ஒரு செயலில் நான்கு புருஷார்த்தங்களும் சேர்ந்திருக்கவில்லையோ, அந்தக் கர்மாவைச் செய்யக் கூடாது. எந்த ஒரு கர்மாவினால் தருமம் அடையப்படுகிறதோ, அதையே ஆரம்பித்து நடத்த வேண்டும். வெறும் பொருளாசை கொண்டவன் உலகத்தினரால் வெறுக்கப்படுகிறான்; காமத்தில் அதிக ஈடுபாடும் போற்றத்தக்கதல்ல. அவர் (தசரதர்)

நமக்கெல்லாம் ஆசார்யர்; நாடாளும் மன்னர்; தந்தை மற்றும் வணக்கத்திற்குரிய வயோதிகர். கோபத்தாலோ, மகிழ்ச்சியாலோ, காமவசப்பட்டோ ஒரு காரியத்தைச் செய்யும்படி உத்தரவிட்டால், அதை நிறைவேற்றுவதுதான் நமது தருமம். அறநெறியில் நடப்பதையே விரதமாகக் கொண்டுள்ள ஒருவன், அதைச் செய்யாமல் இருப்பானா? (58,59)

அப்படிப்பட்ட என்னால் தந்தையின் இந்தப் பிரதிக்ஞையை முற்றிலுமாக, அவர் கூறியவாறே நிறைவேற்றாமலிருக்க முடியாது. தம்பி லட்சுமணா! அவர், நம் இருவருக்கும் கட்டளையிடும் அதிகாரம் உடையவர். நம் தாயார்களின் கணவர். அவர்களுக்கு அவரேதான் புகலிடம். அவரேதான் தருமம். அறநெறி தவறாத மன்னர் இன்னும் உயிரோடு இருக்கிறார். குறிப்பாக, தன் ஆட்சி–அதிகாரத்தையும் செலுத்திக் கொண்டிருக்கிறார். இந்த நிலையில், யாரோ ஒரு விதவை மாது, தன் மகனுடன் இருப்பதைப்போல, நமது அன்னை என்னுடன்கூட எவ்வாறு வெளியே வரலாம்? (60,61)

அன்னையே! காட்டிற்குப் போவதற்கு எனக்கு அனுமதி அளியுங்கள். (சௌக்கியமாகத் திரும்பி வருவதற்காக,) எங்களுக்கு ஆசீர்வாதங்களைச் செய்தருள வேண்டும். சத்தியம் தவறாத யயாதி மீண்டும் சுவர்க்கத்திற்குத் திரும்பிச் சென்றது போல, வனவாச கால கெடு முடிந்தவுடன் நான் திரும்பி வருவேன். ('எனக்கு' என்று ஒருமையில் சொல்லாமல், 'எங்களுக்கு ஆசி செய்க' என்று, பன்மையில் இராமன் கூறுவது கவனிக்கத்தக்கது.) இந்த ராஜ்யத்தைப் பெறுவதற்காக, மிகப்பெரிய புகழைத் தரக்கூடிய தருமபரிபாலனம் என்ற நெறியை, நான் பின்னுக்குத் தள்ளமாட்டேன். வாழ்க்கை என்பது சிறிது காலம்தான். ஆகவே, மிகச் சிறு லாபமான இந்த நாட்டின் ஆட்சியை அறமில்லாத முறையில் நான் பெற விரும்பவில்லை.'' (62,63)

தண்டகாரண்யத்திற்குப் போவதில் உறுதியான துடிப்புடைய புருஷக்காளையான அவர், இவ்வாறாக, அன்னைக்குச் சமாதானங்கள் கூறி, தன் தம்பிக்கும் 'தருமம் என்பது என்ன?' என்பதை விளக்கிக் காட்டியபின், தாயாரைத் தன் நெஞ்சுக்குள் வலம் வந்தார். (64)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
இருபத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்து இரண்டு

விதியின் வலிமை

மனக்கவலையால் நொந்து போயிருப்பவனும், நடந்துவிட்ட பெரிய குற்றத்தைப் பொறுத்துக் கொள்ள முடியாதவனும், கோபத்தால் விரிந்த கண்களையுடையவனும், அந்தரங்கமான சகோதரனும், நல்லிதயம் கொண்டவனுமான சுமித்திரை மைந்தனின் அருகே சென்ற விவேகமுடைய இராமன், மிகுந்த தைரியத்துடன் புலன்களை வசப்படுத்திக் கொண்டு பின்வருமாறு கூறினார்— (1,2)

''கோபத்தையும் சோகத்தையும் அடக்கிக் கொள். தைரியம் ஒன்றையே கைக்கொள்வாய். இந்த அவமான எண்ணத்தை உதறித் தள்ளிவிட்டு, மன சந்துஷ்டியை ஏற்றுக் கொள். என் பட்டாபிஷேகத்திற்காகச் சேகரிக்கப்பட்ட எல்லாப் பொருள்களையும் விரைவில் அகற்றிவிடு. தன்னலம் கருதாமல் இந்தக் காரியங்களைச் செய். லட்சுமணா! பட்டாபிஷேகத்திற்குத் தேவையான பொருள்களைச் சேகரிப்பதில் நீ காட்டிய உற்சாகத்தை, இப்போது பட்டாபிஷேகத்தைத் துறந்து, காட்டிற்குப் போவதற்குத் தேவையான பொருள்களைச் சேகரிப்பதில் செலுத்து. (3–5)

என்னுடைய பட்டாபிஷேகத்தைக் காண வேண்டுமென்று என்னுடைய தாயாரின் மனம் துடித்தது. (ஆனால், முடிசூட்டுவிழா நடைபெறவில்லை.) அவருடைய மனம் எவ்விதத்திலும்

சஞ்சலப்படாதபடி, நீ நடந்து கொள்ள வேண்டும். அவருடைய மனத்தில் சந்தேகம் காரணமாக, துக்கம் ஏற்படுவதை, ஒரு முகூர்த்த காலம்கூட என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது; அதை அலட்சியப்படுத்தவும் முடியாது. தெரிந்தோ, தெரியாமலோ, தாயார்களுக்கோ அல்லது தந்தையாருக்கோ பிடிக்காத ஒரு சிறு செயலைக்கூடச் செய்ததாக, எனக்கு நினைவேயில்லை. (6–8)

எப்போதும் சத்தியம் பேசுபவர்; சொன்ன சொல் தவறாதவர்; எங்கும் தடைபடாத பராக்கிரமத்தை உடையவர். (கைகேயியிக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதி நிறைவேற்றப்படாவிட்டால்) தனக்கு சுவர்க்க பிராப்தி கிடைக்காமற்போய்விடுமோ? என்று அச்சம் கொண்டிருப்பவர். (நான், அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதன் மூலம்) என்னுடைய தந்தையார் அச்சம் நீங்கியவராக ஆகட்டும். இந்த வைபவம் (பட்டாபிஷேகம்) நிறுத்தப்படாதிருந்தால், 'வாய்மை தவறிவிட்டேன்' என்ற வருத்தம் அவர் மனத்தை உறுத்திக் கொண்டிருக்கும். அவருடைய மனவருத்தம் என்னையும் எப்போதும் தகித்துக் கொண்டே இருக்கும். (9,10)

லட்சுமணா! ஆகவே, (மேற்கூறிய காரணங்களால்) பட்டாபிஷேக வைபவங்களை நிறுத்திவிட்டு, அதற்கு அடுத்தபடியாக (அதனால் ஏற்படும்) மனத்திருப்தியுடன் இங்கிருந்து காட்டிற்குப் போக விரும்புகிறேன். நான் இங்கிருந்து இப்போது வெளியேறிச் சென்றால், மன்னர் மகளான கைகேயி, தன் விருப்பம் கைகூடியவராவார். மகன் பரதனுக்கு எவ்விதச் சந்தேகங்களும் கவலைகளும் இல்லாமல் பட்டம் சூட்டலாம். நான் மரவுரி–மான்தோல் தரித்துக் கொண்டு, சடா மண்டலம் செய்துகொண்டு, காட்டிற்குப் போன பின்னர்தான் கைகேயியிக்கு மனநிம்மதி ஏற்படும். (11–13)

என்னுடைய தந்தையார், என் சிறிய தாயாருக்கு வரம் கொடுப்பதாக வாக்களித்ததை, நான் மனமுவந்து ஏற்றுக் கொண்டுள்ளேன். அதைச் சிதறடிக்க நான் விரும்பவில்லை. நான், கால தாமதமின்றிக் காட்டிற்குப் பயணப்படுகிறேன். லட்சுமணா! நான் நாடு கடத்தப்படுதலும், எனக்குக் கொடுக்கப்பட்ட அரசு, பின்னர் திரும்பி எடுத்துக் கொள்ளப்படுதலும் விதியின் வேலை என்றே எண்ண வேண்டும். 'எனக்குத் துன்பம் தர வேண்டும்' என்ற எண்ணம் கைகேயியிக்கு எப்படி உண்டாயிற்று? என்றால், அது தெய்வ சங்கல்பம் அல்லது என் விதியின் விளைவு. (14–16)

நற்பண்புள்ளவனே! இதற்கு முன்னர் நம் தாயார்களிடத்தில் நான் வித்தியாசம் பாராட்டியதில்லை. அன்னை கைகேயியும், தன் சொந்த புதல்வனிடமும் என்னிடமும் எந்த வேற்றுமையையும் (ஏற்றத்தாழ்வையும்) கண்டதில்லை என்பதை நீ அறிவாய். அவர், என்னுடைய பட்டாபிஷேகத்தை நிறுத்துவதற்காகவும், என்னை நாடு கடத்துவதற்காகவும், எவ்வளவு பயங்கரமான, கொடூரமான, தரக்குறைவான சொற்களால் மன்னரிடம் வாதாடினாரோ, அதற்குக் காரணம் தெய்வச் செயல் என்று கூறுவதைத் தவிர, வேறொன்றும் எனக்குப் புலப்படவில்லை. (17,18)

(இது தெய்வ சங்கல்பம் என்றில்லாவிட்டால்) நற்குணங்கள் பொருந்திய, நற்பண்பாடுடைய அரசகுல மங்கையான அவர், ஏதோ ஒரு பாமரப் பெண்மணிபோல், தன் கணவர் எதிரிலேயே எனக்குத் துன்பத்தைத் தரும் வரங்களைக் கேட்டுப் பெறுவாரா? 'இவ்வாறு நிகழும்' என்று எது எதிர்ப்பார்க்கப்படாமலே நிகழ்கிறதோ, அது 'தெய்வச் செயல்' என்பதைக் கண்ணாரக் காண்கிறோம். என் விஷயத்திலும் கைகேயி விஷயத்திலும் முரண்பாடு நடந்திருக்கிறதே? (எனக்கு வரவேண்டிய அரசு கைவிட்டுப் போய்விட்டது; அவருடைய நல்ல மனம் திரிந்துவிட்டது.) (19,20)

லட்சுமணா! எந்த ஒரு கர்மானுபவத்திற்கும் தெய்வ சங்கல்பமே காரணம் என்பது தெரிந்துவிட்ட பிறகு, எந்த மனிதன்தான் அதை எதிர்த்துப் போரிட முனைவான்? சுக–துக்கம், பயம்–கோபம், லாபம்–நஷ்டம், பிறப்பு–இறப்பு – இன்னும் இவை போன்ற எத்தனையோ மாறுதல்கள் ஏற்படுகின்றனவே, அவையெல்லாம் தெய்வ சித்தத்தின்படியே நடக்கின்றன என்பது நிச்சயம். ஐம்புலன்களை வென்று கடுமையான தவத்தில் ஈடுபட்டுள்ள முனிவர்கள்கூட,

(மனுஷ்ய அறிவுக்குப் புலப்படாத) தெய்வத் தூண்டுதலால், (தான் கடைப்பிடித்து வந்த) எல்லாக் கட்டுப்பாடுகளையும் கைவிட்டு, காம–குரோதங்கள் வசப்பட்டு நெறியிலிருந்து நழுவி விடுகிறார்கள். (21–23)

இவ்வுலகில் மனத்தால் சிந்தித்துப் பாராத ஒன்று தற்செயலாக நிகழ்ந்துவிடுகிறது. (நன்றாக ஆலோசித்தபின்) ஆரம்பிக்கப்பட்ட காரியம் திடீரென்று தடைபட்டு நின்றுவிடுகிறது என்றால், இவை தெய்வச் செயலேயன்றி வேறில்லை. இந்தத் தத்துவக் கோட்பாடு, என் மனத்தில் ஆழமாகப் பதிந்திருப்பதால், பட்டாபிஷேகம் தடைபட்டுப் போனதில் எனக்கு வருத்தமே ஏற்படவில்லை. ஆகவே, என் சிந்தனையோட்டத்தை அனுசரித்து, நீயும் மனச்சஞ்சலம் இல்லாதவனாகி, இப்போதே பட்டாபிஷேக ஏற்பாடுகளை நிறுத்திவிடு. (24–26)

லட்சுமணா! எனக்குப் பட்டாபிஷேகம் செய்வதற்காக, புனித நீர் கொண்டு வரப்பட்டுள்ள அதே குடங்களால், தவசியாக நான் விரதம் பூணுவதற்கான நீராட்டல் என்னும் சடங்கு நடைபெறும். அதுவும் சரியல்ல. ஏனெனில், இளவரசுப் பட்டத்திற்குரிய நீராட்டலுக்காக, உயர்ந்த நறுமணப் பொருள்கள் சேர்க்கப்பட்டுள்ள இந்தக் கலசநீர் எனக்கு எப்படிப் பொருந்தும்? (இந்தக் கலசநீரை நான் உபயோகப்படுத்தினால் கைகேயி அன்னைக்குப் புதிதான ஒரு சந்தேகம் ஏற்படலாம்.) நான், என் கையாலேயே கொண்டு வரும் தண்ணீர்தான் என் விரத சங்கல்பக் கிரியைக்குப் பயன்படும். (27,28)

தம்பி! 'ராஜ்யலட்சுமி எனக்கு கிடைக்காமற்போய்விட்டதே?' என்று கவலைப்படாதே. அரசாட்சி, காட்டு வாழ்க்கை என்னும் இவ்விரண்டினுள் வனவாசம் மிகச்சிறந்தது. லட்சுமணா! இந்தக் காரியம் (பட்டாபிஷேகம்) நின்றுபோனதற்கு இளைய தாயார்தான் காரணம் என்று சந்தேகப்பட வேண்டாம். விதியின் பிடியில் சிக்கிக் கொண்டவர்தான் அதருமமான சொற்களைப் பேசுவார். (கைகேயி விதியின் பிடியில் சிக்கிக் கொண்டிருக்கிறார். அதனால்தான் இப்படிப் பேசுகிறார்.) 'விதி மிகவும் பலம் வாய்ந்தது' (விதி வலியது) என்பதை நீயும்தான் அறிவாய்.'' (29,30)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
இருபத்து இரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்து மூன்று

லட்சுமணனின் சீற்றம்

இவ்வாறு இராமன் சொன்னதையெல்லாம் குனிந்த தலை நிமிராமல் வெகுநேரம் கேட்டுக் கொண்டிருந்த லட்சுமணன், (அவர் பேசி முடித்தவுடன்) மனத்தில் துக்கம்–மகிழ்ச்சி ஆகிய இரு உணர்வுகளுக்கிடையே சிக்கிக் கொண்டான். அப்போது மனிதக்காளை போன்ற லட்சுமணன் புருவங்களை நெற்றியின் நடுவில் நிறுத்தி, வளைக்குள் இருக்கும் மிகவும் கோபம் கொண்ட மகா சர்ப்பம் போல நீண்ட உஷ்ணமான பெருமூச்செறிந்தான். ஏறிட்டுப் பார்ப்பதற்கு முடியாதபடி அச்சம் தருவதாக, மேல் ஏறி விரிந்து கிடந்த புருவங்களுடன் கூடிய அவனுடைய முகம், மகாசினம் கொண்ட சிங்கத்தினுடையதைப் போலிருந்தது. (1–3)

யானையின் துதிக்கையைப் போல், தனது வலது கையை அங்குமிங்கும் ஆட்டிக் கொண்டு, கழுத்தைச் சரீரத்தின் மேலும் கீழுமாக அசைத்துக் கொண்டு, கடைக்கண்ணை இடுக்கிக் கொண்டு, தமையனாரைப் பார்த்து பின்வருமாறு மொழிந்தான்— (4)

''அறநெறியைக் கைவிட்டதாக ஆகிவிடுமோ? என்பதாலும், நானே தந்தையின் சொற்படி நடக்காவிட்டால், மக்கள் எப்படி நடப்பார்கள்? என்ற அச்சத்தாலும், தங்களைப் போன்ற

வீரருக்குக்கூட, அவ்வித அச்சத்திற்கு ஏற்றதல்லாத இந்தச் சந்தர்ப்பத்தில் உறுதியான மனப்பிரமை உண்டாகியிருக்கிறது. க்ஷத்திரியக் காளையே! நெஞ்சக் கலக்கம் அடையாத தங்களைப் போன்றவர்கள் துன்மார்க்கத்தைக் காட்டும் விதியைப் பற்றிக் கூறுவது என்ன காரணத்தாலோ? சக்தியில்லாத பாமர மனிதனை ஆட்டிப் படைக்கும் விதியின் வலிமையை (மாவீரராகிய) தாங்கள் ஏன்தான் புகழ்கிறீர்களோ? (5,6)

அறத்தின் திருவடிவே! பாவிகளான அவ்விருவர் மீதும் தங்களுக்குச் சந்தேகமே தோன்றவில்லையே! உலகில், தீய மனம் கொண்டவர்கள் தருமம் என்ற போர்வைக்குள் புகுந்து கொண்டு, சாமர்த்தியமாக நடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை தாங்கள் அறியவில்லையா? இராமப்பிரபு! அவ்விருவருடைய சுயநலத்திற்காக வஞ்சனையாக உங்களை வெளியேற்றிவிட, அவர்கள் முன்பே திட்டமிட்டிருக்கிறார்கள். முன்பே கொடுக்கப்பட்ட வரம் இதற்கு முன்பே பெற்றுக் கொள்ளப்பட்டதாகவும் ஆகியிருக்கும். (7,8)

இப்போது ஆரம்பிக்கப்பட்டது உலக நடைமுறைக்கு விரோதமான செயல். (மூத்தவன் இருக்க, இளையவனுக்குப் பட்டம் சூட்டுவதா?) வீரரே! நான் இதை (இந்த அநீதியை)ப் பொறுத்துக் கொள்ளமாட்டேன். இந்த விஷயத்தில் தாங்கள் என்னை மன்னிக்க வேண்டும். பேரறிவாளரே! இப்போது நடந்து கொண்டிருக்கும் தாறுமாறான நிகழ்ச்சிகளால் தடுமாறியிருக்கும் தங்கள் சித்தத்தில் தருமத்தைப் பற்றித் தவறான எண்ணம் புகுந்திருக்கிறதே, அந்தத் தருமத்தைத்தான் நான் வெறுக்கிறேன். (9,10)

தாங்கள் பேராற்றல் உடையவர். (உங்கள் உரிமைக்காகப் போராட வேண்டியதுதானே? அதை விட்டுவிட்டு) கைகேயியின் கட்டுப்பாட்டில் இருக்கும் தந்தையின் அறநெறியில்லாததும் நிந்திக்கத்தக்கதுமான கட்டளையை ஏற்றுப் பணிந்து நடப்பது என்ன நியாயம்? [வரதானம் (பொய்யான மொழி) என்ற] குற்றத்தைச் செய்து, தங்கள் பட்டாபிஷேகத்திற்கு இடையூறு விளைவிக்கப்பட்டிருக்கிறது. (இது தருமமல்ல.) என்றாலும், தாங்கள் இதை ஒப்புக்கொள்ள தயங்குகிறீர்கள். அதனால், எனக்கு மிகவும் துக்கம் உண்டாகிறது. அத்துடன் வஞ்சகமான இந்த நடவடிக்கையை 'தருமம்' என்று ஏற்பதும் வருந்தத்தக்கது. (11,12)

'தருமநெறி' என்று சொல்லிக் கொண்டு, ஒரு கபட நாடகத்திற்குத் தாங்கள் உடன்படுவது மிகவும் கேவலமானது. அவர்களோ தாய்–தந்தை என்று பெயரளவுக்கு இருந்துகொண்டு, அவர்கள் இஷ்டப்படி நடப்பவர்கள். எப்போதும் உங்கள் நலனைக் கருத்தில் கொள்ளாமல் விரோதிகளைப் போல் நடந்து கொள்ளும் அவர்களுடைய ஆணையைத் தங்களைத் தவிர, வேறு யார்தான் மனத்தளவிலாவது ஏற்றுக் கொள்வர்? அவர்களுடைய ஆணை, 'விதியின் வலிமையால் ஏற்பட்டது' என்று தாங்கள் பணிந்து ஏற்றுக்கொள்வீர்களென்றால், அந்த ஏற்பும் கைவிடத்தக்கதே. உங்களுடைய மனப்போக்கு சரியானது என்று எனக்குத் தோன்றவில்லை. (13,14)

கோழை, ஆற்றலில்லாதவன் எவனோ, அவன்தான் தலைவிதிக்கு அடிமையாகிறான். உலகத்தோரால் போற்றப்படும் உடல் வலிமை, மன வலிமை, அறநெறி வழுவாமை உடைய தீரர்கள் விதியின் செயல்பாட்டிற்கு அடங்கிப் போவதில்லை. எவன் விதியை விலக்கும் ஆற்றல் கொண்டிருக்கிறானோ, அவன் தன்னுடைய காரியத்தில் விதி குறுக்கிட்டு இடையூறு செய்தால், அவன் மனம் உடைந்து போவதில்லை. இப்போது தெய்வச் செயலின் சக்தியையும், மானுடனின் பெரும் சக்தியையும் மக்கள் காணப் போகிறார்கள். விதியின் வலிமை, மனிதனின் வலிமை என்ற இவற்றினிடையே, 'எது உயர்ந்தது?' என்பது தெளிவாகப் போகிறது. (15–17)

தங்களுடைய பட்டாபிஷேகம் விதிவசத்தால் நின்று போனதைக் கண்ட மக்கள், இப்போது என் வீரத்தினால் விதியின் வலிமை அழிக்கப்படுவதையும் காணப்போகிறார்கள். அங்குசத்திற்கு அடங்காமல் மதநீர்ப் பெருக்கினால் வலிமை பெற்று, இஷ்டப்படி ஓடித் திரியும் யானையைப் போல் செயல்படுகின்ற விதியை மானுட முயற்சியால் (என் பேராற்றலை வெளிப்படுத்தி,)

நான் புறமுதுகிட்டு ஓடச் செய்கிறேன். இராமசந்திரா! இப்போது எண்திசைக் காவலர்களும், மூன்று உலக மக்களும் ஒன்றாகக் கூடி வந்தாலும், தங்கள் பட்டாபிஷேகத்தை நிறுத்த முடியாது என்னும்போது, ஒரே ஒரு தந்தை எம்மாத்திரம்? (18–20)

பிரபு! எவர்கள் தங்களுக்குள் பரஸ்பரம் ஆலோசித்து, தங்களைக் காட்டில் வசிக்கும்படி சொன்னார்களோ, பதிநான்கு ஆண்டுகள் அவர்கள் அதே காட்டில் வசிக்கப் போகிறார்கள். தந்தையினுடையதும், உங்களுடைய முடிசூட்டலை நிறுத்தி, தன் புத்திரனுக்கே அரசு கிடைக்க வேண்டுமென்ற அவருடையதுமான (கைகேயியின்) அந்த ஆசையை, நான் வெட்டிச் சாய்த்து விடுகிறேன். எனக்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்கின்றவர்களுக்கு என் பௌருஷத்தால் (ஆண்மையால்) எவ்வளவு துக்கம் கொடுக்க முடியுமோ, அவ்வளவு கடுமையான துக்கத்தைத் தெய்வத்தால்கூட கொடுக்க முடியாது. (21–23)

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின்னர், தாங்கள் வானப்பிரஸ்த வாழ்க்கை மேற்கொள்வதற்காகக் காட்டிற்குப் போனதும், தங்களுடைய குமாரர்கள் பிரஜைகளை ரட்சிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்வார்கள். முற்காலத்தில் ராஜரிஷிகளின் ஆசார முறைப்படி, குடிமக்களைத் தாம் பெற்ற புதல்வர்கள் போல் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக, தம் புத்திரர்களை நியமித்துவிட்டு, (வயோதிகம் அடைந்தபின்) வானப்பிரஸ்தம் மேற்கொண்டு, காட்டிற்குச் சென்று வாழவேண்டும் என்று விதிக்கப்பட்டிருக்கிறது. (24,25)

அறத்தின் நாயகரே! இராமா! அரசருக்கு உறுதியான நிலைப்பாடு இல்லை. (கைகேயியிக்குக் கொடுத்த வரத்தை மீறவும் முடியவில்லை; தங்களைப் பிரியவும் விருப்பமில்லை; வானப்பிரஸ்தம் பற்றியும் முடிவு எடுக்க இயலவில்லை.) அவர் சொல்லுக்கு எதிராகத் தாங்கள் அரசைக் கைப்பற்றினால் ராஜ்யம் சிதறிப் போகும் (மக்கள் கிளர்ச்சி செய்வார்கள்) என்ற சந்தேகத்தால்தான், தாங்கள் அரசாட்சி வேண்டாம் என்கிறீர்கள். வீரரே! அலைபாயும் சமுத்திரத்தை ஓர் எல்லையைக் கடந்து உள்ளே வராதபடி, கரை தடுத்து நிறுத்தியிருப்பதைப் போல, தங்களையும் இந்த ராஜ்யத்தையும் நான் காப்பாற்றுவேன். அதில் தவறினால், 'எனக்கு வீர சுவர்க்கம் கிடைக்காமல் போவதாக' என்று சபதம் செய்கிறேன். (26,27)

தாங்கள் பட்டாபிஷேகத்திற்குரிய சடங்கான மங்கள நீராட்டைப் பெறுவதில் மனத்தைச் செலுத்துங்கள். (எதிர்க்கக் கூடிய) சிற்றரசர்களை எதிர்கொண்டு புறமுதுகிட்டு ஓடச் செய்வதற்கு, என் ஒருவனுடைய பலமே போதும். என்னுடைய இரண்டு கைகளும் வெறும் உடலழகுக்காக இல்லை; கையிலுள்ள வில் வெறும் அலங்காரப் பொருள் அன்று; நீண்ட கத்தி ஒப்பனையாய் இடுப்பில் செருகிக் கொள்வதற்காக இல்லை; அம்புறாத்தூணியிலுள்ள பாணங்கள் வெறும் கம்புகள் அல்ல. இவை நான்கும் எதிரிகளை அடக்குவதற்காகவே என்னிடம் இருக்கின்றன. நான், எவனைப் பகைவன் என்று கருதிவிட்டேனோ, அவனை ஒருபோதும் உயிரோடு இருக்க விடமாட்டேன். (28–30)

மின்னலைப் போல் பளபளக்கிற பட்டைதீட்டப்பட்ட கத்தியை மட்டும் நான் கையில் ஏந்திவிட்டால், எதிரே நிற்கும் விரோதியை – அவன் இந்திரனாகத்தான் இருக்கட்டுமே! – துண்டுதுண்டாக்காமல் விடமாட்டேன். என்னுடைய வாளினால் வெட்டுண்டுச் சிதறிக் கிடக்கும் யானை, குதிரை, தேர் முதலியவற்றின் பல்வகை அங்கங்களின் குவியலால் கால் வைத்து நடப்பதற்குக்கூட இடமில்லாதபடி, இந்தப் பூமி ஆகப் போகிறது. என்னுடைய கத்தியினால் வெட்டப்பட்டு ரத்த ஆற்றில் மிதக்கும் பகைவர்கள், கொழுந்துவிட்டெரியும் அக்னியைப் போலவும், மின்னலோடு கூடிய மேகங்கள் பூமியில் விழுந்தாற்போலவும் காணப்படுவார்கள். (31–33)

உடும்புத் தோலினால் செய்யப்பட்ட கவசங்களைக் கைவிரல்களில் அணிந்துகொண்டு, கையில் வில்லேந்தி நான் நிற்கும்போது, எந்த ஆண்மகனுக்குத்தான் என்னை எதிர்க்கும்

தைரியம் உண்டாகும்? ஒரு பாணத்தால் பல வீரர்களையும், பல பாணங்களால் ஒருவனையும் தரையில் வீழ்த்தி, வீரன்–குதிரை–யானைகளின் உயிர்நிலைகளில் தொடர்ந்து அம்புகளைத் தொடுத்து அழித்துவிடுவேன். ஐயனே! அரசரை (தசரதரை) இறையாண்மை அற்றவராகச் செய்து, தங்களுக்கு இறையாண்மையை நிலைநாட்டுவதற்கும், இப்போது என்னுடைய அஸ்திரபலம் பயன்படப் போகிறது. (34–36)

இராமப்பிரபு! சந்தனம் பூசிக் கொள்வதற்கும், தோள்வளை அணிவதற்கும், ஏராளமான செல்வங்களை வாரி வழங்குவதற்கும், நண்பர்களுக்கு உதவுவதிலும் இதுவரை உபயோகப்பட்டு வந்த இந்தக் கைகள், தங்கள் பட்டாபிஷேகத்திற்குத் தடங்கல் ஏற்படுத்தியவர்களை ஒழித்துக் கட்டும் செயலில் ஈடுபடப் போகின்றன. தங்களிடம் நட்புப் பாராட்டாத எவன், இப்போது உயிர்–புகழ்–நண்பர்களிடமிருந்து என்னால் விடுவிக்கப்படவேண்டும் என்பதைக் கூறுங்கள். (நான் யாரை முதலில் அழிக்க வேண்டும்?) நான், தங்களுடைய பணியாள். இந்தப் பூமண்டலம் முழுவதும் எவ்வாறு தங்கள் வசப்படுமோ, அவ்வாறு எனக்கு ஆணையிடுங்கள்.'' (37–39)

ரகு குலத்தின் பெருமையை வளர்ப்பவரான இராமன், லட்சுமணனின் கண்ணீரைத் துடைத்துவிட்டு, பலவாறாக ஆறுதல் கூறி, தந்தையின் ஆணையை நிறைவேற்றுவதில் தான் உறுதியாக இருப்பதைத் தெரிவித்து, ''அன்புள்ளவனே! என்னுடைய இந்த வழிதான் சான்றோர் வழி'' என்று கூறினார். (40)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
இருபத்து மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்து நான்கு

கௌசல்யைக்கு ஆறுதல் கூறுதல்

அவன் (இராமன்), தந்தையின் கட்டளையை நிறைவேற்றுவதில் மிகவும் உறுதியாக இருக்கிறார் என்பதைத் தெரிந்து கொண்ட கௌசல்யை, கண்களில் பொங்கிய கண்ணீரை அடக்கிக் கொண்டு, தருமாத்மாவான இராமனிடம் இவ்வாறு கூறினார்— ''இதுவரை துக்கம் என்பதையே அறியாதவன்; தருமாத்மா; எல்லாப் பிராணிகளிடமும் அன்பாகப் பேசுகிறவன்; எனக்கும் தசரதருக்கும் மகனாகப் பிறந்தவன். அவன் எப்படி உஞ்சவிருத்தியினால் வாழ்க்கை நடத்துவான்? ('உஞ்சவிருத்தி' – நெற்களத்தில் சிதறிக் கிடக்கும் நெல்மணிகளைப் பொறுக்கிச் சேர்த்து, அதைப் பக்குவம் செய்து உணவாகக் கொள்ளும் வாழ்க்கை நெறி.) (1,2)

எவனுடைய பணியாளர்களும், அவர்களைக் காட்டிலும் கீழ்ப்பட்ட நிலையில் உள்ள ஏவலாளர்களும்கூட அறுசுவை உண்டி உண்கிறார்களே? அப்படியிருக்க இராமன், பழம்–கிழங்குகளைப் புசித்துக் கொண்டு எவ்வாறு வாழ முடியும்? நற்குணங்கள் உள்ளவன், மன்னரின் பேரன்புக்குரியவன், ரகுவம்ச திலகமான இராமன் நாடு கடத்தப்படுகிறான் என்றால் யார்தான் நம்புவார்கள்? யாருக்குத்தான் பயம் ஏற்படாது? உலகில் எல்லோருக்கும் பிரியமானவனான நீயே காட்டிற்குப் போகிறாய். நிச்சயமாக எல்லோரையும் ஆட்டிப் படைக்கும் விதி என்பது மிகவும் பலம் வாய்ந்ததுதான். (3–5)

உன் வரவை எதிர்பார்த்துக் கவலைப்படுவதால் உடல் மெலிந்து மனம் தளர்ந்து போயிருக்கும் என்னை, உன்னை விட்டுப் பிரிவதால் உண்டாகும் சோகம் என்ற பெரும் நெருப்பு, கோடை காலத்தில் காட்டில் காய்ந்து கிடக்கும் மரம்–செடி–கொடிகளைக் காட்டுத் தீ எரிப்பதைப் போல என்னை எரிக்கிறது. இந்த நெருப்பின் இருப்பிடம் என் சரீரம்; உன்னை எண்ணி எண்ணி ஏற்படும் துக்கமே சமித்துக்கள்; அழும்போது கண்களிலிருந்து பொழியும்

கண்ணீர்த் துளிகளே ஆகுதிகள்; உன்னைப் பற்றிய கவலையால் விடப்படும் உஷ்ணமான நீண்ட பெருமூச்சுக்களே (அக்னியிலிருந்து கிளம்பும்) புகை. வெளியே ஓடிப் போகின்ற தான் ஈன்ற குட்டியை, எந்தத் தாய்ப்பசுவாவது பின்தொடராமல் இருக்க முடியுமா? மகனே! நீ எங்கே செல்கிறாயோ, அவ்விடத்திற்கு நான் உன்னைப் பின்தொடர்ந்து வருவேன்.'' (6–9)

இவ்வாறு அன்னையால் மொழியப்பட்ட உரையைக் கேட்டு, மாவீரரான இராமன் மிகவும் துக்கத்தில் ஆழ்ந்திருக்கும் தாயிடம் பின்வருமாறு கூறினார்— ''மன்னர், கைகேயியினால் நம்பிக்கை துரோகம் செய்யப்பட்டிருக்கிறார். நானோ காட்டிற்குப் போய்க் கொண்டிருக்கிறேன். உங்களாலும் அவர் கைவிடப்பட்டார் என்றால் அவர் உயிரோடு இருக்கமாட்டார். கொண்ட கணவரைத் துறப்பது (கைவிடப்படுவது) என்பது பெண்களின் மிகக் குரூரமான செயல். இது மிகவும் இகழத்தக்கது. ஆகவே, இவ்வாறு தங்களால் ஒருபோதும் மனத்தால்கூட சிந்திக்கத்தகாது. உலகாளும் மன்னர், என் தந்தை, காகுத்த வம்சத்திலகம் – அவரது உயிர் இருக்கும் வரையில், அவருக்குப் பணிவிடை செய்யுங்கள். இதுதான் பண்டைக் காலத்திலிருந்து கடைப்பிடிக்கப்படும் அறநெறி.'' (10–13)

இவ்வாறு இராமன் சொன்னவுடன் எல்லா நடப்புக்களிலும் நல்லதையே நோக்கும் கௌசல்யை, தன் மனத்தைத் தேற்றிக் கொண்டு, அநாயாசமாகவே அரிய செயல்களைச் செய்யும் இராமனிடம், 'அப்படியே ஆகட்டும்' என்றார். அறநெறியாளர்களில் முதன்மையானவரான இராமன், இந்த வார்த்தைகளைக் கேட்டதும், மிகவும் மனவேதனையில் உழன்று கொண்டிருக்கும் தாயாரைப் பார்த்து, மீண்டும் இவ்வாறு கூறினார்— (14,15)

''என் தந்தையார் இந்நாட்டு மன்னர்; நம்மைப் போஷிப்பவர்; நல்லுபதேசம் செய்யும் ஆசார்யர்; உத்தமர்; எல்லோருக்கும் தலைவர்; முழு அதிகாரம் உடையவர். அவருடைய கட்டளை எதுவானாலும் என்னாலும் தங்களாலும் செய்யப்பட வேண்டும். (சிறுபொழுதேயான) பதினான்கு ஆண்டுகள் காட்டில் சுற்றித் திரிந்துவிட்டுத் திரும்பி வந்து (தந்தையின் ஆணையை நிறைவேற்றிவிட்டதால்) மிக்க மகிழ்ச்சியுடன் தங்கள் சொற்படி நடப்பேன்.'' (16,17)

இராமன் இவ்வாறு சொன்னதும், கண்ணீர் நிறைந்த கண்களுடன் புத்திர வாஞ்சையுடைய கௌசல்யை, மிகவும் துயரத்தில் ஆழ்ந்து, அன்பு மகனைப் பார்த்துக் கூறினார்— ''காகுத்தனே! தந்தையின் கட்டளைப்படி காட்டிற்குப் போவது என்று நீ முடிவு செய்துவிட்டாயேயானால், வனத்தில் வாழும் ஒரு பெண்மானைப் போல என்னையும் அழைத்துச் செல்வாய். இங்கே சக்களத்திகளுடன் வசிப்பதை நான் விரும்பவில்லை.'' இவ்வாறு அழுது கொண்டே சொல்லிய அவரைப் பார்த்துத் தானும் அழுது கொண்டே இராமன் கூறினார்— (18–20)

''பெண்கள் உயிரோடு இருக்கும் வரையில் கணவர்தான் அவர்களுடைய தெய்வம்; இறையாண்மையுடைய தலைவர். இப்போது தங்களுக்கும் எனக்கும் மன்னர்தான் சர்வாதிகாரம் உடைய தலைவர். புத்திமானும், உலகத் தலைவருமான மன்னரால் நாம் கைவிடப்பட்டவர்கள் அல்லர். (அத்துடன் எனக்குப் பதிலாக ஆட்சியை ஏற்கப் போகும்) பரதனும் தருமத்தையே உயிராகக் கொண்டவன். எல்லாப் பிராணிகளிடமும் பிரியமாகப் பேசுபவன். எப்போதும் அறநெறியில் செல்லும் அவன், தங்கள் மனம் கோணாது நடந்து கொள்வான். நான் வெளியே புறப்பட்டுச் சென்றதும், புத்திரனின் பிரிவினால் அதிகமான சோகம் மன்னருக்கு ஏற்படாதபடி, கவனமாகக் கவனித்துக் கொள்ளுங்கள். (21–23)

மிகவும் சகிக்க முடியாத இந்தச் சோகம் வயோதிகரான மன்னரை அழிக்காதிருக்க வேண்டும். அவ்வாறாக, எப்போதும் மனஉறுதியுடன் அனுகூலமான முறையில் பணிவிடை செய்யுங்கள். விரத–உபவாசங்களை முறையாக அனுஷ்டித்துக் கொண்டிருக்கும் ஓர் உத்தம நாரீமணி, கணவருக்கு இசைவாக நடக்கவில்லை என்றால், அவள் (நற்றவம் புரிந்திருந்தாலும்) பாவிகள் போய்ச் சேரும் இடத்தையே அடைவாள். வேறு எந்தத் தெய்வத்தையும் வணங்காத,

தேவபூஜை செய்யாத பெண்மணி, கணவருக்குப் பணிவிடை செய்வதாலேயே உயர்ந்த புண்ணிய உலகங்களைப் பெறுகிறாள். (பெண்கள்) கணவருக்கு இஷ்டம்—அனுகூலமானவற்றில் ஈடுபட்டு, எப்போதும் பணிவிடை செய்ய வேண்டும். இந்த தருமம்தான் பண்டைய காலத்திலிருந்து உலக வழக்கமாக இருந்து வருகிறது; வேதங்களிலும் ஸ்ம்ருதிகளிலும் பாராட்டப் பெற்றுள்ளது. (24–27)

அம்மா! தாங்கள் எப்போதும் செய்துவரும் அக்னி காரியங்களில் என் நல்வாழ்விற்காக, வாசமிக்க மலர்களைத் தூவி தேவதைகளை வழிபடுங்கள்; மறைமொழி மாந்தர்களையும் நல்ல முறையில் கௌரவியுங்கள். இவ்வாறாகக் கட்டுப்பாடுகளுடன் இருந்து, உபவாச துல்லியமான உணவுகளை ஏற்று, பர்த்தாவின் சேவையில் ஈடுபட்டவராக, நான் திரும்பிவரும் காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பீர்களாக. நான் திரும்பி வரும்போது, தருமத்தைத் தாங்குபவர்களில் முதன்மையானவரான (அவர்) உயிரைத் தாங்கிக் கொண்டிருந்தாரென்றால் தாங்கள் விரும்பியவற்றையெல்லாம் அடைவீர்கள்.'' (28–30)

இராமன் இவ்வாறு கூறியதும், கண்ணீரால் கலங்கிய கண்களுடன் செல்வமகனைப் பிரிய வேண்டியிருக்கிறதே? என்ற ஆழ்ந்த வேதனையுடன் கௌசல்யை பின்வருமாறு கூறினார்— 'கண்மணி! காட்டிற்குப் போவதில் உறுதியான முடிவு செய்துவிட்ட உன்னைத் தடுக்க முடியவில்லை என்னால். காலம் (விதி) என்பது யாராலும் வெல்ல முடியாதது. பேராற்றல் படைத்த மைந்தனே! கவலையில்லாமல் நீ செல்வாய். உனக்கு எப்போதும் நன்மையே உண்டாகட்டும். நீ மறுபடி திரும்பி வந்த பின்புதான் என் மனக்கஷ்டம் நீங்கும். நீ, ஏற்றுக் கொண்ட காரியத்தை நல்ல முறையில் நிறைவேற்றிவிட்டு, பெரும் பாக்கியத்துடன் திரும்பி வந்து, தந்தையைக் கடனிலிருந்து விடுவித்த பின்னர்தான், நான் உண்மையான சுகத்தை அடைவேன். (31–34)

குழந்தாய்! இவ்வுலகில் தெய்வத்தின் செயல்பாடுகள் அறியவொண்ணாதவை. பாரேன்! (நீ, தாய் சொல்லைத் தட்டாதவன். ஆனால், இப்போது) என் சொல்லை மீறச் செய்து, காட்டிற்குப் போகும்படி உன்னைக் கட்டாயப்படுத்துகிறது. பெருந்தோளனே! இப்போது நீ செல்வாய். நலமாகத் திரும்பி வந்து ஆறுதலான, இனிய, மனங்கவர் மொழிகளால் என்னை மகிழ்வுறச் செய்வாய். என் செல்வமே! சடாமுடியும் மரவுரியும் தரித்துக் கொண்டு, காட்டிலிருந்து திரும்பி வரும் உன்னைப் பார்க்கும் அந்தக் காலம், இப்பொழுதே வந்துவிடக் கூடாதா?'' ஸ்ரீராமன் காட்டிற்குப் போவதில் உறுதியாக இருப்பதைப் பார்த்து, நல்லிதயம் கொண்ட அவர் ஆசிமொழிகளைக் கூறினார். 'ஸ்வஸ்த்யயனம்' (நல்வாழ்த்துக் கூறி அனுப்பும் சடங்கு) செய்வதில் விருப்பம் கொண்டார். (35–38)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
இருபத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்தைந்து

அன்னையின் அருளாசி

நல்மனம் கொண்ட அந்தத் தாயார், மனக்கிலேசங்களை விட்டொழித்து, ஆசமனம் செய்து, சுத்தமடைந்து, பிரயாண காலத்திற்குகந்த மங்களச் சடங்குகளைச் செய்தார். ''ரகுகுல நாயகனே! என்னால் உன்னைத் தடுக்க முடியவில்லை. இப்போது செல்வாயாக! சான்றோர்களின் வழியில் நிலைத்து நிற்பாயாக! விரைவில் திரும்பி வா. ரகுகுலத்துப் புலி போன்றவனே!

எந்த ஒரு தருமத்தை, தைரியத்துடனும் சலிப்படையாமலும் நீ கடைப்பிடித்து வருகிறாயோ, அந்தத் தருமம் உன்னைப் பாதுகாக்கக் கடவது. (1–3)

மைந்தனே! நீ எந்தக் கடவுள்களை, தேவாலயங்களிலும் யாகசாலைகளிலும் வணங்குகிறாயோ, அந்தத் தெய்வங்கள், மாமுனிவர்களோடுகூட, காட்டில் உன்னைக் காப்பாற்றட்டும். மகா பராக்கிரமசாலியான விசுவாமித்திரரால் உனக்கு உபதேசிக்கப்பட்ட அஸ்திரங்கள் எப்போதும் சீலமுள்ளவனாக இருக்கும் உன்னை நாற்புறங்களிலும் காப்பாற்றட்டும். மகாபலம் பொருந்தியவனே! மகனே! தாயாருக்கும் தந்தையாருக்கும் நீ செய்துள்ள பணிவிடைகள், நீ கடைப்பிடித்து வரும் சத்தியம் – இவைகளால் நன்கு பாதுகாக்கப்பட்டு நெடுநாள் வாழ்வாயாக. (4–6)

புருஷோத்தமனே! சமித்து–குசம்–பவித்ரம் ஆகியவற்றின் அதிஷ்டான தேவதைகள், தெய்வப் பீடங்கள், தேவாலயங்கள், அந்தணர்களின் வேள்விக்கூடங்கள், மலைகள், மரங்கள், குட்டையான சிறு மரங்கள், மடுக்கள், பறவைகள், சர்ப்பங்கள், சிங்கங்கள் போன்றவை உன்னைக் காப்பாற்றட்டும். சாத்யர்கள், விச்வதேவர்கள், மருத்துக்கள், மகரிஷிகள் உனக்கு மங்களத்தைக் கொடுக்கட்டும். தாதா, விதாதா (என்னும் தேவதைகள்) உன்னைக் காத்தருளட்டும். பூஷா, பகன், அர்யமா ஆகியோரும், இந்திரன் முதலான லோகபாலர்கள் எண்மரும் உன்னை ரட்சிப்பார்களாக! ருதுக்கள், பக்ஷங்கள், மாதங்கள், வருஷங்கள், இரவுகள், பகல்கள், முகூர்த்தங்கள் (இவற்றின் அதிஷ்டமான தேவதைகள்) உனக்கு எக்காலத்திலும் நன்மையையே செய்யட்டும். (7–10)

குழந்தாய்! தெய்வ சிந்தனையும், திடமான பக்தியும், தருமமும், தனிப்பெரும் கடவுள் திருமுருகனும், சோமதேவனும், பிருகஸ்பதியும் எப்போதும் உன்னைப் பாதுகாக்கட்டும். மகா பிரசித்தி பெற்ற முனிவர் எழுவரும், நாரதரும், சித்தர்களும், திக்குகளும், திக்பாலர்களும் என்னால் துதிக்கப்பட்டவர்களாக அந்த வனத்தில், மகனே! எப்போதும் உன்னைக் காப்பாற்றட்டும். அனைத்து பர்வதங்கள், சமுத்திரங்கள், மேற்றிசை மன்னனான வருணன், தேவலோகம், ஆகாயம், பூமி, ஆறுகள், அனைத்து தாரகைகள், கோள் தேவதைகளோடு கூடிய கோள்கள், பகலிரவுகள், சந்தியா காலங்கள் ஆகியனவெல்லாம் காட்டில் உன்னைக் காப்பாற்றட்டும். (11–14)

ஆறு ருதுக்கள், புனிதமான மாதங்கள், வருஷங்கள், முகூர்த்தங்கள், லக்கினங்கள் – இவற்றின் ஆட்சித் தெய்வங்கள் எல்லாம் உனக்கு நன்மையை அளிப்பார்களாக. பெருங்காட்டில் தவசி வேடத்தில் சுற்றித் திரியும் புத்திமானான உனக்கு, ஆதித்யர்களும் தானவர்களும் எப்போதும் சௌக்கியத்தைக் கொடுப்பவர்களாக இருக்கட்டும். குழந்தாய்! கொடூரச் செயல்கள் புரியும் அரக்கர்கள், பிசாசுகள், புலால் உணவு உண்ணும் காட்டு மக்களாலும் உனக்குப் பயம் ஏற்படாமலிருக்கட்டும். காட்டிலுள்ள வானரம், தேள், ஈ, கொசு, மலைப்பாம்பு, புழு முதலியவைகள் உன்னைத் தாக்காமல் இருக்கக் கடவன. (15–18)

மகனே! பெரிய யானைகள், சிங்கங்கள், புலிகள், காட்டுப் பன்றிகள், கரடிகள், கொம்புள்ளனவும் பயங்கரமானவையுமான எருமைகள் போன்றவை உனக்குத் தீங்கு விளைவிக்காமல் இருக்கட்டும். மைந்தனே! இவைகளன்றி மனித மாமிசத்தைப் புசிக்கின்றவைகளும், அச்சம் தரும் தோற்றம் கொண்டவைகளுமான பேய்–பிசாசுக் குழுவைச் சேர்ந்த மற்றவைகளும், இங்கே என்னால் நன்றாக பூசிக்கப்பட்டவர்களாக (அதனால் திருப்தி அடைந்து) உன்னைத் துன்புறுத்தாதிருப்பார்களாக! (19,20)

செல்வமே! நீ செல்லும் வழிகள் எல்லாம் மங்களகரமாக இருக்கக் கடவன; உன்னுடைய பராக்கிரமம் எல்லாவிடத்திலும் நல்ல பயன்களைத் தரட்டும்; உனக்கு செழுமைச் சிறப்புகள் கிடைத்துக் கொண்டே இருக்க வேண்டும் என்பதற்காக பரமதிருப்தியுடன் பயணத்தைத் தொடங்கு. ஆகாயவெளியில் சஞ்சரிக்கிறவர்கள், மண்ணுலகில் வாழும் பிராணி வர்க்கங்கள், எல்லா தேவர்கள் மற்றும் உன் பகைவர்களிடமிருந்தும் உனக்கு நன்மையே கிடைக்கக் கடவது. இராமா! சுக்கிரன், சந்திரன், சூரியன், குபேரன், யமன் ஆகியோர் நான் இங்கே

செய்யும் பூஜையை ஏற்று (திருப்தியடைந்து) தண்டக வனத்தில் இருக்கும் உன்னைக் காப்பாற்றுவார்களாக! (21–23)

ரகுநந்தனா! நீ, நீராடும் காலத்திலும், அர்க்யம் அளிக்கும் போதும் அக்னி, வாயு, ஹோமப் புகை மற்றும் முனிவர்களிடமிருந்து கற்றுக் கொண்ட மந்திரங்கள் உன்னைப் பாதுகாக்கட்டும். எல்லா உலகங்களின்மேலும் இறையாண்மையுடைய பிரும்மாவும், பஞ்ச பூதங்களுக்கும் நிலைக்களமான பரம்பொருள் மற்றும் முனிவர்களும், மற்றுமுள்ள எல்லா தேவர்களும் காட்டில் வசிக்கும் உன்னைப் பாதுகாக்கட்டும்.'' இவ்வாறு ஆசிமொழிகளைக் கூறியபின்னர், அகன்ற கண்களை உடையவரும் புகழ்பெற்றவருமான அவர், மலர்மாலைகளாலும் நறுமணப் பொருள்களாலும் அவ்வவற்றிற்குரிய தோத்திரங்களாலும் வழிபாடு நடத்தினார். (24–26)

சான்றோராகிய ஓர் அந்தணரால் உண்டாக்கப்பட்ட அக்னியில், இராமனின் நலனைப் பிரார்த்தித்து முறைப்படி ஆகுதிகள் கொடுக்கச் செய்தார். மாதரசியான கோசலை, நெய், வெண்மலர், சமித்துக்கள், வெண்கடுகு ஆகியவற்றை அக்னியில் போடுவதற்காகக் கொண்டு வந்து வைத்தார். அந்தப் புரோகிதர், மனச்சாந்தியும் உடல் நலமும் வேண்டி ஆகுதிகள் கொடுத்துவிட்டு, மிகுந்திருந்த ஹோமப் பொருள்களைக் கொண்டு, வெளி இடத்தில் செய்ய வேண்டிய பலி கர்மாவையும் செய்து முடித்தார். (27–29)

தேன், தயிர், அட்சதை, நெய் முதலியவற்றை அந்தணர்களிடம் கொடுத்து ஸ்வஸ்திவாசனம் கூறச் செய்து, இராமன் காட்டில் நலமுடன் இருக்க வேண்டும் என்பதற்காக, அதற்கான மந்திரங்கள் ஓதச் செய்தார். பிறகு கீர்த்திமிக்க இராமனின் அன்னையார், வேதப்புலமை பெற்ற அந்தப் புரோகிதருக்கு, அவர் விரும்பிய அளவு தட்சிணை கொடுத்துவிட்டு, இராகவனை நோக்கிப் பின்வருமாறு மங்கள ஆசீர்வாத மொழிகளைக் கூறினார்— (30,31)

''விருத்திராசுரனைக் கொன்றொழித்தவுடன் எல்லா தேவர்களாலும் வணங்கப்படுகிற தேவேந்திரனுக்கு எவ்வளவு மாட்சிமைமிக்க வாழ்த்துக்கள் கிடைத்தனவோ, அந்தப் பெருமை உனக்குக் கிடைப்பதாகுக! முன்பு ஒரு சமயத்தில் அமுதத்தைக் கொண்டு வருவதற்காகக் கருடன் சென்றபோது, அவனுடைய அன்னை வினதை மங்களமான சடங்குகளைச் செய்து, அவன் வெற்றியைப் பிரார்த்தித்தாளே – அந்த மங்களம் உனக்கு ஏற்படட்டும். (32,33)

அமிர்தம் உண்டானபோது அசுரர்களைக் கொன்ற இந்திரனுக்கு அவனுடைய தாயார் அதிதி எந்த மங்களத்தை அளித்தாளோ, அந்த மங்களம் உனக்கு உண்டாகட்டும். இராமனே! மூன்று காலடிகளால் மூன்று உலகங்களை அளந்தவரும், எல்லையில்லாத பிரபாவம் உடையவருமான ஸ்ரீமகாவிஷ்ணுவுக்கு எந்த மங்களம் உண்டாயிற்றோ, அந்த மங்களம் உனக்கு ஏற்படட்டும். ருதுக்கள், கடல்கள், தீபகற்பங்கள், வேதங்கள், உலகங்கள், திசைகள் ஆகிய சுபமங்களமானவை எல்லாம், மாவீரனே! உனக்கு மங்களத்தைக் கொடுக்கட்டும்.'' (34–36)

இவ்வாறு இராமனுடைய தலையில் கைவைத்து ஆசிமொழிகளைக் கூறி, தடங்கண் மாதரசியான அவர், இராமனின் திருவுடலில் சந்தனம் பூசி, விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் தெய்விக மூலிகையான விசல்யகரணியைக் கையில் (தாயத்தாகக்) கட்டி, ரட்சைக்குரிய மந்திரங்களை ஓதியும் அதற்கு வலிமை கூட்டினார். மனத்துயரத்திற்கு வசப்பட்டிருந்த அவர், வெளித் தோற்றத்திற்கு மகிழ்ச்சியோடு இருப்பதாகக் காட்டிக் கொண்டார். அதனால், மனத்தில் ஒட்டாமல் உதட்டளவில் குரல் தழுதழுக்க மந்திரங்களைக் கூறினார். (37–39)

மிகவும் புகழ்பெற்றவரான அவர், மைந்தனை இறுகக் கட்டியணைத்து, உச்சிமுகர்ந்து, ''குழந்தாய், இராமனே! காரியம் கைகூடியவனாக, மனத்தில் எவ்விதச் சஞ்சலமுமின்றி, உன் விருப்பப்படியே செல்வாயாக! குழந்தாய்! நீ ஈடுபட்டுள்ள செயலை நன்றாக நிறைவேற்றிவிட்டு, உடல் தளர்ச்சியில்லாமல் அயோத்திக்குத் திரும்பி வரும்போது, நான் ராஜபாட்டையில் நின்றுகொண்டு, உன்னைப் பார்த்து மகிழ்வேன். உதிக்கின்ற முழு நிலவைப் போன்ற முகத்துடன்

காட்டிலிருந்து திரும்பி வரும் உன்னை மனத்துயரமெல்லாம் ஒழிந்தவளாக, மகிழ்ச்சிப் பெருக்கால் ஒளிவீசும் முகம் உடையவளாக, நான் கண்குளிரப் பார்ப்பேன். (40–42)

இராமா! தந்தையின் வாக்கை நிறைவேற்றிவிட்டுக் காட்டிலிருந்து திரும்பி வந்து, சிம்மாசனத்தில் உட்கார்ந்திருப்பவனாக, உன்னை நான் நிச்சயம் பார்ப்பேன். (இப்போது சிம்மாசனத்தில் வீற்றிருப்பவனாக, உன்னைக் காண முடியாமல் போய்விட்டது. ஆனால், பதிநான்கு ஆண்டுகளுக்குப்பின் நிச்சயம் பார்ப்பேன் – என்றபடி.) ஐயனே! வனவாசத்திலிருந்து திரும்பி வந்து மன்னருக்குரிய ஆடை–ஆபரணங்கள் அணிந்து கொண்டு, என்னுடைய மருமகளின் விருப்பங்களையெல்லாம் நிறைவேற்று. இராகவா! என்னால் தொழுது பிரார்த்திக்கப்பட்ட சிவன் முதலான தேவகணங்கள், மகரிஷிகள், பூதங்கள், மகாசுரர்கள், உரகர்கள், திசைகள் ஆகியன காட்டில் வசிக்கும் உனக்கு ஏராளமாக நலன்களை அருள்வார்களாக!'' (43–45)

கண்ணீர் நிறைந்த கண்களையுடைய அவர், இவ்வாறாக ஆசீர்வாதம் செய்து காப்பு மந்திரங்களைக் கூறி, முறைப்படி நல்வாழ்த்துச் சடங்குகளை நிறைவேற்றி, இராகவனை வலம் வந்து பல தடவைகள் மார்புறத் தழுவிக் கொண்டார். இவ்வாறு தேவியார் வலம் வந்த பின்னர், அவருடைய திருவடிகளில் பல தடவை வணங்கிய கீர்த்திமான் இராமன், இயல்பான தன் ஆன்ம ஒளியால் பிரகாசித்துக் கொண்டு, சீதையின் மாளிகைக்குச் சென்றார். (46,47)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
இருபத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்தாறு

சீதா– இராமர் உரையாடல் (சீதைக்கு உபதேசம்)

பெற்றெடுத்தத் தாயாரால் யாத்திரை காலத்திற்குரிய மங்கள ஆசீர்வாதங்கள் செய்யப்பட்டு, கோசலையின் திருவடிகளில் பணிந்து வணங்கி, அறவழியில் தவறாது நிற்கும் அவர் காட்டிற்குப் போவதில் துடிப்புடன் இருந்தார். அரசகுமாரன் இராமன், குடிமக்கள் கூட்டம் கூட்டமாக நின்ற ராஜவீதியைப் பிரகாசப்படுத்திக் கொண்டு, தன் நற்பண்புகளால் அவர்களுடைய நெஞ்சத்தைக் கொள்ளை கொண்டார். (1,2)

விரதானுஷ்டானங்களைச் செய்து கொண்டிருந்த விதேகன் மகள் சீதைக்கு, (தன் மாளிகைக்கு வெளியே) நடந்து கொண்டிருக்கும் சம்பவங்கள் பற்றி எதுவும் தெரியாது. தன் கணவருக்கு இளவரசுப் பட்டம் சூட்டும் நிகழ்ச்சி மட்டுமே, அவள் இதயத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. அறநெறி பிறழாத மைதிலி, தேவபூஜைகளைத் தானே செய்து முடித்து உவகையுடன் இருந்தாள். மன்னர் குல மரபுகளை அறிந்திருந்த அவள், அரசகுமாரரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். (3,4)

இராமன், நன்றாக அலங்கரிக்கப்பட்டிருந்த, மனமகிழ்ச்சிமிக்க மக்களால் நிரம்பிய தன் அந்தப்புரத்திற்குள் நுழைந்தார். (இவர்களுக்கெல்லாம் மிகவும் வருத்தத்தைத் தரக்கூடிய செய்தியைச் சொல்லப் போகிறோமே? என்பதால்) சற்றே கூச்சமடைந்து தலையைத் தாழ்த்திக் கொண்டார். உள்ளே நுழைந்து கொண்டிருந்த அவரைக் கண்டதும் சட்டென்று எழுந்து, சற்றே உடல் நடுங்கியவளாக, சோகத்தில் வெந்து கொண்டிருப்பவராகவும் சிந்தையால் கலங்கிய புலனுடையவராகவும் உள்ள தன் கணவரைப் பார்த்தாள், வைதேகி. (5,6)

அறநெறி தவறாத அவர், அவளை நேரில் பார்த்ததும் மனத்திற்குள் சுழன்று கொண்டிருந்த சோகத்தை அடக்கிக் கொள்ள முடியாதவரானார். அதனால், அவருடைய துயரம் தானே

வெளிப்பட்டது. முகப்பொலிவு குன்றி, உடல் முழுவதும் வியர்த்து, சோகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் தவிக்கும் அவரைப் பார்த்து, துக்கத்தால் துவண்டு போன அவள், 'பிரபு! இந்தச் சமயத்தில் இது என்ன கோலம்?' என்று வினவினாள். (7,8)

"இராகவனே! இப்போது பிருகஸ்பதியைத் தேவதையாக உடைய பூச நட்சத்திரம் (எனவே, மங்களகரமான முகூர்த்தம்) என்று அறிஞர்களான வேதவிற்பன்னர்களால் கூறப்படுகிறது. (தங்களுக்குப் பட்டாபிஷேகம் ஆகியிருக்க வேண்டுமே?) தாங்கள் ஏன் மனமுடைந்தவராகக் காணப்படுகிறீர்கள்? அத்துடன், பேரழகு படைத்த தங்கள் முகம், நீர் நுரைபோல் வெண்மையானதும், நூற்றுக்கணக்கான கம்பிகளைக் கொண்டதுமான (அரசச் சின்னமான) கொற்றக்குடையால் மறைக்கப்படவில்லை. (9,10)

அகன்ற தாமரையைப் போன்ற கண்களையுடைய தங்கள் திருமுகம், சந்திரனைப் போலும் ஹம்ஸத்தைப் போலும் ஒளிபடைத்த, விலைமதிக்க முடியாத இரண்டு வெண்சாமரங்களால் விசிறப்படாமல் இருக்கிறது. ஆணேறு போன்றவரே! புகழுரை கூறுவதில் வல்லவர்களான சூதர்கள், வம்சாவளியின் சிறப்பைக் கூறும் மாகதர்கள், தோத்திரம் செய்யும் வந்திகளும் மனம் மகிழ்ந்து, தங்களுக்கு முன்பாக இப்போதுகூட வராமலிருக்கிறார்களே? வேதங்களைக் கரைகண்ட அந்தணர்கள், சாஸ்திர முறைப்படி, புனித தீர்த்தங்களுடன் கலந்த தேன், தயிர் ஆகியவற்றைத் தங்கள் சிரசில் அபிஷேகம் செய்ததற்கான அடையாளமே காணப்படவில்லை. (11–13)

அமைச்சர்கள், படைத்தலைவர்கள், நன்றாக அலங்காரம் செய்து கொண்டு விளங்கும் செல்வந்தர்கள், நாட்டுப்புற–நகர்ப்புற மக்கள் தங்களைப் பின்தொடர்ந்து வரவில்லையே, ஏன்? வேகமாகச் செல்பவைகளும் பொன் அணிகளால் அழகு செய்யப்பட்டவையுமான நான்கு குதிரைகள் பூட்டிய, தனிச்சிறப்பு வாய்ந்த புஷ்பரதம் தங்களுக்கு முன்னதாக வரவில்லையே, ஏன்? வீரரே! கருமையான மேகங்கள் சூழ்ந்த மலை போன்றதும், நல்ல குறிகளை உடையதுமான பட்டத்து யானை, தாங்கள் வெளியே புறப்படும்போது, தங்களுக்கு முன்பாக வருவது மரபு. இப்போது அது காணப்படவில்லையே? (14–16)

இனிய தோற்றமுடையவரே! தங்களோடுகூட (தாங்கள் அமர்வதற்காக) வீரர்கள் எடுத்துக் கொண்டு வரும் தங்க வேலைப்பாடுகள் செய்யப்பட்ட பத்ராஸனம் (என்னும் உயர்ந்த இருக்கையை) நான் காணவில்லையே? தங்களுடைய பட்டாபிஷேகத்திற்கான முன்னேற்பாடுகள் முடிந்து, எல்லாம் ஆயத்தமாக இருக்கும் இந்த வேளையில், தங்களுக்கு என்ன ஆயிற்று? இதுவரை இவ்வாறு முகவாட்டத்துடன் தங்களை, நான் பார்த்ததே இல்லை. (இப்போது) முகத்தில் மகிழ்ச்சியின் சாயலே இல்லை." (17,18)

இப்படியெல்லாம் புலம்பிக் கொண்டிருந்த அவளை நோக்கி ரகுநந்தனர் கூறினார்— "சீதா! நம் எல்லோரின் வணக்கத்திற்குரிய தந்தையார், இன்று என்னை வனத்திற்கு அனுப்புகிறார். உயர்ந்த குலத்தில் தோன்றியவளே! அறத்தின் நுட்பங்களை அறிந்தவளே! அறவழியில் நடப்பவளே! ஜானகி! எனக்கு இந்த நிலை எப்படி ஏற்பட்டது? என்பதை வரிசையாகச் சொல்கிறேன், கேள். சொன்ன சொல் தவறாத மன்னரும், என் தந்தையுமான தசரதரால், என்னுடைய (சிறு) தாயார் கைகேயிக்கு முன்னர் ஒரு காலத்தில் இரண்டு முக்கியமான வரங்கள் கொடுக்கப்பட்டன. (19–21)

மன்னரின் முயற்சியால் எனக்கு இளவரசுப் பட்டம் சூட்டுவதற்கான ஏற்பாடுகள் முடிவடையும் இந்த நிலையில், முன்னர் கொடுத்த வாக்குறுதியை நினைவுப்படுத்தி, தருமத்தின் அடிப்படையில் அவரால் வெற்றிகொள்ளப்பட்டார். என் தகப்பனாரால் இளவரசனாக பரதன் நியமிக்கப்பட்டிருக்கிறான். நான், பதிநான்கு ஆண்டுகள் தண்டகாரண்யத்தில் வசிக்க வேண்டும். ஆகவே நான், மனிதப்பூண்டே இல்லாத காட்டிற்குச் செல்வதற்கு முன் உன்னிடம் சொல்லிக் கொண்டு போவதற்காக, இங்கே வந்தேன். (நான் சென்றபின்,) பரதனிடம் பேசுகிறபோது, ஒருபோதும் நீ, என்னைப் பற்றி உயர்வாகப் பேசக்கூடாது. (22–24)

மகத்தான செல்வச் செழிப்போடு விளங்கும் ஆண்கள், பிறரைப் பற்றி உயர்வாகப் பேசப்படுவதைச் சகித்துக் கொள்ள மாட்டார்கள். அதனால், பரதன் முன்னிலையில் என்னுடைய குணங்களை வாழ்த்திப் பேசாதிருக்க வேண்டும். நீ, எந்தக் காலத்திலும் அவனிடமிருந்து சிறப்பான சலுகைகளை எதிர்பார்க்கக் கூடாது. அவனுக்கு அனுகூலமாக இருந்தால்தான் அவனருகில் இருக்க முடியும். சீதே! பழமையான இந்த நாட்டின் இளவரசுப் பதவியை, மன்னர் அவனுக்கு அளித்திருக்கிறார். எனவே, அவனது மனம் உகக்குமாறு, நீ நடந்து கொள்ள வேண்டும். குறிப்பாக, மன்னர் மனம் குளிரும்படி நடந்துகொள்ள வேண்டும். (25–27)

தந்தையின் வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக, நான் இப்போதே காட்டிற்குப் போகப் போகிறேன். நல்மனம் கொண்டவளே! தைரியமாக இரு. கல்யாணி! முனிவர்கள் வசிக்கும் காட்டிற்கு நான் சென்றபின், விரத–உபவாசங்களில் முழு மனத்தையும் செலுத்தி, இங்கே இருப்பாய். காலையில் எழுந்தவுடன் பரம்பரை வழக்கப்படி தேவபூஜைகள் செய்துவிட்டு, என்னுடைய தந்தையும் மன்னருமான தசரதரை வணங்கவேண்டும். சோகத்தால் மனம் புண்பட்டிருக்கும் என்னுடைய வயோதிகத் தாயார் கோசலை, தருமத்தையே முன்னிறுத்தி நடக்கும் உன்னால் கௌரவிக்கத் தக்கவர். (28–31)

மீதியுள்ள என்னுடைய அன்னைமார்கள் எல்லோரையும் நீ நமஸ்கரிக்க வேண்டும். ஏனென்றால், என்னுடைய தாயார்கள் எல்லோரும் ஒட்டுறவு, தொண்டுகளை ஏற்றுக்கொள்ளுதல், தமது தேவைகளைத் தயக்கமில்லாமல் கேட்டுப் பெறுதல் என்னும் மூவகையிலும் சமமானவர்களே. பரத–சத்ருக்னர்கள் என் உயிரினும் மேம்பட்டவர்கள். அதனால், அவ்விருவரும் அதிக பாசத்துடன் சகோதரர்–புதல்வர் போல பார்க்கத் தக்கவர்கள். (32,33)

பரதனுக்குப் பிரியமில்லாத காரியத்தை ஒருபோதும் செய்யக்கூடாது. ஏனென்றால், அவன்தான் இந்த நாட்டிற்கும் குலத்திற்கும் இறையாண்மை உடைய மன்னன். அவர்களுக்குப் பிடித்தமான முறையில் நடந்து கொள்வதாலும், மிகுந்த கவனத்துடன் சேவை செய்வதாலும் அரசர்கள் திருப்தி அடைகிறார்கள்; நேர்மாறாக நடந்து கொண்டால் கோபம் கொள்கிறார்கள். தனக்கு அனுகூலமில்லாததைச் செய்யும் சொந்த மகனையே கைவிட்டுவிடுவார்கள்; தனக்குகந்தபடி நடப்பவன் வேற்றாளாக இருந்தாலும் ஏற்றுக் கொள்வார்கள். (34–36)

ஆகவே, மங்களமானவளே! மன்னன் பரதனின் மனம் கோணாதபடி நடந்து கொண்டு அறத்தில் ஈடுபட்டவளாக, நன்மையே பயக்கும் விரதங்களை அனுஷ்டித்துக் கொண்டு, இங்கேயே நீ இரு. பேரழகியே! நான், அடர்ந்த காட்டிற்குப் போகப் போகிறேன். நீ, இங்கேதான் வசிக்கவேண்டும். உன் நடவடிக்கைகளால் யாருக்கும் எவ்விதக் கஷ்டமும் ஏற்படாமல் இருக்கும் வகையில், என் ஆணையை ஏற்று நடந்து கொள்.'' (37,38)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
இருபத்தாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்தேழு

கற்பின் இலக்கணம்

இவ்வாறு இராமன் கூறியதும், அன்பு செலுத்துவதற்கு உரியவளும், இனிமையாகப் பேசுபவளுமான சீதாதேவி, அந்த அன்பின் காரணமாகவே கோபம் கொண்டவளாகக் கணவரைப் பார்த்துப் பின்வருமாறு கூறினாள்— ''புருஷோத்தமரே! இராமா! என்ன இது? தாங்களாகவே நிச்சயித்துவிட்ட ஒரு முக்கியமான விஷயத்தை, மிக எளிதாகச் சொல்கிறீர்களே!

உங்கள் சொற்களைக் கேட்டு, எனக்கு நகைப்புத்தான் வருகிறது! நற்குலத்தவரே! தாய், தந்தை, சகோதரன், மைந்தன், நாட்டுப்பெண் ஆகியோர் தத்தம் புண்ணியப் பயனிற்கேற்ப சுக–சௌக்கியங்களைப் பெற்று, தத்தம் கர்மவினையை அனுபவிக்கிறார்கள். (1–3)

ஆணேறு போன்றவரே! மனைவி ஒருத்தி மட்டுமே கணவனின் பாக்கியத்தில் பங்கு பெறுகிறாள். அதனால், நானும் காட்டில் வசிக்கவேண்டும் என்று ஆணையிடப்பட்டதாகிறது. இவ்வுலகிலிருந்து சென்றபின் தந்தையோ, புத்திரனோ, தெய்வமோ, தாயாரோ, தோழிகளோ உதவ மாட்டார்கள்; பெண்களுக்குக் கணவர்தான் ஒரே கதி (போக்கிடம்). இராகவா! தாங்கள் இப்போதே காட்டிற்குப் புறப்பட்டுவிட்டீர்கள் என்றால், நான் தங்களுக்கு முன்பாக (பாதையிலுள்ள) புற்களையும் முட்களையும் (மிதித்து அகற்றி,) மென்மைப்படுத்திக் கொண்டு போவேன். (4–6)

பொறாமையையும் கோபத்தையும் துறந்து, குடித்து மீதம் வைக்கப்பட்ட தண்ணீரையும் உடன் கொண்டு செல்வதுபோல என்னையும் அழைத்துச் செல்லவேண்டும். வீரரே! நான் எந்தக் குற்றமும் செய்யவில்லையே! (பெண்ணாகிய இவள் காட்டிற்கு வருவேன் என்று பிடிவாதம் பிடிக்கிறாளே? என்பதால், பொறாமை. என் சொல்லுக்கு அடங்கவில்லையே? என்பதால், கோபம். ஒரு பாத்திரத்திலிருந்து தண்ணீர் குடித்துவிட்டு மிகுந்திருப்பதை, 'அடுத்த வேளைக்கு உபயோகப்படும்' என்பதற்காக, எடுத்துச் செல்வது மரபு அல்ல. ஆனால், பாலைவனத்தில் போகும்போது, அப்படிச் செய்தால் அது குற்றமாகாது – என்றவாறு.) (7)

மாபெரும் மாளிகையின் உப்பரிகையில் (காற்று வாங்கிக் கொண்டு) இருப்பது, விமானங்களில் சஞ்சரிப்பது அல்லது அணிமா முதலிய சித்திகளைப் பெற்று ஆகாயவெளியில் பறந்து செல்வது போன்ற அரிய, பெரிய வாழ்க்கையைக் காட்டிலும், எந்த நிலையில் இருந்தாலும் கணவருடைய திருவடி நிழலில் இருப்பதே மிக உயர்வானது. நான் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? என்பதை என் தாயும் தந்தையும் பற்பலவிதமாக, பல தடவைகள் அறிவு புகட்டியுள்ளார்கள். எனவே, இப்போது, 'நான் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும்?' என்று சொல்லித்தர வேண்டியதில்லை. (8,9)

மனித நடமாட்டமில்லாத, அடர்த்தியான, பல்வகை விலங்குக் கூட்டங்கள் நிறைந்த, புலி–ஓநாய்கள் வாழ்கின்ற காட்டிற்கு(த் தங்களுடன்) நான் வருவேன். என்னுடைய தந்தையின் அரண்மனையில் சுகமாக இருந்ததைப் போலவே, காட்டிலிருக்கும் போது மூன்றுலக போகங்களைப் பற்றிச் சிந்திக்காமல், கணவருக்குப் பணிவிடை செய்வதையே கருத்தில் கொண்டு வசிப்பேன். மாவீரரே! நியமங்களைக் கைக்கொண்டு புலன்களை வசத்தில் வைத்து, ஒழிவில்லாமல் தங்களுக்குச் சேவை செய்து கொண்டு, (பல்வகை மலர்கள், கனிகளின்) மனங்கவரும் மணத்தைப் பரப்பும் காட்டுப் பிரதேசங்களில் தங்களுடன் ஆனந்தமாக இருப்பேன். (10–12)

தன்மானம் காப்பவரே! காட்டில் (தங்களிடம் சரணாகதி அடைந்த) மற்ற மக்களைப் பேணவும் தங்களால் முடியும் என்னும்போது, என்னைக் காப்பாற்றுவது பெரிய காரியமா, என்ன? பெரும்பேறு பெற்றவரே! சந்தேகமில்லாமல் இப்போது நான் தங்களுடன் காட்டிற்கு வருவேன். இந்த முடிவிலிருந்து என்னைத் தடுத்து நிறுத்துவதற்கு எதனாலும் முடியாது. தினந்தோறும் பழங்களையும் கிழங்குகளையும் புசித்துக் கொண்டிருப்பேன். (அறுசுவை உணவு புசித்தவளால் இப்படி இருக்கமுடியுமா? என்று) சந்தேகப்பட வேண்டாம். தங்களுடன் கூடவே இருக்கின்ற நான், எவ்விதத் துன்பத்தையும் தரமாட்டேன். (13–15)

தங்களுக்கு முன்னால் செல்வேன். தாங்கள் போஜனம் செய்தபின் மிகுந்திருக்கும் உணவை உண்பேன். பேரறிவாளரான பிரபு! தங்களுடன் நதிகள், மலைகள், குட்டைகள், மரச்சோலைகள் ஆகிய எல்லா இடத்தையும் அச்சம் என்பதை அறியாமல் ஆனந்தமாகச் சுற்றிப் பார்க்க விரும்புகிறேன். வீரரான தங்களுடன்கூட அன்னப்பறவைகள், நீர்க்கோழிகள் நிறைந்து, அழகாக மலர்ந்து விளங்கும் தாமரைத் தடாகங்களைப் பார்க்க விரும்புகிறேன். தருமானுஷ்டானங்களைக்

கடைப்பிடிக்கும் நான், அங்குள்ள நீர்நிலைகளில் நாள்தோறும் நீராடுவேன். விசாலமான கண்களை உடையவரே! மிகவும் மகிழ்ச்சியில் ஆழ்ந்தவளாய், தங்களுடன்கூட உற்சாகமாகக் காலம் கழிப்பேன். (16–18)

இவ்வண்ணம் தங்களோடுகூட, 'கெடு இன்னும் முடியவில்லையே?' என்று அலுத்துக் கொள்ளாமல் நூறாயிரம் ஆண்டுகள் கழிந்தாலும் நான் அறியமாட்டேன். எனக்கு இதைக்காட்டிலும் தேவலோகம் மேம்பட்டதல்ல. இராகவனே! நீங்கள் இல்லாமல், நான் மட்டும் சுவர்க்கத்தில் வாழும் வாய்ப்பு கிடைத்தாலும், புலிநிகர் வீரரே! நான் அதை விரும்பமாட்டேன். வனவிலங்குகள், வானரங்கள், யானைகள் நிறைந்த, புகுந்து செல்வதற்கரிய காட்டிற்கு நான் வருவேன். மனக்கட்டுப்பாட்டுடன் இருந்துகொண்டு, தங்கள் திருவடிகளையே தஞ்சமடைந்து, எப்படி என் தந்தையின் வீட்டில் சௌக்கியமாக இருப்பேனோ, அப்படியே காட்டில் வாழ்வேன். (19–21)

தங்களைத் தவிர வேறு எதையும் மனத்தால் நினைக்காதவளும், தங்களுக்கு அனுகூலமாகவே எப்போதும் சிந்திப்பவளும், தங்களிடமிருந்து பிரிவு ஏற்பட்டால், உடனே உயிரை விடுவது என்று நிச்சயித்திருப்பவளுமான என்னை, என் பிரார்த்தனையை உள்ளமுவந்து அங்கீகரித்து, கூடவே அழைத்துச் செல்லுங்கள். நான், தங்களுடன் இருப்பதனால் தங்களுக்கு எந்தச் சுமையும் ஏற்படாது.'' அறத்தின் அன்பரும், உத்தம புருஷருமாகிய அவர், இவ்வாறாக வேண்டிக்கொள்ளும் சீதாப்பிராட்டியைத் தன்னுடன் அழைத்துச் செல்ல விரும்பாதிருந்தார். வனவாசத்திலிருந்து அவள் மனத்தைத் திருப்புவதற்காக, அங்குள்ள பலவகையான துன்பங்கள் பற்றி, சீதையிடம் எடுத்துக் கூறத் தொடங்கினார். (22,23)

**ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
இருபத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.**

ஸர்க்கம் : இருபத்தெட்டு

காட்டில்தான் எத்தனை துன்பங்கள்!

அறநெறியில் பிடிப்பு உள்ளவரும், அறவொழுக்கம் அறிந்தவருமான அவர், காட்டில் ஏற்படக்கூடிய துன்பங்களை மனத்தில் கொண்டு, அவளை (இவ்வாறாகப் பேசிய சீதையை)த் தன்னுடன் அழைத்துப் போகும் எண்ணத்தைக் கொள்ளவில்லை. கண்ணீர் விட்டுக் கலங்கிய கண்களோடிருக்கும் அவளுக்கு மறுபடியும் சமாதானம் கூறி, அறமூர்த்தியாகிய அவர், காட்டிற்குப் போகும் எண்ணத்திலிருந்து அவளைத் திருப்புவதற்காகப் பின்வருமாறு கூறினார்— (1,2)

''பிராட்டியே! நீ உயர்ந்த குலத்தில் தோன்றியவள்; எப்போதும் அறவொழுக்கத்தில் உறுதியாக ஈடுபட்டிருப்பவள். (அதனால்,) இங்கிருந்தபடியே அறச்செயல்களைக் கடைப்பிடி. அதனால், என் மனம் நிம்மதியாக இருக்கும். சீதே! தேகபலம் குறைந்தவளே! நான், உனக்கு என்ன சொல்கிறேனோ, அதன்படியே நீ நடக்க வேண்டும். காட்டிலோ துன்பங்கள் ஏராளம். அவைகளைப் பற்றிச் சொல்கிறேன், கேள். சீதே! வனத்தில் வசிக்க வேண்டும் என்ற எண்ணத்தைத் துறந்துவிடு. காடு மனித சஞ்சாரமில்லாதது என்றும், பலவகையான கஷ்டங்கள் நிறைந்தது என்றும் சொல்லப்படுகிறது. (3–5)

உனக்கு நலன் செய்யவேண்டும் என்ற எண்ணத்தால்தான் நான் இவ்வாறு கூறுகிறேன். காட்டில் ஒருபோதும் சுகம் என்பதையே நான் கேட்டறியேன். எப்போதும் துக்கம் – துன்பம்தான். மலையிலிருந்து கொட்டும் அருவிகளின் பேரொலி, மலைக்குகைகளில் வாழும் சிங்கங்களின் உறுமல் – இவைகளைக் கேட்பதற்கே அச்சமாக இருக்கும். சீதே! காட்டில் எப்போதும் கஷ்டம்தான்! மனித நடமாட்டமே இல்லாத காட்டில் அச்சமில்லாமல் கும்மாளமிட்டுக்

கொண்டிருக்கும் மதம்பிடித்த பெரும் விலங்குகள், (நம்மைப்) பார்த்தவுடனேயே சீறிப் பாய்ந்து கொண்டு ஓடிவரும். சீதே! காட்டில் எப்போதும் கஷ்டம்தான்! (6–8)

நதிகளில் முதலைகள் இருக்கும்; சேறு அதிகமாக இருக்கும்; மதம் கொண்ட யானைகளாலும்கூட கடந்து செல்ல முடியாதவை. ஆகவே, காட்டில் எப்போதும் பயங்கரமான துன்பம்தான்! காட்டுப் பாதையில் முள் நிறைந்த கொடிகள் படர்ந்திருக்கும்; காட்டுக் கோழிகள் இரைச்சலிட்டுக் கூவும்; குடி தண்ணீர் கிடைப்பது அரிது; மிகவும் அடர்த்தியாகவும், நுழைந்து செல்ல முடியாதபடியும் இருக்கும்; காட்டில் எப்போதும் கஷ்டம், கஷ்டமேதான்! பகலில் வழி நடந்து களைத்துப் போனவன், இரவில் மரத்திலிருந்து தாமாக தரையில் உதிர்ந்து கிடக்கும் சருகுகளையே பாயாகக் கொண்டு உறங்கவேண்டும். (உடல் களைப்பு நீங்கும்படியாக, கட்டில்–மெத்தைகள் கிடைக்காது.) சீதே! காட்டில் எப்போதும் கஷ்டமேதான்! (9–11)

மனத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு, மரங்களிலிருந்து விழும் பழங்களையே பகலும் இரவும் புசித்துத் திருப்தி கொள்ள வேண்டியது. சீதே காட்டில் எப்போதும் துன்பம்தான்! மிதிலை மன்னன் மகளே! (உயிரைத் தக்க வைத்துக் கொள்ளும் அளவுக்கு மட்டுமே உணவு உட்கொண்டு) முடிந்தவரையில் உண்ணாநோன்பு இருக்க வேண்டும். மரவுரி ஆடைதான் உடுத்திக் கொள்ள வேண்டும்; ஜடாமுடி போட்டுக் கொள்ள வேண்டும். தேவதைகளுக்கும், பிதிரர்களுக்கும், அவ்வப்போது வந்து சேரும் அதிதிகளுக்கும் குல வழக்கப்படி, நாள்தோறும் உபசார–மரியாதைகள் செய்யப்பட வேண்டும். (12–14)

(ஆசார நியமங்களைக் கடைப்பிடிக்கும் ஒருவன்) நாள்தோறும் மூன்று தடவைகள், அதாவது, குறிப்பிட்ட அந்தந்தக் காலங்களில் நீராட வேண்டும். ஆகவே, காடு மிகவும் கஷ்டத்தைக் கொடுக்கக் கூடியது. இளம்பெண்ணே! தானே மலர்களைக் கொண்டுவந்து, தெய்வங்களை நிறுவியுள்ள மேடைகளில் மறைமுறைப்படி பூஜை செய்யப்பட வேண்டும். ஆகவே, காட்டில் கஷ்டம்தான் அனுபவிக்க வேண்டும். காட்டுப் பாதையில் செல்பவர்கள் ஒவ்வொரு நாளும் உண்பதற்கு அவ்வப்போது என்ன கிடைக்கிறதோ, அதையே புசித்து விருந்து உண்ட மகிழ்ச்சியை அடையவேண்டும். ஆகவே, காட்டில் (உணவு கிடைப்பது) கஷ்டமான கஷ்டம்! (15–17)

இவ்விடத்தில் (காட்டில்) பெருங்காற்று வீசும்; கருமையான இருட்டு சூழ்ந்துகொள்ளும்; (நடந்து, அலைந்து, திரிவதால்) பெரும் பசி உண்டாகும். எப்போதும் பெரிய பெரிய ஆபத்துக்கள் தோன்றிக் கொண்டே இருக்கும். ஆகவே, காட்டில் கஷ்டத்தைத் தவிர வேறெதுவும் இல்லை. நாயகி! பெருத்த உடல் கொண்ட அநேக மலைப்பாம்புகள் (பாதையெங்கும்) தரையில் கர்வத்தோடு ஊர்ந்து கொண்டிருக்கும். ஆகவே, காடு என்பது கஷ்டங்களைத் தருவது. ஆற்றங்கரைகளில் வசித்துக் கொண்டு, ஆற்றைப் போலவே வளைந்து வளைந்து ஓடும் பாம்புகள், பாதைகளை அடைத்துக் கொண்டு படுத்திருக்கும். ஆகவே, வனவாசம் என்பது மிகவும் கஷ்டத்தைத் தரக்கூடியது. (18–20)

கண்மணி! மின்மினிப் பூச்சிகள், தேள்கள், புழுக்கள், காட்டு ஈக்கள், கொசுக்கள் முதலியன எப்போதும் தொல்லை தந்து கொண்டிருக்கும். ஆகையால், காடு முற்றிலும் துக்ககரமானது. தேவி! காட்டில் முள் மரங்களும், (அறுக்கும் தன்மையுடைய) குசம், நாணல் போன்றவைகள் எப்போதும் நுனியை அசைத்துக் கொண்டிருக்கும். (எந்த நேரத்திலும் நம்மை காயப்படுத்தி விடலாம்.) ஆகவே, காடு துன்பமயமானது. காட்டில் வாழ்க்கை நடத்துகிறவனுக்குச் சரீர சிரமங்கள் பலப்பல; ஆபத்துக்களும் பலவகையாக ஏற்படும். எனவே, காடு என்றாலே துன்பம்தான்! (21–23)

அங்கு கோபம்–ஆசைகளை விட்டுவிட்டு தவம் செய்வதிலேயே மனத்தைச் செலுத்த வேண்டும். அஞ்சத்தக்கவைகளைக் கண்டும் அஞ்சாமலிருக்க வேண்டும். ஆகவே, காடு

என்றால் எப்போதுமே கஷ்டம்தான்! ஆதலால், காட்டிற்குப் போகவேண்டும் என்ற எண்ணத்தை மாற்றிக் கொள். காட்டு வாழ்க்கை உனக்கு ஒவ்வாதது. இது விஷயமாக, நன்மை–தீமைகளை நன்றாக ஆலோசித்துப் பார்த்து, காடு மிகவும் ஆபத்துக்களைத் தரக்கூடியது என்பதைக் கண்டு கொண்டேன்.'' (24,25)

உயர் பண்புகளின் இருப்பிடமான இராமனுக்குத் தன்னையும் காட்டிற்கு அழைத்துச் செல்லும் எண்ணம் ஏற்படவில்லை என்பதைப் புரிந்துகொண்டு, அவள் தாங்கமுடியாத துயரத்துடன் இராமனிடம் பின்வருமாறு சொன்னாள். (26)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
இருபத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்தொன்பது

காட்டிற்கு அழைத்துப் போகும்படி, சீதை மன்றாடுதல்

இராமனுடைய உரையைக் கேட்ட சீதை, மிகவும் மனவேதனை அடைந்து கண்ணீர் பெருக மெலிந்த குரலில் இவ்வாறு கூறினாள்— ''காட்டில் வசிப்பதில் என்னென்ன கஷ்டங்கள் இருக்கின்றன என்று தாங்கள் கூறியதனைத்தும், தாங்கள் என்மேல் கொண்டுள்ள பேரன்பினால் சாதகமாகவே இருக்கும் என்பதை அறிந்து கொள்ளுங்கள். மான்கள், சிங்கங்கள், யானைகள், புலிகள், சரபங்கள், கவரிமான்கள், கருமையான மான்கள் மற்றும் காட்டில் உலவும் மற்ற விலங்குகளனைத்தும், இதற்கு முன் பார்த்திராத பராக்கிரமப் பொலிவுள்ள தங்களைப் பார்த்தவுடனேயே திரும்பிப் போய்விடும். அச்சம் கொள்ளவேண்டிய இடத்தில் எல்லோரும் அச்சப்படுவார்கள்தானே? (1–4)

இராமா! பெற்றோர்களின் கட்டளைப்படி, தங்களுடன் நானும் செல்லத்தான் வேண்டும். தங்களைப் பிரிந்திருக்க நேருமேயானால், இப்போதே உயிரை விட்டுவிட வேண்டியதுதான். அன்பரே! நான் தங்களுடனேயே இருந்தால் தேவர்களுக்குத் தலைவனான இந்திரன்கூட, தன் வலிமைக் கொழுப்பினால், என்னைத் தாக்குவதற்குத் துணியமாட்டான். இராமனே! 'ஒரு நற்குலப் பெண்மணி, தன் கணவரை விட்டுப் பிரிய நேர்ந்தால், உயிரைத் தாங்கிக் கொண்டிருக்க மாட்டாள்' என்று, தாங்களே எனக்கு விளக்கமாகக் கூறியிருக்கிறீர்கள். (5–7)

பேரறிவாளரே! (காட்டில் வசிப்பது மிகவும் துக்ககரமானது என்று தாங்கள் கூறியது சரியானதாகவே இருக்கட்டும்.) முன்னர், நான் என் தந்தையின் வீட்டில் இருந்தபோது, 'இந்தப் பெண் ஒரு சந்தர்ப்பத்தில் அவசியம் காட்டில் வசிக்கப் போகிறாள்' என்று நான்மறையாளர் சொல்லக் கேட்டிருக்கிறேன். மகாபலம் கொண்டவரே! சோதிடநூல் வல்லுநர்களான அந்தணர்கள் வாயிலாக, இத்தகைய சொற்களைக் கேட்டு, வனவாசத்தில் உற்காசமுடையவளாக, நான் எப்போதும் இருந்து கொண்டிருக்கிறேன். அது என்னால் விதிப்பயனாய் அனுபவிக்கப்பட வேண்டியதல்லவோ? அதை எப்படி மாற்றி அமைக்க முடியும்? ஆகவே, (ஜாதக ரீதியாக வனவாசம் செய்ய வேண்டிய) நான், கணவரான தங்களுடனே அங்கே வருவேன். (8–10)

அந்தணர்களுடைய வாக்கு உண்மையாகட்டும். அதற்கேற்ற காலமும் வந்துவிட்டது. தங்களுடன் செல்வதன் மூலம் வினைப்பயனை அனுபவித்ததாகவும் ஆகிவிடும். வீரரே! வனவாசத்தில் ஆபத்துக்கள் பலவிதமாக வந்து சேரும் என்பதை நான் அறிவேன். ஆனால், ஐம்பொறிகளையும் மனத்தையும் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்காதவர்களுக்குத்தான் ஆபத்துக்கள் வரும். நான், என் தந்தையின் இல்லத்தில் கன்னிகையாக இருந்தபோதே, சாதுக்களின்

நெறியைக் கடைப்பிடித்து, பிச்சை ஏற்றுக் காலம் கழிக்கும் ஒரு மாது, என் அன்னையின் எதிரிலேயே, 'எனக்கு வனவாசம் உண்டு' என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். (11–13)

(விவாகமாகி அயோத்திக்கு வந்த பின்னர்) 'நாம் காட்டிற்குச் சென்று சிலகாலம் ஏகாந்தமாகக் காலம் கழிப்போம்' என்று நான் வேண்டிக் கொண்டபோதெல்லாம், தாங்கள் அதற்குச் சம்மதித்திருக்கிறீர்கள். இராகவனே! தங்களுக்கு மங்களமுண்டாகட்டும். காட்டிற்குப் போவதற்கு முன்பே தங்களிடம் அனுமதி பெற்றுவிட்டேன்! காட்டில் வாழப்போகும் சூரராகிய தங்களுக்குப் பாதசேவை செய்வதுதான் எனக்குப் பிடித்த விஷயம். தூய சிந்தை உடையவரே! பேரன்பின் காரணமாகக் கணவராகிய தங்களைப் பின்பற்றிச் செல்வதன் மூலம் நான் குற்றமற்றவளாக ஆவேன்; கணவர் (தாங்கள்) தான் என் தெய்வம்! (14–16)

கடுமையான நோன்புகளைக் கடைப்பிடிக்கும் அந்தணர்கள், 'தங்களையே பின்பற்றுவதால் பரலோகத்திலும் எனக்கு நன்மை ஏற்படும்; தங்களுடன் கூடவே இருப்பேன்' என்று புண்ணியமான வேதங்களில் சொல்லப்பட்டிருப்பதாகக் கூறக் கேட்டிருக்கிறேன். இவ்வுலகில், ஒரு பெண் பெற்றோர்களால் தன் குல ஆசாரப்படி, எவருக்குத் தாரை வார்த்துக் கொடுக்கப் பட்டாளோ, அவள், உயிர் நீங்கிய பின்னரும் அவனுடையவளே! இத்தகைய காரணங்களால் நான் தங்களுடைய மனைவி; நல்லொழுக்கம் உடையவள்; கற்பைக் காப்பாற்றுபவள். அப்படியிருக்கும்போது எந்தக் காரணத்தால் என்னை அழைத்துப் போவதற்குத் தாங்கள் திருவுள்ளம் கொள்ளாதிருக்கிறீர்கள்? (17–19)

காகுத்தரே! நான், தங்கள் அடியாள்; கற்புடையவள்; இரங்கத்தக்க நிலையில் இருப்பவள்; சுக–துக்கங்களைச் சமமாகப் பகிர்ந்து கொள்பவள்; இன்பம்–துன்பம் இரண்டையும் ஒரே மாதிரியாகப் பார்ப்பவள். அப்படிப்பட்ட என்னைத் தாங்கள் அழைத்துப் போக வேண்டும். மிகவும் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும் என்னைக் காட்டிற்கு அழைத்துப் போக விரும்பாத பட்சத்தில், உயிரைப் போக்கிக் கொள்வதற்காக விஷம், நெருப்பு அல்லது தண்ணீர் – இவைகளில் ஏதேனும் ஒன்றுக்கு ஆளாகிவிடுவேன்." (20,21)

இவ்வாறாக, பலவிதமாகக் காட்டிற்குப் போவது குறித்து அவள், அவரிடம் மன்றாடிக் கேட்டுக் கொண்டாள். ஆனால், பெருந்தோளரான அவர் (இராமன்), மனித சஞ்சாரமற்ற காட்டிற்கு அழைத்துச் செல்வதற்கு உடன்படவில்லை. இவ்வாறு சொல்லிவிட்டுத் தன் கண்களிலிருந்து பெருகிவரும் வெம்மையான கண்ணீர்ப் பெருக்கினால் பூமியை நனைத்துக் கொண்டு, மிக்க சோகத்தில் ஆழ்ந்து நின்றாள். மனோதைரியம் கொண்ட அவர், அப்போது (காட்டிற்குப் போகும்) அந்த எண்ணத்திலிருந்து அவளை மாற்றுவதற்காக பெரும் சினத்தில் மூழ்கியிருக்கும் வைதேகியைப் பலவகையிலும் ஆறுதல் கூறி அமைதிப்படுத்த முயன்றார். (22–24)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
இருபத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பது

'சரி, காட்டிற்கு வா!'

இராமனால் பலவித ஆறுதல் வார்த்தைகள் கூறப்பட்ட பின்னரும், வனவாசம் செய்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்த ஜனகரின் புத்திரியான மைதிலி, கணவரைப் பார்த்து மறுபடியும் இவ்வாறு கூறினாள். சீதை மிகவும் அச்சம் அடைந்திருந்தாள். விசாலமான மார்பினையுடைய இராகவனிடம் கொண்டிருந்த பேரன்பினாலும், சுயகௌரவ உணர்ச்சியினாலும், அவரை மறுத்துக் கூறுவதைப் போலப் பேசினாள்— (1,2)

''என்னுடைய தந்தையார் மிதிலை மன்னரான வைதேகர், இராமா! 'ஆண் உருவத்தில் இருக்கும் ஒரு பெண்ணையல்லவா மாப்பிள்ளையாக அடைந்திருக்கிறேன்' என்று எப்போதாவது எண்ணிப் பார்த்திருப்பாரா? 'நெருப்புக் கொழுந்தாய் சுட்டெரிக்கும் சூரியனைப் போல் தோற்றமுள்ள இராமனிடம், உண்மையில் பராக்கிரமம் இல்லை!' என்று, உண்மையறியாத உலகமக்கள் பொய்யாகப் பேசுவதை, கஷ்டம்! நான் கேட்கத்தான் வேண்டுமா? தாங்கள் எதைக் குறித்து வருத்தப்படுகிறீர்கள்? அல்லது யாரிடமிருந்து தாங்கள் பயப்படுகிறீர்கள்? தங்களைத் தவிர வேறு எதையும், எவரையும் சிந்தித்தறியாத என்னை இங்கேயே விட்டுவிட்டுப் போக ஏன் விரும்புகிறீர்கள்? (3–5)

வீரரே! த்யுமத்சேனருடைய குமாரன் சத்தியவானை அடியொற்றிச் சென்ற சாவித்திரியைப் போல, தங்களுக்கு அடிமைப்பட்டுக் கிடப்பவள் நான் என்பதை அறிந்து கொள்ளுங்கள். மாசுமருவற்ற இராகவனே! குலத்தைக் களங்கப்படுத்தும் பாமரப் பெண்ணைப் போன்றவள் அல்லள், நான். தங்களைத் தவிர வேறு எவரையும் மனத்தால்கூட நினைத்துப் பார்த்ததில்லை. (தங்களைத் தவிர வேறு யார் யாரையோ மட்டும் பார்க்கக்கூடிய சூழ்நிலையில் என்னைத் தனியே விட்டுப் போனால் தாங்க (முடியுமா, என்னால்?) எனவே, தங்களுடன் நானும் வருவேன். (6,7)

கன்னிப்பருவத்திலேயே மணம் செய்து கொண்டு, நீண்டகாலம் தங்களுடனேயே வாழ்ந்து கொண்டிருக்கும் பதிவிரதையான என்னை, மனைவியைப் பிறரிடம் அடகு வைத்து ஜீவிக்கும் நடிகனைப் போல, இராமா! என்னைப் பிறரிடம் ஒப்படைத்துச் செல்ல விரும்புகிறீர்கள்? குற்றமற்றவரே! யாருக்கு அனுகூலமாக நடந்து கொள்ளவேண்டும் என்று தாங்கள் எனக்கு உபதேசம் செய்கிறீர்களோ, எவர் பொருட்டுத் தங்கள் பட்டாபிஷேகம் நிறுத்தப்பட்டதோ, அந்த அவருக்கு வசப்பட்டவராகவும், கட்டளைப்படி நடப்பவராகவும் தாங்கள் (வேண்டுமானால்) இருங்கள். (அது என்னால் முடியாது.) (8,9)

தாங்கள் என்னையும் உடன் அழைத்துச் செல்லாமல் காட்டிற்குப் போகக்கூடாது. தவம் செய்வதாக இருந்தாலும், காட்டில் வசிப்பதாக இருந்தாலும், சுவர்க்கம் செல்வதாக இருந்தாலும் சரி – நான் தங்களுடன் சேர்ந்தே அனுபவிப்பேன். 'காட்டுப் பாதைகளில் நடந்து நடந்து எனக்குக் களைப்பு ஏற்பட்டுவிடுமே?' என்று எண்ணாதீர்கள். தங்களுக்குப் பின்னால் போகும் நான், மலர்த் தோட்டத்தில் சுற்றிவரும் போதும், கட்டிலில் படுத்துறங்கும் போதும் ஏற்படும் உல்லாசத்தையே அனுபவிப்பேன். (10,11)

காட்டிற்குள் செல்லும் தடங்களில் புற்களும் புதர்களும் கோரை–நாணல்களும் முள்மரங்களும் என் உடலில் படும். ஆனால், தங்களுடன் செல்லும் எனக்கு, அவை பஞ்சினால் தடவிக் கொடுப்பதுபோலும், மான்தோலைத் தொடுவது போலும் இன்பம் பயப்பதாகவே இருக்கும். என் ஆருயிர் நாதரே! (அவ்வப்போது) பெருங்காற்றுக் கிளம்பி, புழுதிகளை வாரி என்மேல் கொட்டும். அந்தப் புழுதிப் படலத்தை, உயர்ந்த சந்தனப்பூச்சாகவே எண்ணிக் கொள்வேன். (12,13)

காட்டு வழியில் செல்லத் தீர்மானித்துவிட்ட ஸ்ரீராமா! காட்டின் உட்பகுதியில் இளம் புற்றரைகளில் படுத்து உறங்குவேன். அதைக் காட்டிலும் மேலான சுகம், விதவிதமான விரிப்புக்களையுடைய அழகான கட்டிலில் படுக்கும்போதுகூடக் கிடைக்காதே! தாங்கள் தங்கள் கையால் பறித்துக் கொண்டுவந்து – குறைவாகவோ, நிறைவாகவோ – கொடுக்கும் இலை–கிழங்கு–பழமே எனக்கு அமுதபானத்திற்குச் சமமாக இருக்கும். (போய்க் கொண்டேயிருக்கும் போது,) அந்தந்தப் பருவ காலங்களில் கிடைக்கும் பழங்களை(ப் புசித்தும்), மலர்களை(க் கண்டும்) அனுபவித்துக் கொண்டே மகிழ்ச்சியடையும் நான், தாய்–தந்தை, வீடு–வாசல் ஆகிய எதைப் பற்றியும் நினைத்துப் பார்க்க மாட்டேன். (14–16)

அங்கு சென்று வசிக்கத் தொடங்கியதும், தங்களுக்கு அனுகூலமில்லாத எந்தக் காரியத்தையும் நான் செய்யமாட்டேன்; என்னால் தங்களுக்கு எந்தக் கஷ்டமும் ஏற்படாது;

தங்களால் மிகவும் கஷ்டப்பட்டுக் காப்பாற்றப்பட வேண்டியவளாக ஆகமாட்டேன். தாங்கள் இருக்கும் இடமே எனக்கு சுவர்க்கம்; தாங்கள் இல்லாத இடம் நரகம் – என்ற என் உறுதியான நம்பிக்கையை மனத்தில் ஏற்று, இராமா! என்னையும் தங்களுடன் மிகவும் திருப்தியுடன் அழைத்துச் செல்லுங்கள். வனவாழ்க்கையின் கஷ்டங்களை அறிந்து கொண்டும், அச்சப்படாமல் இருக்கும் என்னை அழைத்துச் செல்லாவிட்டால், இப்போதே நஞ்சை அருந்துவேன். பிறருடைய ஆதரவில் வாழ்க்கை நடத்தமாட்டேன். (17–19)

என்னைத் துறந்துவிட்டுத் தாங்கள் காட்டிற்குப் போவீர்களேயானால், பின்னர் என் உயிர் உடலில் நிற்காது என்பது திண்ணம். ஆகவே, இப்போதே (தங்கள் எதிரிலேயே) உயிரை விடுதல் மேலானது. இப்படிப்பட்ட பிரிவு என்னும் மாபெரும் சோகத்தை, ஒரு முகூர்த்த காலம்கூட என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது என்றால், பதிநான்கு ஆண்டுக்காலம் துக்கத்தைத் தாங்கிக் கொண்டிருக்க முடியுமா, என்ன?'' (பத்தாண்டுக் காலம், தண்டகாரண்யத்தில்; மூன்றாண்டுக் காலம், பஞ்சவடியில்; ஓராண்டுக் காலம், இலங்கையில் – என்றபடி.) இவ்வாறாக, சோகத்தீயில் வெந்து கொண்டிருந்த அவள், நெடுநேரம் கருணை தோன்றும்படி புலம்பித் தள்ளிவிட்டு, கணவனை இறுகத் தழுவிக் கொண்டு கேவிக் கேவி அழுதாள். (20–22)

நஞ்சு தோய்க்கப்பட்ட பல பாணங்களால் தைக்கப்பட்ட ஒரு பெண்யானை எவ்வாறு துடித்துப் போகுமோ, அவ்வாறே முன்னர் இராமன் கூறிய சொற்களால் தாக்கப்பட்ட சீதை, அதுவரை அடக்கி வைத்திருந்த கண்ணீரை வழியவிட்டாள். தாங்க முடியாத வருத்தம் காரணமாக, அவள் கண்களிலிருந்து தாரையாகக் கொட்டிய படிகம் போன்ற கண்ணீர், இரண்டு தாமரை மலர்களிலிருந்து நீர் கொட்டுவதைப் போலிருந்தது. களங்கமற்ற முழு நிலவைப் போல் விளங்கும் விசாலமான அழகிய கண்களைக் கொண்ட அவளுடைய முகம், கண்ணீர்ப் பெருக்கினால் முகம் சுருங்கி, தண்ணீருக்கு வெளியே எடுத்துப் போட்ட தாமரை போல் ஆகிவிட்டது. (23–25)

துக்கம் தாங்காத சீதை, ஏறக்குறைய உணர்விழந்தவள் போல் ஆனாள். அவளை இருகைகளாலும் அணைத்துத் தூக்கி, மார்புறத் தழுவிக் கொண்டு, அவளைச் சமாதானப்படுத்தும் வகையில் பின்வருமாறு பேசினார், இராமன். ''தேவி! உனக்குத் துன்பத்தைக் கொடுத்து, எனக்கு சுவர்க்கம் கிடைக்கிறது என்றால், அதை நான் ஏற்கமாட்டேன். தான்தோன்றியான பிரும்மாவுக்கு எப்படியோ, அப்படியே எனக்கும் எந்தக் காலத்திலும், எந்த இடத்திலும் எள்ளளவுகூட பயம் இல்லை. அழகிய முகமுடையாளே! காட்டில் உன்னைப் பாதுகாப்புடன் வைத்துக் கொள்வதற்கு எனக்கு ஆற்றல் உண்டு. என்றாலும், உன் அந்தரங்க அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ளாமல், உன்னைக் காட்டுவாசியாக்க, நான் விரும்பவில்லை. (26–28)

மைதிலி! நீ, என்னுடன் காட்டில் வாழ்வதற்காகவே சிருஷ்டிக்கப்பட்டுள்ளாய். எத்தனை ஆபத்துக்கள் வந்தாலும் கலங்காத நெஞ்சமுடையவன், தன்னுடைய கீர்த்தியை இழந்துவிட விரும்புவானா? (மாட்டான். புகழின் உச்சியில் இருப்பவன், அதை இழப்பதைக் காட்டிலும் உயிர் விடுவதையே மேலானதாகக் கருதுவான்.) அழகானவளே! தருமம் என்பது பண்டைய காலத்திலிருந்து சான்றோர்கள் நடந்துகாட்டும் வாழ்க்கை நெறியாகும். அந்த நல்வழியை இப்போது நானும் பின்பற்றுவேன். எப்போதும் சூரியனோடு கூடவே இருக்கும் சுவர்ச்சலா தேவி போல (நீயும் என்னுடனேயே இருப்பாய்.) (29,30)

ஜனகர் மகளே! நான் காட்டிற்குப் போகமாட்டேன் என்பது இல்லவே இல்லை. தந்தையாரின் சத்தியப் பிரதிக்ஞை, என்னை வனத்திற்கு அழைத்துச் செல்கிறது. கவினுறு நங்காய்! தாய்–தந்தையரின் வசத்தில் (அவர்கள் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து) இருப்பதுதான் மேலான அறம். ஆகவே, தருமவிதியைப் புறக்கணித்துவிட்டு, நான் உயிர்வாழ உடன்படேன். கண்ணுக்குத்

தெரிகிற தாய், தந்தை, குரு ஆகியோரை மீறி, (அவர்களுடைய கட்டளைக்குக் கட்டுப்படாமல்,) கண்ணுக்குப் புலனாகாத ஒரு தெய்வத்தை ஆராதித்து என்ன பயன்? (31–33)

நற்றடங்கண்ணாளே! எந்த ஒரு தருமத்தைக் கடைப்பிடிப்பதால், தருமார்த்த காமங்கள் ஒருங்கே கிடைக்குமோ, மூன்று உலகங்களும் பூஜிக்கப்பட்டதாக ஆகுமோ, தாய்–தந்தை–குரு என்கிற மூன்றைத் தவிர, வேறொரு புண்ணிய மூர்த்தி இந்தப் பூமண்டலத்தில் இல்லை. அதனால்தான் இம்மூவரும் மக்களால் ஆராதிக்கப்படுகிறார்கள். சீதே! தந்தையின் விருப்பப்படி சேவை செய்வதால் எவ்வளவு புண்ணியம் கிடைக்குமோ, அவ்வளவு புண்ணியத்தைச் சத்தியம் பேசுவது, கொடை வழங்குவது, பெருமை பெறுவது, ஏராளமான தட்சிணை கொடுத்து யாகங்கள் செய்வது – இவைகளால் கொடுக்க முடியாது. (34,35)

குருமார்களுக்கு (தாய்–தந்தை–குரு) பணிவிடை செய்வதைக் கடமையாகக் கொண்டவனுக்கு சுவர்க்கம், செல்வம், தானியம், ஞானம், புதல்வர்கள், சௌக்கியங்கள் – இவையெல்லாம் அடைய முடியாதனவல்ல! தாய்–தந்தையருக்குப் பக்தியுடன் பணிவிடை செய்வதையே ஒரே கடமையாகக் கொண்ட உத்தம மனிதர்கள், தேவ–கந்தர்வ–கோலோக–பிரும்மலோகம் ஆகியவற்றை அடைகிறார்கள். ஆகவே, சத்திய–தரும வழியில் நிலைபெற்றிருக்கும் என் தந்தை என்ன கட்டளையிடுகிறாரோ, அதைச் சிரமேற்கொண்டு நடக்கவே, நான் விரும்புகிறேன். ஏனென்றால், அதுதான் தொன்றுதொட்டு வரும் தருமம். (36–38)

சீதே! என்னைப் பின்தொடர்ந்து வந்து, 'காட்டில் வசிக்கப் போகிறேன்' என்று உறுதிகொண்டு விட்டாய். எனவே, என்னுடைய பழைய முடிவை மாற்றிக் கொண்டு, உன்னையும் தண்டகாரண்யத்திற்கு அழைத்துச் செல்லும் முடிவுக்கு வந்துள்ளேன். அழகியவளே! மயக்கும் விழியாளே! அச்சம் என்ற பண்பு உடையவளே! நீ, என்னுடன் காட்டில் இருப்பதற்காகவே படைக்கப்பட்டுள்ளாய். என்னைப் பின்தொடர்ந்து வா. என்னுடன் இருந்து நான் செய்யும் அறக்கடமைகளில் பங்கு பெறுவாய். சீதே! நீ, என்னுடன் செல்வது என்ற மேலான முடிவைச் செய்திருக்கிறாயே? அது, என்னுடைய பரம்பரைக்கும், உன்னுடைய குலத்திற்கும் ஏற்ற மாண்புமிக்க செயலாகும். (39–41)

அழகியவளே! வனவாசம் செல்வதற்கு முன் செய்யவேண்டிய தானம் முதலிய கர்மாக்களை உடனே தொடங்கு. சீதே! நீ (என் அருகில்) இல்லாவிட்டால், நான் சுவர்க்கத்தைக்கூட விரும்ப மாட்டேன். மறைமொழி மாந்தர்களுக்கு இரத்தினம் போன்ற உயர்ந்த செல்வங்களைக் கொடு; யாசகம் கேட்டு வரும் எளியோருக்கு நல்ல வகையான உணவு கொடு; விரைவாகக் காரியங்களைச் செய்; தாமதம் செய்யாதே. என்னுடைய விலையுயர்ந்த ஆபரணங்கள், உயர்தரமான ஆடைகள், கவின்மிகு கலைப்பொருட்கள், விளையாட்டுச் சாமான்கள், அறை அலங்காரப் பொருட்கள், படுக்கைகள், வாகனங்கள் மற்றும் வேறு என்னென்ன இருக்கின்றனவோ, அவைகளையும் அந்தணர்களுக்குக் கொடுத்து, மிகுந்திருப்பதை உன் பணியாளர்களுக்குக் கொடு.'' (42–45)

கணவர், தான் காட்டிற்குச் செல்வதற்கு இசைந்துவிட்டார் என்பதை உணர்ந்து கொண்ட சீதாதேவி, அப்போதே பொருள்களையெல்லாம் வாரிவழங்கத் தொடங்கினாள். பின்னர், தன்னுடைய எண்ணம் நிறைவேறியதால் மனமகிழ்ந்தவளும், நல்லுள்ளம் கொண்டவளும், புகழ்பெற்றவளுமான அந்தப் பெண்ணரசி, கணவருடைய சொற்படி அறநெறி நிற்கும் மறைமொழி வல்லுநர்களுக்குச் செல்வங்களையும் நவரத்தினங்களையும் கொடுப்பதற்கு முற்பட்டாள். (46,47)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
முப்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்தொன்று

லட்சுமணனை அனுமதித்தல்

சீதா–இராமர்களிடையே நடந்த சொற்போரை, முன்னரே அவ்விடத்திற்கு வந்துவிட்டிருந்த இலக்குவன் கேட்டுக் கொண்டிருந்தான். கண்களில் கண்ணீர் ததும்ப, பொங்கிவரும் சோகத்தைக் கட்டுப்படுத்த முடியாமலிருந்தான். ரகுநந்தனனான இலக்குவன், சகோதரரின் திருவடிகளை இறுகப் பிடித்துக் கொண்டான். புகழ்மிக்கவளான சீதையையும், மிகவும் கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிக்கும் இராமனையும் பார்த்துச் சொன்னான்— (1,2)

''விலங்குகளும் யானைகளும் நிறைந்த காட்டிற்குச் செல்வது என்று உறுதியான முடிவு எடுத்துவிட்டீர்கள் என்றால், தங்களுக்கு முன்னே கையில் வில்லேந்தியவனாக, நான் தங்களைப் பின்தொடர்ந்து காட்டிற்கு வருவேன். பறவைகளாலும் விலங்குக் கூட்டங்களாலும் நாற்புறத்திலும் சூழப்பெற்ற பல (இடங்களில் உள்ள) காடுகளில் என்னுடன்கூட சுற்றி வரப்போகிறீர்கள். தாங்கள் உடன் இல்லாதுபோனால், நான் மட்டுமே சுவர்க்கத்தில் வாழ்வதையோ, தேவநிலையை அடைவதையோ, எல்லா உலகங்களுக்கும் அதிபதியாக இருப்பதையோ விரும்பமாட்டேன்.'' (3–5)

இவ்வாறாக வனவாசம் செய்ய நிச்சயம் செய்து பேசிக்கொண்டே போன சுமித்திரையின் மைந்தனைப் பலவழியிலும் சமாதானப்படுத்திக் காட்டிற்கு வருவதிலிருந்து (இராமன்) அவனைத் தடுத்ததும், அவன் மறுபடியும் கூறினான்— ''தாங்கள், என்னை (காட்டிற்கு வருவதற்கு) முன்னரே அனுமதித்து விட்டீர்கள். அப்புறம், இப்போது ஏன் என்னைத் தடுக்கிறீர்கள்? மாசற்றவரே! தங்களுடன் வருவதற்குத் துடித்துக் கொண்டிருக்கிற என்னை, எந்தக் காரணத்தால் தாங்கள் தடுக்கிறீர்கள்? என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இந்த விஷயத்தில் என் மனத்தில் ஒரு சந்தேகம் தோன்றியிருக்கிறது.'' (6–8)

ஆன்மப் பிரகாசம் வீசும் இராமன், தனக்கு முன்னால் இரு கைகளையும் கூப்பிக்கொண்டு, பிரார்த்தனை செய்து கொண்டிருப்பவனும், தனக்கும் முன்னதாகவே காட்டிற்குச் செல்ல ஆயத்தமாகிவிட்டவனுமான லட்சுமணனைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார்— ''நீ மிகவும் ஒட்டுதலுடைய அன்பன்; அறவழியில் நடப்பவன்; வீர–தீரன்; எப்போதும் நேரான வழியில் செல்பவன்; அன்பிற்குரியவன்; உயிருக்கு நிகரானவன்; கட்டுப்பட்டு நடப்பவன்; சகோதரன்; என்னுடைய நண்பனும்கூட. லட்சுமணா! நீ, இப்போது என்னுடன் காட்டிற்கு வந்துவிட்டால், (இங்கே இருக்கும்) கௌசல்யா தேவியையும், கீர்த்தி மிக்கவரான சுமித்திரையையும் யார் பொறுப்புடன் கவனித்துக் கொள்வார்கள்? (9–11)

எப்படி மேகம் ஏராளமாக நிலத்தின்மேல் மழை பொழிந்து மக்களின் விருப்பங்களை நிறைவேற்றுகிறதோ, அப்படி குடி ஜனங்களின் தேவைகளைக் கண்டறிந்து, நற்காரியங்களை வரம்பில்லாமல் செய்து வந்த மகாதேஜஸ்வியான மன்னர், விரும்பிய வரத்தைக் கொடுப்பது என்ற வலையில் சிக்கிக் கொண்டிருக்கிறார். மன்னர் அசுவபதியின் குமாரத்தியான அந்தக் கைகேயி, இந்த ராஜ்யத்தை அடைந்ததும், துயரத்தில் மூழ்கியிருக்கும் சக்களத்திகளுக்கு நல்லதைச் செய்ய வாய்ப்பில்லை. அரசாட்சியை அடைந்துவிட்ட பரதனும் கைகேயியின் கைப்பிடியில் சிக்கியிருப்பதால், ஆழமான துயரத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் கோசலையையும் சுமித்திரையையும் நினைத்துக்கூடப் பார்க்க மாட்டானோ, என்னவோ? (12–14)

நீ, இங்கேயே இருந்து கொண்டு, உன் சொந்த முயற்சியாலோ, அரசரின் தயவைப் பெற்றோ, நான் சொன்னபடி கௌசல்யா தேவியை நன்றாகக் கவனித்துக் கொள். இப்படிச் செய்தாயேயானால், என்னிடம் உனக்கு உள்ள பக்தியை வெளிப்படுத்தியதாகும். அறம் அறிந்தவனே! தாய்–தந்தையருக்குச் சேவை செய்வது மிக உயர்ந்த தருமம். அதுவும் உனக்குக்

கிடைத்ததாகும். சுமித்திரைச் செல்வனே! என்பொருட்டு நான் சொன்னபடி செய். ஏனென்றால், (நாம் இருவரும் காட்டிற்குப் போய்விட்டால்,) நம்மிடமிருந்து பிரித்து வைக்கப்பட்ட நம் தாயார்களுக்கு, சௌக்கியம் என்பதே கிடைக்காது.'' (15–17)

இவ்வாறு இனிய சொற்களால் கூறப்பட்டவனும், சொல் நுட்பம் அறிந்தவனுமான இலக்குவன், சொல்லாட்சித் திறனுடைய இராமனைப் பார்த்துப் பதில் சொன்னான்— (18)

''வீரரே! பரதன், தங்களுடைய பிரபாவ மகிமையினால் கோசலையையும் சுமித்திரையையும் மிகவும் ஆர்வத்துடன் கௌரவமாகப் பரிபாலிப்பான் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. வீரம் மிக்கவரே! செல்வச் செழிப்பான அரசைப் பெற்று, அதனால் மிகவும் செருக்கடைந்து, கெட்ட மனமுடையவனாகி, தவறான பாதையில் சென்று, அன்னைமார்களைப் போஷிக்காமல் போனால், கெட்ட புத்தி படைத்தவனும், கொடுமைக்காரனுமான அவனையும், அவனுக்கு ஆதரவாக என்னை எதிர்த்து வரக்கூடியவர்கள் எல்லோரையும் – மூன்று உலக மக்களாயினும் சரி – கொன்று விடுவேன் என்பதில் ஐயமில்லை.

மேலும், சீலம் மிக்கவரான கௌசல்யா தேவியார், என்னைப் போன்ற ஆயிரம் பேர்களையும் போஷிக்கக் கூடியவர். ஏனென்றால், தன்னை அண்டியிருப்பவர்களைக் காப்பாற்றுவதற்கென்றே, ஆயிரக்கணக்கான கிராமங்கள் அவர் கைவசம் இருக்கின்றன. அவ்விதமே கொடையுள்ளம் படைத்த அவர், தன்னையும் என் தாயாரையும் மற்றும் என்னைப் போன்ற பல பேர்களையும் போஷித்துப் பரிபாலிக்கும் சக்தி கொண்டவர். ஆகவே நான், தங்களுடன் வருவதற்கு அனுமதியுங்கள். இதனால், தருமம் எதுவும் கெட்டுப் போய்விடாது. நானும் பிறவிப் பயனைப் பெற்றவனாவேன். தங்களுக்கும் நான் உதவி செய்பவனாக இருப்பேன். அம்பும் வில்லும் கையிலேந்தியவனாக, மண்வெட்டியும் கூடையும் சுமந்து கொண்டு, பாதையைக் காட்டிக் கொண்டு, தங்களுக்கு முன்னே நடப்பேன். (19–25)

தினந்தோறும் கிழங்குகள், பழங்கள் மற்றும் காட்டில் தவசிகள் புசிக்கக்கூடிய ஏனைய பண்டங்கள் எவையெவை உள்ளனவோ அவைகளையும், காட்டில் கிடைக்கும் மற்ற வஸ்துக்களையும், நித்யாக்னிஹோத்திரத்திற்குத் தேவையான மற்ற பொருட்களையும் (அதாவது சமித்து, குசம் முதலானவையும்) தங்களுக்குக் கொண்டு வந்து தருவேன். (துஷ்ட பிராணிகள் உள்ள இடத்தில் பசுவை வளர்க்க முடியாது. பால், நெய் கிடைக்காது. காட்டுப் பசும்பால் வேள்விக்கு உதவாது.) நான், தாங்கள் விழித்துக் கொண்டிருக்கும்போதும், உறங்கும்போதும் மற்ற எல்லாக் காரியங்களையும் செய்து முடிப்பேன். தாங்கள், (கொஞ்சம்கூட கவலைப்படாமல்) பிராட்டியாருடன் மலைச்சிகரங்களில் காற்று வாங்கலாம்.'' (26,27)

இந்தப் பேச்சினால் சந்தோஷமடைந்த இராமன், ''லட்சுமணா! தாயார் உட்பட, எல்லா நண்பர்களிடமும் சென்று, காட்டிற்குப் புறப்படுவதைத் தெரிவித்து, விடைபெற்றுக் கொண்டு வா'' என்று அவனிடம் கூறினார். ''லட்சுமணா! ஜனகரின் வேள்விச்சாலையில், தேவதையான வருண பகவான், பார்ப்பதற்குப் பயங்கரமான இரண்டு விற்கள், தெய்விக ஆற்றல் கொண்ட பிளக்க முடியாத இரு கவசங்கள், எப்போதுமே குறைவுபடாத இரண்டு அம்புறாத்தூணிகள், சூரியனைப் போல் ஒளிவீசுகின்றவையும் தங்கக் கைப்பிடியுள்ளவையுமான இரண்டு வாள்கள் முதலியன கொடுத்தார். அவைகள், நமது குருநாதர் வசிஷ்டரின் இல்லத்தில் மிகவும் மரியாதையுடன் வைக்கப்பட்டிருக்கின்றன. நீ, உடனே சென்று அந்தப் படைக்கலன்களையெல்லாம் எடுத்துக் கொண்டு வந்து சேர்.'' (28–31)

வனவாசம் (தனக்கும்) உறுதியானவுடன் நண்பர்களிடம் விடைபெற்றுக் கொண்டு, இக்ஷ்வாகு பரம்பரையின் ஆசார்யரிடமிருந்து தெய்விகமான அந்தப் படைக்கலன்களைப் பெற்றுக் கொண்டான். ரகு பரம்பரையின் புலி போன்ற இலக்குவன், தெய்விக ஆற்றல் படைத்த, நன்கு பூஜிக்கப்பட்ட, மலர்மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட எல்லா ஆயுதங்களையும்

இராமனிடம் காட்டினான். முன்னதாகத் திட்டமிடும் ஞானம் பெற்ற இராமன், லட்சுமணன் வந்து சேர்ந்துவிட்டதைப் பார்த்து உவகை கொண்டு, 'நான் உன்னை எதிர்பார்த்துக் கொண்டிருந்த சமயத்தில் வந்து சேர்ந்தாய்; நன்று' என்று சொன்னார். (32–34)

''எதிரிகளை வாட்டுபவனே! எனக்கு உரிமையான செல்வங்களை, உன்னை உடன் வைத்துக் கொண்டு தபஸ்விகளான அந்தணர்களுக்குத் தானம் செய்ய விரும்புகிறேன். நம்முடைய ஆசார்யர்களிடம் அசையாத பக்திகொண்டு, அநேக அந்தணர்கள் இங்கே இருந்து வருகிறார்கள். அவர்களுக்கும், நம்மை அண்டியுள்ள மற்றப் பணியாளர்களுக்கும் ஏராளமாகக் கொடுக்க விரும்புகிறேன். இருபிறப்பாளர்களில் உத்தமரும், நற்பண்புகளுள்ளவருமான வசிஷ்ட புத்திரர் சுயக்ஞரை விரைவில் இங்கு அழைத்து வா. நல்லொழுக்கமுடைய மற்ற இருபிறப்பாளர்கள் எல்லோரையும் தக்கபடி மரியாதை செய்துவிட்டு, காட்டிற்குப் புறப்படப் போகிறேன்.'' (35–37)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
முப்பத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்து இரண்டு

செல்வத்தைத் தானம் செய்தல்

பின்னர், இனிய, புண்ணியத்தைத் தரக்கூடிய தமையனாரின் (இராமனின்) கட்டளையை ஏற்று, அங்கிருந்து புறப்பட்டு விரைவில் சுயக்ஞருடைய இல்லத்தை அடைந்தான், இலக்குவன். அக்னிஹோத்ர சாலையிலிருந்த அவரை வணங்கி, 'அன்பரே! செயற்கரிய செயல்களைச் செய்யவல்ல ஸ்ரீராமனுடைய மாளிகைக்கு நீங்கள் எழுந்தருள வேண்டும். மற்ற விஷயங்களை அங்கே நேரில் கண்டு கொள்வீர்கள்' என்று லட்சுமணன் சொன்னான். (அதைக் கேட்ட அவர்) உடனே, அந்த வேளைக்குரிய நித்திய வைதிக கர்மாக்களை முடித்துக் கொண்டு, லட்சுமணனுடன் கூடவே சென்று, செல்வச் செழிப்பால் பேரழகுடன் விளங்கும் இராமனுடைய மாளிகையை அடைந்தார். (1–3)

ஹோமம் செய்து கொண்டிருக்கும்போது கொழுந்துவிட்டு எரியும் அக்னியைப் போல் பிரகாசிப்பவரும், வேதவித்தகருமான சுயக்ஞர் வந்து கொண்டிருப்பதைக் கண்டதும், கைகளைக் கூப்பிக் கொண்டு, சீதையுடன் வந்து, அவரை எதிர்கொண்டு வரவேற்றார், இராமன். 'ஜாதரூபம்' என்ற உயர்ரகப் பொன்னால் செய்யப்பட்ட மிகச்சிறந்த தோள்வளைகள், அழகான காதணிகள், பொன்வடத்தில் கோர்த்த மாணிக்க மாலைகள், கேயூரங்கள், வளையல்கள் மற்றும் அநேகவித இரத்தினங்கள் கொடுத்து, காகுத்தர் அவரைக் கௌரவித்தார். (பணிவுடன் தானம் செய்தார் – என்றபடி.) அப்போது, சீதை வேண்டிக் கொண்டபடி, சுயக்ஞரிடம் இவ்வாறு கூறினார், இராமன். (4–6)

''நண்பரே! சீதை, தன்னுடைய பொன்மாலைகள், பொன்வடங்கள், மேகலை ஆகியவற்றை உங்களுடைய பத்தினிக்குக் கொடுக்க விரும்புகிறாள். அவைகளையும் ஏற்றுக் கொள்ளுங்கள். அன்பரே! சீதை, இப்போது காட்டிற்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறாள். (காட்டில் நகைகள் தேவையில்லை. எனவே,) அழகான வேலைப்பாடுகள் அமைந்த தோள்வளைகள், கவின்மிகு கேயூரங்கள் முதலியவைகளையும் உங்கள் பத்தினிக்காக, உங்களிடம் கொடுக்கிறாள். முதல்தரமான படுக்கை விரிப்புகள் கொண்டதும், பல்வகையான இரத்தினங்கள் இழைக்கப்பட்டதுமான கட்டிலையும் உங்கள் இல்லத்திற்கு அனுப்பி வைக்க விரும்புகிறாள், வைதேகி. அந்தணோத்தமரே! என்னுடைய மாமன் எனக்குக் கொடுத்த சத்ருஞ்ஜயம் என்ற யானையை ஆயிரம் பொற்காசுகளுடன் உங்களுக்குக் கொடுக்கிறேன்!'' (7–10)

இவ்வாறு இராமனால் கூறப்பட்டதும் சுயக்ஞர் அவைகளையெல்லாம் ஏற்றுக் கொண்டு, இராம–லட்சுமண–சீதைக்கு மங்களமான ஆசீர்வாதங்களை வழங்கினார். பின்னர் நெஞ்சம் கலங்காதவனும், அன்பாகப் பேசுகிறவனுமான தம்பி இலக்குவனைப் பார்த்து, பிரும்மதேவர் தேவ மன்னனுக்கு உத்தரவு இடுவதைப் போல, பின்வருமாறு இராமன் கூறினார்— (11,12)

''தோள்வலிமை படைத்தவனே! அந்தணோத்தமர்களான அகஸ்தியரையும் கௌசிக மாமுனிவரையும் அழைத்து வந்து, விளைநிலத்தில் முளைத்திருக்கும் பயிருக்கு (அது மேலும் செழிப்பாக வளர்வதற்காக) ஏராளமான தண்ணீரைப் பாய்ச்சுவதைப் போல, பல்வகை இரத்தினங்கள், ஆயிரக்கணக்கான பசுமாடுகள், பொன்–வெள்ளி–விலையுயர்ந்த மாணிக்கங்கள் ஆகியவற்றைக் கொடுத்து, அவர்களைப் பூஜித்து மனம் குளிரச் செய்வாயாக! (13,14)

யஜுர்வேத தைத்ரீயசாகையைக் கற்பிக்கும் ஆசார்யர், புலமை பெற்ற வேதவித்தகர் ஒருவர் கோசலா தேவியையும், சுமித்திரா தேவியையும் தினந்தோறும் பக்தி–சிரத்தையுடன் ஆசீர்வதித்து வருகிறார். அவருக்கு ஒரு வாகனம், பணியாளர்கள், பட்டுத்துணிகள், அவருக்குத் திருப்தி ஏற்படும் வரையில் மற்றப் பொருட்களையும் (நமது கருவூலத்திலிருந்து) கொடுக்கச் செய்வாயாக! (15,16)

நல்ல பண்பாடுகள் உள்ளவரும், தேரோட்டிகள் குலத்தில் பிறந்தவருமான சித்ரரதன் என்பவர் வெகுகாலமாக நமக்கு அமைச்சராகவும் இருந்து வருகிறார். விலையுயர்ந்த இரத்தினங்களையும், ஆடைகளையும், ஏராளமான பொருட்களையும், அனைத்து வகையான ஆடுகளையும், ஆயிரம் பசுக்களையும் கொடுத்து, அவரை மகிழ்விப்பாயாக! (17)

கையில் தண்டம் தரித்த பிரம்மசாரிகள், கட சாகையையும் கலாப சாகையையும் அத்யயனம் செய்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் பொழுதெல்லாம் வேதம் ஓதிக் கொண்டிருப்பதால் மிகவும் களைப்படைந்து, வேறு எந்த வேலையையும் செய்ய முடியவில்லை. (உணவுக்காகப் பிச்சை எடுக்கக்கூடப் போக முடியவில்லை.) ஆனால், சுவையுள்ள பதார்த்தங்களை உண்பதில் விருப்பமுடையவர்கள்; வேதவிற்பன்னர்களால் மதிக்கப்படுபவர்கள். (18,19)

அவர்களுக்கு இரத்தின மூட்டைகள் ஏற்றப்பட்ட எண்பது ஒட்டகங்களைக் கொடுக்கச் செய். ஆயிரம் பொதி மாடுகளையும், இருநூறு உழவு மாடுகளையும், உணவுக்கு வேண்டிய பால், தயிர், நெய் முதலியவற்றிற்காக ஆயிரம் பசுக்களையும் கொடு. லட்சுமணா! மௌஞ்சி புல்லை அரைஞாணாகக் கட்டியிருக்கும் பிரம்மசாரிகளின் பெருங்கூட்டம், அன்னை கௌசல்யா தேவியாரை அண்டி வாழ்ந்து கொண்டிருக்கிறது. அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆயிரக்கணக்கில் பொற்காசுகள் கொடுக்கச் செய். என்னுடைய தாயார் கௌசல்யை, அந்தணர்களுக்கு எவ்வளவு தட்சிணை கொடுத்தால் மனம் மகிழ்வாரோ, அந்த அளவுக்குக் கொடுத்து, அவர்கள் எல்லோரையும் கௌரவப்படுத்து!'' (20–22)

பின்னர், புலிநிகர் ஆற்றல் படைத்த லட்சுமணன், இராமன் கூறியவண்ணம், தானே நேரில் அந்தணோத்தமர்களுக்கு குபேரன் போல் வாரி வாரி வழங்கினான். கண்ணீர்ப் பெருக்கினால் பேசமுடியாமல் தொண்டை அடைக்க நின்று கொண்டிருந்த குற்றேவல் செய்யும் பணியாளர்கள் ஒவ்வொருவருக்கும் (பதிநான்கு ஆண்டுகள்) வாழ்க்கை நடத்துவதற்குப் போதுமான செல்வத்தைத் தாராளமாக வழங்கிவிட்டுக் கூறினார்— ''லட்சுமணனுடைய வீடு, என்னுடைய இந்த மாளிகை ஆகிய எங்கள் இருவருக்கும் தனித்தனியாக இருக்கும் இருப்பிடங்கள், நாங்கள் திரும்பி வரும்வரை பாழடைந்துவிடாமல் இருக்கும்படி, நீங்கள் கவனித்துக் கொள்ள வேண்டும்.'' (23–25)

மிகவும் துயரத்தில் ஆழ்ந்திருந்த ஏவலாளர்களான அவர்களிடம் இவ்வாறு கூறிவிட்டு, செல்வங்களைக் கொண்டு வருமாறு கருவூலத் தலைவருக்கு உத்தரவிட்டார். உடனே, எல்லா

பரிசனங்களும் சென்று செல்வத்தைக் கொண்டு வந்து குவித்தார்கள். அந்த மாபெரும் பொருட்குவியல், கண்டு மகிழத்தக்கதாகக் காணப்பட்டது. மகாபலம் பொருந்திய அவர், உடனிருந்த இலக்குவனும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அந்தணச் சிறுவர்களுக்கும் முதியோர்களுக்கும் ஏழை–எளியோர்களுக்கும், அந்தச் செல்வம் முழுவதையும் பங்கிட்டுக் கொடுக்கச் செய்தார். (26–28)

அந்தக் காலத்தில் அயோத்திக்கு அருகிலிருந்த காட்டுப் பகுதியில் கர்க்கிய கோத்திரத்தைச் சேர்ந்த 'திரிஜடர்' என்ற ஓர் அந்தணர் இருந்தார். போதுமான உணவு இல்லாததால் அவரது உடல் வெளிறிப் போயிருந்தது. அவர் கோடரி, மண்வெட்டி, கலப்பை – இவைகளைத் தாங்கிக் கொண்டிருந்தார். காட்டில் சிதறிக் கிடக்கும் தானியங்களைப் பொறுக்கி எடுத்து உயிர்வாழும் நெறியைப் பின்பற்றி வந்தார். வயோதிகரான அவருக்கு இளமையான மனைவி. வறுமையால் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த அவள், சின்னஞ்சிறு குழந்தைகளுடன் அவரிடம் வந்து பின்வருமாறு கூறினாள்— ''கோடரியையும் மண்வெட்டியையும் தூக்கிப் போடுங்கள். தயவுசெய்து நான் சொல்கிறபடி செய்யுங்கள். விருப்பமிருந்தால் தருமப்பிரபுவான இராமனைப் போய்ப் பாருங்கள்.'' (29–31)

மனைவியின் சொற்களைக் கேட்ட அவர், கிழிந்து போயிருந்த வேட்டியை ஒருவாறாக உடம்பில் சுற்றிக் கொண்டு, இராமனின் திருமாளிகை இருந்த பாட்டையை அடைந்தார். ஆன்மவொளியால் (மிகவும் பிரசித்தர்களான) பிருகு, அங்கிரஸ் போன்ற முனிவர்களைப் போல் இருந்த திரிஜடரை, மாளிகைக்குள் இருந்த மக்கள் கூட்டத்தில் ஐந்து கட்டுகள் வரை எவரொருவரும் தடுத்து நிறுத்தவில்லை. திரிஜடர், அரசகுமாரரிடம் சென்று பின்வருமாறு தெரிவித்துக் கொண்டார். ''சக்கரவர்த்தித் திருமகனே! வள்ளல் என்று பெரும் புகழ் படைத்தவரே! நான் பொருள் இல்லாதவன்; குழந்தைகுட்டிக்காரன்! காட்டில் சிதறிக் கிடக்கும் தானியங்களைப் பொறுக்கிச் சேர்த்து வாழ்ந்து கொண்டிருக்கிறேன். தாங்கள் என்னிடம் அருட்பார்வை செலுத்த வேண்டும்.'' (32–35)

அவரைப் பார்த்து குறும்புத்தனமாக இராமன் சொன்னார்— ''என்னிடம் ஆயிரக்கணக்கான பசுக்கள் இருக்கின்றன. ஆனால், இதுவரை ஒரு பசுவைக்கூட, நான் தானம் செய்யவில்லை. (உங்கள் கையிலுள்ள) கழியை எவ்வளவு தூரத்திற்கு வீசி எறிகிறீர்களோ, அவ்வளவு தூரத்திற்கு இடையிலுள்ள அத்தனை பசுக்களையும் அடைவீர்கள்.'' உடனே மிகவும் பரபரப்படைந்த அவர் (திரிஜடர்), வேட்டியை இடுப்பில் வரிந்து கட்டிக்கொண்டு, முழு மூச்சையும் பிரயோகித்து, வேகத்துடன் தண்டத்தைச் சுழற்றி வீசி எறிந்தார். அவர் கையிலிருந்து விடுபட்ட அந்தத் தடி, சரயூ நதியின் அக்கரையை அடைந்து, ஆயிரக்கணக்கான பசுக்கள் நிறைந்த மந்தையில், ஓர் எருதின் பக்கலில் விழுந்தது. (36–38)

அறத்தின் உயிர்நாடி போன்ற இராமன், அவரை மார்புறத் தழுவிக் கொண்டார். சரயூ நதிக்கரையிலிருந்து அவர் எறிந்த கம்பு விழுந்த இடம் வரையிலுள்ள எல்லாப் பசுக்களையும் இடையர்களைக் கொண்டு, திரிஜடரின் குடிலுக்கு அனுப்பி வைத்தார். அச்சமயத்தில், கர்க வழித்தோன்றலான அந்த அந்தணரைச் சமாதானப்படுத்தும் வகையில், ''நான் செய்தது குறும்புத்தனம்தான்; தாங்கள் (நற்பண்பாளர்) என்மீது கோபம் கொள்ளக்கூடாது'' என்று கூறினார். (39,40)

''கடக்க முடியாத தங்களுடைய ஆன்மிக ஆற்றலை அறிந்து கொள்ள விரும்பிய நான், இவ்வாறு செய்தேன் – தண்டத்தை வீசி எறியும்படிக் கேட்டுக் கொண்டேன். தங்களுக்கு வேறு ஏதேனும் தேவைப்பட்டால் கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள். உண்மையாகக் கூறுகிறேன். தாங்கள் (யாசித்துப் பெறுவதற்குச்) சங்கோஜப்பட வேண்டாம். என்னிடமுள்ள செல்வங்கள் அனைத்தும் அந்தணர்களுக்குக் கொடுப்பதற்காகத்தான்! என்னால் சேமித்து

வைக்கப்பட்ட பொருட்களைத் தங்களைப் போன்றவர்களுக்கு மனமுவந்து ஏராளமாகக் கொடுப்பதே, எனக்கு மனமகிழ்ச்சியையும் புகழையும் விளைவிப்பதாக ஆகும்.'' பசுமந்தையைப் பெற்றுக் கொண்டு மிக்க மகிழ்ச்சியடைந்த பெருங்குடும்பியான திரிஜடர், (இராமனுக்கு) புகழ், ஆற்றல், அகமகிழ்ச்சி, உடல்நலம் பெருகுவதற்கான ஆசிமொழிகளைக் கூறினார். (41–43)

மனம் நிறைந்த உவகையுடன் கூடிய இராமன், அறநெறிப் பயனான ஆண்மையால் சம்பாதிக்கப்பட்ட ஏராளமான செல்வங்களை, அன்பர்கள் எல்லோருக்கும் அவரவர் தகுதிக்குத் தக்கபடி, உபசார வார்த்தைகள் கூறி, வெகுநேரம் வரை பங்கிட்டுக் கொடுத்துக் கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில், அந்தணன், நண்பன், வேலைக்காரன், வறியவன், பிச்சை எடுத்து ஜீவிப்பவன் – இவர்களில் தமக்குரிய மரியாதை மற்றும் தானங்களால் திருப்தி அடையாதவர் ஒருவர்கூட இல்லவே இல்லை! (44,45)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
முப்பத்து இரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்து மூன்று

நகர மக்களின் கூற்று!

இராம–லட்சுமணர்கள் சீதையுடன்கூட, ஏராளமான செல்வங்களை அந்தணர்களுக்கு வழங்கிவிட்டு, தந்தையைப் பார்ப்பதற்காக (பார்த்து விடைபெறுவதற்காக)ச் சென்றார்கள். அவர்கள் (இருவரும்) அணிந்திருந்த ஆயுதங்களில் புஷ்பமாலைகள் சார்த்தி, சந்தனமிட்டு அலங்கரித்திருந்தாள், சீதை. அவைகளின் ஒளிவீச்சால் பார்ப்பவரின் கண்கள் கூசின. அப்போது செல்வந்தர்களான குடிமக்களின் கூட்டம் மதிற்சுவர்களிலும், அரச மாளிகைகளிலும், ஏழடுக்கு மாளிகைகளிலும் மேலேயுள்ள திறந்தவெளி உப்பரிகைகளிலும் ஏறி நின்று உற்சாகமில்லாமல் பார்த்துக் கொண்டிருந்தது. (1–3)

மிக அதிகமாக மக்கள் கூடியதால் தேரோடும் வீதிகளில் நடந்து செல்வதற்கு இடமில்லாமல் போய்விட்டது. அதனால், மாளிகைகளின் மதிற்சுவர்கள் மேல் ஏறி நின்று, வருத்தம் தோய்ந்த முகத்துடன், இராமனின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்போது தம்பியுடனும் சீதையுடனும் கால்நடையாக நடந்து வரும் அவரைக் கண்டதும், சோகத்தால் தடுமாற்றமடைந்த மனத்துடன் பலவிதமான கருத்துக்களைப் பரிமாறி கொண்டார்கள். (4,5)

''எவர் வெளியே புறப்பட்டு வந்தால், சிறப்புமிக்க நால்வகைப் படை பின்தொடர்ந்து வருமோ, இப்போது சீதையோடு தனியாக வரும் அவருடன்கூட லட்சுமணன் (மட்டும்) பின்தொடர்ந்து வருகிறார். செல்வத்தின் உண்மையான பயன்பாட்டை அறிந்தவரும், தன்னிடம் வந்து யாசிப்பவர்களின் எல்லா விருப்பங்களையும் நிறைவேற்றுபவருமான இவர், தருமத்தினிடம் தான் கொண்டிருக்கும் கௌரவத்தினால், தந்தையினுடைய சொல் பொய்யாகி விடுவதை விரும்பாமல் இருக்கிறார். எந்த ஒரு பெண்மணி, வான்வெளியில் சஞ்சரிக்கும் பூதங்களால்கூட காண முடியாதவராக இருந்தாரோ, ராஜபாட்டையில் நடந்து செல்லும் அந்தப் பெண்ணரசி சீதாதேவியை, இப்போது பாமர மக்கள்கூடப் பார்க்கிறார்கள். (6–8)

வாசனைத் திரவியங்கள் பூசிக் கொள்வதற்குத் தக்கவளும், செஞ்சந்தனம் பூசிக் கொள்ள வேண்டியவளுமான சீதாதேவியை, காற்று–வெயில்–குளிர் முதலானவைகள் தாக்கி வெளிறச் செய்துவிடும். ஏதோ ஒரு தீயசக்தியைத் தன்னுள் புகவிட்டுக் கொண்டு, தசரதர் மதிகலங்கிப் பேசுகிறார் என்பது நிச்சயம். (இல்லையென்றால்,) தனக்குப் பிரியமான குமாரனை, நாட்டை விட்டு வெளியேற்றத் துணியமாட்டார். நற்குணங்களே இல்லாத மகனைக்கூட நாட்டை

விட்டுத் துரத்துவது எவ்வாறு பொருந்தும்? அப்படியிருக்க, தன் நல்ல குணங்களாலேயே எல்லா மக்களையும் தன்பால் வசீகரித்து வைத்திருப்பவரைப் பற்றிக் கூறவேண்டுமா, என்ன? (இராமனை நாட்டிலிருந்து வெளியேற்றக் கூடாது.) (9–11)

பிறருக்கு உடற்கேடு மற்றும் மனக்கேடு விளைவிக்காதவர், இரக்கம், அறநூல் ஞானம், நல்லொழுக்கம், புலனடக்கம், மனவடக்கம் என்ற ஆறு குணங்களும் ஆணேறாகிய இராமனிடம் குடிகொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட உத்தமருக்குப் பேரிடி கொடுக்கப்பட்டதால், மக்கள் எல்லோரும் கோடைகாலத்தில் தண்ணீர் வறண்டு போய்விட்ட நீர்நிலையில் வாழும் ஜந்துக்கள் போல மிகவும் துன்பம் அடைந்திருக்கிறார்கள். மலர் மற்றும் கனிகளுடைய மரத்தின் வேரை வெட்டிவிட்டால், மரத்தின் எல்லாப் பகுதிகளுமே அழிந்து போய்விடுவதைப் போல, இந்த உலகத்தின் நாயகர் துன்பப்படப்பட்டிருப்பதால், உலக மக்கள் அனைவரும் துயரத்தில் ஆழ்ந்திருக்கிறார்கள். (12–14)

அறத்தைப் பிழிந்தெடுத்த சாறு போன்றவரும், தெய்விக மகிமை பொருந்தியவருமான இந்த ஸ்ரீராமன், மனித குலத்தின் ஆதார ஸ்தானம்; வேர் போன்றவர்; ஏனைய மக்கள் எல்லோரும் பூ, பழம், இலை மற்றும் கிளைகள். அதனால், நாம் எல்லோரும் மனைவி–உறவினர்களோடுகூட, எந்த வழியில் ஸ்ரீராமன் செல்கிறாரோ, அதே வழியில் இலக்குவனைப் போலப் பின்தொடர்ந்து செல்வோம். தோட்டம்–துரவுகளையும், வீடு–வாசல்களையும், நிலம்–நீச்சுகளையும் அப்படியே விட்டுவிட்டு, சுகத்தையும் துக்கத்தையும் சமமாகக் கருதி, அறமூர்த்தியாகிய ஸ்ரீராமனைப் பின்தொடர்ந்து செல்வோம். (15–17)

புதைத்து வைக்கப்பட்டுள்ள செல்வங்களை எடுத்துக் கொள்வோம்; அழகான முற்றங்களைச் சிதைத்து விடுவோம்; எல்லாச் செல்வங்களையும் தானியங்களையும் எடுத்துக் கொள்வோம்; மற்ற எல்லாப் பொருட்களையும் நாலாபக்கங்களிலும் தூக்கி எறிவோம்; வீடு முழுவதிலும் புழுதி படியட்டும்; குல தேவதைகள் வீட்டை விட்டுப் போகட்டும்; வளைகளில் புகுந்து புறப்பட்டு எலிகள் இங்குமங்கும் ஓடிக் கொண்டிருக்கட்டும்; தண்ணீர்விட்டுக் கழுவப்படாமல், நறுமணப் புகை காட்டப்படாமல், துடைப்பத்தால் பெருக்கப்படாத, வைச்வதேவ பலி, வைதிகக் கிரியை, வேள்வி, மந்திரம், ஜபம் இல்லாததாக, பஞ்சத்தில் அடிபட்டாற்போல் சிதிலமடைந்து, உடைந்துபோன பாத்திரங்களுடன், நம்மால் விட்டுவிடப்பட்ட வீடுகளை (கொடுமதியாள்) கைகேயி தாராளமாக எடுத்துக் கொள்ளட்டும். (18–21)

ஸ்ரீராமன் போய் வசிக்கப் போகும் காடு (எல்லா மக்களும் அவருடனேயே சென்று விடுவதால்,) பட்டணம் போல் ஆகிவிடும். நம்மால் துறக்கப்பட்ட இந்த நகரமானது காடு என்ற நிலையை அடையும். நம்மைக் கண்டதும் அஞ்சி நடுங்கும் பாம்புகள் புற்றுகளை விட்டும், விலங்கு–பறவைகள் தாம் வசிக்கும் தாழ்வரையை விட்டும், யானை–சிங்கங்கள் எல்லாம் அந்தக் காட்டை விட்டும் வெகுதூரத்திற்குப் போய்விடும். (22,23)

நம்மால் கைவிடப்பட்ட வீடுகளை இவைகள் ஆக்கிரமித்துக் கொள்ளட்டும்; நாம் வசிப்பதற்கு ஏற்றபடி, அந்த (காட்டு)ப் பிரதேசத்தைத் துறந்து விட்டுப் போகட்டும். இந்த நகரம் ஆடு–மாடுகள் மேயும் புல்தரையாகவும், புலாலுண்ணும் கொடுமைமிக்க சிங்கங்களுக்கும், பழம் தின்னும் பறவைகளுக்கும் உரிய இடமாகட்டும். இப்படிப்பட்ட மோசமான நிலையில், கைகேயி இந்த நாட்டைக் குமாரனோடும் உறவினர்களோடும் பெற்றுக் கொள்ளட்டும். நாம் எல்லோரும் கவலையே இல்லாமல் ஸ்ரீராமனோடு காட்டில் வசிப்போம்.'' (24,25)

இவ்வாறு பலவிதமான பேச்சுக்களை மக்கள் பேசிக் கொண்டிருப்பதை இராமன் கேட்டார். கேட்டபிறகும் அவருடைய மனத்தில் கலக்கம் ஏற்படவில்லை. மதங்கொண்ட யானைக்கு நிகரான பலம் கொண்டவரும், அறத்தையே மூச்சாகக் கொண்டவருமான அவர், தூரத்திலிருந்தே கைலாச மலைபோல் ஒளிவீசும் தந்தையின் மாளிகையைப் பார்த்து, அதை

நோக்கி நடந்தார். அரசமாளிகைக்குள் வந்து சேர்ந்த அவர், வினயமும் வீரமும் உடைய சுமந்திரர் (அரசருக்கு) அருகில் மிகவும் வாட்டத்துடன் நின்று கொண்டிருப்பதைக் கண்டார். (26–28)

தன் உயர்குடியைச் சேர்ந்த பெரியோர்கள் பலர் கவலை தோய்ந்த முகத்துடன் அவருடைய வரவை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்தும்கூட, சோகத்தின் நிழல்கூட தன்மீது படாமல், தந்தையின் கட்டளையை முறைப்படி நிறைவேற்ற விருப்பங்கொண்டு, அவரைப் பார்ப்பதற்காக, புன்முறுவல் பூத்தாற்போன்ற முகத்துடன் உள்ளே சென்றார். சோகத்தில் மூழ்கியிருந்த மன்னரின் அருகில் போவதற்கு முன்னால் மகாத்மாவும் இக்ஷ்வாகு குலதிலகமுமான இராமன், தான் வந்திருக்கும் தகவலை மகாத்மாவான தந்தையிடம் கூறுவதற்காக, சுமந்திரரை நோக்கிப் பார்த்தபடி நின்று கொண்டார். தந்தையின் கட்டளைப்படி, காட்டிற்குப் போவதற்கு உறுதியாக நிச்சயித்துவிட்ட அறம் நழுவாத இராமன், சுமந்திரரைப் பார்த்துக் கூறினார்— ''நான் இங்கே வந்திருப்பதை மன்னருக்குத் தெரிவியுங்கள்.'' (29–31)

**ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
முப்பத்து மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.**

ஸர்க்கம் : முப்பத்து நான்கு

தசரதருக்குத் தேறுதல் கூறுதல்

தாமரைக் கண்ணரும், கருநீலவண்ணத்தரும், உவமை இல்லாத பேரழகரும், உத்தமபுருஷருமாகிய இராமன் சாரதியான சுமந்திரரிடம், ''நான் வந்திருப்பதாகத் தந்தையிடம் தெரிவியுங்கள்'' என்றார். மனக்கவலையினால் பொறிகள் கலங்கியிருந்த அவர், இராமனால் கேட்டுக் கொள்ளப்பட்டதும், உடனே உள்ளே சென்ற சாரதி நீண்ட பெருமூச்சுவிட்டுக் கொண்டிருப்பவராக, மன்னரைக் கண்டார். (1,2)

ராகுவினால் பீடிக்கப்பட்ட சூரியன் போலவும், நீறுபூத்த நெருப்புப் போலவும், தண்ணீர் வற்றிய நீர்நிலை போலவும் (இயற்கையான ஒளியிழந்து) வீற்றிருக்கும் மன்னரைப் பார்த்தார். நுண்ணறிவினரான சாரதி, மன்னர் மிகவும் மனம் குழம்பியிருப்பதையும், இராமனைப் பற்றியே கவலைப்பட்டுக் கொண்டிருப்பதையும் பார்த்து, கைகளைக் கூப்பிக்கொண்டு அருகில் சென்று நின்றார். முதலில், அரசருக்கு வெற்றி வாழ்த்துக்களைக் கூறிவிட்டு, பயத்தால் சொற்கள் தடுமாற, மெதுவாக, தெளிவாகச் சொன்னார்— (3–5)

''புருஷோத்தமரான தங்கள் குமாரர், எல்லாச் செல்வங்களையும் அந்தணர்களுக்கும் மற்ற பணியாளர்களுக்கும் கொடுத்துவிட்டு வாயிற்படியில் நின்று கொண்டிருக்கிறார். சொன்ன சொல் தவறாதவரான இராமன், தங்களைப் பார்ப்பதற்கான அனுமதியை அளிப்பீர்களாக! எல்லா நண்பர்களிடமும் விடைபெற்றுக் கொண்டு, இப்போது தங்களைப் பார்த்து விடைபெற்றுப் போக விரும்புகிறார். பெருங்காட்டிற்குப் போய்க் கொண்டிருக்கும் அவர், கிரணங்களோடு கூடிய சூரியன் பிரகாசிப்பதைப் போல, அரசருக்கு வேண்டிய எல்லாப் பண்புகளாலும் பிரகாசிக்கிறார். மன்னரே! அவரைத் தாங்கள் பார்க்க வேண்டும்.'' (6–8)

வாய்மை தவறாதவர்; தருமாத்மா; சமுத்திரம் போல் காம்பீர்யம் உடையவர்; ஆகாயம் போல் மாசற்றவர் – இப்படிப்பட்ட மன்னர்மன்னன் சுமந்திரருக்குப் பதில் கூறினார்— ''சுமந்திரா! என்னுடைய மனைவிமார்களில் யார் யார் இங்கே இருக்கிறார்களோ, அவர்களை எல்லாம் அழைத்து வாருங்கள். (என்னுடைய) எல்லா மனைவியர்களாலும் சூழப்பட்டவனாக அறத்தின் திருவுருவான இராகவனைக் காண விரும்புகிறேன்.'' (உடனே,) அவர் அந்தப்புரத்தினுள் சென்று,

அங்கிருந்த பெண்மணிகளைப் பார்த்து, ''நாரீமணிகளே! மன்னர் உங்களை அழைக்கிறார். உடனே வாருங்கள்'' என்று கூறினார். (9–11)

அரசரின் ஆணையை சுமந்திரர் கூறியதைக் கேட்ட எல்லாப் பெண்மணிகளும் கணவருடைய (தசரதருடைய) கட்டளையை ஏற்று, அவர் மாளிகையை நோக்கிப் புறப்பட்டார்கள். செவ்வரி படர்ந்த கண்களைக் கொண்ட முன்னூற்றைம்பது பதிவிரதைகள், கௌசல்யையைச் சூழ்ந்து கொண்டு மெல்ல மெல்லச் சென்றார்கள். மன்னர், மனைவிகள் எல்லோரும் வந்துவிட்டதைப் பார்த்து, சாரதி சுமந்திரரை நோக்கி, ''என் மகனை அழைத்து வா'' என்று கூறினார். அந்த சாரதி, இராமன்–லட்சுமணன்–சீதை ஆகியோரை உடன் அழைத்துக் கொண்டு, உலகாளும் மன்னரின் அருகே விரைவாக வந்தார். (12–15)

தூரத்திலிருந்து இரு கைகளையும் கூப்பியபடி வந்துகொண்டிருந்த புதல்வனைக் கண்டவுடனேயே, பெண்மணிகளால் சூழப்பட்டிருந்த அவர் சட்டென்று ஆசனத்திலிருந்து எழுந்தார். மாமன்னர், இராமனைக் கண்டதும் (வாத்சல்ய மிகுதியால்) வேகமாக, அவரை நோக்கி ஓடினார். அவரை நெருங்குவதற்கு முன்பாகவே, சோகத்தினால் தாக்கப்பட்டிருந்த அவர் உணர்விழந்து தரையில் விழுந்தார். அப்போது எல்லையில்லாத துக்கத்தினால் உணர்விழந்தாற்போலாகிவிட்ட, சோகத்தின் பிடியில் சிக்கியிருந்த மன்னரை, இராமனும் பேராற்றல் பெற்றவனான இலக்குவனும் பதறிச் சென்று நெருங்கினார்கள். (16–18)

இங்கு இவ்வாறு இருக்கும்போது, அரசமாளிகைக்குள் ஆயிரக்கணக்கான பெண்கள் (கைகளை ஆட்டி ஆட்டிப் பேசியதால்) அணிகலன்களின் ஒலியுடன், 'ஓ இராமா! ஹே இராமா!' என்ற துயர ஒலியும் சேர்ந்து எழுந்தது. இராம–லட்சுமணர்கள், தம் கைகளால் அவரை அணைத்துத் தூக்கி, சீதை உதவி செய்ய, வாய்விட்டு அழுதுகொண்டே கட்டிலில் உட்கார வைத்தனர். சோகக் கடலில் மூழ்கித் தத்தளிக்கும் மன்னருக்குச் சிறிது நேரம் சென்றதும் பிரக்ஞை வந்தது. அப்போது மன்னரிடம் இராமன் கைகூப்பிக் கொண்டு கூறினார்— (19–21)

''மாமன்னரே! எங்கள் எல்லோருக்கும் நீங்கள்தான் கண்கண்ட தெய்வம். தண்டகாரண்யம் போவதற்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கும் நான், தங்களிடம் விடைபெற்றுப் போக வந்திருக்கிறேன். மங்களம் தரும் தங்கள் திருப்பார்வையால் எங்களை நோக்கி அருள்வீராக! லட்சுமணனுக்கும் தாங்கள் உத்தரவு கொடுக்க வேண்டும்; சீதையும் என்னுடன் காட்டிற்கு வருகிறாளாம். நியாயமான பல காரணங்களைக் கூறி, அவர்களைத் தடுக்க முயன்றேன். ஆனால், அவர்கள் அதை ஏற்கவில்லை. பிறரைக் கௌரவிக்கும் நல்லியல்பு உடையவரே! சோகத்தை விட்டுவிடுங்கள். பிரும்மா, தன் மானஸ புத்திரர்களான ஸனகாதிகளுக்கு அனுமதி கொடுத்ததைப் போல, லட்சுமணன், நான், சீதை ஆகிய மூவருக்கும் அனுமதி கொடுங்கள்.'' (22–24)

காட்டிற்குச் செல்வதற்காக, எவ்விதப் பதற்றமும் இல்லாமல் மாமன்னரின் உத்தரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் இராகவனை நோக்கி, மன்னர் கூறினார்— ''ரகுகுல மாணிக்கமே! கைகேயியிக்குக் கொடுக்கப்பட்ட வரத்தினால், நான் மதிமயங்கிக் கிடக்கிறேன். என்னை அடக்கிவிட்டு (சிறையில் தள்ளிவிட்டு), இப்போதே நீ அயோத்திக்கு மன்னனாக ஆகிவிடு.'' இவ்வாறு மாமன்னர் சொன்னதும், அறத்தின் அடித்தளமாக விளங்குபவர்களில் முதன்மையானவரான, வார்த்தைச் சித்தரான இராமன் கைகளைக் கூப்பிக் கொண்டு, தந்தைக்குப் பதில் கூறினார்— (25–27)

''மன்னரே! தாங்கள் இன்னும் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு, இந்த மண்ணுலகின் தலைவராக இருந்து வரவேண்டும். நான், தங்கள் சொல் சத்தியமாக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறேன். நான் காட்டில் (எவ்விதத் துன்பமும் இல்லாமல்) வசிப்பேன். பதிநான்கு ஆண்டுகள் காட்டில் சுற்றித் திரிந்துவிட்டு, மன்னரே! (தங்களால் வாக்களிக்கப்பட்ட) பிரதிக்ஞை கெடு முடிந்தபின், தங்கள் திருவடிகளில் தலைவைத்து வணங்குவேன்.'' சத்திய

பாசத்தால் கட்டுண்டு, அதன் விளைவாக மனவேதனை ஒருபுறம்; மற்றொருபுறம் கைகேயியின் நிர்ப்பந்தம் – இவை இரண்டின் இடையில் அகப்பட்டுத் தத்தளிக்கும் மன்னர், இராமனைப் பார்த்துக் கூறினார்— (28–30)

''உனக்குக் கீர்த்தி பெருகட்டும்; பெருமைகள் வளரட்டும்; குழந்தாய்! நீ சௌக்கியமாகத் திரும்பி வருவாய். உன் பாதையில் இடையூறு, அச்சம் இல்லாமல் இருக்கட்டும். மனம் தளராது சீர்மிகு பாதையில் செல்வாயாக! ரகுநந்தனா! மகனே! நீ, சத்தியத்தின் ஆத்மா போன்றவன்; தருமத்திலேயே மனத்தை ஊன்றியவன்; (காட்டிற்குப் போவது என்ற) உன் முடிவிலிருந்து உன்னை யாராலும் திருப்ப முடியாது. நீ, இன்று இரவு மட்டும் போகாதே. (இன்னும்) ஒரு நாள் உன்னைப் பார்த்துக் கொண்டிருக்கும் சுகத்தையாவது அனுபவிக்கிறேனே? இன்றிரவு மட்டும் தாயையும் என்னையும் கவனித்துக் கொள். எல்லா விருப்பங்களும் நிறைவேறப் பெற்றவனாக, நாளைக் காலையில் உன் விருப்பப்படி செல்லலாம். (31–34)

செல்வமே! நீ, யாராலும் செய்ய முடியாத அரிய செயலைச் செய்யப் போகிறாய். இராகவா! என் விருப்பத்தின்படி நடக்கவேண்டும் என்ற காரணத்தால், உனக்கு இஷ்டமானவர்களைத் துறந்து, மனித சஞ்சாரமில்லாத காட்டிற்குப் போகிறாய். இராகவா! மகனே! நான் சத்தியமாகச் சொல்கிறேன்; எனக்கு இதில் இஷ்டமேயில்லை. மேலே சாம்பல் படர்ந்து உள்ளே மறைந்திருக்கும் அனல்கங்குகள் போல், பயங்கரமான எண்ணத்தை மனத்திற்குள் மறைத்து வைத்திருந்த ஒரு பெண்ணால், நான் நிலைதடுமாறி நிற்கிறேன். (35,36)

பரம்பரையாக வந்த வழக்கத்தைக் குலைத்து, என்னை வஞ்சித்த கைகேயியினால் ஏவப்பட்டு, (அந்த வஞ்சகத்தைப்) பூர்த்தி செய்ய, நீ துணிந்துவிட்டாய். மகனே! நீ, (எவ்வளவு துன்பம் அனுபவிக்க நேரிட்டாலும்,) உன் தந்தையைச் சத்தியசந்தனாக்க விரும்புகிறாய். இது ஒன்றும் பெரிய ஆச்சரியமான விஷயம் அல்ல. குணம், பிறப்பு என்ற இருவகையான பார்வையிலும் நீ, என்னுடைய முதன்மையான புதல்வனன்றோ?'' (37,38)

பிறகு, சோகத்தில் மூழ்கியிருக்கும் தந்தையின் சொற்களை, லட்சுமணன் உடனிருக்கக் கேட்ட இராமன், மனம் நொந்து பின்வருமாறு கூறினார்— ''இப்போது இங்கே தங்குவதால் என்னென்ன விருப்பங்கள் நிறைவேறப் பெறுவேனோ, அவைகளை நாளைக்கு யார்தான் எனக்கு நிறைவேற்றித்தரப் போகிறார்கள்? ஆதலால், முழு மனத்தோடு (இப்போதே) வெளியேறுவதற்கு அனுமதியைத் தங்களிடம் கோருகிறேன். பல நாடுகள், குடிமக்கள், தனதானியங்கள் ஏராளமாகவுடையதும், என்னால் உரிமை விட்டுவிடப்பட்டதுமான இந்த பூமண்டலம் பரதனுக்குக் கொடுக்கப்படட்டும். (39–41)

காட்டிற்குச் சென்று வசிப்பது என்ற என் முடிவில், இப்போது எந்த மாற்றமும் இல்லை. வேண்டும் வரங்களைக் கொடுப்பவரே! மன்னரே! மனமுவந்து கைகேயிக்கு வரம் தந்தீர்களே, அதை முற்றிலுமாக நிறைவேற்றி, வாக்குத் தவறாதவர் என்ற பெருமையோடு இருங்கள். நான், தங்களுடைய கட்டளையை வாக்களித்தவண்ணமே நிறைவேற்றிக் கொண்டு, பதிநான்கு ஆண்டுகள் கானகத்தில் காட்டுமனிதர்களுடன் வசிப்பேன். தாங்கள் மனத்தில் வேறுவிதமாக எண்ண வேண்டாம். இந்த மண்ணுலகம் முழுவதையும் பரதனுக்குக் கொடுங்கள். (42–44)

ரகுநாயகரே! (தாங்கள், எனக்குப் பட்டாபிஷேகம் என்று சொன்னபோது) என்னுடைய அல்லது எனக்குப் பிரியமானவர்களுடைய சுகத்திற்காக, நான் அரசாட்சியை ஏற்றுக் கொள்வதாக சொல்லவில்லை; 'தங்கள் கட்டளை அது' என்பதாலேயே சம்மதித்தேன். தங்களது துக்கம் தொலையட்டும்; கண்ணீர்ப் பெருக்கு நிற்கட்டும். ஆறுகளுக்குத் தலைவனும், நிலைதடுமாறச் செய்ய முடியாதவனுமான ஆழ்கடல் எப்போதாவது கலங்கியதுண்டோ? (தாங்கள் மனம் குலைந்துபோவது தங்களுக்குத் தகுமா?) (45,46)

நான் அரசுரிமையையோ, சுக–சௌக்கியங்களையோ, அன்புக்குரிய மனைவி மைதிலியையோ, இங்கேயுள்ள அனைத்து போகங்களையோ, சுவர்க்கத்தையோ, ஏன், வாழ்க்கையைக்கூட நான் விரும்பவில்லை! (இவைகள் என்னை விட்டுப் போனாலும், நான் பொருட்படுத்தமாட்டேன்.) தங்களுக்கு எதிரில் சத்தியத்தின் மீதும், புண்ணியங்களின் மீதும் ஆணையிட்டுச் சொல்கிறேன்— புருஷோத்தமரே! தாங்கள் வாக்குத் தவறாதவர் – பேச்சுத் தவறுபவர் அல்லர் – என்பதை நிலைநாட்டவே விருப்பம் கொண்டுள்ளேன். (47,48)

அன்புத் தந்தையே! மாமன்னரே! இனிமேல் இங்கு ஒரு கணநேரம்கூட என்னால் இருக்கமுடியாது. இந்த வருத்தத்தைப் பொறுத்துக் கொள்ளுங்கள். எதிர்மாறான ஒரு முடிவை (காட்டிற்குப் போகாமலிருப்பதை) நான் எடுக்கவே மாட்டேன். ரகுகுலத் திலகமே! 'காட்டிற்குப் போ' என்று கைகேயி, என்னை வேண்டினார். நானும், 'போகிறேன்' என்று சொல்லிவிட்டேன். அந்தச் சொற்களின் சத்தியத்தைப் பரிபாலனம் செய்கிறேன். மன்னரே! தங்கள் திருவுள்ளத்தில் வேதனைக் கொந்தளிப்பு ஏற்படக்கூடாது. சாந்த சுபாவமுள்ள மான்கள் நிறைந்ததும், பலவகை பறவைகளின் இன்னொலிகள் நிரம்பியதுமான காட்டில் நாங்கள் இன்பமாக இருப்போம். (49–51)

தந்தையே! தந்தை என்பவர் 'தெய்வங்களுக்கெல்லாம் மேலான தெய்வம்' என்று அறநூல்களில் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, தங்களைத் தெய்வமாகவே மதிக்கும் நான், தந்தையாகிய தாங்கள் இடும் கட்டளையை ஏற்று நடப்பேன். புருஷோத்தமரே! பதிநான்கு ஆண்டுகள் முடிந்து, நான் திரும்பி வருவதைத் தாங்கள் பார்க்கத்தான் போகிறீர்கள். எனவே, மனக்கொதிப்பை விட்டுவிடுங்கள். இந்த நாட்டு மக்கள் எல்லோரும் அழுது கண்ணீர் பெருக்கிக் கொண்டிருக்கிறார்கள். எந்த ஒருவரால் அவர்கள் தைரியமூட்டப்பட வேண்டுமோ, அப்படிப்பட்ட தாங்களே மனத்தளர்ச்சிக்கு இடம் கொடுத்தால் எப்படி? (52–54)

இந்த நகரம், இந்த நாடு, ஏன், இந்தப் பூமண்டலத்தின் மீது எனக்குள்ள உரிமையை மனப்பூர்வமாகத் துறந்துவிட்டேன்! இவைகளைத் தாராளமாக பரதனுக்குக் கொடுங்கள். நான், தங்கள் கட்டளையைச் சிரமேற்கொண்டு நீண்ட காலம் வசிப்பதற்காகக் காட்டிற்குப் போகிறேன். அநேக மலைகள்–பட்டணங்கள்–உபவனங்கள் அடங்கியதும், எல்லாவித நற்பேறுகளைப் பெற்றதும், நன்றாக வரையறுக்கப்பட்ட எல்லைகளை உடையதும், என்னால் உரிமை விட்டுக் கொடுக்கப்பட்டுவிட்டதுமான இந்த பூமியை பரதன் ஆளட்டும்.

மன்னரே! தங்களால் வாக்குத்தத்தம் செய்யப்பட்டது எதுவோ, அது அப்படியே இருக்கட்டும். மாசற்றவரே! தங்களது கட்டளையை நிறைவேற்றுவது என்பது சான்றோர்கள் வகுத்துத் தந்த நெறி, என்னுடைய மனம் அதைப் பின்பற்றுவதில்தான் ஆர்வத்தோடு இருக்கிறதே தவிர, சிறப்பான ராஜபோகங்களை அனுபவிப்பதிலோ, உடல் சௌக்கியத்திலோ இல்லை. எனவே, தாங்கள் படும் மனத்துயரத்தை விட்டுவிடுங்கள். (55–57)

புண்ணியாத்மாவே! தங்களை வாக்குத் தவறியவராகச் செய்து, அதனால் கிடைக்கும் அரசு, பல்வகையான போகங்கள், அழிவில்லாத பேரின்பம், அன்புக்குரிய சீதை, ஏன், நானே உயிர் வாழ்வதையும்கூட விரும்பவே மாட்டேன். என்னுடைய ஒரே நோக்கம், தங்களுடைய வாக்குறுதி சத்தியமானதாக ஆக்கப்படவேண்டும் என்பதே. காட்டில் பலவகையான, அழகழகான மரங்களையும் மலைகளையும் நதிகளையும் நீர்நிலைகளையும் கண்குளிரப் பார்த்துக் கொண்டு, பழம்–கிழங்குகளைப் புசித்துக் கொண்டு இன்பமாகக் காலம் கழிப்பேன். தங்கள் மனம் அமைதி அடையட்டும்.'' (58,59)

இவ்வாறு இராமன் கூறி முடித்ததும் (மகனைப் பிரிய வேண்டியிருக்கிறதே? என்ற) சோகத்தினாலும், (ஆலோசனையில்லாமல் கைகேயியிக்கு வரம் கொடுத்துவிட்டோமே? என்ற) துக்கத்தினாலும் தாக்கப்பட்டு, செல்வக் குமாரனை மார்புறத் தழுவிக் கொண்டு, முற்றிலும் உணர்விழந்து மூர்ச்சை அடைந்தார். கொஞ்சம்கூட அசைவு இல்லாமல் (தரையில்) கிடந்தார்.

(இந்த அவலநிலையைக் கண்டதும்) அங்கு கூடியிருந்த அரச பத்தினிகள் அனைவரும் – அந்த ஒருத்தியைத் தவிர – வாய்விட்டுக் கதறி அழுதார்கள். சுமந்திரரும் அழுது கொண்டே மூர்ச்சை அடைந்தார். அந்த இடம் முழுவதும், 'ஹா! ஹா!... அடடா!' என்ற துன்ப ஒலிகளால் நிறைந்ததாயிற்று! (60,61)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
முப்பத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்தைந்து

சுமந்திரர், கைகேயியை இடித்துரைத்தல்

அப்போது, தசரதருடைய அந்தரங்கமான எண்ணத்தை (இராமன் காட்டிற்குப் போவதில் விருப்பமில்லை என்பதை)த் தெரிந்து கொண்ட அந்தச் சாரதி, வேகமாகத் தலையை ஆட்டி, பல தடவை நீண்ட பெருமூச்செறிந்து, ஓர் உள்ளங்கையை மற்றொரு உள்ளங்கையில் வைத்துத் தேய்த்து, பற்களை நறநறவென்று கடித்து, தாங்க முடியாத கோபத்தால் கண்கள் சிவக்க, முன்பிருந்த இயல்பான தேககாந்தியை இழந்து, சீற்றம் பொங்கியெழ, பொறுக்க முடியாத மனவேதனையை அடைந்தார். கூர்மையான சொற்சரங்களால் கைகேயியின் இதயத்தையே கசக்கிவிடுவது போலவும், கொடுமையானவைகளும் ஈடு–இணையற்றவை களுமான வாக்கியங்களான வஜ்ராயுதத்தால் கைகேயியின் உயிர்நிலைகளையே தாக்குவது போலவும் சுமந்திரர் பின்வருமாறு பேசினார்— (1–4)

"தேவி! எப்போது உம்முடைய கணவரும், சராசரப் பிராணிகள் அடங்கிய எல்லா உலகத்திற்கும் மன்னருமான தசரதரையே துறந்துவிட்டீரோ, அப்புறம் செய்யத்தகாத எந்தக் காரியத்தைத்தான் நீர் செய்யத் துணியமாட்டீர்? கணவரையே கொன்றுவிட்ட நீர், கடைசியில் குலத்தையே அடியோடு ஒழித்துவிடப் போகிறீர்! என்று நான் எண்ணுகிறேன். எவர் தேவராஜனான இந்திரனைப் போல் எவராலும் வெல்ல முடியாதவரோ, மலையைப் போல் அசைக்க முடியாதவரோ, மாபெருங்கடலைப் போல் கலக்க முடியாதவரோ, அவரை (இது போன்ற) தீய நடவடிக்கைகளால் மனவேதனைப்படச் செய்துவிட்டீர். (5–7)

தசரதர், உம்மைப் பாதுகாத்துத் தாங்குபவர்; கேட்டதை அளிப்பவர்; கணவர். அவரை நீர் இவ்வாறு அவமதிக்கக் கூடாது. பெண்களுக்கு சத்புத்திரர்களாக ஏராளமான பேர்கள் இருந்தாலும் கணவரின் மனத்திற்கு உகந்தபடி நடப்பதுதான் மிகச்சிறந்தது. ஒரு மன்னர் மரணமடைந்துவிட்டால், அவருடைய குமாரர்களில் வயதால் மூத்தவர்தான் அரசுரிமையை அடைகிறார். இக்ஷ்வாகு பரம்பரையில் சிறந்தவரான இவர் விஷயத்திலேயே, அந்தச் சம்பிரதாயத்தை மாற்றுவதற்கு நீர் விருப்பங்கொண்டுவிட்டீர். உம்முடைய மகன் பரதன் அரசனாகட்டும்; உலகை ஆளட்டும். இராமன் எங்கே போகிறாரோ, அங்கேயே நாங்களும் போகிறோம். (8–10)

உம்முடைய ராஜ்யத்தில் அந்தணர் எவரும் வாசம் செய்யத்தகாது. அவ்விதமாக அறநெறிகளுக்கும், நடைமுறை அனுஷ்டானங்களுக்கும் விரோதமான செயலைச் செய்ய நீர் விரும்புகிறீர். இவ்வளவு முறைகேடான செயலைச் செய்துகொண்டிருக்கும் நீர் இருக்கும் இடத்தில், 'பூமி ஏன் பிளந்து போகாமல் இருக்கிறது?' என்று நான் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கிறேன்! மிகப்பெரிய பிரும்மரிஷிகளால் விடப்பட்ட நெருப்புப் போல் தகிக்கின்றவைகளும் பயங்கரமானவைகளுமான நிந்தனைச் சொற்கள் என்னும் தடிகள், இராமனை வெளியேற்றுவதிலேயே குறியாக இருக்கும் உம்மைத் துன்புறுத்தவில்லையா, என்ன? (11–13)

கோடரியால் மாமரத்தை வெட்டிவிட்டு, அந்த இடத்தில் வேப்பமரத்தை நட்டு பால் ஊற்றி வளர்த்தாலும், அது என்ன இனிப்பாகவா மாறப் போகிறது? உம்முடைய தாயாரிடம் எந்த இழிகுணம் இருந்ததோ, அதே தன்மை உம்மிடமும் குடிகொண்டுள்ளது என்று எண்ணுகிறேன். 'வேப்பமரத்திலிருந்து தேன் எப்படி ஒழுகும்?' என்பதுதானே உலகத்தார் சொல்லும் பழமொழி. உம்முடைய தாயாரின் அடாவடித்தன்மையைப் பற்றி முன்பே கேள்விப்பட்டிருக்கிறோம். (அதை இப்போது சொல்கிறேன்.) உம்முடைய தந்தைக்கு யாரோ ஒரு மகான், ஒரு புதுமையான வரத்தைக் கொடுத்திருந்தார். (14–16)

கேகய மன்னர், வரத்தின் பயனாக, எல்லாப் பிராணிகளின் மொழியையும் கேட்டுணரும் வல்லமை பெற்றார். அவரால் (குறுக்குவாட்டில் வளர்கிற) ஈ, எறும்பு போன்ற பிராணிகளின் பேச்சையும் அறிந்துகொள்ள முடிந்தது. மிக்க தேஜஸ்வியான உம்முடைய தந்தையார், படுத்திருக்கும்போது 'ஜ்ரும்பம்' என்னும் எறும்பின் ஒலியிலிருந்து, அதன் கருத்தைப் புரிந்துகொண்டார். (கருத்து வினோதமாக இருந்தது. அதனால், அதை நினைத்து நினைத்து ஆச்சரியப்பட்டுப்) பல தடவைகள் சிரித்தார். (அதைக் கேட்டுக் கொண்டிருந்த) உமது தாயாருக்கு மிகவும் சீற்றம் வந்தது. யமபாசத்தைக் கழுத்தில் (தானே) சுற்றிக் கொள்வதைப் போல, 'இனிய மன்னரே! தங்கள் சிரிப்பின் காரணத்தை அறிந்து கொள்ள விரும்புகிறேன்' என்றாள். (17–19)

மனைவியைப் பார்த்து, 'தேவி! அதன் காரணத்தை நான் விளக்கமாக, உனக்குச் சொன்னேனேயானால், எனக்கு மரணம் ஏற்படும்; அதில் சந்தேகமில்லை' என்று மன்னர் சொன்னார். உம்முடைய தாயார், கேகய மன்னரைப் பார்த்து, 'நீங்கள் இருந்தாலும் சரி, மாண்டாலும் சரி, எனக்குச் சொல்லித்தான் ஆகவேண்டும். இப்படியெல்லாம் சொல்லி, என்னைப் பரிகாசம் செய்யக்கூடாது' என்றாள். தன்னுடைய பிரிய மனைவி இவ்வாறு கூறியதைக் கேட்டவுடன், கேகய மன்னர் தனக்கு வரம் கொடுத்த பெரியவரிடமே சென்று நடந்தவற்றை நடந்தவாறே தெரிவித்தார். (20–22)

அதைக் கேட்டபின், அந்த வரத்தைக் கொடுத்த சாது மகாத்மா சொன்னார்— 'அரசரே! நீங்கள் அதை வெளிப்படையாகச் சொன்னால், உங்களுக்கு நிச்சயமாக மரணம் சம்பவிக்கும். மன்னரே! இவள் மாண்டாலும் சரி, வெளியே ஓடிப் போனாலும் சரி. நீங்கள் (அந்த ரகசியத்தை) வெளியிட வேண்டாம்.' சாதுவினுடைய சொற்களைக் கேட்டதும், மன்னருக்கு மனம் அமைதி அடைந்தது. (உம் தந்தை) உம்முடைய தாயாரை உடனே வீட்டிலிருந்து துரத்திவிட்டு, அதன்பின் குபேரன் போல் மகிழ்ச்சியுடன் சஞ்சரித்து வந்தார். பாவச்செயலில் மனத்தைச் செலுத்திவிட்டவரே! உமது அன்னையைப் போலவே, தீயவர்கள் கடைப்பிடிக்கும் நெறியைப் பின்பற்றி, மனத் தடுமாற்றத்தால், மன்னர் விஷயத்தில் செய்யத்தகாத இந்தப் பாவ காரியத்தைச் செய்கிறீர். (23–26)

'ஆண்பிள்ளைகள் தங்கள் தகப்பனாரைப் போலவும், பெண்கள் தங்கள் தாயாரைப் போலவும் (அதே குணத்தைக் கொண்டு) பிறக்கிறார்கள்' என்ற பழமொழி உண்மையானது என்றே எனக்குத் தோன்றுகிறது. இந்தப் பழமொழிக்கு இலக்காக நீர் ஆகிவிடக்கூடாது. மாமன்னர் சொல்வதைக் கேளும். கணவரின் விருப்பத்தை ஏற்றுக்கொண்டு நடப்பீர். குடிமக்களின் (ஒருமனதான பாராட்டிற்கு உரியவராக) அடைக்கலம் அளிப்பவராக இருப்பீர். தீய எண்ணம் கொண்டவர்களால் முடுக்கிவிடப்பட்டு, இந்திரனுக்கு நிகரான ஆற்றலுள்ளவரும், உலகமனைத்தையும் ரட்சிக்கும் வல்லமை பெற்றவருமான கணவரைத் தீயநெறியில் செல்ல நிர்ப்பந்திக்க வேண்டாம். (27–29)

தேவி! மாசற்றவரும், தாமரைக் கண்ணரும், அனைத்துச் செழுமைகளும் பெற்றவருமான தசரத மன்னர், உமக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதியைப் பொய்யாக்க மாட்டார். ஸ்ரீராமன் மன்னருடைய மூத்த மகன்; கொடை வள்ளல்; செயல்திறன் உடையவர்; தன்னுடைய தருமத்தை மிகவும் பரிபாலிப்பவர்; எல்லாப் பிராணிகளையும் பாதுகாப்பவர். (இவ்வளவு சிறப்புப் பெற்ற)

இராமனுக்கு முடிசூட்டு விழா நடைபெறட்டும் என்று கூறும். தேவி! மன்னரான தந்தையை விட்டுவிட்டு, ஸ்ரீராமன் காட்டிற்குப் போவாரேயானால், உலகில் உமக்கு நிலையான கெட்ட பெயர்தான் ஏற்படும். இராகவன் தனக்குரிய அரசை அடையட்டும்; நீர் மனக்கொதிப்பை விட்டுவிட்டு நிம்மதியாக இரும். (30–32)

இந்த மாபெரும் நாட்டில், இராமனைத் தவிர வேறு யாரும் உமக்கு அனுகூலமாக இருக்கமாட்டார்கள். (எல்லோரும் உம்மை இகழ்ந்து கொணடேதான் இருப்பார்கள்.) இராமனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டி, ஆட்சி உரிமையை முறைப்படி கொடுத்த பின்னர், மாபெரும் வில்லாளரான தசரதர், தம் முன்னோர்களின் வாழ்க்கை முறையை நினைத்துப் பார்த்து, தானே காட்டிற்குப் போய்விடுவார். (வாழ்க்கைப் பாதையின் அடுத்தக் கட்டமான வானப்பிரஸ்தத்தை மேற்கொள்வார்.)'' (33,34)

இவ்வாறாக, அந்த அரசமாளிகையில் கைகளைக் கூப்பிக்கொண்டு, நியாயமான, அதே சமயம், கூர்மையான சொற்களால் கைகேயிக்கு அழுத்தமாக எடுத்துக் கூறி, அவள் மனத்தை மாற்ற முயன்றார், சுமந்திரர். ஆனால், அந்த தேவியின் மனம் கடுகளவுகூட ஆட்டம் காணவில்லை; சிறிதளவுகூட வருத்தம் அடையவில்லை. அப்போது அவளுடைய முகத்தின் தோற்றத்தில் (அச்சம், நாணம் முதலியவற்றால் ஏற்படும்) எவ்வித மாறுபாடும் காணப்படவில்லை! (35,36)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
முப்பத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்தாறு

சித்தார்த்தன் செய்த உபதேசம்

அப்போது இக்ஷ்வாகு மன்னர் தசரதர், வாக்குறுதியில் கட்டுப்பட்டவராகி, கண்களில் நீர்வழிய, பெருமூச்சுவிட்டுக் கொண்டு, சுமந்திரரைப் பார்த்து மறுபடியும் பின்வருமாறு கூறினார்— (1)

''சாரதி! ஏராளமான உத்தமப் பொருள்களுடன் நால்வகைப் படையும், இராமனைப் பின்தொடர்ந்து செல்வதற்காக உடனே ஆணையிடு. நல்ல தோற்றம், நல்ல பேச்சு, நன்னடத்தை உடைய தாசிகள், பெரும் செல்வந்தர்கள், பெரிய அளவில் வியாபாரம் செய்பவர்களான வணிகர்கள் ஆகியோர் அரசகுமாரன் இராமனின் படையை அழகு செய்யட்டும் (படைகளுடன் செல்லட்டும்). எவர்களெல்லோரும் இராமனை அண்டிப் பிழைக்கிறார்களோ, எவர்களுடைய வீரதீரத்தைப் பரிசோதித்துத் தெரிந்து கொண்டு, அவர்களைக் கொண்டு மகிழ்ச்சி அடைகிறானோ, அத்தகையவர்களுக்கும் பலவகையான பொருட்களை அளித்து, அவர்களையும் (இராமனின் பாதுகாப்புக்காக உடன் செல்லும் நால்வகை) சேனைகளுடன் போகும்படி உத்தரவிடு. (2–4)

முக்கியமான ஆயுதங்களும் நகரத்தார்களும் வண்டிகளும் காட்டின் உட்பகுதியை நன்றாக அறிந்த வனவாசிகளும் காகுத்தனுடன் செல்லட்டும். (இராமன்) பாதையில் எதிர்ப்படும் (சிறு) விலங்குகளையும், (பெரிய) யானைகளையும் கொன்றழிப்பான்; காட்டுத் தேனைப் பருகுவான்; பலவகையான ஆறுகளைப் பார்த்து மகிழ்வான். (இம்மகிழ்ச்சிக்கிடையில்) ராஜ்யத்தைப் பற்றி எண்ணிப் பார்க்கவே மாட்டான்! மனித சஞ்சாரமற்ற காட்டில் வசிக்கப் போகிறான், இராமன். அதனால், என்னுடைய தானியக் களஞ்சியமும் பொருட்கருவூலமும் அவனுடன் செல்லட்டும். (5–7)

புண்ணிய க்ஷேத்திரங்களில் வேள்விகள் செய்து கொண்டும், ஆசார்யர்களுக்கு விருப்பம் போல் தட்சிணை கொடுத்துக் கொண்டும், முனிவர்களுடன் கூடி உபதேசம் பெற்றுக் கொண்டும் காட்டில் (இராமன்) சுகமாக இருக்கவேண்டும். பேராற்றல் படைத்த பரதன் அயோத்தியைப் பரிபாலித்து வருவான். அதுபோல தேவையான எல்லாப் பொருட்களுடனும் இராமன் இங்கிருந்து அனுப்பி வைக்கப்படட்டும்.'' இவ்வாறாக, காகுத்த மன்னர் சொல்லி முடித்தவுடன், கைகேயியின் மனத்தில் பயம் தோன்றிவிட்டது; முகம் வற்றிப் போயிற்று; குரலும் அடைபட்டுப் போயிற்று. (8–10)

அவளுக்குக் கவலையும் அச்சமும் ஏற்பட்டன; முகம் வாட்டமடைந்தது. (வேறு யாரையும் ஏறிட்டுப் பார்க்காமல்) மன்னரையே நோக்கி, கைகேயி பின்வருமாறு கூறினாள்— ''அப்பாவியாய் நடிக்கும் மன்னரே! 'சுவையான மதுவின் சாரமான பகுதியைக் குடித்துவிட்டு, அடியில் தங்கியிருக்கும் கசண்டுவை யாரும் சீந்தக்கூட மாட்டார்கள்' என்பது போல, செல்வச் செழிப்பை இழந்து பாழாகிப் போய், போகத்திற்குரியதாக எதுவுமே இல்லாத வெற்று ராஜ்யத்தை பரதன் ஏற்றுக் கொள்ளமாட்டான்.'' (11,12)

நாணத்தைத் துறந்து கடூரமான வார்த்தைகளைப் பேசும் தடங்கண்ணாள் கைகேயியைப் பார்த்து, மன்னர் தசரதர் கூறினார்— ''பண்பில்லாதவளே! எதிரியாக இருப்பவளே! பெரும் சுமையை என்மேல் ஏற்றிவிட்டு, அதைத் தாங்க முடியாமல் நான் தவித்துக் கொண்டிருக்கும் போதே, மேலும் என்மேல் பாரத்தை ஏற்றுகிறாயே? இப்போது சொன்ன விஷயத்தை முதலிலேயே ஏன் என்னைக் கேட்கவில்லை?'' (இராமனுக்கு வனவாசம் என்பதே, என்னால் பொறுக்கமுடியாத சுமை. படைகளும் பிற பொருள்களும் அனுப்பக்கூடாது என்று இப்போது கூறுவது, மேலும் அதிக பாரத்தை ஏற்றுவதாக இருக்கிறது.) (13,14)

சீற்றம் பொங்க அவர், இவ்வாறு கூறியதைக் கேட்டதும் கைகேயி அழகியார், இருமடங்கு கோபம் கொண்டு, மன்னரை நோக்கிக் கூறினாள்— ''(புதல்வனை நாட்டிலிருந்து வெளியேற்றுவது என்பது உங்கள் பரம்பரைப் பழக்கம்தானே!) உங்களுடைய பரம்பரையில் முன்னர் இருந்த சகரன் என்ற மன்னர், மூத்த புதல்வன் அசமஞ்ஜன் என்பவனை நாடு கடத்தினார். அதுபோலவே இவனும் (இராமனும்) போகவேண்டியதுதானே?'' (15,16)

இவ்வாறாக அவள் பேசியதைக் கேட்ட அரசர், 'அடக் கஷ்டமே!' என்று ஒரு சொல்லைக் கூறி, எல்லையில்லாத தன் மனக்கஷ்டத்தை வெளிப்படுத்தினார். அந்த இடத்திலிருந்த மக்கள் எல்லோரும் மிகவும் வேதனை அடைந்தார்கள். ஆனால், அவள் மட்டும் அந்த இழிச்சொல்லைப் பொருட்படுத்தவேயில்லை. அப்போது வயது முதிர்ந்தவரும், அமைச்சர்களில் சிறந்தவரும், புண்ணியசீலரும், மன்னரால் மதிக்கப்பட்டவருமான சித்தார்த்தர் என்று பெயர் பெற்றவர் கைகேயியிடம் சொன்னார்— (17,18)

''அசமஞ்ஜன் தீயபுத்தி உடையவன். தெருவில் விளையாடிக் கொண்டிருக்கும் சிறுபிள்ளைகளைக் கைப்பற்றி எடுத்துச் சென்று சரயூவில் தூக்கி எறிவான். அவை திக்குமுக்காடி இறந்து போவதைக் கண்டு மனம் களிப்பான். இந்தக் கொடுமையான விளையாட்டைப் பார்த்த நகரத்தார்கள், மிகவும் கோபம் கொண்டு மன்னரிடம் சென்று முறையிட்டார்கள்— 'நாட்டு நலனில் அக்கறையுள்ள அரசரே! ஒன்று, அசமஞ்ஜனை மட்டும் வைத்துக் கொண்டிருங்கள். அல்லது எங்களை மட்டும் இங்கே இருக்க விடுங்கள்.' இதைக் கேட்டதும் மன்னர் அவர்களைப் பார்த்து, 'இந்த பயத்திற்கு என்ன காரணம்?' என்று கேட்டார். மன்னர் கேட்டவுடன் குடிமக்கள் பதில் சொன்னார்கள்— (19–21)

'இவன் விளையாடிக் கொண்டிருக்கும் எங்கள் குழந்தைகளைக் கைப்பற்றி, அவர்கள் பயந்து நடுங்கும்போதே சரயூவில் தூக்கி எறிந்து, (அவர்கள் நீரில் மூழ்கி இறப்பதைப் பார்த்து) அளவில்லாத மகிழ்ச்சியை அடைகிறான்.' குடிமக்களுடைய குற்றச்சாட்டைக் கேட்ட மன்னர்,

அவர்களுக்கு நீதி வழங்குவதற்காக, கேடு விளைவிக்கும் அந்தப் புதல்வனைத் தன்னிடமிருந்து விலக்கிவிட்டார். தேவையான பொருட்களுடன்கூட அவனையும், அவன் மனைவியையும் ஒரு வாகனத்தில் ஏற்றித் தன் பணியாளர்களைப் பார்த்து, 'வாழ்நாள் முழுவதும் இவன் நாட்டின் புறத்தே இருக்கக் கடவன்' என்று உத்தரவிட்டார், தந்தை. (22–24)

பாவம் புரிந்த ஒருவன் எவ்வாறு கஷ்டப்படுவானோ, அவ்வாறே களைவெட்டி, கூடை எடுத்துக் கொண்டு, மலைகளிலும் காடுகளிலும் நாலாபக்கங்களிலும் சுற்றித் திரிந்தான். மன்னர் சகரன் மிகவும் தார்மிகர். அதனால், பாவியான அவனைக் கைகழுவினார். பட்டாபிஷேகத்திற்குத் தடை போடும்படியான என்ன மகாபாவத்தைச் செய்தார், இராமன்? இராகவனிடம் எந்த ஒரு சிறு குறையையும் நாங்கள் காணவில்லை. பூர்ண சந்திரனிடம்கூட சிறுகுறை காணப்படலாம். ஆனால், குறை என்பதை இராமனிடம் காணவே முடியாது! தேவி! தாங்கள் இராமனிடம் ஏதேனும் குறை கண்டிருந்தால், இப்போது தெளிவாகச் சொல்லி விடுங்கள். (குறை உண்மையாக இருந்தால்,) இராமன் நாடு கடத்தப்படட்டும். (25–28)

எந்த ஒரு தவற்றையும் செய்யாதவனும், சன்மார்க்கத்திலேயே ஈடுபட்டிருப்பவனுமான ஒருவனைத் தியாகம் செய்தால், அந்த அதருமத்தைச் செய்தவன் இந்திரனாகவே இருந்தாலும்கூட அவனுடைய மகிமையைப் பொசுக்கிவிடும். தேவி! 'இராமனுடைய பட்டாபிஷேகத்தைக் குலைப்பது' என்ற உங்கள் முயற்சி இத்துடன் நிற்கட்டும். நன்முகத்தாளே! மக்களின் ஒட்டுமொத்த இகழ்ச்சியிலிருந்தும் நீங்கள், உங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமல்லவா?'' சித்தார்த்தரின் உரையைக் கேட்ட மன்னர், மிகவும் களைத்துப் போனதால் மெலிந்த குரலில், சோகத்தில் விளைந்த சொற்களால் கைகேயியைப் பார்த்து இவ்வாறு கூறினார்— (29–31)

''பாவத்தின் முழுவடிவே! (சித்தார்த்தருடைய) இந்த நன்மொழிகள் உனக்குப் பிடிக்கவில்லை? எனக்கோ அல்லது உனக்கோ நல்லது எது? என்பதை நீ அறியவில்லை. தீமை தரும் வழியை ஏற்றுத் தவறான செயல்கள் செய்கிறாய். உன்னுடைய நடவடிக்கைகள் நன்னெறியிலிருந்து வெகுதூரம் விலகி நிற்கின்றன. இந்த நாடு, சுகம், செல்வம் எல்லாவற்றையும் துறந்துவிட்டு, இப்போது நானும் இராமனைப் பின்தொடர்ந்து போகப் போகிறேன். மன்னன் பரதனோடுகூட நீ (மட்டும்) உன் விருப்பப்படி, நெடுங்காலம் ஆட்சியை அனுபவித்துக் கொண்டிரு.'' (32,33)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
முப்பத்தாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்தேழு

மரவுரியும், மாமுனிவர் சீற்றமும்

முதலமைச்சர் முன்னர் கூறியதைக் கேட்டு, சூழ்நிலையை அனுசரித்து, ஏற்ற வகையில் நடக்கும் அறிஞரான, பணிவு அறிந்தவரான இராமன், தசரதரை நோக்கி மிகவும் வினயத்துடன் இவ்வாறு கூறினார்— ''மன்னரே! சுகபோகங்களைத் துறந்து, காட்டில் பழங்கள்–கிழங்குகளைப் புசித்துக் கொண்டு, எல்லாவற்றிலும் பற்றுதலை நீக்கிவிட்ட எனக்கு பரிவார ஜனங்களால் என்ன பயன்? உத்தமமான யானையை (தானமாக)க் கொடுத்துவிட்டவன், அதைப் பிணைக்கும் கயிற்றின்மேல் ஆசை வைப்பானா? (கயிற்றை மட்டும் தன்னிடமே வைத்துக் கொள்ள ஆசைப்படுவானா?) யானையையே துறந்துவிட்ட அவனுக்கு, அந்தக் கயிற்றினால் என்ன பிரயோஜனம்? (1–3)

அவ்வண்ணமே சதுரங்க சேனையால் எனக்கு என்ன பிரயோஜனம்? சான்றோர்களில் முதன்மையானவரே! உலகாளும் மன்னரே! எல்லாவற்றையும் முற்றிலுமாக பரதனுக்குக்

கொடுப்பதற்கு, நான் சம்மதிக்கிறேன். எனக்கு இப்போதைய தேவையான மரவுரிகள் மட்டும் கொண்டுவரப்படட்டும். (நாட்டைவிட்டுப்) பதிநான்கு ஆண்டுகள் காட்டில் வசிக்கப் போய்க் கொண்டிருக்கும் எனக்கு களைவெட்டி, கூடை ஆகிய இரண்டும் கொண்டு வந்து தருக.'' வெட்கம்–மானத்தை முழுவதுமாக விட்டுவிட்ட கைகேயி தானே சென்று மரவுரிகளைக் கொண்டுவந்து, மக்கள் கூட்டம் பார்த்துக் கொண்டிருக்கும்போதே இராமனை நோக்கி, 'உடுத்திக் கொள்' என்றாள். (4–6)

மகாபலம் பொருந்திய அவர், கைகேயியிடமிருந்து அந்த மரவுரிகள் இரண்டையும் பெற்றுக் கொண்டு, தான் அணிந்திருந்த உயர்ந்த ஆடையைக் களைந்து, முனிவர்களைப் போல் (மரவுரியை) உடை அணிந்து கொண்டார். லட்சுமணனும், தான் அணிந்திருந்த உத்தமமான வேஷ்டி–உத்தரீயங்களைக் களைந்துவிட்டு, தகப்பனாரின் முன்னிலையிலே, தவசிகளின் உடைகளை ஏற்றுக் கொண்டான். பிறகு, உயரிய பட்டாடைகளையே அணிந்து கொள்ளும் சீதாதேவி, தான் உடுத்திக் கொள்வதற்காகவும் மரவுரி வைக்கப்பட்டிருப்பதைப் பார்த்து, விரித்து வைக்கப்பட்டிருக்கும் வலையைக் கண்ட பெண்மான் போல அஞ்சி நடுங்கினாள். (7–9)

பேரழகு வாய்ந்த சீதை – அறம் அறிந்தவள், அறநெறிப்படி நடப்பவள் – கைகேயியிடமிருந்து இரண்டு மரவுரிகளைக் கைநீட்டி வாங்கிக் கொண்டு, மிகவும் மனம் நொந்து, கண்களில் நீர் நிரம்ப, கந்தர்வ மன்னனைப் போல மிகுந்த ஒளியுடன் விளங்கிய கணவரைப் பார்த்து இவ்வாறு கேட்டாள்— ''காட்டில் வசிக்கும் முனிவர்கள், மரவுரியை எப்படி (தம் உடலில்) கட்டிக் கொள்கிறார்கள்?'' என்று கேட்டுவிட்டு, பலதடவை மரவுரியைத் தானே உடுத்திக் கொள்ள முயன்றும், அதில் பழக்கமில்லாததால் ஒவ்வொரு தடவையும் தோற்றுப் போனாள். (10–12)

மரவுரியை உடுத்திக் கொள்வதில் பழக்கமில்லாததால், தன் முயற்சியில் தோற்றுப் போன அவள், மனத்துன்பத்துடன் ஒரு மரவுரியைக் கழுத்தில் போட்டுக் கொண்டு மற்றொன்றை கையில் பிடித்துக் கொண்டு அப்படியே நின்றுவிட்டாள். தருமத்தைக் கடைப்பிடிப்பவர்களுள் முதன்மையானவரான இராமன் உடனே அருகில் வந்து, சீதை உடுத்தியிருந்த பட்டு வஸ்திரத்தின் மேல் மரவுரியைத் தானே அணிவித்தார். மகாமகிமை பொருந்திய இராமன், சீதைக்கு மரவுரி கட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்ததும், அந்தப்புரத்திலிருந்த அத்தனை பெண்களும் கண்ணீர் பெருக்கினார்கள். (13–15)

சகிக்க முடியாத மனவருத்தமடைந்த அவர்கள், ஒளிப்பிழம்பாய் நிற்கும் இராமனைப் பார்த்து, 'மகனே! நல்லிதயம் கொண்ட இவள் காட்டிற்குப் போகும்படி ஆக்ஞாபிக்கப் படவில்லை?' என்று கூறினார்கள். (அப்படியிருக்க, இவளுக்கு ஏன் மரவுரி? இராமன் காட்டிற்குப் போகவேண்டும் என்றுதானே கைகேயி வரம் கேட்டாள்? (பார்க்க:– ஸர். 11, சுலோ. 26) சீதை, இராமனுடன் பதிவிரதை தருமத்தை அனுசரித்து, தன்னையும் காட்டிற்கு அழைத்துப் போகச் சம்மதிக்கச் செய்திருக்கிறாள் என்பது அவர்களுக்குத் தெரியாது. முன்னதாக, அரசர் முன் நடந்த உரையாடலிலிருந்து கைகேயி மட்டும் புரிந்து கொண்டிருந்தாள்.) (16)

''செல்வமே! தந்தையின் வார்த்தையைக் காப்பாற்றுவதற்காக மனித சஞ்சாரமற்ற காட்டிற்கு நீ சென்றுவிட்டால், நாங்கள் இவளைப் பார்த்துப் பார்த்து ஆறுதல் அடைந்து கொண்டிருப்போம். குழந்தாய்! லட்சுமணனைத் துணைக்கு அழைத்துக் கொண்டு, நீ காட்டிற்குப் போ. சுகுமாரியான இவள் ஒரு தபஸ்வினியைப் போல காட்டில் வசிக்கத்தக்கவள் அல்லள். மகனே! எங்கள் வேண்டுகோளை ஏற்றுக்கொள். அழகுச்சிலையான சீதை இங்கேயே இருக்கட்டும். எப்போதும் அறவழியையே கடைப்பிடிக்கும் நீ, இனிமேல் இங்கே இருப்பதை விரும்பமாட்டாய்.'' தாய்மார்களின் இப்படிப்பட்ட சொற்களைக் கேட்டபின்னரும், தசரத குமாரர் தனக்கு இணையான நற்பண்புகள் கொண்ட சீதைக்கு மரவுரியை அணிவிக்கவே செய்தார். (17–20)

அவள் மரவுரியைக் கட்டிக் கொண்டதைப் பார்த்தவுடன் வசிஷ்டர் சீதையைத் தடுத்து, (நீ காட்டிற்குப் போகக்கூடாது என்று சைகையால் தடுத்து,) கைகேயியை நோக்கிக் கூறினார்— ''வரம்புமீறி நடக்கின்றவளே! கெட்ட புத்தி உள்ளவளே! குலத்தைக் கெடுக்க வந்தவளே! மன்னருக்கு மோசம் செய்துவிட்ட நீ, உன் அதிகார எல்லைக்குள் நிற்கவில்லை. நற்பண்பற்றவளே! சீதை காட்டிற்குப் போகக் கூடாது. இராமனுக்கு வழங்கப்பட்ட சிம்மாசனத்தில் அவள் அமர்ந்து கொள்வாள். குடும்ப வாழ்க்கையை மேற்கொள்ளும் எல்லோருக்கும் மனைவிகளே ஆத்மாவாகிறார்கள். இவள் இராமனுடைய ஆத்மா; (அவனுக்குப் பதிலாக இவளே) உலகத்தைப் பரிபாலிப்பாள். (21–24)

இராமனுடன் சேர்ந்து சீதையும் காட்டிற்குப் போகிறாள் என்றால், நாங்களும் அவர்களைப் பின்தொடர்ந்து செல்வோம். ஏன், இந்த நகரத்து மக்கள் எல்லோருமே சென்று விடுவார்கள்! மனைவியோடு இராமன் எங்கே போகிறானோ, அந்த இடத்திற்கு (மிகவும் முக்கியமான பாதுகாப்புப் பணியைச் செய்துவரும்) எல்லை பாதுகாவல் படையினரும் சென்று விடுவார்கள். மன்னரின் தயவில் வாழ்க்கை நடத்திக் கொண்டிருப்பவர்களும், நகர மக்களும், புறநகர் மக்களும், தத்தம் உடைமைகளை எடுத்துக் கொண்டு போய் விடுவார்கள். பரதனும் சத்ருக்னனும் மரவுரி அணிந்து கொண்டு காட்டில் இருப்பார்கள். காட்டில் வசிக்கும் மூத்த சகோதரர் இராமனுக்குச் சேவை செய்து வருவார்கள். (25–27)

பிறகு, மக்கள் எல்லோரும் வெளியேறிவிட்டதால் பாழடைந்துவிட்ட இந்த ராஜ்யத்தைத் தீயநெறியில் செல்கின்றவளும், குடிமக்களின் நலனில் அக்கறை அற்றவளுமான நீ ஒருத்தியாக (ஓடிப் போக முடியாததால் பொலிவிழந்து நிற்கும்) மரங்களுடன்கூட ஆட்சி செலுத்தி வா! எந்த இடத்தில் இராமன் மன்னனாக இல்லையோ, அந்த இடம் நாடு ஆகாது; இராமன் வாழும் காடுகூட ஒரு நாடாக ஆகிவிடும். பரதன், தசரத மன்னனுக்குப் பிறந்த பிள்ளையாக இருப்பானேயாகில், தந்தையால் மனமுவந்து அளிக்கப்படாத ராஜ்யத்தை ஆட்சி செய்ய உடன்பட மாட்டான். உன்னிடமும் ஒரு மகனைப் போல் நடந்து கொள்ள மாட்டான். (28–30)

நீ, பூமியிலிருந்து ஆகாயத்திற்குத் துள்ளிப் பாய்ந்தாலும், தந்தையின் பரம்பரைப் பழக்கங்களை அறிந்த அவன், அதற்கு மாறுபாடாக நடந்து கொள்ள மாட்டான். (மூத்த பிள்ளைக்கே அரசுரிமை என்ற மரபுக்கு எதிராக நடக்கமாட்டான்.) உன் புத்திரனுக்கு நலன் செய்ய விரும்பிய நீ, அவனுக்குப் பிரியமில்லாத காரியத்தையே செய்திருக்கிறாய். ஏனென்றால், இராமனுக்கு அடிபணிந்து, அனுசரித்துப் போகாத ஒருவர்கூட இந்த உலகத்தில் இல்லை. கைகேயி! இராமனோடு கூடவே ஆடு–மாடுகளும், நாகங்களும், புலி–கரடி–யானை–குதிரை போன்ற விலங்குகளும், பறவைகளும் போவதைக் கண்ணால் காணப் போகிறாய். அவ்வளவு ஏன், மரங்கள்கூட அவன் போகும் திசையை நோக்கியே சாய்ந்து கொள்ளும்! (31–33)

தேவி! உன் மருமகளுக்குக் கொடுத்திருக்கும் மரவுரியைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, சிறந்த ஆடை–அணிகலன்களைக் கொடு. மரவுரி அணிந்துகொள்ள வேண்டுமென்று இவளுக்கு விதிக்கப்படவில்லை.'' இவ்வாறு சொல்லிவிட்டு மரவுரி ஆடையை அணிந்து கொள்வதிலிருந்து சீதையைத் தடுத்தார், வசிஷ்டர். (ஸர். 11ல் காண்க. 'மரவுரி–மான்தோல் அணிந்துகொண்டு, இராமன் தவசியாக வாழவேண்டும்.' கைகேயி கேட்ட வரத்தில் சீதை இல்லவே இல்லை.) (34)

''கேகய மன்னன் மகளே! இராமன் ஒருவனுக்குத்தான் வனவாசம் உன்னால் வரமாகக் கேட்டுக் கொள்ளப்பட்டது. இராமன், நித்திய வைதிகக் கர்மாக்களைச் செய்யும்போது, அவனுடன் இருக்கவேண்டிய தருமபத்தினியான இவள், நன்றாக ஆடை–அலங்காரம் செய்து கொண்டவளாகவே காட்டில் வாழ்ந்து வரட்டும். அரசகுமாரியான சீதை, வாகனங்கள் மற்றும் முக்கியமான பணியாளர்கள் சூழ, எல்லாவிதமான ஆடை–அணிகலன்களுடன் (காட்டிற்குச்) செல்லட்டும். உனக்குக் கொடுத்த வரத்தில் இது அடங்கவில்லை.'' ('சீதையும் தபஸ்வியைப் போல இருக்கவேண்டும்' என்று கோரப்படவில்லை.) (35,36)

ஒப்புயர்வில்லா தவ வலிமை உடையவரும், மன்னரின் ஆசார்யரும், அந்தணோத்தமருமான வசிஷ்டர் இவ்வாறு கூறியதைக் கேட்ட பின்னரும், தன் அன்புக்குரிய கணவரை அடியொற்றியே நடக்க விரும்பிய சீதை, 'மரவுரியைக் கட்டிக்கொள்ள வேண்டும்' என்ற எண்ணத்தைத் துறக்கவில்லை. (37)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
முப்பத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்தெட்டு
மக்களின் கொதிப்பு

பரிவு காட்டும் பந்துக்களை உடைய அவள் (சீதை), ஆதரிப்போர் இல்லாதவளைப் போல, மரவுரியை உடுத்திக் கொள்வதைக் கண்டதும் அங்கிருந்த குடிமக்கள் எல்லோரும், 'தசரதரே! உமக்கும் இப்படி ஒரு கதியா?' என்று இகழ்ந்து வருந்தி அழுதார்கள். அப்போது, அந்த மன்னர் (தசரதர்) அந்தப் பெரும் சத்தத்தைக் கேட்டு மிகவும் மனம் துடித்து, தன்னுடைய வாழ்க்கை, தருமம், புகழ் ஆகியவற்றின் மீதிருந்த பற்றை ஒழித்தார். (1,2)

இக்ஷ்வாகு மன்னரான அவர், வெம்மையான நீண்ட பெருமூச்சுவிட்டு கைகேயியிடம் இவ்வாறு கூறினார்— "கைகேயி! புல்லால் நெய்யப்பட்டதைப் போன்ற இந்த மரவுரியை உடுத்திக் கொண்டு சீதை போகக்கூடாது. இவளோ மெல்லியலாள்; இளம் பெண்; எப்போதும் சுக–சௌக்கியங்களை அனுபவிக்கத் தக்கவள். இவள் காட்டிற்குப் போகும் துன்பத்திற்கு உரியவள் அல்லள் என்று என்னுடைய குருநாதர் உண்மையைக் கூறியிருக்கிறார். (3,4)

மிகச்சிறந்த அரசரான ஜனகருடைய குமாரத்தியான இவள், யாருக்காவது சிறிதளவாவது குற்றமிழைத்திருக்கிறாளா? யாரோ ஒரு பேதை சந்நியாசினியைப் போல, இவ்வளவு ஜனத்திரளுக்கு மத்தியில் மரவுரியைக் கட்டிக் கொண்டு நிற்கிறாளே? (இவ்வளவு பெரிய தண்டனை அடைய என்ன தவறு செய்தாள், அவள்?) ஜனகரின் திருமகளான இவள் மரவுரியைக் களைந்து விடவேண்டும். நான் முன்னர் உனக்குக் கொடுத்த வாக்குறுதியில் இது மாதிரி சொல்லப்படவில்லை. ராஜகுமாரி! சீதை எல்லாவிதமான ஏராளமான ஆடை–ஆபரணங்களுடன், தன் விருப்பப்படி காட்டிற்குச் செல்லட்டும். (5,6)

என் வாழ்நாள் முடிந்து போகும் தறுவாயில் இருப்பதால், பயங்கரமான அந்தப் பிரதிக்ஞையைச் செய்தேன். நீ, 'இதுதான் தருமம்' என்று மதியின்மையால் கூறி, என்னைக் கட்டிப்போட்டுவிட்டாய். மூங்கில் மரங்கள் ஒன்றோடொன்று உரசிக் கொண்டு, தீப்பற்றி அழிவதைப் போல, நானே வாக்குறுதி அளித்து, என்னையே அழித்துக் கொண்டேன். மகாபாவி! இராமனால் உனக்கு ஏதோ ஒரு தீங்கு செய்யப்பட்டது (என்றே வைத்துக் கொள்வோம். அதற்கு தண்டனையாக, அவனுக்கு வனவாசம் கொடுத்துவிட்டாய். அத்துடன் அந்த விஷயம் முடிந்துவிட்டது). ஆனால், வைதேகியால் உனக்கோ, எனக்கோ என்ன கெடுதல் செய்யப்பட்டது? (செய்யப்படவில்லை என்னும்போது, அவளையும் காட்டிற்கு அனுப்பும் நோக்கத்துடன் மரவுரியைக் கொண்டு வந்து தருகிறாயே? இது தகுமா?) (7,8)

பெண்மான் போன்றவள்; மலர்ந்த கண்கள் உடையவள்; மென்மையான இயல்புடையவள்; பதிவிரதா தருமத்தைக் கடைப்பிடிப்பவள். இப்படிப்பட்ட ஜனககுமாரி, இங்கே உனக்கு என்ன குற்றத்தைச் செய்திருக்க முடியும்? இராமனை நாட்டை விட்டுத் துரத்தும் ஒரு பாவமே உனக்குப் போதுமடியம்மா! (அதுவே உன்னை நரகத்தில் வீழ்த்திவிடப் போகிறது.) அதற்கு மேலும்

இன்னும் பல பாவகாரியங்களை (சீதைக்கு மரவுரி கொடுத்துக் காட்டிற்குப் போகும்படி தூண்டுவது போன்ற செயல்களை)ச் செய்யத்தான் வேண்டுமா? (9,10)

இராமன், பட்டாபிஷேகத்திற்காக, இங்கே வந்தபோது அவனிடம் என்ன சொன்னாயோ, அதைக் கேட்டுக் கொண்டிருந்த நான், அப்போது நீ சொன்னவற்றிற்கு மட்டும்தான் சம்மதித்தேன். (என் வாக்குத்தத்தம், அப்போது நீ பிரார்த்தித்த கோரிக்கைகளுக்கு மட்டுமே. பின்னால், நீ வேறு பல கோரிக்கைகள் வைத்தால், அவைகளுக்கு நான் சம்மதித்துவிட்டதாக ஆகாது.) நீ, அப்போது வரமாகக் கேட்டுக் கொண்டதைக் கடந்து, மைதிலியையும் மரவுரி தரித்தவளாகக் கண்ணால் பார்த்துக் கொண்டிருக்கிறாயே? நீ நிச்சயமாக நரகத்திற்குத்தான் போகப் போகிறாய்.'' (11,12)

மகாத்மாவான மன்னர் இவ்வாறு புலம்பிய பின்னும் துக்கத்தின் முடிவைச் சிறிதுகூட அடையாமல், திருக்குமாரனுக்கு நேர்ந்துவிட்ட கஷ்டத்தில் மூழ்கி, அதனாலேயே மிகவும் நொந்து, தளர்ந்து, உணர்விழந்து தரையில் விழுந்தார். மேற்கண்டவாறு தந்தை பேசிப் புலம்பிக் கொண்டிருக்கும்போது, காட்டிற்குப் போவதற்குச் சித்தமாக இருந்த இராமன், தலையைக் குனிந்து கொண்டு வெறும் தரையில் உட்கார்ந்திருந்த அவரைப் பார்த்து பின்வருமாறு கூறினார்— (13,14)

''தருமமொன்றையே கடைப்பிடிக்கும் உத்தமரே! என்னுடைய தாயார் கௌசல்யை முதுமை அடைந்தவர்; இழிகுணமே இல்லாதவர்; நல்லவர் என்று புகழ் பெற்றவர். இவர் (இப்போதும்) தங்களைக் குறை கூறவில்லை. வேண்டுவார் வேண்டுவன அருள்பவரே! இவர் இதுவரை துக்கம் என்பதையே அறிந்ததில்லை. நான் இல்லாததால் துயரக்கடலில் மூழ்கித் தவிக்கும் இவரிடம் மேலும் அதிகமான பரிவு காட்டவேண்டும். (15,16)

நல்ல நோன்புகள் நோற்கும் இவர், என்னையே எண்ணிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தாலும், புத்திரனைப் பிரிந்த சோகத்தைப் பாராட்டாதவராக உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும்படி போற்றத் தக்கவரான தங்களால் மிகுந்த கவனத்துடன் பாசம் செலுத்தப்பட வேண்டும். இந்திரனை நிகர்த்த பெருமை பெற்றவரே! புத்திர வாத்சல்யமுடைய என்னுடைய தாயார் காட்டில் வாழும் என்னையே நினைத்து, துயரம் தாங்காமல், தன் உயிரை விட்டு யமலோகம் சென்றுவிடாதபடி, இவரைப் பரமநேயத்துடன் காப்பாற்றி வரவேண்டும்.'' (17,18)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
முப்பத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்தொன்பது

காட்டிற்குப் போக விடைபெறுதல்

தன் மனைவிகள் சூழ்ந்து கொண்டிருக்க, இராமனுடைய பேச்சைக் கேட்டு, தவம் செய்யும் முனிவரைப் போன்ற கோலத்தில், அவரைக் கண்களால் கண்டவுடன் மன்னர் உணர்விழந்தவரானார். மிகவும் மனம் வெதும்பிப் போயிருந்த அவர், தலையைத் தூக்கி இராகவனைக் கண்களால் காண முடியவில்லை; அவரைப் பார்த்துப் பதில் சொல்லவும் முடியவில்லை. மகாபலம் பொருந்திய மாமன்னர் சிறிதுநேரம் உணர்விழந்து கிடந்த பின்னர், இராமனையே நினைத்து நினைத்து மனம் புழுங்கியவராகப் பின்வருமாறு புலம்பினார்— (1–3)

''போன ஜன்மத்தில் பல பசுமாடுகளிடமிருந்து கன்றுகளைப் பிரித்திருப்பேன். அல்லது எத்தனையோ உயிர்ப்பிராணிகளை மிகவும் துன்புறுத்தியிருப்பேன். அதனால்தான் இந்த

அவலநிலை எனக்கு இப்போது ஏற்பட்டிருக்கிறது. உரிய காலம் வராவிட்டால் உடம்பிலிருந்து உயிர் நீங்காது. அதனால்தான் கைகேயியினால் சித்திரவதைப்பட்டுக் கொண்டிருக்கும் எனக்கும் மரணம் ஏற்படவில்லை. அட! நான் பெற்ற பிள்ளை, மிருதுவான ஆடைகளைக் களைந்துவிட்டு, முனிவர் கோலத்தில் நெருப்பைப் போல் ஜொலித்துக் கொண்டு, என் எதிரில் நிற்பதைக் கண்களால் காண்கிறேனே? (என்ன துர்ப்பாக்கியம்!) (4–6)

சுயநலத்தில் ஊக்கங்கொண்டிருக்கும் கைகேயி என்ற ஒருத்தி, நேர்மையற்ற வழியைக் கடைப்பிடித்து (என்னை ஏமாற்றிச்) செய்யப்பட்ட காரியத்தில், மக்கள் எல்லோரும் பெரும் துன்பத்தில் தவிக்கிறார்கள்.'' இவ்வாறு கூறிவிட்டுக் கண்ணீர்ப் பெருக்கினால் துயரம் மேலிட புலன்களின் செயலிழந்து, ஒரே ஒரு முறை 'இராமா' என்று அழைத்து, மேலே தொடர்ந்து பேச முடியாதவரானார். சிறிது நேரத்திற்குப்பின் உணர்வு பெற்ற அந்த மன்னர், கண்ணீர் நிறைந்த கண்களோடுகூட, சுமந்திரரை நோக்கி இவ்வாறு கூறினார்— (7–9)

''நல்ல நிலைமையில் உள்ள தேரில், உத்தமமான குதிரைகளைப் பூட்டிக் கொண்டு வா; இங்கிருந்து (மூன்று உலகங்களுக்கும் பெரும் நன்மை விளைவிக்கும் ஒரு வீரச் செயல் செய்யப் போகும்) மகத்தான பேறு பெற்ற இவனை, நாட்டின் எல்லைக்கு அப்பால் சேர்ப்பித்துவிடு. சீலமும் வீரமும் மிக்க மைந்தன், தன் தாயார்–தகப்பனார்களாலேயே காட்டிற்கு ஓட்டிவிடப்படுகிறான் என்றால், 'நற்குணங்கள் கொண்ட குணசாலிக்கு இதுதான் பலன் என்று அறநூல்களில் கூறப்பட்டிருக்கிறது' என்று எண்ணுகிறேன்.'' (10,11)

மன்னருடைய கட்டளையை ஏற்று விரைவாகச் செயல்படும் சுமந்திரர், உயர் ஜாதிக் குதிரைகள் பூட்டிய ரதத்தைக் கொண்டு வந்து நிறுத்தினார். அரசகுமாரரிடம், ''உயர்ஜாதிக் குதிரைகள் பூட்டப்பட்டதும், தங்கம் இழைக்கப்பட்டதுமான ரதம் சித்தமாக இருக்கிறது'' என்று கைகளைக் கூப்பிக் கொண்டு சாரதி சொன்னார். இடம்–காலம் அறிந்தவரும், சகலவிதத்திலும் தூய்மையானவருமான மன்னர், பொருள் சேர்த்து சேமித்து வைக்கும் பணியில் உள்ள கருவூலத் தலைவரை உடனே அழைப்பித்து, கண்டிப்பான உத்தரவைக் கூறினார்— (12–14)

''வைதேகி, இத்தனை (பதிநான்கு) ஆண்டுக் காலம் உபயோகிப்பதற்குத் தேவையான உயர்ரக ஆடைகள், சிறந்த அணிகலன்கள் ஆகியவைகளைக் கணக்குப் பார்த்து, விரைவில் கொண்டு வா!'' மாமன்னர் இவ்வாறு உத்தரவிட்டவுடன், அவர் கருவூலம் சென்று எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு வந்து உடனே சீதையிடம் சமர்ப்பித்தார். நல்ல குலத்தில் பிறந்தவளும் (ஒரு தாயின் வயிற்றிலிருந்து பிறவாமல், பூமியில் நல்லவண்ணம் தோன்றியவளும்), காட்டிற்குப் போகச் சித்தமாக இருந்தவளுமான சீதை, நல்ல லட்சணங்களோடிருந்த தன் மேனி அங்கங்களில், கவின்மிகு அணிகலன்களை அணிந்து கொண்டாள். (15–17)

பொழுது புலரும் வேளையில், கிரணங்களோடு கூடிய சூரியன் ஆகாயத்தை ஒளிமயமாக்குவதைப் போல, ஆபரணங்களால் அழகு செய்யப்பட்ட சீதை, அந்த மாளிகையையே பிரகாசப்படுத்தினாள். அப்போது, (கணவரை அடியொற்றிச் செல்லும்) பாக்கியசாலியான சீதை, மாமியாரின் திருவடிகளில் விழுந்து வணங்கினாள். அவர் (கோசலை), அவளை இரு கைகளாலும் தூக்கி, மார்புறத் தழுவிக் கொண்டு, இவ்வாறு கூறினார். குணக்குறைவான செயலுக்கு இடம் கொடாத மைதிலியை உச்சிமுகர்ந்து, ''இந்த உலகில் கணவர்களால் மேன்மையாக நடத்தப்பட்டாலும், பண்புடைய குலத்தில் பிறக்காத பெண்கள், ஏதோ காரணத்தால் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்ட தத்தம் கணவரிடம் மரியாதை செலுத்துவதில்லை. (18–20)

முன்னர் சுகங்களையெல்லாம் அனுபவித்துவிட்டு, தற்போது சிறிதளவே ஆபத்து என்றாலும்கூட, கணவரிடம் குற்றம் காண்கிறார்கள். ஏன், விலக்கிக்கூட வைத்துவிடுகிறார்கள். இதுதான் பாமரப் பெண்களின் இயல்பு. சில இளம்பெண்கள் பொய்யான நடத்தையுடையவர்கள்; காமம், கோபம் போன்ற மனோவிகாரங்களுக்கு இடம் கொடுப்பவர்கள்; கடுமையானவர்கள்;

இதயமே இல்லாதவர்கள் போல யாரிடமும் ஒருபோதும் கருணை காட்டாதவர்கள்; கீழான சிந்தனைகளிலேயே உழல்பவர்கள்; நொடிப்பொழுதில் (பின்னர் ஏற்படும் விளைவுகளைக் கருதாமல்) கணவருடன் உறவைத் துண்டித்து விடுபவர்கள்; (21–22)

தான் பிறந்த உயர்குலம், தனக்குச் செய்யப்பட்ட உபகாரம், தான் பெற்ற கல்வி, தனக்குக் கொடுக்கப்பட்டது, தன்னிடம் கணவர் காட்டிய அளவற்ற பாசம் – இவைகள் எல்லாம் பெண்களின் இதயத்தில் உறுதியாக இடம் பெறுவதில்லை. அவர்கள் எப்போதும் மாறிக் கொண்டேயிருக்கும் மன இயல்பு உடையவர்கள். இதற்கு மாறாக, சிறந்த நாரீமணிகளிடம் நற்குலம், சத்தியம், சாஸ்திர நம்பிக்கை முதலியவைகளில் மனம் நிலைத்திருக்கும். பெண்களுக்கு மிக உயர்ந்த தருமானுஷ்டானமாக கணவர்தான் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளார். நாட்டிலிருந்து வெளியேற்றப்படும் என் மகனை, நீ அவமானம் செய்யலாகாது. அவன் செல்வச்சீமானாக இருந்தாலும், வறுமையில் உழன்றாலும் சரி, கணவரே உனக்கு தெய்வம்.'' (23–25)

மாமியார் கூறிய தருமம்–அர்த்தம் பொதித்த சொற்களின் உட்கருத்தைப் புரிந்து கொண்ட சீதை, அவர் எதிரில் நின்று கைகளைக் கூப்பிக்கொண்டு கூறினாள்— ''அன்னையே! தாங்கள் எனக்குக் கூறிய உபதேசத்தின்படி நடப்பேன். கணவரிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று முன்பே அறிவுறுத்தப்பட்டிருக்கிறேன். அதைத் தாங்கள் இப்போது நினைவுபடுத்தினீர்கள். வணக்கத்திற்கு உரியவரே! கீழ்த்தரமான பெண்களைப் போல என்னைத் தாங்கள் எண்ணக் கூடாது. சந்திரனிடமிருந்து ஒளி விலக முடியாததைப்போல தரும வழியிலிருந்து நான் சிறிதும் விலக மாட்டேன். தந்தியில்லாத வீணையை வாசிக்க முடியாது; சக்கரம் இல்லாத தேர் ஓடாது; அதுபோல ஒரு பெண் ஏராளமான மக்கட்செல்வத்தைப் பெற்றவளாக இருந்தாலும், கணவர் அருகில் இல்லாவிட்டால் சுகத்தை அடைய மாட்டாள். (26–29)

தந்தை, தாய், மகன் – இவர்கள், பெண்கள் சுகமாக இருப்பதற்கு ஓர் அளவுக்குத்தான் உதவியாக இருக்கமுடியும். எல்லையில்லாத அளவு சுகம் (இகலோகத்தில் உலகாயத இன்பங்களையும், பரலோகத்தில் புண்ணியப் பயனான போகங்களையும்) கொடுக்கக் கூடிய கணவரை யார்தான் பூஜிக்காமல் இருப்பார்கள்? அம்மா! முதிய ஸ்திரீகளிடமிருந்து பெண்களின் சாமானிய தருமம், விசேஷ தருமம் குறித்து, நான் விரிவாகக் கேட்டிருக்கிறேன். பெண்களுக்குக் கணவர்தான் கண்கண்ட தெய்வம் என்பதைப் புரிந்து கொண்டிருக்கிறேன். அப்படிப்பட்ட நான் இவரை எப்படி அவமதிப்பேன்?'' (30,31)

சீதையினுடைய மனப்பூர்வமான சொற்களைக் கேட்டதும், தூய இதயம் கொண்ட கௌசல்யா தேவி, துயரம், உவகை ஆகிய இரண்டு காரணங்களாலும் உடனே கண்ணீர் விட்டார். அப்போது, தாயார்கள் கூட்டத்தில் தனிச்சிறப்புடன் நிற்கும் தாயார் கோசலையை நோக்கி, அறத்தின் திருவுருவான இராமன் கூப்பியக் கைகளுடன் பின்வருமாறு கூறினார்— (32,33)

''அம்மா! தாங்கள் கவலைப்பட வேண்டாம். என் தகப்பனாரைப் பார்த்துக் கொள்ளுங்கள். வனவாசத்திற்காகக் குறிக்கப்பட்ட காலம் வெகுவிரைவில் முடிந்துவிடும். இது என்ன, ஒன்பதும் ஐந்துமான சொற்ப ஆண்டுக்காலம்தானே? ஒரு நாள் நீங்கள் தூங்கி விழிக்கும் போது, திடீரென்று நண்பர்கள் புடைசூழ, லட்சுமணனும் சீதையும் பக்கத்தில் நிற்க, சௌக்கியமாக நான் வந்து சேர்ந்துவிட்டதைக் காணத்தான் போகிறீர்கள்!'' இவ்வாறு, தன்னைப் பெற்ற தாயிடம் உறுதியான தன் கருத்தைக் கூறிவிட்டு, உடனிருந்த மற்ற முந்நூற்றைம்பது தாய்மார்களையும் பார்த்து, அவர் மனம் கலங்கினார். (34–36)

அவர்கள் எல்லோரும் அவ்வாறே (பெற்ற தாயாரைப் போன்றே) மிகவும் வருத்தத்தில் ஆழ்ந்திருப்பதைக் கண்ட தசரதகுமாரர், கைகளைக் கூப்பிக்கொண்டு தருமத்தோடு கூடிய சொற்களை உரைத்தார்— ''அதிகமான நெருக்கத்தினால் நான் தங்களிடம் சிலசமயம் கோபமாகப் பேசியிருந்தாலோ, அல்லது அறியாமையினால் தவறு செய்திருந்தாலோ, அதை

மன்னித்துவிடுங்கள். உங்கள் எல்லோரிடமிருந்தும் விடைபெற்றுக் கொள்கிறேன்.'' சோகத்தால் அலைப்புண்ட தசரத மன்னரின் மனைவிகளான அவர்கள் நன்னெறியை விளக்கிக் காட்டுவதும், ஆறுதல் அளிப்பதுமான சொற்களை இராமனிடமிருந்து கேட்டார்கள். (37–39)

இவ்வாறு, இராமன் கூறியதும் தசரதருடைய பத்தினிகள் எழுப்பிய சோகப் பெருங்கூச்சல், பெண் கிரௌஞ்சப் பறவைகளின் நாதம் போல் அனைத்திடங்களிலும் பரவிற்று. முன்னர், முரஜம்–பணவம் ஆகிய பறைகளின் மேககர்ஜனை போன்ற பேரொலிகளால் எதிரொலித்த தசரதரது மாளிகை, இப்போது சோகம், அழுகுரல், வேதனை, கவலை, துயரம் ஆகியவற்றின் ஒலிக்குறிப்புக்களை உடையதாக ஆயிற்று! (40,41)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
முப்பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பது
நகரமாந்தர் உடன் சென்றார்கள்!

பின்னர், இராமனும் சீதையும் இலக்குவனும் பணிவு தோன்ற, கைகூப்பிக் கொண்டு மிகவும் வருந்திய நிலையில் மன்னரின் திருப்பாதங்களைத் தொட்டு கும்பிட்டு, அவரை வலம் வந்தார்கள். அறம் அறிந்தவரான இராமன், சீதையுடன்கூட மன்னரிடம் அனுமதி பெற்றுக் கொண்ட பின்னர், சோகத்தால் மனம் கலங்கி, தாயாரை நமஸ்கரித்தார். இராமன் வணங்கிய பிறகு, லட்சுமணன் கௌசல்யா தேவியாரை நமஸ்கரித்தான். அடுத்ததாக, பெற்ற தாயான சுமித்திரையின் பாதங்களில் விழுந்து வணங்கினான். பாதங்களில் பணிந்து நின்ற லட்சுமணனை உச்சிமுகர்ந்து, மகாபலசாலியான அவனது நல்வாழ்வில் அக்கறையுள்ள அன்னை சுமித்திரை அழுதுகொண்டே மைந்தனிடம் கூறினாள்— (1–4)

''செல்வமே! நீ வனவாசத்திற்கென்றே படைக்கப்பட்டிருக்கிறாய். நண்பர்களிடத்தில் பேரன்பு கொண்ட நீ, காட்டில் இராமன் இங்குமங்கும் சுற்றி அலையும்போது கவனக்குறைவாக இருந்துவிடாதே! (அவனைப் பாதுகாப்பதில் நீ எப்போதும் விழிப்புடன் இருக்க வேண்டும்.) மாசற்றவனே! துன்பத்தின் வசப்பட்டிருந்தாலும், செல்வச் செழிப்புடன் வளமாக இருந்தாலும் இராமன்தான் உனக்குக் கதி. மூத்த சகோதரனுக்கு அடங்கி நடப்பது என்பதுதான் இந்த உலகில் சான்றோர்களின் அனுஷ்டானம். தானம் கொடுத்தல், யாக தீட்சை செய்து கொள்வது, யுத்தத்தில் ஈடுபட்டு உயிரை விடுவது ஆகிய இவைதான் பழமையான இந்தப் பரம்பரையினர் கைக்கொண்டுவரும் பழக்கம்.'' (5–7)

இலக்குவனிடம் சுமித்திரை இவ்வாறு கூறிவிட்டு, காட்டிற்குப் போவதற்கு ஆயத்தமாகிவிட்ட இராமனைப் பார்த்து, 'போய் வா, போய் வா' என்று ஆசீர்வாதங்களை மீண்டும் மீண்டும் கூறினாள். (பின்னர், இலக்குவனிடம் கூறினாள்—) ''குழந்தாய்! இராமனை தசரதராக எண்ணிக் கொள்; சீதையை நானாக (தாயாராக) எண்ணிக் கொள்; அரண்யத்தை அயோத்தியாக எண்ணிக் கொள். சரி, சௌக்கியமாகச் சென்று வா.'' பின்னர், பணிவான நடத்தையின் பெருமையை உணர்ந்தவரும், பணிவுள்ளவருமான சுமந்திரர், மாதலி (என்ற ரத சாரதி) தன் தலைவன் இந்திரனிடம் எப்படி மரியாதையுடன் பேசுவானோ, அதைப் போல கூப்பிய கரங்களுடன் இராமனை நோக்கிக் கூறினார்— (8–10)

''அரசகுமாரரே! தங்களுக்கு வாழ்த்துக்கள்! கீர்த்தி பெற்ற ஸ்ரீராமா! தேரில் ஏறுங்கள். நீங்கள் எவ்விடம் போகவேண்டும் என்று சொல்கிறீர்களோ, அந்த இடத்திற்கு விரைவில் கொண்டுபோய்ச் சேர்க்கிறேன். தாங்கள் பதிநான்கு ஆண்டுக்காலம் காட்டில் வசிக்கவேண்டும்.

கைகேயியின் வாக்குப்படி, இன்றே தொடக்க நாள்.'' அழகாகத் தன்னை அலங்காரம் செய்து கொண்டிருந்த சிறந்த நாரீமணியான சீதை மனமகிழ்ச்சியுடன் சூரியனுக்கு ஒப்பாக ஒளிவீசும் அந்த ரதத்தில் ஏறிக் கொண்டாள். (11–13)

கணவருடன்கூட காட்டிற்குச் செல்லும் சீதைக்கு, அவள் அங்கே தங்க வேண்டிய காலத்தைக் கணக்கிட்டு, அந்தக் காலத்திற்குத் தேவையான ஆடை–ஆபரணங்களை மாமனார் கொடுத்தார். அதைப் போலவே சகோதரர்களுக்கு (தந்தையால் கொடுக்கப்பட்ட) ஏராளமான ஆயுதங்கள், கவசங்கள், தோலால் கட்டப்பட்ட கூடை ஆகியன தேர்த்தட்டில் வைக்கப்பட்டன. பின்னர், நெருப்பைப் போல் ஒளிவீசுவதும், தங்கத்தால் இழைக்கப்பட்டதுமான அந்த ரதத்தில் சகோதரர்களான இராம–லட்சுமணர்கள் விரைவாக ஏறிக் கொண்டார்கள். (14–16)

சீதையை மூன்றாமவராகக் கணக்கிட்டு, அவர்கள் ரதத்தில் ஏறிவிட்டதைக் கண்டதும் சுமந்திரர், அதை முன்னே செலுத்தினார். அதில் பூட்டப்பட்டிருந்த, காற்றைப் போல் கடுகிச் செல்லும் குதிரைகளைத் தட்டிக் கொடுத்தார். வெகுகாலம் காட்டில் தங்குவதற்காக, இராமன் புறப்பட்டுச் சென்றபோது, நகரத்து மக்கள் அனைவருக்கும் சித்தக் கலக்கத்தில் மூர்ச்சை உண்டாயிற்று. அந்தச் சமயத்தில் மக்கள் கூட்டமாகக் கூடி மனக்கலக்கமும் குழப்பமும் அடைந்தார்கள்; மதங்கொண்ட யானைகள் கோபத்தால் கர்ஜித்தன; அங்குமிங்கும் ஓடிய குதிரைகளின் கனைப்பாலும் அந்த நகரத்தில் பெருஞ்சத்தம் ஏற்பட்டது. (17–19)

கோடை வெப்பத்தால் தாக்கப்பட்டவன் நீர்நிலையை நோக்கி ஓடுவதைப் போல, அந்த நகரத்திலிருந்த சிறுகுழந்தைகள் முதல் வயோதிகர்கள் வரை எல்லோரும் மிகவும் துக்கமடைந்தவர்களாக, இராமனைப் பின்தொடர்ந்தே ஓடினார்கள். தேரின் இரு பக்கங்களிலும், பின்புறத்திலும், இராமனையே நோக்கியவண்ணம் முன்புறத்திலும், கண்களில் நீர் வழிய தொடர்ந்து ஓடிய மக்கள் ஒன்றாகச் சேர்ந்து பெருங்குரலில் அவரை (சாரதியை)ப் பார்த்து பின்வருமாறு கூறினார்கள்— (20,21)

''சாரதியே! குதிரைகளின் கடிவாளங்களை இழுத்துப் பிடித்து மெல்ல மெல்லச் செல்லும். (இன்னும் சிறிது நேரமாவது) இராமனுடைய திருமுகத்தைக் கண்டு மகிழ்கிறோம். ஏனென்றால், இனிமேல் அவரைக் காண்பது என்பது அரிது. (பதிநான்கு ஆண்டுகள் கழித்துத்தான் பார்க்க முடியும்.) இராமனைப் பெற்ற தாயாரின் இதயம் நிச்சயம் இரும்பினால் செய்யப்பட்டதாகத்தான் இருக்கவேண்டும். தேவகுமாரனைப் போலிருக்கும் மைந்தன் காட்டிற்குப் போவதைக் கண்டும் (அவருடைய இருதயம்) பிளந்து போகவில்லையே? (22,23)

கணவரை நிழல்போலப் பின்தொடர்ந்து செல்லும் சீதை, பிறவிப் பயனை அடைந்து விட்டார். அறவழியிலேயே நிலைத்து நிற்கும் அவர், சூரியனின் ஒளிக்கதிர்கள் மேருமலையை விட்டுப் பிரியாதது போல, கணவரை விட்டுப் பிரியாதிருக்கிறார். ஆகா! லட்சுமணா! தாங்கள் ரொம்பவும் கொடுத்து வைத்தவர். எப்போதும் இனிமையாகப் பேசுபவரும், தேவதை போன்றவருமான மூத்த சகோதரருக்கு (காட்டில்) சேவை செய்யும் பேறு பெற்றிருக்கிறீர்கள். தாங்கள் இவருடன்கூடச் செல்கிறீர்கள் – இதுவே, தங்களுக்குக் கிடைத்துள்ள மகத்தான பேறு. இதுவே, தங்களுக்குச் சகல மங்களங்களையும் கொடுக்கக் கூடியது. இதுவே, தங்களுக்கு அழிவற்ற சுக–சௌக்கியங்களுக்கு இருப்பிடமான சுவர்க்கத்திற்கு இட்டுச் செல்வது.'' (24–26)

இவ்வாறு சொல்லிக் கொண்டும், இக்ஷ்வாகு வம்சத்திற்கு ஆனந்தத்தைப் பெருக்கும் இராமனைத் தொடர்ந்து சென்று கொண்டும் இருந்த அந்த நகரவாசிகள், தங்கள் கண்களிலிருந்து பெருகிய கண்ணீரை அடக்க முடியாமல் இருந்தார்கள். இந்த நிலையில் மனவேதனைப்பட்டுக் கொண்டிருந்த மனைவிமார்களால் சூழப்பட்டவரும், மனம் நொந்து போயிருந்தவருமான மன்னர், ''பாசத்திற்குரிய புத்திரனை இன்னும் ஒரு தடவை பார்த்துவிடுகிறேனே?'' என்று சொல்லிக் கொண்டே மாளிகையிலிருந்து வெளியே வந்தார். (27,28)

ஒரு மாபெரும் ஆண்யானை (தப்பிச் செல்ல முடியாதபடி) கட்டிப் போடப்பட்டால், பெண்யானைகள் எவ்வாறு அலறித் துடிக்குமோ, அவ்வாறே தன் எதிரில் பெண்களின் அழுகுரல் பேரொலியாக எழுவதைக் கேட்டார். பௌர்ணமி நாளில் முழு சந்திரன் ராகு கிரகத்தால் மறைக்கப்பட்டுத் தன் ஒளியை இழந்து காணப்படுவது போல, தந்தையும் கீர்த்திமிக்க காகுத்த மன்னருமான அவர் ஒளியிழந்தவர் ஆனார். சிந்தனைக்கு அப்பாற்பட்டவரும், தசரதருடைய குமாரருமான இராமன், சாரதியை நோக்கி, 'வேகமாக ஓட்டுக' என்று முடுக்கிவிட்டார். (29–31)

சாரதியிடம் இராமன், 'வேகமாகப் போ' என்கிறார். அயோத்தி மக்கள், 'நில்லுங்கள்' என்கிறார்கள். 'ஒன்றுக்கொன்று முரணான சொற்களில் எதை ஏற்றுச் செயல்படுவது?' என்பது புரியாமல், அந்தப் பாதையில் எதையும் செய்யமுடியாமல் திகைத்துப் போனார், சாரதி. பராக்கிரமசாலியான இராமன் நகரத்திலிருந்து வெளியே செல்லும்போது (மக்கள் கூட்டத்தால்) தரையிலிருந்து எழுந்த புழுதி, மக்கள் சிந்திய கண்ணீர்ப் பெருக்கினால் நனைந்து அடங்கியது. இராகவன் பயணப்பட்டுச் செல்கையில் நகரம் முழுவதும் மிகவும் துக்கத்தில் ஆழ்ந்தது; நகரவாசிகள் அழுதார்கள்; கண்ணீர் பெருக்கினார்கள்; ஆ.... ஆ.... என்று அரற்றினார்கள்; உயிரற்றவர்களைப் போல் உணர்விழந்து போனார்கள். (32–34)

ஓடி விளையாடும் மீன்களால் வீசியெறியப்பட்ட தண்ணீர், தாமரை மலர்களிலிருந்து வழிவதைப் போல துயரத்தைக் கட்டுப்படுத்த முடியாத பெண்களின் கண்களிலிருந்து நீர் வழிந்தது. கீர்த்திமிக்க மன்னர், நகரத்து மக்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாகத் துயரத்தில் ஆழ்ந்திருப்பதைப் பார்த்து, துக்கம் தாங்காமல் வேர் வெட்டப்பட்ட மரம் போல் தரையில் சாய்ந்தார். மன்னர் மிகவும் விசனப்பட்டு, மெய் நடுங்க நிற்பதை, இராமனுடைய தேரின் பின்புறத்தில் இருந்த நகர மக்கள் பார்த்து, 'ஐயகோ!' என்று பெருங்குரல் எழுப்பினார்கள். (35–37)

எப்போதும் ஆனந்தமயமாக விளங்கும் அந்தப்புரத்திலிருந்து, சிலர், 'ஏ, இராமா!' என்றும், சிலர், 'இராமனைப் பெற்ற அன்னையே!' என்றும் உரக்கக் கூவி வருத்தப்பட்டார்கள். (அதைக் கேட்டுத் திரும்பிப் பார்த்த) இராமன், மிகவும் மனத்துயரத்தால் கலங்கிய சித்தமுடைய தந்தையும் தாயாரும் தெருவில் தனக்குப் பின்னே தொடர்ந்து வருவதைக் கண்டார். கயிற்றால் கட்டிப் போடப்பட்ட குதிரைக்குட்டி, தன் தாயின் அருகே செல்ல முடியாதது போல, தரும பாசத்தால் அடக்கி வைக்கப்பட்ட அவர், தன் தாயாரை நேரடியாகப் பார்க்க முடியாமல் ஓரக்கண்ணால் பார்த்தார். (38–40)

வாகனங்களிலேயே செல்லவேண்டிய அவ்விருவரும் (தாய்–தந்தையர்) சகல சுகங்களுக்கும் உரியவர்கள்; துயரப்பட வேண்டாதவர்கள். தற்போது காலால் நடந்து வருவதைக் கண்ட இராமன், 'வேகமாகச் செல்லுங்கள்' என்று சாரதியிடம் ஆணையிட்டார். உத்தம யானை அங்குசத்தால் குத்தப்படுவதைச் சகித்துக் கொள்ளாது. அதுபோல, புருஷோத்தமனான இராமன், தாயும் தந்தையும் நடந்து வந்த துயரக் காட்சியைச் சகித்துக் கொள்ள முடியாதவரானார். தொழுவத்தில் கட்டப்பட்டிருக்கும் தன் கன்றைக் காண்பதற்காக (புல்மேய்ந்துவிட்டு மாலையில் வீடு திரும்பும்) தாய்ப்பசு ஓடி வருவதைப் போல, இராமனுடைய தாயார் ஓடி வந்தார். (41–43)

அப்போது, ரதத்தைப் பின்தொடர்ந்து அழுதபடியே கோசலை வந்து கொண்டிருந்தார். 'இராமா! இராமா!' என்றும், 'சீதே!' என்றும், 'லட்சுமணா!' என்றும் வாய்விட்டுப் புலம்பிக் கொண்டு, இராம–லட்சுமண–சீதையின் கதியை நினைத்து கண்களில் நீர்மல்க, தள்ளாடிக் கொண்டு வரும் தாயாரைக் கண்கொட்டாது பார்த்தார், கோசலை மைந்தன். 'நிறுத்து' என்று மன்னர் கூவினார். 'போங்கள், போங்கள்' என்று இராமன் கூறினார். (முரண்பாடான உத்தரவுகளால்) சுமந்திரருடைய உள்ளம் இரு சக்கரங்களுக்கிடையில் சிக்கிக்கொண்டது போல் தவித்தது. (44–46)

இங்கே இப்போது தாமதப்படுத்தினால் பெருந்துயரம்தான் ஏற்படும். (அதனால் வேகமாக ஓட்டுங்கள்.) நீங்கள் திரும்பி வந்ததும், 'நான் சொல்லியும் நீ தேரை நிறுத்தாமல் ஓட்டினாயே?'

என்று கடிந்து கொண்டால், 'நீங்கள் கூறியது என் செவிகளில் விழவில்லை என்று மன்னரிடம் கூறிக் கொள்ளலாம்' என்று இராமன் சாரதியிடம் கூறினார். இராமனுடைய கட்டளைப்படியே நடப்பது என்று தீர்மானித்து, உடன் வந்து கொண்டிருந்த நகரவாசிகளிடம் விடைபெற்றுக் கொண்டு வேகமாகவே சென்று கொண்டிருந்த குதிரைகளை, இன்னும் வேகமாகச் செல்லும்வண்ணம் கடிவாளத்தைச் சொடுக்கினார், சாரதி. மன்னருடன்கூட வந்த ஜனக்கூட்டம் (தேர், மிக வேகமாகப் பறந்து செல்வதைக் கண்டு,) ஸ்ரீராமனை மனத்தால் வலம் வந்து அவ்விடத்திலேயே நின்றுவிட்டது. ஆனால், அந்த மக்கள் மனத்தாலும் கண்ணீர்ப் பெருக்கினாலும் இராமனுடனேயே இருந்தார்கள்! (47–49)

இதனிடையில் அமைச்சர்கள் தசரத மன்னர் அருகில் சென்று, ''எவர் மீண்டும் நல்லபடியாகத் திரும்பி வரவேண்டும் என்று விரும்புகிறோமோ, அவரைத் தொடர்ந்து வெகுதூரம் செல்லலாகாது'' என்று எடுத்துரைத்தார்கள். தருமநெறிக்கு ஒத்ததாக இருந்த அவர்களுடைய சொற்களைக் கேட்ட மன்னர், வியர்வை கொட்டும் உடலுடன் வருத்தமே உருவெடுத்தாற்போன்ற தோற்றத்துடன், வேறு எதுவும் செய்யத் தோன்றாத நிலையில் மனைவிகளோடுகூட அங்கேயே நின்றுவிட்டார். (50,51)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
நாற்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்தொன்று

நகரத்தின் அவலத் தோற்றம்

(ரதத்தில்) கை கூப்பியபடி நின்றுகொண்டு புருஷோத்தமனான இராமன் நகரத்திலிருந்து வெளியேறிக் கொண்டிருந்த போது, பெண்களின் இருப்பிடமான அந்தப்புரத்திலிருந்து துக்கமயமான இரைச்சல் உண்டாயிற்று. (1)

''கதியற்றவர்கள், வாழ்க்கை வசதியற்றவர்கள், நோன்பு இருப்பவர்களான மக்களுக்கெல்லாம் எவரொருவர் புகலிடமாக இருந்தாரோ, போஷகராக இருந்தாரோ, அந்தப் பாதுகாவலர் எங்கோ போய்க் கொண்டிருக்கிறாரே? வன்மையான குற்றச்சாட்டுகள் கூறப்பட்டவராக இருந்தாலும், (பதிலுக்கு) அவருக்குக் கோபமூட்டக்கூடிய சொற்களைத் தவிர்த்துப் பேசுவார்; கோபம் கொண்டவர்களைச் சமாதானப்படுத்தி மகிழ்வுறச் செய்வார்; மற்றவர்களுக்கு ஏற்படும் துக்கங்களையும் தனக்கு நிகழ்ந்ததாக எண்ணி அனுதாபப்படுவார். அப்படிப்பட்டவர் (ஸ்ரீராமன்) எங்கே போய்க் கொண்டிருக்கிறார்? (2,3)

மகாபலம் பொருந்திய இராமன், பெற்ற தாய் கோசலையிடம் எவ்வளவு அத்யந்த பாசம் வைத்திருந்தாரோ, அதேபோல் நம்மிடமும் பழகினார். அந்த மகாத்மா எங்கேதான் போகிறாரோ? கைகேயியின் தொல்லை தாங்காமல் வனத்திற்குப் போகும்படி அரசரால் ஆணையிடப்பட்ட இவர், உலகத்திலுள்ள மக்களுக்கெல்லாம் ரட்சகர், (நம்மையெல்லாம் பரிதவிக்க விட்டுவிட்டு) எங்கேயோ போகிறாரே? என்ன கஷ்டம்! மன்னர் அறிவிழந்துவிட்டார் போலும்! எல்லா ஜீவராசிகளுக்கும் பிரியமானவரும், அறநெறி வழுவாதவரும், சத்தியநோன்பு பூண்டவருமான இராமனை வனவாசம் செய்யும்படி நாட்டிலிருந்து வெளியேற்றுகிறாரே?'' (4–6)

இவ்வாறாக, கன்றைப் பிரிந்த பசுக்களைப் போல எல்லா அரசிகளும் துக்கம் தாங்கமாட்டாமல் புலம்பினார்கள்; உரத்த குரலில் அழவும் செய்தார்கள். அந்தப்புரத்திலிருந்து வந்த துயரக் குரலைக் கேட்ட மன்னர், செல்வக் குமாரனைப் பிரிந்த சோகத்தால் மிகவும் பரிதவித்து, மேலும் அதிகமாக வேதனைப்பட்டார். அன்றைய தினம் குடும்பஸ்தர்கள் (ஆண்கள்)

அக்னிஹோத்ரம் முதலிய அக்னியில் செய்யப்பட வேண்டிய கர்மாக்களைச் செய்யவில்லை; (பெண்கள்) உணவு சமைக்கவில்லை; குழந்தைகள் எந்த வேலையும் செய்யவில்லை; சூரியன்கூட ஒளிமங்கிப் போனான். (7–9)

யானைகள் வாயில் போட்டுக் கொண்ட இரையை வெளியே கக்கிவிட்டன. பசுக்கள் கன்றுகளை ஊட்டவிடவில்லை. முதலாவதாக ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தத் தாய் மகிழ்ச்சியடையவில்லை. திரிசங்குவும், செவ்வாய்–பிருகஸ்பதி–புதன் ஆகிய கோள்களும், மற்ற எல்லா கிரகங்களும் அசுபமான கதியில் சந்திரனை அடைந்து பயங்கரமான கிரகச் சேர்க்கையில் நிலைகொண்டன. ஆகாயத்தில் நட்சத்திரங்கள் ஒளிமங்கிப் போயின; கிரகங்கள் சக்தியற்றவர்களாக ஆனார்கள்; இக்ஷ்வாகு பரம்பரையின் நட்சத்திரமான 'விசாகம்' புகை சூழ்ந்ததாகக் காணப்பட்டது. (10–12)

காற்றின் அபரிமிதமான வேகத்தினால் ஆகாயத்தில் தூக்கியெறியப்பட்ட பெருங்கடல் போல கருநிற மேகக் கூட்டங்கள் காணப்பட்டன. இராமன் காட்டிற்குப் புறப்படும்போது அந்த மாபெரும் நகரம், இவ்வாறெல்லாம் நிலைதடுமாறியதாக ஆயிற்று. எல்லாத் திசைகளும் இருளால் சூழப்பட்டதைப் போல கதிகலங்கிப் போயின. (ஆகாயத்தில்) கிரகங்களோ, தாரகைகளோ, வேறு எதுவுமே ஒளி வீசவில்லை! நகர மக்கள் அனைவரும் திடீரென்று (முன்பின் அறிகுறி இல்லாமல்) சோகத்தை அடைந்தார்கள். யாருக்கும் உணவிலோ, உல்லாசத்திலோ மனம் செல்லவில்லை. (13–15)

அயோத்தியில் எல்லா மக்களும் சோகச் சுமையினால் பரிதவித்து, அடிக்கடி நீண்ட பெருமூச்சுவிட்டுக் கொண்டு, உலகாளும் மன்னரின் நிலை குறித்தும் வருத்தப்பட்டார்கள். ராஜவீதியிலிருந்த மக்கள் அனைவரது முகங்களும் சோகத்தால் வாடியிருந்தன. மகிழ்ச்சியுடன் யாருமே காணப்படவில்லை. எல்லோரும் சோகத்தில் ஆழ்ந்திருந்தார்கள். காற்று குளிர்ச்சியாக வீசவில்லை; சந்திரன் அழகாகத் தோன்றவில்லை; சூரியன் வெம்மையைத் தரவில்லை; உலகத்து மக்களும், மற்ற எல்லாமும் தாறுமாறாகப் போய்க் கிடந்தன. (16–18)

பிள்ளைகள் பெற்றோரிடத்திலும், கணவர்கள் மனைவிகளிடமும், சகோதரர்கள் மற்ற சகோதரர்களிடமும் எல்லா உறவுகளையும் மறந்தார்கள். எல்லோரும் எல்லாவற்றையும் உதறிவிட்டு, இராமனைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தார்கள். இராமனுடைய நண்பர்கள் எல்லோரும் தம் புத்தியை இழந்தார்கள். சோகச் சுமையினால் பீடிக்கப்பட்டவர்களாக (தூக்கம் வராததால்) படுக்கைப் பக்கமே போகவில்லை. மலைகளோடு கூடிய இந்த பூமி, மூன்று உலகங்களுக்கும் அதிபனான இந்திரன் இல்லாது போனால் எப்படி அஞ்சி நடுங்குமோ, அதைப்போல பெருவீரரான 'இராமன் இல்லாத அயோத்தி' பயங்கரமாக நடுங்கிற்று. அச்சத்தினாலும் சோகத்தினாலும் தாக்கப்பட்ட யானை–குதிரை–படைவீரர் கூட்டங்கள் அவலப் பேரிரைச்சலை எழுப்பின. (19–21)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
நாற்பத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்து இரண்டு

தசரதரின் புலம்பல்

(காட்டை நோக்கி) வெளியே புறப்பட்டுச் சென்ற (இராமனின்) ரத ஓட்டத்தினால் கிளம்பிய புழுதி எதுவரையில் அடங்கவில்லையோ, அதுவரையில் இக்ஷ்வாகு மன்னரான தசரதர், தன் கண்களை அங்கிருந்து மீட்கவில்லை. அன்புக்குரியவனும், மிகவும் தருமப்பிடிப்புள்ளவனுமான

குமாரனை, எதுவரையில் அவர் சென்ற வழியில் தூசிக்கூட்டத்தைப் பார்க்க முடிந்ததோ, அதுவரையில் அவருடைய சரீரம் தலையை உயரத் தூக்கிப் பார்த்துக் கொண்டு தரையில் இருந்தது. (1,2)

இராமனுடைய ரதத்தினால் எழுப்பப்பட்ட புழுதியும் முழுவதாக அடங்கிப் போனவுடன் மன்னர் மிக்க சோகமும் வருத்தமும் அடைந்து தரையில் விழுந்தார். அவருடைய வலது கரத்தின் அருகே பெண்ரத்தினமான கோசலை வந்து நின்றார்; இடதுகைப்புறம் பரதனுடைய தாயார் கைகேயி வந்து நின்றாள். நாட்டு நிர்வாகம், தருமானுஷ்டானம், அடக்க சுபாவம் நிரம்பப் பெற்றவராக இருந்தாலும், கைகேயியைக் கண்டதும் புலன்கள் துடிக்க மன்னர் கூறினார்— (3–5)

''தீய சிந்தனையுடைய கைகேயி! நீ, என்னைத் தொடாதே! நீ, எனக்கு மனைவி இல்லை; உனக்கும் எனக்கும் எந்த உறவும் இல்லை; உன்னைப் பார்க்கக்கூட நான் விரும்பவில்லை. உன்னை யாரார் அண்டிப் பிழைக்கிறார்களோ, அவர்கள் எனக்குப் பணியாளர்கள் அன்று; நான், அவர்களுக்கு யஜமானன் அல்லன். பொருள் ஒன்றிலேயே கருத்துடையவளும், தருமத்தைக் கைகழுவிவிட்டவளுமான உன்னை நான் நிராகரிக்கிறேன். (6,7)

நான், உன் கையைப் பிடித்துக் கொண்டு அக்னியை வலம் வந்து விவாகம் செய்துகொண்டேனே, அந்த உறவை இனி இந்த உலகிலும், அந்த உலகிலும் நான் புறக்கணிக்கிறேன். பரதன் குறைவில்லாத செழிப்பை உடைய இந்த அகண்ட ராஜ்யத்தை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டானேயானால், பிதிரர்களுக்காக அவன் கொடுக்கும் பிண்டம், நீர்க்கடன் முதலியன என்னை வந்தடைய மாட்டா.'' சோகத்தினால் மனம் வெதும்பியிருந்த கோசலை, உடல் முழுவதும் புழுதி மண்டிக் கிடந்த மன்னரைத் தூக்கி நிறுத்தி, மாளிகையை நோக்கி அழைத்துச் சென்றார். (8–10)

'பிரும்மஹத்தி' பாவம் வந்துவிடும் என்று தெரிந்தும் மனமொப்பி ஓர் அந்தணரைக் கொன்றுவிட்டவன் மற்றும் சுவாலைவிட்டு எரிந்து கொண்டிருக்கிற நெருப்பைத் தன் கையால் தொட்டுவிட்டவன் ஆகிய இவ்விருவரும் செயலுக்குப்பின் வருந்துவதைப் போல, தருமாத்மாவான மன்னர், தவசி தோற்றம் ஏற்றுச் செல்லும் திருக்குமாரனை எண்ணி மனம் பரிதவித்தார். ரதம் சென்ற பாதையைத் திரும்பித் திரும்பிப் பார்த்துத் துயரப்பட்டுக் கொண்டிருந்த மன்னரின் முகம், ராகுவினால் பீடிக்கப்பட்ட சூரியன் போல் ஒளிமங்கிப் போயிருந்தது. அன்புக்குரிய செல்வக்குமாரனை எண்ணியெண்ணிப் புலம்பினார். புத்திரன் இராமன் நகரத்தின் எல்லையை அடைந்துவிட்டார் என்பதை அறிந்துகொண்டு, பின்னர் இவ்வாறு கூறினார்— (11–13)

''அட! என்னுடைய மகனை ஏற்றிச் சென்ற குதிரைகளின் குளம்படிச் சுவடுகள் சாலையில் காணப்படுகின்றன. ஆனால், என் புத்திர இரத்தினம் காணப்படவில்லையே? நன்றாக அலங்காரம் செய்து கொண்ட பெண்மணிகள் விசிறி வீச, உடலில் சந்தனம் பூசிக்கொண்டு, தலையணைகளை அணைத்துக் கொண்டு, சௌக்கியமாகப் படுக்கையில் உறங்குபவனான என் பிள்ளை, இன்றைக்கு நிச்சயமாக ஒரு மரத்தடியில் அல்லது கற்பாறையின் மேல் தலைவைத்துக் கொண்டு, வெறுந்தரையில் படுத்துக் கொண்டு தூங்கப் போகிறான்! (14–16)

பின்னர், புழுதி படிந்த உடலுடன் கஷ்டநிலையில் இருப்பவனைப் போலப் பெருமூச்சு விட்டுக்கொண்டு, பெண்யானைகளின் துணையான மதர்த்த ஆண்யானை, மலையருவியை ஒட்டிய பிரதேசத்திலிருந்து வெளிப்படுவதைப் போல உறக்கம் நீங்கி எழுவான். (மகாவீரனும், உலகத்திற்கே ஆதரவாளனுமான) அவன் துயிலெழுந்து, ஆதரிப்பாரே இல்லாத ஒற்றை மனிதனைப் போல் காலால் நடந்து செல்வதைக் காட்டுவாசிகள் கண்குளிரப் பார்க்கப் போகிறார்கள். எப்போதும் சுக–சௌக்கியங்களுக்கே உரியவளான ஜனகருடைய பாசமிகு புத்திரி, காட்டுப் பாதையில் காலில் முட்கள் தைக்கக் கஷ்டப்பட்டுக் கொண்டு செல்லப் போகிறாள். (17–19)

காட்டைப் பற்றி ஏதும் அறியாத அவள், பெருங்குரலெடுத்து கர்ஜிக்கும் காட்டு மிருகங்களின் இரைச்சலைக் கேட்டு, மயிர்ச்சிலிர்ப்பை அடைந்து பயத்தால் நடுங்கப் போகிறாள்.

சீ, கைகேயி! உன் விருப்பத்தை அடைந்துவிட்டாயல்லவா? இனி கைம்பெண்ணாக இந்த ராஜ்யத்தில் இருந்து கொண்டிரு. புருஷோத்தமனான அவன் இல்லாமல் நான் உயிர் வாழ மாட்டேன்.'' மக்கட்கூட்டத்தால் சூழப்பட்டிருந்த மன்னர், இவ்வாறு புலம்பிக் கொண்டே, உயிர் துறந்தவருக்காக நீராடிவிட்டுச் சோகத்துடன் வருபவரைப் போன்று, சோகத்தில் மூழ்கியிருந்த தனது திருநகரத்திற்குள் புகுந்தார். (அரண்மனை வளாகத்திற்கு வெளியே, வெகுதூரத்திற்கு மன்னர் வந்துவிட்டார் என்பது புலனாகிறது.) (20–22)

வீடுகளின் உள்ளும் புறமும் வெறிச்சோடிக் கிடந்தன; கடைகளும் தேவாலயங்களும் மூடப்பட்டிருந்தன; நகரத்தில் தங்கிவிட்ட சில மனிதர்களும் களைப்பு–தளர்ச்சி–துக்கத்தால் வாடிப் போயிருந்தார்கள்; அரசபாட்டையில் கூட்டமே இல்லை. நகரத்தின் இந்த அவலக் காட்சியை முழுமையாகப் பார்த்து, இராமனைப் பற்றியே சிந்தித்துப் புலம்பியவண்ணம், கலக்க முடியாத மாபெரும் நீர்நிலையிலிருந்த பாம்பு கருடனால் தூக்கிச் செல்லப்பட்டபின், அந்த நீர்நிலையில் சகிக்க முடியாத சாந்தம் நிலவுவதைப் போல, இராம–லட்சுமண–சீதை இல்லாத அந்த மாளிகைக்குள் மேகங்களால் மறைக்கப்பட்ட சூரியன் போல (மிகுந்த வாட்டத்துடன்) மன்னர் புகுந்தார். (23–25)

மன்னர் தழுதழுத்த குரலில் புலம்பிக் கொண்டு, பொருள் புரிபடாத தெளிவில்லாத, மெலிந்த குரலில் பின்வருமாறு சொன்னார்— ''இராமனுடைய தாயார் கோசலையின் மாளிகைக்கு என்னை அழைத்துச் செல்லுங்கள். (புண்பட்ட) என்னுடைய மனத்திற்கு வேறு எங்கும் ஆறுதல் கிடைக்காது.'' இவ்வாறு உத்தரவிட்ட மன்னரை, கோசலா தேவியாரின் வீட்டிற்கு வாயிற்காப்பாளர்கள் தூக்கிக் கொண்டு போய்ச் சேர்ப்பித்தார்கள். அங்கே மிக்க பணிவுடன் இறக்கிவிட்டார்கள். கௌசல்யையின் வீட்டிற்குள் நுழைந்து, கட்டிலில் படுத்துக் கொண்ட பின்னரும், மனம் சஞ்சலப்பட்டுக் கொண்டே இருந்தது. (26–29)

இரு புதல்வர்களும் மருமகளும் இல்லாத அந்த மாளிகை, நிலவு இல்லாத வானம்போல வெறுமையாக இருந்தது. சூன்யமான அந்த மாளிகையைப் பார்த்தவுடன் வீரம் மிகுந்த மாமன்னர் கையை உயரே தூக்கி, உரத்த குரலில், ''ஹா! இராமா! எங்கள் இருவரையும் (தாய்–தந்தையரை) விட்டுப் போய் விட்டாயே!'' என்று புலம்பி அழுதார். ''அடக் கஷ்டமே! வனவாச காலம் முடிந்து, நீ திரும்பி வந்தவுடன், அதுவரை உயிரோடிருப்பவர்கள் உன்னைச் சூழ்ந்து கொண்டு, பார்த்துப் பார்த்துப் பரவசம் அடைவார்களே, அவர்களே பாக்கியசாலிகள்!'' (30–32)

பின்னர், தனக்குக் காளராத்ரி போன்ற பயங்கரமான இரவு வந்ததும், நடுநிசியில் கௌசல்யையைப் பார்த்து தசரதர் இவ்வாறு கூறினார்— ''இராமனைப் பின்தொடர்ந்து சென்ற என் பார்வை இன்னும் திரும்பவில்லை. கௌசல்யே! உன்னை என் கண்களால் பார்க்க முடியவில்லை. உன்னுடைய மிருதுவான கையினால் என்னைத் தடவிக் கொடு.'' இராமனையே நினைத்துக் கொண்டு படுக்கையில் துவண்டு கிடக்கும் பேரரசரைப் பார்த்ததும், அவர் அருகில் படுக்கையில் உட்கார்ந்து, மிகக் கஷ்டமான நிலையில் சோகத்தின் வடிவாக இருந்த அவர் (கௌசல்யை), நீண்ட பெருமூச்சுவிட்டு அரற்றத் தொடங்கினார். (33–35)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
நாற்பத்து இரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்து மூன்று

கௌசல்யை புலம்புதல்

புத்திர சோகத்தினால் வருந்திய கௌசல்யை, உடலும் மனமும் தளர்ந்து படுக்கையில் படுத்திருக்கும் மன்னரைப் பார்த்து கூறத் தொடங்கினார்— ''கபட நாடகத்தை மேற்கொண்டுள்ள

கைகேயி மாபெரும் வீரனான இராமனிடத்தில் விஷத்தைச் செலுத்திவிட்டு, சட்டை உரித்துப் புதிய உருவெடுத்த நச்சரவு போன்று, சுதந்திரமாகச் சுற்றித் திரியப் போகிறாள். வீட்டில் வாழும் பாம்பு அடிக்கடி கண்ணில் பட்டு அச்சத்தை உண்டுபண்ணும். அதுபோல, இராமனுக்கு வனவாசத்தைக் கொடுத்து, தன் மனோரதத்தை நிறைவேற்றிக் கொண்ட பாக்கியசாலியான கைகேயி, இனி இன்னும் அதிகமாக, எனக்குத் தொல்லை கொடுக்கப் போகிறாள். (1–3)

இந்தப் பட்டணத்தில் பிச்சை எடுத்துக் கொண்டாகிலும் அவன் வீட்டோடு இருக்கலாமே? என் மகனை, கைகேயியிக்கு அடிமையாகக் கொடுத்திருந்தாலும்கூட, அந்த வரதானம், இப்போதைய நிலையைவிட எனக்குத் திருப்தி அளிக்கக் கூடியதாகவே இருக்கும். (தினமும், இராமனைக் கண்களால் பார்த்துக் கொண்டிருப்பேனே?) பர்வ காலங்களில் அக்னிஹோத்ரிகள் (அருள் சுரக்கும்) தேவதைகளுக்குரிய ஹவிஸ்ஸை (அவர்களை வஞ்சித்து கொலைபாதகர்களான) ராக்ஷஸர்களுக்குக் கொடுத்தாற்போல், கைகேயி, தன் விருப்பப்படி இராமனை, அவனுடைய பதவியிலிருந்து கீழே தள்ளிவிட்டாள்! (4,5)

கஜராஜனைப் போன்ற நடையழகு உடையவனும் பெருந்தோளனும் வில் தரித்தவனுமான என் பிள்ளை, நிச்சயமாக மனைவி சீதா மற்றும் லட்சுமணனுடன் காட்டிற்குள் சென்றிருப்பான். கைகேயியிக்குப் பிரியமானதைச் செய்யவேண்டும் என்பதற்காக, உங்களால் காட்டு வாழ்க்கைக்கு அனுப்பப்பட்டவர்களும், இதுவரை கஷ்டம் என்பதையே அறியாதவர்களுமான அவர்களுக்கு, அங்கே என்ன கதி ஏற்படப் போகிறதோ? (6,7)

இளவயதுக்காரர்களான மூவரும் வாழ்க்கையை இன்பமாக அனுபவிக்க வேண்டிய காலத்தில், எல்லாவித சௌகரியங்களையும் இழந்து, இரங்கத்தக்க நிலையில் இருந்துகொண்டு கனி–கிழங்குகளைப் புசித்துக் கொண்டு எப்படித்தான் வாழப் போகிறார்களோ? சகோதரனோடும் மனைவியோடும் இராமனை இங்கே பார்க்கும் மங்களமான காலம், என் சோகத்திற்கு முடிவு கட்டுகிற அந்தப் பொன்னான நேரம், இப்போதே வரக்கூடாதா? (8,9)

தூங்கியபின் விழித்தெழுந்து வருவதைப் போல, அவ்வீரர்கள் இருவரும் உற்சாகத்துடன் புகழ்பெற்ற இந்த அயோத்தி மாநகரத்திற்குத் திரும்பி வரும்போது, வீடுகளின் உயரத்தில் கொடிகளைத் தூக்கிக் கட்டி, மகிழ்ச்சிப்பெருக்கில் நகர மக்கள் திளைக்கும் காலம் எப்போது வருமோ? காட்டிலிருந்து திரும்பி வந்தவர்களாக, அவ்விரு புலிநிகர் வீரர்களையும் கண்ணாரக் கண்டு, பர்வ காலங்களில் பொங்கி அலைவீசும் பெருங்கடல் போல் அயோத்தி நகரம் உவகைப் பெருக்கினால் பொங்கி ஆர்ப்பரிக்கும் காலம் எப்போது வருமோ? (10,11)

பசுவை முன்னே போகவிட்டு பின்னே கம்பீரமாகக் காளைமாடு வருவதைப் போல, ரதத்தில் சீதையை முன்னே நிறுத்தி, மாவீரன் இராமன், அயோத்தி நகரத்திற்குள் பிரவேசிக்கும் நற்காலம் எப்போது வருமோ? இங்குள்ள ஆயிரக்கணக்கான மக்கள், எதிரிகளை அடக்குபவர்களும் ராஜபாட்டையில் வந்துகொண்டிருப்பவர்களுமான என் இரு குமாரர்களையும் மகிழ்ச்சியுடன் வாழ்த்தி வரவேற்கும் முறையில் பொறிகளை வாரியிறைக்கும் காலம் எப்போது வருமோ? (12,13)

சிகரங்களையுடைய இரண்டு மாமலை போன்றவர்களும், அழகிய காதணிகள் அணிந்தவர்களும், வில்லையும் வாளையும் தூக்கிப் பிடித்துக் கொண்டிருப்பவர்களும், அயோத்தியில் நுழைந்து கொண்டிருப்பவர்களுமான அவர்களை, நான் பார்க்கும் காலம் எப்போது வருமோ? இருபிறப்பாளர் குலத்தைச் சேர்ந்த கன்னிகைகள் மனம் பூரித்தவர்களாக, பழங்களையும் மலர்களையும் தூவிக் கொண்டு, இந்த நகரத்தை வலம் வரும் காலம் எப்போது வருமோ? (14,15)

ஞானத்தில் மிக்குயர்ந்தவனும், வயதால் தேவர்களைப் போன்றவனும் (எப்போதும் இளமையோடு இருப்பவனும்), அறம் தெரிந்தவனும், மாதம் மும்மாரி போன்று உள்ளங்குளிரச் செய்பவனுமான என் இராமன், எனக்குச் சேவை செய்யும் காலம் எப்போது வருமோ? நாதா!

முன்பொரு பிறவியில், கருமித்தனம் கொண்டிருந்த என்னால் பசுங்கன்றுகள் பால் குடிப்பதற்காக ஆவலுடன் ஓடிவந்தபோது, (பாவி, நான்!) பசுக்களின் மடிக்காம்புகளிலிருந்து விலக்கி விட்டிருப்பேன் என்பதில் சந்தேகமேயில்லை. இளங்கன்றையுடையதும், கன்றிடம் பேரன்பு கொண்டதுமான பசுவை ஒரு சிங்கம் கன்றிடமிருந்து பலாத்காரமாகப் பிரித்துக் கவ்விச் சென்றுவிட்டதைப் போல, புலிநிகர் வீரரே! அந்தக் கைகேயியினால் நான் ஆக்கப்பட்டிருக்கிறேன். (என்னை, என் மகன் இராமனிடமிருந்து பிரித்து விட்டாள்.) (16–18)

நற்குணங்கள் நிறைந்தவன்; எல்லா நூல்களையும் கற்றுணர்ந்தவன்; எனக்கு ஒரே பிள்ளை – அவன் இல்லாமல் நான் உயிர் பிழைத்திருக்க மாட்டேன். பெருந்தோளனும் மகாபலசாலியும் பாசத்திற்குரியவனுமான புத்திரனைப் பார்க்காமல் உயிரோடு இருக்கும் ஆற்றல் எனக்கு இல்லை. இப்போது புத்திரசோகத்தினால் உண்டான தீயானது, கோடை காலத்தில் சுட்டெரிக்கும் கிரணங்களால் இந்தப் பூமியைக் கொதிக்கச் செய்யும் சூரியனைப் போல, என்னை மிகவும் எரித்துக் கொண்டிருக்கிறது.'' (19–21)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
நாற்பத்து மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்து நான்கு

சுமித்திரை சமாதானம் கூறுதல்

அப்போது, பெண்களில் தலைசிறந்தவரான கௌசல்யை இவ்வாறு புலம்புவதைக் கேட்டு, தருமத்தில் நிலைத்து நிற்கும் சுமித்திரை, தருமத்தோடு கூடிய சொற்களைக் கூறினாள்— ''பண்புமிக்கவரே! உங்கள் திருக்குமாரன் எல்லா நற்குணங்களும் நிரம்பியவன்; புருஷோத்தமன். இப்படி மனம் குலைந்து புலம்புவதாலோ, அழுவதாலோ என்ன பயன்? சீலம் மிக்கவரே! உங்கள் திருக்குமாரன் பலசாலி. அரசாட்சியைத் துறந்துவிட்டுப் போயிருக்கிறான். இதன்மூலம் மிகவும் போற்றத்தக்க தந்தைக்கு, 'சொன்ன சொல் தவறாதவர்' என்ற பெருமையை நிலைநிறுத்தி இருக்கிறான். (1–3)

இராமன் பின்பற்றும் வழி சான்றோர்களால் உறுதியாகக் கைக்கொள்ளப்பட்ட நெறி. மேலுலகில் உயர்ந்த பலனைக் கொடுக்கக் கூடியது. இராமன் தலைசிறந்த தருமத்தில் உறுதியாக இருக்கிறான். அவனுக்காக ஒருபோதும் நீங்கள் கவலைப்பட வேண்டாம். எப்போதும் பாவ சிந்தை அற்றவனான இலக்குவன், இராமனுடன் சென்று சேவை செய்வது என்ற மிக உயர்ந்த நெறியில் ஈடுபட்டிருக்கிறான். எல்லாப் பிராணிகளிடமும் தயவுள்ளவன். புத்திநுட்பம் அமையப் பெற்ற அவனுக்கு, இது (தமையனைத் தொடர்ந்து செல்வது) மிகவும் மேன்மையைத் தரப்போகிறது. (4,5)

விதேக மன்னர் குமாரத்தி, எப்போதும் சுக–சௌக்கியங்களுக்கு உரியவள்; காட்டில் ஏற்படும் ஆபத்துக்கள் குறித்து இராமன் சொல்லக் கேட்டறிந்தவள். (அப்படியிருந்தும்) உங்கள் திருக்குமாரனான தருமாத்மாவைப் பின்தொடர்ந்து செல்கிறாள். உலகில், தன்னுடைய புகழ்ப்பதாகையை உயரப் பறக்கவிட்டிருக்கும் பிரபு இராமன், தருமத்தையும் சத்தியத்தையும் காக்கும் விரதம் கொண்டவன். அப்படிப்பட்ட உங்கள் மகனுக்கு எந்த மேன்மைதான் கிட்டவில்லை? (6,7)

இராமனுடைய புனிதத்தையும் உன்னதத்தையும் நன்றாக அறிந்துள்ள சூரிய பகவான், அவன் சரீரத்தை வெம்மையான கிரணங்களால் தவிக்கச் செய்ய மாட்டார். வாயு பகவான், மரங்கள்

அடர்ந்த காட்டுப் பகுதியிலிருந்து வெளியே வந்து வீசும்போது, எல்லாக் காலங்களிலும் இராகவனின் உடலுக்கு ஆரோக்கியமும், மனத்திற்கு இன்பமும் தரும் அளவு மட்டும் காற்று வீசி பணிபுரியப் போகிறார். இரவில் உறங்கும்போது ஒரு தகப்பன் தன் தனயனைப் பாசத்துடன் அணைத்துக் கொள்வதைப் போல, சந்திரன் தன் குளிர்ந்த கிரணங்களால் அவன் உடலைத் தழுவி ஆனந்திக்கச் செய்யப் போகிறான். (8–10)

திமித்வஜன் (சம்பரன்) பிள்ளையான சுபாகு என்னும் மகாபலம் பொருந்திய அசுரன் யுத்தகளத்தில் கொல்லப்பட்டவுடன், அகமகிழ்ந்த பிரும்மரிஷி விசுவாமித்திரர், தெய்விக சக்தி கொண்ட பல அஸ்திரங்களைப் பராக்கிரமசாலியான இராமனுக்குக் கொடுத்திருக்கிறார். அந்த ஆண்சிங்கம் மகாசூரன்! தன் தோள்வலிமையில் நம்பிக்கை உடையவன்! எதற்கும் அஞ்சாதவன்! காட்டிலிருந்தாலும் வீட்டில் வசிப்பதைப் போலவே மனமகிழ்ச்சியுடன் இருப்பான். (11,12)

எவருடைய அம்புக்கு இலக்காகிவிட்ட எதிரிகள் மாய்ந்து போகிறார்களோ, அப்படிப் பட்டவருடைய ஆணைக்கு இவ்வுலகமும் உயிர்களும் எப்படி அடங்கி நடக்காமல் இருக்கும்? இராமனுடைய சரீரத்தில் விளங்கும் தெய்விகமான காந்தி, பராக்கிரமம், பிறருக்கு மங்களத்தையே செய்யும் தனிப்பெரும் நற்குணம் – இவைகளை எண்ணிப் பார்க்கும்போது வனவாசத்தை முடித்துக் கொண்டு விரைவிலேயே அவன் ஆட்சியை அடைவான் என்பது உறுதி. (13,14)

தேவி! அவன் சூரியனுக்கும் சூரியன்; அக்னிக்கும் அக்னி; தலைவர்களுக்கெல்லாம் தலைவன்; திருமகளுக்குச் செல்வம் அளிக்கும் பெருந்திரு; புகழுக்கே புகழ் அளிப்பவன்; பொறுமைக்குப் பொறுமை கற்பிப்பவன்; தேவதைகளுக்கும் தேவதை; பூதங்களில் முதன்மையான பூதம் – இவ்வளவு மகிமை பொருந்தியவனுக்கு – காட்டில் இருந்தாலும் சரி, நாட்டில் இருந்தாலும் சரி – யார்தான் தீங்கு செய்வார்கள்? (இராமன் 'பகவானின் அவதாரம்' என்பது சுமித்திரைக்கு நிச்சயமாகத் தெரிந்திருந்தது என்பதற்குச் சான்றாக, இந்த இரண்டு சுலோகங்களைப் பெரியோர்கள் எடுத்துக் கூறுவார்கள்.) (15,16)

ஆணேறாகிய இராமன், விரைவில் பார்மடந்தை, சீதாதேவி, ராஜ்யலட்சுமி ஆகிய மூவருடனும் பட்டாபிஷேகம் செய்விக்கப்படுவான். நகரத்தை விட்டு வெளியேறும் எவனைப் பார்த்து சோகத்தின் வேகத்தால் தாக்குண்ட அயோத்தி மக்கள் எல்லோரும் துக்கத்தால் உண்டான கண்ணீரைப் பெருக்கினார்களோ; மரவுரி, மான்தோல் தரித்துக் கொண்டு செல்லும், யாராலும் வெல்ல முடியாத எந்த வெற்றி வீரனை, சீதை என்னும் சாட்சாத் லட்சுமி பின்தொடர்ந்து செல்கிறாளோ, அப்படிப்பட்டவனால் அடையப்பட முடியாத பேறுகள் ஏதேனும் உண்டோ? (அவனால் எல்லா மேன்மைகளையும் பெறமுடியும் என்றவாறு.) (17–19)

எவனுக்கு முன்னதாக வில்லேந்தியவர்களில் சிறந்தவனான லட்சுமணன், தானே கைகளில் அம்பும் கத்தியும் அஸ்திரமும் தாங்கிச் செல்கிறானோ, அப்படிப்பட்டவனால் அடையப்பட முடியாதது ஒன்றுண்டோ? தேவி! நான் சத்தியத்தைக் கூறுகிறேன். வனவாசத்தை முடித்துக் கொண்டு திரும்பி வந்துவிட்டவனாக அவனை, நீங்கள் கண்களால் காணத்தான் போகிறீர்கள். எனவே மனவருத்தம், மதிமயக்கம் ஆகியவற்றை உதறித் தள்ளுங்கள். கல்யாணி! குற்றமற்றவரே! கீழ்வானில் எழுந்த முழுநிலவைப் போல் அமுதத்தைப் பொழிந்து கொண்டு, தங்கள் குமாரன் திரும்பி வந்து, தங்கள் பாதங்களில் தலைவைத்து வணங்குவதைக் காணத்தான் போகிறீர்கள். (20–22)

அவன் மறுபடி திரும்பி வந்து ராஜ்யலட்சுமியை அடைந்து, பட்டாபிஷேகம் செய்விக்கப் பெறும் திருக்காட்சியை, உங்கள் இரு கண்களாலும் கண்டு மகிழ்ந்து, உடனே ஆனந்தபாஷ்யம் சொரியப் போகிறீர்கள். தேவி! நீங்கள் சோகம், துக்கம் அனுபவிக்க வேண்டாம். (காட்டிற்குப் புறப்பட்டுச் சென்ற) இராமனுடைய முகத்தில் அமங்களமான குறிகள் ஏதும் காணப்படவில்லை. சீதையோடும் லட்சுமணனோடும் சேர்ந்து வரும் குமாரனை, நீங்கள் விரைவில் காண்பீர்கள்.

மாசற்ற மாதரசி! இந்த நகரத்திலிருக்கும் எல்லா மக்களுக்கும் உங்களால் தைரியம் ஊட்டப்பட வேண்டியிருக்கும் இந்த நேரத்தில், உங்கள் இதயத்தில் தடுமாற்றத்திற்கு இடம் கொடுக்கலாமா? (23–25)

தேவி! உங்களுக்கு இராகவன் புதல்வன் என்ற ஒரு காரணத்தால் மட்டுமேகூட நீங்கள் வருத்தம் கொள்ளத்தகாதவர். இராமனைத் தவிர நன்னெறியில் உறுதியாக நிற்கும் இன்னொருவனை உலகில் நான் காண்கிலேன். உங்கள் திருக்குமாரன், (பதிநான்கு ஆண்டுக்காலம்) கூடவே இருந்து தொண்டு செய்து வந்த பேரன்புக்குரிய இருவருடன் விரைவில் வந்து, உங்கள் பாதங்களில் விழுந்து வணங்கப் போகிறான். அப்போது கார்காலத்து மேகக் கூட்டங்கள் மழை பொழிவதைப் போல, உங்கள் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பொழியப் போகிறது. (26,27)

தான வீரனான உங்கள் குமாரன் மீண்டும் திரும்பி வந்து மென்மையாகவும், பருத்துமுள்ள தன் இரு கைகளாலும், உங்கள் பாதங்களைத் தொட்டு வணங்கப் போகிறான். மேகக் கூட்டங்கள் சிகரங்களில் மழையைப் பொழிந்து மலையைக் குளிப்பாட்டுவதைப் போல, தன்னுடன் இருந்த இருவருடன் வந்து, மந்திரம் கூறி, நமஸ்காரம் செய்யும் செல்வப் புதல்வனை, மகிழ்ச்சியால் விளைந்த கண்ணீர்ப்பெருக்கால் குளிப்பாட்டப் போகிறீர்கள்!'' (28,29)

நல்ல சொற்றிறம் உடையவளும், குற்றமற்றவளும், கண்ணுக்கினியவளுமான சுமித்திரை, இராமனுடைய தாயாரை மேற்சொன்னபடி பலவிதமான யுக்தி வாதங்களால் சமாதானப்படுத்தி விட்டுச் சற்றே ஓய்ந்தாள். சிறிதளவே நீர்கொண்ட சரத்கால மேகம், காற்றுப்பட்டவுடன் சின்னா பின்னமாகி விடுவதைப் போல, மாமன்னருடைய பத்தினியும் இராமனுடைய அன்னையுமான கோசலையின் சோகம், அப்போதே மனத்திற்குள்ளேயே மறைந்து அழிந்து போயிற்று! (30,31)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
நாற்பத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்தைந்து

இராமனுடன் நகர மக்கள் செல்லுதல்

(அந்தப்புரத்தில் இவ்வாறிருக்கையில் நகரத்தின் இன்னொரு பகுதியில்) சத்திய பராக்கிரமம் படைத்தவரும், ஞானக் கடலுமான ஸ்ரீராமன், காட்டில் வசிப்பதற்காகப் பிரயாணப்பட்டபோது, அவரிடம் பேரன்பு கொண்டிருந்த குடிமக்கள், அவரைப் பின்தொடர்ந்து சென்றார்கள். 'எவர் விரைவில் திரும்பி வரவேண்டும் என்று விரும்புகிறோமோ, அவரை வழியனுப்பி வைக்க வெகுதூரம் செல்லக்கூடாது' என்ற நன்னெறியை எடுத்துக்காட்டி, மன்னர் (தசரதர்) திருப்பி அனுப்பி வைக்கப்பட்டார். ஆனால், இராமனுடைய ரதத்தைப் பின்தொடர்ந்து சென்ற குடிமக்கள் திரும்பிப் போகவே இல்லை! (1,2)

ஏனென்றால், நற்குணங்கள் நிரம்பியவரும், பெரும் புகழ் படைத்தவருமான அவர், முழுநிலவைப்போல அயோத்தி நகர மக்கள் எல்லோருக்கும் அனுகூலமானவராக இருந்தார். அந்தக் குடிமக்கள் எல்லோரும் ஸ்ரீராமனை (நகரத்திற்குத் திரும்பி வரும்படி) பிரார்த்தித்துக் கொண்டார்கள். ஆனால், தந்தையைச் சத்தியவாதியாக நிலைநிறுத்த வேண்டும் என்ற எண்ணத்தால், காட்டை நோக்கியே அவர் முன்னேறிக் கொண்டிருந்தார். பார்வையாலேயே அவர்களைப் பருகிவிடுவதைப் போல, அன்பு பொங்க அவர்களை நோக்கினார். அந்தப் பொது ஜனங்களை, தன்னுடைய ரத்த சம்பந்தமுடைய ஜனங்களாகவே கருதி, அன்பு மீதூரப் பின்வருமாறு கூறினார், இராமன். (3–5)

''அயோத்தி நகர மக்களுக்கு என்னிடம் எவ்வளவு அன்பும் மரியாதையும் இருக்கிறதோ, அதைக் காட்டிலும் அதிகமான அன்பும் மரியாதையும் பரதனிடம் காட்டப்பட வேண்டும். அதுவே, எனக்குத் திருப்தியை அளிக்கக் கூடியது. கைகேயியின் ஆனந்தத்தை வளர்ப்பவனான அவன், போற்றத்தக்க செயல்பாடுகள் உடையவன்; முன்னோர்கள் அனுஷ்டித்த தருமநெறிப்படி உங்களுக்கு நலன் கொடுக்கக் கூடியவைகளையும், மனத்திற்குப் பிடித்தவைகளையும் செய்வான். அவன், வயதில் சிறியவன்; ஞானத்தில் முதிர்ந்தவன்; சமயத்திற்கேற்றபடி மென்மையாகவும் வீரத்துடிப்புடனும் இருப்பவன்; உங்கள் அச்சத்தைப் போக்கி, உங்கள் எதிர்பார்ப்புக்கு ஏற்றபடி சிறந்த பாதுகாவலனாக இருப்பான். (6–8)

அவன், எல்லா அரச இயல்புகளும் பொருந்தியவன் என்பதால்தான், அவனை இளவரசனாக மன்னர் நியமித்திருக்கிறார் அன்றோ? என்னைக் காட்டிலும் சிறந்தவர்களான உங்களாலும் மன்னரின் கட்டளை நிறைவேற்றத்தக்கது, அல்லவா? எனக்கு நல்லது செய்ய விரும்பும் நீங்கள், நான் காட்டிற்குப் போனவுடன் துயரத்தில் அமிழ்ந்து போகாதபடி இருக்க என்ன செய்யவேண்டுமோ, அவ்வாறே செய்யுங்கள்.'' தந்தையின் வாக்குறுதியைக் காப்பாற்றுவதுதான் தனது தருமம் என்று இராமன் பிடிவாதமாகப் பேசிக் கொண்டிருக்க, 'இராமனே நமக்கு மன்னனாக வேண்டும்' என்ற ஆசை நாட்டுமக்களிடம் பலமாக எழுந்தது. (9–11)

கண்ணீர்ப் பெருக்கால் முகம் வாடி, வருந்தத்தக்க நிலையிலிருந்த அயோத்தி நகர மக்கள் (ரதத்தைத் தொடர்ந்து ஓடி வந்ததைப் பார்த்தால்,) கயிற்றால் கட்டப்பட்டு இழுத்து வருவது போலிருந்தது. பின்தொடர்ந்து வந்தவர்களில் மூன்று வகையான அந்தணோத்தமர்கள் – ஞானம், வயது, தவம் இவற்றால் மூத்தவர்கள் – இருந்தார்கள். முதுமை காரணமாக தலை ஆட்டம் கொண்டிருந்தவர்கள் (ரதத்தின் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாததால்) தூரத்தில் இருந்தவாறே பின்வருமாறு இரைந்து கத்தினார்கள்— (12,13)

''இராமனைச் சுமந்துகொண்டு வேகமாக ஓடிச் செல்கின்ற உயர்ஜாதிக் குதிரைகளே! அட, கொஞ்சம் நில்லுங்களேன்! நீங்கள் மேலே போகக் கூடாது. உங்கள் யஜமானனுக்கு அனுகூலமானதைச் செய்யுங்கள்; திரும்பி வாருங்கள். எல்லா உயிர்ப் பிராணிகளுக்கும் செவிப்புலன் உண்டு. குறிப்பாக, குதிரைகளுக்கு நீளமான செவிகள். எங்கள் வேண்டுகோள் உங்கள் செவிகளில் விழுந்திருக்கும். ஆகவே, நீங்கள் திரும்பி வாருங்கள். (நீங்கள் சுமந்து செல்கிறீர்களே) அவன் மிகவும் சுத்தாத்மா; மாவீரன்; உத்தமமான விரதத்தை உறுதியோடு கட்டிக் காப்பவன். எனவே, உங்கள் தலைவனை நகரத்தின் வெளிப்புறத்திலிருந்து உள்ளே அழைத்துவர வேண்டுமே தவிர, நகரத்திலிருந்து காட்டிற்கு அழைத்துப் போகக் கூடாது.'' (14–16)

இவ்வாறெல்லாம் மனவேதனையுடன் புலம்பி (அரற்றிக்) கொண்டு ஓடிவரும் வயோதிக அந்தணர்களைப் பார்த்ததும், இராமன் சட்டென்று ரதத்திலிருந்து இறங்கிவிட்டார். இறங்கியதும் சீதை–லட்சுமணர்களோடுகூட, கால்நடையாகவே செல்லத் தொடங்கினார். கால்களை எட்டிப் போடாமல், மிதமான வேகத்தில் காட்டை நோக்கியே நடந்தார். (அந்தணர்கள் வேகமாக ஓடிவராவண்ணம்) தன் நடையின் வேகத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டார். நல்லொழுக்கத்தைத் தவறாது கடைப்பிடிக்கும் இராமன், கால்நடையாக வந்து கொண்டிருந்த அந்தணர்கள்மேல் தயை கொண்டு, தானும் காலால் நடக்கத் தொடங்கினார். ரதத்தில் ஏறிச் சென்று, அவர்களை அந்தரத்தில் நிறுத்திவிடும் அடாத செயலைச் செய்யச் சக்தியற்றவரானார். (17–19)

இராமன், காலால் நடந்து காட்டை நோக்கியே சென்று கொண்டிருப்பதைப் பார்த்ததும், பதற்றமடைந்த அந்தணர்கள் மனம் தவித்து பின்வருமாறு சொன்னார்கள்— ''வேதியர்களின் இந்தக் கூட்டம் வேதரட்சகரான தங்களைப் பின்தொடர்ந்து வருகிறது. இந்த அக்னிகள் (குடும்ப வாழ்க்கையிலுள்ள அந்தணர்கள் பரிபாலித்து வரும் கார்ஹபத்யம், ஆஹவனீயம், தக்ஷிணாக்னி) எல்லாம் அந்தணர்களின் தோள்கள் மேல் ஏறிக் கொண்டு, தங்களைப் பின்தொடர்ந்து வருகின்றன. (20,21)

வாஜபேய யாகங்களில் கிடைத்தவைகளும், சரத்கால மேகத்தைப் போல நீர் வற்றிப் போய் தூய வெண்மையோடு இருப்பவைகளும், எங்களுடன் கூடவே வந்து கொண்டிருப்பவைகளுமான வெண்ணிறக் குடைகளைப் பாருங்கள். (வாஜபேயம் செய்து முடித்த வேதவித்தகருக்கு வெள்ளைக் குடை சமர்ப்பிப்பது அரசருடைய தருமம். அவ்விதம் வெண்குடையைச் சன்மானமாகப் பெற்ற பரம வேதவிற்பன்னர்களான முதிய அந்தணர்கள், இராமனைத் தொடர்ந்து வந்தார்கள்.) (22)

அரச சின்னமாகிய வெண் கொற்றக்குடை இல்லாததால், சூரிய கிரணங்களால் பரிதவிக்கும் தங்களுக்கு, வாஜபேய யாகத்தின் மூலம் எங்களுக்குக் கிடைத்த இந்த வெள்ளைக் குடைகளால் நிழல் தருகிறோம். குழந்தாய்! எங்களுடைய அறிவு, இதுவரை வேத மந்திரங்களையே ஓதிக் கொண்டு, வேறு எதிலும் சிந்தை செலுத்தாமலிருந்தது. ஆனால் உமது காரணமாக, எங்கள் சிந்தனை, உம்மைப் பின்தொடர்ந்து வனவாசத்திற்குச் செல்வது என்று மாறிவிட்டது. (23,24)

எங்களுடைய மிக உயர்ந்த செல்வம் வேதம். அது எங்கள் இதயத்தில் குடிகொண்டிருக்கிறது. ('அது சரி, தாங்கள் என்னுடன் வந்துவிட்டால், தங்கள் பத்தினிகளின் கதி என்ன ஆவது?' என்று கேட்பாய்.) எங்களுடைய மனைவிகள் தங்களுடைய பதிவிரதா தருமத்தினால் காப்பாற்றப்பட்டவர்களாக வீடுகளிலேயே இருப்பார்கள். (அதாவது, இராமா! ஆண்களாகிய நாங்கள் மட்டும்தான் உம்முடன் வருவதற்கு அனுமதி கோருகிறோம். காட்டில் பெண்களைப் பாதுகாக்கும் கஷ்டத்தை, உமக்குக் கொடுக்க மாட்டோம்.) (25)

நாங்கள், எங்கள் முடிவை மாற்றிக் கொள்ளப் போவதில்லை. எங்களுடைய நல்மனம் உம்மோடு ஒட்டிக் கொண்டுவிட்டது. நீர் தருமத்தையொட்டி, தந்தையின் கட்டளைப்படி காட்டிற்குச் செல்கிறீர். அதனால், தருமத்தைக் கடைப்பிடிக்கும் உம்மைப் பின்பற்றிச் செல்வதுதான் எங்கள் தருமம். தருமானுஷ்டானத்தைத் தவறாது கடைப்பிடிப்பவனே! (எங்கள் தலையைப் பாரீர்.) அன்னப்பறவை போல் வெளுத்த கேசம். (எங்கள் உடலைப் பாரீர்.) தரையில் எட்டு அங்கங்களும் படும்படியாக விழுந்து நமஸ்கரித்துப் பிரார்த்தித்துக் கொண்டதால் புழுதி படிந்திருக்கிறது. அப்படிப்பட்ட முதிய வேதியர்களான நாங்கள் தலைதாழ்த்தி வேண்டிக் கொள்கிறோம்; திரும்பி வருவீராக. (26,27)

இங்கே வந்துள்ள அந்தணர்களில் பலபேர்கள் வேள்விகளைத் தொடங்கி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். குழந்தாய்! அந்த வேள்விகளின் நிறைவு உம் வருகையைச் சார்ந்திருக்கிறது. உலகிலுள்ள அசையும் பொருள், அசையாப் பொருள் எல்லாம் உம்மிடம் ஏராளமாக பக்தி கொண்டிருக்கின்றன. இராமா! உம்மை பக்தியுடன் திரும்பி வருமாறு வேண்டிக் கொள்கின்றன. அவைகளிடம் உமக்கு உள்ள கருணையை வெளிப்படுத்து. (28,29)

இங்குள்ள மரங்களின் வேர்கள் ஆழமாக ஊன்றிப் போயிருப்பதால், அவைகளால் உம்மைப் பின்தொடர்ந்து வரமுடியவில்லை. ஆனால், உயரமான மரங்களிடையே காற்றுப் புகுந்து வீசுகிறதே, அதில் மரங்களின் துயரக்குரல் கலந்து வருகிறது. (செவி கொடுத்துக் கேளீர்.) இரையைத் தேடி வெளியே பறக்காமல் எவ்வித அசைவுமின்றி, மரத்தின் ஓர் இடத்திலேயே இருந்துகொண்டு, இந்தப் பறவைகள் எல்லாம் அனைத்து உயிர்ப் பிராணிகளிடமும் கருணை காட்டும் உம்மைப் பிரார்த்திக்கின்றன.'' (30,31)

இராமன் திரும்பி வரவேண்டும் என்பதற்காக, இவ்வாறெல்லாம் துயரத்துடன் வேண்டிக் கொண்டிருக்கும் வைதிகர்களுக்கு அனுகூலம் செய்வதைப்போல, இராமனை மேலே செல்ல விடாமல் தடுப்பதைப்போல 'தமஸா நதி' குறுக்கிட்டது. அவ்விடத்தை அடைந்ததும் சுமந்திரர் மிகவும் களைத்துப் போயிருந்த குதிரைகளை, உடனே ரதத்திலிருந்து அவிழ்த்துவிட்டு, நீர் அருந்தச் செய்தார்; குளிப்பாட்டினார்; தமஸா நதிக்கரையில் புல் மேயவிட்டார். (32,33)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
நாற்பத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்தாறு

நகர மக்கள் மதி மயங்குதல்

பின்னர், தமஸா நதியின் அழகான கரையில் இருந்து கொண்டு, சீதை–லட்சுமணர்களைப் பார்த்து இராமன் பின்வருமாறு கூறினார்— ''லட்சுமணா! தெய்வம் காப்பாற்றட்டும்! காட்டை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் நமக்கு, வனவாசத்தின் முதல் நாள் இரவு இது. ஆகவே, மனத்தில் வருத்தத்திற்கு இடம் கொடுக்காதே. பாராய்! தத்தம் இருப்பிடத்திற்குத் திரும்பிவிட்ட சூதுவாது அறியாத காட்டுப் பிராணிகள், மற்ற விலங்கு–பறவைகளிடமிருந்து தீங்கு ஏற்படாமல் தம்மை மறைத்துக் கொண்டு, எல்லாத் திக்குகளிலிருந்தும் ஒலி எழுப்புவது, நம்மைப் பார்த்து வருந்தி அழுவதைப் போலிருக்கிறது. (1–3)

இன்று, என்னுடைய தந்தையாரின் அரசு தலைநகரான அயோத்தி, காட்டிற்குச் சென்றுவிட்ட நம்மை நினைத்து வருந்திக் கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆண் புலியே! அயோத்தி மக்கள், அநேக நற்குணங்கள் காரணமாக, மன்னரிடத்திலும் உன்னிடத்திலும் என்னிடத்திலும் சத்ருக்ன–பரதர்களிடத்திலும் பேரன்பு கொண்டிருக்கிறார்கள். நம் தந்தையாரைக் குறித்தும், மாதரசியான என் தாயார் குறித்தும் நான் மிகவும் கவலைப்படுகிறேன். இடைவிடாமல் அழுதுகொண்டே இருந்தால், அவர்கள் பார்வையற்றுப் போய்விடுவார்களோ? என அஞ்சுகிறேன். பரதன் தருமாத்மாவல்லவா? என்னுடைய தாய்–தந்தையரை, தருமம்–அர்த்தம்–காமம் பொருந்திய சொற்களால் ஆசுவாசப்படுத்துவான். (4–7)

பரதனுடைய உத்தமமான குணங்களை அடிக்கடி எண்ணிப் பார்க்கிறேன். லட்சுமணா! அவன் இனிய இயல்புடையவன் என்பதால்தான், என் பெற்றோரைப் பற்றி அதிகமாக அலட்டிக் கொள்ளாமல் இருக்கிறேன். புருஷோத்தமனே! நீ, என்னுடன் வந்திருப்பது மிகப்பெரிய செயல். சீதைக்குத் தீங்கு நேராமல் பாதுகாப்பதற்கு உதவியாளர் ஒருவர் இருந்தால் நல்லது என்று நான் நினைத்தேன். லட்சுமணா! இவ்விடத்தில் புசிப்பதற்கேற்ற பலவித காட்டுப் பொருட்கள் (கனி, கிழங்கு) இருக்கின்றன. என்றாலும், இப்போது தண்ணீர் மட்டும் பருகி, இன்றிரவைக் கழிப்பதே நலம் என்று எனக்குத் தோன்றுகிறது.'' (8–10)

இவ்வாறு இலக்குவனிடம் கூறிய பின்னர், இராமன் சுமந்திரரை நோக்கி, ''அன்பரே! குதிரைகள் விஷயத்தில் நீங்கள் கவனமாக இருங்கள்'' என்று சொன்னார். சூரியன் மலைவாயிலில் மறைந்ததும், சுமந்திரர் குதிரைகளைக் கொண்டு வந்து ஓரிடத்தில் கட்டிப் போட்டார். பின்னர், அவைகளுக்கு வேண்டிய தீனியை ஏராளமாக வைத்துவிட்டு, அடுத்ததாகச் செய்யவேண்டிய காரியங்களில் ஈடுபட்டார். இரவு வரத் தொடங்கியதும், மங்களமான சந்தியாகாலக் கர்மாக்களைச் செய்து முடித்து, லட்சுமணனின் உதவியுடன் இராமன் உறங்குவதற்கான படுக்கையை ஆயத்தம் செய்தார், சாரதியான சுமந்திரர். (11–13)

தமஸா நதியின் கரையில் மரத்தின் இலைகளால் அமைக்கப்பட்ட படுக்கையைப் பார்த்த இராமன், பின்பு இலக்குவனோடும் சீதையோடும் அதன்மேல் உட்கார்ந்து கொண்டார். (சற்று நேரத்தில்) மனைவியோடு உறங்கும் சகோதரனைப் பார்த்து (மனம் கலங்கிய) லட்சுமணன், சாரதியிடம் இராமனுடைய பலவிதமான நற்குணங்களைப் பற்றிக் கூற ஆரம்பித்தான். சாரதியும் லட்சுமணனும் இராமனுடைய குணங்களைப் பற்றியே பேசிக் கொண்டு இரவு முழுவதும் கண்விழித்திருந்தார்கள். இந்த அளவில் சூரியன் உதயமானான். (14–16)

இவ்வாறாக, பசுக் கூட்டங்கள் நிறைந்த தமஸா நதியின் அருகில் பட்டணத்து மக்களுடன் இராமன், அந்த இரவைக் கழித்தார். மகாதேஜஸ்வியான இராமன், மிகவும் அதிகாலையில் கண்விழித்து நகரமாந்தர் உறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு, புண்ணிய லட்சணங்கள் பொருந்திய இலக்குவனிடம் பின்வருமாறு மொழிந்தார்— ''சௌமித்திரனே! லட்சுமணா!

நம்மிடத்தில் பேரன்பு கொண்டவர்களாய், வீடு–வாசலைப் பற்றிய நினைவே இல்லாமல், மரங்களின் வேர்களில் தலையை வைத்துக் கொண்டு, மெய்மறந்து தூங்கிக் கொண்டிருக்கும் இவர்களை இப்போது பார்! இந்த நகர மக்கள், நம்மைத் திருப்பி அழைத்துப் போவதில் உறுதியாக இருக்கிறார்கள். உயிரை வேண்டுமானாலும் துறப்பார்களே தவிர, தங்களுடைய கோரிக்கையைக் கைவிட மாட்டார்கள். (18–20)

ஆழ்ந்த உறக்கத்தில் இவர்கள் இருக்கும்போதே, நாம் ரதத்தில் ஏறி விரைவாக இவர்களுடைய அல்லது இவர்களைப் போல் இன்னும் வரக் கூடியவர்களின் இடையூறு நேராத மார்க்கத்தில் சென்று விடுவோம். இக்ஷ்வாகு பரம்பரை மன்னர்களது தலைநகரத்தின் குடிமக்களான இவர்கள், என்னிடம் பேரன்பு கொண்டவர்கள். இப்போது மரத்தடியில் துயில் கொண்டிருக்கும் இவர்கள் சிறிது நேரத்தில் கண்விழித்துக் கொண்டு விடுவார்கள். தங்களாலேயே தங்களுக்கு நேர்ந்த கஷ்டத்திலிருந்து நகரமக்களை விடுவிப்பதுதான் அரசகுமாரர்களின் கடமை. நம்முடைய கஷ்டத்தை அவர்களும் கூடியிருந்து அனுபவிப்பதற்கு இடம் கொடுக்கக்கூடாது.'' (21–23)

தருமம் திருவுருவம் கொண்டு வந்தாற்போல் எதிரே நிற்கும் இராமனைப் பார்த்து லட்சுமணன், ''பேரறிவாளரே! எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. சீக்கிரமாகத் தேரில் ஏறிக் கொள்ளுங்கள்'' என்றான். பின்னர், திரு பொருந்திய இராமன் சுமந்திரரிடம், ''அன்பரே! தேரை ஆயத்தம் செய்க. காட்டிற்குப் போகவேண்டும். விரைவாக இங்கிருந்து புறப்பட வேண்டும்.'' சாரதி, உடனே விரைவாகச் செயல்பட்டு, உத்தமமான அந்தக் குதிரைகளைத் தேரில் பூட்டி, கைகூப்பியபடி இராமனிடம் வந்து தெரிவித்தார்— ''பெருந்தோளரே! தேர்வீரர்களில் முதன்மையானவரே! ரதம் சித்தமாக இருக்கிறது. தாங்கள் வாழ்க! சீதையோடும் இலக்குவனோடும் விரைவில் ரதத்தில் ஏறுங்கள்.'' (24–27)

இராமன், மற்ற இருவருடன் ரதத்தில் ஏறி, வேகமான நீரோட்டமும் ஏராளமான நீர்ச்சுழல்கள் உடையதுமான தமஸா நதியைக் கடந்து, அக்கரையை அடைந்தார். வீரத்திரு பொருந்திய பெருந்தோளரான அவர் நதியைக் கடந்து, அமைதியான, துன்பம் தராத, எதைக் கண்டாலும் அஞ்சுபவர்களும்கூட அச்சமடையாத ஒரு பெருஞ்சாலையைச் சென்றடைந்தார். இராமன், தாங்கள் செல்லும் பாதையின் சுவடு தெரியாமல் நகர மக்கள் குழம்பிப்போகும்படி செய்ய விரும்பி, தேரோட்டியைப் பார்த்துக் கூறினார்— ''சாரதியே! நீங்கள் ரதத்தை வடக்கு நோக்கி நடத்திச் செல்லுங்கள். (28–30)

ஒரு முகூர்த்த காலம் வேகமாகச் சென்று, பின் திரும்பி நகர மக்கள் ரதத்தின் சக்கரப்பதிவுகளை அறிந்துகொள்ளாவண்ணம் இங்கே வாருங்கள். எப்படியோ முழுமுனைப்புடன் செயல்பட்டு, என்னைப் பற்றி அவர்கள் தெரிந்துகொள்ள முடியாதபடி காரியத்தை முடியுங்கள்.'' தேரோட்டி, இராமன் சொன்னபடியே செய்தார். திரும்பி வந்து ரதம் ஆயத்தமாக இருப்பதை இராமனிடம் விண்ணப்பித்துக் கொண்டார். உடனே, ரகுகுல மாணிக்கங்களான அவ்விருவரும் சீதையுடன் ரதத்தில் ஏறி அமர்ந்து கொண்டார்கள். தேரோட்டி, தபோவனத்திற்குச் செல்லும் பாதையைக் கண்டுபிடித்து, வேகமாகச் செல்லும்படி குதிரைகளைத் தட்டிக் கொடுத்தார். மகாரதரான இராமன் ரதத்தில் ஏறிக் கொண்ட பின்னர், யாத்திரை புறப்படும்போது மங்கள சகுனங்களைக் காண வேண்டும் என்ற விதிப்படி, ரதத்தை வடக்கு திசை நோக்கித் திருப்பச் சொல்லி, சாரதி தேரை ஓட்டிக்கொண்டு வர, இராமன் காட்டிற்குப் புறப்பட்டார். (31–34)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
நாற்பத்தாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்தேழு

நகர மக்கள் திரும்பிச் செல்லுதல்

இரவு கழிந்து பொழுது விடிந்ததும், இராகவனைக் காணாத நகரமக்கள், உணர்வுகள் இழந்து, சோகத்தினால் பீடிக்கப்பட்டவர்களாகச் செயலற்றுப் போனார்கள். சோகத்தால் தோன்றிய கண்ணீர் நிரம்பி வாட்டமடைந்த அவர்கள், எல்லாப் பக்கங்களிலும் தேடிப் பார்த்தும், இராமன் எவ்வழியே சென்றார்? என்பதற்கான அடையாளம் காணப் பெறாததால் மிகவும் துக்கமடைந்தார்கள். மகாபுத்திமானான அவர் (இராமன்) இல்லாததால், அவர்கள் முகத்தில் துயரம் குடிகொண்டது. புண்ணியாத்மாக்களான அவர்கள் மிகவும் இரங்கத்தக்க நிலையில், தங்கள் மனம் படும்பாட்டை பின்வரும் வார்த்தைகளால் பரிமாறிக் கொண்டார்கள்— (1–3)

"நம்முடைய நித்திரை நாசமாகப் போக! அதன் வயப்பட்டு நாம் மெய்மறந்திருந்ததால்தானே, அகன்ற மார்புடையவரும் பெருந்தோளருமான இராமனைக் காணாமல் இப்போது பரிதவிக்கிறோம்? எவருடைய எந்தக் காரியம் பலனளிக்காமல் போவதில்லையோ, (அதனால்தானே, நாம் அவரைச் சரண் புகுந்தோம்?) அத்தகைய மகாவீரனான இராமன், பேரன்போடு உடன்வந்த ஜனங்களை விட்டுவிட்டு, தூர தேசத்திற்கு (வனத்திற்கு)ச் சென்றது அநியாயமன்றோ? ஒரு தந்தை, தன் சொந்தப் பிள்ளையைக் கவனத்துடன் பாதுகாப்பது போல, நம்மைப் பரிபாலித்து வந்த ரகுகுல திலகமான இராமன், நம்மை விட்டுவிட்டு எவ்வாறு காட்டிற்குப் போகலாம்? (4–6)

நாம், இவ்விடத்திலேயே உயிரை விடுவோம். அல்லது உண்ணாநோன்பு ஏற்று, வடதிசை நோக்கிச் சென்று கொண்டேயிருந்து, சக்தியற்றுப் போய், ஏதாவது ஓரிடத்தில் உடல் தானாக விழுந்து விடட்டும். இராமன் இல்லாமல் (இராமன் அயோத்தியில் இருந்தபோது தரிசன பாக்கியமாவது கிடைத்தது. இனிமேல் அதுவும் இல்லை – என்றால்) எதற்காக நாம் உயிரோடு இருக்க வேண்டும்? இங்கே உலர்ந்த கனமான மரக்கட்டைகள் ஏராளமாக இருக்கின்றன. அவைகளைக் கொண்டு சிதை அமைத்து நெருப்பு வளர்த்து, அதில் குதித்து மாண்டு போவோம். (7,8)

(நாம் அயோத்திக்குத் திரும்பிப் போனால் அங்குள்ளவர்கள், 'இராமன் எங்கே?' என்று கேட்பார்கள்.) 'எவரிடமும் வெறுப்புக் கொள்ளாதவர், இனிமையாகப் பேசுகிறவர், ஆண்மை மிக்கவருமான இராமனை, நாங்கள் அழைத்துச் சென்று காட்டில் விட்டுவிட்டு வந்தோம்!' என்று சொல்லத்தகுமா? வேறு என்ன சொல்ல முடியும்? (9)

இராமன் இல்லாமல் நாம் மட்டும் திரும்பி வந்திருப்பதைப் பார்த்ததும், வருந்திக் கொண்டிருக்கும் அந்த நகரத்திலுள்ள மாதர்கள், சிறுவர்கள், வயோதிகர்கள் அனைவரும் உயிர்வாழ்வதில் ஆசை இழந்தவர்களாக ஆவார்கள் என்பது திண்ணம். எப்போதும் ஆத்மாவை தன்வசத்தில் வைத்திருக்கும் மகாவீரரான அவருடன் கூடவே புறப்பட்டு வந்த நாம், அவர் இல்லாமல், மீண்டும் அந்தப் பட்டணத்தை எவ்வாறு காண்போம்?" (10,11)

இவ்வாறு பலவிதமான பேச்சுக்களைக் கையை உயர உயரத் தூக்கி மனவேதனையுடன் கன்றை இழந்த பசுக்களைப் போல, அந்த மக்கள் புலம்பிக் கொண்டிருந்தார்கள். பிறகு, ரதத்தின் சுவட்டைப் பின்தொடர்ந்து சிறிது தூரம் சென்றார்கள். ஆனால், சிறிது நேரத்திலேயே சாலையில் தேர்ச்சுவடு காணப்படாமற்போகவே, மிக வருத்தத்தில் மூழ்கிப் போனார்கள். தேரின் சுவடு தெரியாமற்போனதால், 'என்ன இது? தெய்வத்தால் கைவிடப்பட்ட நாம் இனி என்ன செய்வது?' என்று சிந்தனையில் வல்லவர்களான அவர்கள் திரும்பிவிட்டார்கள். (12–14)

பின்னர், மனம் துவண்டுபோன அவர்கள் எல்லோரும் வந்த வழியாகவே துயரத்தில் ஆழ்ந்திருக்கும் நன்மக்களைக் கொண்ட அயோத்தி நகரத்தை வந்தடைந்தார்கள். களைப்பினாலும்

கவலையினாலும் மனம் தவித்துக் கொண்டிருந்த அவர்கள், பட்டணத்தைப் பார்த்ததும், சோகச் சுமையால் தவித்த கண்களிலிருந்து கண்ணீரைப் பெருக்கினார்கள். நதிக்கரை ஓரங்களில் வளைகளிலிருக்கும் பாம்புகளை, கருடன் கொத்திச் சென்றதும், அந்த ஆறு தன் மகிமையை இழந்துவிடுவதைப்போல, இராமனில்லாத இந்த நகரம் பெருமை மங்கிக் காணப்படுகிறது. (15–17)

உணர்வு மங்கிய அவர்கள், அந்த நகரம் சந்திரன் இல்லாத வானம் போலவும், தண்ணீர் வற்றிய பெருங்கடல் போலவும், ஆனந்த ஆரவாரம் இல்லாததாக இருந்ததைக் கண்டார்கள். துக்கத்தினால் மனம் கலங்கி, மனோல்லாசம் நசித்தவர்களாகச் செல்வச் செழிப்புடன் ரம்மியமாக விளங்கும் வீடுகளைப் பார்த்தும், 'இவர்கள் நம்மவர்கள்; அவர்கள் அயலார்கள்' என்றும் வேற்றுமைப்படுத்தி அறிய மாட்டாதவராக இருந்தார்கள். (18,19)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
நாற்பத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்தெட்டு

மாதர்கள் வருந்துதல்

இவ்வாறு, மிகவும் கவலைப்பட்டவர்களாய், மனவேதனையால் தாக்கப்பட்டவர்களாய், கண்ணீர் ததும்பிய கண்களை உடையவர்களாய், சோகம் தாங்காமல் உயிரைவிட விரும்பியவர்களாய் இராமனைப் பின்தொடர்ந்து சென்று, (அவர் இல்லாமல்) திரும்பி வந்தவர்களுடைய ஆத்மாக்கள், உடலைவிட்டு நீங்கியவை போல் ஆயின. அவர்கள் தத்தம் இல்லங்களில் புகுந்து கொண்டு மகன்கள்–மனைவிகளால் சூழப்பட்டுக் கண்ணீர் பெருக்கினார்கள். அவர்களுடைய முகங்கள் கண்ணீரால் மறைக்கப்பட்டதாயின. (1–3)

அவர்களுடைய சரீரத்தில் ஆனந்த வெளிப்பாடு எதுவும் இல்லை. மனத்தில் மகிழ்ச்சி இல்லை. வணிகர்கள் கடையைத் திறக்கவில்லை. வியாபாரம் நடைபெறவில்லை. இல்லறத்தார்கள் சமையல் செய்யவில்லை. தொலைந்துபோன பொருள் திரும்பக் கிடைக்கப் பெற்றவர்களும் அதனால் பெருமகிழ்ச்சி அடையவில்லை. ஏராளமான பொருள் கிடைத்தும் அதனால் ஆனந்தம் அடையவில்லை. முதல் குழந்தையைப் பெற்ற தாயாரும் அதனால் மகிழவில்லை. வீடுகள்தோறும் மனவேதனையால் புண்பட்டு அழுது கொண்டிருந்த மாதர்கள், திரும்பி வந்து சேர்ந்த தத்தம் கணவரைப் பார்த்து, யானைகளைத் தடிகொண்டு தாக்குவதைப் போல, பின்வரும் சொற்களால் தாக்கித் தூற்றினார்கள்— (4–6)

"ஸ்ரீராமனைக் கண்களால் காணமுடியாத இந்த நிலையில் இருப்பவர்களுக்கு வீடு–வாசல், மனைவி–மக்கள், சொத்து–சுகம் ஆகியவை எதற்கு? சீதையுடன் கூடவே இராமனுக்குத் தொண்டு செய்வதற்காகக் காட்டிற்குப் பின்தொடர்ந்து போயிருக்கும் லட்சுமணன்தான், இந்த உலகில் ஒரே ஒரு பாக்கியசாலி. இராமன், தன் உடல் முழுவதையும் நீருக்குள் அமிழ்த்தி நீராடுகின்ற, தூய நீரைக் கொண்ட ஆறுகள், தாமரைத் தடாகங்கள், பொய்கைகள் எல்லாம் மகத்தான பேறு பெற்றவைகள். அழகிய சிறு வனங்களும், அடர்ந்த காடுகளும், தீர்த்த ஸ்நான கட்டங்களையுடைய நதிகளும், சிகரங்களோடு கூடிய மலைகளும், இராமனுடைய எழிலுக்கு அழகூட்டப் போகின்றன. (7–10)

காடு, மலை வழியாக இராமன் செல்லும்போது, மிகவும் அன்புக்குரிய நமது அதிதி (விருந்தாளி) வந்திருப்பதை உணர்ந்த அவைகள், அவரை உபசரித்துக் கௌரவிக்காமல் இருக்கமாட்டா. பல்வகையான மலர்களைத் தாங்கியிருக்கின்ற, கொத்துக்கொத்தாகப் பூக்களைக் கொண்ட, வண்டுகள் சூழப்பெற்று விளங்கும் மரங்கள், ஸ்ரீராமனுக்கு (வரவேற்புக் கூறுவதைப்

போல) உடலிற்கும் உள்ளத்திற்கும் ஆனந்தத்தைக் கொடுக்கும். மலைகளும், தம்மிடம் வந்திருக்கும் இராமனிடம் பேரன்பைக் காட்டும் வகையில், உரிய காலம் இல்லாவிட்டாலும் சிறந்த புஷ்பங்களையும் மலர்களையும் அவருக்குக் காட்டப் போகின்றன. (11–13)

மலைகள் பலவகையான பேரழகு வாய்ந்த அருவிகளில் தூய்மையான தண்ணீரைத் தாரையாகப் பொழிந்து காட்டப் போகின்றன. மலைச்சிகரங்களிலிருக்கும் மரங்கள் இராமனை மகிழ்விக்கப் போகின்றன. ஸ்ரீராமன் இருக்குமிடத்தில் பயம் என்பதே ஏற்படாது; தோல்வி என்பதே ஏற்படாது. தசரதருடைய திருக்குமாரராகிய அவர் மகாபராக்கிரமசாலி. இராகவன் வெகுதூரம் போவதற்கு முன்னால், நாம் இப்போதே பின்தொடர்ந்து சென்று, அவரை அடைந்து விடுவோம். மேன்மை பொருந்திய அந்த மகாத்மாவுடைய திருவடி நிழல், நமக்கு நிகரற்ற சுகம் அருளக்கூடியது. அவர்தான் நமக்கெல்லாம் பாதுகாவலர்; அடைக்கலம்; இறுதியாகச் சென்றடைய வேண்டிய இடம். (14–17)

நாங்கள் சீதாதேவிக்குப் பணிவிடை செய்வோம்; நீங்கள் இராமபிரானுக்குத் தொண்டு செய்யுங்கள்'' என்று துயரம் தாங்காத நகரப் பெண்மணிகள் தத்தம் கணவரைப் பார்த்து சொன்னார்கள். ''காட்டில் ஸ்ரீராமன், உங்கள் யோகக்ஷேமங்களைக் கவனித்துக் கொள்வார்; சீதாப்பிராட்டி, எங்களுடைய சுக–சௌகரியங்களைக் கவனித்துக் கொள்வார். இந்த இடத்தில் மனமகிழ்ச்சி இல்லை; எல்லா மக்களும் இராமனையே எண்ணி ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள்; உணர்வுகள் அற்றுப்போய்விட்டன; மனம் வேலை செய்வதில்லை – என்னும்போது, இங்கே வாழ்வதற்கு எவர்தான் விரும்புவார்கள்? (18–20)

கைகேயியிடம் இந்த அரசு போய்விட்டால், நாட்டில் தீநெறி பரவிவிடும்; கேட்பார் இல்லாமல் போய்விடும். அந்த அலங்கோல ஆட்சியில், நாம் உயிர் வாழவே விரும்பமாட்டோம் என்றால் புத்திரனாவது, பொருளாவது? (எல்லாம் எக்கேடும் கெட்டுப் போகட்டும்.) குலத்தைக் கெடுக்கும் பாவியான கைகேயி, ஆட்சி உரிமையையே மேலானதாகக் கருதி, சொந்த கணவரையும் புத்திரனையும் கைவிட்டாள். அவள், வேறு யாரைத்தான் உதறித் தள்ளமாட்டாள்? மகன் மேல் ஆணையிட்டுச் சொல்கிறோம்— கைகேயி உயிரோடிருக்கும் வரையில், அவள் ஆட்சி செலுத்திக் கொண்டிருக்கும் நாட்டில் நாங்கள் வாழமாட்டோம். (21–23)

இரக்கமே இல்லாத எவள், மாமன்னருடைய உத்தம புத்திரனை நாடு கடத்துகிறாளோ, அப்படிப்பட்ட கொடூர நடத்தையுடைய, அறம் வழுவிய அவள் ஆட்சி செய்யும் நாட்டில் என்ன சுகத்தைக் காணமுடியும்? கைகேயியின் காரணமாக, இந்த ராஜ்யம் ஆதரவற்றதாய், தலைவன் இல்லாததாய், பல சங்கடங்களுக்கு ஆட்பட்டதாகியிருக்கும் இந்த நிலையில், பேரழிவை அடையத்தான் போகிறது. இராமப்பிரபு நாடு கடத்தப்பட்ட பின்னர், மாமன்னர் உயிரோடிருக்க மாட்டார். தசரதர் இறந்ததும் இந்த நாட்டில் அழுகைக்குரல் மட்டும்தான் கேட்கும் என்பது திண்ணம். (24–26)

உங்களுடைய புண்ணியங்கள் அழிந்துவிட்டன. (அதனால்தான் மகத்தான சோகம் வந்திருக்கிறது.) மிகவும் கொடுமையான ஒரு நிலையை அடைந்துள்ளீர்கள். எனவே, இப்போதாவது ஆலோசனை செய்து, விஷத்தைக் குடித்து உயிரைப் போக்கிக் கொள்ளுங்கள்; அல்லது இராமன் இருக்குமிடத்திற்குச் செல்லுங்கள்; அல்லது கைகேயியின் பெயரைக்கூடக் கேள்விப்படாத நாட்டிற்குச் சென்றுவிடுங்கள். மனைவியோடும் இலக்குவனோடும் சத்தியபலம் இல்லாத ஒரு வரத்தினால் இராமன் நாடு கடத்தப்பட்டிருக்கிறார். நம்முடைய நிலைமையைப் பாருங்கள், கசாப்புக் கடையில் கட்டப்பட்டிருக்கும் ஆடு–மாடுகள் போல் ஆகிவிட்டோம். (நம் கழுத்தில் கத்தி எப்போது வேண்டுமானாலும் விழலாம்.) (27,28)

இலக்குவனுடைய தமையனார் இராமன், முழு நிலவைப் போன்று அழகும் குளிர்ச்சியும் கொண்ட முகம் உடையவர்; கருநீல வண்ணத்தர்; திரண்ட தோள்களை உடையவர்; எதிரிகளை

மாய்ப்பவர்; முழங்கால் வரை நீண்டு தொங்கும் கைகளைக் கொண்டவர்; தாமரைக் கண்ணர்; தற்பெருமை பாராட்டாமல் தானே முன் பேசுபவர்; இனியவர்; சத்தியம் பேசுபவர்; பேராற்றல் உடையவர்; சாத்விகர்; எல்லா மக்களுக்கும் குறைவில்லாது ஆனந்தம் அளிக்கும் சந்திரனைப் போன்று அன்புத் தோற்றம் உடையவர். மகாரதனும், ஆண்புலியும், மதங்கொண்ட யானையின் எல்லையற்ற பராக்கிரமமும் பெற்றுள்ள ஸ்ரீராமசந்திரன், காடுகளில் அங்குமிங்கும் சுற்றிக் கொண்டு, அவைகளுக்கு மெருகூட்டப் போகிறார்.'' (29–31)

பட்டணத்தில் நகரப் பெண்டிர் மேற்கூறியவாறு புலம்பி, துக்கத்தால் பரிதவித்து, யமன் வந்துவிட்டாற்போன்ற பயத்தால் உரக்க அழுதார்கள். இவ்வாறாக, தத்தம் வீடுகளிலிருந்தவாறே இராமனைக் குறித்து பெண்கள் புலம்பிக் கொண்டிருக்கையில், சூரியன் அஸ்தமனத்தை அடைந்தான்; இரவு விரைவாக வந்தது. அப்போது அந்த நகரத்தில் (சமையல், அக்னிஹோத்திரத்திற்கு) தீ மூட்டுவது என்பதே இல்லாமற்போயிற்று; வேதமோதுதல், புராணம் படித்தல் இல்லாததாயிற்று; முற்றிலும் இருளால் பூசப்பட்டதாக ஆயிற்று. (32–34)

கடையில் வியாபாரம் நிகழவில்லை; நிம்மதி போய்விட்டது; அடைக்கலம் கொடுப்போர் யாருமில்லை; தாரகைகள் இல்லாத ஆகாயம் போல் அயோத்தி நகரம் இருள் சூழ்ந்ததாயிற்று! அந்த மாதர்கள், தன் வயிற்றில் பிறந்த பிள்ளை அல்லது உடன்பிறந்த சகோதரன் நாடு கடத்தப்பட்டால் எவ்வளவு வருத்தப்படுவார்களோ, அவ்வளவுக்கு வருந்தி, மதிமயங்கி, நொந்து போய் புலம்பி, வாய்விட்டு அழுது தீர்த்தார்கள். அவர்களுடைய சொந்த பிள்ளையைக் காட்டிலும் மிகவும் பாசத்திற்குரியவராக இருந்தார், இராமன். அப்போது பாடல், திருவிழா, நடனம், வாத்திய இசை முதலியன இல்லாததாக, உற்சாகம் குன்றியதாக, கதவு மூடிய வணிக நிலையங்களை உடையதாக ஆகிவிட்ட அயோத்தி மாநகரம், நீர் சுண்டிப் போய்விட்ட கடல் போல் வெறிச்சென்று காணப்பட்டது! (35–37)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
நாற்பத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்தொன்பது

மக்களின் துயரம்

ஆண்புலி நிகர் இராமன், மிச்சமிருந்த இரவு நேரத்திற்குள் தந்தையின் கட்டளையை நிறைவேற்ற எண்ணி, நெடுந்தொலைவு சென்றார். இவ்வாறு, சுபமான அந்த இரவு பிரயாணத்திலேயே கழிந்தது. இடையில் பற்பல புறநகர்களையும் கிராமங்களையும் கடந்து சென்றனர். சூரிய உதய வேளையில் புண்ணியமான சந்தியாவந்தனத்தைச் செய்தார். கிராமங்களின் எல்லைகளில் விளைநிலங்கள் உழப்பட்டிருந்தன; நந்தவனங்களில் புஷ்பங்கள் மலர்ந்திருந்தன. இவ்வித அழகிய காட்சிகளைக் கண்டபடியே வில்லிலிருந்து விடுபட்ட அம்புபோல, எங்கும் தடைப்படாமல் இலக்கை நோக்கியே உத்தம குதிரைகள் இழுக்கும் ரதத்தில் அவர்கள் போய்க் கொண்டிருந்தார்கள். (1–3)

கிராமங்களில் வசிக்கும் மக்கள், 'காமத்தின் வசப்பட்டு (இராமனை நாடு கடத்திய) மன்னர் தசரதர், ஐயோ பாவம்!' என்று பேசிக் கொள்வதைக் கேட்டார்கள். ''என்ன கஷ்டம்!... இகழத்தக்க கைகேயி மகாபாவி; பாவத்தோடு தன்னை இணைத்துக் கொண்டுவிட்டவள்; கொடூரமானவள்; நல்மரபுகளைத் தகர்த்தெறிந்தவள்; கொடூரமான நடவடிக்கையில் இப்போது ஈடுபட்டிருக்கிறாள். தருமாத்மா, பேரறிவாளர், கருணை உடையவர், புலனடக்கம் கொண்டவர் – இப்படிப்பட்ட அரசகுமாரனை நாடு கடத்தி, காட்டிற்குப் போகும்படி செய்துவிட்டாளே? பாவி! (4–6)

பெரும்பேறு பெற்றவளும் ஜனககுமாரியுமான சீதை எப்போதும் சுக–சௌக்கியங்களையே அனுபவித்து வந்தவள் – எப்படித்தான் கஷ்டங்களைச் சகித்துக் கொள்ளப் போகிறாளோ? அடடா... என்ன கஷ்டம்? மன்னர் தசரதர் ஈவு இரக்கமில்லாமல், மக்களின் அன்புக்கு உரியவரும், குற்றமற்றவரும், தன் சொந்தப் பிள்ளையுமான இராமனை, இப்போது கைவிட்டுவிட விரும்புகிறார்.'' கிராமத்தின் வீடுகளில் வசிக்கும் மக்களின் இம்மாதிரியான குத்தலான சொற்களைக் கேட்டபடியே கோசல நாட்டுத் தலைவன் வீர இராமன், கோசல நாட்டை வெகுவிரைவில் கடந்து சென்றார். (7–9)

பின்னர், தூய நீரோட்டமுடைய 'வேதசுருதி' என்னும் நதியைக் கடந்து, அகஸ்திய மாமுனிவர் வசித்துக் கொண்டிருந்த தெற்கு திசையை நோக்கிச் சென்றார். வெகுநேரம் யாத்திரை செய்த பின்னர், குளிர்ந்த நீரையுடையதும், இருகரைகளிலும் ஏராளமான பசுக்களை உடையதும், கடலில் சென்று கலப்பதுமான கோமதி ஆற்றைக் கடந்து சென்றார். வேகமாகச் செல்லும் குதிரைகளைக் கொண்டு கோமதி நதியைக் கடந்து சென்ற இராமன், மயில்கள்–அன்னப்பறவைகளின் அகவைக் குரல் நிறைந்த 'ஸ்யந்திகா' (தற்போது 'ஸயி' என்று அழைக்கப்படும்) நதியைக் கடந்தார். (10–12)

தன–தானியங்களோடு வளமாக இருப்பதும், பற்பல சிறு நாடுகளைக் கொண்டதுமான அந்த மாபெரும் பிரதேசம், முன்னர் மனு சக்கரவர்த்தியால், குல முதல்வர் இக்ஷ்வாகுவுக்கு அளிக்கப்பட்டது என்று இராமன், சீதைக்கு எடுத்துக் கூறினார். 'தேரோட்டியே! சுமந்திரரே!' என்று அடிக்கடி அவரை அழைத்து, அன்னப்பறவை போன்ற இனிய குரலில் ஆணேறாகிய இராமன், பின்வருமாறு கூறினார்— (13,14)

''நான் எப்போது திரும்பி வந்து தாய்–தந்தையருடன் சேர்ந்திருப்பேனோ? சரயூ நதியின் மலர்கள் நிறைந்த உபவனங்களில் வேட்டையாடிக் கொண்டு சுற்றித் திரிவேனோ? சரயூ நதியை ஒட்டினாற்போலிருக்கும் காடுகளில் வேட்டையாடுவதற்கு எனக்கு விருப்பமில்லைதான். உலகில், இது ஒரு விசேஷமான மனத்திற்கு உற்சாகம் அளிக்கும் விளையாட்டு என்று ராஜரிஷிகளும் அனுமதித்திருக்கிறார்கள். காட்டிற்குச் சென்று வேட்டையாடுவது என்பது ராஜரிஷிகளுக்கு ஒரு பொழுதுபோக்காக அனுமதிக்கப்பட்டது. காலக்கிரமத்தில், கையில் வில்லைப் பிடித்தவர்களுக்கெல்லாம் வேட்டையில் அதிக விருப்பம் வந்துவிட்டது.'' இவ்வாறாக, அவ்வப்போது மனத்தில் தோன்றிய விஷயங்களைப் பற்றி இனிய குரலில் சாரதியிடம் பேசிக் கொண்டே, அந்த நீண்ட வழியில் இராமன் போய்க் கொண்டிருந்தார். (15–18)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
நாற்பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பது

இராமன், குகனைச் சந்தித்தல்

அகன்ற பரப்பளவுடையதும், அழகியதுமான கோசல நாட்டின் எல்லையை அடைந்த லட்சுமணனின் புத்திமானான தமையனார், அயோத்தி நகரை நோக்கி வணக்கத்துடன் இரு கைகளையும் கூப்பிக் கொண்டு (பின்வருமாறு) வேண்டிக் கொண்டார்— ''தலைசிறந்த பட்டணமே! காகுத்தர்களால் பரிபாலிக்கப்படுபவளே! உன்னை ரட்சித்துக் கொண்டு, உன்னிடம் குடிகொண்டிருக்கும் தெய்வங்களிடமிருந்தும் உன்னிடமிருந்தும் நான் விடைகோருகிறேன். வனவாச காலக்கெடு முடிந்து, உலகாளும் மன்னரைக் கடனற்றவராக ஆக்கி, தாயுடனும் தந்தையுடனும் சேர்ந்து கொண்டு, மீண்டும் உன்னைப் பார்ப்பேன்.'' (1–3)

பின்னர், செவ்வரி படர்ந்த மனங்கவர் கண்களைக் கொண்ட இராமன், வலது கையைத் தூக்கி, மனம் வருந்தி, நீர் நிறைந்த கண்களுடன், கிராமப்புற மக்களைப் பார்த்து பின்வருமாறு கூறினார்— ''என் விஷயத்தில் தேவையான அளவு இரக்கமும் தயவும் காட்டிவிட்டீர்கள். இனிமேலும் தொடர்ந்து துக்கப்பட்டுக் கொண்டிருப்பது நல்லது அல்ல. திரும்பிச் சென்று உங்கள் வேலைகளைப் பாருங்கள்.'' மகாத்மாவான அவரைத் தலைதாழ்த்தி வணங்கி, வலம்வந்து, மன உருக்கத்துடன் அழுது புலம்பிக்கொண்டு ஆங்காங்கே நின்றபடியே இருந்தனர். பின்னர், அவரிடமிருந்து விடைபெற்றுப் பிரிய மனமில்லாமல், அழுது கொண்டேயிருந்த அவர்கள் கண்ணில் படாத தூரத்திற்கு வெகுவிரைவாகச் சென்று, பொழுது சாயும் வேளை சூரியனைப் போல, இராமன் மறைந்து போனார். (4–7)

இதன் பிறகு ஆண்புலியாகிய அவர், தேரில் இருந்தவாறே தன–தானியச் செழிப்பு உடையதும், கொடை வள்ளல்களான நன்மக்களைக் கொண்டதும், எதனிடமிருந்தும் எக்காலத்திலும் அச்சப்படாததும், அழகிய தேவாலயங்களும் வேள்விச்சாலைத் தூண்களும் நிறைந்ததும், நந்தவனங்கள்–மாந்தோப்புக்கள் உடையதும், நீர் நிரம்பிய தடாகங்களைக் கொண்டதும், மன ஆரோக்கியமும் உடல் ஆரோக்கியமும் உடைய மக்கள் நிரம்பியதும், இடையர்கள்–பசுக்கூட்டங்கள் நிறைந்ததும், பிற மன்னர்களிடமிருந்து நன்றாகப் பாதுகாக்கப் பட்டதும், வேத கோஷங்கள் எப்போதும் ஒலித்துக் கொண்டிருப்பதுமான கோசல நாட்டைக் கடந்து சென்றார். (8–10)

மனமகிழ்ச்சி அளிப்பதும், செழிப்புள்ளதும், அழகிய நந்தவனங்கள் நிறைந்ததும், மன்னர்கள் சுகபோகங்களுடன் இருப்பதற்கு ஏற்றதுமான நாட்டின் வழியே தைரியசாலிகளில் முதன்மையானவரான இராமன், நேரான பாதையில் சென்றார். பின்னர், இராமன் மூன்று உலகங்களிலும் பாயும் தெய்விகமானதும், குளிர்ந்த நீரோட்டமுடையதும், பாசி படர்ந்திராததும், மாமுனிவர்களால் வணங்கப்படுவதுமான புண்ணிய நதியான கங்கையைக் கண்டார். அதன் கரையருகில் தவச்செல்வர்கள் வாழும் குடில்கள், அந்தப் பிரதேசத்திற்கே சிறப்பைத் தந்தன. குதூகலம் பொங்கிய அப்சரப் பெண்டிர், தூயதான நீர் மடுக்களில் அவ்வப்போது ஜலக்கிரீடை செய்தார்கள். (11–13)

தேவ–தானவ–கந்தர்வ–கின்னரர்கள் அவ்விடத்திற்கு வந்து அழகு கூட்டினார்கள்; எப்போதும் தூய்மையாக இருந்த அந்த நதியில் நாக–கந்தர்வர்களின் மனைவிகள் வந்து நீராடினார்கள். தேவர்கள் விளையாடுவதற்கான நூற்றுக்கணக்கான இடங்கள் இருந்தன; தேவதைகளுக்கான நந்தவனங்கள் இருந்தன; தேவர்களுக்காகவே ஆகாயத்தில் விளங்கிய 'தேவபத்மினி' என்ற புகழ்பெற்ற தாமரைகள், அந்த நந்தவனங்களில் காணப்பட்டன. (14,15)

பாறைகளில் தண்ணீர் மோதியதால் ஏற்பட்ட பயங்கரமான ஒலி, நதியின் கோரமான அட்டகாசத்தைப் போலிருந்தது. நீரோட்டத்தில் மிதந்த வெண்மையான நுரை, அந்த நதியின் வெள்ளிய சிரிப்பைப் போலிருந்தது. சில இடங்களில் குறுகிக் கறுத்து ஓடுவது, பெண்ணின் நீண்ட கூந்தலைப் போலிருந்தது! சில இடங்களில் நீர்ச்சுழல்கள் அழகாகக் காணப்பட்டன. சில இடங்களில் அசைவில்லாமல் ஆழமான தேக்கம் போலிருந்தது. சில இடங்களில் வெகுவேகமாக ஓடியது. சில இடங்களில் தோல் வாத்தியம் போல் இசையொலி கேட்டது. மற்றும் சில இடங்களில் பயங்கரமான ஒலி கேட்டது. (16,17)

தேவர்கள் கூட்டமாக வந்து அங்கே நீராடினார்கள். சில இடங்களில் ஆம்பல்கள் அடர்த்தியாகப் பூத்து வனப்பைக் கூட்டின. சில இடங்களில் விஸ்தாரமாக மணல்வெளி காணப்பட்டது. சில இடங்களில் வழவழப்பான கூழாங்கற்கள் காணப்பட்டன. அன்னங்களும் சாரஸப் பறவைகளும் சப்தமிட்டுக் கொண்டிருந்தன. சக்ரவாகப் பட்சிகள் இடத்தின் அழகை மெருகேற்றின. எப்போதும் களிப்பில் மிதக்கும் பறவைகள், இடைவெளிவிட்டு ஆங்காங்கே சப்தமிட்டுக் கொண்டிருந்தன. (18,19)

சில இடங்களில் அந்த நதியின் கரையில் வரிசையாக வளர்ந்திருந்த மரங்கள், ஒரு மாலை போல் அழகு செய்தன. சில இடங்களில் நன்றாக மலர்ந்த நீலோத்பல மலர்களால் நீரோட்டம் காணப்படாததாயிற்று. சில இடங்களில் தாமரைக் காடுகள் நிறைந்திருந்தன. சில இடங்களில் ஆம்பல்கள் நன்றாக மலர்ந்து அடர்த்தியாக வனப்புடன் இருந்தன. சில இடங்களில் மலர்களின் மகரந்தத் தாதுக்கள் சிதறிக் கிடந்ததைக் காணும்போது, காமவெறி கொண்ட ஒரு மங்கையைப் போலிருந்தது! (20,21)

அது பாவக்குவியலைப் போக்கக் கூடியதாக இருந்தது. (அசுத்தப் பொருட்களின் குவியல் அகற்றப்பட்டதால், நீரோட்டத்தின் தூய்மை கெட்டுப் போகவில்லை.) வைடூரிய மணிபோல் பளிச்சென்று காணப்பட்டது. எண்திசைக் காவலர்களான யானைகளாலும், மதங்கொண்ட உத்தம யானைகளாலும், தேவராஜனின் வாகனத்தை இழுத்துக் கொண்டு வரும் கர்ஜனைகளுடன் கூடிய யானைகளாலும் நிரம்பிய வனப்பிரதேசங்களை உடையதும்; மிகவும் அக்கறையுடன் அணிகலன்களால் தன்னை அலங்கரித்திருக்கும் நாரீமணியைப் போன்றும்; பழங்கள், புஷ்பங்கள், இலைத்தளிர்கள், படித்துறைகள், பட்சிகள் சூழ்ந்திருந்ததும்;

சிம்சுமாரம், முதலைகள், சர்ப்பங்கள் வசிப்பதும்; சாட்சாத் மகாவிஷ்ணுவின் திருவடிகளிலிருந்து உற்பத்தியானதும்; தெய்விகமானதும்; பாவமற்றதும்; பாவத்தை அழிப்பதும்; சகர மன்னர் வம்சத்தில் தோன்றிய பகீரதனுடைய அளவற்ற தபோபலத்தினால், சங்கர மகாதேவனுடைய சடாமகுடத்திலிருந்து விடப்பட்டதும்; கடல் மன்னனின் அரசி போன்றதும்; ஸாரஸம், கிரௌஞ்சம் முதலிய பட்சிகளின் இறைச்சல் நிறைந்ததுமான அந்த கங்கை நதியை, சிருங்கிபேரபுரம் என்னும் ஊரின் அருகே, பெருந்தோளரான அவர் (இராமன்) சென்றடைந்தார். (22–26)

மகாரதனான இராமன் வரிசையாய் அலைகள் மோதி நீர்ச்சுழல்கள் காணப்பட்ட நதியை வணங்கி, சுமந்திரரிடம், 'சாரதி! நாம் இன்று இங்கேயே தங்குவோம்' என்று கூறினார். ''சாரதி! ஆற்றின் அருகிலேயே மலர்களும் தளிர்களும் நிறைந்து விளங்கும், மிகப்பெரிய இந்தப் புங்க மரத்தினடியில் தங்குவோம். தேவ–தானவ–கந்தர்வ–விலங்கு–மானுடர்களால் மிகவும் பூஜித்துக் கொண்டாடப்படும் நீரை உடையதும், சர்வ மங்களங்களையும் அளிக்கக் கூடியதும், ஆறுகளில் மிக உயர்வானதுமான இந்த (கங்கை) நதியை ஆர அமரப் பார்ப்போமாக.'' லட்சுமணனும் சுமந்திரரும், 'அப்படியே ஆகட்டும்' என்று இராகவனிடம் கூறிவிட்டு, குதிரைகளுடன் (ரதத்துடன்) புங்க மரத்தின் அருகில் சென்றார்கள். (27–30)

இக்ஷ்வாகு குலத்திற்கு ஆனந்தம் அளிக்கும் இராமன், வசதியாக இருந்த அந்த மரத்தை வந்தடைந்து, மனைவியோடும் லட்சுமணனோடும் ரதத்திலிருந்து இறங்கினார். பிறகு, சுமந்திரரும் ரதத்திலிருந்து இறங்கி, குதிரைகளை அவிழ்த்துவிட்டு, மரத்தின் அடியில் நின்றுகொண்டிருந்த இராமனிடம் சென்று, கைகளைக் கூப்பிக் கொண்டு (அடுத்த உத்தரவை எதிர்பார்த்து) நின்றார். அந்தப் பகுதியில் வேடுவர் வகுப்பைச் சேர்ந்தவனும், மிக்க பலசாலியும், இராமனுக்கு உயிர் நண்பனுமான சிற்றரசன் குகன் என்பவன், அந்தப் பிரதேசத்திற்குத் தலைவனாகப் புகழ் பெற்று விளங்கினான். (31–33)

ஆண்புலியான இராமன் (தன் நாட்டிற்குள்) வந்திருப்பதைக் கேள்விப்பட்டு வயோதிகர்கள், அமைச்சர்கள் மற்றும் உறவினர்களுடன்கூட அவ்விடம் வந்தான். தொலைவில் வந்து கொண்டிருந்த வேடுவர் தலைவனைக் கண்டதும் இராமன், இலக்குவனோடுகூட முன்னே வந்து குகனைச் சந்தித்தார். (தவக்கோலத்தில் இராமனைக் கண்டதும்) மிகவும் மனவேதனைப்பட்ட குகன், ''அயோத்தி எப்படியோ, அப்படியே இந்த நாடும் தங்களுடையதே. நான், தங்களுக்கு என்ன சேவை செய்யவேண்டும்?'' என்று கேட்டான். (34–36)

''பெருந்தோளரே! தங்களைப் போன்ற பாசமுள்ள விருந்தினர், வேறு எவருக்குக் கிடைப்பார்?'' பிறகு, விதவிதமான உயர்வகை உணவுப் பொருட்களைக் கொண்டு வந்து,

அவருக்குச் சமர்ப்பித்தான். உடனே, அவருக்கு அர்க்யம் முதலான உபசாரங்கள் செய்து பின்வருமாறு கூறினான்— ''மாவீரரே! தங்களுக்கு நல்வரவு கூறுகிறேன். இந்த மண்ணுலகம் முழுவதும் தங்களுடையதே! (37,38)

நாங்கள் ஏவலர்கள்; தாங்கள் யஜமானர். தாங்கள் இந்த நாட்டை ஏற்று, எங்களுக்கு நல்லாட்சி அருளுங்கள். தங்களுக்காக பல்வகை அன்னங்கள், இனிப்பு வகைகள், பால் முதலிய பருகுவதற்கான பானங்கள், துவையல் வகைகள் முதலியன இதோ கொண்டு வரப்பட்டுள்ளன. உடலுக்கு சுகம் தரும் நல்ல படுக்கைகளும், குதிரைகளுக்குத் தீனியும் கொண்டு வரப்பட்டுள்ளன.'' இவ்வாறு கூறி முடித்த குகனைப் பார்த்து இராமன் பதில் சொன்னார்— ''காலால் நடந்து இவ்வளவு தூரம் நீங்களெல்லோரும் வந்ததாலும், முறுகிய நட்பைக் காட்டியதன் மூலமும் நாங்கள், உன்னால் நன்றாகக் கௌரவிக்கப்பட்டு மகிழ்ச்சியுடன் இருக்கிறோம்.'' (39–41)

உருண்டு திரண்ட தன் இரு கைகளாலும் குகனை மார்புறத் தழுவி, பின்வருமாறு கூறினார்— ''குகனே! உன்னையும் உன் சுற்றத்தார்களையும் உடல் நலமும் மன நலமும் உடையவர்களாகப் பார்ப்பதை ஒரு பேறாகக் கருதுகிறேன். உன் நாட்டுப் பிரஜைகள், அரசகுல நண்பர்கள், பொருள் வரவு – எல்லாம் சரியாக இருக்கின்றனவா? மிக்க அன்புடன் நீ கொண்டு வந்திருக்கும் எல்லாப் பொருட்களையும் திரும்பி எடுத்துக் கொண்டு போகும்படி உத்தரவிடுகிறேன். ஏனென்றால், பிறர் கொடுக்கும் பொருளை ஏற்பதில்லை – என்ற கொள்கையில் இருக்கிறேன். (42,43)

மரவுரி–மான்தோல் அணிந்து, கனி–கிழங்குகளைப் புசித்துக் கொண்டு, காட்டில் திரியும் அறநெறியைக் கொண்ட தவசியாக நான் இருக்கிறேன் – என்பதை அறிந்துகொள். நீ கொண்டு வந்திருப்பவைகளில், குதிரைகளுக்குத் தேவையான தீனி–தண்ணீர் மட்டும்தான் எனக்கு இப்போது தேவைப்படுபவை; வேறு எதுவும் வேண்டாம். இந்த ஒன்றினாலேயே நான் நன்கு பூஜிக்கப்பட்டவனாக ஆவேன். இந்தக் குதிரைகள், என்னுடைய தந்தையார் தசரத மன்னருக்கு மிகவும் பிரியமானவைகள். இவைகளுக்கு நல்ல ஏற்பாடு செய்யப்பட்டால் போதும், நான் கௌரவிக்கப்பட்டவனாக ஆவேன்.'' (44–46)

''குதிரைகளுக்குத் தீனியும், குடிப்பதற்குத் தண்ணீரும் உடனே கொண்டு வந்து கொடுங்கள்'' என்று, குகன் அப்பொழுதே தன் வேலைக்காரர்களுக்கு ஆணை பிறப்பித்தான். பின்னர், இராமன் அங்கவஸ்திரமாக ஒரு மரவுரியைத் தரித்துக் கொண்டு, சாயங்கால சந்தியாவந்தனம் செய்தார். இலக்குவன், தன் கையாலே கொண்டு வந்த நீரை மட்டும் உணவாகக் கொண்டார். தருமபத்தினியுடன் வெறுந்தரையில் படுத்துக் கொண்ட அவருடைய திருவடிகளை, நீர்விட்டுக் கழுவிச் சுத்தம் செய்தபின், சற்றுத் தள்ளியிருந்த ஒரு மரத்தைப் பிடித்துக் கொண்டு நின்றான், லட்சுமணன். (47–49)

கவனமாகக் கையில் வில்லைப் பிடித்துக் கொண்டு குகன், சாரதியுடனும் லட்சுமணனுடனும் இராமனைப் பற்றிப் பேசிக் கொண்டு, இரவு முழுவதும் கண்விழித்துக் கொண்டிருந்தான். அவ்வாறு படுத்துக் கொண்டிருந்த நன்மதியாளரும், புகழ்பெற்றவரும், மகாத்மாவும், இதுவரை துக்கத்தையே அனுபவித்தறியாதவரும், சுக–சௌக்கியங்களுக்கு உரியவருமான அந்த தசரத குமாரருக்கு, அந்த இரவு வெகுநேரம் கொண்டதாகத் தோன்றி, ஒருவாறாகக் கழிந்தது. (50,51)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
ஐம்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்தொன்று

குக–லட்சுமணர் உரையாடல்

(தன் தமையனாரின் பாதுகாப்பை முன்னிட்டு) கபடமில்லாமல் விழித்திருக்கும் இலக்குவன் படும் துன்பத்தைக் கண்டு மனவேதனைப்பட்ட குகன் பின்வருமாறு கூறினான்— (1)

''ஐயா! அரசகுமாரரே! சுகமான இந்தப் படுக்கை உங்களுக்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதில் படுத்து அமைதியுடன் உறங்கிக் களைப்பாறிக் கொள்ளுங்கள். நாங்கள் எல்லோரும் துன்பங்களைத் தாங்கிக் கொள்ளப் பழக்கப்பட்டவர்கள். நீங்கள் சௌக்கியமாக இருக்க வேண்டியவர். இராமனின் பாதுகாப்புக்காக, நாங்கள் இரவு முழுவதும் கண்விழித்துக் காவல் காப்போம். இந்த உலகில், ஸ்ரீராமனைக் காட்டிலும் என்னுடைய அதிக அன்பிற்குரியவர் வேறு யாருமிலர். சத்தியத்தின் மேல் ஆணையிட்டு, இந்த விஷயத்தை (நாங்கள் காவல் காப்போம் என்பதை) உங்களிடம் சத்தியமாகக் கூறுகிறோம். (2–4)

இவ்வுலகில் மிகப்பெரும் புகழையும், தருமானுஷ்டானத்தின் அளவில்லாத புண்ணியத்தையும், ஏராளமான பொருள்–போகங்களையும் அடையலாம் என்று நம்பிக்கையோடு இருக்கிறேன். தூங்கிக் கொண்டிருக்கும் என் அருமைத் தோழரான ஸ்ரீராமனையும் சீதையையும், நான் என் உறவினர்களோடு வில்லும்–கையுமாக நாற்புறத்திலும் காவல் காத்துக் கொண்டிருப்பேன். எப்போதும் இந்தக் காட்டில் சஞ்சரித்துக் கொண்டிருக்கும் எனக்கு இங்கே தெரியாதது ஒன்றுமில்லை. எதிரிகள் நால்வகைப் படையுடன் வந்தாலும், அவர்களை எதிர்கொள்வதற்கு நாங்களே போதும்.'' (5–7)

அப்போது, லட்சுமணன் அவனிடம் சொன்னான்— ''குற்றமற்றவனே! தருமத்திலிருந்து விலகாத மனத்தையுடைய நீ காவல் காத்துக் கொண்டிருக்கும் இந்த இடத்தில் எங்களுக்குப் பயம் ஏது? தசரதரின் மூத்த குமாரர், தன் மனைவியுடன் கட்டாந்தரையில் படுத்து உறங்கிக் கொண்டிருக்கும்போது, எனக்குத் தூக்கம் வருமா? உயிர் வாழவோ, சுகங்களை அனுபவிக்கவோ இயலுமா? தேவாசுரர்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து வந்தாலும் யுத்தத்தில் எவரை எதிர்த்து வெற்றி பெற முடியாதோ, அப்படிப்பட்ட அவர் சீதையுடன்கூட புல்படுக்கையில் அமைதியாகத் தூங்குவதைப் பார். (8–10)

பலவகையான தீவிர முயற்சிகளாலும், மந்திர ஜபங்களாலும், தவநெறி அனுஷ்டானங்களாலும், தனக்கு நிகரான நற்குணங்கள் கொண்டவராக, தசரதருக்குப் பிரியமான மூத்த புதல்வராகப் பெறப்பட்டவர், இவர். இவர் நாட்டை விட்டு வெளியேறியபின் வெகுகாலம் வேந்தர் உயிரோடு இருக்கமாட்டார். இந்தப் பூமியே தலைவன் அற்றதாக ஆகிவிடப் போகிறது. நண்பனே! அந்தப்புரப் பெண்மணிகள் வாய்விட்டுக் கதறி அழுதுவிட்டு, களைப்படைந்து ஓய்ந்து போயிருப்பார்கள். மன்னரின் மாளிகையில் ஒப்பாரி சப்தம் ஒழிந்து, அமைதி அடைந்திருக்கும் என்று எண்ணுகிறேன். (11–13)

கௌசல்யாதேவியும் மன்னரும் என்னைப் பெற்றெடுத்த தாயாரும், இன்றிரவு வரையிலாவது உயிரோடு இருப்பார்கள் என்று என்னால் சொல்ல முடியாது. என்னுடைய அன்னை, சத்ருக்னனைப் பார்க்க வேண்டும் என்பதற்காகவே உயிரைத் தக்க வைத்துக் கொண்டிருக்கலாம். வீரராமனைப் பெற்றெடுத்த தாயார் புத்திரனின் பிரிவைத் தாங்காமல் உயிர்விட்டால், அது எங்களுக்கு மகத்தான துக்கத்தைத் தரும். அயோத்தியில் இராமனிடம் பக்தி கொண்டவர்கள் நிரம்பி இருக்கிறார்கள். சுகத்தைக் கொடுக்கக் கூடியது; மக்களுக்குப் பிரியமான பொருட்களை உடையது. இப்போது, வேந்தரின் மரணத்தால் துக்கம் தாளாமல் அந்த நகரம் அழிந்துவிடப் போகிறது. (14–16)

மகா மகிமை வாய்ந்தவரும், பேரன்பிற்குரிய மூத்த புதல்வருமான இராமனைப் பாராமல், மகாத்மாவான மன்னருடைய திருமேனி, (எப்படி) உயிரைத் தாங்கிக் கொண்டிருக்கப் போகிறது? மன்னர் மரணமடைந்தால், பிறகு கௌசல்யா மாதாவும் உயிரை விடுவார். பின்னர், என்னுடைய அன்னையும் உயிர்வாழ மாட்டார். மன்னருடைய விருப்பத்திற்கு எதிராக எது நடந்ததோ, அது நிகழ்ந்துவிட்ட வேதனையான சத்தியம். மன்னர், இராமனுக்கு ஆட்சி அதிகாரத்தைக் கொடுக்காமலே, என்னுடைய தந்தையான அவர் உயிரைவிடப் போகிறார். மண்ணாண்ட மன்னர் உயிர்விடும் அந்த நேரத்தில், அவர் அருகில் இருந்து எல்லா உத்தரக்கிரியைகளையும் என் தந்தையாருக்குச் செய்பவர்களே கொடுத்து வைத்தவர்கள். (17–20)

(ஆகா! அயோத்தியைப் போல அழகான நகரம், இவ்வுலகில் வேறு எங்கும் காணக் கிடைக்குமா?) நேர்த்தியாக அமைக்கப்பட்ட நாற்சந்திகள்; நன்கு வகுக்கப்பட்ட நெடுஞ்சாலைகள்; செல்வந்தர்களின் வீடுகள்; அரச குடும்பத்தினரின் மாளிகைகள்; இறைப்பணியில் தம்மை அர்ப்பித்துக் கொண்ட கணிகை இன மாதர்கள் – இவற்றால் அழகூட்டப்பட்டது. உத்தமமான ரதங்கள், குதிரைகள், யானைகள் நிறைந்தது; பல்வகைப்பட்ட இசைக்கருவிகளின் ஒலியால் எதிரொலிக்கப்படுவது; சுகமான வாழ்க்கைக்கு வேண்டிய அனைத்துப் பொருட்களும் கிடைக்கப் பெறுவது; மனமகிழ்ச்சியும் உடல் நலமும் வாய்க்கப் பெற்ற மக்களின் கூட்டங்கள் கொண்டது; (21,22)

தோட்டங்கள், நந்தவனங்கள் உடையது; சமுதாயத் திருவிழாக்கள் அடிக்கடி கோலாகலமாகக் கொண்டாடப்படுவது – இப்படிப்பட்ட என் தந்தையாரின் பட்டணத்தில் வாழ்பவர்கள் நிச்சயம் பாக்கியசாலிகளே! வனவாசத்திலிருந்து நாங்கள் திரும்பி வந்து பெரும் பாக்கியமுள்ளவரும், விரத அனுஷ்டானமுள்ளவருமான என் தந்தை தசரதரை உயிர் வாழ்பவராகப் பார்ப்போமா? வனவாசத்திற்கான காலகெடு முடிந்து, சத்தியவாதியான இராமனுடன் குறை ஒன்றுமில்லாதவர்களாக நாங்கள் அயோத்தியில் பிரவேசிப்போமா?'' (23–25)

இவ்வாறு, மனத்துயரம் தாங்காமல் வேதனையுடன் புலம்பிக் கொண்டேயிருந்த பாசமிகு அரசகுமாரனுக்கு அந்த இரவு ஒருவழியாகக் கழிந்தது. மக்களின் நல்வாழ்வில் கருத்துடைய அரசகுமாரன் இலக்குவன், தந்தை–தமையனிடம் கொண்டிருந்த பேரன்பினால் மனந்திறந்து பேசியதைக் கேட்டதும், நோயினால் பீடிக்கப்பட்ட யானை தவிப்பதைப் போல, குகன் மிகவும் மனம் நொந்து துக்கம் தாங்காமல் கண்ணீர் விட்டான். (26,27)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
ஐம்பத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்து இரண்டு

கங்கையைக் கடந்து செல்லுதல்

இரவு கழிந்து, பொழுது விடிந்ததும் விசாலமான மார்பும் மகாகீர்த்தியும் பெற்ற இராமன், அழகிய உடலமைப்புக் கொண்ட இலக்குவனிடம் பின்வருமாறு கூறினார்— ''அருமைத் தம்பி! இப்போது சூரியன் உதிக்கிற காலம். இரவு மங்களமாகக் கழிந்தது. தனியாக ஒரு கருங்குயில் கூவுகிறது. காட்டில் அகவும் மயில்களின் ஓசை கேட்கிறது. சமுத்திரத்தை நோக்கி வேகமாக ஓடும் கங்கை நதியைக் கடந்து செல்லவேண்டும். தம்பி! ஆகவேண்டியதை விரைவாகச் செய்.'' நண்பர்களை ஆனந்தப்படுத்தும் லட்சுமணன், இராமனுடைய பேச்சின் கருத்தைப் புரிந்துகொண்டு, குகனையும் சாரதியையும் அழைத்துக் கொண்டு வந்து தமையனார் எதிரே கைகட்டி நின்றார். (1–4)

அந்தப் பிரதேசத்தின் தலைவன் (குகன்) இராமனுடைய ஆணையைச் சிரமேற்கொண்டு, உடனே, தன் அமைச்சர்களிடம் பின்வருமாறு கூறினான்— ''படகுத் துறையில் துடுப்பு முதலிய மரக்கலக் கருவிகளையுடைய, மீகான் (படகைச் செலுத்துபவன்) உடைய, நீரில் செல்லும்போது குலுங்கி ஆடாமல் செல்லக்கூடிய, உறுதியான, பார்ப்பதற்கு லட்சணமான ஒரு தோணியை ஆயத்தப்படுத்துங்கள்.'' குகனுடைய கட்டளையைக் கேட்டு, குகனுடைய அமைச்சர்களின் பெருங்கூட்டம், அழகிய ஒரு படகை ஏற்பாடு செய்துவிட்டு, குகனிடம் வந்து அறிவித்தது. (5–7)

உடனே, வணக்கமாய் கூப்பிய கரங்களுடன் குகன், இராமனிடம் விண்ணப்பித்துக் கொண்டான்— ''ஐயனே! படகு ஆயத்தமாக இருக்கிறது. இனி, நான் என்ன பணி செய்ய வேண்டும்? தேவகுமாரனைப் போல் ஒளி வீசுபவரே! ஆண்சிங்கமே! நல்விரதங்களை அனுஷ்டிப்பவரே! பெருங்கடலை நோக்கிச் செல்லும் நதியைக் கடப்பதற்கு படகு வந்து விட்டது; தாங்கள் ஏறிக் கொள்ளலாம்.'' அப்போது, மகாதேஜஸ்வியான இராமன் குகனிடம் சொன்னார்— ''என்னுடைய எல்லா விருப்பங்களையும் நீ நிறைவேற்றிவிட்டாய்! நாங்கள் கொண்டு வந்திருக்கும் பொருட்களை விரைவில் படகில் ஏற்றி வை.'' (8–10)

இவ்வாறு சொல்லிவிட்டு, இராம–லட்சுமணர்கள் கவசம்–அம்புறாத்தூணி கட்டிக்கொண்டு, கைகளில் வில்லும் கத்தியும் ஏந்தி, எல்லா மக்களும் செல்லும் வழியாகவே கங்கையின் தோணித்துறைக்கு சீதையுடன் சென்றார்கள். அந்தச் சமயத்தில் அறம் அறிந்தவரான இராமனை அணுகி, வணக்கத்துடன் கைகளைக் கூப்பிக் கொண்டு, 'அடியேனுக்கு என்ன கட்டளையோ?' என்று சாரதி (சுமந்திரர்) கேட்டார். அப்போது, தேரோட்டியான சுமந்திரரை, மங்களகரமான தன் வலது கையால் தொட்டுக் கொண்டு இராமன் கூறினார்— ''சுமந்திரரே! சீக்கிரமாகத் திரும்பிச் செல்லுங்கள். மன்னர் அருகில் கவனக்குறைவில்லாமல் இருங்கள். (11–13)

நீங்கள் திரும்பிப் போகலாம். இதுவரை நீங்கள் கொண்டு வந்துவிட்டதே போதும். தேரைத் தவிர்த்துவிட்டு இனிக் கால்களால் நடந்தே பெருங்காட்டிற்குப் போவோம்'' என்று அவரிடம் சொன்னார். தான் திரும்பிப் போக உத்தரவிடப்பட்டதால், மிகவும் வருத்தமடைந்த அந்த சாரதி சுமந்திரர், மகாபலசாலியான இராமனிடம் இவ்வாறு விண்ணப்பித்துக் கொண்டார்— (14,15)

''தாங்கள், தம்பியோடும் மனைவியோடும் ஒரு பாமரனைப் போல் காட்டில் வசிக்க நேர்ந்திருக்கிறது! (இது தெய்வ சித்தம்.) உலகில் எந்த ஒரு மனிதனாலும் தெய்வ சங்கல்பம் முறியடிக்கப்பட்டதில்லை (என்பதற்கு இந்த ஒரு சான்றே போதும்!) தங்களைப் போன்றவர்களுக்கே இவ்வளவு பெரிய கஷ்டம் வந்திருக்கிறது என்றால் பிரம்மசரிய விரதம், வேத பாராயணம், கருணை, நேர்மை – இவைகளால் எந்தப் பயனும் இல்லை என்று, நான் எண்ணுகிறேன். மகாவிஷ்ணு மூன்று அடிகளால் மூன்று உலகங்களையும் அளந்து 'பேரருளாளன்' என்ற பெரும்புகழை அடைந்தாற்போல, மகாவீரரான இராமா! தாங்கள் லட்சுமணனோடும் சீதையோடும் காட்டில் வசித்துக் கொண்டு, எல்லோருக்கும் புகல் அளிப்பவராக ஆகப்போகிறீர்கள். (16–18)

இராமா! நாங்கள் (அயோத்தியாவாசிகள்) எல்லா வகையாலும் சீரழிந்துவிட்டோம்! எங்களையெல்லாம் தாங்களும் வஞ்சித்துவிட்டீர்கள். (உங்களுடன் காட்டில் வசிப்பதற்கு அனுமதிக்கவில்லை.) இனிமேல் பாவசிந்தை கொண்ட கைகேயியின் அதிகாரத்திற்கு உட்பட்டு துன்பத்தையே அனுபவித்துக் கொண்டிருக்கப் போகிறோம்!'' இவ்வாறு, தன் உயிர்போல நேசிக்கும் இராமனிடம் கூறிக் கொண்டிருக்கும் போதே, இராமன் வெகுதொலைவிற்குப் போகத் தொடங்கியதைக் கண்ணுற்ற சாரதி சுமந்திரர், துக்கம் தாங்காமல் வாய்விட்டு அழுதார். (19,20)

பின்னர், கண்ணீர்ப்பெருக்கு நின்றவுடன் ஆசமனம் செய்து சுத்தியடைந்த சாரதியைப் பார்த்து, இராமன் இனிய மொழிகளால் அழுத்தமாகக் கூறினார்— ''இக்ஷ்வாகு பரம்பரைக்கு உமக்கு நிகரான வேறொரு நண்பரை நான் காண்கிலேன். தசரத மன்னர் என்னைப் பற்றிக் கவலைப்படாமல்

இருப்பதற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ, அவற்றைச் செய்யுங்கள். உலகாளும் மன்னர் மூப்பு அடைந்தவர்; தன் விருப்பங்கள் கைகூடப் பெறாதவர்; அதனால் மனம் நொந்திருப்பவர். எனவேதான், அவரைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளும்படி கூறுகிறேன். (21–23)

கைகேயியின் பிரியத்தைப் பெறவேண்டும் என்பதற்காக மகாத்மாவான மன்னர் (தசரதர்) எதைச் சொன்னாலும், அதை மனப்பூர்வமாக நிறைவேற்றிவிட வேண்டும். வேந்தர்கள், தம் மனத்தில் தோன்றியவைகளை, எவ்வித எதிர்ப்புமின்றி நடத்திக் கொள்ள முடியும் என்ற காரணத்தால்தான் நாட்டை ஆள்கிறார்கள். ஆகவே, சுமந்திரரே! எந்த ஒரு விஷயத்திலும் மன்னருக்கு விருப்பமில்லாதது நடந்துவிடக் கூடாது; அதிக துயரத்தால் உடல் இளைத்துவிடக் கூடாது. இவ்வாறிருக்கும்படி நீங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். மன்னர் இதுவரை துக்கம் என்பதையே அறியாதவர்; வயோதிகர்; உயர்குணங்கள் உடையவர்; புலன்களை வென்றவர். என் பொருட்டு அவரை வணங்கி, நான் சொல்லப் போவதைச் சொல்லுங்கள். (24–27)

'அயோத்தியை விட்டு வெளியே வந்துவிட்டோமே!' என்றோ, 'காட்டில் வசிக்கும்படி ஆகிவிட்டதே' என்றோ, நானோ, லட்சுமணனோ, சீதையோ வருத்தப்படவில்லை. பதிநான்கு ஆண்டுக்காலத்தை வெகுவிரைவில் கடந்து, மீண்டும் வந்து சேர்ந்துவிட்ட லட்சுமணனையும் என்னையும் சீதையையும் கண்ணால் காணப்போகிறீர்கள். சுமந்திரரே! இவ்வாறு அரசரிடமும், என் தாயாரிடமும், கைகேயி உட்பட மற்ற தாய்மார்களிடமும் விளக்கமாகக் கூறுங்கள். (28–30)

மேலும் சீதையுடைய, என்னுடைய, இலக்குவனுடைய நமஸ்காரத்தை கௌசல்யா தேவியாரிடம் தெரிவித்து, நாங்கள் உடலாலும் உள்ளத்தாலும் நலமாக இருப்பதையும் சொல்லுங்கள். மாமன்னரிடம் வெகுவிரைவில் பரதனை அழைத்துக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படி, நான் கூறியதாகத் தெரிவியுங்கள். அவன் வந்தவுடன் மன்னர் விரும்பியபடி, இளவரசுப் பட்டம் சூட்டச் சொல்லுங்கள். நீங்கள், பரதனை (அன்புடன்) மார்புறத் தழுவி, இளவரசனாக முடிசூட்டிவிட்டபின், எங்கள் பிரிவின் காரணமாக ஏற்பட்ட துக்கம், உங்கள் மனத்திலிருந்து மறைந்து போய்விடும். (31–33)

பரதனிடம், 'மன்னரிடம் எவ்வளவு பரிவும் பாசமும் கொண்டு நடக்கிறாயோ, அவ்வாறே எல்லா அன்னையரிடமும் சமமான பரிவு–பாசத்துடன் நடந்து கொள்ள வேண்டும். உன் மனத்தில் கைகேயியிக்குக் கொடுக்கும் உயர்ந்த ஸ்தானம், சுமித்திரைக்கும் என் தாயார் கோசலைக்கும் கொடுக்கப்பட வேண்டும். தந்தையாரின் விருப்பப்படி, இளவரசுப் பதவியை ஏற்று நீதிநெறிப்படி ஆட்சி செய்தால், இவ்வுலகிலும் அவ்வுலகிலும் புண்ணிய பலனான சுகபோகங்களை அடையலாம்' என்று நான் சொன்னதாகக் கூறுங்கள்.'' (34–36)

சுமந்திரர், மேற்கண்டவாறு விரிவாகக் கூறப்பட்ட விஷயங்களைக் கேட்டு, திரும்பிப் போக விடைகொடுக்கப்பட்டதை உணர்ந்து, மிக்க துயரத்தில் ஆழ்ந்து இராமனிடமிருந்த பேரன்பினால் இவ்வாறு கூறினார்— ''நான் சொல்லப் போகும் விஷயத்தைத் தாங்கள் கேட்டருளவேண்டும். நான் தங்களுடைய சேவகன் என்ற துணிவுடன் சொல்கிறேன். அப்படிச் சொல்வதற்கு எனக்கு உரிமையில்லை என்று கருதாமல், 'இவன் நம்மிடம் பக்தி கொண்டவன்' என்று நினைத்து, என்னை மன்னித்துவிட வேண்டும். தன் சொந்த மகனை இழந்துவிட்ட ஒரு தாயைப் போல, தங்கள் பிரிவால் பரிதவிக்கும் அந்த நகரத்திற்கு, தாங்கள் இல்லாமல் நான் மட்டும் தனியாக எப்படித் திரும்பிச் செல்வேன்? (37–39)

(அயோத்தியிலிருந்து புறப்பட்ட) அப்போது என்னால் ஓட்டப்பட்ட ரதத்தில் இராமன் வீற்றிருப்பதைக் கண்குளிரக் கண்ட குடிமக்கள், இராமன் இல்லாத ரதத்தைப் பார்த்தும், அந்த நகரமே பிளந்து சிதறிப் போகாதோ? போர்க்களத்தில் படைத்தலைவன் உயிர்விட்டதும், சாரதி மட்டும் ரதத்தைத் திரும்பி ஓட்டிச் செல்வதைப் பார்க்கும் அவனது படையினர் அஞ்சி

வருந்துவதைப் போல, இந்த ரதத்தில், அதன் தலைவர் இல்லாமல் வெறுமையாக இருப்பதைப் பார்த்ததும், அயோத்தி நகர மக்கள் எல்லோரும் மனம் கலங்கிப் போவார்கள். (40,41)

தாங்கள் தொலைவில் இருந்தாலும் மக்கள் மனத்தில் குடிகொண்டிருப்பதால், தம் எதிரிலேயே தாங்கள் நின்று கொண்டிருப்பதாக எண்ணி மகிழ்ந்தவர்கள், இப்போது தங்களைப் பற்றி விசனப்பட்டுக் கொண்டு உணவையும் மறந்தவர்களாகியிருப்பார்கள். இராமா! தாங்கள் நாட்டிலிருந்து வெளியேறியபோது, தங்களைப் பற்றிய கவலையால், மக்கள் சோகக் கடலில் மூழ்கியதைத் தாங்கள் கண்ணால் பார்த்தீர்கள். தாங்கள் காட்டிற்குப் புறப்பட்டபோது நகர மக்கள் எழுப்பிய சோகக் கூக்குரலைப் போல், ரதத்தில் என்னை மட்டும் காணும் ஜனங்கள் நூறு மடங்கு அதிகமாகச் சோகக் கூக்குரலை எழுப்புவார்கள் என்பது நிச்சயம். (42–44)

நான், உங்கள் தாயாரிடம் என்ன சொல்வேன்? 'உங்களுடைய செல்வக் குழந்தையை மாமன் வீட்டில் விட்டிருக்கிறேன். நீங்கள் வருத்தப்பட வேண்டாம்' என்றா சொல்லமுடியும்? இவ்வாறு சொல்வது, உங்கள் தாயாருக்கு மன மகிழ்ச்சியைத் தருவதாக இருக்கலாம். ஆனால், அது அசத்தியமாயிற்றே? இம்மாதிரியான அசத்தியத்தை என்னால் சொல்ல முடியாது. ஆனால், உங்கள் அன்னைக்கு வருத்தத்தை விளைவிக்கக் கூடிய (காட்டில் விட்டுவிட்டு வந்திருக்கிறேன் என்ற) உண்மையை எவ்வாறு என் வாயால் கூறுவேன்? என் ஆணைப்படி நடக்கும் இந்த உத்தமக் குதிரைகள், தங்கள் உற்றார்–உறவினர்களைச் சுமந்து செல்பவைகள். இப்போது, தாங்கள் இல்லாத தேரை எவ்வாறு இழுத்துச் செல்லும்? (45–47)

மாசற்றவரே! தாங்களில்லாமல் நான் அயோத்திக்குப் போகமாட்டேன். வனவாசத்தில் தங்களுடனேயே நான் இருப்பதற்கு அனுமதி கொடுங்கள். இவ்வளவு தூரம் நான் மன்றாடிக் கேட்டுக் கொண்ட பின்னரும், தாங்கள் என்னைக் கைவிட்டுவிட்டால், அவ்விதம் தங்களால் கைவிடப்பட்ட க்ஷணத்திலேயே இங்கேயே ரதத்துடன் அக்னியில் பாய்ந்துவிடுவேன்! இராகவப் பிரபு! காட்டில் தங்கள் தவத்திற்கு இடையூறு செய்யும் எல்லாப் பிராணிகளையும், இந்த ரதத்தின் துணைகொண்டே எதிர்த்துப் போரிடுவேன். (48–50)

தங்களுக்குப் பட்டாபிஷேகம் ஆகி, ராஜபவனியில் ரதத்தைச் செலுத்தும் பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லை. வனவாசத்தில் தங்களுடன் இருக்கும் பெரும்பேற்றையாவது எனக்கு அருளவேண்டும். வனத்தில் தங்களுடனேயே இருக்க விரும்பும் என்னிடம் கருணை காட்டுங்கள். 'என்னுடனே இரு' என்னும் திருவாக்கைத் தங்களிடமிருந்து கேட்க விரும்புகிறேன். மாவீரரே! தங்களுடைய இந்தக் குதிரைகளும், காட்டில் தங்களுக்குப் பணி செய்தால், பின்னாட்களில் மிக உயர்ந்த நிலையை அடையும். (உத்தம கதியை அடையும்.) (51–53)

காட்டில் வசித்துக் கொண்டு, தங்கள் உத்தரவுகளைத் தலையால் ஏற்றுப் பணிவிடை செய்வேன். (இந்தத் தொண்டு புரியும் பாக்கியமே எனக்குப் போதும்.) அயோத்தியோ, ஏன், சகல போகங்களும் நிரம்பிய தேவலோகமோகூட எனக்கு வேண்டவே வேண்டாம்! பாவம் செய்தவரால், இந்திரனது தலைநகரான அமராவதிக்குள் புகவே முடியாது. அதைப்போல தாங்களில்லாமல் அயோத்திக்குள் என்னால் நுழைய முடியாது. என்னுடைய விருப்பம் இதுதான். தங்கள் வனவாசம் முடிந்தவுடன், இதே ரதத்தில் தங்களைச் சுமந்து கொண்டு மீண்டும் அயோத்தி நகரத்திற்குப் போகவேண்டும். (54–56)

தங்களுடன் வனத்தில் இருக்கும் பதிநான்கு ஆண்டுக்காலம், ஒரு விநாடிப் பொழுதாகக் கழிந்துவிடும். இல்லையென்றால் நூறு மடங்கு அதிகமாக வளர்ந்துவிடும். பணியாளர்களிடம் பேரன்பு கொண்டவரே! நான், என்னுடைய தலைவரின் திருக்குமரன் செல்லும் நெறியில் நிற்பவன்; பக்தன்; ஏவலாளன்; என் பணிகளின் எல்லைக்குள் நின்று கடமை ஆற்றுபவன். தாங்கள் என்னைப் புறக்கணிக்கக் கூடாது.'' இவ்விதம் பலவிதமாக, பல தடவைகள் மிகவும்

குழைந்து வேண்டிக் கொண்ட சுமந்திரரைப் பார்த்து, தொண்டு செய்பவர்களிடம் அபாரமான அன்பு கொண்டவராயினும், இராமன் இவ்வாறு சொன்னார்— (57–59)

''ராஜவிசுவாசம் உடையவரே! தங்களுக்கு என்னிடம் எல்லையில்லாத பக்தி இருக்கிறது என்பதை நான் அறிவேன். நான், உங்களை எதற்காக இங்கிருந்து அயோத்திக்குத் திருப்பி அனுப்புகிறேன் என்பதையும் கேட்டுக் கொள்ளுங்கள். நீங்கள் பட்டணத்திற்கு வந்துவிட்டதை அறிந்து கொண்டால், என் இளைய தாயார் கைகேயி, 'சரி, இராமன் காட்டிற்குப் போயே போய்விட்டான்!' என்று நம்பிக்கை அடைவார். நான், காட்டிற்குப் போனதை உறுதியாகத் தெரிந்து கொண்டதும், கைகேயிதேவி மனம் மகிழ்வார். தரும வடிவினரான மன்னரை, 'இவர் பொய் பேசுபவர்' என்று சந்தேகப்பட மாட்டார். (60–62)

என்னுடைய இளைய தாயார், பரதனுக்காகக் கேட்டுப் பெறப்பட்ட, புத்திரனின் ஆளுகைக்கு வந்துவிட்ட வளமான ராஜ்யத்தை (உண்மையாகவே) அடைந்துவிடுவார் – இதுதான் (தங்களைத் திருப்பி அனுப்புவதன்) முக்கிய நோக்கம். என்னுடைய விருப்பப்படியும், மன்னரின் ஆணைப்படியும் தாங்கள் ரதத்துடன் பட்டணத்திற்குச் செல்லவேண்டும். அத்துடன் யார் யாருக்கு என்னென்ன செய்திகள் சொல்லப்பட்டிருக்கின்றனவோ, அவைகளை அவரவரிடம் தெரிவிக்க வேண்டும்.'' மேற்கண்டவாறு விளக்கமாக எடுத்துக் கூறி, சாரதிக்கு ஆறுதல் அளித்துவிட்டு, குகனிடம் தர்க்கபூர்வமான வார்த்தைகளை மிகவும் உற்சாகத்துடன் கூறினார், இராமன். (63–65)

''குகனே! மக்கள் அதிகமாக நடமாடும் இந்தக் காட்டுப் பிரதேசத்தில் நான் வசிக்கலாகாது. கண்டிப்பாக (அதிக மக்கள் வந்து போகாத) தனியானதொரு ஆசிரமத்தில், அதற்கான சட்ட–திட்டங்களைக் கைக்கொண்டு வசிப்பதுதான் முறை. ஆகவே, என் தந்தையார் மற்றும் சீதை–லட்சுமணர்களுடைய நலனையும் விரும்பி, தவம் செய்யும் சான்றோர்களின் நியமங்களையும் தோற்றத்தையும் ஏற்று, தலைமுடியை ஜடையாகச் செய்துகொண்ட பின்னர், தொடர்ந்து காட்டிற்குள் போகப் போகிறேன்; ஆலமரத்தின் பாலைக் கொண்டு வா.'' அந்தப் பாலை வெகுவிரைவில் குகன் கொண்டுவந்து அரசகுமாரரிடம் கொடுத்தான். (66–68)

ஆலமரத்தின் பாலை, தன் முடியிலும் லட்சுமணன் முடியிலும் தடவி, ஜடாமுடியாகச் செய்துகொண்டார். நீண்ட கரங்களுடைய அந்த ஆண்புலி, தலைமுடியை ஜடாபாரமாக ஏற்றுக் கொண்டார். அப்போது, சகோதரர்களான இராம–லட்சுமணர்கள் மரவுரி தரித்து, 'ஜடாமகுடம்' ஏற்று, மாமுனிவர்களைப் போல் பிரகாசித்தார்கள். பின்னர், லட்சுமணனுடன் வானப்பிரஸ்த வாழ்க்கை மேற்கொள்வதற்கான விரதங்களை (கட்டுப்பாடுகளை) மேற்கொண்டு, நெஞ்சார்ந்த நண்பனான குகனிடம் இவ்வாறு சொன்னார்— (69–71)

''குகனே! சைன்யம், கருவூலம், கோட்டை, மக்கள் நலன் – இவைகளில் எப்போதும் கவனம் செலுத்த வேண்டும். அரசாட்சி என்பது மிகவும் சிரம சாத்தியமானது என்பது எல்லோரும் அறிந்ததே.'' பின்னர், இக்ஷ்வாகு குல இரத்தினமான இராமன், குகனுக்கு விடைகொடுத்து அனுப்பிவிட்டு, மனைவி–லட்சுமணனுடன் சுறுசுறுப்பாகச் செல்லத் தொடங்கினார். தோணித் துறையில் ஒரு படகு இருப்பதைக் கண்ட இராமன், வேகமாகப் பாய்ந்தோடும் கங்கையைக் கடக்க விரும்பியவராய், இலக்குவனை நோக்கி இவ்வாறு கூறினார்— (72–74)

''இங்கே இருக்கும் தோணியில், ஆண்புலியே! பயந்த இயல்புடைய சீதையின் கையைப் பற்றி மெதுவாக ஏற்றிவிடு; உடனே நீயும் ஏறிக்கொள்.'' எதிர்ப்பேச்சுப் பேசியறியாதவனும், மனத்தைத் தன்வசத்தில் வைத்திருப்பவனுமான இலக்குவன், தமையனாரின் ஆணையை முழுமையாகக் கேட்டு, முதலில் சீதாதேவியைப் படகில் ஏற்றிவிட்டுப் பின்னர் தானும் ஏறிக் கொண்டான். பின்னர், மகாபராக்கிரமசாலியான இலக்குவனுக்கு மூத்தவரான இராமன் ஏறிக்கொண்டார். உடனே, வேடர் தலைவன் குகன் படகைச் செலுத்தும்படி, தன் இனத்தவர்களுக்கு உத்தரவிட்டான். (75–77)

ஆன்மிகப் பேரொளி பெற்ற இராமன், தோணியில் ஏறிக் கொண்ட பிறகு, தன்னுடைய நலனை வேண்டி, அந்தணர்களுக்கும் அரசருக்கும் உரியதான மந்திரங்களை ஜபித்தார். எல்லையில்லாத வீரம் படைத்த மனக்களிப்புடன் இருந்த இலக்குவனும் சீதையும் அறநூல் முறைப்படி, (உடல் தூய்மைக்காக முதலில்) ஆசமனம் செய்துவிட்டு, பின்னர் அந்த மகாநதிக்கு (கங்கைக்கு) நமஸ்காரம் செய்தார்கள். சுமந்திரர், குகன், அவனுடைய படைவீரர்கள் ஆகிய எல்லோருக்கும் விடைகொடுத்து அனுப்பிவிட்டு, இராமன் படகில் சௌகரியமாக அமர்ந்து கொண்டு, படகைச் செலுத்துமாறு படகோட்டிகளுக்கு உத்தரவிட்டார். (78–80)

தொழிலில் கவனமுடைய அந்தப் படகோட்டிகளால் செலுத்தப்பட்ட அந்தத் தோணி, வேகமாகத் துடுப்பு போடப்பட்டதால் கங்கையின் ஓட்டத்தைக் கிழித்துக் கொண்டு சென்றது. கங்கையின் நடுப்பகுதியை அடைந்ததும், மாசற்றவளான வைதேகி, இரு கைகளையும் கூப்பிக் கொண்டு, கங்காதேவியிடம் பிரார்த்தித்துக் கொண்டாள்— (81,82)

''பேரறிவாளரான மாமன்னர் தசரதருடைய திருக்குமாரர், இவர். கங்கே! இவரை உன் அருளினால் சௌக்கியமாக அக்கரை சேர்ப்பிப்பாயாக. காட்டில் பதிநான்கு ஆண்டுக் காலம் முழுமையாகக் கழித்துவிட்டு, சகோதரனோடும் என்னோடும் மீண்டும் திரும்பிவரப் போகிறார். எல்லா மனோபீஷ்டங்களையும் நிறைவேற்றித் தரும் புண்ணியவதியான கங்கா தேவியே! நான் சௌக்கியமாகத் திரும்பி வரும்போது, மனமகிழ்ந்து உனக்குப் பூஜை செய்வேன். தேவி! கங்கே! நீ, மூன்று உலகங்களில் விளங்குபவள். இங்கிருந்து பிரும்மலோகத்தைப் பார்க்கிறாய்! (பிரும்மலோகத்திலிருந்து புறப்பட்டு இங்கே வந்திருக்கிறாய்.) இவ்வுலகில், கடலரசனின் பத்தினி என்று கொண்டாடப்படுகிறாய். (83–86)

மங்களம் அருளும் தேவி! ஆண்புலியான என் கணவர், எல்லா நலன்களும் கூடியவராகத் திரும்பி வந்து பட்டாபிஷேகம் செய்து கொண்டவுடன், நான் உன்னை நமஸ்கரித்துத் தோத்திரம் செய்வேன். உன் மனம் திருப்தி அடைய வேண்டி, லட்சம் பசுக்களையும் ஏராளமான ஆடைகளையும் சுவையான உணவுகளையும் அந்தணர்களுக்குத் தானமாகக் கொடுப்பேன். அயோத்திக்குத் திரும்பி வந்தவுடன் மிகவும் ஆர்வத்துடன் தேவர்களுக்கும் கிடைத்தற்கரிய பொருட்களையும், பல்வகை உணவுகளையும் சமர்ப்பித்து, உன்னைப் பூஜிப்பேன். (சுலோகத்தில், ஆயிரக்கணக்கான குடங்களில் கள், புலால் கலந்த அன்ன வகைகள் – என்று பொருள் கொள்ளத்தக்க சொற்கள் உள்ளன. ஆனால், சான்றோர்கள் இந்தப் பொருளைக் கொள்வதில்லை.) (87–89)

உன் கரைகளில் குடிகொண்டுள்ள தேவதைகள், தீர்த்த கட்டங்கள், தேவாலயங்கள் – அவை எல்லாவற்றையும் நான் பூஜிப்பேன். பாவங்களைப் போக்குபவளே! கங்கே! மகாபலம் பொருந்தியவரும் மாசற்றவருமான என் கணவர், தன் தம்பியோடும் என்னோடும் சேர்ந்து வனவாசத்தை முடித்துக் கொண்டு, அயோத்திக்குள் பிரவேசிக்க வேண்டும். (அவ்வாறு அருள்புரிக.)'' இவ்வாறாக, கணவரின் மனம் கோணாது நடக்கும் சீதாப்பிராட்டியார், கங்கையிடம் பிரார்த்தித்துக் கொண்ட பின், நதியின் வலது கரையை விரைவாகச் சென்றடைந்தார், இராமன். கரையை அடைந்ததும் எதிரிகளை மாய்க்கும் இராமன், தோணியிலிருந்து இறங்கி, அதை அனுப்பி வைத்தார். சகோதரனோடும் வைதேகியோடும் மேலே செல்லத் தொடங்கினார். (90–93)

அப்போது சுமித்திராநந்தனான லட்சுமணனிடம் பெருந்தோளரான இராமன் கூறினார்— ''மக்கள் நடமாட்டம் உள்ள இடமாக இருந்தாலும் சரி, மக்கள் இல்லாத இடமாக இருந்தாலும் சரி, பாதுகாவலில் நீ கவனமாக இருக்கவேண்டும். இதற்கு முன் நாம் பார்த்திராத ஜனசஞ்சாரம் இல்லாத காட்டில், நாம் நம்மைக் காப்பாற்றிக் கொள்வதில் விழிப்புடன் இருக்க வேண்டியது அவசியம். லட்சுமணா! நீ முன்னதாகச் செல்; சீதை, உன் பின்னால் வரட்டும். நான், உன்னையும் சீதையையும் பாதுகாத்துக் கொண்டு, பின்பக்கத்தில் வருகிறேன். ஆணேறு போன்றவனே! நாம் ஒருவருக்கொருவர் பாதுகாப்பு கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும். (94–96)

(நாம் காட்டிற்குள் காலடி வைத்ததிலிருந்து) இதுவரை சமாளிக்க வேண்டிய எதிர்பாராத எந்த ஒரு கஷ்டமும் நேரவில்லை. (ஆனால், இனி நமது நாட்கள் அவ்வளவு சுலபமாக இருக்காது என்று எண்ணுகிறேன்.) இனிமேல்தான் வனவாசத்தின் துன்பங்களை, சீதை அறியப் போகிறாள். ஏனென்றால், இப்போது மக்கள் நடமாட்டம் இல்லாத தோப்புத்துரவு, வீடுவாசல் இல்லாத மேடு–பள்ளங்கள் நிறைந்த காட்டிற்குள் புகப்போகிறாள்!'' இராமனுடைய மொழியைக் கேட்ட லட்சுமணன் முன்னே நடந்து போகத் தொடங்கினான். பின்னர், சீதையும் இராகவனும் முறையே சென்றார்கள். (97–99)

மகா பக்திமானான சுமந்திரர், இராமன் கங்கையின் அக்கரையை அடையும் வரையில் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் வெகுதூரம் சென்று கண்ணுக்குப் புலப்படாமற்போகவே, துக்கம் தாங்காமல் கண்ணீர் பெருக்கினார். லோகபாலர்களைப் போன்ற மகாபராக்கிரமம் கொண்ட, வரங்களை அருளும் தயாளுவான மகாத்மா இராமன், பேராற்றைக் கடந்து, வளம் மிக்கதும், தானியங்கள் நிரம்பியதும், மகிழ்ச்சியோடு இருக்கும் குடிமக்களைக் கொண்டதுமான 'வத்ஸ' (பிரயாகை) தேசத்தை அடைந்தார். (100,101)

அங்கே, அவ்விருவரும் (இராம–லட்சுமணர்கள்) ஆசிரமத்திலுள்ள முனிவர்களுக்குத் தொல்லை கொடுக்கும் காட்டுப் பன்றி, ரிச்யம், ப்ருஷதம், மகாருரு என்ற நான்கு வகையான பெருவிலங்குகளைக் கொன்று பயத்தை விலக்கினார்கள். காட்டில் கிடைக்கும் சில பண்டங்களை எடுத்துக் கொண்டு, பசியோடிருந்த அவ்விருவரும் பொழுது சாயும் வேளையில் தங்குவதற்காக, ஒரு பெரிய மரத்தினடியில் வந்து சேர்ந்தார்கள். (102)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
ஐம்பத்து இரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்து மூன்று

இராம–லட்சுமணர்களது விவாதம்

பிறரை மகிழ்ச்சியில் ஆழ்த்துபவர்களில் தலைசிறந்தவரான இராமன், அந்த மரத்தையடைந்து, மாலை நேர சந்தியாவந்தனம் செய்துவிட்டு, இலக்குவனைப் பார்த்துக் கூறினார்— ''இப்போது நாட்டிற்கு வெளியே சுமந்திரர் நம்முடன் இல்லாத முதலாவது இரவு வந்திருக்கிறது. இங்குள்ள அசௌகரியங்களை, நீ எண்ணிப் பார்க்கலாகாது. லட்சுமணா! இப்போது முதல், இரவு வேளைகளில் நாம் இருவரும் சோம்பலில்லாமல் விழிப்புடன் இருக்கவேண்டும். ஏனென்றால், சீதையைச் சௌக்கியமாகவும் பாதுகாப்பாகவும் வைத்துக் கொள்ளும் கடமை நமக்கு இருக்கிறது. லட்சுமணா! நாம் கொண்டு வந்திருக்கும் இலை–தளிர்களைப் படுக்கையாகப் பரப்பி, அதன் மேல் அமர்ந்து ஒருவாறாக இந்த இரவைக் கழித்துவிடுவோம்.'' (1–4)

மிக உயர்ந்த படுக்கையில் படுக்க வேண்டிய இராமன், தரையில் உட்கார்ந்து கொண்டு, இலக்குவனிடம் பின்வரும் நல்ல விஷயங்களை விளக்கிக் கூறினார்— (சுலோகம் ஆறிலிருந்து இருபத்து நான்கு வரை இராமன் கூறுவது, இலக்குவனின் மனநிலையைப் பரிசோதிப்பதற்காகவே. உண்மையில், அவைகள் அவருடைய சொந்த எண்ணம் அல்ல – என்பது உரைகாரர்கள் கருத்து.) ''லட்சுமணா! நிச்சயமாக மாமன்னர் மிகுந்த துக்கத்துடன் இப்போது தூங்கிக் கொண்டிருப்பார்; விருப்பம் நிறைவேறப் பெற்ற கைகேயி மிகவும் மகிழ்ச்சியுடன் இருப்பார். பரதன் வந்தவுடன் அரசு அவன் மூலம் கைகேயியின் வசப்பட்டுவிடும். எனவே, கைகேயிதேவி மாமன்னரின் உயிரைப் பறித்து விடுவாரோ, என்னவோ? (5–7)

காமம் மிகுதியாகப் பெற்ற அவர், ஆதரவு அற்றவராகிவிட்டார்; வயதும் ஆகிவிட்டது; நானும் அருகில் இல்லை. கைகேயியின் கட்டுப்பாட்டில் உள்ள அவர் என்ன செய்வார்? அரசருக்கு ஏற்பட்டுள்ள அறிவுத் தடுமாற்றத்தையும் துயரத்தையும் பார்க்கும்போது, அர்த்தம்–தருமம் ஆகிய இரண்டைக் காட்டிலும் 'காமமே வலியது' என்று எனக்குத் தோன்றுகிறது. தந்தையின் சொல்லைக் கேட்டு நடக்கிற என்னைப் போன்ற புதல்வனை, எந்த ஒரு தகப்பனாவது – அவர் விவேகமில்லாதவராக இருந்தாலும்கூட – ஒரு பெண்ணின் சொற்களைக் கேட்டுத் துரத்திவிடுவாரா? (8–10)

மகிழ்ச்சியோடிருக்கும் மக்களைக் கொண்ட கோசல நாட்டை கைகேயியின் புதல்வனான பரதன், மனைவியோடுகூட தான் ஒருவனாகவே, மன்னருக்கும் மேம்பட்டவனாக அனுபவிக்கப் போகிறானே? தந்தையாருக்கு வயது அதிகமாகிவிட்டது; நானோ காட்டிற்கு வந்துவிட்டேன். ஆக, அவனொருவனே ராஜ்யத்தின் எல்லாச் சுகங்களையும் சுவைக்கப் போகிறான். எவனொருவன் அர்த்தம், தருமம் என்ற இரண்டையும் துறந்து, காமத்தைப் பின்பற்றி நடக்கிறானோ, அவன் தசரத வேந்தனைப்போல விரைவில் பேராபத்தில் வீழ்கிறான். (11–13)

இனியவனே! தசரதரின் வாழ்க்கையை முடிவுறச் செய்வதற்கும், என்னை நாடு கடத்துவதற்கும், பரதனுக்கு ஆட்சியைப் பெற்றுத் தருவதற்குமாகவே, கைகேயி அந்த அரண்மனைக்குள் புகுந்தார் என்று எண்ணுகிறேன். பெருவாழ்வு பெற்றுவிட்ட களிப்பில் மயங்கி நிற்கும் கைகேயி, என்னைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தால் கோசலா தேவியாரையும், சுமித்திரா தேவியாரையும் இப்போது கஷ்டப்படுத்தாமலிருப்பாரா என்ன? (கஷ்டப்படுத்துவார் – என்றபடி.) (14,15)

என் காரணமாக, சுமித்திரா தேவி துன்பம் அனுபவிக்கக் கூடாது. எனவே, லட்சுமணா! நாளைக் காலையில் இங்கிருந்து அயோத்திக்குப் போய்விடு. சீதையோடுகூட தண்டகாரண்யத்திற்கு நான் தனியாகவே போகிறேன். அன்பு செலுத்துவார் யாருமில்லாத என் அன்னை கௌசல்யைக்கு தொண்டு செய்பவனாக. நீ இருப்பாய். கீழான காரியங்களைச் செய்யும் கைகேயி, என்னிடமுள்ள வெறுப்பினால் (என் அன்னைக்கு) அநியாயம் செய்வார். அப்படியானால் அறம் அறிந்தவனான பரதனிடம், என் தாயாரைக் காப்பாற்றும் பொறுப்பை ஒப்புவித்துவிடு. (16–18)

முன்பொரு பிறவியில், என் தாயார், சில பெண்களிடமிருந்து அவர்களுடைய புத்திரர்களைப் பிரித்திருக்கிறார். அதனால்தான், இப்போது (என் தாய், என்னைப் பிரிந்திருக்கும்) இந்த நிலை வந்திருக்கிறது. என்னுடைய தாயார், தனக்கு வந்த ஏராளமான இன்னல்களைத் தாங்கிக் கொண்டு, என்னை நீண்ட காலம் நன்றாகப் பராமரித்தார். இப்போது, நான் அவருக்குத் தொண்டு செய்ய வேண்டிய கனிந்த காலம். ஆனால், எனக்கு என்ன கஷ்டம், பார்! (காட்டிற்கு வந்துவிட்டேனே?) லட்சுமணா! நான், என் அன்னைக்கு மகனாகப் பிறந்து எல்லையில்லாத துன்பத்தைக் கொடுக்கிறேன், பார். சௌபாக்கியவதியான எந்த ஒரு நாரீமணியும் என்னைப் போன்ற ஒரு புத்திரனைப் பெற வேண்டாம். (19–21)

லட்சுமணா! என் அன்னை வளர்க்கும் ஸாரிகா, அவருக்கு என்னைக் காட்டிலும் அதிக ஆனந்தத்தைக் கொடுக்கிறது என்று நினைக்கிறேன். 'கிளியே! உன் விரோதியின் காலைக் கொத்து' என்று அது சொல்வதை, என் தாயார் கேட்டுக் கொண்டிருப்பாரே? ('ஸாரிகா' என்பது கிளி போன்ற பறவை. நாம் சொல்லிக் கொடுத்ததைத் திரும்பவும் அழகாகச் சொல்லும் திறன் கொண்டது. கிளியின் விரோதி – பூனை என்றாலும் சரி – அருகில் வந்தால், 'அதன் காலைக் கொத்திவிடு' என்று குரல் கொடுக்கும். என் அன்னை, அந்த சொற்களைக் கேட்டு மகிழ்வார். அதனால், அதனிடம் அதிகப் பிரீதி. இப்போது, என் அன்னையால் என் பேச்சைக் கேட்க முடியாதே?) (22)

எதிரிகளை அடக்குபவனே! என்னைப் பற்றிய கவலையில் ஆழ்ந்து கிடப்பவரும், பாக்கியம் குறைந்தவருமான என் அன்னை, கொஞ்சம்கூட அவருக்குத் தொண்டு செய்யாத என்னைப்

புத்திரனாக அடைந்ததால் என்ன லாபம்? பாக்கியம் அற்றுப் போன என் அன்னை, நான் அருகில் இல்லாததால் மிகவும் துக்கத்தினால் தாக்கப்பட்டு, சோகக் கடலில் மூழ்கி, படுத்துக் கிடப்பார். லட்சுமணா! எனக்குக் கோபம் வந்தால், நான் ஒருவனாகவே பாணங்களைப் பெய்து, அயோத்தியை, ஏன், இந்தப் பூமண்டலத்தையே என் வசமாக்கிக் கொள்ள முடியும்.

ஆனால், உரிய காரணம் இல்லாமல் பராக்கிரமத்தைப் பிரயோகிப்பது தருமம் ஆகாது. (தந்தையின் வாக்கைக் காப்பாற்றுவதற்காகத்தானே, நான் காட்டிற்கு வந்தேன்? பின், அயோத்தியின் மேல் அம்புமாரி பொழிந்து கைப்பற்றுவது என்பது எப்படி அறமாகும்?) குற்றமற்றவனே! இவ்வுலகில் அதருமத்தைச் செய்ய பயப்படவேண்டும். அச்சமில்லாமல் அறம் தவறி நடந்தால், மேலுலகில் துன்பம் அனுபவிக்க நேரிடும். அதனால்தான் லட்சுமணா! நான், இப்போது எனக்கு பட்டாபிஷேகம் செய்வித்துக் கொள்ளவில்லை.'' (23–26)

இவ்வாறு, இதற்கு மேலும் பலவிதமாகப் பேசி ஓய்ந்து, மனித நடமாட்டமில்லாத அந்தக் காட்டில், விசனத்தோடு புலம்பி, கண்களில் நீர் வழிய, இராமன் அந்த இரவில் மௌனமாக உட்கார்ந்திருந்தார். புலம்பலை நிறுத்தியபின் சுவாலை தணிந்த நெருப்பைப் போலவும், சப்தமில்லாத கடல் போன்றும் விளங்கிய இராமனுக்கு ஆறுதல் கூறினான், இலக்குவன். (27,28)

''போர் வீரர்களில் சிறந்தவரே! மன்னரே! தாங்கள் வெளியே புறப்பட்டு வந்துவிட்டதால், சந்திரன் மறைந்துவிட்ட இரவைப்போல, அயோத்தியா பட்டணம் ஒளி இல்லாமல் போயிருக்கும் என்பது நிச்சயம். புருஷோத்தமரே! இப்போது இப்படித் தாங்கள் மனம் தளர்ந்து வருந்துவது தங்களுக்கு ஏற்றதல்ல. (தாங்கள் துன்பத்துடன் மனோபலம் இழந்து பேசுவதால்) சீதா பிராட்டியையும் என்னையும் மனவருத்தம் அடையச் செய்கிறீர்கள். இராகவா! தாங்கள் இல்லாமல் சீதையோ, நானோ ஒரு முகூர்த்த காலம்கூட உயிரோடு இருக்க மாட்டோம் – தண்ணீருக்கு வெளியே எடுத்துப் போடப்பட்ட மீனைப் போல, சிறிது நேரம் துடித்துவிட்டு மடிந்து போவோம். எதிரிகளை வாட்டுபவரே! தாங்கள் இல்லாமல் நான் தந்தையாரையோ, பரதனையோ, பெற்றெடுத்த தாயாரையோ, ஏன், சுவர்க்கத்தையோகூடப் பார்க்க விரும்பவில்லை!'' (29–32)

பின்னர், அருகிலிருந்த அரசமரத்தினடியில் இலை–தளிர்களால் அமைக்கப்பட்டிருந்த படுக்கையில் உறங்கும் சீதையைப் பார்த்து, அறம் தவறாதவர்களான அவ்விருவரும் அங்கே சென்று வசதியாக உட்கார்ந்து கொண்டு பொழுதைக் கழித்தார்கள். அவர் வனவாசத்திற்கு ஆதரவாக, (இங்கே வந்து மாட்டிக்கொண்டு விட்டோமே? என்று வருந்தாமல்) இலக்குவன் கூறிய சிறந்த கருத்துக்கள் அடங்கிய சொற்களைக் கேட்டதும், எதிரிகளை அழிக்கும் இராமன், தனக்கு விதிக்கப்பட்ட வனவாசம் என்ற நல்லறத்தை லட்சுமணனும் முழுமையாக நிறைவேற்றுவதற்கு உறுதிபூண்டு அனுமதி அளித்தார். (33,34)

அப்போது, மக்கள் நடமாட்டமில்லாத அந்தக் காட்டில் மகாபலம் பொருந்தியவர்களும், ரகு வம்சத்தை வளர்ப்பவர்களுமான அவ்விருவரும் மலையுச்சியில் சுற்றித் திரியும் இரு சிங்கங்களைப் போல அச்சத்தையோ, மனக்குழப்பத்தையோ அடையாமலிருந்தார்கள். (35)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
ஐம்பத்து மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்து நான்கு

பரத்வாஜரின் ஆசிரமம் சென்றார்கள்!

அந்தப் பெரிய மரத்தின் அடியில், துன்பமில்லாத அந்த இரவைக் கழித்துவிட்டு, சூரியன் உதயமானவுடன் அவ்விடத்திலிருந்து புறப்பட்டு முன்னே நடந்து சென்றார்கள். பாகீரதியான

கங்கையுடன் யமுனை நதி சங்கமிக்கும் இடத்தை நோக்கி, படர்ந்து அடர்ந்திருந்த பெருங்காட்டின் வழியே அவர்கள் சென்றார்கள். போகும் வழியில் புகழ் படைத்த அவர்கள் மூவரும், இதற்குமுன் பார்த்திராத, பலவிதமாக அமைந்திருந்த நிலப்பகுதிகளையும், மனங்கவரும் வனப்பகுதிகளையும் ஆங்காங்கே பார்த்துக் கொண்டே சென்றார்கள். இவ்வாறாக, பூக்கள் மலர்ந்து விளங்கிய பலவகையான மரங்களைப் பார்த்து ரசித்துக் கொண்டே சென்றார்கள். பகல் பொழுது முடிந்தவுடன் லட்சுமணனைப் பார்த்து இராமன் சொன்னார்— (1–4)

''சௌமித்திரனே! அக்னி பகவானுடைய கொடியைப் போல் (வெகு உயரத்திற்குப் பரவும்) சுகந்தமான புகைக் கூட்டம் பிரயாகையைச் சுற்றிலும் காணப்படுவதைப் பார். முனிவர் (பரத்வாஜர்) அருகில்தான் இருக்கிறார் என்று எண்ணுகிறேன். கங்கையும் யமுனையும் சங்கமிக்கும் இடத்திற்கு வந்துவிட்டோம் என்பது நிச்சயம். ஏனென்றால், வேகமான நீரோட்டமுடைய இரு நதிகளின் பெருக்கு ஒன்றோடொன்று மோதுவதால் ஏற்படும் ஓசை கேட்கிறது. காட்டில் கிடைக்கும் கனி–கிழங்குகளைப் புசித்து வாழும் மக்கள், (விறகுக்காக) வெட்டிய மரங்கள் காணப்படுகின்றன. பரத்வாஜருடைய ஆசிரம வளாகத்தில் பலவகையான (வெட்டப்படாத) மரங்கள் பசுமையாகக் காணப்படுகின்றன.'' (5–7)

வில்வீரர்களான அவ்விருவரும், இவ்வாறெல்லாம் களைப்புத் தெரியாதபடி பேசிக் கொண்டே நடந்து சென்று, சூரியன் மறையும் வேளையில், கங்கை–யமுனை கூடுமிடத்தில் முனிவரின் இருப்பிடத்தை அடைந்தார்கள். இராமன் ஆசிரமப் பிரதேசத்தின் எல்லையை அடைந்ததும், (அவருடைய தோற்றத்தையும் கையில் வில்லையும் பார்த்த) அங்கிருந்த பறவை–விலங்குகள் அஞ்சி நடுங்கின. அவர் அந்த வழியில் சிறிது நேரம் நடந்து சென்று பரத்வாஜரை அடைந்தார். ஆசிரமத்தின் அருகில் சென்றதும் முனிவரைத் தரிசிக்க விரும்பியவர்களும், சீதையினால் பின்தொடரப்பட்டவர்களுமான அவ்விரு வீரர்கள் சற்றுத் தொலைவிலேயே நின்றுவிட்டார்கள். (8–10)

(அவர்கள் வந்திருப்பதை முனிவரிடம் சீடர்கள் கூறி, அனுமதியைப் பெற்று வந்து தெரிவித்தபின்) சீடர்குழாத்தினால் சூழப்பட்டவரும், கடுமையான விரதங்களை அனுஷ்டிப்பவரும், பரம்பொருளையே சிந்தித்துக் கொண்டிருப்பவரும், தீவிரமான தவத்தின் பயனாக மூன்று காலங்களையும் அறியும் வல்லமை பெற்றவரும், அக்னிஹோத்திரம் செய்து முடித்தவரும், மகாபாக்கியசாலியும், ஆத்மஞானம் பெற்றவருமான முனிவரைத் தரிசித்தவுடனேயே, கைகளைக் கூப்பிக் கொண்டு சீதையோடும் இலக்குவனோடும் இராமன், அவர் பாதங்களில் பணிந்து வணங்கினார். (11,12)

''பெருந்தகையீர்! நாங்கள் தசரதரின் குமாரர்கள்; இராம–லட்சுமணர்கள்'' என்று இலக்குவனின் தமையனார், அவருக்குத் தங்களைப் பற்றித் தெரிவித்துக் கொண்டார். ''குற்றமற்ற இவள் ஜனகருடைய புத்திரி; என் பத்தினி; மிகவும் இனிய இயல்பினள். மக்கள் நடமாட்டமில்லாத, தவம் செய்வதற்குரிய இடமான காட்டிற்கு, என்னைத் தொடர்ந்து வந்திருக்கிறாள். சுமித்திரா தேவியின் மகனும், என் அன்பிற்குரிய தம்பியுமான இவன், காட்டிற்கு வருவதில் உறுதியாக இருந்து, தந்தையினால் நாடு கடத்தப்பட்ட என்னுடன் வந்துவிட்டான். பெருந்தகையீர்! தந்தையின் உத்தரவுப்படி, தவம் செய்யத்தகுந்த ஒரு வனப்பிரதேசத்திற்குச் செல்லப் போகிறோம். அங்கு கனி–கிழங்குகளை உணவாகக் கொண்டு அறவழியிலேயே நடப்போம்.'' (13–16)

பேரறிவாளியான அந்த அரசகுமாரனுடைய சொற்களைக் கேட்ட பின்னர், தருமாத்மாவான முனிவர், விருந்தினர்களை வரவேற்கும் முறைப்படி அர்க்ய–பாத்யம் அளித்து உபசரித்தார். உக்கிரமான தவங்கள் செய்து முடித்த பரத்வாஜர், அவர்களுக்குப் பலவிதமான சுவைகளோடு கூடிய உணவு வகைகளையும், காட்டில் கிடைக்கக்கூடிய கிழங்கு–பழங்களையும் கொடுத்தார். அவர்கள் தங்குவதற்கான இடத்தையும் ஏற்பாடு செய்தார். மாமுனிவரைச் சுற்றி, எல்லாப்

பக்கங்களிலும் மான்கள், பறவைகள், முனிவர்கள் சூழ்ந்திருக்க, விருந்தினராக வந்திருக்கும் இராமனுக்கு முறைப்படி நல்வரவு கூறிப் போற்றினார். (17–19)

அந்த உபசாரங்களை ஏற்று ஆசனத்தில் அமர்ந்திருக்கும் இராகவனைப் பார்த்து, தருமத்தோடு கூடிய பின்வரும் வார்த்தைகளைக் கூறினார்— ''காகுத்தனே! நான் வெகுகாலமாக, உன்னை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்! இப்போதுதான் நேரில் பார்க்கிறேன். நியாயமான காரணமில்லாமல் நீ இவ்வாறு நாடு கடத்தப்பட்டாய் – என்பதையும் நான் கேட்டறிந்தேன். இரண்டு மகாநதிகளின் சங்கமப் பிரதேசமான இவ்விடம், ஒதுக்குப்புறமாக அமைந்துள்ளது (சந்தடி, சத்தம் கேட்காதது); புனிதமானது; கண்கவர் வனப்புடன் விளங்குவது. நீ, இங்கே சௌக்கியமாக இருக்கலாம்.'' (20–22)

இவ்வாறு, பரத்வாஜர் கூறியதைக் கேட்டு அனைத்து உயிர்களின் நலனில் கவனம் உடைய இராமன், மங்களமான சொற்களைக் கொண்டு பதில் உரைத்தார்— ''பெருந்தகையீர்! நகரத்திலும் கிராமத்திலும் வசிக்கும் ஜனங்கள், நான் இந்த ஆசிரமத்தில் எளிதில் பார்க்கக்கூடியவனாக இருப்பதை அறிந்து கொண்டு விடுவார்கள் என எண்ணுகிறேன். என்னையும் வைதேகியையும் பார்க்க விரும்பும் மக்கள் சுலபமாக வந்து போகத் தொடங்குவார்கள். (மக்கள் கூட்டம் வந்தால் தங்கள் தவத்திற்கு இடையூறாக இருக்கும்.) இந்தக் காரணத்தால் இங்கே தங்குவது சரி என்று நான் நினைக்கவில்லை. பெருந்தகையீர்! சுக–சௌக்கியங்களை அனுபவிக்க வேண்டிய ஜனககுமாரி சீதாப்பிராட்டியின் மனம் மகிழும்படியான ஏகாந்தமான ஓர் உத்தமப் பிரதேசத்தைச் சிந்தித்துக் கூறுங்கள்.'' (23–26)

மாமுனிவர் பரத்வாஜர் பொருள் பொதிந்த இந்தச் சொற்களைக் கேட்டு, இராமனுடைய நோக்கம் நிறைவேறுவதற்கு உகந்த பதிலைக் கூறினார்— ''குழந்தாய்! இங்கிருந்து பத்து குரோச தூரத்தில் மகரிஷிகள் வாழ்ந்து கொண்டிருப்பதும் புனிதமானதும் எங்கு நோக்கிலும் மனங்கவர் வனப்புடன் விளங்குவதுமான ஒரு மலையில் நீ வாசம் செய்யலாம். கோலாங்கூலம் என்ற இனத்தைச் சேர்ந்த குரங்குகள், வானரங்கள், கரடிகள் அங்கே வசிக்கின்றன; (அந்த மலை) 'கந்தமாதனம்' என்ற தெய்விகக் குன்றுக்கு நிகரானது; 'சித்திரகூடம்' என்று பெயர் பெற்றது. (27–29)

ஒரு மனிதன் சித்திரகூடத்தின் சிகரங்களைப் பார்த்துவிட்டால் போதும்! அதுமுதல் ஏராளமான நற்பேறுகளை அடைகிறான்; அவனுடைய மனம் பாவத்தின் பக்கம் செல்வதில்லை. அந்த இடத்தில் நீண்ட நெடுங்காலம் தவமியற்றிய அநேக ரிஷிகள் தவத்தின் பயனாக, இந்த உடலுடனேயே வானுலகம் சென்றிருக்கிறார்கள். இடையூறில்லாமல் நீ வாழ்வதற்குத் தனிமையான அந்த இடம் ஏற்றது என்று நான் கருதுகிறேன். அல்லது என்னுடன் இங்கேயே உன் வனவாசத்தைக் கழிக்கலாம்.'' (30–32)

அறம் அறிந்தவரான பரத்வாஜர், மனைவியோடும் சகோதரனோடும் வந்திருக்கும் அன்பிற்குரிய விருந்தினர் இராமனை, தான் விரும்பியவாறெல்லாம் கனிவுடன் உபசரித்தார். பிரயாகையில் மாமுனிவரின் அருகில் அமர்ந்து பல்சுவை விஷயங்களைப் பேசிக் கொண்டிருந்தபோதே புண்ணியமான அந்த இரவுக் காலம் கழிந்து போயிற்று. பிரயாசைப்படாமல் மென்மையாக இருக்கவேண்டிய இராமன், வழிநடந்த களைப்பால் மனத்திற்கினிய பரத்வாஜ ஆசிரமத்திலேயே சீதையோடும் இலக்குவனோடும் அந்த இரவைச் சுகமாகக் கழித்தார். (33–35)

இரவு கழிந்து பொழுது விடிந்ததும் பரத்வாஜரிடம் சென்றார். ஆன்ம ஒளியால் பிரகாசித்துக் கொண்டிருக்கும் முனிவரிடம் புலிநிகர் இராமன் கூறினார்— ''பெருந்தகையீர்! சத்திய நெறியாளரே! தங்கள் ஆசிரமத்தில் நிம்மதியாக இரவைக் கழித்துவிட்டோம். தாங்கள், நாங்கள் விடைபெற்றுச் செல்ல அனுமதிக்க வேண்டும்.'' இருள் மறைந்து வெளிச்சம் வந்ததும் பரத்வாஜர் சொன்னார்— ''தேன், கிழங்குகள், பழங்கள் நிறைந்து விளங்கும் சித்திரகூடம் செல்வாய். பேராற்றலுடையவனே! இராமா! அது நீ வசிப்பதற்கு ஏற்ற இடம் என்று எனக்குத்

தோன்றுகிறது. பலவகையான மரச்சோலைகள் நிறைந்தது; கின்னரர்களும் உரகர்களும் வந்து தங்குவது; மயில்களின் அகவலோசை ஒலிப்பது; சிறந்த யானைகள் அங்கே வாழ்கின்றன. நீ, இவ்விதச் சிறப்புகள் கொண்ட சித்திரகூட மலைக்குப் போ. (36–40)

அது புனிதமான இடம்; கண்கவர் வனப்புடையது; ஏராளமான கிழங்குகள் மற்றும் பழங்கள் உடையது. அங்கு எல்லா இடங்களிலும் காட்டின் உட்பகுதியிலும், யானைக் கூட்டங்களும் மான் கூட்டங்களும் சஞ்சரிக்கின்றன. இராகவா! அவைகளையெல்லாம் பார்த்து மகிழப் போகிறாய். (மந்தாகினி) நதி, சுனைகள், குன்றுச் சிகரங்கள், மலைக்குகைகள், பள்ளத்தாக்குகள், நீர்வீழ்ச்சிகள் ஆகிய இடங்கள், சீதையோடு நீ உலாவும்போது, உன் மனத்திற்கு ஆனந்தத்தைக் கொடுக்கும். உற்சாகங்கொண்ட குருவி–குயில்களின் இன்னொலிகள் சூழ்ந்ததும், மங்களத்தைக் கொடுப்பதும், உல்லாசமாகத் திரியும் மான்களாலும், அநேக யானைகளாலும், மனோகரமாக விளங்குவதுமான அந்த மலைக்குச் சென்று, ஆசிரமம் ஏற்படுத்திக் கொண்டு வசிப்பாயாக.'' (41–43)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
ஐம்பத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்தைந்து

யமுனையைக் கடந்து செல்லுதல்

எதிரிகளை மாய்ப்பவர்களான அவ்விரு அரசகுமாரர்களும் இரவு முழுவதும் அங்கு தங்கிவிட்டு, மாமுனிவரை வணங்கி (அனுமதி பெற்று), பின் அந்தச் சித்திரகூட மலையை நோக்கிப் பயணப்பட்டார்கள். அந்த மாமுனிவர், பயண காலத்தில் நன்மையைத் தரும் மந்திரங்களை ஜபித்து, அவர்களுக்கு அருள்புரிந்தார். புறப்பட்டுவிட்ட அவர்களை, ஒரு தகப்பன் வெளியூர் போகும் தன் மைந்தனைப் பார்ப்பது போலக் கனிவுடன் பார்த்துக் கொண்டே பின்தொடர்ந்து சென்றார். நடைவழியில், மிக்க உள்ளொளி படைத்த பரத்வாஜ மாமுனிவர், சத்தியத்தையே பராக்கிரமமாகக் கொண்ட இராமனைப் பார்த்து சில வார்த்தைகள் சொல்லத் தொடங்கினார்— (1–3)

"ஆணேறுகளே! கங்கை–யமுனை சங்கமத்தை அடைந்து, மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ஓடும் காளிந்தி(யமுனை)யை ஒட்டிச் செல்லுங்கள். ரகுகுல திலகங்களே! வேகமாகப் பாய்ந்தோடும் யமுனையை அடைந்து, பலர் நடந்து பழகிய பாதையில் சென்று, தோணித் துறையைக் கண்டு, அவ்விடத்தில் நீங்கள் ஒரு மிதவை தயாரித்து, யமுனையைக் கடந்து செல்லுங்கள். நதியைக் கடந்து மேலே சென்றால் பச்சைப்பசேலென்ற இலைகளை உடையதும், வேறு பல மரங்களால் நாற்புறமும் சூழப்பட்டதும், 'சியாம' என்று பெயர் பெற்றதும், சித்த புருஷர்கள் வந்து தங்குவதுமான மாபெரும் ஆலமரத்தைக் காண்பீர்கள். சீதை, அந்த மரத்திற்குக் கைகூப்பி அஞ்சலி செய்து, மங்களமான ஆசீர்வாதங்களைப் பிரார்த்திக்க வேண்டும். (4–6)

அந்த மரத்தினிடம் போய்ச் சேர்ந்ததும், (உனக்கு விருப்பம் இருந்தால்) அங்கே தங்கிவிட்டுச் செல்லலாம். அல்லது தொடர்ந்து மேலே போய்க் கொண்டிருக்கலாம். அவ்விடத்திலிருந்து ஒரு குரோச தூரம் சென்றதும் 'நீலம்' என்ற காட்டைக் காண்பீர்கள். (யானைகள் மிகவும் விரும்பும்) 'சல்லகீ' என்ற மரங்களும், இலந்தை மரங்களும், யமுனைக் கரையில் செழிப்பாக வளரும் மூங்கில் காடுகளும் சேர்ந்து அழகாக விளங்கும் அந்தப் பாதை வழியாக, நான் பல தடவைகள் சித்திரகூடத்திற்குப் போயிருக்கிறேன். கண்கவரும் அந்தப் பாதை மிருதுவாக இருக்கும்; காட்டுத் தீ அங்கே உண்டாவதில்லை.'' இவ்வாறு செல்ல வேண்டிய மார்க்கத்தை விளக்கினார், மாமுனிவர். (7–9)

'அவ்வாறே செய்கிறேன்' என்று பதில் கூறிய இராமன், அவர் திருவடிகளில் விழுந்து வணங்கி, 'தாங்கள் திரும்பிச் செல்லலாம்' என்று கூறினார். அவர் திரும்பிச் சென்றதும், இராமன் லட்சுமணனிடம் சொன்னார்— ''லட்சுமணா! முனிவருக்கு நம்மிடம் எவ்வளவு கருணை பார்! நாம் மிகவும் கொடுத்து வைத்தவர்கள்!'' இவ்வாறு பேசிக் கொண்டே சாமர்த்தியசாலிகளான அவ்விருவரும் சீதையை முன்னே போகச் செய்து யமுனையை அடைந்தார்கள். மிக வேகமான நீரோட்டத்தைக் கொண்ட யமுனையை அடைந்ததும், அதைக் கடந்து செல்ல விரும்பிய அவர்கள் சிறிது கவலை அடைந்தார்கள். (10–12)

அவ்விருவரும் மரக்கட்டைகளைக் கொண்டு, ஒரு பெரிய மிதவையைச் செய்தார்கள். காய்ந்த மூங்கில்களைப் பரப்பினார்கள்; வெட்டிவேரைப் பரப்பினார்கள். மகாபலம் பொருந்திய லட்சுமணன், அதன்மேல் பிரப்பங்குச்சிகளையும், நாவல் மரக்கிளைகளையும் ஒடித்துப் போட்டு, சீதை சுகமாக அமரும் வகையில் அமைத்துக் கொடுத்தான். அவ்விடத்தில், திருமகள் போல் எண்ணிப் பார்க்க முடியாத பெருமைகள் கொண்ட அன்பு மனைவியும், சற்றே நாணி நின்றவளுமான அவளைத் தெப்பத்தில் ஏற்றிவிட்டார் (இராமன்). சீதையின் பக்கத்திலேயே அவளுடைய உடை–அணிகலன்களையும், தெப்பத்தில் மண்வெட்டி, கூடை மற்றும் ஆயுதங்களையும் வைத்தார். (13–16)

முதலில், தெப்பத்தை (ஆடி அசைந்து நகராமல்) பிடித்துக் கொண்டு பிராட்டியை ஏற்றிவிட்டார்கள். பின்னர், மனத்திருப்தியுடன் தசரத குமாரர்களான அவ்விருவரும் தெப்பத்தைச் செலுத்துவதில் முனைந்தார்கள். யமுனைப் பிரவாகத்தின் நடுப்பகுதியை அடைந்ததும், சீதாதேவி யமுனையைப் பிரார்த்தித்துக் கொண்டாள்— ''தேவி! வாழ்க! யமுனே! உன்னை (தெப்பத்தின் மூலம்) கடந்து செல்கிறேன். (நீர்ச்சுழலில் சிக்காமல் அக்கரை போய்ச் சேர வேண்டும்.) என்னுடைய கணவரின் வனவாசப் பிரதிக்ஞை முழுமையாக நிறைவேற வேண்டும். இக்ஷ்வாகு பரம்பரையினரால் ஆளப்பட்டு வரும் நகரத்திற்கு, என் கணவர் சௌக்கியமாகத் திரும்பி வந்த பிறகு, ஆயிரக்கணக்கான பசுக்களை தானம் செய்தும், தேவர்களுக்கும்கூட கிடைத்தற்கரிய பொருள்களைக் கொண்டும் உன்னைப் பூஜிக்கிறேன்.'' (17–19)

இவ்வாறு, பெண்மணியான சீதை, கூப்பியக் கரங்களுடன் யமுனையைப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கும் போதே, யமுனையின் தென்கரைக்கு வந்து சேர்ந்தார்கள். வேகமான நீரோட்டத்தை உடையதும், வரிசை வரிசையாக அலைகள் வீசுவதும், கரையோரங்களில் ஏராளமான மரங்களை உடையதுமான அந்த சூரிய புத்திரியாகிய யமுனையைத் தெப்பத்தின் மூலம் கடந்தார்கள். ஆற்றைக் கடந்து வந்துவிட்ட அவர்கள், தெப்பத்தை அங்கேயே விட்டுவிட்டு, யமுனைப் பிரதேச காடுகளின் வழியே நடந்து, பசுமையான இலைகளைக் கொண்டதும், குளிர்ச்சியாக இருந்ததுமான 'சியாமம்' என்ற ஆலமரத்தை அடைந்தார்கள். (20–22)

ஆலமரத்தின் அருகே சென்றதும் சீதாப்பிராட்டியார், ''தெய்விக மரமே! உனக்கு நமஸ்காரம். என் கணவரின் பிரதிக்ஞை நிறைவேற வேண்டும். கோசலா தேவியையும், புகழுக்குரிய சுமித்திரையையும் நான் கண்ணால் காண்பேனாக'' என்று கைகூப்பிக் கொண்டு, அந்தப் புனித மரத்தை வலம் வந்தாள். அப்போது, தன் மனத்திற்குகந்தபடி நடப்பவளும் மாசற்றவளுமான சீதை, ஆலமரத்தைப் பிரார்த்தித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து, இராமன் லட்சுமணனிடம் சொன்னார்— (23–25)

''பரதனின் தம்பியே! புருஷோத்தமனே! சீதையை அழைத்துக் கொண்டு, நீ முன்னே நடப்பாய். நான் ஆயுதபாணியாகப் பின்னால் வருவேன். ஜனககுமாரியான சீதை எந்தப் பழத்தை, எந்தப் புஷ்பத்தை விரும்புகிறாளோ, எந்த விஷயத்தில் இவள் மனம் களிப்படையுமோ, அதனை அப்போதே கொண்டு வந்து கொடுக்க வேண்டும். நடந்து கொண்டிருக்கும் அவர்கள் இருவருக்கும் மத்தியில் சென்று கொண்டிருந்த சீதை, இரு ஆண்யானைகளுக்கிடையில் செல்லும் ஒரு பெண்யானை போல் இருந்தாள். (26–28)

அச்சம் மிகுந்த மடந்தையான சீதை, முன்பு பார்த்திராத மரம், புதர், மலர்கள் நிறைந்த கொடிகளைக் கண்டதும், இராமனிடம் அதைப் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொண்டாள். சீதை கேட்டுக் கொண்டதற்கிணங்க, பலவகையான அழகிய மலர்களைக் கொண்ட மரக்கிளைகளைக் கொண்டு வந்து கொடுத்தார். விசித்திரமான மணல் வகைகளைக் கொண்டதும், கருமையாக விளங்குவதும், அன்னம்–ஸாரஸம் போன்ற பட்சிகளின் ஒலிகள் நிறைந்ததுமான யமுனையைப் பார்த்து, ஜனககுமாரி மனம் களித்தாள். (29–31)

சகோதரர்களான இராம–லட்சுமணர்கள், ஒரு கோச தூரம் நடந்து, எதிரில் வந்த, முனிவர்களுக்கு இன்னல் விளைவிக்கும் பல விலங்குகளைக் கொன்று, (தங்குவதற்கு உகந்த இடம் தேடி,) யமுனைக் கரையிலுள்ள காட்டில் சுற்றி அலைந்தார்கள். கம்பீரமான தோற்றமுடைய அவர்கள், மயில் கூட்டங்களின் அகவை ஒலியுடையதும், குரங்குகளும் யானைகளும் சுற்றி வருவதுமான அவ்வழகிய வனத்தில், யமுனையின் கரையை ஒட்டினாற்போலவே, சமதளமான ஓர் இடத்தில் (இரவில்) தங்குவதற்காக வந்து சேர்ந்தார்கள். (32,33)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
ஐம்பத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்தாறு

சித்திரகூட வாசம்

பின்னர், இரவு கழிந்ததும் இராமன் துயிலெழுந்து, உறங்கிக் கொண்டிருந்த இலக்குவனை மெல்லக் கண்விழிக்கச் செய்தார். 'லட்சுமணா! காட்டு ஜந்துக்களின் செவிக்கினிய இரைச்சல்களைக் கேள். வெற்றிவீரனே! நாம் இங்கிருந்து புறப்படுவதற்கான காலம் வந்துவிட்டது. எனவே, நாம் புறப்படுவோம். சரியான நேரத்தில் லட்சுமணன் சகோதரரால் எழுப்பப்பட்டான். உடனே தூக்கம், சோம்பல், வழி நடந்த களைப்பு எல்லாவற்றையும் முற்றிலுமாக விட்டான், அவன். பிறகு, அவர்கள் எல்லோரும் எழுந்து சென்று, ஆற்றினுடைய தெள்ளிய நீரில் நீராடி, (சந்தியாவந்தனங்களை நிறைவேற்றியபின்) முனிவரால் காட்டப்பட்ட வழியில், சித்திரகூடத்தை நோக்கிச் செல்லத் தொடங்கினார்கள். (1–4)

உரிய நேரத்தில் லட்சுமணனுடன் புறப்பட்ட இராமன், தாமரைக் கண்ணாளாகிய சீதையிடம் பின்வருமாறு சொன்னார்— 'வைதேகி! பனிக்காலம் முடிந்து வசந்த ருது ஆரம்பித்திருக்கும் இத்தருணத்தில் எல்லா மரங்களும் மலர்களோடு விளங்குவதைப் பார்! பலாச மரங்கள், தம் புஷ்பங்களாலேயே மாலை அணிவிக்கப்பட்டதைப் போலும், கொழுந்துவிட்டெரிவது போலும் காணப்படுவதைப் பார்! வானரங்கள் விரும்பி உண்ணும் சேங்கொட்டை மரங்களையும், வில்வ மரங்களையும் பார். பழங்கள்–மலர்களோடு கூடிய (பலவகை) மரங்களும் இருக்கின்றன. இங்கே, நாம் வாழ்க்கையைக் கழிக்க முடியும் என்று நம்புகிறேன். (5–7)

லட்சுமணா! தேனீக்களால் சேகரிக்கப்பட்டு இரண்டு மரக்கால் அளவுக்கு மரங்களிலும் குன்றுகளிலும் தொங்கிக் கொண்டிருக்கும் தேன்கூடுகளைப் பார்! மலர்கள் கொட்டிக் கிடக்கும், கண்கவர் வனப்புக் கொண்ட இந்தப் பிரதேசத்தில், நச்சுக் குருவி குரல் கொடுப்பதைக் கேள். அதற்குப் பதில் கூறுவது போல மயில் அகவுகிறது. யானைக் கூட்டங்கள் வசிப்பதும், பறவைக் கூட்டங்களின் ஒலி நிறைந்ததும், உயரமான முகடுகளை உடையதுமான இந்தச் சித்திரகூடத்தைப் பார். தம்பி! புனிதமான சித்திரகூட மலையில் உள்ள காட்டில் அழகான, சமதளமான, அநேக மரங்கள் சூழ்ந்த ஓர் இடத்தில், நாம் மகிழ்ச்சியாக வாழ்வோம்.'' (8–11)

சீதையுடன் காலால் நடந்து சென்ற அவ்விருவரும் மனம் கவர்வதும் கண்கவர்வதுமான சித்திரகூடத்தின் மலைப்பகுதியை அடைந்தார்கள். பல்வகைப் பறவைக் கூட்டங்கள் நிறைந்ததும், போதுமான அளவு கிழங்கு–பழங்கள் கிடைப்பதும், தெள்ளிய நீர் வசதி உள்ளதுமான அவ்வழகிய மலையை அடைந்ததும், (இராமன் கூறினார்—) ''தம்பி! பலவகையான மரங்கள்–கொடிகள் நிறைந்ததும், ஏராளமான கிழங்குகள்–பழங்கள் உடையதும், உள்ளத்தைக் கொள்ளை கொள்வதுமான இந்த மலை, நாம் வசிப்பதற்கு ஏற்றது என்று எனக்குத் தோன்றுகிறது. பெருந்தகையாளர்களான முனிவர்கள், இந்த மலையின் உச்சிகளில் வசிக்கிறார்கள். ஆகவே, தம்பி! இந்த இடம் நாம் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கு ஏற்றது.'' (12–15)

இவ்வாறு நிச்சயம் செய்துகொண்டு, அருகிலிருந்த வால்மீகியின் ஆசிரமத்திற்குச் சென்று, வணக்கத்துடன் கையைக் கூப்பிக் கொண்டு, அவர் திருவடிகளில் தலையை வைத்து வணங்கினார்கள். அறம் அறிந்த மாமுனிவர் மிகவும் மனம் மகிழ்ந்து, அவர்களை அன்புடன் வரவேற்றார்; 'உட்காருங்கள்' என்று சொல்லி, ஆசனங்கள் கொடுத்தார்; விருந்தினருக்கான உபசரிப்புக்களைச் செய்தார். பின்னர், முறைப்படி தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட பிரபு இராமன், மகாபலசாலியான இலக்குவனை நோக்கிச் சொன்னார்— (16–18)

''தம்பி! உயர்வகையான, உறுதியான மரத்துண்டுகளைக் கொண்டு வா; இங்கேயே ஓர் இல்லம் அமைப்பாய்; இந்த இடம் எனக்குப் பிடித்திருக்கிறது.'' எதிரிகளை அடக்குபவனான இலக்குவன், அவருடைய சொற்களைக் கேட்டதும், பலவகையான மரக்கட்டைகளைக் கொண்டு வந்தான். பின்னர், ஒரு குடிலை அமைத்தான். உறுதியாகவும் அழகாகவும் மரங்களைப் பிணைத்து, மழை–வெய்யில் பாதிப்பு ஏற்படாத வகையில் மேற்கூரை அமைக்கப்பட்ட அந்தப் பர்ணசாலையைப் பார்த்து, உளமாரத் தொண்டு செய்யும் லட்சுமணனை நோக்கி, இராமன் இவ்வாறு சொன்னார்— (19–21)

''சுமித்திரை மைந்தனே! புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இல்லத்தில் நீண்டகாலம் வாழ விரும்புகிறவர்கள், வாஸ்து தேவதைகளுக்குப் பூஜை–ஹோமம் செய்து, அவர்கள் ஆசியைப் பெறவேண்டும். அதனால், இந்தக் குடிலுக்கு அரிய மூலிகைகளைக் கொண்டு, நாம் வாஸ்து ஹோமம் செய்வோம். நன்னோக்கமுடைய லட்சுமணா! அறநெறிகளை நினைவுபடுத்திக் கொள். சாஸ்திரங்களில் கூறப்பட்டபடி ஸம்ஸ்காரங்களைச் செய்யவேண்டும். லட்சுமணா! நீ, உடனே சென்று அரிய மூலிகைகளை எடுத்து வா.'' (22,23)

எதிரிகளை மாய்க்கும் இலக்குவன் சகோதரரின் உத்தரவைச் சிரமேற்கொண்டு, அவர் சொல்லியபடியே செய்து முடித்தான். அப்போது, இராமன் அவனிடம் கூறினார்— ''தம்பி! அந்த மூலிகைகளைப் பக்குவம் செய். சீக்கிரம் ஆகட்டும். இப்போது நல்ல முகூர்த்தம்; 'த்ருவம்' என்று பெயர் பெற்ற நல்ல பகற்பொழுது. இந்த நேரத்தில் பர்ணசாலைக்கு உரிமை பொறுப்புள்ள தேவதைகளுக்கு வேள்வி செய்து மகிழ்விப்போம்.'' வீரனான லட்சுமணன் ஹோமத்தில் உபயோகிக்கத் தகுந்த அரிய மூலிகைகளை எடுத்து வந்து, கொழுந்துவிட்டு எரியும் தீயில் இட்டான். (24–26)

ரத்தசோகையைப் போக்கும் 'அசுவகந்தம்' என்ற மூலிகை வற்றலாகப் பக்குவப்பட்டு விட்டதைக் கண்டு, ஆண்புலியான இராமனிடம் சொன்னான்— ''அசுவகந்தம் என்ற இந்த மூலிகை, உரியபடி, என்னால் பக்குவம் செய்யப்பட்டிருக்கிறது. தெய்வத்திற்கு ஒப்பானவரே! தாங்கள் ஸம்ஸ்கார முறை அறிந்து செய்யும் திறன் உடையவர். குடிலின் அதிஷ்டான தேவதைக்கு பூசனை செய்யுங்கள்.'' நல்லியல்புடையவரும், அந்தந்தக் காலத்திற்கு உரிய மந்திரங்களை முழுமையாக அறிந்தவருமான இராமன் நீராடி, வைதிக நியமங்களை ஏற்று, வாஸ்து ஹோமம் நிறைவடையும் வகையில், எல்லா மந்திரங்களையும் குறைவில்லாமல் ஓதினார். (27–29)

எல்லாக் கடவுளர்களையும் பூசித்த பின்னர், சுத்தமான மனத்துடன் பர்ணசாலைக்குள் காலடி எடுத்து வைத்தார், இராமன். எல்லையற்ற பராக்கிரமசாலியான இராமனுக்கு அந்த இடம்

உவகையைத் தந்தது. வைசுவதேவ பலி, ருத்ர பலி, விஷ்ணு பலி முதலியன செய்து, வாஸ்து தேவதைகளுக்கு மனத்திருப்தி அளிக்கும் மங்கள கர்மாக்களையும் செய்தார். செய்யவேண்டிய மந்திர ஜபங்களைச் செய்தபின் (ருத்ரனுக்கு ஹவிஸ் அளித்ததால்,) முறைப்படி நதியில் குளித்து பரிசுத்தராகி, சகல பீடைகளுக்கும் பரிகாரமாக அதற்கான மந்திரங்களைக் கூறி, (வேள்விக் குண்டத்திற்கு வெளியே) பலிப் பொருட்களைச் சமர்ப்பித்தார். (30–32)

இராமன், ஆசிரமத்தின் பரிமாணத்திற்கு ஏற்றபடி பூஜைக்கான உயர்ந்த மேடைகளையும், பூஜை அறைகளையும், முதன்மை தெய்வங்களுக்கான தனி இடங்களையும் முறைமை செய்து கொடுத்தார். எழில்மிகு தோற்றமுடைய ரகுகுலத் தோன்றல்களாகிய அவ்விருவரும், காட்டுப் புஷ்பங்களாலான மாலைகளாலும், பழங்கள்–கிழங்குகளாலும், சமைக்கப்பட்ட பொருள்களாலும், தண்ணீராலும் (அர்க்யம் கொடுத்தும்) வேதோக்த மந்திர ஜபங்களாலும், தர்பங்களாலும், சமித்து–குசங்களாலும் பூதங்களைத் திருப்தி செய்துவிட்டு, சீதையுடன் மிக நன்றாக அமைந்திருந்த குடிலுக்குள் நுழைந்தார்கள். (33–35)

மரங்களின் இலைகளால் மேற்கூரை அமைக்கப்பட்டதும், மனத்திற்கு உவப்பு அளிப்பதும், சரியான இடத்தில் நன்றாகக் கட்டப்பட்டதும், பேய்க்காற்று வீசாததுமான அந்தக் குடிலுக்குள், தேவசபையான சுதர்மாவுக்குள் அமரர் கூட்டங்கள் நுழைவதைப்போல, அவர்கள் மூவரும் ஒன்றாக உள்ளே சென்றார்கள். ஏராளமான மற்றும் பலவிதமான விலங்கு–பறவைகள் நிறைந்ததும், பலவித உருவ அமைப்புக் கொண்ட இலைக்கொத்துக்களுடன் மரங்கள் விளங்குவதும், கொடூரமான விலங்குகள் சப்தம் போடுவதுமான அந்த அடர்ந்த காட்டில், புலன்களை வென்றவர்களாக, அவர்கள் மிக சௌக்கியமாக வாழத் தொடங்கினார்கள். (36,37)

தெளிந்த நீரோட்டமுடைய மால்யவதியையும், விலங்கு–பட்சிகள் நிறைந்ததும், வனப்புமிக்கதுமான சித்திரகூடத்தில் வனவாசத்தைத் தொடங்கிய இராமன் மிகவும் குதூகலித்தார். நகரத்திலிருந்து வெகுதொலைவில் வசிக்க நேர்ந்த துக்கத்தை விட்டொழித்தார். (38)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
ஐம்பத்தாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்தேழு

சுமந்திரர், அயோத்திக்குத் திரும்பி வருதல்

இராமன், கங்கையின் தென்கரையில் இறங்கிய பின்னர், ஆழ்ந்த வருத்தத்தால் துன்பப்பட்ட குகன், வெகுநேரம் வரை சுமந்திரரோடு பேசிப் புலம்பிவிட்டு, தன் இருப்பிடத்திற்குச் சென்றான். பிரயாகையில் பரத்வாஜ ஆசிரமத்தில் உபசரிக்கப்பட்டது, அவர்கள் சித்திரகூட மலைக்குச் சென்றது என்பது வரையில், அங்குள்ள மக்களிடமிருந்து தெரிந்து கொண்டார்கள். (குகனிடம்) விடைபெற்றுக் கொண்டு, பின்னர் தேரில் குதிரைகளைப் பூட்டி, மிகவும் துயரத்துடன் அயோத்தி நகரம் நோக்கிச் சென்றார், சுமந்திரர். (1–3)

அவர், மலர்களின் நறுமணம் வீசும் காடுகளையும் ஆறுகளையும் பொய்கைகளையும் பட்டணங்களையும் கிராமங்களையும் பார்த்துக் கொண்டே விரைவாகக் கடந்து சென்றார். சாரதி, இரண்டாவது நாள் மாலைப்பொழுதில் அயோத்தியை அடைந்தார். அம்மாநகர், களையிழந்து சோகமயமாக இருப்பதைக் கண்டார். (மூன்றாம் நாள் மாலைப் பொழுது என்றும் சிலர் கூறுவார்கள்.) பாழடைந்துவிட்ட நகரம் போல் மனித அரவம் அற்றுப்போயிருந்ததைக் கண்டு வெகுவாகத் துயரமடைந்தார், சுமந்திரர். சோகத்தின் தாக்குதலால் திகைத்துப் போய் (பின்வருமாறு) சிந்திக்கலானார். (4–6)

'யானை, குதிரை, மக்கள், மன்னரோடுகூட இந்த நகரம், இராமனைப் பிரிந்ததனால் ஏற்பட்ட துக்கத்தின் வெம்மையால் எரிந்து அழிந்து போய்விட்டதா, என்ன?' இவ்வாறு மனவேதனைப்பட்ட சாரதி, வேகமாகச் செல்லும் குதிரைகளால் நகரத்தின் நுழைவாயிலை அடைந்து, விரைவாக உள்ளே நுழைந்தார். சுமந்திரர் திரும்பி வந்துகொண்டிருப்பதைக் கண்டு, நூறு–ஆயிரக்கணக்கில் நகரமக்கள் ஓடிவந்து, ''இராமன் எங்கே?'' என்று கேட்டபடியே தேரைத் தொடர்ந்து ஓடினார்கள். ''கங்கைக் கரையில் நான் இராமனிடம் விடைகோரினேன்; அறத்தின் நாயகனான அந்த மகாத்மாவினால் விடைகொடுக்கப்பட்டேன்'' என்று அவர்களுக்குப் பதில் சொன்னார். (7–10)

அவர்கள் கங்கையைக் கடந்து சென்றுவிட்டார்கள் என்பதை அறிந்துகொண்ட குடிமக்கள் கண்களில் நீர் வழிய, 'அடக் கஷ்டமே!' என்று பெருமூச்சுவிட்டு, 'ஹா இராமா!' என்று கூவிக் கதறினார்கள். ''இராகவனை இப்போது பார்க்காத நாம் அழிந்தே போனோம்'' என்று, கூட்டம் கூட்டமாக நின்றுகொண்டு, அவர்கள் கூக்குரலிட்டதைக் கேட்டார் (சுமந்திரர்). கொடை, வேள்வி, விவாகம், பேரறிஞர்களின் சபை – இவைகளில் நம்மிடையே இனி இராமனைக் காண மாட்டோமே? இந்தக் குடிமகனுக்கு எந்தப் பொருள் உபயோகமாக இருக்கும்? எது விரும்பத்தக்கதாக இருக்கும்? எது சௌக்கியத்தைக் கொடுக்கக் கூடியது? என்று சிந்தித்து, ஒரு தந்தையைப் போல் பட்டணத்தைப் பரிபாலித்தாரே, இராமன்! (11–14)

கடைவீதியைக் கடந்து மக்கள் வசிப்பிடங்களில் சென்றபொழுது, உப்பரிகையின் சாளரத்தினருகே நின்று, இராமனின் துன்பத்தை எண்ணி வேதனைப்படும் பெண்மணிகளின் புலம்பலைக் கேட்டார். (ஜனங்களின் துன்பத்தைக் காணச் சகியாமல்) முகத்தை மூடிக்கொண்ட சுமந்திரர், அரசபாட்டை வழியாகவே, மன்னர் தசரதர் இருக்கும் மாளிகையை நோக்கிச் சென்றார். அரச மாளிகையை அடைந்ததும் ரதத்திலிருந்து விரைவாக இறங்கி, உள்ளே நுழைந்து, குடிமக்கள் குழுமியிருந்த ஏழு கட்டுகளையும் கடந்து சென்றார். மாதர்கள், மாடமாளிகைகளிலிருந்தும் கூடகோபுரங்களிலிருந்தும், அவர் மட்டும் திரும்பி வந்துவிட்டதைப் பார்த்து, இராமனைக் காணாத துயரத்தால் பிழியப்பட்டவர்களாக, 'தெய்வமே! தெய்வமே!' என்று கூவினார்கள். (15–18)

மிகவும் வேதனைப்பட்ட மாதர்கள், அகலமானதும் மாசற்றதும் பொங்கிவரும் கண்ணீரால் கலங்கியதுமான கண்களால் எதிரே இருப்பவரைக்கூடத் தெளிவாகக் காணமுடியாதவர்களாக ஆனார்கள்! மாளிகைகளில் ஆங்காங்கேயிருந்த தசரத பத்தினிகள் இராமனைப் பற்றிய சோகத்தால் தவித்துக் கொண்டு, மெதுவாகப் பேசிக் கொண்ட துயரச் சொற்களை அவர் கேட்டார். ''இராமனோடு புறப்பட்டுச் சென்ற சாரதி, இராமன் இல்லாமல் திரும்பி வந்திருக்கிறார். அழுது தவித்துக் கொண்டிருக்கும் கௌசல்யாதேவிக்கு என்ன பதிலைச் சொல்லப் போகிறாரோ? துன்பமயமாகிவிட்ட இந்த வாழ்க்கையை முடிவுக்குக் கொண்டு வருவதும் எளிதல்ல – என்று எண்ணுகிறேன். ஏனென்றால், இளவரசுப் பட்டத்தைத் துறந்து, செல்வக்குமரன் நாட்டிலிருந்து வெளியேறிய பின்பும் கௌசல்யா தேவியார் உயிரோடு இருக்கிறாரே!'' (19–22)

அரசபத்தினிகளின் சத்தியமான அந்தச் சொற்களைக் கேட்டவாறே, சோகத்தீயால் வெந்துகொண்டிருப்பவரைப் போல சட்டென்று மாளிகைக்குள் நுழைந்தார், சுமந்திரர். அவர், மனம் பரிதவித்து, வருத்தப்பட்டு, புத்திர சோகத்தால் தளர்ச்சியுற்றிருக்கும் மன்னர் தசரதரை, வெள்ளைக் கட்டிடத்தின் எட்டாவது கட்டில் கண்டார். சுமந்திரர், ஆசனத்தில் வீற்றிருந்த அந்த மாமன்னரின் அருகில் சென்று, வணங்கி, இராமன் சொல்லியனுப்பியவாறே செய்தியை விண்ணப்பித்துக் கொண்டார். மௌனமாகவே அதைக் கேட்டுக் கொண்டிருந்த வேந்தர், மனம் கலங்கி, இராமனது சோகத்தைத் தாங்கமாட்டாமல் உணர்விழந்து தரையில் விழுந்தார். நாடாளும் வேந்தர் மூர்ச்சை அடைந்து தரையில் சாய்ந்ததைக் கண்ட அந்தப்புர மாதர்கள், கைகளை உயரத் தூக்கிக் கொண்டு நெஞ்சைப் பிளக்குமாறு கதறி அழுதார்கள். (23–27)

கோசலை, சுமித்திரையின் உதவியுடன், கீழே விழுந்துவிட்ட கணவரைத் தூக்கி நிறுத்தினார். அப்போது, பின்வரும் சொற்களைக் கூறினார்— ''புண்ணியாத்மாவே! அருஞ்செயல்கள் செய்யவல்ல அவனிடமிருந்து, வனவாசத்திற்காக அவர்களைக் காட்டில் விட்டுவிட்டுத் திரும்பி வந்திருக்கும் இந்தத் தூதரிடம் ஏன் முகம் கொடுத்துப் பேசாதிருக்கிறீர்கள்? ரகுகுலத் தோன்றலே! நியாயமில்லாத ஒரு காரியத்தைச் செய்துவிட்டு, இப்போது வெட்கப்படுவதால் ஆவது என்ன? எழுந்திருங்கள். சத்தியத்தைக் காப்பாற்றிவிட்ட புண்ணியம் உங்களுக்கு உண்டாகட்டும். நீங்கள் சோகத்தில் ஆழ்ந்துவிட்டால் ஜன சமுதாயத்திற்கு வேறு யார் ஆதரவு? நாதா! எவளிடமுள்ள பயத்தால் இராமனைப் பற்றி இவரிடம் வாய்திறந்து கேட்காமல் இருக்கிறீர்களோ, அந்த கைகேயி இங்கே இல்லை; பயமில்லாமல் பேசலாம்.'' (28–31)

இவ்வாறு மாமன்னரிடம் கூறிவிட்டு, துயரத்தால் தவித்துக் கொண்டு, கண்ணீரைப் பெருக்கியவாறே பேசிக் கொண்டிருந்த கோசலை, திடீரென்று தரையில் விழுந்தார். அழுது கொண்டே தரையில் விழுந்த கௌசல்யையும், கணவரையும் பார்த்து அரச பத்தினிகள் அனைவரும் எல்லாப் பக்கங்களிலிருந்தும் ஓலமிட்டு அழுதார்கள். அப்போது, அந்தப்புரத்திலிருந்து சோகமயமான அழுகை ஒலி வருவதைக் கேட்டும் பார்த்தும், வயோதிகர்களும் இளைஞர்களும் அழத் தொடங்கினார்கள்; எல்லா மாதர்களும் அழுதார்கள். அந்தப் பட்டணம், எல்லாப் பக்கங்களிலும் மீண்டும் சோகத்தில் மூழ்கியதாக ஆயிற்று. (32–34)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
ஐம்பத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்தெட்டு

இராமனது செய்தியைக் கூறுதல்

மனமயக்கத்திலிருந்து விடுபட்டு மீண்டும் சுய நினைவை அடைந்ததும், இராமனைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகச் சாரதியை அருகில் அழைத்தார். இராமனைப் பற்றித் துக்கப்பட்டுக் கொண்டு, உடற்தளர்ச்சியும் மனத்துயரமும் அடைந்து தவிக்கும் வயோதிகரும், அப்போதுதான் பிடிக்கப்பட்டு வந்த யானையைப் போல் மிகவும் நிலைகொள்ளாதவரும், நீண்ட பெருமூச்சுவிட்டுக் கொண்டிருப்பவரும், நோயினால் பீடிக்கப்பட்ட யானையின் நிலையில் இருந்தவருமான மன்னரைப் பார்த்து, சாரதி கைகளைக் கூப்பிக்கொண்டு எதிரே வந்து நின்றார். (1–3)

புழுதியினால் பூசப்பட்ட சரீரமும், கண்ணீர் நிறைந்த முகமும் கொண்டு மனம் நொந்து எதிரே வந்து நிற்கும் சாரதியைப் பார்த்ததும், மேலும் துயரமடைந்து மன்னர் கேட்டார்— ''தருமாத்மாவான இராகவன் (அரச மாளிகையில் வாழ்ந்தவன்.) மரத்தின் அடியில் எப்படித்தான் வாழப் போகிறானோ? மிகவும் சௌக்கியமாக வாழ்ந்தவன். (உரிய காலங்களில் அறுசுவை உணவு உண்டவன்.) இப்போது என்ன சாப்பிடுகிறான்? சுமந்திரரே! கஷ்டங்களை அனுபவிக்க வேண்டாதவனும், சக்கரவர்த்தித் திருமகனும், நல்ல படுக்கையில் படுக்க வேண்டியவனுமான அவன், எவ்வாறு கரடுமுரடான தரையில் படுத்து உறங்குவான்? (4–6)

அவன் வெளியே புறப்பட்டுச் சென்றால், அவனுடன் காலாட்படை, தேர்ப்படை, யானைப்படையும் செல்லும். அவ்வளவு பெருமைக்குரிய இராமன், மனித நடமாட்டமில்லாத காட்டில் (தன்னந்தனியனாக) எப்படி வசிப்பான்? கொடூரமான விலங்குகள் நடமாடுவதும், கருநாகங்கள் வாழ்வதுமான காட்டை என் குமாரர்கள் இருவரும், வைதேகியும் எவ்வாறு சென்றடைந்தார்கள்? சுமந்திரரே! ரதத்திலிருந்து இறங்கியபின் கோமளமான சரீரம்

உடையவளும் நோன்புகள் நோற்பவளுமான சீதையுடன், அரசகுமாரர்கள் இருவரும் எவ்வாறு கால்களால் நடந்து சென்றார்கள்? (7–9)

சாரதியே! அசுவினீகுமாரர்கள் மந்தரமலைக் காட்டிற்குள் செல்வதைப் போல, என் குமாரர்கள் காட்டின் உட்புறம் செல்லும்வரை கண்களால் பார்த்துக் கொண்டிருந்த நீங்கள், வாழ்க்கையின் பயனை அடைந்துவிட்டீர்கள். சுமந்திரரே! இராமன் என்ன சொன்னான்? இலக்குவன் என்ன சொன்னான்? காட்டை அடைந்தபின் சீதை என்ன சொன்னாள்? சாரதியே! இராமன் உட்கார்ந்தது, உறங்கியது, உணவு புசித்தது ஆகியவை பற்றியெல்லாம் எனக்குக் கூறும். யயாதி மன்னன், தேவலோகத்திலிருந்து மண்ணுலகுக்குத் தள்ளப்பட்டபோது, சாதுக்கள் வாழும் இடத்தில் விழுந்ததால் மீண்டும் தேவலோகத்தை அடைந்ததுபோல, நான் உன் பேச்சைக் கேட்டுக் கொண்டே உயிர்வாழ்வேன்.'' (10–12)

இவ்வாறு, மன்னர் செய்தியைச் சொல்லும்படி, தேரோட்டியைத் தூண்டியவுடன், செய்தியைத் தெரிவிக்க சித்தமாக இருந்த அவர், கண்களில் நீர் வழிய, குரல் தழுதழுக்க வேந்தனை நோக்கிச் சொல்ல ஆரம்பித்தார்— ''பார்வேந்தரே! எப்போதும் தருமத்தையே சார்ந்திருக்கும் இராமப்பிரபு (தங்களைத் தியானித்து) கைகளைக் கூப்பி, தலைகுனிந்து வணங்கி, என்னிடம் (பின்வருமாறு) சொன்னார்— சாரதியே! ஆத்மஞானியும் வணங்கத்தக்கவருமான என் தந்தையாரின் பாதங்களில் என்பொருட்டு விழுந்து விழுந்து வணங்க வேண்டும். (13–15)

தேரோட்டியே! அந்தப்புர மாதர் சிரோமணிகள் அனைவருக்கும் என் உடல் நலம் குறித்துக் கூறுங்கள். ஒருவர்கூட விட்டுப் போகாமல் அவரவருக்குத் தக்கபடி, என் வணக்கத்தைத் தெரிவியுங்கள். என்னுடைய தாயார் கௌசல்யா தேவியிடம் என் நமஸ்காரத்தைத் தெரிவித்து, நான் சௌக்கியமாகவும், எல்லாவற்றிலும் கவனமாகவும் இருப்பதாகச் சொல்லவும். இவரிடம் இவ்வாறு (பின்வரும்) செய்தியையும் கூறுங்கள். தாயே! தருமத்தில் நீங்காத பற்றுடையவராக, அந்தந்தக் காலங்களில் செய்யும் அக்னி காரியங்களில் உறுதுணையாக இருங்கள். தந்தையைத் தெய்வமெனப் பாவித்து, அவருக்குப் பாதசேவை செய்து வாருங்கள். (16–18)

'தான்' என்ற செருக்கையும், மற்றவர்களைக் காட்டிலும் 'நான் உயர்ந்தவள்' என்ற எண்ணத்தையும் விட்டுவிட்டு, எல்லா அன்னைமார்களிடமும் இயல்பாகப் பழகுங்கள். மன்னருக்குப் பிடித்ததைச் செய்யுங்கள். அன்னை கைகேயியையும் அவ்வாறே செய்யச் சொல்லுங்கள். மகன் பரதனிடம் (புத்திரவாத்ஸல்யத்தோடுகூட) ஓர் அரசருக்குரிய மரியாதையையும் காட்டவேண்டும். ஆட்சி நெறியை மனத்தில் நினைத்துப் பார்க்கவும். ஒரு நாட்டையே தன் சொத்தாகக் கொண்டிருப்பதால், (வயதில் சிறியவர்களாக இருந்தாலும்) அவர்கள் மாட்சிமை மிக்கவர்கள். பரதனுக்கும் என் நலன் கூறுங்கள். அத்துடன், 'எல்லா அன்னைமார்களிடமும், அவரவர் ஸ்தானத்திற்குரியபடி நடந்து கொள்ளவேண்டும்' என்று நான் கூறியதாகத் தெரிவியுங்கள். (19–21)

இக்ஷ்வாகு குல திலகமும் பராக்கிரமசாலியுமான பரதனிடம், 'இளவரசுப் பட்டம் ஏற்றுள்ள நீ, அரசுப் பட்டம் வகிக்கும் தந்தையை அனுசரித்து நடக்கவேண்டும்' என்று சொல்லுங்கள். 'மன்னர் மிகவும் வயோதிகம் அடைந்தவர். நீ, அவரை எதிர்த்துப் பேசாதே. (அவர் சொல்லுக்கு மாறாக நடக்காதே.) நீ, இளவரசனாக (அந்த அதிகார எல்லைக்குள்) இருந்து வா. அவருடைய ஆணைகள் மதிக்கப்படட்டும்.' தொடர்ந்து கண்களில் நீர் பெருக்கிக் கொண்டு என்னிடம் சொன்னார்— 'புத்திரவாத்ஸல்யம் உடைய என்னுடைய அன்னையார், உன்னுடைய தாயாரைப் போலவே கருதத்தக்கவள்.' பார்வேந்தே! இவ்வாறு என்னிடம் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, செங்கமலக்கண்ணன், பெரும் புகழ் படைத்த இராமன் திருக்கண்களிலிருந்து ஏராளமாகக் கண்ணீர் பொழிந்தது. (22–25)

(இராமன் இவ்வளவு அடக்கமாகச் செய்தி சொல்லி அனுப்பினார். ஆனால்,) லட்சுமணனோ அடங்காத சினத்துடன் பெருமூச்சுவிட்டுக் கொண்டு சொன்னார்— 'ராஜகுமாரரான இவர் எந்தக்

குற்றத்திற்காக நாடு கடத்தப்பட்டார்? மன்னர், கைகேயியின் பிடிவாதமான சொற்களைக் கேட்டு, உடனே அதை நிறைவேற்றிவிட்டார். அது நியாயமோ, இல்லை அநியாயமோ? அதனால் கஷ்டத்திற்கு ஆளாகியிருப்பது நாங்கள்தான். இராமசந்திரமூர்த்தி நாடு கடத்தப்பட்டதற்குக் காரணம், கைகேயியின் பேராசையாக இருந்தாலும் அல்லது மன்னர் அவளுக்குக் கொடுத்த வரங்கள் தாம் என்றாலும் – நடந்தது என்னவோ மகாபாவம்தான். (26–28)

இராமன் கைவிடப்பட்டது தெய்வ சங்கல்பமோ அல்லது மன்னனின் இஷ்டமோ, இவை எதுவுமே ஏற்கத்தக்கதாக இல்லை. தரும விரோதமான இந்தக் காரியம் – இராமனை நாட்டைவிட்டு வெளியேற்றுவது என்பது – முன்பின் யோசனை இல்லாமல் தான்தோன்றித்தனமாகச் செய்யப்பட்டிருக்கிறது. அதனால் பெரும் துக்கத்தையே விளைவிக்கப் போகிறது. ஆகையால், இப்போது நான், மாமன்னரை ஒரு தந்தையாகக் கருதவில்லை. எனக்கு தந்தை–தலைவர்–உடன்பிறப்பு–உறவு எல்லாம் இராமசந்திரமூர்த்தியே! (29–31)

எல்லா மக்களுக்கும் பிரியமானவரும், எல்லா மக்களின் சுக–சௌக்கியத்தில் ஈடுபாடுள்ளவருமான ஸ்ரீராமனை (மன்னர்) துறந்துவிட்டாரே? இப்படிச் செய்தபின், எல்லா மக்களும் எவ்வாறு அவருக்கு இணக்கமாக நடந்து கொள்வார்கள்? எல்லா குடிமக்களுக்கும் பிரியமானவரும், அறத்தின் திருவுருவுமாகிய இராமபிரானை நாட்டைவிட்டு வெளியேற்றி, அதனால், எல்லா மக்களின் பகைமையைப் பெற்றுள்ள இவர், இனி எவ்வாறு மன்னனாக மதிக்கப்படுவார்?' (இதுவரை இலக்குவன் கூறிய செய்தி.) (32,33)

மாமன்னரே! நோன்பு நெறியில் நிற்கும் சீதாப்பிராட்டியார் நீண்ட பெருமூச்சுவிட்டு, துர்தேவதையால் பீடிக்கப்பட்ட மனம் கொண்டவள்போல அசைவில்லாமல் திகைத்து நின்றாள். புகழ்பெற்றவளும், இதற்கு முன் துன்பத்தை அனுபவித்து அறியாதவளுமான அரசகுமாரி, தன் கணவருக்கு ஏற்பட்ட துக்கத்தைப் பொறாதவளாய் அழுதாள். என்னிடம் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. அங்கிருந்து நான் புறப்படுவதற்கு ஆயத்தமாகிவிட்டதைக் கண்டு, ஒட்டி, உலர்ந்த முகத்துடன் கணவனைப் பார்த்தாள். உடனே கண்ணீர் பெருக்கினாள். இவ்வாறு, கண்களில் நீர்வழிய கைகளைக் கூப்பிக்கொண்டு தளர்ந்து நின்ற இராமனை, லட்சுமணன் தன் கரங்களால் தாங்கி நிலைப்படுத்தினார். அவ்வாறே, சீலத் திருமகளான சீதையும் (சூன்யமாகத் திரும்பிச் செல்லும்) மன்னர் தேரையும், (அதை ஒட்டிச் செல்லும்) என்னையும் பார்த்துக் கொண்டே இருந்தாள்.'' (34–37)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
ஐம்பத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்தொன்பது

தசரதரின் புலம்பல்

திறமைமிக்க அமைச்சரும் சாரதியுமான சுமந்திரர் இவ்வாறு சொல்லி நிறுத்தியவுடன், 'மீதி சொல்ல வேண்டியவற்றையும் முழுமையாகச் சொல்லிவிடு' என்று மன்னர் கேட்டுக் கொண்டார். கண்ணீரில் தத்தளித்த சுமந்திரர், அவருடைய உத்தரவைக் கேட்டு, இராமன் சொல்லியனுப்பிய செய்திகளை மீண்டும் விளக்கமாகச் சொல்ல ஆரம்பித்தார்— (1,2)

''மாமன்னரே! மரவுரியும் மரப்பட்டையும் அணிந்து, தலைமுடியை ஜடாமகுடமாகச் செய்து, அவ்விரு வீரர்களும் கங்கையைக் கடந்து, பிரயாகையை நோக்கிச் சென்றார்கள். இராகவனுக்கு வழிகாட்டிக் கொண்டு முதலில் லட்சுமணன் செல்கிறார்; பின்னர் சீதாதேவி; அடுத்ததாக

ரகுகுலத்தை மகிழ்விக்கும் இராமப்பிரபு சென்றார். அவ்வாறு, அவர்கள் தொடர்ந்து செல்வதைப் பார்த்த நான் சுய உணர்வு இல்லாமலே திரும்பி வரத் தொடங்கினேன். இராமன் காட்டை நோக்கிச் சென்றதும், திரும்பும் வழியில் செலுத்தப்பட்ட என் குதிரைகளும் நேர்ப்பாதையில் செல்ல விருப்பமில்லாமல் என்னுடைய வழியில் நடக்கவில்லை. (3–5)

குதிரைகளும் (இராமன் பிரிவால்) உஷ்ணமான கண்ணீரைப் பெருக்குகின்றனவாய் நடக்க மறுத்தன. அவ்விரு அரச குமாரர்களுக்கும் கைகூப்பி வணக்கம் தெரிவித்துவிட்டு, (அவர்களைத் தனியே விட்டுவிட்டுப் பிரிய வேண்டிய) அப்பெரும் துக்கத்தைத் தாங்கிக் கொண்டு ரதத்தில் ஏறிப் புறப்பட்டேன். இராமன், என்னை மறுபடியும் அழைக்கலாம் என்ற நப்பாசையுடன் பல நாட்கள் நான் குகனுடன் தங்கியிருந்தேன். (ஸர். 57–ல், 'இரண்டாவது மற்றும் மூன்றாவது நாள் மாலைப் பொழுதில் அயோத்தியை அடைந்தார்' என்று கூறப்பட்டுள்ளதால், 'பல நாட்கள்' என்ற சொற்கள் சுமந்திரரின் தீவிரமான எதிர்பார்ப்பைக் குறிப்பதாகக் கொள்ளத்தகும்.) (6,7)

பார்வேந்தரே! தங்கள் நாட்டில், இராமனைப் பிரிந்த துக்கத்தால் பிழியப்பட்ட மரங்களும் மலர்கள்–தளிர்கள்–மொட்டுக்களுடன் வாடிப் போயிருக்கின்றன. நதிகள், குட்டைகள், பெரும் தடாகங்களிலுள்ள தண்ணீர் வெம்மையால் கொதிக்கிறது. தோட்டம்–துரவுகளில் இலைகள் சருகுகளாகிவிட்டன. காட்டிலுள்ள உயிர்ப் பிராணிகள் இரை தேடுவதற்காகக்கூட வெளியே செல்லவில்லை; கொடிய மிருகங்களும் வெளியே வரவில்லை. இராமனுக்கு ஏற்பட்ட கஷ்டத்தினால் துக்கத்தில் மூழ்கிய அந்தக் காடு, எவ்வித ஒலியும் இல்லாததாகிவிட்டது. (8–10)

ஆறுகளில் தண்ணீர் கலங்கி ஓடுகிறது; தாமரைத் தடாகங்களில் இலைகள் (நீர் மட்டத்தில் மிதக்காமல்) நீருக்குள் மூழ்கியிருக்கின்றன; தாமரைப் பூக்கள் கருகிவிட்டன; மீன்களும் நீர்ப்பறவைகளும் மறைந்துவிட்டன. தண்ணீரில் தோன்றும் மலர்களும், மண்ணில் தோன்றும் மலர்களும் மணம் இழந்து போனமையால், இப்போது சோபிக்காமல் இருக்கின்றன. மரங்களில் பழங்களும் முன்புபோல் (ஏராளமாகக்) காணப்படுவதில்லை. இங்கேயுள்ள நந்தவனங்கள் ஆள்–அரவமற்று பாழடைந்து காணப்படுகின்றன; பறவைகளோ எங்கோ போய்விட்டன; பூங்காக்கள் முன்புபோல் மனம் மகிழ்விப்பவையாக இல்லை. (11–13)

அயோத்திக்குள் நுழைந்த என்னை, எந்த மனிதரும் முகமலர்ச்சியுடன் வரவேற்கவில்லை. மக்கள், இராமனைக் காணாததால் பெருமூச்சுவிட்டவண்ணம் இருக்கிறார்கள். ஐயனே! இராமப்பிரபு இல்லாமல் திரும்பி வந்திருக்கும் ராஜரதத்தைக் கண்டு, அரசபாட்டைகளில் கூடியிருந்த மக்கள் அனைவரும் துக்கம் தாங்காமல், கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கினார்கள். உப்பரிகைகளிலும் அடுக்கு மாளிகைகளிலும் மாடங்களிலும் கூடியிருந்த மாதர்கள் இராமனைக் காணாததால் மனம் துடித்துப் போய், 'ஹா, ஹா' என்று தீனமாகக் கூவினார்கள். (14–16)

அகன்ற, குற்றமற்ற, பிரவாகமாகப் பொங்கி வரும் கண்ணீரால் நனைந்த கண்களால் மிகவும் துயரத்தில் சூழ்ந்த மாதர்கள், மன இறுக்கத்தைச் சொற்களால் வெளிப்படுத்த முடியாமல், ஒருவரையொருவர் கண்கொட்டாது பார்த்தபடியே இருக்கிறார்கள். பகைவர், நண்பர், நடுநிலையாளர் என்ற மூன்று திறத்தார்களும் சமமாகத் துக்கத்தை அனுபவிக்கிறார்கள். அவர்களிடையே ஏற்றத்தாழ்வை நான் காணவில்லை. மாமன்னரே! செல்வக் குமாரனைப் பிரிந்து பரிதவிக்கும் கோசலா தேவியார் போல, இந்த அயோத்தி பட்டணம் மனமகிழ்ச்சியில்லாத மனிதர்களாலும், சோர்ந்து போன யானை–குதிரைகள் உடையதாகவும், வேதனைக் குரலால் வருந்தியதாகவும், நீண்ட பெருமூச்சுக்களே தன் உயிர்மூச்சாகவும் உடையதாக ஆகிவிட்டதாகத் தோன்றுகிறது.'' (17–20)

மாமன்னர் தசரதர், சாரதியின் சொற்களைக் கேட்டு, மிகவும் மனம் புண்பட்டுக் கண்ணீர் ததும்ப, தேரோட்டியைப் பார்த்து, நாக்குழறும் வார்த்தைகளால் பின்வருமாறு கூறினார்— ''பாவிகளுடைய குலத்தில் தோன்றியவளும் பாவசிந்தனை உடையவளுமான கைகேயியின்

நிர்பந்தப்படியே செய்தேன். ஆலோசனையில் வல்லவர்களான முதியோர்களுடன் நான் கலந்து ஆலோசிக்கவில்லை. நண்பர்களோடும் அமைச்சர்களோடும் நகரத்துப் பிரமுகர்களோடும் கலந்து ஆலோசிக்காமல், ஒரு பெண் காரணமாக மதிமயங்கி, திடீரென்று பொருளற்ற இந்தக் காரியத்தைச் செய்தேன். (21–23)

சாரதி! இந்தக் குலத்தின் அழிவிற்காக விதிவசத்தால் இந்தப் பெரும் துயரம் தானாகவே நிகழ்ந்திருக்கிறது என்பது நிச்சயம். சாரதி! உமக்கு நான் ஏதேனும் நன்மை செய்திருந்தேன் என்றால், (இப்போது, உமது நன்றியைத் தெரிவிக்க ஒரு வாய்ப்பு.) உடனே, என்னை இராமன் இருக்குமிடத்திற்குக் கொண்டு போய் சேர்த்துவிடும். (ஏனென்றால்,) என் உயிர் என்னை விட்டுப் போய்க் கொண்டிருக்கிறது. இப்போதும்கூட (ஆட்சி பரதனிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்ட நிலையிலும்) என் உத்தரவுக்கு மதிப்பு இருக்குமானால், இராமனைத் திரும்ப அழைத்துக் கொண்டு வாரும். இராமன் இல்லாமல் ஒரு முகூர்த்த காலம்கூட நான் உயிரோடு இருக்க மாட்டேன். (24–26)

அல்லது மாவீரனாகிய அவன் வெகுதொலைவு சென்றிருப்பான் என்றால், என்னையே ரதத்தில் ஏற்றிக் கொண்டு போய் விரைவில் இராமனுக்குக் காட்டு. முல்லையரும்பு போன்ற பற்களை உடையவனும், தனிப்பெருமை வாய்ந்த வில்லாளியும், லட்சுமணனுக்கு முன் பிறந்தவனுமான அவன் எங்கே இருக்கிறான்? அவனை சீதையோடுகூட கண்குளிரப் பார்த்துவிட்டேனாகில், நான் பிழைத்திருப்பேன். சிவந்த கண்களை உடையவனும் பெருந்தோளனும் இரத்தின குண்டலங்களை அணிந்தவனுமான இராமனைப் பார்க்காவிட்டால், நான் யமலோகம் போய்விடுவேன். (27–29)

இரங்கத்தக்க இந்த நிலையை அடைந்துவிட்ட நான், இக்ஷ்வாகு பரம்பரையின் பெருமைக்குக் காரணமான இராமனை இங்கே காணவில்லையே? இதைவிடப் பெருந்துயரம் எதுவும் உண்டோ? ஆ, இராமா!... ஆ, லட்சுமணா!... ஆ... ஆ... கற்புக்கரசியான சீதே! ஆதரவற்ற ஓர் அநாதையைப் போல் துயரம் தாங்காமல், நான் உயிர்விட்டுக் கொண்டிருப்பதை நீங்கள் அறியவில்லையா? சொல்லொணாத் துயரத்தினால் மிகவும் மதி கலங்கியிருந்த மன்னர், கடக்க முடியாத துயரக் கடலில் மூழ்கியவராய், இவ்வாறு சொன்னார்— (30–32)

கௌசல்யே! இராமன் இல்லாமல் நான் மூழ்கியிருக்கும் துக்க சாகரத்தில், இராமனை நினைப்பதால் உண்டாகும் சோகமே நீரோடும் வேகம்; சீதையைப் பிரிந்திருப்பது என்பது கரை; பெருமூச்செறிதல் என்பதே அலைகளின் சுழல்கள்; கண்ணீர் என்ற நுரையால் கலங்கிய தண்ணீர்; கைகளை அசைப்பதே மீன் கூட்டங்கள்; புலம்பலாகிய பேரொலி; விரிந்த தலைமுடியே பாசிகள்; கைகேயி என்பவள் வடவாக்கினி (ஊழித்தீ); என் கண்ணீர், பொழிவினால் உண்டானது; கூனியின் சதியாலோசனையே சுறாமீன்கள்; வரம் என்பதே இரு கரைகள்; இராமனை நாடு கடத்தல் என்பதே பரப்பு! இத்தகைய துயரப் பெருங்கடலைத் தாண்டி, நான் உயிர் பிழைத்திருப்பது மிகவும் கடினம். (33–36)

இலக்குவனோடு இராமனைப் பார்க்க விரும்பும் எனக்கு, அவன் இங்கே இப்போது காணப்படவில்லை – இது என் பாவத்தின் பயன்!'' இவ்வாறு, பெரும்புகழ் படைத்த மன்னன் புலம்பிவிட்டு, உடனே படுக்கையில் விழுந்தார். இவ்வாறு, இராமன் காரணமாக மிகவும் பரிதாபமாகப் புலம்பிவிட்டு, மாமன்னர் உணர்விழந்து கிடந்ததைக் கண்ட கோசலை, அவருடைய இரங்கத்தக்கச் சொற்களைக் கேட்டதும், முன்னைக் காட்டிலும் இரு மடங்கு அதிகமான அச்சத்தை அடைந்தார். (37,38)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
ஐம்பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபது

கௌசல்யைக்குச் சமாதானம் கூறுதல்

அப்போது, கோசலா தேவி பேய் பிடித்தவர் போல் உடல் நடுங்கி, தன்னுணர்வு இழந்து தரையில் விழுந்தார். சாரதியைப் பார்த்துச் சொன்னார்— ''இராம–லட்சுமண–சீதை எங்கே இருக்கிறார்களோ, அங்கே என்னை அழைத்துச் செல்லும். அவர்கள் இல்லாமல் ஒரு விநாடிகூட இங்கே உயிர்வாழ மாட்டேன்; ரதத்தைத் திருப்பி ஓட்டு. என்னையும் தண்டகாரண்யத்திற்கு அழைத்துச் செல்; அவர்களைப் பின்தொடர்ந்து செல்வேன்; இல்லையென்றால் யமலோகம் சென்று விடுகிறேன்.'' அந்தத் தேரோட்டி கைகளை வணக்கமாகக் கூப்பிக்கொண்டு, கண்ணீர்ப் பெருக்கினால் சிதைக்கப்பட்ட, வெளிவரத் துடிக்கும் சொற்களால், கோசலைக்கு ஆறுதல் கூறும்முகமாகப் பின்வருமாறு கூறினார்— (1–4)

''மனத்துயரத்தையும், குழப்பத்தையும், துக்கத்தினால் உண்டாகும் மனக்கலவரத்தையும் உதறிவிடுங்கள். மனக்கவலையை அகற்றிவிட்டு, இராமன் காட்டில் வசித்து வருகிறார். அறம் அறிந்த லட்சுமணனும் புலன்களை வென்றவனாக, காட்டில் இராமனுக்குப் பாதசேவை செய்து கொண்டு, (அதன் பயனாக,) புண்ணிய உலகங்களைச் சம்பாதித்துக் கொண்டிருக்கிறான். இராமனிடமே மனத்தைச் செலுத்தியுள்ள சீதை, மனித நடமாட்டமில்லாத காட்டில் அச்சம் அறியாதவளாக வீட்டில் இருப்பதைப் போலவே நிம்மதியாக இருக்கிறாள். எவ்வளவு கூர்ந்து பார்த்தாலும், அவளுக்குக் கடுகளவு வாட்டமும் ஏற்பட்டதாக நான் காணவில்லை. சீதை, வெளிப் பிரதேசங்களில் வசித்துப் பழக்கப்பட்டவளோ என்று எண்ணத் தோன்றுகிறது, எனக்கு. (5–8)

முன்பு, பட்டணத்துப் பூங்காவிற்குச் சென்று உள்ளம் களித்ததைப் போலவே, ஜன சஞ்சாரமற்ற காடுகளிலும் அலைந்து திரிந்து மனம் பூரிக்கிறாள், சீதை. முழு நிலவைப் போன்ற திருமுகமுடைய கற்புக்கரசியான சீதை, இராமனிடத்திலேயே மனத்தை ஒப்படைத்து, மக்கள் நடமாட்டமில்லாத காட்டிலும் சிறுபெண்ணைப் போல குதூகலமாக இருக்கிறாள். அவளுடைய மனம் அவரிடத்திலேயே நிலைத்திருக்கிறது. அவளுடைய வாழ்க்கை அவரைச் சார்ந்திருக்கிறது. இராமன் இல்லாவிட்டால் அயோத்தி நகரம்கூட அவளுக்குக் காடாகத் தோன்றும். (9–11)

வழியில் எதிர்ப்படும் கிராமங்கள், நகரங்கள் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்கிறாள். ஆறுகளைப் பார்த்தால், அவை தொடக்கம்–முடிவு பற்றியும், பல்வகை மரங்களைப் பார்க்கும் போது அவை பற்றிய விவரங்களையும் விருப்புடன் கேட்கிறாள். இராமனிடமோ, இலக்குவனனிடமோ இவைகள் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்கிறாள், வைதேகி. (வெகுதொலைவு சென்றுவிட்டாலும்) அயோத்திக்குக் குரோச தூரத்தில் (ஒரு நந்தவனத்தில்) இருப்பதைப் போலவே எண்ணி விளையாட்டாகத் திரிகிறாள். சீதையைப் பற்றி இவ்வளவுதான் எனக்கு நினைவிலிருக்கிறது. கைகேயியைப் பற்றி அவள் கூறியது என்னவென்றால்... அது, சட்டென்று என் நினைவிற்கு வரவில்லையே?'' (12–14)

தவறுதலாக, உதடு வரை வந்துவிட்ட அந்தச் செய்தியைத் தன் மனத்திற்குள் புதைத்துவிட்டு, தேவியாருக்கு மகிழ்ச்சி தரக்கூடிய சொற்களை இனிமையாகச் சொன்னார்— ''வழியில் நடக்கும் களைப்பு, காற்று வேகம், கொடிய விலங்குகளின் அலறல் கேட்டு அச்சம், வெயில் – இவைகளால் நிலாக் கதிர்கள் போல் தண்ணொளி வீசும் வைதேகியின் சோபை குறைவடையவில்லை. கருணை நிரம்பிய இதயமுடைய வைதேகியின் மலர்ந்த தாமரை போன்றதும், பூர்ண சந்திரனின் ஒளிக்கு நிகரானதுமான முகமண்டலம் சிறிதும் வாட்டம் அடையவில்லை. (15–17)

செம்பஞ்சுக் குழம்பு போல் சிவந்த நிறமுடைய அவளுடைய பாதங்கள், இப்போது செம்பஞ்சுக் குழம்பு பூசப்படாவிட்டாலும், செந்தாமரையின் கூட்டம் போல் செவ்வொளி

வீசுகின்றன. கணவருடைய விருப்பத்திற்கிணங்க, அணிகலன்கள் அணிந்து கொண்டிருக்கும் அழகியான சீதாப்பிராட்டியார், காற்சிலம்புகள் இனிமையாக ஒலிக்கும்படியாக, இப்போதும் குதூகலமாகவே நடந்து செல்கிறாள். காட்டில், இராமனுடைய தோளைப் பற்றிக் கொண்டு செல்லும் அவள், யானை மற்றும் சிங்கம்–புலிகளைக் கண்டு அஞ்சுவதேயில்லை. (18–20)

அவர்களுக்காக, நாம் பரிதாபப்பட வேண்டியதில்லை; உங்களுக்காகவும் மன்னருக்காகவும்கூட கவலைப்பட வேண்டியதில்லை. ஏனென்றால், (சத்திய தரும பரிபாலனத்தை விளக்கிக் காட்டும்) இந்தச் சம்பவம் உலகில் நிலைத்து நிற்கப் போகிறது. அவர்கள் மூவரும் சோகத்தை நீக்கிவிட்டு, மனமகிழ்ச்சியுடன் பெருமுனிவர்களின் நன்னெறியில் திடமான உறுதியுடன் இருக்கிறார்கள். காட்டில் வாழ்வதில் உற்சாகம் உடையவர்களாக, காட்டுக் கனிகளைப் புசித்துக் கொண்டு, தந்தையின் மேன்மையான வாக்குறுதியை மெய்ப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.'' (21,22)

இவ்வாறு சாரதி மிகவும் பொருத்தமான வாதங்களால், மகனைப் பற்றிய சோகத்தால் தவித்துக் கொண்டிருந்த கௌசல்யையைச் சமாதானப்படுத்தினாலும், 'என் அன்பே! குழந்தாய்! இராகவா!' என்று அவர் புலம்புவதை நிறுத்தவில்லை. (23)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
அறுபதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்தொன்று

கௌசல்யை நிந்தித்தல்

எல்லா மக்களுக்கும் ஆனந்தத்தைக் கொடுப்பவரும், தருமத்திலேயே நிலைகொண்டவருமான இராமன் காட்டிற்குப் போய்ச் சேர்ந்துவிட்டதை அறிந்து கொண்டதும், மிகவும் மனவேதனையுடன் அழுது கொண்டு கணவரைப் பார்த்து கௌசல்யை இவ்வாறு சொன்னார்— (1)

''மூன்று உலகங்களிலும் தாங்கள் கருணைமிக்கவர், பெருங்கொடையாளர், அன்பாகப் பேசுகிறவர் என்ற புகழ் பரவியிருக்கிறது. (தங்கள் போக்கு, அதை நிரூபிக்கும் வகையில் இல்லையே?) மன்னர்களில் முதன்மையானவரே! சௌக்கியத்திலேயே வளர்ந்தவர்களும், (தற்சமயம்) மனவேதனை கொண்டவர்களுமான அவ்விரு குமாரர்களும் சீதையும் காட்டில் எவ்வாறு துன்பங்களைச் சகித்துக் கொள்வார்கள்? இளம்பெண்ணும், ஒரு குழந்தைக்கு தாய் ஆகாதவளும், மிருதுவான மேனி உடையவளும், எல்லாச் சுக–சௌக்கியங்களையும் அனுபவிக்க வேண்டியவளுமான சீதை வெட்ப–தட்பங்களை எவ்வாறு தாங்கிக் கொள்வாள்? (2–4)

விசாலமான கண்களையுடைய சீதை நல்ல மணத்தோடும் சுவையோடும் கூடிய உணவு வகைகளைப் புசித்துப் பழகியவள். காட்டில் தானாக வளர்ந்து கிடக்கும் தானியங்களை எவ்வாறு உணவாகச் சாப்பிடுவாள்? மாசற்றவளான அவள் செவிக்கினிய பாட்டு, வாத்திய இசையைக் கேட்டு மகிழ்ந்தவள். (காட்டில்) பச்சைப் புலாலை உண்ணும் சிம்மங்களின் பயங்கரமான கர்ஜனையைக் கேட்டு, எவ்வாறு பயப்படாமல் இருப்பாள்? மகேந்திரனுடைய கொடி போன்று கம்பீரமாய் நின்று வெற்றியை அறிவிப்பவனும், மிகவும் ஆற்றல் படைத்தவனும், உருண்டு திரண்டு விளங்கும் புஜங்களை உடையவனுமான இராமன், இரும்புத் தடி போன்ற தன் கையையே தலையணையாகக் கொண்டு எங்கே படுத்து உறங்குகிறானோ? (5–7)

தாமரை வண்ணம்; அழகிய நுனிமுடி; சிறந்த கமலப்பூவின் நறுமணம் போன்ற மூச்சுக்காற்று; அரவிந்த மலர் போன்ற கண்கள் – இவ்வாறு அழகுற விளங்கும் இராமனின் முகத்தை நான் என்றைக்குக் காண்பேன்? என்னுடைய இதயம், நிச்சயமாக இரும்பால்

செய்யப்பட்டதாகத்தான் இருக்கவேண்டும். அவனைக் காணாதிருந்தும் இன்னும் ஆயிரம் சுக்கலாகப் போகவில்லையே? என் உறவினர்களை (இராமன் முதலியோரை) இரக்கமில்லாமல் வெளியே துரத்திவிட்டீர்கள். சுகபோகங்களுக்கு உரிய அவர்கள், காட்டில் கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டு அலைந்து திரிந்து கொண்டிருக்கிறார்கள். (8–10)

பதினைந்தாவது ஆண்டில் இராமன் திரும்பி வந்தாலும், அரசையும் கருவூலத்தையும், பரதன் அவனிடம் ஒப்படைப்பான் என்று எனக்குத் தோன்றவில்லை. சிலர், தம் மூதாதையர் சிராத்தங்களில் தங்கள் சொந்தக்காரர்களையே முதலில் உணவருந்த வைக்கிறார்கள். சிராத்த கர்மா நிறைவேறிவிட்டதாகத் திருப்திபட்டுக் கொண்டு, பின்னர் அந்தணோத்தமர்கள் பக்கம் பார்வையைச் செலுத்துகிறார்கள். அது சமயம், கௌரவம் பாராட்டுபவர்களும், வேதவித்துக்களும், தேவர்களுக்கு ஒப்பானவர்களுமான இருபிறப்பாளர்கள் (முதல் உணவு கிடைக்காத நிலையில்) பின்னர் அமிர்தமே கொடுக்கப்படுவதாக இருந்தாலும், அதனை ஏற்றுக்கொள்வதில்லை. (11–13)

முதல் பந்தியில் போஜனம் செய்து முடித்தவர்கள் அந்தணர்களேதான் என்றாலும், நுனிமேயப்பட்ட புற்களை உயர் சாதிக் காளைகள் திரஸ்கரிப்பதைப் போல, தெள்ளறிவு கொண்ட வேதவித்தகர்கள், (முதல் பந்தியில் பரிமாறியபின் மிகுந்திருக்கும் உணவை) ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். மாமன்னரே! அதுபோலவே இளைய சகோதரனால் அனுபவிக்கப்பட்ட ராஜ்யத்தை சகல விதங்களிலும் உயர்ந்த, மூத்த சகோதரன் மறுத்தலிக்காமல் இருப்பானா? எப்படி வேறொரு விலங்கினால் கொண்டுவரப்பட்ட அல்லது புசித்து மீதி வைக்கப்பட்ட வேட்டை விலங்கை ஒரு புலி விரும்புவதில்லையோ, அதுபோல மானுடப்புலி போன்ற இராமன் பிறரால் சுவைக்கப்பட்ட ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ள மாட்டான். (14–16)

ஒரு வேள்வியில் உபயோகப்படுத்தப்பட்ட (மிகுந்திருக்கும் பொருட்களான) ஹவிஸ், நெய், மாவினால் பக்குவம் செய்யப்படும் 'புரோடாசம்' என்னும் நிவேதனப் பொருள், குச–தர்ப்பங்கள், கருங்காலி யூபக்கால்கள் முதலியவைகளை வேறொரு வேள்வியில் உபயோகப்படுத்த மாட்டார்கள். இவ்வாறே, சத்து நீக்கப்பட்ட பானம், சோமலதை இல்லாத யக்ஞம் (தேவர்களால்) ஏற்கப்படாததைப் போல, (பரதனால்) அனுபவிக்கப்பட்ட இந்த நாட்டை இராமன் ஏற்றுக் கொள்ளமாட்டான். மகாபலம் பொருந்திய புலியின் வாலைத் தொட்டால்கூட, அது எப்படிப் பொறுத்துக் கொள்ளாதோ, அவ்வாறே, இந்த (பரதனால் அனுபவிக்கப்பட்ட அரசைப் பெற்றுக் கொள்வது என்ற) அவமானத்தை, இராமன் பொறுத்துக் கொள்ளமாட்டான். (17–19)

பெரும்போரில் உலகங்கள் எல்லாம் திரண்டு வந்தாலும்கூட, இவனை அச்சுறுத்த முடியாது. அறத்தையே உயிர்நிலையாகக் கொண்ட இவன், தருமநெறி தவறிய மனிதர்களை அறநெறியைப் பின்பற்றியே வெல்ல விரும்புகிறான். (தன்னுடைய புஜபலத்தைக் காட்டி ஜெயிக்க விரும்பவில்லை.) அஸ்திர பலமும் உடல் வலிமையும் கொண்ட இவன் பொன்மயமான பாணங்களால், யுகமுடிவில் (ஸம்வர்த்தகன் என்ற அக்னிதேவன் போல) அனைத்துப் பிராணிகளையும், ஏன், பெருங்கடல்களையும்கூட எரித்துப் பொசுக்கிவிடுவானே? அத்தகைய பெருமை பெற்ற சிங்கம் நிகர் ஆற்றலும், காளையொத்த கண்களும் கொண்ட வீரபுருஷனாகிய அவன், மீன்குஞ்சானது தன் தகப்பன் மீனாலேயே நாசம் செய்யப்படுவதைப் போல, (தன் தந்தையாலேயே வஞ்சிக்கப்பட்டான்; அரசுரிமை பறிக்கப்பட்டது.) (20–22)

அறம் தவறாத தங்கள் மைந்தன் தங்களால் நாடு கடத்தப்பட்டிருக்கிறான் என்ற விஷயத்தைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்தால், அரசகுலத்தினருக்கான தொன்மையான அறநூல் விதிகள், உங்களுக்குப் பொருந்துமா? (பொருந்தும் என்பது சந்தேகம்தான்.) மன்னரே! ஒரு பெண்ணுக்கு முதன்மையான கதி, அவளுடைய கணவன்; இரண்டாவதாக மகன்; மூன்றாவதாக உறவினர்கள்; நான்காவதாக எதுவுமே இவ்வுலகில் இல்லை. (23,24)

(என்னுடைய முதல் கதி, என் சக்களத்தியின் வசத்தில் இருப்பதால்) தாங்கள் எனக்கு உற்றதுணை (என்ற நிலையில்) இல்லை. இராமனோ காட்டிற்குப் போய்விட்டான். (இரண்டாவது புகலிடமான இராமனுடன் இருக்கலாம் என்றாலோ, நான் தங்கள் பாதசேவையை விட்டுவிட்டு) நான் காட்டிற்குப் போக விரும்பவில்லை. எல்லா வழிகளாலும் நான் தங்களால் நசுக்கப்பட்டு விட்டேன். இந்தப் பேரரசும், அதைச் சார்ந்துள்ள சிறு நாடுகளும் தங்களால் நிர்க்கதியாக்கப்பட்டுவிட்டன; அமைச்சர்களும் தாங்களும் வீழ்ந்துவிட்டீர்கள்; நானும் என் புத்திரனும் பெரும்பேற்றை இழந்துவிட்டோம்; நகர மக்கள் எல்லோரும் வஞ்சிக்கப்பட்டு விட்டார்கள். ஆனால், உங்களுடைய ஆசை மனைவி (கைகேயி), அன்பு மகன் (பரதன்) ஆகிய இருவர் மட்டும் மகிழ்ச்சி அடைந்திருக்கிறார்கள்.'' (25,26)

மன்னர், கோசலையின் கொடிய சொற்களோடு கூடிய நிந்தனையைக் கேட்டு மிகவும் துக்கமடைந்து மனம் கலங்கினார். தான் முன்பு செய்த ஒரு பாவம் நினைவுக்கு வந்ததும் மனவேதனையால் மிகவும் தத்தளித்தார். (27)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
அறுபத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்து இரண்டு

கௌசல்யைக்கு ஆறுதல் கூறுதல்

துயரத்தோடும் அடங்காத சினத்தோடும் இருந்த இராமனின் தாயார், கடுமையாகக் கூறிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, தசரதர் மிகவும் துயரமடைந்து சிந்தனையில் ஆழ்ந்தார். புலன்களால் அலைக்கழிக்கப்பட்ட மன்னர், சிந்தனை வயப்பட்டிருந்ததால் பெரிதும் கலக்கமடைந்தார். எதிரிகளை வாட்டுபவரான அவர் நீண்ட நேரம் சென்றபின் சுயநினைவை அடைந்தார். அவர் தன்னுணர்வு பெற்றவுடன் வெம்மையான நீண்ட பெருமூச்சுவிட்டார். கௌசல்யை அருகில் இருப்பதைக் கண்டு மறுபடியும் கவலை அடைந்தார். (தேவியார் மறுபடியும் தன்னைக் குற்றம் கூற ஆரம்பித்து விடுவாரோ? என்ற கவலை.) (1–3)

அவர், இவ்வாறு சிந்தனையில் மூழ்கியிருந்தபோது, முன்பு 'சப்தவேதி' என்ற (தனித்தன்மை வாய்ந்த) பாணத்தின் மூலம், அறியாமையால் தான் செய்த ஒரு தீயசெயல் நினைவுக்கு வந்தது. முன்பு நடந்த நிகழ்ச்சியினாலும், இராமன் பிரிவு என்ற சோகத்தினாலும் மனம் தடுமாறிய மாட்சிமை மிக்க மன்னர் இரு சோகங்களாலும் பரிதவித்தார். இரு சோகங்களாலும் தகிக்கப்பட்ட வேந்தர், மெய் நடுங்கி, தலைகுனிந்து, கைகளைக் கூப்பிக் கொண்டு கோசலையைச் சமாதானம் செய்யும் பொருட்டுப் பின்வருமாறு கூறினார்— (4–6)

''கௌசல்யே! இதோ பார்! நான் இரு கைகளையும் கூப்பி, உன்னை வேண்டிக் கொள்கிறேன். நீ எப்போதும் மற்றவர்களிடத்தில்கூட அன்பும் கருணையும் உடையவள். (என்னிடம் மட்டும் ஏன் கடுமையாகப் பேசுகிறாய்?) தேவி! தருமத்தைப் பற்றி ஆராயும் பெண்களுக்கு கணவன்தான் – அவன் நற்குணம் பெற்றவனாயினும் சரி, துர்குணம் பெற்றவனாயினும் சரி – கண்கண்ட தெய்வம். உலகத்தில் நடைபெறும் நல்லது–தீயதைக் கண்டு அறிந்தவள், நீ; அறநெறியிலேயே எப்போதும் பற்றுக் கொண்டிருப்பவள். உனக்கும் இப்போது துக்கம்தான் என்றாலும் மிகவும் துக்கப்பட்டுக் கொண்டிருக்கும் என்னிடம் இவ்வளவு கடுமையாகப் பேசக்கூடாது.'' (7–9)

நொந்த நிலையிலிருந்த தசரத வேந்தனின் இரங்கத்தக்க அந்தச் சொற்களைக் கேட்டு, புதிதாகக் கொட்டிய மழையின் நீர், மேற்கூரையிலிருந்து குழாய் வழியாகக் கீழே வேகமாகப்

பாய்ந்து விழுவதைப் போல, கௌசல்யை கண்ணீரைப் பெருக்கினார். (கணவரைக் கடிந்து பேசியதால் தருமம் தவறிவிட்டேனோ? என்ற) அச்சத்தால் உடல் நடுங்கி, கண்களில் நீர்வழிய, கணவரின் கூப்பிய இருகரங்களையும் தாமரை மலர் போல் தன் தலையின்மீது வைத்துக் கொண்டு, பதற்றத்துடன் விரைவாகப் பேச ஆரம்பித்தார்— (10,11)

''ஐயனே! கருணை காட்டுங்கள்; தலைவணங்கிக் கேட்கிறேன்; தங்கள் முன் தரையில் விழுகிறேன். (என்ன விபரீதம், இது!) தாங்கள் (தங்கள் மனைவியான என்னிடம்) கைகூப்பி மன்றாடுவதா? (அடக்கஷ்டமே!) எனக்கு இப்படி ஓர் அவமானமா? மாவீரரே! கணவன் என்பவர் ஒரு மடந்தையால் இவ்வுலகிலும் அவ்வுலகிலும் மதித்துப் போற்றத்தக்கவர். பேரறிஞரான கணவனால் எந்த மாது கைகூப்பி வணங்கிப் பிரார்த்திக்கப்படுகிறாளோ, அவள் 'பெண்' என்று கூறத்தக்கவளே அல்லள். (12,13)

தருமம் அறிந்தவரே! நான் அறம் அறிந்தவள். தாங்கள் சத்தியம் தவறாதவர் என்பதையும் அறிவேன். புத்திரனைப் பிரிந்த துயரத்தால், முன்பின் யோசியாமல் நான் தவறாக ஏதேதோ பேசிவிட்டேன். மனத்துயரம் தைரியத்தை அழிக்கிறது; மனத்துயரம் அறநூல் ஞானத்தை அழிக்கிறது; மனத்துயரம் எல்லாவற்றையும் அழிக்கிறது; மனத்துயரம் போன்ற பரம விரோதி உலகில் இல்லவே இல்லை. பல பகைவர்கள் சேர்ந்து அடிக்கும் அடியைத் தாங்கிக் கொள்ள முடியும். (ஆனால்,) தெய்வாதீனமாக வந்த தாக்குதல், மிகக்குறைந்த அளவேயாயினும் சகித்துக் கொள்ள முடியாது. (14–16)

இராமன் வனவாசத்திற்குச் சென்று ஐந்து இரவுகள் கழிந்திருக்கின்றன. என் மகிழ்ச்சியை இழந்து, ஐந்து நாட்கள் நான் அனுபவித்த துயரத்தைப் பார்த்தால் ஐந்து ஆண்டுக் காலம் ஆனாற்போல் இருக்கிறது. நதிகள் வேகமாக நீரைப் பெருக்கிக் கொண்டு வந்து கொட்டுவதால், பெருங்கடலில் நீர்ப்பெருக்கம் உண்டாவதைப் போல, அவனையே சிந்தித்துக் கொண்டிருக்கும் இந்தத் துயரம், என் இதயத்தில் வளர்ந்து கொண்டே இருக்கிறது.'' (17,18)

இவ்வாறு, கௌசல்யை மன ஆறுதலடைந்து சமாதானமாகப் பேசிக்கொண்டிருக்கும் வேளையில், சூரியனுடைய கிரணங்கள் மறைந்து இரவு வேளை வரத் தொடங்கியது. பின்னர், கௌசல்யா தேவியின் வார்த்தைகளால் மனம் தேற்றப்பட்ட மன்னர், சோகத்தின் பிடியில் சிக்கி உறக்கத்தின் வசப்பட்டார். (19,20)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
அறுபத்து இரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்து மூன்று

முனிகுமாரனின் கதை

பின்னர், மன்னர் தசரதர் ஒரு முகூர்த்த காலம் கழித்துக் கண் விழித்தார்; சோகத்தினால் அலைக்கழிக்கப்படும் அவர் சிந்தனையில் ஆழ்ந்தார். இந்திரனையொப்ப காந்தி படைத்த அவரை, இராம–லட்சுமணர்களின் வெளியேற்றத்தால் உண்டான மனத்துயரம், (பிரகாசம் மிக்க) சூரியனை ராகு பீடித்தாற்போல் சற்றே மங்கச் செய்தது. இராமன் மனைவியுடன் வெளியேறிய பிறகு, கோசலை மன்னர், தான் முன்பு செய்த ஒரு பாவச் செயலை நினைவுபடுத்திக் கொண்டு, கருங்கண்ணாளாகிய கௌசல்யையிடம் சொல்ல விரும்பினார். இராமன், நாட்டிலிருந்து வெளியேறிக் காட்டிற்குச் சென்ற ஆறாம் நாள் நடுநிசியில், தான் முன்னர் செய்த ஓர் அநியாயச் செயலை நினைத்துக் கொண்டார். (1–4)

புத்திரனின் பிரிவினால் மனவேதனைப்பட்டுக் கொண்டிருந்த வேந்தர், தன் தீவினையை ஞாபகப்படுத்திக் கொண்டு, செல்வப் புதல்வனின் பிரிவினால் வருந்தும் கோசலையிடம் பின்வருமாறு கூறினார்— ''கல்யாணி! உத்தமியே! ஒருவன் நல்லதோ, தீயதோ எதைச் செய்தாலும், அதன் விளைவாக, அவன் அதை (சுகத்தையோ, துன்பத்தையோ) அடைந்தே தீருவான். எவனொருவன் செயல்களைச் செய்யத் தொடங்கும் போதே, அதன் பயன் மிகுந்ததா அல்லது குறைவானதா? என்பதை எண்ணிப் பார்க்காமலும், தீமையை விளைவிக்கக் கூடியதா? என்பதை அறியாமலும் செயல்படுகிறானோ, அவன் அறிவற்றவன் எனப்படுகிறான். (5–7)

கண்கவர் மலர்களைக் கண்டு, அவற்றிலிருந்து இனிய பழங்கள் கிடைக்கும் என்று கருதி, (சிறிய பூக்கள் பூக்கும்) மாமரங்களை வெட்டிச் சாய்த்துவிட்டு, (அழகிய மலர்கள் பூக்கும்) புரச மரங்களுக்குத் தண்ணீர் ஊற்றி வளர்ப்பவன், காய் தோன்றிக் கனியாகும் காலத்தில் வருந்தவே செய்வான். 'இந்தக் கர்மாவின் பலன் என்ன?' என்பதைத் தெரிந்து கொள்ளாமலே, கர்மாவை வெகு அக்கறையுடன் செய்பவன், கர்மாவானது பலன் கொடுக்கத் தொடங்கும்போது, அது அற்பமாகவோ அல்லது சிறிதளவுகூட பயன்படாததாகவோ இருப்பதைக் கண்டு, புரச மரத்தை வளர்த்து ஏமாந்தவன் போல துக்கத்தில் ஆழ்கிறான். (8,9)

நானும் அப்படித்தான்! மாந்தோப்பை அழித்துவிட்டு புரசங்காட்டை வளர்த்தேன்! பலன் கிடைக்கும் வேளையில் இராமனை (அரிய வேள்வி இயற்றி, பெற்ற மகனுக்கு இளவரசுப் பட்டம் சூட்ட வேண்டிய தருணத்தில்) கைவிட்டுவிட்டு, புத்திகெட்டுப் போன நான் தவியாய்த் தவிக்கிறேன். கௌசல்யே! 'இந்த அரசகுமாரன் சப்தவேதி (இலக்கைக் கண்ணால் பார்க்காமல், அதன் ஒலியைக் காதால் கேட்டே பாணம் செலுத்தி அடித்து வீழ்த்தும் தனிச்சிறப்பு) பெற்றவன்!' என்று பெரும் புகழ்பெற்ற, (அப்போது) இளவரசனாக இருந்த என்னால் ஒரு மாபெரும் பாவம் செய்யப்பட்டது. (10,11)

அப்போது என்னால் செய்யப்பட்ட அந்தத் தீவினையின் பயன், இப்போது என்னை வந்தடைந்திருக்கிறது – விவரமறியாத சிறுவன் அறியாமை காரணமாக விஷம் கலந்த உணவைச் சாப்பிட்டுவிட்டதைப் போல. (அறியாச் சிறுவன் என்பதால் விஷம், தன் வேலையைச் செய்யாமல் விடாது.) எப்படி ஒரு பாமர மனிதன், புரச மலர்களின் வனப்பில் மயங்கி, வளர்த்து, பயன்படத்தக்க பலன் ஏதும் பெறாமல் ஏமாந்து போவானோ, அதுபோல சப்தத்தைக் கேட்டு இலக்கை வீழ்த்தும் நுட்பத்தால் செருக்கடைந்து, அதன் விளைவு பயங்கரமானது என்பதை அறியாமல் போனேன். (12,13)

தேவி! நீ, கன்னிப்பெண்ணாக இருந்த காலம். நான் இளவரசனாக இருந்தேன். அப்போது, என் ஊக்கத் துடிப்பை வளர்க்கும் மாரிக்காலம் வந்தது. சூரியன், வெம்மையான தன் கிரணங்களால் உலகை எரித்து, பூமியின் தண்ணீரை உறிஞ்சிவிட்டு, மாண்டு போனவர்கள் நடமாடும் பயங்கரமான தென்திசையை அடைந்திருந்தார். அப்போது, நீருண்ட கருமேகங்கள் தோன்றின. உடனே, வெம்மை மறைந்தது. தவளை, சாதகப்புள், மயில் ஆகியவை மனம் களித்தன. (14–16)

(மழை கொட்டியதால்) பறவைகளது இறக்கைகளின் மேற்புறம் நனைந்து போகவே, அவை நீராடிவிட்டு வந்தது போல் காணப்பட்டன. மழை–காற்றின் வேகத்தால் அசைந்தாடும் மரக்கிளைகளின் நுனியை வெகு சிரமப்பட்டுப் பறந்து அடைந்தன. அதுவரை பொழிந்த மழையாலும், அடிக்கடி பெய்து கொண்டிருக்கும் மழையாலும் மூடப்பட்ட மதங்கொண்ட யானைகளை உடைய மலை, அலைகள் இல்லாத சமுத்திரம் போல் விளங்கிற்று. மலையிலிருந்து விழும் அருவிகளின் நீர் தெள்ளியதாக இருந்தாலும், மலையின் தாதுப் பொருட்களின் சேர்க்கையால் வெளுத்தும் சிவந்தும் (காட்டுத் தீயின்) சாம்பல் கலக்கப் பெற்றதாய், பாம்புகளைப் போன்று வளைந்து வளைந்து விழுந்தது. (17–19)

உடலுக்கும் உள்ளத்துக்கும் மிகவும் இன்பம் தருவதாக இருந்த அந்தச் சமயத்தில், உடற்பயிற்சியில் விருப்பங்கொண்ட நான், (வேட்டையாடுவதற்காக) வில்லும் அம்பும் ஏந்தியவனாக, தேரில் ஏறிக்கொண்டு சரயூ நதியின் கரைப் பகுதியை அடைந்தேன். (தேரோட்டி இல்லாமல் தானே தேரைச் செலுத்தினார் என்பது ஊகிக்கத்தக்கது.) (20)

புலன்களை வசப்படுத்தாதிருந்த நான், இரவில் நீர் குடிப்பதற்காகக் காட்டெருமை, யானை அல்லது வேறு ஏதேனும் கொடிய காட்டு மிருகம் ஆற்றுக்கு வந்தால் கொன்றுவிடலாம் என்ற விருப்பத்தோடு இருந்தேன். அப்போது, நல்ல கும்மிருட்டு. குடத்தில் தண்ணீர் நிரப்பும் ஓசை கேட்டது. (சத்தம் எப்படி எழுகிறது என்பது) கண்ணுக்குப் புலப்படாததால், அந்த ஓசை ஒரு யானை தண்ணீர் குடிக்கும்போது உண்டாகும் ஓசை போலவே இருந்தது. உடனே, நான், ஒளிவீசுவதும் விஷப்பாம்பைப் போன்றதுமான ஓர் அம்பை எடுத்து, யானையை இலக்கு வைத்து ஒலி வந்த திசையில் செலுத்தினேன். (வெளிச்சம் வராத) விடியற்கால வேளை. விஷப்பாம்பு போன்ற கூரிய பாணத்தை நான் விட்டவுடனே, காட்டில் வசிக்கும் ஒரு மனிதரின் (சோகக்) குரல் அவ்விடத்திலிருந்து தெளிவாகக் கேட்டது. (21–24)

அவர்மேல் அம்பு விழுந்ததும், அம்பினால் உயிர்நிலையில் தாக்கப்பட்டு, ஆற்று நீரில் ஆ... ஆ... என்று ஓலமிட்டபடி விழுந்த ஒரு மானுடரின் குரல் கேட்டது. 'தவம் செய்கின்றவர்களான என்னை போன்றவர்கள் மீதும் ஆயுதப் பிரயோகமா?... இரவு வேளையில், யாரும் சஞ்சாரம் செய்யாத இந்த இடத்தில், தண்ணீர் எடுப்பதற்காக வந்தேன். நான் யாருக்கு எத்தகைய தீங்கு செய்தேன்? என்னை அம்பினால் தாக்கியது யார்? மற்றப் பிராணிகளுக்குத் தொல்லை கொடுக்கும் வழியை ஒதுக்கிவிட்டு, காட்டில் கிடைக்கக்கூடிய பழம்–கிழங்குகளை உண்டு, காட்டில் முனிவராய் வாழ்கிறேன். (25–27)

மரவுரி, மான்தோல் ஆடை அணிந்து, சடைமுடி தரித்து வாழும் என்னைப் போன்ற முனிவனுக்கும் ஆயுதத்தால் கொலை என்பது எங்கே விதிக்கப்பட்டிருக்கிறதோ? என்னுடைய கொலையினால், எவன் எந்தப் பயனை அடைந்தான்? அவனுக்கு நான் என்ன குற்றம்தான் செய்தேன்? எவ்வித நற்பலனையும் தராத இந்தச் செயல், தீவினையை மட்டுமே தரக்கூடியது. என்னைக் கொன்றவனை யாரும் சாத்விகன் என்று சொல்லமாட்டார்கள். ஆசார்யனுடைய மனைவியோடு உறவு கொண்ட மாபாதகத்தைச் செய்தவனைப் போலவே பாவியாகக் கருதுவார்கள். நான், என்னுடைய உயிர் போய்விட்டதே என்பதற்காக வருந்தவில்லை. (28–30)

நான் சாகடிக்கப்பட்டதில், என் வருத்தமெல்லாம் என் தாய்–தந்தையர் என்ற இருவரைப் பற்றித்தான். வயோதிகர்களான அவ்விருவரும் நெடுங்காலமாக, என்னால் பாதுகாக்கப்பட்டார்கள். நான் இறந்து போய்விட்ட பின், அவர்கள் எவ்வாறு வாழ்க்கையை நடத்துவார்கள்? என்னுடைய தாய்–தந்தையர் வயோதிகர்கள். (அவர்களுக்குப் பணிவிடை செய்து வந்த) நானோ ஒரே அம்பினால் கொல்லப்பட்டுவிட்டேன். (இனி, அவர்களுக்கு ஆதரவு யார்? மகாபாவியும் அறிவு முதிர்ச்சி அடையாதவனுமான எவனாலோ, நாங்கள் எல்லோரும் (மூவரும்) கொல்லப்பட்டுவிட்டோம்.' (31,32)

மிகவும் இரக்கத்தை வரவழைக்கும் அந்தப் பேச்சைக் கேட்டு வருந்தியவனும், தருமத்தில் குறியான நோக்கமுடையவனுமான என்னுடைய கைகளிலிருந்து வில்லும் அம்பும் நழுவி தரையில் விழுந்தன. அந்த இரவு வேளையில், பலவாறாகப் புலம்பிப் பேசிய இரக்கக் குரலைக் கேட்டு, தாங்க முடியாத துயரத்தால் நான் மிகவும் மனக்குழப்பமுற்றவனாக சுய உணர்வை இழந்தவனானேன். நான் தைரியம் இழந்து, மனம் நொந்து, அவ்விடத்திற்கு வந்து, சரயூவின் கரையில் ஒரு தவசி அம்பினால் அடிபட்டுக் கிடப்பதைக் கண்டேன். (33–35)

அவர் தலையின் சடாமுடி அவிழ்ந்திருந்தது; நீருடன் குடம் கவிழ்ந்திருந்தது; உடல் முழுவதிலும் இரத்தமும் புழுதியும் படிந்திருந்தன; அம்பின் வலியைத் தாங்கிக் கொண்டு

தரையில் கிடந்தார். பயந்து நடுங்கிக் கொண்டு, குழம்பிய மனத்துடன் இருந்த என்னை, அவர் நிமிர்ந்து பார்த்துவிட்டு, தன் உள்ளொளியால் என்னை எரித்துவிடுபவரைப் போல கொடூரமான (பின்வரும்) சொற்களைக் கூறினார்— (36,37)

'அரசனே! காட்டில் வசித்துக் கொண்டிருக்கும் நான், உங்களுக்கு என்ன குற்றம் செய்தேன்? என் பெற்றோருக்குத் தண்ணீர் எடுத்துச் செல்வதற்காக வந்த நான், உன்னால் தாக்கப்பட்டேன். என் உயிர்நிலை ஓர் அம்பினால் தாக்கப்பட்டதனால் பார்வையற்ற வயோதிகர்களான என்னுடைய தாயும் தந்தையும் அல்லவா கொல்லப்பட்டிருக்கிறார்கள்? அவர்கள் இருவரும் உடல்பலம் குன்றியவர்கள்; பார்வை இல்லாதவர்கள்; என்னை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்கள்; தாகத்தோடு இருப்பவர்கள். வெகுநேரத்திற்கு என் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, மிகவும் கஷ்டத்துடன் நீர் வேட்கையைத் தங்களுக்குள்ளேயே அடக்கிக் கொள்ளப் போகிறார்கள். (38–40)

(நான்) செய்த தவத்திற்கோ, அறிந்து கொள்ளப்பட்ட சாஸ்திர ஞானத்திற்கோ பலன் கொடுக்கும் திறமை இல்லை என்பது நிச்சயம்! (பாருங்களேன்! எனக்கு இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது!) நான் அம்பினால் அடிபட்டு உயிர் போகும் தறுவாயில் தரையில் கிடக்கிறேன் என்ற செய்தியே என் தந்தைக்குத் தெரியாதே? அவருக்குத் தெரிந்தாலும், தள்ளாதவரும் ஓடியாடி நடக்க முடியாதவருமான அவரால் என்னதான் செய்ய முடியும்? ஒரு மரம் வெட்டித் தள்ளப்படும்போது, அருகிலிருக்கும் இன்னொரு மரம் அதைக் காப்பாற்ற முடியுமா, என்ன? (41,42)

ரகுகுல மன்னனே! நீங்களாகவே என் தந்தையிடம் விரைவாகச் சென்று செய்தி தெரிவியுங்கள். (அப்படிச் செய்தால்தான்) பலமாகப் பற்றி எரியும் நெருப்பு ஒரு காட்டையே அழித்துவிடுவதைப் போன்ற கோபம் கொண்ட அவர், உங்களை அழிக்காமல் விட்டுவிடுவார். மன்னரே! இந்த ஒற்றையடிப்பாதை வழியாகச் சென்றால், என் தந்தையின் ஆசிரமத்தை அடையலாம். அங்கே சென்று அவரைச் சமாதானப்படுத்துங்கள். அவருக்குக் கோபம் வந்தாலும் (மிகக் கடுமையாக) உங்களைச் சபிக்கமாட்டார். (43,44)

மன்னரே! ஆற்று நீரின் வேகம் கரையோர மணற்திட்டுகளைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைத்து விடுவதைப் போல, கூர்மையான அம்பு என் உயிர்நிலையைச் சிறிது சிறிதாக வதைக்கிறது. என் உடலிலிருந்து பாணத்தைப் பிடுங்கி விடுங்கள்.' 'உடலில் பாணம் இருந்தால் துன்பம்; எடுத்துவிட்டாலோ உயிர்போய்விடும்' என்று பாணத்தை எடுக்கும் விஷயத்தில் எனக்குத் தடுமாற்றம் ஏற்பட்டது. முனிகுமாரரும் (பாணத்தை எடுப்பது குறித்து எனக்கு) ஏற்பட்டுள்ள துயரம், தவிப்பு, வருத்தம் ஆகியவற்றால், அப்போது என் உள்ளம் கவலைப்படுவதைப் புரிந்து கொண்டார். (45–47)

அவரால் பேச முடியவில்லை; உடல் நடுங்குகிறது; உடலைத் திருப்பி கொண்டு புரண்டபடியே, உயிர் போகும் நிலையில் மிகவும் துன்பத்தை அடைந்து வெகுவாக முயற்சி செய்து என்னை நோக்கி(ப் பின்வருமாறு) கூறினார்— 'என்னுடைய தைரியத்தைக் கொண்டு, பொங்கிவரும் சோகத்தைத் தடுத்து நிறுத்தி, மனத்தை நிலையாக வைத்துக் கொண்டிருக்கிறேன். (இனி, நான் சொல்லப் போவதைக் கேளுங்கள்.) 'பிரும்மஹத்தி பாவம் நேர்ந்துவிட்டதோ?' என்ற எண்ணத்தை உங்கள் மனத்திலிருந்து நீக்கிவிடுங்கள். மன்னரே! நான் இருபிறப்பாளன் அல்லன். எனவே, நீங்கள் கவலைப்பட வேண்டாம். (48,49)

மக்கள் தலைவரே! வேளாள மங்கையிடம் வணிகருக்குப் பிறந்தவன், நான்.' அவர் இவ்வாறு கூறியதும் உயிர்நிலையில் பாணத்தால் அடிபட்டவரும், தரையில் கிடந்து புரள்பவரும், உடல் சோர்ந்து கிடந்தவருமான அவர் உடலிலிருந்து பாணத்தை, நான் பிடுங்கி எடுத்தேன். அந்தத் தவச்செல்வர் உடல் நடுக்கத்துடன் என்னை ஆழமாகப் பார்த்தவாறே உயிரைவிட்டார்.

உத்தமியே! அவருடைய உடல் தண்ணீரால் நனைந்திருந்தது. உயிர்நிலையில் காயம் ஏற்பட்டதால் மிகுந்த சிரமத்துடன் புலம்பிக் கொண்டு, சரயூ நதிக்கரையில் விழுந்து கிடந்த அவரைப் பார்த்து, நான் மிகவும் துயரமடைந்தேன்.'' (50–52)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
அறுபத்து மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்து நான்கு

தசரதர் சாபம் பெற்ற வரலாறு

இவ்வாறு இதற்கு முன் நிகழ்ந்திராத மாமுனிவரின் கொலையைப் பற்றிப் புலம்பிக் கொண்டே, தருமாத்மாவான தசரதர் கௌசல்யையிடம் தொடர்ந்து சொன்னார்— ''அறியாமையால் பெரிய பாவச்செயலைச் செய்துவிட்ட நான், பொறிகள் கலங்கியவனாக, இனி எதைச் செய்தால் நன்மை விளையுமென்று தனியாகவே எனக்குள் சிந்தித்தேன். பின்னர், தூயதான தண்ணீர் நிரம்பிய குடத்தை எடுத்துக் கொண்டு, (முனிகுமாரரால்) கூறப்பட்ட வழியைப் பின்பற்றிச் சென்று, அந்த ஆசிரமத்தை அடைந்தேன். (1–3)

அங்கே பலவீனர்களும், பார்வையற்றவர்களும், முதியவர்களும், தம்மை வழிநடத்திச் செல்பவரை இழந்தவர்களும், அவரையே எதிர்பார்த்துக் கொண்டு பேசியபடி அமர்ந்திருந்தவர்களும், நடக்க முடியாதவர்களும், அது சம்பந்தமான நம்பிக்கையை என்னால் இழந்தவர்களும், ஆதரவற்றவர்கள் போல் எதிலும் பற்றில்லாமல் இருந்தவர்களும், சிறகுகளை இழந்த பறவையைப் போல் இருந்தவர்களுமான (அந்த முனிகுமாரனின்) பெற்றோர்களைக் கண்டேன். துயரத்தால் தாக்கப்பட்ட மனமுடையவனும், அச்சத்தால் நடுங்கும் அறிவுடையவனுமான நான், அந்த ஆசிரமத்தின் வாயிலை அடைந்ததும் மேலும் அதிகமாகத் துயரமடைந்தேன். (4–6)

என்னுடைய காலடி ஓசையைக் கேட்டவுடன், 'மகனே! ஏன் இவ்வளவு தாமதம்? சீக்கிரம் தண்ணீர் கொடு. ஏனப்பா, இவ்வளவு நேரம் தண்ணீரில் விளையாடிக் கொண்டிருந்தாய்? உன் தாயார் எவ்வளவு கவலைப்படுகிறாள், தெரியுமா? உடனே உள்ளே வா. நானோ, உன் தாயாரோ உனக்குப் பிடிக்காத ஏதேனும் ஒரு காரியத்தைச் செய்திருந்தால், பெற்றோரிடம் பக்தி செலுத்தும் நீ, அதை மனத்தில் வைத்துக் கொள்ளக் கூடாது. வேறு போக்கற்ற எங்களுக்கு நீதான் கதி. கண் பார்வையற்ற எங்களுக்கு நீதான் கண். எங்கள் உயிர் உன்னோடு இணைந்திருக்கிறது. (என்ன? நான் பேசிக் கொண்டே இருக்கிறேன்.) நீ ஏன் பதில் சொல்லமாட்டேன் என்கிறாய்?' என்று முனிவர் கேட்டார். (7–10)

அந்த முனிவரைப் பார்த்ததுமே எனக்குப் பயம் உண்டாகிவிட்டது; நா குளறிற்று; சொற்கள் வெளிவரவில்லை. பொருளில்லாத சொற்களால் பேசத் தொடங்கினேன். நான் ஒருவாறு மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, அனுபவத்தால் ஏற்பட்ட சொல்வன்மையை நிலைப்படுத்தி, மகனை இழந்துவிட்டதைக் கேட்டதும், அவருக்கு ஏற்படக்கூடிய சோகத்தை எண்ணிப் பார்த்து, அச்சம் மேலிட அவரிடம் கூறினேன்— (11,12)

'நான் தசரதர்; க்ஷத்திரியன்; மகாத்மாவான தங்கள் மைந்தன் அல்லன். இப்போது, நான் கூறப்போகும், என்னுடைய முன்வினைப் பயனாக, சான்றோர்களால் இகழப்படும் என் செயலால் தங்களுக்குப் பெருந்துயர் ஏற்பட்டிருக்கிறது. பகவானே! நீர்த்துறையில் தண்ணீர் பருக வரும் யானையையோ, பயங்கரமான ஒரு விலங்கையோ கொல்ல விரும்பி, சரயூ நதிக் கரையில் கையில் வில் ஏந்திக் கொண்டு மறைவிடத்தில் காத்திருந்தேன். அப்போது குடத்தில் தண்ணீர் நிரம்பும் சப்தம் கேட்டது. சரி, இது யானைதான் என்று எண்ணி, அம்பை விட்டுக் கொன்றேன்.

பின்னர், ஆற்றின் கரைக்குச் சென்றதும், மார்பில் அம்பு தைக்கப்பட்டு உயிர்போகும் நிலையில் இருந்தவரும், தரையில் விழுந்து கிடந்தவருமான ஒரு முனிவரைக் கண்டேன். (13–16)

அங்கே சென்றதும் அந்த பாணத்தினால் அவர் மிகவும் துன்பப்படுவதைக் கண்டேன். அவர் கேட்டுக் கொண்டபடி, உடனே உயிர்நிலையிலிருந்து அந்த பாணத்தை மேலே தூக்கினேன். பாணத்தை எடுத்தவுடனேயே அவர் சுவர்க்கத்தை அடைந்துவிட்டார் (உயிரை விட்டார்). உயிர் பிரியும் வேளையில், பார்வையற்ற பெற்றோர்களான தங்களைப் பற்றி வருந்தி புலம்பினார். அறியாமையால் தங்கள் புதல்வன் என்னால் மாய்க்கப்பட்டுவிட்டான். இது என்னவோ நடந்து முடிந்துவிட்டது. இனி, நான் என்ன செய்யவேண்டும்? என்பதைத் தாங்கள் ஆணையிட வேண்டும்.' (17–19)

நான் செய்த பாவத்தை, நானே தெரிவித்துக் கொண்டுவிட்டதால், பயங்கரமான அந்தச் செய்தியைக் கேட்ட பின்பும், பெரியோரான அந்த முனிவர், தன் வேதனையை வெளிப்படுத்த முடியாமலிருந்தார். அவர் கண்களில் நீர் நிரம்பியது; சோகத்தால் உணர்விழந்து நீண்ட பெருமூச்சுவிட்டார். கைகூப்பியவண்ணம் நின்று கொண்டிருந்த என்னை நோக்கி, மகா தேஜஸ்வியான அவர் கூறினார்— (20,21)

'மன்னனே! நீ செய்த இந்த பாவச் செயலை, நீயே வந்து என்னிடம் கூறாமலிருந்திருந்தால், அப்போதே உன் தலைச் சுக்குநூறாகப் போயிருக்கும்! அரசே! ஒரு வானப்பிரஸ்தனை மனம் அறிந்து ஒரு க்ஷத்திரியன் கொலை செய்தால், அப்படிக் கொலை செய்தவன் வஜ்ராயுதம் தாங்கிய இந்திரனாகவே இருப்பினும், (அந்த மகாபாவம்) அவனைப் பதவியிலிருந்து தள்ளிவிடும்! அதுபோலவே, தவத்தில் ஈடுபட்டிருக்கும் பிரம்மஞானியான முனிவரின் மேல் புத்திபூர்வமாக ஒருவன் ஆயுதம் எறிந்தால், அவனுடைய தலை ஏழு துண்டுகளாகப் போய்விடும்! (22–24)

இது (இந்தப் பாவச் செயல்), உன் அறியாமையால் செய்யப்பட்டது. அதன் காரணமாகவே நீ இன்னும் பிழைத்திருக்கிறாய்! மனம் அறிந்து நீ இவ்வாறு செய்திருந்தால் இக்ஷ்வாகு பரம்பரையே அழிந்து போயிருக்கும் என்றால் நீ எம்மாத்திரம்? மன்னா! அவன் விழுந்து கிடக்கும் இடத்திற்கு எங்கள் இருவரையும் அழைத்துச் செல். கடைசியாக ஒரு முறை அவனைப் பார்க்க விரும்புகிறோம்.' (பார்வையற்றவர்களான அவர்களால் எவ்வாறு பார்க்க முடியும்? என்றால், எல்லையில்லாத சோகம் காரணமாக, இந்த உண்மைகூட அவர்களுக்கு மறந்துவிட்டது! என்று விளங்கிக் கொள்ள வேண்டும்.) (25,26)

பின்னர், நான் ஒருவனாகவே மிகவும் துயரத்தில் சூழ்ந்திருந்த அவ்விருவரையும் அந்த இடத்திற்கு அழைத்துச் சென்றேன். ரத்தம் பூசிய உடலுடன், நிலைகுலைந்த மான்தோல் ஆடையுடன் காலன் வசப்பட்டு உயிரையிழந்து தரையில் கிடந்த புதல்வனை முனிவரும், அவரது மனைவியும் தொடும்படி செய்தேன். அந்த உடலை நெருங்கியதும், தவசிகளான அவ்விருவரும் தம் புதல்வனின் உடல்மேல் விழுந்தனர். தந்தை, அவனை (அந்த உடலை)ப் பார்த்துப் பின்வருமாறு சொன்னார்— (27–29)

'குழந்தாய்! என்னை ஏன் நமஸ்காரம் செய்யவில்லை? என்னுடன் ஏன் பேசாமலிருக்கிறாய்? நீ, ஏன் இப்படித் தரையில் விழுந்து கிடக்கிறாய்? எங்கள் மேல் கோபமா, உனக்கு? மகனே! நான், உன் அன்பிற்குப் பாத்திரமானவன் இல்லையா? அறம் அறிந்தவனே! உன் தாயாரைப் பார்! (எழுந்து வந்து) எங்களைக் கட்டித் தழுவிக் கொள்ள மாட்டாயா? இனிய சொற்களைப் பேசமாட்டாயா? பின்னிரவில் (வைகறைப் போதில்) சாஸ்திரம் அல்லது வேறு புராண நூல்களை இனிமையான குரலில் படிப்பதை, இனி எவரிடமிருந்து கேட்கப் போகிறேன்? (30–32)

இனி, நீராடி சந்தியாப் பிரார்த்தனைகளை முடித்து, அக்னிஹோத்திரம் முதலிய வேள்விச்சடங்குகளை நிறைவேற்றிவிட்டு, ஒரே துணையாக இருந்த மகனை இழந்துவிட்டதால்

அச்சத்தால் வருந்தியவண்ணம் உட்கார்ந்திருக்கும் எனக்கு, யார் தொண்டு செய்யப் போகிறார்கள்? செயலற்றவனும், பார்வை அற்றவனும், ஆதரவு அற்றவனுமான என்னை, காய்–கனி–கிழங்குகளைக் கொண்டு வந்து மனத்திற்குப் பிடித்தமான ஒரு விருந்தாளியை உபசரிப்பது போல, இனிமேல் யார்தான் உபசரிப்பார்கள்? செல்வமே! இதோ இருக்கிறாளே உன்னுடைய அன்னை – அறநெறியைக் கடைப்பிடிப்பவள்; பார்வை அற்றவள்; முதியவள்; புதல்வன் மேல் மிக்க ஆசை கொண்டிருந்ததால் இப்போது மனம் தவிப்பவள் – இவளை நான் எப்படிக் காப்பாற்றுவேன்? (33–35)

மகனே! நில். யமனுடைய வீட்டிற்கு இன்றைக்குப் போகாதே. நாளைய தினம் என்னுடனும், உன்னைப் பெற்றெடுத்த தாயாருடனும் போகலாம். நாங்கள் இருவரும் சோகத்தினால் பீடிக்கப்பட்டவர்கள்; காட்டில் ஆதரவு இல்லாதவர்கள்; இரங்கத்தக்க நிலையில் இருப்பவர்கள். உன்னுடன் நாங்களும் விரைவிலேயே யமன் உலகைச் சென்றடைவோம். அங்கு யமனைப் பார்த்து, 'தருமராஜனே! (உங்கள் உத்தரவுப்படி, அவன் உடனே இங்கே வராததற்குக் காரணமான) என்னை மன்னிக்க வேண்டும். அவனை விட்டுவிடுங்கள். பெற்றோர்களான எங்களை அவன்தான் பராமரிக்க வேண்டும்' என்று சொல்வேன். (36–38)

திசைக்காவலரான அவர் தருமாத்மா; பெரும்புகழ் படைத்தவர். என்னைப் போன்ற தீன புருஷனுக்கு வீண் போகாத ஒரு வரம் கொடுக்கும் சக்தியுடையவர். மகனே! நீ பாவம் செய்யாதவன்; ஆனால், தீவினை காரணமாக, ஒரு க்ஷத்திரியன் உன்னைக் கொன்றுவிட்டான். போர்க்களத்தில் போரிட்டு எதிரியின் ஆயுதத்தால் மாண்ட மாவீரன் அடையும் உத்தம லோகங்களைச் சத்தியம் தவறாத என் வார்த்தையின் பிரபாவத்தால் சென்றடைவாயாக. மகனே! எதிரிகளிடம் புறங்காட்டாது நேரே நின்று போர் செய்து மாண்டு போன சூரர்கள், எந்த உயர்ந்த உலகங்களைச் சென்றடைவார்களோ, அந்தப் புண்ணிய உலகங்களை நீயும் சென்றடைவாயாக. மைந்தனே! சகரன், சைப்யன், திலீபன், ஜனமேஜயன், நகுஷன், துந்துமாரன் முதலானவர்கள் எந்த கதியை அடைந்தார்களோ, அதே கதியை அடைவாயாக. (39–42)

வேதாத்யயனம், தவம் முதலியவைகளைக் கைக்கொண்டு எல்லா விதங்களாலும் சான்றோர்களாக வாழ்ந்தவர்கள் அடையும் கதியை நீயும் அடைவாயாக. பூதானம் செய்தவர்; அக்னிஹோத்திரம் செய்தவர்; ஏகபத்தினி விரதர்; ஆயிரம் பசுக்களை தானம் செய்தவர்; ஆசார்யனுக்குச் சேவை செய்தவர்; மகாபரஸ்தானம் போன்ற கடுமையான விரதங்களால் உயிரை விட்டவர்கள் – இவர்களுக்கு என்ன கதி கிடைக்குமோ, அந்த கதியை அடைவாயாக. நம்முடைய குலத்தில் பிறந்தவர் எவரும் துன்பமயமான உலகங்களைச் சென்றடைவதில்லை. (ஏனென்றால், அறநெறியை மிகவும் கண்டிப்பாகப் பின்பற்றி புண்ணியம் சேர்ப்பவர்கள், நாம்.) எனக்கு உறவு என்று சொல்லிக் கொள்ளக்கூடிய உன்னை மாய்த்தவன் எவனோ, அவனே பாவத்தின் பயனான தீய உலகங்களைச் சென்றடையத் தக்கவன்.' (43–45)

இவ்விதம் மிகவும் பரிதாபமாகப் பல தடவை அவர் புலம்பிக் கொண்டே இருந்தார். பின்னர், அவர் தன் மனைவியுடன் சேர்ந்து மகனுக்கு நீர்க்கடன் செலுத்துவதில் ஈடுபட்டார். தன்னுடைய புண்ணியகர்மாக்களின் விளைவாக, தருமம் அறிந்தவரான முனிகுமாரர், தெய்விக சரீரத்தைப் பெற்று இந்திரனுடன் தேவருலகம் சென்றார். இந்திரனுடன் இருந்த தபஸ்வியான முனிகுமாரர், வயது முதிர்ந்தவர்களான அவ்விருவருக்கும் சிறிது நேரம் ஆறுதல் கூறிவிட்டு, பின் இவ்வாறு கூறினார்— 'தங்களிருவருக்கும் தொண்டு செய்ததால், நான் மிக உயர்ந்த நிலையை எய்திவிட்டேன். தாங்கள் இருவரும் விரைவில், என் இடத்திற்கு வந்து சேருவீர்கள்.' (46–49)

இவ்வாறு கூறிவிட்டு ஒளிபொருந்திய திவ்ய விமானத்தில் ஏறி, புலன்களை வென்ற அந்த முனிகுமாரன் விரைவில் வானுலகை அடைந்தான். மனைவியுடன் நீர்க்கடன்களை விரைவாக நிறைவேற்றிய மகாதேஜஸ்வியான அந்த தபஸ்வி, கைகூப்பிக் கொண்டு நிற்கும்

என்னைப் பார்த்துக் கூறினார்— ''அரசனே! மரணம் அடைவதில் எனக்குத் தவிப்பு ஏதுமில்லை. எனவே, இப்போதே என்னைக் கொன்றுவிடு. என்னுடைய ஒரே மகனை அம்பினால் கொன்று, என்னை மகன் அற்றவனாகச் செய்துவிட்டாய். குற்றமற்றவனான என் மகன் அறியாமையால் உன்னால் கொல்லப்பட்டுவிட்டான். அதனால், மிகவும் துக்கத்தைத் தரக்கூடியதும், மிகவும் பயங்கரமானதுமான சாபம் கொடுக்கிறேன். (50–53)

மன்னனே! இப்போது எனக்கு மகன் பிரிவினால் துக்கம் உண்டாகியிருக்கிறது. இவ்வாறே, நீயும் புத்திரனைப் பிரிந்த சோகத்தினால் யமனை அடைவாய். ஒரு முனிவன், க்ஷத்திரியனான உன்னால் ஆலோசனை செய்யாமல் தெரியாத்தனமாகக் கொல்லப்பட்டுவிட்டான். ஆனால், மன்னனே! உன்னைப் பிரும்மஹத்தி தோஷம் பற்றிக் கொள்ளாது. (தான், வைசிய ஜாதியைச் சேர்ந்தவன் என்று, முன்னரே முனிகுமாரர் கூறியிருக்கிறார்.) தட்சிணையின் பலன், அதைக் கொடுப்பவரைச் சென்றடைவதைப் போல, உயிரைப் பறிக்கும் பயங்கரமான சூழ்நிலை உன்னையும் நிச்சயமாக வந்தடையும்.'' (54–56)

இவ்வாறு, எனக்கு சாபம் கொடுத்துவிட்டு, மிகவும் பரிதாபமாகப் புலம்பிவிட்டு, சிதையில் குதித்து அவ்விருவரும் தேவருலகம் சென்றார்கள். சப்தவேதி என்ற பாணத்தால், சிறுபிள்ளைத்தனமாக, அப்போது நான் செய்த பாவம், இப்போது மகனுடைய பிரிவைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கும் வேளையில், எனக்குத் தானாக நினைவுக்கு வந்தது. உடலுக்கு ஒவ்வாதவைகளை உணவுடன் சேர்த்து உண்டுவிட்டால், உடலை நோய் பற்றிக் கொள்வதைப் போல, (முன்னர் செய்த) அந்தச் செயலின் விளைவாக, இது இப்போது எனக்கு நேர்ந்திருக்கிறது. குணவதியே! கருணையுள்ளம் கொண்ட அவருடைய அந்தச் செயல் (சாபம்) பலனைக் கொடுக்கும் நேரம், இப்போது வந்திருக்கிறது. அதனால், புத்திரனைப் பிரிந்த சோகத்தினால், நான் இப்போது உயிரைவிடப் போகிறேன். (57–60)

கௌசல்யே! கண்களாலும் உன்னைப் பார்க்க முடியவில்லை. (அதனால்,) என்னைத் தொட்டுத் தடவிக் கொடு'' என்று சொல்லிவிட்டு, மன்னர், அழுது கொண்டும் அச்சத்துடனும் மனைவியைப் பார்த்து மேலும் கூறினார்— ''யமலோகத்தை நோக்கிச் செல்ல ஆயத்தமாகிவிட்ட மனிதர்கள், தங்கள் உறவினர்களைக் காண்பதில்லை. இராமன், ஒரு தடவை இங்கே வந்து என்னைத் தொட்டுவிட்டாலோ, இங்குள்ள சகல போகங்களையும் ஏற்றுக்கொண்டு விட்டாலோ, இளவரசுப் பட்டம் ஏற்க இசைந்துவிட்டாலோ, நான் பிழைத்துக் கொள்வேன் என்று எனக்குத் தோன்றுகிறது. (61,62)

இராகவன் விஷயத்தில் நான் செய்தது, என் நிலைக்கு உகந்ததல்ல. ஆனால், அவன் என் விஷயத்தில் நடந்து கொண்டவிதம் அவனுக்கு ஏற்றதாகவே இருக்கிறது. தீய நடத்தையுடையவனாக இருப்பினும், தன் புதல்வனை நல்லறிவுள்ள எவன்தான் தியாகம் செய்வான்? தந்தையால் நாடு கடத்தப்படும் எந்த மகன்தான், அவரிடம் வெறுப்புக் கொள்ளாமல் இருப்பான்? கௌசல்யே! கண்களால் உன்னைப் பார்க்க முடியவில்லை. சுய உணர்வும் என்னிடமிருந்து விலகிக் கொண்டிருக்கிறது. யமனுடைய தூதர்கள், என்னை அவசரப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். (63–65)

என்னுடைய மரண காலத்தில், தருமம் அறிந்தவனும், சத்திய பராக்கிரமம் படைத்தவனுமான இராமனை, நான் பார்க்கவில்லை! இதைவிடக் கொடுமை உண்டோ? (குட்டையில் உள்ள) சிறிது நீரை சூரியன் வெகு விரைவாக உறிஞ்சி விடுவதைப்போல, ஈடு–இணையில்லாத செயல்களைச் செய்பவனான இராமனைப் பார்க்காததால் ஏற்படும் சோகம், என் உயிரை உறிஞ்சிக் கொண்டிருக்கிறது. அழகிய, மங்களமான குண்டலங்களை அணிந்த இராமனுடைய திருமுகத்தை, பதினைந்தாம் ஆண்டில் எவர்கள் பார்க்கிறார்களோ, அவர்கள் மானுடர்கள் அல்லர்; தேவர்களே! (66–68)

தாமரை இதழ் போன்ற கண்கள்; கவின்மிகு புருவங்கள்; அழகிய பற்கள்; கவர்ச்சிமிகு நாசி; சந்திரனைப் போன்ற முகம் கொண்ட இராமனை, பெரும்பேறு பெற்றவர்கள் பார்க்கப் போகிறார்கள். சரத்கால சந்திரனைப் போன்றதும், மலர்ந்த தாமரை போன்றதும், நறுமணம் கமழ்வதுமான என்னுடைய இராமனின் திருமுகத்தைப் பெரும்பேறு பெற்றவர்கள் பார்க்கப் போகிறார்கள். (தாழ்நிலையிலிருந்து விடுபட்டுத்) தன் இடத்திற்கு வந்துவிட்ட சுக்கிரனைப் போல, வனவாசத்தை முடித்துக் கொண்டு, மீண்டும் அயோத்திக்கு வந்துவிட்ட இராமனைக் காண்பவர்கள் பாக்கியசாலிகள். (69–71)

கௌசல்யே! மனமயக்கத்தினால் என்னுடைய இதயம் சிதறிக் கொண்டிருப்பது போல் இருக்கிறது. சப்தம், ஸ்பரிசம், சுவை முதலானவைகளுடன் அவைகளை உணரும் புலன்கள் சேர்ந்தவைகளாக, நான் உணரவில்லை. (செவி, கை, நாக்கு முதலிய பொறிகள் அடங்கிவிட்டன.) எண்ணெய் தீர்ந்து போன விளக்கின் திரிச்சுடர் ஒளிமங்கிப் போவதைப் போல, என் மனம் அழிந்துவிட்டதன் காரணமாக, எல்லா இந்திரியங்களும் ஒடுங்கிக் கொண்டிருக்கின்றன. (72,73)

என் கர்மவினைப்படி, என்னால் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இந்தச் சோகம், ஆதரவற்றவனும் உணர்வு மழுங்கியவனுமான என்னை, ஆற்றின் வெள்ளப்பெருக்கு அதன் கரையை அரித்துத் தள்ளுவதைப் போல, பலமாக என்னை ஒழித்துக் கொண்டிருக்கிறது. ஏ, இராகவா! பெருந்தோளனே! என் துயரத்தைப் போக்குபவனே! பெற்றோரிடம் அன்புடையவனே! என் அருமைச் செல்வனே! மைந்தனே! என்னைவிட்டுச் சென்று, இப்போது எங்கே இருக்கிறாய்? ஏ, கௌசல்யே! நான் அழிந்து கொண்டிருக்கிறேன். ஏ, சுமித்திரே! தவநெறியில் வாழ்ந்த பெண்ணரசியே! ஏ, கைகேயி! வெறுக்கத்தக்கவளே! என்னிடம் நட்பு இல்லாதவளே! குலத்தைக் கெடுக்க வந்தவளே!'' (74–76)

இவ்வாறு, இராமனுடைய தாயார் மற்றும் சுமித்திரையின் எதிரில் புலம்பியவண்ணம் மன்னர் தசரதர் வாழ்வின் இறுதியை அடைந்தார். தன்னுடைய அன்பிற்குரிய மைந்தன் காட்டிற்குச் சென்றுவிட்டதால் ஏற்பட்ட துயரத்தால் மனம் கலங்கிய மன்னர் தசரதர், மேற்கண்டவாறு பரிதாபமாகப் புலம்பிக் கொண்டு, துக்கம் தாங்காமல், சத்தியம் தவறாதவரான அவர், நள்ளிரவு கடந்தபின் உயிரை விட்டார்! (77,78)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
அறுபத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்தைந்து

அந்தப்புர மாதர்கள் கதறல்

இரவு கழிந்ததும், மறுநாள் விடியற்காலையில், அந்த மன்னர் இருந்த மாளிகைக்கு மன்னர் புகழ் பாடுவோர் வந்து சேர்ந்தார்கள். வனப்புமிக்க ஆடை–ஆபரணம் அணிந்த சூதர்கள், சிறந்த புகழ் படைத்த வம்ச பரம்பரையைப் பாராட்டும் மாகதர்கள், இசைக்கலையை நன்றாகக் கற்றறிந்த இசைவாணர்கள் முதலியோர் தத்தமக்குரிய தனித்தனி முறைப்படி மன்னர் புகழ் இசைத்தவண்ணம் அங்கே வந்து சேர்ந்தார்கள். மன்னரைப் புகழ்ந்து உரத்த குரலில் ஆசி கூறும் தோத்திரக்காரர்களின் புகழுரைகளின் பலத்த சப்தம் அரண்மனை சுற்றுச்சுவர்களில் மோதி எதிரொலித்தது. (1–3)

இவ்வாறு போற்றிப் பாடுகின்றவர்களிடையே, கைகளால் தாளம் போட்டுக் கொண்டு, அரச மரபினரின் வீரச்செயல்களை இசைப்பவர்களான தாளம் போடுபவர்கள், (விவரிக்கப்படும்) செயல்களுக்கு ஏற்ப தாளகதியை மாற்றி ஜாலராவைத் தட்டினார்கள். அந்த மாபெரும்

சப்தத்தினால் மரக்கிளைகளில் இருந்தவைகளும், கூண்டுகளில் இருந்தவைகளும், அரச மாளிகையில் வசித்துக் கொண்டிருந்தவைகளுமான பறவைகள், கண்விழித்துக் கொண்டு குரல் எழுப்பின. (வேதவித்தகர்களின் முகத்திலிருந்து) வெளிப்பட்ட புண்ணியச் சொற்களாலும், வீணைகளிலிருந்து எழுந்த இனிய ஓசைகளாலும், வரலாற்றுக் கதைகளின் ஆசீர்வாதத்தோடு கூடிய பாடல்களாலும் அந்த மாளிகை நிறைந்தது. (4–6)

பின்னர், நல்லொழுக்கமுடையவர்களும், குற்றேவல் செய்வதில் வல்லவர்களான பெண்களும், அரவாணிகளும் முன் எப்போதும் போலவே வந்து சேர்ந்தார்கள். நீராடும் முறையை நன்கு அறிந்த பணியாளர்கள், பொற்குடங்களில் வாசம்மிகு செஞ்சந்தனம் கலந்த நன்னீரை உரிய காலத்தில், உரிய முறைப்படி கொண்டு வந்தார்கள். மற்றும் சில கன்னியர், உடலில் தேய்த்துக் கொள்வதற்கான மங்கலப் பொருட்களையும், நீராடிய பின் அருந்துவதற்கான மூலிகைகளையும் கொண்டு வந்தார்கள். (7–9)

கொண்டு வந்து வைக்கப்பட்ட அந்தப் பொருள்கள் எல்லாம் சரியான அளவிலும், தரம் உயர்ந்தவைகளாகவும், அவ்வவற்றிற்குரிய நற்பயனையும் காந்தியையும் தரக்கூடியவை களாகவும் இருந்தன. சூரியோதயம் ஆகும் வரையில் அவர்கள் எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டு நின்று கொண்டிருந்தார்கள். அரசர் வராமற்போகவே, 'என்ன ஆயிற்று?' என்று சந்தேகப்பட ஆரம்பித்தார்கள். அப்போது, கோசல மன்னர் தசரதருடைய அருகில் இருக்கக்கூடிய நாரீமணிகள், அவர் படுக்கையின் அருகே சென்று, தங்கள் கணவரைக் கண்விழிக்கச் செய்ய முயன்றார்கள். (10–12)

அவரைத் தொட்டுப் பேசும் உரிமையுடைய அவர்கள், மரியாதையுடனும் யுக்தியுடனும், அவருடைய படுக்கையைத் தொட்டு ஆட்டியும், அவர் உடலில் உயிர் இருப்பதற்கான எவ்வித அடையாளத்தையும் காணவில்லை. படுத்திருக்கும் முறை, அசைவுகள் முதலியவற்றை அறிந்தவர்கள், அவர்கள். அத்துடன் கை நாடிகளின் துடிப்பையும், இதயத்தின் ஒலிக்குறிப்பையும் உணர்ந்தவர்கள். அவர் உடலில் உயிரோட்டத்திற்கான எவ்வித அடையாளத்தையும் காணாததால், 'உயிர் போய்விட்டதோ?' என்ற சந்தேகம் அவர்களுக்கு ஏற்பட்டது. (13,14)

ஆற்றின் வெள்ளப்பெருக்கிற்கு எதிராக இருக்கும் புற்களின் நுனியைப் போல் உடல் நடுங்கினார்கள். சந்தேகப்பட்டுக் கொண்டிருந்த பெண்கள், மன்னரின் முகத்தை நேராகப் பார்த்தவுடன் தாங்கள் சந்தேகித்தது உண்மையாகிவிட்டதை உணர்ந்தார்கள். புத்திரர்களைப் பிரிந்த சோகத்தில் மூழ்கியிருந்த கௌசல்யாவும் சுமித்திரையும் மரணமடைந்தவர்போல் உறங்கிப் போயிருந்ததால், அதுவரையில் கண்விழிக்கவில்லை. உறங்கிக் கொண்டிருந்த கோசலை ஒளியிழந்திருந்தார். அவருடைய நிறம் மாறியிருந்தது; சோகத்தின் ஆட்பட்டுக் கவலையில் இருந்தார்; இருட்டினால் மூடப்பட்ட தாரகை போல் அழகு குன்றியிருந்தார். (15–17)

மன்னரின் அருகில் கௌசல்யை இருந்தார். அவர் அருகில் சுமித்திரை இருந்தார். இருவர் முகங்களிலும் சோகத்தின் விளைவாக ஏற்பட்ட கண்ணீர்ப்பெருக்கு பரவியிருந்ததால், அவர்கள் சோபையுடன் திகழவில்லை. அந்தப்புரத்து மாதர்கள், அவ்விரு அரசிகளும் தூங்கிக் கொண்டிருக்கும்போது, மன்னரின் உயிர் தூக்கத்திலேயே பிரிந்து சென்றுவிட்டது என்று எண்ணினார்கள். காட்டில், பெண்யானைகளை விட்டுவிட்டு ஆண்யானைகள் வேறிடம் சென்றுவிட்டால் பெண்யானைகள் எப்படித் தவிக்குமோ, அவ்வாறே அந்தப்புரப் பெண்ணரசிகள் எல்லோரும் துயரம் தாங்காமல் உரத்த குரலில் கதறி அழுதார்கள். (18–20)

அவர்களுடைய உரத்த அழுகைக் குரலைக் கேட்டதும் கௌசல்யை–சுமித்திரையின் உறக்கம் கலைந்தது. கௌசல்யையும் சுமித்திரையும் மன்னரைக் கண்ணால் பார்த்து, கைகளால் தொட்டதும் (அவர் உயிர் பிரிந்துவிட்டதை உணர்ந்து), 'ஆ! என் கணவரே!' என்று அலறிக் கொண்டு தரையில் விழுந்தார்கள். கோசல மன்னருடைய குமாரத்தியான கோசலை தரையில்

விழுந்து, புழுதியில் புரண்டு அரற்றினார்; ஆகாயத்திலிருந்து கீழே விழுந்துவிட்ட நட்சத்திரம் போல ஒளியிழந்து காணப்பட்டார். (21–23)

மன்னருடைய உடலின் உஷ்ணம் அடங்கிப் போனதையும், கௌசல்யை தரையில் விழுந்து கிடப்பதையும் பார்த்த எல்லாப் பெண்டிரும் உணர்விழந்த பெண்யானையைப் போல் அவரைப் பார்த்தார்கள். பின்னர், மன்னருடைய பிற பத்தினிகளான கைகேயி முதலியவர்கள் சோகம் தாங்காமல் கதறி அழுதார்கள்; உணர்விழந்து கீழே விழுந்தார்கள். முன்பே அங்கு சோகமயமான அழுகைக் குரல் ஒலித்துக் கொண்டிருந்தது. அவர்களும் உரத்த குரலில் ஒப்பாரி வைக்கத் தொடங்கியதும் பேரொலி எழுந்தது. அதனால் வியாபிக்கப்பட்ட அந்த மாளிகை சோகக் குரலை எதிரொலித்தது. (24–26)

திடீரென்று மரணத்தை அடைந்துவிட்ட மாமன்னரின் அந்த மாளிகையின் எல்லாப் பக்கங்களிலும் மனவேதனை கொண்ட மக்கள் குழுமினார்கள்; முற்றிலும் கலக்கமடைந்ததாயும், அழுகையொலி நிரம்பியதாகவும், சோகத்தால் பீடிக்கப்பட்ட உறவினர்களை உடையதாகவும், ஆனந்தம் இழந்ததாகவும், பரிதவிப்பு–சோகம் மற்றும் அச்சம் தரும் தோற்றமுடையதாகவும் அந்த மாளிகை ஆயிற்று. பெரும்புகழ் படைத்த மாமன்னரின் மனைவிமார்கள், தம் கணவர் (பரலோகம்) சென்றுவிட்டார் என்பதை அறிந்து, அவருடைய இரு கைகளையும் பிடித்துக் கொண்டு மிகவும் துயரத்தோடு அழுதுகொண்டு, ஆதரவற்றவர்கள் போல் பரிதாபமாகப் புலம்பினார்கள். (27–29)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
அறுபத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்தாறு

எண்ணெய்த் தொட்டியில் வைத்தல்

அணைந்து போன அக்னி போலவும், நீர் வற்றிய கடல் போலவும், ஒளியிழந்த கதிரவன் போலவும் மாமன்னர் உயிரற்றவராகக் கிடப்பதைப் பார்த்து, பல்வகை துயரங்களால் மனம் வருந்திய கோசலை, மாமன்னரின் தலையைத் தூக்கித் தன் மடியில் வைத்துக் கொண்டு கைகேயியை நோக்கி இவ்வாறு பேசினார்— (1,2)

"கைகேயி! இரக்கமற்றவளே! உன் விருப்பம் கைகூடப் பெற்றவளாகிவிட்டாயல்லவா? மன்னனை இழந்துவிட்டுத் தனியொருத்தியாக எவ்வித இடையூறுமில்லாது அரசை நன்றாக அனுபவிப்பாய். கொடுஞ்செயல் புரிபவளே! என்னை விட்டுவிட்டு இராமன் (காட்டிற்குப்) போய்விட்டான். துன்பங்கள் நிறைந்த பாதையில் வாழ்க்கைப் பயனை இழந்தவளாக, நான் வாழ விரும்பவில்லை. அறம் தவறிய கைகேயியைத் தவிர, வேறு எந்தப் பெண்மணிதான், தனக்குத் தெய்வம் போன்ற கணவரைப் பறிகொடுத்துவிட்டு உயிர் வாழ்வதை விரும்புவாள்? (3–5)

பேராசை கொண்டவன், ஊசிப்போன உணவின் விஷத்தன்மையைப் பற்றிக் கவலைப் படாமல் உண்டுவிடுகிறான். (அப்போதைக்கு அவன் பசி அடங்கியதே தவிர, விஷத்தின் தீய விளைவுகள், பின்னர் அவனைத் தாக்கவே செய்யும்.) (அதுபோல) கூனி காரணமாக, கைகேயியினால் ரகு பரம்பரைக்கே ஆபத்து வந்திருக்கிறது. (கைகேயியின் விருப்பம் நிறைவேறினாலும், அவளுக்கும் துயரம் ஏற்படவே செய்தது – கணவரை இழந்ததாலும், பரதன் அரசாள மறுத்ததாலும்.) கைகேயி, மன்னரைத் தவறான காரியத்தில் ஈடுபடுத்தி, மனைவியுடன் இராமனை வெளியேற்றிவிட்டாள். இந்தச் செய்தியைக் கேட்டால், நான் தவிப்பதைப் போலவே, ஜனகருடைய மனமும் பரிதவிக்கப் போகிறது. (6,7)

அறத்தின் நாயகனும், தாமரை இதழ் போன்ற கண்களுடையவனுமான இராமன், நான் இப்போது ஆதரவற்றவளாகவும் விதவையாகவும் ஆகிவிட்டேன் என்பதை அறியான். அவனோ, (மன்னர்) உயிருடன் இருக்கும்போதே இங்கிருந்து போய்விட்டான். விதேக மன்னருடைய புதல்வியும், கணவருக்குப் பணிவிடை செய்வதையே தவமாகக் கொண்டவளுமான சீதை, துயரத்தை அனுபவிக்கத்தக்கவள் அல்லள். காட்டில் துன்பத்தை அனுபவித்து மனம் பதறப் போகிறாள். (8,9)

இரவு நேரத்தில், பலமான சத்தத்துடன் ஒலி எழுப்பும் விலங்குகள்–பறவைகளுடைய சப்தத்தைக் கேட்டு அச்சம் அடைந்து, இராமனைத் தழுவிக் கொள்வாள். அவர் (ஜனகர்) வயோதிகர்; ஆண் சந்ததி இல்லாதவர். வைதேகியைப் பற்றியே எண்ணி எண்ணி வேதனைப்பட்டு, சோகம் தாங்காமல் நிச்சயம் உயிரை விடப் போகிறார். நானும் இப்போதே உயிர் துறக்கப் போகிறேன். பதிவிரதையான நான், இந்தத் திருமேனியைக் கட்டித் தழுவிக் கொண்டு நெருப்பில் புகுவேன்.'' (10–12)

அப்போது, அரண்மனைப் பணியாளர்கள், மிகவும் மனம் நொந்து புலம்பிக் கொண்டு பரிதாபகரமான நிலையில் இருந்த கோசலையை, பெண் ஏவலர்கள் தூக்கி அணைத்தவாறு வேறிடத்திற்கு அழைத்துக் கொண்டு போகச் செய்தார்கள். தொடர்ந்து அரசு நிர்வாகக் காரியங்களில் நியமிக்கப்பட்டிருந்த அமைச்சர்கள், மாமன்னரை எண்ணெய்த் தொட்டியில் கிடத்திவிட்டு, அரசாங்கத்தின் மற்ற காரியங்களை நிறைவேற்றுவதில் ஈடுபட்டார்கள். எல்லாம் அறிந்தவர்களான அமைச்சர்கள், புதல்வர்கள் யாரும் இல்லாமல், மன்னரின் அந்திமக்கிரியைகளைச் செய்ய விரும்பவில்லை. அதனால், அரசரின் உடல் கெட்டுப் போகாதபடி பாதுகாத்தார்கள். (13–15)

அமைச்சர்கள் மன்னரின் உடலை எண்ணெய்த் தொட்டியில் வைத்துவிட்டார்கள் என்பதைத் தெரிந்து கொண்டதும், மனைவிகள் எல்லோரும், 'அடக்கஷ்டமே! இவர் (உண்மையாகவே) இறந்து விட்டாரே!' என்றுணர்ந்து, அதனைச் சூழ்ந்து கொண்டார்கள். அவர்களுடைய கண்களிலிருந்து கண்ணீர் அருவியாகக் கொட்டத் தொடங்கியது. இரங்கத்தக்க நிலையிலிருந்த அவர்கள் கைகளை உயரத் தூக்கிக் கொண்டு, சோகம் தாங்காமல் அழுது பரிதாபமாகப் புலம்பினார்கள். (16,17)

''ஆ, மன்னரே! எப்போதும் இனிமையாகப் பேசுபவனும், சத்தியம் தவறாதவனுமான இராமனைப் பிரிந்தோம். (அந்தத் துயரத்தில் ஆழ்ந்துள்ள) எங்களைத் தாங்கள் ஏன் துறந்து சென்றீர்கள்? கெட்ட சிந்தனையுள்ள கைகேயியினால் இராமனுடைய பிரிவு ஏற்பட்டது. கணவரைக் கொன்றவளான அவளுடன் விதவைகளாகிவிட்ட நாங்கள் எவ்வாறு சேர்ந்து வாழ்வோம்? எங்களுக்கும் தங்களுக்கும் நற்காவலனாகவும், எப்போதும் மதிக்கத்தக்கவனாகவும், நல்ல உள்ளம் கொண்டவனாகவும் இருந்த திருநிறை இராமன் அரசு அதிகாரத்தைத் துறந்து காட்டிற்குப் போய்விட்டான். (18–20)

தாங்களும், மகாவீரனான அவனும் இல்லாமல் துயரத்தில் மதிகலங்கியிருக்கும் நாங்கள், கைகேயியினால் உதாசீனப்படுத்தப்பட்டவர்களாக எவ்வாறு இங்கே இருந்து கொண்டிருப்போம்? மன்னரையும், சீதையோடுகூட இராமனையும், மகாபலம் பொருந்திய இலக்குவனையும் ஒட்டுமொத்தமாகத் துறந்த அவள், வேறு எவரைத்தான் வெளியே துரத்த மாட்டாள்?'' தசரதருடைய உத்தம மனைவிகள் கண்ணீர் விட்டுக்கொண்டு, சோகம் நிரம்பியவர்களாக உற்சாகம் இழந்து துடியாகத் துடித்தார்கள். (21–23)

விசாலமனம் படைத்த அரசர் இல்லாத அயோத்தி மாநகர், நிலவு இல்லாத இரவு போலவும், கணவரை இழந்த மனைவி போலவும் சோபையற்றதாக ஆயிற்று. மக்கள், கண்ணீரைப் பெருகவிட்டுக் கொண்டிருந்தார்கள்; உயர்குடிப் பெண்டிர் 'ஹா... ஹா...' என்று

அரற்றிக் கொண்டிருந்தார்கள்; நாற்சந்திகளும் வீட்டுவாசல்களும் பாழடைந்தாற்போல் காணப்பட்டன. அந்த நகரம் முன்பு இருந்ததைப் போல் ஒளிவீசுவதாக இல்லை. (24,25)

மாமன்னர் துயரம் தாங்காமல் மேலுலகம் அடைந்தார். அவருடைய பத்தினிகள் (சோகத்தைத் தாங்க முடியாமல்) தரையில் விழுந்து கிடந்தார்கள். (சோகக் காட்சிகளைக் காணச் சகியாதவன் போல,) தன் சஞ்சாரத்தை முடித்துக் கொண்டு சூரியன் விரைவில் மறைந்தான். இரவும் தன் பயணத்தைத் தொடங்குவதற்காக வெளியே புறப்பட்டது. அங்கே கூடியிருந்த நண்பர்கள், ஒரு புதல்வன்கூட இல்லாமல் மன்னர் உடலைத் தகனம் செய்ய ஒப்புக்கொள்ளவில்லை. உயிர் நீங்கிய உடல் காணச் சகியாததாக ஆகிக் கொண்டிருப்பதை எண்ணிப் பார்த்து, தைலத் தொட்டியிலேயே படுக்க வைத்திருப்பது என்று தீர்மானித்து, அவ்வாறே படுக்க வைத்தார்கள். (26,27)

சூரியன் இல்லாததால் ஒளியிழந்த வானம் போலவும், நட்சத்திரக் கூட்டம் இல்லாததால் அழகில்லாத இரவு போலவும், மாமன்னரான தசரதர் இல்லாத அந்தப் பட்டணம் ஒளியிழந்து போயிற்று; சாலைகளிலும் நாற்சந்திகளிலும் கண்ணீர் நிறைந்து, தொண்டை அடைக்க மக்கள் கூடி நின்றார்கள். அப்போது, நகரத்தில் ஆண்களும் பெண்களும் கூட்டங்கூட்டமாகக் கூடி, மன்னரின் மறைவிற்குக் காரணமான பரதனுடைய தாயாரை இகழ்ந்து பேசிக் கொண்டு வருந்தினார்கள்; அவர்களுடைய ஆழ்துயரமும் அடங்கிப் போகவில்லை; அமைதியையும் அடையவில்லை. (28,29)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
அறுபத்தாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்தேழு

அரசன் இல்லாவிட்டால் ஏற்படும் கேடுகள்

அந்த இரவில் அயோத்தியில் மக்கள் கதறி அழுதார்கள்; புலம்பினார்கள்; மகிழ்ச்சி என்பதே இல்லாததாயிற்று. கண்ணீர்ப் பெருக்கினால் யாராலும் பேச முடியாமல் தொண்டை அடைத்துக் கொண்டது. துக்கத்தின் காரணமாக, அந்த இரவு மிக நீண்டதாகத் தோன்றிற்று. பின்னர், இரவு கழிந்து சூரியன் உதித்த உடனே, அரசு அதிகாரிகளும் அந்தணர்களும் ஒன்றுகூடி சபாமண்டபத்தை அடைந்தார்கள். மார்க்கண்டேயர், மௌத்கல்யர், வாமதேவர், கசியபர், காத்யாயனர், கௌதமர், பெரும்புகழ் படைத்த ஜாபாலி ஆகிய அந்தணோத்தமர்கள் அமைச்சர்களுடன்கூட உத்தமரும் அரச புரோகிதருமான வசிஷ்டரின் எதிரில் உட்கார்ந்து கொண்டு, தத்தம் கருத்துக்களைத் தனித்தனியே சொல்ல ஆரம்பித்தார்கள்— (1–4)

''மாமன்னர், மகனைப் பிரிந்த சோகத்தினால் மரணத்தை அடைந்துவிட்டார். அதனால், ஓர் இரவு மிகவும் துக்கம் நிரம்பிய நூறு ஆண்டுகள் போல நீண்டதாகக் கழிந்தது. மன்னர் வானுலகம் அடைந்துவிட்டார். இராமனும் காட்டிற்குப் போய்விட்டார். பேராற்றல் பொருந்திய இலக்குவனும் இராமனோடு கூடவே போய்விட்டார். எதிரிகளை மாய்க்கவல்ல பரத–சத்ருக்னர் ஆகிய இருவரும் கேகய நாட்டின் தலைநகரான ராஜக்ருஹத்தில், பாட்டனாரின் அழகிய அரண்மனையில் தங்கியிருக்கிறார்கள். (5–7)

இக்ஷ்வாகு வம்ச அரசகுமாரர்களில் யாரேனும் ஒருவரை இப்போதே, இங்கேயே அரசராக நியமிக்க வேண்டும். இல்லையென்றால், நமது நாடு அழிந்து போய்விடும். அரசன் இல்லாத நாட்டில், மின்னல் கூட்டங்களுடன் கர்ஜனை செய்யும் மேகம் மழை பொழிந்து பூமியை நனைக்காது. அரசன் இல்லாத நாட்டில், ஒரு கைப்பிடி விதையும்

விளைநிலத்தில் தெளிக்கப்பட மாட்டாது. அரசன் இல்லாத நாட்டில், தந்தையின் சொல்லுக்கு மகன் அடிபணிய மாட்டான்; கணவனின் கட்டுப்பாட்டில் மனைவி இருக்கமாட்டாள். (8–10)

அரசன் இல்லாத நாட்டில், தன்னுடையது என்று எந்தச் செல்வத்தையும் வைத்துக் கொள்ள முடியாது. அரசன் இல்லாத நாட்டில், தன்னுடைய மனைவி என்று (முறைப்படி மணந்த பெண்ணையும்) சொல்லிக் கொள்ள முடியாமற்போகும். அரசன் இல்லாத நாட்டில், இம்மாதிரியான பேரச்சம் இருந்து கொண்டிருக்கும். எனவே, வேறு எங்குதான் சத்தியத்தைக் காணமுடியும்? அரசன் இல்லாத நாட்டில், மனிதர்கள் நியாயஸ்தலத்தையோ, அழகிய பூந்தோட்டங்களையோ, அறச்சாலைகளையோ மனமகிழ்ச்சியோடு நாடிச் செல்ல மாட்டார்கள். (11,12)

அரசன் இல்லாத நாட்டில், வேள்வி செய்வதில் பற்றுடையவர்களும், தீவிர விரத அனுஷ்டானம் உடையவர்களும், புலன்களை வென்றவர்களும், வேதவிற்பன்னர்களுமான அந்தணர்கள், ஸத்ரம் முதலான பெரும் யாகங்களைச் செய்ய மாட்டார்கள். அரசன் இல்லாத நாட்டில், பெருவேள்விகள் ஒருக்கால் செய்யப்பட்டாலும், செல்வம் நிறைந்த பிராமணர்கள்கூட, வேள்வி செய்வோருக்கு உரிய அளவு தட்சிணை கொடுக்க மாட்டார்கள். அரசன் இல்லாத நாட்டில், உற்சாகம் நிறைந்த ஆடல்வல்லார்கள் தம் கலைத்திறனைக் காட்டி, சமுதாயத்தை மேம்படுத்தும் திருவிழா நிகழ்ச்சிகள் மற்றும் பேரவைக் கூட்டங்கள் அதிக அளவில் நடத்தப்படமாட்டா. (13–15)

அரசன் இல்லாத நாட்டில், ஒரு பொருள் குறித்து வாதப்பிரதிவாதங்கள் நடைபெறுவதில்லை. கதை கேட்பதில் ஆர்வமுடையவர்கள்கூட இனிமையாகக் கதை சொல்பவர்களின் நிகழ்ச்சிகளில் ஈடுபடுவதில்லை. அரசன் இல்லாத நாட்டில், பொன்மயமான அணிகலன்கள் அணிந்த இளம்பெண்கள், மாலை நேரங்களில் ஒன்றாகக் கூடி, பூங்காவில் விளையாடிப் பொழுதுபோக்கச் செல்ல மாட்டார்கள். அரசன் இல்லாத நாட்டில், சிற்றின்பப் பிரியர்களான ஆண்மக்கள் பெண்களோடுகூட, வேகமாகச் செல்லும் வாகனங்களில் ஏறி, காட்டை நோக்கிச் செல்லமாட்டார்கள். (16–18)

அரசன் இல்லாத நாட்டில், செல்வந்தர்களுக்குப் பாதுகாப்பு கிடைக்காது; பயிரிடுதல், பசுக்களைப் பராமரித்தல் போன்ற பணிகளால் உயிர்வாழ்பவர்கள், கதவைத் திறந்து வைத்துக் கொண்டு தூங்கமாட்டார்கள். (சொத்துக்கள் கொள்ளை போய்விடுமோ? என்ற அச்சம் தோன்றிவிடும்.) அரசன் இல்லாத நாட்டில், அறுபது ஆண்டுகளைக் கடந்த, தந்தங்களை உடைய, கழுத்தில் மணி கட்டப்பட்ட யானைகள் ராஜபாட்டைகளில் திரிவதில்லை. அரசன் இல்லாத நாட்டில், எப்போதும் அம்பு–அஸ்திரப் பயிற்சி செய்யும் காலத்தில், குறி பார்த்து பாணம் வீசுபவர்களை உற்சாகப்படுத்தும் கைதட்டல் ஒலி கேட்கப்படுவதில்லை. (19–21)

அரசன் இல்லாத நாட்டில், ஏராளமான வணிகப் பொருட்களை எடுத்துக் கொண்டு வியாபாரிகள் ஆபத்துக்கள் இல்லாமல் வெகுதூரம் செல்ல முடிவதில்லை. அரசன் இல்லாத நாட்டில், தன் மனத்தால் பரமாத்மாவைத் தியானித்துக் கொண்டு, தனி ஒருவனாக நடந்து சென்று கொண்டு, எந்த இடத்தில் மாலைப்பொழுது ஏற்படுகிறதோ, அங்கேயே தங்கிவிடுகின்ற புலனடக்கமுடைய தவச்சீலர் சுற்றித் திரிய மாட்டார். அரசன் இல்லாத நாட்டில், மக்களால் அடைய முடியாத பொருளை அடைவதும், அடைந்த பொருள்களைக் காப்பாற்றவும் முடியாமல் போகும். அரசன் இல்லாத நாட்டில், படைவீரர்கள் போர்க்களத்தில்கூட எதிரிகளை எதிர்த்துப் போர் புரியமாட்டார்கள். (22–24)

அரசன் இல்லாத நாட்டில், உற்சாகங்கொண்ட உத்தமக் குதிரைகளிலும் ரதங்களிலும் ஏறிக் கொண்டு, நன்றாக ஆடை–அலங்காரம் செய்து கொண்டு, முன்னேற்பாடு இல்லாமல் மக்கள் வெளிக் கிளம்ப மாட்டார்கள். அரசன் இல்லாத நாட்டில், அறநூல் வல்லுநர்களான

அறிஞர்கள் சோலைகளிலும் பூங்காக்களிலும் கூடியமர்ந்து சாஸ்திர ஆராய்ச்சியில் ஈடுபட மாட்டார்கள். அரசன் இல்லாத நாட்டில், தெய்வ வழிபாட்டில் பற்றுக் கொண்ட மக்கள் மலர்மாலைகள், இனிப்புப் பண்டங்கள், தட்சிணை முதலியவற்றை இறைவழிபாட்டிற்காக ஏற்பாடு செய்யமாட்டார்கள். (25–27)

அரசன் இல்லாத நாட்டில், சந்தனம்–அகரு முதலிய வாசனைப் பொருள்கள் பூசிக் கொண்டு வனப்புடன் உலாவும் அரசகுமாரர்கள் – வசந்த காலத்தில் இலை உதிர்ந்த மரங்கள் போல – ஒளியுடன் விளங்கமாட்டார்கள். அரசன் இல்லாத நாடு, தண்ணீர் இல்லாத ஆறுகள் போலவும், பசும்புல் இல்லாத காடு போலவும், இடையன் இல்லாத பசுக்கள் போலவும், பயனற்றதாகவும் அநாதையாகவும் ஆகிவிடும். உயரே அசைந்தாடும் கொடி, அங்கே தேர் இருப்பதைக் குறிக்கிறது; ஓர் இடத்தில் காணப்படும் புகை, அங்கே நெருப்பு இருப்பதை உணர்த்துகிறது. அதேபோல, அரசு அலுவல்களை நடத்துகின்ற நமக்குக் கொடிமரமாக விளங்கிய மன்னர் தெய்வநிலையை அடைந்துவிட்டார். (28–30)

அரசன் இல்லாத நாட்டில், 'தன்னுடையது' என்று எதுவும் யாருக்கும் கிடையாது. ஒரு மீன், இன்னொரு மீனை விழுங்கிவிடுவதைப் போல, மக்கள் ஒருவரையொருவர் அழித்துக் கொள்வார்கள். எந்த நாத்திகர்கள் அறநெறிகளுக்குப் புறம்பாக நடக்க விரும்பியும், இதுவரையில் மன்னரின் தண்டனைக்குப் பயந்து அடங்கி இருந்தார்களோ, அவர்கள் கவலை நீங்கியவர்களாக, தங்கள் கொள்கைகளை நிலைநிறுத்தத் துணிவார்கள். உடலுக்குக் கண்கள் எவ்வளவு முக்கியமோ, அந்த அளவிற்கு சமுதாயத்தின் சத்தியம்–தருமம் ஆகியவற்றின் நிலைப்பாட்டிற்கு மன்னன் முக்கிய காரணமாக விளங்குகிறான். (31–33)

மன்னன்தான் சத்தியமும் தருமமும். மன்னன்தான் நற்குடியில் பிறந்தவர்களின் குலப் பாதுகாவலன். மன்னன்தான் தாயும் தந்தையும். மன்னன்தான் குடிமக்களுக்கு நன்மை புரிபவன். மன்னன், தன்னுடைய உயர்ந்த செயல்பாடுகளால் யமன், குபேரன், இந்திரன் மற்றும் பலம்மிக்க வருணன் ஆகியோரைக் காட்டிலும் மேலானவன். (யமன் தண்டனை மட்டும் கொடுக்கிறான்; குபேரன் செல்வத்தைக் கொடுக்கிறான்; இந்திரன் பரிபாலிக்கிறான்; வருணன் நல்லொழுக்கத்தைத் தருகிறான். ஆனால், மன்னனிடம் இந்த நான்கு குணங்களும் இருக்கின்றன.) (34,35)

உலகில் அரசன் என்ற ஒருவன் இருந்துகொண்டு நன்மை–தீமைகளை வகுத்து நிர்வாகம் செய்து கொண்டிராவிட்டால், ஆகா! இந்த உலகம் ஒரே இருட்டாக ஆகிவிடும்; எதுவுமே புலப்படாமற்போகும். சமுத்திரத்தின் அலைகள் கரையைக் கடந்து செல்லாததைப் போல, மன்னர் உயிரோடிருந்த காலத்திலும், நாங்கள் தங்கள் சொற்களை ஏற்று நடந்தோம். ஆகவே, அந்தணோத்தமரே! (வசிஷ்டரே!) இந்தச் சமயத்தில் நாங்கள் நடந்துகொள்வதைப் பார்த்தும், மன்னன் இல்லாமல் நாடு, காடு போல் ஆகிவிட்டதையும் மனத்தில் கொண்டு, இக்ஷ்வாகு வம்சத்தைச் சேர்ந்த ஓர் அரசகுமாரனுக்கோ அல்லது தகுதி வாய்ந்த வேறொருவருக்கோ, தாங்களே பட்டாபிஷேகம் செய்து வைப்பீர்களாக.'' (36–38)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
அறுபத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்தெட்டு

தூதர்களை அனுப்புதல்

அவர்களுடைய அந்தச் சொற்களைக் கேட்ட வசிஷ்டர், நண்பர்கள், அமைச்சர் குழுவினர் மற்றும் அந்தணர்கள் ஆகிய எல்லோரையும் பார்த்து பின்வரும் பதிலைக் கூறினார்— ''தசரத

மன்னரால் அரசுரிமை கொடுக்கப்பட்ட பரதன், சத்ருக்னனோடுகூட மாமன் வீட்டில் ஆனந்தமாக இருந்து கொண்டிருக்கிறான். ஆகவே, வீரர்களான சகோதரர் இருவர்களையும் அழைத்து வருவதற்கு வேகமாகச் செல்லக்கூடிய குதிரைகளில் ஏறி, தூதர்கள் செல்லட்டும். இதைத் தவிர வேறு என்ன கருத்துக் கூற முடியும்?'' (1–3)

அவர்கள் எல்லோரும் வசிஷ்டரைப் பார்த்து, 'ஆம், தூதர்கள் செல்லட்டும்' என்றார்கள். அவர்களுடைய அந்தச் சொற்களைக் கேட்ட வசிஷ்டர் பின்வருமாறு சொன்னார்— ''சித்தார்த்தா! விஜயா! ஜயந்தா! அசோகா! நந்தனா! இங்கே வாருங்கள். இனி, நாம் என்ன செய்ய வேண்டும்? என்பதை உங்கள் எல்லோருக்கும் கூறுகிறேன், கேளுங்கள். நீங்கள் விரைவாகச் செல்லக்கூடிய குதிரைகளில் ஏறி, ராஜக்ருஹம் என்னும் நகரத்திற்குச் சென்று, சோக உணர்ச்சியை வெளிக்காட்டாமல், என்னுடைய ஆணை என்று பரதனிடம் இவ்விதம் கூறுங்கள்— (4–6)

'புரோகிதரும் மற்ற அமைச்சர்களும் உங்களுடைய நலனைப் பற்றிக் கேட்டார்கள். (நீங்கள்) விரைவில் இங்கிருந்து புறப்பட வேண்டும். உங்களால் அவசரமான காரியம் ஒன்று (அயோத்தியில்) செய்யப்பட வேண்டியிருக்கிறது.' அவனிடம் இராமனுடைய வனவாசத்தைப் பற்றியோ, தந்தையின் மரணம் குறித்தோ, எதுவும் கூறவேண்டாம். இந்த நிலைமையில் ரகு பரம்பரையில் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பற்றியும் பேச வேண்டாம். (கேகய நாட்டு) மன்னருக்கும் பரதனுக்கும் பட்டாடைகளையும் விலையுயர்ந்த அணிகலன்களையும் எடுத்துக் கொண்டு விரைவாகச் செல்லுங்கள்.'' (7–9)

கேகய நாட்டிற்குச் செல்வதற்கு நியமிக்கப்பட்ட அந்தத் தூதர்கள், பயணப்படி பெற்றுக் கொண்டு உயர்ரக குதிரைகளில் ஏறிக்கொண்டு, தத்தம் வீட்டிற்குச் சென்றார்கள். பின்னர், பயணம் தொடர்பான மற்ற காரியங்களையும் செய்து முடித்துக் கொண்டு, வசிஷ்டரிடம் விடைபெற்றுக் கொண்ட தூதர்கள், விரைவாகப் புறப்பட்டார்கள். 'அபரதாலம்' என்னும் மலையின் தெற்கு எல்லையை ஒட்டி, 'பிரலம்பம்' என்னும் மலைக்கு வடபுறமாக, இடையிலே ஓடும் 'மாலினி' என்னும் நதியினை ஒட்டியே சென்றார்கள். அஸ்தினாபுரத்தில் கங்கையைக் கடந்து, மேற்கு நோக்கிச் சென்று, 'குருஜாங்கலம்' வழியாகப் 'பாஞ்சால நாட்டை' அடைந்தார்கள். (10–13)

வழியில் விரிந்த மலர்களால் வனப்புடன் விளங்கும் நீர்நிலைகளையும், தூய நீர் பாயும் ஆறுகளையும் பார்த்துக் கொண்டு (அவற்றின் அழகில் மயங்கி நின்றுவிடாமல்,) தாங்கள் செல்லும் பணியின் அவசரத்தை நினைத்து வேகமாகச் சென்றார்கள். தெளிந்த நீரை உடையதும், வகைவகையான பறவைகள் வாழ்வதும், (கரையோரங்களில்) மக்கள் நெருக்கம் உள்ளதுமான 'சரதண்டா' என்னும் நதியை விரைவாகக் கடந்து சென்றார்கள். சரதண்டா நதியின் மேல் கரையில் 'சத்யோபயாசனம்' என்ற பெயர் கொண்ட தெய்விக அருட்தன்மையுடைய மரத்தைக் கண்டு, அதை வலம் வந்து வணங்கிவிட்டு, 'குலிங்கம்' என்னும் நகரத்தை அடைந்தார்கள். (14–16)

அவ்விடத்திலிருந்து 'அபிகாலம்' என்னும் இடத்தை அடைந்தார்கள். பின், 'தேஜோபிபவனம்' என்ற இடத்தைத் தாண்டி, (தசரதருடைய) தந்தை–பாட்டன் என்று பரம்பரையாக அனுபவிக்கப் பட்டதும் புண்ணியமானதுமான 'இக்ஷுமதி' என்னும் நதியைக் கடந்து சென்றார்கள். இரு கை அளவு நீரை மட்டும் உணவாகக் கொண்டு, வேதப் பயிற்சியில் ஈடுபட்டு, தவ வாழ்க்கை நடத்திவரும் வேதவித்தகர்களான அந்தணர்களைத் தரிசித்துக் கொண்டு, 'பாஹ்லீகம்' என்னும் தேசத்தின் வழியே சென்று, 'சுதாமா' என்னும் மலையை அடைந்தார்கள். (17,18)

அந்த மலைச்சிகரத்தில் பகவான் விஷ்ணுவின் திருவடிச் சின்னங்களைக் கண்டு வணங்கினார்கள். பின்னர், 'விபாசா' (பீயாஸ்) நதியைக் கடந்து, அதன் கரையிலிருந்த 'சால்மலி' என்ற மரத்தையும், வேறு பல ஆறு–ஓடை–பொய்கைகளையும், பலவகையான சிங்கம், புலி, மான் மற்றும் யானைகளையும் பார்த்துக் கொண்டே நெடுந்தொலைவு செல்லும் பாதையில், தங்கள் ஆசார்யரின் ஆக்ஞையை நிறைவேற்றுவதில் கருத்துடையவர்களாகச் சென்றார்கள். (19,20)

தூதர்கள் ஏறிச் சென்ற குதிரைகள் மிகவும் களைப்படைந்திருந்தன. கடந்து வந்த பாதை நெடியதாக இருந்தாலும் இடையூறுகள் இல்லாமல் இருந்தது. விரைவில் அவர்கள் 'கிரிவ்ரஜம்' என்ற சிறந்த நகரத்தை அடைந்தார்கள். அந்த தூதர்கள், ஆணை கொடுத்தனுப்பிய வசிஷ்டரின் அன்பைப் பெறுவதிலும், அரச குலம் காப்பாற்றப்படுவதிலும், இக்ஷ்வாகு பரம்பரையின் கௌரவம் நிலைநாட்டப்படுவதிலும் மிக்க ஊக்கமுடையவர்களாக வேகமாகச் சென்று, அன்றிரவே ('ராஜக்ருஹம்' என்ற) அந்தப் பட்டணத்தைச் சென்றடைந்தார்கள். (21,22)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
அறுபத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்தொன்பது

பரதன் தீயகனவு கண்டான்!

அந்தத் தூதர்கள், அந்த நகரத்தை அடைந்த அதே இரவில், தீய கனவைப் பரதன் கண்டான். இரவு கழிந்து வைகறைப்பொழுது தொடங்கிய நேரத்தில் மாமன்னரின் புதல்வன் மனத்திற்கு இன்பம் அளிக்காத ஒரு கனவைக் கண்டு, அதனால் மிகவும் வேதனைப்பட்டான். இனிமையாகப் பேசும் நண்பர்கள், அவன் மனம் வேதனைப்படுவதை அறிந்து கொண்டு, அவன் துயரத்தைப் போக்குவதற்காக, ஒரு கூட்டமாகக் கூடி வேடிக்கைக் கதைகளைப் பேசினார்கள். (1–3)

அவனுக்கு மன அமைதி ஏற்பட வேண்டும் என்பதற்காக, சிலர் இசைக்கருவிகளை மீட்டினார்கள்; சிலர் நடனமாடினார்கள்; சிலர் நகைச்சுவைக் காட்சிகளை நடித்துக் காட்டினார்கள். ஆனால், ரகுகுலத் திலகமும் மகாத்மாவுமான பரதன் இனிமையாகப் பேசுகிற நண்பர்கள் குழுவின் நகைச்சுவைப் பேச்சுக்களால் மனம் மகிழவில்லை. நண்பர்களால் சூழப்பட்டிருந்த பரதனின் அருகில் அமர்ந்திருந்த உயிர் நண்பன் ஒருவன், பரதனைப் பார்த்து, "நண்பனே! ஏன் சந்தோஷமில்லாமல் இருக்கிறாய்?" என்று கேட்டான். (4–6)

இவ்வாறு கேட்ட நண்பனைப் பார்த்து, "எனக்கு மனவேதனை ஏன் ஏற்பட்டிருக்கிறது? என்பதை நீ கேட்பாயாக. இன்றிரவு ஒரு கனவு கண்டேன். என் தந்தை அழுக்கடைந்தவராக, தலைமுடியை விரித்துக் கொண்டு, மலையுச்சியிலிருந்து துர்நாற்றம் வீசும் பசுஞ்சாணம் நிரம்பிய மடுவில் விழுவதைக் கண்டேன். அந்த மடுவில் அவர் நீந்திக் கொண்டிருப்பதையும், அடிக்கடி சிரித்துக் கொண்டு இரு கைகளாலும் எண்ணெய் குடிப்பதையும் பார்த்தேன். அப்போது, எள்ளுஞ்சாதம் புசித்து, தலை கீழ்நோக்கி இருக்க, உடல் முழுவதும் எண்ணெய் பூசப்பட்டவராய் திரும்பத் திரும்ப எண்ணெயிலேயே மூழ்கினார். (7–10)

கனவில் பெருங்கடல் வற்றிப் போயிருந்தது; சந்திரன் பூமியில் விழுந்தது; உலகத்தை இருள் சூழ்ந்து கொண்டு இயல்பு வாழ்க்கையைத் தடைப்படுத்தியது. பட்டத்து யானையின் தந்தம் தூள்தூளாயிற்று; கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்த அக்னி திடீரென்று அணைந்து போயிற்று. பூமி வெடித்தது; பல்வகையான மரங்கள் காய்ந்து போயின; மலைகள் தகர்க்கப்பட்டு அவைகளிலிருந்து புகை எழுவதையும் நான் பார்த்தேன். கருமையான இரும்பு ஆசனத்தில், கருமையான ஆடை அணிந்து கொண்டு உட்கார்ந்திருந்த மன்னரை, கருப்பு மற்றும் மஞ்சள் நிறம் கொண்ட மாதர்கள் பரிகசித்துக் கொண்டிருந்தார்கள். (11–14)

தருமாத்மா(வான என் தந்தையார்) செவ்வண்ண மாலைகள், செஞ்சந்தனம் பூசிக் கொண்டு, கழுதை பூட்டிய தேரில் ஏறிக்கொண்டு தென்திசை நோக்கி விரைவாகச் சென்றார். செவ்வாடை அணிந்த, விகாரமான முகங்கொண்ட அரக்கத் தோற்றமுடைய பெண்ணொருத்தி,

அரசரைப் பரிகசித்துக் கொண்டே இழுத்துச் சென்றாள். இதையும் நான் பார்த்தேன். இந்த இரவில் அச்சத்தை அளிக்கும் இப்படிப்பட்ட காட்சிகளை நான் கண்டேன். (இந்தக் கனவு, எதை முன்கூட்டி அடையாளம் காட்டுகிறது என்றால்,) இராமனோ, மன்னரோ, இலக்குவனோ அல்லது நானோ மரணமடையப் போவது நிச்சயம். (15–17)

கனவில், எவனொருவன் கழுதை பூட்டிய ரதத்தில் ஏறிச் செல்வதாகக் காணப்படுகிறானோ, விரைவில் அவனுடைய சிதையிலிருந்து எழும் புகை காணப்படும். (அதாவது, அவன் உயிர் துறப்பான்.) இதன் காரணமாக, நான் மனவேதனையோடு இருக்கிறேன். அதனால்தான் உங்கள் வேடிக்கைகளை ரசிக்க முடியவில்லை. என்னுடைய தொண்டை உலர்ந்து போகிறது. என் மனமும் நல்ல நிலையில் இல்லை போலிருக்கிறது. (18,19)

என்னுடைய பயத்திற்கு எந்தக் காரணமும் தென்படவில்லை; என்றாலும் ஏனோ பயம் ஏற்பட்டிருக்கிறது. எனது குரலும் மாறிவிட்டது; என் தேககாந்தியும் மங்கிவிட்டது. என் மேலேயே எனக்கு வெறுப்பு உண்டாகிறது. ஆனால், அதற்கான காரணம் தெரியவில்லை. இந்தத் தீயகனவின் பயனை எண்ணியும், பலவகையாகக் காட்டப்பட்டதும், இதற்குமுன் நினைத்துக்கூடப் பார்க்காததும், எண்ணிப் பார்க்க முடியாத நிலையில் மன்னரைக் காட்சியாகக் கண்டதும் – ஆக இவையெல்லாவற்றையும் நினைத்து நினைத்து, என் மனத்தில் தோன்றிய அச்சம் நீங்கவில்லை'' என்று பரதன் பதில் கூறினான். (20–21)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
அறுபத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எழுபது

பரதன் புறப்படுதல்

பரதன் நண்பர்களிடம் இவ்வாறு தான் கண்ட கனவைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கையில், கடக்கமுடியாத அகழியை உடையதும், அழகு வாய்ந்ததுமான ராஜக்ருஹம் என்ற அந்த நகரத்திற்குள் தூதர்கள் நுழைந்தார்கள். அந்த நகரத்திற்குள் வந்ததும் மன்னராலும் அரச குமாரர்களாலும் வரவேற்கப்பட்டார்கள். பின்னர், (எதிர்கால) மன்னரான பரதனுடைய பாதங்களில் வணங்கி, பின்வரும் சொற்களைக் கூறினார்கள்— (1,2)

''புரோகிதரும், மற்ற அமைச்சர்களனைவரும் தங்கள் நலனைப் பற்றி விசாரிக்கச் சொன்னார்கள். தங்களால் செய்யப்பட வேண்டிய அவசர வேலை இருக்கிறது; விரைவாக (அயோத்திக்கு)ப் புறப்படுங்கள். அகன்ற கண்களை உடையவரே! விலையுயர்ந்த இந்த ஆடை–அணிகலன்களைப் பெற்றுக் கொண்டு, உங்கள் மாமனுக்கும் கொடுங்கள். நாங்கள் கொண்டு வந்திருப்பவைகளில் மன்னருக்கு இருபது கோடியும், உங்கள் மாமனுக்கு பத்துக் கோடியும் மதிப்புள்ளவைகள் இருக்கின்றன.'' பரதன் அவையெல்லாவற்றையும் பெற்றுக் கொண்டான். தன்பால் பற்றுக் கொண்டுள்ளவர்களிடம் பேரன்பு கொண்ட அவன், அந்தத் தூதர்களுக்கு அவர்கள் விரும்பியவற்றையெல்லாம் கொடுத்த பின்னர் இவ்வாறு கேட்டான்— (3–6)

''என்னுடைய தந்தையும், மாமன்னருமான தசரதர் உடல் நலமுடன் இருக்கிறாரா? மகாத்மாவான இராமன், இலக்குவன் ஆகியோர் நோய்–நொடி இல்லாமல் இருக்கிறார்கள் அல்லவா? மகாபுத்திமானான இராமனின் அன்னை, அறம் அறிந்த, அறப்பற்றுடைய, அறத்தை நடத்திக் காட்டுகிற உத்தமியான கோசலா தேவியார் நோயில்லாமல் இருக்கிறாரா? இலக்குவன் மற்றும் வீரனான சத்ருக்னனுடைய தாயாரும், அறநெறி உணர்ந்தவரும், (மூன்று பட்டத்தரசிகளில்) நடுவில் இருப்பவருமான சுமித்திரை நலம்தானே? தன்னலம் கருதுபவரும்,

எல்லா விஷயத்திலும் முரண்டு பிடிப்பவரும், கோபக்காரியும், தன்னை மகாபுத்திசாலி என்று நினைத்துக் கொண்டிருப்பவருமான என் தாயார் கைகேயி நலம்தானே? அவர் என்ன சொல்லி அனுப்பினார்?'' (7–10)

மகாத்மா பரதனால் இவ்வாறு கேட்கப்பட்ட அந்தத் தூதர்கள், மிக்க வினயத்துடன் பின்வரும் பதிலை பரதனிடம் சொன்னார்கள்— ''புலிநிகர் வீரரே! எவரெவர்களுடைய நலனைத் தாங்கள் அறிந்து கொள்ள விரும்புகின்றீர்களோ, அவர்கள் நலமாகவே இருக்கிறார்கள். தாமரை தடக்கை கொண்ட திருமகள் தங்களைக் கோருகிறாள். தங்கள் தேர் இப்போதே ஆயத்தமாகட்டும்.'' இவ்வாறு அந்தத் தூதர்கள் சொன்னதைக் கேட்டு, ''சரி, நான் மன்னரிடம், 'தூதர்கள் என்னை அவசரமாக அழைக்கிறார்கள்' என்று கூறி, விடைபெற்றுக் கொண்டு வருகிறேன்.'' (11–13)

இவ்வாறு அந்தத் தூதர்களிடம் தெரிவித்துவிட்டு, அரசகுமாரரான பரதன், தூதர்களால் விரைவுபடுத்தப்பட்டு, தாய்வழிப் பாட்டனாரிடம் சென்று பின்வருமாறு கூறினான்— ''மன்னரே! தூதர்கள் என்னை அவசரப்படுத்துகிறார்கள். தகப்பனாரிடம் செல்கிறேன். பின்னர், நீங்கள் என்னை அழைக்கும்போது வருகிறேன்.'' பரதன் இவ்வாறு கூறியதைக் கேட்ட தாய்வழிப் பாட்டனாரான மன்னர், ரகுகுல திலகமான பரதனை உச்சிமுகர்ந்து மங்களமான சொற்களைக் கூறினார்— (14–16)

''குழந்தாய்! நான், உனக்கு அனுமதி கொடுக்கிறேன், சென்று வருவாயாக! உன்னைப் பெற்றதால், கைகேயி நன்மகவைப் பெற்ற தாய் என்ற பெருமையைப் பெற்றாள். வெற்றி வீரனே! உன் தாய்–தந்தையரின் நலனை விசாரித்ததாகக் கூறுவாயாக. புரோகிதரிடமும் மற்றுமுள்ள அந்தணோத்தமர்களிடமும் நான் நலன் விசாரித்ததாகக் கூறு; வீரமிகு வில்லாளிகளும், சகோதரர்களுமான இராம–இலக்குவர்களையும் நான் மிகவும் விசாரித்ததாகக் கூறு.'' (17,18)

கேகய மன்னர், பரதனுக்கு உத்தமமான யானைகளையும், கம்பளி வகைகளையும், மான்–புலித் தோல்களையும், ஏராளமான செல்வங்களையும் பரிசாகக் கொடுத்தார். கேகய மன்னர், இரண்டாயிரம் பொற்காசுகளையும், ஆயிரத்து அறுநூறு குதிரைகளையும் கைகேயியின் பிள்ளைக்கு மிக்க அன்போடு பரிசாக அளித்தார். மன்னர் அசுவபதி, தன் மனம் போல நடக்கின்ற, நம்பிக்கைக்குப் பாத்திரமான, நற்குணங்களுடன் கூடிய அமைச்சர்களைப் பரதனுடன் செல்லும்படி ஆணையிட்டார். மாமன் இவருக்கு(த் தன் அன்புப் பரிசாக) 'இராவான்', 'இந்திரசிரஸ்' என்ற மலைகளில் தோன்றிய அழகிய தோற்றமுடைய யானைகளையும், தேர்களை வேகமாக இழுத்துச் செல்வதில் பழக்கப்பட்டவைகளான கோவேறு கழுதைகளையும் அளித்தார். (19–22)

அந்தப்புரத்தில் மிகவும் அக்கறையுடன் வளர்க்கப்பட்டவைகளும், புலியின் வீர்ய–பராக்கிரமத்திற்கு ஈடானவைகளும், கோரைப் பற்களையே ஆயுதங்களாக உடையவைகளும், பேருடல் கொண்டவைகளுமான வேட்டை நாய்களையும் வெகுமானமாகக் கொடுத்தார். கைகேயி மைந்தன் பரதன் புறப்பட்டுச் செல்வதற்குத் துடித்துக் கொண்டிருந்ததால், கேகய மன்னரால் அளிக்கப்பட்ட அந்தப் பரிசுகளில் மனநாட்டம் கொள்ளவில்லை. தூதர்கள் அவசரப்படுத்தியதாலும், கெட்ட கனவைக் கண்டதாலும், அப்போது அவனுடைய மனத்தில் பெருங்கவலை உண்டாகியிருந்தது. (23–25)

திருநிறை செல்வனான அவன், தன் இருப்பிடத்திற்குச் சென்று, பின் அங்கிருந்து புறப்பட்டு, மக்கள்–யானைகள்–குதிரைகள் நிரம்பிய மிகச்சிறந்ததான, விசாலமான ராஜவீதியை அடைந்தான். பின்னர், திருபொருந்திய பரதன், அதைக் கடந்து எழில்மிக்க அந்தப்புரத்தைக் கண்டான்; (காவலர்களால்) தடைசெய்யப்படாதவனாக உள்ளே சென்றான். பரதன், தாய் வழிப்பாட்டனாரிடமும், மாமனாகிய யுதாஜித்திடமும் விடைபெற்றுக் கொண்டு, சத்ருக்னனோடு ரதத்தில் ஏறி, பயணத்தைத் தொடங்கினான். (26–28)

வேலைக்காரர்கள், வட்டமான சக்கரங்களைக் கொண்ட ஒட்டகம்–எருது–குதிரை–கோவேறு கழுதைகள் பூட்டிய நூற்றுக்கணக்கான ரதங்களில், முன்னே வேகமாகச் சென்று கொண்டிருந்த பரதனைப் பின்பற்றிச் சென்றார்கள். கேகய மன்னருக்குச் சமம் என்று கருதத்தக்க அமைச்சர்களுடன் படையினரால் பாதுகாக்கப்பட்டு, சத்ருக்னனையும் உடன் அழைத்துக் கொண்டு, எதிரிகளில்லாத பரதன், யாரோ ஒரு சித்த புருஷர் இந்திரலோகத்திலிருந்து புறப்பட்டு வேறோர் இடத்திற்குக் கோலாகலமாகச் செல்வதைப்போல, அந்த அரண்மனையிலிருந்து வெளிக் கிளம்பினான். (29,30)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
எழுபதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எழுபத்தொன்று

பரதன், அயோத்தியை அடைதல்

மகாவீரனான அவன், ராஜக்ருஹத்திலிருந்து புறப்பட்டுக் கிழக்குத் திசை நோக்கிச் சென்றான். வழியில், தேஜஸ்வியான அவன் 'சுதாமா' என்ற நதியைக் கண்டு, அதைக் கடந்து சென்றான். பின்னர், இக்ஷ்வாகு குலத்திற்குப் பெருமை சேர்ப்பவனும் ஸ்ரீமானுமான பரதன், 'ஹ்லாதினி' என்னும் ஆற்றையும், மேற்கு திசைநோக்கிப் பாயும் 'சதத்ரு' (தற்கால சட்லெஜ்) என்னும் நதியையும் கடந்தான். 'ஏலாதானம்' என்னும் நகரத்தை அடைந்து, அங்கே ஒரு நதியைத் தாண்டிச் சென்று, 'அபரபர்ப்படம்' என்ற நாட்டின் வழியே சென்று, தன்னுள் விழுகின்றவைகளைக் கற்களாக மாற்றிவிடும் தன்மை படைத்த ஒரு நதியையும் கடந்து, தென்கிழக்கில் 'சல்யகர்த்தனம்' என்ற நாட்டை வந்தடைந்தான். (1–3)

சொல் தவறாதவனும் தூய உள்ளம் கொண்டவனும், சகல வளமைகளும் பொருந்தியவனுமான அவன், (கற்பாறைகளைப் புரட்டித் தள்ளும் அளவுக்கு வேகமாகப் பாயும்) 'சிலாவஹா' என்று பெயர் பெற்ற நதியைத் தரிசித்துக் கொண்டு, பெரிய பெரிய மலைகளைக் கடந்து சென்று, 'சைத்ரரதம்' என்னும் காட்டை அடைந்தான். சரஸ்வதி நதியும், கங்கையின் ஒரு கிளை நதியும் சேரும் இடத்தை வந்தடைந்தான். அங்கிருந்து 'வீரமத்ஸ்யம்' என்ற நாட்டின் வடக்கேயிருந்த நாடுகள் வழியே சென்று 'பாருண்டம்' என்ற வனத்தில் புகுந்தான். (4,5)

பின்னர், மிக வேகமாக ஓடுவதும், மலைகளிலிருந்து சப்தமிட்டுக் கொண்டு விழும் அருவிகளின் நீர் நிரம்பியதுமான 'குலிங்கம்' என்ற நதியைக் கடந்து, அதன்பின் யமுனை நதியையும் கடந்து சென்று, அவ்விடத்தில் படையினருக்கு ஓய்வு கொடுத்தான். அவ்விடத்தில் களைப்படைந்திருந்த குதிரைகளைக் குளிப்பாட்டி, உடலில் குளிர்ச்சியூட்டி, இளைப்பாறச் செய்தான். தானும், நீராடியும் நீர் பருகியும், போகும் வழியில் தேவைப்படும் தண்ணீரை எடுத்துக் கொண்டும் புறப்பட்டான். புண்ணியாத்மாவான சக்கரவர்த்தியின் குமாரன், மக்கள் நடமாட்டமில்லாத நெடிய வனத்தை, மங்களமான ரதத்தின் மூலம், ஆகாயத்தில் எப்படி வாயு தடையற்றுச் செல்லுமோ, அவ்வாறே எளிதாகக் கடந்தான். (6–8)

'அம்சுதானம்' என்ற நகரை அடைந்த பரதன், பெருவெள்ளமாகப் பெருகி ஓடிக் கொண்டிருந்த கங்கையை அவ்விடத்தில் கடக்க முடியாது என்று கண்டு, வேகமாகச் சென்று புகழ்பெற்றதான 'ப்ராக்வடம்' என்னும் நகரை அடைந்தான். ப்ராக்வட நகரத்தில் கங்கையைக் கடந்து, 'குடிகோஷ்டிகா' என்னும் நதியின் கரையை வந்தடைந்தான். படையினரோடு தானும் அந்த ஆற்றைக் கடந்து 'தர்மவர்த்தனம்' என்னும் கிராமத்தை வந்தடைந்தான். அங்கிருந்து தசரதர் மைந்தனான பரதன், 'தோரணம்' என்ற கிராமத்தின் தென்புறத்தில் அமைந்திருந்த

'ஜம்பூப்ரஸ்தம்' என்ற அழகான ஊரை அடைந்தான். பின்னர், 'வரூதம்' என்ற அழகான கிராமத்தை அடைந்தான். (9–11)

அவ்விடத்தில், ஒரு காட்டில் இரவு தங்கிவிட்டு, பொழுது விடிந்ததும் கிழக்குத் திசையில் சென்றான். அவ்வாறு மேலே சென்று கொண்டிருந்த அவன் 'உஜ்ஜிஹானா' என்ற நகரத்தின் பூங்காவனத்தை அடைந்தான். ஆச்சா மரங்களும், கதம்ப மரங்களும் நிறைந்திருந்த அந்த இடத்தில், படையினரை மெதுவாக வரும்படி ஆக்ஞை கொடுத்துவிட்டு, வேகமாகச் செல்லும் குதிரைகளைத் தன் தேரில் பூட்டிக் கொண்டு விரைவாகச் சென்றான். மாவீரனான அவன், 'சர்வதீர்த்தம்' என்னும் கிராமத்தில் ஓர் இரவைக் கழித்துவிட்டு, 'உத்தானிகா' என்ற ஆற்றையும், வேறு பல ஆறுகளையும் மலைப்பிரதேச இனத்தைச் சேர்ந்த குதிரைகளைக் கொண்டு தாண்டிச் சென்று, 'ஹஸ்திப்ருஷ்டகம்' என்ற கிராமத்தை அடைந்தான். அதன் அருகில் 'குடிகை' என்னும் ஆற்றைக் கடந்தான். பின்னர், 'லோஹித்யம்' என்னும் சிற்றூர் அருகே 'ஸிகதாவதி' என்ற ஆற்றைக் கடந்தான். (12–15)

பரதன், 'ஏகஸாலம்' என்னும் கிராமத்திற்கு அருகில் 'ஸ்தாணுமதி' என்ற ஆற்றையும், 'வினதம்' என்ற சிற்றூருக்கு அருகில் 'கோமதி' என்ற ஆற்றையும் கடந்து, குதிரைகள் மிகவும் களைப்படைந்திருந்த நிலையிலேயே இடையில் தாமதிக்காமல், 'கலிங்க' நகரை ஒட்டியிருந்த ஆச்சா மரங்கள் நிறைந்த வனப்பிரதேசத்தை சென்றடைந்தான். இரவில் விரைவாக வனத்தைக் கடந்து, வைகறைப்போதில் மனுச்சக்கரவர்த்தியால் நிர்மாணிக்கப்பட்ட அயோத்தி மாநகரை, வழியில் ஏழு இரவுகளைக் கழித்த மாவீரனான அவன், கண்களால் கண்டான். (16–18)

கண்ணெதிரில் அயோத்தியைப் பார்த்து, தேரோட்டியை நோக்கிச் சொன்னான்— ''புகழ்மிக்கதும், பவித்ரமான பூங்காக்களை உடையதுமான இந்த நகரம், களையிழந்ததாக என்னால் காணப்படுகிறது. சாரதியே! இதே அயோத்தியில்தான் நற்குணங்கள் அமையப் பெற்றவர்களும், வேதவித்தகர்களுமான அந்தணர்கள் வசித்து வருகிறார்கள்; பெரும் செல்வந்தர்கள் நிறைந்திருக்கிறார்கள்; ராஜரிஷியான தசரத மன்னர் பரிபாலித்து வருகிறார். அந்த அயோத்தி தூரத்திலிருந்து பார்க்கும்போது வெண்மணற்குவியல் போல் என்னால் காணப்படுகிறது. (19,20)

முன்பு, இந்த அயோத்தியில் ஆண்–பெண்களின் கோலாகலக் குரல் எல்லாப் பக்கங்களிலிருந்தும் கேட்கப்படும். ஆனால், இப்போது நான் அதைக் கேட்கவில்லை. அந்திவேளையில், பூங்காக்களில் விளையாட்டுக்களை முடித்துக் கொண்டு, மக்கள் நாலாதிசைகளிலும் பரந்து கொண்டு செல்வார்கள்; ஆனால், இப்போது எனக்கு வேறுவிதமாகக் காட்சி தருகிறது. தன்னிடம் அன்பு கொண்டவர்களால் துறக்கப்பட்டு, அந்தப் பூங்காக்கள் அழுவது போலிருக்கிறது. (21,22)

தேரோட்டியே! ஊரிலுள்ள பிரமுகர்கள், முன்பு போல் தேர்–யானை–குதிரைகளில் ஏறிக் கொண்டு உள்ளே வருகிறவர்களாகவோ, வெளியே போகிறவர்களாகவோ காணப்படவில்லை. அதனால், இது காட்டைப் போல் (மக்கள் நடமாட்டமில்லாததாக) ஆகிவிட்டதாகத் தோன்றுகிறது. முன்பு, பூங்காக்களில் ஆனந்தப்பெருக்கில் மதிமயங்கி மூழ்கியவர்களும், காம விளையாட்டுக்களுக்கு ஏற்ற சௌகரியங்கள் நிறைந்திருந்ததால் இளைஞர் கூட்டமும் ஆரவாரம் செய்து கொண்டிருக்கும். இப்போது பூங்காக்களுக்குச் செல்லும் பாதைகளில் மரங்கள் கதறி அழுது உதிர்த்த இலைகள் காணப்படுகின்றன; எல்லாப் பக்கங்களிலும் ஆனந்தமின்மையைக் காண்கிறேன். (23–25)

அன்பும் இனிமையும் கூடி, பேரிரைச்சலாகக் கூவும் மதங்கொண்ட மான்கள்–பறவைகளின் ஒலியை, இந்த நேரம் வரை நான் கேட்கவில்லை. சந்தனம், அகில் போன்ற வாசனைப் பொருள்கள் மற்றும் மணமிக்க தூபப் புகையின் நறுமணம் ஆகியவற்றைச் சுமந்து வரும்

இனிய காற்று, இப்போது முன்புபோல் (நறுமணத்துடன்) வீசவில்லை? பேரிகை, மிருதங்கம், வீணை ஆகிய இசைக்கருவிகளின் கம்பீரமான நாதம், எவ்வித இடையூறுமில்லாமல் முன்பு கேட்டுக் கொண்டிருக்கும். அது ஏன் இப்போது நின்று போயிற்று? (26–28)

துயரம் தரக் கூடிய பலவகையான பாவக் காட்சிகளைக் காண்கிறேன். மனத்திற்கு உற்சாகம் அளிக்காத சகுனங்களையும் பார்க்கிறேன். அதனால், என் மனம் கவலைப்படுகிறது. தேரோட்டியே! என் உறவினர்கள் எல்லோரும் நலம் என்பது ஒருக்காலும் நடக்கக் கூடியதல்ல. புத்தி மயங்குவதற்குக் காரணமே இல்லை என்ற போதிலும், என் மனம் நடுங்குகிறது.'' உற்சாகம் இழந்தவனாக, களைப்புற்ற மனம் கொண்டவனாக, உள்ளம் நடுங்கியவனாக, பொறிகள் கலங்கியவனாக, இக்ஷ்வாகு மரபினரால் பாதுகாக்கப்படும் நகரத்திற்குள் பரதன் பிரவேசித்தான். (29–31)

வைஜயந்தமென்னும் நுழைவாயில் வழியாக, களைத்துப் போன வாகனங்களையுடைய பரதன் உள்ளே நுழைந்தான். வாயிலில் காத்திருந்த பணியாளர்கள், 'வெற்றி, வீரரே! வெற்றி!' என்று வாழ்த்தினார்கள். அவர்களுடனே உள்ளே சென்றான். பரதனுடைய மனம் ஒருநிலையில் இல்லை – அஞ்சி அலைந்து கொண்டிருந்தது. உடன் வந்த வாயிற்காப்பாளர்களுக்கு விடைகொடுத்து அனுப்பினான். அசுவபதியினால் அனுப்பப்பட்டவனும் களைத்திருந்தவனுமான தேரோட்டியை நோக்கி இவ்வாறு கூறினான்— (32,33)

''குற்றமற்றவனே! எவ்வித முக்கிய காரணமும் இல்லாமல் நான் ஏன் இங்கு இவ்வளவு விரைவாக அழைத்து வரப்பட்டேன்? மனத்தில் அசுபமான எண்ணங்களே எழுகின்றன. இயல்பான என் மனோதைரியம் விழுந்துவிட்டது போலிருக்கிறது. தேரோட்டியே! ஒரு நாட்டின் அரசர் அழிந்தால் என்னென்ன நிமித்தங்கள் காணப்படும் என்று, நாம் முன்னர் கேட்டறிந்திருக்கிறோமோ, அந்த அறிகுறிகளையெல்லாம் நான் இங்கே பார்க்கிறேன். வீடுகள் கூட்டி மெழுகப்படவில்லை; சோபை இழந்தவைகளாகக் காணப்படுகின்றன. கதவுகள் மூடப்படவில்லை. எல்லாப் பக்கங்களிலும் ஒளி குன்றியதாகக் காண்கிறேன். (34–36)

சம்சாரிகள் வசிக்கும் வீடுகளில் தெய்வ ஆராதனை, பலிஹரணம் காணப்படவில்லை; நறுமண தூபங்கள் இல்லை; குடும்பத்தில் உள்ளவர்கள் உணவு கொள்ளவில்லை; மக்கள் ஒளியிழந்தவர்களாக இருக்கிறார்கள்; வீடுகள் பாழடைந்துவிட்டனபோல் நான் காண்கிறேன். தேவாலயங்களில் மலர்மாலைகளின் சோபை காணப்படவில்லை; பிரகாரங்கள் பெருக்கி, நீர் தெளித்து சுத்தம் செய்யப்படவில்லை; மனித நடமாட்டமே இல்லாமல் சூனியமாக இருக்கிறது. ஏன், முன்புபோல் ஒளியுடன் விளங்கவில்லை? (37,38)

தெய்வத் திருமேனிகளுக்கு வழிபாடுகள் நடைபெறவில்லை; வேள்விச் சாலைகளும் அவ்வாறே (கர்மாக்கள் இல்லாததாகக்) காணப்படுகின்றன; மலர் விற்பனை நிலையங்களில், மலர்மாலைகள் முன்புபோல் இப்போது வியாபாரத்திற்காக வைக்கப்படவில்லை. இங்கு வணிகர்களும் சோகத்தால் மனம் பதறியவர்களாகக் காணப்படுகிறார்கள்; விற்பனை இழந்ததால் மனம் குன்றியிருக்கிறார்கள்; அதனால் முன்புபோல் காணப்படவில்லை. கோவில்களிலும் புனித மரங்களிலும் பறவை–விலங்குகள் சோர்ந்து கிடக்கின்றன. நகரத்தில் ஆண்–பெண்களின் சமூகம் மாசடைந்தும், கண்ணீர் நிரம்பிய கண்களுடனும், இரங்கத்தக்க நிலையிலும், கவலை கொண்டும், துவண்டுபோய் வருந்திக் கொண்டிருப்பதாகவும் காண்கிறேன்.'' (39–41)

பரதன், சாரதியிடம் இவ்வாறு கூறிவிட்டு, அயோத்தியில் அபசகுனங்களைப் பார்த்து நொந்த மனத்துடன் மன்னர் மாளிகையை அடைந்தான். தேவலோகத்தில் இந்திரனுடைய பட்டணம் போல் முன்பு விளங்கிய அந்த நகரம், நாற்சதுக்கங்கள்–வீடுகள்–தேர்த்தடங்கள் எல்லாம் மக்கட்கூட்டமில்லாமல் இருப்பதையும், வீட்டுக் கதவுகள் புழுதி படிந்து செம்மையாக மாறியிருப்பதையும் பார்த்து மிகவும் துயரமடைந்தான். இதற்கு முன்பு அந்த நகரில் மனத்திற்கு

ஒவ்வாத இப்படிப்பட்ட காட்சிகள் காணப்பட்டதில்லை. ஆனால், இப்போது ஏராளமாகக் காணப்படுகின்றன. அதனால், (தவிர்க்க முடியாத ஒரு பேரிழப்பை எதிர்பார்த்து) தலையைத் தொங்கவிட்டுக் கொண்டு, மனம் நொந்து, மகிழ்ச்சியிழந்து தந்தையின் மாளிகைக்குள் புகுந்தான், மகாத்மாவான பரதன். (42–44)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
எழுபத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எழுபத்து இரண்டு

பரதன் கதறி அழுதல்

பரதன், அப்போது தந்தையின் அந்த மாளிகையில் அவரைக் காணாததால், தாயைக் காண்பதற்காகத் தாயாரின் மாளிகைக்குச் சென்றான். வெளிநாடு சென்றிருந்த தன்னுடைய மைந்தன் திரும்பி வந்துவிட்டதைக் கண்டு, கைகேயி மனம் பூரித்தவளாகப் பொன்மயமான ஆசனத்திலிருந்து குதித்தோடி வந்தாள். தருமாத்மாவான பரதன் மாளிகைக்குள் நுழைந்ததுமே, அது ஒளியிழந்திருப்பதைக் கண்டான்; தன் தாயாரின் மங்களமயமான பாதங்களில் வீழ்ந்து வணங்கினான். அவள், புகழ்மிக்கவனான அவனை உச்சிமுகர்ந்து, கட்டித்தழுவி, மடியில் அமர்த்திக் கொண்டு விசாரிக்க ஆரம்பித்தாள்— (1–4)

''பாட்டனாரின் வீட்டிலிருந்து எவ்வளவு நாட்களுக்கு முன் புறப்பட்டாய்? தேரில் ஏறி வேகமாக வந்திருக்கும் உனக்கு பயணக் களைப்பு இல்லையா? குழந்தாய்! உன் பாட்டனார் சுகமாக இருக்கிறாரா? அவ்வாறே உன் மாமா யுதாஜித்தும் நலம்தானே? நீ, இங்கிருந்து புறப்பட்டுச் சென்றது முதல் நலமாகத்தானே இருக்கிறாய்? எல்லாவற்றையும் எனக்கு விவரமாகக் கூறு.'' இவ்வாறு கைகேயியினால் கனிவுடன் கேட்கப்பட்ட தசரத நந்தனன், தாமரைக்கண்ணன் பரதன், எல்லாவற்றையும் அன்னையிடம் கூறினான்— (5–7)

''பாட்டனாரின் வீட்டிலிருந்து புறப்பட்டு இப்போது ஏழு நாட்கள் ஆகின்றன. தங்கள் தந்தையார் சௌக்கியமாக இருக்கிறார். என் மாமன் யுதாஜித்தும் நலம்தான். பகைவரை வாட்டி எடுக்கும் கேகய மன்னர், எனக்கு ஏராளமான செல்வத்தையும், மதிப்புமிக்க பொருள்களையும் பரிசாகக் கொடுத்தார். அவைகளைச் சுமந்து வந்த வாகனங்கள் வரும் வழியில் மிகவும் களைப்படைந்துவிட்டன. ஆதலால், நான் (சத்ருக்னனுடன்கூட) முன்னால் வந்துவிட்டேன். அரச ஆணையைக் கொண்டு வந்த தூதர்கள், என்னை மிகவும் அவசரப்படுத்தியதால், நான் முன்னால் வந்துவிட்டேன். நான் கேட்கப்போகும் தகவல்களைத் தாயாராகிய நீங்கள் நிச்சயமாகச் சொல்லவேண்டும். (8–10)

(மன்னர் வந்து படுக்கும்) தங்கமயமான தங்கள் கட்டில் ஆள் இல்லாமலிருக்கிறது. (அவர் ஏன் இங்கே இல்லை?) இக்ஷ்வாகு பரம்பரையின் மக்களும் தற்சமயம் மனமகிழ்ச்சியுடன் இருப்பதாகத் தெரியவில்லை. பொதுவாக, மன்னர் என் அன்னையின் இருப்பிடமாகிய இங்கேதான் அதிக நேரம் தங்கியிருப்பார். ஆனால், இப்போது அவரை இங்கே நான் காணவில்லை. அவரைப் பார்க்கும் ஆவலுடன் இங்கு வந்தேன். என் தந்தையாரின் பாதங்களில் விழுந்து நமஸ்கரிக்க வேண்டும். எனவே, நான் கேட்பதற்குப் பதில் சொல்லுங்கள். ஒருக்கால் பெரிய அன்னை கௌசல்யையின் மாளிகையில் இருக்கிறாரோ?'' (11–13)

ஆட்சி அதிகாரத்தில் மயங்கியிருந்த கைகேயி, பயங்கரமானதும் மகிழ்ச்சி தராததுமான செய்தியை, 'அவனுக்கு மகிழ்ச்சியைத் தரும்' என்ற தவறான எண்ணத்துடன், மன்னர் பற்றிய செய்திகளை அறியாத அவனுக்குத் தெரியப்படுத்தும் வகையில், இவ்வாறு பதில்

கூறினாள்— ''எண்ணற்ற வேள்விகளைச் செய்தவர், சான்றோர்களுக்குப் புகலிடம், மகா தேஜஸ்வி, மகாத்மா – இப்படிப்பட்ட உன்னுடைய தந்தையாகிய மன்னர், எல்லா உயிர்ப் பிராணிகளுக்கும் முடிவு எதுவோ, அந்த முடிவை அடைந்துவிட்டார்.'' (14,15)

அறத்தின்பால் உறுதியான பற்றுக் கொண்டவனும், பரிசுத்த மூர்த்தியுமான பரதன், அந்தச் சொற்களைக் கேட்டவுடன், தந்தையின் மரணத்தால் ஏற்பட்ட சோகத்தால் தாக்கப்பட்டு, உடனே தரையில் வீழந்தான். வீரம் மிக்கவனும் பெருந்தோளனுமாகிய பரதன், 'ஆகா!... தந்தையே!... நான் தொலைந்தேன்!' என்ற துக்ககரமான சொற்களைப் பரிதாபமாகக் கூறியபடி, இருகைகளாலும் தரையைத் தட்டிக் கொண்டு விழுந்து புரண்டான். மகாதேஜஸ்வியான அவனுடைய சிந்தனை கலங்கிச் சிதறியது. தந்தையின் மரணத்தால் ஏற்பட்ட சோகத்தால் மெய்மறந்து அழுது புலம்பத் தொடங்கினான்— (16–18)

''சரத் காலத்தில், நிர்மலமான ஆகாயத்தில், நிலா வெகு அழகாகப் பிரகாசிப்பதைப் போல, முன்பு என் தந்தையார் வீற்றிருந்தபோது, இந்தக் கட்டில் சோபிதமாக விளங்கியது. அதே கட்டில், இப்போது மகாபுத்திமானான அவர் இல்லாததால், நிலா இல்லாத வானம் போலவும், நீரில்லாத சமுத்திரம் போலவும் ஒளியிழந்து காணப்படுகிறது.'' வெற்றி வீரர்களில் தலைசிறந்தவனான அவன், மிகவும் மனவேதனைப்பட்டு, தன்னுடைய அழகிய முகத்தைத் துணியால் மறைத்துக் கொண்டு, கண்ணீர் விட்டுக்கொண்டு தனக்குள் விம்மி அழுதான். தேவர்கள் போல் ஒளிவீசும் அவன், காட்டில் கோடரியால் வெட்டிச் சாய்க்கப்பட்ட ஆச்சா மரத்தின் கிளையைப் போல், தரையில் வீழ்ந்து கிடந்ததைக் (கைகேயி) கண்டாள். (19–22)

மதங்கொண்ட யானையைப் போன்றவனும், சூரிய–சந்திரர்களுக்கு ஒப்பானவனும், துயரத்தால் பீடிக்கப்பட்டிருந்தவனுமான அவனைத் தரையிலிருந்து தூக்கி உட்கார வைத்து, பின்வரும் சொற்களைக் கூறினாள்— ''மன்னர் மைந்தனே! புகழ்மிக்கவனே! எழுந்திரு, எழுந்திரு. ஏன் படுத்துக் கொண்டிருக்கிறாய்? பேரறிஞர்களின் சபையில் கொண்டாடப்படும் உன்னைப் போன்ற மேன்மக்கள், இந்த விஷயத்தில் வருந்த மாட்டார்கள். நற்புத்தி நிறைந்தவனே! ஆகாயத்தில் சூரியனுடன் கூடிய பிரபை போல, உனது நோக்கம் தானம் செய்வதிலும் யாகங்கள் செய்வதிலும் இணைபிரியாது இருக்கவேண்டும்; நல்லொழுக்கம், வேதமோதுதல், தவ வாழ்க்கை – இவற்றைச் சார்ந்திருக்க வேண்டும்.'' (23–25)

அவன் தரையில் வெகுநேரம் விழுந்து புரண்டு அழுதுவிட்டு, மிகவும் துயரத்தால் ஆட்கொள்ளப்பட்டு, தாயைப் பார்த்து இவ்வாறு பேசினான்— ''மன்னர், இராமனுக்கு முடிசூட்டப் போகிறார்; அல்லது ஒரு மகாயாகத்திற்கு அவர் சங்கற்பம் செய்து கொள்ளப் போகிறார் – என்று, மிகவும் சந்தோஷத்துடன் முடிவு செய்து கொண்டு, அங்கிருந்து புறப்பட்டு வந்தேன். ஆனால், இங்கு நடந்திருப்பதோ வேறாக உள்ளது. எப்போதும் என் நல்வாழ்வில் அக்கறையுடைய தந்தையாரைக் காணாததால், என் மனம் உடைந்து போய்விட்டது. (26–28)

அம்மா! நான் திரும்பி வருவதற்கு முன்பாகவே, உயிர் போகும்படியான அப்படி என்ன நோய் அவரைப் பீடித்திருந்தது? தந்தையாருக்கு நேரடியாகவே அந்திமக்கிரியைகளை நடத்திய இராமன் முதலிய எல்லோரும் மிகவும் கொடுத்து வைத்தவர்கள். புகழ்பெற்ற மாமன்னர், நான் இங்கே திரும்பி வந்துவிட்டதை அறியமாட்டார். அறிந்திருந்தால் அவர் என் தலைமேல் குனிந்து என்னை உச்சிமுகர்வார். எந்தச் செயலையும் எளிதில் முடிக்கக் கூடியவரான தந்தையின் இனிமையாகத் தடவிவிடுகின்ற கைகள் எங்கே? அந்தக் கைகளால்தான் புழுதி படிந்த என் சரீரத்தை உடனுக்குடன் துடைத்துவிட்டுக் கொண்டிருப்பார். (29–31)

என்னுடைய சகோதரரும், தந்தைக்கு ஒப்பானவரும், கஷ்டமான காரியங்களையும் சுலபமாக முடித்துவிடக் கூடியவருமான எந்தப் பேரறிவாளருக்கு நான் தொண்டனோ, அந்த இராமபிரானுக்கு நான் திரும்பி வந்துவிட்ட செய்தியைத் தெரிவியுங்கள். அறம் அறிந்தவனுக்கு (அவனுடைய)

அண்ணன் (பெற்ற) தந்தைக்கு சமானமானவர். வணக்கத்திற்குரிய அவருடைய திருவடிகளில் விழுந்து நமஸ்காரம் செய்யப் போகிறேன். இனிமேல், அவர்தானே எனக்குப் புகலிடம்? (32,33)

தாயே! தருமம் அறிந்தவரும், தருமத்தில் நிலையான பற்றுடையவரும், பெரும் பாக்கியசாலியும், உறுதியான விரதம் உடையவரும், வீணபோகாத பராக்கிரமம் உடையவருமான என் தந்தை என்ன சொன்னார்? கடைசியாக எனக்கு அவர் ஏதேனும் ஆணையிட்டிருந்தால், அதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.'' இவ்வாறு கேட்கப்பட்டவுடன் நடந்தவற்றையெல்லாம் நடந்தவாறே கைகேயி சொல்லிவிட்டாள். ஆண்மை மிக்கவர்களில் சிறந்தவரான, மகாத்மாவான அவர், 'ஹா, இராமா! ஹா, சீதே! ஹா, லட்சுமணா!' என்று புலம்பிக் கொண்டே மேலுலகம் சென்றார். (34–36)

கயிறுகளால் பிணைக்கப்பட்ட பெரிய யானை அடங்கிவிடுவதைப் போல, காலவசத்தால் கட்டுண்ட உன் தந்தை, பின்வரும் சொல்லையும் கடைசியாகச் சொன்னார்— 'சீதையோடும் இலக்குவனோடும் திரும்பி வரும் பெருந்தோளனான இராமனை, பாக்கியம் செய்த மனிதர்கள் பார்க்கப் போகிறார்கள்.' தாயாரிடமிருந்து மனத்திற்குப் பிடிக்காத இந்த இரண்டாவது செய்தியைக் கேட்டதும், துயரம் தாங்காமல் பரதனின் முகம் மிகவும் வாடிப்போயிற்று; தாயாரை மறுபடியும் கேட்டான்— (37–39)

''கௌசல்யாதேவியின் ஆனந்தத்தைப் பெருக்கும் தருமாத்மாவான அவர், சீதாப் பிராட்டியுடனும், சகோதரன் லட்சுமணனுடனும் இந்தச் சந்தர்ப்பத்தில் எங்கே போயிருந்தார்?'' இவ்வாறு கேட்கப்பட்டவுடன் அவனுடைய தாயார், மிகவும் துன்பம் தரக்கூடிய செய்தியை, மகிழ்ச்சி தரும் என்று தவறாகக் கருதி, நடந்தவைகளை நடந்தவாறே சொல்லத் தொடங்கினாள்— ''மகனே! மன்னரின் மைந்தனான அவன், மரவுரியுடுத்து, இலக்குவன் பின்தொடர, சீதையோடு தண்டகப் பெருங்காட்டிற்குச் சென்றுவிட்டான்!'' (40–42)

அதைக் கேட்டதும் பரதனுக்குத் தன் தமையனாரின் ஒழுக்கத்தில் சந்தேகம் ஏற்பட்டது. (ஆனால், அவர் 'தருமாத்மா' ஆயிற்றே? என்ற எண்ணமும் தோன்றியது.) தன்னுடைய பரம்பரையின் தருமநெறி தவறாத பெருமையை நினைத்துப் பார்த்து, மேலும் விசாரிக்கத் தொடங்கினான்— ''இராமன், யாரோ ஓர் அந்தணருடைய செல்வத்தைக் கவர்ந்தாரா? குற்றமற்ற ஒரு செல்வந்தனோ அல்லது ஏழையோ, அவரால் கடுமையாகத் துன்புறுத்தப்பட்டனரா? அப்படியில்லை என்றால் அரசகுமாரரான இராமன், பிறர் மனைவியை மனத்தாலாவது விரும்பினாரா? கருச்சிதைவு என்ற மகாபாவத்தைச் செய்பவனுக்கு அளிக்கப்படும் கொடுந்தண்டனை போல, எந்தக் காரணத்திற்காக, இவர் தண்டகாரண்யத்திற்குக் கடத்தப்பட்டார்?'' (43–45)

பொருட்பற்றுடைய அன்னை, தான் பெண் இயல்பின்படி செய்த காரியங்களை, அதே பெண் தன்மைக்கேற்ப உள்ளபடியே சொல்ல ஆரம்பித்தாள். மகாத்மாவான பரதனால் இவ்வாறு கேட்கப்பட்ட அறிவிலியான கைகேயி, தன்னை எல்லாம் அறிந்தவளாக எண்ணிக் கொண்டு, மிக்க குதூகலத்துடன் சொல்லத் தொடங்கினாள்— ''மகாபுத்திமானான இராமனால் எந்த ஓர் அந்தணரின் செல்வமும் பறிக்கப்படவில்லை; எந்த ஒரு செல்வந்தனோ, ஏழையோ இம்சிக்கப் படவில்லை. இராமன், பிறர் மனைவிகளைக் கண்ணால்கூடப் பார்க்கமாட்டான். (46–49)

மகனே! இராமனுக்குப் பட்டாபிஷேகம் என்று கேள்விப்பட்டவுடன், உன் தந்தையிடம் சென்று, அரசுரிமையை உனக்கும், இராமனை நாடு கடத்தலும் என்னால் வேண்டிக் கொள்ளப் பட்டன. உன் தந்தை, எனக்குக் கொடுத்திருந்த பிரதிக்ஞைகளின்படி, அதை அவ்வாறே ஏற்றுக்கொண்டார். இராமன், இலக்குவனுடனும் சீதையுடனும் காட்டிற்கு அனுப்பப்பட்டான். பெரும்புகழ் கொண்டவரும், மாமன்னருமான அவர் அன்பிற்குரிய மைந்தனான அவனைக் காணாததால், மகனைப் பிரிந்த துக்கத்தைத் தாங்க முடியாமல் மரணத்தை அடைந்தார். தருமம் அறிந்தவனே! இப்போதே, நீ அரசு அதிகாரத்தை ஏற்றுக்கொள். (50–52)

இவையெல்லாம் உனக்காகவே என்னால் செய்யப்பட்டன. வருத்தம் அடையாதே; வேதனைப்படாதே; மன உறுதியை ஏற்றுக்கொள். இந்த நகரமும், சௌக்கியம் நிறைந்த இந்த ராஜ்யமும் உன் அதிகாரத்தில் உள்ளன. செல்வமே! இனி, வசிஷ்டரைத் தலைவராக உடைய அந்தணர்களோடு அந்திமக்கிரியை விதிகளை நன்கு அறிந்து ஆலோசித்து, மன்னரை முறைப்படி பிதிரர்களுடன் சேர்த்துவிடு. இயல்பாகவே மாவீரம் படைத்த நீ, உலகின் மாமன்னனாக, உனக்குப் பட்டாபிஷேகம் செய்விக்கச் சொல்வாயாக.'' (53,54)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
எழுபத்து இரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எழுபத்து மூன்று

பரதன், கைகேயியை நிந்தித்தான்!

தந்தையார் மாண்டுவிட்டதையும், இரு சகோதரர்களும் நாடு கடத்தப்பட்டதையும் கேட்டு, துயரத்தால் வெதும்பித் தவித்து, பரதன் இவ்வாறு கூறினான்— "தந்தையும், தந்தைக்குச் சமமான சகோதரரும் இல்லாமல் பரிதவிக்கும் நிலையில் விடப்பட்டு, துன்பத்தில் ஆழ்ந்திருக்கும் எனக்கு, இனி, இந்த அரசாட்சியால் பயனொன்றும் இல்லை. நீங்கள் என் தகப்பனாரை மேலுலகத்திற்கு அனுப்பிவிட்டீர்கள்; இராமனைத் தவசியாக ஆக்கிவிட்டீர்கள். புண்ணின் மேல் உப்புப்பொடியைத் தடவுவது போல, அடுக்கடுக்காக எனக்குத் துன்பத்தைத் தந்துவிட்டீர்கள். (1–3)

இந்தப் பரம்பரையை அழித்து ஒழிப்பதற்கென்றே காலராத்ரியாக, நீங்கள் வந்திருக்கிறீர்கள். என் தந்தை, நல்ல ஒரு மனைவியாக உங்களை அணைத்துக் கொண்டார். அப்போது, நீங்கள் பொசுக்கும் நெருப்பு என்பதை அவர் அறியவில்லை. தீயசிந்தனை உடையவரே! உங்களால் மன்னர் யமனிடம் கொண்டு சேர்க்கப்பட்டார். குலத்தைக் கெடுக்க வந்தவரே! உங்கள் புத்தி மயக்கத்தால், இந்தக் குலத்தின் மேன்மை அழிக்கப்பட்டுவிட்டது. உங்களை மனைவியாக ஏற்றுக்கொண்டதால் சத்தியம் தவறாதவரும், பெரும்புகழ் கொண்டவரும், என் தந்தையுமான தசரத மன்னர், சமீபத்திய நாட்களில் மிகக் கடுமையான துக்கத்தால் மனம் வெதும்பி, உயிரை விட்டுவிடும் நிலையை அடைந்துவிட்டார். (4–6)

அறநெறிப் பற்றுடையவரும், என் தந்தையுமான மாமன்னர் (உன்னால்) அழிக்கப்பட்டார். (சரி, அது போகட்டும்.) இராமன் ஏன் நாடு கடத்தப்பட்டார்? (நாடு கடத்தப்பட்டாலும்) ஏன் காட்டிற்குப் போனார்? கௌசல்யையும் சுமித்திரையும் மகன்களைப் பிரிந்த சோகத்தால் பீடிக்கப்பட்டதோடு, என்னுடைய தாயார் என்று கூறப்படுகிற உன் கண்ணெதிரே இன்னும் உயிரோடிருப்பது கஷ்டமான காரியம். என்னுடைய மூத்த சகோதரர் ஸ்ரீராமன், தருமாத்மா. பெரியோர்களிடம் எவ்வாறு பணிவுடன் நடந்து கொள்ளவேண்டும்? என்ற நெறிமுறைகளை அறிந்தவர். அவர், தன் அன்னை கௌசல்யா தேவியிடம் எப்படிப் பழகினாரோ, அப்படித்தானே பண்பும் பணிவும் அன்பும் தோன்ற உன்னிடமும் பழகினார்? (7–9)

அவ்வாறே, என் பெரிய தாயாரும், தொலைநோக்குடையவருமான கௌசல்யா தேவி, தருமநெறிகளுக்கேற்ப, உன்னிடம் உடன்பிறந்த ஒரு சகோதரியிடத்தில் பழகுவதுபோல் பழகுகிறார். மகாபாவியே! அவருடைய பரிசுத்தமான உள்ளம் படைத்த திருக்குமாரனை, மரப்பட்டை–மரவுரி உடுத்தியவராகக் காட்டிற்கு அனுப்பிவிட்டு, கொஞ்சமும் வருத்தப்படாமல் இருக்கிறாயே? எவரிடமும் குறை காணாதவர்; சூரர்; தூய மனத்தினர்; புகழ்மிக்கவர் – இப்படிப்பட்ட அவரை மரவுரி உடுத்தியவராகக் காட்டிற்கு அனுப்பிவிட்டுக் கொஞ்சமும் வருத்தப்படாமல் இருக்கிறாயே? (10–12)

நீ, பேராசைக்காரி; நான் ஸ்ரீராமனிடம் எவ்வளவு பக்தி வைத்திருக்கிறேன் என்பதை நீ அறியவில்லை என்று நினைக்கிறேன். அதனால், அரசாட்சியைப் பெறுவதற்காக, இத்தகைய மாபெரும் தவற்றைச் செய்திருக்கிறாய். மகாவீரர்களான இராம–லட்சுமணர்கள் இல்லாமல் நான் தனியாக, எந்தச் சக்தியின் வலிமையால் நாட்டைக் காப்பாற்றத் துணிவேன்? பேராற்றல் படைத்தவரும், தருமாத்மாவுமான மாமன்னர், பராக்கிரமசாலியான அவரையே (இராமனையே) (தன்னுடைய காரிய சித்திகளில்) உறுதியாக நம்பிக் கொண்டிருந்தார் – மேருமலையானது, அதனைச் சூழ்ந்துள்ள அடர்ந்த காட்டை நம்பிக் கொண்டிருப்பதைப்போல. (காடு மட்டும் இல்லாவிட்டால், பாமர மக்கள்கூட மேருவின் உச்சிக்குப் போகத் துணிந்துவிடுவார்கள்.) (13–15)

அனுபவமும் ஆற்றலும் மிக்க பெரியோர்கள், பேரரசு நிர்வாகம் என்ற பெருஞ்சுமையைப் பொறுப்பேற்று நடத்தியிருக்கிறார்கள். அனுபவமில்லாத கன்றுக்குட்டி போன்ற நான், இந்தச் சுமையை, எந்தச் சக்தியைக் கொண்டு சுமக்க முடியும்? ஒருக்கால், பலவகையான உபாயங்களாலும் அறிவு பலத்தாலும், எனக்குச் சக்தி ஏற்படும் என்றாலும், தன் மைந்தனுக்கு மட்டுமே மேன்மை உண்டாக வேண்டும் என்று (சுயநலமாகச் சிந்திக்கும்) உன் விருப்பம் நிறைவேறும் வகையில் நான் செயல்படமாட்டேன். இராமனுக்குத் தன் சொந்த தாயாரைப் போல் எண்ணியிருந்த உன்னிடம், எப்போதும் மதிப்பு இல்லாதிருக்குமேயானால், பாவத்தைச் செய்ய உறுதி கொண்டுவிட்ட உன்னைத் துறப்பதில் எனக்குத் தயக்கமே உண்டாகாது. (16–18)

நன்னடத்தையிலிருந்து நழுவிவிட்டவளே! பாவத்தைச் செய்துவிட்டவளே! நம்முடைய முன்னோர்களால் இகழப்பட்ட, இம்மாதிரியான எண்ணம் உனக்கு எப்படித்தான் உண்டாயிற்றோ? இந்தக் குலத்தில், (புதல்வர்களில்) மூத்தவன்தான் அரசு பட்டம் சூட்டப்படுவான். மற்ற இளைய உடன்பிறப்புக்கள், அவனிடம் அன்புகொண்டு இணைந்து செயல்படுவார்கள். கொடூரமானவளே! அரசநீதி பற்றி, நீ ஏதும் அறியாய் என்று எண்ணுகிறேன். நிரந்தரமாகப் பழக்கத்தில் வந்துள்ள மன்னர் குல சம்பிரதாயங்களையும் நீ அறியவில்லை. (19–21)

அரசகுமாரர்களில் எவன் மூத்தவனோ, அவனுக்குத்தான் பட்டம் சூட்டப்படுகிறது. இது, எல்லா மன்னர்களுக்கும் உரிய பொதுவான சட்டம் என்றாலும், இக்ஷ்வாகு பரம்பரையில் இந்தச் சட்டத்திற்கு அதிக மதிப்பு உண்டு. தருமம் ஒன்றையே பாதுகாப்பாகக் கொண்டவர்களும், பரம்பரையின் மேலான ஒழுக்கத்தால் ஒளிவிட்டுப் பிரகாசித்தவர்களுமான, அவர்களுடைய ஒழுக்கத்தின் பெருஞ்சிறப்பு, உன்னோடு ஏற்பட்ட உறவினால் இப்போது தலைகீழாகப் புரண்டுவிட்டது. உன்னுடைய முன்னோர்களும் மிகவும் புண்ணியாத்மாக்களான மன்னர்கள்தாம். அப்படியிருக்க, அவமதிப்பிற்குரிய இந்த எண்ணம், இந்த மதிமயக்கம் உனக்கு எப்படி உண்டாயிற்று? (22–24)

பாவம் செய்வதில் உறுதி கொண்டிருப்பவளே! என் உயிரைப் போக்கும் அளவிற்கு எல்லையில்லாத துக்கத்தைக் கொடுத்துவிட்ட உன் விருப்பத்தை, நான் நிறைவேற்ற மாட்டேன். உனக்கு இஷ்டமில்லாத ஒரு காரியத்தை இப்போதே செய்யப் போகிறேன். பார்! மாசற்றவரும், மக்களுக்குப் பிரியமானவருமான சகோதரரைக் காட்டிலிருந்து திருப்பி அழைத்துவரப் போகிறேன். ஸ்ரீராமனைத் திரும்ப அழைத்து வந்து, மகத்தான ஆன்ம ஒளி வீசும் அவருக்கு, தூய மனம் கொண்ட தொண்டனாகப் பணி செய்வேன்.'' (25–27)

மகாத்மாவான பரதன் இவ்வாறு சொல்லிவிட்டு, பிரியமில்லாத (கடுமையான) வார்த்தைகளால் அவளைக் கடிந்து கொண்டான். சோகத்தால் தாக்கப்பட்டவனாக இருந்தாலும், மந்தரமலையின் குகையில் சிங்கம் கர்ஜிப்பதைப் போல பெருங்குரலில் உறுமினான். (28)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
எழுபத்து மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எழுபத்து நான்கு

பரதன், கைகேயியை நிந்தித்தான்! (தொடர்ச்சி)

தாயாராகிய அவளை மேற்கண்டவாறு இகழ்ந்து பேசிய பின்னரும், பெரும் ஆத்திரத்தின் வயப்பட்ட பரதன், மீண்டும் கடுமையான சொற்களைச் சொல்ல ஆரம்பித்தான்— (1)

"குரூரமானவளே! தவறான நடத்தை உடையவளே! நாட்டிலிருந்து எங்காவது போய்விடு. அறம் உன்னைக் கைகழுவிவிட்டது. என்னையும் இறந்து போய்விட்டவனாக நினைத்து அழுது கொண்டே இரு. மகாதருமிஷ்டரான இராமனோ அல்லது (என் தந்தையான) மன்னரோ, எப்போதாவது உன்னைக் குறை கூறியிருக்கிறார்களா? உன்னால் அவ்விருவருக்கும் ஒரே காலத்தில் (முறையே) வனவாசமும் மரணமும் ஏற்பட்டிருக்கிறது. கைகேயி! இந்தக் குலத்திற்குப் பெரும் தீங்கு விளைவித்திருக்கிறாய். அதனால், கருச்சிதைவு செய்த பாவத்தை அடைந்து விட்டாய். நீ நரகத்திற்குத்தான் போவாய். உன் கணவர் சென்றடைந்திருக்கும் நல்லுலகத்தை (பொதுவாக, பதிவிரதைகள் உயிர்நீத்ததும் செல்வதைப் போல) அடையவே மாட்டாய். (2–4)

எல்லாப் பிராணிகளிடமும் அன்பு பாராட்டும் இராமனை நாடு கடத்துவது என்பது மிகக் கொடூரமான செயல். இப்படிப்பட்ட (கருச்சிதைவுக்குச் சமமான) பாவத்தை நீ செய்திருக்கிறாய் என்பதை எண்ணிப் பார்க்கும்போது எனக்கு அச்சம் ஏற்படுகிறது. (நீ இன்னும் வேறு எந்தக் கொடிய பாவச் செயலைத்தான் செய்யமாட்டாய்? என்பதால் மனநடுக்கம்.) உன் காரணமாக, என்னுடைய தந்தை மரணமடைந்தார்; இராமன் காட்டை அடைந்தார். இவ்வுலகில், உன்னால் எனக்கும் இகழ்ச்சி உண்டாகிவிட்டது. தாயின் வடிவில் வந்த என் சத்துருவே! கொடியவளே! அரசாட்சியில் பேராசை கொண்டவளே! இனி, நீ என்னுடன் எதுவும் பேசாதே. (5–7)

குல கௌரவத்தைக் கெடுத்துவிட்ட நீ, இந்தப் பரம்பரையில் சம்பந்தப்பட்டதால், கௌசல்யையும் சுமித்திரையும் மற்றுமுள்ள என் தாய்மார்களும் தாங்க முடியாத துக்கத்தால் தவிக்கிறார்கள். பேரறிவாளரும், அறத்தின் நாயகர் போன்றவருமான அசுவபதியின் மகள் அல்ல, நீ. தந்தையின் குலப்பெருமையை அழிக்க வந்த அரக்கியாகப் பிறந்திருக்கிறாய், நீ. உன் காரணமாக, சத்தியத்தில் உறுதியாக நிற்பவரும், அறம் தவறாதவருமான இராமன் காட்டிற்கு அனுப்பப்பட்டார். அந்தத் துயரத்தினால் என் தந்தையும் மேலுலகம் சென்றுவிட்டார். (8–10)

இவ்விதத் தீய செயல்களால் உன்னால் சம்பாதிக்கப்பட்ட பாவம், இப்போது என்னை வந்தடைந்திருக்கிறது. அதனால்தான், தந்தையை இழந்தவனாக, சகோதரர்களைப் பிரிந்தவனாக, எல்லா மக்களாலும் தூற்றப்படுகிறவனாக ஆகியிருக்கிறேன். துணிச்சலுடன் பாவத்தைச் செய்பவளே! நரகத்திற்குப் போகிறவளே! அறநெறி தவறாத கௌசல்யையைக் கணவனை இழந்தவராகவும், புதல்வனைப் பிரிந்தவராகவும் ஆக்கிவிட்டு, அதனால், இப்போது எந்த(ப் புண்ணிய) உலகத்தை அடையப் போகிறாய்? (11,12)

கொடியவளே! கௌசல்யையின் வயிற்றில் பிறந்த இராமன், 'புலன்களை வென்றவன்' என்றும், 'பந்துக்களுக்குப் புகலிடம்' என்றும், 'மூத்தவரானதால் தந்தைக்குச் சமமானவர்' என்றும் நீ அறியவில்லையா? 'தாய்–தந்தையரின் முக்கிய உறுப்புக்கள் மற்றும் அடுத்த நிலையில் உள்ள உபாங்கங்கள் மற்றும் மனத்தின் பாசத்திலிருந்தும் புதல்வன் பிறக்கிறான்' என்ற காரணத்தால் அன்னைக்கு மிகவும் வேண்டியவன் ஆகிறான். மற்ற உற்றார்–உறவினர்கள் எவரும் அன்புக்கு மட்டும் உரியவர்கள். (13,14)

முன்னொரு காலத்தில், தருமம் அறிந்ததும் தேவர்களால் போற்றப்படுவதுமான காமதேனு, தன் புதல்வர்களான (இனத்தவர்களான) இரு எருதுகள், வயலில் கலப்பை இழுத்துக் களைத்துப் போய் குற்றுயிரும் குலையுயிருமாகப் பூமியில் கிடப்பதைக் கண்டது.

நண்பகல் வரை நிலத்தில் பாடுபட்டுக் களைப்படைந்திருந்த அவ்விரு காளைகளைப் பார்த்ததும், புதல்வர்களின் அவலநிலை காரணமாக, கண்ணீரால் கலங்கிய கண்களுடன் அழுதது. அதற்குக் கீழே எங்கோ சென்று கொண்டிருந்த மகாத்மாவான தேவராஜனின் திருமேனியில், நல்ல மணமுடைய நுண்ணிய கண்ணீர்த்துளிகள் விழுந்தன. (15–17)

தேவேந்திரன், தன் உடலில் விழுந்த கண்ணீர்த்துளிகள் மிக்க வாசனையுடன் இருப்பதைக் கண்டு, அது பெருமைக்குரிய காமதேனுவினுடையதாகத்தான் இருக்கவேண்டும் என்று எண்ணினான். இந்திரன் நிமிர்ந்து மேலே பார்த்தபோது, ஆகாயத்தில் அசையாமல் நின்றுகொண்டு, மிகவும் துக்கத்துடன், மனம் நொந்து அழுது கொண்டிருக்கும் அந்தக் காமதேனுவைக் கண்டான். வஜ்ராயுதம் ஏந்தியவனும் தேவர்களின் மன்னனுமான இந்திரன், புகழ்மிக்க காமதேனுவின் மனம் பரிதவித்துக் கொண்டிருப்பதைக் கண்டு, நடுநடுங்கிப் போய் கைகளைக் கூப்பிக்கொண்டு இவ்வாறு சொன்னான்— (18–20)

‘எல்லோருடைய நன்மையிலும் நாட்டமுடையவளே! உமக்கு எங்கிருந்தும், எவ்விதமான மிகப்பெரிய பயமும் தோன்றியதில்லையே? எந்தக் காரணத்தால் உனக்கு இத்தகைய சோகம் ஏற்பட்டது என்பதைத் தெரிவி.’ பேரறிஞனான இந்திரனால் இவ்வாறு கேட்கப்பட்டதும், பேச்சில் வல்லதும், வீர இயல்புடையதுமான சுரபி இவ்வாறு பதில் சொல்லிற்று— ‘தேவர் தலைவனே! உங்களுக்கு எங்கிருந்தும், எவ்வகையான கஷ்டமும் சிறிதளவும் இல்லை. அப்படியே வந்தாலும் தெய்வத்தின் அருளால் சாந்தமடைந்துவிடும். துன்பத்தில் மூழ்கியிருக்கும் என் இரு புதல்வர்களின் நிலை குறித்து வருந்திக் கொண்டிருக்கிறேன். (21–23)

தேவர் தலைவனே! இவ்விரு காளைகளும் உடல் மெலிந்து இருக்கின்றன; பரிதாபத்திற்குரிய நிலையில் இருக்கின்றன; சூரிய கிரணங்களால் பொசுக்கப்படுகின்றன; உழவனால் (சாட்டையினால்) தாக்கப்படுகின்றன. (என் குழந்தைகளுக்கு நேர்ந்துள்ள) இந்தக் கொடுமையைப் பார்த்து சோகத்தில் ஆழ்ந்துள்ளேன். என் உடம்பிலிருந்து தோன்றிய இவைகள் மிகவும் துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கின்றன; வேலை மிகுதியால் துன்பப்படுகின்றன; இவைகளைக் கண்டு நான் மிகவும் தவிக்கிறேன். ஏனென்றால், புத்திரனிடம் செலுத்தப்படும் அன்பிற்கு இணையாக அன்பு செலுத்தத்தக்கவர் வேறு எவரும் இலர்.’ (24,25)

எவளுடைய ஆயிரக்கணக்கான புத்திரர்களால் இந்த உலகம் நிரம்பியிருக்கிறதோ, அப்படிப்பட்ட காமதேனு துக்கத்தால் அழுது கொண்டிருப்பதைப் பார்த்ததும், ‘பெற்றெடுத்த மகனைக் காட்டிலும் அருமையானது ஏதுமில்லை’ என்று இந்திரன் தனக்குள் எண்ணிக் கொண்டான். எப்போதும் இணையில்லாத நல்ல செய்கைகள் புரிபவள்; தெய்வத்தன்மை பொருந்தியவள்; உத்தம குணங்களை நிரந்தரமாக உடையவள்; உலகத்தைத் தாங்கவேண்டும் என்ற விருப்பமும், பிறவிக்குணமான ரட்சிக்கும் தன்மையும் கொண்டவள். ஆயிரக்கணக்கான சந்ததிகளையுடைய அந்தக் காமதேனுகூட துயரத்தை அனுபவிக்கிறது. என்றால், இராமனைப் பிரிந்த கௌசல்யை (மகன் காட்டிற்குப் போன பின்னர்) எவ்வாறு உயிரைத் தாங்கிக் கொண்டிருப்பார்? (26–28)

ஒரே குழந்தையைப் பெற்றவர்; மென்மையான இயல்புடையவர். அப்படிப்பட்ட கௌசல்யை, உன்னால் மகனைப் பிரிந்தவராக ஆக்கப்பட்டிருக்கிறார். அதனால், நீ இவ்வுலகிலும் மேலுலகிலும் எப்போதும் துன்பத்தையே அனுபவிக்கப் போகிறாய். நான், என் தமையனாருக்கும் தந்தைக்கும் இழைக்கப்பட்ட அநீதிகளுக்குப் பிராயச்சித்தம் செய்யப் போகிறேன். தந்தைக்கு அளிக்க வேண்டிய பிண்டதானம் முதலியவற்றைச் செய்து, மூத்த சகோதரனிடம் நாட்டை ஒப்படைக்கப் போகிறேன். இதன்மூலம் எனக்கு ஏற்பட்டுள்ள அபகீர்த்தியை மாற்றிப் புகழை வளர்த்துக் கொள்வேன். இதில் சந்தேகம் வேண்டாம். (29,30)

மாவீரனும் பெருந்தோளனுமான கோசல மன்னன் இராமனைத் திரும்பி வரச் செய்து, முனிவர்கள் வாழும் இடமான காட்டிற்குள் நானே புகுவேன். பாவச் செயலில் துணிந்துவிட்டவளே!

மாபாவியே! உன்னால் செய்யப்பட்ட பாவத்தின் விளைவாக, நகரமக்கள் கண்களில் நீர் சொரிந்துகொண்டு, தொண்டை அடைக்க, என்னை (இகழ்ச்சியாக)ப் பார்ப்பதை என்னால் சகித்துக் கொள்ள முடியாது. (31,32)

இவ்வளவு பெரிய பாவத்தைச் செய்துவிட்ட நீ நெருப்பில் விழுந்துவிடு; கழுத்தில் கயிற்றைக் கட்டிச் சுருக்குப் போட்டுக் கொள்; அல்லது நீயாகவே தண்டகாரண்யம் போய்விடு. இவற்றைத் தவிர, உனக்கு வேறு கதியே இல்லை. (உன் பாவத்திற்கு வேறு பிராயச்சித்தமே இல்லை.) வீணாகாத பராக்கிரமமுடைய இராமபிரான் எப்போது இந்த ராஜ்யத்தில் முடிசூட்டிக் கொள்கிறாரோ, அப்போதுதான் என்மீது சுமத்தப்பட்டுள்ள, 'இராமனை நாட்டை விட்டுத் துரத்தியவன்' என்ற அவப்பெயர் நீங்கி, வாழ்க்கையில் எல்லாக் காரியங்களையும் நிறைவேற்றியவனாவேன்.'' (33,34)

இவ்வாறு கூறிவிட்டு தோமரத்தாலும் அங்குசத்தாலும் துன்புறுத்தப்பட்ட காட்டு யானை போல் மனத்துன்பமடைந்து, மிகவும் சீற்றம் கொண்ட பாம்பு போல நீண்ட பெருமூச்சுவிட்டுக் கொண்டு தரையில் சாய்ந்தான். எதிரிகளைச் சுட்டெரிக்கும் அரசகுமாரனான பரதன், கோபத்தினால் கண்கள் சிவந்து, ஆடை களைந்து, அணிகலன்கள் உடைந்து சிதறிப் போய்விட, திருவிழா நிறைவடைந்த பின் கீழே இறக்கப்பட்ட இந்திரத்வஜம் போல தரையில் விழுந்தான். (35,36)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
எழுபத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எழுபத்தைந்து

பரதன் சபதம் செய்தல்

நீண்டநேரத்திற்குப் பின் தன்னுணர்வு பெற்ற தைரியசாலியான பரதன், (தன் விருப்பம் கைகூடாததால்) மனம் நொந்து நிற்கும் தாயை, நீர் நிரம்பிய கண்களால் பார்த்து, அமைச்சர்கள் முன்னிலையில் நிந்திக்கத் தொடங்கினான்— ''நான் அரசாட்சியை விரும்பியவன் அல்லன்; ஒருபோதும் அன்னையுடன் (அரசாட்சி பற்றிக்) கலந்து ஆலோசிக்கவில்லை. அரசர் திட்டமிட்டிருந்த இளவரசுப் பட்டம் பற்றியும் எனக்குத் தெரியாது. நான், சத்ருக்னனுடன்கூட வெகுதூரத்திற்கு அப்பாலுள்ள நாட்டில் வசித்துக் கொண்டிருந்தேன். மகாத்மாவான இராமனுக்கு வனவாசம் என்பதும், இலக்குவனும் சீதாப்பிராட்டியாரும் நாடு கடத்தப்பட்டார்கள் என்பதும் எனக்குத் தெரியாது.'' (1–4)

மகாத்மா பரதன், இவ்வாறு தன் தாயாரை நிந்தித்துக் கொண்டிருக்கும் குரலைக் கேட்டு, கௌசல்யா தேவி சுமித்திரையிடம் பின்வருமாறு கூறினார்— ''கொடிய செயல்களைச் செய்யும் கைகேயியின் புதல்வன் பரதன் வந்திருக்கிறான். தொலைநோக்குடைய அந்த பரதனை நான் காண விரும்புகிறேன்.'' இவ்வாறு சுமித்திரையிடம் சொல்லிவிட்டு உடல் வண்ணம் மங்கியவரும் மாசுபடிந்தவரும் உடல் தளர்ந்தவருமான அவர், பரதன் இருந்த இடத்தை நோக்கி உணர்விழந்து, உடல் நடுங்கிய நிலையில் புறப்பட்டார். அதே நேரத்தில், இராமனின் தம்பியாகிய பரதன், சத்ருக்னனோடு கௌசல்யை இருக்கும் இடம் நோக்கிப் புறப்பட்டான். (5–8)

பின்னர், செல்லும் வழியில் துயரத்தால் பீடிக்கப்பட்டு, சுயநினைவு இழந்து தரையில் விழுந்துவிட்ட கௌசல்யையை மிகவும் துக்கப்பட்டுக் கொண்டிருந்த பரத–சத்ருக்னர்கள் தூக்கி நிறுத்தி, மார்புற கட்டித் தழுவிக் கொண்டார்கள். மிகவும் துயரத்தில் இருந்தவரும் நல்மனமுடையவரும் நற்குடியில் பிறந்தவருமான கௌசல்யை, பரதனை நோக்கிப் பின்வருமாறு கூறினார்— (9,10)

''நீ அரசாள வேண்டும் என்று ஆசைப்பட்டாயல்லவா? இடையூறு இல்லாத இந்த ராஜ்யம், அறநெறிக்குப் புறம்பான கொடிய வழியைப் பின்பற்றிய கைகேயியினால் எளிதாகப் பெறப்பட்டிருக்கிறது. கொடிய எண்ணங்கொண்ட கைகேயி, என் புதல்வனை மரவுரி உடுத்தியவனாகக் காட்டிற்குத் துரத்திவிட்டு என்ன லாபத்தை அடைந்தாள்? நிகரற்ற அழகுடைய, பெரும் புகழ் படைத்த என் குமாரன் இருக்கும் இடத்திற்கு, உடனே என்னையும் அனுப்பிவிடுவதே கைகேயி செய்யத்தக்கது. (11–13)

இல்லாவிட்டால் சுமித்திரையுடன் அக்னிஹோத்ர அக்னியை எடுத்துக் கொண்டு, நானாகவே என் விருப்பப்படி, இராமன் இருக்கும் இடத்திற்குப் புறப்பட்டுச் செல்கிறேன். அல்லது, என்னுடைய செல்வப் புதல்வன் தவம் செய்து கொண்டிருக்கும் இடத்திற்கு இப்போதே, நீயே என்னை அழைத்துக் கொண்டு போய்விடுவது மிகவும் உத்தமமானது. ஏனென்றால், பொருள் வளம்–பயிர் வளம் நிரம்பியதும், யானை–குதிரை–தேர்களால் நிரம்பப் பெற்றதும், பரந்து விரிந்து கிடப்பதுமான இந்த ராஜ்யம், அவள் (கைகேயி) உனக்காகப் பெற்றுத் தந்தது, அல்லவா?'' (14–16)

இவ்வாறு புண்ணில் ஊசியால் குத்தியது போல கொடூரமான சொற்களால் இகழ்ந்துரைக்கப்பட்ட, குற்றமற்றவனான பரதன் மிகவும் மனவேதனை அடைந்தான். மதிகலங்கி, உணர்விழந்து, பலவகையாகப் புலம்பிய பரதன், உடனே அவளுடைய பாதங்களில் விழுந்தான். பின்னர், உணர்வு பெற்று எழுந்து நின்றான். பலவிதமான சோகங்களால் தாக்கப்பட்டு முன்னர் கூறியவாறு புலம்பிய கௌசல்யையின் முன் கைகளைக் கூப்பிக்கொண்டு, பரதன் இவ்வாறு பதில் சொன்னான்— (17–19)

''அன்னையே! இங்கு நடந்த எதையுமே அறியாத, நிரபராதியான என்னை ஏன் பழித்துரைக்கிறீர்கள்? இராமபிரானிடம் எனக்கு உறுதியான, ஆழமான பாசம் உண்டு என்பது தங்களுக்குத் தெரியும்தானே? எவனுடைய விருப்பத்தின்பேரில், சொன்ன சொல் தவறாதவரும், நன்னெறியாளர்களில் சிறந்தவரும், உயர்குடிப்பிறப்பாளருமான அவர் (காட்டிற்குச்) சென்றாரோ, அவனுடைய புத்தி ஆசார்யர்களால் உபதேசிக்கப்பட்ட நல்வழியில் செல்லவேண்டாம்! (20,21)

எவனுடைய விருப்பத்தின்பேரில், மாமனிதரான அவர் (காட்டிற்குச்) சென்றாரோ, அவன் மாபாவிகளின் கொத்தடிமை ஆகட்டும்; சூரியனை நோக்கி உட்கார்ந்து மல–ஜல விசர்ஜனம் செய்பவனாகட்டும்; தூங்கிக் கொண்டிருக்கும் பசுத்தாயைத் தன் காலால் உதைக்கட்டும். (அதாவது, இந்தப் பாவச்செயல்களின் தீயபலன்களை அனுபவிக்கட்டும் – என்றபடி.) எவனுடைய சம்மதத்தின்பேரில், மாமனிதரான அவர் (காட்டிற்குச்) சென்றாரோ, அவன் தொழிலாளிக்குச் சம்பளம் கொடுக்காமலே அதிகமான வேலை வாங்கிக் கொள்ளும் யஜமானன் அடையும் அதருமத்திற்கான பாவத்தை அடைவானாக! (22,23)

எவனுடைய சம்மதத்தின்பேரில், மாமனிதரான அவர் (காட்டிற்குச்) சென்றாரோ, அவன் எல்லா உயிர்களையும் தன் சொந்தப் பிள்ளைகள் போல் மிக்க அன்புடன் அரசன் ஆட்சி செய்து கொண்டிருக்கும்போது, அவருக்கு எதிராகச் செயல்படும் மக்கள் அடையும் பாவத்தை அடைவானாக! எவனுடைய சம்மதத்தின்பேரில், மாமனிதரான அவர் காட்டிற்குச் சென்றாரோ, அவன் மக்களின் வருமானத்தில் ஆறில் ஒரு பங்கு வரி வசூலித்துக் கொண்டு, அவர்களைப் பாதுகாக்காத மன்னன் அடையும் பாவத்தை (பாவத்தின் பயனான துன்பங்களை) அடைவானாக! (24,25)

எவனுடைய சம்மதத்தின்பேரில், மாமனிதரான அவர் காட்டிற்குச் சென்றாரோ, அவன் வேள்விக்குரிய தட்சிணை கொடுப்பதாக வேள்வி வளர்க்கும் தவசிகளுக்கு வாக்களித்துவிட்டு, பின்னர், அந்த உறுதிமொழியை மறுக்கிறானோ, அதன் பலனான பாவத்தை அடையட்டும்! எவனுடைய சம்மதத்தின்பேரில், மாமனிதரான அவர் காட்டிற்குச் சென்றாரோ, அவன் யானை–குதிரை–தேர்கள் நிறைந்து, அஸ்திர–சஸ்திரப் பிரயோகம் நடைபெறும் போர்க்களத்தில் மேலோர்களின் அறநெறியைக் கடைப்பிடிக்காதவர்களுக்கு (அதருமயுத்தம் செய்கிறவர்களுக்கு) ஏற்படும் பாவத்தை அடைவானாக! (26,27)

எவனுடைய விருப்பத்தின்பேரில், மாமனிதரான அவர் காட்டிற்குச் சென்றாரோ, அவனது நினைவில் மாமேதையான ஆசார்யரால் கவனமாக உபதேசிக்கப்பட்ட, ஆழமான பொருளுடைய அறநெறித் தத்துவங்கள் தங்காமற்போகட்டும்! எவனுடைய விருப்பத்தின்பேரில், மாமனிதரான அவர் காட்டிற்குச் சென்றாரோ, அவன் சூரிய–சந்திரர்போல் பேரொளி வீசுபவரும், விசாலமான தோளும் புஜங்களும் உடையவருமான அவர், சிம்மாசனத்தில் வீற்றிருந்து ஆட்சி செலுத்தும் காட்சியைக் காணாமற்போவானாக! (28,29)

எவனுடைய அனுமதியுடன், மாமனிதரான அவர் காட்டிற்குச் சென்றாரோ, அவன் பாயஸம், எள்ளன்னம், ஆட்டின் பால் ஆகியவைகளை (தேவர்கள், மூதாதையர், பகவான் ஆகியோருக்காக அல்லாமல்), தனக்காகவே செய்து உண்ணும் ஈரமற்ற நெஞ்சினன் ஆவானாக. ஆசார்யர்களையும் அவன் அவமரியாதை செய்வானாக! எவனுடைய அனுமதியுடன், மாமனிதரான அவர் காட்டிற்குச் சென்றாரோ, அவன் கோமாதாவைத் தன் காலால் உதைக்கட்டும்; ஆசார்யர்களை இகழ்ந்து பேசுவானாக; நண்பர்களுக்குத் துரோகம் செய்வானாக! (30,31)

எவனுடைய அனுமதியின்பேரில், மாமனிதரான அவர் காட்டிற்குச் சென்றாரோ, அவன் நண்பனிடமுள்ள நம்பிக்கையால் தமக்குள் பரிமாறிக் கொள்ளப்பட்ட இன்னொருவருடைய குற்றத்தை அவன் மற்றவர்களுக்கும் கூறுவானாக! (நட்புத் துரோகம் செய்த பாவத்தை அடைவானாக.) எவனுடைய விருப்பத்தின்பேரில், மாமனிதரான அவர் காட்டிற்குச் சென்றாரோ, அவன் பிறருக்கு உதவி செய்யாதவனாக, நன்றி மறந்தவனாக, சான்றோர்களால் ஒதுக்கப்பட்டவனாக, நாணமற்றவனாக, மக்களால் வெறுக்கப்பட்டவனாக ஆகட்டும்! (32,33)

எவனுடைய விருப்பத்தின்பேரில், மாமனிதரான அவர் காட்டிற்குச் சென்றாரோ, தன் வீட்டில் புதல்வர்–மனைவிகளாலும், வேலைக்காரர்களாலும் சூழப்பட்டிருக்கும் அவன், (அவர்களுக்குக் கொடுக்காமல்) தான் மட்டுமே அறுசுவை உணவுகளை உண்பவன் ஆவானாக! எவனுடைய இணக்கத்தின்பேரில், மாமனிதரான அவர் காட்டிற்குச் சென்றாரோ, அவன் தன் கருத்திற்கு ஏற்ற மனைவியை அடையாமல், அதனால் குடும்பத் தருமங்களைக் கைக்கொள்ள முடியாமலும், சந்ததி இல்லாதவனாகவும் மரிப்பானாக! (34,35)

எவனுடைய விருப்பத்தின்பேரில், மாமனிதரான அவர் காட்டிற்குச் சென்றாரோ, அவன் பூரண ஆயுளைப் பெறாமலும், எப்போதும் துயரப்பட்டுக் கொண்டும், தன் மனைவியிடம் தன்னுடைய சந்ததியைக் காணாமலும் போவானாக! மன்னன், பெண், சிறுவன், வயோதிகன் – இவர்களைக் கொன்றால் என்ன பாவம் வந்து சேரும் என்று விதிக்கப்பட்டிருக்கிறதோ, மேலும் தன்னை அண்டிப் பிழைப்பவர்களை உதறி விடுவதால் என்ன பாவம் வந்து சேருமோ, இவை யாவும் அவனை அடைவதாகுக! (36,37)

எவனுடைய சம்மதத்தின்பேரில், மாமனிதரான அவர் காட்டிற்குச் சென்றாரோ, அவன் அரக்கு, கள், இறைச்சி, இரும்பு, விஷம் ஆகியவைகளை விற்பதால் வரும் வருமானத்தினால் தன்னை அண்டியிருப்பவர்களை எப்போதும் காப்பாற்றி வருவானாக! (இந்தப் பொருள்களை விற்பது மகாபாவம் என்று உணர்க.) எவனுடைய அனுமதியின்பேரில், மாமனிதரான அவர் காட்டிற்குச் சென்றாரோ, அவன் எதிரிப் படையினருக்குப் பயங்கரத்தை விளைவிக்கும் போர்க்களத்திலிருந்து புறமுதுகிட்டுத் தப்பியோடுபவனாகக் கொல்லப்படட்டும். (38,39)

எவனுடைய அனுமதியின்பேரில், மாமனிதரான அவர் காட்டிற்குச் சென்றாரோ, அவன் கந்தைத்துணி உடுத்தி, கப்பரை ஓடு ஏந்தி, பிச்சையெடுப்பவனாக, பைத்தியம் பிடித்தவன் போல் உலகில் சுற்றி வருவானாக. எவனுடைய அனுமதியின்பேரில், மாமனிதரான அவர் காட்டிற்குச் சென்றாரோ, அவன் காமம்–கோபம் ஆகிய தீய குணங்களுக்கு ஆட்பட்டு, கட்குடி, பெண்ணுறவு, சூதாட்டம் ஆகியவைகளில் எப்போதும் ஈடுபட்டவனாக ஆகட்டும். (40,41)

எவனுடைய ஆலோசனையின்பேரில், மாமனிதரான அவர் காட்டிற்குச் சென்றாரோ, அவன் தருமத்தில் மனம் செலுத்துபவனாக ஆகவேண்டாம்; அதருமத்திலேயே குடியிருக்கட்டும்; தகுதியில்லாதவர்களுக்கு ஏராளமாக தானம் செய்பவனாகட்டும். எவனுடைய ஆலோசனையின் பேரில், மாமனிதரான அவர் (நாட்டை விட்டு) சென்றாரோ, அவன் பெருமுயற்சி செய்து சேர்த்து வைத்த பல்லாயிரம் மதிப்புடைய பல்வகைச் சொத்துக்கள் திருடர்களால் கொள்ளையிடப்படட்டும். (42,43)

எவனுடைய ஆலோசனையின்படி, மாமனிதரான அவர் நாட்டை விட்டுச் சென்றாரோ, அவனுக்கு சந்தி–அந்தி இரு வேளைகளிலும் உறங்குபவனுக்கு எந்தப் பாவம் விதிக்கப்பட்டிருக்கிறதோ, அந்தப் பாவம் ஏற்படக்கடவது. பிறர் உடைமைகளில் கொள்ளி வைத்து அழிப்பவனுக்கு எந்தப் பாவமோ, குருவின் மனைவியுடன் உறவு கொள்பவனுக்கு எந்தப் பாவமோ, நண்பனை வஞ்சகமாக ஏமாற்றுபவனுக்கு எந்தப் பாவமோ, அந்தப் பாவத்தையும் அடைவானாக. (44,45)

எவனுடைய அனுமதியின்பேரில், மாமனிதரான அவர் நாட்டைவிட்டுச் சென்றாரோ, அவன் தேவதைகள்–பிதிரர்கள்–பெற்றோர்களுக்குச் சேவை செய்யாமறபோகட்டும். (இவர்களுக்குச் செய்யும் வழிபாட்டுப் பணிகளால் கிடைக்கக் கூடிய புண்ணியத்தை இழந்தவனாக ஆகட்டும்.) எவனுடைய அனுமதியின்பேரில், மாமனிதரான அவர் நாட்டைவிட்டுச் சென்றாரோ, அவன் சான்றோர்களின் கூட்டத்திலிருந்தும், சான்றோர்களின் நன்மதிப்பிலிருந்தும், அவ்வாறே நன்றாக அனுஷ்டிக்கப்பட்டு வந்த கர்மாக்களிலிருந்தும் நழுவியவன் ஆவானாக. (46,47)

எவனுடைய விருப்பத்தின்பேரில், நீண்ட புஜங்களையும் விசாலமான மார்பையும் உடைய மாமனிதரான அவர் நாட்டைத் துறந்து சென்றாரோ, அவன் தன்னைப் பெற்ற அன்னைக்குப் பணிவிடை செய்யாமறபோகட்டும்; கெடுதலைச் செய்யும் முறைகளில் உறுதியாக நிற்பானாக. எவனுடைய விருப்பத்தின்பேரில், மாமனிதரான அவர் நாட்டை விட்டுச் சென்றாரோ, அவன், ஏராளமான குழந்தைகளைப் பெற்று, வறுமையில் வாடி, நோய்–நொடிகளால் பீடிக்கப்பட்டு, எப்போதும் வருத்தத்தில் மூழ்கியவனாக ஆகட்டும். (48,49)

எவனுடைய விருப்பத்தின்பேரில், மாமனிதரான அவர் நாட்டை விட்டுச் சென்றாரோ, அவன் மிகவும் எதிர்பார்ப்புடன் கொடையாளியின் முகத்தை நோக்கி உயரத் தூக்கிய கண்களுடன் பார்க்கும் யாசகர்களின் நம்பிக்கையைப் பயனற்றதாகச் செய்வானாக. எவனுடைய விருப்பத்தின்படி, மாமனிதரான அவர் காட்டிற்குச் சென்றாரோ, அவன் கொடுஞ்சொல் பேசுபவனாக, கஞ்சத்தனம் மிக்கவனாக, தூய்மையற்றவனாக, அரசனிடம் எப்போதும் அச்சம் கொண்டவனாக, நன்னெறி தவறியவனாக, கபடமான வாழ்க்கையில் மனம் லயித்து வாழ்வானாக. (50,51)

எவனுடைய விருப்பத்தின்படி, மாமனிதரான அவர் காட்டிற்குச் சென்றாரோ, அந்தக் கொடுமனக்காரன், ருதுஸ்நானம் செய்துவிட்டு, கணவனுடன் உறவு கொள்ள விரும்பி அருகில் வந்து நிற்கும் மனைவியின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் கடமையை மறந்து, அவளை மறுத்து ஒதுக்குவானாக. (தருமபத்தினியின் நியாயமான ஆசையை நிறைவேற்றாத பாவத்தை அடையட்டும்.) எவனுடைய இஷ்டத்தின்படி, மாமனிதரான அவர் காட்டிற்குச் சென்றாரோ, அவன் முறைப்படி விவாகம் செய்து கொண்ட மனைவியைப் புறக்கணித்து, பிறர் மனைவிகளிடம் ஆசை கொள்வானாக. அறிவில்லாத அவன், அறநெறிகளில் ஆழ்ந்த பற்றினைத் துறந்தவன் ஆகட்டும். (52,53)

எவனுடைய விருப்பத்தின்பேரில், மாமனிதரான அவர் நாட்டை விட்டுச் சென்றாரோ, அவனுக்கு சந்ததியில்லாத பிராமணனுக்கு ஏற்படும் பாவம் கிடைக்கும். (ஆண் சந்ததி இல்லாததால், அந்த பிராமணன் தேவர் கடனையும், பிதிரர் கடனையும் அடைக்க முடியாமல் போகிறது. தான் வேதம் ஓதியதாலும், யாக–யக்ஞங்கள் செய்ததாலும் ரிஷிகடன்

செலுத்தப்பட்டதாகிறது.) எவனுடைய சம்மதத்தின்பேரில், மாமனிதரான அவர் காட்டிற்குச் சென்றாரோ, அவன் குடிநீரை (குடிப்பதற்குத் தகுதியில்லாதபடி) அசுத்தம் செய்பவனுக்கு என்ன பாவமோ, அதேபோல் விஷம் கொடுத்துக் கொல்பவனுக்கு என்ன பாவமோ, அவை அனைத்தையும் இவன் ஒருவனே அடைவானாக. (54,55)

எவனுடைய விருப்பத்தின்படி, மாமனிதரான அவர் காட்டிற்குச் சென்றாரோ, அவன் பொறிகலங்கி வேதவித்துக்களுக்குப் பூஜை செய்வதற்காக சித்தம் செய்யப்பட்டதை நாசம் செய்வானாக. புதிதாக ஈன்றெடுத்த கன்றினையுடைய பசுவிடமிருந்து பாலைக் கறக்கக் கடவன். (கன்று போட்டபின் பத்து நாட்கள் வரை, தாய்ப்பசுவிடமிருந்து பால் கறக்கக் கூடாது என்பது விதி.) எவனுடைய விருப்பத்தின்படி, மாமனிதரான அவர் காட்டிற்குச் சென்றாரோ, அவன் தன்னிடம் குடிதண்ணீர் இருக்கும்போது, தாகத்தால் தவித்துக் கொண்டிருப்பவனுக்குக் கொடுக்காமல் ஏமாற்றுபவன் என்ன பாவத்தை அடைவானோ, அந்தப் பாவத்தை அடையக் கடவன். (56,57)

எவனுடைய விருப்பத்தின்படி, மாமனிதரான அவர் காட்டிற்குச் சென்றாரோ, அவன் இருவர் தங்களுக்குள் வாய்ச்சண்டையில் ஈடுபட்டிருக்கும்போது, அவர்கள் பிரச்னையில் எங்கே நியாயம் இருக்கிறது? என்பதைப் புரிந்து கொண்டபோதிலும், அவ்விருவருள் தனக்கு வேண்டிய ஒருவனுக்கு அனுகூலமாகப் பேசுபவனுக்கு ஏற்படும் பாவத்தை அடையக் கடவன்.'' மாமன்னரின் திருமகனான அவன், தன் கணவனையும் புதல்வனையும் விட்டுப் பிரிந்து மிகவும் துயரப்பட்டுக் கொண்டிருக்கும் கோசலா தேவியாரை, மேற்கண்டவாறு சமாதானப்படுத்திக் கொண்டிருக்கும் போதே சடாரென்று தரையில் விழுந்தான். (58,59)

மிகவும் கடுமையான சபதங்களைச் செய்து, துக்கத்தால் தவித்து சுயநினைவை இழந்த பரதனை நோக்கி கௌசல்யை பின்வருமாறு கூறினார்— ''மகனே! (உன் துயரத்தைப் பார்த்ததும்) என்னுடைய இப்போதைய துயரம் மேலும் அதிகமாகிறது. மிகவும் கடினமான சபதங்களைச் செய்து, எனக்குச் சமாதானம் அளித்து, போய்க் கொண்டிருந்த என் உயிரைத் தடுத்து நிறுத்திவிட்டாய். குழந்தாய்! நீ, இயல்பாகவே நற்குணங்கள் உடையவன். தருமவழியிலிருந்து உன் மனம் நழுவவில்லை என்பது தெய்வத்தின் அருள்தான். நீ, கொடுத்த வாக்கு தவறாதவன். அதனால், மேன்மக்களான புண்ணியாத்மாக்கள் அடையும் நல்லுலகங்களை அடையப் போகிறாய்.'' (60–62)

இவ்வாறு கூறிவிட்டு, சகோதர வாஞ்சையுடைய பெருந்தோளனான பரதனைத் தன் மடிமேல் ஏற்றி வைத்துக் கொண்டு, மார்புறத் தழுவி மிகவும் வருத்தத்துடன் வாய்விட்டு அழுதார். முன்பு கூறியபடி, துயரத்தில் மூழ்கிப் புலம்பிய மகாத்மாவான பரதனின் மனம், அளவிடமுடியாத சோகத்தாலும், எதிர்பாராத சம்பவங்களால் சித்தம் மயங்கியதாலும் தடுமாற்றம் அடைந்ததாயிற்று. தரையில் விழுந்து அழுது அரற்றிக் கொண்டிருந்த, தன்னுணர்வு இழந்திருந்த அவனுடைய விவேக சக்தி மறைந்துவிட்டிருந்தது. அடிக்கடி நீண்ட பெருமூச்சுவிட்டுக் கொண்டிருந்தான். இவ்வாறு சோகத்திலேயே அந்த இரவு கழிந்தது. (63–65)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
எழுபத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எழுபத்தாறு

தசரதரின் ஈமச் சடங்குகள்

இவ்வாறு, துயரத்தில் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் கைகேயியின் புதல்வன் பரதனைப் பார்த்து, நல்வார்த்தைகளையே பேசுபவரும், பேச்சில் வல்லவருமான வசிஷ்டர்

கூறினார்— ''அரசகுமாரா! உனக்கு நலம் விளைக. நீ துயரப்பட்டது போதும். பெரும்புகழ் பெற்றவனே! மன்னருக்கு ஈமச்சடங்குகள் செய்வதற்கு உரிய காலம் வந்துவிட்டது.'' வசிஷ்டருடைய சொற்களைக் கேட்டு தருமமறிந்த பரதன், அவர் திருவடிகளில் வணங்கிவிட்டு, இறந்தவருக்கான சடங்குகள் அனைத்தையும் செய்வித்தான். (1–3)

தசரதருடைய உடல் தைலக் கொப்பரையிலிருந்து எடுத்து பூமியில் வைக்கப்பட்டது. பல நாட்கள் எண்ணெயில் இருந்ததால் மன்னரின் முகம், மஞ்சள் நிறமுடையதாக இருந்தது; தூங்குவது போல காணப்பட்டார். பல்வகையான நவரத்தினங்கள் இழைக்கப்பட்ட படுக்கையில் அவர் உடலைக் கிடத்தினார்கள். உடனே (அந்த நிலையில்) தசரதரைப் பார்த்து, புதல்வனான பரதன் மிகவும் வருத்தத்துடன் புலம்பினான்— (4,5)

''மன்னரே! வேறு நாட்டிலிருந்த நான் திரும்பி வருவதற்கு முன்னதாக, அறம் அறிந்த இராமனனையும், பேராற்றல் பொருந்திய இலக்குவனையும் நாடு கடத்திவிட்டு, (இந்த நிலையை அடைவதற்குத்) தாங்கள் எவ்வாறு திருவுள்ளம் கொண்டீர்கள்? மாமன்னரே! எந்தச் செயலையும் இலகுவாகச் செய்து முடிக்கும் ஆற்றல் படைத்த இராமனைப் பிரிந்து அல்லற்படும் இந்த அடிமையைத் தனியே விட்டுவிட்டுத் தாங்கள் எங்கே போகப் போகிறீர்கள்? தந்தையே! தாங்கள் சுவர்க்கத்திற்குச் சென்றுவிட்டீர்கள்; ஸ்ரீராமன் காட்டைச் சென்றடைந்துவிட்டார். மன்னராகிய தாங்கள் இல்லாத இந்த நகரத்தின் பாதுகாப்பை யார் ஏற்கப் போகிறார்? (6–8)

மன்னரே! தாங்கள் இல்லாததால் இவ்வுலகம் மங்கலம் இழந்து, ஒளியில்லாததாக ஆகிவிட்டது. இந்த நகரம் சந்திரன் இல்லாத இரவைப் போல (மகிழ்ச்சியற்றதாக) எனக்குத் தோன்றுகிறது.'' இவ்வாறு நொந்த மனத்துடன் பரதன் புலம்பிக் கொண்டிருப்பதைப் பார்த்து, மாமுனிவரான வசிஷ்டர் மீண்டும் பேசத் தொடங்கினார்— ''பெருந்தோளனே! இந்த மாமன்னருக்குச் செய்ய வேண்டிய ஈமச்சடங்குகளை மனத்தைச் சிதறவிடாமல் அமைதியாகச் செய்வாயாக.'' 'அவ்வாறே செய்கிறேன்' என்று வசிஷ்டருடைய சொற்களை ஆமோதித்த பரதன், ரித்விக்குகள், புரோகிதர்கள், ஆசார்யர்கள் ஆகியோரை, இந்தக் காரியத்தில் துரிதப்படுத்தினான். (9–12)

மன்னருடைய அக்னி கூடத்திலிருந்து, முன்பே வெளியே எடுத்துச் செல்லப்பட்டிருந்த (மூன்று) அக்னி குண்டங்களில் வேதவித்தகர்களாலும் வேள்வியாளர்களாலும் முறைப்படி ஆகுதிகள் வழங்கப்பட்டன. பிறகு உயிரிழந்த மன்னரைப் பல்லக்கில் ஏற்றிய பணியாளர்கள், துக்கத்தால் நெஞ்சு அடைத்துக் கொள்ள, நலிந்த மனத்தினராய் அவரைச் சுமந்து சென்றார்கள். மக்கள், மன்னருக்கு முன்பாக பொன்–வெள்ளி நாணயங்களையும், வகைவகையான துணிமணிகளையும் சாலையில் இறைத்துக் கொண்டு சென்றார்கள். (13–15)

அவ்வாறே சிலர், சந்தனம், அகில் ஆகிய நறுமணப் புகையை உண்டாக்கினார்கள்; ஸரலம், பத்மகம், தேவதாரு ஆகிய உயர்ரக மரக்கட்டைகளைக் கொண்டு வந்து, சிலர் சிதையில் அடுக்கினார்கள். பின்னர், வேள்வியாளர்கள் மற்றுமுள்ள பல்வகை நறுமணப் பொருட்களைத் தூவி, உலகாண்ட மன்னரைச் சிதையின் மேல் வைத்தார்கள். பின்னர், (தசரதருடைய அக்னிஹோத்திர) அக்னியைச் சிதையின் மேல் வைத்து (பரதனை வைக்கச் செய்து), அந்தச் சடங்கிற்கான மந்திரங்களை ஓதினார்கள்; சாஸ்திரச் சம்பிரதாயப்படி, ஸாம வேத வல்லுநர்கள் ஸாமகானம் செய்தார்கள். (16–18)

அப்போது, அவருடைய (தசரதருடைய) மனைவியர், முதிய பணியாளர்களால் பாதுகாக்கப்பட்டவர்களாய், தத்தம் தகுதிக்கு ஏற்றபடி பல்லக்குகளிலும், பிற வாகனங்களிலும் ஏறிக் கொண்டு நகரத்திலிருந்து புறப்பட்டு அவ்விடத்திற்கு (சிதை மூட்டப்பட்ட இடத்திற்கு)ச் சென்றார்கள். அசுவமேதம் வரையிலான பல வேள்வி செய்து முடித்துள்ள அந்த மன்னரை, வேள்வியாளர்கள் இடது பக்கமாகச் சுற்றி வந்தார்கள்; சோகத்தால் தவித்துக் கொண்டிருந்த கோசலை முதலான மனைவியரும் அவ்வாறே செய்தார்கள். (19,20)

அந்தச் சமயத்தில், துயரத்தால் பரிதாபமாக ஓலமிடும் பெண்களின் அழுகை ஒலி, ஆயிரக்கணக்கான கிரௌஞ்சப் பறவைகளின் தீனமான கதறலைப் போலிருந்தது. (சிதையில் தீ வைக்கப்பட்ட) பின்னர் தன்வசமிழந்து, வாய்விட்டுப் புலம்பும் உயர்குடிப் பெண்களான அவர்கள், அழுது அழுது ஓய்ந்து, வாகனங்களில் ஏறி, சரயூ நதியின் கரையில் இறங்கினார்கள். மறைந்த மன்னரின் மனைவியரும், மந்திரி–புரோகிதர்களும் பரதனுடன்கூட தலைமூழ்கி நீராடி, நீர்க்கடன் செலுத்திவிட்டு, கண்ணீர் நிறைந்த கண்களுடன் பட்டணத்திற்கு வந்து, பத்து நாட்கள் வரை தரையிலேயே படுத்து இறப்புத் தீட்டு என்னும் மரபைக் கடைப்பிடித்தார்கள். (21–23)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
எழுபத்தாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எழுபத்தேழு

பரத–சத்ருக்னரின் புலம்பல்

பின்னர், பத்து நாட்கள் கழிந்ததும் ஸ்தல–பாண்ட–ஆத்ம சுத்திக்கான கர்மாக்களைச் செய்து, பன்னிரண்டாவது நாளில் சிராத்த காரியங்களைச் செய்து முடித்தனர். அந்தணர்களுக்கு ஏராளமான இரத்தினங்கள், செல்வங்கள், உணவுப் பண்டங்களையும், வெள்ளாடுகளின் ரோமங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட கம்பளிகளையும், அநேக வெள்ளிக்கட்டிகளையும், நூற்றுக்கணக்கான பசுமாடுகளையும் தானம் செய்தனர். மன்னரின் புதல்வனான பரதன், இறந்து போன தந்தைக்கு, மேல் உலகங்களில் சுகமான வாழ்வு கிடைக்கவேண்டும் என்பதற்காக, வேலைக்காரர், வேலைக்காரி, வாகனம், மிகப்பெரிய மாளிகைகள் முதலியவற்றை அந்தணர்களுக்குக் கொடுத்தான். (1–3)

பின்னர், பதின்மூன்றாவது நாள் விடியற்காலையில், மகாபலசாலியான பரதன் சோகத்தில் பீடிக்கப்பட்டவனாகக் கதறி அழுதான். தந்தையின் உடலுக்குத் தீ வைக்கப்பட்ட இடத்தில் ஸஞ்சயனத்திற்காக வந்த அவனது தொண்டை, சொற்கள் எழும்பாதபடிக் கட்டிப் போயிருந்தது. மிகவும் துயரத்தோடு தந்தையின் சிதை இருந்த இடத்தின் அருகில் பின்வரும் சொற்களை மொழிந்தான்— (4,5)

"தந்தையே! தாங்கள் என் தமையனாரான எந்த இராமனிடம் என்னை ஒப்படைத்தீர்களோ, அந்த இராமன் காட்டிற்கு அனுப்பப்பட்டுவிட்டார். ஒரு பாழ்வெளியில் தங்களால் தள்ளிவிடப்பட்டவனாக (இப்போது) இருக்கிறேன். (மன்னரே!) எவருடைய ஒரே ஆதரவு, அவருடைய ஒரே மகனோ, அந்த மகனும் காட்டிற்கு அனுப்பப்பட்ட பிறகு, ஆதரவு இல்லாமல் போன அன்னை கௌசல்யா தேவியாரை உதறிவிட்டு எங்கே போனீர்கள், அப்பா?" சிதை வைக்கப்பட்ட இடத்தில் சிவந்த சாம்பலையும், எரிந்து நொறுங்கிப்போன எலும்புக் கூட்டத்தையும் பார்த்து, தந்தையார் உடலை உகுத்துவிட்டார் என்பதை நினைவு கொண்டு மிகவும் துயரத்துடன் புலம்பினான், அவன். (6–8)

அவன், அந்த இடத்தைப் பார்த்ததுமே துக்கத்தால் அழுது, இந்திரனுடைய அரசச் சின்னமாகிய துவஜம், மேலே உயர்த்தப்படும்போது கீழே நழுவி விழுந்துவிட்டது போல் தரையில் சாய்ந்தான். அந்தச் சமயத்தில், புண்ணியம் முழுவதும் அனுபவிக்கப்பட்டதும் தேவலோகத்திலிருந்து நழுவி விழுந்த யயாதி மன்னனை முனிவர்கள் சூழ்ந்து கொண்டதைப் போல, அவனுடைய அமைச்சர்கள் எல்லோரும், புனிதமான விரதங்களை அனுஷ்டிக்கும் அவனை அணுகி வந்தார்கள். பரதன், சோகத்தில் மூழ்கியிருப்பதைப் பார்த்தும், (மறைந்த) மன்னரை நினைத்துக் கொண்டும் சத்ருக்னனும் மதி கலங்கியவனாகத் தரையில் விழுந்தான். (9–11)

அந்தந்தச் சமயங்களுக்கேற்றபடி, தந்தையின் குணங்கள் தனித்தன்மையுடன் சிறந்து வெளிப்பட்டதை நினைத்து, மிக்கத் துயரத்தினால் உணர்வு மங்கி, பித்துப்பிடித்தவன் போல்

கதறியழுதான். மந்தரையிடமிருந்து உண்டானதும், கைகேயி என்ற முதலையால் கலக்கப்படுவதும், எவராலும் வற்றச் செய்ய முடியாததும், வரதானம் என்ற உருவம் கொண்டதும், மிகவும் உள்ளாற்றல் உடையதுமான சோகக்கடல் எல்லோரையும் மூழ்கடித்துவிட்டது. (12,13)

''தந்தையே! எப்போதும் தங்களால் சீராட்டி வளர்க்கப்பட்டவனும், வாலிபனும், உலகமறியாத சிறுபிள்ளை போன்றவனுமான பரதனை அழுது புலம்பித் தவிக்க விட்டுவிட்டுத் தாங்கள் எங்கே போய்விட்டீர்கள்? உணவு வகைகள், பான வகைகள், உடைகள், அணிகலன்கள் ஆகியவைகளை எங்களைச் சுற்றி ஏராளமாகக் குவித்து வைத்துவிடுவீர்கள். இனிமேல், அவ்வாறு எங்களுக்கு யார் செய்யப் போகிறார்கள்? அறம் அறிந்தவரும், மகாத்மாவும், பேரரசருமான தங்களை இழந்த இந்த பூமி, வெடித்துச் சிதறவேண்டிய இந்தத் துக்க வேளையிலும் வெடிக்காமல் இருக்கிறதே? (14–16)

தந்தையோ தேவலோகம் போய்விட்டார்; இராமனோ காட்டிற்குப் போய்விட்டார். இனிமேல் என்னால் எப்படி உயிரோடு இருக்கமுடியும்? நான் நெருப்பில் குதித்து (உயிரை) விடுகிறேன். மூத்த சகோதரரும், பெற்ற தகப்பனும் இல்லாததால் பாழ்வெளியாகப் போய்விட்டதும், இக்ஷ்வாகு பரம்பரையினரால் பரிபாலிக்கப்பட்டதுமான அயோத்தி நகரத்திற்குள் நான் நுழையமாட்டேன்; தபோவனத்திற்குள் சென்றுவிடுகிறேன்.'' அவ்விருவருடைய புலம்பலைக் கேட்டும், அவர்களுடைய ஆழமான துயரத்தைக் கண்ணால் கண்டும், உடன் சென்றவர்கள் எல்லோரும் முன்பைக் காட்டிலும் அதிக துயரத்தை அடைந்தார்கள். (17–19)

அப்போது, அளவுக்கு மீறிய துக்கத்தினால் உடல் தளர்ச்சியடைந்த சத்ருக்ன–பரதர்களாகிய இருவரும், கொம்பு முறிக்கப்பட்ட இரு காளைகள் போல் தரையில் சாய்ந்தார்கள். அந்தச் சமயத்தில், இயற்கையிலேயே தெய்விக ஞானம் படைத்தவரும், சகலகலா வல்லவரும், இவர்களுக்கும் இவர்களுடைய தந்தைக்கும் புரோகிதருமான வசிஷ்டர், பரதனைத் தூக்கி நிறுத்தி, அவனிடம் பின்வருமாறு கூறினார்— (20,21)

''ஐயனே! உன் தந்தையாரைத் தீயிலிட்டு, இன்று பதின்மூன்றாவது தினம். எஞ்சியுள்ள அஸ்திகளைச் சேகரிக்க வேண்டும். இதைச் செய்வதில் நீ ஏன் காலதாமதம் செய்கிறாய்? மூன்று இரட்டைகள் (பசி–தாகம், சோகம்–மோகம், மூப்பு–மரணம்) எல்லாப் பிராணிகளிடத்திலும் சமமாக (பாரபட்சமில்லாமல்) நிகழ்கின்றன. தவிர்க்க முடியாத அவற்றின் பொருட்டு இவ்வாறு நடந்து கொள்ளக் கூடாது.'' தத்துவம் அறிந்த சுமந்திரர், சத்ருக்னனைத் தூக்கி நிறுத்தி, ஆறுதல் கூறி, எல்லாப் பிராணிகளுக்கும் பிறப்பு–இறப்பு உண்டு என்பதை விளக்கிக் கூறினார். (22–24)

புருஷோத்தமர்களும், புகழ்பெற்றவர்களுமான அவ்விருவரும் எழுந்து நின்ற காட்சி, மழையாலும் வெயிலாலும் அடிபட்ட இரண்டு இந்திரத்வஜங்கள் (தேவராஜனின் அரச சின்னங்களில் ஒன்று) போல் தனித்தனியே பிரகாசித்தார்கள். அமைச்சர்கள், கண்ணீரைத் துடைத்துக் கொண்டு (அழுதழுது) சிவந்த கண்களைக் கொண்டவர்களும், நலிந்த குரலில் பேசுபவர்களுமான அவ்விரு (அரச) மைந்தர்களையும் அடுத்த காரியங்களைச் செய்வதற்குத் தூண்டிவிட்டார்கள். (25,26)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
எழுபத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எழுபத்தெட்டு

கூனிக்குத் தண்டனை

மன்னருக்குச் செய்ய வேண்டிய ஈமச்சடங்குகளையெல்லாம் செய்து முடித்த பின்னர், இராமன் இருக்குமிடத்திற்குப் போவதற்காகச் சிந்தித்துக் கொண்டிருந்த, சோகத்தில் மூழ்கியிருந்த பரதனைப் பார்த்து, இலக்குவனுடைய தம்பி (சத்ருக்னன்) பின்வரும் சொற்களைக் கூறினான்— (1)

''துன்பம் நேரும்போது எல்லாப் பிராணிகளுக்கும் எவர் புகலிடமோ, அவர், தங்களுக்கும் தங்களைச் சேர்ந்தோர்க்கும் புகலிடம் என்பதைச் சொல்லவும் வேண்டுமா? இயல்பாகவே நற்குணங்கள் நிரம்பிய அந்த இராமன், கேவலம் ஒரு பெண்ணால் காட்டிற்கு அனுப்பப்பட்டார் (என்பது எவ்வளவு வேதனையான நிகழ்ச்சி). லட்சுமணன் என்று ஒருவன், மிகுந்த பலசாலி; பராக்கிரமம் உடையவன் என்றெல்லாம் பேச்சு. அப்பாவைக் கட்டிப் போட்டுவிட்டு, இராமனை, அந்த இக்கட்டிலிருந்து ஏன் விடுவிக்கவில்லை? ஒரு பெண்ணின் வசப்பட்டு, மன்னர் தவறான வழியில் செல்லத் தொடங்கினார் என்றால், அதிலுள்ள நியாய–அநியாயத்தை எண்ணிப் பார்த்து, முதலிலேயே அவரை அடக்கியிருக்க வேண்டும்.'' (2–4)

இவ்வாறாக, இலக்குவனின் தம்பியாகிய சத்ருக்னன் பேசிக் கொண்டிருந்தபோது, எல்லா அணிகலன்களையும் அணிந்து கொண்ட கூனி, அரண்மனையின் கிழக்கு நுழைவாயிலில் வந்து நின்றாள். உடலில் உயர்ரக சந்தனத்தைப் பூசிக் கொண்டிருந்தாள்; அரசகுல பெண்மணிகள் அணியத் தகுந்த விலையுயர்ந்த உடைகளை உடுத்தியிருந்தாள்; அந்தந்த அங்கங்களுக்குரிய விதவிதமான ஆபரணங்களை அணிந்திருந்தாள். பலவகைப்பட்ட ஒட்டியாணங்களையும், இன்னும் அநேக உத்தம அணிகலன்களையும் அணிந்து கொண்டிருந்த அவள், கயிற்றால் கட்டப்பட்ட பெண் குரங்குபோல் காணப்பட்டாள். (5–7)

மிகப்பெரிய பாவச்செயலைச் செய்துவிட்ட அவளைப் பார்த்த வாயிற்காப்பாளர்கள், ஈவு–இரக்கமற்ற அந்தக் கூனியைக் கட்டியிழுத்து வந்து, சத்ருக்னன் முன் நிறுத்தினார்கள். ''எவள் காரணமாக, இராமன் இப்போது காட்டில் வசிக்கிறாரோ, உங்களுடைய திருத்தந்தையார் உடலைவிட்டாரோ, வெறுக்கத்தக்க அந்த மகாபாவி இவள்தான். உங்கள் விருப்பப்படி, இவளைத் தண்டிக்கலாம்.'' உறுதியான செயல்பாடுடைய சத்ருக்னன், வாயிற்காப்பாளர்களின் சொற்களைக் கேட்டவுடன் மிகவும் துயரத்திற்கு ஆளாகி, அந்தப்புரத்திலுள்ள எல்லோரையும் அழைத்து, பின்வருமாறு கூறினான்— (8–10)

''எந்தப் பெண்ணால் எனக்கும், என் சகோதரர்களுக்கும், தந்தையாருக்கும் மிகக்கொடிய துயரம் விளைவிக்கப்பட்டதோ, அந்த இவள் கீழ்த்தரமான தன் பாவச்செயலுக்கான பலனை இப்போதே அனுபவிக்கப் போகிறாள்.'' அவனால் இவ்வாறு கூறப்பட்டதும், தோழிகளால் சூழப்பட்டிருந்த கூனி, உடனே பலவந்தமாகப் பிடித்து இழுக்கப்பட்டவளாய், மாளிகையில் எதிரொலி உண்டாகும்படிப் பேரிரைச்சல் போட்டாள். அப்போது அவளுடைய தோழிகள் எல்லோரும் மிகவும் துயரம் கொண்டார்கள்; சத்ருக்னனுக்குப் பெருங்கோபம் உண்டாகியிருப்பதை உணர்ந்து நாலாபக்கங்களிலும் ஓடிப் போனார்கள். (11–13)

பின்னர், ஓர் இடத்தில் ஒன்றுகூடிய தோழிமார்கள், ''இவர் தண்டனை கொடுப்பது என்று தீர்மானித்துவிட்டார். எவரையும் விட்டுவிடாமல் நம் எல்லோரையும் தண்டிக்கப் போகிறார். அனுதாபம் உடையவரும், உதாரகுணம் கொண்டவரும், அறம் அறிந்தவரும், புகழ் பெற்றவருமான கோசலாதேவியைச் சரணம் அடைவோம். அவர் ஒருத்திதான் நம் எல்லோருக்கும் உறுதியான புகலிடம் ஆவார்'' என்று ஆலோசனை நடத்தினார்கள். (14,15)

கோபத்தால் சிவந்த கண்களை உடையவனும், எதிரிகளை வாட்டியெடுப்பவனுமான சத்ருக்னன், அப்போது அலறிக் கொண்டிருக்கும் கூனியைத் தரையில் தள்ளி இழுத்தான். அவ்வாறு, மந்தரை இழுக்கப்படும்போது அவள் அணிந்திருந்த பல்வகையான அணிகலன்கள் உடைந்து நொறுங்கி தரையில் இங்குமங்கும் சிதறி விழுந்தன. அப்போது அந்த ராஜமாளிகை, நொறுங்கிய ஆபரணங்கள் பரந்து சிதறிக் கிடந்ததால் (நட்சத்திரக் கூட்டங்களால் பிரகாசிக்கும்) சரத்கால வானம் போல் அழகாகக் காணப்பட்டது. (16–18)

பலசாலியும் புருஷோத்தமனுமான அவன் அடங்காத கோபத்துடன் பலவந்தமாகப் பிடித்திழுத்து, (அவளைக் காப்பாற்றுவதற்காக, அப்போது அவ்விடத்திற்கு வந்து சேர்ந்த) கைகேயியையும்

இகழ்ந்து பேசிக் கடுமையான சொற்களைக் கூறினான். அந்தக் கொடிய, சோகமயமான சொற்களால் மிகவும் மனம் புழுங்கிய கைகேயி, 'சத்ருக்னன் கூனியைக் கொன்றுவிடுவானோ?' என்ற அச்சத்தால், உடல் நடுங்கியவாறே (வேறு எந்த வழியாலும் சத்ருக்னனைத் தடுக்க முடியாது என்று உணர்ந்து) பெற்றெடுத்த புதல்வனை நாடி வந்தாள். (19,20)

துன்பத்திலிருந்த அவளைக் கண்டதும், சினத்தில் மூழ்கியிருந்த சத்ருக்னனை நோக்கிப் பின்வருமாறு பரதன் கூறினான்— "உயிர்ப் பிராணிகளில், பெண்கள் கொல்லத்தக்கவர்கள் அல்லர்; மன்னித்து விடுவாயாக. அறம் தவறாதவரான இராமன், 'தாயைக் கொன்றவன், இவன்' என்று என்மீது வெறுப்படையாமல் இருப்பாரேயானால், தீயசெயலைச் செய்துவிட்ட பாவியான இந்த கைகேயியை, நான் கொன்று போட்டிருப்பேன். தருமாத்மாவான இராமன் இந்தக் கூனியும் அடித்துத் துன்புறுத்தப்பட்டாள் என்பதை அறிந்தாரேயானால், நிச்சயமாக, உன்னிடத்திலும் என்னிடத்திலும் பேசவே மாட்டார்." (21–23)

பரதனுடைய சொற்களைக் கேட்ட இலக்குவன் தம்பியாகிய சத்ருக்னன், உடனே கோபத்தை அடக்கிக் கொண்டான்; மந்தரையையும் விடுவித்தான். மந்தரை, (தன்னைக் காப்பாற்றிய) கைகேயியின் பாதங்களில் விழுந்தாள். அவள் மிகவும் மனம் நொந்து, பெருமூச்சுவிட்டுக் கொண்டு பரிதாபமாகக் கதறியழுதாள். சத்ருக்னன், பலவந்தமாகப் பற்றித் தரையில் இழுத்து வந்ததால் சுயநினைவை இழந்திருந்த, கூண்டில் அடைபட்ட கிரௌஞ்சப் பறவை பயத்துடன் நோக்குவதுபோல், தன்னை தீனமாகப் பார்த்துக் கொண்டிருந்த கூனியைப் பார்த்து, பரதனின் தாயார் மெல்லச் சமாதானப்படுத்தினாள். (24–26)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
எழுபத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எழுபத்தொன்பது

பரதன், அமைச்சர்களின் வேண்டுகோளை நிராகரித்தல்

பின்னர், பதிநான்காவது நாள் காலைப்பொழுதில் அரசு அலுவலர்கள் எல்லோரும் ஒன்றாகக் கூடி வந்து, பரதனைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார்கள்— "மூத்த மகனான இராமனையும், பேராற்றல் கொண்ட லட்சுமணனையும் நாடு கடத்திவிட்டு, எங்கள் தந்தையரைக் காட்டிலும் பேரன்பு கொண்டிருந்த மன்னர் தேவலோகம் சென்றுவிட்டார். அரசகுமாரரே! பெரும் புகழ் படைத்தவரே! நீங்கள் இப்போதே எங்களுக்கு மன்னராக வேண்டும். நல்லகாலமாக, அரசன் இல்லாதிருந்த அண்மை நாட்களில் இங்கு அராஜகம் தலையெடுக்கவில்லை. (1–3)

ரகுகுலத் தோன்றலே! மன்னர் மைந்தரே! அமைச்சர்களும் பிரபுக்களும் சமுதாயத் தலைவர்களும் பட்டாபிஷேகத்திற்குத் தேவையான எல்லாப் பொருட்களையும் ஆயத்தமாக வைத்துக் கொண்டு, தங்கள் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். மனிதரேறே! பரதனே! தங்கள் முன்னோர்களால் வம்ச பரம்பரையாக ஆளப்பட்டு வந்த இந்த ராஜ்யத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்; அரச பதவியை ஏற்று, அபிஷேகம் செய்வித்துக் கொள்ளுங்கள்; எங்களையும் காப்பாற்றுங்கள்." உயர்ந்த விரதத்தை மனத்திற்குள் சங்கல்பித்துக் கொண்டிருந்த பரதன், பட்டாபிஷேகத்திற்காக ஆயத்தமாக வைக்கப்பட்டிருந்த பொருட்களை வலம் வந்து, அங்கு கூடியிருந்தவர்களைப் பார்த்துப் பதில் சொன்னான்— (4–6)

"(பரம்பரை சம்பிரதாயங்கள்) எல்லாம் அறிந்த சான்றோர்களாகிய நீங்கள் என்னிடம் இவ்வாறு சொல்லக்கூடாது. ஏனென்றால், பரம்பரை தத்துவமாக மூத்த மகனுக்கு அரசு என்பது நம்முடைய குலத்தின் நியாயமான வழக்கம். ஸ்ரீராமன், எங்களுக்கு மூத்த சகோதரர். எனவே, அவர்தான்

மன்னராக வேண்டும். (அப்படியானால் என் நிலைமை என்ன?) நான், பதிநான்கு ஆண்டுகள் கானகத்தில் வசிக்கப் போகிறேன். நான்கு வகைப்பட்டதும் பெரும் சக்தி படைத்ததுமான சேனை சித்தமாகட்டும். மூத்தவரான இராமனைக் காட்டிலிருந்து நான் அழைத்து வரப்போகிறேன். (7–9)

சேகரித்து வைக்கப்பட்டுள்ள அபிஷேகப் பொருட்களையெல்லாம், ஸ்ரீராமனுக்காக எடுத்துக் கொண்டு, நான் காட்டிற்கே போகப் போகிறேன். அங்கேயே புருஷோத்தமரான ஸ்ரீராமசந்திர மூர்த்திக்கு அபிஷேகம் செய்வித்து, வேள்விச் சாலையிலிருந்து ஜொலிக்கும் அக்னியை எடுத்து வருவதைப் போல, (அவ்வளவு சிறப்பாக) அவரை அழைத்துவரப் போகிறேன். தாய் என்று பெயரளவில் கூறப்படும் இவள் (கைகேயி) விருப்பம் கைகூடியவளாக ஆக விடமாட்டேன். பயங்கரமான கானகத்தில் நான் வசிக்கப் போகிறேன். சாலை பணியாளர்கள் முன்னதாகச் சென்று மேடுபள்ளங்களைச் சமன் செய்து பாதை அமைக்கட்டும்; செல்லும் வழியில் இடையூறு நேரக் கூடிய பகுதிகளை அறிந்துள்ளவர்கள் பாதுகாப்பு கொடுத்துக் கொண்டு உடன் வரட்டும்.'' (10–13)

ஸ்ரீராமனைப் பொருட்டாகக் கொண்டு, மேற்கண்டபடி பேசிய மன்னர் புதல்வனைப் பார்த்து, அங்கிருந்த மக்கள் மிக்குயர்ந்த, க்ஷேமகரமான பதிலைக் கூறினார்கள்— ''இவ்வளவு உயர்ந்த நோக்கத்துடன் பேசுகின்ற தங்களிடம், தாமரையில் வீற்றிருக்கும் இலக்குமிதேவி நித்யவாசம் செய்வாராக! ஆகா! அரசரின் மூத்த மகனுக்கு (தங்களுக்கு மிக எளிதாகக் கிடைத்த) இந்தப் பூமண்டலத்தைக் கொடுக்க விரும்புகிறீர்கள்!'' அரசகுமாரரால் (சற்று முன்) கூறப்பட்ட, ஒப்புயர்வற்ற உறுதியான அந்தத் திருவாக்கைக் கேட்டதும், அங்கிருந்த மேன்மக்களின் முகத்தில் தோன்றிய ஆனந்தக் கண்ணீர்த் திவலைகள் தரையில் விழுந்தன. (பரதனின் ஒப்புயர்வில்லாத நற்குணங்களால் அவையினர் அனைவரும் பெருமகிழ்ச்சி அடைந்தார்கள் – என்றபடி.) (14–16)

'இராமனை அழைத்து வரப் போகிறேன்' என்ற சொற்களைக் கேட்டதும், அமைச்சர்கள், அவையோர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். அவர்களைச் சூழ்ந்திருந்த சோகம் விலகியது. ''புருஷோத்தமரே! தங்கள் கட்டளைப்படி வேலைத்திறனுடைய தொழிலாளர்கள், சாலை அமைப்பாளர்கள் ஆகியோருக்கு பாதை போடும்படிச் சொல்லி அனுப்பப்பட்டிருக்கிறது'' என்று பதில் கூறினார்கள். (17)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
எழுபத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எண்பது

சாலை அமைத்தல்

பின்னர், நிலத்தின் தன்மை அறிந்தவர்கள்; கயிறு பின்னுவதிலும், நூல் பிடித்து அளப்பதிலும் திறமை கொண்டவர்கள்; தத்தம் பணிகளில் ஊக்கம் உடையவர்கள்; வல்லுநர்கள்; பூமி தோண்டுபவர்கள்; சிற்பிகள்; இயந்திரங்களைப் பழுது நீக்கிச் செப்பனிடும் திறமை பெற்றவர்கள்; தச்சர்கள்; முன்னால் சென்று வழிகாட்டுபவர்கள்; மரங்களை வெட்டுவோர்; கிணறு தோண்டுவோர்; சுண்ணாம்புச்சாந்து பூசி வேலை செய்யும் கொத்தனார்கள்; மூங்கில் வேலையில் பயிற்சி உடையோர் ஆகியோரும், அமைக்கும் பாதை பற்றிய அறிவுடைய நிபுணர்களும் முதலில் புறப்பட்டுச் சென்றார்கள். (1–3)

சாலை அமைக்கும் பணியில் ஈடுபட மிக்க மகிழ்ச்சியுடன் காட்டை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்த மக்கட்கூட்டமானது, பருவ காலங்களில் மிகவும் வேகத்துடன் பொங்கியெழும் பெருங்கடல் போல விளங்கிற்று. சாலை போடுவதில் வல்லவர்களான தொழிலாளர்கள், தத்தம் வேலைக்குரிய (மண்வெட்டி, அரிவாள், கூடை போன்ற) கருவிகளைப் பெற்றுக்

கொண்டு, தத்தம் குழுவினருடன் முன்னே சென்றார்கள். மரக்கிளைகளையும் கொடிகளையும் புதர்களையும் பட்டுப்போன மரங்களையும் பாறைகளையும் பலவகையான மரங்களையும் வெட்டித் தள்ளிப் பாதையைச் செம்மைப்படுத்தினார்கள். (4–6)

(நிழல் தரும்) மரங்கள் இல்லாத இடங்களில் சிலர் மரங்களை நட்டார்கள்; சிலர் கோடரி–உளி–அரிவாள்களால் (மரம்–புல்புதர்களை) வெட்டிப் பாதையை அமைத்தார்கள். மிகவும் பலம் பொருந்திய சிலர், ஆழமாக வேரூன்றிய உயரமான புதர்க் கூட்டங்களைப் பிடுங்கி எறிந்தார்கள்; நுழைய முடியாத இடங்களையும் ஆங்காங்கே அழித்துக் கொண்டிருந்தார்கள். வேறு சிலர், பாழடைந்த கிணறுகளையும் அகன்ற பள்ளங்களையும் மண்ணைக் கொட்டி நிரப்பினார்கள்; தாழ்வான பகுதிகளில், நாற்புறத்திலிருந்தும் மண்ணைக் கொட்டிச் சமப்படுத்தினார்கள். (7–9)

அவ்வண்ணமே, பாலம் கட்ட வேண்டிய இடங்களில் பாலம்–அணை கட்டினார்கள்; வேறு சிலர், நீரோட்டத்திற்குத் தடையாக இருந்த தடைகளைப் பெயர்த்துத் தள்ளினார்கள். கால்வாயில் நாற்புறமும் சிதறி ஓடிய தண்ணீரைச் சுற்றிலும் கரைகளை எழுப்பி நீரைத் தேக்கினார்கள்; பல வடிவங்களான நீர்நிலைகளை கடல் போன்று ஆழங்காண முடியாதபடி நீர் நிரம்பியதாக வெகுவிரைவில் செய்து முடித்தார்கள். தண்ணீர் வசதி இல்லாத இடங்களில் பல வகையான கிணறு–குட்டைகளையும், அவற்றின் அருகே (ஓய்வு கொள்வதற்காக) திண்ணைகளையும் நிறுவினார்கள். (10–12)

சுண்ணாம்புச்சாந்து பூசப்பட்ட தளம்; நன்றாக மலர்ந்த பூக்களைக் கொண்ட மரங்கள்; ஏராளமாக தேனை உண்டதால் மதம் கொண்டு கூச்சல் போடும் பறவைக் கூட்டங்கள், சாலையோரங்களில் அசைந்தாடும் தோரணக் கொடிகள்; சந்தனம் கலந்த தண்ணீர்த் தெளிப்பு; நாலாவகையான மலர்களால் அலங்காரம் – இவ்வாறாக படைகள் செல்லும் பாதை, தேவதைகள் உபயோகிக்கும் பாட்டை போல மிகவும் அற்புதமாகக் காட்சியளித்தது. (13,14)

அப்போது, வாஸ்து சாஸ்திர வல்லுநர்களின் ஆலோசனையைக் கேட்டு, உகந்த இடங்களில் கூடாரங்களை அமைக்குமாறு, அதற்கான அதிகாரிகள் தொழிலாளர்களுக்கு உத்தரவிட்டார்கள். மகாத்மா பரதன், தங்குவதற்கான கூடாரத்தை விசேஷமாக அலங்காரம் செய்து, தேவலோகம் போல் அழகுபடுத்தினார்கள். கோள்நிலை அறியும் தெய்வக்ஞர்கள் குறித்துக் கொடுத்த சுபமான நட்சத்திரம்–முகூர்த்தம் பார்த்து, பரதன் தங்கக்கூடிய வாசஸ்தலங்களை நிர்மாணித்தார்கள். (15–17)

சேனைகள் வழியில் தங்குவதற்காக அமைக்கப்பட்ட வாசஸ்தலங்கள், இந்திரனுடைய நகரம் போல் மேன்மையாக விளங்கின; நாற்புறமும் அகழி வெட்டப்பட்டு மண்குவியல்கள் கரைகளில் உயரமாகக் குவிக்கப்பட்டன; கூடாரத்தினுள் இந்திரநீல மணியாலான சிற்பங்கள் நிறுவப்பட்டன; தெருக்கள் அழகாக விளங்கின; மன்னர் குடும்பம் தங்கும் இடங்களும், தேவதா பூஜைக்கான இடங்களும் சுண்ணாம்புச்சாந்து பூசப்பட்ட சுவர்களுடன் விளங்கின. நன்றாக அமைக்கப்பட்ட நெடுஞ்சாலைகளிலெல்லாம் தோரணக் கொடிகள் பறக்கவிடப்பட்டன; ஆகாயத்தை முட்டும் அளவிற்கு உயரமாகக் கட்டப்பட்ட உப்பரிகைகளில் புறாக் கூண்டுகள் அமைக்கப்பட்டன. (18–20)

பெரிய மீன்கள் ஏராளமாக வசிப்பதும், மாசு இல்லாத குளிர்ந்த நீரையுடையதும், பல்வகை மரங்கள் அடங்கிய சிறுகானகங்களை உடையதுமான கங்கை நதிக்கரை வரையில், பணிகளில் சாமர்த்தியம் வாய்ந்த தொழிலாளர்களால் அமைக்கப்பட்ட அந்த அழகிய ராஜபாட்டை, இரவு நேரத்தில் சந்திரன்–நட்சத்திரங்களோடு விளங்கும் நிர்மலமான ஆகாயம் போல் கண்ணைக் கவர்வதாகப் பிரகாசித்தது. (21,22)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
எண்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எண்பத்தொன்று

பரதன் அவைக்கு வருதல்

அதே சமயத்தில், (அயோத்தி அரண்மனை வளாகத்தில்) பொழுது விடிந்ததும் நடைபெறவுள்ள (பரத பட்டாபிஷேகம் என்ற) மங்களகரமான சடங்கிற்கு முந்தைய இரவில், நல்வாக்கு வல்லுநர்களும், சூத–மாகதர்கள் என்னும் அரச துதி மற்றும் குலப்பெருமை இசைப்பவர்களும் மங்களமயமான பாடல்களைப் பாடி, பரதனைத் துயிலெழுப்பினார்கள். வெண்கலப் பறை தங்கத் தடியினால் அடிக்கப்பட்டு முழக்கப்பட்டது; பேரொலி எழுப்பும் பெருவாத்தியங்களும், மந்தமான ஒலி எழுப்பும் சிறு பறைகளும், சங்குகளும் நூற்றுக்கணக்கில் முழக்கப்பட்டன. இசைக்கருவிகளின் பேரொலி ஆகாயத்தை வியாபித்து எதிரொலித்தது போலிருந்தது. சோகத்தால் தவித்துக் கொண்டிருந்த பரதனை, இவ்வொலிகள் மேலும் துன்பங்களால் துளைத்தெடுத்தது. (1–3)

அப்போது கண்விழித்த பரதன் வாத்திய இசைகளை நிறுத்தச் சொன்னான். 'நான் மன்னன் இல்லை' என்று கூறி, சத்ருக்னனைப் பார்த்துப் பின்வருமாறு சொன்னான்— ''சத்ருக்னா! பார்! கைகேயியினால் மக்களுக்குச் செய்யப்பட்ட மகத்தான துரோகத்தை நினைத்துப் பார். மன்னர் தசரதரோ என் தலையில் எல்லாத் துயரங்களையும் சுமத்திவிட்டு (சுவர்க்கத்திற்கு)ப் போய்விட்டார். மகாத்மாவான, உருக்கொண்ட அறம் போன்ற மன்னருடைய இந்த ராஜ்யலக்ஷ்மி, மீகான் (மாலுமி) இல்லாத ஓடம் நீரில் தடுமாறுவது போலவே தவிக்கிறது. நம்முடைய மாபெரும் புகலிடம் ஸ்ரீராமன். அவரும் தானாகவே தருமத்தைக் கைகழுவிவிட்ட என்னுடைய தாயாரால் காட்டிற்கு வெளியேற்றப்பட்டார்.'' (4–7)

இவ்வாறு, உணர்விழந்தவன் போல் அழுது புலம்பும் பரதனைக் கண்டு அங்கிருந்த பெண்மணிகள் எல்லோரும் பரிதாபமாக வாய்விட்டு அழுதார்கள். பரதன் முதலியோர் மேற்கண்டவாறு அழுது புலம்பிக் கொண்டிருக்கும் வேளையில் ஆட்சி நெறி அறிந்தவரும், பெரும் புகழ் பெற்றவருமான வசிஷ்டர் (அரண்மனை வளாகத்தில் வேறொரு பகுதியில் இருந்த) இக்ஷ்வாகு குல மன்னர்களின் சபா மண்டபத்தைச் சென்றடைந்தார். பொன்னால் இழைக்கப்பட்டு, நவரத்தினங்களால் அழகு செய்யப்பட்டு, தேவராஜனின் சபையான சுதர்மாவைப் போல் விளங்கிய அந்த சபாமண்டபத்தை, சீடர்களின் கூட்டம் புடைசூழ தருமாத்மாவான வசிஷ்ட மாமுனிவர் வந்தடைந்தார். (8–10)

எல்லா வேதங்களிலும் வல்லவரான அவர் விலைமதிக்க முடியாத விரிப்பை உடைய பொற்பீடத்தில் வீற்றருளினார். பின், அரசுப் பணியாளர்களை நோக்கி உத்தரவு பிறப்பித்தார்— ''நீங்கள் மனத்தைச் சிதறவிடாமல் சென்று அந்தணர்–க்ஷத்திரியர்–வணிகர்–அமைச்சர்–படைத்தலைவர் ஆகியோரை வெகுவிரைவில் அழைத்து வாருங்கள். இங்கு மிக அவசியமான, அவசரமான ஒரு சடங்கு நடக்கப் போகிறது. அரசகுமாரனான சத்ருக்னனோடு புகழ்பெற்ற பரதனையும், அமைச்சர்களான யுதாஜித்–சுமந்திரர்களையும் மற்றும் இந்தச் சந்தர்ப்பத்தில் உடனிருக்க வேண்டிய நலன்விரும்பிகளையும் அழைத்து வாருங்கள்.'' (11–13)

பின்னர், ரதம்–குதிரை–யானைகளில் ஏறி, அவ்விடத்திற்கு வந்து கொண்டிருந்த மக்களின் ஆரவாரப் பேரொலி பெருமளவில் உண்டாயிற்று. அப்போது சபைக்கு எழுந்தருளும் இந்திரனைத் தேவர்கள் மிக்க மரியாதையுடன் எதிர்கொண்டு அழைப்பதைப் போல, (சபா மண்டபத்தில் குழுமியிருந்த அமைச்சர்களும், பிறரும் (சபா மண்டபத்திற்கு வரும்) தசரதரை வரவேற்பதைப் போலவே, பரதனை வாழ்த்தி வணங்கி வரவேற்றார்கள். சுறாமீன், நீர்யானைகள், முத்து–சங்கு–மணல் முதலியவற்றையுடைய (ஆழமாக இருந்ததால் அலைவீசாமல்) சப்தமில்லாமலிருக்கும் பெரிய தடாகத்தைப் போல், தசரத மன்னரின் திருக்குமாரன் வீற்றிருந்ததால்

ஒளிவீசிய அந்தப் பேரவை, முன்பு தசரதர் அமர்ந்திருந்த அவை போலவே மேன்மையாக விளங்கிற்று. (14–16)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில் எண்பத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எண்பத்து இரண்டு

அவை நிகழ்வுகள்

நல்லறிவு படைத்தவனும், முழு நிலவு போல் ஒளிவீசிக் கொண்டிருந்தவனுமான பரதன், நட்டநடுநிசியில், மாசில்லாத வானத்தில், நலன் தரும் கோள்கள் பிரகாசிப்பதைப் போல, அந்த அரசவை மேன்மக்களின் கூட்டத்தால் நிரம்பியிருப்பதைப் பார்த்தான். அப்போது, தத்தம் தகுதிக்கேற்றபடி ஆசனங்களில் வீற்றிருந்த சான்றோர்கள் நிரம்பிய அந்தப் பேரவை, அவர்களுடைய உயர்ந்த ஆடைகளாலும், வாசம் மிக்க உடற்பூச்சுகளாலும் ஒளிவீசித் திகழ்ந்தது. மழை ஓய்ந்து சரத்காலம் வந்தவுடன், இரவில் முழு நிலவு அதிகப் பிரகாசத்துடன் விளங்குவதைப் போல, பேரறிவாளர்கள் நிறைந்த அந்தப் பேரவை மிகவும் மனத்தைக் கவர்வதாக அமைந்திருந்தது. (1–3)

மாமன்னரின் புரோகிதரும், அறம் அறிந்தவருமான அவர் (வசிஷ்டர்), மக்கள் எல்லோரும் ஒன்றாகத் திரண்டு வந்திருப்பதைக் கண்டு, பரதனை நோக்கிப் பின்வரும் இனிய சொற்களை அன்பொழுகக் கூறினார்— ''குழந்தாய்! அறம் தவறாமல் ஆட்சி புரிந்த மன்னர் தசரதர், செல்வ வளமும் பயிர்ச்செழிப்பும் உடைய இந்தப் பூமியை உனக்குக் கொடுத்துவிட்டு தேவலோகம் சென்றுவிட்டார். உதயமாகிவிட்ட சந்திரன், தன் நிலவொளியை விட்டுவிடாததைப் போல, சத்தியத்தில் நிலைபெற்ற இராமன், மேலோர்களின் அறநெறிகளை நினைவிற்கொண்டு தந்தையின் கட்டளையை விட்டுவிடவில்லை. (தந்தையின் கட்டளையைப் புறக்கணிக்க முடியாதபடிக்கு அறப்பற்றுடையவராக இருந்தார்.) (4–6)

பகை இல்லாத இந்த அரசு, தந்தையாராலும் தமையனாராலும் உனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அமைச்சர்கள் மகிழும்வண்ணம் இந்த அரசை ஏற்றுப் பரிபாலனம் செய். விரைவிலேயே பட்டாபிஷேகம் செய்வித்துக் கொள். வடக்கு, மேற்கு, தெற்கு மற்றும் கிழக்குத் திசையிலுள்ள நாடுகளை ஆளும் சிற்றரசர்களும், கடல் கடந்து வாணிபம் செய்யும் வணிகர்களும் கோடிக்கணக்கான நவரத்தினங்களைக் காணிக்கையாகச் செலுத்தட்டும்.'' அந்தச் சொற்களைக் கேட்டு பரதன் சோகத்தில் மூழ்கிப் போனான். அறத்தையே பின்பற்ற வேண்டும் என்ற விருப்பமுடையவனும், தருமம் அறிந்தவனுமான பரதன், இராமனையே மனத்தால் அடைக்கலம் புகுந்தான். (7–9)

வாலிபனான பரதன் அன்னத்தின் இனிய நாதம் போன்ற தொனியில், துக்கம் தாங்காமல் கண்ணீருடன் தழுதழுத்த சொற்களால் அந்தப் பேரவையில், அந்தப் புரோகிதரைக் கடிந்து கொண்டான்— ''பிரம்மசரியத்தை (குருகுலவாசத்தை) நன்கு நிறைவேற்றிய வேத–வேதாங்கங்களைப் பரிபூரணமாக ஓதிமுடித்த, அதிமேதாவியான, அறத்தைக் காப்பதில் பெருமுயற்சியுடைய அவருடைய ராஜ்யத்தை என்னைப் போன்ற (வெற்று மனிதனாகிய) எவன் கைப்பற்றுவான்? தசரதருக்குப் பிறந்த ஒரு புதல்வன் (மூத்தவனுக்கு உரித்தான) நாட்டைக் கைப்பற்றுபவனாக எப்படி ஆவான்? இந்தத் தேசமும் நானும் இராமபிரானுடைய உடைமைகள். (இந்த விஷயத்தை மனத்திற்கொண்டு) இந்த விஷயத்தில் தருமமார்க்கத்தைக் கூறுங்கள். (10–12)

காகுத்தனான இராமன் எனக்கு மூத்தவர்; குணங்களால் மிக உயர்ந்தவர்; அறத்தையே மூச்சுக்காற்றாக உடையவர்; (எங்கள் முன்னோர்களான) திலீபன்–நகுஷன் போல் பராக்கிரமம் உடையவர். எவ்வாறு எங்கள் தந்தையார் தசரதர் (அவருடைய தந்தையின் மறைவிற்குப்பின்) இந்த அரசாட்சியை அடைந்தாரோ, அதுபோல இராமனே இந்த நாட்டை அடையவேண்டும். மேன்மக்களுக்கு ஒவ்வாததும், (மரித்த பின்) சுவர்க்கத்தைக் கொடுக்காததுமான இந்தப் பாவத்தை நான் செய்வேனாகில், இவ்வுலகில் இக்ஷ்வாகு பரம்பரையில் களங்கத்தை ஏற்படுத்தியவன் ஆவேன். (13,14)

என் அன்னையால் செய்யப்பட்ட பாவத்தில் எனக்கு விருப்பம் இல்லை. (அதில் எனக்கு உடன்பாடு இல்லை.) (அதற்குப் பரிகாரமாக) இங்கிருந்தபடியே அடர்ந்த காட்டிலிருக்கும் அவருக்குக் கைகூப்பி நமஸ்காரம் செய்கிறேன். நான், இராமனைப் பின்பற்றிச் செல்வேன். மனிதர்களுள் மிகச்சிறந்தவரான அவர்தான் அரசர். மூன்று உலக மக்களையும் காத்துப் பரிபாலிக்கும் பேராற்றல் உடையவர், அவர்.'' தருமத்தோடு கூடிய அந்தச் சொற்களைக் கேட்ட அவையோர்கள் எல்லோரும் இராமனிடம் மனத்தைச் செலுத்தியவர்களாய் மகிழ்ச்சியுடன் ஆனந்தக் கண்ணீர் பெருக்கினார்கள். (15–17)

(பரதன் மறுபடியும் பேசினான்.) ''குணக்குன்றான அவரைக் காட்டிலிருந்து திருப்பி அழைத்துவர முடியாமற்போனால் புருஷோத்தமனான லட்சுமணன் போல், நானும் அந்தக் காட்டிலேயே வசிக்கப் போகிறேன். நற்குடிப் பிறப்பும், நற்குணங்கள் கொண்டவர்களும், மரியாதைக்கு உரியவர்களுமான உங்கள் அனைவருடைய கண்ணெதிரில், காட்டிலிருந்து அவரை அழைத்துக் கொண்டு வருவதற்கு, எல்லாவிதமான உபாயங்களையும் கடைப்பிடிப்பேன். கூலியாட்களும், சாலை அமைப்பதில் திறமை கொண்டவர்களும், மரவேலை செய்வோரும் முன்பே என்னால் அனுப்பப்பட்டுவிட்டார்கள். ஆகவே, இப்போது பிரயாணத்தைத் தொடங்குவதை என் மனம் விரும்புகிறது.'' (18–20)

இவ்வாறு, (அவையோரை நோக்கிக்) கூறிவிட்டு சகோதர பாசமுடைய தருமாத்மாவான பரதன், அரசாங்க மந்திராலோசனைகளில் சமர்த்தரான அருகிலிருந்த சுமந்திரரைப் பார்த்துப் பின்வருமாறு கூறினான்— ''சுமந்திரரே! நீங்கள் இப்போதே எழுந்து செல்லுங்கள்; என் ஆணைப்படிப் பிரயாணத்தை எல்லோருக்கும் தெரிவியுங்கள்; காலதாமதமின்றிப் படைகளையும் ஆயத்தப்படுத்துங்கள்.'' மகாத்மாவான பரதன் மேற்கண்டவாறு கூறியதும், மிக்க குதூகலமடைந்த சுமந்திரர், பரதன் சொல்லியபடியே அந்த இனிப்பான கட்டளையை எல்லோருக்கும் தெரிவித்தார். அங்கு கூடியிருந்த மக்கள், ஸ்ரீராமசந்திரனைத் திரும்ப அழைத்துக் கொண்டு வருவதற்காகப் படைவீரர்களும் படைத்தலைவர்களும் பிரயாணத்திற்கு ஆயத்தமாகும்படி உத்தரவு செய்யப் பெற்றிருக்கிறார்கள் என்பதைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். (21–24)

(இதைத் தெரிந்துகொண்ட) படைவீரர்களின் மனைவிகள் எல்லோரும் மிகவும் குதூகலத்துடன் தத்தம் வீடுகளில், தத்தம் கணவர்களைப் பிரயாணத்திற்குத் துரிதப் படுத்தினார்கள். படைத்தலைவர்கள் குதிரைகள், மாட்டு வண்டிகள், மிக வேகமாகச் செல்லும் தேர்கள் முதலியவற்றோடு காலாட்படையினரையும் விரைவில் ஆயத்தப்படுத்தினார்கள். படைகள் புறப்படுவதற்கு ஆயத்தமாக இருப்பதைக் கேட்டு, ஆசார்யரின் திருச்செவியில் கேட்கும்படியாக, தன் அருகில் நின்றுகொண்டிருந்த சுமந்திரரைப் பார்த்து, 'என்னுடைய ரதத்தை விரைவில் கொணர்க' என்று கூறினான், பரதன். பரதனுடைய கட்டளையைச் சிரமேற்கொண்டு பெருமகிழ்ச்சியுடன் சென்ற சுமந்திரர், சிறந்த குதிரைகள் பூட்டிய தேருடன் வந்து சேர்ந்தார். (25–28)

அப்போது சத்தியத்தில் உறுதியான பற்றுக் கொண்டவனும், வீரம் மிகுந்தவனும், அசைக்க முடியாத சத்திய பராக்கிரமசாலியுமான ரகுகுலத்தில் தோன்றியவனுமான பரதன்,

புகழ்பெற்றவரும் பெருங்காட்டிற்குச் சென்றுவிட்டவரும் தந்தை–ஆசார்யருக்கு நிகரானவருமான இராமனை உள்ளங்குளிரச் செய்யும் நோக்கத்துடன், அதற்கு அனுகூலமான உத்தரவுகளைப் பிறப்பித்துக் கொண்டு கூறினான்— ''சுமந்திரரே! நீங்கள் உடனே எழுந்து சென்று படைத் தலைவர்களிடம் (பிரயாணத்திற்கு உகந்தபடி) சேனைகளை அணிவகுத்து நிற்கச் சொல்லுங்கள். உலகுக்கு நன்மை பெருக வேண்டுமென்பதற்காகக் காட்டிலிருக்கும் இராமப்பிரபுவை மனம் குளிரச் செய்து அழைத்துக் கொண்டு வர விரும்புகிறேன்.'' (29–30)

தேர்ப்பாகரின் புதல்வரான சுமந்திரர் பரதனால் உறுதியாகக் கட்டளையிடப்பட்டதும், தன் மனோரதம் முழுமையாக நிறைவேறப் போகிறது என்ற களிப்புடன் மக்கட்தலைவர்களையும் படைத்தலைவர்களையும் நண்பர்களையும் பார்த்துத் தெரிவித்தார். உடனே, ஒவ்வொரு வீட்டிலும் உள்ள அந்தணர்–அரசர்–வணிகர்–வேளாளர்கள் துள்ளியெழுந்து, உயர் ஜாதி ஒட்டகங்கள்–கோவேறு கழுதைகள்–தேர்கள்–யானைகள்–குதிரைகள் முதலியவற்றைப் பூட்டி ஆயத்தப்படுத்தினார்கள். (31,32)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
எண்பத்து இரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எண்பத்து மூன்று

பரதன், ஸ்ரீராமனை அழைத்துவரக் காட்டிற்குப் புறப்படுதல்

மறுநாள் காலையில் துயிலெழுந்ததும், அச் சுபவேளையில் உத்தமமான ரதத்தில் ஏறி, இராமனைக் காண மிகுந்த விருப்பத்துடன் பரதன் புறப்பட்டான். அவனுக்கு முன்னால் எல்லா அமைச்சர்களும் புரோகிதர்களும், குதிரைகள் பூட்டிய சூரியபகவான் பவனி வரும் தெய்விகமான தேர் போன்ற தேர்களில் ஏறிப் புறப்பட்டுச் சென்றார்கள். இக்ஷ்வாகு குலத்தை மகிழ்வுறச் செய்யும் பரதனின் அந்தப் பயணத்தில், கஜ சாஸ்திர நூல்களில் கூறப்பட்டுள்ள முறைப்படி அலங்கரிக்கப்பட்ட ஒன்பதாயிரம் யானைகள் பின்தொடர்ந்து சென்றன. (1–3)

புகழ்மிக்கவனும், அரசகுமாரனும், காட்டை நோக்கிப் பிரயாணம் செய்து கொண்டிருப்பவனுமான பரதனுடன் அறுபதாயிரம் ரதங்களும், பல்வகையான ஆயுதங்களைப் பூண்டிருந்தவர்களும், வில்லாளிகளும் சென்றார்கள். சத்தியம் தவறாதவனும், புலன்களை வென்றவனும், ரகு பரம்பரையைச் சேர்ந்தவனும், பயணம் செய்து கொண்டிருந்தவனுமான பரதனுடன், வீரர்கள் ஆரோகணித்திருந்த நூறாயிரக்கணக்கான குதிரைகள் சென்றன. புகழ்பெற்ற கோசலையும் சுமித்திரையும் கைகேயியும் இராமனைத் திரும்ப அழைத்து வருவது குறித்து உள்ளம் மகிழ்ந்தவர்களாக ஒளிவீசும் வாகனத்தில் ஏறிச் சென்றார்கள். பெருங்கூட்டமாகச் சென்ற சான்றோர்கள், இலக்குவனுடன் இருக்கும் இராமபிரானைத் தரிசிக்கும் ஆவலால் மனம் பூரித்தவர்களாக, அவருடைய அபூர்வமான கல்யாண குணங்களைப் பற்றியே பேசிக் கொண்டு சென்றார்கள். (4–7)

''கார்மேகம் போன்ற வண்ணம்; புஜபல பராக்கிரமம்; கலங்காத மனம்; விரதானுஷ்டானங்களில் உறுதி – இப்படிப்பட்டவரும், உலகத்தின் துன்பங்களைப் போக்குகிறவருமான இராமப்பிரபுவை எப்போது காண்போம்? உதித்தவுடனேயே சூரியன், எல்லா உலகங்களின் இருளையும் விலக்கிவிடுவதைப் போல, இராமன், நாம் அவரைப் பார்த்தவுடனேயே எல்லாத் துயரங்களையும் போக்கிவிடுவார். (அப்போது நமக்கெல்லாம் பேரானந்தம் உண்டாகும்.)'' அந்த நகரத்து மக்கள், இவ்வாறெல்லாம் மிக்க மகிழ்ச்சியுடன்

புண்ணியமான பேச்சுக்களைப் பேசி ஆனந்த மிகுதியால் ஒருவரையொருவர் தழுவிக் கொண்டும் சென்றார்கள். பிரசித்தி பெற்ற வேதவல்லுநர்களும், ஏனைய மக்களும், அமைச்சர்கள் எல்லோரும் மனக்களிப்புடன் இராமனை நோக்கிச் சென்றார்கள். (8–11)

நவரத்தினங்களுக்குச் சாணை தீட்டுவோர், குயவர்கள், நெசவுத் தொழில் செய்வோர், ஆயுதங்கள் செய்து கொடுக்கும் கருமான்கள், மயில்தோகை வணிகர், வாள்காரர்கள், இழைப்பு வேலை செய்வோர், துளை போடுகிறவர்கள், தந்த வேலை செய்பவர்கள், சுண்ணாம்புச்சாந்து வேலை செய்யும் கொத்தனார்கள், பரிமளப் பொருள்கள் விற்றுப் பிழைப்பவர்கள், கைத்திறன் கொண்ட பொற்கொல்லர், கம்பளம் நெய்பவர்கள், எண்ணெய் தேய்த்து விடுகிறவர்கள், மருத்துவர்கள், நறுமணப் புகையிடுவோர், மது விற்பனையாளர்கள், சலவையாளர், தையல்காரர், கிராமம் மற்றும் இடைச்சேரி முக்கியஸ்தர்கள், மனைவிகளுடன் கூடிய நாட்டியக்காரர்கள், படகோட்டிகள் முதலியோர் சென்றார்கள். (12–15)

மாட்டு வண்டிகளில் சாந்தமான சித்தம் உடையவர்களும், நல்லொழுக்கம் உடையவர்களும், வேதவித்துக்களுமான அந்தணர்கள், ஆயிரக்கணக்கில் காட்டிற்குப் போய்க்கொண்டிருக்கும் பரதனைப் பின்தொடர்ந்து சென்றார்கள். அவர்கள் எல்லோரும் நன்றாக அலங்கரித்துக் கொண்டு, தூய ஆடை அணிந்து, சிவந்த உடற்பூச்சு பூசிக் கொண்டவர்களாக, பற்பல வாகனங்களில் மெல்லமாகப் பரதனைப் பின்தொடர்ந்து சென்றார்கள். உள்ளப்பூரிப்பும் ஆனந்தமும் நிறைந்த அந்தப் பெரும் படை, சகோதரரிடம் பாசமுடையவனும், கைகேயியின் மைந்தனும், மூத்த சகோதரரைத் திரும்ப அழைத்துவரச் சென்று கொண்டிருந்தவனுமான பரதனைப் பின்தொடர்ந்து சென்றது. (16–18)

தேர்–வாகனம்–குதிரை–யானைகளில் அவர்கள் நீண்ட தூரம் பாதையைக் கடந்து, பின்னர், சிருங்கிபேரபுரத்திற்கு அருகில் கங்கைக் கரையை வந்தடைந்தார்கள். அங்கே, இராமபிரானது தோழன், வீரசூரனான குகன் தன் உற்றார்–உறவினருடன் சோர்வில்லாமல் அந்தப் பிரதேசத்தைப் பரிபாலித்துக் கொண்டிருந்தான். சக்ரவாகப் பறவைகளால் அழகூட்டப்பட்ட கங்கைக் கரையை அடைந்ததும், பரதனைத் தொடர்ந்து வந்த நால்வகைப்படை நின்றுவிட்டது. (19–21)

புண்ணிய தீர்த்தத்தையுடைய கங்கையையும், தன்னுடன் வந்திருக்கும் சேனையையும் பார்த்து, (படையினருக்குத் தண்ணீர் வசதியுள்ள இந்த இடத்தில் ஓய்வு தேவை என்றுணர்ந்து) பேச்சில் வல்லவனான பரதன், அமைச்சர்கள் எல்லோரையும் நோக்கிப் பின்வருமாறு கூறினான்— ''இப்போது என் படைவீரர்களை அவர்கள் இஷ்டப்படி எல்லாப் பக்கங்களிலும் தங்க விடுங்கள். எல்லோரும் நன்றாகக் களைப்பாறியபின், நாளைய தினம் இந்த நதியைக் கடந்து செல்வோம். இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, கங்கையில் இறங்கி, சுவர்க்கம் சென்றுவிட்ட மாமன்னருக்கு மேலுலகில் நல்ல சௌகரியங்கள் கிடைக்கவேண்டும் என்பதற்காக நீர்க்கடன் செலுத்த விரும்புகிறேன்.'' (22–24)

இவ்வாறு, அவன் சொன்னதைக் கேட்டு, 'அப்படியே ஆகட்டும்' என்று ஏற்றுக் கொண்ட அமைச்சர்கள், அவரவர் விருப்பப்படிச் சேனைகளைத் தனித்தனியே நிறுத்தினார்கள். மகாநதியின் கரையில் கூடாரம்–பாசறை முதலிய அப்போதைய நிலைமைக்கேற்ற உபாயங்களால் மனம் மகிழும்படியாக சேனைகளை அமர்த்திவிட்டு, மகாத்மாவான ஸ்ரீராமனைத் திருப்பி அழைத்துக் கொண்டு வருவது பற்றிச் சிந்தித்துக் கொண்டே, பரதன் அன்றிரவு அங்கே தங்கினான். (25,26)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
எண்பத்து மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எண்பத்து நான்கு

குகனின் வருகை

(இங்கு இவ்வாறு நிகழ்ந்து கொண்டிருந்தபோது) வேடர்களின் அரசன், கங்கைக் கரையில் வந்து இறங்கியிருக்கும் சேனையைப் பார்த்ததுமே, தன் உறவினர்களை நோக்கி வேகமாகக் கூறினான்— ''இங்கு வந்திருக்கும் பெரும்படை, சமுத்திரம் போல் அளவிட முடியாததாகக் காணப்படுகிறது. நான், இதன் மறு எல்லையை மனத்தாலும் காணமுடியாதவனாக இருக்கிறேன். ரதத்தில் மிகப்பெரிய கோவிதாரக் கொடி (சீமை அத்தி எனப்படும் தாவர வகை) காணப்படுகிறது என்பதால் தீய எண்ணமுடைய பரதனே வந்திருக்கிறான் போலும்! (1–3)

செம்படவர்களாகிய நம்மையெல்லாம் சிறைப்படுத்தப் போகிறானோ, அல்லது கொலை செய்யப் போகிறானோ, அல்லது தந்தையைக் கொண்டு நாட்டிலிருந்து வெளியேற்றிய தசரத குமாரர் இராமனை, மாமன்னருடைய கிடைத்தற்கரிய ராஜ்யலக்ஷ்மியை நிரந்தரமாக வைத்துக் கொள்ள விரும்பும் கைகேயியின் புதல்வரான பரதன், இராமனைக் கொல்வதற்காக வந்திருக்கிறானோ? தசரத குமாரரான ஸ்ரீராமன் எனக்குத் தலைவரும் தோழரும் ஆவார். அவருடைய நன்மையில் நாட்டம் கொண்டவர்களாக போர் புரியும் ஆயத்தங்களுடன் கங்கைக் கரையில் காத்துக் கொண்டிருங்கள். (4–6)

செம்படவர்கள் எல்லோரும் கவசம் அணிந்து, புலால்–கிழங்கு–பழம் ஆகியவற்றை உணவாகக் கொண்டு, கங்கை நதிக்கரையில் நதியைப் பாதுகாத்துக் கொண்டு (பரதனுடைய படைவீரர்கள், நாம் அறியாதபடி ஆற்றைக் கடந்துவிடாமல் கவனமாக) நிற்கட்டும். நம்மிடம் உள்ள ஐநூறு மரக்கலங்களில் ஒவ்வொன்றிலும் பலம் பொருந்தியவர்களும், போர் புரிய ஆயத்தமாக இருப்பவர்களுமான நூறு செம்படவர்கள் சித்தமாக இருக்கட்டும்.'' இவ்வாறு சொல்லியபின் மேலும் கூறினான்— (7,8)

''இராமபிரானுக்கு நன்மை செய்வதில் பிரீதியுடையவராக பரதன் இருப்பாரேயானால், அப்போதுதான் இந்த மாபெரும் படை எவ்விதத் தடையுமின்றி, எளிதாகக் கங்கையைக் கடக்கும்.'' மேற்கண்டவாறு கூறிவிட்டு, மீன்–மாமிசம்–தேன் முதலிய காணிக்கைகளை எடுத்துக் கொண்டு, வேடர்களின் தலைவனான குகன் பரதனிடம் சென்றான். பிரதாபமிக்கவரும், அரசநீதி அறிந்தவரும், தேர்ப்பாகனின் புதல்வருமான சுமந்திரர், (பரதனை நோக்கி) வந்து கொண்டிருக்கும் அவனைக் (குகனைக்) கண்டவுடன் மிக்க வணக்கத்துடன் பரதனிடம் கூறினார்— (9–11)

''இங்கே வந்துகொண்டிருக்கும் வயோதிகன் இந்தப் பகுதியின் தலைவன்; ஆயிரக்கணக்கான பந்துக்கள் சூழ வாழ்ந்து கொண்டிருப்பவன்; தண்டகாரண்யம் பற்றி முழுமையாக அறிந்தவன்; அத்துடன் உங்கள் (மூத்த) சகோதரரின் அன்புத் தோழன். ஆகவே, காகுத்த குலத்தோன்றலே! வேடர்களின் தலைவனான குகனை, நீங்கள் பார்த்துப் பேசவேண்டும். (நீங்கள் வரவேற்றுப் பேசவேண்டும் என்று நான் கூறுவதற்கு இன்னொரு முக்கிய காரணம் இருக்கிறது.) இராம–லட்சுமணர்களாகிய அவ்விருவரும் இருக்கும் இடத்தை இவன் நிச்சயமாக அறிவான்.'' செவிக்கினிய இந்தச் சொற்களை சுமந்திரரிடமிருந்து கேட்டதும், 'குகன் உடனே வந்து என்னைப் பார்க்கட்டும்' என்று உத்தரவு கொடுத்தான். உத்தரவு கிடைத்ததும் மகிழ்ச்சியடைந்த குகன், உறவினர்கள் புடைசூழ வந்து, தலைவணங்கி, பரதனிடம் விண்ணப்பித்துக் கொண்டான்— (12–15)

''இந்தப் பிரதேசம் தங்கள் திருமாளிகையின் தோட்டம் போன்றது. (தங்கள் பேரரசின் ஒரு பகுதியே.) தங்கள் விஜயம் பற்றி முன்னரே தகவல் கிடைக்காததால், முறைப்படித் தங்களை வரவேற்க இயலாமற்போய்விட்டது. நாங்கள் எல்லோரும் தங்களுடைய அடிமைகள். தாங்கள் எங்களுடன் தங்கி இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். வேடர்களால் கொண்டுவரப்பட்ட கிழங்கு–பழவகை, புதிய புலால் மற்றும் வற்றலானவையும், உண்ணத்தக்க

பிற காட்டுப் பொருள்களும் ஏராளமாக இருக்கின்றன. படைகள் வயிறாரப் புசித்துவிட்டு இன்றிரவு இங்கே தங்கியிருக்கட்டும். எங்களால் மனப்பூர்வமாகக் கௌரவிக்கப்பட்டவராக படையுடன்கூட தாங்கள் நாளைய தினம் புறப்பட வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.'' (16–18)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
எண்பத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எண்பத்தைந்து

குகனுடன் சந்திப்பு

மேற்கண்டவாறு வேண்டிக்கொள்ளப்பட்ட மகாபுத்திசாலியான பரதன், வேடர்கள் தலைவனான குகனைப் பார்த்து, நல்ல காரணங்களும் பயனும் உள்ள பதிலைக் கூறினான்— (1)

''என்னுடைய தலைவரின் தோழரே! இவ்வளவு பெரிய படைக்கு உபசாரம் செய்ய, ஒரு சிறு பிரதேசத்திற்கு அதிபதியான நீ விரும்புகிறாய் – என்ற ஓர் உயர்ந்த எண்ணத்தாலேயே நீ காரியத்தைச் செய்து முடித்ததாகிறது.'' ('எங்களுடைய அதிதி சத்காரத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்ற) குகனுடைய பிரார்த்தனைக்கு மேற்சொன்ன சிறப்பான பதிலைக் கூறிய மகாதேஜஸ்வியும், அறப்பற்று என்ற திவ்ய இயல்பும் பெற்ற பரதன், மேலும் கூறினான்— ''நான் எந்த வழியாக, பரத்வாஜருடைய ஆசிரமத்திற்குப் போக முடியும்? இந்த நிலப்பகுதி மிகவும் உட்புக முடியாததாக இருக்கிறது. அத்துடன் வெள்ளம் பெருகியோடும் கங்கை, கடக்க முடியாததாகப்படுகிறது.'' (2–4)

காட்டில் அலைந்து திரிந்து பழக்கப்பட்டுள்ள குகன், மேதாவியான அந்த அரச குமாரனின் சொற்களைக் கேட்டு, கையைக் கூப்பிக்கொண்டு வணக்கத்துடன் பின்வருமாறு கூறினான்— (5)

''பெரும் புகழ்கொண்ட சக்கரவர்த்தித் திருமகனாரே! இந்தக் காட்டுப் பகுதியைப் பற்றி நன்றாக அறிந்துள்ள செம்படவர்கள், வில்லேந்தியவர்களாகத் தங்களைப் பின்தொடர்ந்து வருவார்கள்; அடியேனும் தங்களுடன் வருவேன். (ஆனால், என் நெஞ்சத்திற்குள் ஒரு நெருடல் இருக்கிறது; அதை முன்னதாகவே நீக்கிக் கொள்ள விரும்புகிறேன்.) எவ்வளவு பெரிய செயலையும் இலகுவாகச் செய்து முடிக்கக் கூடியவரான ஸ்ரீராமப்பிரபுவிடம், தாங்கள் தீய எண்ணத்துடன் போகின்றீர்களா? (எனக்கு ஏன் இப்படி ஓர் எண்ணம் வரவேண்டும்? என்றால்) இவ்வளவு பெரிய சேனை(யுடன் வந்திருக்கிறீர்களே? அதுதான்) சந்தேகத்தை உண்டாக்குவது போல இருக்கிறது.'' (6,7)

இவ்வாறு கூறிய குகனைப் பார்த்து, ஆகாயம் போல் நிர்மலமான மனமுடைய பரதன் தெளிவான சொற்களைக் கூறினான்— ''சகிக்க முடியாத இந்தக் கஷ்டகாலம் ஏற்பட வேண்டாம். நீ, என்னைச் சந்தேகப்படக் கூடாது. இராகவன் என்னுடைய மூத்த சகோதரர்; தந்தைக்கு நிகராக அவரை மதிக்கிறேன். காட்டில் வசிக்கும் காகுத்தனைத் திருப்பி அழைத்து வருவதற்காகச் செல்கிறேன். குகனே! வேறுவிதமான எண்ணமுடையவனாக என்னைக் கருதவேண்டாம். நான், உனக்குச் சத்தியமாகச் சொல்கிறேன்.'' (8–10)

பரதன் கூறியதைக் கேட்ட அவன் முகமலர்ந்து, உள்ளம் பூரிக்க, பரதனை நோக்கி மீண்டும் பின்வருமாறு கூறினான்— ''தாங்கள் பெரும் போற்றுதலுக்குரியவர். எவ்வித முயற்சியுமில்லாமலே கிடைத்த ராஜ்யத்தைத் துறந்துவிட விரும்புகிறீர்களே! தங்களுக்கு நிகரான உத்தமரை, நான் இந்த உலகில் பார்த்ததே இல்லை! தற்போது, துன்ப

நிலையிலிருக்கும் ஸ்ரீராமனைத் திருப்பி அழைத்துக் கொண்டு போக விரும்பும் தங்கள் புகழ் நிரந்தரமாக உலகில் விளங்கிக் கொண்டிருக்கும்!'' (11–13)

இவ்விதமாக, பரதனிடம் குகன் பேசிக் கொண்டிருந்தபோது, சூரியன் ஒளி குன்றியவன் ஆனான்; இரவு படரத் தொடங்கியது. குகனுடைய பேச்சினால் மனமகிழ்ந்த அவன், அந்தச் சேனையை ஆங்காங்கே ஓய்வெடுக்கச் செய்துவிட்டு, சத்ருக்னனுடன் உறங்குமிடத்தை அடைந்தான். தருமத்தில் நம்பிக்கையுடைய பரதன் துயரத்தை அனுபவிக்கத்தக்கவன் அல்லன். என்றாலும், இராமனைப் பற்றிய நீங்காத நினைவு என்ற சோகம் பெருமளவில் அவனிடம் வந்து சேர்ந்திருக்கிறது. (14–16)

காட்டுத் தீயினால் வெந்து கொண்டிருக்கும் மரத்தை, அதன் பொந்திலிருக்கும் நெருப்பும் உட்புறத்திலிருந்து எரிப்பதைப் போல, இராமனின் பிரிவு என்ற வெளிப்புறத் தீயினால் கொதித்துக் கொண்டிருந்த பரதனை, தந்தையின் மறைவு என்ற நெஞ்சில் உறைந்திருந்த தீயும் சேர்த்து எரித்தது. சூரியனின் வெம்மைக் கதிர்களால் இமயமலையிலிருந்து பனிக்கட்டி உருகி நீராகப் பெருகி ஓடுவதைப் போல, சோகத்தீயினால் பெருகிய வியர்வை (பரதனின்) எல்லா அங்கங்களிலிருந்தும் வெளிப்பட்டது. (17,18)

கைகேயியின் புதல்வன், அப்போது உள்ளே அழுந்தும் துக்கம் என்னும் மலையால் பீடிக்கப்பட்டிருந்தான். இராமனைப் பற்றிய நினைவு என்பதுதான் (அந்த மலையில்) செதுக்கப்படாத குன்றுகள்; பெருமூச்சுக்களே தாதுக்கள்; மனத்தளர்ச்சியே மரக்கூட்டங்கள்; சோகத்தின் விளைவான உடல்தளர்ச்சியே உயர்ந்த சிகரங்கள்; (எடுத்துக் கொண்ட காரியம் வெற்றியடைய வேண்டுமே? என்ற) பெருங்கலக்கமே, அங்கு வாழும் உயிர் வகைகள்; உள்ளேயும் புறத்தேயும் வாட்டும் கொதிப்புதான் தாவரங்கள் மற்றும் மூங்கில் காடுகள். (19,20)

மானுடர்களில் சிறந்தவனான பரதன் பெருங்கஷ்டத்தை அடைந்து, மிகவும் மனக்கலக்கம் அடைந்து, மனக்கொதிப்பால் பீடிக்கப்பட்டவனாக, தன்வயம் இழந்து, மந்தையிலிருந்து பிரிந்து வழிதவறிச் சென்றுவிட்ட காளையைப் போல் மன அமைதி பெறாமலிருந்தான். பேராற்றல் கொண்டவனும், மன உறுதி படைத்தவனுமான பரதன், பரிவாரங்களுடன் குகனுடைய உபசாரத்தை ஏற்றுத் தங்கினான். மிகவும் மனம் நொந்திருந்த அந்த நிலையிலும் குகன், தன் தமையன் குறித்து வருந்திக் கொண்டிருந்த பரதனைத் தேற்றினான். (21,22)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
எண்பத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எண்பத்தாறு

குகன் (லட்சுமணனைப் பற்றிக்) கூறுதல்

அப்போது, வனங்களில் சுற்றிப் பழகியுள்ள குகன், லட்சுமணனுடைய உயர்ந்த இயல்புகள் நினைவுவரப் பெற்றவனாய் எல்லையில்லாத ஆற்றல் கொண்ட பரதனிடம் (பின்வருமாறு) விவரித்தான்— ''தன் தமையனாரைப் பாதுகாத்துக் கொண்டு, உத்தமமான வில்–அம்பு தரித்து இரவு முழுவதும் கண்விழித்துக் கொண்டிருந்த நற்குணசாலியான லட்சுமணனைப் பார்த்து நான் சொன்னேன்— (1,2)

'ரகுநந்தனா! இந்தச் சுகமான படுக்கை தங்களுக்காகப் போடப்பட்டிருக்கிறது. கவலைப் படாமல் இதில் படுத்துக் கொண்டு நன்றாகக் களைப்பாறுங்கள். தருமாத்மாவே! நானும் என்னைச் சார்ந்த இந்த மக்களும், அசௌகரியங்களைச் சகித்துக் கொள்ளும் பழக்கமுடையவர்கள்.

ஆனால், தாங்களோ பரமசௌக்கியங்களையே அனுபவித்தவர். நாங்கள், தங்களைப் பாதுகாத்துக் கொண்டு கண்விழித்திருப்போம். தங்கள் முன்னிலையில் நான் சத்தியமாகக் கூறுகிறேன்— எனக்கு, ஸ்ரீராமனைக் காட்டிலும் அதிக அன்பிற்குரியவர் இவ்வுலகில் வேறு எவரும் இலர். அதனால், இவருடைய பாதுகாப்பைப் பற்றி, நீங்கள் கவலைப்பட வேண்டாம். (3–5)

இவருடைய (இராமபிரானுடைய) பேரருளினால் இவ்வுலகில் பெரும் கீர்த்தியையும், அறச்செயல்களின் பயனான புண்ணியத்தையும், ஏன், இவ்வுலக வாழ்க்கைக்குத் தேவையான பொருள் வளத்தையும் பெறலாம் என்று நம்பிக் கொண்டிருக்கிறேன். ஆகவே, (இராமனிடம் பேரன்பு வைத்துள்ள) நான், கையில் வில் பிடித்து, என்னுடைய சுற்றத்தார் எல்லோருடனும் (விழிப்பாக இருந்து) சீதாப்பிராட்டியாருடன் படுத்துக் கொண்டிருக்கும் உயிர்த்தோழரான இராமனைப் பாதுகாப்பேன். நாங்கள், எப்போதும் காட்டிற்குள் சுற்றித் திரிந்து கொண்டிருப்பதால், எங்களுக்குத் தெரியாதது என்று இங்கு எதுவுமே இல்லை. நால்வகைப்படை (எதிர்பாராதவிதமாகத் திடீரென்று) எதிர்த்து வந்தால்கூட, நாங்கள் எதிர்கொள்வோம் என்பது திண்ணம்.' (6–8)

இவ்வாறு நாங்கள் கூறிமுடித்ததும், தருமம் ஒன்றையே மனத்தில் சிந்திப்பவரும் மகாத்மாவுமான லட்சுமணன், எங்களைப் பார்த்து வினயத்தோடு கூறினார்— 'தசரதகுமாரர் ஸ்ரீராமனும் சீதையும் வெறும் தரையில் சயனித்துக் கொண்டிருக்கும்போது, நான் உயிர் பிழைத்திருக்கவோ, சுகங்களை அனுபவிக்கவோ, உறங்கவோ எவ்வாறு முடியும்? குகனே! எவர், தேவ–அசுரர்கள் எல்லோரும் ஒன்றுகூடி வந்தாலும், போரில் எதிர்கொள்ள முடியாதவரோ, அவர், சீதாப்பிராட்டியுடன் புற்களாலான படுக்கையில் படுத்துக் கொண்டிருக்கும் அவலத்தைப் பார்! (9–11)

தசரதருடைய நீண்ட நெடுந்தவத்தாலும், பல வகையான சிரமத்தைக் கொடுக்கும் உபவாசம் போன்ற முறைகளாலும், தனக்கு நிகரான வல்லமை படைத்தவராகப் பெறப்பட்ட அரும்பெரும் புதல்வர், இவரேயன்றோ! இவர் நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டபின் வெகுகாலம் மன்னர் உயிரோடிருக்க மாட்டார். இந்த மண்ணுலகு விரைவிலேயே நாதனை இழந்ததாக ஆகப்போகிறது. அந்தப்புரத்து மாதர்கள் எல்லோரும் துக்கம் தாங்காமல் பெருங்குரலில் ஒப்பாரி வைத்து, உடல் சோர்ந்து, அழுகையை நிறுத்திவிட்டதால் அரச மாளிகை சப்தமில்லாமல் அடங்கிப் போயிருக்கும் என்று எண்ணுகிறேன். (12–14)

கௌசல்யா தேவியும், மன்னரும், என் அன்னை சுமித்திரையும் இந்த இரவு வரையில்கூட உயிர் பிழைத்திருக்கமாட்டார்கள் என அஞ்சுகிறேன். ஒரு வேளை (கேகய நாட்டிலிருந்து) சத்ருக்னன் வரும் வழியைப் பார்த்துக் கொண்டு, என்னுடைய தாயார் உயிர் பிழைத்திருக்கலாம். ஆனால், மாவீரனைப் பெற்ற தாயார் கௌசல்யை பெருந்துயரமுற்றவராய் மாண்டு போயிருப்பார். என்னுடைய தந்தையார் இராமனுக்கு இளவரசுப் பட்டம் சூட்ட விரும்பி, அது நிறைவேறாமற்போகவே, 'எல்லாம் போய்விட்டது... எல்லாம் போய்விட்டது....' என்று மனம் புண்பட்டே உயிர் துறந்திருப்பார். என் தந்தையின் மரண காலத்தில் அருகில் இருந்து, மன்னருடைய ஈமச்சடங்குகளை நடத்தி வைப்பவர்கள் வாழ்க்கைப் பயன் கைகூடப் பெற்றவராவார்கள். (15–18)

அழகிய நாற்சந்திகள்; நன்கு வகுக்கப்பட்ட ராஜ வீதிகள்; செல்வந்தர்கள் வசிக்கும் மாளிகைகள்; அரச மரபினர் வசிக்கும் அரண்மனைகள்; எல்லா வகையான உத்தமப் பொருள்களின் நிறைவு; யானை–குதிரை–ரதம் நிறைந்திருப்பது; பல்வகை இசைக்கருவிகளின் இனிய நாதம்; மங்களகரமான வஸ்துக்கள் நிறைய காணப்படுவது; மனமகிழ்ச்சியும் உடல் வலிவும் பெற்ற மக்களின் கூட்டம்; ஏராளமான பூஞ்சோலை, நந்தவனங்கள்; அவ்வப்போது பொதுமக்கள் கூட்டமாகக் கூடி நடத்தும் மனமகிழ் நிகழ்ச்சிகள், திருவிழாக்கள் – இவ்வளவும் நிறைந்த என் தந்தையாரின் தலைநகரத்தில் பெரும்பேறு பெற்றவர்கள் உலாவப் போகிறார்கள். வனவாச காலம் முடிந்ததும், சொன்ன சொல்லை நிறைவேற்றிவிட்ட மனத்திருப்தியுடன் சுகமாகத் திரும்பும் நாங்கள், மீண்டும் (அயோத்தி நகரத்தில்) நுழைவோமா?' (19–22)

இவ்வாறு, மனம் நொந்து புலம்பிய பெரும் புண்ணியசாலியான அரசகுமாரர் (இலக்குவன்) கண்விழித்து நின்ற அந்த நிலையிலேயே அந்த இரவு கழிந்தது. மாசில்லாத சூரியன் உதித்தவுடன் கங்கைக்கரையில் (ஆலம்பால் கொணர்ந்து) அவ்விருவர் முடியையும் ஜடாபாரமாகச் செய்வித்து சௌக்கியமாக அக்கரையில் சேர்ப்பித்தேன். சடாமுடியும் மரவுரியும் தரித்தவர்களும், எதிரிகளை வாட்டுகிறவர்களும், யானைக் கூட்டங்களின் இரு தலைவர் போன்றவர்களும், பேராற்றல் கொண்டவர்களும், உயர்ந்த வில்–அம்பு ஏந்தியவர்களுமான அவ்விருவரும் நாலாபக்கங்களிலும் பார்வையைச் செலுத்தியபடி சீதையுடன் சென்றார்கள்.'' (23–25)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
எண்பத்தாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எண்பத்தேழு

இராமன் எங்கே படுத்தார்?

குகனிடமிருந்து மனத்திற்கு மகிழ்ச்சி தராத பல செய்திகளைக் கேட்ட பரதன், அவைகளைக் கேட்டமாத்திரத்திலேயே மிகவும் கவலை அடைந்தான். பரதன் அழகானவன்; ஆற்றல் மிக்கவன்; சிங்கம் நிகர் தோள்களையும் நீண்ட கைகளையும் உடையவன்; தாமரையன்ன விசாலமான கணகளைப் பெற்றவன்; யௌவனப் பருவத்தினன்; கண்ணுக்கினிய தோற்றத்தினன். இப்படிப்பட்ட அந்த பரதன், (குகனிடமிருந்து நெஞ்சைப் பிளக்கும் செய்திகளைக் கேட்டுச்) சிறிது நேரம் மன உறுதியுடன் நின்றான். ஆனால், வேதனை மிகவும் அதிகமாகப் போனவுடன் அங்குசங்களால் நெஞ்சப் பகுதியில் தாக்கப்பட்ட யானைபோல் சடாரென்று தரையில் சாய்ந்தான். (1–3)

அருகிலிருந்த சத்ருக்னன், பரிதாபகரமான அந்த நிலையிலிருக்கும் பரதனை மார்புறத் தழுவிக் கொண்டு சோகத்தினால் பீடிக்கப்பட்டவனாய் சுயநினைவிழந்து உரத்த குரலில் அழத் தொடங்கினான். சற்றைக்கெல்லாம் பரதனுடைய தாய்மார்கள் அனைவரும் அங்கே வந்து சேர்ந்தார்கள். அவர்கள் கணவரை இழந்த துக்கத்தால் தாக்கப்பட்டவர்களாக, உபவாசத்தால் மெலிந்த தேகமுடையவர்களாகக் காணப்பட்டார்கள். அவர்கள் எல்லோரும் தரையில் விழுந்து கிடக்கும் அவனை அழுதவாறே சூழ்ந்து கொண்டார்கள். மிகவும் மனவேதனையால் வெந்து கொண்டிருந்த கோசலை, அவனை நெருங்கிக் கட்டியணைத்துக் கொண்டார். (4–6)

சோகத்தால் வதங்கி அழுது கொண்டிருந்த அவர், தாய்ப்பசு தன் கன்றை நோக்கி அன்புடன் ஓடிவருவதைப் போல பரதனை வாரி எடுத்து (பின்வருமாறு) வினவினார்— ''குழந்தாய்! உன் உடம்பை ஏதேனும் நோய் வருத்துகிறதா, என்ன? இப்போது அரச குலத்தின் எதிர்கால வாழ்வு உன்னையே சார்ந்திருக்கிறது. மகனே! இராமன் தம்பியுடன் (நாட்டிற்கு) வெளியே சென்றுவிட்டபின், மன்னர் தசரதரும் உயிர் துறந்த பின்னர், இப்போது நீ ஒருவன்தான் எங்களுக்குப் பேராதரவு. உன்னைப் பார்த்துக் கொண்டிருப்பதால்தான் நான் இன்னமும் உயிரோடிருக்கிறேன். செல்வமே! லட்சுமணனைப் பற்றியோ, மனைவியோடு காட்டிலிருக்கும் நான் பெற்ற எனது ஒரே மகனை (இராமனை)ப் பற்றியோ, ஏதேனும் வருந்தத்தக்க தகவல் உன் செவிகளில் விழுந்ததா?'' (7–10)

பெரும் புகழ் கொண்ட பரதன், சிறிது நேரத்திற்குப்பின் மனம்தேறி அழுதுகொண்டே கௌசல்யையைத் தேற்றினான். பின், குகனைப் பார்த்து பின்வரும் சொற்களைக் கூறினான்— ''குகனே! அன்றைய தினம் இரவில் என் தமையனார் எதைப் புசித்தார்? எங்கே தங்கினார்? எந்தப் படுக்கையில் தூங்கினார்? சீதாப்பிராட்டியார் எங்கே இருந்தார்? லட்சுமணன் எவ்விடத்தில் இருந்தான்? இவையெல்லாவற்றையும் எனக்குச் சொல்.'' வேடர் தலைவனான

குகன் (பரதனுடைய பேச்சைக் கேட்டு) மன ஆறுதலடைந்து, தன்னிடம் அன்பு கொண்டவரும், அதிதியுமான இராமனை எவ்வாறு வரவேற்று உபசரித்தானோ, அதனை பரதனுக்கு விளக்கினான்— (11–13)

''இராமபிரான் உண்பதற்காகப் பலவித உணவு வகைகளையும், பல்வகை ஆகாரப் பண்டங்களையும், பலவகையான பழங்களையும் ஏராளமாகக் கொண்டு வந்தேன். சத்திய பராக்கிரமரான ஸ்ரீராமன், அவை எல்லாவற்றையும் (கடைக்கண் பார்வையால்) அங்கீகரித்தார். ஆனால், அரசகுல தருமத்தை அனுசரித்து, அவைகளை ஏற்றுக் கொள்ளவில்லை. அவை எல்லாவற்றையும் திருப்பிக் கொடுத்துவிட்டார். அரசரே! 'நண்பனே! நாங்கள் எதையும் பெற்றுக் கொள்பவரல்லர்; எப்போதும் கொடுத்துப் பழக்கப்பட்டவர்கள்' என்று மகாத்மாவான அவர் தெளிவுபடுத்தினார். (14–16)

மகாத்மாவான லட்சுமணனால் கொண்டு வரப்பட்ட சுத்தமான தண்ணீரை மட்டும், சீதையும் இராகவனும் அருந்திவிட்டு உபவாசம் இருந்தார்கள். அவர்கள் இருவரும் பருகிய பின் மிகுந்திருந்த தண்ணீரை மட்டும் லட்சுமணன் உட்கொண்டார். பின்னர், அந்த மூவரும் மௌனமாகவும், மனத்தை நிலைப்படுத்தியும் பகவத் தியானத்தில் ஆழ்ந்தார்கள். அதன் பின்னர், சுமித்திரையின் மைந்தன், தானே சென்று, விரைவாகத் தர்பங்களைக் கொண்டுவந்து, இராகவனுக்காக அழகிய படுக்கையை அமைத்தார். ஸ்ரீராமன் சீதாதேவியுடன் அந்தப் படுக்கையில் அமர்ந்ததும், அவருடைய திருவடிகளைத் துடைத்து வணங்கிவிட்டு, லட்சுமணன் அப்பால் நகர்ந்து சென்றார். (17–20)

இதுதான் அந்த இங்குதி மரத்தின் வேர்; இதுதான் அந்தப் புல். அந்த இரவில், ஸ்ரீராமனும் சீதாப்பிராட்டியும் படுத்துக் கொண்டிருந்தது இங்கேதான். எதிரிகளை வாட்டும் லட்சுமணன், பாணங்கள் நிறைந்த அம்புறாத்தூணிகளை முதுகில் கட்டிக் கொண்டு, கைவிரல்களில் தோற்கவசங்களை அணிந்து கொண்டு, இரவு முழுவதும் இவரை (இராமனை), சுற்றிலும் திரிந்தபடியே பாதுகாத்துக் கொண்டிருந்தார். அப்போது நானும், உயர்ந்த வில்–அம்புகளை ஏந்திக் கொண்டு, லட்சுமணன் இருந்த இடத்திலேயே நின்று கொண்டிருந்தேன். மிகவும் கவனமாக இருந்த நாணேற்றிய வில்லைப் பற்றியிருந்த சுற்றத்தார்களோடுகூட தேவேந்திரன் போன்ற அவரைப் பாதுகாத்துக் கொண்டு, இங்கேயே தங்கிவிட்டேன்.'' (21–23)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
எண்பத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எண்பத்தெட்டு

படுக்கையைப் பார்த்து வருந்துதல்

வேடர் தலைவன் சொன்ன சொற்களையெல்லாம் கவனமாகக் கேட்ட பரதன், அமைச்சர்களோடுகூட இங்குதி (புங்க) மரத்தினடிக்கு வந்து இராமனின் படுக்கையைப் பார்த்ததும், அன்னைமார்கள் அனைவரையும் பார்த்து, ''இங்குதான் அந்த மகாத்மா வெறுந்தரையில் அன்றிரவு முழுவதும் படுத்திருந்தார். புற்களில் அவர் உடல் அழுந்திய சுவடுகள், இதோ தெரிகின்றன'' என்று மனவேதனையுடன் கூறினார். (1,2)

ஸ்ரீராமன், மிகவும் கீர்த்தியுடைய மரபில் தோன்றியவர். மிகவும் பாக்கியசாலியும் பேரறிவாளருமான தசரதரிடமிருந்து தோன்றியவர். இப்படிப்பட்ட இவர் கட்டாந்தரையில் படுக்கத் தக்கவரல்லர். சிறந்த மான்தோல் விரிக்கப்பட்ட, உயர்ரக விரிப்புகள் போடப்பட்ட படுக்கையில் படுத்துப் பழக்கப்பட்ட புருஷோத்தமர் வெறும் பூமியில் எவ்வாறு படுத்தாரோ? (3,4)

எப்போதும் மதிற்சுவர்களால் சூழப்பட்ட மாளிகைகளிலும் தங்கம்–வெள்ளி இழைக்கப்பட்ட தரைகளையுடைய உப்பரிகைகளிலும் விலையுயர்ந்த படுக்கை விரிப்புகளிலும் பல்வகை மலர்க்குவியல்களால் அழகூட்டப்பட்டதும், சந்தனம்–அகில் நறுமணப் புகை சூழ்ந்திருப்பதும், வெண்மேகக் கூட்டம் போல் பிரகாசிக்கின்றதும், கிளிக் கூட்டங்களின் இனிய குரல் கேட்டுக் கொண்டிருப்பதும், குளிர்ச்சியான பெரிய மாளிகைகளில் நறுமணம் வீசிக் கொண்டிருப்பதும், மேருமலை போன்று கம்பீரமாக விளங்குகின்றவைகளும், சுவர்களில் சுவர்ண சித்திர வேலைப்பாடுகள் உடையதுமான அரண்மனைகளில் உறங்கி, பாட்டு–வாத்திய ஒலிகளாலும், ஆபரணங்களின் ஒலியாலும், மிருதங்கங்களின் இனிய ஒலியினாலும் நாள்தோறும் துயிலெழச் செய்யப்படுபவரும், பற்பல துதி பாடகர்கள் – வம்ச பரம்பரையைப் போற்றுவோர், காலத்திற்கேற்ற பாடல்களை இசைப்போர் – ஆகியோரின் இசையைக் கேட்டுக் கண்விழிக்கும் அவர் வெறும் தரையில் படுத்துத் தூங்கும்படி ஆயிற்றே! (5–9)

உலகில் இது நம்பக்கூடியதாக இல்லை; இது உண்மையாக நடந்தது என்று தோன்றவில்லை; என் மனம் தடுமாறுகிறது; இது வெறுங்கனவு என்று எண்ணுகிறேன். தசரத குமாரரான இராமன், இப்படி வெறும் தரையில் படுக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது என்றால், விதியைக் காட்டிலும் தெய்வசக்தி அதிக பலம் வாய்ந்தது அல்ல என்பது நிச்சயம். தசரதருடைய நாட்டுப்பெண்ணும், விதேக மன்னருடைய புதல்வியும், இனிய தோற்றமும் உடைய சீதை வெறுந்தரையில் படுத்துக் கொண்டார்! அட! (10–12)

இது என் சகோதரரின் படுக்கை! கடினமாகத் தரையில் பரப்பப்பட்ட புற்களில் அவர் உடல் அழுந்திய அடையாளம் தெரிகிறது. மங்களமான லட்சணங்கள் கொண்ட சீதாதேவி அணிகலன்களை அணிந்துகொண்டே படுத்திருப்பார் என்று எண்ணுகிறேன். ஏனென்றால், இவ்விடத்தில் ஆங்காங்கே சுவர்ணத் துகள்கள் காணப்படுகின்றன. இந்த இடத்தில் சீதாப்பிராட்டியார் தன் மேலாடையை விரித்துப் படுத்திருக்கிறார். அதனால்தான் வெண்பட்டு இழைகள் இங்கே படிந்து ஒளி வீசுகின்றன. (13–15)

கணவருடைய படுக்கை சுகமாக அமைக்கப்பட்டிருக்கிறதோ அல்லது கடினமாக இருக்கிறதோ, அதுவேதான் பதிவிரதைக்குச் சுகம் தருவதாக அமைகிறது என்று எண்ணுகிறேன். யௌவனப் பருவத்தில் இருப்பவரும், கோமளமான சரீரம் உடையவரும், கடுமையான தவத்தில் ஈடுபட்டிருப்பவருமான மைதிலி, அதனால் (இந்தக் கரடுமுரடான தரையில் படுப்பதில்) கஷ்டத்தை அனுபவித்திருக்கமாட்டார். அந்தோ! நான் செத்தேன்! நான் மிகவும் இழிந்தவன்! என்னாலன்றோ பத்தினியோடு ஸ்ரீராமன் எந்த ஆதரவும் இல்லாதவரைப் போல, இவ்வளவு சாமானியமான படுக்கையில் படுக்க நேரிட்டிருக்கிறது? (16,17)

உலகனைத்தையும் ஆட்சி செய்யும் பரம்பரையில் தோன்றியவர்; எல்லா உலகத்தினருக்கும் சௌக்கியத்தைக் கொடுப்பவர்; எல்லா மக்களாலும் பெரிதும் விரும்பப்படுபவர்; நீலோத்பல மலர் போன்ற திருமேனிப் பாங்கு உடையவர்; செவ்வரியோடிய திருக்கண்களை உடையவர்; அன்பு ததும்பும் இனிய காட்சியினர்; எல்லாச் சுகங்களையும் அனுபவிக்கத்தக்கவர்; துக்கங்களை அனுபவிக்க வேண்டாதவர் – இப்படிப்பட்ட ஸ்ரீராமன், உத்தமமான சுக–சௌக்கியங்களை அளிக்கவல்ல நாட்டைத் துறந்து, இந்தத் தரையில் எவ்வாறுதான் படுத்துக் கொண்டாரோ? (18,19)

நற்குணங்கள் கொண்ட லட்சுமணன், தமையனார் ஸ்ரீராமனுடைய கஷ்ட காலத்தில் பக்கத்திலிருந்து தொண்டு செய்கிறான். அவன்தான் புண்ணியாத்மா! எல்லோராலும் கொண்டாடத்தக்கவன்! கணவரைப் பின்தொடர்ந்து காட்டிற்கு வந்துள்ள வைதேகி தேவியார், பிறவிப் பயனைப் பெற்றுவிட்டார். அந்த மகாத்மாவிடமிருந்து பிரிந்திருக்கிற நாம் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். (நாம் சென்று அழைத்தால் இராமன் ஏற்றுக் கொள்வாரோ, மாட்டாரோ? என்று சந்தேகப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.) (20,21)

தசரதர் தேவலோகம் போய்விட்டார். இராமனோ காட்டில் வசிக்கத் தொடங்கிவிட்டார். எனவே, படகோட்டி இல்லாத படகு போல இவ்வுலகம் பாழடைந்துவிட்டதாக எனக்குத் தோன்றுகிறது. காட்டில் வசித்துக் கொண்டிருந்தாலும், உலகத்தையே காப்பாற்றிக் கொண்டிருக்கும் அவருடைய புஜபலத்தை எண்ணிப் பார்த்து, எந்த ஒருவனும் (கோசல) நாட்டைக் கைப்பற்ற வேண்டும் என்று மனத்தாலும்கூட எண்ணிப் பார்க்கவில்லை. (22,23)

கோட்டையில் காவல் இல்லை; யானை–குதிரைகள் கட்டப்படவில்லை; கோட்டை நுழைவாயில் மூடப்படவில்லை, காக்கப்படவுமில்லை; சேனாவீரர்கள் உற்சாகத்தை இழந்திருக்கிறார்கள்; நகரம் களையிழந்து போயிருக்கிறது; ரோந்துக்காரர்கள் செயல்படாததால் கட்டுக்காவல் எல்லைகள் இல்லை; நிலைமை மாறி அமைதியற்று இருக்கிறது. நாட்டின் தலைநகர் இப்படி சீரழிந்திருந்த போதிலும், விஷம் கலந்த உணவிற்கு எவரும் ஆசைப்படாததைப் போல எதிரிகள் அஞ்சி ஒதுங்குகிறார்கள். (24,25)

இன்று முதல், நான் தரையில் அல்லது புற்படுக்கையில்தான் படுக்கப் போகிறேன். தினமும் பழங்களையும் கிழங்குகளையும் புசிப்பேன்; சடைமுடி பூண்டு, மரவுரி தரித்துக் கொள்வேன். மீதியுள்ள வனவாச காலம் முடியும் வரை, நானே காட்டில் சுகமாக வசிப்பேன். அப்படிச் செய்தால் இராமன் கொடுத்த வாக்கு பொய்யாகப் போய்விட்டதாகாது. சகோதரனுக்காகக் காட்டில் வசிக்கும் என்னுடன் சேர்ந்து சத்ருக்னன் இருப்பான். மகாபுருஷராகிய இராமன், லட்சுமணனுடன் அயோத்தியைப் பரிபாலிப்பார். (26–28)

அயோத்தியில் அந்தணோத்தமர்களும், அரச மரபினரும், வணிக மரபினரும் கூடி, காகுத்த வம்சத்திலகமான இராமனுக்கு முடிசூட்டுவார்கள். ஆ! என்னுடைய இந்த விருப்பத்தைத் தெய்வங்கள் நிறைவேற்றி வைப்பார்களா? நான் தலைவணங்கி, பலவித உபாயங்களால் வேண்டிக் கொள்வேன். அவர் என் வேண்டுகோளை ஏற்காவிட்டால், காட்டில் வசிக்கும் ஸ்ரீராமனுடன் நீண்டகாலம் நானும் அங்கேயே வசிப்பேன். அவர் என்னை மறுக்கமாட்டார்.'' (29,30)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
எண்பத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எண்பத்தொன்பது

கங்கையைக் கடந்து செல்லுதல்

ரகுகுலத் தோன்றலாகிய பரதன், கங்கையின் கரையிலேயே அந்த இரவைக் கழித்து, விடியற்காலையில் எழுந்து சத்ருக்னனைப் பார்த்துப் பின்வருமாறு கூறினான்— ''சத்ருக்னா! இன்னும் ஏன் தூங்கிக் கொண்டிருக்கிறாய்? எழுந்திராய். உனக்கு நலன் உண்டாகுக. வேடர் தலைவனான குகனை உடனே அழைத்து வா. அவன்தான் நம் சேனையை அக்கரை கொண்டுபோய் சேர்ப்பிக்க வல்லவன்.'' சகோதரரால் எழுப்பப்பட்ட சத்ருக்னன், ''நான் விழித்துக் கொண்டுதான் இருக்கிறேன்; மாமனிதராகிய அவரையே நினைத்துக் கொண்டிருந்தேன்; நான் தூங்கவில்லை'' என்று பதில் சொன்னான். (1–3)

இவ்வாறு மனித உருவெடுத்த சிங்கங்கள் போன்ற அவ்விருவரும் பேசிக் கொண்டிருக்கும் போதே, உரிய நேரத்தில் அவ்விடம் வந்து சேர்ந்த குகன், இரு கைகளையும் கூப்பிக்கொண்டு பரதனை நோக்கிக் கூறினான்— ''காகுத்தரே! நதிக்கரையில் இரவை நன்றாகக் கழித்தீர்களா? தாங்களும், தங்கள் சைன்னியமும் நலமுடன் இருக்கிறீர்களா?'' மிக்க அன்புடன் குகன் கேட்டதற்கு இராமபிரானின் தொண்டரான பரதன் பின்வருமாறு சொன்னான்— ''மன்னனே!

இரவு எங்களுக்குச் சுகமாக இருந்தது. உன்னால் நாங்கள் சிறப்பாக உபசரிக்கப்பட்டோம். செம்படவர்கள், பற்பல மரக்கலங்களைக் கொண்டு, எங்கள் அனைவரையும் கங்கையின் அக்கரைக்குக் கொண்டுபோய் சேர்க்கட்டும்.'' (4–7)

துரிதப்படுத்தும் பரதனுடைய கட்டளையைக் கேட்டவுடன், குகன், தன் நகரத்திற்குத் திரும்பி வந்து சுற்றத்தார்களைப் பார்த்துக் கூறினான்— ''எழுந்திருங்கள்; கண்விழித்துக் கொள்ளுங்கள்; படகுகளை இழுத்துக் கொண்டு படகுத் துறைக்கு வாருங்கள். உங்கள் எல்லோருக்கும் புகழ் உண்டாகட்டும். சேனையை நதியின் அக்கரைக்குக் கொண்டு சேர்க்க வேண்டும்.'' இவ்வாறு கூறப்பட்டவுடன், அவர்கள் உடனே எழுந்து மன்னரின் கட்டளைப்படி, விரைவாகச் சென்று நதியின் பல துறைகளிலிருந்தும் ஐந்நூறு படகுகளைக் கொண்டு வந்தார்கள். (8–10)

ஸ்வஸ்திகம் என்று சிறப்புப் பெயர் கொண்ட உயர்ந்த மரக்கலங்களில் பெரிய மணிகள் தொங்கவிடப்பட்டிருந்தன; கொடிகள் மிக உறுதியாக அமைக்கப்பட்டு அழகாக விளங்கிய அவைகளை நிபுணர்களான படகோட்டிகள் செலுத்தினார்கள். அவைகளில் ஸ்வஸ்திகம் எனப் பெயரிடப்பட்டிருந்த மங்கலம் பொருந்திய ஒரு படகை குகன் கொண்டு வந்தான். மங்களமான இசைகள் ஒலிக்கும் அதில் வெண்மையான கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. பெரும்புகழ் கொண்ட பரத–சத்ருக்னர்கள் மற்றும் கௌசல்யை–சுமித்திரையுடன் அரச பத்தினிகள் சிலர் அதில் ஏறிக் கொண்டார்கள். (11–13)

அவர்களுக்கு முன்னதாக புரோகிதர்களும் ஆசார்யர்களும் மற்றுமுள்ள அந்தணர்களும் ஏறிக் கொண்டார்கள். பிறகு, மற்ற அரசபத்தினிகள், பின் மாட்டுவண்டிகள், பலசரக்குகள் (ஏற்றப்பட்டன.) (சேனை, ஓர் இடத்தில் தங்கிவிட்டு அவ்விடத்திலிருந்து புறப்பட்டுச் செல்லும்போது, உபயோகமில்லாத அற்பப் பொருட்களை அவ்விடத்திலேயே தீயிட்டுக் கொளுத்துவது ஒரு மரபு. அதன்படி,) தங்கியிருந்த இடத்திலிருந்த பொருள்களைத் தீயிட்டுக் கொளுத்துபவர்கள், நீரில் மூழ்கி கும்மாளமடிப்பவர்கள், தத்தம் சாமான்களைத் தேடிப் பிடித்து எடுத்துச் செல்பவர்கள் ஆகியோர் எழுப்பிய பெரும் சப்தம் ஆகாயத்தைத் தொட்டது. (14,15)

அந்தப் படகுகளில் கொடிகள் கட்டப்பட்டிருந்தன. விரைவில் செல்லக்கூடிய அவைகளை செம்படவர்களே ஓட்டினார்கள். ஏறிய மக்களைச் சுமந்து கொண்டு அவைகள் செல்லத் தொடங்கின. சில படகுகளில் மாதர்கள் நிரம்பியிருந்தார்கள்; சிலவற்றில் குதிரைகளும் மற்றும் சிலவற்றில் வாகனங்களும், அவற்றை இழுத்துச் செல்லும் காளை போன்றவைகளும், ஏராளமான செல்வங்களும் ஏற்றப்பட்டன. படகுகள் நதியின் அக்கரையை அடைந்து, அந்த மக்களை இறக்கியபின் திரும்பியபோது படகோட்டிகளான செம்படவர்கள், பலவித விசித்திரமான போக்குகளைக் காட்டினார்கள். (16–18)

அம்பாரி கட்டிய யானைகள் பாகர்களால் செலுத்தப்பட்டு, வெள்ளத்தில் நீந்திச் சென்ற காட்சி, கொடி கட்டிய மலைச்சிகரங்கள் அசைந்து செல்வதுபோல் இருந்தது. சிலர், படகுகளில் ஏறிக்கொண்டார்கள்; சிலர், தெப்பங்கள் மூலம் கடந்து சென்றார்கள்; சிலர், குறுகிய வாயையுடைய பானைகளைத் தழுவியபடி மிதந்து சென்றார்கள்; சிலர், கைகளால் நீந்திச் சென்றார்கள். செம்படவர்களின் பேருதவியால் கங்கையைக் கடந்து சென்ற அந்த சேனை, மைத்ரம் என்ற நல்ல பொழுதில், உத்தமமான பிரயாக வனத்தை நோக்கிச் சென்றது. (19–21)

மகாத்மாவான பரதன், படையினரை உற்சாகப்படுத்தி, இனிய மொழிகள் கூறி, அங்கேயே தங்கும்படிக் கட்டளை பிறப்பித்துவிட்டு, முனிவர்களில் மிகச்சிறந்தவரான பரத்வாஜரைத் தரிசிப்பதற்காக, புரோகித–ஆசார்யர்கள் புடைசூழப் புறப்பட்டுச் சென்றான். தேவ புரோகிதரும் மகாத்மாவும் பிரும்மஞானம் பெற்றவருமான பரத்வாஜருடைய ஆசிரம வளாகத்தில் மரங்களால்

சூழப்பட்ட அழகிய குடில்களையும், அந்தணோத்தமருடைய அந்தப் பிரதேசத்தில் மிகவும் வனப்புடன் விளங்கும் விசாலமான கானகத்தையும் அவன் பார்த்தான். (22,23)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
எண்பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : தொண்ணூறு

பரத்வாஜரின் ஆசிரமத்தில் தங்குதல்

சற்று தொலைவில் பரத்வாஜருடைய ஆசிரமத்தைக் கண்டதும், எல்லா சைன்னியத்தையும் அங்கேயே நிறுத்திவிட்டு, புருஷோத்தமனும் அறம் அறிந்தவனுமான பரதன், தாங்கியிருந்த ஆயுதங்களைக் கழற்றிவிட்டு, வெண்பட்டாடை உடுத்தி, அமைச்சர்களோடு காலால் நடந்து சென்றான். ஆசிரமத்திற்குள் நுழையுமிடத்திலிருந்தே பரத்வாஜரைப் பார்த்ததும், அமைச்சர்களை அங்கேயே நிறுத்திவிட்டு, புரோகிதர் முன்னே செல்ல அவன் பின்தொடர்ந்து சென்றான். மகாதபஸ்வியான பரத்வாஜர், வசிஷ்டரைப் பார்த்ததுமே சீடர்களை நோக்கி, 'அர்க்யம் கொண்டு வாருங்கள்' என்று சொல்லிக் கொண்டே இருக்கையிலிருந்து எழுந்தார். (1–4)

மகாதேஜஸ்வியான அவர், வசிஷ்டரை வரவேற்று அளவளாவும் போது பரதன் அவரை நமஸ்கரித்தான். (வசிஷ்டரோடு வந்திருப்பதால்) அவன், தசரதருடைய புதல்வன் என்று அறிந்து கொண்டார். அறம் அறிந்தவரான பரத்வாஜர், அவ்விருவருக்கும் அர்க்யம், பாத்யம் அளித்து, பின்னர் பழங்கள் கொடுத்து, முறையே அரச குடும்பம், அயோத்தி, சேனை, பொக்கிஷம், நண்பர்கள், அமைச்சர்கள் ஆகியோரின் நலன் பற்றி விசாரித்தார். தசரதர் காலகதி அடைந்து விட்டார் என்பதை அறிந்திருந்ததால், அவரைப் பற்றிய பேச்சை எடுக்கவில்லை. (5–7)

பின்னர், வசிஷ்டரும் பரதனும், அவருடைய உடல்நலம், அக்னி, சீடர் குழாம், (ஆசிரமத்தை அண்டி வாழும்) விலங்கு–பறவை, மரம்–செடிகள் பற்றிக் கேட்டறிந்தார்கள். பெரும் புகழ்கொண்ட பரத்வாஜர், 'அவையெல்லாம் நலமே' என்று பதில் கூறிவிட்டு, இராமனிடமிருந்த அன்புப் பிணைப்பினால், பரதனைப் பார்த்து பின்வருமாறு கூறினார்— (8,9)

"இப்போது நாட்டை ஆண்டு கொண்டிருக்கும் நீ, இங்கே வந்திருப்பதன் நோக்கம் என்ன? அதை எனக்கு விவரமாகக் கூறு. உன் விஷயத்தில் என் மனம் நம்பிக்கையுடன் இல்லை. கோசலாதேவி, எதிரிகளை மாய்ப்பவரும் எல்லோருக்கும் மகிழ்ச்சியைப் பெருக்குபவருமான எவரைப் பெற்றாரோ, பெருங்கீர்த்தி பெற்ற அவர், ஒரு பெண்ணின் வசப்பட்ட உன் தகப்பனாரால், 'பதிநான்கு ஆண்டுகள் வனத்தில் இரு' என்று ஆக்ஞாபிக்கப்பட்டு, தன் மனைவியுடனும், சகோதரனான லட்சுமணனுடனும் நீண்ட காலத்திற்கு நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டார். இலகுவாகக் கிடைத்த ராஜ்யத்தைத் தொடர்ந்து, எவ்வித இடையூறுமில்லாமல் அனுபவிக்கும் ஆசை கொண்டு, குற்றமற்றவரான அவருக்கும், அவருடன் சென்றிருக்கும் தம்பிக்கும் கேடு விளைவிக்க, நீ விரும்பவில்லையே?" (10–13)

இவ்வாறு வினவப்பட்ட பரதன், கண்ணீரால் கலங்கிய கண்களுடன், துக்கம் தாங்காமல் தழுதழுத்த குரலில் பரத்வாஜருக்குப் பதில் கூறினான்— "அச்சோ! என்ன துர்ப்பாக்கியம் எனக்கு! எல்லாம் அறிந்தவரான தாங்களும் என்னைப் பற்றித் தவறாகக் கருதினால், நான் என்ன செய்வேன்? நான், எந்தக் குற்றத்தையும் செய்யவில்லை. தாங்கள், இத்தகைய சந்தேக வெளியீட்டால் என்னைத் தண்டிக்கலாகாது. நான் ஊரில் இல்லாதபோது, என் தாயார் என்ன பேசினாளோ (வரங்கள் கேட்டாளோ), அவைகள் என் விருப்பத்தின்பேரில் அல்ல. நான், அதனால் மனக்களிப்பு அடையவில்லை; அதை ஏற்றுக் கொள்ளவுமில்லை. (14–16)

மானுடச்சிங்கம் போன்ற அவரைப் பிரார்த்தித்து, மனமகிழச் செய்து, அயோத்திக்குத் திருப்பி அழைத்து வருவதற்காகவும், அவருடைய திருவடிகளில் தலைவைத்து வணங்குவதற்காகவும் செல்கிறேன். என்னை (இப்படிப்பட்ட நல்ல நோக்கத்துடன் செல்பவனாக அறிந்து கொண்டு) தாங்கள் அருள்புரிய வேண்டும். பகவானே! மன்னராகிய ஸ்ரீராமன் தற்போது எங்கே தங்கி இருக்கிறார்? அப்போது வசிஷ்டர் முதலிய ஆசார்யர்களாலும், வேள்வியாளர்களான ரித்விக்குகளாலும் (பரதனுடைய தூய எண்ணம் குறித்து உறுதியளித்தபின்னர்) வேண்டிக் கொள்ளப்பட்ட பகவான் பரத்வாஜர், முகமலர்ச்சியடைந்து பரதனை நோக்கிக் கூறினார்— (17–19)

''புருஷோத்தமனே! ரகு மகாராஜாவின் குலத்தில் பிறந்த உனக்கு, இந்த உயர்ந்த எண்ணம்தான் தோன்றும். ஆசார்யர்களிடம் பக்தி, புலனடக்கம், சான்றோர் வழியைப் பின்பற்றுதல் ஆகிய நற்பண்புகள் உனக்கு ஏற்றதே. உன் மனத்திலுள்ளதை நான் அறிவேன்; அது நன்றாக உறுதி பெறட்டும் என்பதற்காகக் கேட்டேன். இதனால், உன்னுடைய கீர்த்தியும் விஸ்தாரமாகப் பரவவேண்டும் என்பதால் அவ்விதம் கேட்டேன். தருமத்தின் திருவுருவாகிய இராமன், சீதை–லட்சுமணர்களுடன் தங்கியிருக்கும் இடத்தை அறிவேன். உன்னுடைய சகோதரன், பெருங்குன்றமான சித்திரகூடத்தில் வசித்துக் கொண்டிருக்கிறார். மகாமேதாவியே! அமைச்சர்களோடுகூட இன்று இங்கேயே தங்கிவிட்டு, நாளைய தினம் அவ்விடத்திற்குச் செல்வாய். பிறர் விருப்பத்தை நிறைவேற்றி வைப்பதில் வல்லவனே! என்னுடைய இந்த விருப்பத்தைப் பூர்த்தி செய்வாய்.'' (20–23)

அப்போது தாராள மனமுடையவனும், இயல்பானவனும், நற்குணங்களைப் பெற்றவனும், மாமன்னரின் புதல்வனுமான பரதன், 'தங்கள் நியமனப்படியே செய்கிறேன்' என்று கூறி, அந்த ஆசிரமத்தில் அந்த இரவு தங்குவதற்கு முடிவு செய்தான். (24)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
தொண்ணூறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : தொண்ணூற்றொன்று

பரத்வாஜர் அளித்த விருந்துபசாரம்

பரதன், அந்த ஆசிரமத்தில் தங்குவதற்கு நிச்சயித்தவுடன், பரத்வாஜ முனிவர் அவனைத் தனது விருந்தினனாக இருக்கும்படிக் கேட்டுக் கொண்டார். 'காட்டில் கிடைக்கக் கூடிய பொருட்களைக் கொண்டும், பாத்யம்–அர்க்யம் அளித்தும் தாங்கள் நன்றாக உபசரித்திருக்கிறீர்கள்' என்று பரதன் சொன்னான். (1,2)

இதைக் கேட்டதும், சற்றே இளநகை புரிந்தாற்போல பரத்வாஜர் கூறினார்— ''என்னிடத்தில் பேரன்பு கொண்டிருப்பவன், நீ. அதனால், ஒரு சிறு உபசாரத்தாலும் நீ மனமகிழ்வாய் என்பது எனக்குத் தெரியும். மக்கள் தலைவனே! உன்னுடைய சேனைகளுக்கு உணவளிக்க விரும்புகிறேன். நான் அப்படிச் செய்தால் என் மனம் மகிழ்வுறும். என் மனம் மகிழும்படியான காரியத்தை, நீ செய்ய வேண்டும். (என் விருப்பப்படி, உன் சேனைகளுக்கு உணவு அளிப்பதற்கு, நீ இசைவு தெரிவிக்க வேண்டும்.) ஆண்களில் காளை போன்றவனே! படைவீரர்களைத் தொலைவில் நிறுத்திவிட்டு, ஏன் இங்கே வந்தாய்? ஏன், படையினரை இங்கே அழைத்துக் கொண்டு வரவில்லை?'' (3–5)

தவச்செல்வரான அவரைப் பார்த்து இரு கைகளையும் கூப்பிக் கொண்டு பரதன் பதில் கூறினான்— ''பகவானே! தங்களிடம் நான் கொண்டிருக்கும் பக்தியின் காரணமாகவே சைன்னியங்களை அழைத்துக் கொண்டு வரவில்லை. பகவானே! அரசனும் அரசகுமாரனும் தவம்

செய்பவர்களின் நித்திய நடைமுறைகளில் குறுக்கிடாவண்ணம் எப்போதும் மிகுந்த கவனத்துடன் விலகியே இருக்கவேண்டும். தரம் மிக்க குதிரைகள், பல்வகை மனிதர்கள், மதங்கொண்ட பெரும் யானைகள் முதலியன பெரும் நிலப்பகுதியை மறைத்துக் கொண்டு என்னைப் பின்தொடர்கின்றன. மாமுனிவரே! அவைகள் ஆசிரம வளாகத்திலுள்ள மரங்கள், நீர்நிலைகள், (ஜப–தியான) மேடைகள் மற்றும் குடில்களை அழித்துவிடக் கூடாதே? என்பதால்தான், நான் மட்டும் தனியாக வந்தேன்.'' (6–9)

'படைகளை இங்கே கொண்டு வருவாயாக' என்று மாமுனிவர் உத்தரவிட்டதும், பரதன் சேனைகளை அவ்வாறே அவ்விடம் தருவித்தான். அப்போது, பரத்வாஜர் வேள்விச்சாலைக்குள் சென்று, ஆசமனம் செய்து, உடல் அங்கங்களை நீரினால் தொட்டு, விருந்துபசாரம் செய்வதற்காக விசுவகர்மாவை (உரிய மந்திரங்களைக் கூறி) அழைத்தார். நான் (பரதனுக்கும், அவனுடைய சேனைகளுக்கும் தகுந்த முறையில்) விருந்து உபசாரம் செய்ய விரும்புகிறேன். (அந்தக் காரியம் நிறைவேறுவதில் எனக்கு உதவி செய்யும் பொருட்டு) தேவசிற்பியான விசுவகர்மா த்வஷ்டாவை அழைக்கிறேன். (அவர், உடனே வந்து தேவையான ஏற்பாடுகளைச் செய்வாராக.) (10–12)

இந்திரனை முதன்மையாகக் கொண்ட உலக ரட்சகர்கள் (மற்ற) மூவரையும் (யமன், வருணன், குபேரன்) அழைக்கிறேன். நான் அளிக்க விரும்பும் விருந்தினர் உபசாரத்திற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் அவர்கள் செய்வார்களாக. மண்ணுலகிலும் ஆகாயத்திலும், கிழக்கு நோக்கியும் மேற்கு நோக்கியும் பாய்கின்ற நதிகள் அனைத்தையும், இப்போது நான் இவ்விடத்திற்கு வரும்படி அழைக்கிறேன். சில நதிகள் மைரேயம் (பழரசம்) என்னும் பானத்தையும் மற்றும் சில நதிகள் சுரா என்ற பானத்தையும், வேறு சில நதிகள் கருப்பஞ்சாற்றுக்கு இணையான இனிப்புள்ள நல்ல நீரையும் பெருகவிடட்டும். (13–15)

தேவ–கந்தர்வர்களான விசுவாவசு, ஹாஹா, ஹூஹூ முதலியோரையும், அவ்வாறே அப்சரசுகளையும், தேவ–கந்தர்வ நாரீமணிகளையும் அழைக்கிறேன். க்ருதாசி, விஸ்வாசீ, மிஸ்ரகேசி, அலம்புஸா, நாகதந்தா, ஹேமா, மலையில் வாழும் ஹேமா மற்றும் இந்திரனுக்கும் பிரும்மாவுக்கும் தொண்டு செய்யும் தேவமகளிரையும், தும்புருவோடு கூடிய (கலை வல்லுநர்களான) எல்லா நிருத்த–நாட்டிய–சங்கீத கலாவாணிகளையும் தத்தம் இசைக் கருவிகளோடு வரும்படி அழைக்கிறேன். (16–18)

உத்தரகுரு என்ற நாட்டிலுள்ள குபேரனுடைய நந்தவனத்தில் உள்ள மரங்களின் இலைகளாக உயர்வகை அணிகலன்களும் ஆடைகளும் எப்போதும் விளங்குகின்றன; மரத்தின் பழங்களாக அழகுமிக்கப் பெண்கள் விளங்குகிறார்கள். அந்தக் குபேரவனம் இப்போது இங்கே வரக்கடவது. பகவான் சோமன், பலவகையான தரம் மிகுந்த உணவு வகைகளையும், பற்களால் கடித்து உண்ணத் தக்கவைகளையும், அருந்தத் தக்கவைகளையும், நக்கியும் உறிஞ்சியும் சாப்பிடத் தக்கவைகளையும், அற்புதமான மலர்மாலைகளையும், மரங்களிலிருந்து உதிர்ந்த மலர்களையும், சுரா முதலான பானங்களையும், பல்வகைப் பழ வகைகளையும் ஏராளமாக அளிப்பானாக.'' (19–21)

இவ்வாறு, மிகக் கடுமையான விரதங்களை அனுஷ்டிப்பவரும், இணையற்ற ஆன்மிக ஆற்றல் படைத்தவருமான முனிவர், வேதாங்கங்களான சிக்ஷை–வியாகரணம் ஆகியவற்றில் கூறியபடிச் சரியான ஸ்வரத்தில் எல்லோரையும் அழைத்தார். (வேத மந்திரங்களுக்கு ஸ்வரம் மிகவும் முக்கியம்; உரிய ஸ்வரத்துடன் உச்சரித்தால்தான் கோரிய பலன் கிடைக்கும்.) கிழக்கு நோக்கி நின்று இரு கைகளையும் கூப்பிக் கொண்டு, மேலே சொன்னவாறு மனத்தால் தியானம் செய்தவுடனேயே, அவர் அழைத்த அத்தனை தேவ–கந்தர்வ–அப்சர–திக்பாலர்களும் மற்றவர்களும் ஒவ்வொருவராக வந்து சேர்ந்தார்கள். (22,23)

அப்போது வியர்வையைப் போக்கும் காற்று, மலயம் மற்றும் தார்துரம் என்னும் மலைகளைத் தழுவிக்கொண்டு (அந்த மலைகளிலிருந்து புறப்பட்டு) மிகவும் ஆனந்தத்தை அளிக்கக் கூடிய அளவில் சுகமாக வீசியது. அப்போது தெய்விகமான மலர்கள் தொடர்ந்து மழையாகப் பொழிந்தன. எல்லாத் திசைகளிலும் தேவலோக நகராக்களின் பேரொலி கேட்டது. உடலுக்கு இன்பம் தரும் தூய காற்று ஏராளமாக வீசியது; அப்சரப் பெண்டிர் கூட்டங்கூட்டமாக நடனம் ஆடினார்கள்; தேவ கந்தர்வர்கள் நல்லிசை வழங்கினார்கள்; வீணைகளின் இனிய ஒலி எங்கும் பரவியது. (24–26)

அப்போது ஏற்பட்ட இசைகளின் பேரொலி தாளக்கட்டுடன் கூடியதாக ஆகாயத்திலும் பூமியிலும் இருந்த எல்லாப் பிராணிகளின் செவிகளிலும் புகுந்தது. மனிதர்களின் செவிகளுக்கு இன்பத்தை அளித்த அந்த இசையொலி (சற்று நேரத்திற்குப் பின்) நின்றவுடன் பரதனுடைய பெருஞ்சேனை விசுவகர்மாவின் மகத்தான வேலைத்திறனைக் கண்டது. மேடும்–பள்ளமுமாக இருந்த அந்தக் காட்டுப் பிரதேசம் ஐந்து யோஜனை தூரத்திற்கு நாற்புறங்களிலும் சமதரையாகக் காணப்பட்டது. நீலம்–வைடூர்யம் போன்ற மணிகளின் நிறத்தில் இளம்புற்கற்றைகளால் அந்தச் சமவெளி முழுவதும் மறைக்கப்பட்டாற்போல் ஆகியிருந்தது. (27–29)

அந்தப் பிரதேசத்தில் வில்வம்–விளா–பலா–கொய்யா–மாதுளை–நெல்லி–மா ஆகிய மரங்கள் ஏராளமான பழங்களுடன் விளங்கின. உத்தரகுருவர்ஷம் என்னும் நிலப்பகுதியில் இருந்த எல்லாவிதச் சுக–சௌக்கியங்களையும் அளிக்கக்கூடிய சைத்ரரதம் என்னும் அற்புத நந்தவனம் அங்கே (பரத்வாஜ ஆசிரமத்திற்கு) வந்தது. கரையோரங்களில் வளரும் பலவிதமான மரங்களுடன் கூடிய தெய்விக நதிகளும் அங்கே வந்தன. நல்ல வெளிச்சத்துடன் கூடிய சச்சதுரமான வீடுகள், யானை–குதிரைகளைக் கட்டுவதற்கான தொழுவங்கள், அழகான ஏழடுக்கு மாளிகைகள், கூடகோபுரங்கள், தோரணவாயில்கள் காணப்பட்டன. (30–32)

மணம் வீசும் நீர் தெளிக்கப்பட்டு, வெண்மையான மலர்மாலைகளால் அலங்கரிக்கப்பட்டு, அரச குடும்பத்தினர் தங்குவதற்கென்றே விசாலமான நுழைவாயிலைக் கொண்ட வெண்முகில் நிகர் மாளிகை; வெகு நீள–அகலமான சதுரமான அறைகள்; உறங்குவதற்கும் உட்காருவதற்கும் வாகனங்களை நிறுத்துவதற்கும் தனித்தனி இடங்கள்; எல்லாவிதமான சுவைகள் பொருந்திய இனிய உணவு வகைகள், ஆடைவகைகள்; எல்லா வகையான அன்னப்பக்குவங்கள்; பளீரென்று தூய்மையாக விளங்கும் பாத்திரங்கள்; இவ்வாறு சித்தமாக வைக்கப்பட்ட ஆசனங்கள், நல்ல மேல்விரிப்புக்களை உடைய படுக்கைகள் முதலிய செல்வச் செழிப்புடன் இரத்தினங்கள் இழைக்கப்பட்ட அந்தத் திருமாளிகைக்குள் மாமுனிவரின் கட்டளைப்படி, பெருந்தோளனும் கைகேயியின் மைந்தனுமான பரதன் நுழைந்தான். (33–36)

அவனைத் தொடர்ந்து அமைச்சர்களும் புரோகிதர்களும் உள்ளே சென்றார்கள். அந்தத் திருமாளிகையின் அற்புதமான அமைப்பைக் கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். அவ்விடத்தில் காணப்பட்ட அரியாசனத்தையும், திவ்யமான சாமரத்தையும், வெண்கொற்றக் குடையையும் (மன்னரான இராமபிரானே அங்கே வீற்றிருப்பதாகக் கருதி,) அமைச்சர்களுடன் கூடிய பரதன், அரசர்போல எண்ணி வழிபட்டான். பின், இராமபிரானை மனத்தால் எண்ணி வணங்கி சிம்மாசனத்திற்குத் தலைவணங்கினான். பின்னர், கையில் வெண்சாமரத்தைத் தாங்கிக் கொண்டு, அமைச்சர்களுக்கான இருக்கை ஒன்றில் அமர்ந்து கொண்டான். (37–39)

அதன் பின்னர் எல்லா அமைச்சர்களும் புரோகிதர்களும், தத்தம் அதிகாரத்திற்கும் தகுதிக்கும் ஏற்ற முறைப்படி ஆசனங்களில் அமர்ந்து கொண்டார்கள். பின், படைத்தலைவரும் பாசறை அமைப்புப் பொறுப்பாளரும் அமர்ந்தார்கள். பின்னர், ஒரு முகூர்த்த காலத்திற்குள் பரத்வாஜ முனிவரின் ஆணைப்படி, பாயசம் பெருகிப் பாயும் நதிகள், பரதனின் (அவனுடைய படைவீரர்கள் மற்றும் உடன் வந்தோர்களின்) உபயோகத்திற்காக அருகில் ஓடின. அந்தணப் பெருந்தகையின்

மகிமையால், நதியின் இரு கரைகளிலும் பளிச்சென்று சுண்ணாம்புக் கலவையால் கட்டப்பட்ட கவின்மிகு வாசஸ்தலங்கள் தோன்றியிருந்தன. (40–42)

அதே வேளையில், பிரும்மாவினால் அனுப்பப்பட்டவர்களும், விலையுயர்ந்த அணிகலன்கள் அணிந்தவர்களுமான இருபதினாயிரம் நாரீமணிகள் அவ்விடம் வந்து சேர்ந்தார்கள். குபேரனால் அனுப்பப்பட்ட இருபதினாயிரம் நங்கையர், தங்கம்–இரத்தினம்–முத்து–பவழங்களால் அலங்கரிக்கப் பட்டவர்களாக வந்து சேர்ந்தார்கள். எந்தப் பெண்களால் பார்க்கப்பட்ட ஆண்மகன் சித்தம் கலங்கியவன் போல் காணப்படுவானோ, அத்தனை பேரழகு வாய்ந்த இருபதினாயிரம் அப்சரப் பெண்டிர் தேவலோகத்துப் பூஞ்சோலையான நந்தவனத்திலிருந்து வந்து சேர்ந்தார்கள். (43–45)

சூரியனுடைய செங்கதிர் போல் ஒளிவீசும் நாரதர், தும்புரு, கோபர் ஆகிய கந்தர்வ முக்கியஸ்தர்கள், பரதன் முன்னால் வந்து இசை பாடத் தொடங்கினார்கள். அலம்புஸா, மிஸ்ரகேசி, புண்டரீகா, வாமனா (என்னும் அப்சர நர்த்தகிகள்) பரத்வாஜருடைய ஆணைக்கிணங்க, பரதன் முன்னிலையில் நடனம் ஆடினார்கள். தேவர்களுடைய பூந்தோட்டங்களில் உள்ள மலர்களும், குபேரனுடைய சைத்ரரதம் என்னும் பூங்காவில் காணப்படும் அதிக சிறப்பான மலர்மாலைகளும், பரத்வாஜருடைய எல்லையற்ற மகிமையால் பிரயாகையில் காணப்பட்டன. (46–48)

பரத்வாஜருடைய தவத்தின் ஆற்றலால் அவ்விடத்திலிருந்த வில்வமரங்கள் மிருதங்கம் வாசித்தன; விபீதக (தானிக்காய்) மரங்கள் சம்யம் என்னும் தாள வகையைப் போட்டன; அரச மரங்கள் நடனக்காரர்கள் ஆயின. அப்போது, தேவதாரு–பனை–திலகம்–தமாலம் ஆகிய மரங்கள் மிக்க மகிழ்ச்சியுடன் கூனர்–குள்ளர்களாக மாறினார்கள். சிம்சுபா, நெல்லி, நாவல் முதலியவைகளும், காட்டுக் கொடிகள் பிறவும் பெண்ணுருவம் ஏற்று, பரத்வாஜர் ஆசிரமத்தில் (பரதனுக்குக் குற்றேவல் செய்வதற்காக) வந்திருக்கத் தொடங்கினார்கள். (49–51)

''மதுபான வேட்கையுடையவர்களே! மிகவும் பசியோடு இருப்பவர்களே! உங்களுக்கு வேண்டிய அளவு மதுவையும் பாயசத்தையும் பருகுங்கள்; நன்றாகப் பழுத்தப் பழங்களை உண்ணுங்கள்'' (என்று, அந்தப் பெண்கள் இனிமையாக வற்புறுத்தினார்கள்). ஒவ்வொரு ஆண்மகனையும் ஏழெட்டு இளம்பெண்கள் சௌகரியமாக அமைக்கப்பட்ட நதிக்கரைகளில் உட்கார வைத்து உடலைப் பிடித்துவிட்டு நீராட்டினார்கள். அழகிய கண்களையுடைய இளம்பெண்கள், விருந்தாளிகளின் கால்களைப் பிடித்து விடுவதற்காக வந்தார்கள்; உத்தமப் பெண்டிர், அவர்களுடைய உடலைத் துடைத்துவிட்டு ஒருவருக்கொருவர் இனிய பானங்களை அளித்தார்கள். (52–54)

விலங்குக் காவலர்கள், குதிரை–யானை–கழுதை–ஒட்டகம்–காளைகளுக்கு உரிய தீனிகளைக் கொடுத்து, அவைகளை உண்ண வைத்தார்கள். இக்ஷ்வாகு பரம்பரையின் ஆற்றல் மிக்க படைவீரர்களை வாகனங்களில் சுமந்து வந்த குதிரை, எருது முதலானவைகளுக்கு, (அவைகளைக் கவனித்துக் கொள்ளும்படி முனிவரால் ஆணையிடப்பட்ட) ஏவலாளர்கள் கரும்புக் கழிகளையும், வெல்லம் கலந்த தவிடு முதலியவைகளையும் கொஞ்சிக் குலாவி உற்சாகப்படுத்தி உண்ண வைத்தார்கள். (55,56)

குதிரைக்காரன் குதிரையைப் பற்றிக் கவலைப்படவில்லை; யானைப்பாகன் யானையைப் பற்றி அக்கறை கொள்ளவில்லை. அந்த இடத்தில் அந்தப் படை மெய்மறந்த ஆனந்தத்தால் மயங்கியிருந்தது. அந்தப் படைவீரர்கள், தங்கள் விருப்பங்கள் எல்லாம் நிறைவேறப்பட்டவர்களாக, அப்சரப் பெண்டிரால் செஞ்சந்தனம் பூசப்படுவது ஆகிய உபசாரங்கள் செய்விக்கப்பட்டவர்களாக, பின்வரும் வார்த்தைகளைப் பேசிக் கொண்டார்கள். (57,58)

'நாம் அயோத்திக்குத் திரும்பிப் போக மாட்டோம்! தண்டகாரண்யத்திற்கும் போக மாட்டோம்!... பரதன் சௌக்கியமாக இருக்கட்டும்! (அவன்தானே நம்மை இங்கே அழைத்து வந்தான்!) இராமனும் நலமாக இருக்கட்டும்! (அவரைக் காண்பதற்காகத்தானே நாம் இங்கே

வந்தோம்!) இவ்விதமாக காலாட்படையினர், குதிரை வீரர்கள், யானைப் படையினர் எல்லோரும், (சகலவித சௌக்கியங்களையும் எல்லையில்லாது அனுபவித்து மதிமயங்கிய நிலையில்) 'தமக்கு யாரும் தலைவர் இல்லை' என்ற அகந்தையில் பேசிக் கொண்டார்கள். பரதனுடன் வந்திருந்த ஆயிரக்கணக்கான மக்கள் அந்த இடத்திலிருந்த குறைவில்லாத சுக சாதனங்களால் மயங்கி, 'இதுதான் சுவர்க்கம்!' என்று மிக மகிழ்ச்சியுடன் ஆர்ப்பரித்தார்கள். (59–61)

மலர்மாலைகளை அணிந்து உல்லாசமாக இருந்த ஆயிரக்கணக்கான படைவீரர்கள், தலைகால் புரியாமல் ஆட்டம் போட்டார்கள்; காரணமில்லாமல் சிரித்தார்கள்; இஷ்டப்படிப் பாடினார்கள்; எல்லாத் திசைகளிலும் தறிகெட்டு ஓடினார்கள். அமிழ்தத்திற்கு ஒப்பான உணவு வகைகளை உண்டுகளித்த அவர்களுக்கு, (சுவை–மணம்–நிறம்–தோற்றம் கொண்ட) பல்வகை சிற்றுண்டிகளைக் கண்ணால் பார்த்ததும், மேலும் மேலும் உண்ண வேண்டும் என்ற பேராசை உண்டாயிற்று. பணியாளர்கள், வேலைக்காரிகள், படையிலிருந்த குற்றேவல் செய்யும் பெண்கள் எல்லோருமே புதிய ஆடைகளைப் பெற்றவர்களாக, முற்றிலும் மனம் மகிழ்ந்தவர்களானார்கள். (62–64)

யானைகள், கோவேறு கழுதைகள், ஒட்டகங்கள், பசுக்கள், குதிரைகள், மற்றுமுள்ள (நாய்கள் போன்ற) விலங்குகள், பறவைகள்கூட எல்லா வகையாலும் நிறைவை அடைந்திருந்தன. வேறு எந்தப் பொருளுக்கும் எவனும் சிறிதுகூட விருப்பம் கொள்ளவில்லை. அந்த இடத்தில் அழுக்கான ஆடை உடுத்தியவன், பசியுள்ளவன், தளர்ந்து போனவன், தூசி படிந்த கேசத்தை உடையவன் என்று எந்தவொரு மனிதனும் காணப்படவில்லை. பலவகையான உணவுகளின் பக்குவங்கள், உயர்ந்த துவையல் வகைகள், இனிப்பான பழரஸங்களின் கலவைகள், நல்ல மணமும் சுவையும் கூடிய குழம்பு, ரஸம், வெண்மையான அன்னம் நிரம்பியனவும், அழகிய மலர் வேலைப்பாடுகளைக் கொண்டவையுமான தங்கப் பாத்திரங்கள் – இவைகளைப் பேராச்சரியத்துடன் கண்டார்கள். (65–68)

அந்த வனத்தை ஒட்டியிருந்த பிரதேசங்களில் இருந்த கிணறுகளில் கெட்டியான பாயசம் நிரம்பி வழிந்தது; அங்கிருந்த சாதாரணப் பசுக்கள் (மக்கள் விரும்புகிறவைகளையெல்லாம் அளிக்கும் சக்தி படைத்த) காமதேனுக்களாக மாறின; மரங்கள் தேனைப் பொழிந்தன. (பரதனுடைய சேனையுடன், காட்டு மனிதர்கள்–வேடர்கள் போன்ற இழிகுலத்தோர் சிலரும் வந்திருந்தார்கள். அவர்கள் மனம் மகிழும் வகையில்) அந்தப் பகுதியிலிருந்த குட்டைகளில் (தண்ணீருக்குப் பதிலாக) மைரேயம் என்னும் பழரசம் நிரம்பியது; உயர்ந்த வகையிலான பலவகை பக்குவங்கள் காணப்பட்டன. (69,70)

ஆயிரக்கணக்கான சமையல் பாத்திரங்கள்; (சாம்பார், ரஸம், மோர், பச்சடி போன்றவைகளை வைக்கப் பொருத்தமான) லட்சக்கணக்கான தூக்குப் பாத்திரங்கள்; கோடிக்கணக்கான தங்கத் தாம்பாளங்கள் காணப்பட்டன. சுவை கூட்டப் பெற்ற தயிர்ப் பாண்டங்கள்; பெரியனவும் சிறியனவுமான மட்பாண்டங்கள்; சில மடுக்களில் விளாம்பழத்தின் இனிய வாசனையுடன் கூடிய, புளிக்காத, வெள்ளைவெளேரென்று பளிச்சிடுகிற தயிர் நிறைந்திருந்தது; மற்றும் சிலவற்றில் இனிப்பான பொருட்கள் சேர்க்கப்பட்ட மோர் இருந்தது; வேறு மடுக்களில் பால் நிறைந்திருந்தது; சர்க்கரைக் குவியல்களும் காணப்பட்டன. (71–73)

மக்கள் நீராடும் நதித்துறைகளில் பல்வகைப் பாத்திரங்களில் வைக்கப்பட்ட நெல்லிமுள்ளிக் கல்கம், உடம்பில் பூசிக் கொள்வதற்கான பூச்சுக்கள், தைலங்கள் முதலியன இருப்பதைக் கண்டார்கள். பல் துலக்குவதற்காக வெண்மையும், கூர்மையுமான மரக்குச்சிகளின் கட்டுகள்; சம்புடங்களில் வைக்கப்பட்ட சந்தனக் குழம்பு; நன்றாகத் துடைத்து வைக்கப்பட்ட நிலைக்கண்ணாடிகள், ஆடைகளின் குவியல்கள்; ஆயிரக்கணக்கான மரப்பாதுகைகள் – செருப்புகளின் ஜோடிகள்; கண்களில் இட்டுக் கொள்ளும் மை வகைகள்; சீப்புகள்; கூந்தலை சிடுக்கு நீக்கும் கேசநீவிகள்; சஸ்திரங்கள்; விற்கள்; உயிர்நிலைகளைக் காக்கும் கவசங்கள்; படுக்கைகள்; அமர்வதற்கான இருக்கைகள்; (74–77)

கோவேறு கழுதை, ஒட்டகம், யானை, குதிரை முதலியன சுகமாக இறங்கி, நீர் குடிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள நிறைவான நீர்நிலைகள்; உத்பலம், தாமரை மலர்கள் விளங்கும் தலைமூழ்கி நீராடக் கூடிய துறைகள்; நீர்நிலைகளில் தண்ணீர் ஆகாயத்தைப் போல் நிர்மலமாக இருந்தது; சுகமாக நீந்தக் கூடியதாகவும் இருந்தது; நான்குகால் பிராணிகளின் உணவுக்காக நீலம், வைடூர்யம் போல் பிரகாசிக்கும் மிருதுவான புல்வெளிகள் அவ்விடத்தில் எங்கும் காணப்பட்டன. அந்த மக்கள் எல்லோரும் பரதனுக்கு மாமுனிவரால் அளிக்கப்பட்ட விருந்துபசாரத்தைக் கண்டு, 'இது என்ன கனவா? ஆகா, என்ன அற்புதம்!' என்று வியப்பில் ஆழ்ந்து போனார்கள். (78–80)

தேவலோக நந்தனவனத்தில் தேவர்கள் மிக இன்பமாகப் பொழுதைக் கழிப்பதைப் போல, பரத்வாஜருடைய அழகிய ஆசிரமத்தில் அவர்களுடைய அந்த இரவு கழிந்தது. (பொழுது விடிந்ததும்) அந்த நதிகள், கந்தர்வர்கள், அழகான பெண்கள் அனைவரும், பரத்வாஜரிடம் அனுமதி பெற்றுக் கொண்டு வந்தபடியே திரும்பிச் சென்றார்கள். (ஆனால்,) அந்த மக்கள் எல்லோரும் மதுபானத்தால் மதிமயங்கியவர்களாகவும், திவ்யமான அகில்–சந்தனக் குழம்பு பூசப்பட்டவர்களாகவும் இருந்தார்கள். அவர்களால் (மதிமயங்கிய நிலையில்) எறியப்பட்ட மலர்மாலைகள் ஆங்காங்கே தனித்தனியாக வாடிக் கிடந்தன. (81–83)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
தொண்ணூற்றோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : தொண்ணூற்று இரண்டு

பரத்வாஜரிடம் விடைபெறுதல்

விருந்தினர்க்குரிய சகல உபசாரங்களையும் மனம் விரும்பியபடித் தன் படைகளோடு பெற்றுக் கொண்டு, அந்த இரவை அவ்விடத்தில் கழித்துவிட்டு, (பொழுது விடிந்ததும்) பரத்வாஜரை நோக்கிச் சென்றான், பரதன். அக்னிஹோத்ரம் முதலான நித்திய கர்மாக்களை முடித்துவிட்டு (குடிலிலிருந்து) வெளியே வந்த பரத்வாஜ முனிவர், கைகளைக் கூப்பிக் கொண்டு எதிரே வந்துகொண்டிருந்த புருஷோத்தமனான பரதனைப் பார்த்துக் கூறினார்— "புண்ணியாத்மாவே! இரவில் இந்த இடத்தில் சுகமாகத் தங்கினாயா? உன்னுடைய பரிவாரங்கள் எல்லாம் விருந்துபசாரங்களால் திருப்தியடைந்தார்களா? இதைப் பற்றி எனக்குச் சொல்." (1–3)

ஆசிரமத்திலிருந்து வெளியே வந்து கொண்டிருந்தவரும், ஆன்மசக்தி மிக்கவருமான முனிவரைக் கண்டதும் தரையில் விழுந்து வணங்கிக் கைகளைக் கூப்பிக்கொண்டு பரதன் சொன்னான்— "தொழுந்தகையீர்! எல்லாப் படைவீரர்கள்–அமைச்சர்கள்–வாகனங்களுடன் சுகமாகத் தங்கினேன். பகவானே! தங்களால் எங்களுடைய எல்லா வகையான (சுக–சௌக்கிய) விருப்பங்களும் நிறைவேற்றப்பட்டன. கீழ்நிலைப் பணியாளர்களிலிருந்து எல்லோரும் தளர்ச்சியும் உடல்வலியும் நீங்கியவர்களாக, நல்ல உணவை வயிறார உண்டவர்களாக, நன்றாக உபசரிக்கப்பட்டவர்களாகச் சுகமாகப் பொழுதைக் கழித்தார்கள். (4–6)

பெருந்தகையீர்! முனிவர் திலகமே! தமையன் இருக்குமிடத்திற்குச் செல்ல, தங்களிடம் அனுமதிகோரி வந்திருக்கிறேன். அருள் நிறைந்த பார்வையால் தாங்கள் கடாட்சிக்க வேண்டும். அறம் அறிந்த வள்ளலே! அறம் அறிந்தவரும், பேரருளாளருமான அவருடைய ஆசிரமம் பற்றி விவரமாகக் கூறவேண்டும். அவ்விடம் செல்லும் வழி எது? இங்கிருந்து எவ்வளவு தொலைவு? என்பதையும் அடியேனுக்குச் சொல்லவேண்டும்." மகாதேஜஸ்வியும் பெரும் தவசியுமான பரத்வாஜர், தமையனாரைக் காண்பதற்குத் தவித்துக் கொண்டிருக்கும் பரதன் மேற்கண்டவாறு கேட்டதும், அவனுக்குப் பதில் சொன்னார்— (7–9)

''பரதா! இங்கிருந்து இரண்டரை யோஜனை தூரத்தில் மக்கள் நடமாட்டமில்லாத இடத்தில் அழகான நீரருவிகளும், காட்டுப் பிரதேசமும் சூழ்ந்த சித்திரகூடம் என்ற மலை இருக்கிறது. அதன் வடக்குப் பகுதியில் மலர்கள் நிறைந்த மரங்களால் மறைக்கப்பட்டதும், மனங்கவர் பூஞ்சோலைகளை உடையதுமான மந்தாகினி நதி இருக்கிறது. பிள்ளாய்! அந்த ஆற்றின் கரையை ஒட்டி சித்திரகூட மலை இருக்கிறது. அவ்விடத்தில்தான் அவ்விருவரும் (இராம–லட்சுமணர்கள்) தங்கியிருக்கிறார்கள் என்பது நிச்சயம். படைகளுக்குத் தலைவனே! யானை–குதிரை–தேர்கள் கொண்ட சேனையைத் தெற்கு வழியே நடத்திச் சென்று, (பின் பாதை பிரியுமிடத்தில்) தென்மேற்கு நோக்கிச் செலுத்து. பெரும் புகழுக்குரியவனே! அந்த வழியில் செல்லும்போது இராகவனைக் காண்பாய்.'' (10–13)

(மறைவாக) வாகனங்களில் அமர்ந்திருந்த மாமன்னரின் மனைவிமார்கள் அவ்விடத்திலிருந்து புறப்பட்டுச் செல்ல வேண்டும் என்பதைக் கேட்டதும், வாகனங்களில் இருந்து இறங்கி, பிரும்மரிஷியின் அருகே வந்தார்கள். உடல் மெலிந்து பரிதாபமான நிலையிலிருந்த கோசலை, அந்த முனிவருடைய திருவடிகளை சுமித்திராதேவியோடு நடுங்கும் கரங்களுடன் தொட்டு வணங்கினார். தன் விருப்பம் கைகூடப் பெறாதவளும், எல்லா மக்களாலும் இழித்துரைக்கப்பட்டவளுமான கைகேயி, வெட்கத்தால் வெதும்பி, முனிவரின் திருவடிகளில் பணிந்தாள். பின்னர், வருத்தம் தோய்ந்த மனமுடைய அவள், இறைவனுக்கு ஒப்பான மாமுனிவரை வலம் வந்து, (மற்றவர்களுடன் சேராமல்) தன் மகன் பரதன் அருகில் வந்து நின்றாள். (14–17)

அப்போது அறவொழுக்கத்தில் உறுதியுடைய பரத்வாஜர், பரதனைப் பார்த்து, 'பரதா! இந்த உன் தாய்மார்களில் யார், இன்னாரென்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்' என்று கேட்டார். பரத்வாஜரால் இவ்வாறு கேட்கப்பட்ட அறநெறியாளனும் சொல் திறன் உடையவனுமான பரதன், இரு கைகளையும் கூப்பிக் கொண்டு, (பின்வரும்) சொற்களைக் கூறினான்— (18,19)

''சான்றோரே! சோகத்தாலும், உணவு உண்ணாமையாலும், உடல் தளர்ந்திருப்பவரும், ஒரு தேவதையைப் போல் தோற்றமளிப்பவருமான இவர்தான், என் தந்தையின் பட்டத்தரசி. இவர்தான் அதிதிதேவி மகாவிஷ்ணுவைப் பெற்றது போல, வீறுகொண்ட சிங்கம் போன்ற நடையையுடைய இராமனை ஈன்றெடுத்த கௌசல்யை! (20,21)

இவருடைய இடது கையைப் பிடித்துக் கொண்டு நொந்த மனத்துடன் துயரத்தால் தாக்கப்பட்டவராக, (அணிகலன்கள் அணியாததால்) காட்டில் மலர்கள் உதிர்ந்துவிட்ட கர்ணிகார மரக்கிளையைப் போல் இருக்கும் இந்த சுமித்திராதேவி மன்னரின் மனைவியரில் நடுவர். வீண்போகாத பராக்கிரமம் கொண்டவர்களும், தேவர்களுக்கு ஒப்பான ஒளி படைத்தவர்களும், தரும வீரர்களும், வாலிபர்களுமான லட்சுமண–சத்ருக்னர்கள் இவருடைய (மணி வயிற்றில் உதித்த) புத்திரர்கள். (22,23)

எவள் காரணமாக புருஷோத்தமர்களான அவ்விருவரும் (சுக வாழ்விற்குரிய) நாட்டிலிருந்து உயிருக்கே ஆபத்தை விளைவிக்கும் இடத்திற்குச் சென்றார்களோ, மன்னர் தசரதர், புதல்வனைப் பிரிந்ததால் (உயிரை விட்டு) தேவருலகம் சென்றடைந்தாரோ, அவள் மிகவும் கோபம் கொண்டவளும், நல்வழி புகட்டப்படாத புத்தி உடையவளும், கர்வம் கொண்டவளும், ஈடில்லாத கட்டழகி என்று தன்னை நினைத்துக் கொண்டவளும், செல்வத்தில் பேராசை உடையவளும், உயர்குடித் தோன்றல் போன்ற உருவத்தில் இருந்தாலும் இழிகுணம் கொண்டவளும், வெறுக்கத் தக்கவளும், பாவம் செய்வதற்கு உறுதிபூண்டவளுமான என் தாயார் என்று அறிந்துகொள்ளுங்கள். இவளால்தான் எனக்கு மாளாத துயரம் ஏற்பட்டிருப்பதைப் பார்க்கிறேன்.'' (24–26)

இவ்வாறு, புருஷோத்தமனான பரதன் கண்ணீர் பெருக்கிக் கொண்டு தழுதழுத்த குரலில் கூறிவிட்டு, சிவந்த கண்களுடன் சினம் கொண்ட சர்ப்பம் போல் பல தடவைகள்

பெருமூச்செறிந்தான். முன்பு கூறியபடிப் பேசிக் கொண்டிருந்த பரதனுக்கு, பேரறிஞரும் மாமுனிவருமான பரத்வாஜர் பொருள் நிறைந்த (பின்வரும்) பதில் மொழிந்தார்— (27,28)

''பரதா! கைகேயியை நீ இவ்வாறு குற்றம் சுமத்தும் முறையில் ஏசலாகாது. இராமனைக் காட்டிற்கு அனுப்பியது என்ற இந்த நிகழ்ச்சி பிற்காலத்தில் நன்மையை விளைவிக்கப் போகிறது. இராமன், நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டதால் இவ்வுலகில் தேவ–அசுரர்களுக்கும், ஆத்ம சாட்சாத்காரம் பெற்ற முனிவர்களுக்கும் நன்மையே ஏற்படப் போகிறது.'' (இராமன் இருக்குமிடத்தை முனிவரிடமிருந்து தெரிந்து கொண்டுவிட்டு) தான் வந்த காரியம் கைகூடப் பெற்றவனான பரதன், முனிவரை வலம் வந்து வணங்கிவிட்டு விடைபெற்றுக் கொண்டான். 'சேனைகளை ஆயத்தப்படுத்துங்கள்' என்று (அதிகாரிகளுக்கு) உத்தரவிட்டான். (29–31)

உடனே, பிரயாணப்பட வேண்டிய பல்வகை மக்களும் (படைவீரர், கூடாரம் அமைப்போர், சாலை அமைப்போர், உணவு–தண்ணீர் வசதி செய்வோர் போன்ற எல்லா தொழிலாளர்களும்), பொன் வேலைப்பாடுகளால் அற்புதமாக விளங்கிய குதிரைகள் பூட்டப்பட்ட தேர்களில் ஏறிக் கொண்டார்கள். பதாகைகள் பறக்க, பொற்சங்கிலிகளால் கட்டப்பட்டிருந்த ஆண்யானைகளும் பெண்யானைகளும் மழைக்கால மேகங்கள் இடிமுழக்கம் செய்வதைப் போல (தம் கழுத்தில் கட்டப்பட்டிருந்த) மணிகளை ஒலித்துக் கொண்டு புறப்பட்டன. (32,33)

பலவகையான பெரிய–சிறிய வடிவுடைய மிக்க மதிப்புடைய வாகனங்களில் சேனைத்தலைவர்கள் ஏறிக் கொண்டார்கள். காலாட்படையினர் காலால் நடந்து செல்லத் தொடங்கினார்கள். அப்போது, இராமனைக் காண்பதில் எல்லையில்லாத வேட்கை கொண்ட கௌசல்யை முதலான அரசபத்தினிகள் மிக்க மகிழ்ச்சியுடன் சிறந்த வாகனங்களில் ஏறிக் கொண்டு சென்றார்கள். அறச்செல்வரான பரதன், உதிக்கும் சூரிய–சந்திரனைப் போன்று ஒளிவீசும் அழகிய சிவிகையில் அமர்ந்து, தம் பரிவாரங்களுடன் சென்றான். (34–36)

யானை–குதிரை–தேர்கள் நிறைந்த அந்த மாபெரும் சேனை, ஆகாயத்தில் உலா வரும் மேகக்கூட்டம் போல தென்திசையில் வெகுதூரம் சென்றது. கங்கையின் எதிர்க்கரையில் சிறு குன்றுகள் சிற்றாறுகள் நிறைந்து, விலங்கு–பறவைகள் ஓடிக் களிக்கும் காட்டுப் பகுதிகளைக் கடந்தது. பரதனுடைய யானை–குதிரை–போர்வீரர்களைக் கொண்ட அந்த சேனை உற்சாகத்துடன் இருந்தது. அந்தப் பெருங்காட்டிலிருந்த விலங்கு மற்றும் பறவைக் கூட்டங்களைப் பயத்தால் மிரளச் செய்து கொண்டு பீடுநடை போட்டுச் சென்றது, அப்படை. (37–39)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
தொண்ணூற்று இரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : தொண்ணூற்று மூன்று

சித்திரகூடம் நோக்கிப் பயணம்

பயணம் செய்து கொண்டிருந்த அந்த மாபெரும் சேனையைக் கண்டு மிகவும் பயந்து போன, காட்டிலிருந்த யானைக் கூட்டங்களின் மதங்கொண்ட தலைமை யானைகள், தத்தம் கூட்டங்களோடு வேகமாக வெளியிடங்களுக்கு ஓடிப் போயின. கரடிகள், புள்ளிமான்கள், கலைமான்கள் ஆகியவை காட்டுப் பகுதிகளிலும் மலையுச்சிகளிலும் நதியோரங்களிலும் மற்றும் எல்லாப் பக்கங்களிலும் (அச்சங்கொண்டு ஓடுகின்றவைகளாகக்) காணப்பட்டன. மிகவும் உற்சாகத்துடன் பேரொலி எழுப்பும் விஸ்தாரமான நால்வகைப் படையால் சூழப்பட்ட பரதன், மிக்க மகிழ்ச்சியுடன் புறப்பட்டுச் சென்றான். (1–3)

மழைக்கால மேகக்கூட்டங்கள் ஆகாயத்தை மறைப்பதைப் போல, மகாத்மாவான பரதனுடைய பெருங்கடல் போன்ற படைக்கூட்டம், வெகுதூரத்திற்குப் பூமியை மறைத்துக் கொண்டிருந்தது. குதிரைக் கூட்டங்களாலும், மகாபலம் பொருந்திய யானைகளாலும் நிரம்பிய மண்தரை வெகுநேரம் வரை கண்ணுக்குப் புலப்படாததாக இருந்தது. (குதிரை–யானைகளின் கால்களால் எழுப்பப்பட்ட மண்புழுதி வெகுநேரம் வரை அடங்கவில்லை. குதிரை–யானைப் படைகள் அவ்வளவு அதிகமாக இருந்தன – என்றவாறு.) வெகுதூரம் நடந்து சென்றதால் மிகவும் களைத்துப் போன வாகனங்களைக் கொண்ட பண்புத்திரு மிக்கவனான பரதன், ஆலோசனை சொல்பவர்களுள் தலைசிறந்தவரான வசிஷ்டரை நோக்கிக் கூறினான்— (4–6)

''பரத்வாஜ முனிவரிடமிருந்து நான் எவ்வாறு கேட்டேனோ, அத்தகைய காட்சிகள் இங்கே காணப்படுகின்றன. அதனால், அவரால் கூறப்பட்ட இடத்திற்கு நாம் வந்துவிட்டோம் என்பது தெளிவாகிறது. இந்த மலை சித்திரகூட மலை; இது மந்தாகினி ஆறு; கார்வண்ண மேகத்தைப் போன்ற காட்டுப் பகுதி தொலைவில் தெரிகிறது. தற்சமயம், சித்திரகூட மலையின் தாழ்வரைகள் மலைகள் போன்ற நம்முடைய யானைப்படையால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறது. (நாம் சித்திரகூட மலைக்கே வந்துவிட்டோம் என்பது நிச்சயம்.) கார்காலத்தில் நீருண்ட மேகங்கள் மலைச்சிகரங்களில் மழையைப் பொழிவதைப்போல, இந்தக் காட்டிலுள்ள மரங்கள் (ஏராளமான) மலர்களை மலையின் தாழ்வரைகளில் பொழிகின்றன.'' (7–10)

(இதன் பின்னர் சத்ருக்னனை நோக்கி பரதன் பேசுகிறான்—) ''சத்ருக்னா! பெருங்கடல் சுறாமீன்களால் நிரம்பியிருப்பதைப் போன்று கின்னரர்கள் உலாவரும் மலையின் தாழ்வரை எங்கும் மான்கள் நிரம்பியிருக்கின்றன. சரத்காலத்தில் ஆகாயத்தில் மிதக்கும் மேகக் கூட்டங்கள் காற்றினால் தாக்கப்பட்டுச் சிதறி ஓடுவதைப் போல, இந்த மான்கூட்டங்கள் (நமது சேனையின் பேரொலியால் பயந்து) மிக வேகமாக ஓடுகின்றன. இந்தக் காட்டிலுள்ள ஆதிவாசிகள் மேகவண்ணக் கேடயங்களோடு விளங்கும் தென்னாட்டவர்போல, தலைகளில் மணம் மிக்க மலர்களைக் கொண்டு அழகு செய்து கொள்கிறார்கள். (11–13)

மனித அரவமே இல்லாததால் மிகவும் அச்சம் விளைவிப்பதாக விளங்கிய இந்தக் காடு, இப்போது (நம்முடைய சேனை, மக்கள் நிரம்பியதாய்) குடிமக்கள் நிறைந்த அயோத்தி நகர் போலவே எனக்குத் தோன்றுகிறது. (குதிரைகளின்) குளம்புகளால் எழுப்பப்பட்ட மண்தூசி ஆகாயத்தை அளாவி நிற்கிறது. (தூசி மூட்டத்தால் எனக்குக் கஷ்டம் ஏற்படும் என்பதை உணர்ந்து) எனக்கு நன்மையைச் செய்ய விரும்பும் காற்றானது தூசிக்கூட்டத்தை விரைவாக அப்பால் கொண்டு செல்கிறது. சத்ருக்னா! பார்! (நன்றாக அமைக்கப்பட்ட சாலைகளிலேயே சென்று பழக்கப்பட்ட) குதிரைகள் பூட்டிய தேர்கள், வல்லுநர்களான தேரோட்டிகளால் இந்தக் காட்டுப்பாதையிலும் வேகமாகச் செல்கின்றன. (14–16)

காட்சிக்கினிய மயில்கள் (நமது படையைக் கண்டு) பயந்து பறவைகளின் இருப்பிடமான மலையை நோக்கிப் பறந்து சென்று புகுந்து கொள்கின்றன. இந்தப் பிரதேசம் மிகவும் மனத்தைப் பரவசப்படுத்துவதாக எனக்குத் தோன்றுகிறது. தவம் செய்பவர்கள் வசிக்கும் இந்த இடம் தேவருலகத்திற்கு அழைத்துச் செல்லும் பாதை என்பது உறுதி. (இந்தப் பிரதேசம் அவ்வளவு புனிதமான ஸ்தலம்.) காட்டில் மலர்களால் பலவகையாக அலங்கரிக்கப்பட்டு மனம் கவரும் தோற்றமுடைய பெண்மான்களோடு கூடிய புள்ளிமான்கள் ஏராளமாகக் காணப்படுகின்றன. சரி, காட்டினுள் வீரர்கள் முன்னேறிச் செல்லட்டும். புருஷோத்தமர்களான இராம–லட்சுமணர்கள் கண்ணில் படுகிறார்களா? என்று தேடிப் பார்க்கட்டும்.'' (17–20)

பரதனுடைய சொற்களைக் கேட்டு, ஆயுதம் தாங்கிய சில வீரர்கள் (அடர்த்தியான) காட்டிற்குள் புகுந்தார்கள். அப்போது, ஓர் இடத்தில் புகை வருவதைக் கண்டார்கள். மேலெழும்பி வரும் புகையைக் கண்ட அவர்கள் பரதனிடம் வந்து கூறினார்கள்— ''மனிதர்கள் இல்லாத

இடத்தில் நெருப்பு இருக்கிறது. (நெருப்பு இல்லாமல் புகை தோன்றாது.) அதனால், இந்தப் பகுதியில்தான் இராம–லட்சுமணர்கள் இருக்க வேண்டும். எதிரிகளை வாட்டும் புருஷோத்தமர்களான மாமன்னரின் திருக்குமாரர்கள், ஒருக்கால் இங்கே இல்லாமற்போனாலும், இராமபிரானுக்கு நிகரான வேறு தபஸ்விகள் நிச்சயமாக இருப்பார்கள்.'' பகைவர்களின் பலத்தை அடக்கும் பரதன், தகுந்த காரணங்களோடு கூடிய அவர்களுடைய சொற்களைக் கேட்டு, பின்னர் தன் படைவீரர்களைப் பார்த்து (பின்வருமாறு) சொன்னான்— (21–24)

''நீங்கள் இதற்கு மேல் செல்ல வேண்டாம்; இங்கேயே எச்சரிக்கையுடன் இருங்கள். நானே (தொடர்ந்து புகை வரும் இடம் நோக்கிச்) செல்கிறேன்; என்னுடன் சுமந்திரரும் திருதியும் வருவார்கள்.'' இவ்வாறு கூறப்பட்ட படைவீரர்கள் நாற்புறமும் சூழ்ந்துகொண்டு (தம் விருப்பம்போல்) தங்கிவிட்டார்கள். புகையின் மேல்நுனி தெரியும் இடத்திலேயே பரதன், தன் பார்வையைச் செலுத்தினான். எந்தச் சேனையானது பரதனால் கட்டளையிடப்பட்டு அதே இடத்தில் நின்றுவிட்டதோ, அதே சேனை கண்ணுக்கு எட்டும் தூரத்தில் புகையைக் கண்டு, பேரன்புக்குரிய இராமப்பிரபுவின் சந்திப்பு விரைவில் நிகழப்போகிறது என்றுணர்ந்து மனமகிழ்ச்சியுடன் இருந்தது. (25–27)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
தொண்ணூற்று மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : தொண்ணூற்று நான்கு

சித்திரகூடத்தின் அழகு

மலை–காடுகளில் மனம் திருப்தியடையும் இயல்புடையவரும், தேவர்கள் போல் ஒளிவீசுபவருமான தசரத குமாரர், அந்த மலையில் பல நாட்கள் வசித்த பின்னர், சீதாப்பிராட்டியைச் சந்தோஷப்படுத்தவும், தன் மனத்திற்கு ஆனந்தமூட்டவும் விருப்பம்கொண்டு, இந்திராணியை இந்திரன் மகிழ்வுறச் செய்வதுபோல, தன் மனைவிக்கு சித்திரகூட மலையின் அழகுக் காட்சிகளை விளக்கிக் கூறினார்— (1,2)

''நற்பண்பினாய்! மனம் கவரும் அற்புத அழகு வாய்ந்த இந்த மலையைக் காணும்போது, நாட்டிலிருந்து வெளியேறி வந்தது, நண்பர்கள் உடன் இல்லாதது ஆகியவை என் மனத்தில் எந்தப் பாதிப்பையும் உண்டாக்கவில்லை. (துயரத்தைத் தரவில்லை.) நங்காய்! பலவகையான பறவைக் கூட்டங்கள் நிறைந்து விளங்கும் இந்த மலையை நன்றாகப் பார். பலவகையான தாதுப் பொருள்கள் நிரம்பிய மலைச் சிகரங்கள் ஆகாயத்தைப் பிளந்து கொண்டு நிற்கும் பேரழகைப் பார். (3,4)

பலவகைப்பட்ட தாதுக்களால் அலங்கரிக்கப்பட்ட, உன்னதமான இந்த மலையின் எல்லாப் பக்கமும் அழகுடன் மிளிர்கிறது. சில இடங்களில் வெள்ளியைப் போன்ற பிரகாசம்; சில இடங்களில் இரத்தச் சிவப்பு; சில இடங்களில் மஞ்சள்–சிவப்பின் கலவை வண்ணம்; சில இடங்களில் இந்திரநீல மணியின் ஒளி; புஷ்பராகம், படிகம், தாழம்பூ போன்று சில இடங்கள்; தாரகையின் பளிச்சென்ற ஒளியுடன் பாதரசம் போன்று வழிந்தோடும் தாதுக்களைக் கொண்ட சில பகுதிகள்! (5,6)

இந்த மலையில் எண்ணிறந்த பறவைக் கூட்டங்கள் இருக்கின்றன; பலவகையான விலங்குகளும், புலி–சிறுத்தை–கரடிக் கூட்டங்களும் இருக்கின்றன. ஆனால், தத்தம் இயல்பான கொடூர குணத்தைத் துறந்து, பிறரைத் துன்பப்படுத்தாமலிருப்பதன் மூலம் மலையின் பெருமையை அதிகரிக்கின்றன. இந்த மலை, மலர்–பழம்–நிழல் தரும் மா, நாவல், வேங்கை, வெள்ளலொத்தி,

முரளை, பலா, தவம், அழிஞ்சல், பவ்யம், தினிசம், பில்வம், திந்துகம், மூங்கில், கொம்மட்டி, வேம்பு, மாவிலங்கை, இலுப்பை, மஞ்சாடி, இலந்தை, நெல்லி, கடம்பம், பிரம்பு, மருதை, மாதுளை – இவை போன்ற அநேக மரங்கள் நிறைந்ததாக அழகைக் கூட்டுகிறது. (7–10)

சீலத்திருவினளே! மலையின் தாழ்வரைகளில் தன்னால் நேசிக்கப்படும் ஆண்–பெண்கள், இருவர் இருவராக காமக் கேளிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் இந்தக் கின்னரர்களைப் பார். வித்யாதரர்களின் கத்திகள் மரக்கிளைகளில் தொங்கவிடப்பட்டிருக்கின்றன. வித்யாதரப் பெண்கள் விளையாடுமிடங்களில் அவர்களின் சிறந்த ஆடைகள் காணப்படுவதையும் பார். இந்த மலை, ஆங்காங்கே பெருகி ஓடிவரும் அருவிகளாலும், பூமியிலிருந்து பீறிட்டு எழும்பும் ஊற்றுக்களாலும் மதநீரைப் பெருக்கும் மாபெரும் யானைபோல் தோற்றமளிக்கிறது. (11–13)

குகைகளிலிருந்து வெளியே வரும் காற்று பலவகையான மலர்களின் நறுமணத்தைச் சுமந்து வந்து நுகர்புலனைத் திருப்தி செய்விப்பதால், எந்த மனிதனைத்தான் மகிழ்விக்காது? மாசற்றவளே! இந்த இடத்தில், பல ஆண்டுகள் உன்னோடும் லட்சுமணனோடும் வாழ்ந்தாலும்கூட, (நாட்டிலிருந்து வெளியேறிய) சோகம் என்னை வருத்தாது. அழகியவளே! பலவகையான மலர்களும் பழங்களும் மற்றும் விதவிதமான பறவைக் கூட்டங்களும் விளங்கும் அற்புதமான சிகரங்களையுடைய, பேரழகு வாய்ந்த இந்தப் பிரதேசத்தில் நான் மனமுவந்து ஈடுபட்டிருக்கிறேன். (14–16)

இந்த வனவாசத்தால் என்னால் இரண்டு பயன்கள் அடையப்பட்டுள்ளன: ஒன்று, அறநெறிப்படி தந்தையின் வாக்கைக் காப்பாற்றியதால், அவர் கடன் தீர்ந்துபோனது; இரண்டு, பரதனுக்கு உகந்ததைச் செய்தது. வைதேகி! சித்திரகூடத்தில் என்னோடுகூட மனம்–வாக்கு–சரீரங்களைக் களிப்புறச் செய்யும் பலவகையான காட்சித் தோற்றங்களைப் பார்த்துக் கொண்டு மகிழ்கிறாய் அல்லவா? தேவி! என்னுடைய முன்னோர்களும் மற்றுமுள்ள ராஜரிஷிகளும் இவ்விதமான வனவாசம், உடலை உகுத்த பிறகு மிக உயர்ந்த நிலையை அடைவிக்கும் சாதனம் எனக் கூறியிருக்கிறார்கள். (17–19)

இந்த மலையின் நான்கு புறங்களிலுமுள்ள நூற்றுக்கணக்கான பெரும் பாறைகள், கருமை, மஞ்சள், வெண்மை, செம்மை நிறங்கள் கொண்டதாக ஒளி வீசுகின்றன. உன்னதமான இந்த மலையின் உச்சியில் வளர்ந்துள்ள ஆயிரக்கணக்கான தாவரங்கள் தாமாக ஒளி வீசிக்கொண்டு நெருப்புச் சுவாலைகள் போல் இரவில் பிரகாசமாக விளங்குகின்றன. பேரழகியே! இந்த மலையில் சில இடங்கள் வீடுகளைப்போல் விளங்குகின்றன. (வசிப்பதற்கு ஏற்றவைகளாக இருக்கின்றன); சில இடங்கள் (மலர்ச் செடிகள் நிறைந்திருப்பதால்) பூஞ்சோலைகள் போல் அழகாக இருக்கின்றன; சில இடங்கள் (எவ்விதப் பயிர் வகைகளும் வளர முடியாத) ஒரே பாறையாக இருக்கின்றன. (20–22)

சித்திரகூட மலை பூமியைப் பிளந்து கொண்டு மேலெழுந்தது போல் விளங்குகிறது; சித்திரகூடத்தின் இந்தச் சிகரம் எல்லாப் பக்கங்களிலும் அழகாகக் காணப்படுகிறது. கீழாநெல்லி, புன்னை, ஸ்தகரம், பூர்ஜம் ஆகியவை பரப்பப்பட்டு, தாமரை இதழ்களால் மூடப்பட்ட தம்பதிகள் உல்லாசமாக இருப்பதற்கேற்ற (படுக்கை) விரிப்புகளைப் பார். மாதரசியே! தருமபத்தினியுடன் சுகம் அனுபவித்தவர்களால் கசக்கி எறியப்பட்ட தாமரை மாலைகளையும், பல்வகைப் பழங்களையும் பார். (23–25)

இந்தச் சித்திரகூட மலை, குபேரனுடைய தலைநகரையும், இந்திரனின் பட்டணத்தையும், வடக்கு குரு தேசங்களின் சிறப்புக்களையும் மிஞ்சி, அநேக வகையான கிழங்கு, பழம், நீர் முதலியவைகளுடன் (சுகமான வாழ்விற்கு ஏற்ற முறையில்) விளங்குகிறது. உயிரினும் மேலான சீதே! பெரியோர்கள் சென்ற வழியில், எனக்குரிய விதி–நியமங்களை ஒழுங்காகக் கடைப்பிடித்து, (சிற்றன்னையால்) நியமிக்கப்பட்டுள்ள (பதிநான்கு ஆண்டுக்) காலத்தை

உன்னோடும் லட்சுமணனோடும் கழித்துவிட்டேனேயானால், பரம்பரையாக வந்த தருமத்தை அனுஷ்டித்த நற்பயனைப் பெறுவேன்.'' (26,27)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
தொண்ணூற்று நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : தொண்ணூற்றைந்து

மந்தாகினி நதியின் அழகு வர்ணனை

பின்னர், இராமன் அந்த மலையிலிருந்து புறப்பட்டு, (சிறிது தூரம் சென்று) தூய நீரையுடைய மந்தாகினி நதியை மைதிலிக்குச் சுட்டிக்காட்டினார். தாமரைக் கண்ணரான இராமன், விதேக மன்னரின் புதல்வியும், சந்திரன் போன்று அழகிய முகத்தை உடையவளும், பெண்ணரசியுமான அவளிடம் (இவ்வாறு) கூறினார்— (1,2)

''பல்வேறு வடிவமுடைய மணற்திட்டுகளை உடையதும், கண்ணுக்கு இனியதும், அன்னம்–ஸாரஸப் பறவைகள் உலாவுவதும், தாமரைகள் நிறைந்துள்ளதுமான மந்தாகினியைப் பார். கரையோரங்களில் பலவகையான மலர்–பழங்களையுடைய மரங்களால் சூழப்பெற்று, குபேரன் நீராடும் தாமரையோடை போல் கண்கவர்வதாக இருக்கிறது. தற்சமயம், மான் கூட்டங்கள் நீர் அருந்தியதால் கலங்கியிருந்தாலும், கண்ணுக்கினிய நீரோட்டம் எனக்கு மனத்திருப்தியை உண்டுபண்ணுகிறது. அன்புடையாளே! சடை, மான்தோல், மரவுரி, மேலாடை தரிக்கின்ற முனிவர்கள், உரிய வேளைகளில் மந்தாகினி ஆற்றில் தலைமூழ்கிக் குளிக்கிறார்கள். (3–6)

நெடுந்தடங்கண்ணினாய்! வேறு சில முனிவர்கள் கடுமையான விரதங்களை மேற்கொண்டவர்களாக இரு கைகளையும் உயரே தூக்கிக் கொண்டு, சூரிய பகவானை உபாசிக்கிறார்கள். வேகமான காற்று வீச்சினால் நதியின் எல்லாப் பக்கங்களிலுமுள்ள மரங்களின் உச்சிக் கிளைகள் ஆடுகின்றன. அவற்றிலிருந்து இலைகளும் மலர்களும் உதிர்கின்றன. இதைக் காணும்போது மலையே நடனமாடுவதுபோல் தோன்றுகிறது. (7,8)

தேவி! பார்! சில இடங்களில் ஆற்று நீர் இந்திரநீலமணி போல் ஒளி வீசுகிறது. சில இடங்களில் மணற்திட்டுகள் காணப்படுகின்றன. சில இடங்களில் ஆத்ம தரிசனம் பெற்ற ஸித்த புருஷர்கள் தலைமூழ்கி நீராடிக் கொண்டிருக்கிறார்கள். காற்றடிப்பதால் உதிர்ந்துபோன மலர்கள் பல இடங்களில் குவியலாகக் கிடப்பதைப் பார். பூக்குவியல்கள் ஆற்றின் நடுவில் மிதந்து செல்லும் காட்சியைப் பார். மனத்திற்கினியாளே! இனிமையாகக் குரலெழுப்பும் சக்ரவாகப் பறவைகள், மங்களமான ஓசையை எழுப்பிக் கொண்டு மேலே பறந்து செல்வதைப் பார். (9–11)

பேரழகுடையாளே! சித்திரகூட மலையையும் மந்தாகினி நதியையும் உன்னையும் (தினந்தோறும்) பார்த்துக் கொண்டிருப்பதால், நகரத்தில் வசிப்பதைக் காட்டிலும் இந்த வனவாசம் சுகமானது என எண்ணுகிறேன். (அயோத்தியில் அழகுமிக்க இந்த மலையையும் மந்தாகினியையும் காண முடியாதன்றோ!) தவம், புலனடக்கம், மனச்சாந்தி முதலியவைகளால் பாவம் நீங்கியவர்களான ஸித்தர்களால் நாள்தோறும் நீராடப்படுவதால், இந்த ஆற்றின் நீர் எப்போதும் புண்ணியம் தரவல்லதாக இருக்கிறது. வா, என்னுடன் நீராடுவாயாக. (12,13)

உத்தமியே! சீதே! ஒரு தோழியுடன் ஜலக்ரீடை செய்வதைப் போல (நாணத்தை விட்டு) மந்தாகினியில் சுதந்திரமாகக் குதித்து அளைந்து நீராடு. நீ மூழ்கி எழும்போது உண்டாகும் அலைகளால் செந்தாமரை–வெண்டாமரை மலர்கள் நீரில் மூழ்கட்டும். நங்காய்! இங்குள்ள விலங்குகளை நகர மக்களைப் போலும், இந்த மலையை அயோத்தி என்றும்,

இந்த (மந்தாகினி) நதியை சரயூவாகவும் கருதுவாயாக. வைதேகி! அறத்தையே மூச்சாகக் கொண்ட லட்சுமணன், என் கட்டளைக்கு அடிபணிந்து நடக்கிறான்; நீயும் எனக்கு அனுகூலமாக இருக்கிறாய். அதனால், என் மனம் திருப்தியுடன் இருக்கிறது. (14–16)

உன்னோடு மூன்று வேளைகளிலும் (நித்திய கர்மாக்களுக்குப் பூர்வாங்கமாக) நதியில் நீராடி, தேன்–கிழங்கு–பழங்களைப் புசித்துக் கொண்டு இருக்கும் நான், அயோத்தியை (அங்கு திரும்பிச் செல்வதை) விரும்பவில்லை; அரசாட்சியையும் விரும்பவில்லை. இங்கே மான் கூட்டங்கள் சஞ்சரிக்கின்றன; யானை–சிங்கம்–குரங்கு முதலானவை இந்த நதியின் நீரை (விருப்பத்துடன்) குடிக்கின்றன; இரு கரைகளிலும் ஏராளமான மலர்களைக் கொண்ட மரங்கள் அழகாக விளங்குகின்றன. இப்படிப்பட்ட இந்த நதியில் நீராடி சுகத்தை அனுபவிக்காதவனோ, களைப்புத் தீராதவனோ இருக்கவே மாட்டான்.'' (17,18)

ரகுகுல நாயகரான இராமன், இவ்வாறெல்லாம் அந்த ஆற்றைப் பற்றிய பொருத்தமான செய்திகளை விரிவாக விளக்கியவாறே, (மரங்களின் அடர்த்தியால்) கண்மை போல் கருநீல ஒளியுடன் காட்சி தரும் சித்திரகூடத்தில் தன் மனத்திற்குகந்த மனைவியுடன் நடைபயின்றார். (19)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
தொண்ணூற்றைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : தொண்ணூற்றாறு

இலக்குவன் சீற்றம்

மிதிலை மன்னரின் புதல்வியான சீதைக்கு மலையைச் சுற்றி ஓடும் மந்தாகினியின் அழகைக் காட்டிய பின்னர், மலைச்சாரலில் உட்கார்ந்து உண்பதற்கான பொருள்களைக் கொடுத்து உற்சாகப்படுத்திக் கொண்டு அமர்ந்திருந்தார், இராகவன். தருமாத்மாவான இராமன், 'இந்தப் பண்டம் பரிசுத்தமானது; இது சுவையாக இருக்கிறது; இது அக்னியில் நன்றாக காய்ச்சப்பட்டிருக்கிறது' என்றெல்லாம் சீதையுடன் பேசிக் கொண்டு உட்கார்ந்திருந்தார். இவ்வாறாக, அவர்கள் அளவளாவிக் கொண்டிருந்தபோது, பரதனுடன் வந்துகொண்டிருந்த மாபெரும் படைகளால் எழுப்பப்பட்டப் பேரொலியும் அடர்த்தியான தூசியும் ஆகாயத்தை அளவளாவிக் கிளம்பின. (1–3)

இதனிடையில் மதங்கொண்ட யானைக் கூட்டங்களின் தலைமை யானைகள் தத்தம் கூட்டங்களோடு, (படைகளின்) பெரும் கூச்சலால் அச்சம் கொண்டு நாலா பக்கங்களிலும் சிதறி ஓடின. இராமன், அந்தப் படைவீரர்களின் நடமாட்டத்தால் எழுந்த பேரொலியைக் கேட்டார். யானைக் கூட்டங்களெல்லாம் அச்சங்கொண்டு சிதறித் தறிகெட்டு ஓடுவதையும் பார்த்தார். சிதறி ஓடிக்கொண்டிருக்கும் அவைகளைப் பார்த்தும், பயங்கரமான சப்தத்தைக் கேட்டும் (வியப்படைந்த) இராமன், கொழுந்து விட்டெரியும் அக்னி போன்ற பேராற்றல் உடையவனும், சுமித்திரையின் புதல்வனுமான இலக்குவனைப் பார்த்து(ப் பின்வருமாறு) கூறினார்— (4–6)

''தம்பி லட்சுமணா! உன்னைப் போன்ற நல்ல மகனைப் பெற்ற சுமித்திரை போற்றற்குரியவள்! பூமியே அசைவது போன்ற கம்பீரமான பெரும் சப்தம் கேட்கப்படுகிறது, இல்லையா? 'ஏன், இப்படி?' என்று பார். புனிதமான இந்தப் பெருங்காட்டில் யானைக் கூட்டங்களும் எருமைகளும் மான்களும் சிங்கங்களால் திடீரென்று துரத்தப்பட்டு, மருட்சி அடைந்து, எல்லாப் பக்கங்களிலும் ஓட்டமாக ஓடுகின்றன. (7,8)

ஓர் அரசனோ அல்லது அரசன் போன்ற நாட்டுத் தலைவனோ துஷ்ட மிருகங்களை வேட்டையாட வந்திருக்கிறானா? அல்லது வேறு ஏதேனும் காரணம் உண்டா? என்று தெரிந்து கொண்டு வா. பறவைகள் பறந்து செல்வதற்குக்கூட இயலாத இந்தக் கானகத்தில் (குரூரப் பிராணிகள் வர முடியாது; சரியான பாதை இல்லாததால் மக்களும் வரமுடியாது – என்றிருக்கும்போது) விலங்குகள் ஓடுவதற்கும், பெருஞ்சத்தம் எழுவதற்கும் உண்மையான காரணம் என்ன? என்பதை உடனே நீ அறிந்து வருவாயாக.'' (9,10)

மலர்கள் பூத்திருந்த ஓர் ஆச்சாமரத்தில் வெகுவேகமாக ஏறிய இலக்குவன், எல்லாத் திசைகளிலும் பார்வையைச் செலுத்தி, கிழக்குத் திசையில் கண்களைச் செலுத்தினான். பின்னர், வடக்குத் திக்கில் யானை–குதிரை–தேர்ப்படைகளுடன் வாகனங்களும், காலாட்படையும் சேர்ந்த பெரிய சேனையைக் கண்டான். குதிரை–யானைகள் நிறைந்ததும், கொடிகள் பறக்கும் தேர்களை உடையதுமான அந்தப் படையைப் பற்றி இராமனிடம் தெரிவித்து, மேலும் கூறினான்— (11–13)

''அண்ணா! நெருப்பை அணைத்து விடுங்கள். (நெருப்பு இருந்தால் புகை கிளம்பும்; புகையைக் கண்டதும் நேராக இங்கே வந்துவிடுவது எளிது.) சீதாதேவி குகை போன்ற மறைவான இடத்தில் பத்திரமாக இருக்கட்டும். தாங்கள் வில்லில் நாண் ஏற்றி அம்புகளையும் (அம்புறாத்தூணிகளையும்), கவசத்தையும் அணிந்து கொள்ளுங்கள்.'' ஆண்புலி நிகர் வல்லமை படைத்த இராமன், (இலக்குவன் கூறியதைக் கேட்டுவிட்டு,) ''லட்சுமணா! நீ நன்றாகப் பார்த்திருப்பாயே? இது யாருடைய சேனை என்று எண்ணுகிறாய்?'' என்று கேட்டார். இவ்வாறு இராமன் கேட்டதும், இலக்குவன் ஜொலிக்கும் அக்னியைப் போல் மிகவும் கோபம் கொண்டவனாக, அந்தப் படையை எரித்துவிடுபவன் போல் பார்த்து (பின்வருமாறு) பதில் சொன்னான்— (14–16)

''அண்ணா! கைகேயியின் மைந்தனான பரதன், மன்னனாகப் பட்டாபிஷேகம் செய்யப்பட்டு, (நாம் இருவரும் பின்னாட்களில் அரசாட்சியில் பங்கு கேட்டால் என்ன செய்வது? என்ற நச்சுப் போன்ற முன்யோசனையுடன்) நம்மைக் கொல்வதற்காக வருகிறான் என்பதில் ஐயமில்லை. எதிரே மிகப்பெரிய ஒரு மரம் காணப்படுகிறது. அதன் அருகில் விஸ்தாரமான கிளைகளுடன் கூடிய கோவிதாரக் கொடி தேரில் பறக்கிறது. வேகமாகச் செல்லும் புரவிகளில் ஏறிக்கொண்டு, தம் விருப்பப்படி குதிரை வீரர்கள் வருகிறார்கள்; யானைப் படையினர் யானைகளில் ஏறிக்கொண்டு முகமலர்ச்சியுடன் விளங்குகிறார்கள். (17–19)

மாவீரரே! நாமிருவரும் வில்லேந்தியவர்களாக மலையின் மேல்பகுதிக்குச் செல்வோம். (அப்படிச் செய்தால் பரதனின் படைகளை எதிர்ப்பதற்குச் சௌகரியமாக இருக்கும்.) அல்லது ஆயுதங்கள் தாங்கியவர்களாக இவ்விடத்திலேயே இருப்போம். இராகவனே! தங்களுக்கும் சீதாப்பிராட்டிக்கும் எனக்கும், எந்த பரதன் காரணமாக மிகப்பெரிய துக்கம் ஏற்பட்டிருக்கிறதோ, எவன் காரணமாகத் தாங்கள் அரசுரிமையிலிருந்து நிரந்தரமாக நீக்கப்பட்டீர்களோ, அப்படிப்பட்ட பரதன் மாமன்னரின் கோவிதாரக் கொடியுடன் வந்திருக்கிறானே? போரில் அவனை வென்று, அரச சின்னமான கோவிதாரக் கொடி நம் வசப்படுமா? வீரரே! இராகவனே! எதிரியான இந்த பரதன், இதோ நம் எதிரே வந்திருக்கிறான். அவன் என்னால் கொல்லத்தக்கவன். பரதனைக் கொல்வதில் நான் எந்த ஒரு குற்றத்தையும் காணவில்லை. (20–23)

இராமசந்திரா! (அவனைக் கொல்வது பாவமாகாதா? என்றால்) பரதன்தான் முதலில் அபகாரம் செய்தவன்; தருமத்தைக் கைவிட்டவன். எனவே, அவனைக் கொல்வது என்பது அதருமமாகாது. இவன் கொல்லப்பட்டதும் பூமண்டலம் முழுவதையும் தாங்கள் ஆள்வீர்கள். அரசாள்வதற்குப் பேராசைப்பட்ட கைகேயி, யானையால் முறிக்கப்பட்ட மரம் போல போரில் என்னால் கொல்லப்படும் புத்திரனைப் பார்த்து மிகவும் துக்கப்படுவாள். பரிவார ஜனங்கள், உறவினர்களோடு கைகேயியையும் கொல்லப் போகிறேன். (அவள் கொல்லப்பட்டபின்) இந்த

உலகம் பெரும் பாவத்திலிருந்து விடுபட்டதாகும். பெருந்தகையீர்! (தங்கள் பேச்சைக் கேட்டு) அடக்கி வைத்திருந்த கோபத்தையும் அவமரியாதையையும் உலர்ந்த சருகுக்குவியலை நெருப்புப் பொசுக்கி விடுவதைப் போல, எதிரிப் படைகளின் மேல் செலுத்தப் போகிறேன். (24–27)

என்னுடைய கூரிய பாணங்களால் எதிரிகளின் உடல்களை வெட்டித் தள்ளி, சித்திரகூட மலையின் இந்தக் காட்டை இரத்தப் பெருக்குடையதாகச் செய்வேன். பாணங்களால் மார்பு பிளக்கப்பட்ட யானை–குதிரைகளையும், என்னால் கொல்லப்பட்ட மனிதர்களையும் (நரி முதலான) கொடூர விலங்குகள் இழுத்துச் செல்லட்டும். (நடைபெறப் போகும்) பெரும் போரில் படைவீரர்களோடு பரதனைக் கொன்று, என்னுடைய அம்புகளுக்கும் வில்லுக்கும் பட்டிருக்கும் கடனைத் தீர்த்துவிட்டவனாக ஆவேன் என்பதில் ஐயமில்லை. (வெகுகாலமாகப் போர் செய்யாததால், வில்–அம்புகளுக்குத் தான் கடன்பட்டிருப்பதாக லட்சுமணனின் வீரத்தனமான உரை.)'' (28–30)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
தொண்ணூற்றாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : தொண்ணூற்றேழு

இராமன், பரதனைப் புகழ்தல்

அப்போது, மிகவும் கோபமும் பகைமையும் கொண்டு மனக்குழப்பத்திலிருந்த சுமித்திரையின் குமாரன் இலக்குவனைப் பார்த்து, மிகவும் சமாதானப்படுத்தும்படியான (பின்வரும்) சொற்களை இராமன் கூறினார்— (1)

''மாபெரும் வில்லாளியும் பேரறிவாளனுமான பரதனே நேரில் வருகிறானென்றால், வில்–கத்தி–கேடயத்தினால் ஆவதென்ன? லட்சுமணா! நான், தந்தைக்கு ஒரு சத்தியம் செய்து கொடுத்துவிட்டு (தனக்கு வனவாசம்; பரதனுக்கு அரசுரிமை), இங்கே வந்திருக்கும் பரதனைக் கொன்று, பிறர் பழிச்சொல்லுடன் கிடைக்கும் ராஜ்யத்தை வைத்துக் கொண்டு என்ன செய்வேன்? (தந்தைக்குக் கொடுத்த வாக்கை மீறிய பாவம் என்னை வந்தடையாதா? மக்கள் தூற்ற மாட்டார்களா?) உறவினர்கள், நண்பர்கள் அழிவினால் எந்தப் பொருள் கிடைக்குமோ, அதை விஷம் கலந்த உணவைப் போல நான் ஏற்கமாட்டேன். (2–4)

லட்சுமணா! தருமார்த்த காமங்களையும் பூமியையும், உங்கள் (தம்பிகள்) பொருட்டாகவே நான் விரும்புகிறேன். இதை உனக்குச் சத்தியமாகக் கூறுகிறேன். நான் ராஜ்யத்தை விரும்புவதுகூட, சகோதரர்களின் ஒற்றுமைக்காகவும் சௌக்கியத்திற்காகவும்தான். என் ஆயுதங்களின் மீது ஆணையிட்டு இதைக் கூறுகிறேன். லட்சுமணா! நல்லியல்பினாய்! கடலை எல்லையாகக் கொண்ட இந்தப் பூமண்டலம் என்னால் அடைய முடியாததன்று. ஆனால், லட்சுமணா! அதருமத்தினால் (தவறான வழிகளை மேற்கொள்வதால்) இந்திரப் பதவியே கிடைப்பதானாலும், அதை நான் விரும்பமாட்டேன். நற்பண்பினாய்! பரதனும் நீயும் சத்ருக்னனும் இல்லாமல் (உங்களுக்கெல்லாம் கிடைக்காமல்) எனக்கு (மட்டும்) எள்ளளவு சுகம் கிடைப்பதாக இருந்தால், அதனை அக்னிதேவன் சுட்டு எரிக்கட்டும். (5–8)

பரதன், சகோதரர்களிடம் பாசம் உள்ளவன். எனக்கு, என் உயிரைக் காட்டிலும் பிரியமானவன். சூரனே! அவன் அயோத்திக்குத் திரும்பி வந்ததும் உன்னுடனும் சீதையுடனும், நான் சடைமுடி–மரவுரி தரித்துக் கொண்டு, நாடு கடத்தப்பட்டதைக் கேள்விப்பட்டு, (மூத்த குமாரனே இளவரசுப் பட்டம் ஏற்கவேண்டும் என்ற) பரம்பரை வழக்கத்தை நினைவுகூர்ந்து, துயரத்தால் புலன்கள் கலங்க, அன்பு மேலீட்டினால் நெஞ்சம் நிரம்பி வழிய, நம்மைப்

பார்ப்பதற்காக வந்திருக்கிறான் என்று கருதுகிறேன். மாவீரனே! வேறு எந்தக் காரணத்தை முன்னிட்டும் அவன் வந்திருக்க மாட்டான் (என்பது நிச்சயம்). (9–11)

திருவளர் செல்வனாகிய அவன், அன்னை கைகேயியிடம் மிகவும் கோபம் கொண்டு, கடுமையான வார்த்தைகளால் ஏசி, தந்தையாரைப் பிரார்த்தித்து, மனங்குளிரச் செய்து, அரசுரிமையை எனக்குக் கொடுப்பதற்காக வந்திருக்கிறான். பரதன் நம்மைப் பார்க்கவேண்டும் என்று சரியான காலத்தில்தான் விரும்பியிருக்கிறான். இவன் நமக்கு நல்லது அல்லாததை மனத்தாலும் சிறிதளவுகூடச் செய்யமாட்டான். முன்னர் எப்போதாவது, உனக்குத் துன்பம் விளைவிப்பதான ஒரு செயலை பரதன் செய்திருக்கிறானா? (செய்ததே இல்லை என்னும்போது) பரதன் விஷயத்தில் உனக்கு இப்படிப்பட்ட பயமும் சந்தேகமும் எப்படி வந்தது? (அவன் நம்மைக் கொல்வதற்காகவே வருகிறான் என்று ஏன் தீர்மானிக்கிறாய்?) (12–14)

பரதனைக் குறித்து இவ்வளவு கடுமையான, அன்பில்லாத சொற்களை நீ பேசலாகாது. பரதனைப் பற்றி நீ நிந்தனை செய்தால், அது, நான் நிந்திக்கப்பட்டதாகவே ஆகும். லட்சுமணா! ஏதேனும் ஒரு பெரிய ஆபத்து ஏற்பட்டாலும், புதல்வர்கள் தம் தந்தையைக் கொல்வார்களா? (கொல்ல மாட்டார்கள் தானே? அதுபோல) தனக்கு உயிர் போன்ற சகோதரனை, அவனுடைய சகோதரன் எவ்வாறு கொல்வான்? உனக்கு அரசாட்சி வேண்டும் என்ற காரணத்தால் இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்கிறாயேயானால், நான் பரதனைப் பார்த்து, 'ராஜ்யத்தை இவனுக்குக் கொடுத்துவிடு' என்று சொல்கிறேன். லட்சுமணா! 'அரசாட்சியை இவனிடம் ஒப்படைத்து விடு' என்று நான் சொல்லியதைக் கேட்டவுடனேயே, 'அவ்வாறே ஆகட்டும்' என்றுதான் பரதன் நிச்சயமாகச் சொல்வான்.'' (15–18)

அறவொழுக்கமுடைய சகோதரரால் இவ்வாறு கூறப்பட்டவனும், அவருடைய நலனில் அக்கறை உள்ளவனுமான இலக்குவன், வெட்கத்தால் உடல் குறுகிப் போனான். அந்தச் சொற்களைக் கேட்டு மனம் தவித்துப் போன இலக்குவன் (பேச்சை மாற்ற விரும்புபவன் போல்), ''தந்தையார் தசரதர் அவர்களே தங்களைக் காண்பதற்காக வந்திருக்கிறார் என்று எண்ணுகிறேன்'' என்று பதில் கூறினான். (19,20)

இலக்குவன் மிகவும் மனம் வெதும்பிப் போனதை உணர்ந்து கொண்ட இராகவன் கூறினார்— ''ஆம், பெருந்தோளரான அவரே நம்மைப் பார்க்க வந்திருக்கிறார் என்று எண்ணுகிறேன். அல்லது சுக–சௌக்கியத்தோடு வளர்ந்த நாம் காட்டில் எவ்வளவு கஷ்டத்துடன் வாழவேண்டியிருக்கும் என்பதை எண்ணிப் பார்த்து, வீட்டிற்கு அழைத்துப் போகப் போகிறார் என்று உறுதியாக எண்ணுகிறேன். (அல்லது) மிகவும் சுகபோகங்களை அனுபவித்த இந்த சீதாதேவியை, அனைத்துப் பெருமைகளுக்கும் உரிய ரகுகுல திலகமான என்னுடைய திருத்தந்தையார் காட்டிலிருந்து அழைத்துக் கொண்டு போகப் போகிறார். (21–23)

வீரனே! (அங்கே பார்!) உயர்ந்த ஜாதியிற்தோன்றிய, கண்களுக்கினிய, வாயுவுக்கு நிகரான வேகத்தில் செல்லக்கூடிய உத்தமமான அந்தக் குதிரைகள் இரண்டும் கண்களில் படுகின்றன. மகாமேதாவியான தந்தையாருடைய, பேருடல் கொண்ட, முதுமையடைந்துவிட்ட சத்ருஞ்ஜயம் என்ற யானை படைகளுக்கு முன்பாக அசைந்தாடிக் கொண்டு வருகிறது. (ஆனால்,) பெருந்தோளாய்! தெய்விகமானதும் உலகத்தோரால் வணங்கப்படுவதுமான, நம் தந்தையினுடைய வெண்கொற்றக்குடை காணப்படவில்லையே? இது ஏனோ எனக்குச் சந்தேகத்தை விளைவிக்கிறது. லட்சுமணா! மரத்தின் உச்சியிலிருந்து இறங்கு. நான் சொல்கிறபடிச் செய்'' என்று, தருமாத்மாவான இராமன், சுமித்திரையின் குமாரனான இலக்குவனை நோக்கிச் சொன்னார். (24–27)

வெற்றி வீரனான இலக்குவன் ஆச்சாமரத்தின் உச்சியிலிருந்து இறங்கி வந்து, கைகளைக் கூப்பியவண்ணம் இராமன் அருகே வந்து நின்றான். 'கூச்சல்–குழப்பம் ஏற்படக்கூடாது' என்று பரதனால் உத்தரவிடப்பட்ட அந்தப் பெரும் படை, அந்த மலையின் எல்லாப் பக்கங்களிலும்

தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டது. யானை–குதிரை–தேர்ப்படை அடங்கிய இக்ஷ்வாகு சேனை, அந்த மலையிலிருந்து ஒன்றரை யோஜனை தூரம் வரை ஆக்கிரமித்துக் கொண்டு நின்றது. நீதிமானான பரதனால் ஆணையிடப்பட்ட அந்தச் சேனைக் கூட்டம், இராமப்பிரபுவின் திருப்தியைச் சம்பாதிப்பதற்காக, தம் செருக்கை ஒழித்து, அறநெறியைக் கைக்கொண்டு, சித்திரகூட மலைப் பிரதேசத்தில் களிப்புடன் தங்கியிருந்தது. (28–31)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
தொண்ணூற்றேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : தொண்ணூற்றெட்டு

இராமனைத் தேடுதல்

உறுதி படைத்தவனும் மனிதருள் சிறந்தவனுமான அவன், இவ்வாறு படைகளை ஒழுங்காக நிறுத்திவிட்டு, பெற்றோர்–முன்னோர்களிடம் பேரன்பு கொண்ட இராமனைத் தேடிக் கண்டுபிடிக்கக் காலால் நடந்து செல்லத் தீர்மானித்தான். கட்டளைக்குக் கீழ்ப்படிந்து சேனை அவ்விடத்தில் தங்கியவுடன், பரதன் சகோதரனான சத்ருக்னனைப் பார்த்து (பின்வருமாறு) கூறினான்— (1,2)

''தம்பி! நம்முடன் வந்திருக்கும் மனிதர்களோடும் வேடுவர்களோடும் இந்தக் காட்டின் எல்லாப் பகுதிகளிலும் (இராமனை), நீ உடனே தேடவேண்டும். ஆயிரக்கணக்கான உறவினர்களோடு வந்திருக்கும் குகன், அம்பு–வில்–கத்தி ஏந்தியவர்களாக இந்தக் காட்டில், இரு காகுத்தர்களையும் தானே முன் சென்று தேடுவானாக. அமைச்சர்கள், நகரமக்கள், ஆசார்யர்கள், அந்தணர்கள் முதலியோருடன் காடு முழுவதையும் நடந்து சென்று, நானும் தேடப் போகிறேன். இராமனையோ, லட்சுமணனையோ, பெரும் பாக்கியசாலியான சீதையையோ காணாத வரையில் என் மனம் அமைதி அடையாது. (3–6)

சந்திரன் போல் தண்ணொளி வீசும் பிரகாசமுடையவரும், தாமரையிதழ் போன்ற கண்களையுடைய அழகிய திருமுகத்தையுடையவருமான என் சகோதரரைக் காணாத வரையில், என் மனம் அமைதி அடையாது. அரச லட்சணங்களுள்ள தமையனாரின் திருவடிகளை, என் தலையால் தாங்காத வரையில் என் மனம் அமைதி அடையாது. ஆட்சி செலுத்தும் உரிமை பெற்ற அவர், பாட்டன்–முப்பாட்டன் காலத்திற்கு முன்பிருந்தே பரம்பரையாக வந்துள்ள அரசபீடத்தில், பட்டாபிஷேகப் புனித நீரால் நனைக்கப்பட்டவராக உட்காராத வரையில், என் மனம் அமைதி அடையாது. (7–9)

மாசற்ற சந்திரன் போல் ஒளிவீசுபவரும் தாமரைக்கண்ணரும் பேரொளி படைத்தவருமான இராமனுடைய திருமுகத்தை (நாள்தோறும்) தரிசிக்கும் லட்சுமணனன்றோ கொடுத்து வைத்தவன்? பூமண்டலம் முழுவதற்கும் உரிமையாளரான தன் கணவரைப் பின்தொடர்ந்து செல்லும் பேறுபெற்ற ஜனகன் புதல்வியான வைதேகி கொடுத்து வைத்தவர். நந்தனத்தில் குபேரன் வசிப்பதைப் போல, இந்தச் சித்திரகூட மலை இராமப்பிரபு தங்கியிருப்பதால் (மிகப் புனிதமான) இமயமலையையொத்த புனிதத்தைப் பெற்றுவிட்டது. ஆயுதமேந்தியவர்களில் சிறந்தவரும் மகா தேஜஸ்வியுமான இராமன் தங்கியிருப்பதால், கொடிய விலங்குகள் வசிப்பதும் உட்புக முடியாததுமான இந்த வனம் பெரும் புகழை அடைந்துவிட்டது.'' (10–13)

இவ்வாறு சொல்லிவிட்டு மிக்கபலம் பொருந்திய பெருந்தோளனும் புருஷோத்தமனுமான பரதன், அந்த அடர்ந்த காட்டிற்குள் நடந்து சென்றான். பேச்சுத்திறனுடைய பரதன்,

மலைச்சாரலில் கிளை நுனிகளில் மலர்களையுடைய ஏராளமான மரக்கூட்டத்தினிடையே புகுந்து சென்றான். சித்திரகூட மலையில் மலர்கள் நிறைந்த ஓர் ஆச்சா மரத்தில் ஏறி, இராமனுடைய குடிலிலிருந்து உயரே கிளம்பி வந்த புகையைக் கண்டான். (14–16)

அதைக் கண்டவுடன் தொண்டு செல்வனான பரதன், உறவினர்களிடம் கூறி, (தன் தேடலுக்கு வெற்றி கிடைத்துவிட்டதால்) பெருங்கடலின் அக்கரையை அடைந்துவிட்டதைப் போன்று, 'இராமன் இங்கேதான் இருக்கிறார்' என்று உறுதியாகத் தெரிந்து கொண்டு பெருமகிழ்ச்சி அடைந்தான். மகாத்மாவான அவன், புண்ணியாத்மாக்களான முனிவர்களுடன் இருக்கும் இராமசந்திரமூர்த்தியின் ஆசிரமம் அதுதான் என்று (காட்டு மக்களிடம் கேட்டு) உறுதி செய்து கொண்டு, படைகளை ஆங்காங்கே நிறுத்திவிட்டு, குகனுடன் வேகமாக (ஆசிரமத்தை நோக்கி) நடந்து சென்றான். (17,18)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
தொண்ணூற்றெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : தொண்ணூற்றொன்பது

இராமனைச் சந்தித்தல்

சேனை அந்த இடத்தில் தங்கியதும், சகோதரரைக் காண்பதில் ஆவல் மிக்கவனான பரதன், செல்லும் வழியிலுள்ள அடையாளங்களை சத்ருக்னனுக்கு விவரித்துக் கொண்டே சென்றான். தமையனாரிடம் பெரும் பாசம் கொண்ட பரதன், 'என் தாயார்களை விரைவில் தங்களுடன் அழைத்து வருக' என்று வசிஷ்டரிடம் தெரிவித்துவிட்டு, முன்னதாக அவன் வேகமாகச் சென்றான். சுமந்திரரும், சத்ருக்னனுக்கு அருகிலேயே பின்தொடர்ந்து சென்றார். இராமனைச் சந்திக்க வேண்டும் என்ற துடிப்பு, பரதனைப் போல அவருக்கும் இருந்தது. சென்று கொண்டிருக்கும்போதே, தவம் செய்வோர் வாசம் செய்யும் இடம் போல் நன்கு அமைக்கப்பட்ட, தமையனாரின் குடிலையும் பர்ணசாலையையும் பரதன் கண்டான். (1–4)

இலைகளால் வேயப்பட்ட அந்தக் குடிலின் முன்பு, வெட்டிப் போடப்பட்ட மரச்சுள்ளிகளையும், சேகரித்து வைக்கப்பட்ட மலர்களையும் பரதன் கண்டான். (சுள்ளிகள் ஹோமத்திற்காக; மலர்கள் தேவபூஜைக்காக.) இராம–லட்சுமணர்களுடைய ஆசிரமத்தை நெருங்கிக் கொண்டிருந்த பரதன், நடந்து செல்வதற்குப் பாதை அடையாளம் தெரிவதற்காக, ஆங்காங்கே மரக்கிளைகளில் தர்பக் கட்டுகளும் மரவுரிகளும் தொங்கவிடப்பட்டிருந்ததைக் கண்டான். அந்தக் காட்டில், குளிர் காய்வதற்காக (முன்னேற்பாடாகச் சேமித்து வைக்கப்பட்டிருந்த) மான்–எருமைகளின் சாண வரட்டிகளின் குவியல்களைக் கண்டான். இப்படி நடந்து போய்க் கொண்டிருக்கும்போதே பெருஞ்சோதியாளனும் பெருந்தோளனுமான பரதன், மனமகிழ்ச்சியுடன் சத்ருக்னனையும் அமைச்சர்கள் எல்லோரையும் பார்த்துக் கூறினான்— (5–8)

''பரத்வாஜர் கூறிய அந்த இடத்தை நாம் வந்தடைந்துவிட்டோம் எனக் கருதுகிறேன். இங்கிருந்து வெகுசமீபத்திலேயே மந்தாகினி நதி இருக்கிறது என்றும் எண்ணுகிறேன். வெளிச்சமில்லாத காலங்களில் காலால் நடந்து போய் வரும்போது பாதைப் புலப்படுவதற்காக மரங்களின் மேலே உள்ள மரவுரி அடையாளங்கள் இலக்குவனால் கட்டப்பட்டவைகளாக இருக்கக் கூடும். நீண்ட தந்தங்களையுடைய வேகமாகச் செல்லும் யானைகள் ஒன்றையொன்று பார்த்து (சினங்கொண்டு), கர்ஜித்துக் கொண்டு மலைச்சாரலில் நடந்து போகும் இடம் இது. (அவைகளிடமிருந்து விலகிச் செல்வதற்காகவே, பாதுகாப்பான பாதையைக் குறிப்பதற்காக, தகுந்த சின்னங்களை மரங்களின் உச்சியில் இலக்குவன் கட்டியிருக்கிறான் போலும்!) (9–11)

காட்டில் வசிக்கும் தவசிகள், எந்தக் காலத்திலும் அணையாமல் பாதுகாக்க விரும்பும் வேள்விக்குண்டத்திலுள்ள அக்னியின் புகைக்கூட்டம் இதோ காணப்படுகிறது. இந்த இடத்தில் மாபெரும் வீரரும், ஆசார்யர்களைக் கௌரவிப்பவரும், உயர் பண்பினரும், மாமுனிவர்போல் எப்போதும் ஆனந்தத்தில் திளைத்திருப்பவருமான இராகவனைத் தரிசிக்கப் போகிறேன்.'' பின்னர், ஒரு முகூர்த்த காலம் நடந்து சென்று சித்திரகூடத்தில் பாய்ந்தோடும் மந்தாகினியை அடைந்து, தன்னுடன் வந்திருப்பவர்களைப் பார்த்து ரகுகுல திலகமான பரதன் இவ்வாறு கூறினான்— (12–14)

''மன்னராக முடிசூட்டிக் கொண்டு சிம்மாசனத்தில் வீற்றிருந்து அரசு செலுத்த வேண்டிய புருஷோத்தமரான இராமன், மக்கள் நடமாட்டமில்லாத காட்டில் வெறுந்தரையில் (தவம் இயற்றுவோருக்குரிய நியமமான) வீராஸன நிலையில் அமர்ந்திருக்கிறார். (இந்தத் துன்பங்களுக்கெல்லாம் நானல்லவா, காரணம்?) நான் ஏன் பிறந்தேன்? இந்தக் கேடுகெட்ட வாழ்வு எனக்கு எதற்கு? மக்கள் தலைவரும் தேசு மிக்கவருமான இராகவன், என் பொருட்டு மகத்தான துன்பத்தை அடைந்து, எல்லாவிதச் சுகபோகங்களையும் துறந்து வனத்தில் வசிக்கிறார். 'மக்களால் நான் நிந்திக்கப்படுகிறேன்' என்று விண்ணப்பித்து, இராமசந்திரனை மனங்குளிரச் செய்து, அவருடைய திருவடிகளில் வீழ்ந்து பிரார்த்திப்பேன்; சீதையினுடைய மற்றும் (என் தம்பியாக இருந்தாலும் கைங்கர்ய ஸ்ரீமானான) லட்சுமணனுடைய பாதங்களில் பணிந்து வேண்டிக் கொள்வேன்.'' (15–17)

அந்தக் காட்டில் தசரத மைந்தனான பரதன், இவ்வாறு புலம்பிக் கொண்டிருக்கும்போதே, மனத்திற்கினியதும் மிகப்பெரியதும் புண்ணியம் தருவதுமான பர்ணசாலையைக் கண்டான். வேள்விச்சாலையில் வேதிகை(மேடை)யின் மீது தர்பங்களைப் பரப்பினாற்போல, ஆச்சா–பனை–அசுவகர்ணம் ஆகிய மரங்களின் அநேக இலைகளால் மூடப்பட்டதும், அதிக பரப்பளவுள்ளதுமான அந்தப் பர்ணசாலையின் தரையில் தர்பம் பரப்பப்பட்டிருந்தது. மிகக் கடினமான வேலைகளையும் செய்யவல்ல இந்திரனுடைய வில்லைப் போன்ற விற்கள் பல வைக்கப்பட்டிருந்தன. அவைகள் பொன்னால் இழைக்கப்பட்டிருந்தன. வெகு உறுதியாகவும், எதிரிகளை நசுக்கவல்லதாகவும், ஒளியுடன் திகழ்பவையாகவும் இருந்தன. (18–20)

அங்கிருந்த அம்புறாத்தூணிகளில் சூரிய கிரணங்களைப் போல் ஒளிவீசும் பயங்கரமான பாணங்கள் இருந்தன; ஒளி உமிழும் முகத்தையுடைய சர்ப்பங்களால் போகவதி நகரம் பிரகாசிப்பதைப் போல (அந்தப் பர்ணசாலை ஒளி வீசியது.) தங்க உறையில் வைக்கப்பட்ட இரண்டு கத்திகளாலும், பொன்மணிகள் பதிக்கப்பட்டு அழகுடன் விளங்கும் இரு கேடயங்களாலும் (அவ்விடம் பிரகாசித்தது.) கலைத்திறனோடு கூடிய பொன்வேலைப்பாடுகளால் அழகாக விளங்கும் கைவிரலைக் காப்பாற்றும் கொப்பிகள் இருந்தன. சிங்கத்தின் குகையை மான்கள் நெருங்க முடியாததைப் போல, அந்த ஆசிரமவளாகம், பகைவர் கூட்டங்களால் அணுக முடியாததாக இருந்தது. (21–23)

இராமன் தங்கியிருந்த அந்தக் குடிசையில் வடகிழக்கில் எரிந்து கொண்டிருந்த அக்னியுடன் கூடிய, விசாலமான, புனிதச் சடங்குகளுக்கான மேடையை பரதன் பார்த்தான். சிறிது நேரம் அங்கேயே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த பரதன், தன் மூத்த சகோதரர் இராமன், சடைமுடி தரித்தவராகப் பர்ணசாலையில் வீற்றிருப்பதைக் கண்டான். மான்தோல், மரப்பட்டை, மரவுரி அணிந்து கொண்டிருந்தார்; சிங்கத்தினுடையது போன்ற தோள்கள்; மாவீரர்; தாமரைக்கண்ணர்; பெரும் சமுத்திரத்தை எல்லையாகவுடைய இந்த மேதினியின் தலைவர்; அறநெறிப்படி நடப்பவர்; ஜொலிக்கும் அக்னியைப் போல் ஒளி வீசுபவர்; நெருங்க முடியாதவர்; நீண்ட புஜங்கள் உடையவர்; நிரந்தரமான பிரும்மதேவனைப் போன்றவர் – இப்படிப்பட்ட ஸ்ரீராமன், சீதையும் லட்சுமணனும் இருபுறங்களிலும் சேவித்து நிற்க, (தர்பப் புல் பரப்பப்பட்ட மண்தரையில்) அமர்ந்திருப்பதைக் கண்டான். (24–28)

தொலைவிலிருந்து அவரைக் கண்ணால் பார்த்ததும், துயரத்திலும் மனத்தடுமாற்றத்திலும் மூழ்கிய தருமாத்மாவும் கைகேயியின் மைந்தனுமான பரதன், அவர் இருந்த இடம் நோக்கி வேகமாக ஓடினான். (அவரைக்) கண்ணால் பார்த்ததுமே மனவேதனை தாங்காமல் கண்ணீர் பெருக்கினான்; துக்கம் தாங்க முடியாமல் தவித்தான். பின்னர் ஒருவாறு மனம் தேறி, கண்ணீர்விட்டுக் கொண்டு, குரல் தழுதழுக்க (பின்வருமாறு) கூறினான்— (29,30)

"அட! என் தமையனார் அரசவையில் வீற்றிருந்து நகரமக்கள், மந்திரிப் பிரதானிகள் போன்ற மதிப்புமிக்க மக்களால் போற்றி வணங்கத்தக்கவர்! (இப்போது) காட்டு விலங்குகளால் சூழப்பட்டவராக (தரையில்) அமர்ந்திருக்கிறார்! மகோன்னத மாமனிதரான எவர், எப்போதும் மதிப்புமிக்க ஏராளமான ஆடைகளை அணிந்து கொண்டிருந்தாரோ, அவர், தவம் செய்வோரின் நெறிமுறைகளை ஏற்றுக் கொண்டு இரண்டு மான்தோல் ஆடைகளை அணிந்து கொண்டிருக்கிறார். எந்த ஸ்ரீராமன், எப்போதும் பலவகையான அழகுமிக்க வாசம் மிகுந்த மலர்களைத் தலைமுடியில் அணிந்து கொண்டிருந்தாரோ, அவர் சுமைமிக்கதான இந்தச் சடாமுடியை எவ்வாறு தாங்கிக் கொண்டிருக்கிறார்? (31–33)

மலைமலையான புண்ணியக் குவியல்களைச் சாஸ்திர முறைப்படிச் செய்யப்படும் வேள்விகளால் (நாட்டில் இருந்தபடியே) சம்பாதித்துக் கொள்ளக்கூடிய இவர், உடலை வருத்திக் கொண்டு தருமத்தைத் தேடுகிறாரே? எவருடைய திருமேனி மிக்க மணம் வீசும் உயர்ந்த சந்தனத்தால் பூசப்படத்தக்கதோ, மரியாதைக்குரிய அவருடைய அந்தத் திருமேனி இப்போது (காற்றில் வரும்) தூசுகளால் பூசப்பட்டிருக்கிறதே? சுக–சௌக்கியங்களுக்கு உரியவரான ஸ்ரீராமன், என் காரணமாகத்தான் துக்கத்தை அடைந்திருக்கிறார். ஐயகோ! மக்களால் நிந்திக்கப்படும் கொடியவனான என் வாழ்க்கை பாழாகப் போகட்டும்." (34–36)

தாமரையன்ன முகத்தில் வியர்வை கொட்ட, மேற்கண்டவாறு புலம்பிக் கொண்டிருந்தவனும், மனம் வருந்தியவனுமான பரதன், ஸ்ரீராமனுடைய திருவடிகளைத் தொட்டு வணங்குவதற்கு முன்பே வாய்விட்டு அழுதவண்ணம் தரையில் வீழ்ந்தான். அரசகுமாரனும் மகாபலசாலியும் தாங்க முடியாத துக்கத்தால் தவித்தவனுமான பரதன், 'அண்ணா....' என்று ஒரு தடவை கூறினான். பின் (துக்கம் காரணமாக) மேற்கொண்டு எதுவும் பேச இயலாதவனானான். கண்ணீர் பெருக, தொண்டை அடைக்க, புகழ்மிக்க இராமனை நெருங்கியபோதும், 'அண்ணா!' என்று மட்டும் அழைத்தானே தவிர, மேலே எதுவும் பேச முடியாத நிலையில் இருந்தான். (37–39)

சத்ருக்னனும் கண்ணீர் பெருக்கியவாறே இராமனின் திருவடிகளில் வணங்கினான். அவ்விருவரையும் அணைத்துக் கொண்டு இராமனும் கண்ணீர் சொரிந்தார். அவ்வமயம், ஆகாயத்தில் சூரிய–சந்திரர்களை சுக்கிரனும் பிருகஸ்பதியும் வந்து பார்ப்பதைப் போல, சுமந்திரரும் குகனும் காட்டில் வசிக்கும் அரசகுமாரர்களை (இராம–லட்சுமணர்களை) அணுகி வந்து தரிசித்தார்கள். அரச யானைகளில், அம்பாரியில் அமர்ந்து அடர்ந்த காட்டில் வனயாத்திரை செய்யத்தக்கவர்களான அரசகுமாரர்கள், அங்கே ஒன்றுகூடியிருப்பதைக் கண்டு மட்டில்லாத மகிழ்ச்சி பெற வேண்டிய வனவாசிகள், இன்பத்தைத் துறந்து கண்ணீர் விட்டார்கள். (40–42)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
தொண்ணூற்றொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூறு

இராமன், பரதனிடம் கேள்விகள் கேட்பது

சடைமுடி தரித்து, மரவுரி அணிந்து, கைகளைக் கூப்பியவண்ணம் அடையாளம் கண்டு கொள்ள முடியாதபடி, யுகத்தின் முடிவில் பூமியில் விழுந்து கிடக்கும் சூரியனைப்போல்

தரையில் விழுந்து கிடந்தவனை இராமன் பார்த்தார். முகம் ஒளியிழந்து, உடல் இளைத்துக் காணப்பட்ட சகோதரன் பரதனை, ஸ்ரீராமன் ஒருவாறாக அடையாளம் கண்டு கொண்டு, தன் கைகளால் ஆலிங்கனம் செய்து கொண்டார். ரகுகுல நாயகரான இராமன், பரதனைக் கட்டி அணைத்தவாறே மடியிலிருத்திக் கொண்டு, உச்சிமுகர்ந்து மிகுந்த பாசத்துடன் (பின்வருமாறு) வினவினார்— (1–3)

''குழந்தாய்! நீ காட்டிற்கு வந்திருக்கிறாயே? அப்படியானால், நமது தந்தை எங்கே இருக்கிறார்? ஏனென்றால், அவர் உயிருடன் இருக்கும்போது (அவருக்குப் பணிவிடை செய்வதை விட்டுவிட்டு), நீ காட்டிற்கு வரக்கூடாதே? நான், வெகுகாலத்திற்குப்பின் வெகுதூரத்திலிருந்து (கேகய நாட்டிலிருந்து) உட்புக முடியாத இந்த வனத்திற்கு வந்திருக்கும் பரதனை (உன்னை)ப் பார்க்கிறேன். குழந்தாய்! (இவ்வளவு கஷ்டங்களைச் சகித்துக் கொண்டு) நீ ஏன் காட்டிற்கு வந்தாய்? தம்பி! நீ இங்கே வந்திருக்கிறாய் என்பதால் மன்னர் (என்னைப் பிரிந்த பின்னர்) மனோதைரியத்துடன் இருக்கிறார் (என்றே நினைக்கிறேன்). எதிர்பாராதவிதமாக (நான், சீதை, லட்சுமணன் காட்டிற்கு அனுப்பப்பட்டுவிட்ட) துன்பத்தைத் தாங்க முடியாமல் வானுலகம் சென்றுவிடவில்லையே? (4–6)

அன்புடையவனே! நீ இன்னும் சிறுவனாக இருப்பதால் பரம்பரையாக வந்த பேரரசு உன் கைநழுவிப் போய்விடவில்லையே? (பகைவர்கள் அபகரித்துக் கொண்டுவிடவில்லையே?) குழந்தாய்! சத்தியப் பேராற்றல் கொண்ட தந்தையாருக்கு, நீ சேவை செய்து வருகிறாயல்லவா? ராஜசூயம், அசுவமேதம் முதலிய மாபெரும் வேள்விகளை முறைப்படிச் செய்து முடித்தவரும், தருமத்தில் உறுதியாக நிற்பவரும், சொன்ன சொல் தவறாதவருமான தசரத மன்னர் சௌக்கியமாக இருக்கிறாரா? செல்வனே! வேதவித்தகர், பிரும்மஞானி, எந்த நிலையிலும் தருமம் தவறாதவர், தவ ஒளி திகழ்பவர், இக்ஷ்வாகு பரம்பரையின் ஆசார்யர் (வசிஷ்டர்) முறைப்படிக் கௌரவிக்கப்படுகிறாரா? (7–9)

தம்பி! கௌசல்யையும், நற்புதல்வர்களைப் பெற்ற சுமித்திரையும் சுகமாக இருக்கிறார்களா? உத்தமியான கைகேயி அம்மையார் சந்தோஷத்துடன் இருக்கிறாரா? பணிவுமிக்கவர், நற்குலத்தில் தோன்றியவர், பல நூல்களைக் கற்றும் கேட்டும் அறிந்தவர், பொறாமையற்றவர், முக்காலங்களையும் அறிந்தவர் – இப்படிப்பட்ட உன் (நமது) புரோகிதரான (சுயக்ஞர்) அவரை, நீ மதிப்புடன் நடத்துகிறாயா? மூன்று அக்னிகளையும் பொறுப்புடன் கவனிப்பதற்காக, நீ நியமித்துள்ள வேள்வி நெறிமுறை, நூல் அறிவு, நேர்மை கொண்ட அந்தணர் சரியான காலத்தில் செய்யப்பட்ட ஆகுதி, செய்யப்படவேண்டிய ஆகுதிகள் பற்றி, உனக்குத் தெரிவிக்கிறாரா? (10–12)

குழந்தாய்! தேவதைகள், பிதிரர்கள், வேலைக்காரர்கள், ஆசார்யர்கள், தந்தை போல் போற்றத்தக்க வயோதிகர்கள், மருத்துவர்கள் மற்றும் அந்தணர்களை உரிய முறையில் கௌரவப்படுத்துகிறாயல்லவா? பாணப் பிரயோகம், அஸ்திரப் பிரயோகம் பற்றி முழுமையான அறிவு படைத்தவரும், அரச நீதி வல்லுநருமான சுதன்வா என்னும் ஆசார்யரை, நீ மேன்மைப் படுத்துகிறாயல்லவா? செல்வமே! தனக்கு நிகரான வீரமும் சாஸ்திர அறிவும் உடையவர்கள், புலன்களை வென்றவர்கள், நற்குடியில் தோன்றியவர்கள், உன்னுடைய மெய்ப்பாடுகளைப் பார்த்தே உன் மனத்தில் ஓடும் எண்ணத்தை அறியும் நுட்பத்திறன் உடையவர்கள் – இப்படிப்பட்டவர்களை அமைச்சர்களாக அமர்த்தியிருக்கிறாயா? (13–15)

பரதனே! (மன்னர்,) அமைச்சர்களுடன் கலந்து ஆலோசிக்கப்படும் ஆலோசனைகள்தாம் எடுத்தக் காரியங்களில் வெற்றியின் அடிப்படை. அதுவும்கூட, ஆலோசனை சொல்வதில் நிபுணர்களும், அரசநீதி பற்றி நன்குணர்ந்தவர்களுமான மந்திரிகளால் ஆலோசனை முடிவுகள் ரகசியமாகக் காப்பாற்றப்பட வேண்டும். நீ, எப்போதும் தூங்கிக் கொண்டே காலத்தைக்

கழிக்கவில்லையல்லவா? விடியற்காலைப்பொழுதில் கண்விழிக்கிறாய்தானே? பின்னிரவு வேளைகளில், செல்வம் சேர்ப்பதைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்கிறாயா? (16,17)

நீ, தனி ஒருவனாகச் சிந்தித்து முடிவு எடுக்காமல் இருக்கிறாயா? ஏராளமானவர்களை வைத்துக் கொண்டு முக்கிய முடிவுகள் எடுக்காமல் இருக்கிறாயா? உன்னால் தக்க ஆலோசகர்களுடன் கலந்து ஆலோசிக்கப்பட்ட முடிவுகள், நாட்டில் உரிய காலத்திற்கு முன் கசிந்துவிடாமல் இருக்கிறதா? (திட்டங்களின் ரகசியம் பாதுகாக்கப்படுகிறதா?) பரதா! எளிய முறையில் ஆரம்பிக்கப்பட்டு பெரும் பயனைத் தரக்கூடிய செயல்களை நிச்சயித்தபின், உடனே செயல்படுத்துகிறாயா? காலதாமதம் செய்யவில்லையல்லவா? உன்னுடைய செயல்திட்டங்கள் முற்றிலும் நிறைவேறியபின் அல்லது நிறைவேறும் தறுவாயில் இருக்கும்போது மட்டுமே பிற மன்னர்களும் தெரிந்து கொள்ளவேண்டும். அப்படித்தானே நடக்கிறது? அல்லது நீ ரகசியமாகத் திட்டமிட்டுள்ள செயல்களை, அவர்கள் முன்பாகவே அறிந்து கொள்கிறார்களா? (18–20)

குழந்தாய்! ஆலோசனைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் நீயோ அல்லது ஆலோசனையில் கலந்து கொண்ட அமைச்சர்களோ வெளியிடாதிருக்கும் நிலையில், (வெளியில் உள்ளவர்கள் உங்கள் முகக்குறி போன்றவைகளைப் பார்த்து) தர்க்கத்தாலும் யுக்தியாலும் (ஊகம்–அனுமானங்களால்) அறிந்து கொள்ளாமல் இருக்கிறார்களா? (எந்த முடிவு எடுக்கப்பட்டிருந்தாலும், முகத்தில் எவ்விதச் சலனமும் காட்டாமல் இருக்கிறீர்களா?) அறிவில்லாத பலரைக் காட்டிலும், புத்திகூர்மையுடைய ஒருவரை அருகில் வைத்துக் கொள்ள விரும்புகிறாய் தானே? ஒரு காரியத்தைச் செய்யும்போது ஏற்படும் இடுக்கண்களை, ஒரு புத்திசாலியால்தான் களைய முடியும். (21,22)

ஒரு மன்னர் அறிவில்லாத ஆயிரம், பதினாயிரம் பேர்களைத் தன் அருகில் (கஷ்ட காலத்தில் நமக்குத் துணையாக இருப்பார்கள் என்று எண்ணி) வைத்துக் கொண்டால், அவசியமான நேரத்தில் அவர்களிடமிருந்து எவ்வித உதவியும் கிடைக்காது. பேரறிவாளனும், சூரனும், செயல்திறன் உடையவனும், அரசு நிர்வாக நிபுணனுமான ஒரேயொரு மந்திரி இருந்தால் போதும், அவனால் அரசனுக்கும் அரசுப் பொறுப்பில் உள்ளவர்களுக்கும் பெரும்புகழ் ஏற்படும். குழந்தாய்! அரசுப் பணியாளர்களில் முக்கியப் பிரமுகர்களைப் பெரிய வேலைகளிலும், நடுத்தரமான மனிதர்களை நடுத்தர வேலைகளிலும், சாமானியர்களைச் சாமானிய வேலைகளிலும் ஈடுபடுத்துகிறாயல்லவா? (23–25)

தருமம்–அர்த்த–காமங்களில் சோதனை செய்து தேறியவர்கள், பாட்டனார்–தந்தையார் காலத்திலிருந்து பணி செய்பவர்கள், அகத்தூய்மை உடையவர்கள், குணசாலிகள் – இப்படிப்பட்டவர்களை உயர்ந்த பணிகளைச் செய்வதற்கு நியமிக்கிறாயல்லவா? கைகேயியின் மைந்தனே! குற்றத்திற்குப் பொருந்தாத கடுமையான தண்டனையைப் பெற்று குடிமக்கள் அமைச்சர்களிடம் முறையிட, அவர்கள் உன்னைத் தடுக்கும்படி வைத்துக் கொள்ளாமல் இருக்கிறாயா? (26,27)

தவறான வழிகளில் பொருள் சேர்த்து, யாகம் செய்ய விரும்புகிறவனை ரித்விக்குகள் எவ்வாறு ஒதுக்குவார்களோ, நற்குலப் பெண்மணிகள், தங்களைக் காம இச்சையுடன் அணுகிவரும் ஆண்களை எப்படி அவமதிப்பார்களோ, அதுபோல குடிமக்களைத் துன்புறுத்தி, அவர்கள் செல்வத்தைப் பறித்துக் கொள்பவனாய் உன்னிடம் குற்றம் கண்டு குடிமக்கள் உன்னை அவமதிக்காமல் இருக்கிறார்களா? (28)

(ஸாம–தான–பேத–தண்டம் என்ற) உபாயங்களைப் பிரயோகிப்பதில் வல்லவனும், பிறரை வஞ்சிக்கும் முறைகளைக் கூறும் நூல்களைக் கற்றவனும், அரசனுக்கு அந்தரங்கமான பணியாளர்கள் மேல் பழி சுமத்துபவனும், மன்னனுக்கு இன்னல் விளைவிப்பதில் சூரனும், அரசாட்சியைக் கைப்பற்றும் தீய விருப்பம் உடையவனுமான ஒருவனைக் கொல்லாமல் விட்டால், அந்த அரசனே (அந்தக் கயவனால்) சிறைப்படுத்தப்படுவான். (29)

எப்போதும் மனநிறைவுடன் இருப்பவனும், சூர–வீரனும், அறிவுள்ளவனும், நற்குடித் தோன்றலும், உன்னிடத்தில் விசுவாசம் உள்ளவனும், காரியங்களைச் செய்வதில் திறமையுள்ளவனுமான ஒருவனைப் படைத்தலைவனாக நியமித்திருக்கிறாயா? உன்னுடைய முக்கியமான படைத்தலைவர்கள் பலசாலிகளாகவும், போர்க்கலை வல்லுநர்களாகவும், பராக்கிரமம் மிக்கவர்களாகவும் இருக்கிறார்களா? அவர்களுடைய திறமையை அவ்வப்போது சோதித்துப் பார்த்திருக்கிறாயா? அவர்களில் சிறந்து விளங்குபவர்கள் தத்தம் திறமைக்கேற்றபடி, உன்னால் வெகுமதிக்கப்பட்டிருக்கிறார்களா? (30,31)

படைவீரர்களுக்குக் கொடுக்க வேண்டிய சம்பளத்தையும் உணவையும் அவரவர்களுக்குத் தக்கபடி, அந்தந்தக் காலங்களில் கொடுத்துவிடுகிறாயா? காலம் தாழ்த்திக் கொடுக்கவில்லை அல்லவா? இவைகளை உரிய காலத்தில் கொடுத்தால்தான் அவர்கள் மகிழ்ச்சியுடன் இருப்பார்கள்; தாமதமானால் மனச்சலிப்பு அடைவார்கள்; தலைவனிடம் கோபம் கொண்டு நம்பிக்கை இழந்துவிடுவார்கள். இதுவே பெரிய அனர்த்தத்தில் கொண்டு போய்விடும். அரசகுலத்தில் தோன்றிய பிரமுகர்கள் எல்லோரும் உன்னிடம் அன்புடையவர்களாகவும், உனக்காக எந்தச் சந்தர்ப்பத்திலும் தம் உயிரை விடவும் துணிச்சல் உடையவர்களாகவும் இருக்கிறார்களா? (32–34)

பரதனே! நீ, ராஜதூதர் என்ற பொறுப்பில் யாரை நியமித்திருக்கிறாயோ, அவர் உன் நாட்டில் பிறந்தவர்தானே? பிறருடைய எண்ணங்களை அறியக் கூடியவராகவும், செயல்களைச் செய்வதில் சாமர்த்தியம் உடையவராகவும், சமயத்திற்குத் தக்கபடி பதில் சொல்லக் கூடியவராகவும், நீ சொல்லியனுப்பியதை நீ சொன்னபடியே சொல்பவராகவும், அவர் சொல்லியதைச் சொன்னபடியே உன்னிடம் தெரிவிப்பவராகவும், நல்லது–கெட்டது என்ற விவேகம் உடையவராகவும் இருக்கிறாரல்லவா? (35)

பிற மன்னருடைய நாட்டிலுள்ள பதினெட்டு வகை அரசுப் பணியாளர்களையும், உன் நாட்டில் பதினைந்து வகையான பொறுப்பிலுள்ள பணியாளர்களையும், அவர்கள் அறியாவண்ணம் ஒருவன் மும்மூன்று பேர்களைக் கண்காணிக்கும்படி வேவுகாரர்களைக் கொண்டு உண்மை நிலவரத்தை அறிந்துகொள்கிறாயல்லவா? (தன் நாட்டில் அமைச்சர், புரோகிதர், இளைய மன்னர் ஆகிய மூவரும் தன்னருகிலேயே இருப்பதால், அவர்கள் அந்தரங்கத்தை ஒற்றர்கள் மூலம் சோதித்துப் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை.

மீதமுள்ள பதினைந்து வகையான பணிகள் பின்வருமாறு கூறப்பட்டுள்ளன:– படைத்தலைவன், நகரவாயில் காப்போன், அந்தப்புரத் தலைவன், சிறைச்சாலை அதிகாரி, கருவூலத்தலைவன், அவசியமான செலவுக்குத் தக்கபடிப் பொருளைப் பகிர்ந்து கொடுக்கும் அமைச்சர், காவலாளர் களுக்குப் பணி நிர்ணயம் செய்பவன், நகர பாதுகாவலன், கட்டிடத் தொழிலாளர்களை மேற்பார்வை இடுபவன், தீர்வைப் பொருள் திரட்டிக் கொண்டு வந்து கொடுப்பவர்களுக்குத் தலைவன், அவைத்தலைவன், குற்றவாளிகளின் தண்டனையை நிறைவேற்றுபவன், கோட்டைக் காவலன், நாட்டின் நாற்புற எல்லைக் காவலன், வனக்காவலன்.) (36)

எதிரிகளை அடக்குபவனே! நாட்டிற்குத் தீங்கு செய்பவர்களை நாட்டை விட்டுத் துரத்துவது ஒரு தண்டனை. அப்படித் தண்டிக்கப்பட்டவர்களில் சிலர் திரும்பி வந்திருக்கக்கூடும். அவர்களை 'சக்தி இழந்தவர்கள்' என்று எண்ணி அலட்சியப்படுத்தக் கூடாது. எப்போதும் அவர்களைக் கண்காணித்துக் கொண்டே இருக்கிறாயல்லவா? செல்வமே! முறைப்படி வேதம் பயிலாத, பகவத் பக்தி இல்லாத, நாத்திக (வைதிக நெறிகளுக்குப் புறம்பான வழிகளில் செல்கிற) அந்தணர்களுடன் சேராமல் இருக்கிறாயா? ஏனென்றால், தங்களுக்கு எல்லாம் தெரியும் என்று கருதிக் கொண்டிருக்கும் இந்த அறிவிலிகள் தீமை விளைவிப்பதில் சாமர்த்தியமுள்ளவர்கள். உயர்ந்த கருத்துக்களைப் போதிக்கும் தரும சாஸ்திரங்கள் இருக்கும்போது, மேற்சொன்ன அற்ப புத்தியுள்ள பண்டிதர்கள், வெறும் தர்க்கவாதங்களையே முன்வைத்து, இக–பர சுகங்களுக்குப் பயன்படாத விஷயங்களையே பேசுவார்கள். (37–39)

குழந்தாய்! அயோத்தி நகரம், இதற்கு முன்னர் மாவீரர்களான நமது முன்னோர்களால் வசிக்கப்பட்டது; பெயருக்கேற்றபடிப் பிறரால் வெற்றி கொள்ள முடியாதது; உறுதியான நகர வாயில்களை உடையது; யானை–குதிரை–தேர்கள் நிரம்பியது; எப்போதும் தத்தம் கடமைகளைச் செய்வதில் பற்றுடையவர்களும் புலனடக்கமுடையவர்களும் பேரார்வம் உடையவர்களுமான உத்தம அந்தண–அரச–வணிகர்கள் ஆயிரக்கணக்கில் வசிக்கப்படுவது; பெரியதும்–சிறியதுமான கோவில்களையும் அரண்மனைகளையும் உடையது; எல்லாக் கலைகளிலும் தேர்ந்தவர்கள் விரும்பி வரும் நகரமானது – இப்படிப்பட்ட மனமகிழ்ச்சியுடன் இருக்கும் மக்களைக் கொண்டதும், வளமிக்கதுமான அயோத்தியைக் கவனமாகப் பாதுகாத்து வருகிறாயல்லவா? (40–42)

எல்லாச் சௌகரியங்களும் கிடைப்பதால் மனநிறைவுடன் வசிக்கும் மக்கள் நிரம்பியது; நூற்றுக்கணக்கான யாகசாலைகள், தேவாலயங்களைக் கொண்டது; தண்ணீர்ப் பஞ்சம் ஏற்படாதபடி நீர்நிலைகளும், வழிப்போக்கர்கள் தாகம் தீர்த்துக் கொள்ள தண்ணீர்ப் பந்தல்களும் உடைய நமது நாடு, சுக–சௌக்கிய ஏற்பாடுகளுடன் செழிப்பாக விளங்குகிறதல்லவா? (43)

பரதனே! மனத்திருப்தி கொண்ட ஆண்–பெண்கள்; அவ்வப்போது நடைபெறும் பொதுமக்கள் பங்கு கொள்ளும் திருவிழாக்களின் சோபை; நீர்ப்பாசனம் தங்குதடையில்லாமல் கிடைப்பதால் வயல்வெளிகளில் இடைவிடாத உழவுவேலை; திருட்டுப் பயம் போன்ற தொல்லைகள் இல்லாதது; அழகானது; ஆற்றுப்பாய்ச்சல் உள்ளது; கொடிய விலங்குகள் இல்லாதது; எந்தவிதமான அச்சங்களுக்கும் இடமளிக்காதது; (தங்கச்) சுரங்கங்கள் உடையது; பாவம் செய்யும் மக்கள் இல்லாதது; என் முன்னோர்களால் நன்கு பரிபாலிக்கப்பட்டதும், வளமிக்கதுமான நமது நாடு (கோசலம்) மக்களுக்குத் திருப்தி அளிப்பதாக இருந்து வருகிறதல்லவா? (44–46)

விவசாயம் செய்பவர்கள், பசுக்களை (ஆடு–மாடுகளை)ப் பராமரித்து வாழ்க்கை நடத்துபவர்கள் – இவர்கள் உன்னிடம் அன்புடன் இருக்கிறார்களா? குழந்தாய்! வாணிபம் செய்யும் வர்த்தக மக்கள் சுகமாக வாழ்கிறார்களா? (அரசாங்கத்திலிருந்து அவர்களுக்குப் பாதுகாப்புக் கிடைக்கிறதல்லவா?) மன்னனின் ஆட்சிக்குட்பட்ட மக்கள் எல்லோருமே நீதி முறைப்படிப் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள்தாம். அதனால், மேற்சொன்ன வர்த்தகர்களுக்கு வாணிபம் செய்வதற்கு உதவியாகப் பொருள் உதவுதல், தீர்வைகளைத் தள்ளுபடி செய்தல் போன்ற உதவிகளை, நீ செய்துவருகிறாயல்லவா? (47,48)

உன்னைச் சார்ந்திருக்கும் பெண்களைத் திருப்தியுடன் வைத்திருக்கிறாயா? அவர்கள் பிற ஆண்களுடன் உல்லாசமாகப் பேசாமலும், அவர்கள் தூய்மைக்குக் கேடு விளையாதபடியும் கவனமாகப் பாதுகாக்கிறாயா? அவர்களை முற்றிலுமாக நம்பாமல் இருக்கிறாயா? ரகசிய விஷயங்களை அவர்களிடம் சொல்லாமலிருக்கிறாயா? (49)

(யானைகள் பிறந்து, வளர்ந்து, நடமாடும் காடு, பிற மன்னர்கள் கண்ணில்படாமல் இருக்கிறதா?) யானைகளைப் பிடித்துப் பழக்கும் இடம் ரகசியமாக வைக்கப்பட்டிருக்கிறதா? (யானைகளின் எண்ணிக்கை குறைந்துவிட்டால் யானைப்படை பலமிழந்துவிடும்.) தேவையான எண்ணிக்கையில் பெண்யானைகள் உன்னிடம் இருக்கின்றனவா? (பெண்யானைகள் மூலமாகத்தான் ஆண்யானைகளைப் பிடிக்க முடியும்.) ஆண்யானை, பெண்யானை, குதிரைகள் விஷயத்தில், 'இவ்வளவு போதும்' என்று திருப்தியடையாமல் இருக்கிறாயா? (நாட்டின் பாதுகாப்பிற்கு யானைப் படையும், குதிரைப் படையும் மிக அவசியம். எனவே, அவைகளின் எண்ணிக்கையைப் பெருக்கிக் கொண்டே இருக்கவேண்டும்.) (50)

மன்னர் மைந்தனே! விடியற்காலை வேளையில் எழுந்து, அரசருக்குரிய ஆடை–ஆபரணங்கள் அணிந்து கொண்டு ராஜபாட்டையில் ஆங்காங்கே எழுந்தருளி, நாள்தோறும் குடிமக்களின் கண்களில் படுகிறாயா? (அவ்வப்போது மக்கள் பார்வையில் படாவிட்டால், 'அரசனுக்கு உடல் நலமில்லை' என்றெல்லாம் கதையைப் பரப்பிவிடுவார்கள்.) வெகுசுலபமாக, உன் வேலைக்காரர்கள்

உன்னை நெருங்கிப் பார்க்க முடியாமல் வைத்திருக்கிறாயா? (எளிதாகப் பார்க்கும் உரிமையைக் கொடுத்தால் மரியாதையைக் குறைத்து விடுவார்கள்.) அதுபோல, உன்னைப் பார்க்க முடியாமலும் இருக்கக்கூடாது. இரண்டிற்கும் நடுவான ஒரு நிலையை அனுசரிக்கவேண்டும். (51,52)

உன் கோட்டைகளில் எல்லாம், தனம், தானியம், ஆயுதம், தண்ணீர், யந்திரங்கள், கட்டுமான தொழிலாளர்கள், வில்லாளிகள் – இவை நிறைந்திருக்கின்றனவா? பரதா! உன் அரசாங்க வரவு அதிகமாகவும் செலவு குறைவாகவும் இருக்கிறதா? உன்னுடைய செல்வம் தகாதவர்களிடம் போகாமலிருக்கிறதா? தெய்வம், முன்னோர், அந்தணர், விருந்தினர், போர் வீரர்கள், நட்புக் குழுவினர் – இப்படிப்பட்டவர்களுக்கு (அவர்களைப் போற்றிக் கௌரவிக்கும் வகையில்) ஏராளமாகச் செலவு செய்கிறாயல்லவா? உன் ராஜ்யத்தில் தூய இயல்புடைய உத்தமன் எவனாவது, பேராசைமிக்க ஒருவனால் திடீரென்று திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டு, நீதி சாஸ்திரம் அறிந்தவர்களால் விசாரிக்கப்படாமலே தண்டிக்கப்படுகிறானா? (53–56)

புருஷோத்தமா! ஒருவன் திருடும் காலத்திலேயே தக்கச் சான்றுகளுடன் கண்டுபிடிக்கப் பட்டு, நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு, குற்றவாளி என்று தீர்ப்பு அளிக்கப்பட்டவன், பொருளாசையால் (அதிகாரிகளுக்குக் கையூட்டுக் கொடுப்பது, தான் திருடிய பொருள்களைத் திருப்பிக் கொடுத்துவிடுவது போன்ற அநீதியான செயல்கள் காரணமாக) விடுவிக்கப்படாமல் இருக்கிறானா? பரதனே! ஒரு செல்வந்தனுக்கும், ஓர் ஏழைக்குமிடையே வழக்கு விசாரிக்கப்படும்போது, நீதி நூல் வல்லுநர்களும் உன் நலனில் அக்கறையும் உள்ள அமைச்சர்கள் ஒருசார்பாகத் தீர்ப்பளிக்காமல் இருக்கிறார்களா? (57,58)

பரதா! குற்றம் செய்யாதவர்கள் தவறாகத் தண்டிக்கப்பட்டால், அவர்கள் கண்களிலிருந்து சிந்தும் கண்ணீர், தன் சுகத்தையே பெரிதாகக் கருதி ஆட்சி செய்பவனுடைய புதல்வர்களையும் பசுக்களையும் (செல்வத்தையும்) அழித்துவிடும். வயோதிகர்களையும் சிறுவர்களையும் சிறந்த மருத்துவர்களையும் வெகுமானத்தாலும் மனப்பூர்வமான நட்பினாலும் புகழ்ந்து பேசுவதாலும் உன்வசத்தில் வைத்திருக்கிறாயல்லவா? ஆசார்யர்களையும், முதியவர்களையும், தவம் செய்பவர்களையும், தேவதைகளையும், அதிதிகளையும், தெய்வம் வசிக்கும் (அரசு, வேம்பு போன்ற) மாபெரும் மரங்களையும், யோக மகிமையால் இவ்வுலக பந்தத்திலிருந்து விடுபட்ட பெரியோர்களையும், அந்தணர்களையும் வணங்குகிறாயல்லவா? (59–61)

தருமத்தைச் சம்பாதிக்க வேண்டிய காலத்தில் தருமத்தைச் செய்ய வேண்டும்; செல்வம் வாழ்க்கைக்கு அவசியமானதால், அதனையும் உரிய முறையிலும், உரிய காலத்திலும் சேர்க்க வேண்டும். அதேபோல் நீ, காம சுகத்திற்கு என்று விதிக்கப்பட்டுள்ள காலங்களில் மட்டுமே சிற்றின்பத்தில் ஈடுபட வேண்டும். தரும–அர்த்தங்களை மறந்து காமத்திலேயே இச்சை கொண்டு, அதிலேயே ஈடுபடாமல் இருக்கிறாயா? வெற்றி வீரர்களில் சிறந்தவனே! காலத்தின் அருமையை அறிந்தவனே! பிறர் வேண்டிக் கேட்கும் உதவிகளைச் செய்பவனே! காலத்தைப் பங்கிட்டு தரும–அர்த்த–காமங்களுக்கான கால விகிதப்படி எல்லாவற்றையும் அனுபவிக்கிறாயல்லவா? உன் தேசத்திலுள்ள, அனைத்து அறநூல்களிலும் வல்லவர்களான பிராமணர்களும் பட்டணத்து மக்களும் நாட்டுப்புறங்களில் வசிப்பவர்களும், உன் நலனைக் கோரி பிரார்த்தனை செய்கிறார்களல்லவா? (62–64)

நாத்திகம் பேசுதல், பொய் கூறுதல், அவசியமில்லாதபோது கோபம், தவறுதல், காரியங்களை விரைவில் செய்து முடிக்காமல் நீட்டித்துக் கொண்டே போவது, ஞானம் மிக்கவர்களான மகான்களைத் தரிசிக்காமல் இருப்பது, சோம்பேறித்தனம், புலன்களிடம் வசப்பட்டிருப்பது, அரசாங்க விஷயங்களைத் தான் ஒருவனாகவே ஆலோசிப்பது, விபரீதமான சிந்தனையுடையவர்களுடன் கலந்தாலோசிப்பது, மந்திராலோசனையில் தீர்மானிக்கப்பட்டவைகளைத் தொடங்காமலிருப்பது, ஆலோசித்து எடுக்கப்பட்ட முடிவுகளைப் பிறர் அறியாமல் காப்பாற்ற முடியாமை, மங்களமான

காரியங்களைச் செய்யாமலிருப்பது, எல்லாப் பகைவர்களுடனும் ஒரே நேரத்தில் போரைத் தொடங்குவது – இந்தப் பதிநான்கு குற்றங்களையும் நீ விலக்கி இருக்கிறாயா? (65–67)

ரகுவம்ச திலகமான பரதனே! மகாபுத்திசாலியே! †பத்து–ஐந்து–நான்கு வர்க்கங்களையும், ஏழு வர்க்கங்களையும், எட்டு வர்க்கங்களையும், மூன்று வர்க்கங்களையும், மூன்று வகையான கல்வியையும், ஐம்புலன்களை அடக்குதலையும், ஆறு வகையான குணங்களையும், இயற்கையால் ஏற்படும் துன்பங்களையும், மனிதர்களால் உண்டாகும் துன்பங்களையும், தன் பகைவரிடம் கோபம் கொண்டு விலகிவிட்டவர்களைத் தன்பக்கம் இழுத்துக் கொள்வதையும், இருபது வர்க்கங்களையும், பிரகிருதிமண்டலங்களையும், யாத்ரா (எதிரியின் மேல் படையெடுப்பது), தண்டவிதானம் (படைகளை பலவித வியூகங்களாக அமைப்பது) என்பனவற்றையும், இரண்டு வகையான ஸந்தி (நட்புறவு)–விக்ரகம் (நட்பைக் குலைப்பது) – இவைகளையெல்லாம் நன்றாக ஆராய்ந்து நல்லவைகளை ஏற்று, தீயவழிகளைத் தவிர்த்து உரிய காலத்தில் தகுந்த நடவடிக்கை எடுக்கிறாயல்லவா? (68–70)

அரசநீதியின்படி அரசாங்க செயல்பாடுகளை மூன்று அல்லது நான்கு மந்திரிகளுடன் ஒன்றாகவும், பின் தனித்தனியாகவும் ஆலோசனைகளைச் செய்கின்றாயா? நீ அத்யயனம்

---

† (மேலே, சூசகமாகக் கூறப்பட்ட வர்க்கங்கள் – செயல் மற்றும் குணத்தின் தொகுதிகள் பற்றிப் பண்டைக்கால பாஷ்யக்காரர்கள் வெவ்வேறுவிதமாக விளக்கியிருக்கிறார்கள்; பல இடங்களில் ஒத்துப் போயும் இருக்கிறார்கள். சில விளக்கங்களை இங்கே காணலாம்—

1. பத்து வர்க்கம்: வேட்டை, சூதாட்டம், பகலில் தூங்குவது, பிறரை நிந்திப்பது, பெண்களிடம் காமப்பற்றுடன் ஒட்டிக்கொள்வது, மதுபானம், நாட்டியம், பாட்டு, தாளவாத்தியம் – இவைகளில் மூழ்கிப் போவது, நோக்கமில்லாமல் ஊர் சுற்றுதல்.

2. ஐந்து வர்க்கம்: நீர் அரண் (அகழி), மலையரண், மரவரண் (உட்புகமுடியாத மரங்களடர்ந்த காடுகளை நாட்டைச் சுற்றிலும் வளர்ப்பது), பாலைவன அரண், மணல் அரண் (கோடை நாட்களில் இவைகளைத் தாண்டி வருவது அசாத்தியம்.)

3. நான்கு வர்க்கம்: ஸாமம், பேதம், தானம், தண்டம்.

4. ஏழு வர்க்கம்: மன்னர், அமைச்சர், நாடு, கோட்டை, கருவூலம், படை, நண்பர்.

5. எட்டு வர்க்கம்: கோள் சொல்வது, பிடிவாதம், வஞ்சனை, பொறாமை, எல்லாவற்றிலும் குற்றம் காண்பது, செல்வத்தைத் தீயவழியில் செலவழிப்பது, கடுமையான பேச்சு, சாதாரண குற்றங்களுக்குக் கொடிய தண்டனை அளிப்பது – இவை எட்டும் தீயகுணத்தின் வெளிப்பாடுகளாதலால் மன்னனால் விலக்கத்தக்கவை. இதேபோல் நல்ல குணத்தின் வெளிப்பாடுகளாக எட்டுச் செயல்களையும் சில பண்டிதர்கள் கூறுகிறார்கள். அவையாவன:– பயிர்த் தொழிலை மேன்மைப்படுத்துவது, வாணிபத்தைப் பெருக்குவது, ஆங்காங்கே கோட்டைகள் கட்டுவது, நதிநீர் சேமிப்பிற்காக அணைகள் கட்டுவது, காட்டிலிருந்து யானைகளைப் பிடித்துக் கொண்டு வருவது, சுரங்கம் வெட்டுவது, சிற்றரசர்களிடமிருந்து கப்பம் வாங்குவது, மக்கள் இல்லாத பிரதேசங்களில் மக்களைக் குடியேற்றுவது.

6. மூன்று வர்க்கம்: தரும–அர்த்த–காமம் (அல்லது மன்னருக்குரிய உத்ஸாஹசக்தி, பிரபுசக்தி, மந்த்ரசக்தி – எப்போதும் சுறுசுறுப்புடன் இருத்தல்; தலைமையை நிலைநிறுத்திக் கொள்ளுதல், நல்ல ஆலோசனைகளைப் பெறுதல்).

7. மூன்று வித்தைகள்: வேதம் கற்றல், பசுப்பாதுகாப்பு–விவசாய–வணிக நுணுக்கம், குற்றவாளிகளைத் தண்டிக்கும் முறையைப் புகட்டும் நீதிசாஸ்திரம் (தண்டநீதி).

8. ஆறு குணங்கள்: (பிற மன்னர்களுடன்) நட்புறவு, அவர்களிடையே பகைமையை உண்டாக்கிப் பிரித்தல், போர் தொடுத்தல், போரைத் தவிர்த்துச் சமாதானமாக இருப்பது, தனது பகைவனின் பகைவனுடன் நல்லுறவு கொள்ளுதல்.

9. இயற்கைத் துன்பங்கள்: தீ பரவுதல், நீர்ப் பஞ்சம் அல்லது வெள்ளத்தால் சேதம், நோய் பரவுதல், உணவுப் பஞ்சம், இறப்பு. மனிதரால் ஏற்படும் துன்பங்கள்: அரசு அலுவலர்களின் கொடுமை, திருடர் பயம், பகைவர் அச்சம், மன்னனுக்கு நெருக்கமானவர்களின் அட்டூழியம், மன்னனின் பேராசையால் வரிச்சுமை போன்றவை.

செய்த வேதசாஸ்திரங்கள் அதிருஷ்டமான (கண்ணுக்குப் புலப்படாத) நற்பலன்களை அளித்து வருகின்றனவா? உன்னுடைய காரியங்கள் எல்லாம் நற்பயனை அளிக்கின்றனவா? உன் பத்தினி உனக்கு அனுகூலமாக இருக்கிறாளா? நீ கற்றுக் கொண்ட நீதிநூல்கள் நற்பயனை அளிக்கின்றனவா? நான் இதுவரையில் கூறிய நீதி வாக்கியங்கள் நீண்ட ஆயுளையும் புகழையும் கொடுக்கக் கூடியவை; தரும–அர்த்த–காமங்களை நிறைவேற்றக் கூடியவை. எனவே, உன் சித்தத்தின் போக்கு இந்த வழியில் செல்கிறதா? (71–73)

(நான் கூறிய) நீதிமுறைகள் நல்ல மார்க்கத்தில் கொண்டு சேர்ப்பிக்கும். இவைகளை நமது பாட்டன்மார்கள் அனுஷ்டித்தார்கள். நமது தந்தையார் அனுஷ்டித்து வருகிறார். அதே வழியை நீயும் பின்பற்றி வருகிறாயல்லவா? சுவையாகப் பக்குவம் செய்யப்பட்ட உணவு வகைகளை நீ ஒருவனாகவே புசிக்காமல் இருக்கிறாயா? உன்னிடமிருந்து உதவியை எதிர்பார்க்கும் நண்பர்களுக்கு வேண்டிய உதவியைச் செய்து வருகிறாயா? புத்திமானான ஒரு மன்னன் தருமநெறிப்படி மக்களைப் பரிபாலித்து, குற்றவாளிகளுக்கு உரிய தண்டனையை அளித்து ஆட்சி செய்தால், இந்தப் பூமண்டலம் முழுவதையுமே அடைவான். நல்லுபதேசங்களால் ஞானப்பக்குவம் பெற்று, வினையெச்சம் (கர்மவினையில் மீதமுள்ளது) முற்றுப் பெற்றதும், உடலை உகுத்து சுவர்க்கத்தை அடைவான்.'' (74–76)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
நூறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றொன்று

ஸ்ரீராமன், தந்தையின் மரணச்செய்தியைச் செவியுறுதல்

இராமனுடைய உபதேசங்களைக் கேட்ட பரதன், ''எல்லா தருமங்களையும் இழந்துவிட்ட எனக்கு, அரச தருமங்கள் எந்தவிதத்தில் பயன்படப் போகின்றன?'' என்று பதில் சொன்னான். (1)

10. இருபது வர்க்கம்: சிறுவர்; வயோதிகர்; நீண்டகால நோயாளி; தன் இனத்தாரால் விலக்கப்பட்டவன்; பயந்தாங்கொள்ளி; பயம் கொண்டவர்களைத் தன்னுடன் வைத்துக் கொண்டிருப்பவன்; பேராசை கொண்ட மக்களைத் தன் ஆதரவில் வைத்துக் கொண்டிருப்பவன்; மக்கள் மற்றும் தன்னிடம் பணிசெய்வோரின் விசுவாசத்தை இழந்தவன்; புலனின்பங்களில் பற்று கொண்டவன்; சந்தேகப்படும்படியான ஆலோசனைகளைக் கூறுகின்றவர்களிடம் ஆலோசனை கேட்பவன்; தேவதைகளையும் அந்தணர்களையும் நிந்திப்பவன்; தேவதைகளின் கோப–சாபங்களால் பீடிக்கப்பட்டவன்; 'எல்லாம் கடவுள் பார்த்துக் கொள்வார்' என்று சொல்லி வேலை செய்யாமலிருப்பவன்; பஞ்சம் (போர்க் காலத்தில்) படைவீரர்களின் எண்ணிக்கை குறைவதால் தைரியமிழப்பவன்; தன் நாட்டில் வாசம் செய்யாதவன்; பல திசைகளிலும் பகைவர்களை உடையவன்; நவகோள்களின் விபரீத தசைகளால் பாதிக்கப்பட்டவன்; சத்திய–தருமம் இல்லாதவன்.

11. பிரகிருதிமண்டலங்கள்: நாட்டின் தலைவன், அமைச்சன், நண்பர், கருவூலம், நாடு, கோட்டை, சேனை என்ற ஏழும் பிரகிருதிமண்டலம் எனக் கூறுவார்கள். சில வியாக்கியானக்காரர்கள் பிரகிருதியைத் தனியாகப் பிரித்து ஐந்து வகையாகக் கூறியிருக்கிறார்கள்:– அமைச்சர், நாடு, கோட்டை, பொக்கிஷம், தண்டனை. மண்டலம் என்று பன்னிரெண்டு வித உறவுகளையுடைய – பகைவன், தன் முன்னவனுக்குப் பகைவன், தன் நண்பன் முதலான – மன்னர்களைக் கூறியுள்ளார்கள்.

12. யாத்ரா–தண்ட விதானம்: படைகளை ஆயத்தப்படுத்துவது, அணிவகுப்பது, படையை நடத்திச் செல்வது, படைவீரர்களுடனேயே தங்குவது – இவை யாத்ரா எனப்படும் போர்க்கால ஏற்பாடு. நட்புடன் இருக்கும் மன்னர்களிடையே பிளவை உண்டாக்குவது, ஒருவருடன் சமரச உடன்படிக்கை செய்துகொண்டு உதவிகளைப் பெறுவது – இவை தண்டம் எனப்படும்.)

"புருஷோத்தமனே! மன்னனே! நம்முடைய பரம்பரையில் மூத்த புதல்வன் இருக்கும் போது இளையவன் இளவரசனாக ஆவதில்லை என்ற நெறி நிரந்தரமாக (தொடக்க நாட்களிலிருந்தே) இருந்து வருகிறது. இராகவா! (இப்போதே) செல்வச் செழிப்புடன் கொழிக்கும் அயோத்திக்கு என்னுடன் வாருங்கள். நம்முடைய பரம்பரை மற்றும் எங்களுடைய நலனைக் கருதி, நாட்டின் மன்னராகத் தங்களை அபிஷேகம் செய்வித்துக் கொள்ளுங்கள். அரசனையும் ஒரு சாதாரண மனிதனாக மற்றவர்கள் எண்ணுகிறார்கள். ஆனால் என் கருத்துப்படி, அவன் தெய்வாம்சம் பொருந்தியவன். ஏனென்றால், அரசனுடைய தரும–அர்த்த பரிபாலனம் பிறரால் செய்ய முடியாதது. (2–4)

நான், கேகய நாட்டிலிருந்தபோது தாங்கள் காட்டிற்கு வந்துவிட்டீர்கள். (நானோ, தாங்களோ அயோத்தியில் இல்லாத அந்த இடைக்காலத்தில்) பற்பல வேள்விகளைச் செய்தவரும், மகாமேதாவியும், சான்றோர்களால் மதிக்கப்பட்டவருமான மன்னர் (தசரதர்) சுவர்க்கலோகம் ஏகிவிட்டார். தாங்கள், சீதையோடும் லட்சுமணனோடும் நாட்டைவிட்டு வெளியேறியவுடனேயே மனவேதனைப்பட்டுக் கவலையில் மூழ்கிய மன்னர் விண்ணுலகை அடைந்துவிட்டார். மாவீரரே! எழுந்திருங்கள். தந்தைக்குச் செய்யவேண்டிய நீர்க்கடனைச் செலுத்துங்கள். நானும் சத்ருக்னனும் முன்பே தர்ப்பணம் செய்துவிட்டோம். (5–7)

இராகவனே! (இறந்தவர்களுக்கு மிகவும்) 'பிரியமானவனால் கொடுக்கப்பட்டது மாத்திரமே, பிதிரர் உலகில் இருப்பவருக்குக் குறைவில்லாமல் போய்ச் சேர்ந்து நற்கதியை அளிக்கிறது' என்று சொல்கிறார்கள். தாங்கள் தந்தைக்கு மிகவும் பிரியமான புத்திரர். (8)

நமது தந்தையார், தங்களைப் பிரிந்ததும் வருத்தம் தாங்காமல் நோய்வாய்ப்பட்டார். தங்களைப் பற்றிய கவலையிலேயே ஆழ்ந்து, தங்களைப் பார்க்கப் பேராவல் கொண்டு, தங்களிடம் பதித்திருந்த நினைவைத் திருப்ப முடியாமல், தங்களைப் பற்றிய ஸ்மரணையுடனேயே (நினைவுடனேயே) (இவ்வுலகை விட்டுச்) சென்றுவிட்டார்." (9)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
நூற்றியோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்று இரண்டு
தந்தைக்கு நீர்க்கடன் இயற்றல்

இராமன், பரதனால் சொல்லப்பட்ட துக்ககரமான செய்தியான தந்தையின் மரணம் பற்றிக் கேட்டதும் உணர்விழந்தார். பகைவரை வாட்டி வதைக்கும் இராமன், அசுரர்களின் சத்ருவான இந்திரன் போர்க்களத்தில் வஜ்ராயுதத்தை ஏவியதைப் போல, பரதனால் சொல்லப்பட்டதும், செவிக்கு இனிமையில்லாததுமான சொற்கள் என்னும் வஜ்ராயுதத்தால் (தந்தை இறந்த செய்தியால்) தாக்கப்பட்டு, காட்டில் கோடரியால் வெட்டி வீழ்த்தப்பட்ட, மலர்கள் பூத்துக் குலுங்கும் கிளைகளையுடைய ஒரு மரம் போல், இரு கைகளையும் உயரே தூக்கிக் கொண்டு தரையில் சாய்ந்தார். (1–3)

நதிக்கரைகளை இடித்துத் தள்ளி விளையாடி ஓய்ந்து படுத்துவிட்ட யானை போல், சோகத்தால் தாக்கப்பட்டு, தரையில் வீழ்ந்து கிடந்த மாபெரும் வில்லாளியான உலக நாயகனைப் பார்த்து, தம்பிகள் எல்லோரும், வைதேகியும் கண்ணீர் பெருக்கிக் கொண்டே குளிர்ந்த தண்ணீரை எடுத்து (அவர் முகத்தில்) தெளித்தார்கள். சிறிது நேரத்திற்குப் பின்னர், சுய உணர்வைப் பெற்ற காகுத்த இராமன், இரு கண்களாலும் கண்ணீரைப் பெருக்கிக் கொண்டு, மிகவும் மனம் பரிதவித்து பலவிதமாகப் புலம்பத் தொடங்கினார். அறத்தையே உயிராகக் கொண்ட

இராமன், மாமன்னரான தந்தையார் தேவருலகம் சென்றுவிட்டதைக் கேட்டு, பரதனைப் பார்த்து (பின்வரும்) தரும சம்மதமான சொற்களைக் கூறினார்— (4–7)

''தந்தையார் விண்ணுலகத்திற்கு ஏகியபின், நான் அயோத்திக்கு வந்து என்ன செய்யப் போகிறேன்? மாட்சிமைமிக்க அவர் இல்லாத அந்த அயோத்தியை யார் பரிபாலனம் செய்வார்? எவர், என்னையே நினைத்துக் கொண்டு சோகம் தாங்காமல் மரணமடைந்தாரோ, மகாத்மாவான அவருக்கு ஈமச்சடங்குகள்கூடச் செய்ய முடியாத, உபயோகமற்ற என்னால் என்ன பயன்? (அவர், என்னை மகனாகப் பெற்றதால் ஒரு லாபத்தையும் அடையவில்லையே?) குற்றமற்ற பரதனே! நீ கொடுத்து வைத்தவன்; பெரும்பேறு பெற்றவன். நீயும் சத்ருக்னனும் தந்தையின் ஈமச்சடங்குகளைச் செய்து, அவருக்கு மரியாதை செலுத்தியிருக்கிறீர்கள். (8–10)

மாமன்னர் இல்லாததால், ஒப்பற்ற ஒரு தலைவனை இழந்து, பலருடைய நிர்வாகத்தில் சிக்கிக் கொண்டிருக்கும் அயோத்திக்கு வனவாசம் முடிந்தபின்னரும்கூடத் திரும்பி வருவதற்கு, நான் உடன்படமாட்டேன். எதிரிகளை வாட்டுபவனே! வனவாச காலம் முடிந்து, நான் அயோத்திக்குத் திரும்பி வந்தால், நமது தந்தையார் காலகதி அடைந்துவிட்ட பிறகு, எனக்கு எவர்தான் நல்லுபதேசம் செய்வார்? நான், அவருடைய ஏதோ ஒரு (சாமானிய) கட்டளையை நிறைவேற்றிவிட்டால்கூட, அவர் மனம் மகிழ்ந்து செவிக்கினிய சொற்களால் என்னைப் பாராட்டுவார். அத்தகைய இனிய சொற்களை, இனி எவரிடமிருந்து நான் கேட்கப் போகிறேன்?'' (11–13)

பரதனை நோக்கி இவ்வாறு கூறிவிட்டுச் சோகத்தால் தவித்துக் கொண்டிருந்த இராமன், முழு நிலவைப் போன்று பிரகாசிக்கும் முகத்தினையுடைய மனைவியிடம் வந்து (இவ்வாறு) கூறினார்— ''சீதே! உன் மாமனார் இறந்துவிட்டார். லட்சுமணா! நீ தந்தையற்றவனாகிவிட்டாய். நாடாண்ட மன்னர் மேலுலகம் சென்றுவிட்டார் என்ற துயரச் செய்தியைச் சொல்கிறான், பரதன்.'' இவ்வாறு இராமன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, புகழ்பெற்ற அந்தப் புதல்வர்களின் கண்களிலிருந்து கரகரவென்று கண்ணீர் வழியத் தொடங்கியது. (14–16)

பின்னர், மற்ற சகோதரர்கள் இராமனுக்குத் தேறுதல் கூறிச் சமாதானப்படுத்தி, ''உலக நாயகராக விளங்கிய தந்தைக்குச் செய்ய வேண்டிய நீர்க்கடன்களைச் செய்யுங்கள்'' என்று சொன்னார்கள். 'மாமனாராகிய மன்னர் விண்ணுலகம் சென்றுவிட்டார்' என்று கேள்விப்பட்டதும், சீதையின் இரு கண்களிலிருந்தும் கண்ணீர் பெருகிப் பார்வையை மறைத்ததால், கணவரைப் பார்க்க முடியவில்லை. அழுது கொண்டிருந்த ஜானகியைச் சமாதானப்படுத்திவிட்டு, துக்கத்தோடு கூடிய இராமன், இலக்குவனைப் பார்த்து துக்ககரமான சொற்களைக் கூறினார்— (17–19)

''தம்பி! இங்குதிப் பிண்ணாக்கையும், மரவுரி, உத்தரீயம் ஆகியவற்றையும் எடுத்துக் கொண்டு வா. மகாத்மாவான தந்தைக்குத் தர்ப்பணம் செய்வதற்காக (ஆற்றுக்கு)ச் செல்லப் போகிறோம். சீதை முதலில் செல்லட்டும். நீ, அவளுக்குப் பின்னால் செல். நான் (உனக்குப்) பின்னால் வருகிறேன். கடுமையான இந்த முறைதான் தர்ப்பணக் காலங்களுக்கு விதிக்கப்பட்டிருக்கிறது.'' (20,21)

அவர்களிடம் பரம்பரையாகப் பணிசெய்து வருபவரும், ஆத்மஸ்வரூபத்தை அறிந்தவரும், பேரறிவாளரும், இனிய இயல்புடையவரும், புலன்களை வென்றவரும், மன அமைதி பெற்றவரும், இராமனிடத்தில் உறுதியான பக்தியுள்ளவருமான சுமந்திரர், இராமனையும், மாமன்னரின் மற்றப் புதல்வர்களையும் தேற்றி, இராமனுடைய கைகளை(ப் பாசத்துடன்) பிடித்துக் கொண்டு, புண்ணியமான மந்தாகினி நதியில் (நீராடும் துறையில்) இறங்கச் செய்தார். (22,23)

கீர்த்தி பெற்றவர்களான அவர்கள், எக்காலத்திலும் கலங்காத தெளிந்த நீரை உடையதும், (இரு கரைகளிலும்) அழகாகப் பூத்துக் குலுங்கும் வனங்களை உடையதும், வேகமாக ஓடும் நீர்ப்பிரவாகத்தை உடையதுமான மந்தாகினி நதியை மனவேதனையுடன் அடைந்து, மாசுகள்

அற்றதும் புண்ணியமானதுமான நீரை (இருகைகளிலும்) எடுத்து, 'இது மாமன்னரைப் போய்ச் சேர்வதாகுக' என்று (அதற்குரிய மந்திரங்களைக் கூறியபடி) நீர்க்கடன் செலுத்தினார்கள். (24,25)

உலகப் பரிபாலகரான அவர், இருகைகளிலும் நீர் எடுத்துக் கொண்டு, தென்திசையை நோக்கி நின்று, அழுதவாறே (பின்வரும்) சொற்களைக் கூறினார்— ''பேராற்றல் படைத்த பேரரசரே! இப்போது நான் அளிக்கும் இந்தத் தூய நீர், பிதிரர் உலகிலிருக்கும் தங்களுக்குக் குறைவில்லாதத் திருப்தியை அளிக்கட்டும்.'' பின்னர், மந்தாகினி நதியிலிருந்து மேலே வந்து கரையில், பேரொளி பொருந்திய இராமன் சகோதரர்களோடுகூட, தந்தைக்குப் பிண்டப் பிரதானம் செய்தார். (26–28)

தர்ப்பத்தைத் தரையில் பரப்பி, அதன் மேல் இலந்தை கலந்த இங்குதிப் பிண்ணாக்கை (பிண்டமாக) வைத்து, பெரும் துக்கத்துடன் அழுது கொண்டு இராமன் (பின்வருமாறு) கூறினார்— ''மாமன்னரே! மனமுவந்து இதனைப் புசிப்பீராக. நாங்கள் இதனையே உணவாகக் கொள்கிறோம். ஒரு மனிதன் எதை உண்கிறானோ, அதே உணவை அவனது தெய்வங்கள் (தெய்வமாகிவிட்ட பிதிரர்கள்) ஏற்றுக் கொள்கிறார்கள் (என்பது தரும விதி).'' பின்னர், புருஷோத்தமரான இராமன், நதியின் கரையிலிருந்து அதே வழியாகவே (முன்பு வந்த பாதையிலேயே) சென்று, அழகியதான உயர்ந்த சிகரங்களையுடைய மலையில் ஏறினார். (29–31)

உலகநாயகரான அவர் பர்ணசாலையின் வாயிலை வந்தடைந்ததும் (துக்கத்தைத் தாங்க மாட்டாதவராய்) இருகைகளாலும் பரத–லட்சுமணர்களைக் கட்டியணைத்துக் கொண்டார். வைதேகியும், அந்த சகோதரர்களும் எழுப்பிய அழுகை ஒலி, சிங்கங்களின் கர்ஜனை போல் மலையில் எதிரொலித்தது. தந்தையாருக்கு நீர்க்கடன் செலுத்திவிட்டு, பெரும் பலசாலிகளான அவர்கள் அழுது புலம்புவதால் உண்டான பேரொலியைக் கேட்டு, (தொலைவில் நின்று கொண்டிருந்த) பரதனுடைய படைவீரர்களுக்கு பயம் உண்டாயிற்று. (32–34)

''இராமபிரானை பரதர் சந்தித்துவிட்டார் என்பது திண்ணம். தந்தையார் இறந்துவிட்டார் என்பதைக் கேட்டு, மனம் வருந்தி, அவர்கள் எழுப்பும் பேரொலிதான் இது'' என்று பேசிக் கொண்டார்கள். உடனே, அவர்கள் எல்லோரும் தங்கியிருந்த அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டு, சப்தம் வந்த திசையை நோக்கி, அந்த இடத்திலேயே கண்ணும் கருத்தும் உடையவர்களாக, ('இராமனைக் கண்ணால் கண்டுவிட வேண்டும்' என்ற) ஒரே நோக்கத்துடன் ஓடிச் சென்றார்கள். செல்வச் செழிப்போடுச் செல்லமாக வளர்ந்து விட்டிருந்த சிலர் குதிரைகளிலும், சிலர் யானைகளிலும் மற்றும் சிலர் நன்கு அலங்கரிக்கப்பட்ட தேர்களிலும் சென்றார்கள். மற்ற எல்லோரும் காலால் நடந்தே சென்றார்கள். (35–37)

இராமன், நாட்டைவிட்டு வெளியேறி இங்கு வந்து சிறிது காலமே ஆகியிருந்தது என்றாலும், ஏதோ நீண்ட காலம் ஆகிவிட்டதுபோல் மக்கள் எல்லோரும் பரிதவித்து, அவரைக் கண்ணால் காண வேண்டும் என்ற பேராவலுடன் பரபரப்புடன் சென்றார்கள். குளம்பு, சக்கரம் கொண்ட பலவித (குதிரை, தேர் முதலிய) வாகனங்களில், சகோதரர்களுடைய சந்திப்பைக் காணும் அவா கொண்டவர்களாக மிக விரைவாகச் சென்றார்கள். பலவிதமான அநேக வாகனங்களின் காலோசை, ஆகாயத்தில் மேகக் கூட்டங்கள் மோதிக் கொள்ளும்போது ஏற்படும் இடியின் பெரும் சத்தம் போல, அந்தப் பிரதேசம் பேரொலியை எழுப்பிற்று. (38–40)

செவிப்பறையைத் தாக்கும் அந்த ஒலியைக் கேட்டு மிக்க அச்சம் கொண்ட ஆண்யானைகளும் பெண்யானைகளும் மதநீர் வாசனையை நாலா பக்கத்திலும் பரவ விட்டுக் கொண்டு, தூரத்திலிருந்த வேறு காட்டுப் பகுதியை நோக்கி ஓடின. பன்றி, ஓநாய், சிங்கம், எருமை, சர்ப்பம், குரங்கு, புலி, கோகர்ணம் (கோவேறு கழுதை), கவயம் (என்ற ஒரு வகைப் பசு), புள்ளிமான்கள் ஆகிய எல்லாம் பயந்தோடிப் போயின. சக்ரவாகம், நீர்க்கோழி, அன்னம்,

நீர்க்காக்கை, கொக்கு, ஆண்குயில், கிரௌஞ்சம் முதலிய பறவைகள் பயத்தால் கதிகலங்கி, எல்லாத் திசைகளிலும் பறந்தோடிச் சென்றன. (41–43)

அந்தப் பெரும் சப்தத்தால் பயந்தோடிய பறவைக் கூட்டங்களால் ஆகாயம் வியாபிக்கப்பட்டதாயிற்று. (அதே போல்) கீழே மண்பிரதேசம் மனிதர்களால் நிரம்பியதால் இரண்டும் ஒன்றுக்கொன்று ஈடு கொடுத்து விளங்கின. பின்னர், ஓலை வேய்ந்த குடிசையை நெருங்கிய மக்கள், புருஷோத்தமரும் புகழ் பெற்றவரும் குற்றமற்றவருமான ஸ்ரீராமன் வெறும் தரையில் உட்கார்ந்திருந்ததைக் கண்டு திடுக்கிட்டார்கள். மக்கள், இராமபிரானை நெருங்கிச் சென்றதும், கைகேயியையும் மந்தரையையும் இடித்துரைத்து கண்களில் நீர்வழிய நின்றார்கள். (44–46)

அப்போது தருமசீலரான அவர் (இராமன்), மிக்க மன வேதனையுடன் கண்ணீர் வழியும் கண்களுடனிருந்த அந்தக் குடிஜனங்களை அருகில் அழைத்து, தட்டிக் கொடுத்து தாய்–தந்தையரைப் போல் அமைதிப்படுத்தினார். அரசகுமாரரான இராமன், அப்போது சிலரை மார்புறத் தழுவிக் கொண்டார்; சிலர், அவர் திருவடிகளில் விழுந்து வணங்கினார்கள். அப்போது அங்கு வந்திருந்த நண்பர்களையும் உறவினர்களையும் அவரவருக்கு ஏற்ற முறையில் மரியாதை செய்தார். அந்த சமயத்தில், கண்ணீர் விட்டு அழுது கொண்டிருந்த பேரன்புடைய குடிமக்களின் அழுகை ஒலி, பூமி–ஆகாயம்–மலைக்குகை–திசைகள் எங்கும் இடைவிடாது எதிரொலித்து மிருதங்க முழக்கம் போல் கேட்டது. (47–49)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
நூற்று இரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்று மூன்று

தாய்மார்களைத் தரிசித்தல்

இராமனைக் காண்பதற்குப் பேராவல் கொண்ட வசிஷ்டர், தசரதருடைய மனைவிகளை முன்னிட்டுக் கொண்டு, (இராமனுடைய ஆசிரமம் இருந்த) அந்த இடத்தை நோக்கி நடந்தார். மந்தாகினி நதியை நோக்கி மெல்லச் சென்ற அரச பத்தினிகள் (நீராடும் ஒரு துறையில் பித்ருக்களுக்காக இங்குதிப் பிண்டம் வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்து), இராம–லட்சுமணர்கள் (நாள்தோறும்) நீராடும் அந்த நதித்துறையைப் பார்த்தார்கள். கண்ணீர் நிறைந்து வதங்கிய முகத்தோடிருந்த கோசலை, துயரத்தால் இரங்கத்தக்க நிலையிலிருந்த சுமித்திரை மற்றும் மன்னருடைய பிற மனைவியரையும் பார்த்து(ப் பின்வருமாறு) சொன்னார்— (1–3)

"நாடு கடத்தப்பட்டவர்களும், எந்த வேலையையும் எளிதில் செய்து முடிக்க வல்லவர்களும், (இப்போது) ஆதரவற்றவர்களாக இருக்கின்றவர்களுமான அவர்கள், காட்டில் (மந்தாகினியின்) இந்தத் துறையில்தான், சௌகரியமாக ஏறியிறங்குவதற்குப் படிக்கட்டுகள்கூட இல்லாததால் மிகவும் சிரமத்துடன் நீராடுகிறார்கள் (என்று, கால் வழித்தடம் காணப்படுவதால் தோன்றுகிறது). சுமித்திரே! லட்சுமணன், என் மகனுக்காகச் சோம்பலில்லாமல் இங்கிருந்துதான், தானே தண்ணீர் எடுத்துச் செல்கிறான். (4,5)

உன்னுடைய புதல்வன் (தண்ணீர் சுமந்து செல்லுதல் போன்ற) இழிவான சேவைகளைச் செய்தாலும் யாராலும் பழிக்கப்படமாட்டான். தன் மூத்த சகோதரனுக்கு உதவிடும் வகையில் செய்யப்படும் எல்லாக் காரியங்களும் நற்பயனை விளைவிப்பவைதாம். இம்மாதிரியான உடல் உழைப்புகளுக்கு உசிதமில்லாதவனான உன் புதல்வன், துர்ப்பாக்கியவசமாகச் செய்துவரும்

இழிதொழிலை, (இராமன்) இப்போது (நம்முடன் நாட்டிற்குத் திரும்பியவுடனாவது) விட்டுவிடுவானா?'' (6,7)

நெடுந்தடங்கண்ணாளாகிய அவள் (கோசலை) தரையில், தெற்குப் பார்த்த நுனியையுடைய தர்பங்களின் மேல் தந்தைக்காக வைக்கப்பட்டிருந்த இங்குதிப் பிண்டங்களைப் பார்த்தாள். (தந்தையின் மரணச் செய்தியைக் கேட்டு) துக்கமடைந்த இராமனால், தரையில் தந்தைக்கு வைக்கப்பட்டிருந்த அதை (பிண்டத்தை)ப் பார்த்த கோசலை, தசரதருடைய மனைவிமார்கள் எல்லோரையும் நோக்கி(ப் பின்வருமாறு) கூறினாள்— (8,9)

''பாருங்கள்! மகாத்மாவும், இக்ஷ்வாகு வம்ச திலகரும், தன் தந்தையுமான தசரதருக்கு முறைப்படிக் கொடுக்கப்பட்டது, இது (இந்தப் பிண்டம்). தேவர்களுக்கு ஒப்பானவரும், ஏராளமான அரச போகங்களை அனுபவித்தவரும், மாவீரருமான அந்த மன்னருக்கு, இது (இந்த எளிய உணவு) உகந்த உணவில்லை என்று எண்ணுகிறேன். நான்கு சமுத்திரங்களை எல்லையாக உடைய இந்தப் பூமண்டலம் முழுவதையும் ஆண்டவரும், மண்ணுலகில் தேவேந்திரன் போல் வாழ்ந்தவருமான மாமன்னர், இந்த இங்குதிப் பிண்ணாக்கை எவ்வாறு ஏற்பார்? (10–12)

எல்லையற்ற செல்வங்களுக்கு அதிபதியான இராமன், (காலஞ்சென்ற) தன் தந்தைக்கு (காட்டுப் பழமான) இங்குதியின் சதையைப் பிண்டமாகக் கொடுத்தான் என்றால், இதைக் காட்டிலும் மேலான துக்கம் இல்லை என்று எனக்குத் தோன்றுகிறது. 'இராமனால், தன் தந்தைக்கு இங்குதிப் பிண்ணாக்கு உருண்டைதான் பிண்டமாகக் கொடுக்கப்பட்டது' என்பதைக் கண்ணால் பார்த்த பின்னரும், என் இதயம் சுக்குநூறாகப் பிளக்காமல் இருக்கிறதே? 'ஒரு மனிதன் எத்தகைய உணவைப் புசிக்கிறானோ, அதே உணவை அவனது தெய்வங்களுக்கும் படைக்கிறான்' என்ற உலகியல் பழமொழி, நிச்சயமாக உண்மைதான் என்று எனக்குத் தோன்றுகிறது.'' (13–15)

சோகத்தால் மேற்கண்டவாறு அழுத அவரை, சக்களத்திமார்கள் ஆறுதல் கூறி, அழைத்துச் சென்றார்கள். அவர்கள், ஆசிரமத்தில் தேவலோகத்திலிருந்து விழுந்துவிட்ட தேவதையைப் போன்று வீற்றிருக்கும் இராமனைக் கண்டார்கள். தாய்மார்கள், எந்தவிதமான போக–சௌகரியங்களும், சுக சாதனங்களும் இல்லாத இராமனைக் கண்டு மிகவும் துக்கப்பட்டார்கள்; துயரத்தால் தாக்கப்பட்டவர்களாக அழுது புலம்பிக் கொண்டு கண்ணீர் பெருக்கினார்கள். சத்தியம் தவறாதவரான புருஷோத்தமர் இராமன் தன் இடத்திலிருந்து எழுந்து, அந்தத் தாய்மார்கள் அனைவருடைய புண்ணியத் திருவடிகளிலும் விழுந்து வணங்கினார். (16–18)

அகன்ற கண்களையுடைய அவர்கள் மிருதுவான விரல்களையும், உள்ளங்கைகளையும், இனிய பரிசத்தை அளிப்பவைகளும், மங்களமானவைகளுமான தங்கள் கைகளால், ஸ்ரீராமனுடைய முதுகில் ஒட்டிக் கொண்டிருந்த தூசுகளைத் துடைத்துவிட்டார்கள். இலக்குவனும் அந்தத் தாய்மார்கள் எல்லோரையும் ஒருசேரப் பார்த்து மிகவும் துக்கங்கொண்டு, இராமன் வணங்கி எழுந்த பின்னர், மிகவும் பாசத்துடன் மெல்ல மெல்ல வணங்கினான். (19,20)

அந்த மாதரசிகள் அனைவரும், இராமனிடத்தில் எப்படியோ, அப்படியே தசரதகுமாரனும், சுபலட்சணங்கள் பொருந்தியவனுமான லட்சுமணனிடமும் பாசத்தை வெளிப்படுத்தினார்கள். துயரத்துடன் சீதையும் மாமியார்களின் பாதங்களில் வணங்கி, கண்ணீர் நிறைந்த கண்களுடன், அவர்களுக்கு முன்னால் வந்து நின்றாள். துக்கம் தாங்காத கோசலை, பெற்ற தாய் தன் பெண்ணை ஆதரவுடன் அணைத்துக் கொள்வதைப் போல, வனவாசத்தால் மெலிந்திருப்பவளும், இரங்கத்தக்க நிலையிலுள்ளவளுமான அவளைக் கட்டியணைத்துக் கொண்டு (பின்வருமாறு) கூறினார்— (21–23)

''விதேக மன்னனுடைய புதல்வி; தசரதருடைய மருமகள்; இராமனுடைய பத்தினி – (இவ்வளவு பெருமை வாய்ந்த நீ) மக்கள் நடமாட்டமே இல்லாத காட்டில் வசிக்கும் துக்கத்தை

எவ்வாறு அடைந்தாய்? வெய்யிலில் வாடிய தாமரை மலர், கசக்கப்பட்ட நீலோத்பலம், மாசு படிந்த சுவர்ணம், மேகங்களால் மறைக்கப்பட்ட முழுநிலவு – இவ்வாறாக உன் முகத்தைப் பார்க்கும் என்னைத் துக்கம் என்ற அரணிக்கட்டையில் தோன்றியுள்ள சோகம் என்ற அக்னி, நெருப்பானது தான் இருக்குமிடத்தையே எரிப்பதைப் போல, என் உள்ளத்தைத் தகிக்கிறது.'' (24–26)

இப்படியெல்லாம் மனவேதனையுடன் அன்னை பேசிக் கொண்டிருக்கையில், பரதனின் மூத்தவரான இராமன், வசிஷ்ட முனிவரின் திருவடிகளில் விழுந்து வணங்கினார். தேவர்கள் வேந்தனான இந்திரன், பிருகஸ்பதியைப் பக்தி–சிரத்தையுடன் வணங்குவதைப் போன்று, அக்னியைப் போன்று ஜொலிக்கும் புரோகிதருடைய பாதங்களில் வணக்கம் செலுத்திவிட்டு, அவர் அருகிலேயே அமர்ந்து கொண்டார், இராமன். பின்னர், தன்னுடன் வந்திருந்த எல்லா அமைச்சர்கள், நகரப் பிரமுகர்கள், படைத்தலைவர்கள், தருமம் அறிந்த உத்தமர்கள் ஆகியோர்களுடன் அறநெறி தவறாத பரதன், தன் அண்ணனுக்கு அருகில் அவர் பின்னால் சென்றமர்ந்தான். (27–29)

அப்போது வீரம் மிக்கவனான பரதன், தவசியைப் போன்ற தோற்றத்துடன், தவச்செல்வத்தால் பேரொளி வீசிக்கொண்டிருக்கும் இராமனைப் பார்த்து, கைகளைக் கூப்பிக்கொண்டு, பிரும்மதேவன் எதிரில் தேவேந்திரன் விநயசம்பன்னனாக நிற்பதைப் போன்று வீற்றிருந்தான். அந்தச் சமயத்தில், இராகவனை வணங்கி உபசாரங்கள் செய்துவிட்ட பரதன், அவரிடம், 'என்ன பேசப் போகிறான்?' என்பதை அறிய, அங்கிருந்த மேன்மக்கள் மனத்துடிப்புடன் இருந்தார்கள். அரசவையில் நண்பர்கள் புடைசூழ விளங்குவது போல சத்தியத்தில் உறுதியுள்ள ஸ்ரீராமன், மகானுபாவனான லட்சுமணன், தருமாத்மாவான பரதன் ஆகிய மூவரும், யாகசாலையில் வேதவித்தகர்களால் சூழப்பட்டிருக்கும் மூன்று அக்னிகள் போல் அப்போது பிரகாசித்தார்கள். (30–32)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
நூற்று மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்று நான்கு
இராம–பரதனிடையே உரையாடல்

தம்பி இலக்குவனுடன் இருந்த இராமன், பெரியோர்களிடம் (குறிப்பாக, தன்னிடம்) மிகவும் மரியாதை கொண்டவனான தம்பியை (பரதனை) நோக்கிப் பேச ஆரம்பித்தார்— ''மரவுரி, ஜடை, மான்தோல் ஆகியவைகளைத் தரித்துக் கொண்டு, (அயோத்தியிலிருந்து வெகுதூரத்திற்கப்பால் உள்ள கோரமான காடுகள் அடர்ந்த) இந்தப் பிரதேசத்திற்கு நீ ஏன் வந்தாய்? என்று, நீயே சொல்லிக் கேட்க விரும்புகிறேன். (மன்னனாக முடிசூட்டிக் கொண்டிருக்க வேண்டிய நீ) மான்தோல்–ஜடை தரித்து, நாட்டை விட்டு, எந்த நோக்கத்துடன் இங்கே வந்திருக்கிறாய்? என்பதை விளக்கமாகச் சொல்.'' (1–3)

காகுத்த இராமன் மேற்கண்டவாறு கேட்டவுடன், தன் நெஞ்சில் துக்கத்தை அடக்கிக் கொண்டு, இரு கைகளையும் கூப்பி, கைகேயியின் மைந்தன் (பின்வரும்) சொற்களைக் கூறினான்— ''பெருந்தோளரான நமது தந்தையார், மகாகுணசாலியான தங்களைத் துறத்தல் என்ற மிகவும் கொடூரமான ஒரு காரியத்தைச் செய்துவிட்டு, பின்னர் புதல்வனைப் பிரிந்த சோகத்தைத் தாங்கமாட்டாமல் விண்ணுலகம் சென்றடைந்தார். எதிரிகளை வாட்டுபவரே! என் தாய் எனப்படும் ஒரு பெண்ணின் சொற்களுக்குக் கட்டுப்பட்டு, தன்னுடைய பெரும்புகழை அடியோடு ஒழித்துக் கட்டும் மிகப்பெரிய இந்தப் பாவச்செயலைச் செய்தார். (4–6)

என்னுடைய தாயார், (தான் விரும்பிய) அரசாட்சி என்ற பயனைப் பெறவில்லை. (மாறாக,) கைம்பெண்ணாகிச் சோகத்தால் தவிக்கிறாள். (தான் செய்த பாவத்தின் பயனாக) மிகவும் பயங்கரமான நரகத்தில் விழப் போகிறாள். தங்களுடைய அடிமையாகிய எனக்கு அருள்புரிய வேண்டும். தேவலோகத்தில் இந்திரன் பட்டாபிஷேகம் செய்துகொண்டதைப் போல, தாங்கள் கோசல நாட்டை ஏற்று வேந்தர் வேந்தனாக முடிசூட்டிக் கொள்ள வேண்டும். முக்கியஸ்தர்களான இந்தக் குடிமக்களும், அமங்கலக்கோலம் பூண்டிருக்கும் தாயார்களும் (இந்தப் பிரார்த்தனையைக் கூறவே,) தங்களிடம் வந்திருக்கிறார்கள். அவர்கள் வேண்டுகோளைத் தாங்கள் அங்கீகரிக்க வேண்டும். (7–9)

அனைவரையும் கௌரவிக்கும் பெருமையுடையவரே! (மூத்த புதல்வனுக்கே அரசுரிமை என்ற) பரம்பரை வழக்கப்படிச் சரியானதும், அதனால் நியாயப்படித் தங்களுக்கே கிடைக்க வேண்டியதுமான அரசை ஏற்றுக் கொண்டு நண்பர்களையெல்லாம் மனோரதம் கைகூடியவர்களாகச் செய்யுங்கள். சரத்காலத்தில் (மேக சஞ்சாரமில்லாத ஆகாயத்தில்) மாசற்ற முழுநிலவின் ஒளியால் இரவு நேரம் பிரகாசிப்பது போல, இந்தப் பூமண்டலம் முழுவதும் தங்களைத் தலைவராகப் பெற்று மங்கலமாக விளங்கட்டும். நான், தங்களுடைய சகோதரன்; சிஷ்யன்; அடிமை. இங்குள்ள அமைச்சர்களோடு தலைவணங்கிப் பிரார்த்திக்கிறேன். எனக்குத் தாங்கள் அருள்புரிய வேண்டும். (10–12)

ஆண்புலி நிகர் வீரரே! இங்குள்ள ஜீவப் பிராணி, தாவர ராசிகள் எல்லாம் பன்னெடுங்காலமாக, நமது முன்னோர்களால் நன்றாகப் பரிபாலிக்கப்பட்டு வந்துள்ளன. அந்த முறையைத் தாங்கள் மீறிச் செல்லக்கூடாது.'' இவ்வாறு சொல்லிவிட்டு, மகாவீரனான பரதன் கண்களில் நீர் சொரிய இராமபிரானுடைய திருவடிகளில் (சரணாகதி செய்யும்) முறைப்படி மீண்டும் நமஸ்காரம் செய்தான். அப்போது மதங்கொண்ட யானைபோல் இடைவிடாது பெருமூச்சுவிட்டுக் கொண்டிருந்த சகோதரனான பரதனை, இராமன் அன்புடன் அணைத்துக் கொண்டு பின்வருமாறு கூறினார்— (13–15)

''நற்குடியில் பிறந்த, நற்குணங்கள் நிறைந்த மகாவீர்யவானும் அறநெறி வழுவாதவனுமான என்னைப் போன்ற ஒருவன், அரசாட்சியை அடைய வேண்டும் என்ற காரணத்திற்காக, (தந்தையின் கட்டளையை மீறுதல் என்ற) பாவத்தைச் செய்யத் துணிவானா? எதிரிகளை அடக்குபவனே! நான், உன்னிடம் கடுகளவு குற்றத்தையும் பார்க்கவில்லை. (நீ, குற்றமற்றவன் என்பதை நான் நன்றாக உணர்ந்திருக்கிறேன்.) மேலும், மதிமயக்கத்தினால் உன் அன்னையை, நீ இகழ்ந்து பேசக்கூடாது. மாசற்றவனே! பேரறிவாளனே! அறநூல்படி, தமக்கு மிகவும் விருப்பமான மனைவி–புதல்வர்களைத் தம் இஷ்டப்படி ஆணையிடும் அதிகாரம் தந்தைமார்களுக்கு இருக்கிறது. (16–18)

சீலத்திருவாளனே! நம் தாய்மார்களும், புத்திரர்களான நாம் எல்லோரும் உலகிலுள்ள சான்றோர்களால், மாமன்னரின் அன்பிற்குரிய மனைவிகள் எனவும், புதல்வர்கள் எனவும், கட்டளைப்படி நடக்கும் சீடர்கள் எனவும் போற்றப்படுகிறோம் என்பதை நீயும் உணர்ந்து கொள்ளவேண்டும். நற்குணம் நிறைந்தவனே! மரவுரியும் மான்தோலும் உடுத்திக் கொண்டு காட்டில் வசிக்கச் சொல்வதற்கும், அல்லது (சிம்மாசனத்தில் அமர்ந்து) ஆட்சி செலுத்தும்படிக் கூறுவதற்கும் மாமன்னரான அவருக்கு அதிகாரம் உண்டு. (19,20)

தருமப்பற்றுடையவர்களில் தலைசிறந்தவனே! உலக மக்கள் அனைவராலும் கௌரவிக்கப்பட்டவரும் அறம் வழுவாதவருமான தந்தையின்பால் எவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறோமோ, அதே அளவு மதிப்பை, பெற்ற தாயினிடத்தில் வைக்கப்பட வேண்டும். ரகுநந்தனா! தருமசீலர்களும், தாய்–தந்தையருமான (தசரதர்–கைகேயி ஆகிய) இவ்விருவராலும், 'காட்டிற்குப் போ' என்று ஆணையிடப்பட்ட நான், அதற்கு மாறாக எவ்வாறு நடப்பேன்? (21,22)

'நீ, உலகத்தோரால் போற்றப்படும் கோசல நாட்டின் தலைநகரான அயோத்தியை அடையவேண்டும். நான், மரவுரி உடுத்திக் கொண்டு தண்டகாரண்யத்தில் வசிக்க வேண்டும்.' மகாதேஜஸ்வியான மாமன்னர் தசரதர், மக்களவையில் மேற்கண்டவாறு தனித்தனியே பிரிவினை செய்து ஆணையிட்ட பின்னர் மேலுலகம் சென்றார். தருமாத்மாவும் உலகத் தலைவருமான அந்த மன்னர்தான், உனக்கு ஆணையிடும் அதிகாரம் படைத்த உச்சநிலை அதிகாரி. எனவே, தந்தையாரால் கொடுக்கப்பட்ட பாகத்தை (அரசு பரிபாலனத்தை) உள்ளபடி அனுபவிப்பதற்கு உரிமையுள்ளவன் நீதான். (23–25)

புண்ணியாத்மாவே! மகாத்மாவான தந்தையாரால் எனக்கு அளிக்கப்பட்ட தண்டகாரண்யத்தில் இருந்துகொண்டு, நான் பதிநான்கு ஆண்டுகளைக் கழிப்பேன். உலக மக்களால் மதிக்கப்பட்டவரும், தேவர்கள் தலைவனான இந்திரனுக்கு நிகரானவரும் மகாத்மாவுமான தந்தையார், எனக்கு என்ன உத்தரவிட்டாரோ, அதுதான் எனக்கு நன்மையை அளிப்பது என்று கருதுகிறேன். அதற்குமாறாக, எல்லா உலகங்களுக்கும் தலைவனாக (பிரும்மாவாக) இருக்கும் பதவியைக்கூட, நான் (எனக்கு நலன் விளைவிப்பதாக) எண்ணவில்லை.'' (26,27)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
நூற்று நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றைந்து

இராமன் தருமத்தைக் கூறுதல்

நண்பர்களோடு கூடியிருந்த, சிந்தனையில் மூழ்கியிருந்த இராமன் முதலான சகோதரர்களுக்கு, அந்த இரவு துக்கத்துடனேயே கழிந்தது. இரவு கழிந்து, பொழுது புலர்ந்தவுடன் அந்தத் தம்பிகள் (மூவரும்) மந்தாகினி நதியில் நீராடிவிட்டு, ஜப–ஹோமங்களைச் செய்து முடித்து, அன்பர்கள் புடைசூழ, இராமனை வந்தடைந்தார்கள். மௌனமாகவே உட்கார்ந்திருந்த அவர்களில் யாரும் எதுவும் பேசவில்லை. நண்பர்கள் கூடியிருக்கும் அந்த நேரத்தில் பரதன், இராமனைப் பார்த்துப் பின்வருமாறு சொன்னான்— (1–3)

''என்னுடைய தாய், (தந்தையிடமிருந்து) தருமநெறிப்படி (வரதானத்தைப் பெற்று) திருப்தி செய்விக்கப்பட்டாள். இந்த அரசாட்சி, என்னுடைய தாயாரால் எனக்குக் கொடுக்கப்பட்டது. (எனவே, இந்த ராஜ்யத்தின் மீது முழு உரிமையும் என்னுடையதே என்பது நிச்சயம்.) அதை, நானாகவே தங்களுக்குக் காணிக்கை ஆக்குகிறேன். (இந்த ஏற்பாட்டில் தரும விரோதம் எதுவும் காணப்படவில்லையே?) தாங்கள், இந்த ராஜ்யம் முழுவதையும் ஏற்றுப் பரிபாலனம் செய்ய வேண்டும். (4)

மழைக்காலத்தில் பெரும் வெள்ளத்தினால் உடைந்துபோன அணையைச் செப்பனிட முடியாதது போல, விசாலமான (கோசல) நாட்டுப் பிரதேசத்தைத் தங்களைத் தவிர, வேறு எவராலும் நிர்வகிக்க முடியாது. (வெள்ளம் வடிந்த பின்னர்தான் அணையைக் கட்ட முடியும். அதுபோல, தாங்கள் வந்து அரசாட்சியை ஏற்றுக் கொண்டால்தான் அயோத்தியின் கட்டுக்கோப்பு குலையாதிருக்கும்.) (5)

உலகாளும் மன்னரே! வேகமாக ஓடும் குதிரைக்கு ஈடாகுமா, கழுதை? கருடனுடைய மகாவேகத்துடன் ஒரு சின்னஞ்சிறு பறவையை ஒப்பிட முடியுமா? (தாங்கள் கருடன்; நான் ஒரு குருவி.) தங்களுடைய ஈடு–இணையற்ற நிர்வாகத் திறனை அனுசரித்துச் செல்லும் சக்தி எனக்கு இல்லை. இராமா! எவனுடைய உதவியை நாடிவந்து மக்கள் வாழ்க்கை நடத்துகிறார்களோ,

அவனுடைய வாழ்க்கையே உத்தமமானது. எவனொருவன் பிறருடைய ஆதரவில் வாழ்க்கை நடத்துகிறானோ, அவனுடைய வாழ்வு கஷ்டமானது. (6,7)

மாபெரும் வீரரே! பழத்தில் விருப்பம் கொண்ட ஒரு மனிதன் விதை விதைக்கிறான்; அது செழித்து வளர்ந்து பல கிளைகள் உடையதான பெரிய மரமாக உயர்ந்து நிற்கிறது; ஒரு குள்ளமனிதனால் அதில் ஏற முடியாது. அந்த மரத்தில் பூக்கள் மலர்ந்தன. ஆனால், காய்–பழம் தோன்றவேயில்லை என்றால், எந்தக் காரணத்திற்காக மரம் வளர்க்கப்பட்டதோ, அந்த விருப்பம் நிறைவேறாமற்போகிறது. (தாங்கள் செய்கையும் இதுபோலவே இருக்கிறது?) (தாங்கள் ராஜ்யத்தை ஆளவேண்டும் என்பது அரசரின் விருப்பம். அந்த விருப்பம் நிறைவேறாமற்போனால், தங்களைப் புதல்வனாக அடைந்ததன் பயனே இல்லாமல் போய்விடும்.) நான் சொல்கிற இந்த உதாரணத்தைத் தாங்கள் புரிந்து கொள்வீர்கள். ஆணேறு போன்ற தாங்கள் பணியாளர்களான எங்களுடைய போஷகர்; தலைவர். தாங்கள் எங்களை ஆட்சி செய்ய இசையவில்லை என்றால் முன்னர் கூறிய உதாரணங்கள் தங்கள் விஷயத்திலும் பொருத்தமாகிவிடும். (8–10)

பேரரசரே! எதிரிகளை அடக்கும் தாங்கள் செஞ்சுடர்விட்டுப் பிரகாசிக்கும் சூரியனைப் போல, அரசு கட்டிலில் வீற்றிருந்து ஆட்சி செய்வதை, எல்லா வகுப்பு மக்களும் பிரமுகர்களும் கண்டு களிக்கட்டும். காகுத்தரே! தாங்கள் பவனி வரும்போது உற்சாகங்கொண்ட யானைகள் உரத்த குரலில் பிளிறட்டும்; அந்தப்புரத்து நாரீமணிகள் முக மலர்ச்சியோடு வாழ்த்தி வரவேற்கட்டும்.'' இராமனை மன்றாடிப் பிரார்த்திக்கும் பரதனுடைய சொற்களைக் கேட்டுக் கொண்டிருந்த பட்டணத்திலிருந்து வந்திருந்த பலதரப்பட்ட மக்களும், 'ரொம்ப சரி' என்று எண்ணி மகிழ்ந்தார்கள். (11–13)

மிகவும் மனத்தூய்மையுடையவரும் புலன்களை வென்றவருமான இராமன், புகழ்பெற்ற பரதன் இவ்வாறு துக்கத்துடன் புலம்பிக் கொண்டிருப்பதைப் பார்த்து(ப் பின்வருமாறு கூறித்) தேற்றியருளினார்— ''எந்த மனிதனும் தன் இஷ்டம் போல் நடக்க முடியாது. அவனுக்கு அந்த உரிமை இல்லை. வினைப்பயன் அவனை இங்குமங்குமாகத் துரத்தி அலைக்கழிக்கிறது. சேர்த்து வைக்கப்பட்ட செல்வங்கள் எல்லாம் முடிவில் அழிந்துதான் போகும்; பெரும் பதவியில் இருப்பவர்கள் கீழே விழுகிறார்கள்; சேர்க்கை (மனைவி–மக்கள்–நட்பு–உறவு) எல்லாம் இறுதியில் பிரிந்துதான் போகும்; உயிரின் முடிவு மரணம். (14–16)

மரத்தில் நன்றாகப் பழுத்துவிட்ட பழங்களுக்கு, 'தாம் விழுந்துவிடுவோமோ?' என்பதைத் தவிர வேறு பயமில்லை. அதுபோல பிறவி எடுத்துவிட்ட மனிதனுக்கு, 'மரணம் வந்துவிடுமே?' என்பதைக் காட்டிலும் வேறு பயமில்லை. உறுதியான தூண்களையுடைய ஒரு கட்டிடம் நாட்கள் செல்லச் செல்ல, தன் வலிமையிழந்து இடிந்து விழுகிறது. அவ்விதமே, மனிதர்கள் முதுமை–மரணங்களுக்கு ஆட்பட்டவர்களாகி அழிந்து போகிறார்கள். கழிந்து போன இரவு எப்படியும் திரும்பி வருவதில்லை. உப்புக் கடலைச் சென்றடையும் யமுனை நதியின் தூய நீர் கடலுடன் கலந்துவிடுகிறது. (திரும்பவும் யமுனையின் தூய நீராக ஆவதில்லை.) (17–19)

கோடைக் காலத்தில் சூரியனின் வெம்மைக் கிரணங்கள் வேகமாகத் தண்ணீரை உறிஞ்சிவிடுவதைப் போல, இவ்வுலகில் எல்லாப் பிராணிகளுக்கும் வாழ்நாளை குறைத்துக் கொண்டு இரவு–பகல்கள் கழிந்து கொண்டிருக்கின்றன. உன் வாழ்நாள் குறைந்து கொண்டே இருக்கிறது. எனவே, நீ, உன்னைப் பற்றியே நினைத்துப் பார்; இங்கே உயிருடன் இருப்பவன், அல்லது போய்விட்ட பிறரைப் பற்றி ஏன் வருத்தப்படுகிறாய்? (20,21)

காலன், (பிராணிகளின்) கூடவே நடக்கிறான். காலன், கூடவே உட்காருகிறான். காலன், கூடவே வெகுதூரம் வரை சென்று திரும்புகிறான். சரீரத்தில் சுருக்கங்கள் உண்டாகிவிட்டன; தலைமுடி நரைத்துப் போய்விட்டது. முதுமையினால் மனிதன் பலம் இழக்கிறான். உண்மையான

நிலை இப்படி இருக்கும்போது, அவன் எந்த உபாயத்தின் மூலம் சாவிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியும்? (22,23)

சூரியன் உதயமானவுடன் மனிதன் மகிழ்ச்சி அடைகிறான்; சூரியன் மறைந்த பின்னும் மகிழ்கிறான். ஆனால், (அந்தோ, பரிதாபம்!) தம் வாழ்வின் ஒரு நாள் குறைந்துவிட்டதை மனிதர்கள் உணர்ந்து கொள்வதில்லை. ஒவ்வொரு பருவ காலமும் தோன்றும்போது, அப்போதுதான் முதன்முறையாகத் தோன்றியதைப் போன்று மனிதன் மனம் துள்ளுகிறான்; (உலகம் தோன்றிய நாளிலிருந்து ஏற்படும்) பருவ காலங்களின் மாறுதலால் ஜீவன்களுக்கு வாழ்நாள் குறைந்து கொண்டே வருகிறது (என்பதை உணர்வதில்லை). (24,25)

பெருங்கடலில் (தனித்தனியே மிதந்து கொண்டிருக்கும்) இரண்டு மரக்கட்டைகள் ஒரு சமயத்தில் ஒன்றுசேரும்; கொஞ்ச நேரத்தில் கூடியிருந்த அவை பிரிந்து சென்றுவிடும். அதுபோலவே, மனைவி–புதல்வர்–உறவினர்–செல்வங்கள் எல்லாம் ஒன்றுசேர்ந்திருந்து, பின்னர் பிரிந்துவிடுகின்றன. இந்தப் பிரிவு நிச்சயம் நடைபெறவே செய்கிறது. இந்த உலகில் எந்தவொரு பிராணியும், தன் வினைப்பயனை மாற்றவே முடியாது என்பதால், இறந்துபோனவனுக்காக (உயிரோடிருக்கும்) ஒருவன் அதிக சோகத்தில் மூழ்குவதால், அவனுக்கு எந்தப் பயனும் உண்டாவதில்லை. (அவன், தன்னுடைய கடைசி நாளை தள்ளிப்போட இயலாது.) (26–28)

பாதையோரத்தில் நிற்கும் ஒருவன், அந்தச் சாலையில் சென்று கொண்டிருக்கும் ஒரு கூட்டத்தினரைப் பார்த்து, ‘நான், உங்கள் பின்னாலேயே வருகிறேன்’ என்று கூறி, (மன நிம்மதியுடன்) அவர்களுடன் செல்கிறான். அவ்வாறே, நமது முன்னோர்களான தந்தை–பாட்டன்மார் சென்று காட்டிய அறநெறி உறுதியானது. (தவறான இடத்திற்குக் கொண்டு போய் விடுமோ? என்ற சந்தேகத்திற்கு இடமளிக்காதது.) அதை மீறி நடக்காமல், அதன் வழியே செல்பவன் எவ்வாறு வருத்தப்படுவான்? (29,30)

நதியின் நீரோட்டம் பின்னோக்கி இயங்குவதில்லை; (கழிந்துபோன நாட்கள் திரும்புவதில்லை.) ஆயுட்காலம் குறைந்துகொண்டே போகிறபடியால், ஆத்மாவை மோட்சம் என்ற பேரானந்தப் பெருவெள்ளத்தை நோக்கிச் செலுத்த வேண்டும். (அறநெறியை உறுதியாகப் பின்பற்றுவதில் மனத்தைச் செலுத்த வேண்டும்.) ஏனென்றால், மக்கள் பேரின்பத்தைப் பெறும் உரிமை பெற்றவர்கள். (31)

உலகாண்ட மன்னரான நமது தந்தையார் அறத்தையே மூச்சாகக் கொண்டவர்; ஏராளமான தட்சிணை கொடுத்து, எல்லா வகையான சுபமான வேள்விகளையும் நடத்திப் பாவமற்றவராக விண்ணுலகம் சென்றுவிட்டார். நமது தந்தையார், தன் பணியாளர்களை நன்றாகப் போஷித்தார்; குடிமக்களைப் பரிபாலித்தார்; எல்லோருக்கும் செல்வங்களை வாரி வழங்கினார். இந்தத் தருமானுஷ்டானத்தின் பயனாக, தேவருலகம் சென்றடைந்தார். நம்முடைய பிதாவான தசரத சக்கரவர்த்தி உரிய தட்சிணைகளை வழங்கி, யாகங்கள் செய்தார்; மிக்க நல்ல பயன்களை அளிக்கும் பொதுநலப் பணிகளைச் செய்தார். இவற்றின் விளைவாக சுவர்க்கத்தை அடைந்தார். (32–34)

பூமண்டலநாயகர் (தசரதர்), பல்வகை விருப்பங்களைப் பூர்த்தி செய்யக்கூடிய யாகங்களைச் செய்து, அளவிட முடியாத போகங்களைப் பெற்று, நீண்டகாலம் நல்வாழ்க்கை வாழ்ந்துவிட்டு மேலுலகம் சென்றுவிட்டார். குழந்தாய்! (மாமன்னர் ரகுவின் வழித்தோன்றலான நமது) தந்தை மிக நீண்டகாலம் உயிர் வாழ்ந்து, எல்லா போகங்களையும் அனுபவித்துவிட்டு, சான்றோர்களால் போற்றப்பட்டு விண்ணுலகம் ஏகியுள்ளார். அவரைப் பற்றி வருத்தப்பட வேண்டாம். நலிவடைந்துவிட்ட மானுட தேகத்தைத் துறந்து, பிரும்மலோகத்தில் இருப்பதற்கான தேவ சரீரத்தைப் பெற்றிருக்கிறார், நமது தந்தை – என்பது திண்ணம். (35–37)

(நற்கதியையே அடைந்திருக்கும்) அவர் விஷயத்தில் எந்தவொரு புத்திமானும் துக்கப்பட மாட்டான். நல்ல கேள்வி ஞானம் உடையவனும், அறிவாளிகளில் சிறந்தவனுமான நீ,

அதற்கேற்ப நடக்க வேண்டுமே தவிர, இப்படி (சோகப்பட்டுக் கொண்டு) இருக்கிறாயே? தீரமும் அறிவும் பொருந்தியவன், பலவகையான சோகங்கள்–புலம்புதல்–கண்ணீர்விடுதல் ஆகிய சோக வெளிப்பாடுகள் அனைத்தையும் அறவே நீக்கிவிட வேண்டும். பேச்சில் வல்லவனே! மன அமைதியை அடைவாயாக; துக்கப்பட வேண்டாம். நீ, அந்த நகரத்திற்கே (அயோத்திக்கே) சென்று வசிக்க வேண்டும். புலன்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்த தந்தையினால் அவ்வாறு ஆக்ஞாபிக்கப்பட்டிருக்கிறாய். (அவர் ஏதோ காமவசப்பட்டுத் தவறான இந்த முடிவிற்கு வந்தார் என்று எண்ணாதே.) (38–40)

புண்ணிய கர்மானுஷ்டானங்கள் செய்த அவரால், நான், எவ்விடத்தில் இருக்கும்படிக் கட்டளையிடப்பட்டேனோ, அவ்விடத்திலேயே (காட்டிலேயே) இருந்து மகா உத்தமரான நமது தந்தையின் கட்டளையை நிறைவேற்றுவேன். எதிரிகளை அடக்குபவனே! அவருடைய கட்டளையை மீறுவது என்பது என்னால் ஆகாதது. அவருடைய கட்டளை உன்னாலும் மதிக்கத்தக்கதே. ஏனென்றால், அவர் நம்முடைய நலன் விரும்பி; உயிர் கொடுத்த தந்தையும்கூட. (41,42)

ரகுநந்தனா! தந்தையின் சொற்களை (காட்டில் வசிப்பதை) நான் நடத்திக் காட்டுவேன். அப்படிச் செய்வதுதான் அறநெறியாளர்களின் ஒப்புதலைப் பெற்றதாகும். ஆண்புலியே! சுவர்க்கம் போன்ற நல்லுலகங்களை அடைய விரும்பும் மனிதன் தார்மிகனாகவும், பிற உயிர்களுக்குத் துன்பம் விளைவிக்காதவனாகவும், ஆசார்யர் போன்ற பெரியோர்களின் சொற்படி நடப்பவனாகவும் இருக்கவேண்டும். புருஷோத்தமா! நமது தந்தை தசரதரின் சீலம் மிகுந்த ஒழுக்கத்தை நினைவுபடுத்திப் பார்த்து, உனக்கு இயல்பான நல்ல குணங்களோடு இணைத்து மேன்மை அடைவாயாக.'' (43–45)

இவ்வாறு, மாட்சிமை மிக்கவரும் மகாத்மாவுமான இராமன், தந்தையின் ஆக்ஞையை உள்ளபடியே நிறைவேற்றுவதற்காக, பொருள் நிறைந்த உத்தம உபதேசங்களை இளைய சகோதரனிடம் கூறிவிட்டுச் சிறிது நேரம் மௌனமாக இருந்தார். (46)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
நூற்றைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றியாறு

பரதனின் வேண்டுகோள்

மந்தாகினி நதிக்கரையில் மேற்கண்டவாறு அறம் நிறைந்த சொற்களைக் கூறிவிட்டு, இராமன் சற்றே ஓய்ந்ததும், மக்களிடம் பேரன்பு பூண்டவரும் தார்மிகருமான அவரைப் பார்த்து, தருமாத்மாவான பரதன் ஒப்புயர்வற்ற அரிய சொற்களைக் கூறினான்— ''எதிரிகளை அடக்குபவரே! இந்த உலகில் தாங்கள் அனுசரிக்கும் மிக உயர்ந்த நெறியைப் பின்பற்றக் கூடிய வேறு ஒருவர் இருக்கவே முடியாது. துக்கம் (தரக்கூடிய கஷ்டம்) தங்களை மனவேதனைக்கு உள்ளாக்காது; மகிழ்ச்சிக்குரிய விஷயமும் ஆனந்தத்தில் மூழ்கடித்துவிடாது. (அறிவு சார்ந்த) மூத்தவர்கள், தங்களை (தங்கள் அறிவுத்திறனை) மதிக்கிறார்கள். என்றாலும், தாங்கள் அவர்களிடம் சந்தேக விளக்கம் கேட்டுத் தெளிவு பெறுகிறீர்கள். (1–3)

மரணமடைந்து விட்டவனுக்கு, (தான் முன்பு பெற்றிருந்த) உயிரோடிருந்த சரீரத்துடன் எவ்வாறு எந்தத் தொடர்பும் இல்லையோ, அதுபோலவே உயிரோடிருக்கும் போதும் சம்பந்தம் இல்லை என்ற (ஞானத்தை) அடைந்துவிட்டவன், மற்றும் இல்லவே இல்லாத ஒரு பொருளின்மேல் ஆசையோ, வெறுப்போ தோன்றாததைப் போன்று, அதுபோலவே இருக்கும்

பொருள்களின் மேலும் ஆசையோ, வெறுப்போ கொள்ளாதவன் எவனோ, அந்த விவேகியான புருஷனுக்கு (துயரம்) மனக்கவலை என்பது எவ்வாறு ஏற்படும்? (4)

மக்கள் தலைவரே! (ஸத்–அஸத் என்ற விவேகத்தைக் கொண்டுள்ள) தங்களைப் போன்று (காட்டில் வசிக்கும்) இதுபோன்ற துன்பத்தை அடைந்தாலும், ஞானிக்கு ஒப்பானவர்கள் மனம் வருந்தமாட்டார்கள். இராகவனே! தாங்கள் தேவதைகளைப் போன்று நற்குணம் நிறைந்தவர்; மகாத்மா; சத்தியம் தவறாதவர்; எல்லாம் அறிந்தவர்; நடப்பவைகளுக்கெல்லாம் சாட்சியாக இருப்பவர்; தலைசிறந்த புத்திமான். இவ்வாறான நற்குணங்களோடு விளங்குபவரும், தோற்றம்–அழிவுகளின் ரகசியத்தை அறிந்தவருமான தாங்கள், தாங்கமுடியாத இந்தக் கஷ்டத்தை அனுபவிக்கத்தக்கவரல்லர்.'' (5–7)

பரதன் இவ்வாறு கூறிவிட்டு, பின்னர் தொடர்ந்து இராமனை நோக்கிப் பேசினான்— ''நான் வெளிநாட்டில் இருந்தபோது, அற்பத்தனமான என் தாயாரால், என் பொருட்டு எந்தப் பாவச்செயல் செய்யப்பட்டதோ, அதில் எனக்குச் சம்மதம் இல்லை. தாங்கள், என்மேல் கருணை கொண்டு, அதை மன்னித்தருள வேண்டும். தருமம் என்ற கயிற்றால் நான் கட்டப்பட்டிருக்கிறேன். அதனால்தான் தண்டனைக்குரிய பாவத்தைச் செய்த தாயாரான இவரை, கொடிய தண்டனை கொடுத்து கொல்லாமல் விட்டு வைத்திருக்கிறேன். பரம்பரை, தருமானுஷ்டானம் ஆகிய இரு வகையாலும் உத்தமரான தசரதருக்குப் பிறந்த நான் தருமத்தை அறிந்தவன். (அப்படிப்பட்ட நான்) அற ஒழுக்கத்திற்குப் புறம்பானதும், உலகத்தோரால் இகழத்தக்கதுமான ஒரு செயலை (பெற்ற தாயாரைக் கொல்வது என்ற பாவத்தை) எவ்வாறு செய்வேன்? (8–10)

மாமன்னர், எனக்கு (பிரும்மோபதேசம் செய்த) குரு; பெரிய வேள்விகளை நடத்தியவர்; வயது முதிர்ந்தவர்; நாட்டின் அரசர்; தந்தை; தெய்வத்திற்குச் சமமானவர்; தற்சமயம் மேலுலகம் அடைந்துவிட்டவர் என்பதால், பெருமக்கள் நிறைந்த இந்தக் கூட்டத்தில் அவரை இகழாதிருக்கிறேன். தருமத்தை நன்றாக அறிந்த இராகவனே! ஒரு பெண்மணியின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக, அறநெறி அறிந்த எவர்தான் தருமம்–அர்த்தம் இரண்டிற்கும் புறம்பான இத்தகைய இழிசெயலைச் செய்வார்? வாழ்க்கையின் இறுதிக் காலத்தில் உயிர்ப் பிராணிகள் மதிமயக்கத்தை அடைகின்றன என்று ஒரு பழமொழி உண்டு. அந்தப் பழமொழி, மன்னரின் இவ்விதச் செய்கையால் உலகில் கண்கூடாக உறுதியாக்கப்பட்டுவிட்டது. (11–13)

கோபம், மோகம் அல்லது துணிச்சல் காரணமாக நமது தந்தை, தருமத்திற்குப் புறம்பாகச் செய்துவிட்டதை, அதனால் ஏற்படும் விளைவுகளையும் மனத்தில் நன்றாக ஆலோசனை செய்து, (தந்தை செய்துவிட்ட தவற்றைத் திருத்தி) நல்வழிக்குத் திருப்பிக் கொண்டு வரவேண்டும். அறநெறியிலிருந்து வழுவி தந்தை செய்ததை, எந்தப் புதல்வன், உரிய நடவடிக்கை எடுத்து தருமநெறிக்குக் கொண்டு வருகிறானோ, அவனே நல்ல புதல்வன் என்று உலகத்தாரால் மதிக்கப்படுகிறான். அப்படிச் செய்யாத புத்திரன் வேறுவிதமாக (அதருமத்திற்கு ஆதரவு அளிப்பவனாகக்) கருதப்படுவான். (14,15)

ஆகையால், தாங்கள் அவருக்கு சத்புத்திரனாக இருக்க வேண்டும். (அவர் செய்துவிட்ட தவற்றைத் திருத்த வேண்டும்.) உலகத்தோரால் இகழ்ந்து பேசப்படக்கூடியதும், அறநெறிக்கு மாறாகச் செய்யப்பட்டுவிட்டதுமான காரியத்தை, தாங்கள் மேலானதாக எண்ணி நிறைவேற்ற வேண்டியதில்லை. கைகேயி, நான், தந்தை, நண்பர்கள், உற்றார்–உறவினர், நகரத்தார்கள், புறநகர்வாசிகள் ஆகிய எல்லோரையும் தாங்கள்தான் அரசாட்சியை ஏற்றுக் காப்பாற்ற வேண்டும். வனவாசம் என்பது க்ஷத்திரிய தருமமா? சடாமுடி தரித்து நாடாளும் எந்த மன்னராவது இதுவரை இருந்ததுண்டா? இவ்வாறு ஒன்றுக்கொன்று எதிரான காரியத்தைத் தாங்கள் செய்யக்கூடாது. (16–18)

க்ஷத்திரியன் வேந்தனாக முடிசூட்டிக் கொள்வதுதான், அவனுடைய முதன்மையான தருமம். பேரறிவாளரே! பட்டம் சூட்டிக் கொண்டு ஆட்சி செய்வதன் மூலம் குடிமக்களைக் காப்பாற்ற

முடியும். கண்களால் காணக்கூடியதை விட்டுவிட்டு (நல்லாட்சி செய்து மக்கள் சுகமாக இருப்பதைக் கண்ணால் கண்டு மனத்திருப்தி அடைவதைவிட்டு), (இந்தத் தருமத்தை இப்படிச் செய்வது சரியா, தவறா? என்ற) சந்தேகத்திற்கு இடமளிப்பதும், தற்சமயம் தேவையில்லாததும், 'எதிர்காலத்தில் நல்ல பயனைக் கொடுக்கும்' என்று கூறப்படுவதும், உறுதியாகப் பின்பற்றவே வேண்டும் என்றும் விதிக்கப்படாத ஒரு வழியை (காட்டு வாழ்க்கை, சடாமுடி–மான்தோல் அணிவது) பாமரனான ஒரு க்ஷத்திரியன்கூட அனுஷ்டிக்கத் துணியமாட்டான். (19,20)

உடலை வருத்திக் கொண்டுதான் தருமத்தை அனுசரிக்கத் தாங்கள் விரும்பினீர்களேயானால், சரி – நான்கு வருணத்தார்களையும் (அவரவர் கடமைகளில் ஈடுபடச் செய்து) அறநெறிப்படி பரிபாலிக்கும் கஷ்டத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். நான்கு வகையான வாழ்க்கை நிலைகளில் (ஆசிரமங்களில்) கிருஹஸ்த தருமம் (விவாகம் செய்து கொண்டு மனைவி–மக்களுடன் வாழும் நிலை) தான் உயர்ந்தது என்று அறநூல் வல்லுநர்கள் கூறுகிறார்கள். தாங்கள் தருமம் அறிந்தவர். எனவே, (குடும்ப வாழ்க்கை என்னும்) அந்தத் தருமத்தைத் தாங்கள் துறக்கலாகாது. (ஒரு முனிவரைப் போல தவ வாழ்க்கையை ஏற்கக் கூடாது.) (21,22)

கல்வி–கேள்வியினாலும் பிறப்பு வரிசையாலும் நான் தங்களுக்கு இளையவன்; அவ்வளவு எளியவனான நான், (என்னைக் காட்டிலும் எல்லாவிதத்திலும் மேன்மையான) தாங்கள் இருக்கும் போது, இந்தப் பூமண்டலத்தை எவ்வாறு பரிபாலிப்பேன்? நான் சிற்றறிவும் இழிகுணங்களும் உடையவன், சிறுவன், தாழ்ந்த ஒருநிலையில் இருப்பவன். தங்களைப் பிரிந்து உயிர்வாழ்வதிலும் விருப்பம் இல்லாதவன். அறம் அறிந்தவரே! பரம்பரையாக வந்த இந்த நாடு முழுவதும் மிகவும் செழிப்பானது; இடையூறுகள் இல்லாதது. தாங்கள் நம்முடைய குலமுறைப்படி உற்றார்–உறவினர்களோடு (ஆட்சியை ஏற்று நாட்டைப்) பரிபாலித்தருள வேண்டும். (23–25)

அமைச்சர்கள், படைத்தலைவர்கள், குடிமக்கள் மற்றும் வசிஷ்டர் உள்ளிட்ட வேதவித்தகர்களான ரித்விக்குகள் இங்கு உள்ளார்கள். அவர்கள், தங்களுக்கு இங்கேயே, இப்பொழுதே முறைப்படிப் பட்டாபிஷேகம் செய்விக்கட்டும். மருத்துக்களால் பட்டாபிஷேகம் செய்விக்கப்பட்ட தேவேந்திரன் போல, தாங்கள் எங்களால் அபிஷேகம் செய்விக்கப்பட்டு, உலகம் முழுவதையும் விரைவில் வென்று, மக்களைப் பரிபாலிப்பதற்காக அயோத்திக்கு எழுந்தருள வேண்டும். அங்கு, தேவ–ரிஷி–பிதிரர்களுக்குச் செலுத்த வேண்டிய மூன்று கடன்களையும் போக்கிக் கொண்டு, நண்பர்கள் விரும்பும் பொருட்களை அளித்து, அவர்களை மகிழ்வுறச் செய்து கொண்டு, அவ்விடத்தில் எனக்கு நல்லுபதேசங்கள் செய்து கொண்டிருக்க வேண்டும். (26–28)

தொழுந்தகையீர்! தங்களது பட்டாபிஷேகத்தைப் பார்த்து நண்பர்கள் பெருமகிழ்ச்சி அடையட்டும்; தீய எண்ணங்கொண்ட எதிரிகள் அச்சமடைந்து பத்துத்திசைகளிலும் ஓடி ஒளியட்டும். புருஷோத்தமரே! தாங்கள், என் தாயாருக்கு ஏற்பட்டுள்ள களங்கத்தைப் போக்கி, மதிப்பிற்குரிய தந்தையையும் உலக அபவாதத்திலிருந்து காப்பாற்ற வேண்டும். நான், தங்கள் திருவடிகளில் தலை வைத்து வேண்டிக் கொள்கிறேன். எல்லா உயிர்ப் பிராணிகளிடமும் பரமேசுவரன் அருளைச் செலுத்துவதைப் போல, தாங்கள் என்னிடமும் எல்லா உற்றார்–உறவினர்களிடமும் கருணை காட்டவேண்டும். இல்லையென்றால், தாங்கள் இங்கிருந்து தண்டகாரண்யத்திற்கே போவதாக நிச்சயித்தால், நானும் தங்களுடன் வருவேன்.'' (29–32)

துயரத்தில் ஆழ்ந்த பரதன், இராமபிரானைச் சிரம் தாழ்த்தி வேண்டிக் கொண்டான். ஆனால், உலகநாயகரும் தருமவீரருமான இராமன், தந்தையின் கட்டளையை நிறைவேற்றுவதில் உறுதியாக நின்றதால், (அயோத்திக்குத்) திரும்பிச் செல்வதில் மனம் செலுத்தவில்லை. இராமசந்திரனின் ஒப்புவமையில்லாத உறுதியைக் கண்டு, எல்லா மக்களும் ஒரே சமயத்தில் துக்கத்தையும் சந்தோஷத்தையும் அடைந்தார்கள். 'இராமன் அயோத்திக்கு வரப்போவதில்லை'

என்பதால் துயரம். (எந்த நிலையிலும் மனம் மாறாமல்) தந்தையின் வாக்குறுதியைக் காப்பாற்றுவதில் தளர்வில்லாத பிடிப்பு – அதனால் மகிழ்ச்சி. (33,34)

அப்போது, வேதவித்தகர்களும் நகரப் பிரமுகர்களும் தாய்மார்களும் தன்வசமிழந்து கண்ணீர் பெருக்கினார்கள்; பரதனுடைய உத்தமமான குணத்தை வெகுவாகப் போற்றினார்கள்; இராமனுடைய திருவடித் தாமரைகளில் தலைதாழ்த்தி வணங்கிப் பிரார்த்தித்துக் கொண்டார்கள். (35)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
நூற்றியாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றேழு
இராமன் பதில் கூறுதல்

அப்போது, உற்றார்–உறவினர்கள் மத்தியில் மிகுந்த கௌரவத்துடன் அமர்ந்திருந்தவரும், சீமானும், இலக்குவன் தமையனாருமான அவர், மீண்டும் இவ்வாறு (இராமன் அயோத்திக்குத் திரும்பவேண்டும் என்று) வேண்டிக் கொண்ட பரதனுக்குப் பின்வருமாறு பதில் கூறினார்— (1)

''சிறந்த வேந்தராகிய தசரதருக்கு, கைகேயியிடம் பிறந்த புதல்வனான நீ, முன்பு கூறியதெல்லாம் சரியானதே. தம்பி! நம்முடைய தகப்பனார், முன்பு உன் தாயாரைத் திருமணம் செய்துகொண்ட காலத்தில், உன் பாட்டனாரிடம், தன் ராஜ்யத்தை வதுதட்சிணையாகக் கொடுக்க ஒப்புக்கொண்டார். (கைகேயிக்குப் பிறக்கும் குமாரனுக்கே அரசாட்சியைக் கொடுப்பதாக வாக்களித்தார்.) பின்னர் ஒரு சமயம், தேவாசுரர்களிடையே நடந்த போரில், (தேவர்களுக்கு உதவுவதற்காகச் சென்ற) நமது தந்தையாரின் உயிரை, உன் தாயார் காப்பாற்றியதால் மனம் மகிழ்ந்து, அவருக்கு வரம் கொடுப்பதாகக் கூறியிருக்கிறார். (2–4)

கீர்த்திமிக்கவரான உன் தாயார், பின்னொரு சந்தர்ப்பம் வாய்த்தபோது, ('வரம் கொடுப்பதாக முன்பு கூறியதை மீறமாட்டீர்களே?' என்று) தருமம் தவறாதவரான அவரிடம் வாக்குறுதி பெற்று, இரண்டு வரங்களை வேண்டினார். புருஷோத்தமா! 'உனக்கு ராஜ்யம்; எனக்கு வனவாசம்' என்ற இரு வரங்களையும், முன்பு கொடுத்த வாக்குறுதியினால் கட்டுப்பட்ட மன்னர், அவருக்குக் கொடுத்தார். மாவீரனே! இவ்விதம் வரதானம் என்ற பெயரில், 'நான், பதிநான்கு ஆண்டுகள் காட்டில் வசிக்கவேண்டும்' என்று தந்தையார் கட்டளையிட்டிருக்கிறார். (5–7)

ஆகவேதான், சீதையோடும் லட்சுமணனோடும் மனித சஞ்சாரமில்லாத இந்தக் காட்டிற்கு வந்திருக்கிறேன். என்னுடைய இந்த முடிவில் எந்தவித மாற்றத்திற்கும் இடமில்லை. ஏனென்றால், தந்தையின் சொற்களுக்குக் கட்டுப்பட்டவன். நமது தந்தை கொடுத்த வரத்தைச் சத்தியமாக்கிக் கொண்டு, நான் இங்கே இருக்கிறேன். ராஜேந்திரா! நீயும் சத்தியசந்தரான தந்தையின் சொற்களை ஏற்றுக்கொண்டு விரைவில் பட்டாபிஷேகம் செய்துகொள்ளக் கடவாய்! அதனால், அவரின் சத்தியவிரதத்தைக் காப்பாற்றியவன் ஆவாய். (8,9)

பரதனே! நமக்குத் தலைவரும் மன்னரும் அறம் அறிந்தவரும் தந்தையுமான அவரை (கைகேயியிடம் அவர் பட்டிருக்கும்) கடனிலிருந்து விடுவிப்பாயாக. உன் தாயாரையும் சந்தோஷப்படுத்து. செல்வனே! முன்னொரு காலத்தில் புகழ்பெற்ற கயர் என்பவர் கயா க்ஷேத்திரத்தில், தன் முன்னோர்களுடைய திருப்தியின் பொருட்டு சிராத்தம் செய்தபோது கூறிய ஒரு நீதிவாக்கியம் எல்லோரும் அறிந்ததே. புதல்வன் என்பவன், புத் என்னும் நரகத்திலிருந்து தந்தையைக் காப்பாற்றுவதாலும், முன்னோர்களை எல்லாவிதத்திலும் பாதுகாப்பதாலும், அவன் 'புத்திரன்' என்று அழைக்கப்படுகிறான். (10–12)

குணசாலிகளான பல்கலை அறிவு பெற்ற அநேக மைந்தர்களைப் பெறவேண்டும் என்று ஆசைப்பட வேண்டும். பெற்றெடுத்த பல புத்திரர்களில் எவனேனும் ஒருவனாவது கயைக்குச் செல்ல மாட்டானா? (அங்கே பிதிரர் கடன்களை நிறைவேற்ற மாட்டானா?) அரசருக்கு மனமகிழ்வளிக்கும் மைந்தனே! நான் மேலே சொல்லியதை எல்லா ராஜரிஷிகளும் ஆமோதித்திருக்கிறார்கள். ஆகவே, மனிதருள் மாணிக்கமே! நமது தந்தையை நரகத்திலிருந்து காப்பாற்று. தருமவீரனே! பரதா! (இங்கே வந்திருக்கும்) இரு பிறப்பாளர்கள் (வேதியர், வேந்தர், வணிகர்) அனைவருடனும் சத்ருக்னனோடும் அயோத்திக்குச் செல்வாயாக. (அங்கே நல்லாட்சி புரிந்து) குடிமக்களை மகிழ்விப்பாயாக. (13–15)

மன்னரே! (இராமன், பரதனை இவ்வாறு அழைத்ததன் மூலம், 'பரதனே அயோத்தியின் மன்னன்' என்பதை இராமனே உறுதி செய்து, அங்கிருந்த அனைவருக்கும் உணர்த்திவிட்டார் என்ற நுட்பம் சுவைக்கத்தக்கது.) இனியும் காலதாமதம் செய்யாமல் நானும் சீதை–லட்சுமணனோடு தண்டகாரண்யத்திற்குள் புகப்போகிறேன். பரதனே! நீயே மனிதர்களுக்கு மன்னனாக ஆகுக. (மன்னனாக முடிசூட்டிக் கொள்.) நான், காட்டு விலங்குகளுக்கு சிறந்த மன்னனாக ஆவேன்! மனத்திருப்தியோடு இப்போது தலைநகரத்திற்குச் செல்; நானும் மனநிம்மதியுடன் தண்டகாரண்யத்திற்குள் செல்வேன். (16,17)

பரதா! (அரச சின்னமான) வெண்கொற்றக்குடை, உன் தலையின்மேல் சூரிய கிரணங்கள் படாமல் குளிர்ந்த நிழலை அளிக்கட்டும். நானும், இந்தக் காட்டு மரங்களின் அடர்த்தியான நிழலின்கீழ் சுகமாகத் தங்குவேன். பரதா! மனம் வருந்தாதே. எனக்கு சுமித்திரையின் மைந்தன் லட்சுமணன் முக்கியமான நண்பன் என்பது தெரிந்த விஷயம். சிறந்த அறிவாளியான சத்ருக்னன் (சுமித்திரையின் இன்னொரு புதல்வன்) உனக்கு உறுதுணையாக இருப்பான். நற்புதல்வர்களான நாம் நால்வரும் (மாமன்னரின் கட்டளைப்படியே நடந்து,) அவரைச் சத்தியத்தில் நிலைபெற்றவராகச் செய்வோம்.'' (18,19)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
நூற்றியேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றெட்டு

ஜாபாலியின் கூற்று!

அறவிதிகளை அறிந்த இராமன், பரதனுக்கு ஆறுதல் கூறி, மேற்கண்டவாறு பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்த வேதவித்தகரான ஜாபாலி என்பவர் அறத்திற்குப் புறம்பான வாதங்களை அப்போது சொன்னார்— (1)

''இராகவனே! உன் பேச்சு நன்றாக இருந்தது. உயர்ந்த நோக்கமுடையவனும், நல்லிதயம் கொண்டவனுமான நீ, பாமர மக்களைப் போன்று எவ்விதப் பயனையும் தராத வாதங்களைக் கூறக் கூடாது. எவன், (வேறு) எந்த மனிதனுக்கு உறவு? யாரால், யாருக்கு என்ன காரியம் ஆகவேண்டும்? எப்படி ஒரு பிராணி தனியாகப் பிறக்கிறதோ, அவ்வாறே தனியாக (தான் ஒன்றியாக) நசித்துப் போகிறது. ஆகவே, இராமா! தாய்–தந்தை என்று எவனொருவன் பாசம் வைக்கிறானோ, அவனை மதிகலங்கிய பித்தன் என்று அறிந்து கொள்ளவேண்டும். ஏனென்றால், யாரும் யாருடனும் சம்பந்தப்பட்டவர் அல்லர். (2–4)

காகுத்தனே! ஒரு மனிதன் வேறோர் ஊருக்குப் போகும் வழியில், ஏதோ ஓர் இடத்தில் இரவில் தங்குகிறான்; மறுநாளே, அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டுவிடுகிறான். (அப்படிப் பிரிந்து செல்வதில் அவனுக்கு எந்த வருத்தமும் ஏற்படுவதில்லை.) இதைப் போலவேதான்

மனிதர்களுக்கு தாய்—தந்தை—வீடு—செல்வம் ஆகியன எல்லாம் வெறும் தங்குமிடம் போன்றவையே. அறிவாளிகள் இவற்றின்மேல் பற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆகவே, நரோத்தமனே! நீ, வம்ச பரம்பரையாக வந்த நாட்டைத் துறந்து, துக்கம் தருவதும், மேடு—பள்ளமானதும், பற்பல இடைஞ்சல்களைக் கொடுப்பதுமான இந்தத் தவறான வழியில் செல்லக்கூடாது. (5–7)

செல்வச் செழிப்புள்ள அயோத்தியில் மன்னனாக உன்னை அபிஷேகம் செய்வித்துக் கொள். (வெளியூர் சென்றிருக்கும் கணவரின் விரக தாபத்தால்) ஒற்றைப் பின்னலுடன் விளங்கும் பெண்மணியைப் போல, (நீ இல்லாமல் களையிழந்து கிடக்கும்) அந்த நகரம் முழுவதும் உன் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. மன்னர் மைந்தனே! தேவலோகத்தில் இந்திரன் சகல சௌக்கியங்களையும் அனுபவித்துக் கொண்டிருப்பதைப் போல, விலைமதிக்க முடியாத அரச போகங்களை அனுபவித்துக் கொண்டு அயோத்தியில் நீ உலா வருவாயாக. (8,9)

தசரதர் உனக்கு ஒருவருமல்லர்; நீயும் அவருக்கு எந்த உறவும் உடையவனல்லன். மன்னர் வேறு; நீ வேறு. ஆகையால், (எங்களால்) என்ன சொல்லப்படுகிறதோ, அவ்வாறே செய். (நாட்டிற்குத் திரும்பி வந்து முடிசூட்டிக் கொள்.) இவ்வுலகில் தந்தை என்பவர் ஒரு ஜீவன் பிறப்பதற்கு நிமித்த காரணம் மட்டுமே. உண்மையில் ருது நீராடியுள்ள தாயின் கர்ப்பாசயத்தில் சோணித—சுக்லங்களின் இணைப்பே முதன்மையான காரணம். அந்த மன்னர் எந்த இடத்திற்குப் போக வேண்டுமோ, அங்கே போய்ச் சேர்ந்துவிட்டார். இதுதான் மனிதர்களுக்கு இயல்பு. நீயோ, ('அவர் என் தந்தை' என்ற) பொய்யான பாசத்தினால் உருகிக் கொண்டிருக்கிறாய். (10–12)

எந்தெந்த மனிதர்கள், தமக்குக் கிடைத்த செல்வங்களைத் துறந்து, தருமானுஷ்டானம் என்ற பெயரில் உடலை வருத்திக் கொள்கிறார்களோ, அவர்களை நினைத்துத்தான் நான் வருந்துகிறேன்; மற்றவர்களைப் பற்றி அல்ல. அவர்கள், இவ்வுலகில் தருமம் என்று கூறிக் கொண்டு, பற்பல கஷ்டங்களையும் அனுபவித்துவிட்டு, கடைசியில் உயிரைவிட்டபின் காணாமல் போய்விடுகிறார்கள். (அவர்களுக்கு நல்ல கதி கிடைத்ததா? என்பது நமக்குத் தெரியாது.) பாமர மனிதன், அஷ்டகா சிராத்தம், பித்ரு சிராத்தம் என்ற சடங்குகளில் பெரிதும் ஈடுபடுகிறான். உண்மையில், இந்தச் சிராத்தங்கள் உணவுப் பண்டங்களை வீணாக்கும் செயலே ஆகும். யோசித்துப் பார்! செத்துப் போய்விட்ட மனிதன் உணவு உண்பானா? (13,14)

இங்கு ஒரு மனிதனால் புசிக்கப்பட்ட உணவு, வேறோர் இடத்திலுள்ள வேறொரு சரீரத்திற்குப் போய்ச் சேருமா? (சேரும் என்றால்) நெடுந்தூரம் பயணம் செய்யும் ஒருவனுக்கு இங்கேயே சிராத்தம் செய்துவிட்டால், வழியில் அவனுக்கு அந்த உணவு போய்ச் சேர்ந்துவிட வேண்டுமே? (கட்டுச்சாதம் சுமந்துகொண்டு போக வேண்டியதில்லையே?) வேள்வி செய்; தானம் செய்; மந்திர உபதேசம் பெற்றுக் கொள்; தவம் செய்; வீட்டையும் பொருட்களையும் துறந்துவிடு – என்றெல்லாம் கூறும் நூல்கள், மகா புத்திமான்களால் தானத்தின் சிறப்பை வலியுறுத்துவதற்காகச் செய்யப்பட்டன. (15,16)

மேதாவியே! (கண்ணுக்குப் புலனாகாத) மேலுலகம் இல்லை என்பதை நிச்சயமாகத் தெரிந்து கொள். எது கண்ணுக்குத் தெரிகிறதோ, அதையே ஏற்றுக் கொள். கண்ணுக்குப் புலப்படாதவைகளைப் பின்னுக்குத் தள்ளிவிடு. சான்றோர்களின் சொற்கள், எல்லா மக்களுக்கும் நல்வழியைக் காட்டுவதால் பிரமாணமாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்கி, பரதனுடைய பிரார்த்தனைக்குச் செவிசாய்த்து, ராஜ்யத்தை நீ ஏற்றுக் கொள்ள வேண்டும்.'' (17,18)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
நூற்றெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றொன்பது

இராமன் சத்தியத்தின் மேன்மையை விளக்குதல்

ஜாபாலியின் சொற்களைக் கேட்டபின், சத்திய நெறியைக் கடைப்பிடிப்பவர்களுள் தலையாயவரும், சந்தேகத்திற்கு இடமில்லாமல் தன் வழியில் நிச்சயமான பிடிப்பு உள்ளவரும், வேத–சாஸ்திர–மெய்ஞ்ஞானிகளின் உபதேச வாயிலாக அறியப்பட்டதுமான நீதிகளின் அடிப்படையில் இராமன் சொன்னார்— (1)

"தாங்கள், எனக்கு நன்மை செய்யக் கருதி, இப்போது சொன்ன சொற்கள் (கேட்பதற்கு இனிமையாக இருப்பதால்), 'செய்யத்தக்க செயல் இதுவே' என்பது போல் தோற்றமளித்தாலும், (உண்மையில்) செய்யத்தகாத, தருமத்திற்கு ஒவ்வாத செயலே ஆகும். நல்ல வழி என்பது போல் தோன்றினும் தவறான பாதையே ஆகும். அறநூல்களின் உபதேசங்களுக்கு ஒப்ப நடக்காதவன், ஒழுக்கம்–சிந்தனைகளில் வேறுபட்டு பாவங்களைச் செய்கிறான். (நல்ல ஒழுக்கமும் நல்ல சிந்தனைகளும் இல்லாமல் போகிறான்.) இப்படிப்பட்டவன் சான்றோர்களால் மதிக்கப்படுவதில்லை. (2,3)

ஒருவனுடைய ஒழுக்கம்தான் அவன் நற்குலத்தில் பிறந்தவனா? இல்லை, இழிகுலத்தில் பிறந்தவனா? என்பதையும், அவன் சிறந்த வீரனா? அல்லது வெறும் ஆண் தோற்றமுடையவன் மட்டும்தானா? என்பதையும், அவன் மனத்தூய்மை உடையவனா? அல்லது அழுக்கடைந்த மனம் உடையவனா? என்பதையும் விளக்கமாகக் காட்டிக் கொடுக்கும். (4)

[வெளித் தோற்றத்தை (செவிக்கு இனிய சொற்களை)க் கொண்டு ஒருவனை எடை போட முடியாது.] தீய நடத்தையுடையவனோ நன்னடத்தை உடையவன் போல் காணப்படுவான்; அந்தரங்க சுத்தமில்லாதவனோ நற்குணங்கள் உள்ளவன் போலும், வைதிக ஆசார–அனுஷ்டானங்களில் ஈடுபட்டவன் போல் பேசித் திரியும் ஒருவன், அவற்றை அனுஷ்டிக்காமலும் இருப்பான்; தீயகுணங்கள் உடையவனோ, ஆத்ம குணங்களைக் கொண்டவன் போல் காணப்படுவான். (5)

உலகத்தைக் கெடுக்கக்கூடியதும், தருமம் என்ற தோற்றத்தில் தாங்கள் கூறியதுமான அதருமமான உபதேசங்களை நான் ஏற்றுக் கொண்டேனேயானால், செம்மையான நீதி நெறியைத் துறந்து, அதருமமான காரியங்களைச் செய்வேனாகில், உலகில் செய்யத்தக்கது–தகாதது என்று பகுத்தறியும் நல்லறிவுடைய சான்றோர் எவரேனும் மக்களால் இகழத்தக்க தீயநெறியைக் கடைப்பிடித்த என்னை மதிப்பாரா? (6,7)

கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றாமல் விடுவது என்ற செயல், (இதற்குமுன்) எந்தச் சான்றோர் காட்டிய வழி எனப் பின்பற்றுவேன்? (நீங்கள் கூறியபடி, இதற்கு முன்பு எங்கள் முன்னோர்களில் யாரும் – சத்தியம் தவறுதல் பாவமில்லை என்று – நடந்து காட்டவில்லையே?) இப்போது நான் கொடுத்த வாக்குறுதியைக் கைவிட்டால், எந்த மார்க்கத்தால் நான் சுவர்க்கத்தை அடைவேன்? (சத்தியத்தை மீறிய பாவிக்கு சுவர்க்கம் எப்படிக் கிடைக்கும்?) (8)

மன்னர்கள் எவ்வழி நடக்கிறார்களோ, அவ்வழியையே மக்கள் பின்பற்றி நடக்கிறார்கள். (நான், தாங்கள் உபதேசித்த வழியைப் பின்பற்றினால், மக்களும் தைரியமாகத் தவறான பாதைகளில் செல்லத் தொடங்குவார்கள்.) அந்த நிலையில், இந்த உலகம் முழுவதும் தத்தம் விருப்பப்படி (நீதி–நியாயங்களைக் காற்றில் பறக்க விட்டுவிட்டு) நடக்க ஆரம்பித்துவிடும். உயிர்ப் பிராணிகளிடம் கருணையோடு விளங்கும் பண்பு, சத்தியம்; தொன்மைக் காலத்திலிருந்து மன்னர்களால் கைக்கொள்ளப்பட்ட நெறி. அரசு நிர்வாகம் என்பது சத்தியமே வடிவானது; உலகம் சத்தியத்தில் நிலைபெற்றிருக்கிறது. (9,10)

முனிவர்களும் தேவர்களும் சத்தியத்தையே முழுமையாக மதித்துப் போற்றினார்கள்; மேலும், இவ்வுலகில் சத்தியம் பேசுகிறவன் உயர்ந்த இடத்திற்குப் போகிறான். (உன்னதமான பதவியை அடைகிறான்.) உசுப்பிவிடப்பட்ட பாம்பைக் கண்டு மனிதன் அஞ்சுவதைப் போல, பொய் பேசுபவனைக் கண்டும் மக்கள் பயப்படுகிறார்கள். உலகத்தில் தருமத்தின் எல்லையாக இருப்பது சத்தியமே. அனைத்திற்கும் (அனைத்து நன்மைகளுக்கும்) அதுவே மூலகாரணம் என்றும் சொல்லப்படுகிறது. (11,12)

உலகத்தில் சத்தியம்தான் ஈசுவரன் (அனைத்திற்கும் மேலாக இருப்பது); சத்தியத்தில்தான் திருமகள் வசிக்கிறாள்; எல்லா நற்செயல்களுக்கும் சத்தியமே ஆணிவேர்; சத்தியத்தைக் காட்டிலும் உயர்ந்த ஸ்தானம் இல்லவே இல்லை. தானம், வேள்வி, ஹோமம், கடுமையான கட்டுப்பாடுகளுடன் செய்யப்பட்ட தவம் மற்றும் வேதங்களும் சத்தியத்தின் மேல் நிற்கின்றன. ஆகவே, மனிதன் சத்தியத்தையே முற்றிலுமாக அனுசரிக்கக் கடவன். ஒரு மனிதன், உலகத் தலைவனாகிப் பாதுகாக்கிறான். இன்னொரு மனிதன், தன் பரம்பரை பெருமைகளைக் காப்பாற்றுகிறான். வேறொருவன், நரகத்தில் வீழ்ந்து மூழ்கிப் போகிறான். இன்னொருவன், சுவர்க்கலோகத்தில் போற்றப்படுகிறான். (13–15)

இவ்விதம் சத்தியத்தின் மேன்மையில் உறுதியுடைய நான், வாக்குத் தவறாதவன்; தந்தை கொடுத்த வரங்களை நிறைவேற்றுவதாகச் சபதம் செய்திருக்கிறேன். ஆகவே, இப்போது கொடுத்த வாக்குறுதியை (தந்தையின் முன் செய்த சபதத்தை) எப்படிக் கடைப்பிடிக்காமல் இருப்பேன்? தந்தைக்கு அளித்த வாக்கை பேராசையாலோ, மதிமயக்கத்தாலோ, தெள்ளிய அறிவின்மையாலோ, அறியாமையால் மதியிழந்தோ சத்திய வரம்பை மீறி நடக்க மாட்டேன். (16,17)

அசத்தியம் பேசுகிறவனும், நிலையான அறச்சிந்தனை இல்லாதவனும், நற்செயல்களில் தடுமாற்றமுடையவனுமான ஒருவனால் அளிக்கப்படும் நைவேத்யம், பிண்டம் ஆகியவற்றை முறையே தேவதைகளும் பிதிரர்களும் ஏற்கமாட்டார்கள் என்று, நாங்கள் (குருமுகமாகக்) கேட்டிருக்கிறோம். நான், சத்தியம் கூறுதல் என்ற தருமத்தைத்தான் எல்லாப் பிராணிகளுக்கும் நன்மை செய்யும் வழியாகவும், எல்லா தருமங்களைக் காட்டிலும் உயர்ந்ததாகவும் நிச்சயமாகக் கருதுகிறேன். ஆகவே, சான்றோர்களால் அணியப்படும் ஜடாபாரம், மரவுரி ஆகியன கொண்டாடப்படுகின்றன. (இவ்வாறு, தம் உடலை வருத்திக் கொள்பவர்கள் சத்தியம் தவறமாட்டார்கள் என்பது திண்ணம்.) (18,19)

பாவச்செயல்கள் புரியும் அற்பர்களும், கொடியவர்களும், பேராசை கொண்டவர்களாலும் ஏற்கப்படுவதும், அறநெறி போல் தோற்றம் தரும் அதருமமான இந்த க்ஷத்திரிய நெறியை நான் துறக்கிறேன். (அரசாள்வது க்ஷத்திரிய தருமம். ஆனால், அதுவே சத்தியவாக்கிற்கு எதிராக இருக்கும் நிலையில் கைவிடத்தக்கதே.) உடலினால் பாவத்தைச் செய்யும் மனிதன், முதலில் அதை மனதில் தீர்மானிக்கிறான்; நாவினால் பொய் பேசுகிறான். ஆக, பாவச்செயல் என்பது (மனம், வாக்கு, காயம் என்ற) மூன்று வகையாலும் செய்யப்படுகிறது. பூதேவி, இகலோக புகழ், மறைந்த பின் நிலைத்து நிற்கும் புகழ், செல்வத் திருமகள் – இவையெல்லாம் சத்தியம் பேசும் புருஷனையே அடைய விரும்புகின்றன. மேலும், சான்றோர்கள் சத்தியத்தையே கடைப்பிடிக்கிறார்கள். ஆகவே, மனிதன் எப்போதும் சத்தியத்தையே அனைத்திலும் மேலானதாகக் கொள்ளவேண்டும். (20–22)

தாங்கள், எனக்கு நல்லது செய்யும் நோக்கத்துடன் அதற்கு ஏற்ற மாதிரியான தர்க்கவாதங்களைக் கொண்டு, 'நல்ல ஆலோசனைகளை ஏற்றுக்கொள். நாட்டிற்குத் திரும்பி வந்து ஆட்சி செலுத்து' என்று சொன்னீர்களே, அது நற்குடிப் பிறந்தோர் ஏற்கும் சொற்கள் அல்லவே? நான், தந்தையின் எதிரில், 'இவ்வாறு வனவாசம் செய்வேன்' என்று வாக்களித்திருக்கிறேன். இப்போது, அவருடைய கட்டளையை மீறி, பரதனுடைய வேண்டுகோளை எவ்வாறு ஏற்க முடியும்? தந்தையின் முன்னிலையில் செய்யப்பட்ட சபதம் உறுதியானது; அசைக்க முடியாதது.

அப்போது (நான் காட்டிற்குப் போகிறேன்; பரதன் இளவரசுப்பட்டம் சூட்டிக் கொள்ளட்டும் என்று நான் சபதம் செய்தபோது) கைகேயிதேவி மனக்களிப்படைந்தார். (23–25)

பரிசுத்தனாக இருந்து கொண்டு விரத காலத்திற்குரிய உணவை உண்டு, புனிதமான கிழங்கு–பழம்–மலர்களால் பிதிரர்களையும் தேவர்களையும் திருப்தி செய்வேன். உள்ளும் புறமும் ஒரே மாதிரியாக இருந்து, செய்யவேண்டியது–செய்யவேண்டாதது என்பதை நன்றாகப் பகுத்துணர்ந்து, ஐம்புலன்களின் இயக்கங்களிலும் திருப்தியடைந்தவனாக மிகவும் நம்பிக்கையோடு உலக வாழ்க்கையை நடத்தி வருவேன். கர்மபூமியான இந்த நாட்டில் பிறந்திருக்கும் நாம், புண்ணிய கர்மங்களையே செய்யவேண்டும். ஏனென்றால், அக்னி, வாயு, சந்திரன் ஆகியோர் தத்தம் கர்மாக்களின் பயனையே, (அந்தந்தப் பதவியை அடைந்ததன் மூலம்) அனுபவித்து வருகிறார்கள். தேவராஜன், நூறு யாகங்கள் இயற்றி (அவற்றின் பயனாக) தேவலோக தலைமைப் பதவியை அடைந்தான்; கடுமையான நியமங்களோடு தவம் புரிந்த முனிவர்கள் சுவர்க்கலோகம் சென்றார்கள்.'' (26–29)

மகாதேஜஸ்வியும் அரசகுமாரருமான இராமன், நாத்திகத்தைத் தூண்டும் (பரலோகம் இல்லை; வேத–சாஸ்திரம் தவறு – என்பது முதலான) சொற்களைக் கேட்டு, அவைகளை சகித்துக் கொள்ள முடியாமல், அவருடைய வாதங்களைக் கண்டிக்கும் நோக்கத்துடன் அவரைப் பார்த்து மேலும் கூறினார்— (30)

''சத்தியம், தருமம், போரில் புறமுதுகு காட்டாத வீரம், அனைத்துப் பிராணிகளிடத்திலும் கருணை, அந்தணர்களையும் தேவதைகளையும் விருந்தினர்களையும் வணங்கிப் போற்றுதல் – இவைகளே ஒருவனை சுவர்க்கத்திற்கு அழைத்துச் செல்லும் வழிகள் என்று மகான்கள் சொல்லியிருக்கிறார்கள். அதனால்தான், சான்றோர்களின் இந்தச் சொற்களின்படியும், நியாயமான வாதங்களாலும் தருமத்தின் நுட்பத்தை ஆராய்ந்து, திண்ணமான முடிவிற்கு வந்து, அதன்படி சிரத்தையுடன் மனச்சஞ்சலம் அடையாதவர்களாக அறநெறியைக் கடைப்பிடித்து, உத்தமமான விண்ணுலகங்களை அடைவதில் அந்தணர்கள் விருப்பம் கொண்டுள்ளார்கள். (31,32)

தங்களது அறிவு தவறான வழியில் நிலைபெற்றிருக்கிறது. தாங்கள் (தெய்வம், வேதம், தருமம் ஆகியவைகளில் நம்பிக்கையில்லாத) நாஸ்திகர். தாங்கள் தரும வழியிலிருந்து வெகுதூரத்திற்கப்பால் இருக்கிறீர்கள். இப்படிப்பட்ட தங்களை, (தான் செய்யும் யக்ஞ காரியங்களில் ஒரு வேள்வியாளராக,) என் தந்தை ஏற்றுக்கொண்ட அந்தச் செயலை, நான் நிந்திக்கிறேன். (என் தந்தையின் இந்தச் செயலை, நான் ஏற்றுக் கொள்ளவில்லை.) அறிவாளியானவன் நாத்திகவாதத்திற்கு இடம் கொடுப்பானாகில், அதாவது வேதத்திற்குப் புறம்பான வழியில் செல்வானாகில், அவன் திருடனைப் போன்றவனாவான். அவ்வாறு சந்தேகிக்கத்தக்கவர்களை நல்லறிஞர்கள் முகம் கொடுத்தும் பேசுவதில்லை. (இதுவே, அவர்களுக்குப் பெரிய தண்டனை ஆயிற்று.) (33,34)

ஆகையால்தான், தங்களைக் காட்டிலும் பெரியோர்களும், வயதில் சிறியவர்களுமான மக்கள், மங்களகரமான அநேக கர்மாக்களைச் செய்தார்கள். தவம், கொடை, யாகம் முதலிய நற்கர்மங்களை மறை ஒழுக்கப்படி செய்து, இவ்வுலகிலும் மேலுலகிலும் வெற்றியை நிலைநாட்டி, அந்தணர்கள் மேன்மை அடைந்தார்கள். தருமத்தில் உறுதியான நம்பிக்கை உடையவர்கள், மெய்ஞானிகளுடன் உறவு கொண்டிருப்பவர்கள், ஆன்ம ஒளி மிக்கவர்கள், ஈகைக் குணத்தை முக்கியமாகக் கொண்டவர்கள், எந்த ஜீவனையும் துன்புறுத்தாதவர்கள், மனமாசுகள் நீங்கியவர்கள் – இப்படிப்பட்ட உத்தமமான முனிவர்கள்தாம், உலகத்தில் பூஜிக்கத்தக்கவர்கள் ஆகின்றார்கள்.'' (35,36)

இவ்வாறு, தாழ்ந்து போகாத மனஉறுதி படைத்த இராமன், கோபத்துடன் பேசியதைக் கேட்ட அந்தணர் (ஜாபாலி), மறுபடியும் பேசத் தொடங்கி, தெய்வம்–வேதம் முதலியவைகளில் நம்பிக்கையுடைய ஆஸ்திகமான, சத்தியமான, நன்மை அளிக்கக்கூடிய சொற்களைப் பணிவுடன் உரைத்தார்— (37)

''(இராமா!) நான் நாஸ்திக வாதத்தை உயர்வாகப் பேசவில்லை; நான் நாஸ்திகனும் அல்லன்; பரலோகம் முதலானவை இல்லை என்று சொல்பவனும் அல்லன். இப்போது சந்தர்ப்பத்தை அனுசரித்து, நான் ஆஸ்திகனாகிவிட்டேன்! அவசியம் ஏற்பட்டால் பின்னொரு சமயத்தில் நான் நாத்திகனாகவும் மாறுவேன்! நாத்திகவாதம் செய்ய வேண்டிய சந்தர்ப்பம், இப்போது எவ்வாறோ ஏற்பட்டிருந்தது. இராமா! உன்னை எப்படியாவது சமாதானப்படுத்தி (அயோத்திக்கு)த் திரும்பவும் அழைத்துப் போவது என்ற காரணத்தால், என்னால் (வேத விரோதமான) நாத்திகம் பேசப்பட்டது.'' (ஆகவே, நான் இப்படிப் பேசியதற்காக, நீ என்னை மன்னிக்க வேண்டும்.) (38,39)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
நூற்றொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றுப் பத்து
இக்ஷ்வாகு பரம்பரையைப் புகழ்தல்

இராமன், இன்னமும் கோபத்தோடு இருப்பதை அறிந்துகொண்ட வசிஷ்டர், ''ஜாபாலியும் இந்த உலகில் உயிர்கள் தோன்றுவதையும் மறைவதையும் (உடலைத் துறந்து மேலுலகம் சென்று, பின் மறுபிறவி எடுப்பதை) அறிவார்'' என்று பதில் சொன்னார். (அவர் நாஸ்திகர் அல்லர்.) (1)

''ஜகதீசுவரா! உன்னைத் திரும்ப அழைத்துப் போகும் ஆசையில், அவர் இவ்வாறு தாறுமாறாகப் பேசினார். அவ்வளவுதான், இந்த உலகம் தோன்றியவிதத்தை நான் விரிவாகச் சொல்கிறேன், கேள். முதலில், எல்லாம் (எல்லாவிடத்திலும்) ஜலமயமாகவே இருந்தது. அதன் மத்தியில் பூமண்டலம் நிலைநிறுத்தப்பட்டது. பின்னர், தான்தோன்றியான பிரும்மா தேவதைகளோடு தோன்றினார். பிறகு, மகாவிஷ்ணு ஸ்வரூபமான பிரும்மா வராகமூர்த்தியாக வெளிப்பட்டு, இந்தப் பூமியை மேலே இழுத்துக் கொண்டு வந்தார். குணசாலிகளான புதல்வர்களுடன் இவ்வுலகமனைத்தையும் படைத்தார். (2–4)

நித்திய நிரந்தரமாக அழிவில்லாமல் இருக்கும் பிரும்மா, ஆகாயத்தில் (வெட்டவெளியில்) தோன்றியவர்; அவரிடமிருந்து மரீசி (என்ற பிரஜாபதி) தோன்றினார்; மரீசியின் புதல்வர் கசியபர். கசியபரிடமிருந்து விவஸ்வான் தோன்றினார்; விவஸ்வானுடைய குமாரர் வைவஸ்வத மனு. அவர்தான் முதலாவது பிரஜாபதி. மனுவின் புதல்வர் இக்ஷ்வாகு. எல்லா வளங்களையும் உடைய இந்த பூமி முதன்முதலாக மனுவினால் யாருக்குக் கொடுக்கப்பட்டதோ, அந்த இக்ஷ்வாகுதான் அயோத்தியின் முதலாவது மன்னன். இக்ஷ்வாகுவின் புதல்வன் குக்ஷி என்பவன் சகல ஐசுவரியங்களையும் பெற்றுப் புகழோடு விளங்கினான். பின்னர், வீரனான விகுக்ஷி என்பவன் குக்ஷியின் குமாரனாகத் தோன்றினான். (5–8)

விகுக்ஷியிடமிருந்து மகாதேஜோவானும் பராக்கிரமம் மிக்கவனுமான பாணன் என்பவன் புத்திரனாகப் பிறந்தான். பெருந்தோளனும், பெரும்புகழ் கொண்டவனுமான அநரண்யன் பாணனின் புதல்வன். நற்குணங்கள் பொருந்தியவர்களில் முதன்மையானவரான அநரண்யன் ஆட்சி செலுத்துகையில், நாட்டில் மாரி பொய்த்ததில்லை; பஞ்சம் ஏற்பட்டதில்லை; ஒரு திருடன்கூட இல்லை. அநரண்யனுக்குப் பிறகு, (அவர் மைந்தர்) மகாவீரரான பிருது மன்னரானார். அந்த பிருது மன்னரிடமிருந்து திரிசங்கு தோன்றினார். வீரரான திரிசங்கு (விசுவாமித்திர மகரிஷியின்) சத்தியமான வார்த்தைகளால் இந்த உடலுடனேயே தேவலோகம் சென்றார். பெரும்புகழ் கொண்ட துந்துமாரன், திரிசங்குவின் புதல்வனாகத் தோன்றினான். (9–12)

துந்துமாரனிடமிருந்து மகாதேஜஸ்வியான யுவநாஸ்வன் பிறந்தான். யுவநாஸ்வனுடைய மகன் திருவுடை செல்வனான மாந்தாதா உண்டானார். மாந்தாதாவிற்கு மகாதேஜஸ்வியான ஸுஸந்தி என்பவன் மகனாகப் பிறந்தான். ஸுஸந்திக்கு துருவஸந்தி, ப்ரஸேனஜித் என்ற இரண்டு குமாரர்கள். புகழ்பெற்ற துருவஸந்திக்கு எதிரிகளை அடக்குபவனான பரதன் மகனாகப் பிறந்தான். பெருந்தோளனான பரதனிடமிருந்து அஸிதன் என்ற புத்திரன் உண்டானான். அவனுக்கு எதிரிகளாக ஹைஹயர்களும் தாலஜங்கர்களும், சூரர்களான சசி–பிந்துக்களும் தோன்றினார்கள். (13–16)

அவர் (அஸிதர்), அவர்கள் எல்லோருக்கும் எதிராக வியூகம் அமைத்துப் போரிட்டாலும், தோற்றுப் போனதால் நாட்டைவிட்டு ஓடினார். மிகச்சிறந்ததான இமயமலையில் மனம் அமைதி அடைந்தவராக முனிவராகிக் காலம் கழித்தார். இவருடைய மனைவிகள் இருவரும் அந்தச் சமயத்தில் கருத்தரித்திருந்தார்கள் என்று சொல்லப்படுகிறது. அவர்களில் ஒருத்தி, தன் சக்களத்திக்கு (வயிற்றிலுள்ள கருவை அழிப்பதற்காக) விஷத்தைக் கொடுத்தாள். பிருகு வம்சத்தில் தோன்றிய சியவனர் என்ற முனிவர், அப்போது இமயமலையில் இருந்தார். (அஸிதரின் இருமனைவியரில் ஒருத்தியான) காளிந்தி, அந்த முனிவரிடம் வந்து வணங்கி நின்றாள். (17–19)

புத்திரனை அடைவதற்கு வரம் கோரி நிற்கும் அவளைப் பார்த்து, அந்த அந்தணர் சொன்னார்— 'தேவி! உனக்கு விசாலமனம் படைத்தவனும், உலகப் புகழ் பெறுபவனும், அறநெறி தவறாதவனும், சால்பு மிக்கவனும், வம்சத்தைத் தொடரச் செய்பவனும், எதிரிகளை மாய்ப்பவனுமான ஒரு புதல்வன் பிறப்பான்.' (இதைக் கேட்டதும்) தாமரைத் தடங்கண்ணாளாகிய அரசி உள்ளம் மகிழ்ந்து, அந்த முனிவரை வலம் வந்து நமஸ்காரம் செய்துவிட்டு, வீட்டிற்கு வந்ததும், தாமரை மலரின் நடுத்தளத்தையொத்த நிறமுடைய ஒரு ஆண் சிசுவைப் பெற்றாள். (20–22)

அவளுடைய வயிற்றிலிருந்த கருவைச் சிதைக்கவேண்டும் என்பதற்காகச் சக்களத்தியால் கொடுக்கப்பட்ட விஷத்துடனேயே ***(கரம்)*** அவன் பிறந்ததால், சகரன் என்று பெயர் சூட்டப்பட்டான். அசுவமேத யாகம் செய்யத் தொடங்கி, நடுவில் குதிரை காணாமல் போய்விட்டதால், அதைத் தேடிக் கண்டு பிடிக்கும் முயற்சியில், எவர் பருவகாலங்களில் சீறியெழும் அலைகளால் எல்லா மக்களையும் அச்சமடையச் செய்கிற கடலைத் தோண்டச் செய்தாரோ, அவர்தான் இந்த சகரன் என்ற மன்னர். (23,24)

சகரனுக்கு அசமஞ்ஜன் என்ற பிள்ளை பிறந்ததாக, நாங்கள் கேள்விப்பட்டிருக்கிறோம். அவன் பாவச்செயல்களில் ஈடுபட்டதால் உயிருடன் இருக்கும்போதே நாட்டிலிருந்து துரத்தப் பட்டான். அசமஞ்ஜனுக்கு வீரம் மிக்கவனான அம்சுமான் என்பவன் புத்திரனாகப் பிறந்தான். திலீபன் அம்சுமானின் புதல்வன். திலீபனுடைய குமாரன் பகீரதன். பகீரதனிடமிருந்து ககுத்ஸ்தர் தோன்றினார். அதனால், அந்தப் பரம்பரையினர் காகுத்ஸ்தர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். காகுத்ஸ்தருடைய மைந்தன் ரகு. அதனால், அவன் வம்சாவளியினர் 'ராகவர்' என்று கூறப்பட்டார்கள். (25–27)

ரகுவினுடைய புதல்வன் மகாதேஜஸ்வியான கல்மாஷபாதன். இவன் ஒரு சாபத்தின் காரணமாக, மனிதர்களைப் புசிக்கும் ராக்ஷஸனாக சில காலம் இருந்தான். இவனுக்கு பிரவ்ருத்தன், ஸௌதாஸன் என்ற பெயர்களும் உலகில் உண்டு. கல்மாஷபாதனுடைய புத்திரன் சங்கணன் என்று பெயர் பெற்றவன்; போர்க்களத்தில் மிகுந்த வீரத்தோடு சண்டையிட்டாலும், தன் படையினருடன் அழிந்து போனான். சங்கணனுடைய புத்திரன் சுதர்சனன். இவன் மகாசூரன்; திருவுடைசெல்வன். சுதர்சனனுடைய புத்திரன் அக்னிவர்ணன். அக்னிவர்ணனுடைய மைந்தன் சீக்ரகன். சீக்ரகனுடைய புத்திரன் மரு; மருவின் மைந்தன் ப்ரசுச்ருவன்; ப்ரசுச்ருவனுடைய புதல்வனான அம்பரீஷன். இவன் மகாமேதாவி. (28–31)

அம்பரீஷனுக்கு வீண்போகாத பராக்கிரமமுடைய நகுஷன் மகனாகப் பிறந்தான். நகுஷனுடைய புதல்வன் நாபாகன், பெருங்கொடையாளன். அஜன், சுவ்ரதன் ஆகிய இருவரும் நாபாகனின் இரு புதல்வர்கள். அஜனுடைய மைந்தன் தருமாத்மாவான தசரத மன்னர். அவர் இந்தப் பூமண்டலம் முழுவதையும் வென்று (சகல சுக–போகங்களையும் அனுபவித்துவிட்டு), இப்போது அந்தத் தலைவர் விண்ணுலகில் ஆட்சி செலுத்துகிறார் (மரணமடைந்துவிட்டார்). அவருடைய மூத்த புதல்வனான நீ, ஸ்ரீராமன் என்ற பெயரால் போற்றப்படுகிறாய். (32–34)

ஆகவே, சக்கரவர்த்தித் திருமகனே! உன்னுடையதேயான இந்த நாட்டை ஏற்றுக்கொண்டு குடிமக்களைப் பரிபாலிப்பாயாக. இதுவரையில் இக்ஷ்வாகு பரம்பரையில் மூத்த புதல்வனே மன்னனாக முடிசூட்டப்பட்டிருக்கிறான். மூத்தவன் இருக்கும்போது இளையவன் அரசனாக முடிசூட்டப்படுவதில்லை. பெரும்புகழ் பெற்றவனே! ரகுவம்சத்தில் நெடுங்காலமாக இருந்து வரும் ஒரு குலதருமத்தை (சம்பிரதாயத்தை) நீ இப்போது கைவிடக்கூடாது. அநேக சிறு நாடுகளை உடையதும், ஏராளமான செல்வங்களையுடையதுமான இந்த உலகை, ஒரு தந்தையைப் போல் (பொறுப்பு–பாசத்துடன்) ஆண்டு வருவாயாக.'' (35,36)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
நூற்றுப் பத்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றுப் பதினொன்று

பரதனைச் சமாதானப்படுத்துதல்

அரசகுல புரோகிதரான வசிஷ்டர், இராமனைப் பார்த்து மேற்கண்டவாறு சொல்லிய பின்னர், மறுபடியும் தருமத்தோடு பொருந்திய மேலும் சில வார்த்தைகளைக் கூறினார்— (1)

''காகுத்தனே! இராகவனே! இவ்வுலகில் பிறந்தவனுக்கு, ஆசார்யன்–தந்தை–தாய் என்று மூன்று குருமார்கள் இருக்கிறார்கள். ஆண்மைமிக்க வீரனே! தந்தை, ஒரு புருஷன் பிறப்பதற்கு விதையாக இருக்கிறான். ஆனால், ஆசார்யன் என்பவன் பிறவி எடுத்த ஜீவனுக்கு (வாழ்வாங்கு வாழ்ந்து இறுதியில் நல்லுலகங்களை அடையத் தேவையான) ஞானத்தை அளிக்கிறான். அதனால்தான், அவன் குரு (பெரியவன்) என்று அழைக்கப்படுகிறான். எதிரிகளை வாட்டி வதைக்கும் வீரனே! நான், உனக்கும் உன் தந்தைக்கும் ஆசார்யன். எனவே, என்னுடைய பேச்சைக் கேட்டு நடந்தால், நல்லோர்கள் நடந்து சென்ற வழியிலிருந்து வழுவியவனாக மாட்டாய். (2–4)

இங்கு, உன்னுடைய அவையோர்கள், முக்கியத் தலைவர்கள், மற்றும் இருபிறப்பாளர்கள் வந்திருக்கிறார்கள். குழந்தாய்! இவர்கள் எதிர்பார்க்கும் அறநெறியைக் கைக்கொள்வதால், நீ நல்லோர்கள் நடந்து சென்ற வழியிலிருந்து வழுவியவனாக மாட்டாய். முதுமை அடைந்து விட்டவளும், தருமம் ஒன்றிலேயே ஊன்றியிருப்பவளுமான உன் தாயாரின் விருப்பத்தை, நீ ஒதுக்கித் தள்ளிவிடக்கூடாது. அவளுடைய சொற்படி நடப்பதால், நல்லோர்கள் நடந்து சென்ற வழியிலிருந்து வழுவியவனாகக் கருத மாட்டாய். சத்தியத்திலும் தருமத்திலும் ஒன்றிப் போயிருக்கும் இராகவனே! மனமுருகிப் பிரார்த்திக்கும் பரதனுடைய வேண்டுகோளை ஏற்று நடப்பதால், உன் இயல்பான சத்திய–தருமத்திலிருந்து வழுவியவனாக மாட்டாய்.'' (5–7)

புருஷோத்தமனான இராமன், மேற்கண்டவாறு செவிக்கினிய சொற்களை ஆசார்யரிடமிருந்து கேட்ட பின்னர், நடுநாயகமாக அங்கு வீற்றிருந்த வசிஷ்டரைப் பார்த்துப் பதில் சொன்னார்— ''தாய்–தந்தையர் புதல்வனிடம் அன்புடன் பேசிப் பழகுகிறார்கள்; அவனுக்கு மகிழ்ச்சியளிக்கக் கூடியவைகளைச் செய்கிறார்கள்; அவன் விரும்பிக் கேட்டவைகளில், தங்களால் இயன்றதைக்

கொடுக்கிறார்கள்; அவனை நீராட்டி ஆடை அணிவிக்கிறார்கள்; எப்போதும் பாசத்தோடு பேசுகிறார்கள்; ஊட்டி வளர்க்கிறார்கள். இவற்றிற்குக் கைம்மாறாக எக்காலத்திலும் எதையும் செய்து தீர்க்க முடியாது. என்னைப் பெற்றெடுத்த தசரதர், மன்னர். அவரால் கட்டளையிடப்பட்டதை நான் ஒருக்காலும் பொய்யாக்க மாட்டேன்.'' (8–11)

இவ்வாறு இராமனால் கூறப்பட்டதும், மகாமனஸ்வியான பரதன் மிகவும் மனம் வருந்தி, அருகில் அமர்ந்திருந்த தேரோட்டியான சுமந்திரரைப் பார்த்து (பின்வருமாறு) சொன்னான்— ''சாரதியே! இங்கே தரையில் தர்பங்களைப் பரப்புங்கள். என் தமையனார் என் வேண்டுகோளுக்கு இணங்காத வரையில், இங்கேயே உட்கார்ந்து சத்தியாக்கிரகம் செய்வேன். (அவர் செயல்பாடுகளைத் தடுத்து நிறுத்துவேன்.) வறுமையில் வாடும் அந்தணன், உணவு கொள்ளாமல் கண்களை மூடிக்கொண்டு (உயிர்போகும் வரையில் பிராயோபவேசமாகக்) கிடப்பதைப் போல, என் வேண்டுகோளை ஏற்று, இவர் (அயோத்திக்குத்) திரும்பி வராத வரையில், இந்தக் குடிசையின் முன் படுத்துக் கிடப்பேன்.'' (12–14)

மனவேதனையுடனிருந்த பரதன், சுமந்திரர் இவ்விஷயத்தில் இராமனின் ஒப்புதலை எதிர்பார்க்கிறார் என்பதை உணர்ந்து, தர்ப்ப படுக்கையைத் தானே கொண்டு வந்து தரையில் விரித்து, அதன்மேல் உட்கார்ந்து கொண்டான். மகாதேஜஸ்வியும் ராஜரிஷிகளில் சிறந்தவருமான இராமன், பரதனை நோக்கிக் கூறினார்— ''என் செல்வமே! பரதா! நான் உனக்கு என்ன கெடுதல் செய்தேன்? என்பதற்காக, என்னை இப்படி அடக்கி வைக்கிறாய். அந்தணர், ஒருபுறமாகவே படுத்திருந்து தனக்கு அநியாயமிழைத்துவிட்ட மனிதர்களை இவ்வாறு தடை செய்யலாம். ஆனால், முடிசூட்டிக் கொள்ளும் உரிமை பெற்ற க்ஷத்திரியர்களுக்கு இது விதிக்கப்படவில்லை. இந்தக் கொடிய விரதத்தைக் கைவிட்டு எழுந்திராய். ஆண்புலி நிகர் வீரனே! இவ்விடத்திலிருந்து விரைவாக அயோத்திக்குப் போ, இராகவனே!'' (15–18)

பரதன் தர்ப்ப விரிப்பில் உட்கார்ந்தவாறே பட்டணத்தார்களையும், புறநகர் மக்கள் எல்லோரையும் பார்த்து, ''ஏன் நீங்களெல்லோரும் என் தமையனாருக்கு நல்ல வார்த்தை சொல்லாதிருக்கிறீர்கள்?'' என்று கேட்டான். நகர மக்களும் கிராமவாசிகளுமான அவர்கள், மகாத்மாவான அவனை (பரதனை)ப் பார்த்துச் சொன்னார்கள்— ''நாங்கள் இராமப்பிரபுவை நன்றாக அறிந்திருக்கிறோம். இராமன் சொல்வது நியாயமே. பெரும்பேறு பெற்றவரான இராமன், தன் தகப்பனாரின் கட்டளையைக் காப்பாற்றுவதில் உறுதியாக இருக்கிறார். அதனால்தான், அந்த (நேரான) பாதையிலிருந்து சடாரென்று அவரைத் திருப்ப முடியாமல் இருக்கிறோம்.'' (19–21)

அவர்களுடைய சொற்களைக் கேட்ட இராமன் இவ்வாறு சொன்னார்— ''தருமத்தையே கண்ணும் கருத்துமாகவுடைய நண்பர்களுடைய இந்தப் பேச்சைக் கேட்பாயாக. பரதா! என் சொற்களையும், இவர்கள் கூறியதையும் நன்றாக ஆராய்ந்து பார். புருஷோத்தமனே! நீ எழுந்திரு; என்னைத் தொடு. அவ்வண்ணமே தண்ணீரையும் தொட்டுக் கையை அலம்பு.'' (22,23)

உடனே, பரதன் எழுந்திருந்து நீரைத் தொட்டு பின்னர் கூறினான்— ''சபையோர்களும், அமைச்சர்களும், நகரப் பிரமுகர்களும் நான் சொல்லப் போவதைக் கேளுங்கள். நான், என் தந்தையாரிடத்தில் அரசாட்சியை எனக்குக் கொடுக்கும்படி வேண்டிக் கொள்ளவில்லை; என் தாயாரையும் தூண்டிவிடவில்லை; அறநெறி வல்லுநரும் உத்தமருமான இராமன் காட்டில் வசிப்பதற்குச் சம்மதிக்கவும் மாட்டேன். தந்தையின் கட்டளைப்படிக் காட்டில் வசிப்பது என்பது கட்டாயமாக அனுசரிக்கப்பட வேண்டியதே என்றால், பதிநான்கு ஆண்டுகள் நானே காட்டில் வசிக்கிறேன்.'' (24–26)

தருமாத்மாவான இராமன், சகோதரனுடைய மனப்பூர்வமான வாதத்தில் ஆச்சரியமடைந்து நாட்டு–நகர மக்களைப் பார்த்துச் சொன்னார்— ''என் தந்தையார் உயிருடன் இருக்கும்போது

விற்றுவிட்ட—வாங்கிய—அடகு வைக்கப்பட்ட பொருளை, என்னாலோ, பரதனாலோ மாற்றியமைக்க முடியாது. வனவாசத்தில் வெறுப்புக் கொண்டு, (அதைத் தவிர்ப்பதற்காக) ஏமாற்று வேலை ஒன்றை என்னால் செய்ய முடியாது. கைகேயி தாயார் நியாயமாகவே வரம் கேட்டார். (தந்தை, முன்பு கொடுத்த வாக்குறுதியைத்தானே கேட்டார். அது எப்படித் தவறாகும்?) என் தந்தை செய்ததும் சரியானதுதான். (27–29)

பரதன் மிகவும் பொறுமையுடையவன்; ஆசார்யர்களை வழிபடுகிறவன் என்பதை நான் அறிவேன். சத்தியம் தவறாத மகாத்மாவான அவனிடம் எல்லா நற்குணங்களும் உள்ளன. வனவாசம் முடிந்து மீண்டும் திரும்பி வந்து, தருமநெறி தவறாத இந்தச் சகோதரன் பரதனுடன் இந்தப் பூமண்டலத்திற்குச் சிறந்த தலைவனாவேன். கைகேயி, மன்னரிடம் வரம் கோரினார். நான், அந்த ஆக்ஞைப்படி நடப்பதாக வாக்குக் கொடுத்துவிட்டேன். இப்படிச் செய்வதால் (என் சொல்லைக் கேட்டு நடப்பதால்) மட்டுமே, தந்தையை (கொடுத்த வாக்கை மீறிய)ப் பாவத்திலிருந்து விடுவிக்க முடியும்.'' (30–32)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
நூற்றுப் பதினோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றுப் பன்னிரண்டு

பாதுகைகளை அளித்தல்

அங்கு கூடியிருந்த மாமுனிவர்கள், ஒப்புயர்வற்ற தேஜஸ்விகளான சகோதரர்கள் இருவருடைய மெய்ச்சிலிர்ப்பை உண்டாக்கும் சந்திப்பைப் பார்த்து ஆச்சரியமடைந்தார்கள். ஆகாயத்தில் கண்களுக்குப் புலப்படாதவாறு நின்று பார்த்துக் கொண்டிருந்த முனிவர் கூட்டங்களும், ஸித்தர்களும் மற்றும் அவ்விடத்திலேயே இருந்த மாமுனிவர்களும் காகுத்தர்களும் மகாத்மாக்களுமான இரு சகோதரர்களையும் வெகுவாகப் புகழ்ந்தார்கள். அறம் அறிந்தவர்கள், அறத்தையே உறுதியாகக் கடைப்பிடிப்பவர்களான இவ்விரு புதல்வர்களையும் பெற்றெடுத்தவர், மகாபாக்கியசாலி. இருவருடைய உரையாடல்களையும் நாம் மேலும் கேட்க விரும்புகிறோம்! (அவ்வளவு பொருள் பொதிந்த, தருமமான வாதங்களை அடுக்கடுக்காகப் பேசுகிறார்கள்.) (1–3)

அரசர்களுள் புலி போன்ற பரதன் முன்பாக, தசக்ரீவனான இராவணனுடைய வதத்தில் நோக்கமுடைய முனிவர்கள் கூட்டமாக வந்து, பின்வரும் சொற்களைச் சொன்னார்கள்— (4)

''உத்தம குலத்தில் பிறந்தவனே! பேரறிவாளனே! போற்றத்தக்க ஒழுக்கம் உடையவனே! பெரும்புகழ் பெற்றவனே! உன் தந்தைக்கு நல்லது செய்ய விரும்புவாயேயானால், இராமன் சொல்வதை ஏற்றுக் கொள். இராமன், தன் தந்தைக்குப்பட்டிருக்கும் கடனைத் தீர்த்து, கடன் இல்லாதவராக இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம். (அந்தக் கடன், இராமனே பதிநான்கு ஆண்டுகள் காட்டில் வசித்தால்தான் தீர்ந்துபோகும்.) கைகேயியிடம் பட்டிருந்த கடனைத் தீர்த்ததால்தானே, தசரதர் (சகல சௌக்கியங்களும் நிறைந்த) சுவர்க்கலோகத்தை அடைந்தார்? (கைகேயியிக்குக் கொடுத்த வரங்களை அவர் ஏற்காமல் விட்டிருந்தால், சொன்ன சொல் தவறிய பாவத்திற்காக, நரகத்தில் அல்லவா உழன்று கொண்டிருப்பார்?)'' (5,6)

இவ்வாறு கூறிவிட்டு, கந்தர்வர்களும் மாமுனிவர்களும் ராஜரிஷிகளுமான அவர்கள் எல்லோரும் தத்தம் இருப்பிடத்திற்குச் சென்றார்கள். இனிய தோற்றமுடைய இராமன், மகரிஷிகளின் நியாயமான உரையினால் மிகவும் மனமகிழ்ந்து, அவர்களை(த் தன் மனத்திற்குள்) வணங்கினார். ஆனால், அந்த வார்த்தையைக் கேட்டதும் பரதனின் சரீரம் நடுங்கிற்று; சொற்கள்

தடுமாறின. இரு கைகளையும் கூப்பிக்கொண்டு இராமனைப் பார்த்து, மீண்டும் இவ்வாறு கூறினான்— (7–9)

''காகுத்தரே! தாங்கள் அரச நீதியையும், இடையறாது வரும் குலதருமத்தையும் நன்கு சிந்தித்துப் பார்த்து, என்னுடையவும் என் தாயாருடையவும் வேண்டுகோளை ஏற்றருள வேண்டும். மிகப்பெரிய இந்த ராஜ்யத்தை நான் ஒருவனாகக் காப்பாற்ற முடியாது. அத்துடன் தங்களிடம் மிகவும் பற்றுக் கொண்டிருக்கும் நாட்டு–நகரத்தார்களையும் மகிழ்ச்சியுடையவர்களாக வைத்திருக்க என்னால் முடியாது. விவசாயிகள் மழையை மிகவும் எதிர்பார்ப்பதைப் போல, நமது உற்றார்–உறவினரும், படைவீரர்களும், நண்பர்களும், பாசம் கொண்டவர்களும் தங்களையே ஆவலுடன் வேண்டி விரும்புகிறார்கள். மகாமேதாவியே! தாங்கள் இந்த நாட்டினை ஏற்று வலிமையுள்ளதாகச் செய்யவேண்டும். காகுத்தரே! தாங்கள், இந்த உலகம் முழுவதையும் பரிபாலிக்கும் சக்தி பெற்றவர்.'' (10–13)

இவ்வாறு கூறிவிட்டு, சகோதரரின் திருவடிகளில் வீழ்ந்தான், பரதன். இனிமையாகப் பேசும் அவன், இராமனை மிகவும் இரக்கம் தோன்றும் வகையில் பிரார்த்தித்தான். கருமை நிறமுடையவனும், தாமரையிதழ் போல் விரிந்த கண்களுள்ளவனுமான பரதனை எழுப்பி, தன் மடியில் வைத்துக் கொண்டு, மதங்கொண்ட அன்னப்பறவையின் குரலில் (இராமன்) தானே பேசினார்— (14,15)

''குழந்தாய்! பணிவு என்ற இந்த இயல்பான எண்ணம் உன்னுடன் கூடவே பிறந்தது. அதனால், இந்த உலகத்தையே காப்பாற்றும் அபார வலிமை உன்னிடம் இருக்கிறது. எவ்வளவு பெரியதாக இருந்தாலும், எல்லாக் காரியங்களையும் அமைச்சர்களுடனும், நல்லியல்பு கொண்டவர்களுடனும், சிறந்த அறிஞர்களான அரசியல் ஆலோசகர்களுடனும் ஆலோசித்து நடப்பித்துக்கொள். சந்திரனிடமிருந்து அதனுடைய ஒளி நீங்கிப் போனாலும் போகலாம்; இமயமலை பனிக்கட்டிகளை விட்டும் விடலாம்; பெருங்கடல் கரையைக் கடக்கவும் செய்யலாம். ஆனால், தந்தைக்குக் கொடுத்த வாக்கை நான் காப்பாற்றாமல் இருக்கமாட்டேன். (16–18)

செல்வமே! உன்னுடைய தாயார், உன் மீதுள்ள பேரன்பினாலோ, பேராசையினாலோ உன் பொருட்டு இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார். இதை (ஒரு பெரிய குற்றமாக) மனத்தில் வைத்துக் கொள்ளாதே. (அவரிடம் வெறுப்படையாதே.) நன்மை செய்த ஒரு தாயாரிடம் தனயன் நடந்து கொள்வதைப் போலவே, அவரிடம் மிக்க கௌரவத்துடன் நடந்துகொள்ள வேண்டும்.'' (19)

சூரியனைப் போல் (கண்களைக் கூசும்) ஒளி வீசுபவரும், பிரதமை திதி சந்திரனைப் போல் கண்ணுக்குக் குளிர்ச்சியான எழில் தோற்றமுடையவருமான கோசலையின் மைந்தன் இராமன், இவ்வாறு கூறியதைக் கேட்டதும் பரதன் சொன்னான்— ''அண்ணா! பொன்னால் அலங்கரிக்கப்பட்ட இந்தப் பாதுகைகளின்மேல் திருவடி சார்த்தி அருள்வீராக. இந்தப் பாதுகைகள்தாம், எல்லா உலகங்களின் யோக–க்ஷேமங்களை நிர்வகிக்கப் போகின்றன.'' மிகுந்த தேஜஸ் உடையவரும், மனிதர்களுள் உத்தமருமான அவர் பாதுகைகளில் ஏறி, (சிறிது நேரம் நின்று, பின்) இறங்கி, மகாத்மாவான பரதனிடம் அளித்தார். (20–22)

அவன், பாதுகைகளை வணங்கிய பின், இராமனை நோக்கிக் கூறினான்— ''ரகுநந்தனா! வீரரே! எதிரிகளை வாட்டுபவரே! ஜடை–மரவுரி தரித்துக் கொண்டு, பழங்களையும் கிழங்குகளையும் உணவாகக் கொண்டு, தங்கள் பாதுகைகளிடம் அரசு நிர்வாகத்தை ஒப்படைத்துவிட்டு, தங்கள் வரவை எதிர்பார்த்துக் கொண்டு, நகரத்தின் வெளியிலேயே பதினான்கு ஆண்டுகள் தங்கியிருக்கப் போகிறேன். ரகுநாயகரே! பதினான்கு ஆண்டுகள் முடிந்த மறுநாளில், நான் தங்களைக் காணாவிட்டால் நெருப்பில் விழுவேன்.'' அவனை அன்புடன் தழுவிக் கொண்டு, 'அப்படியே ஆகட்டும்' (பதினான்கு ஆண்டுகள் முடிந்த மறுநாள், நான்

உன்னைச் சந்திக்கிறேன்) என்று உறுதி கூறி, சத்ருக்னனையும் கட்டியணைத்து, பின்னர் பரதனிடம் பின்வருமாறு கூறினார்— (23–26)

''ரகுகுலத்தில் பிறந்த உத்தமனே! என்மேலும், சீதைமேலும் ஆணையிட்டுச் சொல்கிறேன், அன்னை கைகேயியை நன்றாகக் கவனித்துக் கொள். அவரிடம் ஒருபோதும் கோபம் கொள்ளாதே.'' இவ்வாறு சொல்லிவிட்டுக் கண்களில் கண்ணீர் ததும்ப, தம்பிக்கு விடைகொடுத்தனுப்பினார். அறமறிந்தவனும் பராக்கிரமசாலியுமான பரதன், நன்றாக அலங்கரிக்கப்பட்ட அந்தப் பாதுகைகளைப் பக்திப்பெருக்குடன் பெற்றுக் கொண்டு, இராகவனை வலம் வந்து, மன்னர் பவனிக்கான உத்தம யானையின் தலையில், அவைகளை மிக்க மரியாதையுடன் வைத்தான். (27,28)

அவ்வமயம், தன்னுடைய தருமத்தில் இமயமலை போன்று நிலைகுலையாது நிற்கும் இராமன், அங்கு வந்திருந்த நாட்டு–நகர மக்கள், ஆசார்யர்கள், அமைச்சர்கள் மற்றும் இரண்டு சகோதரர்களையும் அவரவர்க்குரிய முறைப்படிக் கௌரவித்து விடைகொடுத்து அனுப்பினார். தாய்மார்கள் துக்கம் தாங்காமல் கண்ணீர் பெருக்கித் தொண்டை அடைக்க, அவரிடம் விடைபெற்றுக் கொள்ளவும் முடியாதிருந்தார்கள். இராமன், தானே எல்லா தாய்மார்களையும் வணங்கிவிட்டு, அழுது கொண்டே தன் குடிலுக்குள் புகுந்தார். (29,30)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
நூற்றுப் பன்னிரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றுப் பதின்மூன்று

பாதுகைகளைப் பெற்றுக் கொண்டு திரும்புதல்

பின்னர், ஸ்ரீராமசந்திரனுடைய இரு பாதுகைகளையும் பரதன், தன் தலையில் மகிழ்ச்சியுடன் வைத்துக் கொண்டு, சத்ருக்னனோடு தேரில் ஏறினான். வசிஷ்டர், வாமதேவர், உறுதியான விரதமுடைய ஜாபாலி மற்றும் ஆலோசனை சொல்வதில் சிறந்தவர்களான அமைச்சர்கள் ஆகிய எல்லோரும் முன்னால் சென்றார்கள். அவர்கள், மனத்திற்கினிய மந்தாகினி நதியை அடைந்தார்கள். பின்பு, சித்திரகூடம் என்னும் அந்த மாமலையை வலம் வந்து கிழக்கு நோக்கிச் சென்றார்கள். அழகிய, பலவகையான, ஆயிரக்கணக்கான தாதுக்களைப் பார்த்துக் கொண்டு, சைன்னியங்களோடு மலையை ஒட்டினாற்போலவே பரதன் சென்றான். (1–4)

சித்திரகூடத்திலிருந்து சிறிது தூரத்திலேயே, பரத்வாஜ முனிவர் வசிக்கும் ஆசிரமத்தைப் பரதன் பார்த்தான். தன் குலத்தின் பெருமையை வளர்க்கும் புத்திமானாகிய அவன், பரத்வாஜருடைய அந்த ஆசிரமத்தை அடைந்து, தேரிலிருந்து இறங்கி, அவருடைய திருவடிகளை வணங்கினான். அவனுடைய வருகையால் மகிழ்ச்சியடைந்த பரத்வாஜர், பரதனைப் பார்த்து, ''குழந்தாய்! இராமனைச் சந்தித்தாயா? உன் விருப்பம் கைகூடிற்றா?'' என்று கேட்டார். மேதாவியான பரத்வாஜரால் இவ்வாறு கேட்கப்பட்டதும், சகோதர பாசம் கொண்ட பரதன் (பின்வருமாறு) பதிலளித்தான்— (5–8)

''ஆசார்யராலும் என்னாலும் மிகவும் வேண்டிக் கொள்ளப்பட்டாலும், உறுதியான சத்திய பராக்கிரமமுடைய ஸ்ரீராமன் மிகவும் மனங்குளிர்ந்து, வசிஷ்டரைப் பார்த்துச் சொன்னார்— 'என் தந்தையின் கட்டளையை, அதன் உட்பொருளுக்குச் சிதைவு ஏற்படாத வகையில், அப்படியே காப்பாற்றுவேன். பதிநான்கு ஆண்டுகள் (காட்டில் வசிக்கவேண்டும்) என்று என் தந்தையால் பிரதிக்ஞை செய்யப்பட்டது.' இவ்வாறு கூறப்பட்டதும், சொல் நுட்பம் அறிந்த பெரும் அறிஞரான வசிஷ்டர், பேசுவதில் நிபுணரான இராமனைப் பார்த்து, மேலான சொற்களைக் கூறினார்— (9–11)

'பேரறிவாளனே! பொன்னால் அலங்கரிக்கப்பட்ட, அயோத்தியின் யோக–க்ஷேமங்களைப் பாதுகாக்கும் உன்னுடைய இந்தப் பாதுகைகளை மனம் மகிழ்ந்து கொடுப்பாய்.' இவ்வாறு வசிஷ்டர் கூறியதும், கிழக்கு நோக்கிப் பாதுகைகளில் ஏறி நின்று, பின் அரசு நிர்வாகத்தைச் செய்வதற்காக என்னிடம் கொடுத்தார். பின்னர், மகாத்மாவான இராமனிடம் விடைபெற்று, மங்களமான இரு பாதுகைகளைப் பெற்றுக் கொண்டு, திரும்பவும் அயோத்திக்கே செல்கிறேன்.'' மகாத்மா பரதனின் இனிய சொற்களைக் கேட்ட பரத்வாஜ முனிவர், அவனை நோக்கி மிகவும் மங்களகரமான சொற்களை மொழிந்தார்— (12–15)

''(பரதா!) மனிதர்களுள் நீ சிங்கம் நிகர் வீரன்; நற்குண–நல்லொழுக்க ஞானம் உடையவர்களில் தலையாயவன். பள்ளத்தை நோக்கித் தண்ணீர் ஓடுவது எவ்வளவு இயல்பானதோ, அப்படியே உன்னிடம் நற்குணங்கள் நிரம்பியிருக்கின்றன என்பது வியக்கத்தக்க விஷயமல்ல. உன்னுடைய தந்தையான பெருந்தோளர் தசரதர், எல்லாக் கடன்களிலிருந்தும் விடுபட்டு விட்டார் – உன்னைப் போன்ற தருமப்பற்றுள்ள, தருமானுஷ்டானமுள்ள மகனைப் பெற்றதனால்!'' மகாத்மாவான அந்த முனிவர் இவ்வாறு கூறியதும், பரதன் இரு கைகளையும் கூப்பி, பாதங்களில் விழுந்து வணங்கி, விடைபெற்றுச் செல்வதில் ஆர்வம் காட்டினான். (16–18)

உடனே, பலதடவைகள் பரத்வாஜரை வலம் வந்து (விடைபெற்றுக் கொண்டு), பாதுகா லட்சுமியைப் பெற்று தேஜஸையுடைய பரதன், அமைச்சர்களோடு அயோத்திக்குச் சென்றான். வாகனங்கள், வண்டிகள், குதிரைகள், யானைகள் அடங்கிய அந்தப் பெரிய பட்டாளம், பரதனைப் பின்தொடர்ந்து மீண்டும் (அயோத்திக்குத்) திரும்பியது. அவர்கள் எல்லோரும் அலைவரிசைகளை அழகாகவுடைய, தெய்விகம் பொருந்திய நதியான யமுனையைக் கடந்து, புனிதமான தண்ணீரையுடைய கங்கையை மறுபடியும் கண்டார்கள் (கங்கைக் கரையை அடைந்தார்கள்). (19–21)

புனிதநீரால் நிரம்பிய அந்த நதியைக் கடந்து, உற்றார்–உறவினரோடும், படைவீரர்களோடும் கண்ணுக்கினிய சிருங்கிபேரபுரத்திற்குள் நுழைந்தான் (பரதன்). சிருங்கிபேரபுரத்திலிருந்து புறப்பட்டுத் தொலைவிலிருந்து அயோத்தியைக் கண்டான். தந்தையும் தமையனாரும் இல்லாத அயோத்தியைப் பார்த்ததும், துக்கத்தைத் தாங்க முடியாமல் தேரோட்டியான சுமந்திரரைப் பார்த்துப் பின்வருமாறு சொன்னான்— ''சாரதியே! அயோத்தி நகரம் தன் உருவிழந்து, ஆனந்தமிழந்து, வலிமை குன்றி, ஒலி அடங்கி, களையிழந்து, பிரகாசமில்லாமல் இருக்கிறது என்பதை நீங்களும் பாருங்கள்.'' (22–24)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
நூற்றுப் பதின்மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றுப் பதிநான்கு

பரதன், அயோத்தியில் பிரவேசித்தல்

செவிக்கினிய கம்பீரமான ஒலியுடன் கூடிய தேரில், பெரும் புகழ் கொண்டவனும், பிரபுவுமான பரதன், வழியில் தடையேதுமில்லாமல் அயோத்தி நகருக்குள் பிரவேசித்தான். (1)

அந்தச் சமயத்தில், பூனைகளும் கோட்டான்களும் அங்கே அலைந்து கொண்டிருந்தன. மனிதர்கள் சோர்வடைந்திருந்தனர். யானைகளும் சோர்ந்து கிடந்தன. இருளால் ஆக்கிரமிக்கப்பட்டு ஒளியிழந்த, கரிய இருட்டான இரவைப் போலவும்; சந்திரனின் அன்புக்குரிய மனைவியும், தன் இயல்பான பேரொளியினால் பிரகாசிப்பவளுமான ரோகிணிதேவி, வெகுவேகமாகத் தோன்றிய ராகு கிரகத்தால் கணவன் பீடிக்கப்பட்டதும் தனியாக இருந்து தவிப்பது போலவும்; மலையில்

தோன்றிய நதியின் நீர் கோடைக்கால சூரிய வெப்பத்தால் வற்றியதும், அதிலிருந்த சிறுமீன், பெரியமீன், முதலை போன்றவைகள் ஆழமான இடத்திற்குச் சென்று மறைந்து கொள்வது போலவும்; வெப்பம் தாங்காமல் அங்கிருந்த பறவைகள் தவிப்பது போலவும்; (2–4)

வேள்விக்குண்ட அக்னி, முதலில் (நெய் ஆகுதி செய்யப்படும்போது) புகையில்லாமல் சுவர்ணமயமான சுவாலைகளுடன் விளங்கி, பின்பு தயிர்–பால் ஆகுதி செய்யப்பட்டதும் அக்னிச் சுவாலைகள் அடங்கிவிட்டது போலவும்; பெரும்போரில் ஒரு பக்கத்துப் படையினர் எதிரிகளால் முறியடிக்கப்பட்டதால் கவசங்கள் சிதறியும்; யானை, குதிரை, தேர்க்கொடி முதலியன சின்னபின்னமாக்கப்பட்டுக் கிடப்பது போலவும்; முக்கிய படைத்தலைவர்கள் அழிக்கப்பட்டுத் தோல்வியைத் தழுவித் தவிப்பது போலவும்; காற்றின் வேகத்தினால் நுரையுடனும், பெரும் கர்ஜனை ஒலியுடனும் உயரமாக எழுந்த அலைவரிசை, காற்றின் வேகம் குறைந்தவுடன் அலை ஓய்ந்து சப்தமில்லாமல் அமைதியாக இருப்பது போலவும்; (5–7)

வேள்விச்சாலையில் வேள்வி முடிந்தவுடன் ரித்விக்குகளும், ஏனையோரும் வெளியே சென்ற பின்பு, யாகத்தில் உபயோகிக்கப்பட்ட உபகரணங்கள் சீண்டுவாரின்றிக் கிடப்பது போலவும்; மந்திர ஒலி இல்லாமல் இருக்கும் யாகசாலை போலவும்; பசுத்தொழுவத்திலிருந்து தனக்கு இஷ்டமான காளையிடமிருந்து பிரிக்கப்பட்டு, அதையே நினைத்து வருந்தி, பசும்புல்லைத் தின்னாமல் நின்று கொண்டிருக்கும் பசுவைப் போல் இருப்பதுவும்; மிக்க ஒளிவீசும் பத்மராகம் முதலிய இரத்தினங்களால் கவினுற விளங்கும் முத்துமாலை, (அவைகளை எடுத்துவிட்டால்) அவைகள் இல்லாமல் அழகு குறைந்து காணப்படுவது போலவும்; (8–10)

ஒரு தாரகை, தான் செய்த புண்ணியம் முற்றிலும் அனுபவித்துத் தீர்ந்து போய்விட்டதால் புண்ணியத்தின் பயனாக அடைந்த பதவியை இழந்து, ஒளி இழந்து பூமியில் விழுந்ததைப் போலவும்; கோடை வருவதற்கு முன்னர், வசந்த ருதுவில் ஏராளமான மலர்கள் பூத்து, மதங்கொண்ட வண்டுகள் மொய்த்து ரீங்காரம் செய்யப்பட்ட காட்டுக்கொடி, திடீரென்று தோன்றிப் பரவிய காட்டுத் தீயினால் கருகிப் போனது போலவும்; மக்கள் போக்குவரத்து இல்லாததால் கூச்சல் சப்தம் இல்லாமலும், வாங்குதல்–விற்றல் என்ற வாணிபம் இல்லாமலும், மேகங்களால் சூழப்பட்டுக் கண்ணுக்குப் புலப்படாமல் மறைக்கப்பட்ட சந்திரன்–நட்சத்திரங்களுடன் கூடிய ஆகாயம் போலவும்; (11–13)

உயர்ந்த பலவகையான மதுபானங்களைக் பருகுவதற்கான குடுவைகள் உடைந்து சிதறிக் கிடப்பதுவும், குடிப்பவர்கள் இல்லாததால் சுத்தம் செய்யப்படாத மதுபானக்கடை சிதைந்து காணப்படுவது போலவும்; பாளம்பாளமாகத் தரை வெடித்து பள்ளமாகிவிட்டது போலவும்; நீர் குடிக்கும் பாத்திரங்கள் உடைந்து சிதறிக் கிடப்பது போலவும்; தண்ணீர் முற்றிலும் அற்றுப் போய் தூண்கள் இடிந்து கீழே விழுந்துவிட்ட தண்ணீர்த் தொட்டியைப் போலவும்; உயர்ந்த, நீண்ட வில்லில் பூட்டப்பட்டிருந்த நாண் கயிறு, எதிரிகளின் பாணங்களால் அறுக்கப்பட்டு பூமியில் கிடப்பது போலவும்; போர்க்களத்தில் குதிரை வீரனால் சேணம் முதலியவைகளால் அலங்கரிக்கப்பட்டு வேகமாகச் செலுத்தப்பட்ட, (எதிரிகளால் தாக்கப்பட்டு, அதனால்) பின் கைவிடப்பட்ட வலிமை இழந்த பெண்குதிரை போல் இருப்பதுவும்; (14–17)

பலவகையான பெரிய மீன்களாலும் ஆமைகளாலும் நிரம்பியிருந்ததும், தற்சமயம் நீர்வற்றி, நீலோத்பல மலர்கள் அழிந்து, இடிந்த கரைகளையுடைய பொய்கையைப் போல் இருப்பதுவும்; மகிழ்ச்சியில்லாத ஒருவனுடைய சரீரம் சந்தனப்பூச்சு இல்லாமலும், அணிகலன்களால் அலங்கரிக்கப்படாமல் இருப்பதைப் போலவும்; தீவிரமான மாரிக்காலத்தில், மேகமண்டலத்திற்குள் புகுந்த கருத்த மேகங்களால் மறைக்கப்பட்ட (மங்கிய) ஒளி போல் இருப்பதுவும்; நன்றாகப் பராமரிக்கப்பட்ட பெண்குதிரை எதிரிப்படைகளால் வீழ்த்தப்பட்டது போல் இருப்பதுவுமான (அயோத்திக்குள் பரதன் பிரவேசித்தான்.) (18–20)

அழியா செல்வமுடையவனும், தசரத குமாரனுமான பரதன், தான் தேரில் உட்கார்ந்திருந்தபடி உத்தமமான ரதத்தைச் செலுத்தும் சாரதியைப் பார்த்து (இவ்வாறு) சொன்னான்— ''இப்பொழுது (முன்புபோல்) வாய்பாட்டு–தாளவாத்தியங்களின் கம்பீரமான இசையொலி அயோத்தியில் கேட்கப்படவில்லை. இது எவ்வளவு வருந்தத்தக்க விஷயம்! நாலாபக்கங்களிலும் பரவி வீசும் வாருணி என்ற மதுவகையின் வாசனையும், மலர்மாலைகளின் நறுமணமும், அகில்புகையின் வாசனையும் காற்றில் மிதந்து வரவில்லையே? (21–23)

சிறந்த வண்டிகள் போய் வருவதால் உண்டாகும் சப்தமும், குதிரைகளின் மனங்கவரும் கனைப்பு ஒலியும், மதங்கொண்ட யானைகளின் பிளிறலும், ரதங்களின் போக்குவரத்தால் ஏற்படும் பேரொலியும், ஸ்ரீராமன் நாடு கடத்தப்பட்டுவிட்டபடியால், இந்த நகரத்தில் இப்போது கேட்கப்படவில்லை. இராமப்பிரபு நகரத்தை விட்டுச் சென்றுவிட்டதால் எப்போதும் இனிமையாகப் பொழுதைக் கழிக்கும் மக்கள், மனவேதனைப்பட்டு விலையுயர்ந்த புதிய மாலைகளை அணியாமலும், சந்தனம்–அகில் போன்றவைகளின் நறுமணத்தை நுகராமலும் இருக்கிறார்கள். இராமனைப் பிரிந்ததால் துயரத்தில் வாடும் நகரமக்கள், அழகிய மாலைகளை அணிந்து கொண்டு வெளியில் உலாவுவதற்குச் செல்லாமல் இருக்கிறார்கள்; (மக்கள் கூடிக்களிக்கும்) திருவிழாக்களும் நடைபெறவில்லை. (24–26)

என்னுடைய தமையனாருடன் இந்த நகரத்தின் (மனத்தைக் கொள்ளை கொள்ளும்) சோபையும் போய்விட்டது என்பது திண்ணம். இந்த அயோத்தி, மேகக்கூட்டம் நிறைந்த, மிக வேகமாகக் கொட்டும் மழைக்கால இரவுபோல் ஒளிவீசாதிருக்கிறது. வெப்பம் மிகுந்த கோடைக்காலத்தில் தண்ணீருக்கு ஏங்கித் தவிக்கும் மக்கள், வானத்தில் கரிய மேகங்களைக் கண்டதும் பெருமகிழ்ச்சி கொள்வார்களே, அது போன்ற கோலாகல மகிழ்ச்சிப் பெருக்கை எப்போதுதான் என் தமையனார் திரும்பி வந்து உண்டாக்கப் போகிறாரோ? அயோத்தியின் ராஜவீதிகளில், எழில்மிகு ஆடை–அணிகலன்கள் அணிந்து, கம்பீரமாக நடந்து செல்லும் யௌவன புருஷர்களைக் காணவில்லையே?'' (27–29)

இவ்வாறு பலவிதமாகப் புலம்பிக் கொண்டு, புருஷோத்தமர் (தசரதர்) இல்லாததால், சிங்கம் இல்லாத குகை போல் (முற்றிலும் சூன்யமாகக்) காணப்பட்ட, தந்தையின் மாளிகைக்குள் (பரதன்) புகுந்தான். அப்போது, (முன்பு) தேவாசுர யுத்தத்தில் தேவர்கள் தோற்றுப்போன ஒரு சந்தர்ப்பத்தில், சூரியனை ராகு இழுத்துச் சென்றுவிட்டதால், சூரியன் இல்லாத பகல் போல் அந்தப்புரம் ஒளியிழந்து காணப்பட்டது; மனித நடமாட்டமில்லாமல் பயங்கரமாக இருந்ததைக் கண்டு, மகாதைரியசாலியான பரதன் துக்கம் தாங்காமல் கண்ணீர் பெருக்கினான். (30,31)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
நூற்றுப் பதிநான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றுப் பதினைந்து

பாதுகா பட்டாபிஷேகம்

ஒழுக்கத்தில் உறுதியுடைய பரதன், அயோத்தியில் தாய்மார்களைத் தங்கச் செய்து, மனவேதனையால் தவித்து, பெரியோர்களைப் பார்த்து(ப் பின்வருமாறு) சொன்னான்— ''நான் நந்திக்கிராமம் செல்லப் போகிறேன். உங்கள் எல்லோரிடமும் விடைபெற்றுக் கொள்கிறேன். இராமன் இல்லாததால் ஏற்பட்டுள்ள இந்தத் துக்கத்தையெல்லாம் அங்கே சகித்துக் கொண்டிருப்பேன். நம்மையெல்லாம் ஆண்ட மன்னர் தசரதர் விண்ணுலகம் சென்று

விட்டார். என்னுடைய தமையனார் காட்டிலிருக்கிறார். நான், நந்திக்கிராமத்தில் இருந்து கொண்டு, தானே நாட்டை ஆள்வதற்கு வருகைபுரியும் ஸ்ரீராமனை எதிர்பார்த்துக் காத்திருப்பேன். பெரும்புகழ் கொண்ட அவர்தான் (இந்த நாட்டிற்கு) அரசர்.'' (1–3)

மகாத்மா பரதனுடைய, தருமசம்மதமான இந்த வார்த்தைகளைக் கேட்டு, புரோகிதரான வசிஷ்டரும், எல்லா அமைச்சர்–ஆலோசகர்களும் (பின்வருமாறு) கூறினார்கள்— ''பரதா! சகோதரனிடம் மிக்க அன்புடைய உன்னால் கூறப்பட்ட விஷயம் மேன்மையான உன் இயல்பிற்கு ஒத்தது; புகழத்தக்கது; உனக்கே ஏற்றது. உன் தமையனின் வரவையே நீ எப்போதும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாய்; அவர் நலனில் முழு அக்கறை கொண்டிருக்கிறாய். சரியான பாதையைத் தேர்தெடுத்துவிட்ட உனக்கு, எவர்தான் அனுமதி கொடுக்காமலிருப்பார்?'' (4–6)

தன் விருப்பத்திற்கு ஆதரவான இனிய சொற்களை அமைச்சர்களிடமிருந்து கேட்டவுடன், 'என்னுடைய ரதத்தை ஆயத்தப்படுத்துங்கள்' என்று சாரதியான சுமந்திரரைப் பார்த்துச் சொன்னான். முகமலர்ச்சியுடன் எல்லா தாய்மார்களையும் வணங்கிவிட்டு, ஸ்ரீமானான பரதன் சத்ருக்னனுடன் தேரில் ஏறினான். மிகவும் சந்தோஷத்துடன் ரதத்தில் ஏறிய பரத–சத்ருக்னர்களாகிய அவ்விருவரும், அமைச்சர்–புரோகிதர்கள் புடைசூழ, அவ்விடத்திலிருந்து உடனே புறப்பட்டார்கள். (7–9)

வசிஷ்டர் முதலான ஆசார்யர்களும் அந்தணர்களும் முன் செல்ல, நந்திக்கிராமம் இருக்கும் கிழக்குத் திசை நோக்கி எல்லோரும் சென்றார்கள். பரதன் புறப்பட்டதும் உத்தரவு செய்யப்படா விட்டாலும்கூட, யானை–குதிரை–தேர் அடங்கிய அனைத்துப் படைகளும் நகரவாசிகளும் அவனுடன் சென்றார்கள். தருமாத்மாவும், சகோதரரிடம் பேரன்பு கொண்டவனுமான பரதன், ஸ்ரீராமனுடைய திவ்ய பாதுகைகளைத் தன் சிரசில் சுமந்தபடியே ரதத்தில் இருந்துகொண்டு விரைவில் நந்திக்கிராமத்தை அடைந்தான். (10–12)

பின்னர், நந்திக்கிராமத்திற்குள் நுழைந்ததும் ரதத்திலிருந்து உடனே இறங்கி, ஆசார்யர்களைப் பார்த்து(ப் பின்வருமாறு) கூறினான்— ''இந்த அரசு, ஒப்படைக்கப்பட்ட ஒரு பொருள்போல, என்னுடைய சகோதரராலேயே என்னிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பொன்னால் அலங்கரிக்கப்பட்ட அவருடைய இந்த இரு பாதுகைகள்தாம் அரசு நிர்வாகம் செய்யப் போகின்றன.'' பின்னர், ஒப்படைக்கப்பட்ட பாதுகைகளுக்குத் தலைகுனிந்து வணங்கி, துயரத்தால் மனம் தவித்து, அங்கிருந்த எல்லோரையும் பார்த்து பரதன் கூறினான்— (13–15)

மகாபுருஷராகிய ஸ்ரீராமனுடைய திருவடிகளே எனக் கருதத்தக்க, இந்தப் பாதுகைகளுக்கு (அரச சின்னமாகிய) வெண்கொற்றக் குடையைப் பிடியுங்கள். என்னுடைய சகோதரருடைய திருப்பாதுகைகளான இவை இரண்டினால்தான் நாட்டில் தருமம் நிலையாக நிற்கப் போகிறது. என்னிடம் கொண்டுள்ள நன்னம்பிக்கையால், என் தமையனாரால் என்னிடம் ஒப்படைக்கப்பட்டதை, ஸ்ரீராமன் திரும்பிவரும் காலம் வரையில், இதனை நல்லமுறையில் பரிபாலனம் செய்வேன். ('இதனை' என்று ஒருமையில் கூறப்பட்டிருப்பதால், 'என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள இந்த நாட்டை நல்லமுறையில் பரிபாலனம் செய்வேன்' என்றும் பொருள் கொள்ளலாம்.) (16,17)

ஸ்ரீராமன் திரும்பி வந்தவுடனேயே, நானே இவைகளை அவருடைய திருவடிகளில் சேர்த்து, திருப்பாதுகைகளுடன் கூடியவைகளாக, அவருடைய திருவடிகளைக் காண்பேன். பின்னர், அவர் திரும்பி வந்து சந்தித்தவுடனேயே, தமையனாரிடம் அரசாட்சியை ஒப்புவித்துவிட்டு, (அரசுச்) சுமை நீங்கியவனாக (பொறுப்பு ஏதும் இல்லாதவனாக), அவருக்குப் பணிவிடை செய்வதில் ஈடுபடப் போகிறேன். பிரதிநிதியாக என்னிடம் கொடுக்கப்பட்டுள்ள, வணக்கத்திற்குரிய இரு பாதுகைகளையும், இந்த அயோத்தி அரசையும் இராமபிரானிடம் சமர்ப்பித்துப் பழி நீங்கியவன் ஆவேன். காகுத்தவம்ச திலகமான இராமனுக்குப் பட்டாபிஷேகம் ஆகி, மக்கள் மனம் களிப்புற்று விளங்கும்போது, ராஜ்யத்தை ஆட்சி செய்வதைக் காட்டிலும், நான்கு மடங்கு மகிழ்ச்சியும் புகழும் எனக்கு ஏற்படும்.'' (18–21)

பெரும்புகழ் கொண்ட பரதன், இவ்வாறு மனம் நொந்து, வருந்தி, புலம்பிவிட்டு, அமைச்சர்களுடன் நந்திக்கிராமத்தில் வசித்துக் கொண்டு ஆட்சி புரியத் தொடங்கினான். மகிமை பொருந்தியவனும் வீரனுமான பரதன் மரவுரி–ஜடை தரித்து, முனிவர்போல் வேஷம் தாங்கி, படைகளுடன் நந்திக்கிராமத்தில் வசித்தான். சகோதரரிடம் பேரன்புடையவனும், சகோதரரின் சொற்படி நடப்பவனும், வாக்குறுதியைக் கடக்க விரும்பாதவனுமான பரதன், இராமபிரானுடைய வருகையை எதிர்பார்த்துக் கொண்டு, திருப்பாதுகைகளுக்குத் திருவபிஷேகம் செய்து, அப்போது முதல் நந்திக்கிராமத்தில் வசிக்கத் தொடங்கினான். (22–24)

பரதன், திருப்பாதுகைகளுக்குத் தானே குடையைப் பிடித்தான்; கவரி (சாமரம்) வீசினான்; அரசு செயல்பாடுகள் முழுவதையும் பாதுகைகளிடம் விண்ணப்பித்தான். தமையனாரின் பாதுகைகளுக்குப் பட்டம் சூட்டிய பின்னர், தொண்டுச் செல்வனாகிய பரதன், எப்போதும் அவற்றின் அதிகாரத்திற்குட்பட்டவராக இருந்து, (அமைச்சர் முதலியோரைக் கொண்டு) அரசு நிர்வாகத்தை நடப்பித்துக் கொண்டிருந்தான். அதுமுதற்கொண்டு, பரதன் எந்தச் சிறுசெயலானாலும், விலையுயர்ந்த காணிக்கைப் பொருள் கொண்டு வரப்பட்டாலும் முதலில் அவைகளைப் பாதுகைகளுக்குத் தெரிவித்துவிட்டு, அதன் பின்னர் முறைப்படியான ஏற்பாடுகளைச் செய்தான். (25–27)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
நூற்றுப் பதினைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றுப் பதினாறு

கரன் தரும் தொல்லைகளைக் கூறுதல்

பரதன் திரும்பிச் சென்றதும், தபோவனத்தில் வசித்துக் கொண்டிருந்த இராமன், அங்குள்ள தவசிகள் மனம் புழுங்கி, வேறு ஏதோ ஒன்றில் உள்ளம் கொண்டவர்களாக இருப்பதைப் பார்த்தார். சித்திரகூடத்தில் அந்தத் தபோதனர்களின் ஆசிரமப் பிரதேசத்தில் முன்பிருந்தே வசித்து வந்தவர்கள், இராமனுடைய பாதுகாப்பில் கவலையில்லாமல் இருந்தவர்கள், இப்போது கலலையோடு இருப்பதைக் கண்ணுற்றார், அவர். கண்களாலும், புருவங்களின் அசைவுகளாலும் இராமனை நோக்கிச் சமிக்கை காட்டி, மனத்திற்குள் சந்தேகப்பட்டுக் கொண்டு, தங்களுக்குள் மெல்லப் பேசி, ஒருவருக்கொருவர் செய்திகளைத் தெரிவித்துக் கொண்டார்கள். (1–3)

அவர்களுடைய கவலைதோய்ந்த முகத்தைப் பார்த்து இராமன், 'தான் தவறாக நடந்து கொண்டுவிட்டோமோ?' என்று சந்தேகப்பட்டு, (முனிவர்களில் மூத்தவரான) குலபதி என்ற முனிவரிடம் சென்று, இரு கைகளையும் கூப்பிக் கொண்டு சொன்னார்— (4)

''பகவானே! நான் இங்கு வந்தபோது நடந்துகொண்ட விதத்திலிருந்து மாறுபட்டிருக்கிறேனா? (எல்லா தவசிகளிடமும் எப்போதும்போல் பணிவுடன்தானே நடந்து கொள்கிறேன்?) பின் ஏன் தவசிகள் என்னை ஒருவித மாற்றத்துடன் பார்க்கிறார்கள்? (அவர்கள் பார்வையில் அன்பு காணப்படவில்லையே?) என்னுடைய தம்பி லட்சுமணனின் நடத்தை, ஏதோ தவறுதலாக, அவன் உயர் குணத்திற்கு ஒவ்வாததாக முனிவர்களால் காணப்பட்டதா? (லட்சுமணன் அஜாக்கிரதையாக, முனிவர்களுக்கு ஏதேனும் அபசாரம் செய்துவிட்டானா?) தங்களைப் போன்ற முனிவர்களுக்கு சேவை செய்து வரும் சீதை, எனக்குப் பணிவிடை செய்வதில் முழுவதும் ஈடுபட்டதால், ஒரு குடும்பப் பெண் முனிவர்களுக்குச் செய்யவேண்டிய உபசாரங்களை முறைப்படிச் செய்யாமல் விட்டுவிட்டாளா?'' (5–7)

வயதாலும் தவத்தாலும் மூப்படைந்திருந்த முனிவர் உடல் நடுங்கினாற்போல், அனைத்துப் பிராணிகளிடமும் கருணையுள்ள இராமனைப் பார்த்துக் கூறினார்— ''குழந்தாய்! பிறவியிலேயே நல்ல குணம் உடையவளும், அவ்வாறே நன்மைகளைச் செய்வதில் மிகவும் அக்கறை கொண்டவளுமான வைதேகி தவறிழைப்பாளா? அதிலும் குறிப்பாக முனிவர்களை அலட்சியப்படுத்துவாளா? உன் காரணமாகத்தான் தபஸ்விகளுக்கு அரக்கர்களிடமிருந்து பயம் தோன்றியிருக்கிறது. அதனால், மனக்கவலை அடைந்த முனிவர்கள், தங்களுக்குள் ரகசியமாக ஏதேதோ பேசிக் கொள்கிறார்கள். (8–10)

இராவணனுடைய இளையவன்; கரன் என்ற பெயருடையவன்; ராக்ஷஸன்; கர்வமுள்ளவன்; வெற்றித்திமிர் கொண்டவன்; குரூரன்; மனிதர்களைப் புசிப்பவன்; கொழுப்படைந்தவன்; மகாபாவி. அவன் ஜனஸ்தானத்தில் ஆசிரமம் அமைத்துக் கொண்டு வாழும் தபஸ்விகளைத் தூக்கி எறிந்து கொண்டிருக்கிறான். உன்னையும் விட்டுவைக்க மாட்டான். குழந்தாய்! நீ, இந்த ஆசிரம வளாகத்தில் வசிக்கத் தொடங்கிய நாளிலிருந்து அரக்கர்கள் தவம் செய்பவர்களுக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். (11–13)

வெறுப்பு உண்டாக்குவதும், பார்ப்பதற்குப் பயங்கரமானதும், குரூரமானதும், விகாரமானதுமான பலவகையான கொடிய உருவங்களை எடுத்துக் கொண்டு (தவம் செய்யும் முனிவர் எதிரில்) தோன்றுகிறார்கள். விலக்கப்பட்ட அசுத்தமான பொருள்களால் தபஸ்விகளைத் தொட்டு, அவர்களுடைய தூய்மையைக் கெடுக்கிறார்கள். மற்றும் சிலர், தபஸ்விகளின் எதிரில் தோன்றி, மாயையினால் அவர்களைக் கொன்றுவிடுகிறார்கள். அவர்கள் ஆசிரமங்களில் தந்திரமாகப் புகுந்து, கண்ணில் படாமல் மறைந்து கொள்கிறார்கள். தவசிகள் சற்று கவனக்குறைவாக இருக்கும்போது, அவர்களை அவ்விடத்திலேயே அழித்துவிட்டு ஆனந்தக் கூத்தாடுகிறார்கள். (14–16)

ஹோமம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, யாக உபகரணங்களை எடுத்து வீசுகிறார்கள்; தண்ணீரைக் கொட்டி அக்னியை அணைக்கிறார்கள்; புனித நீர் நிரம்பிய கலசங்களை உடைத்துத் தள்ளுகிறார்கள். அந்தத் தீயவர்களால் தீண்டப்பட்ட குடில்களை முற்றிலுமாகத் துறந்துவிட்டு, வேறு ஒரு பிரதேசத்திற்குச் செல்வதற்கு முனிவர்கள் என்னைத் தூண்டுகிறார்கள். இராமா! அந்தத் துஷ்டர்கள் தபஸ்விகளின் சரீரத்திற்கும் துன்பம் கொடுப்பார்கள். (அவர்கள் கர்மாக்களுக்கு இடைஞ்சல் செய்வது முன்பே கூறப்பட்டது.) அதனால், அந்த நிலை வருவதற்கு முன்பாகவே, இந்தத் தவபூமியை விட்டுவிட்டு சௌகரியமான வேறு ஓர் இடம் செல்லப் போகிறோம். (17–19)

இவ்விடத்திற்கு அருகிலேயே ஏராளமான கிழங்கு–பழங்களைக் கொண்ட வனம் இருக்கிறது. பழமையான அந்த ஆசிரமத்திற்கே இந்த முனிவர் கூட்டத்துடன் மீண்டும் சென்று வாசம் செய்யப் போகிறேன். கரன், உனக்கும் தொல்லை கொடுப்பான். அவ்விதம் நேரிடுவதற்குமுன், உனக்கு விருப்பமிருந்தால் நீயும் எங்களுடன் வரலாம். முயற்சி உடையவனாகவும், சாமர்த்தியம் உடையவனாகவும் நீ இருந்தாலும் மனைவியோடு இருக்கிறாய். நீ சாதுவாக இருப்பதால், இங்கே இப்போது உனக்குத் துன்பம் ஏற்படத்தான் செய்யும்; அபாயம் ஏற்படவே செய்யும்.'' (20–22)

இவ்வாறு கூறிவிட்டு, வேறு இடத்திற்குச் செல்வதிலேயே குறியாக இருந்த அவரை, அரசகுமாரரான இராமன் சமாதானப்படுத்தும் பதிலால் தடுத்து நிறுத்த முடியவில்லை. பிறகு முனிவர் குலபதி, இராமப்பிரபுவைப் போற்றிப் புகழ்ந்து, அவரிடம் விடைபெற்றுக் கொண்டு, அவரைச் சமாதானப்படுத்திவிட்டு, அந்த ஆசிரமப் பிரதேசத்தைத் துறந்து, (தன்னுடைய சகாக்களான) முனிவர் கூட்டத்தோடுகூடச் சென்றுவிட்டார். இராமன், அந்த முனிவர் கூட்டத்தைப் பின்தொடர்ந்து சென்று விடைகொடுத்தார். முனிவர் குலபதியின் திருவடிகளில் வீழ்ந்து

வணங்கினார். மனம் மகிழ்ந்த அவர்களால் தெளிவாகக் கூறப்பட்ட உபதேசங்களை ஏற்று, அவர்களிடம் அனுமதி பெற்றுக்கொண்டு, புண்ணியமான தன் இருப்பிடத்திலேயே தொடர்ந்து வசிப்பதற்காகத் திரும்பி வந்து சேர்ந்தார். (23–25)

அந்த ஆசிரமத்திலிருந்து பல முனிவர்கள் வேறிடத்திற்குச் சென்றுவிட்டாலும், பிரபு ஸ்ரீராமன் அந்த இடத்தைவிட்டு ஒரு விநாடிகூடப் பிரிந்திருக்கவில்லை. இராமனுடைய உயர்குணங்களால் வசீகரிக்கப்பட்டு, அவரையே பின்பற்றி நடக்கும் சில முனிவர்கள், 'எப்படியும் இராமன் நம்மைக் காப்பாற்றுவான்' என்ற நம்பிக்கையுடன், அங்கேயே தங்கிவிட்டார்கள். (26)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
நூற்றுப் பதினாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றுப் பதினேழு

பதிவிரதையின் தருமம்

முனிவர்கள் போனபின்னர், அது விஷயமாகப் பல தடவைகள் சிந்தனை செய்து, பல காரணங்களைக் கொண்டு, இனிமேல் தானும் அவ்விடத்தில் வசிப்பது சரியல்ல என்று இராமன் எண்ணினார்— 'நகரத்தார்களோடும் தாய்மார்களோடும் பரதன் இங்கே வந்து என்னைச் சந்தித்தான். அவர்களைப் பற்றிய நினைவு இடைவிடாமல் என்னைச் சோகத்தில் ஆழ்த்துகிறது. மகாத்மா பரதனுடைய பெரும்படை இங்கே தங்கியதால், யானை–குதிரை முதலியவற்றின் சாணத்தால் இந்தப் புண்ணிய பூமி அசுத்தமாகியிருக்கிறது. அதனால், நாம் வேறு ஓர் இடத்திற்குச் சென்றுவிடுவோம்' என்று தீர்மானித்த இராமன், சீதை–லட்சுமணனோடு அங்கிருந்து புறப்பட்டார். (1–4)

பெரும்புகழ் கொண்ட அவர், அத்ரி முனிவரின் ஆசிரமத்தை அடைந்து, அவரை வணங்கி நின்றார். பகவான் அத்ரியும் அவரைத் தன் புதல்வன் போலவே கருதி ஆசீர்வதித்தார். முனிவர், மிக நல்ல முறையில், தானே இராமனுக்கு உபசாரங்கள் செய்து, இலக்குவனையும் சீதையையும் வரவேற்று உபசரித்தார். அனைத்துப் பிராணிகளுக்கும் நன்மை செய்வதில் நோக்கங்கொண்டவரும், தருமம் அறிந்தவருமான அவர், அப்போது அங்கு வந்து நின்ற மரியாதைக்குரியவளும் முதியவளுமான தன் மனைவியைப் பார்த்து அன்பொழுகக் கூறினார். தன் இல்லக்கிழத்தியும், தவம் செய்பவளும், மகாபாக்கியசாலியுமான அநஸூயையைப் பார்த்து, 'வைதேகியை வரவேற்று நன்றாக உபசாரம் செய்' என்று சொன்னார். (5–8)

இராமனிடமும், தன் மனைவியும் தபஸ்வியுமான அவளைப் பற்றிய விவரங்களைக் கூறினார்— "ஒரு காலத்தில் பத்தாண்டுகள் தொடர்ந்தாற்போல் மழை இல்லாததால் மக்கள் உணவிற்காகத் தவித்துப் போனார்கள். அப்போது, கிழங்குகளும் கனிகளும் இவளால் உண்டாக்கிக் கொடுக்கப்பட்டன. கங்கையின் நீரோட்டம் தடையின்றி நடைபெறச் செய்தாள். இவள் கடுமையான தவங்களைச் செய்தவள். கட்டுப்பாடான வாழ்க்கை முறையால் சிறப்புப் பெற்றவள். இவள் பத்தாயிரம் ஆண்டுகள் தவம் இயற்றியிருக்கிறாள். அநஸூயை எல்லாவிதமான இடையூறுகளையும் விலக்கி, விரதங்களை முழுமையாகச் செய்து முடித்தவள். (9–11)

தேவர்களுடைய காரியத்தைச் செய்து கொடுப்பதில் சிரத்தை கொண்ட இவளால், பத்து இரவுகள் ஓர் இரவாகச் செய்யப்பட்டன. மாசற்றவனே! அவ்வளவு பெருமைக்குரிய இவள், உனக்கு அன்னை போன்றவள். எல்லாப் பிராணிகளாலும் வணங்கத்தக்கவள்; கீர்த்தி பெற்றவள்; முதியவள்; கோபம் என்பதையே ஒருபோதும் அறியாதவள். அன்பு நிறைந்த தன் நற்கர்மங்களால்

அநஸூயா (பொறாமை இல்லாதவள்) என்று உலகத்தாரால் புகழப் பெற்ற இவளிடம் சீதை சென்று மனதாரப் பேசிக் கொண்டிருக்கட்டும்.'' இவ்வாறு கூறிய முனிவரிடம், ''அப்படியே ஆகுக'' என்று சொல்லிவிட்டு, இராமன் தருமமறிந்த சீதாப்பிராட்டியைப் பார்த்து பின்வரும் நன்மொழிகளைப் புகன்றார்— (12–14)

''மன்னர் புதல்வியே! முனிவர் இப்போது கூறியவைகளை நீயும் கேட்டுக் கொண்டிருந்தாய் அல்லவா? உனது மேன்மையின் பொருட்டு தபஸ்வினியை உடனே சென்று சந்திப்பாயாக.'' தன் நலனை விரும்பும் இராகவனுடைய இந்த வார்த்தைகளைக் கேட்ட சீதை, அத்ரி முனிவரின் பத்தினியும் அறவல்லுநருமான அநஸூயா தேவியின் அருகே சென்றாள். உடல் தளர்ந்து, சுருக்கங்கள் தோன்றி, மூப்படைந்து, முதுமையால் நரைத்துப் போன கூந்தலையுடையவரும், பெருங்காற்று வீசும்போது அசைந்தாடும் வாழைமரத்தைப் போல் எப்போதும் நடுங்கும் சரீரத்தை உடையவரும், பெரும்பேறு பெற்றவரும், கற்புக்கரசியுமான அந்த அநஸூயையை மிகவும் வணக்கத்துடன் நமஸ்கரித்து, தன் பெயரையும் சொன்னாள், சீதை. (15–18)

மனமாசுகளற்றவரும் தவசியுமான அவரை மீண்டும் நமஸ்காரம் செய்து, மனமகிழ்ச்சியுடன் இரு கைகளையும் கூப்பிக்கொண்டு, அவருடைய உடல்நலம் பற்றி விசாரித்தாள். தருமத்தை அனுஷ்டிப்பவளும் பெரும்பேறு பெற்றவளுமான சீதையைப் பார்த்து, பாராட்டிக் கூறும் முறையில் பின்வருமாறு கூறினார்— ''நீ தருமத்திலேயே பற்றுடையவளாக இருக்கிறாய் என்பது பெருமைக்குரிய செயல். பேரழகியான சீதையே! உற்றார்–உறவினர்களையும் கௌரவத்தையும் சுகபோகங்களையும் புறக்கணித்துவிட்டு, காட்டில் இருக்கும்படிக் கட்டளையிடப்பட்ட இராமனைப் பின்பற்றி வந்திருக்கிறாய் என்பது மிகவும் கொண்டாடத்தக்க தருமம். (19–21)

தன்னுடைய கணவர், நாட்டில் இருந்தாலும் காட்டில் இருந்தாலும் நல்லவரோ–கெட்டவரோ, அவரிடம் அன்பு பாராட்டும் மனைவிகளுக்கு (பிற்காலத்தில்) சௌக்கியமான உலகங்கள் கிடைக்கும். கணவன், தீய நடத்தையுடையவனாக இருந்தாலும், காமாதுரனாக இருந்தாலும், செல்வம் இல்லாதவனாக இருந்தாலும் மேன்மையான குணங்கள் கொண்ட பெண்களுக்கு கணவனே மிக உயர்ந்த தெய்வம். வைதேகி! நான் தீவிரமாகச் சிந்தித்துப் பார்த்துவிட்டேன் – கணவரைவிட நெருக்கமான ஓர் உறவை நான் காண்கிலேன். செய்த தவத்தின் அழிவற்ற (பொய்க்காத) பலன்போல, எவ்விடத்திலும் (இவ்வுலகிலும் மேலுலகிலும்), அவரே நமக்கு உறுதுணையாக இருப்பவர். கணவனை அடக்கி ஆள்பவர்களும், காமத்தில் ஈடுபட்ட மனமுடையவர்களான தீயவொழுக்கம் உடைய பெண்கள், நல்லது–கெட்டதுகளை அறியமாட்டார்கள். (22–25)

மைதிலி! இப்படிப்பட்ட பெண்கள் செய்யத்தகாத காரியங்களில் சிக்கிக் கொள்கிறார்கள். நேரான வழியிலிருந்து வழுவிச் சென்று இகழ்ச்சியை அடைகிறார்கள். ஆனால், உன்னைப் போன்று உத்தம குணங்களோடு கூடிய பெண்மணிகள், உலகத்தில் உயர்வு–தாழ்வுகளை உணர்ந்து கொண்டு (கணவன் அனுஷ்டிக்கும் தரும காரியங்களில் அனுகூலமாக இருந்து), புண்ணியத்தை ஏராளமாகச் சம்பாதித்தவர்கள் சென்றடையும் சுவர்க்கத்தையே சென்றடைவார்கள். ஆகவே, இதைப் போலவே கணவருக்குப் பணிவிடை செய்வதில் ஆர்வத்துடன் இரு; கற்புடைய மாதர்களின் தருமத்தைக் கடைப்பிடி; தன் கணவரின் தருமானுஷ்டானங்களில் உறுதுணையாக இரு. அதனால், (இவ்வுலகில்) நற்புகழையும், (மேலுலகில்) தருமங்களின் பயனான சுக–சௌக்கியங்களையும் அடைவாய் என்பது திண்ணம்.'' (26–28)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
நூற்றுப் பதினேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றுப் பதினெட்டு

அணிகலன்களைப் பெறுதல்

அநஸூயையயால் மேற்கண்டவாறு உபதேசிக்கப்பட்ட வைதேகி, அவர் கூறியதை உன்னிப்பாகக் கேட்டு, அவற்றைக் கொண்டாடி, மெதுவாகப் பதில் சொல்லத் தொடங்கினாள்— ''மிகச்சிறந்த குணங்களைக் கொண்ட தாங்கள் எனக்குச் செய்த உபதேசங்கள், தங்கள் உயர்நிலைக்கு ஏற்றதேயானதால், இதில் ஆச்சரியப்படுவதற்கு ஏதுமில்லை. 'பெண்டிர்க்குக் கணவனே கண்கண்ட தெய்வம்' என்பது எனக்கும் தெரியும். தாயே! எனது கணவரான இவர், நடத்தை தவறியவராக இருப்பாரேயானாலும்கூட, மனத்தில் எவ்விதச் சஞ்சலமுமின்றி, நான் அவருக்குப் பணிவிடை செய்து கொண்டிருப்பேன். (1–3)

ஆனால், இவரோ எல்லோராலும் புகழத்தக்க குணங்கள் உடையவர்; கருணைமிக்கவர்; புலன்களை வென்றவர்; நிலையான அன்பு வைத்திருப்பவர்; தருமாத்மா; ஒரு தாயைப் போலும், தந்தையைப் போலும் மனப்பூர்வமான நேசமுள்ளவர். இப்படிப்பட்ட உத்தமபுருஷருக்கு நான் பணிவிடை செய்வதிலும், அவரை அனுசரித்துப் போவதிலும் ஆச்சரியம் என்ன? பேராற்றலுடைய இராமன், (தன்னைப் பெற்ற தாயாரான) கௌசல்யா தேவியாரிடம் எவ்வளவு பாசம் வைத்திருக்கிறாரோ, அவ்வளவு பாசம் அரசரின் மற்ற பத்தினிகளிடமும் வைத்திருக்கிறார். (4,5)

மன்னர் (தசரதர்), எந்தப் பெண்ணையாவது ஒரு தடவை பிரேமையுடன் பார்த்திருந்தாலும், மன்னரிடம் மரியாதை வைத்துள்ள, தருமத்தை அறிந்துள்ள வீரராமன், (தன் அன்னைக்குப் போட்டியாக வந்துவிட்டாளே? என்ற) பொறாமை இல்லாமல், தன் தாயாரிடம் நடந்து கொள்வதைப் போலவே, அந்தப் பெண்ணிடமும் நடந்து கொள்கிறார். மிகவும் அச்சத்தை விளைவிக்கக் கூடியதும், மனித சஞ்சாரமில்லாததுமான காட்டிற்கு நான் புறப்பட்டபோது, என் மாமியார் கூறிய மேலான மொழிகளை (அறிவுரைகளை), என் இதயத்தில் வைத்துக் கொண்டிருக்கிறேன். (6,7)

என்னை விவாகம் செய்து கொடுத்த காலத்தில், அக்னியின் முன்பாக, என் தாயார் செய்த நல்லுரைகளும் என் மனத்தில் நிற்கின்றன. தருமத்தை அனுஷ்டிப்பவரே! 'கணவருக்குப் பணிவிடை செய்வதைத் தவிர, வேறு எந்தத் தவமும் பெண்களுக்கு விதிக்கப்படவில்லை' என்பது முதலான பெண் தருமங்கள் அனைத்தும் எனக்குத் தங்களால் நினைவூட்டப்பட்டன. சாவித்திரி, கணவர் சத்தியவானுக்குச் சேவை செய்ததாலேயே சுவர்க்கலோகத்தில் மதிப்புடன் விளங்குகிறாள். அதேபோன்று அனுஷ்டானமுடைய தாங்கள், கணவருக்குப் பணிவிடை செய்வதன் காரணமாகவே சுவர்க்கத்தை அடையப் போகிறீர்கள். (8–10)

எல்லாப் பெண்டிரைக் காட்டிலும் சிறந்தவளான ஆகாயத்தில் விளங்கும் ரோகிணிதேவி, சந்திரனைவிட்டு ஒரு முகூர்த்தகாலம்கூடப் பிரிந்ததில்லை. இவ்விதம் கணவருக்குப் பணிவிடை செய்வதில் உறுதியாக இருக்கும் உத்தமப்பெண்டிர், தங்கள் புண்ணிய கர்மத்தின் பயனாக தேவலோகத்தில் பெருமையோடு இருந்து கொண்டிருக்கிறார்கள்.'' சீதையின் சொற்களைக் கேட்டு மனமகிழ்ந்த அநஸூயை, அவளை உச்சிமுகர்ந்து, மைதிலியை மேலும் சந்தோஷப்படுத்தும் விதமாகக் கூறினார்— (11–13)

''சீதே! பலவகையான நியமங்களாலும் கடுமையான தவத்தாலும் என்னிடம் எத்தனையோ சக்திகள் பெறப்பட்டுள்ளன. அழகாகச் சிரிப்பவளே! அந்தத் தெய்விக ஆற்றலைப் பெற்றிருப்பதால், 'உனக்கு வேண்டியதைக் கேள்' என்கிறேன். மைதிலி! உன் பேச்சு உயர்தரமாகவும் தர்க்கத்திற்கு ஒத்ததாகவும் இருப்பதால், நான் மிகவும் பிரீதி அடைந்துள்ளேன்.

உனக்குப் பிரியமானது எதுவோ, அதைக் கேள்; நான் செய்வேன்.'' அவருடைய அந்தப் பேச்சைக் கேட்டு, ஆச்சரியமடைந்த சீதை மெல்லப் புன்னகை செய்து, தவமகிமையுடைய அநஸூயையைப் பார்த்து, 'தங்கள் அன்பான பேச்சினாலேயே என் விருப்பங்கள் நிறைவேறி விட்டன' என்று சொன்னாள். (14–16)

சீதை இவ்வாறு கூறியதும், தருமம் அறிந்தவரான அநஸூயைக்கு அவள் மேல் இன்னும் அதிக மதிப்பு உண்டாயிற்று. ''சீதே! பேராசைப்படாத உன்னைக் கண்டு என் மகிழ்ச்சி மேலும் அதிகமாகிறது. அந்த ஆனந்தத்தை நான் நிச்சயம் பலனுள்ளதாகச் செய்வேன். வைதேகி! திவ்வியமான இந்த மாலை, வஸ்திரம், அணிகலன்கள், வாசனை திரவியம், விலைமதிக்க முடியாத உடற்பூச்சு முதலியவைகளை உனக்குக் கொடுக்கிறேன். இவை, உன் உடல் எழிலை அதிகப்படுத்திக் காட்டும். இவைகள் உனக்கு ஏற்றவை; எப்போதும் கசங்காமலும் மாசு அடையாமலும் இருக்கும். ஜனகன் புதல்வியே! அழிவில்லாத மகாவிஷ்ணுவை அவர் மார்பில் விளங்கும் ஸ்ரீதேவி விளக்கமுறச் செய்வதைப் போல, திவ்யமான இந்த வாசனைத் திரவியங்களை நீ உடலில் பூசிக் கொண்டு, உன் கணவரை அழகுறச் செய்வாய்.'' (17–20)

எல்லையில்லாத அன்பினால் கொடுக்கப்பட்ட ஆடை, நறுமணப்பூச்சு, அணிகலன்கள், மாலைகள் ஆகியவைகளை மைதிலி பெற்றுக் கொண்டாள். பேரன்பினால் கொடுக்கப்பட்ட அவைகளைப் பெற்றுக் கொண்ட புகழ்மிக்க சீதை, இரு கைகளையும் கூப்பிக்கொண்டு, தவச்செல்வியான அநஸூயையின் அருகில் அமர்ந்து கொண்டாள். பிறகு, சீதை வந்து அருகில் உட்கார்ந்து கொண்டிருப்பதைக் கண்ட விரதங்களை உறுதியுடன் கடைப்பிடிக்கும் அநஸூயை சில சல்லாபமான விஷயங்களைக் கேட்க விரும்பியவராக, தானே பேச ஆரம்பித்தார்— (21–23)

''சீதே! புகழ்பெற்ற இந்த இராமனால், சுயம்வரத்தின்வழி நீ அடையப்பட்டாய் என்று, ஒரு கதை என் செவிகளுக்கு எட்டியது. மைதிலி! நான் அந்த நிகழ்ச்சியை விஸ்தாரமாகக் கேட்க விரும்புகிறேன். எனவே, எது எப்படி நடந்ததோ, அதை அப்படியே முழுமையாக எனக்குக் கூறுவாய்.'' இவ்வாறு கூறப்பட்ட சீதை, தருமானுஷ்டானமுள்ள அவரைப் பார்த்து, 'கேளுங்கள்' என்று சொல்லிவிட்டு, அந்தக் கதையைச் சொல்ல ஆரம்பித்தாள்— ''ஜனகர் என்று பெயர் பெற்ற மிதிலையின் அரசர், வீரர்; தருமம் அறிந்தவர்; க்ஷத்திரிய தருமத்தில் மிகவும் ஈடுபாடு உடையவர். அவர், தன் தேசத்தை முறைப்படி ஆண்டு வந்தார். (24–27)

ஒரு சமயம், அவர் யாகபூமியைத் தன் கலப்பையால் உழுது கொண்டிருந்தபோது, நான் பூமியைப் பிளந்து கொண்டு வெளிப்பட்டேன். அதனால், அந்த மன்னரின் மகள் ஆனேன். அவர், அவ்விடத்திலிருந்த செடி–கொடிகளைப் பிடுங்கி எறிவதில் முனைந்திருந்த போது, என்னைப் பார்த்தார். உடல் முழுவதும் புழுதி படிந்திருந்த என்னைப் பார்த்து ஜனகர் ஆச்சரியமடைந்தார். அவருக்குக் குழந்தைகள் இல்லை. எனவே, பாசத்துடன் என்னைத் தன் மடியில் வைத்துக் கொண்டு, 'இவள் என்னுடைய மகள்' என்று கூறி, என்மீது அன்பைப் பொழிந்தார். அப்போது, ஆகாயத்தில் ஓர் அசரீரி எழுந்தது— 'மன்னனே! மானுடம் சாராத இவள், நீர் கூறியபடியே உமது தருமபுத்திரிதான்.' (28–31)

தருமாத்மாவும் தந்தையும் மிதிலை மன்னருமான அவர் மிகவும் மனமகிழ்ந்தார். அரசர் என்னை (மகளாக) அடைந்ததும், எல்லையில்லாத செல்வச் செழிப்பைப் பெற்றுவிட்டதுபோல் மகிழ்ந்தார். புண்ணியச் செயல்களைச் செய்பவரும், தனக்கு மிகவும் பிரியமானவருமான மூத்த அரசியிடம் என்னை ஒப்படைத்தார். அவர், என்னைப் பெற்ற தாயைப்போல பேரன்புடன் சீராட்டி வளர்த்தார். தன் செல்வம் முழுவதையும் இழந்து ஏழையாகிவிட்டவன் துயரப்படுவதைப் போல, எனக்கு விவாக வயது வந்துவிட்டதை அறிந்த என் தந்தை, மனம் தளர்ந்து கவலை கொண்டார். (32–34)

உலகத்தில், தேவேந்திரனுக்கு நிகராக இருந்தாலும், பெண்ணைப் பெற்ற எந்தவொரு தகப்பனாரும் தனக்கு இணையான அல்லது கீழான மக்களிடமிருந்து வரும் இகழ்ச்சியை அனுபவிக்கிறார்கள். நடுக்கடலில் தத்தளிக்கும் ஒருவன், படகு இல்லாமல் கரையை அடைய முடியாதது போல, அந்த இகழ்ச்சியை எதிர்கொள்ளும் காலம் தனக்கு நெருங்கிவிட்டதைப் பார்த்து, மன்னர் சோகக்கடலில் மூழ்கினார். புவியாளும் அரசர், நான் ஒரு தாயின் வயிற்றில் தோன்றாததால் (மானுட இயல்பிற்கு மேம்பட்டு இருந்ததால்) எனக்கு இணையான குணமும், அழகும் பொருந்திய கணவரைக் கண்டுபிடிக்க முயன்றும், எவ்வித முடிவிற்கும் வரமுடியாதவராக இருந்தார். (35–37)

புத்திமானான அவருக்கு, எப்போதும் இதை(என் விவாகத்தை)ப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கையில், 'என் மகளுக்கு சுயம்வரம் ஏற்பாடு செய்யலாம்' என்ற கருத்து உண்டாயிற்று. முன்பு ஒரு சமயம், பெருவேள்வி நடந்தபோது மகாத்மாவான வருணனால், அவருக்கு அருள்புரியும் நோக்கத்துடன், (பரமேசுவரன் உபயோகித்த) அம்புகள் குறையாத இரண்டு அம்புறாத்தூணிகளும், மிகச்சிறந்த வில்லும் கொடுக்கப்பட்டன. அதன் தெய்விகத் தன்மையாலும் கனத்தாலும் மிகவும் முயற்சி செய்தால்கூட, மனிதர்களால் அசைக்க முடியாதிருந்தது. அரசகுமாரர்கள், அந்த வில்லை எடுத்து வளைக்கும் ஆற்றலைக் கனவில்கூட பெறமுடியாதவர்களாக இருந்தார்கள். (38–40)

அவ்வளவு மகிமை பொருந்திய வில் தன்னிடம் இருப்பதை நினைவுகூர்ந்து, மன்னர்களை அழைப்பித்து, அவர்கள் சபையில் சத்தியவாதியான என் தகப்பனார் (பின்வருமாறு) பிரகடனம் செய்தார்— 'எவனொருவன் இந்த வில்லை எடுத்து நாணேற்றுகிறானோ, அவனுக்கு என் புத்திரி மனைவியாவாள். இதில் சந்தேகமில்லை.' மலைபோல அசைக்க முடியாததான அந்தத் தெய்விக வில்லைப் பார்த்ததும், அதைக் கையால் தூக்கக்கூட சக்தியற்றவர்களான மன்னர்கள், அதை வணங்கிவிட்டுத் திரும்பிச் சென்றார்கள். (41–43)

வெகுநாட்களுக்குப் பிறகு, மகாபராக்கிரமசாலியான சத்தியம் தவறாத இந்த இராகவன், (மிதிலையில் நடந்து கொண்டிருந்த) வேள்வியைப் பார்ப்பதற்காக விசுவாமித்திரருடனும் சகோதரன் லட்சுமணனோடும் வந்தார். தருமாத்மாவான விசுவாமித்திரர், என் தந்தையால் நன்கு உபசரிக்கப்பட்டார். அப்போது, அவர் என் தந்தையைப் பார்த்து, 'இவர்கள் இருவரும் தசரதருடைய குமாரர்கள்; இராமன்–லட்சுமணன் என்ற சகோதரர்கள்; வில்லைப் பார்ப்பதில் விருப்பம் உடையவர்கள்' என்று சொன்னார். 'தெய்விகமான அந்த வில்லை, அரசகுமாரனான இராமனுக்குக் காட்டுவாயாக' என்று அந்த முனிவரால் சொல்லப்பட்டதும், அந்த வில்லைக் கொண்டுவரச் செய்தார் (ஜனகர்). (44–47)

மகாவீரம் பொருந்திய, பேராற்றல் மிக்க அவர், இமைகொட்டும் நேரத்தில் அதை வளைத்து, நாண் கயிற்றை எடுத்து, உடனே நாணேற்றி டங்காரம் செய்தார். அழுத்தமாக வில்லை வளைத்து நாணேற்றும்போது, அது நடுவில் (தானாகவே) முறிந்து இரண்டு துண்டுகளாயிற்று. கீழே விழுந்தபோது ஏற்பட்ட பயங்கரமான சப்தம் இடியோசைபோல் கேட்டது. சொன்ன சொல் தவறாத என் தந்தை, உத்தமமான தீர்த்த பாத்திரத்தைக் கையில் எடுத்து, அப்போதே, இராமனுக்கு என்னைத் தாரை வார்த்துக் கொடுப்பதாக நிச்சயித்தார். உடனே, என் தந்தை என்னைக் கொடுக்க வந்தபோது, அயோத்தியாதிபதியான தன்னுடைய தந்தையாரின் சம்மதத்தைப் பெறாமல், என்னை ஏற்றுக்கொள்ள மறுத்தார், அவர். (48–51)

பின்னர், வயோதிகமடைந்த மன்னரான என் மாமனாரை வரவழைத்து, ஆத்மஞானம் பெற்றவரான இராமனுக்கு என்னை விவாகம் செய்து கொடுத்தார். என் இளைய சகோதரியும், அழகிய தோற்றமுள்ளவளும், பண்பு நிறைந்தவளுமான ஊர்மிளையை லட்சுமணனுக்குப் பத்தினியாக, என் தந்தை தானே கொடுத்தார். இவ்வாறாக, அப்போது அந்த சுயம்வரத்தில்

நான், ஸ்ரீராமனுக்குக் கொடுக்கப்பட்டேன். ஆற்றல்மிக்கவர்களில் முதன்மையானவரான அவரிடம் அறநெறிப்படி, நான் சஞ்சலமில்லாத அன்புடையவளாக இருக்கிறேன்.'' (52–54)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
நூற்றுப் பதினெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றுப் பத்தொன்பது

தண்டகாரண்யத்தில் புகுதல்

போற்றற்குரிய அந்தக் கதையைக் கேட்டு, தருமமறிந்தவரான அநஸூயா, மைதிலியைத் தன் இரு கைகளாலும் அணைத்துக் கொண்டு உச்சிமுகர்ந்தார். தெளிவான, அழகான, இனிமையான சொற்களால் நீ கூறிய சுயம்வரக் கதையை நான் முன்பே கேட்டிருக்கிறேன். இனிமையாகப் பேசுகிறவளே! நீ கூறிய கதையில் என் மனம் ஆழ்ந்திருக்கிறது. மங்களமான இரவு வேளைக்கு இடம் கொடுத்து, ஒளிச்செல்வனான சூரியன் மறைந்துவிட்டான். பகலில் உணவைத் தேடி வெளியே பறந்து சென்ற பறவைகள், அந்திவேளையில் உறங்குவதற்காகக் கூடுகளில் புகுந்து கொண்டு சப்தமிடும் ஒலி கேட்கப்படுகிறது. (1–4)

முனிவர்கள் ஈரமான மரவுரி அணிந்து கொண்டு, குளித்ததால் நீர்சொட்டும் உடலுடன் கையில் ஜலபாத்திரம் ஏந்தியவர்களாக ஒன்றாகத் திரும்பி வருகிறார்கள். அக்னிஹோத்ர குண்டத்தில் முறைப்படி முனிவர்களால் ஆகுதி செய்யப்பட்டு, காற்றினால் எங்கும் பரவிய புகை, புறாவின் அங்கத்தைப் போல சாம்பல் நிறத்துடன் காணப்படுகிறது. அடர்த்தியான காட்டுப் பிரதேசங்களுக்குத் தொலைவில் இருக்கும் இந்த இடத்திலும், கொஞ்சமாக இலைகளையுடைய மரங்கள் இருளினால் மூடப்பட்டு, திக்கு–திசை தெரியாமல், எங்கும் மிக்க அடர்த்தியானதுபோல் காணப்படுகின்றது. (5–7)

இரவு வேளையில் திரியும் பிராணிகள், நாலாபக்கத்திலும் சுற்றித் திரிகின்றன. இந்தத் தபோவனத்தைச் சேர்ந்த விலங்குகள் (மான், பசு, கன்று போன்றவை) புண்ணியமான வேள்விக்கூடம் போன்ற இடங்களில் படுத்துக் கிடக்கின்றன. சீதே! தாரகைகளால் அழகுற்று விளங்கும் இரவு வந்துவிட்டது; ஆகாயத்தில் சந்திரன் தோன்றி, நிலா கிரணங்களைப் போர்த்திக் கொண்டு விளங்குகிறான். நீ இப்போது செல்வாய், நான் அனுமதி கொடுக்கிறேன். சென்று இராமனுக்குச் சேவை செய்வதில் ஈடுபடுவாய். இனிமையான உன் பேச்சினால் நானும் மகிழ்ந்திருக்கிறேன். (8–10)

என் செல்வகுமாரி மைதிலி! திவ்யமான இந்த ஆடை–ஆபரணங்களால் உன்னை நீயே அலங்காரம் செய்து கொள். நீ, அலங்காரம் செய்து கொண்டு பேரழகுடன் விளங்குவதை நான் கண்ணாரக் கண்டு மகிழ விரும்புகிறேன். அவ்வாறே அலங்காரம் செய்து கொண்ட அவள், தேவப்பெண் போல் விளங்கினாள். அவருக்குத் தலைவணங்கிவிட்டு இராமனை நோக்கிச் சென்றாள். தபஸ்வினியான அநஸூயையால் அன்புப் பரிசாகக் கொடுக்கப்பட்டவைகளை அணிந்து கொண்டு வந்த சீதையை, வாக்குத் திறனுடையவர்களில் சிறந்தவரான இராமன் பார்த்தார்; மகிழ்ச்சியும் அடைந்தார். (11–13)

தபஸ்வினியால் அன்புப் பரிசாக அளிக்கப்பட்ட ஆடை–ஆபரணங்களையும், மற்ற பேச்சுக்கள் எல்லாவற்றையும் இராமனிடம் மைதிலி தெரிவித்தாள். இராமனும், பெரும் வீரனான இலக்குவனும் மனிதர்களுக்குக் கிடைத்தற்கரிய பெரும்பேறு சீதைக்கும் கிடைத்திருப்பதைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். சந்திரனையொத்த திருமுகத்தையுடைய ரகுநந்தனரான இராமன்,

தவசிகளாலும் ஸித்தர்களாலும் உபசரிக்கப்பட்டு, புண்ணியமான அந்த இரவை அவ்விடத்திலேயே கழித்தார். அந்த இரவு கழிந்ததும், நீராடிவிட்டு அக்னிகுண்டங்களில் ஹோமம் செய்து முடித்த காட்டுவாசிகளான தவசிகளிடம், தாங்கள் அங்கிருந்து புறப்பட்டுச் செல்வதற்கு புருஷோத்தமர்கள் இருவரும் விடைகேட்டார்கள். (14–17)

அறநெறியில் செல்லும் வனவாசிகளான அந்தத் தவசிகள், அந்தக் காட்டில் அரக்கர்கள் எல்லா இடங்களிலும் சஞ்சரித்துத் தொல்லை கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். இந்தப் பெருங்கானகத்தில் பல வடிவங்களை எடுத்து, மனிதர்களைத் தின்னும் அரக்கர்களும், மனித ரத்தத்தைக் குடிக்கும் துஷ்ட விலங்குகளும் இருக்கின்றன. இந்தப் பெருங்கானகத்தில் தருமானுஷ்டானமுள்ள தவச்செல்வர்களை, அவர்கள் தூய்மை குறைந்தோ, கவனக்குறைவாகவோ இருக்கும்போது கைப்பற்றித் தின்று விடுகிறார்கள். நீங்கள், அவர்களை இங்கிருந்து ஓட்டி (விரட்டி) விட வேண்டும். (18–20)

மாமுனிவர்கள் பழம்–புஷ்பம் சேகரித்துக் கொண்டு வரும் பாதை இது. இராகவா! இந்த வழியாகச் சென்றால் உட்புக முடியாத அடர்ந்த காட்டை அடையலாம். தபஸ்விகளான அந்த அந்தணர்கள், இவ்வாறு தெரிவித்துவிட்டுக் கைகளைக் கூப்பி அவர்களை ஆசீர்வதித்து, மேற்கொண்டு பயணம் நல்லபடியாக நிறைவேற வேண்டும் என்று மங்கள வாக்கியங்களைக் கூறினார்கள். எதிரிகளை வாட்டும் ஸ்ரீராமன், மனைவியோடும் லட்சுமணனோடும் மேக மண்டலத்திற்குள் பிரவேசிக்கும் சூரியனைப்போல, அந்தக் காட்டினுள் புகுந்தார். (21,22)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
நூற்றுப் பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

அயோத்தியா காண்டம் முற்றிற்று.

॥ ஸ்ரீஹரி: ॥

ஆரண்ய காண்டம்

ஸர்க்கம் : ஒன்று

முனிவர்களைக் கண்டு வணங்குதல்

எவராலும் வெல்ல முடியாதவரும் மகாதீரருமான இராமன், பெருவனமாகிய தண்டகாரண்யத்திற்குள் புகுந்து, தவசிகளின் இருப்பிடங்களான குடில்களின் வரிசைகளைக் கண்டார். (தண்டகன் என்னும் அரசனுடைய நாடு, சுக்ராசார்யாரின் சாபத்தால் பெருங்காடாக மாறிவிட்டிருந்தது.) அங்கே தர்பைகளும் மரவுரிகளும் பரவலாகக் காணப்பட்டன. பிரும்மவித்தை சாதனை புரிந்து கொண்டிருக்கும் மகரிஷிகளின் இருப்பிடமானதால், ஆகாயத்தில் கண்ணெடுத்துப் பார்க்க முடியாத சூரியமண்டலத்தின் பேரொளி போன்ற சிறப்பான தெய்விக ஒளி படர்ந்திருந்தது. அந்த இடம் எல்லாப் பிராணிகளுக்கும் சரணாலயமாக இருந்தது. எப்போதும் சுத்தம் செய்யப்பட்டுக் கொண்டிருந்ததால் வீடு–வாசல்கள் தூய்மையாக இருந்தன. பல்வகையான விலங்குகள் நிறைந்திருந்தது. பறவைக் கூட்டங்களால் சூழப்பட்டிருந்தது. (1–3)

அப்சரப் பெண்டிர், நாள்தோறும் அந்த மனோகரமான இடத்திற்குக் கூட்டங்கூட்டமாக வந்து, அதனைப் போற்றி நாட்டியமாடினார்கள்; விசாலமான வேள்விச்சாலைகளாலும், ஸ்ருக்கு என்ற மரக்கரண்டிகளாலும், வேள்வி உபகரணங்களாலும், மான்தோல்களாலும், தர்பைகளாலும், சமித்துக்களாலும், நீர் நிறைந்த கலசங்களாலும், பழம்–கிழங்குகளாலும் அந்த ஆசிரம வளாகம் அழகாக விளங்கிற்று; சுவையான பழங்களைக் கொடுக்கும் புனிதமான மிகப்பெரிய காட்டு மரங்கள் சூழ்ந்திருந்தன. (4,5)

பலி–ஹோமங்களால் பூஜிக்கப்பட்டு, புண்ணியமான வேதகோஷங்கள் எதிரொலித்துக் கொண்டிருந்ததும், காட்டு மலர்களையும் தாமரை மலர்கள் நிறைந்த ஓடைகளையும் உடையதும், பழம்–கிழங்குகளை உணவாகக் கொண்டு புலன்களை வென்றவர்களும், மரவுரிகளையும் மான்தோல்களையும் உடுத்திக் கொண்டிருப்பவர்களும், சூரியனையும் அக்னியையும் போன்று ஒளி வீசுகின்ற மிகவும் முதிர்ந்தவர்களான முனிவர்கள் விளங்குவதும், உணவுக் கட்டுப்பாடுடைய புண்ணியம் நிறைந்த மாமுனிவர்களால் அழகு பெற்றதும், பிரும்மலோகம் போல் எப்போதும் மறை ஒலிகள் ஒலித்துக் கொண்டிருப்பதும், பிரும்மத்தை அறிந்த பெரும்பேறு பெற்றவர்களான அந்தணர்கள் விளங்குவதுமான தபசிகளின் பர்ணசாலைக் கூட்டங்களைக் கண்டு, ஸ்ரீமானும் பெரும் தேஜஸ் உடையவருமான இராமன், தன்னுடைய பெரும் வில்லிலிருந்து நாண்கயிற்றைக் கழற்றிவிட்டு (ஆசிரமக் கூட்டத்தின் அருகே) சென்றார். (6–9)

இராமனையும், மிகவும் புகழ் பெற்றவளான சீதையையும் கண்டு, பெருங்களிப்படைந்த தெய்விக ஞானம் படைத்த மாமுனிவர்கள், அவர்களை எதிர்கொண்டழைத்தார்கள். கடுமையான விரதங்களைக் கடைப்பிடிப்பவர்களும், அறநெறி தவறாதவர்களுமான அந்த முனிவர்கள், உதயமாகிக் கொண்டிருக்கும் பூர்ணசந்திரனைப் போன்ற இராமனையும், இலக்குவனையும், கீர்த்திமிக்க விதேக மன்னரின் குமாரியையும் கண்டு, மங்களமான ஆசிமொழிகளைக் கூறி, தங்கள் விருந்தினர்களாக ஏற்றுக் கொண்டார்கள். காட்டிலேயே வாசம் செய்பவர்களான அந்த முனிவர்கள், இராமசந்திரனுடைய தோற்றப் பொலிவையும், செந்திரு திகழும் திருமேனியையும், உடலின் மென்மையையும் மனங்கவரும் உருவ அமைப்பையும் மிகுந்த வியப்புடன் கண்டு ஆனந்தித்தார்கள். காட்டில் வாழும் அவர்கள் எல்லோரும், சீதாப்பிராட்டியாரையும் லட்சுமணனையும் இராமனையும் கண்கொட்டாமல் ஆச்சரியத்துடன் பார்த்து வியந்தார்கள். (10–13)

பெரும்பேறு பெற்றவர்களான அவர்கள், எல்லாப் பிராணிகளின் நலனிலும் அக்கறையுடையவரும் விருந்தினராக வந்துள்ளவருமான இராமனை, ஒரு குடிசையில் தங்க வைத்தார்கள். அறநெறி தவறாதவர்களும், அக்னியைப் போல் பிரகாசிக்கின்றவர்களுமான அவர்கள் முறைப்படி இராமனுக்கு வரவேற்பளித்து, பருகுவதற்கு நீர் அளித்தார்கள். அறம் அறிந்தவர்களான அவர்கள், அந்த ஆசிரமத்தையும், காட்டில் கிடைக்கும் கிழங்கு–பழம்–புஷ்பம் முதலியவைகளையும் மகாத்மாவான இராமனுக்குச் சமர்ப்பணம் செய்துவிட்டு, பின்னர் கைகூப்பிக் கொண்டு விண்ணப்பம் செய்தார்கள். (14–16)

''தாங்கள், தருமத்தைக் காப்பாற்றுகிறவர்; மக்களுடைய புகலிடம்; பெரும் கீர்த்தி பெற்றவர்; (மக்களால்) கௌரவிக்கத்தக்கவர்; போற்றுதலுக்குரியவர்; ஆட்சி புரிபவர்; (தீயவர்களுக்குத்) தண்டனை அளிப்பவர்; குரு. இராகவனே! மன்னன், இந்திரனுடைய (எல்லையற்ற) சக்தியில் கால்பாகத்தைப் பெற்று, இங்கே (மண்ணுலகில்) மக்களைக் காப்பாற்றுகிறான். ஆதலால், மக்களால் வணங்கப்பட்டு மிக உயர்ந்த போகங்களை அனுபவிக்கிறான். தங்களுடைய நாட்டில் வசிக்கும் நாங்கள், தங்களால் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள். தாங்கள், மக்கட்தலைவர்; காட்டிலிருந்தாலும் நாட்டிலிருந்தாலும், தாங்கள்தான் எங்கள் அரசர். (17–19)

மன்னரே! எங்களைத் துன்புறுத்துபவர்களைச் சாபம் கொடுத்துத் தண்டிக்கக் கூடாதா? என்றால், நாங்கள் சாபம் கொடுப்பதை நிறுத்திவிட்டோம். (சாபம் கொடுத்தால் தவவலிமை குன்றிவிடும்.) நாங்கள் கோபத்தை வென்றுவிட்டவர்கள்; புலன்களை வென்றவர்கள்; கருப்பையிலிருக்கும் சிசுவுக்கு, அதன் தாய்தான் கதி என்பது போல், தவம் செய்வதைத் தவிர வேறொன்றும் அறியாதவர்கள் நாங்கள்; தங்களால் காப்பாற்றப்பட வேண்டியவர்கள்.'' (20)

இவ்வாறு கூறிவிட்டு, காட்டில் கிடைக்கும் புஷ்பம்–பழம்–கிழங்குகளாலும் மற்றும் பலவகையான ஆகாரங்களாலும், லட்சுமணனையும் இராமனையும் உபசரித்தார்கள். இதைத் தவிர, அக்னி போல் ஜொலிக்கும் மற்ற தவசியரும், நீதிநெறி தவறாத ஸித்தர்களும் அனைத்துலகத் தலைவரான இராமனைக் கண்டு, முறைப்படி வரவேற்று, அளவளாவி மகிழ்வித்தார்கள். (21,22)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
முதலாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இரண்டு

விராதன், சீதையை அபகரித்தல்

நன்றாக உபசரிக்கப்பட்ட இராமன், (மறுநாள் காலையில்) சூரியோதயம் ஆனவுடன் எல்லா முனிவர்களிடமும் விடைபெற்றுக் கொண்டு அடர்த்தியான காட்டிற்குள் நுழைந்தார். பல விலங்குக் கூட்டங்கள் நிறைந்திருப்பதும், புலிகளும் செந்நாய்களும் வசிப்பதும், (முரட்டு விலங்குகளால்) நாசம் செய்யப்பட்ட மரம்–கொடிகளை உடையதும், நீர்நிலைகள் காண்பதற்கு அரியதாகவும் கூச்சல் எழுப்பாத பல்வகை பறவைகளைக் கொண்டதும், ஏராளமான சுவர்க்கோழிகள் சப்தமிட்டுக் கொண்டிருப்பதுமான காட்டின் ஒரு பகுதியை, லட்சுமணனால் பின்தொடரப்பட்ட இராமன் பார்த்தார். காட்டின் இடையே, கொடிய மிருகங்கள் நிறைந்த அந்தப் பகுதியில், மனிதர்களைப் புசிப்பவனும் பெருங்குரலுடையவனும் மலைச்சிகரம் போல் நெடிதுயர்ந்தவனுமான ஓர் அரக்கனை, சீதையுடன் வந்துகொண்டிருந்த இராமன் கண்டார். (1–4)

ஆழமான பெருங்கண்கள்; பெரிய முகம்; பயங்கரமானவன்; சீர்குலைந்த வயிறு; அச்சம் விளைவிக்கும் தோற்றம்; நிலைகெட்டவன்; உயரமாக வளர்ந்தவன்; விகாரமான உடலமைப்பு; கொடிய தோற்றத்தோடு கூடியவன்; இரத்தம் சொட்டும் புலித்தோலை உடுத்தியவன்; உடல்

முழுவதும் இரத்தம் வழிந்து கொண்டிருப்பவன்; எல்லாப் பிராணிகளுக்கும் பயத்தை விளைவிப்பவன்; வாயைப் பிளந்து கொண்டிருக்கும் யமனைப் போன்றவன்; இரும்புச் சூலத்தில் மூன்று சிங்கங்களையும் நான்கு புலிகளையும் இரண்டு காளைகளையும் பத்து புள்ளிமான்களையும் தந்தம்–கொழுப்போடு கூடிய ஒரு பெரிய யானைத் தலையையும் கோர்த்துக் கொண்டு, பெருங்குரலில் கூச்சலிட்டுக் கொண்டிருப்பவனுமான (அரக்கனைப் பார்த்தார்.) (5–7)

அவன், இராமனையும் லட்சுமணனையும் மிதிலை மன்னரின் திருமகளாகிய சீதாப்பிராட்டியாரையும் பார்த்து, மிகவும் கோபம் கொண்டவனாக, உயிரைப் பறிக்கும் காலன், மக்களை நோக்கி ஓடுவதைப் போல ஓடி வந்தான். பூமண்டலத்தையே அசைப்பவன் போல, பயங்கரமாகக் கர்ஜித்து, சீதையைத் தூக்கி இடுப்பில் வைத்துக் கொண்டு, சிறிது தூரம் விலகிச் சென்று, பின்னர் கூறினான்— (8,9)

''நீங்கள் இருவரும் (முனிவர்களைப் போல) சடை–மரவுரி தரித்துக் கொண்டிருக்கிறீர்கள்; (ஆனால்,) மனைவியோடு இருக்கிறீர்கள்! வில், அம்பு, கத்தி தாங்கிக் கொண்டு தண்டகாரண்யம் புகுந்தீர்கள்! (அதனால்,) உங்கள் ஆயுள் முடியப் போகிறது. தவசிகளான நீங்களிருவரும் ஒரு பெண்ணோடுகூட இருப்பது என்பது எப்படி நியாயமாகும்? அறமல்லாத வழியில் செல்லும் பாவிகளான நீங்கள் இருவரும், முனிவர்களுக்கு இழுக்குத் தேடித் தருபவர்கள். யார் நீங்கள்? நான் விராதன் என்ற அரக்கன். யாரும் புக முடியாத இந்த வனத்தில், கையில் ஆயுதம் தாங்கி, தினந்தோறும் முனிவர்களைக் கொன்று தின்று சுற்றித் திரிகிறேன். (10–12)

பேரழகு வாய்ந்த இந்த மங்கைநல்லாள், என் மனைவியாக ஆகப் போகிறாள். பாவிகளான உங்கள் இருவரையும் யுத்தத்தில் கொன்று, ரத்தத்தைக் குடிக்கப் போகிறேன்.'' இவ்வாறு, துஷ்டனான விராதன் அகங்காரத்துடன் கூடிய கொடிய சொற்களைக் கூறியதும், கதிகலங்கிய ஜானகி, பெருங்காற்றில் நடுங்கி ஆடும் வாழைமரம் போல் நடுநடுங்கினாள். புண்ணியவதியான சீதை, விராதனுடைய இடுப்பில் தவித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து, உலர்ந்து போன முகத்துடன் இராமன், இலக்குவனை நோக்கிக் கூறினார்— (13–15)

''தம்பி! மன்னராகிய ஜனகருடைய புத்திரியும் என் மனைவியும் நல்லொழுக்கம் உடையவளும் மிக சௌக்கியமாக வளர்ந்தவளும் அரசகுமாரியும் கீர்த்தி பெற்றவளுமான (சீதை,) விராதன் பிடியில் அகப்பட்டு நடுங்கித் துடிப்பதைப் பார். லட்சுமணா! நமது விஷயத்தில் கைகேயியின் உத்தேசம் எதுவோ, வரத்தால் பெறப்பட்டது எதுவோ, அது, இப்போது இலகுவாக நிறைவேறிவிட்டது! தன் புதல்வனுக்கு அரசாட்சியைப் பெற்றுக் கொடுப்பதில் மட்டும் திருப்தி அடையாத தொலைநோக்குடைய அவரால், எல்லாப் பிராணிகளின் நலனையும் விரும்பும் நான், காட்டிற்கு அனுப்பப்பட்டேன். என்னுடைய இளைய தாயாரான அவரது ஆசை, இப்போது முற்றிலும் நிறைவேறிவிட்டது. வேறொரு ஆடவன், விதேக மன்னரின் குமாரியைத் தொட்டுவிட்டதால் ஏற்பட்டுள்ள துக்கத்தைக் காட்டிலும், தந்தையின் மரணம், அரசாட்சி அபகரிப்பு என்ற மற்ற எதுவும் அதிகமான துக்கத்தைத் தரவில்லை.'' (16–19)

துயரத்தால் கண்ணீர் விட்டுக் கொண்டு, இவ்வாறு இராமன் புலம்பியதும், மந்திரத்தினால் கட்டுண்ட சர்ப்பம், அடங்காத கோபத்தால் சீறுவதைப் போல, இலக்குவன் (பின்வருமாறு) சொன்னான்— (20)

''அண்ணா காகுத்தரே! தாங்கள் தேவராஜனுக்கு நிகரானவர்; எல்லாப் பிராணிகளுக்கும் புகலிடம். அப்படிப்பட்ட தாங்கள், தங்கள் உத்தரவுப்படிச் செயல்படுபவனான நான் இருக்கும் போது, கவனிப்பார் யாருமே அற்றவர் போல மனம் வருந்துகிறீர்களே? கோபம் கொண்டுள்ள என்னால் இந்த அரக்கன் இப்போதே அம்பினால் கொல்லப்படப் போகிறான். உயிரிழந்த விராதனின் ரத்தத்தை இந்த மண் பருகப் போகிறது. அரசைக் கைப்பற்றுவதற்கு ஆசைப்பட்ட பரதனிடம் எனக்கு ஏற்பட்ட கோபத்தை – வஜ்ரதாரியான இந்திரன், ஒரு மாமலையின்மேல்

வஜ்ராயுதத்தை எறிவதைப் போல – நான் இப்போது விராதன் மேல் செலுத்துவேன். எனது தோள்வலிமையால் வேகமூட்டப்பட்ட இந்த பாணம், இவனுடைய விசாலமான மார்பில் விழட்டும்; உடலிலிருந்து உயிர் விலகிச் செல்லட்டும்; பின், அவன் நிலைதடுமாறிச் சுற்றிச் சுழன்று தரையில் விழட்டும்.'' (21–24)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
இரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : மூன்று

விராதனைத் தாக்குதல்

அப்போது, காட்டில் எதிரொலி உண்டாகும் வண்ணமாகப் பெருங்குரலில் விராதன் மறுபடியும் கேட்டான்— ''உங்களைப் பற்றிக் கேட்கிறேனே, எனக்குப் பதில் சொல்லுங்கள். நீங்கள் யார்? எங்கே போய்க் கொண்டிருக்கிறீர்கள்?'' அதைக் கேட்ட பின்னர், நெருப்புப் போல் பற்றி எரியும் முகத்தையுடைய அரக்கனைப் பார்த்து, மகாதேஜஸ்வியான இராமன், ''நாங்கள் இக்ஷ்வாகு வம்சத்தைச் சேர்ந்தவர்கள். நாங்கள் க்ஷத்திரியர்கள்; நன்னடத்தை உடையவர்கள்; தற்போது, காட்டில் வசித்துக் கொண்டிருக்கிறோம். உன்னைப் பற்றியும் நாங்கள் தெரிந்துகொள்ள விரும்புகிறோம். இந்தத் தண்டக வனத்தில் சுற்றித் திரியும் நீ யார்?'' என்று கேட்டார். (1–3)

சத்தியபராக்கிரமரான இராமனைப் பார்த்து, விராதன் கூறினான்— ''இராகவ மன்னரே! நான் சொல்லப் போவதைக் கவனமாகக் கேளுங்கள். நான், ஜவன் என்பவருடைய மைந்தன்; என்னுடைய தாய், சதஹ்ரதை. இவ்வுலகிலுள்ள அரக்கர்கள் என்னை, விராதன் என்று அழைப்பார்கள். நான், தவம் செய்து பிரும்மாவின் அருளைப் பெற்றுள்ளேன். உலகில், ஆயுதத்தால் யாராலும் என் உயிரைப் பறிக்க முடியாது; என்னை வெட்டிப் போடவோ, பிளந்து போடவோ முடியாது. இந்தப் பெண்ணைத் திரும்ப அடையும் எண்ணத்தைத் துறந்து, இவளை இங்கேயே விட்டுவிட்டு, வந்தபடியே வேகமாக ஓடிப் போய்விடுங்கள். (அப்படிச் செய்தால்,) நான் உங்கள் உயிரைப் பறிக்காமல் விட்டுவிடுவேன்.'' (4–7)

தீயமதி படைத்தவனும் விகாரமான உருவம் கொண்டவனுமான அரக்கன் விராதனை நோக்கி, கோபத்தால் சிவந்த கண்களைக் கொண்ட இராமன், பின்வருமாறு பதில் சொன்னார்— ''அட, அற்பப்பதரே! நீ அழிந்து போவதற்காகக் காலனைத் தேடிக் கொண்டிருக்கிறாய் போலும்! (என்னுடன் செய்யும் போரில்,) நீ காலனை நிச்சயமாக அடையப் போகிறாய். நகராதே, நில். என் கண்ணில்பட்ட பின், நீ உயிருடன் திரும்பிச் செல்ல மாட்டாய்.'' உடனே, இராமன், வில்லில் நாணைப்பூட்டி, மிகவும் கூர்மையான பாணங்களைத் தொடுத்து, வெகுவேகமாக அரக்கன் மேல் வீசினார். அடடா, என்ன வேகம்! (8–10)

தங்கத்தாலான இறகுகள் பொருத்தப்பட்டவைகளும், கருடன் மற்றும் வாயுதேவனுக்கு நிகரான மகாவேகம் கொண்டவைகளுமான ஏழு பாணங்களை, நாணேற்றிய வில்லிலிருந்து விடுத்தார், அவர். நெருப்பைப் போல் ஜொலிக்கின்றவைகளும் மயிலிறகு கட்டப்பட்டவை களுமான அவைகள், விராதனுடைய உடலைத் துளைத்துவிட்டு, இரத்தம் சொட்டச் சொட்ட பூமியில் விழுந்தன. காயமடைந்த அந்த அரக்கன், சீதாப்பிராட்டியை விட்டுவிட்டு, சூலத்தை உயரே தூக்கிப் பிடித்துக் கொண்டு, மிகவும் கோபம் கொண்டவனாக, இராம–லட்சுமணர்களின் எதிரே ஓடி வந்தான். (11–13)

அப்போது, அவன், இந்திரனுடைய துவஜம் போன்ற (வலிமையும் நீளமுமுடைய) சூலத்தை ஏந்திக் கொண்டு, உரக்கக் கூச்சலிட்டுக் கொண்டு, திறந்த வாயுடன் (ஓடி வரும்) யமன் போல்

தோன்றினான். பிரளய காலத்தில் அனைத்தையும் அழிக்கும் யமன் போல் ஓடி வரும் அரக்கன் விராதனின் மேல் சகோதரர்கள் இருவரும், ஜொலிக்கின்ற பாணங்களைச் சற்றும் இடைவிடாது சரமாரியாகச் செலுத்தினார்கள். மகாகொடியவனான அந்த அரக்கன் அஞ்சாமல் நின்று, சற்றே சிரித்துவிட்டு, உடலை நெட்டி முறித்தான். நெட்டி முறித்தவுடன் அவன் சரீரத்திலிருந்து, அவர்களால் வேகமாக எய்தப்பட்ட பாணங்கள் கீழே உதிர்ந்து விழுந்தன. தான் பெற்றிருந்த வரங்களின் பயனாக, அரக்கனாகிய விராதன், தன் உயிரை விடாமல் நிலைநிறுத்திக் கொண்டு, சூலத்தை உயரப் பிடித்துக் கொண்டு, இராம–லட்சுமணர்களை நோக்கி ஓடிவந்தான். (14–17)

வஜ்ராயுதம் போன்றும் அக்னியைப் போன்றும் ஆகாயத்தில் ஒளிவீசிக் கொண்டு விளங்கிய அந்தச் சூலத்தை, ஆயுதம் தாங்குபவர்களில் தலையாயவரான இராமன், இரண்டு பாணங்களால் தகர்த்துவிட்டார். இராமனுடைய பாணங்களால் சிதைக்கப்பட்ட அந்தச் சூலம், தாக்கப்பட்ட மேருமலையின் பெரும் பாறைபோல் தரையில் விழுந்தது. உடனே, அவ்விருவரும் கருநாகத்தைப் போன்ற சிறந்த கத்திகளை உயரத் தூக்கிக் கொண்டு, தங்கள் மேல் வேகமாகப் பாய்ந்து வரும் அவனைப் பலமாகத் தாக்கினார்கள். கொடியவனான அவன், மிகவும் புண்பட்டவனாக, எதற்கும் அசைந்து கொடுக்காத புருஷோத்தமர்களாகிய அவ்விருவரையும், இரு கைகளாலும் தூக்கிக் கொண்டு (வேறு ஓர் இடத்திற்குப்) போகத் தலைப்பட்டான். (18–21)

அவனுடைய எண்ணத்தைப் புரிந்து கொண்ட இராமன், இலக்குவனிடம் கூறினார்— ''அரக்கன் இந்த வழியே நம்மைச் சுமந்து செல்வது சரிதான். லட்சுமணா! அரக்கனுக்கு விருப்பம் உள்ள தொலைவுக்கு நம்மைச் சுமந்து செல்லட்டும். ஏனென்றால், இந்த அரக்கன் சென்றுகொண்டிருக்கும் இந்தப் பாதைதான் நாம் செல்ல வேண்டிய பாதையாகும்.'' அந்த இராச்சுற்றி, தன்னுடைய பலபராக்கிரமத்தினால், அவ்விருவரையும் சிறு குழந்தைகளைத் தூக்குவது போல் தூக்கித் தன் தோளின் மேல் வைத்துக் கொண்டான். இராம–லட்சுமணர்களைத் தோளில் சுமந்து கொண்டு, அரக்கனான விராதன், மிகவும் பயங்கரமாக இரைச்சலிட்டுக் கொண்டு, அடர்ந்த காட்டை நோக்கிச் சென்றான். கரிய மேகம் போன்று இருள் சூழ்ந்ததும், பலவகையான மாபெரும் மரங்கள் அடர்ந்திருப்பதும், பலவகையான ஏராளமான பறவைகளால் சூழப்பட்டதும், நரிகள் நிறைந்ததும், கொடிய விலங்குகள் சுற்றித் திரிவதுமான காட்டுப் பகுதிக்குள் (அவன்) நுழைந்தான். (22–26)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நான்கு

விராதனுக்கு நற்கதி அளித்தல்

இராம–லட்சுமணர்கள் தூக்கிச் செல்லப்படுவதைப் பார்த்த அழகிய கைகளையுடைய வைதேகி, இரு கைகளையும் உயரத் தூக்கிக் கொண்டு பெருங்குரலில் அழ ஆரம்பித்தாள். ''தசரத குமாரரான இந்த இராமன், சத்தியம் தவறாதவர்; நல்லொழுக்கமுடையவர்; சுத்தமானவர். பயங்கரமான உருவங்கொண்ட அரக்கனால், லட்சுமணனோடுகூட எடுத்துச் செல்லப்படுகிறார். அரக்கர் பெருமானே! உனக்கு நமஸ்காரம். காகுத்தர்களை விட்டுவிட்டு, என்னைத் தூக்கிச் செல். (தனியாக இந்தக் காட்டில் நிற்கும்) என்னை, செந்நாய்களும் புலிகளும் சிறுத்தைகளும் தின்றுவிடப் போகின்றன.'' (1–3)

சீதையின் புலம்பலைக் கேட்ட வீரர்களான இராம–லட்சுமணர்கள், அந்தத் துஷ்டனைக் கொலை செய்வதில் வேகம் காட்டினார்கள். சுமித்திரையின் புதல்வனான இலக்குவன், அந்தக்

கொடிய அரக்கனுடைய இடது கையை வெட்டித் தள்ளினான். அவ்வாறே, இராமன் மிக்க வலிமையுடன் அந்த அரக்கனுடைய வலது கையை வெட்டினார். கைகளை இழந்த, மேகம் போல் கருநிறம் கொண்ட அந்த அரக்கன், மனம் கலங்கி, வஜ்ராயுதத்தால் தாக்கப்பட்ட பெரிய மலை போலத் தரையில் விழுந்தான். அந்த அரக்கனை, முஷ்டிகளாலும் முழங்கால்களாலும் கால்களாலும் தாக்கி, மேலே தூக்கித் தூக்கிப் போட்டுக் கீழே விழுந்தவனை நசுக்கினார்கள். அநேக பாணங்களால் காயப்படுத்தப்பட்டும், கத்திகளால் வெட்டப்பட்டும், பூமியில் பலதடவை தேய்க்கப்பட்டும்கூட, அந்த அரக்கன் உயிரை விடவில்லை. (4–8)

மலையைப் போன்று பேருடல் கொண்ட அவனை, எந்த வழியாலும் கொல்ல முடியாது என்பதைக் கண்டு, துன்பம் நேருகையில் துயர் துடைக்கும் திருவளர் செல்வராகிய இராமன், (இலக்குவனை நோக்கி) இவ்வாறு கூறினார்— "தம்பி! இந்த அரக்கன் பெற்றுள்ள தவ ஆற்றலால், போரில் சஸ்திரங்களால் இவனை வெற்றி கொள்ள முடியாத மகிமை பெற்றிருக்கிறான். (எனவே, இவனைக் கொல்லும் முயற்சியை விட்டு) பள்ளம் தோண்டி அரக்கனைப் புதைத்து விடுவோம். லட்சுமணா! யானை போல் பேருடல் படைத்தவனும் கொடுமைக்காரனும் பயங்கர செயல்பாடுடையவனுமான இந்த அரக்கனுக்காக, இந்தக் காட்டில், மிகப்பெரிய பள்ளம் தோண்டுவாயாக." இவ்வாறாக, பள்ளம் தோண்டும்படியாக இலக்குவனிடம் கூறிவிட்டு, மகாபலம் பொருந்திய அவர், விராதனுடைய கழுத்தில் தன் காலை வைத்து அழுத்திக் கொண்டு நின்றார். (9–12)

ஸ்ரீராமசந்திரனால் சொல்லப்பட்ட சொற்களைக் கேட்ட அரக்கன் விராதன், புருஷோத்தமராகிய காகுத்தனைப் பார்த்து, வணக்கத்துடன் பின்வருமாறு தெரிவித்துக் கொண்டான்— "புலிநிகர் ஆண்மையாளரே! இந்திரனுக்கொப்பான தங்கள் ஆற்றலால், நான் வீழ்த்தப்பட்டுள்ளேன். உத்தமரே! மன மயக்கத்திலிருந்த என்னால் முன்னரே தாங்கள் (ஸ்ரீமந்நாராயணன் என்று) அறிந்து கொள்ளப்படவில்லை. உலக நாயகரே! இராமனே! தாங்கள், கோசலா தேவியாரின் திருக்குமாரர் என்பதை அறிந்து கொண்டேன். பெரும் பேறுபெற்ற இவர், விதேக மன்னரின் புத்திரி என்பதையும், இவர் அழியாப் புகழ் பெற்ற இலக்குவன் என்பதையும் தெரிந்து கொண்டேன். (13–15)

தும்புரு என்ற பெயர் கொண்ட கந்தர்வனான நான், ஒரு சாபத்தின் விளைவாக, பயங்கரமான அரக்க உடலைப் பெற்றேன். நான் இந்திரனால் சபிக்கப்பட்டேன். பெரும்புகழ் பெற்றவரான இந்திரனை, நான் மனமுருக வேண்டிக் கொண்டேன். 'தசரத குமாரரான இராமன், போரில் உன்னை வெல்லும்போது, நீ உன் சொந்த உடலைப் பெற்று தேவலோகத்திற்குச் செல்வாய்' என்று இந்திரன் கூறினார். முன்பொரு சமயத்தில், நான் ரம்பையிடம் மோகித்துக் கிடந்த வேளையில், அவருக்கு மதிப்புக் கொடுக்காததால் கோபம் கொண்ட அவர், என்னைச் சபித்து, பின்னர், அது நீங்கும் காலத்தையும் கூறினார். தங்கள் கருணையால், கோரமான அந்தச் சாபத்திலிருந்து நான் விடுபட்டு விட்டேன். (16–19)

எதிரிகளை வாட்டுபவரே! தங்களுக்கு மங்களம் உண்டாகட்டும். நான், என் இருப்பிடத்திற்கு (தேவலோகத்திற்கு)ச் செல்லப் போகிறேன். உலக நாயகரே! இங்கிருந்து ஒன்றரை யோஜனை தொலைவில், சூரியன் போல் மிக்க தேஜஸுடன் விளங்குபவரும், தவமகிமை பெற்றவரும், தருமாத்மாவுமான மாமுனிவர் சரபங்கர் வசிக்கிறார். உடனே, அவரிடம் செல்வீர்களாக. அவர் தங்களுக்குப் பெருமை சேர்க்கும் ஆலோசனைகளைக் கூறுவார். இராமபிரானே! என்னைக் குழியில் தள்ளி மூடிவிட்டு, (பின்) நிம்மதியாகச் செல்வீர்களாக. உயிர் பிரிந்த அரக்கர்களுக்கு (இப்படிக் குழியில் போட்டுப் புதைப்பதுதான்) பரம்பரையான வழக்கம். உயிர் பிரிந்த எந்த அரக்கர்கள் குழியில் புதைக்கப்படுகிறார்களோ, அவர்களுக்குப் புண்ணிய லோகங்கள் கிடைக்கும் (நற்கதியை அடைவார்கள்)." பாணங்களால் துன்பப்பட்டுக் கொண்டிருந்த மகாபலம் பொருந்திய

விராதன், காகுத்த இராமனிடம் இவ்வாறு கூறிவிட்டு, உடலை உகுத்துவிட்டு விண்ணுலகை நோக்கிச் சென்றான். (20–23)

விராதனின் சொற்களைக் கேட்ட இராமன், இலக்குவனுக்கு உத்தரவிட்டார். உடனே, லட்சுமணன் மண்வெட்டியை எடுத்து, பெருவீரனான விராதனுடைய உடலுக்கு அருகிலேயே பெரும் பள்ளத்தைத் தோண்டினான். இராமன், அவன் கழுத்தின் மேல் வைத்திருந்தத் தன் காலை அகற்றிக் கொண்டதும், கழுதை போல் நீண்ட செவிகளை உடையவனும் பெருங்குரல் எழுப்புபவனும் மிக பயங்கரமாகக் கூச்சலிடுபவனுமான விராதனைக் கைகளால் புரட்டி பள்ளத்தில் தள்ளினான் (லட்சுமணன்). போரில் பின்வாங்காதவர்களும், எளிதாகவே வீரத்தை வெளிப்படுத்துபவர்களுமான இராம–லட்சுமணர்கள், போரில் வீழ்த்தப்பட்டவனும் பயங்கரமாகக் கூச்சலிடுபவனுமான அந்த அரக்கனை, முழு பலத்தையும் உபயோகித்துத் தூக்கி, மனமகிழ்ச்சியுடன் (பள்ளத்தில்) எறிந்தார்கள். அந்தப் பேரரக்கனைக் கூர்மையான ஆயுதங்களாலும் கொல்ல முடியாது என்பதைத் தெரிந்து கொண்ட புருஷோத்தமர்களும் பேரறிவாளர்களுமான அவ்விருவரும், குழியில் அவன் மரணத்தைத் தீர்மானித்து, அவ்விதமே செய்து முடித்தார்கள். (24–27)

உண்மையில், 'தன்னுடைய மரணம், இராமனால்தான் ஏற்படவேண்டும்' என்று விராதன் விரும்பியிருந்தான். அதனால்தான் காட்டில் திரிகின்ற அவன், தானாகவே, 'ஆயுதங்களால் என்னைக் கொல்ல முடியாது' என்ற தகவலை முதலிலேயே தெரிவித்து விட்டான். (ஆயுதங்களால் என்னைக் கொல்ல முடியாததாகையால், என் உயிரைப் பறிப்பதற்கு, வேறு வழிகளைக் கையாளுவாயாக – என்று, சூசகமாகக் கூறியிருந்தான்.) அந்த உரையைக் கேட்ட பின்னர்தான், பள்ளம் வெட்டி அவனைத் தள்ளுவது என்ற தீர்மானத்தை, இராமன் மேற்கொண்டார். இராமனால் முழு பலத்துடன் பள்ளத்திற்குள் அவன் தள்ளப்பட்டபோது, (அவன் விழுந்த சத்தம்) அந்தக் காடுகளில் எதிரொலித்தது. (28,29)

மகிழ்ச்சியால் முகம் மலர்ந்த இராம–லட்சுமணர்கள், கொடுங்கோலனான அந்த விராதனைப் பள்ளத்தில் தள்ளி, பற்பல கற்களைக் கொண்டு, அந்த அரக்கனை மூடினார்கள். பின்னர், பயம் நீங்கியவர்களாக, அந்தப் பெருங்காட்டில் ஆனந்தத்தை அனுபவித்தார்கள். வில்–கத்தி தாங்கிய அவ்விருவரும், இவ்விதமாக அரக்கனைக் கொன்று, மைதிலியைத் திரும்பப் பெற்று, சூரிய–சந்திரர்கள் ஆகாயத்தில் பேரொளி வீசுவதைப் போல் ஒளிவீசிக் கொண்டு, மிக்க மகிழ்ச்சியுடன் அந்தப் பெருங்காட்டில் சுற்றித் திரிந்தார்கள். (30,31)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐந்து

சரபங்கர் பிரும்மலோகம் சென்றார்!

அந்தக் காட்டில் பேராற்றல் படைத்த அரக்கன் விராதனைக் கொன்ற பிறகு, (அச்சத்தால் நடுங்கிக் கொண்டிருந்த) சீதாப்பிராட்டியாரை ஆலிங்கனம் செய்து, சமாதானப்படுத்திய வீரரான இராமன், ஒளிப்பிழம்பாக விளங்கும் சகோதரன் இலக்குவனைப் பார்த்து, ''உள்ளே புகமுடியாதபடி இந்த அடர்ந்த காடு மிகவும் கஷ்டத்தைத் தருவதாக இருக்கிறது. இத்தகைய வனப்பிரதேசத்தில் வாழ்ந்து பழக்கப்பட்டவர்கள் அல்லர், நாம். உடனே, தவச்செல்வராகிய சரபங்கர் ஆசிரமத்திற்குச் செல்வோம்'' என்று கூறி, அதன்படியே இராகவன், சரபங்கருடைய ஆசிரமத்தைச் சென்றடைந்தார். (1–3)

அவர், தேவதைகளுக்கு நிகரான மகிமை பொருந்தியவரும், தவத்தினால் ஆத்மதரிசனம் பெற்றவருமான சரபங்கருடைய ஆசிரமத்தின் அருகே, ஓர் அற்புதக் காட்சியைப் பார்த்தார். சூரியன்–அக்னி போன்று தேககாந்தியுடன் விளங்குபவனும், ஆகாயத்திலேயே நிற்கின்ற மிக உயர்ந்ததான தேரிலிருந்து இறங்கி வருபவனும், பூமியில் பாதங்கள் படாமலிருப்பவனும், தேவதைகளால் சூழப்பட்டிருப்பவனுமான அமரர்கோனைப் பார்த்தார். (அவன்,) மிக்க ஒளிவீசும் அணிகலன்களையும் தூயதான ஆடைகளையும் அணிந்து கொண்டிருக்கும் தேவன்; அவனைப் போன்றே விளங்கும் பல பெரியோர்களால் தோத்தரிக்கப்படுபவன். பச்சை வண்ணக் குதிரைகள் பூட்டப் பெற்றதும், உதிக்கின்ற சூரியனைப் போல் ஒளிவீசுவதும், அவன் அருகில் ஆகாயத்திலேயே நிற்பதுமான தேரை, அவர் (இராமன்) பார்த்தார். வெண்மேகக் கூட்டம் போன்றதும், சந்திர மண்டலத்திற்கு ஒப்பானதும், பலவிதமான மாலைகளால் அழகுற விளங்குவதும், குறைகள் இல்லாததுமான (கொற்றக்) குடையைப் பார்த்தார். (4–8)

விலைமதிக்க முடியாதனவும், தங்கப்பிடிகள் உடையனவுமான சாமரம்–விசிறிகளை உயர்குல (அப்சரப்) பெண்டிர் கையில் தாங்கி, அவன் சிரசுப் பகுதியில் விசிறிக் கொண்டிருந்தார்கள். கந்தர்வ–தேவர்–ஸித்தர்–மாமுனிவர்கள் பலர், வானவெளியிலிருக்கும் இந்திரனைச் சிறந்த சொற்களால் தோத்தரித்துக் கொண்டிருந்தார்கள். சரபங்க முனிவருடன் தேவேந்திரன் உரையாடிக் கொண்டிருப்பதை, தான் நின்றவிடத்திலிருந்தபடியே பார்த்து, இலக்குவனுக்கு அந்த ரதத்தைச் சுட்டிக்காட்டி, இராமன் கூறினார்— (9–11)

''லட்சுமணா! ஆகாயத்திலேயே (அதாவது, பூமியில் பட்டுவிடாமல்) நின்று கொண்டிருக்கும் அந்த ரதத்தைப் பார்! எப்படி ஒளி வீசிக் கொண்டிருக்கிறது! சகல செளகரியங்களும் நிறைந்து அற்புதமாக இருக்கிறது; சூரியனைப் போல் மிகவும் பிரகாசத்துடன் விளங்குகிறது. முன்னர், தேவராஜனான இந்திரனுடைய குதிரைகள் பற்றி, நாம் எவ்வாறு கேள்விப்பட்டிருக்கிறோமோ, அவ்வாறே வான்வெளியில் நிற்கும் தெய்விகமான இந்தக் குதிரைகளும் இருக்கின்றன. காதுகளில் குண்டலம் தரித்துக் கொண்டு, கையில் கத்தியைத் தாங்கிக் கொண்டு, ரதத்தைச் சுற்றிலும் நூற்றுக்கணக்காகக் குவிந்திருக்கும் புலிநிகர் பராக்கிரமம் பெற்றவர்களான இவர்கள், எப்போதும் வாலிபம் மாறாதவர்கள்; அகன்ற மார்பையுடையவர்களும், தாழ்ப்பாள் போல் நீண்ட கைகளைப் பெற்றவர்களும், செவ்வாடை அணிந்தவர்களுமான இவர்களனைவரும் (புலிகள் போல்) நெருங்க முடியாதவர்கள். (12–15)

எல்லோருடைய மார்பிலும் நெருப்புப் போல் பிரகாசிக்கும் மாலைகள் விளங்குகின்றன. சுமித்திரையின் தவப்புதல்வனே! இருபத்தைந்து வயதைத் தாண்டாத உருவத்தைப் பெற்றிருக்கிறார்கள், இவர்கள். மாவீரனே! தேவர்களுக்கு எப்போதும் இதே வயதுதான்! (வாலிபம் மாறுவதில்லை.) அதன் காரணமாகவே, இவர்கள் வாலிப மிடுக்குடன் காணப்படுகிறார்கள். லட்சுமணா! சிறிது நேரம் சீதையுடன்கூட இங்கேயே இரு. நான் சென்று, ரதத்தில் ஒளிமயமாக விளங்கும் இவர் யார்? என்று தெளிவாகத் தெரிந்து கொண்டு வருகிறேன்.'' இவ்வாறு, 'இங்கேயே இருப்பாய்' என்று இலக்குவனிடம் கூறிவிட்டு, சரபங்கருடைய ஆசிரமத்தை நோக்கி, இராமன் சென்றார். (16–19)

இராமன் (ஆசிரமத்தை நோக்கி) வந்து கொண்டிருப்பதைப் பார்த்த இந்திரன், உடனே சரபங்கரிடம் விடைபெற்றுக் கொண்டு, (உடனிருந்த) தேவர்களைப் பார்த்துப் பின்வருமாறு கூறினான்— ''ஸ்ரீராமன் இதோ வந்து கொண்டிருக்கிறார். (நான், அவரை நேரில் பார்த்துப்) பேசுவதற்கு இடம்கொடாமல், என்னை வேறிடம் அழைத்துச் செல்லுங்கள். (அவரால், அவதார காரியம் முடிக்கப்பட வேண்டும். அவருடைய தெய்வத்தன்மை வெளிப்படாமல், மானுடராகவே இருந்து கொண்டிருந்தால்தான் இராவண வதம் நடைபெறும்.) (அதன்) பின்னர்தான் அவர் என்னைச் சந்திக்க வேண்டும். இவர், பிறரால் செய்ய முடியாத ஓர் அரிய செயலைச் செய்ய வேண்டியிருக்கிறது. விரைவில், அந்தச் செயலை வெற்றிகரமாகச் செய்து முடித்துவிட்டபின்,

இவரைச் சந்திக்கிறேன். அந்தக் காரியத்தைச் செய்து முடித்துவிட்ட பிறகுதான், இவர் என்னைப் பார்க்க வேண்டும்.'' பின்னர், அந்தத் தபஸ்வியைக் கௌரவித்து, அனுமதி பெற்றுக் கொண்டு, குதிரைகள் பூட்டிய ரதத்தில் ஏறி, எதிரிகளை அடக்க வல்லவனான இந்திரன் தேவலோகம் சென்றான். (20–23)

உடன் வந்தவர்களோடு இந்திரன் புறப்பட்டுச் சென்றதும், அக்னிஹோத்ரம் செய்து கொண்டிருந்த சரபங்கரை, இராமன் அணுகினார். இராம–லட்சுமண–சீதை ஆகியோர், அவருடைய திருவடிகளில் விழுந்து சேவித்தார்கள். அவரால் முகமன் கூறி வரவேற்கப்பட்டு, அவர் அனுமதியுடன் ஆசனங்களில் அமர்ந்தார்கள். அப்போது, இந்திரன் வருகை பற்றி, இராமன் விசாரித்தார். ''வரம் கொடுப்பவனான இந்திரன், என்னைப் பிரும்மலோகம் அழைத்துச் செல்ல விரும்புகிறான்'' என்று சொல்லிவிட்டு, தொடர்ந்து எல்லாவற்றையும் இராமனிடம் சரபங்கர் தெரிவித்தார். (24–26)

''ஆத்மஞானமில்லாதவர்களால் அடைய முடியாத (அந்தப் பிரும்மலோகம்) கடுமையான தவத்தினால் (முன்னரே) என்னால் அடையப்பட்டுவிட்டது. புருஷோத்தமனே! நீ, வெகுசமீபத்தில் வந்திருக்கிறாய் என்பதை அறிந்து கொண்ட நான், அன்புக்குரிய விருந்தாளியான உன்னைப் பார்க்காமல், பிரும்மலோகம் போக விரும்பவில்லை. மனிதருள் தலையாயவரே! அறத்தில் ஊன்றிய மகாத்மாவான உன்னைச் சந்தித்த பின்னர், தேவர்கள் வாழும் வானுலகுக்குச் செல்வேன். மனிதருள் மாணிக்கமே! என்னால் அழிவில்லாத உத்தம லோகங்கள் அடையப்பட்டுள்ளன. பிரும்மலோகம், சுவர்க்கம் முதலான என்னால் அடையப்பட்டுள்ள புண்ணிய லோகங்களை ஏற்று அருள்புரிவாயாக.'' (27–29)

எல்லா சாஸ்திரங்களையும் அறிந்தவரும் புருஷோத்தமருமான இராமன், முன்சொன்னவாறு சரபங்க முனிவரால் கூறப்பட்டவுடன், பின்வருமாறு பதில் கூறினார்— ''மாமுனிவரே! நானே (நீங்கள் குறிப்பிட்ட) எல்லா நல்லுலகங்களையும் நற்கர்மங்கள் செய்து பெற்றுக் கொள்ள முடியும். (அத்துடன், க்ஷத்திரியனான நான் பிறரிடமிருந்து எதனையும் பெற்றுக் கொள்ளலாகாது. அதனால், தாங்கள் முயன்று பெற்றுள்ள புண்ணியலோகங்களை, நான் ஏற்பதற்கில்லை.) இப்போது, இந்தக் காட்டில், தங்களால் சுட்டிக்காட்டப்படும் ஓர் இடத்தில் வசிக்க விரும்புகிறேன்.'' இந்திரனுக்கு ஒப்பான பலம் வாய்ந்த இராமனால் இவ்வாறு கூறப்பட்டதும், மாமேதாவியான சரபங்கர் மீண்டும் சொல்லவாரம்பித்தார்— (30–32)

''இராமா! மகாதேஜஸ்வியும் அறவடிவினருமான சுதீட்சணர் என்ற தருமாத்மா, இந்தக் காட்டில் வசித்துக் கொண்டிருக்கிறார். அவர் உனக்கு வாசஸ்தலத்தைக் கூறுவார். புனிதமான இடத்தில் தவம் செய்து கொண்டிருக்கும் சுதீட்சணரைச் சந்திப்பாயாக. அழகான ஒரு காட்டுப் பகுதியில், அவர் உனக்கு வாசஸ்தலத்தை நிர்ணயிப்பார். தெப்பங்கள் போன்று ஏராளமான மலர்கள் மிதந்து செல்லும் இந்த மந்தாகினீ நதியின் ஓட்டத்திற்கு எதிரான திசையில் இப்படியே சென்றால், அந்த இடத்தை அடைவாய். புருஷோத்தமனே! இதுதான் நீ செல்லவேண்டிய வழி. குழந்தாய்! பழைய தோலை உரித்து விடும் சர்ப்பத்தைப் போல, இந்த உடலை நான் உகுக்கும் வரை சற்று நேரம் இங்கே இருந்து பார்ப்பாயாக.'' பின்னர், அக்னியை நன்றாக எரியச் செய்து, மந்திரம் கூறி, நெய்யினால் ஆகுதி கொடுத்து, ஆத்மதரிசனம் பெற்ற சரபங்கர் நெருப்பில் பிரவேசித்தார். (33–37)

அக்னி, மகாத்மாவான அவருடைய ரோமங்களையும் கேசங்களையும் சுருங்கிய தோலையும் எலும்புகளையும் ரத்தத்தோடு கூடிய சதைகளையும் சுட்டெரித்துச் சாம்பலாக்கியது. மகா தைரியசாலியான இராமனோ, சகோதரனோடும் மனைவியோடும்கூட (சரபங்கருடைய இந்தச் செயலைப் பார்த்து,) மிக்க ஆச்சரியமடைந்தார். அவரும் (சரபங்கரும்) நெருப்புப் போல் பிரகாசிக்கும் குமாரனாக உருவம் கொண்டு, அந்த அக்னி குண்டத்திலிருந்து எழுந்து ஒளித்திரளாக விளங்கினார். அவர், அக்னிஹோத்திரிகள், மகாத்மாக்களாகிய முனிவர்கள்,

தேவர்கள், ஆத்மதரிசனம் பெற்றவர்கள் ஆகியோர் அடையக் கூடிய உலகங்களைக் கடந்து, பிரும்மலோகத்தை அடைந்தார். புண்ணியச் செயல்களை ஆற்றிய அந்தணோத்தமரான அவர், அணுக்கத் தொண்டர்களோடு விளங்கும் பிரும்மதேவனை, அவர் இருப்பிடத்திலேயே கண்டார். ஆகா! பிரும்மாவும் அந்த அந்தணரைப் பார்த்து, மகிழ்ச்சி கொண்டு, 'தங்கள் வரவு நல்வரவாகுக' என்று கூறி வரவேற்றார். (38–41)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
ஐந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஆறு

'அரக்கர்களை வதம் செய்கிறேன்!'

சரபங்கர் விண்ணுலகம் சென்றதும், மிக்க ஒளிவீசும் காகுத்த இராமனிடம், முனிவர்கள் கூட்டம் கூட்டமாக வந்து சேர்ந்தார்கள். (1)

அந்த முனிவர் கூட்டத்தில், பிரும்மாவின் நகத்திலிருந்து தோன்றிய வைகாநஸர்கள்; பிரும்மாவின் உரோமங்களிலிருந்து உற்பத்தியான வாலகில்யர்கள்; அடுத்த வேளை உணவுக்காக எந்தப் பண்டத்தையும் சேமித்து வைக்காத ஸம்ப்ரக்ஷாளர்கள்; சூரிய–சந்திரர்களின் கிரணங்களையே உட்கொண்டு வாழ்கின்ற மரீசிபர்கள்; பச்சைத் தானியங்களைக் கற்களால் பொடி செய்து உண்ணும் அச்மகுட்டர்கள்; இலைகளை மட்டுமே புசிக்கும் பல தபஸ்விகள்; பற்களையே உரல்–உலக்கை போல் பயன்படுத்தி உணவு உண்பவர்கள்; கழுத்துவரை தண்ணீரில் நின்றுகொண்டு தவம் செய்பவர்கள்; வெறுந்தரையில் படுத்து உறங்குபவர்கள்; படுக்கையே இல்லாமல் உறங்குபவர்கள்; எப்போதும் நற்கர்மங்களைச் செய்து கொண்டிருப்பதால் ஒய்வே இல்லாதவர்கள்; தண்ணீரையே உணவாகக் கொள்பவர்கள்; காற்றை மட்டுமே புசிப்பவர்கள்;

பூமிக்கு வராமல் மரங்களிலேயே வாழ்பவர்கள்; தர்பை விரிப்பில் படுப்பவர்கள்; பரண், மலைச்சிகரம் போன்ற உயரமான இடங்களிலேயே வசிப்பவர்கள்; புலன்களை வென்றவர்கள்; எப்போதும் ஈரமான ஆடைகளையே அணிந்து கொண்டிருப்பவர்கள்; எப்போதும் ஜபம் செய்து கொண்டிருப்பவர்கள்; தவத்தில் ஊன்றி நிற்பவர்கள்; பஞ்சாக்னியின் நடுவிலிருந்து தவம் செய்பவர்கள் – இவ்வாறான இவர்கள் எல்லோரும் பிரும்மவித்தையால் ஆன்ம ஒளி பெற்றவர்கள்; யோகங்களில் உறுதியான அப்யாசம் பெற்றவர்கள்; நிலையான கருத்துடையவர்களான தவசிகள். இவர்கள், சரபங்கருடைய ஆசிரமத்தில் சாட்சாத் ஸ்ரீராமசந்திரமூர்த்தியைச் சென்றடைந்தார்கள். (2–6)

அறமறிந்தவர்களும் ஆத்மதரிசனத்தில் உறுதியான கருத்துடையவர்களுமான ரிஷிகணங்கள், அறத்தைக் கடைப்பிடிப்பவர்களில் முதன்மையானவரும் உயர்ந்த தருமங்களை அறிந்தவருமான இராமனைக் கண்டு, பின்வருமாறு விண்ணப்பித்துக் கொண்டார்கள்— ''மாவீரரே! தேவர்களுக்கு இந்திரன் போல, தாங்கள் இக்ஷ்வாகு குலத்திற்கும் பூமண்டலம் முழுவதற்கும் தலைவராகவும் மேலாண்மைத் தலைவராகவும் இருக்கிறீர்கள். கீர்த்தியினாலும் பராக்கிரமத்தினாலும், தாங்கள் மூன்று உலகங்களிலும் அறியப்பட்டுள்ளீர்கள். தங்களிடம் தந்தைக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றும் மன உறுதியும் சத்தியத்தன்மையும் அறநெறியும் நிறையவே இருக்கின்றன. உலகத் தலைவரே! தாங்கள் மகாத்மா; தருமம் அறிந்தவர்; தருமத்தைப் பாதுகாப்பவர். தங்களை அண்டி வந்திருக்கும் நாங்கள், எங்களது பிரார்த்தனைகளைச் சொல்லப் போகிறோம். தாங்கள், அதற்காக எங்களை மன்னித்தருள வேண்டும். (7–10)

அண்ணலே! மன்னன், மக்களின் வருவாயில் ஆறில் ஒரு பங்கை வரியாக வசூலித்துவிட்டு, அவர்களைத் தம் புதல்வர்களைப் போல அன்புடன் காப்பாற்றாவிடில், அது மாபெரும் அநீதியாகும். (பெரும் பாவம், மன்னனை வந்து சேரும்.) இராமப்பிரபோ! குடிமக்கள் எல்லோரையும் எப்போதும் தன் உயிரைப் போலவும், தன் உயிரைக் காட்டிலும் மேலான தன் புத்திரர்களைப் போலவும், எக்காலத்திலும் கவனத்துடன், முறையாகப் பாதுகாக்கும் மன்னன், (இவ்வுலகில்) நெடுங்காலம் நிலைத்து நிற்கும் புகழை அடைவான். (பின்னர்,) பிரும்மலோகத்தை அடைந்து அங்கேயும் சிறப்பாகக் கௌரவிக்கப்படுவான். (ஆனால், முனிவர்களுக்கோ வருவாயுமில்லை. எனவே, வரிவசூலும் இல்லை என்னும்போது, அவர்களை ஏன் காப்பாற்ற வேண்டும்? – என்றால்,) பழம்–கிழங்குகளைப் புசித்து வாழும் முனிவர், உத்தமமான எந்தெந்த தருமங்களை அனுஷ்டானம் செய்கிறாரோ, அந்தந்த தருமத்தின் நற்பயனில் நாலில் ஒரு பங்கு அறநெறிப்படி, மக்களைப் பரிபாலிக்கும் மன்னனைப் போய்ச் சேரும். வானப்பிரஸ்தர்களின் இந்தக் கூட்டத்தில், பிராமணர்கள் பெரும்பான்மையாக இருக்கிறார்கள். தாங்கள்தான் எங்களுக்குத் தலைவர். அப்படியிருக்கும்போது, இராமா! எங்களில் பலர் அனாதைகளைப் போல் (காப்பாற்றுவார் யாரும் இல்லாதவர்கள் போல்) கொல்லப்படுகிறார்கள். (11–15)

வாருங்கள்! பயங்கரமான அரக்கர்களால் பலவாறாகக் கொல்லப்பட்ட, ஆத்மதரிசனம் பெற்ற பல முனிவர்களின் உடல்களை (அதாவது, உடல் எலும்புகளை)ப் பாருங்கள். பம்பா நதிக்கரையில் வசிப்பவர்களுக்கும், மந்தாகினீ நதியின் அருகில் இருப்பவர்களுக்கும், சித்திரகூட மலையடிவாரத்தில் வாழ்கின்றவர்களுக்கும் பேரழிவு நேரிடுகிறது. காட்டில், கொடுஞ்செயல் செய்பவர்களான அரக்கர்களால் தபஸ்விகளுக்கு விளைவிக்கப்படும் பேரழிவை, இனியும் நாங்கள் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டோம். இராமப்பிரபோ! அதனால்தான் புகலிடம் தேடி, உலகத்திற்கே அடைக்கலம் தரக்கூடிய தேவரீரை வந்தடைந்திருக்கிறோம். இராச்சுற்றிகளான அரக்கர்களால் வதம் செய்யப்படும் எங்களைக் காத்தருள்வீராக. மாவீரரே! உலகில் தங்களைக் காட்டிலும் மேலான புகலிடம் வேறு எதுவுமில்லை. (ஆகவே,) மன்னர் புதல்வரே! எங்கள் எல்லோரையும் அரக்கர்களிடமிருந்து காப்பாற்ற வேண்டும்.'' (16–20)

இரங்கத்தக்க நிலையிலிருக்கும் தபஸ்விகளின் இந்த வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து அருளிய இராமன், முனிவர்கள் அனைவரையும் பார்த்துப் பின்வருமாறு பதில் கூறினார்— ''(முனிவர்களே!) நீங்கள் எல்லோரும் இப்படிப் பிரார்த்தனைச் செய்யக்கூடாது. தவசிகளால் ஆக்ஞை இடத்தக்கவன், நான். என்னுடைய சொந்தக் காரியமாக (பித்ருவாக்ய பரிபாலனம் என்ற காரணத்தால்), நான் காட்டிற்கு வந்தேன். அரக்கர்களால் தங்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை அகற்றுவதற்காகவே, தந்தையின் கட்டளையை நிறைவேற்றும் வகையில், இந்தக் காட்டிற்கு வந்திருக்கிறேன். தற்செயலாக, இங்கு வந்திருக்கும் நான், உங்களுடைய விருப்பத்தையும் நிறைவேற்றுவேன். அதனால், என்னுடைய இந்த வனவாசம் மிகவும் நற்பயனை அளிக்கப் போகிறது. தவம் செய்பவர்களின் விரோதிகளான அரக்கர்களைக் கொல்ல விரும்புகிறேன். தவச்செல்வர்களான முனிவர்கள், என்னுடைய மற்றும் எனது சகோதரனுடைய மகாவீரத்தைக் கண்டுகளிக்கட்டும்.'' (21–25)

தருமத்தில் நிலையான உறுதி படைத்தவரும், புகழத்தக்க நடத்தையுடையவருமான அந்த வீரர் (இராமன்), தவச்செல்வர்களுக்கு அபயம் அளித்துவிட்டு, இலக்குவனோடும் தவசிகளோடும், சுதீட்சணர் இருந்த இடத்தை நோக்கிச் சென்றார். (26)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
ஆறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஏழு

சுதீட்சணருடைய ஆசிரமத்தில்...

எதிரிகளைத் தவிக்கச் செய்யும் இராமன், சகோதரன், சீதை மற்றும் அந்த அந்தணர்களுடன் சுதீட்சணருடைய ஆசிரமத்தை நோக்கிச் சென்றார். அவர்கள் சிறிது தூரம் நடந்து, வெள்ளம் பெருக்கெடுத்தோடும் பல நதிகளைக் கடந்து, வெகுதூரம் சென்று, மிக உயரமாக மாபெரும் மேகத்தைப் போல் செழுமையாக விளங்கும் ஒரு மலையைக் கண்டார்கள். பின்னர், இக்ஷ்வாகு குலத் திலகங்களான இராம–லட்சுமணர்கள், சீதையோடுகூட பலவகையான மரங்கள் அடர்ந்த காட்டிற்குள் புகுந்தார்கள். பயங்கரமான அந்தக் காட்டினுள் புகுந்த அவர்கள், ஏராளமான பழங்கள்–மலர்கள் தாங்கிய மரங்கள் நிறைந்ததும், அநேக மரவுரிகள் உலர்த்தப்பட்டிருப்பதுமான தனியான ஓர் இடத்தில் ஆசிரமம் ஒன்றைக் கண்டார்கள். (1–4)

அங்கே, (நீண்ட காலமாக ஒரே இடத்தில் அமர்ந்திருந்ததால்,) அழுக்கடைந்த சடாமுடியுடன் விளங்கும் தபஸ்வியான சுதீட்சணரை நெருங்கிச் சென்ற இராமன், தவச்செல்வரான அவரிடம் பணிவுடன் தெரிவித்துக் கொண்டார். ''சத்தியத்தையே ஆற்றலாகவுடைய மாமுனிவரே! தருமம் அறிந்தவரே! பகவானே! நான் இராமன். தங்களைத் தரிசிப்பதற்காக வந்திருக்கிறேன். ஆகவே, தாங்கள் என்னுடன் பேசியருள வேண்டும்.'' தருமாத்மாக்களுள் சிறந்தவரும் மாவீரருமான இராமனைக் கண்களால் நெடிது நோக்கிய அவர், இரு கைகளாலும் அவரை ஆலிங்கனம் செய்துவிட்டு, பின்வரும் சொற்களைக் கூறினார்— ''அறநெறியாளர்களில் முதன்மையானவனே! வீரனே! இராமா! உன் வரவு நல்வரவாகுக. இந்த ஆசிரமம், உன் வரவினால், இப்போதுதான் ஒரு தலைவனைப் பெற்றதாகிறது. (5–8)

மிகவும் கீர்த்திபெற்ற வீரனே! உன்னை எதிர்பார்த்துக் கொண்டேயிருந்ததால், இந்தப் பூதலத்தில் சரீரத்தைத் துறந்து, இங்கிருந்து மேலே விண்ணுலகத்திற்குச் செல்லாதிருக்கிறேன். ராஜ்யத்தை விட்டுச் சித்திரகூடத்திற்கு வந்திருக்கிறாய் என்று கேள்விப்பட்டேன். காகுத்தனே! ஆயிரம் வேள்விகள் செய்த தேவராஜனான இந்திரன் (சற்றுமுன்) இங்கே வந்திருந்தான். தேவர்களுக்குத் தலைவனும், தேவர்களில் மிக்கப் பெருமைக்குரியவனுமான இந்திரன், 'என்னுடைய புண்ணிய கர்மங்களின் பலனாக, விண்ணிலுள்ள எல்லாத் திருநாடுகளும் ஜெயிக்கப்பட்டுவிட்டன' என்று கூறினான். நான், அவைகளை உனக்கு அர்ப்பணம் செய்கிறேன். என்னுடைய தவத்தினால் அடையப்பட்டுள்ள, தேவரிஷிகள் விளங்கும் அந்தப் புண்ணிய உலகங்களில், இலக்குவனோடும் மனைவியோடும்கூடச் சுற்றித் திரிந்து இன்புறுவாய்.'' (9–12)

கடுமையாகத் தவம் செய்பவரும், சத்தியம் தவறாதவருமான மாமுனிவரைப் பார்த்து, பிரும்மதேவரிடம் இந்திரன் உரையாடுவதைப் போல, பேருள்ளம் கொண்ட இராமன் பின்வருமாறு பதில் சொன்னார்— ''மாமுனிவரே! (நீங்கள் குறிப்பிட்ட போக ஸ்தலங்களான) அவ்வுலகங்களை, நானே முயன்று அடைந்துவிடுவேன். (நான், எதற்காகத் தங்களிடம் வந்திருக்கிறேன் என்றால்,) நான் இப்போது காட்டில் வசிப்பதற்கான ஓர் இடத்தைத் தாங்கள் காட்டி அருள வேண்டுமென வேண்டிக் கொள்கிறேன். கௌதம கோத்திரத்தில் உதித்த மகாத்மாவான சரபங்கர், தாங்கள் எல்லாப் பிராணிகளின் நலனிலும் பேரார்வம் கொண்டவர் என்றும், எல்லா இடங்களையும் அறிந்தவர் என்றும் சொல்லியிருக்கிறார்.'' (13–15)

உலகப் புகழ் பெற்ற மாமுனிவர், இராமனால் இவ்வாறு கூறப்பட்டவுடன், மகிழ்ச்சிப் பெருக்கில் திளைத்து, இனிய சொற்களைக் கூறத் தொடங்கினார்— ''இராமா! இந்த ஆசிரமத்தில் எல்லா சௌகரியங்களும் இருக்கின்றன. எனவே, நீ இங்கேயே தங்கலாம். முனிவர் குழுக்கள் அடிக்கடி இங்கே வந்து போகின்றன. எல்லாக் காலத்திலும் பழம்–கிழங்குகள் கிடைக்கின்றன. பெரிய பெரிய விலங்குகள், பயமில்லாமல் இந்த ஆசிரமத்திற்குள் புகுந்து திரிந்து,

எல்லாவற்றையும் குலைத்துவிட்டுத் திரும்பிச் செல்கின்றன. விலங்குகளால் ஏற்படும் இந்த இடையூறு தவிர, வேறு குறையேதும் இல்லை.'' (அரக்கர்களே பலவித விலங்குகளின் உருவில் வந்து முனிவர்களின் யாக–யக்ஞங்களை நாசப்படுத்திவிட்டுச் செல்கிறார்கள் என்பதை, மறைமுகமாகக் குறிப்பிடுகிறார், முனிவர்.) (16–18)

இதைக் கேட்டவுடன், இலக்குவனின் பெரிய சகோதரரும் தைரியசாலியுமான இராமன், அம்புடன் கூடிய வில்லைக் கையிலெடுத்தார். ''எல்லையில்லாப் பேறு பெற்றவரே! இன்னல் கொடுப்பதற்காக இங்கே வரும் அந்த விலங்குக் கூட்டங்களை, வஜ்ராயுதம் போல் ஆற்றலுடைய, கூர்மையான பாணங்களால் நான் கொல்வேன். ஆனால், (அஹிம்ஸா விரதம் அனுஷ்டிக்கும்) தங்களுக்கு (எதிரிலேயே அவ்வாறு வெட்டி வீழ்த்தினால் – ஹிம்ஸை செய்தால் – அது) அவமரியாதை காட்டியதாகும். இவ்விதம் தங்களுக்கு அகௌரவமான ஒரு செயலைத் தங்கள் கண்ணெதிரிலேயே செய்வதைக் காட்டிலும் மேலான ஒரு பாவம் இருக்கிறதா, என்ன? எனவே, இந்த ஆசிரமத்தில் வெகுகாலம் தங்குவதற்கு நான் உடன்படேன்.'' அவரிடம் இவ்வாறு சொல்லிவிட்டு, சந்த்யாவந்தனம் செய்வதற்குச் சென்றார், இராமன். (19–21)

சாயங்கால சந்த்யா கர்மாக்களைச் செய்து முடித்த இராமன், மனத்திற்குகந்த சுதீட்சணருடைய அந்த ஆசிரமத்திலேயே, சீதையோடும் இலக்குவனோடும், அந்த இரவைக் கழிக்க முடிவு செய்தார். மாலை வேளை முடிந்து இரவு வந்ததும், தபஸ்விகளால் ஏற்கத்தக்க உணவை, மிகவும் உபசாரம் செய்து, அவ்விரு புருஷோத்தமர்களுக்கும், சுதீட்சணர் தன் கைகளாலேயே அளித்தார். (22,23)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
ஏழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எட்டு

சுதீட்சணரிடம் விடைபெறுதல்

சுதீட்சணரால் சிறப்பாக உபசரிக்கப்பட்டவரும், இலக்குவனோடுகூட இருந்தவருமான இராமன், அந்த இடத்தில் இரவைக் கழித்துவிட்டு, அதிகாலையில் கண்விழித்தார். சரியான நேரத்தில், சீதாப்பிராட்டியாருடன் கண்விழித்தெழுந்த இராமன், கருநெய்தல் மலர்கள் நிறைந்த, மிகக் குளிர்ந்த நீரையுடைய தடாகத்தில் நீராடினார். இராம–லட்சுமண–சீதை ஆகிய மூவரும் அக்னியில் ஆகுதிகள் கொடுத்தும் தேவதைகளை வழிபட்டும் காலைவேளைக்கான கர்மாக்களைச் செய்து முடித்தார்கள். தபஸ்விகள் வசிக்கும் அந்தக் கானகத்தில், உதயமாகும் சூரியனைக் கண்டு வணங்கி, மாசு நீங்கியவர்களாக, சுதீட்சணரிடம் சென்று, பின்வரும் சொற்களை மதுரமாகக் கூறினார்கள்— (1–4)

''பகவானே! பூஜிக்கத்தக்க தங்களால் நாங்கள் மிக்க அக்கறையுடன் கவனிக்கப்பட்டு சுகமாக இரவைக் கழித்தோம். உடன் வந்திருக்கும் முனிவர்கள் எங்களைத் துரிதப்படுத்துகிறார்கள். புறப்படுவதற்கு ஆயத்தமாகிவிட்ட நாங்கள், தங்கள் அனுமதியைக் கோருகிறோம். தண்டகாரண்யத்தில் ஆங்காங்கே வசிக்கும் புண்ணியாத்மாக்களான முனிவர்களுடைய ஆசிரமங்கள் அனைத்தையும் பார்ப்பதற்கு நாங்கள் அவசரப்படுகிறோம். ஆகவே, எப்போதும் தருமத்திலேயே நிலைத்து நிற்பவர்களும், தவத்தினால் புலன்களை வென்றவர்களும், புகையில்லாத அக்னியைப் போல் பிரகாசிக்கின்றவர்களுமான இந்த முனிசிரேஷ்டர்களுடன் செல்வதற்குத் தங்கள் அனுமதியைக் கோருகிறோம். தவறான வழிகளில் பொருளை ஈட்டிய இழிகுலத்தோன் பிறரை வாட்டி வதைப்பதைப் போல, சூரியன் இன்னும் மேலே எழுந்து

சுட்டெரிப்பதற்கு முன்பு, நாங்கள் பயணத்தைத் தொடங்க விரும்புகிறோம்'' என்று கூறி, முனிவருடைய திருவடிகளை, லட்சுமணன்–சீதையோடு இராமன் பணிந்து வணங்கினார். (5–9)

தன் திருவடிகளில் விழுந்து வணங்கும் அவ்விருவரையும் (இராம–லட்சுமணர்களையும்) எழுப்பி, மார்புறத் தழுவிக் கொண்டு, பின்வரும் அன்பு நிறைந்த சொற்களைக் கூறினார். ''இராமா! நிழல் போல் உன்னைத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் இந்த சீதையோடும், சுமித்திரையின் மைந்தனுடனும் செல்லக் கடவாய். வழியில் உனக்கு மங்களம் உண்டாகட்டும். வீரனே! கடுமையான தவத்தினால் ஆத்ம தரிசனம் பெற்றுள்ள, தண்டகாரண்யத்தில் வசிக்கும் முனிவர்களுடைய அமைதி தவழும் ஆசிரமங்களைப் போய்ப் பார். நீ செல்லும் வழியெங்கணும், ஏராளமான பழங்களும் கிழங்குகளும் மலர்ந்த மலர்களும் நிறைந்து அழகாக விளங்கும் காட்டுப் பகுதிகளையும், (விரோதத்தை ஒழித்து) உத்தம விலங்குகளின் மந்தைகளையும், இரைச்சல் போடாத பறவைக் கூட்டங்களையும், (10–13)

மலர்ந்த தாமரைகள் ஏராளமாக விளங்குகின்றதும் தெளிந்த நீர் நிரம்பியதும் நீர்க்காக்கைகள் நிறைந்ததுமான தடாகங்களையும், ஓடைகளையும், பார்ப்பதற்கு அழகாக விளங்கும் மலையருவிகளையும், மயில்களின் அகவல் எதிரொலிக்கும் கண்ணுக்கினிய கானகங்களையும் காண்பாய். என் செல்வமே! செல்வாயாக. லட்சுமணா! நீயும் செல்வாய். குழந்தாய்! என்னுடைய இந்த ஆசிரமத்திற்கு நீ மறுபடியும் வரவேண்டும்.'' இவ்வாறு சொல்லப்பட்ட இராமன், 'அவ்வாறே செய்கிறேன்' என்று பதில் கூறிவிட்டு, லட்சுமணனுடன்கூட முனிவரை வலம் வந்து, பின்னர் புறப்பட்டுச் செல்வதற்கு ஆயத்தமானார். (14–17)

அப்போது, நெடுந்தடங்கண்ணாளான சீதை, அவ்விரு சகோதரர்களுக்கும் இரண்டு அம்புறாத்தூணிகளையும், விற்களையும், பளபளவென்று பிரகாசிக்கும் இரு வாட்களையும் கொண்டு வந்து கொடுத்தாள். இராம–லட்சுமணர்களாகிய அவ்விருவரும் மங்களமான அம்புறாத்தூணியை முதுகில் கட்டிக் கொண்டார்கள்; (வில்லில் நாணேற்றி) டங்காரம் செய்யும் வில்லினைக் கையில் தாங்கிக் கொண்டார்கள். பின்னர், ஆசிரமத்திலிருந்து புறப்பட்டுச் செல்வதற்காக வெளியே வந்தார்கள். திருவளர் செல்வர்களும், பேரழகு வாய்ந்தவர்களும், இயற்கையான தம்முடைய ஆன்ம ஒளியால் பிரகாசிக்கின்றவர்களும், வில்லேந்தியவர்களுமான ரகுகுல திலகங்களான அவ்விருவரும், சீதாப்பிராட்டியாருடன்கூட யாத்திரையைத் தொடங்கினார்கள். (18–20)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
எட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஒன்பது
சீதையின் வேண்டுகோள்

சுதீட்சணரால் விடைகொடுக்கப்பட்டு, காட்டினுள்ளே சென்று கொண்டிருந்த ரகுநந்தனரான கணவரைப் பார்த்து, உள்ளத்தில் இருப்பதை நன்கு வெளிப்படுத்துவதும் அன்பு நிறைந்ததுமான பின்வரும் சொற்களை (சீதை)க் கூறினாள்— (1)

''முனிவர்கள் அனுஷ்டிக்கும் தருமம் மிக நுட்பமான விதிகளால் அறியத்தக்கது. இவ்வுலகில் (காம–குரோத–லோபங்களில்) இருந்து விடுபட்டு, அவைகளை வென்றவனால் மட்டுமே, இது மேற்கொள்ளத்தக்கதாகும். இவ்வுலகில், காமத்தால் விளையும் பாவங்கள் மூன்றே மூன்றுதான். பொய் பேசுவது மிகப்பெரிய பாவம்; மற்றுமுள்ள இரண்டும் அதைக் காட்டிலும் பெரிய பாவச் செயலாகும். பிறர் மனைவியை நாடுதல்; விரோதமே இல்லாத ஒருவனிடம் மிகவும் குரூரமாக நடந்து கொள்ளுதல் – என்ற இரண்டும், மகாபாவங்கள். இராகவா! தாங்கள் இதுவரை பொய்

பேசியதில்லை; இனியும் பேசப் போவதில்லை. பிற பெண்டிரை விரும்புவது என்பது தங்களிடம் எப்படித் தோன்றும்? மனிதருள் மாணிக்கமே! தருமத்தை அழிக்கின்ற இந்த எண்ணம் தங்களிடம் இல்லை; இனி, ஒருபோதும் தங்களுக்கு ஏற்படப் போவதுமில்லை. (2–5)

இராமா! தங்கள் மனத்தில்கூட இப்படிப்பட்ட தீய எண்ணம் தோன்றியதில்லை (என்னும்போது, வாக்கினாலோ, செயலினாலோ தீயனவற்றைத் தாங்கள் எவ்வாறு செய்வீர்கள்?) அரச குமாரரே! தாங்கள் எப்போதும் தன் தருமபத்தினியிடமே முழு மனத்தைச் செலுத்தியவர். (தாங்கள்) அறநெறி வழுவாதவர்; சத்தியசந்தர்; தந்தையின் ஆக்ஞையை நிறைவேற்றுபவர். தங்களிடம் சத்தியமும் தருமமும் நிலைபெற்றுள்ளன. தங்களிடமே எல்லாமும் குடிகொண்டுள்ளன. (6,7)

தோள்வலிமிக்கவரே! அவையெல்லாம் (சத்தியமும் தருமமும்) புலன்களை வென்றவர்களால் மட்டுமே அனுஷ்டிக்க முடியும். தரிசனத்தாலேயே நலன்களை வழங்கும் வள்ளலே! தாங்கள் பொறிகளை முற்றிலுமாக வெற்றி கொண்டவர் என்பதையும் நான் அறிவேன். எவ்விதப் பகையும் இல்லாமல், மதிமயக்கத்தினால் பிற உயிர்களைக் குரூரமாகத் துன்புறுத்துவது என்பது ஒரு மனிதனின் வீழ்ச்சிக்கு மூன்றாவது காரணமானது. அதுதான் இப்போது தங்கள் முன் வந்து நிற்கிறது. (8,9)

மாவீரரே! தண்டகாரண்யத்தில் வசிக்கும் முனிவர்களைப் பாதுகாப்பதற்காக, யுத்தத்தில் அரக்கர்களை வதம் செய்வதாகத் தாங்கள் வாக்களித்திருக்கிறீர்கள். இந்தக் காரணத்திற்காகவா (அரக்கர்களை வதம் செய்வது) தண்டகம் என்று பெயர் பெற்ற இந்தக் கானகத்திற்கு வில்லும் அம்பும் ஏந்தி, தம்பியுடன் வந்திருக்கிறீர்கள்? கொடியதான இந்தச் செயலைச் செய்து முடிப்பதற்காகத் தாங்கள் புறப்பட்டுவிட்டதைக் கண்டது முதல் என் மனம் வேதனைப்படுகிறது. தங்கள் நடவடிக்கைகளை (முனிவர்களுக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவது என்ற குறிக்கோளை)ப் பற்றி ஆலோசிக்கும் காலத்தில், 'இது, தங்களுக்குச் சிறப்பான நலன்களைக் கொடுக்குமா?' என்ற கலக்கம் ஏற்படுகிறது. (10–12)

வீரரே! தண்டகாரண்யத்தை நோக்கி, நாம் செல்வது சரியானதாக எனக்குப் படவில்லை. அதற்கான காரணத்தைச் சொல்கிறேன்; செவிமடுத்துக் கேளுங்கள். அம்பு–வில்லைக் கையிலேந்தி, தம்பியோடுகூடக் காட்டிற்கு வந்திருக்கிறீர்கள். காட்டில் சுற்றித் திரியும் யாரைக் கண்டாலும் பாணப்பிரயோகம் செய்யத்தான் செய்வீர்கள். ஏனென்றால், நெருப்பிற்கு அருகில் வைக்கப்பட்டிருக்கும் விறகும், க்ஷத்திரியர் கையிலுள்ள வில்லும், ஆற்றலையும் வேகத்தையும் மிகவும் அதிகப்படுத்தவே செய்யும். (13–15)

பெருந்தோளரே! முன்னொரு காலத்தில், பட்சிகளும் விலங்குகளும் ஆனந்தமாக வசித்துக் கொண்டிருந்த புனிதமான ஒரு காட்டுப் பகுதியில் சத்தியம் தவறாதவரும் உள்ளத்தூய்மை உடையவருமான ஒரு தபஸ்வி இருந்து வந்தார். அவருடைய தவத்திற்கு இடையூறு விளைவிக்க வேண்டுமென்பதற்காக, இந்திராணியின் கணவரான இந்திரன், ஒரு போர் வீரனைப் போல் உருவம் ஏற்று, கையில் வாள் ஏந்தி, அந்த முனிவர் ஆசிரமத்திற்கு வந்தான். தவத்தில் நிலைத்து நிற்கும் அவருடைய ஆசிரமத்தில், 'பாதுகாப்பாக இருக்கட்டும்' என்ற முறையில், மிகச்சிறந்ததும் கூர்மையானதுமான அந்த வாள் ஒப்படைக்கப்பட்டது. (16–18)

அந்த ஆயுதத்தைப் பெற்றுக் கொண்ட முனிவர், தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பொருளைப் பாதுகாப்பதில் மிகவும் கவனத்துடன் இருந்தார். தன்மீது வைக்கப்பட்ட நம்பிக்கையைக் காப்பாற்றுவதற்காக, அதைக் கையில் வைத்துக் கொண்டே காட்டில் சஞ்சரித்தார். ஒப்படைக்கப்பட்ட வாளைக் காப்பாற்றுவதில் மிகவும் கவனத்துடன் இருந்த அவர், கிழங்கு–மலர்களைக் கொண்டு வருவதற்காக வெளியே சென்றபோதும் வாளுடனே சென்றார். எப்போதும் ஆயுதத்தைக் கையில் தாங்கிக் கொண்டிருந்த தவச்செல்வரான அவர், நாளடைவில், தவம் செய்வதில் ஊக்கமிழந்து, தன் புத்தியைக் கொடுமை நிறைந்ததாக ஆக்கிக் கொண்டார். பின்னர், அந்த ஆயுதத்தின் சேர்க்கையால், அவர் தன் சுயநிலை தவறிக் கொடிய செயல்களில் மிகவும் தீவிரமாக ஈடுபட்டார்.

அதுவரையில் அறச்செயல்கள் செய்து சேமித்து வைத்திருந்த புண்ணியம் அழிந்து போகவே, அந்த முனிவர் நரகத்தை அடைந்தார். (19–22)

ஓர் ஆயுதத்தைத் தன்னிடம் வைத்திருப்பதால், எவ்வளவு பெரிய தவறு நேரிடுகிறது என்பதை விளக்கும் இந்தக் கதை மிகவும் பழமையானது. நெருப்பினுடைய கூட்டுறவினால் கட்டைகள் எரிந்து சாம்பலாகிவிடுவதைப் போலவே, ஆயுதங்களைத் தன்னிடம் வைத்திருப்பதாலும் பெரிய தவறு (பேரழிவு) நேரிடும் என்று சொல்லப்படுகிறது. தங்களிடம் நான் வைத்துள்ள ஆழ்ந்த அன்பினாலும் பெருமதிப்பினாலும், (இந்த விஷயத்தைத்) தங்களுக்கு நினைவூட்டுகிறேனே தவிர அறிவுரை கூறவில்லை. கையில் வில்லைத் தாங்கிக் கொண்டிருக்கும் தாங்கள் ஒருபோதும் அம்மாதிரியான அழிவுச் செயல்களைச் செய்யக்கூடாது. (23,24)

தண்டகாரண்யத்தில் வசிக்கும் அரக்கர்களுடன் (நேரிடையாக நமக்கு) எவ்விதப் பகைமையும் இல்லாதபோது, அவர்களைக் கொல்வது என்ற எண்ணம் தங்களுக்குத் தோன்றக் கூடாது. வீரரே! குற்றம் செய்யாத மக்களைக் கொல்வதை நான் விரும்பவில்லை. வீரர்களாகிய க்ஷத்திரியர் களுடைய வில்லுக்கு, காடுகளில் வாழும் ஆத்மசாதகர்களுக்கு ஏற்படும் துன்பங்களிலிருந்து அவர்களைக் காப்பாற்றுவது என்பது மட்டுமே செய்யத்தக்கது, (முனிவர்களைக் கஷ்டப்படுத்தும் அரக்கர்களை எதிர்ப்பது சரியாக இருக்கலாம். ஆனால், 'எல்லா அரக்கர்களையும் கொன்று விடுகிறேன்' என்று சபதம் செய்வது எப்படி நியாயமாகும்?) (25,26)

ஆயுதம் தரித்தல் என்பது எங்கே? (அது, போர்க்களத்தில் அல்லவா பொருந்தும்?) காடு என்பது எங்கே? (இது, அமைதியான இடமாயிற்றே!) க்ஷத்திரிய தருமம் என்பது எங்கே? (இங்கே, அதற்கு என்ன அவசியம்?) தவம் செய்வது என்பது எங்கே? (சகலப் பிராணிகளிடமும் தயை கொண்டிருப்பதுதானே அடிப்படை பண்பு?) இரண்டு இரண்டான இவை, ஒன்றுக்கொன்று எதிரானவை. நாம், தற்போது வாழும் பிரதேசத்திற்கு ஏற்ற (காட்டில் வாழும் தவசிகளின் கொல்லாமை என்ற) தருமமே பின்பற்றத்தக்கது. (27)

உத்தமரே! இப்போது, கையில் ஆயுதம் வைத்துக் கொண்டிருப்பதால், அறிவு திரிந்து போகிறது. (கைகேயிக்குக் கொடுத்த வரத்தின்படி, பதிநான்கு ஆண்டுகள் (முடிந்து) அயோத்திக்குத் திரும்பவும் போய்ச் சேர்ந்த பின்னர், க்ஷத்திரியக் கடமையை ஆற்றுங்கள். நாட்டை முற்றிலுமாகத் துறந்து, ஆத்ம சாதனை செய்யும் முனிவராக நீங்கள் ஆகிவிட்டால், என்னுடைய மாமனார்–மாமியார்களுக்கு எல்லையில்லாத மகிழ்ச்சி உண்டாகும். தருமத்திலிருந்துதான் (நான்கு) புருஷார்த்தமும் உண்டாகிறது; தருமத்திலிருந்து சுகமும் ஞானமும் உண்டாகிறது; தருமமொன்றால்தான் (மோட்ச சுகம் உட்பட) எல்லாவற்றையும் ஒருவன் அடைகிறான். இவ்வுலகம் தருமத்தையே உயிராகக் கொண்டிருக்கிறது. (28–30)

ஞானிகள், அந்தந்தக் கால–தேச–ஆசிரமங்களுக்கு உரியதான பலவகை நியமங்களையும் முயற்சியுடன் கடைப்பிடித்து, உடலை வாட்டி, தருமானுஷ்டானம் செய்கிறார்கள். ஏனெனில், சௌக்கியமான வாழ்க்கை வாழ்வதால், அந்தச் சுகத்திற்குக் காரணமான தருமம் (புண்ணியம்) அடையப்படுவதில்லை. உத்தமரே! எப்போதும் தூய உள்ளத்துடன் இருந்து கொண்டு, இந்தத் தபோவனத்தில் அறநெறியைக் கடைப்பிடிக்க வேண்டும். மூன்று உலகங்களிலுமுள்ள அனைத்தைப் பற்றியும் தாங்கள் உள்ளபடியே அறிவீர்கள். பெண்களுக்குரிய இயல்பான சஞ்சலத்தினால் நான் இவ்வாறு கூறினேன். தங்களுக்குத் தருமத்தைப் போதிப்பதற்குத் தகுதியுள்ளவர் யார்? தம்பியுடன்கூட விரிவாக ஆலோசனை செய்து, 'எது சரி' என்று படுகிறதோ, அதனைக் காலதாமதமில்லாமல் செய்வீர்களாக.'' (31–33)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
ஒன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பத்து
‘முனிவர்களைக் காப்பாற்றுவது என் கடமை’

கணவரிடம் எல்லையில்லாத அன்பு கொண்ட வைதேகியினால் இவ்வாறு கூறப்பட்டதைக் கேட்டு, அறநெறியில் உறுதியாக நிற்கும் இராமன் மைதிலிக்குப் பதில் சொன்னார்— ‘‘தேவி! தருமம் அறிந்த ஜனக குமாரியே! என்னிடம் உள்ள பேரன்பு காரணமாக, நீ கூறிய சொற்கள் உனக்குத் தகுந்தவையே. நீ பிறந்த உயர்ந்த குலத்திற்கும் ஏற்றதே. ‘மக்களிடமிருந்து துன்பக் குரல் எழக்கூடாது என்பதற்காகவே, க்ஷத்திரியர்களால் வில் தரிக்கப்படுகிறது’ என்று நீ சொன்ன வார்த்தைகளின் மேல், என் எண்ணத்தையும் சொல்கிறேன். (க்ஷத்திரியர்கள் வில் ஏந்துவது, கண்ணில் படுபவர்களையெல்லாம் பாணம் விட்டு அழிப்பதற்காக அல்ல. யார் துன்பம் செய்கிறார்களோ, அவர்களை இனம் கண்டு அடக்குவதற்காகவே.) (1–3)

சீதே! பற்பல கட்டுப்பாடுகளை உறுதியாகக் கைப்பற்றும் தண்டகாரண்ய முனிவர்கள், தாங்கள் படும் துன்பம் பொறுக்க முடியாமல், பிறருக்கு அடைக்கலம் தரத்தக்க அவர்களே, தாமாக என்னிடம் வந்து தஞ்சமடைந்தார்கள். காட்டில் பழம்–கிழங்குகளைப் புசித்துக் கொண்டு வாழும் அவர்கள் தருமத்தில் ஈடுபட்டவர்கள். கொடூரமான செயல்பாடுகளைக் கொண்ட அரக்கர்களிடம் ஏற்பட்டுள்ள அச்சத்தினால் சுகமாக இருக்க முடியவில்லை. (பயமில்லாமல் தவம் செய்ய முடியவில்லை.) அந்தந்தக் காலத்திற்கேற்ற வைதிகக் கர்மாக்களை நெறி பிறழாது செய்து வரும் அவர்கள், காட்டில் மனிதர்களைக் கொன்று தின்னும் அரக்கர்களால் புசிக்கப்படுகிறார்கள். தண்டகாரண்யத்தில் அவ்விதம் (அரக்கர்களால்) மிகவும் தொல்லைக்கு உள்ளாகும் அந்தணோத்தமர்களான முனிவர்கள், ‘எங்களைக் காப்பாற்றுங்கள்’ என்று என்னிடம் தெரிவித்துக் கொண்டார்கள். (4–7)

அவர்கள் முகத்திலிருந்து வெளிப்பட்ட இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன், நான் அவர்களுடைய திருவடிகளில் பணிந்து, பின்வருமாறு பதில் சொன்னேன். ‘தங்களைப் போன்ற அந்தணோத்தமர்களுக்கு நானே முன்வந்து சேவை செய்வதுதான் முறை. ஆனால், இப்போது, தாங்களாகவே என்னிடம் வந்து வேண்டிக் கொள்கிறீர்கள் என்பது, எனக்கு அளவில்லாத வெட்கத்தைத் தருகிறது. தாங்கள் என்னிடம் தயை காட்டவேண்டும். இப்போது, நான் என்ன செய்ய வேண்டும்? என்று கட்டளையிடுங்கள்’ என்று நான் கூறினேன். (இதைக் கேட்டவுடன்) அங்கு வந்திருந்த முனிவர்கள் எல்லோரும் ஒன்றாகக் கூடி, பின்வரும் சொற்களைக் கூறினார்கள்— (8–10)

‘இராமசந்திரா! நினைத்த உருவம் எடுக்கவல்ல அநேக அரக்கர்களால், தண்டகாரண்யத்தில் தவம் செய்யும் நாங்கள் மிகவும் துன்பப்படுத்தப்படுகிறோம். தாங்கள் எங்களைக் காப்பாற்ற வேண்டும். மாசற்றவரே! நாள்தோறும் நடைபெறும் அக்னிஹோத்ரம் முதலான ஹோமங்கள் நடக்கும் போதும் மற்ற பருவ காலங்களிலும், புலால் உண்பவர்களும் அடக்க முடியாதவர்களுமான அரக்கர்கள் எங்களைப் பயமுறுத்துகிறார்கள். அரக்கர்களால் தொல்லை கொடுக்கப்படுகின்ற எங்களைப் போன்ற சாத்விகர்களான தபஸ்விகள், ஒரு புகலிடத்தைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். தாங்கள்தான் எங்களுக்கு முற்றிலும் அடைக்கலம் தரக் கூடியவர். எங்களுடைய தவத்தின் ஆற்றலால் அரக்கர்களை அழித்துவிட முடியும்தான். ஆனால், மிக்கக் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த தவ ஆற்றலை வீணாகச் செலவழிக்க நாங்கள் விரும்பவில்லை. (11–14)

தவம் செய்யும்போது எப்போதும் இடையூறுகள் எதிர்ப்படும். கட்டுப்பாடுகள் கடுமையானவை என்பதால் அனுஷ்டிப்பதும் மிகவும் கஷ்டம். இராகவா! அதனால்தான் அரக்கர்களால் பலவிதங்களில் துன்புறுத்தப்பட்டாலும், நாங்கள் அவர்களுக்குச் சாபம் கொடுக்காதிருக்கிறோம். தண்டகாரண்யத்தில் வசிக்கின்ற அரக்கர்களால் துன்புறுத்தப்படும் எங்களைச் சகோதரனுடன்

நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும். காட்டில் எங்களுக்குத் தாங்கள்தான் தலைவர் (புகலிடம்).' ஜனககுமாரியே! தண்டகாரண்யத்தில் முனிவர்களின் இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன், 'முழுமையாகப் பாதுகாப்புத் தருகிறேன்' என்று என்னால் பிரதிக்ஞை செய்யப்பட்டது. (15–17)

முனிவர்களுக்கு இப்படி ஓர் உறுதிமொழியைக் கொடுத்துவிட்டு, நான் உயிரோடிருக்கும் வரையில், அதை மாற்றமாட்டேன். ஏனெனில், எப்போதும் (எந்த நிலையிலும்) சொன்ன சொல்லைக் காப்பதுதான் எனக்கு மிகவும் பிடித்தமானது. சீதே! என் உயிரை வேண்டுமானாலும் விடுவேன். லட்சுமணனையோ, உன்னையோ கூடத் தியாகம் செய்வேன். ஆனால், செய்யப்பட்ட பிரதிக்ஞையை நிறைவேற்றாமல் இருக்கமாட்டேன். குறிப்பாக, அந்தணர்களுக்குக் கொடுக்கப்பட்ட வாக்கை நிச்சயம் காப்பாற்றுவேன். வைதேகி! முனிவர்களைக் காப்பாற்றுவது என்பது (அவர்கள் நேரில் வந்து கேட்காவிட்டாலும்கூட, அது) என்னுடைய கடமையாகும். நானோ, இப்போது வாக்குக் கொடுத்துவிட்டேன் எனும்போது, அதில் மறுபரிசீலனைச் செய்வதற்கு என்ன இருக்கிறது? (18–20)

குற்றமற்றவளே! ஆழ்ந்த அன்பினாலும், நிறைந்த நல்லெண்ணத்தாலும் நீ (முன்னர் கூறியபடி) பேசினாய். சீதே! நான் மகிழ்ச்சியுடன் இருக்கிறேன். (ஒரு பெண்ணான இவள், எனக்கு என்ன உபதேசம் செய்வது? என்று கோபப்படவில்லை.) தனக்குப் பிரியமில்லாதவர்களுக்கு யாரும் அறிவுரை கூறுவதில்லை. பிரியமானவளே! நீ கூறியதெல்லாம், உன் உயர்ந்த நிலைக்கு ஏற்றதுதான். நீ, என்னுடன் இணைந்து தருமங்களை அனுஷ்டிப்பவள்; என் உயிரினும் மேலானவள்.'' மேற்கண்டபடி, மிதிலை மன்னர் புதல்வியும் இஷ்டமானவளுமான சீதையிடம் கூறிய மகாத்மாவான இராமன், கையில் வில்லேந்தியவராக லட்சுமணனுடன் தவசிகள் வாழும் அமைதியான காட்டுப் பகுதிக்குள் சென்றார். (21–23)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
பத்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பதினொன்று

அகஸ்தியருடைய ஆசிரமத்திற்குச் செல்லுதல்

முன்னதாக இராமன் சென்றார். இடையழகு கொண்ட சீதை நடுவில் சென்றாள். பின்னால், கையில் வில்லேந்தியவனாக இலக்குவன் பின்தொடர்ந்தான். சீதையோடு அவ்விருவரும், பலவகையான மலைச்சிகரங்களையும் காட்டுப் பகுதிகளையும் பார்த்துக் கொண்டே சென்றார்கள். சில இடங்களில் நதியின் மணல் திட்டுகளில் ஸாரஸம், சக்ரவாகம் முதலியவைகளையும் மற்ற நீர்வாழ் பறவைகள், தாமரைகள் நிறைந்த ஓடைகளையும் கண்டார்கள். கூட்டமாகச் செல்லும் புள்ளிமான்களையும், நீண்ட கொம்புகளுடன் மதங்கொண்டு திரியும் காளைகளையும், எருமை–பன்றிகளையும், மரங்களை முறித்து அழிக்கும் யானைகளையும் (பார்த்தார்கள்.) (1–4)

அவர்கள் வெகுதூரம் நடந்த பின்னர், சூரியன் அஸ்தமிக்கும் வேளையில், ஒரு யோஜனை நீள–அகலமுடைய மிகப்பெரிய நீர்நிலையைக் கண்டார்கள். அந்தத் தடாகத்தில் செந்தாமரை–வெண்டாமரைகள் நெருக்கமாகக் காணப்பட்டன; யானைக் கூட்டங்கள் நீரில் திரிந்து விளையாடி அழகைக் கூட்டின; ஸாரஸம், ராஜஹம்ஸம், கலஹம்ஸம் முதலிய நீர்வாழ் பறவைகள் ஏராளமாக இருந்தன; தெள்ளிய நீர் நிறைந்து, கண்கவர் காட்சியுடன் விளங்கிய அந்தத் தடாகத்தில் பாட்டும் இசைக்கருவிகளின் ஒலியும் கேட்கப்பட்டன. ஆனால், (இசைவாணர்கள்) யாரும் கண்ணில் படவில்லை. (5–7)

அப்போது, மகாபலம் பொருந்திய லட்சுமணனும் இராமனும் (அந்த விசித்திரத்தை அறிந்து கொள்ள) மிக்க ஆவல் கொண்டவர்களாக, (உடன் வந்து கொண்டிருந்த) 'தர்மப்ருத்' என்னும் முனிவரைப் பார்த்துக் கேட்டார்கள்— ''முனிவர் பெருமானே! மிகவும் அற்புதமான இந்த இசையைக் கேட்டு, எங்கள் எல்லோருக்கும் 'இது என்ன?' என்று தெரிந்து கொள்வதில் மிகவும் ஆவல் உண்டாகியிருக்கிறது. தாங்கள் தெளிவாக விளக்கிக் கூறவேண்டும். 'இது மிகவும் ரகசியமான விஷயம்' என்றில்லையானால், அந்தணரே! வணக்கத்திற்குரியவரே! தாங்கள் இதன் விவரத்தைச் சொல்ல வேண்டும்.'' (8,9)

இராகவனால் இவ்வாறு கேட்டுக் கொள்ளப்பட்ட தருமாத்மாவான முனிவர், அந்தத் தடாகத்தின் மகிமை முழுவதையும் சொல்லவாரம்பித்தார்— ''ஆழங்காண முடியாத அளவுக்கு எப்போதும் நீர் நிறைந்து விளங்கும் இந்தத் தடாகத்திற்கு 'பஞ்சாப்ஸரஸ்' என்று பெயர். 'மாண்டகர்ணி' என்ற முனிவர், தன் தவ ஆற்றலால் இதனை உண்டாக்கினார். மாண்டகர்ணி என்ற அந்த மாமுனிவர், வெறும் காற்றை மட்டுமே புசித்துக் கொண்டு, தண்ணீரில் நின்றபடி பத்தாயிரம் ஆண்டுகள் கடுமையாகத் தவம் புரிந்தார். (10–12)

அப்போது, அக்னி முதலான எல்லா தேவர்களும் மனக்கலக்கமடைந்து, எல்லோரும் ஒன்றாகக் கூடி, தங்களுக்குள் ஆலோசனை நடத்தினார்கள். 'நம்முள் யாரோ ஒருவருடைய பதவியைப் பறித்துக் கொள்ள, இந்த முனிவர் விரும்புகிறார் போலும்!' என்று எண்ணி, விண்ணுலகவாசிகளான அவர்கள் அனைவரும் மனம் கலங்கினார்கள். அப்போது, எல்லா தேவர்களும் ஒன்றுகூடி, அவருடைய தவத்திற்கு இடையூறு விளைவிப்பதற்காக, மின்னற்கொடி போல் கண்ணைப் பறிக்கும் பேரழகு வாய்ந்த முக்கிய அப்சரப் பெண்டிர் ஐவரை நியமித்தனர். (13–15)

இகம்–பரம் இரண்டும் அறிந்த அந்த முனிவர், அந்த அப்சரப் பெண்டிரால், தேவர்களின் விருப்பம் கைகூடுவதற்காகக் காமலீலைகளின்பால் அழைத்துச் செல்லப்பட்டார். (முனிவரால், அப்சரசுகளைப் புறக்கணித்திருக்க முடியும். என்றாலும், 'தேவர்கள் வென்றதாக இருக்கட்டுமே?' என்ற பரந்த நோக்கத்தில் காமத்திற்கு வசப்பட்டார்.) அந்த அப்சர மகளிர் ஐவரும், முனிவரின் மனைவிகளாக ஆகிவிட்டார்கள். இந்தக் குளத்தின் உள்ளே, மறைவாக, அவர்களுக்காக ஒரு வீடு உண்டாக்கப்பட்டது. (16,17)

அங்கே அப்சரப் பெண்டிர் ஐந்து பேர்களும் மிகவும் களிப்புடன் வாழ்ந்து கொண்டு, தன் தவயோக மகிமையால் வாலிபப் பருவத்தை ஏற்றுக் கொண்ட முனிவரை மகிழ்வித்துக் கொண்டிருக்கிறார்கள். ஓடியாடிக் களிக்கும் அவர்களால் மீட்டப்படும் இசைக்கருவிகளின் ஒலியும், அணிகலன்கள் உரசும் ஒலியும், மனங்கவரும் இசையொலியும்தான் உங்களால் கேட்கப்படுகிறது.'' ஆத்மதரிசனம் பெற்ற (தர்மப்ருத் என்ற) அவருடைய விளக்கத்தைக் கேட்டதும், ''இது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது!'' என்று கூறி, தம்பியோடு கூடிய பெரும்புகழ் படைத்த இராமன் மிகவும் மகிழ்ந்தார். (18–20)

இவ்வாறு சொல்லிக் கொண்டிருக்கும் போதே, தர்பை, மரவுரி முதலியன சிதறிக் கிடந்த, மறைத்திரு பொருந்திப் பிரகாசிக்கும் ஆசிரமக் கூட்டத்தைக் கண்டார். வைதேகியுடனும் லட்சுமணனுடனும் அந்த ஆசிரம வளாகத்தில் நுழைந்த இராமன், பெரும் புகழ் கொண்ட எல்லா முனிவர்களாலும் மதிப்புடன் வரவேற்கப்பட்டு, அங்கேயே தங்கினார். பின்னர், தெய்விக ஒளி வீசும் ஆசிரமக் கூட்டத்தில், மாமுனிவர்களால் நன்றாக உபசரிக்கப்பட்டு, காகுத்த இராமன் சுகமாகத் தங்கியிருந்து, அங்கிருந்த தபஸ்விகளின் ஆசிரமங்களுக்கு ஒவ்வொன்றாகச் சென்றார். அஸ்திர வித்தையில் நிபுணரான அவர், முன்னர் தங்கியிருந்த ஆசிரமங்களுக்கே கிரமமாகச் சென்றார். (21–24)

சில இடங்களில் பத்து மாதங்களும், வேறு சில இடங்களில் ஓர் ஆண்டுக் காலமும், சில இடங்களில் நான்கு–ஐந்து–ஆறு மாதங்களும், அதற்கும் மேலும், மற்றும் சில இடங்களில் ஒரு

மாதத்திற்கு அதிகமாகவும், சில இடங்களில் மாதத்திற்கு மேல் ஒரு பட்ச காலமும், சில இடங்களில் மூன்று–எட்டு மாதங்களும் சுகமாக வசித்தார், இராமன். இவ்விதம், முனிவர்களின் ஆசிரமங்களில், அனுகூலமான சூழ்நிலையில் (தவ விரதம் தவறாதபடி) ஆனந்தமாகப் பத்து ஆண்டுகள் கழிந்தன. காட்டின் நாலாபக்கங்களிலும் இவ்விதம் (முனிவர் ஆசிரமங்களில்) சுற்றித் திரிந்துவிட்டு, தருமம் அறிந்தவரான இராமன், (முன்னர் சுதீட்சணர் கேட்டுக் கொண்டபடி,) மீண்டும் சுதீட்சணர் ஆசிரமத்திற்கே திரும்பி வந்தார். அவர் அந்த ஆசிரமக் குடியிருப்பில், முனிவர்களால் நன்றாகக் கவனிக்கப்பட்டு, அங்கேயே சில காலம் தங்கினார். (25–29)

ஒரு சமயம், ஆசிரமத்தில் அமர்ந்திருந்த அந்த சுதீட்சண மாமுனிவரைப் பார்த்து, வணக்கத்துடன் இராமன் கேட்டார். ''முனிபுங்கவரான பகவான் அகஸ்தியர், இந்தக் காட்டில் வசிக்கிறார் என்று பல பேர்கள் பல தடவை சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆனால், இந்தக் காடு மிகவும் விஸ்தாரமாக இருப்பதால், அவருடைய ஆசிரமம் அமைந்துள்ள இடத்தை அறிய முடியவில்லை. மகாஞானியான அந்த முனிவரின் புனிதமான ஆசிரமம் எங்கே இருக்கிறது? தங்களுடைய நல்லாசியுடன், தம்பியுடனும் சீதையுடனும் சென்று, அகஸ்தியரைத் தரிசித்து, நமஸ்காரம் செய்யவேண்டும் என்ற பேராவல் என் மனத்தில் இருந்து கொண்டிருக்கிறது. முனிவர் திலகமாகிய அவருக்கு நான் சேவை செய்யும் வாய்ப்புக் கிடைக்குமா?'' இவ்வாறு தருமாத்மாவான இராமன் கூறியச் சொற்களைக் கேட்ட அந்த முனிவர் சுதீட்சணர், மிகவும் பரிவுடன் தசரத குமாரனைப் பார்த்துப் பின்வருமாறு பதில் கூறினார்— (30–34)

''இராகவா! சீதையுடனும் லட்சுமணனுடனும் அகஸ்தியரைத் தரிசித்துவிட்டு வா – என்று, நானே சொல்ல வேண்டுமென்று இருந்தேன். நல்ல காலமாக, இதுபற்றி நீயே என்னிடம் பேசத் தொடங்கிவிட்டாய்! குழந்தாய்! நான், உனக்கு மாமுனிவர் அகஸ்தியருடைய ஆசிரமம் இருக்குமிடத்தைச் சொல்கிறேன். இந்த ஆசிரமத்திலிருந்து தென்திசையில் நான்கு யோஜனை தூரம் சென்றதும், அகஸ்தியரின் சகோதரருடைய அமைதி தவழ்கின்ற பேராசிரமம் தென்படும். ஏறக்குறைய சமதளமாக விளங்குகின்ற அந்தக் காட்டுப் பகுதியில், திப்பிலி மரங்கள் ஏராளமாக உள்ளன; பலவகையான மலர்களும் பழங்களும் நிறைந்து அழகூட்டுகின்றன; பலவகையான பறவைகள் சப்திக்கின்றன; தெளிந்த நீரையுடைய பலவகையான தாமரை மலர்கள் நிறைந்த ஓடைகளில் அன்னம், நீர்க்கோழி, சக்ரவாகம் முதலிய பறவைகள் நிறைய விளங்குகின்றன. (35–38)

அங்கு (அகஸ்தியரின் சகோதரருடைய பெயர் இத்மவாஹர் என்று வேறு புராணங்களில் காணப்படுகிறது.) ஓர் இரவு தங்கிவிட்டு, பொழுது விடிந்ததும் காட்டை ஒட்டினாற்போலவே, தெற்குத் திசையை நோக்கிச் செல்வாய். அதன் பிறகு, ஒரு யோஜனை தூரம் சென்றால், மனங்கவரும் வனப்பகுதியில், ஏராளமான மரங்கள் சூழ்ந்திருக்கும் அகஸ்தியருடைய ஆசிரமத்தைச் சென்றடைவாய். அநேக மரங்கள் அடர்ந்த, மனங்கவரும் அவ்விடத்தில் சீதையுடன் லட்சுமணனும் நீயும் மிகவும் மகிழ்ச்சி அடைவீர்கள். பெரும் கீர்த்தி பெற்றவனே! அகஸ்திய மாமுனிவரைத் தரிசிக்க வேண்டும் என்று விரும்பினால், நீ இப்போதே புறப்படலாம்.'' (39–42)

இவ்வாறு, முனிவர் கூறியதைக் கேட்ட இராமன், சகோதரனுடன் அவரை வணங்கிவிட்டு, அகஸ்தியர் இருக்கும் இடத்தை நோக்கி, தம்பியுடனும் சீதையுடனும் புறப்பட்டார். சுதீட்சணரால் விபரமாகக் கூறப்பட்ட அந்த வழியில், அழகிய வனப்பகுதிகளையும் மேகம் போன்ற மலைகளையும் பார்த்தும், ஓடைகளையும் ஆறுகளையும் கடந்தும் சென்று, பாதையில் துன்பமில்லாமல் முன்னேறி நடந்து சென்றார்கள். மிகவும் மனமகிழ்ச்சியடைந்த இராமன், லட்சுமணனைப் பார்த்து பின்வருமாறு கூறினார்— ''இதோ காணப்படுகிற ஆசிரமம், புண்ணியக் கர்மாக்களை இயற்றிவரும் அகஸ்தியருடைய தம்பியினுடையது என்பது நிச்சயம். ஏனென்றால், இந்த வனப்பகுதியை நன்றாக அறிந்த சுதீட்சணர் கூறியபடியே, வழியில்

ஆயிரக்கணக்கான மரங்கள், பழங்கள் மற்றும் மலர்களின் மிகையால் தாழ்ந்த கிளைகளுடன் விளங்குகின்றன. (43–47)

திப்பிலிப் பழங்களின் கடுமையான வாசனையை வேகமாக இழுத்துக் கொண்டு வரும் காற்று, இந்தக் காட்டுப் பகுதியிலிருந்து வீசுகிறது. ஆங்காங்கே மரக்கட்டைகளின் குவியல்கள் காணப்படுகின்றன. வழியில் வைடூரியம் போல் ஒளிவீசும் தர்பைக் கட்டுகளும் காணப்படுகின்றன. காட்டினிடையே காணப்படும் கருமுகில் போன்ற மலைச்சிகரம் போல், இந்த ஆசிரம வேள்விச் சாலையிலிருந்து அடர்த்தியான புகைக் கூட்டம் நன்றாகக் காணப்படுகிறது. மாமுனிவர்கள், ஏகாந்தமான புண்ணிய நீர்நிலையில் நீராடிவிட்டு, தாங்களே சேகரித்துக் கொண்டு வந்த மலர்களினால் தேவதைகளை அர்ச்சிக்கிறார்கள். (48–51)

பிரியமானவனே! சுதீட்சணரிடமிருந்து நான் கேட்டவாறே அமைந்துள்ள இவ்விடத்தில்தான் அகஸ்தியருடைய தம்பியின் ஆசிரமம் கட்டாயம் இருக்க வேண்டும். இவருடைய மூத்த சகோதரரும் மக்களின் நலனில் அக்கறை கொண்டவருமான அகஸ்தியரால், யமன் போன்று உயிரைப் பறிக்கும் (வாதாபி–இல்வலன் ஆகிய இருவரின்) கொடுஞ்செயல் அடக்கப்பட்டு, இந்தத் திசையானது எல்லோரும் பயமின்றி வாழக் கூடிய பிரதேசமாகச் செய்யப்பட்டது. (52,53)

முன்னொரு காலத்தில், குரூரமான இயல்புடைய வாதாபி–இல்வலன் என்ற சகோதரர்கள் ஒன்றாக வாழ்ந்து வந்தார்களாம். இருவரும் கொடிய அசுரர்கள்; அந்தணர்களைக் கொல்பவர்கள். கொடியவனான இல்வலன், அந்தணன் வேடம் தாங்கி, பண்பான வார்த்தைகளைப் பேசி, 'சிராத்தத்தை நடத்திக் கொடுக்க வேண்டும்' என்று (கண்ணில் தென்படுகிற) வேதியர்களை வேண்டிக் கேட்டுக் கொள்வான். பின்னர், தன் சகோதரனை, ஆட்டின் வடிவம் ஏற்கச் செய்து, பக்குவம் செய்து, சிராத்தச் சடங்குகளுக்கு உரிய விதிப்படி, தான் அழைத்து வந்த அந்தணர்களை உண்ணச் செய்வான். (54–56)

அந்த வேதியர்கள் போஜனம் செய்து முடித்த பின்னர், 'வாதாபி! வெளியே வா' என்று உரத்த குரலில் இல்வலன் அழைப்பான். சகோதரனின் அழைப்பைக் கேட்டதும், வாதாபி, ம்மே.. ம்மே... என்று ஆடுகள் போல் குரல் கொடுத்துக் கொண்டு, அந்தணர்களின் வயிற்றைக் கிழித்துக் கொண்டு வெளியே வருவான். இவ்வாறு, தம் விருப்பம் போல் உருவம் எடுக்கக் கூடிய மாமிசபட்சிணிகளான அவ்விருவராலும், நாள்தோறும், ஏராளமான அந்தணர்கள் கொல்லப்பட்டு அழிக்கப்பட்டு வந்தார்கள். (57–59)

இப்படி நடந்து வருகையில், தேவர்களால் பிரார்த்திக்கப்பட்ட அகஸ்திய முனிவர், சிராத்தத்தில் (உண்மையைத் தெரிந்து கொண்டே) மகாசுரனைப் புசித்து முடித்தார். பின்னர், (சிராத்த முறைப்படி, போஜனம் செய்து முடித்துவிட்ட அவரைப் பார்த்து) 'திருப்தி அடைந்தீர்கள், அல்லவா?' என்று கேட்டு, (அவர், 'ஆம்' என்று பதில் கூறியதும்,) அவர் கையில் நீரை வார்த்து, சகோதரனை 'வெளியே வா' என்று இல்வலன், உரக்கக் கூவினான். முனிவர்களில் தலைசிறந்தவரான அகஸ்தியர், அவ்வாறு சகோதரனை அழைக்கும், அந்தணர்களைக் கொலை செய்பவனான இல்வலனைப் பார்த்து, சற்றே நகைத்தவண்ணம் பின்வருமாறு சொன்னார்— (60–62)

'என்னால் ஆட்டின் உருவில் வந்த உன் சகோதரன் ஜீரணம் செய்யப்பட்டுவிட்டான். யமலோகத்தை அடைந்துவிட்ட அந்த அரக்கனால், எவ்வாறு வெளியே வரமுடியும்?' உடனே, சகோதரனின் அழிவைக் குறிக்கும் அவருடைய சொற்களைக் கேட்ட அரக்கன், மிகவும் சினங்கொண்டு, மாமுனிவரைத் துன்புறுத்தத் தொடங்கினான். உத்தமமான முனிவரை நோக்கி (அவரைத் தாக்குவதற்காக) ஓடினான். ஆன்ம ஒளிப் பிழம்பான முனிவரால், கனல் போன்ற கண்பார்வையாலேயே எரிக்கப்பட்டு, அவன் மரணத்தை அடைந்தான். அந்தணர்களிடம் இரக்கம் கொண்டு வேறு யாராலும் செய்யமுடியாத காரியத்தைச் செய்து முடித்த

அகஸ்தியருடைய தம்பியின் ஆசிரமம், இது. குளங்களும் மரச்சோலைகளும் இவ்விடத்தை அழகு செய்கின்றன.'' (63–66)

இவ்வாறு இலக்குவனிடம் அவர் உரையாடிக் கொண்டிருந்தபோதே, சூரியன் அஸ்தமிக்கும் காலம் வந்தது; சந்த்யாகாலம் வரத் தொடங்கியது. மாலைக் கால சந்த்யா அனுஷ்டானங்களை, தம்பியுடன் கூட முறைப்படி செய்து முடித்த பின்னர், அந்த ஆசிரம வளாகத்திற்குள் புகுந்து, அந்த முனிவரைக் கண்டு, அவர் (இராமன்) வணங்கினார். அந்த முனிவரால் மிக்க அன்புடன் வரவேற்கப்பட்ட இராகவன், கிழங்கு–பழங்களைப் புசித்து, அந்த ஓர் இரவை அங்கேயே கழித்தார். (67–69)

இரவு கழிந்து, பொழுது புலர்ந்ததும், அகஸ்திய சகோதரரிடம் விடைபெறுவதற்காக இராமன் சென்றார். ''மாமுனிவரே! நான், தங்களுக்கு நமஸ்காரம் செய்கிறேன். இரவு சுகமாகக் கழிந்தது. தங்கள் மூத்த சகோதரரான ஆசார்யரைத் தரிசிக்கச் சென்று கொண்டிருக்கிறேன்; தங்களிடம் விடைகோருகிறேன்.'' 'சென்று வா' என்று அவரால் அனுமதிக்கப்பட்ட இராமன், அந்த (அகஸ்திய) வனத்தை நோக்கி, குறிப்பிட்ட பாதையில் சென்றார். (70–72)

நீர்க்கடம்பு, பலா, பனை, தினிசி, மகிழம், தவம், சிறிவில்வம், இலுப்பை, வில்வம், திந்துகம் முதலிய அநேக காட்டு மரங்களையும், மலர்க் கொத்துக்களைக் கொண்ட நுனிகளையுடைய கொடிகளால் கொழு கொம்பு போல் சுற்றிக் கொள்ளப்பட்டிருந்த மலர் நிறைந்த மரங்களையும், யானைகளின் துதிக்கையால் முறித்துப் போடப்பட்ட விருட்சங்களையும், குரங்குகள் தாவி விளையாடுவதையும், மதங்கொண்ட நூற்றுக்கணக்கான பறவைக் கூட்டங்களின் கூவல் சப்தம் எதிரொலிப்பதையும் இராமன் பார்த்தார். அரவிந்தலோசனராகிய இராமன், தன் பின்னால் அருகில் வந்து கொண்டிருந்த வீரனும் செந்திருவைப் போல் செழுமையான பொலிவுள்ளவனுமான லட்சுமணனைப் பார்த்துப் பின்வருமாறு சொன்னார்— (73–76)

''இங்குள்ள மரங்களின் இலைகள் பச்சைப்பசேலென்று ஒளிவீசுகின்றன; விலங்குகளும் பறவைகளும் (தத்தம் பகைமையை மறந்து) சாதுவாக இருக்கின்றன. ஆதலால், மிகவும் தூய உள்ளம் படைத்த மாமுனிவரின் ஆசிரமம் அருகிலேயே இருக்க வேண்டும் என்று எண்ணுகிறேன். எவராலும் சாதிக்க முடியாத தன் அரும்பெருஞ்செயலினால் (விந்தியமலையின் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்தியதால்) அகஸ்தியர் என்று புகழ்பெற்ற முனிவருடையதும், களைப்புடன் வாடி வதங்கி வரும் மக்களின் களைப்பைப் போக்குவதுமான ஆசிரமம் காணப்படுகிறது. இந்த ஆசிரமம் அமைந்துள்ள இந்தக் காட்டுப்பகுதி, பற்பல வேள்விகளின் புகையால் வியாபிக்கப்பட்டிருக்கிறது; மரவுரிகள் வரிசையாகக் காணப்படுகின்றன; கூட்டமாகத் திரியும் விலங்குகள் அமைதியாக இருக்கின்றன; பலவகையான பறவைகள் கூச்சல் போட்டுக் கொண்டிருக்கின்றன. (77–79)

உலக மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, எவருடைய அசாத்திய சாதகமான செயலினால் தென்திசைப் பிரதேசம், காலனைப் போன்ற அரக்கர்களை அடக்கியதால் அமைதியாக வாழ விரும்புவோர்க்குப் புகலிடமாக்கப்பட்டதோ, அவருடைய இந்தத் தென்பகுதி ஆசிரம வளாகம், அவருடைய மகிமையினால் அரக்கர்களால் (தூரத்திலிருந்தபடியே) நடுக்கத்துடன் பார்க்கப்படுகிறது. ஆனால், அவர்களால் உள்ளே நுழைய முடியவில்லை. எது முதற்கொண்டு, நற்றவங்கள் புரியும் அவர் இங்கு வசிக்க ஆரம்பித்தாரோ, அது முதற்கொண்டு அந்தப் பக்கத்திலுள்ள பிணந்தின்னிகள் (அரக்கர்கள்) பகைமை ஒழிந்தவர்களாகவும் சாந்தமடைந்தவர்களாகவும் ஆகிவிட்டார்கள். (80–82)

கொடுஞ்செயல்கள் செய்பவர்களால் அண்ட முடியாததும், மேலோர்கள் விரும்பி வந்து வாழ்வதற்குரியதுமான இந்தத் தென்பகுதி, பகவான் அகஸ்தியருடைய பெயரால், 'அகஸ்திய திசை' என்றே வழங்கப்படுகிறது. சூரிய பகவானுடைய போக்கினைத் தடுத்து நிறுத்துவதற்காக,

சிறந்ததான விந்தியமலை, நாள்தோறும் வளர்ந்து கொண்டே வந்தது. இவருடைய கட்டளையை ஏற்று, மேலும் வளராமல் நின்றுவிட்டது! (83,84)

இவர் நீண்ட ஆயுளை உடையவர்; உலக மக்களால் கொண்டாடப்படும் (கடல் நீர் முழுவதையும் ஒரே ஆசமனத்தால் வற்றச் செய்தல் முதலான) அருஞ்செயல்களைச் செய்தவர்; சாதுக்களான சான்றோர்கள் இங்கே வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். அத்தகைய தவத்திருவுடைய அகஸ்தியரின் ஆசிரமம், இது. இவர், உலக மக்களால் மரியாதை செய்யப்படுபவர்; நிறைவான நல்லியல்புகளைக் கொண்டவர்; சான்றோர்களின் நல்வாழ்வில் எப்போதும் கருத்துடையவர். இங்கு வந்து சேர்ந்திருக்கும் நமக்கும் நல்வழியைக் காட்டுவார். (85,86)

பேரன்புடையவனே! பிரபு! மாமுனிவரான அகஸ்தியருக்குப் பணிவிடை செய்து கொண்டிருக்கப் போகிறேன். வனவாசத்தில் மீதியுள்ள காலத்தை இங்கேயே கழிக்கப் போகிறேன். (தம்பியைப் பார்த்து, 'பிரபோ' என்று அழைப்பது சரிதானா? என்ற சந்தேகத்திற்கு, உரையாசிரியர்கள் பலவிதமாகச் சமாதானம் கூறியிருக்கிறார்கள். பக்தபராதீனரான இராமன், தனக்குப் பணிவிடை புரியும் பக்தனை நோக்கி, 'பிரபோ!' என்று கௌரவமாக அழைப்பது சரியானதுதான் என்று கூறியிருக்கிறார்கள். 'வல்லவனே!' என்ற பொருளும் உண்டு.) (87)

இவ்விடத்தில் தேவ–கந்தர்வ–சித்த–மாமுனிவர்கள், உணவுக் கட்டுப்பாட்டுடன் (விரத நியமங்களுடன்) வாழ்ந்து வரும் அகஸ்தியரை எப்போதும் உபாசிக்கிறார்கள். இந்த இடத்தில், பொய் பேசுபவன், கொடியவன், வஞ்சகன், ஈவு–இரக்கமில்லாதவன், காம வசப்பட்டவன் எவனும் இருக்க முடியாது. இந்த முனிவரின் பிரபாவம் அத்தகையது. இவ்விடத்தில் தேவ–யட்ச–நாகர்களும், (கருடன் போன்ற ஞானம் படைத்த) பறவைகளும் உணவுக் கட்டுப்பாட்டை மேற்கொண்டு, தருமத்தை (புண்ணியத்தை)ச் சம்பாதிப்பதற்காக வசித்துக் கொண்டிருக்கிறார்கள். (88–90)

மகாத்மாக்களான மாமுனிவர்களும் ஸித்தர்களும், இங்கு உடலை நீத்து, புதியதான (தெய்விக) உடலைப் பெற்று, சூரியனைப் போல் ஒளிவீசும் விமானங்களில் ஏறி விண்ணுலகம் ஏகியிருக்கிறார்கள். புண்ணியாத்மாக்களால் இவ்விடத்தில் ஆராதிக்கப்படும் தேவதைகள், (அவ்விதம் ஆராதிக்கும் அடியார்களுக்கு) யட்சத் தன்மையையும், தேவத் தன்மையையும், பற்பல போக பூமிகளையும் அளிக்கின்றார்கள். லட்சுமணா! இப்போது நாம் ஆசிரம வளாகத்திற்கு வந்து சேர்ந்துவிட்டோம். நீ முன்னதாகச் சென்று, சீதையும் நானும் வந்திருப்பதாக முனிவரிடம் கூறு.'' (91–93)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
பதினோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பன்னிரண்டு

அகஸ்தியரைக் காணுதல்

இராமபிரானுடைய தம்பியான லட்சுமணன், அந்த ஆசிரம வளாகத்தினுள் சென்று, அங்கு கண்ணில் தென்பட்ட அகஸ்தியருடைய சீடர்களில் ஒருவரைப் பார்த்து பின்வருமாறு சொன்னான்— (1)

''தசரதர் என்று பெயர் கொண்ட ஒரு மன்னர் (இருந்தார்). அவருடைய மூத்த புதல்வரும் மிக்க பலசாலியுமான இராமன், முனிவரைத் தரிசிப்பதற்காக, மனைவி சீதையுடன் இங்கு

வந்திருக்கிறார். நான், அவருடைய தம்பி; அவருடைய நலனை விரும்புபவன்; அவர் சொற்படி நடப்பவன். என் பெயர் லட்சுமணன். ஒருக்கால், நீங்கள் என்னைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கலாம். நாங்கள், தந்தையின் கட்டளைப்படி, பயங்கரமான காட்டிற்கு வந்திருக்கிறோம். நாங்கள் எல்லோரும் பகவான் அகஸ்தியரைத் தரிசிக்க விரும்புகிறோம் – என்ற செய்தியை, அவரிடம் தெரிவியுங்கள்.'' (2–4)

அந்தத் தவச்செல்வர், இலக்குவனுடைய சொற்களைக் கேட்டு, ''அப்படியே செய்கிறேன்'' என்று பதில் கூறிவிட்டு, அக்னிஹோத்ர சாலைக்குள் நுழைந்தார். வேள்விச் சாலைக்குள் புகுந்த அகஸ்தியருடைய பிரியத்திற்குப் பாத்திரமான அந்தச் சீடர், இரு கைகளையும் கூப்பிக் கொண்டு, தவத்தின் மகிமையால் பிறரால் வெல்ல முடியாதவரான முனிவர் பெருமானிடம், லட்சுமணன் கூறியபடியே, இராமன் வந்திருப்பதை உடனே தெரிவிக்கும் முறையில் பின்வருமாறு கூறினார்— ''இராமன், லட்சுமணன் என்ற தசரத குமாரர்கள் இருவர், இராமபத்தினியாகிய சீதையுடன் ஆசிரமத்திற்கு வந்திருக்கிறார்கள். எதிரிகளை அடக்குபவர்களான அவ்விருவரும் தங்களைத் தரிசித்து, வந்தனம் செய்வதற்காக வந்திருக்கிறார்கள். இது விஷயமாக, மேற்கொண்டு ஆக வேண்டியதைத் தாங்கள் உத்தரவிட வேண்டும்.'' (5–8)

சீடரிடமிருந்து லட்சுமணனும் இராமனும் மகாபாக்கியவதியான வைதேகியும் வந்திருப்பதைக் கேட்டறிந்து, (அகஸ்தியர்) பின்வரும் சொற்களைக் கூறினார்— ''வெகுகாலமாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த இராமன், இன்றைக்கு என்னைப் பார்க்க வந்திருக்கிறார் என்றால், அது என் அதிர்ஷ்டம்தான். நானும், அவர் இங்கே எழுந்தருள வேண்டும் என்று மனத்திற்குள் எண்ணிக் கொண்டிருந்தேன். உடனே சென்று, இராமனையும் அவருடைய பத்தினியையும் லட்சுமணனையும் மிகவும் நல்லவிதமாக உபசரித்து ஆசிரமத்திற்குள் என் அருகே அழைத்து வா. இத்தனை நேரம் அவர்கள் ஏன் உள்ளே அனுப்பப்படவில்லை?'' தருமம் அறிந்தவரும் மகாத்மாவுமான முனிவர் இவ்வாறு கூறியவுடன், கைகூப்பியவண்ணம் நின்று கொண்டிருந்த சீடர், அவரை வணங்கி, ''அவ்வாறே செய்கிறேன்'' என்றார். (9–12)

பின்னர், பரபரப்படைந்த சிஷ்யர் வெளியே வந்து, இலக்குவன் அருகில் சென்று, ''இராமன் என்பவர் யார்? முனிவரைத் தரிசிப்பதற்கு, அவர் தாராளமாக, தானே உள்ளே செல்லலாம்.'' உடனே, ஆசிரமத்தின் நுழைவாசலுக்குச் சீடருடன் சென்ற இலக்குவன், காகுத்த இராமனையும் ஜனகரின் திருமகளான சீதையையும் அறிமுகப்படுத்தினான். அந்தச் சீடர், மிக்க வினயத்துடன் அகஸ்தியருடைய கட்டளையைக் கூறி, மிகுந்த கௌரவத்திற்குத் தகுந்தவரான அவரை நல்ல முறையில் வரவேற்று, முறைப்படி உள்ளே அனுப்பி வைத்தார். பின்னர், இராமன் சீதையோடும் இலக்குவனோடும் அமைதியாக உலவித் திரியும் மான்களைப் பார்த்துக் கொண்டே ஆசிரமத்திற்குள் நுழைந்தார். (13–16)

அந்த ஆசிரம வளாகத்தில், முறையே பிரும்மா, அக்னி, பகவான் விஷ்ணு, மகேந்திரன், சூரியன், சந்திரன், பகன், குபேரன், தாதா, விதாதா, வாயு, நாகராஜன், மகாத்மாவான அனந்தன், காயத்ரி, வசுக்கள், பாசதாரியான மகாத்மா வருணன், கார்த்திகேயன், தருமதேவதை (தருமராஜன்) ஆகியோர், அங்கு வந்து தங்குவதற்கான வசிப்பிடங்களையும் பார்த்தார். அப்போது, சிஷ்யர்களால் சூழப்பட்ட முனிவரும் அக்னிசாலையிலிருந்து வெளியே வந்தார். தேஜோமயமாக ஒளிவீசும் முனிவர்களின் முன்னதாக முதலில் வந்து கொண்டிருக்கும் அவரை இராமன் பார்த்தார். அவ்வமயம், திருவளர் செல்வனான லட்சுமணனைப் பார்த்து வீரராமன் பின்வருமாறு கூறினார்— (17–21)

''லட்சுமணா! இதோ, வெளியில் வந்து கொண்டிருப்பவர்தான், அகஸ்தியர். அவரிடமிருந்து வெளிப்படும் அபூர்வ பெருமிதத்தால், இவர் தவங்களுக்கு இருப்பிடம் என்று நான் அறிகிறேன்.'' இவ்வாறு, எதிரிகளை வாட்டுபவரும் பெருந்தோளருமான இராமன், இலக்குவனிடம் கூறிவிட்டு,

சூரியனுக்கு நிகரான தேஜஸை உடைய அவருடைய (அகஸ்தியருடைய) திருவடிகளில் மிக்க மகிழ்ச்சியுடன் பணிந்து வணங்கினார். விதேக மன்னர் புதல்வியான சீதையுடனும் லட்சுமணனுடனும் அவரை நமஸ்கரித்துவிட்டு, தருமாத்மாவான இராமன் கைகளைக் கூப்பிக் கொண்டு (முனிவரின் உத்தரவை எதிர்பார்த்துக் கொண்டு) நின்றபடியே இருந்தார். (முனிவர்) காகுத்தனை வரவேற்று, ஆசனம்–தீர்த்தம் கொடுத்து, ''சௌக்கியம் தானே?'' என்று நலன் விசாரித்துவிட்டு, ''உட்காருங்கள்'' என்று சொன்னார். (அகஸ்தியர்) வேள்விக் குண்டத்தில் ஆகுதி அளித்துவிட்டு, அர்க்யம் கொடுத்து, விருந்தினர்களுக்கு உபசார வார்த்தைகள் கூறி, வானப்பிரஸ்த நெறிப்படி, (கிழங்கு–பழங்களை) அவர்களுக்கு உணவாக அளித்தார். (22–26)

தருமம் அறிந்தவரான முனிவர்பெருமான் முதலில் உட்கார்ந்தார். பின், கைகளைக் கூப்பியவண்ணமே அமர்ந்திருக்கும், அறநெறிகளை முற்றிலும் உணர்ந்தவரான இராமனைப் பார்த்துக் கூறினார்— ''காகுத்தனே! முதலில் வேள்விக் குண்டத்தில் அவி சொரிந்து, அதிதிகளுக்கு அர்க்யம் கொடுத்து உபசாரம் செய்ய வேண்டும். இதற்குமாறாக, ஒரு தபஸ்வி நடப்பானேயானால், அவன் பரலோகத்தில், பொய்சாட்சி சொன்னவனுக்கு உரிய தண்டனையான, தன் மாமிசத்தைத் தானே தின்ன நேரிடும். நீ, எல்லா உலகங்களுக்கும் மன்னன்; அறநெறிப்படி நடப்பவன்; மகாரதன்; கௌரவிக்கத்தக்கவன்; மதிப்பு மிக்கவன்; பிரியமான விருந்தாளியாக வந்திருக்கிறாய்.'' இவ்வாறு கூறிவிட்டு, பழம்–கிழங்கு–மலர்களாலும் மற்றவைகளாலும், இராகவனைத் தனக்கு இஷ்டமானபடியெல்லாம் உபசரித்துவிட்டு, மீண்டும் பின்வருமாறு கூறினார்— (27–30)

''புலிநிகர் மாவீரனே! பொன்–இரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளதும் தெய்வத் தன்மை பொருந்தியதுமான இந்த வில், முன்னொரு காலத்தில் மகாவிஷ்ணுவுக்காக விசுவகர்மாவினால் செய்யப்பட்டது; சூரியனைப் போல் ஒளிவீசும் உத்தமமான இந்த அம்பு பிரும்மாவினால் கொடுக்கப்பட்டது. (விசுவகர்மாவினால் நிர்மாணிக்கப்பட்ட அம்பும்–வில்லும், பிரும்மாவினால் விஷ்ணுவிடம் சேர்க்கப்பட்டன.) அக்னியைப் போல் ஒளிவீசும், கூர்மையான பாணங்கள் நிறைந்த, எப்போதும் குறைவடையாத இரண்டு அம்புறாத்தூணிகள் இந்திரனால் (முன்பு எனக்குக்) கொடுக்கப்பட்டன. அத்துடன், பொன்னால் அலங்கரிக்கப்பட்டு, தங்கத்தாலான உறையில் இருக்கும் கத்தி ஒன்றும் இதோ இருக்கிறது. (31,32)

இராமா! முன்னொரு காலத்தில், மகாவிஷ்ணு இந்த வில்லினால்தான், பேராற்றல் கொண்ட அசுரர்களைப் போரில் வென்று, விண்ணுலகத்தவர்களுக்கு (பழையபடி) மதிப்பு–அதிகாரங்களைத் திரும்பக் கொடுத்துதவினார். பேருள்ளம் கொண்டவனே! இந்த வில், இரண்டு அம்புறாத்தூணிகள், அம்பு, வாள் ஆகியவற்றை இந்திரன் வஜ்ராயுதத்துடன் விளங்குவதைப் போல, உன் வெற்றிக்காகப் பெற்றுக் கொள்வாய்.'' தவப் பேரொளி வீசும் பகவான் அகஸ்தியர், மேற்கண்டவாறு கூறிவிட்டு, மிக உயர்ந்தவைகளான அந்த ஆயுதங்கள் அனைத்தையும் இராமனிடம் கொடுத்துவிட்டு, மீண்டும் (பின்வருமாறு) கூறினார். (33–35)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
பன்னிரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பதின்மூன்று

பஞ்சவடிக்குப் புறப்படுதல்

''இராமா! உனக்கு மங்களம் உண்டாகட்டும். என்னைப் பார்த்து நமஸ்காரம் செய்யவேண்டும் என்பதற்காக (இந்த இடத்தை நாடி) சீதையுடன் நீங்கள் இருவரும் வந்திருக்கிறீர்களே! நான்

மகிழ்ச்சி அடைகிறேன். லட்சுமணா! உன்னிடத்திலும் எனக்குச் சந்தோஷம் உண்டாகிறது. நீண்ட தூரம் நடந்து வந்ததால் நீங்கள் களைத்துப் போயிருக்கிறீர்கள். ஜனகன் புதல்வியான சீதை, இளைப்பாறுவதற்குத் தவிக்கிறாள் என்பது தெளிவாகத் தெரிகிறது. இவள் மென்மையான திருமேனியுடையவள். இதற்கு முன் இவ்வாறான துன்பங்களை அனுபவித்தது இல்லை. காட்டில் எல்லையில்லாத கஷ்டங்கள் ஏற்படும் என்பதை அறிந்தும்கூட, கணவரிடம் உள்ள பேரன்பினால் காட்டிற்கு வந்திருக்கிறாள். இராமா! கானகத்தில் சீதையின் மனம் சந்தோஷப்படும்படியாக நடந்து கொள். இவள், உன்னுடன் காட்டிற்கு வருவது என்ற அரிய செயலைச் செய்திருக்கிறாள். (1–4)

ரகுநந்தனா! உலக உற்பத்தி காலத்திலிருந்து பெண்களிடம் இயற்கையாகவே ஒரு குணம் இருந்து வருகிறது. கணவன் நல்ல நிலையில் (பணம், பதவி, உடல்நலத்துடன்) இருந்தால், அவனிடம் அன்பு பாராட்டுவார்கள். இதற்கு நேர்மாறான நிலை (ஏழ்மை, அகௌரவம், உடல்நலக் குறைவு) ஏற்பட்டால் கைவிட்டு விடுவார்கள். பெண்கள், மின்னலின் நிலையாமையையும், ஆயுதங்களின் கூர்மையையும், கருடன்–வாயுக்களின் அதிவேகத்தையும் உடையவர்கள். உன்னுடைய பத்தினியாகிய இவள், இந்தக் குற்றங்குறைகள் இல்லாதவள்; அருந்ததி தேவியைப் போல பாராட்டத்தக்கவள்; பதிவிரதைகளில் முதன்மையானவள். இராமா! பகைவர்களை அடக்குபவனே! சுமித்திரையின் மைந்தனான லட்சுமணனோடும், விதேக குமாரியான சீதையுடனும் நீ இங்கே வசிக்கப் போவதால், இந்த இடத்திற்கு மேலும் மதிப்பு கூடப்போகிறது.'' (5–8)

இவ்வாறு, அந்த முனிவர் கூறியதைக் கேட்ட இராகவன், கைகளைக் கூப்பிக் கொண்டு, வணக்கத்துடன், அக்னியைப் போல் பிரகாசிக்கும் ரிஷியைப் பார்த்துக் கூறினார்— ''முனிபுங்கவராகிய தாங்கள், தம்பி, மனைவி மற்றும் அடியேனுடைய பணிவான நடத்தையால் மனநிறைவு அடைந்தீர்கள் என்றால், அது நான் செய்த பெரும் பேறு. எனக்குக் கிடைத்த பேரருள். ஆனால், முனிவர்பெருமானே! (ஒரு விண்ணப்பம்.) ஏராளமான மரங்கள் அடர்ந்ததும், நீர்வளமுள்ளதும், ஆசிரமம் அமைத்துக் கொண்டு கவலையில்லாமல் சுகமாகக் காலங்கழிக்கத் தகுந்ததுமான ஓர் இடத்தை, எனக்குக் காட்டியருள வேண்டும்.'' இராமனுடைய சொற்களைக் கேட்ட ஆத்மஞானியும் தருமாத்மாவுமான முனிபுங்கவர் சிறிது நேரம் உள்முகமாகச் சிந்தித்துவிட்டு, (எதிர்காலத்தில் நிகழவிருப்பவைகளை உணர்ந்து) மிக்கக் கம்பீரமான சொற்களைக் கூறினார்— (9–12)

''செல்வமே! இங்கிருந்து இரண்டு யோஜனை தொலைவில் நிறைய கிழங்கு–பழம்–தண்ணீர் வசதியுடையதும், பலவகை மான்கள் வசிப்பதும், செழுமையானதுமான 'பஞ்சவடி' என்று புகழ்பெற்றப் பிரதேசம் இருக்கிறது. அவ்விடத்திற்குச் சென்று, ஆசிரமக் குடில்கள் அமைத்துக் கொண்டு, லட்சுமணனுடன் தந்தையினால் கூறப்பட்டபடியே உத்தரவைக் கைக்கொண்டு சுகமாக நீ வசிப்பாய். இராகவா! மன்னர் தசரதனால் கூறப்பட்ட காலகெடுவில் (பதிநான்கு ஆண்டுகளில்) பெரும் பகுதி கழிந்துவிட்டது. காகுத்தனே! பிரதிக்ஞையை நிறைவேற்றிவிட்டு, நீ சுகமாக ராஜ்யத்தில் வசிக்கப் போகிறாய். ரகுநந்தனா! உன்னைப் பெற்ற மன்னர், மூத்த மகனால் உய்விக்கப்பட்ட யயாதியைப் போல மிகவும் பாக்கியசாலி. (13–16)

தூயவனே! உன்னுடையவும் தசரதனுடையவுமான எல்லா நிகழ்ச்சிகளும், என்னுடைய தவத்தின் மகிமையினாலும் உன்னிடமுள்ள பேரன்பினாலும் எனக்குத் தெரிந்தவைதான். என்னுடன் நீ இந்தத் தபோவனத்திலேயே மீதிக் காலத்தைக் கழிக்கலாம் என்று நினைத்தேன். (ஆனால், இப்போது, நீ வேறு இடம் சென்று வசிக்க விருப்பம் கொண்டுள்ளாய்.) என் தவத்தின் மகிமையால், உன் உள்ளத்தில் இருக்கும் நோக்கத்தை, நான் புரிந்து கொண்டேன். அதனால்தான், 'பஞ்சவடிக்குச் செல்' என்று நான் கூறுகிறேன். மனங்கவரும் அந்த வனப்பகுதியில் மைதிலி இன்பமாகப் பொழுதைக் கழிப்பாள். (17–19)

போற்றத்தக்க அந்த இடம் அருகில்தான் இருக்கிறது. கோதாவரியின் கரையில் அமைந்துள்ள அந்த இடத்தில் மைதிலி இன்பமாகப் பொழுதைக் கழிப்பாள். பழம்–கிழங்குகள் குறைவில்லாமல்

கிடைக்கும்; பலவகையான, சாதுவான விலங்குகள் சுற்றித் திரியும்; தனிமையான இடம். பெருந்தோளனே! மேலும், அந்த இடம் புனிதமானது; அழகானதும்கூட. நீ, மனைவியோடு இருப்பவன்; அவளைப் பாதுகாக்கும் வல்லமை உடையவன். இராமா! நீ அங்கே வசித்துக் கொண்டு தபஸ்விகளைக் காப்பாற்றுவாயாக. ('சீதையைப் பாதுகாக்க வல்லவன்' என்ற சொற்களில், 'சீதாபஹரணம்' என்ற அவதார ரகசியம் சூசகமாகக் கூறப்படுகிறது – என்பது, பேரறிஞர்கள் கருத்து.) (20–22)

வீரனே! இதோ தென்படும் இலுப்பை மரக் காட்டைப் பார். அதன் வடக்கு வழியாகப் போனால் ஓர் ஆலமரத்தைக் காண்பாய். அதைத் தாண்டி ஒரு மேடு இருக்கிறது. அதனைக் கடந்து சென்றால், ஒரு மலை காணப்படும். அதனருகில் எப்போதும் மலர்களைக் கொண்ட காட்டுப் பிரதேசமான பஞ்சவடி என்று புகழ்பெற்ற இடம் இருக்கிறது.'' அகஸ்தியர் இவ்வாறு கூறி முடித்தவுடன், இராம–லட்சுமணர்கள் சத்தியசந்தரான அவரை வணங்கி விடைபெற்றுக் கொண்டார்கள். (23–25)

அவரால் விடைகொடுக்கப்பட்ட அவ்விருவரும், அவருடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கிவிட்டு, அந்த ஆசிரம வளாகத்திலிருந்து சீதையுடன் பஞ்சவடியை நோக்கிச் சென்றார்கள். போர்களில் பின்வாங்காத அரசகுமாரர்களான அவ்விருவரும், முதுகில் அம்புறாத்தூணியைக் கட்டிக் கொண்டு, கைகளில் வில்லினை ஏந்தி, மன உற்சாகத்துடன், மாமுனிவர் காட்டிய வழியில் பஞ்சவடியை நோக்கி நடந்தார்கள். (26,27)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
பதின்மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பதிநான்கு
ஜடாயுவைக் காணுதல்

பஞ்சவடியை நோக்கிப் போய்க் கொண்டிருக்கும்போது, வழியில், பெரிய உடலை உடையதும் நடுங்க வைக்கும் பராக்கிரமம் கொண்டதுமான ஒரு கழுகினைப் பார்த்தார், இராமன். பெரும் புகழ்பெற்றவர்களான இராம–லட்சுமணர் ஆகிய இருவரும், ஆலமரத்திலிருக்கும் அந்தப் பறவையை ஓர் அரக்கன் என்று கருதி, ''நீ, யார்?'' என்று கேட்டார்கள். அந்தக் கழுகு, அவர்கள் இருவருக்கும் அன்பு ஏற்படும்படியான இனிய, பாசம் மிகுந்த குரலில், ''குழந்தாய்! நான், உன்னுடைய தந்தையின் நண்பன் என்பதை அறிந்து கொள்'' என்றது. 'அது, தன் தந்தையின் தோழன்' என்பதை அறிந்து கொண்ட இராமன், அதனை மிகவும் போற்றினார். பின்னர், சாந்த மனத்துடன் அதனுடைய குலம், பெயர் முதலியவற்றைப் பற்றிக் கேட்டார். (1–4)

இராமனுடைய சொற்களைக் கேட்ட அது, தன்னைப் பற்றியும், தன் குலத்தைப் பற்றியும் கூறிவிட்டு, சகல ஜீவராசிகளின் உற்பத்தியைப் பற்றியும் கூறவாரம்பித்தது— ''மகாவீரனே! பண்டைய காலத்தில் யார் யார் பிரஜாபதிகளாக இருந்தார்களோ, அவர்களை வரிசைப்படி சொல்கிறேன், கேள்! அவர்களில் (பிரஜாபதிகளில்) முதலாமவர் கர்தமர்; அதன் பிறகு விக்ரீதர்; பின்னர், சேஷன், ஸம்ச்ரயன், பராக்கிரமசாலியான பகுபுத்திரன் (என்பவர்கள் மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது பிரஜாபதிகளாக இருந்தார்கள்). (தொடர்ந்து) ஸ்தாணு, மரீசி, அத்ரி, மகாபலம் பொருந்திய கிரது, புலஸ்தியர், ஆங்கிரஸ், பிரசேதஸ், புலஹர் (முதலியோர் பிரஜாபதிகளாக இருந்தார்கள்). (5–8)

(பின்னர், முறையே) தக்ஷர், விவஸ்வான், அரிஷ்டநேமி, மகாதேஜஸ்வியான கசியபர் ஆகியோர் பிரஜாபதிகளாக இருந்தார்கள். இராகவா! இவர்தான் பிரஜாபதிகளில் கடைசியானவர்.

பெரும்புகழ் பெற்ற இராமனே! இவர்களில் தக்ஷ பிரஜாபதிக்கு, மிகவும் கீர்த்தி வாய்ந்த அறுபது புதல்விகள் பிறந்தார்கள் என்று சொல்லப்படுகிறது. அழகான அந்தப் பெண்களில் அதிதி, திதி, தனு, காலிகா, தாம்ரா, க்ரோதவசா, மனு, அநலா என்ற எண்மரைக் கசியபர் மணந்து கொண்டார். பின்னர், மிகவும் சந்தோஷமடைந்த கசியபர், அந்தப் பெண்களைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார்— (9–12)

'மூன்று உலகங்களையும் காப்பாற்றும் திறனுடையவர்களும் என்னைப் போன்றவர்களுமான புதல்வர்களைப் பெறப் போகிறீர்கள்.' இராமா! அதிதி, திதி, தனு, காலிகா ஆகிய நால்வரும் அதற்கு சம்மதித்தார்கள்; மற்றவர்கள் உடன்படவில்லை. பெருந்தோளனே! அதிதியினிடத்தில் முப்பத்து மூன்று தேவர்கள் பிறந்தார்கள். (பன்னிரண்டு) ஆதித்யர்கள், (எட்டு) வசுக்கள், (பதினோரு) ருத்ரர்கள், (இரண்டு) அசுவினி தேவர்கள். (ஆக மொத்தம், முப்பத்து மூன்று.) குழந்தாய்! திதி என்பவள் தைத்யர்கள் என்ற பெயர் பெற்ற மக்களை ஈன்றெடுத்தாள். முன்னொரு காலத்தில், காடுகள்–கடல்கள் சூழ்ந்த இம்மண்ணுலகம் முழுவதும் அவர்கள் ஆதிக்கத்தில் இருந்தது. எதிரிகளை அடக்குபவனே! தனு என்பவள், அசுவக்ரீவன் என்ற மகனைப் பெற்றாள். (13–16)

காலிகா என்பவள் நரகன், காலகன் என்ற இரு மகன்களைப் பெற்றாள். கிரௌஞ்சி, பாஸீ, ஸ்யேநீ, த்ருதராஷ்ட்ரீ, சுகி ஆகிய பெண்களை தாம்ரா என்பவள் பெற்றெடுத்தாள். இவர்கள் ஐவரும் உலகப் பிரசித்தி பெற்றவர்கள். கிரௌஞ்சி என்பவள் கோட்டான்களைப் பெற்றாள்; பாஸீ என்பவள் கோழிகளைப் பெற்றெடுத்தாள்; ஸ்யேநீ என்பவள் மிகவும் ஆற்றல் படைத்த பருந்துகளையும் கழுகுகளையும் பெற்றாள்; த்ருதராஷ்ட்ரீ என்பவள் எல்லா வகையான அன்னப்பறவைகளையும் கலஹம்ஸங்களையும் ஈன்றெடுத்தாள். (17–19)

அதே மங்கை நல்லாள், சக்ரவாகப் பறவைகளையும் பெற்றாள். இராமனே! உனக்கு நலம் உண்டாகுக. சுகி என்பவள் நதை என்ற பெண்ணைப் பெற்றாள்; நதையின் மகள், வினதை. இராமா! க்ரோதவசா என்பவள் ம்ருகி, ம்ருகமந்தா, ஹரி, பத்ரமதா, மாதங்கி, சார்தூலீ, ஸ்வேதா, சுரபி, எல்லா லட்சணங்களும் பொருந்திய சுரஸா, கத்ரு ஆகிய பத்துப் பெண்களை ஈன்றாள். (20–22)

மனிதருள் மாணிக்கமே! எல்லா விலங்குகளும் ம்ருகியின் வழித்தோன்றல்கள். கரடி, ஸ்ருமரம் மற்றும் சமரி என்ற மான்கள் ஆகியன ம்ருகமந்தா பெற்றெடுத்தவை. ஹரி என்பவளுக்கு சிங்கங்களும் ஆற்றல் மிகுந்த குரங்குகளும் மகவாகப் பிறந்தார்கள். பத்ரமதா என்பவள், இராவதி என்ற பெண்ணைப் பெற்றெடுத்தாள். மாமனிதரே! உலகத்தைத் தாங்கும் பெரும் யானையாகிய ஐராவதம், அவளுடைய புதல்வன். அவ்வாறே, மற்ற எல்லா யானைகளும் மாதங்கியின் வழித்தோன்றல்களே. காகுத்தனே! சார்தூலீ என்பவள், கோலாங்கூலமென்ற வகையைச் சேர்ந்த குரங்குகளையும் புலிகளையும் புதல்வர்களாகப் பெற்றெடுத்தாள். ஸ்வேதா என்பவள் திசைக்காவலர்களான யானைகளைப் பிள்ளைகளாகப் பெற்றாள். (23–26)

இராமா! உனக்கு நலமே உண்டாகுக. சுரபி என்பவள் இரண்டு பெண்களை, அதாவது ரோகிணி என்ற பெயருள்ளவளையும் புகழ்பெற்றவளான கந்தர்வி என்பவளையும் பெற்றாள். இராமா! ரோகிணி பசுக்களைப் பெற்றெடுத்தாள்; கந்தர்வி குதிரைகளை மகன்களாகப் பெற்றாள்; சுரஸா என்பவள் (படம் எடுக்கும் நாகர் என்ற இனத்தைச் சேர்ந்த) பாம்புகளைப் பெற்றாள். கத்ரு என்பவள் (படம் எடுக்காத இனத்தைச் சேர்ந்த) பன்னகம் என்ற சர்ப்பங்களைப் பெற்றாள். (27,28)

மனிதரேறே! இராமா! மனு என்பவள் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்று பெயர் பெற்ற மனிதர்களைப் புதல்வர்களாக ஈன்றெடுத்தாள். அநலா என்பவள் நல்ல பழங்களைக் கொடுக்கக் கூடிய எல்லா மரங்களையும் உண்டாக்கினாள். (கசியபருடைய மனைவியான தாம்ரா

என்பவளின் புத்ரி, சுகி.) சுகியினுடைய பேத்தி, வினதை; கத்ரு என்பவள் சுரஸாவின் சகோதரி. கத்ரு என்பவள், இந்த மண்ணுலகைத் தாங்கும் ஆயிரம் முகம் படைத்த (ஆதிசேஷன் என்ற) நாகத்தைப் பெற்றாள். வினதைக்கு கருடன்–அருணன் என்று இரு புத்திரர்கள். (29–31)

எதிரிகளை அடக்குபவனே! அந்த அருணனிடமிருந்து நான் பிறந்தேன். சம்பாதி என்பவர் எனக்கு முன் பிறந்தவர். நான், ஸ்யேநீ புத்திரனான ஜடாயு என்பதை அறிந்து கொள். செல்வமே! நீ விரும்பினால், உன்னுடைய இந்த வாசஸ்தலத்தில் நான் உனக்கு உதவியாளனாக இருப்பேன். உள்ளே புகமுடியாத இந்தக் காட்டில் கொடிய விலங்குகளும் அரக்கர்களும் இருக்கிறார்கள். மைந்தனே! நீ, இலக்குவனுடன் வெளியே செல்லும் காலங்களில் நான் சீதையைப் பாதுகாப்பேன்.'' (32,33)

நிகரில்லா ஆற்றல் பெற்ற இராமன், மிக்க மகிழ்ச்சியுடன் ஜடாயுவைக் கொண்டாடி, மார்புற அணைத்துக் கொண்டு பணிவுடன் வணங்கினார். தந்தையுடன் ஏற்பட்ட நட்பைப் பற்றி, ஜடாயு பல தடவை எடுத்துக் கூற, அதைக் கவனமாகக் கேட்டார். அவர் (இராமன்), அவ்விடத்திலேயே மிதிலைத் திருமகளாகிய சீதையை (ஜடாயு) பாதுகாக்க ஒப்புக் கொண்டார். (பின்னர்,) பேராற்றல் கொண்ட அந்தப் பட்சியுடனும் சீதையுடனும் லட்சுமணனுடனும்கூட பஞ்சவடியை நோக்கிச் சென்றார். (அங்கிருந்தபடியே) நெருப்பு, விட்டிற்பூச்சிகளைப் பொசுக்கி அழிப்பதைப் போல, (முனிவர்களின்) விரோதிகளை (அரக்கர்களை) ஒழித்துக் கட்டலாம் எனக் கருதினார். (34,35)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
பதிநான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பதினைந்து

பஞ்சவடியில் பர்ணசாலை அமைத்தல்

பின்னர், பலவகையான கொடிய விலங்குகள் நிறைந்த பஞ்சவடியை அடைந்து, சுடர்மிகு ஆற்றல் படைத்த தம்பி இலக்குவனைப் பார்த்து, இராமன் சொன்னார்— (1)

''அன்புத் தம்பியே! மாமுனிவரால் குறிப்பிட்டுச் சொல்லப்பட்ட அதே இடத்திற்கு நாம் வந்து விட்டோம். மலர்கள் நிறைந்த மரங்கள் அடர்ந்த இந்தப் பிரதேசம்தான், பஞ்சவடி. எல்லாத் திசைகளிலும் பார்வையைச் செலுத்திப் பார். நீதான் காட்டுப் பகுதியில் சுற்றியலைந்து விபரம் அறிந்தவனாயிற்றே! எந்த இடத்தில் ஆசிரமம் அமைத்தால் நமக்குச் சௌகரியமாக இருக்குமோ, அப்படிப்பட்ட இடத்தைப் பார். லட்சுமணா! நீர்நிலை அருகில் இருக்கக் கூடியதும், எந்த இடத்தில் சீதை மகிழ்ச்சியாக இருப்பாளோ, அதேபோல் நீயும் நானும் உகப்புடன் இருப்போமோ, அப்படிப்பட்டதான ஓர் இடத்தைத் தேடிக் கண்டுபிடி. அந்த இடம், மரங்கள் அடர்ந்து அழகாக இருக்க வேண்டும்; நீர்வளம் உள்ளதாக இருக்க வேண்டும்; அருகிலேயே சமித்து, மலர்கள், தர்பை, நல்ல தீர்த்தம் கிடைக்கும்படியாக இருக்க வேண்டும்.'' (2–5)

இவ்வாறு இராமன் கூறி முடித்ததும், லட்சுமணன் கைகளைக் கூப்பிக் கொண்டு, சீதையின் எதிரில், காகுத்தனைப் பார்த்துப் பின்வருமாறு கூறினான்— ''இராமா! நான் காலமெல்லாம் தங்கள் அடிமையாக இருப்பவன். (அதனால், 'உனக்குப் பிடித்தமான இடத்தைத் தேர்ந்தெடு' என்று தாங்கள் கூறுவது முறையல்ல.) எந்த இடத்தில் தங்கள் மனம் ஈடுபடுகிறதோ, அதைச் சுட்டிக்காட்டி, 'இங்கே பர்ணசாலையைக் கட்டு' என்று எனக்கு ஆணையிடுங்கள்.'' நல்ல உள்ளம் படைத்த இலக்குவனுடைய சொற்களைக் கேட்டு மனத்திருப்தியடைந்த அவர், அங்குமிங்கும் தேடி, எல்லா சௌகரியங்களும் நிறைந்த ஒரு பிரதேசத்தை 'சரியான இடம்' என்று தீர்மானித்தார். (6–8)

ஆசிரமம் கட்டுவதற்கு ஏற்றதான, கண்ணுக்கினிய அந்த இடத்திற்குச் சென்று, லட்சுமணனுடைய இரு கைகளையும் தன் இருகைகளால் பிடித்துக் கொண்டு இராமன் கூறினார்— "தம்பி! இந்த இடம் சமதளமாக இருக்கிறது. பூத்த மலர்களுடன் கூடிய மரங்கள் நிறைந்து அழகாக விளங்குகிறது. நீ, இந்த இடத்தில் (ஆசிரமம் கட்டும் முறைகளை விளக்கும் நூல்களில் கூறப்பட்டுள்ள) முறைப்படி ஆசிரமத்தைக் கட்டுவாயாக. அருகில், சூரியனைப் போல் ஒளிவீசுகின்றவைகளும், மனத்திற்குகந்த நறுமணம் கமழ்பவைகளுமான தாமரைப் பூக்களால் அழகாக விளங்கும் தாமரை ஓடை காணப்படுகிறது. ஆத்மஞானியான அகஸ்திய முனிவரால் கூறப்பட்டபடி, மலர்கள் நிறைந்த மரங்களால் சூழப்பட்ட நேர்த்தியான கோதாவரி நதி, இதுவேதான். (9–12)

அன்னம், நீர்க்காக்கை, சக்ரவாகம் முதலிய பறவைகளால் கண்ணுக்கு இனிதாக இருக்கிறது. அத்துடன், (இந்த நதி, நாம் ஆசிரமம் அமைக்கப் போகும் இடத்திலிருந்து) அதிகத் தொலைவிலும் இல்லை; அருகிலும் இல்லை. மான்களின் கூட்டம் அடிக்கடி வந்து போகிற இடமாகவும் இருக்கிறது. செல்வனே! மயில்களின் அகவல்கள் செவிக்கு இனிமையாக இருக்கின்றன; உயர்ந்த மலைகளில், மலர்கள் பூத்த மரங்களால் மறைக்கப்பட்ட பல குகைகள் காணப்படுகின்றன. மலைகளில், ஆங்காங்கே, தங்கம்–வெள்ளி–தாமிரமயமான தாதுக்களைக் காணும்போது, மிகச்சிறந்த சித்திர வடிவங்களால் அழகாக அலங்கரிக்கப்பட்ட யானைகள் போல் பிரகாசிக்கின்றது. (13–15)

ஆச்சா, பனை, தமாலம், பேரீச்சை, பலா, மா, நீர்க்கடம்பு, தினிசி, புன்னாகம், தேன் மா, அசோகம், மஞ்சாடி, சம்பகம், தாழை, சந்தனம், ஸ்பந்தம், நிலைக்கடம்பு, கறுப்புக் கஞ்சாங்கோரை, எலுமிச்சை, தவம், அசுவகர்ணம், கருங்காலி, வன்னி, முள் முருங்கை, பாதிரி முதலியவைகளாலும், இன்னும் பல மலர்தரு மரங்களோடும், புதர்களோடும் இந்த இடம் அழகாக விளங்குகிறது. சுமித்திரையின் மைந்தனே! இந்த இடம் புனிதமாக இருக்கிறது; பரிசுத்தமாகவும் இருக்கிறது. இவ்விடத்தில் பல மான்களும் பறவைகளும் வசித்து வருகின்றன. (ஆகவே,) இந்தப் பறவையுடன் (ஜடாயுவுடன்) இங்கே வசிப்போம்." பகைவரை வெல்பவனும், மிக்கப் பராக்கிரமம் உடையவனுமான இலக்குவன், இராமன் மேற்கண்டவாறு கூறியவுடன், தமையனுக்காக ஆசிரமத்தை விரைவில் கட்டி முடித்தான். (16–20)

எந்தப் பணியையும் எளிதாகச் செய்யும் அவன், இராகவனுக்காக, ஒப்புயர்வற்றதும், கண்குளிரப் பார்க்கத்தக்கதும் விசாலமானதுமான பர்ணசாலையை இருப்பிடமாகக் கட்டிக் கொடுத்தான். மண்சுவர் எடுக்கப்பெற்று, உறுதியான மூங்கில்களால் தூண்களை நாட்டி, மேலே விட்டங்களை இறுகப் பிணைத்து, வன்னிமரக் கிளைகளை அதன்மேல் பரப்பி, கெட்டியான கயிற்றால் கட்டி, தர்பை–கோரை–நாணல்களைப் பரப்பி, மேற்கூரை நன்றாக மூடப்பட்டதாக ஆக்கினான். அவ்வாறே, தரையும் சமமாகச் செய்யப்பட்டது. (21–23)

(இவ்வளவு சிறப்பாக ஆசிரமத்தைக் கட்டி முடித்த பின்னர்,) தொண்டர் திலகமான இலக்குவன், கோதாவரி நதிக்குச் சென்று நீராடி, பழங்களையும், தாமரை மலர்களையும் பறித்துக் கொண்டு திரும்பவும் (ஆசிரமத்திற்கு) வந்தான். பின்னர், சாஸ்திர நூல்களில் சொல்லப்பட்டபடி, தேவதைகளுக்கு மலர்களால் பலி–பூஜை செய்து, வாஸ்து சாந்தி சடங்கைச் செய்து, தன்னால் கட்டி முடிக்கப்பட்ட ஆசிரமத்தை இராமபிரானுக்குக் காட்டினான். அழகாகக் கட்டி முடிக்கப்பட்டிருந்த அந்த ஆசிரமத்தை, சீதாப் பிராட்டியாருடன் சென்று பார்த்த இராமன், அந்தக் குடில் நன்றாக அமைக்கப்பட்டிருந்ததைக் கண்டு, தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். (24–26)

அப்போது, அவர் உள்ளம் பூரித்தவராக, இரு கரங்களாலும் மிகுந்த பாசத்துடன் இலக்குவனைக் கட்டித் தழுவிக் கொண்டுப் பின்வருமாறு கூறினார்— "செயல்திறனுடைய வீரனே! (ஆசிரமத்தைக் கண்டு) நான் மனத்திருப்தியுடன் இருக்கிறேன்; மிகப்பெரிய காரியம்

உன்னால் செய்யப்பட்டிருக்கிறது. அதற்கேற்ற கைமாறாக (தற்போது) என்னிடம் ஏதுமில்லாததால், இவ்வாறு உன்னைத் தழுவிக் கொள்கிறேன். லட்சுமணா! என் மனவோட்டத்தைத் தெரிந்து கொண்டு செயல்படுபவனும் நன்றியுடையவனும் அறம் அறிந்தவனுமான மைந்தன் நீ இருக்கும்போது, (என் நலனில் நாட்டமுடைய, என் தந்தையைப் போல் நீ என் அருகில் இருக்கும்போது) என் தந்தை இறந்துவிட்டதாக எனக்குத் தோன்றவில்லை.'' (27–29)

செழுமையை வளர்க்கும் இலக்குவனிடம் இவ்வாறு கூறிய ஜிதேந்திரியரான இராமன் பலவித சௌகரியங்களோடு கூடிய அந்தப் பிரதேசத்தில், மிக மகிழ்ச்சியோடு வசிக்கத் தொடங்கினார். அறத்தின் நாயகரான இராமன், (அந்த இடத்தில்) சீதையாலும் இலக்குவனாலும் பணிவிடை செய்யப்பட்டவராக, தேவலோகத்தில் இந்திரன் போல், (இடையூறுகள் ஏதுமில்லாமல்) சிறிது காலம் வசித்தார். (30,31)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
பதினைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பதினாறு

ஹேமந்த ருது வர்ணனை

மகாத்மாவாகிய இராமன் (அவ்விடத்தில்) சுகமாக வசித்துக் கொண்டிருக்கையில் சரத்காலம் கழிந்து, (மக்களுக்குப்) பிரியமான ஹேமந்த ருது தொடங்கிற்று. ஒரு நாள், இரவு வேளை முடிந்து பொழுது புலரும் நேரத்தில், நீராடுவதற்காக மனம் கவரும் கோதாவரி நதிக்குச் சென்றார், ரகுநந்தனன். மிகவும் பலசாலியான லட்சுமணன், மிக்க வணக்கத்துடன் கையில் குடத்தை எடுத்துக் கொண்டு, சீதையுடன் அவரைப் பின்தொடர்ந்து சென்றவாறே பின்வருமாறு கூறினான்— (1–3)

''இனிமையாகப் பேசுபவரே! இப்போது தங்களுக்குப் பிடித்தமான ஹேமந்த ருது வந்திருக்கிறது. அதனால், இந்த ஆண்டு முழுவதும் மங்களமாகப் பிரகாசிப்பது போல் விளங்குகிறது. இந்த ருது காலத்தில் அதிகமான பனிக்குளிர் காரணமாக உடல் விறைத்துப் போகிறது; விளைநிலங்களில் பயிர்கள் செழித்து வளர்கின்றன; தண்ணீர் மிகவும் குளிர்ந்திருப்பதால் உபயோகிக்க முடியாமல் இருக்கிறது; நெருப்பின் வெம்மை உடலுக்கு இதமாக இருக்கிறது. சான்றோர்கள், புதிய (தானியங்களைக் கொண்டு) ஆக்ராயணம் என்ற பாகயக்ஞத்தைச் செய்து, பித்ருதேவதைகளைத் திருப்தி செய்து, பாவங்களிலிருந்து விடுபடுகிறார்கள். (4–6)

மக்கள் அதிக அளவில் உணவுக்கான பொருள்களையும் பால், தயிர், நெய் போன்று பசுக்களிடமிருந்து கிடைக்கப்பெறும் பொருள்களையும் அடைகிறார்கள். பிற நாடுகளை வெற்றி கொள்ள விரும்பும் மன்னர்கள் (நால்வகைப் படையுடன், தம் நாட்டை விட்டுப் புறப்பட்டு) வெளிநாடுகளில் பிரயாணம் செய்கிறார்கள். யமதேவனால் பரிபாலிக்கப்படும் தென்திசையில், சூரியபகவான் பூரணமாகச் சென்றிருக்கிறார். அதனால், வடதிசை நெற்றித்திலகமிடாத மங்கை போல சோபையில்லாதிருக்கிறது. இயற்கையாகவே பனிக்கட்டிகளால் மூடப்பட்டிருக்கும் இமயமலை, தற்போது சூரியன் (அந்த மலையிலிருந்து) வெகுதூரத்திற்குச் சென்றுவிட்டபடியால், 'பனிமலை' என்ற பெயரை உண்மையாக்கிக் கொண்டிருக்கிறது. (7–9)

சூரியன், நடுப்பகலில் சுகமான வெம்மையைத் தருகிறான். அதனால், அங்குமிங்கும் சுற்றித் திரிய முடிகிறது. பகல்பொழுதிலும் (கண் கூசாமல்) சூரியனை நன்றாகப் பார்க்க முடிகிறது. ஆனால், (குளிர்ந்திருப்பதால்) நிழலும் நீரும் அணுக முடியாதவைகளாக இருக்கின்றன. இப்போது

பகல்பொழுதுகளில், சூரியன் வெம்மையான கிரணங்கள் இல்லாததாக இருக்கிறது. பனியுடன் கூடிய, அதிகக் குளிருள்ள காற்றினாலும் பனியினாலும் தாக்கப்பட்டவைகளான காடுகளில், பிராணிகள் வெளியில் சஞ்சரிக்காமல் மறைந்து வாழ்கின்றன. இப்போது, இரவுபொழுது வெட்டவெளியில் படுக்க முடியாதவையாகவும், பனியினால் ஒளிகுன்றிய புஷ்ய சந்திரனை உடையவையாகவும், மிகவும் குளுமையான நீண்ட பொழுதுள்ளவையாகவும் கழிகின்றன. (10–12)

(இந்த ஹேமந்த ருது காலத்தில்) பனி காரணமாக சந்திரனின் ஒளி குன்றியதால், மூச்சுக்காற்றால் ஒளிமங்கிய கண்ணாடி போல், அதனுடைய ஒளி சூரியனிடம் சென்றடைந்து விட்டதைப்போல் தெளிவில்லாமல் இருக்கிறது. பனியால் ஒளி குன்றிய நிலவு, பௌர்ணமியன்று கூட முழுப் பிரகாசத்துடன் விளங்கவில்லை; கடுமையான வெய்யிலினால் உடல் வண்ணம் குன்றிய சீதாப்பிராட்டியார் போல் (ஒளிகுன்றிக்) காணப்படுகிறது. இயற்கையாகவே, குளிர்ச்சியுடன் வீசும் மேல்காற்று, இந்தப் பருவ காலத்தில், பனியினால் குளிர் அதிகரிக்கப் பட்டதாக, இரண்டு மடங்கு குளிர்ச்சியுடன் வீசுகிறது. யவம், கோதுமை பயிரிடப்பட்டுள்ள நிலங்கள் மூடுபனியால் மறைக்கப்பட்டுள்ளன. சூரியோதய காலத்தில் கிரௌஞ்சம், ஸாரஸம் ஆகிய பறவைகள் கூவும் போது காடுகள் அழகாக விளங்குகின்றன. (13–16)

நெற்கதிர்களில் பூரணத்தன்மையை அடைந்துவிட்டது; நெற்பயிர்கள், பேரீச்சம்பூவின் வடிவத்திற்குப் பெரிதாக வளர்ந்து, கதிர்கள் பொன்னிறம் பெற்று, (அவற்றின் கனம் தாங்க முடியாமல்) சற்றே தலைசாய்ந்தவைகளாக விளங்குகின்றன. உதித்துவிட்ட சூரியன், பனி–மூடுபனியால் சூழப்பட்டு, பரவி வரும் கிரணங்களால், வெகுதூரத்தில், சந்திரன் போல் (கண்ணுக்கு இதமாகக்) காணப்படுகிறான். (இந்தக் காலத்தில்) வெய்யில் பூமியில் படும்போது, வெண்மையும் செம்மையும் சிறிதளவு கலந்ததாக இருக்கிறது; காலை வேளைகளில் வெம்மை இல்லாமலும், நண்பகல் நேரத்தில் சுகமாக அனுபவிக்கத் தக்கதாகவும் இருக்கிறது. காடுகளின் தரையில் வளர்ந்துள்ள புல்புதர்கள் மீது பனித்திவலைகள் படிந்திருப்பதால், புற்கள் நனைந்து, சூரியோதயம் ஆனவுடன் வெளிப்படும் இளம் வெய்யிலில் வனப்புடன் விளங்குகின்றன. (17–20)

மிகவும் தாகத்தால் தவிக்கும் காட்டு யானை, (நீர்நிலையைக் கண்டவுடன்) மகிழ்ச்சியுடன் தண்ணீரை (அருந்துவதற்காக)த் தொடும்பொழுது, குளிர்ச்சி தாங்காமல் தன் தும்பிக்கையை(த் தண்ணீரிலிருந்து) திருப்பி இழுத்துக் கொள்கிறது. தைரியமில்லாதவர்கள் போர்க்களத்திற்குள் சென்று போரிடாமல் ஓரமாக ஒதுங்கி நிற்பதைப் போல, நீரில் வாழும் இந்தப் பறவைகள், தண்ணீரின் அருகே (நீர்நிலையின் கரைகளில்) உட்கார்ந்து கொண்டிருக்கின்றன; (தண்ணீரின் குளிர்ச்சிக்குப் பயந்து,) அதில் மூழ்கி விளையாடவில்லை. இந்தக் காட்டுப் பகுதிகள், இரவில் பனிப்பொழிவிலும் இருளிலும் மூழ்கி, சூரிய உதய காலத்தில் மூடுபனியினாலும் மறைக்கப்பட்டு, மரங்களில் மலர்களும் இல்லாமல், பெருந்தூக்கத்தில் சூழ்ந்துள்ளவை போல் காணப்படுகின்றன. (21–23)

இப்போது ஆறுகளில் தண்ணீர் ஓட்டம் (நம் கண்ணுக்குப் புலப்படாதவாறு) மூடுபனியால் மறைக்கப்பட்டிருக்கிறது. நீர்ப் பறவைகளான ஸாரஸங்களை அவற்றின் குரல் ஒலியினாலேயே அறிந்து கொள்ள முடிகிறது. நதியின் கரைகளில் உள்ள மணல், பனிப்பொழிவினால் ஈரமாக்கப்பட்டிருப்பதால் மட்டுமே, 'இங்கே நதி இருக்கிறது' என்று உணர்ந்து கொள்ள முடிகிறது. (நீரோட்டம் கண்ணுக்குத் தெரியாத அளவுக்குக் கனத்த பனிமூட்டம்.) தூயதான பாறைகளில் அமைந்துள்ள சுனைகளில் இருக்கும் தண்ணீர், பனி பெய்வதாலும், சூரியனின் வெம்மைக் குறைவாலும், குளிர்ச்சியான காற்றினாலும் முற்றிலும் ஏற்கத் தகாத விஷம் போல் இருக்கிறது. நெடுநாள் (தண்ணீரில்) இருந்துவிட்டதால், (தாமரைக்கொடியின்) இலைகள் கிழிந்துவிட்டன; மலரின் நடுவிலுள்ள கேசரங்கள் பனியால் உதிர்ந்துவிட்டன; மிகுந்திருப்பது, தாமரைத் தண்டு மட்டுமே! எனவே, தாமரைத் தடாகங்கள் பிரகாசமாக இல்லை. (24–26)

(அண்ணா!) இந்த நாட்களில், பராக்கிரமம் மிக்கவரும், தங்கள் பிரிவால் துயரப்பட்டுக் கொண்டிருப்பவரும் தருமாத்மாவுமான பரதன், தங்களிடமுள்ள ஆழ்ந்த பக்தியால், பட்டணத்தில் தவநெறியை மேற்கொண்டு வாழ்கிறார். அரசு அதிகாரத்தையும், கௌரவத்தையும், பலவகையானவைகளும் எண்ணற்றவைகளுமான சுகபோகங்களையும் துறந்து, உணவுக் கட்டுப்பாட்டுடன் தவம் செய்து கொண்டு, குளிர்ச்சியான மண் தரையில் படுத்துக் கொண்டிருக்கிறார். அவரும், இந்த வேளையில் ஆற்றில் நீராடும் பொருட்டு, அமைச்சர்களும் பிற குடிமக்களும் புடைசூழ, நாள்தோறும் சரயூ நதிக்குப் போய்க் கொண்டிருப்பாரல்லவா? மிகவும் சௌக்கியமாக வளர்ந்தவரும் மென்மையான உடல்வாகு உடையவருமான அவர், இரவின் கடைசி யாமத்தின் பனியால் தாக்கப்பட்டவராக, சரயூ நதியில் எவ்வாறு தலைமூழ்கி நீராடுவார்? ஐயோ! (27–30)

தாமரையிதழ் போன்ற கண்கள்; வீரர்; சியாமள வண்ண மேனியர்; உள்ளடங்கிய வயிறுடையவர்; உயர்ந்த நோக்குடையவர்; அறம் அறிந்தவர்; சத்தியம் பேசுபவர்; அறநூல்களில் 'செய்யத்தகாதன' என்று கூறப்பட்டவைகளைச் செய்வதற்கு வெட்கப்படுபவர்; புலன்களை வென்றவர்; தானே முன் வந்து முதலில் உரையாடலைத் தொடங்குபவர்; இனிய மொழியுடையவர்; நீண்ட கைகளை உடையவர்; பகைவர்களை அடக்குபவர் – இப்படிப்பட்ட சிறப்புகளை உடைய அவர் (பரதன்), பல்வகையான போக–போக்கியங்களைத் துறந்து, முற்றிலுமாகத் தங்களையே அண்டியிருக்கிறார். (31,32)

காட்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் தங்களைப் பின்பற்றி (நகரத்திலுள்ள) நம்முடைய சகோதரர் பரதனும் தவவாழ்க்கையை மேற்கொண்டு வருவதால், சுவர்க்கம் அவரால் வெல்லப்பட்டதாகிறது. (அவருக்கு நிச்சயமாக சுவர்க்கம் கிடைக்கும்.) 'அநேகமாக பிள்ளைகள் தாயாரின் குண இயல்புகளையே அடைகிறார்கள்; தந்தையின் குணங்களை அடைவதில்லை' என்ற இந்தப் பிரபலமான உலக வழக்கு பரதனால் பொய்யாக்கப்பட்டுவிட்டது. தசரதன் போன்ற ஒரு மாமனிதர், கணவர்; அடக்கமான பரதன், புதல்வன். இப்படி இருக்கையில் தாயாராகிய கைகேயிக்கு இப்படிப்பட்ட (தங்களைக் காட்டிற்கு அனுப்புவது என்ற) கொடிய எண்ணம் எப்படி வந்தது?'' அறநெறியாளனான லட்சுமணன், (இராமனிடம் கொண்டிருந்த அளவற்ற) அன்பினால், மேற்கண்டவாறு பேசிவருகையில், (சிறிய) தாயாரைப் பற்றிய அந்த இழிவான சொற்களைப் பொறுக்க முடியாத இராமன், பின்வருமாறு மொழிந்தார்— (33–36)

''குழந்தாய்! (நம்முடைய அன்னைமார்களில்) நடுவளாகிய அவள், எந்தவிதத்திலும் நிந்திக்கத்தக்கவள் அல்லள். (இனி, இன்னும் ஏதேனும் பேச விரும்பினால்) இக்ஷ்வாகு பரம்பரையின் திலகம் போன்ற பரதனைப் பற்றியே பேசு. வனவாசம் என்ற விரதத்தை உறுதியாக அனுஷ்டிக்க வேண்டும் என்பதில் நான் தீர்மானமாக இருக்கிறேன். என்றாலும், பரதனிடம் உள்ள அன்பு என்னைத் தகிப்பதால் மனம் சஞ்சலம் அடைகிறது. (உடனே அயோத்தி சென்று பரதனைப் பார்க்க வேண்டும் போல் இருக்கிறது.) பிரியமான, இனிமையான, மனத்திற்குகந்தவைகளான, அமிழ்தம் போன்று மனத்தைக் களிக்கச் செய்கின்றவைகளுமான இவனுடைய (பரதனுடைய) சொற்களை (இப்போது) நினைத்துப் பார்க்கிறேன். ரகுகுலத்தின் பெருமையை வளர்க்கும் லட்சுமணா! உன்னோடுகூடச் சென்று, மகாத்மாவான பரதனையும் வீரனான சத்ருக்னனையும் சந்திக்கும் அந்த நன்னாள் என்றைக்கு வருமோ?'' (37–40)

இவ்வாறு பேசிக் கொண்டே, அவர்கள் கோதாவரி நதியை அடைந்தார்கள். காகுத்த இராமன், மனைவியுடனும் சகோதரனோடும் நதியில் நீராடினார். (ஸ்நானத்தின் அங்கமாக விதிக்கப்பட்டுள்ள) தேவ–பித்ரு தர்ப்பணங்களைச் செய்தார்கள். (அப்போது) சூரியன் உதிக்கவே, சூரியனையும் சந்தியா தேவதைகளையும், மன ஒருமைப்பாட்டுடன் தோத்தரித்தார்கள். (காலை சந்தியாவந்தனம் செய்தார்கள்.) தலைமூழ்கி நீராடி விட்டு, இலக்குவனோடும் சீதையை

அருகில் வைத்துக் கொண்டும் நடந்துவந்த ஸ்ரீராமன், நந்தி பகவானுடனும் மலைமகளாகிய பார்வதியை அருகில் வைத்துக் கொண்டும் நதியில் நீராடிவிட்டு எழுந்தருளும் ஈசுவரனாகிய சாட்சாத் ருத்ர பகவான் போலவே விளங்கினார். (41–43)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
பதினாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பதினேழு

சூர்ப்பணகை வருகை

தலைமுழ்கி நீராடிய பின்னர், இராமன்–சீதை–லட்சுமணன் ஆகியோர், கோதாவரி நதிக் கரையிலிருந்து தங்கள் இருப்பிடத்திற்குச் சென்றார்கள். ஆசிரமத்தை அடைந்த இராம–லட்சுமணர்கள், காலை நேரத்தில் செய்ய வேண்டிய வைதிகச் சடங்குகளை முடித்துக் கொண்டு, (சற்றுத் தள்ளி அமைக்கப்பட்டிருந்த) ஓலைக்குடிலுக்கு வந்தார்கள். அந்த இடத்தில் (பஞ்சவடியில்), பல முனிவர்கள் அவ்வப்போது வந்து இராமனைப் போற்றினார்கள். சகோதரனான இலக்குவனோடு பற்பல விஷயங்களைப் பேசிக் கொண்டு இன்பமாக வசித்து வந்தார்கள். பர்ணசாலையில் சீதையுடன் அமர்ந்திருந்த பெருந்தோளரான இராமன், சித்திரை நட்சத்திரத்துடன் கூடிய சந்திரன் போல (சித்ரா பௌர்ணமி போல) சோபையுடன் விளங்கினார். (1–4)

அவ்விதம் உட்கார்ந்து கொண்டு, இலக்குவனுடன் உரையாடிக் கொண்டிருந்த ஒரு சமயத்தில், அந்த இடத்திற்கு அரக்கி ஒருத்தி தற்செயலாக வந்து சேர்ந்தாள். சூர்ப்பணகை என்ற அவள், அரக்கன் பத்துத்தலை இராவணனுடைய சகோதரி. அவள், இராமனை நெருங்கி வந்ததும், அபூர்வ அழகுடன் தேவலோகத்தவரைப் போல் அவர் விளங்குவதைக் கண்டாள். அகன்ற மார்பு; திரட்சியான தோள்கள்; தாமரை இதழ் போன்ற கண்கள்; முழங்கால் வரை நீண்டிருந்த கைகள்; ஒளிச்சுடராக விளங்கும் திருமுகம்; பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் போன்ற பேரழகு; யானை போன்ற வீரநடை; மண்டலாகாரமான சடாமுடி; கோமளமயமான திருமேனி; மிகவும் பராக்கிரமம் உடையவர்; அரச லட்சணங்கள் பொருந்தியவர்; கருநெய்தல் போன்ற கார்வண்ணம்; மன்மதனுக்கு நிகரான சௌந்தரியம்; இந்திரன் போன்ற ஆளுமை – இவ்விதம் இராமனைப் பார்த்த அரக்கி காமவசப்பட்டாள். (5–9)

காணச் சகியாத முகம்; மாபெரும் வயிறு; அவலட்சணமான கண்கள்; செம்பட்டை கேசம்; வெறுக்கத்தக்க உருவம்; பயங்கரமான பெருங்குரல்; பார்ப்பதற்கு விருப்பம் ஏற்படாதபடி அச்சத்தை விளைவிப்பவள்; முதியவள்; வக்கிரமாகப் பேசுபவள்; மிகவும் தீய ஒழுக்கமுடையவள்; ஏறிட்டுக் காணத்தகாதவள் – இவ்வாறிருந்த அந்த அரக்கி, அழகான முகமுடையவரும், அளவான இடையை உடையவரும், அகன்ற கண்களுள்ளவரும், நற்கூந்தல் உடையவரும், பார்க்கப் பார்க்கத் தெவிட்டாதவரும், இனிய குரலுடையவரும், வாலிபமுறுக்கில் இருப்பவரும், அன்பொழுகப் பேசுபவரும், அறநெறியைக் கைக்கொண்டவரும், நல்லுணர்வைத் தூண்டுபவரும், அனைவரையும் கவர்ந்திழுப்பவருமான இராமனைப் பார்த்ததும் காமத்தால் ஆக்கிரமிக்கப்பட்டவளாகப் பின்வருமாறு கூறினாள்— (இராமனிடம் வந்தபோது, சூர்ப்பணகை சுந்தர வடிவம் ஏற்றுக் கொண்டுதான் வந்தாள்; அது மாயா வடிவம். வால்மீகி, அவளுடைய இயற்கையான வடிவத்தை மேலே விவரித்துள்ளார்.) (10–12)

''தவசிபோல் வேடம்பூண்டு, (அதற்கேற்றாற்போல்) சடைமுடி தரித்திருக்கிறாய். (ஆனால்,) மனைவியோடு இருக்கிறாய். கையிலோ வில்–அம்பு! அரக்கர்கள் வாழ்கின்ற இந்த காட்டுப் பகுதிக்கு, நீ எப்படி வந்தாய்? நீ, எந்தக் காரியத்தைச் செய்து முடிப்பதற்காக இவ்விடத்திற்கு

வந்திருக்கிறாய்? உண்மையைச் சொல்.'' இவ்வாறு அரக்கியான சூர்ப்பணகை கேட்டவுடன், எதிரிகளை வதைத்தெடுக்கும் இராமன், நேர்மை நெறியில் பழகிய காரணத்தால், உண்மையாக நடந்த எல்லாவற்றையும் நடந்தபடியே சொல்லவாரம்பித்தார். ஏனென்றால், எந்தக் காலத்திலும் பொய் என்பது இராமனுக்கு ஏற்புடையதன்று. (13–15)

குறிப்பாக, ஆசிரமத்தில் இருக்கும்போதும், பெண்கள் அருகில் இருக்கும் காலத்திலும் பொய் பேசுவது முற்றிலுமாகப் பிடிக்காது. (அப்படியானால், மற்ற நேரங்களில் பொய் பேசுவதை இராமன் ஏற்றுக்கொள்வாரா? என்றால், அப்போதைய சூழ்நிலையையும் காலத்தையும் கருதி, கவிஞர் அவ்வாறு கூறினார் – என்று கொள்ள வேண்டும்.) ''தேவர்களுக்கு நிகரான பராக்கிரமமுடைய தசரதன் என்ற பெயர் கொண்ட மன்னர் ஒருவர் இருந்தார். (16)

அவருடைய மூத்த புதல்வன் நான்; இராமன் என்று மக்கள் அழைப்பார்கள். இவன், என்னுடைய இளைய சகோதரன்; லட்சுமணன் என்று பெயர்; என்னைப் பின்தொடர்ந்து வருகிறான். இவள் என்னுடைய மனைவி; விதேக மன்னரின் மகள்; சீதை என்று பிரசித்தி பெற்றவள். மாமன்னராகிய தந்தையினுடையவும் தாயினுடையவும் ஆணைக்குக் கட்டுப்பட்டு (காட்டுக்கு) வந்திருக்கிறேன். உன்னைப் பற்றியும் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். நீ யார்? யாருடையவள்? என்பதைக் கூறுவாயாக. பேரழகியாக நீ காணப்பட்டாலும், எனக்கு நீ ஓர் அரக்கி என்றே தோன்றுகிறது. இந்த இடத்திற்கு வந்த உண்மையான காரணத்தைக் கூறு.'' (17–20)

அந்தச் சொற்களைக் கேட்டதும், மன்மதனால் துன்புறுத்தப்பட்ட அவள், ''இராமா! நான் உண்மையைப் பேசப் போகிறேன், கேள். விருப்பம் போல் வடிவம் எடுக்கக்கூடிய நான், சூர்ப்பணகா என்ற பெயருடையவள். எல்லோருக்கும் பெரும் பயத்தை விளைவித்துக் கொண்டு, இந்த காட்டில் தன்னந்தனியளாக உலாவி வருகிறேன். அரக்கர்களின் தலைவனான, பெரும் பலசாலியான இராவணன் எனது சகோதரன்; மகாவீரன்; விச்ரவஸின் மைந்தன். (நீ, அவனைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பாயே?) அவனுடைய புகழ், உன் செவிகளுக்கும் எட்டியிருக்கும். (21–23)

மகாபலவானாகிய கும்பகர்ணன் எப்போதும் ஆழ்ந்த, நீண்ட நித்திரையில் இருப்பவன். ஆனால், (இன்னொரு சகோதரனான) விபீஷணனோ அறநெறி வழுவாதவன்; அரக்கர்களின் இயல்பான கொடிய செயல்பாடுகள் இல்லாதவன். போரில், தம் வீரத்தைக் காட்டி பெரும் புகழடைந்த கரனும் தூஷணனும் என் (இளைய) சகோதரர்கள். இராமா! நான் அவர்களை மீறிச் சுதந்தரமாகச் சஞ்சரிப்பவள். உன்னைப் பார்த்தது முதல், புருஷோத்தமனாகிய நீதான் என் கணவன் என்று மனத்தால் வரித்துவிட்டேன். நான், அதிசயமான ஆற்றல்கள் படைத்தவள். என் பேராற்றல் காரணமாக, என் விருப்பப்படி உலகின் எல்லா இடங்களுக்கும் போவேன். என்றென்றைக்கும் நீ என் கணவனாக இரு. சீதையால் நீ என்ன இன்பத்தை அடையப் போகிறாய்? இவள் விகாரமானவள்; அவலட்சணமானவள். இவள் உனக்கு (உன் போன்ற அதிமானுட அழகு படைத்தவனுக்கு) ஏற்றவள் அல்லள். (24–27)

நான்தான் உனக்கு ஏற்றவள்; மனைவியாக என்னை ஏற்றுக்கொள். அழகில்லாதவளும் நற்குணங்கள் இல்லாதவளும் பயங்கரத் தோற்றம் உடையவளும் சரிந்த வயிறுடையவளுமான இந்த மானுட மங்கையை, உன் சகோதரனோடுகூடத் தின்றுவிடப் போகிறேன். அன்பனே! (இவர்களைத் தீர்த்துக் கட்டிய) பின்னர், என்னுடன் மலைமுகடுகளிலும், பல்வகையான வனாந்தரங்களிலும், தண்டகாரண்யத்தை நன்றாகப் பார்த்துக் கொண்டு, சுற்றிப் பார்க்கப் போகிறாய்.'' இவ்வாறு கூறப்பட்ட இராமன், சிரித்தவண்ணம், போதை வெறிகொண்ட அவளைப் பார்த்து, பேச்சில் நிபுணரான அவர் பின்வருமாறு கூற ஆரம்பித்தார்— (28–30)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
பதினேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பதினெட்டு

சூர்ப்பணகையின் அகந்தையை அழித்தல்

பின்னர், காமவலையில் சிக்கிக் கொண்ட அந்த சூர்ப்பணகையைப் பார்த்து இராமன் தெளிவான, இனிய சொற்களால் புன்சிரிப்புடன் பின்வருமாறு சொன்னார்— (1)

''மரியாதைக்குரிய பெண்ணே! நான் திருமணமானவன்; (அத்துடன் இப்போது என் அருகிலிருக்கும்) இந்த மனைவி எனக்குப் பிரியமானவள். உன்னைப் போன்ற பெண்களுக்குச் சக்களத்தியுடன் வாழ்வது என்பது மிகவும் வருத்தத்தைத் தரக்கூடியது. என்னுடைய இளைய சகோதரனான லட்சுமணன் என்ற இவன் நல்லொழுக்கம் உடையவன்; அழகு மிக்கவன்; வீரம் படைத்தவன்; செந்திரு பொருந்தியவன்; அருகில் மனைவி இல்லாதவன். இவன் நற்குணங்கள் நிரம்பப் பெற்றவன்; இளம்பிராயத்தான்; காணக் காணத் தெவிட்டாத அழகுடையவன்; உன்னுடைய பேரழகான இந்த உருவத்திற்கு ஏற்ற கணவனாக இருக்கத்தக்கவன். கண்ணழகியாளே! சிறந்த பெண்மணியே! சூரியனுடைய ஒளி மேருமலையை எவ்வாறு விளக்கமுறச் செய்கிறதோ, அவ்வாறே, நீ இவனை(க் கணவனாக) அடைந்து, சக்களத்தி இல்லாதவளாக இரு.'' (2–5)

காம மயக்கத்திலிருந்த அந்த அரக்கி, இராமன் இவ்வாறு கூறியவுடன், உடனே இராமனை விட்டுவிட்டு, (சற்றுத் தள்ளி நின்ற) இலக்குவனைப் பார்த்துக் கூறினாள்— ''(லட்சுமணா!) உன்னுடைய அழகான இந்தத் தோற்றத்திற்கு கட்டழகியான நான்தான் தகுந்த மனைவி; (என்னை மனவியாக ஏற்றுக் கொண்டு, நீ) என்னுடன் இன்பமாக தண்டகாரண்யம் முழுவதும் சுற்றி வரலாம்.'' அரக்கியினால் இவ்வாறு கூறப்பட்டவனும் சொற்றிறன் உடையவனுமான இலக்குவன், முறம் போன்ற நகங்களைக் கொண்ட அவளைப் பார்த்துப் புன்னகை செய்து, யுக்திபூர்வமான பதிலைக் கூறினான்— (6–8)

''தாமரையொத்த செவ்வண்ணத்தாளே! நான் என்னுடைய தமையனார் ஸ்ரீராமசந்திரமூர்த்தியின் கட்டுப்பாட்டில் உள்ளவன்; இவர்களுக்குக் குற்றேவல் புரியும் எனக்கு மனைவியாகி, (நீயும்) வேலைக்காரியாக ஆகப் போகிறாயா? நெடுந்தடங்கண்ணாளே! என்னுடைய தமையனார் எல்லாச் செல்வங்களும் நிறையப் பெற்றவர். நீ சந்தோஷத்துடன் அவருடைய இளைய மனைவியாக ஆகிவிடு. அதனால், உன் விருப்பங்களெல்லாம் நிறைவேறும். (9,10)

இவள் (சீதை) அவலட்சணமானவள்; துர்க்குணம் உடையவள்; காண்பதற்கு அருவருப்பானவள்; சரிந்த வயிறுடையவள்; கிழவியாகிவிட்டவள். எனவே, இவளைக் கைவிட்டுவிட்டு, (மகாசுந்தரியான) உன்னையே மனைவியாக ஏற்றுக் கொள்வார். (இந்தச் சுலோகத்தில், சீதையைப் பற்றி சூர்ப்பணகை சொன்ன சொற்களையே லட்சுமணன் உபயோகிக்கிறான் – என்பது குறிப்பிடத்தக்கது. 'சீதையைப் பற்றி இவ்வளவு கேவலமாக லட்சுமணன் பேசலாமா?' என்ற சந்தேகம் எழும். சான்றோர்களான நமது முன்னோர்கள், இந்தச் சுலோகத்திற்கு உயர்வான விளக்கம் தந்திருக்கிறார்கள். 'இவள், மானுட வடிவம் தாங்கி வந்தாலும் தெய்வத்தன்மை வாய்ந்தவள்; தன்னை மிஞ்சிய பதிவிரதை இல்லாதவள்; சாமுத்ரிகா இலக்கணப்படி அங்க அமைப்பு உடையவள்; சுருங்கிய இடைப்பிரதேசத்தைக் கொண்டவள்; ஞானத்தால் மூத்தவள்.') (11)

மிக்க சோபையுடன் விளங்கும் பேரழகியே! இந்த (உன்னிடம் காணப்படும்) மிக அழகான வடிவத்தைப் புறக்கணித்துவிட்டு, புத்திசாலியான எவன்தான், மானுடப் பெண்களிடத்தில் மனத்தைச் செலுத்துவான்?'' வெறுக்கத்தக்க உருவமுடைய, சரிந்த வயிறுடைய அவள், லட்சுமணன் இவ்வாறு கூறியவுடன், அது பரிகாசமாகக் கூறப்பட்டது என்பதை உணரும் அறிவற்றவளாய், அந்தச் சொற்களை உண்மைக்கூற்றாகவே எண்ணினாள். காமத்தால் மதியிழந்த

அவள், பர்ணசாலையில் சீதையுடன் உட்கார்ந்திருந்தவரும் பிறரால் நெருங்க முடியாதவரும் எதிரிகளை வாட்டுபவருமான இராமனைப் பார்த்து(ப் பின்வருமாறு) கூறினாள்— (12–14)

''அவலட்சணமான, துர்குணம் நிறைந்த, காணச்சகியாத, சரிந்த வயிறுடைய, கிழவியாகி விட்ட இந்த மனைவியின் வசப்பட்டுத்தானே, என்னை மதிக்காமல் இருக்கிறாய்? இப்போது, நீ பார்த்துக் கொண்டிருக்கும் போதே, நான், இந்த மானுடப்பதரைத் தின்றுவிடப் போகிறேன். (பின்னர்,) சக்களத்தி இல்லாதவளாக, உன்னுடன் மனம் போனபோக்கில் உல்லாசமாகச் சுற்றி வருவேன்!'' இவ்வாறு சொல்லிவிட்டு, சுவாலை இல்லாமல் தகதகவென்று எரியும் நெருப்புத் துண்டம் போல் அனல் பறக்கும் கண்களுடன் மிகவும் கோபத்துடன், மான்குட்டி போன்ற கண்களையுடைய சீதையை நோக்கி, ரோகிணி நட்சத்திரத்தைத் தாக்குவதற்காக, வேகமாக ஓடிவரும் தூமகேது (எரிகொள்ளி) போலப் பாய்ந்து சென்றாள். (15–17)

பேராற்றல் படைத்த இராமன், கோபம் கொண்டு, யமனுடைய பாசம் போல் பாய்ந்து வரும் அவளை (ஹுங்கார சப்தத்தினால்) தடுத்து நிறுத்திவிட்டு, பின்னர் இலக்குவனைப் பார்த்துக் கூறினார்— ''லட்சுமணா! பண்பில்லாத கொடியவர்களோடு ஒருபோதும் பரிகாசத்தில் ஈடுபடக் கூடாது. பார், சீதையைக் காப்பாற்ற எவ்வளவு கஷ்டப்பட வேண்டியிருக்கிறது? ஆண் சிங்கமே! அவலட்சணமான, தீயகுணமுடைய, பெருமயக்கம் கொண்ட பெருவயிறு படைத்த இந்த அரக்கியின் உடலில் ஒரு குறையை உண்டாக்கிவிட வேண்டும்.'' (18–20)

மகாபலம் பொருந்திய இலக்குவன், இவ்வாறு இராமன் கூறியவுடன், மிகவும் கோபம் கொண்டு அவர் கண் முன்பாகவே, கத்தியை எடுத்து, அவளுடைய காதுகளையும் நாசியையும் அறுத்துவிட்டான். காது–மூக்கு வெட்டப்பட்ட கோரமான அவள், உரத்த குரலில் அலறிக் கொண்டே, தான் வந்த வழியே காட்டிற்குள் ஓடிப் போனாள். உருக்குலைந்தவளும் மகாபயங்கரமானவளும் உடல் முழுவதும் இரத்தத்தால் நனைந்தவளுமான அந்த அரக்கி, மழைக்கால இடிமுழக்கம் போல, பல்வேறுவிதமாகக் குரலெழுப்பி வீறிட்டுக் கதறினாள். பார்ப்பதற்குப் பயங்கரமாகக் காட்சியளித்த அவள், இரத்தத்தைப் பெருகவிட்டுக் கொண்டு, இரு கைகளையும் மேலே தூக்கிக் கொண்டு பெருங்காட்டுக்குள் புகுந்து கொண்டாள். (21–24)

பிறகு, உருக்குலைக்குப்பட்ட அவள், ஜனஸ்தானத்தில் அரக்கர்களின் கூட்டத்தால் சூழப்பட்டிருந்தவனும், பயங்கரத் தோற்றமுடையவனும், சகோதரனுமான கரனை அடைந்து, ஆகாயத்திலிருந்து விழும் பேரிடியைப் போல தரையில் விழுந்தாள். இரத்தத்தால் நன்றாக நனைந்து போயிருந்தவளும், அச்சத்தாலும் மதிமயக்கத்தாலும் உணர்விழந்திருந்தவளும், கரனுடைய மூத்த சகோதரியுமான அவள், மனைவியுடனும் இலக்குவனுடனும் இராமன் காட்டிற்கு வந்திருப்பது, தன்னை உருக்குலைத்தது ஆகிய எல்லாச் செய்திகளையும் எடுத்துரைத்தாள். (25,26)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
பதினெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பத்தொன்பது

கரனுக்கு வந்ததே, கோபம்!

உடல் அங்கங்கள் சிதைக்கப்பட்டவளும், இரத்தப் பெருக்கால் சரீரம் நனைந்தவளும், அவ்வாறு (இடி போல) தரையில் விழுந்தவளுமான அரக்க சகோதரியைப் பார்த்துக் கோபத்தால் மனம் கொதித்த கரன், (பின்வருமாறு) கேள்வி கேட்டான்— (1)

''எழுந்திராய், சகோதரி! என்ன நடந்தது? என்று தெளிவாகக் கூறு. மனக்கலவரத்தையும் பயத்தையும் விட்டுவிடு. எவனால், நீ இவ்விதமாக உருக்குலைக்கப்பட்டாய்? என்பதை விபரமாகச் சொல். உபத்திரவம் செய்யாது, தான் இருந்த இடத்தில் கிடக்கும், பல்லில் விஷமுள்ள கொடிய கருநாகத்தை, விளையாட்டுப் போல விரல் நுனியால் சீண்டிவிட்டு, சீறியெழுந்து எதிர்த்து வருமாறு செய்பவன், யார்? இப்போது உன்னை இவ்வாறு விகாரப்படுத்தியவன், கொடிய விஷத்தை உட்கொண்டிருக்கிறான்; கழுத்தில் காலபாசத்தைக் கட்டிக் கொண்டிருக்கிறான். (அவன் இறந்து போவது நிச்சயம். ஆனால்,) அறிவின்மையால் (இந்தப் பயங்கர விளைவை) அறியவில்லை. யார், அவன்? (2–4)

யமனுக்கு நிகரான (கொடூரமான) நீ, உடல் பலமும் பேராற்றலும் மிக்கவள்; இஷ்டம் போல் திரிபவள்; இஷ்டம் போல் மாற்றுருவம் எடுக்கக் கூடியவள். எவன், உன்னை இந்தப் பாழிய நிலைக்குக் கொண்டு தள்ளியவன்? (அவனை அப்போதே நசுக்காமல், இங்கே திரும்பி வந்திருக்கிறாயே?) தேவதை–கந்தர்வர்–பூதங்கள்–மகாத்மாக்களான முனிவர்கள் ஆகியோரில், உன் உடல் அங்கங்களைத் துண்டித்த மாவீரன், யார்? பாகன் என்ற அசுரனைக் கொன்றவனும் ஆயிரம் கண்களுடையவனுமான மகேந்திரனைத் தவிர, உலகத்தில் என் விருப்பத்திற்கு எதிரான ஒரு காரியத்தைச் செய்யக்கூடிய ஒருவனையும் காண்கிலேன். தண்ணீரில் கலந்த பாலை ஸாரஸம் என்ற அன்னப்பறவை குடிப்பதைப் போல, எதிரிகளின் உயிரை வாங்கக்கூடிய பாணங்களால், இப்போதே நான் அவன் உயிரைப் பறித்துவிடுகிறேன். (5–8)

போரில், என் பாணங்களால் துளைத்தெடுக்கப்பட்ட மர்மஸ்தானங்களையுடைய, என்னால் கொன்று வீழ்த்தப்பட்டு, நுரையைக் கக்கிக் கொண்டு, எவனுடைய செக்கச் சிவந்த இரத்தத்தை இந்த நிலம் குடிக்கப் போகிறது? போரில், என்னால் கொல்லப்பட்ட எவனுடைய உடலிலிருந்து மாமிசத்தைக் கூட்டங்கூட்டமாகப் பறவைகள் வந்து, கொத்திக் கிளறி பேரானந்தத்துடன் தின்னப் போகின்றனவோ? பெரும் போரில் என்னால் எதிர்கொள்ளப்பட்டு, அரண்டு போய் நிற்கும் அவனை, தேவர்களாலும் கந்தர்வர்களாலும் பைசாசர்களாலும் அரக்கர்களாலும்கூடக் காப்பாற்றவே முடியாது. (நீ) சற்று ஆசுவாசப்படுத்திக் கொண்டு, செருக்குக் கொண்ட எவனால், நீ தாக்கப்பட்டு வெற்றி கொள்ளப்பட்டாயோ, அவனைப் பற்றிய தகவல்களை எனக்குக் கூறு.'' (9–12)

மிகவும் கோபத்தால் கொதித்துக் கொண்டிருந்த தம்பி கரனால் இவ்வாறு கூறப்பட்டவுடன், கண்களில் நீர்வழிய, சூர்ப்பணகை பின்வருமாறு சொன்னாள்— ''இளமைப் பருவத்தினர்கள்; பேரழகு கொண்டவர்கள்; மிகவும் மிருதுவான சரீரத்தை உடையவர்கள்; உடல் வலிமை பெற்றவர்கள்; தாமரையிதழ் போன்ற விசாலமான கண்மலர்களை உடையவர்கள்; மரவுரி–மான்தோல் அணிந்தவர்கள்; பழம்–கிழங்குகளை உண்பவர்களும், புலனடக்கம் உடையவர்களும், தவசிகளும், அறநெறியைக் கடைப்பிடிப்பவர்களும், தசரதனுடைய மைந்தர்களுமான இராம–லட்சுமணர்கள் இங்கு வந்திருக்கிறார்கள். கந்தர்வ மன்னர்களைப் போல் இருக்கிறார்கள்; அரச அடையாளங்களுடன் விளங்குகிறார்கள்; அவர்கள் இருவரும் தேவர்களா, மனிதர்களா? என்று, என்னால் நிச்சயிக்க முடியவில்லை. (13–16)

அவ்விடத்தில் அவ்விருவர்களுடன் கூட, யௌவனமும் (இளமையும்) பேரழகும் அங்க லட்சணங்களும் பொருந்தியவளும், எல்லா அணிகலன்களும் அணிந்து கொண்டிருந்தவளுமான ஒரு பெண்மணியை நான் பார்த்தேன். அந்தப் பெண்மணியின் காரணமாக, அவ்விரு ஆண்களும் ஒன்றுசேர்ந்து, ஓர் அநாதை போலும் குணமற்றவள் போலும், என்னை இந்த இழிநிலைக்குக் கொண்டு தள்ளிவிட்டார்கள். போர்க்களத்தில் (உன்னால்) கொல்லப்பட்ட அவ்விருவர்களுடையதும் தீய ஒழுக்கமுடைய அவளுடையதுமாகிய நுரைத்துக் கொண்டுவரும் செந்நீரை, நான் பருக விரும்புகிறேன். போர்க்களத்தில் அவ்விருவருடைய

மற்றும் அவளுடைய இரத்தத்தைப் பருக வேண்டும் என்பதே, என்னுடைய தலையாய விருப்பம். உன்னால் முடிந்தால் செய்து காட்டு.'' (17–20)

இவ்வாறு அவள் கூறியவுடன் மிகவும் கோபம் கொண்ட கரன், யமனைப் போன்று பயங்கரமானவர்களும் மிக்க உடல் வலிமை பெற்றவர்களுமான பதிநான்கு அரக்கர்களை அழைத்துக் கட்டளையிட்டான்— ''ஆயுதம் தாங்கியவர்களும் மரவுரி–மான்தோல் உடுத்தியவர் களுமான இரண்டு மானுடர்கள், ஒரு பெண்ணுடன் பயங்கரமான தண்டகாரண்யத்திற்குள் புகுந்திருக்கிறார்கள். நீங்கள், முதலில் அவ்விருவரையும் கொன்று, அவளையும் கொன்று விட்டுத் திரும்பி வாருங்கள். (பின்னர்,) என் சகோதரியான இவள் சென்று, அவர்கள் இரத்தத்தைக் குடிப்பாள். அரக்கர்களே! என் சகோதரியின் முக்கியமான ஆசை, இது. உடனே சென்று, அவ்விருவரையும் உங்களுடைய அளவு கடந்த ஆற்றலினால் கொன்று, இவளுடைய ஆசையை நிறைவேற்றி வையுங்கள். அவ்விரு சகோதரர்களும், யுத்தத்தில் உங்களால் கொல்லப்பட்டதைக் கண்டு, இவள் மனம் மகிழ்ந்து, மிக்கத் திருப்தியுடன் போர்க்களத்தில் இரத்தத்தைக் குடிப்பாள்.'' (21–25)

இவ்வாறு உத்தரவிடப்பட்ட அந்தப் பதிநான்கு அரக்கர்களும், காற்றோட்டத்தால் இழுக்கப்பட்ட மேகங்கள் போல, அவளை (சூர்ப்பணகையை)த் தொடர்ந்து, அவர்கள் இருந்த இடத்திற்குப் போனார்கள். பின்னர், கூர்மையான பாணங்களைப் பெற்றிருந்த அந்த அரக்கர்கள், பிறரால் நெருங்க முடியாதவரும் திரண்டு வந்த தேஜசுடன் விளங்குபவருமான அவரை (இராமனை), கனன்று கொழுந்து விட்டெரியும் காட்டுத் தீயை, காட்டு யானைகள் எவ்வாறு நெருங்க முடியாதோ, அவ்வாறே, அவருடன் யுத்தத்தைத் தொடங்கவும் முடியாமல் இருந்தார்கள். (26,27)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபது
அரக்கர்கள் கொல்லப்பட்டார்கள்!

பின்னர், கொடியவளாகிய சூர்ப்பணகை இராமனுடைய ஆசிரமத்திற்கு வந்து, சீதையுடன் இருக்கும் அந்தச் சகோதரர்கள் இருவரையும் அரக்கர்களுக்குக் காட்டினாள். அவர்கள், விதேகன் புதல்வியான சீதையுடனும் லட்சுமணனுடனும் பர்ணசாலையில் வீற்றிருக்கும் வல்லமை பொருந்திய இராமபிரானைப் பார்த்தார்கள். வீரலட்சுமி பொருந்திய இராமன், வந்திருந்த அவர்களையும் அந்த அரக்கியையும் பார்த்துவிட்டு, கொழுந்துவிட்டெரியும் ஆற்றலுடைய சகோதரனான இலக்குவனைப் பார்த்துக் கூறினார்— (1–3)

''லட்சுமணா! சிறிது நேரம், சீதைக்குக் காவலாக, நீ இங்கே இருந்து கொண்டிரு. இவளுடன் (சூர்ப்பணகையுடன்) கூட வந்திருக்கும் இந்த அரக்கர்களை, இப்போதே கொன்றுவிட்டு வருகிறேன்.'' உடனே, இராமனுடைய மன இயல்புகளை நன்குணர்ந்திருந்த இலக்குவன், அவருடைய கட்டளையைக் கேட்டு, ''அப்படியே செய்கிறேன்'' என்று கூறி, இராமனுடைய சொற்களை ஆமோதித்தான். இராமன், தங்கப்பூண் போடப்பட்டதான உயர்ந்த வில்லில் நாணேற்றிக் கொண்டார். பின்பு, அந்த அரக்கர்களை நோக்கி(ப் பின்வருமாறு) கூறினார்— (4–6)

''தசரதனுடைய புதல்வர்களாகிய நாங்கள், இராம–லட்சுமணர்கள் என்ற சகோதரர்கள். உட்புகமுடியாத இந்த தண்டகாரண்யத்திற்கு சீதையுடன் வந்திருக்கிறோம். தண்டகாரண்யத்தில், பழம்–கிழங்குகளைப் புசித்துக் கொண்டு, புலன்களை வென்றவர்களாக, அறநெறி தவறாமல் நடக்கிறவர்களாக, தவம் செய்பவர்களாக (அமைதியுடன்) வசித்துக் கொண்டிருக்கும் எங்களை

ஏன் துன்புறுத்துகிறீர்கள்? ('தபஸ்வி என்றும், ஜிதேந்திரியர்கள் என்றும் உங்களைப் பற்றிப் பெருமை பேசுகிற நீங்கள், இப்போது ஏன் நாண்பூட்டிய வில்லுடன் வந்திருக்கிறீர்கள்?' என்று கேட்டால்,) பாவாத்மாக்களும் பிறருக்குத் தீங்கு செய்வதையே தொழிலாகக் கொண்டவர்களுமான உங்களையெல்லாம் முனிவர்களின் ஆணைப்படி, போர் செய்து கொல்வதற்காகப் பாணங்களையும் ஆயுதங்களையும் கையிலெடுத்துக் கொண்டு, இங்கு வந்திருக்கிறேன். இராச்சுற்றிகளே! போர் செய்வதில் உங்களுக்கு விருப்பம் இருந்தால், இங்கேயே நில்லுங்கள்; திரும்பி ஓடக்கூடாது. உயிர்தான் முக்கியம் என்றால், உடனே திரும்பிப் போய்விடுங்கள்.'' (7–10)

அந்தணர்களைக் கொல்பவர்களும் கையில் சூலம் ஏந்தியவர்களுமான அந்த பதிநான்கு அரக்கர்களும், இராமனுடைய சொற்களைக் கேட்டு, மிகவும் கோபம் கொண்டவர்களாகக் கடுமையான குரலில் பதிலளித்தார்கள்— ''மிகப்பெரிய சரீரம் படைத்தவரும் எங்களுடைய தலைவருமான கரனுடைய கோபத்திற்கு ஆளாகியிருக்கிறாய். (அதனால்,) இப்போது யுத்தத்தில் எங்களால் தாக்கப்பட்டு, நீதான் உயிரை விடப்போகிறாய். நீயோ, ஒருவன்; நாங்களோ, பலர்! போர்க்களத்தில் எங்களுக்கு எதிராக, உன்னால் நிற்கக்கூட முடியாது என்னும்போது, போர் செய்வது என்ற பேச்சுக்கே இடமில்லை! எங்களுடைய கைகளிலிருந்து எறியப்படும் குண்டாந்தடிகள்–சூலங்கள்–கத்திகளால் உன் கையில் பிடித்திருக்கும் வில்லையும், உன்னுடைய கர்வத்தையும், உன் உயிரையும் ஒரே நேரத்தில் இழக்கப் போகிறாய்!''. இவ்வாறு கூறிவிட்டு, கோபம் கொண்ட அந்த பதிநான்கு அரக்கர்களும், பலவகையான ஆயுதங்களையும் கத்திகளையும் எடுத்துக் கொண்டு, இராமனை நோக்கி ஓடினார்கள். (11–15)

அதே நேரத்தில், இராச்சுற்றிகளான அந்த அரக்கர்கள், குண்டாந்தடிகளையும் கத்திகளையும் சூலங்களையும் பொன் வேலைப்பாடு செய்யப்பட்ட சிறு கத்திகளையும் கையில் ஏந்தியவர்களாக, இராமனின் பின்புறமாகச் சென்று, போரில் வெல்ல முடியாத அவர் மேல் அவ்வாயுதங்களை வீசினார்கள். அந்தப் பதிநான்கு சூலங்களையும், அதே எண்ணிக்கையாலான (பதிநான்கு), பொன்னால் அலங்கரிக்கப்பட்ட (தனது) பாணங்களால் காகுத்தன் வெட்டித் தள்ளினார். பின்னர், பாறையில் தேய்க்கப்பட்டுக் கூர்மை செய்யப்பட்டவைகளும் (பாறைகளையும் வெட்டிப் பிளக்கக் கூடியவைகளும்), சூரியன் போல் ஒளி வீசுபவைகளுமான நாராசம் என்ற பாணங்கள் பதிநான்கினை, பேராற்றல் பெற்றவரும் மிகவும் சினம் அடைந்தவருமான இராமன் கையில் பற்றினார். (16–18)

இராமன், அந்தப் பாணங்களை வில்லில் தொடுத்து, காதுவரை நாண்கயிற்றை இழுத்து, அரக்கர்களைக் குறி வைத்து, இந்திரன் வஜ்ராயுதத்தை எதிரிகள் மேல் வீசுவதைப் போலச் செலுத்தினார். தங்கத்தாலான இறகுகளால் அலங்கரிக்கப்பட்டவைகளும், தங்க வேலைப்பாடு உடையவைகளும், அனல் போல் சுடர் தெறிப்பவைகளுமான அந்த நாராசங்கள், அரக்கர்களின் மார்பைத் துளைத்துக் கொண்டு, இரத்தம் சொட்டச் சொட்ட, புற்றிலிருந்து வெளிப்பட்ட சர்ப்பங்கள் போலத் தரையில் விழுந்தன. அவர்கள் இதயம் பிளக்கப்பட்டு, இரத்தத்தால் உடல் அங்கங்கள் நனைக்கப்பட்டவர்களாக, உடல் சிதைக்கப்பட்டவர்களாக, உயிரை இழந்து வேர் அறுக்கப்பட்ட மரங்கள் போல தரையில் விழுந்தார்கள். (19–21)

தரையில் விழுந்துவிட்ட அவர்களைப் பார்த்த அரக்கி (சூர்ப்பணகை), கோபத்தால் நிலைதடுமாறி, மிகவும் அச்சம் கொண்டு, அவ்விடத்திலேயே பயங்கரமாகக் கூக்குரலிட்டாள். அவள் பெருங்கூச்சலிட்டுக் கொண்டு, வெகுவேகமாக மீண்டும் கரனை வந்தடைந்தாள். அப்போது, அவளுடைய செவி–நாசியிலிருந்து பெருகிக் கொண்டிருந்த இரத்தம் சற்றுக் காய்ந்து போயிருந்தது. (22,23)

துயரம் தாங்காமல், வெட்டப்பட்ட இடத்திலிருந்து ஒழுகிய கோந்து போன்ற திரவம் காய்ந்து போய்விட்டிருந்த சல்லகீ என்ற மரத்தைப் போன்று, அவள் தரையில் விழுந்தாள்.

துக்கத்தால் தாக்கப்பட்டு, சகோதரன் முன்பாக, தொடர்ந்து அழுகைக் குரல் எழுப்பினாள். வருத்தம் தோய்ந்த முகத்தில், கண்ணீரைப் பெருக்கிக் கொண்டு ஒப்பாரியிட்டாள். போரில் (பதிநான்கு) அரக்கர்கள் கொல்லப்பட்டதைக் கண்ணாரக் கண்டு, அங்கிருந்து வேகமாக ஓடிவந்த கரனுடைய தமக்கையான சூர்ப்பணகை, அங்கு (இராமன் ஆசிரமத்தில்) நடந்த எல்லாவற்றையும், அனுப்பப்பட்ட அரக்கர்கள் அனைவருடைய அழிவைப் பற்றியும் விளக்கமாக (கரனிடம்) கூறினாள். (24,25)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
இருபதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்தொன்று
கரனைத் தூண்டுதல்

அவனுக்கு (அரக்கர்களுக்கு) அழிவை ஏற்படுத்துவதற்காக மீண்டும் திரும்பி வந்து, கோபத்துடன் தரையில் விழுந்து கிடக்கும் சூர்ப்பணகையைப் பார்த்ததும், தெளிவான சொற்களால் கரன் சொன்னான்— (1)

''இரத்தத்தை உணவாகக் கொள்பவர்களும் சூரர்களுமான அரக்கர்கள், உன்பொருட்டு, உன் விருப்பத்தின்படி, இப்போது என்னால் அனுப்பப்பட்டார்களே? அப்படியும், இன்னமும் ஏன் அழுது கொண்டிருக்கிறாய்? அவர்கள், எப்போதும் என்னிடம் பேரன்பு கொண்டவர்கள்; விசுவாசமுடையவர்கள்; என் நன்மையில் நாட்டமுடையவர்கள்; பிறரைக் கொல்லக் கூடியவர்களே தவிர, பிறரால் கொல்லப்பட முடியாதவர்கள். என் கட்டளையைச் செய்யாமலிருப்பார்கள் என்பதும் இல்லை. (நிச்சயமாக, என் கட்டளையை நிறைவேற்றவே செய்வார்கள்.) மறுபடியும், நீ, 'ஐயோ, அப்பா...' என்று கூக்குரலிட்டுக் கொண்டு, தரையில் விழுந்து நெளியும் பாம்பைப் போலப் புரள்வதன் காரணம் என்ன? என்று அறிய விரும்புகிறேன். உனக்கு ஆதரவாக, நான் இருக்கும்போது ஆதரவற்றவள் போல் புலம்புகிறாயே? எழுந்திரு, எழுந்திரு; பயப்படாதே; கோழைத்தனத்தை என் எதிரிலேயே விட்டுவிடு.'' (2–5)

கரன் இவ்வாறு கூறி, அடக்க முடியாதவளான அவளைச் சமாதானப்படுத்தியதும், கண்ணீர் பெருகும் கண்களைத் துடைத்துக் கொண்டு, சகோதரனான கரனைப் பார்த்துக் கூறினாள்— ''நான், காது–மூக்குகளைப் பறிகொடுத்து, ரத்த வெள்ளத்தினால் உடல் நனைய, முன்பு இங்கு வந்தேன். அப்போதும் நீ என்னைச் சமாதானப்படுத்தினாய். வீரத் தம்பியே! நீ கோபம் கொண்டு, என் விருப்பப்படி, இராமனையும் லட்சுமணனையும் கொல்வதற்காக, பதிநான்கு அரக்கர்களை (என்னுடன்) அனுப்பி வைத்தாய். மிகவும் கோபம் கொண்டு, கையில் சூலம்–கத்திகளை ஏந்திக் கொண்டு வந்த அவர்கள் எல்லோரும், உயிர்நிலைகளைத் துளைக்கும் அம்புகளால் (போரில்) இராமனால் கொல்லப்பட்டார்கள். மகாபலம் பொருந்திய அவர்கள், நொடிப்பொழுதில் பூமியில் வீழ்ந்ததைப் பார்த்து, இராமனுடைய அரிய செயலைக் கண்டு, எனக்குப் பேரச்சம் உண்டாயிற்று. (6–10)

அரக்கர் தலைவனே! (பதிநான்கு மாவீரர்களான அரக்கர்கள் இராமனால் வதம் செய்யப்பட்டதைக் கண்ணால் கண்ட) நான், மனம் கொதித்துக் கொண்டிருக்கிறேன்; வருத்தத்தோடு இருக்கிறேன்; எல்லா திக்குகளிலும் பயத்தையே காண்கிறேன். அதனால், மறுபடியும் உன்னிடம் அடைக்கலம் புகுந்துள்ளேன். துயரம் என்னும் முதலைகள் வசிப்பதும், பயம் என்னும் அலைவரிசைகளைக் கொண்டதுமான விஸ்தாரமான துக்கப் பெருங்கடலில் மூழ்கியிருக்கும் என்னை ஏன் காப்பாற்றாமலிருக்கிறாய்? என்னுடன் வந்த மாமிசபட்சிணிகளான

அரக்கர்கள் அனைவரும், இராமனுடைய கூரான அம்புகளால் தாக்கப்பட்டுப் பூமியில் சாய்ந்தார்கள். (11–13)

என்னிடத்திலும், (இராமனால் கொல்லப்பட்ட) அந்த அரக்கர்களிடமும் உனக்கு இரக்கம் இருக்குமானால், இராமனோடு போர் புரிவதற்கு உடலாற்றலும் மனவலிமையும் உன்னிடம் இருக்குமேயானால், அரக்கனே! அரக்கர்களுக்குப் பகையாக, தண்டகாரண்யத்தைப் போர் மையமாகக் கொண்டிருக்கும் அவனை ஒழித்துக் கட்டு. என்னுடைய விரோதியான இராமனை, இப்போதே நீ கொல்லாமற்போனால், நான் (கொஞ்சங்கூடத் தயங்காமல்) சிறிதும் வெட்கப்படாமல் உன் எதிரிலேயே உயிரை விட்டுவிடுவேன். (14,15)

நீ, உன் படைவீரர்களோடு கூடி நின்றாலும், போர்க்களத்தில் இராமனை எதிர்த்து உன்னால் போரிட முடியாது என்பதை நன்றாக ஆலோசனை செய்தபின் உணர்கிறேன். நீ, உன்னை மகாசூரனாக எண்ணிக் கொண்டிருக்கிறாய்; (உண்மையில்,) நீ சூரன் இல்லை. நீ பராக்கிரமசாலி என்பது பொய்யாக உன் மேல் சுமத்தப்பட்டுள்ள பெருமை. உன்னால், மானுடர்களாகிய இராம–லட்சுமணர்களைக் கொல்ல முடியவில்லையே? குலத்தின் பெருமையைக் குலைப்பவனே! இராமனுடன் போர் புரிவதற்குத் தேவையான உடலாற்றலும் மனவலிமையும் உன்னிடம் இருக்குமேயானால், அரக்கர் தலைவனே! தண்டகாரண்யத்தை இருப்பிடமாகக் கொண்டுள்ள அவனை ஒழித்துக் கட்டு. (16–18)

தைரியமில்லாத, வீரமில்லாத நீ இங்கே ஏன் வாழ்ந்து கொண்டிருக்கிறாய்? உடனே, உற்றார்–உறவினர்களோடு ஜனஸ்தானத்தை விட்டுச் செல்வாயாக. இராமனுடைய பேராற்றலினால், நீ ஆக்கிரமிக்கப்பட்டு வெகுவிரைவில் அழியப் போகிறாய். தசரதன் மைந்தனான இராமன், மகாவீரம் பொருந்தியவன்; அவனுடைய தம்பியும் மாபெரும் வீரன். அவனாலன்றோ, நான் உருக்குலைக்கப் பெற்றேன்?'' இவ்வாறு பல தடவை ஒப்பாரி வைத்து, பெருவயிறு படைத்த அந்த அரக்கி, வயிற்றில் அடித்துக் கொண்டு, மிகவும் துக்கத்துடன் வாய்விட்டு அழுதாள். (19–21)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
இருபத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்து இரண்டு

கரன் போருக்குப் புறப்படுதல்

மேற்கண்டவாறு சூர்ப்பணகையால் இகழ்ந்து பேசப்பட்ட மாவீரனும் கொடியவனுமாகிய கரன், அரக்கர்கள் முன்னிலையில் மிகவும் கடுமையான சொற்களைக் கூறினான்— (1)

''உனக்கு நேர்ந்த அவமானத்தால் எனக்குத் தோன்றியுள்ள கோபம் அளவிட முடியாதது; (பருவ காலங்களில்) பொங்கியெழும் பெருங்கடல் போல அடக்க முடியாதிருக்கிறது. வீரம் என்ற பார்வையில், இராமன் என் கண்ணுக்குப் புலப்படவேயில்லை; அத்துடன், அவன் மானுடன்; இன்னும் சில பொழுதே உயிரோடு இருக்கப் போகிறவன்; தன்னுடைய தீச்செயல்களால் அழிந்து கொண்டிருக்கும் அவன், இப்போது என்னால் உயிரை விடப்போகிறான். (சகோதரி!) உன் கண்ணீரை நிறுத்து; மனக்கலவரத்தையும் விட்டுவிடு. நான், இராமனை தம்பியோடுகூட யமன் வீட்டிற்கு அனுப்புகிறேன். அரக்கியே! இன்று, போரில் என் கோடரியால் வெட்டுண்டு குற்றுயிராகக் கிடக்கும் இராமனின் இரத்தத்தை, அது வெம்மையுடன் இருக்கும்போதே நீ குடிக்கப் போகிறாய்.'' (2–5)

கரனுடைய வாயிலிருந்து வெளிப்பட்ட இந்தச் சொற்களைக் கேட்டதும், அவள் மிகவும் மகிழ்ச்சியடைந்தாள். அரக்கர்களுள் சிறந்தவனான அவனைத் தன் அறிவின்மையால் ஏராளமாகப்

புகழ்ந்தாள். அவளால் சற்றுமுன் இகழ்ந்து பேசப்பட்டவனும், பின்னர் (உடனேயே) புகழ்ந்துரைக்கப்பட்டவனுமான கரன், சேனைத் தலைவனான தூஷணன் என்பவனைப் பார்த்து(ப் பின்வருமாறு) கூறினான்— (6,7)

''சேனாபதி! என்னுடைய மனத்திற்கு ஏற்றபடிச் செயல்படுபவர்களும், பயங்கரமான வேகம் உடையவர்களும், போர்க்களத்தில் அஞ்சிப் பின்வாங்காதவர்களும், மேகம் போன்று கருமையானவர்களும், பயங்கரமானவர்களும், கொடுஞ்செயல்களை இலகுவாகச் செய்யக் கூடியவர்களும், மக்களைத் துன்புறுத்துவதையே விளையாட்டாகக் கொண்டவர்களும், உடல் வலிமை மிக்கவர்களும், மிகுந்த பராக்கிரமம் உடையவர்களும், புலி போன்று செருக்குடையவர்களும், பெரிய வாயைக் கொண்டவர்களும், உறுதி தளராதவர்களும் போரில் ஆர்வம் கொண்டவர்களுமான பதிநான்காயிரம் அரக்கர்களைச் சகலவிதத்திலும் ஆயத்தமாக இருக்கும்படிச் செய்விப்பாயாக. (8–10)

வீரனே! வெகுவிரைவில், என்னுடைய ரதத்தையும் வில்–அம்புகளையும் பலவகையான கத்திகளையும் கூரிய வேல்களையும் ஆயத்தப்படுத்து. அகந்தை கொண்டு திரியும் இராமனைக் கொல்வதற்காக புலஸ்திய வம்சத்தின் சிறந்த படையின் முன்னணியில் ரதத்தில் ஏறியவனாக, போர்த்திறன் கொண்ட நான் செல்ல விரும்புகிறேன்.'' இவ்வாறு, அவன் ஆணையிட்டு முடித்தவுடனேயே, பல வண்ணங்கள் கொண்ட உயரிய குதிரைகளால் பூட்டப் பெற்று, சூரியன் போல் பிரகாசிக்கும் பெரிய தேர் ஆயத்தமாக இருப்பதாக தூஷணன் தெரிவித்துக் கொண்டான். (11–13)

அந்த ரதம், மேருமலையின் சிகரம் போல் உயரமாக விளங்கியது; உருக்கிய தங்கத்தாலான வேலைப்பாடுகள் பெற்றது; பொன்னாலான சக்கரங்களைக் கொண்டது; விசாலமானது; வைடூர்யமயமான நுகத்தடியை உடையது; மீன், மலர், மரம், மலை, சந்திரன், சூரியன், மங்களமான பறவைக் கூட்டம், தாரகைகள் – இவை போன்ற சித்திர வேலைப்பாடு செய்யப்பட்டது; கொடி, கத்தி உடையது; சிறு மணிகளால் அலங்கரிக்கப்பட்டது; உயர் ஜாதிக் குதிரைகள் பூட்டப்பட்டது – இவ்வாறான அந்த ரதத்தில், மிகுந்த கோபத்துடனிருந்த கரன் ஏறி அமர்ந்தான். பயங்கரமான ஆற்றலுடைய அந்த அரக்கர்கள் (சேனாவீரர்கள்), கரன் ரதத்தில் அமர்ந்து விட்டதைப் பார்த்து, (அடுத்த ஆக்ஞை என்ன? என்று கேட்பதைப் போல) பெரும் வலிமை கொண்ட தூஷணனைச் சூழ்ந்து கொண்டு நின்றார்கள். (14–17)

தேரிலிருந்த கரன், மாபெரும் விற்களையும், பயங்கரமான கவசம்–ஆயுதம்–கொடிகளையும் தாங்கிய அந்த அரக்கர்கள் எல்லோரையும் பார்த்து, மனம் களிப்படைந்து, 'செல்லலாம்' என்று ஆணையிட்டான். பின்னர், அரக்கர்களின் அந்தப் படை, பயங்கரமான கவசம்–ஆயுதங்கள்–துவஜங்களுடன் பேரொலியை எழுப்பிக் கொண்டு, வெகுவேகமாக ஜனஸ்தானத்திலிருந்து புறப்பட்டது. கரனுடைய ஆணைப்படி நடக்கின்றவர்களும் மிகவும் பயங்கரமானவர்களுமான பதிநான்காயிரம் அரக்கர்கள் ஜனஸ்தானத்திலிருந்து புறப்பட்டார்கள். அவர்கள் எல்லோரும் அச்சமூட்டக்கூடிய தோற்றம் கொண்டவர்கள்; கையில் இரும்புத் தடி, பட்டாக்கத்தி, சூலம், மிகக் கூர்மையான கோடரி, வாள், சக்கரம், பிரகாசிக்கும் வல்லயம், வேல், வலிமை பொருந்திய குண்டாந்தடி, மிகப்பெரிய உருவமுடைய வில், கதை, கத்தி, உலக்கை மற்றும் வஜ்ரம் (எட்டு முனைகள் கொண்ட ஓர் ஆயுதம்) முதலியவைகளை எடுத்துக் கொண்டு புறப்பட்டுச் சென்றார்கள். (18–22)

பயங்கரத் தோற்றமுடைய அந்த அரக்கர்கள் வேகமாக ஓடுவதைப் பார்த்து, கரனுடைய ரதம் சற்றுப் பின்னாலேயே சென்றது. கரனது சிந்தனையை உணர்ந்து கொண்ட தேர்ப்பாகன், உருக்கிய தங்கத்தாலான அணிகளால் அலங்கரிக்கப்பட்டவைகளும் பல வண்ணமுடையவைகளுமான குதிரைகளைத் துரிதமாக ஓட்டினான். பகைவர்களைக் கொல்பவனான அந்த கரனுடைய தேர்,

வேகமாகச் செலுத்தப்பட்டதால் எழும்பிய பேரொலி எண்திசைகளிலும் எதிரொலித்தது. அப்போது கரனுக்கு அடக்க முடியாத கோபம் உண்டாயிற்று; குரல் பயங்கரமாயிற்று; எதிரியைக் கொல்வதற்காக யமனைப் போல் அவசரப்பட்டான். மகாபலம் பொருந்திய அவன், தேர்ப்பாகனைப் பார்த்து கல்மாரி பொழியும் மேகத்தைப் போல் கர்ஜித்துக் கொண்டு, இன்னும் வேகமாகச் செல்லும்படி முடுக்கிவிட்டான். (23–26)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
இருபத்து இரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்து மூன்று

கெட்ட சகுனங்கள்

அந்த அரக்கர் படை ஜனஸ்தானத்திலிருந்து புறப்பட்டுச் செல்லத் தொடங்கியதும், ஆகாயத்தில், கழுதை போல் சாம்பல் நிறம் கொண்ட மேகங்கள் ஏராளமாகத் திரண்டு வந்தன. பேரிரைச்சலுடன் சேனையின் மீது அமங்களமான இரத்தமாரியைப் பொழிந்தன. மலர்கள் தூவப்பட்ட, சமதளமான அரசபாட்டையில், அவனுடைய தேரில் கட்டப்பட்டிருந்த மகாவேகம் கொண்ட குதிரைகள், காரணமில்லாமல் நிலைதடுமாறி இடறி விழுந்தன. சூரியனைச் சுற்றிலும் ஒரு கரியவட்டம் தோன்றிற்று. அதன் ஓரம், செவ்வண்ணமாகத் திகழ்ந்தது. அது, காண்பதற்குக் கொள்ளிக் கட்டையைச் சுழற்றுவது போலிருந்தது. (1–3)

அப்போது, தேரில் தங்கக் கம்பத்தின் மீது கட்டப்பட்ட துவஜத்தைப் பற்றிக் கொண்டு, பயங்கரமான பேருடலைக் கொண்ட ஒரு கழுகு, அதன் மீதமர்ந்தது. மாமிசபட்சிணிகளான விலங்குகளும் பறவைகளும், ஜனஸ்தானத்தின் அருகே வந்து ஒன்றுகூடிக் கொடுங்குரலில் பலவகையான விகாரக் கூச்சல்களை எழுப்பின. கிழக்குத் திசையில், நெருப்பைக் கக்கும் நரிகள் பெருங்குரலில் ஊளையிட்டு, அரக்கர்களுக்கு அபசகுனமான பயங்கர ஒலிகளை எழுப்பின. (இந்திரனால்) சிறகுகள் வெட்டப்பட்ட மலைகள் போன்று பயங்கரத் தோற்றமுடைய மேகங்கள், நீருக்குப் பதிலாக இரத்தத்தைப் பொழிந்தன. 'ஆகாயமே இல்லை' என்னும்படி, பேருடல் கொண்ட நாரைகள் ஆகாயத்தை மறைத்துக் கொண்டன. (4–7)

மயிர்க்கூச்செறியும்படியான அடர்த்தியான இருள் கனமாகப் படர்ந்தது. திக்குத்திசைகள்கூடத் தெளிவாகத் தெரியவில்லை. இரத்தத்தினால் பூசப்பட்டப் பொருளைப் போல, மேகங்களில் செவ்வண்ணம் தோன்றிற்று. அப்போது, கொடிய விலங்குகளும் பறவைகளும் கரனுக்கு நேரெதிரில் வந்து இரைச்சலிட்டன. பருந்து–நரி–கழுகுகளும், போர்க்களத்தில் எப்போதும் அமங்களத்தை உண்டுபண்ணுபவைகளும், நெருப்பைக் கக்கும் வாய்களால் ஆபத்தை அறிவிக்கின்றவைகளுமான நரிகளும் பரிதாபமாகக் கூச்சலிட்டன. குண்டாந்தடி போன்ற தலையில்லாத மனித உடல், சூரியன் அருகில் காணப்பட்டது. பெருங்கோளான ராகு, அமாவாசை இல்லாத அந்த நாளில் சூரியனைக் கவ்விக் கொண்டது; காற்று வேகமாக வீசிற்று; சூரியன் ஒளியிழந்தவனாக ஆனான். (8–12)

இரவு நேரமில்லாத அந்த வேளையிலும் (ஆகாயத்திலிருந்து) தாரகைகள், மின்மினிப் பூச்சிகளைப் போல(ப் பூமியில்) விழுந்தன. தாமரைக் குளங்களில் மீன்களும் பறவைகளும் மறைந்து கொண்டன; தாமரை மலர்கள் கருகிப் போயின. அந்த நேரத்தில், மரங்களில் மலர்களோ, பழங்களோ இல்லாதவைகள் ஆயின. (எல்லாம் உதிர்ந்துவிட்டன.) காற்று வீசாத போதிலும் மேகம் போல் கறுத்த புழுதித் துகள்கள் மேலே எழுந்தன. கிளிகள் (தம் இனிய குரலை விட்டுவிட்டு) காச்சுமூச்சென்று இரைச்சலிட்டன; பயங்கரத் தோற்றமுடைய எரிநட்சத்திரங்கள் பேரொளி எழுப்பிக் கொண்டு, ஆகாயத்திலிருந்து பூமியில் விழுந்தன. (13–15)

மலை–காடு–சோலைகளோடு பூமி முழுவதும் கிடுகிடுத்தது. புத்திமானான கரன், ரதத்தில் இருந்தபடி கர்ஜனை செய்து கொண்டிருந்தான். அப்போது அவனுடைய இடது தோள் துடித்தது. அவனுக்குக் குரலும் தடைப்பட்டது. எல்லா பக்கங்களிலும் பார்க்கும் அவன் கண்களில் கண்ணீர் காணப்பட்டது. (அவனுக்குத்) தலையில் வலி ஏற்பட்டது. மயிர்க்கூச்சலை உண்டாக்கும் பெரிய பெரிய துர்நிமித்தங்களைக் கண்ட பிறகும், மதிமயங்கியிருந்ததால் (யுத்தத்திற்குப் போகாமல்) திரும்பவில்லை. (16–18)

அப்போது, கரன் (தான், இன்னமும் தைரியத்தை இழக்கவில்லை என்பதை உணர்த்துவது போல) வெளிப்படையாகச் சிரித்துக் கொண்டு, அந்த அரக்கர்கள் அனைவரையும் பார்த்துக் கூறினான்— ''மிகப் பயங்கரமாகத் தோற்றம் தரும் இந்தத் துர்நிமித்தங்கள் எல்லாவற்றையும் பார்த்த பின்னும், என்னுடைய வீரத்தின் மீது நம்பிக்கை இருப்பதால், அவற்றைப் பொருட்படுத்தவில்லை. மாவீரம் பொருந்தியவன் வீரமில்லாதவனைப் பொருட்படுத்துவானா? (பெரிய அபசகுனங்களால் நான் மனம் தளர்ந்துவிட மாட்டேன் – என்றபடி.) (என்னுடைய வீரத்தின் அளவு என்ன என்று உங்களுக்குத் தெரியுமா?) ஆகாயத்திலுள்ள நட்சத்திரங்களைக் கூட, கூரிய அம்புகளால் தாக்கி, பூமியில் விழச் செய்வேன்! (19,20)

எனக்குக் கோபம் வந்ததேயானால், யமனைக்கூட மரணத்தைத் தழுவும்படிச் செய்வேன்; பலத்தால் தருக்கித் திரியும் இராமனையும், அவன் தம்பி லட்சுமணனையும், கூர்மையான பாணங்களால் கொல்லாமல் நான் திரும்பமாட்டேன். எவளுக்குத் தண்டனை கொடுக்கவேண்டும் என்ற விபரீதமான ஆசை இராம–லட்சுமணர்களுக்குத் தோன்றியதோ, அந்த அவ்விருவருடைய இரத்தத்தைக் குடித்து, என் மூத்த சகோதரி, தன் விருப்பம் நிறைவேறியவளாக ஆகட்டும். முன்னர், ஒருபோதும் நான் போரில் தோற்றதேயில்லை. (21–23)

நான் பொய் பேசவில்லை. நீங்கள் எல்லோரும் கண்ணால் பார்த்திருக்கிறீர்கள். எனக்குக் கோபம் வந்தால், மதங்கொண்ட ஐராவதத்தில் ஆரோகணித்திருப்பவனும், கையில் வஜ்ராயுதம் தாங்கியிருப்பவனுமான இந்திரனையும் போரில் மாய்ப்பேன் – என்றால், அற்ப மனிதர்களாகிய அவ்விருவர் எம்மாத்திரம்?'' அந்த அரக்கனுடைய வீர முழக்கத்தைக் கேட்ட, யமபாசத்தில் மாட்டிக் கொண்டுவிட்ட, அந்த மாபெரும் சேனை கட்டுக்கடங்காத மகிழ்ச்சியை அடைந்தது. (24,25)

போர்க் காட்சிகளைக் காண விரும்பிய மகாத்மாக்களான முனிவர்கள், தேவ–கந்தர்வ–ஸித்த–சாரணர்கள் அங்கே ஒன்றுகூடினார்கள். புண்ணியாத்மாக்களான அவர்கள் கூட்டமாகச் சேர்ந்து, ஒருவரோடொருவர் (பின்வருமாறு) பேசிக் கொண்டார்கள்— ''பசுக்களுக்கும் அந்தணர்களுக்கும் நன்மை உண்டாகட்டும்; அவ்வாறே, மக்களுக்கு நலன் புரிபவர்களுக்கும் மங்களம் உண்டாவதாகுக. கையில் சக்கரத்தைக் கொண்ட ஸ்ரீமந்நாராயணன், அசுரத் தலைவர்களைப் போரில் எவ்வாறு வென்றாரோ, அதே போல் புலஸ்திய குலத்தில் தோன்றிய அரக்கர்களை, யுத்தத்தில் இராகவன் வெற்றி கொள்வாராக.'' (ஆகாயத்தில்) மிகவும் உற்சாகத்துடன் விமானத்திலிருந்த தேவதைகள் மற்றும் மாமுனிவர்கள், இவ்வாறு பலவாறாக நல்வாக்குகள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, உயிரை இழந்துவிட்ட அந்த அரக்கர் படையைக் கண்டார்கள். (நிச்சயமாக, போரில் அவர்கள் உயிரைப் பறிகொடுக்கத்தான் போகிறார்கள் – என்றபடி.) (26–29)

கொடூரமாக யுத்தம் செய்யும் படையைக் கொண்ட கரன், ரதத்தில் வேகமாகச் சென்றான். அந்த அரக்கனைப் பார்த்து, மற்ற அரக்கர்களும் இன்னும் துரிதமாகச் சென்றார்கள். ச்யேனகாமீ, ப்ருதுக்ரீவன், யக்ஞசத்ரு, விஹங்கமன், துர்ஜயன், கரவீராக்ஷன், பருஷன், காலகார்முகன், மேகமாலி, மகாமாலி, ஸர்பாஸ்யன், ருதிராசனன் – இந்தப் பன்னிரண்டு மகாவீரர்கள் நாற்புறமும் கரனைச் சூழ்ந்து கொண்டு சென்றார்கள். மகாகபாலன், ஸ்தூலாக்ஷன், பிரமாதீ, திரிசிரஸ் என்ற சேனைத் தலைவர்கள் நால்வரும் தூஷணனைப் பின்தொடர்ந்து

சென்றார்கள். பயங்கரத் துடிப்புடையதும், போரில் பெருவிருப்பமுடையதும், மிகவும் பலம் பொருந்தியதுமான அந்த அரக்க வீரர்களின் படை, செவ்வாய் முதலிய குரூரக் கிரகங்கள், சந்திர–சூரியர்களை எதிர்த்து நிற்பதைப் போல, அரசகுமாரர்களான அவ்விருவரையும் விரைவில் அடைந்து எதிர்த்து நின்றது. (30–34)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
இருபத்து மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்து நான்கு

இராமன்– கரன் சேனை உராய்தல்

மிகவும் பராக்கிரமம் கொண்ட கரன், ஆசிரமத்தை நெருங்கியபோது, தம்பியுடனிருந்த இராமனும் அதே அபசகுனங்களைக் கண்டார். மகாபயங்கரமாக, மயிர்கூச்சல் எடுக்கும்படி தோன்றிய, மக்களுக்குக் கெடுதல் செய்யக்கூடிய, அந்த துர்நிமித்தங்களைப் பார்த்ததும், இலக்குவனை நோக்கி இராமன் கூறினார்— (1,2)

"பெருந்தோளனே! எல்லாப் பிராணிகளுக்கும் கேடு நேரிடும் என்பதைக் குறிப்புணர்த்தும் பல்வகையான பெரும் அபசகுனங்களைப் பார். (இங்கு வந்திருக்கும்) அரக்கர்கள் எல்லோரையும் அழிக்கவேண்டும் என்பதை அவை குறிப்பிடுகின்றன. ஆகாயத்தில், கழுதையின் சாம்பல் நிறம் போல் காணப்படும் மேகங்கள் கரகரப்பான சப்தங்களை வெளியிட்டுக் கொண்டும், அஞ்சும்படியாக இரத்தத்தைப் பொழிந்து கொண்டும் அலைகின்றன. லட்சுமணா! (யுத்தத்தை எதிர்கொள்ள விரும்புவதைப் போல) என்னுடைய பாணங்கள் எல்லாம் புகையை வெளிப்படுத்துகின்றன; பின்புறத்தில் தங்கத்தகடு வேயப்பட்ட விற்களும் துடிக்கின்றன. (3–5)

இந்தக் காட்டுப் பகுதியில் திரியும் பறவைகள் ஒரு மாதிரியாக (சற்று வித்தியாசமாக)க் கூவுகின்றன என்பதை நோக்கும்போது, நம் எதிரில் ஆபத்து காத்துக் கொண்டிருக்கிறது (என்பதும்,) (எதிர்த்து வந்திருக்கும்) அரக்கர்கள் உயிருடன் திரும்புவது சந்தேகம்தான் (என்பதும் உணர்த்தப்படுகிறது.) இப்போது மிகப்பெரிய யுத்தம் ஏற்படப் போகிறது என்பதில் ஐயமில்லை. (ஏனென்றால்,) என்னுடைய வலது கை இடைவிடாமல் துடிக்கிறது. அதன் மூலம், சமீபத்தில், நமக்கு வெற்றியையும் பகைவர்களுக்குத் தோல்வியையும் சுட்டிக்காட்டுகிறது. அத்துடன், உன் முகத்தில் ஒளியும் மகிழ்ச்சியும் காணப்படுகின்றன. (6–8)

லட்சுமணா! யுத்தத்திற்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கும்போது, எவருடைய முகம் சோபையற்றுப் போகிறதோ, அவருடைய ஆயுள் அத்துடன் முடிந்து போகிறது (என்பது ஆன்றோர் வாக்கு.) பெருங்கூச்சலிடுகின்ற அரக்கர்களுடைய கொடிய பேரொலியும், கொடூரமான செயல்கள் புரியும் அரக்கர்களால் அடிக்கப்படும் பேரிகைகளின் ஒலியும் கேட்கப்படுகிறது. தன்னுடைய பாதுகாப்பில் அக்கறையுடைய அறிவாளியான ஒருவன், ஓர் ஆபத்தை எதிர்பார்க்கும்போது, (அதிலிருந்து தன்னைக் காத்துக் கொள்வதற்கான) தற்காப்பு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். ஆதலால், கையில் வில்லும் அம்பும் தாங்கியவனாக, சீதையை அழைத்துக் கொண்டு, எவராலும் நெருங்க முடியாததும் மரங்கள் அடர்ந்திருப்பதுமான மலையிலுள்ள குகைக்குச் செல்வாயாக. (9–12)

அன்புக்குரியவனே! இந்த ஆணையை எதிர்த்து, நீ எதுவும் பேசவோ, செய்யவோ கூடாது என்று நான் விரும்புகிறேன். என் பாதங்களின் மீது ஆணையிட்டுச் சொல்கிறேன், தாமதப்படுத்தாமல், நீ உடனே செல். நீ, மகாசூரன்; பலம் உடையவன். இவர்கள் எல்லோரையும் நீ (ஒருவனாகவே) வதம் செய்வாய் என்பதில் ஐயமில்லை. (ஆனால் நான், அரக்கர்களை

அழித்து, முனிவர்களைக் காப்பாற்றுவதாக, அவர்களுக்கு வாக்குக் கொடுத்திருக்கிறேனே?) அதனால், இந்த அரக்கர்கள் எல்லோரையும் நானே கொல்ல விரும்புகிறேன்.'' இராமபிரான் இவ்வாறு கூறியவுடன், லட்சுமணன் வில் அம்புகளை எடுத்துக் கொண்டு, சீதாதேவியாருடன், எவராலும் உட்புக முடியாத மலைக்குகையை அடைந்தான். (13–15)

லட்சுமணனும் சீதையும் குகைக்குள் சென்றவுடன், ''அப்பாடா! ரொம்ப நல்லதாகப் போயிற்று!'' என்று வாய்விட்டுக் கூறி, (உடனே யுத்தத்திற்கு ஆயத்தமாகி,) கவசத்தை அணிந்து கொண்டார், இராமன். அக்னியைப் போல் பிரகாசிக்கும் கவசத்தை அணிந்து கொண்ட ஸ்ரீராமன், இருளினிடையே தோன்றிய, புகையில்லாத அக்னிச் சுவாலைபோல் விளங்கினார். மாவீரரான அவர், ஒரு பெரிய வில்லையும் பாணங்களையும் எடுத்துக் கொண்டு, நாண்கயிற்றின் ஒலியால் எல்லாத் திசைகளையும் நிரப்பிக் கொண்டு, அவ்விடத்திலேயே ('நான் யுத்தத்திற்கு ஆயத்தமாக இருக்கிறேன்' என்ற குறிப்பு தோன்ற) நிலைபெயராது நின்றார். அப்போது, யுத்தத்தைக் காண விரும்பிய மகாத்மாக்களும், தேவ–கந்தர்வ–ஸித்த–சாரணர்களும் அவ்விடம் வந்து சேர்ந்தார்கள். (16–19)

(இவர்களைத் தவிர) மூன்று உலகங்களிலும் பெரும்புகழ் கொண்ட பிரும்மரிஷிகளும் புண்ணிய கர்மாக்களைச் செய்யும் முனிவர்களும் ஒன்றாகக் கூடித் தமக்குள் பின்வருமாறு பேசிக் கொண்டார்கள்— ''பசுக்களுக்கும் அந்தணர்களுக்கும் நலன் உண்டாகட்டும்; மக்கள் நலனில் அக்கறை கொண்டவர்களுக்கும் மங்களம் உண்டாகட்டும். சக்கரதாரியான ஸ்ரீமந் நாராயணன், எல்லா அசுரத் தலைவர்களையும் யுத்தத்தில் வீழ்த்தியதைப் போல, இரவு வேளையில் சுற்றித் திரியும் புலஸ்திய குல அரக்கர்களை, ஸ்ரீராமன் யுத்தத்தில் வெல்வாராக.'' இவ்வாறு ஆசி கூறிவிட்டு, மறுபடியும் ஒருவரையொருவர் பார்த்து(ப் பின்வருமாறு) பேசிக் கொண்டார்கள். (20–22)

மிகக் கொடூரமான செயல்களைச் செய்யக் கூடிய அரக்கர்களோ, பதிநான்காயிரம் பேர்கள்; தருமாத்மாவான ஸ்ரீராமன் ஒரே ஒருவர். இந்த நிலையில் யுத்தம் என்பது எப்படி நிகழப் போகிறதோ? ('பதிநான்காயிரம் அரக்கர்களுக்கு, இராமன் தனியாக ஈடு கொடுக்க முடியுமா?') விமானத்தில் பரிவாரங்களோடுகூட இருந்த தேவர்கள், (பரலோகம் சென்று, அங்கே சுகத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும்) ராஜரிஷிகள், ஸித்தர்கள், அந்தணோத்தமர்கள் ஆகியோர், (நடக்கவிருக்கும் யுத்தத்தின்) முடிவைத் தெரிந்து கொள்ளும் ஆவலுடன் இருந்தார்கள். (23,24)

அப்போது, வீரபராக்கிரமம் நிறைந்து, போர் முனையில் நிற்கும் இராமனைக் கண்டு, எல்லா உயிர்ப் பிராணிகளும் பயத்தால் நடுங்கின. கடினமான செயல்களையும் வெகு எளிதாகச் செய்ய வல்லவரும், ஒப்பற்ற தெய்விக உருவம் படைத்தவருமான இராமனின் திருத்தோற்றம், பினாகம் என்ற உயரிய வில்லைக் கையில் தாங்கி, கோபத்தோடு விளங்கும் ருத்ர பகவானுடைய உருவம் போல் ஆயிற்று. இவ்வாறாக, தேவ–கந்தர்வ–சாரணர்கள் இராமனுக்கு வாழ்த்துக் கூறிக் கொண்டிருக்கும் போதே, கொடிய கவசம்–ஆயுதம்–துவஜங்களைக் கொண்ட, பேரொலி எழுப்பிய அரக்கர் சேனை நாற்புறமும் சூழ்ந்து கொண்டது. (25–27)

ஒருவரைப் பார்த்து ஒருவர் அட்டகாசமாகக் குரல் கொடுப்பவர்களும், சிங்கநாதம் செய்பவர்களும், வில்லின் நாண்கயிற்றைச் சுண்டிவிட்டு டங்காரம் செய்பவர்களும், அடிக்கடி ஆரவாரம் செய்பவர்களும், காட்டுக்கத்தலாகப் பேசுகிறவர்களும், துந்துபி வாத்தியங்களை அடிப்பவர்களுமான அவர்கள் எழுப்பிய மகத்தான ஒலி, அந்தக் காடு முழுவதையும் நிரப்பிற்று. காட்டிலிருந்த கொடிய விலங்குகள் (அரக்கர் சேனை எழுப்பிய பயங்கர சப்தத்தால் மிகவும் பயந்து) சப்தமில்லாத இடத்தை நோக்கி, திரும்பிக்கூடப் பார்க்காமல் ஓடிச்சென்றன. பலவிதமான ஆயுதங்களை உடையதும், சமுத்திரம் போல் கம்பீரமாக விளங்கியதுமான அந்த அரக்கர் படை, மிக வேகத்துடன் இராமனை அணுகிச் சென்றது. (28–31)

போரில் வல்லவரான இராமன், எல்லாப் பக்கங்களிலும் பார்வையைச் செலுத்தி, போர் செய்யும் துடிப்புடன் வந்திருக்கும் கரனுடைய படை முழுவதையும் கண்ணால் பார்த்தார். பின்னர், அம்புறாத்தூணியிலிருந்து பாணங்களை எடுத்து, பயங்கரமான வில்லில் கோர்த்து, அனைத்து அரக்கர்களையும் கொல்வதற்காக யுத்த ஆவேசத்தை மேற்கொண்டார். கோபத்தை ஏற்றுக் கொண்ட அவர், பிரளய கால அக்னியைப் போல தேஜோமயமாக விளங்கினார். அந்த நிலையில், அவரைப் பார்ப்பதற்கே கஷ்டமாக இருந்தது. அந்தக் கோலத்தில், அவரைப் பார்த்த வனதேவதைகள் ஓடி ஒளிந்து கொண்டார்கள். (32–34)

சினம் பொங்கிய அந்த நிலையில் இராமனுடைய உருவம், தட்சனுடைய யாகத்தை அழிப்பதற்காக வந்த ருத்ரமூர்த்தியினுடையதைப் போலக் காணப்பட்டது. வில்–அணிகலன்–துவஜம்–நெருப்பைப் போல் ஒளிவிடும் கவசங்கள் ஆகியவற்றால், அரக்கர்களின் அந்தச் சேனை, சூரியோதய காலத்தில் நீலமேகக் கூட்டம் போல காணப்பட்டது. (கவசங்கள், சூரிய கிரணங்களைப் போல் பிரகாசித்தன; அரக்கர்களின் கரிய உடல், நீலமேகம் போலிருந்தது; வில், வானவில்லை ஒத்திருந்தது – என்றபடி.) (35,36)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
இருபத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்தைந்து

கரனின் படைகளை அழித்தல்

கரன், முன்னிலையில் இருக்கும் படைவீரர்களுடன், ஆசிரமத்தின் அருகில் வந்து, எதிரிகளை மாய்ப்பவரும் பெருங்கோபத்தில் இருப்பவருமான இராமன், கையில் வில்லேந்திக் கொண்டு நிற்பதைக் கண்டான். அவரைப் பார்த்ததும், அம்புகளோடு கூடியதும், கொடிய சப்தம் எழுப்புவதுமான வில்லைத் தூக்கி நிறுத்தி வைத்துக் கொண்டு, தேரோட்டியைப் பார்த்து, 'இராமனுக்கு நேர் எதிராகப் போ' என்று கட்டளையிட்டான். கரனுடைய உத்தரவைக் கேட்டதும், மகாபலம் பொருந்திய ஸ்ரீராமன், தன்னந்தனியராக, எந்த இடத்தில் இருந்து கொண்டு, தன் வில்லை அசைத்துக் கொண்டிருந்தாரோ, அந்த இடத்திற்குத் தேர்ப்பாகன் குதிரைகளைச் செலுத்தினான். கரன், இராமன் சமீபத்தில் சென்றுவிட்டான் என்பதைக் கண்ட ச்யேனகாமி முதலிய அமைச்சர்கள், உற்சாகத்துடன் சிம்மநாதம் செய்து, அவரை நாற்புறமும் சூழ்ந்து கொண்டு நின்றார்கள். (1–4)

அந்த அரக்கர்களின் மத்தியில், தேரில் அமர்ந்திருந்த கரன், தாரகைகளின் மத்தியில் உதயமான செவ்வாய் கிரகம் போல் விளங்கினான். அப்போது, ஒப்புயர்வில்லாத இராமன் மீது ஆயிரக்கணக்கான அம்புகளைச் செலுத்தித் துன்புறுத்திய கரன், போர்க்களத்தில் பேரொலி எழுப்பினான். பின்னர், பெரிய வில்லைத் தாங்கியவரும் வெற்றி கொள்ள முடியாதவருமான இராமன் மீது கோபம் கொண்ட அரக்கர்கள் அனைவரும் பலவகையான சஸ்திரங்களை மழையாகப் பொழிந்தார்கள். கடுஞ்சினத்தில் மூழ்கியிருந்த அரக்கர்கள், ரணகளத்தில், உலக்கை–பட்டாக்கத்தி–சூலம்–ஈட்டி–வாள் மற்றும் கோடரிகளால் இராமனைத் தாக்கினார்கள். (5–8)

நீர் குடித்த மேகம் போன்ற வண்ணமுடையவர்களும் உரக்கக் கூச்சலிடுபவர்களும் மிக்க பலசாலிகளுமான அவர்கள், தேர்–குதிரைகள் மீது சென்றும், மலைநிகர் யானைகள் மீது சென்றும் யுத்தத்தில் இராமனை வெற்றி கொள்ள விரும்பியவர்களாய், காகுத்தனை நோக்கி ஓடினார்கள். மிகவும் கனத்த பெருமேகங்கள் இமயமலை மீது மாரியைப் பொழிவது போல, அந்த அரக்கர் கூட்டங்கள் இராமன் மீது அம்புமாரியைப் பொழிந்தன. (9,10)

கொடூரமான அந்த அரக்கர் கூட்டங்களால் சூழப்பட்டிருந்த ஸ்ரீராமன், பிரதோஷ திதிகளில் பிரமத கணங்களால் சூழப்பட்ட சிவபெருமான் போல் விளங்கினார். ஆற்று வெள்ளத்தை ஏற்றுக்கொண்டு நிலைகுலையாதிருக்கும் பெருங்கடல் போல, அரக்கர்களால் ஏவப்பட்ட சஸ்திரங்களையெல்லாம் இராமன் அம்புகளால் எதிர்த்து ஏற்றுக்கொண்டு கலங்காமலிருந்தார். ஜொலித்துக் கொண்டுவரும் அநேக வஜ்ராயுதங்களால் தாக்கப்பட்டாலும், மாபெரும் மலை தகர்க்கப்படாதிருப்பதைப் போல, அரக்கர்களால் விடப்பட்ட பயங்கரமான அஸ்திர–சஸ்திரங்களால் தாக்கப்பட்டுக் காயமடைந்தாலும், இராமன் சிறிதும் துன்பமடையாமல் இருந்தார். ரகு குல திலகமான ஸ்ரீராமன், உடலின் எல்லாப் பகுதிகளிலும் தாக்கப்பட்டு இரத்தத்தால் நனைந்தவராக, சந்த்யாகால செம்மை படர்ந்த மேகங்களால் மறைக்கப்பட்ட சூரியன் போல் விளங்கினார். (11–14)

அப்போது, தேவர்கள், கந்தர்வர்கள், ஸித்தர்கள், மாமுனிவர்கள் ஆகியோர் ஒரேயொருவரை ஆயிரக்கணக்கானோர் சூழ்ந்து நின்று தாக்குவதைப் பார்த்து வருத்தமடைந்தார்கள். அப்போது, இராமன் மிகவும் கோபம் கொண்டு, தன்னுடைய வில்லை மண்டலாகாரமாகச் செய்து (நாண்கயிற்றைக் காதுவரை இழுத்து) அம்புகளையும் பாணங்களையும் நூறாயிரக்கணக்காய் செலுத்தினார். (பிறைச்சந்திரன் போன்ற தலைப்பை உடைய அம்புகள் பாணங்கள் எனப்படும்.) தடுத்து நிறுத்த முடியாதனவும், பொறுத்துக் கொள்ள முடியாதனவும், யமனுடைய பாசத்திற்கு ஒப்பானவையும், குறி தவறாது செல்பவையும், கழுகின் இறகு கட்டப்பட்டவைகளுமான பாணங்களை (கொஞ்சமும் சிரமமில்லாமல்) விளையாட்டாகவே இராமன் விடுத்தார். (15–17)

வெகு எளிதாக, எதிரிப் படைகளின் மீது இராமனால் விடப்பட்ட அம்புகள், காலனால் விடப்பட்ட பாசங்கள் போல் அரக்கர்களுடைய உயிரைப் பறித்துவிட்டன. அரக்கர்களுடைய சரீரங்களைத் துளைத்துக் கொண்டு, இரத்தத்தில் தோய்ந்தவைகளாய், ஆகாயத்தை அடைந்த இராமனுடைய அம்புகள் கொழுந்து விட்டெரியும் நெருப்புப்போல் விளங்கின. மண்டலாகாரமாக வளைக்கப்பட்ட இராமனுடைய வில்லிலிருந்து, கணக்கிட முடியாத, மிகப்பயங்கரமான, அரக்கர்களின் உயிரை வாங்குகிற பாணங்கள் வெளிப்போந்தன. (18–20)

யுத்த பூமியில், ஸ்ரீராமன், எதிரிகளின் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான விற்களையும், துவஜங்களின் மேற்பகுதி கவசங்கள், தலைகள், அணிகலன்கள் பூண்டிருந்த புஜங்கள், யானையின் துதிக்கை போன்ற தொடைகள் ஆகியவைகளையும் வெட்டித் தள்ளினார். இராமனுடைய வில்லின் நாண்கயிற்றிலிருந்து விடுபட்ட பாணங்கள், தங்கமயமான அணிகலன்களால் அலங்கரிக்கப்பட்டு, ரதத்தில் பூட்டப்பட்டிருந்த குதிரைகளையும், தேர்களையும், யானைகளையும், யானையின் மேல் ஆரோகணித்திருந்த வீரர்களையும், குதிரைகளையும், குதிரை வீரர்களையும், காலாட்படையினரையும் கொன்று, வெட்டிச் சின்னபின்னமாக்கி, யமன் இருப்பிடத்திற்கு அனுப்பி வைத்தன. அப்போது, நாலீகம், நாராசம், கூரிய முனையுடைய விகர்ணி என்ற பாணங்களால் தாக்கப்பட்ட அரக்கர்கள் பயங்கரமாக ஓலமிட்டனர். (21–25)

உயிர்நிலைகளைத் தாக்கும் இராமனுடைய கூர்மையான பாணங்களால் துன்புறுத்தப்பட்ட அந்த (அரக்கர்) படை, பட்டுப்போன மரங்களையுடைய காடானது தீயினால் எரிக்கப்பட்டுச் சாம்பலாவதைப் போல, (அந்தப் படையினர் குதூகலத்துடன் எதிர்பார்த்து வந்தபடி) சௌக்கியத்தை அடையவில்லை. மகாபராக்கிரமம் கொண்ட சில வீரர்கள் சூலம்–கத்தி–கோடரி முதலிய ஆட்கொல்லிகளான ஆயுதங்களை, இராமன் எதிரில் சென்று (அவர் மேல்) வீசி எறிந்தார்கள். ஆனால், மகாவீரமும் மகாபலமும் படைத்த இராமன், அரக்கர்கள் எறிந்த ஆயுதங்களைத் தன்னுடைய பாணங்களால் தடுத்து, அவர்கள் கழுத்தை வெட்டி உயிரைப் பறித்தார். (26–28)

தலை அறுபட்டு, கவசங்களும் விற்களும் துண்டிக்கப்பட்ட அவர்கள், கருட பகவான் வெகுவேகமாகப் பறக்கும்போது, மரங்கள் வேருடன் சாய்வதைப் போல தரையில் விழுந்தார்கள். அந்தப் போர்க்களத்தில் மிகுந்திருந்த அரக்கர்கள் மிகவும் கவலையடைந்து, (இராமனுடைய) கரங்களால் தாக்கப்பட்டு, கரனிடமே அடைக்கலம் வேண்டி ஓடினார்கள். அவர்கள் எல்லோரையும்

தூஷணன் சமாதானப்படுத்தி, மறுபடியும் அழைத்துக் கொண்டு, கோபம் கொண்ட காலன், சிவபெருமானை நோக்கி ஓடி வந்ததைப் போல, காகுத்தனைக் குறிவைத்து ஓடினான். (காலன், காலகாலனான பரமேசுவரனால் வெற்றி கொள்ளப்பட்டதைப் போல, தூஷணனும் இராமனால் வெற்றி கொள்ளப்படுவான் என்பது கருத்து.) (29–31)

'தூஷணன் அருகில் இருக்கிறான்' என்பதால் அச்சத்தைத் துறந்த அவர்கள் எல்லோரும், ஆச்சாமரம், பனைமரம், கற்பாறைகளை ஆயுதங்களாகக் கொண்டு, இராமனையே குறிவைத்துத் தாக்கினார்கள். பெரும் பலசாலிகளான அரக்கர்கள், யுத்தத்தில் சூலம்–உலக்கை–வில் முதலியவைகளை ஏந்திக் கொண்டு அம்புமாரியையும் சஸ்திரங்களையும் பொழிந்தார்கள்; மரங்களை வீசினார்கள்; கற்பாறைகளை இடைவிடாது வீசி எறிந்தார்கள். அதனால், போர்க்களத்தில் மயிர்க்கூச்செறியும்படியான பேரொலி எழும்பிப் பேராச்சரியத்தை விளைவித்தது. (32–34)

மறுபடியும், அந்த அரக்கர்களுக்கும் இராமனுக்குமிடையே பயங்கரமான போர் நிகழ்ந்தது. மிகவும் ஆத்திரமடைந்த அவர்கள், இராமனை நாற்புறமும் சூழ்ந்து கொண்டார்கள். மகாபலசாலியான அவர், எட்டுத் திசைகளிலும் ஈட்டி–அம்புமாரி பொழிகின்ற அரக்கர்களால் சூழ்ந்து நிற்பதைப் பார்த்து, உரத்த குரலில் சிங்கநாதம் செய்து, மிக்க ஒளி பொருந்திய காந்தர்வம் என்ற அஸ்திரத்தை அரக்கர்கள் மீது பிரயோகித்தார். பின்னர், மண்டலாகாரமாகச் செய்யப்பட்ட வில்லிலிருந்து ஆயிரக்கணக்கான அம்புகள் வெளிப்போந்தன. அந்த அம்புகளின் கூட்டத்தால் பத்துத் திசைகளும் மறைக்கப்பட்டன. (35–38)

அவருடைய அம்புகளால் அடிபட்ட அரக்கர்கள், பயங்கரமான சரங்களை அவர் எடுப்பதையோ, நாணில் தொடுத்து இழுப்பதையோ, அவைகளை விடுவதையோ காண முடியவில்லை. (இந்தச் செயல்களெல்லாம் முறையே, விரைவாக நடந்ததால், அவர்களால் அறியக்கூட முடியவில்லை.) இராமனால் தொடர்ந்து விடப்பட்ட சரக்கூட்டங்களால் ஏற்பட்ட இருள், சூரியனையும் ஆகாயத்தையும் சூழ்ந்து கொண்டது. (இராமன் அம்புகளை எடுத்து, தொடுத்து, விடுவதைக் காண இயலாததால்,) அவர் ஓரிடத்தில் நின்றவாறே, அம்புகளை (வாயிலிருந்து) வீசுவது போல் தோன்றினார். (39,40)

ஒரே சமயத்தில் விழுந்து கொண்டிருப்பவர்களாலும், மிகவும் அடிபட்டவர்களாலும், ஒரே சமயத்தில் விழுந்தவர்களாலும் (அவர்களது சடலங்களால்) அந்த யுத்தகளம் நிரம்பியதாயிற்று. அரக்கர்கள் ஆங்காங்கே ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டவர்களாக, விழுந்து கிடப்பவர்களாக, காயப்பட்டவர்களாக, துளைக்கப்பட்டவர்களாக, துண்டிக்கப்பட்டவர்களாகக் காணப்பட்டார்கள். போரில், இராமனுடைய பாணங்களால் சிதைக்கப்பட்ட தலைப்பாகைகளுடன் கூடிய தலைகளாலும், தோள்வளைகளோடு கூடிய புஜங்களாலும், தொடைகளாலும், முழங்கால்களாலும், பல்வகை அணிகலன்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த தூள்தூளாக்கப்பட்ட குதிரை–யானை–தேர்களாலும், சிதைக்கப்பட்ட சாமரம்–ஆலவட்டம்–குடை–துவஜங்களாலும், தகர்க்கப்பட்ட விசித்திரமான சூலம்–பட்டாக்கத்திகளாலும் நிறைந்திருந்த போர்க்களம் பயங்கரமாகக் காணப்பட்டது. (41–45)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
இருபத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்தாறு

தூஷணனின் வதம்

மகாவீரனான தூஷணன் தன்னுடைய படை அழிக்கப்படுவதைக் கண்டவுடன், மிகவும் வேகமாகச் செயல்படுபவர்களும் எதிர்கொள்ள முடியாதவர்களும் போர்க்களத்திலிருந்து

பின்வாங்காதவர்களுமான ஐயாயிரம் அரக்கர்களை (இராமனுடன் போர் தொடுக்கும்படி) ஏவினான். அவர்கள், சூலம்–பட்டாக்கத்தி–வாள்–மரம்–கல்மாரி–அம்புமாரிகளை நான்கு பக்கங்களிலிருந்தும் இடைவிடாது அவர் மீது பொழிந்தார்கள். போர் நெறி தவறாமல் யுத்தம் செய்பவரான இராமன், உயிரைப் பறிக்கக் கூடிய வன்மையான மரம்–கல்மாரிகளைக் கூரிய அம்புகளால் எதிர்கொண்டார். (அவ்வளவு கோரமான தாக்குதலிலும் அமைதி இழக்காத இராமன்) கண்களை மூடிக் கொண்டிருக்கும் காளை போல, சரமாரியைத் தடுத்துக் கொண்டு, எல்லா அரக்கர்களையும் கொல்வதற்காக பெரும் கோபத்தை ஏற்றுக் கொண்டார். (1–4)

மிகவும் கோபம் கொண்டு, நெருப்பைப் போல் பிரகாசமாக விளங்கிய அவர், தூஷணனுடனிருந்த சைன்யத்தின் மீது எல்லாப் பக்கங்களிலிருந்தும் அம்புகளைப் பொழிந்தார். அப்போது பகைவர்களைக் குலைக்க வல்லவனும் படைத்தலைவனுமாகிய தூஷணன் மிகவும் கோபம் கொண்டு, இடிகளுக்கு ஒப்பான சரங்களால் இராமனை மூழ்கடித்தான். அவ்வமயம், போர்க்களத்தில் மிகவும் சினம் பொங்கிய இராமன், கத்தி போன்ற கூரான அமைப்பு கொண்ட பாணத்தால், அவனுடைய பெரிய வில்லையும், நான்கு அம்புகளால் (ரதத்தில் பூட்டப்பட்டிருந்த) நான்கு குதிரைகளையும் வெட்டி வீழ்த்தினார். கூரிய அம்புகளால் குதிரைகளைக் கொன்றுவிட்டு, பிறைச்சந்திரன் வடிவமுள்ள பாணத்தால் தேர்ப்பாகன் தலையைப் பறித்தார்; அந்த அரக்கனுடைய மார்பில் மூன்று பாணங்களால் அடித்தார். (5–8)

வில்லை இழந்து, ரதத்தை இழந்து, குதிரைகள் மாண்டு, தேர்ப்பாகனும் கொல்லப்பட்டு, தனியாக இருந்த அவன், தங்கப் பட்டைகள் சுற்றப்பட்டதும், தேவர்களின் படையையும் தாக்க வல்லதும், கூரான இரும்பு ஆணிகள் பொருத்தப்பட்டிருந்ததும், எதிரிகளின் கொழுப்பு–சதையில் தோய்ந்திருந்ததும், வஜ்ராயுதம் மற்றும் இடியைப் போன்ற வலிமை உடையதும், எதிரிகளின் நகரத்தின் நுழைவாயில்களைத் தகர்க்க வல்லதும், எல்லாப் பிராணிகளுக்கும் பேரச்சத்தை விளைவிப்பதும், தங்க வேலைப்பாடுகள் கொண்டதும், மலைச்சிகரங்களைப் போன்றதும், (கண்ணால் பார்த்தாலே) மயிர்க்கூச்செரியச் செய்வதுமான ஒரு கதையை கையில் எடுத்துக் கொண்டான். ரணகளத்தில், மிகப்பெரிய நாகம் போன்ற குண்டாந்தடி(கதை)யை எடுத்துக் கொண்டு, கொடிய வினைகள் செய்யும் அரக்கனான தூஷணன், இராமனை நோக்கிப் பாய்ந்து சென்றான். (9–12)

தன்னைத் தாக்குவதற்காக ஓடிவரும் தூஷணனுடைய, தோள்வளை முதலிய அணிகலன்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த இரண்டு கைகளையும் இரண்டு அம்புகளால் வெட்டித் தள்ளினார், இராமன். போர்க்களத்தில், கைகள் வெட்டப்பட்ட அவன் எதிரிலேயே, கைப்பிடிப்பிலிருந்து நழுவிய மாபெரும் உருவம் கொண்ட இரும்புத்தடி, இந்திரத்துவஜம் போல் விழுந்தது. வீரம் படைத்த யானையொன்று, இரு தந்தங்களும் வெட்டப்பட்டுத் தரையில் விழுந்தால் எப்படி இருக்குமோ, அப்படியே கைகள் வெட்டப்பட்ட தூஷணன் தரையில் விழுந்தான். போரில் கொல்லப்பட்டுத் தரையில் விழுந்து கிடக்கும் தூஷணனைப் பார்த்துவிட்டு, 'ஆகா! ரொம்ப நல்ல காரியம்!' என்று, எல்லாப் பிராணிகளும் காகுத்தனைக் கொண்டாடின. (13–16)

இதனிடையில், படைகளின் முன்னணியில் செல்லும் மகாகபாலன், ஸ்தூலாக்ஷன், மகாவலிமை கொண்ட ப்ரமாதி ஆகிய மூவரும், மிகவும் கோபம் கொண்டு, காலபாசத்தில் சிக்கியவர்களாக, ஒன்றாகச் சேர்ந்து இராமனைத் தாக்க வந்தார்கள். மகாகபாலன் என்ற அரக்கன், பெரிய சூலம் ஒன்றை எடுத்துக் கொண்டான். ஸ்தூலாக்ஷன் பட்டாக்கத்தியையும், ப்ரமாதி கோடாரியையும் எடுத்துக் கொண்டார்கள். அவர்கள் தன்னை நெருங்கி வருவதைப் பார்த்ததும், வாசலில் வந்து நிற்கும் அதிதிகளை மனமுவந்து வரவேற்பதைப் போல, கூரான முனையையுடைய அம்புகளால் எதிர்கொண்டார், இராமன். (17–19)

வலிமைமிக்க பாணங்களால் மகாகபாலனுடைய தலையை வெட்டித் தள்ளினார்; எண்ணிலடங்காத அம்புக் கூட்டங்களால் ப்ரமாதியைத் தூள்தூளாக்கினார். ஸ்தூலாக்ஷனுடைய இரு கண்களையும் கூரிய பாணங்களால் நிரப்பினார். (கண்களை அழித்தார் – என்றபடி.) அவன் உயிரிழந்து, ஏராளமான கிளைகளைக் கொண்ட ஒரு பெரிய மரம் போல் பூமியில் விழுந்தான். கோபம் கொண்ட இராமன், தூஷணனுடன் வந்த ஐயாயிரம் பேர்களையும் ஐயாயிரம் பாணக் கூட்டங்களால், நொடிப்பொழுதில் யமனுலகுக்கு அனுப்பி வைத்தார். (20–22)

தூஷணனும் அவனுடன் வந்தவர்களும் கொல்லப்பட்டதைக் கண்டு, மகாபலசாலிகளான படைத்தலைவர்களைப் பார்த்து, கரன் (பின்வருமாறு) உத்தரவிட்டான்— ''இந்தத் தூஷணனும் அவனுடன் வந்தவர்களும் மிகப்பெரும் படையுடன் கூடிப் போர் செய்து, அற்பமானுடனான இராமனால் கொல்லப்பட்டார்கள். எல்லா அரக்கர்களும் பல்வகையான அமைப்புக் கொண்ட சஸ்திரங்களால் (இராமனைக்) கொல்லுங்கள்'' என்று சொல்லிவிட்டு, கோபத்துடனிருந்த கரன், இராமனைக் குறிவைத்தே ஓடினான். ச்யேனகாமீ, ப்ருதுக்ரீவன், யக்ஞசத்ரு, விஹங்கமன், துர்ஜயன், கரவீராக்ஷன், பருஷன், காலகார்முகன், மேகமாலி, மகாமாலி, ஸர்பாஸ்யன், ருதிராசனன் என்ற பன்னிரண்டு மாவீரர்களாகிய படைத்தளபதிகள், தத்தம் படைவீரர்களுடன் சென்று, கூரிய அம்புகளைப் பொழிந்து, இராமனை எதிர்த்துப் போரிட்டார்கள். (23–27)

அப்போது, அந்த (எதிரிப்) படையில் மீதி இருந்தவர்களை நெருப்பைப் போன்று வெம்மை ஒளிவீசுபவைகளும், பொன்–வஜ்ரமணி இழைக்கப்பட்டதுமான அம்புகளால் மகாபராக்கிரமசாலியான இராமன் அழித்துக் கொன்றார். புகையுடன் கூடிய அக்னிபோல், பொன் இறகுகள் கட்டப்பெற்ற அவருடைய அம்புகள், அந்த அரக்கர்களை, மாபெரும் மரங்களைப் பிளந்து சாய்க்கும் வஜ்ராயுதங்கள் போல் கொன்று போட்டன. இராமன், நூறு அரக்கர்களை, 'கர்ணி' என்ற வகையான நூறு அம்புகளாலும், ஆயிரக்கணக்கானவர்களை ஆயிரக்கணக்கான அம்புகளாலும், அந்தப் போர்முனையில் மாய்த்தார். (28–30)

அவரால் ஏவப்பட்ட அம்புகளால், கவசங்கள், அணிகலன்கள், விற்கள் முதலியவை தூள்தூளாக்கப்பட்டு, இரத்தம் பெருகும் உடலுடன் அரக்கர்கள் தரையில் விழுந்தார்கள். தலைமுடி அவிழ்ந்து, இரத்தம் சொட்டச் சொட்ட விழுந்து கிடந்த அவர்களால், போர்க்களப் பிரதேசம் முழுவதும், தர்பங்கள் விரிக்கப்பட்ட பெரும் யாகமேடை போலிருந்தது. நொடிப்பொழுதில் பயங்கரமான அந்த வனம், கொல்லப்பட்ட அரக்கர்களின் கொழுப்பு, இரத்தம் முதலியவைகளால் சேறாகி, நரகம் போல் காட்சி தந்தது. மானிடனும், வாகனம் ஏதும் இல்லாமல் தரையில் நின்று போரிட்டவருமான இராமன் ஒருவராலேயே மிகவும் பயங்கரமாகச் செயல்படக் கூடிய பதினான்காயிரம் அரக்கர்களும் அழிக்கப்பட்டார்கள். (31–34)

அங்கு கூடியிருந்த மாபெரும் படையில் மகாரதனான கரன், திரிசிரஸ் என்ற அரக்கன், எதிரிகளை மாய்க்கும் இராமன் ஆகிய மூவர் மட்டுமே கடைசியாக மீதியிருந்தார்கள். (மேலே சொல்லப்பட்ட இரண்டு அரக்கர்களைத் தவிர) மாவீரர்களும் போர்முனையில் வெல்ல முடியாதவர்களும் பயங்கரத் தோற்றமுடையவர்களுமான மற்ற அரக்கர்கள் எல்லோரும் இலக்குவனுடைய தமையனாரால் கொல்லப்பட்டார்கள். அப்போது, அந்த மாபெரும் போரில், மகாபலசாலியான இராமனால், அரக்கர்களின் பெரும்படை கொல்லப்பட்டதைக் கண்டு, ஒரு பெரிய தேரில் ஏறிக்கொண்டு, (ஒரு பகைவனை அழிப்பதற்காகக் கோபத்துடன்) கையில் வஜ்ராயுதம் தாங்கிக் கொண்டு எதிர்க்கும் இந்திரனைப் போல் கரன், இராமனை நோக்கிச் சென்றான். (35–37)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
இருபத்தாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்தேழு

திரிசிரஸ் வதம்

அரக்கர் படையின் ஒரு தலைவனான திரிசிரஸ், இராமனை நோக்கிச் செல்லும் கரனைப் பார்த்து, குறுக்கே பாய்ந்து பின்வருமாறு சொன்னான்— (1)

''மகாவீரரே! (இராமனை நீங்களே எதிர்ப்பது என்ற) இந்த வீரச்செயலிலிருந்து விலகி நிற்கவேண்டும். அந்த வேலையை என்னிடம் ஒப்படையுங்கள். போரில், நான் பெருவீரனான இராமனை வீழ்த்துவதைப் பாருங்கள். இந்த ஆயுதத்தின் மேல் ஆணையிட்டு, 'எல்லா அரக்கர்களாலும் கொல்லத்தக்கவனான இராமனை, நான் கொன்று போடுவேன்' என்று, உண்மையாக உங்களுக்குச் சபதம் செய்து கொடுக்கிறேன். போரில், இவனுக்கு நான் யமன் ஆவேன்; அல்லது இவன் எனக்கு யமன் ஆவான். சண்டை செய்ய வேண்டும் என்ற ஆர்வத்திலிருந்து திரும்பி, சிறிது நேரத்திற்கு (இந்த நேரடிப் போரில்,) வெற்றி–தோல்வியை நிர்ணயிப்பவனாக இருங்கள். (2–4)

இராமன் (என்னால்) கொல்லப்பட்டால் நீங்கள் மிக்க மனமகிழ்ச்சியுடன் ஜனஸ்தானத்திற்குத் திரும்பிச் செல்வீர்கள். ஒருக்கால் நான் மாண்டு போய்விட்டால், இராமனைப் போருக்கு அழையுங்கள்.'' 'இராமன் கையால் மரணத்தை அடைய வேண்டும்' என்று விதியினால் உந்தப்பெற்ற திரிசிரஸின் சொற்களை ஏற்றுக் கொண்ட கரன், 'நல்லது, போர் செய்யச் செல்வாயாக' என்று விடைகொடுத்தனுப்பவே, (திரிசிரஸ்) இராமனை எதிர்த்துச் சென்றான். குதிரைகள் பூட்டப்பெற்ற, பேரொளி வீசும் ரதத்தில் ஏறிக்கொண்ட, மூன்று சிகரங்களைக் கொண்ட மாபெரும் பர்வதம் போல் விளங்கிய திரிசிரஸ், போரில் இராமனைக் கடுமையாகத் தாக்கினான். (5–7)

அவன், கரிய பெரிய மேகம் (நீர்த்தாரைகளைப் பொழிவதைப்) போல, அம்புமாரியைப் பொழிந்து கொண்டு, நீரில் நனைந்த துந்துபி வாத்தியம் போல், ஈனமான குரலில் கூவினான். (நனைந்து போன துந்துபியின் ஒலி அடங்கித்தான் இருக்கும்.) திரிசிரஸ் என்ற அந்த அரக்கன், தன்னை எதிர்க்க வருவதைக் கண்ட இராமன், கூர்மையான பாணங்களைத் தொடுத்து, வில்லினால் வரவேற்றார். (அவன் முன்னேறி வருவதைத் தடுத்து நிறுத்தினார்.) இராமனுக்கும் திரிசிரஸிற்கும் இடையே நடந்த மகத்தான துவந்துவ யுத்தம், மிக்க பலங்கொண்ட சிங்கத்திற்கும் யானைக்கும் இடையே நடைபெறும் சண்டை போல் மிகவும் ஆக்ரோஷமாக இருந்தது. அப்போது திரிசிரஸ், மூன்று பாணங்களால் இராமனுடைய நெற்றியைத் தாக்கினான். அவனுடைய தாக்குதலைச் சகித்துக் கொள்ள முடியாத இராமன், மிகவும் கோபம் கொண்டு, உணர்ச்சி பொங்க, இவ்விதம் கூறினார்— (தனக்குள் எண்ணிக் கொண்டார்.) (8–11)

'மாவீரம் பொருந்திய இந்த அரக்கனுடைய பலம், அம்மாடியோவ்! இவனுடைய அம்புகளால், மலர் அர்ப்பணம் போல நெற்றியில் காயப்படுத்தப்பட்டிருக்கிறேன்.' (புஷ்பத்தால் நெற்றியில் அடித்தால், எப்படி எவ்விதத் துன்பமும் ஏற்படாதோ, அதுபோல, இவன் பாணத் தாக்குதலால் எனக்குத் துன்பம் ஏதும் ஏற்படவில்லை – என்றபடி.) ''இதோ, என்னுடைய வில்லிலிருந்து வெளிப்படும் அம்புகளையும் (உன் பூசனைக்குப் பயனாக) ஏற்றுக் கொள்.'' இவ்வாறு சொல்லிவிட்டு, ஆவேசத்துடன் விஷப்பாம்புகளுக்கு ஒப்பான பதிநான்கு பாணங்களை, திரிசிரஸின் மார்பில் எய்தார். மகாபராக்கிரமம் கொண்ட இராமன், முனையில் சற்று வளைந்த நான்கு பாணங்களால் வேகமாகச் செல்லக் கூடிய, அவனுடைய நான்கு குதிரைகளையும் கொன்று தரையில் விழச் செய்தார். (12–14)

இராமன், எட்டு பாணங்களால் தேர்த் தட்டிலிருந்து தேர்ப்பாகனைத் தரையில் விழச் செய்தார். அவனுடைய தேரில் உயர்த்திக் கட்டப்பட்டிருந்த துவஜத்தை ஒரு பாணத்தால்

அறுத்துத் தள்ளினார். பின்னர், சின்னபின்னமாக்கப்பட்ட அந்த ரதத்திலிருந்து கீழே குதித்த அந்த அரக்கனின் மார்பைப் பாணங்களால் பிளந்தார். அப்போது அவன் உணர்வு இழந்தவனானான். ஒப்புயர்வில்லாத பராக்கிரமம் படைத்த அவர், மிகவும் கோபம் கொண்டு, மிக வேகமாகச் செல்லும் கூரிய பாணங்கள் மூன்றினால், அரக்கனுடைய (மூன்று) தலைகளையும் வெட்டித் தள்ளினார். அந்த அரக்கன் இராம பாணங்களால் மிகவும் தாக்கப்பட்டு, இரத்தத்தைக் கக்கிக் கொண்டு, முன்னர் வீழ்ந்தத் தன் தலைகளோடு தரையில் விழுந்தான். (15–18)

கரனுடைய பணியாளர்கள், கொல்லப்பட்டவர்கள் போக மீதி இருந்தவர்கள், புலியைக் கண்டு பயந்து தலைதெறிக்க ஓடும் மான்களைப் போல விழுந்து அடித்துக் கொண்டு ஓடினார்கள்; ஒருவர்கூட நிற்கவில்லை. ஓடிக்கொண்டிருக்கும் அவர்களைப் பார்த்துக் கோபம் கொண்ட கரன், அவர்களைத் திருப்பி அழைத்தான். பின்னர், சந்திரனை விழுங்குவதற்கு ஓடும் ராகுவைப் போல, இராமனை நோக்கி ஓடினான். (19,20)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
இருபத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்தெட்டு
கரனுடன் போர்

போர்க்களத்தில், தூஷணனும் திரிசிரஸூம் மாய்க்கப்பட்டதைக் கண்டதும், இராமனுடைய பராக்கிரமத்தைக் கண்ணால் பார்த்துவிட்ட கரனுக்கும் பெரும் அச்சம் உண்டாயிற்று. மகாபலசாலியான அவன், திரிசிரஸ்–தூஷணன் முதலியோருடன் எதிர்க்க முடியாத அரக்கர் படையில் பெரும் பகுதியினர் இராமன் என்ற ஒரே ஒருவரால் அழிக்கப்பட்டதைக் கண்டு மனம் நொந்து, (முன்னொரு காலத்தில்) நமுசி என்னும் அசுரன் இந்திரன் மீது கோரத்தாக்குதல் நடத்தியது போல, இராமன் மீது பாய்ந்தான். கரன், மிகுந்த பலத்துடன் வில்லை வளைத்து, கோபம் கொண்ட சர்ப்பங்களைப் போன்று, இரத்தத்தைக் குடிக்கும் நாராசம் என்ற பாணங்களை, இராமனை நோக்கி ஏவினான். போர்க்களத்தில் ரதத்திலிருந்த கரன், நாண்கயிற்றை நன்றாக இழுத்து, தான் பயின்ற அஸ்திரங்களைப் பிரயோகித்து, பாணங்களைப் பல வழிகளில் செலுத்திச் சுற்றிச் சுற்றி வந்தான். (1–5)

ரதத்தில் ஏறி யுத்தம் செய்யும் கரனைக் கண்டு, மகாரதராகிய இராமன், கரனைக் கொல்வதற்கு ஏற்றதான வேறொரு மாபெரும் வில்லை எடுத்து, சரமாரி பெய்து, எல்லாத் திசைகளையும் அம்புகளால் நிரப்பினார். (பதினாயிரம் போர் வீரர்களைத் தனியாக எதிர்த்துப் போரிடக்கூடிய மாவீரன், மகாரதன் என்ற பெருமைக்கு உரியவனாகிறான். இராமன், தரையில் நின்றபடியே யுத்தம் செய்தாலும், அவருடைய பராக்கிரமம் எல்லையற்றது என்பதால் மகாரதன் என்ற சொல்லைக் கூறியுள்ளார், ஆதிகவி.) அவர், தீப்பொறி பறக்கும் நெருப்புப் போன்றவைகளும், தாங்கிக் கொள்ள முடியாதவைகளுமான அம்புகளால் மேகத்தின் மழைத்தாரையால் ஆகாயம் மறைக்கப்படுவதைப் போன்று, ஆகாயத்தை இடைவெளி இல்லாததாகச் செய்தார். கரனாலும் இராமனாலும் விடப்பட்ட கூரிய அம்புகளால், ஆகாயம் முழுவதும் எல்லாத் திசைகளிலும் அம்பு நிறைந்ததால், ஆகாயமே இல்லாததுபோல் ஆயிற்று. (6–8)

ஒருவரையொருவர் கொல்லவேண்டும் என்ற ஆத்திரத்துடன் அவ்விருவரும் கடுமையாகப் போர் செய்கையில், (இருவராலும் விடப்பட்ட) பாணக் கூட்டங்களால் மறைக்கப்பட்ட சூரியன், அப்போது பிரகாசிக்கவில்லை. (சூரிய ஒளியை அம்புகளின் கூட்டம் மறைத்துவிட்டது.) அப்போது, யுத்தகளத்தில் கரன், நாலீகம், நாராசம், சற்றே வளைந்த முன் பகுதியையுடைய

கூரான விகர்ணி ஆகிய பாணங்களால், ஒரு மாபெரும் மதயானையை அங்குசத்தால் அடக்கிக் கொல்ல முயல்வதைப் போல, இராமன் மீது செலுத்தினான். (அங்குசத்தால் மதங்கொண்ட யானையை ஒருக்காலும் அடக்க முடியாது – என்றபடி.) அந்த நேரத்தில், கையில் வில்லைப் பிடித்துக் கொண்டு, ரதத்தில் உறுதியாக நிற்கும் கரனைக் கையில் பாசத்தை ஏந்தி நிற்கும் காலனாக, எல்லாப் பிராணிகளும் நினைத்துப் பார்த்தன. தனது வீரத்தில் உறுதியாக நின்று, (அரக்கர்) படை முழுவதையும் கொன்றுவிட்ட பின்னர், மகாதைரியம் கொண்டவரான இராமன் களைப்படைந்திருக்கிறார் என்று, அப்போது கரன் எண்ணினான். (9–12)

சிம்மத்திற்கு நிகரான பராக்கிரமம் உடையவனும், சிம்மம் போல வீர நடை நடப்பவனுமான அவனைப் பார்த்து, (மான் முதலிய) ஓர் அற்ப விலங்கைக் கண்டு, ஒரு சிங்கம் எவ்வாறு அலட்சியமாக நிற்குமோ, அதேபோல் இராமன் அவனைக் கண்டு கலவரப்படாமலிருந்தார். அப்போது, சூரியனைப் போல் ஒளிவீசும் ஒரு பெரிய ரதத்தில் நின்ற கரன், (தான் பொசுங்கிப் போவோம் என்ற நினைவில்லாமல்) ஒரு விட்டிற்பூச்சியானது நெருப்பை நோக்கி வேகமாகச் செல்வதைப் போல, போர்க்களத்தில் இராமனை நோக்கிச் சென்றான். உடனே, அம்பு பூட்டிய வில்லில் எந்த இடத்தில் இராமன் கை வைத்திருந்தாரோ, அந்த இடத்தில், தன் கைத்திறமையைக் காட்டும் வகையில் கரன் அம்பைச் செலுத்தி (வில்லை) ஒடித்தான். (இராமன், களைப்படைந்து சற்று ஓய்வாக இருந்த சில நொடி இடைவேளையில் இப்படி நிகழ்ந்தது என்பர், ஆன்றோர்.) உடனே கரன், இந்திரனுடைய வஜ்ராயுதத்திற்கு நிகரான ஏழு பாணங்களை எடுத்து, கோபத்துடன் (இராமனின் மார்புக்) கவசத்தை நோக்கிச் செலுத்தினான். (13–16)

அப்போது, சூரியன்போல் ஒளிவீசும் இராமனுடைய கவசம், கரனால் விடப்பட்ட கணுக்கள் கொண்ட பாணங்களால் தாக்கப்பட்டு பூமியில் விழுந்தது. அந்தப் போரில், இணையற்ற பராக்கிரமசாலியான இராமனை மேலும் ஆயிரக்கணக்கான பாணங்களால் தாக்கிவிட்டு, கரன் ஆணவத்துடன் பெருங்குரல் எழுப்பினான். அந்தச் சண்டையில், உடல் முழுவதும் அம்புகளால் துளைக்கப்பட்டு, (வழிந்தோடும் செந்நிற இரத்தத்தால்) புகையில்லாமல் சுவாலையுடன் எரியும் நெருப்பைப் போல், சினங்கொண்ட ரகுகுல திலகமான இராமன் விளங்கினார். (17–19)

பகைவர்களை அழித்தொழிக்கும் இராமன், அப்போது கம்பீரமாக ஒலியெழுப்பும் வேறொரு பெரிய வில்லை எடுத்து, எதிரியின் அழிவுக்காக நாணேற்றினார். மாமுனிவர் அகஸ்தியரால் சமர்ப்பிக்கப்பட்ட, பெரிய, சிறந்த வைஷ்ணவ வில்லை எடுத்து (நாணேற்றி) கரனைத் தாக்கினார் (இராமன்). மிகவும் கோபம் கொண்ட இராமன், பொன்கட்டுகளுள்ளவையும் அளவான கணுக்கள் உடையவையுமான பாணங்களால், கரனுடைய (தேர்) துவஜத்தை அறுத்துத் தள்ளினார். காண்பதற்கு அழகான அந்தப் பொற்கொடி, சின்னபின்னமாக்கப்பட்டு, தேவதைகளின் கட்டளைக்கிணங்க, சூரியன் பூமிக்கு இறங்கி வந்தாற்போலிருந்தது. (கொடி கிழிந்து கந்தலாகிப் போனாலும் ஒளி குன்றாதிருந்தது – என்றபடி.) (20–23)

சினத்தால் பொங்கிய கரன், அந்தச் சண்டையில், உடலின் உயிர்நிலைகளைக் குறிவைத்து, யானைப் பாகன் அங்குசத்தால் மாபெரும் யானையைக் குத்துவதைப் போல, நான்கு பாணங்களை, இராமனின் உடல் மீது செலுத்தினான். கரனுடைய வில்லிலிருந்து புறப்பட்ட ஏராளமான பாணங்களால் தாக்கப்பட்டு, உடல் முழுவதும் இரத்தம் சொட்டச் சொட்ட நின்ற இராமன் மிகவும் கோபத்தை அடைந்தார். வில்லாளிகளில் முதன்மையானவரும், மிகச்சிறந்த வில்லை உடையவருமான அவர், வில்லை எடுத்து, குறி பார்த்து ஆறு அம்புகளைச் செலுத்தினார். அவனை ஒரு பாணத்தால் தலையிலும் இரண்டு பாணங்களால் இரு கைகளிலும் தாக்கித் துன்புறுத்தினார். பிறைநிலா போன்ற வடிவமுடைய மூன்று பாணங்களால் அவன் மார்பைத் தாக்கினார். பின்னர், அரக்கனைக் கொல்வதில் முனைப்புக் கொண்டு, மிகுந்த கோபத்துடன், பேராற்றல் பெற்ற சூரியன்போல் ஒளிவீசுகிற நாராசம் என்ற பாணங்கள் பதின்மூன்றை எடுத்துத் தொடுத்தார். (24–28)

பேராற்றலுடைய அவர் ஒரு பாணத்தால் நுகத்தடியையும், நான்கு பாணங்களால் நான்கு குதிரைகளையும், கரனுடைய தேரோட்டியின் தலையை ஆறாவது பாணத்தாலும், மூன்று பாணங்களால் ஏர்க்காலையும், மகாபலம் கொண்ட அவர் இரு பாணங்களால் ரதத்தின் இருசையும், பன்னிரண்டாவது பாணத்தால் அம்பு கோர்க்கப்பட்டிருந்த கரனுடைய வில்லையும் அறுத்துத் தள்ளிவிட்டு, இந்திரனுக்கு நிகரான இராமன், அந்தப் போரில் வஜ்ரம் போல் பிரகாசிக்கும் பதின்மூன்றாவது பாணத்தால், ஒரு விளையாட்டுப் போல கரனைத் துளைத்தார். (29–31)

அப்போது வில் முறிக்கப்பட்டு, ரதம் இல்லாமல், குதிரைகள் மாய்க்கப்பட்டு, தேரோட்டியையும் இழந்தவனான கரன், கையில் கதையை எடுத்துக் கொண்டு தரையில் குதித்தான். மகாரதனான இராமனின் அந்தச் செயற்கரிய செயலைக் கண்டு, விமானத்தின் முன்பகுதிக்கு வந்து நின்று கொண்டு, தேவர்களும் மாமுனிவர்களும் மனம் மகிழ்ந்து கைகூப்பியவாறு ஒன்றாகக்கூடி, இராமனைப் போற்றிப் புகழ்ந்தார்கள். (32,33)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
இருபத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்தொன்பது

கரனுடைய கதையைத் தூளாக்குதல்

அளவிட முடியாத ஆற்றல் படைத்த இராமன், ரதத்தை இழந்து, கையில் கதையை வைத்துக் கொண்டு, எதிரில் நிற்கும் கரனைப் பார்த்து, தொடக்கத்தில் மிருதுவாகவும், பின்னர் கடுமையாகவும் கூறினார்— (1)

யானை–குதிரை–தேர்களை ஏராளமாகக் கொண்ட சேனை இருக்கிறது என்ற அகந்தையால், எல்லாப் பிராணிகளாலும் வெறுக்கத்தக்க, மிகக்கொடிய செயல்கள் உன்னால் செய்யப்பட்டன. பிராணிகளின் கோபத்தைக் கிளறி, வெறுக்கத்தக்கப் பாவச்செயல்களைச் செய்பவன் மூன்று உலகங்களுக்கும் தலைவனாக இருந்தாலும், அவன் வெகுகாலம் தாக்குப்பிடிக்க மாட்டான். அரக்கனே! எதிரே வந்து நிற்கும் கொடுமை பிராணியான சர்ப்பத்தைக் கொல்வதைப் போல, உலக மக்களின் நலனுக்கு எதிரான செயல்களைச் செய்பவனை, மக்களனைவரும் கடுமையாக எதிர்த்துக் கொல்கிறார்கள். (தனக்குக் கிடைக்காத பொருளை விரும்புவது, காமம். பின்னர், கிடைத்த பொருளை மேன்மேலும் சேர்க்க வேண்டும் என்று ஆசைப்படுவது, லோபம்.) காமத்தாலோ, லோபத்தாலோ பாவச்செயல்களைச் செய்துகொண்டு, அந்தத் தவற்றை அறிந்து கொள்ளாதவன், ஆலங்கட்டியை விருப்புடன் தின்றுவிட்ட அரணையைப் போல், தன்னுடைய முடிவைத் தானே தேடிக் கொள்கிறான். (2–5)

அரக்கனே! தண்டகாரண்யத்தில் இருப்பவர்களும் பெரும்பேறு பெற்றவர்களுமான தபஸ்விகளைக் கொன்று போடுவதால், என்ன பயனை அடையப் போகிறாயோ? உலகத்தோரால் வெறுக்கப்படும் பாவச்செயல்கள் புரியும் கொடியவர்கள், ஏதோ ஒரு புண்ணிய விசேஷத்தால் மேன்மையை அடைந்திருந்தாலும், வேர் அறுபட்ட மரங்கள் போல, அதிக காலம் சுக–சௌக்கியங்களை அனுபவிக்க மாட்டார்கள். உரிய பருவகாலத்தில் மரங்களில் புஷ்பங்கள் தோன்றுகின்றன. அதேபோல, பாவத்தைச் செய்தவன், அதன் பயனை அனுபவிக்க வேண்டிய காலம் வந்ததும் பயங்கரமான விளைவுகளை அடைகிறான். அரக்கனே! விஷம் கலந்த உணவை உண்டவன், அதன் விளைவான துன்பங்களை எவ்விதம் உடனே அனுபவிக்கிறானோ, அவ்விதமே பாவகாரியங்களின் பயனை விரைவிலேயே அனுபவிக்கிறான். அரக்கனே! உலக மக்களுக்குத் தீமை செய்ய விருப்பம் கொண்டு, கொடியதான பாவச் செயல்கள் புரிபவர்களின் உயிரை மாய்க்க, நான் மன்னரால் அனுப்பப்பட்டுள்ளேன். (6–10)

இப்பொழுது, நான் விடப்போகும் பொன்னால் இழைக்கப் பெற்ற பாணங்கள், உன் உடலைப் பிளந்து சென்று, புற்றுக்குள் நுழையும் பாம்புகள் போல, பூமியினுள்ளேயும் சென்றடையப் போகின்றன. தண்டகாரண்யத்தில், அறநெறியைக் கடைப்பிடிக்கும் முனிவர்கள் உன்னால் புசிக்கப்பட்டார்கள். இப்போது, சண்டையில் கொல்லப்பட்டுவிட்ட படையுடன் சேர்ந்து, நீயும் அவர்களைப் பின்பற்றிச் செல்வாய். (நீயும் அவர்களைப் பின்பற்றி நல்லுலகங்களையே அடைவாய்.) உன்னால், முன்னர் துன்புறுத்தப்பட்ட மாமுனிவர்கள் (இப்போது, ஆகாயத்தில்) விமானத்தில் இருந்து கொண்டு, என் பாணங்களால் நீ கொல்லப்பட்டுத் தரையில் விழுந்து, நீ அனுபவிக்கப் போகும் நரக வேதனையைக் காணப் போகிறார்கள். இழிகுலத்தோனே! உன்னால் முடிந்தவாறெல்லாம் போர் புரிவாய். (நீ எவ்வளவுதான் உக்கிரமாகப் போரிட்டாலும்,) இப்போது பனைமரத்திலிருந்து பனம்பழம் உதிர்வதைப் போல, உன் தலையை, உன் உடலிலிருந்து அறுத்துத் தள்ளப் போகிறேன் (என்பது நிச்சயம்).'' (11–14)

இவ்வாறு, இராமன் கூறியதைக் கேட்டவுடன் கரனின் கோபம் பொங்கியெழுந்தது; கண்கள் சிவந்தன; சினத்தால் மதியிழந்தவன் போலாகி, சிரித்துக் கொண்டு இராமனுக்குப் பதிலுரைத்தான்— ''தசரதனின் மைந்தனே! வெறும் சிப்பாய்களைப் போரில் கொன்றுவிட்டு, எந்தப் புகழுக்கும் உரியவனல்லாத உன்னைப் பற்றி, நீயே புகழ்ச்சியாகப் பேசுகிறாய். அட்டா! பராக்கிரமம் மிக்கவர்களும் உடல்பலம் உடையவர்களுமான உத்தமமான வீரபுருஷர்கள், தங்கள் பிரதாபத்தால் செருக்கடைந்து, (நீயே உன்னைப் புகழ்ந்து கொள்வதைப் போலச்) சிறிதளவும் தங்களைப் போற்றிப் பேச மாட்டார்கள். இராமனே! அற்ப குணங்களையுடைய, புலன் கட்டுப்பாடில்லாத, க்ஷத்திரிய குலத்திற்கே களங்கத்தை ஏற்படுத்துகிறவர்கள்தான், பொருளில்லாமல் இவ்வாறு பிதற்றுவார்கள். (15–18)

போரில் மாண்டுபோகும் வேளை நெருங்கி வந்துவிட்ட காலத்தில், எந்த வீரன்தான் தன் உயர்குடிப் பிறப்பையும், அவசியமே எழாதபோதுகூட தானாகவே தன்னைப் பற்றிப் புகழ்ந்து பேசிக் கொண்டிருப்பான்? தர்ப்பத்தை அக்னியில் போட்டுக் கொளுத்தும்போது தங்கம்போல் பிரகாசத்தை வெளியிடுகிறது. (ஆனால், எரிந்து அணைந்தவுடன் வெறும் கருப்புச் சாம்பலாகி விடுகிறது; வெம்மையும் பிரகாசமும் இல்லாததாகிறது.) அதுபோல, தற்பெருமை பேசும் உன்னால், உன்னுடைய கையாலாகாத்தனம்தான் முற்றிலும் வெளியிடப்பட்டதாகிறது. (நீ வீரமாகப் பேசியபடி, என்னைக் கொல்ல முடியாது.) பல்வகை தாதுக்களால் விளங்குவதும் இந்த மண்ணுலகையே தாங்கிக் கொண்டிருப்பதுமான ஒரு பர்வதத்தைப் போல, கையில் கதையுடன் கொஞ்சமும் அசைக்க முடியாதவனாக உன் எதிரில் நிற்கும் என்னை (அளவிட முடியாத என் ஆற்றலை), நீ அறிந்து கொள்ளவில்லை போலும்! (19–21)

போரில், உன்னுடையவும் மூன்று உலக மக்களுடையவும் உயிரை, கையில் பாசத்தை வைத்துக் கொண்டிருக்கும் யமனைப் போல் (வெகு எளிதாக) மாய்ப்பதற்கு கதையைக் கையில் பிடித்துக் கொண்டிருக்கும் நான் ஒருவனே போதும். உன்னைப் பற்றி சொல்லவேண்டிய விஷயம் இன்னும் நிறைய இருக்கிறது என்றாலும் இப்போது சூரியன் மறையப் போகிறான். அப்படி அஸ்தமனமாகிவிட்டால், போருக்கு இடையூறு ஏற்படும். (இரவு வேளையில், கரனுடைய பலம் அதிகரிக்கும் என்பது உண்மையேயானாலும், மானுடனான எதிரியை – இருட்டில் அவன் போர் செய்ய முடியாதபோது – மாய்ப்பது, தனக்குப் பெருமையைத் தராது என்று எண்ணினான் எனக் கொள்க.) பதிநான்காயிரம் அரக்கர்கள் உன்னால் கொல்லப்பட்டார்கள். இப்போது, நான் உன்னைக் கொன்று (பழி தீர்த்து, கணவர்களை இழந்த மனைவிகளின்) கண்ணீரைத் துடைப்பேன்.'' (22–24)

இவ்வாறு கூறிவிட்டு, சிறந்த தோள்வளைகளை அணிந்திருந்த கரன், மேலும் கோபம் கொண்டு, நெருப்புப் போல் பிரகாசிக்கும் வஜ்ராயுதத்தைப் போன்ற அந்த கதாயுதத்தை, இராமன் மேல் வீசியெறிந்தான். கரனுடைய கையிலிருந்து விடுபட்ட பேருருவம் கொண்ட அந்த கதை

பேரொளி வீசிக் கொண்டு, (இடையிலிருந்த) மரங்களையும் புதர்களையும் பொசுக்கிச் சாம்பலாக்கிவிட்டு, இராமன் அருகே சென்றது. ஜொலித்துக் கொண்டு, காலனுடைய பாசத்திற்கு ஒப்பான அந்த கதை, தன்மேல் விழுவதற்காக வந்து கொண்டிருப்பதைப் பார்த்த இராமன், அது ஆகாய வழியில் வந்து கொண்டிருக்கும்போதே பாணங்களை விடுத்துத் துகள்துகளாகச் செய்தார். அம்புகளால் முறிக்கப்பட்டுச் சிதறிப்போன அந்த கதை, மந்த்ர–மூலிகைகளின் பலத்தால் இழுக்கப்பட்ட சர்ப்பம் போலத் தரையில் விழுந்தது. (25–28)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
இருபத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பது

கரனை மாய்த்தல்

தருமப்பற்றுடைய இராமன், அந்த கதையைப் பாணங்களால் தூளாக்கிவிட்டு, சற்றே நகைத்தவாறே அகந்தை கொண்ட கரனைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார்— (1)

"அரக்கப் பதரே! உன் பலம் முழுவதையும் காட்டிவிட்டாய்! நீ, என்னைக் காட்டிலும் மிகவும் பலம் குறைந்தவன் (என்பது இப்போது நிரூபிக்கப்பட்டுவிட்டது. எனினும்,) நீ வீணாகக் கூச்சலிட்டுக் கொண்டிருக்கிறாய். என்னுடைய பாணங்களால் சுக்குநூறாக்கப்பட்ட உன்னுடைய கதை, தற்பெருமை பேசுவதில் வல்லவனான உன் நம்பிக்கையை அழிக்கும்விதமாகத் தரையில் விழுந்து கிடக்கிறது. 'மாண்டு போன அரக்கர்களை எண்ணி வருந்தி, அவர்களுடைய மனைவி–மக்கள் சொரியும் கண்ணீரைத் துடைப்பேன்' என்று கூறினாயே, அந்தச் சூளுரையும் பொய்யாகப் போய்விட்டது. தேவதைகளிடமிருந்த அமிர்தத்தை பலவந்தமாகக் கருடன் கவர்ந்து சென்றதுபோல, தாழ்ந்தவனும் இழிகுணங்கள் உடையவனும் பொய் நடத்தையுள்ளவனுமான அரக்கனுடைய (உன்னுடைய) உயிரை, நான் கவர்ந்து செல்வேன். இப்போது, நான் என் பாணங்களால் உன் உடலைத் துளைத்து, தலையை அறுத்துத் தள்ளப் போகிறேன். அப்போது, உன் உடலிலிருந்து நுரைத்துக் கொண்டு பெருகிவரும் இரத்தத்தை, இந்தப் பூமி குடிக்கப் போகிறது. (2–6)

மண் படிந்த சரீரமுடையவனாக, இரண்டு கைகளும் வெட்டப்பட்டுத் தனித்து விழுந்து கிடக்க, கிடைத்தற்கரிய ஒரு பெண்மணி அணைத்துக் கொண்டிருப்பதைப் போல, பூமியில் விழுந்து நீ நித்திரை செய்யப் போகிறாய். அரக்கப்பதரான நீ, நீண்ட நித்திரையில் ஆழ்ந்து வீழ்ந்த பின்னர், புகலிடம் இல்லாமல் தவித்த(முனி)வர்களுக்கு, இந்தத் தண்டகாரண்யம் அடைக்கலம் கொடுக்கும் இடமாக ஆகப்போகிறது. அரக்கனே! என்னுடைய பாணங்களால், உன்னுடைய தலைமை இடமான ஜனஸ்தானம் முற்றிலும் அழிக்கப்பட்டதும், இந்த வனத்தின் எல்லா இடங்களிலும், முனிவர்கள் அச்சமற்றவர்களாகச் சஞ்சரிக்கப் போகிறார்கள். (7–9)

இதுவரையில், பிறருக்குப் பயத்தை விளைவித்துக் கொண்டிருந்த அரக்கிகள், உற்றார்–உறவினர்களை இழந்து, கண்ணீர் பெருகும் முகத்தோடு, (தங்களுக்கும் அழிவு ஏற்படுமோ? என்ற) பயத்தால், இந்த இடத்தை விட்டு ஓடிப்போகப் போகிறார்கள். உன்னைப் போன்ற ஒருவனைக் கணவனாக அடைந்து (உனக்கு ஏற்ற மாதிரியே) தீவினைகளைச் செய்த உன்னுடைய பத்தினிகள் (இதுவரையில் இன்பச்சுவையை மட்டும் அறிந்தவர்கள்), இப்போது (நீ, என்னால் கொல்லப்பட்ட பின்) சோகச்சுவையை அனுபவிக்கப் போகிறார்கள். கொடியவனே! அற்பனே! தீய எண்ணங்களுடையவனே! வேதநெறியாளர்களின் பகைவனே! முனிவர்கள், உன் நிமித்தமான அச்சத்துடனேயே அக்னியில் அவியைச் சொரிகிறார்கள்.'' (கடைசி நேரத்தில் வந்து, அவியைப் பறித்துக் கொண்டு போய்விடுவானோ? என்ற பீதியில்.) (10–12)

போரில், இவ்வாறு மிகக் கடுமையாகப் பேசிய இராமனை நோக்கி, கடுஞ்சினத்தால் குரல் கரகரக்க அதட்டலாகப் பதில் சொன்னான், கரன். ''நீ, நிச்சயமாக மகா கர்வம் கொண்டவன்தான்! அதனால்தான், பயப்பட வேண்டிய காலத்திலும் பயமில்லாதவன் போல் பேசுகிறாய்! எது பேசத்தக்கது? எது பேசத்தகாதது? என்பதையும் அறியவில்லை, பாவம். நீ, காலனின் பிடியில் சிக்கிக் கொண்டிருப்பதையும் அறியவில்லை! காலபாசத்தில் சிக்கிக் கொண்ட மனிதர்கள், ஆறு புலன்களும் செயலற்றுப் போக, செய்யத்தக்கது–செய்யத்தகாதது என்பவற்றை அறிய மாட்டார்கள்.'' (ஆறு புலன்கள் = ஐந்து ஞானேந்திரியங்களும் அந்தக்கரணமும்.) இவ்வாறு, இராமனை நோக்கிக் கூறிவிட்டு, புருவத்தை நெறித்து, சற்றுத் தொலைவில் பெரிய ஆச்சாமரம் ஒன்றை, அந்த அரக்கன் பார்த்தான். (13–16)

போரில் (எதிரியை) அடிப்பதற்காக நாற்புறமும் பார்வையைச் செலுத்திய அவன், உதட்டைக் கடித்துக் கொண்டு, அந்த மரத்தை வேருடன் பெயர்த்தெடுத்தான். (வெகு ஆழமாக வேரோடியிருந்ததால், தன் முழு பலத்தைக் காட்டுவதற்காக உதட்டைக் கடித்துக் கொண்டான்.) மகாபலம் பொருந்திய அவன், இரு கைகளாலும் அந்த மரத்தைப் பிடுங்கி, வெகுவாக சத்தமிட்டுக் கொண்டு, 'நீ (இப்போது) தொலைந்தாய்!' என்று முழக்கமிட்டவாறே, இராமனைக் குறி வைத்து எறிந்தான். பராக்கிரமம் மிக்க இராமன், தன்னை நோக்கி வந்து கொண்டிருக்கும் அந்த மரத்தைப் பற்பல பாணங்களால் சிதைத்து, சண்டையில் கரனைக் கொல்வதற்காகக் கட்டுக்கடங்காத கோபத்தை ஏற்படுத்திக் கொண்டார். (17–19)

அப்போது, இராமனது சரீரத்தில் வியர்வை கொட்டிற்று; கோபத்தால் கண்கள் சிவந்தன. போர்க்களத்தில் ஆயிரக்கணக்கான அம்புகளால் கரனைச் சிதறடித்தார். மலையின் ஊற்றிலிருந்து தண்ணீர் அருவியாகப் பெருகி வழிவதைப் போல, அவருடைய பாணங்களால் துளைக்கப்பட்ட (கரனுடைய) சரீரத்திலிருந்து ஏராளமான இரத்தம் நுரைத்துக் கொண்டு பெருகி ஓடிற்று. சண்டையில், இராமனுடைய பாணங்களால் தாக்குண்டு மதிகலங்கிப் போனான், அவன். இரத்தத்தின் வாசனையால் வெறிபிடித்தவன் போலாகி, அவரை நோக்கியே வேகமாக ஓடிச் சென்றான். (20–22)

மிகவும் கோபத்துடன் இரத்தம் சொட்டச் சொட்டத் தன்னை நெருங்கிவிட்ட அவன்மேல் அஸ்திரத்தைத் தொடுப்பதற்குத் தேவையான இடைவெளியை ஏற்படுத்திக் கொள்ள விரும்பி, துரித நடையுடைய அவர், இரண்டு–மூன்று அடிகள் பின்னோக்கிச் சென்றார். (யுத்தத்தில் பின்னோக்கிச் செல்வது வீரனுக்கு அழகல்ல. இராமன் பின்னோக்கிச் சென்றது அச்சத்தால் அல்ல. கரனுடைய இரத்தப் பெருக்குத் தன் மேல்பட்டு அசுத்தப்படுத்திவிடக் கூடாது என்பதாலும், அஸ்திரத்தை ஏவுவதற்குத் தகுந்த இடைவெளி முக்கியம் என்பதாலும்தான், அவர் இரண்டு–மூன்று அடிகள் பின்னோக்கிச் சென்றார்.) யுத்தத்தில், கரனை வதைப்பதற்காக, அக்னியைப் போல் சுடர்விடும் ஓர் அம்பினை இராமன் எடுத்தார். அது, இன்னொரு பிரும்மதண்டம் (பிரும்மாஸ்திரம்) போல் (நிச்சயமாக எதிரியை வீழ்த்துவதாகத்) தோன்றிற்று. (23,24)

பேரறிவாளனும் தேவர்கள் மன்னனுமான இந்திரனால் கொடுக்கப்பட்டதான அதை, தருமாத்மாவான இராமன், கரனைக் குறி வைத்துச் செலுத்தினார். இராமனால், காதுவரை நாண்கயிற்றை இழுத்து (முழு வேகத்துடன்) விடப்பட்ட அந்த மகாபாணம், இடியைப் போல் முழங்கிக் கொண்டு, கரனுடைய மார்பில் விழுந்தது. பாணத்தின் நெருப்பினால் கொளுத்தப்பட்ட கரன், (முன்னொரு காலத்தில்) சுவேதாரண்ய க்ஷேத்திரத்தில், ருத்ரனால் எரிக்கப்பட்ட அந்தகன் போல தரையில் விழுந்தான். வஜ்ராயுதத்தால் விருத்திராசுரன் வீழ்ந்ததைப் போல, நுரையினால் நமுசி வீழ்ந்ததைப் போல, இந்திரனின் அதிகாரத்திற்குட்பட்ட இடியினால் பலாசுரன் வீழ்ந்ததைப் போல, கரன் கொல்லப்பட்டு விழுந்தான். (25–28)

அப்போது, (மன்னர்களாக இருந்து நாட்டை ஆண்டு, பின் ஞானவழியை ஏற்ற) ராஜரிஷிகளும், வேதநெறிப்படி வாழ்க்கை நடத்தும் பிரும்மரிஷிகளும் மிகவும் மனம்

மகிழ்ந்தவர்களாக, ஒன்றாகத் திரண்டு, இராமனைப் போற்றிக் கொண்டாடிப் பின்வருமாறு கூறினார்கள்— ''பெரும் ஆற்றலுடையவனும், பாகன் என்ற அசுரனைக் கொன்றவனும், புரந்தரனுமாகிய தேவேந்திரன், இதன் பொருட்டே புனிதமான சரபங்க முனிவருடைய ஆசிரமத்திற்கு வந்திருந்தான். கொடியவர்களும் பாவச் செயல்களையே செய்பவர்களுமான இந்த அரக்கர்களை ஒழித்துக் கட்டுவதற்காகவே, முனிவர்கள் ஓர் உபாயம் செய்து, உன்னை இந்த இடத்திற்குக் கொண்டு வந்தார்கள். தசரதர் மைந்தனே! எங்களுடைய இந்தக் காரியம் உன்னால் நிறைவேற்றப்பட்டுவிட்டது. இனி, மாமுனிவர்கள், தண்டகாரண்யத்தின் பல பகுதிகளிலும் எவ்விதக் கவலையுமில்லாமல் தத்தம் அனுஷ்டானங்களைச் செய்வார்கள்.'' (29–32)

இதனிடையில், இராமன் செய்து முடித்த செயற்கரிய செயலால் பெரும் வியப்படைந்த தேவர்கள், மிகவும் களிப்புற்றவர்களாக, சாரணர்களுடன் சேர்ந்து துந்துபி வாத்தியங்களை முழக்கிக் கொண்டு, இராமன் மீது எல்லாப் பக்கங்களிலிருந்தும் மலர்மாரியைப் பொழிந்தார்கள். ''பெரும் போரில், கர–தூஷணர்களைத் தலைவர்களாகக் கொண்டவர்களும், கொடுஞ்செயல் புரிபவர்களுமான பதிநான்காயிரம் அரக்கர்கள், ஒன்றரை முகூர்த்த காலத்தில், கூரிய பாணங்களால் இராமனால் கொல்லப்பட்டார்கள். மகாபராக்கிரமம் கொண்ட இராமனுடைய இந்த அரிய செயலைப் புகழ்வதற்குச் சொற்களே இல்லை! சாட்சாத் ஸ்ரீமகாவிஷ்ணுவினிடம் காணப்படுவதைப் போலவே, இவரிடமும் என்ன வீரம்! என்ன சாமர்த்தியம்!'' இவ்வாறு புகழ்ந்து கூறிவிட்டு, தேவர்கள் அனைவரும் வந்தபடியே திரும்பிச் சென்றார்கள். (33–35)

இதனிடையே, வீரனான இலக்குவன், சீதையோடுகூட மலைக்குகையிலிருந்து வெளியே வந்து, மிக்க மகிழ்ச்சியுடன் ஆசிரமத்தை வந்தடைந்தான். பின்னர், வெற்றிவீரரான இராமன், மகரிஷிகளாலும் லட்சுமணனாலும் கொண்டாடப்பட்டு ஆசிரமத்தை அடைந்தார். பகைவர்களைக் கொன்றழித்து, மாமுனிவர்களுக்கு நன்மையை விளைவித்த அவரைப் பார்த்து சீதை ஆனந்தப்பட்டாள்; (மகிழ்ச்சி மேலீட்டினால்) கணவரை ஆலிங்கனம் செய்து கொண்டாள். அரக்கர்கள் கொல்லப்பட்டுக் கிடப்பதைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்த ஜனககுமாரி, இராமனுக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படவில்லை என்பதையும் கண்டு மனம் பூரித்தாள். முழுமதி போன்ற முகமுடைய ஜனககுமாரி, அரக்கர் கூட்டங்களை அழித்தவரும், மனமகிழ்ந்த மாமுனிவர்களால் கொண்டாடப்படுபவருமான அவரை (இராமனை), அப்போது மீண்டும் மார்புறத் தழுவிக் கொண்டு நிறைந்த மனமுடையவளானாள். (36–40)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
முப்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்தொன்று

இராவணன், கரன் அழிவைத் தெரிந்து கொள்ளுதல்

ஜனஸ்தானத்திலிருந்து அகம்பனன் என்ற அரக்கன் (போர்முனையிலிருந்து தப்பித்து) விரைவாகச் சென்று, இலங்கையில் புகுந்து பரபரப்புடன் இராவணனிடம் இவ்வாறு சொன்னான்— ''மன்னரே! ஜனஸ்தானத்திலிருந்த ஏராளமான அரக்கர்கள் கொல்லப்பட்டார்கள்; (தூஷண–திரிசிரஸுடன்) கரனும் யுத்தத்தில் கொல்லப்பட்டார். நான் எப்படியோ இங்கு வந்து சேர்ந்தேன்.'' (பெண்வேடம் தாங்கி, இராமன் அம்புக்குப் பலி ஆகாமல் தப்பினான் – என்பர், உரையாசிரியர்கள்.) இவ்வாறு கூறப்பட்டதும், கோபத்தால் கண்கள் சிவக்க பார்வையாலேயே எரித்துவிடுவதைப் போலப் பார்த்து, அகம்பனனை நோக்கிப் பின்வருமாறு கூறினான், இராவணன். (1–3)

''அழகான என்னுடைய ஜனஸ்தானம், ஆயுள் முடிந்த எவனால் அழிக்கப்பட்டது? இப்போது உலகத்தின் எந்தப் பகுதியிலும் (பதுங்குவதற்குப்) புகலிடம் கிடைக்காமல் எவன் அலையப்

போகிறான்? (ஜனஸ்தானத்தை அழித்தவன் உலகத்தின் எந்த மூலையில் ஒளிந்து கொண்டாலும், நான் அவனை விட்டு வைக்க மாட்டேன் – என்றபடி.) ஏனென்றால், எனக்கு ஒரு கெடுதலைச் செய்துவிட்டு இந்திரன், குபேரன், யமன், விஷ்ணு – எவராலும் நிம்மதியாக இருக்க முடியாது. நான், காலனுக்குக் காலன்; அக்னியையும் எரிப்பேன்! மிருத்யுவை மரணத்துடன் கூட்டி வைப்பேன்! எனக்குக் கோபம் வந்ததேயானால், வாயுவினுடைய வேகத்தையும் தடுத்து நிறுத்துவேன்; தீப்பிழம்பு போன்ற என் ஆற்றலினால், சூரியனையும் அக்னியையும்கூடக் கொளுத்திவிடுவேன்.'' இவ்வாறு கோபத்துடன் கர்ஜித்த இராவணனை நோக்கி, இருகைகளையும் கூப்பிக் கொண்டு, பயத்தினால் நாக்குழற அடைக்கலம் கோரினான், அகம்பனன். (4–8)

அரக்கர்களில் சிறந்தவனான இராவணன் அவனுக்கு அபயம் அளித்தான். அதனால் அகம்பனன் பயம் நீங்கி, தெளிவான சொற்களால் பின்வருமாறு கூறினான்— ''தசரதரின் புத்திரர்; சிங்கம் போன்ற உடலமைப்புக் கொண்டவர்; வாலிபர்; இராமன் என்று பெயர்; காளையைப் போன்று கொழுப்பான தோளுடையவர்; உருண்டு திரண்டு அழகாக விளங்கும் கரங்கள்; வீரர்; மிகவும் புகழ்பெற்றவர்; வெற்றிச் செல்வியை உடையவர்; ஒப்பில்லாத உடல்பலமும் பராக்கிரமமும் கொண்டவர். அவரால், ஜனஸ்தானம் முழுவதும் அழிக்கப்பட்டது; கரனும் தூஷணனும் கொல்லப்பட்டார்கள்.'' (9–11)

அகம்பனனுடைய சொற்களைக் கேட்ட அரக்கர் தலைவனான இராவணன், பெரிய சர்ப்பத்தைப் போல நீண்ட பெருமூச்சுவிட்டுக் கொண்டு பின்வருமாறு கூறினான்— ''அகம்பனா! அந்த இராமன் என்பவன், எல்லா தேவர்களோடும் தேவேந்திரனோடும் கூடியவனாக ஜனஸ்தானத்திற்கு வந்திருக்கிறானா? சொல்லு.'' இராவணனுடைய கேள்வியைக் கேட்ட அகம்பனன், மகாத்மாவான அவருடைய (இராமனுடைய) உடல் வலிமையையும் பேராற்றலையும் மீண்டும் எடுத்துரைத்தான்— (12–14)

''இராமன் என்று பெயர் பெற்ற அவர், மகாபராக்கிரமசாலி; உலகிலுள்ள வில்லாளிகளில் தலைசிறந்தவர்; தெய்விகமான அஸ்திரங்களைச் செலுத்தும் திறமை பெற்றவர்; போரில், (வஜ்ரம் என்ற சிறந்த ஆயுதத்தைக் கொண்ட) இந்திரனுக்கு நிகரானவர். அவருடைய தம்பி, லட்சுமணன் என்று பெயர் கொண்டவன்; அவரைப் போலவே பலம் மிக்கவன்; சிவந்த கண்களுள்ளவன்; துந்துபி வாத்திய முழக்கம் போன்ற குரலுடையவன்; முழுநிலா போன்று அழகான முகம் உடையவன். நெருப்பு எரிந்து கொண்டிருக்கும்போது காற்றும் சேர்ந்து கொண்டால், நெருப்பு தீவிரமடைந்து பெரும் நாசத்தை விளைவிப்பதைப் போல, தம்பியோடுகூட வெற்றிச் செல்வனான சீர்மிகு மன்னன் (இராமன்) சேர்ந்திருக்கிறார். அவரால் ஜனஸ்தானம் வீழ்த்தப்பட்டது. (15–17)

தேவர்களோ, தவச்செல்வர்களான மகாத்மாக்களோ (அவர்களுடன்) இல்லவே இல்லை. இதுபற்றித் தாங்கள் சந்தேகப்பட வேண்டாம். இராமனால் விடப்பட்ட, பொன் வேய்ந்தவைகளும் சிறகுள்ளவைகளுமான வாயை அகலமாக்கிக் கொண்ட அம்புகள், சர்ப்பங்கள் போலாகி அரக்கர்களை விழுங்கிவிட்டன. பயத்தால் கலவரமடைந்த அரக்கர்கள் எந்தெந்த வழிகளில் ஓடினார்களோ, அந்தந்தப் பாதைகளில் தம் எதிரே இராமன் நிற்பதைக் கண்டார்கள். குறைவில்லாத வீரமுடையவரே! இவ்வாறு தங்களுடைய ஜனஸ்தானம் அந்த இராமனால் அழிக்கப்பட்டது.'' அகம்பனனுடைய கூற்றைக் கேட்டதும், ''இராமனையும் லட்சுமணனையும் கொல்வதற்காக, நான் ஜனஸ்தானம் போகப் போகிறேன்'' என்றான், இராவணன். (18–20)

இந்தச் சொற்களைக் கேட்ட அகம்பனன், ''அரசே! இராமனுடைய உடல்பலத்தையும் பேராற்றலையும் உள்ளபடியே நான் சொல்வதைக் கேளுங்கள். இராமன், (யுத்தம் செய்யும்) கோபத்தோடு இருக்கும் போது, எவராலும் வெல்லமுடியாதவர் என்று பிரசித்தி பெற்றவர்; (அவருடைய பேராற்றலைச் சொல்லட்டுமா?) வெள்ளம் கரைபுரண்டோடும் நதியின் வேகத்தைத் தன் அம்புகளால் தடை செய்வார். விண்ணில் நிலைத்திருக்கும் ஒளிமயமான கோளங்கள்,

நவக்கிரகங்கள், நட்சத்திரங்கள் ஆகியவற்றை அழிக்கக் கூடியவர்; வீரச் செல்வியோடு கூடிய இந்த இராமன், கடலில் மூழ்கிக் கொண்டிருக்கும் பூமண்டலத்தை மேலே தூக்கி வைக்கக் கூடியவர். சர்வ வல்லமையுடைய அவர், சமுத்திரத்தின் கரையை உடைத்து, உலகத்தைத் தண்ணீர்க் காடாக ஆக்கிவிடுவார்; பெருங்கடலின் அடக்க முடியாத போக்கையும், வாயுவின் வேகத்தையும் தன்னுடைய கரங்களால் தடுக்கக் கூடியவர். (21–24)

பெரும்புகழ் கொண்ட அவர் விரும்பினால், தன் ஆற்றலினால் உலகங்களை அழித்துவிட்டு, மறுபடியும் மக்களை உற்பத்தி செய்யும் திறமை உடையவர். இராவணனே! பாவம் செய்த மக்களால் தேவலோகம் அடைய முடியாததைப் போல, உங்களாலோ, அரக்கர் எல்லோரும் ஒன்றுசேர்ந்தோ, போர் செய்து இராமனை வெல்ல முடியாது. எல்லா தேவர்களும் அசுரர்களும் ஒன்றாகச் சேர்ந்து போரிட்டாலும், அவரைக் கொல்ல முடியாது என்று எண்ணுகிறேன். (ஆனால்,) அவரைக் கொல்வதற்கு ஓர் உபாயம் எனக்குத் தோன்றுகிறது. அதைச் சொல்கிறேன், கவனமாகக் கேளுங்கள். (25–27)

அவருடைய மனைவி உலகில் மிகச் சிறந்தவள்; சீதை என்று பெயர்; நுண்ணிடையாள்; யௌவனப் பருவத்தில் இருப்பவள்; எல்லா அவயவங்களும் அளவாக அமையப் பெற்றவள்; பெண்மணிகளில் இரத்தினம் போன்றவள்; நவரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்டவள். தேவ–கந்தர்வ–அப்சர–தானவப் பெண்டிர்களில் அவளுக்கு இணையானவள் இருக்க மாட்டாள் என்றால், (கேவலம்) மனித ஜாதியில் யாரும் இருக்கவே முடியாதன்றோ? விசாலமான அந்தக் காட்டில், அவருடைய மனைவியை வஞ்சகமான உபாயத்தால் கவர்ந்து கொண்டு வந்துவிடுங்கள். மனைவியிடம் மிக்கப் பிரேமை கொண்ட அவர், சீதையை இழந்ததும் தன் உயிரையே துறந்து விடுவார்.'' அரக்க மன்னனாகிய இராவணன், அவன் யோசனையை நல்லது என ஏற்றுக் கொண்டான். பெருந்தோளனான அவன், சிறிது நேரம் சிந்தனை செய்துவிட்டு, அகம்பனனை நோக்கிச் சொன்னான்— (28–31)

''ரொம்ப சரி. நாளைக் காலையில் சாரதியுடன்கூட நான் தனியாகச் சென்று, இந்தப் பெருநகரத்திற்கு மகிழ்ச்சியுடன் விதேக மன்னன் புதல்வியைக் கொண்டு வந்து விடுகிறேன்.'' இவ்வாறு சொல்லிவிட்டுப் பின்னர் (மறுநாள் காலையில்) கோவேறு கழுதைகள் பூட்டப்பட்ட, சூரியன் போல் ஒளிவீசி எல்லாத் திசைகளையும் பிரகாசப்படுத்திய தேரில் ஏறிச் சென்றான், இராவணன். ஆகாய வீதியில் செல்லும் அரக்க மன்னனுடைய அந்த ரதம், மேகத்தினிடையே சஞ்சரிக்கும் சந்திரன் போலத் திகழ்ந்தது. அவன், தாடகையின் புதல்வனான மாரீசனின் ஆசிரமத்தை அடைந்தான். மாரீசன், இவ்வுலகில் கிடைக்காத பல்வகை உணவுப் பண்டங்களை மன்னனுக்கு வழங்கி உபசரித்தான். ஆசனம் அளித்தல், தண்ணீர் கொடுத்தல் முதலிய உபசாரங்களை மாரீசன், தானே செய்து கௌரவித்துவிட்டு, பின்னர் பொருள் செறிந்த சொற்களால் பின்வருமாறு கூறினான்— (32–36)

''அரக்கர் தலைவரே! மன்னரே! நாட்டில் மக்கள் எல்லோரும் நலமுடன் இருக்கிறார்களல்லவா? தலைவரே! நீங்கள் இங்கே விரைந்தோடி வந்திருப்பதைப் பார்த்தால், மனக்கஷ்டமான ஏதோ ஒரு காரியம் நடந்திருக்கிறது என்று சந்தேகப்படுகிறேன்.'' இவ்வாறு மாரீசனால் கேட்கப்பட்ட பின்னர், பேச்சில் வல்லவனும் மகாபராக்கிரமசாலியுமான இராவணன் பதிலுரைத்தான்— ''எளிதில் வீரச்செயல்களைச் செய்யவல்ல இராமனால், என்னுடைய நாட்டின் எல்லைக் காவலர்கள் அனைவரும் கொல்லப்பட்டுவிட்டார்கள். அப்பா! அழிக்கவே முடியாத ஜனஸ்தானம் என்ற அந்தப் பிரதேசம் முழுவதும் போரில் அழிக்கப்பட்டுவிட்டது. இவ்வளவு பெரிய அவமானத்தைத் தாங்கிக் கொண்டிருக்கும் எனக்கு, அவனுடைய மனைவியைக் கவர்ந்து கொண்டு போகும் விஷயத்தில், நீ உதவி செய்ய வேண்டும்.'' அரக்கர் மன்னனுடைய இந்தச் சொற்களைக் கேட்டதும் மாரீசன் சொன்னான்— (37–40)

''அரக்கர்களில் புலி போன்றவரே! உங்கள் நண்பன் போல வேஷம் போடும் எந்தப் பகைவனால் சீதையைப் பற்றித் தெரிவிக்கப்பட்டது? உங்களால் நிராகரிக்கப்பட்ட எவன், மனமகிழ்ச்சியை இழந்து தவிக்கிறான்? (அதனால், இந்தத் தவறான கருத்தை உங்கள் மனத்தில் ஊன்றியிருக்கிறான்?) 'சீதையை இங்கே கொண்டு வாருங்கள்' என்று சொன்னவன் யார்? – என்பதை எனக்குக் கூறுங்கள். எல்லா அரக்கர்களிலும் சிகரம் போன்ற உங்களை வெட்டிப் போட விரும்புகிறவன் யார்? இந்தக் காரியத்தைச் செய்யும்படி உங்களைத் தூண்டிவிடுபவன், உங்களுக்கு எதிரி என்பதில் சந்தேகமில்லை. உங்களைக் கொண்டே விஷமுடைய பாம்பின் வாயிலிருந்து அதன் கோரப் பற்களைப் பிடுங்க விரும்புகிறான். அவ்வித ஆபத்தான, தவறான காரியத்தைச் செய்யும்படி எவனால் உபதேசிக்கப்பட்டிருக்கிறீர்கள்? மன்னரே! அமைதியாக உறங்கிக் கொண்டிருக்கும் உங்கள் தலையில் அடித்தவன் யார்? (41–44)

இராவணா! இராமன் ஒரு மதயானைக்கு ஒப்பானவர்; குற்றங்குறையில்லாத நற்குலத்தில் பிறப்பு என்பது துதிக்கை; பராக்கிரமமே மதநீர்; எதையும் எதிர்க்கும் வலிமையுடைய இரு தோள்களே, தந்தங்கள்; அவரை, போரில் கண்ணெடுத்தும் பார்க்க முடியாது (என்னும்போது, யுத்தம் செய்வது என்பது எப்படி சாத்தியமாகும்?) (இராமன்) மானிட உருவம் கொண்டிருக்கும் ஒரு சிம்மம்; யுத்தகளத்தில் நிலைதவறாமல் உறுதியாக நிற்பது என்பதே அதனுடைய மயிர் அடர்ந்த வால்; வீரர்களான அரக்கர்களே, அதனால் கொல்லப்பட்ட மான்கள்; பாணங்களே, அதன் அங்கங்கள்; கூர்மையான கத்தியே அதன் பற்கள்; உறங்கிக் கொண்டிருக்கும் அந்தச் சிங்கத்தை இப்போது நீங்கள் எழுப்பத் தகாது. (அது விழித்துக் கொண்டால் விளைவுகள் பயங்கரமாக இருக்கும்.) (45,46)

அரக்கர் மன்னரே! இராமன், பாதாளத்தை அடித்தளமாகக் கொண்ட மாபெரும் கடல் போன்றவர்; அவருடைய வில்(லாகிற கோதண்டமே), முதலை; அம்புகளை எடுத்துத் தொடுப்பதால் அவருக்குள்ள கைவேகமே, ஆழமான சேறு; பாணங்களே, அலைகள்; யுத்தமே, கடலில் நிறைந்துள்ள நீர். இவ்வளவு பயங்கரமான கடலில் குதிப்பது என்பது உசிதமானதன்று. இலங்கை தலைவரே! அரக்கர்களில் முதன்மையானவரே! அருள்கூர்ந்து, நான் சொல்வதைக் கேளுங்கள். மனத்தெளிவுடனும் அமைதியுடனும் இலங்கைக்குத் திரும்பிச் செல்லுங்கள். என்றென்றும் உங்கள் மனைவிகளுடன் இன்பத்தை அனுபவியுங்கள். இராமன், தன் மனைவியோடு காட்டில் சுகமாக இருக்கட்டும்.'' இவ்வாறு மாரீசன் கூறியதும், இலங்கா நகருக்குத் திரும்பிச் சென்ற இராவணன், மிகச்சிறந்ததான தன் மாளிகையில் புகுந்தான். (47–49)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
முப்பத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்து இரண்டு

சூர்ப்பணகை வருகை

பயங்கரமான செயல்கள் செய்து வந்த பதிநான்காயிரம் அரக்கர்களும், இராமன் ஒருவராலேயே கொல்லப்பட்டதைக் கண்டாள், சூர்ப்பணகை. தூஷணன், கரன், திரிசிரஸ் ஆகியோரும் அவ்வாறே கொலை செய்யப்பட்டதைக் கண்டதும், மேகங்களின் மோதலைப் போல் மறுபடியும் பெருங்கூச்சலிட்டாள். இராமன், வேறு எவராலும் செய்ய முடியாத சாகசச் செயலைச் செய்து முடித்துவிட்டார் என்பதைப் பார்த்ததும், அவள் மிகவும் சஞ்சலப்பட்டவளாக, இராவணனால் பரிபாலிக்கப்படும் இலங்கையைச் சென்றடைந்தாள். புஷ்பக விமானத்தின் உயர்ந்த பீடத்தில் பேரொளி பரப்பிக் கொண்டு, மருத் கணங்களால் சூழப்பட்ட இந்திரன் போல், அமைச்சர்கள் புடைசூழ வீற்றிருக்கும் இராவணனைக் கண்டாள். (1–4)

சூரியனைப் போல் ஒளிவீசும் தங்கமயமான உயர்ந்த ஆசனத்தில் வீற்றிருப்பவனும், பொன்னால் அமைக்கப்பட்ட யாக மேடையில் நிறைய நெய் ஆகுதியைப் பெற்று கொழுந்து விட்டெரியும் அக்னியைப் போன்றிருப்பவனும், தேவ–கந்தர்வ–பூதங்களாலும் மகாத்மாக்களான முனிவர்களாலும் போரில் வெற்றி கொள்ள முடியாதவனும், மகாசூரனும், வாயை அகலமாக வைத்துக் கொண்டு ஓடிவரும் யமனைப் போன்றவனும், தேவர்களோடும் அசுரர்களோடும் போர் புரிந்தபோது வஜ்ராயுதத்தினாலும் இடியினாலும் ஏற்பட்ட தழும்புகளை உடையவனும், இந்திரனுடைய யானையாகிய ஐராவதத்தின் தந்தங்களின் நுனியால் குத்தப்பட்ட தழும்புகளை மார்பில் உடையவனும், இருபது தோள்கள், பத்துத் தலைகள், கண்களால் கண்டு மகிழத்தக்க ஆடை–ஆபரணங்கள், சத்ர–சாமரங்கள், விசாலமான மார்பு, வீரமுடையவன் ஆகிய மன்னருக்குரிய லட்சணங்களால் அழகாக விளங்குபவனும், (5–8)

நல்ல நீரோட்டமுள்ள (உயர்ந்த வகை) நீலமணிக்குச் சமமான காந்தியுள்ளவனும், உருக்கி சுத்தம் செய்யப்பட்ட பொன்னாலான அணிகலன்களை அணிந்தவனும், அழகான புஜங்கள், வெண்மையான பற்கள், பெரிய வாய்கள் உடையவனும், மலைபோல் உறுதி தளராதவனும், தேவர்களோடு நிகழ்த்திய போர்களில் விஷ்ணுவினுடைய சக்ராயுதத்தால் பல தடவைகள் அடிவாங்கியவனும், மற்றும் பல பெரிய போர்களில் வேறு பல சஸ்திரங்களாலும் குத்துக்களாலும் தாக்கப்பட்டவனும், தேவர்களின் ஆயுதங்களால் மேன்மேலும் அடிபட்ட சரீரத்தை உடையவனும், கலக்க முடியாத பெருங்கடல்களையும் கலக்கக் கூடியவனும், எண்ணிய செயலை உடனே செய்து முடிப்பவனும், பெரிய மலைகளையும் அனாயாசமாகப் பிடுங்கி எறிபவனும், தேவர்களை நசுக்குபவனும், அறச்செயல்களையெல்லாம் வேரோடு வெட்டி விடுபவனும், பிறர் மனைவிகளிடம் தவறாக நடப்பவனும், (9–12)

எல்லாவித தெய்விக அஸ்திரங்களையும் பிரயோகிப்பதில் நிபுணனும், எப்போதும் யாகங்களுக்கு இடையூறு செய்பவனும், பாதாளத்திலுள்ள போகவதி நகருக்குச் சென்று, வாசுகியை வென்றவனும், தக்ஷகனுடைய அன்பிற்குரிய மனைவியை பலவந்தப்படுத்திக் கவர்ந்து கொண்டு வந்தவனும், கைலாச பர்வதம் சென்று நரவாகனமுடைய குபேரனை வென்று, செலுத்துபவரின் விருப்பப்படிச் செல்லக்கூடிய, அவனுடைய புஷ்பக விமானத்தைப் பிடுங்கிக் கொண்டு வந்தவனும், தெய்விக அழகு பொருந்திய சைத்ரரதம் என்ற குபேரனுடைய பூங்காவையும் தாமரை ஓடையையும், இந்திரனுடைய நந்தனம் என்ற பூஞ்சோலையையும், தேவர்களுடைய பூந்தோட்டங்களையும் கோபத்தால் அழித்துவிடும் பராக்கிரமம் உடையவனும், மிக்க ஒளிவீசுபவர்களும் வணங்கத்தக்கவர்களுமான உதித்தெழுந்த சந்திர–சூரியர்களை மலைமுகடுகள் போன்ற புஜங்களால் தடுக்க வல்லவனும், (13–16)

பெருங்காட்டில் பதினாயிரம் ஆண்டுகள் தவம் செய்து, தன் தலைகளை அறுத்து, பிரும்மதேவருக்கு பலியாகக் கொடுத்தவனும் (ஹோம குண்டத்தில் ஆகுதியாகக் கொடுத்தவன்), யுத்தத்தில், மானுடர் நீங்கலாக தேவ–தானவ–கந்தர்வ–பிசாச–பதக–நாகர்களால் மரணமின்மை அருளப்பட்டவனும், இருபிறப்பாளர்கள் நடத்தும் புண்ணியமான வேள்விகளில், யாகவேதியில் உரிய மந்திரங்களைக் கூறி சொரியப்படும் புனிதமான ஸோமரஸத்தைப் பிடுங்கிக் கொட்டுகிற மகாபலம் பொருந்தியவனும், வேள்வி நிறைவு பெறும்போது அதைக் கெடுப்பவனும், கொடியவனும், அந்தணர்களைக் கொல்பவனும், தீய நடத்தையுடையவனும், எது வேண்டுமானாலும் செய்யத் துணிந்தவனும், மனத்தில் இரக்கமில்லாதவனும், பிராணிகளைத் துன்புறுத்துவதில் ஆர்வமுடையவனும், எல்லாப் பிராணிகளையும் கதற அடிப்பவனும், எல்லா மக்களுக்கும் அச்சத்தைக் கொடுப்பவனும், சூரனும், பெரும் பலசாலியுமான சகோதரனை, அந்த அரக்கி பார்த்தாள். (17–21)

உயர்ந்த ஆடையணிகலன்கள் அணிந்து தெய்விகமான மாலைகளால் அழகூட்டப் பெற்றவனும், சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பவனும், காலனுக்குச் காலன் போல் செருக்குடையவனும், அரக்கர்களின் தனிப்பெரும் தலைவனும், எல்லா உலகங்களிலும் பெயர் நாட்டியவனும், புலஸ்தியர் குலத்திற்கு

ஆனந்தத்தை அளிப்பவனும், எதிரிகளை அழிப்பவனும், அமைச்சர்களால் சூழப்பட்டவனுமான இராவணனை நெருங்கி, பயத்தால் மதிகலங்கிய அரக்கி பின்வருமாறு கூறினாள். பயமில்லாமல் எல்லா இடங்களிலும் சுற்றித் திரிபவளான சூர்ப்பணகை, மகாத்மா லட்சுமணனால் தன் அங்கங்கள் (காது–மூக்கு) சிதைக்கப்பட்டதைச் சுட்டிக்காட்டி, நெருப்புக் கொழுந்து போல் சிவந்த, அகன்ற கண்களையுடைய அவனைப் பார்த்து, (தற்போது) பயத்தாலும் மனக்கலக்கத்தாலும் அறிவு மயங்கியிருந்த அவள், பின்வரும் கடுமையான சொற்களைக் கூறினாள். (22–24)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
முப்பத்து இரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்து மூன்று

இராவணனைத் தூற்றுதல்

மிகவும் பரிதாப நிலையில் இருந்தவளும் வெகுவாகக் கோபம் கொண்டிருந்தவளுமான சூர்ப்பணகை, உலகங்களைக் கதற வைக்கும் இராவணனைப் பார்த்து, அமைச்சர்கள் முன்னிலையில், (பின்வரும்) கொடுமையான சொற்களைக் கூறினாள்— (1)

"அரக்கர் மன்னனே! நீ, சிற்றின்பங்களை அனுபவிப்பதில் மதிமயங்கிக் கிடக்கிறாய்; உன் மனத்தில் தோன்றியபடி நடக்கிறாய்; உன்னை அடக்குபவர் யாருமில்லை. மிகவும் பயங்கரமான ஆபத்து வந்திருப்பதை நீ கட்டாயம் (நான் சொல்வதற்கு முன்னதாகவே) தெரிந்து கொண்டிருக்க வேண்டும். ஆனால், நீ இன்னும் அறிந்து கொள்ளாமலிருக்கிறாய். காமக் கேளிக்கைகளில் மூழ்கி, அற்பமான உடலின்பங்களில் ஈடுபட்டு, வரம்பு கடந்த காமாதுரனான மன்னனைச் சுடுகாட்டுத் தீயைப் போல, குடிமக்கள் மதிக்க மாட்டார்கள். எந்த மன்னன், செய்ய வேண்டிய காரியங்களை, உரிய காலத்தில் தானே முன்னின்று செய்யாதிருக்கிறானோ, அவன் அந்தக் காரியங்களையும், கூடவே அரசையும் இழந்து அழிந்துவிடுகிறான். (2–4)

எதிரிகளின் நடவடிக்கைகளையும் நாட்டு நடப்பையும் தெரிந்து கொள்வதற்காக ஒற்றர்களை நியமிக்காத, மக்கள் நேரில் காண்பதற்கு மிகவும் அரிதாகிவிட்ட, (காமக்கிழத்திகள் அல்லது சுயநலக்காரர்களின் இனிய மொழியில் மயங்கி,) தன் சுதந்திரத்தை இழந்துவிட்ட அரசனை, நதிக்கரையிலுள்ள சேற்றைக் கண்டு யானைகள் விலகிப் போவதைப் போல, மக்கள் துறந்து விடுகிறார்கள். தன் கருத்துப்படி நடக்க முடியாமல் பிறரால் அடக்கி வைக்கப்பட்டிருக்கும் மன்னர்கள், தங்கள் ராஜ்யத்தைக் காப்பாற்றித் தக்க வைத்துக் கொள்ளாமல், கடலில் மூழ்கியிருக்கும் மலைகள் வெளியே தென்படாததுபோல, போற்றத்தக்கவர்களாக இருக்க மாட்டார்கள். தங்களைக் காத்துக் கொள்வதில் எப்போதும் முயற்சியுடனிருக்கும் தேவ–தானவ–கந்தர்வர்களை விரோதித்துக் கொண்டு, ஒற்றர்களை நியமிக்காமல் காமவசப்பட்டிருக்கும் நீ, எப்படித்தான் இன்னமும் அரசனாக ஆட்சி செய்கிறாயோ? (5–7)

அரக்கனே! நீ சிறுபிள்ளைத்தனமுள்ளவன்; அறிவு இல்லாதவன். எதைத் தெரிந்து கொள்ள வேண்டுமோ, அதைத் தெரிந்து கொள்ளாமல், நீ எப்படித்தான் அரசனாக இருக்கிறாயோ? எங்கணும் வெற்றிக்கொடி நாட்டுபவனே! எந்த மன்னர்களுக்கு ஒற்றனும் பொக்கிஷமும் அரசியல் நீதியும் தன்வசம் இல்லாமல் இருக்கின்றனவோ, அவர்கள் பாமர மக்களுக்கு ஒப்பானவர்கள். வெகு தொலைவில் உள்ள பிரதேசங்களில் நடைபெறும் செயல்களையெல்லாம் ஒற்றர்படை மூலம் தெரிந்து கொள்கிறார்கள் என்பதால்தான், மன்னர்கள் தொலைநோக்குடையவர்கள் என்று சொல்லப்படுகிறார்கள். பாமரர்களான அமைச்சர்களால் சூழப்பட்டிருப்பதால் நீ, நாட்டு நடப்பைத் தெரிந்துகொள்ள ஒற்றர்களை நியமிக்கவில்லை என்று எண்ணுகிறேன். நமது சுற்றத்தார்களும் ஜனஸ்தானமும் முற்றிலும் அழிக்கப்பட்டுவிட்டன என்பதைக்கூட, நீ தெரிந்து கொள்ளவில்லை. (8–11)

பயங்கரமாகச் செயல்படக் கூடிய பதிநான்காயிரம் அரக்கர்களும், கரனும், தூஷணனும் ஒரே ஒருவனான இராமனால் கொல்லப்பட்டார்கள். மிகவும் கஷ்டமான காரியத்தையும் வெகு எளிதில் செய்து முடிக்கும் இராமன் என்பவனால், முனிவர்களுக்கு அபயம் அளிக்கப்பட்டது. தொல்லை கொடுத்து வந்த அரக்கர்கள் கொல்லப்பட்டுவிட்டதால், தண்டகாரண்யம் (தவம் செய்வோர்க்கு) அமைதியான பிரதேசமாக்கப்பட்டுவிட்டது. ஜனஸ்தானமும் நிர்மூலமாக்கப்பட்டுவிட்டது. இராவணா! நீ, காமவசப்பட்டவன்; மதிமயங்கியவன்; பிறர் ஆளுகையில் உள்ளவன். உன் ராஜ்யத்திலேயே ஏற்பட்டிருக்கும் ஆபத்தை உணராதிருக்கிறாயே? (12–14)

சிடுமூஞ்சிக்காரன், பணியாட்களுக்கும் பிறருக்கும் தாராளமாகப் பொருள் கொடுக்காதவன், செருக்குக் கொண்டவன், தவறு இழைப்பவன், மந்த புத்தியுள்ளவன் – இதுபோன்ற குணம் கொண்ட மன்னனுக்குத் துன்பம் நேரும்காலத்தில், எந்த ஒரு பிராணியும் உதவிக்கு வராது. தன்னை, எல்லாம் அறிந்தவனாக எண்ணிக் கொள்பவன், சான்றோர்களால் ஏற்கப்படாதவன், தன்னைத்தானே பெருமைப்படுத்திக் கொள்பவன், தக்க காரணமில்லாமல் சினம் கொள்பவன் – இப்படிப்பட்ட ஒரு மனிதனை, அவன் நாடாளும் அரசனாகவே இருந்தாலும், அவனுடைய உற்றார்–உறவினர்கள் கேவலப்படுத்தி விடுவார்கள். (15,16)

தன் கடமைகளையும் செய்ய வேண்டிய காரியங்களையும் செய்யாமல் விட்டுவிடுபவன்; அஞ்சத்தக்க தருணங்களில் தற்காப்பு நடவடிக்கை எடுக்காதவன் – இப்படிப்பட்ட மன்னன், விரைவில் பரிதாபத்துக்குரியவனாகி, ஆட்சியிலிருந்து விலக்கப்பட்டு, தன் நாட்டிலேயே வெறும் புல்லுக்குச் சமமாக ஆகிவிடுகிறான். காய்ந்த மரக்கட்டைகளாலும் ஓட்டாஞ்சல்லிகளாலும் வெறும் தூசிகளாலும்கூட ஓர் உபயோகம் ஏற்படலாம். ஆனால், தன்னுடைய உயர்நிலையிலிருந்து நழுவி விழுந்த மன்னர்களால் எந்த உபயோகமும் ஏற்படாது. ஒருவன் கட்டிக் கொண்டு அவிழ்த்துப்போட்ட வஸ்திரம், அணிந்து கொண்டு அனுபவித்த பின் கழற்றிப் போடப்பட்ட மலர்மாலை – இவைகள் எப்படிப் பிறருக்கு உபயோகமாகாதோ, அதே போலத்தான், அரச பதவியிலிருந்து நழுவிய ஒருவன், எவ்வளவு திறமைசாலியாக இருந்தாலும், மற்றவர்களுக்கு உபயோகப்பட மாட்டான். (17–19)

எந்த ஒரு மன்னன், தெளிவான அறிவுடன், புலன்களை அடக்கியவனாக, எல்லாவற்றையும் அறிந்தவனாக, அறநெறியில் ஆட்சி செலுத்துபவனாக, நன்றியுடைவனாக இருக்கிறானோ, அவன் நீண்ட காலம் புகழுடன் விளங்குவான். எவன், தன் கண்களை மூடிக் கொண்டு உறங்கினாலும், அரச நீதியில் விழிப்புடன் இருக்கிறானோ, எவனுடைய கோபத்தின் பயனும் மகிழ்ச்சியின் பயனும் வெளிப்படையாகத் தெரிகிறதோ, அந்த மன்னன் மக்களால் போற்றப்படுகிறான். (மன்னனுக்குக் கோபம் வந்தால் தண்டனை கிடைக்கும்; மன்னன் மகிழ்ந்தால் வெகுமதி கிடைக்கும் என்ற நம்பிக்கை உண்டாக்கப்பட வேண்டும்.) (20,21)

இராவணா! நீ கெட்ட புத்தி உடையவன்; அரசர்க்குரிய, மேற்சொன்ன நற்குணங்கள் இல்லாதவன். அதனால்தான், அரக்கர்களுக்கு ஏற்பட்ட பேரழிவு பற்றிய செய்தி, ஒற்றர்கள் மூலம் உன்னால் அறியப்படவில்லை. நீ, மற்றவர்களைப் பொருட்படுத்தாதவன்; புலனின்பங்களில் மூழ்கியவன்; இடம்–காலங்களுக்கு ஏற்ப நடக்கும் திறனில்லாதவன்; நன்மை–தீமைகளைப் பகுத்துணரும் விஷயத்தில் புத்தியைச் செலுத்தாதவன்; விரைவில் அரசாட்சியை இழந்து பேராபத்தில் சிக்கிக் கொள்ளப் போகிறாய்.'' இவ்வாறு அவளால் விரிவாக எடுத்துரைக்கப்பட்ட தன் குற்றங்களைப் பொருள்–அகந்தை–ஆற்றல் நிரம்பப் பெற்ற அரக்க மன்னன், பகுத்தறிவு கொண்டு அலசிப் பார்த்து, நீண்ட நேரம் ஆலோசனையில் ஆழ்ந்திருந்தான். (22–24)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
முப்பத்து மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்து நான்கு

சீதையைக் கவர்ந்து வரும்படித் தூண்டுதல்

பின்னர், மிகுந்த கோபத்துடன் கடுமையான சொற்களைக் கூறிய சூர்ப்பணகையை, அமைச்சர்கள் எதிரில், மிக்கச் சினங்கொண்டு இராவணன் கேட்டான்— (1)

''இராமன் என்பவன் யார்? எத்தகைய வீரம் உடையவன்? அவன் உருவம் எப்படிப்பட்டது? போராற்றல் எத்தகையது? யாராலும் நுழைய முடியாத தண்டகாரண்யத்திற்கு எதற்காக வந்திருக்கிறான்? அரக்கர்களையும் கரன்–தூஷணன்–திரிசிரஸ் ஆகியோரையும் போரில் கொன்று குவித்தானே, அந்த இராமனுடைய ஆயுதம் எது?'' இவ்வாறு அரக்கர் மன்னனால் கேட்கப்பட்டதும், கோபத்தால் மதி கலங்கியிருந்த அரக்கி, இராமனைப் பற்றிய உண்மையான எல்லா விவரங்களையும் கூற ஆரம்பித்தாள்— (2–4)

''நீண்ட கைகள்; விசாலமான கண்கள்; மரவுரி–மான்தோல் ஆடை; மன்மதனுக்கு ஒப்பான அழகு; தசரதரின் புதல்வன், இராமன். இந்திரனுடைய வில்லைப் போன்ற, தன் வில்லில் நாணேற்றி பொற்பூண்கள் கொண்ட, கொடிய விஷமுள்ள சர்ப்பங்கள் போல அனல் வீசும் நாராசங்களை எய்கிறான். யுத்தகளத்தில், மகாபலசாலியான அவன், எப்படி வில்லை எடுக்கிறான்? எப்படி பயங்கரமான அம்புகளைச் செலுத்துகிறான்? வில்லை எப்படி வளைக்கிறான்? என்பதை நான் பார்க்கவே இல்லை. (அவ்வளவு விரைவாகச் செயல்கள் நடந்தன.) செழிப்பாக வளர்ந்த பயிர்களைக் கல்மாரியால் (பனிக்கட்டியால்) இந்திரன் அழிப்பதைப் போல, படைவீரர்கள் அம்புமாரியால் கொல்லப்படுவதை மட்டும் காண்கிறேன் (கண்டேன் – என்றபடி). (5–8)

பயங்கரத் தோற்றமுடைய பதிநான்காயிரம் அரக்கர்கள் மற்றும் கரனும் தூஷணனும், ஒன்றரை முகூர்த்த காலத்திற்குள்ளாகவே கூர்மையான பாணங்களால், தரையில் நின்று போரிட்ட அவன் ஒருவனாலேயே கொல்லப்பட்டார்கள். (இவ்வாறு, நமது படையினர் முற்றிலும் அழிக்கப்பட்டுவிட்டதால்,) முனிவர்களின் அச்சத்தைப் போக்கிவிட்டான்; தண்டகாரண்யம் (தவம் செய்வோருக்கு ஏற்ற) அமைதியான பிரதேசமாகிவிட்டது. ஆத்மஞானியும் மகாத்மாவுமான இராமனால் 'பெண்கொலை செய்யத்தகாது' என்பதால், என் அங்கங்களைத் துண்டித்து அவமானப்படுத்தி ஒருவாறு விடப்பட்டேன். (9–11)

இவனுடைய தம்பி, பேராற்றலுடையவன்; குணத்திலும் பராக்கிரமத்திலும் இவனுக்கு நிகரானவன்; தளர்வடையாத விசுவாசமும் அளவில்லாத அன்பும் கொண்டவன்; அந்த மாவீரனுக்கு லட்சுமணன் என்று பெயர். சாகசக்காரன்; வெற்றிகொள்ள முடியாதவன்; எப்போதும் வெற்றி பெறுபவன்; நிகரற்ற போர்வீரன்; நல்லறிவாளன்; உடல்பலம் உடையவன்; இராமனுடைய வலது கை போன்றவன்; (இராமனின் கட்டளையை அப்படியே செய்து முடிப்பவன்.) எப்போதும் (இராமனுடைய உடலுக்கு) வெளியே இருக்கும் உயிர் போன்றவன். (இருவரிடையேயும் பிரிக்க முடியாத உறவு நிலவுகிறது.) (12,13)

(இவர்களுடன் கூட இருக்கும்) இராமனுடைய தருமபத்தினி, விசாலமான கண்களை உடையவள்; முழுநிலா போன்ற முகமுடையவள்; அவனுக்கு மிகவும் பிரியமானவள்; எப்போதும் கணவரின் நலனிலேயே அக்கறை கொண்டவள். அவளுடைய கூந்தல், நாசி, தொடைகள் அழகானவை; சர்வ லட்சணங்களும் பொருந்தியவள் என்று புகழ்பெற்றவள்; இந்தக் காட்டின் (தலைவியான) தேவதை போல் விளங்குகிறாள்; (மகாவிஷ்ணுவின் பத்தினியான ஒரு லட்சுமியைப் பற்றி நீ கேள்விப்பட்டிருப்பாய்.) இவளோ, இன்னொரு லட்சுமியைப் போல் நிகரற்ற அழகு வாய்ந்தவள். உருக்கிய தங்கம் போல் தகதகவென்று மின்னுபவள்; செம்பூச்சுடைய உயர்ந்த நகங்களை உடையவள்; மங்களமானவள்; லட்சணமான அங்கங்களையுடைய அவள் சிற்றிடையாள்; விதேக மன்னன் புதல்வி; சீதை என்று பெயர். (14–16)

அவள் தேவ–கந்தர்வ–யட்ச–கின்னர மங்கையோ இல்லவே இல்லை. இந்த உலகத்தில் இவ்வளவு அழகான மானுட நங்கையை இதற்கு முன் நான் பார்த்ததேயில்லை. எவனுக்கு சீதை மனைவியாக ஆகிறாளோ, எவனை அவள் மனமகிழ்ச்சியுடன் ஆலிங்கனம் செய்து கொள்கிறாளோ, அவன் இந்திரனைக் காட்டிலும் எல்லா உலகங்களிலும் மிக்க மேன்மை பெற்று விளங்குவான். அவள் நல்லொழுக்கமுடையவள்; அழகான அங்கங்களைப் பெற்றவள்; பூமண்டலத்தில் அவளுக்கு நிகரான அழகுடையவர்களே இல்லை! அவள் உனக்குப் பொருத்தமான மனைவியாக இருப்பாள்; அதேபோல், நீயும் அவளுக்குப் பொருத்தமான கணவனாக இருப்பாய். (17–19)

விசாலமான பின்புறத்தை உடையவள்; செழுமையான நிமிர்ந்த மார்பகங்களைக் கொண்டவள்; ஒளிவீசும் முகமுடையவள். பெருந்தோளனே! அவளை, உனக்கு மனைவியாகச் செய்யவேண்டுமென்று நான் முயன்றபோது, கொடுமைக்காரனான லட்சுமணனால் உருவம் குலைக்கப்பட்டேன். பூர்ண சந்திரனைப் போன்ற முகமுடைய வைதேகியைப் பார்த்தாலே போதும், மன்மத பாணங்களுக்கு நீ அடிமையாகி விடுவாய்! உனக்கு, அவளை மனைவியாக்கிக் கொள்ளும் துடிப்பு உண்டாகியிருந்தால், வெற்றியின் பொருட்டு, இப்போதே இங்கேயே உன் வலது காலை முன் வைத்துப் புறப்படுவாய். (20–22)

அரக்கர் மன்னனே! (முனிவர் வேடம் தாங்கி,) ஆசிரமத்தில் வசிப்பவனும் இகழத்தக்கவனுமான இராமனைக் கொன்று, (அவனால் கொல்லப்பட்டு இறந்துபோன அரக்கப்படையினரின் உற்றார்–உறவினர்களின் துயரத்தைப் போக்கி,) அந்த அரக்கர்களுக்கு உன் அன்பைக் காட்டு. கூரிய பாணங்களால் அவனையும் மகாவீரனான லட்சுமணனையும் கொன்று, அதன்பின் ஆதரவு அற்றுப்போன சீதையை, எவ்விதக் கவலையுமில்லாமல் அனுபவிப்பாயாக. அரக்கர் வேந்தே! இராவணா! என்னுடைய கருத்து சரியானது என்று உனக்குத் தோன்றினால், சந்தேகப்படாமல் நான் சொல்கிறபடிச் செய். (23–25)

அரக்கர் அரசே! இப்போது, அளவிட முடியாத உன்னுடைய பராக்கிரமத்தை நினைத்துப் பார்த்து, குறைகள் இல்லாத அங்கங்களை உடையவளும் திக்கற்றுப் போனவளுமான சீதையை, உன் மனைவியாக்கிக் கொள்வதற்காக, பலவந்தமாகக் கவர்ந்து எடுத்துக் கொண்டு வா. குறி தப்பாமல் செல்லக்கூடிய இராமபாணங்களால் ஜனஸ்தானத்திலிருந்த அரக்கர்கள் அனைவரும் கொல்லப்பட்டார்கள்; கரனும் தூஷணனும் கொல்லப்பட்டார்கள் என்பதைத் தெரிந்து கொண்டுவிட்ட நீ, இந்த விஷயத்தில் இனிச் செய்ய வேண்டிய காரியத்தைத் தீர்மானிப்பாயாக.'' (26,27)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
முப்பத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்தைந்து

மீண்டும் மாரீசனிடம் செல்லுதல்

சூர்ப்பணகையின் நடுநடுங்க வைக்கும் சொற்களைக் கேட்டதும், அமைச்சர்களுக்கு விடைகொடுத்து அனுப்பிவிட்டு, அடுத்ததாக, தான் செய்யவேண்டிய காரியத்தைப் பற்றித் தனிமையாக ஆலோசித்தான், இராவணன். நடைபெற்ற நிகழ்ச்சிகளை ஒன்றன்பின் ஒன்றாக, வரிசையாக நினைத்துப் பார்த்தான். தன்னுடைய பக்கத்தின் குறை–நிறைகளையும் பலத்தையும் பலவீனத்தையும் நன்றாக சீர்தூக்கிப் பார்த்தான். உண்மையான நிலவரத்தைத் தெரிந்து கொண்டு, 'இனி, தான் செய்ய வேண்டியது என்ன?' என்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டு,

அதிலேயே மனத்தை நிலைநிறுத்தி, அழகிய வாகனங்கள் நிறுத்தப்பட்டிருக்கும் வாகனசாலைக்குச் சென்றான். வாகனசாலைக்குள் (யார் கண்ணிலும் படாமல்) மறைவாகச் சென்று, அங்கிருந்த தேரோட்டியிடம், 'தேரைப் பூட்டு' என்று கட்டளையிட்டான். (1–4)

இவ்வாறு கட்டளையிடப்பட்ட திறமை பெற்ற தேரோட்டி, அவன் (இராவணன்) மனத்திற்குகந்த தேரை நொடிப்பொழுதில் பூட்டினான். குபேரனுடைய தம்பியும் அரக்கர் வேந்தனும் செல்வச் செழிப்புள்ளவனுமான அவன், பொன்னால் செய்யப்பட்டதும், நவரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்டதும், விருப்பப்படிச் செல்லக் கூடியதும், பிசாசு போன்ற முகமும் பொன் அணிகளால் அலங்கரிக்கப்பட்டவைகளுமான கோவேறு கழுதைகள் பூட்டப்பட்டதும், பறந்து செல்லும்போது மேகம் போன்ற பேரொலியை எழுப்புவதுமான தேரில் ஏறிக் கொண்டு, சமுத்திரக்கரையின் ஓரமாகவே சென்றான். (5–7)

அந்தப் பத்துத்தலையன், அப்போது, வெண்சாமரங்களால் வீசப்பட்டான்; தலைக்கு மேலே வெண்கொற்றக்குடை; பளீரிடும் நீலமணி போல் கருநீல ஒளிப்பிழம்பு; உருக்கிய தங்கத்தாலான அணிகலன்கள்; பத்துக் கழுத்துக்கள்; இருபது கைகள்; கண்களைக் கவரும் ஆடை–அணிகலன்கள்; தேவர்களின் எதிரி; மாமுனிவர்களைக் கொல்பவன்; பத்து சிகரங்களைக் கொண்ட மாபெரும் மலைபோல் அப்போது அவன் காணப்பட்டான். நினைத்தபடியெல்லாம் செல்லக்கூடிய ரதத்தில் சென்று கொண்டிருந்த அவன், ஆகாயத்தில் மின்னற்கொடிகளையுடையதும் கொக்குகளோடு கூடியதுமான மேகம் போல் திகழ்ந்தான். (8–10)

மாவீரனாகிய அவன், அந்த சமுத்திரக் கரையில் பல குன்றுகள் இருப்பதையும், பல்வகை மலர்களாலும் பழங்களாலும் நிறைந்திருந்த ஆயிரக்கணக்கான மரங்களையும், சுற்றிலும் குளிர்ச்சியான நன்னீர் நிரம்பிய தாமரைத் தடாகங்களையும், பெரிய யாகமேடைகளையுடைய ஆசிரமங்கள் திகழ்வதையும், சில இடங்களில் வாழைத் தோட்டங்கள் நெருக்கமாக இருப்பதையும், சில இடங்கள் தென்னை மரங்களால் அழகு பெற்று விளங்குவதையும், ஆச்சா–பனை–தமாலம் முதலிய மரங்களையும் மற்றும் நன்றாகப் பூத்த மலர்களைக் கொண்ட வேறு மரங்களையும், (11–13)

கடுமையான ஆகார நியமங்களையுடைய மகாமுனிவர்களால் அழகுறப் பெற்றதும், ஆயிரக்கணக்கான நாகர், சுபர்ணர், கந்தர்வர், கின்னரர், பிரும்மபுத்திரர்கள், தூம்ரர், வைகானஸர் (வானப்பிரஸ்தர்), வாலகில்யர், சூரிய கிரணத்தையே உணவாகக் கொள்ளும் மரீசிபர், எல்லா ஆசைகளையும் வென்றுவிட்ட சித்தர்–சாரணர்கள் ஆகியோரால் அழகு பெற்று விளங்குவதையும், திவ்யமான அணிகலன்களும் மாலைகளும் அணிந்த கவின்மிகு தோற்றமுடையவர்களும், நகைச்சுவை ஒழுக இன்பமாகப் பேசிப் பொழுதைக் கழிக்கும் வழிகளை நன்கு அறிந்தவர்களுமான அப்சரப் பெண்டிர் எங்கும் நிறைந்திருப்பதும், பெரும்பேறு பெற்றவர்களான தேவர்களின் மனைவிகளால் உலாவப் பெற்றதும், இணைந்து உட்கார்ந்து கொண்டிருக்கப்பட்டதும், அமுதத்தை உண்ணும் தேவ–தானவக் கூட்டங்களால் உலாவப்பட்டதும், (14–17)

அன்னம்–அன்றில்–நீர்க்காக்கை (அல்லது தவளை) முதலியவை நிறைந்துள்ளதும், ஸாரஸம் என்ற அன்னப் பறவைகளால் இன்னிசை எழுப்பப்படுவதும், ஒளிமிகுந்த வைடூரியம் போன்ற பாறைகளாலும் பெருங்கடலின் மகோன்னதத் தோற்றத்தால் மனம் கவர்வதுவும், பழுப்பு நிறமுள்ளவைகளும், விசாலமானவைகளும், வாடாத மலர்களால் அலங்கரிக்கப்பட்டவைகளும், இசைக்கருவிகள்–வாய்ப்பாட்டு ஆகிய இன்னிசையோடு விளங்குபவைகளும், தங்கள் தவத்தின் பயனாக எல்லா மேலுலகங்களையும் வென்றவர்களுடைய நினைத்தபடியெல்லாம் செல்லக் கூடிய விமானங்களையும், கந்தர்வ–அப்சரப் பெண்டிர்களையும் நாற்றிசைகளிலும் கடந்து சென்ற குபேரனின் தம்பி, கண்டான். (18–20)

நறுமணமுள்ள பிசின்களைக் கொடுக்கும் வேர்களையுடைய மரங்களையும், ஆயிரக் கணக்கான சந்தன மரங்களையும், வாசனையால் முகர்வதற்கு நிறைவைத் தரும் அழகிய

வனங்களையும் கண்டான். சிறந்த அகில் மரங்களையும், (இயற்கையாக அமைந்த) வனங்களையும், (திட்டமிட்டு அமைக்கப்பட்ட) நந்தவனங்களையும், தக்கோல மரங்களையும், நறுமணம் வீசும் ஜாதிக்காய் மரங்களையும், தமால மரங்களின் மலர்களையும், மிளகுக் கொடி மண்டியிருப்பதையும், கரைகளில் உலர வைக்கப்பட்டிருந்த முத்துக்களின் குவியல்களையும், பவழம்–சங்குகளின் குவியல்களையும், எல்லாப் பக்கங்களிலும் பொன்–வெள்ளிக் குன்றுகளையும், மனம் கவரும் மலையருவிகளையும், தெளிந்த நீருடைய மடுக்களையும், செல்வச்செழிப்பு–உணவுப்பண்டம் நிறைந்ததும் சீலமிக்கப் பெண்டிர்கள் வாழ்வதும் யானை–குதிரை–தேர்கள் நிறைந்தவைகளான நகரங்களையும் பார்த்துக் கொண்டே சென்று, சமுத்திரத்தின் அக்கரை எல்லா இடத்திலும் சமமாக இருப்பதையும், உடலுக்கினிய காற்று மெல்லத் தொட்டுக் கொண்டு வீசுவதையும், அந்தப் பிரதேசம் தேவலோகம் போல் மனோகரமாக விளங்குவதையும் கண்களால் கண்டான். (21–26)

அடர்த்தியான நிழல் காரணமாகப் பெரிய மேகம் போல் விளங்கும் ஓர் ஆலமரத்தை அங்கே பார்த்தான். அதன் நாற்றிசையிலும் முனிவர்கள் வசித்துக் கொண்டிருந்தார்கள். அந்த மரத்தினுடைய கிளைகள் நான்கு பக்கங்களிலும் நூறு யோஜனை தூரம் பரவியிருந்தன. (முன்னொரு சமயத்தில்) மகாபலம் பொருந்திய கருடன், ஒரு யானையையும் பெருத்த உடலுடைய ஓர் ஆமையையும் எடுத்துக் கொண்டு, அவைகளைப் புசிப்பதற்காக அந்த மரத்தின் கிளைக்கு வந்து சேர்ந்தார். அந்த மரக்கிளையின் கீழே வைகானஸர்கள், மாஷ கோத்திரக்காரர்கள், வாலகில்யர்கள், சூரிய ஒளியை உண்ணும் மரீசிபாக்கள், பிரும்மபுத்திரர்கள், தூம்ரர் மற்றும் மாமுனிவர்கள் ஒன்றுகூடி இருந்தார்கள். (அவ்விடத்தில் குடில் அமைத்து வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.) (27–30)

(கருடனின் பாரத்தைத் தாங்கமாட்டாமல் அந்த கிளை முறிந்தது.) பறவைகளில் உத்தமரும் தருமாத்மாவுமான கருடன், அவர்களுக்குக் கருணை காட்டுவதற்காக நூறு யோஜனை நீளமுடைய அந்த முறிந்த கிளையையும் யானை–ஆமையையும் வேகமாக, ஒரு பாதத்தால் எடுத்துக் கொண்டு, பறந்து கொண்டிருக்கும் போதே அவற்றின் இறைச்சியைப் புசித்துவிட்டு, கொடுங்கோலர்களான வேடர்கள் வசித்த பிரதேசத்தின் மீது கிளையை எறிந்து, அதனை அழித்தார். மாமுனிவர்கள் காப்பாற்றப்பட்டதால், அவர் மகிழ்ச்சி அடைந்தார். (31,32)

இந்த மகிழ்ச்சியினால் அவருடைய பராக்கிரமம் இரு மடங்காகப் பெருகியது. அதனால், உடனே, அமிர்தத்தைக் கொண்டுவரும் திட்டத்தில் மனத்தைச் செலுத்தினார். பின்னர், இரும்பு வலைகளை அறுத்து, இரத்தினமயமான கட்டடத்தைப் பிளந்து, இந்திரனின் மாளிகையில் மறைவாக வைக்கப்பட்டிருந்த அமிர்தத்தைக் கவர்ந்து கொண்டு வந்தார். குபேரனின் தம்பியான இராவணன், மகரிஷிகள் வசிப்பதும், கருடனால் செய்யப்பட்ட அடையாளத்தை உடையதும், சுபத்ரம் என்று பெயர் பெற்றதுமான அந்த ஆலமரத்தைக் கண்டான். (33–35)

நதிகளின் கணவனான சமுத்திரத்தின் அக்கரையை அடைந்ததும், தனிமையும் புனிதமும் வனப்பும் சேர்ந்த ஒரு வனப்பகுதியில் ஓர் ஆசிரமத்தைக் கண்டான். அங்கு, மான்தோல் அணிந்து, சடாமுடி தாங்கி, மரவுரி உடுத்து, கட்டுப்பாடான உணவுடன் வாழ்ந்து கொண்டிருந்த மாரீசன் என்ற அரக்கனைக் கண்டான். (விசுவாமித்திரர் யாகத்தைக் கெடுக்க வந்தபோது இராமனால் தாக்கப்பட்டு, கடலில் மூழ்கி எழுந்த பின்னர், மாரீசன் தவ ஒழுக்கத்தை மேற்கொண்டான்.) இராவணன், அவனிடம் வந்து சேர்ந்ததும், மனிதர்களுக்குக் கிடைத்தற்கரிய எல்லாவித போக்ய வஸ்துக்களால் அரக்கன் மாரீசனால் முறைப்படி உபசரிக்கப்பட்டான். (36–38)

உணவும் தண்ணீரும் கொடுத்து, மாரீசன், தானே அவனை உபசரித்த பின்னர், பொருள் பொதிந்த சொற்களைக் கூறினான்— ''அரக்கர் வேந்தே! இலங்கையில் அனைவரும் நலம்தானே? மன்னா! தாங்கள் எதன் பொருட்டு மறுபடியும் இவ்வளவு விரைவில் இங்கு வந்திருக்கிறீர்கள்?''

மாரீசன் இவ்வாறு கேட்டவுடன், பெரும் பலசாலியான, பேச்சில் வல்லவனான இராவணன் பின்வரும் சொற்களைக் கூறினான்— (39–41)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில் முப்பத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்தாறு

இராவணன், மாரீசனிடம் உதவி கோருதல்

''ஐயனே! மாரீசா! நான் சொல்வதைக் கவனமாகக் கேள். மிக்க மனவேதனையோடு இருக்கிறேன். துக்கத்தில் ஆழ்ந்திருக்கும் எனக்கு, மற்ற எல்லோரைக் காட்டிலும் நீதான் நிச்சயமாக உதவி செய்யக் கூடியவன். ஜனஸ்தானத்தில் என்னுடைய சகோதரன் கரன், பெருந்தோளனான தூஷணன், என்னுடைய தங்கையாகிய சூர்ப்பணகை, மாமிசத்தைப் புசிப்பவனும் மகாபராக்கிரமசாலியுமான அரக்கன் திரிசிரஸ் மற்றும் அஸ்திரவித்தையில் சூரர்களான இன்னும் அநேக அரக்கர்கள் இருந்து வந்தார்கள் என்பதை நீ அறிவாய். என்னுடைய கட்டளைப்படி அங்கே எப்போதும் வசித்துக் கொண்டிருக்கும் அரக்கர்கள், அந்தப் பெருங்காட்டில் அறவழி நடக்கும் முனிவர்களுக்கு இடையூறு செய்து கொண்டிருந்தார்கள். (1–4)

பயங்கரமான வேலைகளைச் செய்யக்கூடியவர்களும், அஸ்திர யுத்தத்தில் வல்லவர்களும், சூரர்களும், கரனுடைய கட்டளைப்படி நடக்கக் கூடியவர்களுமான பதிநான்காயிரம் அரக்கர்கள் (இப்போது இல்லை.) ஜனஸ்தானத்தில் வசித்துக் கொண்டிருந்த மகாபலசாலிகளும் பல்வகையான அஸ்திர–சஸ்திரப் பிரயோகங்களில் திறமை பெற்றவர்களுமான கரனைத் தலைவனாகப் பெற்றிருந்த அரக்கர்கள் ஒன்றுசேர்ந்து இராமனோடு போரிடுவதற்கு, அப்போது ஆயத்தமாக இருந்தார்கள். சினங்கொண்ட இராமன், போர்க்களத்தில் எவ்வித வீர வார்த்தைகளையும் பேசாமல், வில்லுடன் பாணத்தை இணைத்தான். பயங்கரமான ஆற்றல் படைத்த பதிநான்காயிரம் பேர்கள், தரையில் நின்று சண்டை போட்ட ஒரு மானிடனால், கூரிய பாணங்களால் கொல்லப்பட்டார்கள். (என்பது, எவ்வளவு வெட்கப்படத்தக்கது?) (5–8)

கரனும் கொல்லப்பட்டான்; போரில் தூஷணனும் வீழ்த்தப்பட்டான்; திரிசிரஸும் மாய்க்கப்பட்டான். தண்டகாரண்யம் (முனிவர்கள்) அச்சமில்லாமல் சஞ்சரிக்கும் இடமாகிவிட்டது! கோபம் கொண்ட தகப்பனாரால் மனைவியுடன் துரத்தப்பட்டவனும், ஆயுள் முடியப் போகிறவனும், க்ஷத்திரியகுலப் பதரானவனுமான அந்த இராமன், அரக்கர் படையை அழித்து விட்டான். (இராமன்) தீய இயல்புடையவன்; இரக்கமில்லாதவன்; கொடுமைக்காரன்; அறிவில்லாதவன்; கஞ்சன்; புலனடக்கமில்லாதவன்; தருமத்தைக் கைவிட்டவன்; அதரும வழியில் செல்பவன்; பிராணிகளைத் துன்புறுத்துவதில் ஈடுபாடுடையவன். காட்டில் பகையேதும் இல்லாத போதிலும், தன்னுடைய பலத் திமிரினால், என்னுடைய சகோதரி காது–மூக்கு துண்டிக்கப்பட்டு விகாரப்படுத்தப்பட்டாள். (9–12)

(அதனால்,) அவனுடைய மனைவியும், தேவமகளிர்க்கு ஒப்பானவளுமான சீதையை, ஜனஸ்தானத்திலிருந்து பலாத்காரமாக எடுத்துக் கொண்டு வரப்போகிறேன். அந்த விஷயத்தில், நீ எனக்கு உதவி புரிய வேண்டும். பெரும் ஆற்றல் படைத்தவனே! நீயும் என் சகோதரர்களும் என்னுடன் இருக்கும்போது, யுத்தகளத்தில், தேவர்கள் எல்லோரும் ஒன்றுதிரண்டு வந்தாலும், நான் ஒரு பொருட்டாகக் கருதமாட்டேன். ஆகவே, எனக்கு நீ உதவி புரிய வேண்டும். ஏனென்றால், எனக்கு உதவி செய்யும் சாமர்த்தியம் உன்னிடம் இருக்கிறது. போர் செய்வதிலும் வீரத்தைக் காட்டுவதிலும் செருக்குடன் விளங்குவதிலும் உனக்குச் சமமானவன் இல்லவேயில்லை.

பற்பல உபாயங்களை அறிந்தவன்; பெருவீரன்; பெரிய பெரிய மாயைகளைச் செய்வதில் நிபுணன். அரக்கனே! இதன் காரணமாகவே, நான் உன்னிடம் வந்திருக்கிறேன். நீ, எனக்கு எவ்வாறு உதவவேண்டும் என்பதைச் சொல்கிறேன், கேள். (13–17)

வெள்ளிப் புள்ளிகளால் அழகாக விளங்கும் பொன்மானாக உருவம் ஏற்று, இராமனுடைய ஆசிரமப் பகுதியில் சீதையின் பார்வையில் படும்படித் திரிந்து விளையாடு. சீதையும், உன்னைப் பார்த்ததுமே, ('இது என்ன அதிசயமாக இருக்கிறதே? ஒருவேளை, அரக்கனாக இருப்பானோ?' என்ற) சந்தேகம் கொள்ளாமல், தன் கணவரையும் இலக்குவனையும் பார்த்து, 'இதைப் பிடித்துக் கொடுங்கள்' என்று கேட்பாள். அதைக் கேட்டதும் (ஓடிச் செல்லும் உன்னைப் பின்தொடர்ந்து வெகுதூரம் வருவார்கள். அப்போது,) அவ்விருவரும் இல்லாத சமயத்தில், வேறு மனிதர்கள் இல்லாததால் இடையூறு ஏதும் இல்லாமல் சீதையை, சந்திரனுடைய ஒளியை ராகு கவ்விப் பிடிப்பதைப் போல, இலகுவாகக் கவர்ந்து வருவேன். அதன் பின்னர், மனைவி அபகரிக்கப்பட்டுச் சென்று விட்டதால் மனம் வருந்தி, ஆற்றல் இழந்து நிற்கும் இராமனை, என் உள்ளத்திலுள்ள வீரத்தை முழுமையாக நம்பி, தயக்கமில்லாமல் போரிட்டு இலகுவில் கொல்வேன்.'' (18–21)

இராவணன், இராமனைப் பற்றிச் சொல்லிய செய்திகளைக் கேட்டதும் மகாத்மாவான மாரீசனுடைய முகம் உலர்ந்து போயிற்று. அவன் மிகவும் பயம் கொண்டான். உலர்ந்து போன உதடுகளை நக்கிக் கொண்டு, இமைகொட்டாத கண்களால் (சடலத்தின் கண்கள் இமைப்பதில்லை என்பதால்) மரணமடைந்தவன் போன்றவனாகி, மிகவும் துயரமடைந்து, இராவணனையே உற்றுநோக்கினான். (விசுவாமித்திரர் யாக காலத்தில்) அந்தப் பெருங்காட்டில் இராமனுடைய ஈடு இணையில்லாத ஆற்றலை அறிந்துகொண்டவனாதலால், அஞ்சி நடுங்கிச் சோகமுற்ற நெஞ்சத்துடன், இராவணனை நோக்கிக் கைகளைக் கூப்பிக் கொண்டு, உண்மையானதும், தனக்கும் அவனுக்கும் அனுகூலமானதுமான பதிலைக் கூறினான். (22–24)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
முப்பத்தாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்தேழு

மாரீசனின் உபதேசம்

பேச்சில் வல்லவனும் பேரறிவாளியுமான மாரீசன், அரக்கர் மன்னனின் உரையைக் கேட்டுவிட்டு, அரக்கர் தலைவனைப் பார்த்துப் பதில் சொன்னான்— (1)

''வேந்தே! எப்போதும் (தலைவனின்) இஷ்டத்திற்கேற்ப பேசும் மனிதர்கள் ஏராளமாகக் கிடைப்பார்கள். (ஆனால்,) கேட்பதற்கு இனிமையாக இல்லாததாக இருப்பினும் நல்ல பயனை அளிக்கக்கூடிய ஆலோசனையைக் கூறுபவனைக் காண்பது அரிது. அதேபோல், அதை செவிமடுத்துக் கேட்பவனும் அரிது. உங்களிடம் ஒற்றர்படை இல்லை; மேலும், நீங்கள் சஞ்சல புத்தி காரணமாக, இராமன் மாபெரும் ஆற்றலுடையவர் என்பதையும், நற்குணங்களால் சிறந்து விளங்குபவர் என்பதையும், தேவேந்திரனையும் வருணனையும் நிகர்த்தவர் என்பதையும் அறியாமலிருக்கிறீர்கள். ஐயனே! உலகிலுள்ள அரக்கர்கள் எல்லோருக்கும் நலன் விளையுமா? இராமன் கடுஞ்சினம் கொண்டு உலகத்தில் அரக்கர்களே இல்லாமல் செய்யாதிருப்பாரா? (2–4)

உங்களுடைய உயிரை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக ஜனககுமாரி பிறந்திருக்கவில்லை, அல்லவா? சீதையை நிமித்தமாகக் கொண்டு, உங்களுக்குப் பெருந்துயரம் ஏற்படாதிருக்குமா? நினைத்தபடியெல்லாம் நடப்பவரும், அங்குசம் இல்லாதவருமான (தவறு செய்யும்போது தடுத்து நிறுத்துவதற்கு யாரும் இல்லாதவருமான) தங்களைத் தலைவனாகப் பெற்ற இலங்கை பட்டணம்,

உங்களோடுகூட அரக்கர்கள் அனைவரும் சேர்ந்து அழியாமல் இருக்குமா? உங்களைப் போன்று, மனம் போன போக்கில் செல்பவனும், தீய ஒழுக்கமுடையவனும், தீமை பயக்கும் ஆலோசனைகளைக் கேட்பவனும், கெட்ட புத்தியுடையவனுமான அரசன், தன்னையும் தன் மக்களையும் தன் நாட்டையும் அழித்துவிடுகிறான். (5–7)

(இராமன்) தந்தையினால் கைவிடப்பட்டவர் அல்லர்; ஒருபோதும் அறநெறிகளை மீறியவர் அல்லர்; பேராசைக்காரர் அல்லர்; தீய ஒழுக்கமுடையவர் அல்லர்; க்ஷத்திரிய குலத்திற்குக் களங்கம் ஏற்படுத்துபவருமல்லர். கௌசல்யாதேவியின் ஆனந்தத்தை வளர்க்கும் அவர், நற்குணங்கள் இல்லாதவர் அல்லர்; கொடுமைக்காரர் அல்லர்; எல்லாப் பிராணிகளுக்கும் தீங்கு செய்யும் எண்ணமுடையவர் அல்லர். கைகேயியினால் தந்தை வஞ்சிக்கப்பட்டதைக் கண்டு, 'அவர் சொல்லை உண்மையாக்குவேன்' ('தந்தை கொடுத்த வரத்தைச் சத்தியவாக்காகச் செய்வேன்') என்று தனக்குள் நிச்சயித்து, அதன் காரணமாகத் தானாகவே காட்டிற்கு வந்திருக்கிறார். தாயார் கைகேயிக்கும் தந்தை தசரதருக்கும் மனநிம்மதியைக் கொடுப்பதற்காக, அரசாட்சியையும் சுக–போகங்களையும் துறந்து, தண்டகாரண்யத்திற்குள் புகுந்திருக்கிறார். (8–11)

தலைவரே! இராமன் இரக்கமற்றவர் அல்லர்; அறிவில்லாதவர் அல்லர்; புலனடக்கம் இல்லாதவர் அல்லர்; (இவற்றை நான் பிரத்யட்சமாக அறிந்திருக்கிறேன். அதனால், இராமனைப் பற்றி என்னிடம்) பொய்யையும், யாரோ சொல்லக் கேட்ட தவறான தகவல்களையும் என்னிடம் நீங்கள் சொல்லவே கூடாது. ஸ்ரீராமன், தருமமே உருவெடுத்து வந்தவர்; நல்லவர்; வீண்போகாத பராக்கிரமத்தை உடையவர். எவ்வாறு இந்திரன் தேவர்களுக்குத் தலைவனோ, அவ்வாறே, இவர் எல்லா உலகங்களுக்கும் தலைவர். சூரியனுடைய கதிரொளியை அதனிடமிருந்து பிரிக்க முடியாததைப் போல, தன்னுள் இயற்கையாக அமைந்துள்ள, கற்பு என்னும் பேராற்றலினால் காப்பாற்றப்படும் அவருடைய பத்தினி சீதையை, பலாத்காரமாகக் கவர்ந்து வர எவ்வாறு ஆசைப்படுகிறீர்கள்? (12–14)

இராமன், கொழுந்துவிட்டெரியும் அக்னிக்கு ஒப்பானவர்; பாணங்களே சுவாலைகள்; வில்லும் கத்தியும் விறகுகள்; அணுக முடியாதபடிக் கனன்று எரியும் இராமன் என்னும் அக்னியில், (பலாபலன்களை எண்ணிப் பார்க்காமல்) திடீரென்று நீங்கள் குதிக்கக்கூடாது. அன்பரே! இராமன் என்கிற காலன், வில் என்னும் பேரொளி வீசும் வாயை உடையவர்; அம்புகளே நாக்கு; எதிர்கொள்ள முடியாதவர்; கத்தி என்னும் பாசக்கயிற்றை உடையவர்; நிகரில்லாத வீரம் படைத்தவர்; பகைவர்களின் படையை ஓட ஓட விரட்டுபவர். (அப்படிப்பட்டவரை) அரச போகம், வளமான வாழ்க்கை, அருமையான உயிர் ஆகியவற்றைத் துறந்து (விடுவதற்காக), நீங்கள் எதிர்த்து நிற்கத் துணியலாகாது. (15–17)

ஜனகரின் புதல்வி எவருடைய தருமபத்தினியோ, அவருடைய ஆற்றல் ஈடில்லாதது. காட்டில், இராமனுடைய வில்லை அண்டியிருக்கும் அவளை, பலாத்காரமாக எடுத்து வருவதற்கு உங்களால் முடியாது. மனிதர்களுள் சிங்கம் போன்றவரும், சிங்கத்தின் நெஞ்சுறுதியைக் கொண்டவருமான அவருடைய அழகு குன்றாத மனைவி, எப்போதும் கணவனைப் பின்தொடர்பவள். அவருக்கு உயிரினும் மேலான அன்புக்கு உரியவள். மிதிலை மன்னன் குமாரியான சீதை, பேராற்றல் மிக்க இராமனுக்கு மிகவும் பிரியமானவள். அந்த அழகி, கொழுந்து விட்டெரியும் அக்னியின் சுவாலை போன்று நெருங்க முடியாதவள். (18–20)

அரக்கர் வேந்தே! வீணான இந்த முயற்சியினால் நீங்கள் அடையப் போவது என்ன? போர்க்களத்தில் அவரால் பார்க்கப்பட்டாலே போதும், உங்கள் வாழ்க்கை அத்துடன் முடிந்துவிடும். உங்கள் உயிர், சுக–சௌக்கியம், அரசாட்சி – இவை கிடைத்தற்கரியவை. இவைகளை நெடுநாள் அனுபவிக்க வேண்டும் என்ற விருப்பம் இருந்தால், இராமனுடைய பகைமையைத் தேடிக் கொள்ளாதீர்கள். விபீஷணன் முதலான எல்லா அமைச்சர்களோடும்

கலந்தாலோசித்து, அறம் அறிந்தவர்களின் ஆலோசனையைப் பெற்று, குறை–நிறைகளையும் பலம்–பலவீனங்களையும் சீர்தூக்கிப் பார்த்து, தங்களுடைய ஆற்றலையும், இராமனுடைய உண்மையான பெருவீரத்தையும், நன்மை–தீமைகளையும் நிச்சயித்து, உங்களுக்குள் ஒரு தீர்மானத்திற்கு வந்து, நன்மை தரக்கூடிய செயலையே செய்ய வேண்டும். அரக்கர் அரசே! கோசல மன்னரின் புதல்வருடன் நீங்கள் போர் செய்வது சாத்தியம் என்று நான் கருதவில்லை. இராச்சுற்றிகளின் தலைவரே! பொருத்தமானதும், அனுபவத்திற்கு இசைவானதும், மேலானதுமான சொற்களை, மறுபடியும் நான் சொல்லப் போகிறேன், கேட்பீர்களாக.'' (21–25)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
முப்பத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்தெட்டு

ஸ்ரீராமனுடைய அஸ்திர மகிமை

ஒரு காலத்தில், மலை போன்ற பேருருவத்தை ஏற்று, ஆயிரம் யானைகளின் பலத்தைப் பெற்று, கார்வண்ண முகில் போன்ற நிறத்துடன், தூய பொன்னாலான குண்டலங்களை அணிந்து கொண்டு, தலையில் மகுடம் சூட்டிக்கொண்டு, பரிகம் என்னும் இரும்புத்தடியைச் சுழற்றிக் கொண்டு, தண்டகாரண்யத்தில் முனிவர்களின் மாமிசங்களைப் புசித்துக் கொண்டு, வீரக்கொழுப்பினால் இந்தப் பிரதேசம் முழுவதிலும் சுற்றித் திரிந்து கொண்டிருந்தேன். (1,2)

அப்போது, தருமாத்மாவான விசுவாமித்திர மாமுனிவர், என்னிடம் பயங்கொண்டு, பேரரசனான தசரதரிடம் தானே சென்று பின்வருமாறு கூறினார்— ''மன்னரே! மாரீசனால் எனக்கு மிகவும் பயம் ஏற்பட்டிருக்கிறது. (உங்களுடைய குமாரனாகிய) இராமன், வேள்வி நிறைவுறும் காலத்தில் (என் பக்கத்திலிருந்து) என்னைக் காப்பாற்றட்டும். (என் வேள்வி, தடங்கலில்லாமல் நிறைவேற பாதுகாப்புத் தரட்டும்.)'' அறநெறி வழுவாத மன்னர் தசரதர், இவ்வாறு கூறிய மகாபாக்கியசாலியான முனிவர் பெருமான் விசுவாமித்திரருக்குப் பின்வருமாறு விடையளித்தார்— (3–5)

''(என் மைந்தனான) இராமன், சிறுவன்; பன்னிரண்டு ஆண்டுகளே நிறைவு பெற்ற பாலன்; அத்துடன், அஸ்திரப் பயிற்சியில் முழுமையாகத் தேர்ச்சி பெற்றவனுமல்லன். (ஆகவே, தங்கள் வேள்வியைப் பாதுகாப்பதற்கு நானே வருகிறேன்.) என்னுடன் கூட, என்னுடைய மிகப்பெரிய சேனையும் வரும். (விசுவாமித்திர யாக காலத்தில், இராமனின் வயது பதினைந்து. மாரீசன், 'பன்னிரண்டு வயது' என்று சொன்னதற்குக் காரணம், இராவணன் மனத்தில் அச்சத்தை உண்டாக்க வேண்டும் என்பதே. 'அப்போது, இராமன் சிறுவன்; இப்போது, வாலிபன். போராற்றல் வளர்ந்திருக்குமே?' – என்று கருத்து.) நால்வகைப் படையோடுகூட நானே வந்து, தங்கள் விருப்பப்படி, மாமுனிவரே! தங்களுடைய எதிரிகளான அரக்கர்களைக் கொல்வேன்.'' (6,7)

இவ்வாறு சொல்லப்பட்டதும் அந்த முனிவர், மன்னனை நோக்கி மீண்டும் சொன்னார்— ''அந்த அரக்கனை அழிப்பதற்கு, இராமனைத் தவிர வேறு எந்தப் படைவீரனாலும் முடியாது. மன்னரே! போர்க்களங்களில் நீங்கள் தேவர்களையும் காப்பாற்றியிருக்கிறீர்கள் என்ற உங்கள் பெருவீரத்தைப் பற்றிய செய்தி மூன்று உலகங்களுக்கும் தெரியும். எதிரிகளை வாட்டுபவரே! உங்களுடைய பெரும் படை இங்கேயே இருக்கட்டும். சிறுபையனாக இருந்தாலும் பேராற்றலுடைய இவன் (இராமன்), அவனை (மாரீசனை) ஒழித்துக் கட்டுவதில் திறமை உடையவன். பகைவர்களை வாட்டுபவரே! உங்களுக்கு க்ஷேமம் உண்டாகட்டும். நான்

இராமனை அழைத்துக் கொண்டு போகிறேன்.'' விசுவாமித்திர முனிவர் இவ்வாறு கூறிவிட்டு, மன்னர் மைந்தன் இராமனை அழைத்துக் கொண்டு, மனம் நிறைந்தவராகத் தன் ஆசிரமத்திற்குச் சென்றார். (8–11)

பின்னர், தண்டகாரண்யத்தில், யாகசங்கல்பம் செய்து கொண்டு, நியமத்தோடு இருக்கும் அவர் பக்கத்திலேயே இருந்து, விசித்திரமான வில்லில் நாணொலி எழுப்பி நின்று கொண்டிருந்தார், இராமன். உடலில் யௌவன குறிகள் தோன்றாதவர்; அழகு மிக்கவர்; தாமரை இதழ் போன்ற கண்கள்; ஒரே வஸ்திரம்; கையில் ஏந்திய வில்; தலையில் சிகை; ஒளிவீசும் தனது பேராற்றலாலும் தங்கமய மாலையினாலும் தண்டகாரண்யத்திற்கு அழகு சேர்த்துக் கொண்டு, அப்போது உதித்த இளம் நிலவு போல இராமன் காணப்பட்டார். (12–14)

அவ்வமயம், மேகம் போன்று கறுத்த உடலையுடையவனும், சொக்கத் தங்கத்தாலான குண்டலங்களை அணிந்தவனும், மிக்க பலசாலியும், பல வரங்களைப் பெற்றதால் கொழுப்படைந்திருந்தவனுமான நான், அந்த ஆசிரமத்திற்கு வந்தேன். ஆயுதங்களைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு, திடீரென்று அங்கே வந்துவிட்ட என்னை அவர் பார்த்துவிட்டார். என்னை (அந்தப் பயங்கரக் கோலத்தில்) பார்த்தும்கூட, அவர் மனக்கலக்கம் அடையாமல் வில்லில் நாணேற்றினார். 'இராகவன் சிறுபிள்ளைதானே!' என்று, அறியாமையால் அவரை அலட்சியப்படுத்திவிட்டு, விசுவாமித்திரருடைய யாகமேடையை நோக்கி விரைந்து சென்றேன். பகைவர்களை அடக்கவல்லவரான அவர் ஒரு கூரிய பாணத்தை விட்டார். அதனால் தாக்கப்பட்ட நான், நூறு யோஜனை தூரத்திற்கு அப்பால் கடலில் தள்ளப்பட்டேன். (15–18)

அன்பரே! அவர் அப்போது என்னைக் கொல்ல விரும்பாததால், நான் உயிர் பிழைத்தேன். ஆனால், இராமனுடைய அம்பின் வேகத்தால் நான் நினைவிழந்தவனாக எறியப்பட்டேன். ஆழ்ந்தகன்ற மாபெரும் கடலில் நான் அவரால் தள்ளப்பட்டேன். வெகுநேரம் கழித்து உணர்வு பெற்று, இலங்கை நகருக்குத் திரும்பிச் சென்றேன். அப்போது அவரால் உயிருடன் விடப்பட்டேன். அஸ்திரப் பயிற்சி முழுமை பெறாதவரும், சிறுவரும், கடினமான செயல்களையும் எளிதில் செய்ய வல்லவருமான இராமனால், என்னுடன் வந்திருந்த வீரர்கள் எல்லோரும் கொல்லப்பட்டார்கள். (19–21)

ஆகவேதான், நான் உங்களைத் தடுக்கிறேன். (அதையும் மீறி,) நீங்கள் இராமனுடன் விரோதத்தை உண்டாக்கிக் கொண்டீர்களேயானால், இராவணா! மிக விரைவில், பயங்கரமான ஆபத்தை அடைவீர்கள். காம–கேளிக்கை விளையாட்டுக்களில் கைதேர்ந்தவர்களும், கூட்டம் கூட்டமாக திருவிழாக்களில் கூடுபவர்களுமான அரக்கர்கள் அனைவருக்கும் மனத்துயரையும் தீங்கையும் கொண்டு வருவீர்கள். மைதிலியை விரும்பிய காரணத்தால், உப்பரிகைகளாலும் அரண்மனைகளாலும் நிறைந்துள்ளதும், பல்வகை இரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்டதுமான இலங்கை நகர் அழிவதைப் பார்க்கப் போகிறீர்கள். (22–24)

மடுவில், முதலைகளுடன் வசிக்கும் மீன்கள் (மீன்களால் எவ்வித ஆபத்தும் இல்லையென்றாலும், ஆபத்தான முதலைகளுடன் இருக்கும் காரணத்தால்) அழிந்து போவதைப் போல, நல்மனம் கொண்டவர்கள் பாவம் செய்யாதிருந்த போதிலும், பாவிகளின் சேர்க்கையால் (பாவிகளின் பாவத்தின் காரணத்தால்) அழிந்து போகிறார்கள். (இலங்கையிலுள்ள அரக்கர்கள் எந்தத் தவறும் செய்யாத போதிலும்) திவ்யமான சந்தனக்குழம்பு பூசப்பட்ட அங்கங்களையுடைய, அழகழகான அணிகலன்கள் அணிந்த அரக்கர்கள், உங்களுடைய பாவத்தினால் பூமியில் வீழ்ந்து கிடப்பதைக் காணப் போகிறீர்கள். (25,26)

மனைவிகளை இழந்தும், மனைவிகளோடு கூடியும், போரில் கொல்லப்படாமல் மீதியிருக்கும் அரக்கர்கள், புகலிடம் இல்லாமல் பத்துத் திசைகளிலும் ஓடிச் செல்வதைக் காணப் போகிறீர்கள். அம்புக் கூட்டங்களால் மூடப்பட்டதும், நெருப்புக் கொழுந்துகளால் சூழப்பட்டதும், வீடுகள்

கொளுத்தப்பட்டதுமான இலங்கையைக் காணப் போகிறீர்கள் என்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை. பிறர் மனைவியைக் கற்பழிப்பதைக் காட்டிலும் கொடிய பாவம் வேறெதுவுமில்லை. வேந்தே! உங்கள் அந்தப்புரத்தில்தான் ஆயிரக்கணக்கான அழகிகள் இருக்கிறார்களே? (அவர்களை விட்டுவிட்டு, சீதையை அடைய ஏன் ஆசைப்படுகிறீர்கள்?) (27–29)

அரக்கரே! உங்கள் மனைவிகளிடம் இன்பம் அனுபவியுங்கள். உங்கள் குலம்–கௌரவம்–செல்வச்செழிப்பு–அரசாட்சி, அத்துடன் உங்களுக்குப் பிரியமான உயிரையும் காப்பாற்றிக் கொள்ளுங்கள். உங்கள் மனைவிமார்களுடனும் நண்பர்களுடனும் நீண்டகாலம் இன்பமாக வாழ விரும்பினால், இராமனுடைய பகையைத் தேடிக் கொள்ளாதீர்கள். உங்கள் நலனில் பெரும் அக்கறை கொண்ட நான் பல தடவை எடுத்துக் கூறிய பின்னரும் சீதையை, பலாத்காரமாக எடுத்து வந்தீர்களேயானால், இராமனுடைய பாணங்களால் சேனைகளை இழந்து, உங்கள் உயிரையும் இழந்து உறவினர்களோடுகூட யமலோகத்தை அடைவீர்கள். (30–32)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
முப்பத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்தொன்பது

மாரீசன் மீண்டும் உபதேசித்தல்

அந்தச் சமயத்தில் (இராமன் சிறுவனாக இருந்தபோது) ஏற்பட்ட அந்தப் போரில், முன்னே சொன்னபடி, ஏதோ ஒருவாறாக நான் உயிருடன் விடப்பட்டேன். பின்னர், (இராமன் வளர்ந்து, யுத்தக் கலையில் தேர்ச்சி பெற்ற) சமீப காலத்தில் நடந்த நிகழ்ச்சியைக் கூறுகிறேன். குறுக்கே பேசாமல் கேளுங்கள். முன்னர் கூறியபடி (கடலில் மூழ்கடித்து என்னைத் திக்குமுக்காடச் செய்து) அவமானப்படுத்தப்பட்ட நான், அதைரியம் அடையாமல், மான் உருவமெடுத்துக் கொண்டு இரண்டு அரக்கர்களோடுகூட தண்டகாரண்யத்திற்குள் புகுந்தேன். நெருப்பாகச் சிவந்த நாக்கு; பெரிய உருவம்; கூரிய கொம்புகள்; மகாபலம் பொருந்திய பெரிய மானாகி மாமிசத்தைப் புசித்துக் கொண்டு, தண்டகாரண்யத்தில் சுற்றித் திரிந்து கொண்டிருந்தேன். (1–3)

இராவணா! அக்னிஹோத்ர சாலைகளிலும், புண்ணிய தீர்த்த கட்டங்களிலும், புனிதமான மரங்களின் அடியிலும் அமர்ந்து தவம் செய்து கொண்டிருந்தவர்களைப் பயமுறுத்தியவண்ணம் பயங்கர உருவம் கொண்டு திரிந்து வந்தேன். தண்டகாவனத்தில், அறநெறிப்படி வாழ்ந்து கொண்டிருந்த முனிவர்களைக் கொன்று, அவர்கள் இரத்தத்தைக் குடித்து, உடலைத் தின்றுகொண்டு, ரிஷிகளின் உயிரில்லாத சரீரங்களையே உண்பவனாக, கொடுமைக்காரனாக, காட்டில் வசிக்கும் பிராணிகளைப் பயமுறுத்திக் கொண்டு, இரத்தவெறி கொண்டவனாக, தருமத்திற்குக் கேடு விளைவிப்பவனாகச் சுற்றித் திரிந்து கொண்டிருந்தபோது, ஒரு சமயம், தவவேடம் பூண்டு, அறவொழுக்கத்தைக் கடைப்பிடிக்கும் இராமனையும், மிகவும் பேறு பெற்றவளான சீதையையும், மகாவீரனான லட்சுமணனையும் அங்கே பார்த்தேன். (4–7)

தவவேடம் புனைந்தவர்; அளவாக உண்பவர்; எல்லாப் பிராணிகளின் நலனிலும் நோக்குடையவர். இப்படியாக, காட்டிற்கு வந்திருக்கும் பெரும் பலசாலியான இராமனை, 'இவர் தபஸ்வியல்லவா?' (எனவே, தபஸ்விகளின் நியமப்படி, பிராணிகளை ஹிம்ஸை செய்ய மாட்டார்) என்று எண்ணி, அலட்சியப்படுத்தி முன் விரோதத்தை நினைவுக்குக் கொண்டு வந்து, மிகவும் கோபத்துடன், கூரிய கொம்புகளையுடைய மான் உருவம் கொண்ட நான், முன்பு கிடைத்த அடியை நினைத்துக் கொண்டு, புத்தியை இழந்தவனாக (சிறுபிள்ளையாக இருந்தபோதே அந்தப் பாடுபடுத்தியவர், இப்போது என்னதான் செய்யமாட்டார்? – என்ற படிப்பினை வராமல்) அவரைக் கொல்லும் நோக்கத்துடன் எதிர்த்துச் சென்றேன். (8,9)

கூர்மையானவைகளும் எதிரிகளை மாய்க்கவல்லவைகளும் கருடன், வாயுவைப் போல் முழக்கம் செய்கின்றவைகளுமான மூன்று பாணங்களை, மாபெரும் வில்லில் நாணேற்றிச் செலுத்தினார். அந்தப் பாணங்கள் வஜ்ராயுதத்தைப் போன்றும், மகா பயங்கரமானவைகளாகவும், (எதிரிகளின்) இரத்தத்தை உறிஞ்சுபவைகளாகவும், சீராக அமைக்கப்பட்ட கணுக்களை உடையவைகளாகவும் இருந்தன. அவை மூன்றும் ஒன்றாகக் கூடி எதிரே வந்தன. இராமனுடைய எல்லையில்லாத பராக்கிரமத்தை அறிந்தவன், நான். அவரால் விளைவிக்கப்பட்ட பெருந்துன்பத்தை அனுபவித்தவன், நான். அதனால், (இராமபாணத்திலிருந்து தப்ப முடியாது என்பதால்) தந்திரமாகத் தாவிக் குதித்து ஓடிப்போனதால் உயிர் பிழைத்தேன். அந்த இரு அரக்கர்களும் கொல்லப்பட்டார்கள். (இராமபாணம் களத்திலிருந்து புறங்காட்டிச் செல்லும் கோழையைப் பின்தொடர்ந்து சென்று அழிக்காது.) (10–12)

இராமனுடைய அம்பிலிருந்து ஒரு வழியாகத் தப்பித்துக் கொண்டு, புது வாழ்வைப் பெற்று, இவ்விடத்திற்கு வந்து, நல்லொழுக்கம் கொண்டவனாக, செம்மையான மனம் உடையவனாக, உலகப்பற்றை விட்டுவிட்ட தவசியாக இருந்து கொண்டிருக்கிறேன். இங்கேயுள்ள ஒவ்வொரு மரத்திலும், மரவுரியும் மான்தோலும் அணிந்து, வில்லைத் தாங்கி நிற்கும் இராமனைக் – கையில் பாசமேந்திக் கொண்டு நிற்கும் காலனைப் போல – காண்கிறேன். இராவணா! மேலும், பயத்தில் திளைத்துக் கொண்டிருக்கும் நான், இங்கே ஆயிரக்கணக்கான இராமன்களைக் காண்கிறேன். இந்த வனம் முழுவதும் இராமனாகவே ஆகிவிட்டதாக எனக்குத் தோன்றுகிறது! (13–15)

அரக்கர் தலைவரே! நான் (இராமன் இல்லாத இடத்தில்) தனிமையில் இருக்கும்போது, இராமனையே காண்கிறேன். கனவில் இராமனைப் பார்க்க நேரிட்டால் அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்து விடுகிறேன். இராவணா! இராமனிடம் எனக்கு ஏற்பட்டுள்ள பயத்தால், இரத்தினம், இரதம் முதலிய, 'இர' என்ற எழுத்தில் தொடங்கும் சொற்கள் எனக்குள் ஒரு நடுக்கத்தை உண்டாக்குகின்றன. (16,17)

நான், அவருடைய மகிமையை உள்ளபடி அறிவேன். அதனால்தான் சொல்கிறேன். அவருடன் யுத்தம் செய்யும் சக்தி உங்களிடம் இல்லை. ரகு குலத்தை மகிழ்விக்கும் இராமன், அந்த பலிச்சக்கரவர்த்தியையும் நமுசியையும் கூடக் கொன்றுவிடுவார். (நமுசியைப் பற்றி இரண்டுவிதமான வரலாறுகள் காணக் கிடைக்கின்றன. ஒன்று: அசுரர்களில் ஒருவனான நமுசி மட்டும், இந்திரனுடன் நடந்த போரில் வெற்றி பெற்றான். இந்திரன் கைது செய்யப்பட்டான். 'பகலிலோ இரவிலோ, ஈரமான அல்லது உலர்ந்த ஆயுதத்தால் என்னைத் தாக்கமாட்டேன் – என்று வாக்களித்தால் உன்னை விடுவிக்கிறேன்' என்றான், நமுசி. அதை ஏற்று வெளியே வந்த இந்திரனால், இரவும்–பகலுமில்லாத சந்த்யா காலத்தில், கடல் நுரையால் நமுசி கொல்லப்பட்டான். மற்றொன்று: நமுசி, இந்திரனின் நண்பன். ஒரு சமயம், இந்திரனின் உயிரை வாங்காமல், அவன் இரத்தத்தை மட்டும் குடித்துவிட்டான். பின்னர், அசுவினீ தேவர்களும் சரஸ்வதியும் இந்திரனுக்கு ஒரு வஜ்ரத்தை அளித்தார்கள். அதைக் கொண்டு நமுசியின் தலையை வெட்டினான், இந்திரன். விரோசனன் மகனான பலிச்சக்கரவர்த்தி, மகாவிஷ்ணுவின் திரிவிக்ரம அவதாரத்தால், பாதாளத்திற்கு அனுப்பப்பட்டவன்.) (18)

அரக்கரே! துணிச்சல் இருந்தால் இராமனோடு போர் செய்யுங்கள். இல்லாவிட்டால், அவர் செய்தவைகளைப் பொறுத்துக் கொள்ளுங்கள். என்னை உயிருடன் பார்க்க விரும்பினால், என் எதிரில் இராமனிடம் விரோதம் காட்டிப் பேசாதீர்கள். உலகில் தருமத்தை அனுஷ்டிப்பவர்களும் ஆத்மஞானிகளுமான பெரியோர்கள் பலர், சகவாச தோஷத்தால் (தீயோருடன் சேர்க்கை என்ற குற்றத்தால்), உறவினர்களோடுகூட அழிந்து போயிருக்கிறார்கள். அரக்கர் மன்னரே! நீங்கள் செய்யப்போகும் (சீதையை அபகரித்தல் என்ற) குற்றத்தால் நான் மாண்டு போவேன். எனவே,

உங்களிடம் உள்ள சக்திக்கேற்ற காரியத்தை நீங்கள் செய்து கொள்ளுங்கள்; நான் (இந்த விஷயத்தில்) உங்களுக்கு உதவி செய்யமாட்டேன். (19–21)

இராமனோ, மகாபராக்கிரமம் உடையவர்; அறிவுமிக்கவர்; மிகவும் உடல்பலம் உடையவர். அரக்கர் குலத்திற்கே அவர் நாசத்தை விளைவிப்பவராக ஆகக் கூடியவரன்றோ? சூர்ப்பணகை காரணமாக, ஜனஸ்தானத்திற்குச் சென்ற கரன் முதலில் நியாய வரம்பை மீறினான். அதனால், கஷ்டமான காரியங்களையும் எளிதில் செய்து முடிக்கும் திறன் கொண்ட இராமனால் கொல்லப்பட்டான் என்றால், இராமன் எல்லை மீறி நடந்தார் என்று சொல்வதில் உண்மை இருக்கிறதா? என் உறவினரான உங்கள் நன்மையை நாடும் என் அறிவுரையை ஏற்காவிடில், போரில் இராமனால் குறி தப்பாது செலுத்தும் பாணங்களால் அடிபட்டு, அந்த க்ஷணமே, உற்றார்–உறவினர்களோடு உயிரைத் துறப்பீர்கள். (22–24)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
முப்பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பது

மாயமான் உருவம் கொள்ள வற்புறுத்துதல்

மாரீசனால் சொல்லப்பட்ட அந்த உரை உசிதமாகவும் ஏற்கத்தக்கதாகவும் இருந்தபோதிலும், உயிரைவிடத் துணிந்த ஒரு நோயாளி, மருந்தை ஏற்க மறுப்பதைப் போல, (காமம் என்ற நோயால் பீடிக்கப்பட்ட) அந்த அரக்கன், அவனால் சொல்லப்பட்ட நல்லுரையை ஏற்கவில்லை. காலனால் குறி வைக்கப்பட்டிருந்த அந்த அரக்கர் வேந்தன், உண்மையை உள்ளபடியேயும் நயமாகவும் கூறிய மாரீசனைப் பார்த்துத் தகாத சொற்களைக் கோபத்துடன் கூறினான்— (1,2)

''மாரீசனே! பொருத்தமில்லாத எந்த வார்த்தைகளை என்னிடம் கூறினாயோ, அவையெல்லாம் உவர்பூமியில் விதைக்கப்பட்ட விதைபோல சிறிதும் பயனில்லாதவை. இராமன் தீய ஒழுக்கமுடையவன்; மதியில்லாதவன்; அத்துடன், அற்ப மனிதப்பிறவி. ஆகவே, 'இராமனுடன் போர் புரிய உன்னால் முடியாது' என்று நீ சொன்னது சரிதான்! (மூன்று வகைகளில் என்னில் தாழ்ந்தவனான அவனுடன் போரிடுவது, என் போன்ற வீரனுக்கு அழகல்ல – என்பது உண்மைதான்.) ஆனால், அவனுக்குப் பாடம் புகட்டுவதற்கு, 'அவன் மனைவியை அபகரித்து வருவது' என்ற என் நிச்சயத்தை, உன் வார்த்தைகள் அசைத்துவிட முடியாது. (3,4)

எவன், மதியில்லாத ஒரு பெண்ணின் (கைகேயியின்) சொற்களைக் கேட்டு மதித்து, நண்பர்களையும் அரசாட்சியையும் தாயாரையும் தந்தையையும் ஒருங்கே துறந்து, காட்டிற்கு ஏகினானோ, போரில் கரனைக் கொன்ற அவனுடைய உயிருக்கும் மேலான சீதை, உன் முன்னிலையிலேயே (உன் சகாயத்தாலேயே) நிச்சயம் அபகரிக்கப்பட வேண்டியவள். மாரீசனே! இந்த எண்ணம் என் மனத்தில் திடமாக இருக்கிறது. இதனை, இந்திரன் முதலான தேவர்களும் அசுரர்களும் ஒன்றுகூடி வந்தாலும் மாற்ற முடியாது. (5–7)

இந்த விஷயத்தை நிர்ணயிப்பதற்காக, 'இந்தத் திட்டத்திலுள்ள குண–தோஷங்கள் என்னென்ன? ஆபத்து என்ன? வழிமுறை என்ன?' என்று கேட்கப்பட்டால் அல்லவோ, நீ அறிவுரை கூறவேண்டும்? தன்னுடைய நன்மையை விரும்புகிற, புத்திசாலியான அமைச்சன், அவனிடம் ஆலோசனை கேட்கப்பட்டால் மட்டுமே, அரசன் முன்பு கைகூப்பி வணக்கத்துடன் பதில் கூறவேண்டும். மன்னன் என்பவன் அனுகூலமானதும் மென்மையானதும் நன்மை அளிப்பதும் மங்களமானதும் மரியாதையோடு கூடியதுமான ஆலோசனையைக் கூறத்தக்கவன். (8–10)

மாரீசனே! மற்றவர்களின் கௌரவத்திற்கு உரியவனான மன்னன், அவனுக்கு நன்மையே செய்யும் சொற்களாக இருந்தாலும், அவை அவமரியாதையுடன் சொல்லப்படுமானால், அவன் அந்தச் சொற்களால் மகிழ்வடைவதில்லை. எல்லையில்லாத பராக்கிரமம் பெற்ற மன்னர்கள் ஐந்து தேவதைகளான அக்னி, இந்திரன், சந்திரன், யமன், வருணன் ஆகியவர்களின் சிறப்பியல்புகளைப் பெற்றுள்ளார்கள். அரக்கனே! சுட்டெரிக்கும் வெம்மை, அளவற்ற பராக்கிரமம், இனிய இயல்பு, குற்றமிழைத்தோர்க்குத் தண்டனை கொடுப்பது, இரக்கம் ஆகிய குணங்களைப் பேரரசர்களான மன்னர்கள் பெற்றுள்ளார்கள். (11–13)

ஆதலால், எந்த நிலைமையிலும் மன்னர்கள், மனத்தால் கௌரவிக்கவும், சொற்களால் போற்றவும் தக்கவர்கள். நீ, தருமத்தை அறியவில்லை; மதிமயக்கத்தில் சிக்கியிருக்கிறாய். உன்னைத் தேடி வந்திருக்கும் என்னிடம், உன் துஷ்டத்தனத்தினால், இம்மாதிரியான அவமரியாதை சொற்களைக் கூறுகிறாய். அரக்கனே! என்னிடம் சக்தி இருக்கிறது (என் விருப்பப்படிச் செயல்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு). என் செயல்பாட்டின் நல்லது–கெட்டதுகளைப் பற்றி நான், உன்னைக் கேட்கவில்லை. (14,15)

எல்லையற்ற பராக்கிரமம் கொண்ட அரக்கனே! இப்போது, நான் உன்னிடம் கூறியது இதுதான். (நான் முடிவெடுத்திருக்கும்) இந்தப் பெரும் காரியத்தில் நீ எனக்கு உதவி செய்ய வேண்டும். நீ, எனக்கு எப்படி உதவ வேண்டும்? என்று நான் சொல்லப் போவதைக் கேள். வெள்ளிப் புள்ளிகளால் கவர்ச்சியுடன் விளங்கும் பொன்வண்ண மானாக உருக்கொண்டு, இராமனுடைய ஆசிரமத்திற்கு அருகில் சீதையின் கண்ணெதிரே ஓடித் திரி. (பெண் ஆனதால், புதுமையான அந்த மானைக் கண்டு சீதை மயங்குவாள். அதனைக் கொஞ்சிக் குலாவ விரும்புவாள்.) சீதையின் மனத்தில் இப்படி ஓர் ஆசையை உண்டாக்கிவிட்டு, நீ உன் இஷ்டம் போல் எங்கு வேண்டுமானாலும் சென்றுவிடலாம். (16–18)

மாயையால், பொன்மானாகத் தோற்றமளிக்கும் உன்னைக் கண்டதுமே, சீதை மிகவும் ஆச்சரியமடைந்து, இராமனைப் பார்த்து, 'இதை உடனே பிடித்துக் கொண்டு வாருங்கள்' என்று சொல்வாள். உன்னைப் பிடிப்பதற்காக, உன் பின்னால் இராமன் (ஆசிரமத்திலிருந்து) வெகுதூரம் சென்றபின்னர், இராமனுடைய குரலில், 'ஹா, சீதே! ஹா, லட்சுமணா!' என்று உரத்த குரலில் அழை. அந்த அழைப்பைக் கேட்டு, (கவலை கொண்ட) சீதையால் மன்றாடிக் கேட்டுக் கொள்ளப்பட்டு, பேரன்பு கொண்ட லட்சுமணன், மனம் பதறி, இராமன் சென்ற வழியிலேயே பின்தொடர்ந்து செல்வான். (19–21)

இவ்விதம் இராமனும் லட்சுமணனும் வெகுதூரம் சென்றுவிட்ட பின்னர், இந்திரன் இந்திராணியைக் கவர்ந்து சென்றதைப் போல, மிகச் சுலபமாக வைதேகியை அபகரிக்கப் போகிறேன். நல்ல விரதங்களை அனுஷ்டிக்கும் அரக்கனே! இந்தக் காரியத்தை இவ்வாறு செய்துவிட்டு, உன் இஷ்டம் போல் செல்லலாம். மாரீசனே! (நீ செய்யப்போகும் இந்தப் பேருதவிக்காக,) என் ராஜ்யத்தில் பாதியை உனக்குத் தருவேன். அன்பனே! இந்தக் காரியம் நன்றாக நிறைவேறுவதற்காகப் புறப்படுவாயாக. வழியில் உனக்கு மங்களம் உண்டாகட்டும். நான் தேரில் ஏறி, உன்னைப் பின்தொடர்ந்து தண்டகாவனம் வருகிறேன். போர் ஏதும் நிகழ்த்தாமல், இராமனை ஏமாற்றிவிட்டு, சீதையைத் தூக்கிக் கொண்டு, எண்ணிய காரியம் நிறைவேறியவனாக, உன்னுடன்கூட இலங்கைக்குத் திரும்பிச் செல்வேன். (22–25)

மாரீசனே! நீ இந்த உதவியைச் செய்யாவிட்டால், உன்னை இப்போதே கொன்று விடுவேன்! என் நிர்பந்தத்தினால்தான் என்றாலும், என்னுடைய இந்தக் காரியத்தை நீ கட்டாயம் செய்தே ஆகவேண்டும். அரசனுடைய விருப்பத்திற்கு மாறாக நடப்பவன், ஒருபோதும் சுகத்தை அடையமாட்டான். அவனை (இராமனை) நெருங்கி, இந்தக் காரியத்தைச் செய்யும்போது, (உன் தவத்தின் பயனாக) ஒருவேளை நீ உயிர் தப்பினாலும் தப்பலாம். ஆனால், என் விருப்பத்திற்கு

எதிராக நடந்தால், இப்பொழுதே உனக்குச் சாவு நிச்சயம்! எனவே, இதுபற்றி ஆழமாகச் சிந்தித்து, உனக்கு எது நல்லது? என்று முடிவு செய்து, அவ்வாறே செய்.'' (26,27)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
நாற்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்தொன்று

மீண்டும் மாரீசனின் உபதேசம்

அரசருக்கு உரிய தோரணையில் இராவணன், தனக்குத் தீங்கை விளைவிக்கக்கூடிய கட்டளையை இட்டதும், (இராவணன், தன் அறிவுரையை ஏற்றுக் கொண்டு திருந்தக்கூடும் என்ற நம்பிக்கை அறவே ஒழிந்தவனாக,) சந்தேகத்திற்கு இடமின்றி (அவன் கருத்தைத் தெரிந்து கொண்டு), ராட்சஸ மன்னனைக் கோபத்துடன் பார்த்து, பின்வருமாறு (மாரீசன்) கூறினான்— (1)

''அரக்கத் தலைவரே! இப்படியான (சீதையைக் கவர்வது என்றதான) ஒரு பாவ காரியத்தைச் செய்து, மக்கள்–ஆட்சி–அமைச்சர்களோடுகூட உங்களுக்கும் நாசம் ஏற்படக்கூடிய உபாயத்தைச் சொன்னவன், யார்? வேந்தரே! தாங்கள் சுகமாக இருந்து கொண்டிருப்பதை விரும்பாத அந்தக் கயவன் யார்? யமலோகத்தின் வாயிற்படிக்கு உங்களைக் கொண்டு சேர்க்கும் இந்த வழியைக் கூறியவன் யார்? உங்களுடன் விரோதம் கொண்ட, பலம் குன்றிய அரக்கர்கள், மிகவும் பலசாலியான ஒருவனால் நீங்கள் எதிர்க்கப்பட்டு அழிந்து போவதைக் காண விரும்புகிறார்கள் (என்று தோன்றுகிறது). (2–4)

உங்கள் நலனை விரும்பாத எந்த அற்பன், இந்த அறிவுரையைக் கூறினான்? அரக்கரே! தன்னுடைய சூழ்ச்சியால் (தவறான அறிவுரையால்) நீங்கள் அழிந்து போவதை அவன் விரும்புகிறானோ? (நீங்கள் செய்யும் பாவகாரியத்தாலேயே நீங்கள் அழிந்து போவதை – உங்கள் சாவுக்கு நீங்களே காரணமாவதை – அவன் விரும்புகிறான்.) இராவணா! தவறான வழியில் செல்லத் துணிந்துவிட்ட உங்களை, எப்பாடுபட்டாகிலும் தடுக்காமலிருக்கும் அந்த அமைச்சர்கள் கொல்லத்தக்கவர்கள். (ஆனால், நீங்கள்) அவர்களைக் கொல்லாமல் விட்டு வைத்திருக்கிறீர்கள். தன் மனம் போனபடி நடக்கின்றவனும் தீங்கு விளைவிக்கும் வழியில் செல்பவனுமான அரசனை, நல்லெண்ணமுடைய அமைச்சர்கள் எவ்வாறேனும் தடுத்து நிறுத்தவேண்டும். கட்டுப்படுத்தப்பட வேண்டிய உங்களை அவர்கள் தடுத்து நிறுத்தாமலிருக்கிறார்களே? (5–7)

எப்போதும் வெற்றிபெறும் ராட்சஸ மன்னரே! அமைச்சர்கள், அரசனுடைய தயவினால்தான் அறம்–பொருள்–இன்பம்–புகழ் ஆகியவற்றைப் பெறுகிறார்கள். இராவணா! இதற்குமாறாக நடக்குமானால் (மன்னனுடைய கிருபை இல்லாமற்போனால்) அவையெல்லாம் பயனற்றுப் போகின்றன. (மேற்சொன்ன மேன்மைகள் கிடைக்காமல் போகின்றன.) மற்ற குடிமக்கள், மன்னனுடைய குணக்குறைவினால் (குற்றத்தால்) துன்பத்தை அடைகிறார்கள். (8,9)

வெற்றித் திலகமே! தருமமும் வெற்றியும் அரசனை வேராகக் கொண்டவை. (வேர் காப்பாற்றப்பட்டால், தருமமும் வெற்றியும் நிலைத்திருக்கும்.) எனவே, எல்லா நிலைமைகளிலும் மன்னர்கள் நன்றாகக் காப்பாற்றப்பட வேண்டியவர்கள். இரவில் திரியும் ராட்சஸரே! கடுமையான தண்டனை கொடுக்கிற, மக்கள் நலனுக்கு எதிராகச் செயல்படுகிற, பொறிகளைக் கட்டுப்பாட்டில் வைத்திராத மன்னனால் நாட்டை ஆளமுடியாது. மேடு–பள்ளமான பாதையில், திறமையில்லாத சாரதிகளால் செலுத்தப்படும் ரதங்கள் போல, துர்போதனை செய்யும்

அமைச்சர்கள், அவனோடு (மன்னனோடுகூட) நாசமடைகிறார்கள். முறையாக தருமத்தை அனுஷ்டிக்கும் சான்றோர்கள் பலர், மற்றவர்கள் செய்த குற்றத்தின் காரணமாக, தம் குடும்பத்தோடு அழிவை அடைந்திருக்கிறார்கள். (10–13)

இராவணா! மக்கள் நலனுக்கு எதிராகச் செயல்படுபவனும் கொடிய இயல்பை உடையவனுமான மன்னனால் பரிபாலிக்கப்படும் குடிமக்கள், ஒரு நரியின் பாதுகாப்பில் விடப்பட்ட ஆடுகள் எப்படி விருத்தியடைவதில்லையோ, அவ்வாறே வளர்ச்சியடைய மாட்டார்கள். இராவணா! அரக்கர்கள் அனைவருக்கும் அரசரான நீங்கள் நெஞ்சில் ஈரமில்லாதவர்; தீய எண்ணங்களைக் கொண்டவர்; புலன்கட்டுப்பாடு இல்லாதவர். அதனால், அவர்கள் (மக்கள்) எல்லோரும் அழிந்து போவது திண்ணம். 'காக்கை உட்கார, பனம்பழம் விழுந்தது' என்ற நியாயப்படி, அகஸ்மாத்தாக, (உன் தீயசெயலுக்கு உடந்தையாக இருப்பது என்ற) இந்த பயங்கரமான கஷ்டம் எனக்கு வந்திருக்கிறது. நீங்கள், உங்கள் சேனைகளோடு சேர்ந்து அழியப் போகிறீர்கள் என்பதை நினைத்தால், இப்போதே வருத்தம் ஏற்படுகிறது. (14–16)

இராமன், என்னைக் கொன்றுவிட்டு, விரைவில் உங்களையும் கொல்லப் போகிறார். எதிரியினால் (யுத்தத்தில்) கொல்லப்பட்ட நான், செய்யவேண்டியவைகளைச் செய்து முடித்துவிட்டவனாக இருக்கிறேன். (நான், எப்படியும் உன் கையினாலேயோ, இராமன் கையினாலேயோ மரணமடைய வேண்டும் என்பது உறுதியாகிவிட்டது. இவற்றில், இராமன் அம்புக்கு இரையாவது, பரலோகத்தில் எனக்கு சுகத்தைத் தரக்கூடியது. ஆகவே, உன் கட்டளையை ஏற்று, மான் உருவம் எடுத்துக் காட்டிற்குச் செல்கிறேன்.) (17)

இராமன் என்னைப் பார்த்தவுடனேயே கொன்றுவிடுவார் என்பதில் ஐயமில்லை. சீதையை அபகரித்து வந்தால், நீங்களும் உற்றார்–உறவினர்களோடு அழிந்து போவீர்கள் என்பதை அறிந்து கொள்ளுங்கள். என்னுடன் சென்று, இராமாசிரமத்திலிருந்து சீதையைத் தூக்கிக் கொண்டு வந்துவிட்டீர்களேயானால், நீங்கள் உயிருடன் இருக்கப் போவதில்லை; நானும் இருக்கமாட்டேன்; இலங்கையும் இருக்கப் போவதில்லை; ராட்சஸர்களும் இருக்கமாட்டார்கள். அரக்கர் தலைவரே! ஆயுள் குன்றி, மரணத்தின் பிடியிலுள்ள மனிதர்கள், நண்பர்களால் சொல்லப்படும் நல்லுபதேசங்களை ஏற்கமாட்டார்கள் என்பதைப் போல, உங்கள் நலனில் கருத்துடைய என்னால் தடுக்கப்பட்டும்கூட, என்னால் கூறப்பட்ட நல்லுரைகளை ஏற்காமல் இருக்கிறீர்கள்.'' (18–20)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
நாற்பத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்து இரண்டு

'பொன்மான்' உருவம் ஏற்பது

பின்னர், மேற்கண்டவாறு இராவணனிடம் சொல்லிவிட்டு, அரக்கர் வேந்தனிடம் இருந்த அச்சத்தால், 'சரி, வா, போவோம்' என்று மனம் நொந்தவனாக மாரீசன் கூறினான். (1)

''அம்பு, வில், கத்தி ஆகியவைகளைத் தரித்தவரும், என்னைக் கொல்வதற்காக ஆயுதங்களை ஆயத்தமாக வைத்திருப்பவருமான அவரால் இன்னொரு முறை நான் பார்க்கப்பட்டேனேயாகில், என் வாழ்க்கை அத்துடன் முடிந்துவிடும். இராமனை எதிர்த்து நின்ற எவனும் உயிருடன் திரும்பியதேயில்லை. யமனுடைய தண்டத்தினால் உயிர் பறிக்கப்பட்டுவிட்ட உங்களுக்கு, இவர் (இராமன்), உருவம் எடுத்துக் கொண்டு நேரில் வந்த யமனாகவே இருக்கிறார். (2,3)

இவ்வாறு தீங்கு விளைவிக்கக்கூடிய ஒரு திட்டத்துடன் வந்திருக்கும் உங்கள் விஷயத்தில் நான் என்ன செய்யமுடியும்? (உங்கள் ஆணையை ஏற்காவிட்டால், உங்கள் வாளுக்குப்

பலியாகிவிடுவேன். எனவே,) ஐயனே! இதோ, நான் புறப்பட்டுவிட்டேன். அரக்கர் மன்னரே! உங்களுக்கு க்ஷேமம் உண்டாகட்டும்.'' (உனக்கு எப்படி க்ஷேமம் உண்டாகும்? பரமாத்மாவான இராமனை அல்லவா எதிர்த்து நிற்கிறாய்? என்றபடி.) இராவணன், அவனுடைய மொழிகளால் மிகவும் களிப்படைந்து, (வாஞ்சையுடன்) மிக இறுக்கமாக அவனைத் தழுவிப் பின்வருமாறு சொன்னான்— (4,5)

''இப்போது நீ பேசிய பேச்சு, எனக்கு உகந்த வீரத்தனத்தைப் பிரதிபலிப்பதாக இருக்கிறது. இப்போதுதான் நீ (நிஜமான) மாரீசன்! இதற்கு முன், யாரோ பெயர் தெரியாத அரக்கனாக இருந்தாய். இரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்டதும் பிசாசுகளைப் போன்ற முகமுடைய கழுதைகள் பூட்டப்பட்டதுமான இந்த ரதத்தில், என்னுடன் உடனே ஏறிக்கொள். (உன்னால் ஆகவேண்டியது ஒரே ஒரு காரியம்தான்.) வைதேகியின் மனத்தில் அடக்க முடியாத ஆசையைக் கிளப்பிவிட்டுவிட்டு, உன் விருப்பப்படி எங்கே வேண்டுமானாலும் போகலாம். ஆசிரமத்தில் (வேறு) யாரும் இல்லாத சமயத்தில், நான் பலாத்காரமாக சீதையைத் தூக்கிக் கொண்டு வந்துவிடுவேன்!'' (6–8)

பின்னர், இராவணனும் மாரீசனும், ஆகாயத்தில் சஞ்சரிக்கும் தேவவிமானம் போன்ற ரதத்தில் விரைந்து ஏறி, அந்த (மாரீச) ஆசிரம வளாகத்திலிருந்து புறப்பட்டுச் சென்றார்கள். முன்னர் (இராவணன் இலங்கையிலிருந்து புறப்பட்டு வந்தபோது) பார்த்ததைப் போலவே, கடலோரப் பட்டினங்களையும் காடு–மலை–நதிகள் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டே, அரக்கர் வேந்தன் இராவணன், மாரீசனோடுகூட தண்டகாரண்யத்தை அடைந்து, அங்கே இராமனுடைய ஆசிரமத்தைக் கண்டான். தங்க வேலைப்பாடுகளால் அழகு செய்யப்பட்ட அந்த ரதத்திலிருந்து இறங்கி, மாரீசனின் கைகளைப் பிடித்துக் கொண்டு, இராவணன் கூறினான்— ''நண்பனே! வாழை மரங்களால் சூழப்பட்ட இராமாசிரமம் இதோ தெரிகிறது. நாம் எதற்காக இங்கே வந்திருக்கிறோமோ, அந்தக் காரியத்தை உடனே ஆரம்பிப்பாயாக.'' (9–13)

அப்போது, மாரீசன், இராவணனது சொற்களைக் கேட்டு, மானாகவே ஆகி, இராமனுடைய ஆசிரமத்தின் முன்புறத்தில் உலாவினான். அது, பார்ப்பதற்கு மிகவும் ஆச்சரியமான உருவத்தை எடுத்துக் கொண்டது – சிறந்த நவரத்தினங்களால் அமையப்பட்ட கொம்பு நுனிகள்; வெளுத்தும் கறுத்துமுள்ள முக வடிவம்; செந்தாமரையும் கருநெய்தலும் போன்ற முகம்; இந்திரநீல மணியையும் கருநெய்தல் மலரின் வண்ணத்தையும் கொண்ட காதுகள்; சற்றே உயரத்தூக்கிய கழுத்து; இந்திரநீலக் கல்லின் ஒளிச்சிதறல் போன்று பளபளக்கும் உதடு; (14–16)

முல்லைப் புஷ்பம், சந்திரன், வைரக்கல் போன்று (மணமும் ஒளியும் பெற்று) பிரகாசிக்கும் வயிறு; இலுப்பைப்பூப் போன்ற இருபக்கங்கள்; தாமரைப் பூவின் நடுவிலுள்ள கேசரம் போன்ற பொன்வண்ணம்; வைடூர்யம் போன்ற கால் குளம்புகள்; சிறுத்த, அளவாக அமைந்த முழங்கால்கள்; வானவில் போன்று சற்றே உயர்ந்து நிற்கும் வால்; மனத்தைக் கவர்வது; பளபளப்பான நிறம்; பல்வகை இரத்தினங்களால் ஆன புள்ளிகள் – இவ்விதம் மிகவும் அழகான மானாக அரக்கன் மாறினான். (17–19)

அந்த அடவியையும் அழகான இராமாசிரமத்தையும் மேலும் பிரகாசிக்கச் செய்து கொண்டு, மனங்கவரும் உருவத்தை ஏற்றுக் கொண்ட அந்த அரக்கன், வைதேகியின் மனத்தில் மிகவும் ஆசையை உண்டுபண்ணுவதற்காக, பலவிதத் தாதுப்பொருள்களால் அழகுபடுத்திக் கொண்டு, எங்கும் முளைத்திருந்த புற்றரைகளின் மேல் திரிந்து கொண்டும், நூற்றுக்கணக்கான வெள்ளிப் புள்ளிகளால் கவின் மிகுந்து, உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் பேரழகை உடையதாகி, மரங்களின் இளந்தளிர்களைக் கடித்துத் தின்றவாறு திரிந்து கொண்டிருந்தது. (20–22)

வாழை மரங்களால் சூழப்பெற்ற ஆசிரமத்தில் இங்குமங்குமாக அலைந்து, கர்ணிகார மரத்தினருகே சீதையின் கண்ணில் படும்படியான இடத்தை அடைந்து நின்றது. தாமரை மலர்

போன்று மனோகரமான பின்பக்கங்களுடன் விளங்கிய அந்தப் பெரிய மான், இராமனுடைய ஆசிரமத்தின் அருகில் இஷ்டப்படிச் சுற்றித் திரிந்தது. பேரழகு படைத்த அந்த மான், சிறிதுதூரம் ஓடிச் சென்று, பின் திரும்பி வந்தது; (மீண்டும்) சிறிதுநேரம் ஓடிச் சென்று வேகமாகத் திரும்பி வந்தது. சிலபொழுது துள்ளி விளையாடியது; சிலபொழுது தரையில் படுத்துக் கொள்கிறது. ஆசிரமத்திற்கு முன் பக்கத்தில் மற்ற மான்களுடன் கூடிச் செல்கிறது. சீதையின் கண்களில் படுவதை விரும்பி, மான் உருவம் ஏற்ற அரக்கன் மற்ற மான்களுடன் சேர்ந்து மீண்டும் திரும்பி வருகிறது; பலவிதமான, அழகிய நடைகளில் நடந்து, அங்கேயே சுற்றிக் கொண்டிருக்கிறது. (23–27)

காட்டிலிருந்த மற்ற எல்லா மான்களும் அதைப் பார்த்து, அருகில் வந்து, முகர்ந்து பார்த்து ('இது நம்முடைய ஜாதி இல்லை போலிருக்கிறதே?' என்று அச்சம் கொண்டு) பத்துத் திசைகளிலும் ஓடி மறைந்தன. அரக்கனான அவன், அந்தக் காட்டு மான்களைக் கொன்று தின்பதில் ஆசையுடையவனாக இருந்தும், தன் சுய இயல்பை வெளிக்காட்டாதிருப்பதற்காக, அவைகளைத் தொட்டுப் பார்த்தானே தவிர, கொன்று தின்னவில்லை. அதே சமயத்தில் அழகான கண்களைப் பெற்ற வைதேகி, மலர்களைப் பறிப்பதற்காக மரங்களின் அருகே வந்தாள். மயக்கும் விழியாளும், கவினுறு முகம் படைத்தவளுமான அவள், கர்ணிகாரம், அசோகம், மா முதலிய மரங்களுனூடே சென்று மலர்களைத் தேடிக் கொண்டு, அந்த இடத்தைச் சுற்றி வந்தாள். (28–31)

வனவாசத்தை ஏற்கத் தகாதவளான அந்த உத்தம நாரீமணி, முத்து–மாணிக்கங்கள் பொதியப் பெற்ற, இரத்தினமயமான அந்த மானைப் பார்த்தாள். அழகான பற்களையும் உதடுகளையும் உடையதும், வெள்ளி–செம்பு போன்ற தாதுக்களின் நிறமுடைய ரோமங்களைக் கொண்டதுமான அந்த மானை, வியப்பினால் மலர்ந்த கண்களுடன், ஆசை பொங்க உற்றுப் பார்த்தாள். அந்த மாயமான், இராமனுடைய பத்தினியைப் பார்த்ததும், அந்த அடவியையே ஜொலிக்கச் செய்யும்வண்ணமாக மீண்டும் பலவித விளையாட்டுக்களில் ஈடுபட்டது. இதற்கு முன் பார்த்திராத, பற்பல இரத்தினங்களாலான அந்த மானைப் பார்த்து, ஜனகரின் புதல்வியான சீதை மிகவும் வியப்படைந்தாள். (32–35)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
நாற்பத்து இரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்து மூன்று

இலக்குவனின் ஐயமும் சமாதானமும்

தூய தங்கம் போன்ற நிறமுடையவளும் அழகான பின்பக்கத்தை உடையவளும் குற்றமற்ற திருமேனியை உடையவளுமான அவள், மலர்களைச் சேகரித்துக் கொண்டிருக்கும்போது, பொன்–வெள்ளி நிறங்களுடைய இரு பக்கங்களால் மிகவும் அழகுடன் விளங்கும் அந்த மானைக் கண்டு மிகவும் களிப்படைந்து, தன் கணவரையும் இலக்குவனையும் ஆயுதம் எடுத்துக் கொண்டு வரும்படி உரத்த குரலில் அழைத்தாள். வைதேகியால் அழைக்கப்பட்ட இராம–லட்சுமணர்கள், அவள் இருந்த இடத்தை நோக்கியபோது, அந்த மானைப் பார்த்தார்கள். மானைப் பார்த்து சந்தேகப்பட்ட லட்சுமணன், இராமனை நோக்கி, 'இந்த மான், மாரீசன் என்னும் அந்த அரக்கன்தான் என்று எண்ணுகிறேன்' என்று சொன்னான். (1–4)

"அண்ணா! மகிழ்ச்சியுடன் காட்டில் வேட்டையாடித் திரிந்து கொண்டிருந்த பல அரசர்கள், விரும்பியவண்ணம் உருவங்களை எடுக்கக்கூடிய இந்தப் பாவியால் வஞ்சித்துக் கொல்லப்பட்டு இருக்கிறார்கள். மாவீரரே! பலவிதமான மாயைகளை அறிந்த அவன், மிக்க ஒளியுடன் விளங்கும்

இந்த மாயாரூபமான மானாக, வானத்தில் காணப்படும் கந்தர்வ நகரம் போல் (உண்மையில் இல்லாதது, நிஜமாக இருப்பது போல்) வந்திருப்பதாக, எனக்குத் தோன்றுகிறது. ஜகதீசுவரரே! ரகுகுல திலகமே! உலகில் இரத்தின வேலைப்பாடுகளால் அலங்கரிக்கப்பட்ட இம்மாதிரியான மான் இல்லவேயில்லை; இது மாயைதான் என்பதில் சந்தேகமில்லை.'' (5–7)

மான்தோலின் கவர்ச்சியினால் மதிமயங்கிய சீதை, மேற்கண்டவாறு சொன்ன லட்சுமணனைச் சினக்குறிப்புடன் புன்னகையால் தடுத்து, ஆசை பொங்க (இராமனை நோக்கி)க் கூறினாள்— ''பிராணநாதரே! இந்த அழகிய மான், என் மனத்தைக் கொள்ளை கொள்கிறது. இதைப் பிடித்துக் கொண்டு வாருங்கள். நாம் விளையாடுவதற்கு ஏற்றதாக இது இருக்கும். நம்முடைய இந்த ஆசிரம வளாகத்தில் காண்பதற்கினிய ஏராளமான மான்களும் வெளுப்பான கவரி ரோமங்களைக் கொண்ட மான்களும், கரிய கவரி மான்களும் கூட்டங்கூட்டமாகத் திரிகின்றன. (8–10)

தோள்வலி மிக்கவரே! தோற்றச் சிறப்பு மிக்கவைகளும் மனங்கவர்பவைகளுமான கரடிகள், புள்ளிமான்கள், குரங்குகள், குதிரை முகங்கொண்ட கின்னரம் என்ற அழகிய விலங்குகளும் திரிகின்றன. பேரருளாளரே! இறுமாப்பு, மென்னடை, பிரகாசமான மேனியுடைய இதற்கு நிகரான எந்த ஒரு மானையும் இதற்கு முன் நான் பார்த்ததேயில்லை! இது மான்களில் தனிச்சிறப்பு வாய்ந்தது. பலவகையான நிறங்களைக் கொண்ட அங்கங்கள்; விரவியிருக்கும் இரத்தினப் புள்ளிகள்; சந்திரன் போல் குளுமையான ஒளி – இவைகளால், இந்த வனம் முழுவதையும் ஒளிபெறச் செய்து கொண்டு விளங்குகிறது. (11–13)

ஆகா, என்ன தோற்றம்! என்ன பிரகாசம்! குரலினிமைதான் என்ன! இந்த மான் அற்புதமாக, அழகாக இருக்கிறபடியால், என் மனத்தைக் கொள்ளை கொண்டுவிட்டது! இந்த மான், தங்கள் கைகளால் உயிருடனேயே பிடிக்கப்படுமானால், அது ஆச்சரியமான காரியம்! தங்களுக்கும் பிரமிப்பை உண்டுபண்ணும். நாம், வனவாசத்தை முடித்துக் கொண்டு நாட்டிற்குத் திரும்பிச் சென்றதும், என் அந்தப்புரத்தில் ஓர் அலங்காரப் பொருளாக இதை வைத்திருப்பேன். பிரபு! அழகிய மான் உருவத்தைப் பெற்ற இது, பரதனுக்கும் தங்களுக்கும் மற்றும் என் மாமியார்களுக்கும் எனக்கும் நிச்சயமாக ஆச்சரியத்தை விளைவிக்கும். [சீதை, மான் (மிருகம்) என்று சொல்லாமல், மிருகரூபம் (மான் உருவம்) என்று கூறியதன் ஆழ்பொருள் உய்த்துணரத்தக்கது.] (14–17)

புலிநிகர் ஆண்மையுடையவரே! உயர்ந்த வகையைச் சேர்ந்த இந்த மானை உயிருடன் பிடித்துக் கொண்டு வரமுடியாமற்போனாலும், (அம்பெய்து கொன்றாவது) கொண்டு வாருங்கள். ஏனென்றால், இதனுடைய தோல் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. இளம்புற்களால் (தர்பாசனம் போல்) செய்யப்பட்ட ஆசன விரிப்பின்மேல், கொலை செய்யப்பட்ட இந்த விலங்கின் சுவர்ணமயமான தோலை விரித்து உங்களுடன்கூட உட்கார ஆசைப்படுகிறேன். இவ்விதம், தன் இச்சையை நிறைவேற்றும்படி கணவரைக் கட்டாயப்படுத்துவது, நற்குலப் பெண்டிர்க்கு உகந்ததல்ல என்ற போதிலும் (நான் ஏன் இவ்வளவு நிர்ப்பந்திக்கிறேன்? என்றால்,) இந்த விலங்கின் உடலழகு – பொன்னிற ரோமவரிசை, இந்திர நீலமணிகள் பதிக்கப்பட்ட கொம்புகள், இளஞ்சூரியனைப் போன்று பிரகாசமான செவ்வொளி, நட்சத்திரங்களைப் போல் ஒளிவீசும் புள்ளிகள் ஆகியன – என்னுள் பேராச்சரியத்தை உண்டாக்கிவிட்டன.'' (18–21)

சீதையின் இந்தச் சொற்களைக் கேட்டவுடன், அற்புத அழகுடைய அந்த மானைப் பார்த்ததும், இராமனுடைய மனத்திலும் ஆச்சரியம் உண்டாயிற்று. அதனுடைய அழகில் மயங்கியவரும், சீதையால் வேண்டிக் கொள்ளப்பட்டவருமான இராமன் மனமகிழ்ச்சியுடன் தம்பி இலக்குவனைப் பார்த்துக் கூறினார்— ''லட்சுமணா! சீதையின் ஆசை, இந்த மானின் மேல் சென்றிருக்கிறது என்பதைக் கவனித்தாயா? பேரழகு படைத்த இத்தகைய மானை, இப்போதெல்லாம் காண்பது அரிது. (பேரழகு படைத்த இந்த மான், என் கண்களில்பட்டபின், இனி இருக்கப் போவதில்லை.) (22–24)

(இந்திரனுடைய பூங்காவாகிய) நந்தனத்திலும், (குபேரனுடைய பூஞ்சோலையான) சைத்ரரதம் என்ற வனத்திலும்கூட, இதற்கொப்பான அழகுடைய மான் நிச்சயமாக இல்லை. லட்சுமணா! இந்த மண்ணுலகில் எங்கே இருக்கப் போகிறது? பொன்வண்ணப் புள்ளிகளால் அலங்கரிக்கப்பட்டுக் குறுக்கும்–நெடுக்குமான ரோம வரிசைகள், மானின் உடலில் அழகாக விளங்குகின்றன. இது கொட்டாவி விடும்போது, நெருப்புச் சுவாலையைப் போன்று ஒளிவீசிக் கொண்டு, வாயிலிருந்து வெளியே வந்து தொங்குகிற, மேகங்களிடையே தோன்றும் மின்னலைப் போன்று விளங்கும் நாக்கைப் பார். (25–27)

இதனுடைய முகம், இந்திரநீல மணியாலான நீர்க்கிண்ணம் (மது அருந்தும் கோப்பை) போல் இருக்கிறது. வயிற்றுப் பகுதி சங்கு மற்றும் முத்துக்களைப்போல் வெளிறியுள்ளது. பேரழகுடைய இந்த மான், யாரைத்தான் ஆசை கொள்ளச் செய்யாது? பொன்னொளி வீசுவதும், நவ வித இரத்தினமயமானதும், மண்ணுலகில் காணக் கிடைக்காததுமான இந்த உருவத்தைக் கண்டு, எவனுடைய மனம்தான் ஆச்சரியத்தில் அமிழ்ந்து போகாமலிருக்கும்? லட்சுமணா! மாமிசத்திற்காகவும் விளையாட்டு வினோதத்திற்காகவும், வில்லேந்திய மன்னர்கள் பெருங்காடுகளில் வேட்டையாடி மான்களைக் கொல்கிறார்கள். (அவ்விதம் வேட்டையாடுவதற்காகச் செல்லும் போது,) பெருங்கானகத்தில் நவமணிகளும் பொன்னும் கலந்த தாதுக்களைச் சேகரித்துக் கொண்டு வருவதன் மூலம் செல்வச் செழிப்பையும் தேடிக் கொள்கிறார்கள். (28–31)

லட்சுமணா! காட்டின் இயற்கை வளங்கள், மக்களின் பொக்கிஷத்தை நிரம்பச் செய்கின்றன. (காட்டில் கிடைக்கும் இந்த மான், நாட்டிற்குக் கொண்டு செல்லப்படுவது மிக்க நன்று.) பொருளாதார நிபுணர் சுக்ரனின் கொள்கைப்படி, மனத்தால் நினைக்கும் பொருள்கள் எல்லாம் (பொக்கிஷம் நிரம்புவதற்குத்) தேவை. லட்சுமணா! பொருளை விரும்பும் எவனொருவன் விரைந்து செயல்பட்டு அதை அடைகிறானோ, (அந்தப் பொருளைத்தான்) அறிவிற்சிறந்த பொருளாதார நிபுணர்கள், அர்த்தம் (தரும–அர்த்த–காம–மோட்சம் என்ற நான்கு புருஷார்த்தங்களில் இரண்டாவதான, முறைப்படி சேகரிக்கப்பட்ட பொருள்) என்கிறார்கள். (32,33)

தனிச்சிறப்புடைய இந்த மானின் பொன்வண்ணத் தோலில், நுண்ணிடையாளான விதேக மன்னன் குமாரி என்னுடன் உட்காருவாள். காதலி, பிரியகம், பிரவேணி என்ற உயர்ந்த வகைகளைச் சேர்ந்த மான்களோ, ஆட்டுத்தோலோகூட, இந்த மானுடைய தோலின் மிருதுத்தன்மையை உடையவை அல்ல என்று நான் கருதுகிறேன். இந்த மானும், விண்ணுலகில் விளங்கும் மானும் (மிருகசிரீஷ நட்சத்திரமும்) தான், மான்வகைகளில் உன்னதமானவை. ஒன்று, இதோ பூமியில் காணப்படும், இது; மற்றொன்று, விண்ணில் காணப்படும் தாரகை. (மிருகசிரீஷம் என்றால் மான்தலை என்று பொருள்.) (34–36)

லட்சுமணா! 'இது அரக்கனுடைய மாயை' என்று சொல்கிறாயா? அப்படியே இருந்தாலும் இதைக் கொல்வது (அரக்கனை அழிப்பது) என் கடமையல்லவா? இதற்கு முன்பு, வெறுக்கத் தக்கவனும் தீயவனுமான இதே மாரீசன் (அரக்க உருவத்தில்) காட்டில் திரிந்து கொண்டிருந்த போது, தவச்செல்வர்கள் பலரைக் கொன்றிருக்கிறான். பெரும் வில்லாளிகளான மன்னர்கள் பலர் காட்டில் வேட்டையாடும்போது, இவன் திடீரென்று வெளிப்பட்டு, அவர்களைக் கொன்றிருக்கிறான். அதனாலும் இந்த மான் கொல்லப்பட வேண்டியதே. (37–39)

முன்னொரு காலத்தில் வாதாபி என்னும் அரக்கன், தவசிகளான வேதியர்களை, ஓர் உபாயத்தால் ஏமாற்றி, வயிற்றுக்குள் புகுந்து அசுவதரியைப் போல் (கழுதைக்கும் பெண் குதிரைக்கும் பிறக்கும் விலங்கு, தான் கருவிலிருக்கும் போதே தாயை அழித்துவிடுவதைப் போல) அவர்களைக் கொன்று வந்தான். (அசுவதரி என்றால் தேள் என்றும் கூறப்படுவதுண்டு.) அவன் இப்படியே நீண்ட காலம் செய்து கொண்டிருந்தான். பேராசை பிடித்த அவன், ஒருசமயம், தவ ஆற்றலோடு விளங்கும் மாமுனிவரான அகஸ்தியரிடம் சென்று, அவருக்கு உணவாக (வயிற்றினுள்) சென்றான். (40,41)

சிராத்தத்திற்கு வரிக்கப்பட்ட வேதியர் போஜனம் செய்து முடித்தபோது, (வயிற்றிலிருந்த அவன்) தன் நிஜ உருவத்தை அடைய (அரக்க உருவத்தில் அவர் வயிற்றைக் கிழித்துக் கொண்டு வெளியே வருவதற்கு) விரும்பியதை உணர்ந்து கொண்ட பகவான் அகஸ்தியர், மெல்லப் புன்னகை செய்து வாதாபியைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார்— ''வாதாபி! சுய வீரச்செருக்குக் கொண்ட, முன்–பின் ஆலோசனை செய்யாத உன்னால், இவ்வுலகில் அந்தணோத்தமர்கள் பலர் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள். (அதன் பயனாக,) இப்போது நீ ஜீரணமாகிவிட்டாய்!'' (42,43)

லட்சுமணா! தருமத்தில் உறுதியாக இருப்பவனும், புலன்களை வென்றவனுமான என்னைப் போன்றவனை மேக்கரித்துச் செல்லும் இவன் (மாரீசன்), வாதாபியைப் போல இனி உயிருடன் இருக்கக்கூடாது. என் கண்களில் பட்டுவிட்ட இவன், அகஸ்தியரால் வாதாபி அழிந்ததைப் போல, என்னால் கொல்லப்படப் போகிறான். நீ, கவசம்–வில் முதலியன தரித்துக் கொண்டு, மிகவும் கவனத்துடன் சீதையைப் பாதுகாத்துக் கொண்டிரு. ரகு குலத்திற்கு ஆனந்தத்தைக் கொடுக்கும் லட்சுமணா! நம்மால் செய்யவேண்டிய தலையாய கடமை, இவளைக் காப்பாற்றுவதுதான். நான், இந்த மானைக் கொல்வேன் அல்லது உயிருடன் பிடித்து வருவேன். சுமித்திரையின் மைந்தனே! நான் வேகமாகச் சென்று மானைக் கொண்டு வரும் காலம் வரையிலும் மான்தோலில் மிகவும் ஆசை வைத்துள்ள வைதேகியைப் பார்த்துக் கொள். (விழிப்புடனிருந்து காப்பாற்று – என்றபடி.) (44–47)

அதிசயமான தோலின் காரணமாகவே, இந்த மான், இனி இருக்கப் போவதில்லை! (எது, அதன் மகிமைக்குக் காரணமோ, அதுவே அதன் அழிவுக்குக் காரணமாகப் போகிறது.) ஆசிரமத்தில் இருக்கும் சீதையுடன், நீ ஜாக்கிரதையாக இரு. லட்சுமணா! ஒரே அம்பினால் இந்தப் புள்ளிமானைக் கொல்வேன்! கொன்று, தோலை எடுத்துக் கொண்டு விரைவில் திரும்பி வருவேன். எல்லாத் திசைகளிலிருந்தும் எந்த நொடியிலும் சீதைக்கு ஆபத்து நேரக்கூடும் என்ற எண்ணத்துடன், சாமர்த்தியசாலியும் அறிவாளியும் பலசாலியுமான ஜடாயு என்னும் பறவையின் துணையோடுகூடக் கவனத்துடன் இருப்பாய்.'' (48–50)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
நாற்பத்து மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்து நான்கு

மாரீசனின் வஞ்சனை

மகாபராக்கிரமசாலியும் ரகு குலத்தின் ஆனந்தத்தை வளர்ப்பவருமான அவர், மேற்கண்டவாறு தம்பிக்குக் கட்டளையிட்டுவிட்டு, (இடுப்பில்) பொன்னாலான கைப்பிடியுள்ள பட்டாக்கத்தியைக் கட்டிக் கொண்டார். மிகவும் புகழ்பெற்ற சூரராகிய இராமன், மூன்றிடங்களில் வளைந்து, தனக்கு ஓர் அணிகலனாக விளங்கும் வில்லை எடுத்துக் கொண்டு, இரண்டு அம்புறாத்தூணிகளை (முதுகில்) கட்டிக்கொண்டு புறப்பட்டுச் சென்றார். மகாவல்லமை பொருந்திய அவர் புறப்பட்டு வருவதைக் கண்டவுடன் மாயமான், அவரை ஏமாற்ற விரும்பி, பயத்துடன், அவர் கண்களுக்குப் புலப்படாதவாறு மறைந்து கொண்டது. பின், அவர் பார்வையில் படுவதற்காகத் திரும்பி வந்தது. கத்தியை இடுப்பில் கட்டிக் கொண்டு மான் இருந்த திசையை நோக்கி, வில்லேந்தியவராக இராமன் ஓடினார். (1–4)

கையில் வில் ஏந்திய அவர், அந்தக் கானகத்தில் பேரொளி வீசும் அழகினால், தனக்கு முன்னே உள்ள பிரதேசத்தைப் பிரகாசப்படுத்திக் கொண்டு, பின்னால் அடிக்கடி திரும்பிப்

பார்த்துக் கொண்டு ஓடும் மானைப் பார்த்தார். பாணம் தன்மேல் படாதபடி (வளைந்து வளைந்து) விலகிச் சென்றது. சில சமயங்களில், (கைக்கு அகப்பட்டுக் கொண்டுவிடும் அளவுக்கு சமீபத்தில் வந்து) ஆசை காட்டிற்று. (எப்படியாவது இவர் என்னைக் கொன்று விடுவாரோ? என்ற) சந்தேகத்துடனும் மனக்கலக்கத்துடனும் மேலே எம்பிக் குதித்தது. சரத் காலத்தில், சிதறுண்ட மேகங்களிடையே மறைந்தும் வெளிப்பட்டும் காட்சி தரும் சந்திரனைப் போல, (அந்த மான்) சில இடங்களில் கண்ணில் தென்படுவதாகவும் (உடனே அடவியில் மறைந்து) கண்ணுக்குப் புலனாகாததாகவும் இருந்தது. ஒரு நிமிட நேரம் கண்ணில் படும்படியாகவும், உடனே ஓடிச் சென்று வெகுதூரத்தில் காணப்படுவதாகவும் இருந்தது. (5–7)

மான் உருவத்தை ஏற்றிருந்த மாரீசன், இப்படியாகக் கண்ணில் பட்டும் படாமலும் ஓடிச்சென்று, அந்த ஆசிரமத்திலிருந்து வெகுதூரத்திற்கு (இராமனை) இழுத்துச் சென்றுவிட்டான். அந்த மானிடம் மயங்கிய அவர், தன்னுணர்வு இழந்தவராகக் கோபம் கொண்டார். பின், களைத்துப்போன அவர் ஒரு மர நிழலில் புற்றரைமேல் நின்றுவிட்டார். மான் உருவம் கொண்ட அந்த அரக்கன், காட்டு மான்களால் சூழப்பட்டவனாக வெகு அருகில் வந்தான். அதைப் பிடிப்பதற்காக நெருங்கி வருவதைக் கண்டதும் மறுபடியும் திரும்பி ஓடிற்று. அச்சமிகுதியால் அந்த விநாடியிலேயே கண்ணில் படாமல் போயிற்று. (8–11)

பின்னர், அது மறுபடியும் தூரத்திலிருந்த மரக்கூட்டங்களின் வழியே வெளிப்பட்டதைக் கண்ட இராமன், அதைக் கொல்வதென்று தீர்மானித்தார். அப்போது மிகவும் சினங்கொண்டவரும் எதிரிகளை மாய்ப்பவருமான இராமன், சூரியனுடைய கதிர்கள் போன்று பேரொளி வீசுவதும், நெருப்பைக் கக்குவதும், பெருமூச்சுவிடும் பாம்பைப் போன்றதும், பிரும்மாவினால் உண்டாக்கப்பட்டதுமான ஒரு பாணத்தை எடுத்து, மிக்க வலிமை வாய்ந்த வில்லில் நாணேற்றி, பலமாக இழுத்து, அந்த மானைக் குறி வைத்து எய்தார். (12–14)

இடியைப் போன்று பேராற்றலுடைய மகிமை பொருந்திய அந்தப் பாணம், மானுருவம் கொண்டிருந்த மாரீசனுடைய உடலைக் கிழித்து இதயத்தையும் சிதறடித்தது. பாணத்தால் தாக்கப்பட்ட அவன், பயங்கரமான ஒலியெழுப்பிக் கொண்டு, பனைமர உயரத்திற்கு மேலே தாவிக் குற்றுயிருடன் தரையில் விழுந்தான். இறந்து கொண்டிருந்த மாரீசன், அந்தப் பொய்யான உடலைத் துறந்தான். அவ்வரக்கன், இராவணன் சொன்ன சொற்களை நினைவிற்குக் கொண்டு வந்து, 'எந்த மோசடியினால், சீதை, லட்சுமணனை இந்த இடத்திற்கு அனுப்புவாள்? வேறொருவரும் உதவிக்கு இல்லாத சமயத்தில் இராவணன் அவளை அபகரித்துச் செல்வான்?' என்று சிந்தித்தான். இராவணன் கூறிய தந்திரத்தைக் கையாளுவதற்கு 'இதுவே ஏற்ற சமயம்' என்று உணர்ந்து, இராமனுடையதைப் போன்ற குரலில், 'ஹா, சீதே! ஹா, லட்சுமணா!' என்று இரைந்து கூவினான். (15–18)

ஒப்புவமையில்லாத அம்பினால் அவனுடைய உயிர்நிலை பிளக்கப்பட்டதும், அந்த மான் உருவத்தைத் துறந்து, அரக்க உருவத்தை அடைந்து, உயிரை விடும் சமயத்தில் மாரீசன், தன்னை மிகப்பெரிய உடலுடையவன் போல ஆக்கிக் கொண்டான். பாணத்தால் தாக்கப்பட்ட அவன், அழகிய தோள்வளை உடைய, எல்லா அணிகலன்களாலும் அலங்கரிக்கப்பட்ட, பொன்மாலை தரித்த, பெரிய கோரைப்பற்களைக் கொண்ட அரக்கனானான். பார்க்கப் பயங்கரமான தோற்றமுடையவனும், இரத்தம் பெருகும் உடலையுடையவனும், தரையில் புரண்டு கொண்டிருப்பவனுமான அந்த அரக்கன், உயிர் நீங்கித் தரையில் விழுந்ததைப் பார்த்ததும், லட்சுமணனுடைய சொற்களை நினைத்துக் கொண்டு, மனத்திற்குள் சீதையைப் பற்றிக் கவலைப்படத் தொடங்கினார், இராமன். (19–21)

"லட்சுமணன் முன்னரே சொன்னபடி, இது மாரீசனுடைய மாயவேலைதான். அவன் சொன்னபடியேதான் இப்போது நடந்திருக்கிறது. என்னால் கொல்லப்பட்ட இவன், மாரீசன்தான்.

'ஹா சீதே! ஹா லட்சுமணா!' என்று பெருங்குரலில் கதறிவிட்டு, அரக்கன் மாண்டு போனான். இவன் அலறலைக் கேட்ட சீதையின் நிலை என்னவாகுமோ? தோள் வலிமையுடைய லட்சுமணன் என்ன நிலையை அடைவானோ?'' என்று எண்ணிய தருமாத்மாவான இராமன் மயிர்க்கூச்செறிந்தார். மான்வேடம் பூண்டிருந்த அரக்கனைக் கொன்று, அவனுடைய கூச்சலைக் கேட்டதால், கவலையடைந்த அவர் மனத்தில் பேரச்சம் குடிகொண்டது. இராமன், உண்பதற்குத் தகுந்த பழம்–கிழங்குகளை எடுத்துக் கொண்டு பரபரப்புடன், அப்போதே ஜனஸ்தானத்தின் அருகேயிருந்த, தன் ஆசிரமத்தை நோக்கி நடந்தார். (22–26)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
நாற்பத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்தைந்து

சீதையின் கடுஞ்சொல்

காட்டில், அந்தப் பரிதாபமான குரல் தன் கணவருடையதே – என்று எண்ணிய சீதை, இலக்குவனைப் பார்த்து, ''போய், இராமனைப் பற்றித் தெரிந்து கொண்டு வாரும்'' என்றாள். மிகவும் துன்பச்சூழலில் இருக்கும் அவருடைய அலறலை, நான் செவிகளால் கேட்டேன். (அந்த விநாடியிலிருந்து) என் மனமும் உயிரும் அதனதன் இடத்தில் நிற்கவில்லை. வனத்தில் சிங்கங்களிடம் சிக்கிய பசு–காளையைப் போல், அரக்கர்களிடம் சிக்கி உதவியைக் கோரிக் கூக்குரலெழுப்பும் சகோதரரை, உடனே சென்று காப்பாற்றுவீர். இவ்வாறு, இலக்குவன் கேட்டுக்கொள்ளப்பட்டவனாக இருந்தும், தமையனாரின் கட்டளையை மதித்து (அங்கிருந்து) நகராமலிருந்தான். (1–4)

அப்போது மிகவும் கோபம் கொண்ட சீதை, ''லட்சுமணா! சகோதரரிடம் நட்புடன் பழகும் பகைவனாக நீர் இருக்கிறீர். அதனால்தான், உயிருக்குப் போராடும் சகோதரரிடம் நீர் போகாமலிருக்கிறீர். என்னை அடைவதற்காக, இராமன் அழிந்துபோவதை நீர் விரும்புகிறீர். என்னிடம் கொண்டுள்ள ஆசையால்தான், இராமனைத் தேடிக் கொண்டு செல்லவில்லை. அவருக்கு ஏற்பட்டுள்ள இந்தக் கஷ்டம், உமக்குப் பிரியமாக இருக்கிறது. சகோதரரிடம் பாசம் என்பதே இல்லை. அதனால்தான் மகாவீரரான அவரைத் தேடிக்கொண்டு செல்லாமல், மனச்சாந்தியுடன் இங்கேயே நின்று கொண்டிருக்கிறீர். அவரைக் காப்பாற்றுவதுதான் உமது முக்கியமான பணி. அதற்காகத்தான் நீர் வந்திருக்கிறீர். அவருக்கு ஆபத்து வந்திருக்கும்போது, இங்கே இருக்கும் என்னைப் பாதுகாப்பதற்காக நின்று கொண்டிருப்பதால் என்ன பயன்?'' என்று அவனிடம் கேட்டாள். (5–8)

ஒரு பெண்மானைப் போல, உள்ளம் பரிதவித்து சோகக் கண்ணீர் பெருக்கிக் கொண்டு, மேலே சொன்னவண்ணம் பேசிய சீதையைப் பார்த்து, லட்சுமணன் கூறினான்— ''வைதேகி பிராட்டியாரே! தங்கள் கணவர், நாக–அசுர–கந்தர்வ–தேவ–மானுட–அரக்கர் ஆகிய எவராலும் வெற்றி கொள்ள முடியாதவர் என்பதில் சந்தேகமில்லை. பண்புடைய தேவி! தேவர்கள், மனுஷ்யர்கள், கந்தர்வர்கள், பட்சிகள், அரக்கர்கள், பைசாசங்கள், கின்னரர்கள், விலங்குகள், பயங்கரமான தானவர்கள் ஆகிய இவர்களில் எவரும், இந்திரனுக்கு நிகரான இராமனைப் போரில் எதிர்த்து நிற்கக் கூடியவர் அல்லர். ஆகவே, போரில் கொல்லப்பட முடியாதவரான இராமனைக் குறித்துத் தாங்கள் இவ்வாறு பேசலாகாது. (9–12)

இராமன் இல்லாத இந்த நேரத்தில், தங்களை, இந்தக் காட்டில் தனியாக விட்டுச் செல்ல உடன்பட மாட்டேன். பெரும் சேனைகளுடன் சேர்ந்து மாவீரர்களாலும், தேவதைகள் மற்றும் இந்திரன் போன்ற தேவர்களுடன் சேர்ந்து பெருமுயற்சியுடன் திரண்டு வரும் மூவுலக

மக்களாலும், அவருடைய பேராற்றல் அடக்க முடியாதது. ஆகவே, இந்த மனக்கவலையை விட்டுவிடுங்கள்; தங்கள் மனம் அமைதி கொள்ளட்டும். தங்கள் கணவர், பார்வைக்கு அழகான அந்த மானைக் கொன்றுவிட்டு விரைவில் திரும்பி வருவார். (தாங்கள் கேட்ட குரல்) அவருடையதல்ல; யாரோ ஒருவனால் மாயையால் எழுப்பப்பட்டது என்பது தெளிவு. (13–15)

கந்தர்வ நகரம் போல் (கானல்நீர் என்பதற்கு ஒப்பாக) இல்லாத ஒரு பொருளை, இருப்பது போல் காட்டும் இந்த மாயவித்தை, அந்த அரக்கனுடையதுதான். வைதேகி அன்னையே! மகாத்மாவான அவர், திருப்பி ஒப்படைக்க வேண்டிய ஒரு பொருளாகத் தங்களை என்னிடம் ஒப்படைத்திருக்கிறார். மகளிர் திலகமே! நான், தங்களை இவ்விடத்தில் தன்னந்தனியாக விட்டுச் செல்ல விரும்பவில்லை. உத்தமியே! கரனுடைய அழிவினாலும் ஜனஸ்தானத்திலிருந்த மற்ற அரக்கர்களைக் கொன்றதாலும், அரக்கர் குலம் நம்மிடம் பகைமை கொண்டுள்ளது. விதேகன் புதல்வியாரே! இந்தப் பெருங்கானகத்தில், விளையாட்டுத்தனமாக பலவகையான குரல்களை அரக்கர்கள் எழுப்புகிறார்கள். ஆகவே, தாங்கள் இது பற்றிக் கவலை கொள்ளத் தேவையில்லை.'' (16–18)

இலக்குவன் இவ்வாறு கூறியதும், சீதை, கோபத்தால் செக்கச் சிவந்த கண்களுடன், சத்தியசந்தனான அவனைப் பார்த்துக் கடுமையான வார்த்தைகளைச் சொல்ல ஆரம்பித்தாள்— ''பண்பில்லாதவனே! இரக்கம் இல்லாதவனே! கொடுங்கோலனே! குலப்பெருமையைத் தொலைக்க வந்தவனே! இராமனுக்குப் பெரும் ஆபத்து ஏற்பட்டால், அதுதான் உனக்குப் பிரியமானது என்று எண்ணுகிறேன். இராமனுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியைப் பார்த்து, அதன் காரணமாக இவ்வாறெல்லாம் பேசுகிறாய். லட்சுமணா! எப்போதும் ஒளிவு–மறைவாக நடக்கின்ற, இரக்கமில்லாத, உன் போன்ற சத்ருக்களிடம் தவறான எண்ணம் தோன்றுவதில் ஆச்சரியமில்லை. (19–21)

நீ மகாதுஷ்டன்; இராமன் தனியாக (என்னுடன்) காட்டிற்கு வருவதைத் தெரிந்து கொண்டு, என்னை அடையும் தீய எண்ணத்தை மறைத்து, நீ ஒருவனாக உடன் வந்திருக்கிறாய். அல்லது பரதனால் அனுப்பப்பட்டும் வந்திருக்கலாம். சுமித்திரையின் மைந்தனே! உன்னுடைய எண்ணமோ அல்லது பரதனுடைய சூழ்ச்சியோ நிச்சயம் நிறைவேறப் போவதில்லை. கருநெய்தல் போன்ற வண்ணத் திருமேனியரும், தாமரையன்ன திருக்கண்களையுடையவருமான அவரைக் கணவராக அடைந்துள்ள நான், வேறு யாரோ ஒரு பேர்வழியை எவ்வாறு விரும்புவேன்? லட்சுமணா! உன் எதிரிலேயே என் உயிரைத் துறந்துவிடுவேன் என்பது உறுதி. (22–24)

இந்த மண்ணுலகில், இராமன் இல்லாமல் நான் உயிரோடு இருக்கவே மாட்டேன்.'' மயிர்க்கூச்செறியும்படியான கொடிய சொற்களை, சீதை கூறியதைக் கேட்ட லட்சுமணன், புலன்களை வென்றவனாகி, (தன் உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு) இரு கைகளையும் கூப்பிக் கொண்டு சீதையை நோக்கிக் கூறினான்— ''நான், தங்களை மறுத்துப் பேச விரும்பவில்லை; ஏனென்றால், தாங்கள் என் தெய்வம். மிதிலைச் செல்வமே! உசிதமில்லாத, தீங்கு விளைவிக்கக்கூடிய சொற்களைக் கூறுவது பெண்களின் இயல்பு. பெண்களிடம் இத்தகைய இயல்பு குடிகொண்டிருப்பதை உலகில் காண்கிறோம். (25–27)

அறவழியிலிருந்து நழுவியவர்களாக, சஞ்சல சித்தமுடையவர்களாக, கொடியவர்களாக, குடும்பத்தின் ஒற்றுமையைக் குலைப்பவர்களாகப் பெண்கள் இருக்கிறார்கள். ஜனகர் பெற்ற திருமகளே! வைதேகி அன்னையே! இப்போது என் இரண்டு காதுகளிலும் பழுக்கக் காய்ச்சிய இரும்பை ஊற்றினாற்போன்ற இம்மாதிரியான சொற்களை, என்னால் தாங்கிக் கொண்டிருக்க முடியாது. உண்மையை உள்ளபடியே கூறிய நான், தங்களிடமிருந்து கடுமையான சொற்களைக் கேட்டுவிட்டேன். (இனிமேலும் உங்களிடம் வாதாட விரும்பவில்லை.) இந்தக் காட்டிலுள்ள எல்லாப் பிராணிகளும் (வனதேவதைகளும்) நான் சொல்லப் போவதைச் சாட்சிகளாக இருந்து கேட்பார்களாக. (28,29)

நான், தங்களுக்காக இரக்கப்படுகிறேன். இப்போது தாங்கள் காணாமல் போகப் போகிறீர்கள். அதனால்தான் சாமானிய மகளிரின் இயல்பான துஷ்டத்தனத்தால் தமையனாரின் கட்டளையை நிறைவேற்றுவதில் உறுதியாகவுள்ள என்னை, இப்படிச் சந்தேகிக்கிறீர்கள். உத்தம முகமுடையவரே! நான், இராமன் இருக்குமிடத்திற்குப் போகிறேன். தங்களுக்குத் தெய்வமே துணை. தடங்கண்ணினாய்! அனைத்து வனதேவதைகளும் தங்களைக் காப்பாற்றுவார்களாக! எவையெவை கெட்ட நிமித்தங்களோ, அவையெல்லாம் என் கண்ணெதிரில் உண்டாகின்றன. நான், இராமனுடன் திரும்பி வந்து தங்களைப் பார்ப்பேனோ, என்னவோ?'' (30,31)

இவ்வாறு இலக்குவன் சொல்லி முடித்ததும், கண்களில் நீர்வழிய அழுது கொண்டே ஜனககுமாரி கடுமையான பதிலைச் சொன்னாள்— ''லட்சுமணா! இராமன் இல்லாவிட்டால் நான் கோதாவரியில் குதித்து விடுவேன். அந்தக் கஷ்டமான நிலை ஏற்பட்டால், தூக்கிட்டுக் கொண்டாவது என் உடலைத் துறப்பேன் (உயிர்வாழ மாட்டேன்); கொடிய விஷத்தைக் குடிப்பேன்; நெருப்பில் வீழ்ந்து மாய்ந்து போவேன். இராமனைத் தவிர வேறு ஓர் ஆண்மகனையும் (கையினால்) நான் தொடக்கூட மாட்டேன்!'' துக்கத்தில் மூழ்கிய சீதை, உரத்த குரலில் இவ்வாறு கூறிவிட்டு, துக்கத்தைத் தாங்க மாட்டாமல் அழுது கொண்டு இருகைகளாலும் வயிற்றில் அடித்துக் கொண்டாள். (32–35)

துக்கமே உருவெடுத்தாற்போன்று, கண்ணீர் வடித்துக் கொண்டு நிற்கும் நெடுந்தடங்கண்ணாளாகிய சீதையைக் கண்டு, இலக்குவன் இரக்கத்துடன் தேற்றினான். ஆனால், சீதையோ (இன்னும் இந்த இடத்தை விட்டுப் போகாமல் காலதாமதம் செய்து கொண்டிருக்கிறானே! – என்ற கோபத்தால்) தன் மைத்துனனிடம் ஒரு வார்த்தையும் பேசவில்லை. பின்னர், தைரியமடைந்த லட்சுமணன் இருகைகளையும் கூப்பி, தலைகுனிந்து சீதையை வணங்கிவிட்டு, பல தடவை மைதிலி இருந்த திசையைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே, இராமனை நோக்கிச் சென்றான். (36,37)

**ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
நாற்பத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.**

ஸர்க்கம் : நாற்பத்தாறு

இராவண சந்நியாசிக்கு வரவேற்பு

சீதை, இவ்வளவு கடுமையாகப் பேசியதைக் கேட்டதும் லட்சுமணனுக்குக் கோபம் வந்தது. (இனியும் அங்கே நிற்கத் தகாது என்ற கருத்துடையவனாக,) இராமனைப் பார்ப்பதில் மிகவும் ஆவலுற்று, உடனே அங்கிருந்து புறப்பட்டான். லட்சுமணன் புறப்பட்டுச் சென்றதும், தக்க சமயத்தை அடைந்த இராவணன், உடனே துறவியின் வேஷத்தை ஏற்று, சீதையின் அருகில் வந்தான். அழகான காவித்துணி, சிகை, குடை, பாதுகைகள், இடது தோளில் அழகான திரிதண்டம், கமண்டலம் – இவ்வாறு பரிவிராஜகத் துறவி வேடத்தில் வைதேகியை அணுகினான். (ஓர் இடத்தில் ஆசிரமம் அமைத்துக் கொண்டு தங்கிவிடாமல், வெவ்வேறு இடங்களுக்குப் போய்க்கொண்டிருக்கும் துறவி, பரிவிராஜகர்.) சந்திர–சூரியர்கள் இல்லாத சந்த்யா காலத்தில் காரிருள் சூழ்வதைப் போல மகாபலசாலியான அவன், சகோதரர்கள் இல்லாத அந்த வனப்பகுதியில், அவளை நெருங்கிச் சென்றான். (1–4)

மிகவும் கொடியவனான அவன், புகழ் பெற்றவளும் இராமபத்தினியும் கபடமற்றவளுமான அவளை, சந்திரன் அருகில் இல்லாத ரோகிணியை ஒரு பாவக்கிரகம் (நப்பாசையுடன்)

பார்ப்பதைப் போலப் பார்த்தான். ஜனஸ்தானத்திலிருந்த மரங்கள், மிகவும் கொடிய தீச்செயல்கள் புரியும் அவனைப் பார்த்ததும் (திடுக்கிட்டுப் போனவைகளாக) அசையாமல் குத்திட்டு நின்றன; காற்றுகூட (வேகமாக) வீசவில்லை. வேகமாகப் புரண்டோடும் கோதாவரி நதியும் சிவந்த கண்களுடன் உக்கிரமாகப் பார்க்கும் அவனைக் கண்டதும், அச்சம் கொண்டு (ஓசையின்றி) மெல்ல ஓடத் தொடங்கியது. (5–7)

இராமனைப் பழிவாங்குவதற்குச் சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த பத்துத்தலை இராவணன், அந்த நேரத்தில் துறவி வேடத்தோடு, சீதை, தன்னைப் பார்ப்பதற்காகக் காத்து நின்றான். செய்யக் கூடாததைச் செய்யத் துணிந்துவிட்ட அவன், சாந்த ஸ்வரூபனாக உருவம் ஏற்று, சித்திரை நட்சத்திரத்தைப் பிடிக்கவரும் சனைச்சரக் கிரகம் போல், தன் கணவரை நினைத்து சோக சிந்தனையில் மூழ்கியிருந்த வைதேகியின் எதிரில் போய் நின்றான். புற்களால் மறைக்கப்பட்ட பாழுங்கிணற்றைப் போன்று பாவியான அவன், அழகான உருவம் எடுத்துக் கொண்டு, புகழ் மிக்கவளும் இராமனுடைய பத்தினியுமான அவளை ஆசைபொங்க உற்று நோக்கியவண்ணமே நின்றுகொண்டிருந்தான். (8–10)

ஒளிவீசும் பற்களையும் உதடுகளையும் உடையவளும், முழுநிலவு போன்று தன்னொளி வீசும் முகமுடையவளும், தாமரைத் தடங்கண்ணாளும், மஞ்சள் நிறப் பட்டாடை உடுத்தியிருந்தவளும், சோகத்தால் கண்ணீர் வடித்துத் தவித்துக் கொண்டிருப்பவளும், களை பொருந்தியவளுமான சீதையை, (தான் எதிர்பார்த்தபடியே வேறு யாரும் அருகே இல்லாததால்) மனங்களிப்புற்ற அரக்கன் நெருங்கினான். அவளைக் கண்டதுமே மன்மத பாணங்களால் தாக்குண்ட அரக்க மன்னன், யாருமில்லாத அந்த வேளையில், மறையொலி எழுப்பிக் கொண்டு, அமைதியான குரலில் ஏதோ சொல்ல தலைப்பட்டான். கமலாசனத்தைத் துறந்து வந்திருக்கும் சாட்சாத் மகாலட்சுமியைப் போல், தன் தேககாந்தியால் பிரகாசித்துக் கொண்டிருக்கும் அந்த உத்தம ஸ்திரீயை, இராவணன் மனம் கொண்ட மட்டும் புகழத் தொடங்கினான். (11–14)

''பொன்னிற மேனியளே! மஞ்சள் வண்ணப் பட்டாடை உடுத்திக் கொண்டிருப்பவளே! தாமரை மலர்கள் வரிசையாக மாலைபோல் எழுந்துள்ள தாமரைத் தடாகம் போன்ற நீ, யார்? (மலர்ந்த தாமரைகளின் பொலிவினால் நெஞ்சங்கவரும் தாமரையோடைபோல், என் மனத்தைக் கவர்கிறாய்.) அழகிய திருமுகமுடையவளே! பெண்ணரசியே! மகாவிஷ்ணுவின் சக்திவிசேஷமான ஹ்ரீ, தேககாந்தியின் அதிதேவதையான ஸ்ரீ, புகழின் அதிதேவதையாகிய கீர்த்தி, வணங்கத்தக்கத் தோற்றமுடைய லட்சுமி, அப்சரஸ், செல்வச் செழுமையின் உருத்தோற்றம், இஷ்டம்போல் திரியும் ரதிதேவி – இவர்களில் நீ யார்? (15,16)

உன்னுடைய பற்கள் சமமாகவும் வரிசையாகவும் மனங்கவரும்வண்ணம் வெண்மையாகவும் இருக்கின்றன. கண்களின் ஓரங்களில் செவ்வரி படர்ந்து, விசாலமாக, நிர்மலமாக இருக்கின்றன. இடுப்பின் பின்புறக் கீழ்ப்பகுதிகள் சதைப்பற்றுடன் விசாலமாக இருக்கின்றன. தொடைகள் யானையின் தொடையை நிகர்த்துள்ளன. உன்னுடைய இரண்டு மார்பகங்களும் புஷ்டியாக, உருண்டையாக, ஒன்றோடொன்று இணைந்து, விம்மிப் புடைத்து, பெருத்து, உயர்ந்த காம்புகளுடன் மனத்தைக் கொள்ளை கொள்கின்றவைகளாக, ஒளிவீசும் பனம்பழங்களுக்கு நிகராக, நன்மணிகளாலான மாலைகளால் அலங்கரிக்கப்பட்டு அழகாக விளங்குகின்றன. (17,18)

அழகாகப் புன்சிரிப்பை உடையவளே! அழகிய பற்களை உடையவளே! அழகிய கண்களை உடையவளே! உல்லாசமாக இருக்கும் பெண்மணியே! நதியின் வெள்ளம் அதன் கரைகளைக் கரைப்பதைப் போல, என் உள்ளத்தை அபகரிக்கிறாய். கைப்பிடியில் அடங்கிவிடும் சிற்றிடை; நற்கூந்தல்; ஒன்றோடொன்று இணைந்த ஸ்தனங்கள்! இந்த மண்ணுலகில் இதற்கு முன்னர் இவ்வளவு அழகு வாய்ந்த மானுடப் பெண்ணைப் பார்த்ததே இல்லை; தேவமகள், கந்தர்வப் பெண், யட்ச மங்கை, கின்னர நங்கை ஆகியோரிலும் கண்டதில்லை. (19,20)

மூன்று உலகங்களிலும் முதன்மையான உன்னுடைய அழகு, கவர்ச்சிகரமான இளமை, யௌவனம் – இவை என் மனத்தை மயக்குகின்றன. மனத்தை மோகமடையச் செய்யும் நீ, ஏன் காட்டில் வசிக்கிறாய்? மனத்தைக் கொள்ளை கொள்ளும் அழகு வாய்ந்த நீ, இங்கிருந்து திரும்பிச் சென்றுவிடு. உனக்கு மங்களம் உண்டாகட்டும். பயங்கரமானவர்களும் இஷ்டம் போல் உருவம் எடுக்கக் கூடியவர்களுமான அரக்கர்கள் வாழும் இடம், இது. நீ இங்கே தங்கியிருப்பது ஆபத்தானது. நீ, சுகசாதனங்கள் நிறைந்த உப்பரிகைகளிலும், அழகான நகரங்களிலும், நறுமணம் பரப்பும் பூஞ்சோலைகளிலும் சுற்றிவரத்தக்கவள். (21–23)

பேரழகியே! விலையுயர்ந்த மாலைகளும் அறுசுவை உணவுகளும் சிறப்பான ஆடைகளுமே உனக்கு ஏற்றவை. கருங்கண்ணினாய்! (அதுபோலவே,) உன் கணவனும் (உனக்கு ஏற்றவாறு) உயர்ந்தவனாக இருப்பான் என்று எண்ணுகிறேன். அழகான முகமுடையவளே! ருத்ரர்–மருத்து–வசுக்களுள் நீ யாராக (எந்த தேவகணத்தைச் சேர்ந்தவளாக) இருக்கிறாய்? மகளிர் மாமணியே! நீ, (சாதாரண மானுடப் பெண் அல்லள்.) தேவ மங்கை என்றே நான் கருதுகிறேன். அரக்கர்கள் இங்கே வசிப்பதால், கந்தர்வர்களோ, தேவர்களோ, கின்னரர்களோ இங்கு வருவதேயில்லை. நீ எப்படி இங்கே வந்து சேர்ந்தாய்? இந்தப் பிரதேசத்தில் குரங்குகள், புள்ளித்தோலுடைய புலிகள், மான்கள், கரடிகள், (நாய்க்குலத்தைச் சேர்ந்த) கழுதைப் புலிகள், கழுகுகள் போன்றவை ஏராளமாக இருக்கின்றனவே? அவைகளைக் கண்டு நீ பயப்படவில்லையா? (24–27)

சுந்தரி! இந்தப் பெருங்கானகத்தில், வேகமாக ஓடுகின்ற, மதநீர் பெருக்கிக் கொண்டு அடாத செயல்கள் செய்கின்ற யானைகளின் நடுவே, தன்னந்தனியாக இருப்பதில் உனக்கு அச்சமேற்படவில்லையா? பயங்கரமான அரக்கர்கள் சுற்றித் திரியும் தண்டகாரண்யத்தில் தன்னந்தனியாக வசிக்கும் நீ யார்? யாருடைய மனைவி? எங்கிருந்து, எதற்காக வந்திருக்கிறாய்?'' இவ்வாறு, தீய சிந்தனையுள்ள இராவணனால் புகழ்ந்துரைக்கப்பட்ட வைதேகி, வந்திருக்கும் இராவணனை அந்தண வேஷத்தில் பார்த்து, அதிதிகளைக் கௌரவிக்கும் எல்லா சாதனங்களைக் கொண்டும் உபசரித்தாள். (28–30)

முதலில் ஆசனம் அளித்து, பின்னர், பாத்யம் (கை–கால் கழுவுவதற்காக நீர்) கொடுத்து உபசரித்து, 'போஜனம் சித்தமாக இருக்கிறது' என்று, (மேற்பார்வைக்கு) சான்றோனாகத் தோன்றிய அவனை, உணவு கொள்வதற்கு அழைத்தாள். கமண்டலு கைக்கொண்டு, காவி வஸ்திரம் தரித்து, அந்தண வேஷத்தில் வந்திருக்கும் அவன், தவறான எண்ணத்தோடு வந்திருக்கிறான் என்ற உண்மையை அறிந்துகொள்ள முடியாத அப்பாவி பெண்ணான மைதிலி, ஓர் அந்தணத் துறவிக்கு உரித்தான வரவேற்பை நல்கினாள். ''அந்தணரே! இதோ ஆசனம். தங்கள் சௌகரியப்படி உட்காருங்கள். கால் கழுவுவதற்கான தண்ணீர் இதோ, ஏற்றுக் கொள்ளுங்கள். காட்டில் கிடைக்கும் உயர்வகை பழம்–கிழங்குகள் தங்களுக்காகவே சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. அவசரப்படாமல், அமைதியான மனத்துடன் இப்போது புசியுங்கள்.'' (31–33)

'உணவு சித்தமாக இருக்கிறது' என்று சொல்லி அழைத்த, அரசகுமாரரின் மனைவியான மைதிலியை உற்றுநோக்கி, பலவந்தமாக அவளைக் கடத்திச் செல்வதன் மூலம் தன்னை அழித்துக் கொள்வதில் இராவணன், தன் முழுக் கவனத்தையும் செலுத்தினான். வேட்டையாடுவதற்குச் சென்றிருந்த சுந்தர புருஷனான தன் கணவரை லட்சுமணனோடுகூட, அப்போது சீதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். அந்தப் பெருங்காட்டில் நாற்புறமும் கண்களைச் செலுத்துகையில், பசுமையான மரக்கூட்டங்கள் தென்பட்டனவே தவிர, இராம–லட்சுமணர்கள் காணப்படவேயில்லை. (34,35)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
நாற்பத்தாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்தேழு

இராவணனை நிந்தித்தல்

சீதையைக் கவர்ந்து செல்லும் ஆசையுடன் பரிவிராஜக வேஷத்தில் வந்திருந்த இராவணன் இவ்வாறு கேட்டதும், அவள் தனக்குள் ஆலோசித்தாள். 'இவர், அந்தணர்; விருந்தாளியாக வந்திருப்பவர். இவர் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லாவிட்டால், என்னைச் சபித்து விடுவார்' என்று சிறிதுநேரம் சிந்தித்தபின், பின்வரும் பதிலைச் சொன்னாள், சீதை. (1,2)

''அந்தணோத்தமரே! நான், மிதிலை மன்னர் மகாத்மா ஜனகருடைய புதல்வி; சீதை என்று எனக்குப் பெயர்; ஸ்ரீராமபிரானுடைய அன்பிற்குப் பாத்திரமான இல்லத்தரசி. (விவாகத்திற்குப் பின்) பன்னிரண்டு ஆண்டுகள் இக்ஷ்வாகு வம்சத்து மன்னர்களின் அரண்மனையில், அனைத்து ஆசைகளும் நிறைவேறப் பெற்றவளாக, மனிதர்களால் அனுபவிக்கப்படக்கூடிய போகங்கள் அனைத்தையும் அனுபவித்துக் கொண்டு வாழ்ந்து கொண்டிருந்தேன். பதின்மூன்றாவது வருஷத்தின் துவக்கத்தில், தன்னிகரில்லாப் பேரரசராகிய தசரதர், அமைச்சர்களுடன் ஆலோசனை செய்து, இராமனுக்கு இளவரசுப் பட்டம் சூட்ட நிச்சயித்தார். இராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்விப்பதற்காகப் பொருள்கள் சேகரிக்கப்பட்டு வரும்போது, வணக்கத்திற்குரிய (என் மாமியார்களில் ஒருவரான) கைகேயி என்பவர், தன் கணவரிடம் (முன்பு கொடுக்கப்பட்ட) வரத்தை வேண்டினாள். (3–6)

'கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவது உங்கள் கடமை' என்று கூறி, சத்தியத்தால் அவரைக் கட்டிப்போட்டுவிட்டு, சிறந்த மன்னரும் சத்தியம் தவறாதவருமான தன் கணவரிடம், 'என் கணவர் வெளியேற்றப்படுதல்; பரதனுக்குப் பட்டம் சூட்டுதல்' ஆகிய இரண்டு வரங்களைக் கேட்டார். 'இராமனுக்கு முடிசூட்டப்படுமேயானால், நான் இப்போது முதல் உணவு கொள்ள மாட்டேன்; உறங்க மாட்டேன்; நீர்கூட அருந்தவும் மாட்டேன். இப்படி இருந்தால், அதுவே என் வாழ்க்கையை முடிவுக்குக் கொண்டுவிடும்.' இவ்வாறு பேசிய கைகேயியிடம், 'நீ எல்லாப் பொருள்களையும் (ராஜ்யம் உட்பட) எடுத்துக் கொள்; (மற்றொன்றை மற)' என்று, எல்லோரையும் கௌரவமாக நடத்தும் என் மாமனார் மன்றாடிக் கேட்டுக் கொண்டார். ஆனால், அவர் (கைகேயி) அந்த வேண்டுகோளை ஏற்கவில்லை. (7–9)

அளவுகடந்த ஆற்றலுடைய என் கணவருக்கு அப்போது இருபத்தைந்து வயது. எனக்கு, பதினெட்டு வயது. இராமன் என்ற பெயரால் உலகத்தோர் அனைவராலும் அறியப்பட்டவர் (என் கணவர்); நற்குணங்கள் நிரம்பியவர்; சத்தியம் தவறாதவர்; மாசில்லாத மனம் கொண்ட தூயவர்; விசாலமான கண்களைக் கொண்டவர்; தோள்வலிமை உடையவர்; எல்லா ஜீவன்களுக்கும் நன்மை செய்வதில் மிக்க ஈடுபாடுடையவர். அவருடைய தந்தை, ஆற்றல் மிக்கவரான தசரதர் காமவயப்பட்டு, கைகேயியின் விருப்பத்தை நிறைவேற்றும் பொருட்டு இராமனுக்கு முடிசூட்டவில்லை. அபிஷேகத்திற்காகத் தந்தையிடம் வந்த என் கணவரிடம், மிகவும் உறுதியாக பின்வருமாறு கைகேயி சொன்னார்— 'இராமா! உன் தந்தையின் ஆணையை நான் இப்போது சொல்லக் கேட்பாய். (10–13)

இடையூறுகள் இல்லாதபடி இந்த ராஜ்யம் முழுவதும் பரதனுக்குக் கொடுக்கப்பட வேண்டும். ஒன்பதும் ஐந்துமாகிய (பதிநான்கு) ஆண்டுகள், நீ காட்டில்தான் வசிக்கவேண்டும். அதனால் நீ, தந்தையைப் பொய்யிலிருந்து விடுவிப்பதற்காகக் காட்டிற்குச் செல்வாய், காகுத்தனே.' எதற்கும் அஞ்சாதவரான இராமன், 'அப்படியே ஆகட்டும்' என்று கைகேயிக்குப் பதில் கூறினார். மன உறுதியுடைய என் பர்த்தா, அவருடைய ஆணைப்படியே செய்தார். அந்தணரே! அவர் (என் கணவர்) வள்ளல்; வாங்குபவர் அல்லர்; சத்தியமே பேசுபவர்; பொய் பேசமாட்டார். இது, இராமப்பிரபுவினுடைய ஒப்புயர்வற்ற, உறுதியான கொள்கை. (14–16)

லட்சுமணன் என்ற பெயருள்ள அவருடைய தம்பி (இளைய தாயாரின் புதல்வர்) பராக்கிரமசாலி; ஆண்களில் புலி போன்றவர்; இராமபிரானுக்குத் தொண்டு செய்பவர்; போரில் எதிரிகளை மாய்ப்பவர்; அறவழி நடப்பவர்; உறுதியாக நற்பண்புகளைப் பேணுபவர்; நாட்டை விட்டு வெளியேறும் இராமனை, என்னோடுகூட, கையில் வில்லேந்தியவராகப் பின்தொடர்ந்தார். எப்போதும் தருமத்தை அனுஷ்டிப்பவரும் புலன்களை வென்றவருமான (கோபம், பொறாமை, சோகம் ஆகிய தீய உணர்வுகள் இல்லாத) அவர் (இராமன்) தவக்கோலம் ஏற்று, சடாமுடி தரித்தவராக, என்னுடனும் லட்சுமணனுடனும் தண்டகாரண்யத்திற்கு வந்தார். அந்தணோத்தமரே! கைகேயியின் காரணமாக ஆட்சியிலிருந்து கழற்றிவிடப்பட்ட நாங்கள் மூவரும், இந்தக் கானகத்தில் எங்கள் ஆற்றலின் மீது நம்பிக்கை வைத்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம். (17–20)

தங்களுக்குச் சௌகரியப்பட்டால், சற்றுநேரம் இங்கே தங்கி இளைப்பாறலாம். என்னுடைய கணவர், காட்டில் கிடைக்கும் பண்டங்களை நிறைய எடுத்துக் கொண்டு இப்போது வந்துவிடுவார். (ருரு என்ற மான் வகையையும், உடும்பு போன்றவற்றையும், காட்டுப் பன்றிகளையும் கொன்று, அவைகளின் இறைச்சியைக் கொண்டு வருவார்.) (இந்த அரை சுலோகம் பல பதிப்புகளில் இல்லை.) அவர் வருகிற வரையில், தங்கள் குலம்–கோத்திரம் பற்றித் தெளிவாகக் கூறுங்கள். அந்தணரே! (பிக்ஷை போடுவதற்கு மனிதர்களே இல்லாத) தண்டகாரண்யத்தில், தாங்கள் எதற்காகத் தனியாக சஞ்சரிக்கிறீர்கள்?'' [சந்நியாசிகளின் குலம்–கோத்திரம் பற்றி விசாரிக்கக் கூடாது என்பது விதி. சீதை கேட்டது, துறவுக்கு முன்னால் எந்தக் குலம் (தாய் வழி), எந்த கோத்திரம் (தந்தை வழி) – என்று கொள்ள வேண்டும்.] (21,22)

இவ்வாறு கேட்ட இராமபத்தினியாகிய சீதைக்கு, அரக்கர்கோன் இராவணன், காது செவிடாகும்படியான பெருங்குரலில் பின்வருமாறு பதில் கூறினான்— ''சீதே! எவனைக் கண்டு எல்லா உலகங்களும் தேவ–அசுர–மானுடர்களும் அஞ்சிப் பதறுகிறார்களோ, அந்த அரக்கர் குலத்தின் தனிப்பெரும் தலைவனான இராவணன் என்று பெயர் கொண்டவன், நான்தான்! மாசற்ற மேனியளே! பொன்னிறமுடைய பட்டாடை உடுத்திய உன்னைக் கண்ட விநாடியிலிருந்து, நான் என்னுடைய மனைவிகளிடத்தில் இன்பத்தைக் காணவில்லை. (23–25)

வாழ்க நீ! என்னுடைய பட்டத்தரசியாக ஆகிவிடு. அதன் காரணமாக, என்னால் பல இடங்களிலிருந்தும் அபகரித்துக் கொண்டு வரப்பட்ட ஏராளமான பெண்மணிகளுக்குத் தலைவி ஆவாய். என்னுடைய தலைநகரம், பெருங்கடலின் நடுவே, மலையுச்சியில் அமைக்கப்பட்டுள்ள இலங்கை என்னும் நகரம்; நாற்புறமும் சமுத்திரத்தால் சூழப்பட்டுள்ளது. சீதே! அங்கே இளங்காடுகளில் என்னுடன்கூடத் திரிந்து மகிழ்வாய். அழகியே! உனக்கு இந்தக் காட்டு வாழ்க்கை விரும்பத்தக்கதாக இருக்காதே? சீதே! நீ என் மனைவியாக ஆகிவிட்டால், எல்லா அணிகலன்களாலும் அலங்கரிக்கப்பட்ட ஐயாயிரம் பணிப்பெண்கள், உனக்குப் பணிவிடை செய்வார்கள்.'' (26–29)

இராவணன் இவ்வாறு கூறியதும், அழகு பொருந்திய அங்கங்களைக் கொண்ட சீதை, (முன்னர் பணிவுடன் பேசியதற்கு மாறாகக்) கோபம் கொண்டு, அந்த அரக்கனை அலட்சியப்படுத்திப் பதில் கூறினாள்— ''இராமப்பிரபு, மாமலையைப் போல் அசைக்க முடியாதவர்; மகேந்திரனுக்கு நிகரான மாவீரர்; ஆழ்ந்தக் கடலைப் போல் கலக்க முடியாதவர். அத்தகைய கணவரை நான் மனம்–மொழி–மெய்களால் பாசத்துடன் அனுசரிப்பவள். எல்லா லட்சணங்களும் பொருந்தியவர்; ஆலமரத்தைப் போல் அண்டியவர்களை அன்புடன் ஆதரிப்பவர்; சத்தியம் தவறாதவர்; பெரும்பேறு பெற்றவர். நான், முழு மனத்துடன் இராமனையே பின்பற்றிச் செல்பவள். (30–32)

நீண்ட கைகளை உடையவர்; விசாலமான மார்பு; பேராற்றல் பெற்ற சிங்க நடை; (விரோதிகளுக்கு அச்சத்தைக் கொடுக்கும்) சிங்கம் நிகர் தோற்றம்; தலைசிறந்த ஆண்மகனார். அப்படிப்பட்ட இராமசந்திரமூர்த்தியைத் தளர்ச்சியுறாமல் பின்பற்றுபவள், நான். முழு நிலவைப் போன்று குளிர்ந்த முகம்; எல்லோராலும் விரும்பப்படுபவர்; மன்னரின் செல்வக்குமரன்;

புலன்களை வென்றவர்; மிகவும் புகழுடையவர்; கருணை உள்ளம் கொண்டவர். அப்படிப்பட்ட இராமநாதனை முற்றிலுமாகப் பின்தொடர்ந்து நடப்பவள், நான். (33,34)

பெண் சிங்கம் போன்றவளும், அடையவே முடியாதவளுமான என்னை, குள்ளநரியாகிய நீ அடைய விரும்புகிறாய்! சூரியனுடைய கதிர்களை (பிரபையை) எவ்வாறு எவராலும் தொட முடியாதோ, அவ்வாறே நானும் உன்னால் தொடக்கூட முடியாதவள். ஆயுள் குறைந்து விட்டவனான நீ, எல்லா மரங்களையும் சுவர்ணமயமாகப் பார்க்க ஆரம்பித்து விட்டாய் போலும்! (என்ன சாகசம்!) இராமபிரானுக்கு இஷ்டமான பத்தினியான என்னை, ஐயா, இராவணனே! நீ அடைய விரும்புகிறாயே! மிகவும் வேகமுடையதும், மற்ற விலங்குகளின் பகையாளியும், பசியுடன் இருப்பதுமான சிங்கத்தின் பல்லையும், கொடிய பாம்பின் பல்லையும் பிடுங்க விரும்புகிறாய்! சிறந்த, உறுதியான மந்தர மலையைக் கைகளால் அடிவேரோடு பிடுங்க விரும்புகிறாய்! ஆலகால விஷத்தைப் பருகிவிட்டுச் சௌக்கியமாகச் செல்வதற்கு விரும்புகிறாய்! (35–38)

கண்ணை, ஊசியால் துடைக்கிறாய்; நாக்கால், கூர்மையான கத்தியை நக்குகிறாய். (இவை, தனக்கே ஆபத்தை உண்டுபண்ணும் என்பதை அறிய மாட்டாயா?) ரகு குல திலகமாகிய இராமனுடைய பேரன்பிற்குரிய பத்தினியைக் கைவசப்படுத்த விரும்புகிறாயே! கழுத்தில் பாறையைக் கட்டிக்கொண்டு கடலைக் கடக்க விரும்புகிறாய்! சூரிய–சந்திரர்களாகிய இருவரையும் இருகைகளாலும் பெயர்த்தெடுக்க விரும்புகிறாய்! இராமனுக்குப் பிரியமான மனைவியை பலாத்காரமாக எடுத்துச் செல்ல விரும்புகிறாய்! கொழுந்துவிட்டெரியும் நெருப்பை, துணியில் வைத்து எடுத்துக் கொண்டு வர விரும்புகிறாய்! மகாபதிவிரதையான இராமபத்தினியைத் தூக்கிச் செல்ல விரும்புகிறாய்! இராமனுக்கு மட்டுமே ஏற்றவளான அவருடைய பத்தினியை நீ அடைய விரும்புவது, கூரான முனையுள்ள சூலங்களின் மேல் நடக்க விரும்புவதைப் போல் இருக்கிறது! (39–42)

காட்டில் வசிக்கும் விலங்குகளான சிங்கத்திற்கும் நரிக்குமிடையே எவ்வளவு ஏற்றத்தாழ்வோ, சிறுவாய்க்காலுக்கும் பெருங்கடலுக்குமிடையே எவ்வளவு ஏற்றத்தாழ்வோ, அமுதத்திற்கும் மட்டமான பொருள்களால் தயாரிக்கப்பட்ட புளித்துப்போன காடிக்கும் எவ்வளவு ஏற்றத்தாழ்வோ, அவ்வளவு ஏற்றத்தாழ்வு உனக்கும் இராமபிரானுக்குமிடையே இருக்கிறது. பொன், ஈயம் என்னும் இரண்டு உலோகங்களுக்குமிடையே எவ்வளவு ஏற்றத்தாழ்வோ, சந்தனத்திற்கும் சேற்றுக்குமிடையே எவ்வளவு ஏற்றத்தாழ்வோ, காட்டிலுள்ள யானைக்கும் பூனைக்குமிடையே எவ்வளவு ஏற்றத் தாழ்வோ, அதே ஏற்றத்தாழ்வு தசரத குமாரருக்கும் உனக்குமிடையே இருக்கிறது. (43,44)

கருடனுக்கும் காக்கைக்குமிடையே எவ்வளவு வித்தியாசமோ, மயிலுக்கும் நீர்க்கோழிக்கும் இடையே எவ்வளவு வித்தியாசமோ, காட்டிலிருக்கும் அன்னப்பறவைக்கும் கழுகுக்குமிடையே எவ்வளவு வித்தியாசமோ, அதே வேற்றுமை தசரத குமாரருக்கும் உனக்குமிடையே இருக்கிறது. இந்திரனுக்கு நிகரான பேராற்றல் படைத்த இராமன், கையில் வில்லும் அம்பும் தாங்கி நிற்கும்போது, அரிசிமணி என்று நினைத்து வைரத்தை உண்டுவிட்ட ஈயினால் அதை ஜீரணிக்க முடியாததைப் போல, உன்னால் நான் கவர்ந்து செல்லப்பட்டாலும் மானக்குறைவை அடையமாட்டேன்.'' (45,46)

தவறான எண்ணமில்லாத அவள், அரக்கனாகிய அவனுக்குத் தக்கவாறு நற்போதனை செய்துவிட்டு, பெருங்காற்றால் தாக்கப்பட்ட வாழை போல் உடல் நடுங்கி மனம் கலங்கினாள். உடல் நடுங்கிக் கொண்டிருந்த சீதையைப் பார்த்த, யமனுக்கு நிகரான பராக்கிரமம் கொண்ட இராவணன், அவளுக்கு மேலும் அச்சத்தை வளர்ப்பதற்காக, தன்னுடைய குலம், ஆற்றல், பெயர், செயல்பாடு ஆகியவற்றை விரிவாகச் சொல்லத் தொடங்கினான். (47,48)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
நாற்பத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்தெட்டு

இராவணனின் தற்பெருமையும், சீதையின் ஏச்சும்

சீதாதேவியார் இவ்வளவு கடுமையாகப் பேசியதும், இராவணன் கோபம் தாங்காமல் நெற்றியின் உயரத்திற்குப் புருவங்களை நெறித்து, ஆத்திரத்துடன் பயங்கரமான பதிலைச் சொன்னான்— (1)

“பேரழகியே! உனக்கு நன்மை உண்டாகுக! நான் குபேரனுடைய தம்பி (தகப்பனார் ஒருவரே; தாயார்கள் வெவ்வேறு); பேராற்றல் கொண்ட தசக்ரீவன் என்ற பெயர் கொண்ட இராவணன். எவனைக் கண்டு தேவர்கள்–கந்தர்வர்கள்–பிசாசர்கள்–வல்லமை படைத்த பறவைகள்–நாகர்கள் முதலானோரும், காலனை எண்ணினாலே பயத்தால் குன்றிப்போகும் மக்களைப் போல் அச்சத்தால் நடுங்குகிறார்களோ, எவனால் ஏதோவொரு காரணத்தால் ஒருவருக்கொருவர் சண்டையில் பெரிய தாயாரின் மகனான குபேரன் யுத்தகளத்தில் கோபத்துடன் போரிடப்பட்டு வெற்றிகொள்ளப்பட்டானோ, எவனிடம் பயந்து கொண்டு, செல்வச் செழிப்புள்ள தன் பட்டணத்தை விட்டுவிட்டு, நரவாகனனான அவன், மலைகளுள் சிறந்ததான கைலாசத்தை அடைந்து வசித்துக் கொண்டிருக்கிறானோ, (2–5)

நற்குணமுடையவளே! மிகப் பிரசித்தி பெற்றதும் விருப்பப்படிச் செல்லக் கூடியதும் அழகானதுமான புஷ்பகம் என்ற விமானம், தன் பராக்கிரமத்தாலேயே எவனால் அடையப்பட்டதோ, அந்த விமானத்திலேறி ஆகாயத்தில் திரிபவன், நானே! மிதிலைச் செல்வி! கோபக்குறிப்புகளுடன் தோன்றும் என் முகத்தைப் பார்த்தமாத்திரத்திலேயே, இந்திரன் முதலான தேவர்களும் பயந்து நடுங்குகிறார்கள். நான் இருக்குமிடத்தில் அச்சங்கொண்ட வாயு மெல்ல மெல்ல வீசுகிறது. வெம்மை கதிர்களையுடைய சூரியன் குளிர்ந்த கிரணங்களையுடைய சந்திரனாகவே ஆகிவிடுகிறான்! நான் எவ்விடத்தில் நிற்கிறேனோ, உலாவுகிறேனோ அவ்விடத்திலுள்ள மரங்களின் இலைகள் அசைவதில்லை; நதிகளின் ஓட்டம் தடைப்பட்டுப் போகிறது! (6–9)

சமுத்திரத்தைக் கடந்து அப்பாலுள்ளது எனது தலைநகரமான அழகான இலங்கை பட்டணம். இந்திரனுடைய (சகல வசதிகளும் பொருந்திய) அமராவதி பட்டணம் போன்றது; பயங்கரமான அரக்கர்களால் நிரம்பியிருப்பது; நகரின் நாற்புறமும் வெண்மையான (வெள்ளியாலான) மதிற்சுவரால் சூழப்பட்டது; பொன்னால் இழைக்கப்பட்ட கட்டிடங்களையும், வைடூர்யம் பதிக்கப்பட்ட நுழைவாயில்களையும் உடைய அழகிய நகரம்; யானைகள்–குதிரைகள்–ரதங்கள் நிறைந்தது; மங்களமான இசையொலி நிரம்பியது; விரும்புகின்ற எல்லாப் பழங்களையும் தருகின்ற மரங்கள் அடர்ந்தது; விளையாட்டு–பொழுதுபோக்குக்கான கவின்மிகு பூந்தோட்டங்கள் விளங்குவது. அரசகுமாரியான சீதே! (இவ்வளவு சுக–சாதனங்கள் நிரம்பிய) அங்கே என்னுடன் வசிக்கத் தொடங்கினால் உல்லாசத்தில் திளைத்து, அதிலேயே மனத்தைச் செலுத்தி, சாமானிய மானுடப் பெண்கள் அனுபவிக்கும் அற்ப சுகத்தை மறந்தே போவாய்! (10–13)

நங்காய்! அவ்விடத்தில் (உனக்குப் பழக்கமான) மானுட போகங்களையும், (கிடைத்தற்கரிய) தேவ போகங்களையும் அனுபவிக்கும் நீ, வாழ்வின் முடிவை நெருங்கியுள்ள மானுட இராமனை நினைக்கவே மாட்டாய்! தசரத மன்னன், தனக்கு இஷ்டமான புதல்வனுக்குப் பட்டம் சூட்டினான். (பட்டத்திற்கு உரியவனான) மூத்த மகன் ஆற்றலில்லாதவன்; அதனால், காட்டிற்குத் துரத்தப்பட்டான். ராஜ்யத்தை இழந்து, (தனக்கு உரிமையுள்ள அதைப் பெற்றே தீரவேண்டும் என்ற) உணர்வின்றி, தவத்தில் ஈடுபட்டு, முனிவனாக இருக்கும் அந்த இராமனால், தடங்கண்ணாய்! உனக்கு என்ன பிரயோசனம்? (14–16)

அரக்கர்கள் அனைவருக்கும் தலைவனும், தானாகவே தேடிக்கொண்டு வந்திருப்பவனும், மன்மத பாணங்களால் தாக்கப்பட்டவனுமான என்னை, நீ வெறுங்கையோடு திருப்பி அனுப்பக் கூடாது. (என் வேண்டுகோளை ஏற்றே ஆகவேண்டும்.) அச்சம் கொண்டவளே! இப்போது நீ

என்னை ஏற்க மறுத்தால், பின்னர் நீதான் வருத்தப்படுவாய் – தன்னை நாடி வந்த புரூரவஸ் என்ற மன்னரைக் காலால் உதைத்து அனுப்பிவிட்டு, பின்னர், அவ்வாறு செய்ததற்காக ஊர்வசி மனம் வருந்தியதைப் போல. பேரழகியே! வெறும் மானுடனான அந்த இராமன், போர்க்களத்தில் என் சுண்டுவிரலுக்குக்கூட இணையாக மாட்டான். உன்னுடைய புண்ணியத்தின் பயனாக (உன்னை நாடி) வந்திருக்கும் என்னை ஏற்றுக் கொள்.'' (17–19)

வேறு எவரும் இல்லாத அந்த இடத்தில், இவ்வாறு சொல்லப்பட்ட வைதேகிக்குக் கோபம் பொங்கியெழுந்து கண்கள் சிவந்தன. அரக்க மன்னனான இராவணனைப் பார்த்து, கடுமையான சொற்களைக் கூறினாள்— ''எல்லாப் பிராணிகளாலும் வணங்கத்தக்க குபேரன், உன் சகோதரன் என்று சொல்லிக் கொண்டு, அடாத செயலைச் செய்ய எவ்வாறு துணிந்தாய்? (அவருடைய தெய்வத் தன்மைக்கு நேர்மாறாக, அசுரத் தன்மையுடன் இருக்கிறாயே!) இராவணா! உன்னைப் போல் முரடனான, மூடனான, புலனடக்கம் இல்லாத ஒருவனை அரசனாக அடைந்துள்ள அரக்கர்கள் எல்லோரும் நிச்சயமாக அழியத்தான் போகிறார்கள். (20–22)

இந்திரனின் பாரியையான சசீதேவியை அபகரித்துச் செல்பவன், ஒருவேளை உயிர் தப்பினாலும் தப்பலாம். ஆனால், ஸ்ரீராமசந்திரனின் பத்தினியான என்னைக் கவர்ந்து செல்பவன் உயிரோடு இருக்கவே மாட்டான். இணையற்ற அழகு வாய்ந்த சசீதேவியை, இந்திரனுடைய கையிலிருந்து பிடுங்கிச் சென்றவன், ஒருக்கால் (அதன் பின்னரும்) நெடுங்காலம் உயிர் வாழ்ந்தாலும் வாழலாம். அரக்கனே! என்னைப் போன்ற ஒருத்தியிடம் தரக்குறைவாகப் பேசும் நீ, மரணமிலாப் பெருவாழ்வு கொடுக்கும் அமிர்தத்தைப் பருகியிருந்தாலும், உனக்கு யமனிடமிருந்து விடுதலை என்பது கிடையவே கிடையாது.'' (23,24)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
நாற்பத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்தொன்பது

சீதை அபகரிக்கப்பட்டாள்!

சீதையின் சொற்களைக் கேட்ட, பராக்கிரமசாலியான தசக்ரீவன் இராவணன், (இறுமாப்பின் அறிகுறியாகக்) கையோடு கையைத் தட்டி, மிகப்பெரிய உருவத்தை எடுத்துக் கொண்டான். பேச்சுக்கலையில் வல்லவனான அவன் மைதிலியைப் பார்த்து மீண்டும் கூறினான்— ''என்னுடைய வீரப்பிரதாபங்களைக் கேட்டும், அதைக் காதில் போட்டுக் கொள்ளாத நீ, மிகவும் கர்வம் கொண்டவள் என்று நினைக்கிறேன். நான் ஆகாயத்தில் நின்றுகொண்டு, இருகைகளாலும் இந்த மண்ணுலகைத் தூக்குவேன்; கடல் தண்ணீர் முழுவதையும் குடிப்பேன்; காலனுடன் சண்டையிட்டு அவனைக் கொல்வேன்; கூரிய அம்புகளை விட்டு சூரியனின் உலா வருதலைத் தடை செய்வேன்; இந்தப் பூமியைக்கூடப் பிளப்பேன். மதம் பிடித்த பெண்ணே! இஷ்டப்படி உருவம் எடுக்கக் கூடியவனும், வேண்டுவனவெல்லாம் கொடுக்கும் சக்தி பெற்றவனுமான என்னை, 'நாயகன்' என்று எண்ணிப் பார்!'' (1–4)

இவ்வாறு மிகவும் கோபத்துடன் பேசிய இராவணனுடைய கபிலவர்ணமான ஓரங்களைக் கொண்ட இரண்டு கண்களும் நெருப்புக் கனலைப் போல் சிவந்து போயின. உடனேயே, இராவணன் அமைதியான துறவி வேடத்தைத் துறந்து, யமன் போன்ற தன்னுடைய சொந்த உருவத்தை எடுத்துக் கொண்டான். செக்கச் சிவந்த கண்கள்; விசித்திரமான சக்திகளை வெளிப்படுத்தும் திறன்; சொக்கத்தங்கத்தாலான அணிகலன்கள்; அளவு கடந்த கோபத்தால், நீருண்ட மேகங்களைப் போல் கன்னங்கரிய உடல்; பத்துத் தலைகள்; இருபது புஜங்கள் – இவ்வித வடிவமுடையவனாக அந்த அரக்கன் ஆனான். (5–7)

அரக்கர்களின் தலைவனும், பேருடல் கொண்டவனுமான இராவணன், கபட சந்நியாசி வேஷத்தைத் துறந்து, தன் இயற்கையான வடிவத்தை அடைந்தான். கோபத்தால் சிவந்த கண்களுடன், நீருண்ட மேகக்கூட்டம் போன்ற கரிய நிறமுடையவனும் செவ்வாடை அணிந்தவனுமான அவன், பெண்ணரசியான மைதிலியைப் பார்த்தவண்ணம் நின்று கொண்டிருந்தான். அடர்த்தியான கருங்கூந்தலை உடையவளும், சிறந்த ஆடை–அணிகலன்களை அணிந்திருந்தவளும், சூரியனின் செங்கதிரைப் போன்றவளுமான சீதையைப் பார்த்து இராவணன் கூறினான்— (8–10)

''மூன்று உலகங்களிலும் பிரசித்தி பெற்ற ஒரு கணவரை விரும்பினாயேயானால், பெண்மணியே! என்னைத் தேர்ந்தெடுப்பாய்! நான்தான் உனக்கு ஏற்ற கணவன். நீண்ட நெடுங்காலம் நன்றாக வாழ்வதற்காக, என்னை ஏற்றுக் கொள்வாய். நான், உன்னுடைய அருமையான கணவனாக இருந்து காட்டுவேன். நங்காய்! உனக்குப் பிரியமில்லாத ஒரு செயலை ஒருபொழுதும் செய்யமாட்டேன். உன் மனிதத்தன்மையை (மானுடனான இராமனிடம் வைத்துள்ள பற்றை) மறந்துவிடு; என்னிடம் அன்பைச் செலுத்து. மகாமேதாவியாக உன்னை நினைத்துக் கொண்டிருக்கும் அறிவு கெட்டவளே! ராஜ்யத்திலிருந்து துரத்தப்பட்டவன்; மனோரதங்கள் நிறைவேறப் பெறாதவன்; ஓர் எல்லைக்கு உட்பட்ட ஆயுளைக் கொண்டவன், இராமன். அவனிடம் எந்தச் சிறப்பைக் கண்டு, இப்படி ஒட்டிக் கொண்டிருக்கிறாய்? ஒரு பெண்ணின் பேச்சுக்குப் பணிந்து, உற்றார்–உறவினர்களையும் அரசாட்சியையும் இழந்து, கொடிய விலங்குகள் வாழும் இந்தக் காட்டில் வசிக்கிறான், அந்த மூடன்!'' (11–14)

பிரியமான சொற்களைக் கேட்கத் தகுந்தவளும், பிரியமான சொற்களையே பேசுகிறவளுமான சீதையைக் காமமயக்கத்திலிருந்த அந்த மகாதுஷ்டன் நெருங்கி, வானத்தில் ரோகிணியைக் கைப்பற்றும் புதனைப் போல பற்றி இழுத்தான். (புதன், ஒருபோதும் தன் தாயாராகிய ரோகிணியை பலாத்காரம் செய்ததாக வரலாறு இல்லை. ஒருக்கால், அவன் அப்படிச் செய்தால் எவ்வளவு மகத்தான பாவத்தை அடைவானோ, அவ்வளவு மகாபாவத்தை இராவணன் அடைவான் – என்று உணரத்தக்கது.) தாமரைக் கண்ணாளாகிய சீதையை, அவன் தன் இடது கையால் கூந்தலையும் வலது கையால் இரு தொடைகளையும் பிடித்துத் தூக்கினான். காலனைப் போன்றவனும், கூரான கோரைப் பற்களை உடையவனும், பருமனான கைகளைக் கொண்டவனும், மலைமுகடு போன்று நிமிர்ந்து நிற்பவனுமான அவனைக் கண்டு, அஞ்சி நடுங்கிய வனதேவதைகள் விழுந்தடித்துக் கொண்டு ஓடினார்கள். (15–18)

இதனிடையில், கழுதைகள் பூட்டப்பட்டதும் கழுதை போல் ஒலியுடையதும் இராவணனுடைய மாயாசக்தியால் உண்டாக்கப்பட்டதும் பொன்மயமானதும் ஆகாயத்தில் செல்லக் கூடியதுமான பெரும் தேர் ஒன்று திடீரென்று அங்கே காணப்பட்டது. அவன், அவளைக் கடுமையான வார்த்தைகளால் உரத்த குரலில் பயமுறுத்திக் கொண்டு, அவள் தொடையைப் பிடித்து ரதத்தில் ஏற்றினான். கீர்த்தி பெற்ற அவள், இராவணனால் அபகரிக்கப்பட்டவுடன், வருத்தத்தால் துன்பமடைந்து, காட்டில் வெகுதூரம் சென்றிருக்கும் இராமனை அழைப்பதற்காக, 'ஹே இராமா!' என்று கதறி அழுதாள். அடிபட்ட பெண் சர்ப்பத்தைப் போன்று துடிப்பவளும், அவனைக் கொஞ்சமும் விரும்பாதவளும், (வேதனையால்) துடிதுடித்துக் கொண்டிருப்பவளுமான அவளைக் கவர்ந்து, காமவெறி கொண்ட இராவணன் ஆகாயத்தில் உயரே பறந்து சென்றான். (19–22)

அரக்க மன்னனால் அபகரிக்கப்பட்டு ஆகாய வீதியில் சென்று கொண்டிருந்த அவள், துயரம் தாங்காமல் பித்துப் பிடித்தவள் போலவும் அறிவு கலங்கியவள் போலவும் மிகவும் கதறியழுதாள். ''ஹா லட்சுமணா! மகாவீரனே! அண்ணன் முதலான பெரியோர்களின் மனத்தை மகிழ்விப்பவரே! பழிக்குப் பழி தீர்த்துக் கொள்ள விரும்பும் அரக்கனால் நான் தூக்கிச் செல்லப்படுவதை நீர் அறியீரோ? ரகுநந்தனரே! தாங்கள் அறத்தைக் காப்பதற்காக, உயிர்மேல் உள்ள ஆசை, சரீர சுகம், அரச போகம் ஆகியவற்றைத் துறந்தீர்கள். அதருமமாகக் கவர்ந்து செல்லப்படும் என்னை மட்டும் ஏன் பார்க்காமலிருக்கிறீர்கள்? (23–25)

பகைவர்களை அழிப்பவரே! தவறான பாதையில் செல்பவர்களுக்குத் தண்டனை கொடுத்து, சரியான பாதையைக் காட்டுவீர்களன்றோ? இவ்வளவு பெரிய பாவத்தைச் செய்கின்ற இராவணனை ஏன் தண்டிக்காமலிருக்கிறீர்கள்? தவறு செய்தவனுக்கு, உடனே தண்டனை கிடைத்துவிடுவதில்லை என்பது கண்கூடு. பயிர்கள் முதிர்ந்து அறுவடைக்கு வருவதற்கு உரிய காலம் தேவைப்படுவதைப் போல, அக்கிரமச் செயலுக்குப் பலன் கிடைக்கும் விஷயத்திலும் காலத்தின் பங்கு தேவைப்படுகிறது. (சீதை, இராவணனைப் பார்த்துக் கூறியது.) காலதேவனால் உன் அறிவு சிதறடிக்கப்பட்டுள்ளது. அதனால்தான் இத்தகைய கொடிய செயலைச் செய்கிறாய். ஸ்ரீராமனிடமிருந்து, உன் வாழ்க்கையை முடிவுக்குக் கொண்டுவரும் பயங்கரமான துயரத்தை அடையப் போகிறாய். (26–28)

(சீதை, தனக்குத் தானே புலம்பிக் கொள்வது.) ஐயோ! இப்போது கைகேயி, தன் மனோரதம் நிறைவேறியதைக் கண்டு உற்றார்–உறவினர்களோடு மகிழ்ச்சி அடைவாள். அறத்தில் பற்றுள்ளவரும் புகழ் படைத்தவருமான (இராமனுடைய) தருமபத்தினியான நான் திருடிச் செல்லப்படுகிறேன்! என்ன கஷ்டம்! ஜனஸ்தானத்தில் இருக்கும், ஏராளமான மலர்களையுடைய கர்ணிகார மரங்களை நான் வேண்டிக் கொள்கிறேன்— 'இராவணன், சீதையைத் திருடிக் கொண்டு போகிறான்' என்று உடனே (இராமனுக்குத்) தெரிவியுங்கள். மலர்களோடு கூடியதும், சிறந்த முகடுகளை உடையதுமான பிரஸ்ரவண மலையை வணங்குகிறேன்— 'இராவணன், சீதையைத் திருடிக் கொண்டு போகிறான்' என்று உடனே தெரிவிப்பாயாக. (29–31)

ஹம்ஸ–காரண்டவப் பறவைகள் நிறைந்த கோதாவரி நதியை வணங்குகிறேன்— 'இராவணன், சீதையைத் திருடிக் கொண்டு போகிறான்' என்று உடனே சொல்வாயாக. இந்தக் காட்டிலுள்ள பல்வகை மரங்களில் குடிகொண்டிருக்கும் தேவதைகளுக்கு, நான் நமஸ்காரம் செய்து, 'நான் திருடிக் கொண்டு போகப்படுகிறேன் என்ற செய்தியை, என் கணவரிடம் சொல்லுங்கள்' என்று கேட்டுக் கொள்கிறேன். இவ்விடத்தில் விலங்கு–பறவை முதலான எந்தப் பிராணிக் கூட்டங்கள் வசிக்கின்றனவோ, அவைகளை நான் தஞ்சம் அடைகிறேன். (32–34)

என் கணவருக்கு, தன் உயிரைக் காட்டிலும் மேலானவள், நான். அவருடைய அன்பிற்குரிய சீதை, வேறு எதுவும் செய்ய முடியாத நிலையில், இராவணனால் கவர்ந்து செல்லப்பட்டாள் என்று அவரிடம் கூறுங்கள். மகாவீரராகிய அவர், நான் மேலுலகத்தில் இருந்தாலும் அது அவருக்குத் தெரிந்துவிட்டால், யமனால் அபகரிக்கப்பட்டவளாக இருந்தாலும், அவனை வென்று என்னைத் திரும்ப அழைத்து வருவார்.'' நெடுந்தடங்கண்ணாளாகிய அவள், மிகவும் துக்கத்துடன் இரக்கத்தை வரவழைக்கும் சொற்களால் புலம்பிக் கொண்டிருக்கும்போது, ஒரு மரத்தில் உட்கார்ந்திருந்த கழுகரசன் ஜடாயுவைப் பார்த்தாள். (35–37)

அதைப் பார்த்துவிட்ட, இராவணனுடைய வசத்தில் இருந்த பேரழகியான அவள், அச்சம் நிரம்பியவளாய், துக்கத்தால் சிதறடிக்கப்பட்ட சொற்களால் புலம்பத் தொடங்கினாள்— ''ஜடாயுவே! உத்தமரே! கொடிய செயல்களைச் செய்யும் இந்த அரக்க மன்னனால், மிகவும் பரிதாபத்திற்குரிய அநாதை போல் திருடிக்கொண்டு போகப்படும் என்னைப் பாருங்கள். தங்களால் இவனைத் தடுக்க முடியாது. ஏனென்றால், இந்த அரக்கன் கொடியவன்; பலம் மிகுந்தவன்; போர்களில் வெற்றி பெற்றதால் செருக்குக் கொண்டவன்; ஆயுதங்களைக் கொண்டிருப்பவன்; தந்திர யுத்தத்தில் புத்தியைச் செலுத்துபவன் (கெடுமதி கொண்டவன்). ஜடாயுவே! (உங்களால் சண்டை போட முடியாவிட்டால், போகட்டும்.) நான் கவர்ந்து செல்லப்படுவதான நிகழ்வை, உள்ளது உள்ளபடியே, முற்றிலுமாக, இராமபிரானிடத்திலும் லட்சுமணனிடத்திலும் சொல்லுங்கள்.'' (38–41)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
நாற்பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பது

ஜடாயு சண்டை போடுதல்

அப்போது நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்த ஜடாயு, சீதையின் பரிதாபமான குரலைக் கேட்டதும் விழித்துக் கொண்டு, சீதாப்பிராட்டியாரை நன்கு பார்த்தார்; இராவணனையும் கண்டார். உடனே மலைச்சிகரம் போன்றவரும் கூர்மையான அலகு உடையவரும் திருத்தொண்டுச்செல்வரும் பறவைகளில் உத்தமருமாகிய அவர் மரத்தில் இருந்தவாறே (இராவணனை நோக்கி) இதமான சொற்களைக் கூறினார்— (1,2)

"தசக்ரீவனே! பழமையான தருமத்தில் ஊன்றி நிற்பவன், நான்; சத்தியத்தையே கடைப்பிடிப்பவன். தம்பி, இகழத்தக்க இந்தக் காரியத்தை என் எதிரில் நீ செய்யத்தகாது. என் பெயர் ஜடாயு; மகாபலம் பொருந்தியவன்; கழுகரசன். தசரத குமாரரான இராமன், எல்லா உலகங்களுக்கும் அரசர்; இந்திர–வருணர்களுக்கு ஒப்பானவர்; மக்களின் நலனிலேயே அக்கறை கொண்டவர். எந்தப் பெண்மணியை நீ அபகரித்துச் செல்ல விரும்புகிறாயோ, அவள் உலக நாயகரான அவருடைய தருமபத்தினி; பெயர் சீதை. இவள் புகழ் மிக்கவள். அறநெறியைக் கடைப்பிடிக்கும் ஓர் அரசன் பிறர் மனைவியை எவ்வாறு விரும்புவான்? (பிறர் மனைவியைத் தொடக்கூடக் கூடாது.) பேராற்றலுடையவனே! குறிப்பாக, பிற அரசனுடைய மனைவிகள் காப்பாற்றத் தக்கவர்கள். (3–6)

பிறர் மனைவியைக் கற்பழிப்பதிலிருந்து உன் மனத்தை விலக்கிக் கொள். புத்திசாலியான ஒருவன் மற்றவர்களால் நிந்திக்கப்படும் தீயசெயலைச் செய்யக்கூடாது. சமபுத்தி உடைய ஒருவன், தன் மனைவியைப் பிறரிடமிருந்து காப்பாற்றுவதைப் போலவே, பிறர் மனைவியையும் (அவளுடைய கற்புக்குப் பங்கம் ஏற்படாதவாறு) காப்பாற்ற வேண்டும். புலஸ்திய குலக் கொழுந்தே! சான்றோர்கள், சாஸ்திரங்களில் காணப்படாத முறைகளில் பெறப்படும் தருமார்த்த காமங்களை விரும்புவதில்லை. (அறநெறியில் சம்பாதிக்கப்படும் தருமார்த்த காமங்களையே போற்றுவார்கள். மற்ற பாமர மக்கள் எப்படி வேண்டுமானாலும் நடந்து கொள்ளட்டும்.) உன்னைப் போன்ற மன்னர்கள் அவ்வாறு (அநீதியான முறையில்) நடந்து கொள்ளக் கூடாது. (7,8)

மன்னன் தருமார்த்த காமங்கள் குடி கொண்டிருக்கும் கருவூலம் ஆவான். அதனால், தருமம், புண்ணியம், பாவம் எல்லாம் அரசனை மையமாகக் கொண்டு நிகழ்கின்றன. அரக்கர் தலைவனே! ஒரு பாவியைத் தேவலோகத்திற்கு அழைத்துச் செல்ல ஒரு தேவ விமானம் வந்திருப்பதைப் போல, பாவ சிந்தனையுடையவனும் நப்பாசையுடையவனுமான நீ, எவ்வாறு செல்வச் செழிப்பு, ஆற்றல், அதிகாரம் ஆகியவைகளை அடைந்தாய்? ஒருவனுடைய இரத்தத்தில் ஊறிய இயல்புகளை எவ்வளவு முயன்றாலும் மாற்றவே முடியாது. துஷ்டர்களுக்குச் செய்யப்படும் உபதேசங்கள், அவர்கள் மனத்தில் நீண்ட காலம் நிலைத்திருப்பதில்லை. (செவியால் கேட்கப்படும் காலம் வரைதான் இருக்கும்.) (9–11)

மகாபலம் பொருந்தியவரும் தருமாத்மாவுமான ஸ்ரீராமன், உன் நடவடிக்கைகளிலோ, அரசாட்சியிலோ குறுக்கீடு செய்யாதிருக்கும்போது, நீ ஏன் அவருக்குப் பெரும் குற்றத்தைச் செய்கிறாய்? சூர்ப்பணகைக்கு ஏற்பட்ட அவமானத்திற்கு வஞ்சம் தீர்த்துக் கொள்வதற்காக ஜனஸ்தானத்திற்குள் அத்துமீறி நுழைந்த கரன், எவ்வளவு கஷ்டமான வேலையானாலும் எளிதாகச் செய்து முடிக்கும் இராமனால் கொல்லப்பட்டான். என்றால், இது எப்படி ஸ்ரீராமனுடைய வரம்புமீறிய செய்கையாகும்? அதைத் தெளிவாகக் கூறு. அந்தக் காரணத்தால்தானே, நீ உலக நாயகரான அவருடைய மனைவியைத் திருடிக்கொண்டு செல்கிறாய்? (12–14)

இராவணா! உடனே சீதையை விட்டுவிடு. இல்லையென்றால், இந்திரனுடைய வஜ்ராயுதத்தால் விருத்திராசுரன் கொல்லப்பட்டதைப் போல, தன்னுடைய கோபக்கனல் தெறிக்கும் பார்வையாலேயே

இராமன் உன்னைப் பொசுக்கிவிடுவார். (சினங்கொண்ட இராமனுடைய பார்வையே போதும், உன்னைச் சுட்டெரிக்க! ஆயுதம் ஏதும் தேவையில்லை.) நீ, உன்னுடைய இடுப்புத் துணியில் கொடிய விஷமுடைய பாம்பைக் கட்டிக் கொண்டிருக்கிறாய்; ஆனால், நீ அதை அறியவில்லை. உன் கழுத்தில் காலபாசத்தைச் சுற்றிக் கொண்டிருக்கிறாய். ஆனால், அதையும் நீ அறியவில்லை. நற்குலத்தோனே! ஒருவன் தன்னை அழுத்தித் தள்ளிவிடாதபடி, தன்னால் சுமக்கக் கூடிய அளவுக்குத்தான் சுமையை ஏற்கவேண்டும். அதுபோலவே, வயிற்றுக்குள் சென்று ஜீரணமாகக் கூடியதும், நோய்களை விளைவிக்காததுமான ஆகாரத்தையே உட்கொள்ள வேண்டும். (15–17)

எந்த ஒரு காரியத்தைச் செய்வதால், உலகில், தருமம்–கீர்த்தி–பெருமை பெருகி வளராதோ, எந்தக் காரியத்தைச் செய்வதால் உடலுக்குக் கேடு நேருமோ, அந்தக் காரியத்தை எந்த மனிதன்தான் செய்யத் துணிவான்? இராவணா! பரம்பரையாக வந்த பட்சிகளின் ஆட்சிப் பொறுப்பை நியாயமான முறையில் நிர்வகித்து வரும் எனக்கு, அறுபதினாயிரம் ஆண்டுகள் ஆகின்றன. நான் வயோதிகன்; நீ இளைஞன்; அம்புடன் கூடிய வில் தரித்தவன்; கவசம் அணிந்திருப்பவன்; ரதத்தில் ஏறி நிற்பவன். (உன்னுடன் போர் செய்வதற்கு வேண்டிய தளவாடம் எதுவும் என்னிடம் இல்லை! என்றாலும்,) நீ, சீதாப்பிராட்டியாரைத் தூக்கிக் கொண்டு, சௌக்கியமாகத் திரும்பிப் போகப் போவதில்லை. நியாயமான, அறிவுபூர்வமான வாதங்களால் பொருள் உறுதி செய்யப்பட்ட வேதவாக்கியத்தை, சமத்கார வாதங்களால் மாற்ற முடியாததைப் போல, நான் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, நீ சீதையை பலவந்தமாகத் தூக்கிக் கொண்டு செல்ல முடியாது. (18–21)

இராவணா! கொஞ்ச நேரம் நில். நீ சூரனாக இருந்தால் என்னுடன் போருக்கு வா! என்னால் வீழ்த்தப்பட்டு, முன்னர் கரன் கிடந்தானே, அதுபோலத் தரையில் விழுந்து மாளாத்துயிலில் ஆழ்ந்து போவாய்! எவர், பலமுறை தேவ–தானவர்களைப் போரில் அழித்தாரோ, அவர், இப்போது மரவுரி தரித்திருக்கும் அதே ஸ்ரீராமன், போரில் உன்னைக் கொல்லப் போகிறார். இப்போதைய நிலையில், என்னால் என்ன செய்ய முடியும்? மன்னரின் புதல்வர்கள் இருவரும் வெகுதூரம் சென்றிருக்கிறார்கள். அற்பனே! அவர்களிடம் உள்ள பயத்தால் (திருட்டுத்தனமாக, சீதையை எடுத்துச் செல்லும்) நீ விரைவில் அழியப்போகிறாய் என்பதில் சந்தேகமில்லை. (22–24)

நான் உயிருடன் இருக்கும்போது, தாமரைக் கண்ணாளும் ஸ்ரீராமனுடைய அன்பிற்குரிய அரசியும் அருளுள்ளம் கொண்டவளுமான சீதையை, நீ எடுத்துச் செல்லவே முடியாது. மகாத்மாவான இராமனுக்கும் தசரதருக்கும் பிரியமான ஒரு காரியத்தை, உயிரைக் கொடுத்தேனும் நான் செய்தே ஆகவேண்டும். இராவணா! பத்துத் தலையனே! போகாதே, நில். (என் இடத்திற்கு வந்திருக்கும் உனக்கு, அதிதி உபசாரம் செய்ய வேண்டுமே!) அரக்கனே! என் உயிருள்ள வரை உனக்கு, போர் உபசாரம் செய்வேன்! நன்றாகப் பழுத்துவிட்ட பழம், காம்பிலிருந்து தானாக உதிர்வதைப் போல, (அவ்வளவு எளிதாக) உத்தமமான தேரிலிருந்து உன்னைக் கீழே தள்ளுவேன்.'' (25–27)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
ஐம்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்தொன்று

ஜடாயு–இராவணன் யுத்தம்

ஜடாயுவின் நியாயமான இந்த வார்த்தைகளைக் கேட்டதும், சினத்தால் பொங்கிய இராவணனுடைய இருபது கண்களும் கொழுந்துவிட்டெரியும் நெருப்பைப் போல் கனல் கக்கின. சொக்கத்தங்கத்தாலான குண்டலங்கள் அணிந்திருந்த அரக்க மன்னன், (ஜடாயுவின் சொற்களைப்)

பொறுக்க முடியாமல், கோபத்தால் கண்கள் சிவக்க, பட்சிராஜனை (ஜடாயுவை) நோக்கிப் பாய்ந்தான். ஆகாயத்தில் பெருங்காற்றினால் அலைப்புண்ட இரு மேகங்கள் மோதிக் கொண்டதைப் போல, அந்தப் பெருங்கானகத்தில் அவ்விருவர்க்குமிடையே கோரமான யுத்தம் நடந்தது. (1–3)

இறகு முளைத்த மால்யவான் என்ற (ஒன்றுக்கொன்று வெகுதூரத்திலிருக்கும்) இரு மலைகளிடையே நடக்கும் போரைப் போல, கழுகுக்கும் அரக்கனுக்குமிடையே யுத்தம் நிகழ்ந்தது. (மால்யவான் என்ற பெயரில் இரண்டு மலைகள் இருந்தன. ஒன்று, தண்டகாரண்யத்தில் இருந்தது; மற்றொன்று, கிஷ்கிந்தையில் அல்லது இமயமலைச் சாரலில் இருந்ததாகக் கூறப்படுகிறது.) அப்போது, பேராற்றல் படைத்த அவன், நாளீகம், நாராசம், மிகக் கூர்மையான நுனிகளையுடைய விகர்ணி ஆகிய மகாபயங்கரமான பாணங்களைக் கழுகரசன் மீது மழை போல் இடைவிடாது செலுத்தினான். பட்சிராஜனான ஜடாயுவென்ற அந்த கழுகு, போரில், இராவணனால் விடப்பட்ட எல்லா பாணங்களையும் அஸ்திரங்களையும் ஏற்றுக் கொண்டது. மிகுந்த பராக்கிரமமுடையவரும், உத்தமப் பறவையுமான அவர், கூரிய நகங்களையுடைய இரு கால்களைக் கொண்டே, அவனுடைய உடலில் அநேக இடங்களைக் காயப்படுத்தினார். (4–7)

உடனே பெருங்கோபமடைந்த இராவணன், யமதண்டம் போன்று பயங்கரமானவைகளான பத்து பாணங்களை, எதிரியை அழிக்க விரும்பிக் கையிலெடுத்தான். எல்லையில்லாத வீரம் படைத்த அவன், பலம் கொண்ட மட்டும் வில்லை இழுத்து விடப்பட்டவைகளும், லட்சியத்தை நோக்கி நேராகச் செல்பவைகளும், கூரிய–கொடிய–விஷம் பூசப்பட்ட நுனியில் முள் உள்ளவைகளுமான பாணங்களால் அந்தக் கழுகை நிலைகுலையச் செய்தான். (8,9)

அவர், அரக்கனின் ரதத்தில் கண்களில் நீர் வழிய நிற்கும் சீதையைக் கண்டார். (அவள் நிலையைக் கண்டு அவருக்குள் உத்வேகம் பொங்கியெழுந்தது.) அந்த பாணங்களைப் பொருட்படுத்தாமல், அரக்கனை நோக்கி விரைந்து சென்றார். மிக்கப் பராக்கிரமம் வாய்ந்த பட்சிராஜன், முத்து–மாணிக்கம் இழைக்கப் பெற்ற அவனுடைய வில்லையும் அம்புகளையும் இரு கால்களால் தாக்கி முறித்துத் தள்ளினார். உடனே, இராவணன் கோபாவேசம் கொண்டு, வேறொரு வில்லை எடுத்து, நூறு–ஆயிரக்கணக்கான அம்புகளை (அவர் மேல்) மழையெனப் பொழிந்தான். போரில் அவனுடைய பாணங்களால் மூடி மறைக்கப்பட்ட அந்த பறவை மன்னர், கூட்டுக்குள் பதுங்கியிருக்கும் பறவை போலானார். (10–13)

அளவில்லாத ஆற்றல் படைத்த அவர், அந்த அம்பு மூடியை உதறித் தள்ளிவிட்டு, அவனுடைய பெரிய வில்லையும் இரு கால்களினாலேயே முறித்தெறிந்தார். அக்னியைப் போல் ஜொலிக்கும் இராவணனுடைய கவசத்தை, தன் இரு இறக்கைகளால் தூள்தூளாக்கினார். பின்னர், மகாபலசாலியான அவர், பொற்கவசங்களைப் பூண்டிருந்த, சிறந்த, பேய்முகம் படைத்த, மிகவும் வேகமாகச் செல்லக்கூடிய அவனுடைய (ரதத்தை இழுக்கும்) கோவேறு கழுதைகளையும் கொன்று வீழ்த்தினார். மிகச்சிறந்த நுகத்தடியை உடையதும், விருப்பத்தின்படிச் செல்லக் கூடியதும், நெருப்புக் கொழுந்து போல் பிரகாசிப்பதும், இரத்தினமும் தங்கமும் இழைக்கப் பெற்ற சக்கரங்களையுடையதுமான அந்தப் பெரிய ரதத்தை முறித்தெறிந்தார். (14–17)

முழுநிலவைப் போன்றிருந்த குடையையும், சாமரங்களையும், அவைகளைக் கையில் பிடித்துக் கொண்டிருந்த அரக்கர்களையும் விரைவாக வீழ்த்தித் தள்ளினார். மகாபலம் கொண்டவரும் வீரலட்சுமியின் அருட்பார்வை பெற்றவருமான அவர் (ஜடாயு), அவனுடைய ரதசாரதியின் பெரிய தலையையும் தன் அலகினாலேயே வேகமாகத் தாக்கித் துண்டித்தெறிந்தார். வில்லிழந்து, தேர் இழந்து, குதிரைகளை (கோவேறு கழுதைகளை) இழந்து, தேரோட்டியையும் இழந்து நின்ற இராவணன், மடியில் வைதேகியை வைத்துக் கொண்டு தரையில் விழுந்தான். இராவணன் வாகனத்தை (ரதத்தை) இழந்து, தரையில் விழுந்து கிடந்ததைப் பார்த்தவுடன், எல்லாப் பிராணிகளும் கழுகரசனை நோக்கி, 'நல்ல காரியம் செய்தாய்!' என்று வாழ்த்துக் கூறின. (18–21)

வயோதிகம் காரணமாக (இத்தனை நேரம் சண்டை செய்ததால்) பட்சிராஜன் களைப்படைந்திருப்பதைக் கண்டு மனம் பூரித்தவனாக, மைதிலியை எடுத்துக் கொண்டு மறுபடியும் மேலே எம்பிச் சென்றான், இராவணன். மிக்க மகிழ்ச்சியுடன் ஜானகியை மடியில் வைத்துக் கொண்டு சென்று கொண்டிருக்கும் இராவணனை மறித்து, பேராற்றல் கொண்ட ஜடாயு, மேலே எழும்பிச் சென்று பின்வருமாறு கூறினார்— (22,23)

"புல்லறிவாளனான இராவணா! வஜ்ராயுதம் போன்ற பாணங்களை உடையவர், ஸ்ரீராமன். அவருடைய தருமபத்தினியான இவளை, எல்லா அரக்கர்களின் அழிவுக்காகவே திருடிக் கொண்டு போகிறாய். நீர்வேட்கை கொண்டவன் (வெகுவேகமாகவும் பரபரப்புடனும்) தண்ணீர் அருந்துவதைப் போல, உன் உற்றார்–உறவினர், அமைச்சர், படைகள் ஆகியோரின் அழிவுக்காக, (ஜானகியைக் கவர்ந்து செல்லுதல் என்பது நீர் குடிப்பதைப் போல சாதாரண விஷயம் என்று நினைத்து) இந்த விஷத்தைக் குடிக்கிறாய்! தங்கள் செய்கைகளின் விளைவுகளை அறியாத மந்தமதியாளர்கள் எவ்வாறு விரைவிலேயே அழிந்து போகிறார்களோ, அவ்வாறே நீயும் அழியப் போகிறாய். தூண்டில் முள்ளில் உள்ள மாமிசத்திற்காக, அதைக் கவ்விப் பிடிக்கும் மீன் (மீன் பிடிப்பவன் கையில் பிடிபட்டு) இறந்து போவதைப் போல, யமபாசத்தினால் கட்டுண்டு கிடக்கும் நீ, (நிச்சயமாகச் சாகப் போகிறாய்!) எங்கே ஒடி ஒளிந்து பாசக்கயிற்றின் பிடியிலிருந்து தப்பிக்கப் போகிறாய்? (24–27)

இராவணா! காகுத்த வம்சத் திலகங்களான இராம–லட்சுமணர்கள், எவராலும் வெல்ல முடியாதவர்கள். அவர்களுடைய இந்த ஆசிரமத்தில் நடந்துள்ள இந்தக் குற்றத்தை ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள். பயம் கொண்ட நீ உலகத்தோரால் நிந்திக்கத்தகுந்த திருடர்களின் அற்ப வழியைப் பின்பற்றியுள்ளாய்; வீரர்களால் கைக்கொள்ளத்தக்க நெறி அல்ல, இது. இராவணா! நீ வீரனாக இருந்தால், சற்றுநேரம் தங்கி, என்னுடன் யுத்தம் செய். (என்ன ஆகும், தெரியுமா?) உன் சகோதரன் கரனுக்கு நேர்ந்த அதே கதிதான், உனக்கும்! என்னால் கொல்லப்பட்டுத் தரையில் விழுந்து கிடக்கப் போகிறாய்! (28–30)

அழிவுக் காலம் நெருங்கி வந்தவுடன், ஒரு மனிதன் (மனம் தடுமாறித்) தன் அழிவின் பொருட்டு, எந்தப் பாவச் செயலைச் செய்வானோ, அதே போல் (சீதையை அபகரித்துச் செல்வது என்ற) ஒரு பாவ காரியத்தை, நீ செய்திருக்கிறாய். எந்தச் செயலின் விளைவாக, தனக்குப் பாவம் ஏற்படுமோ, அந்தச் செயலை எந்த மனிதனும் செய்ய மாட்டான். ஏன், உலகங்களுக்கு அதிபதியும் சுயம்புவுமான பகவான் பிரும்மா கூடச் செய்ய மாட்டார். (சர்வ வல்லமையுடைய அவரே கூடச் செய்யமாட்டார் என்றால், அற்பனான நீ எம்மாத்திரம்?)" இவ்வாறு மகாவீரரான ஜடாயு, அவனுக்கு நன்மையைச் செய்யும் சொற்களைக் கூறிவிட்டு, அரக்கன் இராவணனுடைய முதுகில் வேகமாகப் பாய்ந்து விழுந்தார். (31–33)

மதம் கொண்ட யானையின் மேல் ஆரோகணித்திருக்கும் மாவுத்தன், அங்குசத்தால் அதைத் துளைத்தெடுப்பதைப் போல, இராவணன் முதுகில் உட்கார்ந்திருந்த ஜடாயு நாலாபக்கங்களிலும் அவன் உடலைக் கீறினார். நகம், இறக்கை, மூக்கு – இவைதான் அவருடைய ஆயுதங்கள். அவனுடைய முதுகை நகத்தால் கீறிக் கிழித்தார்; நகங்களால் கேசத்தைப் பிடுங்கி எடுத்தார். கழுகரசரால் இவ்வாறு பலவிதங்களில் துன்புறுத்தப்பட்ட இராவணன் சிலிர்த்தெழுந்தான். கோபத்தால் அவன் உதடுகள் துடித்தன. மிகவும் கஷ்டத்திற்குள்ளான இராவணன், கோபத்தால் பொங்கியெழுந்து, இடது கையால் சீதையை (கீழே விழாமல்) இறுகப் பிடித்துக் கொண்டு ஜடாயுவை (வலது) கையால் வேகமாகத் தாக்கினான். (34–37)

பகைவர்களின் கொட்டத்தை அடக்கவல்ல புள்ளரசர் ஜடாயு, அவனை மேக்கரித்துச் சென்று, அவனுடைய இடது கைகள் பத்தினையும் தன் மூக்கினால் துண்டித்தெறிந்தார். கைகள் வெட்டப்பட்ட அவனுக்கு, விஷப்பிழம்புகளையுடைய சர்ப்பங்கள் புற்றிலிருந்து ஒரே காலத்தில் வெளியே சீறி வருவதைப் போல, (புதிய) கைகள் உடனேயே முளைத்தெழுந்தன.

அப்போது மகாவீரனான இராவணன், சீதாப்பிராட்டியாரை இறக்கிவிட்டு, மிகுந்த கோபத்துடன் இரு கைமுட்டிகளாலும் இரு கால்களாலும் கழுகரசரைத் தாக்கினான். அவ்வமயம், முகூர்த்த காலத்திற்கு அரக்கர்கோனுக்கும் பறவைத் தலைவருக்குமிடையே, பெரும் போர் நிகழ்ந்தது. (முகூர்த்த காலம் – ஒரு குறிப்பிட்ட கால அளவு) அப்போது, இராவணன் வாளை உருவி, அவருடைய இரு பக்கங்களின் இறக்கைகளையும் இரண்டு கால்களையும் வெட்டித் தள்ளினான். (38–42)

கொடுங்கோலனான அரக்கனால், திடீரென்று சிறகுகள் அறுக்கப்பட்ட அந்தக் கழுகு, குற்றுயிரும் குலையுயிருமாகத் தரையில் விழுந்தது. இரத்தத்தைப் பெருகவிட்டுக் கொண்டு தரையில் வீழ்ந்து கிடந்த அந்த ஜடாயுவை, நெருக்கமான ஓர் உறவினரைப் போல் எண்ணிய சீதை, துக்கம் கொண்டு அவரை நோக்கி ஓடினாள். நீருண்ட மேகம் போன்ற நிறமுடையவரும் மிகவும் வெளுத்த மார்பை உடையவரும் மகாபலசாலியுமான ஜடாயு, அடங்கிக் கொண்டிருக்கும் காட்டுத் தீயைப் போல் தரையில் விழுந்து கிடப்பதை, இலங்கை மன்னன் பார்த்தான். இராவணனுடைய கோரமான தாக்குதலால் தரையில் வீழ்த்தப்பட்ட அந்த கழுகை, நிலாக்கதிரை ஒத்த திருமுகமுடையவளும், ஜனகன் செல்வியுமான சீதை இறுகத் தழுவி, (இந்த அவலக் காட்சியைக் காணப் பொறுக்காதவளாக) மறுபடியும் கதறி அழுதாள். (43–46)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
ஐம்பத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்து இரண்டு

சீதை கதறினாள்!

இராமாசிரமத்திற்கு அருகில் சில நொடிகளே உயிர் தரிக்கக்கூடியதாக, தரையில் விழுந்து துடித்துக் கொண்டிருக்கும் அந்தக் கழுகை அரக்க மன்னன் பார்த்தான். இராவணனால் உயிர் பறிக்கப்பட்ட அந்தப் புள்ளின் வேந்தனை, முழுநிலா போன்ற முகமுடைய அவள் நன்றாகப் பார்த்து, மிகவும் வருத்தமடைந்து கதறி அழுதாள். எல்லையில்லா ஆற்றல் படைத்த இராவணனால் கொல்லப்பட்ட அந்தக் கழுகை கட்டிக் கொண்டு, சந்திரன் போன்ற முகம் கொண்ட சீதை மிகவும் துக்கத்துடன் கதறி அழுதாள். (1–3)

''மனிதர்களுடைய சுக–துக்கங்களை முன்கூட்டியே தெரிவிக்கும் வகையில், கனவு மற்றும் பறவைகளின் கூவுதல் முதலிய நிமித்தங்கள் நிச்சயமாகக் காணப்படுகின்றன. இராமா! எனக்குப் பேராபத்து ஏற்பட்டிருக்கிறது என்பது தங்களுக்குத் தெரியாது. (அதைத் தெரிவிப்பதற்காகத்தான்) என் பொருட்டுத்தான் விலங்குகளும் பறவைகளும் தங்களை நோக்கி ஓடிக் கொண்டிருக்கின்றன. இராமா! என் மேல் இரக்கம் கொண்டு, என்னைக் காப்பாற்றுவதற்காக வந்த பட்சிராஜன் உயிர் பறிக்கப்பட்டுத் தரையில் கிடக்கிறார். அந்தோ, என் துர்ப்பாக்கியம்!'' (4–6)

மாதர் மாணிக்கமாகிய அவள், மிகவும் அச்சங்கொண்டு 'ஹே இராமா! ஹே லட்சுமணா!' என்று அருகில் கேட்கக் கூடியவர்களின் செவிகளில் விழும்படியாகக் கூவியமுதாள். மாலைகளும் அணிகலன்களும் அலங்கோலமாகக் கிடக்க, ஆதரவற்றவள் போல் சோகமாக அழுது கொண்டிருந்த சீதையை நோக்கி, அரக்கர் தலைவன் இராவணன் ஓடினான். பெரும் மரங்களில் படரும் கொடியைப் போல அவைகளைக் கட்டிக் கொண்டு, இராமன் இல்லாத அந்தக் கானகத்தில், 'இராமா, இராமா' என்று இடைவிடாமல் கூவிக்கொண்டிருக்கும் அவளை, 'மரத்தை விட்டு விலகி விடு; விட்டு விடு' என்று கூறிக்கொண்டு, காலனைப் போன்ற அவன், தன் வாழ்க்கையை முடித்துக் கொள்வதற்காக, அவளுடைய கேசத்தைப் பற்றினான். (7–10)

இவ்வாறு, சீதை பயமுறுத்தப்பட்ட போது அசையும் பொருள்–அசையாப் பொருள் உட்பட எல்லா உலகமும், ஒழுங்குமுறை தவறி காரிருளால் சூழப்பட்டதாக ஆயிற்று. அப்போது காற்று அசையாமல் நின்றது; சூரியன் ஒளிமங்கிப் போயிற்று. ஸ்ரீமானாகிய பிதாமகர் பிரும்மதேவன், பரிதாபமான சீதையின் கேசம் பற்றியிழுக்கப்பட்டதைத் தன் ஞானக்கண்களால் தெரிந்து கொண்டு, 'ஆகா, நடக்க வேண்டியது நடந்துவிட்டது!' என்று சொல்லி மகிழ்ந்தார். சீதை பலவந்தமாக இழுக்கப்பட்டாள் என்பதை அறிந்து கொண்ட தண்டகாரண்ய முனிவர்கள் எல்லோரும் மகிழ்ச்சியும் துயரமும் அடைந்தார்கள். (சீதைக்குக் கஷ்டம் வந்ததே? என்பதால் துயரம்; விரைவில், இராவணனுக்கு அழிவு ஏற்படப் போகிறது என்பது தெரிந்துவிட்டதால் மகிழ்ச்சி.) (11–14)

அரக்கர் வேந்தனாகிய இராவணன், 'ஸ்ரீராமா! ஸ்ரீராமா!' என்றும், 'ஹா லட்சுமணா!' என்றும் கூவியழுது கொண்டிருக்கும் அவளைத் தூக்கிக் கொண்டு ஆகாய வழியில் சென்றான். சொக்கத்தங்கத்தால் செய்யப்பட்ட அணிகலன்களை நிகர்த்த நிறமுடையவளும், மஞ்சள் நிறப்பட்டாடை உடுத்தியவளும், சிறப்புமிக்க சௌதாமினீ என்ற மின்னற்கொடி போன்றவளும், மன்னர் மகளுமான சீதை ஒளிமிக்கவளாக விளங்கினாள். காற்றால் அசைந்த அவளுடைய மஞ்சள் நிற ஆடையால், காட்டுத் தீயினால் பிரகாசிக்கின்ற மலைபோல் மிக்க ஒளியுடன் விளங்கினாள். மங்களங்களை அள்ளித் தருபவளான அந்த வைதேகி தேவியின் (உடலிலிருந்து) செக்கச்சிவந்த நிறமுடைய நறுமணம் வீசும் தாமரைகளில் சில இதழ்கள் இராவணன் மீது சிதறி விழுந்தன. (15–18)

அவளுடைய பொன்னிற பட்டுச்சேலை (காற்றின் வேகத்தால்) ஆகாயத்தில் பறந்ததைப் பார்த்தால், அந்திக் கதிரவனின் செவ்வண்ணத்தால் செம்மை படர்ந்த (ஒரு சிறு) மேகம்போல் இருந்தது. ஆகாயத்தில் இராவணனின் மடியிலிருந்த அவளுடைய மாசுமருவற்ற திருமுகம், இராமன் இல்லாததால் தண்டிலிருந்து பிரிக்கப்பட்ட தாமரை போல் ஒளிகுன்றிப் போயிருந்தது. அழகிய நெற்றி; அழகிய கூந்தல்; தாமரை மலரின் உட்புறம் போன்ற நிறம்; சொத்தை முதலிய குறைகள் இல்லாத, வெண்ணிறமாக, தூயனவாக விளங்கும் பற்கள் ஆகியவைகளைக் கொண்ட அவளுடைய திருமுகம், ஆகாயத்தில் இராவணனின் மடியிலிருந்ததால், கார்முகிலைப் பிளந்து கொண்டு ஒளி சிந்தும் சந்திரன் போல் இருந்தது. (19–22)

சந்திரன் போல் காண்பதற்கு இனியதும், அழகிய கண்களையுடையதும், அழகிய செவ்விதழ்களையுடையதும், செம்பொன் நிறங்கொண்டதும், மனங்கவர்வதுமான அவளுடைய நன்முகம், இராமபிரானை விட்டுப் பிரிந்து, ஆகாயத்தில் அரக்க மன்னன் வசப்பட்டதாலும், ஓயாது கண்ணீரைப் பெருக்கிக் கொண்டு அழுதவண்ணம் இருந்ததாலும் பகலில் உதித்த சந்திரன் போல் ஒளியற்றதாக இருந்தது. பொன்னிறம் படைத்த அந்த மைதிலி, கறுத்த உருவங்கொண்ட இராவணனின் பிடியில் இருந்ததைப் பார்த்தால், ஒரு யானை, பொன்னாலாகிய மேகலையை அணிந்திருப்பது போலிருந்தது. தாமரையின் செவ்விய அழகினை உடையவளும், பொன்வண்ண மேனியளும், சுடரொளி வீசும் அணிகலன்களை அணிந்தவளுமான அந்த ஜனககுமாரி, இராவணன் வசப்பட்டிருந்ததால் மேகக்கூட்டத்தினிடையே விளங்கும் மின்னல் போல் தோன்றினாள். (23–26)

வைதேகியின் ஆபரணங்கள் உராய்வதால் பேரொலி எழும்பிற்று. அதனால், அரக்க மன்னன் மின்னலும் இடியும் கூடிய மேகம் போல் காணப்பட்டான். தூக்கிக் கொண்டு போகப்படுகிற சீதையின் தலையிலிருந்து உதிர்ந்த ஏராளமான மலர்கள் பூமியில் நாலாபக்கங்களிலும் சிதறி விழுந்தன. (சீதையின் சிரசிலிருந்து பொழிந்த) அந்தப் பூமாரி, எல்லாப் பக்கங்களிலும் சிதறுண்டு விழுந்து, இராவணன் செல்லும் வேகத்தினால் எழுந்த பேய்க்காற்றால் எடுத்துச் செல்லப்பட்டு, அவனையே பின்தொடர்ந்தன. குபேரனுடைய தம்பியான

இராவணன் மீது விழுந்த மலர்மாரி, உயர்ந்து விளங்கும் மேருமலையின் மீது மாசற்ற தாரகைக் கூட்டம் போல் அழகாக விளங்கிற்று. (27–30)

சீதா தேவியின் ஒரு காலிலிருந்து நழுவிய, இரத்தினங்கள் இழைக்கப்பட்ட மின்னற்கொடி போன்ற சிலம்பு, இனிய ஒலி எழுப்பிக் கொண்டு (பூமியில்) வீழ்ந்தது. மரங்களின் தளிர் இலைகள் போன்று சற்றுச் சிவந்து விளங்கும் சீதை, கன்னங்கரேலென்று உடல் கொண்ட இராவணனை, பிணைத்துக் கட்டும் தங்கச் சங்கிலியால் யானை அழகு பெறுவதைப் போல, அழகுபடுத்திக் காட்டினாள். நாட்டை ஆள்பவருக்கு நாசத்தை முன்கூட்டி அறிவிக்கும் எரிகொள்ளி போல், தன் ஆன்ம சக்தியால் ஒளிரும் சீதையை ஆகாய மார்க்கமாக அபகரித்துச் சென்றான், இராவணன். வானத்திலிருந்து, புண்ணியம் முற்றிலும் அழிந்து போன தாரகைகள் பேரொலியுடன் பூமியில் விழுவதைப் போல, நெருப்புப் பொறிகளைப் போன்று ஒளிவீசும் சீதையின் அணிகலன்கள் ஒவ்வொன்றாகக் கழன்று விழுந்தன. (31–34)

வைதேகியின் மார்பிலிருந்து நழுவி விழுந்த சந்திரகாந்தியுடைய மாலை ஆகாயத்திலிருந்து கீழே இறங்கிவரும் கங்கையைப் போலிருந்தது. இராவணன் செல்லும் வேகத்தினால் மேலெழும்பிய காற்று, மரக்கிளைகளின் நுனிப்பகுதியை அசைத்தது; மரத்திலிருந்த பல பறவைகள் காச்சுமூச்சென்று அலறின. இதன் மூலம், 'நீ பயப்படாதே!' என்று, அந்த மரங்கள் (சீதைக்குத்) தைரியம் கூறினபோலும்! தாமரை ஓடைகள், அங்குமிங்கும் அலையும் தாமரைகளாலும், பயத்தால் சிதறி ஓடும் மீன் முதலிய நீர்வாழ் பிராணிகளாலும் தோழியாகிய ஜானகியின் நிலையைக் கண்டு பெருமூச்செறிந்து துயரப்பட்டன போலும்! சீதையை அபகரித்துச் சென்றதால் இராவணனிடம் மிகவும் கோபம் கொண்ட சிங்கம்–புலி–மான்–பறவைகள் நாலாபக்கங்களிலிருந்தும் ஓடிவந்து, அவள் நிழலைத் தொடர்ந்து ஓடிச்சென்றன. (35–38)

மலைகள், சீதை கவர்ந்து செல்லப்படுவதைக் கண்டு, கொட்டும் அருவிகளான கண்ணீர் பொழியும் முகமுடையவைகளாகவும் உயர்ந்த முகடுகளால் உயரே தூக்கப்பட்ட கைகளை உடையவை போலவும் (துக்கம் தாங்காமல்) கதறி அழுதனபோலும்! கண்ணைப் பறிக்கும் ஒளியுடைய சூரியன், ஜானகி கவர்ந்து செல்லப்படுவதைப் பார்த்து, மனம் நொந்து, ஒளி மழுங்கி, பழுப்பு நிற மண்டலமாக ஆயிற்று. "ஐயகோ! இராமனுடைய தருமபத்தினியான வைதேகியை இராவணன் கடத்திச் செல்கிறானே? உலகத்தில், தருமம் இல்லை; சத்தியம் இல்லை; நேர்மை இல்லை; தயை இல்லை" என்று எல்லாப் பிராணிகளும் கூட்டங்கூட்டமாகக் கூடிப் புலம்பின. அச்சங்கொண்ட மான் குட்டிகள் கண்ணீர்ப் பெருக்கினால் கலங்கிய கண்களுடன் வருத்தம் தோய்ந்த முகத்தை உயரத் தூக்கிப் பார்த்துப் பார்த்து அழுது தீர்த்தன. எல்லையில்லாத துக்கத்தை அடைந்து, வாய்விட்டுக் கதறியழும் சீதையைப் பார்த்து, வனதேவதைகளின் உடல்கள் நடுங்கின. (39–43)

இனிய குரலில், 'ஹே லட்சுமணா! ஹே இராமா!' என்று கதறி அழுபவளும், பூமியை அடிக்கடி உற்று நோக்குபவளும், அவிழ்ந்து கிடக்கும் கூந்தலையுடையவளும், நெற்றித் திலகம் அழிந்திருப்பவளும், கற்புக்கரசியுமான விதேக மன்னரின் செல்வக் குமாரத்தியான சீதையை, தன் அழிவின் பொருட்டு இராவணன் திருடிச் சென்றான். அப்போது அழகிய பற்களை உடையவளும் அழகிய புன்சிரிப்பு உடையவளுமான ஜானகி, தன் அருகில் உற்றார்–உறவினர்கள் இல்லாதவளாய், இராம–லட்சுமணர் இருவரையும் காணாதவளாய், அதிக பயத்தால் பீடிக்கப்பட்டு வெளுத்த முகமுடையவளானாள். (44–46)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
ஐம்பத்து இரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்து மூன்று

இராவணனை நிந்தித்தல்

அவன் ஆகாயத்தில் மேலெழும்பிச் செல்வதைப் பார்த்து, சீதை மனம் துயருற்று, நெஞ்சம் படபடக்க, பேரச்சத்தில் மூழ்கிப் போனாள். அபகரித்துச் செல்லப்படும் சீதாப்பிராட்டியார், கோபம்–அழுகையால் கண்கள் சிவக்க, பரிதாபமான நிலையில், பயங்கரமான கண் படைத்த அரக்கர்கோனைப் பார்த்துப் பின்வருமாறு கூறினாள்— (1,2)

''இராவணா! நான் தனிமையில் இருக்கும் சமயத்தை அறிந்து கொண்டு, என்னைத் திருடிக் கொண்டு ஓடுகிறாயே. இழிந்தவனே! இந்தச் செயலால் நீ வெட்கப்படவில்லையே? கொடியவனே! என்னைத் திருடிக்கொண்டு செல்ல விரும்பிய, பயந்தாங்கொள்ளியான உன்னால் மாயையால் மான் உருவம் ஏற்று, என் கணவர் (ஆசிரமத்திலிருந்து) அப்புறப்படுத்தப்பட்டார் என்பதில் சந்தேகமில்லை. என் மாமனாருடைய தோழரும், வயது முதிர்ந்தவருமான கழுகரசர் என்னைக் காப்பாற்ற முயன்றார். பராக்கிரமம் மிக்க அவரும் (உன்னால்) வீழ்த்தப்பட்டார். அரக்கப்பதரே! உனது வீரியம் மிகவும் சிறப்பானதாகவே இருக்கிறதன்றோ! உன் பெருமைகள் அனைத்தையும் கூறி, (என் பர்த்தாவுடன்) போர் செய்து நான் ஜெயிக்கப்படவில்லையே! (3–6)

அற்பனே! காப்பாற்றுவார் எவருமில்லாத வேளையில், மற்றவருடைய மனைவியைத் திருடிச் செல்வது என்ற இழிவான செயலைச் செய்வதற்கு நீ வெட்கப்படவில்லையே? சூர–வீரனென்று தன்னையே புகழ்ந்து கொள்ளும் இந்தச் செயலை, மிகவும் வெறுக்கத்தக்கதாகவும், மிகவும் கொடியதாகவும், அதருமமானது என்றும் உலகிலுள்ள வீரபுருஷர்கள் சொல்லப் போகிறார்கள். முன்னர் என்னிடம் பேசியபோது, உன் மனோதைரியத்தையும் உடல்பலத்தையும் பலவாறாகப் பாராட்டிக் கொண்டாயே! அது, நாசமாய் போக! உன்னுடைய குலத்திற்குக் களங்கத்தை விளைவிக்கும் இது போன்ற செயல்கள், உலகத்தோரால் தூற்றப்படும். இவ்வளவு வேகமாக ஓடிப் போகிறாயே, உன்னால் என்ன சாதிக்க முடியும்? சிறிது நேரம் நின்று பார். நீ உயிருடன் திரும்பிப் போகமாட்டாய்! (7–10)

பேரரசரின் திருக்குமாரர்களான அவ்விருவருடைய கண்ணில் நீ பட்டுவிட்டால், போதும்! நீ பெரும் படைகளோடு கூடியவனாக இருந்தாலும், உன்னால் ஒரு முகூர்த்த காலம்கூட உயிரோடு இருக்க முடியாது. காட்டில் கொழுந்துவிட்டெரியும் நெருப்பின் அருகே ஒரு பறவை சென்றால் எப்படிச் சாம்பலாகிப் போகுமோ, அதேபோல் அவ்விருவருடைய அம்பு உன் மேல் பட்டாலே போதும், எவ்வளவு முயன்றாலும் உன்னால் அதைத் தாங்கிக் கொள்ளவே முடியாது. இராவணா! இதுவரை நடந்தது நடந்ததாகவே இருக்கட்டும். உனக்கு நன்மையைத் தேடிக் கொள்ள விரும்பினால், இப்போதே என்னை விட்டுவிடு. நீ என்னை விடாமற்போனால், என்னைத் திருடிச் சென்றதால் உன்னிடம் கோபம் கொண்டு, தம்பியுடன் சேர்ந்து, என் கணவர் உன்னை அழிப்பதற்கு தீர்மானம் செய்வார். (11–13)

அற்பனே! நீ எந்த எண்ணத்துடன் என்னை இவ்வாறு பலாத்காரமாகத் திருடிச் செல்கிறாயோ, அந்த உன் எண்ணம் நிறைவேறப் போவதில்லை. தேவருக்கு ஒப்பான என் பர்த்தாவைக் காணாமல், பகைவனிடம் சிக்கிக் கொண்டவளாக, நான் நீண்ட காலம் உயிரை வைத்திருக்க மாட்டேன். மரணகாலம் நெருங்கிவிட்ட ஒரு மனிதன், தன் உடல் நலனுக்குக் கேடு செய்வதை விரும்பி ஏற்பதுபோல், (மரணகாலம் நெருங்கிவிட்டதால்) உன்னுடைய க்ஷேமத்தையும் நேர்மையையும் நீ சிந்தித்துப் பார்க்கவில்லை. இறுதிக்காலம் நெருங்கிவிட்ட எல்லோருக்குமே நல்வழி ஏதும் பிடிக்காமற்போகும். (நீயும் அப்படித்தான்.) இப்போது, காலபாசம் உன் கழுத்தில் இறுகிக் கொண்டிருக்கிறது என்று நினைக்கிறேன். (14–17)

பத்துத்தலையனே! மிகவும் அச்சப்பட வேண்டிய இந்த நிலையிலும், நீ அச்சப்படாமல் இருக்கிறாய் (என்றால், அதற்குக் காரணம், உன் முடிவுக்கான நிமித்தங்களைக் காணத் தொடங்கிவிட்டாய் என்பதுதான்). அதனால்தான் மரங்களையெல்லாம் பொன்மயமாகக் காணப் போகிறாய். இராவணா! இரத்த வெள்ளம் ஓடுகிற (நரகத்திலிருக்கும்) பயங்கரமான வைதரணி என்னும் நதியையும், பெரிய கத்திகளையே இலைகளாகக் கொண்ட அஸிபத்ரம் என்ற மரங்கள் அடர்ந்த காட்டையும், நீ காணப் போகிறாய். தூய பொன்னாலான மலர்களை உடையதும், உயர்ந்த வைடூர்யங்களாலான இலைகளை உடையதும் கூரிய இரும்பு முட்கள் நிறைந்துள்ளதுமான (நரகத்திலுள்ள) சால்மலி என்னும் பெரிய மரம் போன்ற தூணை, நீ கட்டியணைக்கப் போகிறாய். (பொன்மய மரங்கள், வைதரணி நதி, சால்மலி ஆகியன யமலோகத்தில் காணப்படுபவை. 'நீ, இவைகளைக் காணப் போகிறாய் என்றால், விரைவில் நீ யமலோகம் செல்லப் போகிறாய்' என்பது குறிப்பு.) (18–20)

இராவணா! சாகத் துணிந்தவன் விஷத்தைக் குடித்தபின் வெகுநேரம் உயிரோடு இருக்க மாட்டான். அதுபோல, பராக்கிரமசாலியான அவருக்கு (இராமனுக்கு) இவ்வளவு பெரிய குற்றத்தைச் செய்துவிட்டு, நீ வெகுகாலம் உயிரோடிருக்க முடியாது. மிகவும் சக்தி வாய்ந்த காலபாசத்தினால் நீ கட்டப்பட்டிருக்கிறாய். மகாத்மாவாகிய என் கணவர் கண்ணில் படாமல், எந்த இடத்திற்கு ஓடிச்சென்று நீ பாதுகாப்பை அடையப் போகிறாய்? எவர் தன் தம்பியும் உடனில்லாமல், ஒரு நிமிஷ நேரத்தில், பதிநான்காயிரம் அரக்கர்களைப் போரில் கொன்று மடித்தாரோ, அந்த இராமன், எல்லா அஸ்திரங்களிலும் கைதேர்ந்தவர்; உடலாற்றல் மிக்கவர்; தனிப்பெரும் வீரர். அவருடைய தருமபத்தினியான என்னைக் கவர்ந்து செல்லும் உன்னை, கூர்மையான பாணங்களால் கொல்லாமல் விட்டுவிடுவாரா?'' (21–24)

இராவணன் மடியிலிருந்த சீதை, அச்சத்தினாலும் துக்கத்தினாலும் சூழப்பட்டவளாக மேற்சொன்னவாறும், இன்னும் பலவிதமாகவும் கடுமையான சொற்களைக் கூறி, பரிதாபமாகக் கதறினாள். அந்தப் பாவி அரக்கன், இவ்வாறு மிகவும் துயரமடைந்து, பலவாறாகப் புலம்பிக் கொண்டு, பரிதாபமாகப் பேசுகிறவளும், (அச்சத்தால்) உடல் நடுங்க, மனம் நொந்து துடிப்பவளும், மன்னர் திருமகளுமான பெண்ணரசியைக் கவர்ந்து சென்றான். (25,26)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
ஐம்பத்து மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்து நான்கு

இலங்கையை அடைதல்

(இராவணனால்) திருடிக்கொண்டு போகப்படும் சீதை, தன்னை விடுவிப்பவர் எவரையும் காணவில்லையே (என்று வருந்தியபோது, வழியில்) ஒரு மலையுச்சியில் அமர்ந்திருந்த, சிறந்த வானரர்கள் ஐவரைக் கண்டாள். விசாலமான கண்களை உடையவளும், அழகிய அங்கங்களை உடையவளுமான மைதிலி, பொன்னிறமான பட்டு மேலாடையையும், தன்னுடைய உயர்வான அணிகலன்களையும் சேர்த்து முடிச்சுப் போட்டு, 'இவர்கள் இராமனிடம் சொல்லக்கூடிய வாய்ப்பு கிடைத்தாலும் கிடைக்கலாம்' என்று எண்ணி, அவர்களை நோக்கி எறிந்தாள். ('இராம–லட்சுமணர்கள் துரத்திக் கொண்டு வந்துவிடுவார்களோ?' என்ற) அச்சத்துடன் சென்று கொண்டிருந்த இராவணன், சீதையின் இந்தச் செயலைப் பார்க்கவில்லை. (1–3)

அகலமான கண்களையுடைய சீதாப்பிராட்டி, பலவாறாக உரத்த குரலில் புலம்பிக் கொண்டிருப்பதை, மஞ்சளான கண்களையுடைய வானரோத்தமர்கள் இமைகொட்டாது

நோக்கினார்கள். அரக்கர் தலைவனான அவன், அழுது கொண்டிருக்கும் ஜானகியைப் பற்றிக் கொண்டு பம்பா நதியைக் கடந்து, இலங்கையை நோக்கிச் சென்றான். கூர்மையான பற்களைக் கொண்டதும் கொடுமையான விஷமுடையதுமான பாம்பு போன்றவளும், தனக்கே யமனாக வந்துள்ளவளுமான அவளை, இராவணன் மிக்க மகிழ்ச்சியுடன் தன் மடியில் வைத்துக் கொண்டு கவர்ந்து சென்றான். வில்லிலிருந்து விடப்பட்ட அம்பு போல, காடு–ஆறு–மலை–தடாகங்களை ஆகாயமார்க்கமாக விரைவில் கடந்து சென்றான். (4–7)

திமி என்ற வகையைச் சேர்ந்த மீன்களும் முதலைகளும் வசிப்பதும், எப்போதுமே குறைவை அடையாததும், நதிகளின் புகலிடமானதும், வருணனின் இருப்பிடமானதுமான பெருங்கடலைக் கடந்து சென்றான். விதேககுமாரி அபகரித்துச் செல்லப்படுவதைக் கண்டு, அஞ்சி நடுங்கிய சாகரம் (சமுத்திரம்) அலைவீசாமல் அடங்கிப் போயிற்று. அதிலிருந்த மீன்களும் பெரிய பெரிய பாம்புகளும் ஓட்டம் தடைபட்டு நின்றுவிட்டன. அப்போது, ஆகாயத்தில் சென்று கொண்டிருந்த சாரணர்கள், 'இராவணனுக்கு முடிவுகாலம் நெருங்கிவிட்டது!' என்று பேசிக் கொண்டார்கள். ஸித்தர்களும் அதை ஆமோதித்தார்கள். (8–10)

இராவணன், தன் உயிரைப் பறிப்பதற்காகக் காலனே உருக்கொண்டு வந்தது போன்றவளும், துடிதுடித்துக் கொண்டிருப்பவளுமான சீதையை மடியில் வைத்துக் கொண்டு, இலங்கை நகரை அடைந்தான். நன்கு வகுக்கப்பட்ட நெடுஞ்சாலைகளையுடையதும், நகரத்தின் நுழைவாயிலில் மக்கள் திரளாகச் சூழ்ந்திருப்பதுமான இலங்கை நகரை அடைந்து, தன்னுடைய அந்தப்புரத்திற்குள் நுழைந்தான் (இராவணன்). முன்பு, மயன் என்ற அசுரன், தன் மாயையால் உண்டாக்கப்பட்ட ஒரு குகையில் ஸ்வயம்பிரபை என்ற அப்சரப்பெண்ணை வைத்ததைப் போல, அவ்விடத்தில் கருங்கண்ணாளும் சோக–மோகங்களில் மூழ்கியிருப்பவளுமான சீதையை, இராவணன் வைத்தான். (மயன் என்ற அசுர குல கட்டிடக்கலை நிபுணன், ஆச்சரியமான சக்திகளைக் கொண்ட ஒரு பெண்ணை, சிறையில் வைத்ததைப் போல – என்றும் பொருள் கொள்ளலாம்.) (11–13)

பிசாசு போன்ற பயங்கரமான தோற்றமுடைய அரக்கிகளைப் பார்த்து, ''என் உத்தரவு இல்லாமல் இந்த சீதையைப் பார்க்க, ஆணோ அல்லது பெண்ணோ யாரையும் அனுமதிக்கக் கூடாது'' என்று கூறினான். ''முத்து, மணி, பொன், ஆடை–ஆபரணங்கள் என்று எவை எவைகளை இவள் விரும்பிக் கேட்கிறாளோ, அவைகளையெல்லாம் உடனே இவளுக்குக் கொடுக்க வேண்டும் என்று கட்டளையிடுகிறேன். உங்களில் யாரேனும் ஒருத்தி, தெரிந்தோ தெரியாமலோ கடுமையான சொற்களை இவளுடன் பேசினால், அவளுக்கு உயிர்மேல் ஆசையில்லை என்பதாகும். (அவளைக் கொன்று விடுவேன்.)'' (14–16)

பராக்கிரமம் மிகுந்த அரக்க மன்னன், மேற்கண்டவாறு அரக்கிகளுக்கு உத்தரவிட்டுவிட்டு, 'அடுத்தபடி செய்ய வேண்டிய காரியம் என்ன?' என்று சிந்தித்துக் கொண்டு, அந்த அந்தப்புரத்திலிருந்து வெளியே வந்தவுடனேயே, பச்சை மாமிசம் உண்பவர்களும் பேராற்றல் படைத்தவர்களுமான எட்டு அரக்கர்களைப் பார்த்தான். பெருவீரனான அவன், வரம் பெற்றுள்ள இறுமாப்பினால், அவர்களுடைய உடல் பலத்தையும் வீரத்தையும் புகழ்ந்து பேசி, (அவர்களை உற்சாகப்படுத்தி, தைரியமூட்டி) பின்வருமாறு சொன்னான்— (17,18)

''பலவகையான ஆயுதங்களை எடுத்துக் கொண்டு, உடனே இங்கிருந்து புறப்பட்டு ஜனஸ்தானத்திற்குச் செல்லுங்கள். கரனின் தலைமை இடமாக இருந்த அந்தப் பிரதேசம், இப்போது பாழடைந்து கிடக்கிறது. அங்கிருந்த எல்லா அரக்கர்களும் கொல்லப்பட்டுவிட்டார்கள். அந்த இடம் அரக்கர் கண்காணிப்பு இல்லாமல் வெற்றிடமாகிவிட்டது. (உங்கள் மனத்தில்) அச்சம் ஏற்பட்டிருந்தால் அதைத் தொலைவில் உதறிவிட்டு, உங்கள் ஆண்மையிலும் பலத்திலும் நம்பிக்கை வைத்து, அங்கே வசித்துக் கொண்டிருங்கள். நான், ஜனஸ்தானத்தில் பெரும் படையை நிறுத்தியிருந்தேன். அவையனைத்தும் கர–தூஷணன் உட்பட, இராமனுடைய அம்புகளால் யுத்தத்தில் அழிக்கப்பட்டுவிட்டது. (19–21)

இந்த அவமானத்தைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. என்னுடைய தைரியத்தை மீறிக் கொண்டு கோபம் உண்டாகியிருக்கிறது. அதனால், இராமனை பழிக்குப்பழி வாங்க வேண்டும் என்ற மிகத் தீவிரமான எண்ணம் உண்டாகியிருக்கிறது. நான், மிக்க பலம் வாய்ந்த என்னுடைய எதிரியிடம் வஞ்சம் தீர்த்துக் கொள்ள விரும்புகிறேன். போரில் என் எதிரியைக் கொல்லாத வரையில் எனக்கு உறக்கமே வராது. இராமன், கர–தூஷணர்களைக் கொன்றிருக்கிறான். அவனை (இராமனை) இப்போது (நான்) கொன்றுவிட்டு, வறுமையில் உழல்பவன் ஏராளமான தனத்தைப் பெற்றால் எவ்வளவு மகிழ்ச்சி அடைவானோ, அவ்வளவு மகிழ்ச்சியை நான் அடைவேன். (22–24)

ஜனஸ்தானத்தில் வசித்துக் கொண்டு, 'இராமன் என்னென்ன செய்கிறான்?' என்பது பற்றிய உண்மையான செய்தியை, நீங்கள் எனக்கு அனுப்பிக் கொண்டிருக்க வேண்டும். அரக்கர்களான நீங்கள் எல்லோரும் மிகவும் கவனமாக, அங்கு செல்ல வேண்டும். இராமனைக் கொலை செய்வதற்காக முயல்வதே உங்கள் கடமை. போர்க்களத்தில் பல தடவைகள் உங்களுடைய அபாரமான பலத்தைக் கண்டிருக்கிறேன். அதனால்தான் ஜனஸ்தானத்தில் வசிக்கும்படி, உங்களுக்குக் கட்டளையிடுகிறேன்.'' (25–27)

அந்த அரக்கர்கள், அந்தக் கட்டளையை மிக்க பயனளிக்கக் கூடியதாகவும் பேரன்பினால் சொல்லப்பட்டதாகவும் கருதி, இராவணனை வணங்கினார்கள். அந்த இடத்திலிருந்தே, எவர் கண்ணிலும் புலப்படாதவர்களாக, இலங்கையை விட்டு ஒன்றாகவே ஜனஸ்தானத்தை நோக்கிப் புறப்பட்டார்கள். ஜனகர் திருமகளாகிய சீதாப்பிராட்டியாரை எடுத்து வந்து, அரக்கிகளிடம் ஒப்படைத்த இராவணன் எல்லையில்லாத மகிழ்ச்சியில் மூழ்கினான். அந்த அரக்கன், இராமனிடம் மிகவும் வெறுப்பை வளர்த்துக் கொண்டு, மதிமயக்கத்தால் ஆனந்தப்பட்டுக் கொண்டிருந்தான். (28,29)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
ஐம்பத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்தைந்து

சீதைக்கு ஆசை காட்டினான்!

மகாபலசாலிகளும் கொடியவர்களுமான அந்த எட்டு அரக்கர்களையும் கட்டளையிட்டு அனுப்பிய பின், அறிவு தடுமாற்றத்தால், உலகில் அடையப்பட வேண்டிய எல்லாவற்றையும் தான் அடைந்துவிட்டதாக இராவணன் எண்ணிக் கொண்டான். அவன் இடைவிடாமல் சீதாதேவியை நினைத்துக் கொண்டு, மன்மத பாணங்களால் தாக்கப்பட்டவனாக, சீதையைப் பார்ப்பதற்காக அழகிய அந்தப்புரத்திற்குள் அவசரமாக நுழைந்தான். (1,2)

அரக்கர் தலைவனான இராவணன், அந்த மாளிகைக்குள் சென்று, அரக்கிகளின் மத்தியில் சோகத்தில் மூழ்கியிருக்கும் சீதையைக் கண்டான். கண்ணீர் நிரம்பிய கண்கள்; திக்கற்றவள்; சோகச் சுமையினால் தவிப்பவள்; கடலில், காற்றின் வேகத்தால் அடிபட்டு, மூழ்கிக் கொண்டிருக்கும் படகு போன்றவள்; மான் கூட்டத்திலிருந்து பிரிந்து சென்று நாய்களால் சூழப்பட்ட பெண்மானைப் போன்றிருப்பவள்; தரையை நோக்கியபடித் தலையைக் குனிந்து கொண்டிருப்பவள்; துன்ப நிலையில் உள்ளவள் – இப்படியான நிலையிலிருந்த சீதையை அரக்கன் அணுகினான். (3–5)

சோகவயப்பட்டிருப்பவளும் இரங்கத்தக்க நிலையில் இருந்தவளுமான அவளைக் கட்டாயப்படுத்தி அழைத்துச் சென்று, தேவமாளிகை போன்று விளங்கும் தன் மாளிகையைக் காட்டினான். பெரிய மாளிகைகள், உப்பரிகைகள் நிறைந்ததும், ஆயிரக்கணக்கான நாரீமணிகள் வசிப்பதும், பல்வகை பறவைக் கூட்டங்களை உடையதும், பல்வகையான இரத்தினங்கள்

இழைக்கப் பெற்றதும், உருக்கி வார்த்த பொன்னாலும் வெள்ளியாலும் ஆனவைகளும், வைர-வைடூர்யங்களால் அணி செய்யப்பட்டு கண்களைக் கவரும் தூண்களை உடையதும், தேவலோக துந்துபி நாதம் விளங்குவதும், தூய தங்கத்தால் செய்யப்பட்ட கதவுகளை உடையதுமான (அந்த மாளிகையில்), பொன்னாலான படிகளில் அவளுடன் ஏறிச் சென்றான். (6–9)

அவ்விடத்தில் தந்தம்–வெள்ளியினால் செய்யப்பட்டு அழகாக விளங்கும் சாளரங்களும், பொன்வலையினால் மேலே மூடப்பட்ட மேடைகளும் வரிசை வரிசையாக இருந்தன. இராவணன், தன் அரண்மனையில், எல்லா இடத்திலும் வெண்முத்துக்கள் பதிக்கப்பட்ட தரைகளை, மைதிலிக்குக் காட்டினான். இராவணன், சோகத்தில் மூழ்கியிருக்கும் சீதைக்கு, பலவகையான மரங்கள் சூழ்ந்த சிறிய நீர்நிலைகளையும் தாமரைத் தடாகங்களையும் காட்டினான். மிகச்சிறந்த அந்த மாளிகை முழுவதையும் (ஒவ்வோர் இடமாகக்) காட்டிவிட்டு, மகாபாவியான அவன், சீதைக்கு ஆசையை உண்டாக்குவதற்காகப் பின்வருமாறு பேசினான்— (10–13)

"சீதே! பயங்கரமான செயல்களைச் செய்யக்கூடிய முப்பத்திரண்டு கோடி அரக்கர்களுக்கு நான்தான் தலைவன். வயோதிகத்தால் வலிமை குன்றியவர்களும் சிறுவர்களும் இந்தக் கணக்கில் சேர்க்கப்படவில்லை. இது தவிர, என் ஒருவனுக்குப் பணிவிடை செய்வதற்காகவே ஓராயிரம் அரக்கர்கள் இருக்கிறார்கள். தடங்கண்ணாளே! என்னுடைய இந்த ஆட்சி–அதிகாரம் முழுவதையும், என் வாழ்க்கையையும் உன்னிடம் ஒப்படைத்துள்ளேன். நீ, என் உயிரைக் காட்டிலும் மேலானவள். என் அந்தப்புரத்தில் ஆயிரக்கணக்கான மனைவிகள் இருக்கிறார்கள். அவர்களனைவருக்கும் நீதான் தலைவி. அன்பிற்குரியவளே! என்னுடைய மனைவியாக ஆகிவிடு. என்னுடைய சொற்களை ஏற்றுக்கொள். இதிலிருந்து மாறுபட்டு ஒரு முடிவை நீ மேற்கொண்டால், அது சரியானது அல்ல. உன்னை அடைவதற்காகத் தவித்துக் கொண்டிருக்கும் என்னை ஏற்று அருள்புரிய வேண்டும். (14–18)

நூறுயோஜனை விஸ்தாரமுள்ள இந்த இலங்கை, பெருங்கடலால் சூழப்பட்டிருக்கிறது. இந்த நாடு, இந்திரன் முதலான தேவர்களாலும் அசுரர்களாலும்கூட அழிக்க முடியாதது. தேவதை–யட்சர்–கந்தர்வர்–முனிவர்கள் ஆகியோரில், எனக்கு நிகரான வீரத்தையுடைய ஒருவரை, இவ்வுலகில் நான் கண்டேனில்லை! இராமன், நாட்டிலிருந்து துரத்தப்பட்டவன்; தாழ்நிலையில் உள்ளவன்; தவம் செய்கிறவன்; (தேர், யானை, குதிரை ஏதுமில்லாமல்) கால்நடையாகச் செல்பவன்; மேலும், அவன் ஒரு மனிதப் பிறவி; அதனால், குறைந்த அளவே ஆண்மையுள்ளவன். இப்படிப்பட்ட இராமனை வைத்துக் கொண்டு நீ என்ன செய்யப் போகிறாய்? (உன்னைச் சுகமாக வைத்துக் கொள்ளக்கூட அவனால் முடியாதே?) (19–21)

சீதே! என்னையே ஏற்றுக்கொள்; நான்தான் உனக்கு ஏற்ற கணவன். அச்சமுடையவளே! இளமை நிலையற்றது. (அதனால், இப்போதே என்னை ஏற்றுக்கொண்டு) என்னுடன் இங்கேயே இன்பத்தை அனுபவித்துக் கொண்டிரு. அழகான திருமுகம் உடையவளே! சீதே! இராமனைப் பார்க்கலாம் என்ற எண்ணத்தை விட்டுவிடு. (ஏனென்றால், நீ இங்கு இருப்பதை அவன் அறிந்து கொண்டாலும்,) இங்கே வருவதைச் சிந்தித்துப் பார்க்கக்கூட அவனால் முடியாது! (எண்ணிப் பார்க்கக்கூட முடியாது என்னும்போது நேரில் அவனால் வரவா முடியும்!) ஆகாயத்தில் வெகுவேகமாக வீசிக் கொண்டிருக்கும் காற்றைக் கயிற்றினால் கட்டிப் போட்டுவிட முடியாது; புகை இல்லாமல் கொழுந்துவிட்டெரியும் தீ நாக்குகளைக் கையால் பிடித்துவிட முடியாது. (அதுபோல, இராமனால் இங்கு வரவே முடியாது!) (22–24)

பேரழகியே! என் புஜபலத்தால் நன்கு காப்பாற்றப்படும் உன்னை, தன் வலிமையால் (என்னை வென்று) எடுத்துப் போகும் திறனுடைய எவனையும் மூன்று உலகத்திலும் நான் காணவில்லை. இலங்கையாகிற இந்த மாபெரும் ராஜ்யத்தில் நீ அரசு செலுத்து. என் போன்ற அரக்கர்களும் அமரர்களும் அனைத்துச் சராசரங்களும் உனக்குப் பணியாளர்களாக ஆவார்கள்.

பட்டத்தரசியாக பட்டாபிஷேகம் செய்யப்பட்டு, அந்த நீரினால் நனைந்து, (கிடைத்தற்கரிய பேறு பெற்றதால்) மனமகிழ்ந்து, அதனால் என்னையும் சந்தோஷப்படுத்து. முன்வினைப்பயனாக ஏற்பட்ட துன்பங்கள் வனவாசத்தால் கழிந்துபோய்விட்டது. உன்னுடைய புண்ணியத்தின் பயனாகக் கிடைக்க வேண்டிய போகங்களை இங்கே அடைவாய். மைதிலி! நீ என்னுடன் இங்கே இருந்து கொண்டு, தெய்விக மணம் கமழும் எல்லா வகையான மாலைகளையும் உத்தமமான அணிகலன்களையும் ஏற்று அனுபவி. (25–28)

மெல்லிடையாளே! சூரியனுக்கொப்பாக ஒளி வீசும் புஷ்பகம் என்ற விமானம், என்னுடைய சகோதரன் குபேரனிடமிருந்து என் ஆண்மையால் (அவனை வென்று) எடுத்துக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. சீதே! அந்த விமானம் விசாலமானது; அழகானது; விருப்பத்திற்கிணங்க செல்லக்கூடியது. நீ அதில் என்னுடன் உட்கார்ந்து கொண்டு இஷ்டப்படிச் சுற்றி வரலாம். அழகிய முகமுடையாளே! பெண்ணரசியே! தாமரைபோல் ஒளிவீசுவதும் குற்றமற்றதும் வனப்புமிக்கதுமான உன் முகம், துக்கத்தால் பீடிக்கப்பட்டு ஒளியில்லாமல் இருக்கிறது.'' இவ்வாறு அவன் பேசியதும், மாதரசியான சீதை, நிலாவை நிகர்த்த தன் முகத்தை, ஆடையின் முந்தானையால் மூடிக்கொண்டு கண்ணீர் பெருக்கினாள். (29–32)

கவலையால் ஒளியிழந்து, மனக்கலவரத்துடன் இராமனையே நினைத்துக் கொண்டிருக்கும் சீதையைப் பார்த்து, அரக்கர் தலைவனான பாவி இராவணன் மேலும் சொன்னான்— ''விதேககுமாரி! நீ இதுவரை துக்கப்பட்டது போதும். இது (நான் , உன்னை அரசியாக்கிக் கொள்ள விரும்புவது) அறம் பிறழ்ந்த செயல் என்று எண்ணித்தானே துயரப்படுகிறாய்? (நமக்குள் ஏற்படப் போகும் உறவு) முனிவர்களால் கூறப்பட்ட தருமம்தான். நீ அடையப் போகும் சம்பந்தம், தெய்வத்தின் ஆணைப்படி நடப்பது. (கன்னிப் பெண்டிரைப் பலவந்தமாகத் தூக்கிக் கொண்டு வந்து விவாகம் செய்துகொள்வது, ராட்சஸ விவாகம் எனப்படும். அது வைதிக நெறியாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அத்துடன், விவாகமான பெண்ணைக் கடத்திக் கொண்டு வந்து, தன்னை மணம் செய்து கொள்ளும்படி அச்சுறுத்துவது, மிகப்பெரிய பாவம் என்பது அறநூல் கூற்று.) (33,34)

ஒளிவீசும் உன் இரு திருப்பாதங்களிலும், நான் என்னுடைய (பத்து) தலைகளை வைத்து வணங்குகிறேன். உடனே, என் வேண்டுகோளை ஏற்றுக்கொள். நான் உனக்குக் கட்டுப்பட்டவன்; உன் அடிமை. காமாக்னியால் வெந்துகொண்டிருக்கும் நான் அதன் காரணமாக, இவ்வளவு தூரம் என்னைத் தாழ்த்திக் கொண்டு பேசினேன். இராவணன், எந்த ஒரு பெண்ணின் பாதத்திலும் தலைகுனிந்து வணங்குபவன் அல்லன் அன்றோ?'' இவ்வாறு மிதிலை திருமகள் ஜனகபுத்திரியிடம் கூறிவிட்டு, காலன் வசப்பட்ட இராவணன், 'இனி இவள் எனக்குத்தான்!' என்று எண்ணிக் கொண்டான். (35–37)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
ஐம்பத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்தாறு

கெடு விதிப்பது

இவ்வாறு கூறப்பட்ட வைதேகி, சோகத்தால் மனம் வெதும்பி, இடையில் ஒரு புல்லைப் போட்டுவிட்டு, இராவணனிடம் கடுகளவும் அச்சங்கொள்ளாமல் பதில் கூறினாள்— (1)

''தசரதன் என்ற பெயருடைய ஒரு மன்னர்; அறத்தின் எல்லையைக் கடந்து செல்லக்கூடாது என்பதில் உறுதியாக நிற்பவர்; வாக்குத் தவறாதவர்; உலகப் புகழ் பெற்றவர்; அவருடைய

செல்வப் புதல்வர், ஸ்ரீராகவன். இராமன் என்று அவருக்குப் பெயர்; தருமத்தையே உயிர்மூச்சாக உடையவர்; மூன்று உலகங்களிலும் பிரசித்தி பெற்றவர்; நீண்ட கைகளும், அகன்ற கண்களுமுடைய அவர்தான் என் கணவர்; நான் ஆராதிக்கும் தெய்வம். அவர், இக்ஷ்வாகு குலத்தில் தோன்றியவர்; சிங்கம் நிகர் தோள்வலிமை கொண்டவர்; மிக்க மேன்மையுற்றவர். அவர், தன் சகோதரனான லட்சுமணனுடன் வந்து உன் உயிரைப் பறிக்கப் போகிறார். (2–4)

என்னை, அவர் கண் முன்னால் பலாத்காரமாகத் தூக்கி வருவதற்கு முயன்றிருந்தால், கரனைப் போலவே ஜனஸ்தானத்தில் மாண்டுபோய் நீண்ட நித்திரையில் ஆழ்ந்திருப்பாய். எந்த அரக்கர்களை (வானளாவப் புகழ்ந்து) பயங்கரமான தோற்றமுடையவர்கள் என்றும், மகாபலசாலிகள் என்றும் போற்றுகிறாயோ, அவர்கள் எல்லோரும் கருடனைக் கண்டவுடன் சர்ப்பங்கள் அடங்கி விடுவதைப் போல, இராமனைக் கண்டதும் தம் ஆற்றலை முற்றிலும் இழந்தவர்களாகி விடுவார்கள். அலைபுரண்டு வெள்ளமாக வரும் தண்ணீர், கங்கையின் கரையை அரித்து விடுவதைப் போல, அவருடைய (இராமனுடைய) வில்லின் நாண்கயிற்றிலிருந்து செலுத்தப்பட்ட பொற்பூண் கொண்டு விளங்கும் அம்புகள், உன் உடலை அழிக்கப் போகின்றன. (5–7)

இராவணா! அசுரர்களாலும் தேவர்களாலும் நீ கொல்லப்பட முடியாதவனாக (வரம் பெற்று) இருக்கலாம். ஆனால், இராமனுடன் பெரும் பகையை உண்டாக்கிக் கொண்டுவிட்ட நீ, உயிருடன் தப்பிச் செல்லமாட்டாய். இராகவன் பேராற்றலுடையவர்; மீதியிருக்கும் உன் வாழ்நாளை முடிவுக்குக் கொண்டுவரப் போகிறவர், அவர்தான். வேள்விச்சாலையில், யூபக் கம்பத்தில் கட்டப்பட்டிருக்கும் ஆடு எப்படி உயிருடன் தப்பிச் செல்ல முடியாததோ, அப்படியே உன்னாலும் தப்பிச் செல்ல முடியாது. சினங்கொண்ட கண்களால் இராமன் உன்னைப் பார்ப்பாரேயானால், அரக்கனாகிய நீ இப்பொழுதே சாம்பலாகிப் போய்விடுவாய் – ருத்திரனின் நெற்றிக்கண் பார்வையால் மன்மதன் எரிந்து போனதைப் போல. (8–10)

எவர், வானத்திலிருக்கும் சந்திரனைப் பூமியில் வீழ்த்தவோ அழிக்கவோ வல்லவரோ, மாபெரும் கடலைக்கூட வற்றடிக்கும் திறன் பெற்றவரோ அவர், ஏர்முனைநாயகியான என்னை இவ்விடத்திலிருந்து விடுவிப்பார் (என்பதில் சந்தேகமில்லை). உனக்கு ஆயுள் முடிந்துவிட்டது; செல்வச்செழிப்பும் ஆட்சி–அதிகாரமும் போய்விட்டன; வீரம் ஒழிந்துவிட்டது; புலன்கள், தம் இயல்பான செயல்பாடுகளை இழந்துவிட்டன. உன் காரணமாக, இலங்கை கைம்மை கோலம் பூணப்போகிறது. காட்டில் கணவரிடமிருந்து பிரித்து என்னை எடுத்து வந்தாயே, இந்த பாவச் செயல் உனக்கு நலன் தருவதாக அமையப் போவதில்லை. (11–13)

என் கணவர் மிகவும் மகிமை வாய்ந்தவர்; தன்னுடைய வீரத்தின் மேல் நம்பிக்கை வைத்து, என் மைத்துனரோடுகூட, மக்கள் நடமாட்டமில்லாத தண்டகாரண்யத்தில் அச்சமில்லாமல் வசிக்கிறார். அவர், யுத்தத்தில் சரமாரியைப் பொழிந்து, உன் உடலிலிருந்து செருக்கு, வலிமை, வீரம் மற்றும் இது போன்ற அடாவடித்தனங்களை வெளியேற்றப் போகிறார். எப்பொழுது, காலனால் விதிக்கப்பட்ட அழிவு காலம் நெருங்கி வருகிறதோ, அப்பொழுது மானிடர்கள் தம் செயல்களில் தவற்றைச் செய்கிறார்கள். (தவறான செயல்களில் ஈடுபடுகிறார்கள்.) (14–16)

அரக்கப்பதரே! என்னை அபகரித்து வந்ததால் உனக்கும் அரக்கர்களுக்கும் அந்தப்புரத்திலுள்ள பெண்டிர்க்கும் அழிவு காலம் மிகவும் நெருங்கிவிட்டது. வேள்விச்சாலையின் நடுவில் நிறுவப் பட்டதும், ஸ்ருக்–ஸ்ருவம், பஞ்சபாத்திரம், நெய்க்கிண்ணம் முதலான வேள்விப் பாண்டங்கள் நிறைந்ததும், வேதவிற்பன்னர்களால் மந்திரம் ஓதப்பட்டுப் புனிதமாக்கப்பட்டதுமான வேள்விக் குண்டம் இழிகுலத்தோனால் தீண்ட முடியாது. அரக்கப்பதரே! (வேள்விக்குண்டம் போல் புனிதமானவளும்) தருமத்தில் ஊன்றி நிற்கும் இராமனுக்கு, அறநெறிப்படி கன்னிகாதானம் செய்து கொடுக்கப்பட்டவளும், கற்புக்கனலியுமான நான், மாபாவியான உன்னால் தொடக்கூட முடியாதவள். தாமரை மலர்கள் நிறைந்த ஓடையில் ராஜ அன்னத்தோடு உல்லாசமாக விளையாடும் அன்னப்பேடு, புல்புதரில் வசிக்கும் நீர்காகத்தைக் கண்ணெடுத்துப் பார்க்குமா? (பார்க்காது.) (17–20)

அரக்கனே! நீ, உணர்வுகள் நசித்துப்போய்விட்ட இந்தச் சரீரத்தைக் கட்டிப்போடு அல்லது வெட்டிப்போடு. இந்தச் சரீரத்தையோ, வாழ்நாளையோ, நான் பாதுகாத்து வைத்துக் கொள்ள விரும்பவில்லை. இந்த உலகில் என்னைப் பற்றி இகழ்ந்து பேசக்கூடிய ஒரு காரியத்தைச் செய்யமாட்டேன். (உயிரை விட்டாலும் விடுவேனே தவிர, உன் வசப்படமாட்டேன்.)'' இராவணனிடம் கோபம் கொண்டு, இவ்வளவு கடுமையான சொற்களைக் கூறிவிட்டு, மேற்கொண்டு ஏதும் பேசாமல் மௌனமானாள், மைதிலி. (21,22)

சீதையின், உரோமச்சிலிர்ப்பை ஏற்படுத்தும் வன்மொழிகளைக் கேட்டதும், அவளைப் பார்த்து, அச்சத்தை விளைவிக்கும் பதிலைக் கூறினான்— ''அழகாகச் சிரிக்கும் பெண்ணரசியே! என் சொற்களைக் காது கொடுத்துக் கேள். இரண்டு மாதம் காலகெடு தருகிறேன். அதற்குள் நீயாக என்னை நாடி வராவிட்டால், சமையற்காரர்கள் ஒரு நாள் காலை உணவிற்காக உன்னைத் துண்டுதுண்டாக வெட்டிப் போடுவார்கள்.'' பகைவர்களைக் கதறச் செய்யும் இராவணன் இவ்வாறு கடுமையான சொற்களைச் சீதையிடம் கூறிவிட்டு, மிகவும் கோபத்துடன் (காவலுக்கு வைக்கப்பட்டிருந்த) அரக்கிகளைப் பார்த்துக் கூறினான்— ''மாமிசத்தையும் இரத்தத்தையும் உணவாகக் கொள்பவர்களும், பயங்கரமான தோற்றமுள்ளவர்களும், நிலைதடுமாறிப் போனவர் களுமான அரக்கிகளே! நீங்கள் விரைவில் இவளுடைய செருக்கை அடக்கவேண்டும்.'' (23–26)

மகாகோரமான தோற்றமுடைய அந்த அரக்கியர் கூட்டம், அவனுடைய உத்தரவைக் கேட்டதும் கைகூப்பி வணங்கிவிட்டு, சீதையைச் சூழ்ந்து கொண்டனர். பயங்கரத் தோற்றம் கொண்ட மன்னன் இராவணன், பூமியைப் பிளப்பதைப் போலக் கால்களைத் தூக்கி உதைத்து, அவர்களைப் பார்த்து மீண்டும் கூறினான்— ''சீதையை அசோகவனத்திற்கு அழைத்துச் செல்லுங்கள்; அங்கே இவளைச் சூழ்ந்து கொண்டு மிகவும் ரகசியமாகப் பாதுகாத்துக் கொண்டிருங்கள். இவளை அதட்டி உருட்டி பயமுறுத்துங்கள். பின்னர், இனிய சொற்களால் மகிழ்வுறச் செய்யுங்கள். காட்டிலுள்ள எதற்கும் கட்டுப்படாத பெண்யானையைப் பலவித முறைகளைக் கையாண்டு, அதை வசப்படுத்துவதைப் போல, நீங்களனைவரும் முயன்று மைதிலியை என் வசப்படுத்துங்கள்.'' (27–30)

இராவணனால் இவ்வாறு ஆணையிடப்பட்ட அந்த அரக்கிகள், ஆண்டு முழுவதும் பழம் தரக்கூடிய மரங்களும், பல்வகையான பழம்–புஷ்பம் நிறைந்ததும், எப்போதும் உல்லாச மயக்கத்துடனிருக்கும் பறவைகள் வசிப்பதுமான அசோகவனத்திற்கு மைதிலியை அழைத்துச் சென்றார்கள். அரக்கிகளிடம் அகப்பட்டுவிட்ட ஜனககுமாரி சீதை, பெண்புலிகளிடம் சிக்கிக் கொண்ட பெண்மானைப் போல சோகத்தில் மூழ்கியவளானாள். ஜனகன் திருமகளான மைதிலி, எல்லையில்லாத துக்கத்திற்கு ஆட்பட்டு, உள்ளம் நடுங்கி, வலையில் அகப்பட்டுக் கொண்ட பெண்மானைப் போல ஒரு விநாடிகூட மன அமைதியைப் பெறவில்லை. அழகில்லாத கண்களைக் கொண்ட அவர்களால் மிகவும் மிரட்டப்பட்ட மைதிலி, அவ்விடத்தில் மன அமைதியை அடையவில்லை. தான் வணங்கும் தெய்வமான கணவரையே நினைத்துக் கொண்டிருந்த அவள் பயத்தாலும் சோகத்தாலும் தாக்கப்பட்டு, உணர்விழந்தவள் போலானாள். (31–35)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
ஐம்பத்தாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

இடைச்செருகலான ஸர்க்கம்

இந்திரன், சீதைக்குத் தெய்விக பாயசம் அளித்தல்

இலங்கையில் சீதாப்பிராட்டியார் பிரவேசித்ததும் பேரானந்தமடைந்த பிரும்மா, தேவராஜனான இந்திரனைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார்— (1)

''மூன்று உலகங்களின் நலனுக்காகவும் அரக்கர்களின் அழிவுக்காகவும், தீய எண்ணம் கொண்ட இராவணனால், சீதாதேவி இலங்கைக்குள் கொண்டு செல்லப்பட்டாள். கற்புக்கரசியும் பெருமைமிக்கவளும் எப்போதும் சுகமாக இருந்து பழக்கப்பட்டவளுமான அவள், தற்சமயம் இராமனைக் காண முடியாமல், (மாறாக) சுற்றிச் சூழ்ந்திருக்கும் அரக்கிகளையே காண்கிறாள்! தன் கணவரைப் பார்க்க வேண்டும் என்று துடித்துக் கொண்டிருக்கிறாள். இலங்கை நகரம், கடலால் சூழப்பட்டிருக்கிறது. மாசுமருவற்ற அவள் அங்கே இருப்பதை இராமன் எவ்வாறு அறிவான்? (2–4)

சீதை, துக்கத்திலும் பலவிதக் கவலைகளிலும் மூழ்கியிருக்கிறாள். கணவனால் அறிந்து கொள்ள முடியாத நிலையில் இருக்கிறாள். உணவு எடுத்துக்கொள்ளாத அவள், நிச்சயமாக உயிரைத் துறக்கப் போகிறாள். அவள் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுவிட்டால், நம்முடைய எண்ணம் நிறைவேறுவது சந்தேகம்தான். விரைவில் நீ இங்கிருந்து சென்று, இலங்கை நகருக்குள் நுழைந்து, மங்களம் பொருந்திய முகமுடைய சீதையைப் பார்த்து உத்தமமான ஹவிஸைக் கொடு.'' இவ்வாறு கூறப்பட்ட தேவ மன்னனான இந்திரன், தன்னுடன் நித்ராதேவியை அழைத்துக் கொண்டு இராவணனால் பரிபாலிக்கப்படும் அந்த நகருக்கு வந்து சேர்ந்தான். நித்ராதேவியைப் பார்த்து, ''நீ உள்ளே சென்று, அரக்கர்களை மயக்கத்தில் ஆழ்த்து'' என்றான். இவ்வாறு இந்திரனால் கூறப்பட்ட நித்ராதேவி மிகவும் களிப்படைந்து, தேவர்களின் எண்ணம் ஈடேறும்பொருட்டு அரக்கர்களை உறக்கத்தில் ஆழ்த்தினாள். (5–8)

இதனிடையே, ஆயிரம் கண் படைத்தவனும் சசீதேவியின் கணவனுமான இந்திரன், காட்டிலிருக்கும் சீதையிடம் வந்து, பின்வருமாறு கூறினான்— ''நற்புன்னகையாளே! தங்களுக்கு நலன் உண்டாகட்டும். நான் தேவராஜன் வந்திருக்கிறேன். பெருவீரரான இராமனுடைய நோக்கம் நிறைவேற வேண்டும் (தாங்கள் அரக்கர் பிடியிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும்) என்பதற்காக, நான் உதவி செய்ய விரும்புகிறேன். ஜனகர் புதல்வியே! தாங்கள் துயரப்பட வேண்டாம். என் அருளினால், பெரும் படையுடன் பெருங்கடலைக் கடந்து, அவர் வரப்போகிறார். நல்லணங்கே! என்னுடைய மாயா சக்தியினால், இங்குள்ள அரக்கிகளை மயங்கிக் கிடக்கச் செய்திருக்கிறேன். (9–12)

வைதேகி! உயர்ந்த உணவான இந்த ஹவிஸை எடுத்துக்கொண்டு, நித்ராதேவியுடன் நான் இங்கே வந்திருக்கிறேன். நல்நங்காய்! அழகியவளே! என் கைகளிலிருந்து இந்த ஹவிஸ் உணவையேற்று உட்கொண்டால், பதினாயிரம் ஆண்டுகளுக்குப் பசியும் தாகமும் தங்களை வருத்தமாட்டா.'' இவ்வாறு தேவேந்திரனால் கூறப்பட்டதும், அவள் சந்தேகப்பட்டு அவனிடம் கூறினாள்— ''சசீதேவியின் கணவனான தேவேந்திரன்தான் இங்கே வந்திருப்பது என்பதை நான் எவ்வாறு நம்புவேன்? தேவேந்திரனே! இராம–லட்சுமணர்களுடன் இருக்கும்போது தேவதைகளின் உடல் தோற்றத்தை, என் கண்களால் பார்த்திருக்கிறேன். நீ, உண்மையிலேயே தேவர்களின் மன்னன் என்றால், உன் தேவதா ஸ்வரூபத்தைக் காட்டு.'' (13–16)

சீதையின் சொற்களைக் கேட்ட இந்திரன் அவ்வாறே செய்தான். தரையில் படாமல் அந்தரத்தில் நிற்கும் கால்கள்; இமைகொட்டாத கண்கள்; அழுக்குப்படியாத ஆடை; வாடாத மலர்மாலை! இந்த லட்சணங்களைக் கண்டு, அவன் இந்திரன்தான் என்று உணர்ந்து, சீதை மிகவும் மகிழ்ச்சியடைந்தாள். இராகவனை எண்ணி துக்கத்துடன் அழுது கொண்டு, ''தம்பியோடு கூடிய பெருந்தோளரான இராமனுடைய பெயர் அதிருஷ்டவசமாக இன்று என் செவிகளில் விழுந்தது'' என்றாள். ''மாமன்னரான என் மாமனாரைப் போலவும், (தந்தையாகிய) மிதிலை மன்னரைப் போலவும், நான் உன்னை இப்போது பார்க்கிறேன். (துணைக்கு) நீ வந்திருப்பதால், என் கணவர், ஓர் உற்றாரோடு இருக்கிறார் (என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது). தேவேந்திரனே! ரகு பரம்பரையை வளர்க்கக் கூடியதும், உன்னால் கொடுக்கப்பட்டதுமான இந்த பாலன்னத்தை, நீ கேட்டுக் கொண்டபடி நான் புசிக்கிறேன்.'' (17–21)

இந்திரனுடைய கரங்களிலிருந்து அந்தப் பாலன்னத்தைப் பெற்றுக்கொண்ட சீதை, மனத்திற்குள்ளே, தன் கணவருக்கும் மைத்துனருக்கும் படைத்தாள். ''மகாபலம் பொருந்திய என் கணவர், தன் சகோதரரோடு உயிருடன் இருப்பாரேயானால், நான் வணக்கத்துடன் சமர்ப்பிக்கும் இந்த உணவு அவர்களைச் சென்றடையட்டும்'' என்று சொல்லிவிட்டு, அந்தப் பாயசத்தை அவள் பருகினாள். (22,23)

பேரழகியான அவள், இவ்வாறாக அந்த ஹவிஷ்யான்னத்தை உண்டு, பசி–தாகம் முதலியவற்றால் ஏற்படும் துக்கத்தைத் துறந்தாள். காகுத்தர்கள் பற்றிய சில விபரங்களை இந்திரனிடமிருந்து அறிந்து கொண்ட அவள், உவகை அடைந்தாள். இராமனுடைய முயற்சி வெற்றியடைய வேண்டும் என்பதற்காக இவ்வாறு செய்ததனால் மனத்திருப்தியடைந்த இந்திரன், சீதையிடம் விடைபெற்றுக் கொண்டு, நித்ராதேவியுடன் தன் இருப்பிடமான தேவலோகத்தைச் சென்றடைந்தான். (24,25)

**ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
இடைச்செருகலான ஸர்க்கம் முற்றிற்று.**

ஸர்க்கம் : ஐம்பத்தேழு

இராமன், பர்ணசாலைக்குத் திரும்பி வருதல்

விரும்பியவண்ணம் உருவம் எடுக்கக் கூடியவனும், (தற்போது) மான் உருவம் எடுத்துத் திரிந்து கொண்டிருந்தவனுமான அரக்கன் மாரீசனைக் கொன்றுவிட்டு, ஆசிரமத்திற்குச் செல்லும் பாதையில் இராமன் வேகமாகத் திரும்பி வந்து கொண்டிருந்தார். சீதையைப் பார்க்கத் துடிக்கும் மனத்துடன் விரைவாக வந்து கொண்டிருந்த அவருக்குப் பின்னால், ஒரு நரி கோரமாக ஊளையிட்டது. (ஒருவனுடைய பின்பக்கத்தில் ஒரு நரி ஊளையிடுவது துர்நிமித்தம்.) உரோமச் சிலிர்ப்பை உண்டாக்குவதும் பயத்தை விளைவிப்பதுமான அந்த நரியின் ஊளையைக் கேட்டு, (சீதையின் பாதுகாப்புக் குறித்து) சந்தேகம் தோன்றி, அவர் ஆழ்ந்த கவலை வயப்பட்டார். (1–3)

'நரி ஏனோ இப்படி ஊளையிடுகிறது? இதனால், ஏதோ ஆபத்து ஏற்படப் போகிறது என்று எண்ணுகிறேன். வைதேகி, அரக்கர்களால் விழுங்கப்படாமல் சௌக்கியமாக இருக்க வேண்டும். மான் உருவம் கொண்டிருந்த மாரீசன், வேண்டுமென்றே, நான் ஆபத்தில் இருப்பதைப் போல் என் குரலில் இரைந்து கத்தினானே? ஒருவேளை அதை லட்சுமணன் கேட்டிருப்பானோ? லட்சுமணன், (மாரீசனின்) ஓலத்தைக் கேட்டு, சீதையைத் தனியே விட்டுவிட்டு, அவளால் அனுப்பப்பட்டு, என்னை நோக்கி இந்த இடத்திற்கு விரைவில் வந்துவிடப் போகிறான். அரக்கர்கள் எல்லோரும் சீதை கொல்லப்படுவதை விரும்புகிறார்கள். அதனால்தான், மாரீசன் பொன்மான் உருவம் கொண்டு, ஆசிரமத்திலிருந்து வெகுதூரத்திற்கு அப்பால் என்னைக் கொண்டு சென்றான். அதனால்தான், என் அம்புகளால் மாய்க்கப்பட்டதும், அரக்க உருவம் பெற்று, 'தம்பி லட்சுமணா! நான் செத்தேன்!' என்று உரத்த குரலில் கூவினான். (4–8)

காட்டில் (ஆசிரமத்தில்), என்னை விட்டுப் பிரிந்திருக்கும் அவர்கள் இருவரும் எப்படியாவது க்ஷேமமாக இருக்கவேண்டும். ஜனஸ்தானத்தில் நான் வசிப்பதன் காரணமாக, அரக்கர்களுக்கு என்னிடம் பகைமை இருக்கிறது. பயங்கரமான அபசகுனங்கள் ஏராளமாக இப்போது ஏற்படுகின்றன' என்று எண்ணியவாறே நடந்த ரகுகுலதிலகமாகிய இராமன், நரிகளின் ஊளையைக் கேட்டார். மான் உருவம் கொண்ட அரக்கனால், தான் வெகுதூரத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டதையும் நினைத்து, மிகவும் சந்தேகம் கொண்ட உள்ளத்துடன் ஜனஸ்தானத்தை நோக்கித் திரும்பி வந்து கொண்டிருந்தார். அவருடைய மனம் மிகவும் வேதனையில் ஆழ்ந்திருந்தது. அவர் மிகவும்

இரங்கத்தக்க நிலையில் இருந்தார். அச்சமயம் விலங்குகளும் பறவைகளும் பெருவீரரான அவருக்கு இடதுபுறமாகச் சென்று, துயரம் எதிர்நோக்கியிருப்பதைக் குறிக்கும் வகையில், பயங்கரமான ஒலிகளை எழுப்பின. (9–12)

பயங்கரமான துர்நிமித்தங்களைக் கண்டு, தன்னுடைய ஆசிரமத்தை நோக்கி வெகுவேகமாகத் திரும்பினார், இராகவன். இராமன், பெண்குலத்தின் திலகம் போன்ற சீதையையும், மகாபலம் பொருந்திய இலக்குவனையும் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டே ஜனஸ்தானத்தை நோக்கி வந்து கொண்டிருந்தார். அப்போது, ஒளியிழந்த முகத்துடன் லட்சுமணன் வந்து கொண்டிருப்பதைப் பார்த்தார். அப்பொழுது, துக்கத்தால் முகம் வாடியிருந்த லட்சுமணன், கவலையால் உள்ளம் தவித்து, சுண்டிப்போன முகத்துடன் இருக்கும் இராமனை, அருகில் சென்று சந்தித்தான். அரக்கர்கள் நடமாடுவதும், வேறு மக்கள் இல்லாததுமான காட்டில் சீதையைத் தன்னந்தனியாக விட்டுவிட்டு வந்திருக்கும் லட்சுமணனைப் பார்த்ததும், இராமன் அவனைக் கடிந்து கொண்டார். (13–16)

இராமன், லட்சுமணனின் இடது கையைப் பற்றிக் கொண்டு, மிகவும் விசனத்துடன், கடுமையான பொருள் பொதிந்த வார்த்தைகளை இனிமையாகக் கூறினார்— "அன்பார்ந்த லட்சுமணா! சீதையைத் தனியே விட்டுவிட்டு, நீ இங்கே வந்திருப்பது மிகவும் கண்டிக்கத்தக்கது. அச்சோ! என்ன தவறு செய்துவிட்டாய்? ஆசிரமத்தில் அவள் இருப்பாள் என்பது சந்தேகமே. வீரனே! பல்வகையான அபசகுனங்களே தோன்றுவதால், காட்டில் வாழும் அரக்கர்களால் ஜனககுமாரியான சீதை கவர்ந்து செல்லப்பட்டிருப்பாள் அல்லது கொன்று தின்றுவிடப்பட்டிருப்பாள். இதில், எனக்குக் கடுகளவுகூடச் சந்தேகம் இல்லை. தலைசிறந்த வீரனே! லட்சுமணா! ஜனகருடைய திருமகளாகிய சீதையை, உயிருடனும் தீங்கு ஏதும் ஏற்படாதவளுமாக நாம் காண்போமா? (17–20)

பேராற்றல் உடையவனே! மான் கூட்டங்களும், ஒரு நரியும் (பல நரிகளின் ஊளைக்குரல் அபசகுனம் அல்ல), பறவைகளும் சூரிய ஒளியினால் மிகவும் பிரகாசமாக விளங்கும் திசையை நோக்கியே மிகப் பரிதாபமாகக் குரல் எழுப்புகின்றன. (சூரியனை நோக்கிக் குரல் கொடுப்பது நற்சகுனம் அல்ல.) ஆகவே, மன்னர்மகளாகிய அவள் சௌக்கியமாக இருப்பாள் என்று தோன்றவில்லை. இந்தப் பொன்மானாக உருவெடுத்த அரக்கன், என்னை வெகுதூரம் பின்தொடர்ந்து வரச்செய்து, ஆசை காட்டி, (அதனை லட்சியப்படுத்தி அம்புவிட முடியாமல் துள்ளி, வளைந்து ஓடி) மிகுந்த முயற்சியின் பேரில் என்னால் கொல்லப்பட்டான். அவன் சாகும்போது அரக்கனாக ஆனான். இப்போது என் மனம் அமைதியிழந்து, நொந்து போய்க் கிடக்கிறது; இடது கண் துடிக்கிறது. லட்சுமணா! சீதை (ஆசிரமத்தில்) இருக்கமாட்டாள் என்பதில் ஐயமில்லை. அவள் மாண்டு போயிருப்பாள் அல்லது திருடிக் கொண்டு போகப்பட்டிருப்பாள் அல்லது துன்பமான நிலையில் நடுவழியில் தத்தளித்துக் கொண்டிருப்பாள்." (21–23)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
ஐம்பத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்தெட்டு

இராமனின் பிரலாபம்

தசரதன் புதல்வனான இலக்குவன், சீதையைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு வராமலும், மனம் வாடி, ஒளியிழந்து இருப்பதையும் கண்டு, அறத்தின் நாயகனான இராமன், அவனைக் கேட்டார்— (1)

''லட்சுமணா! என்னைப் பின்தொடர்ந்து தண்டகாரண்யத்திற்குப் புறப்பட்டு வந்தவள் எவளோ, அவளை(த் தனியே) விட்டுவிட்டு இங்கு வந்திருக்கிறாயே? அந்த ஜானகி இப்போது எங்கே இருக்கிறாள்? நாட்டிலிருந்து துரத்தப்பட்டு, நொந்த மனத்துடன் தண்டகாரண்யத்தில் கால்நடையாகத் திரிந்து கொண்டிருக்கும் எனக்குத் துக்கம் மேலிடும் காலங்களில் ஆறுதலளிக்கும் இடையழகியான வைதேகி எங்கே? எவள் இல்லாமல் சிறிதுநேரம்கூட நான் உயிர்வாழ விரும்பேனோ, அப்படிப்பட்ட உயிர்த்துணையான, தேவமங்கை போன்ற என்னுடைய மனைவி சீதை எங்கே? (2–4)

லட்சுமணா! உருக்கி வார்க்கப்பட்ட தங்கப் பொலிவுடன் விளங்கும் சீதை இல்லாமல், தேவர்களுக்கோ மண்ணுலகிற்கோ நிகரில்லா அரசனாவதையும் நான் விரும்பமாட்டேன். என் உயிரைக் காட்டிலும் பிரியமான வைதேகி இன்னும் உயிரோடு இருப்பாளா? தம்பி! நான் நாடு கடத்தப்பட்டு, 'பதிநான்கு ஆண்டுகள் காட்டில் வாழ்வேன்' என்று கூறிய உறுதிமொழி பொய்யாகப் போகாமல் இருக்குமா? (சீதையை இழந்த துக்கத்தினால் நானும் உயிரை விட்டுவிட்டால், என் சபதம் என்னவாகும்?) லட்சுமணா! சீதையைப் பிரிந்ததனால் நான் உயிரைத் துறக்கவே, நீ தனியாக அயோத்திக்குத் திரும்பிச் சென்றால், கைகேயி அம்மையார் தன் விருப்பம் கைகூடியவராக மனத்திருப்தி அடையப் போகிறாரோ? தனயனை இழந்து, தபஸ்வியான அன்னை கௌசல்யை, தன் புதல்வனுக்கு அகண்டமான ராஜ்யம் கிடைத்துவிட்டதால், தன் எண்ணம் நிறைவேற்றப்பட்டுவிட்ட கைகேயியின் முன் பணிந்து நிற்க வேண்டியிருக்குமோ? (5–8)

லட்சுமணா! விதேக மன்னர் புதல்வியான சீதை உயிருடன் இருந்தால் மட்டுமே, நான் ஆசிரமத்திற்குள் அடியெடுத்து வைப்பேன். நற்குணங்கள் நிரம்பிய அவள் மாண்டுபோயிருந்தால், நானும் என் உயிரை விட்டுவிடுவேன். நான் ஆசிரமத்தின் நுழைவாயிலை அடைந்ததும், வைதேகி சிரித்த முகத்துடன் வந்து என்னை எதிர்கொண்டழைத்துப் பேசவில்லையென்றால், நான் உயிரை விட்டுவிடுவேன். லட்சுமணா! சீதை உயிருடன் இருக்கிறாளா, இல்லையா? சொல். உன்னுடைய கவனக்குறைவு காரணமாக, இரக்கத்திற்குரியவளான சீதை, அரக்கர்களால் புசிக்கப்பட்டிருப்பாளோ? மென்மையான உடல்; கள்ளங்கபடில்லாத மனம்; இதுவரை துக்கம் என்பதைச் சிறிதளவும் அனுபவித்தறியாதவள்! ஜானகி, என்னுடைய பிரிவினால் மனம் வாடித் தளர்ந்து இடைவிடாது வருந்திக் கொண்டிருப்பாள் என்பது திண்ணம். (9–12)

நயவஞ்சகனும் மிகவும் கொடியவனுமான அரக்கன், 'ஹா, லட்சுமணா' என்று உரத்த குரலில் அழைத்ததைக் கேட்டதும் நிச்சயமாக உனக்கும் பயம் ஏற்பட்டிருக்கும். என்னுடையதைப் போன்றதான அந்தக் குரலைக் கேட்டதும் பயந்து போன சீதையால் அனுப்பப்பட்டு, என்னைப் பார்ப்பதற்காக நீ வேகமாக வந்திருக்கிறாய் என்று ஊகிக்கிறேன். எது எப்படியோ போகட்டும். ஆனால், காட்டில் சீதையைத் தனியே விட்டுவிட்டு வந்திருக்கிறாயே, அது மிகவும் தவறு. (ஏனென்றால்,) அரக்கர்கள் பழிதீர்த்துக் கொள்வதற்கு வாய்ப்புக் கொடுத்தாற்போல் ஆகிவிட்டது. (13–15)

மாமிசபட்சிணிகளான அரக்கர்கள், கரன் கொல்லப்பட்டதால் மனம் கொதித்துக் கொண்டிருந்தார்கள். பயங்கரமான செயல்களைப் புரியும் அவர்களால் சீதை கொல்லப் பட்டிருப்பாள் என்பதில் சந்தேகமில்லை. பகைவர்களை அடக்குபவனே! நான் எல்லா வகையாலும் துக்கச் சாகரத்தில் மூழ்கியிருக்கிறேன். இத்தகைய பெருந்துயரத்தை அனுபவிக்க வேண்டியது என் தலைவிதி என்று எண்ணுகிறேன். இப்போது நான் என்னதான் செய்வேன்?'' இவ்வாறு பேரழகியான சீதையைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டே, இலக்குவனோடு வேகமாக ஜனஸ்தானத்தை வந்தடைந்தார். (16–18)

மாவீரரான அவர், துன்பத்தில் ஆழ்ந்திருக்கும் தம்பியைக் கடிந்து பேசிவிட்டு, பசி–களைப்பு–தாகத்தால் வருந்தி, பெருமூச்சுவிட்டபடியே ஆசிரம வாயிலை அடைந்து, அங்கே ஆள்–அரவம் இல்லாததால் (அங்கே சீதையைக் காணாததால்) முகம் சுண்டிப்போய்,

ஒளிகுன்றி, தன் ஆசிரமத்திற்குள் நுழைந்து, எல்லாவிடங்களிலும் தேடிப் பார்த்தும் அவள் தென்படாததால், உல்லாசமாக விளையாடிக் களிக்கும் இடங்களிலும், காலாற சுற்றிவரும் இடங்களிலும் தேடிப் பார்த்துவிட்டு, 'நான் நினைத்தபடியே ஆகிவிட்டதே?' என்று வருத்தத்துடன் கூறி, மயிர்க்கூச்செறிந்து துயரத்தில் மூழ்கினார். (19,20)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
ஐம்பத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்தொன்பது

இலக்குவனைக் கடிந்து பேசுதல்

(முன் ஸர்க்கத்தில் சொல்லப்பட்ட விஷயமே, இந்த ஸர்க்கத்தில் விரிவாக மறுபடியும் கூறப்படுகிறது.)

அப்போது, (சீதையின் சுடுசொற்களைக் கேட்டு) ஆசிரமத்திலிருந்து புறப்பட்டு வந்து கொண்டிருக்கும் லட்சுமணனைக் கண்டதும் ரகுகுல திலகமான இராமன், மிகவும் மனவருத்தம் அடைந்து பின்வருமாறு கேட்டார்— "உன்மேல் (கவனமாகப் பாதுகாப்பாய் என்ற) நம்பிக்கை வைத்து, மைதிலியைக் காட்டில் தனியே விட்டுவிட்டு வந்தேன். நீ, அவளைத் தனியாக விட்டுவிட்டு இங்கே ஏன் வந்தாய்?" என்று அவனைக் கேட்டார். "லட்சுமணா! மைதிலியை விட்டுவிட்டு வந்துள்ள உன்னை(த் தூரத்தில்) பார்த்ததுமே, எந்தப் பெரும் ஆபத்தைக் குறித்து, என் உள்ளத்தில் கலக்கம் ஏற்பட்டிருந்ததோ, அது உண்மைதான் என்று தோன்றியது. லட்சுமணா! சீதை இல்லாமல் நீ மட்டும் வந்து கொண்டிருப்பதைத் தொலைவிலிருந்து பார்த்ததும் என் இடதுகண் துடித்தது; இடது தோளும் இதயமும் துடிக்கின்றன." (1–4)

இவ்வாறு இராமன் சொல்லி முடித்ததும், குணசாலியும் சுமித்திரையின் நற்புதல்வனுமான லட்சுமணன், முன்னிலும் அதிகமாகத் துக்கத்தில் மூழ்கி, துக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இராமனைப் பார்த்துப் பின்வருமாறு பதிலுரைத்தான்— "அண்ணா! நான், என் விருப்பப்படி பிராட்டியாரைத் தனியே விட்டுவிட்டு வந்துவிடவில்லை. பிராட்டியாரின் கடுமையான சொற்களால் துரத்தப்பட்டே உங்களை நோக்கி இங்கு வந்தேன். யாரோ ஒருவரால், 'ஹா, சீதே!...' என்றும், 'லட்சுமணா!... காப்பாற்று...' என்றும் உங்களுடைய குரலில் எழுப்பப்பட்ட ஒலி மைதிலியின் செவிகளில் விழுந்தது. அந்தக் துயரக் குரலைக் கேட்ட பிராட்டியார், உங்களிடத்திலுள்ள பேரன்பினால், அஞ்சித் தவித்து, கண்ணீர்விட்டு அழுது, என்னைப் பார்த்து, 'போ, போ' என்று சொன்னார். (5–8)

அவர், 'போ, போ' என்று பலமுறை என்னைத் தூண்டிவிட்டார். அப்போது (அவருக்கு நம்பிக்கை ஏற்படும்படியாக,) உங்கள் வீரப்பிரதாபங்களை விளக்கிப் பதில் கூறினேன். அவருக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடிய ஓர் அரக்கனை, நான் இதுவரை கண்டதில்லை. எனவே, இந்த விஷயத்தை (இந்தத் துயரக்குரலை)ப் பொருட்படுத்த வேண்டாம். எவனோ ஒருவன் இவ்வாறு குரல் எழுப்பியிருக்கிறான்; (நீங்கள்) கவலைப்படாமல் இருங்கள். அம்மையே! (அவர்) தேவர்களையும்கூடக் காப்பாற்றக்கூடிய புருஷோத்தமர். இழிவைத் தருவதும் அச்சத்தைப் புலப்படுத்துவதுமான, 'என்னைக் காப்பாற்று' என்ற சொற்களை எவ்வாறு கூறுவார்? மங்களமானவரே! யாரோ ஓர் அரக்கனால் ஏதோ ஒரு காரணத்திற்காக, என் சகோதரருடைய குரலில், 'காப்பாற்று, காப்பாற்று' என்ற சொற்கள் கூறப்பட்டுள்ளன. (9–12)

'லட்சுமணா! என்னைக் காப்பாற்று' என்று உரத்த குரலில் கூறப்பட்டதைக் கேட்டு, பாமரப் பெண்களைப் போல், பெருந்தேவியாரான தாங்கள் கலவரம் அடையக்கூடாது. மனக்கலக்கத்தில் ஆழ்ந்தது போதும்; சாந்தம் அடையுங்கள்; சஞ்சலத்தை அகற்றுங்கள். மூன்று உலகங்களிலும்

இராமனைப் போர்க்களத்தில் எதிர்கொள்ளக்கூடியவர் எவருமிலர். போரில் இராமனைத் தோற்கடிக்கக் கூடியவன் இதுவரை பிறக்கவில்லை; இனியும் பிறக்கப் போவதில்லை! இந்திரனைத் தலைவனாகக் கொண்டிருக்கும் தேவர்களாலும் இராமன் யுத்தத்தில் வெல்லப்பட முடியாதவர். இவ்வாறு என்னால் கூறப்பட்டதும், முற்றிலும் உள்ளம் கலங்கியிருந்த சீதாப்பிராட்டியார், கண்ணீரைப் பெருகவிட்டுக் கொண்டு, என்னைப் பார்த்துக் கடுமையான சொற்களைக் கூறினார்— (13–16)

'உன் மனத்தில், என் விஷயமாக பாவகரமான எண்ணம் குடிகொண்டிருக்கிறது. உன் சகோதரர் மாண்டுபோனதும் என்னை அடைய விரும்புகிறாய். ஆனால், நீ என்னை அடைய மாட்டாய். பரதனுடைய (ரகசியத்) தூண்டுதலின்படி, (உள்நோக்கத்தோடு) ஸ்ரீராமனைப் பின்தொடர்ந்து வந்திருக்கிறாய். (அதனால்தான்) தீனமான குரலில் அவர் அழைத்துக் கொண்டிருக்கவும், நீ அவரைக் காப்பாற்றப் போகாமலிருக்கிறாய். நீ ஒரு வெளிவேஷக்காரன்; (எங்கள்) பகைவன். நீ, என்னை அடையும் பொருட்டாகவே அவரைப் பின்தொடர்ந்து வந்திருக்கிறாய். அதனால்தான், (ஆபத்தில் சிக்கித் தவிக்கும்) அவரைக் காப்பாற்றப் போகாமல் இருக்கிறாய்.' இவ்வாறு, விதேக மன்னர் புதல்வியால் நிந்திக்கப்பட்ட எனக்கு ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது; கண்கள் சிவந்தன; உதடுகள் துடித்தன. அந்த நிலையிலேயே ஆசிரமத்திலிருந்து வெளியே வந்தேன்.'' (17–20)

இவ்வாறு சொல்லி முடித்த சுமித்திராநந்தனைப் பார்த்து, சொல்லொணா வேதனையால் மனம் மயங்கியிருந்த இராமன், ''தம்பி! அவள் இல்லாமல் (அவளையும் உன்னுடன் அழைத்துக் கொண்டு வராமல்) நீ வந்தது பெரும் தவறு. அரக்கர்களை என்னால் சமாளிக்க முடியும் என்பதை அறிந்திருந்தும், சீதை கோபத்துடன் சொன்ன சொற்களைக் கேட்டு, (அதற்கு மதிப்புக் கொடுத்து) நீ வெளியே வந்திருக்கிறாயே? கோபத்தில் சொல்லப்பட்ட கடுமையான சொற்களைக் கேட்டு, (அதனால் நீயும் சினம் கொண்டு) மைதிலியைத் தனியே விட்டுவிட்டு, நீ இங்கு வந்திருக்கிறாயே? (இது தவறு. 'உங்களைக் காப்பாற்றத்தானே வந்தேன்' – என்று கூறினால்,) இதற்காக நான் உன்னுடைய இந்தச் செயலால் திருப்தியடையவில்லை. சீதையின் கடுமையான சொற்களால் மனம் புண்ணாகி, ஆத்திரத்தின் வசப்பட்டு, என் உத்தரவை மீறியிருக்கிறாய். எப்படிப் பார்த்தாலும் உனது இந்தச் செயல் நியாயமானது அல்ல. (21–24)

எந்த அரக்கன் மான்வேடம் ஏற்று ஆசிரமத்திலிருந்து என்னை வெகுதூரத்திற்கு இழுத்துச் சென்றானோ, அவன் என் அம்பினால் அடிபட்டு மாண்டு கிடக்கிறான். வில்லை வளைத்து, அம்பைத் தொடுத்து, வெகு எளிதாக என்னால் விடப்பட்ட பாணத்தால் தாக்கப்பட்டு, மான் உருவத்தை விட்டு, புஜங்களில் தோள்வளை அணிந்த அரக்கனாக மாறிய அவன், வேதனை நிறைந்த குரலுடையவன் ஆனான். அப்போது, அம்பினால் வீழ்த்தப்பட்ட அவன், என்னுடையதைப் போன்ற குரலில், ஆபத்தை உணர்த்தும் சொற்களைக் கூறினான். கேட்பவருக்கு அச்சத்தை உண்டாக்கும் அந்த சொற்கள், தொலைவில் இருப்பவர்களுக்கும் கேட்கும்படியாக, உரத்த குரலில் கூவப்பட்டன. அதைக் கேட்டதனால், மைதிலியைத் தனியாக விட்டுவிட்டு நீ வந்து சேர்ந்திருக்கிறாய்.'' (25–27)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
ஐம்பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபது

இராமனின் மதிமயக்கம்

(ஆசிரமத்தை நோக்கித்) திரும்பி வந்து கொண்டிருந்த அவருடைய இடதுகண் கீழ் இமை வேகமாகத் துடித்தது. இராமன் தடுமாறினார். அவருக்கு உடல் நடுக்கமும் உண்டாயிற்று. அவர்

துர்நிமித்தங்களைக் கண்டு, 'சீதை சௌக்கியமாக இருப்பாளா?' என்று பலதடவை வாய்விட்டுப் புலம்பினார். சீதையைக் காணவேண்டும் என்ற அடங்காதத் துடிப்புடன், அவர் வெகுவேகமாகச் சென்றார். பர்ணசாலை ஆளரவம் இல்லாமல் இருப்பதைக் கண்டு மனம் கொதித்தார். ரகுநந்தனரான இராமன், மனம் சிதறி, ஆத்திரமடைந்து ஓலைக்குடிலைச் சுற்றிச் சுற்றி, நாற்புறத்திலும் அங்குமிங்கும் தேடிப் பார்த்தார். சீதை இல்லாத பர்ணசாலை, பனிக்காலத்துத் தாமரையோடை போல் அழகை இழந்து வெறுமையாகக் காணப்பட்டது. (1–5)

சீதை இல்லாததால், பர்ணசாலையின் உள்ளேயும் வெளியேயும் அந்தப் பிரதேசத்திலிருந்த மரங்கள் அழுது கொண்டிருப்பதைப் போலிருந்தது. மலர்களும் மான்களும் பறவைகளும் மனம் வாடிப் போயிருந்தன. வனதேவதைகள் அந்த இடத்தைத் துறந்து வெளியேறிவிட்டன. அந்த இடம் ஒளியிழந்து அலங்கோலமாகக் காணப்பட்டது. மான்தோல், தருப்பம் முதலியன சிதறிக் கிடந்தன. ஆசனங்கள் தாறுமாறாக வீசப்பட்டிருந்தன. இவைகளைக் கண்டு மிகவும் மனவேதனையுடன் (இராமன்) மிகவும் புலம்பினார். "அவள் திருடிக்கொண்டு போகப் பட்டிருப்பாளோ? உயிரை விட்டிருப்பாளோ? வழி தவறி காணாமற்போய்விட்டாளோ? அல்லது (விளையாட்டாக) மறைந்து கொண்டிருக்கிறாளோ? அல்லது காட்டின் உட்பகுதிக்குச் சென்றிருக்கிறாளோ? இன்னும் கொஞ்சம் மலர்களையும் பழங்களையும் பறிப்பதற்காகப் போயிருப்பாளோ? அல்லது தண்ணீர் கொண்டு வருவதற்காகத் தாமரைத் தடாகம் அல்லது (கோதாவரி) ஆற்றை நோக்கிப் போயிருக்கிறாளோ?" (6–9)

மிகவும் பிரயத்தனப்பட்டுத் தேடியும், அன்பிற்குரிய மனைவியைக் கண்டாரில்லை. மனம் வெகுண்டதால் கண்கள் சிவந்தன. சோகம் தாங்காமல் மதியிழந்தவர் போல் அவர் காணப்பட்டார். எல்லையில்லாத் துயரம் என்னும் சேற்றுக் கடலில் மூழ்கிய அவர், புலம்பிக் கொண்டே ஒரு மரத்திலிருந்து மற்றொரு மரத்திற்கும், ஒரு குன்றிலிருந்து மற்றொரு சிகரத்திற்கும், ஓர் ஆற்றிலிருந்து வேறோர் ஆற்றிற்குமாக அலைந்து திரிந்தார். (10,11)

"கதம்ப மரமே! கதம்ப மலரில் ஆசையுள்ள அவளை நீ பார்த்தாயா? அழகான முகமுடைய சீதை இருக்குமிடத்தை நீ அறிவாயாகில் எனக்குச் சொல். வில்வ மரமே! தளிர் இலை போல் மனத்தில் ஒட்டிக் கொள்ளும் பிரகாசம்; மஞ்சள் நிறப்பட்டாடை; வில்வப் பழம் போன்ற மார்பகங்கள். இவளை நீ பார்த்திருந்தால், எனக்குக் கூறு. மருத மரமே! நீயாவது சொல். மருதமலரிடம் பிரியமுள்ள அவளைப் பற்றிச் சொல். ஜனகருடைய புதல்வி; பயந்த சுபாவமுடையவள்; உயிருடன் இருக்கிறாளா? இல்லையா? மருத மரமே! (ககுப மரமே!) பெண்களின் தொடை போன்ற தண்டை உடைய நீ, பிரசித்தமான மைதிலியை நன்றாக அறிவாய். இந்த மரம், தளிர்–மலர்களுடன் கண்ணைக் கவர்கிறது. (மைதிலியைப் பற்றித் தெரிந்திருந்தும் பதில் சொல்லாமலிருக்கிறதே?) மரங்களிற்சிறந்த இந்தத் திலக மரத்தைச் சுற்றி வண்டுகள் ரீங்காரம் செய்கின்றன. திலகத்தில் ஆசையுள்ள அவளைப் பற்றி, இந்த மரம் தெளிவாகத் தெரிந்து கொண்டிருக்கிறது. (தெரிந்து கொண்டிருக்க வேண்டும். ஆனால், பதில் சொல்ல மறுக்கிறதே!) (12–16)

சோகத்தைப் போக்கும் அசோக மரமே! இப்பொழுதே என் அன்பிற்குரிய மனைவியை எனக்குக் காட்டு. (அவள் இருக்கும் இடத்தைக் கூறு.) சோகத்தால் தவிக்கும் மனமுடைய என்னை, உன் பெயருக்கு ஏற்றாற்போல் (அசோகனாக) சோகமில்லாதவனாக ஆக்கிவிடு. பனை மரமே! நன்றாகப் பழுத்த பனம் பழங்களைப் போன்ற கொங்கைகளையுடைய அவளை நீ பார்த்திருந்தால், உனக்கு என்னிடம் இரக்கம் இருந்தால், பெண் குலத்தின் இரத்தினம் போன்ற அவளைப் பற்றிக் கூறுவாய். நாவல் மரமே! நீ, தங்கம் போல் தகதகக்கும் சீதையைப் பார்த்தாயா? என்னுடைய பிரியமான மனைவியைப் பற்றி நீ ஏதேனும் அறிந்திருந்தால், ('உண்மையைக் கூறினால் எனக்கு என்ன ஆபத்து வருமோ?' என்ற) ஐயப்பாடு ஏதுமில்லாமல்

என்னிடம் தெரிவிப்பாய். ஓ சரக்கொன்றை மரமே! இப்போது ஏராளமான மலர்களுடன் நீ வெகு அழகாக விளங்குகிறாய். என் மனைவி கொன்றை மலரில் ஆசையுள்ளவள்; நற்குணச் செல்வி. அவளைப் பார்த்திருந்தால், அதை விபரமாகக் கூறு.'' (17–20)

உலகப் புகழ் பெற்றவரும், எல்லோராலும் விரும்பப்படுபவருமான இராமன், காட்டிலிருந்த மா, கடம்பு, பெரிய ஆச்சா மரங்கள், பலா மரங்கள், மருதாணி மற்றும் மாதுளை மரங்களையும், மல்லிகை–முல்லைக் கொடிகளையும், சம்பகம் மற்றும் தாழம்பூ புதர்களிடையேயும் சென்று சீதையைத் தேடிப் பார்த்து, அவைகளைக் கேட்டுக் கொண்டே, அறிவு கலங்கிப் பித்துப் பிடித்தவர் போல் காணப்பட்டார். (21,22)

''மானே! (மரங்கள், பதில் சொல்ல மறுக்கின்றன.) நீயாவது பதில் சொல். மான்விழியுடைய மைதிலியை நீ அறிவாயா? (நீ இப்போது பார்த்தாயா?) என் மனைவியின் கண்களும் மான்குட்டியினுடையதைப் போன்றே இருக்கும். அதனால், பெண்மான்கள் கூட்டத்தில் அவளும் இருக்கிறாளோ? உயர் குலத்தில் உதித்த யானையே! நீ, யானையின் துதிக்கை போன்ற தொடைகளையுடைய அவளைப் பார்த்திருக்கலாம். அவள் எங்கே இருக்கிறாள்? என்பது உனக்குத் தெரிந்திருக்கும். அதை எனக்குக் கூறு. புலியே! நீ, பூரணசந்திரனைப் போன்ற முகமுடைய என் மனைவி மைதிலியைப் பார்த்தாயா? மனநடுக்கமில்லாமல், நடந்ததை நடந்தவாறே சொல். என்னிடம் உனக்குப் பயம் வேண்டாம். (23–25)

(இவ்வாறு, மரம்–விலங்குகளிடம் விசாரித்துக் கொண்டிருந்த இராமனுக்கு, சீதை எங்கோ ஓடி ஒளிந்து கொள்வதைப் போன்ற பிரமை உண்டாயிற்று.) தாமரைக்கண்ணாளே! அன்பிற்கு உரியவளே! இதோ, நான் உன்னைப் பார்த்துவிட்டேன்! மரங்களின் பின்னால் மறைந்து கொண்டிருக்கும் நீ, ஏன் என்னுடன் பேசாமலிருக்கிறாய்? அம்மணி! நில், நில்! என்னிடம் உனக்கு இரக்கம் இல்லையா? நீ, அளவுக்கு மீறி விளையாடுகிறாய்! ஏன் என்னை ஒதுக்குகிறாய்? பெண்ணரசி! நீ அணிந்திருக்கும் மஞ்சள் நிறப்பட்டாடையினால் நான் உன்னைக் கண்டு கொண்டேன்! நீ (என் கண்களில் படாதவாறு) ஓடிக்கொண்டிருந்தாலும், நான் உன்னைப் பார்த்து விட்டேன்! என்னிடம் உனக்கு உண்மையான பாசம் உண்டு என்றால் ஓடாதே, நில். (26–28)

(சீதை கண்ணில் பட்டாள் என்ற மனமயக்கம் நீங்கியபின்,) அவள் இங்கே இல்லவே இல்லை. அழகாகப் புன்னகைக்கும் அவள் (அரக்கர்களால்) கொல்லப்பட்டாளோ? (அவள் இங்கே இருந்தால்,) மிகவும் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் என்னை விட்டுப் பிரிந்திருக்க மாட்டாளே? நான் இல்லாமல் தனித்து விடப்பட்ட, விபரமறியாப் பேதையான என் மனைவி, பச்சைப் புலால் உண்பவர்களான அரக்கர்களால் எல்லா அங்கங்களையும் வெட்டித் தின்னப்பட்டிருப்பாள் என்பது நிச்சயம். அழகான பற்கள், உதடுகள், எடுப்பான நாசி, பளிச்சென விளங்கும் காதணிகள் கொண்ட அவள் முகம், ராகுவினால் பீடிக்கப்பட்ட முழுநிலவைப் போல ஒளியை இழந்திருக்கும். (29–31)

சம்பகப்பூவின் நிறமுடையதும், அட்டிகைகளால் அழகுற விளங்குவதும், மிருதுவானதும், செம்மையாக அமைந்ததுமான அவளுடைய கழுத்தை, அவள் அழுது அரற்றிக் கொண்டிருக்கும் போதே நெறித்துத் தின்றிருப்பார்கள். இளந்தளிர் போல் கோமளமானவைகளும், (எதிர்ப்பைக் காட்டுவது போல) இங்குமங்கும் உதறிக் கொண்டிருப்பவைகளும், நடுங்கும் விரல்களுடன் கூடியவைகளும், வளையல்–தோள்வளை அணியப் பெற்றவைகளுமான கைகள் (அரக்கர்களால்) புசிக்கப்பட்டிருக்கும். பயணிகள் கூட்டத்திலிருந்து தனித்து விடப்பட்ட ஒரு பெண்ணைப்போல, உற்றார்–உறவினர் அநேகர் இருந்தும், சூதுவாதறியாத அவள், அரக்கர்களின் உணவாவதற்காக, என்னால் தனியாக விடப்பட்டாள்போலும்! (32–34)

மாவீரனான ஹே லட்சுமணா! என் பிரிய பாரியையை எங்காவது பார்த்தாயா? என் அன்பிற்குரியவளே! எங்கே போய்விட்டாய்?.... நல்லணங்கே! ஹா சீதே!...'' என்று, மீண்டும்

மீண்டும் புலம்பிக் கொண்டு, மனைவியைத் தேடிக் கண்டுபிடிப்பதில் மனம் செலுத்தியவராக, காட்டின் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு ஓடிக் கொண்டும், அன்பின் ஆதிக்கத்தினால் சிலவிடங்களில் திகைத்து நின்றார்; சிலவிடங்களில் பித்துப்பிடித்தவர் போல் காணப்பட்டார், இராமன். அவர், மக்கள் வாழத் தகுந்த சிறு வனங்களிலும் ஆறுகளிலும் மலையருவிகளிலும் அடர்ந்த காடுகளிலும் ஓய்வு–ஒழிவில்லாமல் பரபரவென்று அலைந்து திரிந்தார். அவர் மைதிலியைத் தேடிக் கொண்டு அடர்த்தியான பெருங்காடுகளுக்கும் சுற்றுப்புறங்களுக்கும் சென்று தேடியும் நோக்கம் கைகூடப்பெறாதவராக இருந்தாலும், தன் அன்பிற்குரியவளைத் தேடுவதில் மீண்டும் மும்மரமாக ஈடுபட்டார். (35–38)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
அறுபதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்தொன்று

சீதையைத் தேடுதல்

தசரத குமாரரான இராமன், ஆசிரம வளாகம் சூன்யமாக இருப்பதையும், குடிலுக்குள் சீதை இல்லாதிருப்பதையும், உட்காருவதற்கான ஆசனங்கள் தாறுமாறாகக் கிடப்பதையும் பார்த்து, எல்லாப் பக்கங்களிலும் வைதேகியைத் தேடியும் அவள் கண்ணில் படாமற்போகவே, அழகான தன் இருகைகளையும் உயரே தூக்கிக் கொண்டு (சீதே, சீதே என்று) உரத்த குரலில் அரற்றியபடி (இலக்குவனை நோக்கிக்) கூறினார்— (1,2)

''லட்சுமணா! வைதேகி எங்கே? இந்த இடத்திலிருந்து வேறு இடத்திற்குப் போய்விட்டாளா? சுமித்திரையின் புதல்வனே! எவனால் திருடிக்கொண்டு போகப்பட்டாள்? அல்லது என் மனைவி யாராலாவது உண்ணப்பட்டு விட்டாளா?... சீதே! மரங்களுக்குப் பின்னால் மறைந்து நின்று கொண்டு எனக்கு விளையாட்டுக் காட்டுகிறாயா?... போதும், உன் விளையாட்டு. நான் மிகவும் துயரத்தில் இருக்கிறேன். உடனே (வெளியே வந்து) என் அருகில் வா. சீதே! நீண்ட நாள் பழக்கத்தால் ஏற்பட்ட முறுகிய அன்புடைய எந்த மான் குட்டிகளுடன் நீ விளையாடுவாயோ, அவைகள் நீ இல்லாததால் கண்ணீர் ததும்பும் கண்களுடன் உன்னையே நினைத்து உருகுகின்றன. (3–5)

லட்சுமணா! சீதை இல்லாமல் நான் உயிர் வாழமாட்டேன் என்பது நிச்சயம். சீதை திருடிச் செல்லப்பட்டதால் ஏற்பட்ட சோகத்தின் காரணமாக மாண்டு போய்விட்ட என்னை, மேலுலகத்தில் மாமன்னரான நம் தந்தை நிச்சயமாகப் பார்க்கப் போகிறார். 'சபதம் செய்து கொடுத்து விட்டும், என்னால் ஆணையிடப்பட்டும் (காட்டிற்குச் சென்ற நீ) அந்தக் காலகெடு முடிவதற்குள், இங்கே என் சமீபம் எவ்வாறு வந்தாய்?' (என்று நம் தந்தை கேட்கப் போகிறார்.) மேலுலகத்தில் என்னுடைய தந்தையார், 'மனம்போன போக்கில் நடப்பவன்' என்றும், 'சொன்ன சொல் தவறியவன்' என்றும் குற்றம் சுமத்தி, 'அட, கேடு கெட்டவனே!' என்று என்னை இழித்துரைக்கப் போகிறார். (6–8)

எழிலணங்கே! நுண்ணிடையாளே! நான் சுயக்கட்டுப்பாட்டை இழந்து, சோகத்தால் வறுத்தெடுக்கப்பட்டு, மனம் நலிந்து, நோக்கம் நிறைவேறப் பெறாதவனாக, இரங்கத்தக்க நிலையில் உள்ளேன். வஞ்சக எண்ணம் கொண்டவனைப் புகழரசி கைவிட்டுவிட்டுச் செல்வதைப் போல, என்னை இந்த நிலையில் தவிக்க விட்டுவிட்டு எங்கே சென்றுவிட்டாய்?... நீ இல்லாவிட்டால் நான் என் உயிரை விட்டு விடுவேன்.'' இவ்வாறு புலம்பிக் கொண்டு சீதையைக் காணத் துடித்துக் கொண்டிருந்த இராமன் மிகவும் துக்கப்பட்டார்; அப்படியும் ஜனககுமாரியான சீதை கண்ணில் படவில்லை. (9–11)

சேற்றில் சிக்கிக் கொண்டு மிகவும் துன்பப்படும் யானையைப் போல், சீதையைக் காணாமல் தவிக்கும் தசரதகுமாரரான இராமனைப் பார்த்து, அவருக்கு ஆறுதல் கூறித் தேற்ற வேண்டும் என்ற நல்விருப்பத்துடன் லட்சுமணன் (பின்வருமாறு) கூறினான்— ''மாவீரரே! துக்கப்படாதீர்கள். என்னுடன் மேலும் தீவிரமாகத் தேடுங்கள். சூரரே! இந்தக் காட்டில் பற்பல குகைகள் இருக்கின்றன. (அவைகளில் தேடிப் பார்ப்போம்.) மைதிலி தேவியார் காட்டில் சுற்றித் திரிவதில் மிகவும் விருப்பமுடையவர். அத்துடன், அவர் நீர்நிலைகளைக் கண்டு மோகித்துப் போகிறவர். அதனால், அவர் காட்டிற்குள் அல்லது மலர்ந்த தாமரைகளையுடைய ஓடையை நோக்கிச் சென்றிருக்கலாம். (12–14)

புருஷோத்தமா! நீராடும் பொருட்டு மீன்களும் நீர்நொச்சிகளும் நிறைந்த நதியை அடைந்திருக்கலாம். அல்லது, நானும் நீங்களும் அவரைக் கண்டுபிடிக்கும் திறன் உடையவர்களாக இருக்கிறோமா? என்று தெரிந்து கொள்ளும் விருப்பத்தால் விளையாட்டிற்காகக் காட்டில் எங்கேனும் மறைந்து கொண்டிருக்கலாம். நம்மைக் கலவரம் அடையச் செய்ய வேண்டும் என்பதற்காகக் காட்டில் பதுங்கியிருக்கலாம். திருவுடைச் செல்வரே! இப்போதே நாம் அவரைத் தேடிக் கண்டுபிடிக்க முயற்சி செய்வோம். நீங்கள் சரி என்று கருதினால், ஜனககுமாரி இருக்கக்கூடிய காடு முழுவதையும் அலசிப் பார்த்துவிடுவோம். காகுத்தரே! சோகத்தில் மனத்தைச் செலுத்த வேண்டாம்.'' (15–17)

இவ்வாறு, லட்சுமணனால் பாசத்துடன் கூறப்பட்டதும், ஒருவாறாக மனத்தைத் தேற்றிக் கொண்ட இராமன், லட்சுமணனோடு (சீதையைத்) தேடுவதற்கு ஆரம்பித்தார். தசரதரின் புதல்வர்களான அவ்விருவரும், மக்கள் சஞ்சரிக்கத்தக்க சிறு கானகங்களையும், மலை–ஆறு–ஓடைகளையும் ஓர் இடம்கூட விடாமல் தேடினார்கள். தொடர்ந்து, அந்த மலையின் தாழ்வரை–குகை–சிகரங்களையும் ஓர் இடம்கூட விடாமல் தேடினார்கள். ஆனால், சீதையைத்தான் காணவில்லை. அந்தப் பர்வதத்தின் நாலாபுறங்களிலும் தேடிய பின்னர், லட்சுமணனைப் பார்த்து இராமன் கூறினார்— ''லட்சுமணா! புண்ணியவதியான வைதேகியை மலையில் காணவில்லை.'' (18–21)

அப்போது, மனவேதனையால் வெந்து கொண்டிருந்த இலக்குவன் தண்டகாரண்யத்தில் நடந்துகொண்டே, சுடர்விட்டெரியும் பேரொளி படைத்த தமையனாரை நோக்கிப் பின்வருமாறு கூறினான்— ''பேரறிவாளரே! எல்லையில்லாத ஆற்றல் படைத்த பகவான் விஷ்ணு, பலிச்சக்கரவர்த்தியை (அறநெறி என்ற கயிற்றால்) கட்டி, இம்மண்ணுலகை அடைந்தாற்போல, ஜனகர் புதல்வியாகிய சீதாப்பிராட்டியாரை, நீங்கள் அடையப் போகிறீர்கள்.'' (22,23)

மாவீரனான இலக்குவனால் இவ்வாறு கூறப்பட்டதும், துக்கத்தால் தவிக்கும் மனத்தைக் கொண்ட இராமன், நொந்து நலிந்த குரலில் பதில் கூறினார்— ''மகாபுத்திசாலியே! காடு முழுவதும் மலர்ந்த தாமரைகளையுடைய தாமரை ஓடைகளிலும், பல குகைகளையும் அருவிகளையுமுடைய இந்த மலையிலும் நன்றாகத் தேடியும், என் உயிரினும் மேலான ஜானகியைக் கண்டிலேன்.'' சீதையைக் காணாததால் மனம் சலித்துப் போன இராமன், மேற்கண்டவாறு புலம்பிக் கொண்டு சோகம் அதிகரித்தவராகச் சிறிது நேரத்திற்கு மனக்குழப்பமுடையவராக ஆனார். (24–26)

அவருடைய உடலின் எல்லா அங்கங்களும் துவண்டு போயின; புத்தி, வேலை செய்யவில்லை; உணர்வற்றுப் போயிருந்தது. மிகவும் துன்பத்தை அனுபவித்துக் கொண்டு, பரிதாபத்திற்குரியவராக நீண்ட வெப்பமான பெருமூச்சுவிட்டுக் கொண்டு துயரத்தில் மூழ்கிப் போனார். செந்தாமரைக் கண்ணரான இராமன், மீண்டும் மீண்டும் பெருமூச்செறிந்து கண்ணீர் பெருக்கிக் கொண்டு குரல் தழுதழுக்க, 'ஆ! என் அன்பிற்குரியவளே!' என்று பல தடவை வாய்விட்டுக் கதறினார். அப்போது, அறம் அறிந்தவனும் சகோதர பாசமுடையவனுமான இலக்குவன், வணக்கத்துடன் கைகூப்பிக் கொண்டு, பலவாறான முறைகளில் பணிவான

சொற்களைக் கூறி, அவரைத் தேற்றினான். இலக்குவனுடைய வாயிலிருந்து வந்த அந்தச் சொற்களை லட்சியம் செய்யாமல், தன் அன்பிற்குரிய சீதையைக் காணாததால், மேலும் மேலும் வாய்விட்டுக் கதறினார். (27–30)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
அறுபத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்து இரண்டு

இராமன் புலம்புதல்

சீதையைக் காணாததால், சோகத்தால் மனம் தவித்து, அறத்தின் நாயகரும், மாவீரரும், கமலக்கண்ணருமான இராமன் புலம்பத் தொடங்கினார். சீதையைக் காணாமல் காமத்தால் வருந்திய இராமன், அவளை நேரில் காண்பது போலவே நினைத்துக் கொண்டு, அழுகையும் புலம்பலுமாகத் தட்டுத் தடுமாறிப் பேசிக் கொண்டிருந்தார். (1,2)

''பிரியே! உனக்கு மலர்களிடம் நிறைய ஆசையுள்ளதால், மலர்கள் நிறைந்துள்ள அசோக மரத்தின் கிளைகளால் உன் சரீரத்தை (என் கண்ணில் படாமல்) மறைத்துக் கொண்டிருக்கிறாய். அதனால், என் துக்கம் வளர்ந்து கொண்டிருக்கிறது. தேவி! வாழைமரங்களை நிகர்த்த உன் தொடைகளை, வாழைமரத்தால் நீ மறைத்துக் கொண்டாலும், நான் பார்த்துவிட்டேன்! (நீ, இருக்குமிடம் எனக்குத் தெரிந்துவிட்டது!) நீ, இனிமேலும் உன்னை மறைத்துக் கொண்டிருக்க முடியாது! தேவி! நீ, சிரித்துக் கொண்டே சரக்கொன்றை தோட்டத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறாய்!... எனக்கு வேதனையைத் தருகிற இந்த விளையாட்டை இத்துடன் நிறுத்திக் கொள். அன்பே! சீதையே! மிகவும் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் என்னிடம் என்ன பரிகாசம் வேண்டிக் கிடக்கிறது? உன்னுடைய இந்த விளையாட்டு சரியானது என்று எனக்குத் தோன்றவில்லை. (3–6)

அன்பே! இது போன்ற பரிகாச விளையாட்டுகளில் உனக்கு ஆசை உண்டு என்பதை நான் அறிவேன். என்றாலும், குறிப்பாக ஆசிரம வளாகத்தில் இம்மாதிரியான கண்ணாமூச்சி விளையாட்டு ஏற்புடையதில்லை. நெடுந்தடங்கண்ணாய்! உன்னுடைய இந்த ஓலைக்குடில் சூன்யமாகக் கிடக்கிறது. நீ உடனே வந்து சேர்.'' (பின்னர், மனமயக்கத்திலிருந்து ஒருவாறு விடுபட்ட இராமன், இலக்குவனை நோக்கிக் கூறுகிறார்.) லட்சுமணா! அவளை நினைத்துப் புலம்பிக் கொண்டிருக்கும் என்னிடம் அவள் வராமலிருக்கிறாள் என்பதிலிருந்தே, அரக்கர்களால் சீதை உண்ணப்பட்டுவிட்டாள் அல்லது திருடிக்கொண்டு போகப்பட்டாள் என்பது தெளிவாகிறது. (7–9)

லட்சுமணா! பார், இந்த மான் கூட்டங்கள் நீர் நிறைந்த கண்களுடன் நிற்கின்றன. 'ஜானகி (அரக்கர்களால் கொன்று) தின்னப்பட்டாள்' என்று சொல்வது போலிருக்கிறது, இல்லையா? என் மதிப்பிற்குரியவளே! எங்கே போய்விட்டாய், நீ? குணவதியே! நல்லணங்கே!... ஐயகோ! கைகேயியின் அந்தரங்க விருப்பம் நிறைவேறிவிட்டதே. சீதையுடன் கூட (அயோத்தியிலிருந்து புறப்பட்டு) வெளியே வந்தேன்; சீதை இல்லாமல் (அயோத்திக்குத்) திரும்பிச் செல்கிறேன்!... (என்ன கஷ்டம்!) (லட்சுமணா!) அவளில்லாமல் வெற்றிடமாய்க் கிடக்கும் அந்தப்புரத்திற்குள் நான் எவ்வாறு நுழைவேன்? குடிமக்கள் எல்லோரும் (என்னை) வீரமில்லாதவன் என்றும், இரக்கமில்லாதவன் என்றும் ஏசுவார்கள். சீதை அபகரித்துச் செல்லப்பட்டதால், என்னுடைய கையாலாகாத்தனம் வெளிப்படையாகத் தெரிந்துவிட்டது! (10–13)

வனவாசம் முடிந்து நாட்டிற்குத் திரும்பியதும் மிதிலை மன்னர் ஜனகர் வந்து, 'சௌக்கியமா?' என்று விசாரிக்கும்போது, நான் எவ்வாறு அவரை நிமிர்ந்து பார்ப்பேன்? விதேக

மன்னர், அவளில்லாமல் (தனி ஒருவனாக) என்னைப் பார்த்ததும், (நடந்திருக்கக் கூடியதை ஊகித்து) மகளிடம் கொண்டுள்ள பேரன்பினால் மனம் பதைத்து மூர்ச்சையடைந்து விடுவார். அதனால், (இத்தகைய தொடர் துன்பங்கள் ஏற்படாமலிருக்க,) பரதனால் பரிபாலிக்கப்படும் நகரத்திற்கு நான் போகாமலிருந்து விடுகிறேனே? சீதை என்னுடன் இல்லாவிட்டால் தேவலோகம்கூட வெற்றிடமாகத்தான் எனக்குத் தோன்றும். என்னை இந்தக் காட்டில் விட்டுவிட்டு, புனிதமான அயோத்தி நகருக்குப் போய்ச் சேர். சீதை இல்லாமல் நான் ஒருபோதும் உயிரோடிருக்க மாட்டேன். (14–18)

பரதனை மார்புறத் தழுவி, 'இந்த மேதினியை ஆண்டு வா. இராமன் உனக்கு ஆக்ஞையிட்டிருக்கிறார்' என்று, நான் கூறியதாகச் சொல். ஆற்றல் மிக்கவனே! என்னுடைய தாயார் கௌசல்யை, கைகேயி, சுமித்திரை ஆகியோரை முறைப்படி வணங்க வேண்டும் என்று ஆணையிடுகிறேன். மிக்கக் கவனத்துடன் நீ அவர்களைக் காப்பாற்ற வேண்டும். நீ, அவர்கள் சொற்படி நடக்க வேண்டும். பகைவரைக் கொல்பவனே! சீதையினுடைய அழிவு, அதன் விளைவாக என்னுடைய அழிவு – இவைகளை, என் தாயாரிடம் நீ விரிவாக எடுத்துக் கூற வேண்டும்.'' கூந்தலழகியான சீதை இல்லாமல் மிகவும் மனம் நொந்து, (அவளைத் தேடிக் கொண்டு) காட்டின் உட்பகுதிகளில் நின்று, மேற்கண்டவாறு இராமன் புலம்புவதைப் பார்த்து, துன்பத்தால் முகம் வாடி, மனம் பதறிய இலக்குவனும் மிகவும் வேதனைப்பட்டான். (19–22)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
அறுபத்து இரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்து மூன்று
இராமன் புலம்புதல் (தொடர்ச்சி)

தனக்குப் பிரியமான மனைவியைப் பிரிந்ததால் காமத்தினாலும் சோகத்தினாலும் தாக்கப்பட்ட இராமன், தன்னுடைய சோகத்தினால் லட்சுமணனுடைய துக்கத்தையும் அதிகப்படுத்திக் கொண்டு, மேலும் தீவிரமான துக்கத்தில் ஆழ்ந்தார். இலக்குவன் துயரத்தில் மூழ்கியிருந்தான். மாளாத்துயரில் ஆழ்ந்திருந்த இராமன், சோகத்தால் அழுதுகொண்டே, வெப்பமான பெருமூச்செறிந்து, தனக்கு ஏற்பட்டிருக்கும் பேராபத்திற்கு ஏற்ற சொற்களை அவனிடம் கூறினார்— (1–2)

''என்னைப்போல் (அளவிலடங்காத) பாவம் செய்த இன்னொருவர் இந்த வையகத்தில் இருக்கமாட்டார் என்று எண்ணுகிறேன். அதனால்தான், ஒன்றன்பின் ஒன்றாக, சோகத்தின் மேல் சோகம் என் மனத்தையும் அறிவையும் தகர்த்துக் கொண்டு, என்னை வந்தடைகிறது. கடந்த பிறவியில், என் மனத்திற்கேற்றபடி நடந்து (தருமத்தின் எல்லையைக் கடந்து) பல தடவை பாவச்செயல்களைச் செய்திருக்கிறேன் என்பது திண்ணம். அதன் பயன், இப்போது என்னைத் தாக்கத் தொடங்கியிருக்கிறது. அதனால்தான், நான் துக்கத்தின் மேல் துக்கமாக அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். முதலாவதாக, அரசாட்சியை இழந்தது; தொடர்ந்து, உறவினர்களை விட்டுப் பிரிந்தது; தந்தையின் மரணம்; பெற்ற தாயைப் பிரிந்திருப்பது – இவையெல்லாவற்றையும் நினைத்துப் பார்த்தால், லட்சுமணா! என் துக்கம் வேகமாக வளர்கிறது. (3–5)

காட்டிற்கு வந்தபின் (சீதை அருகில் இருந்ததால்) எல்லாத் துயரங்களும் அடங்கிப்போய்க் கிடந்தன. எரிந்து தணிந்துவிட்ட நெருப்பில் உலர்ந்த விறகுகளைப் போட்டதும், சட்டென்று நெருப்புப் பற்றிக் கொண்டு விடுவதைப் போல, சீதையின் பிரிவினால் (அடங்கிக் கிடந்த) என் துயரம் பொறுக்க முடியாததாய் மீண்டும் எழுந்தது. சீலத்திரு பொருந்திய, அஞ்சும் இயல்புடைய என் மனைவி, யாரோ ஓர் அரக்கனால் பலாத்காரமாகத் தூக்கிச் செல்லப்பட்டு, வானவெளியை

அடைந்து, இயற்கையாக இனிய குரலையுடைய அவள் பயத்தின் காரணமாக தீனக்குரலில் தொடர்ந்து அழுது கொண்டிருக்கிறாளோ, என்னவோ? (6,7)

லோஹிதம் எனப்படும் உயர்வகை செஞ்சந்தனத்தினால் பூசப்படும், என் அன்பிற்குரிய அவளுடைய உருண்டு திரண்ட நகில்கள் இரண்டும், (அரக்கனால் நாசம் செய்யப்பட்டு) இரத்தக்களறியாக ஆகியிருக்கும் என்பது நிச்சயம். (இவ்வளவு கஷ்டத்திலும்) என் உடல் (மண்ணில்) சாயவில்லையே? இனிமை–தெளிவு–மென்மையோடுகூடப் பேசக் கூடியதும் சுருள்சுருளான குழற்கற்றைகளால் நேர்த்தியாக விளங்குவதுமான அவளுடைய முகம், இப்போது அரக்கனிடம் சிக்கி, ராகுவினால் பீடிக்கப்பட்ட சந்திரன்போல், ஒளி மங்கிப் போயிருக்கும் என்பது சர்வ நிச்சயம். (8,9)

உதிரத்தை உணவாகக் கொள்ளும் அரக்கர்கள், யாருமே இல்லாத காட்டில் அழகிய மாலைகளை அணிவதற்கு எப்போதும் ஏற்றதும், (என்னைத் தவிர வேறொருவரை நினைத்தும் பார்க்காத) மனத்திண்மை உடையவளுமான என் மனைவியின் கவின்மிகு கழுத்தைத் திருகிக் குருதியைக் குடித்திருப்பார்கள் என்பது திண்ணம். நான் இல்லாத நேரத்தில், மக்கள் நடமாட்டமில்லாத காட்டில், கவர்ச்சி மிக்கத் தடங்கண்ணாளாகிய அவள், அரக்கர்களால் பலாத்காரமாகக் கவர்ந்து செல்லப்பட்டு, மிகவும் மனம் பதறி, கிரௌஞ்சப் பட்சியைப் போல அழுகைக் குரலை வெளியிட்டிருப்பாள். லட்சுமணா! பெருந்தன்மையுள்ளவளும் பளீரிடும் புன்னகையுடையவளுமான சீதை, முன்னொரு சமயம் இந்தப் பாறைமேல் என்னுடன் கூட உட்கார்ந்திருந்தபோது, உன்னையும் அழைத்து வெகுநேரம் தொடர்ந்தாற்போல் பேசிக் கொண்டே இருந்தாள். (10–12)

ஆறுகளில் சிறந்ததாகிய இந்த கோதாவரி நதி, என் அன்பிற்குரிய சீதைக்கு எப்போதும் பிரியமானது. அதனால், (காலம்–நேரத்தைப் பார்க்காமல்) கோதாவரிக் கரைக்குப் போயிருப்பாள் என்று எண்ணுகிறேன். (ஆனால்,) அவள் ஒரு தடவைகூடத் தனியாகப் போனதில்லையே? தாமரையன்ன முகம்; மலர்ந்த தாமரை போன்ற தடங்கண்கள் கொண்டவளான சீதை தாமரைப் பூக்களைக் கொய்து வருவதற்காகப் போயிருப்பாளோ? ஆனால், அதுவும் சரியில்லை. ஏனென்றால், நான் இல்லாமல் அவள் ஒருபோதும் தாமரைப் பூவைப் பறிக்கச் சென்றதில்லை. ஒருக்கால், மலர்கள் பூத்துக் குலுங்கும் மரங்கள் அடர்ந்ததும், பற்பல பறவைக் கூட்டங்கள் நிறைந்ததுமான காட்டின் உட்புறம் போயிருப்பாளோ? (மலர்கள், பறவைகள் மேல் அவளுக்கு அதிக ஆசை ஆயிற்றே!) ஆனால், அப்படி ஊகிப்பதும் சரியானதாகத் தோன்றவில்லை. பயந்த சுபாவமுள்ள அவள் தன்னந்தனியாகப் போக மிகவும் அஞ்சுவாள். (13–15)

சூரிய பகவானே! உலகத்தில் நிகழ்ந்தது–நிகழாததுகளை அறிந்தவரே! மக்களுடைய சத்திய கர்மாக்களையும் நேர்மையற்ற செயல்களையும் சாட்சியாக இருந்து பார்த்துக் கொண்டிருப்பவரே! என் அன்பிற்குரிய சீதை எங்கே போயிருக்கிறாள்? அல்லது எவராலாவது கவர்ந்து செல்லப்பட்டாளா? (சீதையைக் காணாத போதிருந்து) எப்போதும் சோகத்தின் வசப்பட்டுள்ள எனக்கு (நடந்ததைக் கூறுங்கள்.) வாயு பகவானே! எல்லா உலகங்களிலும் உங்களுக்குத் தெரியாத விஷயமே இல்லை. உயர்குலத் தோன்றலாகிய அவளைப் பற்றிக் கூறுங்கள். யாராலாவது அபகரித்துச் செல்லப்பட்டாளா? அல்லது இறந்து போய்விட்டாளா? அல்லது (வெகுதூரம் நடந்து சென்று திரும்பி வருவதற்கு) வழி புலப்படாமல் இருக்கிறாளா? – என்பதைச் சொல்லுங்கள்.'' (16,17)

இவ்வாறு சோகத்தில் மூழ்கிய மெய்மறந்த சரீரத்தோடு, மேற்சொன்னவாறு புலம்பிக் கதறும் இராமனைப் பார்த்து, மன உறுதியைக் கைவிடாதவனும் மூத்தவர்களிடம் இருக்க வேண்டிய மரியாதையிலிருந்து பிறழாதவனுமான சுமித்திரை மைந்தன், அந்தச் சமயத்திற்கேற்ற ஆறுதல் சொற்களைக் கூறினான்— ''அண்ணா! சோகத்தை விட்டொழியுங்கள்; மனோதைரியத்தைப்

பற்றிக் கொள்ளுங்கள்; சீதாப்பிராட்டியாரை விடாமுயற்சியுடன் தேடுவோம்; மன உறுதி கொண்ட மனிதர்கள்தாம், உலகில் மிகவும் முயற்சியுடன் செய்ய வேண்டிய காரியங்களைக் கண்டு தளர்ந்து போக மாட்டார்கள்.'' இவ்வாறு, மிகுந்த பராக்கிரமம் கொண்ட இலக்குவன் கூறியதைச் செவிமடுத்துக் கேட்காமல், மனவலிமையை இழந்து, துயரத்தில் மூழ்கியிருந்த ரகுகுலத் தோன்றலான இராமன், மேலும் அதிக துக்கத்தை அடைந்தார். (18–20)

ஸ்ரீமத் வால்மீகி ராமயணம் ஆரண்ய காண்டத்தில்
அறுபத்து மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்து நான்கு
இராமனின் கோபம்

பின்னர், இரங்கத்தக்க நிலையிலிருந்த அவர், கெஞ்சி மன்றாடும் குரலில் இலக்குவனைப் பார்த்துக் கூறினார்— ''லட்சுமணா! தாமரை மலர்களைக் கொண்டு வருவதற்காக, சீதை, கோதாவரி நதியோரம் சென்றிருப்பாளோ? நீ, விரைவாக கோதாவரிக் கரைக்குச் சென்று தேடிப் பார்த்துவிட்டு வா.'' இராமன் இவ்வாறு சொன்னவுடன், மனத்திற்கினிய கோதாவரி நதியை நோக்கி, மறுபடியும் வேகமாகச் சென்றான், இலக்குவன். கோதாவரியின் நீராடும் துறைகள் பலவற்றிலும் அவளைத் தேடிப் பார்த்துவிட்டு வந்து இராமனிடம், ''பல இடங்களில் தேடியும் பிராட்டியாரைக் காணவில்லை. உரத்த குரலில் அழைத்தேன். அதுவும் அவர் செவிகளில் விழவில்லை. மனத்துயரை அழிக்கக்கூடிய வைதேகிப் பிராட்டியார் எந்த இடத்திற்குப் போயிருக்கிறாரோ, துடியிடையுடைய அவர் இருக்கும் அந்த இடத்தை நான் அறியேன்.'' (என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை.) (1–4)

இலக்குவனுடைய சொற்களைக் கேட்டதும், மனம் நொந்து, சோகத்தால் மதிமயங்கிக் கிடந்த இராமன், தானே கோதாவரி நதியை நோக்கிச் சென்றார். அந்த நதியின் அருகில் சென்ற இராமன், 'சீதை எங்கே?' என்று கேட்டார். வதம் செய்யத்தக்க அரக்க மன்னனால், அவள் அபகரித்துச் செல்லப்பட்டாள் என்பதைச் சகலப் பிராணிகளும் கோதாவரி நதியும்கூட இராமனுக்குச் சொல்லவில்லை. அப்போது, எல்லாப் பிராணிகளாலும், 'இவருடைய பிரியத்திற்குரிய பிராட்டியைப் பற்றிய செய்தியைத் தெரிவி' என்று தூண்டப்பட்டபோதிலும், சீதையைக் குறித்துத் துக்கத்தில் ஆழ்ந்திருந்த இராமனிடம், அது (கோதாவரி) எதுவும் தெரிவிக்காமல் இருந்துவிட்டது. தீயவனான இராவணனுடைய (பயங்கரமான) அந்தத் தோற்றத்தையும் செய்கைகளையும் நினைத்துப் பார்த்து பயங்கொண்ட அந்த ஆறு, வைதேகியைப் பற்றி ஏதும் கூறாமலிருந்தது. (5–9)

சீதையைக் காணும் விஷயத்தில் அந்த நதி உதவி செய்யும் என்று எண்ணியிருந்த நம்பிக்கை முற்றிலும் வீணாகிப் போனதால், சீதையைக் காணாததால் மனத்துயரத்தால் தவித்துக் கொண்டிருந்த இராமன், இலக்குவனைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார்— ''தம்பி! இந்தக் கோதாவரி நதி ஒரு வார்த்தைகூடப் பதில் சொல்லாமல் இருக்கிறது. லட்சுமணா! வைதேகி இல்லாமல் நான் மட்டும் (நாட்டிற்குச் சென்று) ஜனகரையும் சீதையின் தாயாரையும் பார்க்கும் போது, துன்பகரமான சொற்களை எப்படிச் சொல்வேன்? (வைதேகி இல்லாமல் நான் மட்டும் சென்று ஜனகரிடமும், மதிப்பிற்குரிய என் தாயாரிடமும் எப்படிச் சொல்வேன்?) (10,11)

நாட்டை இழந்து காட்டிற்கு வந்து, இங்கு கிடைக்கும் கனி–கிழங்குகளைப் புசித்துக் கொண்டு காலங்கழிக்கும் என் மனத்துயரையெல்லாம் போக்குகின்ற என்னுடைய மனைவி சீதை எங்கே போய்விட்டாள்? உற்றார்–உறவினரை விட்டுப் பிரிந்து, இப்போது அரசகுமாரி சீதையையும் காணாததால் (துக்கம் இரண்டு பங்காகித்) தூக்கமில்லாமல் இருக்கும் எனக்கு

இரவுப்பொழுது இனிமேல் நீண்டதாகவே இருக்கப் போகிறது. மந்தாகினி (என்ற பெயருடைய, இந்தப் பகுதியில் ஓடும்) நதிக்கரைகளிலும் ஜனஸ்தானம் முழுவதிலும் பிரஸ்ரவண மலையிலும், 'சீதை இருக்கிறாளா?' என்று தேடிப் பார்க்கிறேன். பேராற்றல் பொருந்திய இந்த மான்கள் அடிக்கடி என்னைப் பார்த்தவண்ணம் இருக்கின்றன; அவயவ அசைவுகளையும் நான் காண்கிறேன்; என்னிடம் ஏதோ சொல்ல விரும்புகின்றன என்று தோன்றுகிறது.'' (12–15)

அப்படிப்பட்ட நிலையில் அவைகளை உற்றுநோக்கிய மாவீரரான இராமன், கண்ணீருடன் துயரத்தால் தொண்டை அடைத்துக் கொள்ள, 'சீதை எங்கே?' என்று அவைகளைக் கேட்டார். புருஷோத்தமரான அவரால் இவ்வாறு கேட்கப்பட்ட அந்த மான்களனைத்தும், ஆகாயத்தைக் காட்டிக் கொண்டு, தெற்குத் திசையை நோக்கியபடி உடனே எழுந்து நின்றன. கவர்ந்து செல்லப்பட்ட பிராட்டியார், எந்தத் திசையில் கொண்டு போகப்பட்டாரோ, அதே வழியில் (தெற்கு நோக்கி) ஓடிக் கொண்டு, இராமனைத் திரும்பித் திரும்பிப் பார்த்தன. மான்கள், எந்தத் தெற்குத் திசையையும் ஆகாயப் பகுதியையும் பார்த்துக் கொண்டு ஓடினவோ, தொடர்ந்து அந்த வழியிலேயே செல்ல விரும்புவதாக இலக்குவனால் உணரப்பட்டது. (ஆகாய மார்க்கமாக எடுத்துச் செல்லப்பட்டு, தெற்கே வெகுதொலைவில் சீதை வைக்கப் பட்டிருக்கிறார் – என்று, மான்கள் கூறுவதாக இலக்குவனுக்குத் தோன்றியது.) (16–19)

அவைகள் சொல்ல விரும்பியதையெல்லாம், அவைகளின் அங்க–அசைவுகளைப் பார்த்துத் தெரிந்து கொண்ட பேரறிவாளியான லட்சுமணன், மூத்த சகோதரரைப் பார்த்து மிகவும் துக்கத்துடன் பின்வருமாறு கூறினான்— ''சீதை எங்கே? என்று தங்களால் கேட்கப்பட்ட இந்த மான்கள், உடனே எழுந்து அங்க–அசைவுகளால் பூமியையும் தெற்குத் திசையையும் நமக்குக் காட்டுகின்றன. ஐயனே! இந்தத் தென்மேற்குத் திசையிலேயே நாம் சென்று பார்ப்பது நல்லது என்று தோன்றுகிறது. பிராட்டியைப் பற்றிய தகவல் ஏதேனும் கிடைக்கலாம். ஏன், பிராட்டியே கூட கண்ணில் படலாம்.'' (20–22)

வீரலட்சுமியுடன் கூடிய காகுத்தர் (இராமன்) 'சரி, அப்படியே செய்வோம்' என்று சொல்லி, லட்சுமணன் பின்தொடர்ந்து வர, சுற்றிலும் நிலப்பரப்பில் பார்வையைச் செலுத்திக் கொண்டு, தெற்குத் திசையை நோக்கிப் புறப்பட்டார். இவ்விதம் தங்களுக்குள் பேசிக் கொண்டு சென்ற அவ்விரு சகோதரர்களும், பாதையில் மலர்கள் விழுந்து கிடப்பதைப் பார்த்தார்கள். வீரரான இராமன், தரையில் சிதறி விழுந்து கிடந்த ஏராளமான மலர்களைப் பார்த்ததும், நெஞ்சம் கலங்கி, இலக்குவனை நோக்கித் துக்ககரமான (பின்வரும்) சொற்களைக் கூறினார்— (23–25)

''லட்சுமணா! வைதேகி, காட்டில் என்னால் கொடுக்கப்பட்ட மலர்களைத் தன் கூந்தலில் வைத்துக் கொண்டாள். இங்கே விழுந்து கிடக்கும் புஷ்பங்கள், அவள் தலையில் இருந்தவைதான் என்று எனக்குத் தெரிகிறது. சூரியனும், வாயுவும், பெருமைக்குரிய பூதேவியும் எனக்கு நலன் செய்ய விரும்பி, இந்தப் பூக்களை (வாடிப்போய் உருமாறாமலும், வெகுதூரம் அடித்துக் கொண்டு போகப்படாமலும்) காப்பாற்றி வைத்திருக்கிறார்கள் என்று எண்ணுகிறேன்.'' ஆண்களில் காளை போன்ற இராமன், மகாபலம் பொருந்திய இலக்குவனிடம் இவ்வாறு கூறிவிட்டு, அருவிகள் நிரம்பிய பிரஸ்ரவண மலையைப் பார்த்து(ப் பின்வருமாறு) சொன்னார்— (26–28)

''மலைகளின் தலைவனே! என்னை விட்டுப் பிரிந்தவளும், அழகிய அங்கங்களை உடையவளுமான ஒரு பெண், மனோரம்யமான இந்தக் காட்டில் உன்னால் பார்க்கப்பட்டாளா?'' (மூலச் சுலோகத்தில், *'கச்சித்க்ஷிதிப்$_4$ருதாம் நாத$_2$'* என்றிருக்குமிடத்தில், *'ஸர்வக்ஷிதிப்$_4$ருதாம் நாத$_2$'* என்று இருந்தால், பொருளமைதி ஏற்படும் என்பது அறிஞர்கள் துணிபு. 'சர்வாங்க சுந்தரியான ஒரு பெண் உன்னால் பார்க்கப்பட்டாள்' என்ற எதிரொலி மலையிலிருந்து ஒலிக்கும். 'பார்க்கப்பட்டாளா?' என்று கேட்டால், எதிரொலியும் கேள்விக்குறியோடு அவ்வாறே கேட்கும். இந்தப் பொருள், அடுத்து வரும் சுலோகத்துடன் ஒட்டாமல் தனித்து நிற்கும்.) ஒரு சிங்கம்

அல்ப பிராணி ஒன்றைப் பார்த்துக் கர்ஜிப்பதைப் போல், ''ஓ மலையே! உன்னுடைய சிகரங்களை எல்லாம் நான் தூள்தூளாக்குவதற்குள்ளாக, பொன்னிறமும் பொன்னொளியும் கொண்ட அழகியான சீதையை எனக்குக் காட்டிவிடு'' என்று, சினம் பொங்கியவராகக் கூறினார். (29,30)

அந்த மலை, மைதிலியைப் பற்றி இவ்வாறு இராமன் கூறியவுடன் (தன் எதிரொலியால்) அவளைக் காட்டுவது போல் தோன்றினாலும், அவளை இராமனுடைய கண்ணுக்குப் புலனாகும்படிக் காட்டவில்லை. அப்போது, தசரத குமாரரான இராமன், மலைக்குன்றைப் பார்த்து, ''அக்னியைக் கக்கும் என் பாணங்களால் எரிக்கப்பட்டு, புல்–மரம்–தளிர்கள் ஒழிந்ததாக, எக்காலத்திலும் எவராலும் விரும்பப்படாதவண்ணம் சாம்பலாகப் போகிறாய்'' என்று சொன்னார். ''லட்சுமணா! சந்திரனை நிகர்த்த முகமுடைய என் சீதையைப் பற்றி, இந்த நதி இப்போது எனக்குத் தெரிவிக்காமற்போனால், நான் இதையும் இப்போதே வற்றச் செய்வேன்.'' (31–33)

இவ்வாறு கோபத்துடன் கூறிய இராமன் கண்பார்வையினாலே (மலையையும் ஆற்றையும்) சுட்டு எரித்துவிடுபவர்போல் பார்க்கும்போது, தரையில் அரக்கனுடைய பெரிய அடிச்சுவடுகளைக் கண்டார். கூடவே, இராமனை நோக்கிச் செல்ல விரும்பி பயத்துடன் இங்குமங்கும் ஓடிச்சென்றவளும், அரக்கனால் பின்தொடரப்பட்டவளுமான வைதேகியின் பாதச் சுவடுகளையும் பார்த்தார். சீதை மற்றும் அரக்கனின் அடிச்சுவடுகள், முறிந்து கிடந்த வில், அம்புறாத்தூணிகள், சுக்குநூறாகக் கிடந்த தேர் – இவைகளைப் பார்த்ததும் இராமனின் மனம் பதறியது. பாசத்திற்குரிய தன் தம்பியைப் பார்த்து (பின்வருமாறு) கூறினார்— (34–36)

''லட்சுமணா! சீதையின் அணிகலன்களிலிருந்து உதிர்ந்து விழுந்து கிடக்கும் பொற்றுகள்களைப் பார். சௌமித்திரா! பல்வகையான மலர்மாலைகளும் சிதறிக் கிடக்கின்றன. லட்சுமணா! இந்தப் பகுதியில் தரை முழுவதும் தங்கத் துளிகள் போன்ற இரத்தத் துளிகளால் நிறைந்து கிடப்பதையும் பார். லட்சுமணா! விருப்பம்போல் உருவம் எடுக்கக்கூடிய அரக்கர்களால், சீதை துண்டுதுண்டாக்கப்பட்டு பங்கு போடப்பட்டிருப்பாள் அல்லது புசிக்கப் பட்டிருப்பாள் என்று எண்ணுகிறேன். (37–39)

சுமித்திரைச் செல்வமே! சீதையின் நிமித்தமாக இரண்டு அரக்கர்களிடையே வாக்குவாதம் ஏற்பட்டு, பின்னர், பயங்கரமான யுத்தமும் இங்கே நடந்திருக்கிறது. தம்பி! முத்து–வைரம் இழைக்கப் பெற்று, பொன்னால் அலங்கரிக்கப்பட்டு, தரையில் முறிந்து விழுந்து கிடக்கும் பொன்மயமான இந்தப் பெரிய வில் யாருடையதாக இருக்கும்? குழந்தாய்! இது அரக்கர் களுடையதாகவோ அல்லது தேவர்களுடையதாகவோ இருக்கலாம். உதிக்கின்ற சூரியன்போல் ஒளிவீசுவதும், வைடூர்ய மணிகள் இழைக்கப் பெற்றதுமான பொற்கவசம் தரையில் சிதறிக் கிடக்கிறது. இது யாருடையதோ? இளவலே! நூறு (நூற்றுக்கணக்கான) கம்பிகள் உள்ளதும், தெய்விகமான மலர்மாலைகளால் அலங்கரிக்கப்பட்டதும், கைப்பிடி முறிந்து தரையில் வீழ்ந்து கிடப்பதுமான இந்தக் குடை யாருடையதோ? (40–43)

பொன்னாலான கவசங்கள்; பேய் முகம்; மிகப்பெரிய உடல்; யுத்தத்தில் வீழ்த்தப்பட்டுள்ள பயங்கரமான தோற்றமுடைய இந்தக் கோவேறு கழுதைகள் யாருடையவைகளோ? கொழுந்து விட்டெரியும் நெருப்பைப் போல் ஒளிவீசுவதும், போர்க்கொடியை உடையதும், உடைந்து தாறுமாறாகக் கிடப்பதுமான இந்தப் போர் ரதம் யாருடையதோ? இலக்கை நோக்கிச் செலுத்தப்பட்டதால் முனை மழுங்கிப் போனவைகளும், தேரினுடைய அச்சின் அளவே உள்ளவைகளும், தங்க வேலைப்பாடுகள் கொண்டவைகளும், நாற்புறத்திலும் சிதறிக் கிடைப்பவைகளுமான இந்த அம்புகள், எந்தத் துஷ்டனுடையதோ? (44–46)

லட்சுமணா! பாணங்கள் நிறைந்து, சிதைந்து கிடக்கும் இந்த அம்புறாத்தூணிகளைப் பார். கையில் சவுக்கையும் கடிவாளக் கயிற்றையும் பிடித்தவண்ணமே மாண்டு கிடக்கும் இந்தத் தேரோட்டி, யாரைச் சேர்ந்தவனோ? தம்பி! புலிநிகர் வீரனே! சாமரங்களைக் கையில்

பிடித்துக் கொண்டு, தலைப்பாகை—மணிமயமான குண்டலங்களை அணிந்து கொண்டு, போரில் கொல்லப்பட்டுத் தரையில் இருவர் சாய்ந்து கிடக்கிறார்களே? இவர்கள் யாரைச் சேர்ந்தவர்களோ? பாதையில் தென்படும் இந்த அடிச்சுவடு நிச்சயமாக ஓர் அரக்கனுடையதுதான். (விருப்பம்போல் உருவம் எடுக்கக்கூடிய ஓர் அரக்கன்தான், சீதையைத் தூக்கிக் கொண்டு போயிருக்கிறான் என்பதில் சந்தேகமில்லை.) இப்போது, அரக்கர்கள்மேல் எனக்கு இருந்த கோபம் பலமடங்கு அதிகமாகிவிட்டது. இதோ பார், நான் அந்த அரக்கனை (அவன் மூலமாக, அரக்கர்கள் கூட்டத்தையே) ஒழிக்காமல் விடப்போவதில்லை. (47–49)

தம்பி! விருப்பம்போல் உருவம் எடுக்கவல்ல மிகக் கொடூரமான எண்ணங்கொண்ட அரக்கர்களால், அறநெறி கட்டுப்பாடுகளை அனுஷ்டிக்கும் சீதை தூக்கிச் செல்லப்பட்டிருக்கிறாள் அல்லது கொல்லப்பட்டிருக்கிறாள் அல்லது புசிக்கப்பட்டுவிட்டாளோ, என்னவோ? இந்தப் பெருங்காட்டில், அபகரித்துச் செல்லப்படும் சீதையை, அவள் கைக்கொண்டு ஒழுகிய தருமங்கள் காப்பாற்றவில்லையே? (என் தாயார், நான் காட்டிற்குப் புறப்பட்டபோது,

யம் பாலயஸி த₄ர்மம் த்வம் ப்ரீத்யா ச நியமேந ச |
ஸ வை ர₄ாகவசார்தூ₃ல த₄ர்மஸ்த்வாமபி₄ரக்ஷது || ***(அயோ. 25–3)***

என்று ஆசீர்வாதம் செய்து அனுப்பினாரே? என் அம்மாவின் வாக்குகூடப் பொய்யாகப் போய் விட்டதா, என்ன? 'தருமம் உன்னைக் காப்பாற்றும்' என்றால், 'உன்னுடன் காட்டிற்கு வருபவர் களையும் தருமம் காப்பாற்றும்' என்றுதானே, அர்த்தம்?) (ஆபத்துக் காலத்தில் ஒருவனை, அவன் செய்த தருமம் காப்பாற்றும் — என்ற உலக வழக்கு உண்மையாகவில்லையே?) (50,51)

செல்வனே! சீதைப் புசிக்கப்பட்டாளோ? அல்லது தூக்கிச் செல்லப்பட்டாளோ தெரியவில்லை. தம்பி! இந்த உலகத்தில், எனக்குக் கேடு விளைவிக்கும் துணிச்சலுடையவர்கள் யாரேனும் இருக்கிறார்களா? உலகங்களைப் படைத்து, காத்து, அழிக்கும் வல்லமை பெற்ற தனிப்பெரும் தெய்வம். தன் இரக்ககுணம் காரணமாகக் குற்றத்தைப் பார்த்தும் பொறுத்துக் கொண்டு வாளாவிருந்தால், அறியாமையால் மக்கள் அவரை மதிக்காமல் போகிறார்கள். நான், உலகப் பிராணிகளுக்கு நன்மை செய்வதில் முனைந்து நிற்பவன்; புலனடக்கம் உடையவன்; கருணை மிக்கவன். அதனால், தேவலோகப் பிரமுகர்கள் கோழை என்று என்னை எண்ணிவிட்டார்கள் போலும்! (52–54)

என்னிடம் அமைந்துள்ள நற்குணங்களே எனக்கு ஒரு குறையாக ஆகிவிட்டன! லட்சுமணா! பார்! சந்திரனின் தண்ணொளியை அழித்துவிட்டு, பேரொளி படைத்த சூரியன் உதிப்பதைப் போல, எல்லாப் பிராணிகளையும் அரக்கர்களையும் ஒழித்துக்கட்டும்படி, என்னுடைய (பொறுமை, குற்றம் பொறுத்தல் ஆகிய) எல்லா நற்குணங்களையும் மறைத்துக் கொண்டு, எல்லையில்லாத என் ஆற்றலை வெளிப்படுத்தப் போகிறேன். லட்சுமணா! யட்சர்—கந்தர்வர்—பைசாசர்—அரக்கர்—கின்னரர்—மானுடர் ஆகிய யாராக இருந்தாலும் சரி, சுகத்தை அடையப் போவதில்லை. (எல்லோரையும் ஸம்ஹாரம் செய்வது என்று தீர்மானித்துவிட்டேன்.) லட்சுமணா! என்னுடைய அஸ்திர—பாணங்களால் ஆகாயத்தை நிரப்பி, மூன்று உலகங்களுக்கும் தடையின்றிச் சென்று வருபவர்களின் போக்குவரத்தைத் தடை செய்யப் போகிறேன், பார்! (55–58)

நவகோள்களைத் தத்தம் வேலையைச் செய்யவிடாமல் தடுப்பேன்; சந்திரனை மறைப்பேன்; அக்னி, காற்று ஆகியவற்றைக் காணாமற்போகச் செய்வேன்; சூரியனின் ஒளியை மறைத்து விடுவேன்; மலைச்சிகரங்களை உருட்டித் தள்ளுவேன்; நீர்நிலைகளை வற்றச் செய்வேன்; மரம்—செடி—புதர்களை நாசம் செய்வேன்; பெருங்கடலைக் கலக்குவேன்! — இவ்வாறு, மூன்று உலகங்களிலும் பிரளய காலத்திய அழிவுச் செயல்களைச் செய்துகாட்டப் போகிறேன். தெய்வங்கள், க்ஷேமமான நிலையில் சீதையை என்னிடம் ஒப்படைக்காவிட்டால், லட்சுமணா! இப்போதே, இந்த க்ஷணத்திலேயே, என் மகத்தான ஆற்றலை அவர்கள் காண்பார்கள். என்னுடைய வில்லின் நாண்கயிற்றிலிருந்து புறப்படும் பாணக்கூட்டங்களால் ஆகாயத்தை

இடைவெளியே இல்லாமல் நிறைத்து விடுவேன்! லட்சுமணா! பின்னர், எந்தப் பிராணிகளும் ஆகாயத்தில் பறக்க முடியாது. (59–62)

என்னுடைய நாராசம் என்ற பாணங்களால் தாக்கப்பட்டு, விலங்குகளும் பறவைகளும் உணர்விழந்து, உலகமே நிலைகுலைந்துத் தாறுமாறாகப் போகப் போவதை, நீ காணப் போகிறாய். மைதிலியின் காரணமாக, காதுவரை இழுத்து விடப்பட்ட, எவராலும் எதிர்கொள்ள முடியாத பாணங்களால், உயிர்கள் வாழும் உலகத்தில் பைசாசங்களும் (தீங்கு செய்வதையே தொழிலாகக் கொண்டவர்களும்) அரக்கர்களும் இல்லாதபடிச் செய்யப் போகிறேன். மிகவும் கோபத்துடனும் வெகுதூரத்திலுள்ள இலக்கை நோக்கி உத்வேகத்துடனும் செல்லக்கூடிய என் பாணங்களின் மகாபலத்தை, தேவர்கள் இப்போது பார்க்கப் போகிறார்கள். (63–65)

தாங்கமுடியாத என் கோபத்தினால் மூன்று உலகங்களும் அழியும்போது, தேவர்–அசுரர்–பிசாசர்–அரக்கர் எவருமே இருக்கமாட்டார்கள். தேவ–அசுர–யட்ச–அரக்கர்களின் உலகங்கள் என் பாணக்கூட்டங்களால் துகள்துகளாக்கப்பட்டுக் கீழே விழப்போகின்றன. ஸௌமித்ரா! திருடிக் கொண்டு போகப்பட்டிருந்தாலும், உயிர் போனவளாக இருந்தாலும், தெய்வங்கள் அவளை என்னிடம் கொண்டுவந்து கொடுக்கவில்லையென்றால், இப்போதே என் பாணங்களால், இந்த உலகங்களையெல்லாம் நிலைகுலையச் செய்துவிடுவேன். என் அன்பிற்குரிய சீதையை, அவள் முன்பு எப்படி இருந்தாளோ, அப்படியே கொண்டுவந்து என்னிடம் கொடுக்காவிட்டால், மூவுலகங்களையும், அவற்றிலுள்ள சராசரங்களையும், எல்லா உலகத்தையும் அழித்துக் காட்டுவேன்.'' (66–69)

இவ்வாறு சொல்லிவிட்டு, கோபத்தால் கண்கள் சிவக்க, உதடுகள் துடிக்க, மரவுரி–மான்தோல்களைத் தளர்ந்துவிடாமல் கட்டி, ஜடாபாரத்தையும் இறுக முடிந்து கொண்டார். சினத்தால் கொதித்துக் கொண்டிருப்பவரும், பேரறிஞரும், சொன்னபடி உலகத்தை அழிக்கத் துணிந்து விட்டவருமான இராமனுடைய தோற்றம், முன்னொரு காலத்தில் முப்புரங்களை எரிப்பதற்காகப் புறப்பட்ட ருத்ர பகவானின் தோற்றத்தைப் போலவே இருந்தது. இலக்குவனிடமிருந்து வில்லைப் பெற்று, அதை உறுதியாகப் பற்றிக் கொண்டு, பயங்கரமான விஷத்தையுடைய, சர்ப்பத்தைப் போல் ஒளிவீசிய ஒரு பாணத்தை, பகைவர் நகரத்தை ஜெயிக்கவல்ல இராமன், வில்லில் கோர்த்தார். ஊழித்தீ போல சினங்கொண்டு பின்வரும் சொற்களைக் கூறினார்— (70–73)

''லட்சுமணா! எல்லாப் பிராணிகளும் கிழத்தனம், மரணம், காலம், விதி முதலியவற்றின் தாக்குதல்களை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டுமே தவிர, அவைகளைத் திருப்பித் துரத்தியடிக்க முடியாது. அவ்விதமே, கோபத்தால் கொதித்துக் கொண்டிருக்கும் நான் ஒருக்காலும் தடுக்க முடியாதவன். அழகிய பல்வரிசை உடையவளும், குற்றமற்ற லட்சணங்கள் உள்ளவளுமான சீதையை, அவள் முன்னர் இருந்தவாறே, தேவதைகள் என்னிடம் திருப்பிக் கொடுக்கவில்லை என்றால், தேவர்கள்–கந்தர்வர்கள்–மனுஷ்யர்கள்–பன்னகர்கள்–மலைகள் அடங்கிய உலகத்தைத் தலைகீழாகச் செய்துவிடுவேன்.'' (74,75)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
அறுபத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்தைந்து

கோபத்தை அடக்கும்படி இலக்குவன் வேண்டுதல்

சீதை அபகரித்துச் செல்லப்பட்டதால் மனங்கலங்கித் தவித்துக் கொண்டிருப்பவரும், ஊழிக்காலத் தீயைப் போல் உலகங்களை இல்லாததாக்குவதில் (அழித்துவிடுவதில்) துடிப்புடன்

இருப்பவரும், நாணேற்றப்பட்ட வில்லை அடிக்கடி பார்த்துப் பெருமூச்சுவிட்டுக் கொண்டிருப்பவரும், யுகத்தின் முடிவில் எல்லா உலகங்களையும் தகித்தொழிக்கத் தலைப்பட்ட பரமேசுவரனைப் போன்றிருப்பவருமான இராமனை, அளவு கடந்த சினங்கொண்டவராக இதுவரை பார்த்திராத இலக்குவன், இப்போது பார்த்து, உலர்ந்த முகத்துடன் கைகளைக் கூப்பிக்கொண்டு பின்வரும் சொற்களைக் கூறினான்— (1–3)

''அண்ணா! இதற்கு முன் தாங்கள் புலனடக்கம் உடையவராக, மென்மையான உள்ளம் கொண்டவராக, எல்லா உயிர்களுக்கும் நன்மை விளைவிப்பதில் பேரார்வம் உடையவராக இருந்தீர்கள். ஆதலால், இப்போது கோபத்தின் வசப்பட்டு இயல்பான நற்குணங்களைத் துறந்துவிடலாகாது. சந்திரனிடம் மக்கள் மனத்தை மகிழ்விக்கும் சோபையும், சூரியனிடம் வெம்மைக் கதிர்களும், வாயுவினிடம் எப்போதும் சஞ்சரித்துக் கொண்டே இருக்கும் தன்மையும், பூமியினிடம் பொறுமையும் நிலைகொண்டுள்ளன. தங்களிடம், இந்த நான்கு தன்மைகளுடன் (ஐந்தாவதாக) ஈடு–இணையில்லாத புகழ் குடிகொண்டிருக்கிறது. யாரோ ஒருவன் செய்த குற்றத்திற்காக, உலகங்களை அழிக்க முற்படுவது நியாயமானது அல்ல. (4–6)

முதலில், உடைந்து சின்னாபின்னமாகக் கிடக்கும் இந்தப் போர் ரதம் (உல்லாசப் பயணங்களுக்காக அல்லாமல், போர்களத்தில் உபயோகப்படும்படித் தனித்தன்மை பெற்ற தேர்) யாருடையது என்றறிந்து கொள்ள முயல்கிறேன். யார், எந்தக் காரணத்திற்காக, நுகத்தடி மற்றும் யுத்தக் கருவிகள் நிறைந்த இந்த ரதத்தை முறியடித்திருக்கிறார்? இதோ குதிரைக் குளம்பு, தேர்ச் சக்கரம் ஆகியவைகளின் அழுத்தமான சுவடுகள் காணப்படுகின்றன. அத்துடன், தரையில் இரத்தத் துளிகளும் காணப்படுகின்றன. எனவே, பேச்சில் வல்லவரே! இந்தச் செயல் ஒரே ஒருவரால் செய்யப்பட்டது. இருவரால் (அல்லது, அதற்கு அதிகமான பேர்களால்) நிகழ்த்தப்பட்டது அல்ல. ஏனென்றால், இங்கே பெரும்படையின் பாதச்சுவடுகள் காணப்படவில்லை. மன்னர் மைந்தரே! இந்த இடத்தில் பயங்கரமான போர் நிகழ்ந்திருக்கிறது. ஒருவருடைய கால்சுவடுகள் மட்டுமே பதிந்திருக்கின்றன. ஒருவர் (குற்றம் செய்தவன்) பொருட்டு, உலகங்களையெல்லாம் அழிப்பதற்குத் தாங்கள் முயலக்கூடாது. (7–9)

செங்கோலோச்சும் மன்னர்கள் (குற்றவாளிகள் விஷயத்தில்) குற்றத்தின் கடுமை–மென்மைகளுக்கேற்றபடி தண்டனை கொடுப்பவர்களாகவும், மென்மையான மனமுடையவர் களாகவும், மிகவும் அமைதியுடையவர்களாகவும் இருக்கவேண்டும். தாங்கள் எப்போதும் எல்லா உயிர்ப்பிராணிகளுக்கும் அடைக்கலம் தருபவர். ஜீவன், கடைசியில் போய்ச் சேர வேண்டிய இடமும் தாங்களே. இராகவா! ஆறு–கடல்–மலைகளும், தேவ–கந்தர்வ–தானவர்களும் மற்றும் எந்தவொரு மனிதரும், தங்கள் துணைவியார் கவர்ந்து செல்லப்பட்டது சரியானது என்று அங்கீகரிக்க மாட்டார்கள். மிக உயர்ந்த வேள்விகளைச் செய்து முடித்த பரம்பரையில் வந்துள்ள தங்களுக்கு, நற்குணசாலிகள் ஒருபோதும் தீங்கு செய்ய மாட்டார்கள். ஆகவே, சீதையைத் தூக்கிக் கொண்டு போன குற்றவாளியைத் தாங்கள் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். (10–12)

(சீதையைத் தேடுவதில்) என்னை இரண்டாவது நபராகக் கொண்டு, கையில் வில்லேந்தி, இங்குள்ள மாமுனிவர்கள் உதவியுடன் பெருங்கடல்கள், மலைகள், காடுகளில் தேடுவோம். பயங்கரமான, பல்வகையான குகைகளிலும், நதிகள்–தாமரையோடைகளிலும், தேவ–கந்தர்வர் உலகங்களிலும் மனத்திண்மையுடன் தேடிக்கொண்டு செல்வோம். தங்கள் துணைவியைக் கவர்ந்து சென்ற குற்றவாளியை, நாமே அலைந்து திரிந்து கண்டுபிடிப்பதற்கு முன், மூன்று உலகங்களிலும் உள்ள பெருந்தலைவர்கள் தங்களிடம் தங்கள் பத்தினியைக் கொண்டுவந்து கொடுக்காவிட்டால், கோசலைச் செல்வமே! அதன் பிறகு, காலத்திற்கேற்ற காரியங்களைச் செய்யுங்கள். புருஷோத்தமரே! உத்தமமான இயல்பு, சமாதான அழைப்பு, மரியாதை, அரசியல் நடைமுறை ஆகியவற்றிற்கேற்றபடி, சீதையைத் தாங்கள் அடையாமற்போனால், பிறகு,

பொற்கூரான, இந்திரனுடைய வஜ்ராயுதத்திற்கு நிகரான பாணங்களால் உலகத்தைப் புரட்டிப் போடுங்கள்.'' (13–16)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
அறுபத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்தாறு

இராமனைச் சமாதானப்படுத்துதல்

இவ்வாறு, சோகத்தால் வெதும்பிக் கொண்டிருந்தவரும், உதவி செய்ய உற்றார்–உறவினர் எவருமேயில்லாதவர் போல் புலம்பிக் கொண்டிருந்தவரும், அளவுகடந்த மனமயக்கத்திற்கு ஆட்பட்டவரும், பிரக்ஞை இழந்து வருத்தப்பட்டுக் கொண்டிருந்தவருமான இராமனை, லட்சுமணன் சிறிது நேரம் நல்வார்த்தை கூறித் தேற்றிவிட்டு, பின்னர் அவர் திருவடிகளைப் பிடித்துக் கொண்டு (ரகுகுல மேன்மையை) நினைவுபடுத்தினான். (1,2)

''அண்ணா! தேவர்கள் எவ்வளவோ முயற்சி செய்து அமுதத்தை அடைந்தார்கள். அதேபோல, மன்னர் தசரதர், நீண்டகாலம் உடலை வறுத்தி நியமங்களை அனுஷ்டித்தும், புத்ரகாமேஷ்டி போன்ற புண்ணிய கர்மாக்களைச் செய்தும், தங்களைப் புத்திரராக அடைந்தார். தங்களுடைய குணங்களால் தங்களிடம் அளவிட முடியாத பாசத்தால் கட்டப்பட்டிருந்த, உலகாண்ட மன்னர், தங்கள் பிரிவாற்றாமையால் உயிர் துறந்தார் (சுவர்க்கலோகம் சென்றார்) என்று பரதனிடமிருந்து அறிந்து கொண்டோம். அண்ணா! உலகத்தில் எந்தப் பிராணிக்குத்தான் ஆபத்துக்கள் வரவில்லை? மன்னரே! ஆபத்துக்கள் நெருப்பைப்போல் நொடிப்பொழுதில் பற்றிக் கொள்கின்றன; அடங்கியும் போகின்றன. (3–5)

காகுத்தரே! தாங்கள் இந்தத் துயரத்தைப் பொறுத்துக் கொள்ளாமல் போனால் (மனம் தளர்ந்து புலம்பிக் கொண்டிருந்தால்), கல்வியறிவில்லாத, மனத்திண்மையில்லாத ஒரு பாமரன் எவ்வாறு சகித்துக் கொள்வான்? புலிநிகர் ஆண்மையாளரே! தாங்கள், மிகவும் ஆழமான துக்கம் காரணமாக, தங்கள் பேராற்றலால் உலகங்களை அழிக்க முற்பட்டால், அதனால் பாதிக்கப்பட்ட மக்கள் யாரிடம் சென்று முறையிடுவார்கள்? உலகத்தில் எல்லா மக்களுக்கும் ஆபத்துக்கள் வருவதும் போவதும் இயற்கைதான். நகுஷனுடைய புதல்வனான யயாதி, தேவலோகத்தில் இந்திரப் பதவியை அடைந்தான். ஆனால், அங்கேயும் அவனுக்குத் துன்பம் வராமல் இல்லை. (தேவலோகத்தில் இந்திரன், யயாதியைப் பார்த்து, 'உலகத்தில் உத்தமன் யார்?' என்று கேட்டான். 'நான்தான்!' என்று செருக்குடன் யயாதி பதில் கூறியதால், கீழே தள்ளப்பட்டான்.) (6–8)

நம்முடைய தந்தைக்குப் புரோகிதரும் மாமுனிவருமான வசிஷ்டர் ஒரே நாளில் நூறு புதல்வர்களைப் பெற்றார். பின்னர், (விசுவாமித்திரருடைய சாபத்தால்) ஒரே நாளில் நூற்றுவரையும் இழந்தார். கோசலநாட்டுத் தலைவரே! எல்லா மக்களாலும் வணங்கப்படுகிறவளும் உலகத் தாயுமானவளுமான இந்த பூதேவி சிற்சில சமயங்களில் ஆட்டம் காண்கிறாள். இந்த நிலநடுக்கத்தை நாம் பார்க்கிறோமே? எவர்கள், தங்கள் கடமையிலிருந்து சிறிதளவுகூட பிறழாமல் இருப்பவர்களோ, எவர்கள் உலகத்திற்குக் கண் போன்றவர்களோ, எவர்களை ஆதாரமாகக் கொண்டு உலகம் நிலைத்து நிற்கிறதோ, எவர்கள் மிகவும் ஆற்றலுடையவர்களோ, அப்படிப்பட்ட சூரிய–சந்திரர்கள்கூட ராகுவினால் பீடிக்கப்படுகிறார்கள். (9–11)

ஆண்மையாளரே! மிகப்பெரிய பிராணிகளும் தேவர்களும்கூட (பிராரப்தக் கர்மாவிலிருந்து) வினைப்பயனைத் தவிர்க்க முடியாது என்னும்போது, சரீரம் எடுத்து வந்துள்ளவைகளில் தலையாய படைப்பான மனிதனைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா? இந்திரன் முதலான

தேவர்களுக்கும்கூட சுக–துக்கங்கள் ஏற்படுகின்றன என்று கூறப்படுகிறது. புருஷோத்தமரே! ஆகவே, தாங்கள் மனக்கவலைக்கு இடம் கொடுக்கக் கூடாது. இராகவனே! பிராட்டியார் கொல்லப்பட்டிருக்கலாம். அல்லது தூக்கிக் கொண்டு போகப்பட்டிருக்கலாம். அதன் காரணமாக, வீரரே! படிப்பறிவில்லாத சாமானிய மக்களைப் போல, தாங்கள் இவ்வளவு துக்கம் அடையக் கூடாது. (12–14)

இராமா! நடந்ததை உள்ளபடி அறிந்து கொள்ளும் திறமையுடைய தங்களைப் போன்ற ஞானிகள் மிகப்பெரிய துக்கம் ஏற்பட்ட காலத்திலும், ஒருபோதும் மனத்தளர்ச்சியை அடைய மாட்டார்கள். புருஷோத்தமரே! கலக்கமில்லாத அறிவைக் கொண்டு, யதார்த்த நிலையைப் பற்றித் தீவிரமாக ஆலோசியுங்கள். பேரறிவாளர்கள், தங்கள் அறிவைக் கொண்டு, புண்ணிய–பாவங்களை (செய்யத்தக்கது–செய்யத்தகாதது ஆகியவைகளை) அறிந்துகொள்கிறார்கள். (15,16)

கர்மாக்களின் பலன் (அதாவது, குணமோ குற்றமோ) கண்ணுக்குத் தெரிவதில்லை; பயன் அளிக்கும்போதுதான் உணரப்படுகிறது. கர்மாக்களின் பயனான சுக–துக்கங்களும் நிரந்தரமானவை அல்ல; சிறிதுகாலம் இருந்துவிட்டு மறைந்து போய்விடுகின்றன. கர்மங்களை அனுஷ்டிக்கா விட்டால் சுகமோ–துக்கமோ ஏற்படுவதில்லை. இராமா! முன்பு பலதடவை இந்த விஷயங்களைத் தாங்களே எனக்கு உபதேசித்திருக்கிறீர்கள். (எனவே, தங்களுக்கு வாழ்க்கை தத்துவங்கள் எல்லாம் நன்றாகத் தெரியும் என்பது உறுதியாகிறது.) அப்படியிருக்கும்போது, யாரோ ஒருவன் – அவன் சாட்சாத் பிருகஸ்பதியாகத்தான் இருக்கட்டுமே! – தங்களுக்கு என்ன உபதேசம் செய்யமுடியும்? (17,18)

எல்லாம் அறிந்த பேரறிவாளரே! தேவர்கள்கூட தங்கள் அறிவின் ஆழத்தைக் கண்டறிய மாட்டார்கள். ஆனால், இப்போது தங்களது சிந்தனை திறனோ சோகம் காரணமாக, உறங்கிக் கிடப்பதுபோல் இருக்கிறது. அதனால், நான் அதனைத் துயிலெழுப்புகிறேன். இக்ஷ்வாகு குல மாவீரரே! தங்களிடம் தேவதைகளுக்குரியனவும் மனிதர்களுக்குரியனவுமான ஆற்றல்கள் நிரம்பியுள்ளன. இந்தச் சந்தர்ப்பத்திற்கேற்ற செயல்களை முடிவு செய்து, எதிரிகளை வதம் செய்வதில் முயற்சி மேற்கொள்ள வேண்டும். காளை நிகர் பராக்கிரமசாலியே! உலகங்களையெல்லாம் அழிப்பதால் தங்களுக்கு என்ன பயன்? குற்றம் செய்த பாவியான பகைவனைக் கண்டுபிடித்து, அவனை வேரோடு கெல்லி எறிவதுதான் தக்க கர்மமாகும்.'' (19–21)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
அறுபத்தாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்தேழு
ஜடாயுவைச் சந்தித்தல்

எல்லாவற்றிலும் உள்ள சாரமான நற்கருத்துக்களை ஏற்றுக் கொள்பவரும், இலக்குவனுக்கு முன் பிறந்தவருமான இராகவன், அவன் கூறிய அறிவுபூர்வமான வாதங்களில் மிக நுட்பமான நியாயங்களை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டார். மாவீரரான அவர், வளர்ந்து வரும் தன் கோபத்தைத் தணித்துக் கொண்டு, உத்தமமான வில்லைத் தொங்கவிட்டுக் கொண்டு லட்சுமணனைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார்— ''குழந்தாய்! லட்சுமணா! இப்போது நாம் என்ன செய்வோம்? எங்கே போவோம்? எந்த உபாயத்தால் சீதையைக் காணலாம்? என்பதைப் பற்றி ஆலோசனை செய்.'' (1–3)

இவ்வாறு துக்கத்தால் தவித்துக் கொண்டிருக்கும் அவரை நோக்கி லட்சுமணன் கூறினான்— ''தாங்கள் இந்த ஜனஸ்தானத்திலேயே தேடுவதுதான் சரியானது. பல அரக்கர்கள் இங்கே அலைந்து

திரிந்து கொண்டிருக்கிறார்கள். அத்துடன், பலவகையான மரங்களும் கொடிகளும் அடர்த்தியாக உள்ளன. இங்கே, மலைமேல் உட்புக முடியாத இடங்களும், பாறை வெடிப்புகளும், குகைகளும் இருக்கின்றன. பலவகையான, பயங்கரமான அநேக விலங்கு–பறவைக் கூட்டங்கள் வசிக்கும் குகைகளும், கின்னரர்கள் தங்குமிடங்களும், கந்தர்வர்களின் வீடுகளும் இருக்கின்றன. (4–6)

என்னுடன் அந்த இடங்களிலெல்லாம் தாங்கள் தேடிப் பார்ப்பது சாலச் சிறந்தது. தங்களைப் போன்ற நுண்ணறிவாளர்கள், மகாத்மாக்கள், வீரர்கள் போன்றோர் பெருங்காற்று வீச்சினால் அசையாத மலைகள் போல் ஆபத்தைக் கண்டு கலங்க மாட்டார்கள்.'' இவ்வாறு லட்சுமணன் கூறியதும், இராமன் மறுபடியும் சினங்கொண்டவராக, கத்தியைப் போல் கூரிய–கொடிய அம்பினை வில்லில் பூட்டி, அந்தக் காடு முழுவதிலும் அவனுடன் சுற்றி அலைந்தார். பின்னர், (சிறிது தூரம் நடந்து சென்றதும்) மலைச்சிகரத்தைப்போல் கம்பீரமானவரும், மகாபுண்ணியசாலியும், பட்சிகளில் உன்னதமானவருமான ஜடாயு, உடலெல்லாம் இரத்தத்தால் நனைந்து, தரையில் விழுந்து கிடப்பதைக் கண்டார். மலைச்சிகரம் போல் விளங்கும் அவரைப் பார்த்துவிட்டு இராமன், லட்சுமணனிடம் சொன்னார்— (7–9)

''விதேக மன்னர் செல்வியான சீதை, இவனால் புசிக்கப்பட்டுவிட்டாள் என்பதில் ஐயமில்லை. யாரோ ஓர் அரக்கன், கழுகு வடிவத்தைத் தாங்கிக் கொண்டு காட்டில் சுதந்திரமாகச் சுற்றி வருகிறான். நெடுந்தடங்கண்ணாளாகிய சீதையைத் தின்றுவிட்டு, சௌக்கியமாக இங்கே உட்கார்ந்திருக்கிறான். நெருப்பைக் கக்கும் தலைப்பகுதியை உடைய, பயங்கரமான, குறிதப்பாது செல்கின்றவைகளுமான பாணங்களால் இவனைக் கொல்லப் போகிறேன்.'' இவ்வாறு சொல்லிவிட்டு, கோபத்தால் கொதித்துக் கொண்டிருந்த இராமன், வில்லில் கூர்மையான பாணத்தைத் தொடுத்து, பெருங்கடலை எல்லையாகவுடைய பூமண்டலத்தையே ஆட்டுவதைப் போல, அந்தக் கழுகை நெருங்கினார். (10–12)

குற்றுயிராகக் கிடந்த கழுகு, நுரையோடுகூட ரத்தத்தைக் கக்கிக் கொண்டு மிகவும் சோர்ந்த குரலில், தசரதரின் புதல்வரான இராமனைப் பார்த்துப் பின்வருமாறு பேசிற்று— ''நீ, நெடுங்காலம் வாழ்வாயாக! இந்தப் பெருங்கானகத்தில் அபூர்வமான மூலிகையை (மருத்துவர்கள் மிக்க ஆவலுடனும் கவனத்துடனும் தேடுவார்களோ, அதேபோல்) எந்த மாதரசியைத் தேடிக் கொண்டிருக்கிறாயோ, அந்தப் பிராட்டியாரும் மற்றும் என் பிராணனும் இராவணனால் அபகரிக்கப் பட்டன! இராகவா! நீயும் லட்சுமணனும் இல்லாத நேரத்தில், மிக்க பலம் பொருந்தியவனான இராவணனால், பிராட்டியார் கவர்ந்து செல்லப்பட்டதை, நான் என் கண்களால் பார்த்தேன். நான், சீதாப்பிராட்டியை மீட்க முயன்றேன். அப்போது நடந்த போரில் இராவணன், அவனுடைய தேரும் குடையும் முறிக்கப்பட்டுத் தரையில் வீழ்த்தப்பட்டான். (13–16)

இராமா! முறிந்து கிடக்கும் இதுதான், அவனுடைய வில்; இவைகள் அவனுடைய அம்புகள்; போரில் என்னால் தகர்க்கப்பட்ட இந்தப் போர்த்தேர் அவனுடையது. இவன், என்னுடைய இறக்கைகளால் அடித்துக் கொன்று வீழ்த்தப்பட்ட, அவனுடைய தேர்ப்பாகன். நான் சற்றுக் களைப்படைந்திருந்த வேளையில், என் இரு இறக்கைகளையும் கத்தியால் அறுத்துத் தள்ளிவிட்டு, வைதேகியான சீதையை எடுத்துக் கொண்டு ஆகாயத்தில் பறந்து சென்றான். முன்னரே அரக்கனால் தாக்கப்பட்டுக் குற்றுயிராகக் கிடக்கும் என்னைக் கொல்வதற்கு, நீ விரும்பலாகாது.'' (17–19)

இராமன், ஜடாயுவிடமிருந்து சீதையைப் பற்றி உபயோகமான செய்தியைத் தெரிந்து கொண்டு, முன்னைக் காட்டிலும் இருமடங்கு அதிகமான மனவேதனையால் துடித்து, கண்களில் நீர் வழிய நின்றார். லட்சுமணனுடன் ஜடாயுவின் சொற்களைக் கேட்ட இராமன், வில்லை அப்பால் வைத்துவிட்டு, கழுகரசனைக் கட்டித் தழுவிக் கொண்டு உணர்விழந்து தரையில் விழுந்தார். (தனக்கு உதவி செய்ய முனைந்தவருக்கு இத்தகைய துர்கதி ஏற்பட்டதே? என்று வருந்தி,) இலக்குவனுடன் சேர்ந்து வாய்விட்டு அழுதார். ஒருவழிப் பாதையானதும்,

நெருங்கிச் செல்ல முடியாததுமான அந்தத் தனி இடத்தில், தான் ஒருவராக, அடிக்கடி நீண்ட பெருமூச்சுவிட்டுக் கொண்டிருக்கும் அவரைப் பார்த்துவிட்டு, துக்கம் பொங்கியெழ, இலக்குவனை நோக்கிக் கூறினார்— (20–22)

''அரசு, என் கைநழுவிப் போயிற்று; வனவாசம் ஏற்பட்டது; சீதை காணாமல் போய்விட்டாள்; கழுகரசர் (ஜடாயு) தாக்கப்பட்டு இறக்கும் நிலையில் உள்ளார். இப்படி, அலையலையாக எவ்வளவு கஷ்டங்கள்! ஐயோ, பாவம்! என் துரதிருஷ்டம் (பிறரைச் சுட்டுப் பொசுக்கும்) அக்னியைக்கூட எரித்துவிடும்! இப்போது நிரம்பி விளங்கும் சமுத்திரத்தில் நான் விழுந்து நீந்தத் தொடங்கினால், நதிகளின் தலைவனாகிய அதுவும், என் துரதிருஷ்டத்தின் காரணமாக வற்றிப் போய்விடும். அசையும்–அசையாப் பொருள்கள் நிறைந்த இவ்வுலகில், என்னைக் காட்டிலும் துரதிருஷ்டசாலி எவரும் இலர். அதனால்தான், மிகப்பெரிய துயரம் என்னும் வலையில் நான் சிக்கிக் கொண்டிருக்கிறேன். என் தந்தையின் தோழர்; முதுமை அடைந்தவர்; கழுகுகளின் அரசர் – இப்படிப்பட்டவர், என் துரதிருஷ்டத்தால் பலமாகத் தாக்கப்பட்டுத் தரையில் வீழ்ந்து கிடக்கிறார்.'' (23–26)

இவ்வாறு பலவிதமாகப் பேசிவிட்டு, இலக்குவனோடு இருந்த இராமன், தன்னைப் பெற்றெடுத்த தந்தையிடமுள்ள அன்பை வெளிக்காட்டுவதுபோல் ஜடாயுவைத் தடவிக் கொடுத்தார். பின், இராமன் இறக்கைகள் அறுக்கப்பட்டு, ரத்தம் தோய்ந்து கிடக்கும் அந்தக் கழுகரசனைக் கட்டிக் கொண்டு, 'என் உயிருக்கு உயிரான சீதை எங்கே போனாள்?' என்று சொல்லியவாறே கண்ணீர் பெருக்கித் தரையில் விழுந்தார். (27,28)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
அறுபத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்தெட்டு

ஜடாயுவிற்கு ஈமக்கடன் இயற்றுதல்

கொடிய அரக்கன் இராவணனால் தரையில் வீழ்த்தப்பட்ட அந்தக் கழுகின்மேல் பார்வையைச் செலுத்தி, தன்னிடம் எப்போதும் தோழமையோடிருக்கும் இலக்குவனைப் பார்த்து இராமன் கூறினார்— ''இந்த பறவை அரசர், எனக்கு உதவி செய்ய முற்பட்டபோது, போரில் அரக்கனால் பலமாகத் தாக்கப்பட்டு, எவரும் இழக்க விரும்பாத, தன் உயிரையும் விடப் போகிறார். லட்சுமணா! இவர் சரீரத்திற்குள், சப்த நாடியும் ஒடுங்கிப் போய், உயிர் மட்டும் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. அதனால், இவர் குரல் நலிந்திருக்கிறது; (பார்வை மங்கித்) தடுமாற்றத்துடன் பார்க்கிறார்.'' (1–3)

(இதுவரை லட்சுமணனிடம் பேசிய இராமன், இனி ஜடாயுவிடம் பேசுகிறார்—) ''ஜடாயுவே! வாழ்க! உங்களால் வாய் திறந்து பேசமுடியுமென்றால், சீதையைப் பற்றி மேலும் விபரம் கூறுங்கள்; நீங்கள் எவ்வாறு தாக்கப்பட்டீர்கள்? என்பதையும் கூறுங்கள். இராவணன், எதன் காரணமாக சீதையை அபகரித்துச் சென்றான்? நான், அவனுக்கு என்ன குற்றமிழைத்தேன்? என்னிடம் என்ன குற்றத்தைப் பார்த்து, என் அன்பிற்குரிய பத்தினியைக் கவர்ந்து சென்றான்? புள்ளரசே! சந்திரனைப் போல் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அவளுடைய முகம் எப்படி இருந்தது? அவனால் தூக்கிச் செல்லப்படும் காலத்தில், சீதை என்னென்ன கூறினாள்? அன்பரே! அந்த அரக்கனுடைய வீர பராக்கிரமம் எப்படிப்பட்டது? எப்படிப்பட்ட உருவ அமைப்பைக் கொண்டவன்? அவனுடைய செயல்திறன் எப்படி? அவனுடைய இருப்பிடம் எங்கே இருக்கிறது? என்னுடைய இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில் கூறுங்கள்.'' (4–7)

ஆதரவற்ற ஒருவனைப் போல் புலம்பிக் கொண்டிருக்கும் அவரைப் பார்த்து, மகாபுண்ணியசாலியான ஜடாயு, தடுமாறும் குரலில் பின்வருமாறு பதில் கூறினார்— ''அவள், அரக்க மன்னன் இராவணனால் யாராலும் கண்டுபிடிக்க முடியாத மாயையை உபயோகித்து, புயல்காற்றும் மேகக்கூட்டமும் சேர்ந்து காரிருளில் மூழ்கியிருந்தபோது எடுத்துப் போகப்பட்டாள். அன்பனே! நான் சற்றுத் தளர்ச்சியடைந்திருந்த நேரத்தில் என் இறக்கைகளை வெட்டிப் போட்டுவிட்டு, சீதையைத் தூக்கிக் கொண்டு தெற்குத் திசையில் சென்றான். இராமா! இப்போது என் உயிர் அடங்கிக் கொண்டிருக்கிறது; பார்வை (நிலைத்து நிற்காமல்) சுழல்கிறது. நுனியில் விளாமிச்ச வேர்களைக் கொண்ட தங்கமயமான மரங்களைப் பார்க்கிறேன். (8–11)

இராவணன், எந்த முகூர்த்தத்தில் சீதையை எடுத்துக் கொண்டு சென்றானோ, அந்த முகூர்த்தத்திற்கு 'விந்தம்' என்று பெயர். (இந்த முகூர்த்தத்தின் சிறப்பு என்னவென்றால்) பொருளைப் பறிகொடுத்த உரிமையாளன், விரைவிலேயே அதைத் திரும்ப அடைந்து விடுவான். உன்னுடைய தேவி ஜானகியைத் திருடிச்சென்ற அரக்க மன்னனான இராவணன், இதைக் கவனிக்கவில்லை. தூண்டிலிலுள்ள முள்ளைக் கவ்விய மீன்போல அவன் விரைவில் அழியப் போகிறான். ஜனகருடைய புதல்வியைப் பற்றி, நீ வீணாகக் கவலைப்பட வேண்டாம். விரைவில், அந்த அரக்கனை யுத்தத்தில் மாய்த்து, சீதையுடன் மகிழ்ந்திருக்கப் போகிறாய்.'' (12–14)

(உயிர் போய்க் கொண்டிருந்தாலும்) கலக்கமில்லாத உணர்வுடனிருந்த கழுகரசர், இராமனுடைய கேள்விகளுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, அவருடைய வாயிலிருந்து இரத்தமும் சதையும் பெருகி வழிந்தது. 'விச்ரவஸின் குமாரன்; சாட்சாத் குபேரனுடைய சகோதரன்...' என்று அந்தப் புள்ளின் வேந்தன் சொல்லிக் கொண்டிருந்தபோதே, கிடைத்தற்கரியதான தன் இன்னுயிரைத் துறந்தார். இராமன் கைகளைக் கூப்பிக் கொண்டு, 'சொல்லுங்கள், மேலே சொல்லுங்கள்' என்று வேண்டிக் கொண்டிருக்கும்போதே, கழுகின் உயிர் உடலைவிட்டுப் பிரிந்து வான்வெளியை அடைந்தது. அவர் (ஜடாயு) தலையைப் பூமியில் கிடத்தி, கால்களை விரித்து நீட்டி, தன் உடலைத் தரையில் வீழ்த்திச் சாய்ந்துவிட்டார். (15–18)

செக்கச்சிவந்த கண்களுடன், உயிரைத் துறந்து மலைபோல் அசைவற்றுக் கிடக்கும் அந்தக் கழுகைப் பார்த்ததும், பலவகையான துக்கங்களால் மனம் நொந்திருந்த இராமன், லட்சுமணனைப் பார்த்துச் சொன்னார்— ''அரக்கர்கள் வாசம் செய்யும் இந்த தண்டகாரண்யத்தில், பல ஆண்டுகள் சௌக்கியமாகக் காலங்கழித்து வந்த இந்த கழுகு, இவ்விடத்திலேயே தன் உயிரை விட்டிருக்கிறது. இது, அநேக ஆண்டுகளைக் கண்டிருக்கிறது; நீண்ட காலம் சுகவாழ்வு வாழ்ந்திருக்கிறது. இவ்வாறிருந்த அதுவே, இப்போது கொல்லப்பட்டு நெடுந்துயில் கொண்டுவிட்டது. விதியை யாரால் வெல்ல முடியும்? (19–21)

லட்சுமணா! (இந்த விசித்திரத்தைப்) பார்! எனக்கு உதவி செய்து சீதையை மீட்கத் துணிந்த இந்த கழுகு, (அந்தக் காரணத்தாலேயே) மகாபலசாலியான இராவணனால் கொல்லப்பட்டுக் கிடக்கிறது. இந்த புள்ளரசு, தகப்பன்–பாட்டன் என்று பரம்பரையாக, பல தலைமுறைகளாகக் கிடைத்த கழுகு பேரரசைக் கைவிட்டு, என் சேவையில் ஈடுபட்டிருந்த போது உயிரைத் துறந்திருக்கிறது. அறத்தைக் கைக்கொண்டு வாழ்பவர்கள், சூரர்கள், அடைக்கலம் கேட்டு வந்தவர்களைக் காப்பாற்றுகிறவர்கள் – இப்படிப்பட்ட உயர்பண்புகளை உடையவர்கள் எக்காலத்திலும் விலங்கு–பறவை முதலிய இனங்களில்கூட இருந்து கொண்டிருக்கிறார்கள். (22–24)

எதிரிகளை வாட்டுபவனே! இளவலே! சீதை அபகரித்துச் செல்லப்பட்டதால் ஏற்பட்ட துக்கம், என்பொருட்டு உயிர்துறந்த கழுகுக்காக ஏற்பட்டுள்ள துயரத்திற்கு ஈடாகாது. மிக்க புகழ் படைத்தவரும் புண்ணியசாலியுமான மன்னர் தசரதர், எப்படி என்னால் கௌரவிக்கத்தக்கவரோ போற்றத்தக்கவரோ, அப்படியேதான் இந்த கழுகரசரும் (கௌரவிக்கத்தக்கவர்). லட்சுமணா!

உலர்ந்த கட்டைகளைக் கொண்டு வா. அரணியைக் கடைந்து நெருப்பை உண்டாக்கப் போகிறேன். என் நிமித்தமாக உயிரை விட்ட கழுகரசரை, நான் தகனம் செய்யப் போகிறேன். பறவைக் கூட்டங்களின் பாதுகாவலரான இவரை, சிதையில் ஏற்றி வைக்கப் போகிறேன். கொடிய அரக்கனால் கொல்லப்பட்டுக் கிடக்கும் இவருக்கு, தகன ஸம்ஸ்காரம் செய்யப் போகிறேன்.'' (25–28)

(இவ்வாறு இலக்குவனிடம் கூறியபின், ஜடாயுவைப் பார்த்து) ''கழுகரசரே! பெரும்பேறு பெற்றவரே! வேள்வி செய்கிறவர்கள், நித்தியம் அக்னிஹோத்திரம் செய்பவர்கள், போர்க்களத்தில் புறமுதுகு காட்டாது போர் புரிந்து மாண்டவர்கள், பூதானம் செய்தவர்கள் – இவர்கள் எப்படிப்பட்ட உயர்ந்த நிலையைச் சென்றடைவார்களோ, அப்படிப்பட்ட ஈடு–இணையற்ற, மிக்குயர்ந்த சுகபோகமான புண்ணிய உலகங்களை, என் ஆணைப்படி என்னால் உத்தரக்கிரியை செய்யப்பட்டவராகச் சென்றடைவீராக.'' இவ்வாறு சொல்லிவிட்டு, கழுகரசரைச் சிதையில் ஏற்றி வைத்து, மிகுந்த துக்கப்பட்டுக் கொண்டு, தருமாத்மா இராமன், தன்னுடைய நெருங்கிய உறவினருக்குச் செய்வதைப் போல் தீ மூட்டி தகனம் செய்தார். (29–31)

பின்னர், மாவீரரான இராமன், லட்சுமணனோடு காட்டிற்குள் சென்று, பருமனான மகாரோஹி (என்னும் கிழங்கு வகையை) அந்த பறவைக்காக வெட்டிக் கொண்டு வந்தார். பெரும்புகழ் படைத்த இராமன், அந்தக் கந்தமூலங்களை வெட்டி, பிண்டங்களாகச் செய்து, பசுமையான புதிய தருப்பை விரிப்பின்மேல் வைத்து கழுகுக்குப் பிண்டதானம் செய்தார். இருபிறப்பாளர்கள், உயிரை விட்டுப் பிணமாகி மேலுலகம் புறப்பட்டுவிட்ட ஜீவனுக்கு, சுவர்க்கத்தை அடைவிக்கும் எந்தெந்த வேதமந்திரங்களை (யம ஸூக்தம் முதலியவைகளை)ச் சொல்கிறார்களோ, அவற்றையெல்லாம் அந்த பறவைக்காக அவரே ஜபித்தார். சக்கரவர்த்தியின் திருக்குமாரர்களான அவ்விருவரும் கோதாவரி நதிக்குச் சென்று, அந்த கழுகரசருக்கு நீர்க்கடன் செய்தார்கள். (32–35)

அப்போது, மறுபடியும் நீராடிவிட்டு, அறநூல்களில் கூறியுள்ளபடி, இராம–லட்சுமணர்களாகிய இருவரும் கழுகரசரை முன்னிட்டு, மேலும் பல தர்ப்பணங்களைச் செய்தார்கள். புகழைத் தருவதும், பிறரால் செய்ய முடியாததுமான பெரும் போர் செய்து வீழ்த்தப்பட்ட அந்தக் கழுகின் வேந்தர், மாமுனிவர்களுக்கு நடப்பதைப் போன்ற முறையில் இறுதிச் சடங்குகள் செய்யப்பட்டவராக, தன் ஆன்மாவிற்கு மங்களமும்–புண்ணியமுமான நற்கதியை அடைந்தார். தேவோத்தமர்களான விஷ்ணுவையும் இந்திரனையும் போன்ற அவர்கள், சிறந்த பறவையான ஜடாயுவிற்கு உரிய முறையில் நீர்க்கடன் செய்து, மனம் அமைதி அடைந்து, சீதையைத் தேடிக் கண்டுபிடிப்பதில் மனத்தைச் செலுத்தி, (ஜடாயு காட்டிய திசையில்) காட்டிற்குள் சென்றார்கள். (36–38)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
அறுபத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்தொன்பது

கபந்தனிடம் சிக்கிக் கொள்ளுதல்

அந்த பறவைக்கு உகந்த வகையில் நீர்க்கடன் செலுத்திவிட்டு, இராம–லட்சுமணர்களான அவ்விருவரும் அங்கிருந்து புறப்பட்டு, காட்டுப் பகுதியில் சீதையைத் தேடிக் கொண்டு மேற்குத் திசையில் (தென்மேற்குத் திசை என்று உரையாசிரியர் கருத்து) நடந்து சென்றார்கள். இக்ஷ்வாகு வம்சத்தவர்களான அவ்விருவரும் பாணம், வில், கத்தி ஏந்திக் கொண்டு, மக்கள் நடமாட்டமில்லாத ஒற்றையடிப்பாதை வழியே தெற்குத் திசையை நோக்கித் திரும்பி நடந்தார்கள். எல்லாப் பக்கங்களிலும் அநேகவிதமான கொடி–புதர்கள் நிறைந்துள்ளதும், கடப்பதற்கு அரியதும்,

அடர்த்தியானதும், பயங்கரமானதும், மிக விஸ்தீர்ணமானதுமான அந்தப் பெருங்காட்டை வேகமாகக் கடந்து, மகாபலசாலிகளான அவ்விருவரும் தெற்குத்திசை நோக்கிச் சென்றார்கள். (1–4)

பின்னர், இராம–லட்சுமணர்கள் ஜனஸ்தானத்திலிருந்து மூன்று குரோசம் சென்று, அடர்ந்து செழித்திருந்த கிரௌஞ்சாரண்யம் என்னும் காட்டிற்குள் புகுந்தார்கள். அவ்விருவரும், பல வண்ணமுடைய நீருண்ட மேகக் கூட்டங்களைப் போன்றதும், எல்லாவிடத்திலும் மகிழ்ச்சி பொங்குவது போல், பலவண்ண நறுமணம் கமழும் பூக்கள் பூத்துக் குலுங்குவதும், பலவகையான விலங்கு–பறவைக் கூட்டங்கள் நிறைந்துள்ளதுமான அந்தக் காட்டில், சீதையைக் காணும் விருப்பத்துடன் தேடித் திரிந்தார்கள். சீதை அபகரித்துச் செல்லப்பட்டதால் மனம் தளர்ந்து, ஆங்காங்கே உட்கார்ந்து இளைப்பாறிச் சென்றார்கள். (5–7)

பின்னர், அவ்விரு சகோதரர்களும், கிழக்குத் திசையில் மூன்று குரோச தூரம் சென்று, கிரௌஞ்சாரண்யத்தைக் கடந்து, மதங்கர் ஆசிரமத்திற்கு முன்னதாக, பல கொடிய மிருகங்களும் பட்சிகளும் நிறைந்ததும், ஆங்காங்கே பலவகையான பிராணிகள் வசிப்பதும், எங்கும் அடர்த்தியான மரங்கள் நிறைந்ததுமான அந்தக் காட்டைப் பார்த்துக் கொண்டே சென்று, அங்கிருந்த மலையில், பாதாளம் வரை ஆழமானதும் எப்போதும் இருள் சூழ்ந்திருப்பதுமான ஒரு குகையை தசரத குமாரர்கள் கண்டார்கள். அவ்விடத்தை நெருங்கிச் சென்ற, மாவீரர்களான அவ்விருவரும் குகைக்கு அருகில், பேருடலும் கோரமான கண்களுமுடைய ஓர் அரக்கியைப் பார்த்தார்கள். (8–11)

இராம–லட்சுமணர்களாகிய அவ்விருவரும் அவ்விடத்தில் பலம் குன்றியவர்களுக்குப் பயத்தைக் கொடுப்பவளும் பார்ப்பதற்கு அருவருப்பாக இருப்பவளும் பயங்கரமான தோற்றம், நீண்ட வயிறு, கூர்மையான கடைவாய்ப்பற்கள், கடினமான தோல், அவலட்சணம், விரிந்த கூந்தல் – இவற்றை உடையவளும் வெறுக்கத்தக்கவளும் பெரிய மிருகங்களைப் புசிப்பவளுமான அவளை உற்று நோக்கினார்கள். அவள், வீரர்களான அவ்விருவரையும் நெருங்கி, அண்ணனுக்கு முன்னதாக(ப் பாதையைக் காட்டிக் கொண்டு) சென்று கொண்டிருந்த இலக்குவனைப் பார்த்து, ''வா, வா! நாம் இருவரும் ஒன்றுகூடி மகிழ்வோம்'' என்று சொல்லிக் கொண்டே, அவன் கைகளைப் பற்றி இழுத்தாள். லட்சுமணனைக் கட்டிப் பிடித்து இறுகத் தழுவி, ''என் பெயர் அயோமுகி. நான் உன்னை விரும்புகிறேன்! நீ பெரிய பாக்கியசாலி!'' என்று கூறினாள். (12–15)

''என் உயிர் போன்ற தலைவனே! வீரனே! மலைச்சிகரங்களிலும் ஆற்றின் மணற்படுகைகளிலும் எஞ்சியுள்ள வாழ்நாளை என்னோடு விளையாடி இன்புறுவாய்!'' இவ்வாறு அரக்கி கூறியதைக் கேட்டவுடன், மிகவும் சினம் கொண்டு வாளை உருவி எடுத்து, அவளுடைய காது–மூக்கு–நகில்களை லட்சுமணன் அறுத்துத் தள்ளினான். செவிகளும் மூக்கும் அறுக்கப்பட்டவுடன் அவள் பயங்கரமான உரத்த குரலில் அலறிக் கொண்டு வந்த வழியே திரும்பி ஓடினாள். அவள் திரும்பிச் சென்றதும், பகைவரைக் கொல்பவர்களும் சகோதரர்களுமான இராம–லட்சுமணர்கள், தைரியத்தை ஏற்படுத்திக் கொண்டு, நடந்து சென்று அடர்த்தியான ஒரு காட்டை அடைந்தார்கள். ஒளிச்சுடராக விளங்கும் தமையனாரைப் பார்த்து, மகாமேன்மை பொருந்தியவனும் பராக்கிரமமுள்ளவனும் நல்லொழுக்கமுடையவனும் தூயசிந்தை உடையவனுமான இலக்குவன், கைகளைக் கூப்பிக் கொண்டு (பின்வருமாறு) கூறினான்— (16–20)

''என்னுடைய இடது புஜம் மிகவும் துடிக்கிறது; என் மனம் மிகவும் கவலை அடைந்திருக்கிறது. மேலும், ஆபத்தைக் குறிப்பிட்டுக் காட்டும் தீய நிமித்தங்களையே கண்ணால் காண்கிறேன். அண்ணா! தாங்கள், உடனே ஒரு யுத்தத்திற்கு ஆயத்தமாக இருக்க வேண்டும். அருள்கூர்ந்து அடியேனுடைய சொற்களைக் கேட்டு, அதன்படி நடக்க வேண்டும். ஏனென்றால், நான் காணும் துர்நிமித்தங்கள், ஏதோ ஒரு பெரிய ஆபத்து வெகுவிரைவில் ஏற்படுவதைத் தெரிவிக்கின்றன. (இத்தகைய தீய நிமித்தங்களிடையே, ஒரு நல்ல சகுனமும் கண்ணில் படுகிறது.) மிகக்கொடியதான வஞ்சுளகம் என்ற பறவை, ஆபத்துக்கள் வந்தாலும் வெற்றி நமக்குத்தான் என்பதைக் குறிப்பிடும் வகையில் நன்றாகக் கூவுகிறது.'' (21–23)

அவர்கள் மிகுந்த கவனத்துடன் அந்தக் காட்டில் தேடிக் கொண்டிருக்கையில், அந்தக் காட்டையே (காட்டு மரங்களையே) முறித்துப் போடுவது போன்ற ஒரு பேரிரைச்சல் உண்டாயிற்று. காற்றினால் முற்றிலும் ஆக்கிரமிக்கப்பட்ட ஆகாயத்தைப் போலவே, காட்டில் அப்போது கேட்கப்பட்ட பேரிரைச்சல் வானம் முழுவதிலும் பரவிற்று. இராமன், அவர் சகோதரரோடு கூட, அந்த இரைச்சல் எங்கிருந்து யாரால் எழுப்பப்படுகிறது என்பதைக் கண்டறியும் விருப்பத்துடன் சென்று கொண்டிருந்தபோது, காட்டின் ஒரு பகுதியில் மிகப்பெரிய உடலும் அகன்ற மார்பும் கொண்ட ஓர் அரக்கனைப் பார்த்தார். (24–26)

அவ்விருவருக்கும் எதிரில் அந்த அரக்கன் வந்து நின்றான். பெரிய உடல், ஆனால் கழுத்து–தலையைக் காணவில்லை. வாய், வயிற்றில் இருந்தது. அதன் காரணமாகவே, அவனுக்கு கபந்தன் என்ற பெயர் ஏற்பட்டிருந்தது. சரீரத்தில் மிகக் கூர்மையான ரோமம் மண்டியிருந்தன; மாபெரும் மலையைப் போன்ற வளர்ச்சி; நீருண்ட கருமேகம் போன்ற கருமை; பயங்கரமான தோற்றம்; மேககர்ஜனைக்கு நிகரான குரல்; அவனுடைய மார்பிலே நெற்றி; கொழுந்துவிட்டெரியும் அக்னிச்சுவாலை போன்ற பெரிய இமைகள் கொண்ட, பழுப்பு நிறமான, நீண்டு அகலமான, பயங்கரமான, வெகுதூரம் பார்க்கவல்லதான ஒற்றைக்கண்; பெரிய கோரைப்பற்கள்; நாக்கை நீட்டி உதடுகளை நக்கிக் கொண்டிருப்பவன்; பெரிய முகம்; மிகப்பெரிய கரடி–சிங்கம்–மான்–யானைகளைத் தின்றுகொண்டிருப்பவன்; ஒரு யோஜனை தூரத்திற்கு பயங்கரமான இரு கைகளை நீட்டிக் கொண்டிருப்பவன்; (27–31)

கைகளால் பலவகைப்பட்ட கரடிகள், பறவைக் கூட்டங்கள், மான்கள் ஆகியவற்றைப் பிடித்துத் தன் பக்கம் இழுத்துக் கொண்டிருப்பவன்; ஏராளமான விலங்குகளைப் பற்றிக் கொண்டிருப்பவன்; அவர்கள் இருவரும் வரும் வழியில் எதிரே நின்று தடுத்துக் கொண்டிருப்பவன் – இப்படிப்பட்ட கபந்தனை நெருங்கி வந்தார்கள். அவ்விருவரும் இன்னும் சிறிது தூரம் நடந்து பெரிய உடல் உடையவனும், அருவருக்கத்தக்க தோற்றமுடையவனும், கொடியவனும், தலை இல்லாதவனும், கைகளை விரித்துக் கொண்டிருப்பவனும், மிகவும் பயங்கரமான உடலமைப்புடன் கூடியவனும், கபந்தன் என்று பெயர் பெற்றவனுமான அவனை அருகில் சென்று பார்த்தார்கள். மகாபலசாலியான அவன், மிக நீண்டதான இரு கைகளையும் விரித்து, இராம–லட்சுமணர்களை ஒன்றுசேர்த்தே வலிமையுடன் இறுகக் கட்டிப் பிடித்துக் கொண்டான். (32–35)

அவ்விரு சகோதரர்களும், கைகளில் கத்தியும் பலமான வில்லும் வைத்துக் கொண்டிருந்தார்கள்; எதிரிகளைச் சுட்டெரிக்கும் ஆற்றலைக் காட்டும் சரீரத்தை உடையவர்கள்; பெரும் பலசாலிகள்தாம். (என்றாலும், இப்போது) இறுகிக் கட்டப்பட்டதும், (சிறிதுநேரம்) சுய உணர்வை இழந்தது போலானார்கள். அப்போது, மகாசூரரான இராமன் தைரியத்தை ஏற்படுத்திக் கொண்டு அஞ்சாமல் இருந்தார். ஆனால், இலக்குவனோ பக்குவமின்மையாலும், (அண்ணனும் அகப்பட்டுக் கொண்டுவிட்டதால்) தனக்கு உத்தரவு கொடுப்பவர் இல்லாததாலும் மிகவும் மனவேதனைப்பட்டான். லட்சுமணன், மனம் குழம்பிய நிலையில், இராமனைப் பார்த்து, ''வீரரே! அரக்கனுடைய பிடியில் அகப்பட்டுத் தவித்துக் கொண்டிருக்கும் என்னைப் பாருங்கள்'' என்று கூறினான். (36–38)

''இராகவா! என்னை இவனிடம் விட்டுவிட்டு, தங்களை விடுவித்துக் கொள்ளுங்கள். என்னை, இந்தப் பிராணிக்குப் பலியாகத் தந்துவிட்டு, நீங்கள் தப்பித்துக் கொண்டு ஓடிப்போய் விடுங்கள். விரைவில் சீதாப்பிராட்டியாரைத் தாங்கள் திரும்பப் பெற்று விடுவீர்கள் என்று எண்ணுகிறேன். பாட்டன்–தந்தை என்று பரம்பரையாக வந்த ராஜ்யத்தைத் திரும்பப் பெற்று விடுவீர்கள். காகுத்தரே! தாங்கள் அரசாட்சி செய்யும்போது, எப்போதும் என்னை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.'' இவ்வாறு இலக்குவன் கூறியதும், இராமன் பதில் சொன்னார்— ''வீரனே! நீ பயங்கொள்ளலாகாது உன்னைப் போன்றவர்கள் ஒருபோதும் மனத்தளர்ச்சியை அடைய மாட்டார்கள்.'' (39–41)

இதனிடையே, கொடிய ஆற்றல் மிக்க அசுரனான கபந்தன் சகோதரர்களான இராம–லட்சுமணர்களைப் பார்த்து, இடியோசை போன்ற குரலில் கேட்டான்— ''எருதினுடையதைப் போன்ற கழுத்தை உடையவர்களும், பெரிய வாளையும் வில்லையும் ஏந்தியவர்களுமான நீங்கள் இருவரும் யார்? பயங்கரமான இந்தக் காட்டுப்பகுதிக்கு எதற்காக வந்திருக்கிறீர்கள்? என்னுடைய நல்ல காலத்தால் என் கண்களில் பட்டுவிட்டீர்கள்! இந்த இடத்தில் உங்களுக்கு என்ன வேலை? நீங்கள் இருவரும் என்ன உத்தேசத்துடன் இவ்விடம் வந்திருக்கிறீர்கள்? இப்போது மிகவும் பசியுடன் நான் தவித்துக் கொண்டிருக்கும் வேளையில், இந்தப் பகுதிக்கு வந்திருக்கிறீர்கள்! கூர்மையான கொம்புகளைக் கொண்ட இரண்டு ரிஷபங்களைப் போல் இருக்கிறீர்கள். பாணம், வில், கத்தி வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். என் வாய்க்கு அருகில் வந்துவிட்ட உங்களால் இனிப் பிழைத்திருக்க முடியாது!'' (42–45)

கொடிய நடவடிக்கைகளையுடைய கபந்தனுடைய சொற்களைக் கேட்டு, உலர்ந்து போன முகத்துடன் காணப்பட்ட இலக்குவனைப் பார்த்து, இராமன் கூறினார்— ''வீண்போகாத பராக்கிரமத்தை உடையவனே! துக்கத்தின்மேல் துக்கமாக வந்து கொண்டிருப்பதைப் பார்! என் அன்பிற்குரிய மனைவியை அடைவதற்கு முன்னதாகவே, என் வாழ்க்கை முடிந்து விடும்போல் இருக்கிறதே? லட்சுமணா! அளவிட முடியாத பலம் கொண்ட காலம், எல்லா உயிர்களையும் ஆட்டிவைப்பதைப் பார்! புலிநிகர் வீரனே! நீயும் நானுங்கூட துயரங்களால் மனம் கலங்கியிருப்பதைப் பார். லட்சுமணா! விதிக்கு, எந்த ஓர் உயிரையும் ஆட்டிவைப்பது கஷ்டமான காரியமில்லை. மணலாற்கட்டப்பட்ட அணையை வெள்ளப்பெருக்கு எளிதாகக் கரைத்து விடுவதைப்போல, சூரர்களும் பலவான்களும் அஸ்திர நிபுணர்களும் காலத்தின் வசப்பட்டு, போர்க்களத்தில் தளர்ந்து மறைந்து போகிறார்கள்.'' (46–49)

எக்காலத்திலும் வீண்போகாத பராக்கிரமமுடையவரும், பெரும்புகழ் படைத்தவரும், மகிமை பொருந்தியவருமான இராமன், தளர்ச்சியடையாத ஆண்மை கொண்ட இலக்குவனைப் பார்த்து இவ்வாறு கூறிக் கொண்டிருக்கும்போதே, தன் இயல்பான, எதற்கும் அசைந்து கொடுக்காத, உறுதியான மனோதைரியத்தைத் தனக்குள் தானே வரவழைத்துக் கொண்டார். (50)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
அறுபத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எழுபது

கபந்தனின் கைகளை வெட்டுதல்

அப்போது, தன்னுடைய கைகள் என்னும் கயிற்றால் கட்டப்பட்டுச் சலிப்புடன் நின்று கொண்டிருந்த சகோதரர்களான இராம–லட்சுமணர்களைப் பார்த்து கபந்தன் கூறினான்— (1)

''க்ஷத்திரிய ரிஷபங்களைப் போன்ற (க்ஷத்திரிய வீரர்களான) நீங்கள் இருவரும், பசியுடன் இருக்கும் என்னைப் பார்த்துக் கொண்டு ஏன் வாளா நின்று கொண்டிருக்கிறீர்கள்? (என் அகன்ற வாய்க்குள் புகுந்துவிட வேண்டியதுதானே!) உயிரைப் பறிகொடுக்கும் நிலையிலுள்ள நீங்களிருவரும் தெய்வசங்கல்பத்தால், எனக்கு உணவாக அனுப்பப்பட்டிருக்கிறீர்கள்.'' அந்தச் சொற்களைக் கேட்ட, கஷ்டத்தில் சிக்கிக் கொண்டிருந்த லட்சுமணன், அந்தச் சமயத்திற்கு ஏற்றதும் நன்மை பயக்கத்தக்கதுமான பலப் பிரயோகம் செய்வதை மனத்தில் நிச்சயித்துக் கொண்டு, (இராமனைப் பார்த்துப்) பின்வருமாறு கூறினான்— (2,3)

''(அண்ணா!) இந்த அரக்கப்பதர், தங்களையும் என்னையும் விரைவில், தன் வாய்க்குள் தள்ளிவிடப் போகிறான். அதனால், இப்போதே இவனுடைய நீண்ட கைகளை நாமிருவரும்

கத்திகளால் வெட்டித் தள்ளுவோம். பேருடல் கொண்ட இந்த அரக்கன் மகா பயங்கரமானவன். இவனுடைய பலமும் வீரமும் இவன் புஜங்களில்தான் இருக்கின்றன. இவன் உலகப் பிராணிகளைத் துன்புறுத்தி வெகு எளிதாக வெற்றி கண்டு, இப்போது நம்மையும் கொல்லப் பார்க்கிறான். அரசரே! இராகவா! வேள்விக்காகக் கொண்டு வரப்பட்ட ஆடுகளைப் போல் (எதிர்த்துப் போராடும் வாய்ப்பில்லாத) செயலற்ற மற்ற விலங்குகளைக் கொல்வது அரசாளும் க்ஷத்திரிய குலத்தினருக்கு இழிவைத் தருவதாகும். (எனவே, எழுந்து நின்று நம்மை எதிர்க்க முடியாத இவனைக் கொல்வது முறையாகாது.)'' (4–6)

அவர்களிடையே நிகழ்ந்த இந்த உரையாடலைக் கேட்டுக் கோபம் கொண்ட அசுரன், பயங்கரமான தன் வாயை விசாலமாக விரித்துக் கொண்டு, அவ்விருவரையும் விழுங்க முயன்றான். உடனே, இடம்–காலம் அறிந்த இராம–லட்சுமணர்கள், மிகவும் உற்சாகம் கொண்டு, அவனுடைய தோள் பட்டையை வெட்டி இருகைகளையும் அறுத்துத் தள்ளினார்கள். அப்போது, செயல்திறனுடைய இராமன், வலுவாகவும் எளிதாகவும் அவனுடைய வலது கையை வாளால் அறுத்துத் தள்ளினார். அவ்வாறே, வீரனான லட்சுமணன் இடது கையை வெட்டினான். (7–9)

வலுவான நீண்ட கைகளைக் கொண்டிருந்த அவன், கைகள் வெட்டப்பட்டவுடன், இடிமுழக்கம் செய்யும் மேகம் போல் மண்ணிலும் விண்ணிலும் எதிரொலிக்கும்படியாகப் பெருங்குரல் எழுப்பிக் கொண்டு கீழே சாய்ந்தான். தன் இரு கைகளும் வெட்டப்பட்டு, இரத்த வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்த அசுரன், இரங்கத்தக்க நிலையிலிருந்த மாவீரர்களான அவ்விருவரையும் பார்த்து, 'நீங்கள் யார்?' என்று கேட்டான். இவ்வாறு அவன் கேட்டதும், மகாபலம் பொருந்திய, நல்லியல்புடைய லட்சுமணன், அந்த கபந்தனுக்கு இராமனைப் பற்றிய விபரங்களைத் தெரிவித்தான்— (10–12)

''இவர், இக்ஷ்வாகு பரம்பரையில் தோன்றியவர்; மக்களிடையே, இராமன் என்ற பெயரால் வழங்கப்படுபவர். நான், இவருடைய இளைய சகோதரன் லட்சுமணன் என்று அறிந்துகொள். இளவரசுப் பட்டம், (கைகேயி) அன்னையால் நிறுத்தப்பட்டது; (தந்தையின் சொற்படி,) இராமன் காட்டிற்கு அனுப்பப்பட்டார். இந்தப் பெருங்காட்டில், என்னுடனும் பிராட்டியாருடனும் இவர் வசித்து வந்தார். மக்கள் நடமாட்டமில்லாத இந்தக் காட்டில் வசித்துக் கொண்டிருக்கும்போது, தேவர்களுக்கு நிகரான பராக்கிரமம் கொண்ட இவருடைய மனைவி, ஓர் அரக்கனால் கவர்ந்து செல்லப்பட்டார். அவரைத் தேடிக் கண்டுபிடிக்கும் நோக்கத்துடன் நாங்கள் இங்கே வந்தோம். நீ, யார்? தலை, அதற்குரிய இடத்தில் இல்லாமல், கபந்தம் போன்ற அமைப்புடன் இருக்கிறது. இந்தக் காட்டில் என்ன காரணத்தால் இருந்து கொண்டிருக்கிறாய்? முழங்கால் முறிந்து நடக்க முடியாமலிருக்கிறாய். பற்றியெரியும் நெருப்புப் போன்ற வாய், மார்பில் அமைந்திருக்கிறது. இந்தக் கோலத்துடன், இங்குமங்கும் ஏன் சுற்றித் திரிகிறாய்?'' (13–16)

இவ்வாறு இலக்குவனால் கேட்கப்பட்டதும், முன்னர் இந்திரன் கூறியிருந்ததை நினைவுகூர்ந்து, மிக்க மகிழ்ச்சியடைந்த கபந்தன், பின்வரும் பதிலைக் கூறினான்— ''மாவீரர்களே! உங்கள் இருவருக்கும் நல்வரவு கூறுகிறேன். என்னுடைய பெரும்பேற்றின் காரணமாக, உங்கள் இருவரையும் காண முடிந்திருக்கிறது. எனக்குச் சுமையாக இருந்த என்னுடைய புஜங்கள், அதிருஷ்டவசமாக, உங்களிருவராலும் வெட்டித் தள்ளப்பட்டிருக்கின்றன. புருஷோத்தமரே! என்னுடைய அகந்தையால், எப்படி என் உருவம் விகாரமாக்கப்பட்டதோ, அந்த விஷயத்தைத் தெளிவாகக் கூறுகிறேன். அருள்கூர்ந்து கேட்க வேண்டும்.'' (17–19)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
எழுபதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எழுபத்தொன்று

கபந்தன் வரலாறு

''தோள்வலிமை பெற்ற ஸ்ரீராமா! முன்பு, அளவிட முடியாத வலிமையும் பராக்கிரமமும் பெற்ற, மனத்தால் எண்ணிக்கூடப் பார்க்க முடியாத பேரழகான, மூன்று உலகங்களிலும் பிரசித்தி பெற்ற உருவம் படைத்தவனாக இருந்தேன். சூரியன், சந்திரன், இந்திரன் போன்ற கவின்மிகு தோற்றமுடையவனாக இருந்தேன். அத்தகைய அழகுடைய உருவம் பெற்றிருந்த நான், இத்தகைய பயங்கரமான பேருருவத்தை அடைந்து, காட்டிலுள்ள முனிவர்களை அவ்வப்போது பயமுறுத்திக் கொண்டிருந்தேன். இப்படி இருக்கும் வேளையில், ஸ்தூலசிரஸ் என்ற பெயருடைய முனிவர் காட்டில் கிடைக்கும் பழம்–கிழங்குகளைச் சேகரித்துக் கொண்டிருந்தபோது, கோரமான உருவங்கொண்ட என்னால் பயமுறுத்தப்பட்டார். என் செய்கையால் அவர் மிகவும் சினமடைந்தார். என்னுடைய விகாரமான உருவத்தைப் பார்த்த அவர், பயங்கரமான சாபத்தைக் கொடுத்து இவ்வாறு கூறினார்— (1–3)

'உனக்கு, எல்லோராலும் வெறுக்கத்தக்க, கோரமான இந்த உருவமே எப்போதும் இருக்கக் கடவது' என்றார். நான், 'அபசாரத்தால் விளைந்த இந்தச் சாபத்திற்கு ஒரு முடிவு காலமும் கூறப்பட வேண்டும்' என்று, கோபத்துடனிருந்த அவரைப் பிரார்த்தித்துக் கொண்டேன். அவர் பின்வருமாறு கூறியருளினார்— 'மக்கள் சஞ்சாரமில்லாத காட்டில், எப்போது இராமன் உன் கைகளை வெட்டி, உன்னை எரிக்கிறானோ, அப்போது பேரழகு வாய்ந்த உன் சொந்த வடிவத்தை அடைவாய்.' லட்சுமணா! (நான் யார்? என்று தெரிந்து கொள்ள ஆவலுடன் இருப்பாய்!) தனு என்ற அசுரனுடைய, மகா அழகு படைத்த மைந்தன், நான். போர்க்களத்தில், இந்திரனுடைய கோபத்தின் விளைவாக, இந்த உருவத்தை அடைந்தேன். (4–6)

(நான், என் இயல்பான அசுர வடிவத்தில் இருந்தபோது, அமரர்களின் தலைவனான இந்திரனிடம் இயற்கையாகவே பகை இருந்ததால், அவனை ஒழித்துக்கட்டும் நோக்கத்துடன்) பிரும்மாவைக் குறித்து கடுமையான தவத்தை மேற்கொண்டேன். அவர், எனக்கு வரமாக நீண்ட ஆயுளைத் தந்தார். அதைப் பெற்றவுடன் என் மனம் பேதலித்தது. எனக்குத்தான் நீண்ட ஆயுள் கிடைத்துவிட்டதே! இந்திரனால் என்னை என்ன செய்ய முடியும்? என்று அகந்தை கொண்டு, இந்திரனைப் போருக்கு அழைத்தேன். போரில் அவர் கையிலிருந்து விடுபட்ட நூற்றுக்கணக்கான கூர்முனைகளையுடைய வஜ்ராயுதத்தால், என் தலை, உடலின் நடுப்பகுதியை அடைந்தது; இரு முழங்கால்களும் உடலுக்குள் புதைந்து போயின. (7–9)

நான், அவரைப் பிரார்த்தித்துக் கொண்டதால், அவர் என்னை யமன் வீட்டிற்கு அனுப்பவில்லை. 'பிரும்மதேவரின் வரம் உண்மையாக இருக்கட்டும்' என்று சொல்லி, என்னை விட்டுவிட்டார். ('நீண்ட காலம் வாழ்வாய்' என்று பிரும்மா கொடுத்த வரத்தை மீறி நடக்க இந்திரன் விரும்பவில்லை.) 'முழங்கால்கள், தலை, வாய் ஆகியனவெல்லாம், வஜ்ராயுதத்தின் தாக்குதலால் சேதப்படுத்தப்பட்டுவிட்ட நிலையில், உணவைத் தேடிப்பெற்று அடைய முடியாத நான், எவ்வாறு நீண்டகாலம் உயிர் வாழ்வேன்?' என்று கேட்டேன். (10,11)

இவ்வாறு, நான் கேட்டவுடன் ஒரு யோஜனை நீளமுள்ள கைகளையும், வயிற்றுப்பகுதியில் கூர்மையான கோரைப் பற்களைக் கொண்ட வாயையும் அமைத்துக் கொடுத்தார். அத்தகைய விசித்திரமான உருவத்தைப் பெற்ற நான், வெகு நீளமான கைகளால் காட்டில் திரியும் சிங்கம், யானை, மான், புலி போன்றவற்றை எல்லாப் பக்கங்களிலிருந்தும் பற்றி இழுத்து புசித்து வருகிறேன். அப்போது, இந்திரன், 'எப்போது இராம–லட்சுமணர்கள் யுத்தத்தில் உன் கைகளை வெட்டுகிறார்களோ, அப்போது நீ தேவலோகத்தைச் சென்றடைவாய்' என்று என்னிடம் கூறினார். (12–14)

மாண்புடைய மன்னரே! இராமா! இந்தக் காட்டில் இதே உருவத்துடன் இருந்து கொண்டு எவையெவைகளைப் பார்க்கிறேனோ, அவை எல்லாவற்றையும் கைப்பற்றிக் கொள்வது என் இயல்பாகிவிட்டது. (இந்திரனும் முனிவரும் கூறியபடி,) இராமன் என்றைக்காவது என்பிடியில் அகப்படுவார் என்ற நம்பிக்கையுடன், இந்த உடலை விட்டொழிப்பதற்கு நான் விடாமுயற்சியுடன் இருந்தேன். தாங்கள் (அவர்கள் குறிப்பிட்ட) ஸ்ரீராமன்தான் என்பதில் சந்தேகமில்லை. தங்களை வணங்கித் துதிக்கிறேன். இராமனைத் தவிர வேறு யாராலும் என்னைக் கொல்ல முடியாது என்று அந்த மாமுனிவர் கூறியது உண்மையாகிவிட்டது. மாவீரரே! உங்கள் இருவராலும் அக்னியில் நான் தகனம் செய்யப்பட்டதும் அறிவார்ந்த ஆலோசனையைக் கூறுவேன். உங்களுக்கு உற்ற நண்பனாக விளங்கப்போகும் ஒருவனைப் பற்றியும் தெரிவிப்பேன்.'' (15–18)

அந்த அசுரன் இவ்வாறு கூறிமுடித்தவுடன், தருமாத்மாவான இராமன், லட்சுமணன் கேட்கும்படியான பின்வரும் சொற்களைக் கூறினார்— ''புகழ்மிக்க என்னுடைய பத்தினி சீதாதேவி, நான் என் சகோதரனுடன் ஜனஸ்தானத்திலிருந்து வெளியே சென்றிருந்தபோது, இராவணனால் வெகுசாமர்த்தியமாகக் கவர்ந்து செல்லப்பட்டாள். அந்த அரக்கனுடைய பெயர் மட்டும்தான் எனக்கு(எங்களுக்கு)த் தெரியும். அவனுடைய உருவம், இருப்பிடம் மற்றும் ஆற்றல்கள் எங்களுக்குத் தெரியாது. துக்கத்தில் ஆழ்ந்து, சரியான வேறு துணையுமின்றி, இவ்வாறு அங்குமிங்கும் (சீதையைத் தேடிக்கொண்டு) அலைந்து திரிந்து கொண்டிருக்கும் எங்களிடம் இரக்கம் கொண்டு உதவி புரிய வேண்டும். (19–22)

வீரனே! யானைகளால் வெகுநாட்களுக்கு முன் முறிக்கப்பட்டு, காய்ந்து போயிருக்கும் மரக்கட்டைகளைக் கொண்டு வந்து, ஒரு பெரிய குழியைத் தோண்டி, (அதில் உன்னைக் கிடத்தி,) உன்னை நாங்கள் தகனம் செய்கிறோம். இப்போது, சீதையைப் பற்றிய தகவல்களைக் கூறு. யாரால் அபகரிக்கப்பட்டாள்? எந்த இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறாள்? இவை பற்றிய உண்மையான விபரங்கள் உனக்குத் தெரிந்திருந்தால், அவைகளைத் தெரிவித்து, எங்களுக்குப் பேருதவி செய்.'' (23,24)

இவ்வாறு இராமன் கூறியதும், நற்கதியை அடையப் போகும் அசுரனான கபந்தன், (இராமனுக்கு) மிகச்சிறந்த உதவியைச் செய்யக்கூடியவனைப் பற்றி விரிவாகக் கூறினான்— ''தெய்விக ஞானம் எனக்கு இல்லை; சீதையையும் நான் அறியேன்!... (உங்களால் நான்) எரிக்கப்பட்ட பின்னர், என் சுயஉருவத்தை நான் அடைந்துவிடுவேன். அப்போது, அவரை (சீதாப்பிராட்டியாரை)ப் பற்றி அறிந்துள்ளவனைக் குறிப்பிட்டுச் சொல்கிறேன். ஐயனே! தங்களுடைய மனைவி சீதாதேவியைத் திருடிச் சென்ற, மகாவீரனான அந்த அரக்கனைப் பற்றிக் கூறுவதற்கு, எரிக்கப்படாத இந்த நிலையில் எனக்குச் சக்தியில்லை. (25–27)

இராமப்பிரபோ! முனிவரின் சாபத்தால், என்னுடைய தெள்ளிய அறிவு முற்றிலும் அழிந்து போய்விட்டது. என்னுடைய செருக்கினால், உலகத்தோரால் இகழத்தக்க இந்த உருவத்தை அடைந்தேன். இராமா! களைப்படைந்த வாகனங்களைக் கொண்ட சூரியன் மறைவதற்குள்ளாகவே, என்னைக் குழியில் தள்ளி, அறநூல் முறைப்படி என்னை எரித்துவிடு. (ஏழு குதிரைகள் பூட்டிய ரதத்தில், அருணோதய வேளையிலேயே சூரியன் பவனியைத் தொடங்கி, நிற்காமல் போய்க் கொண்டிருப்பதால், அந்திவேளையில் குதிரைகள் களைத்துப் போய்விடக்கூடும் – என்பது கருத்து.) (28,29)

ரகுநந்தனா! வீரரே! என்னைக் குழியில் கிடத்தி, உங்களால் முறைப்படி தகனம் செய்யப்பட்டதும், எவனொருவன் அந்த அரக்கனைப் பற்றி அறிவானோ, அவனைப் பற்றிய தெளிவான விவரத்தை நான் கூறுவேன். ரகுநாயகரே! நீதிநெறிப்படி நடக்கும் அவனுடன் தாங்கள் நட்புக் கொள்ள வேண்டும். மகாவீரனான அவன், தங்களிடம் திருப்தியடைந்து தக்க உதவிகளைச் செய்வான். ரகுவீரரே! மூன்று உலகங்களிலும் அவனுக்குத் தெரியாத

இடமே இல்லை! ('அது எப்படி சாத்தியம்?' என்று கேட்பீர்கள்.) முன்பொரு சமயம், ஒரு காரணத்திற்காக, எல்லா உலகங்களையும் அவன் சுற்றி வந்திருக்கிறான்.'' (30–32)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
எழுபத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எழுபத்து இரண்டு

கபந்தன் சாபம் பெறுதல்

கபந்தன் இவ்வாறு கூறியதும், வீரர்களும் புருஷோத்தமர்களுமான அவ்விருவரும் ஒரு மலைக்குகையில் (அவன் உடலைத் தள்ளி) எரியூட்டினார்கள். லட்சுமணன், கொழுந்து விட்டெரியும் கொள்ளிக்கட்டைகளால் சிதையின் நாலாபக்கங்களிலும் தீயிட்டுக் கொளுத்தினான். அது, எல்லாப் பக்கங்களிலும் சுடர்விட்டு எரிந்தது. பெரிய நெய்யுருண்டை போலிருந்த அந்தச் சரீரத்தில் அதிகமாகக் கொழுப்பு இருந்ததால், அதை எரித்துக் கொண்டு, நெருப்பு மெல்லப் பற்றி எரிந்தது. மகாபலசாலியான அவன், உடனே சிதையிலிருந்து வெளிக்கிளம்பி, தூயதான இரு ஆடைகளையும் தெய்விகமான மாலையையும் அணிந்து கொண்டு, புகையில்லாமல் திகுதிகுவென சுடர்விட்டு எரியும் அக்னியைப் போல் மேலே எழுந்து நின்றான். (1–4)

ஒளி வீசிக்கொண்டு, தூய ஆடைகள் உடுத்திக் கொண்டு, எல்லா அவயவங்களிலும் (அவ்வவற்றுக்குரிய) அணிகலன்கள் அணிந்துகொண்டு, மிகவும் மனநிறைவு பெற்றவனாக வெகுவேகமாகச் சிதையிலிருந்து குதித்து எழுந்தான். அன்னப்பறவைகள் பூட்டப்பட்டதும், புகழைக் கொடுக்கக்கூடியதுமான பேரொளி வீசும் விமானத்தில் நின்றுகொண்டு, தன்னுடைய பேரொளியினால் பத்துத் திசைகளையும் ஒளிரச் செய்துகொண்டு, வானத்திலிருந்தபடியே, இராமனைப் பார்த்து கபந்தன் சொன்னான்— ''ஸ்ரீராமா! எவ்வாறு நீங்கள் சீதாப்பிராட்டியை நிச்சயமாக அடைவீர்கள் என்பதைச் சொல்கிறேன், கேளுங்கள். (5–7)

இராமபிரானே! உலகில், ஆறுவகையான உபாயங்களால் (வேண்டுவன) எல்லாம் அடையப்படுகின்றன. கஷ்டநிலையிலுள்ள ஒருவன், அதேபோன்று கஷ்டநிலையிலுள்ள இன்னொருவனின் உதவியைப் பெறமுடியும். (அவர்களால்தான் பரஸ்பரம் கஷ்டத்தை மனதார உணர்ந்து கொள்ளமுடியும்.) (ஆறு உயாயங்கள்:– 1. ஸந்தி = நட்பு; 2. விக்ரஹம் = பகைமை மூட்டுதல்; 3. யானம் = படையெடுத்தல்; 4. ஆஸனம் = எதிரியை எதிர்பார்த்தல்; 5. த்வைதீபாவம் = நண்பர்களைப் பிரித்தல்; 6. ஸமாச்ரயம் = பணிந்துபோதல். ஆறுவகையான பிரமாணங்கள்:– பிரத்யட்சம், அனுமானம், உபமானம், சப்தம், அனுபலப்தி, அர்த்தாபத்தி என்று சில உரையாசிரியர்கள் விளக்கியிருக்கிறார்கள்.) ஸ்ரீராமனாகிய தாங்களும் லட்சுமணனும் கஷ்டத்தை அடைந்து மனம் நொந்திருக்கிறீர்கள். மனைவி காணாமல் போய்விட்டதால், உங்களுக்குப் பெரும் துயரம் ஏற்பட்டிருக்கிறது. (8,9)

நண்பர்களில் தலையாயவரே! தாங்கள் அவசியம் (நான் கூறப்போகும்) அவருடன் நட்புப் பூண வேண்டும். நான் தீர்க்கமாக ஆலோசனை செய்து பார்த்துவிட்டேன். அவருடன் நட்புக் கொள்ளாமல், உங்கள் நோக்கத்தை நீங்கள் அடையமுடியாது. நான் கூறப்போவதைக் கேளுங்கள், இராமபிரானே! சுக்ரீவன் என்ற பெயருடைய ஒரு வானரன். இந்திரனுடைய (அம்சம் பெற்ற) மகனும், கோபம் கொண்ட தன் சகோதரனுமான வாலியினால் வெளியே துரத்தப்பட்டவன். நற்குணங்கள் கொண்டவனும் வீரனுமான அவன், தற்போது, (தனக்கு உற்ற அமைச்சர்களான) நான்கு வானரர்களுடன் பம்பா நதிப் பிரதேசத்திலுள்ள அழகான, உத்தமமான ரிஷ்யமூகம் என்ற மலையில் வசித்துக் கொண்டிருக்கிறான். (10–12)

இராமா! அந்த வானரத் தலைவன், மகாவீரன்; பராக்கிரமம் உடையவன்; எப்போதும் பிரகாசித்துக் கொண்டிருப்பவன்; சொன்ன சொல் தவறாதவன்; வினயம் உடையவன்; எடுத்துக்கொண்ட செயலில் உறுதியாக இருப்பவன்; அறிவாளி; மாட்சிமை பொருந்தியவன்; செயல்திறன் உடையவன்; அச்சம் அறியாதவன்; தெளிந்த அறிவொளி வீசுபவன்; மகாபலமும் பராக்கிரமமும் கொண்டவன். அரசாட்சி காரணமாக, மகாபலசாலியான அவன், தன் சகோதரனால் நாடு கடத்தப்பட்டான். இராமப்பிரபோ! சீதையைத் தேடிக் கண்டுபிடிக்கும் விஷயத்தில், அவன் தங்களுக்கு உதவி புரியும் உத்தம நண்பனாக இருப்பான். ஆகவே, தங்கள் மனத்தில் துயரத்திற்கு இடம் கொடுக்கலாகாது. இக்ஷ்வாகு குல திலகமே! விதிப்படி எது நடக்க வேண்டுமோ, அது நடந்தே தீரும். அதை, வேறு மாதிரியாக மாற்றியமைக்க முடியாது. விதிப்பயன் என்பதை யாரும் மீறிச் செல்ல முடியாது. (அனுபவித்தே ஆகவேண்டும்.) (13–16)

இராமனே! உடனே இங்கிருந்து புறப்படுங்கள். மகாபலம் பொருந்திய அந்த சுக்ரீவனுடன் நட்புக் கொள்வீராக. இப்போதே இங்கிருந்து கிளம்பி அவனிடம் செல்லுங்கள். கொழுந்து விட்டெரியும் அக்னியின் முன்னிலையில் (அக்னிசாட்சியாக), பரஸ்பர உதவி என்ற நட்பு இலக்கணம் உறுதியாக இருக்கும்படி உடன்படிக்கை செய்து கொள்ளுங்கள். (ஆனால், பின்னர், ‘இவன் என்ன, பயந்து ஓடி ஒளிந்த குரங்குதானே?’ என்று) வானரர் தலைவனான சுக்ரீவன், தங்களால் அலட்சியப்படுத்தப்படக் கூடாது. அவன் நன்றி மறவாதவன்; இஷ்டப்படி வேற்றுருவம் எடுக்க வல்லவன்; தனக்கு உதவி செய்பவரை எதிர்பார்த்துத் தவித்துக் கொண்டிருப்பவன்; மகாவீரன். தற்சமயம், அவன் விரும்பும் காரியத்தை நிறைவேற்றிக் கொடுக்கும் சக்தியுடையவர்கள், நீங்கள் இருவரும். நீங்கள் அவனுடைய விருப்பத்தை நிறைவேற்றிக் கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும், அவன் உங்கள் காரியத்தை முடித்துக் கொடுப்பான். (17–19)

ரிக்ஷரஜஸ் என்ற வானரனுடைய புதல்வன், அவன். சூரியபகவானுடைய தேஜஸால் தோன்றிய சொந்த மகன். வாலிக்கு, அவனிடம் வெறுப்பு உண்டாயிற்று. (வாலியினால் அவன் குற்றம் சாட்டப்பட்டான்.) அதனால், அவனிடம் சந்தேகம் கொண்டு (‘எந்த வழியிலாவது என்னைக் கொன்றுவிடுவானோ?’ – என்று அச்சங்கொண்டு) பம்பை நதிப் பிரதேசத்தில் (ரிஷ்யமூக மலையில்) சுற்றிக் கொண்டிருக்கிறான். ரிஷ்யமூக மலையை இருப்பிடமாகக் கொண்டு, அங்குமிங்கும் காட்டில் அலைந்து கொண்டிருக்கும் அந்த வானரனுடன், ஆயுதத்தைச் சாட்சியாக வைத்துக் கொண்டு, வாக்கினால் சத்திய உடன்படிக்கை செய்து கொண்டு, நண்பன் என்ற உறவை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். (20,21)

அந்த வானரவேழம், நரமாமிசத்தைப் புசிக்கும் அரக்கர்கள் வசிக்கும் எல்லா இடங்களையும் உள்ளே நுழைந்து பார்த்து நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறான். எதிரிகளை அடக்கும் இராகவனே! ஆயிரக்கணக்கான கதிர்களைக் கொண்ட சூரியனின் ஒளி, உலகில் எவ்வளவு தூரம் படர்கிறதோ, அதுவரையில் உள்ள வஸ்துக்களோ, இடங்களோ – இவற்றில் அவனுக்குத் தெரியாதது எதுவுமே இல்லை! அவன், ஆறுகள் (ஆற்றங்கரைகள்), பெரிய மலைகள், மலைக்குகைகள், மலைப்பிளவுகள் முதலிய இடங்களில், வானரர்களோடுகூடத் தேடியலைந்து, தங்கள் பத்தினியைக் கண்டுபிடித்துக் கொடுப்பான். (22–24)

ரகுநாயகரே! தங்கள் பிரிவால் துக்கப்பட்டுக் கொண்டிருக்கும் சீதையைத் தேடுவதற்காக, பேருடல் படைத்த வானரர்களை எல்லாத் திசைகளுக்கும் அனுப்புவான். இராவணனுடைய பிரதேசத்தில், தெய்வ வடிவுடைய, பரிசுத்தமான பிராட்டியாரை, அவன் கண்டுபிடித்து விடுவான். தங்கள் அன்பிற்குரிய, தூய நடத்தையுள்ள மனைவி, மேருமலையின் உயரமான சிகரத்தில் (எவராலும் கண்டுபிடிக்க முடியாதபடி) வைக்கப்பட்டிருந்தாலும் சரி, யாரும் உட்புகுந்து வரமுடியாத பாதாளலோகத்தில் அடைத்து வைக்கப்பட்டிருந்தாலும் சரி, வானரர்களின்

தலைவனான அவன், அரக்கர்களைக் கொன்று, பிராட்டியாரை மீண்டும் தங்களிடம் சேர்ப்பிக்கப் போகிறான்.'' (25–27)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
எழுபத்து இரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எழுபத்து மூன்று

ரிஷ்யமூக மலைக்கு வழிகாட்டுதல்

சீதையைத் தேடும் விஷயத்தில் உபயோகமான ஓர் உபாயத்தை (சுக்ரீவனோடு நட்புப்பூணுதலை)க் காட்டிய பின்னர், ஆழ்ந்த அறிவுடைய கபந்தன், இராமனுக்கு உதவியாக இருக்கும் மேலும் சில தகவல்களைத் தெரிவிப்பதற்காக மறுபடியும் பேசினான்— (1)

''ஸ்ரீராமனே! கண்ணைக் கவரும்வண்ணம், பூத்துக் குலுங்கும் மரங்கள் காணப்படும் இந்த மேற்கு வழிப்பாதை உங்களுக்குச் சௌகரியமானது. நாவல், வேங்கை, பலா, நாட்டு அத்தி, ஆல், தும்பை, அரசு, சரக்கொன்றை, மா மற்றும் பிற மரங்களான வேல், நாகம், திலகம், புங்கை, நீல அசோகு, கடம்பு, மலர்ந்து விளங்கும் செவ்வரளி, அசோகம், செஞ்சந்தனம், வேம்பு முதலிய பலவகையான மரங்கள் பாதை நெடுகிலும் இருக்கின்றன. அவைகளில் ஏறி அல்லது பலத்தைப் பிரயோகித்துக் கிளைகளை முறித்து, அவைகளில் இயல்பாகக் கனிந்து அமுதம்போல் சுவைக்கும் பழங்களைத் தின்றுகொண்டு செல்வீர்களாக. (2–5)

காகுத்தரே! அதைக் கடந்து, வடக்குக் குரு நாடுகளில் இருப்பதைப் போல், மலர்ந்த புஷ்பங்களோடு விளங்கும் மரங்களைக் கொண்ட, இன்னொரு காட்டை அடைவீர்கள். அங்கே, (இந்திரனுடைய) நந்தனப் பூங்காவைப் போல், எல்லா விருப்பங்களையும் நிறைவேற்றக்கூடிய, சுவையான தேனைச் சொரிகின்ற (மலர்களைக் கொண்ட) மரங்கள் இருக்கின்றன. (குபேரனுடைய) சைத்ரரதம் என்ற நந்தவனத்தில் இருப்பதைப் போன்றே, ஆறு ருதுக்களும் அங்கே குடிகொண்டு இருக்கின்றன. பெரிய பெரிய கிளைகளெல்லாம், கொத்துக்கொத்தாகத் தொங்கும் பழக்குலைகளின் சுமையைத் தாங்கமுடியாமல் கீழ்நோக்கித் தாழ்ந்து காணப்படுகின்றன. (6,7)

அங்கே, எல்லாப் பக்கங்களிலும், மேகங்களையும் மலைகளையும் போல் வனப்புடன் விளங்கும் பெரிய மரங்களில் ஏறி அல்லது இஷ்டமான முறையில் அவைகளைத் தரையில் வளைத்து, அமுதச் சுவையுடைய பழங்களைப் பறித்து, இலக்குவன் தங்களுக்குக் கொடுப்பான். அழகான நாடுகளைக் கடந்து, ஒரு மலையிலிருந்து வேறொரு மலையையும், ஒரு காட்டிலிருந்து வேறொரு காட்டையும் கடந்து சென்று, பின்னர், வீரர்களான நீங்கள் இருவரும் பம்பை என்ற நீர்நிலையை அடைவீர்கள். (8,9)

ஸ்ரீராமா! அங்கே (கால்களைக் குத்தும்) பருக்கைக் கற்கள் இல்லை; காலை வழுக்கிவிடுகிற சேறு–சகதிகள் இல்லை; மேடு–பள்ளமாக இல்லாமல் சமதளமாக இருக்கும்; பாசி இல்லை; அடியிலுள்ள மணல் தெரியும். (அந்த அளவுக்குத் தெள்ளிய நீரை உடையது.) தாமரை, ஆம்பல் மலர்கள் நிறைந்திருக்கும். அங்கே, அன்னம்–வாத்து–கிரௌஞ்சம்–குரரம் (என்ற மீன்கொத்தி இனம்) ஆகிய பட்சிகள், பம்பை நீரில் வாழ்ந்து கொண்டு, இனிய குரலில் கூவிக் கொண்டிருக்கும். இதுவரையில், யாராலும் பறவைகள் கொல்லப்படுவதைப் பார்த்தறியாத அவைகள், மனிதர்களைப் பார்த்து நெஞ்சம் படபடப்பதில்லை. பெரிய நெய்க்கட்டி போல் பருமனான அந்தப் பட்சிகளுக்கு, நீங்கள் இருவரும் உணவு ஊட்டலாம். (10–12)

ரோகிதம், வக்ரதுண்டம், நடமீன் ஆகிய உயர்வகை மீன்கள் பம்பையில் காணப்படும். அங்கு கரையில் உள்ள கிழங்குகளைக் குத்தி எடுத்து, முட்களை நீக்கி, சூலத்தின் நுனியில் வைத்து,

(நெருப்பில் வாட்டி) மிகவும் பயபக்தியுடன் இலக்குவன் தங்களுக்குக் கொடுக்கப் போகிறான். நீரில் சலசலக்கும் மீன்களைப் பார்த்தவாறே, இலக்குவன் கொடுக்கும் கனி–கிழங்குகளைப் புசிக்கும் தங்களுக்கு, மலர்க்கூட்டம் நிறைந்த பம்பையின் தாமரை மணம் வீசுவதும், பரிசுத்தமானதும், சுவையானதும், குளிர்ச்சியானதும், நோயை நீக்க வல்லதும், கலங்கல் இல்லாததும், வெள்ளி–பளிங்குக் கல்லைப் போல் வெண்மையாகவும் இருக்கும் தண்ணீரை, இலக்குவன் தாமரைத் தொன்னையில் எடுத்து வந்து, வேண்டிய மட்டும் தங்களுக்குக் கொடுப்பான். (13–16)

மாலை வேளைகளில், தங்களுடன் உலாவச் செல்லும் இலக்குவன், மலைக்குகைகளில் வசிக்கின்றவைகளும் காட்டில் திரிகின்றவைகளுமான வானரங்கள், உடல் பெருத்த காட்டுப் பன்றிகள் முதலியன தண்ணீர் குடிப்பதற்காகப் பேராசையுடன் வந்து, காளைகளைப் போல் உற்சாகமாக ஆடிக் குதிப்பதைக் காட்டுவான். நரோத்தமரே! நல்ல உருவம் கொண்ட அவைகளைப் பம்பையில் பார்க்கப் போகிறீர்கள். இராமப் பெருந்தகையே! மாலை வேளைகளில் வெளியே நடந்து செல்லும்போது பெரிய கிளைகளையும் ஏராளமான மலர்களையும் உடைய மரங்களையும், பம்பையின் குளிர்ந்த நீரையும் கண்டு சோகத்தை விட்டுவிடுவீர்கள். மலர்கள் நிறைந்துள்ள திலக மரங்களையும் நக்தமாலக (ஆலமர வகை) மரங்களையும், குளத்தில் மலர்ந்து விளங்கும் ஆம்பல்களையும் தாமரைகளையும் பார்த்து, இராகவனே! தாங்கள் மனத்துயரத்தை விட்டுவிடுவீர்கள். (17–20)

ரகுகுல இரத்தினமே! அங்கிருந்து மலர்களைப் பறித்து (தலையில்) சூட்டிக்கொள்வதற்கு ஒரு மனிதனும் இல்லை. அத்துடன் அவை வாடிப்போவதும் இல்லை; உதிர்வதும் இல்லை. இராகவ வள்ளலே! முன்னர், அவ்விடத்தில் சித்தத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்த மதங்க ரிஷியின் சீடர்களான முனிவர்கள், தம் ஆசார்யருக்காகக் காட்டில் கிடைக்கும் பழம்–கிழங்குகளைச் சேகரித்துக் கொண்டு, அந்தச் சுமையுடன் நடந்து செல்லும்போது களைப்படைந்து, அதனால் வியர்வை வழிந்து தரையில் சிந்தி, அந்த வியர்வைத் துளிகள் அவர்களுடைய தவ ஆற்றலால் அப்போதே மலர்களாக மாறியதால், அவை ஒருபோதும் வாடுவதில்லை. (21–23)

காகுத்தரே! (மதங்கரும் சீடர்களும் வாழ்ந்து வந்த) அவ்விடத்திலேயே, அவர்களுக்குத் தொண்டு செய்துகொண்டிருந்த, வயது முதிர்ந்த பெண் துறவியான சபரி என்பவள் இப்போதும் இருந்து கொண்டிருக்கிறாள். அறநெறிகளை உறுதியாக அனுஷ்டித்துக் கொண்டிருக்கும் அவள், எல்லாப் பிராணிகளாலும் வணங்கப்படுபவரும், பரம்பொருள் போன்றவருமான தங்களைத் தரிசனம் செய்துவிட்டுத் தேவலோகத்தை அடையப் போகிறாள். (24,25)

காகுத்தரே! ஸ்ரீராமனே! ஆகவே, (நீங்கள் நடந்து சென்று) பம்பையின் மேற்குக் கரையை அடைவீர்கள். அவ்விடத்தில், புனிதமானதும் மிக்க அமைதி குடிகொண்டிருப்பதுமான ஓர் ஆசிரம வளாகத்தைக் காண்பீர்கள். அந்தக் காட்டிலும் மலையிலும் பலவகையான யானைகள் இருக்கின்றன. ஆனால், அந்த யானைகள் ஆசிரமத்திற்குள் புகுவதில்லை. ரகுநந்தனரே! அந்தக் காட்டுப் பகுதி மதங்க முனிவரால் உண்டாக்கப்பட்டதால், 'மதங்க வனம்' என்றே அழைக்கப்படுகிறது. (இந்திரனுடைய) நந்தனத்திற்கு ஒப்பானதும் தெய்விக வனம் போல் விளங்குவதுமான அந்தக் கானகத்தில், மனக்கவலையை மறந்து மிகவும் சாந்தத்தை அனுபவிப்பீர்கள். (26–29)

பம்பையின் கிழக்கே, மலர்கள் பூத்துக்குலுங்கும் ரிஷ்யமூகம் இருக்கிறது. ஏராளமான யானைக் குட்டிகள் வாழும் அந்த மலை ஏறிச் செல்ல முடியாதது. முன்னொரு காலத்தில், வள்ளன்மை மிக்க அந்த மலையை நான்முகன் படைத்தார். (வெண்மையான கால்களைக் கொண்ட ரிஷ்யம் என்ற இனத்தைச் சேர்ந்த மான்கள், முனிவரிடம் உள்ள பக்தியால் சப்தம் செய்யாமல் மெல்ல நடக்கின்றன – என்பதால், ரிஷ்யமூகம்.) ஸ்ரீராமா! அந்த மலையின் உச்சியில் ஒருவன் படுத்துத் தூங்கும்போது, கனவில் எந்தப் பொருளைக் காண்கிறானோ, அதனை அவன் கண்விழித்ததும் (உண்மையாகவே) அடைந்துவிடுவான். உலகநெறிகளுக்குப் புறம்பாக, தீயதொழில் புரிபவன் இந்த மலையில் ஏறமாட்டான். (ஏனென்றால்,) உலகநெறிக்கு

மாறாக பாவச்செயல்களில் ஈடுபட்ட ஒருவன் மலையில் ஏறினால், அவன் தூங்கிக் கொண்டிருக்கும்போதே, அவனை அங்கேயே அரக்கர்கள் கொன்று விடுகிறார்கள். (30–32)

பம்பா நதிக்கரையில் ஆனந்தமாகத் திரிந்துகொண்டு, மதங்க ஆசிரம வளாகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் யானைக் குட்டிகளின் பிளிறல்களின் பேரொலி அந்த மலையிலும் கேட்கப்படுகிறது. சிவந்த இரத்தத்தால் உடல் நனைந்த, மேகம் போன்ற நிறமுடைய, விரைவாகச் செல்லும் யானைகள் ஒன்றோடொன்று மோதிச் சண்டையிட்டு, தனித்தனிக் கூட்டங்களாகச் சஞ்சரிக்கின்றன. காடுகளில் அலைந்து திரியும் அந்த யானைகள் அவ்விடத்தில் (பம்பையில்) தூயதான, எப்போதும் குறையாத, குளிர்ந்த நீரைக் குடித்துவிட்டுக் காடுகளில் மறுபடியும் புகுந்துவிடுகின்றன. கரடிகள், புலிகள், நீலமணிபோல் வனப்புடன் விளங்குபவைகளும் (ஓட்டத்தில்) வெல்ல முடியாதவைகளுமான ருரு என்ற மான்கள் – இவைகளைப் பார்த்து (மனமகிழ்ந்து) துக்கத்தை மறக்கப் போகிறீர்கள். (33–36)

இராமபிரானே! அந்த மலையில், பெரும் பாறைகளால் அடைக்கப்பட்ட (அல்லது சிலாபிதானா என்ற பெயருடைய) அழகான குகை இருக்கிறது. காகுத்தரே! அதனுள் பிரவேசிப்பது மிகவும் கடினம். அந்தக் குகையின் முன்வாசலுக்கு எதிரில் குளிர்ச்சியான நீரையுடையதும், பழங்களும் கிழங்குகளும் உடையதும், பல்வகை விலங்குகளால் சூழப்பட்டதுமான ஒரு பெரிய மடு இருக்கிறது. அந்தக் குகையில், நான்கு வானரர்களோடுகூட சுக்ரீவன் (என்ற வானரத் தலைவன்) வசித்துக் கொண்டிருக்கிறான். சிற்சில சமயங்களில் மலைச்சிகரத்திலும் வந்து நிற்கின்றான்.'' (37–39)

மகாவீரனான கபந்தன், இராம–லட்சுமணர்களாகிய அவ்விருவருக்கும் இவ்வாறு கூறிவிட்டு, கழுத்தில் தெய்விக மாலை அணிந்தவனாகவும், சூரியன்போல் ஒளிவீசிக் கொண்டும் ஆகாயத்தில் (இராமனின் அனுமதியை எதிர்பார்த்துத் தயங்கி நின்றவனாகக்) காணப்பட்டான். அங்கிருந்து புறப்பட்டுக் கொண்டிருந்த இராம–லட்சுமணர்கள், ஆகாயத்திலிருந்த பெரும் பாக்கியசாலியான கபந்தன் அருகில் சென்று, ''சௌக்கியமாகச் செல்வாயாக'' என்று சொன்னார்கள். (40,41)

அவன், அவ்விருவரையும் பார்த்து, ''உங்கள் காரியம் நிறைவேறும்; தொடர்ந்து செல்வீர்களாக'' என்று சொன்னான். அப்போது, (சீதையைப் பற்றிப் பல தகவல்களும் தெரிந்துவிட்டதால்) மனநிறைவுடன் இருக்கும் அவ்விருவரிடமும் விடைபெற்றுக் கொண்டு கபந்தன் (மேலுலகம் நோக்கிப்) புறப்பட்டுச் சென்றான். கபந்தன் தன்னுடைய முந்தைய அழகிய வடிவத்தை அடைந்து, சூரியனைப்போல் ஒளிக்கதிர்களால் சூழப்பட்டவனாக, ஆகாயத்திலிருந்தபடியே, இராமனை(க் கண்குளிர) இன்னொரு முறை பார்த்து, (வணக்கத்துடன் தோத்தரித்து,) ''சுக்ரீவனுடன் நட்புக் கொள்க'' என்று மீண்டும் கூறினான். (42,43)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
எழுபத்து மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எழுபத்து நான்கு

சபரிக்கு சுவர்க்கம் அருளல்

மன்னர்மன்னரின் புதல்வர்களாகிய அவ்விருவரும் கபந்தனால் கூறப்பட்ட அந்த வழியில் காட்டின் மேற்குத் திசையில் பம்பையை நோக்கிச் சென்றார்கள். இராம–லட்சுமணர்களாகிய அவ்விருவரும் அங்குள்ள மலைகளில் ஏராளமான பூக்களையும், தேன்போல் இனிக்கும் பழங்களையும் உடைய மரங்களைப் பார்த்துக் கொண்டு, சுக்ரீவனைச் சந்திக்கும் நோக்கத்துடன் சென்றார்கள். இராம–லட்சுமணர்கள் ஓரிரவு அந்த மலையின் தாழ்வரையில் தங்கிவிட்டு, பின்னர் பம்பையின் மேற்குக் கரையை அடைந்தார்கள். அவ்விருவரும் பம்பை என்ற அந்த ஏரியின் மேற்குக் கரையை அடைந்து, அங்கே சபரியினுடைய புனிதமான ஆசிரமத்தைக் கண்டார்கள். (1–4)

அநேக மரங்களால் சூழப்பட்டதும், கண்கவர் வனப்புடன் விளங்கியதுமான அந்த ஆசிரம வளாகத்தை எல்லாப் பக்கங்களிலும் சுற்றிப் பார்த்துக் கொண்டு செல்கையில், அவ்விருவரும் சபரியைப் பார்த்தார்கள். அப்போது, அவர்களைப் பார்த்தவுடன், தீவிரமான தவத்தின் திரண்ட பயனைப் பெற்றுவிட்ட அம்மாதரசி, உடனே எழுந்து, கைகூப்பி, இராமனுடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, சிறந்த புத்திமானாகிய இலக்குவனையும் அவ்வாறே வணங்கினாள். பின்னர், பாத்யம்–ஆசமனீயம் முதலான உபசாரங்களை முறைப்படி செய்தாள். அறநெறி வழுவாத அந்தப் பெண்துறவியைப் பார்த்து இராமன் கூறினார்— (5–7)

''தவச்செல்வியே! விரத நியமங்களைக் கெடுக்கவரும் காமம் முதலான தடைகளை, நீ வென்றுவிட்டாயா? உன்னுடைய தவம் இடையூறில்லாமல் தொடர்ந்து நடைபெற்று வருகிறதா? கோபமும் உணவும் உன் கட்டுப்பாட்டில் இருக்கின்றனவா? அன்பொழுகப் பேசும் அன்னையே! உன்னுடைய விரதங்கள் எல்லாம் பூர்த்தியாகிவிட்டனவா? உன் மனத்தில் சாந்தி ஏற்பட்டு விட்டதா? உன்னுடைய குருமார்களுக்கு, நீ செய்துவந்த பணிவிடைகளுக்குரிய நற்பலன்கள் கிடைத்துவிட்டனவா? (திவ்ய ஞானம் ஏற்பட்டுவிட்டதா?)'' இராமனால் இவ்வாறு வினவப்பட்ட தபஸ்வினியும் புண்ணியப்பேறு பெற்றவளும் ஸித்தபுருஷர்களால் வெகுமதிக்கப்பட்டவளும் முதியவளுமான சபரி, இராமன் எதிரில் நின்று கொண்டு (பின்வருமாறு) கூறினாள்— (8–10)

''தங்களைத் தரிசித்ததால், இப்போதுதான் என்னுடைய தவம் நிறைவு பெற்றிருக்கிறது! இப்போதுதான் என்னுடைய விரதானுஷ்டானங்கள் பயனைத் தந்திருக்கின்றன. (எனக்கு நல்வழி காட்டிய) ஆசார்யர்களுக்கு நான் மனப்பூர்வமாகச் சேவை செய்ததன் விளைவு, இது. (பெறற்கரிய இந்தத் தருணத்தை முன்கூட்டியே எனக்கு அருளிச் செய்தார்கள்.) புருஷோத்தமரே! இராமப்பிரபுவே! தேவாதிதேவரான தங்களை உபசரித்ததனால், இந்தப் பிறவி பயனை அடைந்ததாகிவிட்டது; (நிச்சயமாக) சுவர்க்கமும் எனக்குக் கிடைக்கப் போகிறது! ரகுநந்தனரே! காமம் முதலான அறுவகை உள் எதிரிகளை (மனமாசுகளை) மாய்ப்பவனே! (புலன்களின்மேல் வெற்றியை அருள்பவனே!) அருள்மழை பொழியும் உங்கள் திருப்பார்வையால் நான் புனிதமாகிவிட்டேன். உங்கள் பேரருளினால் அழிவேயில்லாத உலகங்களை (பரமபதத்தை) அடையப் போகிறேன். (11–13)

தாங்கள் சித்திரகூட மலைக்கு எழுந்தருளிய காலத்தில், எந்தத் தவச்செல்வர்களுக்கு நான் சேவை செய்து வந்தேனோ, அவர்கள், இவ்விடத்திலிருந்து ஒப்பற்ற ஒளிவீசும் தெய்விக விமானங்களில் ஏறி, தேவலோகம் சென்றார்கள். 'மிகவும் புண்ணிய பூமியான உன்னுடைய இந்த ஆசிரமத்திற்கு இராமன் வரப்போகிறார்' என்று அறம் அறிந்தவர்களும், மகாபுண்ணியசாலிகளும், மாமுனிவர்களுமான அவர்கள் என்னிடம் கூறினார்கள். 'சுமித்திரைச் செல்வனோடு வரும் அந்த அதிதியை, நீ உபசரித்து வரவேற்க வேண்டும். அவரைப் பார்த்த பின்னர் (அவரால் கடாக்ஷிக்கப்பட்டு) உத்தமமான, அழிவில்லாத (புண்ணியப் பயனான) உலகங்களுக்குச் செல்வாய்.' புருஷோத்தமரே! ஆண்புலி நிகர் மாவீரரே! பம்பைக் கரையில் உற்பத்தியாகும் பலவகை கனி–கிழங்கு முதலானவை தங்களுக்காகவே என்னால் சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றன.'' (14–17)

நால்வகை வருணப்பகுப்பிற்கு அப்பாற்பட்ட இனத்தவளாக இருந்தும், (பரமாத்ம ஞானத்தைப் பெற்றுவிட்டதால்) அடியார் கூட்டத்திலிருந்து ஒருபோதும் புறக்கணிக்க முடியாதவளான சபரியின் சொற்களைக் கேட்ட தருமாத்மா இராகவன், பின்வருமாறு கூறினார்— ''உன்னுடைய ஆசார்யர் மதங்கருடைய அளவற்ற மேன்மைகளை (தவ ஆற்றல்களை), தனு வம்சத்தோன்றல் கபந்தனிடமிருந்து உள்ளபடி அறிந்து கொண்டிருக்கிறேன். என்னால் கேட்கப்பட்ட அந்தச் சிறப்புக்களை, நீ மனம் வைத்தால், என் கண்களால் நேரில் காண விரும்புகிறேன்.'' இராமன் இவ்வாறு கூறியதைக் கேட்ட சபரி, பெருமைமிக்க அந்த வனத்தை அவ்விருவருக்கும் சுற்றிக் காட்டினாள். (18–20)

''ரகுநந்தனரே! நீருண்ட மேகம் போல் மிகவும் போற்றத்தக்கதும், விலங்கு–பறவைகள் நிறைந்ததும், மதங்கவனம் என்று புகழ்பெற்றதுமான இந்தக் காட்டைப் பாருங்கள். (வானத்தில்

நீருண்ட மேகம் தோன்றினால், உடனே, உயிருக்கு ஆதாரமான நீர்பொழியும் என்பதால், மேகம் போற்றத்தக்கதாகிறது என்றபடி.) ஆத்மஞானிகளான என்னுடைய ஆசார்யர்கள் இந்தப் பெரும் வனப்பிரதேசத்தில், வேத மந்திரங்களால் முறைப்படி, தம் உடல்களை அக்னியில் ஆகுதியாகக் கொடுத்தார்கள். ('நித்யாக்னிஹோத்ரிகளின் உடல், அவர்களால் பூஜிக்கப்பட்டு வந்த அக்னியிலேயே ஆகுதியாக அளிக்கப்படவேண்டும்' என்பது விதி.) (21,22)

என்னால் நன்றாக சேவை செய்யப்பட்ட அவர்கள், 'ப்ரத்யக்ஸ்தலீ' என்ற இந்த பூஜை மேடையில், வயோதிகத்தின் காரணமாக, நடுங்கும் கைகளால் (தேவதைகளுக்கு) மலர் வழிபாடு நடத்தினார்கள். என்னுடைய குருமார்களின் அளவிட முடியாத தபோ பலத்தால், தெய்வ வழிபாட்டு இடங்கள் ஒப்பற்ற சோபையுடன் எல்லாப் பக்கங்களையும், இப்போதும்கூட பிரகாசப்படுத்திக் கொண்டிருக்கின்றன – பாருங்கள், ரகுநாயகரே! உபவாசத்தினால் களைப்பு மேலிட்டு உடல் தளர்ந்து வெளியே எங்கும் (புண்ணிய தீர்த்தங்களில் நீராடுவதற்குப்) போக முடியாதிருந்த அவர்கள், மனத்தால் நினைத்தவுடனேயே ஏழு கடல்களும் ஒன்றுகூடி இங்கேயே வந்திருப்பதைப் பாருங்கள். (அவர்கள் மேலுலகம் சென்ற பின்னரும் ஸப்தஸாகரங்கள் இங்கேயே இருந்து கொண்டிருக்கின்றன.) (23–25)

அதில் தலைமூழ்கி நீராடிய பின்னர், உலர்வதற்காக இங்குள்ள மரக்கிளைகளில் போடப்பட்ட அவர்களுடைய மரவுரிகள், இவ்வளவு காலம் கடந்தும் மட்கிப் போகாமல் இருக்கும் அதிசயத்தைப் பாருங்கள், ரகுநந்தனரே! கருநெய்தல் மற்றும் வேறு மலர்களைக் கொண்டும் அவர்கள் தேவபூஜை செய்தார்கள். மிகவும் பக்தியுடன் அவர்கள் பூஜை செய்ததால், (இத்தனை காலமாகியும்) அந்த மலர்கள் வாடாமல் இருக்கின்றன. இந்த வனம் முழுவதையும் சுற்றிக் காட்டிவிட்டேன்; அருமையான செய்திகளையும் கூறிவிட்டேன். ஆகவே, தங்கள் அனுமதியுடன் இப்போது இந்த உடலைத் துறக்க விரும்புகிறேன். இந்த ஆசிரமம் எந்தப் பிரும்மஞானிகளுடையதோ, எவர்களுக்கு நான் தொண்டு செய்து வந்தேனோ, அவர்கள் தற்போது இருக்குமிடத்தை அடைய விரும்புகிறேன்.'' (26–29)

உயர்நெறியோடு கூறிய (சபரியின்) அந்தச் சொற்களை, இலக்குவனுடன் கூட இராமன் கேட்டு புளகாங்கிதம் அடைந்தார். (அந்த வனத்தின் சிறப்புக்களை எண்ணிப் பார்த்து) ''ஆகா! ஆச்சரியம்!'' என்று வியந்து கூறினார். விதிக்கப்பட்டுள்ள விரதங்களையெல்லாம் முற்றிலுமாக நிறைவேற்றிவிட்ட சபரியைப் பார்த்து, ''நீ மிகவும் பக்தியுடன் என்னை உபசரித்திருக்கிறாய். (நான் மனமகிழ்ச்சியுடன் இருக்கிறேன்.) ஆனந்தமாக, நீ விரும்பும் புண்ணிய உலகங்களை அடைவாய்'' என்று இராமன் திருவாய் மலர்ந்தருளினார். (30,31)

மான்தோலும் மரவுரியும் தரித்த, தலையில் சடைக்கற்றையையுடைய முதியவளான சபரி, இராமனால் மேற்கண்டவாறு சொல்லப்பட்டவுடன், அதே முகூர்த்தத்தில் மிகவும் நலிவடைந்திருந்த உடலைத் துறக்க எண்ணி, இராமபிரானால் அனுமதிக்கப்பட்டு, தன்னை நெருப்பில் சமர்ப்பணம் செய்து, கொழுந்துவிட்டெரியும் நெருப்பைப் போன்ற ஒளியுடன், தேவலோகத்தையே சென்றடைந்தாள். அப்போது, தெய்விகமான அணிகலன்கள் அணிந்து கொண்டு, தெய்விக மாலைகளும் வாசனைப்பூச்சும் திவ்யமான ஆடையும் அணிந்தவளாய், கண்ணுக்கினிய தோற்றம் கொண்டவளாக ஆனாள். பேரொளி வீசும் மின்னற்கொடியைப் போல் அந்தப் பிரதேசம் முழுவதையும் ஒளிரச் செய்த சபரி, நற்பேறுபெற்றவர்களான மாமுனிவர்கள் (அவளுடைய குருமார்கள்) எந்தப் புண்ணிய லோகத்திலிருந்து கொண்டிருந்தார்களோ, அதே இடத்தைத் தன் ஆத்மயோகத்தால் சென்றடைந்தாள். (32–35)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
எழுபத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எழுபத்தைந்து

பம்பை நதியைக் காணுதல்

தன்னுடைய தவ ஆற்றலினால் சபரி மேலுலகம் சென்றதும், தம்பியான லட்சுமணனோடு (சபரி கூறிய செய்திகளைக் குறித்து) ஆழமாக அலசிப் பார்த்தார், இராகவன். தருமத்தையே உயிர்மூச்சாகக் கொண்டிருந்த அந்த ஆத்மஞானிகளின் தபோபலத்தை எண்ணிப் பார்த்து, தன்னுடைய நன்மையிலேயே உறுதியாக மனத்தைச் செலுத்தியிருக்கும் லட்சுமணனைப் பார்த்து இராமன் சொன்னார்— (1,2)

''தம்பி! மகாத்மாக்களான அந்த முனிவர்களின் இந்த ஆசிரமம் பல அதிசயங்களோடு இருப்பதைக் கண்டோம். இங்கே மானும் புலியும் (பரஸ்பரம் உள்ள பகைமையை மறந்து) நட்புக் கொண்டிருக்கின்றன; பற்பல வகையான பறவைகள் இங்கே வசிக்கின்றன. ஏழு சமுத்திரங்களும் கூடியிருக்கும் இந்தப் புண்ணிய தீர்த்தத்தில் முறைப்படி நாம் நீராடினோம்; மூதாதையர்க்கு நீர்க்கடன் செலுத்தினோம். லட்சுமணா! புண்ணிய தீர்த்தத்தில் நீராடியதாலும், முன்னோர்களைத் திருப்தி செய்து வைத்ததாலும், (இங்கிருந்த மாமுனிவர்கள் பேரருளினாலும்) நம்முடைய பாவங்கள் தொலைந்தன. (மனவேதனைகள் மறைந்தன.) இனி, நமக்கு வெற்றியே கிட்டப்போகிறது. இந்த உண்மை விளங்கிவிட்டதால், இப்போது என் மனத்தில் மகிழ்ச்சி தோன்றியிருக்கிறது. (3–5)

புலிநிகர் வீரனே! என் இதயத்தில் மங்களமான எண்ணங்கள் தோன்றுகின்றன. ஆகவே, வா. கண்ணுக்கினிய, புனிதம் மிக்க பம்பை தடாகத்திற்குச் செல்வோம். அதன் அருகிலேயே ரிஷ்யமூக பர்வதம் இருக்கிறது. சூரியகுமாரனான தருமாத்மா சுக்ரீவன் அங்கேதான் வசித்துக் கொண்டிருக்கிறான். வாலியிடமிருக்கும் பயத்தினால், நான்கு வானரர்களோடு எப்போதும் கூடியிருக்கும் வானரர் தலைவனான சுக்ரீவனைக் காண்பதற்கு வேகமாகச் செல்வோம். தம்பி! என்னுடைய சீதையைத் தேடிக் கண்டுபிடிப்பது என்ற கடினமான செயல், அவன் பொறுப்பில் இருக்கிறது (என்று கபந்தன் சொல்லியிருக்கிறானே?)'' இவ்வாறு, வீரரான இராமன் சொல்லியதைக் கேட்டு, சுமித்திரைச் செல்வன் பதில் கூறினான்— ''அவ்விடத்திற்கு நாம் விரைந்து செல்ல, என் மனமும் துடித்துக் கொண்டிருக்கிறது.'' (6–9)

உடனே, லோகநாதரான இராமப்பிரபு, அந்த ஆசிரமத்திலிருந்து வெளியேறி, லட்சுமணனோடு பம்பை கரையை வந்தடைந்தார். அவர், புனிதமானதும் முனிவர் பெருமக்களால் உபயோகப் படுத்தப்படுவதும் (நான்கு புறங்களிலும்) பலவகையான மரங்கள்–கொடிகள் சூழப்பட்டதும் அருந்துவதற்குகந்த தெள்ளிய நீரையுடையதுமான பம்பையைக் கண்டார். தாமரைகள், சிவந்த செங்கழுநீர்ப் பூக்கள், வெண்மையான ஆம்பல்கள், கருமையான நெய்தல் மலர்கள் – இவ்விதம் பல வண்ணச் சேர்க்கையால் கம்பளம் விரித்தாற்போலிருந்த பம்பையைப் பார்த்தார்கள். வெகுதூரத்திலிருந்து வந்திருந்த இராமன் நன்னீர் நிரம்பிய அந்த நீர்நிலையில் மதங்கஸரஸ் என்ற மடுவில் நீராடினார். (மதங்கஸரஸ் என்பது, பம்பையின் ஒரு ஸ்நானகட்டம் – நீராடும் படித்துறை என்று கொள்க – கங்கையில், மணிகர்ணிகை என்பது போல. இது, சில வியாக்கியானக்காரர்களின் முடிபு.) (10–13)

(பம்பையிலும் அதைச் சுற்றியிருந்த கரைப்பகுதிகளிலும்) செந்தாமரை, நெய்தல், வெண்தாமரை, சௌகந்திகம் (செங்கழுநீர்) ஆகிய மலர்கள் நிரம்பியிருந்தன. மலர்களை உடைய மாமரங்களின் காடுகள், மயில்களின் இனிய குரலோசை, திலகம், மாதுளை, தவம் என்ற மரம், மருதம், மலர்ந்த அரளி, ஏராளமான புஷ்பங்களைக் கொண்ட புன்னாகம், மாலதி (மல்லிகை) புதர்கள், ஆல், வஞ்சுளம், அசோகம், ஏழிலைப்பாலை, தாழை, தினிசி மற்றும்

பலவகை மரங்களாலும், நன்றாக அலங்கரிக்கப்பட்ட அணங்கை போன்று, எல்லாப் பக்கங்களிலும் செழிப்பான மரங்கள் அடர்ந்தும், ஏராளமான மலர்கள் விளங்குவதையும் பார்த்துக் கொண்டே, நாரை–மயில்–கொக்கு–மரங்கொத்தி முதலியவற்றாலும் மற்றும் பலவகை பட்சிகளால் ஒலியெழுப்பப்படுவதுமான அந்தப் பெருங்காட்டுப் பகுதியில், கலங்காத, உறுதியான நெஞ்சுடைய இராம–லட்சுமணர்கள் வந்து சேர்ந்தார்கள். (14–18)

பல பறவைகள் வசிப்பதும், நீர்நிலையை ஒட்டி வளர்ந்துள்ள காடுகளையும் பார்த்தவாறே சென்று கொண்டிருந்தார்கள். உற்சாகத்துடன் பறந்து கொண்டிருக்கும் பல்வகை பறவைகளும் மரங்களும் அழகூட்டும் சுற்றுச் சூழலையுடையதும், மாசுமருவற்ற, குளிர்ந்த நீர் நிரம்பியதுமான பம்பையை இராமன் பார்த்தார். இராமன், பலவகையான மரங்களையும், பல்வகை நீர்நிலைகளையும் (நீராடும் படித்துறைகளையும்) பார்த்ததும், காமவேதனையால் பீடிக்கப்பட்டு, புனிதமான பம்பை ஏரியை அடைந்தார். (19,20)

மலர்ந்த புஷ்பங்களைக் கொண்ட உபவனங்கள், அழகைப் பெருக்கும் ஸால–சம்பக மரங்கள், வண்டுகளின் கூட்டம், லட்சுமீகரமானது, ஒப்புவமையற்றது, படிகம் போன்று தூயதான நீர் நிரம்பியது, (செல்லும் பாதையில்) மிருதுவான மணல் பொடிகள், தாமரை–செங்கழுநீர் செழிப்புடன் வளர்ந்திருப்பது – இவ்விதமாக விளங்கும் பம்பை ஏரியை மீண்டும் கண்கொட்டாமல் பார்த்து, வீண்போகாத பராக்கிரமத்தையுடைய இராமன், இலக்குவனைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார்— (21,22)

''இந்த ஏரியை ஒட்டினாற்போல், தாதுக்கள் நிறைந்ததும், மலர்கள் பூத்துக் குலுங்கும் மரங்களை உடையதும், புகழ்பெற்றதும், (முனிவர்களின் இருப்பிடமாதலால்) புண்ணியப்பேறு பெற்றதும், முன்னர் கபந்தனால் கூறப்பட்டதுமான ரிஷ்யமூகம் என்ற பர்வதம் இருக்கிறது. பெருமைமிக்க வானரனான ரிக்ஷரஜஸ் என்பவருடைய புதல்வன், மகாவீரம் பொருந்திய சுக்ரீவன் என்று பெயர் பெற்றவன், அந்த மலையில் வசித்து வருகிறான். வீரசிகாமணியே! நீ, வானரர் தலைவனான அந்த சுக்ரீவனைச் சென்று பார்ப்பாயாக.'' இவ்வாறு, சத்தியபராக்கிரமம் படைத்த இலக்குவனிடம் கூறி நிறுத்தி, பின்னர் தொடர்ந்து பேசினார்— (23–25)

''லட்சுமணா! நாடு கடத்தப்பட்டுப் பரிதாப நிலையில், சீதையிடம் அளவிட முடியாத பற்றுக்கொண்டிருக்கும் நான், அவள் இல்லாமல் எப்படி உயிர் வாழ முடியும்?'' இவ்வாறு, காமதேவதையால் பீடிக்கப்பட்டிருந்த அவர், இராமனுடைய நலனைத் தவிர வேறெதையும் அறியாத இலக்குவனைப் பார்த்துக் கூறிவிட்டு, துக்கம்–மனச்சோர்வினால் தளர்ந்திருந்த ரகுநாயகன், மனத்திற்கினிய பம்பையில் (புத்துணர்ச்சி பெறுவதற்காக) இறங்கினார். இடையூறுகள் நிறைந்த காட்டுப் பகுதிகளின் வழியே வெகுதூரம் சிரமப்பட்டு நடந்து வந்த அவர், அழகிய பூங்காவனங்கள் சூழ்ந்ததும் பலவகையான பறவைக் கூட்டங்கள் விளங்குவதுமான பம்பையைக் கண்களால் கண்டார். (28)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டத்தில்
எழுபத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஆரண்ய காண்டம் முற்றிற்று.

|| ஸ்ரீஹரி: ||

கிஷ்கிந்தா காண்டம்

ஸர்க்கம் : ஒன்று

இராமனின் காமவேதனை

தாமரை, நீலோத்பலம் மற்றும் மீன்கள் நிறைந்த அந்த ஓடையின் அருகில் சென்று பார்த்தவுடன் புலன்கள் துடிக்க, லட்சுமணன் (தைரியம் கூறுவதற்காக) அருகிலிருக்கும்போதே இராமன் அரற்றத் தொடங்கினார். அந்த ஏரியைப் பார்த்தவுடனே, மகிழ்ச்சியால் அவருடைய புலன்கள் கிளர்ந்து நடுங்கின. காமத்தின் வசப்பட்ட அவர், லட்சுமணனைப் பார்த்து இவ்வாறு சொன்னார்— "லட்சுமணா! வைடூர்யம் போன்ற தூய நீராலும், மலர்ந்துள்ள தாமரை, நீலோத்பலம் போன்ற மலர்களாலும், (கரைகளில்) பலவகையான மரங்களாலும் பம்பை ஓடை அழகாக விளங்குகிறது. லட்சுமணா! பம்பையின் கரைகளில் உயரமான சிகரங்களுடன் கூடிய மாமலைகளைப் போல் விளங்கும் மரங்களையுடைய கண்கவர் காடுகள் செழிப்புடன் இருப்பதைப் பார். ஆனால், (தன் வேண்டுகோள் ஏற்கப்படாததால், அரசமாளிகை சுக–சௌக்கியங்களைத் துறந்து, நந்திக்கிராமத்தில் விரதக் கட்டுப்பாடுகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கும்) பரதனைப் பற்றிய துக்கத்தாலும், சீதை அபகரித்துச் செல்லப்பட்டதாலும், முன்னமே என் மனம் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறது. இப்போது, மனவேதனை அதிகமாக வருந்தச் செய்கிறது. (1–5)

துயரம் என்னை வாட்டிக் கொண்டிருந்தாலும் பலவிதமான மலர்கள் நிறைந்து, குளிர்ந்த, தெளிந்த நீர் நிரம்பிய பம்பையின் கரையிலுள்ள மனமகிழ்ச்சி தரும் காடுகளால், ஓடையின் அழகைக் காண முடிகிறது. தாமரை மலர்களால் மூடப்பட்டாற்போலிருக்கும் ஓடை மிக அழகாகக் காட்சி தருகிறது. அருகிலேயே சர்ப்பம் மற்றும் அச்சமூட்டும் விலங்குகளும், மான் முதலான சாந்தமான பிராணிகளும் திரிந்து கொண்டிருக்கின்றன. கரும்பச்சை, வெளிர் மஞ்சள் நிறங்களில் உள்ள புற்கள் இந்த இடத்தின் அழகை அதிகப்படுத்துகின்றன; மரங்களிலிருந்து பலவிதமான மலர்கள் தரையில் உதிர்ந்து, இரத்தினக் கம்பளம் விரித்தாற்போலிருக்கிறது. (6–8)

எல்லாப் பக்கங்களிலும் மரக்கிளைகளின் நுனியில் ஏராளமான மலர்க்கொத்துக்கள் இருக்கின்றன; அவைகளின் நாற்புறங்களிலும், மேற்பகுதியில் மலர்களைக் கொண்ட கொடிகளால் சுற்றிக் கொள்ளப்பட்டிருக்கின்றன. லட்சுமணா! இது வசந்தகாலம் (சித்திரை மாதம்). அதனால், மரங்களில் மலர்களும் பழங்களும் விளங்குகின்றன. அவைகளைத் தழுவிக் கொண்டு வரும் காற்று நறுமணத்தைத் தருவதுடன் காமவேதனையையும் தூண்டிவிடுகிறது. (9,10)

சுமித்திரைச் செல்வனே! கொத்துக்கொத்தாக மலர்களையுடைய மரங்களைக் கொண்ட காட்டுப் பகுதிகளின் பல்வகையான அழகைப் பார்! (நிறம், மணம் இவற்றிற்கேற்ப, அழகின் காட்சிகளும் பலவிதமாக இருக்கின்றன.) மேகங்கள் மழையைப் பொழிவதைப் போல, மரங்கள் மலர்மாரியைப் பொழிகின்றன. பல்வகையான காட்டுமரங்கள், காற்றின் அதிவேகத்தினால் அசைக்கப்பட்டு, அழகான மலைப்பாறைகளில் மலர்களைச் சொரிகின்றன; பூமியைப் பூக்களால் மூடி விடுகின்றன. (11,12)

சுமித்திரை மைந்தனே! மரத்திலிருந்து விழுந்துவிட்ட, விழுந்து கொண்டிருக்கிற, கிளைகளின் நுனியில் தொங்கிக் கொண்டிருக்கிற மலர்களுடன், எல்லாப் பக்கங்களிலிருந்தும் காற்றுதேவன் விளையாடிக் கொண்டிருப்பதைப் போன்ற அற்புதத்தைப் பார்! காற்றானது, மலர்கள் நிரம்பிய மரங்களின் பற்பல கிளைகளையும் உலுக்கிவிட்டுச் செல்கிறது. அதனால்,

மலர்களில் தேன் குடித்து மதர்த்திருந்த வண்டுகள், காற்றுப்போக்கில் செல்லும் மலர்களைத் தொடர்ந்து ரீங்காரமிட்டுச் செல்கின்றன. (13,14)

மலைக்குகைகளிலிருந்து வெளியேறும் காற்று நல்லிசை போல் (புல்லாங்குழல் போன்ற காற்றிசைக்கருவியின் இசைபோல்) அமைந்து, மதங்கொண்ட குயில்களின் அகவல்கள் குரலிசையாக அமைய, அதற்கேற்ப மரங்கள் நர்த்தனம் செய்வது போல் ஆடுகின்றன. மிக வேகமாக வீசும் காற்றினால் மரங்களின் கிளைகள் எல்லாப் பக்கங்களிலும் ஆட்டப்படுவதால், மரக்கிளைகள் ஒன்றோடொன்று கோர்க்கப்பட்டிருப்பதைப் போல் விளங்குகின்றன. குளிர்ச்சியான தென்றல் காற்று, மலர்களின் நறுமணத்தைச் சுமந்து கொண்டு, இனிமையாக உடலைத் தடவிக் கொண்டு செல்வதால், உடல் களைப்பு நீங்கிப் போகிறது. (15–17)

காடுகளிலுள்ள மரங்கள், இனிய மணத்தைப் பரப்பிக் கொண்டு வேகமாக வீசும் காற்றினால் தாக்கப்படும்போது எழும்பும் ஒலி செவிக்கினிய இசையைப் போலிருக்கிறது. கூடவே வண்டுகளும் துணையாக இசைக்கின்றன. மலையின் பல இடங்களிலும், கண்கவர் அழகுடன் மலர்க்கொத்துக்களையுடைய பெரிய பெரிய மரங்களுடன் கூடிய சிகரங்களால் மலைகள் மிகப்பொலிவுடன் விளங்குகின்றன. (18,19)

மரங்கள், மலர்கள் நிறைந்த கிளைகளைக் கொண்டிருக்கின்றன. (மலர்களை மொய்க்கும்) வண்டுகள் தலையணி போல் விளங்குகின்றன. காற்றினால் அசைக்கப்பட்டு அசையும் கிளைகளில் எழுகின்ற வண்டுகளின் ரீங்காரம், மரங்களே பாட்டிசைப்பதைப் போலிருக்கிறது. உடல் முழுவதையும் பொன் அணிகலன்களால் மூடிக்கொண்டு (ஏராளமான நகைகளை, அவையவை களுக்குரிய இடத்தில் அணிந்துகொண்டு), பட்டாடை உடுத்தி (ஒளிமயமாக) விளங்கும் மனிதர்களைப் போல, நன்றாகப் பூத்துக்குலுங்கும் இந்த சரக்கொன்றை மரங்களைப் பார். (20,21)

லட்சுமணா! பலவகைப்பட்ட பறவைகள் கூவி ஆனந்திக்கின்ற இந்த வசந்தகாலம், சீதையை விட்டுப் பிரிந்திருக்கும் என் சோகத்தை மேலும் வளர்ப்பதாக இருக்கிறது. மகிழ்ச்சியில் திளைக்கும் குயில், கூவிக் கூவி என்னை அழைப்பது போலிருக்கிறது. அதைக் கேட்பதனால், பிரிவாற்றாமையில் மூழ்கிக் கிடக்கும் என்னை மன்மதன் வாட்டுகிறான். லட்சுமணா! மனத்துக்கினிய காட்டருவியின் பக்கத்தில் உல்லாசமாகக் குரலெழுப்பும் நீர்க்கோழி நன்றாகக் கூவி, மதனாவஸ்தையில் தவிக்கும் என்னை மேலும் துக்கப்படுத்துகிறது. (22–24)

முன்பு ஆசிரமத்திலிருந்தபோது, இதனுடைய கூவலைக் கேட்டு மிக்க மகிழ்ச்சி கொண்ட என் அன்புக்குரிய சீதை, உற்சாகத்துடன் என்னை அருகில் அழைத்து, சந்தோஷத்தைப் பகிர்ந்து கொண்டாள். இப்படியாக, பலவிதமான ஒலிகளை எழுப்பும் பல இனங்களைச் சேர்ந்த பறவைகள், எல்லாப் பக்கங்களிலிருந்தும் பறந்து வந்து மரம்–புதர்–கொடிகளில் உட்காருவதைப் பார். லட்சுமணா! பெண் பறவைகள், (ஏராளமான மலர்கள் பூத்துக்குலுங்குவதால் மகரந்தம் பருகுவதற்காகக் கூட்டங்கூட்டமாக வரும்) தேனீக்களின் ரீங்கார இன்னொலியில் மயங்கி, ஆண்பறவையுடன் கூடி மகிழ்ந்து, (அந்த இனிய தாம்பத்யத்தால்) அதன் இனத்தைச் சேர்ந்த மற்ற பறவைகளும் ஆனந்தமடைகின்றன! (25–27)

பம்பை ஏரியின் இந்தக் கரையில், பறவைக் கூட்டங்கள் மனக்களிப்புடன் கூவிக் கொண்டிருக்கின்றன. நீர்க்கோழிகள், தம் துணையை நாடி சப்திக்கின்றன; ஆண்குயில்கள், தம் பேடையைக் கூவி அழைக்கின்றன; மரங்கள் (காற்றினால் அசைக்கப்பட்டு) என் காமதாபத்தை வளர்ப்பதுபோல் ஆடுகின்றன. வசந்தகாலம் என்ற அக்னிக்கு, அசோக மரங்களில் செக்கச்சிவந்து பூத்துக்குலுங்கும் மலர்க்கொத்துக்களே, நெருப்புக் கனல்கள்; சற்றே சிவந்து விளங்கும் புத்தம் புதிய தளிர்களே, செஞ்சுவாலைகள்; வண்டுகளின் ரீங்காரமே, கனன்றெரியும் நெருப்பின் ஒலிகள். ஆகா! இந்தப் பருவ காலம், என்னை எவ்வாறு தகிக்கிறது! (28,29)

சுமித்திரைச் செல்வனே! அழகான கண்ணிமையாள்; நற்குழலாள்; இன்மொழியாள்! – இப்படிபட்டவளான அவளைக் காணாததால், இனி உயிரோடிருப்பதில் பிரயோஜனம் இல்லை (என்று எண்ணுகிறேன்). காட்டுப் பகுதிகள் மிக அழகாக விளங்கும் இந்தக் காலத்தில், காட்டின் எல்லைப்புறங்களிலிருந்தும் கூட குயில்களின் கூவல் ஓசை இனிமையாகக் கேட்கிறது. என் மனத்துக்கினியாள் மிகவும் விரும்பும் வசந்தகாலம், இது. (30,31)

காமவேதனையால் தவித்துக் கொண்டிருக்கும் என்னை, வசந்தருதுவின் (காமத்தை வளர்க்கின்ற) தன்மைகள் விரைவில் எரித்துவிடும் போலிருக்கிறது. (தென்றல் காற்று, மரங்களில் செந்தளிர்கள், பூங்கொத்துக்கள், குயில்களின் கூவல், மலர்ந்த தாமரை, நறுமணம் – இவைகள் வசந்தத்தின் தன்மைகள்.) என் மனத்துக்கினிய மனைவியோ கண்ணில் படவில்லை; மரங்களோ மிக அழகாகக் காணப்படுகின்றன. அதனால், பிரிவாற்றாமையின் தாபம் வளர்ந்து கொண்டே போகிறது. கண்ணில் படாததால் வைதேகி என் துயரத்தை அதிகப்படுத்துகிறாள் என்றாலோ, காமக்களைப்பினால் ஏற்படும் வியர்வையைத் தென்றல் காற்றினால் போக்கும் வசந்தம், என் கண்களில் பட்டு சோகத்தை அதிகப்படுத்துகிறது. (32–34)

லட்சுமணா! மான்குட்டியின் கண்களைப் போல் சுழன்றலையும் கண்களையுடைய அவளுடைய பிரிவால், பலாத்காரமாகக் கவலையிலும் சோகத்திலும் ஆழ்த்தப்பட்டுள்ள என்னை, சித்திரை மாதக் காற்று இரக்கமில்லாமல் வாட்டி வதைக்கிறது. பளிங்குக் கற்களால் செதுக்கப்பட்ட சாளரங்கள்போல், விரிந்த தோகைகளையுடைய மயில்கள், காற்றினால் இங்குமங்கும் அசைக்கப்பட்டு மிக அற்புதமாக ஆடுவதைப் போல் விளங்குகின்றன. ஆண்மயில்கள், பெண்மயில்களால் சூழப்பட்டு காமக்களிப்பில் மெய்மறந்து நிற்பதைக் காணும் போது பிரிவாற்றாமையால் தவிக்கும் எனக்குக் காமவேதனை மேலும் வளர்கிறது. (35–37)

லட்சுமணா! மலைமுகட்டில் ஆடிக்கொண்டிருக்கும் தன் ஆண்துணையை அனுசரித்து, தன் காமவேதனையை வெளிப்படுத்திக் கொண்டு, இந்தப் பெண்மயில் கூத்தாடுவதைப் பார். அந்த ஆண்மயிலும் அழகான தன் தோகைகளை விரித்து, மனமகிழ்ச்சியை இனிய ஒலிகளால் வெளிப்படுத்திக் கொண்டு, மனத்தால் தன் பேடையைச் சென்றடைகிறது. ('உன்னால் முடியாதே!' என்று என்னைக் கண்டு பரிகசிப்பது போல் இருக்கிறது.) (38,39)

(இந்த மயில்கள் இருக்கும் இந்தக் காட்டின் வழியாக சீதையை, அரக்கன் அபகரித்துக் கொண்டு போகவில்லை என்று எண்ணுகிறேன். அதைப் பார்த்திருந்தால், இவைகள் சோகத்தில் மூழ்கியிருக்குமே! என்று பொருள் கொள்வரும் உளர்.) காட்டில், எந்த அரக்கனும் ஆண்மயிலின் இனிய துணையை அபகரித்துச் செல்லவில்லை. அதனால்தான், காட்சிக்கினிய காட்டுப் பகுதிகளில், தன் பேடையோடுகூட ஆண்மயில் களிப்புடன் திரிகிறது. (40)

எங்கு நோக்கினும் பூக்கள் மலர்ந்து விளங்கும் இந்த சித்திரை மாதத்தில், சீதை இல்லாமல் தனித்திருப்பதை என்னால் பொறுக்க முடியவில்லை. லட்சுமணா! விலங்கு–பறவைகளாகப் பிறவி எடுத்துள்ள பிராணிகளுக்குங்கூட அன்யோன்ய காமக்கவர்ச்சி இருப்பதைப் பார்! அதோ, அந்த மயில்பேடு காமக்கிளர்ச்சியுடன் தன் துணையை நெருங்கி வருகிறது. நெடுந்தடங்கண்ணாளாகிய சீதை, (அரக்கனால்) திருடிக் கொண்டு போகப்படாதிருந்தால், மனவேட்கை கொண்டவளாக, என்னை நோக்கி மயங்கி ஓடி வருவாளே! (41–43)

லட்சுமணா! வசந்த காலத்தில், மரங்களில் பூத்துக்குலுக்கும் மலர்கள், (சீதை அருகில் இல்லாததால், மகிழ்ச்சியைத் தராமல்) எனக்கு உபயோகமற்றவைகளாக இருக்கின்றன. மரங்களின் அழகை அதிகரிக்கச் செய்யும் கண்ணுக்கினிய மலர்கள், பயனில்லாதனவாகி, வண்டுகளின் கூட்டங்களோடு (நிறைந்த மகரந்தத்தின் சுமையைத் தாங்காமல்) தரையில் விழுகின்றன. பறவைக் கூட்டங்கள், (வசந்தகால வரவினால்) மனக்களிப்படைந்து, தத்தம் பேடையை

அழைப்பது போல் கலகலவென்ற இனிய ஒலிகளை எழுப்பி, எனக்கும் மதன வேதனையை உண்டுபண்ணுவது போல ஆடுகின்றன. (44–46)

என் அன்புக்குரியவளான சீதை தற்போது எங்கே இருக்கிறாளோ? அங்கேயும் இப்போது வசந்தகாலம் என்றால், நான் எவ்வாறு இங்கே வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறேனோ, அவ்வாறே அவளும் காமவசப்பட்டுத் தவித்துக் கொண்டிருப்பாள் என்பது நிச்சயம். அவள் இருக்குமிடத்தை வசந்தன் நெருங்கியிருக்க மாட்டான் என்பது நிச்சயம். ஏனென்றால், (வசந்தத்தின் புதிய கண்கவர் வனப்பைக் கண்டு) நான் இல்லாத, செங்கமலத்தடங்கண்ணாளான அவள் எவ்வாறு உயிரை வைத்துக் கொண்டிருப்பாள்? (47,48)

'என் பத்தினி இருக்குமிடத்திலும் வசந்தகாலம்தான்' என்றே வைத்துக் கொண்டாலும், (காவல் காத்துக் கொண்டிருக்கும்) அந்நியர்களால் பயமுறுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் அவ்வழகியாள் என்னதான் செய்ய முடியும்? யௌவனத்தின் நடு தசையில் உள்ளவள்; தாமரை இதழ் போன்ற கண்களுடையவள்; மென்மையும் இனிமையும் கூடிப் பேசுபவள். அவள், இந்த வசந்த காலத்தின் அற்புதக் காட்சிகளைக் கண்டு (நான் அருகில் இல்லாததால் பூரணமாக அனுபவிக்க முடியாமல், மனமுடைந்து) உயிரைத் துறந்துவிடுவாள் என்பதில் சந்தேகமில்லை. (49,50)

மென்மையான இயல்புடைய சீதை, என் பிரிவைத் தாங்கமாட்டாமல், உயிரை வைத்துக் கொண்டிருக்கமாட்டாள் – என்று, இப்போது என் உள்ளத்தில் நிச்சயமான எண்ணம் தோன்றுகிறது. உண்மையில், என்னுடைய முழுப்பிரேமை சீதையிடத்திலும், சீதையின் அன்பு முழுமையும் என்னிடத்திலும் எப்போதும் எந்தச் சூழ்நிலையிலும் நிலைபெற்றுள்ளன. மலர்களின் நறுமணத்தைச் சுமந்து கொண்டு, பனிக்கட்டியின் குளிர்ச்சியைத் தாங்கிக் கொண்டு, உடலை இனிமையாக வருடிச் செல்லும் இந்தக் காற்று, என் மனத்துக்கினிய மனைவியையே நினைத்துக் கொண்டிருக்கும் என்னை நெருப்பாகச் சுடுகிறது. (51–53)

முன்பு சீதையுடன் இருந்தபோது, மலயமாருதம் எனக்கு இன்பமளிப்பதாக இருந்தது. அதே காற்று, சீதையை விட்டுப் பிரிந்திருக்கும் என்னைத் துயரத்தில் ஆழ்த்துகிறது. நான், சீதையுடன் இருந்தபோது, காகம் ஆகாயத்தில் பறந்துகொண்டு, கா...கா... என்று கரைந்தது. (இது, பிரிவைக் குறிக்கும் சகுனம்.) அதே காகம், இப்போது மரத்தில் உட்கார்ந்து கொண்டு உற்சாகத்துடன் கரைகிறது. (இது, பிரிந்தோர் கூடுவதைக் குறிக்கும் சகுனம்.) இதே பறவை, ஆகாயத்திலிருந்து கூவியபோது சீதை கவர்ந்து செல்லப்பட்டதைக் குறிப்பதாக இருந்தது. (இப்போது, மரத்தில் உட்கார்ந்து கூவுவதால்) தடங்கண்ணாளாகிய அவளிடம் கொண்டு சேர்க்கப் போகிறது. (சீதையை விரைவில் சந்திப்பேன் என்பதைச் சூசனையாகத் தெரிவிக்கிறது.) (54–56)

லட்சுமணா! பூங்கொத்துக்களையுடைய கிளைகளைக் கொண்ட மரங்களில், பல்வகையான பறவைகள், பிரிவாற்றாமையை அதிகரிக்கச் செய்யும்வண்ணம் பேரொலி எழுப்புவதைக் கேள். காற்றினால் அசைக்கப்படும் திலகமரத்தின் மலர்க்கொத்தை, தன் அன்புக்குரியவளைக் காம வசப்பட்டவன் சென்று அணைத்துக் கொள்வதைப் போல, வண்டு விரைந்து சென்று அணைத்துக் கொள்கிறது. மனைவியினிடத்தில் அளவுக்கு மிஞ்சிய பிரேமை வைத்திருப்பவர்களின் சோகத்தை (பிரிவாற்றாமையை) அசோகமரம் வளர்க்கிறது. காற்றினால் பூங்கொத்துக்கள் அசைக்கப்படுவதைப் பார்க்கும்போது (மனைவியைப் பிரிந்து வருந்தும்) என்னைப் பயமுறுத்துவதைப் போலிருக்கிறது. (என் சோகத்தைச் சுட்டிக்காட்டி அதட்டுவதைப் போலிருக்கிறது.) (57–59)

லட்சுமணா! ஏராளமான பூக்களைக் கொண்டுள்ள மாமரங்கள், காமக்கிளர்ச்சியில் திளைக்கும் மனிதர்கள், சந்தனம் முதலான நறுமணப்பூச்சுக்களைப் பூசிக்கொண்டு நிற்பதைப் போல் காணப்படுகின்றன. மனிதரேறே! சுமித்திரை மைந்தனே! பம்பை ஏரியின் அழகான மர வரிசைகளில், இங்குமங்குமாக கின்னரர்கள் உலவி வருகிறார்கள். லட்சுமணா! இளஞ்சூரியனைப்

போன்ற செவ்வண்ணத்துடன், இந்த ஏரி முழுவதிலும் நறுமணம் பரப்பும் தாமரைகள் பிரகாசமாக விளங்குகின்றன. (60–62)

பம்பையின் நீர் மிகத் தெளிவாக இருக்கிறது. இதில் செந்தாமரை, கருநெய்தல் புஷ்பங்கள் ஏராளமாக உள்ளன. அன்னம், நீர்க்காக்கை முதலிய பறவைகள் நிறைய காணப்படுகின்றன. இவையெல்லாம் சேர்ந்திருப்பதனால் நறுமணம் வீசிக் கொண்டிருக்கிறது. பம்பையின் நீர்ப்பரப்பு வண்டுகளால் மொய்க்கப்பட்டபோது உதிர்ந்த மகரந்தப் பொடியாலும் உதயசூரியனின் செஞ்சுடர் போன்ற பிரகாசத்தை உடையவையுமான தாமரை மலர்களாலும் எல்லாப் பக்கங்களிலும் சூழப்பட்டதாக விளங்குகிறது. இந்த ஏரியில் சக்ரவாகப் பறவைகள் எப்போதும் வாசம் செய்கின்றன; சுற்றியுள்ள எல்லைப் பகுதிகளில் கண்கவர் இடங்கள் இருக்கின்றன; நீர் பருக வரும் யானை மற்றும் மான் கூட்டங்களால் வனப்பு மிக்கதாக விளங்குகிறது. (63–65)

லட்சுமணா! நிர்மலமான நீர்ப்பரப்பில் வேகமாக வீசுகின்ற காற்றினால் அலைகள் எழுந்து, அதனால் அசைக்கப்படும் தாமரை மலர்கள் அழகாகக் காட்சி தருகின்றன. தாமரை இதழ் போன்ற கண்களுள்ளவளும், எப்போதும் தாமரை மலரில் பிரியமுள்ளவளுமான வைதேகியைக் காணப் பெறாத எனக்கு உயிர் வாழவே பிடிக்கவில்லை. ஆகா! காமத்தின் கோணல்தனத்தை என்னென்று சொல்வது? மங்களமானவளும், மிக இனிமையாகப் பேசுபவளுமான அவள், என்னால் இப்போது அடைய முடியாத இடத்திற்குச் சென்றுவிட்ட போதிலும், அவளையே நினைக்கச் செய்கிறதே? (66–68)

இந்த ருதுவில், மரங்களில் மலர்கள் விரிந்து விளங்குகின்றன. இந்த வசந்தம், மீண்டும் ஒருமுறை என்னைத் தாக்காதிருந்தால், என் காமவேதனையை ஒருவாறு சகித்துக் கொள்ளமுடியும். சீதையுடன் இருந்தபோது மிக அழகாகத் தோன்றிய பொருட்கள் எல்லாம், அவள் இல்லாத இப்போது அழகில்லாதவைகளாகத் தோன்றுகின்றன. லட்சுமணா! சீதையின் கண்களைப் போன்று தாமரையின் இதழ்கள் இருப்பதால், இந்தத் தாமரைகளைப் பார்க்கும்போது அவளைப் பற்றிய நினைவுதோன்றி, என்னை வாட்டுகிறது. தாமரை மலர்களின் மகரந்தத்தைத் தழுவிக் கொண்டு, மரங்களிடையே புகுந்து வெளிப்படுகிற காற்று, மனத்தைக் கொள்ளை கொள்வதாக, சீதையின் மூச்சுக்காற்றுப்போல் வீசுகிறது. (69–72)

சுமித்திரை மைந்தனே! பம்பையின் தென்புற மலைச்சாரல்களில், மிக அழகாகப் பூத்துக்குலுங்குகின்ற கொன்றை மரக்கிளையைப் பார். இந்த மலையரசன், பல்வகை தாதுக்களால் மிக அழகாக விளங்குகிறது; வாயுவின் வேகத்தினால் ஏராளமான பல வண்ணத் தாதுத்துகள்களை உண்டாக்குகிறது. சுமித்திரைச் செல்வனே! மலையின் தாழ்வரைப் பிரதேசங்களில் பலாச மரங்கள், இலைகள் உதிர்ந்து செவ்வண்ண மலர்க்கொத்துகளுடன் விளங்குவதால், மலையே செஞ்சுடர்க்கொழுந்தாகப் பிரகாசிக்கிறது. (73–75)

பம்பைக் கரையில் அடர்த்தியாக வளர்ந்துள்ள மகரந்த மணம் கமழும் ஜாதிமல்லிகை, மல்லிகை, நன்றாக மலர்ந்துள்ள அரளி, தாழை, வெண்மையான நொச்சி, நன்கு பூத்த வாசந்திக் கொடி, நறுமணம் மிகுந்த மரமல்லிகை, எங்கு பார்த்தாலும் குந்தமலர்ப் புதர்கள், சிரிபில்வம் (வாகைப்பூ), இலுப்பை, நீர்வஞ்சி, மகிழம், சம்பகம், திலகம், நன்றாக மலர்ந்த புஷ்பங்களைக் கொண்ட நாகமரங்கள், நன்கு மலர்ந்த கடம்பு, மாவலிங்கை, பேரீச்சை, பத்மபர்ணம், பூத்துக்குலுங்கும் நீல அசோகம் முதலான மரங்கள் (இந்த ஏரிக்கரையில்) மிக அழகாக விளங்குகின்றன. (76–79)

மலைச்சரிவுகளில், சிங்கத்தின் பிடரியைப் போல் மலர் உடைய லோத்ரம், அழிஞ்சில், மருதாணி, பூர்ணகம் (என்ற சால்மலி வகை மரம்), வேம்பு, மாமரம், பாதிரி, நன்றாக மலர்ந்துள்ள கோவிதாரம், நாரத்தை, மருது முதலியவைகளும் மலைச்சரிவுகளில் காணப்படுகின்றன. தாழை, உத்தாலகம், வாகை, சிம்சுபா, தவம், இலவம், புரசு, சிவந்த

மருதாணி, தினிசம், நக்தமாலம், சந்தனம், ஸ்பந்தனம், ஹிந்தாலம், திலகம் மற்றும் ஏராளமான மலர்களைக் கொண்ட நாகமரம் (ஆகிய மரங்களும்), லட்சுமணா! நன்கு பூத்த, கொடி நுனிகளால் சுற்றிக் கொள்ளப்பட்ட மலர்களையுடைய பலவகையான மரங்களும் பம்பையின் கரைகளில் செழித்து வளர்ந்திருப்பதைப் பார். (80–84)

காமக்கிளர்ச்சியுற்ற உத்தமப் பெண்மணிகள் எப்படித் தம் கணவரைத் தழுவிக் கொள்ள துடித்துக் கொண்டிருப்பார்களோ, அதே போல (அதே துடிப்புடன்) அவர்கள் செயலைப் பின்பற்றிக் காற்றினால் அசைக்கப்பட்டுத் தாழ்ந்துவரும் மரக்கிளைகளை, அருகிலுள்ள கொடிகள் அணைத்துக் கொள்ள விரும்புவதைப் போல அசைந்தாடுகின்றன. ஒரு மரத்திலிருந்து இன்னொரு மரத்திற்கும், ஒரு மலையிலிருந்து இன்னொரு மலைக்கும், ஒரு வனப்பகுதியிலிருந்து இன்னொரு வனப்பகுதிக்கும் சென்று புகுந்து வரும் காற்று, பலவகையான நறுமணங்களை அனுபவித்த ஆனந்தத்துடன் உற்சாகமாக வீசிக் கொண்டிருக்கிறது. (85,86)

சில மரங்கள், மகரந்த மணம் கமழும் ஏராளமான மலர்களை உடையதாகவும் மற்றும் சில மரங்கள் சியாம நிறமுடைய மொட்டுக்கள் நிறைந்ததாகவும் இருக்கின்றன. வண்டு, பேராசையினால் மதம் கொண்டாற்போல, ‘இது இனிப்பாக இருக்கிறது; இது சுவையாக இருக்கிறது; இது நன்றாக மலர்ந்திருக்கிறது’ என்று எண்ணி மலர்கள்தோறும் சென்று, அவற்றினுள்ளே மறைந்து விடுவதைப் போலிருக்கிறது. இந்த வண்டு, ஒரு மலரினுள் மறைந்து முற்றிலுமாகத் தேனைக் குடித்தும் ஆசை தீராமல், உடனே வெளியே வந்து பம்பையின் கரையிலுள்ள மற்ற மரங்களிலுள்ள மலர்களை நாடிச் செல்கிறது. இந்தப் பிரதேசம் முழுவதிலும், மரங்களிலிருந்து மலர்கள் தாமாகவே விழுந்து, படுக்கை விரிப்பைப் போல சுகமாக அமைந்திருக்கிறது. (87–90)

லட்சுமணா! மலைச்சரிவுகளில் இறைந்து கிடக்கும் புற்பலவிதமான மஞ்சள்–செம்மை நிறப் பூக்களால், அந்த இடங்கள் படுக்கை விரிப்புகள் போலவே தோன்றுகின்றன. சௌமித்திரி! பனிக்காலம் முடிந்து வசந்தருது வந்தவுடன், மரங்களில் பூக்கள் தோன்ற ஆரம்பிக்கின்றன. சித்திரை மாதத்தில் மரங்கள், ஒன்றோடொன்று போட்டி போட்டுக் கொண்டாற்போல மலர்களைத் தோற்றுவிக்கின்றன. லட்சுமணா! மிக அழகான மலர்கள் நிறைந்த கிளைகளையுடைய மரங்களில் கேட்கப்படும் வண்டுகளின் ரீங்காரம், அவை ஒன்றையொன்று (‘அருகில் வா’ என்று) அழைப்பதைப் போலிருக்கிறது. (91–93)

இந்த நீர்க்காக்கை, தன் பேடையோடுகூட, (பம்பையின்) தெளிந்த நீரில் மூழ்கி (ஜலக்ரீடை செய்து), என்னுடைய காமக்கிளர்ச்சியைத் தூண்டிவிடுகிறது. (சித்திரகூடத்தில், நாம் முன்னர் பார்த்த) மந்தாகினியைப் போன்று அழகிய தோற்றமுடையதாக இது இருக்கிறது. உலகப் புகழ்பெற்ற அதன் பெருமைகள் நியாயமானவையே. கற்புக்கரசியான அவள் நமக்குக் கிடைத்து, நாம் இங்கேயே வசிப்பதென்று தீர்மானித்துவிட்டால், இந்திரன் ஆட்சிபுரியும் தேவலோகத்தையும் வேண்டேன்; அயோத்தியையும் வேண்டேன்! மனத்தைக் கொள்ளை கொள்ளும் இந்தப் புற்றரையில் அவளுடன்கூட இன்பமாகக் காலம் கழிப்பேன்; (அரசு கிடைக்கவில்லையே? – என்ற) வருத்தமும், வேறு சுக சாதனங்களில் மனமும் செல்லாது. இந்தக் காட்டில், பலவிதமான மலர்களால் கண்கவரும்படியாக மூடப்பட்டாற்போலிருக்கும் இந்த மரங்கள், என் மனத்துக்கினியாள் அருகில் இல்லாததால், என் மனத்தைக் கிறங்கச் செய்கின்றன. (94–98)

லட்சுமணா! குளிர்ந்த நீரைக் கொண்ட இந்த ஏரியில் தாமரை மலர்கள் நிறைந்துள்ளன; சக்ரவாகப் பறவைகள் மேலே பறந்து கொண்டிருக்கின்றன; நீர்க்காக்கைகள் நிறைந்து காணப்படுகின்றன. இந்த அற்புதக் காட்சியைப் பார்த்து இன்புறுவாய்! வாத்து, கிரௌஞ்சம் முதலிய பறவைகள் நீரில் நீந்திக் கொண்டிருக்கின்றன; பன்றிகளும் மான்களும் நீர் குடிப்பதற்காக அடிக்கடி வந்து போய்க் கொண்டிருக்கின்றன. பறவைகள் இனிமையாகக் கூவிக் கொண்டு இருக்கின்றன. இவைகளால் பம்பை மேலும் அதிகமான அழகுடன் பிரகாசிக்கிறது. (99,100)

(ஆணும்–பெண்ணுமாக) ஆனந்தத்தில் மூழ்கியுள்ள பல்வகைப் பறவைகள், என்னுடைய மதனவேட்கையைக் கிளர்ந்தெழச் செய்வது போலிருக்கின்றன. தாமரைக்கண்ணாள்; பூர்ணசந்திரன் போன்ற இனிய முகம்; யௌவனத்தின் நடுவில் இருப்பவள்; எனக்குப் பிரியமானவள் – அந்த சீதையை (இந்த இணைப்பறவைகள்) எனக்கு நினைவுபடுத்துகின்றன. அற்புதமான மலைச்சாரல்களில் பெண்மான்களோடு ஆண்மான்கள் கூடிக் குலாவுகின்றன. ஆனால், மான்குட்டியின் விழிகளை உடைய சீதையைப் பிரிந்து (தனியே நின்று) தவிக்கும் என்னையும் பார்! (101,102)

காமவேட்கையைத் தீர்த்துக் கொண்ட பறவைக் கூட்டங்கள், மலைச்சிகரங்களில் இங்குமங்கும் பறந்து திரிந்து கொண்டிருப்பதைப் பார்க்கும்போது, என் மனம் நிச்சயமாக ஏங்கித் தவிக்கிறது. நான், என் மனத்திற்கினியாளைக் கண்டுவிட்டால்தான் எனக்குப் பூரிப்பான வாழ்வு ஏற்படும்; லட்சுமணா! தாமரைகளின் மணத்தைச் சுமந்து வருவதும், சௌக்கியமானதும், கவலையைப் போக்குவதுமான பம்பையின் நறுங்காற்றை, என்னுடன்கூட நல்லிடையாளான அவளும் இருந்து அனுபவித்தால்தான் நான் உயிர் வாழ முடியும்! லட்சுமணா! பம்பையின் அருகிலுள்ள நந்தவனங்களிலிருந்து வரும் மந்தமாருதத்தை நற்பேறு பெற்றவர்களே அனுபவிக்கிறார்கள்! (103–106)

நடு யௌவனத்தில் உள்ளவள்; தாமரையின் தளம் போன்ற கண்களை உடையவள்; எனக்கு மிகவும் பிரியமானவள்; நான் அவளுடன் இல்லாததால் தனித்திருப்பவள்; வேறொருவர் கண்காணிப்பில் இருப்பவள்; ஜனகரின் திருமகளான அவள் (இத்தகைய சூழ்நிலையில்) எவ்வாறு உயிரை வைத்துக் கொண்டிருப்பாள்! மக்களவையில், சீதையின் நலன் பற்றி ஜனகர் விசாரிக்கும்போது சத்தியம் பேசுகிறவரும் அறம் அறிந்தவரும் மன்னருமாகிய அவருக்கு, நான் என்ன பதில் சொல்வேன்? தந்தையால் காட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்ட துரதிருஷ்டசாலியான என்னை, நல்லறத்தைக் கடைப்பிடிக்கின்றவளாய் தொடர்ந்து வந்தாளே! அந்த அன்புக்குரிய சீதை இப்போது எங்கே, எப்படி இருக்கிறாளோ? (107–109)

லட்சுமணா! அரசாட்சியை இழந்தேன்; (சரி, அரசாட்சி இல்லாவிட்டாலும் நாட்டில் ஒரு மூலையில் சௌக்கியமாக வாழலாமே? என்றால், அதற்கும் வழியில்லாமல்) நம்பிக்கையை இழந்தேன். நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டு, (பரிதாபத்திற்குரியவனாக) உள்ளங்கலங்கி நின்ற நிலையிலும் என்னைப் பின்பற்றி வந்தவள் இல்லாமல், நான் எவ்வாறு உயிரோடிருப்பேன்? கண்கவர் இமைகளை கொண்ட கண்களையுடைய, நற்பார்வையுடைய, (கண் மையினால் அலங்கரிக்கப்பட்டு) நறுமணமுடைய, எவ்விதக் குறையுமில்லாத (சீதையின்) திருமுக மண்டலத்தைக் காணாததால் என் மனம் துடித்துக் கொண்டிருக்கிறது. (110,111)

லட்சுமணா! சீதை பேசும்போது இடையிடையே புன்முறுவல் செய்வாள்; இயல்பான நகைச்சுவை கலந்து பேசுவாள்; நன்மை பயப்பதாக, செவிக்கு இனிமையாக, சமயோசிதமாக உயர்ந்த தரத்தில் பேசுவாள். அப்படிப்பட்ட ஜானகியின் உரையாடலை, இனி எப்போது கேட்கப் போகிறேனோ? காட்டில் எத்தனையோ கஷ்டங்கள்! அத்துடன் காமவசப்பட்டுத் தவிக்கும் என்னைப் பார்த்து, இளமங்கையாகிய அவள், தன் துக்கங்களெல்லாம் போய்விட்டாற்போல, மிக்க மகிழ்ச்சியுடன் இருப்பவளைப் போல, கற்புக்கரசியாகிய அவள், எனக்கு உற்சாகமும் நம்பிக்கையும் தோன்றும்வண்ணம் பேசுவாள். (112,113)

மன்னர் மைந்தனே! அயோத்திக்குச் சென்றதும், கௌசல்யாதேவி, 'என் மருமகள் சீதை எங்கே? எப்படி இருக்கிறாள்?' என்று மிக்கப் பரிவுடன் கேட்டால், நான் என்ன பதில் சொல்வேன்? லட்சுமணா! நீ (அயோத்திக்குத் திரும்பிச்) செல்வாயாக. சகோதர பாசமுடைய பரதனைப் பார். (பார்த்துப் பேசு.) ஜனககுமாரியான அவளில்லாமல் நான் உயிருடன் வாழ மாட்டேன்.'' இவ்வாறு, மனஉறுதி படைத்த இராமன், தனக்குத் துணையாக வேறு எவரும்

இல்லாதவர்போல அரற்றுவதைக் கேட்ட இளவல் இலக்குவன், அந்தச் சமயத்திற்கேற்ற நம்பிக்கையூட்டுகிறச் சொற்களைக் கூறினான்— (114–116)

''புருஷோத்தமரான இராமபிரானே! இறைவன் அருள்புரிவாராக! மனத்தைத் திடப்படுத்திக் கொள்ளுங்கள்; துயரமடையாதீர்கள். மனோதைரியமுடைய தங்களைப் போன்றவர்களின் உறுதி இவ்வாறு குன்றிப் போவதில்லை. நமக்கு மிகவும் பிரியமானவர்களைப் பிரிந்தால் துக்கம் ஏற்படவே செய்யும் – என்ற நிதர்சன உண்மையை நினைவிற்கொண்டு, (சீதாப்பிராட்டியின் பிரிவினால் ஏற்பட்டுள்ள) துக்கத்தை விட்டொழியுங்கள். விளக்குத் திரி நீரில் நனைந்து போயிருந்தாலும், அதிகமான எண்ணெயுடன் சேர்க்கப்பட்டால் தீப்பற்றிக் கொள்கிறது. (117,118)

இராகவனே! இராவணன், (சீதையை எடுத்துக் கொண்டு) பாதாளத்திற்கோ அல்லது அதற்கும் அப்பால்தான் சென்றிருக்கட்டுமே? அவன், இனி எப்படியும் உயிருடன் இருக்கப் போவதில்லை. முதலில், அந்தப் பாவி அரக்கன் இருக்குமிடத்தைக் கண்டுபிடிப்போம். (நம்மைப் பார்த்தவுடனேயே) அவன் சீதையை விட்டுவிட்டு ஓடிப் போய்விடுவான் அல்லது (அகங்காரத்துடன் சண்டைக்கு வந்தால்) உயிரை விட்டுவிடப் போகிறான்! (119,120)

இராவணன், சீதையுடன் திதியிடம் அடைக்கலம் கோரி ஒளிந்து கொண்டாலும், (நான் நேரில் சென்று அறிவுறுத்தியும்) மைதிலிதேவியைக் கொடுக்காவிட்டால், அவனை அவ்விடத்திலேயே கொன்றுவிடுவேன். (கர்பம் என்று சுலோகத்தில் உள்ள சொல், ரகசியமான, பாதுகாப்பான இடத்தைக் குறிக்கிறது.) நற்குடிப்பிறப்பாளரே! தங்களுடைய இயல்பான சுறுசுறுப்பையும் புத்துணர்ச்சியையும் உண்டாக்கிக் கொள்ளுங்கள்; அவநம்பிக்கையைக் கைவிடுங்கள். பொருளை இழந்து முயற்சியில் தோற்றுப்போனவர், முயற்சியைக் கைவிட்டு விட்டால் பொருள் திரும்பக் கிடைப்பதில்லை. (121,122)

அண்ணா! விடாமுயற்சிதான் மனிதனுக்குப் பலம் தருவது; விடாமுயற்சிக்கு மேலான ஒரு சக்தி இல்லவேயில்லை. விடாமுயற்சியுடைய ஒருவருக்கு உலகத்தில் கிடைக்காத பொருள் ஏதுமில்லை. விடாமுயற்சியுடைய மக்கள், தம் செயல்களில் தளர்வடைவதில்லை. விடாமுயற்சியையே துணையாகக் கொண்டு, சீதாப்பிராட்டியாரைத் திரும்பப் பெறுவோம். காமவேட்கையை விட்டுவிடுங்கள்; சோகத்தைப் பின்னுக்குத் தள்ளுங்கள். தாங்கள் சீலம் மிகுந்த பேறறிவாளர்; தூய உள்ளம் உடையவர். இந்த நேரத்தில், இந்த உண்மையை, தாங்கள் ஏன் உணராமலிருக்கிறீர்கள்?'' (123–125)

இவ்வாறு இலக்குவனால் கூறப்பட்டதும், சோகத்தில் மூழ்கி உணர்விழந்திருந்த இராமன், துயரத்தையும் மனமயக்கத்தையும் விட்டுவிட்டு தைரியத்தை அடைந்தார். நினைத்துப் பார்க்க முடியாத பலபராக்கிரமத்தையுடைய இராமன், மனத்தை ஒருநிலைப்படுத்தி, அழகாக அசைந்தாடுகிற மரங்களையுடைய, கண்கவர் வனப்புடைய பம்பையைக் கடந்து சென்றார். (இலக்குவனால் கூறப்பட்டவைகளைப் பற்றி மனத்திற்குள் ஆலோசனை செய்து,) உடனே துக்கத்தை மறந்தவராக, (நெஞ்சில் புத்துணர்ச்சி பெற்று) காட்டிலுள்ள மலையருவிகளையும் குகைகளையும் (களிப்புடன்) பார்த்தவாறே, (சீதையைப் பற்றிக்) கொந்தளிக்கும் மனத்தை உடையவராக லட்சுமணனோடுகூட, மேலே நடக்கத் தொடங்கினார். (126–128)

மதயானை போல் செருக்கான நடையுடைய பெருமனம் கொண்ட லட்சுமணன், மனத்தளர்ச்சி இல்லாமல் நடந்து சென்று கொண்டிருந்த இராகவனின் விருப்பப்படி நடந்துகொண்டு, அறத்தின் ஆற்றலாலும் உடலின் பலத்தாலும், அவரைப் பாதுகாத்துச் சென்றான். வானரர்களுக்குத் தலைவனும் மகாபலசாலியுமான சுக்ரீவன், (தற்செயலாக) ரிஷ்யமூக மலையின் அடிவாரத்தில் சுற்றித் திரிந்துகொண்டிருந்தபோது, அற்புதத் தோற்றம் கொண்ட அவ்விருவரையும் பார்த்து மிகவும் அச்சம் கொண்டான். எந்தக் காரியமும் செய்யாமல் அப்படியே ஸ்தம்பித்து நின்றான்! (129,130)

யானை போல் அசைந்தாடிவரும் மகாபலம் கொண்ட வானரன், வெகுகாலமாக மனித நடமாட்டமேயில்லாத அங்கு, நடந்து வந்து கொண்டிருந்த இருவரையும் அப்போது பார்த்து, மிகவும் கவலை கொண்டான். பேரச்சத்தில் மூழ்கியவனாகத் துயரத்தில் ஆழ்ந்தான். (மதங்க முனிவரின் குடில் அமைந்திருந்த மலைப்பகுதிக்குள், அவருடைய சாபம் காரணமாக, வாலி நுழைய முடியாது. ஏன், கெட்ட நோக்கத்துடன் யாருமே உட்புக முடியாது. அவ்வளவு பவித்திரமான வளாகம், அது!) பராக்கிரமசாலிகளான இராம–லட்சுமணர்களைக் கண்ட வானரர்கள் மிகவும் பயந்து, தாங்கள் விரைவில் சென்றடையக் கூடியதும், புண்ணியப் பலனை அளிக்கக் கூடியதும், எப்போதும் அடைக்கலம் புகத் தக்கதுமான அந்த (மதங்கரின்) ஆசிரமத்தை அடைந்து நிம்மதி அடைந்தார்கள். (131,132)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
முதலாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இரண்டு

சுக்ரீவனின் ஆலோசனை

உத்தமமான ஆயுதங்களைத் தரித்துக் கொண்டு வீரத் தோற்றத்துடன் விளங்கிய, பராக்கிரமசாலிகளும் சகோதரர்களுமான இராம–லட்சுமணர்களைக் கண்டு, சுக்ரீவன் சந்தேகமடைந்தான். மனக்கலவரத்துடன் எல்லாத் திசைகளையும் உற்று உற்றுப் பார்த்தான். வானரத் தலைவனான அவன், ஓரிடத்திலும் நிலைத்து நிற்காமல் தவித்தான். மாவீரர்களான அவ்விருவரையும் பார்த்த பொழுதிலிருந்தே அவனுடைய மனத்தை நிலைகொள்ளச் செய்ய முடியவில்லை. மிகவும் பயந்த அந்த வானரனின் உள்ளம் தத்தளித்தது. மிகவும் கவலை கொண்ட சுக்ரீவன், ஆட்சிநெறி அறிந்தவனானதால் தன்னோடு இருப்பவர்களுடன், தன்னுடைய பலம்–பலவீனம் பற்றி நன்றாக ஆலோசனை செய்தான். (1–4)

பின்னர், வானரத் தலைவனான சுக்ரீவன், தன் அமைச்சர்களிடம் இராம–லட்சுமணர்களைத் தொலைவிலிருந்து பார்த்தபடியே (காட்டியபடியே) மனக்கலவரத்துடன் கூறினான்— "புகுதற்கரிய இந்தக் காட்டினுள், வாலியினால் அனுப்பப்பட்ட இவர்கள், (முனிவர் போன்ற) போலியான வேஷத்துடன், (வேவு பார்ப்பதற்காக) இவ்விடத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள் என்பது திண்ணம். மாபெரும் விற்களை ஏந்திக் கொண்டுவரும் அவர்களைக் கண்டு நடுங்கிய சுக்ரீவனின் அமைச்சர்கள், (அந்த வீரர்களுக்குக் கண்ணில் படும்படியான தூரத்திலிருந்த) அந்த மலையிலிருந்து இன்னும் உயரமான (எளிதில் வரமுடியாத) வேறொரு மலைச்சிகரத்திற்கு ஓடிச் சென்றார்கள். (5–7)

தலைவர்களான வானரர்கள், மேலாண்மைத் தலைவனும் சிறந்த வானரனுமான அவனை (சுக்ரீவனைப்) பரபரப்புடன் நெருங்கி (மேற்கொண்டு ஆலோசனை நடத்துவதற்காகச்) சூழ்ந்து கொண்டார்கள். ஒரு மலையிலிருந்து மிக வேகமாக வேறொரு மலைக்குப் பாய்ந்து, மலைச்சிகரங்களைச் சிதறடித்துக் கொண்டு, பயத்துடன் அதிவேகமாகத் தாவிச் சென்ற அவர்கள், ஓர் இடத்தில் வந்து கூடினார்கள். அவ்விதம் (ஆகாயத்தில்) மிதந்து செல்லும் மகாபலசாலிகளான வானரர்கள் எல்லோரும், அவ்விடத்தில் நன்றாகப் பூத்து, அடர்ந்து வளர்ந்திருந்த மரங்களை முறித்துத் தள்ளினார்கள். (8–10)

அப்போது, எல்லாப் பக்கங்களிலிருந்தும் அந்த மாமலையின்மீது வந்து குதித்த வானர வீரர்கள், அங்கிருந்த மான்–காட்டுப்பூனை–புலி முதலியவைகளைப் பயப்படுத்திக் கொண்டு சென்றார்கள். பின்னர், மிக உயரமான மலையை, வானரத் தலைவனான சுக்ரீவனுடன்கூடச்

சென்றடைந்த வானர அமைச்சர்கள் அனைவரும், (அவன் ஆணையை எதிர்பார்த்து) கைகளைக் கூப்பிக்கொண்டு எதிரே நின்றார்கள். அப்போது பேச்சில் வல்லவரான அனுமான், வாலியினுடைய சதித் திட்டம் பற்றிச் சந்தேகப்பட்டு அச்சத்தால் மனம் தத்தளித்துக் கொண்டிருந்த சுக்ரீவனைப் பார்த்து(ப் பின்வருமாறு) கூறினார்— (இராமாயணத்தில், அனுமானைப் பற்றிய முதல் குறிப்பு, இதுதான் என்பது நினைவுகூறத்தக்கது.) (11–13)

''வாலியைப் பற்றிய பேரச்சத்தை எல்லோரும் ஒழித்துக் கட்டுங்கள். 'மலயம்' என்ற பெயருடைய, இந்தச் சிறந்த மலையில் வாலியிடமிருந்து ஆபத்து ஏதும் நேரிட முடியாது. (முனிவர் சாபம் காரணமாக, வாலி இங்கு வரமாட்டான்.) வானரோத்தமரே! நீங்கள், எவனிடமிருந்த பயத்தால் மனம் பதறி இவ்விடம் ஓடிவந்தீர்களோ, அந்த பயங்கரத் தோற்றத்தை உடையவனும் கொடிய செயல்களைச் செய்பவனுமான (காலில் விழுந்து மன்னிப்புக் கேட்ட பின்னரும் தம்பியிடம் மனம் இளகாதவனுமான) வாலியை, நான் இங்கே காணவில்லை. மதிப்பிற்குரியவரே! தீய செயல்களைச் செய்கிற எந்த மூத்த சகோதரனிடமிருந்து உங்களுக்கு ஆபத்து ஏற்படுமோ, துஷ்டனான அந்த வாலி இங்கே இல்லை. (ஆகவே,) நீங்கள் பயப்படுவதற்கான எந்தக் காரணத்தையும் நான் பார்க்கவில்லை. (14–16)

வானரரே! ஐயகோ! நீங்கள், உங்கள் குரங்குத் தன்மையையே வெளிப்படுத்தியிருக்கிறீர்கள்! சஞ்சலமான, வலிமையில்லாத மனம் உடையவராதலால், (மேலே என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும்? என்ற) ஆலோசனையில் சிந்தனையைச் செலுத்தாதிருக்கிறீர்கள். சிறந்த அறிவும் நாட்டு நடப்பும் அறிந்திருக்கும் நீங்கள், மற்றவர்களுடைய முகக்குறிப்பு, அங்க–அசைவுகள் ஆகியவற்றைக் கவனித்து, அதற்குத் தக்கபடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள். ஏனென்றால், புத்திபலத்தை (மந்திராலோசனையை) உபயோகப்படுத்தாத மன்னர், எந்தப் பிராணியின் மீதும் அதிகாரத்தைச் செலுத்த முடியாது.'' (17,18)

அனுமானுடைய நல்லுரைகளை முழுமையாகக் கேட்ட பின்னர், அவருடைய சொற்களைக் காட்டிலும் மேலான சொற்களை, அனுமானைப் பார்த்து சுக்ரீவன் கூறினான்— ''நீண்ட கைகள்; அகன்ற கண்கள்; அம்பு–வில்–கத்தி முதலியவை தரித்தவர்கள்; தேவகுமாரர்கள் போல் விளங்குபவர்கள் – இவர்களைப் பார்த்து யாருக்குத்தான் பயம் ஏற்படாது? புருஷோத்தமர்களான இவ்விருவரும் வாலியினால் அனுப்பப்பட்டவர்கள் என்று நான் சந்தேகிக்கிறேன். ஏனென்றால், மன்னர்களுக்குப் பலவிதமான நண்பர்கள் இருப்பார்கள். (வாலி, தானே நேரில் இந்த மலைக்கு வர முடியாததால், மகாவீரர்களான இவர்களை அனுப்பியிருக்கக் கூடுமல்லவா!) ஆகவே, (எதையும் ஆராயாமல்) நாம் இவர்களை நம்பிவிடக்கூடாது. (19–21)

எதிரிகள் போலி வேஷம் தரித்து வருவார்கள். அவர்களை அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் சிறிதுசிறிதாக நம்பிக்கையை வளர்த்துக் கொண்டு, பின்னர், சமயம் வாய்க்கும்போது, அவர்களை நம்பியவர்களையே எதிர்த்து நிற்பார்கள். வாலி, ரகசியமாகக் காரியங்களைச் செய்வதில் வல்லவன். மன்னர்கள் பலவிதத் தந்திரங்களை அறிந்தவர்கள். அதன் மூலம் எதிரிகளை அழித்துவிடுவார்கள். (ஆகவே, இவ்விருவரைப் பற்றியும்) ஒற்றர்கள் மூலமாக, நாம் அறிந்து கொள்ள வேண்டும். வானரனே! நீயே மாறுவேடம்பூண்டு சென்று, அவர்களுடைய அங்க–அசைவுகளாலும் பேசும் முறைகளாலும் உண்மையை அறிந்து வா. (22–24)

அவர்கள் நல்ல எண்ணம் உடையவர்கள் தானா? என்பதை முதலில் அறிந்துகொள். அவ்விதம் நம்பிக்கைக்கு உரியவர்களாக இருந்தால், என்மேல் நல்லெண்ணம் உண்டாகும்படி பல விஷயங்களைக் கூறு. வானர வீரனே! என்னையே நோக்கி நின்று அவர்களைக் கேள். கோரமான இந்தக் காட்டுக்குள் வில்லேந்தியவர்களாக அவர்கள் வந்திருப்பதன் நோக்கம் என்ன? என்று கேள். வானரனே! அவர்கள் களங்கமில்லாத உள்ளம் உடையவர்களா? தீய

எண்ணம் கொண்டவர்களா? அல்லது நல்லவர்கள் தானா? – என்பதை அவர்கள் பேசும் முறையிலிருந்து அறிந்து கொள்.'' (27)

இவ்வாறு, வானர மன்னன் சுக்ரீவன் கூறியவுடன், இராம–லட்சுமணர்கள் இருக்கும் இடத்திற்குப் போகத் தீர்மானித்தார், வாயுகுமாரர் (அனுமான்). (எதிரிகளால்) வெல்ல முடியாதவனும், (ஆனால், இப்போது) மிகவும் பயத்தில் மூழ்கிப் போயிருப்பவனுமான அந்த வானரனின் (சுக்ரீவனின்) சொற்களை ஏற்று, ''அவ்விதமே செய்கிறேன்'' என்று சொல்லிவிட்டு, மாவீரரான அனுமான், அப்போது ஸ்ரீராமனும், மகாபலம் பொருந்திய இலக்குவனும் இருந்த இடத்திற்குச் செல்ல நிச்சயித்தார். (28,29)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
இரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : மூன்று

அனுமான், இராம–லட்சுமணர்களைச் சந்தித்தல்

வானரத் தலைவன் சுக்ரீவனுடைய சொற்களின் உட்கருத்தைப் புரிந்துகொண்ட அனுமான், ரிஷ்யமூக மலையிலிருந்து இராம–லட்சுமணர்கள் இருந்த இடத்திற்குத் தாவிச் சென்றார். (1)

வாயுகுமாரரான அனுமான், தன் வானர ரூபத்தைத் துறந்துவிட்டு, வஞ்சக எண்ணத்துடன் ஒரு (மனுஷ்ய) பிரும்மசாரியின் உருவத்தை ஏற்றுக் கொண்டார். (மூலச் சுலோகத்திலுள்ள பிக்ஷுரூபம் என்ற பதத்திற்கு துறவி என்றும், பிரும்மசாரி என்றும் வெவ்வேறு விதமாகப் பொருள் கொண்டு, தத்தம் கொள்கையை நிலைநாட்ட நீண்ட வாதங்களைச் செய்திருக்கிறார்கள், முந்தைய உரையாசிரியர்கள். அனுமானுக்குத் தன் சுய உருவத்தை மாற்றிக் கொள்ளும் வல்லமை இருந்தது என்பதை ஏற்றுக்கொண்டால் போதும். தண்டம், கமண்டலம் இல்லாததால் பிரும்மசாரி வடிவம் என்றே வைத்துக் கொள்வது சாலச் சிறந்தது.) (2)

பின்னர், மிகுந்த வணக்கத்துடன் அவர்களை நெருங்கி, நமஸ்காரம் செய்து, நெஞ்சத்தைக் கவரும் வகையில் இனிமையாகப் பேசத் தொடங்கினார். (அவ்விருவரின் தெய்விக அழகில் மனத்தைப் பறிகொடுத்த) அனுமான், அவ்விரு வீரர்களையும் உள்ளமுவந்து பாராட்டினார். வாயுகுமாரராகிய அனுமான், வீண்போகாத பராக்கிரமம் உடையவர்களும், ராஜரிஷி போன்று இருப்பவர்களும், தவசிகள் போன்ற தோற்றத்தில் இருப்பவர்களும், கடுமையான நியமங்களைக் கடைப்பிடிப்பவர்களுமாகிய அவ்விருவரையும் அனுஷ்டானத்தில் உள்ளபடி வரவேற்று, மென்மையான குரலில் மனப்பூர்வமாகப் பேசினார்— (3–5)

''அபூர்வமான உடல்வண்ணம் பெற்றுள்ள தாங்கள் இருவரும் (உள்ளே புகமுடியாத, மனிதர்களுக்கு வேலையில்லாத) இந்த இடத்திற்கு எப்படி வந்து சேர்ந்தீர்கள்? மான் கூட்டங்களையும் மற்றுமுள்ள காட்டுப் பிராணிகளையும் அஞ்சி ஓடச் செய்கிறீர்கள். பம்பை ஏரியின் கரையிலுள்ள மரங்களை உற்றுப் பார்க்கிறீர்கள். துடிப்புடன் இருக்கும் நீங்கள் தெளிவான தண்ணீரோடு விளங்கும் இந்த நதியை மேலும் அழகுபடுத்துகிறீர்கள். (பம்பையை நதி என்று குறிப்பிட்டது, இராம–லட்சுமணர்களின் தேஜஸால் மயங்கிய நிலையில் வழுக்கி விழுந்த சொல். முன் ஆலோசனையுடன் சொல்லப்பட்டது அல்ல. நதியைப் போல் நீண்டு விளங்கியதால், அவ்வாறு கூறினார் என்றும் கொள்ளலாம்.) (6,7)

மிகவும் மனஉறுதி படைத்தவர்கள் போலக் காணப்படுகிறீர்கள்; பொன்னிற மேனியர்; மரவுரி தரித்துக் கொண்டிருக்கிறீர்கள்; நீண்ட பெருமூச்சுவிட்டுக் கொண்டிருக்கிறீர்கள்; வலுவான தோள்களை உடையவர்கள்; இந்தக் காட்டுப் பிராணிகளைத் துன்பப்படுத்துகிறீர்கள்.

(உங்கள் மகாவீரத் தோற்றத்தைக் கண்டு எல்லாப் பிராணிகளும் அஞ்சுகின்றன.) சிங்கத்தைப் போன்ற கம்பீரமான பார்வை; சிங்கத்தைக் காட்டிலும் மிக அதிக பராக்கிரமம்; மனோவீரம்; இந்திரனுடையதைப் போன்றதொரு வில்லை ஏந்திக் கொண்டிருக்கிறீர்கள்; (இதிலிருந்தே) நீங்கள் எதிரிகளை அடக்கவல்லவர்கள் (என்பதைத் தெரிந்து கொள்ள முடிகிறது). காந்தியும் உடலழகும் பெற்றவர்கள்; உயர்ந்த காளை நிகர் பேராற்றல் உடையவர்கள்; யானையின் துதிக்கை போன்ற புஜங்களை உடையவர்கள்; ஒளிவீசுபவர்கள்; புருஷோத்தமர்கள். (8–10)

மலைகளுள் சிறந்த இந்த மலை, தங்களுடைய ஒளியால் பிரகாசிக்கிறது; அரசாட்சி செய்யத்தக்கவர்கள்; தேவர்களைப் போல் விளங்குபவர்கள்! – இப்படிப்பட்ட நீங்கள் இருவரும், அணுக முடியாத இந்தப் பிரதேசத்திற்கு ஏன் வந்தீர்கள்? தாமரையிதழ் போன்ற கண்களை உடையவர்கள்; வீரத்தை வெளிப்படுத்தும் உடலமைப்புக் கொண்டவர்கள்; சடாமகுடம் தரித்தவர்கள்; இருவரும் ஒரே தோற்றமுடையவர்கள்; (கோமளமான சரீரம் படைத்த நீங்கள், கரடுமுரடான பாதையில் பல தீயசக்திகளையும் எதிர்கொண்டு வெற்றியுடன் காலால் நடந்து வந்திருக்கும்) மனவலிமை பெற்ற வீரர்கள்; (தற்செயலாக,) தேவலோகத்திலிருந்து இந்தப் பிரதேசத்திற்கு வந்து விட்டவர்கள் போல் தோன்றச் செய்கிறவர்கள்; (11,12)

எதிர்பாராதவிதமாக மண்ணுலகை அடைந்துவிட்ட சூரிய–சந்திரர்கள் போலிருக்கிறீர்கள்; அகன்ற மார்பு; மனிதர்களாக இருந்தாலும், உங்கள் தோற்றமும் வீரமும் தேவர்களுடையதைப் போன்றதாக இருக்கிறது. சிங்கத்தினுடையதைப் போன்ற தோள்கள்; உடலில் உற்சாகம் வழிகிறது; மதங்கொண்ட ரிஷபங்களைப் போன்றவர்கள்; நீண்டு, உருண்டு, திரண்டு, பரிகம் (இரும்புத்தடி) போல் விளங்கும் புஜங்கள்; எல்லா அணிகலன்களையும் அணியத்தக்க உடலுறுப்புக்களைக் கொண்ட நீங்கள், ஏன் ஓர் அணிகலனைக்கூட அணியவில்லை? (பரிபூரண அழகையும் மக்கள் கண்டு களிக்கட்டுமே! என்ற தயாள குணத்திலா?) சமுத்திரங்கள், காடுகள் மற்றும் விந்தியம்–மேரு மலைகள் சூழப்பெற்ற இந்த உலகம் முழுவதையும் காப்பாற்றுவதற்கு நீங்கள் இருவர் மட்டுமே போதும் என்று நான் நினைக்கிறேன். (13–15)

உங்களுடைய விற்கள் இரண்டும் அற்புதமாக இருக்கின்றன; பளிச்சென்று ஒளிவீசிக் கொண்டு, நறுமணப் பூச்சுகள் பூசப்பட்டும் விளங்குகின்றன. தங்கத்தால் அலங்கரிக்கப்பட்ட இந்திரனுடைய இரண்டு வஜ்ராயுதங்கள் போல் இருக்கின்றன. (விற்களை, வஜ்ராயுதம் என்று குறிப்பிட்டது, அவைகளின் அபார ஆற்றலை உணர்த்துவதற்காக.) பெருமூச்சுவிடும் (ஆத்திரத்துடன் தாக்குவதற்கு ஆயத்தமாக இருக்கும்) சர்ப்பங்களைப் போல, பயங்கரமானவைகளும் உயிரைப் பறிக்கின்றவைகளும் கூரானவைகளுமான பாணங்கள் நிரம்பிய, அழகிய அம்புறாத்தூணிகளை அணிந்திருக்கிறீர்கள். மிக நீண்டவைகளும், அகலமானவைகளும், சொக்கத்தங்கத்தாலான வேலைப்பாடு உடையவைகளுமான கத்திகள் இரண்டும், சட்டையை உரித்துவிட்ட பாம்புகள் போல் பளீரிடுகின்றன. (16–18)

இவ்வளவு நேரமாக (உங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள) கேள்வி கேட்டுப் பேசிக் கொண்டிருக்கும் எனக்கு ஏன் பதில் சொல்லாதிருக்கிறீர்கள்? அறநெறியாளரான வானரத் தலைவர் சுக்ரீவன் என்ற ஒருவர் இருக்கிறார். அவர் மாவீரர். தன்னுடைய சகோதரனால் (நாட்டிலிருந்து) துரத்தப்பட்டு, மிகவும் துயரத்துடன் உலகம் முழுவதும் சுற்றிச் சுற்றி அலைகிறார். (அவருடைய சகோதரர், பாமரர்களான வானரர்களுக்கு வேண்டுமானால் மன்னராக இருக்கலாம்!) வானர முக்கியஸ்தர்களுக்கு (இவர்தான்) மன்னர்; மகாத்மாவான சுக்ரீவன் என்னை அனுப்பியிருக்கிறார். நான் வானரன்; (இப்போது நீங்கள் காண்பது, நான் பொய்யாகப் புனைந்து கொண்ட வேஷம்!) அனுமான் என்று பெயர். (19–21)

தருமாத்மாவான சுக்ரீவன், உங்கள் இருவருடனும் நட்புக் கொள்ள விரும்புகிறார். நான் அவருடைய அமைச்சன் (என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்). வாயுதேவனுக்கு (ஒரு வானரப்

பெண்ணிடம்) பிறந்த சொந்தப் பிள்ளை. சுக்ரீவனுடைய விருப்பப்படி, பிரும்மசாரியாக (மன்னரின் கட்டளையைச் சிரமேற்கொண்டு நடக்கும் கடமை தவறாத அமைச்சன்) மாறுவேடம் தாங்கி, ரிஷ்யமூகத்திலிருந்து இங்கு வந்திருக்கிறேன். நான், என் விருப்பப்படி உருவம் எடுக்கக் கூடியவன்; எங்கும் செல்லக் கூடியவன்.'' வீரர்களும், சொற்கருத்தை அறியவல்லவர்களுமான அவ்விருவரிடமும் இவ்வாறு கூறிவிட்டு, சொல்லழகரான அனுமான் இவ்வளவில் பேச்சை நிறுத்திக் கொண்டார். (22–24)

ஆண்மைத் திரு பொருந்தியவரும், மலர்ந்த முகமுடையவருமான இராமன், அனுமானுடைய சொற்களைக் கேட்டு, பக்கத்தில் நின்று கொண்டிருந்த சகோதரன் லட்சுமணனைப் பார்த்து (இவ்வாறு) கூறினார்— ''இவன், மகாபலம் பொருந்திய வானர மன்னரான சுக்ரீவனுடைய அமைச்சன். அவனுக்கு (சுக்ரீவனுக்கு) க்ஷேமம் உண்டாக வேண்டும் என்ற ஆதங்கத்துடன் என்னிடம் வந்திருக்கிறான். (எந்த சுக்ரீவனைக் காண வேண்டுமென்று நான் ஆவலாக இருக்கிறேனோ, அவனிடமிருந்தே என்னை நாடி வந்திருக்கிறான் – என்றும் பொருள் கொள்ளலாம்.) எதிரிகளை மாய்ப்பவனே! சுமித்திரைச் செல்வனே! சொற்களின் நுட்பத்தை அறிந்தவனும் வானரனும் சுக்ரீவனுடைய அமைச்சனுமான இவனுக்கு, இனிய நட்புத் தோன்றும் சொற்களால் பதில் கூறுவாயாக. (25–27)

ரிக் வேதம் படிக்காத, யஜுர் வேதம் பயிற்சி பெறாத, சாம வேதம் பயிலாத ஒருவனால், இவ்வளவு உயர்தரமான சொற்களைக் கொண்டு பேச முடியாது. இவன், இலக்கண நூல்களை பல தடவைகள் படித்து அசை போட்டிருக்கிறான் என்பதில் சந்தேகமில்லை. பலவிதமான விஷயங்களைப் பேசியபோதிலும், தரம் தாழ்ந்த சொல் ஒன்றுகூட வெளிப்படவில்லையே! பேசும்போது, அவனுடைய முகம், கண்கள், நெற்றி, புருவங்கள், உடலின் பிற அவயவங்களிலும் குறை சொல்லும்படியான அசைவுகள் இல்லை. (28–30)

இவனுடைய பேச்சு, சுருக்கமாக, (இருபொருள் கொள்ளும்படியான சந்தேக நிலையில் இல்லாமல்) தெளிவாக, (யோசனை செய்து கொண்டே தடுமாறியவண்ணம் இல்லாமல்) திக்கித் திணறாமல், சொற்களைக் கடித்துக் குதறாமல், மார்புப் பகுதியிலிருந்து எழும்பியதாய் (உளமாரச் சொன்னதாக), தொண்டையிலிருந்து சீராக, நமக்கு மட்டும் கேட்கும்படியான மத்யம ஸ்வரத்தில் அமைந்திருக்கிறது. பேச்சுக்கலையை உரிய முறையில் கற்று, படபடப்போ தடங்கலோ இல்லாமல், (கேட்போரின்) மனத்தைக் கொள்ளை கொள்ளும் மங்களமான சொற்களைக் கூறுகிறான். உடலின் [இருதயம், கழுத்து, தலை (வாய்) என்ற] மூன்று இடங்களிலிருந்து எழுகின்ற இனிய சொற்களைக் கேட்டு, எவனுடைய மனம்தான் ஆனந்தமடையாமலிருக்கும்? எதிரியை வெட்டுவதற்காகக் கத்தியை உருவிக் கொண்டு வருபவன்கூட (இத்தகைய பேச்சைக் கேட்டால்) மனம் குளிர்ந்து போய் விடுவானே! (31–33)

மாசற்றவனே! இவ்விதமான உயர்ந்த தன்மைகள் கொண்ட தூதன், எந்த மன்னனுக்கு இல்லையோ, அவனுடைய செயல் திட்டங்கள் எவ்வாறு வெற்றி பெறமுடியும்? எந்த மன்னனுக்கு, இப்படிப்பட்ட உயர் குணங்கள் நிரம்பிய பணியாளர்கள் இருக்கிறார்களோ, அவனுடைய எல்லாத் திட்டங்களும், தூதனுடைய சமத்காரமான பேச்சினாலேயே நிறைவேறி விடுகின்றன.'' இவ்வாறு, இராமனால் கூறப்பட்டவனும் சொற்சிலம்பனுமான இலக்குவன், சுக்ரீவனின் அமைச்சரும், வாயுவின் புதல்வரும் சொல்நுட்பமறிந்தவருமான வானரரைத் பார்த்து(ப் பின்வருமாறு) கூறினான்— (34–36)

''பெரும் புலமை கொண்டவரே! பராக்கிரமசாலியான சுக்ரீவனின் நற்குணங்கள் பற்றி நாங்கள் ஏற்கனவே அறிந்திருக்கிறோம். வானரத் தலைவரான சுக்ரீவனைத் தேடிக் கொண்டுதான் நாங்கள் இங்கே வந்திருக்கிறோம். உத்தமரே! அனுமானே! சுக்ரீவனுடைய கருத்தை இங்கே வந்து நீங்கள் சொல்லியபடியே, அவருடன் நட்புப்பூண நாங்களும் உடன்படுகிறோம்.'' அவனுடைய

(லட்சுமணனுடைய) அன்பு ததும்பும் பதிலைக் கேட்டதும், வாயுகுமாரனான வானரர், உள்ளம் பூரித்தவராகித் தன் மனத்திற்குள், தன்னுடைய (சுக்ரீவனுடைய) காரியம் வெற்றியடையும் என்று நிச்சயித்து, அவர்களுடன் தோழமை கொள்ள நிச்சயித்தார். (37–39)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நான்கு

சுக்ரீவனைச் சந்தித்தல்

நட்புறவைக் காட்டும் அந்தச் சொற்களைக் கேட்டதும், 'இவருக்கும் சுக்ரீவனால் ஒரு காரியம் ஆகவேண்டியிருக்கிறது' என்பதைப் புரிந்து கொண்டு, அதனால் (இவர், நிச்சயமாக சுக்ரீவனோடு நட்புக் கொள்வார் என்று) மனமகிழ்ந்த அனுமான், மனத்திற்குள் சுக்ரீவனை நினைத்துக் கொண்டார். நல்ல உள்ளம் கொண்ட சுக்ரீவனுக்கு, (வானர) அரசு (திரும்பக்) கிடைக்கலாம். ஏனென்றால், இவ்விருவரும் ஏதோ ஒரு காரியத்தை உத்தேசித்து இவ்விடம் வந்திருக்கிறார்கள். இவர்களுக்கு ஆகவேண்டிய காரியத்தை, சுக்ரீவன்தான் நிறைவேற்றிக் கொடுப்பார் (என்பதும், இவருடைய பேச்சிலிருந்து புலனாகிறது). (1,2)

பின்னர், பேச்சில் வல்லவரான வானரவீரர் அனுமான், மிகவும் மனமகிழ்ந்து, இராமன் மொழிந்தவைகளுக்குப் பதிலுரைத்தார்— "பலவகையான துஷ்ட விலங்குகள் வசிப்பதும், உட்புக முடியாததும், பயங்கரமானதும், அடர்த்தியான காடுகள் மண்டிக்கிடப்பதுமான இந்த பம்பா தீரத்துக்கு, தம்பியோடுகூட எதற்காக வந்திருக்கிறீர்கள்?" அவருடைய இந்தச் சொற்களைக் கேட்டு, இராமனுடைய (பார்வையால்) அனுமதியைப் பெற்று, தசரதகுமாரரும் மாவீரருமான ஸ்ரீராமனைப் பற்றிய விவரங்களை, லட்சுமணன் சொல்லத் தொடங்கினான்— (3–5)

"தசரதர் என்ற பெயருடைய ஒரு மன்னர் இருந்தார். அவர் பேரொளி படைத்தவர்; அறநெறி வழுவாதவர். அரசனுடைய கடமைப்பிரகாரம், எப்போதும் நான்கு வருணத்தவர்களையும் நன்றாகப் பரிபாலித்து வந்தார். இவ்வுலகில், அவருக்கு விரோதி என்று எவரும் இருந்ததில்லை; அவரும் யாரையும் பகைவராகக் கருதியதில்லை. அவர், எல்லாப் பிராணிகளிடமும், இரண்டாவது பிரும்மாவைப் போல சமமான அன்பு கொண்டிருந்தார். அவர், விதிக்கப்பட்ட அளவு தட்சிணைகள் கொடுத்து, அக்னிஷ்டோமம் முதலிய வேள்விகளைச் செய்து முடித்தவர். இவர், அவருடைய மூத்த புதல்வர். மக்கள், இவரை 'இராமன்' என்று அழைக்கிறார்கள். (6–8)

எல்லாப் பிராணிகளுக்கும் அடைக்கலம் கொடுப்பவர்; தந்தையின் கட்டளைகளைச் சிரமேற்கொண்டு நடத்துபவர்; மாபெரும் வீரர். தசரதருடைய புதல்வர்களில், எல்லோரைக் காட்டிலும் நற்குணங்கள் நிறையப் பெற்றவர். நாடாளும் அரசருக்குரிய எல்லா லட்சணங்களும் உடையவர். ராஜ்யலட்சுமியை அடைய வேண்டிய தருணத்தில் (ஏதோ காரணமாக) நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டு, காட்டில் வசிப்பதற்காக, என்னுடன்கூட வந்திருக்கிறார். மிக்க ஒளிபொருந்திய சூரியன், அந்திவேளையில் பிரபையோடு விளங்குவதைப் போல, புலனடக்கமுள்ளவரும் பேராற்றலுடையவருமான இவர், மனைவியான சீதாப்பிராட்டியுடன் (காட்டுக்கு) வந்தார். (9–11)

நான், இவருடைய தம்பி; லட்சுமணன் என்று பெயர். நன்றி மறவாதவரும் எல்லாம் அறிந்தவருமான இவருடைய திருக்கல்யாண குணங்களால் ஈர்க்கப்பட்டு, எப்போதும் இவருக்கு ஏவலாளனாக இருந்து கொண்டிருக்கிறேன். எல்லாப் பிராணிகளின் க்ஷேமத்திலும் அக்கறை உடையவர்; எல்லாவிதச் சுகபோகங்களையும் அனுபவிக்கத்தக்கவர்; அனைத்து மக்களாலும் மதிக்கத்தக்கவர்; அரசாட்சி என்ற பெரும்பேற்றை இழந்து, காட்டில் வாழ்ந்து கொண்டிருப்பவர்.

இவருடைய பத்தினி, யாரும் அருகிலில்லாமல் தனியாக இருந்தபோது, விருப்பப்படி உருவம் எடுக்கவல்ல ஓர் அரக்கனால் அபகரித்துச் செல்லப்பட்டார். இவருடைய மனைவியைக் கவர்ந்து சென்ற அரக்கனைப் பற்றிய வேறு எந்த விவரமும் தெரியவில்லை. (12–14)

திதியின் புத்திரனான தனு என்பவன் (திதியின் குலத்தில் தோன்றிய கபந்தன்) ஒரு சாபத்தால் அரக்கத்தன்மையை அடைந்தான். அவன், 'வானரர் தலைவன் சுக்ரீவன், சாமர்த்தியம் உடையவன்' என்று சொன்னான். 'மகாவீரனான அவன், உங்கள் மனைவியைக் கவர்ந்து சென்றவனைப் பற்றிச் சொல்வான்' என்று கூறிவிட்டு, (சாபம் நீங்கிவிட்டதால்) ஒளிமயமான சரீரத்தைப் பெற்று, வெகு எளிதாக விண்ணுலகை அடைந்தான். நீ கேட்ட கேள்விக்குரிய உண்மையான பதிலைக் கூறிவிட்டேன். நானும் ஸ்ரீராமனும் சுக்ரீவனுடைய உதவியை நாடி வந்திருக்கிறோம். (15–17)

இவர் (ஸ்ரீராமன்) முன்னர் ஏராளமான பொருள்களைத் தானம் செய்து, அழியாப் புகழை அடைந்துள்ளார். முன்பு மக்கள் அனைவரையும் (அடைக்கலம் தந்து) காக்க வல்லவராக இருந்தார். (இப்போதும் அந்த மகிமையோடுதான் இருக்கிறார். என்றாலும் தற்சமயம்) சுக்ரீவனுடைய உதவியைக் கோருகிறார். இதற்கு முன்னர், அறநெறிவழுவாத இவருடைய தந்தை, எல்லோருக்கும் புகலிடமாக இருந்தார். அவருடைய புதல்வராகிய இவர், எல்லோருக்கும் அடைக்கலம் தரக்கூடியவர். (அண்டி வந்தவர்களுக்கு அடைக்கலம் கொடுப்பது என்பது, பரம்பரையாக வந்து கொண்டிருக்கும் உத்தமகுணம்.) இவர், இப்போது சுக்ரீவனுடைய பேருதவியை வேண்டி வந்திருக்கிறார். (18,19)

தருமாத்மாவான என்னுடைய தமையனார், உயிர்ப்பிராணிகள் அனைத்துக்கும் புகலிடமாக விளங்கினார். இவரே அடைக்கலம் புகத் தக்கவராக இருந்தார். ஆனால், அவ்வளவு பெருமை வாய்ந்த அவர், இப்போது சுக்ரீவனின் உதவியைக் கேட்பதற்காக வந்திருக்கிறார். எவருடைய மனம் மகிழ்ச்சி அடைந்தால், நாட்டு மக்கள் எல்லோரும் பெருமகிழ்ச்சியை அடைவார்களோ, அந்த ஸ்ரீராமன், வானர மன்னரான சுக்ரீவனின் உதவியை எதிர்பார்த்து வந்திருக்கிறார். (20,21)

உலகில், நற்குணங்களோடு கூடிய குறுநில மன்னர்கள் அனைவரும் எந்த மன்னரால் சிறப்பாகக் கௌரவிக்கப்பட்டார்களோ, அந்த தசரத மன்னருடைய மூத்த புதல்வரும் மூன்று உலகங்களிலும் இராமன் என்ற பெயரால் வழங்கப்படுபவருமான இவர், வானரர் தலைவரான சுக்ரீவனின் உதவியை நாடி வந்திருக்கிறார். இராமன், சோகத்தால் ஆட்கொள்ளப்பட்டு, மிகுந்த வருத்தத்துடன் அடைக்கலம் கோரி வந்திருக்கிறார். (எனவே,) வானரர்களின் தலைவரான சுக்ரீவன் இவருக்கு அருள்புரிய வேண்டும்.'' கண்களில் கண்ணீரைப் பெருக்கிக் கொண்டு இவ்வாறு உருக்கமாகப் பேசிய லட்சுமணனைப் பார்த்து, பேச்சில் வல்லவரான அனுமான் பின்வருமாறு பதில் சொன்னார்— (22–25)

''(அரசகுமாரரே!) அறிவு நிறைந்த, கோபத்தை அடக்கிய, புலன்களை வென்ற தங்களைப் போன்றவர்களை வானர மன்னராகிய சுக்ரீவன், தானே தேடிச் சென்று சந்திக்க வேண்டியிருக்கும் வேளையில், அதிருஷ்டவசமாக சுக்ரீவனைப் பார்க்கும் நோக்கத்துடன், நீங்களே இங்கு வந்திருக்கிறீர்கள்! அவரும் (சுக்ரீவனும்) சகோதரனான வாலியினால் நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டு இருக்கிறார்; எதிரியாகக் கருதப்படுகிறார்; மனைவி (சகோதரனான வாலியினால்) அபகரிக்கப்பட்டிருக்கிறார்; காட்டுக்குத் துரத்திவிடப்பட்டு இருக்கிறார். இவ்வாறெல்லாம், (ஸ்ரீராமனைப் போலவே) மிகவும் துன்பத்தில் சிக்கிச் சுழன்று கொண்டிருக்கிறார். சூரிய புதல்வராகிய சுக்ரீவன், எங்கள் எல்லோருடன்கூட, சீதாப்பிராட்டியைத் தேடிக் கண்டுபிடிக்கும் விஷயத்தில், உங்கள் இருவருக்கும் தேவையான உதவிகளைச் செய்வார்.'' (26–28)

இவ்வாறு, நட்புத் தோன்றும் இனிய முறையில் பதில் கூறிவிட்டு, இராமனைப் பார்த்து, ''நன்று, நாம் இப்போது சுக்ரீவனிடம் செல்வோம்'' என்றார். இவ்வாறு பேசிய அனுமானை,

அறநெறியாளரான இலக்குவன் மனதாரப் புகழ்ந்துவிட்டு, இராமனை நோக்கிப் பின்வருமாறு கூறினான்— ''இராமா! வாயுகுமாரராகிய இந்த வானரர் மிகவும் மகிழ்ச்சியுடன் பேசுவதைப் பார்த்தால், இவருக்கும் நம்மால், ஏதோ ஓர் உதவி தேவைப்படுவதுபோல் தோன்றுகிறது. ஆகவே, (சரியான) இந்த இடத்திற்கு வந்துள்ள தாங்களும், தங்களுடைய காரியம் கைகூடினவராக ஆகிவிட்டீர்கள். மலர்ச்சியான முகப்பொலிவு; மனம் நிறைந்த மகிழ்ச்சி; தெளிவான பேச்சு – இப்படிப் பேசும் வாயுகுமாரரான இந்த வீரர் அனுமான், பொய் சொல்லமாட்டார். (பொய் பேசுபவரிடம் இத்தகைய நல்ல அறிகுறிகள் காணப்படமாட்டா.)'' (29–32)

உடனே, வாயுகுமாரரும் பேரறிவாளருமான அனுமான், இராம–லட்சுமணர்களாகிய இரு வீரர்களையும் சுக்ரீவனைச் சந்திக்கும் பொருட்டு அழைத்துச் சென்றார். வானரோத்தமரான அவர், பிரும்மசாரி வேஷத்தைத் துறந்து, வானர வடிவத்தை ஏற்று, அந்த வீரர்கள் இருவரையும் தன் முதுகில் சுமந்துகொண்டு (சுக்ரீவன் இருக்குமிடம் நோக்கிச்) சென்றார். மிகவும் புகழ் பெற்றவரும், வானரவீரரும், வாயுவின் புதல்வரும், நற்சிந்தனை உடையவரும், பராக்கிரமம் மிக்கவருமான அவர், (தன் தலைவனான சுக்ரீவனின்) விருப்பம் (அப்போதே) கைகூடிவிட்டாற்போல மனம்பூரித்து, இராம–லட்சுமணர்களோடுகூட, சிறந்த மலையான ரிஷ்யமூகத்தைச் சென்றடைந்தார். (33–35)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐந்து

சுக்ரீவனுடன் நட்பை உறுதி செய்தல்

அப்போது, அனுமான் ரிஷ்யமூகபர்வதத்திலிருந்து (அதன் வேறொரு சிகரமான) மலயமலைக்குச் சென்று, வானர மன்னரிடம் மாவீரர்களான ரகுகுலத் தோன்றல்களைப் பற்றி (இவ்வாறு) கூறினார்— ''இங்கே (உங்கள் உதவியை நாடி வந்திருக்கும்) இராமன், பேரறிவாளர்; எதற்கும் அஞ்சாத பராக்கிரமம் உடையவர்; சகோதரரான லட்சுமணனோடு வந்திருக்கும் இந்த இராமப்பிரபு, வீண்போகாத வீரத்தைக் கொண்டவர். இக்ஷ்வாகு பரம்பரையில் தசரதரின் புதல்வராகத் தோன்றியவர், ஸ்ரீராமன்; அறநெறியில் நீங்காத பற்றுடையவர்; தந்தையின் கட்டளையை ஏற்று நடப்பவர். (1–3)

எந்த (தசரத) மன்னரால், ராஜசூயம், அசுவமேதம் (முதலான யாகங்களால் அக்னி திருப்தி செய்விக்கப்பட்டாரோ, அவ்வாறே, (வேத வித்தகர்களுக்கு) ஏராளமான தட்சிணையும் பசுக்களும் தானமாக வழங்கப்பட்டனவோ, தவம்–சத்தியம் ஆகியவற்றின் அடிப்படையில் இந்தப் பூமண்டலம் பரிபாலிக்கப்பட்டதோ, அவருடைய புதல்வரான ஸ்ரீராமன், ஒரு பெண்ணின் காரணமாக (கைகேயிக்கு அளிக்கப்பட்ட வரத்தைக் காப்பாற்றும் பொருட்டு) காட்டுக்கு வந்திருக்கிறார். மகாத்மாவான ஸ்ரீராமன், முனிவர்களுக்குரிய கட்டுப்பாடுகளுடன் காட்டில் வசித்துக் கொண்டிருக்கும் போது, இவருடைய மனைவியை இராவணன் கவர்ந்து சென்றுவிட்டான். (அவரைத் தேடிக் கண்டுபிடிக்கும் விஷயத்தில்) உங்கள் உதவியை நாடி வந்திருக்கிறார். (4–6)

சகோதரர்களான இராம–லட்சுமணர்கள், தங்களுடன் நட்புறவு கொள்ள விரும்புகிறார்கள். இவ்விருவரும் மிகவும் கௌரவிக்கத்தக்கவர்கள். தாங்கள் (அவர்கள் இருக்குமிடம்) வந்து, அவர்களை வரவேற்று நல்வரவு கூறவேண்டும்.'' அனுமானுடைய சொற்களைக் கேட்ட சுக்ரீவன், மனக்கவலை ஒழிந்தவனாக, உள்ளம் பூரித்தவனாக, இராமனிடமிருந்து மிக

பயங்கரமான எதிர்ப்பு வரும் என்று எதிர்பார்த்து அஞ்சி நடுங்கியதையும் விட்டொழித்தான். வானர மன்னராகிய சுக்ரீவன், மானுட உருவம் தாங்கி, கண்கவர் வசீகரத் தோற்றத்துடன் கூடியவனாக, மனம் குளிர்ந்து இராமனைப் பார்த்து(ப் பின்வருமாறு) கூறினான்— (7–9)

''தாங்கள் அறநெறியை நன்றாக அறிந்தவர்; எவராலும் வெல்ல முடியாதவர்; எல்லாப் பிராணிகளிடமும் அன்பு பாராட்டுகிறவர் – என்று, தங்களுடைய மேன்மையான குணங்கள் சந்தேகத்திற்கிடமின்றி வாயு மைந்தனால் என்னிடம் கூறப்பட்டன. பெருந்தகையீர்! (நான், வானரன்; தாங்கள் உயர் பிறவியான மனிதர்.) வானரனான என்னுடன் தாங்கள் நட்பை விரும்பினால், அது எனக்கே பெருமையைத் தருவது; மிகப்பெரிய பயனையும் தரக்கூடியது. தாங்கள் என்னுடன் நட்புக் கொள்ள விரும்பினால், இதோ என்னுடைய (வலது) கையை நீட்டுகிறேன்; அந்தக் கையின் மேல் தங்கள் (வலது) கையை வைத்து, உறுதியாகப் பற்றி, நட்புறவை நிலைநாட்டிக் கொள்ளலாம்.'' (10–12)

இவ்வாறு, (தனக்கு உதவி கிடைக்கும் என்று நம்பிக்கை தரும் வகையில்) சுக்ரீவன் இனிமையாகப் பேசியதைக் கேட்ட அவர், மிகவும் மனமகிழ்ந்தவராக, தன் கையினால் (நீட்டப்பட்ட) அவன் கையைப் பற்றினார்; மனப்பூர்வமான அன்புடன் அவனைக் கட்டியணைத்துக் கொண்டார். அப்போது, எதிரிகளை அடக்கவல்ல அனுமான் பிரும்மசாரி வேடத்தைத் துறந்து, தன் சுய உருவத்தை எடுத்துக் கொண்டு, இரு கட்டைகளை உரசி நெருப்பை உண்டுபண்ணினார். (இராம–லட்சுமணர்களை ரிஷ்யமூகத்தில் இறக்கிவிட்ட பின்னர், சுக்ரீவனுக்கு நம்பிக்கை ஏற்பட வேண்டும் என்பதற்காக, அவனிடம் சென்றபோது பிரும்மசாரி வடிவத்தை ஏற்றுச் சென்றார் – என்று கொள்ள வேண்டும்.) (13,14)

மிகவும் மகிழ்ச்சியுடனிருந்த அவர் (அனுமான்) ஒருமித்த மனத்துடன், கொழுந்துவிட்டு எரியும் அக்னியை மலர்களால் வழிபட்டு, அவ்விருவருக்கும் இடையே வைத்தார். பின்னர், மாறாத நட்புறவைப் பெற்றுவிட்ட சுக்ரீவனும் இராமனும், சுவாலைவிட்டு எரியும் அக்னியை வலம் வந்தார்கள். அப்போது, வானரனும் இராமனுமாகிய அவ்விருவரும் பரிபூரணமாகக் களிப்புற்றவர்களாக ஒருவரையொருவர் (கண்கொட்டாமல்) பார்த்துக் கொண்டார்கள். ('ஆகா! இவர் நமக்கு நண்பராகக் கிடைத்தாரே!' என்ற, உள்ளார்ந்த பெருமகிழ்ச்சி காரணமாக, வெகுநேரம் பார்த்துக் கொண்டிருந்தும்) 'போதும்' என்ற மனநிறைவை அடையாதிருந்தார்கள். (இன்னமும் பார்த்துக் கொண்டே இருக்கவேண்டும்! – என்பது போலிருந்தது.) (15–17)

''நீ என் மனத்திற்குகந்த நண்பனாகி விட்டாய். (இனி,) நம் இருவருடைய துக்கமும் சுகமும் பொதுவானவை'' (இருவராலும் ஒன்றாக அனுபவிக்கத்தக்கன) என்று, உள்ளக்களிப்புடன் இராமன், சுக்ரீவனை நோக்கிக் கூறினார். பின்னர், இலைகளும் மலர்களும் மிக அதிகமாகவுள்ள ஆச்சா மரக்கிளையை ஒடித்து, அதைத் தரையில் பரப்பி, இராமனுடன் சுக்ரீவன் உட்கார்ந்தான். அதே போன்று, வானரத்திலகமான அனுமான் நன்கு பூத்திருந்த சந்தன மரத்தின் ஒரு கிளையை, லட்சுமணன் உட்காருவதற்காகக் கொடுத்தார். அப்போது, மனமகிழ்ச்சியுடனிருந்த சுக்ரீவன் ஆனந்தப்பெருக்கால் மலர்ந்த கண்களுடன், நெஞ்சைத் தொடும் இனிய சொற்களால் இராமனைப் பார்த்து (பின்வருமாறு) பதில் சொன்னான்— (18–21)

''ஸ்ரீராமா! நான் நாட்டிலிருந்து துரத்தப்பட்டு, ('மறுபடியும் என் எதிரி, என்னை வந்து தாக்குவானோ?' என்ற) அச்சத்தால் மனம் நடுங்கி, இங்கே சுற்றிக் கொண்டிருக்கிறேன். என் மனைவி அபகரிக்கப்பட்டாள். யாரும் புகமுடியாத காடுகள் சூழ்ந்த இந்த மலையில் அடைக்கலம் புகுந்திருக்கிறேன். இராகவா! சகோதரனான வாலியினால் துரத்தப்பட்டு, நிலையான பகைமை பாராட்டப்பட்டு, அச்சங்கொண்டு, மனம் கலங்கி, நடுங்கிக் கொண்டு காட்டில் இருந்து வருகிறேன். பேரருளாளரே! வாலியிடம் உள்ள பயத்தால் மனத்துன்பத்துடன் இருக்கும் எனக்கு, அபயம் கொடுத்தருள வேண்டும். காகுத்தரே! என்ன செய்தால் என் அச்சம் நீங்குமோ, (நான் மன அமைதியுடன் உலகில் சஞ்சரிப்பேனோ,) அவ்வாறு தாங்கள் செய்ய வேண்டும்.'' (22–24)

இவ்வாறு வேண்டிக் கொள்ளப்பட்டவரும், மாவீரரும், அறம் அறிந்தவரும், அறநெறியில் மாறாத பற்றுடையவருமான காகுத்தர், சுக்ரீவனை நோக்கிச் சற்றே இளநகை செய்தாற்போல், (இவ்வாறு) பதில் கூறினார்— ''வானரத் தலைவனே! நட்பின் பயன் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து கொள்வதுதான் என்பது எனக்குத் தெரியும். உன்னுடைய மனைவியைக் கைப்பற்றி வைத்துள்ள (அறம் தவறிய) அந்த வாலியை, நான் அழித்துவிடப் போகிறேன். (25,26)

என்னுடைய இந்த பாணங்கள் வீண்போகாதவை; கூர்மையானவை; சூரியனைப் போல் ஒளிவீசுபவை; கழுகின் இறகுகளால் அலங்கரிக்கப்பட்டவை; இந்திரனுடைய வஜ்ராயுதத்தைப் போன்றவை; கூரான நுனிகளையும் நேரான கணுக்களையும் கொண்ட இந்தப் பாணங்கள், கோபத்துடன் சீறிப் பாயும் பாம்புகளைப் போல, அறம் பிறழ்ந்த அந்த வாலியின் மேல் விழுந்து தாக்கப் போகின்றன. விஷத்தையுடைய சர்ப்பங்களைப் போன்று கொடியவைகளான பாணங்களால் தாக்கப்பட்டுப் பூமியில் சிதறி விழுந்த மலையைப் போல் விழுந்து கிடக்கும் வாலியை, இப்போதே காண்பாய்!'' (27–29)

தனக்கு நன்மையை விளைவிக்கக்கூடிய இராமனின் அந்த மொழியைக் கேட்டு, மிகவும் சந்தோஷமடைந்த சுக்ரீவன், மாபெரும் நற்பயன்களைத் தரப் போகும் பதிலைக் கூறினான்— ''வீரரே! மானுடச் சிங்கமே! தங்கள் பேருதவியினால் என் மனைவியையும் அரசாட்சியையும் நான் அடையப் போகிறேன் (என்பதில் ஐயமில்லை). மனிதருள் மாணிக்கமே! என்னைப் பகைவனாகக் கருதும் என் மூத்த சகோதரன், இனிமேல் என்னைத் துன்புறுத்தாமலிருப்பதற்கு ஏற்றபடிச் செய்வீர்களாக. (30,31)

சுக்ரீவனும் இராமனும் நட்புறவுடன் அன்பொழுகப் பேசிக் கொண்டிருந்த அதே வேளையில், சீதை–வாலி–இராவணன் ஆகிய மூவரின், முறையே, செந்தாமரை–தங்கம்–நெருப்பை நிகர்த்த இடது கண்கள் ஒரே சமயத்தில் வேகமாகப் படபடத்தன. (பெண்களின் இடது கண் துடிப்பு மங்களத்தைக் குறிக்கும்; ஆண்களின் இடது கண் துடிப்பு வரப் போகின்ற துயரத்தை அறிவிக்கும் – என்பது சகுனநூல் கூற்று.) (32)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
ஐந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஆறு

அணிகலன்களை அடையாளம் காணுதல்

மனநிறைவடைந்த சுக்ரீவன், இராமனைப் பார்த்து மேலும் கூறினான்— ''இராமா! மந்திராலோசனை கூறுபவர்களில் மிகச்சிறந்த அமைச்சனான அனுமான், மனித நடமாட்டமே இல்லாத காட்டுக்கு, தாங்கள் எதன் பொருட்டு வந்திருக்கிறீர்கள்? என்பதைச் சொன்னான். சகோதரனான இலக்குவனுடன் தாங்கள் காட்டில் வசித்துக் கொண்டிருக்கும்போது, பேரறிவாளனான இலக்குவனையும் தங்களையும் விட்டுப் பிரித்து, அவர் (சீதை) தனித்திருந்த போது, நல்வாய்ப்புக்காகக் காத்துக் கொண்டிருந்த அவனால் (இராவணனால்), கழுகரசான ஜடாயுவைக் கொன்றுவிட்டு, ஜனகன் திருமகளும் தங்கள் மனைவியுமான மைதிலி கதறி அழுது கொண்டிருக்கும் போதே கவர்ந்து செல்லப்பட்டார். மனைவியைப் பிரிந்துவிட்ட துக்கத்திலிருந்து தாங்கள் வெகுவிரைவில் விடுபடப் போகிறீர்கள். (1–4)

(முன்னொரு காலத்தில் மது, கைடபன் என்ற அரக்கர்களால்) திருடிச் செல்லப்பட்ட வேதங்களை, (சாட்சாத் மகாவிஷ்ணு மத்ஸ்யாவதாரம் செய்து) மீட்டுக் கொண்டு வந்ததைப் போல, நான் அவரைக் கொண்டு வருவேன். அவர் (கீழேயுள்ள) பாதாளத்தில் இருந்தாலும்,

(மேலேயுள்ள) ஆகாயத்தில் இருந்தாலும் சரி, இராகவா! எதிரிகளை அடக்குபவரே! தங்கள் மனைவியை மீட்டுக்கொண்டு வந்து தங்களிடம் ஒப்படைப்பேன். என்னுடைய இந்த வார்த்தை சத்தியம் என்று நம்புங்கள். பெருந்தோளரே! விஷம் கலந்த அன்னம் எவ்வாறு ஜீரணிக்க முடியாததோ (விஷம் கலந்திருப்பதைத் தெரிந்து கொண்டும் உண்டவர்களின் உயிரைப் பறித்து விடுமோ), அவ்வாறே இந்திரன் முதலான தேவர்களாலும் அசுரர்களாலும்கூட, தங்கள் மனைவி தீங்கு செய்யப்பட முடியாதவர். (5–7)

மாவீரரே! துயரத்தை விட்டொழியுங்கள். நான், தங்கள் அன்புக்குரிய மனைவியை நிச்சயமாகத் தேடிக் கண்டுபிடித்துக் கொடுக்கிறேன். கொடிய செயல்களைச் செய்யும் ஓர் அரக்கனால் அபகரித்துக் கொண்டு போகப்பட்ட ஒரு பெண்மணியை, நான் பார்த்தேன். அவர் மைதிலிதான் என்று சந்தேகத்திற்கு இடமில்லாமல் இப்போது ஊகிக்கிறேன். பரிதாபமான குரலில் 'இராமா', 'இராமா' என்றும், 'லட்சுமணா' என்றும் அவர் கதறிக் கொண்டிருந்தார். இராவணனுடைய மடியில், சர்ப்பராஜனின் மனைவியைப் போல (கட்டுப்படுத்தப்பட்டுவிட்ட நாகம் போல) துடித்துக் கொண்டிருந்தாள். (8,9)

மலைச்சிகரத்தில் என்னையும் சேர்த்து ஐந்து பேர்களாக உட்கார்ந்திருந்த எங்களைப் பார்த்து, அவரால் மேலாடையும், அழகிய அணிகலன்களும் (மேலாடையில் வைத்து முடியப்பட்ட அணிகலன்கள்) கீழே போடப்பட்டன. நாங்கள் அவைகளை எடுத்துப் பத்திரமாக வைத்திருக்கிறோம். அவைகளை நான் கொண்டு வந்து காட்டுகிறேன். தாங்கள் அடையாளம் கண்டுகொள்ளலாம்.'' மகிழ்ச்சி தரும் சொற்களைக் கூறிய சுக்ரீவனைப் பார்த்து, ''நண்பனே! அவைகளை உடனே கொண்டு வந்து காட்டு. ஏன் காலதாமதம் செய்கிறாய்?'' என்று (இராமன்) சொன்னார். இராமனுக்கு விருப்பமானதைச் செய்வதில் ஆர்வமுடைய சுக்ரீவன், மேற்கண்டவாறு சொல்லப்பட்டவுடன், அந்த மலையில் மறைவாக அமைந்திருந்த ஒரு குகைக்குள் நுழைந்தான். (10–13)

மங்களமான அணிகலன்களையும் மேலாடையையும் கொண்டு வந்து, ''இதைப் பாருங்கள்'' என்று, வானரன் கூறினான். அந்த ஆடையுடன் அழகிய அணிகலன்களையும் (தன் கைகளில்) வாங்கிக் கொண்ட இராமன், பனிநீரால் மூடப்பட்ட சந்திரன் போல் கண்ணீரால் பார்வை மறைத்தவராக ஆனார். சீதையிடம் கொண்டிருந்த அன்பின் மிகுதியால், கண்களில் நீர் வழிந்து, தைரியத்தை இழந்து, ''ஆ! என் அன்புக்கு உரியவளே!'' என்று புலம்பிக் கொண்டு தரையில் விழுந்தார். மிக உயர்ந்த அந்த அணிகலன்களை, பல தடவை மார்பில் வைத்துக் கொண்டு, புற்றிலிருந்து மிகவும் சினத்துடன் சீறிப் புறப்படும் பாம்பைப் போல் மிகவும் பெருமூச்செறிந்தார். (14–17)

இடைவிடாது கண்ணீர் விட்டுக்கொண்டிருந்த இராமன், அருகில் நின்று கொண்டிருந்த இலக்குவனைப் பார்த்துப் பரிதாபத்துடன் பேசத் தொடங்கினார்— ''லட்சுமணா! (அரக்கனால்) கவர்ந்து செல்லப்பட்ட வைதேகி, தான் அணிந்திருந்த ஆடையையும் அணிகலன்களையும் தரையில் எறிந்திருப்பதைப் பார். கவர்ந்து செல்லப்படுகிற சீதையால், துணியில் வைத்து புற்கள் நிறைந்த பிரதேசத்தில் இந்த நகைமுடிப்பு போடப்பட்டுள்ளது என்பது நிச்சயம். (ஏனென்றால்,) மேலேயிருந்து தரையில் விழுந்தும்கூட, நகைகள் உடைந்தோ நசுங்கியோ போகாமல், இயல்பான வடிவத்துடன் காணப்படுகின்றன.'' (18–20)

இவ்வாறு இராமன் கூறியதும், இலக்குவன் பதில் சொன்னான்— ''நான், (பிராட்டியின் புஜங்களில் அணியும்) வங்கியைப் பார்த்தறியேன்; காதில் அணியும் குண்டலங்களையும் பார்த்ததில்லை. நாள்தோறும் அவர் திருவடிகளில் விழுந்து சேவித்து வந்ததால், பாதச் சிலம்புகள் இரண்டை மட்டும் நான் நன்றாக அடையாளம் கண்டு கொள்கிறேன்.'' பின்னர், பரிதாபமான நிலையிலிருந்த இராமன், சுக்ரீவனைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார்— ''சுக்ரீவனே! என்னுடைய உயிரைக் காட்டிலும் மேலான என் மனைவி, கொடிய தோற்றமுடைய அரக்கனால், எந்த நாட்டை நோக்கி எடுத்துச் செல்லப்பட்டவளாக, உன்னால் பார்க்கப்பட்டாள் என்பதைக் கூறு.

எனக்கு மிகவும் துயரத்தைக் கொடுத்திருக்கும் அந்த அரக்கன் எங்கே வசிக்கிறான்? அவனைக் காரணமாகக் கொண்டு, எல்லா அரக்கர்களையும் நான் அழித்துவிடப் போகிறேன். மைதிலியைக் கவர்ந்து சென்றதன் மூலம் எனக்கு மிகவும் கோபத்தை மூட்டியவன், அவன் தன் அழிவுக்காக, தானே யமலோகத்தின் கதவைத் திறந்து வைத்திருக்கிறான். வானரத் தலைவனே! மிகவும் அன்புக்குரிய என் மனைவி, காட்டிலிருந்து எந்த அரக்கனால் பலாத்காரமாகத் திருடிச் செல்லப்பட்டாளோ, அந்த அரக்கப் பகைவனைப் பற்றிய விவரங்களைக் கூறு. இப்போதே அவனை யமனிடம் அனுப்பி வைக்கிறேன்.'' (21–25)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
ஆறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஏழு

இராமனுக்கு ஆறுதல் கூறுதல்

மிகவும் மனம் நொந்துபோயிருந்த இராமன், இவ்வாறு கூறியவுடன் வானரனான சுக்ரீவன் இரு கைகளையும் வணக்கத்துடன் கூப்பிக் கொண்டு, துயரக் கண்ணீரால் தொண்டை தழுதழுக்கப் பின்வரும் சொற்களைக் கூறினான்— (1)

''கீழ்மைக் குணங்கள் கொண்ட பாவியான அந்த அரக்கனுடைய இருப்பிடத்தையோ, செயல்திறனையோ, பேராற்றலையோ, வம்ச பரம்பரையையோ நான் சிறிதளவுகூட அறியவில்லை. எதிரிகளை மாய்ப்பவரே! துயரத்தை விட்டொழியுங்கள். எந்த வகையில் முயற்சி செய்தால் மைதிலியைத் தாங்கள் அடைவீர்களோ, அந்த வகையில் நான் முயற்சி செய்வேன் என்று தங்களுக்குச் சத்தியத்தின் மேல் ஆணையிட்டுச் சொல்கிறேன். இராவணனை, அவனது கூட்டத்தாருடன் அழித்துக் கொன்று, தங்களுக்கு மகிழ்ச்சியை உண்டுபண்ணி, என் வீரத்தைக் காட்டுவேன். தங்களுக்கு வெகுவிரைவில் திருப்தி உண்டாகும் வகையில் நான் செயல்படுவேன். (2–4)

இதுவரை மனம் சஞ்சலப்பட்டது போதும். தங்களுடைய இயல்பான தைரியத்தை நினைவுக்குக் கொண்டு வாருங்கள். தங்களைப் போன்ற மேன்மக்களுக்கு இப்படிப்பட்ட மனச்சோர்வு கொஞ்சமும் பொருத்தமானதன்று. என் மனைவியை (வாலி) அபகரித்துக் கொண்டதால், அந்த வகையிலான பெருந்துயரம் எனக்கும் உண்டு. ஆனால், நான் (தங்களைப் போல்) இவ்வளவு தீவிரமாக வருத்தப்படவில்லை; மனோதைரியத்தையும் இழக்கவில்லை. நான், கல்வி–கேள்வி பெறாத, நன்னெறிப்படாத வானரன். அப்படியிருந்தும் என் மனைவியை நினைத்து நினைத்து துக்கப்பட்டுக் கொண்டிருக்கவில்லை. தாங்களோ நற்குணங்கள் நிரம்பப் பெற்றவர்; கல்வியறிவு பெற்றவர்; மனஉறுதி படைத்தவர் – இப்படிப்பட்ட தங்களைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா! (5–7)

தாங்கள் தைரியத்தை மேற்கொண்டு பெருகி வழிந்தோடும் கண்ணீரை நிறுத்த வேண்டும். இயற்கையான வீரத்தோடு கூடியவர்கள், தம் வாழ்வில் கடைப்பிடித்துக் காட்ட வேண்டிய ஒழுக்கமான மன உறுதியைக் கைவிட்டுவிடக் கூடாது. துயரத்தைத் தரக்கூடிய நிகழ்ச்சிகள் நடந்தாலும், பொருள் நாசம் ஏற்பட்டாலும், பேராபத்து வந்துவிட்டாலும், உயிரே போவதாக இருந்தாலும், தன்னுடைய தெள்ளறிவைக் கொண்டு சிந்தித்து அலசிப் பார்ப்பவன், மனத்தளர்ச்சி அடையமாட்டான். மனவலிமை குன்றி எப்போதும் கோழையாகவே இருப்பவன், அதிகமான சுமை ஏற்றப்பட்ட ஓடம் நீரில் மூழ்கிவிடுவதைப் போல, தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் சோக சாகரத்தில் மூழ்கிப் போகிறான். (8–10)

நான் கைகூப்பித் தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்; மிகுந்த அன்பினால் பிரார்த்தித்து வேண்டிக் கொள்கிறேன்; பேராண்மையை ஏற்றுக் கொள்ளுங்கள்; சோகத்திற்கு இடம் கொடுக்காதீர்கள். எப்போதும் சோகத்தையே பாராட்டிக் கொண்டிருப்பவர்களுக்கு சுகம் என்பது கிடைக்க மாட்டாது; அவர்களுடைய ஆற்றலும் குன்றிப் போய்விடும். எனவே, தாங்கள் மனத்துயரம் கொள்ளலாகாது. மாமன்னரே! துயரத்தினால் ஆட்கொள்ளப்பட்டிருக்கும் ஒருவனுக்கு, தன் உயிரைப் பற்றிக்கூட சந்தேகம் வந்துவிடுகிறது. ஆகவே, தாங்கள் மனத்துயரத்தை விட்டொழியுங்கள்; மனோபலத்தை முற்றிலுமாக ஏற்றுக் கொள்ளுங்கள். (11–13)

தங்களுடைய உயிர் நண்பன் என்ற முறையில், இந்த ஆலோசனைகளை விண்ணப்பித்துக் கொண்டேன். நான் உபதேசம் செய்யவில்லை. தாங்கள், என் நட்புக்குக் கௌரவம் கொடுக்கும் வகையில் ('இவன், நமக்குத் தேவையான உதவிகளைக் கட்டாயமாகச் செய்வான்' என்ற நம்பிக்கையில்), இனியும் துயரத்திற்கு இடம் கொடுக்காதீர்கள்.'' இவ்வாறு இனிமையான சொற்களால் சுக்ரீவனால் ஆறுதல் கூறப்பட்ட இராமன், கண்ணீரால் நனைந்திருந்த கண்களை ஆடையின் நுனியால் துடைத்துக் கொண்டார். சுக்ரீவனுடைய சொற்களால் (துயரத்தை ஒழித்து, தன்) இயல்பான அமைதி ததும்பும் உள்ளத்தைப் பெற்ற மாமனிதராகிய இராமன், சுக்ரீவனை மார்புறத் தழுவிக் கொண்டு பின்வருமாறு கூறினார்— (14–16)

''சுக்ரீவனே! மனப்பூர்வமான அன்பும், உதவி புரியும் நன்னோக்கமும் உடைய ஓர் ஆருயிர் நண்பன் செய்யவேண்டிய காரியத்தை (ஆறுதல் கூறி, மனோதைரியத்தை உண்டாக்கும் இனிய சொற்களைக் கூறியதன் மூலம்) நீ செய்திருக்கிறாய். நீ செய்தது முற்றிலும் சரியானது. இந்தச் சமயத்திற்கு உகந்ததும் ஆகும். நண்பனே! உன்னால் ஆறுதல் கூறப்பட்ட நான், என் இயல்பான சாந்தத்தை அடைந்துவிட்டேன். குறிப்பாக, (எனக்கு நேர்ந்துள்ள) இந்தத் துயர காலத்தில், உன்னைப் போன்ற ஆருயிர் நண்பன் கிடைப்பது மிகவும் அரிது. ஆகவே, தீய இயல்புடையவனும் கொடியவனும் அரக்கனுமான இராவணனையும் மற்றும் மைதிலியையும் தேடிக் கண்டுபிடிக்கும் விஷயத்தில், நீ முயற்சியை மேற்கொள்ள வேண்டும். (17–19)

(உனக்கு உதவி செய்யும் விஷயத்தில்) என்னால் என்ன செய்யப்பட வேண்டுமோ, அதனையும் தயக்கமில்லாமல் கூறுவாயாக. வளமான பயிர்நிலத்தில், மழைக்காலத்தில் விதைக்கப் பட்ட விதைகள் செழிப்பாக வளர்ந்து, நல்ல பலனை நிச்சயமாகக் கொடுப்பதைப் போல, என்னால் உனக்கு எல்லா நன்மைகளும் கிடைக்கும். வானரோத்தமனே! உன்னிடத்திலுள்ள சிநேகத்தினால், நான் (முன்னர்) கூறிய (வாலி வதம் உட்பட) சொற்களெல்லாம் உண்மையே என்று நீ நம்பு. ('இவரால் செய்யமுடியுமா!' என்று சந்தேகப்பட வேண்டாம்.) இதற்கு முன் பொய் என்பது என்னால் சொல்லப்பட்டதில்லை. இனி, ஒருபோதும் சொல்லவே மாட்டேன். ஆகவே, உனக்கு நான் கூறியவையெல்லாம் உண்மையிலேயே நடக்கும் என்று சத்தியத்தின் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன்.'' (20–22)

தன்னுடைய வானர அமைச்சர்களோடு கூடியிருந்த சுக்ரீவன், இராமனால் ஆணையிட்டுக் கூறப்பட்ட சொற்களைக் கேட்டு மனம் களித்தான். பின்னர், மனிதரும் வானரமுமான அவ்விருவரும் ஒரு தனி இடத்திற்குச் சென்று, பரஸ்பரம் ஒரே மாதிரியாக இருந்த சுக–துக்கங்களை மனம் விட்டுப் பேசிக் கொண்டார்கள். வானர வீரர்களின் தலைவனான வானரன் (சுக்ரீவன்), மனிதருள் காளை போன்ற மகாபுருஷரான இராமனுடைய சொற்களைக் கேட்டதும், தன்னுடைய நோக்கம் வெற்றி பெற்றுவிட்டதாக மனத்திற்குள் தீர்மானித்துக் கொண்டான். (23–25)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
ஏழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எட்டு

'வாலியை வதம் செய்கிறேன்!'

அவருடைய நம்பிக்கை தரும் சொற்களால் மிகவும் திருப்தியடைந்த வானரன் சுக்ரீவன், இலக்குவன் முன்னிலையில் இராமனைப் பார்த்துப் பின்வருமாறு கூறினான்— ''அரசருக்குரிய வீர–தீர–பராக்கிரமம் படைத்த தாங்கள் எனக்கு நண்பனாகியிருக்கிறீர்கள் – என்பதாலேயே, தெய்வங்களின் பேரருளுக்கு நான் முற்றிலும் பாத்திரமாகிவிட்டேன் என்பது நிச்சயமாகிறது. (இதுவரை நான் அனுபவித்த கஷ்டங்களுக்குக் காரணம், என்மீது தேவதைகளின் அருட்பார்வை படாததால்தான்.) மாசற்றவரே! சீர் பெற்றவரே! இராமா! தங்களுடைய உதவியைப் பெற்ற ஒருவன் அமரர்கள் அரசையே பெறமுடியும் என்னும்போது, (மிக எளிமையான) என் ராஜ்யத்தைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா? (என் இளவரசுப் பட்டத்தை அடைவது ஒரு கஷ்டமா, என்ன?) (1–3)

இராமப்பிரபு! புகழ்மிக்க ரகு வம்சத்தில் தோன்றிய தங்களை அக்னிசாட்சியாக நண்பராகப் பெற்றுவிட்டேன், நான். அதனால், என் உறவினர்கள் மற்றும் நண்பர்களின் போற்றுதலுக்கு உரியவனாகிவிட்டேன். நானும் தங்களுக்கேற்ற சிநேகிதன் என்பதை, நாளடைவில் அறிந்து கொள்வீர்கள். என் பெருமையை நானே சொல்ல இயலாது. ஆத்மஞானிகளில் சிறந்தவரான இராமா! தங்களைப் போன்ற (பாவம் என்பதன் ஓர் அணுவும் அணுகமுடியாத) புண்ணியசாலிகளான மகாத்மாக்களின் பேரன்பும், அளவுகடந்த தைரியமும் எப்போதும் உறுதியாக இருக்கும். (4–6)

நண்பர்கள், தங்களுக்கு உரிமையான வெள்ளி–பொன்–ஆடை–அணிகலன்களின் மேல் தங்கள் சிநேகிதர்களுக்கும் சம உரிமை இருப்பதாக எண்ணுகிறார்கள். செல்வந்தனோ, தரித்திரனோ; துக்கப்படுபவனோ, சுகப்படுபவனோ; நல்லவனோ, கெட்டவனோ – எப்படியிருந்தாலும், ஒருவனுக்கு அவன் நண்பனே புகலிடம். அப்படிப்பட்ட இதயபூர்வமான நட்புடைய ஒருவன், தன் நண்பனின் பொருட்டு, பொருள்–சுகம்–உயிர் ஆகியவற்றையும் இழக்கச் சித்தமாக இருக்கிறான்.'' தெய்விக ஒளி பொருந்தியவனும், இந்திரனுக்கு நிகரான அறிவாளனுமான இலக்குவனுக்கு முன்னால் (அதாவது, அவன் உடனிருக்கும்போது) முறுகிய அன்புடன் பேசிய சுக்ரீவனைப் பார்த்து, 'ஆமாம். நீ சொன்னது சரிதான்' என்று இராமன் கூறினார். (7–10)

அப்போது, இராமனும் மகாபலசாலியான லட்சுமணனும் நின்று கொண்டிருப்பதைப் பார்த்து, காட்டின் எல்லாப் பக்கங்களிலும் சுக்ரீவன் பார்வையைச் செலுத்தினான். (முன்னர், அவர்கள் மரக்கிளைகளில் அமர்ந்து கொண்டார்கள் என்று கூறியிருப்பதால், இப்போதைய நிகழ்ச்சி மறுநாள் நடந்ததாகக் கொள்ள வேண்டும், என்பது விளக்கவுரையாளர்களின் கருத்து.) வானரத் தலைவனான அவன், அவ்விடத்திற்கு அருகில், நன்றாக மலர்ந்த சில புஷ்பங்களையுடையதும், இலைகள் நிரம்பியதும், வண்டுகள் மொய்ப்பதால் அழகாக விளங்குவதுமான ஓர் ஆச்சா மரத்தைக் கண்டான். (11,12)

சுக்ரீவன், அந்த ஆச்சா மரத்திலிருந்து நிறைய மலர்களுடைய, இலைகள் அடர்ந்த ஒரு கிளையை முறித்து, கீழே பரப்பி, இராமனுடன் உட்கார்ந்தான். அங்கு அவ்விருவர்களும் (இராம–சுக்ரீவர்கள்) உட்கார்ந்து விட்டதைப் பார்த்ததும், ஆச்சா மரத்தின் (வேறொரு) கிளையை ஒடித்து, வணக்கத்துடன் (கீழே பரப்பி) இலக்குவனையும் அமரச் செய்தார், அனுமான். பழங்களும் மலர்களும் பரவிக் கிடந்த அந்த உத்தமமான மலையில், எந்நிலையிலும் கலங்காத பெருங்கடலைப் போன்று அமைதியாக வீற்றிருந்தவரும், எல்லோருக்கும் பிரியமானவருமான இராமனைப் பார்த்து, மனம் மகிழ்ந்து, நட்பு மிகுதியால், இனிமையான நல்வார்த்தைகளை, சந்தோஷத்தால் தட்டுத் தடுமாறியபடி சுக்ரீவன் கூறினான்— (13–16)

''என் சகோதரனால் நாட்டிலிருந்து துரத்தப்பட்டேன்; என் மனைவியை அவன் அபகரித்துக் கொண்டான். அதனால், அவனை நினைத்து அஞ்சி நடுங்கிக் கொண்டு, மிகவும் துக்கத்துடன் உத்தமமான இந்த ரிஷ்யமூக மலையில் சுற்றிக் கொண்டிருக்கிறேன். இராகவனே! நான் அவனிடமிருந்து எப்போதும் நடுங்கிக் கொண்டிருக்கிறேன்; அச்சத்தில் மூழ்கியிருக்கிறேன்; மனம் கலங்கி வளைய வந்து கொண்டிருக்கிறேன். சகோதரனான வாலியினால் நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்ட பின்னரும் பகைமை பாராட்டப்படுகிறேன். எல்லா உயிர்களுக்கும் அடைக்கலம் அளிப்பவரே! வாலியிடமிருந்து அஞ்சித் தவித்துக் கொண்டிருப்பவனும், வேறு துணையற்றவனுமான எனக்கும் தாங்கள் அருள்புரிய வேண்டும்.'' (17–19)

இவ்வாறு கூறப்பட்டவரும், தேஜஸ்வியும், அறநூல்களைப் பயின்று அறநெறிப்படியே ஒழுகுகின்றவருமான இராமன், சற்றே புன்னகைத்தாற்போல் சுக்ரீவனைப் பார்த்துப் பதில் கூறினார்— ''உபகாரம் செய்வதுதான் நட்பின் அடையாளம்; அபகாரம் செய்வது பகைவர்களின் இயல்பு. (நான், உனக்கு நண்பனாகிவிட்டதால், உனக்கு உதவி செய்வது என் கடமை.) நான், உன் மனைவியைக் கவர்ந்து கொண்டுள்ளவனை, இப்போதே ஒழித்துக் கட்டுவேன். (20,21)

என்னுடைய இந்த பாணங்கள், மிகவும் வேகமாகச் செல்பவைகள்; சிறகுகளால் அலங்கரிக்கப்பட்டவைகள்; பயங்கரமான ஆற்றல் உடையவைகள்; கார்த்திகேயப் பெருமான் தோன்றிய சரவணத்தில் தோன்றியவைகள்; பொன்னால் அணி செய்யப்பட்டவைகள்; கழுகுகளின் இறகுகள் கட்டப்பட்டவைகள்; இந்திரனுடைய வஜ்ராயுதம் போன்றவைகள்; நல்ல கணுக்களும் கூர்மையான முனைகளும் உள்ளவைகள்; சினத்துடன் சீறிவரும் சர்ப்பங்கள் போன்றவைகள். உன் தமையன் என்ற உறவு வைத்துக் கொண்டு, பாவ காரியத்தைச் செய்துவிட்டு, நீங்காத பகைமை பாராட்டும் வாலி, தூள்தூளாக்கப்பட்ட மலையைப் போல், என் பாணங்களால் கொல்லப்பட்டு விழுந்து கிடப்பதை, நீ பார்க்கப் போகிறாய்.'' (வானர) சேனைத் தலைவனாகிய சுக்ரீவன், இராமனுடைய சொற்களைக் கேட்டு, எல்லையில்லாத மகிழ்ச்சியடைந்து, ''ரொம்ப சரி, ரொம்ப சரி!'' என்று மொழிந்தான். (22–25)

''ஸ்ரீராமா! நான் துக்கத்தில் மூழ்கிக் கிடக்கிறேன். துயரத்தால் துன்பப்படுபவர்களுக்குத் தாங்கள்தான் புகலிடம். தாங்கள், எனக்கு நண்பர் என்பது உறுதியாகிவிட்டதால், என் மனவேதனைகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். தாங்கள், என் கையின்மேல் தங்கள் கையை வைத்து, அக்னிதேவன் சாட்சியாக எனக்கு நண்பனாகியிருக்கிறீர்கள். ஆகவே, தாங்கள் என் உயிரைக் காட்டிலும் மேலானவர். இந்த வார்த்தையைச் சத்தியத்தின் மீது ஆணையிட்டுச் சொல்கிறேன். தாங்கள், என்னுடைய நண்பர் என்பதனால் தங்களிடம் பூரண நம்பிக்கை வைத்து, என் நெஞ்சத்திலிருக்கும் துக்கத்தை – என் மனத்தைத் துடிக்க வைத்துக் கொண்டிருக்கும் துக்கத்தை – கொஞ்சமும் ஒளிவு–மறைவில்லாமல் தங்களிடம் கூறிக் கொண்டிருக்கிறேன்.'' (26–28)

இவ்வாறு சொல்லிக் கொண்டிருக்கும் போதே, சுக்ரீவனின் கண்களில் நீர் பெருகியது. (துக்க மேலீட்டினால்) கண்களில் நீர் வழிந்ததாலும், (வாயிலிருந்து) சொற்கள் தடுமாற்றம் அடைந்ததாலும் மேற்கொண்டு பேசமுடியாமலிருந்தான். திடீரென்று ஆற்றில் வெள்ளம் பெருகினாற்போல, கண்களிலிருந்து பெருகிய கண்ணீரின் வேகத்தை, இராமன் முன்னிலையில், தைரியத்தை அடைந்து அடக்கிக் கொண்டான். தேஜஸ்வியான சுக்ரீவன், கண்ணீரைக் கட்டுப்படுத்தி, அழகிய கண்கள் இரண்டையும் துடைத்துக் கொண்டு, நீண்ட பெருமூச்சுவிட்டுக் கொண்டு, இராமனை நோக்கி மீண்டும் பேசத் தொடங்கினான்— (29–31)

''இராமா! முன்னர் நடந்ததைச் சொல்கிறேன். கடுமையான சொற்களைக் கூறி, மகாபலசாலியான வாலி என்னை அவமானப்படுத்தி, என்னுடைய நாட்டிலிருந்தும் (இளவரசுப் பதவியிலிருந்தும்) என்னைத் துரத்திவிட்டான். என் உயிரினும் மேலான என் மனைவியும் அவனால் கைக்கொள்ளப்பட்டாள். என்னுடைய எல்லா நண்பர்களும் சிறையில் அடைக்கப்

பட்டார்கள். இராகவா! மிகப்பெரிய கொடுங்கோலனான அவன், என்னை அழிப்பதற்குப் பல தடவைகள் முயற்சி செய்தான். (என்னைக் கொல்வதற்காக,) அவனால் அனுப்பப்பட்ட வானரர்களை நான் கொன்றுவிட்டேன். (32–34)

ரகுநாயகா! (தங்களையும் இலக்குவனையும் தொலைவில் பார்த்ததும்) என்னைக் கொல்வதற்காக அனுப்பப்பட்டவர்களோ? என்ற சந்தேகம் எழுந்ததால் பயம் கொண்டுதான், அப்போது நான் தங்கள் எதிரில் வரவில்லை. அஞ்சவேண்டிய காலத்தில் எல்லோரும் அச்சம் கொள்ளத்தானே செய்வார்கள்? அனுமான் முதலிய இவர்கள்தாம் எனக்குத் துணையாக இருப்பவர்கள். அதனால்தான் மிகவும் நெருக்கடியை அடைந்திருக்கும் இந்த நிலையிலும், நான் உயிரை விடாதிருக்கிறேன். என்னிடம் உள்ளார்ந்த அன்பு வைத்துள்ள இந்த வானரர்கள், என்னைச் சூழ்ந்து நின்று என்னைக் காப்பாற்றுகிறார்கள். நான் வெளியே போகும்போது என்னுடனே வருகிறார்கள். நான் ஓரிடத்தில் நின்றால், அவர்களும் நின்று விடுகிறார்கள். (35–37)

இராமா! சொல்ல வேண்டிய தகவல்களை, நான் சுருக்கமாகக் கூறியுள்ளேன். தங்களிடம் விஸ்தாரமாகக் கூறவேண்டுமா, என்ன? என்னுடைய மூத்த சகோதரனும் பரம வைரியுமான வாலியின் பேராற்றல் உலகம் முழுவதும் அறிந்ததுதான். (என் சகோதரனின் அழிவு என்பது துக்கத்தைத் தரக்கூடிய விஷயம்தான் என்றாலும்) இப்போது நான் அனுபவிக்கும் துயரம், அவன் ஒழிந்தால்தான் மறைந்து போகும். என் சுகமும் வாழ்க்கையும், அவன் மரணத்தில்தான் இருக்கின்றன. இராமா! இதுதான், என் சோகத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஒரே வழி. இதையும் நான் துக்கத்தோடுதான் சொன்னேன். ஒரு நண்பனுக்கு – சுகமோ, துக்கமோ – எது ஏற்பட்டாலும், அவனுடைய நண்பனே அவனுக்கு உதவக் கூடியவன்.'' (38–40)

இந்தத் தகவல்களைக் கேட்டதும் இராமன் சுக்ரீவனைப் பார்த்து, ''எதன் காரணமாக (உனக்கும் வாலிக்குமிடையே) விரோதம் ஏற்பட்டது? என்ற உண்மையை அறிந்து கொள்ள விரும்புகிறேன்'' என்று கேட்டார். ''வானரத் தலைவனே! உங்களிடையே ஏற்பட்டுள்ள பகைமையின் காரணத்தைத் தெரிந்து கொண்டு, யாரிடம் குற்றம் இருக்கிறது? என்பதையும், குற்றத்திற்கு ஏற்றபடி தண்டனைக் கொடுக்கப்பட்டிருக்கிறதா? என்பதையும் சீர்தூக்கி அலசிப் பார்த்து, பின்னர் உனக்கு நலன் தரக்கூடிய காரியத்தைச் செய்வேன். (41,42)

மாரிக் காலத்தில் ஆற்றில் வெள்ளம் பெருகி வருவதைப் போல, உனக்கு அவமானம் ஏற்பட்டது என்பதைக் கேட்டதும், என் கோபம் பொங்கிக் கொண்டு வருகிறது. என் இதயத்தை நடுங்கச் செய்கிறது. மனத்தெளிவுடன் நடந்தது எதையும் மறைக்காமல் சொல்லிவிடு. ஏனென்றால், எப்போது என் வில்லில் நாண் ஏற்றப்பட்டுப் பாணம் விடப்படுகிறதோ, அப்போதே உன்னுடைய பகைவன் மாண்டான் (என்பதை நினைவில் கொள்க).'' மகாத்மாவான இராமனால் இவ்வாறு கூறப்பட்டதும், நான்கு வானரர்களோடிருந்த சுக்ரீவன் அளவில்லாத மகிழ்ச்சியை அடைந்தான். உடனே, சுக்ரீவன் முகத்தில் மலர்ச்சி தோன்ற, (வாலியுடன் ஏற்பட்ட) விரோதத்தின் உண்மையான காரணத்தை, இராமனிடம் சொல்லத் தொடங்கினான். (43–46)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
எட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஒன்பது

பகைமையின் காரணம்

''எதிரிகளை அழிக்கும் ஆற்றல் படைத்த வாலி, என் மூத்த சகோதரன். (ரிக்ஷரஜஸ் என்று பெயர் கொண்ட) என் தந்தையால் எப்போதும் மதிக்கப்பட்டவன். நானும், (இனிச் சொல்லப்

போகும் நிகழ்ச்சிக்கு) முன்னர் அவனிடம் அவ்வாறே அன்புடன் இருந்தேன். எங்களுடைய தந்தை மரணமடைந்ததும், 'இவன் மூத்த மகன்' என்பதால், அமைச்சர்கள் ஒருமுகமாகச் சம்மதப்பட்டு, வானர ராஜ்யத் தலைவனாக முடிசூட்டப்பட்டான். தந்தை–பாட்டன் காலத்திலிருந்து பரம்பரையாக வந்த விசாலமான ராஜ்யத்தை, அவன் ஆளத் தொடங்கினான். நான், எப்போதும் மிகப் பணிவுடன் ஓர் அடிமையைப் போல் அவனுக்குச் சேவை செய்து கொண்டிருந்தேன். (3)

பேராற்றல் கொண்ட மாயாவி என்ற அசுரன், துந்துபி என்னும் அசுரனின் மூத்த புதல்வன். அவனுடன் (மாயாவியுடன்) அவனுக்கு (வாலிக்கு) ஒரு பெண் விஷயமாக, கடுமையான விரோதம் முன்னர் ஏற்பட்டது என்று கேள்விபட்டிருக்கிறேன். அவன், ஜனங்கள் உறங்கிக் கொண்டிருக்கும் ஓர் இரவில், கிஷ்கிந்தையின் கோட்டை வாயிலுக்கு வந்து மிகவும் கோபத்துடன் கர்ஜனை செய்து வாலியைச் சண்டைக்கு அழைத்தான். நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்த என் சகோதரன், பயங்கரமான குரலில் உண்டான கர்ஜனையைக் கேட்டு விழித்தெழுந்து, பின் பொறுமை இழந்தவனாகக் கோபத்துடன் வேகமாக வெளியே புறப்பட்டான். (4–6)

வீரம் மிக்க அந்த அசுரனைக் கொல்லும் பொருட்டுக் கோபத்துடன் வெளியே புறப்பட்டு வந்த அவனை, அவன் மனைவிகளும் வணக்கத்துடன் நானும் தடுத்தேன். மகாபலம் பொருந்திய அவன், எங்கள் எல்லோரையும் உதறிவிட்டு வெளியே புறப்பட்டுவிட்டான். அதனால், அவனிடம் கொண்டிருந்த அன்பின் காரணமாக நானும் அவனுடன் வெளியே வந்தேன். அவன் (மாயாவி), என் சகோதரனையும் என்னையும் தூரத்திலிருந்தே பார்த்துவிட்டான். அதனால், அச்சமடைந்த அசுரன் வேகமாக ஓடத் தொடங்கினான். (7–9)

அவன் (மாயாவி) மனம் நடுங்கி ஓடத் தொடங்கினான்; நாங்கள் இருவரும் அவனைவிட வேகமாக நடந்து, அவனைப் பின்தொடர்ந்து சென்றோம். அப்போது உதயமான சந்திரனின் ஒளியால் பாதை நன்றாகத் தெரிந்தது. புற்களால் சூழப்பட்டதும், உட்புக முடியாததும், விசாலமானதும், பூமியை ஒட்டினாற்போல் அமைந்திருந்ததுமான ஒரு குகைக்குள் அவன் வேகமாகப் புகுந்துவிட்டான். நாங்கள் இருவரும் அந்த இடத்தை அடைந்து ('அசுரன் வெளியே வரட்டும்' என்று) காத்திருந்தோம். எதிரி, குகைக்குள் புகுந்துவிட்டதைப் பார்த்ததும், வாலி எல்லையில்லாக் கோபத்தால் ஆட்கொள்ளப்பட்டான். அவனுடைய பொறிகள் துடிக்கத் தொடங்கின. அப்போது, வாலி என்னைப் பார்த்துச் சொன்னான்— (10–12)

'சுக்ரீவா! நான் (குகையின்) உள்ளே சென்று எதிரியுடன் சண்டையிட்டு, அவனைக் கொன்றுவிட்டுத் திரும்பி வரும் வரையில், மிகவும் கவனத்துடன் குகையின் நுழைவாயிலில் இங்கேயே, இப்போது முதல் நின்று கொண்டிரு.' அவன் கூறியதைக் கேட்டதும் எதிரிகளை மாய்ப்பவனான அவனுடன் நானும் வருவதாகச் சொன்னதை மறுத்து, அப்போதே, அவன் கால்களின் மீது ('நான் உள்ளே வரமாட்டேன்' என்று) ஆணையிடச் செய்து, குகைக்குள் புகுந்துவிட்டான். குகைக்குள் அவன் புகுந்து ஓர் ஆண்டுக்கு மேல் ஆகிவிட்டது. அதேபோல் குகைவாயிலில் நின்று கொண்டிருந்த எனக்கும் ஓராண்டுக் காலம் கழிந்தது. (13–15)

அவன், குகைக்குள் எங்கேயோ காணாமல் போய்விட்டான் என்று எண்ணினேன். அவனிடமிருந்த அன்பினால் எனக்கு மனக்கலக்கம் ஏற்பட்டது. சகோதரனை வெகுநாட்களாகக் காணாததால், 'அவன் கொல்லப்பட்டு விட்டானோ?' என்ற சந்தேகம் தோன்றியது. நீண்ட காலத்திற்குப் பின், அந்தக் குகையிலிருந்து நுரையுடன் கூடிய சிவந்த இரத்தம் வெளியே வழிந்தோடி வந்ததைக் கண்டு, நான் (வாலி கொல்லப்பட்டான் என்று எண்ணி) மிகவும் துக்கமடைந்தேன். உள்ளே அசுரர்கள் எழுப்பிய கர்ஜனை ஒலி என் செவியில் விழுந்தது. போரில் தோல்வியைத் தழுவிய என் அண்ணனின் கதறலும் செவியில் கேட்டது. (16–18)

நண்பரே! இத்தகைய அடையாளங்களால் (அசுரர்களின் கும்மாளம், அண்ணனின் கதறல், வழிந்தோடும் இரத்தம் போன்றவற்றால்) என் அண்ணன் கொல்லப்பட்டான் என்று, புத்தியைக்

கொண்டு ஆலோசனை செய்து நிச்சயித்தேன். அதனால், மிகவும் துக்கமடைந்தேன். (அசுரர்கள் வெளியே வராமல், உள்ளேயே கிடந்து தவிக்கட்டுமே? என்ற பழிதீர்க்கும் எண்ணத்துடன்,) மலையைப் போன்ற ஒரு பாறையால் குகையின் நுழைவாயிலை மூடிவிட்டு, (இறந்து போன சகோதரனுக்குச் செலுத்த வேண்டிய) நீர்க்கடனைச் செலுத்திவிட்டு, கிஷ்கிந்தைக்குத் திரும்பி வந்தேன். நான் நடந்த நிகழ்வுகளை வெளியிடாமல் மறைத்து வைத்திருந்தாலும், அமைச்சர்கள் இடைவிடாது துளைத்தெடுத்து உண்மையைத் தெரிந்துகொண்டு விட்டார்கள். (19,20)

அவர்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து, ஒருமனதாக எனக்குப் பட்டாபிஷேகம் செய்வித்தார்கள். அவ்வாறு அரசனாக்கப்பட்ட நான், என் நாட்டை நீதிநெறியுடன் ஆண்டு கொண்டிருந்தபோது, எதிரியைக் கொன்றுவிட்டு, என் சகோதரன் கிஷ்கிந்தா நகரத்திற்குள் புகுந்தான். (வெற்றி பெற்று நாட்டுக்குத் திரும்பினான்.) (அவனை அடக்கிவிட்டு, நானே மன்னனாகத் தொடர்ந்திருக்கலாம். ஆனால்,) அவன், என் மூத்த சகோதரன் என்ற மரியாதையினால், என் மனம் அம்மாதிரியான எண்ணத்தில் ஈடுபடவில்லை. மகாத்மாவான அவனுக்கு உரிய முறையில் மரியாதை செய்யும்பொருட்டு அவன் கால்களில் விழுந்து வணங்கினேன். ஆனால், நெஞ்சம் நிறைந்த மகிழ்ச்சியுடன் அவன், எனக்கு ஆசி கூறவில்லை. ஐயனே! அவனுடைய பாதங்களில் என் தலையிலுள்ள கிரீடம் படும்படியாக வணங்கியும்கூட, என்னிடம் கொண்டிருந்த கோபத்தால் வாலி, என்னை மன்னிக்கவில்லை. (21–24)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
ஒன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பத்து

நாட்டிலிருந்து துரத்தியது ஏன்?

அப்போது, திரும்பி வந்து (தான் இல்லாத காலத்தில் நடந்துவிட்ட நிகழ்ச்சிகளால்) மனம் கலங்கி, கோபத்திற்கு ஆட்பட்டவனுமான என் சகோதரனின் நலனைக் கோரி, நான் அவனை வணங்கிச் சமாதானம் கூற முற்பட்டேன்— ‘உங்களால் எதிரி கொல்லப்பட்டான். அதிருஷ்டவசமாக, நீங்களும் திரும்பி வந்து விட்டீர்கள்! நீங்கள் ஒருவரே திக்கற்றவர்களைக் காப்பாற்றுகிறவர். வேறு துணையில்லாத எனக்கும் நீங்களே ரட்சகர். அநேக கம்பிகளையுடையதும் (விசாலமானதும்), உதயமான முழு நிலவைப் போன்றதுமான வெண்கொற்றக் குடையை, உங்கள் தலைக்கு மேலே நான் பிடிக்கிறேன்; மான்சவரி வீசுகிறேன். ஏற்றுக் கொள்ளுங்கள். (1–3)

மன்னரே! குகையின் வாயிலில் ஓர் ஆண்டுக்காலம் நின்று கொண்டிருந்தேன். அப்போது குகைக்குள்ளேயிருந்து இரத்தம் பெருகி வருவதைக் கண்டு மிகவும் துயரமடைந்தேன். சோகத்தினால் என் மனம் மிகவும் வேதனைப்பட்டது; புலன்கள் தடுமாறின. அப்போது, மலை போன்ற ஒரு பாறையால் குகையின் நுழைவாயிலை மூடிவிட்டு, அங்கிருந்து புறப்பட்டு மீண்டும் கிஷ்கிந்தைக்குள் புகுந்தேன். சோகத்துடன் நான் மட்டும் திரும்பி வந்ததைக் கண்ட குடிமக்களும் அமைச்சர்களும், (வேறு வழி தோன்றாமல்,) என்னுடைய விருப்பத்தைக் கேளாமலேயே எனக்குப் பட்டாபிஷேகம் செய்வித்தனர். இப்படி நடந்துவிட்டதற்காக, நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும். (4–6)

இங்கு மேன்மை தங்கிய மன்னர் நீங்கள்தான். நான், முன்பு இருந்ததைப் போல எப்போதும் உங்கள் பணியாளன். நீங்கள் காணாமல் போய்விட்டதால், இந்த அரசபதவியை நான் ஏற்றுக் கொண்டேன். அமைச்சர்கள், குடிமக்கள், நகரங்கள் நிறைந்த, எவ்வித இடையூறுகளும் இல்லாத, என்னிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையான இந்த அரசை, உங்களிடம்

திருப்பித் தருகிறேன். அன்புடையவரே! எதிரிகளை அடக்குபவரே! என்னிடம் நீங்கள் கோபம் கொள்ளலாகாது. மன்னரே! நான் தலைவணங்கிப் பிரார்த்திக்கிறேன்; இரு கைகளையும் கூப்பி வேண்டிக் கொள்கிறேன். அரசன் இல்லாத நாட்டை (தக்க தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்) பகை நாட்டினர் படையெடுத்து வருவார்கள். அதனால், அமைச்சர்களும் நகர மக்களும் ஒன்றாகக் கூடி, என்னை அரசபீடத்தில் அமர்த்திவிட்டார்கள்.' (7–10)

இவ்வாறு அன்பொழுகப் பேசிய என்னை, அந்த வானரன் இகழ்ந்து பேசி, 'கெட்டுத் தொலை' என்ற வசை கூறிச் சொல்லத் தகாத சொற்களைக் கூறினான். பின்னர், குடிமக்களையும் மதிப்புக்குரிய அமைச்சர்களையும் அழைத்து, நண்பர்கள் மத்தியில் என்னைப் பற்றி (பின்வரும்) மிகவும் இழிவான சொற்களைக் கூறினான். 'ஒரு நாள், இரவு வேளையில், மகாசுரனான மாயாவி இங்கே வந்தான் என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும். தீய எண்ணமுடையவனும் கொடியவனுமான அவன் என்னுடன் போர்புரிய விரும்பி, என்னை அழைத்தான். அவனுடைய கர்ஜனையைக் கேட்ட நான், அரண்மனையிலிருந்து வெளியே வந்தேன். உடனே மிகக் கொடியவனான இந்த சகோதரன் என்னைப் பின்தொடர்ந்து வந்தான். (11–14)

அந்த அசுரன் மகாபலசாலிதான் என்றாலும், அவ்விரவில் ஒரு துணைவனோடு நான் வருவதைக் கண்டதுமே, அச்சத்தால் உள்ளம் நடுங்கி, நாங்கள் பின்தொடர்ந்து வருவதைப் பார்த்துக் கொண்டே, வேகமாக ஓடிச்சென்று ஒரு பெரிய குகைக்குள் புகுந்து கொண்டான். மிக பயங்கரமானதும் மிகப் பெரியதுமான குகைக்குள் அவன் (அசுரன்) புகுந்து கொண்டதைத் தெரிந்துகொண்டு, கொடிய எண்ணமுடைய என் சகோதரனைப் பார்த்துக் கூறினேன். அசுரனைக் கொல்லாமல், இங்கிருந்து கிஷ்கிந்தா நகரத்திற்குச் செல்லும் எண்ணம் எனக்கு இல்லை. (மாயாவியை உயிருடன் விட்டு வைத்தால், அவன் மீண்டும் வந்து தொந்தரவு கொடுப்பான். அத்துடன் தனிப் போருக்கு அழைத்த பகைவனோடு சண்டை போட்டு வெற்றி பெறாமல் திரும்புவது வீரனுக்கு அழகல்ல.) (15–17)

'இவன் (குகையின் நுழைவாயிலில்) காத்துக் கொண்டிருக்கிறான்' என்று (என்னிடமிருந்து தப்பி, மாயாவி வெளியே வந்தாலும் இவனிடமிருந்து தப்பிச் செல்ல முடியாது என்று) நம்பிக் கொண்டு, உள்ளே செல்வதற்கே முடியாதிருந்த அதற்குள் நுழைந்தேன். அங்கு அவனைத் தேடிக் கொண்டேயிருக்கையில் ஓர் ஆண்டுக் காலம் கழிந்துவிட்டது. பயங்கரமான அந்த எதிரியைக் கண்டுபிடித்து, உறவினர்களோடுகூட அவனை, அங்கேயே நான் மிக எளிதாகக் கொன்றேன். சாவதற்கு முன் அவன் எழுப்பிய பெருங்குரலினால், அவன் வாயிலிருந்து வழிந்தோடிய இரத்தவெள்ளத்தால் அந்தக் குகை முழுவதும் நிறைந்து கடக்க முடியாததாயிற்று. (18–20)

துந்துபியின் புதல்வனும் ஆற்றல் மிக்கவனும் பகைவனுமான அவனைக் கொன்றுவிட்டு வெளியே வர முயன்றபோது, குகையின் நுழைவாயில் மூடப்பட்டிருந்ததால், வெளியே வரும் வழியைக் காண முடியவில்லை. பல தடவைகள், 'சுக்ரீவா, சுக்ரீவா' என்று உரத்த குரலில் கூவினேன். எவ்விடத்திலிருந்தும் எனக்குப் பதில் கிடைக்காததால், நான் மிகவும் துக்கமடைந்தேன். (தட்டுத் தடுமாறி, நுழைவாயில் பாறையால் மூடப்பட்டிருப்பதை அறிந்து,) பல தடவைகள் கால்களால் உதைத்து, அதைப் பிளந்தேன். பின்னர், அங்கிருந்து வெளியே வந்து, சரியான பாதையைக் கண்டுபிடித்து நகரத்திற்கு திரும்பி வந்தேன். (21–23)

சகோதரப் பற்றை முற்றிலுமாக மறந்து, இந்த அரசு தனக்கே வந்து சேரவேண்டும் என்ற எண்ணத்துடன், கொடியவனான இந்த சுக்ரீவனால் அங்கேயே (அந்தக் குகையிலேயே) நான் அடைத்து வைக்கப்பட்டேன்.' வானரனான வாலி, என்னைக் குறித்து, அவ்விடத்தில் இவ்வாறு கூறிவிட்டு, நான் அணிந்திருந்த ஒரே ஆடையுடன், சிறிதும் நெஞ்சம் கலங்காதவனாய், என்னை வெளியேற்றினான். இராமபிரானே! இவ்வாறு அவனால் நான் கைவிடப்பட்டேன்; என் மனைவியையும் தன்னிடம் வைத்துக் கொண்டான். அவனிடமிருந்த அச்சத்தால், காடுகளும் கடல்களும் நிறைந்த இந்தப் பூமண்டலம் முழுவதும் சுற்றிச் சுற்றி அலைந்தேன். (24–26)

முக்கியமானதொரு காரணத்தால், வாலி புகுந்து வர முடியாத சிறந்த மலையான இந்த ரிஷ்யமூகத்தில், மனைவியைப் பறிகொடுத்ததால் மனவேதனையுடன்கூட நான் தங்கி வசித்துக் கொண்டிருக்கிறேன். ரகு குல நாயகரே! (எனக்கும் வாலிக்கும்) பகைமை ஏற்பட்டதற்கான விவரங்களை முழுமையாகத் தங்களிடம் கூறிவிட்டேன். குற்றம் ஏதும் புரியாதவனான எனக்கு எவ்வளவு துன்பங்கள் ஏற்பட்டுள்ளன என்பதைத் தாங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அனைத்து உயிர்களுக்கும் அபயம் அளிப்பவரே! வீரரே! வாலியை நினைத்து அஞ்சி நடுங்கிக் கொண்டிருக்கும் எனக்கு, அவனை அடக்குவதன் மூலம் அருள்புரிய வேண்டும்.'' (27–29)

இவ்வாறு வேண்டிக்கொள்ளப்பட்ட, தேஜஸ்வியும் அறநெறியாளருமான அவர் (இராமன்) சுக்ரீவனைப் பார்த்து சற்றே புன்னகை புரிந்தாற்போல், அறத்தோடியைந்த சொற்களைக் கூறத் தொடங்கினார்— ''(நண்பனே!) வீண் போகாதவைகளும், சூரியன் போல் பேரொளி வீசுபவைகளும் கூர்மையானவைகளுமான என்னுடைய இந்த அம்புகள், தீய நடத்தையுள்ள அந்த வாலியின் மேல் வேகமாக விழுந்து துளைக்கப் போகின்றன.

மகாபாவியும், தீய ஒழுக்கமுடையவனும், உன்னுடைய மனைவியைக் கவர்ந்து வைத்துக் கொண்டிருப்பவனுமான வாலி, என் கண்களில் படாதிருக்கும் வரையில்தான் உயிருடன் இருப்பான். (என் கண்ணில்பட்டு விட்டானேயானால், ஒரே பாணத்தால் அவனைக் கொன்று விடுவேன்.) எனக்கும் நேர்ந்துள்ள அதே அனுபவம் போல, (மனைவியைப் பிரிந்து) துயரக்கடலில் நீ மூழ்கியிருக்கிறாய் என்பதை உணர்கிறேன். துன்பங்களிலிருந்து நான் உன்னைக் கடைத்தேற்றுகிறேன். குறைவில்லாத சௌக்கியத்தை அடையப் போகிறாய்.'' தனக்கு நன்மையைத் தரும் சொற்களை இராமனிடமிருந்து கேட்டதும், சுக்ரீவன் மிகவும் மனம் பூரித்து, பல முக்கிய செய்திகளைக் கூறினான். (30–34)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
பத்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பதினொன்று

வாலியின் பராக்கிரமம்

உற்சாகத்தையும் ஆண்மையையும் ஊட்டக் கூடிய இராமனுடைய சொற்களைக் கேட்ட சுக்ரீவன், இராமபிரானுக்குக் கைகூப்பி வணங்கி, தன் பாராட்டுக்களையும் புகன்றான்— ''பேரொளி வீசுகின்ற, மிகக் கூர்மையான, உயிர்நிலைகளைத் தாக்குகின்ற தங்கள் பாணங்களால், தாங்கள் கோபம் கொண்டால், ஊழிக்கால சூரியனைப் போல, உலகங்கள் அனைத்தையும் அழித்துவிடக் கூடியவர் என்பதில் ஐயமில்லை. ஆனால், வாலியினுடைய பேராண்மை, பேராற்றல், கலங்காத மனஉறுதி ஆகியவைகளைத் தாங்கள் மனமொன்றிக் கேட்டுவிட்டு, அதற்குப் பிறகு, (அவனை வெல்வதற்கு) செய்ய வேண்டிய காரியங்களை நிச்சயுங்கள். (1–3)

சூரியன் உதிப்பதற்கு முன்னதாகவே, பிரும்மமுகூர்த்தத்தில் கண்விழித்து, மேற்கு சமுத்திரத்திலிருந்து கிழக்கு சமுத்திரத்திற்கும், தெற்கு சமுத்திரத்திலிருந்து வடக்கு சமுத்திரத்திற்கும் கொஞ்சமும் உடற்தளர்ச்சியடையாமல் தாண்டுகிறான். மகாவீரம் பொருந்திய அவன் மலையுச்சிகளில் ஏறி, பாறைகளைப் பிடுங்கி மேலே தூக்கியெறிந்து, அவை கீழே விழும்போது தன் கைகளால் உறுதியாகப் பிடித்துக் கொள்வான். தன்னுடைய உடல்பலத்தை வெளிப்படுத்தும் எண்ணத்துடன், காடுகளிலுள்ள பலவகையான பெரிய, வைரம் பாய்ந்த மரங்களை, தன் ஆற்றலினால் செருக்குக் கொண்டு முறித்துத் தள்ளுவான். (4–6)

(இது இவ்வாறிருக்கையில் நடந்த விஷயம் ஒன்றைக் கூறுகிறேன் கேளுங்கள்). கைலாச மலையின் சிகரங்களைப் போன்று பேருடல் படைத்தவனும், மகாவீரம் பொருந்தியவனுமான துந்துபி (என்ற அசுரன்) எருமை உருவமேற்று ஆயிரம் யானைகளின் பலத்தைக் கொண்டவனாக இருந்தான். தீய எண்ணங்கொண்ட அவன், உடலாற்றலால் அகந்தை அடைந்து, வரம் பெற்றதனால் சிந்தை மழுங்கி பெரிய உருவத்தை எடுத்துக் கொண்டு, நதிகளுக்கு அரசனான சமுத்திரத்தின் அருகே சென்றான். வரிசை வரிசையாக அலைகள் வீசுவதும் (முத்து, பவழம் முதலான) இரத்தினங்கள் உடையதுமான பெருங்கடலைச் சிறிதும் மதிக்காமல் (அலட்சியமாக), (பெருங்கடலின் அதிஷ்டான தேவதையான) சமுத்திர ராஜனைப் பார்த்து, 'என்னுடன் போருக்கு வா' என்று அழைத்தான். (7–9)

மன்னரே! அப்போது மகாபலம் பொருந்தியவனும் தருமாத்மாவுமான கடலரசன் வெளிப்பட்டு, காலதேவனின் வசப்பட்டிருந்த அசுரனைப் பார்த்துக் கூறினான்— 'போரில் வல்லவனே! உன்னுடன் போர் செய்யும் திறன் என்னிடம் இல்லை. (ஆனால்,) உன்னுடன் துவந்துவ யுத்தம் செய்யும் ஆற்றல் பெற்றவனைக் கூறுகிறேன், கேள். அடர்த்தியான காடுகள் நிறைந்த சிறந்த மலை; தவம் செய்பவர்களுக்குப் புகலிடம்; பரமேசுவரனுக்கு மாமனார்; பெரிய நீர்நிலைகள் நிறைந்தது; அநேக பள்ளத்தாக்குகளும் குகைகளும் நிறைந்தது. அந்த மலையரசன், (உனக்கு நிகராகப் போர் செய்து) மாவீரனான உனக்கு, யுத்தத்தில் எல்லையற்ற திருப்தியைத் தரக்கூடியவன்.' (10–13)

கடல் மன்னன் (தன்னுடன் போர் செய்வதற்கு) பயப்படுகிறான் என்று நினைத்துக் கொண்ட அந்தப் பேரசுரன், வில்லிலிருந்து விடுபட்ட அம்பைப் போல, இமாலயத்தின் தாழ்வரைக் காட்டைச் சென்றடைந்தான். அங்கே, பெரிய யானைகள் போல் விளங்குபவையும் வெண்மையானவையுமான கற்பாறைகளைப் பல தடவைகள் தரையில் உருட்டித் தள்ளிப் பேரொலி எழுப்பினான். அப்போது, வெண்முகில் போன்ற தோற்றம் கொண்டு, இனிய இயல்புடைய, காண்போர் உள்ளத்தை மகிழ்விக்கும் மேனி எழிலுடன் இமவான், தன் சிகரத்தில் (உச்சியில்) இருந்தவாறே பின்வருமாறு மொழிந்தான்— (14–16)

'அறப்பற்றுடைய துந்துபியே! நான் போர்த்திறன் இல்லாதவன்; தவம் செய்பவர்களுக்கு இருப்பிடம் கொடுப்பவன். நீ இவ்வாறு என்னைத் தொந்தரவு செய்யக்கூடாது.' பேரறிஞனான மலையரசனின் அந்தச் சொற்களைக் கேட்ட துந்துபி, ('சே! இவனும் நம்முடன் யுத்தம் செய்ய வரவில்லையே? என்ற ஏமாற்றத்தால், போர்த்தினவு தாங்க முடியாமல்) அகந்தையால் கண்கள் சிவக்கப் பின்வருமாறு கூறினான்— 'சரி, உனக்குப் போர்த்திறன்தான் இல்லை; அல்லது என்னிடமுள்ள பயத்தால் யுத்தம் செய்யவும் முற்படவில்லை – அது எப்படியோ போகட்டும். இப்போது (யாருடனாவது) யுத்தம் செய்ய வேண்டும் என்ற வெறி எனக்கு இருக்கிறது. ஆகவே, என்னுடன் யுத்தம் செய்யக்கூடிய ஒருவனைக் காட்டு.' (17–19)

பேச்சில் வல்லவனும், அறத்தை உயிரெனக் கொண்டவனுமான இமவான், மேற்கண்டபடி உரைத்த, கோபத்தின் வசப்பட்டிருந்த மகாசுரனைப் பார்த்து, இதுவரையில் யாரும் சொல்லியிராததை (போர் செய்வதில் துந்துபிக்கு ஈடு கொடுக்கக் கூடியவன் பெயரை) சொன்னான்— 'பேரறிவாளன்; இந்திரனுக்கு நிகரான பராக்கிரமமுடையவன்; ராஜ்யலட்சுமியை உடையவன்; இணையில்லாத அழகுபடைத்த கிஷ்கிந்தையில் வாலி என்ற பெயருடைய வானரன் வசித்து வருகிறான். (20,21)

இந்திரனுக்கும் நமுசிக்குமிடையே எவ்வாறு போர் நடந்ததோ, அதுபோல, மகா அறிவாளியும் போர்க்கலையில் நிபுணனுமான அவன் (வாலி), உன்னுடன் வீரதீரத்துடன் துவந்துவ யுத்தம் செய்யத்தக்கவன். (இந்திரன்–நமுசி பற்றிய போர் வரலாறு பலவகையாகக் காணப்படுகிறது. அசுரனான நமுசி, இந்திரனை வென்று சிறையில் வைத்தான். பின்னர், ஓர் உடன்படிக்கையின்படி

வெளியே விடப்பட்ட இந்திரன், உடன்படிக்கையை மீறாமல் ஒரு தந்திர வழியைக் கடைப்பிடித்து நமுசியைக் கொன்றான் – என்பது ஒரு வரலாறு.) உடனே யுத்தம் புரிய வேண்டும் என்ற வெறி உனக்கு இருந்தால், இப்போதே அவனிடம் செல். யுத்தம் செய்யும் வாய்ப்பை நழுவவிடாதவன், அவன். போர்புரியும் எல்லாக் காலங்களிலும் அவன் தன் வீரத்தைக் காட்டுபவன்.' (22,23)

கோபத்தால் ஆட்கொள்ளப்பட்ட துந்துபி, இமவானின் சொற்களைக் கேட்டதும் வாலியினுடைய கிஷ்கிந்தை நகருக்குப் போய்ச் சேர்ந்தான். அவன் கூரிய கொம்புகளை உடையதும் பயங்கரமான தோற்றமுடையதுமான ஓர் எருமையின் உருவத்தை ஏற்று, ஆகாயத்தில் நீர்நிறைந்த மாரிக்கால மேகம் போல் விளங்கினான். மகாபலம் பொருந்திய துந்துபி, கிஷ்கிந்தையின் நுழைவாயிலை அடைந்து, துந்துபி வாத்தியத்தின் பேரொலியைப் போல, பூமியே நடுங்கும்படியாகப் பேரிரைச்சலிட்டான். அருகிலிருந்த மரங்களைப் பெயர்த்தான்; கால்குளம்புகளால் பூமியைக் கீறினான்; செருக்குக்கொண்ட யானை போல கொம்புகளால் நுழைவாயிலைப் பிளந்தான். (24,27)

அப்போது அந்தப்புரத்தில் (உல்லாசமாக) இருந்த வாலி, (துந்துபி எழுப்பிய) சப்தங்களைக் கேட்டு மிகவும் கோபம் கொண்டு, தாரகைக் கூட்டங்களால் சூழப்பட்ட சந்திரன் போல, மனைவிமார்கள் புடைசூழ வெளியே (நகரின் வாயிற்புறத்திற்கு) வந்தான். வனத்தில் வாழும் எல்லா வானரர்களுக்கும் மன்னனான வாலி, தெளிவான சொற்களில், சுருக்கமான ஒரு கருத்தை துந்துபியிடம் கூறினான்— 'பலம் மிக்கவனே! துந்துபியே! உன்னை எனக்கும் தெரியும். இந்த நகர வாயிலை நொறுக்கித் தள்ளி, ஏன் கர்ஜனை செய்கிறாய்? (இந்த அக்கிரமங்களை உடனடியாக நிறுத்திக் கொண்டு) உன் உயிரைக் காப்பாற்றிக் கொள்.' (28–30)

புத்திமானான வானர மன்னனின் இந்தச் சொற்களைக் கேட்டதும், துந்துபி கோபத்தால் கண்கள் சிவக்க, பின்வரும் சொற்களைக் கூறினான்— 'வீரனே! பெண்கள் எதிரில் (அஞ்சா நெஞ்சனைப் போல) இத்தகைய சொற்களைக் கூறுவது உனக்கு அழகல்ல. இப்போதே என்னுடன் போருக்கு வா. அப்போது உன் ஆற்றலை அறிந்து கொள்வேன். இல்லாவிட்டால், குரங்கே! இந்த இரவு முடியும்வரை என் கோபத்தை அடக்கிக் கொள்கிறேன். சூரியோதயம் வரை உன் விருப்பப்படிக் காமகேளிக்கைகளில் ஈடுபட்டிரு. (31–33)

அடடா! நீயோ, எல்லா வானரர்களுக்கும் அரசனல்லவா! (அதனால், கடைசியாக) உன் நண்பர்களான வானரங்களையெல்லாம் கட்டித் தழுவி, அவர்களுக்கு ஏதேனும் கொடுக்க விரும்பினால், அதையும் கொடுத்துவிட்டு விடைபெற்றுக் கொள்! நான், உன் செருக்கை அழிக்க வந்திருக்கிறேன்! கிஷ்கிந்தையை(க் கடைசியாக ஒரு தடவை) நன்றாகப் பார்த்துவிடு. உனக்கு ஈடான ஒருவனை அரசனாக ஆக்கிவிடு. இப்போது மனைவிகளோடு மகிழ்ச்சியுடன் இருந்துவிட்டு வா. மதுபானத்தால் மதிமயங்கியிருப்பவன்; அஜாக்கிரதையாக இருப்பவன்; தூங்கிக் கொண்டிருப்பவன்; கையில் ஆயுதம் இல்லாதவன்; உன்னைப் போல காமவெறியில் மதிமயங்கி இருப்பவன் – இவர்களைக் கொல்பவன், உலகத்தில் கருச்சிதைவு செய்த பாவத்தை அடைகிறான்.' (34–36)

(வாலி) இதைக் கேட்டதும், மெலிதாகப் புன்னகை செய்து, தாரை முதலான மனைவிமார்கள் எல்லோரையும் அனுப்பிவிட்டு, கோபத்துடன் அந்தப் பேரசுரனைப் பார்த்துக் கூறினான்— 'இவன் மதுபானம் செய்தவன் என்று என்னைப் பற்றி நினைத்து விடாதே. நீ, இப்போதே யுத்தம் செய்யப் பின்வாங்கவில்லை என்றால், நான் பானம் செய்திருப்பது, நம்மிடையே நடக்கப் போகும் யுத்தத்திற்காகச் செய்யப்பட்ட வீரபானம் என்று எண்ணிக்கொள்.' (யுத்தம் தொடங்குவதற்கு முன், யுத்தவெறி ஏற்பட வேண்டும் என்பதற்காகப் போர்வீரர்கள் குடிப்பது, வீரபானம்.) (37,38)

அவனிடம் இவ்வாறு சொல்லிவிட்டு, தன்னுடைய தந்தையான இந்திரனால் கொடுக்கப்பட்ட பொன்மாலையைக் கழுத்தில் போட்டுக் கொண்டு, சினம் மிகுந்தவனாக, யுத்தத்திற்கு ஆயத்தமாக

வந்து நின்றான். (*'ஏதத் காஞ்சநமாலா த₄ரண காலே ய: புரோ யுத்₃த₄யாக₃ச்ச₂தி தஸ்ய ப₃லம் ஸர்வம் தவைவ ப₄விஷ்யதீதி மஹேந்த்₃ரேண த₃த்தாம் இத்யர்த்த₂: ।'* – இந்த காஞ்சனமாலை உன் கழுத்தில் இருக்கும்போது உன்னுடன் போர் புரிவதற்காக, உன் எதிரில் எவன் வருகிறானோ, அவனுடைய சக்தி முழுவதும் உன்னை வந்தடையும் என்று சொல்லி இந்திரன் கொடுத்தான் – என்பது, பாஷ்யகாரார் கோவிந்தராஜர் குறிப்பு.) (39)

வானரசிரேஷ்டனான வாலி, மலை போல் பேருருவத்துடனிருந்த துந்துபியை, இரு கொம்புகளையும் பிடித்து, வீரக்குரல் எழுப்பியவாறே பல தடவைகள் சுழற்றினான்; அவனைத் தரையில் அடித்து வீழ்த்தி, பேரிரைச்சலுடன் குரல் எழுப்பினான். தரையில் அடிபட்டு விழுந்த அவனுடைய இரு செவிகளிலிருந்தும் இரத்தம் பெருகி வழிந்தது. கோபத்தால் ஆட்கொள்ளப்பட்டு, ஒருவரையொருவர் ஜெயிக்க விரும்பிய துந்துபி–வாலி ஆகிய இருவரிடையே மிகவும் பயங்கரமான யுத்தம் தொடங்கியது. அப்போது, இந்திரனுக்கு நிகரான பராக்கிரமம் படைத்த வாலி, முஷ்டி–முழங்கால்–பாறை மற்றும் மரங்களால் போர் புரிந்தான். (40–43)

போரில் ஒருவரையொருவர் தாக்கிக் கொள்ளும் அந்த நேரத்தில், வானரன், அசுரன் ஆகிய இருவரில், அசுரன் சளைத்தவனாகிவிட்டான்; இந்திரனுடைய மைந்தனான வாலியின் வெற்றி வாய்ப்பு மேலும் வளர்ந்தது. உயிரைப் பறிப்பதற்காக நடந்த அந்தப் போரில், அசுரனான துந்துபியை உயரே தூக்கித் தரையில் வீசியெறிந்து (வாலி, தன் கால்களால் அமுக்கிப்) பிசைந்தான். பேருடல் படைத்த அவன், உயிரை இழந்து தரையில் விழுந்தான். உயிரிழந்து, ஜடப்பொருளாகிவிட்ட அவனை, மகாபலம் பொருந்திய வாலி, தன் இரு கைகளாலும் (உயரே) தூக்கி, ஒரே வீச்சில் ஒரு யோஜனை தூரத்திற்கப்பால் போய் விழும்படியாக வீசியெறிந்தான். (44–46)

வேகமாக வீசியெறியப்பட்ட அந்த உடலின் வாயிலிருந்து ஏராளமான இரத்தத்துளிகள் காற்று வீச்சினால் அடித்துச் செல்லப்பட்டு, மதங்க முனிவரின் ஆசிரமப் பகுதியில் விழுந்தன. மிகவும் கீர்த்தி பெற்ற அந்த முனிவர், ஆசிரம வளாகத்தில் வந்து விழுந்த இரத்தத் திவலைகளைக் கண்டு, கோபம் கொண்டவராகி, (இந்த அக்கிரமமான காரியத்தைச் செய்த) 'அவன் யார்?' என்று தனக்குள் சிந்தித்துப் பார்த்தார். 'தீய இயல்புடைய எவனால், நான் (அதாவது, என் ஆசிரமம்) இரத்தத்தினால் அசுத்தமாக்கப்பட்டேன்? தீய குணம், கெட்ட புத்தி, அடக்கமின்மை கொண்ட இந்த மூர்க்கன் யார்?' இவ்வாறு தனக்குள் சொல்லிக் கொண்டு, உத்தமமுனிவராகிய மதங்கர், வெளியே வந்து, மலை போன்ற பேருடல் படைத்ததும், உயிரிழந்து தரையில் கிடந்ததுமான எருமையைக் கண்டார். (47–50)

தன் தவமகிமையினால், (எருமையை எறிந்த அடாத செயல்) அது ஒரு வானரனால் செய்யப்பட்டது என்பதை அறிந்து கொண்டார். அதைத் தூக்கியெறிந்த வாலிக்கு(ப் பின்வரும்) சாபத்தைக் கொடுத்தார்— 'நான் வசிக்கும் இடமான இந்தக் காடு, இரத்தத் துளிகளால், எவனால் மாசுபடுத்தப்பட்டதோ, அவன், இந்த இடத்திற்கு இனி வரக்கூடாது; வந்தால் மரணம் அடைவான். இங்குள்ள மரங்கள் எல்லாம், அசுரனின் உடல் எறியப்பட்டபோது முறிந்துவிட்டிருக்கின்றன. (எனவே,) என் ஆசிரமத்தைச் சுற்றிலும் ஒரு யோஜனை தூரத்திற்குள், அறிவிலியாகிய அவன் காலடி எடுத்து வைத்தானேயானால், நிச்சயமாக, அவன் உயிருடன் இருக்க மாட்டான். (51–53)

நான் வசிக்கின்ற இந்தக் காட்டில், அவனுடைய (வாலியினுடைய) அமைச்சர்கள், நெருங்கிய உற்றார்–உறவினர்கள் யாரேனும் இருந்தால், அவர்களும் இந்தப் பிரதேசத்தில் வசிக்கக் கூடாது. நான் கொடுத்திருக்கும் சாபத்தைக் கேட்டு, வேறு எங்கேனும் சென்றுவிட வேண்டும். எனது ஆசிரமத்தைச் சுற்றியுள்ள இந்தக் காட்டுப் பகுதியை, நான் புத்திரவாத்சல்யத்துடன் பரிபாலித்து வருகிறேன். இங்குள்ள மரங்களின் இலை–தளிர்கள் மற்றும் பழம்–கிழங்குகளை அழித்துக் கொண்டு, நான் கூறியபடி வெளியேறாமல் இங்கேயே தங்கியிருப்பார்களேயானால், அவர்களையும்

நிச்சயமாக சபித்து விடுவேன். இன்றைக்கு மட்டும் அவர்கள் இங்கே இருக்கலாம். நாளைய தினம், எந்தக் குரங்கையாவது நான் இங்கே பார்த்தால், பல ஆயிரம் ஆண்டுகள் அவர்கள் பாறைகளாகப் போய் விடுவார்கள்.' (54–56)

பின்னர், முனிவரால் கொடுக்கப்பட்ட சாபத்தைக் கேள்விப்பட்ட வானரர்கள், (கூட்டம் கூட்டமாக) அந்தக் காட்டிலிருந்து வெளியேறத் தொடங்கினார்கள். அவர்களைப் பார்த்து வாலி கேட்டான்— 'மதங்க முனிவரின் காட்டில் வசித்துக் கொண்டிருந்த நீங்கள் எல்லோரும் என்னிடம் ஏன் வந்து விட்டீர்கள்? வானரர்களுக்கு அங்கே ஆபத்து ஏதுமில்லையே?' அப்போது, காஞ்சனமாலை அணிந்திருந்த வாலியிடம், வானரர்கள் ஒன்றாகக் கூடி, துந்துபியின் உடல் விழுந்ததையும், வாலிக்குக் கொடுக்கப்பட்ட சாபத்தைப் பற்றிய விபரத்தையும், அதைத் தொடர்ந்து நடந்தவைகள் எல்லாவற்றையும் தெரிவித்தார்கள். (57–59)

வானரர்கள் கூறிய செய்தியைக் கேட்டவுடன், மாமுனிவராகிய அவரிடம் சென்று, கைகளைக் கூப்பிக் கொண்டு வாலி விண்ணப்பித்துக் கொண்டான். ஆனால், மாமுனிவர் அவனை மதிக்காமல் தன் குடிலுக்குள் சென்றுவிட்டார். (வாலி, மதங்கர் அருகில் வந்தும் அவன் உயிர் போகவில்லை என்பதால், 'இன்று ஒரு நாள் மட்டும் அவர்கள் இங்கே இருக்கலாம்' என்று முனிவர் கூறியது, வாலிக்கும் பொருந்தும் என்று கொள்க.) வாலியும் சாபத்தின் தவிர்க்க முடியாத தன்மையை உணர்ந்து, அச்சமடைந்து, மனவருத்தத்துடன் அவ்விடமிருந்து சென்றான். மன்னரே! அப்போது முதற்கொண்டு, சாபத்திற்கு அஞ்சி, பயந்து மாமலையான இந்த ரிஷ்யமூகத்திற்குள் நுழையவோ, ஏன் கண்ணெடுத்துப் பார்க்கவோகூட துணியாதிருக்கிறான். (60–62)

இராம வள்ளலே! அவன் இந்தப் பெருங்காட்டுக்குள் நுழையமாட்டான் என்பதையறிந்து, அமைச்சர்களோடுகூட கவலையில்லாமல் நான் இங்கே தங்கியிருக்கிறேன். தன் ஆற்றலில் செருக்குக் கொண்ட வாலியினால் தூக்கியெறிப்பட்டதும், பெரிய மலையின் சிகரத்தைப் போன்றதுமான துந்துபியின் எலும்புக் குவியல், இதோ காணப்படுகிறது. ஏராளமான கிளைகளையுடைய, வலுவான ஏழு ஆச்சா மரங்கள் இங்கே இருக்கின்றனவல்லவா? இவைகள் ஒவ்வொன்றையும் (தான் களைத்துப் போகாமல் ஆட்டி அசைத்து) தன் பேராற்றலால் ஓர் இலைகூட இல்லாமல் செய்வதற்கு வல்லவன், வாலி. (63–65)

வீர இராமனே! அவனுடைய ஒப்பற்ற பராக்கிரமத்தை நான் விவரித்துவிட்டேன். மாமன்னர் புதல்வரே! இப்படிப்பட்ட வாலியை, தாங்கள் எப்படிப் போரில் கொல்ல முடியும்?'' இவ்வாறு பேசி முடித்த சுக்ரீவனைப் பார்த்து, சற்றே புன்னகைத்தவாறு இலக்குவன் கேட்டான்— ''நீங்கள் சொல்லும் எந்தவொரு (கடினமான) காரியத்தை (இராமன்) செய்து முடித்தால், (அவரால்) வாலியைக் கொல்ல முடியும் என்ற நம்பிக்கை உங்களுக்கு ஏற்படும்?'' (66,67)

அவனைப் பார்த்து, சுக்ரீவன் பின்வருமாறு பதில் கூறினான்— ''முன்னொரு காலத்தில் இந்த ஏழு ஆச்சா மரங்களையும் வாலி ஆட்டி அசைத்திருக்கிறான். பின்னரும் பல தடவைகள் அவ்வாறே செய்துள்ளான். லட்சுமணா! இராமபிரான், இவைகளுள் ஒரு மரத்தை ஒரேயொரு பாணத்தால் துளைக்க வேண்டும்; கொல்லப்பட்ட எருமையின் எலும்புக்கூட்டை ஒரு காலால் தூக்கி, மிகவும் பலமாக, இருநூறு வில்லளவு தூரத்திற்கு அப்பால் எறியவேண்டும். அப்போது ஸ்ரீராமனுடைய பராக்கிரமத்தைக் கண்களால் கண்டு, வாலி மாண்டுவிட்டதாகவே எண்ணிக் கொள்வேன்.'' ('*த நு:*' என்று சுலோகத்தில் உள்ள சொல், நீட்டலளவையைக் குறிப்பது. அதாவது, சுமாராக ஆறடி நீளம்). (68–70)

கண்ணோரங்களில் செம்மை படர்ந்த இராமனைப் பார்த்து மேற்கண்டவாறு கூறிவிட்டு, சிறிது நேரம் யோசனை செய்தபின், காகுத்தனைப் பார்த்து மேலும் கூறினான்— ''மகாபலம் பொருந்திய வானரனான வாலி சூரன்; சூரர்களை(ப் போரில்) கொன்றவன்; அவன் ஆற்றலும் ஆண்மையும் புகழ்பெற்றவை; போர்களில் எவராலும் வெல்ல முடியாதவன். தேவர்களாலும்கூட

செய்தற்கரிய செயல்களை இவன் (எளிதாகச்) செய்வதைப் பார்த்துவிட்டு, அச்சமடைந்து, (அவன் காலடி படமுடியாத) ரிஷ்யமூகத்திற்கு வந்து சேர்ந்துவிட்டேன். (71–73)

வானரர் தலைவனான அவன் எவராலும் வெல்ல முடியாதவன்; அடக்க முடியாதவன் (அலட்சியப்படுத்த முடியாதவன்); எதிரிகளின் மிரட்டலுக்கு அஞ்சாதவன் என்பதை நன்றாக எண்ணிப் பார்த்து, (சாபம் காரணமாக வர முடியாத) இந்த ரிஷ்யமூக மலையை விட்டு அகலாதிருக்கிறேன். என்னை அனுசரித்துப் போகிறவர்களும் உயர் குணங்களை உடையவர்களுமான (நம்பிக்கைக்கு உரியவர்களுமான) அனுமான் முதலிய அமைச்சர்களோடு கூடவே, எப்போதும் ('அவன் வந்து விடுவானோ?' என்ற) சந்தேகத்துடனும் அச்சத்துடனும் நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். நண்பர்களிடம் அன்பு பாராட்டுபவரே! (தாங்கள்) மிகச்சிறந்த, நல்ல நண்பராக எனக்குக் கிடைத்திருக்கிறீர்கள். ஆண் சிங்கமே! மிக்க உறுதியான இமயமலையைப் போன்ற தங்களை, நான் அண்டியிருக்கிறேன். (74–76)

ஆனால், ரகுநந்தனா! கொடிய தன்மை கொண்ட (என்) சகோதரனும் பலம் மிகுந்தவனுமான அவனுடைய ஆற்றலை, நான் நேரில் பார்த்திருக்கிறேன். ஆனால், போர்க்களத்தில் தங்கள் வீரத்தை நான் கண்ணால் பார்த்ததில்லை. நான், தங்களை அவனுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதாக எண்ணக்கூடாது. தங்களை அவமதிக்கவுமில்லை; பயமுறுத்தவுமில்லை. ஆனால், மகாபயங்கரமான அவனுடைய கொடுஞ்செயல்களை நேரில் பார்த்திருப்பதால், என் மனத்தில் அச்சம் புகுந்திருக்கிறது. இராகவா! தங்களுடைய சத்தியமான வாக்கும், அறிவாற்றலும், மனவுறுதியும், நீறுபூத்த நெருப்புப் போல் பொலிவுடன் விளங்கும் தங்களின் திருத்தோற்றமுமே (தங்களுடைய நிகரற்ற) வீரத்தை விளக்குவதற்குப் போதுமானவை.'' (77–79)

மேன்மை தங்கிய இராமன், மகாத்மாவான சுக்ரீவனின் சொற்களைக் கேட்டு, வானரனான அவனைப் பார்த்து இலேசாகச் சிரித்தவண்ணம் (பின்வருமாறு) பதில் கூறினார்— ''வானரனே! எங்கள் போர்த்திறனில் உனக்கு நம்பிக்கை ஏற்படவில்லையென்றால், உன்னால் போற்றத்தக்க விதத்தில் நம்பிக்கையை விளைவிக்கிறேன்.'' இலக்குவனின் மூத்தவரும் தோள்வலிமை மிக்கவரும் ரகுகுல திலகமுமான அவர், (இவ்வளவு தானே? என்று) சுக்ரீவனுக்கு ஆறுதல் கூறிவிட்டு, ஒரு காலின் கட்டைவிரலால், துந்துபியின் உடலை வெகு எளிதாகத் தூக்கி, பத்து யோஜனை தூரத்திற்கப்பால் போய் விழும்படியாகத் தூக்கியெறிந்தார். (80–82)

சுண்டிப்போயிருந்த அசுரனின் உடல், கால் கட்டைவிரலால் தூக்கியெறிப்பட்டதைப் பார்த்து, வீரனான சுக்ரீவன் மீண்டும் கூறினான். இலக்குவன் முன்னிலையில், சூரியனைப் போல் சுடர்விடுகின்ற வீரரான இராமனைப் பார்த்து, வானரர்கள் சூழ நின்ற அவன், பொருள் பொதிந்த பின்வரும் சொற்களைக் கூறினான்— ''நண்பரே! முன்பு (வாலி எறிந்தபோது) இந்த உடல், இரத்தம் நிரம்பியதாய், சதைப்பற்றுள்ளதாய், புத்தம் புதியதாக இருந்தது. ஆனால், ரகுநந்தனா! (அது நடந்து வெகுகாலமாகிவிட்டபடியால்) தற்சமயம் இலேசாகிவிட்டது; சதைகள் இல்லாமல், வெறும் புல்லைப் போன்றதாகிவிட்டது. (83–85)

(இந்த நிகழ்ச்சி நடந்தபோது) நீண்ட காலம் யுத்தம் செய்ததால் என் சகோதரன் வாலி மிகவும் களைப்படைந்திருந்தான்; மது அருந்தி மயக்கத்தில் இருந்தான். (அவ்வளவு தளர்ந்த நிலையில் அவனால் தூக்கி எறியப்பட்ட, மிகவும் பாரமாக இருந்த இதை) புத்துணர்ச்சியுடன் இருக்கும் தாங்கள் இலகுவாகத் தூக்கியெறிந்திருக்கிறீர்கள். (எனவே, முற்றிலும் மாறுபட்ட சூழ்நிலை காரணமாக) அதிக பலம் தங்களுக்கா? இல்லை, அவனுக்கா? – என்று நிச்சயிக்க முடியாமலிருக்கிறது. ஏனென்றால், அப்போது இரத்தம்–சதை நிரம்பி கனமாகவும் ஈரமாகவும்இருந்த உடல், இப்போது உலர்ந்து போயிருக்கிறது. இராகவா! இரண்டுக்குமிடையே உள்ள வேற்றுமை மிகப் பெரியதல்லவா? (86,87)

பாசமிக்க நண்பரே! அதிக ஆற்றல் தங்களிடமா? அல்லது அவனிடமா? என்ற விஷயத்தில், இந்த சந்தேகம் இருந்து கொண்டிருக்கிறது. தாங்கள், (இங்குள்ள ஏழு ஆச்சா

மரங்களுள்) ஒரு மரத்தை மட்டும் (அம்பினால்) துளைத்துக் காட்டினால், இருவரில் யாருக்குப் பலம் அதிகம் என்பது தெளிவாகத் தெரிந்துவிடும். (தங்கள் கையிலுள்ள) யானையின் துதிக்கை போல் நீண்டதான வில்லைக் காதுவரை இழுத்து வளைத்து, நாணேற்றி சக்தி வாய்ந்த ஒரு பாணத்தைச் செலுத்துங்கள். (88,89)

தங்களால் விடப்படும் அம்பு, இந்த ஆச்சா மரத்தைத் துளைத்துவிடும் என்பதில் ஐயமில்லை. (மறுபடியும் என் ஆற்றலைச் சோதனை செய்து பார்க்க, இவன் ஏன் விரும்புகிறான்? என்பது போன்ற) ஆராய்ச்சிகள் இப்போது வேண்டாம். (தங்களைப் பரீட்சிப்பதற்காக அல்ல; தங்கள் பேராற்றலை மறுபடியும் கண்ணால் கண்டு மகிழ விரும்புகிறேன்.) மன்னர் மைந்தரே! என் வேண்டுகோளை உடனே ஏற்றுக் கொள்ளுங்கள். என் மேல் ஆணையிட்டுக் கூறுகிறேன். ஒளிமிக்க பொருட்களில் முதன்மையானது, சூரியன்; அவ்வாறே, மாமலைகளுள் உயர்ந்தது இமயமலை; நாற்கால் பிராணிகளில் உயர்வானது, சிங்கம்; அதுபோல, பேராற்றல் மிக்க மானுடர்களில் தாங்கள்தான் மிகச்சிறந்தவர்.'' (90,91)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
பதினோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பன்னிரண்டு

சுக்ரீவனுக்கு நம்பிக்கை வருதல்

பேராற்றல் படைத்த இராமன், சுக்ரீவனால் தெளிவாகச் சொல்லப்பட்டதைக் கேட்டவுடன், (அவனுக்குத் தன் பராக்கிரமத்தில்) நம்பிக்கை உண்டுபண்ணுவதற்காக வில்லைக் கையிலெடுத்தார். எல்லோரையும் கௌரவிக்கும் குணசீலராகிய அவர், மிகவும் உறுதியான வில்லை எடுத்து, நாணொலியால் எல்லாத் திசைகளையும் நிரப்பி, ஆச்சா மரத்தை இலக்காகக் கொண்டு ஓர் அம்பினைச் செலுத்தினார். மகாபலம் பொருந்திய அவரால் விடப்பட்ட, பொற்கட்டுகளைக் கொண்ட பாணம், ஏழு ஆச்சா மரங்களையும் துளைத்துக் கொண்டு, மலைச்சிகரத்தைத் தகர்த்து, கீழேயுள்ள ஏழாவது உலகமான ரஸாதலத்தைச் சென்றடைந்தது. (ஸப்தபூமி என்று மூலச் சுலோகத்திலுள்ள சொல்லுக்கு ரஸாதலம் என்று பொருள் கொள்வர், பாஷ்யகாரர்.) (1–3)

மகாவேகமுடைய அந்த பாணம், நொடிப்பொழுதில் பூமியைத் துளைத்துக் கொண்டு சென்று, உடனே வெளியே வந்து, முன்பு போலவே தன் அம்புறாத்தூணியில் புகுந்து கொண்டது. ('ஜடவஸ்துவான பாணம் மீண்டும் திரும்பி வருமா?' என்ற ஐயத்தைப் போக்க, '*மந்த்ரப்ரப₄ாவேண அசேதநஸ்யாபி புந: ஆக₃மநம்*' என்கிறது, கோவிந்தராஜீயம்). வானரத் தலைவனான சுக்ரீவன், இராமனுடைய பாணவேகத்தால் அந்த ஏழு ஆச்சா மரங்களும் சிதறடிக்கப்பட்டதைக் கண்டு மிகவும் ஆச்சரியத்தை அடைந்தான். (இராமனுடைய பாணம் ஆச்சா மரங்களைப் பிளந்ததை மட்டும் சுக்ரீவனால் பார்க்க முடிந்தது. பூமிக்குள் சென்று திரும்பியதைக் காணும் திவ்யதிருஷ்டி அவனுக்கு இல்லை.) (4,5)

மிகவும் மனத்திருப்தியடைந்த சுக்ரீவன், இராகவன் திருமுன்னிலையில் இருகைகளையும் கூப்பி நின்று, கழுத்தில் அணிந்திருந்த அணிகலன்கள் விழுந்து புரளும்படி, அவர் திருவடிகளில் தன் தலையை வைத்துப் பூமியில் அங்கமெல்லாம் படும்படியாகப் பணிந்து வணங்கினான். ஆச்சரியகரமான அந்தச் செயலினால் மகிழ்ச்சியடைந்த அவன் (சுக்ரீவன்), அறம் அறிந்தவரும், அனைத்து ஆயுதங்களையும் செலுத்த வல்லவர்களில் தலைசிறந்தவரும், எதிரே நிற்கும் மாவீரருமான இராமனைப் பார்த்துப் பின்வருமாறு கூறினான்— (6,7)

''ஆண்மையாளர்களில் சிறந்தவரே! இந்திரன் முதலான தேவர்கள் அனைவரையும் போர்க்களத்தில் பாணங்களால் கொல்லும் திறனுடையவர் தாங்கள் (என்பதை நான் கண்ணால் கண்டு தெரிந்துகொண்டு விட்டேன்). அப்படியிருக்கும்போது ஐயனே! வாலி எம்மாத்திரம்? மாபெரும் ஏழு ஆச்சா மரங்களும், மலையும், பூமியும் எந்த வீரரால் ஒரே பாணத்தால் பிளக்கப்பட்டனவோ, காகுத்தரே! அப்படிப்பட்ட தங்களுக்கு எதிரில் போர்க்களத்தில் நிற்கக் கூடியவர் எவரேனும் இருக்க முடியுமா? மகேந்திரன், வருணனுக்கு ஒப்பான மகாபலம் பொருந்திய தங்களை நண்பராகப் பெற்றுள்ளதால் என் துயரம் முற்றிலும் மறைந்து போய்விட்டது; இப்போது எனக்குத் திருப்தி உண்டாகியிருக்கிறது. (8–10)

காகுத்தரே! சகோதரன் என்ற உருவிலிருக்கும் என் விரோதியை இப்போதே தாங்கள் வதம் செய்து, எனக்கு மகிழ்ச்சியை அளிக்க வேண்டும். இரு கைகளையும் கூப்பி வணங்கிக் கேட்டுக் கொள்கிறேன்.'' மகிழ்ச்சிப் பொலிவுடன் விளங்கிய சுக்ரீவனை மார்புறக் கட்டித் தழுவி, பேரறிவாளரான இராமன், இலக்குவனும் சம்மதப்படுவதான பதிலை அப்போது கூறினார்— ''சுக்ரீவனே! இங்கிருந்து நாம் கிஷ்கிந்தைக்குப் போவோம். நீ, எங்களுக்கு முன்னதாக வேகமாகச் சென்று, உனக்குத் தொல்லை கொடுக்கும் உடன்பிறந்த வாலியைப் போருக்கு அழைப்பாய்.'' (11–13)

அவர்கள் எல்லோரும் வாலியின் நகரமான கிஷ்கிந்தைக்கு வேகமாகச் சென்றார்கள். அடர்த்தியான காட்டுப் பகுதியில் (சுக்ரீவனைத் தவிர மற்றவர்கள்) தங்களை மறைத்துக் கொண்டு நின்றார்கள். சுக்ரீவன், ஆடையை இறுகக் கட்டிக் கொண்டு, வாலியைப் போருக்கு அழைக்கும் நோக்கத்துடன், வானைப் பிளக்கும் பேரொலி எழுப்பி உரக்கக் கூச்சல் போட்டான். மகாபலசாலியான வாலி, சகோதரனின் கோரக் கூச்சலைக் கேட்டு மிகவும் சினம் கொண்டு, அஸ்தகிரியிலிருந்து வெளிப்படும் சூரியனைப் போல, மிக வேகமாக வெளியே வந்தான். (மேருமலையின் தெற்குப் பகுதியில் சூரிய அஸ்தமன காலம், அதன் வடக்குப் பகுதியில் உதயகாலம் – என்பது புராண வசனம். வீறுகொண்டு வெளிப்படும் சூரியன் போல், வாலி வெளியே வந்தான் – என்பது கருத்து.) (14–16)

பின்னர், ஆகாயவெளியில், புதன்–செவ்வாய் ஆகிய இரு கோள்களிடையே போர் நிகழ்ந்தாற்போல, பயங்கரமானதும் குழப்பமானதுமான போர் வாலி–சுக்ரீவர்களிடையே உண்டாயிற்று. கோபாவேசத்திலிருந்த சகோதரர்கள் இருவரும், ஒருவரையொருவர் உள்ளங்கைகளால் இடி போல அடித்துக் கொண்டார்கள். துவந்துவ யுத்தத்தில், வஜ்ராயுதம் போன்ற வலிமைமிக்க முஷ்டிகளால் தாக்கிக் கொண்டார்கள். அசுவிநீ தேவர்களைப் போல் ஒரே மாதிரியாகத் தோற்றமளித்த, 'இவன், இன்னான்' என்று வேற்றுமை காணமுடியாத வீரர்களான அவ்விருவரையும், கையில் வில்லுடன் நின்று கொண்டிருந்த இராமன் பார்த்து, 'இருவரில், வாலி யார்? சுக்ரீவன் யார்?' என்று தீர்மானிக்க முடியாததால், உயிரைப் பறிக்கும் அம்பைச் செலுத்துவதற்கு, அந்த நேரத்தில் முடிவு எடுக்க முடியவில்லை. (17–20)

இதனிடையில், வாலியினால் நன்றாக புடைக்கப்பட்ட சுக்ரீவன், தன்னைக் காப்பாற்றுவதாக வாக்களித்த இராமனைக் காணாததால், (தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக,) ரிஷ்யமூக பர்வதத்தை நோக்கி வெகுவேகமாக ஓடினான். களைப்படைந்து, இரத்தத்தால் சரீரம் நனைந்து, (வாலியின்) குத்துகளால் உடல் தளர்ந்து போன சுக்ரீவன், கோபத்துடன் துரத்திக் கொண்டு வந்த வாலியிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்காக, மதங்க முனிவரின் ஆசிரமம் இருந்த பெருங்காட்டுக்குள் புகுந்து கொண்டான். அவன் காட்டுக்குள் புகுந்து விட்டதைப் பார்த்த பேராற்றல் படைத்த வாலி, முனிவரின் சாபத்திற்கு அஞ்சி (அவனைப் பின்தொடர்ந்து செல்லாமல்) 'பிழைத்துப் போ' என்று சொல்லிவிட்டுத் திரும்பினான். (21–23)

இராமன், தன் சகோதரனுடனும் அனுமானுடனும் வானரத் தலைவனான சுக்ரீவன் மறைந்து கொண்டிருந்த, அதே காட்டுப் பகுதிக்கு வந்து சேர்ந்தார். இலக்குவனோடுகூடத்

திரும்பி வந்த இராமனைப் பார்த்து, சுக்ரீவன் மிகவும் வெட்கமடைந்து, தலைகுனிந்து தரையைப் பார்த்துக் கொண்டு மனம் நொந்து பின்வருமாறு கூறினான்— ''தங்களுடைய பராக்கிரமத்தை நான் காணும்படியாகக் காட்டினீர்கள். (அதனால், நான் நம்பிக்கை அடைந்தேன்.) அவனைப் போர் செய்வதற்கு அழைப்பாய் – என்று கூறினீர்கள். (என்ன ஆயிற்று?) என்னுடைய விரோதி, என்னைப் புரட்டியெடுத்து விட்டான். தாங்கள், இப்போது ஏன் இப்படிச் செய்தீர்கள்? ரகுநந்தனா! (கைகளைக் கூப்பிக் கொண்டு, வாலியைக் கொல்ல வேண்டும் என்று வேண்டிக் கொண்ட) அந்தச் சமயத்திலேயே, 'நான், வாலியைக் கொல்ல மாட்டேன்' என்ற உண்மையைத் தெரிவித்திருக்க வேண்டும். அப்படிச் சொல்லியிருந்தால், நான் இங்கிருந்து (கிஷ்கிந்தைக்குச்) செல்லாமல் இருந்திருப்பேன்.'' (24–27)

பரிசுத்தனான சுக்ரீவன் இவ்வாறு சொல்லி முடித்ததும், இராமபிரான் அவனிடம் இரக்கம் கொண்டு, ஆறுதலளிக்கும் சொற்களால் மறுபடியும் சொன்னார்— ''என் அன்புக்குரிய சுக்ரீவனே! கோபத்தை விட்டுவிடு. நான் ஏன் பாணத்தைச் செலுத்தவில்லை? என்பதற்கான காரணத்தைக் கேள். சுக்ரீவா! மாலை முதலான அணிகலன்களாலும் உடையாலும் தோற்றத்தாலும் நடையாலும், நீயும் வாலியும் ஒரே மாதிரியாக இருக்கிறீர்கள். குரல், தேஜஸ், கண் பார்வை, பராக்கிரமம் மற்றும் பேசும் விதத்தினாலும், வானர வீரனே! உங்கள் இருவருக்குள்ளும் எவ்வித வேறுபாட்டையும் நான் காணவில்லை. வானரோத்தமனே! இருவரிடையேயுமுள்ள உருவ ஒற்றுமையில் குழம்பியதால்தான், எதிரிகளை மாய்க்க வல்லதும் பேராற்றல் கொண்டதுமான பாணத்தைச் செலுத்தவில்லை. (28–32)

இருவர் இடையேயும் இருந்த உருவ ஒற்றுமையால் 'யார், எவர்?' என்ற தெளிவு தோன்றாமல் உயிரைப் பறிக்கும் பயங்கரமான பாணத்தைச் செலுத்தவில்லை. நம்மிருவருடைய (பகைவரின் வதம்; மனைவியரை அடைதல் என்ற) ஒரே லட்சியத்திற்கு அழிவு என்னால் ஏற்பட்டுவிடக் கூடாதே? என்பதால் வாளாவிருந்தேன். ('ஆடை–ஆபரணங்களில் வேற்றுமையைக் காணவில்லை' என்று, இராமன் கூறுவதால், இந்திரன் அளித்த காஞ்சனமாலையை அன்றைய தினம் வாலி அணிந்து கொண்டிருக்கவில்லை என்று அறிந்து கொள்ளவேண்டும்.) மாவீரனான உனக்கு, என்னுடைய மனக்குழப்பத்தாலோ அவசரத்தாலோ ஓர் ஆபத்து ஏற்பட்டது என்றால், என்னுடைய விவேகமின்மையும் விளையாட்டுத்தனமும் வெளியே பரவிப் போகும். (எல்லோருக்கும் தெரிந்ததாகிவிடும்.) (33,34)

அபயம் கொடுத்துவிட்டு, அவனையே கொல்வது என்பது மிகப்பெரிய பாவம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் காட்டில் நானும், லட்சுமணனும், பெண்குலத் திலகமான சீதையுமாகிய எல்லோரும் உன் பொறுப்பில் இருப்பவர்கள். நீதான் எங்களுக்குப் புகலிடம். ஆகவே, மறுபடியும் நீ (வாலியுடன்) போரிடுவாயாக. வானரனே! நீ, என்னைச் சந்தேகிக்க வேண்டாம். சுக்ரீவனே! இதே முகூர்த்தத்தில், போரில், ஒரே பாணத்தால் தாக்கப்பட்டுத் தரையில் விழுந்து துடிக்கும் வாலியைப் பார்க்கப் போகிறாய். வானரத் தலைவனே! (நீயும் வாலியும்) துவந்துவ யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும்போது, உன்னை நான் கண்டு கொள்ளும்படியாக ஓர் அடையாளத்தை நீயே உனக்குச் செய்துகொள்.'' (35–38)

(இவ்வாறு சுக்ரீவனிடம் கூறிவிட்டு, பின், இலக்குவனை நோக்கி) ''லட்சுமணா! கவர்ச்சிகரமான தோற்றமுடையதும் மலர்ந்திருப்பதுமான கஜபுஷ்பி என்னும் இந்த மலர்களை எடுத்து, மேன்மை பொருந்திய சுக்ரீவனின் கழுத்தில் அணிவிப்பாய்.'' அப்போது, மலைத்தாழ்வரையில் ஏராளமாகப் பூத்துக் குலுங்கிய கஜபுஷ்பிக் கொடியைப் பறித்து, அவன் கழுத்தில் (மாலையாக) லட்சுமணன் போட்டான். இராமனுடைய சொற்களால் ஆறுதல் பெற்ற அவன், கழுத்தில் அணிவிக்கப்பட்ட கஜபுஷ்பிக் கொடியினால் மாலைக் காலத்தில் மேகங்களிடையே பறக்கும் கொக்குகளின் வரிசைபோல், வெற்றித்திரு பொருந்திய

தோற்றப்பொலிவுடன், வாலியினால் பரிபாலிக்கப்படும் கிஷ்கிந்தையை நோக்கி, இராமனுடன் மறுபடியும் சென்றான். (39–42)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
பன்னிரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பதின்மூன்று

ஸப்தஜனாசிரமத்தைக் காணுதல்

அறநெறியாளரும், இலக்குவனின் தமையனாருமான இராமன், தங்க வேலைப்பாடுகள் செய்யப்பட்ட மாபெரும் வில்லை எடுத்துக் கொண்டு, சூரியனைப் போல் ஒளிவீசுபவைகளும் போர்க்களத்தில் இலக்குத் தவறாமல் செயல்படுபவைகளுமான பாணங்களை எடுத்துக் கொண்டு, வாலியின் பராக்கிரமத்தால் பரிபாலிக்கப்படும் கிஷ்கிந்தைக்கு, ரிஷ்யமூக மலையிலிருந்து சுக்ரீவனுடன் சென்றார். பேரருளாளரான அந்த இராமனுக்கு முன்னதாக, கஜபுஷ்பி மாலை அணிந்து அழகாக விளங்கிய கழுத்தையுடைய சுக்ரீவனும், மகாபலம் பொருந்திய இலக்குவனும் சென்றார்கள். அவர்களுக்குப் பின்னால், வீர அனுமானும், நளனும், நீலன் என்ற வானரனும், பேராற்றல் படைத்தவனும் படைத்தலைவர்களுக்குத் தலைவனுமான தாரனும் சென்றார்கள். (1–4)

மலர்களின் சுமையால் வளைந்த மரங்கள்; சமுத்திரத்தை நோக்கித் தெளிந்த நீர்ப்பெருக்குடன் ஓடும் நதிகள்; ஆலயம் போன்ற குடவரைகள்; மலைகள்; மலை வெடிப்புக்கள்; தேவதைகளால் செதுக்கப்பட்ட குகைகள்; நிமிர்ந்து நிற்கும் சிகரங்கள்; அழகான தோற்றத்துடன் விளங்கும் கண்கவர் அமைப்பு கொண்ட மலைப்பிளவுகள்; வைடூர்யம் போல் மிகத்தெளிவான நீர் நிறைந்தனவும், தாமரை–அசோகத்தின் பாதி மலர்ந்த மொட்டுக்களும் உள்ள வற்றாத நீர்வளம்; நீர்க்காக்கை–அன்றில்–அன்னம்–வஞ்சுளம்–நீர்க்கோழி–சக்ரவாகம் மற்றும் பல பறவைகளின் ஒலி–எதிரொலிகள் கேட்கப்படும் நீர்நிலைகள் – இவைகளையெல்லாம் போகும் வழியில் நன்றாகப் பார்த்துக் கொண்டே சென்றார்கள். (5–8)

(வேடர்கள் வந்து விடுவார்களோ? என்ற) அச்சமில்லாமல், மென்மையான இளம் புற்களின் நுனியை மேய்கின்ற மான்குட்டிகளையும், ஆங்காங்கே நின்று கொண்டும் நாற்புறமும் திரிந்து கொண்டும் இருக்கும் மான்களையும் பார்த்தார்கள். வெண்மையான தந்தங்களால் அழகாக விளங்குபவை; பார்ப்பதற்குப் பயங்கரமானவை; தனித்தனியே திரிகின்றவை; குளங்களைக் கலக்குகின்றவை; நீர்நிலைகளைத் தகர்த்து விடுபவை; மதங்கொண்டவை; மலையடிவாரத்தைத் தந்தங்களால் கீறிக் கொண்டிருப்பவை; நகர்ந்து செல்லும் மலைகளைப் போன்றவை; பூமியின் புழுதி படியப் பெற்றவை; நீருண்ட மேகத்தைப் போல கருத்த நிறமுள்ளவை – இத்தகைய யானைகளையும் மற்றுமுள்ள காட்டு விலங்குகளையும், வானத்தில் பறந்து திரியும் பறவைகளையும் பார்த்துக் கொண்டே, சுக்ரீவனின் கட்டுப்பாட்டிலிருந்த அவர்கள் வேகமாக நடந்து சென்றார்கள். (9–12)

(கிஷ்கிந்தையை நோக்கி அவர்கள்) வேகமாகப் போய்க் கொண்டிருக்கும்போது, ரகுகுல திலகமான இராமன், மரங்களடர்ந்த ஒரு காட்டைப் பார்த்ததும், சுக்ரீவனை நோக்கி வினவினார்— ''ஆகாயத்தில் நீலவண்ண மேகக்கூட்டம் விஸ்தாரமாக விளங்குவதைப் போல, மரங்களின் கூட்டம் (புதர்–கொடிகளோடு கூடியதாய்) எல்லைகளில் வாழை மரங்களால் சூழப்பட்டதாக பளிச்சென்று காணப்படுகிறது. நண்பனே! (புதுமையாகக் காணப்படும்) 'இது என்ன?' என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். எனக்குள் ஆர்வம் பொங்கியெழுகிறது. இந்த ஆர்வம்

உன்னால் நீக்கப்பட வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.'' (இதன் காரணத்தை நீயே தெரிவிக்க வேண்டும் – என்றபடி.) (13–15)

மகிமைமிக்க இராமனுடைய அந்தச் சொற்களைக் கேட்டு, நடந்து கொண்டே அந்த மாபெரும் காட்டின் விசேஷத்தைப் பற்றிப் பின்வருமாறு சுக்ரீவன் கூறினான்— ''இராமபிரானே! விசாலமான இந்த ஆசிரமம் களைப்பைப் போக்கவல்லது; பூஞ்சோலைகள் நிறைந்தது; சுவைமிக்க கனி–கிழங்கு–குடிநீர் உடையது. இவ்விடத்தில் ஸப்தஜனம் என்று பெயர் பெற்ற ஏழு முனிவர்கள், தலைகீழாகத் தொங்கிக் கொண்டும், தண்ணீருக்குள்ளே வசித்துக் கொண்டும் கடுமையான விரதங்களை மேற்கொண்டவர்களாக நியமத்துடன் இருந்து வந்தார்கள். (16–18)

காட்டில் வசித்த இவர்கள், ஏழு நாட்களுக்கு ஒரு தடவை வாயுவையே ஆகாரமாகக் கொண்டார்கள். (ஏழு நாட்கள் தொடர்ந்தாற்போல் மூச்சை அடக்கிக் கொண்டிருந்தார்கள்.) இவ்விதம், எழுநூறு ஆண்டுகள் தவம் செய்துவிட்டு, சரீரங்களுடனேயே மேலுலகம் சென்றார்கள். இப்படிப்பட்ட மகிமை பொருந்திய அவர்களுடைய இந்த ஆசிரமம், மரங்களையே மதிற்சுவர்களாக உடையது; இந்திரன் முதலான தேவர்களாலும் அசுரர்களாலும்கூட உட்புக முடியாதது. பறவைகளும் மற்ற காட்டுப் பிராணிகளும் இந்தப் பிரதேசத்தைத் தவிர்த்துவிட்டுச் செல்கின்றன. (இந்த ஆசிரமத்தின் தனிச்சிறப்பினை அறியாமல்) இதனுள்ளே புகுந்து செல்பவைகள், மீண்டும் திரும்பி வருவதில்லை. (அங்கேயே மடிந்து விடுகின்றன.) (19–21)

ரகுநாயகா! இந்தக் காட்டினுள், (மங்கையரின் நடன காலத்தில் எழும்) அணிகலன்களின் ஓசையும், மங்களமான இசையும், பேரிகை மற்றும் இசைக்கருவிகளின் இனிய ஒலிகளும் கேட்கப்படுகின்றன. இங்கே திவ்வியமான நறுமணமும் வீசுகிறது. இங்கே மூன்று அக்னிகளும் (கார்ஹபத்யம், ஆஹவநீயம், திரேதாக்னி என்பன) எப்போதும் எரிந்து கொண்டிருப்பதால் (நித்யாக்னிஹோத்ரம் தடைபடாது நடந்து வருவதால்), புறாவின் உடல் நிறம் போல் செம்மையான புகைக்கூட்டம் மரங்களின் நுனிகளைச் சூழ்ந்துகொண்டு காணப்படுகிறது. (22,23)

இவ்விடத்தில், புகையால் ஒட்டிக் கொள்ளப்பட்டிருக்கும் நுனிகளையுடைய மரங்கள், மேகக்கூட்டங்களால் மறைக்கப்பட்ட வைடூர்ய மலைகள் போல் விளங்குகின்றன. அறத்தின் உயிர் போன்றவரே! இராமசந்திரனே! அந்த மாமுனிவர்களைக் கருத்தில் கொண்டு, மனமொன்றி, இரு கைகளையும் கூப்பி, சகோதரன் இலக்குவனுடன் வணக்கத்தைத் தெரிவியுங்கள். இராமபிரானே! ஆத்மஞானிகளாகிய அந்த முனிவர்களை வணங்கிப் பணிகின்றவர்களுக்கு உடல்நோய் எதுவும் உண்டாவதில்லை.'' (24–26)

உடனே, இராமனும் லட்சுமணனும் கைகளைக் கூப்பிக்கொண்டு, மகாபுனிதர்களான அந்த முனிவர்களை உத்தேசித்து வணங்கினார்கள். அறத்தின் நாயகனான இராமனும், சகோதரனான இலக்குவனும் (முனிவர்களை நினைவிற்கொண்டு) வணங்கியபின், சுக்ரீவனும், (மற்ற நான்கு) வானரர்களும் மனம் மகிழ்ந்தவர்களாகத் தொடர்ந்து நடந்தார்கள். அந்த ஸப்தஜனாசிரமத்திலிருந்து வெகுதூரம் பாதையில் நடந்து, வாலியினால் காக்கப்படுவதும் பிறரால் புக முடியாததுமான கிஷ்கிந்தையைக் கண்டார்கள். பின்னர், இராம–லட்சுமண–வானரர்கள், உதிக்கின்ற சூரியனின் ஒளிபோல் பிரகாசிக்கும் அஸ்திர–சஸ்திரங்களைக் கைகளிலேந்தி, தேவர்கள் தலைவனான இந்திரகுமாரனின் பேராற்றலால் ஆட்சி செய்யப்படும் அந்த நகரத்திற்கு, பகைவனைக் கொல்லும் பொருட்டு, மீண்டும் ஒரு கூட்டமாக வந்து சேர்ந்தார்கள். (27–30)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
பதின்மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பதிநான்கு

சுக்ரீவன், வாலியைப் போரிட அழைத்தல்

அவர்கள் யாவரும், வாலியினால் ஆட்சி செய்யப்பட்ட கிஷ்கிந்தையை வேகமாகச் சென்றடைந்து, (அதன் வெளிப்புறத்தில்) அடர்த்தியான காட்டில், (நெருக்கமாக) மரங்களினால் தங்களை மறைத்துக் கொண்டு நின்றார்கள். காட்டில் ஆசையுள்ளவனும் விசாலமான கழுத்துடையவனுமான சுக்ரீவன், காட்டில் நாற்புறமும் பார்வையைச் செலுத்தி, (யுத்தம் செய்வதற்குத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ளும் வகையில்) கோபத்தை வரவழைத்துக் கொண்டான். பின்னர், தனக்கு உதவி செய்ய வந்தவர்களால் சூழப்பட்ட அவன், ஆகாயத்தையே பிளப்பதைப் போலப் பயங்கரமாகக் கர்ஜனை செய்து, (வாலியை) யுத்தத்திற்கு அழைத்தான். (1–3)

வேகமாக வீசும் காற்றினால் தாக்கப்பட்ட மேகம் போல் (கர்ஜித்த அவன்), இளங்கதிரவனைப் போன்றும், கர்வம் கொண்ட சிங்கத்தின் நடையை உடையவனாகவும் காணப்பட்டான். '(பறவைகளைப் பிடிப்பதற்காக விரிக்கப்படும் வலையைப் போல்) வானரர்கள் நிறைந்ததும், உருக்கிய பொன்னாலாகிய நுழைவாயிலையுடையதும், கொடிகள்–பொறிகள் அமைக்கப் பட்டதுமான வாலியின் நகரத்தை வந்தடைந்துவிட்டோம்' என்று, செயல்திறனுடைய இராமனைப் பார்த்து சுக்ரீவன் சொன்னான்— ''வீரரே! வாலியை வதம் செய்வதாகத் தாங்கள் முன்னரே வாக்குறுதி அளித்துள்ளீர்கள். சரியான பருவத்தில் ஒரு கொடியானது (மலர்–காய்–பழம் கொடுத்து, தான் வளர்க்கப்பட்டதன் நோக்கத்தை) நிறைவேற்றுவதைப் போல, உங்கள் வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டிய இந்தத் தருணத்தில் விரைவில் செய்து முடியுங்கள்.'' (4–6)

இவ்வாறு சுக்ரீவன் கூறியதும், எதிரிகளை மாய்ப்பவரும் அறத்தையே உயிராகக் கொண்டவருமான இராமன், அவனைப் பார்த்துப் பதில் கூறினார்— ''லட்சுமணன், (தன் கையால் பிடுங்கி,) உன் கழுத்தில் போட்டிருக்கும் கஜபுஷ்பி என்னும் இந்தக் கொடியால், உன்னை அடையாளம் கண்டுகொள்ள முடியும். வீரனே! ஆகாயத்தில், நட்சத்திர மண்டலங்களால் சூழப்பட்ட முழுநிலாவைக் காட்டிலும், உன் கழுத்திலிருக்கும் இந்தக் கொடியினால் மிகவும் பிரகாசமாக விளங்குகிறாய். இப்போது, யுத்தத்தில் ஒரேயொரு பாணத்தை (என் வில்லிலிருந்து) விடுவித்து, வாலியிடம் உள்ள அச்சத்திலிருந்தும் விரோதத்திலிருந்தும் உன்னை விடுவிக்கிறேன். (7–10)

சுக்ரீவனே! சகோதரன் என்று உறவு மட்டும் கொண்டிருக்கும் அந்தப் பகைவனை எனக்குக் காட்டுவாயாக. (என் கண்ணில்பட்ட அடுத்த விநாடியே) வாலி கொல்லப்பட்டு, காட்டுத்தரைப் புழுதியில் விழுந்து புரள்வதைக் காண்பாய். அவன், என் கண்களில்பட்ட பின்னரும் உயிருடன் திரும்பிப் போவானேயானால், என்மீது நீ குற்றம் சுமத்தலாம். உடனே, என்னை இகழ்ந்தும் பேசலாம். ஒரேயொரு பாணத்தால் ஏழு ஆச்சா மரங்கள் பிளக்கப்பட்டதை உன் கண்களாலேயே பார்த்தாய். அதே பலத்தைக் கொண்டு, (உன்னோடு நடைபெறப் போகும் யுத்தத்தில்) வாலியைக் கொன்று விடுவேன் என்பதை அறிந்துகொள். (11–13)

வீரனே! எவ்வளவோ இக்கட்டான சூழ்நிலைகளிலும் நான், இதற்கு முன்னர் பொய் சொன்னதில்லை. எனக்கு தருமத்தின் மேல் பெரும் பற்றுதல் இருப்பதால், (இனி) ஒருபோதும் பொய் பேசமாட்டேன். விளைநிலத்தில் முளைவிட்டிருக்கும் நெற்பயிருக்குத் தேவையான மழையைப் பொழிவித்து, இந்திரன் நெற்கதிரை வளர்ப்பதைப் போல, என் வாக்குறுதியை நிறைவேற்றிக் காட்டுவேன்; மனக்கலக்கத்தை விட்டுவிடு. சுக்ரீவா! பொன்மாலையணிந்த வாலியை(ப் போருக்கு) அழைப்பதற்காக, அதற்கான பெருங்குரலை எழுப்பு; அதைக் கேட்டதும் அந்த வானரன் வெளியே வந்து குதிக்க வேண்டும். (14–16)

போர்களில் வெற்றி கண்டவன்; தன் பலத்தில் பெருமிதம் உடையவன்; போர் செய்வதில் ஆசையுடையவன்; இதற்கு முன் உன்னால் வெல்லப்படாதவன்; அப்படிப்பட்ட வாலி, உடனே

(உன் சத்தத்தைக் கேட்டதும்) வெளியே வருவான் (என்பதில் சந்தேகமில்லை.) தங்களுடைய பராக்கிரமத்தை அறிந்துள்ள சூரர்கள், எதிரிகளின் யுத்த அழைப்பை – குறிப்பாக, பெண்களின் முன்னிலையில் விடப்படும் அழைப்பை – அலட்சியப்படுத்த மாட்டார்கள்.'' (சுக்ரீவனின் பெருங்குரல் நகரம் முழுவதும் கேட்குமாதலால், வாலியின் அந்தப்புரத்திலும் கேட்கும். எனவே, யுத்த அழைப்பை வாலியினால் நிராகரிக்க முடியாது.) (17,18)

பொன்னிறம் வாய்ந்த சுக்ரீவன், இராமபிரானுடைய சொற்களைக் கேட்டவுடன், ஆகாயத்தையே பிளந்து விடுவதைப் போன்ற பயங்கரமான குரலில் கர்ஜித்தான். அராஜகம் சூழ்ந்த நாட்டில் பத்தினி பெண்டிர் மனம் கலங்குவதைப் போல, அவனுடைய பெருங்குரலைக் கேட்டுப் பயந்த பசுக்களின் முகம் வெளிறிப் போயின. விலங்குகள், போரில் அடியுண்ட குதிரைகள் வெளியே விரைவாக ஓடுவதைப் போல, ஓடத் தலைப்பட்டன; புண்ணியம் குறைந்துவிட்ட கிரகங்கள் போல், பறவைகள் பூமியில் விழுந்தன. அப்போது, சூரிய குமாரனான சுக்ரீவன், வேகமாக மேகக் கூட்டங்கள் போல் பேரொலி எழுப்பினான்; வீரம் மிகுந்த சோபையுடன், வாயு வேகத்தினால் அலைவரிசைகள் எழும்பும் பெருங்கடல் போல் தோற்றமளித்தான். (19,22)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
பதிநான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பதினைந்து

தாரையின் நல்லுரைகள்

மகா தைரியசாலியும் சகோதரனுமான சுக்ரீவனின் அந்த அறைகூவலை, (போருக்கு அழைக்கும் கூவலைச் சற்றும்) சகித்துக் கொள்ள முடியாதவனான வாலி, (அந்தச் சமயத்தில்) அந்தப்புரத்தினுள் இருந்ததால், அங்கேயே கேட்டான். எல்லாப் பிராணிகளையும் நடுங்கச் செய்யும் அந்த சப்தத்தைக் கேட்டதும், (வாலியினுடைய) போதை மயக்கம் சட்டென்று மறைந்தது; அளவிட முடியாத கோபம் உண்டாயிற்று. உடனே, மாலைக் கதிரவனின் செவ்வொளி வீசும் வாலியின் உடல் முழுவதும் கோபத்தால் சூழப்பட்டு, (ராகு–கேது) கிரகங்களால் பீடிக்கப்பட்ட சூரியன் போல ஒளிகுன்றிப் போயிற்று. (1–3)

கோரைப் பற்களுடன் கோரமாகத் தோற்றமளித்த வாலியின் கண்கள் கோபத்தினால் கொழுந்துவிட்டெரிந்தன. தாமரை மலர்கள் பிடுங்கப்பட்டு, தாமரைத் தண்டுகள் மட்டும் நிறைந்த நீர்நிலை போல் (சோபை இழந்து) காணப்பட்டான். அப்போது வானரனான வாலி, போருக்கான அறைகூவலைக் கேட்டு, தன் கால்களின் அடி வைப்பினால் பூமியைப் பிளப்பவன் போல் வெகுவேகமாக வெளியே வந்தான். (இதைக் கண்டு) அச்சமடைந்து மனம் கலங்கிய தாரை, தன்னுடைய பேரன்பை வெளிப்படுத்தும் வகையில், ஆசையுடன் அவனை இரு கைகளாலும் தழுவிக் கொண்டு, நன்மைப் பயக்கத்தக்க பின்வரும் சொற்களைக் கூறினாள்— (4–6)

''வீரரே! இரவில் படுக்கும்போது, (நல்மணத்திற்காக) அணியப்பட்ட மாலையைப் பொழுது விடிந்ததும் களைந்து வீசியெறிந்து விடுவதைப் போல, நதியில் திடீரென்று வந்த வெள்ளப்பெருக்கைப் போலத் தோன்றியுள்ள இந்தப் பெருங்கோபத்தை விட்டுவிடுவது நல்லது. வானர மன்னரே! நாளைக் காலையில், இவருடன் (சுக்ரீவனுடன்) போர் செய்யலாம். ஆற்றல் மிக்கவரே! (உடனே போருக்குச் செல்லாமல், காலம் தாழ்த்திச் செல்வதால்) தங்களுடைய விரோதிக்குப் பெருமை கூடிவிடப் போவதில்லை; தங்களுக்குச் சிறுமையும் தோன்றிவிடப் போவதில்லை. இப்போதே புறப்பட்டுத் தாங்கள் வெளியே போவது, எனக்கு என்னமோ நல்லதாகப் படவில்லை. நான், ஏன் உங்களைத் தடுத்து நிறுத்துகிறேன் என்பதற்கான காரணத்தைக் கூறுகிறேன், கேளுங்கள். (7–9)

இதற்கு முன்னர் வந்து போரில் தங்களால் தாக்கப்பட்டு, தோல்வியடைந்து, திக்குத்திசை புரியாமல் ஓடிப் போனவர், அவரே திரும்பவும் வந்து கோபத்துடன் சண்டைக்கு அழைக்கிறார். தங்களால் நன்றாகப் புடைக்கப்பட்டு, தோல்வி அடைந்த அவர், மறுபடியும் இங்கே வந்து சண்டைக்கு அழைக்கிறார் – என்பதால், (இதில் ஏதோ மர்மம் இருக்கும் என்று) என் மனத்தில் சந்தேகம் தோன்றுகிறது. அவர் எழுப்புகிற கூச்சலில் காணப்படும் கர்வமும் போர்த்தந்திரமும் பேரிரைச்சலான முழக்கமும் அசட்டை செய்யத்தக்கக் காரணங்களல்ல. (10–12)

ஒரு துணைவனுடைய உதவியில்லாமல் சுக்ரீவன் இங்கே வந்திருக்க மாட்டார் என்று எண்ணுகிறேன். ஆற்றல்மிக்க ஒரு துணைவரைத் தஞ்சமடைந்து, (அந்த தைரியத்தினால்) இங்கே வந்து இவர் கூவியழைக்கிறார். வானரனான சுக்ரீவன், இயல்பாகவே செயல் திறன் உடையவர்; அறிவுபடைத்தவர். ஒருவருடைய வீரத்தைப் பரிசோதனை செய்யாமல், அவருடன்கூட இங்கே வந்திருக்க மாட்டார். (சுக்ரீவனுக்குத் துணையாக வந்திருப்பவர், நிச்சயம் அருந்திறல் வீரனாகத்தான் இருப்பார்.) வீரரே! புதல்வன் அங்கதனுடன் முன்னர் பேசிக் கொண்டிருந்தபோது, ஒரு செய்தியைக் கேள்விப்பட்டேன். அந்தத் தகவல், தங்களுக்கு நன்மை விளைவிக்கும் என்பதால் இப்போது சொல்கிறேன். (13–15)

(ஒரு சமயம்) நமது குமாரனான அங்கதன் காட்டுக்குள் போயிருந்தான். அப்போது, நம்பத்தக்க ஒற்றர்களால் அவனுக்குக் கூறப்பட்ட ஒரு செய்தியை, அவன் என்னிடம் கூறினான். இக்ஷ்வாகு குலத்தில் தோன்றியவர்களும், அயோத்தி மன்னரின் இரு புதல்வர்களான இராமன், லட்சுமணன் என்று பெயர் பெற்றவர்களும், மகாவீரர்களும், போரில் எவராலும் வெல்ல முடியாதவர்களுமான இவ்விருவரும் சுக்ரீவனின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக வந்திருக்கிறார்கள். தங்களுடைய தம்பிக்கு உதவி செய்ய வந்திருக்கும் ஸ்ரீராமனின் போர்த்திறனின் எல்லையைக் காணமுடியாது. (16–18)

ஸ்ரீராமன், எதிரியின் ஆற்றலை அடியோடு ஒழிப்பவர்; யுகத்தின் முடிவில் தோன்றும் ஊழித்தீயென விளங்குபவர் (அனைத்தையும் பொசுக்கித் தள்ளிவிடக் கூடியவர்); சான்றோர்களுக்குத் தஞ்சமளிக்கும் கற்பக விருட்சம் போன்றவர்; இடர் உற்றவர்களுக்கு அபயமளிக்கும் ஒரே ஒரு புகலிடம்; துன்பப்படுபவர்களுக்குத் தஞ்சமளிப்பவர்; புகழின் ஒரே உறைவிடம்; உலக ஞானமும் ஆன்மிக ஞானமும் பெற்றவர்; தந்தையின் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடப்பவர்; மாபெரும் மலையில் (இமயமலையில்) பலவகையான உயர்ந்த கனிமங்கள் இருப்பதைப் போல, அவர் திருக்கல்யாண குணங்களின் மிகப்பெரிய சுரங்கம். ஆதலால், போர்ச் செயல்களில் வெல்ல முடியாதவரும், ஈடு–இணையற்றவரும், மகாத்மாவுமான ஸ்ரீராமனுடன் பகைமை கொள்வது என்பது சரியானதல்ல. (19–21)

சூரரே! நான், தங்களைக் குறை கூற விரும்பவில்லை. (உங்கள் நன்மையைக் கருதி,) சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். தங்களுக்கு நலன் செய்யக்கூடிய சிலவற்றைச் சொல்வதைக் கேட்டு, அதன்படிச் செய்யுங்கள். உடனே, சுக்ரீவனுக்கு முறைப்படி இளவரசுப் பட்டம் சூட்டுங்கள். மன்னரே! மாவீரரே! இளைய சகோதரரிடம் வீணாகப் பகைமை பாராட்டாதீர்கள். (வலிமைமிக்க) அந்த ஸ்ரீராமனுடன் நட்புக் கொள்வதுதான் தங்களுக்கு உகந்தது என்றே நான் எண்ணுகிறேன். சுக்ரீவனிடமுள்ள பகைமையை வெகுதூரத்திற்கு அப்பால் போட்டுவிட்டு, மனப்பூர்வமான அன்பைக் காட்டுங்கள். தங்கள் இளைய சகோதரரான இவர், தங்களால் கொஞ்சிக் குலாவத் தக்கவர். (22–25)

அவர், அங்கே (ரிஷ்யமூக பர்வதத்தில்) இருந்தாலும், இங்கே அருகிலேயே (கிஷ்கிந்தையிலேயே) இருந்தாலும், உடன்பிறப்பு என்ற உறவு விட்டுப் போகலாகாது. அவரைப் போன்று நெருக்கமான ஓர் உறவினனை நான் காணவில்லை. அவரை முழுமையாகப் பாதுகாத்து, கௌரவப்படுத்தி, தங்களுக்கு அந்தரங்கமானவராகச் செய்து கொள்ளுங்கள்.

இப்போதுள்ள விரோதத்தை ஒழித்துக் கட்டுங்கள்; அவர் எப்போதும் தங்கள் பக்கத்திலேயே இருக்கட்டும். நீண்ட கழுத்தையுடைய சுக்ரீவன், எக்காலத்திலும் தங்களுக்கு நெருக்கமான உறவினர் என்று நான் எண்ணுகிறேன். ஓர் உடன்பிறப்பிடம் காட்ட வேண்டிய பாசத்தைக் காட்டுங்கள். (இந்த இக்கட்டான நிலையில்,) தங்களுக்கு (தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்கு) வேறு வழி ஏதுமில்லை. (26–28)

எனக்கு இஷ்டமான ஒரு காரியத்தைச் செய்ய தாங்கள் விரும்பினால், நான் தங்கள் நலனில் அக்கறையுடையவள் என்று தாங்கள் கருதினால், என் வேண்டுகோளைத் தயவு செய்து ஏற்று அருள் புரிய வேண்டும். அருள்கூர்ந்து நான் கூறுவதைக் கவனமாகக் கேளுங்கள். எப்போதும் கோபத்தை வைத்துக் கொண்டிருக்கக் கூடாது. (கோபத்திற்கும் ஒரு முடிவு வேண்டும்.) இந்திரனுக்கு நிகரான பேராற்றல் படைத்த கோசல மன்னரின் மைந்தருடன் விரோதம் (சண்டை) உகந்த நடவடிக்கையாகாது.'' வாலிக்கு நன்மை விளைவிக்கக் கூடிய நல்லுரைகளையே, மிக்க பரிவுடன் தாரை எடுத்துரைத்தாள். அழிவு காலம் நெருங்கி, காலனின் கைவசப்பட்டிருந்த அவனுக்கு, அந்த உபதேசங்கள் ஏற்கத்தக்கவையாகத் தோன்றவில்லை. (29–31)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
பதினைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பதினாறு
வாலி வதம்

இவ்வாறு பேசிய, முழுநிலா போன்ற முகமுடைய தாரையை வாலி அதட்டினான்; பின்வரும் சொற்களையும் சொன்னான்— ''அழகுமிக்கவளே! பெருங்குரல் எழுப்பி அழைக்கின்ற என் சகோதரனின் – என் தலையாய விரோதியின் – ஆரவாரத்தை, நான் எந்தக் காரணத்தைக் கொண்டு பொறுத்துக் கொள்வேன்? அச்சம் கொண்டவளே! போர்களில் புறமுதுகு காட்டாத, தோல்வியைக் கண்டறியாத சூரர்களுக்கு எதிரிகளின் யுத்த அழைப்பைப் பொறுத்துக் கொண்டிருப்பது என்பது, மரணத்தைக் காட்டிலும் துக்கத்தைத் தருவதாகும். (1–3)

(சுக்ரீவன் – நல்ல கழுத்துடையவன் – என்பது பெயரளவுக்குத்தான்!) குள்ளமான கழுத்துடைய சுக்ரீவன், போர்க்களத்தில் என்னுடன் சண்டையிட விரும்புகிறான். அவனுடைய யுத்த ஆரவாரத்தையும் பெருங்குரலையும் என்னால் சகித்துக் கொண்டிருக்க முடியாது. என் விஷயத்தில், இராமனைக் குறித்து, நீ கவலைப்படவே வேண்டாம். (ஏனென்றால்,) தருமம் அறிந்தவரும், செய்யத்தக்கது எது, செய்யத்தகாதது எது? என்று அறிந்தவருமான அவர், எவ்வாறு ஒரு பாவ காரியத்தைச் செய்வார்? (அவருக்கு ஒரு குற்றமும் இழைக்காத என்னை எவ்வாறு கொல்வார்?) (4,5)

தாரையே! மற்றப் பெண்களையும் அழைத்துக் கொண்டு திரும்பிப் போய்விடு. என்னை ஏன் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறாய்? என்னிடமுள்ள அன்பையும் பக்தியையும் (உன் உபதேசங்கள் மூலம்) நன்றாகக் காட்டிவிட்டாய். மனக்கலக்கத்தை விட்டுவிடு. நான் சென்று சுக்ரீவன் செய்யும் போரை எதிர்கொண்டு, அவன் கொழுப்பை அடக்கிவிட்டு வருகிறேன். அவன் உயிரைப் பறிக்கமாட்டேன். போரிடும் காலத்தில் (அவன் செருக்கை அடக்குவதற்கு) எவ்வளவு பதிலடி தேவையோ, அவ்வளவை மட்டும் கொடுப்பேன். மரங்களாலும் கைமுட்டியின் அடிகளாலும் தாக்கப்பட்டு, அவன் திரும்பிப் போய் விடுவான். (6–8)

துஷ்டனான அவன், அவனுடைய செருக்கினால் ஏற்படுத்திக் கொண்ட என் எதிரடிகளைப் பொறுத்துக் கொள்ளமாட்டான். தாரையே! உன்னால் எனக்குச் செய்யக்கூடிய

உதவி செய்யப்பட்டுவிட்டது; என்னிடமுள்ள அன்பையும் காட்டிவிட்டாய். என் உயிர்மீது ஆணையிட்டுக் கூறுகிறேன்— இந்தப் பெண்களுடன் நீ திரும்பிப் போ. நான், போரில் என் சகோதரனை வென்று திரும்பி வருவேன்.'' இனிமையாகப் பேசுகிறவளும் சாமர்த்தியசாலியுமான தாரை, வாலியைக் கட்டியணைத்துக் கொண்டாள். பின், மெல்லிய குரலில் அழுதபடியே அவனை வலம் வந்தாள். (9–11)

பின்னர், கணவனின் வெற்றியை விரும்புகிறவளும் (செய்யுள் வடிவிலான) மந்திரங்களை அறிந்தவளுமான அவள், அவன் வெற்றியை வேண்டி, அதற்குரிய மந்திரங்களைக் கூறிவிட்டு, சோகத்தால் மயங்கிய மனத்துடன், மற்றப் பெண்களுடன்கூட அந்தப்புரத்தை அடைந்தாள். தாரை, மற்ற மனைவிகளோடுத் தன் இருப்பிடத்திற்குச் சென்ற பின்னர், சீற்றம் கொண்ட அவன் (வாலி) மகாசர்ப்பம் போல் பெருமூச்சுவிட்டுக் கொண்டு, நகரத்திலிருந்து வெளியே வந்தான். பேராற்றலுடையவனும் மிகவும் கோபத்துடன் இருந்தவனுமான வாலி, பகைவனைக் கண்ணால் காண விருப்பம் கொண்டவனாக, எல்லாத் திசைகளிலும் பார்வையைச் செலுத்தினான். (12–14)

வெற்றித்திரு பொருந்திய வாலி, பொன்னிற மேனியனும் கொழுந்து விட்டெரியும் அக்னியைப் போன்று விளங்குபவனும், போருக்குத் தயாராகக் கச்சை கட்டிக்கொண்டு நின்றவனுமான சுக்ரீவனைப் பார்த்தான். மாவீரனான சுக்ரீவன், சண்டைக்குத் தயாராக நிற்பதைப் பார்த்ததும், மிகவும் கோபம் கொண்ட வாலி, தன் ஆடையை இறுக முடிந்து கொண்டான். வீரம் மிகுந்தவனான வாலி, சுக்ரீவனின் நேர் எதிரில் சென்று, இதுவே தக்க தருணம் என்று முடிவு செய்து, முட்டியைத் தூக்கிப் பிடித்தவண்ணம் யுத்தத்தைத் தொடங்கினான். பொன்மாலையணிந்த வாலியை நோக்கி, உச்சகட்ட கோபத்தையடைந்த சுக்ரீவனும் முட்டியைத் தூக்கிக்கொண்டு எதிர்த்து வந்தான். (15–18)

கோபத்தால் செம்மை படர்ந்த கண்களைக் கொண்ட வாலி, போர்த்திறனுடையவனும் வேகமாக எதிர்த்து வருபவனுமான சுக்ரீவனைப் பார்த்துப் பின்வருமாறு கூறினான்— ''என்னுடைய கைகளின் விரல்களை நெருக்கமாக இணைத்து, முட்டி உறுதியாக்கப்பட்டு இருக்கிறது. முட்டியினால் பலமாகத் தாக்கப் போகிறேன். அந்த அடி, உன் உயிரைப் பறித்துக் கொண்டு போகப் போகிறது.'' வாலி இவ்வாறு கூறியதும், கோபத்துடன் சுக்ரீவன் சொன்னான்— ''என் கைமுட்டி, உன் உயிரைப் பறிப்பதற்காக, உன் தலைமேல் விழக்கடவது.'' (19–21)

இதனைக் கேட்டு கோபம் கொண்ட வாலி, சுக்ரீவனைப் பலமாக முதலில் தாக்கினான். அதனால், அருவிகளோடு கூடிய மலைபோல, (சுக்ரீவன்) ரத்தப்பெருக்கைக் கக்குபவனாக ஆனான். சற்றும் தயங்காமல் (தான் பெற்ற அடியைப் பொருட்படுத்தாமல்) மிகவும் ஆற்றலுடன் ஒரு ஆச்சா மரத்தைப் பிடுங்கி எறிந்தான், சுக்ரீவன். வஜ்ராயுதத்தால் தாக்கப்பட்ட பெரிய மலையைப் போல, மேனியில் காயங்களை அடைந்தான், வாலி. ஆச்சா மரத்தின் அடியினால் நிலைகுலைந்த வாலி, அளவுக்கு அதிகமாகச் சுமை ஏற்றப்பட்ட கப்பல் நடுக்கடலில் தத்தளிப்பதைப் போல ஆடிப் போனான். (22–24)

பயங்கரமான ஆற்றலும் பராக்கிரமமும் உடையவர்களும், கருடனுக்கு நிகரான வேகமுடையவர்களும், கோரமான உடலமைப்பு கொண்டவர்களும், (பௌர்ணமி நாளில்) வானத்தில் விளங்கும் சூரிய–சந்திரனைப் போன்றவர்களுமான அவ்விருவரும் எகிறிப் பாய்ந்து யுத்தம் செய்தார்கள். எதிரியை ஒழித்துக்கட்ட விரும்பிய இருவரும் தக்க சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்போது உடலாற்றலும் வீரமும் பொருந்திய வாலியின் கை ஓங்கிற்று. சூரியபுத்திரனும் மகாவீரனுமான சுக்ரீவன் பலம் குன்றத் தொடங்கினான். வாலியினால் செருக்கு ஒழிக்கப்பட்டு, பலம் குறைந்து போன சுக்ரீவன், வாலியிடம் கோபம் கொண்டவனாக, இராமனிடம் தன் அவலநிலையைச் சுட்டிக்காட்டினான். (25–27)

விருத்திராசுரனுக்கும் இந்திரனுக்குமிடையே நிகழ்ந்ததைப் போல, கிளைகள்–நுனிகளோடு கூடிய மரங்களாலும், வஜ்ராயுதத்தின் முனையையொத்த கூரிய நகங்களாலும், முஷ்டிகளாலும்,

முழங்கால்கள்–கால்கள்–தோள்களாலும் பயங்கரமான போர் தொடர்ந்து நிகழ்ந்தது. (ஒருவரையொருவர் இவ்வாறெல்லாம் பயங்கரமாகத் தாக்கிக் கொண்டார்கள்.) காட்டுவாசிகளான அவ்விரு வானரர்களும், உடலில் குருதி சொட்டச் சொட்ட, வானத்தில் இரு மேகங்கள் மோதிக்கொண்டாற்போல் (உரத்த குரலில்) ஒருவரையொருவர் பயமுறுத்திக் கொண்டு போர் புரிந்தார்கள். (28,29)

வானரத் தலைவனான சுக்ரீவன் மிகவும் தளர்ச்சியடைந்து, (இராமன் எங்கே இருக்கிறார்? ஏன் இன்னமும் உதவிக்கு வரவில்லை? என்று எண்ணுபவன் போல்) எட்டுத் திசைகளையும் அடிக்கடி பார்த்துக் கொண்டிருப்பதை இராமன் கவனித்தார். பின்னர், மகாபராக்கிரமம் கொண்ட இராமன், வானர மன்னனான சுக்ரீவன் தவித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து, வாலியை வதம் செய்யும் நோக்கத்துடன், வீரரான அவர், பாணத்தின் மீது பார்வையைச் செலுத்தினார். பின்னர், விஷம் கொண்ட சர்ப்பத்தைப் போன்ற ஒரு பாணத்தை வில்லில் பூட்டி, (யமனுடைய ஆயுதங்களில் ஒன்றான) காலசக்கரத்தைக் கையிலெடுத்துவிட்ட காலனைப் போல் வில்லை வளைத்தார். (30–32)

அவருடைய நாண்கயிற்றின் பேரொலியால் திகிலடைந்த பெரும் பறவைகளும் விலங்குகளும், பிரளய காலத்தில் இன்னது செய்வது என்பதறியாது குழம்பித் தவிக்கும் பிராணிகளைப் போல, எங்கெங்கோ வேகமாக ஓடிப்போயின. வஜ்ராயுதம் போல் பேரொலி எழுப்பிக் கொண்டும், தீப்பற்றியெரியும் மேகத்தைப் போல் ஒளிவீசிக் கொண்டும் விளங்கிய ஒரு மகாபாணம் வாலியின் மார்பில் போய்த் தாக்கும்படியாக இராமனால் விடப்பட்டது. அப்போது பேராற்றலுடையவனும், வீரத்தினால் செருக்குக் கொண்டவனும், வானர மன்னனுமான வாலி மிகவும் வேகமாக வந்து விழுந்த அந்த பாணத்தால் தாக்குண்டு, அப்போதே தரையில் விழுந்தான். (33–35)

ஐப்பசி மாத பூர்ணிமையில் (பௌர்ணமியில்) தரை இறக்கப்பட்ட இந்திரத்வஜம் போல், ஒளியிழந்து உணர்விழந்து விழுந்தான், வாலி. (கௌட தேசத்தில், ஆச்வயுஜ மாதம் பௌர்ணமி திதியில், இந்திரனைக் குறித்து நடக்கும் ஒரு திருவிழாவில், தொடக்க நாளில் கொடி ஏற்றப்பட்டு, உற்சவம் நிறைவடைந்ததும், மேலே இருக்கும் கொடியை வேகமாக இறக்கிவிடுவது வழக்கம். அந்த கொடியிறக்கத்தை ஒப்புவமையாகக் காட்டுகிறார், ஆதிகவி.) புருஷோத்தமரான இராமன், யுக முடிவில் தோன்றும் காலனைப் போன்றதும், பொன்–வெள்ளி வேலைப்பாடுகள் உடையதும், எதிரிகளை அழிப்பதும், தீச்சுடர் போல் விளங்குவதும், சிவபெருமானுடைய முகத்திலிருந்து கிளம்பும் புகையோடு கூடிய அக்னியைப் போன்றதுமான ஓர் உத்தம பாணத்தை அப்போது செலுத்தினார். (36,37)

இந்திரகுமாரனான வாலியினுடைய உடலிலிருந்து, தண்ணீர் வெள்ளம் பாய்வதைப் போல, குருதி வெள்ளம் பெருகிற்று. அதனால் நனைக்கப் பெற்று உணர்விழந்த வாலி, ஏராளமான பூக்களைக் கொண்ட அசோகமரம் பெருங்காற்றினால் அடியோடு வீழ்த்தப்பட்டதைப் போலவும், இறக்கப்பட்ட இந்திரத்வஜம் போலவும் அப்போது பூமியில் விழுந்தான். (38)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
பதினாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பதினேழு

இராம நிந்தனை

யுத்தத்தில் வீரத்தைக் காட்டுபவனான வாலி, இராமனின் ஒரு பாணத்தால் தாக்கப்பட்டு, வெட்டப்பட்ட மரம்போல் அப்போதே தரையில் விழுந்தான். உருக்கிய பொன்னாலான அணிகலன்கள் அணிந்திருந்த அவன், உடலின் எல்லா அவயவங்களும் பூமியில் படும்படியாக,

(உற்சவ முடிவில் இறக்கம் செய்யப்பட்ட) ஒளியிழந்த இந்திரத்வஜம் போல் விழுந்து கிடந்தான். (கொடிமரத்தில் ஏற்றுவதற்கு உபயோகப்பட்ட கயிறு நீக்கப்பட்டவுடன், இந்திரத்வஜம் கீழே விழுந்து விடுவதைப் போலக் கிடந்தான்.) வானரர்களின் தலைவனான அவன் பூமியில் விழுந்ததும், நிலா இல்லாத ஆகாயம் போல் உலகம் பிரகாசத்தை இழந்தது. (1–3)

மகாத்மாவான அவனுடைய உடல் தரையில் விழுந்து விட்டாலும், அவனுடைய மேனிப் பொலிவு, உயிர், ஆன்ம ஒளி மற்றும் மனோதைரியம் அவன் உடலைவிட்டுப் போகவில்லை. இந்திரனால் கொடுக்கப்பட்ட, இரத்தினங்கள் கோர்க்கப்பட்ட, உத்தமமான சுவர்ணமாலை, வானரத் தலைவனுடைய உயிரையும் ஆன்மஒளியையும் தேககாந்தியையும் தாங்கிக் கொண்டிருந்தது. வானரத் தலைவனும் மாவீரனுமான அவன் அணிந்திருந்த அந்த மாலையால், அந்திவேளையில் செம்மை ஒளிவீசும் ஓரங்களைக் கொண்ட மேகம் போல் விளங்கினான். (4–6)

அவனுடைய தங்கமாலை, உடல் மற்றும் உயிர்நிலையைத் தாக்கிய அந்த அம்பு ஆகிய மூன்றும், அவன் கீழே விழுந்து கிடந்தாலும், மூன்று கூறுகளாகச் செய்யப்பட்ட ஒளிக்கற்றைகள் போல் பிரகாசித்தன. இராமனுடைய வில்லிலிருந்து விடப்பட்ட அந்த அஸ்திரம், அந்த வீரனுக்குச் சுவர்க்கத்திற்குச் செல்லும் வழியைக் காட்டுவதாகி, அவனைப் பரமபதத்திற்குக் கொண்டு சென்றது. சுவாலையில்லாத நெருப்புப் போல அடங்கி யுத்தகளத்தில் கிடப்பவனும், (தன்மேல் பாணத்தை ஏவியவரை) மனத்திற்குள் புகழ்ந்து, 'அந்த வீரன் எங்கே?' என்று அரைமயக்கம் காரணமாக, நாற்புறமும் மெல்லப் பார்க்கிறவனும், (7–9)

சுகபோக அனுபவங்களால் புண்ணியச் சேமிப்பு கரைந்து போனதும் தேவலோகத்திலிருந்து தள்ளிவிடப்பட்ட யயாதி போன்றவனும், மகாப்பிரளய காலத்தில் காலதேவனால் பூமியில் தள்ளப்பட்ட சூரியன் போலிருப்பவனும், மகேந்திரனைப் போல் வெல்ல முடியாதவனும், மகேந்திரனைப் போல் நெருங்க முடியாதவனும் (அதாவது, எதிரில் நின்று போரிட முடியாதவனும்), காஞ்சனமாலை அணிந்திருந்தவனும், இந்திர குமாரனும், விழுந்து கிடப்பவனும், அகன்ற மார்புடையவனும், தோளாண்மைமிக்கவனும், ஒளிவீசும் முகத்தையுடையவனும், கபில நிறக் கண்களை உடையவனுமான வாலியை, இலக்குவன் பின்தொடர்ந்து வர இராமன் பார்த்தார்; அவன் அருகிலும் சென்றார். (10–12)

இராமனையும், மிக்க பலவானான இலக்குவனையும் பார்த்து, விநயமும் அறமும் நிறைந்த சொற்களைக் கடுமையாகக் கூறினான், வாலி. ''தாங்கள், ஒரு மாமன்னரின் திருக்குமாரர்; புகழ் பெற்றவர்; இனிய தோற்றமுடையவர் (அல்லது பிரியமான தர்சனங்களை (சாஸ்திரங்களை)க் கற்றவர்); நற்குடியில் பிறந்தவர்; ஸத்வகுணம் நிரம்பியவர்; தேஜஸ் மிக்கவர்; அறநெறிகளைக் கடைப்பிடிப்பவர். நான் (வேறொருவனுடன்) யுத்தத்தில் ஈடுபட்டிருந்தபோது, அதில் முழுமையாகக் கவனம் செலுத்தியிருந்தபோது, மார்பில் அம்பினால் தாக்கப்பட்டேன். தங்களுடன் யுத்தம் செய்வதற்கு ஆயத்தமாக இல்லாத ஒருவனை (என்னை)க் கொன்றதால், தாங்கள் அடைந்த பயன்தான் என்ன? (13–15)

இராமன் கருணை மிக்கவர்; குடிமக்களின் நலனில் பெரிதும் அக்கறை உடையவர்; தயவுகாட்டுபவர்; எப்போதும் மகிழ்ச்சியுடன் (ஊக்கத்துடன்) இருப்பவர்; சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்றபடிச் செயலாற்றுபவர்; அறநெறிகளைத் தவறாது கடைபிடிப்பவர் – என்று, உலகத்தில் உள்ள அனைத்துப் பிராணிகளும் தங்கள் புகழைச் சொல்கின்றன. மன்னரே! ஐம்பொறிகளையும் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல், மனவடக்கம், பொறுமை, அறநெறி பிறழாமை, மனஉறுதி, சத்தியம், பேராற்றல், குற்றம் செய்தவர்களுக்குத் தண்டனை கொடுப்பது – இவைகள் அரசருக்குரிய நற்பண்புகள். தாரையால் தடுக்கப்பட்ட போதிலும், தங்களுடைய உயர்ந்த பரம்பரையிலும், நற்பண்புகள் உடையவர் என்ற பேச்சிலும் நம்பிக்கை வைத்துத்தான், நான் சுக்ரீவனுடன் சண்டையிட வந்தேன். (16–18)

தங்களைப் பார்ப்பதற்கு முன்பு, வேறொருவனுடன் உக்கிரமாகப் போர் செய்து கொண்டு, அந்த எதிரியைத் தவிர வேறு நினைவில்லாதிருந்த நிலையில் (கண்ணுக்குப் புலப்படாத மூன்றாவது நபரால் தாக்கப்படக் கூடும் – என்ற எண்ணமே இல்லாதபோது), தாங்கள் என்னுடன் யுத்தம் செய்ய மாட்டீர்கள் என்று நம்பிக் கொண்டிருந்தேன். தாங்கள், நல்லறிவை ஒழித்துக் கட்டியவர்; அறநெறிகளை அனுஷ்டிப்பவர் போல் வெளியே காட்டிக் கொண்டு, அறம் தவறி நடப்பவர்; பாவச் செயல்களைச் செய்பவர்; புல்கற்றைகளால் மூடப்பட்ட பாழுங்கிணறு போன்றவர் – என்பதை இதுவரை அறியாதிருந்துவிட்டேன். (19,20)

தாங்கள், நல்லவர் போன்ற வேஷம் போட்டுக் கொண்டு பாவம் புரிகிறவர்; நீறுபூத்த நெருப்பு; தருமத்தை மேலே போர்த்திக் கொண்டிருக்கும் கபட வேஷதாரி – என்பதை நான் அறியவில்லை. உங்களது நாடு–நகரத்திற்கு நான் கேடு விளைவித்ததில்லை. உங்களுக்கு அவமரியாதை காட்டியதுமில்லை. குற்றமே செய்யாத என்னை ஏன் கொன்றீர்கள்? நான், காட்டில் வசிப்பவன்; கனி–கிழங்குகளைப் புசிக்கின்ற வானரன். நான், உங்களோடு யுத்தம் செய்ய இங்கு வரவில்லை; வேறொருவனோடு போர் புரிந்து கொண்டிருந்தேன். (21–23)

தாங்கள் மதிப்புக்குரிய ஒரு மாமன்னரின் புதல்வர்; அறிஞர்; எழில்மிகு தோற்றம் உடையவர்; அறநெறி வழுவாதவர் என்ற நம்பிக்கை தோன்றும்படியான அடையாளங்களை (ஜடாபாரம், மரவுரி) உடையவர். க்ஷத்திரிய குலத்தில் பிறந்தவனும், அரச தருமங்களைக் கசடறக் கற்றவனுமான ஒருவன், அறநெறியாளர் போன்ற வேடம்பூண்டு, (இத்தகைய போர் நெறிக்குப் புறம்பான) கொடிய செயலைச் செய்ய எவ்வாறு முற்படுவான்? இராமா! தாங்கள் மன்னர் குலத்தில் பிறந்தவர்; தருமவான் என்று போற்றப்படுபவர். (ஆனால்,) அநாகரிகமான செயல்களைச் செய்து கொண்டிருக்கும் நீங்கள், ஒரு சாதுவைப் போல் (வணங்கத்தக்க) தோற்றம் போட்டுக் கொண்டு இங்குமங்கும் அலைகிறீர்கள். (24–26)

அரசே! ஸாமம் (எதிராளியுடன் சமாதான உடன்படிக்கை செய்து கொள்வது), தானம் (ஏராளமான பொருளைக் கொடுத்துப் பகைவனைத் தன்வயப்படுத்திக் கொள்ளுதல்), பொறுமை, அறநெறி தவறாமை, வாய்மை, சிந்தனையில் உறுதி, பேராற்றல் – இவைகள், அரசர்களின் பண்புகள். தண்டனை கொடுப்பது என்பது குற்றமிழைத்தவர்களுக்கு மட்டும். இராமா! நாங்கள் காட்டில் திரிபவர்கள்; விலங்கினத்தைச் சேர்ந்தவர்கள்; கனி–கிழங்குகளைச் சாப்பிடுகிறவர்கள் – இதுவே, எங்களுக்கு இயல்பாக அமைந்த குணம். தாங்களோ, மனித இனத்தைச் சேர்ந்தவர். அத்துடன் நாடாளும் மன்னர் குலத்தில் தோன்றியவர். (27,28)

இருவரிடையே விரோதம் ஏற்படுவதற்கு மண்–பொன்–வெள்ளி ஆகிய மூன்றும் காரணங்களாகின்றன. (நம்மிடையே, இந்த மூன்றினாலும் விரோதம் தோன்ற முடியாதே? என் கிஷ்கிந்தை, உங்கள் அயோத்திக்கு வெகுதூரத்தில் இருக்கிறது. பொன்–வெள்ளி மலைகளோ, சுரங்கங்களோ இங்கு இல்லவேயில்லை!) ஆகவே, என்னிடமுள்ள சிறு பொருட்களிலோ, காட்டில் கிடைக்கும் பழங்களிலோ உங்களுக்குக் கிடைக்கக் கூடிய லாபம் என்ன? ராஜதந்திரம், அடக்கம் ஆகியவையும், தண்டனை கொடுத்தல், மன்னித்துவிடுதல் ஆகியவையும் அரசநெறிகள்; (சூழ்நிலைக்கேற்ப கைக்கொள்ளத்தக்கவை.) தவறாகப் பிரயோகிக்கக் கூடாதவை. மன்னர்கள், தம் மனம் போன போக்கில் நடப்பவர்களாக இருக்கக் கூடாது. (எல்லையில்லாத் அதிகாரமிருந்தாலும் நியாய–நீதிகளுக்கு உட்பட்டே நடக்க வேண்டும்.) (29,30)

நீங்களோ, உங்கள் மனத்தில் தோன்றும் எண்ணத்தையே முக்கியமாகக் கருதுபவர்; விரைவில் கோபம் கொள்பவர்; சட்ட–திட்டங்களுக்கு உட்படாதவர்; சற்றும் ஆலோசனை செய்யாமல், அரசநெறிகளைத் தவறாகப் பயன்படுத்துபவர்; (நயமாகச் செய்து முடிக்கக் கூடிய காரியங்களில்கூட பேராற்றல் படைத்திருக்கும் செருக்கினால்) வில் ஒன்றையே அனைத்துமாக நம்பிக் கொண்டிருப்பவர். மக்கட்தலைவரே! உங்களுக்குத் தருமத்தில் உறுதியான பிடிப்பு

இல்லை; பொருளைச் சேகரிப்பதிலும் நாட்டமில்லை. ஐம்புலன்களால் அலைக்கழிக்கப்பட்டு, மனம் போன போக்கில் நடக்கிறீர்கள். (31,32)

காகுத்தரே! இப்போது, குற்றமேதும் செய்யாத என்னை ஒரு பாணத்தினால் கொன்று விட்டீர்கள். வெறுக்கத்தக்க இந்தக் காரியத்தைச் செய்துவிட்ட நீங்கள், சான்றோர்கள் கூடி நின்று கேள்வி கேட்டால் என்ன பதில் சொல்வீர்கள்? ('நான் செய்தது நியாயம்' என்று உங்களால் சொல்ல முடியுமா?) அரசனைக் கொன்றவன், அந்தணனைக் கொன்றவன், பசுவைக் கொன்றவன், திருடன், பிராணிகளைத் துன்புறுத்துவதில் மிகவும் ஈடுபாடுடையவன், தெய்வத்தை ஒப்புக் கொள்ளாதவன், அண்ணனுக்கு விவாகம் ஆகாதிருக்கும்போது, விவாகம் செய்து கொண்ட தம்பி (இவனுக்கு 'பரிவேத்தா' என்று அவப்பெயர்) – இவர்கள் எல்லோரும் நரகத்திற்குப் போகிறவர்கள். (பிராயச்சித்தம் செய்துத் தப்பித்துக் கொள்ள முடியாதவர்கள்.) (33,34)

ஒரு ரகசியத்தைப் பகிரங்கப்படுத்துபவன்; தான–தருமம் செய்யாத கஞ்சன்; நண்பனைக் காட்டிக் கொடுப்பவன்; குரு பத்தினியுடன் உறவு கொண்டவன் – இவர்கள், பாவிகளுக்குரிய (துன்பமயமான) லோகத்தை (மரணத்திற்குப் பின்) சென்றடைகிறார்கள் என்பதில் ஐயமில்லை. தங்களைப் போன்ற அறநெறி தவறாத சான்றோர்களால் எனது தோல் அணியத்தக்கதன்று; (மான் தோல், புலித்தோல் போன்றது அல்ல.) உரோமங்களும் எலும்புகளும் விலக்கத் தக்கவைகள்; (கவரிமான் ரோமம், யானைத் தந்தம் போல் உபயோகத்திற்கு உகந்தவை அல்ல.) உடற்சதைகளும் உணவாகக் கொள்ளத்தக்கவை அல்ல. (35,36)

இராகவா! அந்தணர்களாலும் க்ஷத்திரியர்களாலும் ஐந்து நகங்களைக் கொண்ட ஐந்துவிதமான பிராணிகள் புசிக்கத்தக்கவை. முள்ளம்பன்றி, பன்றி, உடும்பு, முயல் மற்றும் ஐந்தாவதாக ஆமை. மன்னரே! என்னுடைய தோலையும் எலும்பையும், ஆசாரமுடைய மேன்மக்கள் தொடக்கூட மாட்டார்கள்; உடற்சதையும் உண்ணத்தகாதது. (அறநெறி இப்படி இருக்கும்போது) ஐந்து நகமுள்ள விலங்கினத்தைச் சேர்ந்த நான் (தங்களால்) கொல்லப்பட்டேன்! உலக விவகாரங்களின் நுட்பத்தையறிந்த தாரையால், எனக்கு நலன் விளைவிப்பதும் சத்தியமுமான சொற்கள் சொல்லப்பட்டன. ஆனால், நான் என் மதிமயக்கத்தால் அதை மீறிக் கொண்டு (இங்கு வந்து) காலனின் கைவசப்பட்டேன்! (37,39)

காகுத்தரே! நல்லொழுக்கமுடைய ஒரு பத்தினிப் பெண், தீயநடத்தையுடைய கணவனுடன் எவ்வாறு சுகமாக இருக்க முடியாதோ, அதேபோல, உங்களை நாதனாக அடையப் போகிற நிலமகள், தனக்கேற்ற கணவனை அடைந்தவளாக இருக்கமாட்டாள். வஞ்சகர், தீங்கிழைப்பவர், கொடியவர், நல்லவர் போல் வேடந்தரித்த பொய்யர், தீத்தொழில்களில் பற்றுடையவர் – இப்படிப்பட்ட உங்களை, மகாத்மாவான தசரதர் எதற்காகப் பெற்றெடுத்தாரோ? நன்னடத்தை என்ற கயிற்றை அறுத்துக் கொண்டு, தருமம் என்ற அங்குசத்திற்குக் கட்டுப்படாததும், சான்றோர்களின் நன்னெறியை மீறித் தன்னிச்சையாகத் திரியும் இராமன் என்ற யானையால் நான் வீழ்த்தப்பட்டேன். (40–42)

தீமையைத் தருவதும், நியாயமற்றதும், மேலோர்களால் இழித்துரைக்கப்படுவதுமான இப்படிப்பட்ட செயலைச் செய்துவிட்டு, நல்லொழுக்கமுடைய அறிஞர்களின் சபையில், இழிவான இந்தச் செயலைச் செய்தது பற்றி வாய் திறப்பீர்களா? இராமா! உங்கள் செயல்களில் தலையிடாத என்னிடம் காட்டிய பராக்கிரமத்தை, உங்களுக்குக் குற்றமிழைத்தவர்களிடம் நீங்கள் காட்டவில்லையே! (உங்கள் மனைவியைக் கவர்ந்து சென்றவனின் இருப்பிடத்தைக்கூட நீங்கள் இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லையே?) மன்னர் மைந்தனே! எனக்கு நேரில், கண்களுக்கு முன்பாக வந்து யுத்தம் செய்திருப்பீர்களேயானால், என்னால் கொல்லப்பட்டு, இந்த நேரத்தில் யமதருமனைக் கண்ணால் பார்த்திருப்பீர்கள்! (43–45)

மதுபானம் செய்துவிட்டு மயங்கிக் கிடக்கும் ஒருவனை (எவ்வித எதிர்ப்பும் அச்சமுமில்லாமல்) ஒரு பாம்பு தீண்டுவதைப் போல, போரில் வெல்ல முடியாத என்னை, கண்ணில் படாமல்

மறைந்திருந்தே (வெகுசுலபமாகக்) கொன்று விட்டீர்கள்! எந்த ஒரு காரியத்தைச் சாதித்துக் கொள்வதற்காக, சுக்ரீவனுக்கு உதவி செய்ய விரும்பி என்னைக் கொன்றீர்களோ, (அந்தக் காரியத்தை நிறைவேற்றிக் கொடுக்கும்படி) முன்னரே என்னை அணுகியிருந்தால், ஜானகியை ஒரே நாளில் நான் கொண்டு வந்திருப்பேன் என்பதில் ஐயமில்லை. (46,47)

அவன் மைதிலியைக் கடலுக்கு அடியிலோ பாதாள லோகத்திலோ மறைத்து வைத்திருந்தாலும், மது–கைடபர்களால் கவர்ந்து சென்று கடலுக்கு அடியில் மறைத்து வைக்கப்பட்ட வேதங்களை, பகவான் ஹயக்ரீவர் மீட்டு வந்ததைப் போல, தங்கள் கட்டளையை ஏற்று, சீதையை மீட்டு வந்திருப்பேன். யுத்தம் செய்து, இராவணனை உயிருடன் பிடித்து கழுத்தில் கயிற்றைக் கட்டி இழுத்து வந்து, தங்களிடம் ஒப்படைத்திருப்பேன். நான் மேலுலகம் சென்றபின், சுக்ரீவன் ஆட்சியைப் பெறுவான் என்பது சரியானதுதான். ஆனால், அறநெறிகளுக்கு மாறாக, நான் தங்களால் போரில் கொல்லப்பட்டேன் என்பது நியாயமானது அல்ல. உலகம், இப்படித்தான் விதியின் வசப்பட்டு நடக்கிறது. இதுவரை நடந்தது நடந்து போனதாகவே இருக்கட்டும். (நான் கொல்லப்பட்டதில், இனி எனக்கு வருத்தமில்லை. அது, விதிவசம்.) ஆனால், நீங்கள் செய்தது நியாயம்தான் என்று கருதும்பட்சத்தில் அதற்குரிய காரணங்களை யோசனை செய்து கூறுங்கள்.'' (48–50)

தேவராஜனின் புதல்வனும், மகாதைரியசாலியும், அம்பின் தாக்குதலால் மிகவும் வேதனைப்படுபவனும், முகம் உலர்ந்து போனவனுமான அவன், சூரியனைப் போல் ஒளிவீசும் இராமனைப் பார்த்து மேற்கண்டவாறு கூறிவிட்டுப் பேச்சை நிறுத்திக் கொண்டான். (51)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
பதினேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பதினெட்டு

வாலியைக் கொன்றது நியாயமே!

அடித்துத் தள்ளப்பட்டதால் உணர்வு மங்கிக் கிடந்த வாலி, விநயம்–தருமம்–அர்த்தம்–நியாயம் கூடிய மேற்கண்ட சொற்களை, இராமனைப் பார்த்துக் கோபத்தோடு கூறினான். அப்போது, ஒளியிழந்த சூரியனைப் போன்றிருப்பவனும் பொழிந்துவிட்ட மேகத்தைப் போன்றிருப்பவனும் சுவாலை அடங்கிவிட்ட நெருப்பைப் போலாகிவிட்டவனுமான வானரத் தலைவனால் இகழ்ந்துரைக்கப்பட்ட சொற்களைக் கேட்டபிறகு, அறம்–பொருள்–நற்பண்புகள் கூடிய உத்தமமான பதிலை, இராமன் வாலிக்குக் கூறினார்— (1–3)

"அறம், பொருள் ஆகிய புருஷார்த்தங்களையும் உலக நடைமுறைகளையும் முற்றிலுமாக அறியாத நீ, இப்படியெல்லாம் என்னைத் தூற்றுகிறாய். வீரனே! அறிஞர்களையும் முதியவர்களையும் ஆசார்யர்களால் மதிக்கப்பட்டவர்களையும் கலந்து ஆலோசிக்காமல், வானரங்களுக்குரிய இயல்பான சஞ்சலத்தன்மையால் என்னைப் பற்றி இவ்வாறு (அவசரமாகப்) பேசிவிட்டாய். மலை–காடு–மரக் கூட்டங்கள் அடங்கிய இந்த மண்ணுலகமும் (ஜம்பூத்வீபம்), இங்குள்ள விலங்கு–பறவை–மானுடர் ஆகியோருக்குத் தண்டனை கொடுப்பது, காப்பாற்றுவது என்ற கடமைகளும், இக்ஷ்வாகு குல மன்னர்களுக்கு உரியவை. (4–6)

சத்தியமும் நேர்மையும் தவறாதவனும், தருமார்த்த காமங்களை அறிந்தவனும், தருமாத்மாவானவனுமான பரதன், இவ்வுலகிலுள்ள பிராணிகளை அடக்குவதிலும் காப்பாற்றுவதிலும் மிகவும் ஆர்வமுடையவனாக ஆட்சி செலுத்தி வருகிறான். எவனிடத்தில் வாய்மை உறுதியாக இருக்கிறதோ, எவனிடம் அரசநீதியும் பொதுக் கல்வியறிவும்

நிலைகொண்டுள்ளனவோ, எவன் பராக்கிரமம் உடையவனோ, எவன் இடம்–காலம் அறிந்து அறநூல் விதிகளின்படிச் செயல்படுபவனோ, அவனே மன்னன் என்ற பெருமைக்கு உரியவன். (பரதனிடம் இவையெல்லாம் அமைந்திருக்கின்றன.) (7,8)

நாங்களும் மன்னர் குலத்தைச் சேர்ந்த வேறு சிலரும், அவனுடைய கடமைகளை நிறைவேற்றுவதில் உறுதுணையாக இருக்கும்படி உத்தரவிடப்பட்டவர்களாக, அறப்பண்புகள் தொடர்ந்து விளங்க வேண்டும் என்ற பெருவிருப்பத்துடன், உலகம் முழுவதிலும் சுற்றிக் கொண்டிருக்கிறோம். அரசர்களில் சிறந்தவனும், அறநெறிகளில் பெரும் பற்றுடையவனுமான பரதன், அகில உலகத்தையும் ஆட்சி செலுத்தி வருகையில், தருமத்திற்குப் புறம்பான செயலைச் செய்ய எவன்தான் முற்படுவான்? எங்களுடைய (அரசக்) கடமைகளில் உறுதியாக நிற்கும் நாங்கள், பரதனுடைய ஆணையின்படி, அறநெறி நழுவியவனைத் தண்டிக்கிறோம். (9–11)

நீயோ, நல்வழியிலிருந்து தவறிச் சென்றவன், கொடுஞ்செயல்களைச் செய்து பெரியோர்களின் இகழ்ச்சியைத் தேடிக் கொண்டவன், காமத்தையே முக்கியமாகக் கொண்டவன், நாடாளும் அரசருக்குரிய நெறியில் நில்லாதவன். தனக்கு முன் பிறந்த சகோதரன் (அண்ணன்), தந்தை, கல்வி கற்பித்தவர் ஆகிய மூவரும், அறவழியில் செல்பவனுக்குத் தந்தை போன்று கருதத்தக்கவர்கள். தனக்குப் பின்னர் பிறந்த சகோதரனும் (தம்பி), பெற்றெடுத்த புதல்வன், நற்குணங்களோடு கூடிய சீடன் – இவர்கள், தன் குமாரனைப் போல் (மிகுந்த பாசத்துடன்) எண்ணத்தக்கவர்கள் என்பது அறநூல் கூற்று. (12–14)

வானரனே! சான்றோர்களின் நடைமுறைகளில் அடித்தளத்தை அறிந்துகொள்வது மிகவும் கடினம்; அது, மிகவும் நுட்பமானது. ஒரு செயல், நல்லது–தீயது என்பதை எல்லாப் பிராணிகளின் இதயத்திலுள்ள ஆத்மாவே அறியும். பிறவியிலேயே கண்பார்வையில்லாத ஒருவனைப் பிறவியிலேயே பார்வை அற்றவனான இன்னொருவன், சரியான பாதையைக் காட்டும்படிக் கேட்டுத் தெரிந்து கொள்ள முடியுமா? நீ, இயற்கையிலேயே சபல சித்தமுடையவன்; எப்போதும் நிலையில்லாமல் திரியும் அறிவுடைய, புலன்களை வெற்றிகொள்ளாத வானரர்களுடனேயே இருந்து வருகிறாய். அப்படிப்பட்டவர்களுடன் மந்திராலோசனை செய்து, என்ன தத்துவத்தை நீ உணர்ந்து கொள்வாய்! (15,16)

நான், இப்போது கூறியவற்றின் சூட்சுமக் கருத்துக்களை விளக்கமாகக் கூறுகிறேன், கேள். கோபத்தால் ஆட்கொள்ளப்பட்டு, என்னை நீ இகழ்ந்து பேசக்கூடாது. எந்தக் காரணத்தில் (நீ செய்த எந்தக் குற்றத்தினால்) என்னால் கொல்லப்பட்டாயோ, அந்தக் காரணத்தைத் தெரிந்து கொள். பழமையான அறநெறியைக் கைவிட்டுவிட்டு, சகோதரனின் மனைவியுடன் உறவு கொண்டிருக்கிறாய். (சகோதரன் உயிருடன் இருக்கும்போது அவன் மனைவியைப் பறித்துக் கொள்வது தவறு. அவன் இறந்துபோனால், அவளைத் தன் மனைவியாக இன்னொரு சகோதரன் ஏற்றுக் கொள்ளலாம் என்பது வானரர் மரபு.) அறம் தவறாதவனான சுக்ரீவன் உயிருடன் இருக்கும்போதே, உனக்கு மருமகள் போன்ற ருமையை, காமத்தினால் கைப்பற்றிக் கொண்ட பாவச்செயலைச் செய்தவன், நீ. (17–19)

வானரனே! தருமத்திலிருந்து விலகி, காமம் மீதூரப் பெற்று, தம்பியின் மனைவியிடம் இன்பம் காணும் உனக்கு, இந்தத் தண்டனைக் கொடுக்கப்பட்டிருக்கிறது. வானரத் தலைவனே! அறநெறியை விட்டு விலகி, உலக நடைமுறைக்கு மாறாக நடப்பவனை, இவ்வாறு கட்டுப்படுத்துவதைத் தவிர வேறு ஒரு தண்டனையை நான் காணவில்லை. நான், நற்குடியில் பிறந்த க்ஷத்திரியன். சொந்த மகள், தங்கை (சகோதரி) அல்லது தம்பியினுடைய மனைவியிடம் காமவெறி கொண்டு தவறு செய்பவனுக்கு, கொலைத் தண்டனைதான் நீதிநூல்களில் கூறப்பட்டுள்ளது. (20–22)

பரதன் (என்ற மகாத்மா) உலகாளும் மன்னன்; நாங்கள் அவன் உத்தரவுப்படி நடப்பவர்கள். (அறக்கடவுள் போன்ற அவன் ஆட்சி செலுத்தும் நாட்டில்) உன்னைப் போன்று அறநெறி தவறி

நடப்பவர்களை எப்படி அலட்சியப்படுத்த முடியும்? பேரறிவாளனும் மன்னனுமான பரதன், அரசநீதிப்படி நல்லோர்களைக் காப்பாற்றிக் கொண்டு, மனம் போனபடியெல்லாம் நடப்பவர்களையும், அறநெறி தவறியவர்களையும் தண்டிப்பதில் உறுதியோடு இருக்கிறான். வானர மன்னா! பரதனுடைய அந்த உள்ளக்கிடக்கையை (எங்களுக்கு இடப்பட்ட) ஆணையாகக் கொண்டு, உன்னைப் போல் எல்லை மீறி நடப்பவர்களைத் தண்டிப்பதில் உறுதியாக இருக்கிறோம். (23–25)

எனக்கு, லட்சுமணனிடம் எல்லையற்ற அன்பு இருப்பதைப் போல, சுக்ரீவனுடன் ஆழ்ந்த நட்பு ஏற்பட்டிருக்கிறது. தன் மனைவியையும் அரசாட்சியையும் பெறுவதற்காக நட்பு கொண்ட அவன், எனக்கு உதவி செய்வதில் குறியாக இருக்கிறான். நட்பு பூண்ட காலத்தில், என்னால் அக்னிசாட்சியாகப் பிரதிக்ஞை செய்யப்பட்டது. என் போன்றவர்களால் கொடுத்த வாக்குறுதியை எவ்வாறு புறக்கணிக்க முடியும்? அறநெறிக்கு இசைவான இத்தகைய மகத்தான காரணங்களால், உன்னைத் தண்டிப்பது என்பது சரியானதே. அதை நீயும் ஒப்புக் கொள்ள வேண்டும். (26–28)

உன்னைத் தண்டித்தது, எந்த வகையில் பார்த்தாலும் நியாயமானது என்றே எண்ணத்தக்கது. அறவழியையே கடைப்பிடிப்பவனுக்கு நண்பனுக்கு உபகாரம் செய்வது முக்கியமான கடமை. (அதைத்தான் நான் செய்திருக்கிறேன்.) நீ அரசனாக ஆட்சி செய்து கொண்டிருக்கிறாய். அரசநெறிப்படிப் பார்த்தாயேயானால், நீயும், நான் செய்த காரியத்தைத்தான் செய்திருப்பாய். அரசர்களுக்கு இருக்கவேண்டிய நல்லொழுக்கங்களை மனு, இரண்டு செய்யுள்களாக ஸ்ம்ருதியில் கூறியிருக்கிறார். அவைகளை, தருமத்தைச் சிறிதளவும் பிறழாது அனுஷ்டிக்கும் பெரியோர்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். நானும் அவ்வாறே செய்தேன். (29,30)

குற்றம் செய்த மனிதர்கள், மன்னர்கள் கொடுக்கும் தண்டனையை அனுபவித்துவிட்டால், பாவம் நீங்கியவர்களாகி, புண்ணியம் செய்த மேலோர்கள் போலவே சுவர்க்கத்தை அடைகிறார்கள். ஒரு திருடன், அரசனால் தண்டனை கொடுக்கப்பட்டாலோ, மன்னித்து விடுதலை செய்யப் பட்டாலோ திருடிய பாவத்திலிருந்து விடுபடுகிறான். ஆனால், மன்னனோ ஒரு குற்றவாளிக்கு (பாவிக்கு) உரிய தண்டனையைக் கொடுக்காவிட்டால், அந்தக் குற்றத்திற்கான பாவத்தைத் தானே அடைகிறான். முன்னொரு சமயத்தில், என்னுடைய முன்னோரான மாந்தாதா என்ற மன்னர், நீ இப்போது செய்ததைப் போன்ற பாவத்தை ஒரு துறவி செய்தபோது, அவருக்கு மிகக் கடுமையான தண்டனை வழங்கினார். (31–33)

பிறரால் செய்யப்பட்ட பாவங்களைத் தம் கவனக்குறைவால் சில மன்னர்கள் கண்டுகொள்ளாததால், அவர்களுக்கே வந்து சேர்ந்த, அந்தப் பாவங்களுக்காகக் கழுவாய் செய்து கொள்கிறார்கள். அதனால், அந்தப் பாவம் நீங்குகிறது. வானர வீரனே! நீ பரிதாபப்பட்டது போதும். உன்னுடைய வதம், தருமநெறிகளின்படியே செய்யப்பட்டிருக்கிறது. (நாங்கள் தருமத்திற்குக் கட்டுப்பட்டவர்கள்.) எங்கள் இஷ்டப்படியெல்லாம் நடக்கக்கூடியவர்கள் அல்லர். வானரோத்தமனே! இன்னொரு முக்கியமான காரணத்தையும் கூறுகிறேன், கேள். தகுந்த நியாயத்தோடு கூடிய அந்த காரணத்தைக் கேட்டதும், நீ உன் கோபத்தை விட்டுவிடுவாய். (34–36)

வானரத் தலைவனே! நான் அரசநீதிக்கு உட்பட்டே காரியம் செய்திருக்கிறபடியால், உன்னைக் கொன்ற இந்த விஷயத்தில், எனக்கு மனவருத்தமோ, (என்னை இகழ்ந்து பேசியதால்) கோபமோ ஏற்படவில்லை. ஏனென்றால், மனிதர்கள் (வேடர், அரசர் போன்றோர்) பெரிய வலைகளை விரித்தும், கயிறுகளைக் கட்டியும், கபடமான மற்ற வழிகளாலும் (ஆழமான பள்ளம் தோண்டி, அதன் மேற்புறத்தை புல்–கற்றைகளால் மறைத்து வைத்தல்) மறைந்திருந்தோ, அல்லது நேரில் கண்ணில்படும்படியாக நின்றோ, அச்சங்கொண்டு அவைகள் வெகுவேகமாக ஓடிச்சென்றாலும் அல்லது பயமில்லாமல் பக்கத்திலேயே இருந்தாலும் அநேக விலங்குகளைக் கைவசப்படுத்துகிறார்கள். (37,38)

க்ஷத்திரியர்கள், விலங்குகள் கவனமாக இருந்தாலும், கவனியாமல் இருந்தாலும், எதிர்ப்புறமாக ஓடினாலும் வேட்டையாடிக் கொன்று விடுகிறார்கள். இதில் குற்றம் (பாவம்) ஏதும் இல்லை. (பாவச் செயலாகக் கூறப்படவில்லை.) தருமத்தைப் பற்றிய முற்றறிவுடைய ராஜரிஷிகளும் இங்கே வேட்டையாட வருகிறார்கள். என்னுடன் நேரில் போரிட்டாலும் போரிடாவிட்டாலும், நீ ஒரு குரங்கு (விலங்கு). ஆதலால், வானரனே! யுத்தத்தில் என்னால் அம்பு எய்தப்பட்டுக் கொல்லப்பட்டாய். வானரோத்தமனே! மன்னர்கள், எளிதில் அடைய முடியாத (பரலோக சாதனங்களான) அறங்களையும், நல்ல வாழ்க்கைக்கு வேண்டிய இகலோக சௌகரியங்களையும் செய்து கொடுக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை. (39–41)

தேவதைகளே மனித வடிவில் அரசர்களாகத் தோன்றி, மண்ணுலகில் விளங்கி வருகிறார்களாதலால், அவர்களைத் துன்புறுத்தக் கூடாது; நிந்தனை செய்யக் கூடாது; எதிர்க்கக் கூடாது; அவர்களுக்குப் பிடிக்காத சொற்களைப் பேசக்கூடாது. அறத்தின் நுட்பங்களை அறியாத நீ, வெறும் கோபத்திற்கு மட்டுமே ஆளாகி, என் முன்னோர்கள் பரம்பரையாக அனுஷ்டித்து வந்த அறநெறியின்படியே நடந்த என்னை இகழ்ந்து பேசுகிறாய்.'' இவ்வாறு, இராமன் கூறியதைக் கேட்டதும் வாலியின் மனத்தில் மிகவும் தன்னிரக்கம் ஏற்பட்டது. அறநெறிகளின் சூட்சுமங்களைத் தெளிவாக அறிந்துகொண்ட அவன், இராமனிடம் ஏற்பட்டிருந்த கோபத்தை விட்டொழித்தான். (42–44)

வானர மன்னனான வாலி இருகைகளையும் கூப்பிக்கொண்டு, ''மன்னரே! தாங்கள் கூறியனவெல்லாம், தாங்கள் கூறியபடி நியாயமானதுதான் என்பதில் சந்தேகமில்லை'' என்று இராமனுக்குப் பதில் கூறினான். ''தங்களைப் போன்ற மேன்மக்களுக்குப் பதில் கூறுவதற்கு, என் போன்ற பாமரர்களால் முடியாது. மனக்குழப்பத்தினால் நான் முன்னர் கூறிய கடுஞ்சொற்களையும் தாங்கள் மனத்தில் வைத்துக் கொள்ளக் கூடாது. தாங்கள், அறநூல்களின் உட்கிடக்கையைத் தெளிவாக அறிந்தவர்; மக்களின் நலனில் நாட்டமுடையவர். ஒரு காரியம், அதற்கான காரணம் ஆகியவைகளை முடிவு செய்வதில் தங்கள் அறிவு சஞ்சலமில்லாமலும் குறைவற்றதாகவும் இருக்கிறது. அறநெறி உணர்ந்தவரே! நான் அறநெறியிலிருந்து வழுவியவன். செய்யக்கூடாத செயல்களைச் செய்தவனான என்னை, தருமத்திற்கியைந்த சொற்களைக் கொண்டு அனுக்கிரகித்துக் காத்தருள வேண்டும்.'' (45–48)

(துக்கம் காரணமாக,) கண்ணீரால் தடைபட்ட தொண்டையுடன் வாலி, சேற்றில் சிக்கிக் கொண்ட யானை போல் துக்கம் தொனிக்கும் குரலில், மெல்ல இராமனைப் பார்த்து, மேலும் சொன்னான்— ''அழகிய தோற்றமுடைய(பொன் தோள்வளை அணிந்த)வனும், உயர்ந்த குணங்களைக் கொண்டவனுமான புதல்வன் அங்கதனைப் பற்றி, நான் கவலைப்படுகிறேனே தவிர, என்னைப் பற்றியோ, (உங்கள் திருக்கரத்தினால் அடிபட்டதால் எனக்குத்தான் வைகுண்டவாசம் கிடைக்கப் போகிறதே!) (சுக்ரீவன் காப்பாற்றுவான் என்பதால்) தாரை மற்றும் உறவினர்களைப் பற்றியோ நான் கவலைப்படவில்லை. (அங்கதன்) அவன், குழந்தைப் பருவத்திலிருந்தே என்னால் கொஞ்சிக் குலாவி வளர்க்கப்பட்டவன். என்னைக் காணாமல், (பிராணிகள் குடித்துவிட்டுச் சென்றதால்) நீர் வற்றிப் போய் விட்ட குளம் போல் களையிழந்து போய் விடுவான். (49–51)

இராமா! அவன் சிறியவன்; கல்வியறிவு முழுமையாகப் பெறாதவன்; ஒரே புதல்வன்; எனக்கு மிகவும் பிரியமானவன்; தாரையிடம் தோன்றியவன்; மிகவும் பலம் கொண்டவன். அவனைத் தாங்கள்தான் பாதுகாக்க வேண்டும். சுக்ரீவனிடத்திலும் அங்கதனிடத்திலும் மிகவும் பரிவுடன் நடந்து கொள்ள வேண்டுகிறேன். தாங்கள்தான் (அவர்கள் மேல்) மேலாண்மை செலுத்தக்கூடியவர்; பாதுகாவலர்; செய்யத்தக்கது எது, செய்யத்தகாதது எது? என்பதை வகுத்துத் தர வல்லவர். மக்கள் தலைவரே! மன்னரே! பரதனிடத்திலும் லட்சுமணனிடத்திலும் தாங்கள் எவ்வளவு பாசத்துடன்

நடந்து கொள்கிறீர்களோ, அவ்வாறே சுக்ரீவனிடத்திலும் அங்கதனிடத்திலும் தாங்கள் நடந்து கொள்ளவேண்டும். (52–54)

நான், சுக்ரீவனுக்குச் செய்த கேடுகளெல்லாம் தாரையின் தூண்டுதலால் செய்யப்பட்டவை என்று எண்ணி, அவன் அவளைக் குற்றவாளியாகக் கருதி அவமதிக்கக் கூடாது. அதற்கான ஏற்பாடுகளைத் தாங்கள் செய்யவேண்டும். தங்களுடைய தயவுக்குப் பாத்திரமானால் ஒரு நாட்டைப் பெற்று ஆட்சி செய்ய முடியும். தங்கள் விருப்பத்திற்கு (ஆணைக்கு) அனுகூலமாக நடந்து கொண்டு, தங்களுக்கு வசப்பட்டு நடப்பவனால் தேவலோகத்தையே பெற்றுவிட முடியும். பூமண்டலம் முழுவதும் ஆட்சி செய்ய முடியும். நான், தங்களால் வதம் செய்யப்பட வேண்டும் என்று நெஞ்சார விரும்பினேன். அதனால்தான் தாரையினால் தடுக்கப்பட்டாலும் சகோதரனான சுக்ரீவனுடன் துவந்துவ யுத்தம் புரிய வந்தேன்.'' (55–57)

இவ்வாறு இராமனிடம் கூறிவிட்டு வானரத் தலைவனான வாலி பேச்சை நிறுத்திக் கொண்டான். (இராமனின் சொற்களினால்) தெள்ளறிவு பெற்றுவிட்ட வாலியை மனச்சாந்திக்கு ஏற்றதும் தருமத்தின் நுட்பங்களை விளக்கிக் காட்டுவதுமான சொற்களால் இராமன் ஆறுதல்படுத்தினார்— ''வானரனே! நடந்து போன இந்த விஷயத்தில் மனக்குறை எதனையும் நீ வைத்துக் கொள்ளவேண்டாம். வானரோத்தமனே! நாங்கள் தவறு செய்துவிட்டோம் என்றோ, நீ தவறு செய்துவிட்டாய் என்றோ எண்ண வேண்டாம். உன்னைக் காட்டிலும் தருமத்தைக் கடைப்பிடிப்பதில் நாங்கள் உறுதியானவர்கள். (58–60)

தண்டனைக்கு உரியவன் தண்டிக்கப்பட வேண்டும்; தண்டனை கொடுக்கும் அதிகாரி, குற்றம் செய்தவனுக்குத் தண்டனை கொடுக்க வேண்டும். இப்படியாக, காரிய–காரணங்கள் நிறைவேற்றப்பட்டுவிட்டால், அவ்விருவரும் குறை நீங்கியவர்களாகி விடுகிறார்கள். (இருவரையுமே பாவம் ஒட்டிக் கொள்ளாது.) தண்டநீதி நூல்களில் கூறப்பட்டுள்ளபடி, நீ இந்தத் தண்டனையை அடைந்துவிட்டபடியால், (பாவம் நீங்கியவனாக) அறநூல்களில் கூறப்பட்ட தூய வடிவினைப் பெற்றுவிட்டாய். வானரத் தலைவனே! உன் நெஞ்சத்திலிருக்கும் சோகத்தையும் மோகத்தையும் பயத்தையும் விட்டுவிடு. விதிவசத்தால் வருவதை உன்னால் விலக்க முடியாது. வானரத் தலைவனே! அங்கதன், உன்னிடத்தில் எப்போதும் எப்படி இருந்தானோ, அவ்வாறே சுக்ரீவனிடத்திலும் என்னிடத்திலும் சௌக்கியமாக இருப்பான் என்பது உறுதி.'' (61–64)

வானரனான அவன், விசாலமான உள்ளம் உடையவரும், அறநெறியையே பின்பற்றி நடப்பவரும், போரில் எதிரிகளை மாய்ப்பவருமான இராமபிரானுடைய மனத்திற்குச் சாந்தி அளிக்கக்கூடிய இனிய சொற்களைக் கேட்டு, அந்தச் சமயத்திற்கேற்றதான சொல்லைக் கூறினான்— ''பெருந்தகையீர்! இந்திரனுக்கு ஒப்பானவரே! அளவில்லாத பராக்கிரமம் உடையவரே! (தங்களது) அம்பினால் தாக்கப்பட்டு உணர்விழந்த நான், அறிவு மயங்கி தங்களைத் தூற்றிவிட்டேன். இப்போது தங்களை வேண்டிக் கொள்கிறேன், மன்னரே! என்னை மன்னித்தருள வேண்டும்.'' (65,66)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
பதினெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பத்தொன்பது

தாரையின் வருகை

பாணம் தைக்கப்பட்டுப் படுத்துக் கிடந்த வானர மாமன்னன், ஏற்கத்தக்க காரணங்களோடு கூடிய பதில் சொல்லப்பட்டதனால், (அவைகளை மனத்தில் வாங்கிக் கொண்டு) மறுபடியும்

பதில் சொல்லாமலிருந்தான். பாறைகளால் சரீரம் காயப்படுத்தப்பட்டும், மரங்களால் மிகவும் தாக்கப்பட்டும் இராம பாணத்தின் தாக்குதலால் அயர்ந்தும் போன அவன், வாழ்க்கையின் இறுதியை அடைந்து மூர்ச்சை அடைந்தான். யுத்தத்தில் இராமன் விட்ட பாணத்தால், வானர மாவீரனான வாலி கொல்லப்பட்டான் – என்ற செய்தியை தாரை கேட்டாள். (1–3)

மிகக் கொடுமையானதும் மனத்திற்குப் பிடிக்காததுமான இந்தச் செய்தியை (கணவன் கொலை செய்யப்பட்டான் என்பதை)க் கேட்டவுடன் மிகவும் மனம் நடுங்கியவளாக, மலைக்குகையிலிருந்து (தலைவன் கொல்லப்பட்டவுடன்) பெண் மான்கள் கதறி ஓடுவதைப் போல, தன் புதல்வனோடு (கிஷ்கிந்தைக் குகையிலிருந்து) வெளியே வந்தாள். அங்கதனின் பரிவாரத்திலிருந்த மகாபராக்கிரமசாலிகளான வீரர்கள் அனைவரும், கையில் கோதண்டத்துடன் விளங்கும் இராமனைக் கண்டு நடுநடுங்கிச் சிதறி ஓடினார்கள். அப்போது, தமது கூட்டத்தின் தலைவன் மாய்க்கப்பட்டதைக் கண்ட மற்ற மான்கள் அனைத்தும் நாற்புறமும் வெகுண்டோடுவதைப் போல, வானரர்கள் (வாலி வதத்தினால்) மிகவும் அச்சங்கொண்டு விழுந்தடித்துக் கொண்டு ஓடுவதைப் பார்த்தாள், தாரை. (4–6)

மிகவும் துக்கத்திலிருந்த கற்புக்கரசியான தாரை, இராமனைப் பார்த்துப் பயந்தோடுபவர்களும், (ஏதோ, தாங்களே இராம) பாணத்தால் அடியுண்டதைப் போல அஞ்சி நடுங்கியவர்களுமான அவர்களிடம் சென்று பின்வருமாறு கூறினாள்— ''வானரர்களே! நீங்களெல்லோரும் வானர சிம்மமான வாலி வெளியில் புறப்படும்போது, அவருக்கு முன்பாக (கட்டியம் கூறுபவர்களாகவும் மெய்காப்பாளர்களாகவும்) சென்று கொண்டிருந்தவர்கள். இப்போது, அவரைத் தனியே விட்டுவிட்டு, மிகவும் நடுங்கித் துயரத்துடன் ஏன் ஓடுகிறீர்கள்? கொடுமனக்காரனான சகோதரன் சுக்ரீவன், அரசாட்சிக்கு ஆசைப்பட்டு, வெகுதூரத்திலிருந்து இராமனால் செலுத்தப்பட்ட பயங்கரமான பாணங்களால் வாலி கொல்விக்கப்பட்டார்.'' (7–9)

வானர (மன்னன்) பத்தினியால் கூறப்பட்ட சொற்களைக் கேட்ட, நினைத்த உருவம் எடுக்கவல்ல வானரர்கள், அந்த மங்கையை நோக்கித் தெளிவாகக் கூறினார்கள்— ''உயிரோடிருக்கும் மகனை உடையவரே! நீங்கள் (குகைக்குத்) திரும்பிச் செல்லுங்கள்; புதல்வன் அங்கதனைக் காப்பாற்றுங்கள். யமனே, இராமன் என்ற வடிவில் வந்து, வாலியைக் கொன்று (உயிரை) எடுத்துச் செல்கிறான். வாலி, பெரிய மரங்களைப் பிடுங்கி (சுக்ரீவன் மீது) எறிந்தார்; பெரிய பாறைகளை வீசினார். ஆனால், வஜ்ராயுதத்திற்கொப்பான இராமபாணங்களால் வாலி தரையில் சாய்க்கப்பட்டார். இந்திரனுக்கு நிகரான ஆற்றல் படைத்த வானரத் தலைவர் கொல்லப்பட்டதும், படைவீரர்கள் எல்லோரும் மனம் கலங்கி, வேகமாகச் சிதறி ஓடிவிட்டார்கள். (10–13)

நகரத்தின் நுழைவாயிலை வீரர்கள் காவல் புரியவேண்டும். அங்கதனுக்குப் பட்டாபிஷேகம் செய்யப்பட வேண்டும். (அரசனாகப்) பதவியேற்றதும் வாலியின் மைந்தனை அனைத்து வானரர்களும் வாழ்த்தி வணங்குவார்கள். மங்களமுகமுடையவளே! தாங்கள் இப்போது இருப்பதுகூட சரியானதாகப் படவில்லை. (ஏனென்றால், நம்முடன் ஒத்துப் போகாத) பிற வானரங்கள் மற்ற கோட்டைகளைக் கைப்பற்றிக் கொள்வார்கள். மனைவியில்லாத, மனைவிகளோடு கூடிய வானரர்கள் பலர் இங்கு இருக்கிறார்கள். மனைவிகளிடமிருந்து நம்மால் பிரிக்கப்பட்டவர்கள், நாட்டுக்குள் நுழையும் சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பேராசைக்காரர்களான அவர்களால்தான் நமக்குப் பேராபத்து விளையும் (என்பது எதிர்பார்க்கத் தக்கதே).'' (16)

பாமரத்தனமான சிந்தனையுடைய அவர்களுடைய சொற்களைக் கேட்ட அந்தப் பெண்மணி, (இழிவு தோன்ற) சற்றே புன்னகைத்தவளாய், தன் மேல்நிலைக்கேற்ற பதிலைக் கூறினாள்— ''பெரும் புகழ் பெற்றவரும் வானர சிம்மமுமான என் கணவர் உயிர்விட்ட பின், புதல்வனால் எனக்கு ஆகவேண்டியதென்ன? அரசாட்சியால் என்ன பயன்? ஏன், நான் உயிரோடு இருப்பதால்

ஆகப்போவது என்ன? இராமனால் செலுத்தப்பட்ட பாணத்தால் வீழ்த்தப்பட்டுக் கிடக்கும், மகாத்மாவான என் கணவரின் திருவடிகளைக் காண்பதற்காகவே நான் போகப் போகிறேன்.'' இவ்வாறு (அங்கிருந்த வானரர்களிடம்) சொல்லிவிட்டு, சோகத்தால் உள்ளம் கலங்கி, துயரம் தாங்காமல் இரு கைகளாலும் தலையிலும் மார்பிலும் அடித்துக் கொண்டு, அழுதபடியே விரைந்து சென்றாள். (17–20)

யுத்தகளத்தின் அருகில் வந்த அவள், போர்களில் புறங்காட்டாதவனும், அசுரத் தலைவர்களைக் கொன்றவனும், இந்திரன் வஜ்ராயுதத்தால் மலைகளைப் பிளப்பதைப் போல பெரிய பெரிய மலைகளைப் பிடுங்கி எறிந்தவனும், பேராற்றல் படைத்தவனும், மேகக் கூட்டங்களின் இடியோசை போன்று கர்ஜிப்பவனும், இந்திரனை நிகர்த்த பராக்கிரமசாலியும், பெருமழை பெய்துவிட்டு வெளிறிய (செயலற்றுப் போன) மேகம் போன்றவனும், போர்க்களத்தில் கர்ஜிப்பவர்களும் அச்சங்கொள்ளத்தக்க முறையில் பேரொலியுடன் கர்ஜிப்பவனும், சூரனும், ஒரு மகாசூரனால் வீழ்த்தப்பட்டவனும், புலாலுணவுக்காக புலியால் கொல்லப்பட்ட மான் கூட்டத் தலைவன் போன்றவனும், கொடிகள்–யாக மேடைகள் விளங்குவதும் எல்லா மக்களாலும் வழிபட்டு வருவதுமான ஓர் ஆலயம், (தப்பித்துச் செல்லும்) ஒரு பாம்பை பிடிப்பதன் பொருட்டு கருடனால் சிதைக்கப்பட்டது போன்றிருப்பவனும், தரையில் விழுந்து கிடந்தவனுமான கணவரைப் பார்த்தாள். (21–24)

கையில் உத்தமமான வில்லை உறுதியாகப் பற்றிக் கொண்டிருக்கும் மங்களமயமான இராமனையும், இராமனுடைய இளவலையும், தன் கணவரின் தம்பியையும் பார்த்தாள். அவர்களைக் கடந்து சென்று, போரில் கொல்லப்பட்டுக் கிடக்கும் கணவரைக் கண்டதும் மனம் கலங்கி, உள்ளம் பதறி, ஐயகோ! என்று கூறி, அவள் தரையில் சாய்ந்தாள். உறங்கி விழிப்புற்றவள் போல் அவள் உணர்வுபெற்று எழுந்து, யமபாசங்களில் கட்டுண்டு கிடக்கும் கணவரைப் பார்த்து, 'என் நாதனே...' என்று துக்கத்துடன் கூவிக் கதறினாள். (ஆண் துணையைப் பிரிந்த) அன்றில் பறவை போல் கதறிக் கொண்டிருக்கும் அவளையும், அவ்விடம் வந்து சேர்ந்த அங்கதனின் சோகத்தையும் பார்த்து, சுக்ரீவன் மிகவும் துயரத்தை அடைந்தான். (25–28)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபது

தாரையின் புலம்பல்

முழுநிலவு போன்ற முகமுடைய தாரை, யானை போன்று பேராற்றல் படைத்த தன் கணவன் வாலி, இராமனுடைய வில்லிலிருந்து விடப்பட்டதும் மரணத்தைக் கொடுப்பதுமான பாணத்தால் தாக்கப்பட்டு, தரையில் வீழ்ந்து கிடப்பதைக் கண்டு, அருகில் சென்று கட்டியணைத்துக் கொண்டாள். தேவேந்திரனுக்குச் சமமான வானரேந்திரன், ஆணிவேருடன் பிடுங்கி எறியப்பட்ட பெரிய மரத்தைப் போல் கிடப்பதைக் கண்டு, சோகத்தால் மனம் கொதிக்கப் பரிதவிக்கின்றவளாக, தாரை (பின்வருமாறு) புலம்பினாள்— (1–3)

''யுத்தத்தில் பயங்கரமான பராக்கிரமத்தை வெளிப்படுத்துபவரே! மாவீரரே! வானரோத்தமரே! மிகவும் இரங்கத்தக்க நிலையில் தங்கள் எதிரில் வந்து நிற்கும் என்னுடன் இப்போது ஏன் பேசாமலிருக்கிறீர்கள்? வானரப்புலியே! எழுந்திருங்கள். உயர்ந்த கட்டிலில் படுத்துக் கொள்ளுங்கள். (தங்களைப் போன்ற) சிறந்த மன்னர்கள் இப்படி வெறுந்தரையில் படுத்து உறங்கமாட்டார்கள். உலகாளும் வேந்தரே! உயிர் போன நிலையிலும் தன் முழு

உடலாலும் எந்தப் பூமிதேவியைத் தழுவிக் கொண்டு படுத்திருக்கிறீர்களோ, அவள் என்னைக் காட்டிலும் தங்களுக்குப் பிரியமானவளா, என்ன? (4–6)

வீரரே! தாங்கள் தருமமான முறையில் (புறமுதுகு காட்டாமலும் அஞ்சி வணங்காமலும்) யுத்தம் செய்து, வீர சுவர்க்கத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறீர்கள். போகும் வழியில், கிஷ்கிந்தையைப் போன்றே அழகான நகரம் தங்களால் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது என்பது நிச்சயம். (இல்லாவிட்டால், இந்தப் பட்டணத்தின் சுகத்தை உதறித் தள்ளிவிட்டு, அவ்விடத்திற்குப் போவானேன்?) மலர்மணங்கமழும் காடுகளில் எங்களுடன் நீங்கள் விளையாடிய விளையாட்டுக்கெல்லாம், இப்போது உங்களால் ஓய்வு கொடுக்கப்பட்டிருக்கிறது. மாபெரும் படையின் தலைவரே! தாங்கள் இயற்கை எய்தியபின், நான் மகிழ்ச்சியற்றவளாக, நம்பிக்கை இழந்தவளாக, துயரக்கடலில் மூழ்கியவளாகி விட்டேன். (7–9)

கணவர் கொல்லப்பட்டுக் கிடப்பதை(க் கண்ணால்) கண்ட பிறகும், சோகத்தால் மிகவும் தகிக்கப்பட்ட பின்னரும்கூட, என் இதயம் ஆயிரக்கணக்கான துகள்களாக வெடிக்கவில்லை என்பதால், நான் கடின இதயம் கொண்டவள் என்று எண்ணுகிறேன். வானரத் தலைவரே! சுக்ரீவனுடைய மனைவியை நீங்கள் அபகரித்துக் கொண்டீர்கள்; அவரையும் நாட்டை விட்டுத் துரத்தினீர்கள். அவற்றின் பயனாக இந்த முடிவை அடைந்திருக்கிறீர்கள். வானரப் பெருந்தகையே! நான், தங்கள் நலனில் அக்கறை கொண்டவள்; தங்களுக்கு மேன்மையைத் தரும் உபாயத்தைக் கூறினேன். ஆனால், மதிமயக்கத்தால் தாங்கள் என்னை இகழ்ந்து பேசினீர்கள். (10–12)

எல்லோருக்கும் கௌரவம் அளிக்கும் உத்தமரே! (நீங்கள் வீர சுவர்க்கம் சென்றதும், அங்கே) அழகு, இளமை ஆகியவற்றால் செருக்கடைந்திருப்பவர்களும் கண்ணைக் கவரும் தோற்றமுடையவர்களுமான அப்சரப் பெண்டிரின் மனத்தைக் கொள்ளை கொண்டு, அவர்களை மயக்கப் போகிறீர்கள் என்பது திண்ணம். தங்கள் வாழ்க்கையை முடிவுக்குக் கொண்டு வரும் காலன்தான், எவர் கையிலும் அகப்படாத தங்களை, பலவந்தமாக இங்கே கொண்டு வந்து சுக்ரீவன் பிடியில் சிக்க வைத்திருக்கிறது. (13–14)

வேறொருவருடன் போர் செய்து கொண்டிருக்கும் வாலியை, எவ்வித முன்னெச்சரிக்கையும் இல்லாமல் கொன்றுவிட்டு, அந்த இழிந்த செயலைச் செய்த காகுத்தன், அதற்காக வருந்தவில்லையே? இதுவரை நான் துக்கத்தை அனுபவித்ததேயில்லை. (இப்போது, என் நிலையைப் பாருங்கள்!) நான் பதிவிரதை; ஆதரவற்றவள்; காப்பாற்றுவார் இல்லாதவள். இனி, கைம்மை–சோகம்–தாழ்வு ஆகியவைகளை அனுபவிக்கப் போகிறேன். என்னுடைய வீரப் புதல்வன் அங்கதன்; (தங்களாலும் என்னாலும்) கொஞ்சிக் கொஞ்சி வளர்க்கப்பட்டவன்; மென்மையான இளைஞன்; சுகங்களை அனுபவிக்க வேண்டியவன். (தங்களிடம் கொண்டுள்ள) கோபத்தால் மதிமயங்கிக் கிடக்கும் சிற்றப்பனிடத்தில் எவ்விதத் துன்பங்களை அனுபவிக்கப் போகிறானோ? (15–17)

குழந்தாய்! செல்வமே! அறத்தின்பால் அன்பு கொண்ட உன் தந்தையை நன்றாகப் பார். (இந்தச் சமயத்தைத் தவறவிட்டால்) இனி ஒருபோதும் அவரைப் பார்க்கவே முடியாது. (பிராணநாதரே!) தாங்கள் வேறோர் உலகம் செல்வதற்குப் புறப்பட்டு விட்டீர்கள். (சாதாரணமாக, தாங்கள் வெளியில் செல்லும்போது அங்கதனைக் கட்டியணைத்து உச்சிமுகர்வீர்களே? இப்போது ஏன் பேசாமலிருக்கிறீர்கள்?) ஆதலால், நமது புதல்வனை அருகில் அழைத்து உச்சிமுகர்ந்து ஆறுதல் கூறுங்கள். தாங்கள் இல்லாத காலத்தில் நாங்கள் செய்ய வேண்டியவைகளையும் ஆணையிடுங்கள். ஸ்ரீராமன், தங்களைக் கொன்றதால் அரும்பெரும் செயலைச் செய்திருக்கிறார். சுக்ரீவனுக்கு வாக்கு கொடுத்தபடி, இந்தச் செயலைச் செய்து, தன் நன்றிக்கடனைத் தீர்த்துவிட்டார். (18–20)

சுக்ரீவனே! உமது ஆசைகளெல்லாம் கைகூடப் பெற்றவராக ஆகப் போகிறீர். நீர், ருமையை அடையப் போகிறீர். உம்முடைய விரோதியான சகோதரர் கொல்லப்பட்டுவிட்டார்.

(இனி, என்ன தடை?) கவலையேதுமில்லாமல் அரசாட்சியை அனுபவிக்கலாம். வானர வேந்தராகிய வாலியே! இப்படி அன்புடன் புலம்பிக் கொண்டிருக்கும் எனக்குப் பதில் சொல்லாமல் இருக்கிறீர்களே! உங்களுடைய உத்தம மனைவியர் பலரும் இங்கே வந்திருக்கிறார்கள். அவர்களை ஒரு தடவை கண்ணால் பார்க்கக் கூடாதா?'' சுற்றிலுமிருந்த வானரப் பெண்கள், அவள் இவ்வாறு கதறியழுவதைக் கேட்டு, மனம் கலங்கி நிற்கும் அங்கதனைக் கட்டியணைத்துக் கொண்டு துக்கம் தாங்காமல் மிகவும் கதறினார்கள். (21–23)

''தோள்வளை தரித்த திண்மையான புஜங்களை உடையவரே! அங்கதனை விட்டு, தாங்கள் நெடுந்தூரத்திற்குப் போகிறீர்கள். தங்களைப் போன்றே நற்குணங்கள் அமையப் பெற்றவனும் மனங்கவரும் தோற்றமுடையவனுமான புதல்வனை விட்டு நீங்கள் போகலாகாது. கண்கவர் திருமேனி படைத்தவரே! நான், தங்களுக்குப் பிரியமில்லாத எந்தச் செயலைச் செய்தேன்? அல்லது, நமது மைந்தன்தான் என்ன பிழை செய்தான்? என் உயிர்க் கணவரே! என்னையும் அங்கதனையும் விட்டுவிட்டு, தாங்கள் மட்டும் நீண்ட பயணத்திற்குப் புறப்பட்டு விட்டீர்கள். நீண்ட நெடுந்தோளரே! வானரகுலத் தலைவரே! தங்களுக்கு விருப்பமில்லாத ஏதேனும் ஒரு செயலை, நான் முன்யோசனை இல்லாமல் செய்திருந்தால், அதை மன்னித்தருள வேண்டும். வீரரே! தங்கள் பாதங்களில் என் தலையை வைத்து வேண்டிக் கொள்கிறேன்.'' (24–26)

இவ்வாறு, மற்ற வானர மனைவிகள் புடைசூழ, கணவரின் அருகில் பரிதாபமாக அழுது கொண்டிருந்தவளும் மாசற்ற மேனியுடையவளுமான தாரை, வாலியின் உடல் கிடந்த இடத்தின் அருகிலேயே அமர்ந்து, 'உயிர் போகும் வரை உண்ணாமலிருப்பது' என்ற விரதத்தை மேற்கொண்டாள். (27)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
இருபதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்தொன்று

அனுமான் ஆறுதல் கூறுதல்

வானரசேனைத் தலைவராகிய அனுமான், ஆகாயத்திலிருந்து நழுவி விழுந்த தாரகையைப் போல் தரையில் விழுந்து கிடக்கும் தாரையைப் பார்த்து, மெல்ல ஆறுதல் கூறத் தொடங்கினார்— (1)

''ஒரு ஜீவனிடம் குணம்–குறை இரண்டும் உள்ளன. அவை இரண்டினாலும் கர்மாக்களைச் செய்கிறான். அவற்றின் விளைவாக சுக–துக்கங்களை அடைகிறான். உயிர் நீங்கிய பின் மேலுலகம் சென்று (பாவ–புண்ணியமான) எந்தக் கர்மாக்களையும் செய்யாமல், அமைதியாக இருந்து, தான் முன்னர் செய்த கர்மாக்களின் பலனை அனுபவிக்கிறான். நீங்களே பரிதாபமான நிலையில் இருக்கிறீர்கள். அவ்விதம் இருக்கையில், வேறு யாரோ ஒருவர் பரிதாபமான நிலையில் இருக்கிறார் – என்று எண்ணி நீங்கள் பரிதாபப்படுகிறீர்களே? நீங்களே மிகவும் இரங்கத்தக்க நிலையில் இருக்கும்போது, வேறு யாரிடம் கருணை காட்ட விரும்புகிறீர்கள்? நீர்க்குமிழி போன்ற இந்த உடலில் இருக்கும் ஜீவன், (அதே போல், நீர்க்குமிழி போன்ற) வேறொரு சரீரத்தில் இருக்கும் ஜீவனுக்காக வருத்தப்பட வேண்டுமா? (2,3)

உங்களுக்கு ஒரு புதல்வன் இருக்கிறான். மைந்தன் அங்கதன் உங்களால் போஷிக்கப்பட வேண்டியவன். எதிர்காலத்தில் இவனுக்கு மேன்மை ஏற்படுவதற்கான ஏற்பாடுகள் குறித்து ஆலோசித்துப் பாருங்கள். உயிர்ப் பிராணிகளின் வருகையும் போக்கும் (பிறப்பும் இறப்பும்) நம்

கட்டுப்பாட்டில் இல்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆகவே, நல்லறிவுடையவன், (இறந்து போனவருக்கு, மேலுலகில் நல்ல கதி கிடைப்பதற்காக,) இங்கு செய்யப்பட வேண்டியவையாக விதிக்கப்பட்டுள்ள சுப கர்மாக்களைச் செய்ய வேண்டும். (4,5)

நூறு–ஆயிரம்–கோடிக்கணக்கான வானரர்கள் எவரிடம் நம்பிக்கை வைத்து (கவலையற்றவர்களாக) வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தார்களோ, அவ்வளவு உயர்ந்தவரான வானரவேந்தரே மரணமடைந்து விட்டார்! (என்றால், விதியின் வலிமையைப் பற்றிக் கூற வேண்டுமா?) அவர், அறநூல்களில் கூறப்பட்ட முறையில் பொருள் சேர்த்தார்; நல்லாட்சி நடத்தினார். சூழ்நிலைக்கேற்றபடிப் பிறருடன் நல்லுறவு, தேவைப்பட்டோருக்கு பொருள் அளித்தல், சில இக்கட்டான நிலையிலும் பொறுமையைக் கடைப்பிடித்தல் – என்றபடி நடந்தார். அதனால், தருமாத்மாக்கள் (எல்லையில்லாத புண்ணியம் செய்தவர்கள்) சென்றடையும் நல்லுலகுக்கே போயிருக்கிறார். எனவே, நீங்கள் அவரைப் பற்றி வேதனைப்படக் கூடாது. (6,7)

அரசியாரே! வானர வீரர்கள், உங்கள் மைந்தன் அங்கதன் மற்றும் வானர–கரடித் தலைவர்கள் ஆட்சிபுரியும் சிறு பிரதேசங்கள் – இவையெல்லாம் உங்களுக்கே உரித்தானவை. நல்லணங்கே! சோகத்தால் வெந்து கொண்டிருக்கும் சுக்ரீவ–அங்கதர்களை, மேலே நடத்தப்பட வேண்டிய கர்மாக்களைச் செய்வதற்காக ஆறுதல் கூறி அனுப்பி வையுங்கள். (ஈமச்சடங்குகள் முடிந்த பின்னர்) உங்கள் மேற்பார்வையில் அங்கதன் ராஜ்யத்தை ஆளட்டும். 'கட்டாயம் சந்ததியைப் பெற வேண்டும்' என்ற விதி, எந்தக் காரணத்திற்காகக் கூறப்பட்டிருக்கிறதோ, அதை உபயோகிக்கத்தக்க காலம், இதுவே. (உயிர் துறந்துவிட்ட) மன்னருக்குச் செய்யப்பட வேண்டிய கர்மாக்கள் அனைத்தும் செய்யப்பட வேண்டும். இதுதான் இந்த நேரத்தின் கட்டாயம். வானர மன்னருக்கு உத்தரக்கிரியை (உடனே) செய்யப்பட வேண்டும். (பின்னர்) அங்கதனுக்கு முடிசூட்ட வேண்டும். அரியணையில் வீற்றிருக்கும் புதல்வனைப் பார்த்ததும் உங்களுக்கு மன அமைதி கிடைக்கும்.'' (8–11)

கணவரின் பிரிவினால் மனம் வருந்திக் கொண்டிருந்த தாரை, அவருடைய சொற்களைக் கேட்டு, எதிரில் நின்று கொண்டிருந்த அனுமானைப் பார்த்துப் பதில் கூறினாள்— ''அங்கதனைப் போன்று நூறு புதல்வர்கள் இருந்தாலும், இதோ வீரரான என் கணவர் இறந்து கிடக்கிறாரே. அவருடைய உடலைக் கட்டித் தழுவிக் கொள்வதே மிக மேலானது. (மகனைக் கட்டியணைத்துக் கொண்டால் பெருமகிழ்ச்சி ஏற்படும் என்பது உலக இயற்கை. கணவருடன் உடன்கட்டை ஏறுவது என்பது பெரும்புண்ணியத்தைத் தரக் கூடியது. அப்படிச் செய்வதையே நான் விரும்புகிறேன் – என்பது தாரையின் சிந்தனை.) (12,13)

வானர ராஜ்யத்திற்கோ, அங்கதனுக்கோ நான் உரிமையாளர் இல்லை. (என் விருப்பப்படி, இவை விஷயமாக எதுவும் செய்யும் அதிகாரம் எனக்கு இல்லை.) அவனுடைய சிற்றப்பனான சுக்ரீவன்தான் இந்த விஷயங்களில் அவனுக்கு நெருக்கமானவர். வானரோத்தமனான அனுமானே! அங்கதன் பற்றி இவ்விதம் ஆலோசனை செய்வது சரியானதல்ல. தந்தைதான் மகனுக்கு நெருங்கிய உறவினர். (அவன் மேன்மையில் நாட்டமுடையவர். பெற்ற தந்தை இல்லாதபோது, தந்தையின் ஸ்தானத்திலுள்ள சிற்றப்பனே அந்தப் பொறுப்பை ஏற்கத்தக்கவர்.) தாய் அல்லள். இவ்வுலகிலோ அவ்வுலகிலோ, வானர மன்னர் வாலியை அண்டியிருப்பதைத் தவிர மேலான கடமை ஏதுமில்லை. மாண்டு கிடக்கும் இந்த மாவீரரான என் கணவர், (இன்னும் சிறிது நேரத்தில்) படுக்கப் போகும் சிதை (என்பதுதான்) எனக்கும் ஏற்ற இடம்.'' (14–16)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
இருபத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்து இரண்டு

வாலியின் இறுதிச் சொற்கள்

மெதுவாக மேல்மூச்சு விட்டுக்கொண்டு, உயிர் போய்க்கொண்டிருக்கும் நிலையில் நாற்புறமும் கண்களைச் செலுத்திய வாலி, எதிரே நிற்கும் சுக்ரீவனை முதன்முதலில் கண்டான். வெற்றி பெற்று விட்டவனும், (அதனால்) வானரர்களுக்குத் தலைவனாகி விட்டவனுமான சுக்ரீவனைப் பார்த்து, அன்புடன் கூடிய தெளிவான சொற்களால் வாலி பேசினான்— (1,2)

''சுக்ரீவனே! முற்பிறவிகளில் செய்த வினைகளின் விளைவான மதிமயக்கம், பலவந்தமாக இழுத்து, இந்தப் பிறவியில் காரியங்களைச் செய்ய வைக்கிறது. (நானும் அதற்கு விதிவிலக்கல்ல.) அதனால், உனக்கு நான் இழைத்த குற்றங்களுக்காக, என்னைக் குறை சொல்லக்கூடாது. குழந்தாய்! நாம் இருவரும் ஒரே நேரத்தில் சுகமாக (அன்யோன்யமாக) இருக்க வேண்டும் என்று விதியால் நிர்ணயிக்கப்படவில்லை என்று எண்ணுகிறேன். (இதுவரை, நான் தனியாக சௌக்கியங்களை அனுபவித்தேன்; நீ கஷ்டப்பட்டாய். ஆனால், இப்போது நிலைமை நேர்மாறாக ஆகியிருக்கிறது.) இரு சகோதரர்களிடையே இருக்கவேண்டிய பரஸ்பர பாசம், வேறுவிதமாக (விரோதமாக) மாறிவிட்டது. (3,4)

நான், இப்போது யமலோகத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறேன். நீ, உடனே வானரர்களின் அரசை ஏற்றுக்கொள். (மன்னனாக முடிசூட்டிக் கொள்.) என்னுடைய உயிர், ஆட்சி, அளவற்ற செல்வம், வானளாவிய புகழ் ஆகியவற்றை இப்போதே துறக்கின்றேன். வீரனே! வேந்தனே! (உயிரை விட்டுக்கொண்டிருக்கும்) இந்த நிலையில், நான் சொல்லப் போவதைச் செய்வது கஷ்டமாக இருந்தாலும், அதை நீ செய்யவே வேண்டும். சுக–சௌக்கியங்களை அனுபவிக்க வேண்டியவனும், செல்லமாக வளர்க்கப்பட்டவனும், அறியாப்பருவத்தினனும் ஆனாலும் மந்த மதியுள்ளவனல்லனுமான கண்ணீர் நிறைந்த கண்களுடன் தரையில் விழுந்து கிடக்கும் அங்கதனைப் பார். (5–8)

என் உயிரினும் மேலானவனான அவன், இப்போது என்னை இழந்துவிட்டான். என் புதல்வனை, உன் சொந்தக் குழந்தை போல ஒரு குறையும் தெரியாதபடி, எல்லா சுகசாதனங்களையும் கொடுத்துக் காப்பாற்று. வானர மன்னனே! நான் இவனுக்கு எப்படி இருந்தேனோ, அப்படியே, இனி நீதான் இவன் விரும்பிக் கேட்பனவற்றையெல்லாம் கொடுப்பவன்; எல்லாவற்றிலிருந்தும் காப்பாற்றுபவன்; ஆபத்துக் காலங்களில் அபயமளிப்பவன்; தாரையின் மைந்தனாகிய இவன் அறிவுச் செல்வம் பெற்றவன்; உனக்கு நிகரான பேராற்றல் உடையவன். (எதிர்காலத்தில்) அந்த அரக்கர்களை அழிக்கும் போரில், உனக்கு முன்னதாக யுத்த பூமிக்குச் செல்வான். (சிறுவன் என்று முன்னர் சொன்னதால், யுத்தம் என்றவுடன் அஞ்சி ஓடி ஒளிந்து கொள்வான் என்று எண்ணிவிடாதே.) (9–11)

தாரை மைந்தனான அங்கதன் வேகமாகச் செயல்படுபவன்; இளைஞன்; ஆற்றல் உடையவன். எனவே, யுத்தகளத்தில் எதிரிகளைத் தாக்கி, தன் வீரத்தை வெளிப்படுத்தும் அருஞ்செயல்களைப் புரிவான். சுஷேணன் பெண்ணாகிய தாரை, பலவகையான நெருக்கடி காலங்களில், அதன் நுட்பங்களை ஆராய்ந்து, சரியான எதிர் நடவடிக்கைகளைத் தீர்மானிக்கக் கூடியவள்; எல்லாத் துறைகளிலும் வல்லவள். இவள், எந்தக் காரியத்தைச் செய்யலாம் என்று சொல்கிறாளோ, அந்தச் செயலை, மறு ஆலோசனையின்றிச் செய்யலாம். தாரையால் சொல்லப்பட்ட கருத்துக்கு மாறாக எதுவுமே நடக்காது. (12–14)

ஸ்ரீராமனுக்கு வாக்களித்த பணியை, நீ நிச்சயமாகச் செய்து முடிக்க வேண்டும். செய்யாது போனால் (சொன்ன சொல் தவறிய) பாவம் வந்து சேரும். அத்துடன், உன்னால் அலட்சியப் படுத்தப்பட்ட அவர், உன்னைக் கொன்றுவிடுவார். சுக்ரீவனே! (இப்போது என் கழுத்திலிருக்கும்) தெய்வத்தன்மை பொருந்திய தங்கமாலையை எடுத்து, இப்போதே அணிந்து கொள். இதன் ஒளியும் வெற்றித்திருவும் நான் இறந்தவுடன் போய்விடும்.'' இவ்வாறு சகோதர பாசத்துடன் வாலி

கூறியதைக் கேட்டதும், வெற்றிக்களிப்பில் திளைத்திருந்த சுக்ரீவன், அதை உதறித் தள்ளிவிட்டு, ராகுவினால் பீடிக்கப்பட்ட சந்திரன் போல் ஒளியிழந்து வருந்தினான். (15–17)

வாலியினுடைய சொற்களைக் கேட்டதும் அவன் மீதிருந்த பகைமையை ஒழித்து, அமைதியடைந்து, அந்தச் சமயத்திற்கேற்ற செயலைச் செய்பவனாக, வாலியினால் உத்தரவிடப்பட்டபடி அந்தப் பொன்மாலையைப் பெற்று அணிந்து கொண்டான். வாலி, அந்தப் பொன்மாலையை (சுக்ரீவனுக்கு)க் கொடுத்துவிட்டு, தன் உயிரை விடுவதற்கு ஆயத்தமானான். அப்போது அருகில் நின்று கொண்டிருந்த புதல்வன் அங்கதனை, அன்பொழுகப் பார்த்து(ப் பின்வருமாறு) கூறினான்— "(குழந்தாய்!) இடம், காலம் ஆகிய இரண்டையும் அறிந்துகொண்டு, அதற்கேற்றவாறு நடந்துகொள். விரும்பியது, விரும்பாதது – எது நடந்தாலும் ஏற்றுக்கொள். அவ்வப்போது ஏற்படும் சுக–துக்கங்களைப் பொறுத்துக் கொள். (துக்கம் வந்தால் சோர்ந்துவிடக் கூடாது.) இனி, சுக்ரீவன் ஆணைப்படி நடப்பவனாக இரு. (18–20)

தோளாண்மை மிக்கவனே! எவ்வாறு நான் உன்னைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்தேனோ, அதே நிலை தொடரவேண்டும் என்று நீ நினைத்தால், சுக்ரீவன் உன்னை லட்சியம் செய்ய மாட்டான். எதிரிகளை அடக்குபவனே! இவனுடைய எதிரிகளுடன் சேராதே! எதிரியை அண்டியிருப்பவனுடனும் சேராதே. தலைவனான சுக்ரீவனின் நலன்களை நாடுபவனாக, பொறுமைமிக்கவனாக, அவனுக்கு அடங்கியவனாக இரு. எவருடனும் அளவுக்கு மீறி நட்புக் கொள்ளாதே. அதே போல், எவருடனும் நட்புக் கொள்ளாமலும் இராதே. இரண்டும் பெருங்குற்றம்தான். அதனால், எல்லோருடனும் மிதமாகப் பழகு." (21–23)

இவ்வாறு கூறி நிறுத்தியவுடன், அம்பின் தாக்குதலால் அவன் மிகவும் துன்பப்பட்டான். அவன் கண்கள் சுழல ஆரம்பித்தன; பயங்கரமான பற்கள் நிறைந்த வாய் மூடாமல் திறந்தபடியே இருந்தது. அந்த நிலையில், அவன் உயிர் பறந்து போயிற்று. தங்கள் தலைவன் மாண்டுவிட்டதை அறிந்து, எல்லா வானரர்களும் வானரத் தலைவர்களும் உரத்த குரலில் கதறி அழுதார்கள். வானர மன்னன் மேலுலகம் சென்று விட்டான். கிஷ்கிந்தை ஒளியிழந்து களையிழந்து வெற்றிடமாகிவிட்டது. (வானரர்கள் ஆனந்தமாகச் சுற்றித் திரிந்த) மலைகள், காடுகள், பூஞ்சோலைகள் எல்லாம் சூன்யமாகி விட்டன. (24–26)

வானரப் புலியான வாலி உயிர் பிரிந்ததுமே வானரர்கள் ஒளியிழந்து விட்டார்கள். எவருடைய முயற்சியின் காரணமாக, சோலைகளும் காடுகளும் மலர்க் கூட்டங்களால் அழகாக விளங்கினவோ, அந்தச் செயலை இனிமேல் யார்தான் செய்யப் போகிறார்கள்? முன்பு ஒருசமயம், மிகவும் பலம் பொருந்திய கோலபன் என்ற கந்தர்வனுடன் வாலி போர் செய்ய நேரிட்டது. அந்தப் போர், ஓய்வில்லாமல் இரவு–பகலாகப் பதினைந்து ஆண்டுகள் நடந்தது. பதினாறாவது ஆண்டில் கோலபன் கொல்லப்பட்டான். பயங்கரமான கோரைப் பற்களையுடைய வாலி, திமிர் பிடித்த அவனைக் கொன்று நம்மையெல்லாம் காப்பாற்றினாரே? அவ்வளவு வல்லமை படைத்த வாலி, அச்சோ! எவ்வாறு வீழ்த்தப்பட்டார்! (27–30)

ஒரு பெருங்கானகத்தில், பசுக்களின் தலைவனான காளை, ஒரு சிங்கத்தால் கொல்லப்பட்டவுடன் எப்படி பசுக்கூட்டம் அமைதியிழந்து தவிக்குமோ, அப்படியே வானர மன்னன் வாலி கொல்லப்பட்டவுடன் வானரர்கள் அமைதியிழந்து தவித்தார்கள். அப்போது இறந்துவிட்ட கணவரின் முகத்தைப் பார்த்து, துயரக் கடலில் மூழ்கிய தாரை, ஒரு பெரிய மரத்தைப் பற்றிப் படர்ந்திருந்த கொடி (மரம் சாய்க்கப்பட்டால் அதனுடன் சேர்ந்து விழுந்து விடுவதைப்) போல, வாலியைக் கட்டித் தழுவிக் கொண்டு தரையில் விழுந்தாள். (31–32)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
இருபத்து இரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்து மூன்று

தாரை மீண்டும் புலம்புதல்

வானரவேந்தரின் முகத்தை முத்தமிட்டு, உலகப் புகழ்பெற்ற தாரை, உயிரிழந்துவிட்ட கணவரைப் பார்த்து(ப் பின்வருமாறு) பேசினாள்— "உயிர்த் துணைவரே! முன்னரே நான் கூறிய கருத்துக்களைக் கேளாமற்போனதால், இப்போது மேடு–பள்ளமானதும், துன்பத்தைக் கொடுப்பதும், கற்கள் நிறைந்ததுமான தரையில் படுத்துக் கிடக்கிறீர்கள். வானர மன்னரே! என்னைக் காட்டிலும், இந்த நிலமகளை நீங்கள் அதிகம் நேசிக்கிறீர்கள் என்பது திண்ணம். அவளை நன்றாக அணைத்துக் கொண்டு படுத்திருக்கும் தாங்கள், என்னுடன் பேசக்கூட மறுக்கிறீர்களே? (1–3)

வீரரே! தன்னிகரில்லாத தங்கள் பேராற்றலால் பிரமிக்க வைக்கும் செயல்களைச் செய்வதில் ஆசையுள்ளவரே! ஐயகோ! இப்போது தெய்வம் சுக்ரீவன் கையில் இருக்கிறது. அதனால்தான், (சாமானிய வீரனான) சுக்ரீவன் மகாபராக்கிரமம் பொருந்தியவனாகி விட்டான்! பலம் பொருந்தியவர்களான கரடிகளும் வானரத் தலைவர்களும் தங்களைச் சுற்றிலும் நின்று கொண்டிருக்கிறார்கள். இவர்களுடைய பரிதாபமான அழுகையையும், துக்கத்தில் மூழ்கியிருக்கும் அங்கதனையும், அன்பும் துயரமும் நிறைந்த இந்த என் சொற்களையும் கேட்டு, தாங்கள் ஏன் இன்னும் கண்விழிக்காதிருக்கிறீர்கள்? யுத்தத்தில் மாய்க்கப்பட்டுத் தாங்கள் எந்த வீரப்படுக்கையில் (தரையில்) கிடக்கிறீர்களோ, அதே படுக்கையில், முன்பு தங்களால் வீழ்த்தப்பட்ட பகைவர்கள் படுத்துக் கிடந்தார்கள். (தாங்கள், எத்தனையோ எதிரிகளைப் போரில் வென்று தரையில் சாய்த்திருக்கிறீர்கள்.) (4–6)

நியாயமான முறையில் போராடும் பேராற்றல் படைத்தவர்களின் குலத்தில் வந்தவரே! சண்டையில் பெருவிருப்பம் உடையவரே! எல்லோரையும் கௌரவிப்பவரே! என் உயிர்க் கணவரே! ஆதரவில்லாமல் போய்விட்ட என்னைத் தனியாகத் தவிக்க விட்டுவிட்டுத் தாங்கள் போய்விட்டீர்கள்! அறிவாளியான ஒருவன், நிச்சயமாக, தன் மகளை ஒரு வீரனுக்கு மணம் முடிக்க மாட்டான். மாவீரரின் மனைவியாகிய நான், கைம்பெண்ணாகி வாழ்க்கையில் அவலநிலையை அடைந்து விட்டதைப் பாருங்கள். 'நான் மகாராணி' என்ற கௌரவம் சீர்குலைந்துவிட்டது. நீண்ட நெடுங்காலம் பேரானந்தத்துடன் இருப்போம் என்ற நம்பிக்கை சிதைந்துவிட்டது. ஆழங்காண முடியாததும் விஸ்தாரமானதுமான துயரக்கடலில் மூழ்கியிருக்கிறேன். (7–9)

என் இதயம், பாறாங்கல்லைப் போல் கடினமானது என்பதில் சந்தேகமில்லை. கணவர் கொல்லப்பட்டுக் கிடப்பதைக் கண்டும் (என் இதயம்) சுக்குநூறாகப் போகவில்லையே? என்னுடைய கணவர், இயல்பாகவே என்னிடம் பேரன்பு பூண்டவர். போர்க்களத்தில் எதிரிகளை முழு வேகத்தோடு தாக்கும் பெருவீரர். அப்படிப்பட்டவர் (இந்த யுத்தத்தில்) உயிரிழந்து விட்டார்! பிள்ளை–குட்டிகள் உள்ளவளாக இருந்தாலும், செல்வச் செழிப்புள்ளவளாக இருந்தாலும், கணவரை இழந்த ஒரு நங்கை, விதவை என்றே மக்களால் அழைக்கப்படுகிறாள். இந்த்ரகோபம் என்ற சிவந்த புழு போன்ற நன்னிறமுடைய விரிப்பு போடப்பட்ட கட்டிலில் முன்னர் தாங்கள் படுத்திருந்ததைப் போலவே, இப்போது தங்கள் சரீரத்திலிருந்து பெருகிப் பரந்து கிடக்கும் செந்நீர் விரிப்பில் படுத்துக் கிடக்கிறீர்கள். (10–13)

வானரப் பெருந்தகையே! தங்கள் சரீரம் முழுவதும் புழுதிபடிந்தும் இரத்தம் பரவியும் இருப்பதால், என் இரு கைகளாலும் தங்களைக் கட்டியணைக்க முடியாதவளாக இருக்கிறேன். சகோதரர் இருவரிடையேயிருந்த பயங்கரமான பகைமையில், சுக்ரீவன் தன் எண்ணம் கைகூடியவராகி, ஸ்ரீராமனால் விடப்பட்ட ஓர் அம்பினாலேயே, அவருடைய நெஞ்சத்தில் வேரூன்றியிருந்த பயம் போக்கப்பட்டுவிட்டது. தாங்கள் மரணமடைந்துவிட்டதை வெறுமே

பார்த்துக் கொண்டு நிற்கிறேன். தங்கள் மார்பில் தைத்திருக்கும் அம்பு, தங்களைத் தழுவிக் கொள்ளவிடாமல் என்னைத் தடுக்கிறது.'' (14–16)

அப்போது, நீலன் என்னும் வானரன், வாலியின் மார்பில் பாய்ந்திருந்த பாணத்தை, ஒரு மலைக்குகையில் மறைந்து கிடந்த, ஒளிமிக்கதும் கொடிய விஷத்தையுடையதுமான சர்ப்பத்தை வெளியே எடுப்பது போல் எடுத்தான். பிடுங்கிப் போடப்பட்ட பாணத்தின் ஒளி, மாலையில் மலைவாயிலில் விழும் சூரியனது செங்கதிர் போல் விளங்கியது. (பாணம் பிடுங்கப்பட்ட பின்னர்) அவனுடைய உடலிலிருந்த எல்லாக் காயங்களிலிருந்தும், ஒரு மலையிலிருந்து சிவந்த தாதுக்கள் கலந்த நீரருவிகள் பெருகி வழிவதுபோல் செந்நீர் தாரைகள் பெருகி வழிந்தன. வாலியின் உடலில் போர்க்களத்தின் புழுதி படிந்திருந்தது. அஸ்திரத்தால் கொலை செய்யப்பட்டதால் செந்நீர் பெருகிக் கொண்டிருந்தது. (இக்காட்சியைக் காணச் சகியாமல், அவன் உடலைத் தூய்மைப்படுத்த விரும்புபவள் போல்) பொங்கிவரும் தன் கண்ணீரால் தாரை, அவன் உடலை நனைத்தாள். (17–20)

மாண்டு கிடக்கும் கணவரின் எல்லா அங்கங்களும் இரத்தத்தில் தோய்ந்திருப்பதைக் கண்டு, செந்நிறக் கண்களைக் கொண்ட புதல்வன் அங்கதனைப் பார்த்துப் பெண்ணரசியான தாரை (பின்வருமாறு) கூறினாள்— ''பிள்ளாய்! தந்தையினுடைய மிகவும் பயங்கரமான இறுதி நிலையைப் பார்! முன்னர் செய்த பாவச்செயல்களின் பயனாக விளைந்த பகைமையைக் கடந்து சென்றுவிட்டார். மைந்தனே! காலைச்சூரியன் போல் செம்பொன்வண்ண உடலுடையவரும், யமலோகத்திற்குச் சென்றுவிட்டவரும், உன்னை மிக்க பாசத்துடன் வளர்த்தவரும், மன்னருமாகிய தந்தையை வணங்கு.'' (21–23)

இவ்வாறு உத்தரவிடப்பட்ட அங்கதன் எழுந்து சென்று, பருத்துத் திரண்ட தன் இரு கைகளாலும் தந்தையின் இரு பாதங்களையும், 'அடியேன் அங்கதன்' என்று சொல்லியவாறே கட்டிக் கொண்டான். ''என் பிராண நாதரே! முன்பெல்லாம் அங்கதன் தங்கள் காலில் விழுந்து வணங்கினால், 'மைந்தனே! நெடுங்காலம் வாழ்வாயாக!' என்று ஆசீர்வாதம் செய்வீர்களே? இப்போது ஏன் பேசாமலிருக்கிறீர்கள்? ஒரு சிங்கத்தால் திடீரென்று தாக்கப்பட்டுக் கொல்லப்பட்ட காளையை இழந்து, கன்றுடன் கூடிய பசு எவ்வாறு தவிக்குமோ, அவ்வாறே புதல்வனோடுகூட நின்றுகொண்டு, உயிர்துறந்துவிட்ட தங்களைப் பார்த்துத் தவிக்கிறேன். (24–26)

யுத்தம் என்ற மகாவேள்வியைச் செய்த ஸ்ரீராமனுடைய பாணத் தாக்குதல் என்ற நீரில், மனைவியான நான் இல்லாமல் தாங்கள் மட்டும் எவ்வாறு அவப்ருதஸ்நானம் செய்தீர்கள்? (ஒரு யாகத்தின் நிறைவுச் சடங்காக, யஜமானன் தன் பத்தினியுடன் நீர்நிலையில் செய்யும் நீராடல் என்ற புனிதச் சடங்கு 'அவப்ருதம்' எனப்படும். மனைவியுடன் கூடவே செய்ய வேண்டிய சடங்கு, இது.) முன்னர் ஒரு போரில், தங்களுடைய வீரத்தைக் கண்டு மகிழ்ச்சியடைந்த இந்திரன் கொடுத்த பொன்மாலையை, இப்போது தங்கள் கழுத்தில் நான் காணவில்லையே? (27,28)

எல்லோருக்கும் கௌரவம் அளிப்பவரே! தங்களுக்கு உயிர் போய்விட்டது. ஆனாலும், எல்லாப் பக்கங்களிலும் சுற்றிவரும் சூரியனது பேரொளி மேருமலையை விட்டு அகலாதது போல, தங்களிடமிருந்து அரசருக்கே உரிய ஆட்சித்திரு அகலவில்லை. நான் சொன்ன நல்லுரைகளைத் தாங்கள் கேட்கவில்லை. தங்களைக் கட்டாயப்படுத்தி நிற்க வைக்கும் சாமர்த்தியம் என்னிடம் இல்லை. அதன் விளைவாக, யுத்தத்தில் கொல்லப்பட்டதால் மகனும் நானும் நடைப்பிணங்களாகிவிட்டோம். இப்போது என்னைவிட்டு மகிழ்ச்சியனைத்தும் தங்களோடுகூட போய்விட்டது.'' (29,30)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
இருபத்து மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்து நான்கு

இராமன், தாரைக்கு ஆறுதல் கூறுதல்

சற்றும் எதிர்பாராத முறையில், மிகவும் ஆச்சரியமான விதமாக ஏற்பட்ட தன் சகோதரன் வாலியின் வதத்தால், கண்ணீர்ப் பெருக்கினாலும் கடந்து செல்ல முடியாத சோகப் பெருங்கடலில் மூழ்கிக் கிடந்த அவளை (தாரையை) அப்போது பார்த்ததும், வேகமாகச் செயல்படும் வாலியின் தம்பி சுக்ரீவன் மிகவும் மனம் வெந்து போனான். நீர் வழியும் கண்களால் (அவளைப்) பார்த்து, நொடிப்பொழுதில் மனம் வெறுப்புற்றவனாகி, நற்சிந்தனையுடைய அவன் மிகவும் துயரத்தில் மூழ்கியவனாக, பணியாளர்கள் புடைசூழ, இராமன் அருகே மெல்லச் சென்றான். (1,2)

கையில் கோதண்டத்தைத் தாங்கிக் கொண்டு, மகாவீரருக்குரிய பெருமைமிக்க தோற்றத்துடன் (பின்புறத்தில்) விஷம் நிறைந்த சர்ப்பங்கள் போன்ற பாணங்களைக் கொண்ட அம்புறாத்தூணி விளங்க, மிகவும் புகழ் பெற்றவரான, சாமுத்திரிகா சாஸ்திரங்களில் கூறப்பட்டபடி உடலமைப்பு அமையப் பெற்று, உத்தமத் தோற்றமளிக்கும் இராமபிரானை நெருங்கிச் சென்று பின்வருமாறு கூறினான்— "கோமானே! தாங்கள் வாக்களித்தபடியே இந்தக் காரியம் (வாலி வதம்) செய்து முடிக்கப்பட்டுவிட்டதைக் கண்களால் கண்டுவிட்டேன். வேந்தர் மைந்தனே! இப்போது என் மனம் உலக சுகங்களை அனுபவிக்க ஆசைப்படவில்லை. ஏன், உயிர் வாழவும் நான் விரும்பவில்லை. (3,4)

இராமா! என்னுடைய தமையனார் கொல்லப்பட்டதால், பட்டத்தரசியான இந்த மாதரசி மிகவும் அழுகிறாள்; குடிமக்கள் துக்கம் தாங்காமல் கதறிக் கொண்டிருக்கிறார்கள்; அங்கதன் உயிரோடு இருப்பானா? அல்லது துயரம் தாங்காமல் உயிரை விட்டுவிடுவானா? என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையில், என் மனம் அரசு செலுத்துவதில் ஆர்வம் காட்டவில்லை. இக்ஷ்வாகு குலத் தோன்றலே! முன்னர் (தங்களைச் சந்தித்த காலத்தில் தமையன் மீதுள்ள) கோபம், வெறுப்பு ஆகியவற்றாலும், (அவனால்) மிகவும் பயமுறுத்தப்பட்டிருந்ததாலும், என் தமையன் கொல்லப்படுவதற்கு மனம் ஒப்பினேன். இப்போது, வானர மன்னரான இவர் மாண்டு கிடப்பதைப் பார்த்து வேதனைப்படுகிறேன். (5,6)

என் குல வழக்கப்படி, அங்குமிங்கும் சுற்றித் திரிந்து கொண்டு, கைக்குக் கிடைத்ததைப் புசித்துக் கொண்டு, மாபெரும் மலையான ரிஷ்யமூகத்தில் நீண்ட காலம் வசித்துக் கொண்டிருப்பதே மிகவும் மேலானது என்று இப்போது எண்ணுகிறேன். (என் தமையனாரான) இவரைக் கொன்று, அதன் பயனாக தேவலோகமே கிடைப்பதாக இருந்தாலும், அது வேண்டாம் என்று தோன்றுகிறது. மகாத்மாவும் பேரறிவாளருமான வாலி, யுத்தம் செய்து நான் தோற்றபோது, 'நான், உன்னைக் கொல்ல விரும்பவில்லை; நீ எங்கேயாவது சென்று, பிழைத்துப் போ' என்று சொன்னார். அது அவருடைய பெருந்தன்மைக்கு ஏற்றதாக இருந்தது. அதற்குமாறாக, (இவரைக் கொல்ல வேண்டும் – என்று நான் தங்களை வேண்டிக் கொண்டேனே?) இந்தச் செயல் என் இழிகுணத்திற்கு ஏற்றதாக இருக்கிறது! (7,8)

வீரராகவரே! ஒருவன் எவ்வளவுதான் சுயநலக்காரனாக இருந்தாலும், நாடாளும் சுகம், சகோதரனைக் கொல்வதால் உண்டாகும் துயரம் – இவை இரண்டையும் சீர்தூக்கிப் பார்த்தானேயானால், குணசாலியான தமையனின் வதத்தை நினைத்துப் பார்ப்பானா என்ன? (தமையனின் வதத்தை விரும்பமாட்டான்.) தன்னுடைய இயல்பான பெருந்தன்மையை நழுவவிட்டுவிடக் கூடாது என்ற காரணத்தால், அவன் என்னைக் கொல்ல விரும்பவில்லை. (என்னிடம் உள்ளார்ந்த பாசமும் மன்னிக்கும் பெருங்குணமும் அவரிடம் இருந்தன.) ஆனால், என்னுடைய மனத்தில் துஷ்டத்தனம் நிறைந்திருந்தது. அதனால், அவரையே ஒழித்துக்கட்டும் தீய எண்ணம் உண்டாகி, அந்தப் பாவமும் ஏற்பட்டுவிட்டது. (9,10)

ஒரு சமயம் (நாங்கள் இருவரும் போர் செய்தபோது) மரக்கிளையால் என்னைத் தாக்கினார். நான், சிறிது நேரம் மனம் கலங்கித் தத்தளித்துப் போனேன். அப்போது அவர் என் மீது இரக்கம் கொண்டு, 'இனிமேல் இப்படிச் செய்யாதே, (என்னுடன் சண்டைக்கு வந்து அடிபடாதே!) போ' என்று அறிவுரை கூறி அனுப்பி வைத்தார். இவரால் சகோதர வாஞ்சை, மேன்மைக் குணம், தருமநெறி – இவை கடைப்பிடிக்கப்பட்டன. ஆனால், நானோ கோபம், பேராசை, குரங்குத்தனம் ஆகியவைகளையே காட்டினேன். நண்பரே! த்வஷ்டாவின் மைந்தனான விருத்திராசுரனைக் கொன்றதால் இந்திரனுக்கு என்ன பாவம் ஏற்பட்டதோ, அதே பாவத்தை நான் செய்திருக்கிறேன். இந்த அற்பச் செயல் மேன்மக்களால் விலக்கத்தக்கது; மனத்தினால் நினைத்துப் பார்க்கவும் கூடாதது; கண்ணாலும் பார்க்கக் கூடாதது. (11–13)

இந்திரனுடைய பாவத்தை, இந்தப் பூமியும் ஆற்றின் முதல் பிரவாகத் தண்ணீரும் பெண்களும் விருப்புடன் ஏற்றுப் பகிர்ந்து கொண்டார்கள். கிளைக்குக்கிளை தாவும் வானரனான என்னுடைய பாவத்தைப் போக்க விரும்பி, அதைத் தாங்கள் ஏற்றுக் கொண்டீர்கள். (இச்செயலைத் தங்களைத் தவிர வேறு எவரால்தான் செய்யமுடியும்?) இராகவனே! அதருமத்தோடு கூடியதும் குலத்தின் அழிவை விளைவித்ததுமான இழிவான காரியத்தைச் செய்த நான், குடிமக்களின் மரியாதைக்கு உரியவன் அல்லன். இளவரசுப் பட்டத்திற்கே தகுதியில்லாதவன் என்னும்போது, அரச பதவியைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா, என்ன? (14,15)

உலகத்தோரால் நிந்திக்கத்தக்க, கீழ்தரமான, உலகுக்குத் தீங்கு விளைவிக்கும் பாவச்செயலைச் செய்திருக்கிறேன். மழைத் தண்ணீர் பள்ளத்தை நோக்கி ஓடுவதைப் போல, எல்லையில்லாத துக்கம் என்னை ஆட்கொண்டிருக்கிறது. சகோதரனது கொலை என்னும் (யானையின்) பின்புறம் மற்றும் வால்; சொல்லொணா மனோவேதனை என்னும் துதிக்கை, கண், தலை; இவற்றுடன் மிகப்பெரிய பாவமே, செருக்கடைந்த மதயானை போன்ற உருவமேற்று வந்து, நீர்ப்பெருக்கெடுத்தோடும் ஆற்றின் கரையை ஒரு யானை இடித்துத் தள்ளுவதைப் போல, என்னை இடைவிடாது தாக்குகிறது. (16,17)

மன்னரே! ரகுநந்தனா! ஐயகோ, என்ன கஷ்டம், நெருப்பில் காய்ச்சப்பட்ட தங்கத்திலிருந்து அதன் கசடுகள் தனித்துச் சென்று விடுவதைப் போல, நான் செய்த பொறுக்க முடியாத பாவம், என் புத்தியிலுள்ள விவேகத்தை வெளியேற்றுகிறது. இராகவனே! என் நிமித்தமாக (வாலி கொலை செய்யப்பட்டதால்), பேராற்றல் பொருந்தியவர்களான வானரத் தலைவர்களின் கூட்டமும், அங்கதனும் மிகவும் துயரத்தோடு இருப்பதாலும், இந்த மக்கட்கூட்டமே குற்றுயிராக இருப்பதாக, நான் எண்ணுகிறேன். நற்குணங்கள் நிரம்பிய, பெற்றோர் சொற்படி நடக்கக் கூடிய புத்திரர்கள் உலகெங்கும் காணப்படுவார்கள். ஆனால், அங்கதனுக்கு ஈடான ஒரு நன்மகனை எங்கே காணமுடியும்! அதே போல், வீரரே! என் சகோதரனைப் போல் மிக நெருக்கத்துடன் பழகும் உடன்பிறப்பை வேறு எந்த நாட்டிலும் காணமுடியாது. (18–20)

பெருவீரர்களில் தலையாயவரே! (தந்தை இறந்த துக்கத்தைப் பொறுத்துக் கொண்டு) அங்கதன் பிழைத்திருந்தால், அவனைப் போஷித்துப் பராமரிப்பதற்காக, அவனுடைய தாயார் தாரையும் உயிருடன் இருப்பார். புதல்வன் இல்லாமல் போய்விட்டால் (அவனும் மரணமடைந்து விட்டால்) அளவில்லாத துக்கத்தால் மனம் நொந்தவராகி, தாரை உயிருடன் இருக்க மாட்டார் என்று நான் நிச்சயமாக அறிவேன். ஆகவே நான், என்னுடைய சகோதரரோடும், அவருடைய புத்திரனோடும் உடனிருப்பதற்காக (நல்லுறவு கொள்ள), கொழுந்துவிட்டெரியும் நெருப்பில் விழுந்து, என் உயிரைப் போக்கிக் கொள்வேன். இந்த வானர வீரர்கள், தங்கள் கட்டளைக்குப் பணிந்து சீதாப்பிராட்டியாரைத் தேடுவார்கள். (21,22)

மாமன்னரின் மைந்தரே! நான், என் உயிரைவிட்ட பின்னரும், அதன் காரணமாகத் தடைபடாமல், (நான் வாக்களித்த) தங்கள் காரியம் குறைவில்லாமல் நிறைவேற்றப்படும்.

இராமா! குலத்தை அழித்தவனும் மகாபாவியுமான நான், இனி உயிருடன் இருக்கக் கூடாது. நான் உயிர்த்தியாகம் செய்வதற்கு அனுமதி கொடுங்கள்.'' இவ்வாறு, சுக்ரீவன் மிகவும் துக்கத்துடன் கூறியவைகளைக் கேட்டு, எதிரிகளை மாய்ப்பவரும் ரகுகுல திலகமுமான இராமன், சிறிது நேரம், துயருற்ற மனத்துடன் சிந்தனையில் ஆழ்ந்தார். பூமாதேவியை நிகர்த்த பொறுமையுடையவரும் அனைத்துலகையும் காப்பாற்ற வல்லவருமான இராமன், அங்குமிங்கும் பார்வையைச் செலுத்தியபோது, துக்கத்தில் மூழ்கியிருந்த தாரை, அழுதபடியே தன்னை அடிக்கடி பார்ப்பதைக் கண்டார். (23–25)

விசால மனமும், அழகிய கண்கள் உடையவளும், வானரர்களில் அரிமா போன்றவனை கணவனாகப் பெற்றிருந்தவளும், அப்போது கணவனை (உடலை) அணைத்தவாறே படுத்துக் கொண்டிருந்தவளுமான வானர வீரரின் பத்தினியை, முக்கிய அமைச்சர்கள் வந்து (வானரப் பெண்களைக் கொண்டு) எழுப்பினார்கள். அவள் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. கணவரின் அருகிலிருந்து அவளை, தோழிகள் அணைத்துத் தாங்கியவண்ணம் அழைத்துச் சென்றார்கள். அப்போது அவள், தன் ஆன்மப் பிரகாசத்தால் சூரியனைப் போல் ஒளிவீசுபவரும், கையில் வில்–அம்பு ஏந்தி நின்றவருமான ஸ்ரீராமனைக் கண்டாள். (26,27)

மான்குட்டியின் கண்களைப் போன்ற கண்களைப் பெற்றிருந்த அவள், அரசருக்குரிய இலக்கணங்களோடு விளங்குபவரும், அழகிய கண்களையுடையவருமான இதுவரை பார்த்தறியாத ஆணழகரைப் பார்த்ததும், 'காகுத்ஸ்த வம்ச திலகமான இராமன் இவர்தான்' என்று அறிந்து கொண்டாள். துயரத்தில் மூழ்கியவளாக, உடல் நடுங்க, மனக்கவலையில் ஆழ்ந்திருந்த உத்தமியான தாரை, இந்திரனை நிகர்த்த வீரமுடையவரும், எளிதில் நெருங்க முடியாதவரும், பேருள்ளம் கொண்டவருமான அவரருகே வேகமாகச் சென்றாள். சோகத்தால் நடுங்கும் சரீரமுடையவளும் தூய நெறியில் செல்பவளும் விவேகியுமான தாரை, போர்க்களத்தில் குறி தப்பாமல் அம்பு செலுத்துபவர் என்று புகழ்பெற்றவரான இராமனை அணுகி, (பின்வருமாறு) கூறினாள்— (28–30)

''தாங்கள், யாராலும் அறியமுடியாத தன்மை உடையவர்; நெருங்க முடியாதவர்; புலன்களை வென்றவர்; உயர்ந்த தருமங்களை அனுஷ்டிப்பவர்; குறையாத புகழ் படைத்தவர்; முக்காலமும் அறிந்தவர்; பூமியைப் போன்று பொறுமைமிக்கவர்; செம்மையான கண்களை உடையவர். தங்கள் கையில் வில்லும் பாணமும் எப்போதும் ஆயத்தமாக இருக்கின்றன; பேராற்றலுடையவர்; உறுதியும் அழகும் கொண்ட திருமேனியர். மானுட சரீரத்திற்குரிய இயல்பான பண்புகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு, தெய்விகமான சரீரகாந்தியுடன் சோபிக்கிறீர்கள். (31,32)

இராமா! எந்த ஒரு பாணத்தால் என் அன்புக் கணவர் கொல்லப்பட்டாரோ, அதே பாணத்தால் (ஒரேயொரு பாணப் பிரயோகத்தால்) என்னையும் கொன்று விடுங்கள். உயிர்துறந்தபின், நான் அவர் இருக்குமிடத்திற்கே சென்றுவிடுவேன். நானில்லாமல் வாலி மகிழ்ச்சியாக இருக்க மாட்டார். மாசற்ற செந்தாமரைக் கண்ணராகிய இவர் சுவர்க்கத்தில் அங்குமிங்கும் திரிந்து என்னைத் தேடுவார். நான் கண்ணில் படாமற்போனாலும், பல்வகையான செம்மலர்களால் அலங்கரிக்கப்பட்ட கேசங்களையுடையவர்களையும், மனங்கவரும் ஆடை–அணிகலன்கள் அணிந்த அப்சரசுகளையும்கூட கண்ணால் ஏறெடுத்தும் பார்க்க மாட்டார். (33,34)

வீரரே! ரிஷ்யமூக பர்வதத்தின் அழகான தாழ்வரைகளில் தாங்கள் வசித்துக் கொண்டு இருந்தாலும், வைதேகி இல்லாததால் எவ்வாறு துன்பப்படுகிறீர்களோ, அவ்வாறே வாலி, (எல்லா சுக–போகங்களும் நிறைந்த) தேவலோகத்தில் இருந்தாலும், நான் அங்கு இல்லாவிட்டால், சோகம் அடைந்து வெளியேறிவிடுவார். வாலிபப் பருவத்திலுள்ள ஓர் ஆண்மகன், அன்புடைய மனைவியைப் பிரிந்திருந்தால் எவ்வளவு கடுமையான மனவேதனையை அனுபவிக்கிறான் என்பது தாங்கள் அறிந்ததுதானே? இந்த நுட்பத்தை அறிந்துள்ள தாங்கள், என்னையும் கொன்றுவிடுங்கள். (கொல்லப்பட்டபின் நானும் தேவலோகம் போய் விடுவேன்.) என்னைக் காணாததால் உண்டாகும் மனவேதனையை வாலி அனுபவிக்காமல் இருக்கட்டும். (35,36)

மகாத்மாவான தங்களுக்கு, ஒரு பெண்ணைக் கொல்வது மாபெரும் பாவம் என்ற தயக்கம் ஏற்படும். என் விஷயத்தில் அந்தப் பாவத்திற்கு இடமில்லை. சக்கரவர்த்தி திருமகனே! 'இவனுடைய (வாலியினுடைய) ஆத்மா, இவள்' என்ற எண்ணத்துடன், (பெரியோர் கூற்றுக்கிணங்க,) என்னைக் கொன்றால் பெண்கொலை என்ற பாவம் உண்டாகாது. சாஸ்திரங்களில் கூறப்பட்ட யாக–யக்ஞங்களில், கணவன்–மனைவிக்குச் சமமான பங்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒருவன், தருமபத்தினி இல்லாமல் இந்தக் கர்மாக்களைச் செய்ய முடியாது. வேதங்களிலும், 'மனைவி என்பவள் கணவனுக்கு வேறானவள் அல்லள்' என்று கூறப்பட்டிருக்கிறது. மேலும், உலகத்தில், ஞானிகளுடைய கருத்துப்படி பெண்தானத்தை விட உயர்ந்த தானம் எதுவும் சொல்லப்படவில்லை. (37,38)

வீரரே! தாங்களும் அறநெறிக்கு இணங்க, என்னை, என் அன்புக்குரிய கணவருக்குக் கொடுத்து விடுங்கள். பேராற்றலுடையவரே! இப்படி என்னை தானம் செய்வதால், (என்னைக் கொல்வதால்) அதருமம் செய்த குற்றம் தங்களைச் சேராது. (நான்) துக்கத்தில் இருப்பவள்; ஆதரவு அற்றவள்; கணவரிடமிருந்து பிரிக்கப்பட்டவள். எனவே, (இவ்வளவு துன்பத்திலிருக்கும்) என்னை வதம் செய்யக் கடவீர். மிகச்சிறந்த பொன்மாலை அணிந்தவரும், யானை போன்று கம்பீரமான நடை உடையவரும், வானரர் தலைவரும், பேரறிவாளருமான அவர் (என் கணவர்) இல்லாமல், மாமன்னரே! வெகுகாலம் நான் உயிரோடு இருக்க மாட்டேன்.'' இவ்வாறு தாரை கூறியதைக் கேட்ட உலகநாயகரும் மகாத்மாவுமான அவர், அவளுக்கு ஆறுதல் கூறும்விதமாக நல்லுரைகளைக் கூறினார்— (39–41)

''மாவீரன் மனைவியே! (இறப்பு என்பது பற்றி) இப்படித் தவறான எண்ணத்திற்கு இடங்கொடாதே. ஏனென்றால், பிரும்மாதான் இவ்வுலக மக்களையெல்லாம் படைத்திருக்கிறார். அதே பிரும்மாதான் சுகம்–துக்கம் இரண்டையும் கொடுக்கிறார் என்பது, பாமர மக்களாலும் அறியப்படுகிறது, கூறப்படுகிறது. மூன்று உலகத்திலுள்ளவர்களும் பிரும்மாவினால் விதிக்கப் பட்டதை மீறிச் செயல்படுவதில்லை. ஏனென்றால், எல்லோரும் அவர் வசத்தில் உள்ளவர்கள். நீ, முன்புபோல் திருப்தியையும் ஆனந்தத்தையும் அடைவாய். உன் மைந்தன் இளவரசனாகப் பட்டம் சூட்டப்படுவான். பிரும்மாவினால் இவ்வாறுதான் விதிக்கப்பட்டிருக்கிறது. வீரருடைய பத்தினிகள் இவ்வாறு வேதனைப்படுவதில்லை.'' எதிரிகளைத் தவிக்கச் செய்கிறவரும், மிக்க பராக்கிரமம் பொருந்தியவருமான இராமனால், இவ்வாறு ஆறுதல் கூறப்பட்ட பேரழகு வாய்ந்த வீரபத்தினியான தாரை, அழுகையை நிறுத்திவிட்டு மௌனமானாள். (42–44)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
இருபத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்தைந்து
வாலியின் இறுதிச் சடங்குகள்

சுக்ரீவன் மற்றும் அங்கு கூடியிருந்தவர்களின் துக்கத்தைப் பார்த்ததும், இராம–லட்சுமணர்களுக்கும் மிகவும் துயரம் உண்டாயிற்று. இராமன், தாரை–அங்கதன்–சுக்ரீவன் ஆகியோரைச் சமாதானப்படுத்தும்வண்ணம் பின்வருமாறு கூறினார்— (1)

''சோகத்தில் மூழ்கித் தவிப்பதால், இறந்து போனவனுக்கு எந்த நன்மையும் ஏற்படப் போவதில்லை. அதனால், (துயரத்தை அடக்கிக் கொண்டு) உடனடியாகச் செய்யவேண்டிய கர்மாக்களைச் செய்யுங்கள். நீங்கள் எல்லோரும் நிறைய கண்ணீர் விட்டுவிட்டீர்கள். இவ்வளவு போதும். இனி, சமூக சம்பிரதாயச் சடங்குகள் நடத்தப்பட வேண்டும். (காலம் கடந்து செய்யப்படும்

கர்மாக்கள் பயன் தரமாட்டா என்பதால்) உரிய காலத்தைக் கடந்து, ஒரு காரியத்தைச் செய்யத்தகாது. உலகில் விதிதான் எல்லாவற்றுக்கும் மூலகாரணம்; கர்மாக்களைச் செய்வதற்கு அனுகூலமாக இருப்பதும் விதிதான்; எல்லாப் பிராணிகளையும் பற்பல வேலைகளில் ஈடுபடுத்துவதும் விதிதான். (2–4)

எந்த ஒரு செயலையும் நடத்துபவனாக எவன் ஒருவனும் ஆகமாட்டான். 'இந்தக் காரியத்தைச் செய்' என்று உத்தரவிடும் அதிகாரம் உடையவனும் அல்லன். உலகம், இறைவன் விருப்பப்படி நடந்து வருகிறது. உலக நடப்புக்கு விதி (காலம்) தான் ஆதாரம். காலமும் (தானே விதித்துக் கொண்ட) கட்டுப்பாடுகளை மீறி நடக்க முடியாது. காலம் (விதி) ஒருபோதும் குறைந்து போவதில்லை. அதனால், விதியின் விளைவை அனுபவிக்கத் தொடங்கிவிட்டவன் எவனும், அதை அனுபவிக்காமல் கடந்து சென்றுவிட முடியாது. ('பாவம், ஊட்டாது கழியாது.' அதாவது, 'பாவம் அனுபவித்தாலொழியக் குறைந்து போகாது' என்பது பழமொழி.) (5,6)

காலத்திற்கு எதனுடனும் (அண்ணன்–தம்பி, உற்றார்–உறவினர், தன் வகுப்பு, தன் மொழி போன்ற) நெருக்க உறவு இல்லை; (வேண்டியவர்–வேண்டாதவர் என்ற வேறுபாடு இல்லை.) அது வெளிப்பட்டுச் செயல்படுவதற்கு மூலகாரணமும் இல்லை; அதை மீறிச் செயல்படுவதற்கு வேறு எதற்கும் ஆற்றலில்லை; நண்பன்–உறவினன் என்ற சம்பந்தமும் (இணைப்பு) இல்லை; தானே மூலகாரணமாக விளங்கும் காலம், உயிர்ப் பிராணிகளின் கட்டுப்பாட்டில் இல்லை. ஆயினும், எல்லாவற்றையும் ஆழமாக ஆராய்ந்து பார்ப்பவன், விதிவசத்தால் அவ்வப்போது நடக்கும் நிகழ்ச்சிகளைக் கருத்துடன் பார்க்க வேண்டும். அறம்–பொருள்–இன்பம் ஆகியவை விதிப்பயனாக வந்து சேர்கின்றன (என்பதை, அந்த ஆராய்ச்சியாளன் உணர்ந்து கொள்ள வேண்டும்). (7,8)

(என்னால் கொல்லப்பட்டதால் சகல பாவங்களும் நீங்கியவனாக) இங்கிருந்து சென்ற வானர மன்னன், தரும–அர்த்த–காமங்களின் கூட்டு விளைவாக, தன் (மூல) இயல்பான புண்ணிய நிலையை, தன் வினைகளின் பயனாக அடைந்துவிட்டான். மகாத்மாவான வாலி, யுத்தத்தில் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளவில்லை. (களத்திலிருந்து ஓடிப் போவது, சரணாகதி அடைவது என்ற வழிகளை நாடவில்லை.) தன் தருமத்தில் உறுதியாக நின்று, போர்க்களத்தில் உயிரை விட்டதால் வீர சுவர்க்கம் அவனால் ஜெயிக்கப்பட்டது. எனவே, அவன் அங்கே போய்ச் சேர்ந்து விட்டான். வானரத் தலைவனான வாலி அடைந்ததுதான் மிக மேன்மையான நிலை. ஆகவே, வருத்தப்பட்டது போதும். இனி, உடனடியாகச் செய்ய வேண்டிய காரியங்களில் மனத்தைச் செலுத்துங்கள்.'' (9–11)

இராமன், இவ்வாறு சொல்லி முடித்தவுடன், பகை வீரர்களை அழிப்பவரான இலக்குவன், தன்னுணர்வு இழந்து நிற்கும் சுக்ரீவனைப் பார்த்து அடக்கமாகக் கூறினான்— ''சுக்ரீவனே! இனி வாலியின் பிரேத தகன விஷயத்தில், தாரை–அங்கதனுடன் கலந்து பேசி, இவருக்குச் செய்யப்பட வேண்டிய இறுதிச் சடங்குகளைச் செய்து முடிக்க வேண்டும். வாலியின் சடலத்தைத் தீ மூட்டுவதற்காக, பெருமளவு உலர்ந்த சந்தனம் முதலிய கட்டைகள் கொண்டு வருவதற்கு உத்தரவிடுங்கள். அங்கதன் மிகவும் துக்கத்தில் ஆழ்ந்திருக்கிறான். அவனுக்கு ஆறுதல் கூறி தைரியப்படுத்துங்கள். 'நான் என்ன செய்வது?' என்று சிறுபிள்ளைத்தனமாக மனம் குழம்பிக் கொண்டிராதீர்கள். ஏனென்றால், இந்த மாபெரும் பட்டணம் உங்கள் வசத்தில் இருக்கிறது. (12–15)

மலர்மாலை, பலவகையான ஆடைகள், நெய், எண்ணெய், வாசமிக்க பொருள்கள் மற்றும் இப்போது தேவைப்படும் மற்ற சாமான்கள் ஆகிய அனைத்தையும் அங்கதனே எடுத்து வரட்டும். தாரனே! நீ வேகமாகச் சென்று ஒரு சிவிகையைக் கொண்டு வா. இது போன்ற சமயங்களில் விரைவாகக் காரியம் செய்தல் என்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். பல்லக்கைத் தூக்கிச்

செல்வதில் தகுதி–சாமர்த்தியம்–பலம் பெற்றவர்களான வானரர்கள் ஆயத்தமாக இருக்கட்டும். அவர்கள்தான் வாலியின் சடலத்தை இங்கிருந்து எடுத்துச் செல்வார்கள்.'' (16–18)

சுக்ரீவனிடம் இவ்வாறு மொழிந்துவிட்டு, சுமித்திரையின் ஆனந்தத்தைப் பெருக்குபவனும் எதிரிகளை மாய்ப்பவனுமான இலக்குவன், தன் சகோதரர் அருகில் போய் நின்றான். இலக்குவனின் உத்தரவைக் கேட்ட தாரன், சிவிகை ஒன்றையே குறியாகக் கொண்டு, பரபரப்படைந்து, குகைக்குள் (கிஷ்கிந்தைக்குள்) நுழைந்தான். அங்கிருந்து சிவிகையைச் சுமக்கவல்ல சூரவீரர்களான வானரர்களைக் கொண்டு தூக்கச் செய்து, சிவிகையுடன்கூட விரைவில் தாரன் திரும்பி வந்தான். திவ்யமான அந்தச் சிவிகையின் நடுவில் அரசர் அமரும் ஆசனம் இருந்தது; தேர் போல் அமைக்கப்பட்டிருந்தது; பறவைகள்–மரங்கள் அழகாக வரையப்பட்டிருந்தன; (19–22)

வரிசை வரிசையாக எழுதப்பட்டிருந்த சித்திரங்களால் கவினுற விளங்கிற்று. அதன் நாற்புறங்களிலும் இளைப்பாறுமிடங்கள் இருந்தன. ஸித்தர்களுடைய விமானத்தைப் போன்றிருந்த அதில் சாளரங்களும் காற்றுப் போக்கிகளும் இருந்தன; விசுவகர்மாவினால் விசாலமாகவும் உறுதியாகவும் அழகாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தது; மரக்கட்டைகளைக் கொண்டு, சிறு சிறு குன்றுகள் அமைக்கப்பட்டிருந்தன; மெருகு வேலை செய்யப்பட்டு மிக்க சோபையுடன் விளங்கிற்று; உயர்வகையான ஆபரணங்களாலும் மாலைகளாலும் அலங்கரிக்கப் பட்டிருந்தது; வகைவகையான மலர்களால் அழகுடன் மிளிர்ந்தது; குகைகளும் வனங்களும் புனையப்பட்டிருந்தன; செஞ்சந்தனம் பூசப்பட்டிருந்தது; (23–25)

பலவகையான மலர்களின் குவியல்களால் அது மூடப்பட்டிருந்தது; இளஞ்சூரியனைப் போல் செம்மையாக விளங்குகின்ற தாமரை மாலைகளும் அதில் கட்டப்பட்டிருந்தன. இவ்வளவு சிறப்புடன் விளங்கிய பல்லக்கைப் பார்த்ததும் (பல்லக்கு வந்து சேர்ந்ததும்) இராமன், லட்சுமணனை நோக்கிக் கூறினார்— ''விரைவில் வாலியைக் கொண்டு செல்லட்டும். இறுதிச் சடங்குகள் செய்யப்படட்டும்.'' உடனே, சுக்ரீவன் அங்கதனுடன்கூட வாய்விட்டுக் கதறிக் கொண்டு, அவ்விடத்திலிருந்து வாலியின் சடலத்தைத் தூக்கிப் பல்லக்கில் ஏற்றி வைத்தான். (26–28)

பல்வகையான அலங்காரங்கள், மாலைகள், ஆடைகளால் அலங்கரித்த வாலியின் சடலத்தைப் பல்லக்கில் ஏற்றி வைத்து, பின்னர், வானரர்களின் தலைவனும் மன்னனுமான சுக்ரீவன், ''இந்தப் பெருமகனாருக்குத் தக்கபடி உத்தரக்கிரியைகள் செய்யப்படட்டும்'' என்று கட்டளையிட்டான். ''பலவகையான இரத்தினங்களை ஏராளமாக அள்ளி வீசிக்கொண்டு, சிவிகையின் முன்னதாகவும் அருகிலேயும் வானரர்கள் செல்லட்டும். இந்த உலகத்தில், இறந்து போன மன்னர்களின் ஏற்றத்திற்குத் தக்கபடி, மிக விமரிசையாக, ஆடம்பரமாக இறுதிச்சடங்குகள் செய்யப்படுகின்றன – என்பதைப் பார்க்கிறோம். எனவே, அதுபோலவே மிகவும் பொருட்செலவு செய்து, வானரர்கள் தங்கள் மன்னருடைய இறுதி ஊர்வலத்தை இங்கே நடத்துவார்களாக.'' (29–32)

பின்னர், நெருங்கிய உறவினனான வாலியை இழந்த தாரன் முதலிய வானரர்கள் எல்லோரும் கதறியவண்ணம் அங்கதனோடுகூட உடனே (பல்லக்கைத் தூக்கிக் கொண்டு) புறப்பட்டார்கள். அப்போது வாலியினுடைய கட்டுப்பாட்டிலிருந்த மனைவிமார்கள் அனைவரும், 'ஆ! வீரரே! வீரப்பெருந்தகையே!' என்று உரத்த குரலில் கூவியழுது கதறினார்கள். நாயகனைப் பறிகொடுத்த தாரை முதலிய வானரப் பெண்டிர் எல்லோரும், அவலக்குரலில் கதறிக் கொண்டு, கணவரைப் பின்தொடர்ந்து (சிவிகையுடன்கூட) சென்றார்கள். காட்டினுள்ளே கதறிக் கொண்டிருந்த வானரப் பெண்களின் அழுகுரல், காட்டிலும் மலைகளிலும் எதிரொலித்து, அதனால் அவைகளும் அழுவதைப் போலிருந்தது. (33–36)

மலையிலிருந்து பெருகிவரும் நதியின் மணற்திட்டில், இருபுறமும் தண்ணீர் ஓட, தனித்திருந்த ஓர் இடத்தில், துக்கம் தாங்காமல் உருகிக் கொண்டிருந்த பல வானரர்கள்

சிதையைக் கட்டினார்கள். பல்லக்கைத் தூக்கி வந்தவர்கள், அதைத் தோளிலிருந்து இறக்கி வைத்துவிட்டு, ஏகாந்தமான இடத்திற்குச் சென்று சோகத்தில் மூழ்கியவர்களாக, எல்லோரும் நின்று கொண்டார்கள். பின்னர், சிவிகையில் கிடத்தப்பட்டிருக்கும் தன் கணவரின் சடலத்தைக் கண்ட தாரை, அவனுடைய தலையை எடுத்துத் தன் மடியில் வைத்துக் கொண்டு, துக்கம் தாங்காமல் புலம்பினாள்— (37–39)

''வானர மாமன்னரே! ஓ என் நாயகரே! என் அன்புக்குரியவரே! ஆ... மிகவும் கொண்டாடத்தக்கவரே! தோளாண்மை மிக்கவரே! என்னிடம் பிரியமுள்ளவரே! கண் திறந்து என்னைப் பாருங்கள். சோகத்தில் மிகவும் வருந்திக் கொண்டிருக்கும் இந்த மக்கள் அனைவரையும் ஏன் கண் திறந்து பார்க்காமலிருக்கிறீர்கள்? எல்லோருக்கும் மரியாதை கொடுப்பவரே! உடலிலிருந்து உயிர் போய்விட்டாலும், தங்கள் முகம் உயிரோடு இருப்பதைப் போன்று, மேற்கு மலையில் விழும் சூரியனைப் போல் செம்மையாகவும் மகிழ்ச்சியுடனும் காணப்படுகிறது. வானர மன்னரே! ஸ்ரீராமன் வடிவில் வந்து, காலன் தங்கள் உயிரைக் கொண்டு போகிறான். யுத்தகளத்தில், இராமனுடைய ஒரே பாணத்தால், நாங்கள் எல்லோரும் கைம்பெண்களாக்கப்பட்டோம். (40–42)

மாமன்னரே! தங்கள் அன்புக்குரிய இந்த வானரப் பெண்டிர், வானரர்களைப் போலக் குதித்துக் குதித்து வரமாட்டார்கள்; தங்களைத் தொடர்ந்து வெகுதூரம் காலால் நடந்து வந்திருக்கிறார்கள். இதைத் தாங்கள் அறியவில்லையா? வானர மன்னரே! சந்திரன் போன்று தண்ணொளி படைத்த இந்த மனைவிகள், தங்களுக்கு மிகவும் பிரியமானவர்கள், இல்லையா? அத்துடன், இப்போது தாங்கள் சுக்ரீவனையும் பார்க்க மாட்டீர்களா? அரசரே! மாசற்றவரே! தாரன் முதலிய தங்கள் அமைச்சர்களும் நகர மக்களும், தங்களைச் சூழ்ந்து கொண்டு நிற்கிறார்கள். எதிரிகளை அடக்குபவரே! இந்த வானரர்களைத் தக்கபடி விடைகொடுத்து அனுப்பி வையுங்கள். பின்னர், காமக்களிப்பை விழையும் நாமெல்லோரும் வனப்பகுதிகளில் இன்பமாய் விளையாடுவோம்.'' (43–46)

இவ்வாறாக, கணவனை இழந்த துக்கத்தில் மூழ்கிப் புலம்பும் தாரையைச் சோகத்தால் தளர்ந்து போயிருந்த மற்ற வானரப் பெண்கள் மெல்லத் தூக்கி அப்புறப்படுத்தினார்கள். பின்னர், அழுதவண்ணமே, சுக்ரீவனோடுகூட துயரத்தால் தாக்கப்பட்ட புலன்களைக் கொண்ட அங்கதன், தந்தையின் உடலைச் சிதையின் மேல் வைத்தான். புலன்கள் கலங்கிக் கிடந்த அவன், நீள்பயணம் மேற்கொண்டுள்ள தந்தைக்கு, மரபு முறைப்படி நெருப்பைப் போட்டுவிட்டு, பின்னர், இடப்புறமாகச் சுற்றி வந்தான். வானரர்கள் அனைவரும், முறைப்படி, வாலிக்கு இறுதி மரியாதைகளைச் செலுத்திவிட்டு, புனிதமானதும் குளிர்ந்த நீரையுடையதுமான நதிக்கு (துங்கபத்ரைக்கு) நீராடுவதற்காகப் போய்ச் சேர்ந்தார்கள். (47–50)

அவ்விடத்தில், அங்கதனை முன்னிட்டுக் கொண்டு, சுக்ரீவன், தாரை முதலிய எல்லோரும் வாலிக்கு நீர்க்கடன் செலுத்தினார்கள். துக்கத்தில் ஆழ்ந்திருக்கும் சுக்ரீவனைப் போலவே, மகாபலசாலியான இராமன், தானும் துக்கம் அனுபவித்தவாறே, வாலியின் ஈமச்சடங்குகளைச் செய்வித்தார். இவ்வாறு, இக்ஷ்வாகு வம்சத் திலகமான ஸ்ரீராமனின் பாணத்தால் மாண்டு போன மகாபராக்கிரமமுள்ளவனும், கொழுந்துவிட்டெரியும் அக்னியை நிகர்த்த ஒளிபொருந்தியவனும், மிகவும் பிரசித்தி பெற்றவனுமான வாலியைத் தகனம் செய்துவிட்டு, இலக்குவனோடு இருக்கும் இராமனை (சுக்ரீவன்) வந்தடைந்தான். (51–53)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
இருபத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்தாறு

சுக்ரீவனுக்கு முடிசூட்டுதல்

பின்னர் வானரப் பிரமுகர்கள், துக்கத்தால் பரிதவித்துக் கொண்டிருப்பவனும், (நீராடிவிட்டு வந்ததால்) ஈரமான ஆடையோடு இருப்பவனுமான சுக்ரீவனைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டார்கள். அவர்கள் எல்லோரும் தோளாண்மை மிக்க, வெகு எளிதாகவே அருஞ்செயல்களைச் செய்து முடிக்கும் இராமனிடம் சென்று, கைகளைக் கூப்பிக்கொண்டு, பிரும்மதேவர் எதிரில் நிற்கும் முனிவர்கள் போல் வணக்கத்துடன் நின்றார்கள். அவ்வமயம், பொன்மலை போல் ஒளிவீசுபவரும், இளஞாயிறு போல் செவ்வண்ணமான முகம் உடையவரும், வாயு குமாரருமான அனுமான் கைகளைக் கூப்பிக்கொண்டு, பின்வருமாறு விண்ணப்பித்துக் கொண்டார்— (1–3)

''பெருந்தலைவரே! தங்கள் பேருதவியினால் சுக்ரீவன், பரம்பரையாக வந்ததும், அடைவதற்கு அரியதுமான வானரப் பேரரசைப் பெற்றுள்ளார். இப்போது தாங்கள் அனுமதித்தீர்களேயானால், நண்பர் கூட்டத்துடன் மங்களமான (கிஷ்கிந்தை) நகரத்திற்குள் சென்று, அரசு காரியங்கள் அனைத்தையும் செய்வார். பலவகையான மணம் மிகுந்த அபிஷேகப் பொருள்களாலும் மூலிகை களாலும், முறைப்படி பட்டாபிஷேகம் செய்யப்பட்டபின், இரத்தினங்களாலும் மாலைகளாலும் தங்களை மிகச்சிறப்பாகக் கௌரவிப்பார். இந்த இடத்திலிருந்து, அழகிய மலைக்குகையான கிஷ்கிந்தைக்குள் செல்வதற்குத் தாங்கள் இசைய வேண்டும். முறைப்படி மன்னரை நிலைநிறுத்தி வானரர்களை மகிழ்விக்க வேண்டும்.'' (4–7)

இவ்வாறு அனுமான் சொல்லி முடித்தவுடன், பேச்சில் வல்லவரும் அறிவுமிக்கவரும் எதிரிகளைக் கொல்பவருமான இராமன், அனுமானை நோக்கிப் பின்வருமாறு கூறினார்— ''அனுமானே! அழகியவனே! தந்தையின் ஆக்ஞையைக் காப்பாற்றுகிறவன், நான். பதிநான்கு ஆண்டுக் காலம், ஒரு கிராமம் அல்லது நகரத்திற்குள் நான் புகமாட்டேன். வீர வானரோத்தமனான சுக்ரீவன், பேரழகு வாய்ந்ததும் செல்வச் செழிப்புடையதுமான குகைக்குள் சென்று, கூடிய விரைவில், மரபு முறைப்படி நாட்டின் தலைவனாக பட்டாபிஷேகம் செய்விக்கப்படட்டும்.'' இவ்வாறு அனுமானிடம் கூறிவிட்டு, உலக நடைமுறைகளை நன்றாக அறிந்திருந்த இராமன், நல்லொழுக்கமும், மகத்தான உடலாற்றலும், பராக்கிரமமும் உடையவனான சுக்ரீவனை நோக்கிப் பின்வருமாறு கூறினார்— (8–11)

''வீரனே! அங்கதன், இளவரசனாக இருப்பதற்குத் தகுந்தவன். அவனை இளவரசனாக முடிசூட்டுவாய். அவன், உன்னுடைய மூத்த சகோதரனின் மூத்த புதல்வன்; ஆற்றலில் உனக்கு நிகரானவன்; அங்கதன் உத்தம குணங்கள் உள்ளவன். நற்பண்பாளனே! மழைக்காலம் என்று சொல்லப்படும் நான்கு மாதங்கள் இப்போது தொடங்கிவிட்டன. மழையைக் கொட்டும் இந்தச் சிராவண மாதம், மழைக்காலத்தின் முதலாவது மாதம். அன்பனே! இது காரிய முயற்சிக்கு ஏற்ற சமயமில்லை. எனவே, அழகான நகருக்குப் போ. (அரசு விவகாரங்களைக் கவனி.) நான், லட்சுமணனுடன் இந்த மலையில் தங்கியிருக்கிறேன். (12–14)

நண்பனே! இந்த மலைக்குகையின் சுற்றுப்புறம் மிக அழகாகவும் விசாலமானதாகவும் இருக்கிறது; சுகமான காற்று வீசுகிறது; நீர் வற்றாமல் கிடைக்கிறது; (ஆங்காங்கு உள்ள நீர்நிலைகளில்) தாமரைகளும் ஆம்பல்களும் ஏராளமாக இருக்கின்றன. கார்த்திகை மாதம் வந்ததும், நீ, இராவண வதத்திற்கான முயற்சியைத் தொடங்கு. நண்பனே! இது நமக்குள் செய்துகொண்ட உடன்படிக்கை. நீ, இப்போது உன் அரண்மனைக்குப் போய்ச் சேர். அரசனாக முடிசூட்டிக் கொண்டு நண்பர்களை மகிழ்விப்பாயாக.'' இவ்வாறு, இராமனால் அனுமதியளிக்கப்பட்ட வானரத் தலைவன் சுக்ரீவன், அதுவரையில் வாலியினால் ஆட்சி செய்யப்பட்டு வந்த அழகிய பட்டணமான கிஷ்கிந்தைக்குள் பிரவேசித்தான். (15–17)

நகரத்திற்குள் நுழைந்த வானர மன்னனான அவனை ஆயிரக்கணக்கான வானரர்கள் வணங்கி வரவேற்று நாற்புறமும் சூழ்ந்து கொண்டார்கள். வானரக் கூட்டங்களின் அரசனான அவனைக் குடிமக்கள் அனைவரும் நிறைவான மனத்துடன், தலை தரையில் படும்படியாக வீழ்ந்து வணங்கினார்கள். வீரம் மிக்கவனும் மகாபலம் பொருந்தியவனுமான சுக்ரீவன், மக்கள் எல்லோரையும் எழுப்பி, அவரவருக்குத் தக்கவாறு சில வார்த்தைகள் பேசிவிட்டு, தமையனுடைய அழகான அந்தப்புரத்திற்குள் நுழைந்தான். உள்ளே நுழைந்து, விரைவில் வெளியே வந்த வானரக் காளையான சுக்ரீவனுக்கு, தேவர்கள் இந்திரனுக்குச் செய்தது போல, நண்பர்கள் பட்டாபிஷேகம் செய்வித்தார்கள். (18–21)

தங்க வேலைப்பாடுகள் கொண்ட வெண்கொற்றக் குடை, இரண்டு வெண்சாமரங்கள், அழகான தங்கத்தடிகள் ஆகியவைகளை அவனுக்காகக் கொண்டு வந்தார்கள். பலவகை இரத்தினங்கள், விதைகள், மூலிகைகள், பாலுள்ள மரங்களின் முளைகள், மலர்கள், வெண்மையான ஆடைகள், வெண்ணிற உடற்பூச்சு, மணமிக்க மாலைகள், நிலத்தாமரை, நல்மணங்கமழும் சந்தன வகைகள், மஞ்சள் கலந்த அட்சதை, ஞாழல் கொடி, தேன், நெய், தயிர், புலித்தோல், பன்றித் தோலால் செய்யப்பட்ட காலணிகள், சமாலம்பனம் என்ற அங்கராகம் (உடற்பூச்சு), கோரோசனம், மனச்சிலை (என்னும் தாது) முதலியவற்றைக் கொண்டு வந்தார்கள். இவற்றுடன் மகிழ்ச்சியுடன் விளங்கும் பேரழகிகளான கன்னிப் பெண்கள் பதினாறு பேர்கள் இருந்தார்கள். (22–26)

பின்னர் அவர்கள், அந்த சந்தர்ப்பத்திற்கும் அதற்கான விதிமுறைப்படியும் இரத்தினங்கள், ஆடைகள், உணவு வகைகள் ஆகியவற்றால் அந்தணோத்தமர்களைத் திருப்தி செய்தார்கள். மந்திரம் அறிந்த பெரியோர்கள் தருப்பைகளைப் பரப்பி, வேள்விக்குண்டத்தில் சுவாலைவிட்டு எரியும் அக்னியில், மந்திரங்களினால் புனிதப்படுத்தப்பட்ட அவியினால் ஹோமம் செய்தார்கள். அடுத்து, பொன்னாலான ஆசனத்தில், சிறந்த விரிப்பு போடப்பட்டதும், கோவில் கோபுரம் போன்று அழகாக விளங்குவதும், பலவகையான மாலைகளால் கவினுறக் காட்சியளிப்பதுமான அரியணையில் பற்பல மங்கள மந்திரங்களை ஜபித்து, வானரோத்தமனான சுக்ரீவனைக் கிழக்கு நோக்கி வீற்றிருக்கச் செய்தார்கள்; எல்லாப் புண்ணியத் தலங்களிலிருந்தும், நதி–நதங்களிலிருந்தும், எல்லா சமுத்திரங்களிலிருந்தும் தூய–தெள்ளிய நீரைப் பொற்குடங்களில் வானர வீரர்கள் கொண்டு வந்தார்கள்.

பவித்திரமான கவயம் என்ற மாட்டுக் கொம்பினாலும், பொற்கலசங்களாலும், அறநூல்களில் சொல்லப்பட்ட முறைப்படியும், மகரிஷிகளால் (ஸ்ம்ருதிகளில்) கூறப்பட்டபடியும், தூயதும் மணம் கமழ்வதுமான தீர்த்தத்தால் கஜன், கவாக்ஷன், கவயன், சரபன், கந்தமாதனன், மைந்தன், த்விவிதன், அனுமான், ஜாம்பவான், நளன் ஆகிய வானரோத்தமர்கள், ஆயிரம் கண்களுடைய இந்திரனுக்கு வசுக்கள் செய்ததைப் போல பட்டாபிஷேகம் செய்தார்கள். (27–33)

சுக்ரீவனுக்கு பட்டாபிஷேகம் நடந்து முடிந்தவுடன், அங்கு கூடியிருந்த லட்சக்கணக்கான பெருமைமிக்க வானரோத்தமர்கள் எல்லோரும் மிகவும் மகிழ்ச்சியுடன் ஆரவாரம் செய்தார்கள். இராமன் கூறியதற்கிணங்க வானரோத்தமனான சுக்ரீவன், அங்கதனைப் பாசத்துடன் கட்டியணைத்து இளவரசுப் பட்டம் சூட்டினான். அங்கதன், இளவரசனாகப் பட்டாபிஷேகம் செய்யப்பட்டதும், விசால மனம் படைத்த மகாத்மாக்களான வானரர்கள், சுக்ரீவனைப் பார்த்து, 'நன்று, நன்று செய்தாய்' என்று கூறி வாயாரப் புகழ்ந்தார்கள். இவ்விதம், சுக்ரீவனுக்கும் அங்கதனுக்கும் பட்டாபிஷேகம் நடந்து முடிந்ததும், எல்லா வானரர்களும் மிகவும் திருப்தியடைந்து மகாத்மாவான இராமனையும் இலக்குவனையும் மேன்மேலும் போற்றினார்கள். (34–37)

மலைக்குகையில் அமைந்திருந்த கிஷ்கிந்தா நகரம், மகிழ்ச்சிக் களிப்புடன் விளங்கும் மக்கள் நிறைந்ததாகவும், பாவட்டாக்கள்–கொடிகள் கட்டப்பட்டு சோபையுடனும் மிளிர்ந்தது. வானரப் படையின் தலைவனாகி (மன்னனாகி) விட்டவனும் மாவீரனுமான சுக்ரீவன், நடந்து முடிந்த

பட்டாபிஷேகச் செய்தியை, மகாத்மாவான இராமனுக்குத் தெரியப்படுத்தினான். இந்திரன் (தேவ லோகத்தையும் இந்திராணியையும், எதிரிகளை அழித்து ஒழித்த பின்னர் மீண்டும்) அடைந்ததைப் போல, ருமையையும் வானர நாட்டையும் சுக்ரீவன் திரும்பவும் அடைந்தான். (38,39)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
இருபத்தாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்தேழு

பிரஸ்ரவணமலை வாசம்

வானரனான சுக்ரீவன், பட்டாபிஷேகம் செய்யப்பெற்று, (அந்தச் செய்தியை, நகரத்திற்கு வெளியே இருந்த இராமனிடம் நேரில் தெரிவித்து, பின்னர்) கிஷ்கிந்தை குகைக்குள் போய்ச் சேர்ந்த பிறகு, தம்பியோடுகூட இராமன், பிரஸ்ரவணம் என்ற மலையைச் சென்றடைந்தார். அந்த மலையில், புலிகள் மற்றும் மான்களின் சப்தம் எதிரொலித்துக் கொண்டிருந்தது; பயங்கரமாகக் கர்ஜிக்கும் சிங்கங்கள் இருந்தன; பலவகையான புதர்களாலும் கொடிகளாலும் மூடப்பட்டிருந்தது; அநேக மரங்கள் வளர்ந்திருந்தன; கரடிகள், வானரங்கள், கோபுச்சம் என்ற வகை குரங்குகள், பூனைகள் வசித்துக் கொண்டிருந்தன; அடர்ந்து, செழித்து, இருள் சூழ்ந்திருந்ததால் மேகங்களின் கூட்டம் போல் காட்சி தந்தது; எல்லாக் காலத்திலும் தூய நீருள்ள நீர்நிலைகள் இருந்தன. (1–3)

அந்த மலையின் உச்சியில், பெரியதும் விசாலமானதுமான ஒரு குகை இருந்தது. இலக்குவனோடுகூட வசிப்பதற்கு, அந்தக் குகையை இராமன் தேர்ந்தெடுத்தார். மாசற்றவரும் எப்போதும் அமைதியாக இருப்பவரும் ரகுநந்தனருமான இராமன், (மழைக்காலம் முடிந்ததும் இராவண வதம் பற்றிச் சிந்திக்கலாம் – என்றதான) சுக்ரீவனுடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டு, வெற்றிச்செல்வியுடன் திகழ்பவனும் விநயமுள்ளவனுமான லட்சுமணனைப் பார்த்து, அந்தச் சமயத்திற்கேற்ற உயர்ந்த சொற்களைக் கூறினார்— (4,5)

"லட்சுமணா! இந்த மலைக்குகை அழகாகவும், விசாலமாகவும், காற்றோட்டம் உள்ளதாகவும் இருக்கிறது. மழைக்காலம் முடியும்வரை இந்தக் குகையில் தங்கியிருப்போம். மன்னர் மைந்தனே! இந்த மலைச்சிகரம் அழகாகவும் உயரமாகவும் இருக்கிறது. வெண்மையான, கருமையான, செவ்வண்ணமான பாறைகளால் பேரழகுடன் திகழ்கிறது. பலவகையான தாதுக்கள் நிறைந்திருக்கின்றன; குகைகள்–அருவிகள் இருக்கின்றன; பலவகையான மரங்களின் தோப்புகளும் அழகான பலவிதக் கொடிகளும் சூழ்ந்திருக்கின்றன; பலவகையான பறவைகள் குரலெழுப்பிக் கொண்டிருக்கின்றன; மயில்களின் அகவல் ஒலி நிறைந்திருக்கிறது; மாலதி, மல்லிகைகள் புதர்களாக மண்டிக் கிடக்கின்றன; வெள்நொச்சி, குறிஞ்சி, மலர் குலுங்கும் கடம்பு, மருது, ஆச்சா போன்ற மரங்களாலும் அழகுடன் விளங்குகிறது. (6–9)

அரசகுமாரனே! மலர்ந்த தாமரை மலர்கள் நிறைந்த தாமரை ஓடை, நமது குகைக்கு அருகிலேயே இருக்கிறது. லட்சுமணா! இந்தக் குகை, வடகிழக்குப் பிரதேசத்தில் சௌகரியமாக அமைந்திருக்கிறது. இவ்விடத்தின் மேலண்டைப் பகுதி உயர்ந்தும் இருப்பதால், மழை–சூறாவளிக் காற்று போன்றவைகளிலிருந்து பாதுகாப்பு அளிப்பதாக இருக்கிறது. சுமித்திரையின் மைந்தனே! குகைக்குள் நுழையுமிடத்தில் உள்ள பாறை சமதளமாகவும் வசதியாகவும் வழவழப்பாகவும் விசாலமாகவும் தனியே அமைந்திருக்கும் அஞ்ஜனமலை போலும் இருக்கிறது. தம்பி! வடக்குத் திசையிலிருக்கும் அழகான இந்தக் கொடுமுடி, தனித்துக் கிடக்கும் அஞ்ஜனமலை போன்றும், மேலெழும்பி நிற்கும் மேகத்தைப் போலவும் இருப்பதைப் பார். (10–13)

அதே போல், தென்திசையில் இருக்கும் மலைச்சிகரம் வெண்முகில் போலும் திருக்கயிலாய மலையைப் போன்று பலவகை தாதுக்களால் பேரழகுடன் விளங்குகிறது. குகையின் எதிரே, சேறு–சகதி இல்லாமல் தெளிந்த நீருடன் கிழக்கு நோக்கி ஓடும் இந்த நதி, திரிகூடமலையில் பாயும் மந்தாகினி ஆற்றைப் போலிருக்கிறது. அந்த நதியின் கரைகளில் சம்பகம், திலகம், தாழை, தமாலம், அதிமுக்தம், பத்மகம், சரளம், அழிஞ்சில், வானீரம், திமிசம், வகுளம், கேதகம், தவனம், ஹிந்தாளம், திரிடம், கடம்பம், வேத்திரம், கிருதமாலம் முதலிய மலர்கள் பூத்த செடி–கொடிகளாலும், கரைகளில் ஆங்காங்கே வளர்ந்துள்ள மரங்களாலும் புத்தாடை–அணிகலன்கள் அணிந்து அழகாக விளங்கும் பெண்மணி போல் கவர்ச்சியாய் விளங்குகிறது. (14–18)

நூற்றுக்கணக்கான பறவைகளின் கூட்டங்கள் எழுப்பும் ஒலிகள் எதிரொலிக்கின்றன; பரஸ்பரம் பேரன்பு கொண்ட சக்ரவாகங்கள் இங்கே வசிப்பதால், இந்த இடத்தின் சோபை பெருகுகிறது. அன்னங்கள், ஸாரஸங்கள் வசிப்பதாலும், மிக அழகாக அமைந்த மணற்திட்டுகளாலும் இந்த நதி, பல்வகை இரத்தின ஆபரணங்கள் அணிந்து புன்னகையுடன் விளங்கும் பெண்மணி போல் விளங்குகிறது. சில இடங்களில் கருநெய்தல், சில இடங்களில் செங்கழுநீர், சில இடங்களில் அழகிய வெள்ளை ஆம்பல் மொட்டுக்களும் கண்ணைக் கவர்கின்றன. (19–21)

தம்பி! இந்த நதியில் நூற்றுக்கணக்கான நீர்ப்பறவைகள் வசிக்கின்றன. கரைகளில் மயில்களும் அன்றில்களும் குரல் கொடுக்கின்றன. பற்பல முனிவர்களும் இந்த ஆற்றுக்கு வந்து போவதால், இந்த இடம் ரமணீயமாக இருக்கின்றது. சந்தன மரங்கள் நேர்வரிசைபடி வரிசையாக வளர்க்கப்பட்டிருப்பதைப் போலிருக்கின்றன. மருத மரங்கள் சமமாக இருக்கும்படி, மனத்தால் சங்கல்பிக்கப்பட்டதைப் போன்றிருப்பதைப் பார்! எதிரிகளை அடக்குபவனே! ஆகா! இந்த இடத்தின் பேரழகை என்ன சொல்லி வருணிக்க முடியும்! லட்சுமணா! இந்த இடத்தில் இடையூறுகள் இல்லாமல் சந்தோஷமாக வசிப்போம். (22–24)

அரசகுமாரா! அழகான காடுகள் அடர்ந்ததும் அழகானதுமான சுக்ரீவன் வசிக்கும் பட்டணமான கிஷ்கிந்தையும் அருகிலேயே இருக்கிறது. வெற்றி பெறும் வீரர்களில் தலையாயவனே! மிருதங்க வாத்தியத்தின் ஓசையோடுகூட, கர்ஜனை செய்கின்ற வானரர்களின் பாட்டும், பிற இசைக்கருவிகளின் ஒலியும் கேட்கப்படுகிறது. வானரோத்தமனான சுக்ரீவன், மனைவியையும் அரசாட்சியையும் எல்லையில்லாத செல்வத்தையும் அடைந்துவிட்டபடியால், நண்பர்களோடுகூட வெற்றி விழா கொண்டாடி மகிழ்கிறான் என்பதில் ஐயமில்லை.'' இவ்வாறு சொல்லிவிட்டு, அநேக குகைகளும் பூஞ்சோலைகளும் அழகாக விளங்கிய அந்தப் பிரஸ்ரவணமலையில் இலக்குவனோடுகூட வசிக்கத் தொடங்கினார். (25–28)

அந்த மலையில் சுகமாக வசிப்பதற்குத் தேவையான எல்லாப் பொருள்களும் கிடைத்தன. ஆனால், உயிரைக் காட்டிலும் மேலான மனைவி அபகரித்துச் செல்லப்பட்டுவிட்டதை எண்ணித் துயரப்பட்டுக் கொண்டிருந்ததால், அந்த இடத்தில் இராமன் சிறிதளவுகூட சந்தோஷத்தை அனுபவிக்கவில்லை. இரவு நேரங்களில் படுக்கையில் படுத்துக் கொண்டாலும், உதயகிரியில் உதிக்கும் நிலவைப் பார்த்தவுடன் (சீதையின் முகம் நினைவுக்கு வரவே) உறக்கம் அவரை அண்டவில்லை. அதனால் ஏற்பட்ட சோகத்தால், கண்களில் நீர் பெருக, உணர்விழந்து, எப்போதும் துக்கத்தில் மூழ்கிப் பரிதவிக்கும் இராமனைப் பார்த்து, அவரைப் போலவே சோகத்தில் ஆழ்ந்திருந்த லட்சுமணன் சமாதானப்படுத்தும் வகையில் கூறினான்— (29–31)

''வீரரே! போதும். தாங்கள் மனச்சஞ்சலத்தை அடைந்து துயரப்படக் கூடாது. மனத்தில் துயரத்தைச் சுமந்து கொண்டிருப்பவனுக்கு, அவனுடைய விருப்பங்கள் எல்லாம் நிறைவேறாமல் போகின்றன என்பது தாங்கள் அறிந்ததே. இராமா! தாங்கள் தளராத முயற்சியுடையவர்; தெய்வத்திடம் உறுதியான நம்பிக்கை கொண்டவர்; சுருதி–ஸ்ம்ருதி வாக்கியங்களில் பெருமதிப்பு வைத்திருப்பவர்; அறநெறி தவறாதவர்; வினைத்திறன் உடையவர்.

தாங்கள் துயரத்தில் ஈடுபட்டு, அடுத்து நடக்க வேண்டிய செயல்களைப் பற்றிச் சிந்திக்காமலிருந்தால், வீரத்தைக் காட்டுவதற்கான இடமாகிய போர்க்களத்தில் மாயாஜாலங்கள் காட்டும் அரக்கனை வெற்றிகொள்ளவே முடியாது. துயரத்தை வேரோடு களைந்தெறியுங்கள்; உறுதியாகச் செயலில் ஈடுபடுங்கள். பின்னர், உற்றார்–உறவினர்களோடுகூட அந்த அரக்கனை அடியோடு ஒழித்துக் கட்டுவீர்கள். (32–35)

காகுத்தரே! கடல்கள், காடுகள், மலைகள் உள்ளிட்ட இம்மண்ணுலகையே தங்களால் புரட்டிப் போட முடியும் என்னும்போது இந்த இராவணன் எம்மாத்திரம்! இப்போது மழைக்காலம் தொடங்கிவிட்டது. சரத்காலத்தை எதிர்ப்பார்த்துக் கொண்டிருங்கள். கோடை வந்ததும், நாட்டு மக்களோடும் கூட்டத்தாரோடும் இராவணனைத் தாங்கள் வதைப்பீர்கள். வேள்விக் குண்டத்தில், நீறுபூத்திருக்கும் நெருப்பை, ஹோம காலத்தில் நெய் ஆகுதிகளால் சுவாலைவிட்டு எரியச் செய்வதைப் போல, தங்களிடம் மறைந்திருக்கும் பராக்கிரமத்தை, நான் நினைவூட்டுகிறேன். அவ்வளவுதான். (நான், தங்களுக்கு அறிவுரை கூறுவதாக நினைத்துவிடக் கூடாது.)'' (36–38)

இராமன், மனத்திற்கு ஆறுதல் தரக்கூடியதும் நம்பிக்கையூட்டுவதுமான லட்சுமணனின் சொற்களை உன்னிப்பாகக் கேட்டு, மனமாரப் பாராட்டி (இதயத்தில் ஏற்றுக் கொண்டு), ஆழ்ந்த நட்பைக் காட்டுவதும் இனிமையானதுமான பின்வரும் பதிலைக் கூறினார்— ''லட்சுமணா! மிகவும் பாசமுடைய, நெருக்கமான நட்புடைய, நல்லதையே கோருகிற, வீண்போகாத பராக்கிரமத்தையுடைய உன்னால் எது சொல்லத்தக்கதோ, அதுவே சொல்லப்பட்டது. எல்லாச் செயல்களிலும் கேடு விளைவிக்கின்ற இந்த சோகத்தை, நான் முற்றிலும் ஒழித்துவிட்டேன். பேராற்றலைக் காட்டுவதற்கு இடையூறாக இல்லாத மனோபலத்தை உண்டாக்கிப் பெருக்கிக் கொள்கிறேன். (39–41)

நான், உன் சொற்களை ஏற்றுக் கொள்கிறேன். சுக்ரீவனுடையதும் நதிகளுடையதுமான உதவியை எதிர்பார்த்துக் கொண்டு, சரத்காலம் வரும்வரை காத்துக் கொண்டிருக்கிறேன். (சுக்ரீவன் நீண்ட காலம் துன்பத்தை அனுபவித்தவனாதலால், இப்போது சிறிதுகாலம் இன்பமாக இருக்கவேண்டும். நதிகளில் வெள்ளப்பெருக்கு இருந்தால் படைகளுடன் கடந்து செல்வது மிகவும் சிரமம். நதிகளில் தண்ணீர் அளவு குறைய வேண்டும்.) ஒரு வீரன், இன்னொருவரிடமிருந்து பெற்ற உபகாரத்திற்கு நன்றி தெரிவித்து கைம்மாறு செய்ய வேண்டும். உதவி பெற்றுக் கொண்டவன், அதை மறந்து பிரதி உபகாரம் செய்யத் தவறினால், பேராற்றல் படைத்த சான்றோர்களின் மனத்தைப் புண்படுத்துகிறான்.'' (42,43)

இராமனுடைய சொற்கள், தர்க்கரீதியாகச் சரியாக இருப்பதை நன்றாக ஆலோசித்து உணர்ந்து, லட்சுமணன் அவரைக் கொண்டாடி, இரு கைகளையும் குவித்து வணங்கி, கண்களுக்கு நல்விருந்தாகத் தோற்றமளிக்கும் இராமனைப் பார்த்து, தன்னுடைய நல்ல நோக்கத்தை வெளிப்படுத்திப் பின்வருமாறு கூறினான்— ''மாமனிதரே! தாங்கள் கூறியபடி, வானர மன்னன் சுக்ரீவன், கூடிய விரைவில் தங்கள் எதிர்பார்ப்பை முடித்துத் தருவான். தாங்கள் எதிரியை ஒழித்துக் கட்டுவதில் உறுதியாக இருங்கள். இந்த மழைக்காலம் முடியும் வரை பொறுமையாக இருக்க வேண்டும்; சீற்றத்தை அடக்கிக் கொள்ளுங்கள்; சரத்காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்போம். என்னுடன் இருந்துகொண்டு நான்கு மாதங்களைப் பொறுத்துக் கொள்ளுங்கள். சிங்கங்கள் உலாவும் இந்த மலையில், எதிரியை மாய்ப்பதில் மனத்தைச் செலுத்தியவராகத் துடிப்புடன் வசித்துக் கொண்டிருங்கள்.'' (44–46)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
இருபத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்தெட்டு

மழைக்கால வருணனை

வாலியைக் கொன்று, பின்னர் சுக்ரீவனுக்குப் பட்டாபிஷேகம் செய்வித்து, மால்யவான் என்னும் பெயருடைய பிரஸ்ரவண மலையின் தாழ்வரையில் வசித்துக் கொண்டிருக்கும்போது, (ஒரு நாள்) இராமன், இலக்குவனைப் பார்த்துக் கூறினார்— (1)

''மழையைப் பொழியும் காலம் இப்போது வந்துவிட்டது. மலைகளைப் போன்ற மேகங்களால் ஆகாயம் சூழப்பட்டிருப்பதைப் பார்! வானம் (என்ற மங்கை), சூரியனின் செங்கதிர்கள் மூலமாகப் பெருங்கடல்களின் சாரத்தைக் குடித்து, ஒன்பது மாதங்கள் கர்ப்பம் போல் தன்னிடமே வைத்திருந்து, தூயதான தண்ணீர் என்ற அமுதத்தைப் பொழிகிறது. அடுக்கடுக்கான மேகங்கள் என்னும் படிக்கட்டுகள் மூலம் வான் உச்சிக்கே ஏறிச் சென்று, வெட்பாலை மற்றும் மருது மலர்களால் சூரியனை அலங்கரிக்க இயலும் போல் தோன்றுகிறது. (2–4)

(வானத்தில்) சந்த்யாகாலத்தின் செவ்வொளி படர்ந்து, ஓரங்களில் மிக வெண்மையான, வழவழப்பான முகிற்கூட்டங்கள் சூழ்ந்து நிற்பதைப் பார்த்தால், ரத்தம் பெருகும் காயத்தைத் துணிக்கிழிசல்களால் கட்டுப்போட்டது போலிருக்கிறது. சந்த்யாகாலம் என்னும் செஞ்சந்தனத்தைப் பூசிக்கொண்டும், மெல்ல வீசும் தென்றல் பெருமூச்சை விட்டுக்கொண்டும் வெண்மேகங்களால் சூழப்பெற்ற ஆகாயம் (என்ற புருஷன், தன் விரகதாபத்தைப் போக்கிக் கொள்ள) வெளிறிய சரீரமுடைய காமத்தால் தவிப்பவன் போல் காணப்படுகிறது. (5,6)

என்னைப் பிரிந்த சோகத்தால் சீதை கண்ணீர் விடுகிறாள். (அதேபோல, அவளுடைய தாயாரான) இந்த பூமி, இத்தனை காலம் வெப்பத்தை ஏற்றுப் பரிதவித்து, (இப்போது மழைக்காலம் வந்து) முதல் மழை பெய்ததும், (தன்னுள் அடக்கி வைத்திருந்த வெப்பத்தை) ஆவி என்னும் வடிவில் கண்ணீர் விடுகிறது. மேகத்தின் வயிற்றிலிருந்து வெளிப்படும் காற்று நாற்றிசையிலிருந்தும் வீசுகிறது. செங்கழுநீர் பூப்போல சுகமான குளிர்ச்சியுடையதாய், தாழம்பூவின் மணம் கமழ்வதாக இருக்கிறது. அந்தக் காற்றைக் கைகளில் ஏந்திக் குடிக்கலாம் போலிருக்கிறது. (7,8)

மலர்ந்த பூக்களையுடைய மருது மரங்களைக் கொண்டதும், தாழம்பூக்களால் மிகவும் வாசனையுடன் விளங்குவதுமான இந்த மலை, எதிரிகளை அழித்துப் பின் பட்டாபிஷேகம் செய்து கொண்ட சுக்ரீவனைப் போல, நீர்த்தாரைகளால் அபிஷேகம் செய்யப்படுகிறது. நிறங்கொண்ட கருமுகில்களாகிய கருமான்தோல்களைத் தரித்துக் கொண்டு, மழைத்தாரைகள் என்ற முப்புரியை அணிந்து கொண்டு, காற்று நிரம்பிய குகைகளையுடைய இந்த மலைகள், வேதமோதும் பிரும்மசாரிகளைப் போலிருக்கின்றன. (9,10)

பொன்னாலான கசைகள் போலிருக்கும் மின்னல்களால் அடிக்கப்பட்டதால், உள்வேதனையுடன் இருக்கும் வானம், மேகமுழக்கத்தை வெளியிடுகிறது. (தன் வேதனையை வெளிப்படுத்துகிறது.) கருமேகங்களிடையே தோன்றித் துடிக்கும் மின்னல், இராவணனது மடியில் துடித்துக் கொண்டிருக்கும் கற்புக்கரசியான சீதையைப் போல் எனக்குத் தோன்றுகிறது. நீருண்ட மேகங்களால் ஆகாயம் மறைக்கப்பட்டிருப்பதால், கிரகங்களும் சந்திரனும் கண்ணுக்குப் புலப்படவில்லை. இருள் சூழ்ந்திருப்பதால் திக்குத்திசைகள் தெரியவில்லை. இந்த நேரம், தன் மனத்திற்குகந்தவளோடு சேரத் துடிக்கும் காமுகர்களுக்கு மிகவும் துணை செய்வதாக இருக்கிறது. (11–13)

லட்சுமணா! மலைத்தாழ்வரைகளில், சில இடங்களில் மழைக்காலத்தின் வருகையினால் மிகவும் மகிழ்ந்திருப்பது போலவும், வேறு சில இடங்களில் முதல் மழை கிளப்பிவிட்ட நீராவி

நிறைந்ததும், சில இடங்களில் நன்றாக மலர்ந்து விளங்கும் வெம்பாலை மரங்களையும் பார். (இந்தக் காட்சி) சோகத்தால் (விரகத்தால்) தவித்துக் கொண்டிருக்கும் என்னுடைய காம உணர்வுகளைத் தூண்டிவிடுவதைப் போலிருக்கிறது. பூமியின் துகள்கள் அடங்கிவிட்டன; காற்று குளிர்ச்சியாக வீசுகிறது; வெளிநாட்டின் மேல் படையெடுக்க விரும்பும் மன்னர்களின் பிரயாணம் நின்றுவிட்டது; தூரதேசங்களுக்குச் சென்றிருக்கும் மனிதர்கள் தங்கள் நாடுகளுக்குச் செல்கிறார்கள். (14,15)

மானஸரோவரில் வசிக்க விரும்பிய சக்ரவாகங்கள், தத்தம் பேடைகளுடன் இப்போது புறப்பட்டுவிட்டன. ஓயாமல் பெய்யும் மழையினால் சாலைகள் சேறும்–சகதியுமாகிவிட்டதால் தேர் முதலிய வாகனங்கள் ஓடவில்லை. ஆகாயத்தில் மேகச் சிதறல்கள் பரவியிருக்கின்றன. அவை இல்லாத இடங்களில் ஆகாயம் பிரகாசமாகவும், மேகத்தால் மூடப்பட்ட இடங்களில் ஒளிமங்கியும் காணப்படுகிறது. மேலும் சில இடங்களில், ஓங்கி நிற்கும் மலைகளால் மறைக்கப்பட்டு அலையில்லாத சமுத்திரம் போல் காட்சி தருகிறது. மலையில் பாயும் நதிகள், ஆச்சா–கடம்ப மலர்கள் தூவப்பெற்றும் மலைத்தாதுக்களால் சிவந்தும் மயில்களின் அகவல் சப்தத்திற்கு இணையான ஒலியுடனும் புதிதான மழை நீரை மிக வேகமாகச் சுமந்து செல்கின்றன. (16–18)

கருமையான வண்டுகள் போன்ற இனிய நாவற்பழங்களை மக்கள் ஏராளமாக உண்கிறார்கள். பற்பல நிறமுடைய கனிந்த மாம்பழங்கள் காற்றினால் அடிக்கப்பட்டு பூமியில் விழுகின்றன. மேகங்கள், மலைச்சிகரங்கள் போல் விளங்குகின்றன. அவைகளில், மின்னல் என்னும் பதாகைகள் ஒளிவீசுகின்றன. வரிசை வரிசையாகச் செல்லும் கொக்குகள், வெண்மையான மாலைபோல் அமைந்திருக்கின்றன. போர்க்களத்தில் மதநீர் விட்டுக் கொண்டிருக்கும் பேராற்றல் மிக்க யானைகளின் கர்ஜனையைப் போல் இடியோசையை முழக்குகின்றன. (19,20)

மழைநீரால், காட்டில் புல்–புதர்கள் செழிப்பாக வளர்ந்திருக்கின்றன; மயில்கள் உற்சாகத்துடன் நடனமாடுகின்றன; மேகங்கள் இடைவிடாமல் மழையைப் பொழிகின்றன. பார், இந்த பின்மாலைப் பொழுது எவ்வளவு அழகாக இருக்கிறது! கொக்குகளின் வரிசைகளால் அழகாக விளங்கும் மேகங்கள், நிறைய தண்ணீரைச் சுமந்து கொண்டு, (நடுவில் களைத்துப் போனாற்போல) உயர்வான மலைமுகடுகளில் தங்கித் தங்கி ஓய்வெடுத்துக் கொண்டு, மறுபடியும் இடியோசை எழுப்பிக் கொண்டு செல்கின்றன. (21,22)

கொக்குகளின் வரிசை, (கர்ப்பம் தரிக்கும் விருப்பத்துடன்) மேகத்தினிடம் அளவற்ற அன்பு கொண்டு மேலே மேலே பறந்து செல்வதைப் பார்த்தால், அழகான வெண்டாமரை மாலை காற்றால் அசைக்கப்பட்டு, ஆகாயத்தில் கட்டித் தொங்க விடப்பட்டதைப் போல் இருக்கின்றது. சின்னஞ்சிறிய (செந்நிறமான) இந்த்ரகோபம் என்ற பூச்சிகள், புதிதாக முளைத்த புல்தரையில் ஆங்காங்கே காணப்படுவதைப் பார்த்தால், பூமியானது அரக்குவண்ண வேலைப்பாடுகள் கொண்ட கிளிப்பச்சை சால்வையைத் தன் உடம்பில் போர்த்திக் கொண்ட ஒரு பெண் போல் இருக்கிறது. (23,24)

(மழைக்காலத்தின் தொடக்கத்தில்) நித்திராதேவி மெல்ல மெல்ல ஸ்ரீமந்நாராயணனை நெருங்குகிறாள்; ஆறு, கடலை நோக்கி வேகமாக ஓடுகிறது; மகிழ்ச்சியுடன் கூடிய கொக்கு, வானத்தை நாடிச் செல்கிறது; இளநங்கை, இன்பநுகர்ச்சியில் விருப்பங்கொண்டு தன் கணவனிடம் செல்கிறாள். வனப்பிரதேசங்கள், மயில்களின் நாட்டியத்தினால் அழகாக விளங்குகின்றன; கடம்ப மரங்கள், மலர்களாலும் கிளைகளாலும் நிறைந்திருக்கின்றன; காளைகள், பசுக்களிடம் காமம் கொண்டிருக்கின்றன; பூமியானது, பச்சைப்பசேல் என்று விளங்கும் பயிர் நிலங்களாலும் அடர்த்தியான தோப்புகளாலும் கண்ணுக்கு விருந்தாக ஆகியிருக்கிறது. (25,26)

ஆறுகள் நீர்ப்பெருக்கெடுத்து ஓடுகின்றன; முகில்கள் மழையைப் பொழிகின்றன; மதயானைகள் பிளிறுகின்றன; அடர்ந்த மரத்தோப்புக்கள் அழகாக விளங்குகின்றன; நேசத்திற்குரிய

நங்கையை விட்டுப் பிரிந்திருப்பவர்கள், அவளையே நினைத்துக் கொண்டு இருக்கிறார்கள்; மயில்கள் தோகை விரித்து ஆடுகின்றன; வானரங்கள், கவலையில்லாமல் நிம்மதியாக இருக்கின்றன; பலம் மிகுந்த யானைகள், காட்டு நீர்வீழ்ச்சிகளில் தாழம்பூவின் மணத்தை நுகர்ந்து மதங்கொண்டவைகளாகி, நீர்வீழ்ச்சியின் ஓசையால் மனம் கலங்கி, மயில்களின் அகவல்களுக்கிணங்க, அவைகளுடன்கூட (மென்மையாக)ப் பிளிறுகின்றன. (27,28)

வேகமாகப் பொழியும் மழைத்தாரைகளால் தாக்கப்பட்டு, கடம்ப மரக் கிளைகளில் தொங்கிக் கொண்டு, மலர்களின் மகரந்த ரசத்தைச் சுவைத்த வண்டுகள், மனமயக்கத்தை மெல்ல விட்டுக் கொண்டிருக்கின்றன. நாவல் மரங்களின் கிளைகள், கரிப்பொடி பூசப்பட்டு மிகவும் சுவை நிறைந்த ஏராளமான பழங்களால், வண்டுக் கூட்டங்களால் மொய்க்கப்படுகின்றவை போலவே விளங்குகின்றன. மின்னல் என்னும் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு, மிகவும் உரத்த ஒலியுடன் இடி இடிக்கும் பெரிய மேகங்கள், போர்க்களத்திற்குக் கிளம்பிச் செல்லும் பெரிய யானைகளுடைய வடிவத்தை ஒத்திருக்கின்றன. (29–31)

மலை–காடுகளில் தன் இஷ்டப்படி திரியும் யானை, மேகத்தின் இடி முழக்கத்தைக் கேட்டு, அது தன் எதிரியின் கர்ஜனை என்ற சந்தேகங்கொண்டு, அதனுடன் போர் செய்ய விரும்பி, ஒலி வந்த இடத்தைக் குறி வைத்துத் திரும்பிச் சென்றது. இந்தக் காட்டுப் பகுதியின் சில இடங்களில் வண்டுக் கூட்டங்களின் ரீங்கார இசை கேட்கிறது; சில இடங்களில் மயில்கள் தோகை விரித்தாடுகின்றன; சில இடங்களில் மதங்கொண்ட யானைகள் திரிந்து கொண்டிருக்கின்றன. இந்தப் பிரதேசம், இவ்விதம் பல உணர்ச்சிகளுக்கும் இடம் கொடுப்பதாக இருக்கிறது. (32,33)

இந்தக் காட்டுப் பகுதியில் கடம்பு, ஆச்சா, மருது, நிலத்தாமரை முதலிய மரங்கள் நிறைந்திருக்கின்றன. ஆங்காங்கே புது மழையின் நீர் தேங்கியிருக்கிறது. அதனால், மயில்கள் உற்சாகத்துடன் நடனமாடுகின்றன. (இந்தச் சூழ்நிலையைப் பார்க்கும் போது) இந்த இடம் மதுபானம் செய்யும் இடம் போல் இருக்கிறது. மேகங்களுக்கு அதிபதியான இந்திரனின் விருப்பப்படி பெய்த மழையின் நீர்த்துளிகள், தொன்னை போல் குழிவான இலைகளில் முத்துக்கள் போல் தங்கியுள்ளன. பல வண்ணச் சிறகுகளைக் கொண்ட பறவைகள், மனம் பூரித்து அந்த நீர்த்துளிகளைப் பருகி, தம் தாகத்தைத் தணித்துக் கொள்கின்றன. (34,35)

காட்டில், வண்டுகளின் ரீங்காரம் என்னும் இனிய வீணையின் நாதம்; (கையால் போட வேண்டிய தாளத்தை) வாயால் தாளம் போடுவது போல் தவளைகள் எழுப்பும் ஓசை; மேகங்களின் அடக்கமான இடி முழக்கம் என்ற மிருதங்க ஒலி. ஆகா, இங்கே ஒரு பாட்டுக் கச்சேரியே தொடங்கி நடப்பது போலிருக்கிறது! காட்டில் (மயில்கள்) சில இடங்களில் ஆடுகின்றன; சில இடங்களில் அகவுகின்றன; சில இடங்களில் மரக்கிளைகளின் நுனியில் உட்கார்ந்து கேட்கின்றன – இவ்வாறு, விசாலமான தோகை என்னும் அணிகலன்களைப் பூண்ட மயில்களால் இசைக் கச்சேரி (பாட்டு–நாட்டியம்) ஆரம்பிக்கப்பட்டதைப் போலிருக்கிறது! (36,37)

மேகங்களின் முழக்கங்களால், நீண்டகால உறக்கத்திலிருந்து விழித்துக் கொண்ட, பலவகை வடிவங்களையும் நிறத்தையும் உடலமைப்பையும் கொண்ட தவளைகள், புதிதாகப் பெய்த மழையினால் உற்சாகமடைந்து உரத்த குரலில் சப்திக்கின்றன. ஆற்றின் வேகம் கரைகளை உடைத்துத் தள்ளுகிறது; மேலே சக்ரவாகப் பறவைகள் பறந்து வருகின்றன; ஆறுகள் (கரையோர மரங்களிலிருந்து) புதிதாக, தானாக விழுந்த மலர்–பழங்களை உணவாக எடுத்துக் கொண்டு, தன் கணவனான கடலை நோக்கி வெகுவேகமாக ஓடுகின்றன. (38,39)

காட்டுத் தீயினால் வேரோடு அழிக்கப்பட்ட மலைகள், காட்டுத் தீயினால் அடியோடு நாசம் செய்யப்பட்ட மலைகளுடன் இணைந்தாற்போல, புத்தம் புதிய நீருண்ட கருமேகங்கள், நீருண்ட பிற மேகங்களுடன் இணைந்து விளங்குகின்றன. மகிழ்ச்சிப் பெருக்கினால் கம்பீரமாகத் திரியும்

மயில்கள் அகவுகின்றன. இந்த்ரகோபப் பூச்சிகள் நிறைந்திருக்கும் இளம் புல்வெளிகள்; கடம்பு–மருது மரங்களின் மலர்களின் நறுமணம் – இவற்றோடு அழகுற விளங்கும் காடுகளில் அநேக யானைகள் சுற்றித் திரிகின்றன. (40,41)

வண்டுகள், புதிய மழைத்தாரைகளால் மகரந்தத்தை இழந்த தாமரைப் பூக்களை விட்டுவிட்டு, மகரந்த தாதுக்களையுடைய புதிய கடம்ப மலர்களில் மகிழ்ச்சியோடு வீழ்கின்றன. பேராற்றல் படைத்த யானைகள் மதம் கொண்டிருக்கின்றன; காளைகள் களிப்புடன் இருக்கின்றன; சிங்கங்கள் காடுகளில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கின்றன; மலைகள் அழகாக விளங்குகின்றன; மன்னர்கள் (மழைக்காலத்தில், படையெடுப்பு பற்றிய சிந்தனையில்லாமல், அரண்மனையிலேயே) வாளாவிருக்கிறார்கள். தேவேந்திரன் மேகங்களோடு விளையாடிப் பொழுது போக்குகிறான். (42,43)

ஏராளமான நீருண்ட மேகக்கூட்டங்கள் ஆகாயத்தில் தவழ்ந்தபடி, பேரிரைச்சலிடும் சமுத்திரத்தின் அலையோசை போல் முழங்கிக் கொண்டு, ஆறுகள், குளங்கள், ஓடைகள், கிணறுகள் மற்றும் மண்தரை முழுவதையும் நீரால் வழியச் செய்கின்றன. வெகுவேகமாக மழை பெய்து கொண்டிருக்கிறது. காற்று, நாற்றிசையிலும் வேகமாக வீசுகிறது. நதிகளின் நீர்ப்பெருக்கு கரைகளைத் தகர்த்து, குறுக்கே குவிப்பதால் (ஆங்காங்கே மணல் மேடிட்டு) நதியின் போக்கு மாறிப் போகிறது. (44,45)

மானிடர்கள், கலச நீரினால் மன்னர்களுக்கு அபிஷேகம் செய்து வைக்கிறார்கள். அதேபோல, இந்திரனால் கொடுக்கப்பட்டதும் வாயுவினால் கொண்டு வரப்பட்டதுமான மேகம் என்ற வடிவம் கொண்ட கலச நீரான மழையினால் அபிஷேகம் செய்யப்பட்ட மலைகள், தத்தம் தூய வடிவத்தையும் பேரழகையும் தெளிவாகக் காட்டுவது போலிருக்கின்றன. மேகக் கூட்டங்களினால் ஆகாயம் முழுவதும் மூடப்பட்டிருக்கிறது. அதனால், இரவில் தாரகைகளும், பகலில் சூரியனும் தென்படுவதில்லை. புதிதாக, ஏராளமான தண்ணீரைப் பெற்ற பூமி மிகவும் திருப்தி அடைந்திருக்கிறது. (46,47)

இருளால் திசைகள் மூடப்பட்டிருப்பதால், திக்கு–திசை தெளிவாகத் தெரியவில்லை. மழைப்பொழிவினால் நீராட்டப்பட்ட மலைச்சிகரங்கள், அநேக அருவிகளின் பெருக்கினால், முத்துமாலைகள் அணிந்தாற்போல பேரழகுடன் விளங்குகின்றன. மலைப்பாறைகளில் மோதுண்டு, வேகம் தடைப்பட்ட, சிறந்த மலைகளின் நீரருவிகள், மயில்களின் அகவல் எதிரொலிக்கும் குகைகளுக்குள் நுழைந்து, அறுந்து, சிதறிப்போன முத்துமாலைகள் போல் காட்சி தருகின்றன. (48,49)

மிக வேகமாகச் செல்பவைகளும், ஏராளமானவைகளும், மலைமுகடுகளின் அடித்தளங்களைக் கழுவித் தூய்மையாக்கி இருப்பவைகளும், பார்ப்பதற்கு முத்துமாலைகள் போல் விளங்குபவை களுமான நீரருவிகளைப் பெரிய பெரிய குகைகள் தங்கள் மடியில் தாங்கிக் கொண்டிருக்கின்றன. (குகைகள், நீரருவிகளின் தண்ணீரால் நிரம்பிவிட்டன.) இன்பக்கேளிக்கையின் போது, அமர மங்கையர்களின் முத்துமாலைகள் அங்கங்களின் உரசலினால் அறுந்து போவது போல், மழைத்தாரைகள் எல்லாப் பக்கங்களிலும் எல்லாத் திசைகளிலும் சிதறி விழுகின்றன. (50,51)

பறவைகள் தத்தம் கூடுகளில் பதுங்குகின்றன; தாமரைகள் கூம்பிப் போயிருக்கின்றன; முல்லைப் பூக்கள் மலர்கின்றன. இந்தக் காரணங்களால், 'சூரியன் அஸ்தமித்து விட்டான்' என்பதை அறிய முடிகிறது. (கனத்த மேகக் கூட்டங்கள் வானமெங்கும் சூழ்ந்திருப்பதால், காலப்பொழுதை அறிந்து கொள்ள முடியவில்லை.) மன்னர்களின் அந்நிய நாட்டுப் படையெடுப்பு நின்று போய்விட்டது; யுத்தத்திற்காகப் புறப்பட்டுச் சென்ற படைகள் திரும்பி வந்துவிட்டன. மன்னர்கள் மனத்திலிருந்த பகைமையும், போக்குவரத்திற்கான நெடுஞ்சாலைகளும் (பெருமழை காரணமாக,) கண்ணுக்குப் புலனாகாமல் அடங்கிக் கிடக்கின்றன. (52,53)

வேதாத்யயனம் செய்ய விரும்பும் சாமவேத அந்தணர்கள், மறை ஓதலைத் தொடங்கும் புரட்டாசி மாதம் வந்துவிட்டது. கோசல நாட்டின் மன்னனான பரதன், (மழைக்காலத்திற்குத் தேவையான பொருள்களைச் சேகரித்து வைத்துக் கொண்டு) வெளி அலுவல்களை முடித்து, அரண்மனைக்குள் இருந்து கொண்டு, கடந்த ஆடி மாதப் பௌர்ணமியில் விரத தீட்சை ஏற்றிருப்பான். நான், காட்டுக்குப் புறப்பட்டபோது, அயோத்தி மக்களின் துக்கமயமான கூக்குரல் எவ்வாறு பெருகிக் கொண்டே போயிற்றோ, அவ்வாறே, இப்போது சரயூ நதியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, நதியின் வேகம் வளர்ந்து கொண்டே இருக்கும். (54–56)

இந்த மாரிக்கால மாதங்கள், பல்வகையான குணங்களோடு விளங்குகின்றன. சுக்ரீவன், தன் பகைவனை வென்று, விசாலமான ராஜ்யத்தைப் பெற்று, மனைவியோடுகூட சுகத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறான். லட்சுமணா! ஆனால், என் நிலைமையைப் பார்! மாபெரும் நாட்டை இழந்தேன்; மனைவியோ கவர்ந்து செல்லப்பட்டாள். வெள்ளப் பெருக்கினால் கரைக்கப்படும் ஆற்றங்கரையைப் போல் நலிவடைந்திருக்கிறேன். அளவில்லாத சோகத்தில் நான் இருக்கிறேன். (அதை, மேலும் வளர்ப்பதைப் போல) இந்த மழைக்காலத்தைக் கழிப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆற்றல் மிக்க எதிரியான இராவணனை வெல்ல முடியாதென தோன்றுகிறது. (57–59)

(இந்த மாரிக்காலம்) பிரயாணத்திற்கு உகந்ததல்ல என்பதையும், போகும் பாதைகளும் மிகவும் மோசமாக இருக்கும் என்பதையும் கருத்தில் கொண்டே, சுக்ரீவன் வணக்கத்துடன் கேட்டபோதும், நான் அவனை அவசரப்படுத்தவில்லை. வானரனான சுக்ரீவன் நீண்ட காலமாகக் கஷ்டம் அனுபவித்தவன்; வெகுநாட்களுக்குப் பின் இப்போது மனைவியோடுகூட இருக்கிறான். என்னுடைய காரியமோ மிகப்பெரியது. (சிறு முயற்சியாலோ, சில நாட்களிலோ செய்து முடிக்கக் கூடியதல்ல.) அதனால்தான், இப்போது அவனைத் துரிதப்படுத்த, நான் விரும்பவில்லை. (60,61)

சிறிதுகாலம் இன்பமாகப் பொழுதுபோக்கிவிட்டு, ஏற்ற காலம் வந்தவுடன் அவன் தானாகவே வந்து, தன் நன்றிக்கடனைத் தீர்ப்பான் என்பதில் ஐயமில்லை. ஆகவேதான், ஆணழகனே! சுக்ரீவன் உதவி செய்வதற்கு ஏற்ற காலத்தையும், நதிகளின் நீர்மட்டம் குறையும் காலத்தையும் எதிர்பார்த்துக் கொண்டு காத்துக் கிடக்கிறேன். ஒரு வீரனுக்கு உபகாரம் செய்தால், அவன் அதற்குப் பிரதியாக நன்றி செலுத்துவான். அப்படிச் செலுத்தத் தவறினால், சான்றோர்களின் நல்மனத்தை நோகச் செய்வான். (சான்றோர்கள் அத்தகைய வஞ்சகனை நிந்திப்பார்கள்.)'' (62–64)

இவ்வாறு இராமன் கூறி முடித்ததும், லட்சுமணன் அதைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்துவிட்டு, இருகைகளையும் கூப்பியவாறு அவரைப் புகழ்ந்து, தன்நோக்கிலும் அவர் கூறியவை சரியானவையே என்பதைக் காட்டும் முறையில் பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத அழகுடைய இராமனிடம் தன் கருத்தைத் தெரிவித்தான்— ''மக்கட்தலைவரே! தாங்கள் கூறியபடி வானர மன்னன் கூடிய விரைவில் தங்கள் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பான். சரத் காலத்தின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டு, எதிரியை மாய்ப்பதில் உறுதி மேற்கொண்டு, இந்த மழைக்காலத்தைப் பொறுத்துக் கொண்டிருங்கள்.'' (65,66)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
இருபத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்தொன்பது

அனுமான், சுக்ரீவனுக்கு நினைவூட்டல்

செய்ய வேண்டிய காரியங்களில் உறுதி கொண்டவரும், செய்யத்தக்கது–செய்யத்தகாதது என்ற பாகுபாடு அறிந்தவரும், எந்த நேரத்தில் எந்த விசேஷ தருமத்தைக் கடைப்பிடிக்க

வேண்டும் என்பதைத் தெளிவாக அறிந்தவரும், பேச்சில் வல்லவரும், வாயுகுமாரருமான அனுமான், ஆகாயம் மேகமில்லாமல் தெள்ளத்தெளிவாக இருப்பதைப் பார்த்தார். வானத்தில் மேகங்களும் மின்னல்களும் இல்லை; பறவைகளின் கோலாகலமான ஒலி நிறைந்திருந்தது; (இரவு வந்ததும்) ஆகாயம் அழகிய நிலாவின் வெண்சந்தனப்பூச்சு பெற்றாற்போலிருந்தது; வானரோத்தமனும் வானர மன்னனுமாகிய சுக்ரீவனின் நோக்கம் நிறைவேறிவிட்டது;

அவனோ தருமத்தையும் தன் கடமையையும் மறந்திருக்கிறான்; தீயவர்களின் பாதையைப் பின்பற்றி வருகிறான்; (அரசுப் பணிகள், நண்பர்களுடன் கூடிப் பேசுதல் முதலியவற்றைத் தவிர்த்து) மனைவியரோடு தனித்திருப்பதில் மனத்தைச் செலுத்துகிறான்; அவன் மிக ஆவலோடு எதிர்பார்த்த காரியம் கைகூடி, அதன் பயனை அனுபவித்துக் கொண்டிருக்கிறான்; எல்லா நேரத்தையும் பெண்களோடு கழிக்கிறான். தனது அன்பு மனைவியையும் பெரிதும் விரும்பிய தாரையையும் அடைந்து, தன் மனோரதம் கைகூடப் பெற்றவனாகிவிட்டான்; மனக்கவலை ஏதும் இல்லாமல், அல்லும் பகலும் சிற்றின்பத்தில் காலங்கழிக்கிறான்; தேவலோகப் பூஞ்சோலையான நந்தவனத்தில் அப்சரப் பெண்டிர் கூட்டத்தோடு இந்திரன் இருப்பது போல் சுக்ரீவன் இன்பக்களிப்பில் மூழ்கியிருக்கிறான்.

அரசு வேலைகளை அமைச்சர்களிடம் ஒப்படைத்துவிட்டான். தனக்கு உதவி செய்த நண்பர்களை மறந்துவிட்டான். அரசாங்க விவகாரங்களைக் கவனிக்காமல் காமத்தில் மூழ்கியிருக்கும் அவனிடம் அனுமான் சென்றார். மனங்கவரும், இனிய, நியாயமான காரணங்களோடு கூடிய சொற்களால் அவனை மகிழ்வுறச் செய்தார். நற்பயனை அளிப்பதும், உண்மையானதும், சௌக்கியத்தைக் கொடுப்பதும், நட்பு–தருமம்–நற்பலன்–நியாயம் முதலியவைகளோடு கூடியதும், பிரேமை–மனோல்லாசம் நிறைந்ததும், ராஜபக்தியில் தனக்குள்ள உறுதியைக் காட்டுவதுமான பின்வரும் சொற்களைக் கூறினார்— (1–8)

''மன்னரே! ராஜ்யத்தையும் (இழந்த) புகழையும் (திரும்பப்) பெற்றுவிட்டீர்கள். பரம்பரையாக வந்த செல்வத் திருநாடு மேலும் வளர்ச்சி அடைந்திருக்கிறது. (எனினும்,) உபகாரம் செய்தவர்களுக்குப் பிரதியுபகாரம் செய்தல் என்ற கடமை எஞ்சி நிற்கிறது. தாங்கள், அதைச் செய்து முடிக்க வேண்டும். எவனொருவன், நண்பர்களுக்கு உதவி தேவைப்படும் காலத்தை உணர்ந்து, அந்த நேரத்தில் தன் நன்றியைச் செய்து காட்டுகிறானோ, அவனுடைய நாட்டிற்கு புகழ், பராக்கிரமம் முதலியன பெருகுகின்றன. நாடாளும் மன்னரே! எந்த அரசனுடைய கருவூலம், படைகள், நண்பர்கள், அதிகாரம் ஆகியனவெல்லாம் ஒருபோதும் விட்டுப் பிரியாமல் இருக்கின்றனவோ, அவன்தான் மாபெரும் நாட்டை நெடுங்காலம் ஆண்டு அனுபவிக்கிறான். (9–11)

தாங்கள் நல்லொழுக்கம் உடையவர்; பழமையான தருமத்தில் ஊன்றி நிற்பவர். எனவே, நண்பரின் காரியத்தை நிறைவேற்றிக் கொடுப்பதாகக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும். எவனொருவன், தன்னுடைய மற்ற எல்லாக் காரியங்களையும் புறந்தள்ளிவிட்டு, தனக்கு உதவி புரிந்த நண்பனின் காரியத்தை நிறைவேற்றிக் கொடுப்பதில் மிகவும் ஆர்வத்துடன் ஈடுபடுகிறானோ, அவனைக் கேடுகள் தாக்குவதில்லை. எதிரிகளை அடக்குபவரே! உரிய காலம் கடந்தபின்னர் நண்பனுக்குச் செய்யவேண்டிய கடமைகளில் ஒருவன் ஈடுபட்டால், அவன் மிகப்பெரிய பணியைச் செய்து முடித்தாலும், அது நண்பனுக்குச் செலுத்த வேண்டிய நன்றிக்கடனாக ஆகமாட்டாது. (12–14)

பகைவர்களை அடக்குபவரே! வீரரே! சீதாப்பிராட்டியார் இருக்கும் இடத்தைத் தேடும் முயற்சி இப்போதே தொடங்கப்பட வேண்டும். இதுதான், நண்பரான இராமபிரானுக்கு நாம் ஆற்றவேண்டிய நன்றிக்கடனாகும். வேந்தனே! அவர் (இராமன்) பேரறிவாளர்; காலத்தின் முக்கியத்துவத்தை அறிந்தவர். தன்னுடைய காரியம் செய்யப்பட வேண்டிய காலம் வந்துவிட்டதை அறிந்திருந்தும்கூட, உங்கள் உதவியை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதால்

(நீங்களாகவே முன்வந்து தெரிவிக்காததால்), (முன்னர் நீங்கள் உறுதியளித்த) காலக்கெடு கடந்து விட்டதைக்கூட உங்களுக்கு நினைவுபடுத்தாமல் இருக்கிறார். ஸ்ரீராமன், செல்வச் செழுமையுடன் விளங்கும் உங்கள் ராஜ்யத்திற்குக் காரணமானவர்; ஆழமான நட்புப்பூண்டவர்; ஒப்புவமையில்லாத மகிமை உடையவர்; மங்களகுணங்களில் தனக்கு ஈடான வேறொருவர் இல்லாதவர். (15–17)

வானர மன்னரே! அவரால் உங்களுக்குச் செய்யப்பட வேண்டிய காரியம் முன்னரே முடிக்கப்பட்டு விட்டது. (இப்போது,) நீங்கள் அவருக்குச் செய்ய வேண்டிய பிரதியுபகாரத்தைச் செய்ய வேண்டும். (அதன் தொடக்கமாக) வானரோத்தமர்களுக்கு (செய்ய வேண்டிய காரியத்திற்குத் தகுந்த) உத்தரவை இட வேண்டும். இராமன் நினைவூட்டுவதற்கு முன்பாகவே நாம் காரியத்தைத் தொடங்கிவிட்டால், அது 'காலங்கடந்த செயல்' என்று கருதப்பட மாட்டாது. ஆனால், நாம் செய்ய வேண்டியதை, ஸ்ரீராமன் நினைவூட்டிய பிறகு ஆரம்பித்தால், அது காலங்கடந்து செய்த செயலாகக் கருதப்படும். (அதாவது, இராமனுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி நடவாததாகும்.) (18,19)

வானர வேந்தே! உங்களுக்கு எந்த உதவியும் செய்யாதவருக்கும்கூட, நீங்கள் உதவி செய்பவர். (அத்தனை விசாலமனம் உங்களுக்கு!) அப்படியிருக்கும்போது, (எவராலும் எதிர்கொள்ள முடியாத) வாலியைக் கொன்று (பகைவனை அழித்து), செழிப்பான ராஜ்யத்தைத் தந்தவருக்கு நன்றிக்கடன் செலுத்த மாட்டீர்களா, என்ன? வானர–கரடிக் கூட்டங்களுக்கு மன்னரே! நீங்கள் ஆண்மையுடையவர்; எதிர்கொள்ள முடியாத பேராற்றல் உடையவர். ஆயினும், ஸ்ரீராமன் மனம் மகிழும்படியான காரியத்தைச் செய்வதற்கான உத்தரவிடுவதில் ஏன் கவனம் செலுத்தாதிருக்கிறீர்கள்? இராமன், தேவ–அசுர–மகா சர்ப்பங்களைக்கூட தன் பாணத்தினால், தனக்கு அடிமைப்பட்டவர்களாகக் கொண்டுவர வல்லவர் என்பதில் ஐயமில்லை. (சீதையைத் தேடுவது என்ற காரியத்தையும், அவராலேயே செய்து கொள்ள முடியும், என்றாலும்) முன்னர் நீங்கள் கொடுத்த வாக்குறுதிப்படி நடப்பீர்கள் என்ற எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். (20–22)

(யாரும் எதிர்த்து நின்று வெற்றிபெற முடியாது என்று பெயர் பெற்ற வாலியுடன்) தன் உயிரையே பணயம் வைத்து, அவர் உங்களுக்குப் பிரியமான காரியத்தைச் செய்து முடித்தார். எனவே, அவருடைய மனைவியான வைதேகி (பூமியிலோ ஆகாயத்திலோ) எங்கிருந்தாலும் தேடிக் கண்டுபிடிப்போம். தேவர்கள், கந்தர்வர்கள், அசுரர்கள், மருத்கணங்கள், யட்சர்கள் ஆகிய எவரும் அவருக்கு ஆபத்தை விளைவிக்க முடியாது என்னும்போது, இந்த அரக்கர்கள் எம்மாத்திரம்? வானர மன்னரே! அளவிடற்கரிய பராக்கிரமம் படைத்த அவர், உங்களுக்கு ஏற்கனவே உபகாரம் செய்து விட்டிருக்கிறார். அந்த இராமபிரானுக்குப் பிரியமான காரியத்தை எப்படியாகிலும், நாம் செய்தே ஆகவேண்டும். (23–25)

வானரர் வேந்தே! நீங்கள் உத்தரவிடுங்கள், போதும். எங்களில் எவருக்கும் பூமிக்குக் கீழோ, பூமியிலோ, தண்ணீரிலோ, ஆகாயத்திலோ சஞ்சரிப்பதற்குத் தடை என்பதே கிடையாது. குற்றம்–குறையில்லாதவர்களும், பிறரால் வெல்ல முடியாதவர்களுமான கோடிக்கணக்கான வானரர்கள் உங்களிடம் இருக்கிறார்கள். உங்களுக்காக 'யார், என்ன வேலை செய்ய வேண்டும்?' என்று கட்டளையிடுங்கள்.'' உரிய காலத்தில், உகந்த முறையில் அவரால் சொல்லப்பட்ட அறிவுரைகளைக் கேட்டு, (சுக்ரீவன்) நல்லறிவு பெற்று சிறந்த முடிவை எடுத்தான். (26–28)

அவன் (சுக்ரீவன்) மிகவும் புத்திசாலி. ஆதலால், உடனே சலிக்காமல் செயல்புரியும் நீலன் என்பவனை அழைத்து, எல்லாத் திசைகளிலுமுள்ள எல்லா (வானர) வீரர்களையும் ஓரிடத்தில் கூட்டும்படி உத்தரவிட்டான். என்னுடைய சேனா வீரர்கள் அனைவரும் மற்றும் அவர்களை வழிநடத்திச் செல்பவர்களும், படைத்தலைவர்களும் சிறிதும் காலந்தாழ்த்தாமல் இங்கே வந்து சேரும்படியாக ஏற்பாடு செய்.

நாட்டின் எல்லைக் காவலர்கள், தளராத முயற்சியுடையவர்கள், வேகமாகச் செல்லக் கூடியவர்கள் ஆகிய வானரர்கள் எல்லோரும், என் ஆணையின்படி, தத்தம் படைவீரர்களுடன்

உடனடியாக வந்துசேர வேண்டும். படைவீரர்கள் வந்து சேர்ந்த பின்னர், என்ன செய்ய வேண்டும்? என்பதை நீயே தீர்மானித்துக் கொள். எந்த வானரன், பதினைந்து நாட்கள் முடிந்தும் வராமலிருக்கிறானோ, அவனுக்கு மரணதண்டனைதான். இதைப் பற்றி ஆலோசிக்க வேண்டியதில்லை. இது என்னுடைய உறுதியான கட்டளை. நீ, இந்தக் கட்டளைப்படி ஏற்பாடுகள் செய்வதற்கு அதிகாரம் ஏற்று, முதிய வானரர்களிடம் அங்கதனுடன் செல்வாயாக.'' இவ்வாறு திட்டங்களைக் கூறிவிட்டு, அரண்மனைக்குள் (சுக்ரீவன்) புகுந்து கொண்டான். (29–33)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
இருபத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பது

கூதிர்கால வருணனை

முன் கண்டபடிச் சொல்லிவிட்டு, சுக்ரீவன் குகைக்குள் புகுந்து விட்டான். மழைக்காலம் சென்றுவிட்டதால், ஆகாயம் மேகங்களில்லாமல் தெளிவாக இருந்தது. இராமன், இந்தச் சூழ்நிலையில் சீதையைக் காண வேண்டும் என்ற வேட்கையால் மிகவும் தவிக்கத் தொடங்கினார். ஆகாயம் (மாசு–மருவில்லாமல்) வெண்மையாக இருந்தது; சந்திர மண்டலம் நிர்மலமாக இருந்தது. சரத்கால இரவு (என்னும் நங்கையின்) உடலில், சந்திரனின் குளிர்ந்த கிரணங்கள் என்ற உடற்பூச்சு பூசப்பட்டிருந்தது. 'சுக்ரீவன் காமக்கேளிக்கைகளில் மூழ்கிருக்கிறான்; கவர்ந்து செல்லப்பட்ட சீதையைப் பற்றித் தகவல் ஏதுமில்லை; சீதையையும் இராவணனையும் தேடத் தொடங்குவதற்காகக் குறிப்பிடப்பட்ட காலம் கடந்துவிட்டது' என்பதை எண்ணியதும், இராமனுடைய மனம் துன்பப்பட்டுக் கலக்கமடைந்தது. (1–3)

நல்லறிவுடைய இராமன், சிறிதுநேரத்திற்குப் பின் இயல்பு நிலையை அடைந்து, நெஞ்சில் நிரந்தரமாகக் குடிகொண்டிருக்கும் வைதேகியைப் பற்றியே சிந்திக்கத் தொடங்கினார். பொன்மயமான தாதுக்களால் அழகுடன் விளங்கும் மலைச்சிகரத்தில் உட்கார்ந்திருந்த இராமன் மாசு–மருவற்ற கூதிர்கால ஆகாயத்தைப் பார்த்ததும், மனத்திற்குள்ளேயே தன் அன்புக்குரிய மனைவியைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்தார். நிர்மலமான வான்வெளி; மின்னல்–மேகங்களின் ஆர்ப்பாட்டம் இல்லை; நாற்புறங்களிலும் ஸாரஸப் பறவைகளின் ஒலி – இவற்றைப் பார்த்து மனவேதனை அடைந்து துயரத்துடன் புலம்பத் தொடங்கினார்— (4–6)

''ஸாரஸப் பறவையின் குரல் போன்று மதுரமான குரல் உடையவள்; எனது ஆசிரமத்தில் ஸாரஸப் பறவைகளின் இனிய ஒலியைக் கேட்டு மகிழ்ச்சியுடன் பொழுதைப் போக்கியவள். கள்ளங்கபடமற்ற அவள், இப்போது எப்படித்தான் காலங்கழிக்கிறாளோ? மாசற்ற பொன் வண்ணமாகப் புஷ்பித்திருக்கும் வேங்கை மரங்களைக் கண்டு மகிழ்ச்சியடையும் அவள், இப்போது தன்னருகில் என்னைக் காணாமல், எப்படித்தான் மனமகிழ்ச்சி அடைவாள்? சீதையினுடைய எல்லா அங்கங்களும் அழகானவை. இயல்பாகவே இனிய குரலில் பேசுபவள். முன்பெல்லாம் கலகலவென ஒலியெழுப்பும் அன்னப்பறவைகளின் குரல் கேட்டு, (விடியற்காலையில்) துயில் கலைந்து எழுந்திருப்பாள். அத்தகைய என்னுடைய மனைவி இப்போது எப்படித் துயிலெழுகிறாளோ? (7–9)

ஆண்–பெண் சக்ரவாகங்கள் இணைபிரியாது பறக்கும் ஒலியைக் கேட்டு ஆனந்திக்கும் தாமரைத் தடங்கண்ணாளாகிய அவள் (என்னைப் பிரிந்து தனியாக) என்ன பாடுபடுகிறாளோ? குளம், நதி, தடாகம், பூஞ்சோலை, மரங்கள் அடர்ந்த பகுதிகள் ஆகியவற்றில் மான்விழியாளான அவளில்லாமல் தனியே திரிகின்ற நான் மகிழ்ச்சியை அடையவில்லை. என்னைப் பிரிந்திருக்கும்

மெல்லியலாளான இளமடந்தையை (சீதை), சரத்காலத்தோடுகூட வளர்ந்து வரும் காமம் வெகு ஆழமாகப் பாதிக்காமலிருக்க வேண்டுமே?'' (10–12)

தேவேந்திரனிடமிருந்து மழையை வேண்டிக் கதறும் சாதகப் பறவை போல, மனிதருள் மாணிக்கமும் அரசகுமாரருமான இராமன், மேற்கண்டவாறெல்லாம் சிந்தித்துக் கதறினார். (மழையைப் பொழியும் மேகங்களுக்குத் தலைவன், இந்திரன். சாதகப் பறவை, மழை நீரைத்தான் குடிக்கும்.) அழகான மலைச்சிகரங்களில் வளர்ந்துள்ள மரங்களிலிருந்து பழங்களைப் பறித்துக் கொண்டு வருவதற்காக அலைந்து திரிந்துவிட்டு, அப்போது திரும்பி வந்த லட்சுமணன், தன் மூத்த சகோதரரின் இரங்கத்தக்க நிலையைக் கண்டான். பொறுத்துக் கொள்ள முடியாத கவலையால் மனம் நொந்து, உணர்விழந்து, மனித சஞ்சாரமில்லாத இடத்தில் தன்னந்தனியாக வீற்றிருக்கும் இராமனைப் பார்த்ததும், அவருடைய துயரத்தைக் கண்டு, தானும் மிகவும் மனம் தவித்து, பின்வருமாறு கூறினான்— (13–15)

''அண்ணா! காமத்திற்கு வசப்பட்டு, தங்களுடைய நிலைகுலையாத பேராண்மையைக் கைவிடுவதால் என்ன லாபம்? இந்த சோகம் வெட்கப்படத்தக்கது; இதற்குக் காரணம் தாங்கள் ஏகாக்கிர சித்தத்தை இழந்ததுதான். தாங்கள், இந்த எண்ணத்திலிருந்து மனத்தைத் திருப்பி, நம்முடைய முக்கிய நோக்கத்தின்பால் செலுத்தினால் துயரம் போய்விடாதா என்ன? எதற்கும் அஞ்சாத மகாவீரரே! மேற்கொண்டிருக்கும் காரியத்தில் தொடர்ந்து முயற்சி செய்தல்; மனத்தைத் தெளிவாக வைத்திருத்தல்; நம்முடைய உபாயம் கைகூடும் காலம் நெருங்கியிருப்பது; நண்பனான சுக்ரீவனின் சாமர்த்தியம்; தங்களுடைய தெய்வ வழிபாட்டின் புண்ணியப் பயன் – இவைகளைத் தங்கள் காரியத்தை வெற்றிகரமாக முடித்துக் கொள்வதற்கு சாதனங்களாக உபயோகித்துக் கொள்ள வேண்டும். (16,17)

மனு வம்சத் தலைவரே! மாவீரர்களாலும் போற்றப்படுபவரே! தங்களைக் கணவராக அடைந்துள்ள சீதாப்பிராட்டியாரை, வேறு எவர்தான் அணுக முடியும்? கொழுந்துவிட்டெரியும் நெருப்பின் அருகில் சென்றவன் தீயினால் பொசுக்கப்படாமல் இருக்க முடியுமா, என்ன?'' லட்சுமணன் அனைத்து மேன்மைகளும் பொருந்தியவன். அவனை யாராலும் வெல்ல முடியாது. (அத்தகைய இலக்குவனுடைய பேச்சைக் கேட்டதும்) இராமன், தன்னுடைய நல்லியல்புக்கு ஏற்றபடி பதில் சொன்னார்— ''(லட்சுமணா! நீ கூறிய வார்த்தை) இன்றைய சூழ்நிலையில் நன்மையைச் செய்வது; எதிர்காலத்திலும் நன்மையைத் தரும் பக்குவமுடையது; ராஜதந்திரம் என்ற முறையிலும் சிறந்தது; மனத்திற்கு ஆறுதல் தருவதுடன், தருமம்–அர்த்தம் என்ற புருஷார்த்தங்களை ஒட்டியும் இருக்கிறது. (18,19)

சீதையைத் தேடிக் கண்டுபிடிக்கும் காரியத்தில் நிச்சயமாக முயற்சிகளைச் செய்ய வேண்டியதுதான். அதற்கான சில விசேஷ உபாயங்களையும் மேற்கொள்ள வேண்டும். தம்பி! செய்வதற்கரிய செயலைச் செய்வதற்குத் தொடங்கிவிட்ட நாம், இறுதியாகக் கிடைக்கக் கூடிய பயனைப் பற்றிக் கவலை கொள்ளக் கூடாது.'' பின்னர், (மறுபடியும் தொடர்ந்து) விரிந்த தாமரையிதழ் போன்ற கண்களையுடைய மைதிலியின் நிலை பற்றிக் கவலை கொண்டு, உலர்ந்து போன முகத்துடன், இலக்குவனை நோக்கி இராமன் கூறினார்— (20,21)

''ஆயிரம் கண்ணுடைய இந்திரன், ஏராளமாக மழையைப் பொழிவித்து, பூமியைக் குளிர்வித்து, பயிர்களை நன்றாக வளரச் செய்து, தன் கடமையை முடித்துக் கொண்டுவிட்டான். அரசகுமாரனே! மேகங்கள், மின்னல்களால் ஒளிவீசிக் கொண்டு, கம்பீரமாக இடி இடித்துக் கொண்டு, மலைகள்–மரங்களின் மேலே சஞ்சரித்து, (தம்மிடமிருந்து) நீரைப் பொழிந்துவிட்டு, இப்போது இளைப்பாறுகின்றன. கருநெய்தல் இதழ் போன்ற வண்ணம் கொண்ட மேகங்கள், பத்துத் திசைகளையும் கருமையாக்கிவிட்டு, (இப்போது) மதம் அடங்கிய யானைகள் போல் சக்தியிழந்து காணப்படுகின்றன. (தண்ணீரைப் பொழிந்து விட்டதால், வெற்று மேகங்களாகக் காணப்படுகின்றன.) (22–24)

செல்வனே! நீருண்ட மேகங்களையும், மலை–மல்லிகை மற்றும் மருத மரங்களையும் தழுவிவிட்டு வேகமாக எழும்பி வீசிய மழைக்காற்று, இப்போது சோர்ந்து கிடக்கிறது. குணசாலியான லட்சுமணா! மேகங்கள், யானைகள், மயில்கள், மலையருவிகள் – இவற்றின் பேரொலி திடீரென்று அடங்கிப் போய்விட்டதே! பெருமேகங்கள் பொழிந்த மழை நீரால், விசித்திரமான சிகரங்களைக் கொண்ட பர்வதங்கள் சுத்தமாகக் கழுவப்பட்டுவிட்டன. அதனால், சந்திரனின் வெண்ணிறக் கதிர்களால் பூசப்பட்டவை போல் மனோரஞ்சிதமாக விளங்குகின்றன. (25–27)

ஏழிலைப்பாலை மரங்களின் கிளைகள், சூரியன்–சந்திரன்–நட்சத்திரங்களின் ஒளிக்கதிர்கள் மற்றும் உயர்ந்த யானைகளின் உற்சாக விளையாட்டுக்கள் ஆகியவற்றில் தன்னுடைய சிறப்பைப் பகிர்ந்து கொடுத்து சரத்காலம் வந்திருக்கிறது. (சரத்காலம் வந்துவிட்டதால் எல்லா இடங்களும் பிரகாசமாகவும் விலங்குகள் உற்சாகமாகவும் இருக்கின்றன.) சரத்காலத்தின் சிறப்புத் தன்மை, பல இடங்களிலும் பரவி, பலவகையான எழில் தோற்றங்களை வெளிப்படுத்துகிறது என்றாலும், சூரியனின் முதல் கிரணங்களால் மலர்ந்த பூக்களைக் கொண்ட தாமரைத் தடாகங்களில், இப்போது மிகவும் அதிகமாகத் தன் சிறப்புத் தன்மையை வெளிப்படுத்துகிறது. ஏழிலைப்பாலை மரங்களில் மலர்ந்திருக்கும் மலர்களின் மணமும், மலர்த்தாதுக்களைப் பருக வரும் வண்டுக் கூட்டங்களின் ரீங்கார ஒத்திசையும் காற்றில் கலந்து அலையலையாக வந்து, எல்லா இடங்களிலும் பரவி, காடுகளிலுள்ள மதங்கொண்ட யானைகளின் அட்டகாசத்தை மிகவும் வளரச் செய்கிறது. (28–30)

அழகான விசாலமான சிறகுகள்; காமவிளையாட்டுக்களில் வேட்கை; தாமரை மலரின் தாதுத்துகள்கள் பரவிய உடல் – இப்படியாக, பேராறுகளின் மணல் திட்டுக்களுக்கு வந்து சேர்ந்த சக்ரவாகங்களுடன் அன்னப்பறவைகள் விளையாடுகின்றன. கூதிர்காலத்தின் தனிச்சிறப்பான மேன்மை, மதத்தால் செருக்குற்ற யானைகளிடத்திலும், மதாளித்து நிற்கும் காளைக் கூட்டங்களிலும், தெளிந்த நீரைக் கொண்ட மலையாறுகளிலும் பலவாறாகப் பிரிந்து எழிலுடன் விளங்குகிறது. காடுகளில் மயில்கள், ஆகாயத்தில் மேகங்கள் இல்லாமலிருப்பதைக் கண்டு, தமக்கு அணிகலனாக அமைந்த தோகையை விரிக்காமலும், பெண் மயில்களிடம் ஈடுபாடு இல்லாமலும், வனப்பை இழந்தும், மகிழ்ச்சியில்லாமல் சிந்தனையில் மூழ்கியும் உள்ளன. (31–33)

மனத்தைக் கொள்ளை கொள்ளும் நறுமணம் வீசும் மலர்க்கொத்துக்களின் சுமையால் கிளைகளின் நுனிகள் கீழ்நோக்கி வளைந்திருப்பவையும், தங்கம் போல் மஞ்சள் நிறமுடையவையும், காட்சிக்கினியவையுமான ஏராளமான வேங்கை மரங்களால், காட்டுப் பகுதிகள் மிகவும் ஒளியுடன் கூடி விளங்குகின்றன. பெண்யானையோடு இருந்த தாமரைத் தடாகங்களில் பெருவிருப்புடைய, காட்டில் சுதந்திரமாகத் திரிகின்ற, மலர்களின் மணத்தை நுகர்ந்து பெருமிதம் கொள்கின்ற, மதம் கொண்ட, காமலீலைகளில் துடிப்புடைய உத்தம யானைகளின் நடை, இப்போது (பரபரப்பில்லாமல்) மந்தமாக இருக்கிறது. (34,35)

மேகங்களில்லாத வானம், பட்டை தீட்டப்பட்ட வாள்போல் சுத்தமாக இருக்கிறது; ஆறுகளில் நீரின் ஓட்டம் மெதுவாக இருக்கிறது; காற்று, செங்கழுநீர்ப்பூவின் குளிர்ச்சியைச் சுமந்து கொண்டு வீசுகிறது; எல்லாப் பக்கங்களும் இருள் நீங்கிப் பேரொளியுடன் விளங்குகின்றன. மண் தரையில் சேறாகயிருந்த பகுதி வெம்மையான சூரியனின் கதிர்களால் உலர்ந்து, முன்பிருந்ததைப் போல் புழுதி படிந்ததாக ஆகிவிட்டது. ஒருவரோடொருவர் பகைமை கொண்ட மன்னர்களுக்கு (மழை ஓய்ந்துவிட்ட இந்த காலம்,) போர் முயற்சிகளில் ஈடுபடுவதற்கு உகந்த காலம். (36,37)

சரத் ருதுவின் சீதோஷ்ண மாறுதல்கள் காரணமாக உடல் தோற்றம் மேலும் பொலிவு பெற்று, மிகவும் வீறுகொண்டு, (அகங்காரத்துடன் தரையைக் கால்களால் உதைத்து எழுந்த) புழுதிகளால் உடல் பூசப்பட்டு, செருக்கடைந்து சண்டையைத் தேடி, பசுக்களினிடையே காளைகள் (கம்பீரமாக) நின்றுகொண்டு ‘ம்மா’ என்று குரல் கொடுக்கின்றன. உயர்ஜாதியில்

பிறந்த பெண்யானைகளுக்குக் காம உணர்ச்சி மேலிட்டு, அன்பு பெருகி ஓட, காடுகளில் மதங்கொண்டு, குறைந்த வேகத்துடன் சென்றுகொண்டிருக்கும் கணவனை (ஆண்யானையை)ச் சூழ்ந்துகொண்டு பின்தொடர்ந்து செல்கின்றன. (38,39)

(ருது மாற்றத்தால் மயில்களின் இயல்பிலும் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது.) மயில்களுக்கு அணிகலனான தோகையைப் பொருட்படுத்தாமல் (மகிழ்ச்சியுடன் விரித்து ஆடாமல்), ஸாரஸப் பறவைகளின் கூட்டங்களால் துரத்தப்பட்டவைகள் போல உற்சாகமிழந்து பரிதாபமாக நதிகளின் கரைக்குப் போய்ச் சேர்கின்றன. மதங்கொண்ட யானைகள், உரத்த குரலில் பிளிறி, நீர்க்காக்கைகளையும் சக்ரவாகங்களையும் அஞ்சி ஓடச் செய்துவிட்டு, மலர்ந்த தாமரை மலர்கள் விளங்கும் தடாகங்களில் நீரைக் கலக்கிக் கலக்கிப் பருகுகின்றன. நதிகளில் சேறு இல்லை; ஆங்காங்கே மணற்திட்டுகள் அழகாகக் காணப்படுகின்றன; நீர், தெளிவாக இருக்கிறது; பசுக்கூட்டங்கள் வந்து நீர் குடிக்கின்றன; ஸாரஸப் பறவைகள் ஆனந்தமாக சப்திக்கின்றன. இத்தகைய ஆறுகளில் அன்னப்பறவைகள் மகிழ்ச்சியுடன் இறங்குகின்றன. (நீரில் விளையாடுகின்றன.) (40–42)

நதி, மேகம், மலையருவியின் நீர்வீழ்ச்சி ஒலி, சுழன்று வீசும் காற்று, மயில், உற்சாகம் குன்றிய தவளைகள் ஆகியவைகளின் சப்தம், இப்போது ஒரே காலத்தில் ஓய்ந்து போய்விட்டன. ஆகாயத்தில் மேகங்கள் கர்ஜித்துக் கொண்டு சஞ்சரிக்கும்போது, (மழை கொட்டும் என அஞ்சி,) புற்றுக்களில் அதிகப் பசியினால் உடல் மெலிந்து நீண்டகாலம் மறைந்திருந்த பல வர்ணங்களைக் கொண்ட கொடிய விஷம் கொண்ட பாம்புகள், இப்போது வெளியே வருகின்றன. (43,44)

(சந்த்யை என்ற நங்கை, தன் நாயகனான சந்திரனுடைய கிரணங்களாகிய கைகள், தன் உடலில் பட்டவுடன் மெய்சிலிர்த்து, கண் இமைகள் சற்றே மலர, காமவேட்கை மிகுதியால், தானே தன் ஆடைகளை உதறிவிடுவதைப் போல,) செவ்வண்ணம் கொண்ட சந்த்யாகாலம், அப்போது உதித்தெழும் சந்திரனுடைய கதிர்களின் ஸ்பரிசத்தாலுண்டான களிப்பினால், சற்றே தோன்றத் தொடங்கியிருக்கும் தாரகைகளையுடைய ஆகாயத்தைத் தானாகவே விட்டுச் செல்லும் அழகுதான், என்னே! (45)

சரத்காலத்தில் நீரோட்டம் குறைந்து கொண்டே போகும்போது, நதிகளில் ஆங்காங்கே மணற்திட்டுக்கள் தென்படுகின்றன. (இது, எப்படி இருக்கிறது? என்றால்) இளநங்கையர், தம் மனத்திற்குகந்த நாயகர்களுடன் புதிதாக உறவு கொள்ளும்போது, வெட்கத்துடன் உடல் அங்கங்களைச் சிறிது சிறிதாகப் புலப்படுத்துவதைப் போலிருக்கிறது. உதயமான சந்திரன் என்ற அழகிய முகம்; தாரகை கூட்டங்கள் என்ற மலர்ந்த கண்கள் – இப்படியான ஒரு மங்கை போல், சரத்கால சந்திரனின் அப்பழுக்கற்ற கதிரொளி என்ற வெள்ளாடை தரித்த இரவு விளங்குகிறது. (46,47)

நன்றாக முற்றிப் போன நெல்மணிகளை உண்டு மகிழ்ந்து, வேகமாகப் பறந்து செல்லும் அழகிய ஸாரஸப் பறவைகள், தொடுக்கப்பட்ட வெண்மலர் மாலை, காற்றினால் அலைப்புண்டது போல் வரிசையாக வானத்தில் செல்கிறது. ஆம்பல் மலர்கள் நிறைந்த தடாகத்தின் நீரில் ஓர் அன்னம் உறங்கிக் கொண்டிருப்பதைப் போல, மேகங்களில்லாத இரவில், வானத்தின் எல்லாப் பக்கங்களிலும் பரவிக் கிடக்கும் தாரகைகளின் நடுவில் முழு நிலா விளங்குகிறது. எல்லாப் பக்கங்களிலும் சிதறியோடும் அன்னப்பறவைகளே, மேகலைகள்; மலர்ந்த தாமரை நெய்தல்களே, மாலைகள் – இவ்வாறு, முன்பைக் காட்டிலும் மிக அழகாக விளங்கும் குளங்கள் சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட ஆரணங்குகள் போல் காட்சி தருகின்றன. (48–50)

தயிர் கடையும் சத்தம், கன்றுகளுக்காகக் கொட்டிலில் இருக்கும் பசுக்கள் எழுப்பும் ஓசை, காளைகளின் கர்ஜனை, அதிகாலையில் இடையர்களின் புல்லாங்குழல் இசையொலி – இவையெல்லாம் காலையில் வீசும் காற்றில் கலந்து ஒன்றையொன்று நிறைவு செய்வதைப்

போல ஒன்றுசேர்ந்து ஒலிக்கின்றன. நதியின் கரைகள், அன்றலர்ந்த மலர்களால் ஒளிமிகுந்து, தென்றல் காற்றினால் மெல்ல அசைந்தாடும் சுத்தமான வெண்பட்டாடைகள் போன்ற நாணல்களால் பேரழகுடன் விளங்குகின்றன. (51,52)

காடுகளில் மனம் போனபோக்கில் திரியும் ஆண்வண்டுகள் தேனைக் குடித்ததால் மெய்மறந்து, பேரானந்தத்தால் மதங்கொண்டு, அவைகள் அமரும் ஆசனமாகிய தாமரை மலர்களின் தாதுக்கள் பூசப்பட்டு, பொன்னிறமுடையவைகளாகப் பெண்வண்டுகளோடுகூட காற்றுவாக்கில் பின்தொடர்ந்து செல்கின்றன. நீர்நிலையில் காணப்படும் தெளிந்த நீர்; ஆம்பல் மலரின் வரவு; கிரௌஞ்சப் பறவையின் ஒலி; முதிர்ந்த நெற்கதிர்; தென்றலாக வீசும் காற்று; மாசுமறுவில்லாத சந்திரன் – இவைகள் மழைக்காலம் ஓய்ந்துவிட்டதை நிரூபிக்கின்றன. (53,54)

இரவில், மனத்திற்கினிய கணவர்களால் அனுபவிக்கப்பட்ட பெண்கள், விடியற்காலை நேரத்தில் சோம்பேறித்தனமாக (தளர்ச்சியடைந்து) நடப்பதைப் போல, மீன்களாகிற இடுப்பணி (ஒட்டியாணம்) அணிந்த நதி என்னும் நங்கை, இப்போது மெல்ல நடந்து செல்கிறாள். (மழைக்காலம் நின்றுவிட்டதால் நீர்வரத்து குறைந்துவிட்டது.) பெண்கள், நெற்றியில் கோரோசனை திலகம் வைத்துக் கொள்கிறார்கள்; பச்சை வண்ணத்தால் அழகான சித்திரங்கள் வரைந்து கொள்கிறார்கள்; வெண்பட்டுத் துகில் அணிகிறார்கள். அதுபோலவே, ஆறுகள் என்னும் அணங்குகளின் முகத்துவாரங்களில் சக்ரவாகம் வந்து தங்குவது கோரோசனை திலகமாகவும், படர்ந்திருக்கும் பாசிகள் முகத்தழகு சித்திரங்களாகவும், செழிப்பாகச் சூழ்ந்திருந்த நாணல்கள் வெண்பட்டுத் துகில் போலவும் விளங்குகின்றன. (55,56)

மலர்சோலைகளில் குறிஞ்சி–வேங்கை முதலியன மலர்ந்து அழகாகக் காட்சி அளிக்கின்றன. (மலர்ந்த மலர்களின் மகரந்தத்தைக் குடித்த) வண்டுகள், மனம் நிறைந்த ரீங்கார ஒலி எழுப்புகின்றன. (காம உணர்வுகளை எழுப்பிவிடுவதற்கு இத்தனையே போதும்! என்றாலும்,) காமவேள், தன் கரும்புவில்லை நிமிர்த்திப் பிடித்தவனாக, விரகத்தால் துடிக்கும் வாலிப வயதினர்களுக்குக் கொடிய தண்டனை கொடுப்பதற்காக ஆங்காங்கே திரிகிறான். (மக்களுக்குக் காமவேட்கையையும் காமவேதனையையும் உண்டுபண்ணும் காலம் இது – என்பது கருத்து.) (57)

மேகங்கள், ஏராளமாக மழைநீரைப் பொழிந்து மக்களை மகிழ்வித்துவிட்டு, ஆறு–தடாகங்களை நீரால் நிரப்பிவிட்டு, விளைநிலங்களில் பயிர்களைச் செழிப்பாக வளரச் செய்துவிட்டு, ஆகாயத்தை விட்டே மறைந்து போய்விட்டன! செல்வனே! எல்லா நீர்நிலைகளிலும் தண்ணீர் தெளிவாக இருக்கிறது; (குரரீ) அன்றில் பறவைகள் மகிழ்ச்சியுடன் ஒலி எழுப்பிக் கொண்டிருக்கின்றன; சக்ரவாகப் புட்களின் கூட்டம் பரவிக் கிடக்கிறது. இதனால், நீர்நிலைகள் கண்ணுக்கினியனவாக விளங்குகின்றன. மலையுச்சியிலுள்ள சமவெளிகளில் வேங்கை, ஏழிலைப்பாலை, கருங்காலி, பந்துஜீவம், ஞாழல் முதலியன நன்றாகப் பூத்துக் காணப்படுகின்றன. (58–60)

லட்சுமணா! நதிகளில் ஆங்காங்கே தென்படும் மணற்குன்றுகளில் அன்னம், ஸாரஸம், சக்ரவாகம், அன்றில் முதலிய புள்ளினங்கள் எல்லாப் பக்கங்களிலும் நிறைந்துள்ளன. தம்பி! மன்னர் மகனே! பரஸ்பரம் பகைமைபூண்டு, ஒருவரையொருவர் வெல்வதற்கு விரும்பும் அரசர்கள், (மழைக் காலத்தில் போரிட முடியாமல் தவித்துக் கொண்டிருந்தார்கள்.) போருக்கான முயற்சிகளைத் தொடங்குவதற்கான (கூதிர்) காலம் வந்துவிட்டது. அரசகுமாரா! மன்னர்கள் எதிரியுடன் போரிடுவதற்கான விஜய யாத்திரையைத் தொடங்குவதற்கான முதல் வாய்ப்பு, இது. ஆனால், சுக்ரீவன் இங்கே வரவும் இல்லை; (சீதையைத் தேடுவதற்கான) முயற்சிகளில் அவன் ஈடுபட்டிருப்பதற்கான அறிகுறிகளும் காணப்படவில்லை. (61–63)

தம்பி! சீதையைக் காணாமல் சோகத்தில் மூழ்கிக் கிடக்கும் எனக்கு, மழைக்காலத்திய நான்கு மாதங்களும், நூறு ஆண்டுகள் போல் நீண்டதாக இருந்து கழிந்துவிட்டன.

இளம்பெண்ணாகிய அவள், சக்ரவாகப் பெண்பறவை, தன் ஆண்பறவையை விடாது உடன் செல்வதைப் போல, உட்புக முடியாத தண்டகாரண்யம் என்ற காட்டுக்கு, ஒரு பூங்காவனத்திற்குச் செல்வதைப் போல மகிழ்ச்சியுடன் என்னைப் பின்தொடர்ந்து வந்தாள். லட்சுமணா! மனைவியை விட்டுப் பிரிந்திருக்கிறேன்; துயரத்தால் பீடிக்கப்பட்டிருக்கிறேன்; ராஜ்யத்தை இழந்ததோடு அதிலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறேன். சுக்ரீவ மன்னன், என் விஷயத்தில் எந்த ஆர்வமும் காட்டாதிருக்கிறானே? [என்னால், அவனை (சுக்ரீவனை) எதுவும் செய்யமுடியாது என்று எளிதாகக் கருதுகிறான் போலும்!] (64–66)

எதிரிகளை வாட்டி வதைப்பவனே! குழந்தாய்! நான், இப்போது ஆதரவற்றவனாக இருக்கிறேன்; அரசாட்சியைப் பறிகொடுத்துவிட்டேன்; இராவணனால் இழிவு செய்யப்பட்டுள்ளேன்; பரிதாப நிலையில் இருக்கிறேன்; என் (உற்றார்–உறவினர் உள்ள) இல்லம், வெகுதூரத்தில் இருக்கிறது; (எளிதாக யாரும் உதவிக்கு வர முடியாது.) ஒரு நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக, நான் புகலடைந்துள்ளேன் – இந்தக் காரணங்களால், தீய எண்ணங்கொண்ட வானர மன்னன் சுக்ரீவனின் அவமதிப்புக்கு ஆளாகியிருக்கிறேன். சீதையைத் தேடுவதற்கான காலத்தை நிச்சயித்தவன் அவன்தான். ஆனால், அவனது காரியம் நிறைவேறிவிட்டதால் கெடுமதி படைத்த அவன், தான் கொடுத்த வாக்குறுதியை நினைவிற்கொள்ளாதிருக்கிறான். (67–69)

நீ, கிஷ்கிந்தைக்குச் சென்று, மதிகெட்டவனும் சிற்றின்பத்தில் மூழ்கிக்கிடப்பவனுமான வானரத் தலைவன் சுக்ரீவனிடம், நான் இனிச் சொல்லப் போவதைக் கூறு. முதலில் உபகாரம் செய்துவிட்டு, பின்னர் பதில் உதவியை எதிர்பார்க்கின்றவர்களுக்கு நம்பிக்கையூட்டி, வாக்குறுதி அளித்துவிட்டு, எவன் அதை முற்றிலுமாகச் செய்யாதிருக்கிறானோ, அவன்தான் உலகில் மானுடப்பதர். எவன், தான் வாக்களித்த சொல் அறவழிப்பட்டதாக இருந்தாலும், பாவவழிப்பட்டதாக இருந்தாலும், அதைப் பற்றிச் சிந்திக்காமல், தான் சொன்னபடியே பிரதியுபகாரம் செய்து முடிக்கிறானோ, அந்த தருமவீரன்தான் மக்கள் எல்லோரிலும் மிகச்சிறந்தவன். (70–72)

தன்னுடைய காரியத்தை முடித்துக் கொண்டு, தனக்கு உதவி செய்தவர்களுக்குக் கைமாறு செய்யாத, நன்றி கெட்ட மனிதர்கள் இறந்து போய் வெறும் சடலமாகக் கிடந்தாலும், மாமிசபட்சிணிகளான நாய்–நரி–கழுகுகள்கூட அவ்வுடலைத் தீண்டமாட்டா. போரில், பொன்னாலான பின்பகுதியையுடைய, என்னால் வளைக்கப்படும் வில்லின் மின்னல் கூட்டங்களுக்கொப்பான காந்தியையுடைய உருவத்தைக் காண (சுக்ரீவன்) விரும்புகிறான் போலும்! சினங்கொண்ட நான், போர்க்களத்தில் மிகவும் கொடூரமான அழிவுகளைச் செய்யக் கூடியதும், வஜ்ராயுதத்தின் முழக்கத்திற்கு நிகரானதுமான என் வில்லினுடைய நாணொலியை மீண்டும் கேட்க விரும்புகிறானோ? (என் ஆற்றலைப் பரிசோதிக்க விரும்பியபோது, என் நாணின் ஒலியையும் அம்பின் வேகத்தையும் கண்களால் பார்த்திருக்கிறான்.) (73–75)

மன்னர் மைந்தனே! வீரனே! எல்லையற்ற என் ஆற்றலை அவன் நேரில் கண்டு அறிந்திருக்கிறான். அத்துடன், மாவீரனான நீ, எனக்குத் துணையாக இருக்கிறாய் என்பதையும் அவன் நன்கு அறிவான். அப்படியிருந்தும், (வாலியினுடைய கதி நமக்கும் நேரும் என்று) கவலைப்படாமல் இருக்கிறானே? என்ன ஆச்சரியம்! பகைவர் நாட்டில் வெற்றிக்கொடி நாட்டுபவனே! எந்த நோக்கத்தை முன்னிட்டு அக்னிசாட்சியாக நட்பு, பராக்கிரம பரிசோதனை, வாலி வதம் முதலானவை செய்யப்பட்டனவோ, அவற்றையெல்லாம் தன்னுடைய காரியங்கள் அனைத்தும் நிறைவேறியபின் சுக்ரீவன் மறந்துவிட்டான்; கொடுத்த வாக்குறுதியும் அவனது நினைவில் இல்லை! (76,77)

'மழைக்காலம் முடிந்தவுடன், தங்கள் காரியத்தைத் தொடங்குவேன்' என்று பிரதிக்ஞை செய்த வானர மன்னன், சிற்றின்பத்தில் மூழ்கி, நான்கு மாதங்களும் கழிந்துவிட்டதை அறியாமலிருக்கிறான். அமைச்சர்களோடும் உற்றார்–உறவினர்களோடும் உல்லாசமாகப் பேசி

மகிழ்ந்து, விதவிதமான மதுபானங்களைக் குடிப்பதிலேயே திளைத்திருக்கிறான். அதனால், சோகத்தால் தவித்துக் கொண்டிருக்கும் நம்மிடம் கருணை காட்டாதிருக்கிறான். பேராற்றல் படைத்த சோதரனே! நீ, அவனிடம் செல்வாய். எனக்குக் கோபம் வந்தால், அதன் விளைவு எவ்வாறிருக்கும்? என்பதைச் சொல். அத்துடன், இப்போது நான் சொல்லப் போகும் செய்தியையும் தெரிவிப்பாய். (78–80)

'சுக்ரீவனே! கொல்லப்பட்ட வாலி எந்த வழியாகச் சென்றானோ, அந்தப் பாதை இன்னும் மூடப்படவில்லை. சொன்ன வாக்குறுதியைக் காப்பாற்றுவதில் உறுதியாக இரு. வாலியைப் பின்பற்றி, நீயும் அந்த வழியில் சென்றுவிடாதே. போரில், ஒரு பாணத்தால் வாலி ஒருவன் மட்டும்தான் என்னால் கொல்லப்பட்டான். ஆனால், சத்தியத்தை மீறிய உன்னை (மட்டும் தனியொருவனாகக் கொல்வேன் என்று நினைக்காதே!) சுற்றத்தாரோடு (அனைத்து வானரங்களையும்) கொன்றுவிடுவேன்.' மனிதருள் மாணிக்கமே! புருஷோத்தமனே! செய்ய வேண்டிய காரியத்தைத் தொடங்க வேண்டிய காலம் வந்துவிட்டது – என்பதையும், காரியம் நிறைவேறுவதற்கு அனுகூலமான மற்ற செய்திகளையும் அவனிடம் நேரில் கூறிவிடு. உடனே, புறப்படு. காலக்கெடு முன்பே முடிந்துவிட்டது. (81–83)

(சுக்ரீவனிடம் கூறு.) வானர மன்னா! மிகத் தொன்மையான தருமங்களின்பால் பார்வையைச் செலுத்து. கொடுத்த வாக்குறுதியைச் சத்தியமாக்கிக் காட்டு. இல்லையென்றால், இப்போதே என் பாணத்தால் கொல்லப்பட்டு, பிரேதபாவத்தை அடைந்து, யமலோகத்திற்குச் சென்று, அங்கே (முன்னரே சென்றுவிட்ட) வாலியைச் சந்திக்கும் நிலை ஏற்பட வேண்டாம்.'' மனுவம்சத்தைப் பெருமைப்படுத்துபவனும் மிக்க பராக்கிரமசாலியுமான அவன் (இலக்குவன்), தமையனார் எல்லையில்லாக் கோபத்தில் இருப்பதையும், மனம் நொந்து புலம்பிக் கொண்டிருப்பதையும் நன்கு கவனித்து, வானர மன்னனிடம் மிகவும் கடுமையாக நடந்துகொள்ள வேண்டும் என்று உறுதிபூண்டான். (84,85)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
முப்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்தொன்று

இலக்குவனின் சீற்றம்

அரசகுமாரரும் இராமனின் தம்பியுமான அவன் (இலக்குவன்), மனைவியிடம் பேரன்பு உடையவரும், சோகத்தில் மூழ்கி மனம் தளர்ந்திருந்தாலும் தைரியத்தைக் கைவிடாதவரும், (சுக்ரீவன் மீது) மேலும் மேலும் கோபம் கொண்டவரும், சக்கரவர்த்தித் திருமகனுமான தன் மூத்த சகோதரரை (இராமனை)ப் பார்த்து பின்வருமாறு கூறினான்— (1)

''அண்ணா! வானரனான சுக்ரீவன், சான்றோர்கள் கடைப்பிடிக்கும் வழியில் நிலையாக நிற்க மாட்டான். எந்தக் காரணத்தினால் (இராமனுடன், அக்னிசாட்சியாக உடன்படிக்கை செய்து கொண்டதால் தற்சமயம் அவன் அனுபவித்து வரும்) சுகங்கள் கிடைத்தன என்பதையும், அவன் எண்ணிப் பார்க்க மாட்டான். (செய்நன்றியை மறந்த) அவன், இனி அரசாட்சியை அனுபவிக்கப் போவதில்லை. (அவன் அனுபவிக்கும்படி நான் விடமாட்டேன்.) தன்னுடைய காரியத்தைச் சாதித்துக் கொள்வதற்கு ஏற்றபடித் திட்டமிட்ட அவன் அறிவு, அதன்பின் ஆற்றவேண்டிய கடமையைப் பற்றிச் சிந்திக்காமல் இருக்கிறது. (2)

வீரரே! அறிவுக்குறைவால், சிற்றின்பக் கேளிக்கைகளில் (சுக்ரீவன்) ஆழ்ந்துபோயிருக்கிறான். உங்களுடைய மகத்தான உதவிக்குப் பதில் உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் இல்லாத

அவன் கொல்லப்பட்டு, மாவீரனான வாலியை (மேலுலகில்) நேரில் சந்திக்கட்டும். (நான், சுக்ரீவனைக் கொன்றுவிடப் போகிறேன்.) தீய எண்ணமுடைய இவனுக்கு இந்த அரசு கொடுக்கத் தக்கதல்ல. என்னுடைய கோபத்தின் வேகம் அதிகரித்துக் கொண்டே போகிறது. என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை. கொடுத்த வாக்குத் தவறிய சுக்ரீவனை, இப்போதே கொல்லப் போகிறேன். வாலியின் மைந்தன் (அங்கதன்), மற்ற வானர வீரர்களோடுகூட, (ஜனக) மாமன்னரின் புதல்வியின் இருப்பிடத்தைத் தேடிக் கண்டுபிடிக்கட்டும்.'' (3,4)

இவ்வாறு, தன் எண்ணத்தை வெளியிட்டுவிட்டு, (சுக்ரீவனுடன்) போர் செய்வதில் மிகவும் முனைப்புக்காட்டி, வில்லை எடுத்துக் கொண்டு புறப்படத் தயாராகிவிட்ட அவனைப் பார்த்து, தனக்குள் ஆலோசனை செய்ததன் பலனாக இருப்பதும், நல்வழியைக் காட்டுவதுமான சொற்களைப் பகைவர்களை வேரறுக்கும் இராமன் கூறினார்— (5)

''உன்னைப் போன்ற ஒருவன் (நற்சிந்தனையாளன்) இப்படிப்பட்ட (நண்பனைக் கொல்வது என்ற) பாவச்செயலைச் செய்யலாகாது. எவனொருவன் தன் விவேக புத்தியால் கோபத்தை ஒழித்துக் கட்டுகிறானோ, அவன்தான் வீரன்; புருஷோத்தமன். லட்சுமணா! உயர்ந்த ஒழுக்கமுடைய நீ, இந்த (சுக்ரீவனைக் கொல்வது என்ற) முடிவை ஏற்றுக்கொள்ளக் கூடாது. முன்பு, நாம் அவனுடன் கொண்டிருந்த நட்புறவையும் அன்பையும் தொடர்ந்து கொள்வாய்! கடுமையான சொற்களை முற்றிலுமாக விட்டுவிட்டு, சாந்தமான முறையில் (சீதையைத் தேடுவதற்காகக் கொடுக்கப்பட்ட) காலக்கெடு கடந்துவிட்டது என்று நீ சொல்ல வேண்டும்.'' (6–8)

அந்தச் சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடி நடந்து கொள்ளவேண்டிய நெறிமுறையை தமையனார் சொல்லக் கேட்டு, எதிரிகளை அழிப்பவனும் மாவீரனும் புருஷோத்தமனுமான லட்சுமணன், (கிஷ்கிந்தா) நகருக்குச் செல்வதென்று தீர்மானித்தான். நேரான ஒழுக்கம் உடையவனும் மேதாவியும் தமையனாரின் நலனில் அக்கறை உடையவனுமான லட்சுமணன், பொங்கியெழும் கோபத்துடனேயே வானரனின் மாளிகை நோக்கிச் சென்றான். (9,10)

இந்திரனுடைய வில்லை நிகர்த்ததும் யமனைப் போல் (உயிரைப் பறிப்பதில்) பயங்கரமானதும் மலைமுகட்டைப் போன்றதுமான வில்லை எடுத்துக் கொண்டு, மந்தரமலை போன்றவனும், (தமையனார்) சொல்லியபடியே நடப்பவனும், பிருகஸ்பதிக்கு நிகரான பேரறிவுடையவனுமான இராம சகோதரன், (சுக்ரீவன் சொல்லக்கூடிய சமாதான) வாதங்களுக்கு எதிரான வாதங்களைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டே, (சீதையிடமுள்ள) அன்பினாலும் (சுக்ரீவனின் அலட்சியத்தினால் ஏற்பட்ட) கோபத்தினாலும் தமையனாருக்கு உண்டாகியுள்ள சீற்றத்தீயினால் சூழப்பட்டவனாக, சுக்ரீவனின் செயலில் அதிருப்தி அடைந்தவனாக, அப்போது லட்சுமணன் காற்றைப் போல் கடுகிச் சென்றான். (11–13)

தன்னுடைய வேகத்தினால் ஆச்சா, பனை, அசுவகர்ணம் முதலிய மரங்களைச் சாய்த்துக் கொண்டும், மலைச்சிகரங்களையும் மற்ற பெரிய மரங்களையும் பெயர்த்து எறிந்து கொண்டும், யானை போல் வேகமாக நடந்ததால் பாறைகளை உருட்டித் தள்ளிக் கொண்டும், ஒவ்வொரு காலடியையும் நீளமாக வைத்துக் கொண்டும் விரைந்து சென்றான், இக்ஷ்வாகு வம்சத்துச் சிங்கம் போன்ற இலக்குவன். அவன், மலைகளிடையே அமைந்ததும் போர்வீரர்களால் சூழப்பட்டதும், பிறரால் உட்புக முடியாததுமான அந்த கிஷ்கிந்தையைக் கண்டான். சுக்ரீவனிடம் ஏற்பட்ட பெருஞ்சீற்றத்தால் இலக்குவனின் உதடுகள் துடித்துக் கொண்டிருந்தன. பேருருவம் கொண்ட வானரர்கள், கிஷ்கிந்தையின் வெளிப்புறத்தில் நடமாடிக் கொண்டிருப்பதைப் பார்த்தான். (14–17)

புருஷோத்தமனான இலக்குவனைக் கண்டதும், யானைபோல் பலமும் தோற்றமுமுடைய வானரர்களும் மற்றுமுள்ள எல்லா வானரர்களும் மலைமுகடுகளையும் நூற்றுக்கணக்கான மாபெரும் மரங்களையும் பெயர்த்து எடுத்துக் கொண்டார்கள். அவர்கள் எல்லோரும் (எறிந்து தாக்கக் கூடிய மலை–மரங்கள் போன்ற) ஆயுதங்களைப் பற்றிக் கொண்டிருப்பதைக் கண்டதும்,

லட்சுமணனின் கோபம் எரிகிற தீயில் விறகுக்கட்டைகளைப் போட்டதைப் போல இரு மடங்காகப் பெருகிற்று. யுகத்தின் முடிவில் மிக பயங்கரமாக உருவெடுக்கும் காலனைப் போன்று, சினத்தால் கொதித்துக் கொண்டிருக்கும் அவனை, (அருகில்) பார்த்ததும் பேரச்சம் கொண்ட நூற்றுக்கணக்கான வானரர்கள், எல்லாப் பக்கங்களிலும் சிதறி ஓடிப் போனார்கள். (18–20)

உடனே, உயர் பொறுப்பிலிருந்த சில வானரர்கள் சுக்ரீவனின் அரண்மனைக்குச் சென்று, இலக்குவன் வந்திருப்பதையும், அவன் மிகவும் சீற்றத்தோடு இருப்பதையும் தெரிவித்தார்கள். அப்போது, அந்தப்புரத்தில் தாரையுடன் காமக்கேளிக்கைகளில் மூழ்கியிருந்த சுக்ரீவன், அந்த வானர வீரர்கள் கூறியதைச் செவியில் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே, அமைச்சர்களின் உத்தரவின்படி, மலை–யானை–மேகங்களைப் போன்றவர்களான (பயங்கரத் தோற்றத்தினாலேயே) மயிர்க்கூச்சலை உண்டாக்கும் வானரர்கள், அந்த நகரத்திலிருந்து, (இலக்குவனை எதிர்ப்பதற்கு) வெளியே புறப்பட்டார்கள். (21–23)

அவர்கள் எல்லோரும் பெரும்வீரர்கள்; நகங்களையும் பற்களையும் ஆயுதங்களாக உடையவர்கள்; பயங்கரமான தோற்றமுடையவர்கள்; புலிகளைப் போல் (தம் ஆற்றல் குறித்து) அகந்தை உடையவர்கள்; எல்லோருமே விகாரமான முகங்களையுடையவர்கள். அவர்களில் சிலர், பத்து யானை பலமுடையவர்கள்; சிலர், அதற்கும் பத்து மடங்கு அதிக பலமுள்ளவர்கள்; சிலர், ஆயிரம் யானைகளுக்கு நிகரான பராக்கிரமம் உடையவர்கள். மகாபலசாலிகளான வானரர்கள் (தன்னைத் தாக்குவதற்காகக்) கைகளில் மரங்களை வைத்துக் கொண்டு, யாராலும் வெற்றிகொள்ள முடியாத கிஷ்கிந்தை முழுவதிலும் நிறைந்திருப்பதைச் சீற்றத்தோடிருந்த லட்சுமணன் பார்த்தான். (24–26)

அதே நேரத்தில், பேராற்றலுடைய எல்லா வானரர்களும் மதிற்சுவர், அகழி ஆகியவற்றின் மறைவிடங்களிலிருந்து வெளியே வந்து (லட்சுமணன்) எதிரில் நின்றார்கள். சுயகட்டுப்பாடுடைய வீரனான அவன், சுக்ரீவனின் தவற்றையும், தன் தமையனாருக்கு ஆகவேண்டிய பெரும் செயலையும் எண்ணிப் பார்த்து, முன்னைக் காட்டிலும் அதிகமாகக் கோபம் கொண்டான். மனிதருள் புலி போன்ற அவன், வெகு உஷ்ணமாக நீண்ட பெருமூச்சுவிட்டுக் கொண்டு, கோபத்தால் சிவந்த கண்களுடன் புகையுடன் கூடிய நெருப்புப் போல் விளங்கினான். (27–29)

அம்பின் நுனி என்ற துடிக்கும் நாக்கு, வில்லாகிற படம், உள்ளார்ந்த பராக்கிரமம் என்ற விஷப்பெருக்கு – இப்படிப்பட்ட ஐந்து தலை நாகம் போலும், கொழுந்துவிட்டெரியும் பிரளயகால அக்னியைப் போலும், கோபம் கொண்ட அரவரசன் போலும் தோற்றமளித்த அவனை, அச்சத்துடன் அணுகிய அங்கதன் மிகவும் மனக்கவலை அடைந்தான். பெரும்புகழ் கொண்ட லட்சுமணன், கோபத்தால் சிவந்த கண்களுடன் அங்கதனைப் பார்த்து, ''குழந்தாய்! நான் இங்கே வந்திருப்பதாக, சுக்ரீவனுக்குத் தகவல் அனுப்பு. (30–32)

'இராமபிரானின் தம்பியும், எதிரிகளை அழிப்பவரும், தமையனாருக்கு ஏற்பட்டிருக்கும் துயரத்தால் தானும் தவித்துக் கொண்டிருப்பவருமான லட்சுமணன், உங்களைக் காண்பதற்காக வந்து நுழைவாயிலில் காத்துக் கொண்டிருக்கிறார். வானர (மன்னரே!) எனது சொற்களை நீங்கள் புரிந்துகொண்டால், மேற்கொண்டு தக்க நடவடிக்கை எடுங்கள்' என்று என் செய்தியைக் கூறிவிட்டு, விரைவில் திரும்பி வருவாயாக'' என்றான். லட்சுமணனுடைய சொற்களைக் கேட்ட அங்கதன், மிகவும் வருத்தத்தால் ஆக்கிரமிக்கப்பட்டவனாக சிற்றப்பனிடம் சென்று, ''லட்சுமணர் இங்கே வந்திருக்கிறார்'' என்று சொன்னான். (33–35)

(மேற்சொன்ன விஷயமே இந்தச் சுலோகத்தில் சற்று விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது.) அவனுடைய (இலக்குவனுடைய) சொல்லை வேகமாகச் செயல்படும் அங்கதன், தனக்குள் சிந்தித்துப் பார்த்து, அதனால் உள்ளம் கலங்கி, முகம் சோர்ந்து (அரண்மனைக்குச் சென்று) மன்னரின் பாதங்களில் மௌனத்துடன் சேவித்து வணங்கினான். மாவீரனான அவன் சிற்றப்பனின் பாதங்களில் வணங்கியபின், பெற்ற தாயான தாரையின் பாதங்களில் விழுந்து

வணங்கினான். பின்னர், ருமையின் கால்களில் விழுந்து வணங்கிவிட்டு, முன்னர் கூறிய பொருள் செறிந்த செய்தியைக் கூறினான். (36,37)

அவன் (சுக்ரீவன்), உறக்கமும் குடிபோதையும் மேலிட்டவனாக, காமவேட்கையால் மெய்மறந்து தூக்கம் கலையாதவனாகவே இருந்தான். (அரண்மனையில் இவ்வாறு இருக்கும் போது, வெளியே) சினத்தால் கொதித்துக் கொண்டிருந்த லட்சுமணனைப் பார்த்த வானரர்கள், அச்சத்தால் உள்ளம் உடைந்து, அவனை அமைதிப்படுத்தும் நோக்கத்துடன், தீனமான குரலில் கலகலவென்று ஒலியெழுப்பினார்கள். வஜ்ராயுதம் போலும் இடி போலும் கர்ஜித்துக் கொண்டு, பெரும் வெள்ளத்தைப் போல் பாய்ந்து வரும் இலக்குவன் அருகில் வருவதைக் கண்டவுடன், அவர்கள் ஒரே குரலாக சிங்கநாதம் எழுப்பினார்கள். கள்ளுண்டு மதிமயங்கி சிவந்த கண்களுடைய சுக்ரீவன், மாலைகளும் அணிகலன்களும் நழுவி விழ, அந்த மாபெரும் ஓசையால் கண்விழித்துக் கொண்டான். (38–41)

அப்போது, அங்கதனின் ஆலோசனையைக் கேட்டு, வானர மன்னனுக்கு நெருக்கமானவர்களும், அந்தப்புரத்திற்குள் சென்று அரசிகளைப் பார்க்கும் உரிமை உடையவர்களுமான இரு அமைச்சர்கள், அவனுடனேயே உள்ளே சென்றார்கள். ப்லக்ஷன், ப்ரபாவன் என்ற அவ்விரு அமைச்சர்களும் தருமம், அர்த்தம் சம்பந்தமான சில விஷயங்களைப் பேசுவதற்காக லட்சுமணர் வந்திருப்பதாகத் தெரிவித்தார்கள். முன்கூட்டியே ஆழமாகச் சிந்தனை செய்து தீர்மானிக்கப்பட்ட பயன் தரும் வார்த்தைகளால், தேவமன்னனான இந்திரன் போல் வீற்றிருக்கும் சுக்ரீவனை உள்ளங்குளிரச் செய்து, அவ்விரு அமைச்சர்களும் (பின்வருமாறு) கூறினார்கள்— (42–44)

''சொன்ன சொல் தவறாதவர்கள்; மிகவும் பேறுபெற்றவர்கள்; இராமன், லட்சுமணன் என்ற பெயர் கொண்ட சகோதரர்கள்; நம்முடன் நட்புறவு கொண்டவர்கள்; நாட்டை ஆளத்தக்கவர்கள்; தங்களுக்கு ஆட்சியை அளித்தவர்கள். அவர்களில் ஒருவரான லட்சுமணர், வில்லும் கையுமாக வாசலில் நிற்கிறார். அவரைக் கண்டு பயந்து நடுங்கும் வானரர்கள் பேரொலியை எழுப்புகிறார்கள். இராமபிரானுடைய சகோதரரான லட்சுமணர், கடமையைச் செய்தல் என்ற ரதத்தில் ஏறி, இராமனுடைய ஆக்ஞை என்ற தேரோட்டியாக, இராமனுடைய கட்டளைப்படி வந்திருக்கிறார். பாவம் அறியாத மன்னரே! தாரையின் மைந்தனான அங்கதன், லட்சுமணரால் தங்களுக்கு விரைவாகத் (தகவல்) தெரிவிக்கும்படி அனுப்பப்பட்டார். (45–48)

வானரர் தலைவரே! மாவீரரான அவர், கோபத்தால் கொதிக்கும் கண்பார்வையாலேயே வானரர்களை எரித்து விடுவதைப் போல வாசலில் நின்று கொண்டிருக்கிறார். மாமன்னரே! தாங்கள், புதல்வன்–பந்துக்களோடு விரைவாகச் சென்று, அவர்முன் தலைதாழ்த்தி வணங்கி, அவருடைய கோபத்தை விரட்டி அடியுங்கள். அரசே! தருமாத்மாவான இராமன் சொல்வதைக் கேட்டு, விடாமுயற்சியுடன் அதைச் செய்து முடியுங்கள்; நீங்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதில் உறுதியாக இருங்கள்; சொன்ன சொல் தவறாதவர் என்று பெயர் பெறுங்கள்.'' (49–51)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
முப்பத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்து இரண்டு

அனுமான் நல்லுரை கூறுதல்

இலக்குவன், கோபத்துடன் வந்திருப்பதாக அமைச்சர்களும் அங்கதனும் கூறிய செய்தியைக் கேட்டதும், சுயநினைவை அடைந்து இருக்கையை விட்டு எழுந்து நின்றான், சுக்ரீவன். ஆட்சி

முறைகளில் நிபுணனாகிய அவன், (இராமனுடைய) பெருமைகளையும், (தன்னுடைய) சிறுமைகளையும் சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்தவனாக, அரசு காரியங்களில் நன்கு அனுபவம் பெற்றவர்களும் சிறந்த ஆலோசகர்களுமான அந்த அமைச்சர்களைப் பார்த்து(ப் பின்வருமாறு) கூறினான்— ''நான், (இராமனைப் பற்றி) எந்தக் குற்றங்குறைகளையும் சொன்னதில்லை. நான் அவரிடம் தவறாக நடக்கவும் இல்லை. பின், ஏன், இராமபிரானின் தம்பியான லட்சுமணர் என்மேல் கோபம் கொண்டிருக்கிறார்? என்பது புரியவில்லை. (1–3)

எனக்குத் தீங்கு செய்யத்தக்க சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்களும், என்னிடம் நல்லெண்ணம் வைக்காத பகைவர்களும், என்னிடத்தில் இல்லாத குற்றங்களை லட்சுமணரிடம் கூறியிருக்கிறார்கள் (என்று எண்ணுகிறேன்). (லட்சுமணர் கோபத்தோடு இருக்கும்) இந்த விஷயத்தில், நீங்களெல்லோரும் நன்றாக ஆலோசித்து, 'அவர் மனம் இவ்வாறு மாறுவதற்குக் காரணமென்ன?' என்பதை, முறைப்படி சிந்தித்துத் தயக்கமின்றி ஒரு முடிவுக்கு வரவேண்டும். (4,5)

இலக்குவனிடமோ அல்லது இராமபிரானிடமோ எனக்குப் பயமேற்படவில்லை. ஆனால், நண்பராகிய இவர் எந்தவொரு காரணமுமில்லாமல் என்மேல் கோபம் கொண்டிருக்கிறார் – என்பதுதான் மனக்குழப்பத்தை உண்டாக்குகிறது. எந்தக் காலத்திலும் ஒருவனை நண்பனாக்கிக் கொள்வது மிகவும் சுலபம். ஆனால், நட்பைத் தொடர்ந்து காப்பாற்றுவதுதான் கஷ்டம்! காரணம், மனம் நிலையில்லாதது. அற்ப காரணங்களால்கூட நட்பு முறிந்து விடுகிறது. இதனால்தான் எனக்கு இப்போது பயம் உண்டாகிறது. மகாத்மாவான இராமன், எனக்குச் செய்துள்ள மகத்தான உதவிக்கு ஈடான கைம்மாறு என்னால் செய்ய முடியாது.'' (6–8)

இவ்வாறு சுக்ரீவன் கூறி முடித்ததும், வாயு குமாரரான அனுமான், வானர மந்திரிகள் கேட்டுக் கொண்டிருக்கும்போதே, தன்னுடைய ஆலோசனையைக் கூறினார்— ''வானரக் கூட்டங்களின் தலைவரே! உள்ளங்கவர்ந்த தோழர், தக்கச் சமயத்தில் செய்த மங்களகரமான பேருதவியைத் தாங்கள் மறக்கவில்லை – என்பதில் எள்ளளவும் ஆச்சரியமில்லை. (நன்றி மறவாமை என்பது மேலோர்களின் இயல்பான குணம்தானே?) உங்கள் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகத்தான் (போர்நெறியிலிருந்து விலகிய குற்றம் ஏற்படுமோ? என்ற) அச்சத்தை உதறித் தள்ளிவிட்டு, இந்திரனுக்கு நிகரான பேராற்றல் படைத்த வாலி கொல்லப்பட்டார். (9–11)

உங்களிடமுள்ள ஆழ்ந்த நட்பினால்தான் அவர் கோபம் கொண்டிருக்கிறார் (பகையுணர்ச்சியால் அல்ல) என்பதில் சந்தேகமில்லை. அதனால்தான் திருவளர்ச்செல்வரான லட்சுமணரைத் தங்களிடம் அனுப்பியிருக்கிறார். (பருவ) காலக்கணக்கு தெரிந்தவர்களில் தலையாயவரே! தங்கள் மனம் (வேறு விஷயங்களில் ஈடுபட்டுக் கலங்கியிருந்ததால், இப்போது என்ன ருது? என்று அறியாமலிருக்கிறீர்கள். இப்பொழுது (மழைக்காலம் முடிந்து) சரத்காலம் நடக்கிறது. ஏழிலைப்பாலை மரங்களில் மலர்கள் பூத்துக் கண்கவர் கருமை படர்ந்திருக்கிறது. (12,13)

வானத்தில் மேகங்கள் இல்லாததால், வான் மண்டலத்திலுள்ள கிரகங்களும் நட்சத்திரங்களும் தெளிவாகத் தெரிகின்றன; எல்லாத் திசைகளும் நதிகளும் பொய்கைகளும் தெள்ளென விளங்குகின்றன. வானர மன்னரே! தாங்கள் மதிமயங்கி இருக்கிறீர்கள் என்பது உறுதி. அதனால்தான், (சீதையைத் தேடும்) முயற்சியில் ஈடுபடுவதற்கான காலம் (முன்னரே) வந்துவிட்டது என்பதைத் தாங்கள் அறியவில்லை. ஆகவேதான், மாவீரரான லட்சுமணர் (உங்கள் கடமையை நினைவூட்டுவதற்காக) இங்கே வந்திருக்கிறார். மனைவி அபகரிக்கப்பட்டு, மனம் வருந்திக் கொண்டிருக்கும் மகாத்மா இராமன், (தங்களிடம் கோபம் கொண்டு) கடுமையாகப் பேசியதைக் கேட்டு, (லட்சுமணர்) அந்தக் கடுமையான சொற்களைத் தங்களிடம் சொல்வதைத் தாங்கள் பொறுத்துக் கொள்ள வேண்டும். (14–16)

குற்றம் செய்துவிட்ட தாங்கள், அவரை அமைதி கொள்ளச் செய்வதற்காக, லட்சுமணர் முன் கைகூப்பி வணங்கி வேண்டி நிற்பதைத் தவிர, பயனளிக்கக்கூடிய வேறு எந்தவொரு

வழியையும் நான் காணவில்லை. நாட்டின் நலன் குறித்து ஆலோசனைகள் கூறுவதற்காக நியமிக்கப்பட்டுள்ள அமைச்சர்கள், ஆட்சித் தலைவனான மன்னனுக்கு நன்மை தரக்கூடிய ஆலோசனையை அவசியம் எடுத்துக் கூறவேண்டும் என்ற காரணத்தால் ('இம்மாதிரி பேசலாமோ, கூடாதோ?' என்ற) பயத்தை விட்டு, தீர்மானமான யோசனையைக் கூறியிருக்கிறேன். (17,18)

இராமன், சினங்கொண்டு கையில் வில்லை எடுத்தாரேயானால், தேவர்–அசுரர்–கந்தர்வர் உள்ளிட்ட உலகமனைத்தையும் தன் கட்டுப்பாட்டில் நிலைநிறுத்த வல்லவர். (செய்த குற்றத்தை மன்னிக்கும்படி) அடிபணிந்து வேண்டிக் கொள்ளப்பட வேண்டியவரை, (அவ்வாறு செய்யாமல்) அவர் கோபத்தை வளர்க்கும் விதமாக எதுவும் செய்யக்கூடாது. முக்கியமாக, முன்பு அவர் செய்த உதவியை மறவாதவரும் நன்றி பாராட்டுபவருமான தாங்கள் அவ்வாறு எதுவும் செய்யக் கூடாது. (19,20)

ஆகவே, மன்னரே! தாங்கள் புதல்வனோடும் நண்பர்களோடும் சென்று, அவர் எதிரில் தலைதாழ்த்தி வணங்கி, முன்னர் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதில், ஒரு மனைவி தன் கணவனின் கட்டுப்பாட்டில் இருப்பதைப் போலவே உறுதியாக இருங்கள். வானர மன்னரே! இராம–லட்சுமணர்களின் ஆணையைப் புறக்கணிக்கலாம் என்று தாங்கள் மனத்தாலும் எண்ணக் கூடாது. இந்திரனுக்கு நிகரான பராக்கிரமமுடைய அவர், மானுடர்களிடம் காணப்படாத பேராற்றல் உடையவர் என்பதைத் தங்கள் நெஞ்சம் அறியும். அத்துடன், லட்சுமணரும் அவருடன் இருக்கிறார் (என்பதை நினைவில் கொள்ளுங்கள்).'' (21,22)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
முப்பத்து இரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்து மூன்று

தாரை, லட்சுமணனை அமைதிப்படுத்துதல்

பகைவீரர்களை அழிக்கவல்ல லட்சுமணன், (அங்கதனால்) உள்ளே வரும்படி அழைக்கப் பட்டான். இராமனுடைய கட்டளைப்படி, கிஷ்கிந்தை என்ற அழகிய குகைக்குள் பிரவேசித்தான். கிஷ்கிந்தையின் நுழைவாயிலில் இருந்த பேருடல் கொண்டவர்களும் மகாபலசாலிகளுமான வானரர்கள் எல்லோரும், லட்சுமணனைப் பார்த்ததும் எழுந்து கைகூப்பியவண்ணம் நின்றார்கள். தசரதனின் புதல்வனான அவன், பெருங்கோபத்துடன் பெருமூச்சுவிட்டுக் கொண்டிருப்பதைக் கண்ட வானரர்கள் மிகவும் அச்சமடைந்ததால், அவனை நெருங்கவேயில்லை. (1–3)

அந்தப் பெரிய குகை, மிகவும் அழகாக இரத்தினங்கள் இழைக்கப்பட்டதாக தேவலோகம் போன்றதாக விளங்கிற்று. மலர்ந்த மலர்களையுடைய பூங்காக்கள்; எங்கும் கொட்டிக் கிடக்கும் அபூர்வமான பொருள்கள்; செல்வந்தர்களின் மாளிகைகள்; அரச குடும்பத்தினருக்கான அரண்மனைகள்; திருக்கோவில்கள்; பல்வகையான பண்டங்களை விற்கும் கண்கவர் கடைகள்; எல்லாக் காலங்களிலும் பழங்களைத் தரக்கூடிய மரங்களில் அழகான மலர்கள்; தேவ–கந்தர்வர்களின் (அம்சமாகத் தோன்றிய) புதல்வர்கள்; விரும்பும் உருவம் எடுக்க வல்லவர்கள்; அற்புதமான மாலை–ஆடை அணிந்தவர்களும் பரவசமூட்டும் இனிய தோற்றமுமுடைய வானரர்கள்; சந்தனம், அகில், தாமரை ஆகியவற்றின் நறுமணம் மற்றும் மைரேயம் (தரமற்ற மது), தேன் ஆகியவற்றின் வாசனையால் மனமயக்கத்தை உண்டாக்கும் நெடுஞ்சாலைகள்; விந்தியம், மேருமலை போல் மிகவும் உயரமாக பல உப்பரிகைகளையுடைய பெருமாளிகைகள்; தெள்ளிய நீரையுடைய மலையருவிகள் போன்றவற்றைத் திருவளர்செல்வனான லட்சுமணன் பார்த்துக் கொண்டே சென்றான். (4–8)

லட்சுமணன், அரசபாட்டையில் நடந்து சென்றபோது, அங்கதனுடைய அழகிய மாளிகை மற்றும் மைந்தன், த்விவிதன், கவயன், கவாக்ஷன், கஜன், சரபன், வித்யுந்மாலி, ஸம்பாதி, சூர்யாக்ஷன், அனுமான், வீரபாகு, சுபாகு, மகாத்மாவான நளன், குமுதன், ஸுஷேணன், தாரன், ஜாம்பவான், ததிவக்த்ரன், நீலன், சுபாடலன், சுநேத்ரன் ஆகியப் பெருவீரர்களுடைய மாளிகைகள் யாவும் உறுதியாகக் கட்டப்பட்டு வெண்முகில்கள் போல் விளங்குவதையும், திவ்யமான மாலைகள் நிறைந்து தன–தானியச் செழிப்புடன் இருப்பதையும், உத்தம நங்கைகளால் சோபையுடன் திகழ்வதையும் கண்டான். (9–13)

வானர மன்னனான சுக்ரீவனின் அரண்மனை, தேவேந்திரனுடைய மாளிகை போல் பேரழகுடன் விளங்கிற்று. யாரும் உட்புகமுடியாதபடிச் சுற்றிலும் வெண்மையான கோட்டைச்சுவர்; கைலாச மலையைப் போன்று வெண்மையான உயர்ந்த மதிற்சுவர்கள்; எல்லாப் பருவங்களிலும் பழங்களைக் கொடுக்கக் கூடிய மரங்களில் அலர்ந்து அழகூட்டும் மலர்கள்; இந்திரனால் கொடுக்கப்பட்டதும், நீருண்ட மேகம் போல் கறுத்த குளிர்ச்சியான நிழலுடையதும், பழங்கள்–மலர்கள் குலுங்க மனத்தைக் கொள்ளை கொள்பவைகளுமான மரங்கள்; கையில் ஆயுதம் தாங்கிய மகாபலசாலிகளான வானரர்களால் காவல் காக்கப்படும் நுழைவாயில்; அற்புதமான மாலைகளால் பொலிவுற்று விளங்குவதும் தூய்மையானதும் பத்தரைமாற்றுத் தங்கத்தால் செய்யப்பட்டதுமான தோரணங்கள் – இவ்வாறான சுக்ரீவனின் அழகிய மாளிகைக்குள், பெரிய மேகத்திற்குள் (தடைபடாமல்) சூரியன் செல்வதைப் போல, யாராலும் தடுக்கப்படாமல், (தனது கம்பீரத் தோற்றத்தினாலேயே அனைவரையும் அடங்கச்செய்து) இலக்குவன் புகுந்தான். (14–18)

பல மக்கள் நிறைந்திருந்த ஏழு கட்டுகளைக் கடந்து, மிகவும் மறைவாக இருப்பதும், பொன்–வெள்ளியினாலான கட்டில்களை உடையதும், ஆங்காங்கே விலையுயர்ந்த விரிப்புகள் விரிக்கப்பட்டதும், பலவகையான சிறந்த இருக்கைகளால் அழகுடன் விளங்குவதுமான பெரிய அந்தப்புரத்தை அறநெறியாளனான லட்சுமணன் பார்த்தான். அவன் நுழையும்போதே, தந்தி இசைக்கருவி (வீணை போன்றவை) வாய்ப்பாட்டுடன் சமம் என்ற இசை மரபுக்கேற்ற பதம்–அட்சரங்களுடன் கூடிய பாடல், அங்கு எப்போதும் சூழ்ந்திருக்கக் கூடியதுமான இனிய ஒலிகளைக் கேட்டான். பேராற்றல் படைத்த அவன், சுக்ரீவனின் மாளிகையில் பற்பல தோற்றம் கொண்டவர்களும் அழகும் இளமையும் கொண்டு செருக்குடன் இருப்பவர்களுமான பல பெண்மணிகளைக் கண்டான். (19–22)

அவர்கள் எல்லோரும் உயர்ந்த குலத்தில் பிறந்தவர்கள்; பல வண்ண மலர்களாலான மாலைகளை அணிந்திருந்தார்கள்; சிறந்த மாலைகளைத் தொடுப்பதில் ஈடுபட்டிருந்தார்கள்; உயர்வகை அணிகலன்களால் தங்களை அலங்கரித்துக் கொண்டிருந்தார்கள். (இலக்குவன்) இவர்களைப் பார்த்த பின்னர், சுக்ரீவனின் பணியாட்களையும் பார்த்தான். அவர்களில் எவரும் மனக்குறையுடனோ, பணிகளில் ஆர்வமில்லாதவர்களாகவோ, முதல்தரமான ஆடை–அணிகலன்கள் அணியாதவர்களாகவோ இல்லவேயில்லை. (அவர்களனைவரும் செழிப்புடன் இருந்தனர்.) (23,24)

மிக்க பெருமை பொருந்திய லட்சுமணன், காற்சிலம்புகளின் ஜல்ஜல் ஓசையையும், ஒட்டியாணங்களிலிருந்த மணிகளின் கிண்கிணி நாதத்தையும் கேட்டு, ('அந்நியப் பெண்கள் இருக்குமிடத்திற்கு வந்துவிட்டோமோ?' என்று) மிகவும் வெட்கமடைந்தான். (பெண்கள் அணியும்) அணிகலன்களின் ஓசையைக் கேட்டதும், ('இந்த இடத்திற்கு என்னை அழைத்துக் கொண்டு வந்து விட்டார்களே?' என்று) முன்னிலும் அதிகமான கோபத்தை அடைந்து, வீரனான அவன், நாண்கயிற்றில் பேரொலி எழுப்பி, எல்லாத் திசைகளையும் நிரப்பினான். தோள்வலி மிகுந்த லட்சுமணன் ரகு குலத்தின் ஒழுக்கநெறிகளை நினைத்துப் பார்த்து கொஞ்சம் பின்வாங்கி, ஏகாந்தமான ஓர் இடத்திற்குச் சென்று, இராமபிரானின் சோகத்தை மனத்திற்குள் எண்ணிக் கொண்டு நிலையாக நின்றான். (25–27)

வானர மன்னனான சுக்ரீவன், வில்லின் நாணொலியைக் கேட்டதும், (லட்சுமணன்) வந்திருப்பதை அறிந்துகொண்டு, மிகவும் பயந்து நடுங்கி, சிம்மாசனத்திலிருந்து உடனே எழுந்தான். 'முன்பு அங்கதன் என்னிடம் தெரிவித்தபடி, சகோதர பாசமுடைய லட்சுமணர் வந்திருக்கிறார் என்பது நிச்சயமாகத் தெரிகிறது.' அங்கதன், சுக்ரீவனுக்கு முன்னரே இதுபற்றித் தெரிவித்துவிட்டான். இப்போது, நாணொலி கேட்கிறது. எனவே, 'லட்சுமணர் வந்துவிட்டார்' என்பதை அறிந்து கொண்டான். அதனால், அவன் முகம் சுண்டிப் போயிற்று. (28–30)

வானரோத்தமனான சுக்ரீவன், அச்சத்தால் மனம் குழம்பிப் போனான். (லட்சுமணனை நேரில் காணும் தைரியம் உண்டாகவில்லை.) ஒருவழியாகத் தன்னைத் தேற்றிக் கொண்டு, பேரழகியான தாரையைப் பார்த்து, அந்தச் சூழ்நிலையில் நன்மை பயக்கக்கூடிய வார்த்தைகளைச் சொன்னான்— "அழகியவளே! இயல்பாக இளகிய மனமுடைய லட்சுமணர், இப்போது கோபத்துடன் வந்திருக்கிறார். அதன் காரணம் என்னவென்று புரியவில்லை. பெண்ணரசியே! உத்தமமான மனிதராகிய அவர் காரணமில்லாமல் கோபம் கொள்ளமாட்டார். அரசகுமாரரான லட்சுமணரின் கோபத்திற்குக் காரணம் என்ன? என்று உனக்குத் தோன்றுகிறது. (31–33)

இவருக்கு நாம் ஏதேனும் தவறு இழைத்திருப்பதாக உனக்குத் தோன்றினால், அது பற்றிய விவரம் உனக்கு தெரிந்திருந்தால், உடனே என்னிடம் சொல். நங்காய்! (லட்சுமணருடைய கோபத்தின் காரணம் உனக்கும் தெரியாவிட்டால்) நீயே நேரில் சென்று பார்க்க வேண்டும். கோபத்தைப் போக்கக்கூடிய சாந்தமான சொற்களால் அவரை மனங்குளிரச் செய்யவேண்டும். உன்னைக் கண்டதும் மனம் தெளிந்தவராகிக் கோபத்தை வெளிப்படுத்த மாட்டார். ஏனென்றால், சான்றோர்கள் பெண்களிடம் கடுமையாக நடந்துகொள்ள மாட்டார்கள். உன்னுடைய சமாதான சொற்களைக் கேட்டு, தாமரைக்கண்ணரும் எதிரிகளை அடக்குபவருமான அவர் கோபத்தை அடக்கி, தெளிந்த புலன்களும் மனமும் உடையவராக ஆனபின்னர், நான் சென்று பார்க்கிறேன்." (34–37)

மதுமயக்கத்தால் அலைபாயும் விழிகள்; தள்ளாடிய நடை; பொன்னாலான இடுப்பணியின் ஞாண் கயிறு (முடிச்சு அவிழ்ந்து) தொங்கிக் கொண்டிருந்தது. இயல்பாகவே நற்குணங்களை உடையவளாதலால் (அந்தக் கோலத்தில் அந்நிய புருஷனைச் சந்திக்க நேர்ந்ததால்) குனிந்த மேனியுடைய அழகியான தாரை, (சுக்ரீவன் ஆணைக்கிணங்க) லட்சுமணன் இருந்த இடத்திற்குப் போய்ச் சேர்ந்தாள். நற்குணங்கள் நிரம்பியவனும், மாமன்னரின் புதல்வனுமான அவன் (லட்சுமணன்), வானர மன்னனின் மனைவியான அவளைப் பார்த்ததும், (வா, போ – என்று விருப்போ வெறுப்போ காட்டாமல்) அலட்சியத்தால் மௌனமாக இருந்தான். ஒரு மங்கை அருகில் இருந்ததால் கோபத்தைக் கைவிட்டான். (38,39)

அவள், மது அருந்தியிருந்ததாலும் மாமன்னனின் திருக்குமாரருடைய பார்வை தன்மேல் பட்டதாலும் நாணத்தைத் துறந்து, நேசத்தை வெளிப்படுத்தும் பொருட்செறிவுடைய சொற்களால் சமாதானப்படுத்தும் முறையில் (பின்வருமாறு) கூறினாள்— "சக்கரவர்த்தியின் திருப்புதல்வரே! தங்களுடைய கோபத்திற்குக் காரணம் என்னவோ? தங்கள் சொல்லாணையை மதிக்காதவன் எவனாவது இருக்கிறானா? பட்டுப்போன மரங்களையுடைய காட்டில், பிரளயாக்னி சூழ்ந்திருக்கும் போது அச்சமில்லாமல் அதற்குள் நுழைய முயல்பவன் யார்?" (பிரளயகால அக்னி போன்ற தங்களை, எவரேனும் எதிர்த்து நிற்க முடியுமா?) ஐயத்திற்கு இடமில்லாமல் நட்பை வெளிப்படுத்தி மனத்தைக் குளிர வைக்கும் தாரையின் சொற்களைக் கேட்டு, லட்சுமணன் பதில் சொன்னான்— (40–42)

"கணவனுக்கு நன்மை செய்வதில் ஆர்வமுடையவளே! உன்னுடைய கணவன், இன்பநுகர்ச்சியில் மூழ்கியவனாய், தரும–அர்த்தத்தைப் பரிபாலிப்பதை முற்றிலும் கைவிட்டு விட்டான். இதை ஏன் நீ அவனிடம் எடுத்துக் கூறவில்லை? தாரையே! அரசாட்சியை

அனுபவித்துக் கொண்டிருக்கும் அவன், சோகத்தால் தவித்துக் கொண்டிருக்கும் எங்களைப் பற்றி எண்ணிப் பார்க்கவேயில்லை. தன்னுடைய அமைச்சர்கள் மற்றும் அவையோர்களுடன் குடித்து கும்மாளமடிப்பதிலேயே காலம் கழிக்கிறான். வானர மன்னன், நான்கு மாத காலம் கெடு கொடுத்திருந்தான். ஆனால், குடிவெறியிலும் சிற்றின்பத்திலும் ஈடுபட்ட அவன், அந்த கெடு கடந்து விட்டதை அறிந்துகொள்ளாமல் இருக்கிறான். (43–45)

'கள்ளைக் குடிப்பது தருமார்த்தத்தைக் கொடுக்கக்கூடியது' என்று எவ்விடத்திலும் புகழ்ந்துரைக்கப்படவில்லை. (மாறாக,) கள்குடியினால் தருமம், அர்த்தம், காமம் ஆகிய மூன்று புருஷார்த்தங்களும் அழிந்துவிடுகின்றன. நண்பனால் உதவி செய்யப் பெற்றவன், கைம்மாறு செய்யவேண்டிய தருணத்திலும் செய்யாது போனால் தருமத்திற்குக் குறைவுண்டாகும். (பாவம் ஏற்படும்.) நற்குணங்களுடைய நண்பனின் நட்பை முறித்துக் கொள்வதால் பொருள் நாசமும் ஏற்படுகிறது. (சுக்ரீவன் நன்றியைக் காட்டத் தவறினால், இப்போதைய ஆட்சிகூட பறிபோய்விடலாம் என்பது ரஹஸ்யார்த்தம்.) (46,47)

சத்தியத்திலும் தருமத்திலும் உறுதியாக இருப்பவரும், மேன்மையான குணங்களைக் கொண்டவருமான நண்பரை, எக்காரணம் கொண்டும் கைவிட்டு விடக்கூடாது. ஆனால், உன் கணவனோ இவை இரண்டையும் துறந்துவிட்டான். அவன் தருமநெறியில் உறுதியாக இருக்கவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. செயல்களின் விளைவுகள் பற்றி நன்றாக அறிந்துள்ள அம்மையே! நிலைமை இவ்வாறிருக்கையில், (சுக்ரீவன் நட்புநெறி தவறி நடந்துகொண்டுவிட்ட நிலையில்) நாங்கள் எந்தக் காரியத்தில் முனைந்திருக்கிறோமோ, அதை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு, இனிமேல் என்ன செய்யவேண்டும்? என்பதை நீயே சொல்.'' (48,49)

தருமம்–அர்த்தங்களோடு கூடியதும், எல்லோரையும் வசீகரிக்கக்கூடிய இனிய இயல்பை வெளிப்படுத்துவதுமான அவனுடைய சொற்களைக் கேட்டு, 'இராமபிரான் எந்தக் காரியத்தில் முனைந்திருக்கிறார்?' என்பதை முன்னரே அறிந்திருந்த தாரை, அவனுக்கு நம்பிக்கையூட்டும் பதிலைக் கூறினாள்— ''கோமானின் புதல்வரே! வீரரே! இது தாங்கள் கோபம் கொள்வதற்கு ஏற்ற சமயமன்று. தன்னைச் சேர்ந்தவர்களிடம் மிகுந்த கோபம் கொள்வதும் சரியானதல்ல. ('குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை.') அவருடைய (சுக்ரீவனுடைய) மனத்தில் எப்போதும் உங்கள் காரியத்தைப் பற்றிய நினைவு இருக்கிறது. எனவே, அவருடைய தவற்றை நீங்கள் பொறுத்தருள வேண்டும். (50,51)

அரசகுமாரரே! நற்குணங்கள் நிரம்பப் பெற்ற ஒருவன், தாழ்ந்த குணமுள்ளவனிடம் கோபத்தைக் காட்டுவானா, என்ன? உத்தமமான குணங்கள் பொருந்தி, பொறுமைக்குப் பிறப்பிடமான உங்களைப் போன்றவர்கள் கோபத்தைக் காட்டுவார்களோ? வானர மன்னன் சுக்ரீவனிடம் நல்லுறவு வைத்துள்ள இராமபிரானின் கோபத்திற்குக் காரணத்தை நான் அறிவேன்; உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்ட காலக்கெடு கடந்து விட்டதையும் நான் அறிவேன்; தங்களால் எங்களுக்குச் செய்யப்பட்ட மகத்தான காரியத்தையும் நான் அறிவேன்; (உங்கள் முயற்சியில் வெற்றி காண்பதற்கு,) இப்போது என்ன செய்யப்பட வேண்டும்? என்பதையும் நான் அறிவேன். (52,53)

புருஷோத்தமரே! காமனுடைய பலம் எவ்வளவு வலுவானது, அடக்கமுடியாதது என்பதை நான் அறிவேன்; சுக்ரீவன், எவளிடம் மனத்தைப் பறிகொடுத்து, காமத்தால் கட்டுண்டு, வேறு செயல்களைப் பற்றிச் சிந்திக்காமலிருக்கிறார் என்பதையும் நான் அறிவேன். தாங்கள் இப்போது கோபவசப்பட்டிருக்கிறீர்கள். (ஆதலால், தங்களுக்குச்) சிற்றின்பக் கேளிக்கைகளில் மனம் செல்லவில்லை. காமத்தில் பெரும் பற்றுடைய மனிதன் இடம், காலம், அர்த்தம், தருமம் ஆகியவற்றை நினைத்துப் பார்க்கவே மாட்டான். (மனிதர்கள் சுபாவமே இப்படி – என்றால் குரங்குகளாகிற நாங்கள் எம்மாத்திரம்?) பகைவீரர்களை அழிப்பவரே! காமவெறியால்

ஆட்கொள்ளப்பட்டு, வெட்கத்தைத் துறந்து, காமக்களிப்பில் மூழ்கிக்கிடக்கும் அவர், இப்போது என் அருகில்தான் இருக்கிறார். வானரர் குலத் தலைவரும், தங்கள் சகோதரர் போன்றவருமான அவரை மன்னிக்க வேண்டும். (54–56)

அறநெறியில் புலன்களை வசப்படுத்தித் தவத்தில் ஈடுபட்டவர்களான மாமுனிவர்கள்கூட சிற்றின்பத்தில் பெரும் வேட்கை கொண்டு மதிமயங்கி இருக்கிறார்கள். (உங்கள் விசுவாமித்திரைப் பற்றி எனக்குத் தெரியும் – என்பது உள்ளுறை பொருள்.) இவர் (சுக்ரீவன்) இயற்கையாகவே மனச்சஞ்சலமுடைய வானரர்; (வெகுநாட்கள் உயிருக்கு அஞ்சி, மறைந்து வாழ்ந்து, அண்மையில்தான்) மன்னர் ஆனவர். அப்படிப்பட்டவர் சிற்றின்பங்களில் எப்படி மூழ்காமல் இருப்பார்?'' இணையில்லாத பேராற்றல் படைத்த இலக்குவனைப் பார்த்து மதுபோதையால் சுழலும் கண்களுடன் கூடிய சுக்ரீவ பத்தினி, மேற்கொண்டவாறு பொருள் பொதிந்த சொற்களைக் கூறி, (லட்சுமணனுக்கு) நம்பிக்கையூட்டுவதும் தன் கணவனுக்கு நன்மை பயக்கக் கூடியதுமான பின்வரும் சொற்களைக் கூறினாள்— (57,58)

''மாமனிதரே! சுக்ரீவன், காமத்திற்கு அடிமைப்பட்டுக் கிடந்தாலும், உங்களுடைய காரியத்தை நிறைவேற்றிக் கொடுப்பதற்குத் தேவையான அரசாணைகளை எப்போதோ பிறப்பித்துவிட்டார். அதனால், பல்வேறு மலைகளில் வசிக்கின்றவர்களும் மகாவீரர்களும் நினைத்த உருவம் எடுக்க வல்லவர்களுமான வானரர்கள் நூறு–ஆயிரம்–கோடிக்கணக்கில் வந்து சேர்ந்து விட்டார்கள். மாவீரரே! (அந்நியப் பெண்களைப் பார்க்கக் கூடாது என்பதால் தாங்கள் இதுவரை வெளியே நின்றுகொண்டிருக்கிறீர்கள். இதனால்,) தங்களது நல்லொழுக்கம் தெளிவாக விளங்கிவிட்டது. நட்புணர்ச்சியுடன் பிறர் மனைவிகளைக் கண்களால் பார்த்தால், மேலோர்கள் அதைக் குற்றமாகக் கருதமாட்டார்கள். எனவே, உள்ளே வாருங்கள்.'' (59–61)

மகாசூரனும், புலன்களாகிற எதிரிகளை அடக்கியவனுமான லட்சுமணன், தாரையால் அன்புடன் அழைக்கப்பட்டதை ஏற்றுக் கொண்டு, தங்களுடைய காரியம் விரைவில் முடிக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தால் தூண்டப்பட்டு, அந்த மாளிகைக்குள் புகுந்தான். அங்கே அற்புதமான அணிகலன்கள் விளங்கும் மேனி; அழகான தோற்றம்; புகழ் பெற்றவன்; உயர்ந்த மாலை–ஆடைகள் அணிந்து கொண்டிருப்பவன்; தேவராஜனைப் போல் வெல்லுதற்கரியவன்;

கவின்மிகு அணிகலன்களும் மாலைகளும் தரித்த இளநங்கைகளால் சூழப்பட்டவன்; விலையுயர்ந்த விரிப்புகள் விரிக்கப் பெற்ற தங்கக்கட்டிலில், சூரியனைப் போல் பிரகாசித்துக் கொண்டு வீற்றிருப்பவனுமான சுக்ரீவனைப் பார்த்தான், லட்சுமணன். கோபத்தால் கண்கள் ரத்தச் சிவப்பாக மாறின. அப்போது, அவன் யமராஜனைப் போல் பயங்கரமாகத் தோன்றினான்.

அழகிய பொன்வண்ண மேனியுடையவனும் விசாலமான கண்களை உடையவனும் மாவீரனுமான அவன் (சுக்ரீவன்), ருமையைக் கட்டித் தழுவிக் கொண்டு அற்புதமான ஆசனத்தில் உட்கார்ந்தபடியே, மிக அகன்ற கண்களை உடையவனும், எல்லையற்ற பராக்கிரமம் உடையவனுமான லட்சுமணனைப் பார்த்தான். (62–66)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
முப்பத்து மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்து நான்கு

சுக்ரீவனுக்கு எச்சரிக்கை விடுத்தல்

எவராலும் தடுக்கப்படாமல் உள்ளே வந்து, மிகவும் கோபத்தோடிருக்கும் புருஷோத்தமனான லட்சுமணனைப் பார்த்ததும் சுக்ரீவனின் ஐம்புலன்களும் கலங்கின. (மதுமயக்கத்திலிருந்த

அவனுக்கு, தாரையை அனுப்பிய விஷயம்கூட மறந்து போய்விட்டது போலும்!) பராக்கிரமத்தால் பிரகாசித்துக் கொண்டிருப்பவனும், சகோதரரின் மனவேதனையால் உள்ளம் வெந்து கொண்டிருப்பவனும், மிகுந்த சினத்துடன் பெருமூச்சுவிட்டுக் கொண்டிருப்பவனும், தசரதனின் புதல்வனுமான அவனைப் பார்த்தவுடன், நன்றாக அலங்கரிக்கப்பட்ட இந்திரத்வஜம் போல், பொற்கட்டிலிலிருந்து எழுந்து நின்றான். வானத்தில், தாரகைக் கூட்டம் பூர்ணசந்திரனைச் சூழ்ந்து நிற்பதைப் போல, ருமை முதலான மனைவிமார்கள், எழுந்து நிற்கும் சுக்ரீவனைச் சூழ்ந்து (பொற்கட்டிலிலிருந்து இறங்கி) நின்றார்கள். (1–4)

தெய்விகத் திரு உடையவனும், கோபத்தால் சிவந்த கண்களைக் கொண்டவனுமான லட்சுமணன் (வேண்டிக் கேட்பதைக் கொடுக்கும்) பெருமைக்குரிய கற்பக மரம் போல் அங்கே விளங்கினான். குடியினால் உடல் தடுமாற கைகூப்பினான், சுக்ரீவன். [வேறுவிதமாகவும் அர்த்தம் சொல்வோரும் உளர். 'திருபொருந்தியவனும், மிகவும் சிவந்த கண்களையுடையவனும், குடிமயக்கத்தால் உடல் தடுமாறுபவனுமான சுக்ரீவன், கைகளைக் கூப்பிக் கொண்டு, நெடிதுயர்ந்த கற்பகமரம் போல், (லட்சுமணனின் சொற்களை எதிர்நோக்கி) அங்கே நின்றுகொண்டான்.' 'ஸ்ரீமான்', 'கற்பக விருக்ஷம்' என்ற அடைமொழிகள் இலக்குவனுக்குப் பொருந்துமே தவிர, அந்தச் சூழ்நிலையில், சுக்ரீவனுக்குப் பொருந்த மாட்டா – என்பது சிலர் கருத்து.] (5)

தாரகைகள் சூழ்ந்திருக்கும் சந்திரனைப் போல, பல பெண்டிர்கள் சூழ, ருமையைக் கட்டித் தழுவிக் கொண்டிருக்கும் சுக்ரீவனைப் பார்த்து, மிகுந்த கோபத்துடன் லட்சுமணன் சொன்னான்— ''வீரமுடையவன், நற்குலத்தில் தோன்றியவன், கருணையுள்ளம் கொண்டவன், புலன்களை வென்றவன், நன்றியுணர்வுடையவன், சத்தியம் பேசுபவன் – இப்படிப்பட்ட மன்னன்தான் உலகில் கொண்டாடப்படுகிறான். எந்த மன்னன் அறநெறியிலிருந்து தவறி, உபகாரம் செய்த நண்பனுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதியைப் பொய்யாக்குகிறானோ, அவனைக் காட்டிலும் மிகவும் இகழ்ச்சிக்குரியவன் இருக்க முடியுமோ? (6–8)

ஒரு குதிரைக்காகப் பொய் சொன்ன மனிதன், நூறு குதிரைகளைக் கொன்ற பாவத்திற்கு ஆளாகிறான்; ஒரு பசுவிற்காகப் பொய் சொன்னவன் ஆயிரம் பசுக்களைக் கொன்றவனாகிறான்; ஒரு மனிதருக்குக் கொடுத்த வாக்குறுதியைப் பொய்யாக்குகிறவன், தன்னையும் தன் குலத்தோரையும் கீழ்நிலைக்குத் தள்ளிவிடுகிறான். வானரர் தலைவனே! எவனொருவன் முதலில் தன் காரியத்தை முடித்துக் கொண்டு, உபகாரம் செய்த அந்த நண்பருக்குப் பிரதியுபகாரம் செய்யாமலிருக்கிறானோ, அந்த செய்நன்றி மறந்தவன், எல்லா உயிர்ப் பிராணிகளின் நலனை முன்னிட்டுக் கொல்லத்தக்கவன். (9,10)

வானரனே! செய்நன்றி கொன்ற ஒருவனைப் பார்த்து சினங்கொண்ட பிரும்மதேவன் எல்லா மக்களாலும் போற்றக்கூடிய சில நீதிநெறிகளை உபதேசித்தார். (ஒரு சுலோகத்தைச் சொன்னார்.) அதைச் சொல்கிறேன் கேள். வேதியரைக் கொல்லுதல், கள் குடித்தல், பசுவைக் கொல்லுதல், விரத நியமங்களைக் கைவிடுதல் – இந்தப் பாவங்களுக்குப் பிராயச்சித்தம் சான்றோர்களால் வரையறுக்கப்பட்டுள்ளது. ஆனால், செய்நன்றி மறத்தலுக்குப் பரிகாரமே இல்லை! வானரனே! நீ ஒழுக்கமுடையவன் அல்லன்; நன்றி கொன்றவன்; பொய் பேசுகிறவன். முன்னதாக உனக்கு வேண்டிய காரியத்தை முடித்துக் கொண்டுவிட்ட நீ, உனக்கு உபகாரம் செய்த இராமனுக்கு ஆற்ற வேண்டிய கடமையைச் செய்யவில்லை. (11–13)

வானரனே! உன்னுடைய விருப்பம் நிறைவேறிவிட்டது. இப்போது, செய்யப்பட்ட உதவிக்குக் கைம்மாறாக சீதாப்பிராட்டியைத் தேடும் விஷயத்தில் நீ முயற்சி செய்ய வேண்டும். (ஆனால், நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்?) நீ கொடுத்த வாக்குறுதியைப் பொய்யாக்கிவிட்டு, புலனுகர் சிற்றின்பங்களில் ஆழ்ந்து கிடக்கிறாய்! நீ, தவளைக் குரலுடைய சர்ப்பம் என்பதை ஸ்ரீராமன் அறியவில்லை. (பாம்பின் வாயிற்புகுந்த தவளையின் தீனக்குரலைக்

கேட்டு அருகே சென்றால், பாம்பு தீண்டிவிடும். தவளையால் உயிருக்கு ஆபத்து இல்லை. பாம்பினால் ஆபத்து நிச்சயம்.) (14,15)

பேராற்றலுடையவரும் மகாத்மாவும் கருணை உள்ளம் கொண்டவருமான இராமன், பாவியான உன்னை, வானர ராஜ்யத்தின் மன்னனாக முடிசூட்டி வைத்தார். மகாத்மா ஸ்ரீராமனால் செய்யப்பட்ட பேருதவியை, நீ நினைத்துப் பார்க்காமலிருந்தால் (அதற்குப் பிரதியுபகாரம் செய்ய முனையாவிட்டால்), எதையும் எளிதில் முடிக்கக்கூடிய இராமனின் கூரிய பாணங்களால் விரைவிலேயே கொல்லப்பட்டு, (மேலுலகம் சென்று, அங்கு முன்னரே சென்றடைந்திருக்கும்) வாலியை நேருக்கு நேர் காண்பாய். (16,17)

சுக்ரீவனே! கொல்லப்பட்ட வாலி எந்த வழியாகச் சென்றானோ, அந்தப் பாதை இன்னும் மூடப்படவில்லை! உன் வாக்குறுதியைக் காப்பாற்று. (உயிரைத் தக்க வைத்துக் கொள்.) வாலி சென்ற பாதையில், அவனைப் பின்தொடர்ந்து செல்லாதே. இக்ஷ்வாகு வம்ச திலகமான இராமசந்திரனின் வில்லிலிருந்து வெளிப்படும் பாணங்கள் வஜ்ராயுதத்திற்கு நிகரானவை என்பதை நீ அறியவில்லை. அதனால்தான் சிற்றின்பங்களை அனுபவிப்பதே சுகம் என்று எண்ணி, அதில் மூழ்கிக் கிடக்கிறாய். இராமனுக்குச் செய்ய வேண்டிய கடமையைப் பற்றி, மனத்தால்கூட எண்ணிப் பார்க்காமல் இருக்கிறாய்.'' (18,19)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
முப்பத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்தைந்து

தாரை சமாதானம் செய்தல்

கொழுந்துவிட்டெரியும் கோபத்தினால் மேற்கண்டவாறு பேசிய சுமித்திரையின் மைந்தன் இலக்குவனைப் பார்த்து, முழுநிலவு போன்ற முகமுடைய தாரை (பின்வருமாறு) கூறினாள்— ''லட்சுமணரே! தாங்கள் இவ்வாறு (அபவாதச் சொற்களைப்) பேசக் கூடாது. வானரர் தலைவரான இவரும், இவ்வளவு உக்கிரமான கோபத்திற்கு ஏற்றவர் அல்லர். (அவ்வளவு பெரிய தவற்றைச் செய்துவிடவில்லை.) குறிப்பாக, உங்கள் முகத்திலிருந்து கொடிய சொற்களைக் கேட்பதற்கு உரியவர் அல்லர். வீரரே! வானரர் தலைவரான சுக்ரீவன், செய்நன்றி மறந்தவர் அல்லர்; வஞ்சகன் அல்லர்; கொடியவர் அல்லர்; பொய் பேசுகிறவரும் அல்லர்; ஏமாற்றுபவரும் அல்லர். (1–3)

வீரரே! வானர சூரராகிய சுக்ரீவன், போர்க்களத்தில் மற்ற எவராலும் செய்ய முடியாத உபகாரத்தை, ஸ்ரீராமன் செய்திருப்பதை மறந்து விடவில்லை. எதிரிகளை வாட்டியெடுப்பவரே! ஸ்ரீராமனுடைய பெருந்தயவினால் புகழ், அழிவில்லாத வானர ராஜ்யம், ருமை மற்றும் என்னையும் சுக்ரீவன் அடைந்திருக்கிறார். இதற்கு முன்னர், (நீண்டகாலம்) மிகவும் துன்பங்களை அனுபவித்துவிட்டார், இவர். இப்போது அரசபோகங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் இவர், (இராமனுக்கு) உதவி செய்வதற்கான காலம் வந்துவிட்டதை அறியவில்லை. (புலன்களை அடக்கிய) முனிவரான விசுவாமித்திரர் (தவம் செய்யுங்காலத்தில்) ஒரு பெண்ணைக் கண்டு மயங்கினாரே, அதுபோல! (4–6)

லட்சுமணரே! அப்சரப் பெண்ணாகிய கிருதாசீ (மேனகை) என்பவளிடம் மனத்தைப் பறிகொடுத்த தருமாத்மாவும் மாமுனிவருமான விசுவாமித்திரர், பத்து ஆண்டுக்காலம் சுகத்தை அனுபவித்துவிட்டு, அதை ஒரே ஒரு நாள் போலக் கருதினார். பருவங்களைப் பற்றிச் சரியான கணக்கு வைத்திருப்பவர்களில் தலையாயவரும் (நைமித்திக கர்மாக்களைச் செய்வதற்குக் காலக்கணக்கு அவசியம்), ஆன்மப் பேரொளி பெற்றவருமான விசுவாமித்திரரே (காமக்களிப்பில்

மூழ்கியிருந்ததால்), காலம் சென்று கொண்டிருப்பதை அறியவில்லை என்னும்போது, பாமர மக்களைப் பற்றி என்ன சொல்ல? லட்சுமணரே! முக்கியமாக உடல் தேவைகளைப் பூர்த்தி செய்ய விரும்பிய இவர், தெவிட்டாத சிற்றின்பங்களில் மூழ்கி இருந்ததால் (காலக்கெடு முடிந்து விட்டதை உணராத இவரை), இப்போது அருள்கூர்ந்து மன்னிக்க வேண்டும். (7–9)

பாசத்திற்குரிய லட்சுமணரே! நடந்த விஷயங்களின் உண்மையான நிலையைத் தெரிந்து கொள்ளாமல், ஒரு பாமர மனிதன் போன்று ஆலோசனை செய்யாமல், நீங்கள் கோபத்திற்கு இடம் கொடுக்கக் கூடாது. புருஷோத்தமரே! நற்குணங்கள் அமையப் பெற்ற தங்களைப் போன்ற (அறிவாளிகளான) மனிதர்கள், விசாரித்துப் பார்க்காமலும் திடீரென்றும் கோபத்தின் வசப்பட மாட்டார்கள். அறமறிந்தவரே! சுக்ரீவனுக்காக, நான் மனப்பூர்வமாகத் தங்களைப் பிரார்த்திக்கிறேன். அளவுகடந்த கோபத்தால் ஏற்பட்டுள்ள மனக்குமுறலை விட்டுவிடுங்கள். (10–12)

இராமனின் விருப்பம் இதுதான் என்றால், பொருள், தானியம், செல்வங்கள் மற்றும் வானர ராஜ்யத்தையும் என்னையும் ருமையையும் சுக்ரீவன் துறந்துவிடுவார் என்பது எனக்கு உறுதியாகத் தெரியும். இராவணனைப் போரில் கொன்று, ரோகிணியுடன் சந்திரன் இணைக்கப்பட்டதைப் போல, சீதையுடன் இராகவனைச் சுக்ரீவன் இணைத்து வைப்பார். இலங்கையில் நூறாயிரம் கோடி, முப்பத்தாறு பதினாயிரங்கள் (முப்பத்தாறு லட்சம்), முப்பத்தாறாயிரம், மூவாயிரத்து அறுநூறு அரக்கர்கள் இருக்கிறார்கள் அல்லவா? வெல்ல முடியாதவர்களும் விருப்பம் போல் உருவம் எடுக்கக்கூடியவர்களுமான அந்த அரக்கர்கள் அனைவரையும் கொல்லாமல், சீதாதேவியைக் கவர்ந்து சென்ற இராவணனைக் கொல்ல முடியாது. (13–16)

லட்சுமணரே! பிறர் உதவியில்லாமல் சுக்ரீவனால் மட்டும் போரில் அவர்களைக் கொல்ல முடியாது. குறிப்பாக, மிகவும் கொடியவனான இராவணனை (தனி ஒருவனால்) கொல்லவே முடியாது. (அரக்கப் படைவீரர் எண்ணிக்கை, இராவணனை வெல்ல முடியாமை என்ற) இந்த விஷயங்களைப் பற்றி வாலி முன்னரே என்னிடம் சொல்லியிருக்கிறார். அவருக்கு இந்த விஷயங்களைப் பற்றி நன்றாகத் தெரியும். நானாக இவைகளைப் பார்த்தறிந்து சொல்லவில்லை. அவரிடமிருந்து கேள்விப்பட்டதையே இப்போது சொல்கிறேன். (17,18)

யுத்தத்தில் உங்களுக்கு உதவி செய்வதற்காக, ஏராளமான வானரர்களையும் வானர சேனாதிபதிகளையும் அழைத்துக் கொண்டு வருவதற்காக வானரோத்தமர்கள் அனுப்பப்பட்டு இருக்கிறார்கள். பராக்கிரமம் மிக்கவர்களும் உடல்பலம் பெற்றவர்களுமான அவர்களை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதால் வானர மன்னர், ஸ்ரீராமனுடைய காரியத்தை நிறைவேற்றுவதற்காக, நகரத்தைவிட்டு வெளியில் புறப்படாதிருக்கிறார். லட்சுமணரே! இந்த விஷயத்தில், சுக்ரீவன் முன்பே உத்தரவு பிறப்பித்துவிட்டார். எனவே, மகாபலம் பொருந்திய வானரர்கள் எல்லோரும் இப்போது வந்துகொண்டிருப்பார்கள். (19–21)

எதிரிகளை அடக்குபவரே! காகுத்தரே! ஆயிரங்கோடி கரடிகளும், நூற்றுக்கணக்கான லாங்கூலம் என்ற இனத்தைச் சார்ந்த வானரர்களும், பேராற்றலுடைய அநேக கோடி வானரர்களும், இப்போதே தங்கள் முன்னிலையில் வந்து சேர்வார்கள். எனவே, கோபத்தை விட்டுவிடுங்கள். தங்களுடைய முகம் துடிக்கிறது; கண்கள் இரண்டும் இரத்தச் சிவப்பாய் விளங்குகின்றன. இதைப் பார்த்தால், முதலில் (வாலியைக் கொன்றபோது) ஏற்பட்ட பயத்திலிருந்து விடுதலை அடையாமலிருக்கும் உத்தமமான வானரப் பெண்டிர் அனைவரும், மீண்டும் சித்தம் கலங்கி பயத்திலிருந்து மீளவே மாட்டார்கள்.'' (முதலில், மிகவும் கோபத்துடன் நீங்கள் உள்ளே வந்தபோது, வானரப் பெண்டிர்க்கு ஏற்பட்ட பயத்திலிருந்து அவர்கள் மீளவேயில்லை.) (22,23)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
முப்பத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்தாறு

சுக்ரீவன் சமாதானம் செய்தல்

தருமத்தோடு இணங்கியதும் வினயத்தோடு கூடியதுமான தாரையின் சமாதான உரையைக் கேட்ட, இளகிய மனமுடைய லட்சுமணன் அதனை ஏற்றுக்கொண்டான். (தன் கோபத்தைத் தணித்துக் கொண்டான்.) தாரையின் சொல் ஏற்கப்பட்டுவிட்டது என்பதைத் தெரிந்து கொண்டவுடன் வானரத் தலைவன், ஈரமான ஆடையை ஒருவன் களைந்துவிடுவது போல, இலக்குவனிடம் ஏற்பட்டிருந்த மகாபயத்தை விட்டொழித்தான். உடனே, சுக்ரீவன் மயக்கம் தெளிந்து, பற்பல வேலைப்பாடுகளுடையதும் விலையுயர்ந்ததுமான மாலையைக் கழுத்திலிருந்து கழற்றியெறிந்தான். (1–3)

எல்லா வானரர்களிலும் உத்தமனான சுக்ரீவன், பயங்கரமான ஆற்றலுடைய லட்சுமணனின் உள்ளத்தை மகிழச் செய்வதற்காக, வணக்கத்துடன் பின்வரும் சொற்களைக் கூறினான்— ''சுமித்திரையின் மைந்தனே! செல்வம், புகழ் மற்றும் வானர அரசு ஆகிய எல்லாம் நிரந்தரமாக என் கைநழுவிப் போயிருந்தன. இவையெல்லாம் ஸ்ரீராமனது பேருளால் மீண்டும் எனக்குக் கிடைத்திருக்கின்றன. எதிரிகளை மாய்க்கும் மாவீரரே! தன்னுடைய (எல்லையற்ற வீரத்தை வெளிக்காட்டி நிகழ்த்திய) செயல்களினால் பெரும்புகழ் பெற்ற அந்த மாமனிதருடைய பராக்கிரமத்திற்கு ஈடான கைம்மாற்றை, எவனால் செய்ய முடியும்? (4–6)

தருமாத்மாவான ஸ்ரீராமன், அளவிட முடியாத தனது பேராற்றலாலேயே இராவணனைக் கொல்லப் போகிறார்; சீதாப்பிராட்டியாரைத் திரும்பவும் அடையப் போகிறார்; எளிய உதவியாளனாக மட்டுமே நான் இருப்பேன். ஏழு மாபெரும் மரங்களையும் மலையையும் பூமியையும் ஒரே ஒரு பாணத்தால் துளைத்த அந்த மாவீரருக்கு, (இராவணனை வதம் செய்வதற்குப்) பிறருடைய துணையும் வேண்டுமா, என்ன? லட்சுமணரே! எவரொருவர் வில்லை வளைத்து நாணொலி எழுப்பியமாத்திரத்தில் மலைகளோடு கூடிய பூவுலகம் நடுங்கிக் குலுங்கியதோ, அவருக்குத் துணைவர்களும் தேவையோ? (7–9)

புருஷோத்தமரே! விரோதியான இராவணனை, அவனுடைய பந்து–மித்திரர்களோடு ஒழித்துக் கட்டுவதற்காகச் செல்லும் மாவீரரான இராமபிரானுக்குப் பின்னாலே செல்வேன். (இராமன் கோபம் கொள்ளமாட்டார் என்ற) நம்பிக்கையாலும், நெருக்கமான சிநேகிதத்தாலும் அடிமையாகிய நான், முறை தவறி ஏதேனும் சிறுபிழை செய்திருந்தால், அதை மன்னிக்க வேண்டும். (ஏனென்றால்,) பிழையே செய்யாதவனாக எவனும் இருக்கமாட்டான்.'' மகாத்மாவாகிய சுக்ரீவன் மேற்கண்டவாறு சமாதானம் கூறியதும், லட்சுமணன் மன அமைதி அடைந்தான். பின்னர், மிகவும் அன்புடன் பின்வருமாறு பதிலுரைத்தான்— (10–12)

''வானர மன்னனே! சுக்ரீவனே! உன்னைப் போல் அடங்கி நடக்கும் ஒருவனைத் துணைவனாகப் பெற்றிருப்பதால், என் சகோதரர் எவ்வகையிலும் நல்ல துணையுடன் கூடியவரே. சுக்ரீவனே! நீ, உன்னுடைய ஆற்றல், கபடமின்மை, நேர்மை ஆகிய நற்குணங்களால், வானர நாட்டின் எல்லையற்ற வளங்களை அனுபவிக்கத் தக்கவனே. சுக்ரீவனே! உன்னுடைய உதவியைப் பெற்று, பராக்கிரமசாலியான இராமன் வெகுவிரைவிலேயே எதிரிகளை அழிக்கப் போகிறார் என்பதில் ஐயமில்லை. (13–15)

சுக்ரீவனே! நீ அறநெறி அறிந்தவன்; செய்நன்றி மறவாதவன்; போர்களில் புறமுதுகு காட்டாதவன். அதனால், உன்னுடைய பேச்சு பொருத்தமான வாதங்களோடு, உன் உயர்ந்த பண்புக்கு ஏற்றவாறு அமைந்துள்ளது. வானரோத்தமனே! என் மூத்த சகோதரரையும் உன்னையும் தவிர்த்து, பேரறிவு படைத்த வேறு எந்தவொருவன், தனக்குப் பேராற்றல் இருக்கும்போது, இவ்வளவு அடக்கமாகப் பேசமுடியும்? சுக்ரீவனே! உடல் பலத்திலும் போராற்றலிலும் நீ, இராமனுக்கு

இணையானவன். வானரோத்தமனே! நீ, தெய்வசங்கல்பத்தால் எங்களுக்குச் சகாயம் செய்வதற்காகவே வெகுநாட்களுக்கு முன்பே (எங்களுக்குக்) கொடுக்கப்பட்டிருக்கிறாய். (16–18)

வீரனே! இதுவரை நடந்தது நடந்ததாகவே இருக்கட்டும். (அவைகளைப் பற்றி மேலும் சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டாம்.) நீ, இப்போதே என்னுடன் புறப்படு. மனைவியைத் திருட்டுக் கொடுத்துவிட்டு, மன உளைச்சலில் தவித்துக் கொண்டிருக்கும் உன் நண்பர் இராமனுக்கு ஆறுதல் கூறு. நண்பனே! சோகத்தில் சிக்கித் தவிக்கும் இராமனுடைய (வருத்தமும் சீற்றமும் தோய்ந்த) சொற்களைக் கேட்டதும், எனக்கு மிகவும் கோபம் ஏற்பட்டது. அதனால், உன்னிடம் கடுமையாகப் பேசிவிட்டேன்; என்னை மன்னித்துவிடு.'' (19,20)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
முப்பத்தாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்தேழு

வானர சேனை வருகை

மகாத்மாவான லட்சுமணனால் இவ்வாறு கூறப்பட்டதும், பக்கத்தில் நின்று கொண்டிருந்த அமைச்சரான அனுமானைப் பார்த்து, சுக்ரீவன் பின்வருமாறு ஆணையிட்டான்— (1)

''மகேந்திரம், இமயம், விந்தியம், கைலாசம், வெண்மையான (பனி மூடிய) முகடுகளைக் கொண்ட மந்தரமலை – இந்த ஐந்து மலைகளிலும் உள்ளவர்கள்; மேற்குத் திசையில் சமுத்திரக் கரையில் இளஞ்சூரியனைப் போல் எப்போதும் செம்மையாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கும் மலைகளிலும் வசிப்பவர்கள்; சூரியனின் இருப்பிடம் மற்றும் சந்த்யாகால மேகக்கூட்டம் போல் விளங்கும் மற்ற மலைகளில் வசிப்பவர்கள்; பத்மாசலத்திலுள்ள காடுகளில் வசித்துக் கொண்டிருக்கும் பயங்கரமான ஆற்றலுடைய வானரர்கள்; அஞ்ஜன மலையில் வசிக்கும் கருமேகங்களுக்கு ஒப்பானவர்களும் கஜராஜன் போல் மகாபலம் பொருந்தியவர்களுமான வானரர்கள்; பெரிய மலைகளின் குகைகளில் வசிப்பவர்களும் பொன்னிறங்கொண்டவர்களும் மேருமலையின் அருகிலும் தூம்ர மலையிலும் வசிக்கும் வானரர்கள்;

மைரேயம் முதலான மது வகைகளைக் குடித்துவிட்டு, மகாருண மலையில் விடியற்கால சூரியன் போல் செவ்வொளி வீசிக்கொண்டு பயங்கரமான வேகத்துடன் விளங்கும் வானரர்கள்; நறுமணம் கமழும் அழகிய வனங்களிலும் தவம் செய்வோரின் ஆசிரமங்களைச் சூழ்ந்துள்ள பூங்காக்களிலும் வசிக்கும் வானரர்கள் மற்றும் பூவுலகில் உள்ள மற்ற எல்லா வானரர்களையும் உடனே இங்கே அழைத்துவா. சக்தி படைத்தவர்களும் மிக விரைவாகச் செல்லக்கூடியவர்களுமான வானரர்களை அனுப்பி, (தேவைப்படும் இடங்களில் ஸாம–தான உபாயங்களைக் கைக்கொண்டு,) அவர்கள் எல்லோரையும் இங்கே கொண்டு வந்து சேர்ப்பிப்பாயாக. (2–9)

என்னுடைய உத்தரவின்படி, வேகமாகச் செல்லக்கூடிய வீரர்கள் முன்னரே அனுப்பப்பட்டு விட்டார்கள். என்றாலும், அவர்களை மேலும் துரிதப்படுத்துவதற்காக, சிறந்த வானரர்களை மறுபடியும் அனுப்பு. சிற்றின்பங்களில் மூழ்கியிருப்பவர்கள், செய்யவேண்டிய வேலைகளைத் தள்ளிப் போட்டுக் கொண்டே போகிறவர்கள் – இவர்கள் எல்லோரையும், என் ஆணைப்படி வெகுவிரைவில் இங்கே கொண்டுவந்து நிறுத்துவாயாக. எனது ஆணைப்படி, இன்னும் பத்து நாட்களுக்குள் இங்கு வந்து சேராதவர்கள் அரசாணையை மீறியவர்களாதலால் கொல்லத்தக்கவர்களே. (10–12)

என் ஆணைப்படி, என்னுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான நூறு–ஆயிரம்–கோடி வானரோத்தமர்கள், இப்போதே எல்லாத் திசைகளுக்கும் புறப்பட்டுச் செல்லட்டும். பயங்கரமான

தோற்றமுடையவர்களும், மேகத்தையும் மலையையும் போன்றவர்களுமான உத்தம வானரர்கள், ஆகாயத்தை மறைப்பவர்களாக (அவ்வளவு பெரிய எண்ணிக்கையில்) என் உத்தரவுப்படி, இங்கிருந்து புறப்பட்டுச் செல்வார்களாக. வானரர்களின் இருப்பிடங்களை நன்றாக அறிந்து, பூமண்டலத்தின் எல்லாப் பக்கங்களுக்கும் வெகுவிரைவாகச் சென்று ஆங்காங்குள்ள வானரர்கள் எல்லோரையும் என் கட்டளைப்படி, இங்கே கொண்டு வந்து சேர்க்க வேண்டும்.'' (13–15)

வாயு புதல்வரான அனுமான், வானர மன்னனின் உத்தரவின்படி, மகாபராக்கிரமசாலிகளான வானரர்களை எல்லாத் திசைகளுக்கும் அனுப்பி வைத்தார். மன்னரால் கட்டளையிடப்பட்ட வானரர்கள், பறவை–தாரகைகள் விளங்கும் வான்வழியே வேகமாகச் சென்றார்கள். அந்த வானரர்கள், சமுத்திரங்களின் கரையிலும் மலை–காடுகளிலும் பொய்கைக் கரைகளிலும் வசித்துக் கொண்டிருந்த வானரர்கள் அனைவரையும், வானர மன்னன் சுக்ரீவன் இராமனுக்குப் பணி செய்வதாக அளித்த வாக்குறுதியைப் பற்றிக் கூறி, கிஷ்கிந்தைக்கு அனுப்பி வைத்தார்கள். (16–18)

யமன்–காலன் போல பயங்கரமான தண்டனை கொடுக்கும் தங்கள் மன்னன் சுக்ரீவனின் ஆணையைக் கேட்டதும், அவனிடமுள்ள பயத்தால், கிஷ்கிந்தையை நோக்கி உடனே புறப்பட்டுச் சென்றார்கள். அஞ்ஜன மலையிலிருந்த கண்மை போன்ற நிறமுடையவர்களும் மாவீரர்களுமான மூன்று கோடிப் பேர்கள், இராமன் இருந்த இடத்தை நோக்கிப் புறப்பட்டார்கள். சூரியன் மறையும் அஸ்தகிரியில் வசிக்கும் மாற்றுக் குறையாத பொன் போன்ற மேனியுடைய பத்துக் கோடி வானரர்கள், அங்கிருந்து புறப்பட்டார்கள். கைலாச சிகரங்களிலிருந்து, சிங்கத்தின் பிடரியின் நிறம் படைத்த ஆயிரங்கோடி வானரர்கள் வந்து சேர்ந்தார்கள். (19–22)

கனி–கிழங்குகளை உணவாகக் கொண்டு, இமயமலையில் வாழும் ஆயிரமாயிரம் கோடி வானரர்கள் புறப்பட்டார்கள். விந்தியமலையிலிருந்து அங்காரகனைப் போல் செந்நிறம் உடையவர்களும், பயங்கரமான தோற்றமும் பராக்கிரமமும் உடையவர்களுமான கோடி கோடி ஆயிரம் வானரர்கள் வெளியே வந்தார்கள். பாற்கடலின் கரையில் வசிப்பவர்கள், தமால மரம் நிறைந்த காட்டில் தேங்காயைப் புசித்துக் கொண்டு வாழ்பவர்கள் – இவர்களின் எண்ணிக்கையைச் சொல்லி மாளாது! (23–25)

காடுகள்–குகைகள்–ஆற்றங்கரைகளிலிருந்து மகாபலம் பொருந்திய வானரப் படை சூரியனையே குடித்து விடுவதைப் போல, ஆகாயத்தை மறைத்துக் கொண்டு, மிகப்பெரும் எண்ணிக்கையில் வந்தது. எல்லா வானர வீரர்களையும் துரிதமாக அனுப்பி வைக்கும் பொருட்டு, இரண்டாவது தடவையாக அனுப்பப்பட்ட அந்த கிஷ்கிந்தா வீரர்கள், இமாலய பர்வதத்தில் மிகவும் புகழ்பெற்ற மாபெரும் மரத்தைக் கண்டார்கள். முன்னொரு காலத்தில், அந்த அழகான உத்தம மலையில் எல்லா தேவர்களின் உள்ளத்தை மகிழ்வுறச் செய்வதும், எல்லோருடைய மனத்தைக் கவர்வதுமான பரமேசுவரனைக் குறித்த அற்புத மாவேள்வி நடந்தேறியது. (26–28)

யாகத்தில் உபயோகப்படுத்தப்பட்ட உணவு(ஆகுதி)ப் பண்டங்கள் சிதறிக் கிடந்த இடத்தில் தோன்றிய கனி–கிழங்குகள் அமுதச் சுவை கொண்டவைகளாக இருந்தன. வானர வீரர்கள் அவற்றைப் பார்த்தார்கள். அந்த உணவுச் சிதறல்களிலிருந்து உண்டானதும் தெய்விக சக்தியுடையதும் உள்ளம்கவர்வதுமான கனி–கிழங்கை உண்பவனுக்கு ஒரு மாத காலம் வரை பசி–தாகம் ஏற்படாது. பழங்களை உணவாகக் கொண்ட வானர சேனைத் தலைவர்கள், தெய்விகமான அந்தக் கனி–கிழங்குகளையும், (அந்தப் புனித இடத்தில் முளைத்திருந்த) தெய்விகமான தாவரங்களையும் பறித்து வைத்துக் கொண்டார்கள். (29–31)

வானரர்கள், சுக்ரீவனிடம் காணிக்கையாகக் கொடுத்து, அவன் மனத்தைக் குளிரச் செய்யும் பொருட்டு, அந்த வேள்விச்சாலைக்குள் சென்று மணம் மிகுந்த மலர்களைக் கொண்டு வந்தார்கள். (கிஷ்கிந்தையிலிருந்து சென்ற) வானரோத்தமர்கள், வானரர்கள் எல்லோரிடமும் சுக்ரீவ ஆணையைக்

கூறிவிட்டு, அந்தப் படையினர் புறப்பட்டு வந்து சேர்வதற்கு முன்னதாகவே, திரும்பி வந்து சேர்ந்தார்கள். வெகுவேகமாகச் செல்லக்கூடிய அந்த வானரத் தலைவர்கள், சுக்ரீவன் இருந்த கிஷ்கிந்தைக்குத் துரிதமாக, அந்த முகூர்த்தத்திலேயே வந்து சேர்ந்தார்கள். (32–34)

அந்த வானரர்கள் (தாங்கள் கொண்டு வந்திருந்த) மூலிகைகள், பழங்கள், கிழங்குகள் ஆகியவற்றை சுக்ரீவனிடம் சமர்ப்பித்து, ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக் கொண்டார்கள். தொடர்ந்து பின்வரும் சொற்களையும் சொன்னார்கள்— ''மலைகள், கடற்கரைகள், காடுகள் ஆகிய அனைத்து இடங்களிலும் சுற்றிவிட்டு வந்திருக்கிறோம். உலகிலுள்ள வானரர்கள் எல்லோரும், தங்களது கட்டளைக்கிணங்க, இங்கே வந்து கொண்டிருக்கிறார்கள்.'' இதைக் கேட்டதும், வானர மன்னன் சுக்ரீவன் மனம் களிப்புற்றவனாகி, அவர்கள் செயலில் திருப்தி அடைந்தவனாய், அவர்கள் சமர்ப்பித்த காணிக்கைப் பொருள்களை ஏற்றுக்கொண்டான். (35–37)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
முப்பத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்தெட்டு

இராமனிடம் சென்றார்கள்!

வானரர்களால் கொண்டு வரப்பட்ட காணிக்கைகளை ஏற்றுக்கொண்டு, இனிய சொற்களால் அவர்களை மகிழ்வித்த சுக்ரீவன், அவர்களுக்கு விடைகொடுத்து அனுப்பினான். கொடுக்கப்பட்ட வேலையைத் திறமையாக முடித்துவிட்ட சூரவீரர்களான வானரர்களுக்கு விடைகொடுத்து அனுப்பிவிட்டு, தானும், மகாபலம் கொண்ட இராமனும் காரியம் கைகூடப் பெற்றதாகவே எண்ணினான். பின்னர், எல்லா வானரர்களிலும் சிறந்தவனான, வெறித்தனமான ஆற்றல் கொண்ட சுக்ரீவனை மகிழ்வுறச் செய்யும் பொருட்டு, இலக்குவன் நல்ல நெறியைக் காட்டும் சொற்களைக் கூறினான்— (1–3)

''உனக்கு விருப்பம் இருந்தால் கிஷ்கிந்தையிலிருந்து புறப்படு.'' லட்சுமணனால் உரைக்கப்பட்ட இந்த நல்லுபதேசத்தைக் கேட்ட சுக்ரீவன் மிகவும் மகிழ்ச்சியடைந்து பதில் கூறினான்— ''ஆமாம், அப்படியே செல்வோம். நான் எப்போதும் உங்கள் சொற்படி நடக்க வேண்டியவன்.'' உத்தம லட்சணங்கள் அமையப் பெற்ற இலக்குவனைப் பார்த்து இவ்வாறு கூறிவிட்டு, தாரையையும் மற்றப் பெண்மணிகளையும் அப்போதே விடைகொடுத்து அனுப்பினான். பின்னர், அங்கிருந்த மற்ற வானரர்களை உரத்த குரலில் 'வாருங்கள், வாருங்கள்' என்று கூவி அழைத்தான். அவனுடைய அழைப்பைக் கேட்டவுடன், அந்தப்புரப் பெண்களைப் பாதுகாப்பதற்காக நியமிக்கப்பட்ட அவர்கள் வேகமாக வந்து கைகூப்பிக் கொண்டு நின்றார்கள். (4–7)

சூரியன் போன்ற ஒளியுடைய சுக்ரீவ மன்னன், அங்கு வந்து கூடியிருந்தவர்களைப் பார்த்து, ''வானரர்களே! என்னுடைய பல்லக்கை விரைவில் கொண்டு வாருங்கள்'' என்று கட்டளையிட்டான். அவனுடைய உத்தரவைக் கேட்ட வானரர்கள், வெகுவேகமாகச் சென்று கண்ணுக்கினியதாய் காட்சிதரும் பல்லக்கைக் கொண்டு வந்தார்கள். பல்லக்கு வந்துவிட்டதைப் பார்த்து வானர மன்னன், ''லட்சுமணரே! சீக்கிரம் ஏறிக்கொள்ளுங்கள்'' என்று சொன்னான். இவ்வாறு சொல்லிவிட்டு அநேக வானரர்களால் சுமக்கப்பட்டதும், ஆதவனைப் போல் ஒளிவீசுவதும், பொன்மயமானதுமான சிவிகையில் இலக்குவனோடுகூட சுக்ரீவன் ஏறினான். (8–11)

மிகவும் செல்வச்செழிப்பான ராஜ்யத்தை அடைந்துவிட்ட சுக்ரீவனுக்கு மேலே வெண்கொற்றக்குடை விளங்கிற்று; எல்லாப் பக்கங்களிலும் வெண்சாமரங்கள் வீசப்பட்டன; சங்குகள், பேரிகள் முழங்கின; துதிபாடகர்கள் அவனைப் போற்றிசைத்தார்கள். இத்தகைய

வைபவங்களுடன் அவன் கிஷ்கிந்தையிலிருந்து புறப்பட்டான். கூர்மையான அநேக ஆயுதங்களைக் கையில் தாங்கிய நூற்றுக்கணக்கான வானரர்களால் சூழப்பட்டு, இராமன் தங்கியிருந்த இடத்திற்கு சுக்ரீவன் வந்து சேர்ந்தான். ஸ்ரீராமன் வசிக்கும் புண்ணியமான அந்த இடத்தை அடைந்ததும், மிகவும் ஆற்றலுடைய அவன் லட்சுமணனோடுகூட இறங்கினான். (12–15)

பின்னர், இராமனின் அருகில் சென்று கைகூப்பியபடியே நின்றான். அதைக் கண்டதும் வானரர்களும் கைகூப்பி வணங்கியபடி நின்றார்கள். தாமரை மொட்டுக்கள் நிறைந்த தடாகம் போலிருந்த வானர சேனாவீரர்களின் பெருங்கூட்டத்தைப் பார்த்ததும், இராமன் சுக்ரீவனிடம் திருப்தியடைந்தவரானார். தன்னுடைய தலை, இராமனின் இருதிருவடிகளிலும் படுமாறு பணிந்து சேவித்த வானர மன்னனை உயர எழுப்பி, அன்பின் மிகுதியினாலும் (ஒரு நாட்டின் அரசன் என்ற) மரியாதையாலும் இராமன் இறுகத் தழுவிக் கொண்டார். தருமாத்மாவான இராமன் அவனைக் கட்டித் தழுவி விடுவித்த பின்னர், 'உட்கார்ந்து கொள்' என்று சொன்னார். (மிக்க வணக்கத்துடன்) தரையில் உட்கார்ந்த அவனைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார்— (16–19)

''வீரனே! வானரோத்தமனே! எந்த மன்னன் தன்னிடமுள்ள காலத்தை விதிக்கப்பட்ட தரும–அர்த்த–காமங்களை அனுபவிப்பதற்கு உரியபடி விகிதாசாரம் செய்து, அதைக் கடைப்பிடிக்கிறானோ, அவனே தலைசிறந்த மன்னனாவான். தருமத்தையும் அர்த்தத்தையும் ஒதுக்கிவிட்டு காமத்திலேயே திளைத்திருப்பவன், மரக்கிளையின் நுனியில் படுத்துறங்குபவன் போல், கீழே விழுந்த பின்பு விழித்துக் கொள்கிறான். (காமத்தில் மூழ்கியிருப்பவனுக்குக் காலம் கடந்து நல்லறிவு தோன்றும்.) எந்தவொரு மன்னன் எதிரிகளை அழித்துக் கொண்டும், நண்பர்களை இழக்காமல் தக்க வைத்துக் கொண்டும் உரிய காலங்களில் தரும–அர்த்த–காமங்களை அனுபவிக்கிறானோ, அவன் தருமத்தின் பலனான புண்ணியத்தை அடைகிறான். (20–22)

எதிரிகளை அழிக்கவல்லவனே! வானர மன்னனே! நாம் நம்முடைய முயற்சியைத் தொடங்குவதற்கான காலம் வந்துவிட்டது. அதனால், உன்னுடைய வானர அமைச்சர்களோடு கலந்து ஆலோசனை செய்.'' இவ்வாறு, இராமன் சொன்னதைக் கேட்டதும் சுக்ரீவன் பதில் சொன்னான்— ''தோள்வலிமிக்கவரே! வெற்றி வீரர்களில் முதன்மையானவரே! செல்வச் செழிப்பும், புகழும், நெடுங்காலமாக இருந்து வரும் வானர அரசும், என் கையைவிட்டுப் போயிருந்தன. தங்களின் அருளினாலும், தங்கள் சகோதரரின் அருளினாலும் இவையெல்லாவற்றையும் நான் திரும்பவும் அடைந்தேன். (23–25)

எவனொருவன் தனக்கு செய்யப்பட்ட உதவிக்குக் கைம்மாறு செய்யாதிருக்கிறானோ, அவன் மனிதர்களுள் கடைநிலையில் உள்ளவன். எதிரிகளை அழிப்பவரே! (கிஷ்கிந்தையிலிருந்து சென்ற) நூற்றுக்கணக்கான இந்த வானரோத்தமர்கள், உலகிலேயே பலம் மிக்கவர்களான வானரர்கள் எல்லோரையும் அழைத்துக் கொண்டு வந்து சேர்ந்திருக்கிறார்கள். ஸ்ரீராகவா! கரடிகளும் வானரர்களும் சூரர்களான கோலாங்கூலர்களும் வந்திருக்கிறார்கள். இவர்கள், மலைப்பள்ளத்தாக்குகள், காடுகள் மற்றும் உட்புகமுடியாத இடங்கள் ஆகியவைப் பற்றியும் நன்கு அறிந்தவர்கள். (26–28)

ஸ்ரீராமனே! நினைத்த உருவம் எடுக்கக்கூடியவர்களும், தேவ–கந்தர்வர்களின் புதல்வர்களுமான வானரர்கள், தத்தம் படைகளுடன்கூட வழியில் வந்துகொண்டு இருக்கிறார்கள். எதிரிகளை வாட்டியெடுக்கும் மன்னரே! இந்திரனுக்குச் சமமான ஆற்றலுடையவர்கள்; மேரு–மந்தர மலைகளைப் போல் பேருருவம் கொண்டவர்கள்; விந்தியம் மற்றும் மேருமலைகளில் வசிப்பவர்கள் – இப்படிப்பட்ட சூரர்களான வானரர்கள் நூறு, பதினாயிரம், நூறாயிரம், கோடி, லட்சம் கோடி, பத்து கோடி, நூறு கோடி, ஆயிரங்கோடி, இருபதாயிரம் கோடி, ஆறு லட்சம் கோடி, நூற்றுக்கணக்கான பத்துக் கோடிகள் என்ற எண்ணமுடியாத வானரர்களோடுகூட விரைவில் வந்துசேரப் போகிறார்கள். (29–32)

தங்கள் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்கும் அவர்கள் எல்லோரும் தங்களிடம் வந்து சேரப் போகிறார்கள். (நடைபெறப் போகும்) போரில் அரக்க இராவணனையும், அவன் உற்றார்–உறவினர்களையும் கொன்று, மைதிலியைத் திரும்பக் கொண்டுவரப் போகிறார்கள் என்பது திண்ணம்.'' பராக்கிரமசாலியும் புவியாளும் மன்னரின் மைந்தருமான அவர், தன் கட்டளைப்படி நடக்கும் வானர வீரனின் (சுக்ரீவனின்) அந்த முயற்சிகளை மனத்தில் எண்ணிப் பார்த்து, மிகவும் மகிழ்வடைந்து, மலர்ந்த நீலோத்பல மலர்களாலான திருமேனி போன்ற அற்புதத் தோற்றத்துடன் காட்சியளித்தார். (33,34)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
முப்பத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்தொன்பது

வானரப் படைகள் வந்தன!

மேற்கண்டவாறு கைகளைக் கூப்பிக்கொண்டு பேசிய சுக்ரீவனை, தருமத்தைத் தாங்கி நிற்பவர்களுள் முதல்வரான இராமன், இருகரங்களாலும் கட்டியணைத்து, அவனுக்குப் பதில் சொன்னார்— (1)

''இந்திரன் பூமியில் மழையைப் பொழிவிக்கிறான்; ஆயிரக்கணக்கான செங்கதிர்களை உடைய சூரியன் வானத்தை இருளற்றதாகச் செய்கிறான் – என்றால், இதிலென்ன ஆச்சரியம்? நண்பனே! சந்திரன், தன் கிரணங்களால் உலகை விளக்கமுறச் செய்கிறான். (என்பது ஆச்சரியமான செய்தியா, என்ன?) பகைவர்களை வாட்டியெடுப்பவனே! இவ்வாறாகத்தான் உன்னைப் போன்றவர் நண்பர்களுக்குப் பிரியமானதைச் செய்வர். (இதில் என்ன வியப்பு?) நற்குணங்களுடைய சுக்ரீவனே! (நண்பர்களுக்கு நலன் கொடுக்கும் உதவியைச் செய்ய வேண்டும் என்ற) நல்ல எண்ணம் உன்னிடம் இருப்பதில் ஆச்சரியம் ஏதுமில்லை. ஏனென்றால், எப்போதும் நீ அன்பு ததும்பும் சொற்களையே பேசுபவன் என்பதை நான் அறிவேன். (2–4)

நண்பனே! உன்னைத் துணைவனாகப் பெற்றுள்ள நான், போரில் எல்லா எதிரிகளையும் வெற்றி கொள்வேன். நீதான் என் நலனில் அக்கறை கொண்ட நண்பன். நீதான் எனக்குத் தேவையான உதவிகளைச் செய்யவேண்டும். அனுஹ்லாதன் என்ற அசுரன், புலோமனின் புதல்வியான சசிதேவியை வஞ்சகமாகக் கவர்ந்து சென்றது போல, அரக்கப்பதர் (இராவணன்) தன் அழிவைத் தானே தேடிக் கொண்டவனாக, சீதையைத் திருடிக் கொண்டு போயிருக்கிறான். (அனுஹ்லாதனைக் கொன்று, சசி என்னும் இந்திராணியை இந்திரன் மணந்து கொண்டான் என்பது புராண வரலாறு.) அகந்தை கொண்டிருந்த இந்திராணியின் தந்தையை, இந்திரன் போர் செய்து கொன்றதைப் போல, விரைவில், என்னுடைய கூர்மையான பாணங்களால் இராவணனைக் கொல்லப் போகிறேன்.'' (5–7)

இப்படிப் பேசிக்கொண்டிருக்கும் போதே, சூரியனின் மிகவும் வெப்பம் நிறைந்த ஒளியை மறைத்துக் கொண்டு, ஆகாயத்தில் கனத்த புழுதிப் படலம் எழும்பியது. புழுதிப் படலத்தால் திசைகள் எல்லாம் மூடப்பட்டு மறைந்து போயின. மலை–காடு–சோலை நிறைந்த இந்தப் பூவுலகம் முழுவதும் நடுங்கியது. அப்போது, மலையரசன் போல் பெருத்த சரீரமுடையவர்களும் கூர்மையான பற்களை உடையவர்களும் மகாபலசாலிகளும் கணக்கில்லாதவர்களுமான வானரர்களால், அந்தப் பிரதேசம் முழுவதும் நிறைந்ததாயிற்று. விரும்பிய உருவம் எடுக்கக் கூடியவர்களும் அநேக கோடிக்கணக்கானவர்களுமான வானரப் படையின் தலைவர்களால், ஒரு நிமிஷத்திற்குள்ளாகவே, அந்தப் பிரதேசம் சூழப்பட்டதாயிற்று. (8–11)

ஆற்றோரங்கள்–மலைகள்–கடற்கரைகள்–காடுகள் மற்றும் மேருமலையை இருப்பிடமாகக் கொண்டவர்கள்; மற்றுமுள்ள மகாபலம் பொருந்திய வானரர்கள்; மேகம் போல் கர்ஜிப்பவர்கள்; இளஞ்சூரியனின் நிறமுடையவர்கள்; சந்திரனைப் போல பொன்னிறமானவர்கள்; தாமரைத் தாதுவைப் போன்ற நிறமுடையவர்கள்; வெண்மையானவர்கள் – இப்படிப்பட்ட பத்தாயிரம் கோடிக்கணக்கான வானரர்களால் சூழப்பட்டு, வெற்றித்திரு பொருந்திய சதபலி என்ற வானரன் அவ்விடம் வந்து சேர்ந்தான். பொன்மலை போல் ஒளிவீசுபவனும் மகாவீரனுமான தாரையின் தந்தை, பற்பல பத்தாயிரம் கோடிக்கணக்கானவர்களோடு அப்போது அங்கே வந்து தோன்றினான். (12–15)

மிக்கப் பெருமை பெற்றவனும் சுக்ரீவனின் மாமனாருமான (அதாவது) ருமையின் தந்தை, (தன் பங்காக) மேலும் பல கோடி–ஆயிரங்கணக்கானவர்களோடு சூழப்பட்டவனாக வந்து சேர்ந்தான். தாமரைத் தாதுவைப்போல் ஒளிர்பவனும், இளஞ்சூரியனைப் போல் செவ்வண்ணம் கொண்டவனும், அறிவாளனும், வானரோத்தமனும், எல்லா வானரர்களிலும் சிறந்தவனும், அனுமானின் தந்தையும், வீரத்திரு பொருந்தியவனுமான கேசரி, பல்லாயிரம் வானர வீரர்களுடன்கூட வந்து தோன்றினான். பயங்கரமான பராக்கிரமமுடையவனும், கோலாங்கூலம் என்ற வானர இனத்தின் மாமன்னனுமான கவாக்ஷன், கோடி ஆயிரக்கணக்கான வானரர்கள் சூழ வந்து சேர்ந்தான். (16–19)

எதிரிகளை மாய்ப்பவனான தூம்ரன், அளவில்லாத ஆற்றல் படைத்த இரண்டாயிரம் கோடி கரடிகளுடன் வந்து சேர்ந்தான். மகாவீரனான பனஸன் என்ற படைத்தலைவன், பெரிய மலைகளைப் போல் உருவம் படைத்தவர்களும் பயங்கரமான செயல்புரிபவர்களுமான மூன்று கோடி (வானரர்கள்) சூழ வந்து சேர்ந்தான். கருமையான மலை போன்றவனும் பெரிய சரீரத்தை உடையவனும் படைத்தலைவனுமான நீலன் என்பவன், பத்து கோடி வானரர்களுடன் அப்போது அங்கே தோன்றினான். அவ்வாறே, பொன்மலை போல் ஒளிர்பவனும் மகாவீரனும் சேனைத் தலைவனுமான கவயன் என்பவன் ஐந்து கோடி (வானரர்கள்) சூழ வந்து சேர்ந்தான். (20–23)

பலசாலியும் படைத்தலைவனுமான தரீமுகன் என்ற வானரன், ஆயிரங்கோடி வானரர்களுடன் கூட அவ்விடம் வந்து, சுக்ரீவன் அருகில் நின்றான். மகாபலம் கொண்டவர்களும் அசுவிநீ தேவர்களின் புதல்வர்களுமான மைந்தன், த்விவிதன் ஆகிய இருவரும் பல்லாயிரம் கோடி வானரர்களுடன் தோன்றினார்கள். மகாபராக்கிரமசாலியும் பலவானும் வீரனும் ஆகிய கஜன் என்பவனும், மூன்று கோடி வானரர்களுடன் வந்து சுக்ரீவனுக்கு அண்மையில் நின்றான். பேராற்றலுடையவரும் கரடிகளின் அரசரும் சுக்ரீவனின் சொல்லுக்குக் கட்டுப்பட்டவருமான ஜாம்பவான் என்பவர், பத்து கோடி கரடிகளுடன் வந்து சேர்ந்தார். (24–27)

பராக்கிரமம் பொருந்தியவனும் பலசாலியுமான ருமண்வான் என்ற வானரன், நூறு கோடி வானரர்களோடுகூட வானர மன்னனிடம் வேகமாக வந்து சேர்ந்தான். நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான, ஆயிரங்கோடிக்கணக்கான வானரர்கள் பின்தொடர்ந்து வர, கந்தமாதனன் அப்போது அங்கே வந்து சேர்ந்தான். தந்தைக்கு நிகரான பராக்கிரமம் பொருந்தியவனும் இளவரசனுமான அங்கதன், நூறு லட்சம் கோடி, நூறு கோடி கோடி (வானரர்கள்) சூழ, அப்போது வந்து சேர்ந்தான். நட்சத்திரம் போல் ஒளி வீசுபவனும், அஞ்சத்தக்க பராக்கிரமத்தையுடையவனுமான தாரன் என்ற வானரன், வெகுதொலைவிலிருந்து ஐந்து கோடி வானரர்களோடு அவ்விடம் வந்து சேர்ந்தான். (28–31)

வீரனும் சேனைத் தலைவனும், பதினோரு கோடி வானரர்களுக்குத் தலைவனுமான இந்திரஜானு என்ற வானரன், அவர்கள் எல்லோருடனும் வந்து சேர்ந்தான். இளஞ்சூரியனைப் போன்ற ரம்பன் என்பவன், நூறு–ஆயிரம்–பதினாயிரம் வானரர்களால் சூழப்பட்டவனாக

அப்போது அங்கே வந்து சேர்ந்தான். அவ்வாறே, பலம் மிக்கவனும் வீரனும் படைத்தலைவனுமாகிய துர்முகன் என்ற வானரன், இரண்டு கோடி வானரர்களுடன் வந்து சேர்ந்தான். அனுமான், கைலாயமலை போல் வெண்மையான பேருருவம் கொண்டு, எல்லையில்லாப் பராக்கிரமமுடைய கோடி ஆயிரக்கணக்கான வானரர்களுடன் அங்கு வந்து சேர்ந்தார். (32–35)

பெருவீரனான நளன், நூறு–ஆயிரம்–நூறு கோடிக்கணக்கில் மரங்களில் வாழும் வானரர்களுடன் வந்து சேர்ந்தான். 'நம்பத்தக்கவன்' என்ற திருபொருந்தியவனும், மகாத்மா சுக்ரீவனுக்குப் பிடித்தவனுமான ததிமுகன் என்பவன் பத்துக் கோடி வானரர்களுடன் அங்கே வந்து சேர்ந்தான். சரபன், குமுதன், வன்ஹி, ரம்மன் – இவர்களும், விருப்பப்படி உருவம் எடுக்கக்கூடிய வானரத் தலைவர்களும், தரை–மலை–காடுகளை ஆக்கிரமித்துக் கொண்டு, அவ்விடம் வந்து சேர்ந்தார்கள். அவ்வாறு வந்து சேர்ந்தவர்களைக் கணக்கிடவே முடியாது. (36–39)

அங்கு வந்து சேர்ந்த எல்லா வானரர்களும் தரையில் அமர்ந்து கொண்டார்கள். சூரியனை மேகக்கூட்டங்கள் சூழ்ந்துகொள்வதைப் போல, அங்கு வந்த வானரர்கள் குதித்துக் கூத்தாடிக் கும்மாளமிட்டுக் கொண்டும் கர்ஜித்துக் கொண்டும் சுக்ரீவனைச் சூழ்ந்து கொண்டார்கள். உடல் பலம் மிக்கவர்களும் மனமகிழ்ச்சியுடன் இருந்தவர்களுமான அவர்கள் பலவித ஒலிகளை எழுப்பிக் கொண்டு, வானர மன்னன் சுக்ரீவனுக்கு முடிதாழ்த்தி வணங்கி, (தாங்கள் வந்து விட்டதைத்) தெரிவித்துக் கொண்டார்கள். தலைவர்களான மற்ற வானரோத்தமர்கள், தங்கள் தகுதிக்கேற்றபடி சுக்ரீவனை வணங்கிவிட்டு நகர்ந்தார்கள். மேலும், பலர் (சுக்ரீவனின் உத்தரவை எதிர்பார்த்தவர்களாய்) கைகூப்பியவண்ணம் அவனருகிலேயே நின்றார்கள். (40–42)

அறம் அறிந்தவனான சுக்ரீவன், கைகூப்பி வணங்கிக் கொண்டு, உடனே இராமனிடம் (கணக்கில்லாத வானரர்கள் வந்து சேர்ந்துவிட்டதைத்) தெரிவித்தான். பின்னர், வானரத் தலைவர்களைப் பார்த்துக் கட்டளையிட்டான்— "வானரப்படைத் தலைவர்களே! படைவீரர்களை மலையருவிகளின் அருகிலும் காடுகளிலும் உங்கள் செளகரியப்படித் தங்கச் செய்யுங்கள். அவரவர்கள் தத்தம் படையினரைச் சிறந்த முறையில் பாதுகாக்க வேண்டும்." (43,44)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
முப்பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பது

சீதாதேவியைக் கிழக்கில் தேட அனுப்புதல்

பின்னர், எதிரிகளின் படையை அழிக்கும் புருஷோத்தமரான இராமனைப் பார்த்து, தன் எண்ணம் நிறைவேறப்பட்டவனும் வானரர் மன்னனுமான சுக்ரீவன் (பின்வருமாறு) சொன்னான்— பலவான்களும், நினைத்த உருவம் எடுக்க வல்லவர்களும், பெரும் யானைகளைப் போன்றவர்களும், என் நாட்டில் (ஆளுகையில்) இருப்பவர்களுமான வானரர்கள் எல்லோரும் வந்துவிட்டார்கள்; செளகரியமான இடங்களில் தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த வானரத் தலைவர்கள் அஞ்சத்தக்க ஆற்றலுடையவர்கள்; அசுரர்–தானவர்களுக்கு நிகரான, அளவிட முடியாத பராக்கிரமமும் சூரத்தனமும் கொண்ட வானரர்களோடு வந்திருக்கிறார்கள். (1–3)

(இவர்கள்) செய்யும் தொழிலில் திறமையும் நல்லொழுக்கமும் உடையவர்கள்; வலுவுள்ளவர்கள்; களைப்பை வென்றவர்கள்; 'எதிரிகளைத் தாக்குவதில் வல்லவர்' என்று புகழ்பெற்றவர்கள்; முயற்சி செய்வதில் சளைக்காதவர்கள். இராமபிரானே! இவர்கள் நீரிலும் நிலத்திலும் வசிப்பவர்கள்; பல மலைகளில் வாழ்பவர்கள்; எத்தனையோ கோடிக்கணக்கில் வந்திருக்கும் இவர்கள், தங்கள் பணியாளர்கள். எதிரிகளை அடக்குபவரே! இவர்கள் எல்லோரும்

தமக்கு இடப்பட்ட கட்டளைக்கிணங்க நடப்பவர்கள்; எல்லோரும் தலைவருக்கு நலன் செய்வதில் ஈடுபாடுடையவர்கள்; தங்கள் எண்ணத்தை நிறைவேற்றிக் கொடுக்கும் சக்தியுள்ளவர்கள். (4–6)

எது நமது முயற்சிக்கு ஏற்ற காலம் என்று தங்களுக்குத் தோன்றுகிறதோ, அதைக் கூறுங்கள். இந்தப் படை தங்களுடையது; தங்கள் கட்டுப்பாட்டில் இருக்கிறது. தாங்கள் அவரவர்களுக்கு உரியபடிக் கட்டளையிட வேண்டும். வீரரே! 'நடக்க வேண்டிய காரியம் என்ன?' என்பது இவர்களுக்குத் தெரியும்தான். என்றாலும், அதை எவ்வாறு செயல்படுத்த வேண்டும்? என்று, தங்கள் மனத்தில் எப்படி திட்டமிட்டு வைத்திருக்கிறீர்களோ, அதைத் தாங்களே கூறவேண்டும்.'' இவ்வாறு மொழிந்த சுக்ரீவனை இராமன், இரு கைகளாலும் இறுகக் கட்டித் தழுவி, பின்வரும் சொற்களைக் கூறினார்— (7–9)

''அன்பனே! மகாமேதாவியே! சீதை உயிரோடு இருக்கிறாளா, இல்லையா? என்பதை முதலில் அறிந்துகொள்ள வேண்டும். (அத்துடன்) இராவணன் எந்த இடத்தில் வசிக்கிறான்? என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும். இராவணனது இருப்பிடத்தையும் சீதையைப் பற்றிய தகவலையும் அறிந்த பிறகு, அந்த நேரத்தில் செய்வதற்குகந்த நடவடிக்கை பற்றி, உன்னுடன் ஆலோசனை செய்கிறேன். வானரர் தலைவனே! இந்தக் காரியத்தில் எல்லா அதிகாரமும் பெற்றவன், நீதான்; நானோ லட்சுமணனோ இல்லை. வானர மன்னனே! இந்தக் காரியத்தை நடத்திக் கொடுக்க வேண்டியவனும் சர்வ வல்லமையுள்ளவனும் நீயே. (10–12)

மாபெரும் தலைவனே! என்னுடைய காரியம் வெற்றியடைவதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, அதை நீயே நிச்சயம் செய்து, அதற்கேற்றபடி உத்தரவிடு. வீரனே! எனக்கு ஆகவேண்டிய காரியம் எது? என்று உனக்கு நன்றாகத் தெரியும் என்பதில் ஐயமில்லை. நீ, (லட்சுமணனுக்கு அடுத்தபடி) எனக்கு நல்ல நண்பன்; மிக்க பராக்கிரமமுடையவன்; மேதாவி; காலத்திற்கேற்ற செயல்களை அறிந்தவன்; எங்கள் நலனில் அக்கறையுடையவன்; காரியங்களைச் செவ்வனே செய்பவன்; என்னுடைய காரியத்தை மிக நன்றாக அறிந்தவன்.'' (13,14)

இவ்வாறு சொல்லப்பட்டவுடன், வானர மன்னனான சுக்ரீவன், மலைபோல் பேருருவம் படைத்தவனும், மேகம் போல் கர்ஜிப்பவனும், பலம் மிக்கவனும், படைத்தலைவனுமான வினதன் என்பவனை அழைத்து, இராமன் மற்றும் புத்திமானான லட்சுமணன் முன்னிலையில் (பின்வருமாறு) கூறினான்— ''வானரோத்தமனே! தேச–காலத்திற்கேற்ற உபாயத்தையும், செய்யத்தக்கது–செய்யத்தகாதது என்று பகுத்தறிவதிலும் நீ சமர்த்தன். சந்திர–சூரியர்களின் புதல்வர்களும், மிக்க வேகமாகச் செல்லக்கூடிய நூறாயிரம் வானரர்களுடனும்கூட மலை–காடு–சோலைகள் நிறைந்த கிழக்குத் திசைக்குச் செல். (சுக்ரீவன் பேச்சில் வரும் கிழக்கு முதலான திசைகள் இமயமலை–விந்தியபர்வதங்களுக்கு இடைப்பட்ட ஆர்யவர்த்தத்தை மையமாகக் கொண்டவை என்பது நினைவுகொள்ளத்தக்கது.) (15–17)

அங்கு மலைமுகடுகள்; காடுகள்; நதிக்கரைகள்; கண்கவர் பாகீரதி–சரயு–கௌசிகீ ஆற்றோரங்கள்; காளிந்தி நதியான யமுனை; மாமலையான யாமுனம்; சரஸ்வதி, சிந்து, மாணிக்கம் போல் நிர்மலமான நீரையுடைய சோணபத்ரம்; மஹி, காலமஹி, பிரம்மமாலம், விதேகம், மாளவம், காசி, கோசலம், மகதம் ஆகிய நாடுகளிலுள்ள பெரிய பெரிய கிராமங்கள்; அவ்வாறே புண்ட்ரம், வங்கம், கோசகாரர்கள் என்னும் மன்னர்கள் இருக்கும் நகரம்; வெள்ளிச் சுரங்கங்கள் ஆகிய அனைத்து இடங்களிலும், இராமனுடைய அன்புக்குரிய மனைவியும் தசரதனுடைய மருமகளுமான சீதையையும், இராவணனின் இருப்பிடத்தையும் தேடும்போது, ஆங்காங்கேயுள்ள மற்ற இடங்களிலும் சுற்றிப் பாருங்கள் (தேடுங்கள்). (18–22)

பெருங்கடலுக்குள் மறைந்திருக்கும் மலைகளையும், பட்டணங்களையும், மந்தரமலையின் விசாலமான கொடுமுடியில் வசிக்கின்ற சிலரையும், கர்ணப்ராவணர்கள் (தொங்கும்

காதுகளை உடையவர்கள்), ஒஷ்டகர்ணர்கள் (உதடு வரை நீண்ட காது உடையவர்கள்), கோரலோஹமுகர் (இரும்பு போன்று கருமையும் பயங்கரமுமானவர்கள்), ஒரு காலுடனே வேகமாக நடப்பவர்கள், என்றைக்கும் குறைவுபடாத பலசாலிகளான மானுடர்கள், நரமாமிசம் உண்பவர்கள், ஊசிமுனை போல் கூரான முடியை உடையவர்கள், அழகான பொன்வண்ண மேனியர்கள், பச்சையாக மீனைப் புசிக்கும் வேடர்கள், த்வீபங்களில் வசிப்பவர்கள், மேலே புலித்தோற்றமும் கீழ்ப்பகுதியில் மனித வடிவமும் கொண்டு நீரினுள்ளே வாழ்பவர்கள், காட்டு மனிதர்கள் ஆகிய அனைவரது இடங்களிலும் தேடவேண்டும். (23–26)

மலைகளின் வழியே சென்று அடையக் கூடிய இடங்களையும், தாவிக்குதித்தோ படகு–தோணிகளில் சென்றோ அடையக்கூடிய தீவுகளிலும், (சீதையைத் தேடவேண்டும்.) அத்துடன் மிகவும் மும்மரமாக நீங்கள் எல்லோரும் ஏழு ராஜ்ய பிரிவுகள் அடங்கிய யவத்வீபம் (ஜாவா), சுவர்ணத்வீபம் (சுமத்ரா), தங்கச் சுரங்கங்கள் நிறைந்த ரூப்யகத்வீபம் ஆகியவற்றிலும் தேடுங்கள். யவத்வீபத்தைக் கடந்து சென்றால் சிசிரம் என்ற பெயருடைய மலையைக் காணலாம். அதன் சிகரங்கள் தேவ–தானவர்கள் வசிக்கும் ஆகாயத்தைக் தொட்டுக் கொண்டு நிற்கின்றன. இவ்விடங்களிலுள்ள மலைக்கோட்டைகளில் மலையருவிகளின் அக்கம்பக்கங்களிலும், காடுகளிலும், எல்லோரும் ஒற்றுமையாகச் சென்று, இராமபிரானின் புகழ்மிக்க மனைவியைத் தேடுங்கள். (27–30)

சமுத்திரத்தின் எதிர்க்கரையில் சித்த–சாரணர்கள் வசிக்கிறார்கள். அவ்விடத்தில் மிகவும் ஆழமானதும் வேகமான நீரோட்டமுடையதும் சிவந்த நீரையுடையதுமான சோணம் என்ற ஆற்றையடைந்து, அதன் கவின்மிகு தீர்த்தகட்டங்களிலும் கண்கவர் காடுகளிலும் மற்றுமுள்ள எல்லா இடங்களிலும், இராவணனையும் சீதையையும் தேட வேண்டும். மலைகளிலிருந்து தோன்றிய நதிகளின் கரைகளில், மிகவும் அழகான சோலைகளும் குகைகள் அமைந்த மலைகளும் காடுகளும் தேடத் தகுந்த இடங்கள். அதற்கப்பால் வேகமான காற்றினால் மோதப்பட்டுப் பேரொலியெழுப்பும் அலைகளோடு கூடிய (கருப்பஞ்சாறு நிறைந்த) பெருங்கடலையும், பயங்கரமான தீவுகளையும் அந்தக் கடலில் காண்பீர்கள். (31–34)

அவ்விடத்தில் பெரிய சரீரங்களைக் கொண்ட அசுரர்கள், நெடுங்காலமாகப் பசியுடன் வருந்திக் கொண்டிருக்கிறார்கள். பிரும்மாவின் பேரருளினால், மேலே பறந்து செல்லும் பிராணிகளின் நிழலைக் கடல்நீரில் கண்டு, அந்தப் பிராணிகளைப் பற்றியிழுத்து புசிக்கிறார்கள். மேகம் போல் கருவண்ணம் கொண்டதும், பெரிய பாம்புகள் வாழ்வதும், பேரொலி எழுப்பிக் கொண்டிருப்பதுமான அந்தப் பெருங்கடலைத் தக்கதொரு தந்திரமுறையில் கடந்து, சிவப்பான தண்ணீரையுடைய அபாயகரமான லோகிதம் என்ற சமுத்திரத்தை அடைவீர்கள். அங்கே (சால்மலி த்வீபத்தின் இலச்சினையான) மிகப்பெரிய சால்மலி (இலவ) மரத்தைக் காண்பீர்கள். (35–37)

அவ்விடத்திலேயே கைலாசமலை போல் ஒளியுடனும், விசாலமாக விளங்குவதும், விசுவகர்மாவினால் சிறப்பாக நிர்மாணிக்கப்பட்டதும், பலவித இரத்தினங்கள் இழைக்கப்பட்டதுமான கருட பகவானின் மாளிகை இருக்கிறது. அங்கே மலை போல் பெரிய சரீரமுடையவர்களும் பயங்கரமானவர்களுமான மந்தேகர்கள் என்ற அரக்கர்கள், காண்போருக்கு அச்சம் விளைவிக்கும் பற்பல உருவங்கள் ஏற்று மலைச்சிகரங்களில் தொங்கிக் கொண்டிருக்கிறார்கள். சூரியோதய காலத்தில் அவர்கள் சூரியனுடன் போர் தொடங்குகிறார்கள். (அப்போது வாலகில்யர்கள் என்ற) பிரும்மஞானிகள் நாள்தோறும் அளிக்கும் காயத்ரீ மந்திர அர்க்கியம் என்ற அம்பினால் தாக்கப்பட்டு, சுரா சமுத்திரத்தில் வீழ்கிறார்கள். சூரிய கிரணங்கள் அவர்களை வெம்மையால் வாட்டுகின்றன. சூரியன் மறைந்ததும், மறுபடியும் பலத்தைப் பெற்று, மீண்டும் மீண்டும் மலையில் ஏறித் தொங்குகிறார்கள். (38–40)

எதற்கும் அஞ்சாதவர்களே! அவ்விடத்தைக் கடந்து, தொடர்ந்து செல்லும்போது (முறையே நெய் மற்றும் தயிர்க்கடலைப் பார்த்து, அங்கேயும் சீதையைத் தேடிவிட்டு,) வெண்முகில்

போன்றதும், பூமாதேவிக்கு முத்துமாலை போல் விளங்குவதுமான பாற்கடலைக் காண்பீர்கள். அதன் நடுவில் தெய்விகமான மணமுள்ள மலர்களைக் கொண்ட வெள்ளி மரங்கள் நிறைந்ததும் வெண்ணிறமானதுமான ரிஷபம் என்ற மலை இருக்கிறது. தங்கத் தாதுக்களையுடைய வெள்ளித் தாமரைகளும் ராஜஹம்ஸங்களும் விளங்குகின்ற சுதர்சனம் என்ற பெயர் பெற்ற ஓர் ஏரி இருக்கிறது. அந்த ஏரியில் ஜலக்ரீடை செய்வதற்காக, தேவர்கள், சாரணர்கள், யட்சர்கள், கின்னரர்கள், அப்சரசுகள் கூட்டங்கூட்டமாக வருகிறார்கள். (41–44)

வானரர்களே! அந்தப் பாற்கடலைக் கடந்ததும், உயிர்ப்பிராணிகள் எல்லாவற்றையும் பயமுறச் செய்வதும், கடல்களில் சிறப்பானதுமான தூயநீர் நிரம்பிய கடலைக் காண்பீர்கள். அதனடியில், (ஔர்வர் என்ற மாமுனிவரின்) கோபத்தால் உண்டாக்கப்பட்ட மாபெரும் அக்னியான வடவாமுகம் இருக்கிறது. சராசரப் பிராணிகள் வசிப்பதும், மகாவேகத்துடன் கூடியதுமான அந்தக் கடலின் நீர், வடவாக்னியின் ஆகாரம் என்று சொல்கிறார்கள். அப்பெருங்கடலில் வாழும் பிராணிகள், மிகவும் பலமுள்ளவைகளானாலும் வடவாமுகம் என்ற அக்னியைக் கண்டு, (அது நம்மைச் சுட்டெரித்துவிடுமே? என்ற) அச்சத்தால் அலறும் கதறலை எப்போதும் கேட்கலாம். (45–47)

சுவையான நீர் நிறைந்த அந்தக் கடலின் வடக்குத் திசையில், பதின்மூன்று யோஜனை தூரத்தில், பொன்வண்ணங்கொண்டு திகழும் ஜாதரூபம் என்ற பொன்மலை இருக்கிறது. வானரர்களே! அந்த மலையின் சிகரத்தில், சந்திரன் போல் ஒளிவீசுபவரும், உலகத்தைத் தாங்குகிறவரும், தாமரை இதழ் போன்று விசாலமான கண்களை உடையவரும், எல்லா தேவர்களாலும் வணங்கப்படுபவரும், ஆயிரம் தலைகள் உடையவரும், நீல ஆடையுடுத்தியவரும், அனந்தன் என்று பெயர் பெற்றவருமான நாகராஜன் வீற்றிருக்கக் காண்பீர்கள். (48–50)

அந்த மலையின் உச்சியில், மகாத்மாவான அவருக்குக் கொடியாக, மூன்று பிரிவுகளை உடையதும் பொன்னாலானதும் அடிப்பாகத்தில் மேடையுடன் கூடியதுமான ஒரு பனைமரம் நிறுவப்பட்டு அழகைக் கூட்டுகிறது. இந்தப் பனைமரக் கொடி, உலகில் கிழக்கு எல்லையைக் காட்டும் அடையாளமாக தேவர்களால் அமைக்கப்பட்டிருக்கிறது. இதற்குமப்பால் பொன்மயமான உதயகிரி இருக்கிறது. அஸ்திவார மேடையுடன் கூடிய அந்த மலையின் முகடு, வானுலகத்தைத் தொடுமாற்போல மிக உயரமாகவும் நூறு யோஜனை அகலமுள்ளதாகவும் பொன்மயமாகவும் தெய்விக அழகுடனும் விளங்குகிறது. (51–53)

சூரியனைப் போல் பிரகாசமாக விளங்குகின்றவைகளும் தெய்விகமானவைகளும் பொன்மயமானவைகளுமான பூத்துக்குலுங்கும் ஆச்சா–பனை–தமாலம்–கொன்றை மரங்களால் வனப்புடன் விளங்குகிறது. அங்கே ஒரு யோஜனை அகலமும், பத்து யோஜனை உயரமுமுள்ள ஸௌமனஸம் என்ற பொற்சிகரம் இருக்கிறது. முன்பு, திரிவிக்ரம அவதாரத்தின்போது, புருஷோத்தமரான விஷ்ணு பகவான், தன் முதலாவது காலடியை அதன்மேல் வைத்து, இரண்டாவது அடியை மேருவின் சிகரத்தில் வைத்தார். சூரியதேவன், வடபுறம் வழியாக ஜம்பூத்வீபத்தைச் சுற்றி வரும்போது, அதாவது மிகவும் ஓங்கி உயர்ந்த ஸௌமனஸ மலையை அடையும்போது, ஜம்பூத்வீப மக்களுக்குத் தெளிவாகத் தெரிகிறார். (54–57)

அவ்விடத்தில், பகலவன் நிகர் தேஜஸ் உடையவர்களும், தவச்செல்வர்களும், வைகாநஸர் என்று பெயர் பெற்றவர்களுமான வாலகில்யர்கள் என்னும் மாமுனிவர்கள் ஒளிவீசிக் கொண்டிருக்கிறார்கள். அதனெதிரில், எல்லா உயிர்ப்பிராணிகளுக்கும் வெளிச்சமும் பார்வையும் கிடைக்கின்ற (அதாவது பிராணிகள் விழிப்படைந்து பொருள்களைப் பார்க்கின்ற) சுதர்சனம் என்ற தீவு இருக்கிறது. அங்குள்ள மலைமுகடுகள், குகைகள், காடுகள் மற்றும் சுற்றிலுமுள்ள இடங்களிலும் இராவணனையும் சீதையையும் தேடிப் பார்க்க வேண்டும். (58–60)

சுவர்ணமயமான உதயகிரியின் ஒளியினாலும், தேவதேவரான இளஞ்சூரியனுடைய ஒளியினாலும் வியாபிக்கப்பட்டு, காலை சந்தி செந்நிறமாகப் பிரகாசிக்கிறது. பூர்வ காலத்தில்,

இதுதான் மண்ணுக்கும் விண்ணுக்குமிடையே நுழைவாயிலாகவும், சூரியன் உதிக்கும் ஸ்தானமாகவும் சிருஷ்டிக்கப்பட்டது. அதனால்தான், பூர்வ திக்கு (கிழக்குத் திசை) என்று சொல்லப்படுகிறது. உதயகிரியின் அடிவாரங்கள், அருவிகள், குகைகள் மற்றும் சுற்றிலுமுள்ள இடங்களிலும் சீதையையும் இராவணனையும் தேட வேண்டும். (61–63)

இதற்கு மேல் கிழக்குத் திசையில் செல்ல முடியாது. (ஏனென்றால்,) தேவர்கள் வசிக்கும் இடம் இருக்கிறது. அங்கு சூரிய–சந்திரர்கள் இல்லாததால் இருள் அடர்ந்து மனிதர்களின் பார்வைக்குப் புலனாகாமல் இருக்கிறது. அந்த மலைகள், குகைகள், காடுகள் ஆகியவற்றிலும் மற்றும் என்னால் பெயர் குறிப்பிட்டுச் சொல்லப்படாத மற்றப் பிரதேசங்களிலும் சீதாப்பிராட்டியார் தேடப்பட வேண்டும். வானரோத்தமர்களே! இந்த (உதயகிரி) எல்லை வரையில்தான் வானரர்களால் போக முடியும். இதற்குமப்பால், சூரியன் இல்லாததால் நாடு–நகரம் என்ற பிரிவுகளில்லாத இருள் சூழ்ந்த இடங்களைப் பற்றி, நாம் அறியோம். (64–66)

நீங்கள் உதயகிரி வரை சென்று, சீதையைப் பற்றிய விவரம், இராவணனின் இருப்பிடம் ஆகியவற்றைத் தெரிந்து கொண்டு, ஒரு மாத காலம் முடிவதற்குள் திரும்பி வந்து சேர வேண்டும். ஒரு மாதத்திற்கு மேல் சுற்றி அலையக்கூடாது. தாமதித்து வருபவன் என்னால் கொலை தண்டனை விதிக்கப்படுவான். மைதிலியைப் பற்றித் தெரிந்து கொண்டு, காரியத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு திரும்பி வந்து சேருங்கள். வானரர்களே! மரங்கள் அடர்ந்ததும், இந்திரனுக்குப் பிரியமானதுமான திசையில் நன்றாகச் சுற்றிப் பார்த்துவிட்டு, ரகுகுல திலகரான இராமனின் பத்தினியைப் பற்றித் தெரிந்து கொண்டு திரும்பி வந்து, வெற்றிப் பொலிவுடன் சௌக்கியமாக இருப்பீர்களாக.'' (67–69)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
நாற்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்தொன்று

தெற்குத் திசையில் அனுப்புதல்

இவ்வாறு கூறி, அந்த மாபெரும் படையை அனுப்பி வைத்த சுக்ரீவன், தேர்ந்தெடுக்கப்பட்ட சில வானரர்களைத் தென்திசைக்கு அனுப்பினான். அக்னியின் புதல்வனான நீலன், வானரத் திலகமான அனுமான், பிரும்மாவின் மைந்தரும் பேராற்றல் படைத்தவருமான ஜாம்பவான், ஸுஹோத்ரன், சராரி, சரகுல்மன், கஜன், கவாக்ஷன், கவயன், ஸுஷேணன், ரிஷபன், மைந்தன், த்விவிதன், சரபன், கந்தமாதனன், அக்னியின் இரட்டைப் புதல்வர்களான உல்காமுகன்–அஸங்கன் மற்றும் அங்கதன் முதலான விரைந்து செல்லும் பராக்கிரமமுடைய வானரர்களை அழைத்து, எல்லா இடங்களையும் நன்றாக அறிந்த மாவீரனான வானர மன்னன் (சுக்ரீவன்) பின்வருமாறு ஆணையிட்டான். (1–5)

அந்த வானர வீரர்களுக்குப் பேராற்றலுடைய அங்கதனையே தலைவனாக நியமித்து, தெற்குத் திசையில் சீதையைத் தேடும் பொறுப்பை ஒப்படைத்தான். வானர மன்னன், அந்தத் திசையில் செல்லுதற்கரியதாக இருக்கும் சில இடங்களைப் பற்றி வானரோத்தமர்களான அவர்களுக்கு விளக்கிக் கூறினான்— ''பலவகையான மரம்–கொடிகள் செறிந்ததும் ஆயிரம் முகடுகளை உடையதுமான விந்திய மலையிலும், பெரிய பாம்புகள் வசிப்பதும் கடப்பதற்கரியதுமான நர்மதை நதி, அதைக் கடந்து கோதாவரீ என்னும் அழகிய நதி, கிருஷ்ணவேணி, மகாநதி, பெரும் பாம்புகள் குடிகொண்டுள்ளதும் மிகவும் புனிதமானதுமான வரதை ஆகிய நதிகளின் கரைகளிலும், மேகலை, உத்கலை, தசார்ணம், அசுவவந்தி, அவந்தி ஆகிய நகரங்களிலும் நன்றாகத் தேடிப் பாருங்கள். (6–10)

விதர்ப்பம், ரிஷ்டிகம், கண்கவர் மாஹிஷம், வங்கம், கலிங்கம், கௌசிகம் முதலான நாடுகளில் தேடிப் பார்த்துவிட்டு, அப்படியே மலைகளும் நதிகளும் குகைகளும் கூடிய தண்டகாரண்யத்திலும், அதைக் கடந்து கோதாவரி நதிக்கரைகளிலும் சுற்றிப் பாருங்கள். அவ்வாறே ஆந்திரம், புண்ட்ரம், சோழநாடு, பாண்டியநாடு, கேரளம் ஆகிய நாடுகளுக்கும், தாதுப்பொருள்கள் நிறைந்த அயோமுகம் (மலயம்) என்ற மலைக்கும் செல்லவேண்டும். (அயோமுகம் என்ற மலை – மலயமலை என்றும், ஸஹ்ய பர்வதம் என்றும், வேறொரு மலை என்றும் கருத்துக்கள் உள்ளன.) (11–13)

பல்வகையான சிகரங்களை உடையதும், அழகுச் செல்வம் வாய்க்கப் பெற்றதும், அழகாகப் பூத்த மரங்களையுடையதும், சந்தனமரக் காடுகளைக் கொண்டதுமான (அயோமுகம் என்ற) அந்த மாபெரும் மலையில் தேட வேண்டும். அதற்கும் அப்பால், தெய்விகமானதும் தெளிந்த நீரை உடையதும் மங்களத்தைத் தருவதும் அப்சரக் கூட்டங்கள் நீராடித் திளைப்பதுமான காவேரி நதியைக் காண்பீர்கள். அந்த மலயமலையின் உச்சியில், சூரியனைப் போல் தேஜசுடன் விளங்கும் அகஸ்தியர் என்னும் முதுமுனிவர் வீற்றிருப்பதைக் காண்பீர்கள். (அவரைக் கண்டு வணங்கி ஆசி பெறவேண்டும்.) பின்னர், மனமகிழ்ந்த முனிவரால் விடைகொடுக்கப்பட்டு, பெரிய முதலைகள் வசிக்கும் மகாநதியான தாமிரபரணியைத் தாண்டிச் செல்லுங்கள். (14–17)

தீவு போல் மணற்திட்டுக்கள் காணப்படுவதும் கரையோரங்களிலுள்ள செழிப்பான சந்தன மரங்களால் மறைக்கப்படுவதுமான அந்த ஆறு, தன் காதலன் இருப்பிடத்திற்கு அவசரமாகச் செல்லும் இளம்வயதுப் பெண்ணைப் போல, வேகமாக ஓடிச் சமுத்திரத்தை அடைகிறது. வானரர்களே! அங்கிருந்து தொடர்ந்து சென்றால், பொன்மயமானதும் பேரழகு படைத்ததும் முத்து–இரத்தினங்கள் இழைக்கப் பெற்றதுமான பாண்டிய குலத்தோரின் தலைநகருக்குள் செல்வதற்கான நுழைவாயிலைக் காண்பீர்கள். (18,19)

பின்னர், மேலே சென்றால் கடலின் கரையை அடைவீர்கள். 'அதை எப்படிக் கடந்து செல்வது?' என்ற உபாயத்தை நிச்சயம் செய்து கொள்ள வேண்டும். அந்தப் பெருங்கடலின் நடுவில், பொன்மயமானதும் இயற்கை வளங்கள் நிறைந்ததும் விசித்திரமான அழகுடன் விளங்கும் மரங்கள் அடர்ந்ததும் சிறந்த மலையுமான 'மகேந்திரம்' அகஸ்தியரால் அங்கு நிலைநிறுத்தப்பட்டு இருக்கிறது. அதன் அடிப்பகுதி பெருங்கடலினுள் வெகு ஆழம்வரை வியாபித்துள்ளது. (20,21)

நன்றாகப் பூத்த மலர்களைக் கொண்ட மரங்களாலும் கொடிகளாலும் வனப்புடன் விளங்குவதும், முக்கியமான தேவரிஷிகள், யட்சர்கள், அப்சரப் பெண்டிர் ஆகியோர் வந்து போவதும், சித்த–சாரணர்களின் கூட்டங்கள் விரவியிருப்பதும் மனத்தைக் கவரும்வண்ணம் வனப்புடன் விளங்குவதுமான அந்த இடத்திற்கு, ஒவ்வொரு பருவ நாட்களிலும் (அமாவாசை–பௌர்ணமியில்) இந்திரன் தவறாமல் வந்துகொண்டிருக்கிறான். (22,23)

அந்தப் பெருங்கடலின் அக்கரையில் (நடுவில்) நூறு யோஜனை விஸ்தாரமுள்ள ஒரு தீவு இருக்கிறது. அந்த இடத்தை மனிதர்கள் சென்றடைய முடியாது. ஒளிவீசும் அந்தத் தீவின் எல்லாப் பக்கங்களிலும் மிகவும் தீவிரமாகத் தேட வேண்டும். இந்திரனுக்கு நிகரான பராக்கிரமமுடையவனும் நம்மால் கொல்லத்தக்கவனுமான அரக்க மன்னன் இராவணனின் நாடு, அதுதான். அந்தத் தென்கடலின் நடுவில், வானத்தில் செல்லும் பிராணிகளின் நிழல் கடலில்பட்டதும், அதைப் பிடித்திழுத்து உண்ணும் இயல்புடைய அங்காரகா என்ற அரக்கி வசித்துக் கொண்டிருக்கிறாள். (24–26)

இணையற்ற பராக்கிரமம் கொண்ட புருஷோத்தமர் இராமனின் பத்தினியான சீதையை அந்தத் தீவின், மறைவிடங்கள் உட்பட எல்லா இடங்களிலும் புகுந்து கவனமாகத் தேடுங்கள். சந்தேகம் அற்றவர்களாக (சீதை, இந்தத் தீவில் இல்லை என்ற தீர்மானத்திற்கு வந்தவர்களாக) முடிந்தவரை தேடிப் பாருங்கள். அந்தத் தீவைக் கடந்து சென்றால், நூறு யோஜனைக்கு அப்பால்,

சித்த–சாரணர்கள் போற்றிக் கொண்டாடுவதும், இயற்கை வளம் கொண்டு விளங்குவதுமான புஷ்பிதகம் என்ற மலை இருக்கிறது. சந்திர–சூரியர்கள் போல் பிரகாசித்துக் கொண்டு, கடல் நீரால் சூழப்பட்ட இந்த மலையின் நெடிதுயர்ந்த முகடுகள், ஆகாயத்தில் கோடு வரைவதுபோல் (ஆகாயத்தைத் தொட்டுக் கொண்டு) விளங்குகின்றன. (27–29)

அதனுடைய ஒரு பொற்சிகரத்தில் சூரியன் தங்குகிறான்; ஒரு வெள்ளிச் சிகரத்தில் சந்திரன் தங்குகிறான். நன்றி கொன்றவர்கள், இகழ்ச்சிக்குரியவர்கள், நாஸ்திகர்கள் – இந்த அற்புதக் காட்சியைக் காண மாட்டார்கள். வானரர்களே! நீங்கள் தலைவணங்கி மரியாதை செலுத்திவிட்டு, அந்த மலையில் தேடுங்கள். வெல்ல முடியாத வீரமுடையவர்களே! அதற்கும் அப்பால் புகுந்து செல்லமுடியாத பாதை வழியாகச் சென்றால், அங்கிருந்து பதிநான்கு யோஜனை தூரத்தில், 'சூர்யவான்' என்ற மலை இருக்கிறது. (30,31)

பின்னர், (சூர்யவான் என்ற மலையையும் கடந்து) மேலே சென்றால், விரும்பிய பழங்களைக் கொடுக்கக் கூடிய, எல்லா ருதுக்களிலும் பார்ப்பதற்கு மனோகரமாக இருக்கும் மரங்கள் நிறைந்த 'வைத்யுதம்' என்ற மலை இருக்கிறது. வானரர்களே! அவ்விடத்தில் சுவைமிக்க கிழங்கு–பழங்களை நன்றாகப் புசித்து, பலவகையான உயர்ரக மதுவையும் குடித்துவிட்டு தொடர்ந்து செல்லுங்கள். (தொடர்ந்து சென்றால்) கண்ணுக்கும் மனத்திற்கும் இனிமையான 'குஞ்ஜரம்' என்ற மலையைக் காண்பீர்கள். அந்த மலையில், அகஸ்திய மாமுனிவருக்காக ஒரு மாளிகையை விசுவகர்மா நிர்மாணித்திருக்கிறார். (32–34)

அந்த மாளிகை தெய்விகமானது; பொன்னாலும் பல்வகை இரத்தினங்களாலும் இழைக்கப்பட்டிருப்பது. அதனுடைய அகலம் ஒரு யோஜனை; உயரம் பத்து யோஜனை. அங்கே, பாம்புகளின் வாசஸ்தலமான 'போகவதி' என்ற நகரம் இருக்கிறது. (பாதாளத்திலும் போகவதி என்ற பெயரில் வேறொரு நகரம் இருக்கிறது.) வெல்லமுடியாத அந்த நகரத்தின் வீதிகள் விசாலமானவை; எல்லாப் பக்கங்களிலும் கவனமாகக் கண்காணிக்கப்படுவது. அந்த நகரம், கூரிய பற்களையுடைய, கடும் விஷமுடைய கொடிய சர்ப்பங்களால் காவல் காக்கப்படுகிறது. மிகவும் பயங்கரமான 'வாசுகி' என்ற அரவரசன் அங்கே வசிக்கிறான். அந்த போகவதி பட்டணத்திற்குள்ளும் சென்று, அலைந்து திரிந்து, சீதாப்பிராட்டியைத் தேடவேண்டும். (35–37)

அந்தப் பகுதியில் வேறு சில பிரதேசங்களும் மறைவான இடங்களில் அமைந்துள்ளன. அந்த நாட்டைக் கடந்து சென்றால், ரிஷபம் போல் தோற்றமுடையதும் எல்லா வகையான இரத்தினங்கள் நிரம்பியதும் 'ரிஷபம்' என்ற பெயருடையதுமான பெரியமலை இருக்கிறது. அங்கு அக்னியைப் போல் பிரகாசிக்கும் கோசீர்ஷகம், பத்மகம், ஹரிசியாமம் என்ற சந்தன மரங்கள் இருக்கின்றன. அந்த (தெய்விக) சந்தன மரங்களைக் கண்டதும் பேராவல் கொண்டு, அவைகளைத் தொட்டு முகர முனையக்கூடாது. (ஏனென்றால்,) 'ரோஹிதர்' என்ற பெயர் கொண்ட பயங்கரமான கந்தர்வர்கள், அந்தச் சந்தன வனத்தைப் பாதுகாக்கிறார்கள். (38–41)

அங்கு சூரியனுக்கு நிகரான ஒளியுடைய சைலூஷன், கிராமணி, சிக்ரு, சுப்ரன், பப்ரு என்ற கந்தர்வ தலைவர்கள் ஐவர் வசிக்கிறார்கள். (அந்த ரிஷப மலைக்கு அப்பால், மண்ணுலகின் தெற்கு எல்லை இருக்கிறது.) அந்த எல்லை சூரிய–சந்திர–அக்னியைப் போல் தேஜஸ் படைத்த புண்ணியசாலிகளின் இருப்பிடம். அங்கே வெற்றி கொள்ள முடியாத சுவர்க்கத்தில் (தாம் செய்த கடுமையான தவத்தின் பயனாக) இடம் பெறும் மகத்தான பேறுபெற்றவர்கள் வசிக்கிறார்கள். அதற்கும் அப்பால், மிகவும் பயங்கரமான பித்ருலோகம் இருக்கிறது. அங்கே நீங்கள் யாரும் போகக்கூடாது. அந்த இடம் யமராஜனின் தலைநகரம். அங்கு அடர்த்தியான இருள் கவிந்திருப்பதால் செல்லுதற்கரியது. (42–44)

வீரர்களான வானரோத்தமர்களே! தெற்குத் திசையில் இவ்வளவு தூரம்தான் உங்களால் செல்லவோ, தேடவோ முடியும். அதற்குமப்பால், உயிர்ப்பிராணிகளால் செல்ல முடியாது. நான்

சொல்லிய இவ்விடங்களிலெல்லாம் கட்டாயமாகத் தேடிப் பாருங்கள். அத்துடன், வேறு இடங்கள் உங்கள் கண்ணில்பட்டால் அங்கும் தேடிப் பார்த்து, சீதாதேவியின் இருப்பிடத்தைத் அறிந்துகொண்டு திரும்பி வரவேண்டும். ஒரு மாதம் முடிந்ததும், எல்லோருக்கும் முன்னதாகத் திரும்பிவந்து, 'கண்டேன், சீதையை!' என்று எவனொருவன் சொல்கிறானோ, அவன் சகல சுக போகங்களையும் எனக்கு நிகரான பெருமையையும் பெற்று இன்பமாகக் காலங்கழிப்பான். (அந்த அளவுக்கு நான் பரிசுகள் கொடுத்து பெருமைப்படுத்துவேன்.) (45–47)

அவனைக் காட்டிலும் பிரியமானவன் எனக்கு இல்லை. அவன், என் உயிரினும் மேலானவன். அவன், பற்பல குற்றங்களைச் செய்தவனாக இருந்தாலும் (அவையனைத்தும் மன்னிக்கப்பட்டு), என்னுடைய மிக நெருங்கிய நண்பனாக ஆகிவிடுவான். நீங்கள் எல்லோரும் எல்லையற்ற உடல்வலிமையும் பேராற்றலும் கொண்டவர்கள்; சிறப்பான நற்பண்புகள் கொண்ட குடும்பங்களில் பிறந்தவர்கள். எந்த உபாயத்தை மேற்கொண்டால், மன்னரின் புதல்வியான சீதையைக் கண்டுபிடிக்க முடியுமோ, அந்த வழியில் செயல்படத் தொடங்குங்கள்.'' (48,49)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
நாற்பத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்து இரண்டு

மேற்குத் திசைக்கு அனுப்புதல்

அந்த வானரர்களைத் தெற்குத் திசைக்கு அனுப்பிய பின்னர், மேகம் போல் கறுத்த சரீரத்தைக் கொண்ட ஸுஷேணன் என்ற சேனைத் தலைவரிடம் (பின்வருமாறு) கூறினான். ஸுஷேணன் என்ற சேனைத் தலைவர் தாரையின் தந்தை; சுக்ரீவனின் மாமனார். மகாபராக்கிரமசாலியான அவரை அணுகி, (வயது, உறவு காரணமாகக்) கைகூப்பி வணங்கிவிட்டுக் கூறினான்— (1,2)

''மகரிஷி மாரீசனின் மைந்தனும், மகாவீரர்களான உத்தம வானரர்களால் சூழப்பட்டவனும், இந்திரன் போல் ஒளிவீசுபவனும், அறிவு–ஆண்மை நிறைந்தவனும், கருடனுக்கு ஒப்பான ஒளி (வேகம்) உடையவனுமான அர்ச்சிஷ்மான், மரீசியின் ஏனைய புதல்வர்களான மாரீசர்கள் எனப்படும் பேராற்றலுடைய அர்ச்சிமாலர்கள், வானர வடிவிலிருந்த ரிஷிகுமாரர்கள் ஆகியோர் மேற்கே சென்று தேடுங்கள். வானரோத்தமர்களே! ஸுஷேணனைத் தலைவனாகக் கொண்ட நீங்கள் இருநூறாயிரம் வானரர்களுடன் சென்று சீதையைத் தேடுங்கள். (3–5)

வானர வீரர்களே! ஸௌராஷ்டிரம், பாஹ்லீகம், சூரம், பீமம் மற்றும் வளப்பமும் வனப்பும் கொண்ட நாடுகளையும், செல்வச் செழிப்பான நகரங்களையும், புன்னாகம், மகிழம், உத்தாலகம் ஆகிய மரங்கள் நிறைந்த குக்ஷி நாட்டையும், கரைகளில் தாழை வனங்களையுடைய மேற்கு நோக்கி ஓடுகின்ற, தெளிந்த, குளிர்ச்சியான நீருடைய நதிகளின் கரைகளில் அமைந்துள்ள முனிவர்களின் ஆசிரமங்களையும் நகரங்களையும் ஆங்காங்கு உள்ள காடு–மலைகளையும் அலசிப் பாருங்கள். அதன் பின்னர், மேற்றிசையில் பாலைவனம் இருக்கிறது; மிக உயரமான முகடுகளைக் கொண்ட மலைகளும் கடந்து செல்வதற்கரியதான மலைத்தொடர்களும் நீங்கள் தேடுவதற்குரிய இடங்கள். (6–8)

அதற்கும் மேற்கே திமிங்கிலம்–முதலைகள் வாழ்வதும் குறைவுபடாததுமான (மிக ஆழமானதுமான) மேற்குக் கடலைக் காண்பீர்கள். அதன் கரையில் தாழைவனங்களிலும் தமால மரங்கள் நிறைந்த காடுகளிலும் தென்னந்தோப்புகளிலும் வானரர்கள் (நீங்கள்) உற்சாகமாகச் சுற்றித் திரியலாம். கடற்கரையில் இருக்கின்ற மலை–காடுகளிலும், முரசீ நகரம், அழகியதான ஜடீ நகரம், அவந்தியிலும் (இது வேறோர் அவந்தி; மோக்ஷபுரி ஏழில் சேர்ந்தது அல்ல),

அங்கலேபா என்ற நகரத்திலும், அலக்ஷிதம் என்ற காட்டிலும், பரந்து விரிந்திருக்கும் நாடுகள்—நகரங்களிலும், ஆங்காங்கேயுள்ள மற்ற இடங்களிலும் இராவணன் இருக்குமிடத்தையும் சீதையையும் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். (9–13)

சிந்து நதியும் கடலும் சங்கமமாகும் இடத்தில் நூறு முகடுகளைக் கொண்டதும், மாபெரும் மரங்கள் நிறைந்ததுமான உன்னதமான ஹேமகிரி என்ற மலை இருக்கிறது. வனப்புடன் விளங்கும் அந்த மலையின் தாழ்வரைகளில், இறக்கைகளுடைய சிம்ஹம் என்ற பெரிய பறவைகள் வசிக்கின்றன. அவைகள், (கடலிலுள்ள) மிகப்பெரிய மீன்களையும் (தரையிலுள்ள) யானைகளையும் (கவர்ந்து சென்று,) தம்முடைய கூடுகளில் கொண்டுபோய்ச் சேர்க்கின்றன. (14,15)

பெருவடிவுடைய சிம்ஹம் என்ற அந்தப் பறவைகள் வசிக்கும் பறவைக்கூடுகள் மலைச்சிகரங்களில் அமைந்துள்ளன. அங்கே எடுத்துச் செல்லப்பட்ட யானைகள் (சுதந்திரமாக விடப்பட்டதால்) மகிழ்ச்சியும் செருக்கும் கொண்டவைகளாக, மேக கர்ஜனை போல் பேரொலி எழுப்பிக் கொண்டு, தண்ணீர் நிறைந்த விசாலமான பள்ளத்தாக்குகளின் எல்லாப்புறங்களிலும் திரிகின்றன. பல்வகையான மரங்கள் அடர்ந்ததும், பொன்மயமானதும், வானத்தைத் தொடுமளவுக்கு உயர்ந்து விளங்குவதுமான அந்த மலை, நினைத்த உருவம் எடுக்கவல்ல வானரர்களால் வேகமாக தேடத்தக்கது. (16,17)

அங்கிருந்து தொடர்ந்து சென்றால், கடலின் நடுவில் பாரியாத்ரம் என்ற மலையின் பொற்சிகரத்தைக் காணலாம். அது நூறு யோஜனை விஸ்தாரமுள்ளது; பிறரால் பார்க்கவொண்ணாதது. வானரர்களே! நீங்கள் அங்கேயும் சென்று தேடுங்கள். அங்கு மிகவும் வலிமை பெற்றவர்களும், அக்னியைப் போல் ஜொலிப்பவர்களும், மிக உயர்ந்தவர்களும், இஷ்டப்பட்ட உருவம் எடுக்கக்கூடியவர்களுமான இருபத்துநான்கு கோடி கந்தர்வர்கள் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். வானரர்கள் (அதாவது, நீங்கள்) பேராற்றல் உடையவர்கள்தான் என்றாலும், அக்னியைப் போல் சுடரொளி படைத்தவர்களும், பல்வேறு இடங்களிலிருந்து ஆயிரக்கணக்கில் அங்கே வந்து கூடியிருக்கின்றவர்களுமான அவர்களை நெருங்கவே கூடாது. அந்தப் பிரதேசத்திலுள்ள மரங்களிலிருந்து ஒரு பழத்தைக்கூட வானரர்கள் எடுக்கக்கூடாது. (18–20)

ஏனென்றால், உடல்பலம் கொண்டவர்களும் பேராண்மை உடைய சூரர்களுமான அவர்கள் யாராலும் வெல்ல முடியாதவர்கள். அளவுகடந்த பராக்கிரமமுடைய அவர்கள், அங்குள்ள பழங்களைக் காவல் காக்கிறார்கள். அந்த இடத்திலும் மிகவும் முயற்சி செய்து ஜானகியைத் தேடவேண்டும். வானரர்களின் இயல்பான சஞ்சலத்தன்மையால் அங்குமிங்கும் ஓடித்திரியும் நீங்கள், அந்த கந்தர்வர்களைக் கண்டு பயப்பட வேண்டாம். (கடலில், பாரியாத்ர மலையை அடுத்து) வைடூர்யம் போல் நீல ஒளி வீசுவதும், வஜ்ராயுதம் போல் உறுதி வாய்ந்ததும் பற்பல மரம்—செடி—கொடிகள் வியாபித்திருக்கும் 'வஜ்ரம்' என்ற பெயருள்ள மலை இருக்கிறது. (21–23)

அழகான அந்த மலை நூறு யோஜனை நீளமும், அதே அளவு அகலமும் கொண்டு சதுரமாக விளங்குகிறது. வானரர்களே! அங்கேயுள்ள குகைகளிலும் நீங்கள் கவனமாகத் தேட வேண்டும். சமுத்திரத்தின் நான்காவது பகுதியில் 'சக்ரவான்' என்ற மலை இருக்கிறது. அங்கு, ஆயிரம் ஆரங்களைக் கொண்ட (ஸஹஸ்ரார) சக்கரம் விசுவகர்மாவினால் நிர்மாணிக்கப்பட்டது. அந்த இடத்தில், பஞ்சஜனன்—ஹயக்ரீவன் என்ற இரு அசுரர்களைக் கொன்று, பாஞ்சஜன்யம் என்ற சங்கினையும், சுதர்சனம் என்ற சக்கரத்தையும் புருஷோத்தமரான ஸ்ரீவிஷ்ணு கைப்பற்றினார். 'சக்ரவான்' என்ற மலையின் விசித்திரமான சிகரங்களிலும் விசாலமான குகைகளிலும் மற்றுமுள்ள இடங்களிலும், இராவணனையும் சீதாதேவியையும் தேட வேண்டும். (24–27)

அதைக் கடந்து சென்றால், ஆழங்காண முடியாத பெருங்கடலில், பொற்சிகரங்களை உடையதும் பெரும் வனப்புடன் விளங்குவதும் அறுபது யோஜனை பரப்பளவுள்ளதுமான வராகமலை இருக்கிறது. அங்கே, கொடியவனான நரகன் என்ற அசுரன் வசிக்கும், பொன்

மயமான பிராக்ஜோதிஷம் என்ற நகரம் இருக்கிறது. அங்கு, விசித்திரமான சிகரங்களிலும் விசாலமான குகைகளிலும் மற்றுமுள்ள இடங்களிலும் இராவணனையும் சீதாதேவியையும் தேடவேண்டும். பெருமைமிக்க அந்த மலையைக் கடந்து சென்றால், பொன்மயமான உட்புறத்தையுடைய குகைகள் மற்றும் எப்போதும் நீர்ப்பெருக்கெடுத்தோடும் மலையருவிகள் உடைய 'ஸர்வஸௌவர்ணம்' என்ற மலை இருக்கிறது. (28–31)

அங்கு, நீர்வீழ்ச்சிகளின் பேரிரைச்சலைக் கேட்டு, (இதைவிடப் பேரொலி என்னால் எழுப்பமுடியும்! என்ற) செருக்குக் கொண்ட யானைகள், பன்றிகள், சிங்கங்கள், புலிகள் முதலியன எப்போதும் எல்லா இடங்களிலும் எதிர்க்குரலாய் கர்ஜிக்கின்றன. (அடுத்ததாக,) மேகவான் என்ற மலை இருக்கிறது. அந்த மலையில்தான், பச்சைநிறக் குதிரைகள் பூட்டிய ரதத்தை உடையவனும், பாகன் என்ற அசுரனைக் கொன்றவனும், வீரத்திரு பொருந்தியவனுமான இந்திரன், தேவர்களால் தங்கள் மன்னனாக முடிசூட்டப் பெற்றான். அமரர்கோன் இந்திரனால் பாதுகாக்கப்படும் உன்னதமான மேககிரியைக் கடந்து சென்றால், பொன்மயமான அறுபதினாயிரம் மலைகளைக் காண்பீர்கள். அவைகளின் எல்லாப் பக்கங்களும் இளஞ்சூரியனைப் போல் செவ்வண்ணமாய் விளங்குகின்றன; அழகிய மலர்களைக் கொண்ட தங்கத்தருக்கள் அவ்விடத்தின் வனப்பைக் கூட்டுகின்றன. (32–35)

அந்த (அறுபதினாயிரம்) மலைகளின் நடுவில், பர்வதராஜன் போன்று மேருமலை விளங்குகிறது. (இது வேறொரு மேருமலை.) முன்னொரு காலத்தில், அகமகிழ்ந்த சூரியன் அந்த மலைக்கு ஒரு வரம் கொடுத்திருந்தான். 'எவனொருவன் இரவு–பகலாய் உன்னிடத்திலேயே இருந்து வருகிறானோ, அவன் என்னுடைய அருளால் பொன்வண்ணமாக ஆகிவிடுவான். தேவர்கள், கந்தர்வர்கள், அசுரர்கள் – இவர்களில் யாராக இருந்தாலும் சரி, அவர்கள் தங்கத்தைப் போல் ஒளிவீசுபவர்களாகவும், என்னுடைய பக்தர்களாகவும் ஆகிவிடுவார்கள்' என்ற வரத்தைக் கொடுத்திருந்தார். (36–38)

விசுவேதேவர்கள், மருத்துக்கள், வசுக்கள் மற்றும் சுவர்க்கவாசிகள் (தினந்தோறும்) மாலை அந்திவேளையில், உத்தமமான மேருமலைக்கு வந்து சூரியனை நன்றாகப் பூஜித்து அனுப்பி வைக்கிறார்கள். சூரியன், எந்தப் பிராணிகளின் கண்ணிலும் படாமல் அஸ்தகிரிக்குச் செல்கிறது. சூரியபகவான், பத்தாயிரம் யோஜனைகளுக்கு அப்பாலுள்ள அஸ்தகிரியை அரை முகூர்த்தத்திற்குள்ளாகவே சென்றடைகிறார். அந்த மலையின் சிகரத்தில், உன்னதமானதும், காணற்கரியதும், சூரியனைப்போல் ஒளிவீசுகின்ற மாளிகை கூட்டங்கள் நிறைந்ததும், விசுவகர்மாவினால் உருவாக்கப்பட்டதும், பல்வகைப் பறவைகள் கூட்டமாக வாழ்கின்ற மரங்களால் அழகு செய்யப்பட்டதும், பாசத்தைக் கையில் தாங்கிய மகாத்மா வருணனுடைய இருப்பிடமானதுமான ஒரு பெரிய மாளிகை இருக்கிறது. (39–43)

மேருமலைக்கும் அஸ்தகிரிக்கும் இடையே பத்துக்கிளைகளை உடையதும் பொன் மயமானதுமான ஒரு பெரிய பனைமரம், விசித்திரமான மேடைமீது நிலைநிறுத்தப்பட்டதாக விளங்குகிறது. அங்குள்ள கோட்டைகளிலும் எல்லாப் பொய்கைகளிலும் நதிக்கரைகளிலும் மற்றுமுள்ள இடங்களிலும், இராவணனையும் சீதையையும் தேடிப் பார்க்க வேண்டும். மேருமலையில், தன்னுடைய தவத்தின் மகிமையால் மிக உயர்ந்த நிலையை அடைந்துள்ளவரும், பிரும்மாவுக்கு நிகரான ஆற்றலும் புகழும் பெற்றவருமான மேருஸாவர்ணி என்ற மாமுனிவர் இருந்து கொண்டிருக்கிறார். (44–46)

பகலவனுக்கு நிகரான ஒளிவீசும் மாமுனிவர் மேருஸாவர்ணியின் முன்பு, தலை தரையில் படும்படி வணங்கி நமஸ்கரித்து, சீதையைப் பற்றிய தகவல் ஏதேனும் அவருக்குத் தெரியுமா? என்று கேட்க வேண்டும். (கடந்து போன) இரவின் முடிவில் (கிழக்கில்) முளைத்தெழுந்த சூரியன், உயிர்ப்பிராணிகள் நிறைந்த இவ்வுலகத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் இருளை

நீக்கிவிட்டு, (உலகைப் பிரகாசிக்கச் செய்து,) கடைசியில் அஸ்தகிரியை அடைகிறார். வானரோத்தமர்களே! வானரர்களால் இந்த எல்லை வரையில்தான் செல்ல முடியும். அதற்குமப்பால், சூரியனும் (சூரிய ஒளியும்) இல்லை. ஒழுங்குபடுத்தப்பட்ட நாடுகளும் இல்லாததால், அதைப் பற்றிய விபரங்களை நாம் அறியோம். (47–49)

அஸ்தகிரி வரையில் சென்று, இராவணனுடைய இருப்பிடத்தையும், வைதேகியைப் பற்றிய தகவல்களையும் சேகரித்துக் கொண்டு, ஒரு மாத காலம் முடிவதற்குள் திரும்பி வந்து சேருங்கள். ஒரு மாதத்திற்குமேல் யாரும் தாமதிக்கக் கூடாது. தாமதமாக வருபவனுக்கு மரணதண்டனை விதிக்கப்படும். உங்களுடன்கூட மாவீரராகிய என்னுடைய மாமனார் வருவார். இவருடைய உத்தரவுகளைக் கவனமாகக் கேட்டு, அவர் மனங்கோணாத வகையில் நீங்கள் நடந்துகொள்ள வேண்டும். என்னுடைய மதிப்பிற்குரிய மாமனாராகிய இவர் (ஸுஷேணன்), உடல் வலிமையும் தோள் வலிமையும் பெற்றவர். (50–52)

நீங்களெல்லோரும்கூட பராக்கிரமம் பொருந்தியவர்கள்தாம்; எல்லாக் காரியங்களிலும் நம்பிக்கைக்கு உரியவர்கள். (என்றாலும்,) இவரைத் தலைவராகக் கொண்டு, மேற்குத் திசையில் தேடிப் பாருங்கள். எல்லையற்ற பேராற்றல் கொண்ட மன்னருடைய (இராமனுடைய) பத்தினி கண்டுபிடிக்கப்பட்டால், அவர் செய்த மாபெரும் உதவிக்கேற்ற கைம்மாறு செய்தவர்களாக, செய்ய வேண்டிய கடமையைச் செய்து முடித்துவிட்டவர்களாக ஆவோம். ஆகவே, (இப்போது நான் சொல்லியது மட்டுமில்லாமல்) நாம் எடுத்துக்கொண்டிருக்கும் காரியத்தின் வெற்றிக்கு ஏற்றதான வேறு உபாயங்கள் தோன்றினால், இடம்–காலம்–பயன் ஆகியவற்றை அனுசரித்து, அவைகளையும் மேற்கொள்ளுங்கள்.'' (53–55)

சுக்ரீவனுடைய சிறப்பான சொற்களைக் கேட்ட, ஸுஷேணன் முதலிய வானரர்கள் மற்றும் வானர முக்கியஸ்தர்கள் எல்லோரும் அவனிடம் விடைபெற்றுக் கொண்டு, வருண பகவானால் பாதுகாக்கப்படும் (மேற்குத்) திசையை நோக்கிச் சென்றார்கள். (56)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
நாற்பத்திரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்து மூன்று

வடக்கில் சேனைகளை அனுப்புதல்

இவ்விதமாக, தன்னுடைய மாமனாரை மேற்குத் திசைக்கு அனுப்பிவிட்டு, வானரோத்தமனும் வானரர்களுக்குத் தலைவனும் உலகின் எல்லாப் பகுதிகளைப் பற்றியும் அறிந்தவனுமான சுக்ரீவன், வீரமிக்க சதபலி என்ற வானரனை அழைத்தான். தனக்கும் இராமனுக்கும் நன்மை பயக்கக்கூடிய பின்வரும் சொற்களைக் கூறினான்— (1,2)

''உனக்கு நிகரான வீரர்களான லட்சம் வானரர்களுடனும், யமதருமனின் (அம்சமாகத் தோன்றிய) புத்திரர்களான உன்னுடைய அமைச்சர்களுடனும் புறப்படு. இமயமலையைத் தலையணியாகக் கொண்டதும் பரந்து விரிந்து விளங்குவதுமான வடக்குத் திசையில், எல்லா இடங்களிலும், மதிப்பிற்குரிய இராமபத்தினியை நன்றாகத் தேடவேண்டும். செய்நன்றியின் இன்றியமையாமையை நன்கு அறிந்தவர்களே! ஸ்ரீராமனுடைய நோக்கம் கைகூடப் பெற்று, (சீதையைத் தேடிக் கண்டுபிடிக்கும்) அருஞ்செயல் வெற்றியடைந்தால் (இராமனுக்குச் செய்ய வேண்டிய) நன்றிக்கடனிலிருந்து விடுபட்டவர்களாவோம். (3–5)

மகாத்மா இராமன், நமக்குப் பேருதவி செய்திருக்கிறார். அவருக்கு நாம் கொஞ்சமாவது பிரதிஉபகாரம் செய்தால், வாழ்வின் பயனைப் பெற்றவர்களாக ஆவோம். முன்னர், எந்த

உதவியும் செய்யாத ஒருவன் வந்து உதவி செய்யும்படிப் பிரார்த்திக்கும் போது, அவனுக்கு நாம் உபகாரம் செய்தால், இந்தப் பிறவி பயனுடையதாகும் என்னும்போது, முன்பே உதவி செய்தவனுக்குப் பிரதிஉபகாரம் செய்வதன் அவசியத்தைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ? இந்த நற்சிந்தனையை மனத்தில் உறுதியாக வைத்துக்கொண்டு, எனக்கு இஷ்டமானதையும் நன்மையையும் விரும்பும் நீங்கள், எந்த உபாயத்தை மேற்கொண்டால் ஜானகிதேவி கண்டுபிடிக்கப்படுவாரோ, அவ்வாறு செய்யுங்கள். (6–8)

புருஷோத்தமரும், எதிரிகளின் நகரங்களைக் கைப்பற்றுபவருமான ஸ்ரீராமன், எல்லா உயிர்ப்பிராணிகளாலும் வணங்கத்தக்கவர்; குறிப்பாக, நம்மிடம் பேரன்பு வைத்திருப்பவர். நீங்கள், அறிவையும் ஆண்மையையும் துணையாகக் கொண்டு (நீங்கள் செல்லும் பாதையிலுள்ள) காடுகள், கோட்டைகள், நதிக்கரைகள், மலைப்பிரதேசங்களில் திரிந்து தேடுங்கள். வடக்குத் திசையிலுள்ள மிலேச்சம், புளிந்தம், சூரஸேனம், ப்ரஸ்தலம், பரதம், குரு, மத்ரம், காம்போஜம், யவனம், சகம், ஆரட்டகம், பாஹ்லீகம், ரிஷிகம், பௌரவம், டங்கணம், சீனம், பரமசீனம், நீஹாரம் என்ற நாடுகளையும் நகரங்களையும் நன்றாக மீண்டும் மீண்டும் அலசிப் பார்த்துவிட்டு, தரதம் என்ற நாட்டிலும் இமாலயத்திலும் தேடிப் பாருங்கள். (9–13)

அங்குள்ள லோத்ரம், பத்மகம் ஆகிய மரங்கள் கூட்டமாக வளர்ந்திருக்கும் இடங்களிலும், தேவதாரு காடுகளிலும் மற்றுமுள்ள இடங்களிலும் இராவணனையும் சீதையையும் தேடுங்கள். தேவ–கந்தர்வர்கள் வந்து தங்கிச் செல்கிற ஸோமாசிரமம் என்ற இடத்தை அடைவீர்கள். பின்னர், உயர்ந்த சிகரங்களைக் கொண்ட காலம் என்ற மலையைச் சென்றடைவீர்கள். உயரமான அந்த மலையின் முகடுகளிலும், நீரருவிப் பகுதிகளிலும், குகைகளிலும், பெரும் புண்ணியவதியும் குற்றமற்றவருமான இராமபத்தினியைத் தேடிப் பாருங்கள். (14–16)

தங்கச் சுரங்கங்களைக் கொண்ட மாமலையான 'காலம்' என்ற சிறப்பான குன்றத்தைக் கடந்து சென்று, சுதர்சனம் என்ற பெயர் கொண்ட பர்வதத்தை அடைவீர்கள். அதைக் கடந்து செல்வீர்களேயானால், பறவைகளுக்கு இருப்பிடமானதும், பலவகையான பறவைகள் நிறைந்து இருப்பதும், பலவகையான மரங்களால் அழகு பெற்று விளங்குவதுமான 'தேவஸகம்' என்ற மலையைக் காண்பீர்கள். அங்குள்ள அடர்த்தியான காடுகளிலும் அருவிகளிலும் குகைகளிலும், சீதையையும் இராவணனையும் தேடவேண்டும். (17–19)

அதைக் கடந்து நான்கு புறங்களிலும் நூறு யோஜனை விஸ்தாரமுள்ளதும், மலைகள்–ஆறுகள்–மரங்கள் இல்லாததும், உயிர்ப்பிராணிகள் எவையும் இல்லாததுமான பாழ்வெளி இருக்கிறது. பார்ப்போரை மெய்சிலிர்க்க வைக்குமளவுக்கு பயங்கரமான அந்தப் பாழ்வெளியை விரைவாகக் கடந்து சென்றால், வெண்மையான கைலாச மலையை அடைந்து மனமகிழ்ச்சி அடைவீர்கள். அங்கே, வெண்முகில் போல் ஒளிர்வதும், ஜாம்பூநதம் என்ற பொன்னைக் கொண்டு விசுவகர்மாவினால் நிர்மாணிக்கப்பட்டதுமான அழகான குபேர மாளிகை இருக்கிறது. (20–22)

அவ்விடத்தில் ஏராளமான தாமரை–ஆம்பல் விளங்குவதும், அன்னம்–நீர்க்காக்கை நிறைந்ததும், அப்சரப் பெண்கள் கூட்டங்கூட்டமாக வந்து போவதுமான விசாலமான தாமரையோடை இருக்கிறது. யட்சர்களுக்கு மன்னரும், எல்லா வகையான செல்வச் செழிப்பைப் பெற்றவரும், எல்லா உயிர்களாலும் வணங்கத்தக்கவரும், விச்ரவஸின் மைந்தருமான மன்னர் குபேரன் குஹ்யகர்களோடுகூட அங்கே இன்பமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார். கைலாச மலையின் நிலா ஒளி நிகர் குன்றுகளிலும் குகைகளிலும் மற்றுமுள்ள இடங்களிலும், இராவணனும் சீதையும் தேடத்தக்கவர்கள். (23–25)

அதன் பின்னர், கிரௌஞ்ச மலை காணப்படும். அதன் மலைப்பிளவுகளுக்குள் செல்வது மிகவும் கடினம் என்று கூறப்படுகிறது. (முருகப்பெருமான், தன் சக்தி ஆயுதத்தால் அந்த மலையைப் பிளந்ததாகப் புராண வரலாறு.) ஆகவே, புகுதற்கரிதான அந்த மலைவெடிப்புகளில்

மிகவும் கவனமாகச் செல்ல வேண்டும். அவ்விடத்தில், சூரியனைப் போன்ற தேஜஸ் உடையவர்களும், தேவர்களைப் போன்ற உருவமுடையவர்களும், தேவர்களால் பக்தி–விநயத்துடன் வணங்கப்படுபவர்களுமான சான்றோர்களான மாமுனிவர்கள் வசிக்கிறார்கள். கிரௌஞ்ச மலையின் மற்றுமுள்ள குகைகள், தாழ்வரைகள், மலைமுகடுகள், மலையருவிகள், வெளிப்பிரதேசங்கள் ஆகிய இடங்களிலும் தேடிப் பார்க்க வேண்டும். (26–28)

கிரௌஞ்சமலையின் சிகரத்தில் நானாபக்கங்களிலும் தேடிப்பார்த்துவிட்டு, பின்னர், மரங்களே இல்லாத காமசைலம் என்ற மலையைக் கடந்து, பட்சிகளின் இருப்பிடமான மானஸம் என்ற ஏரியை அடைவீர்கள். தேவ–தானவ–அரக்கர் உட்பட ஜீவப்பிராணிகள் எதுவும் அங்கு செல்ல முடியாது. நீங்கெளெல்லோரும் விசாலமான மலைச்சிகரங்களிலும் தாழ்வரைகளிலும் தேடிப் பார்க்க வேண்டும். கிரௌஞ்சமலைக்கு அப்பால் மைநாகம் என்ற மலை இருக்கிறது. அதில், தானவனாகிய மயன், தானே கட்டிய மாளிகை இருக்கிறது. மைநாக பர்வதத்தின் பள்ளத்தாக்குகளிலும் விசாலமான குகைகளிலும் தேடிப் பார்க்கவேண்டும். (அந்த மலையில்,) ஆங்காங்கே குதிரை முகங்கொண்ட கின்னரப் பெண்களின் இருப்பிடங்கள் இருக்கின்றன. (29–32)

அந்தப் பிரதேசத்தைக் கடந்து சென்றால், ஸித்தர்கள் வாழும் ஆசிரமம் இருக்கிறது. அங்கே, ஸித்தர்கள், வைகாநஸர்கள், வாலகில்யர்கள் என்ற தவசிகள் இருக்கிறார்கள். தவப்பயனை முழுமையாகப் பெற்றவர்களும் தவத்தின் மகிமையால் மனமாசுகள் நீங்கியவர்களுமான அவர்கள் வணக்கத்திற்குரியவர்கள். அவர்களிடம், 'சீதையைப் பற்றி ஏதேனும் செய்தி தெரியுமா?' என்று மிகப் பணிவுடன் கேட்க வேண்டும். அந்த ஆசிரமத்தின் அருகில் வைகாநஸம் என்ற ஏரி இருக்கிறது. அந்த ஏரியின் நீர்ப்பரப்பு, பொன்மயமான தாமரைகளால் மறைக்கப்பட்டிருக்கிறது. (ஏராளமான பொற்றாமரைகள் மண்டிக் கிடக்கின்றன.) அதில் வைகறை சூரியனைப் போல் செவ்வொளி படர்ந்த அன்னங்கள் உலாவுகின்றன. (33–35)

குபேரனின் வாகனமான 'ஸார்வபௌமம்' என்னும் யானை, பெண்யானைகளோடுகூட எப்போதும் அந்த இடத்தில் திரிந்து கொண்டிருக்கிறது. அந்த நீர்நிலையைக் கடந்து சென்றால், சூரிய–சந்திரர்கள் இல்லாததும், தாரகைக் கூட்டங்கள் இல்லாததும், மேகக் கூட்டங்கள் இல்லாததால் (அவற்றின் உரசலால் ஏற்படும்) சத்த முழக்கம் இல்லாததுமான வெட்டவெளி காணப்படும். தவத்தை முழுமையாக நிறைவேற்றி, அதன் பயனைப் பெற்றுவிட்ட மாமுனிவர்கள், அங்கே இளைப்பாறிக் கொண்டிருக்கிறார்கள். தேவர்களைப் போல் விளங்கும் அவர்களுடைய தேககாந்தியினால், அந்த இடம் ஆதவனின் கிரணங்கள் விழுந்து ஒளி பரப்புவதைப் போலவே பிரகாசமாக இருக்கிறது. (36–38)

அந்தப் பிரதேசத்தைக் கடந்து சென்றால் சைலோதா என்ற ஆறு இருக்கிறது. இந்த நதியின் இருகரைகளிலும் கீசகம் (மூங்கில் இனத்தைச் சேர்ந்த தாவரம்) என்னும் மூங்கில்கள் இருக்கின்றன. (வளைந்து கொடுக்கும் தன்மை கொண்ட) அவைகள் ஸித்த புருஷர்களை இக்கரையிலிருந்து அக்கரைக்குக் கொண்டு சென்று, அக்கரையிலிருந்து இக்கரைக்குத் திரும்பக் கொண்டு விடுகின்றன. (சைலோதா நதிக்கரையில்) புண்ணியம் செய்தவர்களுக்கு இருப்பிடமான உத்தரகுரு நாடுகள் இருக்கின்றன. (39,40)

உத்தரகுரு நாட்டில் நீலம், வைடூர்யம் போன்ற வண்ணமுடைய தாமரையிலைகளால் பொலிவுடன் விளங்கும் ஆயிரக்கணக்கான நதிகள் பெருக்கெடுத்தோடுகின்றன. அந்த நதிகளில் பொன்மயமான தாமரைகள் கொண்ட ஓடைகள் வந்து சங்கமிக்கின்றன. இந்த இடத்தில், இளஞ்சூரியனின் செவ்வண்ணம் கொண்ட பொன்மயமான செங்கழுநீர்ப் பூக்கள் மண்டிக்கிடக்கும் நீர்நிலைகள் அழகாக விளங்குகின்றன. விலைமதிக்க முடியாத மரகதமணி போன்ற இலைகளாலும் பொன்னொளி கொண்ட தாதுக்களையுடைய கண்கவர் நீலோத்பலக் கூட்டங்களாலும், அந்த இடம் முழுவதும் வியாபிக்கப்பட்டதாக இருக்கிறது. (41–43)

அங்குள்ள நதிகளின் கரைகளில் உருண்டு திரண்ட முத்துக்கள், உயர்ந்த ரக மாணிக்கங்கள் இருக்கின்றன. தங்கமயமானதும், அக்னி போன்ற ஒளியுடையதும், நவரத்தினமயமானதும், பொன்வண்ணம் கொண்டதும் இவ்விதம் பலவகையான சிறப்புக்களைக் கொண்டதுமான மலைகள் ஏராளமாக விளங்குகின்றன. அங்குள்ள மரங்கள், எந்நாட்களிலும் மலர்–பழம் கொடுக்கின்றன; பறவைகள் நிறைந்திருக்கின்றன; திவ்யமான நறுமணம், சுவை, இனிய ஸ்பரிசம் உடையவை; மக்கள் விரும்பும் சகல பொருள்களையும் பெருமளவில் அளிக்கின்றன. (44–46)

இவைகளைத் தவிர வேறு சில மரங்கள் பற்பல வகையான ஆடைகளையும், முத்து–வைடூர்யம் இழைக்கப் பெற்று பேரழகுடன் விளங்குபவைகளும், ஆண்–பெண் ஆகிய இருபாலர்களுக்கும் பொருத்தமானவைகளுமான அணிகலன்களையும் வழங்குகின்றன. வேறு சில மரங்கள் புசிக்கத்தக்க பழங்களை எல்லாக் காலத்திலும் தருகின்றன. மற்றும் சில உத்தம விருட்சங்கள், பெருமதிப்புடைய, அழகிய பொன்மயமான விரிப்புகளைக் கொண்ட படுக்கைகளை உற்பத்தி செய்கின்றன. (47–49)

வேறு சில மரங்கள் மனத்தைக் கொள்ளை கொள்ளும் மாலைகளையும், பானங்களையும், மிகச்சிறந்த பலவகையான உணவு வகைகளையும், நற்குணம் நிரம்பிய அழகிய தோற்றமும் யௌவனமும் உடைய மங்கையர்களையும் வழங்குகின்றன. சூரியனைப் போல் பிரகாசமாக இருப்பவர்களான கந்தர்வர்கள், கின்னரர்கள், ஸித்தர்கள், நாகர்கள், வித்யாதரர்கள் ஆகியோர் பெண்களோடு கூடிக்களிக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் நற்செயல்கள் செய்து அளவற்ற புண்ணியத்தைச் சேர்த்துக் கொண்டவர்கள்; எல்லோரும் காமக்களியாட்டங்களில் மூழ்கிப் போனவர்கள்; எல்லோரும் (புருஷார்த்தங்களில் ஒன்றான) காமத்தில் தலைப்பட்டு மனைவிகளோடு கூடவே வாழ்கிறார்கள். (50–52)

எல்லாப் பிராணிகளின் மனத்தைக் கொள்ளை கொள்ளும் வாய்ப்பாட்டு மற்றும் இசைக்கருவிகளின் ஒலிகளும் (மிதமிஞ்சிய மகிழ்ச்சியால்) செவிக்கினிய சிரிப்பின் ஒலியும், அவ்விடத்தில் எப்போதும் கேட்டுக் கொண்டிருக்கும். அந்த இடத்தில் மனத்திருப்தியில்லாதவன் எவனும் இல்லை; அறநெறி பிறழ்ந்த செயல்களில் ஈடுபடுபவன் எவனும் இல்லை. அங்கே வசிப்பவர்களுக்கு, மனத்திற்கினிய நற்குணங்கள் நாள்தோறும் வளர்கின்றன. (இந்த இடத்தில் அரக்கர்கள் வசிக்க முடியாததால் அங்கே சீதாபிராட்டியைத் தேடத் தேவையில்லை.) அந்தப் பிரதேசத்திற்கும் அப்பால் வடகடல் இருக்கிறது. அதன் நடுவில் பொன்மயமான 'ஸோமகிரி' என்ற மலை இருக்கிறது. (53–55)

இந்திரலோகத்திற்குப் போகிறவர்களும், பிரும்மலோகத்திற்குப் போகிறவர்களுமான தேவர்களும் அந்த வழியாகவே செல்லவேண்டியிருப்பதால், மலையரசனான ஸோமகிரியைத் தரிசனம் செய்துவிட்டுப் போகிறார்கள். அந்தப் பிரதேசத்தில் சூரியன் இல்லை என்றாலும் அந்த மலையின் சுயஒளியால் வெளிச்சம் இருந்து கொண்டேயிருக்கிறது. சுட்டெரிக்கும் ஒளிவீசும் சூரியனால் (மற்றப் பிரதேசங்கள் அறியப்படுவதைப் போலவே) (சூரியனது ஒளிவீச்சினால்) இந்தப் பிரதேசமும் ஒளிபெற்று விளங்குவதாக அறியப்பட வேண்டும். அகிலாண்ட ஸ்வரூபியான பகவான் ஸ்ரீவிஷ்ணு, பதினோரு ருத்ரமூர்த்திகளாக விளங்கும் பரமசிவன், பிரும்மரிஷிகளால் சூழப்பட்ட பிரும்மா ஆகியோர் அங்கே வசிக்கிறார்கள். (56–58)

குருதேசங்களுக்கு வடக்கில் உங்களால் எந்தவிதத்திலும் செல்ல முடியாது. மற்றப் பிராணிகளும் அதைக் கடந்து செல்ல இயலாது. ஸோமகிரி என்ற அந்த மலையை தேவர்களாலும் அடைய முடியாது. எனவே, அதை ஓரளவு பார்த்துவிட்டு, அங்கிருந்து விரைவில் திரும்பி விடுங்கள். (தேவர்களாலும் புகமுடியாதது என்பதால், சீதை–இராவணர்கள் அங்கே இருப்பார்கள் என்று எண்ணுவதற்கு இடமேயில்லை.) வானரோத்தமர்களே! இந்த இடம் வரையில்தான் வானரர்களால் போக முடியும். அதற்கு மேல் சூரியன் இல்லாத, எல்லை வகுக்கப்படாத

பிரதேசமாதலால், நாம் அதைப் பற்றி அறிய மாட்டோம். நான் சொன்ன இடங்களிலெல்லாம் தேடிப் பாருங்கள். மேலும், என்னால் சொல்லப்படாத வேறு இடங்கள் காணப்பட்டால், அவ்விடங்களிலும் மனத்தைச் செலுத்துங்கள். (59–62)

வாயு–அக்னிக்கு நிகரான வேகமும் தேஜசும் கொண்டவர்களே! சீதாதேவியைக் கண்டுபிடிப்பதற்காக, நீங்கள் மேற்கொள்ளும் முயற்சியில் வெற்றி பெற்றால், இராமபிரானுக்கு இஷ்டமான காரியத்தைச் செய்ததாகும். அதனால், அதைவிடப் பெரிய பிரியத்தை எனக்கும் செய்ததாகும். வானரர்களே! நீங்கள் மேற்கொள்ளும் காரியத்தில் வெற்றி பெற்றுவிட்டால், மனத்திற்கினிய இனிய பொருள்களால் உங்கள் அனைவரையும் பாராட்டிப் பரிசளிப்பேன். பின்னர், நீங்கள் உலகிலேயே எந்தப் பகைவனும் இல்லாமல், மனைவிமார்–உற்றார்–சுற்றத்தார்களுடன் சகலப் பிராணிகளுக்கும் பாதுகாப்பு அளிக்கும் அரசனைப் போல, இவ்வுலகம் முழுவதிலும் தங்குதடையில்லாமல் ஆனந்தமாகச் சுற்றி வரலாம்.'' (63,64)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
நாற்பத்து மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்து நான்கு

ஸ்ரீராமன், அனுமானிடம் கணையாழியைக் கொடுத்தல்

சுக்ரீவன், வானரர்களில் சிறந்தவரான அனுமான் தான் எடுத்துக் கொண்ட காரியத்தை வெற்றிகரமாக நிறைவேற்றக் கூடியவர் என்று நிச்சயித்து, அவரிடம் தனிப்பட்ட முறையில் சில விஷயங்களைக் கூறினான். அனைத்து வானரர்களுக்கும் தலைவனான சுக்ரீவன், மனநெகிழ்ச்சியுடன், வாயுமைந்தரும் பராக்கிரமம் மிக்கவருமான அனுமானைப் பார்த்துப் பின்வருமாறு கூறினான்— ''வானரோத்தமனே! பூமி, பரந்த வெளியான ஆகாயம், தேவலோகம் மற்றும் தண்ணீரிலும் உன் போக்குக்குத் தடையேதும் இல்லை என்பதை நான் அறிவேன். அசுரர்கள், கந்தர்வர்கள், நாகர்கள், மானுடர்கள், தேவர்கள் மற்றும் சமுத்திரங்கள், மலைகள் கொண்ட எல்லா உலகங்களையும் அறிந்தவன், நீ. (1–4)

வானரோத்தமனே! வீரனே! தடைபடாத உன் போக்கு, வேகம், பொலிவு, எதையும் எளிதாகச் செய்து முடிக்கும் திறன் ஆகிய இவையெல்லாம் பேராற்றல் பெற்ற உன் தந்தை வாயுவுக்கு நிகரானவை. ஈடிணையில்லாத அறிவுடன் கூடிய பராக்கிரமத்தில் உனக்குச் சமமான பிராணி இவ்வுலகில் இல்லை. எனவே, சீதாதேவியைக் கண்டுபிடிப்பதற்கான (அடைவதற்கான) வழிமுறைகளையும் நீயே நிச்சயித்துக் கொள். ராஜதந்திர வல்லுநனான அனுமானே! உன்னிடத்தில்தான் உடலாற்றல், தெளிந்த அறிவு, பேராற்றல், இடம்–காலங்களுக்கு ஏற்றபடிச் செயலாற்றுதல், தகுந்த உபாயத்தை மேற்கொள்வது ஆகிய இந்தச் சிறப்புக்களெல்லாம் ஒருங்கே அமைந்திருக்கின்றன.'' (5–7)

(சுக்ரீவனின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த) இராமன், எடுத்துக் கொண்ட காரியம் முழுமையாக வெற்றியடையச் செய்வதற்கான பொறுப்பு, அனுமானைச் சார்ந்திருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டார். (முன்னர், பம்பா நதிக்கரையில் சந்திப்பு ஏற்பட்டது முதல் நடந்துள்ள நிகழ்ச்சிகளில் அனுமானின் தனிச்சிறப்பை நினைவுக்குக் கொண்டு வந்து) அனுமானின் திறமையைப் பூரணமாக உணர்ந்து, தனக்குள் (பின்வருமாறு) சிந்திக்கலானார்— (8)

'வானர மன்னன், எந்தவிதத்திலாவது (எப்பாடுபட்டேனும்) இந்தக் காரியத்தில் வெற்றி காணப் போகிறவன் அனுமான்தான் என்று நம்பிக்கை வைத்திருக்கிறான். அனுமானும் ஒப்படைக்கப்பட்ட பணியைச் செய்து முடிப்பதில் உறுதியாக இருப்பவன்தான். திறமையான

தனது செயல்களால் நன்கு பரிசோதிக்கப்பட்டு, 'சிறந்த வானரன்' என்று எல்லோராலும் அறியப்பட்டவனும், வானரத் தலைவனால் (சீதையைத் தேடுவதற்காக) நம்பிக்கையோடு அனுப்பப்படுகிறவனுமான இவனால், காரிய வெற்றிக்கான அறிகுறிகள் தென்படும் என்பது நிச்சயம்.' பேராண்மையுடைய இராமன், அந்த வானரர் முனைப்பு–செயல்நுட்பத்துடன் கூடியவர் என்பதை உள்ளுணர்ந்து, தன்னுடைய நோக்கம் நிறைவேறிவிட்டதாகவே நிச்சயித்து, ஐம்புலன்களும் மனமும் கிளர்ந்தெழப் பேருவகை அடைந்தார். (9–11)

எதிரிகளை வாட்டி வதைக்கும் இராமன், மனம் நிறைந்தவராக, தன்னுடைய பெயர் பொறிக்கப்பட்டுப் பொலிவுடன் விளங்கும் மோதிரத்தை, மன்னர்மகள் (சீதை) அடையாளம் கண்டுகொள்வதற்காக அவரிடம் (அனுமானிடம்) கொடுத்தார். ''வானரோத்தமனே! ஜனகரின் புதல்வி சீதை, இந்த அடையாளத்தைக் கொண்டு என்னிடத்திலிருந்து வந்திருப்பவனாக உன்னிடம் நம்பிக்கை கொள்வாள். வீரனே! உன்னுடைய முயற்சி, தைரியம், பராக்கிரமம் ஆகியவற்றுடன் (உன்னிடம் அளவற்ற நம்பிக்கை வைத்து) சுக்ரீவன் கூறிய கூற்றும், உன்னால்தான் இந்தக் காரியத்தில் வெற்றி கிடைக்கப் போகிறது என்பதை எனக்குத் தெரிவிப்பது போல் இருக்கிறது.'' (12–14)

வானரர்களில் உத்தமராகிய அவர், அந்த மோதிரத்தைப் பெற்றுக் கொண்டு, (மரியாதை காட்டும் முகத்தான்) தலையில் வைத்த பின்னர், இரு கைகளையும் கூப்பி வணங்கிவிட்டு, திருவடிகளில் விழுந்து வணங்கிவிட்டுப் புறப்பட்டுச் சென்றார். வீரரும் வாயுகுமாரருமாகிய அனுமான், அந்த மாபெரும் வானரப் படையை அழைத்துச் செல்லும்போது, மேகங்கள் இல்லாத தெளிவான ஆகாயத்தில், தாரகைக் கூட்டங்கள் சூழ்ந்து விளங்கும் சந்திரனைப் போல் பிரகாசமாக விளங்கினார். (15,16)

(புறப்பட்டுச் சென்றுகொண்டிருக்கும் அனுமானை நோக்கி இராமன் கூறினார்—) ''மிக்க பலம்கொண்ட வானரோத்தமனே! நான், உன்னுடைய (வீரம், அறிவு, ஆண்மை, ராஜதந்திரம், சமயோசிதம் ஆகிய) பலத்தை நம்பியிருக்கிறேன். ஜனகரின் திருமகளான சீதையைத் திரும்பப் பெறுவதற்கு என்னென்ன உபாயங்களைக் கைக்கொள்ள வேண்டுமோ, அவற்றையெல்லாம் மனந்தளராத உறுதியுடன் செய்து முடிப்பாயாக.'' (17)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
நாற்பத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்தைந்து

வானர சேனை புறப்படுதல்

(புறப்பட்டுச் செல்வதற்கு ஆயத்தமாகிவிட்ட) எல்லா வானரர்களையும் (சேனைத் தலைவர்களையும்) அழைத்து, அவர்கள் எல்லோரையும் பார்த்து, இராமனுடைய நோக்கம் நிறைவேறும் பொருட்டு, ''என்னால் சொல்லப்பட்ட அத்தனை இடங்களிலும், நீங்கள் நிச்சயமாக எந்த இடமும் விட்டுப் போகாமல் தேடவேண்டும்'' என்று மறுபடியும் வானரத் தலைவனான சுக்ரீவன் கூறினான். அரசனின் மிகக்கடுமையான அந்த உத்தரவைச் செவியுற்ற வானரர்கள், பூமியை மறைத்துக் கொண்டு செல்லும் விட்டிற்பூச்சிகளின் கூட்டம் போல் அங்கிருந்து பறந்து சென்றார்கள். இராமன், சீதையைக் கண்டுபிடிப்பதற்காக வகுக்கப்பட்ட ஒரு மாத கெடுவின் நிறைவை எதிர்பார்த்துக் கொண்டு, அந்த பிரஸ்ரவண மலையிலேயே இலக்குவனோடு தங்கியிருந்தார். (1–3)

அப்போது, வீரனான சதபலி என்ற வானரன், இமயமலையால் சூழப்பட்டு வனப்புடன் விளங்கும் வடக்குத் திசையை நோக்கி, உடனே புறப்பட்டுச் சென்றான். வினதன் என்ற படைத்தலைவன் கிழக்குத் திசை நோக்கிச் சென்றான். வானரர் தலைவரும் வாயு குமாரருமான

அனுமான், தாரன்–அங்கதன் முதலியவர்களோடு, அகஸ்திய முனிவர் வசிக்கும் தெற்குத் திசைக்கும், புலிநிகர் ஆற்றல் கொண்டவனும் வானரர் தலைவனுமான ஸுஷேணன் வருண பகவானால் பாதுகாக்கப்படும் மிக பயங்கரமான மேற்குத் திசை நோக்கியும் புறப்பட்டுச் சென்றார்கள். சுக்ரீவ மன்னன், முக்கியமான வானரப் படைத்தலைவர்களை அவரவர் தகுதிக்குத் தக்கபடி அனுப்பிவிட்டு, அதனால் மனநிறைவு பெற்றுக் கவலையில்லாமல் மகிழ்ச்சியுடன் இருந்தான். மன்னனால் உத்தரவிட்டபடி வானரோத்தமர்கள் எல்லோரும் அவரவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட திசையை நோக்கி விரைந்து சென்றார்கள். (4–9)

'சீதையைத் திரும்பக் கொண்டு வருவோம்! இராவணனைக் கொன்று விடுவோம்!' என்று கூறிக் கொண்டும், மகாபலம் பொருந்திய அவர்கள் உரக்கக் கூச்சலிட்டுக் கொண்டும், (இராவணனிடமிருந்த கோபத்தால்) பற்களை நெறித்துக் கொண்டும், உற்சாகமாக முழங்கிக் கொண்டும், குதித்துத் தாவிக் கொண்டும், சீறிப்பாய்ந்து கொண்டும் சென்றார்கள். (ஒரு வானரன் கூறியது—) 'நான் ஒருவனாகவே, போர் செய்து இராவணனைக் கொல்வேன்! கொன்றுவிட்டு, உடனே பயந்து நடுங்கிக் கொண்டிருக்கும் ஜானகிதேவியாரைக் காப்பாற்றி அழைத்து வருவேன்! நீங்களெல்லோரும் இங்கேயே இருங்கள். சீதாப்பிராட்டியார், பாதாளத்திலிருந்தாலும் (அங்கே ஒளித்து வைக்கப்பட்டிருந்தாலும், நான் ஒருவனாகவே கொண்டுவந்து சேர்ப்பேன். (எதிர்ப்படும்) மரங்களைப் பிடுங்கி எறிவேன். மலைகளைப் பெயர்த்துத் தள்ளுவேன். (10–13)

தரையைப் பிளப்பேன்! கடலை வற்றச் செய்வேன்! நான் ஒரு யோஜனை தூரம் தாண்டக் கூடியவன் என்பதை நம்புங்கள்.' (இன்னொரு வானரன் கூறியது—) 'நான் நூறு யோஜனை தூரம் தாண்டுவேன்!' (மற்றொரு வானரன் கூறியது—) 'நான் நூறு யோஜனைக்கு மேலும் தாண்டுவேன் என்பது உங்களுக்குத் தெரிந்ததுதானே? பூமி, கடல், மலைகள், காடுகள் ஆகிய எந்த இடத்திலும் என்னை எதுவும் தடுக்க முடியாது, தெரியுமா!' பலத்தால் செருக்குற்ற வானரர் ஒவ்வொருவரும் வானர மன்னன் எதிரில், மேற்கண்டவாறு வீரவசனம் பேசினர். (14–16)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
நாற்பத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்தாறு

சுக்ரீவன், பூமண்டலத்தைச் சுற்றி ஓடிய வரலாறு

வானர வீரர்கள் அனைவரும் சென்றபின், இராமன், சுக்ரீவனைப் பார்த்து, "இந்தப் பூமண்டலத்தின் இடங்கள் எல்லாவற்றைப் பற்றியும், நீ நன்றாக அறிந்து வைத்திருக்கிறாயே? அது எப்படி?" என்று கேட்டார். சுக்ரீவன், மிகுந்த வணக்கத்துடன் இராமனைப் பார்த்து, "புருஷோத்தமரே! எல்லாவற்றையும் நான் விவரமாகச் சொல்கிறேன், கேளுங்கள். (1,2)

ஒரு சமயம், எருமை உருவம் எடுத்துக் கொண்ட துந்துபி என்ற அசுரன், வாலியுடன் சண்டை போட வந்தான். வாலியின் தாக்குதலைத் தாங்கமுடியாமல், மலயபர்வதத்தை நோக்கி ஓடினான். வாலி, அவனைத் துரத்திக் கொண்டு போனபோது, துந்துபி மலயமலைக் குகையினுள் புகுந்துவிட்டான். அவனை எப்படியும் கொன்றுவிடும் துடிப்புடன் வாலியும் மலயமலை குகைக்குள் புகுந்தான். அப்போது, அந்தக் குகையின் நுழைவாயிலில் நான் (வாலியின் சொல்லுக்கு அடங்கித்) தனியாக நின்றுகொண்டிருந்தேன். ஒரு வருஷ காலம் ஆகியும் வாலி வெளியில் வரவில்லை. (3–5)

பின்னர், வேகமாக வெளிவந்த இரத்த வெள்ளத்தால், அந்தக் குகை முழுவதும் நிறைந்துவிட்டது. அதைக் கண்டதும் எனக்கு மிகவும் ஆச்சரியமுண்டாயிற்று. சகோதரனைக்

குறித்து எனக்கு மிகவும் வருத்தம் உண்டாயிற்று. 'நிச்சயமாக, என்னுடைய அண்ணன் கொல்லப் பட்டான்' என்ற எண்ணம் எனக்குத் தெளிவாக ஏற்பட்டது. 'எருமையான துந்துபி, குகைக்கு வெளியே வரமுடியாமல் உள்ளேயே மாண்டு போகட்டும்' என்ற எண்ணத்துடன் மலை போன்ற ஒரு பாறையைக் குகையின் வாயிலில் வைத்தேன். பின்னர், அண்ணன் உயிரோடிருப்பான் என்ற நம்பிக்கையை இழந்து, நான் கிஷ்கிந்தைக்குத் திரும்பி வந்தேன். (6–8)

தாரை–ருமையுடன் கூட மிகப்பெரிய வானரப் பேரரசை அடைந்து, கவலையில்லாமல் நண்பர்களோடு உல்லாசமாக வசித்து வந்தேன். பின்னர், அந்த அசுர வீரனைக் கொன்றுவிட்டு வாலி திரும்பி வந்தான். எனக்கு மூத்தவர் என்ற மரியாதையாலும் ('என்ன செய்வானோ?' என்ற) அச்சத்தாலும், ராஜ்யத்தை அவனிடம் திருப்பிக் கொடுத்தேன். ஆனால், கெடு மனம் படைத்த வாலி, புலன்கள் கலங்கி, என்னைக் கொல்ல விரும்பினான். நான், என் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, என்னுடைய அமைச்சர்களுடன்கூட ஓடிய என்னைப் பின்தொடர்ந்து ஓடி வந்தான், வாலி. (9–11)

அப்போது அமைச்சர்களோடுகூட, என்னை வாலி துரத்திக் கொண்டு வந்தான். பற்பல ஆறுகள், காடுகள், நகரங்கள் போன்றவற்றைப் பார்த்துக் கொண்டு வேகமாக நான் ஓடினேன். அப்போது, இந்தப் பூமியானது கண்ணாடியின் மேற்பரப்பைப் போல் பளப்பளப்புள்ளதாகவும், கொள்ளிக்கட்டை வட்டவடிவாக சுழல்வது போலவும், மாட்டுக் குளம்படி போலவும் (சிறியதாக, எளிதில் கடக்கக் கூடியதாகவும்) காணப்பட்டது. அப்போது, கிழக்குத் திசையில் ஓடிய நான் அந்தப் பிரதேசத்தில் பலவகையான மரங்கள், பர்வதங்கள், அழகான ஆறுகள், நீர்நிலைகள் ஆகியவற்றைப் பார்த்தேன். அங்கே, பல வகையான தாதுக்கள் பெருகிக் கிடக்கும் உதயகிரியையும், எப்போதும் அப்சரப் பெண்டிர் வாசம் செய்யும் பாற்கடலையும் கண்டேன். (12–15)

சர்வ வல்லமை படைத்தவரே! அப்போது நான் திடீரென்று (வாலி வருகிறானா? என்று பார்க்கும் பொருட்டுத்) திரும்பினேன். வாலி வேகமாக என்னைத் துரத்திக் கொண்டு வருவதைக் கண்டு, (வேறு திசையை நோக்கித் திரும்பி,) தெற்குத் திசையில் மறுபடியும் ஓடினேன். விந்தியமலை, பல்வகை மரங்கள் மற்றும் சந்தனமரங்களால் கண்கவர் சோபையுடன் விளங்குவதையும், வேறு மரங்களையும் மலைகளையும் பார்த்துக் கொண்டு, தெற்குத் திசையிலிருந்து மேலும் தொடர்ந்து ஓடினேன். வாலியினால் வேகமாகப் பின்தொடரப்பட்ட நான், பலவிதமான நாடுகளைப் பார்த்துக் கொண்டு, மேற்குத் திசையில் அஸ்தகிரியைக் கண்டேன். மலைகளுள் சிறந்ததான அஸ்தகிரியை அடைந்தபின்னரும், வாலி துரத்திக் கொண்டு வருவதைப் பார்த்து வடக்கு திசையில் ஓடி இமயம்–மேரு மலைகளையும், அப்பால் பெருங்கடலையும் கண்டேன். (16–20)

வாலியினால் துரத்தப்பட்ட நான், அவனிடமிருந்து தப்புவதற்கு ஏற்ற ஒரு புகலிடத்தைக் காணாமல் தவித்துக் கொண்டிருந்தபோது, மதிநுட்பம் வாய்ந்த அனுமான் என்னிடம் சொன்னார்— 'வானர மன்னரே! இப்போது ஒரு விஷயம் என் நினைவுக்கு வருகிறது. முன்னொரு காலத்தில், 'இந்த ஆசிரம வளாகத்திற்குள் வாலி நுழைந்தானேயானால், அவனுடைய தலை சுக்குநூறாகப் போகக்கடவது' என்று மதங்க முனிவர் சாபம் கொடுத்திருக்கிறார். அதனால், அங்கே (மதங்கர் ஆசிரமத்தின் அருகே) சென்றால், (வாலியிடமிருந்து) பயமில்லாமல் சுகமாக வாழலாம்.' (21–23)

மன்னர் மைந்தரே! உடனே ரிஷ்யமூக பர்வதத்தை அடைந்தோம். மதங்கரிடமிருந்த பயத்தினால், (அவர் கொடுத்த சாபத்தை எண்ணி,) வாலி அந்த இடத்திற்குள் நுழையவில்லை. மன்னரே! இவ்வாறு, அந்தச் சமயத்தில் நான் பூமண்டலம் முழுவதையும் என் கண்களாலேயே பார்த்திருக்கிறேன்! பின்னர், ரிஷ்யமூக பர்வதத்தின் குகைக்கு வந்து சேர்ந்தேன்'' என்றான். (24,25)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
நாற்பத்தாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்தேழு

வானர சேனைகள் திரும்பி வருதல்

வானர மன்னரால் உத்தரவிடப்பட்டபடி, அவரவர்களுக்கு உரிய திசையில், வைதேகியைக் கண்டுபிடிப்பதற்காக வானரத் தலைவர்கள் உற்சாகத்துடன் புறப்பட்டுச் சென்றார்கள். அவர்கள், பொய்கை–நதிகளின் கரைகளிலும், கொடி வீடுகளிலும், வெட்டவெளியிலும், நகரங்களிலும், நதிகளின் குறுக்கீட்டினால் சென்றடைய முடியாத இடங்களிலும், மலைகளிலும் மற்றப் பிரதேசங்களிலும் தேடிப் பார்த்தார்கள். வானர வீரர்களான அவர்கள் எல்லோரும் சுக்ரீவனால் விளக்கிக் கூறப்பட்ட மலைகள்–சோலைகளைக் கொண்ட எல்லாப் பிரதேசங்களிலும் அலசிப் பார்த்தார்கள். (1–3)

சீதாப்பிராட்டியைக் கண்டுபிடிப்பதில் பேரார்வமுடைய அந்த வானரர்கள், பகல் முழுவதும் பூமியில் சுற்றித் திரிந்து தேடிவிட்டு, இரவுகளில் ஓரிடத்தில் வந்து கூடுவார்கள். பகல் முழுவதும் வெவ்வேறு இடங்களில் சுற்றித் திரிந்துவிட்டு, எல்லாக் காலங்களிலும் பழங்களைக் கொடுக்கக் கூடிய மரங்கள் இருக்கும் இடத்தின் அருகே வந்து களைப்பாறினார்கள். புறப்பட்ட அந்த தினத்தை முதல் நாளாகக் கொண்டு, ஒரு மாதம் முடிந்ததும் சீதையைக் காணும் நம்பிக்கை இழந்தவர்களாக வானரத் தலைவர்கள், சுக்ரீவனைச் சந்திக்கும் பொருட்டு பிரஸ்ரவண மலைக்குச் சென்றார்கள். (4–6)

மகாபலம் பொருந்திய வினதன், அவனுக்கு இடப்பட்ட உத்தரவுக்கிணங்க, கிழக்குத் திசையில் தேடிவிட்டு, சீதையைக் காணாமல் தன் அமைச்சர்களோடுகூடத் திரும்பி வந்து சேர்ந்தான். பெருமைக்குரிய வானரனான சதபலி, வடக்குத் திசை முழுவதிலும் தேடிவிட்டு, (சீதையைக் காணாமல்) தன் படைவீரர்களோடுத் திரும்பி வந்தான். ஸுஷேணன் மேற்குத் திசையில் தேடிவிட்டு, ஒரு மாதம் நிறைவடைந்ததும் வானரர்களோடுகூட சுக்ரீவன் எதிரில் வந்து நின்றான். பிரஸ்ரவண மலையில், ஸ்ரீராமனோடுகூட அமர்ந்திருக்கும் சுக்ரீவன் அருகில் சென்று, வணங்கிவிட்டு, பின்வருமாறு தெரிவித்துக் கொண்டார்கள்— "எல்லா மலைகள், அடர்ந்த காடுகள், நதிக்கரைகள், கடற்கரைகள், மக்கள் வாழும் இடங்கள் ஆகிய அனைத்திலும் கவனமாகத் தேடப்பட்டன. (7–11)

தங்களால் குறிப்பிட்டுக் கூறப்பட்ட குகைகள், செடி–கொடிகள் ஏராளமாக வளர்ந்து மூடிக்கிடந்த இடங்கள், அடர்த்தியான பெரும் புதர்கள் ஆகிய எல்லா இடங்களிலும் தேடினோம். உட்புக முடியாத காடுகள், நாடுகள், அகழி சூழ்ந்த கோட்டைகள், மேடுபள்ளமான பிரதேசங்கள் ஆகிய இங்கெல்லாம் தேடினோம். மேலும், பேருருவம் கொண்ட விநோதமான பிராணிகளிடமும் தேடிப் பார்த்தோம். வானர மன்னரே! சீதாதேவியார் சென்றிருக்கும் தெற்குத் திசைக்குப் பேராற்றல் படைத்தவரும் நற்குடியில் பிறந்தவருமான அனுமான் சென்றிருக்கிறார். மைதிலி இருக்குமிடத்தை அவர் தெரிந்து கொண்டு வருவார்." (12–14)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
நாற்பத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்தெட்டு

தென்திசைக் காடுகளில் தேடுதல்

வானர வீரர் அனுமான், தாரன்–அங்கதனோடு கூடவே சென்று, (தென் திசையில்) சுக்ரீவனால் விளக்கிக் கூறப்பட்ட அவ்விடங்களில் தேடித் திரிந்தார். வானர வீரர்கள் எல்லோருடனும்

வெகுதூரம் சென்று, விந்தியமலையை அவர் (அனுமான்) அடைந்தார். அங்குள்ள குகைகள், அடர்த்தியான காடுகள், மலைச்சிகரங்கள், நதிக்கரைகள், குறுகிய பாதைகளையுடைய பிரதேசங்கள், நீர்நிலைகள், பெரிய பெரிய மரங்கள், புதர்கள், பலவகையான மலைகள், நெருக்கமாக வளர்ந்துள்ள மரக்கூட்டங்கள் ஆகிய எல்லா இடங்களிலும் எல்லா வானரர்களும் தேடிப் பார்த்தார்கள். ஆனால், ஜனகன் திருமகளான சீதையைக் காணவில்லை. (1–4)

அச்சமும் சலிப்பும் இல்லாத அவ்வீரர்கள் அனைவரும் ஆங்காங்கே கிடைக்கக்கூடிய பலவகையான பழம்–கிழங்குகளைப் புசித்துக் கொண்டு, சீதையைத் தேடி, அந்தந்த இடங்களிலேயே ஓய்வு எடுத்துக் கொண்டார்கள். விந்தியமலையைச் சார்ந்த விஸ்தாரமான பிரதேசம், தேடிக் கண்டுபிடிக்க முடியாததாகவும், குகைகளும், அடர்ந்த காடுகளும் நிறைந்ததாகவும் இருந்தது. அங்கிருந்த அடர்த்தியான காடுகள், மனிதர்களும் தண்ணீரும் இல்லாததால், உரோமச்சிலிர்ப்பை ஏற்படுத்தும் பாழ்வெளியைப் போலிருந்தன. (5,6)

அப்போது, வானரவீரர்கள் எல்லோரும் அந்த இடத்தை விட்டுவிட்டு, அதுபோன்ற கோரமான காடுகளில் தேடித்தேடி மிகவும் துன்பத்தை அடைந்தார்கள். அச்சமில்லாதவர்களான அவர்கள், உட்புக முடியாத வேறொரு பிரதேசத்திற்குள் நுழைந்தார்கள். அங்கிருந்த மரங்களில் பழம்–புஷ்பம்–இலை முதலிய எதுவும் இல்லை. நதிகளில் தண்ணீர் இல்லை; பழம்–கிழங்குகள் கிடைப்பது அரிதாக இருந்தது. அங்கு எருமைகளோ, மான்களோ, யானைகளோ இல்லவே இல்லை. காட்டில் வாழும் புலிகள், பறவைகள்கூட இல்லை. அங்கு மரம்–செடி–கொடி–புல்பூண்டு ஆகிய எவையும் இல்லை. (7–10)

அந்த இடத்தில் அழகிய இலைகளும், மலர்ந்த தாமரைகளும், நறுமணமும், இனிய காட்சியும் தர வேண்டிய தாமரை ஓடைகள், நீர்வற்றிப் போய் (அதனால், இலை–மலர்கள் இல்லாததால்) வண்டுகள் இல்லாமல் காணப்பட்டன. தவச்செல்வர்; பொய்யாமொழியர்; தனக்கு இழைக்கப்படும் குற்றத்தை மன்னிக்காத கோபக்காரர்; வேறெவராலும் கடைப்பிடிக்க முடியாத நியமங்களை உறுதியாகப் பின்பற்றுபவர் – இப்படிப்பட்ட, 'கண்டு' என்ற மாமுனிவர் (ஒரு காலத்தில்) அங்கே இருந்தார். பத்து வயதுப் பாலகனான அவருடைய குமாரன், ஏதோ ஒரு காரணத்தால் மரணமடைந்தான். அதனால் சினங்கொண்ட முனிவர், அந்தக் காட்டையே அழித்துவிடுவது என்று முடிவு செய்தார். (11–13)

தருமாத்மாவான அவர், 'அந்த மாபெரும் வனம் முழுவதும் மக்கள் வசிக்கத்தகாததாகவும், யாராலும் அணுக முடியாததாகவும், விலங்கு–பறவைகள் இல்லாததாகவும் ஆகுக' என்று சபித்தார். அந்த மாபெரும் காட்டின் எல்லாப் பகுதிகளிலும் மலைக்குகைகளிலும் ஆற்றின் உற்பத்தி ஸ்தானங்களிலும் மிகுந்த முனைப்புடன் அவர்கள் தேடினார்கள். சுக்ரீவனுக்குப் பிரியமான காரியத்தைச் செய்வதில் ஆர்வமுடைய நல்லிதயம் கொண்ட அவர்கள், அந்த இடத்திலும் சீதையையோ, அவளைத் திருடிச் சென்ற இராவணனையோ பார்க்க முடியவில்லை. (14–16)

பின்னர், அவர்கள் கொடிகள், புதர்கள் மண்டிக்கிடந்த ஓர் இடத்திற்குள் நுழைந்து பார்த்தார்கள். அங்கே, தேவர்களுக்கும் அஞ்சாத ஒரு கொடிய அரக்கனைக் கண்டார்கள். ஒரு மலை போல் பெருவடிவம் கொண்டு தோற்றமளிக்கும் அவனைப் பார்த்ததும், ஒரு குன்று போல் உறுதியாக நிற்கும் அவனைத் தாக்குவதற்காக, இடுப்பில் வரிந்து கட்டிக் கொண்டார்கள். அப்போது பலசாலியான அந்த அரக்கன், வானரர்களைப் பார்த்து, 'எல்லோரும் செத்தீர்கள்!' என்று சீற்றத்துடன் சீறிக்கொண்டு, கைமுஷ்டியை மடக்கி உயரே தூக்கிக் கொண்டு, அவர்களை நோக்கி ஓடிவந்தான். (17–19)

அப்பொழுது, வாலியின் புதல்வனான அங்கதன், திடீரென்று தாக்குவதற்காக ஓடிவரும் அவனை, 'இவன்தான் இராவணனோ?' என்று எண்ணி, உள்ளங்கையினால் அவனை அடித்தான். வாலிகுமாரனால் அடிக்கப்பட்ட அந்த அசுரன், வாயிலிருந்து ரத்தத்தைப் பெருகவிட்டுக்

கொண்டு, அடியோடு பெயர்க்கப்பட்ட மலைபோல் தரையில் விழுந்தான். அவன் உயிர் நீங்கியதும், வெற்றிக் களிப்பில் மிதந்த வானரர்கள், அந்த மலைக்குகை முழுவதையும் ஓரிடம் விடாமல் தேடினார்கள். அவர்கள் எல்லோரும் அந்தக் காட்டுப் பகுதியில் மறுபடியும் தேடிவிட்டு, மேலே தொடர்ந்து செல்கையில் பயங்கரமான வேறொரு மலைக்குகைக்குள் நுழைந்தார்கள். அந்த இடத்தில் அலைந்து திரிந்து பல தடவை தேடிப் பார்த்துக் களைப்படைந்தார்கள்; மனம் நொந்து போனார்கள். ஏகாந்தமான (தனியான) ஒரு மரத்தின் அடியில் எல்லோரும் வந்து உட்கார்ந்து கொண்டார்கள். (20–24)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
நாற்பத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்தொன்பது

வெள்ளிமலையில் தேடுதல்

அப்போது பலவிடங்களிலும் அலைந்து திரிந்ததால் களைத்துப் போனவனும் பேரறிவாளனுமான அங்கதன், வானரர்கள் எல்லோரையும் சமாதானப்படுத்தி, மெல்ல மெல்ல பின்வரும் சொற்களைக் கூறினான்— "நம் எல்லோராலும் மலைகள், காடுகள், உட்புக முடியாத இடங்கள், அடர்ந்த பெருங்காடுகள், மலையருவிகள், மலைக்குகைகள் ஆகியவையும், ஆங்காங்கே காணப்பட்ட பிற இடங்களும் தேடப்பட்டுவிட்டன. ஆனால், எந்த இடத்திலும் ஜானகி காணப்படவில்லை. தேவப்பெண்டிருக்கு இணையான சீதாதேவியைக் கவர்ந்து சென்ற அந்த அரக்கனும் காணப்படவில்லை. (1–3)

நமக்குக் கொடுக்கப்பட்டிருந்த காலக்கெடு எப்போதோ முடிந்துவிட்டது. சுக்ரீவன் கடுமையாக தண்டனை கொடுப்பவர். (காலம் கடந்து, சீதையும் இல்லாமல் சென்றால் மரணதண்டனைதான்!) ஆகையால், நீங்களெல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து சுற்றிலும் தேடிப் பாருங்கள். சோம்பல், சோகம், கண்களைச் சுழற்றும் தூக்கம் முதலியவற்றைத் துறந்து, ஜனகர் புதல்வி சீதாப்பிராட்டியாரை, நாம் கண்களால் காணும்வரை தேடிப் பார்ப்போம். 'மனந்தளராமை, செயல்திறன், மனவலிமையை இழக்காதிருத்தல் – இவைகள், ஒரு காரியத்தை வெற்றிகரமாக நடத்திக் கொடுக்கும் பண்புகள்' என்று பெரியோர்கள் சொல்லியிருப்பதால், நான் (அதை) இப்போது உங்களிடம் சொல்கிறேன். (4–6)

உடனே வானரர்கள் எல்லோரும் மனத்தளர்ச்சியை விட்டொழித்து, உள்ளே புகுவதற்கரிய இந்த (இன்னொரு) காட்டில் தேடத் தொடங்க வேண்டும். மன உறுதியுடன் செய்யப்படும் எந்தக் காரியத்திலும் பயனைக் காணலாம். (நிச்சயமாக வெற்றி கிடைக்கும்.) நாம் நம்பிக்கையை இழந்தது போதும். கண்களை மூடிக்கொண்டு (முயற்சியைத் தொடராமல்) இருப்பது, நமக்குப் பொருத்தமானதல்ல. சுக்ரீவ மன்னர், மிகவும் கோபிஷ்டர்; கடுமையான தண்டனை கொடுப்பவர். வானரர்களே! அதனால், (மகாகோபக்காரராகிய) சுக்ரீவனுக்கும், மகாத்மாவாகிய இராமனுக்கும் நாம் பயப்பட வேண்டியிருக்கிறது. வானரர்களே! உங்களுடைய நன்மைக்காக இவற்றையெல்லாம் கூறினேன். இது சரியான யோசனை என்று எல்லோருக்கும் தோன்றினால் செயல்படுத்துவோம். இல்லையென்றால், வேறு மார்க்கங்களை நீங்களெல்லோரும் கூறுங்கள்." (7–10)

அங்கதனுடைய சொற்களைக் கேட்டதும், கந்தமாதனன் என்ற வானரன் தாகத்தாலும் உடற்தளர்ச்சியாலும் தாக்கப்பட்டு, வாய்குழற பின்வரும் சொற்களைக் கூறினான்— "நமக்கு அங்கதன் கொடுத்த அறிவுரை, அவன் உயர்பண்புக்கு ஏற்றதாக இருக்கிறது; உங்கள் எல்லோருக்கும் நன்மையளிப்பது; கைக்கொள்ளத்தக்கது. இவனுடைய ஆலோசனைப்படியே

நாம் நடப்போம். மலைகள், குகைகள், பள்ளத்தாக்குகள், உயிர்ப்பிராணிகளில்லாததால் பாழாகக் கிடக்கும் காடுகள், மலையருவிகள் – இங்கெல்லாம் மறுபடியும் நாம் தேடுவோம். பேருள்ளம் கொண்ட சுக்ரீவன் விளக்கிக் கூறிய காடுகள், உட்புக முடியாத மலைப்பிரதேசங்கள் எல்லாவற்றிலும் நாமெல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து தேடத் தொடங்குவோம்.'' (11–14)

(இதைக் கேட்டதும், மனத்தளர்ச்சியை ஒதுக்கிவிட்டு) பெரும் பலசாலிகளான அந்த வானரர்கள் புத்துணர்வு பெற்று, அவ்விடத்திலிருந்து எழுந்தார்கள். விந்தியமலைக் காடுகள் நிறைந்திருந்த தெற்குத் திசையில் தேடித் திரிந்தார்கள். சீதாதேவியைக் கண்டுபிடித்து விடவேண்டும் என்ற தீவிர வேட்கையுடன் இருந்த அந்த வானரர்கள், சரத்கால வெண்முகில் போன்றதும், சிகரம்–குகைகள் உடையதுமான ரஜத மலை (வெள்ளிமலை) மீது ஏறிச் சென்று, அங்கிருந்து வனப்புமிக்க வெள்ளைலுத்தி மற்றும் ஏழிலைப்பாலை வனங்களிலும் தேடிப் பார்க்கத் தொடங்கினார்கள். எல்லையில்லாத வீரமுடைய அவர்கள், அந்த மலையின் உச்சியில் ஏறி, தேடித் தேடி அலைந்து திரிந்தும், இராமனுடைய அன்பிற்குரிய மனைவியான சீதையைக் காணாததால் மனம் சலித்துப் போனார்கள். (15–18)

பற்பல குகைகளிருக்கும் அந்த மலையையும், அதைச் சுற்றிலுமிருக்கும் மற்றப் பிரதேசங்களையும் கண்மூடாமல் கவனமாகத் தேடிப் பார்த்துவிட்டு, (சீதையைக் காணாததால்) கீழே இறங்கினார்கள். அவ்விடத்திலிருந்து தரையில் இறங்கி வந்து மிகவும் களைப்பினால் உணர்விழந்து, ஒரு முகூர்த்த காலம் அங்கேயே தங்கி, பின்னர் ஒரு மரத்தடிக்கு வந்து சேர்ந்தார்கள். அவர்கள் சிறிது நேரம் அங்கே தங்கி இளைப்பாறியதும், களைப்பு நீங்கியவர்களாக, தென்திசை முழுவதையும் தேடுவதற்காக மறுபடியும் புறப்பட்டார்கள். அனுமான் முதலிய வானரோத்தமர்கள், விந்தியத்தை மையமாகக் கொண்டு சுற்றிலும் ஆங்காங்கு காணப்பட்ட எல்லா இடங்களிலும் தேடித் திரிந்தார்கள். (19–22)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
நாற்பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பது

ரிக்ஷபிலத்திற்குள் நுழைதல்

தாரன், அங்கதன் முதலானோரோடு சென்ற அனுமான், சிறந்த மலையான விந்திய பர்வதத்திலுள்ள குகைகள், காடுகள், பெரும் பாறைகள், நதிக்கரைகள் ஆகியவற்றிலும், சிங்கம்–புலிகள் வசிக்கும் மேடுபள்ளமான இடங்களிலும், பெரும் மலையருவிப் பகுதிகளிலும் தேடினார். தேடிக் கொண்டே சென்று அந்த மலையினுடைய தென்மேற்கு முகட்டினை அடைந்தார்கள். அங்கே தங்கியிருக்கும் போதே, (சுக்ரீவனால் விதிக்கப்பட்ட) காலக்கெடு முடிந்துவிட்டது. அந்தப் பகுதி, உள்ளே நுழைந்து தேடமுடியாதபடி குகைகளும் காடுகளும் அடர்ந்து விசாலமாக இருந்தது. அவ்விடத்தில், வாயுகுமாரரான அனுமான் ஓரிடம்கூட விட்டு வைக்காமல் தேடிப் பார்த்தார். (1–4)

அவர்கள் தனித்தனியே பிரிந்து பரஸ்பரம் வெகுதூரம் செல்லாமல், கஜன், கவாக்ஷன், கவயன், சரபன், கந்தமாதனன், மைந்தன், த்விவிதன், ஸுஷேணன், அனுமான், இளவரசன் அங்கதன், காட்டு வழியறிந்த தாரன் ஆகியோர் மலைத்தொடர்கள் நிறைந்த பிரதேசங்களிலும் தென்திசையின் மற்றெல்லா இடங்களிலும் தேடிக்கொண்டே செல்கையில், நுழைவாயில் திறந்திருந்த ஒரு குகையைக் கண்டார்கள். உள்ளே புக முடியாத அந்த குகைக்கு ரிக்ஷபிலம் என்று பெயர். அதனை ஓர் அசுரன் பாதுகாத்து வந்தான். பசியும் தாகமும் வாட்டியெடுக்க,

மிகவும் களைப்படைந்திருந்த அவர்கள் தண்ணீர் வேட்கை மேலிட, கொடிகளாலும் மரங்களாலும் மறைக்கப்பட்டிருந்த அந்தக் குகையைக் கண்டார்கள். (5–8)

அப்போது, அந்தக் குகையிலிருந்து கிரௌஞ்சம், அன்னம், ஸாரஸம், தாமரைத் தாதுக்களால் சிவப்பான உடலைக் கொண்ட சக்ரவாகம் முதலிய பறவைகள் தண்ணீரால் நனைந்த உடலுடன் வெளியே வந்தன. பின்னர், உட்புக முடியாத அந்தக் குகையை நெருங்கிச் சென்றதும், நறுமணம் கமழ்வதைக் கண்டு மிகவும் ஆச்சரியமடைந்தார்கள். வானர வீரர்களுக்கு, அந்தக் குகையில் ஏதோ ஒரு நீர்நிலை இருக்கவேண்டுமென்ற சந்தேகம் உண்டாயிற்று. மகாபலவான்களும் பராக்கிரமசாலிகளுமான அவர்கள் மகிழ்ச்சியுடன், பலவகை உயிர்ப்பிராணிகள் நிறைந்ததும், அசுர மன்னன் மாளிகை போன்று கண்களால் காண இயலாததும், பயங்கரமானதும், எவ்வகையாலும் உட்புக முடியாததுமான அந்தக் குகையை அணுகினார்கள். (9–12)

அப்போது, மலைச்சிகரம் போல் உன்னதமாக விளங்குபவரும் வாயுகுமாரரும் அடர்த்தியான காட்டுப் பகுதிகளில் தேட வல்லவருமான அனுமான், வானரர்கள் எல்லோரையும் பார்த்து, இவ்விதம் கூறினார்— ''தென்திசையில் மலைத்தொடர்கள் நிறைந்த நாடுகளிலெல்லாம் தேடித்தேடி நாமெல்லோரும் களைப்படைந்துவிட்டோம். அப்படியும் நாம் ஜானகிதேவியைக் காணவில்லை. எதிரில் காணப்படும் குகையிலிருந்து அன்னங்கள், கிரௌஞ்சங்கள், தண்ணீரால் நனைக்கப்பட்ட சக்ரவாகம் ஆகிய நீர்ப்பறவைகள் வெளியே வந்து நாற்புறமும் பறந்து செல்கின்றன. எனவே, நிச்சயமாக இந்தக் குகைக்குள் ஒரு கிணறு அல்லது மடு இருக்க வேண்டும். அதனால்தான் குகை வாயிலிலுள்ள மரங்கள் பசுமையாக இருக்கின்றன.'' (13–16)

இவ்வாறு பேசிக் கொண்டே இருளடர்ந்த அந்தக் குகைக்குள் எல்லோரும் நுழைந்தார்கள். அவ்விடத்தில் சந்திர–சூரியர்களின் ஒளி இல்லாததால், மயிர்க்கூச்செறியும்படி பயங்கரமாக இருந்தது. அந்தக் குகையிலிருந்து சிங்கங்களும் மான்களும் பறவைகளும் வெளியே வருவதைப் பார்த்துக் கொண்டே, இருள்சூழ்ந்த அந்தக் குகைக்குள் வானரோத்தமர்கள் நுழைந்தார்கள். (அவ்விடத்தில் இருள் சூழ்ந்திருந்தாலும்) அவர்களது பார்வை தடைபடவில்லை; வீரமும் பராக்கிரமமும் குறைந்து போய்விடவில்லை; அவர்களுடைய சஞ்சாரமும் வாயுவைப் போல் சுயேச்சையாக இருந்தது; அந்த இருளிலும் கண்பார்வை மங்கிப் போகவில்லை. (17–19)

அந்த வானர வீரர்கள், அச்சம் கொள்ளாமல் அந்தக் குகைக்குள் சென்றார்கள். அதனுள்ளே பிரகாசமானதும் மனங்கவர்வதும் உத்தமமுமான ஓர் இடத்தைக் கண்டார்கள். பின்னர், மிகுந்த கஷ்டத்துடன் செல்லக்கூடிய அந்தக் குகையில், ஒரு யோஜனை தூரம், ஒருவரையொருவர் இறுகத் தழுவிக்கொண்டு சென்றார்கள். தாங்கமுடியாத தாகத்தால் அவர்கள் மதிமயங்கிப் போனார்கள். 'தண்ணீர் கிடைக்காதா?' என்ற ஏக்கத்துடன், முயற்சியைக் கைவிடாமல் அந்தக் குகைக்குள்ளே மேலும் மேலும் சென்று கொண்டே இருந்தார்கள். உடல் துவண்டு, முகம் வாடி, உயிர்மேலிருந்த நம்பிக்கையை இழந்து, மிகவும் களைத்துப் போயிருந்த அவர்கள், (சற்றுத் தூரத்தில்) ஓர் ஒளியைக் கண்டார்கள். (20–23)

பின்னர், இருளடர்ந்த பகுதியிலிருந்து, வெளிச்சமான, அழகான ஒரு காட்டுப் பகுதியை அடைந்தார்கள். கொழுந்துவிட்டெரியும் நெருப்பைப் போல் ஒளிவீசும் பொன்மயமான மரங்களை அங்கே பார்த்தார்கள். ஆச்சா, பனை, புன்னை, மருதம், மகிழம், தவம், சம்பகம், நாகம் ஆகிய மரங்களையும் மற்றும் மலர்கள் பூத்திருந்த சரக்கொன்றை மரங்களையும் (பார்த்தார்கள்.) பொன்னிறமான அழகிய பூங்கொத்துக்கள், செந்நிறத் தளிர்கள், கீழ்நோக்கித் தொங்கிக் கொண்டிருக்கும் கொடிகள், பொன்னாலாகிய அணிகலன்கள் ஆகியவற்றால் அலங்கரிக்கப்பட்டு, இளஞ்சூரியனைப் போல் ஒளிவீசும் வைடூர்யமயமான மேடைகள்; தங்கமயமான மரங்கள், சுயமான ஒளியுடன் பிரகாசித்துக் கொண்டிருந்தன. உதயகால சூரியனைப் போல் ஒளிவீசும் பெரிய பெரிய பொற்றாமரைகள் நிரம்பிய, இந்திரநீல–வைடூர்ய நிறங்கொண்ட புள்ளினங்கள் சூழ்ந்த தாமரையோடைகள் (ஆகியவைகளைப் பார்த்தார்கள்.) (24–27)

அவ்விடத்தில், மாசற்ற தண்ணீரை உடைய அந்தத் தாமரைத் தடாகங்களில் பொன் வண்ண மீன்கள், பெரிய உருவம் படைத்த ஆமைகள் காணப்பட்டன. அந்த இடத்தில், பொன்–வெள்ளியால் செய்யப்பட்டனவும் பொற்சாளரங்களை உடையனவும் முத்து வலைகள் சூழ்ந்திருப்பனவுமான விமானங்களையுடைய தங்கம்–வெள்ளியால் கட்டப்பட்ட மாளிகை களையும், (மண்–கல்–மரம் முதலிய) பூமியில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு கட்டப்பட்ட வைடூர்யம் பதிப்பிக்கப்பட்ட இல்லங்களையும் வானரர்கள் அங்கே கண்டார்கள். (28–30)

பவழம்–மாணிக்கம் போல் ஒளிபடைத்த மரங்களில் மலர்களும் பழங்களும் காணப்பட்டன. அவற்றிலுள்ள மகரந்தத்தைப் பருகுவதற்காகப் பொன்வண்டுகள் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. அந்த இடம் முழுவதிலும் பொன்னும் மணிகளும் இழைத்த படுக்கை–இருக்கைகளையும் விலைமதிக்க முடியாத (பல்லக்கு போன்ற) வாகனங்களையும் பார்த்தார்கள். (31,32)

பொன்–வெள்ளி–வெண்கலத்தாலான பாத்திரங்களின் குவியல்கள், தெய்விகமான அகரு–சந்தனக் கட்டைகளின் குவியல்கள், உண்ணத் தகுந்த தூயதான கிழங்கு–பழங்கள், உயர்வகை பானங்கள், சுவையான மதுவகைகள், மண்ணுலகில் காணக் கிடைக்காத மிகத் தரம் வாய்ந்த ஆடைகளின் குவியல்கள், சித்திரவேலைப்பாடுகளால் அழகாக விளங்கும் கம்பளங்கள்–தோல்களின் குவியல்கள் (ஆகியவற்றையும் பார்த்தார்கள்.) சுவாலைவிட்டெரியும் அக்னியைப் போல் பிரகாசிக்கின்ற, கலப்படமற்ற பொற்கட்டிகளின் குவியல்கள் ஆங்காங்கே வைக்கப்பட்டிருப்பதையும் வானரர்கள் பார்த்தார்கள். மகாபலம் கொண்ட வீரர்களான வானரர்கள், அந்தக் குகையில் ஆங்காங்கே (சீதையைத்) தேடிக் கொண்டிருக்கும்போது, சற்றுத் தொலைவில் ஒரு பெண்ணைக் கண்டார்கள். (33–37)

மரவுரியையும் மானதோலையும் ஆடையாகக் கொண்டு, தவவாழ்க்கை ஏற்று, உணவைச் சுருக்கி, ஆன்ம ஒளியால் பிரகாசித்துக் கொண்டு விளங்கும் அந்த அணங்கைக் கண்டு, வானரர்கள் எல்லோரும் திகைப்படைந்தவர்களாய் சிலைபோல் நின்றுவிட்டார்கள். அப்போது, ''அம்மையே! தாங்கள் யார்? இந்த குகை யாருடையது?'' என்று அனுமான் கேட்டார். மலைபோல் உறுதி படைத்த அனுமான், இருகைகளையும் கூப்பிக் கொண்டு, வயோதிகையான அவரை வணங்கி, ''அம்மணி! தாங்கள் யார்? இந்த இடம், குகை, செல்வக்குவியல்கள் எல்லாம் யாருடையவை? தயவுசெய்து பதில் கூறவேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார். (38–40)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
ஐம்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்தொன்று

சுயம்பிரபை செய்த விருந்தோம்பல்

முதலில் (மேலே சொன்னபடிச்) சுருக்கமாகக் கேட்ட அனுமான், (பின்னர், இன்னும் விரிவாகத் தகவல்களை அறிய விரும்பி,) கருமான்தோல் அணிந்தவரும் அறநெறியைக் கடைப்பிடிப்பவரும் புண்ணியசாலியும் தவச்செல்வியுமான அவரைப் பார்த்து மறுபடியும் கேட்டார்— (1)

''நாங்கள் எல்லா இடங்களிலும் சுற்றி அலைந்ததால் பசி–தாகம் மேலிட்டவர்களாக, மிகவும் களைப்படைந்து இருள் சூழ்ந்த இந்த குகைக்குள் வேறு சிந்தனை செய்யாமல் தடாலென்று நுழைந்தோம். தாகத்தைத் தாங்கமாட்டாமல், ('இங்கேயாவது தண்ணீர் கிடைக்குமா?' என்ற பேராவலில்) பூமியில் காணப்பட்ட இந்தப் பெரிய வெடிப்புப் பகுதியில் நுழைந்தோம். பற்பல வகையான, உவமை சொல்லுதற்கரிய, இதற்கு முன் பார்த்தறியாத பொருள்களைப்

பார்த்ததும், எங்களுக்கு மிகவும் கவலை உண்டாயிற்று; சிந்தனை தடுமாறியது; (இது ஒரு மாயத்தோற்றமோ? என்று எண்ணி) உணர்விழந்தவர்களானோம். செங்கதிர்களைக் கொண்ட இளஞ்சூரியனைப் போல் ஒளி வீசும் இந்தத் தங்கத் தருக்கள் யாருடையவை? (2–4)

தூயவையான இந்த உணவுப் பண்டங்கள், பழம்–கிழங்குகள், பொன்மயமான விமானங்கள், வெள்ளியாலான வீடுகள், இரத்தின வலைகளால் சூழப்பட்ட பொற்சாளரங்கள், நெஞ்சை அள்ளும் மணத்தோடு கூடிய பழம்–புஷ்பங்கள், குலைகுலையாகத் தொங்கும் தங்கத் தருக்கள் ஆகிய அனைத்தும் எவருடைய தெய்விக ஆற்றலால் உண்டாக்கப்பட்டன? தெள்ளிய நீர் கொண்ட தடாகங்களில் பொற்றாமரைகள் உண்டாகியிருக்கின்றனவே? தடாகத்திலுள்ள மீன்களும் ஆமைகளும் எவ்வாறு தங்கமயமாகக் காட்சி தருகின்றன? இவையெல்லாம் தங்களுடைய தெய்விக ஆற்றலால் தோற்றுவிக்கப்பட்டவையா? அல்லது வேறொருவருடைய தவமகிமையால் சிருஷ்டிக்கப்பட்டவையா? எங்களில் எவருக்கும் இதுபற்றித் தெரியாததால் கேட்கிறேன். எல்லா விஷயங்களையும் அருள்கூர்ந்து கூறவேண்டும்.'' (5–8)

இவ்வாறு அனுமான் கேட்டவுடன், எல்லாப் பிராணிகளின் நன்மையில் மனம் கொண்டவரும் அறநெறியில் நடப்பவரும் தவசியுமான அவர் (அவள்) சொன்னார்— ''அசுரர்களில் மிக்க புகழ் பெற்றவனும், பேராற்றல் படைத்த மாயாவியுமான மயன் என்பவன் தன் மாயாசக்தியினால் பொன்மயமான இந்தக் காட்டையும் பிற பொருள்களையும் தோற்றுவித்தான். அந்த மயன் என்ற அசுரன், அசுரத் தலைவர்களுக்கெல்லாம் வீடு நிர்மாணித்துக் கொடுக்கும் பணியைச் செய்து வந்தான். தெய்விக அழகுடன் விளங்கும் இந்தப் பொன்மாளிகை அவனால் நிர்மாணிக்கப்பட்டதுதான். (9–11)

அவன் ஒரு பெருங்காட்டில், ஆயிரம் ஆண்டுகள் தவம் செய்து, பிரும்மாவிடமிருந்து சுக்ராசார்யாரால் உபதேசிக்கப்பட்ட சிற்பக்கலை என்ற அற்புதக் கருவூலத்தையெல்லாம் வரமாகப் பெற்றான். சிற்பக்கலை என்னும் அரிய கலைஞானத்தைப் பெற்றுவிட்ட அவன், இந்தப் பெருங்கானகத்தில், எல்லா சுக–சௌக்கியங்களையும் அனுபவித்துக் கொண்டு சிறிதுகாலம் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தான். நாளடைவில் ஹேமா என்ற அப்சரப் பெண்ணுடன் அசுரத்தலைவன் (மயன்) மிகவும் மோகம் கொண்டு அலைந்தான். அதைத் தெரிந்துகொண்ட தேவர்கோன் இந்திரன், வஜ்ராயுதத்தால் அவனைக் கொன்றான். (12–14)

பின்னர், மிகச்சிறந்ததான இந்தச் சோலையும், என்றைக்கும் குறைவுபடாத இங்குள்ள புலனுகர் பொருள்களும், பொன்மயமான இந்த இல்லமும் பிரும்மாவினால் ஹேமைக்குக் கொடுக்கப் பட்டன. நான், மேருஸாவர்ணியின் புத்திரி; சுயம்பிரபா என்று பெயர். வானரோத்தமனே! நான், ஹேமையின் இந்த மாளிகையைக் காவல் காத்து வருகிறேன். என்னுடைய உயிர்த்தோழியான ஹேமா, இசை–நாட்டியங்களில் கைதேர்ந்தவள். அவள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, இந்தச் சிறப்பான மாளிகையைக் காவல் செய்து கொண்டிருக்கிறேன். (15–17)

உங்களுக்கு இந்த இடத்தில் என்ன வேலை? நுழைவதற்கரிய இந்தக் காட்டுப் பகுதிகளில் எந்த நோக்கத்தோடுச் சுற்றித் திரிந்து கொண்டிருக்கிறீர்கள்? கண்டுபிடிக்க முடியாத இந்தப் பூஞ்சோலையை எவ்வாறு கண்டுபிடித்தீர்கள்? உண்பதற்குரிய இந்தப் பழம்–கிழங்குகளைப் புசித்து, குடிக்கத்தக்க பானங்களைக் குடித்துவிட்டு, பின்னர், என் கேள்விகளுக்குப் பதில் சொல்லுங்கள்.'' (18,19)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
ஐம்பத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்து இரண்டு

குகைக்குள் நுழைந்த காரணம்

சஞ்சலமில்லாத மனத்துடன் அறநெறியில் வாழ்ந்து வரும் தவசியான அவர், களைப்புத் தீர்ந்த வானர வீரர்களைப் பார்த்து(ப் பின்வருமாறு) கூறினார்— ''வானரர்களே! பழங்களைச் சாப்பிட்டதால் உங்களுடைய களைப்பு நீங்கிவிட்டதல்லவா? (நான் முன்பு கேட்ட கேள்விகளுக்கான பதில்களை) நான் தெரிந்துகொள்ளலாம் என்று நீங்கள் கருதினால், அந்தச் செய்திகளைக் கேட்க நான் விரும்புகிறேன்.'' அவருடைய அந்தச் சொற்களைக் கேட்டு வாயுகுமாரரான அனுமான், நேர்மையான முறையில், உண்மையை உள்ளபடிச் சொல்லத் தொடங்கினார்— (1–3)

''அனைத்து உலகங்களுக்கும் மன்னரும், தேவராஜன்–வருணனுக்கு நிகரானவரும், அனைத்துப் பெருமைகளுக்கும் உரியவரும், தசரத குமாரருமான இராமன், தம்பி இலக்குவனோடும், மனைவி சீதையோடும்கூட தண்டகாவனத்திற்கு வந்தார். அவருடைய மனைவி ஜனஸ்தானத்திலிருந்து பலவந்தமாகத் திருடிக்கொண்டு போகப்பட்டாள். அந்த அரசருக்கு, சுக்ரீவன் என்ற வானர வீரர் ஆப்தசிநேகிதர். சுக்ரீவன், வானரர்களுக்கு மன்னர். நாங்கள் அவரால் அனுப்பப்பட்டவர்கள். (4–6)

அகஸ்திய மாமுனிவர் வசிப்பதும், யமதருமனின் பரிபாலனத்தில் உள்ளதுமான தென்திசைக்கு, அங்கதனைத் தலைமையாகக் கொண்ட வானர வீரர்களான நாங்களெல்லோரும் ஒன்றாகக் கூடியிருந்து, 'விதேக மன்னரின் மகளான சீதை மற்றும் நினைத்த உருவம் எடுக்கவல்ல அரக்கன் இராவணன் ஆகியவர்களைத் தேடிக் கண்டுபிடியுங்கள்' என்று உத்தரவிடப்பட்டோம். தென்திசை முழுவதையும் தேடித் திரிந்த நாங்கள் எல்லோரும் பசிமிகுந்து, மிகவும் களைத்துப் போய் ஒரு மரத்தடியில் தங்கினோம். எல்லோரும் முகம் வாடி கவலை மேலிட்டவர்களானோம். கவலைப் பெருங்கடலில் மூழ்கி, அதைக் கடந்து செல்ல வழி தெரியாதிருந்தோம். (7–10)

பார்வையை அங்குமிங்கும் செலுத்தியபோது கொடி–மரங்களால் மறைக்கப்பட்டு, இருள் சூழ்ந்த குகையைக் கண்டோம். இந்தக் குகையிலிருந்து, தண்ணீர்த் திவலைகள் கூடிய அன்னம், குரரம் (மீன்கொத்தி), ஸாரஸம் முதலிய நீர்நிலைப் புள்ளினங்கள் வெளியே பறந்து வருவதைப் பார்த்தோம். நான், 'இதற்குள் நுழைந்து பார்ப்போமே' என்று சொன்னதும், 'இந்தக் குகைக்குள் தண்ணீர் கிடைக்கும் வாய்ப்பிருக்கிறது' என்று எல்லோருக்கும் நம்பிக்கை ஏற்பட்டது. 'மன்னரால் ஏவப்பட்ட காரியத்தை விரைவில் செய்து முடிக்க வேண்டும்' என்ற ஆவலில், (அனுமான் சொன்னபடியே) 'போவோம், (குகைக்குள்) நுழைவோம்' என்ற தீர்மானத்துடன் ஒருவருக்கொருவர் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு உள்ளே நுழைந்தோம். (11–14)

(முன்பின் விளைவுகளை ஆலோசிக்காமல், தண்ணீர் கிடைக்கக்கூடும் என்ற ஒரே ஆசையால்) இருள்சூழ்ந்த இந்தக் குகைக்குள் சட்டென்று புகுந்தோம். (அதிசயமான இந்த இடத்திற்கு வருவது என்ற) காரியத்திற்குக் காரணம் இதுதான். (அத்துடன் சீதையைத் தேடுவது என்ற) எங்களால் செய்யப்பட வேண்டிய காரியத்தை முன்னிட்டும் நாங்கள் உள்ளே வந்தோம். பசியினால் துவண்டு, பலமிழந்து போயிருந்த நாங்கள் தங்களைச் சரணடைந்தோம். விருந்தோம்பல் என்ற அறநெறிக்கேற்ப கனி–கிழங்குகளை எங்களுக்கு அளித்தீர்கள். நாங்களும், தாங்கமுடியாத பசியால் தவித்துக் கொண்டிருந்ததால், வயிறார கனி–கிழங்குகளைப் புசித்துவிட்டோம். (15,16)

கோரமான பசியினால் செத்துப் போகும் நிலையை அடைந்துவிட்ட வானரர்கள் எல்லோரும் தங்களால் காப்பாற்றப்பட்டார்கள். வானரர்களாகிய நாங்கள், தாங்கள் செய்துள்ள பேருதவிக்கு எவ்வாறு நன்றிக்கடன் செலுத்துவது? என்பதைக் கூறவேண்டும்.'' வானரர்கள் இவ்வாறு கூறியதும், முக்கால ஞானமுடைய சுயம்பிரபை, வானரத் தலைவர்களைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார்— ''பராக்கிரமமும் வேகமுமுடைய வானரர்களாகிய உங்கள்

எல்லோரையும் பார்த்ததில், நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன். அறநெறியைப் பின்பற்றி வாழ்ந்து கொண்டிருக்கும் எனக்கு, இவ்விடத்தில் எவரிடமிருந்தும் உதவி தேவையில்லை.'' (17–19)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
ஐம்பத்து இரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்து மூன்று

அங்கதன் முதலானோரின் அவநம்பிக்கை

தவச்செல்வியாகிய அவர், அறநெறிகளுக்கு இயைந்ததும் மிக்கக் கௌரவத்திற்குரிய (மேற்கண்ட) பதிலைக் கூறியதும், குற்றங்குறை காணமுடியாதபடி வாழ்ந்து கொண்டிருக்கும் அவரைப் பார்த்து, பின்வரும் சொற்களைக் கூறினார், அனுமான். ''அறவொழுக்கம் உடையவரே! நாங்களெல்லோரும் தங்களைச் சரணடைந்திருக்கிறோம். எங்களுக்கு மன்னனான சுக்ரீவனால் விதிக்கப்பட்ட காலம் (கெடு), இந்தக் குகையில் (வெகுநாட்கள்) சுற்றிக் கொண்டிருந்ததால் கடந்து போய்விட்டது. தாங்கள் அருள்கூர்ந்து, எங்கள் எல்லோரையும் குகைக்கு வெளியே கொண்டு சேர்க்க வேண்டும். (1–3)

சுக்ரீவனால் கொடுக்கப்பட்ட காலம் கடந்து போய்விட்டதால், எங்கள் உயிரே போய்விடப் போகிறது. (அவ்விதமே அவன் எச்சரித்திருக்கிறான்.) ஆகவே, சுக்ரீவனுடைய கடுமையான தண்டனையை எண்ணி நடுங்கிக் கொண்டிருக்கும் எங்களைத் தாங்கள்தான் காப்பாற்றவேண்டும். அறநெறியாளரே! ஒரு மகத்தான காரியத்தை நாங்கள் செய்யவேண்டியிருக்கிறது. (அதற்காகவே எங்கள் நாட்டிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டோம்.) ஆனால், இங்கேயே சிலநாட்கள் உல்லாசமாக இருந்துவிட்டபடியால், அந்தக் காரியம் நிறைவேற்றப்படவே இல்லை.'' (4,5)

அனுமான் இவ்வாறு கூறியதைக் கேட்டதும், 'இந்தக் குகைக்குள் புகுந்தவர் எவரும், உயிருடன் வெளியே போவது என்பது சாத்தியமில்லாதது' என்று தபஸ்வினி கூறினார். (ஆனால்,) என்னுடைய தவத்தின் வலிமையினாலும், அறநெறிகளைக் கடைப்பிடித்து வந்த புண்ணியத்தாலும், எல்லா வானரர்களையும் இந்தக் குகைக்கு வெளியே கொண்டு போய்ச் சேர்க்கிறேன். வானர வீரர்களே! நீங்கள் எல்லோரும் கண்களை மூடிக் கொள்ளுங்கள். கண்களை மூடாமல், (இங்கிருந்து) வெளியே போக முடியாது. (6–8)

வெளியே செல்வதற்குத் துடித்துக் கொண்டிருந்த அவர்கள் எல்லோரும் உடனே, இமைகளால் கண்களை மூடிக்கொண்டு, மெல்லிய கைவிரல்களாலும் மறைத்துக் கொண்டார்கள். அப்போது, கைகளால் கண்களை மூடிக்கொண்ட வீரர்களான வானரர்கள் அனைவரும், ஒரு நிமிட காலத்திற்குள்ளாகவே, அந்தக் குகைக்கு வெளியே, தபஸ்வினியால் கொண்டு செல்லப்பட்டார்கள். பின்னர், அறநெறி வழுவாத தவச்செல்வியாகிய அவர், உயிர்ப்பிராணிகளின் கண்களுக்குப் புலப்படாத, முற்றிலும் வித்தியாசமான அந்தக் குகையிலிருந்து வெளியே வந்துவிட்ட வானரர்களுக்கு ஆறுதல் கூறி, பின்வரும் செய்திகளைக் கூறினார்— (9–11)

''பலவகையான மரங்களும் கொடிகளும் அடர்ந்து, செழிப்புடன் விளங்கும் இந்த மலைக்குப் பெயர், விந்தியம்; இந்தக் குன்று பிரஸ்ரவணம்; (எதிரே காணப்படும்) பெருங்கடலுக்குப் பெயர் மஹோததி. வானரர்களே! உங்களுக்கு க்ஷேமம் உண்டாவதாகுக. நான், என் இருப்பிடத்திற்குச் செல்கிறேன்'' என்று கூறிவிட்டு, செல்வத் திருமகள் விளங்கும் அந்தக் குகைக்குள் சுயம்பிரபை நுழைந்தார். பின்னர், வருணனுக்கு இருப்பிடமான மாபெரும் சமுத்திரத்தைக் கண்டார்கள். அதில் பேரலைகள் ஓயாமல் வீசிக்கொண்டிருந்ததால், நிரந்தரமாக கர்ஜனை ஒலி எழும்பிக் கொண்டிருந்தது. அதன் அக்கரையைக் காண இயலவில்லை. (12–14)

மயாசுரன், தன் மாயையால் நிர்மாணித்த அந்த மலையின் குகைகளில் தேடிக் கொண்டிருக்கும் காலத்தில், அரசனால் விதிக்கப்பட்ட ஒரு மாதம் என்ற காலக்கெடு கடந்து விட்டது. விந்திய மலையின் அடிவாரத்தில் மலர்க்கொத்துக்கள் செறிந்த மரத்தின் அடியில் அமர்ந்து மகாவீரர்களான அந்த வானரர்கள், (அடுத்ததாகச் செய்ய வேண்டிய காரியம் பற்றி) கவலையுடன் சிந்திக்கத் தொடங்கினார்கள். அப்போது, வசந்தகாலம் நெருங்கிக் கொண்டிருப்பதை நினைவுபடுத்தும்வண்ணம், நூற்றுக்கணக்கான கொடிகளால் சூழப்பட்டனவும், ஏராளமான மலர்களின் சுமை தாங்கிய நுனிகளையுடையனவுமான மரங்களைக் கண்டு, (சுக்ரீவனின் கடுமையான ஆணையை எண்ணிப் பார்த்து) அச்சத்தால் மனம் கலங்கினார்கள். (15–17)

'வசந்த காலம் வந்துவிட்டது' என்று அவர்கள் பரஸ்பரம் சொல்லிக் கொண்டார்கள். (வசந்த காலம் வரப்போவதற்கான அறிகுறிகள் தோன்ற ஆரம்பித்துவிட்டன – என்பது கருத்து. ஏனென்றால், அப்போது வசந்தருது தோன்றவில்லை.) அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட காரியத்தையும் முடிக்கவில்லை; கெடுவையும் கடந்தாகிவிட்டது – என்ற பயத்தால், தரையில் விழுந்து புரண்டார்கள். (18)

அப்போது ஆண்சிங்கத்தின் தோள்களைப் போன்று சதைப்பற்று மிக்க தோள்களை உடையவனும், பருமனான நீண்ட புஜங்களையுடையவனும், மகாமேதாவியுமான வானர இளவரசன் அங்கதன், அறிவிற்சிறந்த முதிய வானரர்களையும், மற்ற காட்டு வானரர்களையும் இனிமையான குரலில் அழைத்து, அவரவர் தகுதிக்கேற்றபடி மரியாதை செய்து, பின்வரும் சொற்களைக் கூறினான்— (19,20)

"வானர மன்னருடைய ஆணைப்படி நாம் எல்லோரும் (கிஷ்கிந்தையிலிருந்து) வெளியே புறப்பட்டோம். ரிக்ஷபிலம் குகையில் (சௌக்கியமாக) இருந்தபோதே ஒரு மாத காலம் முடிந்துவிட்டது என்பது நீங்கள் அறியாததா, என்ன? நாம், ஆசுவயுஜ மாதத்திலிருந்து கணக்கிடப்பட்டு (ஒரு மாதத்திற்குள் திரும்பிவிட வேண்டும் – என்ற உத்தரவுடன்) புறப்பட்டு வந்தோம். அந்தக் கால எல்லை கடந்து போய்விட்டது. எனவே, நாம் அடுத்தபடியாகச் செய்யவேண்டிய காரியம் என்ன? நீங்கள், மன்னரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள்; ராஜதந்திர முறைகளில் நிபுணர்கள்; மன்னரின் நன்மையைக் கோருபவர்கள்; அவரவர்களுக்குத் தகுந்த பணிகளில் ஏவப்படுகிறவர்கள். (21–23)

நீங்களெல்லோரும் செயலாற்றுவதில் ஒப்பில்லாதவர்கள்; எல்லாத் திசைகளிலும் பேராற்றல் பெற்ற உங்கள் புகழ் பரவியிருக்கிறது. வானரர் மன்னரான சுக்ரீவனால் என்னை முன்னிலைப்படுத்தி அனுப்பப்பட்டவர்கள். மன்னரால் உத்தரவிடப்பட்ட காரியத்தைச் செய்து முடிக்காதவர்கள், இறக்க வேண்டியதே! இதில் சந்தேகமே இல்லை. வானர மன்னருடைய கட்டளையை நிறைவேற்றாத எவன்தான் சௌக்கியமாக இருப்பான்? சுக்ரீவனால் குறிப்பிடப்பட்ட காலக்கெடு கடந்து போய்விட்ட இந்த நிலையில் சுக்ரீவனிடம் திரும்பிச் சென்று, மரணதண்டனை பெறுவதைக் காட்டிலும், எல்லோரும் வடக்கிருந்து (தர்பத்தின் மேல் உட்கார்ந்து, தானாக உயிர் போகும்வரை உண்ணாவிரதம் இருத்தல் – பிராயோபவேசம்) உயிர் துறத்தலே செய்யத்தக்கது. (24–26)

சுக்ரீவன் இயல்பாகவே கொடுமைக்காரர்; 'எல்லோருக்கும் தலைவன்' என்ற பெருமிதத்தில் மிதப்பவர்; நாமோ குற்றம் செய்தவர்கள். இந்த நிலையில் அவரிடம் திரும்பிச் சென்றால் நம்மை மன்னிக்கவே மாட்டார். சீதையைப் பற்றிய எந்த விவரத்தையும் கொண்டு செல்லாத நமக்கெல்லாம் மரணதண்டனையைத்தான் வழங்குவார். அதனால், புத்திரர்–மனைவிமார், சொத்து–செல்வம், வீடு–வாசல் ஆகியவற்றின் மேலுள்ள பற்றுதலைத் துறந்து, பிராயோபவேச முறைப்படிப் பட்டினி கிடந்து, இங்கேயே, இப்பொழுதே உயிர்விடுதலே சாலச் சிறந்தது. (27–29)

மேலும் சுக்ரீவன், என்னை இளவரசனாகப் பட்டம் கட்டவில்லை. அரிய செயல்களையும் எளிதாகச் செய்து முடிக்கவல்ல மன்னர் இராமனால் பட்டம் சூட்டப்பட்டேன். (இராமனுடைய

விருப்பத்திற்குக் கட்டுப்பட்டு, எனக்கு இளவரசுப் பட்டம் சூட்டினானே தவிர, என்மேல் உள்ள அன்பினால் அல்ல.) அவர், முன்பிருந்தே என்னிடம் (உள்ளூர) பகைமை பாராட்டி வருகிறார். (அந்தப் பகைமையைப் பழிதீர்த்துக் கொள்ள இப்போது அருமையான வாய்ப்பு கிடைத்திருக்கிறது!) அவருடைய கட்டளையை மீறி (தவணைக்காலம் கடந்து, தோல்வியுடன் நான் சென்றால்) பழைய பகைமையை நினைவிற்கொண்டு, எனக்குக் கடுமையான தண்டனை – மரண தண்டனை – கொடுத்துவிடுவார். (30,31)

என்னுடைய நண்பர்களான உங்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு, உங்கள் கண்முன்னால் நான் சாவதைக் கண்டு வருந்துவதால் என்ன பயன்? (அந்தச் சோகநிலை வர வேண்டாம்.) புண்ணியமான சமுத்திரக் கரையில் (நானாகவே மனமொப்பி) உயிர் தானாகப் போகும்வரை உண்ணாநோன்பிருத்தல் (பிராயோபவேசம்) என்ற முறையை மேற்கொள்ளப் போகிறேன்.'' இளவரசனும் அரசகுமாரனுமான அங்கதன் இவ்வாறு சொல்லியதைக் கேட்டதும், வானரோத்தமர்கள் எல்லோரும் மனத்தை உருக்கும் சொற்களைச் சொன்னார்கள்— (32,33)

''சுக்ரீவன், இயற்கையாகவே கொடூரமானவன். இராமன், மனைவியிடத்தில் பேரன்பு பூண்டவர். (அந்த மனைவியைக் கண்டுபிடிப்பதற்காக, நாம் அனுப்பப்பட்டோம்.) அந்தக் காரியம் நடைபெறவில்லை; அத்துடன் தவணைக் காலமும் கடந்துவிட்டது. வைதேகியைக் காணாமல், கூட்டமாகத் திரும்பி வந்திருக்கும் நம்மைப் பார்த்ததும், இராமனின் பிரியத்தைப் பெறுவதற்காக, நம் எல்லோரையும் (சுக்ரீவன்) கொன்று விடுவார். அதனால், குற்றம் செய்தவர்கள், தங்கள் தலைவன் அருகில் செல்வது செய்யத்தக்கதன்று. நாமெல்லோரும் சுக்ரீவனுக்கு முக்கியப் பணியாளர்களாதலால், அவரால் அனுப்பப்பட்டு வந்திருக்கிறோம். (குற்றம் செய்துள்ள நாம், எப்படி யஜமானர் முகத்தில் விழிப்பது?) (34–36)

இந்த இடத்தில் மறுபடியும் சீதையைத் தேடிப் பார்த்து, விவரங்களைத் தெரிந்து கொண்டு, வீர சுக்ரீவனிடம் போவோம். இல்லையென்றால், யமலோகத்திற்குப் போவோம்.'' (பிராயோபவேசம் செய்து மரணம் அடைவோம்.) பயத்தால் கவலைப்பட்டுக் கொண்டிருந்த வானரர்களின் சொற்களைக் கேட்டு, தாரன் என்ற வானரன் பின்வருமாறு கூறினான்— ''கவலையை உதறித் தள்ளுங்கள். உங்களுக்கு இஷ்டமென்றால், (மீண்டும்) குகையில் (ரிக்ஷபிலத்தில்) நுழைந்து அங்கேயே சௌக்கியமாகக் காலங்கழிப்போம். (37–38)

இது, மாயையால் நிர்மாணிக்கப்பட்ட இடம்; யாராலும் உட்புக முடியாதது. ஏராளமான மரங்களும் தண்ணீரும் உண்ணத்தக்க பண்டங்களும் குடிப்பதற்கான பானங்களும் இருக்கின்றன. இவ்விடத்தில் இராமனிடமிருந்தோ, வானர மன்னனிடமிருந்தோ, ஏன், தேவேந்திரனிடமிருந்தோகூட நமக்கு பயம் (ஆபத்து) இல்லை!'' (இந்த மாயாலோகத்தை அவர்கள்கூடக் கண்டுபிடிக்க முடியாது!) அங்கதனுடைய கூற்றுக்கு மேலாக, தங்களுக்கு அனுகூலமாக தாரன் பேசியதைக் கேட்டதும், எல்லா வானரர்களும் அதற்கு ஆதரவு தெரிவித்தார்கள். 'எந்த உபாயத்தைப் பின்பற்றினால் நாம் அழிக்கப்பட மாட்டோமோ, அப்படிப்பட்ட ஓர் உபாயம் இப்போதே தாமதமின்றித் தீர்மானிக்கப்பட வேண்டும்' என்று கூறினார்கள். (39,40)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
ஐம்பத்து மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்து நான்கு

அனுமானின் கூற்று!

சந்திரனைப் போன்று ஒளிவீசும் தாரன் கூறியதைக் கேட்டும், அங்கதன் ஏதும் மறுத்துப் பேசாததால், அந்த வானர அரசு அங்கதனால் அபகரிக்கப்பட்டுவிட்டதென்றே அனுமான்

நினைத்தார். (அவனிடம் வானர அரசை நிர்வகிக்கும் திறமை இருக்கிறது என்றே நம்பினார்.) வாலியின் புதல்வன் அங்கதனிடம், எட்டுவிதமான தன்மை கூடிய புத்தியும், நான்குவித பலமும், பதிநான்கு வகை குணங்களும் நிறைந்திருப்பதாக அனுமான் உறுதியாக நம்பினார். (1,2)

[*புத்தியின் எட்டு தன்மைகள்:–* 1. பிறர் கூறுவதைச் செவிமடுத்துக் கேட்டு, மனத்தில் ஏற்பது. 2. அதை புத்தியில் நிலைநிறுத்துவது; 3. நினைவாற்றல்; 4. பிறருக்குப் புரியும்படி எடுத்துக் கூறும் திறமை; 5. யுக்தியாகப் பேசுவது; 6. பிறர் கூறும் யுக்தி–உபாயங்களைக் கண்டிப்பது; 7. பிறருடைய பேச்சின் உண்மையான அர்த்தத்தை அறிந்துகொள்வது; 8. விஷயங்களின் ஆழ்பொருளை உணர்ந்து கொள்வது.

நான்குவித பலம்:– ஸாம–தான–பேத–தண்டம் என்ற நால்வகை பலம் என்பர், சிலர். தேகபலம், மனோபலம், உபாய பலம், பந்துபலம் என்பாரும் உளர்.

பதிநான்கு வகை குணங்கள்:– 1. தேசம் – காலம் (அதாவது, சூழ்நிலையை) நன்றாக உணர்தல்; 2. மனவுறுதி; 3. எல்லாவிதமான கஷ்டங்களையும் பொறுத்துக் கொள்ளும் இயல்பு; 4. எல்லா விஷயங்களைப் பற்றியும் தெரிந்து கொள்வது; 5. திறமை; 6. விடாமுயற்சி; 7. மந்திரலோசனைகளை ரகசியமாக வைத்துக் கொள்ளுதல்; 8. முன்பின் மாறுபாடில்லாமல் நடப்பது (சொன்ன சொல் தவறாமை); 9. வீரத்தன்மை; 10. எதிரியின் திறமையை அறிவது; 11. நன்றி மறவாமை; 12. நம்பி வந்தவரைக் கைவிடாதிருத்தல்; 13. கோபமின்மை; 14. சபலத்திற்கு இடங்கொடாதிருத்தல்.]

வளர்பிறையின் துவக்கத்திலிருந்து, நாள்தோறும் கலைகள் கூடிச் சேர, வளரொளி வீசும் சந்திரனைப் போல, உள்ளார்ந்த வீரம், உடல்பலம், பிறரால் எதிர்கொள்ள முடியாத பேராற்றல் முதலியவைகளால் மேன்மேலும் நிறைவு பெற்றுக் கொண்டிருப்பவனும், அறிவில் பிருகஸ்பதிக்கு நிகரானவனும், ஆண்மையில் தந்தைக்கு ஒப்பானவனும், பிருகஸ்பதியின் சொற்படி நடக்கும் இந்திரன் போன்று, (முன்னர் வாமனாவதாரத்தில் சுக்கிரன், மகாபலிக்குத் தவறான உபதேசங்களைச் செய்தது போன்று, இப்போது தாரன் தவறான வழியைக் காட்டுவதால், அதற்கு உவமையாக சுக்கிரன் என்று சொல்லப்பட்டிருக்கிறது – என்பது உரையாசிரியர் கருத்து.) தாரனுடைய சொற்களின்படி நடக்கவிருப்பவனும், தலைவனின் காரியத்தில் மனத்தளர்ச்சி அடைந்தவனுமான அங்கதனை, எல்லா அறநூல்களையும் கற்றுத் தேர்ந்தவரான அனுமான், அவனைத் தன் பக்கம் இழுத்துக் கொள்வதற்கான முயற்சியை மேற்கொண்டார். (3–5)

ஸாம–தான–பேத–தண்டம் என்ற நான்கு உபாயங்களில் மூன்றாவதான பேதம் என்ற முறையை அனுசரித்து, தன்னுடைய பேச்சுத்திறமையால் அவர்களிடையே கருத்து வேற்றுமைகளை உண்டாக்கிவிட்டார். அவர்கள் எல்லோரும் (அங்கதனிடமிருந்து) பிரிந்தவுடன், சீற்றம் என்ற உபாயத்தை ஏற்று, பயத்தை உண்டாக்கும் பலவித வாதங்களைக் கூறி, அவனைக் கதிகலங்கச் செய்தார். ''தாரையின் மைந்தனே! போர் செய்வதில், உன் தந்தையைக் காட்டிலும் திறமை உள்ளவன், நீ. உன் தகப்பனார் எவ்வளவு சிறப்பாக வானர ராஜ்யத்தைக் கட்டிக் காத்தாரோ, அவ்வாறே நீயும் தலைமையேற்று நிர்வாகம் செய்வதற்குச் சக்தி உடையவன். (6–8)

வானரோத்தமனே! வானரர்கள் எப்போதும் சஞ்சலமான புத்தியுடையவர்கள். (எந்தத் தீர்மானத்திலும் நிலைத்து நிற்கமாட்டார்கள்.) உன் கட்டளைப்படி நடப்பதாக, இப்போது ஒப்புக் கொண்டாலும், (குகையில் தங்கிவிடுவதற்கு இப்போது சம்மதித்தாலும்) மனைவி–மக்களைப் பிரிந்து வாழ்வதைப் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள். உன் எதிரில் தெளிவாகச் சொல்கிறேன், கேள். இங்கே இருக்கும் ஜாம்பவான், நீலன், மிகவும் புகழ்பெற்ற சுஹோத்திரன் ஆகியோர் உன் சொல்லுக்குக் கட்டுப்பட மாட்டார்கள். இங்கேயுள்ள மற்ற எல்லோரும், ஏன், நானும்கூட ஸாம–தான–தண்ட உபாயங்களால் சுக்ரீவனிடத்திலிருந்து பிரிக்க முடியாதவர்கள். (9–11)

பலமுள்ளவன், பலம் குறைந்தவனிடம் பகைமை பாராட்டினாலும் சுகமாக வாழலாம். ஆனால், பலம் குறைந்தவன், அதிக பலமுள்ளவனிடம் பகைமையை வளர்த்துக் கொள்வது சரியானதல்ல. 'யார் கண்ணிலும் படாமல் ஜாக்கிரதையாகத் தங்குவதற்கு, ஒரு தாயைப் போல் போஷிக்கும் இந்தக் குகை இருக்கிறதே?' என்பாயேயானால், இதைப் பிளந்து தூள்தூளாக்குவது லட்சுமணனின்

பாணங்களுக்கு ஓர் அற்பமான காரியம்! முன்னொரு காலத்தில், வஜ்ராயுதத்தை எறிந்த இந்திரனால் இந்தக் குகையைச் சிறிதளவுகூடச் சேதப்படுத்த முடியவில்லை. ஆனால், லட்சுமணன் தனது கூரான பாணங்களால், (இந்தக் குகையை) இலையாலான ஒரு தொன்னையைப் போல, வெகு இலகுவாகச் சிதறடித்து விடுவார் என்பதில் ஐயமில்லை. (12–14)

லட்சுமணனிடம் அவ்வளவு வல்லமை பொருந்திய அஸ்திரங்கள் பல இருக்கின்றன. அவைகள் உரசினாற்கூடப் போதும் – வஜ்ராயுதம், இடித்தாக்குதல் போன்று மலைகளைப் பிளந்து மகத்தான சேதத்தை விளைவிக்கும். எதிரிகளை வாட்டுபவனே! நீ, 'இந்த இடத்திலேயே இருந்துவிடுகிறேன்' என்று தீர்மானித்தால், மற்றவர்கள் எல்லோரும் உன்னைத் துறந்துவிட்டு ஓடிப்போய்விடுவது என்று தீர்மானம் செய்துகொள்வார்கள். இவர்கள் தத்தம் மனைவி–மக்களை எண்ணிப் பார்த்து மனஉளைச்சல் படுவார்கள். சுகபோகங்களை அனுபவிக்க விரும்பி, கஷ்டமான படுக்கையில் (மனைவி இல்லாமல்) படுத்து மனம் வருந்தி, உன்னைத் தனியே விட்டுவிட்டுப் போய் விடுவார்கள். (15–17)

நண்பர்கள், நன்மையைக் கோருபவர்கள், உறவினர்கள் ஆகியோரால் கைவிடப்பட்ட நீ, ஒரு புல்லின் அசைவு ஒலி கேட்டாலும் நடுநடுங்கிப் போவாய். லட்சுமணனுடைய பாணங்கள் மிகவும் கடுமையாகத் தாக்கும் இயல்புடையவை; வெகுவேகமாகச் செல்பவை; எதிர்கொள்ள முடியாதவை. உனக்குக் கொடுக்கப்பட்ட காரியத்தைச் செய்யாமல் வேறுவிதமாக நடந்து கொள்ளும் உன்னை, லட்சுமணனின் பாணங்கள் நிச்சயமாகக் கொன்றுவிடும். அப்படியில்லாமல், நீயும் எங்களுடன் வந்து சுக்ரீவனை வணங்கி நின்றால், அரசுரிமை வரிசைப்படி, சுக்ரீவனே தனக்குப்பின் அரசனாக உன்னை நியமிப்பார். (18–20)

உன்னுடைய சிறிய தந்தை அறவழியில் நடப்பவர்; உன்னிடம் அன்பு கொண்டவர்; உறுதியான நியமங்களை உடையவர்; மனத்தூய்மை உடையவர்; சொன்ன சொல் தவறாதவர். (இவ்வளவு உயர்குணங்கள் படைத்த அவர்) உன்னை ஒருபோதும் கொல்வதற்கு நினைக்க மாட்டார். உன்னுடைய தாயாரின் விருப்பத்தை நிறைவேற்றுபவர்; அதற்காகவே உயிர் வாழ்பவர்; அவருக்கு (உன்னைத் தவிர) வேறு சந்ததியும் இல்லை. ஆகையால், அங்கதனே! எழுந்திரு. எங்களுடன்கூட சுக்ரீவனிடம் வருவாயாக.'' (21,22)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
ஐம்பத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்தைந்து

பிராயோபவேசம்

மிகவும் இனிமையாகவும், அறநெறிகளுக்கு இணங்கவும், தன்னுடைய தலைவனுக்கு உரிய கௌரவத்தைக் கொடுக்கும் முறையிலும் கூறப்பட்ட சொற்களைக் கேட்டு, அங்கதன் (பின்வருமாறு) பதில் கூறுகிறான்— (1)

''மனவுறுதி, வீரம், மனத்தூய்மை, இரக்கம், நேர்மை, வெற்றி கொள்ளும் ஆற்றல் (அஞ்சாமை), மன தைரியம் ஆகியன சுக்ரீவனிடத்தில் இல்லை. அவருடைய மனத்திற்குகந்த மனைவி உயிருடன் இருக்கிறாள்; மூத்த சகோதரனின் மனைவி, தாய் என எண்ணத்தக்கவள். இந்த நிலையில், பிறர் வெறுக்கும்படி, மூத்தவனுடைய மனைவியைத் தனக்கு உரியவளாக, எவன் ஏற்றுக்கொண்டானோ, குகையினுள்ளே எதிரியுடன் சண்டைக்குச் சென்ற அண்ணனால் வாசலில் காத்து நிற்கும்படி ஏவப்பட்ட போதிலும், தீய எண்ணமுடைய எவன் நுழைவாயிலை மூடினானோ, அவன் எவ்வாறு தருமத்தை அறிந்தவனாவான்? (2–4)

கையிலடித்து சத்தியம் செய்துகொடுத்துவிட்டு, காரியத்தை நிறைவேற்றிக் கொடுத்தவரும் பெரும் புகழ் கொண்டவருமான இராமபிரானை (அவருக்குக் கைம்மாறு செய்வதற்கு) மறந்து போனவன், வேறு யாருடைய உதவியைத்தான் நினைவில் வைத்திருக்கப் போகிறான்? எவன், அதருமத்திடம் உள்ள பயத்தினால் அல்லாமல் லட்சுமணனிடமிருந்த அச்சத்தால் சீதையைத் தேடுவதற்காக, நம்மையெல்லாம் அனுப்பி வைத்தானோ, அவனிடம் தருமத்தை எப்படி எதிர்பார்க்க முடியும்? அவன் பாவி; நன்றி கொன்றவன்; மறதி உடையவன்; சபலசித்தம் உடையவன். இப்படிப்பட்டவனிடம் நற்குலத்தில் பிறந்த எவன்தான் நம்பிக்கை வைப்பான்? (5–7)

சொந்த புத்திரன் நல்லவனோ, தீயவனோ – அவன்தான் அரசு பட்டம் சூட்டப்பட வேண்டியவன். (அதுதான், பரம்பரையான வழக்கம்.) (நானோ, சுக்ரீவனுடைய சொந்த மகன் இல்லை; மாறாக,) பகைவனான வாலியின் மைந்தனான என்னை, சுக்ரீவன் எவ்வாறு உயிரோடுவிட்டு வைப்பான்? நான், அரசவையில் மந்திராலோசனை செய்து எடுக்கப்பட்ட முடிவை நிறைவேற்றாதவன்; குற்றவாளி; ஆற்றல் குறைந்தவன்; மனவுறுதி இல்லாதவன்; புகலிடம் இல்லாதவன். இப்படிப்பட்ட நான் கிஷ்கிந்தைக்குச் சென்று எவ்வாறு உயிர் வாழ்வேன்? (8,9)

சுக்ரீவன் மந்தபுத்தி உடையவன்; கொடியவன்; இரக்கமில்லாதவன். தான் மட்டும் அரசை ஏகபோகமாக அனுபவிக்க வேண்டும் என்பதற்காக, ரகசியமாக எனக்குத் தண்டனை கொடுப்பான்; அல்லது நிரந்தரமாக காவல் கைதியாக வைப்பான். சிறைக்கைதியாக இருப்பது அல்லது கௌரவம் இழந்து வாழ்வது என்பதைக் காட்டிலும், உண்ணாநோன்பிருந்து உயிர்விடுவதே என்னைப் பொறுத்த வரையில் மேலானது என்று கருதுகிறேன். ஆகவே, வானரர்களே! எனக்கு அனுமதி கொடுங்கள். பின், அவரவர் வீடுகளுக்குப் போய்ச் சேருங்கள். (10,11)

நான், உங்களுக்குத் தீர்மானமாகச் சொல்கிறேன். நான், கிஷ்கிந்தைப் பட்டணத்திற்குத் திரும்பிச் செல்லமாட்டேன். இவ்விடத்திலேயே பிராயோபவேச விரதத்தை மேற்கொள்வேன்; (அதன் விளைவாக, சில நாள்களில்) மரணம் அடைவேன். அதுவே, சிறப்பானது. மிகுந்த வணக்கத்துடன், மகாபலம் பொருந்திய இராம–லட்சுமணர்களும், அவ்வாறே நம்முடைய மன்னனும் என்னால் குசலம் விசாரிக்கப்பட்டதாகக் கூறுங்கள். வானர மன்னனும், என் இளைய தந்தையுமான சுக்ரீவனையும் நான் விசாரித்ததாகத் தெரிவியுங்கள்; என்னுடைய (சிறிய) தாயார் ருமையிடமும் நான் சௌக்கியமாக இருப்பதாகவும், அவர் நலனைப் பற்றி விசாரித்ததாகவும் கூறுங்கள். (12–14)

என்னுடைய தாயார் தாரைக்கு ஆறுதல் கூறுங்கள். இயல்பாகவே, புதல்வனிடம் பெரும் பாசம் கொண்டவள்; இளகிய மனம் உடையவள்; பெண்ணறம் போற்றுபவள். நான் இங்கேயே மரணமடையப் போகிறேன் என்பதை அறிந்ததும், நிச்சயமாகத் தன் உயிரை விட்டுவிடுவாள்.'' இவ்வாறு கூறிவிட்டு, அங்கிருந்த முதியவர்களுக்கு நமஸ்காரம் செய்து, கலங்கிய மனத்துடன் அழுதுகொண்டே, தரையில் தர்பைகளைப் பரப்பி, அதன்மேல் உட்கார்ந்து கொண்டான், அங்கதன். அவன், இவ்வாறு உறுதிபூண்டு தர்பாஸனத்தின் மேல் உட்கார்ந்ததைப் பார்த்ததும், வானர வீரர்கள் எல்லோரும் மிகவும் துக்கமடைந்தவர்களாய் அழுதுகொண்டு கண்களிலிருந்து உஷ்ணமான நீரை வடித்தார்கள். (15–17)

எல்லோரும் (கடுமையான தண்டனை கொடுக்கும்) சுக்ரீவனை இகழ்ந்தார்கள்; வாலியை மிகவும் போற்றினார்கள். அங்கதனைச் சூழ்ந்து கொண்டு, அவனுக்கு ஆதரவாக உயிர்போகும் வரையில் பட்டினி கிடப்பது என்று நிச்சயித்தார்கள். வாலி குமாரனின் சொற்களைச் சிந்தித்துப் பார்த்து (சுக்ரீவனிடம் பயம் கொண்டு) வானரோத்தமர்களான அவர்கள் எல்லோரும் (வடக்கிருந்து மரணமடைவதே மேல் என்று தீர்மானித்து,) உயிரைப் போக்கிக் கொள்ளும் விருப்பத்துடன், (உடல் தூய்மைக்காக) கிழக்கு நோக்கி ஆசமனம் செய்து, சமுத்திரக்

கரையில், தெற்கு நுனியாகப் பரப்பப்பட்ட தர்பங்களில், 'இதுவே செய்யத்தக்கது' என்ற உறுதியுடன் உட்கார்ந்து கொண்டார்கள். (18–20)

இராமனுடைய வனவாசம்; தசரதன் மறைவு; ஜனஸ்தானத்தில் அரக்கர் அழிவு; சீதை கவர்ந்து செல்லப்பட்டது; ஜடாயுவுக்கு மோட்சம்; போரில் வாலி கொல்லப்பட்டது; இராமனுக்கு (சுக்ரீவனிடம்) ஏற்பட்டுள்ள கோபம்; அதனால், வானரர்களுக்கு வந்துள்ள பேராபத்து – இவைகளைப் புலம்பிக் கொண்டிருந்தார்கள். இவ்வாறு பெருமலை போன்ற உருவங்கொண்ட ஏராளமான வானரோத்தமர்கள் பெருங்கூச்சலிட்டுப் பேசியதன் எதிரொலி, பர்வதத்தின் நீரருவிகளில் கேட்டு, உரத்த கர்ஜனை செய்யும் மேகங்களோடு கூடிய ஆகாயம் போல் அந்த மலை விளங்கிற்று. (21–23)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
ஐம்பத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்தாறு

சம்பாதி விசாரித்தல்

எந்த மலையடிவாரத்தில் எல்லா வானரர்களும் 'சாகும்வரை உண்ணாவிரதம்' என்ற தீர்மானத்துடன் உட்கார்ந்து கொண்டார்களோ, அதே இடத்திற்கு கழுகரசன் வந்தடைந்தார். சம்பாதி என்று (அவருக்குப்) பெயர்; சிரஞ்ஜீவி; புள்ளினத்தைச் சார்ந்தவர்; ஜடாயுவின் சகோதரர்; பற்பல பெருமைகள் பொருந்தியவர்; அவருடைய உடல்வலிமையும் பேராண்மையும் எல்லோருக்கும் தெரியும். விந்திய மாமலையின் குகையிலிருந்து வெளியே வந்து, (உண்ணாநோன்புடன்) உட்கார்ந்திருந்த வானரர்களைப் பார்த்ததும் மிகவும் மகிழ்ச்சி அடைந்து, பின்வரும் சொற்களைக் கூறினார்— (1–3)

"முற்பிறவிகளில் செய்யப்பட்ட கர்மாக்களின் வினைப்பயன், தானாகவே இந்தப் பிறவியில் ஒரு ஜீவனைச் சென்றடைகிறது என்று கேள்விப்பட்டிருக்கிறேன். (அது, உண்மைதான் போலும்!) எனக்காகவே குறிக்கப்பட்ட இந்த உணவு (வானரர்கள்) நீண்டகாலத்திற்குப் பின்னர், இப்போது தானாகவே என்னிடம் வந்திருக்கிறது! வானரர்கள் ஒவ்வொருவராக உயிரிழந்ததும், அவ்வப்போதே ஒவ்வொன்றாகத் தின்று தீர்ப்பேன்!" என்று, அந்த வானரர்களை நோக்கிக் கூறினார். உணவுக்காகப் பறக்கும் அந்தப் பறவையின் சொற்களைக் கேட்ட அங்கதன், மிகவும் விசனத்துடன் அனுமானைப் பார்த்துக் கூறினான்— (4–6)

"பார்! சீதையை நிமித்தமாகக் கொண்டு வானரர்களை அழிப்பதற்கென்றே, சூரிய புத்திரனான யமன் இந்த இடத்திற்கு வந்திருக்கிறார், போலும்! ஸ்ரீராமருக்குச் செய்ய வேண்டிய காரியத்தையும் நாம் செய்து முடிக்கவில்லை; (வானர) அரசருடைய (ஒரு மாதத்திற்குள் திரும்பிவிட வேண்டும் என்ற) கட்டளையையும் நிறைவேற்றவில்லை. (அத்துடன், இந்தக் கழுகின் உருவில்) எதிர்பாராத ஒரு பேராபத்து திடீரென்று நமக்கு வந்திருக்கிறது! வைதேகியைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக, கழுகரசர் ஜடாயு செய்த அதிதீரச் செயலைப் பற்றி, நாம் விரிவாகக் கேட்டறிந்திருக்கிறோம். (ஜடாயு மட்டுமல்ல.) விலங்கினத்தில் பிறந்துள்ள அனைத்து உயிர்ப்பிராணிகளும், நம்மைப் போலவே தம் உயிரைக்கூடப் பொருட்படுத்தாது ஸ்ரீராமனுக்கு உதவிபுரிகின்றன. (7–10)

(ஸ்ரீராமனுடைய) பேரன்பு மற்றும் கருணையினால் வசீகரிக்கப்பட்டு, எல்லாப் பிராணிகளும் தனித்தனியே உதவி செய்கின்றன. ஆகவே, அவருக்கு உதவி செய்யும்பொருட்டு, தாமாகவே தம் உயிரைத் தியாகம் செய்து விடுங்கள். தருமம் அறிந்த ஜடாயுவினால், ஸ்ரீராமனுக்குப்

பேருதவி செய்யப்பட்டது. (அந்தச் செயலில், தன் உயிர் போவதைப் பற்றி அவர் கவலைப்படவில்லை.) நாமும், ஸ்ரீராமனின் காரியத்தில் மிகவும் முயற்சி செய்தோம். அதனால், உயிரே போய்விடும் போல் களைத்துப் போய்விட்டோம். காடு–குகைகளில் தேடிப் பார்த்தும் மைதிலியைக் காணவில்லை. (11,12)

யுத்தத்தில், இராவணனால் கொல்லப்பட்ட கழுகரசன் ரொம்பவும் கொடுத்து வைத்தவர். (அவர் உயிருடன் இருந்தால், இப்போது நம்மைப் போல அஞ்சிக் கொண்டிருப்பார்!) நல்லகாலமாக சுக்ரீவ ஆணை என்ற அச்சத்திலிருந்து தப்பித்ததுடன், மோட்சத்தையும் அடைந்துவிட்டார். ஜடாயுவின் வதம், மன்னர் தசரதனின் மரணம், வைதேகி களவாடப்படுதல் ஆகிய நிகழ்ச்சிகளால் வானரர்களின் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. சீதையுடன்கூட இராம–லட்சுமணர்கள் காட்டில் வசித்தல்; இராமனுடைய பாணத்தால் வாலியின் வதம்; இனி, இராமனுடைய கட்டுக்கடங்காத கோபத்தால் முற்றிலுமாக அரக்கர்கள் அழிவு – இவையெல்லாம் கைகேயிக்குக் கொடுக்கப்பட்ட வரத்தின் தீய விளைவுகள்.'' (13–16)

வானரர்கள், இவ்வாறு மீண்டும் மீண்டும் துக்கமயமான செய்திகளைப் பேசிக் கொள்வதைக் கேட்டும், அவர்கள் அனைவரும் (தப்பித்துக் கொள்வதற்கு வேறு வழியில்லாமல்) உண்ணா நோன்பு விரதம் ஏற்று தரையில் உட்கார்ந்திருப்பதையும் பார்த்து, பேரறிவு கொண்ட சம்பாதியின் நெஞ்சம் மிகவும் கலங்கிப் போயிற்று. அவர், மெல்லிய குரலில் பேச முயன்றார். கூர்மையான அலகினைக் கொண்ட, உரத்த குரலுடைய கழுகு, அப்போது அங்கதனுடைய வாய்வழி வந்த சொற்களைக் கேட்டு, அந்த விஷயமாகவே சில வார்த்தைகளைக் கேட்கிறார்— (17,18)

''என் உயிரினும் மேலான சகோதரன் ஜடாயுவின் மரணம் பற்றிப் புகழ்ந்து பேசிக் கொண்டிருக்கும் இவன் யார்? இதைக் கேட்டதும் என் மனம் நடுங்குகிறதே? ஜனஸ்தானத்தில் அரக்கன் இராவணனுக்கும் கழுகான ஜடாயுவுக்குமிடையே ஏன் யுத்தம் ஏற்பட்டது?... ஆகா!... எவ்வளவு காலத்திற்குப் பிறகு, என் சகோதரனின் பெயரைக் கேட்கிறேன்!

ஜடாயு, எனக்கு இளையவன்; நற்குணங்கள் கொண்டவன்; பெரும் புகழுக்குரிய பராக்கிரமத்தைப் பெற்றவன். மிக நீண்ட காலத்திற்குப் பிறகு அவனைப் பற்றிய புகழுரைகளைக் கேட்டு ஆனந்தத்தில் திளைக்கிறேன். நெருங்க முடியாத இந்த மலைப்பகுதியிலிருந்து, நீங்களெல்லோரும் என்னைக் கீழே இறக்கிவிட வேண்டும் என்று விரும்புகிறேன். வானர வீரர்களே! ஜனஸ்தானத்தில் வசித்துக் கொண்டிருந்த என் சகோதரனின் மரணத்தைப் பற்றி விரிவாகத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன். (19–22)

என் சகோதரனுக்கு சான்றோர்களால் பெரிதும் பாராட்டப்படும் இராமன் எவருக்குப் பிரியமான மூத்தகுமாரரோ, அவ்வளவு பெருமைமிக்க மாமன்னர் தசரதன் எவ்வாறு நண்பரானார்? பகைவர்களை ஒழித்துக் கட்டுபவர்களே! சூரியனின் வெம்மைக் கதிர்கள் என் சிறகுகளை எரித்துவிட்டன. அதனால், உங்களருகில் நானாக வரமுடியாமல் இருக்கிறேன். இந்த மலையிலிருந்து கீழே இறங்கிவிட வேண்டும் என விரும்புகிறேன்.'' (23,24)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
ஐம்பத்தாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்தேழு

ஜடாயுவின் வரலாறு

சோகத்தின் காரணமாகத் தடுமாறும் குரலில் பேசிய அவருடைய சொற்களைக் கேட்டும், அவர் முதன்முதலில் கூறிய (இவைகளை ஒவ்வொன்றாகப் புசிப்பேன் – என்ற) சொற்களை

நினைவிற்கொண்டிருந்த வானரத் தலைவர்கள், அவர் பேச்சில் நம்பிக்கை வைக்கவேயில்லை. சாகும்வரை உண்ணாவிரதம் என்ற சங்கல்பத்துடன் உட்கார்ந்திருந்த வானரர்கள், கழுகைப் பார்த்ததும், 'இது, நம் எல்லோரையும் சாப்பிட்டுவிடும் போலிருக்கிறதே?' என்று பயங்கரமாக சிந்தித்தார்கள். (1,2)

'நாம்தான் சாகும்வரை உண்ணாவிரதம் என்ற உறுதியுடன் உட்கார்ந்துவிட்டோம். இது நம்மைப் புசித்துவிடும் என்பது நிச்சயமாகிவிட்டால், நாம் அதிருஷ்டசாலிகள்தாம். நம்முடைய நோக்கம் விரைவில் நிறைவேற்றப்பட்டதாக ஆகிவிடுமே!' இப்படி வானரத் தலைவர்கள் எல்லோரும் எண்ணிக் கொண்டிருக்கும்போதே, அங்கதன் மலையின் உச்சியிலிருந்து அந்தக் கழுகை இறக்கி, அதைப் பார்த்துக் கூறினான்— (3,4)

''புள்ளரசே! முன்னர், ரிக்ஷரஜஸ் என்ற பெயருடைய வானரேந்திரர் இருந்தார். அவர் மிகவும் பராக்கிரமமுடையவர்; அறவழி தவறாதவர்; வானரர்களுக்கு மன்னர்; என்னுடைய பாட்டனார். அவருக்கு இரண்டு குமாரர்கள். சுக்ரீவன், வாலி என்ற அவ்விரு புத்திரர்களும் அளவில்லாத ஆற்றல் உடையவர்கள். என்னுடைய தந்தையான வாலி, தன் வீரதீரச் செயல்களால் உலகம் முழுவதிலும் புகழ் பெற்றார். (இனி, இராமனுடைய வரலாற்றைக் கூறுகிறான்.) இக்ஷ்வாகு பரம்பரையில் தோன்றிய தசரதன் என்பவரின் புதல்வராகிய இராமன், மகாரதர்; உலகமனைத்திற்கும் மன்னர்; தந்தையின் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடப்பவர்; அறநெறி தவறாத அவர் (தந்தையின் சொற்படி) தண்டகாவனத்திற்கு வந்தார். அவருடன், இளையபெருமானான லட்சுமணரும், மனைவி சீதாப்பிராட்டியாரும் வந்தனர். (5–8)

அவருடைய பத்தினி, (அப்போது அந்த மூவரும் தங்கியிருந்த) ஜனஸ்தானத்திலிருந்து இராவணனால் வஞ்சகமாகத் திருடிக் கொண்டு போகப்பட்டாள். இராமபிரானின் தந்தையின் நண்பராகிய ஜடாயு என்ற கழுகரசர், விதேக மன்னன் மகளான சீதை, ஆகாயமார்க்கமாகக் கவர்ந்து செல்லப்படுவதைப் பார்த்தார். அவர், போர் செய்து இராவணனின் தேரை நொறுக்கித் தள்ளினார். சீதையைப் பத்திரமாக இருக்கச் செய்தார். என்றாலும், வயோதிகரான அவர் மிகவும் களைப்படைந்திருந்த நிலையில், இராவணனால் கொல்லப்பட்டார். இவ்வாறு வலிமைமிக்க இராவணனால் தாக்கப்பட்டு உயிர் துறந்த அந்தக் கழுகரசர், சாட்சாத் இராமனால் தகனம் செய்யப்பட்டு, அப்போதே உத்தமோத்தமான நிலையை (பரமபதத்தை) அடைந்தார். (9–12)

பின்னர், என்னுடைய சிற்றப்பன், மகாத்மா சுக்ரீவனுடன் இராமன் (அக்னிசாட்சியாக) நட்புறவு கொண்டார். (நட்பின் இலக்கணப்படி,) அவர் (இராமன்), என் தந்தையைக் கொன்றார். சுக்ரீவனும் அவர் அமைச்சர்களும் (கிஷ்கிந்தைக்குள்) நுழைய முடியாதபடி என் தந்தை செய்துவிட்டார். (அவர்கள், அரசபோகங்களை அனுபவிக்க முடியாமல் வேறு எங்கோ தங்கியிருந்தார்கள்.) இராமன், வாலியைக் கொன்று, அவருக்கு (என் சிற்றப்பனுக்கு)ப் பட்டாபிஷேகம் செய்து வைத்தார். அவர் (இராமன்), வானரத் தலைவர் சுக்ரீவனை அரசாட்சியில் அமர்த்தினார். இப்போது வானரத் தலைவர்களுக்கெல்லாம் சுக்ரீவனே அரசர். (சீதையைத் தேடிக் கண்டுபிடிக்கும்படி) அவரால் நாங்கள் அனுப்பப்பட்டோம். (13–15)

இவ்விதம், இராமகாரியமாக ஆணையிடப்பட்ட நாங்கள், இங்குமங்கும் வைதேகியைத் தேடியலைந்தும், இரவில் சூரிய ஒளியைக் காணமுடியாததைப் போல, பிராட்டியைக் காண முடியவில்லை. நாங்கள் மிகவும் கவனமாக தண்டகாரண்யத்தில், ஓரிடம்கூட விடாமல் தேடிப் பார்த்துக் கொண்டிருக்கும்போது, தவறுதலாக, பூமியில் காணப்பட்ட ஒரு வெடிப்புக்குள் புகுந்து விட்டோம். மயன், மாயையால் நிர்மாணித்திருந்த அந்த வெடிப்புக்குள் (குகைக்குள்) நாங்கள் தேடித் திரிந்து கொண்டிருந்தபோதே, மன்னர் விதித்திருந்த ஒரு மாத தவணை கடந்துவிட்டது. (16–18)

நாங்கள், வானரவேந்தரின் ஆணைப்படி நடப்பவர்கள். அவரால் கொடுக்கப்பட்ட காலக்கெடு கடந்துவிட்டதால், எங்களுக்கு அவர் மரணதண்டனை கொடுப்பார். அதற்கு பயந்து நாங்கள்

(பிராயோபவேசம் என்ற) சாகும்வரை உண்ணாவிரதம் என்ற வழியை கைக்கொண்டிருக்கிறோம். (சீதையைக் காணாமலும், காலக்கெடு முடிந்தும்) நாங்கள் திரும்பிச் சென்றால், இராமன், லட்சுமணன், சுக்ரீவன் ஆகியோர் மிகவும் கோபமடைவார்கள். அவர்கள் கோபம் கொண்டால், நாங்கள் (உயிருடன்) திரும்பிச் சென்றாலும், அங்கே உயிரோடிருத்தல் என்பது நடக்கவே நடக்காது!'' (19)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
ஐம்பத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்தெட்டு

சீதை இருக்கும் இடத்தைத் தெரிவித்தல்

உயிரை விட்டுவிடுவது என்ற தீர்மானத்துடன் உட்கார்ந்திருந்த வானரர்கள், பரிதாபத்துடன் கூறிய சொற்களைக் கேட்டதும், பெருங்குரலுடைய கழுகு சம்பாதி பதில் சொன்னார்— (1)

''வானரர்களே! பலம் மிகுந்த இராவணனால், போரில் கொல்லப்பட்ட ஜடாயு என்ற பெயரைக் கூறினீர்களே, அவன் எனது இளைய சகோதரன். முதுமை, சிறகின்மை ஆகிய காரணங்களால் (இராவணனால் ஜடாயு கொல்லப்பட்டான் என்ற செய்தியைக் கேட்டும்) பொறுத்துக் கொண்டிருக்கிறேன். என்னுடைய சகோதரனுக்கு இழைக்கப்பட்ட கொடுமைக்குப் பழிக்குப்பழி வாங்கும் சக்தி, இப்போது என்னிடம் இல்லை. முன்னொரு காலத்தில், தேவராஜனான இந்திரன், விருத்திரன் என்ற அசுரனைக் கொன்றான். (என்று கேள்விப் பட்டிருப்பாயே?) அக்காலத்தில், நானும் ஜடாயுவும் இளைஞர்கள். உயரப் பறப்பதில், ஒருவரையொருவர் ஜெயிக்க விரும்பி மேலே மேலே பறந்தோம். வரிசையான கதிர்களால் சூழப்பட்டு ஜொலித்துக் கொண்டிருந்த சூரியன் அருகில் சென்றோம். (2–4)

ஆகாயத்தில் மிகவும் வேகமாகச் சுற்றிச் சுற்றிப் பறந்து சென்றோம். சூரியன் நண்பகலில் வானத்தின் மையத்திற்கு வந்தபோது, ஜடாயு களைப்படைந்தான். தம்பி, சூரியகிரணங்களால் தாக்கப்பட்டு, மிகவும் துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருந்ததைப் பார்த்ததும், (அவனைக் காப்பாற்ற விரும்பி) அவனிடமிருந்த பேரன்பினால், என் இரண்டு இறக்கைகளையும் விரித்து, (அவனுக்கு மேலே சென்று) மறைத்தேன். வானரோத்தமர்களே! (சூரியனின் வெம்மைக் கிரணங்களால்) இறக்கை எரிக்கப்பட்டு, இந்த விந்தியமலையில் விழுந்தேன். அப்போதிலிருந்து இங்கேயே வசித்துக் கொண்டிருக்கிறேன். அதன்பின், தம்பியைப் பற்றிய ஒரு தகவலையும் அறியேன்.'' (5–7)

ஜடாயுவின் சகோதரர் சம்பாதி, இவ்வாறு கூறி முடித்ததும், இளவரசனும் பேரறிவாளனுமான அங்கதன் அவரிடம் கேட்டான்— ''நீங்கள் ஜடாயுவுக்கு மூத்த சகோதரராக இருக்கும் பட்சத்தில், நான் முன்னர் கூறிய சொற்களையெல்லாம் மனத்தில் பதியும்படிக் கேட்டிருந்தால், அந்த அரக்கனின் இருப்பிடம் தெரிந்திருந்தால், எனக்கு அதைத் தெரிவிக்க வேண்டும். அரக்கப்பதரான இராவணன், தொலைநோக்கு இல்லாதவன். அவன், இவ்விடத்திற்கு அருகில் அல்லது தொலைவிலிருந்தாலும் சரி, உங்களுக்குத் தெரிந்திருந்தால் எங்களுக்குத் தெரிவியுங்கள்.'' (8–10)

அப்போது, மகாபராக்கிரமசாலியான ஜடாயுவின் மூத்த சகோதரர், தன்னுடைய ஒப்பில்லாத மேன்மைக்கு உகந்ததும், வானரர்களை மகிழச் செய்வதுமான ஒரு செய்தியைக் கூறினார்— ''வானரர்களே! நானோ ஒரு கழுகு; இறக்கை எரிக்கப்பட்டவன்; வலிமை இழந்தவன். (நான் உடலால் உதவி செய்ய முடியாது என்பது உண்மை.) இருப்பினும், இராமபிரானுக்கு, என்

வாக்கினாலாவது உயர்ந்த சேவை செய்கின்றேன். நான், வருணனுடைய உலகங்களை அறிவேன்; (அஷ்டதிக்பாலகர்களின் ஆட்சிக்கு உட்பட்ட எல்லாப் பிரதேசங்களையும் நானறிவேன்.) திருமால், திரிவிக்ரம அவதாரத்தின்போது காலடி வைத்த மூன்று இடங்களையும், மகாசுரர்களுடன் நடந்த போர்களையும், அமுதத்தைப் பெறுவதற்காகப் பாற்கடலைக் கடைந்ததையும் அறிவேன். (11–13)

மூப்பினால் என் உடல்வலிமை குன்றிவிட்டது; என்னுடைய பிராணனும் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. எனவே, இராமபிரானுக்குச் சேவை செய்ய வேண்டியது, என் முதலாவது கடமை. (முன்னர் ஒரு நாள்) பேரழகு படைத்தவளும் எல்லா அணிகலன்களும் அணிந்தவளுமான ஓர் இளநங்கை, கொடுஞ்செயல் புரியும் இராவணனால் கவர்ந்து செல்லப்பட்டதைப் பார்த்தேன். இராமா, இராமா என்றும், லட்சுமணா என்றும் கதறிக் கொண்டிருந்த அவள், உடல் நடுங்கத் தன் அணிகலன்களைக் கழற்றிக் கீழே எறிந்ததைப் பார்த்தேன். (14–16)

அவள் உடுத்தியிருந்த உயர்ந்த பட்டுப்புடவை, மலையுச்சியில் தோன்றும் சூரிய கிரணங்களைப் போல் ஒளிவீசியது. கரிய மேனி படைத்த அரக்கன் அருகில், மேகத்தில் பளீரிடும் மின்னல் போல் பிரகாசித்தாள். ஸ்ரீராமனுடைய பெயரைச் சொல்லிக் கூவி அழைத்ததால், அந்தப் பெண்மணி சீதைதான் என்று எண்ணுகிறேன். அந்த அரக்கனின் இருப்பிடத்தைச் சொல்கிறேன், கேளுங்கள். அவன், மாமுனிவர் விச்ரவஸின் சொந்தப் புதல்வன்; குபேரனுடைய சகோதரன்; இராவணன் என்று பெயர். அந்த அரக்கன் தற்சமயம் இலங்கையை ஆண்டு கொண்டிருக்கிறான். இங்கிருந்து நூறு யோஜனை தூரத்தில், சமுத்திரத்தின் நடுவிலுள்ள ஒரு தீவில், இலங்கை என்ற அழகான நகரத்தை விசுவகர்மா நிர்மாணித்தான். (17–20)

பொன்மயமான நுழைவாயில்கள், பொன்னாலான அழகிய மேடைகள் முதலானவற்றுடன் மிகப்பெரியதான, வெண்மையான மதிற்சுவரால் எல்லாப் பக்கங்களிலும் பாதுகாப்பாகக் கட்டப் பட்டது. அந்த நகரத்தில், இராவணனுடைய அந்தப்புரத்தில், மிகவும் மனம் நொந்தவளாக, பட்டாடை உடுத்திக் கொண்டிருக்கும் வைதேகி, அரக்கிகள் புடைசூழ்ந்து நிற்க, காவலில் வைக்கப்பட்டிருக்கிறாள். எல்லாப் பக்கங்களிலும் கடலால் சூழப்பட்டுப் பாதுகாப்புடன் இருக்கும் இலங்காபுரியில், ஜனக மாமன்னரின் புதல்வியான மைதிலியைக் காணலாம்.

நூறு யோஜனை விஸ்தாரமுள்ள பெருங்கடலைக் கடந்து, (இலங்கைத் தீவின்) தென் கரையை அடைந்தால், அங்குள்ள இராவணனைக் காணலாம். வானரர்களே! உடனே, பெருங்கடலைத் தாண்டுவதில் உங்கள் ஆற்றலைக் காட்டுங்கள். ஞானதிருஷ்டியால் நான் பார்க்கிறேன். நீங்கள், அங்கே (சீதையையும் இராவணனையும்) பார்த்துவிட்டுத் திரும்பிவரப் போகிறீர்கள். (21–25)

தானியங்களைத் தின்று வாழும் புறா, குருவி போன்றவைகளுக்குப் பறக்கும் சக்தி, முதலாவது எல்லை வரையில்தான். காக்கைகள், மரத்தில் பழுக்கும் பழங்களைத் தின்று ஜீவிக்கும் கிளி முதலானவைகளுக்கு (முன்னதைவிட) இரண்டு மடங்கு சக்தி. ராஜாளி, கிரௌஞ்சம், குரரம் (மீன்கொத்தி) போன்றவைகள் மும்மடங்கும்; பருந்துகள் நான்கு மடங்கும்; கழுகுகள் ஐந்து மடங்கும் பறக்கும் சக்தி கொண்டவை. வலிமையும் வீரமுமுடைய, அழகும் இளமையும் பொருந்திய அன்னங்களுக்கு ஆறுமடங்கு ஆற்றல். (முதலில் கூறியதைக் காட்டிலும் ஆறு மடங்கு உயரமாகப் பறக்கும் ஆற்றலுடையவை.) இவையனைத்தையும் மிஞ்சக் கூடியது, வினதையின் புதல்வர்களான கருடன், அருணன் என்பவர்களின் பறக்கும் சக்தி. (26–28)

வானர வீரர்களே! நாங்களெல்லோரும் கருடனிடமிருந்து தோன்றியவர்கள். (ஆதலால்,) இங்கிருந்தபடியே (இலங்கையிலுள்ள) இராவணனையும் ஜானகியையும் பார்க்கிறேன். (சம்பாதி, ஜடாயு ஆகிய இருவரும் அருணனுடைய புதல்வர்கள்.) எங்களுக்கும் கருடனைப் போன்று (வெகுதூரம் பார்க்கக்கூடிய) தெய்விகப் பார்வையும் பலமும் உண்டு. ஆதலால், வானரர்களே! நாங்கள் உண்ணும் உணவின் வலிமையாலும் சுபாவத்தினாலும், எப்பொழுதும் நாங்கள் இருந்த இடத்திலிருந்து எதிரே நூறு யோஜனை தூரத்திலுள்ள பொருள்களைப்

பார்ப்போம். வெகுதூரத்திலுள்ள இரையைக் கண்ணால் பார்த்துக் கொத்திக் கொண்டு போவது, எங்களுக்கு இயற்கையாக அமைந்துள்ளது. ஆனால், கோழி, சேவல் போன்றவை காலடியில் கிடைப்பவைகளையே உண்கின்றன. (29–31)

புலால் உண்பவனால் (இராவணனால்) செய்யப்பட்ட காரியம் மிகவும் வெறுக்கத்தக்கது. (தன்னந்தனி ஒருவனாகப் போரிட்ட, வயோதிகனான என் சகோதரனைக் கொன்றுவிட்டானே?) அதனால், அவனுக்கு எதிரான ஒரு காரியத்தைச் செய்தால், அதுவே என் சகோதரனின் கொலைக்குப் பழிதீர்த்துக் கொண்டதாகும். இந்த உப்புக்கடலைத் தாண்டிச் செல்வதற்குகந்த ஓர் உபாயத்தைச் சிந்தித்துப் பாருங்கள். நீங்கள், வைதேகியைப் பார்த்துவிட்டுக் காரியம் கைகூடியவர்களாக (கிஷ்கிந்தைக்கு)த் திரும்பப் போகிறீர்கள். நீர்நிறைந்த சமுத்திரத்தின் கரைக்கு, நீங்கள் என்னைக் கொண்டு போகவேண்டும் என்று விரும்புகிறேன். விண்ணுலகம் சென்றுவிட்ட, மகாத்மாவான என் சகோதரனுக்கு நீர்க்கடன் செலுத்தப் போகிறேன்.'' (32–34)

இதைக் கேட்டதும் பேராற்றல் படைத்த வானரர்கள், இறக்கைகள் பொசுங்கிவிட்ட சம்பாதியைத் தூக்கிக் கொண்டு, சமுத்திரக் கரையில் இறக்கி, அவர் தர்ப்பணம் செய்து முடித்த பின்னர், மீண்டும் பழைய இடத்திற்கே கொண்டு வந்து சேர்த்தார்கள். (சீதையைப் பற்றிய) தற்கால நிலவரத்தைத் தெரிந்து கொண்ட வானரர்கள் மகிழ்ச்சியடைந்தார்கள். (35,36)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
ஐம்பத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்தொன்பது

சுபார்ச்வன் கூறியதை வானரரிடம் தெரிவித்தல்

கழுகரசரால் (சம்பாதியால்) சொல்லப்பட்ட அமுதத்திற்கொப்பான சொற்களைக் கேட்ட வானர வீரர்கள் எல்லோரும் மிகவும் புளகாங்கிதமடைந்து மனம் பூரித்தவரானார்கள். கரடி–வானரர்களில் சிறந்தவரான ஜாம்பவான், மகிழ்ச்சிப்பெருக்கால் துள்ளிக் குதித்து, அந்தக் கழுகரசரைப் பார்த்து மறுபடியும் கேட்டார்— (1,2)

''ஐயனே! சீதாப்பிராட்டியார் எங்கே இருக்கிறார்? யாராலாவது பார்க்கப்பட்டாரா? மைதிலியை எவன் திருடிச் சென்றான்? இந்த எல்லா விஷயங்களையும் நீங்கள் எங்களுக்குச் சொல்லவேண்டும். காட்டுப்பிராணிகளான எங்களுக்கு நீங்கள்தான் புகலிடம். வஜ்ராயுதத்தைப் போல கடுமையான வேகத்துடன் பாய்ந்து வந்து தாக்கும் இராமபிரானின் பாணங்களைப் பற்றியும், இலக்குவனின் கைகளிலிருந்து விடுபட்டுச் செல்லும் அம்புகளின் ஆற்றல் பற்றியும் அறியாத அந்த கசடன் யார்?'' (இதைக் கேட்டதும்) மனமகிழ்ந்த அவர் (சம்பாதி) சீதையைப் பற்றித் தெரிந்து கொள்வதில் மிக்க ஆவலும் ஊக்கமும் உடைய அந்த வானரர்களைத் திரும்பவும் தேற்றி, பின்வருமாறு பதிலுரைத்தார்— (3–5)

''வைதேகி திருடிச் செல்லப்பட்டாள் என்ற செய்தியை, நான் எவ்வாறு அறிந்து கொண்டேன்? என்பதைக் கேளுங்கள். நெடுந்தடங்கண்ணாளாகிய அவளைப் பற்றி, எவரால், எந்த இடத்தில் (எந்தச் சந்தர்ப்பத்தில்) எனக்குச் சொல்லப்பட்டது? (என்பதைக் கூறுகிறேன்.) யாரும் புகமுடியாத இந்த மலை பல யோஜனை தூரம் பரப்புடையது. நான், இந்த மலையில் வெகுகாலத்திற்கு முன் விழுந்தேன். இப்போது, வயோதிகமடைந்து உயிரும் பலமும் குன்றியவனாகிவிட்டேன். இந்த நிலையில் பறவைகளில் சிறந்த என் புத்திரன் சுபார்ச்வன், வேளை தவறாமல் எனக்கு உணவளித்து, என்னைக் காப்பாற்றி வருகிறான். (6–8)

கந்தர்வர்கள் அபரிமிதமான காமம் உடையவர்கள்; பாம்புகள் அளவுகடந்த கோபம் கொண்டவை; மான்கள் மிகவும் பயந்த இயல்புடையவை. அவ்வாறே, நாங்கள் தணியாத பசி உடையவர்கள். ஒருநாள் நான் பசியால் துடித்துக் கொண்டிருந்தேன். உணவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். பகல் முடிந்து, சூரியன் அஸ்தமிக்கும் வேளையில், வெறுங்கையனாக, இறைச்சியுணவு இல்லாமல் அவன் (சுபார்ச்வன்) வந்து சேர்ந்தான். நான், பசிதாகத்தால் மிகவும் வருந்தியதாலும் முதுமையாலும் கோபத்தாலும், பறவைகளில் சிறந்த அவனைக் கடிந்து கொண்டேன். (9–11)

ஆகாரம் கிடைக்காததால் தவித்துப் போனதால்தான், நான் அவ்விதம் கடுமையாகப் பேசினேன் என்பதை உணர்ந்துகொண்ட அவன், நடந்த நிகழ்ச்சிகளை நடந்தவாறே எனக்குக் கூறினான்— 'தந்தையே! (நான்) சரியான நேரத்தில் புறப்பட்டு, இரைதேடுவதற்காக வானத்தில் பறந்து, மகேந்திர மலையின் நுழைவாயிலை அடைத்துக் கொண்டு நின்றேன். சமுத்திரத்தில் வாழும் ஆயிரக்கணக்கான உயிர்பிராணிகளைக் குறிவைத்து, பார்வையைக் கீழ்நோக்கி செலுத்திக் கொண்டு, அவைகளில் எவையேனும் அந்த வழியாகப் போனால் அலகினால் கொத்தி எடுத்துவிடலாம் என்று (எண்ணி), நான் மட்டும் தனியாகத் தங்கியிருந்தேன். (12–14)

அப்போது மைமலையைப் பிளந்தாற்போன்ற பளபளக்கும் கருமை நிறம் கொண்ட ஒருவன், உதிக்கின்ற சூரியனைப் போன்று செம்மையான ஒளிவீசும் ஒரு மாதரசியை எடுத்துக் கொண்டு போவதைப் பார்த்தேன். அவர்களைப் பார்த்ததும் ஆகாரம் கிடைத்துவிட்டது என்று நிச்சயம் செய்து கொண்டேன். ஆனால், அவனோ மிகவும் வணக்கத்துடன், 'அருள்கூர்ந்து வழியை விடுங்கள்' என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டான். தந்தையே! மிகவும் பணிவுடன் பிரார்த்திப்பவனை எதிர்த்து வதைப்பவன், கீழ்மக்களில்கூட எவனும் இருக்க மாட்டான் என்னும்போது, என் போன்றவர்களைப் பற்றி என்ன சொல்ல! (ஆதலால், நான் அவனுக்கு வழிவிட்டேன்.) (15–17)

பின்னர், அவன் வேகமாகப் பறந்து சென்று ஆகாயத்தையே மறைப்பவன் போல் கடுகிச் சென்றான். அப்போது, வானத்தில் சஞ்சரிக்கும் ஸித்த–சாரணர்கள் என்னை மிகவும் கொண்டாடினார்கள். (சுபார்ச்வன் போர் செய்து இராவணனைக் கொன்றாலும், இராமாவதார நோக்கம் பூர்த்தியாகாது. இராவணன் மட்டுமே இறந்தால் போதாது. அரக்கர் குலமே அழிக்கப்பட வேண்டும். அது இராமனால் மட்டுமே முடியும். ஆகவே, இராவணனின் வேண்டுகோளை ஏற்று, அவனை இலங்கைக்குப் போகவிட்டதால், தருமம் தழைக்க உதவியிருக்கிறான், சுபார்ச்வன். ஆகையால், ஸித்தர்கள் அவனைப் பாராட்டினார்கள்.) (18)

'எப்படியோ, அந்த மங்கை நல்லாளுடன் அவன் உயிருடன் போய்விட்டான்! நல்லகாலமாக, சீதையும் (அவன் பிடியில் சிக்கியும்) உயிருடன் இருக்கிறார். (மறைமுகமாக, அமரர்களுக்கு உதவி செய்துள்ள) உனக்கு மங்களம் உண்டாகும் என்பதில் ஐயமில்லை' என்று சொன்னார்கள். மிகவும் புனிதர்களான ஸித்தர்களால் நான் மேற்கண்டவாறு சொல்லப்பட்டேன். அத்துடன், அவன்தான் அரக்கர்களின் மன்னன் இராவணன் என்றும் சொன்னார்கள். (19,20)

ஜனகரின் புதல்வியும், தசரதகுமாரன் இராமனின் பத்தினியுமான அவளைத் திருடிக் கொண்டு போகிறான், அவன். அவளுடைய அணிகலன்களும் ஆடையும் நழுவி விழுந்து கொண்டிருந்தன. பொறுக்க முடியாத சோகத்தால் தாக்கப்பட்டு, ஆ, இராமா! ஆ, லட்சுமணா! என்று தலைவிரிகோலத்துடன் புலம்பிக் கொண்டிருந்தாள். இந்த நிகழ்ச்சியால்தான் காலதாமதம் ஏற்பட்டது என்று, காலத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்தவர்களுள் சிறந்தவனான சுபார்ச்வன், விவரமாக எனக்குத் தெரிவித்தான். இதைக் கேட்ட பின்னரும், என்னுடைய பராக்கிரமத்தைக் காட்ட வேண்டும் (இராவணனைப் பின்தொடர்ந்து சென்று போரிட்டு, அவனைக் கொன்று, சீதையை மீட்டு, இராமனிடம் ஒப்படைக்க வேண்டும்; இராமசகாயம் செய்யவேண்டும்) என்ற எண்ணம் எனக்குத் தோன்றவேயில்லை. (21–23)

நானோ, இறக்கையில்லாத பறவை. எவ்வாறு, ஒரு சாகசச் செயலை என்னால் தொடங்க முடியும்? (உடலால் உபகாரம் செய்ய முடியாது) வாக்கினாலும் அறிவினாலும் என்னால் செய்ய முடிந்த உதவியைச் செய்கிறேன். முற்றிலும் உங்கள் ஆண்மையைப் பொறுத்திருக்கும் ஒரு விஷயத்தைச் சொல்லப் போகிறேன், கேளுங்கள். என்னுடைய வாக்கு–அறிவினால் உங்கள் எல்லோருக்கும் நலனைச் செய்வேன். இராமனுடைய காரியம் என்றால், அது என்னுடையதும்தான் என்பதில் சந்தேகமேயில்லை. நீங்கள் எல்லோரும் சிறந்த புத்திசாலிகள்; மிகவும் பலசாலிகள்; மேற்கொண்ட காரியத்தில் வெற்றி பெறவேண்டும் என்ற முனைப்பு உடையவர்கள்; தேவர்களாலும்கூட வெல்ல முடியாதவர்கள். அதனால்தான், வானர மன்னன் உங்களை அனுப்பியிருக்கிறான். (24–26)

இராம–லட்சுமணர்களின், கழுகின் இறகு கட்டப்பட்ட கூர்மையான பாணங்கள் மூன்று உலகங்களையும் காப்பாற்ற வல்லவை; அழிக்கவும் வல்லவை. இராவணன், மனோவீரமும் உடல் பலமும் உடையவன்தான் என்றாலும், செயல்வீரர்களான உங்களால் ஆகாதது எதுவுமில்லை. ஆகவே, இதுவரை ஏற்பட்ட காலதாமதம் போதும். அடுத்து செய்யவேண்டிய காரியத்தை உறுதியுடன் நிச்சயித்துக் கொள்ளுங்கள். உங்களைப் போன்ற அறிவாளிகள், வீரச்செயல்கள் செய்வதில் தயக்கம் காட்ட மாட்டார்கள்.'' (27–29)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
ஐம்பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபது

சம்பாதியின் வரலாறு

பின்னர், சகோதரனுக்கு நீர்க்கடன் செலுத்திவிட்டு, தலைமூழ்கித் தூய்மையடைந்து, மீண்டும் மலையின் கரடுமுரடான இடத்திற்கு கொண்டுவரப்பட்ட அந்தக் கழுகை நாற்புறமும் சூழ்ந்து கொண்டு வானர வீரர்கள் உட்கார்ந்து கொண்டார்கள். எல்லா வானரர்களாலும் சூழப்பட்ட அங்கதன் அருகில் அமர்ந்திருந்தான். சம்பாதியின் சொற்களில் எல்லோருக்கும் நம்பிக்கை ஏற்பட்டிருந்தது. அதனால், உற்சாகமடைந்த அவர், மீண்டும் சொல்லத் தொடங்கினார். எல்லா வானரர்களும் சப்தம் செய்யாமலும் மனத்தை அலையவிடாமலும் நான் சொல்லப் போவதைக் கேளுங்கள். மைதிலியைப் பற்றித் தெரிந்துகொள்ள, எனக்குக் கிடைத்த வாய்ப்பை, அது நிகழ்ந்தவாறே கூறுகிறேன். (1–3)

மிகத்தொன்மையான முன்னொரு காலத்தில், இந்த விந்தியமலையின் சிகரத்தில் நான் (வானத்திலிருந்து) விழுந்தேன். சூரியனுடைய வெம்மையான கிரணங்களால், என் அங்கங்கள் எல்லாம் எரிக்கப்பட்டிருந்தன. ஆறு இரவுகள் கடந்த பின்பு எனக்கு உணர்வு வந்தது. என்னால் எதுவும் செய்ய முடியவில்லை; மனத்தில் கவலை மூண்டது; நாற்புறத்திலும் பார்வையைச் செலுத்தினேன். ஆனால், அது எந்த இடம்? என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. நேரம் செல்லச் செல்ல, கடல்–மலை–நதி–நீர்நிலை–காடுகளையும், சுற்றுப்புற இடங்களையும் ஊன்றிப் பார்த்ததும் எனக்குப் புரிய ஆரம்பித்தது. (4–6)

உல்லாசமாகத் திரியும் புள்ளினங்கள் திரிவதும், குகைகளையும் இடையிடையே சிகரங்களையும் உடையதும், தென்கடலின் கரையில் உள்ளதுமான விந்தியமலை இது என்பதை நிச்சயமாக அறிந்துகொண்டேன். புனிதமானதும், தேவர்களாலும் பக்தி–சிரத்தையுடன் வணங்கத்தக்கதுமான ஓர் ஆசிரமம் இங்கே இருந்தது. அங்கு நிசாகரர் (சந்திரமா) என்ற முனிவர், கடுமையான தவத்தில் ஈடுபட்டிருந்தார். மெய்யறம் அறிந்த நிசாகர முனிவர் (ஒரு

நாள்) விண்ணுலகம் எய்தினார். அவர் இல்லாத இந்த ஆசிரமத்தில், நான் எண்ணாயிரம் ஆண்டுகளைக் கழித்தேன். (7–9)

மேடுபள்ளமான விந்தியமலையின் உச்சியிலிருந்து மிகவும் கஷ்டத்துடனும், மன வருத்தத்துடனும் மெல்ல இறங்கி, கூரான தர்பங்கள் மண்டியிருந்த (அசௌக்கியமான ஓர்) இடத்திற்கு மறுபடியும் வந்து சேர்ந்தேன். மிகவும் கஷ்டப்பட்டு, மலையுச்சியிலிருந்து நான் இறங்கி வந்ததற்குக் காரணம், அந்த முனிவரைக் காணவேண்டும் என்பதுதான். நானும் ஜடாயுவும், முந்தைய காலங்களில் பல தடவைகள் அவரைத் தரிசனம் செய்திருக்கிறோம். அவருடைய ஆசிரமப் பகுதியில், நறுமணம் கமழும் காற்று வீசிக்கொண்டிருந்தது. மலர்கள் இல்லாத, பழங்கள் இல்லாத ஒரு மரமும் காணப்படவில்லை. (10–12)

நான் புனிதமான அந்த ஆசிரமத்தையடைந்து, மகா மகிமை பொருந்திய நிசாகரரைத் தரிசிப்பதற்காக, ஒரு மரத்தினடியில், அவர் வரவை எதிர்பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தேன். சற்றைக்கெல்லாம் எவராலும் மீறமுடியாத அவர் நீராடிவிட்டு, கண்களைப் பறிக்கும் ஆன்மப் பொலிவுடன், வடக்குத் திசையிலிருந்து சமீபத்தில் வந்து கொண்டிருப்பதைப் பார்த்தேன். பிரும்மதேவனை உயிர்ப்பிராணிகள் பயபக்தியுடன் சுற்றிச் சுற்றி வருவதைப் போல, கரடி–மான்–புலி–சிங்கம்–யானை–பாம்புகள் அனைத்தும் அவரைச் சூழ்ந்து கொண்டு வந்தன. (நிசாகரரின் தவ வலிமையால், பிராணிகளின் பகைமை மறைந்தே போய்விட்டது.) (13–15)

ஓர் அரசன், தன்னுடைய மாளிகைக்குள் புகுந்ததும், (அந்த இடம் வரை, அவரைப் பின்தொடர்ந்து வந்த) அமைச்சர்களும் மெய்காப்பாளர்களும் தத்தம் இருப்பிடத்திற்குத் திரும்பிச் சென்று விடுவதைப் போல, அந்த முனிவர், ஆசிரமத்தை அடைந்துவிட்டதைத் தெரிந்துகொண்டு, அந்தப் பிராணிகள் திரும்பிச் சென்றன. முனிவர், அங்கே என்னைக் கண்டதும் திருப்தி அடைந்தவராகக் குடிலுக்குள் சென்றார். சிறிது நேரம் கழித்து வெளியே வந்து, நான் வந்த காரியம் பற்றி விசாரித்தார்— (16–17)

'குழந்தாய்! உன்னுடைய சிறகுகள் மாறுபட்டுப் போனதாலும் (பொசுங்கிவிட்டதாலும்), இரண்டு இறக்கைகளும் நெருப்பினால் எரிக்கப்பட்டிருப்பதாலும், என்னால் உன்னை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. அத்துடன், உன் சரீரத்திலும் புண்கள் காணப்படுகின்றன. வாயுவை நிகர்த்த வேகமுடையவர்களும், கழுகுகளுக்கு அரசர்களும், விருப்பம் போல் உருவம் எடுக்கக்கூடியவர்களுமான சகோதரக் கழுகுகள் இருவர், முன்பு இங்கு வந்தபோது பார்த்திருக்கிறேன். சம்பாதியே, நீ மூத்தவன்; ஜடாயு, உன்னுடைய தம்பி. மனித உருவம் எடுத்துக் கொண்டு என் பாதங்களில் விழுந்து பணிந்தீர்கள். உனக்கு ஏதேனும் கொடிய நோய் உண்டாயிற்றா? இறக்கைகள் எப்படி விழுந்தன? அல்லது யாராலாவது கொடுக்கப்பட்ட தண்டனையா? இவைகளைப் பற்றித் தெரிந்துகொள்ள விரும்பிக் கேட்கும் எனக்கு, விவரமாகப் பதில் கூறுவாய்.' (18–21)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
அறுபதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்தொன்று

இறக்கை எரிந்த வரலாறு

(சம்பாதி சொன்னார்—) அப்போது, வேறு எவராலும் செய்ய முடியாததும் பயங்கரமானதும் என் பலத்தின் மீதிருந்த அதீதமான நம்பிக்கையாலும், சூரியனைத் தொடர்ந்து சென்ற அந்த நிகழ்ச்சியை, நடந்தபடியே முனிவருக்குக் கூறினேன்— 'ஐயன்மீர்! உடல் முழுவதும் புண்ணாகி

இருக்கிறது. (முன் ஆலோசனையில்லாமல் ஒரு காரியத்தைச் செய்துவிட்டு, அதனால் பெருந்துன்பத்தை அனுபவிக்க நேரிட்டதே என்ற) வெட்கத்தால் புலன்கள் தடுமாறி, மிகவும் களைப்படைந்திருக்கிறேன். இந்த நிலையில், விஸ்தாரமாகப் பதில் சொல்ல முடியாதவனாக இருக்கிறேன். பொறாமையாலும் அகந்தையாலும் மோகமடைந்த நானும் ஜடாயுவும், எங்களிருவருள் யாருக்குப் பராக்கிரமம் (நீண்ட தூரம் பறக்கும் சக்தி) அதிகம் என்றறிய விருப்பங்கொண்டு ஆகாயத்தில் பாய்ந்தோம். (1–3)

உதயகிரியில் உதயமாகும் சூரியன், அந்திவேளையில் அஸ்தகிரியை அடையும் வரையில், அவரைத் தொடர்ந்து செல்ல வேண்டும் என்று, கைலாச மலையிலிருந்த முனிவர்கள் சாட்சியாக ஒப்பந்தம் செய்துகொண்டோம். பின்னர், நாங்கள் இருவரும் சரிசமமாகப் பறக்கத் தொடங்கினோம். மேலே மேலே சென்ற நாங்கள், கீழே பூமியிலிருந்த பட்டணங்கள் ஒவ்வொன்றும் தேர்ச் சக்கரம் அளவிற்கே இருப்பதைக் கண்டோம். (வானில், அவ்வளவு உயரத்திற்குப் போய்விட்டார்கள்.) (மேலுலகங்களில்) சில பிரதேசங்களில் இசைக்கருவிகளின் இன்னொலியையும், (வேறு சில இடங்களில்) வேத கோஷங்களையும் கேட்டோம். செவ்வாடை அணிந்து பாடிக் கொண்டிருந்த பல பெண்களையும் கண்களால் கண்டோம். (4–6)

வெகுவேகமாகப் பறந்து ஆகாயத்தில் சூரியனுடைய பிரயாணப் பாதையை அடைந்துவிட்ட நாங்கள் இருவரும், மாபெரும் காடுகளைக்கூட வெறும் புல்தரைகள் போல் தோன்றுவதைப் பார்த்தோம். மாபெரும் மலைகள், பூமியின்மேல் வீசப்பட்ட சிறு கற்கள் போலவும், நீண்ட ஆறுகள் பூமியில் சுற்றப்பட்ட நூல்கள் போலவும் காணப்பட்டன. கடல்சூழ் மண்ணுலகில் இருக்கும் இமயம், விந்தியம், மிகப்பெரிய மலையான மேரு முதலியவைகள் தடாகத்தில் நிற்கும் யானைகள் போல் (அவ்வளவு சிறியனவாகக்) காணப்பட்டன. (7–9)

அந்தச் சமயத்தில், எங்கள் உடலிலிருந்து வியர்வை பெருக ஆரம்பித்தது. மிகவும் களைத்துப்போய் விட்டதையும் உணர்ந்தோம். உடனே பயம் ஏற்பட்டது. மதிமயக்கமும், இருளும், மிக அதிகமான நினைவிழப்பும் எங்களை ஆட்கொண்டன. அப்போது, தென்திசை தெரியவில்லை; வடகிழக்குத் திசை தெரியவில்லை; மேற்கும் புலப்படவில்லை. (எந்த திக்குத்திசையும் புலனாகவில்லை.) செம்மையாக இயங்கும் உலகம், யுக முடிவில், யுகாக்னியால் எரிக்கப்பட்டுச் சாம்பலாகப் போய்விட்டதைப் போன்ற பிரமை உண்டாயிற்று. (10,11)

என்னுடைய மனமும் கண்களும், சூரியனின் வெம்மையான ஒளியைத் தாங்கமாட்டாமல் குற்றுயிரும் கொலையுயிருமாகப் போய்விட்டிருந்தன. மிகவும் முயற்சி செய்து மனத்தைக் கண்களில் நிலைநிறுத்தி, மறுபடியும் சூரியனை நோக்கினேன். அப்போது (உண்மையில், பூமியைக் காட்டிலும் பல நூறு மடங்கு பெரியதான) சூரியன் மண்ணுலகம் அளவிற்கே காணப்பட்டார். மிக்க உயரமான அந்த இடத்திலிருந்து, என்னைக் கேளாமலே பூமியை நோக்கி இறங்கினான், ஜடாயு. அதைப் பார்த்து நானும் ஆகாயத்திலிருந்து வேகமாக இறங்கினேன். (12–14)

என்னுடைய விரிக்கப்பட்ட இரு இறக்கைகளாலும் மறைக்கப்பட்ட ஜடாயு, செங்கதிர்களால் எரிக்கப்படாது தப்பினான். நானோ அஜாக்கிரதையால், அங்கேயே எரிக்கப்பட்டு காற்று வீசிய வழியே இழுத்துச் செல்லப்பட்டு ஓரிடத்தில் விழுந்தேன். ஜடாயு, ஜனஸ்தானம் (என்ற பிரதேசத்தில்) விழுந்துவிட்டதாக ஊகிக்கிறேன். நானோ, இறக்கைகள் எரிக்கப்பட்டு, காற்று வீசிய வழியே இழுத்துச் செல்லப்பட்டு ஓரிடத்தில் விழுந்தேன். அரசு, சகோதரன், இறக்கைகள், பராக்கிரமம் ஆகியவற்றை இழந்துவிட்ட நான், எந்தவிதத்திலாவது மரணத்தையே விரும்பி, மலையுச்சியிலிருந்து விழுந்துவிடப் போகிறேன்.' (15–17)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
அறுபத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்து இரண்டு

நிசாகரர், எதிர்காலம் பற்றிக் கூறுதல்

இவ்வாறு, அந்த அருந்தவச்செல்வரிடம் (முனிவர் நிசாகரரிடம்) கூறிவிட்டு மிகவும் துயரத்துடன் அழுதேன். அந்தப் பெருந்தகையாளர் சிறிது நேரம் (உள்முகமாய்) சிந்தனை செய்து, பின்னர், பின்வருமாறு கூறினார்— '(கவலைப்படாதே.) உன்னுடைய பெரிய இறக்கைகளும் (உட்புறத்திலிருக்கும்) சிறிய இறக்கைகளும் புதியனவாக மறுபடியும் தோன்றப் போகின்றன. உன்னுடைய உயிர், பார்வை, ஆண்மை, உடல்பலம் ஆகியனவும் உன்னைத் திரும்பவும் வந்தடையும். எதிர்காலத்தில் நிகழக்கூடிய மகத்தான பல சம்பவங்கள், புராணங்களில் கூறப்பட்டிருப்பதைக் கேட்டிருக்கிறேன். என்னுடைய தவத்தின் மகிமையால், கேட்கப்பட்ட அந்த நிகழ்ச்சிகளைக் கண்களால் பார்த்து, அவையெல்லாம் உண்மை என்றறிந்திருக்கிறேன். (1–3)

இக்ஷ்வாகு பரம்பரையில், தசரதன் என்று ஒரு மன்னர் தோன்றப் போகிறார். அவருடைய புதல்வனாக மகாபராக்கிரமசாலியான இராமன் பிறக்கப் போகிறார். தந்தையினால் ஆணையிடப்பட்டு, சத்தியபராக்கிரமரான இராமன், லட்சுமணன் என்ற சகோதரனோடு காட்டுக்குச் செல்வார். தேவர்கள் மற்றும் தானவர்களாலும் கொல்ல முடியாதவனும் அரக்கர் மன்னனுமான இராவணன் என்ற அரக்கன், ஜனஸ்தானத்திலிருந்து, அவருடைய (இராமனுடைய) மனைவியைத் திருடிக் கொண்டு போவான். (4–6)

பெரும் புகழ் படைத்த மைதிலி, அவள் விரும்பியவற்றையெல்லாம் தருவதாக ஆசை காட்டப்பட்டாலும், மகாபதிவிரதையான அவள், துக்கத்தில் மூழ்கியவளாய் எந்தப் பொருளையும் ஏற்கமாட்டாள். தேவர்களுக்குக்கூட கிடைக்காத, அமுதத்திற்கு இணையான ஓர் உயர்ந்த உணவை சீதையின் நிலையை உணர்ந்து கொண்ட இந்திரன் கொடுத்தனுப்புவான். அந்த உணவு, இந்திரனால் அனுப்பப்பட்டது என்பதை நிச்சயமாகத் தெரிந்துகொண்டு, அதனை ஏற்று, அதிலிருந்து முதல் பிடியை எடுத்து, 'இது இராமனுக்காக' என்ற நோக்கத்துடன் தரையில் வைப்பாள். (7–9)

என்னுடைய கணவர் பிரபு இராமன், சகோதரன் லட்சுமணனோடு உயிரோடிருந்தாலும் சரி அல்லது தெய்வத்தன்மையை அடைந்திருந்தாலும் சரி, இந்த உணவு அவர்களுக்குப் போய்ச் சேரட்டும் (என்று கூறி, சீதை ஒரு கவளம் அன்னத்தைத் தரையில் வைப்பாள்). பறவையே! அவளைத் தேடிக் கொண்டு, இராமதூதர்களான வானரர்கள் (இவ்விடம்) வருவார்கள். அவர்களுக்கு இராமபத்தினியைப் பற்றிய எல்லா விவரங்களையும் நீ கூறவேண்டும். நீ, இந்த இடத்தைவிட்டு ஒருபோதும் போகக்கூடாது. இந்த (குற்றுயிர்) நிலையில் நீ வேறு எங்கேதான் போகமுடியும்? அவர்கள் வந்துசேரும் இடம்–காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிரு. (உரிய காலத்தில்) இறக்கைகளையும் திரும்பப் பெறுவாய். (10–12)

பறவையே! சீதையைப் பற்றிய எல்லாத் தகவல்களையும், நீ அவர்களுக்குக் கூறி முடித்தவுடனேயே உன்னுடைய இறக்கைகள், பளபளப்பு, உயிர், பலம் முதலியனவெல்லாம் உன்னை வந்தடையும். இறக்கைகளோடு கூடியவனாக, இப்போதே உன்னை மாற்ற நான் ஆர்வப்படவில்லை. (ஏனென்றால்,) நீ இந்த இடத்தில் இருந்தவாறே மக்களுக்கு நலன் தரும் அரிய செயலைச் செய்யப் போகிறாய். (13,14)

நீ, வேந்தரின் இரு புதல்வர்களுக்கும் அந்த மகத்தான காரியத்தைச் செய்யவேண்டும். (அந்த உதவி, அவர்களுக்கு மட்டுமல்ல.) அந்தணர்கள், தேவர்கள், முனிவர்கள் மற்றும் தேவராஜனான இந்திரன் ஆகியவர்களுக்கும் செய்யப்படும் பேருதவியாகும். சகோதரர்களான இராம–லட்சுமணர்களைக் கண்களால் தரிசனம் செய்ய ஆவலாக இருக்கிறது. ஆனால், இனிமேலும் உயிரை வைத்துக் கொண்டிருக்க விரும்பவில்லை. ஆகவே, உடலை உகுத்துவிடப்

போகிறேன்.' நடைபெறவிருக்கும் காரியங்களை அறிந்த மெய்ஞ்ஞானியான அவர் (முனிவர் நிசாகரர்) மேற்கண்டவாறு சொன்னார். (15,16)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
அறுபத்து இரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்து மூன்று

சம்பாதிக்கு இறக்கை முளைத்தல்

பேச்சில் வல்லவரான அவர், இத்தகைய சொற்களாலும் இன்னும் பல சொற்களாலும் எனக்குப் பதில் கூறி, விடையளித்துவிட்டுத் தன் குடிலுக்குள் சென்றார். நான், மலையின் அந்த வெடிப்பிலிருந்து மெல்ல மெல்ல நகர்ந்து விந்தியச் சிகரத்தின் மேல் அமர்ந்து, உங்கள் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். இவ்விதமாக, நூற்றுக்கணக்கான வருஷ காலம் கழிந்துவிட்டது. முனிவரின் சொற்களை மனதார நம்பி, தேச–காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். (1–3)

நிசாகரர், மகாப்ரஸ்தானம் (என்ற இறுதியாத்திரையை) ஏற்று சுவர்க்கத்தை அடைந்தார். அதுமுதல் பலவித வாத–விவாதங்களால் குழம்பியிருக்கும் என்னை, கவலை என்னும் நெருப்பு தகிக்கிறது. உயிரைப் போக்கிக் கொள்ளலாம் என்ற எண்ணத்தை, முனிவரின் சொற்கள் மாற்றி விடுகின்றன. அத்துடன், கொழுந்துவிட்டெரியும் நெருப்புச் சுவாலை, இருளைப் போக்கடித்து விடுவதைப்போல, உயிரைக் காப்பாற்றி வைத்திருக்க வேண்டும் என்ற அவருடைய உபதேசமும் என்னைத் தடுத்தது. தீயவனான இராவணனின் பேராற்றல் எனக்குத் தெரியும். அதனால், மைதிலியை ஏன் காப்பாற்றவில்லை? என்று, என் மகனைக் கடிந்து கொண்டேன். (4–6)

அவளுடைய அலறலை (ஹே இராமா, ஹே லட்சுமணா என்ற கூப்பாட்டை)க் கேட்டிருக்கிறான். அவர்களிடமிருந்து (இராம–லட்சுமணர்களிடமிருந்து) சீதை பலவந்தமாகக் கவர்ந்து செல்லப்படுகிறாள். எனக்கு தசரதனிடம் அதிக நட்பு உண்டு. அதனால், சீதையைக் காப்பாற்ற முயற்சி செய்யாத என் மகனிடம் அதிருப்தி உண்டாயிற்று.'' வானரர்களுடன் இவ்வாறு உரையாடிக் கொண்டிருக்கும்போதே, அவர்கள் பார்த்து கொண்டிருக்கும்போதே, சம்பாதியின் இரண்டு இறக்கைகளும் தோன்றி வளர்ந்தன. (7,8)

அருணோதயம் போன்று செவ்வண்ணமாக, அப்போதுதான் புதிதாக முளைத்திருக்கும் இறக்கைகளோடு கூடிய தன் உடலைப் பார்த்து, எல்லையில்லாத மகிழ்ச்சியை அடைந்த அவர், வானரர்களைப் பார்த்துக் கூறினார்— ''அளவிலா ஆற்றலுடைய ராஜரிஷியான நிசாகரருடைய தெய்விக சக்தியால், சூரியனின் செங்கதிர்களால் எரிக்கப்பட்ட என் இறக்கைகள் மறுபடியும் முளைத்துவிட்டன. வாலிபப் பருவத்தில் எனக்கிருந்த பராக்கிரமம், உடல்பலம், பேராண்மை முதலியவற்றை இப்போது திரும்பவும் அடைந்துள்ளேன். (9–11)

நீங்கள் எல்லாவிதமான முயற்சிகளையும் செய்யுங்கள். நிச்சயமாக சீதையைக் காண்பீர்கள். என்னுடைய இறக்கைகள் முளைத்திருக்கின்றன என்ற இந்த அதிசயச் செயலே, உங்களுக்கு வெற்றி கிடைக்கும் என்பதைச் சூசிப்பிக்கிறது. (முனிவர் வாக்கு, சத்தியமான வாக்கு என்ற நம்பிக்கை ஏற்படுகிறது.)'' வானர வீரர்கள் அனைவரையும் நோக்கி இவ்வாறு கூறிவிட்டு, பறவைகளில் சிறந்த சம்பாதி, ஆகாயத்தில் பறக்கும் தன் சக்தியைப் பரிசோதித்துத் தெரிந்து கொள்வதற்காக, அந்த மலைச்சிகரத்திலிருந்து பறந்து சென்றார். (12,13)

அவருடைய சொற்களைக் கேட்ட, புலிநிகர் வானரர்களின் இதயங்களில் உற்சாகம் பெருகிற்று. வீரத்துடன் தொடர்ந்து முயற்சி செய்வதால் வெற்றியை அடைய முடியும் என்ற எதிர்பார்ப்புடன்

இருந்தார்கள். பின்னர், வாயுதேவனைப் போன்ற ஆற்றலுடைய வானரத் தலைவர்கள், மறுபடியும் மனோதைரியத்தை அடைந்து, ஜனகருடைய புத்திரியைத் தேடுவதில் முனைப்புடையவர்களாக அபிஜித் என்ற நல்ல முகூர்த்தத்தில் புறப்பட்டுத் தென்திசை நோக்கிச் சென்றார்கள். (14,15)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
அறுபத்து மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம்: அறுபத்து நான்கு

சமுத்திரத்தை எப்படித் தாண்டுவது?

கழுகரசரால் மேற்கண்டவாறு சொல்லப்பட்டதைக் கேட்டதும், சிங்கம் போன்ற பேராற்றல் கொண்ட வானரர்கள் மனக்களிப்படைந்து, எம்பிக் குதித்து, ஆரவாரத்துடன் சப்தமிட்டார்கள். சம்பாதியினுடைய பேச்சிலிருந்து இராவணனின் அழிவிற்கான குறிப்பு கிடைத்துவிட்டதால், பேரானந்தம் அடைந்த வானரர்கள், சீதாப்பிராட்டியாரின் தரிசனத்தில் ஆவலுள்ளவர்களாகச் சமுத்திரக் கரைக்கு வந்து சேர்ந்தார்கள். எல்லையற்ற ஆற்றலுடைய வானரர்கள், அந்த இடத்திற்கு வந்து சேர்ந்ததும், பிரும்மாண்டமான இந்த உலகத்தின் பிரதிபிம்பம் போல் (உலகத்திலுள்ள எல்லா வஸ்துக்களும் நிரம்பியதாக) இருப்பதைக் கண்டார்கள். (1–3)

வானரோத்தமர்களான அவர்கள் ஒரே கூட்டமாக தெற்குக் கடலின் வடக்குக் கரைக்கு வந்து, அங்கே தங்குவது என்று நிச்சயித்துக் கொண்டார்கள். கடல்நீரில் மிகப்பெரிய பல்வகையான, விசித்திரமான தோற்றமுடைய உயிர்ப்பிராணிகள் விளையாடிக் கொண்டிருந்தன; வரிசையாக வரும், பேருருவம் கொண்ட அலைகள் ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தன. சில இடங்களில் சலனமில்லாமல் தூங்குவது போல் இருந்தது. வேறு சில இடங்களில் அலைகள் ஆரவாரத்துடன் விளையாடுவதைப் போல் காணப்பட்டது. சில இடங்களில் மலைபோன்று நீர்த்திரளின் எழுச்சி காணப்பட்டது. (4–6)

பாதாள லோகத்தில் வசிக்கும் அசுரத் தலைவர்களால், கடலின் அடிப்பாகம் கலக்கப்படுவதைப்போல் பேரிரைச்சலுடன் இருப்பதைக் கண்டார்கள். மயிர்க்கூச்சலை உண்டாக்கும் இந்தக் காட்சிகளைப் பார்த்ததும், யானை நிகர் வானரர்கள் உள்ளம் சோர்ந்து, ஆகாயத்தைப் போலவே அந்தப் பெருங்கடலும் கடத்தற்கரியதாக இருப்பதைக் கண்டு, எப்படி இந்தக் காரியத்தைச் செய்யப் போகிறோம்? (சமுத்திரத்தைத் தாண்டப் போகிறோம்) என்று ஆலோசித்துப் பேசிக் கொண்டு, உடனே கவலை அடைந்தார்கள். பெருங்கடலின் பயங்கரத் தோற்றத்தைக் கண்டு கவலையில் மூழ்கி, பயத்தால் நடுங்கிய சேனாவீரர்களைப் பார்த்து, வானரோத்தமனான அங்கதன் தைரியமூட்டினான். (7–9)

அப்போது, வாலியின் மைந்தனும் புத்திமானும் மகாபலசாலியுமான அங்கதன், மிகவும் கவலையில் ஆழ்ந்துத் துக்கப்பட்டுக் கொண்டிருக்கும் வானரோத்தமர்களைப் பார்த்துக் கூறினான்— ''நீங்கள் மனத்தளர்ச்சியை அடையக் கூடாது. (ஏனென்றால்,) மனத்தளர்ச்சிதான் மிகப்பெரிய குற்றம். சீற்றங்கொண்ட பாம்பு, தன்னருகில் வந்த சிறுவனைக் கொத்தி விடுவதைப் போல (பாம்பின் விஷத்தினால் அவன் உயிர்போய்விடும் என்பதைப் போல), வீரபுருஷனையும்கூட மனத்தளர்ச்சி அழித்துவிடும். தன்னுடைய வீரத்தைக் காட்டி எதிர்கொள்ள வேண்டிய தருணத்தில், எவன் மனத்தளர்ச்சிக்கு ஆட்படுகிறானோ, பலம் குன்றிய அவனுக்கு வாழ்க்கையில் வெற்றி கிடைப்பதில்லை.'' (10–12)

இவ்வாறு, புத்திமானான அங்கதன் பேசிக் கொண்டிருக்கும்போதே, சூரியன் அஸ்தமனம் ஆனான். இரவு மெல்லப் பரவத் தொடங்கியது. அந்த இரவு கழிந்ததும், வானரர்கள் சூழ நின்ற

அங்கதன், வயோதிகர்களான (அனுபவம் மிக்க) வானரர்களை ஒன்றுகூட்டி, மீண்டும் ஆலோசனை நடத்தினான். வானரப்படை, அங்கதனைச் சூழ்ந்து கொண்டு நின்ற அந்தக் காட்சி, தேவசைன்யம் இந்திரனைச் சூழ்ந்து நிற்பது போல சோபையுடன் விளங்கிற்று. வாலி மைந்தன் அங்கதன், வாயு மைந்தன் அனுமான் – இவ்விருவரைத் தவிர வேறு யாரால்தான் அந்த வானரப்படைமேல் ஆதிக்கம் செலுத்தமுடியும்? (13–16)

அப்போது, எதிரிகளை அடக்க வல்லவனும் தலைமை அதிகாரம் பெற்றவனுமான அங்கதன், முதிய வானரர்களை உரிய முறையில் கௌரவித்து, பின், படைவீரர்களைப் பார்த்து, பொருள் பொதிந்த பின்வரும் சொற்களைக் கூறினான்— ''இப்போது அளப்பரும் ஆற்றலுடைய எவர் சமுத்திரத்தைத் தாண்டப் போகிறார்? எதிரிகளை அழிக்கவல்ல சுக்ரீவருக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றியவராக ஆகப் போகிறார்? வானரர்களே! எந்த வீரன், நூறு யோஜனை தூரத்தைத் தாண்டப் போகிறான்? யார், வானர வீரர்கள் எல்லோரையும் பேராபத்திலிருந்து (சுக்ரீவனின் தண்டனையிலிருந்து) விடுவிக்கப் போகிறார்? (17–19)

யாருடைய அரும்பெரும் செயலினால், நாமெல்லோரும், காரியம் கைகூடப் பெற்றவர்களாக, நிம்மதியான மனத்துடன் இங்கிருந்து திரும்பிச் சென்று, மனைவி–மக்கள்–வீடுகளையும் காணப் போகிறோம்? பேராற்றலுடைய இராம–லட்சுமணர்களையும், பேராற்றலுடைய சுக்ரீவரையும், எந்த மாவீரனின் செயற்கரிய செயலால், மகிழ்ச்சி பொங்கும் மனத்தோடு சென்று பார்க்கப் போகிறோம்? உங்களில் யாரேனும் ஒரு வானரன், சமுத்திரத்தைத் தாண்டிச் செல்லும் திறமையுடையவனாக இருந்தால், அவன் விரைவில் முன்வந்து நமக்கு உயிர்வாழ்வு அளிக்கும் 'அஞ்சேல்' என்ற நன்மொழியைக் கூறுவானாக.'' (20–22)

அங்கதனுடைய இந்தச் சொற்களைக் கேட்டு, அங்கிருந்த எவரும் எதுவும் கூறவில்லை. அந்த வானரப்படை முழுவதும் உணர்ச்சியற்ற ஜடப்பொருளாக நின்றது. வானரோத்தமனான அங்கதன், அந்த வானரர்களைப் பார்த்து மறுபடியும் கூறினான்— ''நீங்கள் எல்லோரும் ஐயத்திற்கு இடமில்லாத உறுதியான பராக்கிரமம் உடையவர்கள்; உடல்வலிமை பெற்றவர்களில் முதல் தரமானவர்கள்; புகழ்பெற்ற குலத்தில் பிறந்தவர்கள்; பல தடவை கொண்டாடப்பட்டவர்கள். வானரோத்தமர்களே! பாய்ந்து செல்லும் போது உங்களில் யாருக்காவது, எங்கேயாவது, எப்போதாவது தடை ஏற்பட்டதுண்டா? (இல்லவேயில்லை, அல்லவா?) எனவே, தாண்டுவதில் யார் யாருக்கு எவ்வளவு சக்தி இருக்கிறது? என்று சொல்லுங்கள்.'' (23–25)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
அறுபத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்தைந்து

அவரவர் சக்தியைக் கூறுதல்

பின்னர், அங்கதன் சொற்களைக் கேட்ட அந்த வானரோத்தமர்கள் அனைவரும், தத்தம் சக்தியை ஒவ்வொருவராகக் கூறத் தொடங்கினார்கள். கஜன், கவாக்ஷன், கவயன், சரபன், கந்தமாதனன், மைந்தன், த்விவிதன், ஸுஷேணன், ஜாம்பவான் (ஆகிய தலைவர்கள்) வரிசையாகக் கூறினார்கள். அப்போது, கஜன், ''நான் பத்து யோஜனை தாண்டுவேன்'' என்றான். கவாக்ஷன், ''இருபது யோஜனை கடந்து செல்வேன்'' என்றான். அந்த நேரத்தில், வானரனான கவயன் அங்கிருந்த வானரர்களைப் பார்த்து, ''வானரர்களே! நான் முப்பது யோஜனை தூரம் கடந்து செல்வேன்?'' என்றான். வானர வீரனான சரபன், வானரர்களைப் பார்த்து, ''வானரர்களே! நான் நாற்பது யோஜனை தூரம் செல்வேன்'' என்றான். (1–5)

வானரர்களுள் பேராற்றல் கொண்ட கந்தமாதனன், ''ஐம்பது யோஜனை தூரம் கடந்து செல்வேன் என்பதில் சந்தேகமில்லை'' என்றான். அப்போது வானரத் தலைவனான மைந்தன் என்பவன், அந்த வானரர்களைப் பார்த்து, ''நான் ஒரே தாண்டலில் அறுபது யோஜனையைக் கடக்க முடியும் என்ற நம்பிக்கை கொண்டிருக்கிறேன்'' என்றான். அடுத்ததாக, பேராற்றல் படைத்த த்விவிதன், ''நான் எழுபது யோஜனைகளைக் கடப்பேன் என்பதில் சந்தேகமில்லை'' என்றான். வானரோத்தமனான ஸுஷேணன், அங்கிருந்த வானரர்களைப் பார்த்து, ''நான் எண்பது யோஜனை தூரம் தாண்டுவேன்'' என்றான். (6–9)

அவர்கள் எல்லோருடைய பேச்சையும் கேட்டுப் புரிந்துகொண்டு, அவர்கள் எல்லோரிலும் மூத்தவரான ஜாம்பவான் பதில் சொன்னார்— ''முன்னொரு காலத்தில் எனக்கும் வெகுதூரம் தாண்டும் சக்தி இருந்தது. இப்போது, நான் வாலிபப்பருவத்தைக் கடந்து வந்துவிட்டேன். இப்போதைய நிலை இப்படி இருந்தாலும் (நாம் யாரும் நூறு யோஜனை தூரம் தாண்டும் சக்தியைப் பெற்றிருக்கவில்லை என்றாலும்,) வானர மன்னரும் இராமப்பிரபுவும் எந்தக் காரியத்தை நிறைவேற்றியே தீருவது என்று உறுதிபூண்டார்களோ, அந்தக் காரியத்தைப் புறக்கணிக்க முடியுமா? காலம் மாறிவிட்டது. எனவே, தற்சமயம் என்னால் எவ்வளவு தூரம் தாண்டமுடியும்? என்பதைச் சொல்கிறேன், கேளுங்கள். இப்போது தொண்ணூறு யோஜனை தூரம் கடப்பேன் என்பதில் சந்தேகமில்லை.'' (10–13)

வானரத் தலைவர்கள் எல்லோரையும் பார்த்து, ஜாம்பவான் மேலும் சொன்னார்— ''பாய்ந்து செல்வதில் என்னுடைய சக்தி இவ்வளவாகத்தான் இருந்தது போலும் என்று எண்ண வேண்டாம். சாசுவதமான பகவான் ஸ்ரீவிஷ்ணு, முன்னொரு கல்பத்தில், மகாபலியின் வேள்வியின்போது அவதாரம் செய்து, காலடியால் உலகை அளந்தபோது (மூன்று உலகங்களிலும் வியாபித்து நின்றபோது), நான் அவரை வலம் வந்திருக்கிறேன். இப்போது நான் வயோதிகன்; தாண்டுவதில் பலம் குறைந்தவன்; வாலிபப் பருவத்தில் இருந்தபோது, மற்றவர்களுக்கு இல்லாத ஈடு–இணையில்லாத பலம் எனக்கு இருந்தது. ஆனால், தற்சமயம் தாண்டுவதில் இவ்வளவு சக்திதான் எனக்கு இருப்பதாக எண்ணுகிறேன். (நூறு யோஜனை விஸ்தீர்ணமுள்ள கடலைத் தாண்டுவது என்று) நாம் எடுத்துக் கொண்டிருக்கும் காரியத்தின் முழுமையான வெற்றி, என்னுடைய குறைந்த பலத்தினால் அடையப்பட முடியாது.'' (14–17)

பேரறிவு படைத்த பெருவானரனான அங்கதன், ஜாம்பவானைப் புகழ்ந்து பேசிவிட்டு, தன் நிலைக்குத் தகுந்த உயர்தரமான பதிலைக் கூறினான்— ''மிக நீண்ட தூரமான நூறு யோஜனையை நான் தாண்டிவிடுவேன். என்றாலும், திரும்பித் தாண்டுவதற்கு என்னால் முடியுமா, முடியாதா? என்பது, இதுவரை நிச்சயமாகத் தெரிந்து கொள்ளப்படவில்லை.'' பேச்சில் வல்லவரான ஜாம்பவான், வானரத்தலைவனான அவனைப் பார்த்துக் கூறினார்— ''வானரர்–கரடிகள் தலைவனே! பாய்ந்து செல்வதில் உனக்குள்ள அபாரமான சக்தியைப் பற்றி எங்களுக்குத் தெரியும். நூறாயிரம் யோஜனை தொலைவைக்கூட, நீ கடந்து செல்லவும் திரும்பி வரவும் முடியும். ஆனால், இப்போது இந்தச் சட்டம் உனக்குப் பொருந்தாது. (18–21)

குழந்தாய்! வானரோத்தமனே! ஆணையிட்டுப் பிறரை அனுப்பவேண்டியவனான தலைவன், ஒருபோதும் அனுப்பி வைக்கப்பட்டவனாக (ஆணையிடப்பட்டவனாக) ஆகக்கூடாது. உன்னால், இந்தக் குடிமக்கள் எல்லோரும் ஆணையிடுவதற்குரியவர்கள். ஒரு கணவன், குடும்பத்தின் தலைவன் என்ற முறையில் இருப்பதால், தன் மனைவியைக் காப்பாற்றும் பொறுப்புடையவன்; அதுபோல, மனைவி கணவரின் கட்டளைக்குக் கட்டுப்பட்டவள்; அவர் சொல்லுக்கு அடங்கி நடப்பவள். தலைவன் என்ற பொறுப்பை வகிக்கும் நீ, மனைவி போல் காப்பாற்றப்பட வேண்டியவன். படைத்தலைவன், அந்தப் படைக்கு மனைவி போன்றவன் – இதுதான் உலக வழக்கம். (22,23)

ஆகவே, ஒரு மனைவியைப் போலவே எப்போதும் நீ காப்பாற்றப்பட வேண்டியவன். (சேனா வீரர்கள், எப்பாடுபட்டாகிலும் சேனைத் தலைவனைக் காப்பாற்ற வேண்டும்.) அத்துடன்,

எதிரிகளை அடக்குபவனே! நாம் மேற்கொண்டுள்ள காரியத்திற்கு ஆணிவேர் போன்றவன், நீ. ஒரு காரியத்தின் ஆணிவேரைப் பாதுகாக்க வேண்டும். இதுவே, காரியங்களைப் பற்றி, அவற்றின் செய்முறை பற்றி அறிந்துள்ள அறிஞர்களின் கருத்து. ஏனென்றால், வேர் பிழைத்திருந்தால்தானே, எல்லாப் பயன்களும் கிடைக்கும்? (24,25)

வீண்போகாத ஆற்றலுடையவனே! எதிரிகளை மாய்ப்பவனே! நீ, இந்தக் காரியத்தின் சாதனம் – இலக்கை எட்டுவதற்கான வழி போன்றவன்; அறிவும் பெருவீரமுமுடைய நீதான், இந்தக் காரியத்தின் ஹேது – மூலகாரணன். வானரோத்தமனே! நீ எங்களுக்கு மன்னன். மன்னனின் மைந்தனும்கூட. உன்னிடம் வைத்துள்ள முழு நம்பிக்கையினாலேயே காரியத்தை வெற்றிகரமாகச் செய்யும் திறன் பெற்றிருக்கிறோம்?'' பேரறிஞரான ஜாம்பவான் இவ்வாறு பேசி முடித்ததும், வீரவானரனும் வாலிகுமாரனுமான அங்கதன், பின்வருமாறு பதிலுரைத்தான்— ''நானும் போகக் கூடாது; வேறு வானரர்களும் போகமாட்டார்கள் என்றால், நம்மால் செய்யக்கூடிய ஒரே காரியம், உபவாசத்திலிருந்து உயிர் துறத்தலே. மாமேதையான வானர மன்னரின் கட்டளையை நிறைவேற்றாமல், அங்கே (கிஷ்கிந்தைக்குத்) திரும்பிச் சென்றாலும், நம் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் வழியை நான் காணவில்லை. (26–30)

அந்த வானரர் (சுக்ரீவன்), ஒருவனைப் புகழ்ந்து கௌரவிப்பதானாலும், கோபம் கொள்வதானாலும் அளவுக்கு மிஞ்சி நடப்பவர். (பரிசுகளும் ஏராளமாகக் கிடைக்கும்; தண்டனையும் கடுமையாகக் கிடைக்கும்.) அவருடைய கட்டளையை மீறிவிட்ட நாம் காலக்கெடு முடிந்து, (தோல்வியுடன்) அவரிடம் திரும்பிச் சென்றால் அழிவுதான் ஏற்படும். (மரணதண்டனைதான் கிடைக்கும்.) ஆகவே, (நாம் உயிருடன் சௌக்கியமாக நீண்ட நாள் இருக்கவேண்டுமானால்,) நாம் எடுத்துக் கொண்டுள்ள காரியத்தில் தோல்வி ஏற்படாதபடி ஓர் உபாயத்தை, காரிய சாதனைகளில் அனுபவம் பெற்றுள்ள தாங்கள்தான் ஆலோசித்துக் கூறவேண்டும்.'' (31,32)

இவ்வாறு, அங்கதன் பதில் கூறியவுடன், வானரப் படையின் ரிஷபம் போன்ற ஜாம்பவான், அங்கதனுக்குப் பின்வருமாறு பதிலுரைத்தார்— ''வீரனே! (கவலைப்படாதே.) உன்னுடைய இந்தக் காரியத்திற்கு, எவ்விதக் குறைவும் வராது. எவன் இந்த அரும்பணியைச் செய்துமுடிக்க வல்லவனோ, அவனை ஊக்கிவிடுகிறேன்.'' வானர–கரடிக் கூட்டத்தின் தலைசிறந்த தலைவரான ஜாம்பவான், தாண்டுபவர்களில் மிகச்சிறந்தவரும், தனியாக ஓரிடத்தில் கவலையில்லாமல் உட்கார்ந்திருந்தவரும், வானரர்களுள் முதன்மையானவருமான அனுமானிடம் சென்று, அவரைப் புகழ்ந்து பேசி உற்சாகப்படுத்தினார். (33–35)

ஸ்ரீமத் வால்மீகி ராமயாணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
அறுபத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்தாறு

அனுமானின் ஆற்றலை நினைவூட்டுதல்

பின்னர், எண்ணிலடங்காத வானரப்படை செய்வதறியாது, வருத்தத்துடன் இருப்பதைப் பார்த்ததும் ஜாம்பவான், அனுமானை நோக்கிக் கூறினார்— ''வானரர் உலகத்தின் தனிப்பெரும் வீரனே! எல்லா சாஸ்திரங்களையும் கற்றுத் தேர்ந்தவனே! அனுமானே! தனியாக ஓர் இடத்தில் மௌனமாக உட்கார்ந்திருக்கிறாயே? ஏன் பேசாமல் இருக்கிறாய்? அனுமானே! வானர மன்னன் சுக்ரீவனுக்கு இணையான ஆற்றலுடையவன், நீ. மனோபலம், உடல்வலிமை போன்றவற்றால் இராம–லட்சுமணர்களுக்கும் சமமானவன். (1–3)

(கேள்.) அரிஷ்டநேமியின் (கசியப பிரஜாபதியின்) புதல்வர்; வினதைக்குப் பிறந்தவர்; மகாபலசாலி; புள்ளினத்தில் முதன்மையானவர்; கருடன் என்ற பெயருடன் விளங்கியவர். மகாவலிமை, மகாவேகம், பெருங்கீர்த்தி முதலியவைகளைப் பெற்ற அந்தப் பறவை (கருடன்), கடலிலிருந்து பெரிய பாம்புகளைத் தூக்கிக் கொண்டு போவதை, பல தடவைகள் நானே பார்த்திருக்கிறேன். அவருடைய இறக்கைகளின் வலிமை எவ்வளவோ, அவ்வளவு உன் தோள் வலிமை. அத்துடன், உன்னிடமுள்ள அளவு கடந்த துணிச்சலும் வேகமும், அவருடையதைக் காட்டிலும் குறைந்தவை அல்ல. (4–6)

வானரோத்தமனே! எல்லா உயிர்ப்பிராணிகளையும்விட மிக அதிகமான பலம், அறிவு, துணிச்சல், தைரியம் போன்றவை உன்னிடம் இருக்கின்றன. இதை, நீ ஏன் அறியவில்லை? (உன் பிறப்பைப் பற்றிச் சொல்கிறேன், கேள்.) அப்சரப் பெண்டிரில் மிக மேன்மையாக விளங்கியவள் புஞ்ஜிகஸ்தலை என்பவள். (அவள்) வானர இனத்தில் அஞ்ஜனை என்ற பெண்ணாகத் தோன்றி, கேசரி என்ற வானரனுக்கு மனைவியானாள். குழந்தாய்! ஒப்பில்லாப் பேரழகு படைத்த அவள், மூன்று உலகிலும் புகழ்பெற்றவள். ஒரு சாபத்தினால், விருப்பம் போல் உருவம் எடுக்கக்கூடிய வானரப் பெண்ணாகப் பூவுலகில் பிறந்தாள். (7–9)

பெருமனம் கொண்ட வானர மன்னன் குஞ்ஜரனுடைய பெண்ணாகப் பிறந்த அவள், வானர இனத்தில் பிறந்திருந்தாலும், அழகு நிறைந்த அங்கங்களோடு விளங்கினாள். இஷ்டம் போல் உருவம் ஏற்கக்கூடிய அவள், ஒரு சமயம் வடிவழகு–வயதழகு இரண்டையும் ஒருங்கே பெற்று, மனங்கவர் மாலைகள் அணிகலன்கள் பூண்டு, மிக நேர்த்தியான பட்டாடை உடுத்திக் கொண்டு, கார்மேகம் போன்ற ஒரு மலையின் உச்சியில் நடந்து கொண்டிருந்தாள். மலைச்சிகரத்தில் உலாவிக் கொண்டிருந்த அந்தத் தடங்கண்ணாளின் சிவப்புக்கரை போட்ட பொன்வண்ண ஆடையை, அவள் அறியாவண்ணம் பற்றியிழுத்து விழச்செய்தார், வாயுதேவன். (10–12)

அந்தச் சமயத்தில், அவளுடைய உருண்டு திரண்ட தொடைகளையும், பருத்தும் ஒன்றோடொன்று நெருங்கி அழகாக விளங்கும் மார்பகங்களையும், மனங்கவரும் அழகுடன் கூடிய அவளுடைய முகத்தையும் அவர் பார்த்தார். அகன்று நிமிர்ந்த பின்பக்கங்களையும், மெல்லிய இடையையும், நிகரில்லாத அழகையும், குறையேதுமில்லாத எல்லா அங்கங்களையுமுடைய அவளைப் பார்த்ததும் வாயுதேவன் காமவசப்பட்டார். அந்த வாயுதேவனின் எல்லா அங்கங்களிலும் மன்மதன் புகுந்து கொண்டான். அதனால், வாயு தன் சுயபுத்தியை இழந்து, தன் இரு நீண்ட கைகளாலும் தூயவளான அவளை, மார்புறக் கட்டித் தழுவிக் கொண்டார். (13–15)

நல்லொழுக்கமுடைய அவள் (அஞ்ஜனை), உடனே மனம் பதறி, 'என்னுடைய கற்புநிலையைக் கெடுக்க விரும்புபவன் யார்?' என்ற கடுஞ்சொல்லை உகுத்தாள். அஞ்ஜனையின் சொற்களைக் கேட்ட வாயுதேவன் பதில் கூறினார்— 'நல்லிடையாளே! தெய்வாம்சம் பொருந்தியவளே! நான், உன்னைக் கெடுக்க மாட்டேன். நீ பயப்பட வேண்டாம். நான் வாயுதேவன்; போற்றத்தக்க பேரழகு படைத்த உன்னை, மனப்பூர்வமாக விரும்பிக் கட்டியணைத்தேன். (அவ்வளவுதான். இதன் விளைவாக,) வீரமும் அறிவும் ஒருங்கே நிரம்பப் பெற்ற புதல்வன் உனக்குப் பிறக்கப் போகிறான். அவன் மிகவும் தைரியம் உடையவனாகவும், தேஜஸ் மிக்கவனாகவும், அளவுகடந்த பல–பராக்கிரமம் உடையவனாகவும் இருப்பான். மேலும், பறப்பதிலும் பாய்ந்து தாண்டுவதிலும் எனக்கு நிகராக இருப்பான்.' (16–19)

(ஜாம்பவான், அனுமானைப் பார்த்துக் கூறுகிறார்—) தோள்வலி மிக்கவனே! பெருவானரனே! (வாயு) இவ்வாறு கூறியதும் மனம் தெளிந்த உன் தாய், ஒரு மலைக்குகையில் உன்னைப் பெற்றெடுத்தாள். அந்தப் பெருங்காட்டுப் பகுதியில், சின்னஞ்சிறு குழந்தையான நீ, (கீழ்வானில்) உதயமாகிக் கொண்டிருந்த செங்கதிரோனைக் கண்டு, 'அது ஒரு பழம்' என்று எண்ணி, அதைப் பறிக்க விரும்பி, உயரக் குதித்து, வானத்தை நோக்கிப் போனாய் (தாவிச் சென்றாய்).

பெருமைமிகு வானரனே! ஆகாயத்தில் முந்நூறு யோஜனை உயரத்தை அடைந்தபோது, சூரியனின் கதிர்களால் தாக்கப்பட்டும், நீ மனம் தளரவில்லை. (20–22)

மதிப்புமிக்க வானரனே! நீ வானத்தில் வேகமாகச் சென்று, சூரியனை நெருங்கிவிட்ட உன்மேல், அளவிடமுடியாத உன் ஆற்றலைத் தெரிந்துகொண்ட இந்திரன், (இவனால் தனக்கு ஆபத்து வந்துவிடுமோ? என்ற குழப்பத்தால்) கோபத்துடன் வஜ்ராயுதத்தை வீசினான். (அதனால், அடிபட்டுக் கீழே விழுந்தாய்.) விழும்போது மலையுச்சியில் பட்டு, உன் இடது கன்னம் (ஹனு) பிளந்து போய்விட்டது. அதிலிருந்து உன் பெயர் 'ஹனுமான்' என்று பழக்கத்தில் வந்தது. நீ அடிபட்டுக் கிடப்பதைப் பார்த்து, மணம் சுமக்கும் வாயுதேவன் மிகவும் கோபம் கொண்டார். வேகமாகச் சுழன்று வீசும் அவர், மூவுலகிலும் சஞ்சரிப்பதை நிறுத்திக் கொண்டார். (23–25)

மூவுலகங்களும் காற்றில்லாததால் மூச்சுமுட்டித் திணறின. மனக்கலக்கமடைந்த தேவர்களும் லோகபாலகர்களும் மிகவும் கோபத்துடனிருந்த வாயுவை வேண்டிக் கொண்டார்கள். வீண்போகாத பராக்கிரமம் உடையவனே! அன்பனே! வாயுதேவன் மனமிரங்கியதும், 'யுத்தத்தில், எந்த ஆயுதத்தாலும் உனக்கு மரணம் ஏற்படாது' என்ற வரத்தை பிரும்மா உனக்குக் கொடுத்தார். பெருந்தலைவனே! வஜ்ராயுதத்தால் அடிபட்டும் மனங்கலங்காத உன்னைப் பார்த்து, உள்ளங்களித்த இந்திரன், 'நீ விரும்பியபோது உனக்கு மரணம் ஏற்படக்கடவது' என்ற மாபெரும் வரத்தை அளித்தான். (நீயாக விரும்பினாலொழிய, யாராலும் உன் உயிரைப் பறிக்க முடியாது – என்பது கருத்து.) (26–28)

அளவிட முடியாத பராக்கிரமத்தையுடைய நீ, கேசரியின் மனைவி பெற்றெடுத்த பிள்ளை; வாயுதேவனின் சொந்தப் புதல்வன்; பராக்கிரமத்தாலும் அவருக்கு நிகரானவன். செல்வமே! இவ்வளவுக்கு மேலும் சிறப்புமிக்க உன்னுடைய ஆற்றலை, நாங்கள் எவ்வாறு வர்ணிக்க முடியும்? உலக மக்களில் எவராலும் செய்யமுடியாத பெருஞ்செயலைச் செய்யும் ஆற்றல் உன்னிடம்தான் இருக்கிறது. அஞ்ஜனை வயிற்றில் பிறந்தவனே! நீதான் எங்களுக்கு உயிர் கொடுக்கக் கூடியவன்; குழந்தாய்! நீ காற்றின் மைந்தன்; பாய்ந்து தாண்டுவதிலும் அவருக்கு நிகரானவன். இப்போது, நாங்கள் உயிர் இழந்தவர்களைப் போல் இருக்கிறோம். இப்போது, நீ எங்களைக் காப்பாற்ற வேண்டும். சாமர்த்தியமும் பராக்கிரமமும் நிறைந்த நீ, இன்னொரு கருடனைப் போன்றவன். (29–32)

அருமைக் குழந்தாய்! மகாவிஷ்ணு, திரிவிக்கிரமராக அவதாரம் செய்தபோது, நான் மலை–சோலை–காடுகள் நிறைந்த இந்தப் பூமண்டலத்தை இருபத்தியோரு தடவை காலால் நடந்து வலம் வந்தேன். அதுபோலவே, தேவாசுரர்கள் பாற்கடலைக் கடைந்தபோது, தேவதைகளின் உத்தரவுப்படி, நாம் ஆங்காங்கே சென்று மூலிகைகளைக் கொண்டு வந்தோம். அவைகளைப் பாற்கடலில் போட்டுக் கடைந்து அமிர்தம் எடுத்தார்கள். அந்தக் காலகட்டத்தில் நமக்கு அளப்பரிய பலம் இருந்தது. (அவ்வளவு சக்தி பெற்றிருந்த) நான், இப்போது வயோதிகம் அடைந்துவிட்டேன்; என் சக்திகளும் குறைந்து போய்விட்டன. தற்சமயம், நம் எல்லோரிலும் நீ ஒருவன்தான் எல்லா சக்திகளையும் பெற்றவன். (33–35)

வானரர்களுள் உத்தமன், நீ; மகாசூரன். இந்த வானரப்படை, உன் வீரத்தைக் காண விரும்புகிறது. எனவே, உன் வீரத்தைக் காட்டு. (கடலைத் தாண்டுவது என்ற முடிவுக்கு வா.) புலி நிகர் வானரனே! உடனே எழுவாய்; பெருங்கடலைத் தாண்டுவாய். அனுமானே! மற்ற எல்லாப் பிராணிகளைக் காட்டிலும், பாய்ந்து தாவிச் செல்லும் சக்தி, உன்னிடம் அதிகமாக இருக்கிறது. எல்லா வானரர்களும் கவலையோடு இருக்கிறார்கள். அனுமானே! ஏன் இப்படிப் பராமுகமாக இருக்கிறாய்? பேராற்றல் படைத்த பகவான் மகாவிஷ்ணு, மூன்றே அடிகளால் மூவுலகையும் அளந்தது போல, நீயும் உடலை வளர்த்துக் கொண்டு, உன் சக்தியைக் காட்டு.'' (36–38)

ஜாம்பவானால் இவ்வாறு உற்சாகப்படுத்தி தூண்டிவிடப்பட்டவரும், வாயு குமாரரும், அனைவராலும் அறியப்பட்ட மகாவேகத்தை உடையவருமான அந்த வானரர் (அனுமான்), வீரம்

மிகுந்த வானரப்படையினருக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும்வண்ணம், அப்போதே தன் உருவத்தை மிகப்பெரியதாகச் செய்து கொண்டார். (39)

ஸ்ரீமத் வால்மீகி இராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
அறுபத்தாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்தேழு

அனுமான் மலையில் ஏறினார்!

பேராற்றல் கொண்ட அனுமான், மேற்சொன்னவாறு உற்சாகப்படுத்தப்பட்டதும், மகிழ்ச்சியடைந்து வாலைச் சுழற்றித் தரையில் அடித்தார். அதனால், தன் முழு ஆற்றலை வெளிப்படுத்தியதுடன், அதை வளர்த்துக் கொள்ளவும் செய்தார். எல்லா வானரப் பெரியோர்களாலும் மிகவும் புகழ்ந்துரைக்கப்பட்ட அவர், அளவற்ற ஆற்றலினால் நிரம்பியவராய், மகாமேன்மையான உருவத்தை ஏற்றார். உற்சாகம் கொண்ட சிங்கம், மலைக்குகையில், (உடலைச் சிலிர்த்து அடங்கிக் கிடக்கும்) தன் ஆற்றலை வளர்த்துக் கொள்வதைப் போல, வாயுவின் புதல்வர் (அனுமான்) இப்போது தன் பராக்கிரமத்தை வளர்த்துக் கொண்டார். (1–3)

நூறு யோஜனை தூரத்தைத் தாண்டுவதற்காக, நொடிப்பொழுதில் தன் ஆற்றலைப் பெருக்கிக் கொண்டு, வீரம் தளும்பி நிற்கும் அவரைப் பார்த்த வானரோத்தமர்கள், அந்த கணமே சோகத்தைத் துறந்து, மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தவர்களாய் பெரும் சப்தமிட்டார்கள். மகாபலம் பொருந்திய அனுமானைக் கொண்டாடினார்கள். மூன்று அடிகளால் உலகத்தை அளக்க முற்பட்ட நாராயணனை (திரிவிக்ரமனை) அடியார்கள் கண்டு பேரானந்தம் அடைந்ததைப் போல, பெருமகிழ்ச்சியும் திகைப்பும் கொண்ட வானரர்கள், நாற்றிசையிலிருந்தும் அனுமானைப் பார்த்தார்கள். மகாமேதாவியான அவர் வளர்ந்தபோது, அவருடைய முகம், பழுக்கக் காய்ந்த வாணலி போலும், புகையில்லாமல் கொழுந்துவிட்டெரியும் அக்னிபோலும் செவ்வண்ணத்துடன் விளங்கிற்று. (4–7)

அவர், வானரர் கூட்டத்திலிருந்து எழுந்து நின்றார். மெய்யில் புளகாங்கிதம் ஏற்பட்டது. வயோதிக வானரர்களை வணங்கிவிட்டு, அனுமான் பின்வருமாறு கூறினார்— ''அக்னியின் நண்பரான வாயுதேவன், அநிலன் என்றும் பெயர் பெற்றவர்; மிகவும் பலசாலி; உவமை இல்லாத தனிப் பெரும் சக்தி; ஆகாயத்தில் சஞ்சரிக்கும் அவர் மலைச்சிகரங்களையும் உடைத்தெறிபவர். நான், விரைந்து செல்லும் ஆற்றலுடைய, மிக்க வேகமுடைய மகாத்மா வாயுவின் சொந்தப் புதல்வன். (அவருடைய ஆற்றல் என்னிடமும் இருப்பதில் என்ன ஆச்சரியம்?) பாய்ந்து தாவுதலில் எனக்குச் சமமானவனே இல்லை. (8–10)

மிக விசாலமாக, ஆகாயத்தை அளாவி நிற்கும் மேருமலையை, இடையில் ஓய்வு எடுக்காமலேயே, ஆயிரக்கணக்கான தடவைகள் என்னால் சுற்றிவர முடியும். என்னுடைய புஜங்களின் வேகத்தினால், சமுத்திரத்தின் தண்ணீரை மேலெழச் செய்து, மலை–ஆறு–மடுக்கள் நிறைந்த இவ்வுலகத்தை நீரில் மூழ்கச் செய்வேன். வருணனின் இருப்பிடமான சமுத்திரத்தின் நீர் முழுவதும், என்னுடைய தொடைகள் மற்றும் முழங்கால்களின் வேகத்தால் வெளியேற்றப்பட்டு, பெரிய சுறாமீன்கள் மேலே வந்துவிடும். (11–13)

பறவைகள் பறந்து செல்லும் ஆகாயத்தில், சர்ப்பங்களை உணவாகக் கொள்ளும் கருடன் பறக்கும்போது, அவரை ஆயிரம் முறை சுற்றிவர என்னால் முடியும். உதயகிரியிலிருந்து (அருணோதய காலத்தில்) செங்கதிர்களையே மாலையாகக் கொண்டு சுட்டெரிக்கும் சூரியனை, அவர் மேற்றிசையில் மறையும்வரை, கூடவே தொடர்ந்து செல்ல என்னால் முடியும். வானர வீரர்களே! பின்னர் அங்கிருந்து பூமிவரை திரும்பி வந்து, ஆனால், பூமியைத் தொடாமல்

(இளைப்பாறாமல்) மீண்டும் அவரிடமே சிந்தனைக்கெட்டாத மிகுந்த வேகத்துடன் செல்ல வல்லேன். (14–16)

ஆகாய மண்டலத்திலுள்ள கோள்கள்–தாரகைகளையும் தாண்டி மேலே மேலே செல்லும் உற்சாகத்துடன் இருக்கிறேன். பெருங்கடலைக்கூட என்னால் வற்றச் செய்யமுடியும்; தரையையும் பிளந்து விடுவேன். வானரர்களே! நான் பாய்ந்து செல்லும்போதே மலைகளை உலுக்குவேன்; பாய்ந்து செல்லும்போதே என் தொடைகளின் வேகத்தால் மாபெருங்கடலையும் பற்றியிழுத்து விடுவேன். இப்போது, நான் ஆகாயமார்க்கத்தில் பாய்ந்து செல்லத் தொடங்கும்போது, கொடிகள்–மரங்களின் பலவகையான எல்லா மலர்களும் என்னைப் பின்தொடர்ந்து வரப்போகின்றன. (17–19)

ஆகாயத்தில் சுவாதி நட்சத்திரத்தின் வழியைப் போல், நான் போகும் வழி ஒளியுடன் திகழும். வானரர்களே! நான் இங்கிருந்து எம்பித் தாவி, பயங்கரமான ஆகாயத்தில் மிதந்து செல்வதையும், பின்னர் அக்கரையில் குதிப்பதையும், எல்லா ஜீவப்பிராணிகளும் பார்க்கப் போகின்றன. வானரர்களே! பெரிய மேகத்தைப் போல் தோற்றமளிக்கும் நான், விண்மண்டலத்தை மூடிக்கொண்டும், வானத்தையே விழுங்கிவிடுபவன் போன்றும் செல்வதைப் பார்க்கப் போகிறீர்கள். ஒரே நோக்கத்துடன் பாய்ந்து செல்லும் நான், மேகங்களைச் சிதறடிப்பேன்; மலைகளை உலுக்குவேன்; பெருங்கடலை வற்றச் செய்வேன். (20–22)

கருடனுக்கும் வாயுதேவனுக்கும் உள்ள ஆற்றல் எனக்கும் உண்டு. புள்ளரசன் கருடன், பேராற்றல் படைத்த வாயு – இவ்விருவரைத் தவிர, ஆகாயத்தில் வேகமாகப் பறந்து செல்லும் என்னைப் பின்தொடரக் கூடிய வேறு ஒரு பிராணியையும் நான் காண்கிலேன். மேகத்தினிடையே தோன்றும் மின்னொளியைப் போல, ஒரு நிமிட நேரத்திற்குள்ளாகவே, பிடிப்பு ஏதும் இல்லாத ஆகாய மண்டலத்தில் நான் பாய்ந்து விடுவேன். மூன்று காலடி வைப்புகளால் உலகத்தை அளக்க வாமனர் எந்த உருவத்தை எடுத்தாரோ, அதே போன்று சமுத்திரத்தைத் தாண்டிச் செல்லும் சமயத்தில், என் பேருருவம் வெளிப்படப் போகிறது! (23–26)

வானரர்களே! களிப்புடன் குதித்துக் கும்மாளமிடுங்கள். நான், என் புத்தியால் எதை நினைக்கிறேனோ, பார்க்கிறேனோ, அதற்கு அனுகூலமாகவே மனமும் இயங்குகிறது. நான் வைதேகியைக் காணப் போகிறேன்! (இது நிச்சயம்.) வாயுவுக்கு இணையான வேகமும், கருடனுக்கு இணையான விரைவும் எனக்கு இருக்கிறது. அதனால், பதினாயிரம் யோஜனை தூரத்தையும் கடந்து செல்வேன் என்று எனக்கு உறுதியாகத் தெரிகிறது. வஜ்ராயுதத்தை உடைய இந்திரன், தான்தோன்றியான பிரும்மா – இவர்கள் கையில் அமிர்தம் இருந்தாலும்கூட, சட்டென்று அவர்களை மீறிச்சென்று, அந்த அமிர்தத்தை இங்கே கொண்டு வருவேன். இலங்கையானாலும்கூட அடியோடு பெயர்த்து எடுத்துக் கொண்டு திரும்பி வருவேன் – என்ற தைரியம் வந்திருக்கிறது.'' (27–29)

அளவுகடந்த ஆற்றல் கொண்ட அந்த வானரப் பெருந்தகை கர்ஜிப்பதைக் கேட்டு, வானரர்கள் மிகவும் ஆச்சரியத்துடனும் மகிழ்ச்சியுடனும் அவரை நோக்கினார்கள். உற்றார்–உறவினர்களின் பெருந்துயரத்தைப் போக்கவல்ல அவருடைய வீரவசனங்களைக் கேட்டு, மிகவும் மனமகிழ்ந்த ஜாம்பவான், அந்த உத்தம வானரரைப் பார்த்து (இவ்வாறு) கூறினார்— ''வீரனே! கேசரியின் புதல்வனே! வாயு குமாரனே! அனுமானே! குழந்தாய்! நம் சுற்றத்தாரின் அளவிட முடியாத சோகத்தைப் போக்கிவிட்டாய். (30–32)

உன்னுடைய நலனை விரும்பும் வானரத் தலைவர்கள் ஒன்றாகச் சேர்ந்து, எடுத்துக் கொண்டிருக்கும் காரியம் வெற்றிகரமாக நிறைவேற வேண்டும் என்பதற்காக, மங்களச் சடங்குகளை ஒருமைப்பட்ட மனத்துடன் செய்வார்கள். முனிவர்களின் பேரருளாலும், மூத்த வானரர்களின் நல்லாசியாலும், பெரியோர்களின் கருணையாலும், நீ இந்தப் பெருங்கடலைக் கடந்து செல்வாய் (என்பதில் ஐயமில்லை). வனத்தில் வாழும் பிராணிகளான எங்கள் எல்லோருடைய உயிர்களும்

உன் கையில் இருக்கின்றன. அதனால், நீ திரும்பி வரும் வரையில் நாங்கள் ஒற்றைக்காலில் நின்றுகொண்டிருப்போம்.'' (33–35)

அப்போது, புலிநிகர் வானரரான அனுமான் வானரர்களைப் பார்த்துக் கூறினார்— ''நான் எம்பிக் குதிக்கத் தொடங்கும்போது, எனது வேகத்தை (கால் அழுத்தத்தை) இந்தப் பூமியால் தாங்கிக் கொள்ள முடியாது. ஏராளமான கற்பாறைகளைக் கொண்ட மகேந்திரமலையின் சிகரங்கள் விசாலமாகவும் உறுதியாகவும் இருக்கின்றன. பலவகையான மரங்கள் அடர்ந்ததும், தாதுக்கள் நிறைந்து அழகுடன் விளங்குகின்றதுமான மகேந்திரமலையின் முகடுகளில் காலைப் பதித்து, உயரப் பறக்கத் தொடங்குவேன். வானரோத்தமர்களே! இங்கிருந்து நூறு யோஜனை தூரத்தைத் தாண்டப் போகிற என் கால்களின் அழுத்தத்தை, இவைகள் (மலைமுகடுகள்) ஏற்றுக்கொள்ளப் போகின்றன.'' (36–39)

பின்னர், வாயுவைப் போன்ற வேகமுடையவரும் வாயுவின் மைந்தரும் எதிரிகளை அழிப்பவருமான அந்தத் தனிப் பெரும் வானரர், மகேந்திரம் என்று பெயர் பெற்ற சிறந்த மலையில் ஏறினார். பலவகையான மரங்கள் சூழ்ந்திருந்தன; மான்கள் உலாவும் பசும்புற்றரைகள்; பூங்கொத்துகள் நிறைந்த கொடிகள்; எல்லாக் காலங்களிலும் மலர்–கனிகளைக் கொடுக்கும் மரங்கள்; சிங்கம்–புலிகளின் சஞ்சாரம்; மதங்கொண்ட யானைகள் திரிவது; தேனுண்டு மயங்கிய பறவைக் கூட்டங்களின் ஒலி; ஏராளமான நீரருவிகள்; நிமிர்ந்து நிற்கும் முகடுகளால் உயர்ந்து விளங்கும் தோற்றம் – இவ்வாறான மகேந்திர மலையில், மகேந்திரன் போன்ற வலிமையுடையவரும் வானரோத்தமருமான அந்த பலவான் (அனுமான்) இங்குமங்கும் நடந்தார். (40–43)

மகாசக்திமானரான அவருடைய பாதங்களின் அழுத்தத்தால் பீடிக்கப்பட்ட அந்த மாமலை, சிங்கத்தினால் தாக்கப்பட்ட, மதங்கொண்ட ஒரு பெரு யானை போல் ஓலமிட்டது. மலையருவிகளில் வெள்ளம் பெருகி ஓடிற்று; கற்பாறைகள் நாற்புறத்திலும் சிதறி விழுந்தன; மான்களும் யானைகளும் அஞ்சி நடுங்கின; பெரிய பெரிய மரங்கள் ஆடிச் சாய்ந்தன; மதுபானத்தில் பிரியமுள்ளவர்களும் உடலுறவில் ஈடுபட்டிருந்தவர்களுமான நாக–கந்தர்வ ஜோடிகளும், வித்யாதரர்களின் கூட்டங்களும், பறவைகளும் மலைச்சிகரங்களைத் துறந்து உயரத்தில் பறந்தோடிவிட்டன; மகாசர்ப்பங்கள் பயத்தால் நடுங்கி ஓடி ஒளிந்தன; மலைமுகடுகளும் பாறைகளும் சரிந்து விழுந்தன. (அனுமானின் பாத அழுத்தத்தினால்) அந்த மாமலையில் இவ்வளவு மாற்றங்கள் ஏற்பட்டன. (44–47)

புற்றிலிருந்து சீறிக்கொண்டு வெளியே வந்த பாம்புகள், கற்பாறைகளால் தாக்கப்பட்டு, நசுங்கித் தொங்கிக் கொண்டிருந்தபடியால், அந்த மலையெங்கும் கொடிகள் கட்டப்பட்டது போல் விளங்கிற்று. பாறைகளாலான அந்த மலையிலிருந்து, அச்சங்கொண்ட முனிவர்களும் புறப்பட்டுச் சென்றார்கள். அடர்த்தியான பெருங்காட்டில், உடன் வந்தவர்கள் ஒரேயொரு வழிபோக்கனைத் தன்னந்தனியே விட்டுவிட்டுப் போனதைப் போல, அந்த மகேந்திரமலை அனாதரவாகத் தோற்றமளித்தது. (48,49)

பகைவீரர்களை அழிப்பவரும், வானர முக்கியஸ்தரும், இயற்கையிலேயே வேகமுடையவரும், மகானுபாவருமான அனுமான் இப்போது மனத்தை ஒருமைப்படுத்தி, மிக வேகமாகத் தாண்டுவதற்கு ஆயத்தமாகி, (முதலாவதாக) உள்ளத்தில் உறுதிபூண்டு, மனத்தால் இலங்கையை அடைந்தார். (50)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில்
அறுபத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

கிஷ்கிந்தா காண்டம் முற்றிற்று.

II ஸ்ரீஹநுமதே நம: II

ஸ்ரீ அனுமன் நாற்பது

கோஸ்வாமி ஸ்ரீதுளசிதாசர் அருளிய ஸ்ரீ ஹனுமான் சாலீஸா – மொழிபெயர்ப்பு

[இந்த ஸ்ரீ ஹனுமான் சாலீஸாவை பக்தி–சிரத்தையுடன் வாசிப்பவருக்கு ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தின் சுந்தரகாண்டம் பாராயணம் செய்த பலனும், 40 நாட்கள் காலையில் வாசித்தால் துயரம் விலகுவதும், 108 முறை வாசித்தால் தடங்கலான காரியம் கை கூடுவதும், தினம் 3 வேளை வாசித்தால் வாழ்வில் அனைத்து நலன்களும் பெறுவர் என்பதும் ஆன்றோர் கூற்று.]

தோஹா 1

ஸ்ரீகுருவின் பாதாரவிந்தங்களின் மகரந்தப் பொடிகளால், என் மனம் என்னும் கண்ணாடியைத் தூய்மைப்படுத்தி, †நான்குவிதமான புருஷார்த்தங்களையும் கொடுக்கும் ஸ்ரீராமசந்திரமூர்த்தியின் நிர்மலமான புகழை வர்ணிக்கின்றேன்.

தோஹா 2

ஹே வாயுகுமாரனே! நான், தங்களைத் தியானம் செய்கின்றேன். என்னுடைய உடலும் அறிவும் பலம் குறைந்தவை என்பதைத் தாங்கள் அறிவீர்கள். எனக்கு உடல் ஆற்றலையும், நல்ல புத்தியையும், அறிவையும் கொடுங்கள். என்னுடைய அனைத்து ‡கிலேசங்களையும் விகாரங்களையும் அழித்துவிடுங்கள்.

சௌபாஈ

1. *ஸ்ரீஹனுமானே! தங்களுக்கு வெற்றி உண்டாகட்டும். தங்களுடைய ஞானமும் குணமும் ஆழம் காண முடியாதவை. வானரத் தலைவனே! வாழ்க! வாழ்க! மூன்று உலகங்களிலும் உமது புகழ் பிரகாசிக்கின்றது.*
2. *இராமதூதனே! தாங்கள் ஈடு இணையற்ற பலம் உடையவர்; அஞ்சனை புத்திரன் என்றும், வாயு குமாரன் என்றும் புகழ் பெற்றவர்.*
3. *தாங்கள் மகாவீரர்; அளவற்ற பராக்கிரமம் உடையவர்; வஜ்ரம் போன்ற அவயவங்களைக் கொண்டவர்; தீய புத்தியை நீக்கி, நல்ல புத்தியைக் கொடுத்து, அன்பர்களுக்கு உதவி செய்கின்றீர்கள்.*
4. *பொன்னிற வண்ணத்திருமேனி, காதுகளில் குண்டலம், சுருண்ட செந்நிறமான கேசம் – இத்தகைய உருவத்துடன் தாங்கள் மிக அழகாக விளங்குகிறீர்கள்.*
5. *தங்கள் கையில் வஜ்ராயுதமும் கொடியும் காட்சி அளிக்கின்றன. தோளில் தர்ப்பத்தால் ஆன முப்புரி [பூணூல்] அணிந்து கொண்டிருக்கிறீர்கள்.*
6. *தாங்கள் உண்மையில் சிவபெருமானின் அவதாரமே! [சுவனமே!] அதாவது, மிகவும் பரிசுத்தமான, அழகான, ஏகாந்தமான கைலாச பர்வதத்தின் சிகரத்தில் தாங்கள் நிரந்தரமாக இராமநாம ஜபம் செய்கின்றீர்கள். தங்கள் இருதயமாகிய வனத்தில், பகவான் ஸ்ரீராமன் எப்பொழுதும் உலவிக் கொண்டிருக்கிறார். சுயம்பரமேசுவரனாகிய தாங்கள், சாட்சாத் ஸ்ரீராமனின் அவதார சமயத்தையறிந்து, ஸ்ரீராமனின் கைங்கரியத்திற்காகவே கேசரியின் மைந்தனாக அவதாரம் செய்தீர்கள். கேசரியின் மைந்தரே! தாங்கள் தேஜஸினாலும் பராக்கிரமத்தினாலும் மிகவும் உயர்ந்தவர். உலகமனைத்திலும் தாங்கள் வணங்கப்படுகின்றீர்கள்.*

---

† தர்மம் – அறம்; அர்த்தம் – பொருள்; காமம் – இன்பம்; மோட்சம் – வீடு.

‡ கிலேசம் = அஞ்ஞானம் அதாவது அவித்யா, அஸ்மிதா, ராகம், துவேஷம், அபிநிவேசம்; விகாரம் = பிறப்பு–இறப்பு என்கின்ற சம்சாரமாகிய கடலின் துன்பச்சுழற்சியில் இருந்துவிடுபடுதல்.

7. தாங்கள் ஆழம் காண முடியாத கல்விக்கடல்; நற்குணங்கள் நிரம்பியவர்; செயலாற்றுவதில் மிகுந்த திறமை உடையவர்; ஸ்ரீராமனுக்குப் பணிபுரிவதில் எப்பொழுதும் நாட்டம் கொண்டவர்.

8. தாங்கள், ஸ்ரீராமனுடைய திருக்கல்யாண குணங்களைக் கேட்பதில் மிகுந்த மகிழ்ச்சி கொள்கிறீர்கள். ஸ்ரீராமன், சீதாதேவி, லட்சுமணன் ஆகியோர் தங்கள் இதயத்தில் குடி கொண்டுள்ளார்கள். அவர்களின் இதயங்களில் தாங்கள் குடி கொண்டுள்ளீர்கள்.

9. தாங்கள் மிகச்சிறிய உருவமெடுத்து சீதைக்குக் காட்டினீர்கள்; பயங்கரமான உருவமெடுத்து இலங்கையைக் கொளுத்தினீர்கள்.

10. தாங்கள் மிகவும் பயங்கரமான உருவமெடுத்து அரக்கர்களை அழித்தீர்கள். இவ்விதமாக, ஸ்ரீராமபிரானின் காரியங்களை நிறைவேற்றினீர்கள்.

11. தாங்கள், சஞ்ஜீவனி மலையைக் கொண்டு வந்து லட்சுமணனை உயிர்ப்பித்தீர்கள். இதனால் ஸ்ரீரகுவீரன் மகிழ்ச்சியடைந்து, தங்களை மார்போடு அணைத்துக் கொண்டார்.

12. ஸ்ரீராமபிரான், 'நீ, எனக்குப் பரதனைப் போல அன்புள்ள சகோதரன்' என்று கூறி, தங்களை மிகவும் புகழ்ந்து கொண்டாடினார்.

13. 'உன்னுடைய புகழை ஆயிரம் நா படைத்த ஆதிசேஷன் பாடிக் கொண்டு இருக்கட்டும்' என்று கூறி, சீதாபதியாகிய ஸ்ரீராமசந்திரன் மிகமிக அன்போடு தங்களை மார்போடு தழுவிக் கொண்டார்.

14. சனகாதி முனிவர்கள், பிரம்மா முதலிய தேவர்கள், நாரதர், சரஸ்வதிதேவி மற்றும் ஆதிசேஷன்,

15. மேலும் யமராஜன், குபேரன் போன்ற எல்லா திக்பாலர்கள், கவிஞர்கள், வித்துவான்கள், பண்டிதர்கள் ஆகியோர் எவ்வளவு புகழ்ந்தாலும், உமது பெருமைக்கு எல்லை ஏது?

16. தாங்கள், சுக்ரீவனுக்கு எவ்வளவு பெரிய உபகாரம் செய்து இருக்கிறீர்கள்! அதாவது, ஸ்ரீராமனோடு இணைத்து வைத்தீர்கள். மேலும், அவரை அரசனாக்கினீர்கள்.

17. உங்களுடைய ஆலோசனையை விபீஷணர் ஏற்றுக் கொண்டார். அதனால், அவர் இலங்கையின் அரசர் ஆனார். இவையனைத்தும் எல்லா உலகும் அறியும்.

18. தாங்கள், ஈராயிரம் யோஜனைக்கு அப்பால் இருந்த சூரியனை, 'ஓர் இனிய பழம்' எனக் கருதி, அதனிடம் நெருங்கிச் சென்றுவிட்டீர்கள்.

19. தாங்கள், பிரபு இராமசந்திரனின் கணையாழியைத் திருவாயில் வைத்துக் கொண்டு, சமுத்திரத்தை அனாயாசமாகத் தாண்டினீர்கள் என்பதில் எவ்வித ஆச்சரியமும் இல்லை.

20. உலகத்தில் எவ்வளவு கடினமான காரியங்கள் இருந்தாலும், தங்கள் அருளினால் அவை எளிதாகவே நடந்துவிடுகின்றன.

21. தாங்கள், ஸ்ரீராமசந்திரனுடைய வாயிற்காப்பாளர். தங்கள் கருணையில்லாமல் யாரும் அவரை அணுக முடியாது. [ஸ்ரீராமனுடைய அருளைப் பெறுவதற்கு, முதலில் தங்களின் அருளைப் பெறவேண்டும்.]

22. உமது திருவடிகளை யார் வந்து அடைந்தாலும், அவர்கள் எல்லோருக்கும் ஆனந்தம் கிடைக்கிறது. தாங்கள் காப்பாளராக இருக்கும்போது, நாங்கள் எதைக் கண்டு பயப்பட வேண்டும்?

23. தங்களிடம் உள்ள மிகுதியான தேஜஸைத் தங்களைத் தவிர, வேறு யாராலும் தாங்கவே முடியாது. 'ஹூம்' என்ற உமது கர்ஜனையால் மூன்று உலகங்களும் நடுங்குகின்றன.

24. மகாவீரனே! யார், உமது பெயரைக் கூறினாலும், அதைக் கேட்டமாத்திரத்தில் பூத–பிசாசுகள், தங்கள் நாமத்தைச் சொன்னவர் அருகில் நெருங்குவதில்லை.

25. வீர ஆஞ்சநேயனே! உமது பெயரை இடைவிடாது ஜபம் செய்வதனால், எல்லாத் துன்பங்களும் கிலேசங்களும் அகன்றுவிடுகின்றன.

26. ஹே ஹனுமானே! எவர்கள், தங்களிடம் மனத்தாலும் செயலாலும் சொல்லாலும் ஈடுபாடுடன் இருக்கிறார்களோ, அவர்களை எல்லாத் துன்பங்களிலிருந்தும் தாங்கள் விடுவிக்கிறீர்கள்.

27. எல்லாவற்றிற்கும் மேம்பட்ட பரம்பொருளாகவும், தவம் செய்பவர்களில் சிறந்தவராகவும் விளங்குகின்ற ஸ்ரீராமபிரானின் சகல காரியங்களையும், தாங்கள் செவ்வனே நிறைவேற்றியுள்ளீர்கள்.

28. மேலும், தங்களை வழிபடுகின்றவர்களுடைய எல்லா கோரிக்கைகளும் நிறைவேறுகின்றன. வாழ்க்கையில் மதிப்பிட முடியாத பலன்களும் அவர்களுக்குக் கிடைக்கின்றன.

29. தங்களுடைய பிரதாபம் † நான்கு யுகங்களிலும் பரந்து இருக்கின்றது. உலகத்தில், உமது புகழ் எல்லா இடத்திலும் ஒளிவீசிக் கொண்டு இருக்கிறது.

30. ஸ்ரீராமனுடைய பேரன்பிற்குப் பாத்திரமானவரே! தாங்கள், சாது–மகாத்மாக்களைக் காப்பாற்றுகிறீர்கள்; அசுரர்களை [தீய சக்திகளை] அழிக்கிறீர்கள்.

31. தாங்கள், எல்லோருக்கும் அஷ்டமா சித்திகளையும் நவநிதியங்களையும் கொடுக்கக் கூடியவர். இந்த வரத்தைத் தங்களுக்கு, சீதாபிராட்டியார் அருளியிருக்கிறார்.

32. ஸ்ரீராமபிரானுடைய பெயர் என்கிற ரசாயனம் [ஆனந்தக்கடல்] எப்பொழுதும் தங்களுடைய இதயத்தில் அலைபாய்ந்து கொண்டிருக்கிறது. மேலும், தாங்கள் எப்பொழுதும் அவருடைய திருவடிகளைத் தாங்கிக் கொண்டு, அவரது தாசனாக இருக்கின்றீர்கள்.

33. எவர்கள், தங்களை வழிபடுகின்றனரோ, அவர்கள் ஸ்ரீராமனை அடைகின்றனர். அவர்களுடைய பல பிறவிகளில் ஏற்பட்ட துக்கங்கள் அனைத்தும் விலகிப் போகின்றன.

34. அவர்கள் வாழ்வின் முடிவில், ஸ்ரீரகுவீரனுடைய பரமபதத்தை அடைகின்றார்கள். அவர்கள், இந்தப் பிறவியில் 'ஹரிபக்தன்' என்று போற்றப்படுகிறார்கள்.

35. வேறு தேவதைகளுக்கு மனத்தில் இடம் கொடுக்காமல் ஹனுமானையே வழிபடுவதனால், எல்லா வகையான சுகங்களும் கிடைக்கின்றன.

36. வீரம் மிகுந்த மாருதியை நினைக்கின்றவர்களுடைய எல்லாத் துன்பங்களும் அழிந்து போகின்றன. எல்லாக் கஷ்டங்களும் முடிவு பெற்றுவிடுகின்றன.

37. கருணைக்கடலாகிய இராமதூதனே! போற்றி! போற்றி! போற்றி! தாங்கள் கருணை மிகுந்த குருதேவரைப்போல, எமக்கு அருள்புரியுங்கள்.

38. எவரொருவர், இந்த ஹனுமான் சாலீஸாவை நூறு முறை படிக்கின்றாரோ, அவர் எல்லா பந்தங்களிலிருந்தும் விடுபடுகிறார். அவருக்குப் பரமானந்தம் கிடைக்கும்.

39. 'இந்த ஹனுமான் சாலீஸாவைப் படிப்பவருக்கு நிச்சயமாக வெற்றி கிடைக்கும்' என்பதற்கு கௌரீசங்கரரான ஸ்ரீபரமேசுவரனே சாட்சியாக இருக்கிறார்.

40. ஸ்ரீதுளசிதாசர் சொல்கிறார்— ஹே ஹனுமானே! ஸ்ரீசீதா–ராம–லட்சுமணர்களுடன் தாங்கள், ஸ்ரீராமனை அடைக்கலமாகக் கொண்டுள்ள என்னுடைய இதயத்தை, என்றும் உமது இருப்பிடமாகக் கொள்வீர்களாக!

தோஹா 3

தேவர்களுக்குத் தலைவரே! வாயுகுமாரரே! சங்கடங்களைத் தீர்ப்பவரே! மங்கள வடிவினரே! தாங்கள் ஸ்ரீசீதா–ராம–லட்சுமணர்களுடன் என்னுடைய இதயத்தில் வசிப்பீர்களாக!

கோஸ்வாமி ஸ்ரீதுளசிதாசர் அருளிய

'ஸ்ரீ ஹனுமான் சாலீஸா' (ஸ்ரீ அனுமன் நாற்பது) முற்றிற்று.

வெளியீடு : கீதா பிரஸ், கோரக்பூர் (உ.பி.)

ஸ்ரீ ஹனுமான் சாலீஸா (மூலம் – தமிழ் மூலம் – மொழிபெயர்ப்பு) (Code – 600)

† சத்திய யுகம், திரேதா யுகம், துவாபர யுகம், கலி யுகம்

II ஸ்ரீஹரி: II

ஸ்ரீமத் பாகவத மகாபுராணம்
(பத்தாவது ஸ்கந்தம்)
நாற்பத்தேழாவது அத்தியாயம்
பிரமர கீதம் (வண்டுகளின் இனிய கீதம்)

ஸ்ரீசுகர் கூறுகிறார்— முழந்தாள் வரை நீண்டு தொங்கும் திருக்கைகள், அன்றலர்ந்த தாமரை போன்ற திருக்கண்கள், இடையில் மஞ்சள் பட்டாடை, கழுத்தில் தாமரைப்பூமாலை, அழகிய தாமரை போன்ற திருமுகம், இரத்தினங்கள் பதித்து மின்னுகின்ற குண்டலங்கள், கண்ணனையொத்த திருவடிவம் – இவ்வாறு அழகான ஸ்ரீகிருஷ்ணனின் பக்தனான உத்தவரைக் கோபிகைகள் கண்டனர். [1]

''பார்ப்பதற்கு மிகவும் அழகாக சிரித்த முகத்துடன் விளங்கும் இவர் யார்? ஸ்ரீகிருஷ்ணனைப் போன்று திருவேடம், அலங்காரங்கள் பூண்டது ஏன்? எங்கிருந்து வருகிறார்? இவர் யாரைச் சேர்ந்தவர்?'' என்று [அவரைப் பற்றி முழுமையாக] அறிய விரும்பி புன்னகைத்த கோபிகைகள், உலகம் புகழ் கண்ணனது திருவடிகளில் அடிமைபூண்ட உத்தவரைச் சூழ்ந்து கொண்டனர். [2]

உத்தவர், ஸ்ரீகிருஷ்ணனிடமிருந்து செய்தி கொணர்ந்துள்ளதை அறிந்து, தனிமையில் வெட்கத்துடன் கூடிய புன்சிரிப்பும் இனிய பார்வையும் கொண்டு, இன்சொற்கள் கூறி வரவேற்று, உபசரித்து, ஆசனத்தில் அமர்த்தி, வணங்கி வினயமாக வினவினர். [3]

''இங்கு வந்துள்ள தாங்கள் யது நாதரான ஸ்ரீகிருஷ்ணனின் பக்தர் [சேவகர்] என அறிகிறோம். தங்கள் யஜமானர் ஸ்ரீகிருஷ்ணன் தன் பெற்றோர்களுக்குப் பிரியத்தைச் செய்ய விரும்பித் தங்களை அனுப்பினாரோ? [4]

அதுவன்றி கோகுலத்தில் அவர் நினைப்பதற்கு வேறு ஏதொன்றுமிருப்பதாக எங்களுக்குத் தோன்றவில்லை. உற்றாரிடம் கொண்ட அன்பின் பிணைப்பை முனிவராலும் விடமுடியாதல்லவா? [5]

தாம் நாடும் பொருளைப் பெற பிறரிடம் காட்டும் நட்பு – ஆண்கள் பெண்களிடம் வைப்பதுபோல், வண்டுகள் பூக்களிடம் வைப்பதுபோல் – காரியம் கைகூடும் வரைதான் தொடரும். [6]

கைப்பொருளற்ற ஏழையை வேசியும், ஆளும் திறமையற்ற அரசரை மக்களும், ஆசிரியரைக் கல்வி கற்று முடித்த மாணவரும், தக்ஷிணை தந்துவிட்ட யஜமானனை ருத்விக்குகளும், காய்ப்பு நின்ற மரத்தைப் பறவைகளும், உண்டபின் உண்ட வீட்டை அதிதியும், எரிந்த காட்டை விலங்குகளும், உண்மையில் அன்பு கொண்டிருப்பினும் தான் அனுபவித்த பெண்ணை ஜாரபுருஷனும் புறக்கணிப்பது, உலகின் வழக்கமேயன்றோ! [7,8]

ஸ்ரீகிருஷ்ணனின் தூதரான உத்தவர் கோகுலம் வந்தபோது, கோவிந்தனிடமே பேச்சும் உடலும் உள்ளமும் [மனோவாக்காயங்கள்] லயித்துவிட்ட கோபிகைகள், உலக நடைமுறைகளில் ஈடுபாடற்று இருந்தனர். குழந்தைப் பருவத்திலும், இளம்பருவத்திலும் ஸ்ரீகிருஷ்ணன் செய்த பிரியமான லீலைகளை நினைத்து நினைத்து பாடிக் கொண்டு வெட்கத்தைவிட்டு அழுது கொண்டிருந்தனர். [9,10]

ஒரு வண்டைக் கண்ட கோபிகை, ஸ்ரீகிருஷ்ணனுடன் இணைவதைப் பற்றியச் சிந்தனையில் கண்ணன், தன்னைச் சமாதானம் செய்ய, அதைத் தூதுவனாக அனுப்பியுள்ளதாகக் கற்பனை செய்து கொண்டு கூறலானாள். [11]

கோபிகை கூறுகிறாள்— வஞ்சகனுடன் உறவு கொண்ட வண்டே! கண்ணனது வனமாலை எங்கள் சக்களத்தியின் மார்பில் பட்டு கசங்கி அதில் நீ படிந்ததும், அங்குள்ள சிவந்த குங்குமம் உனது மீசைகளில் படிந்து காணப்படுகிறது. ஆகையால், நீ எங்கள் காலைத் தொடாதே. [வணங்குவதுபோல் பாசாங்கு செய்து, எங்களைச் சமாதானம் செய்ய முயலவேண்டாம்.] யாதவர்களின் தலைவனான

கிருஷ்ணன், மதுரை நகரப் பெண்டிர்களிடமே அன்பைச் செலுத்தட்டும். சபையிலுள்ள யாதவர்களும் அதைக் கண்டு ஏளனம் செய்யட்டும். நீ, ஒரே பூவையா காதலிக்கிறாய்? வெவ்வேறு பூக்களைத் தேடியலைகிறாயே! அதுபோலத்தான் கிருஷ்ணனும். அவனது தூதுவன் தானே நீயும். எங்கள் சக்களத்திகளின் மார்ப்புத்தட குங்குமப் பிரசாதம் கிருஷ்ணன் பக்கலிலேயே இருக்கட்டும். அதை ஒன்றும் எங்களுக்கு உன் மூலம் அனுப்ப வேண்டாம். [12]

உருவ நிறத்திலும், செயல்களிலும் உன்னைப் போன்றவன்தான் அவனும். நீயும் கறுப்பு, அவனும் கறுப்பு. நீ, பூவில் தேனை மட்டும் பருகிவிட்டு, பின் அதை விட்டுச் சென்று விடுகிறாயல்லவா? அப்படித்தான் கிருஷ்ணனும். உலகியலையே மறந்து மயங்கச் செய்யும் தன் திருக்கனிவாயமுதத்தை ஒரே ஒரு தரம் எங்களுக்கு அளித்துவிட்டு, உடனே நழுவிவிட்டான். என்ன இருந்தாலும் நாங்கள் நாகரீகம் அறியாத பாமரர்கள்தானே. [மதுரை நகரப் பெண்கள் நல்ல நாகரீகமுடையவர்கள். நாங்கள் அவ்வாறல்ல என்றுதானே நினைத்து, எங்களை விட்டுச் சென்றான், கண்ணன்.] இவ்வாறு சபல சித்தமுள்ள கிருஷ்ணனது திருவடிகளை ஸ்ரீலக்ஷ்மிதேவி எவ்வாறுதான் சேவிக்கிறாளோ? ஒருவேளை இவனது மனம் கவரும் கனிந்த வஞ்சப் புகழ்ச்சிச் சொற்களைக் கேட்டு மதிமயங்கியிருப்பாளோ? பாவம்! [13]

வண்டே! நாங்களோ வீடுவாசலற்ற காட்டுவாசிகள். எங்கள் எதிரே யதுக்களின் தலைவனான கிருஷ்ணனைப் பற்றியப் பழங்கதைகளை ஏன் வீணாகப் பாடுகிறாய்? அர்ஜுனனின் நண்பனான கிருஷ்ணனது நகரத்துப் பெண்களிடம் சென்று, அவனது வரலாற்றைப் பாடு. அதைக் கேட்டு தங்கள் மார்பகத்து வேதனை குறையவே, மகிழ்ந்த அவர்கள் நீ விரும்பியதை நிறைவுறச் செய்வார்கள். [14]

மனதைப் பற்றி இழுக்கும் கபடு நிறைந்த அவனது புன்சிரிப்பையும், புருவங்களின் நெளிவையும் கண்டு மயங்காத பெண்கள் விண்ணிலும் மண்ணிலும் பாதாள உலகிலும் [மூவுலகிலும்] இல்லை. அப்படியிருக்க, இந்தப் பெண்கள் எம்மாத்திரம்? ஏன்? ஸ்ரீலக்ஷ்மிதேவியே இவனது பாததூளியை வழிபடுகிறாளே! அந்நிலையில் எங்கள் நிலைதான் என்ன? எனினும், கஞ்சனை புகழ்மிக்க வள்ளல் என்பது தகுமா? ஏழைகளிடத்தில் அன்பு செலுத்துபவனைத்தானே 'உத்தமசுலோகன்' [அனைவரும் புகழ்பவன்] என்றழைக்கத்தகும்? [15]

உன் காலை, எனது தலையில் வைக்காதே, அதை எடு. கிருஷ்ணனிடமிருந்து இங்கு தூது வந்து அழகாக இனிய சொற்களைப் பேசி, கிருஷ்ணன் பக்கம் சாரும்படி சமாதானம் செய்யத் தெரிந்த உன்னை நான் நன்கறிவேன். அவனுக்காகப் பிள்ளைகளையும் கணவரையும் மற்ற உறவினரையும் விட்டு வந்த எங்களைப் பற்றிச் சிறிதும் சிந்தியாது நன்றி மறந்து கைவிட்டானே [கண்ணன்]. இனியும் அவனை நம்பி நாங்கள் [ஸந்தி] நட்பு கொள்ள வேண்டுமா? நீயே சொல்! [16]

ஊன் உண்ண மானைக் கொல்கிற வேடனைப்போல் [ஸ்ரீராமாவதாரத்தில்] வானரர்களின் அரசனான வாலியைக் கொன்றான். பெண்ணிற்கு [சீதைக்கு] அடிமையாகித் தன்னை விரும்பிக் காதலித்து வந்த மற்றொரு பெண்ணான சூர்ப்பணகையை அலங்கோலமாக்கினான். பலிச் சக்கரவர்த்தி அளித்த பூஜையை ஏற்று, பின்னர் அவனையே காக்கையைப்போல் [காக்கைத் தன் இனத்தாரையும் கரைந்தழைத்து, தனக்கு உணவு வைத்தவனைச் சுற்றிச் சுற்றி வந்து தொந்தரவு தருவதுபோல்] [வருணபாசத்தால்] கட்டினான். இந்தக் கறுப்பனின் நட்பு போதுமப்பா! 'அப்படியிருக்க ஏன் அவனைப் பற்றியே நினைக்கிறீர்கள்?' என்று கேட்கிறாயா? உண்மையைக் கூறுவதானால் அவனது திருவிளையாடல்களைக் கேட்டு மனம் பறிகொடுத்தவளுக்கு, அவனைப் பற்றிச் சொல்லாமல் இருக்க முடியாது. அதனால்தான் விட முடியவில்லை. [17]

அந்த கிருஷ்ணனின் திருவிளையாடல்களைக் காது குளிரக் கேட்டு, அதன் அமுதத் துளிகளை ஒரு தடவை பருகிய மக்கள், சுகம்—துக்கம் போன்ற துவந்துவ பாதிப்பு [இருமை] நீங்கித் தன்னையே இழந்து, தன்னை நம்பியுள்ள இரங்கத்தக்க வீடுவாசல்களையும் குடும்பத்தையும் துறந்து தாமும் இரங்கத்தக்கவராகி பறவைகள் போல் நிலைகொள்ளாமல் சுற்றித் திரிந்து, உயிரைக் காக்க கரதல பிச்சையேற்றுத் துறவிகளாக இருந்தும், கிருஷ்ணனது திருவிளையாடல்களை மறக்க முடியாமல் இருக்கின்றனர். [18]

தூதுவரே! அறிவற்ற பெண்மான்கள் வேடனது பாட்டை உண்மை என நம்பி, அவன் அம்பால் அடிபட்டுச் சாவதுபோல், நாங்களும் அடிக்கடி அவனது கபடப் பேச்சைக் கேட்டு உண்மையான அன்புடன் பேசுவதாக நம்பி, அவனது நகம் பட்டதால் காம உணர்வு அதிகமாகி இப்பொழுது துன்புறுகிறோம். ஆகையால், இனி பேசுவதானால் அவனைப் பற்றிப் பேசாது, வேறு பேச்சு பேசுங்கள். [19]

எங்கள் அன்பனான கண்ணனின் தோழனே! எங்களது பேரன்புக்குரிய கண்ணனால் அனுப்பப் பெற்று, இங்கு மறுபடியும் திரும்பி வந்தாயா? ஐயனே! நீ மதிப்புக்குரியவன். என்ன வேண்டும்? கேள் [தருகிறோம்]. நல்லவனே! ஸ்ரீலக்ஷ்மியென்ற பெண் எப்போதும் அவரது திருமார்பிலேயே நகராமல் இருக்கிறாளே. அவளை விட்டுப் பிரிந்திருக்க முடியாத அவரிடம் எங்களை எப்படித்தான் அழைத்துச் செல்வாயோ? [20]

நல்மனமுடைய ஏ வண்டே! அது சரி! எங்கள் இனியனான கண்ணன் இப்போது மதுரையில்தான் இருக்கிறாரா? அவர் தன் பெற்றோரையும் உற்றாரையும் உறவினர்களான கோபரையும் நினைக்கிறாரா? அவர் அடிமைகளான எங்களைப் பற்றி எப்போதாவது பேசுவதுண்டா? அகிலின் நறுமணம் கொண்ட திருக்கரத்தை எங்கள் தலைமீது எப்போதாவது வைப்பாரா? [21]

ஸ்ரீசுகர் கூறுகிறார்— இவ்வாறு கோபிகைகள் கூறியதைக் கேட்ட உத்தவர், ஸ்ரீகிருஷ்ணன் அன்புடன் சொன்ன செய்திகளைக் கூறி, ஸ்ரீகிருஷ்ணனைக் காணப் பேராவல் கொண்ட கோபிகைகளைச் சமாதானப்படுத்திப் பின்வருமாறு கூறினார். [22]

உத்தவர் கூறுகிறார்— ஆகா! இவ்வாறு உங்கள் மனம் பகவானான ஸ்ரீகிருஷ்ணனிடம் மட்டுமே தனித்து அர்ப்பணம் செய்யப்பட்டுள்ளதே. நீங்களன்றோ கிடைத்தற்கரிய பேறுபெற்றவர்கள். உலகமெல்லாம் உங்களைப் பாராட்டுவதில் என்ன ஆச்சரியம்? [23]

தானம், விரதம், தவம், ஹோமம், ஜபம், வேதமோதுதல், புலனடக்கம் என்று பற்பல மேன்மை தரும் நியமங்களால் ஸ்ரீகிருஷ்ணனிடம் பக்தி பெறப்படுகிறது. [24]

அஞ்ஞானத்தை அகற்றும் பெருமையுடைய பகவானிடம், முனிவர்களாலும் எளிதில் பெற இயலாத மிகச் சிறந்த பக்தியை, நீங்கள் கொண்டுள்ளீர்கள். அதுவே உங்கள் பாக்கியம்! [25]

மனைவி–மக்கள், கணவர், உடல், உற்றார்–உறவினர், வீடு–வாசல் என்ற பாசங்களைத் துறந்து, ஸ்ரீகிருஷ்ணன் என்ற பரமபுருஷனை விரும்பி அடைந்துள்ளீர்கள் என்பதே பெரும்பேறு! [26]

எவராலும் எவ்வகையிலும் அடைதற்கரிய பெரும்பேறு பெற்ற கோபிகைகளே! மனம், சொல், உடல் என்ற முக்காரணங்களாலும் நீங்கள் கண்ணன் ஒருவரிடமே தனித்த பக்தி கொண்டிருக்கிறீர்களே! ஆகா! அவரை விட்டுப் பிரிந்த விரகதாபத்தால் எங்கும் எதிலும் கண்ணனையே கண்டீர்களே! [ஸர்வாத்மபாவம்]. [கண்ணன், உங்களது விரகதாபத்தைப் போக்க, என்னை இங்கே அனுப்பினார்.] இப்பொழுது உங்களைக் கண்ட எனக்கு, உண்மையில் கண்ணன் பேரருள் செய்துள்ளார். ஏனெனில், உங்களது விரகதாபத்தைக் கண்டு எனக்கும் எங்கும் எதிலும் கண்ணனைக் காணும் பெரும்பேறு கிடைத்துவிட்டது. [27]

நன்மனம் படைத்தவர்களே! நான் என் நாதனின் ரகசியப் பணியாளன். உங்களுக்கு இன்பமளிக்கும் அன்பனின் அன்புச் செய்தியை, இங்கு கொண்டு வந்திருக்கிறேன். அதனைக் கேளுங்கள். [28]

ஸ்ரீபகவான் கூறுகிறார்— எங்கும் எதிலும் நீக்கமற நிறைந்துள்ள நான், அனைத்திற்கும் உபாதான காரணன் [மூலகாரணன்]. ஆகவே, உங்களிடமிருந்து முழு அளவில் நான் பிரிந்திருப்பது என்பது எப்போதும் இயலாததொன்றே. ஆகாசம், வாயு, அக்னி, ஜலம், பூமி என்ற பூதங்கள் அசைவன–அசையாதன என அனைத்திலும் எவ்வாறு பரவியுள்ளனவோ, அவ்வாறே மனம், பிராணன், பஞ்ச பூதங்கள், இந்திரியங்கள், அவற்றின் புலன்களான சப்தம், ஸ்பரிசம் முதலிய அனைத்திலும் ஆதாரமாகப் பரவியுள்ளேன். [29]

நானே, என் மாயாசக்தியின் பெருமையால் வேறு ஸாதனமின்றி என்னையே ஐந்து பூதங்கள், இந்திரியங்கள், அவற்றின் தனித்த ஆற்றலாகிய சப்தம் முதலியனவாக ஆக்கி, அவற்றைக் காத்து, அழித்து, என்னிடமே ஒடுக்கிக் கொள்கிறேன். [30]

ஆத்மா, பேருணர்வே வடிவானவன்; ஆகையால், குணம் மற்றும் செயல்களிலிருந்து வேறுபட்டவன்; சத்துவம் முதலிய குணங்களுடன் கலவாதவன்; ஆகவே தூயவன். மாயையின் விளைவான விழிப்பு, கனவு, ஆழ்ந்த தூக்கம் என்ற மூன்று நிலைகளிலும் விச்வன், தைஜஸன், பிராஜ்ஞன் என வெவ்வேறு வடிவில் காணப்படுகிறான். [31]

தூங்கி எழுந்தவன் கனவில் கண்டதைப் பொய்யென நினைப்பது போலவே, நனவில் புலன்நுகர் பொருட்களைப் பொய்யென உணர்ந்து உண்மைப் பொருளை அறியவேண்டும். புலன்நுகர் பொருட்களையே எண்ணும் மனதைச் சோர்வின்றிக் கட்டுப்படுத்தி, எனது உண்மை நிலையை உணரவேண்டும். [32]

ஆறுகளுக்குக் கடலை அடைவது முக்கிய நோக்கம். அதுபோல் வேதமோதுதல், அஷ்டாங்க யோகம், அறிஞர்களுடன் 'ஆன்மா எது? அல்லாதது எது?' என்கிற தத்துவ விசாரம்–பற்றற்றுத் துறவு கொள்வது–தவம் செய்தல்–புலனடக்கம் என்பதெல்லாம், என் உண்மை நிலையை அறிவது என்பதையே நோக்கமாகக் கொண்டவை. மனவடக்கமே இதற்கு ஒரே வழி. [33]

உங்கள் கண்களுக்கு இன்பம் தருகிற நான், இன்று வெகுதூரத்தில் சென்றிருப்பதன் நோக்கம், என்னையே தொடர்ந்து நினைப்பதில் உங்களை ஆர்வம் கொள்ளச் செய்து, மனத்தளவில் என்னையே நெருங்கி நிற்பதற்காகவே. [34]

பெண்கள் மனம், தம் மனத்திற்கினியவன் தூரத்திலிருக்கும்போது அவனையே நினைந்து நினைந்து முழுவதுமாகப் பரவி நிற்கும். ஆனால், கண்களுக்குப் புலப்படும்படி அருகில் இருப்பின் மனம் அவ்வாறு முழுவதுமாகப் பதியாது. [35]

மற்ற வெளிப்பொருட்கள் அனைத்திலும் நாட்டத்தைவிட்டு, மனதை முழுவதுமாக என்னிடமே செலுத்தி, இடைவிடாமல் என்னையே தொடர்ந்து நினைத்து வந்தால் விரைவிலேயே என்னை அடைவீர்கள். [36]

மங்களமானவர்களே! இதே பிருந்தாவனத்தில் சரத்கால பௌர்ணமி இரவில் ராஸலீலை புரிந்த என்னுடன், ராஸத்தில் பங்கு கொள்ள இயலாதபடி சில கோபிகைகள் கோகுலத்திலேயே தடுக்கப்பட்டு நிற்க நேரிட்டதல்லவா? அவர்கள் எனது திருவிளையாடல்களைத் தொடர்ந்து தியானித்தே என்னை அடைந்தார்கள். [37]

ஸ்ரீசுகர் கூறுகிறார்— இவ்வாறு அன்புக்கினிய ஸ்ரீகிருஷ்ணன் அனுப்பிய செய்தியைக் கேட்ட கோபியர், அந்தச் செய்தியால் அவரது திருவிளையாடல்களை நினைவுகூர்ந்து, துயர் நீங்கி மகிழ்ச்சியுற்று உத்தவரிடம் பின்வருமாறு கூறினார்கள். [38]

கோபியர்கள் கூறினார்கள்— "நல்லவேளையாக, யாதவர்களுக்குக் கெடுதி செய்த கம்சன் துணைவர்களுடன் கொல்லப்பட்டான். விருப்பமனைத்தும் நிறைவுற்ற உற்றார்–உறவினர்களுடன் இருக்கும் ஸ்ரீகிருஷ்ணன், இப்போது நலமுடன்தானே இருக்கிறார்? [39]

உத்தவரே! ஸ்ரீகிருஷ்ணனை நாங்கள் அன்பு நிறைந்து வெள்கிய புன்சிரிப்பும், அழகான கடைக்கண் பார்வையும் கொண்டு சேவித்தோம். அவரும் தன் அழகான பார்வை, புன்சிரிப்பினால் எங்களை மகிழ்வித்தார். அதேபோல், மதுரை நகரப் பெண்மணிகளையும் மகிழ்விக்கிறாரா? [40]

ஸ்ரீகிருஷ்ணன், மனதைக் கவர்ந்திழுக்கும் ரதிவிலாஸங்களை [ஆனந்தம் அளிக்கும் கலையை] நன்கறிந்தவர். மேலும், மதுரை நகரப் பெண்மணிகளுக்கு மிகவும் பிரியமானவர். நகரத்துப் பெண்மணிகளின் இனிய பேச்சுக்களையும், அவர்களது அழகிய சேட்டைகளையும் கண்டு, அவர்களிடமே மனம் லயித்திருப்பார். [41]

பெரியவரே! நகரத்துப் பெண்கள் கூட்டத்தின் இடையே விருப்பப்படி பேசிக் கொண்டிருக்கும் போதோ, அல்லது வேறு சமயத்திலாவது கண்ணன் கிராமத்துப் பெண்களான எங்களைப் பற்றி நினைப்பதுண்டா? [42]

தேவர்களும் துதிக்கும் மனங்கவர் திருவிளையாடல்கள் புரியும் கண்ணன், அன்று பிருந்தாவனத்தில் ஆம்பலும் அல்லியும் குந்த மலர்களும் பூத்து, பௌர்ணமி முழுநிலவால் அழகு மிளிர்ந்திருந்த இரவில்

காற்சதங்கைகள் ஒலிக்க ஆடிய ராஸ விளையாட்டில் அன்பர்களான எங்களுடன், நேரத்தை இனிதே கழித்தார். அந்த நல்லிரவுகளை எப்பொழுதாவது அவர் நினைத்துப் பார்க்கிறாரா? [43]

கண்ணன், தன் பிரிவாற்றாமையால் தவிக்கிற எங்களை, இந்திரன், மேகங்களால் மழை பெய்யச் செய்து உலர்ந்த காட்டை வாழ வைப்பதுபோல், தன் திருமேனி அழகால் வாழ வைக்க இங்கு வருவாரா? பகைவர்களை அழித்து அரசும் பெற்று, நண்பர்கள் சூழ அரசகுமாரிகளை மணந்து, அதனால் மகிழ்ச்சியோடு உள்ள ஸ்ரீகிருஷ்ணன் இங்கு எதற்காக வரப்போகிறார்? [44,45]

அவர் திருமகளின் மணவாளன்; பெறவேண்டியது அனைத்தையும் பெற்றவர்; செய்யவேண்டியது அனைத்தையும் செய்து முடித்தவர்; அனைவரின் விருப்பத்தையும் நிறைவேற்றுபவர். அவருக்குக் காட்டுவாசிகளான எங்களாலோ, எங்களைப் போன்ற அரசகுமாரிகளாலோ ஆகவேண்டியதுதான் என்ன உள்ளது? [46]

பற்றற்றிருப்பதே பேரின்பம் [ஆசை அழிவிற்கு வித்து] என்று, வேசி பிங்களை கூறியிருக்கிறாள். அதை நன்கறிந்திருந்தும், ஸ்ரீகிருஷ்ணனிடம் எங்களுக்கு ஆசையை விட இயலவில்லையே. [47]

அவர் விரும்பாவிடினும் ஸ்ரீலக்ஷ்மி அவரது மார்பிலிருந்து அகலுவதில்லை. அப்படியிருக்க, பெரியோர்கள் கொண்டாடும் அத்தகைய கண்ணனின் கனிந்த இனிய பேச்சுக்களை விடுவதற்கு யாருக்குத்தான் மனம் வரும்? [48]

பிரபுவே! பலராமனுடன் ஸ்ரீலக்ஷ்மிதேவிக்கு இருப்பிடமான ஸ்ரீகிருஷ்ணனது திருவடிகள் சுற்றிச்சுற்றி வந்த இந்த ஆறுகளும் மலைகளும் காட்டுப் பிரதேசங்களும் பசுக்களும் வேணுநாதமும் நந்தகோபரின் புதல்வனான கண்ணனை அடிக்கடி நினைவூட்டுகின்றன. அதை எம்மால் மறக்க இயலவில்லையே! [49,50]

உத்தவரே! பெருமிதத்துடன் கூடிய நடை, மென்மையும் அழகும் மிக்க வெளிறிய புன்சிரிப்பு, விளையாட்டுப் பார்வை, தேனினும் இனிய பேச்சு என இவற்றால் அறிவிழந்த நாங்கள், அவரை எப்படி மறப்போம்? ஏ நாதா! ஏ திருமகள் கேள்வனே! கோகுலத்தின் நாதனே! துயர் தீர்க்கும் கோவிந்தா! [உன்னைவிட்டுப் பிரிந்து] துயரக் கடலில் ஆழ்ந்து மூழ்கிய எங்களைக் கரையேற்றுங்கள்.'' [51,52]

ஸ்ரீசுகர் கூறுகிறார்— இவ்வாறு கூறிய அந்த கோபிகைகள் ஸ்ரீகிருஷ்ணனது செய்தி கேட்டு, புலன்களுக்கு உட்படாத ஆத்மா அவரே என உணர்ந்து [ஆத்மா என உணர்ந்து = ஸர்வ அந்தர்யாமியாக [நம்முள்ளேயே] அருகில் இருப்பவர் என உணர்ந்து], அவரது பிரிவின் துயரகன்று, உத்தவரைப் பாராட்டிப் பெருமைப்படுத்தினர். [53]

உத்தவர், ஸ்ரீகிருஷ்ணலீலையைப் பற்றியச் செய்திகளைப் பாடி, அதனால் கோபிகைகளின் துயரை நீக்கி, கோகுலத்தை மகிழ்ச்சி கொள்ளச் செய்து, சில மாதங்கள் அங்கேயே தங்கியிருந்தார். [54]

உத்தவர் நந்த கோகுலத்தில் வசித்த நாட்கள் முழுவதும் ஸ்ரீகிருஷ்ணனைப் பற்றிய இனிய பேச்சுக்களால் கோகுலவாசிகளுக்கு ஒரு நொடிப்பொழுதாகக் கழிந்தது. [55]

ஸ்ரீஹரி பக்தரான உத்தவர், ஆறுகளையும் மலைகளையும் பள்ளத்தாக்குகளையும் பூத்துக்குலுங்கும் மரங்களையும் கண்டு களித்து, கோகுலவாசிகளுக்குக் கண்ணனையே நினைத்திருக்குமாறு நினைவூட்டிக் கொண்டு பொழுதுபோக்கினார். [56]

ஸ்ரீகிருஷ்ணனிடமே மனதைப் பதித்த கோபியர்கள் படும் ஆற்றாமையையும், அவர்களது பக்தியின் முதிர்ச்சியையும் கண்டு மகிழ்ந்த உத்தவர், அவர்களை வணங்கிப் பின்வருமாறு கூறினார்— [57]

அனைத்து ஜீவன்களிலும் ஆன்மாவாக விளங்கும் ஸ்ரீகிருஷ்ணனிடத்திலேயே, அசைவற்ற பிரேம பக்தி தங்களுக்கு வேருன்றி இருக்க வேண்டுமென உலகியலைக் கண்டு பயந்து நடுங்கும் முமுக்ஷுக்களும் முனிவர்களும் பக்தர்களான நாங்களும் விரும்பி வேண்டுகின்றோம். [அப்படியிருக்க,] அவ்வாறான அசைவற்ற பிரேம பக்தியைக் கொண்ட இந்த கோபிகைகளன்றோ உண்மையில் இவ்வுலகில் உடல் பெற்ற பயனைப் பெற்றவர்கள். [ஸ்ரீபகவானது திருவிளையாடல்களின் கதையமுதத்தைப் பருகியவனுக்கு நற்குடிப்பிறப்பு (ஸௌக்லம்), அந்தணர்களுக்குரிய உபநயனம் முதலிய சடங்குகள் (ஸாவித்ரம்), பெரிய பெரிய வேள்விகளை நடத்தும் யஜமானன் தீக்ஷிதர் (யாஞ்ஞிகம்) என்கிற மூன்றுவிதமான பெருமைகளால் யாது பயன்? பகவானது கதையமுதத்தின்

மீது பற்றோ அல்லது அதைப் பருகும் பேற்றினையோ கிடைக்கப் பெறாத ஒருவனுக்கு, பற்பல கல்பங்கள்தோறும் பிரும்ம பதவி கிடைத்துத்தான் என்ன பயன்?] [பன்முறை பிரும்மதேவரின் பதவி கிடைப்பினும் பகவத் பக்தி இல்லையேல், அவனது பிறவி வீணே.] [58]

ஆசார அனுஷ்டானங்களற்ற, அறிவற்ற, இழிபிறப்பினரான இந்த இடைச்சாதி பெண்கள் எங்கே? பரமாத்மாவான கண்ணனிடத்தில் கொண்ட அசைவற்ற அன்புக்காதல் எங்கே? இறைவனைப் பற்றிய உண்மையை உணராதிருந்தும் அவரிடமே காதல் கொண்டு பக்தி செய்பவனுக்கு, இறைவன் நன்மைகளையே செய்கிறான். அமுதமென்றறியாதிருந்தும் அருந்தியவனுக்கு அது நன்மையே செய்கிறதன்றோ! [59]

ராஸக்ரீடையில் ஸ்ரீகிருஷ்ணனது நீண்ட திருக்கைகளால் கழுத்தில் அணைக்கப் பெற்று விரும்பியதனைத்தையும் பெற்ற கோகுல ஸ்திரீகள் பெற்ற அருளை, தாமரை போன்ற மணமும் அழகும் பெற்ற தேவமாதர்களோ, திருமார்பிலேயே எப்போதும் வசிக்கிற ஸ்ரீமஹாலக்ஷ்மியோ கூடப் பெறவில்லையே? எனில், மற்றப் பெண்களைப் பற்றிச் சொல்ல என்ன இருக்கிறது? [60]

இழக்க இயலாத சுற்றத்தையும், நல்லோரின் அறநெறிகளையும் கைநழுவவிட்ட கோபிகைகள், வேதங்கள் தேடிக் காணக் கிடைக்காத ஸ்ரீகிருஷ்ணனின் பதவியை [பக்தியை] அடைந்தனர். அவர்களது திருவடித்துகள்களைப் பெறுகிற பாக்கியம் பெற்ற பிருந்தாவனத்தில் புல், புதர், செடி, கொடி – இவற்றில் ஏதேனும் ஒன்றாக நான் ஆகக் கூடாதா? [61]

ஸ்ரீமஹாலக்ஷ்மியாலும், விரும்பியதனைத்தையும் பெற்ற பிரும்மா முதலானோராலும், யோகீசுவரர்களாலும் தங்கள் இதயத்தினுள் வைத்து வழிபடப் பெற்ற ஸ்ரீகிருஷ்ணனின் திருவடித்தாமரைகளை, ராஸகோஷ்டியில் தங்கள் மார்பகத்தின் மீது வைத்து அணைத்து, தங்கள் மனக்குறைகளை முற்றிலுமாகப் போக்கிக் கொண்டவர்களன்றோ, இந்தக் கோபியர்கள்! [62]

ஸ்ரீகிருஷ்ண லீலை பற்றிய நந்தகோகுலத்துப் பெண்மணிகளின் கானம், மூவுலகையும் புனிதமாக்குகிறது. அவர்களின் திருவடித்துகள்களை அடிக்கடி நான் வணங்குகிறேன். [63]

ஸ்ரீசுகர் கூறுகிறார்— பிறகு, தாசார்ஹ வம்சத்திலுதித்த உத்தவர் கோகுலத்திலிருந்து கிளம்பும் போது, கோபிகைகளிடமும் யசோதையிடமும் நந்தரிடமும் கோபர்களிடமும் விடைபெற்றுத் தேரில் ஏறினார். அவர் கிளம்புவதைக் கண்ட நந்தர் முதலானோர் [வெண்ணெய் முதலான] பற்பல காணிக்கைகளைக் கைகளில் ஏந்தி, கண்ணீர் மல்க அவரருகே சென்று அன்புடன் சொன்னார்கள்— [64,65]

''[உத்தவரே!] எங்கள் எண்ணங்கள் [மனது] ஸ்ரீகிருஷ்ணனின் திருவடிகளைப் பற்றியதாகவே இருக்கட்டும். வாய் [வாக்கு] அவரது திருநாமங்களைக் கூறிக் கொண்டிருக்கட்டும். உடல் [காயம்] அவரையே வணங்கிக் கொண்டிருக்கட்டும். [66]

வினைப்பயனால் பகவானது விருப்பத்திற்கேற்ப பல்வேறு பிறவிகள் எடுத்துச் சுழன்று கொண்டிருக்கும் நிலையிலும், அவரது அருளால் புரியும் நற்பணிகள், தானங்கள் ஆகியவற்றினால் யாம் வேண்டும் பயன் ஈசுவரனான ஸ்ரீகிருஷ்ணனிடம் பக்தி ஒன்றே.'' [67]

அரசே! ஸ்ரீகிருஷ்ணனிடம் கொண்ட பக்தியால் கோபர்கள் உத்தவரை இவ்வாறு நன்கு உபசரித்தனர். அவரும் ஸ்ரீகிருஷ்ணன் பரிபாலிக்கும் மதுரைக்குத் திரும்ப வந்தார். [68]

[பின்னர்,] ஸ்ரீகிருஷ்ணனைக் கண்டு வணங்கி, கோகுலவாசிகள் அவரிடம் கொண்டுள்ள பக்தியின் சிறப்பைக் கூறி வியந்தார். வசுதேவருக்கும் பலராமனுக்கும் அரசரான உக்ரஸேனருக்கும் கோபர்கள் அளித்த காணிக்கைகளை அளித்தார். [69]

ஸ்ரீமத் பாகவத மகாபுராணம், பத்தாவது ஸ்கந்தத்தில்
நாற்பத்தேழாவது அத்தியாயம் முற்றிற்று.

॥ ஸ்ரீஹரி: ॥

கீதா பிரஸ்ஸின் வெளியீடுகள்

பாராயண நூல்கள்

	Code	பக்கங்கள்	
1.	743	256	ஸ்ரீமத் பகவத்கீதா மூலம் [ஸம்ஸ்கிருதம்–தமிழ்]
2.	793	256	ஸ்ரீமத் பகவத்கீதா – தமிழ் மூலம் & விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் – தமிழ் மூலம்
3.	795	128	ஸ்ரீமத் பகவத்கீதா – பொழிப்புரை
4.	1918	320	ஸ்ரீமத் பகவத்கீதை [தமிழ் மூலம் – பொழிப்புரை] [கையடக்கப் பிரதி]
5.	800	1024	ஸ்ரீமத் பகவத்கீதா–தத்வவிவேசனீ – [மூலம் (ஸம்ஸ்கிருதம்–தமிழ்) – பதவுரை–பொழிப்புரை–விளக்கவுரை]
6.	823	288	ஸ்ரீமத் பகவத்கீதா – [மூலம் (ஸம்ஸ்கிருதம்–தமிழ்) – பதவுரை–பொழிப்புரை]
7.	1426	1112	ஸ்ரீமத் பகவத்கீதா – ஸாதக ஸஞ்ஜீவநீ – [மூலம் (ஸம்ஸ்கிருதம்–தமிழ்) – பதவுரை–விளக்கவுரை] [1 முதல் 9 அத்தியாயங்கள்]
8.	1427	928	[10 முதல் 18 அத்தியாயங்கள்]
9.	389	236	கீதா மாதுர்யம் [ஸ்ரீமத் பகவத்கீதா – வினா-விடை]
10.	600	64	ஸ்ரீஹநுமாந் சாலீஸா – [மூலம் (ஹிந்தி–தமிழ்) – மொழிபெயர்ப்பு]
11.	794	64	விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் – தமிழ் மூலம்
12.	1256	336	அத்யாத்ம ராமாயணம் – தமிழ் மொழிபெயர்ப்பு
13.	1606	304	ஸ்ரீமந் நாராயணீயம் – தமிழ் மூலம்–விளக்கவுரை
14.	1534	432	சுந்தர காண்டம் – ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் [தமிழ் – மொழிபெயர்ப்பு]
15.	1890	304	கம்ப ராமாயணம் – சுந்தர காண்டம் [பாடல்கள்]
16.	1618	328	சுந்தர காண்டம் [ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்] – பொழிப்புரை
17.	1788	112	ஸ்ரீ முருகன் துதிமாலை [தோத்திரத் தொகுப்பு]
18.	1789	160	திருப்பாவை விளக்கம்
19.	1912	112	விரத கல்ப த்ரயம் [பூஜை முறைகளும், கதைகளும்]

ஸ்ரீமத் பாகவத மகாபுராணம் [தமிழ் மூலம் – விளக்கவுரை]

20.	—	832	முதல் பாகம் – [ஒன்று முதல் நான்காவது ஸ்கந்தம் வரை]
21.	—	768	இரண்டாவது பாகம் – [ஐந்து முதல் ஒன்பதாது ஸ்கந்தம் வரை]
22.	—	1024	மூன்றாவது பாகம் – [பத்து முதல் பன்னிரண்டாவது ஸ்கந்தம் வரை]

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் [தமிழ் மூலம் – மொழிபெயர்ப்பு]

23.	1902	1056	முதல் பாகம் – [பால காண்டம் – அயோத்தியா காண்டம்]
24.	1903	768	இரண்டாவது பாகம் – [ஆரண்ய காண்டம் – கிஷ்கிந்தா காண்டம்]
25.	1904	464	மூன்றாவது பாகம் – [சுந்தர காண்டம்]
26.	1905	864	நான்காவது பாகம் – [யுத்த காண்டம்]
27.	1906	512	ஐந்தாவது பாகம் – [உத்தர காண்டம்]

அறிவுரை நல்கும் நூல்கள்

28.	127	96	பயனுள்ள கதைகள்
29.	365	96	பசுப் பராமரிப்பின் நற்பயன்கள் – கதைகள்
30.	423	64	கர்ம ரஹஸ்யம்
31.	466	64	ஸத்ஸங்கத்தின் ஸாரமான தத்துவங்கள்

	Code	பக்கங்கள்	
32.	499	32	நாரத பக்தி ஸூத்ரம்
33.	536	72	கீதை கற்பதன் பயன்கள்
34.	550	64	திருநாமஜபத்தின் மஹிமை
35.	551	64	தூய்மையான உணவுப் பழக்கம்
36.	553	192	குடும்பத்தில் எப்படி இருக்க வேண்டும்? [1,20,000 பிரதிகள் விற்பனை]
37.	568	88	சரணாகதி
38.	569	64	உருவ வழிபாடு
39.	591	128	மஹாபாவத்திலிருந்து உன்னைக் காத்துக் கொள்
40.	601	96	பகவான் ஸ்ரீகிருஷ்ணன்
41.	606	32	மிக உயர்ந்த நிலையை அடைவதற்கான வழி
42.	607	32	எல்லோருக்கும் மேன்மை எப்படி ஏற்படும்?
43.	608	96	பக்தராஜ ஹனுமான்
44.	609	32	ஸாவித்ரி–ஸத்யவான் [கதைப் பகுதி]
45.	642	96	ஸ்ரீகிருஷ்ணனின் நண்பரான உத்தவரின் கதை
46.	643	96	பகவான் உறையும் ஐந்து இடங்கள்
47.	644	64	சுசீலா – ஓர் லக்ஷ்யப் பெண்மணி
48.	645	96	நள–தமயந்தி [கதைப் பகுதி]
49.	646	96	பல்சுவைக் கதைகள்
50.	655	112	ஒன்றே செய்மின்! நன்றே செய்வீர்!!
51.	741	64	மஹாத்மா விதுரர்
52.	792	48	முக்கியமான எச்சரிக்கை
53.	805	32	தாய்மையின் அவல நிலை
54.	850	128	மஹான்களுடைய அமுத மொழிகள்
55.	952	128	மஹான்களின் மணிமொழிகள்
56.	953	128	மஹான்களின் சீரிய உபதேசம்
57.	1110	128	ஆயிரம் அமுதத் துளிகள்
58.	1134	64	கீதையின் பெருமையை விளக்கும் கதைகள்
59.	1243	125	உண்மையான சுகம்
60.	1246	96	பக்த சரித்திரம்
61.	1289	80	ஸாதனை நெறி
62.	1353	176	ராமாயணத்தில் சில முக்கிய பாத்திரங்கள்
63.	1354	160	மஹாபாரதத்தில் சில முக்கிய பாத்திரங்கள்
64.	1480	144	செயல்கள் அனைத்தும் பகவானுக்கே
65.	1481	144	பகவானை நேரில் காண்பதற்கான வழி
66.	1482	144	பக்தியோகத்தின் பெருமை

Shri Hari

Some of Our English Publications

Parayana Books

Code No.	
457	**Shrimad Bhagavadgita – Tattvavivechani** With Sanskrit text, Translation and Deatiled Commentary [By Jayadayal Goyandka]
1080 / 1081	**Shrimad Bhagavadgita – Sadhaka Sanjivani** [With Sanskrit text, Transliteration, Translation and Detailed Commentary] Set of two volumes [By Swami Ramsukhdas]
455	**Shrimad Bhagavadgita** [Sanskrit Text and English Translation] Pocket Size
534	**Shrimad Bhagavadgita** [Sanskrit Text and English Translation] [Hard Bounds Edition] Pocket Size
1658	**Shrimad Bhagavadgita** – Roman Gita [Sanskrit Text, Transliteration and English Translation]
1411	**Shrimad Bhagavadgita** – Roman Gita [Sanskrit Text, Transliteration and English Translation] Book Size
1584	**Shrimad Bhagavadgita** – Roman Gita [Sanskrit Text, Transliteration and English Translation] Pocket Size
487	**Gita Madhurya**
452 / 453	**Shrimad Valmiki-Ramayana** [With Sanskrit Text and English Translation] Set of two volumes
786	**Shri Ramacharitamanasa** (Medium Size]
456	**Shri Ramacharitamanasa** [With Hindi Text and English Translation]
1318	**Shri Ramacharitamanasa** [With Hindi Text Transliteration, Roman Transliteration and English Translation]
1617	**Shri Ramacharitamanasa** [A Romanized Edition with English Translation]
1550	**Shri Ramacharitamanasa – Sundara Kanda** (Roman)
1643	**Ramaraksastatram**
564 / 565	**Shrimad Bhagavata Mahapuranam** [With Sanskrit Text and English Translation] Set of two volumes
1159 / 1160	**Shrimad Bhagavata Mahapuranam** [English Translation only] Set of two volumes
1528	**Hanuman Chalisa** (Roman) (Pocket Size)
1638	**Sri Hanuman Chalisa**
1406	**Gita Madhurya**
824	**Songs from Bhartrhari**

Our Monthly Publications :-

	Subscription
KALYAN (HINDI)	170/- PER YEAR
KALYAN KALPATHARU (ENGLISH)	100/- PER YEAR

(Rates are subject to change)

website : **www.gitapress.org** | e-mail : **booksales @ gitapress.org**

॥ ஓம் ஸ்ரீபரமாத்மநே நம: ॥



மறையவர் வாழி! வேத மனுநெறி வாழி! நன்னூல்
முறை செயும் அரக்கர், திங்கள் மும் மழை, வாழி! மெய்ம்மை
இறையவன் இராமன் வாழி! இக் கதை கேட்போர் வாழி!
அறை புகழ்ச் சடையன் வாழி! அரும் புகழ் அனுமன் வாழி!

– கம்ப ராமாயணம்

கீதா பிரஸ், கோரக்பூர் – 273005.

☎ : (0551) 2334721, 2331250